Koviloor Digital Library

A. No. 3917

உ

திருச்சிற்றம்பலம்.

சைவசமயாசாரியர்களாகிய

திருஞானசம்பந்தசுவாமிகள்
திருநாவுக்கரசுசுவாமிகள்
சுந்தரமூர்த்திசுவாமிகள்

என்னும்மூவரும் அருளிச்செய்த

தேவாரத்திருமுறை.

தலவரிசை.

இது

யாழ்ப்பாணத்து வண்ணைநகர்ச்

சுவாமிநாதபண்டிதரால்

பலதேசத்துப்பழையபிரதிரூபங்களைக்கொண்டு

பரிசோதித்து,

தாம் புதிதாக எழுதிய பலவிஷயங்களுடன்

சென்னபட்டணம்

சைவவித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

சாதாரண௵ பங்குனிமீ.

1911.

Koviloor Digital Library

Koviloor Digital Library

உ

திருச்சிற்றம்பலம்.

இப்புத்தகத்திலடங்கியவை.

க. திருநாரையூர்ப்பொல்லாப்பிள்ளையார் திருவுருவப்படம்.

உ. முகவுரை.

௩. திருமுறைப்பெருமை.

- க. திருமுறை பதிநூல் சித்தாந்தம் என்றும் பகரப்படுமெனல்.
- உ. திருமுறையிற் சிவபிரான் கழிபெருங்காதலுடையரெனல்.
- ௩. திருமுறைகள் திருவருளைக் கொடுக்குமெனல்.
- ச. திருமுறை முத்திகொடுக்குமெனல்.
- ரு. திருமுறைகட்கு ஒப்புயர்வுகூறன்முதலியன உய்தியில்லதோர் குற்றமாமெனல்.
- சு. தமிழ்வேதத்திருப்பதிகம்.
- எ. தமிழ்வேத சிக்ஷை.
- அ. இருவகை வேதவியல்கள்.
- கூ. ஆரியவேத தமிழ்வேத ஒற்றுமை.
- க0. ஆரியவேத தமிழ்வேத தாரதம்மியம்.
- கக. தமிழ்வேதம் பூர்வீகமே.
- கஉ. திருக்கடைக்காப்பு.
- க௩. தமிழ்மறைப்பாராயணபலன்.
- கச. திருமுறைகள் ஓதும்விதி.
- கரு. பன்னிருதிருமுறை நித்தியநைமித்திகங்கள்.
- கசு. பாராயண ஆநந்தக்கூத்து.

ச. திருமுறைவரலாறு.

ரு. திருமுறைகண்டபுராணம்.

சு. திருப்பதிக்கோவை.

எ. திருப்பதிகக்கோவை.

அ. தலஅகராதிமுதலியன.

கூ. தேவாரத்திருவெழுகூற்றிருக்கை.

Koviloor Digital Library

இப்புத்தகத்திலடங்கியவை.

கo. மூவர்முதலிகள்திருவுருவப்படம்.
கக. தேவாரம்.
கஉ. அதிகமாகக்காணப்பட்டபதிகம்.
கங. பாடபேதமும் அரும்பதப்பொருளும். *
கச. சிவக்ஷேத்திரசிவநாமக்கலிவெண்பா.
கரு. திருப்பாட்டுமுதற்குறிப்பகராதி.
கசு. பரிசோதனபத்திரம்.

இப்புத்தகம் காபிரைட்செய்யப்பட்டது. இதிலுள்ளவிஷயங்களை யாரேனும் அச்சிடின் சட்டப்படி நட்டத்துக்காளாவார்கள்.

இங்ஙனம்,

சுவாமிநாதபண்டிதர்.

* இவற்றை அவ்வப் பக்கத்தின் கீழேகாண்க.

Koviloor Digital Library



நம்பியாண்டார் நம்பிக்குத் திருமுறை யிருக்கு
மிடக் தெரிவித்தருளிய திருநாரையூர்ப்
பொல்லாப்பிள்ளையார்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

முகவுரை.

நிலைமண்டலவாசிரியப்பா.

ஞாயிறு போலுமே ஞாயிறு போலுமே
பாயிருஞ் சோதிப் பரம னளித்தரு
டந்தி முகத்தனைச் சந்தத மெந்தஞ்
சிந்தை நிறுவுதுஞ் சிந்தை நிறுவுது
மெந்தவிக் கினமு மெமையணு காவணஞ்
சிந்தி நல்லருள் செய்திடற் பொருட்டே.

அநாதி முத்த சித்துருவாகிய முழுமுதற்கடவுள் சிவபெருமானே யென்று யாவருந் துணிந்து வழிபட்டு உய்யும்பொருட்டுப் பற்பல அற்புதங் களினாலே சைவசமயத்தைத் தாபித்தருளிய திருஞானசம்பந்தசுவாமிகள், திருநாவுக்கரசுசுவாமிகள், சுந்தரமூர்த்திசுவாமிகள், மாணிக்கவாசகசுவாமிகள் என்னுஞ்சமயகுரவர் முதலிய நாயன்மாரால் அருளிச்செய்யப்பட்ட *தேவார திருவாசக முதலிய பன்னிரு திருமுறைகளும் அச்சுப்புத்தகங்களிற் பல பிழைகள் விரவியிருக்கக் காண்டலினால், அவற்றைப் பலதேசத்துப் பழைய பிரதிரூபங்கள் பலதேடிப் பரிசோதித்து ஒருவாறு சுத்தபாடமாக்கிச் சைவ சமயிகள் யாவர்க்கும் எளிதிற் பயன்படும்பொருட்டு ஒருங்கேயச்சிற்பதிப்பித்து வெளிப்படுத்தல் வேண்டுமென்று, என்னுள்ளத்திலெழுந்த வேணவா நாளுக்குநாள்முறுகி வளர்ந்து என்னைத்தன்வசப்படுத்தீர்த்தமையின், யான் அதன்வசத்தனாய்,என்சத்தியைச்சிறிதும் உற்றுநோக்காது அவ்வாறுசெய்யத்துணிந்து, அத்திருமுறைகளுள் மிகப்பிழைகள் செறிந்தச்சிடப்பட்ட திருமந்திரத்தை முதலிற் பரிசோதிக்கக்கருதி, பழைய பிரதிரூபங்கள்தேடிப் பரிசோதித்துக்கொண்டிருக்குங் காலத்திலே, சைவசமயாபிமானத்தான் மேம்பட்டு அதன் விருத்திக்குரிய பல நற்கருமங்களைத் தாமே செய்தும் சைவவித்துவான்களுக்குப் பொருள்கொடுத்து அவர்களைக் கொண்டு செய்வித்தும் பேருபகாரியாய்விளங்கிய மகைசுவரிய மகௌதாரிய மகாப்பிரபுவாகிய ஸ்ரீமான் பாஸ்கரசேதுபதிமன்னரவர்களை சிதம்பரத்திற் சந்திக்கநேர்ந்தது.

அப்பொழுது அவர்கள் யான் பரிசோதித்தச்சிடுவித்த திருக்கோவையாருண்மையைப் பலவாறு புகழ்ந்து கூறி, "அதுபோலத் தாங்கள் பன்னிரு திருமுறைகளையும் பலபிரதிரூபங்களைக் கொண்டு பரிசோதித்துச் சுத்தபாட

* இதன்பொருளை முகவுரைமுடிவிற்காண்க.

Koviloor Digital Library

மாக்கி ஒருங்கேயச்சிற் பதிப்பித்துச் சைவசமயிகட்குப் பயன்படும்பொருட்டு வெளிப்படுத்தல்வேண்டும்; அதற்கு வேண்டும் பொருண்முழுதும் யாமே உபகரிப்பேம்." என்று கூறினார்கள்.

யான் அதுகேட்டு, "தாங்கள் சொல்லுதற்கு முன்னமே அவ்வாறு செய்யக் கருதி அதற்குரிய முயற்சிகள் செய்துவருகின்றேன்; அதற்குச் சான்று இப்பொழுது பரிசோதித்துத் திருத்தப்பட்ட இத்திருமந்திரமே" எனச் சொல்லி அதனை அவர்களுக்குக் காண்பித்து, "அச்சிடுவித்தற்பொருட்டு இப்பொழுது தாங்கள் பொருளுபகரித்தல்வேண்டாம்; அச்சிடுவித்துமுடிந்தபின் இருநூறு முந்நூறு பிரதிரூபங்கள் பெற்றுக்கொண்டு அவற்றின் கிரயத்தையளித்தால் அதுவே பேருபகாரமாகும்" என்று சொல்லினேன்.

அது கேட்ட மன்னரவர்கள் "சைவவித்துவான்கள் சைவசமயிகட்கின்றியமையாத சைவநூல்களைப் பரிசோதித்துச் சுத்தமாக அச்சிடுவித்தலும், சைவப்பிரபுக்கள் அதற்குவேண்டும் பொருளுபகரித்தலும், எக்காலத்தும் எவ்வாற்றானும் எவராலும் மறுக்கப்படாத பொருத்தமுடைத்தாய புண்ணியச் செயல்களாமாகலான், தாங்கள் சென்னைக்குச் சென்று திருமுறைகள் அச்சிடுவிக்கவாரம்பிக்குங்காலத்து எமக்குத்தப்பாது தெரிவித்தல் வேண்டும்" என்று வற்புறுத்திக் கூறினார்கள். அக்கூற்று, இயல்பாகவெரிகின்ற விளக்கிற்கோர் தூண்டுகோல்போல, இயல்பாக அங்ஙனஞ் செய்யக்கருதிய வென்னுள்ளத்திற்கோர் தூண்டுகோலாகி முன்னையினும் பதின்மடங்கு ஊக்கத்தையுண்டாக்கிற்று. அது நிற்க.

அந்நாட்டொடங்கித் தமிழ்நாடுகளுட்பட்ட பற்பல ஊர்கடோறுமுள்ள சைவாபிமானிகளாகிய எனதுநண்பர்களுக்கும் மாணாக்கர்களுக்கும் நேரிலும் கடிதமூலமாகவுந் திருமுறைப்பிரதிரூபங்கள் வேண்டப்பட்டிருத்தலைத்தெரிவித்தேன். அவர்கள் ஆங்காங்குள்ள பிரதிரூபங்களைப் பெற்றனுப்பினார்கள்.

பிரதிரூபங்கள் பெற்றுவருங்காலத்துச் சில அன்பர்கள் தங்களிடத்துள்ள திருமுறைகளைக் கொடுத்தற்கு விருப்பின்றி மறுத்துவிட்டனரென்றுஞ் சில நண்பர்கள் தெரிவித்தார்கள். ஐயையோ!! அவர்கள் கருத்தென்னையோ!!! திருமுறைகள் முன்னரே அச்சிடப்பட்டிருத்தலை அவர்களறியார்களா? காலந்தோறும் பாணவாய்ப்பட்டுஞ் சிதல்வாய்ப்பட்டுஞ் சொரூபங்குன்றிப் பாழாதலைக் கண்டுங் கண்டும், பலர்க்கும் பயன்பட்டுத் தமக்கும் பயன்படுமாறு பரிசோதகர்களுக்குக் கொடாது வைத்திருந்து, "உண்ணானொளிநிறா னோங்கு புகழ்செய்யான்—றுன்னருங் கேளிர் துயர்களையான்—கொன்னே—வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அஆ—விழந்தானென் றெண்ணப் படும்." என்றவாறிழுத்தலால் அவ்வன்பர்களுக்கு வரும் பயன் யாதோ!

பிரதிரூபங்கள் தந்தோர் தேவாரத்திருமுறைகள் சுத்தபாடமாக அச்சிடப்பட்டு வெளிவந்துலவக்கண்டு தங்கட்கெய்திய புகழ் புண்ணியங்களைக்

Koviloor Digital Library

கருதி மகிழ்ச்சியுறுதலைக் கண்டாயினும் அவ்வன்பர்கள் தங்களிடத்துள்ள திருமுறை முதலியநூல்களைப் பரிசோதகர்களுக்குக் கொடுத்துப் பயன்பெற் றின்புறுவார்களாக.

யான் பிரதிரூபங்கள் பெற்று அவற்றை ஒத்துப் பார்த்தற்குத் துணை யாளரைத் தேடிக்கொண்டிருக்குங்காலத்திற் பாஸ்கரசேதுபதிமன்னரவர்கள் சிவபதமடைந்துவிட்டார்கள். அத்துணைப் பரோபகாரவள்ளலை இத்துணைக் காலத்துள் இழக்கப்பெற்றமை சைவசமயிகள் செய்த தவக்குறைவே. அவர் கள் பிரிவாற்றுமையால் எனக்கு உளதாய கவலை திருவருட்செயலைச் சிந்தி த்தலால் நீங்க எடுத்தநற்கருமத்தை நடாத்துதற்கு முயல்வேனாயினேன்.

துணையாளரைப் பெறுதலரிதாயினமையால், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர் கள் கருத்தின்படி தாபிக்கப்பட்ட திருச்செந்தூர்ச்சுப்பிரமணியவித்தியாசா லையிலே அர்த்தஞானமுள்ள பதினைந்து மாணாக்கர்களைச் சேர்த்து ஒருவகுப் பாக்கி, ஒருவருடகாலம்வரை நாடோறும் இரண்டுமணிநேரம் திருவிளையாடற் புராணம், திருவள்ளுவர்பரிமேலழகருரை, நன்னூற்காண்டிகையுரை, சிதம் பரமும்மணிக்கோவை முதலியபிரபந்தங்கள் என்னும் இவற்றை அவர்களுக் குக் கற்பித்து எஞ்சிய காலத்தில் அவர்களைவைத்துக்கொண்டு பதினைந்து பிர திருபங்களை ஒத்துப்பார்வையிட்டுப் பாடபேதங்களையும் பலப்பல திருத்தங் களையும் எழுதிமுடித்தேன்.

எனக்கு அத்தியந்த நண்பர்களாயுள்ள வித்துவசிரோமணிகளாகிய ஸ்ரீமத் சிவ சங். சிவப்பிரகாசபண்டிதரவர்களுக்கு ஏழு பிரதியும், ஸ்ரீமத் அ. குமார சுவாமிப்புலவரவர்களுக்கு மூன்று பிரதியும் அனுப்பினேன். அவர்கள் தங்கள் மாணாக்கரைத் துணையாளராக வைத்துக்கொண்டு அவற்றை ஒத்துப்பார்வை யிட்டுப் பாடபேதங்களையும் பற்பல திருத்தங்களையும் எழுதியனுப்பினார்கள். எனதிப்பிரிய நண்பரிருவருஞ் செய்த இப்பரோபகாரமாகிய பெருநன்றியை யான் என்று மறவாமற் பாராட்டு மத்துணையேயன்றிப் பிறிது கைம்மாறு கண்டிலேன்.

மதுரைத் திருஞானசம்பந்தசுவாமிகளாதீனத்துத் தம்பிரானாகிய ஸ்ரீமத் மாணிக்கவாசகசுவாமிகள் ஆறுமாசகாலம்வரை என்னுடன் கூடவிருந்து, தேவாரம் சீக்கிரம் அச்சிட்டு முற்றுப்பெறவேண்டுமென்னும் விருப்பமிகுதி யாற் செய்தவுதவிகள், 'எழுமை யெழுபிறப்பு முள்ளுவர் தங்கண்—விழுமந் துடைத்தவர் நட்பு' என்றவாறு எழுமையும் உள்ளற்பாலனவேயாம். அவர்கள் அத்துணையேயன்றி இரண்டு திருவிளையாடற்புராணப் பிரதிருபங்கள் ஒத்துப் பார்த்தற்குந் துணையாளராயிருந்தார்கள். அவர்கள் கல்வி கேள்வி அறிவு பத்தி ஒழுக்கம் துறவு முதலியன எத்திறத்தாராலும் மெச்சற்பாலன.

அவர்கள் ஏறக்குறையப் பதினைந்துவருட காலமாக யான் மேற்கொள்ளுங் கருமங்கட்கெல்லாம் சமயம் வாய்க்கும் பொழுது ஏன்று நின்று வேண்டுமுப காரஞ்செய்து "ஒல்லும் வகையா லறவினை யோவாதே - செல்லும்வா யெல்

Koviloor Digital Library

லாஞ் செயல்" என்னுந் திருக்குறளைச் சிந்திக்கச்செய்துவருகின்றார்கள். சைவ சமயமுந் தமிழ் சமஸ்கிருதமென்னு மிருபாஷைகளும் அபிவிருத்தியாகவே ண்டுமென்னும் வேணவா வொன்றே அவர்களப்படிச் செய்தற்குக் காரணம்.

திருமுறைகள் சம்பாதிக்கத் தொடங்கின காலமுதல் இதுவரை ஏறக்கு றையப் பதினைந்து வருடங்களாயின. யான் அச்சிட முயலுதலையறிந்த சில அன்பர்கள் ஒருமுறை இரண்டுமுறை அவற்றை அச்சிட்டு விலைப்படுத்திய தறிந்தும் அவ்வாறு அச்சிடுவிக்க எனக்கு மனம் ஒருப்படாமையாலும், பிரதி ரூபங்கள் கிடைத்தற்குக் காலதாமதமாயினமையாலும், தாமதத்திற் கிடைத் தவைகளும் ஒரேகாலத்திற் கிடையாது முன்னும் பின்னுமாகக் கிடைத்தமை யாலும், அவற்றையொத்துப்பார்த்தற்குத் துணையாளரைத்தேடுதலிற் சிலகா லங்கழிந்தமையாலும், *தேவாரத்தில் முத்தமிழும் விரவியிருத்தலால், இயற்ற மிழை யொழித் தொழிந்த இரண்டனுள் இசைத்தமிழ்நூல் சிலரிடத்திருப்ப தாக வறிந்து அதுபெறின் பண்ணிலக்கணங்களையறிந்து விளக்கலாம் என்னு மாசையால் அவர்களிடத்து வினவியபோது தம்மிடத்துள்ளதாகச் சொல்லித் தருகின்றோ மென்று வாக்குத்தத்தஞ்செய்து இன்று நாளையென்று பலமாச ங்கள் கழித்துப் பின் மறுத்துவிட்டமையாலும், அச்சிட வாரம்பித்தபின்பு கிடைத்த ஐந்து பிரதிரூபங்களை யானே தனித்தனி பார்க்க நேர்ந்தமையா லும், இடையில் சிவஞானபோதத்திராவிடமாபாடியம் பரிசோதித்தச்சிட்டு வெளிப்படுத்தினமையாலும், இடையிடையே எனக்கு நேர்ந்த அசௌக்கி யங்களாலும் இத்துணைக்காலம் நீட்டித்தது.

முன்னரச்சிடப்பட்ட புத்தகங்களில் எழுத்துப்பிறழ்ச்சி, அசைக்குறைவு, அடிமாற்றம் முதலியனவாக ஏறக்குறைய ஆயிரத்தைஞ்ஞூறுபிழைகள் காண ப்பட்டன. அவைகள் பழைய பிரதி ரூபங்களின்படி இப்புத்தகத்திற்றிருத்தப் பட்டன. ஆயிரத்துக்குமேற்பட்ட பாடபேதங்களும், ஆங்காங்கு விளக்க வேண்டிய அரும்பதப் பொருள்களும், திருமுறைப்பெருமை திருப்பாட்டக ராதி முதலியனவும் சேர்க்கப்பட்டன. அப்புத்தகங்களோடு இதனைமுற் றும் ஒத்துப்பார்த்தால் இன்ன இன்ன பிழைகள் திருத்தப்பட்டனவென்பது யாவர்க்கு மினிதுவிளங்கும்.

இத்தேவாரத்தோடு சேர்த்தச்சிடுதற்பொருட்டு எழுதப்பட்ட அரும்பத ப்பொருளும், 'சமயாசாரியசுவாமிகள்' என்பது முதல் 'சிவபெருமானே மகா ப்பிராமணர்' என்பதிறுதியாகவுள்ள நாற்பது விஷயங்களும் காலநீட்டித்தலை யும் பாரமதிகப்படுதலையும் நோக்கி இப்பொழுதச்சிடாமற் றவிர்க்கப்பட்டன. அரும்பதப்பொருள் இனித்தனியே அச்சிட்டு வெளிப்படுத்தப்படும்.

பிராமணவருணத்திற் பிறந்தும் உபவீதந் தரிக்கப்பெற்றுத் துவிசத்துவ மடைந்து வேதமோதாதார் அவ்வருணத்தவராகவைத் தெண்ணப் படாத வாறுபோல, சைவமரபிற் பிறந்தும் சிவதீக்ஷை செய்யப்பெற்றுச் சைவசம

* தேவாரத்தில் முத்தமிழும் விரவியிருத்தற்குத் திருஞானசம்பந்தசுவாமிகளின் திருநாமங்களு ளொன்றாகிய "முத்தமிழ்விரகர்" என்பது போதிய சான்றாதலறிக.

Koviloor Digital Library

யப் பிரவேசமடைந்து தேவாரமுதலிய திருமுறைகளை ஓதாதார் சைவ ரெனவைத் தெண்ணப்படார் என்பதான்றோர்க்குஞ் சைவாகமங்கட்கு மொப் பமுடிந்த கருத்தாகலான், சைவசமயிகள் யாவரும் சமயதீக்ஷைபெற்று உலோபமின்றி இத்தேவாரப்புத்தகத்தில் ஒவ்வொன்று விலைக்கு வாங்கி நாடோறு நியமமாக ஓதக்கடவர்.

அங்ஙனஞ் செய்வாராயின், அச்செயலுன், அவர்வீட்டின்ப மெய்துதற் கும், மற்றைய திருமுறைகள் ஐந்தனோடு வடமொழிச் சிவஞானபோதத்திற் குச் சிவாக்கிரயோகிசுவாமிகள் இயற்றியருளிய பதினாறாயிரஞ் சுலோகங்கொ ண்ட சித்தாந்தலகுபோதமெனப் பெயரிய *மகாபாஷியமும், உமாபதிசிவாசா ரியசுவாமிகள் இயற்றியருளியபௌட்கராகமவிருத்தியும், வடமொழிச்சர்வ ஞானோத்தர வியாக்கியானமும், தேவிகாலோத்தரவியாக்கியானமும், ஆலாசிய மான்மியத்தமிழுரையும், தென்மொழிச்சர்வஞானோத்தரமும், என்னுமியற்றப் படுகின்ற தணிகைப்புராணவுரையும், பாரதவுரையும், கந்தபுராணவசனமும் இன்னோரன்ன பிறநூலுரைகளும் சுத்தமாக அச்சிடப்பட்டு வெளிவந்து லோகோபகாரமாதற்கும் ஏதுவாகும்.

இவ்வுண்மையைநோக்கியே சைவசமயாபிமானமும், தமிழ்சமஸ்கிருத பாஷாபிமானமும், கல்வி கேள்விகளும், அவற்றின் பயனாகிய அறிவும், அத ன்பயனாகிய சிவபூசையும் ஒருங்குடைய ஸ்ரீமான் மன்னார்குடித் தில்லை நாய கப்பிள்ளையவர்கள் "திருமுறை அச்சிட்டு முடிந்தவுடன் நாம் ஐம்பது பிரதி ரூபங்கள் பெற்றுக்கொண்டு அவற்றின்கிரயத்தை அளிப்போம்" என்று முன் னரே வாக்குத்தத்தஞ் செய்திருக்கின்றார்கள்.

சைவாதீனங்களில் வீற்றிருக்கும் மகாசந்நிதானங்களும், சைவமன்னர் களும், சைவப்பிரபுக்களும் இத்திருமுறையிலே தங்கள் தங்கள் சத்திவிசேட த்திற்கேற்பப் பிரதிரூபங்கள் பெற்று அவற்றின் கிரயத்தையளித்து என்னை ஊக்கி மற்றைய நூல்களையும் அச்சிடச்செய்தல் அவர்கட்கின்றியமையாதகடப் பாடென்பதியானெடுத் தியம்பவும்வேண்டுமோ!

திருக்கைலாசபரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்து ஸ்ரீலஸ்ரீ † மகாசந் நிதானமும், சூரியனார்கோயிலாதீனத்து ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமும், மதுரைத் திருஞானசம்பந்தசுவாமிகளாதீனத்து ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமும் காலந்தோ றும், இதுவரை எத்துணைத் திருப்பதிகங்க ளச்சிடப்பட்டன இன்னும் எத் துணைத்திருப்பதிகங்களச்சிடப்படவேண்டும் எப்பொழுது முற்றுப் பெறும் என்று அடிக்கடி உசாவிக்கொண்டிருந்தமை, இத்தேவாரம் சுத்தபாடமாக வெளிவருதற்கண் அக்குருமணிகட்கிருந்த வேணவாவை நன்குபுலப்படுத்தி யின்புறுத்திற்று.

* இப்பாஷியமும் இச்சுவாமிகளால் இயற்றியருளப்பட்ட குருவெனப் பெயரிய வடமொழிச் சிவஞானபோதச் சிற்றுரையுமே ஆசிரியர் மாதவச் சிவஞானயோகிகள் திராவிடமாபாடியமுஞ் சிற்றுரையுஞ்செய்தற்கு மிக்க துணைக்கருவிகளாயிருந்தனவென் றுணர்க. † இம்மகாசந்நிதானம் யான் திராவிடமாபாடியம் அச்சிட்டு வெளிப்படுத்திய ஞான்று ஐம்பதுபுத்தகங்கள்பெற்று அவற்றின்கிரயத்தை அளித்தின் புறுத்திற்று.

Koviloor Digital Library

இதனை அச்சிடுவித்தற்கு வேண்டும் பொருளைப்பற்றி யான் சிறிதுந் தளர்ச்சியடையாவண்ணம் என்னை ஊக்கஞ்செய்து வந்தவர்கள் எனது மாணுக்கர்களாகிய வயி. நாக. ராம. அ. *வேங்கடாசலச்செட்டியார், நா. நா. ராம.†நாராயணச்செட்டியார் என்னு மிருவருமே.

இக்காலத்துச்சீவனத்தின்பொருட்டுப் பெரும்பாலும் யாவராலும்வேண்டப்பட்டுக் கற்கப்படும் பாஷை இங்கிலிஷேயாகலான், தமிழ் சமஸ்கிருதமென்னுமிருபாஷைகளையுங் கற்பாரரியராகின்றனர். அதனால் அப்பாஷைகளிலுள்ள அரியநூல்களைக் கஷ்டப்பட்டுத்தேடிப் பரிசோதித்துப் பொருள்செலவிட்டு அச்சிற்பதிப்பித்தாலும் விலைகொடுத்து வாங்குவோரிலராகின்றனர். அதனால் அந்நூற் பரிசோதகர்கள், பிரதிரூபங்கள் தேடுதல், ஒத்துப்பார்க்கத்துணையாளரைத் தேடுதல், ஒருநூலைப்பரிசோதித்தற்கின்றியமையாத பலவகைக்கருவிநூல்களைத் தேடுதல், நூல்களைவைத்திருப்போர் இன்று நாளையென்று சொல்லிக் கொடாதுலைத்தல், பரிசோதனையின்பொருட்டுத் தமக்குதவிபுரிந்த வித்துவான்களுக்கு அவர்கள் விரும்பியகாலத்து அதுபோன்ற உதவியைத் தாங்கள் செய்தல் முதலியவற்றாற்படுங் கஷ்டத்தையும் பொருள் நஷ்டத்தையும் உற்றுநோக்கி அம்முயற்சியைக் கைநெகிழ விடுகின்றனர். அவர்கள் செய்கை அதுவாயின், முன்னர்க் கொடுங்கோன் மன்னரால் அக்கினிக்கிரையாக்கன் முதலிய ஏதுக்களால் அழிக்கப்பட்டன போக எஞ்சியவற்றுள் அச்சிடப்படாதிருக்கும் அரியநூல்கள் செல் முதலியவற்றால் அழிந்துவிடுமென்பதொருதலையாக யாவருமறிந்தவிஷயமே.

ஆதலால் சைவசமயாபிமானமும் தமிழ் சமஸ்கிருதமென்னும்பாஷாபிமானமு மொருங்குடைய சைவப்பிரபுக்கண் முதலாயினோர் அவ்விருபாஷைகளினுமுள்ளசைவநூல்கள் இறந்துபடாவண்ணம் அவற்றைச் சைவவித்துவான்களைக்கொண்டு பரிசோதிப்பித்துச் சுத்தபாடமாக அச்சிடுவித்து உலோகோபகாரமாக வெளிப்படுத்துதற்குரிமையுடைய அதிகாரபுருஷ சிரோமணிகளாக அறிஞரால் மதிக்கப்படுகின்றார்கள்.

அவர்கள் அங்ஙனஞ் செய்து சிவதருமோத்தரத்திற் சிவஞானதானவியலிலே சொல்லப்பட்ட பெரும்பேற்றைப் பெற்றுய்யும்வண்ணம் பரங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமான் றிருவருள் புரிவாராக.

இப்பொழுதுகிடைத்த தேவாரத்திருமுறைப் பிரதிரூபங்கள் முப்பது. அவற்றைமிக்க சிரத்தையுடன் தேடித்தந்தபேரன்பர்கள் ஊர் பேர் முதலியன பன்னிரண்டாந் திருமுறையாகிய பெரியபுராணத்திலே வெளிப்படுத்தப்படும்.

* இவர் மதுரைச்சில்லா அமராபதிபுதூரை ஜென்மஸ்தானமாகவுடையவர்; மதுரைச் சோமசுந்தரக்கடவுள் ஆலயத்திருப்பணிமுதலியவற்றைப் பூர்த்திசெய்து இவரது தந்தைமுதலிய முன்னோர் நடாத்திவந்த சிவபுண்ணியமாகிய பரமதருமங்களையும் பிறதருமங்களையும் இப்பொழுது தம் தமையனாரவர்களோடு நடாத்திவருகின்றவர்.

† இவர் மதுரைச்சில்லாக் காரைக்குடியை ஜென்மஸ்தானமாகவுடையவர்; திருவையாற்றில் இவர் தந்தைமுதலாயினோர் தாபித்துநடாத்திய சத்திரதருமத்தையும் பிறதருமங்களையும் இப்பொழுது தம் தமையனாரவர்களோடு நடாத்திவருகின்றவர்.

Koviloor Digital Library

பின்னும் பின்னும் பிரதிரூபங்கள் தேடிப் பரிசோதிக்கின் செவ்விய திருத்தங்கள் பலதெரிந்து கோடற் கையமின்று. அங்ஙனஞ் செய்தற்கு இன்னும் அதிககாலமும் பொருளும் துணையாளரும் பிரயாசையும் வேண்டப்படுதலானும், அறிஞர் பலர் இனியாயினுங் காலதாமதமின்றி வெளிப்படுத்தல் வேண்டுமென்று நெருக்குகின்றமையானும், இதுவரை காணப்பட்ட திருத்தங்கள் யாவர்க்கும் பயன்படுமாறு இவ்வளவில் இத்திருமுறைகளைவெளிப்படுத்துவேணுயினேன்.

அச்சுப் புத்தகங்களிற் காணப்படும் சில பண்களும் அவற்றின் கட்டளைத் தொகையும் திருமுறைகண்டபுராணத்திற்கு மாறுபடுகின்றனவாகலான், அவைகள் இன்ன இன்ன பிரகாரம் மாற்றப்படின் புராணத்திற்கு மாறுபடா; அங்ஙனஞ் செய்தலே தகுதியென்பாரும், பிரதிரூபங்களிற்காணப்படாமையால் அவ்வாறு செய்தல் தகுதியன்றென்பாருமாய்ப் பலதிறத்தர் பண்வல்ல ஆசிரியர்.

இப்பொழுது கிடைத்த பிரதிரூபங்களுள் ஒன்றில் ஒருபதிகத்தின்பண் மாத்திரம் வேறுகக் காணப்பட்டது. அதனை அத்திருப்பதிகத்தின்கீழ்ப் பதிப்பித்திருக்கின்றேன். ஏனையவற்றில் ஏனையபண்கள் மகாவித்துவான் ஸ்ரீமத் இராமசுவாமிப்பிள்ளையென்வழங்கும் ஞானசம்பந்தப்பிள்ளையவர்கள் அச்சிற் பதிப்பித்த வண்ணமே காணப்பட்டனவாகலான், யானும் அவ்வாறு பதிப்பித்தேன்; ஆயினும் முதலிற் சில பதிகங்கள் மற்றோர் பதிப்பைப் பார்த்தடுக்கியச்சிடப்பட்டமையாற் சில பண்கள் பிள்ளையவர்கள் பதிப்புக்கு மாறுபடும்; அவற்றை அதற்கிணங்கத் திருத்திக்கொள்க.

இனி, பண்வல்ல ஆசிரியர் யாவராயினும் தக்க பிரமாணங்களோடு அவற்றைப் புராணத்திற்கிசைய மாற்றி எழுதியனுப்புவார்களாயின் அவர்கள் பெயரோடு அச்சிட்டுப் பலர்க்கும் பயன்படுத்தி அவர்கள் நன்றியை என்றும் மறவாது பாராட்டுவேன்.

சில திருப்பதிகத் தொகைகளும் பெரியபுராணச் செய்யுட் டொகைகளும் திருமுறைகண்ட புராண முதலியவற்றிற்கு மாறுபடுகின்றன; அதற்குக் காரணம் என்னையென ஆராய்ச்சிசெய்யப் புகுங்கால், அப்புராணுசிரியரும் பிறரும் தங்கள் காலத்தகப்பட்ட பிரதிரூபங்களிற் காணப்பட்ட தொகைகளைக்கூறிப் போந்தனர் என்றும், பிற்காலத்துச் செல் முதலியவற்றுல் சில பதிகங்கள் அழிந்திருக்கலாம் என்றும், அதுகண்ட வெள்ளியார், "முந்நீர் வலம்புரி" என்னுஞ் சீவகசிந்தாமணிச் செய்யுளுரையில் நச்சினார்க்கினியர் "தேவரருளிச்செய்த செய்யுள், இரண்டாயிரத் தெழுநூறென்றே கொள்க" என்றதும், ஏனை நானூற்று நாற்பத்தைந்து செய்யுட்களும் கந்தியார் பாடி இடையிடையே சேர்த்தனர் என்னுங் கர்ணபரம்பரையும் நன்குணர்ந்த மகாவித்துவானுதலால், நாமும் இறந்துபட்ட திருப்பதிகங்களைப் பூர்த்தி செய்வேமெனக்கருதி அவ்வாறு செய்து ஆங்காங்குள்ள பிரதிகளிற் சேர்த்துவிட்டனர் என்றும், பெரியபுராணத்திற் பலசெய்யுட்களைக் கூட்டிவிட்டனர் என்றும் ஊகித்தற்கிடமாகின்றது.

Koviloor Digital Library

முகவுரை.

"திருவேள்விக்குடியும் திருத்துருத்தியும்" என்றுற்போலும் மகுட நாமங்களையுடைய திருப்பதிகங்கள், பிரதிரூபங்களில் அவ்வாறே யிருக்கின்றன. அதுபற்றியே பதிப்பாசிரியர்கள் அவ்வாறு பதிப்பித்தனர்; யானும் பிரதிகளையும் ஆசிரியர்களையும் பின்றொடர்ந்து அவ்வாறே பதிப்பித்திருக்கின்றேன். ஆயினும் எத்தலத்தெப்பதிகம் அருளிச்செய்யப்பட்டதோ அதனை அத்தலத் திருப்பதிகமாகவே கொள்ளவேண்டும்.

பல்வகைக் கல்வி கேள்விகளான் ஆன்ற மகாவித்துவ சிரோமணிகளாற் பரிசோதிக்கற்பாலனவாகிய இத்தேவாரத்திருமுறைகளை, அதற்கு அருகனல்லாத சிறியேன் சிற்றறிவிற்கு எட்டியவரையே ஒருவாறு பரிசோதித்து, அச்சுப்புத்தகங்களிற் காணப்பட்ட பிழைகளைப் பழையபிரதிரூபங்களிற் காணப்பட்ட திருத்தங்களான்மாற்றி இயன்றமட்டுஞ் சுத்தமாகப் பதிப்பித்தேனுகலான், இப்பதிப்பிற் காணப்படும் எவ்வகைப் பிழைகளையும் அவற்றின் திருத்தங்களையும் பெருந்தயை கூர்ந்து அறிஞர்கள் தெரிவிப்பார்களாயின், அவர்கள் செய்யும் அப்பேருதவியை என்றும் மறவாதவனுகி அவற்றையும் பின்னர் அச்சிற் பதிப்பித்துப் பலர்க்கும் பயன்படச்செய்வேன்.

அறிவொரு சிறிதுமில்லாத புழுத்த நாயினுங் கடையேனுகிய புல்லியேனை இப்பெரும்புண்ணியமுயற்சியிற் செலுத்தி அதனை முற்றுவித்தருளிய எல்லாம்வல்ல பெருங்கருணைப் பிழம்பாகிய சிவபிரான்றிருவடித்தாமரைகளைச் சிரமேற்சூடித் திரிவிதகரணங்களாலுஞ் சிந்தித்துவாழ்த்தி வந்திக்கின்றேன்.

தேவாரமென்பதன்பொருள்வருமாறு:—

க. * தே+வாரம். தேவினிடத்து வாரத்தை விளைவிப்பது. அஃதாவது சிவபிரானிடத்து(அதனை ஓதுவோர்க்குங் கேட்போர்க்கும்)அன்பை யுண்டுபண்ணுவது என்பதாம்.

பேரழகு பேராண்மை பெருங்கல்வி பேரறம் முதலியவற்றையுடைய ஆண்மகனது இலக்கண முதலியவற்றை ஓதல் கேட்டல்களைச்செய்த துணையானே மகளிர்க்கு அவன்மாட்டுக் கழிபெருங்காம மீதூர்தல் போல, சிவபிரானது இலக்கணங்களும் அருட்குணங்களும் பிறவும் திராவிடவேதத்தின்கட் கூறப்பட்டிருத்தலான், அவற்றை ஓதல் கேட்டல்களைச்செய்ததுணையானே மக்கட்குக் கழிபெருங்காதன் மீதூருமென்றுணர்க.

திராவிட வேதத்தை ஓதல்கேட்டல்களைச்செய்த மாத்திரையானே நம்மனோர்க்குச் சிவபிரான் மாட்டுக் கழிபெருங் காதன்மீதூர்தல் ஒருதலையே யென்பது அநுபவப் பிரமாண மாகலான் இதற்குச் சுருதிப்பிரமாணம் வேண்டுவதன்று;வேண்டுமாயின், "வெள்ளை நூடையான் றனக்கன்பு செய்திருத் தாண்டக வேந்த" எனவும், "விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்—காரண னுரையெனு மாரண மொழியோ—வாதிசீர் பரவும் வாதவூ ரண்ணன்—மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ—யாதோ சிறந்த தென்குவீராயின்—வேத மோதின் விழிநீர் பெருக்கி—நெஞ்சநெக் குருகி நிற்பவர்க் காண்கிலேந்—திருவா சகமிங் கொருகா லோதிற்—கருங்கன் மனமுங் கரைந்துகக் கண்கடொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய—மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி—யன்ப ராகுநரன்றி—மன்பதை யுலகின் மற்றைய ரிலரே." எனவும் வருவனவற்றான் உணர்க.

Koviloor Digital Library

அன்புசெய் தாண்டகம் என்புழிக் "குடிபொன்றிக் குற்றமு மாங்கே தரும்." எனவும், "மெய்ஞ்ஞானந் தானே விளையும்." எனவும், "அரச னெடுத்த வாலயம்." எனவும் வரும் வாக்கியங்களிற் போல விவ்விகுதிதொக்குநின்றது; எனவே, ஓதல் கேட்டல்களைச் செய்ததுணையானே சிவபிரான்மாட் டன்பைச் செய்விக்குந் திருத்தாண்டகம் என்பது பொருள்.

உ. தே+வாரம். சிவபிரானுக்குத் (தன்னிடத்தும் தன்னையோதுவோரிடத்தும்) இன்பை விளைவிப்பது. அதனிடத்தும் அதனையோதும் பத்தர்களிடத்தும் சிவபிரான் வாரமுடையராவர் என்பது கருத்து.

அதனை, "பாட்டிற் கின்புறு குருபரன்" எ—ம், ஒழித்தி டும்பவப் பகைவிரைந் துள்ளமே யோதுமூ துணர்வோர்முற்—பழிச்சு பாடலை யரற்கவை விடர்க்கிளம் பாவைய ருரைபோலுங்—கழித்தி டேலுப சாரமென் றிதனைநீ கட்டுரை யெனக்கொள்வாய்—விழித்து மாரனை யெரித்ததே வருள்பெறும் விருப்பினர் விருப்பீதே" எ-ம், "கூட வேடத்த ராகிக் குழுமிலென்—வாடி யூனை வருத்தித் திரிகிலென்—ஆடல் வேடத்த னம்பலக் கூத்தனைப்—பாட லாளர்க்கல் லாற்பய னில்லையே." எ—ம், "படியிலா நின்பாட்டி லாரூரனிவிருப்பன் பரம னென்ப—தடியனே னறிந்தனன்வான் றெழுமீச னினைத்தடுத்தாட் கொண்டு மன்றித்—தொடியுலா மென்கைமட மாதர்பா னினக்காகத் தூது சென்று—மிடியிலா மனைகடொறு மிரந்திட்டு முழன்றமையால் விளங்கு மாறே." எ-ம், "தண்மல ரும்பொழிற் றென்கம லேசர்க்குச் சாத்துகின்ற—வொண்மலர் சொன்மலர்க் கொவ்வாது போலுமற் றோர்புலவன்—பண்மலர் சாத்திப் பணிகொண்ட வாபச்சை மால் சிவந்த—கண்மலர் சாத்தியுங் காண்பரி தான கழன்மலரே." எ—ம், "ஓது நாவினுங் கேட்டவர் செவிப்புலத் துள்ளு—***மாது பாகனுற் றுறைகுவன்." எ—ம். வருவனவற்றான் உணர்க.

மேலும், "பாடுவார் பசிதீர்ப்பாய்." எனவும், "அளப்பில கீதஞ் சொன்னார்க் கடிகடா மருளு மாறே" எனவும் வரும் தமிழ் மறைகளானும் உணர்க.

ங. தே+ஆரம். சிவபிரானுக்கு ஆரம்போல அலங்கரிப்பது.

அதனை, "பழுதி லாதசொன் மணியினைப் பத்திசெய் தன்பு—முழுது மாகிய வடத்தினுன் முறைதொடுத் தலங்கல்—அழுது சாத்துமெய் யன்பருக் கமகிழ்ந் தையர்." என்பதனான் உணர்க.

ச. தே+ஆரம். தெய்வத்தன்மைபொருந்திய பாமாலை. அது, "பன்மாலைத் திரளிருக்கப் பாமாலைக் கேநீதான் பட்சமென்று—நன்மாலை யாவெடுத்துச் சொன்னார் நல்லோர்" என்பதனான் உணர்க. இப்பொருட்குத் தேவ+ஆரம் எனப்பிரிப்பினுமமையும்.

ரு. தே+வாரம். சிவபெருமானுக்கே உரிமையுடையது; வாரம்-உரிமை. வேதம்போலாது சிவபெருமான் ஒருவரையே பதியெனக்கொண்டு போற்றலின் சிவபிரானுக்கே உரியதென்னும் பொருளுஞ் சிறந்தமை காண்க.

சு. தே+வாரம். தெய்வத்தன்மை பொருந்திய வாரமாயுள்ளது என்பாருமுளர்.

தெய்வத் தன்மை பொருந்திய வாரமாயுள்ளது என்றதனை விளக்குவாம். வாரம் என்பது:—இசையினியக்க நான்கினு ளொன்று, உரு, தெய்வப்பாடல், பற்று எனப் பொருள்படும். அது "வார நிலத்தைக் கேடின்று பார்த் தாங்கு" எனவும், "வாங்கிய வாரத்து" எனவும், "வாரம் பாடுந் தோரிய மடந்தையும்" எனவும் வருஉஞ் செய்யுட்களாற் பெற்றாம். முதனடை, வாரம், கூடை, திரள் என்று சொல்லப்பட்ட இசையியக்

Koviloor Digital Library

கம் நான்கனுள், முதற்கணுள்ளது மிகவுந் தாழ்ந்த செலவினை யுடைத்தாகலானும், இறுதிக்கணுள்ள திரள் என்பது மிகவும் முடுகிய நடையினை யுடைத்தாகலானும், இடைப்பட்ட இரண்டனுள், வாரப்பாடலே சொல்லொழுக்கானும் இசையொழுக்கானும் சிறந்ததாகலின், அதுவே இசைத்தமிழ்ப் பாடற்குரிய சிறப்பியக்கமென்க. அத்துணைவிசேடவியக்க முடைமையோடு தெய்வத் தன்மையு மமைதலிற் றேவாரம் என்பது மொன்று.

உரு ஆவது:—கந்த முதலாகப் பிரபந்த வுரு வீறாகவுள்ள அகநாடகங்களுக்குரியன இருபத்தெட்டும், தேவபாணி முதலாக அரங்கொழி செய்யுளீறாகவுள்ள புறநாடகங்களுக்கு உரியன வெல்லாமுமாகிய மங்கலப் பண்ணுற் பாடப்படும் பாட்டுக்களாம். இவை நாடகவியற் குரியன வென்க. மூவர்முதலிக டிருவாய் மலர்ந்தருளிய தமிழ்வேதப் பதிகங்களும், மங்கலப் பண்களானியற்றப்பட்டு, மங்கலச்சொற்களை யுடையனவாய், உக்கிரம், துருவை, ஆபோகம், பிரகலை யென்னும் நாலுறுப்புக்களுங் குறைபாடில்லாத உருவுக்குச் சொற்படுத்தியும் இசைப்படுத்தியும் தேவர்ப்பராவுந் தேவபாணியாகக் கொட்டுங் கூத்தும் நிகழ்த்தித் தெய்வத்திருவருள்வழி அருளப்பட்டனவாகலின் தேவாரமென்னும் பெயர்த்தென்க.

தெய்வப்பாடலென்பது:—நாடகத்தில் அவதாளம் நீங்கவும், தாளம் பொலிவுறவும், நன்மை உண்டாகவும், தீமை நீங்கவும், முதலிலும் இறுதியிலும் பாடப் படுவதாம். அங்ஙனே தமிழ் வேதமும், சிவபெருமான் திருமுன்னிலையிலே நின்று தற்போதங் கெடவும், சிவகரணம் பொலிவுறவும், உலகர்க்கு நன்மை விளைவிக்கவும், * மூவகைத் துன்பமிரிவிக்கவும் ஓதியருளப்பட்டமையானும், நாடகம் போன்ற பிரவஞ்ச வியாபாரங்களில் முதலினும் இறுதியினும் ஓதப்படற்குரிமையானும் தேவாரம் என்னும் பெயரையுடைத்து என்க.

பற்றுவது:—விதிப்படி கொண்ட அரங்கத்திலே தலைக்கோற் பட்ட முற்ற அரிவையென்பாள் அகக்கூத்துப் புறக்கூத்திற்குரிய வரி, பாணி, தூக்கு, குயிலுவக்கருவி என்னு நான்கு முணர்ந்து, நால்வகை அவிநய நிலத்து நின்று கூத்தாடி முடிந்த பின்பு, அவள் காலுக்கு ஒத்தறுத்து இடத்தூணிற்சேர்ந்து நின்று தோரிய மடந்தை, தலைப்பாட்டுக் கூத்தி, இடைப்பாட்டுக்கூத்தி யென்னும் பாடன் மகளிர் மூவரானும் பாடப்படும் ஓரொற்றுவாரம், ஈரொற்றுவாரம் என்னுந் தேவ கானமாம். இத்தமிழ் வேதமும் பற்றென்னும் பாடல் போன்றதாகலின் வாரம் எனப்பட்டது. எங்ஙனமெனில், பெருமை வாய்ந்த திருச்சபைகளிலேறி யாவர்க்கும் எவற்றிற்கும் தலைமையாக விளங்கும் சபாநாதனாகிய நடராசப் பெருமான், ஆன்மாக்களின் இருவினைகட்கு மேற்ற தனு கரண புவன போகம் என்னு நான்கையு முணர்ந்து, பஞ்சகிருத்திய தாண்டவ நிகழ்த்துழி, அவன் திருவடிக்கு ஒத்தறுத்து அவனருள்வழி நின்று, நால்வேத வாய்மை வைத்து, மூவர் மகளிர் போலும் மூவர் முதலிகளாற் பாடப்பட்ட வாரம் ஆகலிற் றேவாரம் ஆயிற்றென்க.

இங்ஙனம்,

சுவாமிநாதபண்டிதர்.

* மூவகைத்துன்பமாவன:—தன்னைப்பற்றிவருவன பிறவுயிரைப்பற்றிவருவன தெய்வத்தான்வருவன என இவை.

Koviloor Digital Library

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருமுறைப்பெருமை.

நிலைமண்டலவாசிரியப்பா.

மதிமுடி வைத்துக் கதிபெற வுயிர்கள்
சதிபெறு நடஞ்செய் தாண்டவ ராயன்
றேவர்க் கிரங்கிச் சிமையத் திறைவி
மேவக் குடிலையிற் காவிற் றந்த
கற்பகக் களிற்றைச் சொற்பல புனைந்து
நற்கம லக்கழ லற்பி னிறைஞ்சுதுங்
கருமுறை கட்டழித் தருடரு பன்னிரு
திருமுறைப் பெருமை செப்பமன் பெரிதே.

சுத்த சாட்குண்ணிய பரிபூரண பதியாகிய சிவபிரானது திருவருளைப் பெற்ற திருஞானசம்பந்தசுவாமிகள் முதலிய உண்மை நாயன்மாராற் றிருவாய் மலர்ந்தருளப் பெற்றனவும், உடலுயிர் கண்ணருக்க னறிவொளிபோற் பிறிவரு மத்துவிதமாகுஞ் சிறப்பினதாய் வேதாந்தத் தெளிவாஞ் சைவசித்தாந்தத் திறத்தினைத் தெரிவிப்பனவுமாகிய தேவாரமுதற் றிருத்தொண்டர்புராண மிறுதியாயுள்ள திருப்பாக்களே திருமுறையெனப்படும்.

அத்திருமுறை பன்னிரு பகுப்புடைத்து. அவை, திருஞானசம்பந்தசுவாமிகள் அருளிச்செய்த தேவாரமாகிய முதன்மூன்று திருமுறைகளும், திருநாவுக்கரசுசுவாமிகள் அருளிச்செய்த தேவாரமாகிய பின்மூன்று திருமுறைகளும், சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்ததேவாரமாகிய ஏழாந்திருமுறையும், மாணிக்கவாசகசுவாமிகள் அருளிச்செய்த திருவாசகந் திருக்கோவை என்னும் இரண்டுமாகிய எட்டாந்திருமுறையும், திருமாளிகைத்தேவர் முதலிய ஒன்பதின்மர் அருளிச்செய்த திருவிசைப்பாவும் அவருட்சேந்தனார் அருளிச்செய்த திருப்பல்லாண்டுமாகிய ஒன்பதாந் திருமுறையும், திருமூலநாயனார் அருளிச்செய்த திருமந்திரமாகிய பத்தாந்திருமுறையும், திருவாலவாயுடைய சிவபிரான் முதலாயினார் அருளிச்செய்த திருமுகப்பாசுரமுதற் றிருநாவுக்கரசுதேவர் திருவேகாதசமாலை யீறும் நாற்பான் பிரபந்தங்களுமாகிய பதினோராந் திருமுறையும், சேக்கிழார் நாயனார் அருளிச்செய்த திருத்தொண்டர் புராணமாகிய பன்னிரண்டாந் திருமுறையுமாம்.

Koviloor Digital Library

தேவாரம், திருவாசகம், திருக்கோவை, திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், திருமுகப்பாசுரமுதல் நாற்பான் பிரபந்தமென்னு மிவற்றை அபயகுலசேகரசோழ வரசர்பெருமான் வேண்டப் பொல்லாப் பிள்ளையார் அநுக்கிரகம்பெற்ற நம்பியாண்டார்நம்பி மந்திரங்கள் பதினொன்றுதல் பற்றிப் பதினொரு திருமுறைகளாக வகுத்தருளினர். திருத்தொண்டர் புராணம் அநபாயசோழவரசர்பெருமான் காலத்திலே பன்னிரண்டாந் திருமுறையாக வகுத்தருளப்பட்டது. இவற்றைத் திருமுறைகண்ட புராணத்தானும், திருத்தொண்டர் புராண வரலாற்றானும் உணர்க.

இத்திருமுறைகள் ஆளுடையபிள்ளையார்முதல் அருண்மொழித்தேவர் இறுதியாயுள்ள நாயன்மாராற் கூறியருளப்பட்டனவேனும், சதாசிவமூர்த்தி பால்நின்று இருக்குமுதலிய வேதங்கணான்கையுங் காமிகமுதலிய விருபத்தெட்டாகமங்களையும் தோற்றுவித்தாற்போல, சிவபிரானே அவ்வாளுடைய பிள்ளையார் முதலாயினார்பால் அதிட்டித்துநின்று, அத்திருமுறைகளைத் தோற்றுவித்தலான், அவை, சிவபிரானால் இயற்றியருளப்பட்டனவேயாமென்க. அல்லதூஉம் பேயினாற் பிடிக்கப்பட்டான் வாய்ச்சொற்களெல்லாம் பேயின்சொற்களேயாமன்றி அவன்சொற்களாகாதவாறுபோலச் சிவபிரானால் அதிட்டிக்கப்பட்ட நாயன்மார் வாய்ச்சொற்களாகிய திருமுறைகளெல்லாம் அச்சிவபிரான் சொற்களேயாமன்றி அவர்சொற்களாகாமை தெற்றெனத் தெளியப்படும். இதனை "எனதுரை தனதுரை யாக நீறணிந் தேறுகந் தேறிய நிமலன்" என ஆளுடையபிள்ளையார் அருளிச்செய்தவாற்றானும் உணர்க.

திருச்சிற்றம்பலக்கோவையா ருண்மையிலே, "அத்திருவாக்கைப் பதிவாக்கியமென்றே கொள்வதல்லது பசுவாக்கியமென்று நினைத்தாலுஞ் சனனமாணத்துக்கே வித்தாம். இவ்வுலகத்திலே பதிவாக்கியமேதென்னில், அநாதிமலமுத்தராயுள்ள சதாசிவமூர்த்தியுடைய திருவாக்காகிய ஆகமவேதங்களன்றி, முன் பரிபாக சின்னம் விளங்கும்படி போதிக்கின்ற ஞானகுருமூர்த்தங்களாயுள்ள சந்தானசாரியர் சமயாசாரியருடைய திருவாக்குகளுமாம்." எனக் கூறுமாற்றானும் அவர் வாக்குச் சிவவாக்கேயாமென்பது தெளியப்படும்.

திருமுறைகள், முதலினும் முடிவினும் ஓங்காரத்தையுடைய ஆரியவேதம்போல, ஓங்காரவாச்சியராகிய சிவபிரானே பரம்பொருள் என்பதனையுணர்த்துமென்பது, அவை, ஓம் என்னும் பிரணவத்தின் முதலெழுத்தாகிய ஓகாரத்தைக் காயத்திரிமந்திரங்களின்முதற்கணிற்குஞ் சிறப்புடைய தகர மெய்யோடு சேர்த்துத், "தோடுடைய செவியன்" என முதற்றிருமுறையின் முதலினும், ஈற்றெழுத்தாகிய மகரத்தை "நின்றதெங்கு நிலவி யுலகெலாம்" எனப் பன்னிரண்டாந் திருமுறையின் ஈற்றினும் புணர்ந்து நிலவுதலானும், அவற்றின் கண்ணவாகிய "தேவராயு மசுரராயுஞ் சித்தர் செழு மறை சேர் - நாவராயு நண்ணுபாரும் விண்ணெரி காணீரு - மேவராய விரைமலரோன் செங்கண்மா லீசனென்னு - மூவராய முதலொருவன் மேயது முதுகுன்றே." "தேவர்கோ வறியாத தேவதேவன் செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்கு மற்றை - மூவர்கோ னாய்நின்ற முதல்வன் மூர்த்தி மூதாதை மாதாளும்

Koviloor Digital Library

பாகத்தெந்தை - யாவர்கோ னென்னையும்வந் தாண்டுகொண்டான் யாமார்க்குங் குடியல்லோம் யாதுமஞ்சோம்-மேவினோ மவனடியா ரடியாரோடு மேன்மேலுங் குடைந்தாடி யாடுவோமே.” என்பன முதலிய சுருதிகளானுந் துணியப்படும். மேலும், “தேவர் குறளுந் திருநான் மறைமுடிவு - மூவர் தமிழு முனிமொழியுங் - கோவை - திருவாசகமுந் திருமூலர் சொல்லு - மொருவாசகமென் றுணர்.” என்னும் ஔவையார் திருவாக்கானும், வேதமுந் திருமுறைகளும் ஒருபொருளையே நுதலியனவென்பது தெற்றென விளங்குமென்க.

ஆரியவேதத்திற் பதி பசு பாசங்களின் இலக்கணங்கள் கூறப்பட்டிருத்தல்போலத் திருமுறைகளின் கண்ணும் பதி பசு பாசங்களின் இலக்கணங்கள் கூறப்பட்டிருத்தலான், அவையும் முப்பொருளையு முணர்தற்குக் கருவியாயுளது என்னும் பொருளைத்தரும் வேதமென்னும்பதத்தானே விவகரிக்கப்படுமென்றற் கியாதோர் தடையின்மையுமறிக. இதனாலன்றே, “திருத்தோணி மிசைமேவி னார்கடங்க டிருமுன்பு தாழ்ந்தெ ழுந்து தமிழ்வேதம் பாடினார் தாளம் பெற்றார்.” எனவும், “மிக்கசொற் றமிழினால்வேதமும் பாடினார்.” எனவும், “விருப்புடன் பாட லிசைத்தார் வேதந் தமிழால் விரித்தார்.” எனவும், “மறைகளாய நான்குமென மலர்ந்த செஞ்சொற் றிருப்பதிகம்” எனவும், அருண்மொழித்தேவர் கூறியருளியதூஉமென்க. ஆளுடையபிள்ளையார் திருப்பாசுரமுதலியவற்றின் வகுத்தும் ஏனையவிடங்களில் குறிப்பாற்றெருகுத்தும் முப்பொருளியல்பு செப்பியவாறுகாண்க.

சிவபிரானுக்கு மந்திரந் தூலசரீரமும், ஆன்மா சூக்கும சரீரமும், சத்தி அதிசூக்கும சரீரமுமாமெனச் சிவாகமங்கள் ஓதுதலான், அம்மந்திர சொரூபமாகிய வேதங்களின் கண்ணும், அவற்றின் வேறாகாத திருமுறைகளின் கண்ணும் சிவபிரான் விசேட சாந்நித்தியமுற்றிருப்பரென்க.

பதியினது விளக்கம் அறிவொருசிறிதுமில்லாத கல் வெள்ளி செம்புகளில் அதிகமா? அப்பதியினது இலக்கணத்தையும் பிறவற்றையும் யதார்த்தமாகவே அறிவிக்கும் பேரறிவே வடிவாகிய தேவார திருவாசக முதலிய திருமுறைகளிலே அதிகமா? முன்னையவைகளினும் பார்க்கப் பின்னையவைகளில் அநந்தகோடிமடங்கதிகமன்றோ! கல் வெள்ளி செம்புகளிலே பதியினது விளக்கம் மந்திரநியாசத்திற்குப் பின்னன்றி முன்னில்லையே! தேவார திருவாசக முதலியவைகளோ பஞ்சாட்சரமந்திரத்தையும் அப்பஞ்சாட்சர முதலிய சகல மந்திரப் பொருள்களையும் உள்ளடக்கிநின்று சித்தி முத்தி சித்திப்பிக்கும் மகாமந்திர வடிவமே யாதலால் அவைகளிலே பதியினது விளக்கம் நித்தியமென்பது சத்தியமாமே. “நாம் ஈண்டிலேம், உமாபதியின் பேடகத்துள்ளோம்” எனக் கோயிற்புராணத்தைக் குறித்துச் சிவபிரான் கூறியருளிய திருவாக்கானும் அது தெளிக. இக்கருத்துப்பற்றியன்றோ பட்டினத்தடிகளும், “சொல்லினுஞ் சொல்லின் முடிவினும் வேதச் சுருதியினு - மல்லினு மாசற்ற வாகாயந் தன்னினு மாய்ந்து விட்டோ-ரில்லினு மன்ப ரிடத்தினு மீச

Koviloor Digital Library

னிருப்ப தல்லாற்-கல்லினுஞ்செம்பினுமோவிருப் பானெங்கள்கண்ணுதலே."* என்று அருளிச்செய்தனர். "ஒருகண மிருப்பன் றெய்வ வுருவினி லீசன் றன்மற் - றிருகணஞ் செங்கோ லோச்சு மிறையவர் பாலி ருப்ப - னருமறை யவர்கு ழாத்து ளம்புவீ ழளவி ருப்பன் - றுரிய யோகிக ளுளத்திற் றாங்குவ னிருந்தெப் போதும்." என்னும் பதிபசுபாச விளக்கச் செய்யுளும் இடவிசேடத்தாற் சிவபிரானது விளக்கம் ஆங்காங்குத் தாரதம்மியப்படுதலை வலியுறுத்துமாற்றால் இதற்கு உபகாரமாதலறிக.

இன்னும் நம்பியாண்டார்நம்பி தேவாரமுதலியவற்றை மந்திரங்கள் பதினொரு பகுதியனவாதல்பற்றிப் பதினொரு திருமுறைகளாகவும், அவற்றுள்ளே தேவாரங்களைச் சத்தகோடி மகாமந்திரப் பகுப்புப் பற்றி ஏழு திருமுறைகளாகவும், வகுத்ததூஉம் இத்திருமுறைகள் அச்சிவபிராற்குத் தூல சரீரமாகிய மந்திரமாதலொற்றுமை நோக்கியே யென்க. இவை அப்பெற்றியவாதல் "மந்திரங்க ளெழுகோடி யாதலினான் மன்னுமவ - ரிந்தவகை திருமுறைகளேழாக வெடுத்தமைத்துப் - பந்தமுறு மந்திரங்கள் பதினொன்று மாதலினா - லந்தமுறை நான்கினொடு முறைபதினொன் றாக்கினார்" என்னுந் திருமுறைகண்ட புராணத்தானுந் தெளியப்படும்.

*இதன்பொருளென்னையெனின், கண்ணுதல், சொல் முதலியவற்றிலே மந்திரநியாசமின்றி எந்நாளும் விளக்கமுற்றிருப்பன்; கல் முதலியவற்றிலே மந்திரநியாசத்துக்குப் பின்னன்றி முன் விளக்கமுற்றிருப்பானல்லன் என்க. எனவே, இறைவன் விளக்கமுறும் இடவிசேடம்தெரித்தவாறும். இஃதறியாது புறச்சமயிகள் கல்லினுஞ்செம்பினும் இருப்பான் அல்லன் எனக்கூறுதல் அறிவில்கூற்றாமெனவிடுக்க. என்னை! எங்கும் வியாபகமாய் இருக்கும் இறைவன் அவற்றில் இரானென்றல் சிறிதும்பொருந்தாமையானும், "கான்சாயும் வெள்ளி மலைக்கரசே" "செங்காட்டி லாத்தி நிழலருகே யிருப்பார்" "ஆளாவதெப்படியோ திருக்காளத்தி யப்பருக்கே" என்றற் றொடக்கத்தனவாக அடிகளருளிச் செய்த திருவாக்குக்களுக்கும், "செம்மலர் நோன்றாள் சேர லொட்டா—வம்மலங் கழீஇ யன்பரொடு மரீஇ—மாலற நேய மலிந்தவர் வேடமு—மாலயந் தானு மரனெனத் தொழுமே" எனச் சீவன்முத்தர்க்கும் வாசனாமலந்தாக்காமைப்பொருட்டு விக்கிரகாராதனம் வேண்டப்படுதலை வற்புறுத்திக்கூறும் சிவஞானபோதத் திறுதிச் சூத்திரத்திற்கும் முரணாகலானும், மகாஞானியாகியபட்டினத்தடிகட்கு அறியாமைக்குற்றம் பற்றுமாகலானும் என்க. அங்ஙனமாயின் "உளியிட்ட கல்லையு மொப்பிட்ட சாந்தையும் மூத்தை யறப்—புளியிட்ட செம்பையும் போற்றுகிலேன்" என்றதன்கருத் தென்னையெனின், சரியை முதலியன "உறங்கினோன் கையில் வெறும் பாக்கெனத்—தா"மேதவிர்தல் குற்றமாகாதென்னும் ஆகமவசன முண்மையின், தமக்கு அந்நிலையுற்றபோது தாம் அவ்வழிபாட்டை யொழிந்தமை கூறினாரேயன்றி அவ்விக்கிரகங்களில் சிவனதுவிளக்கமின்மையும் பிறர் அவ்வழிபாடு ஒழிதல்வேண்டுமென்பதும் கூறினாரல்லர். அது போற்றுகிலேன் என்னும் சொற்கிடக்கையானு மவர்க்கு மினிது விளங்கும். அற்றேல், "உறங்கினோன் கையில் வெறும்பாக் கெனச்" சரியைமுதலியன கழலுங்காலத்துச் சுட்டுணர்வின்றன்றோ? அங்ஙனமாகவும், இவ்வடிகள் சுட்டிக் கூறிய தென்னையெனின், நன்று வினாயினாய்; அவ்வியல்பினையுடைய ஞானிகள் வழிபாடொழிந்திருக்கும் உண்மையறியாதவுலகினர் சிவாலயவழிபாடுசெய்யாதவர் சிவஞானியாவரோவென இழித்துக்கூறி நிரயத்தெய்தாமைப்பொருட்டு அவர்கண்மேல்வைத்த கருணைமேலீட்டால் தம்வாயிலாக அறிவுறுத்தமையின் அது குற்றமாகாமை தெற்றெனவுணர்க. தோத்திரரூபமாகிய செய்யுட்களில் சாத்திரக்கருத்துக் குறிப்பாக ஆங்காங்கு ஆன்றோர் அமைத்துப்பாடியிருத்தலின் அத்தோத்திரத்தை அறிதன்மாத்திரையானே அவற்றின் உண்மைப்பொருண்முற்றும் உணரமுடியாது. சைவசாத்திரம்பற்றியே அஃதுணரப்படும். மற்றைய சைவநூல்களில் இதுபோல வருவனவற்றிற்கும் இவ்வாறுபொருள்கொணடு சமாதானம்பெறுக.

Koviloor Digital Library

மேலும், அத்திருமுறைக்கணுள்ள பாடல்கள் படைத்தல், காத்தல், அழித்தல் என்னு முத்தொழிலைச் செய்தமையும், தம்மை யோதினார்க்கு நோய் நீக்கம், செல்வப் பெருக்கம், ஞானப்பெருக்க முதலியவற்றை யளித்த லும் முத்தொழிலையு நடாத்துஞ் சிவபிரான் மந்திரமாகிய அச்சரீரங்களினின் றவற்றை இயக்கலானெனக் கடைப்பிடிக்க. சிவபிரான் மந்திர சரீரி யாதலினா லன்றே சிவாகமம், வேதாகமங்களை அருச்சிக்கவென விதித்ததூஉம், அவ் விதி புணர்ந்து ஆன்றோரனைவரும் வேத சிவாகமங்களையும் தமிழ்வேதமாகிய தேவாரமுதலிய திருமுறைகளையும் பண்டுதொட் டின்றுவரையும் அருச்சித்து வருவதூஉமென்க.

இன்னும்,இயல்பிலே திருவருள் விளக்கத்தையுடைய சிதம்பரமுதலாய திவ்விய ஸ்தலங்களிலே திருவருள் விளக்கம் பெரிது மெய்துதற்பொருட்டு நித்திய நைமித்திகங்களிலே வேதபாராயணஞ் செய்வித்தன் மாத்திரையி னமையாது சிவாகமத்திலே பூசாந்தத்தில் திராவிடதோத்திரஞ் செய்கவென விதித்தபடி திருமுறைகளையும் ஓதும்வண்ணம் ஆன்றோர்நியமித்ததூஉம், அத ஞன் அத்தலங்களிலே திருவருள் விளக்கம் பெரிதும் உறுவதூஉம், அவை யோதப்பெறாத பொழுது வேதபாராயண முள்வழியுந் திருவருள் விளக்கம் அத்துணையில்லாததூஉம் அத்திருமுறைகள் வேதத்தினும் பார்க்கத் திருவ ருள் விளக்கத்தைப் பெரிது மெய்துவிக்குஞ் சிறப்புப்பற்றியே என்க.

இன்னும், தாந்தோன்றிய ஞான்றுதொட் டிஞ்ஞான்று வரையுஞ் சித் தாந்த சைவத்தின் உயர்வையும், ஏனைச் சமயங்களின் றாழ்வையும், விபூதி உருத்திராக்க பஞ்சாக்கரங்களின் மகிமைகளையுந் தெளிவுற விளக்கிச் சர்வ லோகைக நாயகராகிய சிவபிரான் றிருவடியே நமக்குத் தாரகமாமெனப் பல ரும்விசுவசித்து வழிபட்டு உய்யும்வண்ணஞ் செய்வனவும் அத்திருமுறைகளே யாமென அறிக.

இன்னும்,எத்தனையோ அளவிறந்தகாலம் எத்தனையோ அளவிறந்த மகா ன்களாலே மந்திரநியாசஞ் செய்யப்பட்டு, அவ்வப்போழ்து அவ்வவருக்குப் பதிவிளக்கம் பெரிதுஞ் சித்திக்கப்பெற்ற சுயம்புலிங்க காணலிங்க தைவிகலி ங்க ஆரிடலிங்கங்களுள்ளும் எவை விசேடமுடையன? தேவார திருவாசக முதலிய திருமுறைப்பாக்களேறப்பெற்ற இலிங்கங்களன்றோ? இவ்வுண்மை சிவபுராணங்களாலும் திருமுறைப்பாக்களேறப்பெற்ற சிவஸ்தலங்களில் விசே டவழிபாடு காட்டும் பெரியோர்களுடைய அநுட்டானத்தினாலும் இனிது விளங்கும்.

இன்னும், மதுரைமுதலிய திருப்பதிகளிலே இலிங்கமுதலிய திருமே னிகளிருந்துமென்னை? ஆலயம் மண்டபங் கோபுரந் திருமதிலாதிகளிருந்து மென்னை? திருவாபரணாதிகளிருந்து மென்னை? பூசை திருவிழாக்களுக்கு விளைநிலந் தோட்டங்களிருந்துமென்னை? மடங்களும் ஆசாரியர்களுஞ் சந்நி யாசிகளு மிருந்துமென்னை? எத்தனையோ இலட்சம் பிராமணர்கள் அன்னம் புசிக்குஞ் சத்திரங்களிருந்துமென்னை? அப்பிராமணர்களால் வேதபாராயணங் கள் நடந்துமென்னை? அருகசமயமும், புத்தசமயமும் எங்கெங்குந் தலைப்ப

Koviloor Digital Library

டத் தலைப்படச் சைவங்குன்றிய குன்றிய பொழுது இவைகளெல்லாங் கூடியும் அப்புறச்சமயங்களை யோட்டிச் சைவசமயத்தை நாட்டினவா? இல்லையே. பின்பு அது செய்தவை யாவை? தேவாரமுதலிய திருமுறைப்பாக்களன்றோ? சைவாபிமானிகளாகிய அன்பர்களே! இவ்வுண்மையை நீங்களறியீர்களா? பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், திருவாதவூரடிகள் புராணங் கேட்டதில்லையா? இவை படிக்கப்பெறாத கோயில்களும், இவை படிக்கப்பெறாத மடங்களும், இவையறியாத கோயிலதிகாரிகளும், இவையறியாத பிராமணர்களும், இவையறியாத சைவாசாரியர்களும், இவையறியாத சைவர்களும் இருந்தும் பயனென்?

"சொற்கோவுந் தோணிபுரத் தோன்றலுமென் சுந்தரனுஞ்
சிற்கோல வாதவூர்த் தேசிகனு—முற்கோலி
வந்திலரேல், நீறெங்கே? மாமறைநூ லெங்கே?
யெந்தைபிரா னைந்தெழுத்தெங் கே?"

மதுரைத் திருவிளையாடற்புராணத்திலே இடைக்காடனார் பிணக்குத்தீர்த்த படலம் நீங்கள் கேட்டதில்லையா? மதுரைச் சொக்கநாதசுவாமி, தமதடியாருள் ஒருவராகிய இடைக்காடனார் பாண்டியன்மீது பொருட்பேறுகருதிப் பாடியபாட்டினை அவன் சபையில் அரங்கேற்றியபொழுது, அதனையவன் புறத்தே ஒருசிறிதவமதித்தமை பொறுக்கமாட்டாது, திருக்கோயிலைவிட்டகன்று உத்தரமதுரையிலே போய் எழுந்தருளியிருந்தாரென்னுந் திவ்வியசரித்திரத்தினாலே அவர், சிவாநுபூதிச் செல்வர்களாகிய சமயகுரவர் முதலாயினார் தம்மீதுபாடிய தேவாரமுதலிய திருமுறைகளை நாம் போற்றிப்புகழ்ந்து தமது திருக்கோயில் முதலியவற்றில் ஓதாமல் ஒழிவேமாயின் அதனைப் பொறுக்கமாட்டாரென்பதும், அங்கங்கே விளங்கி நின்று நமக்கருள் செய்யாரென்பதும், சொக்கநாதசுவாமி, தமக்கு அதிவிசித்திரமாகிய ஆலயங்கள், மண்டபங்கள், கோபுரங்கள், திருமதில்கள், இரத்தினாபரணாதிகள், விளைநிலங்கள், தோட்டங்கள் எல்லாஞ் சமர்ப்பித்த மகாராஜாவாகிய பாண்டியனையுந், தமதடியவரொருவர்பொருட்டு வெறுத்தருளினமையால், அவர், தம்மால் மிக விரும்பியருளப்பட்ட சமயகுரவர்முதலாயினார் பொருட்டும் பன்னிரு திருமுறைகளின் பொருட்டும், அத்திருமுறைகளைக்கேட்டுச் சிந்தித்துத் தம்மை வழிபடும் அடியார்கள் பொருட்டும் நம்மை வெறுப்பரென்பதும் தொனித்தல் காண்க.

அன்பர்களே, சிவலிங்கமென்பதற்குப் பொருள் என்னை? இலிங்கமென்னும் பெயர் சிலைமுதலியவற்றிற்கு நிருபசரிதவார்த்தையா? உபசரிதவார்த்தையா? சமயகுரவர்நால்வரும் சரியாவான்களா? கிரியாவான்களா? யோகிகளா? ஞானிகளா? தலந்தோறுஞ்சென்று சிவாலயதரிசனஞ்செய்தல் சரியையா? கிரியையா? யோகமா? ஞானமா? சிவபெருமானுக்கு வடிவம் எத்தனை வகைப்படும்? சரியையாளன் வழிபடும் வடிவம் எது? கிரியையாளன் வழிபடும் வடிவம் எது? யோகி வழிபடும் வடிவம் எது? ஞானி வழிபடும் வடிவம் எது? சிவனது சாந்நித்தியத்துவம் சிவலிங்கத்தில் நித்தியமா? அநித்தியமா? ஆவேசமா? அதிட்டானமா? அட்டபந்தன சலனாதி நிகழ்ந்தவழிப் பாலஸ்தாபனஞ்

Koviloor Digital Library

செய்யப்பட்டபொழுது சிவலிங்கத்திலே சிவ சாந்நித்தியத்துவம் உண்டா? இல்லையா? அப்பொழுது, அது வழிபடற்பாலதா? ஒழிதற்பாலதா? சிவலிங்கத்திற்குப் பிரதிஷ்டை உண்டா? இல்லையா? பிரதிஷ்டையாவது யாது? சிவலிங்கத்திற் சிவசாந்நித்தியத்திற்குக் காரணம் என்னை? அதனொழிவிற்குக்காரணமென்னை? தேவாரமுதலிய திருமுறைகளிற் சிவசாந்நித்தியத்திற்குக் காரணம் என்னை? அதற்கொழிவுண்டா? திருமுறைகளால் உணர்த்தப்படும் வடிவம் எது? சொரூபமா? தடத்தமா? சிவலிங்கத்திற்பாவிக்கப்படும் வடிவெது? சொரூபமா? தடத்தமா? இவற்றிற்குவிடையையும்,

"வேதம் பசுவதன்பான் மெய்யா கமநால்வ
ரோதுந் தமிழதனி னுள்ளுறுநெய்—போதமிகு
நெய்யி னுறுசுவையா நீள்வெண்ணெய் மெய்கண்டான்
செய்ததமிழ் நூலின் றிறம்."

என்னும் ஆன்றோர்வாக்கையும் நலமுறப் பலமுறை சிந்தித்து உண்மை கடைப்பிடித்துத் திருமுறைகளைப் பத்தியோடு ஓதி உய்யக்கருதுதலே உண்மை அறிவினாலாய சிறந்தபயனென்றுணர்க.

திருமுறை பதிநூல் சித்தாந்தம் என்றும் பகரப்படுமெனல்.

இனி, திருமுறைகளை அருளிச்செய்தபெரியார் பதிகாரணமுடையரென்பதும் இவர்கள்செயலெல்லாம் சிவச்செயல்களென்பதும், "பாலைநெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதுங்—காலனையன்றேவிக் காரங்கொண்ட—பாலன்—மரணந் தவிர்த்ததுவு மற்றவர்க்கு நந்தம்—காரணம்போ லல்லாமை காண்" என்னுந் திருக்களிற்றுப்படித் திருவெண்பாவானும், "என்பைப்பெண் ணாக்கி யிரும்பாலை நெய்தலா—யும்பர் மகிழ்ந்திடவன் றோதியதுந்—தம்பிரான்—கதவமடைக்கக் கழறியது மெல்லாம்—பதிகாண மென்றுணரப் பா." "அரவங் கடித்திறந்தா னுருயிரை மீட்டுந்—திருமறைக்காட் டிற்பின் றிறந்துங்—காமலையை—நீற்றறையை வேகமற நீராகப் பாடியதுங்—கூற்றுதைத்தான் போதமெனக்கொள்." "கல்லைப்பொன் னாக்கிக் கடுமுதலை வாய்ப்பிள்ளை—மெல்ல வழைத்து வெறுக்கையினைச்—செல்லுகின்ற—வாற்றிலிட்டு மீட்டு மருங்குளத்திற் கண்டதுவுஞ்—சாற்றிற் சிவகாணந் தான்." "ஊமையினை மாற்றி யுணர்மொழியைச் செய்ததுவுங்—காமனைவென் றேனெழுதக் கற்றதுவு—மாமையைப்போ—லைந் தடக்கி யீச னருளிற் கலந்ததுவு—முந்தும் பசுகாண மோ." என்னும் சிவஞானப்பிரகாச வெண்பாக்களானும், "நஞ்செய லற்றிந்த நாமற்ற பின்னுதன்—றன்செய லானேயென் றுந்தீபற—தன்னையே தந்தானென் றுந்தீபற." என்னும் திருவுந்தியாரானுந், துணியப்படுதலால் இவர்களருளிச்செய்த அத்திருமுறைகள் "பதிநூல்" "சித்தாந்தம்" என்னுந் திருப்பேர்களால் வழங்குதற்கும் உரிமையுடையனவென்ப தொருதலை. இக்கருத்துப்பற்றியன்றே, "பதிநூல் பயிலாத பாசண்டர் மார்க்கங்—கதியல்ல வென்றுரைத்த கர்னு—பதிநூலே—துள்ளபடி சொல்லா யுயர்ஞானக் கண்ணுடைய—வள்ளலே யெற்கருளை வைத்து" என்னும்வெண்பாவிற்போந்த வினாவிற்கு, "அம்மைதிரு வந்தாதி நக்கீரரந்தாதி—பொய்மையிலாப் பொன்வண்ணத் தந்தாதி—செம்மைத்—திருமூலர்

Koviloor Digital Library

மாலையிவை சித்தாந்த மாகும்—வருமூவர் வாக்கியமு மாம்" என்னும் விடை யெழுந்ததூஉமென்க. "எனதுரை தனதுரையாக" என்பதுமுதலிய பிள்ளை யார் திருவாக்குக்களானும் அது நன்கு துணியப்படும். மற்றைத்திருநாமங் களைப் பெரியபுராணம் முதலிய திருமுறைகளுட் கண்டுதெளிக.

திருமுறையிற் சிவபிரான் கழிபெருங்காதல் உடையரெனல்.

காமுகனுயினுன் தன்வாய்ச் சொல்லினும் தன்னுல் விரும்பப்பட்ட காமக்கிழத்தியர் வாய்ச்சொல்லிலே மிகவும் பற்றுடையனுய் மகிழ்ச்சியடை வன். அதுபோலச், சிவபிரானுந் தமது வாய்ச்சொல்லாகிய வேதாகமங்களி னும் தம்மால் விரும்பப்பட்ட அடியவர் வாய்ச்சொல்*லாகிய தேவாரமுதலிய திருமுறைகளிலே மிகவும் பற்றுடையராய் மகிழ்ச்சியடைவர். அது, "ஒழி த்தி டும்பவப் பகைவிரைந் துள்ளமே யோதுமூ துணர்வோர்முற் - பழிச்சு பாடலை † யரற்கவை விடர்க்கிளம் பாவைய ருரைபோலுங் - கழித்தி டேனுப சாரமென் றிதனைநீ கட்டுரை யெனக்கொள்வாய் - விழித்து மாரனை யெரித் தவே வருள்பெறும் விருப்பினர் விருப்பீதே." என்னும் வைராக்கிய சதகச் செய்யுளாற் பெறப்படும்.

இன்னுமிதனை, "தேவரெல்லாந் தொழச்சிவந்த செந்தாண் முக்கட் செங்கரும்பே மொழிக்குமொழி தித்திப்பாக - மூவர்சொலுந் தமிழ்கேட் குந் திருச்செவிக்கே மூடனேன் புலம்பியசொன் முற்றுமோதான்." என்னுந் தாயுமானசுவாமிகள் திருவாக்கும் வலியுறுத்துமென்க. அஃதன்றி, "பண் டையோர் நம்மைப் பரவு சொற்பாடல் கொண்டுநீ துதிகள்கூறெனவிளம்பி"‡ என்னுஞ் சுப்பிரமணியக் கடவுள் திருவுளக்கிடக்கையு மதுவாமாறு கண்டு கொள்க.

திருமுறைகள் திருவருளைக் கொடுக்குமெனல்.

திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளையார் அனுக்கிரகம்பெற்ற நம்பியாண் டார்நம்பி ஆன்மாக்கள் சிவபெருமானுடைய திருவருளைப் பெறுதற்காகவே திருமுறைப்பெருமையை இராஜராஜ அபயகுலசேகர சோழமகாராஜாவுக்குச் சொல்லி யருளினர். அதனை, "கொண்டு குலசேகரனுங் கோன்பால்வந்து குஞ்சரத்தோ னருள்செய்த கொள்கையெல்லா - மண்டுபெருங் காதலுடன் சொல்லியந்த வண்டமிழின் பெருமைதனை வகுத்துச் சொல்வார்-கண்டபெரு மந்திரமே மூவர் பாடல் கைகாணு மந்திரங்கண் ணுதலோன் கூற - லெண்டி சையுஞ் சிவனருளைப் பெறுதற்காக விம்மொழியின் பெருமையையா னியம் பக்கேணீ. சேடர்மலி காழிநகர் வேந்தர் தாமுந் தேவர்புகழ் திருத்தோணிச்

* அடியவர்வாய்ச்சொல் என்பது முன்னும் பின்னும் பதிவாக்கியம் என்று கூறியி ருத்தற்கு முரணுமை,சிவபிரான் அவர்வாக்கிற்கலந்திருத்தன் முதலிய எதுக்களானுணர்க.
† 'ஒழித்திடும் பவப்பகை விரைந்துள்ளமே யோது மூதுணர்வோர் முற்பழிச்சுபாடலை' எனவும், ‡ 'பண்டையோர் நம்மைப் பரவுசொற்பாடல் கொண்டுநீதுதிகள் கூறெனவிள ம்பி எனவும் விசேடித்து வற்புறுத்திக் கூறினமையால் தேவாரமுதலியதிருப்பாட்டுக்கள் அவற்றையருளிச்செய்தவர்களுக்கும் பிறர்க்குந் தப்பாது பெரும்பயன் றருவனவென் பது பெற்றும்.

Koviloor Digital Library

சிவனார் பங்கிற் - பீடுடைய வுமைமுலைப்பா லருளா லுண்டு பிஞ்ஞகனைச் சின
விடைமேற் பெருகக்கண்டு - தோடுடைய செவியன்முதற் கல்லூரென்னுந்
தொடைமுடிவாப் பரசமயத் தொகைகண் மாளப் - பாடினார் பதிகங்கள் பாவி
லொன்றும் பதினாறு யிரமுளதாப் பகருமன்றே. திருநாவுக்கரையரெனுஞ்
செம்மையாளர் தீயமணர் சிறைநீங்க வதிகைமேவுங் - குருநாமப் பரஞ்சுட
ரைப் பரவிச்சூலை கொடுங்கூற்றா யினவென்ன வெடுத்துக் கோதி - லொருமா
னைத் தரிக்குமொரு வரையுங்காறு மொருநாற்பத் தொன்பதினா யிரமதாகப் -
பெருநாமப் புகலூரிற் பதிகங்கூறிப் பிஞ்ஞகனா ரடியிணைகள் பெற்றாரே.
பின்புசில நாளின்க ணாரூர்நம்பி பிறங்குதிரு வெண்ணெய்நல்லூர்ப் பித்தாவெ
ன்னு - மின்பமுதற் றிருப்பதிக மூழிதோறு மீறாமுப் பத்தெண்ணா யிரம
தாக - முன்புபுகன் றவர்நொடித்தான் மலையிற் சேர்ந்தார் முறைகளெல்லாந்
திருத்தில்லை மூதூர்தன்னி - லன்றவர்கை யிலச்சினையால் வைத்தார்மன்ன
வாராய்ந்து தருகவென வருளிச் செய்தார். அருமறையைச் சிச்சிலிபண் டரு
ந்தத்தேடு மதுபோலன் றிதுவென்று முளதா முண்மைப் - பரபதமுந் தற்பர
மும் பரனேயன்றிப் பலரில்லை யென்றெழுதும் பனுவல்பாரி - னெறியினிடை
வேவாதாற் றெதிரேயோடு மென்புக்கு முயிர்கொடுக்கு மிடுநஞ்சாற்றுங் -
கரியைவளை விக்குங்கன் மிதக்கப்பண்ணுங் கராமதலை கரையிலுறக் காற்றுங்
காணே. என்றென்று நம்பிக்குப் பரிவாலுண்மை யின்றமிழின் பெருமைதனை
யியம்பக்கேட்டுக் - குன்றொன்று பேருருவங் கொண்டாற்போலுங் குஞ்சரத்
தோ னருளினையுட் கொண்டு மன்னன் - மன்றினிடஞ் சென்றுமறை யோர்க
டொண்டர் வார்சடையோர் காவலுடை மரபோர்க் கெல்லா - நன்றெங்கள்
கணபதிதன் சொல்லிதென்று நன்மையுடன் மன்னவனார் நவிலுங்காலை.” என்
னுந் திருமுறைகண்டபுராணத் திருவிருத்தங்களா னுணர்க.

திருமுறை முத்திகொடுக்குமெனல்.

சிவஞானமுடையோர் திருவாய்மலர்ந்தருளிய தேவாரமுதலிய திருமு
றைகள் ஆன்மாக்களுக்குப் பிறவிப்பிணி தீர்த்து மோட்சத்தைக்கொடுக்க வல்
லன. அதனை, “பிறவியெனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத்—துறவியெ
னுந் தொல்லோணி கண்டீர்—நிறையுலகிற்—பொன்மாலை மார்பன் புனற்காழிச்
சம்பந்தன்—றன்மாலை ஞானத் தமிழ்” என்னும் நம்பியாண்டார்நம்பி திரு
வாக்கானும், “காழிமாநகர்க் கவுணியர் குலத்தொருகாளை - யேழிசைத்த
மிழ் ஞானசம் பந்தனெம் மடியான் - யாழ நீபெற வெம்முரு விங்குவந் தளி
ப்பா-னாழி யோயது காறுமிவ் வரைப்பினி லமர்ந்து.” “ஈட்ட ருந்தவ மியற்று
கென் றருளிநீங் குதலும் - கோட்ட மின்றிமா லம்முறை வதிந்துபூங் கொன்
றைத் - தோட்ட லங்கலாற் றொழப்புகு முத்தமிழ் விரகர் - பாட்ட லங்கலாற்
பரஞ்சுடர்த் திருவுருப் பெற்றான்.” என்னுங் காஞ்சிப்புராணச் செய்யுட்களா
னும், “கேவல ஞானக் கிழவ னாருடைப்-பிள்ளைநா வரசு பேரா ரூர - னாதன
வாக்கிய னருந்தமிழ் மூலன் - சீவன் முத்தர் திருவாய் மலர்ந்த - நூல்பவ
நோய்க்கு நுண்ணிய மருந்தே.” என்னுஞ் சத்தியஞானபோத ஆசிரியப்பாவா
னும்; “வீட்டிற்கு வாயி லெனுந்தொடை சாத்துசொல் வேந்தபொது - வாட்
டிற்கு வல்ல னொருவற்கு ஞான வமுதுதவி - நாட்டிற்கி லாத குடர்நோய்

Koviloor Digital Library

நினக்குமுன் நல்கினுமென் - பாட்டிற்கு நீயு மவனுமொப் பீரெப் படியினு மே." என்னுஞ் சிவப்பிரகாச சுவாமிக டிருவாக்கானும், விரிவஞ்சிவிடுக்கப்ப ட்ட தேவாரத்திருக்கடைக்காப்புகள் பலவற்றானு முணர்க.

திருமுறைகட்கு ஒப்புயர்வு கூறன்முதலியன உய்தியில்லதோர்குற்றமாமெனல்.

தேவாரமுதலிய பன்னிரு திருமுறைகளுக்கும் ஒப்பாகவேனும் உயர் வாகவேனும் ஒருநூல் உண்டெனக் கூறிக் கொண்டாடுவோரும், அவற்றை நிந் திப்போரும், நிந்திக்க நினைப்போரும் எரிவாய் நிரயத்து வீழ்ந்து வருந்துவர். அதனை, "ஒப்பிலி யநாதி முத்த ஞேதிய வேத*மாதிக்-கொப்புயர் வுரைப் போர் நிந்தை யுரைப்பவ ருன்னு வாரும் - வெப்பெரி நிரயம் வீழ்ந்துவெந் துருகி வீயா - ரெப்பொழு தேறு வாமென் றிளைத்திளைத் தேங்கு வாரே." என்று சுப்பிரமணியப்பெருமான் அகத்தியமகாமுனிவருக்கு அறிவுறுத்திய பொருளையுடைய சிவதருமோத்தரச் செய்யுளானுணர்க.

இக்கருத்துப்பற்றியே திருக்கைலாச பரம்பரைத் திருவாவடுதுறையா தீனத்து ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதேசிகமூர்த்திகளும் தாமருளிச்செய்த இலக்கண க்கொத்துப்பாயிரத்திலே ஏழாஞ்சூத்திரவுரையில், "திருவைக் கோவைக் குங் கூட்டுக. மாணிக்கவாசகர் அறிவாற் சிவனேயென்பது திண்ணம்: அன் றியும், அழகிய திருச்சிற்றம்பலமுடையார் அவர்வாக்கிற் கலந்திருந்து அரு மைத் திருக்கையாலெழுதினர். அப்பெருமையை நோக்காது, சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, சங்கப்பாட்டு, கொங்குவேண்மாக்கதை முதலி யவற்றோடு சேர்த்துச் செய்யுட்களோடொன்றாக்குவர். அங்ஙனமுமமை யாது, இலக்கணமாவது தொல்காப்பியமொன்றுமே செய்யுளாவது திருவள் ளுவரொன்றுமே இவ்விரண்டு நீங்கலான இலக்கண விலக்கியமெல்லாம் ஒன் றற்கொன்று பெருமை சிறுமை இணையென்றுகொள்வாரென்பது தோன்ற இம்முறைவைத்து அடையைப் பொதுவாக்கினும். அவர் அதுமட்டோ இறையனாகப்பொருண்முதலான இலக்கணங்களையும், தேவாரம், திருவாச கம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம், சிவஞானபோதம், சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம், பட்டணத்துப்பிள்ளையார்பாடல்முதலிய இலக்கியங்களையும், ஓர்பொருளாகவெண்ணாது, நன்னூல், சின்னூல், அகப் பொருள், காரிகை, அலங்காரமுதலிய இலக்கணங்களையும், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு, இராமன்கதை, நளன்கதை, அரிச் சந்திரன்கதை முதலிய இலக்கியங்களையும் ஓர்பொருளாகவெண்ணி, வாணாள் வீணாள் கழிப்பர். அவரிவைகளிருக்கவே அவைகளை விரும்புதலென்னெ னின், பாற்கடலுட்பிறந்து அதனுள் வாழுமீன்கள் அப்பாலை விரும்பாது வேறு பலவற்றை விரும்புதல்போல அவரதியற்கை யென்க." என்று கூறிய நூஉமென்க.

* வேதம் என்பது ஆரியவேதத்தையும் திராவிடவேதத்தையும் உணர்த்துமென்பது "திராவிடவேதம் பூர்வீகமே" எனப் பின்வரும் விஷயத்தால் நன்கு தெளிக. ஆதிசத் தத்தால் திருமுறைகளைத்தழுவுவாருமுளர்; அவர் தமிழ்வேதம் பூர்வீகமுள்ளதென்பதை உணரார்போலும்.

Koviloor Digital Library

தமிழ்வேதத்திருப்பதிகம்.

ஆரிய வேதங்களிலே சாகை என்னும் பிரிவுகள் அநேகம் உள. ஆரிய வேதத்தின் பிரிவுகட்கு எங்ஙனஞ் சாகை என்னும்பெயர் வழங்கலாயிற்றோ அதுபோலத் தமிழ்வேதத்தின் பிரிவுகட்குந் திருப்பதிகம் என்னும் இப்பெயர் வழங்கலாயிற்று. ஆரிய வேதங்களிலே வல்லி, பிராஹ்மணம், அநுவாகம், பஞ்சாதி என்றாங்குத் தமிழ்வேதத்திற்கும் பிரிவுப்பெயரொற்றுமை காட்டுதும். வேதத்திலே ஆனந்தவல்லி, பிருகுவல்லி, சீக்ஷாவல்லி, என மூன்று வல்லி இருத்தல் போலத் திருஞானசம்பந்தசுவாமிகள் தேவாரங்கள் மும்முறையாகவும், திருநாவுக்கரசுசுவாமிகள் தேவாரங்கள் மும்முறையாகவும் வகுக்கப்பட்டிருத்தல் காண்க.

பிராஹ்மணம் என்பது ஆதேசம் என்று சொல்லப்படும். அதாவது கட்டளையிடவேண்டிய காரியங்களை ஏவுகிற வேதத்தின்பாகமாம். அங்ஙனமே தமிழ்வேதத்தினும் "ஆளிலை யெம்பெரு மானவை யட்டித் தரப்பணியே" எனவும், "முதலை தரச்சொல்லு காலனையே" எனவும், "கூற்றாயினவா றுவிலக்ககிலீர்" எனவும், "கண்ணி னுலுமைக் காணக் கதவினைத்—திண்ண மாகத் திறந்தருள் செய்மினே"எனவும் வருந் திருப்பதிகங்களும் இன்னோரன்ன பிற அற்புதத்திருப்பதிகங்களும் பிராஹ்மணம் போலுள்ளன வென்றறிக.

அநுவாகமென்பது ஒரு விடயத்தைப் பூரணமாகவுரைக்கும் வாக்கிய சமுதாயமாம். சாகையின் பேதத்துள் இதுவுமொன்று. பஞ்சாதி என்பது பத்துவாக்கியங்கொண்டதாம். இவ்வாறாய பஞ்சாதிகள் ஓரநுவாகத்திற் பலவும் வரும்; ஒன்று இரண்டும் வரும். சில அநுவாகங்களில் பஞ்சாதிக்கணக்குக்குமேல் அதிகவாக்கியங்கள் இருப்பதுமுண்டு. தமிழ்வேதத்து ஒவ்வொரு திருப்பதிகங்களும் சாகைபோல விளங்கலின் அநுவாகத்தை ஒத்தனவாகும்.

அநுவாகங்களும் பத்துவாக்கிய சமுதாயமடங்கிய பஞ்சாதி தங்கட்பொருந்தநின்றாற்போல இத்திருப்பதிகங்களும் பத்துப்பாசுரங்கள் தங்கட்பொருந்த நிற்றலும், அநுவாகத்தின்கட் பஞ்சாதி ஒன்று இரண்டு மூன்றும் வருதல்போல இத்திருப்பதிகங்களுள்ளும், திருஞானசம்பந்தசுவாமிகள் அருளிய "நெய்தற் குருகுதன் பிள்ளையென் றெண்ணி" எனவரூஉந் திருக்கழிப்பாலைத் திருப்பதிகத்தில் மூன்று திருப்பாசுரங்களும், "படையார் மழு வொன்றுபற்றி" எனவரூஉந் திருப்பிரமபுரத் திருப்பதிகத்தில் ஒரு திருப்பாசுரமும், திருநாவுக்கரசுசுவாமிகள் அருளிச்செய்த "நெடியமால் பிரமனோடு நீரெனும் பிலயங்கொள்ள" எனவரூஉந் திருக்குறுக்கை வீரட்டத்திருப்பதிகத்தில் இரண்டு திருப்பாசுரங்களும், "தம்மானங் காப்பதாகி" என்னுங் குறைந்ததிருநேரிசை எனப் பெயரிய திருப்பதிகத்தில் ஆறு* திருப்பாசுரங்களும், சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்த "திருவும் வண்மையுந் திண்டிறலரசும்" எனவரூஉந் திருநின்றியூர்த்திருப்பதிகத்தில் ஏழுதிருப்பாசுரங்

* சிவபிரான் தமிழ்வேதத்திலே சில திருப்பதிகங்களில் திருப்பாசுரங்கள் பத்துப் பதினொன்றாகிய நியதமழிய ஒன்று இரண்டு மூன்று ஆறு முதலியனவாகச்செய்தது இப்பெற்றி அறிவித்தற்குப்போலும்.

Koviloor Digital Library

களும் வருதலுங்காண்க. அநுவாகத்தின்கட் பஞ்சாதி அதிகமாய் வரன்மான இத்திராவிடமறைத் திருப்பதிகங்களுள்ளும், எரியார்மழு, அரனைபுள்குவீர், காடதணிகலம், பிரமபுரத்துறை, பிரமனூர், விளங்கியசீர், பூமகனூர், சுரருலகு, வரமதேகொள, உற்றுமை, என்னும் முதற்குறிப்புக்களையுடைய திருப்பிரமபுரத் திருப்பதிகங்களில் பன்னிருபாசுரங்கள் வருதலும், திருநாவுக்கரசுசுவாமிகள் அருளிய திருவையாற்றுத் திருவிருத்தத் திருப்பதிகத்தில் * இருபதுபாசுரங்கள் வருதலும், சித்தத்திருக்குறுந்தொகைத் திருப்பதிகத்தில் † முப்பதுதிருப்பாசுரங்கள் வருதலும் கண்டுகொள்க.

இன்னன நியாயங்களானே பத்துத் திருப்பாசுரங்களையுடைய ஒவ்வொரு பிரிவுக்கும் திருப்பதிகம் என்று பெயராம். அதனை "ஞானசம் பந்தன் பாமரு பாடல் பத்தும் வல்லார் மேற்பழி போமே" எனவும், "பாமரு செந்தமிழ் மாலை பத்திவை பாட வல்லார்" எனவும், "பண்ணோ டிசைபா டியபத்தும் வல்லார்" எனவும், "பாடல் பத்தும் பாட வல்லார் பாவம் பறையுமே" எனவும், வரூஉம் ஆளுடையபிள்ளையார் திருவாக்குக்களான் உணர்க.

முற்காலத்திலே பத்துப்பாக்களை ஒன்றாகத்தொகுத்து ஓர் நூலென்று வெளிப்படுத்துப. அங்ஙனமே முதலாம்பத்து, இரண்டாம்பத்து, மூன்றாம்பத்து முதலாகப் பப்பத்துத் தொகுக்கப்பட்டு, பதிற்றுப்பத்து என்றிருத்தலானும், திருமுருகாற்றுப்படைமுதலாகப் பத்துப்பாட்டு (நூல்) தொகுக்கப்பட்டு பத்துப் பாட்டு என்றிருத்தலானும், திருக்குறள், நாலடியார், ஔவைகுறள் முதலாயின ஒவ்வோரதிகாரங்கள் பப்பத்தாக வகுக்கப்பட்டிருத்தலானும் பதிகமென்பது பத்துப்பாடல்களையுடையதோர் பிரிவென்றே கொள்க. இலக்கணநூலார் பதிகமாவது ஐந்துபொதுவும் பதினொருசிறப்புமாகிய பல வகைப்பொருள்களையும் தொகுத்துச் சொல்வதென்பர்; அஃதீண்டைக்கேலாமை உணர்க.

இனிப் "பாயிர நாந்தி பதிக மென்ப" என்னும் விதிப்படி திருஞானசம்பந்த சுவாமிகளும் திருநாவலூர் நம்பியாரூரரும் இறுதியில் நாந்தி கூறலாகிய பாயிரமுரைத்தலாற் பதிகம் எனப் பெயர் பெற்றதென்பதூஉமாம். இங்ஙன மிவ்விருவர்களுடைய முதல் இறுதிக்கணின்ற திருமுறைகள் திருப்பதிகமெனப் பெயர் பெறவே, இடைக்கணின்ற அப்பாயிர முரைக்காத ஆளுடைய வாசு திருமுறைச் செய்யுட்களும் இனம்பற்றி அப்பெயர்பெற்றனவெனக் கண்டு கொள்க.

இவ்வாறு பொருளுரைக்காது சமயாசாரியசுவாமிகள் நால்வருந் திருத்தலங்கடோறுஞ் சென்று தரிசித்துப்பாடியருளினரென்று நூல்களுரைத்தலான், அத்தலவெல்லை சமீபித்த இடத்தும், தலமடைந்துழியும், தூலலிங்கமாகியகோபுரதரிசனமாயவிடத்தும், திருவீதிக்கணும் பரமனைநோக்கிப் பாடப்பெற்றனவாகலின் அவைவழிச்செல்வோர் பாசுரங்கள் என்னும் பொருட்

* இதனை இரண்டு திருப்பதிகங்களாகவும், † இதனை மூன்றுதிருப்பதிகங்களாகவுங் கொண்டு ஒரு அநுவாகத்தில் இரண்டு மூன்று பஞ்சாதிகள் வருதற்குச் சமமாகக் கொள்ளுதலு மொன்று.

Koviloor Digital Library

டாகவும் முடிதல் காண்க வென்பாருமுளர். அங்ஙனம் வழிச்செல்வோர்க்குப் பதிகன் என்னும் பெயருண்மையும், ஆரியவேதத்தும் ஆரண்யகம் என்னும் பகுதிகள் ஆரண்யசம்பந்த முள்ளனவென்று காட்டுப்பாட்டுக்களென அருத் தம்பண்ணலுண்மையும் கண்டுகொள்க.

சிலர் பாசுரம் என்பது பதிகம் என்றே பொருளுரைத்து, பதிகம் பாசுரம் என்பனவொருபொருட் சொற்களாமென்று கொண்டிடர்ப்படுவர். பாசுரம் என்பது செய்யுட்கும், பதிகம் என்பது அச்செய்யுள் பத்துக்கொண்டவோர் தொகுதிக்கும் பெயராதல் பன்னிரண்டாந் திருமுறைத் திருவருட்பாட்டுரையாற் றெரிவதுமன்றி,

> "நல்லார்கள் சேர்புகலி ஞானசம்பந்த னல்ல
> வெல்லார்களும் பரவு மீசனை யேத்துபாடல்
> பல்லார்களும் மதிக்கப் பாசுரஞ் சொன்னபத்தும்"

என்றருளியதனானும் பிறவாற்றானும் பெறுதும். இக்காரணங்களானே திருவருட்பா, திருமுறை, திருப்பாசுரம் என்னும் பெயர்கள் போலத் திருப்பதிகம் என்றசொல்லுந் தமிழ்வேதத்தின் ஒவ்வோர் சாகைகட்கும் பெயராயமைந்ததென்பது.

தமிழ்வேத சிக்ஷை.

ஆரியவேதாங்கங்கள் ஆறு உள்ளன. அவற்றுள், நிருத்தம் யாஸ்கர் என்னும் இருடியாரானும், சந்தம் பிங்கள முனிவரானும், சிக்ஷை, வியாகரணம் என்னு மிரண்டும் சிவபெருமான் றிருவருள் பெற்ற பாணினி முனிவரானுஞ் செய்யப்பட்டன. இவற்றுட் சிக்ஷை என்பது முக்கிய அங்கம். சிக்ஷா என்னும் பதம் சீக்ஷா என வேதங்களில் நீண்டு வரும். ஏனைய வழக்கிற்கங்ஙனம் வரல் கூடாதென்ப. சிக்ஷா என்னும் அங்கமுறைப்படியே வேதங்களை யோதுப. சிக்ஷை என்பது, ஶீக்ஷாம் வ்யாக்யாஸ்யாம꞉। வர்ண꞉ ஸ்வர꞉। மாத்ரா பலம்। ஸாம ஸந்தான꞉। இத்யுக்த꞉ ஶீக்ஷாத்யாய꞉। என்ற வேத வாக்கியங்களின்படி இன்ன இடத்தி லிருந்து இன்ன வெழுத்துப் பிறக்கும், இந்த யத்தன முடையது என்னு மிவை முதலியவற்றைப் போதிக்கிற நூலானே சிக்ஷிக்கப்பட்ட எழுத்து, சுரம், மாத்திரை பலம், சம உச்சாரணம், சங்கிதை என்னுந் தொடர்ச்சி முதலியவற்றை விளக்கும் நூலாம். இங்ஙனம் தமிழ்வேதத்திற்கும் சிக்ஷை அவசியமானதே. அத்தகைய சிக்ஷைகள் இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழ் நூல்களி னின்றுந்திரட்டப்படுதல் வேண்டும். அவற்றையெல்லா முரைக்கும் அகத்தியம், இசைநூல், செயிற்றியம், குணநூல், பஞ்சமரபு, பஞ்சபாரதீயம், என்னுமிவை இறந்துபட்டனவாகலான் திரட்டலரிதேயாம். ஆயினும் ஒருவாறு முள்ளிச்செடிக்கும் முத்திகொடுத்தருளினவரும் சந்தானசாரியசுவாமிகளுள் ஒருவருமாகிய உமாபதிசிவாசாரியசுவாமிகள் ஒன்று தொகுத்துச்செய்துளார். அதனையே தமிழ்வேதச்சிக்கையென்ப. அதன் பெயர் திருமுறைகண்டபுராணம். அது தமிழ்வேதச்சந்தசுகளெனப்படூஉம் பண்களின் கட்டளைகள் (வகைகள்) இவ்வளவின வென்பதை மாத்திரம் உணர்

Koviloor Digital Library

த்துகின்றது. ஆரிய சிக்ஷாநூலிற் சொல்லப்பட்ட எழுத்து, சுரம், சாமம் முதலியன கொண்டே தமிழ்வேதத் திருப்பதிகமுதலியன நடைபெற்றனவென்றுணர்க.

இருவகை வேத வியல்கள்.

ஆரியவேதங்கள் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என நான்கு. தமிழ்மறைகளும், திருஞானசம்பந்த சுவாமிகள் திருமறை, திருநாவுக்கரசு சுவாமிகள் திருமறை, சுந்தரமூர்த்திசுவாமிகள் திருமறை, மாணிக்கவாசக சுவாமிகள் திருமறை என நான்கு. ஆரிய வேதங்கள் நான்கு எனக் குறிப்பிடப்படினும் "த்ரயீ" என்று அமரகோசம் முதலியன கூறுகின்றன. அங்ஙனமே தமிழ்மறைகள் நால்வர்தமிழ் எனப் பிரசித்தி பெற்றிருப்பினும், "தேவர் குறளுந் திருநான் மறைமுடிவும்—மூவர் தமிழும்" எனத் தெய்வப் புலமை ஔவைப்பிராட்டியாரும், "தேவரெல்லாந் தொழச்சிவந்த செந்தாண் முக்கட் செங்கரும்பே மொழிக்குமொழி தித்திப் பாக—மூவர்சொலுந் தமிழ் கேட்குந் திருச்செவிக்கே மூடனேன் புலம்பியசொல்" எனத் தாயுமானசுவாமிகளும் வைராக்கியசதகக்காரர், பிரபுலிங்கலீலைக்காரர் முதலிய பிறரு மிங்ஙனங் கூறுதல் காண்க. அதர்வ முனிவரானும் அங்கிரா முனிவரானுங் கண்டெடுக்கப்பட்ட மந்திரபாகங்கள் "அதர்வணவேதம்" என நான்காவதாக வைத் தெண்ணப்பட்டாற்போல, திருவாதவூர் முனிவரானியற்றப்பட்டுத் தில்லைவாழந்தண முனிவர்களாற் கண்டெடுக்கப்பட்ட திருவாசகம் திருக்கோவை என்பன நான்காம் வேதமாக வைத்தெண்ணப்படூஉமென்க.

ஆரியவேதங்கட்குப் பிருகதி, அநுட்டுப் முதலிய சந்தசுகள் இருத்தல்போலத் தமிழ்வேதங்கட்கும் நட்டபாடை தக்கராகம் முதலியபண்கள் இருத்தல் காண்க. உதாத்தம், அநுதாத்தம், சுவரிதம், பிரச்சயங்களாயசுரங்கள் போலத் தமிழ் மறைக்கும் எடுத்தல், படுத்தல், நலிதல், மெலிதலாய நான்குமுண்டென்க. ஆரியவேதசாகைகள்போலத் தமிழ்வேதத் திருப்பதிகங்கள் கொள்ளப்படும். அச்சாகைகளின் வரூஉம் பிராஹ்மணம், கண்டம், அநுவாகம் போலத் தமிழ்மறைகளினுந் திருப்பதிகங்கடோறுமுள்ள திருப்பாசுரங்களெண்ணப்படும். அநுவாகமாதியவற்றின்வரூஉம் பஞ்சாதிகள் போலத் திருப்பாசுர அடிகள் இருத்தல் காண்க. ஆரியவேதங்களில் "ஸ்யஹஸ்ரவியஹஸ்ர்வா விஹஸ்ரவியதீ ஸாஜ்ஞா ஹாவிஸ்தயத்தீம்வவாவெராஹ-சீதி" எனச் சாமவேதத்திற் கூறியாங்கு எழுவகைச் சாமபேத மிருத்தல்போல எழுவகைத் திருமுறைகளிருத்தல் காண்க. இங்ஙன மேனையவற்றையு மொட்டி யுணர்ந்து கொள்க.

ஆரியவேத தமிழ்வேத ஒற்றுமை.

ஆரியவேதம் — முதலிற் சிவபெருமானால் அருளப்பட்டது.

தமிழ்வேதம் — அங்ஙனமே ஆதியிற் சிவபெருமானாற் செய்தருளப்பட்டதென்று சிவரகசியங் கூறுகின்றது.

Koviloor Digital Library

ஆ — சிவபெருமான் நான்கு திருமுகங்களினின்று தோற்றுவிக்கப்பட்டது.
த — சிவபெருமான் ஆசாரியசுவாமிகள் நால்வர் திருமுகங்களினின்று தோற்றுவிக்கப்பட்டது.

ஆ — சாகைகளை யுடையது.
த — திருப்பதிகங்களை யுடையது.

ஆ — நான்கு.
த — நான்கு.

ஆ — கந்தசுவாமி, அதர்வமுனிவர், சுவேதாசுவதரமுனிவர், பிரமதேவர், சனற்குமாரர், யாஞ்ஞவற்கியர், வியாசர், பிரசாபதி, வருணன், ஆசுவலாயனர், அநுமார், தத்தாத்திரேயர் முதலியபலரால் பின்னர்ச் சொல்லியருளப்பட்டது.

த — திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள், திருநாவுக்கரசுசுவாமிகள், சுந்தரமூர்த்திசுவாமிகள், மாணிக்கவாசகசுவாமிகள், சேந்தனுர், திருமாளிகைத்தேவர், புருடோத்தமநம்பி, கருவூர்த்தேவர் முதலாயினோராற் பின்னர்ச் சொல்லியருளப்பட்டது.

ஆ — பலபடக்கிடந்து வியாதமுனிவரால் வகுக்கப்பட்டது.
த — பலபடக்கிடந்து நம்பியாண்டார் நம்பி என்னுஞ் சைவமுனிவரால் திருமுறையாக வகுக்கப்பட்டது.

ஆ — பின்னர்ப் பிரமதேவராற் கூறப்பட்டது.
த — பின்னர்ப் பிள்ளையாராற் கூறப்பட்டது.

ஆ — அநேக சாகைகள் இலதாயிற்று.
த — அநேக திருப்பதிகங்கள் இலதாயிற்று.

ஆ — காயத்திரி, அநுட்டுப், பிருகதி, பங்தி முதலாய சந்தசுகளுடன் ஓதப்படும்.
த — நட்டபாடை, பழம்பஞ்சுரம், தக்கராகம், கொல்லி முதலாய பண்களுடன் ஓதப்படும்.

ஆ — கனம், சடை பொருந்த அத்தியயனம் பண்ணப்படும்.
த — சுத்தாங்கம், கீதாங்கம் இவை பொருந்தப் பாராயணஞ் செய்யப்படும்.

ஆ — சுனுதனர், அகத்தியர், சத்தியவசா என்பவர்புத்திரர் இராதிதாமுனிவர், பூருசிட்டமுனிகுமாரர் தபோநித்யர், மௌற்கல்யர்புத்திரர் நாகர் முதலாயினோர் விதக்கப்பட்டனர்.
த — அப்பூதியடிகணுயனுர், திருநீலநக்கநாயனுர், சிறுத்தொண்டநாயனுர், சண்டேசுரநாயனுர், மார்க்கண்டேயனுர், கோச்செங்கட்சோழநாயனுர் முதலாயினோர் விதக்கப்பட்டனர்.

ஆ — யாக்ஞவற்கியரது மனைவியாரான மைத்திரேயி, கார்க்கி, முதலிய நங்கையர் பேசப்பட்டார்கள்.
த — காரைக்காலம்மையார், மங்கையர்க்கரசியார், முதலிய நங்கையர் வியக்கப்பெற்றனர்.

Koviloor Digital Library

ஆ — மைத்ரேயீதி ஹோவாச யாஜ்ஞவல்க்ய உத்யாஸ்யந்வா அரேஹமஸ்மாத்ஸ்தாநாதஸ்மி ஹந்ததே (மைத்ரேயீ திகோவாச யாஜ்ஞவல்கிய உத்யாஸ்யந்வா அரேஹமஸ்மாத்ஸ்தாநாதஸ்மிகந்ததே) என மைத்திரேயி என்னும் மாதரசிக்கு உபதேசிக்கப்பட்டது.

த — "மானினேர்விழி மாதராய் வழுதிக்குமா பெருந் தேவிகேள்" என மங்கையர்க்கரசி யென்னு நங்கையர் திலகத்திற்கு உபதேசிக்கப்பட்டது.

ஆ — யமன்மனைவியாகிய' ஜான்மலி என்பவளால் கடவல்லி என்னும் யசுர்வேதபாகம் உபதேசிக்கப்பட்டது.

த — பரமதத்தன் மனைவியாராய், சிவபெருமானால் அம்மையேயென்று அழைக்கப்பட்ட காரைக்காலம்மையாரால் மூத்ததிருப்பதிகம் (தேவாரம்) பாடப்பட்டது.

ஆ — அவிமுக்தம், திருப்பருப்பதம், நொடித்தான்மலை (திருக்கயிலாயம்) திருக்கேதாரம், சிதம்பரம், திருவாரூர், பிரயாகை முதலிய தலங்களைப் புகழ்ந்து கூறுகின்றது.

த — அவையிற்றை புகழ்ந்து கூறுகின்றது.

ஆ — சனகாதி நால்வர்க்கும் கல்லால நீழற்கண் எழுந்தருளியிருந்து சிவதத்துவஞானம் உபதேசித்தருளியதை யசுர்வேதபாகமாகிய தக்ஷிணாமூர்த்திபுபநிடதம் வியக்கின்றது.

த — அதனை யாங்காங்கு வியந்து போற்றுகின்றது.

ஆ — திருநீற்றின் மகிமை கூறுவது பஸ்மசாபால உபநிடதம்.

த — திருநீற்றின் மகிமை கூறுவது திருநீற்றுப்பதிகம்.

ஆ — விநாயகக்கடவுள், வீரபத்திரக்கடவுள், தக்கயாகசங்காரம், சுப்பிரமணியக்கடவுள் என்னு மிவரை வியந்து துதிக்கின்றது.

த — அவர்களை ஆங்காங்குப் போற்றுகின்றது.

ஆ — தேவியாகிய பரமேச்சுரையைப் பல இடங்களிற் பேசும்.

த — அவ்வாறு கூறும்.

ஆ — கோயிலாகிய சிதம்பரத்தையே விசேடமாப் புகழ்வது.

த — அங்ஙனே புகழ்வது.

ஆ — ஆரிய முதனூல்.

த — தமிழ் முதனூல்.

ஆ — இறுதிக்கண் பாராயணப்பயன்கூறும்.

த — திருப்பதிக முடிவில் அப்பயன் கூறும்.

ஆ — சிவாலய நித்திய நைமித்திகங்கள், சிவபூசை முதலியவற்றி னுதைப் பெறும்.

த — அவற்றி னுதைப்பெறும்.

ஆ — முத்தியை அமிர்தம் என்று கூறும்.

த — அங்ஙனம் கூறும்.

Koviloor Digital Library

ஆ — முத்திப்பதத்தைச்சுவர்க்கம், நாகலோகம், சோமலோகம் என்றுரைக்கும்.
த — முத்தியை விண்ணுலகம், உம்பர்பதி, வீடு, வான், சிவலோகம் என்று கூறும்.

ஆ — தடத்தசொரூபலக்கணங்கள் கூறப்படும்.
த — இருவகை யிலக்கணமு மியம்பப்படும்.

ஆ — தாபத்திரயங்களை அடக்கும் பஞ்சசாந்தி கூறும்.
த — எவ்வகைத்துன்பங்களையும் போக்குங் கோளறுபதிகங் கூறும்.

ஆ — உபநிடதச் சாகைத் தொகை கூறும்.
த — திருப்பதிகத்தொகை யுரைக்கும்.

ஆ — ஓம் நமோ பகவதே ருத்ராய | ஓம் நமஸ்தே ருத்ரமந்யவ | எனவரூஉம் உருத்திரநமக முள்ளது.
த — வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி, மீளாமே யாளென்னைக் கொண்டாய் போற்றி" என இங்ஙனம் போற்றித் திருத்தாண்டகம், போற்றித்திருவிருத்தம், போற்றித்திருவகவல் உள்ளன.

ஆ — பஞ்சாக்ஷரம், உருத்திராக்கம், யோகம், பஞ்சப்பிரமம், ஷடங்கம் என்னுமிவை நரசிங்கதாபினி, உருத்திராக்கசாபாலம், தரிசனம், பஞ்சப்பிரமம், காலாக்கினிருத்திரம், பஸ்மசாபாலம் என்னு மிவை முதலிய உபநிடதங்களி னுணர்த்தப்படும்.
த — இவை பஞ்சாக்கரப்பதிகம், நமச்சிவாயப்பதிகம், திருநேரிசை, திருநீற்றுப்பதிகம் முதலியவற்றில் நன்கு உணர்த்தப்படும்.

இன்னன பல பொருள்களொத்தலானே இருவேதங்கட்கும் பேதங் காண்கிலேம். ஆரியவேதமே தமிழ்வேதம் தமிழ்வேதமே யாரியவேதம் என்க.

ஆரியவேத தமிழ்வேத தாரதம்மியம்.

ஆரியவேதம் — பரப்பிரமமாகிய பரசிவனாலே அருளப்பட்டது.
தமிழ்வேதம் — அப் பரமசிவனைத்தம்முளடக்கிய பெரியோர்களால் திருவாய் மலர்ந்தருளப் பெற்றது.

ஆ — பலபடக் கிடந்ததனை நான்காகவகுத்தவர் காசித்திருப்பதியின் மயக்கமுற்றவராகிய வியாதமுனிவர்.
த — பலபடக் கிடந்ததனைத் திருமுறையாக வகுத்தவர் திருநாரையூர்த்திருப்பதியில் ஞானவிளக்கமுற்ற ஆதிசைவமுனிகளாகிய நம்பியாண்டார் நம்பிகள்.

ஆ — சிவபிரானால் எழுதப் படாதது.
த — அவ்வாரியவேதம் அருளிய சிற்றம்பலம் உடையாராலே எழுதப்பட்டது

ஆ — வேதாரணியத்திலே கதவை மூடிச்சிவலிங்கத்தை நேரேதரிசிக்கவொட்டாமற்செய்தது.
த — பூட்டிய கதவைத் திறந்து அதனைத் தரிசிக்கச்செய்தது.

Koviloor Digital Library

ஆ – இந்திரன், சந்திரன், அன்னமயம், பிராணமயம், விஞ்ஞானமயம், பிரமன், விட்டுணு முதலிய பெயர்களானும் பிரமத்தைப் போற்றுவது.
த – அங்ஙனமின்றிச் சிவபெருமானுக்கே சிறப்பாயுள்ள திருநாமங்களை எடுத்துப் போற்றுவது.

ஆ – யசுர்வேதத்துட் சுக்கில யசுர்வேதம் ஓதுவோரை மத்தியானத்திற் சண்டாளத்துவம் உடையராகச்செய்வது.
த – எதை எப்பொழுது ஓதினும் சண்டாளத்துவம் நீங்கச்செய்வது.

ஆ – வாரணாசி, சிதம்பரம், பிரயாகை, திருவாரூர், சீர்காழி, முதலிய சில தலங்களைப் புகழ்வது.
த – அவைமுதலாகிய அநேகதலங்களைப் புகழ்வது.

ஆ – உபநயனச் சடங்கு செய்தபின் ஓதப்பெறுவது.
த – அச்சடங்கன்றிச் சமயதீக்கை விசேடதீக்கை முதலியன பெற்றோர்களால் ஓதப்பெறுவது.

ஆ – பல தேவர்களைப் புகழ்வது.
த – அவர்களையெல்லாம் பசுக்களென் றொதுக்கி விட்டுச் சிவபெருமான் ஒருவரையே பதியென்று புகழ்வது.

ஆ – யசுர்வேத தைத்திரியமுதற்சாகை வருணன் தன் குமாரன் பிருகுவுக்கு உரைக்கப்பெற்றது.
த – "தோடுடைய" என்னும் முதற்குறிப்பையுடைய முதற்றிருச்சாகை பிள்ளையார் தம்பிதாவுக்கு உரைக்கப்பெற்றது.

ஆ – காயத்திரி, அநுட்டுப், திருட்டுப், பங்தி, உட்டிணிக் முதலாய ஏழு சந்தசுகளை யுடையது.
த – நட்டபாடை, தக்கராகம், கொல்லி, தக்கேசி, குறிஞ்சி, பழந்தக்கராகம், மேகராகக்குறிஞ்சி, வியாழக்குறிஞ்சி, இந்தளம், சீகாமரம், நட்டராகம், பியந்தைக் காந்தாரம், செவ்வழி முதலிய முக்கிய இருபத்தொரு சந்தசுகளை யுடையது.

ஆ – அத்தியயன மாத்திர முடையது.
த – அதனுடனே நித்திய பூசை, நைமித்திகமாகிய மகோற்சவம் என்னுமிவற்றையு முடையது.

ஆ – பலசமயிகளுக்கும் பதிப்பொருளை நிச்சயிக்கவொட்டாது மயக்கஞ் செய்வது.
த – பதிப்பொருள் சிவபெருமானேயென்று நன்கு விளக்குவது.

ஆ – ஓதுவார் "விழிநீர் பெருக்கி–நெஞ்ச நெக்குருகி நிற்"கச்செய்யாதது.
த – ஓதுவார் "கருங்கன் மனமுங் கரைந்துகக் கண்க–டொடுமணற் கேணியிற் சுரந்து நீர்பாய–மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி–யன்பரா"கச்செய்வது.

ஆ – விட்டுணு, பிரமன், சூரியன், அக்கினி என்னு மிவர்கட்கும் ஆதிக்கங் கூறும் உபப்பிருங் கணங்களை யுடையது.

Koviloor Digital Library

த — பரம்பொருளாகிய சிவபெருமானைத் தம்முளடக்கிய சிவனடியார்களுக்கே ஆதிக்க முரைக்கு முபப்பிருங்கணத்தை யுடையது.

ஆ — பதினெட்டுப் புராணங்களாகிய உபப்பிருங்கணங்களை யுடையது.
த — அறுபத்து மூவராந் தனியடியார் புராணங்கள் அறுபத்து மூன்றும், தொகை யடியார் புராணங்கள் ஒன்பதுமாகிய எழுபானிரண்டு புராணங்களாகிய உபப்பிருங் கணங்களை உடையது.

ஆ — உலகியல் வழக்கங்கூறும் தனுர்வேதம், கந்தருவ வேதம், அர்த்தவேதம், ஆயுர்வேதம் என்னும் உபவேதங்களை யுடையது.
த — உலகியல் வழக்குடன் சரியை, கிரியை, யோக, ஞானபத லக்கணங்களையும் முத்திநெறியையும் முன்னுறத் தெரிக்கும் திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், பதினொராந்திருமுறை என்னும் உபவேதங்களை உடையது.

ஆ — கேட்டோர் ஆசுவலாயனர், சனற்குமாரர், புசுண்டர், பைப்பலாதர், பிப்பிலாதர், மைத்திரேயி, சுவேதகேது, அங்கீரசு, அசுவினிதேவதைகள், தத்தியங்முனி, பிருகு, யமன் முதலிய பசுக்கள்.
த — இதனைக் கேட்டவர் பதிப்பொருளாகிய பரமசிவன் ஒருவரே.

ஆ — தன்கணுள்ள மந்திரங்களைத் தேவர்கள் போர்முகத்தில் அத்திரங்களாகப் பிரயோகித்த போது அசுரர்களாற் கவரப்பட்டது.
த — தன்கணுள்ள திருப்பாசுர மந்திரத்தை முனைமுகத்தில் அத்திரமாகப் பிரயோகித்த காலைப் புத்தநந்திதலையுருளவும், புத்தர்கள் கவரமுடியாது வெருவியோடவும் செய்தது.

ஆ — அசுரர் கடனீருக்குட் கொண்டு செல்லவும் அதற்குள் அமைந்து இருந்தது.
த — பிள்ளையார் வைகையாற்றில் விட எதிரேறி நீரைக்கிழித்துச் சென்றது.

ஆ — கடற்குள் தான்தங்கிய இடத்திற்கு யாதோர் மகிமையும் உண்டாகப்பெற்றிலது.
த — தான் யாண்டுச் சென்று தங்கிற்றோ ஆண்டுத் திருவேடகம் என்னுந் திருத்தலமுண்டாகிச் சிவபெருமான் சாந்நித்தியராயமர்ந்து இன்றும் அருள்புரியப்பெற்றது.

ஆ — இசைக்குள் அடங்கியது.
த — இசைக்குள் அடங்காதது. (அது யாழ்மூரித்திருப்பதிகம் பாடியருளிய காலத்துத் திருநீலகண்டயாழ்ப்பாண நாயனுர் தம் யாழை முரிக்கப் போய உண்மையாற் றெரிந்தாம்.)

ஆ — அழிதன் மாலையவாய சுவர்க்காதி பதவிகளை யடைவிக்கும் வேள்விகளைப் போதிப்பது.
த — அப்பதவிகளழிந்து, அவையிற்றின் றலைவர்களும் நொங்கினுர்கள், அவர் தொகை கங்கைக்கரைக்கண் உள்ள மணலை நிகர்க்குமாகலின் அவையிற்றை நச்சாது சிவபுண்ணியங்களைச் செய்க என்றுரைப்பது.

Koviloor Digital Library

ஆ — வெளிப்படையிற் கன்மயாகமுங் குறிப்பின் ஞானயாகமும் விதிப்பது.
த — வெளிப்படையில் ஞானயாகமும் குறிப்பிற் கன்மயாகமுங் கூறுவது.

ஆ — இசைக்கருவிகளின்றிப் பாராயணம்பண்ணப்படுவது.
த — தாளம் வீணையென்னும் இசைக் கருவிகளுடன் பாராயணம் பண்ணப்படுவது.

ஆ — எந்த மந்திரங்களும் பிரணவமின்றி யியங்கப்பெறாதது.
த — எத்திருப்பதிகமந்திரங்களும் பிரணவம் வேண்டாதே யியங்கப்பெறுவது.

ஆ — [illegible] (ப்ரஹ்மசர்யேணத பச்சைவ தேவாஸ் சுவர்க்கம் லோகமாயந்) என்று அதர்வண வேதங் கூறுமாறு பிரமசரியத்தாலுந் தவத்தாலுமே சுவர்க்கத்தைத் தேவர்கள் பெற்றார்களென்பது. சாமவேதமும் இங்ஙனே கூறும்.

த — எந்நிலை யுடையராயினும் சிவபெருமானுக் கன்பராயினவர் அழியாத பேரின்பத்தையு மடைவார் என்பது.

ஆ — [illegible] (புத்ரேணலோகாந் ஜயதி) [illegible] (புத்ரேணாநந்தியமச்நுதே) [illegible] (நாபுத்ரஸ்யலோகோஸ்தி) என்னு மிவைபோன்ற பலவசனங்களானே புத்திரனால்உத்தமலோகத்தை யடையலாம். ஆகலாற் புத்திரப்பேறு உத்தமலோகசாதகம் என்கின்றது.

த — "தந்தையார் தாயா ருடன்பிறந்தார் தாரமார் புத்திரரார் தாந்தாமாரே—வந்தவா றெங்ஙனே போமாறேதோ மாயமா மிதற்கேது மகிழவேண்டாம்" எந்தையாரது திருநாமமாகிய நமச்சிவாய வென்று உரைமின். உடனே எழுவிசும்பின்மே லிருக்கலா மென்றுரைப்பது.

ஆ — "அரவக லல்குலார்பா லாசைநீத் தவர்க்கே வீடு" என்பது.
த — "அரவக லல்குலார்பா லாசைநீத் தவர்க்கே வீடு—தருவமென் றளவில் வேதஞ் சாற்றிய தலைவன் றன்னைப்—பரவைதன் புலவி தீர்ப்பான் கழுதுகண் படுக்கும்பானு ளிரவினிற் றூது" போக்கியது.

ஆ — திரிபுரதகன ரதத்திற்குக் குதிரைகளாகும்.
த — தெய்வத்தன்மை பொருந்திய (ஆரம்) மாலையாக விளங்கும்.

ஆ — வருந்தித்தவஞ்செய்து தன்னைத் திருவடிப்பாதுகையாக அணியப்பெற்றது.

த — இறைவனை திருவடிநோவ வெழுந்தருளிவந்து எழுதித் திருக்காத்திற் றாங்கப்பெற்றது.

ஆ — தன்னைக்கேட்ட சனகாதி நால்வர்க்கும் ஞானம் உதியாவண்ணம் கலக்கமுண்டாக்கியது.

த — தன்னைக் கேட்ட பாண்டியனுக்கும், யானைமுதலியவற்றிற்கும் அறிவு விளங்கச்செய்தது. அஃதன்றி அநேக சமணர் புத்தர்களுக்கும் சிவஞானத்தை உதிப்பித்தது.

Koviloor Digital Library

ஆ — நாராயணம், தைத்திரீயம், சாந்தோக்கியம், பிருகதாரணியம், கைவல்லி யம் என்னும் உபநிடதங்களாகிய ஐந்துதிருப்பதிகங்களாலும் தகர வித்தையாம் சிதம்பர வழிபாட்டை விளம்புவது.

த — கற்றுங்கு, ஆடினாய், அன்னம், பனைக்கை, செஞ்சடை, பத்தனாய், அரி யானை, பாளையுடை, கருநட்ட, மங்குன், மடித்தாடு என்றற் றொடக் கத்த பதினொரு திருப்பதிகங்களானும் தகரவித்தையாஞ் சிதம்பரவ ழிபாட்டை யுரைப்பது.

ஆ — சிதம்பரக்ஷேத்திரமுதலியவற்றிலுள்ள சிவசந்நிதானங்களில் 'அவதார யாத்' என்று கட்டிய முரைக்கப்பெறுவது.

த — சிதம்பர மகாதலமுதலிய திவ்விய திருப்பதிகடோறுமுள்ள சிவசந்நிதா னங்களிலே பூசாகாலங்களில் "தேவாரம் அருளிப்பாடுக" "திரு வாசகம் அருளிப்பாடுக" என்று கட்டியமுரைக்கப்பெறுவது.

ஆ — ஆயிரத்து நூற்று முப்பத்தொரு சாகைகளைக் கொண்டது.

த — ஓரிலக்கத்து மூவாயிரஞ் சாகைகளாந்திருப்பதிகங்களை யுடையது.

ஆ — சாம வேத கானஞ் செய்த இராவணற்குச் சிவபெருமான் முக்கோடி நாளும் ஒரு வாளுந் தேரும் அருளினர்.

த — இவ்வேதம் பாடினவர்களின் பொருட்டுச் சிவபெருமான் பல உயிரை யெழுப்பியும், நோய்களை நீக்கியும், பொன்னீந்தும், திருமணத்தில் அநேகருக்குமுத்திகொடுத்தருளியும்,வேண்டியவேண்டியாங்கருளினர்

ஆ — இதனைக் கேட்டுக் களிப்ப இது பெரும்பாலும் வழங்கப் பெறாஉம் உத் தர திசைக்கண்ணோர்சபையும் வகுத்தாடியருளினனல்லனிறைவன்.

த — இதனைக் கேட்டுக் களிப்பான் இதுவழங்கப் பெறாஉம் திருவாலங்காடு முதற் கன்னியா குமரி காறு மைந்து சபை வகுத்து ஆடியருளி நிற்கு மவ்விறைவன்.

ஆ — அசுரபரிசம் பட்டுக் குற்ற மடைந்து காஞ்சியில் வந்து பூசித்து மாற்றிக் கொண்டது.

த — அக்கினி எங்ஙன மழுக்கின்றித் தன்னைச்சேர்ந்த வத்துக்களையுந் தன் போலாக்குகிறதோ, அங்ஙனந் தானோர் குற்றமு மடையாது தன் னைத் தொட்டவர்களையும் பரிசுத்தப்படுத்துகின்றது.

ஆ — அற்புத வாயிலாகச் சிவபரத்துவஞ் செய்தது காணேம்.

த — அநேக திவ்வியாற்புதங்களைக்காட்டி அவைவாயிலாகப் பரசிவனே முழு முதற் கடவுளென்றுஞ் சைவசித்தாந்தமே மெய்ச்சமயமென்றும் விள க்கிற்று.

ஆ — அபசுரத்துடன் ஓதினால், துவட்டாவுக்கும் இந்திராதிதேவர்கட்கும் பெருந்துன்பு விளைந்ததுபோலச் சங்கடங்களை விளைப்பது.

த — "இசைகூர வந்தவண மேத்துமவர்" எனவும், "சம்பந்தன் கருதுபாடல் கோழையா வழைப்பினுங் கூடுவார் நீடுவானுலகி னூடே" எனவும் ஆளுடைய பிள்ளையார் திருவாய்மலர்ந்தருளி யாங்கு எவ்வண மேத் தினும் எல்லாப் பொருளையும் பயப்பது.

Koviloor Digital Library

ஆ — ஒருவர்க்கெங்ஙனந் தம் வாக்கு அத்துணை யின்பமாத் தோன்றுதோ அன்னதே போலப் பரப்பிரமமாகிய பரசிவத்திற்கு அத்துணையின்பமாத் தோன்றுவது.

த — ஒருவர்க்கெங்ஙனந் தம்வாக்கினும் தம் மதலையர் குதலைகள் இன்பம் பயக்குமோ, அதினும் விடர்களுக்குத் தங்காதலிளம்பாவையர் உரைகள் எத்துணை மகிழ்வை விளைக்குமோ, அவையே மானப் பரப்பிரமமாகிய பரசிவனார்க்கத்துணை மகிழ்வை விளைப்பது.

ஆ — பிர்ம காயத்திரி கூறி மூன்று சந்தி செய்வார் அஃதோதுவார்.

த — பிரம காயத்திரி யுடன் சிவகாயத்திரி, பஞ்சப்பிரமம், சடங்கம் முதலியவுரைத்து நான்கு சந்தி செய்வார் இஃதோதுவார்.

ஆ — சோமுகன் கவர்ந்து கடலிலொளித்தபோது, நீருக்கு அழியாத தென்பதை மாத்திரம் விளக்கியது.

த — பிள்ளையார் சமண வாதம் புரிந்த காலை நீருக்கும் நெருப்பிற்கும் அழியாததென்பதை விளக்கியது.

ஆ — இதனைச் செய்தபின் பரசிவனிடம் அநேகர் வணங்கி நோன்புநூற்றிக் கேட்டுக் கொண்டனர்.

த — இதனைச்செய்யும் காலத்திலேயே பரசிவனார், தம்மாலாகவேண்டியவற்றை யேவலாள்போலியற்றிக்,கீதவிருப்ப னெங்ஙனம் பாடகற்கிப்பல்லவிகூறாக இப்பதங் கூறாகவென்று தானாக வெடுத்துக்கொடுத்தவன் பாடக்கேட்டுவகையங்கடலிற் படிவனோ,அது சிவண அடியெடுத்துக் கொடுத்து இரந்து மன்றாடிப் பாடக்கேட்டுக் களித்தமையாலன்றோ மன்றாடி யன்றாடியென்னும் பெயர் கொள்ளார்மே யெஞ்ஞான்றும் மன்றாடியென்னும் பெயரைக் கொண்டன ரென்க.

இங்ஙனந் திராவிட வேதப் பெருமை யின்னும் பலகோடியில்லையோ? அவையெல்லாம் பல நாளாகப் பன்னூப் படைத்தார் உடம்பெல்லாங் காதுபெற்றார்க்குச் சொன்னாலுஞ் சொல்லித் தொலைவுபடுமோ? கேட்டு முடியுமோ? இல்லை இல்லை. ஆகலான் அப்பாற்செல்வாம்.

தமிழ்வேதம் பூர்வீகமே.

ஆரியர் சிலர் "ஆரிய வேதங்கள் சாக்ஷாத் பரப்பிரமத்தாற் செய்தவை. திராவிடவேதங்கள் மாணிக்கவாசகரின் பின்றோன்றியவை. எனவே கலியுகப் பாடல்கள். இருக்கு முதலிய வேதங்களோ யுகாயுகங்களாக உள்ளன. தமிழ் வேதப்பாடல்கள் மானுடராலியற்றப்பட்டன" என்று உண்மை யுணராமே நிந்திப்பர். அவையெல்லாம் பதிவாக்கென்றே கொள்ளப்படும் என்பது அதிப்பிரபலநியாயத்தானே முன்னர் விளக்கப்பட்டது. அன்றியும்,

ருக்வேதம் பகவோத்யேமி யஜுர்வேதம் ஸாமவேதமாதர்வணம் சதுர்த்தமிதிஹாஸபுராணம் பஞ்சமம் வேதானாம் வேதம் எனச் சாந்தோக்கியச் சுருதியிலே ஏழாவது பிரபாடகத்திலே கூறியாங்கு ஐந்தாம் வேதமென்று புகழப்பட்டதாகியுள்ள பரமேதிகாசமாகிய சிவரகசியத்திலே,

Koviloor Digital Library

ஒன்பதாம் அமிசத்திலே, சிவபெருமான் திராவிடவேதத்தைத் திருவாய்மலர்ந்தருளினர் என்றும், அது பர்வதாகிருதியாக வெள்ளிமலைக்கண் விளங்குகிறதென்றும், அதன்பாகங்களையே ஆன்மாக்கட்கு வேண்டிய அளவு ஸ்ரீஞானசம்பந்தாதி யருளாளர்கள் பின் சிவாஞ்ஞைப்படி வெளிப்படுத்துவாரென்றுங் கூறப்பட்டமையானும், அங்ஙனே வெளிப்படுத்தியருளினமையானும் திராவிடவேதங்களும் பூர்வமே உள்ளன வென்க.

வியாசர் வேதங்களை நான்காக வகுப்பதற்கு முன் தமிழ்மொழி யிருந்தவுண்மை * ஆசிரியர் தொல்காப்பியனார் செய்த இலக்கணப்பாயிரத்தில் மதுரையாசிரியர் நச்சினார்க்கினியர் ஆகிய பிராமணர் நன்கு விளக்கியதூஉங் கண்டுணர்க. அங்ஙனம் வச்சிரசூசிகோபநிடதச் சுருதியும் துவாபர யுகத்திற்றோன்றினர் வியாசர் என்று தெரிக்கின்றது. இவ்வாறு துவாபர யுகத்திற்றோன்றிய வியாசர், தமது குமாரரான சுகமுனிவர்க்கு யசுர்வேத பாகமாகிய சுகரகசியோப நிடதத்தை உபதேசித்ததாக வேதத்தாற் றெரிகிறது. அதற்கு முன் அப்பாகம் இன்றோ? அதர்வண வேதத்திலே ஒருசாகை சீதாபிராட்டியின் பெருமை அறைகின்றது. அவர் துவாபரயுகத்தாராகலின் அதன் பின்னர்த்தான் அப்பாகஞ் செய்யப்பட்டதோ? இன்னும் அதர்வணவேத பாகங்களிற் கிருஷ்ணர் விடயங்களும், இராமதாபினியில் இராமர் விடயங்களும், யசுர்வேதபாகமொன்றிற் சுவேதாசுவதர முனிவர் கூறியவும் காணப்படுகின்றன. இவர்களும் துவாபர யுகத்தவராகலின் அதற்குமுன் இவைகளில்லையென்றன்றோ தெரிகிறது. ஆகலால் ஆரிய வேதமும் பிற்காலத்தவரானும்,மானுடர்களானும் வெளியிடப்பட்டனவே யெனின் ஆரியர் என் சொல்வர். வேதங்களைச் சொன்ன வியாசர், பிரசாபதி, பிரமன், ஆசுவலாயனர், யாஞ்ஞவற்கியர், தத்தாத்திரேயர், அநுமார், வருணன் முதலினோரையெல்லாந் தேவாம்சமென்பர் போலும். அங்ஙனே யாமுந் தமிழ்மறையருளிச்செய்தவர்கள் யாவருந் தேவர்களுக்கும் மேற்பட்ட அம்சம் என்கின்றேம். "வேதாம் தேவாஸ் ஸ்ருஜத் ப்ரஹ்மா வ்யாகரோத் பூர்வமேவ தத்" என்னும் யசுர்வேதசாகை வசனப்படி பழையகற்பங்களிற் பிரமத்தால் வெளியிடப்பட்ட சுருதிகளையே பின்னர்ப் பலப்பல இருடிகள் தம்வாக்குப்போலக் கூறினர் என்பர்போலும். அங்ஙனாயின், தமிழ்வேதமு மவ்வணமே பூர்வத்திற் பிரமத்தான் வெளிப்படுத்தி யருளப்பெற்றுப் பின்னர்த் திருஞானசம்பந்தசுவாமிகள் முதலாயினரால் வெளிப்படுத்தியருளப்பெற்ற தென்கின்றேம்.

அன்றியுந் திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் திருநாவுக்கரசுசுவாமிகள் சுந்தரமூர்த்திசுவாமிகள் தாங்கள் அருளிச்செய்த திருப்பாசுரங்களிலே பிரமமாகிய பரசிவனால் அருளப்பட்ட ஆரியவேதம், தமிழ்வேதம் என்னும் இரண்டனையும் புகழ்கின்றனர். ஆரியவேதத்தை ஆரியம் என்றும், தமிழ்வேதத்தைத் தமிழ் என்றும் உரைத்தருளினர்.

"* மாரியுங் கோடையும் வார்பனி தூங்கநின்—றேரியு நின்றங் கிளைக்கின்ற காலத்து—வாரிய முந்தமி ழும்முட னேசொல்லிக்—காரிகை யார்க்குங் கருணைசெய் தானே" என்னுந் திருமந்திரம் இங்கேசிந்திக்கற்பாலது.

Koviloor Digital Library

திருவெங்குரு. (க - திருமுறை.)

ஆதிய வருமறை யிருமை யலர்கொடு
வோதிய ருணர்வுடை யோரே.

அச்சிறுபாக்கம். (க - திருமுறை.)

தமிழ்ச்சொலும் வடசொலுந் தாணிழற் சேர
வம்மலர்க் கொன்றை யணிந்த வெம்மடிகள்.

திருக்கடம்பந்துறை. (ரு - திருமுறை.)

ஆரி யந்தமி ழோடிசை யானவன்
கூரி யகுணத் தார்குறி நின்றவன்
காரி கையுடை யான்கடம் பந்துறைச்
சீரி யல்பத்தர் சென்றடை மின்களே.

திருவாவடுதுறை. (சு - திருமுறை.)

பந்தணவு மெல்விரலாள் பாகன் றன்னைப்
பாடலோ டாடல் பயின்றான் றன்னைக்
கொந்தணவு நறுங்கொன்றை மாலை யானைக்
கோலமா நீல மிடற்றான் றன்னைச்
செந்தமிழோ டாரியனைச் சீரி யானை.

திருமறைக்காடு. (சு - திருமுறை.)

* முத்தமிழு நான்மறையு மானான் கண்டாய்.

திருவீழிமிழலை. (எ - திருமுறை)

நம்பினார்க்கருள் செய்யுமந்தணர் நான்மறைக்கிட மாயவேள்வியுள்.

என அருளிச்செய்தமைகாண்க. ஈண்டுக் காட்டப்பட்ட தமிழ்வேதத் திருப்பாசுரங்களிலே 'ஆரியம் தமிழ்' 'செந்தமிழ் ஆரியம்' 'முத்தமிழ் நான்மறை' என்பவற்றாற் குறிக்கப்பட்டன அவ்வம்மொழி மறைகளே யென்பது மறுக்கப்படாத விடயமாம். ஆரியபாஷை, தமிழ்ப்பாஷை என்று கூறுதற்காங்குள்ள சத்திக்கிரகங்கள் இடங்கொடாவென்க. இன்னும் அளப்பில கூற்றுக்களுள்ளன. அவையெலாம் விரியு மாகலி னீண்டுக் காட்டப்பட்டில. ஆங்காங்குக் கண்டுகொள்க.

இன்னும் பூர்வதிராவிடவேதத்தைச் சாரமாகவுடைய தமிழ்மறைகளுளொன்றாய திருவாசகமுந் திருக்கோவையாரும் இரண்டாவது யுகமாகிய திரேதாயுகத்திற் செய்தருளப்பட்டன வென்று தெரிகிறது. அதனைச் சிறிது விவரித்துக் காட்டுவாம். மாணிக்கவாசகசுவாமிகள் இருந்த காலம் அரிமர்த்தனபாண்டியர்காலமென்பது நன்கு விளங்கும். அவர்காலத்தைப் பலரும் பலவகையாக் கூறுவர். சில ஆங்கிலக் கல்வியார் சுமார் இரண்டாயிரம் வருடத்திற்கு முன் இருந்தார் என்றும், சிலர் ஆயிரத்தைஞ்ஞூறு வருடங்களுக்குமுன் இருந்தார் என்றும், சிலர் வேறுவகையாகவுங் கூறுநிற்பர். நாம் ஆராயுங்கால், "நரியைப் பரியாக்கி ஞாலமெல்லா நிகழ்வித்துப்—பெரிய தென்னன் மதுரையெல்லாம் பிச்சதேற்றும்" என்று மணிவாசகப்பிரான் திருவாய்மலர்ந்தருளியுள்ளார்.

* சதாசிவ தத்துவ முத்தமிழ் வேதம் என்ற திருமந்திரம் இங்கே கவனிக்கற்பாலது.

Koviloor Digital Library

நரியைப் பரியாக்கிய இடம் சம்புகாச்வகம் என்று சொல்லப்படும். அங்ஙனஞ் சோமசுந்தரக்கடவுள் சம்பு விலங்குகளை (நரிகளை) அசுவங்களாக்கிய திருவிளையாடல் இரண்டாவது யுகமாகிய திரேதாயுகத்திலே நடந்ததாகப் பிரமகைவர்த்த மகாபுராணங் கூறுகின்றது. எங்ஙனமெனில்,

[illegible] க்ருதே ப்ரஹ்மவநம்நாம த்ரேதாயாம் ஜம்புகாச்வகம் | த்வாபரே ஹ ப்ருகத்கச்சம் சந்திரலேகா கலௌயுகே— என்னும் பிரமகைவர்த்தபுராண சுலோகங்கள் கிருதயுகத்திற் பிரமவனம் என்றும், திரேதாயுகத்திற் சம்புகாசுவகம் என்றும், துவாபரயுகத்திற் பிருகத்கச்சம் என்றும், கலியுகத்திற் சந்திரலேகை என்றும் (அவ்விடம்)பெயர்பெறுமென த்தெரிவிக்கின்றன. கலியுகத்திற் சந்திரலேகை யெனப்படுமென்ற வித்தலம் சந்தலை யெனவழங்கப்படுகிறது. இதிலிருந்துதான் சிவபெருமான் நரிகளைத் திரட்டிக் குதிரைகளாக்கிக்கொண்டு வந்தனர். அதனாற் சம்புகாச்வகம் எனப் பெயர்பெற்றதென்க. இதன்விரிவைப் பிரமகைவர்த்தபுராணம் சுமந்துதேவவர் மாசம்வாதத்திற் பரக்கக்காண்க. இங்ஙனம் அத்திருவிளையாடல் அக்காலத்த தாகலிற்றிருவாதவூரடிகளும் திரேதயுகத்திலிருந்து திருக்கோவைதிருவாசகங் களாகிய தமிழ்மறைகளை அருளினர் என்பது விசிதமாகின்றது. அதுபற்றியே "பக்தாமிர்தம் விச்வஜநாநுமோதநம் சர்வார்த்ததம் ஸ்ரீமணிவாசகவாங்மயம்- ஸகஸ்ரசாகோபநிஷத் ஸமாகமம் நமாம்யகம் த்ராவிட வேதசாகரம்" எனப் பண்டித நவரத்தினங்களுட் கடகர்ப்பரர் என்பார் கூறிய மணிவாசகதீபிகை கூறுகின்றது. ஆகவே இத்தமிழ்மறையின் பின்வந்த ஆரியமறைகளுமுள. ஆகலாற் றிராவிடவேதம் ஆரியமறைபோலப் பூர்வமேயுளதென்க.

திருக்கடைக்காப்பு.

தேவாரத் திருப்பதிகங்கடோறும் இறுதியில் வரூஉம் திருப்பாசுரங்கள் திருக்கடைக்காப்பு எனப் பெயர்பெறும். திரு - அழகு, மேன்மை. கடை- இறுதி. காப்பு - காத்தல். காத்தற்பயன் கூறுஞ் செய்யுள் காப்பு எனப் பெயர் பெற்றது. திருஞானசம்பந்தசுவாமிகள், சுந்தரமூர்த்திசுவாமிகள், காரைக்காலம்மையார், திருவிசைப்பா அருளிச்செய்த நாயன்மார் என்னும் இவர்களே திருக்கடைக்காப்புக் கூறி அவற்றில் தத்தம் திருப்பெயர்களும், திருப்பதிகப் பயன்களும் உரைத்துளார். "ஆயிரமுகத்தா னகன்ற தாயினும்—பாயிர மில்லது பனுவலன்றே" என்பது செந்தமிழிலக்கண விதியாகலின் என்க. அங்ஙனே ஆரியவேதங்கள் கூறுவதற்கும் விதி மாகேசுரர் கூறினர். என்னே? ஒரு பொருளுரைப்பா னெடுத்தியாப்பான் புக்க வாசிரியர், அதனை எழுவகையா னிரூபணஞ்செய்து காட்டல்வேண்டுமென்ப. அவை உபக்கிரமம், உபசங்காரம், அப்பியாசம், அபூர்வதை, பலம், அருத்தவாதம், உபபத்தி என்பனவாம். இவையிற்றைச் சத்தவித இலிங்கமென்ப வடநூலார். இவ்வெழுவகை இலிங்கங்களானும் ஆரியவேத சாகைகண் முற்றியுள்ளனவாம். அங்ஙனமே வேத சாகைகள் ஒவ்வொன்றன் இறுதிக்கண்ணும் லிங்கங்கள் கூறப்பட்டுள்ளன. எவ்வெவ் வுபநிடதங்களை யாரியார் கூறினரோ அவ்வவரே பலலிங்கங்களையும்

Koviloor Digital Library

சாகாவிறுதிக்கண் உரைத்துளார். ஆகலாற்றிருஞானசம்பந்தர் முதலாய ஆசாரியசுவாமிகளும் தாம் அருளியது தமிழ்வேதமாகலான் அம்முறைமைபற்றிப் பலலிங்கங்களென்னு நூற்பயனையுந் தாமே பதிகவிறுதிக்கண் உரைத்தருளினார்கள்.

இருக்குவேத அக்ஷமாலிக சாகையைக் குகப்பெருமானார், பிரமன் வேண்டிக்கொள்ள, அவற்கு உபதேசித்து இறுதிக்கண், [illegible] ப்ராதரதீயானோ ராத்ரிக்கிருதம் பாபம் நாசயதி | சாயமதீ யானோ திவஸக்கிருதம் பாபம் நாசயதி | தத்சாயம் ப்ராதம் ப்ரயும் ஜாநம் பாபோ பாபோ பவதி | ஏவமக்ஷமாலிகயா ஜப்தோ மந்த்ரஸ் ஸத்யஸ் சித்திகரோ பவதி | எனத் தாமே பலலிங்கமுங் கூறியருளினார்.

அங்ஙனே யசுர்வேதக் கைவல்ய சாகையைப் பகவான் பரமசிவனார் சூத்திராசாரிய ஆசுவலாயனருக்கு அறைந்து இறுதிக்கண், [illegible] என்று தாமே நூற்பயனாகிய பலலிங்கத்தையுந் திருவாய் மலர்ந்தருளினார்.

கிருஷ்ண யசுர்வேத மந்திரசாகையை அத்தியாச்சிரமிகளாகிய சிவஞானியர்க்குச் சுவேதாசுவதர மகாமுனிவனார் உபதேசித்து, இறுதிக்கண் [illegible] துக்கஸ்யாந்தோ பவிஷ்யதி என்று தாமே பலலிங்கமாகிய நூற்பயனும் உரைத்துளார்.

சாமவேத பாக ருத்திராக்க சாகையைப் புசுண்ட மகாமுனிவர்க்கு உபதேசித்தருளிய காலாக்கினிருத்திர பகவான் முடிவில் [illegible] என்றுதொடங்கி, [illegible] என்று தாமே நூற்பயனுரைத்தருளினார்.

அதர்வவேத நவம சாகைகளில் ஒன்றாய அதர்வசிகையை எல்லார்க்குந் தெரிந்த அதர்வணவிருடியனார், பைப்பலாதர், ஆங்கிரசு, சனற்குமாரர் என்னு மூவர்க்கும் உபதேசித்து, இறுதியில், "[illegible]

[illegible]| [illegible]" என்று தாமே பலலிங்கமாகிய நூற்பயனுங் கூறினர்.

இங்ஙனமே ஆரியவேத சாகைக ளொவ்வொன்றின் முடிவினும் அவ்வவற்றைக் கூறிய ஆசிரியர்களே நூற்பயனு முரைத்தார் என்று நான்கு வேத சாகைகளினின்றும் வசனங்களெடுத்துக் காட்டினும்.'இதனானே தமிழ்வேதத் திருப்பதிக இறுதிக்கண் நூற்பயனுரைத்தலின்றியமையாத தொன்றென்பதூஉம், ஞானசம்பந்தர் முதலிய திருவருளாளப்பெருந்தகையார் தாங்களே நூற்பயனுரைத்தருளினமை சால்பென்பதூஉம் யாவரும் இனிதின் உணர்ந்துகொள்க. இங்ஙனமிருத்தலால், "தோன்று தோற்றித் துறைபல முடிப்பினுந்—தான்றற் புகழ்த றகுதியின்றே" என்னும் விதி யிவ்வருளாளர் மாட்டுச் செல்லாதென்க.

தமிழ்மறைப்பாராயணபலன்.

தமிழ்மறைக்கண் உள்ள திருப்பதிகங்களை அத்தியயனம் பண்ணும் பலன்கள் அவ்வப்பதிகங்களினிடத்தே உரைத்தருளப்பட்டுள்ளன. அதனாலே தமிழ்மறை எல்லாப்பயன்களையுங் கொடுக்குமோரருமறையென்பது பெறப்படுகின்றது. அத் தமிழ்மறைத் திருப்பதிகங்களுள் சில சிவஞானத்தைக் கொடுப்பனவும், சில போகத்தைக் கொடுப்பனவும், சில சித்திகளைக் கொடுப்பனவும், சில முத்திகளைக் கொடுப்பனவும், சில இவையல்லாத பிறபயன்களைக்கொடுப்பனவுமாக விளங்கும். ஆகலால் புத்தியை விரும்பினோர் அதனை யருளுந் திருப்பதிகங்களையும், முத்தியை விரும்பினோர் அதனை யருளுந் திருப்பதிகங்களையும், இரண்டனையும் விரும்பினோர் அவ்விரண்டனையுந் தரும் திருப்பதிகங்களையும் பாராயணஞ்செய்யக்கடவர். திருக்கடைக் காப்புக்களைக் கொண்டு இவை புத்தியளிப்பன, இவை முத்தி தருவன, இவை சித்தி கொடுப்பன, இவை யெல்லாந் தருவனவென்று அறிந்து கொள்க. திருக்கடைக்காப்பில்லாது வரூஉந் திருநாவுக்கரசுசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய திருப்பதிகங்களை, அருளிய காலம், காரணம், பொருள் முதலியவற்றானாய்ந்து இன்னது இன்னபலன்கொடுக்குமெனக்கொள்க. தமிழ்மறையிற் பாராயணபலன் அதிகமாக உள்ளன. அவற்றை எல்லாம் எடுத்துக்காட்டின் மிகவிரியுமாகலின் திருஞானசம்பந்தசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளியவற்றுட் டாலீபுலாக நியாயமாகச் சில தொகுத்துக்காட்டுவாம்.

"கோலத்தாற் பாட வல்லார் நல்லாரே. உயர்ந்தாரொடுங் கூடுவரே. பழியொடு பாவ மிலரே. உம்பராரெதிர்கொள வுயர்பதி யணைவரே. வணங்கியேத்த மருவாபிணிதானே. வானநாடினி தாள்வரிம் மாநிலத்தே. ஏத்துவார்க் கிடர் கெடுமே. தீவினைநோயிலராய்—ஒத்தமைந்த வுயர்வானிலுயர்வினோடோங்குவரே. நற்றமிழ் சொல்ல வல்லவர் நல்லவரே. அடையாவினைகளமரலோக மாள்வரே. அல்லலோ டருவினை யறுதலாணையே. புகழ் தாங்குவாரே. தொல்வினை தீர்த லெளிதாமே. பொன்னடைந்தார் போகங்கள் பலவடைந்தார் புண்ணியரே. விண்ணவரோ டினிதாக வீற்றிருப்பா ரவர்தாமே. விண்ணுலக மெதிர்கொள்ள விரும்புவரே. சிவகதியைப் பெறுவாரே. பாரோடு விண் பாலகரே." இங்ஙனம் பல வருவன. அவைமெலாங் கண்டுகொள்க.

Koviloor Digital Library

திருமுறைகள் ஓதும்விதி.

ஆரியத்தின்கணுள்ள வேதசிவாகமங்கள் ஓதுவதற்கு அதிகாரிகள், ஓதுமுறைமை, இடம், காலம், பயன் முதலிய இலக்கணங்கள் ஆங்காங்குக் கூறப்பட்டுள்ளன. அவற்றுளாரியவேதங்களில், "வேதாந்தே பரமம் குஹ்யம் புராகல்பப் பிரசோதிதம் | நாப்பிர சாந்தாய தாதவ்யம் நாபுத்ராய நாசிஷ்யாய வாபுந: | யஸ்யதேவே பராபக்தி: யதாதேவே ததாகுரௌ | தஸ்யைதே கதிதாஹ்யர்த்தா: ப்ரகாசந்தே மஹாத்மந: | எனவரூஉம் யசுர்வேத வாக்கியங்களின்படி, வேதாந்தத்திற் பரமரகசியமாகவும், பழைய கற்பங்களில் வெளியிடப்பட்டதாகவு முள்ள இதனைப் புத்திரனில்லாதவன், சீடனில்லாதவன், சாந்தியடையாதவன் என்னு மிவர்க்குக் கொடுத்தறகாது என்பதும், எவனுக்குப் பரசிவனுரிடத்தில் நல்ல அன்புண்டோ, சிவனிடத்துள்ளதுபோல ஆசாரியர்களிடத்துப் பத்தி யாருக்கு உண்டோ, அம்மேலோருக்கே இவை விளங்கும் என்பதும் தெரிகிறது.

ப்ருஹ்விதஹ்ரம்வரிஷ்ட ஈஸஹஸ்ரஸ்வஸ்ரோ நாமிமுஷம் | எனக் கைவல்லியசாகையினும், நாஸ்திகாயக்ருதக்நாயதுஷ்க்ருதாயதுராத்மநே | தாம்பிகாய ந்ருசம்ஸாய சடாயாந்ருதவாதிநே | ஸுவ்ரதாயஸுபக்தாய ஸுவ்ருத்தாய ஸுசீலிநே | குருபக்தாய தாந்தாய சாந்தாய ருஜுசேதஸே | சிவபக்தாய தாதவ்யா எனவரூஉம் அதர்வணவேத வாக்கியங்களானும் அவ்வுண்மை பெறப்படும். ஆகலாற் றமிழ்மறைகள் ஓது முறையையுஞ் சிறிது கூறுவாம்.

பன்னிருதிருமுறைகளும் பன்னிரு மந்திரநிரைப்பொருளாகலானும், முத்தமிழ் விரவியனவாகலானும், ஒன்றிரண்டென வகுக்கப்பட்டனவாகலானுந் தொடர்ச்சி யுடையனவென்க.

எனவே தேவாரம் ஓதினல் மற்றைய திருவாசகமுதலிய திருமுறைகளை வரிசைக்கிரமமாக ஓதி முடிக்கவேண்டுமென்பதுணர்க. பூதசுத்தி முதலிய ஐவகைச்சுத்திகளு ளொன்று விடுக்கப்படினும், சோடச உபசாரங்களுளொன்று நீக்கப்படினும், பஞ்சப்பிரமசடங்கங்களுள் ஒன்றுகழிக்கப்படினும், உடம்பின் கணுள்ள அவயவங்கள் பலவற்றுள் ஒருறுப்புக் குறைக்கப்படினும் எங்ஙனங் குற்றமோ அங்ஙனம் ஒருதிருமுறை நீக்கப்படிற் குற்றமாம். பன்னிரு திருமுறைகளையும் வரிசையாக ஓதிவரல் முப்பானிரண்டு இலக்கணங்களுந் தவறாது பெற்ற உடல்போலாம். சிலவற்றைக் கழித்தோதல் அவ்வுறுப்பிலக்கணங்கள் சிலகழியப்பெற்ற அங்கம்போலாம். ஆகலாற் றவறாது ஓதுக. சிலர் தேவாரம் முதலியவற்றைபோதிப் பெரியபுராணங்கூறி முடித்து, அதன் பின்னர்ப் பரம்பரை வழக்கென்று திருக்கோவையாரை இறுதிக்கண் ஓதலும், சிலர் "உலகெலா முணர்ந் தோதற் கரியவன்" என்னுந் திருப்பாட்டை ஓதி அதன்பின்னர் "வாழ்க வந்தணர் வானவ ரானினம்" என்னுந் தேவாரத் திருப்பாசுரத்தை ஓதலும், தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் என்னு மிவ்வைந்து மன்றி மற்றைய திருமுறைகள்

Koviloor Digital Library

பண்வகுக்கப்படாமையானும், நேரே தோத்திரரூபங்களாக இல்லாமையானும் அவையோதற்பாலன வல்லவென்று நீத்து, ஐந்தைமாத்திரம் ஓதலும் கூடாவாம்.

பன்னிரு திருமுறைகளையும் ஓதுகின்றவர் ஓதுவார் பண்டாரங்கள் என்று சொல்லப்படுவார். அங்ஙனம் விதிப்படி ஓதுகின்ற அவரைச் சிவபெருமானாகவே பாவித்தல் வேண்டும். அதுபற்றியே சிவபெருமானுக்கும் முத்திக்கு முரியதாய "பண்டாரம்" என்னும் பெயரான் அவர் அழைக்கப்பட்டார். "மூலபண்டாரம் வழங்கு கின்றான் வந்து முந்துமினே" என்று தமிழ்மறை யுரைப்பதுங் காண்க. பண்டாரம் என்னுஞ் சொற்பொருள் அரும் பொருள் இருக்குமிடம் என்பது. கருவூலம், பொக்கிஷம் என்பனவும் இப்பொருளவே. அரும்பொருளாவையெனில் பன்னிருதிருமுறைகளேயாம். இங்ஙனமாய அரும்பொருட்டிருமுறைகள் அவர் உள்ளத்தின்கட் கிடக்கப்பெறுதலான் அவர்க்கு அச்சீரியபெயர் போந்ததென்க. பண்டாரம் என்னும் மகாமகிமைபொருந்திய இப்பெயரை இக்காலத்து மது மாமிச பக்ஷணமுடையராய், ஆசாரமில்லாதவராய் உள்ள வள்ளுவர்முதலாயினோர் வைத்துக்கொண்டு ஐயம்வாங்கியும், அன்னக்காவடியெடுத்தும், பிணத்தின்முன்னர்ப் பாட்டுக்களைப்பாடியும் அவ்வருமையைப் போக்கிக்கொண்டனர். நிற்க. ஓதுவாரில்லாவிடின் ஏனையோரும் ஓதலாம். அவரும் பொதுவாக உரைக்குமிடத்து மதுமாமிசபக்ஷணமில்லாதவராய், சைவாசார முடையவராய், சிவதீக்ஷைபெற்றவராய், விபூதிருத்திராக்கதாரணமுடையவராய் இருத்தல் வேண்டும். இன்னும் அவர், இன்றியமையாத இலக்கிய இலக்கணங்களுடன் நிகண்டு தார்க்கிகமுதலியவற்றிற் பயிற்சியுடையவராய், பதி பசு பாசம் என்னுந் திரிபதார்த்த இலக்கணங்களையு முணர்த்தும் சிவஞானபோத முதலிய சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கிலும், பண்டாரசாத்திரங்கள் பதினான்கிலும் வல்லவராய், வேதசிவாகமப்பயிற்சி யுடையவராய், இசைத்தமிழ், நாடகத்தமிழினுமுணர்ச்சியுடையராய், பண்களைச் செவ்வனே கற்றறிந்தவராய், சிவபத்தி சிவனடியார்பத்தி திருமுறைப்பத்தி என்னு மிவையுடையராய், உலகமெங்கணுந் திருமுறைப்பெருமை விளங்குக என்னும் எண்ணமிடையறா திருக்கப் பெறுவோராயிருப்பின் சர்க்கரைப்பந்தரிற் றேன்மாரிபொழிந்தாற்போலுந் தகைமைத்தே.

இவ்வியல்பினரல்லாதவர், ஐயமேற்றற்காகவே ஓதுந் தொழிலை மேற்கொண்டவர், ஆசை ஒன்றையே ஆசைப்பட்டோதுபவர், பண்வழிப்பாடாது தாம் நினைத்தபடியெல்லாம் பாடுவோர், சிவதீக்ஷையில்லாதவர், சிவசின்னமில்லாதவர், சிவபெருமானுக்கு ஒப்பாக வேறொரு தெய்வத்தையுரைக்குஞ் சிவநிந்தகர், திருமுறைகளை ஓதும்பொழுது அதற்கு முன்னும்பின்னும் இடையிலும் வேறுபாடல்களையாவது கீர்த்தனைகளையாவது பாடுவோர், ஆசௌசமுடையவர், ஆசாரமில்லாதவர், நித்தியகடன் முடிக்காதவர் இவர்கள் திருமுறைகளைத் தீண்டுதற்கும் அதிகாரிகளல்லர் என்க. சிவபெருமானுக்கு அடியவராகிய பத்தர் என்பவர் யாவரென்று ஆராயுங்காலத்தில் திருமுறைகளை எவர்

Koviloor Digital Library

மெய்யன்புடன் ஓதுகின்றாரோ, ஓதுவிக்கின்றாரோ, கேட்கின்றாரோ, கேட்பிக்கின்றாரோ, கேட்டக்கால் பரவசமுற்றீஇ ஆனந்தக்கூத்தாடுகின்றாரோ, திருமுறைகளை எவர் ஆன்மார்த்த பூசையாகப் பூசிக்கின்றாரோ, எவர் அவற்றைப் பரப்புகின்றாரோ, பரப்புவிக்கின்றாரோ, அவர்களே சிவனடியாராகிய சிவபத்தரென்று சொல்லப்படுவார். இக்கருத்துப்பற்றியன்றோ, திருஞானசம்பந்தசுவாமிகள், "பந்தமார் தமிழ்பத்தும் வல்லவர் பத்தரா குவரே" "பயில்வொடு கற்றுவல்லவ ருலகினிலடியவரே" எனவும், சுந்தரமூர்த்திசுவாமிகள் தாம் அருளிய திருப்பதிகத்திலே, "இம்மாலை**** பாரூரும் பரவித்தொழ வல்லார் பத்தராய் முத்திதாம் பெறுவாரே" எனவும் திருவாய்மலர்ந்தருளினார்கள். இன்னும் இத்திருமுறைகளையோதுவார் மேலோர் என்று அவற்றை யருளியவரே ஒருமுறை யுரைக்காது மும்முறை யுரைப்பாராயின் அவர்பெருமை நாமாபுகல வல்லேம். ஒரு திருப்பதிகத்திலே "விரும்புவார் மேலையார் மேலையார் மேலாரே" என்று அருளினர். ஓரோவிடங்களில் அவரை ஈசனென்கின்றார். அதனை, "இன்னிசையாற் பாடவல்லோ ரிருநிலத்தி லீசனென்னு மியல்பினோரே" என்றதனாலறிக.

திருமுறைகளை ஓதுகின்றவர் முன்னைய இலக்கண முடையவராய் ஒருவராவது, பலர்சேர்ந்தாவது ஓதக்கடவர். பலர்சேர்ந்து ஓதுவதே விசேடமாகும். அது "சம்பந்தன் செந்தமி—ழொருத்தராகிலும் பலர்களாகிலு முரைசெய்வா ருயர்ந்தார்களே" என்று திருக்கண்டியூர் வீரட்டத்திருப்பதிகத்திலே ஆளுடையபிள்ளையார் உரைத்ததனாற் பெறுதும். இசைகற்றுவல்லவரே ஓதக் கேட்டல் வேண்டுமென்பது,

திருவலஞ்சுழி. உ - திருமுறை.

மாதொர் கூறனை வலஞ்சுழி மருவிய மருந்தினை வயற்காழி
நாதன் வேதியன் ஞானசம் பந்தன்வாய் நவிற்றிய தமிழ்மாலை
யாதரித் திசைகற்று வல்லார் சொலக் கேட்டுகந் தவர்தம்மை
வாதியா வினை மறுமைக்கு மிம்மைக்கும் வருத்தம்வந் தடையாவே.

என்னுந் திருக்கடைக்காப்பாற் பெற்றாம்.

ஓதும்போது குற்றம் வாராமல் ஓதல்வேண்டும். குற்றமாவது உடற்றொழிற் குற்றம், பாடுந்தொழிற் குற்றம், பண்குற்றம், எழுத்துப்பிழை, சொற்பிழை, பொருட்பிழை, ஓதும்வரிசைப்பிறழ்ச்சி என்பனவாம். வெள்ளோசையுடைமை, பேய்கத்தினாற்போலக் கத்துதல், காகத்தைப்போற் கத்துதல், ஒரு ஓசையானதன்மை நீங்கிப் பலவோசையாய் வருதல், குறைபடுங்கட்டோசை, ஒருபண் ராகம் பாட வேறொரு பண்ணிலே விலங்கி நின்று இரட்டல், ஒதுக்கிப் பாடுதல், நாசியாற் பாடுதல், வாயைக் குகைபோலத்திறத்தல், வாய் கோணுதல், அழுமுகங்காட்டல், கண்கள் ஆடுதல், தலைநடுங்குதல், புருவமேறுதல், வயிறுகுழிய மூச்சைவாங்குதல், மிடறுவீங்குதல், பற்கள் காட்டல் இவையேபாடற் றொழிலினும் உடற்றொழிலினும் வருங்குற்றங்களாம். தக்கேசிப் பண்ணாகப்பாடவேண்டியதைக் கொல்லிப் பண்ணிற் பாடுவதும், தக்கேசிப்பண்ணினும் இரண்டாங்கட்டளையாற் பாடவேண்டியதை முதலாங் கட்டளை

Koviloor Digital Library

யாற் பாடுதலும் பண் குற்றமாம். எழுத்துக்கள் வழுவப் பாடலும், சொற்கள் வழுவப் பாடுதலும், பொருள்கள் திரிபுற வோதலும் எழுத்துக் குற்றம், சொற்குற்றம், பொருட்குற்றங்களாம். துவட்டாவென்பவன் எழுத்தொலி பிறழவுச்சரித்து யாகம் புரிந்தமையால் இந்திரனாற் றலையறுப்புண்டான். இந்திரன் பிரமகத்தியால் வருந்தினன். அன்னதேபோல இக்குற்றங்க ளிகழுமாயின், ஓதுவோர் ஓதுவித்தோர் கேட்டோர்யாவர்க்கும் பெருந்துன்பங்க ணேரிடுமென்றுணர்க.

ஓதும் வரிசைக் குற்றமாவது:—முதலாந்திருமுறையை முதலினும், இரண்டாவது திருமுறையை அதற்கடுக்கவும், ௩, ௪, ௫, ௬, ௭, ௮, ௯, ௧0, ௧௧, ௧௨, என்னு மிவைகளை அவ்வவற்றிற்கு அடுக்கவும், இங்ஙனே வரிசையாக ஓதி முடிக்காது முன்னும்பின்னும்மாறியும் திருமுறைகளையும் திருமுறைகளல்லாதவற்றையும் ஓதலாம். பன்னிருதிருமுறைகளை யோதுங்கால் வேறொன்றனையும் ஓதல்கூடாது. இருக்காதி வேதங்களையத்தியயனம் பண்ணுவார் அக்காலத்தில் வேறெவ்வித கிரந்தங்களையும் எங்ஙனமெடுத்துச் சொல்லாரோ அதுபோலத் திருமுறைப் பாராயணத்துங் கொள்க. அங்ஙனம்.வேறொன்றனை யோதுவது கைக்கணுள்ள மாற்றுயர்ந்த ஆணிப்பொன்னை யெறிந்து விட்டு, அயத்துணை யரிப்பரிக்கத் தொடங்கியதுபோலவும்,ஏகசக்கிராதிபதியைச்சபைக்கண் வந்திக்காது ஏழை வறிய குருட்டு நோயாளனொருவனைப்பூசிப்பது போலவும் முடிந்து பழிபாதகங்களைப் பயக்குமென்க. சிலர் தேவாரம் முதலிய திருமுறைகளையோதுங் காலத்திற் றிருப்பாசுரத்திலில்லாதமொழிகளைச் சேர்த்துக் கூறுகின்றார்கள். அதற்கு உதாரணமாக "வடிவுடை மழுவேந்தி - மதகரி யுரிபோர்த்து"என்று ஓதற் பாலதை "வடிவுடை மழுவேந்தி (சம்போ சங்கரா) மதகரி யுரிபோர்த்து (மாதேவா)என்று பாடுகின்றார்கள். அது குற்றமும் பாவமுமாம். அச்சொற்கள் சிவநாமங்களாயினுமாக; அவற்றாற் கேட்பார்க்குப் பத்தி விளையினும் விளைக; அங்ஙனம் கூறுதல் தகாதென்பதே ஆன்றோர் உளக்கிடக்கையாம். எற்றாலோ வெனின், ஆரிய மறை யத்தியயனஞ் செய்வார் ஆங்காங்குப் பகவான் றிருநாமத்தை எங்ஙனம் உச்சரிக்காரோ உச்சரித்தக்கால் வேதசந்தபங்கம் அர்த்தபங்கம் எங்ஙனம் விளையுமோ, அன்னதே போலத் தமிழ்மறைகளுக்கும் ஒருபதங்கூட்டினுஞ் சந்தபங்கமுதலியன உண்டாகுமாகலா னென்க. இவ்வாறாய குற்றங்களை யெல்லாம் நீக்கி யோதவல்லவரே பாராயணம் செய்தற்கு உரியரென்றுணர்க. இவையிற்றையெல்லா மடக்கியே சமயாசாரிய சுவாமிகளாகிய திருமறைக்காரர், ஓதுவதற்குங் கேட்பதற்கும் உரிய அதிகாரிகளை வகுத்தருளினர் அவைவருமாறு:—

"சம்பந்தனுரை பங்கநீங்கப் பாடவல்லவர்" "ஊனமின் மொழிவலார்க்குயருமின்பமே" "பயில்வொடு கற்றுவல்ல வருலகினி லடியவரே" "கூறவல்லாரையுங் கேட்க வல்லாரையுங் குற்றங்கள் குறுகாவே" "சொல்லுதல் கேட்டல் வல்லாரவர்க்கும்" "நல்லுரை ஞானசம்பந்தன் ஞானத்தமிழ் நன்குணரச்—சொல்லிடல் கேட்டல் வல்லார்" "பாடலிவை பத்துஞ்—சொல்லுவார்க்குங் கேட்பார்க்குந் துயரமில்லையே" "கூறுமாறு வல்லார்" "கோலத்தாற் பாடவல்லார்"

Koviloor Digital Library

"சம்பந்தனுண்டமிழ்களி—னணிகொண்ட பத்துமிசைபாடுபத்த ரகல்வான மாள்வர் மிகவே" "காழியர்கோ னவில்பத்து மூனமின்றி யுரைசெயவல்லவர்" "உரியதொரிசைகொள வுரைசெயு நீதியர்" "வண்ண மூன்றுந் தெரிந்திசை பாடுவார்" "பண்கொளப் பாடவல்லார்க் கில்லை பாவமே" பண்ணுரைப் பாடவல்லார்க் கில்லை பாவமே" என்ற இன்னோரன்ன திருவாக்குகளே யாம்.

ஓதுங் காலத்தே சிலர் அங்கி யிட்டும், தாம்பூல முதலியன தரித்துக்கொண்டும், நகை புரிந்தும், பாயலிற் படுத்துக் கொண்டும், ஆசனம்முதலியவற்றி லிருந்து வீராசன மிட்டுக்கொண்டும், கால்களை நீட்டிக்கொண்டும், வாகனத்தி லிருந்தும், பாதரட்சை முதலியன காலின் மாட்டிக்கொண்டும், ஆலயங்களும் மூர்த்திகளும் கீழேயிருப்பத் தாம் மேன்மாளிகையி லுயரவிருந்து கொண்டும், ஒற்றை வத்திரந் தரித்துக்கொண்டும், மீசையை முறுக்குதல் கடித்தல் பற்களால் மெல்லல் கைகளாற்றடவல்களைச் செய்துகொண்டும், உத்தரீய மிட்டுக்கொண்டும், பிறகதைகளை இடையிடையே வசனித்துக்கொண்டும், மூக்கிற்குப் பொடிபோட்டுக்கொண்டும், தலையணை திண்டு முதலியனவற்றிற் சார்ந்துகொண்டும் ஓதலுங் கேட்டலுஞ் செய்கின்றார்கள். அது கூடாதென்க. நாடகங்களிலும், அன்பிலாரிருக்குமிடங்களிலும், புறச்சமயிகள் இருக்குமிடங்களிலும், அசுத்தமான தானங்களிலும், சனங்களின் முன்னும் ஆசௌச வீடுகளினும் அநாவசிய காலங்களினும் ஓதலுங் கேட்டலுமாகாவாம். சிலர் அநாசார நிறைந்த வேசிகளைக்கொண்டு பாடுவித்துக் கேட்கின்றனர். அது பாவம்! பாவம்!! முக்காலும் பாவமே.

திருமுறைப் பாராயணத்திற்கு முன்னர்க் கிழக்குமுகமாகவேனும் வடக்கு முகமாகவேனும் உட்கார்ந்து விநாயகரைத் தியானித்து, சிவபெருமானையும், உமாபிராட்டியாரையும், சமயபரமாசாரியசுவாமிகள் நால்வரையும், திருத்தொண்டர் சீர்பரவுவாரையும் சிந்தித்து, வேதங்களை அத்தியயனம் பண்ணவாரம்பிக்குங்கால் ஆங்காங்குச் சொல்லப்பட்ட சாந்திமந்திரங்களை யுச்சரித்து ஓம் என்று தொடங்கிச் செய்தல்போல, ஒவ்வொரு திருப்பாட்டின் முதலினும் முடிவினும் "திருச்சிற்றம்பலம்" என்று சொல்லுக. "தோடுடையசெவியன்" என்னுந் திருப்பாசுரத்தையுந் திருக்கடைக்காப்பையும்*பாராயணஞ்செய்து விநாயகரைத்துதிக்கவேண்டுமேல்,

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

என்பது முதலாய விநாயகரை யுரைத்த திருப்பதிகங்களைக் கூறி, அப்பால் ஆளுடையபிள்ளையாரது பதிகங்களில் எதனைப்பாராயணம் பண்ணவேண்டுமோ அதுசெய்து, திருநாவுக்கரையர், திருநாவலூரார், மாணிக்கவாசகர் முதலாயினோர் திருப்பாசுரங்களைப் பாராயணஞ்செய்து பெரியபுராணங்கூறி முடிக்க. பெரியபுராணம்சொல்லப்பட்டால் அதன்பின் தேவாரமாவது ஏனைய திருமுறைகளாவது பாடற்க. அவசியமாயின், தேவாரங்கூறி வரிசையாக மற்றைய திருமுறைகளையும் பாடிமுடிக்க.

* ஒவ்வொருபதிகத்தையும் முழுதும் ஓதலே விசேடம்.

Koviloor Digital Library

கந்தராலயமாயிருப்பின் கந்தசுவாமியைப்பற்றிக் கூறும் தேவாரப்பதிகங்களையும், வீரபத்திராலயமாக இருப்பின் தக்கயாக தண்டத் திருப்பதிகங்களையும், அம்மையார் சந்நிதானமாக இருப்பின் அம்மையாரை விதந்துகூறிய திருப்பாசுரங்களையுந் தேவாரத்திற்சொல்லுக. தேவாரம் ஓதி முடிந்தவுடன் திருச்சிற்றம்பலம் என்று உச்சசுரமாக உச்சரிக்க.

இவை ஓதுங்காலத்திலே கேட்பவர்கள் யாவரும் முற்கூறிய குற்றங்களின்றித் திரிகரணங்களு மொருமைப்பாடுற்றுப் பயபத்தியுடனிருந்து பிரமாஞ்சலி சகிதராகக் கேட்டல்வேண்டும். பிரமாஞ்சலியாவது சப்பாணியிட்டிருந்து கையிரண்டனையும் மார்பின் மாறிக் கட்டிக்கொண்டாவது, மார்பு நெற்றி உச்சி என்னு மிவ்விடங்களில் அஞ்சலித்துக்கொண்டாவது இருத்தல். கைகட்டுவதைப்பார்க்கினும் மார்பின்கண் அஞ்சலித்தலும், அதனினும் நெற்றிக்கண் அஞ்சலித்தலும், அதனினும் உச்சியிற் கைகூப்பலும் விசேடமாம். பாராயணஞ்செய்வோர் "நமப்பார்வதீபதே" என்றகாலை, கேட்போர் "அரகரமகாதேவ" என்று கூசாது உரக்க உச்சரிக்கக்கடவர். "சிற்சபேசா" என்னுங் காலைச் "சிவசிதம்பரம்" என்றுரைக்க. உரைக்காது கூசுவோரும், பெருமையானே அதனை வெறுக்கின்றவரும் நரகத்தையடைவர். இவ்வுண்மை, "அடிகளைச் சேர்த்திய பாட—றங்கையாற் றொழுது தந்நாவின் மேற்கொள்வார்" "இம்மாலை-பாருரும் பரவித் தொழவல்லார்" எனச்சுந்தரமூர்த்திசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளியதனு னன்கு புலப்படும். இவையெல்லாம் தம்வசமழிந்து மனமுருகுமெய்யன்பினர்க்கு விதியாகாவென்க.அன்பானே அவரெங்ஙனஞ் செய்யினும் பரசிவன் அருளுமென்பது ஆளுடையபிள்ளையார் திருவாக்குகளானே பெறப்படும். அவை, "கோழைமிட றுககவி கோளுமில வாகவிசை கூடும் வகையால்—ஏழையடி யார்களவர் யாவைசொன சொன்மகிழு மீசன்" எனவும், "இசைகூர வந்தவண மேத்துமவர்" எ-ம், "சம்பந்தன் கருது பாடல்—கோழையா வழைப்பினுங் கூடுவார் நீடுவா னுலகி னூடே" எனவும் வருதல் காண்க.

தேவாரம் முதலாகப் பெரியபுராண மிறுதியாக வோதப்பட்ட பின்னரன்றி நிறுத்தலும், பிறவிடயங்களைச் செய்தலும், சபையை விட்டுப் போதலுங் கூடாவாம்.

பன்னிருதிருமுறை நித்தியநைமித்திகங்கள்.

பன்னிரு திருமுறைகளும் பதிநூல்களென்று சொல்லப்படும்; சிவபெருமான் மற்றவைகளினிடத்தே பாலி னெய்போல விளங்காது நிற்பினும், இத்திருமுறைகளினிடத்தே தயிரி னெய்போல விளங்கிநின்றருள் செய்வர் என்பது முன்னரே நன்குவிளக்கப்பட்டது. சிவபெருமான் ஆன்மாக்கட்கு அருள்செய்யுந் தாபரசங்கமப் பொருள்களில் தாபரப்பொருள்களாகிய இலிங்கங்கள், கோபுரங்கள்,சிலாமூர்த்தங்கள், உலோகமூர்த்தங்கள், சங்கமப்பொருள்களாய சிவனடியார் திருவேடங்கள் என்னு மிவைகள் விசேடித்தன. இவற்றினும் விசேடமுள்ளன பன்னிரு திருமுறைத் திருவருட்பாக்களேயாம். இவை தாபரசங்கமப்பொருள்களையும், அவற்றிலிருந்து அருள்புரியும் பரசி

Koviloor Digital Library

வனுரையும் அடக்கிநிற்கும். தொண்டர்கள் யாவரினும் பெரியவர், எல்லாவற்றையுந் தம்முளடக்கி நிற்குஞ் சிவபெருமானையுந் தம்மகத்தடக்கி நின்றூராகலின். அது, சம்புத்தருவிற் கந்தமகவு பெரியதுயாதென வினவியதற்கு,

பெரியது கேட்கி னெரிதவழ் வேலோய்
பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ நான்முகன் படைப்பு
நான்முகன் கரியமா லுந்தி வந்தோன்
கரியமாலோ வலைகடற் றுயின்றோன்
அலைகடலோ குறுமுனி கையிலடக்கம்
குறுமுனியோ கலசத்திற் பிறந்தோன்
கலசமோ புவியிற் சிறுமண்
புவியோ வரவினுக் கொருதலைப் பாரம்
அரவோ வுமையவள் சிறுவிரன் மோதிரம்
உமையோ விறைவர்பா கத்தொடுக்கம்
இறைவரோ தொண்டருள்ளத் தொடுக்கந்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே.

இதனை விடையாகத் தெய்வப் புலமை ஔவையார் தெரித்ததனுனே யறிக. இதனாலே எல்லாரினுந் தொண்டர்கள் பெரியவர் என்று முடிந்தது. யாம் அப்பெரியதொண்டர்களைப் பார்க்கினும் பெரியன பன்னிருதிருமுறைகளென்கின்றேம். என்னை? எல்லாவற்றையுமடக்கி நிற்குஞ் சிவனையும் தம்முள் அடக்கி நின்ற திருத்தொண்டர்களையுந் தம்மகத்தடக்கி நிற்றலானென்க. ஆகத் திருமுறைகளே யுலகத்து விழுமிய பொருள்களினும் மேலாம் விழுமிய பொருள். அவற்றிற்கு ஒப்பானவும் உயர்ந்தனவுமான பொருள்கள் உலகத்து வேறில்லை. இது சத்தியம் சத்தியம் முக்காலுஞ் சத்தியம். இவ்வுண்மை,மதிமுடிதரித்த வடிகளா ரடிகளை யுள்கி யருள்பெற்ற பொதியமலை மாதவன் சிவாலயமுனிவர்க்குத் தேவாரமுழுவதையும் உபதேசித்து அதினின்று இருபத்தைந்து திருப்பதிகங்களைத் திரட்டிக்கொடுத்துப் பாராயணஞ் செய்வித்த மகிமையானும்விளங்கக்கிடக்குமாயின் றிருமுறைப்பெருமைக்கெல்லையின்றென்க.

பன்னிருதிருமுறைகள் சிவபெருமான், திருக்குமாரர்களாகிய விநாயகக்கடவுள், வைரவக்கடவுள், வீரபத்திரக்கடவுள், சுப்பிரமணியக்கடவுள், மகேசமூர்த்தங்கள், சத்தியாகிய உமையம்மையார், சமயபரமாசாரியசுவாமிகள், சண்டேசுரர் முதலாய நாயன்மார்கள் இவர்களையெல்லாம் அடக்கி நிற்றலானும், சொல்லும் பொருளும் சிவமுஞ் சத்தியுமாம் என்று தமிழ்மறைகள் கூறுவதனுனும், இவற்றை யொருகணமும் நீங்காது பரமனுர்வீற்றிருக்கின்றூர் என்பது திருமுறைகளையருளியார் இட்ட ஏவல்களையெல்லாங் கேட்டுச் செய்தருளிய செய்கையாற் காணப்படுதலானும், இத்திருமுறைகளைப் பூசித்தவர் சிவபெருமானைப் பூசித்தவராவார். உமாபிராட்டியாரை யர்ச்சித்தவராவார். சிவகுமாரர்களையும் பரமாசாரியசுவாமிகளையும், சண்டேசுரநாயனுர் முதலாயினேரையும் பூசித்தவராவார். இவர்கள் யாவர்க்குந் தனித்தனி

Koviloor Digital Library

அபிடேக அலங்கார உபசார அர்ச்சனுதிகளைச் செய்ய இயலாதவர் பன்னிரு திருமுறைகட்கும் நித்தியமாகிய பூசையையும் நைமித்திகமாகிய மகோற்சவத்தையுஞ் செய்விக்கக்கடவர். அது அவர்களைப் பூசித்ததாயும் அவர்களுக்கு மகோற்சவஞ் செய்ததாயும் முடிதலேயன்றிக் கோடிசிவலிங்கப்பிரதிட்டை செய்ததாயும் முடிந்து அப்பன்னிருதிருமுறைகளில் எத்துணை யெழுத்துக்களுளவோ அவ்வளவு கற்பகோடிகாலம் போகங்களை யநுபவிக்கச்செய்து மீளாமுத்தியாகிய சிவசாயுச்சியத்தையும் அவர்கட்குக் கொடுக்கும்.

நித்திய நைமித்திகங்களுக்கு எழுத்துப்பிழைகள் சொற்பிழைகள், முதலாய குற்றங்களில்லாமலிருக்கும் ஏட்டுப்பிரதிகளையே கொள்க. ஏட்டுப் பிரதிகள் அக்குற்றங்களை யுடையனவாயின் அவற்றை யொரீஇச் சுத்தமாகப் பதிப்பிக்கப்பட்ட கடிதப்புத்தகங்களை வாங்கிப் பட்டுக்கட்டடஞ் செய்து கொள்க. பொன்கில்ட்டு வைத்த புத்தகங்கள் ஆகா. என்னை? அக்கில்ட்டு இழிந்தபதார்த்தத்தின் சாரமின்றேற் பிடியாதாகலின். இங்ஙனம் பன்னிரு திருமுறைகளையும் சம்பாதித்தவர்,சிவபெருமானையும், சிவஞானத்தையும், சமயாசாரியர்களையும், மற்றைய திருமுறை நாயன்மார்களையும், தன் ஆசிரியரையும் பணிந்து, அதன்பின்னர் எட்டுமுழ நீளமும் நான்குமுழ அகலமுங் கொண்ட மண்டபமொன்று செய்து, நான்கு மூலைகளினும் நான்கு வைரத்தூண்கள் நாட்டி, பட்டுவத்திரத்தால் வேய்ந்து, அலகிட்டு மெழுக்குமிட்டு மண்டபநடுவண் தாமரை மலர் ஒன்று நீற்றினுற் செய்து, இரத்தினங்கள், புட்பங்கள், கண்ணுடி, பழம், சாமரம் முதலிய கட்டித் தூங்கவிட்டு, வாழை, கமுகு, கரும்பு, தோரணமிவை நாட்டி, மேலிடத்தில் வெண்பட்டுக் கட்டி, நான்கு திசைகளினும் கும்பம்வைத்து, தாமரைமலர்களை யவற்றின் வாயினிறையப் பெய்து, முளையிட்டு, இரத்தினங்களழுத்திச்செய்த பீடமாவது, சுத்தபீடமாவது நடுவிலிட்டு, அப்பீடத்தினடுவே பன்னிருதிருமுறைகளையும் தாபித்து, கோரோசனை பச்சைக்கர்ப்பூரம் முதலாய பரிமளகந்தங்களையப்பி, இரத்தினமாலை, பொன்மாலை, பட்டுவத்திரம் முதலியன அவற்றிற்குச்சாத்தி, தொங்கன் முதலாய விசித்திரங்களுமிட்டு, அருச்சனைசெய்து, நைவேத்தியம் புரிந்து, கர்ப்பூரம், சந்தனம், அகில், குந்திருக்கம், குக்குலு முதலிய பஞ்ச தூபங்கள் இட்டு, கபிலைப்பசுவின் நெய்யினுலே தீபங்கள் இட்டு, சிரம், முழந்தாள், இரு கன்னம், முகம், வாய், புயங்கள் என்னும் எட்டு அங்கங்களும் நிலத்திற்றோய வணங்கி, பஞ்சாங்கமாகவும் பணிந்து எழுந்து தோத்திரம்புரிந்து, அதற்குப் பக்கத்தே கோயிலொன்று செய்து, ஆசான் கொடுக்கத் திருமுறைகளை யேற்று அக்கோயிலிற் பிரதிட்டித்துப் பூசைசெய்க. இது சிவ பூசைக்கும், சிவனடியார்பூசைக்கும் மேலாயதென்க.

அவ்வத் திருமுறை நாயன்மார்கள் திருநட்சத்திரம் வரூஉங்காலத்து அபிடேகாதிகள் செய்வித்து, தன் ஆன்மார்த்தமாகவுள்ள கோயிலின் இடத்தாவது, அந்நாயன்மார்கள் இருக்கும் ஆலயங்களிலாவது அவ்வந்நாயன்மார்களையும் திருமுறைகளையும் அலங்காரமுதலிய செய்து சர்வோபசாரங்களோடும் யானைமீது ஆரோகணிப்பித்துத் திருவிழாக்கொண்டாடுக. யானைமீது வைக்கும் வழக்க முந்தைநாளுண்டென்பது சேக்கிழார் பெருமானையும் திரு

Koviloor Digital Library

முறையையும் விராட்புருடனுக்கு இருதயஸ்தானமாகிய சிதம்பரக்ஷேத்திரத்திலே யானைமீது எழுந்தருளப் பண்ணுவித்து, அநபாயசோழமகாராசா அவர்கள் தாமே சாமரையிரட்டித் திருமுறைப்பவனி வருவித்தார் என்று, சந்தானுசாரியசுவாமிகளாகிய உமாபதிசிவாசாரியசுவாமிகள் தாம் அருளிச்செய்த சேக்கிழார்புராணத்திலே திருவாய்மலர்ந்தருளியதனுனேயறிக.

யானைகிடையாவிடத்து இரதத்தின்மீதேற்றி, அறமனைதோறும் நிறுத்தி, அவரவர் சிறப்புக்கொண்டு, அரசனு மதற்கியைவானுயிற் சிறைவிடுவித்து, அவனுமுடன்வர, வாத்தியங்கள் இயம்ப, நகர்வலம்வந்து சிவாலயத்தையடைந்து, ஆங்கு எழுந்தருளப்பண்ணுவித்துப் பூசைசெய்து, வேந்தனையுள்ளிட்டவர்க்குச் சிலபாசுரங்களையெடுத்துக்கூறி, ஆசாரியற்குப் பொன்னீந்து, தமிழ்மறையோதுவார்களுக்குத் தானம்புரிந்து முன்னிருந்தாங்குக் கொடு சென்றுவைக்க. இங்ஙனம் முதன் முதற் பூசைசெய்வோர் ஆடிப்பூரணை, வைகாசிப் பௌர்ணிமை என்பவற்றிற் றொடங்கனன்று.

இங்ஙனம் திருமுறைகளுக்கு நித்திய நைமித்திகங்களாகிய பூசை மகோற்சவங்களைச் செய்வாராயின் உலகங்களிற்றுன்பமில்லையாகும். கன்னம், களவு, நோய் முதலிய பயங்க ணீங்கும். நன்மையெல்லாம் விளையும். திங்கள் மும்மாரி பெய்யும். செய்தோர் செய்வித்தோர் இவர்கள் எழுத்தொவ்வொன்றற்கு ஓராயிரங் கற்பமாக சிவலோகத்தில் இனிதிருந்து வாழ்வர் என்று அகத்தியமுனிவர்க்குக் கந்தக்கடவுள் உபதேசித்தருளினர். இதனைச் சர்வோக்தாகமத்தின் உபாகமம் ஐந்தனுள் ஒன்றாகிய சிவதருமோத்தரத்தும், பிரணவார்த்த நகரமான்மியத்துங் காண்க.

உபதேசகாண்டம்.

எந்தை கோயிலுட் டிருமுறை மண்டப மெடுத்துத்
தந்த பீடிகைத் தலத்தினிற் றிருமுறை தந்து
சிந்தை யன்பினே டாங்கதற் கருச்சனை செய்தா
லுந்து மேற்றினன் பிரதிட்டை கோடியொப் புறுமால்.

தணிகைப்புராணம் அகத்தியனருள்பெறுபடலம்.

அரியணை மீது வெண்புத் தகத்தினை யமைத்து மேலால்
வரியிவர் புத்த கத்தை வைத்துரோ சனைகப் பூரம்
பரிமளக் கலவை கொட்டிப் பன்மணித் தொடலை தூசு
விரிமணத் தொங்க லாதி விசித்திரம் பிறங்கச் சாத்தி.

முடிவுநாள் பசித்து முக்கண் மூர்த்தியைப் புத்த கத்தைப்
படியிலாக் குரவன் றன்னைப் பூசனை பயிற்றி யெல்லிக்
கடிகொண்மங் கலத்தால் வேத வொலியினுற் றுயிலைக் காதி
விடிவுகண் டருச்ச னாதி விளைத்திர தத்தி னேற்றி.

அறமனை தோறு மாக்கி யவரவ ருடங்கு நண்ண
மறலினர் நிகளஞ் சித்து வண்பலி பலவு மோக்கித்
திறன்மிகு மிறையும் போதச் செறிந்தியம் பலவு நல்க
நிறைவளர் நகர்சூழ் போந்து நின்மலன் கோயி லுய்த்து.

Koviloor Digital Library

மீட்டுநற் பூசை யாற்றி வேந்தனை யுள்ளிட் டோர்க்குத்
தீட்டுபுத் தகத்திற் சில்ல வாக்கியந் தெரித்துச் செம்பொன்
கோட்டமில் குரவற் கீத்துக் கொழும்பொனுந் தூசு மற்றும்
வாட்டமின் மறையோ ராதி வௌவுற வழங்கல் வேண்டும்.

இன்னணம் பூசை யாற்றி னிடரெலா முலகிற் றேம்பு
மன்னுறு நன்மை யெல்லா மதிகண்மும் மாரி நல்குஞ்
சொன்னவா றீந்து ளாருந் தொகுமெழுத் தொரோவொன் றற்கங்
குன்னருஞ் சிவலோ கத்து ளொராயிரங் கற்பம் வாழ்வார்.

ஆடிவை காசித் திங்க ளடுத்தபூ ரணையிற் பூசை
நாடினர் தாமு முன்னை நற்பயன் பற்று வார்க
ளேடெழு தூசி பாச மீந்தவ ரெழுதி வைப்போர்
பீடுறப் பயில்வோர் சொல்வோர் பெரிதரும் பயன்க ளாய்வோர்.

பாராயண ஆனந்தக் கூத்து.

இன்பமே உருவாக விளங்கி எல்லா ஆன்மாக்கட்குந் தமதிணையில் பேரின்பத்தைத் தந்தருளு மிறைவன் றனக்கென வொன்றையும் வேண்டுதலும் வெறுத்தலும் இல்லானென்று வேதாகமங்களும் ஆன்றோரும் மிகுத்துக் கூறுவர். அதனை, மற்றைய விடயங்களைநோக்குங்கால் ஆமென்பேம். திருமுறைகளை நோக்குங்கால் தனக்கென வொன்றை விழைதலும் வெறுத்தலுமுடையானெனச் சொல்வேமன்றே. எதனை விழைதல் எதனை வெறுத்தல் எனில், தேவார திருவாசகங்களாதிய திருமுறைகளை விழைதலும், அவை போல்வனவல்லாதவற்றை வெறுத்தலுமுடையானென்றுணர்க. இங்ஙனமாய தத்துவங்கடந்த தனிப்பரம்பொருளும் தமிழினயங்களையெல்லாம் பேசிப் பேசிக் கூத்தாடுவாரென்றாற் சிற்றறிவும் சிறுதொழிலுந் துக்கவுருவுமுடைய மானுடர் முதலாய உயிர்களங்ஙனஞ் செய்தல் வேண்டுமென்பது கூறவும் வேண்டுமோ? தமிழி னயம்பேசி யாடுகின்றா னிறைவனென்பது,

திருக்கானூர். (க - திருமுறை.)

தமிழி னீர்மை பேசித் தாளம்வீ ணைபண் ணிநல்ல
முழவ மொந்தை மல்கு பாடல் செய்கையி டமோவார்
குமிழின் மேனி தந்து கோலநீர் மையது கொண்டார்
கமழுஞ் சோலைக் கானூர் மேய பவள வண்ணரே.

என்னுந் திருப்பாசுர முழங்குமாற்றா னறிகின்றாம். இங்ஙன மிறைவனே ஆனந்தக் கூத்தாடுமானால், புழுத்த நாயினுங் கடையேந் தேவாரமுதலிய திருமுறைப்பாசுரங்களைக் கேட்டுப் பரவசப்படுதலும், ஆனந்தவிளையாட்டாடலுமோர் வியப்பன்றாம். ஆகவே பாட்டி னருமை தெரிந்தார், பொருள்கண்டார் பத்திமேலிட்டாடுவர். அவர்க்கு வெட்கமுதலியன போய்விடும். அங்ஙனமாடுதல் பத்தர்க்கிலக்கணமென்பது "தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடி" என வாக்கிறைவரும் "ஆடுகின்றிலை கூத்துடையான் கழற் கன்பிலையென்புருகிப்—பாடுகின்றிலை"என மணிவாசகப்பிரானும்"கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடித் திரியே" என அருணந்திசிவாசாரியரும் ஓதியருளியவாற்றானுணர்க.

Koviloor Digital Library

தேவாரத் திருவருட்பாக்கள் நாடகத் தமிழுஞ் சேர்ந்திருத்தல் பற்றியன்றே ஆளுடையபிள்ளையார்க்கு முத்தமிழ் விரக னென்னுந் திருப்பெயர் போந்தது. அன்னவருந் தமது தேவாரத் திருப்பதிகங்களை "நடங்கொடமிழ்" என்று கூறியருளினார். அதற்கேற்பப் பாராயணம் பண்ணி ஆனந்தக் கூத்தாடுவோரும், கேட்டு ஆனந்தக் கூத்தாடுவோரும் முத்தியடைவார் என்பது திண்ணம்.

திருமுறைப்பெருமை முற்றிற்று.

திருமுறைவரலாறு.

புண்ணியபூமியாகிய பரதகண்டத்திலுள்ள பலநாடுகளுள், வடக்கின் கண் அகத்தியமகாமுனிவருக்குத் தமிழறிவுறுத்திய பரமாசாரியராகிய முருகக்கடவுளது வரைப்பாகிய திருவேங்கடமும், மற்றை மூன்று திசைக்கண்ணுங் கடலும் எல்லையாகவுடைய தமிழ்நாட்டின்கண்ணே சிறந்து விளங்கா நின்ற சோழமண்டலத்திலே, பிறக்க முத்திதருந்தலமாகிய திருவாரூரிலே, கல்வியறிவொழுக்கங்களாலும் குரு லிங்க சங்கமபத்தியாலுஞ் சிறப்புற்றோங்கிய அபயகுலசேகர சோழமகாராஜாவானவர் பரமகருணாநிதியாகிய தியாகேசருடைய திருவருளினாலே வைதிகமார்க்கமுஞ் சைவமார்க்கமுந் தழைத்தோங்கச் செங்கோல் நடாத்தி அரசியற்றுவாராயினர்.

அவ்வரசர் தமதவைக்களத்துக்கு எழுந்தருளிவருஞ் சிவனடியார்கள் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருநாவுக்கரசுநாயனார் சுந்தரமூர்த்திநாயனார் என்னுஞ் சமயகுரவர்கள் அருளிச்செய்த தேவாரத்திருப்பதிகங்களுள் ஒன்றொன்று ஓதக்கேட்டு, கைகளிரண்டுஞ் சிரசின்மேலேறிக் குவிய, ஆனந்தவருவி சொரிய, மெய்ம்மயிர் சிலிர்ப்ப, நெஞ்சநெக்குருக ஆனந்தபரவசராயினர். அவ்வியல்படைந்த அரசர் தேவாரத்திருமுறையை எங்குந் தேடி, அகப்படாமையால் மனத்துயரங்கொண்டிருந்தனர். அது நிற்க.

திருநாரையூரென்னுந் திருப்பதியில் எழுந்தருளியிருக்கும் பொல்லாப்பிள்ளையாருக்குப் பூசைசெய்யும் ஆதிசைவரொருவருக்குச் சைவசமயம் வாழும்பொருட்டு ஒரு சற்புத்திரர் திருவவதாரஞ்செய்தருளினார். அவர் உரிய பருவத்திலே உபநயனஞ் செய்யப்பெற்று வேதமுதலிய கலைகளை ஓது நாளிலே, தந்தையார் ஓரூருக்குப் போய்விட, அவருடைய ஆஞ்ஞைப்படியே பொல்லாப்பிள்ளையாருக்கு அபிஷேக முதலியனவெல்லாஞ் செய்து, நைவேத்தியத்தை அவர் திருமுன் வைத்து, "எம்பெருமானே, திருவமுதுசெய்தருளும்" என்று பிரார்த்தித்தார். பொல்லாப்பிள்ளையார் திருவமுதுசெய்யாதிருப்பக் கண்டு, அப்புத்திரர் மனம் வெம்பி, "எம்பெருமானே, அடியேன் யாதாயினுந் தவறுசெய்ததுண்டோ, அடியேன் நிவேதித்ததைத் திருவமுது செய்யாததென்னை" என்று சொல்லிக்கொண்டு, தமது தலையைக் கல்லிலே மோதப்புகுந்தார். உடனே பொல்லாப்பிள்ளையார் "நம்பி பொறு" என்று தடுத்து, அந்நைவேத்திய முழுதையுந் திருவமுதுசெய்தருளினார்.

Koviloor Digital Library

அதுகண்ட நம்பியாண்டார்நம்பி மனமகிழ்ந்து, "எம்பெருமானே, இனி அடியேன் பள்ளிக்கூடத்துக்குப் போனால் ஆசாரியர் அடிப்பார். ஆதலால் வேதமுதலிய கலைகளெல்லாவற்றையும் தேவரீரே ஓதுவித்தல்வேண்டும்" என்று பிரார்த்தித்தார். பொல்லாப்பிள்ளையார் திருவுளமிசைந்து ஓதுவிக்க நம்பியாண்டார்நம்பி மனமகிழ்ந்து நாடோறும் ஓதுவாராகி, அப்பிள்ளையார் மேலே திருவிரட்டைமணிமாலை பாடியருளினார்.

இந்தச்சமாசார முழுதையும் அபயகுலசேகர சோழமகாராஜாவானவர் கேள்வியுற்று மனமகிழ்ந்து, பொல்லாப்பிள்ளையாருக்கு நிவேதிப்பிக்கும்பொருட்டுப் பழவர்க்கங்கள் தேன் அவல் எள்ளுண்டை முதலியவைகளெல்லாம் எடுப்பித்துக்கொண்டு, நால்வகைச்சேனைகளுஞ் சூழச் சென்று, திருநாரையூரையடைந்து, நம்பியாண்டார் நம்பியுடைய திருவடிகளை வணங்கி, "சுவாமீ, இவைகளெல்லாவற்றையும் பொல்லாப்பிள்ளையாருக்கு இப்பொழுதே நிவேதித்தல்வேண்டும்" என்று பிரார்த்தித்தார். நம்பியாண்டார்நம்பி பொல்லாப்பிள்ளையாரை வணங்கி, அவைகளெல்லாவற்றையும் நாற்சுத்திசெய்து படைக்க, பொல்லாப்பிள்ளையார் தமது துதிக்கையை நீட்டி, அவைகளெல்லாவற்றையுந் திருவமுதுசெய்தருளினார்.

அதுகண்ட சோழமகாராஜா மனமகிழ்ந்து, நம்பியாண்டார்நம்பியை வணங்கி, "சுவாமீ, சமயகுரவர் மூவர்கள் அருளிச்செய்த தமிழ்வேதமாகிய தேவாரத்திருமுறையும் திருத்தொண்டர்களுடைய சரித்திரமும் பூவுலகத்தில் விளங்கல்வேண்டும்" என்று விண்ணப்பஞ்செய்தார். அது கேட்டலும், நம்பியாண்டார்நம்பி திருவுளமகிழ்ந்து, திருக்கோயிலினுள்ளே புகுந்து, பொல்லாப்பிள்ளையாரை வணங்கி, "எம்பெருமானே, தேவாரத்திருமுறைகள் இருக்குமிடத்தையும் திருத்தொண்டர்களுடைய சரித்திரத்தையும் அடியேனுக்கு அருளிச்செய்தல்வேண்டும்" என்று பிரார்த்தித்தார். பொல்லாப்பிள்ளையார் "நம்பீ, சிதம்பரத்திலே கனகசபைக்குப் புறக்கடையின் பக்கத்திலே சமயகுரவர்கள் மூவருடைய கைகளின் அடையாளத்தையுடைய அறையினுள்ளே தேவாரத்திருமுறைகள் இருக்கின்றன" என்று அருளிச்செய்து, பின்பு திருத்தொண்டர்களுடைய சரித்திரத்தையும் திருவாய்மலர்ந்தருளினார். நம்பியாண்டார்நம்பி சோழராஜாவிடத்துக்கு வந்து அவைகளைத் தெரிவித்தார்.

சோழராஜா நம்பியாண்டார்நம்பியோடு சிதம்பரத்தையடைந்து, சிவகங்கையிலே ஸ்நானஞ்செய்து சந்தியாவந்தனமுஞ் சிவபூஜையும் முடித்துக்கொண்டு, கனகசபையை அடைந்து சபாநாயகரைத் தரிசித்து வணங்கினார். நம்பியாண்டார்நம்பி சபாநாயகர்மீது கோயிற்றிருப்பண்ணியர்விருத்தம் பாடியருளினார்.

பின்பு சோழமகாராஜா தில்லைவாழந்தணர்களை நோக்கி, "பொல்லாப்பிள்ளையார் கனகசபைக்கு மேற்றிசையிலுள்ள அறையிலே தேவாரத்திருமுறைகள் இருக்கின்றன என்று அருளிச்செய்தனர். அவைகளை எடுத்தல்வேண்டும்" என்றார். தில்லைவாழந்தணர்கள் "மகாராஜாவே, திருமுறைகளை வைத்தருளிய சைவத்திருநெறித்தலைவர்கள் மூவர்களும் எழுந்தருளிவந்தால்

Koviloor Digital Library

அறை திறக்கும்" என்றார்கள். சோழராஜா நடேசருக்கு விசேஷபூஜை செய்வித்துச் சமயகுரவர் மூவரையுந்திருவீதியிலே திருவுலாவருவித்துக் கனகசபையை வலஞ்செய்வித்துத் திருமுறைகள் இருக்கும் அறையினெதிரே கொணர்வித்து நிறுத்திக்கொண்டு, தில்லைவாழந்தணர்களைநோக்கி, "சமயகுரவர்கள் மூவரும் எழுந்தருளிவந்து விட்டார்கள். இனி அறை திறக்கலாமே" என்றார். தில்லைவாழந்தணர்கள் சோழமகாராஜாவுடைய புத்தியை வியந்து, அறைதிறக்க அநுமதிசெய்தார்கள்.

சோழமகாராஜா சமயகுரவர் மூவருடைய கையடையாளமுடைய திருக்கதவைத்திறந்து, திருமுறைகளை வன்மீகமூடியிருப்பக்கண்டு, மனநொந்து, அவைகளைப் புறத்திலே கொணர்வித்து, மேலே படிந்திருந்த மண்ணைத் தள்ளிவிட்டு, செல்லு நனையும்படி எண்ணெயைச் சொரிந்து, திருவேடுகளெல்லாவற்றையும் எடுத்துப்பார்க்க அளவில்லாத திருவேடுகள் பழுதாகக்கண்டு, கண்ணீர்வாரச் சோகித்துநின்றார். அப்பொழுது எல்லாருங்கேட்கச் சிவபெருமானது திருவருளினாலே "தேவாரப்பதிகங்களிலே இக்காலத்துக்கு வேண்டுவனவற்றைமாத்திரம் வைத்துவிட்டு மற்றவைகளைச் செல்லுமண் மூடச்செய்தோம்" என்று ஓரசரீரிவாக்கு ஆகாயத்திலே தோன்றிற்று. அது கேட்டலும், சோழமகாராஜா மனக்கவலை தீர்ந்து, திருவருளை வியந்து ஆடிப்பாடி, நம்பியாண்டார்நம்பியை வணங்கி, "சுவாமீ, தேவாரமுதலிய அருட்பாக்களெல்லாவற்றையும் திருமுறைகளாக வகுத்தருளும்" என்று பிரார்த்தித்தார்.

நம்பியாண்டார்நம்பி அதற் குடன்பட்டு, திருஞானசம்பந்தசுவாமிகள் அருளிச்செய்த தேவாரத்திருப்பதிகங்களை மூன்று திருமுறைகளாகவும், திருநாவுக்கரசுசுவாமிகள் அருளிச்செய்த தேவாரத்திருப்பதிகங்களை மூன்று திருமுறைகளாகவும், சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்த தேவாரத்திருப்பதிகங்களை ஒரு திருமுறையாகவும் வகுத்தருளினார். இப்படித் தேவாரத்தை எழுதிருமுறைகளாக வகுத்தபின்பு, மாணிக்கவாசகசுவாமிகள் அருளிச்செய்த திருவாசகம் திருக்கோவையார் என்னு மிரண்டையும் எட்டாந்திருமுறையாகவும், திருமாளிகைத்தேவர் முதலிய நாயன்மார் ஒன்பதின்மர் அருளிச்செய்த திருவிசைப்பாவும், அவருட்சேந்தனார் அருளிச்செய்த திருப்பல்லாண்டுமாகிய இருபத்தொன்பதுதிருப்பதிகங்களையும் ஒன்பதாந் திருமுறையாகவும், திருமூலநாயனார் அருளிச்செய்த திருமந்திரத்தைப் பத்தாந்திருமுறையாகவும், திருவாலவாயுடையார் திருமுகப்பாசுரமுதலிய திவ்வியப்பிரபந்தங்களைப் பதினொராந் திருமுறையாகவும் வகுத்தருளினார்.

இங்ஙனந் திருமுறைவகுப்பு முற்றியபின்பு, நம்பியாண்டார் நம்பி தமக்குப் பொல்லாப்பிள்ளையார் உபதேசித்தருளியபடியே திருத்தொண்டத்தொகையை முதனூலாகக்கொண்டு, அறுபத்துமூன்று தனியடியாரும் ஒன்பது தொகையடியாருமாகிய திருத்தொண்டர்களுடைய திருத்தொண்டையும் அதனால் அவர்கள் பெற்ற பேற்றையும் கலித்துறைத் திருவந்தாதியாக அருளிச்செய்தார். பின்பு திருஞானசம்பந்தசுவாமிகள் மீது திருவந்தாதி முதலிய

Koviloor Digital Library

ஆறு பிரபந்தங்களும், திருநாவுக்கரசுசுவாமிகள் மீது திருவேகாதசமாலையும் பாடியருளினர். தாம் அருளிச்செய்த பத்துத் திவ்வியப்பிரபந்தங்களையும் சோழமகாராஜாவுடைய வேண்டுகோளின்படி பதினோராந் திருமுறையிலே சேர்த்தருளினர்.

அதன்பின் நம்பியாண்டார்நம்பியும், சோழமகாராஜாவுந் தேவாரத்திருப்பதிகங்களுக்குப் பண்ணடைவு பெறுமையாலே தில்லைவாழந்தணர்கள் மாகேசுரர்கண் முதலாயினரோடும் திருவெருக்கத்தம்புலியூரை அடைந்து, திருக்கோயிலை வலஞ்செய்து சிவபெருமானை வணங்கி, "எம்பெருமானே, தேவாரத்திருப்பதிகங்களுக்குப் பண்ணடைவை அருளிச்செய்தல்வேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள். அப்பொழுது எல்லாருங் கேட்க ஆகாயத்தில் "அன்பர்களே, திருநீலகண்டப்பெரும்பாணன் மரபிலே பிறந்த பெண்ணொருத்திக்குப் பண்களை அருளிச்செய்தோம்" என்று ஓரசரீரிவாக்குத் தோன்றிற்று. உடனே நம்பியாண்டார்நம்பியும், சோழமகாராஜாவும், அவளை அழைத்து, அவளிடத்தே பண்களைக் கேட்டு மனமகிழ்ந்தார்கள். அதன்பின் "அன்பர்களே, இவளைக் கனகசபைக்குமுன் கொண்டுபோய்த் தேவாரப்பதிகங்களுக்குப் பண்ணடைவு வகுக்கக்கடவீர்கள்" என்று ஓரசரீரிவாக்கு எழுந்தது. அது கேட்டலும், நம்பியாண்டார்நம்பியும், சோழமகாராஜாவும் அவ்வாறே அவளை அழைத்துக்கொண்டு சிதம்பரத்தை அடைந்து, கனகசபைக்கு முன் சென்று, தேவாரத்திருப்பதிகங்களுக்குப் பண்ணடைவு வகுத்தார்கள்.

அபயகுலசேகர சோழமகாராஜாவானவர் பதினொரு திருமுறைகளையுஞ்செப்பேடுசெய்து தியாகேசர் சந்நிதியில் ஏற்றுவித்தனர்.

நம்பியாண்டார்நம்பியினாலும், திருமுறைகண்ட இராஜராஜ அபயகுலசேகர சோழமகாராஜாவினாலும் சைவத் திருநெறித் தமிழ்த்திருமுறை பதினொன்றும் தமிழ்நாடெங்கும் பரந்தன. அதனால் உயர்வொப்பில்லாத சற்சமயமாகிய சைவசமயம் எங்கும் தழைத்தோங்கிற்று.

ஆதியில் உள்ள தேவாரத்திருப்பதிகத்தொகை.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.	கசுத
திருநாவுக்கரசுநாயனர்.	சகுத
சுந்தரமூர்த்திநாயனர்.	டுஅத
	ஆ க — லக்ஷத்து டுத.

இப்போது உள்ள தேவாரத் திருப்பதிகத்தொகை.

	தலப்பதிகம்.	பொதுப்பதிகம்.	இரண்டின்றொகை.
திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.	டுஎஎ	எ	டுஅச.
திருநாவுக்கரசுநாயனர்.	உஎச	டுஎ	டுகக.
சுந்தரமூர்த்திநாயனர்.	கூசு	ச	க00.
	எசஎ	சஅ	எகூடு.

Koviloor Digital Library

இத்தேவாரத்திருப்பதிகங்கள் எழுநூற்றுத்தொண்ணூற்றைந்தும் அடங்கிய திருமுறை அடங்கன்முறை எனப்படும்.

கல்வியறிவொழுக்கங்களாற் சிறப்புற்று விளங்கிய சிவாலயமுனிவர் அவ்வடங்கன்முறையினது மகிமையையும் அதனை நாடோறும் விதிப்படி சிரத்தையோடு பாராயணஞ்செய்யின் முத்திசித்திக்குமென்பதனையும் அறிந்து தாம் அப்படிப் பாராயணஞ்செய்ய ஆசைகொண்டார். அது நிறைவேறுதல் கூடாமையால் வருத்தமுற்று, சிதம்பரத்தை அடைந்து, கனகசபையின்கண்ணே ஆனந்ததாண்டவஞ் செய்தருளும் சபாநாதரை வணங்கி, தமது கருத்து முற்றும்பொருட்டு நெடுங்காலம் அருந்தவஞ்செய்தார். அப்பொழுது சபாநாதருடைய திருவருளினாலே, "சிவாலயமுனிவனே, நீ பொதியமலையிலிருக்கின்ற அகத்தியமுனிவனிடத்தே போவாயாயின் உன்கருத்து நிறைவேறும்" என்று ஓரசரீரிவாக்குத் தோன்றிற்று. அதுகேட்ட சிவாலயமுனிவர் மனமகிழ்ந்து, சபாநாதரை வணங்கி விடைபெற்றுக்கொண்டு சென்று, பொதியமலையை அடைந்து, அகத்தியமகாமுனிவரைச் சிந்தித்து, மூன்றுவருஷகாலம் அருந்தவஞ்செய்தார். அகத்தியமகாமுனிவர் அவருக்கு வெளிப்பட்டு, அடங்கன்முறை முழுதையும் அவருக்குபதேசித்து, அதினின்றும் இருபத்தைந்து திருப்பதிகங்களை எடுத்துத் திரட்டி, "இவைகளை நாடோறும் பாராயணஞ்செய்பவர்கள் அடங்கன்முறை முழுதையும் பாராயணஞ்செய்பவர்களாவர்கள்" என்று திருவாய்மலர்ந்து மறைந்தருளினார். சிவாலயமுனிவர் அப்படியே அவ்விருபத்தைந்து திருப்பதிகங்களையும் நெடுங்காலம் பாராயணஞ்செய்து சிவபெருமானுடைய திருவருளைப்பெற்றார்.

திருச்சிற்றம்பலம்.

பகற்பண்.

புறநீர்மை, காந்தாரம், பியந்தைக்காந்தாரம், கௌசிகம், இந்தளம், தக்கேசி, சாதாரி, நட்டபாடை, நட்டராகம், பழம்பஞ்சுரம், காந்தாரபஞ்சமம். ஆ கஉ.

இராப்பண்.

தக்கராகம், பழந்தக்கராகம், சீகாமரம், கொல்லி, கொல்லிக்கௌவாணம், வியாழக்குறிஞ்சி, மேகராகக்குறிஞ்சி, அந்தாளிக்குறிஞ்சி, குறிஞ்சி. ஆ கூ.

பொதுப்பண்.

செவ்வழி, செந்துருத்தி, தாண்டகம். ஆ ங.

ஆகப்பண் - உச.

Koviloor Digital Library

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருமுறைகண்டபுராணம்.

கருமுறை விண்டடி யவருயு மாறருள் கவுணியர் குலதீபந்
தருமிறை நாவுக் கரசா ரூரர் தாஞ்சே மித்திடமெத்
திருமுறை கண்ட புராண முரைக்கச் சிந்துர முகனற்றாள்
ஒருமுறை யிருமுறை மும்முறை வாழ்த்தி யுவந்தன் பொடுபணிவாம்.

வேறு.

உலகமகிழ் தருசைய மீதுதோன்றி யோவாது வருபொன்னி சூழ்சோ ணாட்டின், றிலகமென விளங்குமணி மாடவாரூர்த் தியாகேசர் பதம்பணிந்து செங்கோ லோச்சி, யலகில்புகழ் பெறுராச ராசமன்ன னபயகுல சேகரன்பா லெய்து மன்ப, ரிலகுமொரு மூவரருள் பதிகமொன்றொன் றேயினிதி னுரை செய்ய வன்பாற் கேட்டு. (க)

கையிரண்டு முச்சிமே லேறக்கண்ணீர் கரைந்தோட மெய்ம்முழுதும் புள கம்போர்ப்ப, வையன்மலர்ப் பதமுளத்தே கொண்டுபோற்றி யரியமுறை தேட வெங்கு மிலாமை யாலே, நையுமனத் தினனாகி யிருக்குங்காலை நாரையூ ரினி லாதி சைவமறை யோன்பால், வையமெலா மீடேறச் சைவம்வாழ மாமணி போ லொருசிறுவன் வந்து தோன்றி. (உ)

வளமொடுப நயனவிதிச் சடங்கும்பூண்டு மறைமுதலாங் கலைபயின்று வருநா ளீன்ற, கிளர்மறையோ னேரூர்க்குச் செல்லமைந்தன் கேடில்பிதா வுரைத்தமொழிப் படியே யந்தி, யிளமதிச்செஞ் சடைப்பொல்லாப் பிள்ளை யாரை யேத்தியா ராதிப்பா னினிதி னேகி, யுளமலியன் பொடுதிருமஞ் சன முன்னாகு முரியவெலாஞ் செய்துநிவே தனமுன் வைத்து. (ந)

எம்பெருமா னமுதுசெய வேண்டுமென்ன விறைஞ்சிடவு மமுதுசெயா திருப்பக் கண்டு, வெம்பியுள மேதேனுந் தவறிங்குண்டோ வேழமுக னேய டியே னிவேதித் திட்ட, பம்பமுத முண்ணாத தென்னையென்னப் பரிந்துதலை தனைமோதப் புகுங்கா லெம்மா, னம்பிபொறு வெனத்தடுத்தவ் வமுதமெல்லா நன்கருந்த வுவந்துநம்பி நவில்வ தானன். (ச)

எந்தையே யினியடியேன் பள்ளிக்கேகி லெங்கடே சிகனடிப்பா னதனா லாலே, சந்தமறை முதற்கலைக ணீயேயோதித் தரல்வேண்டு மெனவேழ முகத் தோன் றானு, மந்தமற வோதுவிக்க வோதிநம்பி மகிழ்ந்தனனன் றதுபோல மற்றை நாளும், விந்தையொடு நிகழநம்பி யாண்டார்நம்பி மேவியிருந் திடுஞ் செய்தி வேந்தன் கேளா. (ரு)

Koviloor Digital Library

செல்வமிகு திருநாரை யூரின்மேவுஞ் சிவனளித்த மதகரிக்குச் சிந்தை கூர்ந்து, நல்லபுக ழுடையநம்பி யாண்டார்நம்பி நண்பிஞெடு நிவேதிப்பான் மதுர மிக்க, வெல்லையில்வா ழைக்கனிதே னவலோடப்ப மெள்ளுண்டை யிவ் வுலகோ ரெடுக்க வென்றே, மல்லன்மிகு சேனையுட னிராசராச மன்னவனு மந்நகரில் வந்து சேர்ந்தான். (சு)

ஆங்கதனுக் கந்நகரி லிடம்போதாம லயல்சூழப் பதின்காத வகல வெல்லை, மாங்கனிவா ழைக்கனிகள் வருக்கையாவும் வந்தனவவ் வெல்லையெல்லா மருவ வைத்துப், பாங்கினுட னம்பிதாள் பணிந்துமன்னன் பலகனிகள் கொணர்ந் தவெலாம் பகர்ந்து போற்றி, யீங்கிதனைப் பொல்லாத பிள்ளையாருக் கிப்பொ ழுதே நிவேதிக்க வென்று சொன்னன். (எ)

நம்பியர சன்சொன்ன வார்த்தைகேளா நன்றுனது பணியென்ன வருளா லுன்னித், தும்பிமுக னடிபணிந்து மன்னனிங்குத் தொகுத்தனநீ யமுதுசெய வேண்டு மென்னக், கம்பமதக் களிற்றுமுகத் தானுமங்குக் கருத்தினுட னம் பியுரைக் கிசைந்து காட்ட, விம்பரினில் வந்தனநாற் சுத்திசெய்தே யிருந்த வெலாம் படைக்கவவ னேற்றல் செய்தான். (அ)

புகர்முகக்கை புறப்படவே படைத்தவெல்லாம் புகுந்தவிட மறியாமற் போன பின்னை, யகநெகிழ மெய்யரும்பிக் கண்ணீர்வார நம்பிகழ லன்பினு லா சன் போற்றி, மிகவுமொரு விண்ணப்ப மடியேற்குண்டு வேதியனே கேளெ ன்று விளம்பு வான்மெய்ப், புகழதுசேர் மூவர்தமிழ் தொண்டர்செய்தி பூதல த்தில் விளங்கவெனப் போற்றி நின்றான். (கூ)

அந்தவுரை கேட்டலுமங் கரசன்றன்னை நம்பிமகிழ்ந் தருள்புரிவா னருள் சேர் மூவர்,செந்தமிழ்க ளிருந்தவிட மன்பருள்ளோர் செய்திக்கவ் விநாயகன் றன் சிந்தித் தெந்தா, யந்தவகை யேதென்று கேட்டாலெந்தை மகிழ்ந்தருளு மந்நெறியை வழாது னக்குத், தந்திடுவன் மன்னபொறு வென்றுசொல்லித் தந்திமுகன் சந்நிதியிற் றாழ்ந்து சென்றான். (க0)

சென்றுபணிந் திபமுகத்தோன் பாதப்போதைச் சென்னியில்வைத் தவ னருளிற் றினைத்துச் சிந்தை,யொன்றுமற வுருகிவிழி தாரைகொள்ள வுண்மை யினுல் வந்தித்தங் குவாவோன் றன்னை, யின்றமிழ்சேர் மூவர்தமி ழிருந்தவெ ல்லை யெல்லையில்சீர்த் திருத்தொண்ட ரியல்பு மூர்த்தி, நன்றுமருள் செய்தருள வேண்டுமென்ன நாகமுக னம்பிக்கு நவில லுற்றான். (கக)

வார்ந்தருட்க ணீர்சொரிய நம்பிகேட்ப வண்டமிழ்க ளிருந்தவிட மன்று ளாடும், கூர்ந்தவிருட் கண்டர்புறக் கடையின்பாங்கர்க் கோலமலர்க் கைகள டை யாள மாகச், சார்ந்தனவென் றருள்செய்து தொண்டர்பேறுஞ் சாற்றுத லாற் சகதலத்தோ ரருளைச் சார, வார்ந்ததமி ழிருந்தவிட மன்பர்செய்தி யத் தனையு நம்பிமனத் தருளிற் கொண்டார். (கஉ)

கொண்டுகுல சேகரனுங் கோன்பால்வந்து குஞ்சரத்தோ னருள்செய்த கொள்கை யெல்லா, மண்டுபெருங் காதலுடன் சொல்லியந்த வண்டமிழின்

Koviloor Digital Library

பெருமைதனை வகுத்துச் சொல்வார், கண்டபெரு மந்திரமே மூவர்பாடல்கை காணு மந்திரங்கண் ணுதலோன் கூற, லெண்டிசையுஞ் சிவனருளைப் பெறுதற் காக விம்மொழியின் பெருமையையா னியம்பக் கேணீ. (கங)

சேடர்மலி காழிநகர் வேந்தர்தாமுந் தேவர்புகழ் திருத்தோணிச் சிவ ஞர் பங்கிற், பீடுடைய வுமைமுலைப்பா லருளாலுண்டு பிஞ்ஞகனைச் சினவிடை மேற் பெருகக் கண்டு, தோடுடைய செவியன்முதற் கல்லூரென்னுந் தொடை முடிவாப் பரசமயத் தொகைகண் மாளப், பாடிஞர் பதிகங்கள் பாவிலொன் ரும் பதினறு யிரமுளதாப் பகரு மன்றே. (கச)

திருநாவுக் கரையரெனுஞ் செம்மையாளர் தீயமணர் சிறைநீங்க வதிகை மேவுங், குருநாமப் பரஞ்சுடரைப் பரவிச்சூலை கொடுங்கூற்ற யினவென்ன வெடுத்துக் கோதி, லொருமானைத் தரிக்குமொரு வரையுங்காறு மொருநாற் பத் தொன்பதினு யிரம தாகப், பெருநாமப் புகலூரிற் பதிகங்கூறிப் பிஞ்ஞு கனு ரடியிணைகள் பெற்று ளாரே. (கரு)

பின்புசில நாளின்க ணூரூர்நம்பி பிறங்குதிரு வெண்ணைநல்லூர்ப் பித்தா வென்னு, மின்பமுதற் திருப்பதிக மூழிதோறு மீருய்முப் பத்தெண்ணு யிர மதாக, முன்புபுகன் றவர்நொடித்தான் மலையிற்சேர்ந்தார் முறைகளெல்லாந் திருத்தில்லை மூதூர் தன்னி, லன்றவர்கை யிலச்சினையால் வைத்தார்மன்ன வாராய்ந்து தருகவென வருளிச் செய்தார். (கசு)

அருமறையைச் சிச்சிலிபண் டருந்தத்தேடு மதுபோலன் றிதுவென்று முளதா முண்மைப், பரபதமுந் தற்பரமும் பரனேயன்றிப் பலரில்லை யென்றெ ழுதும் பனுவல் பாரி, னெரியினிடை வேவாதாற் றெதிரேயோடு மென்புக்கு முயிர்கொடுக்கு மிடுநஞ் சாற்றுங், கரியைவளை விக்குங்கன் மிதக்கப்பண்ணுங் காரமதலை கரையிலுறக் காற்றுங் காணே. (கஎ)

என்றென்று நம்பிக்குப் பரிவாலுண்மை யின்றமிழின் பெருமைதனை யியம்பக் கேட்டுக், குன்றென்று பேருருவங் கொண்டாற்போலுங் குஞ்சரத் தோ னருளினையுட் கொண்டுமன்னன், மன்றினிடஞ் சென்றுமறை யோர்க டொண்டர் வார்சடையோர் காவலுடை மரபோர்க் கெல்லா, நன்றெங்கள் கணபதிதன் சொல்லிதென்று நன்மையுடன் மன்னவனூர் நவிலுங் காலை. (கஅ)

அத்தகையோர் தமிழ்வைத்த மூவர்வந்தா லறைதிறக்கு மெனவுரைக்க வரசன் றானு,மெய்த்தகுசி ரம்பலவர்க் குற்றசெல்வ விழாவெடுத்து விளம்புத மிழ் மூவர் தம்மை, யுய்த்தணிவீ தியினிலுலா வருவித்தும்பர் நாயகன்றன் கோயில்வல மாக்கி யுள்ளே, சித்தமெலா முருக்குதமி ழிருக்கைசேரச் சேர்த் தியவர் சேர்ந்ததெனச் செப்பி நின்றான். (ககூ)

ஐயர்நட மாடுமம் பலத்தின்மேல்பா லருள்பெற்ற மூவர்தம தருள்சேர் செய்ய, கையதுவே யிலச்சினையா யிருந்தகாப்பைக் கண்டவர்க ளதிசயிப்பக் கடைவாய் நீக்கிப், பொய்புடையோ ரறிவுதனைப் புலன்கண்மூடும் பொறப்பது போற் போதமிகும் பாட றன்னை, நொய்யசிறு வன்மீக மூடக்கண்டு நொடிப் பளவி னிற்சிந்தை நொந்த வேந்தன். (உ0)

Koviloor Digital Library

பார்த்ததனைப் புறத்துய்ப்ப வுரைத்துமேலே படிந்திருந்த மண்மலையைச் சேரத் தள்ளிச், சீர்த்ததில தயிலமலி கும்பங்கொண்டு செல்லுநனை யச்சொரிந்து திருவே டெல்லா, மார்த்தவரு ளதனாலே யெடுத்துநோக்க வலகிலா வேடு பழு தாகக் கண்டு, தீர்த்தமுடிக் கணிபரனே பரனேயென்னச் சிந்தைதளர்ந் திருகணீர் சோர நின்றான். (உக)

ஏந்துபுகழ் வளவனிவ்வா றன்பினாலே யிடர்க்கடலின் கரைகாணா தினை யுங் காலைச், சார்ந்தமலை மகள்கொழுந னருளால்வேதச் சைவநெறித் தலைவ ரெனு மூவர் பாடல், வேய்ந்தனபோன் மண்மூடச் செய்தேயீண்டு வேண்டு வன வைத்தோமென் றுலகி னுள்ள, மாந்தரொடு மன்னவனுங் கேட்குமாற் றால் வானகத்தி லோரோசை யெழுந்த தன்றே. (உஉ)

அந்தமொழி கேட்டலுமே மன்னன்றானு மாடினான் பாடினா னலக்கண் யாவுஞ், சிந்தினா னமுதமுண்டான் போலநெஞ்சந் தேறினானம்பிதிரு வடியிற் றாழ்ந்தான், பந்தமறு சிவனடியார் கொள்கவென்னாப் பண்டாரந் திறந்துவி ட்டான் பரிவு கூர்ந்தான், இந்தவகைப் பெருங்களிகொண் மன்னன்றானு மெ ழின்முறையை முன்போல வகுக்க வெண்ணி. (உங)

மன்னுதமிழ் விரகரெங்கள் காழிவேந்தர் வகுத்தருளா லமைத்ததிரு முறையோர் மூன்று, மன்னவகை வாகீசர் முறையோர்மூன்று மாரூ ருரைத்ததிரு முறைய தொன்றுந், துன்னவகை யேழாகத் தொகுத்துச்செய் தான் றாயமனு வெழுகோடி யென்ப துன்னித், தன்னிகரி றிருவாளன் மன் னன்றானுந் தாரணியோர் வீடுபெறுந் தன்மை சூழ்ந்தே. (உச)

வேறு.

பண்புற்ற திருஞான சம்பந்தர் பதிகமுந்நூற்
றெண்பத்தி னான்கினை விலங்குதிரு முறைமூன்று
நண்புற்ற நாவரசர் முந்நூற்றேழ் மூன்றினால்
வண்பெற்ற முறையொன்று நூற்றினால் வன்றொண்டர். (உரு)

ஆகவளர் திருமுறையே ழருட்டிருவா சகமொன்று
மோகமெறி திருவிசைப்பா மாலைமுறை யொன்றுசிவ
போகமிகு மந்திரமா முறையொன்று புகழ்பெறவே
பாகமிகுந் திருமுறைகள் பத்தாக வைத்தார்கள். (உசு)

வைத்ததற்பி னம்பிகழன் மன்னர்பிரான் மகிழ்ந்திறைஞ்சிச்
சித்திதரு மிறைமொழிந்த திருமுகப்பா சுரமுதலா
வுய்த்தபதி கங்களையு மொருமுறையாச் செய்கவெனப்
பத்திதருந் திருமுறைகள் பதினொன்றாப் பண்ணினார். (உஎ)

மந்திரங்க ளெழுகோடி யாதலினான் மன்னுமவ
ரிந்தவகை திருமுறைக ளேழாக வெடுத்தமைத்துப்
பந்தமுறு மந்திரங்கள் பதினொன்று மாதலினா
லந்தமுறை நான்கினொடு முறைபதினொன் றாக்கினார். (உஅ)

Koviloor Digital Library

ஆக்கியபின் றிருத்தொண்டத் தொகையடைவை யருளாலே
நோக்கியபின் ஞயன்மார் றுடங்கடைவுந் தொழிற்பேறும்
பாக்கியத்தா லிபமுகத்தோ னருள்செய்த பகுதியினல்
வாக்கியல்சே ரந்தாதி நம்பியடை வேவகுத்தார். (உகூ)

சீரருள்சே ரறுபத்து மூவர்தனி திருக்கூட்டஞ்
சாருமவ ரொன்பானுந் தண்டமிழா னுரைசெய்து
பேரிசையாம் வகையடைவு புவியினிடைப் பெருமையினற்
சீருலவு திருவெருக்கத் தம்புலியூர் சென்றடைந்தார். (ங௦)

சென்னியரு ணம்பியிவ ரந்நகரைச் சேர்ந்துசிவன்
மன்னுதிருக் கோயிலினை வலங்கொண்டு பணிந்தரனே
யின்னிசைதந் தருளென்ன விரக்கமுடன் குறைந்திரப்பக்
கன்னியொரு பங்குடையோ னருள்செய்த கடனுரைப்பாம். (ஙக)

நல்லிசையாழ்ப் பாணனார் நன்மரபின் வழிவந்த
வல்லியொருத் திக்கிசைகள் வாய்ப்பவளித் தோமென்று
சொல்லவவ டனையழைத்துச் சுருதிவழிப் பண்டமுவு
நல்லிசையின் வழிகேட்டு நம்பியிறை யுண்மகிழ்ந்தார். (ஙஉ)

ஆங்கவளை யம்பலத்து ளாடுவார் திருமுன்பே
பாங்கினுடன் கொடுவந்து பண்ணடைவு பயில்பாட
லோங்கருளான் முறைபணித்தற் கொக்குமென வோரோசை
நீங்கரிய வானின்க ணிகழுவர சன்கேட்டான். (ஙங)

மன்னனுக்கு நம்பிக்கு மறையவர்மூ வாயிரவர்
பன்னரிய திருத்தொண்டர் பலதுறையோர்க் குங்கேட்க
வின்னருண்முன் வியந்துரைத்த விவண்முதலா விசைத்தவிசை
தென்னிலமேன் மிகத்தோன்றத் திருவருளாற் றோன்றியதாம். (ஙச)

சொன்னட்ட பாடைக்குத் தொகையெட்டுக் கட்டளையா
மின்னிசையாற் றருந்தக்க ராகத்தேழ் கட்டளையாம்
பன்னுபழந் தக்கரா கப்பண்ணின் மூன்றுளதா
முன்னரிய தக்கேசிக் கோரிரண்டு வருவித்தார். (ஙரு)

மேவுகுறிஞ் சிக்கஞ்சு வியாழகுறிஞ் சிக்காறு
பாவுபுகழ் மேகரா கக்குறிஞ்சிப் பாவிரண்டு
தேவுவந்த விந்தளத்தின் செய்திக்கு நான்கினிய
தாவில்புகழ்க் காமரத்தின் றன்மைதனக் கிரண்டமைத்தார். (ஙசூ)

காந்தார மாகிய பியந்தையாங் கட்டளைக்கு
வாய்ந்தவகை மூன்றாக்கி வன்னட்ட ராகத்திற்
கேய்ந்தவகை யிரண்டாக்கிச் செவ்வழியொன் றாக்கியிசைக்
காந்தார பஞ்சமத்தின் கட்டளைமூன் றாக்கினார். (ஙஎ)

Koviloor Digital Library

கொல்லிக்கு நாலாக்கிக் கவுசிகத்துக் கூறும்வகை
சொல்லிரண் டாக்கிமிகு தூங்கிசைநேர் பஞ்சமத்திற்
கொல்லையினி லொன்றாக்கிச் சாதாரிக் கொன்பதாப்
புல்லுமிசைப் புறநீர்மைக் கொன்றாகப் போற்றினார். (௩அ)

அந்தாளிக் கொன்றாக்கி வாகீச ரருந்தமிழின்
முந்தாய பலதமிழுக் கொன்றென்று மொழிவித்து
நந்தாத நேரிசையாங் கொல்லிக்கு நாட்டிரண்
டுந்தாடுங் குறுந்தொகைக்கோர் கட்டளையா விரித்துரைத்தார். (௩௯)

தாண்டகமாம் பாவுக்கோர் கட்டளையாத் தாபித்தங்
காண்டகையார் தடுத்தாண்ட வையாரு டெய்யமுறைக்
கீண்டிசைசே ரிந்தளத்துக் கிரண்டாக வெடுத்துரைத்து
நீண்டதக்க ராகத்துக் கிரண்டாக நிகழ்வித்தார். (௪0)

கூறரிய நட்டரா கத்திரண்டு கொல்லிக்கு
வேறுவகை மூன்றாக மிகுத்தபழம் பஞ்சுரத்துக்
கேறும்வகை யிரண்டாக்கி யின்னிசைதேர் தக்கேசிப்
பேறிசையா றுக்கியதிற் காந்தாரம் பிறித்திரண்டாம். (௪க)

ஒன்றாகுங் காந்தார பஞ்சமத்துக் கோரிரண்டா
நன்றான சீர்நட்ட பாடைக்கு நவின்றுரைக்கிற்
குன்றாத புறநீர்மைக் கிரண்டாகுங் கூறுமிசை
யொன்றாகக் காமரத்துக் கொன்றாகப் போற்றினார். (௪உ)

உற்றவிசைக் குறிஞ்சிக்கோ ரிரண்டாக வகுத்தமைத்துப்
பற்றரிய செந்துருத்திக் கொன்றாக்கிக் கவுசிகப்பாற்
றுற்றவிசை யிரண்டாக்கித் தூயவிசைப் பஞ்சமத்துக்
கற்றவிசை யொன்றாக்கி யானருளால் விரித்தமைத்தார். (௪௩)

இந்தவகை சிவன்செவிப்பா லெக்கண்ணுந் தழைத்தோங்க
வந்தமிலா வறுபத்து மூவாரு ளம்புவிமே
னந்திடிட மும்மலமு நல்லுலகோர் நீங்கியிடச்
சிந்தையருட் சிவமாகத் தெளிவித்தா னருட்சென்னி. (௪௪)

சீராருந் திருமுறைகள் கண்டதிறற் பார்த்திபனு
மோராரு மிறைவனையு மெழிலாரு நம்பியையு
மாராத வன்பினுட னடிபணிந்தங் கருள்விரவச்
சோராத காதன்மிகுந் திருத்தொண்டர் பதந்துதிப்பாம். (௪௫)

திருமுறைகண்டபுராணம் முற்றிற்று.

திருப்பதிகக்கோவை.

ஒன்றாதி யோரெழுபத் தொன்றீறாய் மூவர்தமிழ்
சென்றார் சிவதலங்கள் செப்புதற்கு — நின்று
கடக்குஞ் சரமுகனோர் காய்விழியா னீன்ற
கடக்குஞ் சரமுகனே காப்பு.

Koviloor Digital Library

பன்னுசிவ தலமொருநூற் றைம்பதிற்று மூன்று பதிகமொன்று நாற்பத் தொன் பதுபதிக மிரண்டா, முன்னுமிரு பதிற்றெட்டு நகர்பதிக மூன்று மொ ருபதினோர் தலம்பதிக மொருநான்கென் றுணர்க, மன்னுமிரு நான்குதல மோரைந்தே பதிக*மற்றுமைந்து தலங்களுக்கு வருபதிக மாறும், பின்னுமை ந்து வளர்நகர்க்குப் பெறும்பதிக மேழாம் பேசுமொரு நான்குதலம் பெறும்ப திக மெட்டே. (௧)

பரவுமொரு நான்குதலம் பதினொன்றும் பதிகம்†பன்னுமிரு தலம்பதி கம் பன்னிரண்டாப் பகரு, முரைசெயிரு தலம்பதிகம் பதினெட்டா மிப்பா லொருமூன்று தலங்களுக்கிங் குறுபதிக முரைக்கி, னிரவிவரு மறுநான்கு முப்பதிற்று நான்கு நீடெழுபத் தொன்றுமென நிரனிரையா மாகக், கருது சிவ தலமிருநூற் றெழுபதிற்று நான்கு கடைகாப்போ ரெழுநூற்று நாற்ப திற்றொன் பானே. (௨)

திருப்பழுவூர் சேய்ஞலூர் திருமுல்லை வாயி றிருவைகா கொடிமாடச் செங்குன்றூர் வியலூர், கருக்குடிதெங் கூர்பனந்தாள் கலிக்காமூர் தலைச்சங் காடுமயேந் திரப்பள்ளி கச்சினங்கன் றாப்பூர், குரக்குக்கா பெரும்புலியூர் திரு க்காட்டுப் பள்ளி குடந்தைக்கீழ்க் கோட்டமொடு குடந்தைக்கா ரோணம், மெ ருக்கத்தம் புலியூர்வெண் டுறைகண்ணார் கோயி லிலம்பையங்கோட் டூர்சிக்க லிராமனதீச் சரமே. (௩)

பள்ளியின்முக் கூடறிரு விரும்பூளை யாவூர்ப் பசுபதீச் சரம்பாலைத் துறை பருதி நியமங், கள்ளில்குரங் கணின்முட்டந் திருமுருகன் பூண்டி கஞ்சனூர் கச்சிநெறிக் காரைக்கா டோத்தூர், புள்ளமங்கை நாட்டியத்தான் குடிகலைய நல்லூர் புக்கொளியூ ரவிநாசி பூவனூர் துறையூர், கொள்ளிக்கா டிடைச்சுர மச் சிறுபாக்கம் விளமர் கொட்டையூர் கொடுங்குன்றங் கூடலையாற் றூரே. ()

நெல்வேலி திருவழுந்தூர் தருமபுரம் பயற்றூர் நெடுங்களம்வக் கரையி ரும்பை மாகாளம் வடுகூர், நெல்வெண்ணெய் வடகரைமாந் துறைதிருவிற் கோல நீடூர்சக் கரப்பள்ளி யகத்தியான் பள்ளி, நெல்வாயில் பேணுபெருந் துறைநாலூர் மயான நெல்லிக்கா விற்குடிவீ ரட்டமதி முற்றம், வல்லமறை யணிநல்லூர் தலையாலங் காடு வாட்போக்கி திருநாவ லூர்மயிலாப் பூரே. (௫)

திருவாரூர்ப் பரவையுண்மண் டளிசாத்த மங்கை சிற்றேமந் தெளிச் சேரி திருவுசாத் தானம், கரவீரந் திருவாலம் பொழில்வெண்ணெய் நல்லூர் கச்சியனே கதங்காவ தங்கோடிக் குழக, ரசிலிதென் குடித்திட்டை வடமு ல்லை வாயி லம்பர்ப்பெருந் திருக்கோயில் வெண்பாக்கஞ் சுழியல், பெருமண மிந் திரநீலப் பருப்பதம் வேற்காடு பேரெயில்பாற் றுறைமூக்கீச் சரமுண்டீச் சரமே. (௬)

பறியலூர் வீரட்டங் கானாட்டு முள்ளூர் பாதாளீச் சரமெதிர்கொள் பாடிவலி தாயஞ், சிறுகுடிகச் சூராலக் கோயில்கொள்ளம் பூதூர் திருப்புற வார் பனங்காட்டூர் விளநகர்தண் டலைநீ, ணெறியரதைப் பெரும்பாழி யூறல் கரு வூரா னிலையிடும்பா வனங்கடுவாய்க் கரைப்புத்தூர் கடம்பந், துறைதி ருவே டகந்திருவஞ் சைக்களமா டானை சோபுரங்கற் குடிவடகு ரங்காடு துறையே. (௭)

* எழுதலங்களுக்கே ஐந்துபதிகங்களுள்ளன. † மூன்றுதலங்களுக்கே பதினொரு பதிகங்களுள்ளன.

Koviloor Digital Library

திருமாணி குழிவேட்டக் குடிதிருவாப் பாடி திருந்துதே வன்குடிமா கறல்சத்தி முற்றந், திருவாப்ப னூர்மீயச் சூரவ்வூர் தன்னிற் றிகழ்ந்ததிரு விளங்கோயில் வெஞ்சமாக் கூடல், பெருநீலக் குடிமண்ணிப் படிக்கரைநன் னிலத்துப் பெருங்கோயி றிருநணு திருப்பட்டீச் சரமே, திருவீங்கோய் மலை வன்பார்த் தான்பனங்காட் டூரே திருப்புகலூர் வர்த்தமானேச்சரம்பாம்புரமே.

கடைமுடியே யோணகாந் தன்றளிகோட் டூர்வை கன்மாடக் கோயிலி டை யாறுபழை யாறை, வடதளிநற் றினைநகாங் கோணமா மலைசீர் வன்னியூர் கருவிலிய னேகதங்கா வதகல், விடமேவு கடிக்குளநற் றிருக்களரென் றிவை கட் கிரும்பதிக மொவ்வொன்றென் றிசைத்திடுக விப்பாற், குடவாயில் புன வாயி றாங்கானை மாடங் கோழம்ப மவளிவணல் லூர்கோலக் காவே. (கூ)

குருகாவூர் திருவேள்விக் குடிவிசய மங்கை குற்றாலங் குடமூக்குக் கோட் டாறு பனையூர், கருகாவூர் குரங்காடு துறையோமாம் புலியூர் கண்டியூர் வேதி குடி கானூர்கோ காணங், திருவாரூ ரனெறிபங் தணைநல்லூர் நல்லங் திருக் கண்டீச் சரந்தேவூர் திருச்சிராப் பள்ளி, பெருவேளூர் கீழ்வேளூ ரெறும்பி யூர் கானப் பேர்திருமங் கலக்குடியாக் கூர்கோவ லூரே. (க0)

திருப்பரங்குன் றந்திருப்பா திரிப்புலியூர் குறுக்கை திருப்புத்தூர் மணஞ்சேரி பாச்சிலாச் சிராமங், கருப்பறிய லூர்கேதீச் சரந்திருக்கே தாரங் கச்சிமேற் றளிமேலைத் திருக்காட்டுப் பள்ளி, யருத்தியுறு பட்டினத்துப் பல் லவனீச் சரம்பே ரன்பிலா லந்துறைப ராய்த்துறைவேட் களமிங், குரைத்தசீ ரன்னியூ ரிவ்விரண்டாம் பதிக முள்ளதலங் கடவூர்ம யானம்வாஞ் சியமே. ()

துருத்திதிரு நனிபள்ளி திருமருக றிருப்பூந் துருத்திபுறம் பயங்கடவூர் புள்ளிருக்கு வேளூ, ரத்துறைவாழ் கொளிபுத்தூர் வான்மியூர் பாசூ ரம்ப ர்மா காளமயி லாடுதுறை வாய்மூர், திருக்கழுக்குன் றம்பாண்டிக் கொடுமு டிரா மேச்சரஞ் செங்காட்டங் குடிவெண்ணி திருச்செம்பொன் பள்ளி, பரு ப்பதம்புன் கூரரிசிற் கரைப்புத்தூர் சேறை பைஞ்ஞீலி கற்குடிமா மலைபதிக மூன்றே. (கஉ)

வலம்புரமா லங்காடு சிவபுரங்கா ளத்தி வலிவலஞ்சாய்க் காடுதிருக் கோ டிகா நகரம், நலந்திகழும் பூவணங்கோ ளிலிநின்றி யூரு நறையூர்ச்சித் தீச்ச ரமு நான்காகும் பதிகம், வலஞ்சுழிநல் லூர்பழன*மாமாத்தூ ரண்ணு மலைக டம்பூ ரின்னம்பர் நாரையூ ரைந்தா, நிலந்திகழ்நா கேச்சரமாற் பேறுமழ பாடி நெய்த்தானம் வெண்காடு நீள்பதிக மாறே. (கங)

கயிலாய மானைக்கா நள்ளாறு நாகைக் காரோணந் திருச்சோற்றுத் துறையேழு†புகலூர், வயலாருங் கழிப்பாலை யொற்றியூர் திருவா வடுதுறை யெட் டாந்தில்லை மறைக்காடு மதுரை, யியலாரு முதுகுன்றம் பதினொன்று‡ கச்சி யேகம்ப மிடைமருதி ராறையா றதிகை, யயலீரொன் பான்வீழி யாரூ ர்சீ காழி யறுநான்கு முப்பானுன் கெழுபத்தோன் றுமே. (கச)

திருப்பதிகக்கோவை முற்றிற்று.

* பழனத்துக்கு ஆறுபதிகங்களுள்ளன. † திருச்சோற்றுத்துறைக்கு ஆறுபதிகங்க ளுள்ளன. ‡ மறைக்காட்டுக்குப் பத்துப்பதிகங்களேயுள்ளன.

Koviloor Digital Library

திருப்பதிக்கோவை.

கோயிறிரு வேட்களநெல் வாயில்கழிப் பாலை குலவுபெரு மணமயேந் திரப்பள்ளி முல்லை, வாயில்கலிக் காமூர்சாய்க் காடுதிருப் பல்ல வனீச்சரம் வெண் காடுவளர் திருக்காட்டுப் பள்ளி, தாயிலான் குருகாவூர் காழிகோ லக்கா தருக்கிளர்புள் ளிருக்குவே ளூர்கண்ணார் கோயின், ஞாயிலியற் கடை முடியே நின்றியூர் புன்கூர் நாடியநீ டூரன்னி யூர்வேள்விக் குடியே. (க)

கருதெதிர்கொள் பாடிமணஞ் சேரிதிருக் குறுக்கைகருப்பறிய லூர்க தியே காட்டுகுரக் குக்கா, மருவும்வாழ் கொளிபுத்தூர் மண்ணிப்படிக் கரையே வளருமோ மாம்புலியூர் கானாட்டு முள்ளூர், திருநாரை யூர்கடம்பூர் பந்தணை நல் லூர்பொன் றிகழ்கஞ்ச னூர்கோடி காமங்கலக் குடியே, திருப்பனந்தா ளாப்பாடி சேய்ஞலூர் திருந்து தேவன்குடி திருவியலூர் திருக்கொட்டை யூரே. (உ)

இன்னம்பர் திருப்புறம்ப யம்விசய மங்கை யியல்வைகா வூர்நல்வட குரங் காடு துறையே, பின்னமறு பழனமை யாறுநெய்த் தானம் பெரும்புலியூர் மழ பாடி திருப்பழுவூர் கானூ, ரன்னவன்பி லாலந்துறை மாந்துறைபாற் றுறை யேயானைக்கா பைஞ்ஞீலி பாச்சிலாச் சிராம, மன்னுமீங் கோய்மலையி னோட றுபான் மூன்றே வடகரையிற் பதிதென்பால் வாட்போக்கி யாமே. (ங)

கடம்பந்துறை திருப்பராய்த்துறை கற்குடிமூக் கீச்சரங் கருதுதிருச் சிராப்பள்ளி திருவெறும்பி யூரே, நெடுங்களமே லைக்காட்டுப் பள்ளியாலம் பொழில்சீர் நிகழ்திருப்பூந் துருத்திகண்டி யூர்சோற்றுத் துறைமா, லடும்வேதி குடிதென்குடித் திட்டைபுள்ள மங்கை யணியார்சக் கரப்பள்ளி யருங்கருகா வூரே, படர்பாலைத் துறைநல்லூர் திருவாரூ ரதனிற் பசுபதீச் சுரஞ்சத்தி முற் றம்பட்டீச் சரமே. (ச)

ஆறைவட தளிதிருவ லஞ்சுழியே குடமூக் கதனிற்கீழ்க் கோட்டங்கா ரோணநா கேச்சரங், கூறுமிடை மருதுகுரங் காடுதுறை நீலக் குடிவைகன் மாடக்கோயி னல்லங்கோ ழம்பஞ்,சாறமா வடுதுறைதண் டுருத்திதிரு வழுந் தூர் சகம்புகழ்மா யூரம்விள னகர்பறிய லூரே, வீறுசெம்பொன் பள்ளிநனி பள்ளிவலம் புரமே வியன்றலைச்சங் காடாக்கூர் விளங்குகட வூரே. (ரு)

திருக்கடவூர் மயானமொடு திருவேட்டக் குடியே தெளிச்சேரி தரும புர நள்ளாறு கோட்டா, றுரைக்குமம்பர்ப் பெருந்திருக் கோயின்மா காள முயர்மீயச் சூரிளங்கோ யிறிலதைப் பதிபூ, மருக்கமழ்பாம் புரநற்சிறு குடிவீழி மிழலை வன்னியூர் கருவிலிமன் பேணுபெருந் துறையென், கருத்து டைக்கு நறையூர்ச்சித் தீச்சரத்தோ டரிசிற் கரைப்புத்தூர் சிவபுரமுங் கலைய நல்லூர் காணே. (சு)

கருக்குடிவாஞ் சியந்திருநன் னிலத்துப்பெருங் கோயில் கவின்கொண் டீச் சரம்பனையூர் விற்குடிதென் புகலூ, ரிருக்கும்வர்த்த மானேச்சர மிராமன தீச் சரமே யியல்பயற்றூர் செங்காட்டங் குடிமருக விருளே, முருக்குதிருச் சாத்தமங்கை நாகைக்கா ரோண முன்றிருச்சிக் கறிருக்கீழ் வேளூர்தே வூரே, யரிக்கரியான் பள்ளியின்முக் கூடறிரு வாரூ ரநெறிமூ லட்டானம் பரவையுண்மண் டளியே. (எ)

மேலாகும் விளமர்கர வீரம்பெரு வேளூர் மிளிர்தலையா லங்காடு குட வாயில் சேறை, நாலூர்ம யானங்கடு வாய்க்கரைப் புத்தூர் நவிலுமிரும் பூளை திரு வீரதைப்பெரும் பாழி, மாலூரு மவளிவணல் லூர்பருதி நியமம் வாழ் வெண்ணி பூவனூர் பாதாளீச் சரநீர்ச், சேலூருந் திருக்களர்சிற் றேமமு சாத் தானந் திருவிடும்பா வனத்தோடு சேர்ந்தகடிக் குளமே. (௮)

தண்டலைநீ ணெறிகோட்டூர் வெண்டுறையோ டழகே தருகொள்ளம் பூதூர்பே ரெயில்கொள்ளிக் காடு, கண்டருதெங் கூர்நெல்லிக்கா நாட்டியத் தான் குடியே காறுயில் கன்றாப்பூர் வலிவலங்கச் சினத்தோ, டண்டர்பிரான் கோளிலிதென் றிருவாய்மூர் மறைக்கா டகத்தியான் பள்ளிகோடிக் குழகருந் தென் கரையி, லெண்டருநூற் றிருபத்தே ழிப்பாலீ ழத்தி லிசைகோண மாம லைகே தீச்சரமென் றிரண்டே. (௯)

ஆலவா யாப்பனூர் பரங்குன்றே டகத்தோ டருங்கொடுங்குன் றந்திருப் புத் தூர்புனவா யிலினோ, டேடுமிரா மேச்சரமா டானைகா னப்பே ரெழிற்றி ருப்பூ வணஞ்சுழிய லின்புறுகுற் றாலம், பாலலோ சனன்றிருநெல் வேலி யொடு பாண்டி பதினான்கு மலைநாட்டி லஞ்சைக்கள மொன்றே, சீலமிகு மவி நாசி திருமுருகன் பூண்டி திருநணா கொடிமாடச் செங்குன்றூர் தானே. (௧௦)

வெஞ்சமாக் கூடல்கொடு முடிகருவூர் கொங்கின் மேவுமே ழாத்துறை வண் டேங்கானை மாட, மெஞ்சலில் கூடலையாற்றூ ரெருக்கத்தம் புலியூ ரிணைய கலுந் தினைநகர்சோ புரமதிகை புகழே, விஞ்சுதிரு நாவலூர் முதுகுன்றந் திருநெல் வெண்ணெய்திருக் கோவலூ ரறையணிநல் லூரே,மஞ்சுதிக ழிடை யாறு வெண்ணெய்நல்லூர் துறையூர் வடுகூர்வீ டேயருளூந் திருமாணி குழியே. (௧௧)

தண்ணார்தண் டலைப்பாதி ரிப்புலியூர் முண்டீச் சரம்புறவார் பனங்காட் டூர் திருவாமாத் தூரே, யெண்ணாரண் ணாமலையு நடுநாட்டி லிருபத் திரண் டாகு மிப்பாலே கம்பமேற் றளிவின், கண்ணோங்கு மதிலோண காந்தன்றளி யனேக தங்காவ தங்கச்சி நெறிக்காரைக் காடே, யுண்ணாடு குரங்கணின்முட் டந்திருமா கறலோத் தூர்வன்பார்த் தான்பனங்காட் டூர்வல்லமாற் பேறே. ()

ஊறலிலம் பையங்கோட் டூர் விற்கோல மாலங்கா டியர்பாசூர் வெண்பா க்கங் கள்ளில்கா ளத்தி, மாறிறிரு வொற்றியூர் வலிதாயம் பாலி வடமுல்லை வாயில்வேற் காடுதிரு மயிலை, யீறிறிரு வான்மியூர்கச் சூராலக் கோயி லிடை ச்சுரங் கழுக்குன்ற மச்சிறுபாக் கம்மே, மாறிறிரு வக்கரையே யரசிலிதொல் லிரும்பை மாகாளந் தொண்டைநன்னாட் டெண்ணின்முப்பா னிரண்டே. ()

கோகரணந் துளுவதே யத்திலொன்றே யிப்பாற் குலவுபருப் பதநீலப் பருப்பதமம் பிகைதன், பாகருறை யனேகதங்கா வதந்திருக்கே தாரம் பகர் கொடித்தான் மலைவடக்கிற் பதியைந்தே யிவற்றோ, டாகவிரு நூற்றெழுபா னென்கென்பர் மூவ ரருட்பதிக மிருக்குமூ ரதிகமாம் வைப்பு, தாகமுட னினை ப்போர்க்குந் துதிப்போர்க்கும் வினைகள் சாராவாம் பிறப்பகலுஞ் சத்தியமுத் தியுமே. (௧௪)

திருப்பதிக்கோவை முற்றிற்று.

Koviloor Digital Library

A. No............

உ

சிவமயம்.

தல அகராதி முதலியன.

தலம் - பதிகம் - சமய குரவர்.	திருமுறை எண்	பக்கம்.
க. அகத்தியான்பள்ளி.		அசஎ
வாடியவெ ச	உ	அசஎ
உ. அச்சிறுபாக்கம்.		கக௩௩
பொன்றிரண் ,,	க	கக௩௩
௩. அஞ்சைக்களம்.		கூக௩
தலைக்குத்தலை சு	எ	கூக௩
ச. அண்ணுமலை.		க0உ௫
உண்ணுமுலை ச	க	க0உ௫
பூவார்மலர் ,,	,,	க0உசு
ஓதிமாமலர் அ	ச	க0உஅ
வட்டனைம்மதி ,,	௫	க0உகூ
பட்டியேறு ,,	,,	க0௩0
௫. அதிகை.		கூசச
குன்றைக்கு ச	க	கூசச
கூற்றுயின அ	ச	கூச௫
சுண்ணவெண் ,,	,,	கூசகூ
முளைக்கதிரி ,,	,,	கூ௫0
இரும்புகொ ,,	,,	கூ௫உ
வெண்ணிலா ,,	,,	கூ௫௩
நம்பனேயெ ,,	,,	கூ௫ச
மடக்கினுர் ,,	,,	கூ௫௫
முன்பெலா ,,	,,	கூ௫சு
மாசிலொள் ,,	,,	கூ௫எ
கோணன்மா ,,	௫	கூ௫அ
எட்டுநாண் ,,	,,	கூசு0
வெறிவிரவு ,,	சு	கூசுக
சந்திரனை ,,	,,	கூசுச
எல்லாஞ்சிவ ,,	,,	கூசுசு
அரவணையா ,,	,,	கூசுஅ
செல்வப்பு ,,	,,	கூஎ0
தம்மானை சு	எ	கூஎ௩
சு. அம்பர்ப்பெருந்திருக்கோயில்.		௫௫உ
எரிதரவனல் ச	௩	௫௫உ
எ. அம்பர்மாகாளம்.		௫௫ச
அடையார்பு ,,	க	௫௫ச
புல்குபொன் ,,	உ	௫௫சு
படியுளார் ,,	௩	௫௫எ

தலம் - பதிகம் - சமய குரவர்.	திருமுறை எண்.	பக்கம்.
அ. அரசிலி.		கக௩எ
பாடல்வண் ச	உ	கக௩எ
கூ. அரதைப்பெரும்பாழி.		எஎ௩
பைத்தபாம் ,,	௩	எஎ௩
க0. அரிசிற்கரைபுத்தூர்.		சுக0
மின்னுஞ்ச ச	உ	சுக0
முத்தூரும் அ	௫	சுகஉ
மலைக்கும் சு	எ	சுக௩
கக. அவளிவணல்லூர்		எஎச
கொம்பிரிய ச	௩	எஎச
தோற்றிஞ அ	ச	எஎசு
கஉ. அவிநாசி.புக்கொ		கூகசு
எற்றுன்ம சு	எ	கூகசு
க௩. அழுந்தூர்		சகூஉ
தொழுமாறு ச	உ	சகூஉ
கச. அறையணி நல்லூர்.		கூகூஅ
பீடிஞற்பெ ,,	உ	கூகூஅ
க௫. அனேக தங்காவதம்.		கக௫0
நீடன்மேவு ,,	,,	கக௫0
கசு. அன்பிலாலந்துறை.		௩உஅ
கணைநீடெரி ச	க	௩உஅ
வானஞ்சேர் அ	௫	௩உகூ
கஎ. அன்னியூர்.		கஅ0
மன்னியூருறை ச	க	கஅ0
பாறலைத்த அ	௫	கஅக
கஅ. ஆக்கூர்.		௫கஎ
அக்கிருந் ச	உ	௫கஎ
முடித்தாம அ	சு	௫ககூ
ககூ. ஆடானை.		அகூச
மாதோர்கூ ச	உ	அகூச
உ0. ஆப்பனூர்.		அஎச
முற்றுஞ்ச ச	க	அஎச

தலம் - பதிகம் - சமய குரவர்.		திரு முறை எண்.	பக்கம்.	தலம் - பதிகம் - சமய குரவர்.		திரு முறை எண்.	பக்கம்.
௨௧. ஆப்பாடி.			௨௩௯	௨௫. ஆரூர்ப்பரவையுண்மண்டளி.			௭௫௧
கடலகமேழி	அ	௪	௨௩௧	தூவாயாதொ	சு	௭	௭௫௧
௨௨. ஆமாத்தூர்.			௧௦௧௭	௨௬. ஆலங்காடு.			௧௦௭௯
தன்னம்பெய்	ச	௨	௧௦௧௭	துஞ்சவரு	ச	௧	௧௦௭௯
குன்றவார்	,,	,,	௧௦௧௮	வெள்ளநீர்	அ	௪	௧௦௮௧
மாமாத்தா	அ	௫	௧௦௧௯	ஒன்றாவுல	,,	௬	௧௦௮௨
வண்ணங்க	,,	௬	௧௦௨௧	முத்தாமுத்	சு	௭	௧௦௮௫
காண்டனன்	சு	௭	௧௦௨௩	௨௭. ஆலம்பொழில்.			௩௭௭
௨௩. ஆரூர்.			௬௯௦	கருவாகிக்	அ	௬	௩௭௭
சித்தந்தெ	ச	௧	௬௯௦	௨௮. ஆலவாய் (மதுரை.)			௮௫௬
பாடலனன்	,,	,,	௬௯௦	நீலமாமிடற்	ச	௧	௮௫௬
பவனமாய்	,,	௨	௬௯௨	மந்திரமா	,,	௨	௮௫௭
பருக்கையா	,,	,,	௬௯௩	மானினேர்	,,	௩	௮௫௮
அந்தமா	,,	௩	௬௯௪	காட்டுமா	,,	,,	௮௬௦
பாடிளம்	அ	௪	௬௯௬	செய்யனே	,,	,,	௮௬௧
மெய்யெலா	,,	,,	௬௯௭	வீடலாலவா	,,	,,	௮௬௩
குலப்படை	,,	,,	௬௯௮	வேதவேள்வி	,,	,,	௮௬௫
காண்டலே	,,	,,	௬௯௯	ஆலநீழலு	,,	,,	௮௬௭
முத்துவிதா	,,	,,	௭௦௧	மங்கையர்க்	,,	,,	௮௬௮
படுகுழிப்	,,	,,	௭௦௨	வேதியாவே	அ	௪	௮௭௦
குழல்வலங்	,,	,,	௭௦௩	மூளைத்தானை	,,	௬	௮௭௧
குலம்பலம்	,,	,,	௭௦௫	௨௯. ஆவடுதுறை.			௪௭௩
வேம்பினைப்	,,	,,	௭௦௬	இடரினும்	ச	௩	௪௭௩
எப்போதும்	,,	௫	௭௦௮	மாயிருஞா	அ	௪	௪௭௬
கொக்கரை	,,	,,	௭௧௦	மஞ்சனேம	,,	,,	௪௭௭
கைம்மான	,,	௬	௭௧௧	நிறைக்கவா	,,	௫	௪௭௯
உயிராவண	,,	,,	௭௧௩	நம்பனைநால்	,,	௬	௪௮௦
பாதித்தன்	,,	,,	௭௧௬	திருவேயெ	,,	,,	௪௮௨
பொய்ம்மாய	,,	,,	௭௧௭	மறையவ	சு	௭	௪௮௪
நீற்றினையு	,,	,,	௭௨௦	கங்கைவார்	,,	,,	௪௮௫
திருமணியை	,,	,,	௭௨௨	௩௦. ஆவூர்ப்பசுபதீச்சரம்.			௪௧௮
எம்பந்த	,,	,,	௭௨௪	புண்ணியர்	ச	௧	௪௧௮
இடர்கெடு	,,	,,	௭௨௬	௩௧. ஆனைக்கா.			௩௩௪
கற்றவர்க	,,	,,	௭௨௮	மழையார்	ச	௨	௩௩௪
வருவனய்யு	,,	,,	௭௩௧	வானைக்கா	ச	௩	௩௩௫
இறைகளோ	சு	௭	௭௩௩	மண்ணதுவுண்ட	ச	௩	௩௩௬
குருகுபா	,,	,,	௭௩௪	கோனைக்காவி	அ	௫	௩௩௮
தில்லைவா	,,	,,	௭௩௬	எத்தாயரெத்	,,	௬	௩௩௯
பத்திமை	,,	,,	௭௩௯	முன்னானைத்	,,	,,	௩௪௧
பொன்னுமெ	,,	,,	௭௪௧	மறைகளாயின	சு	௭	௩௪௩
கரையுங்க	,,	,,	௭௪௨	௩௨. இடும்பாவனம்.			௭௯௨
அந்தியுண்ண	,,	,,	௭௪௪	மனமார்த	ச	௧	௭௯௨
மீளாவடிமை	,,	,,	௭௪௫				
௨௪. ஆரூர் அரநெறி.			௭௪௭				
எத்திபுகினும்	அ	௪	௭௪௭				
பொருக்கை	,,	௬	௭௪௧				

Koviloor Digital Library

தலம் - பதிகம் - சமயகுரவர்.		திருமுறை எண்.	பக்கம்.
௩௩. இடைச்சுரம்.			௧௧௨௭
வரிவளரவி	௪	௧	௧௧௨௭
௩௪. இடைமருதூர்.			௪௪௫
ஓடேகலனு	௪	௧	௪௪௫
தோடொர்கா	,,	,,	௪௪௭
மருந்தவன்	,,	,,	௪௪௭
நடைமருதி	,,	,,	௪௪௯
விரிதருபுலி	,,	,,	௪௫௦
பொங்குநூல்	௮	௨	௪௫௧
காடுடைச்	,,	௪	௪௫௩
பாசமொன்	,,	௫	௪௫௪
பறையினே	,,	,,	௪௫௫
சூலப்படை	,,	௬	௪௫௬
ஆறுச்சடைக்	,,	,,	௪௫௮
கழுதைகுங்	௬	௭	௪௬௧
௩௫. இடையாறு.			௯௯௯
முந்தையூர்	,,	௭	௯௯௯
௩௬. இந்திரநீலபருப்பதம்.			௧௧௪௯
குலவுபாரி	௪	௨	௧௧௪௯
௩௭. இராமனதீச்சரம்.			௯௫௧
சங்கொளிர்	௪	௧	௯௫௧
௩௮. இராமேச்சுரம்.			௮௯௦
அலைவளர்	௪	௩	௮௯௦
திரிதருமா	,,	,,	௮௯௧
பாசமுங்க	௮	௪	௮௯௩
௩௯. இரும்பூளை (ஆலங்குடி)			௭௭௧
சீரார்கழலே	௪	௨	௭௭௧
௪௦. இரும்பைமாகாளம்.			௧௧௩௮
மண்டுகங்	,,	,,	௧௧௩௮
௪௧. இலம்பையங்கோட்டூர்.			௧௦௭௫
மலையினார்	௪	௧	௧௦௭௫
௪௨. இன்னம்பர்.			௨௪௮
எண்டிசைக்கும்	௪	௩	௨௪௮
விண்ணவர்	௮	௪	௨௪௯
மன்னுமலை	,,	,,	௨௫௧
என்னிலாரு	,,	௫	௨௫௨
அல்லிமலர்	,,	௬	௨௫௩
௪௩. ஈங்கோய்மலை.			௩௫௩
வானத்துயர்	௪	௧	௩௫௩
௪௪. உசாத்தானம் (திருக்கோயிலூர்.)			௭௯௦
நீரிடைத்	௪	௩	௭௯௦
௪௫. ஊறல் (தக்கோலம்.)			௧௦௭௩
மாறிலவுணர்	,,	௧	௧௦௭௩
௪௬. எதிர்கொள்பாடி.			௧௮௭
மத்தயானை	௬	௭	௧௮௭
௪௭. எருக்கத்தம்புலியூர்.			௯௩௯
படையார்த	௪	௧	௯௩௯
௪௮. எறும்பியூர்.			௩௯௯
விரும்பியூ	௮	௫	௩௯௯
பன்னியசெந்	௮	௬	௩௭௧
௪௯. ஏடகம்.			௮௮௦
வன்னியுமத்	௪	௩	௮௮௦
௫௦. ஐயாறு.			௨௭௫
கலையார்மதி	௪	௧	௨௭௫
பணிந்தவரு	,,	,,	௨௭௭
புலனைந்தும்	,,	,,	௨௭௮
கோடல்கோ	,,	௨	௨௮௦
திருத்திகழ்	,,	,,	௨௮௧
மாதர்ப்பிறை	௮	௪	௨௮௩
விடகிலேனடி	,,	,,	௨௮௫
கங்கையை	,,	,,	௨௮௬
குண்டனாய்	,,	,,	௨௮௮
தானலாதுலக	,,	,,	௨௮௯
அந்திவட்ட	,,	,,	௨௯௦
குறுவித்த	,,	,,	௨௯௦
சிந்திப்பரியன	,,	,,	௨௯௨
சிந்தைவாய்	,,	௫	௨௯௪
சிந்தைவண்	,,	,,	௨௯௫
ஆரார்திரி	,,	௬	௨௯௬
ஓசையொலி	,,	,,	௨௯௯
பரவும்பரி	௬	௭	௩௦௧
௫௧. ஒற்றியூர்.			௧௧௦௨
விடையவன்	௪	௩	௧௧௦௨
வெள்ளத்தை	௮	௪	௧௧௦௩
ஓம்பினேன்	,,	,,	௧௧௦௫
செற்றுக்க	,,	,,	௧௧௦௫
ஒற்றியூரு	,,	௫	௧௧௦௬
வண்டோங்	,,	௬	௧௧௦௮
அழுக்குமெய்	௬	௭	௧௧௧௦
பாட்டும்பா	,,	,,	௧௧௧௨
௫௨. ஓணகாந்தன்றளி (கச்சி.)			௧௦௫௩
நெய்யும்பா	௬	௭	௧௦௫௩
௫௩. ஓத்தூர்.			௧௦௬௧
பூத்தேர்ந்	௪	௧	௧௦௬௧

தலம் - பதிகம் - சமயகுரவர்.		திருமுறை எண்.	பக்கம்.
௫௪. ஓமாம்புலியூர்.			உ0௫
பூங்கொடி	ச	௩	உ0௫
ஆராருமூவிலை	அ	௬	உ0௬
௫௫. கச்சி அனேகதங்காவதம்			க0௫௪
தேனெய்புரி	சு	௭	க0௫௪
௫௬. கச்சி ஏகம்பம் (காஞ்சீபுரம்.)			க0௩உ
வெந்தவெண்	ச	க	க0௩உ
மறையானை	,,	உ	க0௩௩
கருவார்க	,,	௩	க0௩௫
பாயுமால்	,,	,,	க0௩௫
காவாடும்	அ	௪	க0௩௭
நம்பனை	,,	,,	க0௩௮
ஓதுவித்தாய்	,,	,,	க0௩௯
பண்டுசெய்	,,	௫	க0௪க
பூமேலானும்	,,	,,	க0௪உ
கூற்றுவன்	,,	௬	க0௪௩
உரித்தவன்	,,	,,	க0௪௬
ஆலந்தா	சு	௭	க0௪௮
௫௭. கச்சிநெறிக்காரைக்காடு.			க0௫௬
வாரணவுமு	ச	௩	க0௫௬
௫௮. கச்சிமேற்றளி.		,,	க0௫0
மறையதுபா	அ	௪	க0௫0
நொந்தா	சு	௭	க0௫க
௫௯. கச்சூர்.			ககஉ௫
முதுவாயோ	,,	,,	ககஉ௫
௬0. கஞ்சனூர்.			உஉ௭
மூவிலைநற்சூல	அ	௬	உஉ௭
௬க. கடம்பந்துறை.			௩௫௬
முற்றிலாமுலை	அ	௫	௩௫௬
௬உ. கடம்பூர்.			உக௯
வானமர்திங்கள்	ச	உ	உக௯
தளருங்கோளா	அ	௫	உஉ0
ஒருவராயிரு	,,	,,	உஉஉ
௬௩. கடவூர்.			௫உக
சடையுடை	ச	௩	௫உக
பொள்ளத்த	அ	௪	௫உஉ
மருட்டுயர்	,,	,,	௫உ௪
மலைக்கொளா	,,	௫	௫உ௫
பொடியார்	சு	௭	௫உ௬
௬௪. கடவூர்மயானம்.			௫உ௮
வரியமறை	ச	உ	௫உ௮
குழைகொள்	அ	௫	௫உ௯
மருவார்	சு	௭	௫௩0
௬௫. கடிக்குளம்.			௭௯௩
பொடிகொண்	ச	உ	௭௯௩
௬௬. கடுவாய்க்கரைப் புத்தூர்.			௭௭0
ஒருத்தனை	அ	௫	௭௭0
௬௭. கடைமுடி (கீழூர்.)			க௬௫
அருத்தனை	ச	க	க௬௫
௬௮. கண்டியூர்.			௩௮௪
வினவினேனறி	ச	௩	௩௮௪
வானவர்தா	அ	௪	௩௮௬
௬௯. கண்ணார்கோயில் (குறுமாணக்குடி.)			க௬௩
தண்ணார்திங்கட்	ச	க	க௬௩
௭0. கயிலாயம்.			கக௫௫
பொடிகொ	,,	க	கக௫௫
வாளவரிகோ	,,	௩	கக௫௬
கனகமாவ	அ	௪	கக௫௮
வேற்றாகிவி	,,	௬	கக௫௯
பொறையுடை	,,	,,	கக௬க
பாட்டான	,,	,,	கக௬௪
தானெனைமுன்	சு	௭	கக௬௬
௭க. கரவீரம்.			௭௫௪
அரியுநம்	ச	க	௭௫௪
௭உ. கருகாவூர்.			௪0௪
முத்திலங்கு	ச	௩	௪0௪
குருகாம்	அ	௬	௪0௫
௭௩. கருக்குடி.			௬உ௩
நனவிலும்	ச	௩	௬உ௩
௭௪. கருப்பறியலூர்.			க௯௩
சுற்றமொடு	ச	உ	க௯௩
சிம்மாந்து	சு	௭	க௯௫
௭௫. கருவிலிக்கொட்டிட்டை.			௬0உ
மட்டிட்டகுழலார்	அ	௫	௬0உ
௭௬. கருவூர் ஆனிலை.			௯உ௮
தொண்டெலா	ச	உ	௯உ௮
௭௭. கலய நல்லூர் (சாக்கோட்டை.)			௬உக
குரும்பைமுலை	சு	௭	௬உக
௭௮. கலிக்காமூர் (அன்னப்பன் பேட்டை.)			௩௭
மடல்வரை	ச	௩	௩௭
௭௯. கழிப்பாலை.			உஉ
புனலாடிய	ச	உ	உஉ

Koviloor Digital Library

தலம் - பதிகம் - சமயகுரவர்.		திருமுறை எண்.	பக்கம்.
வெந்தகுங்கிலிய	ச	௩	௨௪
வனபவள	அ	௪	௨௫
நங்கையை	,,	,,	௨௭
நெய்தற்குருகு	,,	,,	௨௯
வண்ணமும்	,,	௫	௨௬
ஊனுடுத்தி	,,	௬	௨௯
செடியேன்	சு	௭	௩௧
௮௦. கழுக்குன்றம்.			௧௧௨௯
தோடுடையா	ச	௧	௧௧௨௯
மூவிலைவேற்	அ	௬	௧௧௩௧
கொன்றுசெ	சு	௭	௧௧௩௧
௮௧. களர்.			௭௮௭
நீருளார்க	ச	௨	௭௮௭
௮௨. கள்ளில்.			௧௦௯௩
முள்ளின்மே	,,	௧	௧௦௯௩
௮௩. கற்குடி.			௩௬௧
வடந்திகழ்	ச	௧	௩௬௧
மூத்தவனை	அ	௬	௩௬௨
விடையாரு	சு	௭	௩௬௪
௮௪. கன்றாப்பூர்.			௮௧௦
மாதினையோ	அ	௬	௮௧௦
௮௫. காட்டுப்பள்ளி (கீழை.)			௫௭
செய்யருகே	ச	௧	௫௭
௮௬. காட்டுப்பள்ளி			௩௭௫
வாருமன்னு(மேலை.)	ச	௩	௩௭௫
மாட்டுப்பள்	அ	௫	௩௭௬
௮௭. காவிரிப்பூம்பட்டினத்துப்பல்லவனீச்சரம்.			௪௫
அடையார்தம்	ச	௧	௪௫
பாசுபாணி	,,	௩	௪௭
௮௮. காழி(பிரமபுரம்.)			௬௧
தோடுடைய	ச	௧	௬௧
எரியார்மழு	,,	,,	௧௩௭
அரனையுள்குவீர்	,,	,,	௧௩௮
எம்பிரானெனக்கமு	,,	௨	௬௩
கறையணிவேலிலர்	,,	,,	௬௫
காமுனம்மலராற்	,,	௩	௬௬
இறையவனீசன்	,,	,,	௬௭
சுரருலகு	,,	,,	௧௪௭
வரமதேகொ	,,	,,	௧௪௯
வேணுபுரம்.			௬௮
வண்டார்குழல்	,,	௧	௬௮
நிலவும்புனலும்	,,	௨	௭௦
பூதத்தின்	,,	,,	௭௧

தலம் - பதிகம் - சமயகுரவர்.		திருமுறை எண்.	பக்கம்.
புகலி.			௭௨
விதியாய் விளைவாய்	ச	௧	௭௨
மைம்மருபூ	,,	,,	௮௩
ஆடலரவசை	,,	,,	௭௩
உகலியாழ்	,,	௨	௭௫
முன்னியகலை	,,	,,	௭௬
உருவார்ந்த	,,	,,	௭௭
விடையதேறி	,,	,,	௭௯
இயலிசை	,,	௩	௮௦
கண்ணுதலானும்	,,	,,	௮௨
வெங்குரு.			௮௫
காலைநன்	ச	௧	௮௫
விண்ணவர்தொழு	,,	௩	௮௬
தோணிபுரம்.			௮௭
வண்டரங்க	,,	௧	௮௭
சங்கமரு	,,	௩	௮௯
கரும்பமர்	,,	௩	௯௦
மாதியன்று	அ	௫	௯௧
பூந்தராய்.			௯௨
செங்நெலங்	ச	௨	௯௨
பந்துசேர்விரலாள்	,,	௩	௯௪
தக்கன்வேள்வி	,,	,,	௯௫
மின்னனவெயிறு	,,	,,	௯௬
சிரபுரம்.			௯௮
பல்லடைந்த	,,	௧	௯௮
வாருறுவனமுலை	,,	,,	௯௯
அன்னமென்னடை	,,	௨	௧௦௦
புறவம்.			௧௦௨
நறவநிறை	,,	௧	௧௦௨
எய்யாவென்	,,	,,	௧௦௩
பெண்ணியலுரு	,,	௩	௧௦௪
சண்பை.			௧௦௬
பங்கமேறு	,,	௧	௧௦௬
எந்தமது சிந்தை	,,	௩	௧௦௭
சீர்காழி.			௧௦௮
பூவார்கொன்றை	,,	௧	௧௦௮
அடலேறமரு	,,	,,	௧௦௯
நல்லார்தீ	,,	,,	௧௧௧
உரவார்கலை	,,	,,	௧௧௨
நல்லானை	,,	௨	௧௧௩
பண்ணினேர்	,,	,,	௧௧௪
நலங்கொண்	,,	,,	௧௧௫
விண்ணியங்கு	,,	,,	௧௧௭
பொங்குவெண்	,,	,,	௧௧௮
நம்பொருண	,,	,,	௧௧௯
பொடியிலங்கு	,,	,,	௧௨௦

Koviloor Digital Library

தலம் - பதிகம் - சமயகுரவர்.		திருமுறை எண்.	பக்கம்.
சந்தமார்	ச	௩	கஉஉ
கொச்சைவயம்.			கஉச
நீலநன்மா	ச	உ	கஉச
அறையும் பூம்	,,	,,	கஉரு
இருந்துமாக	,,	௩	கஉசு
கழுமலம்.			கஉஅ
பிறையணி	,,	க	கஉஅ
அயிலுறு	,,	,,	கஉகூ
பந்தத்தால்	,,	,,	க௩0
சேவுயருந்	,,	,,	க௩௩
மண்ணினல்ல	,,	௩	க௩ச
மடன்மலி	,,	,,	க௩ரு
பார்கொண்டு	அ	ச	கருக
படையார்	,,	,,	கருஉ
சாதலும்	சு	எ	கரு௩
மேற்படியூர்ப்பன்னிருதிருநாமங்கள்.			க௩கூ
காடதணிகலங்	ச	க	க௩கூ
பிரமபுரத்துறை	,,	,,	கச0
ஒருருவாயினை	,,	,,	கசஉ
விளங்கிய	,,	உ	கசரு
பூமகனூர்	,,	,,	கசசு
பிரமனூர்	,,	,,	கச௩
யாமா	,,	௩	கஉ௩
உற்றுமைசேர்	,,	,,	கரு0
அகூ. காளத்தி.			க0கூரு
சந்தமார	,,	,,	க0கூரு
வானவர்க	,,	,,	க0கூசு
விற்றூணொன்	அ	சு	க0கூஎ
செண்டாடும்	சு	எ	கக00
கூ0. காறாயில்.			அ0கூ
நீரானேநீள்	ச	உ	அ0கூ
கூக. கானப்பேர் (காளையார்கோயில்.)			அகூசு
பிடியெலாம்	ச	௩	அகூசு
தொண்டரடி	சு	எ	அகூஎ
கூஉ. கானாட்டு முள்ளூர்.			உ0கூ
வள்வாயமதி	சு	எ	உ0கூ
கூ௩. கானூர்.			௩உரு
வானார்சோதி	ச	க	௩உரு
திருவின்றாத	அ	ரு	௩உஎ
கூச. கீழ்வேளூர்.			சுஅ0
மின்னுலாவி	ச	உ	சுஅ0
ஆளானவடி	அ	சு	சுஅஉ

தலம் - பதிகம் - சமயகுரவர்.		திருமுறை எண்.	பக்கம்.
கூரு. குடந்தைக்காரோணம் (கும்பகோணம் விசுவநாதர் கோயில்.)			ச௩ரு
வாரார்கொ	ச	க	ச௩ரு
கூசு. குடந்தைக் கீழ்க்கோட்டம் (கும்பகோணம் நாகேஸ்வர சுவாமி கோயில்.)			ச௩௩
சொன்மலிந்த	அ	சு	ச௩௩
கூஎ. குடமூக்கு (கும்பகோணம்.)			ச௩0
அரவிரிகோ	ச	௩	ச௩0
பூவணத்த	அ	ரு	ச௩க
கூஅ. குடவாயில்.			எசுக
திகழுந்திரு	ச	உ	எசுக
கலைவாழுமங்	,,	,,	எசு௩
கூகூ. குரக்குக்கா.			ககூசு
மரக்கொக்கா	அ	ரு	ககூசு
க00. குரங்கணின்முட்டம்.			க0ருஅ
விழுநீர்ம	ச	க	க0ருஅ
க0க. குரங்காடுதுறை வட.			உசுரு
கோங்கமே	ச	௩	உசுரு
க0உ. மேற்படி தென்.			சசுஉ
பரவக்கெடும்	,,	உ	சசுஉ
இரங்கா	அ	ரு	சசு௩
க0௩. குருகாவூர்.			ருகூ
சுண்ணவெண்	ச	௩	ருகூ
இத்தனையா	சு	எ	சு0
க0ச. குறுக்கை (வீரட்டம்.)			ககூக
ஆதியிற்பிரம	அ	ச	ககூக
நெடியமால்	,,	,,	ககூ௩
க0ரு. குற்றாலம்.			கூ0அ
வம்பார்கு	ச	க	கூ0அ
திருந்த (குறும்பலா)	,,	உ	கூக0
க0சு. கூடலையாற்றூர்.		,,	கூ௩அ
வடிவுடைம	சு	எ	கூ௩அ
க0எ. கேதாரம்.			ககருஉ
தொண்டரஞ்	ச	உ	ககருஉ
வாழ்வாவது	சு	எ	ககரு௩
க0அ. கேதீச்சரம்.			அரு௩
விருதுகுன்	ச	உ	அரு௩

Koviloor Digital Library

தலம் - பதிகம் - சமயகுரவர்.	திருமுறை எண்.	பக்கம்.
நத்தார்ப சு	௭	௮௫௪
௧௦௯. கைச்சினம்.		௮௧௯
தையலோர் ச	௨	௮௧௯
௧௧௦. கொடிமாடச்செங்குன்றூர் (திருச்செங்கோடு.)		௯௨௨
வெந்தவெண் ச	௧	௯௨௨
௧௧௧. கொடுங்குன்றம் (பிரான்மலை.)		௮௮௨
வானிற்பொ ச	௧	௮௮௨
௧௧௨. கொட்டையூர்.		௨௪௬
கருமணிபோற் அ	௬	௨௪௬
௧௧௩. கொண்டீச்சுரம்.		௬௩௧
வரைகிலேன் ,,	௪	௬௩௧
கண்டபேச் ,,	௫	௬௩௨
௧௧௪. கொள்ளம்பூதூர்		௭௯௯
கொட்டமேக ச	௩	௭௯௧
௧௧௫. கொள்ளிக்காடு.		௮௦௩
நிணம்படு ,,	,,	௮௦௩
௧௧௬. கோகரணம்.		௧௧௪௦
என்றுமரி ,,	,,	௧௧௪௦
சந்திரனும் அ	௬	௧௧௪௨
௧௧௭. கோடி (குழகர் கோயில்.)		௮௪௯
கடிதாய்க் சு	௭	௮௪௯
௧௧௮. கோடிகா.		௨௩௦
இன்றுநன்று ச	௨	௨௩௦
நெற்றிமேற் அ	௪	௨௩௧
சங்குலாமுன் அ	௫	௨௩௨
கண்டலஞ்சேர் அ	௬	௨௩௩
௧௧௯. கோட்டாறு.		௫௫௦
கருந்தடங் ச	௨	௫௫௦
வேதியன்வி ,,	௩	௫௫௧
௧௨௦. கோட்டூர்.		௭௯௬
நீலமார்த ,,	௨	௭௯௬
௧௨௧. கோணமலை.		௮௫௧
நிரைகழல ,,	௩	௮௫௧
௧௨௨. கோயில் (சிதம்பரம்.)		௧
கற்றாங்கெரி ச	௧	௧
ஆடினாய்நறு ,,	௩	௨
செஞ்சடைக்கற் அ	௪	௭
பத்தனாய்ப்பாட ,,	,,	௮
பாளையுடைக்கமு ,,	,,	௯
கருநட்டகண்டனை ,,	,,	௧௦
அன்னம்பாலிக்கும் ,,	௫	௪
பனைக்கைமும்மத ,,	௫	௫
அரியானை ,,	௬	௧௨
மங்குன்மதி ,,	௬	௧௪
மடித்தாடு சு	௭	௧௬
௧௨௩. கோலக்கா.		௧௫௫
மடையில்வாளை ச	௧	௧௫௫
புற்றில்வாள சு	௭	௧௫௭
௧௨௪. கோவலூர்.		௯௯௫
படைகொள் ச	௨	௯௯௫
செத்தையே அ	௪	௯௯௬
௧௨௫. கோழம்பம்.		௪௭௦
நீற்றானை ச	௨	௪௭௦
வேழம்பத் அ	௫	௪௭௨
௧௨௬. கோளிலி.		௮௨௧
நாளாயபோ ச	௧	௮௨௧
மைக்கொள் அ	௫	௮௨௨
முன்னமேநி ,,	,,	௮௨௩
நீளநினைந் சு	௭	௮௨௫
௧௨௭. சக்கரப்பள்ளி.		௪௦௨
படையினார் ச	௩	௪௦௨
௧௨௮. சத்திமுற்றம்.		௪௧௯
கோவாய்முடுகி அ	௪	௪௧௧
௧௨௯. சாத்தமங்கை.		௬௬௪
திருமலர்க் ச	௩	௬௬௪
௧௩௦. சாய்க்காடு.		௩௯
நித்தலுங் ச	௨	௩௯
மண்புகார் ச	,,	௪௦
தோடுலா அ	௪	௪௨
வானத்திள ,,	௬	௪௩
௧௩௧. சிக்கல்.	௨	௬௭௯
வானுலாவு ச		௬௭௯
௧௩௨. சிராப்பள்ளி.	௧	௩௬௭
நன்றுடையா ச	௫	௩௬௭
மட்டுவார் அ		௩௬௯
௧௩௩. சிவபுரம்.		௬௧௫
புவம்வளி ச	௧	௬௧௫
இன்குரலி ,,	,,	௬௧௬
கலைமலிய ,,	,,	௬௧௭
வானவன்கா அ	௬	௬௧௯
௧௩௪. சிறுகுடி.		௫௬௫
திடமலிமதி ச	௩	௫௬௫
௧௩௫. சிற்றேமம்.		௭௮௯
நிறைவெண் ,,	௩	௭௮௯
௧௩௬. சுழியல்.		௯௦௭
ஊனாயுயிர் சு	௭	௯௦௭

Koviloor Digital Library

தல அகராதி முதலியன.

தலம் - பதிகம் - சமயகுரவர்.	திருமுறை எண்.	பக்கம்.
கநஎ. செங்காட்டங்குடி.		சுருச
நறைகொண்ட ச	க	சுருச
பைங்கோட் ,,	ந	சுருரு
பெருந்தகை அ	சு	சுருஎ
கநஅ. செம்பொன்பள்ளி.		ரு௦க
மருவார்கு ச	க	ரு௦க
ஊனினுள் அ	ச	ரு௦ந
கானருத ,,	ரு	ரு௦ச
கநகூ. சேய்ஞலூர்		உசக
நூலடைந்த ச	க	உசக
கச௦. சேறை.		எசுச
முறியுறுநிற ச	ந	எசுச
பெருந்திரு அ	ச	எசுரு
பூரியாவ ,,	ரு	எசுஎ
கசக. சோபுரம் (தியாகவல்லி.)		கூசஉ
வெங்கண ச	க	கூசஉ
கசஉ. சோற்றுத்துறை.		நஅஎ
செப்பநெஞ்சே ச	க	நஅஎ
பொய்விரா அ	ச	நஅகூ
காலையெழு ,,	,,	நகூ௦
கொல்லையேற் ,,	ரு	நகூக
மூத்தவனு ,,	சு	நகூஉ
அழனிரொ சு	எ	நகூரு
கசந. தண்டலை நீணெறி.		எகூரு
விரும்புந் ச	ந	எகரு
கசச. தருமபுரம்.		ருநரு
மாதர்மட ச	க	ருநரு
கசரு. தலைச்சங்காடு.		ருகசு
நலச்சங்க ச	உ	ருகசு
கசசு. தலையாலங்காடு		எருசு
தொண்டர்க் அ	சு	எருக
கசஎ. திருந்துதேவன்குடி.		உசஉ
மருந்துவேண் ச	ந	உசஉ
கசஅ. திலதைப்பதி.		ருசுக
பொடிகள் ,,	உ	ருசுக
கசகூ. தினைநகர்.		கூசக
நீறுதாங்கி சு	எ	கூசக
கரு௦. துருத்தி (குற்றாலம்.)		சஅஎ
வரைத்தலை ச	உ	சஅஎ
பொருந்திய அ	ச	சஅஅ
மின்னுமா சு	எ	சஅகூ
கருக. துறையூர்.		க௦௦ரு
மலையாரரு ,,	,,	க௦௦ரு
கருஉ. தூங்கானைமாடம் (பெண்ணாகடம்.)		கூநரு
ஒடுங்கும் ச	க	கூநரு
பொன்னார்திரு அ	ச	கூநஎ
கருந. தெங்கூர்.		அ௦ச
புரைசெய் ச	உ	அ௦ச
கருச. தெளிச்சேரி.		ருநந
பூவலர்ந் ச	உ	ருநந
கருரு. தென்குடித்திட்டை.		நசுசு
முன்னைநான் ச	ந	நககூ
கருசு. தேவூர்.		சுஅச
பண்ணிலாவி ச	உ	சுஅச
காடுபயில் ,,	ந	சுஅரு
கருஎ. நணா (பவானிமுக்கூடல்.)		கூஉ௦
பந்தார்வி ,,	உ	கூஉ௦
கருஅ. நல்லம்.		சசுஅ
கல்லானிழன் ச	க	சசுஅ
கொல்லைத்தா அ	ரு	சசுகூ
கருகூ. நல்லூர்.		ச௦கூ
கொட்டும்ப ச	க	ச௦கூ
பெண்ணமரு ,,	உ	சகக
வண்டிரிய ,,	ந	சகஉ
அட்டுமினில் அ	ச	சகந
நினைந்துருகு அ	சு	சகரு
கசு௦. நல்லூர்ப்பெருமணம் (ஆச்சாபுரம்.)		நஉ
கல்லூர்ப் ச	ந	நஉ
கசுக. நள்ளாறு.		ருநசு
போகமார்த்த ச	க	ருநகூ
பாடகமெல் ,,	,,	ருநஅ
ஏடுமலிகொ ,,	உ	ருசஉ
தளிரிளவள ,,	ந	ருசந
உள்ளாறுத அ	ரு	ருசரு
ஆதிக்கனு ,,	சு	ருசசு
செம்பொன் சு	எ	ருசஅ

Koviloor Digital Library

தலம் - பதிகம் - சமய குரவர்.		திரு முறை எண்.	பக்கம்.
கசுஉ. நறையூர்ச்சித்தீச்சரம்.			சுOடு
ஊருலாவு	ச	க	சுOடு
பிறைகொள்	,,	,,	சுOசு
நேரியனுகு	,,	உ	சுOஎ
நீரும்மலரு	சு	எ	சுOகூ
கசுங. நனிபள்ளி.			டுOடு
காரைகள்	ச	உ	டுOடு
முற்றுணை	அ	ச	டுOஎ
ஆதியனுதி	சு	எ	டுOஅ
கசுச. நன்னிலத்துப் பெருங்கோயில்.			சுஉகூ
தண்ணியல்	,,	,,	சுஉக
கசுடு. நாகேச்சுரம்.			சஙஎ
பொன்னேர்	ச	உ	சஙஎ
தழைகொள்	,,	,,	சஙஅ
கச்சைசே	அ	ச	சஙகூ
நல்லர்நல்	,,	டு	சசக
தாயவனே	,,	சு	சசஉ
பிறையணி	சு	எ	சசச
கசுசு. நாகைக்காரோணம் (நாகபட்டணம்.)			சுசுஎ
புனையும்விரி	ச	க	சுசுஎ
கூனற்றிங்	,,	உ	சுசுகூ
மனைவிதாய்	அ	ச	சுஎO
வடிவுடைமா	,,	,,	சுஎக
பாணத்தான்	,,	டு	சுஎஉ
பாரார்பர	,,	சு	சுஎச
பத்தூர்புக்	சு	எ	சுஎசு
கசுஎ. நாட்டியத்தான் குடி.			அOஎ
பூணுணவ	,,	எ	அOஎ
கசுஅ. நாரையூர்.			உகக
உரையினில்	ச	உ	உகக
காம்பினைவென்ற	,,	ங	உகங
கடலிடை	,,	,,	உகச
வீறுதானுடை	அ	டு	உகடு
சொல்லானை	,,	சு	உகஎ
கசுகூ. நாலூர்மயானம்			எசுஅ
பாலூருமலே	ச	உ	எசுஅ
கஎO. நாவலூர்.			கூஎசு
கோவலனுன்	சு	எ	கூஎசு
கஎக. நின்றியூர்.			கசுசு
சூலம்படை	ச	க	கசுசு
கொடுங்கண்	அ	டு	கசுஎ
அற்றவனுரடி	சு	எ	கசுகூ

தலம் - பதிகம் - சமய குரவர்.		திரு முறை எண்.	பக்கம்.
திருவும்வண்	சு	எ	கஎO
கஎஉ. நீடூர்.			கஎஅ
ஊர்வதோர்	,,	,,	கஎஅ
கஎங. நீலக்குடி.			சசுடு
வைத்தமாடு	அ	டு	சசுடு
கஎச. நெடுங்களம்.			ஙஎங
மறையுடை	ச	க	ஙஎங
கஎடு. நெய்த்தானம்.			ஙOங
மையாடியகண்டன்	,,	க	ஙOங
காலனைவீழ	அ	ச	ஙOச
பாரிடஞ்சாடி	,,	,,	ஙOடு
கொல்லியான்	,,	டு	ஙOஎ
வகையெலா	,,	சு	ஙOஅ
மெய்த்தான	,,	,,	ஙகO
கஎசு. நெல்லிக்கா.			அOசு
அறத்தாலு	ச	உ	அOசு
கஎஎ. நெல்வாயில் (சிவபுரி.)			உக
புடையினுர்	,,	உ	உக
கஎஅ. நெல்வாயிலரத்துறை.			கூஙO
எந்தையீ	ச	உ	கூஙO
கடவுளைக்	அ	டு	கூஙஉ
கல்வாயகி	சு	எ	கூஙச
கஎகூ. நெல்வெண்ணெய்.			கூகூங
நல்வெண்ணெய்	ச	ங	கூகூங
கஅO. நெல்வேலி.			கூகக
மருந்தவை	ச	ங	கூகக
கஅக. பட்டீசுரம்.			சஉக
பாடன்மறை	ச	ங	சஉக
கஅஉ. பந்தணைநல்லூர்			உஉங
இடறினுர்கூற்றை	ச	ங	உஉங
நோதங்கமில்லா	அ	சு	உஉடு
கஅங. பயற்றூர்.			சுடுஉ
உரித்திட்டா	,,	ச	சுடுஉ
கஅச. பரங்குன்றம்.			அஎசு
நீடலர்சோ	ச	க	அஎசு
கோத்திட்	சு	எ	அஎஎ
கஅடு. பராய்த்துறை.			ஙடுஅ
நீறுசேர்வ	ச	க	ஙடுஅ
காப்பர்	அ	டு	ஙடுகூ
கஅசு. பரிதிநியமம்.			எஎஎ
விண்கொண்ட	ச	ங	எஎஎ

Koviloor Digital Library

தலம் - பதிகம் - சமயகுரவர்.	திருமுறை எண்.	பக்கம்.
கஅஎ. பருப்பதம். (ஸ்ரீசைலம்.)		கககச
சுடுமணியு ,,	க	கககச
கன்றினூர் அ	ச	கககசு
மானும்மரை சு	எ	கககஎ
கஅஅ. பழனம்.		உசுசு
வேதமோதி ச	க	உசுசு
சொன்மாலை அ	ச	உசுஅ
ஆடினுரொரு ,,	,,	உசுகூ
மேவித்து ,,	,,	உஎ0
அருவனுய ,,	௫	உஎஉ
அலையார்கட ,,	சு	உஎ௩
கஅகூ. பழூவூர்.		௩உச
முத்தன்மிகு ச	உ	௩உச
ககூ0. பழையாறைவடதளி.		சஉ௩
தலையெலாஞ் அ	௫	சஉ௩
ககூக. பள்ளியின்முக்கூடல்.		சுஅஎ
ஆராதவின் ,,	சு	சுஅஎ
ககூஉ. பறியலூர்.		௫00
கருத்தன் ச	க	௫00
ககூ௩. வன்பார்த்தான் பனங்காட்டூர். (திருப்பனங்காடு)		க0சு௩
விடையின் சு	எ	க0சு௩
ககூச. பனந்தாள்.		உ௩அ
கண்பொலிநெற்றி ச	௩	உ௩அ
ககூ௫. பனையூர்.		சு௩௩
அரவச்சடை ச	க	சு௩௩
மாடமாளி சு	எ	சு௩௫
ககூசு. பாசூர்.		க0அசு
சிந்தையிடை ச	உ	க0அசு
முந்திமூவெ அ	௫	க0அஅ
விண்ணுகி ,,	சு	க0அக
ககூஎ. பாச்சிலாச்சிரா.		௩சகூ
துணிவளர் ச	க	௩சகூ
வைத்தனன் சு	எ	௩௫க
ககூஅ. பாண்டிக்கொடுமுடி.		கூஉ௫
பெண்ணமர் ச	உ	கூஉ௫
சிட்டனைச்சிவ அ	௫	கூஉசு
மற்றுப்பற் சு	எ	கூஉஎ
ககூகூ. பாதாளீச்சுரம்		எஅ௫
மின்னியல் ச	க	எஅ௫

தலம் - பதிகம் - சமயகுரவர்.	திருமுறை எண்.	பக்கம்.
உ00. பாதிரிப்புலியூர்		க0க0
முன்னநின்ற ,,	உ	க0க0
ஈன்றாளுமா அ	ச	க0கக
உ0க. பாம்புரம்.		௫சு௩
சீரணிதிகழ் ச	க	௫சு௩
உ0உ. பாலைத்துறை.		ச0அ
நீலமாமணி அ	௫	ச0அ
உ0௩. பாற்றுறை.		௩௩உ
காரார்கொன் ச	க	௩௩உ
பிரமபுரம் (காழியைப் பார்க்க.)		
உ0ச. புகலூர்.		சு௩அ
குறிகலந்த ச	க	சு௩அ
வெங்கள்விம் ,,	உ	சு௩கூ
செய்யர் அ	ச	சுசக
பகைத்திட் ,,	,,	சுசஉ
தன்னைச்சர ,,	,,	சுச௩
துன்னக்கோ ,,	௫	சுசச
எண்ணுகே ,,	சு	சுச௫
தம்மையே சு	எ	சுசஎ
உ0௫. புகலூர்வர்த்தமானீச்சரம்.		சுசகூ
பட்டம்பா ச	உ	சுசகூ
உ0சு. புத்தூர்.		அஅ௩
வெங்கள்விம் ,,	க	அஅ௩
புரிந்தமரர் அ	சு	அஅ௫
உ0எ. புள்ளமங்கை.		ச0க
பாலுந்துறு ச	க	ச0க
உ0அ. புள்ளிருக்குவேளூர். (வைத்தீச்சுரன்கோயில்.)		க௫அ
கள்ளார்ந்த ச	உ	க௫அ
வெள்ளெருக்கா அ	௫	கசு0
ஆண்டானை ,,	சு	கசுக
உ0கூ. புறம்பயம்.		உ௫௫
மறம்பய ச	உ	உ௫௫
கொடிமாட அ	சு	உ௫எ
அங்கமோதி சு	எ	உ௫கூ
உக0. புறவார்பனங்காட்டூர். (பனையபுரம்)		க0க௫
விண்ணமர்ந் ச	உ	க0க௫
உகக. புனவாயில்		அஅஎ
மின்னியல் ச	௩	அஅஎ
சித்தநினை சு	எ	அஅகூ

Koviloor Digital Library

தலம் - பதிகம் - சமயகுரவர்.		திருமுறை எண்.	பக்கம்.
௨௧௨. புன்கூர்.			௧௭௨
முந்திநின்ற	ச	௧	௧௭௨
பிறவாதே	அ	௬	௧௭௩
அந்தணாள	சு	௭	௧௭௫
௨௧௩. பூந்துருத்தி.			௩௮௦
கொடிகொள்	அ	௫	௩௮௦
மாலினைமா	,,	௪	௩௮௧
நில்லாதநீர்	,,	௬	௩௮௨
௨௧௪. பூவணம்.			௯௦௦
அறையார்	ச	௧	௯௦௦
மாதமர்மே	,,	௩	௯௦௧
வடிவேறுதி	அ	௬	௯௦௩
திருவுடையார்	சு	௭	௯௦௫
௨௧௫. பூவனூர்.			௭௮௪
பூவனூர்ப்பு	அ	௫	௭௮௪
௨௧௬. பெரும்புலியூர்.			௩௧௨
மண்ணுமோர்	ச	௨	௩௧௨
௨௧௭. பெருவேளூர்.			௭௫௬
அண்ணாவுங்	,,	௩	௭௫௬
மறையணிநா	அ	௪	௭௫௭
௨௧௮. பேணுபெருந்துறை.			௬௦௩
பைம்மாநாகம்	ச	௧	௬௦௩
௨௧௯. பேரெயில்			௮௦௧
மறையுமோ	அ	௫	௮௦௧.
௨௨௦. பைஞ்ஞீலி.			௩௪௫
ஆரிடம்பா	ச	௩	௩௪௫
உடையர்கோ	அ	௫	௩௪௬
காருலாவிய	சு	௭	௩௪௭
௨௨௧. மங்கலக்குடி.			௨௩௫
சீரினார்மணி	ச	௨	௨௩௫
தங்கலப்பிய	அ	௫	௨௩௬.
௨௨௨. மணஞ்சேரி.			௧௮௯
அயிலாருமம்ப	ச	௨	௧௮௯
பட்டநெற்றி	அ	௫	௧௯௦
௨௨௩. மண்ணிப்படிக்கரை. (இலுப்பைப்பட்டு.)			௨௦௩
முன்னவனெங்கள்	சு	௭	௨௦௩
௨௨௪. மயிலாடுதுறை (மாயூரம்.)			௪௯௪
கரவின்றி	ச	௧	௪௯௪
ஏனவெயிறு	,,	௩	௪௯௫
கொள்ளுங்	அ	௫	௪௯௬
௨௨௫. மயிலாப்பூர்.			௧௧௧௮
மட்டிட்ட	ச	௨	௧௧௧௮
௨௨௬. மயேந்திரப்பள்ளி.			௩௪
திரைதருபவள	,,	௩	௩௪
௨௨௭. மருகல். (செங்காட்டங்குடியும்.)			௬௫௯
அங்கமும்	ச	௧	௬௫௯
சடையாயெ	,,	௨	௬௬௧
பெருகலாந்த	அ	௫	௬௬௩
௨௨௮. மழபாடி.			௩௧௪
களையும்வல்	ச	௨	௩௧௪
காலையார்	,,	௩	௩௧௫
அங்கையார	,,	,,	௩௧௭
நீறேறுதிரு	அ	௬	௩௧௮
அலையடுத்த	,,	,,	௩௨௦
பொன்னார்	சு	௭	௩௨௨
௨௨௯. மறைக்காடு. (வேதாரணியம்.)			௮௩௨
சிலைதனைநடு	ச	௧	௮௩௨
சதுரம்மறை	,,	௨	௮௩௩
பொங்குவெண்	,,	,,	௮௩௫
கற்பொலிசுர	,,	௩	௮௩௬
இந்திரனோ	அ	௪	௮௩௭
தேரையுமேல்	,,	,,	௮௩௯
ஓதமால்க	,,	௫	௮௪௦
பண்ணினேர்	,,	,,	௮௪௨
தூண்டுசுடர	,,	௬	௮௪௩
யாழைப்பழித்த	சு	௭	௮௪௫
௨௩௦. மாகறல்.			௧௦௫௯
விங்குவிளை	ச	௩	௧௦௫௯
௨௩௧. மாணிகுழி.			௧௦௦௮
பொன்னியல்	ச	௩	௧௦௦௮
௨௩௨. மாந்துறை.			௩௩௧
செம்பொனார்	ச	௨	௩௩௧
௨௩௩. மாற்பேறு.			௧௦௬௬
ஊறியார்	ச	௧	௧௦௬௬
குருந்தவன்	,,	,,	௧௦௬௭
மாணிக்குயிர்	அ	௪	௧௦௬௮
பொருமாற்	,,	௫	௧௦௬௯
ஏதுமொன்று	,,	,,	௧௦௭௦
பாராணைப்	,,	௬	௧௦௭௧
௨௩௪. மீயச்சூர்.			௫௫௮
காயச்செவ்	ச	௨	௫௫௮

Koviloor Digital Library

தலம் - பதிகம் - சமயகுரவர்.		திருமுறை எண்.	பக்கம்.
௨௩௫. மீயச்சூர் இளங்கோயில்.			௫௬௦
தோற்றுங்	அ	௫	௫௬௦
௨௩௬. முண்டீச்சுரம்.			௧௦௧௩
ஆர்த்தான்	,,	௬	௧௦௧௩
௨௩௭. முதுகுன்றம். (விருத்தாசலம்.)			௯௭௮
மத்தாவரை	ச	௧	௯௭௮
தேவராயு	,,	,,	௯௭௯
திின்றுமலர்	,,	,,	௯௮௦
மெய்த்தாறு	,,	,,	௯௮௧
தேவாசிறி	,,	௨	௯௮௨
வண்ணமாம	,,	௩	௯௮௪
முரைசதிர்ந்	,,	,,	௯௮௫
கருமணியை	அ	௬	௯௮௬
பொன்செய்	சு	௭	௯௮௮
நஞ்சியிடை	,,	,,	௯௯௦
மெய்யைமுற்	,,	,,	௯௯௧
௨௩௮. முருகன்பூண்டி.			௯௧௮
கொடுகுவெஞ்	சு	௭	௯௧௮
௨௩௯. முல்லைவாயில் (வட)			௧௧௧௫
திருவுமெய்ப்	,,	,,	௧௧௧௫
௨௪௦. முல்லைவாயில் (தென்.)			௩௬
துளிமண்டி	ச	௨	௩௬
௨௪௧. மூக்கீச்சுரம். (உறையூர்)			௩௬௬
சாந்தம்	ச	௨	௩௬௬
௨௪௨. வக்கரை.			௧௧௩௫
கறையணி	,,	௩	௧௧௩௫
௨௪௩. வடகூர்.			௧௦௦௬
சுடுகூடெரி	ச	௧	௧௦௦௬
௨௪௪. வலஞ்சுழி.			௪௨௪
விண்டெலா	ச	௨	௪௨௪
என்னபுண்	,,	,,	௪௨௬
பள்ளமதாய	,,	௩	௪௨௭
ஓதமார்க	அ	௫	௪௨௮
அலையார்	,,	௬	௪௩௦
௨௪௫. வலம்புரம்.			௫௦௯
கொடியுடை	ச	௩	௫௦௯
தெண்டிரை	அ	௪	௫௧௧
மண்ணளந்த	,,	௬	௫௧௨
எனக்கினித்	சு	௭	௫௧௪

தலம் - பதிகம் - சமயகுரவர்.		திருமுறை எண்.	பக்கம்.
௨௪௬. வலிதாயம் (பாடி.)			௧௧௧௩
பத்தரோடு	ச	௧	௧௧௧௩
௨௪௭. வலிவலம்.			௮௧௩
ஒல்லையா	ச	௧	௮௧௩
பூவியல்புரி	,,	,,	௮௧௪
நல்லான்கா	அ	௬	௮௧௫
ஊனங்கத்	சு	௭	௮௧௮
௨௪௮. வல்லம்.			௧௦௬௪
எரித்தவன்	ச	௧	௧௦௬௪
௨௪௯. வன்னியூர்.			௬௦௦
காடுகொண்ட	அ	௫	௬௦௦
௨௫௦. வாஞ்சியம்.			௬௨௫
வன்னிகொன்	ச	௨	௬௨௫
படையும்பூத	அ	௫	௬௨௬
பொருவனர்	சு	௭	௬௨௭
௨௫௧. வாட்போக்கி (இரத்தினகிரி.)			௩௫௫
காலபாசம்	அ	௫	௩௫௫
௨௫௨. வாய்மூர்			௮௨௬
தளிரிளவள	ச	௨	௮௨௬
எங்கேயெ	அ	௫	௮௨௮
பாடவடியா	,,	௬	௮௨௯
௨௫௩. வாழ்கொளிபுத்தூர்.			௧௯௮
பொடியுடை	ச	௧	௧௯௮
சாகையாயிர	,,	௨	௧௯௯
தலைக்கலன்	சு	௭	௨௦௧
௨௫௪. வான்மியூர்.			௧௧௨௧
கரையுலாங்	ச	௨	௧௧௨௧
விரையார்	,,	௩	௧௧௨௨
விண்டமா	அ	௫	௧௧௨௩
௨௫௫. விசயமங்கை.			௨௬௦
மருவமர்	ச	௩	௨௬௦
குசையுமங்	அ	௫	௨௬௨
௨௫௬. வியலூர்.			௨௪௪
குரவங்கமழ்	ச	௧	௨௪௪
௨௫௭. விளநகர்.			௪௯௮
ஒளிரிளம்	,,	௨	௪௯௮
௨௫௮. விளமர்.			௭௫௩
மத்தகமணி	,,	௩	௭௫௩
௨௫௯. விற்குடி வீரட்டம்.			௬௩௬
வடிகொண்மேனி	,,	௨	௬௩௬

Koviloor Digital Library

தலம் - பதிகம் - சமயகுரவர்.		திருமுறை எண்.	பக்கம்.
உசு0. விற்கோலம். (கூவம்.)			க0எஅ
உருவினரு	ச	ங	க0எஅ
உசுக. வீழிமிழலை.			ருசுசு
சடையார்புன	,,	க	ருசுசு
தடநிலவிய	,,	,,	ருசுஅ
அரையார்விரி	,,	,,	ருசுகூ
இரும்பொன்	,,	,,	ருஎ0
வாசிதீரவே	,,	,,	ருஎஉ
அலர்மகண்	,,	,,	ருஎங
வரிசையும்	,,	,,	ருஎச
கேள்வியர்	,,	ங	ருஎசு
சீர்மருவு	,,	,,	ருஎஎ
மட்டொளிவிரி	,,	,,	ருஎஅ
வெண்மதித	,,	,,	ருஅ0
வேலினேர்தரு	,,	,,	ருஅக
துன்றுகொ	,,	,,	ருஅஉ
புள்ளித்தோ	,,	,,	ருஅங
பூதத்தின்	அ	ச	ருஅச
வான்சொட்டச்	,,	,,	சுஅசு
கரைந்துகை	,,	ரு	ருஅஎ
என்பொனே	,,	,,	ருஅஅ
போரானை	,,	சு	ருகூ0
கயிலாயமலை	,,	,,	ருகூஉ
கண்ணவன்	,,	,,	ருகூச
மானேறு	,,	,,	ருகூசு
நம்பினர்	சு	எ	ருகூகூ
உசுஉ. வெஞ்சமாக்கூடல்.			கூஉங
எறிக்குங்	,,	,,	கூஉங
உசுங. வெண்காடு.			சஅ
கண்காட்டு	ச	உ	சஅ
உண்டாய்	,,	,,	ரு0
மந்திரம	,,	ங	ருக
பண்காட்டி	அ	ரு	ருஉ
தூண்டுசு	,,	சு	ருச
படங்கொ	சு	எ	ருசு
உசுச. வெண்டுறை.			எகூஅ
ஆதியனுதி	ச	ங	எகூஅ
உசுரு. வெண்ணியூர்.			எஎகூ
சடையானை	ச	உ	எஎக
முத்தினைப்	அ	ரு	எஅ0
தொண்டிலங்கு	,,	சு	எஅக
உசுசு. வெண்ணெய்நல்லூர்.			க00க
பித்தாபிறை	சு	எ	க00க

தலம் - பதிகம் - சமயகுரவர்.		திருமுறை எண்.	பக்கம்.
உசுஎ. வெண்பாக்கம்.			க0கூக
பிழையுளன	சு	எ	க0கூக
உசுஅ. வேட்களம்.			கஅ
அந்தமுமாதி	ச	க	கஅ
நன்றுநாடொறு	அ	ரு	ககூ
உசுகூ. வேட்டக்குடி.			ருஙஉ
வண்டிரைக்கு	ச	ங	ருஙஉ
உஎ0. வேதிகுடி.			ஙகூசு
நீறுவரியா	ச	ங	ஙகூசு
கையதுகா	அ	ச	ஙகூஅ
உஎக. வேள்விக்குடி.			கஅஉ
ஓங்கிமேலுழி	ச	ங	கஅஉ
மூப்பதுமில்லை	சு	எ	கஅசு
மின்னுமா	,,	,,	கஅங
உஎஉ. வேற்காடு.			கககசு
ஒள்ளிதுள்	ச	க	கககசு
உஎங. வைகன்மாடக்கோயில்.			சசுசு
துளமதியுடை	ச	ங	சசுசு
உஎச. வைகாவூர்.			உசுங
கோழைமிட	ச	ங	உசுங
பொதுப்பதிகங்கள்.			
அவ்வினைக்	ச	க	ககசுஅ
ஆரூர்தில்லை	,,	உ	ககஎ0
வேயுறு	,,	,,	ககஎக
துஞ்சலுந்	,,	ங	ககஎங
கல்லானீழல்.	,,	ங	ககஎரு
காதலாகிக்	,,	,,	ககஎசு
வாழ்கவந்	,,	,,	ககஎஎ
சிவனெனு	அ	ச	ககஎகூ
தலையே	,,	,,	ககஅக
சொற்றுணை	,,	,,	ககஅஉ
பருவரை	,,	,,	ககஅச
பற்றற்றார்	,,	,,	ககஅரு
ஒன்றுகொலா	,,	,,	ககஅசு
முத்தினை	,,	,,	ககஅஅ
தொண்டனேன்	,,	,,	ககஅகூ
மருளவா	,,	,,	கககூ0
கடும்பக	,,	,,	கககூஉ
வென்றிலேன்	,,	,,	கககூங
தம்மானங்	,,	,,	கககூச
எட்டாங்	,,	,,	கககூரு
சாம்பலைப்	,,	,,	கககூசு
விடையும்	,,	,,	கககூஎ

Koviloor Digital Library

தலம் - பதிகம் - சமய குரவர்.		திரு முறை எண்.	பக்கம்.	தலம் - பதிகம் - சமய குரவர்.		திரு முறை எண.	பக்கம்.
வெள்ளிக்	அ	ச	ககசுக	வேதநா	அ	௬	கஉகஅ
பவளத்	,,	,,	கஉ00	தில்லைச்சிற்	,,	சு	கஉகக
ஒன்றுவெண்	,,	௬	கஉ0க	பொருப்பள்ளி	,,	,,	கஉஉக
மாசில்	,,	,,	கஉ0௩	நேர்ந்தொருத்தி	,,	,,	கஉஉச
எயிலானை.	,,	,,	கஉ0ச	இருநிலனாய்த்	,,	,,	கஉஉசு
கண்டுகொள்ள	,,	,,	கஉ0௬	அப்பனீ	,,	,,	கஉஉஅ
காசனைக்	,,	,,	கஉ0எ	ஆமயந்	,,	,,	கஉ௩க
அண்டத்	,,	,,	கஉ0அ	அண்டங்	,,	,,	கஉ௩௩
புக்கணைந்து	,,	,,	கஉ0க	நாமார்க்குங்	,,	,,	கஉ௩சு
பொன்னுள்	,,	,,	கஉகக	வீழக்காலனைக்	சு	எ	கஉ௩அ
சிந்திப்பார்	,,	,,	கஉகஉ	பாறுதாங்கிய	,,	,,	கஉச0
நீறலைத்த	,,	,,	கஉக௬	முடிப்பது	,,	,,	கஉசக
பாவமும்	,,	,,	கஉகஎ	காட்டேர்க்	,,	,,	கஉச௩

தல அகராதி முதலியன முற்றிற்று.

சமயகுரவர் வயசு.

அப்பருக்கெண் பத்தொன் றருள்வாத வூராருக்குச்
செப்பிய நாலெட்டிற் றெய்வீக—மிப்புவியிற்
சுந்தரர்க்கு மூவாறு தொன்ஞான சம்பந்தர்க்
கந்தம் பதினா றறி.

திருநட்சத்திரம்.


சித்திரைச் சதய மப்பர் சிறந்தவை காசி மூல
மத்தரைப் பணிசம் பந்த ராணிமா மகத்தி லந்த
முத்தமிழ் வாத வூரர் முதியநல் லாடி தன்னிற்
சுத்தமாஞ் சோதி நாளிற் சுந்தரர் கயிலை சேர்ந்தார்.

பாடிய சம்பந்தர் வைகாசி மூலம் பயிலுமப்பர்
நீடிய சித்திரை மாதச் சதய நிறைவன்றொண்ட
ராடியிற் சோதி திருவாத வூரர்நல் லானிமகந்
தேடிய சேக்கிழார் வைகாசிப் பூசஞ் சிறந்தனரே.

அடங்கன்முறையில் உள்ள பதிகங்கள் எழுநூற்றுத் தொண்ணூற்றைந்தே. "மின்னுமாமேகங்கள்" என்னும் பதிகத்தைத் திருவேள்விக்குடிக்குந் திருத்துருத்திக்குங்கொள்ளில் எழுநூற்றுத்தொண்ணூற்றாறாகும், அது "மைம்மருபூங்குழல்" என்னும் பதிக முதலியவற்றையும் அவ்வவற்றிற்கூறிய இருதலங்கட்குங் கொள்ளாமையால் பொருத்த முடைத்தன்று. எழுநூற்றுத்தொண்ணூற்றேழு என்று ஓரோவிடத்துக் கூறப்பட்டுள்ளது. அவ்வாறு அகப்பட்ட பிரதிகளிற் பதிகங்கள்காணப்படவில்லை.


Koviloor Digital Library

தேவாரத்திருவெழுகூற்றிருக்கை.



தேவாரத்திருவெழுகூற்றிருக்கை.

Koviloor Digital Library



சம்பந்தர். அப்பர். சுந்தரர்.

Koviloor Digital Library

KOVILOOR கோவிலூர் மடாலயம். MADALAYAM

உ

திருச்சிற்றம்பலம்.

மூவர்தேவாரம்.

தலமுறை.

சோழநாட்டிலே காவேரிக்கு வடகரையில் உள்ள தலங்கள்.

க. கோயில்.*

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

கற்றாங்கெரியோம்பிக்கலியைவாராமே
செற்றார்வாழ்தில்லைச்சிற்றம்பலமேய
முற்றாவெண்டிங்கண்முதல்வன்பாதமே
பற்றாநின்றாரைப்பற்றாபாவமே. (க)

பறப்பைப்படுத்தெங்கும்பசுவேட்டெரியோம்புஞ்
சிறப்பர்வாழ்தில்லைச்சிற்றம்பலமேய
பிறப்பில்பெருமானைப்பின்றாழ்சடையானை
மறப்பிலார்கண்டீர்மையதீர்வாரே. (உ)

மையாரொண்கண்ணார்மாடநெடுவீதிக்
கையாற்பந்தோச்சுங்கழிசூழ்தில்லையுட்
பொய்யாமறைபாடல்புரிந்தானுலகேத்தச்
செய்யானுறைகோயில்சிற்றம்பலந்தானே. (ங)

நிறைவெண்கொடிமாடநெற்றிநேர்தீண்டப்
பிறைவந்திறைதாக்கும்பேரம்பலந்தில்லைச்
சிறைவண்டறையோவாச்சிற்றம்பலமேய
இறைவன்கழலேத்துமின்பமின்பமே. (ச)

செல்வநெடுமாடஞ்சென்றுசேணோங்கிச்
செல்வமதிதோயச்செல்வமுயர்கின்ற
செல்வர்வாழ்தில்லைச்சிற்றம்பலமேய
செல்வன்கழலேத்துஞ்செல்வஞ்செல்வமே. (ரு)

* கோயில்—சிதம்பரம்.

Koviloor Digital Library

வருமாந்தளிர்மேனிமாதோர்பாகமாந்
திருமாந்தில்லையுட்சிற்றம்பலமேய
கருமானுரியாடைக்கறைசேர்கண்டத்தெம்
பெருமான்கழலல்லாற்பேணாதுள்ளமே. (௬)

அலைபார்புனல்சூடியாகத்தொருபாக
மலையான்மகளோடுமகிழ்ந்தானுலகேத்தச்
சிலையாலெயிலெய்தான்சிற்றம்பலந்தன்னைத்
தலையால்வணங்குவார்தலையானார்களே. (௭)

கூர்வாளரக்கன்றன்வலியைக்குறைவித்துச்
சீராலேமல்குசிற்றம்பலமேய
நீரார்சடையானைநித்தலேத்துவார்
தீராநோயெல்லாந்தீர்தறிண்ணமே. (௮)

கோணாகணையானுங்குளிர்தாமரையானுங்
காணார்கழலேத்தக்கனலாயோங்கினான்
சேணார்வாழ்தில்லைச்சிற்றம்பலமேத்த
மாணாநோயெல்லாம்வாளாமாயுமே. (௯)

பட்டைத்துவராடைப்படிமங்கொண்டாடும்
முட்டைக்கட்டுரைமொழிவகேளாதே
சிட்டர்வாழ்தில்லைச்சிற்றம்பலமேய
நட்டப்பெருமானைநாளுந்தொழுவோமே. (௧0)

ஞாலத்துயர்காழிஞானசம்பந்தன்
சீலத்தார்கொள்கைச்சிற்றம்பலமேய
சூலப்படையானைச்சொன்னதமிழ்மாலை
கோலத்தாற்பாடவல்லார்நல்லாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

ஆடினாய்நறுநெய்யொடுபாறயிரந்தணர்பிரியாதசிற்றம்பலம்
நாடினாயிடமாநறுங்கொன்றைநயந்தவனே
பாடினாய்மறையோடுபல்கீதமும்பல்சடைப்பனிகால்கதிர்வெண்டிங்கள்
சூடினாயருளாய்சுருங்கவெமதொல்வினையே. (௧)

கொட்டமேகமழுங்குழலாளொடுகூடினாயெருதேறினாய்நுதற்
பட்டமேபுனைவாயிசைபாடுவபாரிடமா
நட்டமேநவில்வாய்மறையோர்தில்லைநல்லவர்பிரியாதசிற்றம்பலம்
இட்டமாவுறைவாயிவைமேவியதென்னைகொலோ. (௨)

Koviloor Digital Library

நீலத்தார்கரியமிடற்றார்நல்லநெற்றிமேலுற்றகண்ணினார்பற்று
சூலத்தார்சுடலைப்பொடிநீறணிவார்சடையார்
சீலத்தார்தொழுதேத்துசிற்றம்பலஞ்சேர்தலாற்கழற்சேவடிகைதொழக்
கோலத்தாயருளாயுனகாரணங்கூறுதுமே. (௩)

கொம்பலைத்தழகெய்தியநுண்ணிடைக்கோலவாண்மதிபோலமுகத்திரண்
டம்பலைத்தகண்ணாண்முலைமேவியவார்சடையான்
கம்பலைத்தெழுகாமுறுகாளையர்காதலாற்கழற்சேவடிகைதொழ
அம்பலத்துறைவானடியார்க்கடையாவினையே. (௪)

தொல்லையாரமுதுண்ணநஞ்சுண்டதோர்தூமணிமிடறுபகுவாயதோர்
பல்லையார்தலையிற்பலியேற்றுழல்பண்டரங்கா
தில்லையார்தொழுதேத்துசிற்றம்பலஞ்சேர்தலாற்கழற்சேவடிகைதொழ
இல்லையாம்வினைதானெரியம்மதிலெய்தவனே. (௫)

ஆகந்தோயணிகொன்றையாயனலங்கையாயமார்க்கமாவுமை
பாகந்தோய்பகவாபலியேற்றுழல்பண்டரங்கா
மாகந்தோய்பொழின்மல்குசிற்றம்பலமன்னினாய்மழுவாளினாயழல்
நாகந்தோயரையாயடியாரைநண்ணாவினையே. (௬)

சாதியார்பளிங்கினொடுவெள்ளியசங்கவார்குழையாய்திகழப்படும்
வேதியாவிகிர்தாவிழவாரணிதில்லைதன்னுள்
ஆதியாய்க்கிடமாயசிற்றம்பலமங்கையாற்றொழவல்லடியார்களை
வாதியாதகலுநலியாமலிதீவினையே. (௭)

வேயினார்பணைத்தோளியொடாடலைவேண்டினாய்விகிர்தாவுயிர்கட்கமு
தாயினாயிடுகாட்டெரியாடலமர்ந்தவனே
தீயினார்கணையாற்புரமூன்றெய்தசெம்மையாய்திகழ்கின்றசிற்றம்பலம்
மேயினாய்கழலேதொழுதெய்துதுமேலுலகே. (௮)

தாரினார்விரிகொன்றையாய்மதிதாங்குநீள்சடையாய்தலைவாநல்ல
தேரினார்மறுகிற்றிருவாரணிதில்லைதன்னுட்
சீரினால்வழிபாடொழியாததோர்செம்மையாலழகாயசிற்றம்பலம்
ஏரினாலமர்ந்தாயுனசீரடியேத்துதுமே. (௯)

வெற்றரையுழல்வார்துவராடையவேடத்தாரவர்கள்ளுரைகொள்ளன்மின்
மற்றவருலகின்னவலம்மவைமாற்றகில்லார்
கற்றவர்தொழுதேத்துசிற்றம்பலங்காதலாற்கழற்சேவடிகைதொழ
உற்றவருலகின்னுறுதிகொளவல்லவரே. (௧௦)

நாறுபூம்பொழினண்ணியகாழியுளான்மறைவல்லஞானசம்பந்தன்
ஊறுமின்றமிழாலுயர்ந்தாருறைதில்லைதன்னுள்
ஏறுதொல்புகழேந்துசிற்றம்பலத்தீசனையிசையாற்சொன்னபத்திவை
கூறுமாறுவல்லாருயர்ந்தாரொடுங்கூடுவரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

Koviloor Digital Library

திருஞானசம்பந்தப்பிள்ளையார் சிதம்பரத்தை அடைந்து, பஞ்சகிருத்திய திருநிருத்தஞ்செய்யும் சபாநாயகரைத் தரிசித்து, அத்திருப்பதியிலே எழுந்தருளியிருத்தற்கு அஞ்சி, திருவேட்களத்தில் எழுந்தருளியிருந்துகொண்டே, சிதம்பரத்துக்கும் வந்து சபாநாயகரைத் தரிசிப்பாராயினார். அப்படி யிருக்குநாளிலே, ஒருநாள் பிள்ளையார் திருவேட்களத்தைக் கடந்து சிதம்பரத்தை அடைந்தபொழுது, சபாநாயகருடைய திருவருளினாலே தில்லைவாழந்தணர் மூவாயிரும் சிவகணநாதராய்த் தோன்றக் கண்டு, அத்தன்மையைத் திருநீலகண்டப்பெரும்பாணருக்குங் காட்டினார். தில்லைவாழந்தணர்கள் பிள்ளையாரைக் கண்டவுடனே வணங்க, பிள்ளையார் அவர்கள் வணங்குமுன் தாமும் வணங்கி, திருக்கோயிலிற் பிரவேசித்து,சபாநாயகரை வணங்கி, "ஆடினாய்நறுநெய்யொடுபாறயிர்" என்றுந் திருப்பதிகத்தைப் பாடினார். அந்தத் திருப்பதிகத்திலே "நீலத்தார்கரியமிடற்றார்" என்றுந் திருப்பாட்டிலே தில்லைவாழந்தணரைத் தாங் கண்டபடி கூறி, அவர்கள் "தொழுதேத்து சிற்றம்பலம்" என்று அருளிச்செய்தார்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

அன்னம்பாலிக்குந்தில்லைச்சிற்றம்பலம்
பொன்னம்பாலிக்குமேலுமிப்பூமிசை
என்னம்*பாலிக்குமாறுகண்டின்புற
இன்னம்பாலிக்குமோவிப்பிறவியே. (௧)

அரும்பற்றப்படவாய்மலர்கொண்டுநீர்
சுரும்பற்றப்படத்தூவித்தொழுமினோ
கரும்பற்றச்சிலைக்காமனைக்காய்ந்தவன்
பெரும்பற்றப்புலியூரெம்பிரானையே. (௨)

அரிச்சுற்றவினையாலடர்ப்புண்டுநீர்
எரிச்சுற்றக்கிடந்தாரென்றயலவர்
சிரிச்சுற்றுப்பலபேசப்படாமுனந்
திருச்சிற்றம்பலஞ்சென்றடைந்துய்ம்மினே. (௩)

அல்லலென்செயுமருவினையென்செயுந்
தொல்லைவல்வினைத்தொண்டன்றானென்செயுந்
தில்லைமாநகர்ச்சிற்றம்பலவனார்க்
கெல்லையில்லதோரடிமைபூண்டேனுக்கே. (௪)

ஊனிலாவியுயிர்க்கும்பொழுதெலாம்
நானிலாவியிருப்பனென்னாதனைத்
தேனிலாவியசிற்றம்பலவனார்
வானிலாவியிருக்கவும்வைப்பரே. (௫)

* "என்னன்பாலிக்கு" என்றும் பாடம்.

Koviloor Digital Library

சிட்டர்வானவர்சென்றுவரங்கொளுஞ்
சிட்டர்வாழ்தில்லைச்சிற்றம்பலத்துறை
சிட்டன்சேவடிகைதொழச்செல்லுமச்
சிட்டர்பாலணுகான்செறுகாலனே. (௬)

ஒருத்தனுருலகங்கட்கொருசுடர்
திருத்தனர்தில்லைச்சிற்றம்பலவனர்
விருத்தனரிளையார்விடமுண்டவெம்
அருத்தனு*ரடியாரையறிவரே. (௭)

விண்ணிறைந்ததொர்வெவ்வழலின்னுரு
எண்ணிறைந்தவிருவர்க்கறிவொணுக்
கண்ணிறைந்தகடிபொழிலம்பலத்
துண்ணிறைந்துநின்றுடுமொருவனே. (௮)

வில்லைவட்டப்படவாங்கியவுணர்தம்
வல்லைவட்டம்மதின்மூன்றுடன்மாய்த்தவன்
றில்லைவட்டந்திசைகைதொழுவார்வினை
ஒல்லைவட்டங்கடந்தோடுதலுண்மையே. (௯)

நாடிநாரணனுன்முகனென்றிவர்
தேடியுந்திரிந்துங்காணவல்லரோ
மாடமாளிகைசூழ்தில்லையம்பலத்
தாடிபாதமென்னெஞ்சுளிருக்கவே. (௧0)

மதுரவாய்மொழிமங்கையொர்பங்கினன்
சதுரன்சிற்றம்பலவன்றிருமலை
அதிரவார்த்தெடுத்தான்முடிபத்திற
மிதிகொள்சேவடிசென்றடைந்துய்ம்மினே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பனைக்கைமும்மதவேழமுரித்தவன்
நினைப்பவர்மனங்கோயிலாக்கொண்டவன்
அனைத்துவேடமாமம்பலக்கூத்தனைத்
தினைத்தனைப்பொழுதும்மறந்துய்வனே. (௧)

தீர்த்தனைச்சிவனைச்சிவலோகனை
மூர்த்தியைமுதலாயவொருவனைப்
பார்த்தனுக்கருள்செய்தசிற்றம்பலக்
கூத்தனைக்கொடியேன்மறந்துய்வனே. (௨)

* அமுதம்போன்றவர் எனப்பொருள்கொள்ளின் மருத்தனர் எனப்பாடங்கொள்க.

Koviloor Digital Library

கட்டும்பாம்புங்கபாலங்கைமான்மறி
இட்டமாயிடுகாட்டெரியாடுவான்
சிட்டர்வாழ்தில்லையம்பலக்கூத்தனை
எட்டனைப்பொழுதும்மறந்துய்வனோ. (௩)

மாணிபால்கறந்தாட்டிவழிபட
நீணுலகெலாமாளக்கொடுத்தவென்*
ஆணியைச்செம்பொனம்பலத்துண்ணின்ற
தாணுவைத்தமியேன்மறந்துய்வனோ. (௪)

பித்தனைப்பெருங்காடரங்காவுடை
முத்தனைமுளைவெண்மதிசூடியைச்
சித்தனைச்செம்பொனம்பலத்துண்ணின்ற
அத்தனையடியேன்மறந்துய்வனோ. (௫)

நீதியைநிறைவைமறைநான்குடன்
ஓதியையொருவர்க்குமறிவொணாச்
சோதியைச்சுடர்ச்செம்பொனினம்பலத்
தாதியையடியேன்மறந்துய்வனோ. (௬)

மைகொள்கண்டனெண்டோளன்முக்கண்ணினன்
பைகொள்பாம்பரையார்த்தபரமனார்
செய்யமாதுறைசிற்றம்பலத்தெங்கள்
ஐயனையடியேன்மறந்துய்வனோ. (௭)

முழுதும்வானுலகத்துளதேவர்கள்
தொழுதும்போற்றியுந்தூயசெம்பொன்னினால்
எழுதிமேய்ந்தசிற்றம்பலக்கூத்தனை
இழுதையேன்மறந்தெங்ஙனமுய்வனோ. (௮)

காருலாமலர்க்கொன்றையந்தாரனை
வாருலாமுலைமங்கைமணாளனைத்
தேருலாவியதில்லையுட்கூத்தனை
ஆரிலாவமுதைமறந்துய்வனோ. (௯)

ஓங்குமால்வரையேந்தலுற்றான்சிரம்
வீங்கிவிம்முறவூன்றியதாளினான்
தேங்குநீர்வயல்சூழ்தில்லைக்கூத்தனைப்
பாங்கிலாத்தொண்டனேன்மறந்துய்வனோ. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார் சிதம்பர தரிசனஞ்செய்து, பின் திருவேட்களம், திருக்கழிப்பாலை என்னுந் தலங்களையடைந்து சிவதரிசனஞ்செய்து திருப்பதிகம்பாடி நீங்கி, வழியில் "பனைக்கை"என்று எடுத்து "அம்பலக்கூத்தனைத்—தினைத்தனைப்பொழுதும் மறந்துய்வனோ" என்னும் திருப்பதிகம் பாடிக்கொண்டு மீண்டுந் தில்லையை அடைந்தார்.

* கொடுத்தவன் என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருநேரிசை. பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

செஞ்சடைக்கற்றைமுற்றத்திளநிலாவெறிக்குஞ்சென்னி
நஞ்சடைகண்டனாரைக்காணலாநறவநாறு
மஞ்சடைசோலைத்தில்லைமல்குசிற்றம்பலத்தே
துஞ்சடையிருள்கிழியத்துளங்கெரியாடுமாறே. (க)

ஏறனாரேறுதம்பாலிளநிலாவெறிக்குஞ்சென்னி
ஆறனாராறுசூடியாயிழையாளோர்பாக
நாறுபூஞ்சோலைத்தில்லைநவின்றசிற்றம்பலத்தே
நீறுமெய்பூசிநின்றுநீண்டெரியாடுமாறே. (உ)

சடையனார்சாந்தநீற்றர்தனிநிலாவெறிக்குஞ்சென்னி
யுடையனாருடைதலையிலுண்பதும்பிச்சையேற்றுக்
கடிகொள்பூந்தில்லைதன்னுட்கருதுசிற்றம்பலத்தே
அடிகழலார்க்கநின்றுவனலெரியாடுமாறே. (ங)

பையரவசைத்தவல்குற்பனிநிலாவெறிக்குஞ்சென்னி
மையரிக்கண்ணினாள்*மாலுமோர்பாகமாகிச்
செய்யெரிதில்லைதன்னுட்டிகழ்ந்தசிற்றம்பலத்தே
கையெரிவீசிநின்றுகனலெரியாடுமாறே. (ச)

ஓதினார்வேதம்வாயாலொளிநிலாவெறிக்குஞ்சென்னிப்
பூதனார்பூதஞ்சூழப்புலியுரியதளனார்தா
நாதனார்தில்லைதன்னுணவின்றசிற்றம்பலத்தே
காதில்வெண்குழைகடாழக்கனலெரியாடுமாறே. (ரு)

ஒருடம்பிருவராகியொளிநிலாவெறிக்குஞ்சென்னிப்
பாரிடம்பாணிசெய்யப்பயின்றவெம்பரமமூர்த்தி
காரிடந்தில்லைதன்னுட்கருதுசிற்றம்பலத்தே
பேரிடம்பெருகநின்றுபிறங்கெரியாடுமாறே. (சு)

முதற்றனிச்சடையைமூழ்கமுகிழ்நிலாவெறிக்குஞ்சென்னி
மதக்களிற்றுரிவைபோர்த்தமைந்தரைக்காணலாகு
மதத்துவண்டறையுஞ்சோலைமல்குசிற்றம்பலத்தே
கதத்ததோரரவமாடக்கனலெரியாடுமாறே. (எ)

மறையனார்மழுவொன்றேந்திமணிநிலாவெறிக்குஞ்சென்னி
இறைவனாரெம்பிரானாரேத்துவாரிடர்கடீர்ப்பார்
சிறைகொணீர்த்தில்லைதன்னுட்டிகழ்ந்தசிற்றம்பலத்தே
அறைகழலார்க்கநின்றுவனலெரியாடுமாறே. (அ)

விருத்தனாய்ப்பாலனாகிவிரிநிலாவெறிக்குஞ்சென்னி
நிருத்தனார்நிருத்தஞ்செய்யநீண்டபுன்சடைகடாழக்
கருத்தனார்தில்லைதன்னுட்கருதுசிற்றம்பலத்தே
அருத்தமாமேனிதன்னோடனலெரியாடுமாறே. (கூ)

* கண்ணியாளும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

பாலனுப்பிருத்தனுகிப்பனிநிலாவெறிக்குஞ்சென்னிக் *
காலனைக்காலாற்காய்ந்தகடவுளார்விடையொன்றேறி
ஞாலமாந்தில்லைதன்னுணவின்றசிற்றம்பலத்தே
நீலஞ்சேர்கண்டனார்தாநின்றெரியாடுமாறே. (௧0)

மதியிலாவரக்கனோடிமாமலையெடுக்கநோக்கி
நெதியன்†தோளொரியவூன்றிநீடிரும்பொழில்கள்சூழ்ந்த
மதியந்தோய்தில்லைதன்னுண்மல்குசிற்றம்பலத்தே
அதிசயம்போலநின்றுவனலெரியாடுமாறே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருநேரிசை. பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

பத்தனுப்பாடமாட்டேன்பரமனேபரமயோகி
எத்திறுற்பத்திசெய்கேனென்னைநீயிகழவேண்டா
முத்தனேமுதல்வாதில்லையம்பலத்தாடுகின்ற
அத்தாவுன்னுடல்காண்பானடியனேன்வந்தவாறே. (௧)

கருத்தனுப்பாடமாட்டேன்காம்பனதோளிபங்கா
ஒருத்தாலறியவொண்ணுத்திருவுருவுடையசோதி
திருத்தமாந்தில்லைதன்னுட்டிகழ்ந்தசிற்றம்பலத்தே
நிருத்தநான்காணவேண்டிநேர்படவந்தவாறே. (௨)

கேட்டிலேன்கிளைபிரியேன்கேட்குமாகேட்டியாகில்
நாட்டினேனின்றன்பாதநடுப்படநெஞ்சினுள்ளே
மாட்டினீர்வாளைபாயுமல்குசிற்றம்பலத்தே
கூட்டமாங்குவிமுலையாள்கூடநீயாடுமாறே. (௩)

சிந்தையைத்திகைப்பியாதேசெறிவுடையடிமைசெய்ய
எந்தைநீயருளிச்செய்யாயாதுநான்செய்வதென்னே
செந்தியார்வேள்வியோவாத்தில்லைச்சிற்றம்பலத்தே
அந்தியும்பகலுமாடவடியிணையலசுங்கொல்லோ. (௪)

கண்டவாதிரிந்துநாளுங்கருத்தினுனின்றன்பாதங்
கொண்டிருந்தாடிப்பாடிக்கூடுவன்குறிப்பினாலே
வண்டுபண்பாடுஞ்சோலைமல்குசிற்றம்பலத்தே
எண்டிசையோருமேத்தவிறைவநீயாடுமாறே. (௫)

பார்த்திருந்தடியனேனுன்பாவுவன்பாடியாடி
மூர்த்தியேயென்பனுன்னைமூவரின்முதல்வனென்பன்
ஏத்துவாரிடர்களைப்பாய்தில்லைச்சிற்றம்பலத்துக்
கூத்தாவுன்கூத்துக்காண்பான்கூடநான்வந்தவாறே. (௬

* சென்னி—காலனை என்றும் பாடம். † "நெதியின்" என்றும் பாடம்.

Koviloor Digital Library

பொய்யினைத்தவிரவிட்டுப்புறமலாவடிமைசெய்ய
ஐயநீயருளிச்செய்யாயாதியேயாதிமூர்த்தி
வையகந்தன்னின்மிக்கமல்குசிற்றம்பலத்தே
பையநின்னுடல்*காண்பான்பரமநான்வந்தவாறே. (எ)

மனத்தினார்திகைத்துநாளுமாண்பலாநெறிகண்மேலே
கனைப்பராலென்செய்கேனோகறையணிகண்டத்தானே
நினைத்தனைவேதங்குன்றாத்தில்லைச்சிற்றம்பலத்தே
அனைத்துநின்னிலயங்காண்பானடியனேன்வந்தவாறே. (அ)

நெஞ்சினைத்தூய்மைசெய்துநினைக்குமாநினைப்பியாதே
வஞ்சமேசெய்தியாலோவானவர்தலைவனேநீ
மஞ்சடைசோலைத்தில்லைமல்குசிற்றம்பலத்தே
அஞ்சொலாள்காணநின்றுவழகநீயாடுமாறே. (கூ)

மண்ணுண்டமாலவனுமலர்மிசைமன்னினானும்
விண்ணுண்டதிருவுருவம்விரும்பினார்காணமாட்டார்
திண்ணுண்டதிருவேமிக்கதில்லைச்சிற்றம்பலத்தே
பண்ணுண்டபாடலோடும்பரமநீயாடுமாறே. (கο)

திருச்சிற்றம்பலம்.

திருவிருத்தம். பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

பாளையுடைக்கமுகோங்கிப்பன்மாடநெருங்கியெங்கும்
வாளையுடைப்புனல்வந்தெறிவாழ்வயற்றில்லைதன்னுள்
ஆளவுடைக்கழற்சிற்றம்பலத்தரனாடல்கண்டாற்
பீளையுடைக்கண்களாற்பின்னைப்பேய்த்தொண்டர்காண்பதென்னே. (க)

பொருவிடையொன்றுடைப்புண்ணியமூர்த்திபுலியதளன்
உருவுடையம்மலைமங்கைமணாளனுலகுக்கெல்லாந்
திருவுடையந்தணர்வாழ்கின்றதில்லைச்சிற்றம்பலவன்
றிருவடியைக்கண்டகண்கொண்டுமற்றினிக்காண்பதென்னே. (உ)

தொடுத்தமலரொடுதூபமுஞ்சாந்துங்கொண்டெப்பொழுதும்
அடுத்துவணங்குமயனொடுமாலுக்குங்காண்பரியான்
பொடிக்கொண்டணிந்துபொன்னாகியதில்லைச்சிற்றம்பலவன்
உடுத்ததுகில்கண்டகண்கொண்டுமற்றினிக்காண்பதென்னே. (ந)

வைச்சபொருணமக்காகுமென்றெண்ணிநமச்சிவாய
அச்சமொழிந்தேனணிதில்லையம்பலத்தாடுகின்ற
பிச்சன்பிறப்பிலிபேர்நந்தியுந்தியின்மேலசைத்த
ச்சினழகுகண்டாற்பின்னைக்கண்கொண்டுகாண்பதென்னே. (ச)

* நுன்னுடல் என்றும் பாடம்.

Koviloor Digital Library

செய்ஞ்ஞின்றநீலமலர்நின்றதில்லைச்சிற்றம்பலவன்
மைஞ்ஞின்றவொண்கண்மலைமகள்கண்டுமகிழ்ந்துநிற்க
நெய்ஞ்ஞின்றெரியும்விளக்கொத்தநீலமணிமிடற்றான்
கைஞ்ஞின்றவாடல்கண்டாற்பின்னைக்கண்கொண்டுகாண்பதென்னே. (௫)

ஊனத்தைநீக்கியுலகறியவென்னையாட்கொண்டவன்
தேனொத்தெனக்கினியான்றில்லைச்சிற்றம்பலவனெங்கோன்
வானத்தவருய்யவன்னஞ்சையுண்டகண்டத்திலங்கும்
ஏனத்தெயிறுகண்டாற்பின்னைக்கண்கொண்டுகாண்பதென்னே. (௬)

தெரித்தகணையாற்றிரிபுரமூன்றுஞ்செந்தீயின்மூழ்க
எரித்தவிறைவனிமையவர்கோமானிணையடிகள்
தரித்தமனத்தவர்வாழ்கின்றதில்லைச்சிற்றம்பலவன்
சிரித்தமுகங்கண்டகண்கொண்டுமற்றினிக்காண்பதென்னே. (௭)

சுற்றுமமரர்சுரபதிநின்றிருப்பாதமல்லாற்
பற்றொன்றிலோமென்றழைப்பப்பரவையுணஞ்சையுண்டான்
செற்றங்கனங்கனைத்தீவிழித்தான்றில்லையம்பலவன்
நெற்றியிற்கண்கண்டகண்கொண்டுமற்றினிக்காண்பதென்னே. (௮)

சித்தத்தெழுந்தசெழுங்கமலத்தன்னசேவடிகள்
வைத்தமனத்தவர்வாழ்கின்றதில்லைச்சிற்றம்பலவன்
முத்தும்வயிரமுமாணிக்கந்தன்னுள்விளங்கியதூ
மத்தமலர்கண்டகண்கொண்டுமற்றினிக்காண்பதென்னே. (௯)

தருக்குமிகுத்துத்தன்றோள்வலியுன்னித்தடவரையை
வரைக்கைகளாலெடுத்தார்ப்பமலைமகள்கோன்சிரித்து
அரக்கன்மணிமுடிபத்துமணிதில்லையம்பலவன்
நெருக்கிமிதித்தவிரல்கண்டகண்கொண்டுகாண்பதென்னே. (கo)

திருச்சிற்றம்பலம்.

திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

கருநட்டகண்டனையண்டத்தலைவனைக்கற்பகத்தைச்
செருநட்டமும்மதிலெய்யவல்லானைச்செந்தீமுழங்கத்
திருநட்டமாடியைத்தில்லைக்கிறையைச்சிற்றம்பலத்துப்
பெருநட்டமாடியைவானவர்கோனென்றுவாழ்த்துவனே. (க)

ஒன்றியிருந்துநினைமின்கடமக்கூனமில்லைக்
கன்றியகாலனைக்காலாற்கடிந்தானடியவற்காய்ச்*
சென்றுதொழுமின்கடில்லையுட்சிற்றம்பலத்துநட்டம்
என்றுவந்தாயென்னுமெம்பெருமான்றன்றிருக்குறிப்பே. (உ)

* அடியவர்க்காச் என்றும் பாடம்.

Koviloor Digital Library

கன்மனவீர்கழியுங்கருத்தேசொல்லிக்காண்பதென்னே
நன்மனவாநவிறில்லையுட்சிற்றம்பலத்துநட்டம்
பொன்மலையில்வெள்ளிக்குன்றதுபோலப்பொலிந்திலங்கி
என்மனமேயொன்றிப்புக்கனன்போந்தசுவடில்லையே. (௩)

குனித்தபுருவமுங்கொவ்வைச்செவ்வாயிற்குமிண்சிரிப்பும்
பனித்தசடையும்பவளம்போன்மேனியிற்பால்வெண்ணீறும்
இனித்தமுடையவெடுத்தபொற்பாதமுங்காணப்பெற்றால்
மனித்தப்பிறவியும்வேண்டுவதேயிந்தமாநிலத்தே. (௪)

வாய்த்ததுநந்தமக்கீதோர்*பிறவிமதித்திடுமின்
பார்த்தற்குப்பாசுபதமருள்செய்தவன்பத்தருள்ளீர்
கோத்தன்றுமுப்புரந்தீவளைத்தான்றில்லையம்பலத்துக்
கூத்தனுக்காட்பட்டிருப்பதன்றோநந்தங்கூழைமையே. (௫)

பூத்தனபொற்சடைபொன்போன்மிளிரப்புரிகணங்கள்
ஆர்த்தனகொட்டியரித்தனபல்குறட்பூதகணந்
தேத்தெனவென்றிசைவண்டுகள்பாடுசிற்றம்பலத்துக்
கூத்தனிற்கூத்துவல்லாருளரோவென்றன்கோல்வளைக்கே. (௬)

முடிகொண்டமத்தமுமுக்கண்ணினோக்குமுறுவலிப்புந்
துடிகொண்டகையுந்துதைந்தவெண்ணீறுஞ்சுரிகுழலாள்
படிகொண்டபாகமும்பாய்புலித்தோலுமென்பாவிநெஞ்சிற்
குடிகொண்டவாதில்லையம்பலக்கூத்தன்குரைகழலே. (௭)

படைக்கலமாகவுன்னாமத்தெழுத்தஞ்செனாவிற்கொண்டேன்
இடைக்கலமல்லேனெழுபிறப்புமுனக்காட்செய்கின்றேன்
றுடைக்கினும்போகேன்றொழுதுவணங்கித்தூநீறணிந்துன்
அடைக்கலங்கண்டாயணிதில்லைச்சிற்றம்பலத்தரனே. (௮)

பொன்னொத்தமேனிமேல்வெண்ணீறணிந்துபுரிசடைகண்
மின்னொத்திலங்கப்பலிதேர்ந்துழலும்விடங்கவேடச்†
சின்னத்தினான்மலிதில்லையுட்சிற்றம்பலத்துநட்டம்
என்னத்தனாடல்கண்டின்புற்றதாலிவ்விருநிலமே. (௯)

சாடவெடுத்ததுதக்கன்றன்வேள்வியிற்சந்திரனை
வீடவெடுத்ததுகாலனைநாரணனான்முகனுந்
தேடவெடுத்ததுதில்லையுட்சிற்றம்பலத்துநட்டம்
ஆடவெடுத்திட்டபாதமன்றோநம்மையாட்கொண்டதே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார் சிதம்பரத்தை அடைந்து, திருச்சிற்றம்பலத்திலே திருநிருத்தஞ் செய்தருளுகின்ற சபாநாயகரைத் தரிசித்து விழுந்து நமஸ்கரித்து எழுந்து, இரண்டு கைகளும் சிரசின்மேலேறிக் குவிய, இரண்டு கண்களினின்றும் ஆனந்த பாஷ்பஞ் சொரிய, அக்கினியிற்பட்ட வெண்ணெய்போல மனங்கசிந்துருக, என்றுவந்தாய் என்னுந்திருக்குறிப்போடு நடனஞ் செய்கின்ற சுவாமியுடைய திருநயனத்தினின்றும் பொ

* ஈதோபிறவி என்றும் பாடம். † வேடஞ்-சின்னத்தினான் என்றும் பாடம்.

Koviloor Digital Library

ழிகின்ற திருவருளாலாகிய ஆனந்த மேலீட்டினாலே "கருநட்டகண்டனை" என்னுந் திருவிருத்த முதலியவற்றைப் பாடினார். அத்திருப்பதிகத்திலே "ஒன்றியிருந்து" என்னுந் திருப்பாட்டிலே, நடராசமூர்த்தி தமக்குக் காட்டியருளிய திருக்குறிப்பை "தில்லையுட் சிற்றம்பலத்து நட்டம்—என்று வந்தாயென்னு மெம்பெருமான்றன் றிருக்குறிப்பே" என்று அருளிச் செய்தார்.

பெரியதிருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

அரியானையந்தணர்தஞ்சிந்தையானை
யருமறையினகத்தானையணுவையார்க்குந்
தெரியாததத்துவனைத்தேனைப்பாலைத்
திகழொளியைத்தேவர்கடங்கோனைமற்றைக்
கரியானைநான்முகனைக்கனலைக்காற்றைக்
கனைகடலைக்குலவரையைக்கலந்துநின்ற
பெரியானைப்பெரும்பற்றப்புலியூரானைப்
பேசாதநாளெல்லாம்பிறவாநாளே. (க)

கற்றானைக்கங்கைவார்சடையான்றன்னைக்
காவிரிசூழ்வலஞ்சுழியுங்கருதினானை
அற்றார்க்குமலந்தார்க்குமருள்செய்வானை
யாரூரும்புகுவானையறிந்தோமன்றே
மற்றொருந்தன்னொப்பாரில்லாதானை
வானவர்களெப்பொழுதும்வணங்கியேத்தப்
பெற்றானைப்பெரும்பற்றப்புலியூரானைப்
பேசாதநாளெல்லாம்பிறவாநாளே. (உ)

கருமானினுரியதளையுடையாவீக்கிக்
கனைகழல்கள்கலந்தொலிப்பவனல்கையேந்தி
வருமானத்திரடோள்கண்மட்டித்தாட
வளர்மதியஞ்சடைக்கணிந்துமானேர்நோக்கி
அருமானவாண்முகத்தாளமர்ந்துகாண
வமரர்கணமுடிவணங்கவாடுகின்ற
பெருமானைப்பெரும்பற்றப்புலியூரானைப்
பேசாதநாளெல்லாம்பிறவாநாளே. (ங)

அருந்தவர்கடொழுதேத்துமப்பன்றன்னை
யமரர்கடம்பெருமானையரனைமூவா
மருந்தமரர்க்கருள்புரிந்தமைந்தன்றன்னை
மறிகடலுங்குலவரையுமண்ணும்விண்ணுந்
திருந்தொளியதாரகையுந்திசைகளெட்டுந்
திரிசுடர்களோரிரண்டும்பிறவுமாய
பெருந்தகையைப்பெரும்பற்றப்புலியூரானைப்
பேசாதநாளெல்லாம்பிறவாநாளே. (ச)

Koviloor Digital Library

அருந்துணையையடியார்தமல்லறீர்க்கு
மருமருந்தையகன்ஞாலத்தகத்துட்டோன்றி
வருந்துணையுஞ்சுற்றமும்பற்றும்விட்டு
வான்புலன்களகத்தடக்கிமடவாரோடும்
பொருந்தணைமேல்வரும்பயனைப்போகமாற்றிப்
பொதுநீக்கித்தனைநினையவல்லோர்க்கென்றும்
பெருந்துணையைப்பெரும்பற்றப்புலியூரானைப்
பேசாதநாளெல்லாம்பிறவாநாளே. (ரு)

கரும்பமருமொழிமடவாள்பங்கன்றன்னைக்
கனவயிரக்குன்றனையகாட்சியானை
அரும்பமரும்பூங்கொன்றைத்தாரான்றன்னை
யருமறையோடாறங்கமாயினானைச்
சுரும்பமருங்கடிபொழில்கள்சூழ்தென்னூரூர்ச்
சுடர்க்கொழுந்தைத்துளக்கிலாவிளக்கைமிக்க
பெரும்பொருளைப்பெரும்பற்றப்புலியூரானைப்
பேசாதநாளெல்லாம்பிறவாநாளே. (சு)

வரும்பயனையெழுநரம்பினோசையானை
வரைசிலையாவானவர்கண்முயன்றவாளி
அரும்பயஞ்செயவுணர்புரமெரியக்கோத்த
வம்மானையலைகடனஞ்சயின்றான்றன்னைச்
சுரும்பமருங்குழன்மடவார்கடைக்கணோக்கிற்
றுளங்காதசிந்தையராய்த்துறந்தோருள்ளப்
பெரும்பயனைப்பெரும்பற்றப்புலியூரானைப்
பேசாதநாளெல்லாம்பிறவாநாளே. (எ)

காரானையீருரிவைப்போர்வையானைக்
காமருபூங்கச்சியேகம்பன்றன்னை
ஆரேனுமடியவர்கட்கணியான்றன்னை
யமரர்களுக்கறிவரியவளவிலானைப்
பாரோரும்விண்ணோரும்பணியநட்டம்
பயில்கின்றபரஞ்சுடரைப்பரனையெண்ணில்
போரானைப்பெரும்பற்றப்புலியூரானைப்
பேசாதநாளெல்லாம்பிறவாநாளே. (அ)

முற்றாதபான்மதியஞ்சூடினானை
மூவுலகுந்தானாயமுதல்வன்றன்னைச்
செற்றார்கள்புரமூன்றுஞ்செற்றான்றன்னைத்
திகழொளியைமரகதத்தைத்தேனைப்பாலைக்
குற்றாலத்தமர்ந்துறையுங்குழகன்றன்னைக்
கூத்தாடவல்லானைக்கோனைஞானம்
பெற்றானைப்*பெரும்பற்றப்புலியூரானைப்
பேசாதநாளெல்லாம்பிறவாநாளே. (கூ)

* பெற்றார்கள் என்றும் பாடம்.

Koviloor Digital Library

காரொளியதிருமேனிச்செங்கண்மாலுங்
கடிக்கமலத்திருந்தவனும்*காணவண்ணஞ்
சீரொளியதழற்பிழம்பாய்நின்றதொல்லைத்
திகழொளியைச்சிந்தைதனைமயக்கந்தீர்க்கும்
ஏரொளியையிருநிலனும்விசும்பும்விண்ணு
மேழுலகுங்கடந்தண்டத்தப்பாலின்ற
பேரொளியைப்பெரும்பற்றப்புலியூரானைப்
பேசாதநாளெல்லாம்பிறவாநாளே. (கo)

திருச்சிற்றம்பலம்.

புக்க திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

மங்குன்மதிதவழுமாடவீதி
மயிலாப்பிலுள்ளார்மருகலுள்ளார்
கொங்கிற்கொடுமுடியார்குற்றாலத்தார்
குடமூக்கிலுள்ளார்போய்க்கொள்ளம்பூதூர்த்
தங்குமிடமறியார்சாலநாளார்
தருமபுரத்துள்ளார்தக்களூரார்
பொங்குவெண்ணீறணிந்துபூதஞ்சூழப்
புலியூர்ச்சிற்றம்பலமேபுக்கார்தாமே. (க)

நாகமரைக்கசைத்தநம்பர்இந்நா
ளணிபள்ளியுள்ளார்போய்நல்லூர்த்தங்கிப்
பாகப்பொழுதெலாம்பாசூர்த்தங்கிப்
பரிதிநியமத்தார்பன்னிருநாள்
வேதமும்வேள்விப்புகையுமோவா
விரிநீர்மிழலையெழுநாட்டங்கிப்
போகமும்பொய்யாப்பொருளுமானார்
புலியூர்ச்சிற்றம்பலமேபுக்கார்தாமே. (உ)

துறங்காட்டியெல்லாம்விரித்தார்போலுந்
தூமதியும்பாம்புமுடையார்போலும்
மறங்காட்டிமும்மதிலுமெய்தார்போலு
மந்திரமுந்தந்திரமுந்தாமேபோலும்
அறங்காட்டியந்தணர்க்கன்றாலநீழ
லறமருளிச்செய்தவானிரிங்காட்
புறங்காட்டெரியாடிப்பூதஞ்சூழப்
புலியூர்ச்சிற்றம்பலமேபுக்கார்தாமே. (ங)

* கடிக்கமலத்திருந்தவனும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

வாரேறுவனமுலையாள்பாகமாக
மழுவாள்கையேந்திமயானத்தாடிச்
சீரேறுதண்வயல்சூழோதமேவித்
திருவாஞ்சியத்தார்திருநள்ளாற்றார்
காரேறுகண்டத்தார்காமற்காய்ந்த
கண்விளங்குநெற்றியார்கடனஞ்சுண்டார்
போரேறுதாமேறிப்பூதஞ்சூழப்
புலியூர்ச்சிற்றம்பலமேபுக்கார்தாமே. (௪)

காரார்கமழ்கொன்றைக்கண்ணிசூடிக்
கபாலங்கையேந்திக்கணங்கள்பாட
ஊராரிடுபிச்சைகொண்டுழலு
முத்தமராய்நின்றவொருவனார்தாஞ்
சீரார்கழல்வணங்குந்தேவதேவர்
திருவாரூர்த்திருமூலட்டானமேயார்
போரார்விடையேறிப்பூதஞ்சூழப்
புலியூர்ச்சிற்றம்பலமேபுக்கார்தாமே. (௫)

காதார்குழையினர்கட்டங்கத்தர்
கயிலாயமாமலையார்காரோணத்தார்
மூதாயர்மூதாதையில்லார்போலு
முதலுமிறுதியுந்தாமேபோலும்
மாதாயமாதர்மகிழவன்று
வன்மதவேடன்னுடலங்காய்ந்தாரிந்நாட்
போதார்சடைதாழப்பூதஞ்சூழப்
புலியூர்ச்சிற்றம்பலமேபுக்கார்தாமே. (௬)

இறந்தார்க்குமென்றுமிறவாதார்க்கு
மிமையவர்க்குமேகமாய்நின்றுசென்று
பிறந்தார்க்குமென்றும்பிறவாதார்க்கும்
பெரியான்றன்பெருமையேபேசநின்று
மறந்தார்மனத்தென்றுமருவார்போலு
மறைக்காட்டுறையுமழுவாட்செல்வர்
புறந்தார்சடை* தாழப்பூதஞ்சூழப்
புலியூர்ச்சிற்றம்பலமேபுக்கார்தாமே. (௭)

குலாவெண்டலைமாலை† யென்புபூண்டு
குளிர்கொன்றைத்தாரணிந்துகொல்லேறேறிக்
கலாவெங்களிற்றுரிவைப்போர்வைமூடிக்
கையோடனலேந்திக்காடுறைவார்
நிலாவெண்மதியுரிஞ்சநீண்டமாட
நிறைவயல்சூழ்நெய்த்தானமேயசெல்வர்
புலால்வெண்டலையேந்திப்பூதஞ்சூழப்
புலியூர்ச்சிற்றம்பலமேபுக்கார்தாமே. (௮)

* புறந்தாழ்சடை என்றும் பாடம். † குலாவெண்ணெடுமாலை என்றும் பாடம்.

Koviloor Digital Library

சந்தித்தகோவணத்தர்வெண்ணூன்மார்பர்
சங்கரனைக்கண்டீரோகண்டோமிந்நாட்
பந்தித்தவெள்விடையைப்பாயவேறிப்
படுதலையிலென்கொலோவேந்திக்கொண்டு
வந்திங்கென்வெள்வளையுந்*தாமுமெல்லா
மணியாரூர்நின்றந்திகொள்ளக்கொள்ளப்
பொன்றிமணிவிளக்குப்பூதம்பற்றப்
புலியூர்ச்சிற்றம்பலமேபுக்கார்தாமே. (௯)

பாதங்கணல்லார்பரவியேத்தப்†
பத்திமையாற்பணிசெய்யுந்தொண்டர்தங்கள்
ஏதங்கடீரவிருந்தார்போலு
மேழுபிறப்புமாளுடையவீசனார்தாம்
வேதங்களோதியோர்வீணையேந்தி
விடையொன்றுதாமேறிவேதகீதர்
பூதங்கள்சூழப்புலித்தோல்வீக்கிப்
புலியூர்ச்சிற்றம்பலமேபுக்கார்தாமே. (௧௦)

பட்டுடுத்துத்தோல்போர்த்துப்பாம்பொன்றார்த்துப்
பகவனார்பாரிடங்கள்சூழநட்டஞ்
சிட்டாய்த்தீயேந்திச்செல்வார்தம்மைத்
தில்லைச்சிற்றம்பலத்தேகண்டோமிந்நாள்
விட்டிலங்குசூலமேவெண்ணூலுண்டே
யோதுவதும்வேதமேவீணையுண்டே
கட்டங்கங்கையதேசென்றுகாணீர்
கறைசேர்மிடற்றெங்கபாலியார்க்கே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

மடித்தாடுமடிமைக்கணன்றியே‡மனனேநீவாழுநாளுந்
தடுத்தாட்டித்தருமனார்தமர்செக்கிலிடும்போதுதடுத்தாட்கொள்வான்
கடுத்தாடுகரதலத்திற்றமருகமுமெரியகலுங்கரியபாம்பும்
பிடித்தாடிப்புலியூர்ச்சிற்றம்பலத்தெம்பெருமானைப்பெற்றாமன்றே. (௧)

* வந்திங்கனைவளையும் என்றும் வந்திங்கேனைவளையும் என்றும் பாடம். † ஏத்தியென்றும் பாடம். ‡ அடிமைக்களன்றியே என்றும் பாடம். அடிமைக்கணன்றியே என்பது பாடமாயின் மடித்தாடுகின்ற திருவடியினிடத்துமாறுபட்டு எனப் பொருள்கொள்க; ஈண்டு அடிமை என்பதனுள் ஐவிகுதி தன்மை உணர்த்தாது தன்மையுடைப் பொருளையுணர்த்திப் பகுதிப்பொருள் விகுதியாய் நின்றது; "இருமைவகைதெரிந்து" என்புழிப்போல. அடி - திருவடி. ஆடுதல் அடியைவிசேடித்தது.

Koviloor Digital Library

போாதுகாமத்திற்சென்றாற்போலன்றியேபிரியாதுள்கிச்
சீரார்ந்தவன்பராய்ச்சென்றுமுன்னடிவீழுந்திருவினரை
ஓராதுதருமனர்தமர்செக்கிலிடும்போதுதடுத்தாட்கொள்வான்
பேராளர்புலியூர்ச்சிற்றம்பலத்தெம்பெருமானைப்பெற்றாமன்றே. (உ)

நரியார்தங்கள்ளத்தாற்பக்கானபரிசொழிந்துநாளுமூழ்கிப்
பிரியாதவன்பராய்ச்சென்றுமுன்னடிவீழுஞ்சிந்தையாரைத்
தரியாதுதருமனர்தமர்செக்கிலிடும்போதுதடுத்தாட்கொள்வான்
பெரியோர்கள்புலியூர்ச்சிற்றம்பலத்தெம்பெருமானைப்பெற்றாமன்றே. (ங)

கருமையாற்றருமனர்தமர்நம்மைக்கட்டியகட்டறுப்பிப்பானை
அருமையாந்தன்னுலகந்தருவானைமண்ணுலகங்காவல்பூண்ட
உரிமையாற்பல்லவர்க்குந்திறை*கொடாமன்னவரைமறுக்கஞ்செய்யும்
பெருமையார்புலியூர்ச்சிற்றம்பலத்தெம்பெருமானைப்பெற்றாமன்றே. (ச)

கருமானினுரியாடைச்செஞ்சடைமேல்வெண்மதியக்கண்ணியானை
உருமன்னகூற்றத்தையுருண்டோடவுதைத்துகந்துவுலவாவின்பந்
தருவானைத்தருமனர்தமர்செக்கிலிடும்போதுதடுத்தாட்கொள்வான்
பெருமானார்புலியூர்ச்சிற்றம்பலத்தெம்பெருமானைப்பெற்றாமன்றே. (ரு)

உய்த்தாட்டி†த்திரியாதேயுள்ளமேயொழிகண்டாயூன்கணோட்டம்
எத்தாலுங்குறைவில்லையென்பர்காணெஞ்சமேநம்மைநாளும்
பைத்தாடுமரவினன்படர்சடையன்பரஞ்சோதிபாவந்தீர்க்கும்
பித்தாடிபுலியூர்ச்சிற்றம்பலத்தெம்பெருமானைப்பெற்றாமன்றே. (சு)

முட்டாதமுச்சந்திமூவாயிரவர்க்குமூர்த்தியென்னப்
பட்டானைப்பத்தராய்ப்பாவிப்பார்பாவமும்வினையும்போக
விட்டானைமலையெடுத்தவிராவணனைத்தலைபத்துநெரியக்காலாற்
றொட்டானைப்புலியூர்ச்சிற்றம்பலத்தெம்பெருமானைப்பெற்றாமன்றே. (எ)

கற்றானுங்குழையுமாறன்றியேகருதுமாகருதுகிற்றார்க்
கெற்றாலுங்குறைவில்லையென்பர்காணுள்ளமேநம்மைநாளுஞ்
செற்றாட்டித்தருமனர்தமர்செக்கிலிடும்போதுதடுத்தாட்கொள்வான்
பெற்றேறிப்புலியூர்ச்சிற்றம்பலத்தெம்பெருமானைப்பெற்றாமன்றே. (அ)

நாடுடையநாதன்பானன்றென்றுஞ்செய்மனமேநம்மைநாளுந்
தாடுடையதருமனர்தமர்செக்கிலிடும்போதுதடுத்தாட்கொள்வான்
மோடுடையசமணர்க்குமுடையுடையசாக்கியர்க்குமூடம்வைத்த
பீடுடையபுலியூர்ச்சிற்றம்பலத்தெம்பெருமானைப்பெற்றாமன்றே. (சு)

பாரூருமரவல்குலுமைநங்கையவள்பங்கன்பைங்கணேற்றன்
ஊரூரன்றருமனர்தமர்செக்கிலிடும்போதுதடுத்தாட்கொள்வான்
ஆரூரன்றம்பிரானாரூரன்மீகொங்கி‡லணிகாஞ்சிவாய்ப்
பேரூர்பெருமானைப்புலியூர்ச்சிற்றம்பலத்தேபெற்றாமன்றே. (க௦)

திருச்சிற்றம்பலம்.

கோயிற்றிருப்பதிகம் - கக.

கனகசபை சுவாமி தேவி திருநாமங்கள் – சபாநாயகர், சிவகாமியம்மை.

திருமூலட்டானம் சுவாமி தேவி திருநாமங்கள் – திருமூலநாதர், உமையம்மை.

* பல்லவர்க்குத்திறை என்றும் பாடம். † உய்த்தாடி என்றும் பாடம். ‡ மீக்கொங்கில் என்றும் பாடம்.

Koviloor Digital Library

சுந்தரமூர்த்திநாயனார், கொங்கநாட்டிலே, விராட்புருடனுக்கு விந்துஸ்தானமாய், தக்ஷிணகைலாசம், பிப்பிலாரணியம், மேலைச்சிதம்பரம் என்பன முதலிய திருநாமங் களை யுடைத்தாய் விளங்கும் திருப்பேரூரை அடைந்து, அங்கே சிவபிரான், காத்தற்க டவுளாகிய விட்டுணுமுதலியோருக்கு ஆனந்ததாண்டவஞ் செய்துகாட்டிய வெள்ளிய ம்பலத்திலே, விராட்புருடனுக்கு இருதயஸ்தானமாய் விளங்கும் சிதம்பரத்தின்கண்ண தாகிய கனகசபையிலே, நடனஞ்செய்யும் திருக்கோலத்தைத் தமக்குக்காட்டக்கண்டு, வணங்கிப் பேரானந்தக்கடலின் மூழ்கி, மீண்டு சிதம்பரத்தை அடைந்து, சபாநாயகரை நமஸ்கரித்து, "மடித்தாடு மடிமைக்க ணன்றியே" என்னுந் திருப்பதிகம் பாடினார். தாம் சபாநாயகரைத் திருப்பேரூரிலே கண்டநிலைமையைச் சிறப்பித்து, அத்திருப்பதி கத்திலே "மீகொங்கி லணிகாஞ் சிவாய்ப்-பேரூர் பெருமானைப் புலியூர்ச்சிற் றம்பல த்தே பெற்றா மன்றே" என்று அருளிச்செய்தார்.

உ. திருவேட்களம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

அந்தமுமாதியுமாகியவண்ணலாரழலங்கையமர்ந்திலங்க
மந்தமுழவமியம்பமலைமகள்காணநின்றாடிச்
சந்தமிலங்குநகுதலைகங்கைதண்மதியம்மயலேததும்ப
வெந்தவெண்ணீறுமெய்பூசும்வேட்களநன்னகராரே. (க)

சடைதனைத்தாழ்தலுமேறமுடித்துச்சங்கவெண்டோடுசரிந்திலங்கப்
புடைதனிற்பாரிடஞ்சூழப்போதருமாறிவர்போல்வார்
உடைதனினால்விரற்கோவணவாடையுண்பதுமூரிடுபிச்சைவெள்ளை
விடைதனையூர்திநயந்தார்வேட்களநன்னகராரே. (உ)

பூதமும்பல்கணமும்புடைசூழப்பூமியும்விண்ணுமுடன்பொருந்தச்
சீதமும்வெம்மையுமாகிச்சீரொடுநின்றவெஞ்செல்வர்
ஓதமுங்கானலுஞ்சூழ்தருவேலையுள்ளங்கலந்திசையாலெழுந்த
வேதமும்வேள்வியுமோவாவேட்களநன்னகராரே. (ங)

அரைபுல்குமைந்தலைபாடலரவமமையவெண்கோவணத்தோடசைத்து
வரைபுல்குமார்பிலோராமைவாங்கிபணிந்தவர்தாம்*
திரைபுல்குதெண்கடறண்கழியோதந்தேனலங்கானலில்வண்டுபண்செய்ய
விரைபுல்குபைம்பொழில்சூழ்ந்தவேட்களநன்னகராரே. (ச)

பண்ணுறுவண்டறைகொன்றையலங்கல்பால்புரைநீறுவெண்ணூல்கிடந்த
பெண்ணுறுமார்பினர்பேணார்மும்மதிலெய்தபெருமான்
கண்ணுறுநெற்றிகலந்தவெண்டிங்கட்கண்ணியர்விண்ணவர்கைதொழுதேத்தும்
வெண்ணிறமால்விடையண்ணல்வேட்களநன்னகராரே. (ரு)

* அணிந்தவர்தாம் என்றும் பாடம்.

Koviloor Digital Library

கறிவளர்குன்றமெடுத்தவன்காதற்கண்கவரைங்கணையோனுடலம்
பொறிவளராரழலுண்ணப்பொங்கியபூதபுராணர்
மறிவளரங்கையர்மங்கையொர்பங்கர்மைஞ்ஞிறமானுரிதோ* லுடையாடை
வெறிவளர்கொன்றையந்தாரார்வேட்களநன்னகராரே. (சு)

மண்பொடிக்கொண்டெரித்தோர்சுடலைமாமலைவேந்தன்மகண்மகிழ
நுண்பொடிச்சேரநின்றாடிநொய்யனசெய்யலுகந்தார்
கண்பொடிவெண்டலையோடுகையேந்திக்காலனைக்காலாற்கடிந்துகந்தார்
வெண்பொடிச்சேர்திருமார்பர்வேட்களநன்னகராரே. (எ)

ஆழ்தருமால்கடனஞ்சினையுண்டாரமுதமமரர்க்கருளிச்
சூழ்தருபாம்பரையார்த்துச்சூலமோடொண்மழுவேந்தித்
தாழ்தருபுன்சடையொன்றினைவாங்கித்தண்மதியம்மயலேததும்ப
வீழ்தருகங்கைகரந்தார்வேட்களநன்னகாரே. (அ)

திருவொளிகாணியபேதுறுகின்றதிசைமுகனுந்திசைமேலளந்த
கருவரையேந்தியமாலுங்கைதொழநின்றதுமல்லால்
அருவரையொல்கவெடுத்தவரக்கனுடெழிற்றோள்களாழந்தழுந்த
வெருவுறவூன்றியபெம்மான்வேட்களநன்னகராரே. (கூ)

அத்தமண்டோய்துவராரமண்குண்டர்யாதுமல்லாவுரையேயுரைத்துப்
பொய்த்தவம்பேசுவதல்லாற்புறனுரையாதொன்றுங்கொள்ளேன்
முத்தனவெண்முறுவல்லுமையஞ்சமூரிவல்லானையினீருரிபோர்த்த
வித்தகர்†வேதமுதல்வர்வேட்களநன்னகராரே. (க0)

விண்ணியன்மாடம்விளங்கொளிவீதிவெண்கொடியெங்கும்விரிந்திலங்க
நண்ணியசீர்வளர்காழிநற்றமிழ்ஞானசம்பந்தன்
பெண்ணினல்லாளொருபாகமமர்ந்துபேணியவேட்களமேன்மொழிந்த
பண்ணியல்பாடல்வல்லார்கள்பழியொடுபாவமிலாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனர்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

நன்றுநாடொறுநம்வினைபோயறும்
என்றுமின்பந்தழைக்கவிருக்கலாஞ்
சென்றுநீர்திருவேட்களத்துள்ளுறை
துன்றுபொற்சடையானைத்தொழுமினே. (க)

கருப்புவெஞ்சிலைக்காமனைக்காய்ந்தவன்
பொருப்புவெஞ்சிலையாற்புரஞ்செற்றவன்
விருப்பன்மேவியவேட்களங்கைதொழு
திருப்பணுகிலெனக்கிடரில்லையே. (உ)

* உரித்தோல் என்றும் பாடம். † வித்தகவேதமுதல்வர் என்றும் பாடம்.

Koviloor Digital Library

வேட்களத்துறைவேதியனெம்மிறை
ஆக்க*ளேறுவரானஞ்சுமாடுவர்
பூக்கள்கொண்டவன்பொன்னடிபோற்றினாற்
காப்பர்நம்மைக்கறைமிடற்றண்ணலே. (௩)

அல்லலில்லைபருவினைதானில்லை
மல்குவெண்பிறைசூடுமெனாளனார்
செல்வனார்திருவேட்களங்கைதொழ
வல்லராகில்வழியதுகாண்மினே. (௪)

துன்பமில்லைத்துயரில்லையாமினி
நம்பனாகியநன்மணிகண்டனார்
என்பொனாருறைவேட்களநன்னகர்
இன்பன்சேவடியேத்தியிருப்பதே. (௫)

கட்டப்பட்டுக்கவலையில்வீழாதே
பொட்டவல்லுயிர்போவதன்முன்னநீர்
சிட்டனார்திருவேட்களங்கைதொழப்
பட்டவல்வினையாயினபாறுமே. (௬)

வட்டமென்முலையாளுமைபங்கனார்
எட்டுமொன்றுமிரண்டுமூன்றுமியினார்
சிட்டர்சேர்திருவேட்களங்கைதொழு
திட்டமாகியிருமடநெஞ்சமே. (௭)

நட்டமாடியநம்பனைநாடொறும்
இட்டத்தாலினிதாகநினைமினோ
வட்டவார்முலையாளுமைபங்கனார்
சிட்டனார்திருவேட்களந்தன்னையே. (௮)

வட்டமாமதின்மூன்றுடை†வல்லரண்
சுட்டகொள்கையராயினுஞ்சூழ்ந்தவர்
குட்டவல்வினைதீர்த்துக்குளிர்விக்கும்
சிட்டர்பொற்றிருவேட்களச்செல்வரே. (௯)

சேடனாருறையுஞ்செழுமாமலை
ஓடியாங்கெடுத்தான்முடிபத்திற
வாடவூன்றிமலரடிவாங்கிய
வேடனாருறைவேட்களஞ்சேர்மினே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருவேட்களத்திருப்பதிகம். - ௨.

ஆ திருப்பதிகம் - ௧௩.

சுவாமி தேவி திருநாமங்கள் - பாசுபதேசுரர், நல்லநாயகி.

* ஆக்கள் கள் அசை; தருமதேவதை விட்டுறு இந்திரன் மூவரும் இடபமாய்த்தாங்கினராகவின் பன்மைவிகுதியுமாம். † மூன்றுடன் என்றும் பாடம்.

Koviloor Digital Library

௩. திருநெல்வாயில்.*

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

புடையினர்புள்ளிகால்பொருந்திய
மடையினர்மணிநீர்நெல்வாயிலார்
நடையினல்விரற்கோவணந்நயந்
துடையினரெமதுச்சியாரே. (௧)

வாங்கினர்மதின்மேற்கணைவெள்ளந்
தாங்கினர்தலையாயதன்மையர்
நீங்குநீரநெல்வாயிலார்தொழ
ஓங்கினரெமதுச்சியாரே. (௨)

நிச்சலேத்துநெல்வாயிலார்தொழ
இச்சையாலுறைவாரெம்மீசனர்
கச்சையாவதோர்பாம்பினர்கவின்
இச்சையாரெமதுச்சியாரே. (௩)

மறையினர்மழுவாளினர்மல்கு
பிறையினர்பிறையோடிலங்கிய
நிறையினர†நெல்வாயிலார்தொழும்
இறைவனரெமதுச்சியாரே. (௪)

விருத்தனகிவெண்ணீறுபூசிய
கருத்தனர்கனலாட்டுகந்தவர்
நிருத்தனரநெல்வாயின்மேவிய
ஒருத்தனரெமதுச்சியாரே. (௫)

காரினர்கொன்றைக்கண்ணியார்மல்கு
பேரினர்பிறையோடிலங்கிய
நீரினரநெல்வாயிலார்தொழும்
ஏரினரெமதுச்சியாரே. (௬)

ஆதியாரந்தமாயினர்வினை
கோதியார்மதில்கூட்டழித்தவர்
நீதியாரநெல்வாயிலார்மறை
ஓதியாரெமதுச்சியாரே. (௭)

* திருநெல்வாயில்-சிவபுரி. † நிறையினர அகரம் சாரியை; இதுபோல்வனபி றவுமன்ன.

Koviloor Digital Library

பற்றினானரக்கன்கயிலையை
ஒற்றினொருகால்விரலுற
நெற்றியாரநெல்வாயிலார்தொழும்
பெற்றியாரெமதுச்சியாரே. (அ)

நாடினார்மணிவண்ணனான்முகன்
கூடினார்குறுகாதகொள்கையா
நீடினாரநெல்வாயிலார்தலை
ஓடினாரெமதுச்சியாரே. (கூ)

குண்டமண்டுவர்க்கூறைமூடர்சொற்
பண்டமாகவையாதபண்பினர்
விண்டயங்குநெல்வாயிலார்நஞ்சை
உண்டகண்டரெம்முச்சியாரே. (க0)

நெண்பயங்குநெல்வாயிலீசனைச்
சண்பைஞானசம்பந்தன்சொல்லிவை
பண்பயன்கொளப்பாடவல்லவர்
விண்பயன்கொளும்வேட்கையாளரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநெல்வாயிற்றிருப்பதிகம். - க.
ஆ திருப்பதிகம் - கச.

சுவாமி தேவி திருநாமங்கள் - உச்சிநாதர், கனகாம்பிகை.

ச. திருக்கழிப்பாலை.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

புனலாடியபுன்சடையாயரணம்
அனலாகவிழித்தவனேயழகார்
கனலாடலினாய்கழிப்பாலையுளாய்
உனவார்கழல்கைதொழுதுள்குதுமே. (க)

துணையாகவொர்தூவளமாதினையும்
இணையாகவுகந்தவனேயிறைவா
கணையாலெயிலெய்கழிப்பாலையுளாய்
இணையார்கழலேத்தவிடர்கெடுமே. (உ)

Koviloor Digital Library

நெடியாய்குறியாய்நிமிர்புன்சடையின்
முடியாய்சுடுவெண்பொடிமுற்றணிவாய்
கடியார்பொழில்சூழ்கழிப்பாலையுளாய்
அடியார்க்கடையாவவலம்மவையே. (௩)

எளியாயரியாய்நிலநீரொடுதீ
வளிகாயமெனவெளிமன்னியதூ
ஒளியாயுனையேதொழுதுன்னுமவர்க்
களியாய்கழிப்பாலையமர்ந்தவனே. (௪)

நடநண்ணியொர்நாகமசைத்தவனே
விடநண்ணியதூமிடறுவிகிர்தா
கடனன்னுகழிப்பதிகாவலனே
உடனண்ணிவணங்குவனுன்னடியே. (௫)

பிறையார்சடையாய்பெரியாய்பெரியம்
மறையார்தருவாய்மையினையுலகிற்
கறையார்பொழில்சூழ்கழிப்பாலையுளாய்
இறையார்கழலேத்தவிடர்கெடுமே. (௬)

முதிருஞ்சடையின்முடிமேல்விளங்குங்
கதிர்வெண்பிறையாய்கழிப்பாலையுளாய்
எதிர்கொண்மொழியால்இரந்தேத்துமவர்க்
கதிரும்வினையாயினவாசறுமே. (௭)

எரியார்கணையாலெயிலெய்தவனே
விரியார்தருவீழ்சடையாயிரவிற்
கரிகாடலினாய்கழிப்பாலையுளாய்
உரிதாகிவணங்குவனுன்னடியே. (௮)

நலநாரணனான்முகனண்ணலுறக்
கனலானவனேகழிப்பாலையுளாய்
உனவார்கழலேதொழுதுன்னுமவர்க்
கிலதாம்வினைதானெயிலெய்தவனே. (௯)

தவர்கொண்டதொழிற்சமண்வேடரொடுந்
துவர்கொண்டனநுண்டுகிலாடையரும்
அவர்கொண்டனவிட்டடிகளுறையும்
உவர்கொண்டகழிப்பதியுள்குதுமே. (௧௦)

கழியார்பதிகாவலனைப்புகலிப்
பழியாமறைஞானசம்பந்தனசொல்
வழிபாடிவைகொண்டடிவாழ்த்தவல்லார்
கெழியாரிமையோரொடுகேடிலரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

Koviloor Digital Library

பண் - கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

வெந்தகுங்கிலியப்புகைவிம்மவே
கந்தநின்றுலவுங்கழிப்பாலையார்
அந்தமும்மளவும்மறியாததோர்
சந்தமாலவர்மேவியசாந்தமே. (௧)

வானிலங்கவிளங்குமிளம்பிறை
தானலங்கலுகந்ததலைவனார் *
கானிலங்கவருங்கழிப்பாலையார்
மானலம்மடநோக்குடையாளொடே. (௨)

கொடிகொளேற்றினர்கூற்றையுதைத்தனர்
பொடிகொண்மார்பினிற்பூண்டதோராமையர்
கடிகொள்பூம்பொழில்சூழ்கழிப்பாலையுள்
அடிகள்செய்வனவார்க்கறிவொண்ணுமே. (௩)

பண்ணலம்படவண்டறைகொன்றையின்
தண்ணலங்கலுகந்ததலைவனார்
கண்ணலங்கவருங்கழிப்பாலையுள்
அண்ணலெங்கடவுள்ளவனல்லனே. (௪)

ஏரினாருலகத்திமையோரொடும்
பாரினாருடனேபரவப்படுங்
காரினார்பொழில்சூழ்கழிப்பாலையெம்
சீரினார்கழலேசிந்தைசெய்ம்மினே. (௫)

துள்ளுமான்மறியங்கையிலேந்தியூர்
கொள்வனாரிடுவெண்டலையிற்பலி
கள்வனாருறையுங்கழிப்பாலையை
உள்ளுவார்வினையாயினவோயுமே. (௬)

மண்ணினார்மலிசெல்வமும்வானமும்
எண்ணிநீரினிதேத்துமின்பாகமும்
பெண்ணினார்பிறைநெற்றியொடுற்றமுக்
கண்ணினாருறையுங்கழிப்பாலையே. (௭)

இலங்கைமன்னனையீரைந்திரட்டிதோள்
துலங்கவூன்றியதூமழுவாளினார்
கலங்கள்வந்துலவுங்கழிப்பாலையை
வலங்கொள்வார்வினையாயினமாயுமே. (௮)

ஆட்சியாலலரானொடுமாலுமாய்த்
தாட்சியாலறியாதுதளர்ந்தனர்
காட்சியாலறியான்† கழிப்பாலையை
மாட்சியாற்றொழுவார்வினைமாயுமே. (௯)

* தலையினார் என்றும் பாடம். † காட்சியாலரியான் என்றும் பாடம்.

Koviloor Digital Library

செய்யநுண்டுவராடையினுரொடு
மெய்யின்மாசுபிறக்கியவீறிலாக்
கையர்கேண்மையெனேகழிப்பாலையெம்
ஐயன்சேவடியேயடைந்துய்ம்மினே. (க0)

அந்தண்காழியருமறைஞானசம்
பந்தன்பாய்புனல்சூழ்கழிப்பாலையைச்
சிந்தையாற்சொன்னசெந்தமிழ்வல்லவர்
முந்திவானுலகாடன்முறைமையே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனர்.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

வனபவளவாய்திறந்துவானவர்க்குந்தானவனேயென்கின்றளாற்
சினபவளத்திண்டோண்மேற்சேர்ந்திலங்குவெண்ணீற்றனென்கின்றளால்
அனபவளமேகலையொடப்பாலைக்கப்பாலானென்கின்றளாற்
கனபவளஞ்சிந்துங்கழிப்பாலைச்சேர்வானைக்கண்டாள்கொல்லோ. (க)

வண்டுலவுகொன்றைவளர்புன்சடையானேயென்கின்றளால்
விண்டலர்ந்துநாறுவதோர்வெள்ளெருக்கநாண்மலருண்டென்கின்றளால்
உண்டயலேதோன்றுவதொருத்தரியப்பட்டுடையனென்கின்றளாற்
கண்டயலே*தோன்றுங்கழிப்பாலைச்சேர்வானைக்கண்டாள்கொல்லோ. (உ)

பிறந்திளையதிங்களெம்பெம்மான்முடிமேலதென்கின்றளால்
நிறங்கிளருங்குங்குமத்தின்மேனியவனிறமேயென்கின்றளால்
மறங்கிளர்வேற்கண்ணாண்மணிசேர்மிடற்றவனேயென்கின்றளாற்
கறங்கோதமல்குங்கழிப்பாலைச்சேர்வானைக்கண்டாள்கொல்லோ. (ங)

இரும்பார்ந்தசூலத்தனேந்தியோர்வெண்மழுவனென்கின்றளாற்
சுரும்பார்மலர்க்கொன்றைச்சுண்ணவெண்ணீற்றவனேயென்கின்றளாற்
பெரும்பாலனாகியோர்பிஞ்ஞகவேடத்தனென்கின்றளாற்
கரும்பானல்பூக்குங்கழிப்பாலைச்சேர்வானைக்கண்டாள்கொல்லோ. (ச)

பழியிலான்புகழுடையன்பானீற்றனானேற்றனென்கின்றளால்
விழியுலாம்பெருந்தடங்கண்ணிரண்டல்லமூன்றுளவேயென்கின்றளாற்
சுழியுலாம்வருகங்கைதோய்ந்தசடையவனேயென்கின்றளாற்
கழியுலாஞ்சூழ்ந்தகழிப்பாலைச்சேர்வானைக்கண்டாள்கொல்லோ. (ரு)

* கண்டலயலே என்றும் பாடம்.

Koviloor Digital Library

பண்ணார்ந்தவீணைபயின்றவிரலவனேயென்கின்றாளால்
எண்ணார்புரமெரித்தவெந்தைபெருமானேயென்கின்றாளாற்
பண்ணார்முழவதிரப்பாடலோடாடலனேயென்கின்றாளாற்
கண்ணார்பூஞ்சோலைக்கழிப்பாலைச்சேர்வானைக்கண்டாள்கொல்லோ. (சு)

முதிருஞ்சடைமுடிமேன்மூழ்குமிளநாகமென்கின்றாளால்
அதுகண்டதனருகேதோன்றுமிளமதியமென்கின்றாளாற்
சதுர்*வெண்பளிக்குக்குழைகாதின்மின்னிடுமேயென்கின்றாளாற்
கதிர்முத்தஞ்சிந்துங்கழிப்பாலைச்சேர்வானைக்கண்டாள்கொல்லோ. (எ)

ஓரோதமோதியுலகம்பலிதிரிவானென்கின்றாளால்
நீரோதமேறநிமிர்புன்சடையானேயென்கின்றாளாற்
பாரோதமேனிப்பவளமவனிறமேயென்கின்றாளாற்
காரோதமல்குங்கழிப்பாலைச்சேர்வானைக்கண்டாள்கொல்லோ. (அ)

வானுலர்ந்திங்கள்வளர்புன்சடையானேயென்கின்றாளால்
ஊனுலாம்வெண்டலைகொண்டூர்பலிதிரிவானென்கின்றாளாற்
தேனுலாங்கொன்றை†திளைக்குந்திருமார்பனென்கின்றாளாற்
கானுலாஞ்சூழ்ந்தகழிப்பாலைச்சேர்வானைக்கண்டாள்கொல்லோ. (கூ)

அடர்ப்பரியவிராவணனையருவரைக்கீழடர்த்தவனேயென்கின்றாளாற்
சுடர்ப்பெரியதிருமேனிச்சுண்ணவெண்ணீற்றவனேயென்கின்றாளால்
மடற்பெரியவாலின்கீழறநால்வர்க்கன்றுரைத்தானென்கின்றாளாற்
கடற்கருவிசூழ்ந்தகழிப்பாலைச்சேர்வானைக்கண்டாள்கொல்லோ. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

வண்ணமும்வடிவுஞ்சென்றுகண்டிலள்
எண்ணிநாமங்களோத்திநிறைந்திலள்
கண்ணுலாம்பொழில்சூழ்கழிப்பாலையெம்
அண்ணலேயறிவானிவடன்மையே. (க)

மருந்துவானவருய்யநஞ்சுண்டுகந்
திருந்தவன்கழிப்பாலையுளெம்பிரான்
றிருந்துசேவடிசிந்தையுள்வைத்திவள்
பரிந்துரைக்கிலுமென்சொற்பழிக்குமே. (உ)

மழலைதான்வரச்சொற்றெரிகின்றிலள்
குழலினேர்மொழிகூறியகேண்மினோ
அழகனேகழிப்பாலையெம்மண்ணலே
இகழ்வதோவெனையேன்றுகொளென்னுமே. (ஙூ)

* சதிர் என்றும் பாடம். † தேனுலாங்கோதை என்றும் பாடம்.

Koviloor Digital Library

செய்யமேனிவெண்ணீறணிவான்றனை
மையலாகிமதிக்கிலாரையுங்
கைகொள்வெண்மழுவன்கழிப்பாலையெம்
ஐயனேயறிவானிவடன்மையே. (௪)

கருத்தனைக்கழிப்பாலையுண்மேவிய
ஒருத்தனையுமையாளொருபங்கனை
அருத்தியாற்சென்றுகண்டிடவேண்டுமென்
றொருத்தியாருளமூசலதாடுமே. (௫)

கங்கையைச்சடைவைத்துமலைமகள்
நங்கையையுடனேவைத்தநாதனார்
திங்கள்சூடித்திருக்கழிப்பாலையான்
இங்குவந்திடுமென்றிறுமாக்குமே. (௬)

ஐயனேயழகேயனலேந்திய
கையனேகறைசேர்தருகண்டனே
மையுலாம்பொழில்சூழ்கழிப்பாலையெம்
ஐயனேவிதியேயருளென்னுமே. (௭)

பத்தர்கட்கமுதாயபரத்தினை
முத்தனைமுடிவொன்றிலாமூர்த்தியை
அத்தனையணியார்கழிப்பாலையெம்
சித்தனைச்சென்றுசேருமாசெப்புமே. (௮)

பொன்செய்மாமுடிவாளரக்கன்றலை
அஞ்சுநான்குமொன்றும்மிறுத்தானவன்
என்செயான்கழிப்பாலையுளெம்பிரான்
றுஞ்சும்போதுந்துணையெனலாகுமே. * (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

நங்கையைப்பாகம்வைத்தார்ஞானத்தை†நவிலவைத்தார்
அங்கையிலனலும்வைத்தாரானையினுரிவைவைத்தார்
தங்கையின்யாழும்வைத்தார்தாமரைமலரும்வைத்தார்
கங்கையைச்சடையுள்வைத்தார்கழிப்பாலைச்சேர்ப்பனாரே. (௧)

விண்ணினைவிரும்பவைத்தார்வேள்வியைவேட்கவைத்தார்
பண்ணினைப்பாடவைத்தார்பத்தர்கள்பயிலவைத்தார்
மண்ணினைத்தாவநீண்டமாலினுக்கருளும்வைத்தார்
கண்ணினைநெற்றிவைத்தார்கழிப்பாலைச்சேர்ப்பனாரே. (௨)

* இத்திருப்பதிகத்தில் ஒன்பதாஞ்செய்யுள் இறந்துபோயிற்று. † கானத்தைஎன்றும் பாடம்.

Koviloor Digital Library

வாமனைவணங்கவைத்தார்வாயினைவாழ்த்தவைத்தார்
சோமனைச்சடைமேல்வைத்தார்சோதியுட்சோதிவைத்தார்
ஆமனைப்பாடவைத்தாரன்பெனும்பாசம்வைத்தார்
காமனைக்காய்ந்தகண்ணார்கழிப்பாலைச்சேர்ப்பனாரே. (௩)

அரியனவங்கம்வேதமந்தணர்க்கருளும்வைத்தார்
பெரியனபுரங்கண்மூன்றும்போழலுண்ணவைத்தார்
பரியதீவண்ணராகிப்பவளம்போனிறத்தைவைத்தார்
கரியதோர்கண்டம்வைத்தார்கழிப்பாலைச்சேர்ப்பனாரே. (௪)

கூரிருள்கிழியநின்றகொடுமழுக்கையில்வைத்தார்
பேரிருள்கழியமல்குபிறைபுனற்சடையில்*வைத்தார்
ஆரிருளண்டம்வைத்தாரறுவகைச்சமயம்வைத்தார்
காரிருள்கண்டம்வைத்தார்கழிப்பாலைச்சேர்ப்பனாரே. (௫)

உட்டங்குசிந்தைவைத்தாருள்குவார்க்குள்ளம்வைத்தார்
விட்டங்குவேள்விவைத்தார்வெந்துயர்தீரவைத்தார்
நட்டங்குநடமும்வைத்தார்ஞானமுநாவில்†வைத்தார்
கட்டங்கந்தோண்மேல்வைத்தார்கழிப்பாலைச்சேர்ப்பனாரே. (௬)

ஊனப்பேரொழியவைத்தாரோதியேயுணரவைத்தார்
ஞானப்பேர்நவிலவைத்தார்ஞானமுநடுவும்வைத்தார்
வானப்பேராறுவைத்தார்வைகுந்தற்காழிவைத்தார்
கானப்பேர்காதல்வைத்தார்கழிப்பாலைச்சேர்ப்பனாரே. (௭)

கொங்கினுமரும்புவைத்தார்கூற்றங்கள்கெடுக்கவைத்தார்
சங்கினுண்முத்தும்‡வைத்தார்சாம்பரும்பூசவைத்தார்
அங்கமும்வேதம்வைத்தாராலமுமுண்டுவைத்தார்
கங்குலும்பகலும்வைத்தார்கழிப்பாலைச்சேர்ப்பனாரே. (௮)

சதுர்முகன்றானுமாலுந்தம்மிலேயிகலக்கண்டு
வெதிர்முகமின்றிநின்றவெரியுருவதனைவைத்தார்
பிதிர்முகன்காலன்றன்னைக்காறனிற்பிதிரவைத்தார்
கதிர்முகஞ்சடையில்வைத்தார்கழிப்பாலைச்சேர்ப்பனாரே. (௯)

மாலினாணங்கையஞ்சமதிலிலங்கைக்குமன்னன்
வேலினன்வெகுண்டெடுக்கக்காண்டலும்வேதநாவன்
நூலினானோக்கிநக்குநொடிப்பதோரளவில்வீழக்
காலினாலூன்றியிட்டார்கழிப்பாலைச்சேர்ப்பனாரே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

* சடையுள் என்றும் பாடம். † நானமுநாவில என்றும் ஞாலமுநாவில என்றும் பாடம். ‡ முத்தம் என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

நெய்தற்குருகுதன்பிள்ளையென்றெண்ணிநெருங்கிச்சென்று
கைதைமடற்புல்குதென்கழிப்பாலையதனுறைவாய்
பைதற்பிறையொடுபாம்புடன்வைத்தபரிசறியோம்
எய்தப்பெறினிரங்காதுகண்டாய்நம்மிறையவனே. (க)

பருமாமணியும்பவளமுத்தும்பரந்துந்திவரை
பொருமால்கரைமேற்றிரைகொணர்ந்தெற்றப்பொலிந்திலங்குங்
கருமாமிடறுடைக்கண்டனெம்மான்கழிப்பாலையெந்தை
பெருமானவனென்னையாளுடையானிப்பெருநிலத்தே. (உ)

நாட்பட்டிருந்தின்பமெய்தலுற்றிங்குநமன்றமராற்
கோட்பட்டொழிவதன்முந்துறவேகுளிரார்தடத்துத்
தாட்பட்டதாமரைப்பொய்கையந்தண்கழிப்பாலையண்ணற்
காட்பட்டொழிந்தமன்றேவல்லமாயிவ்வகலிடத்தே. * (௩)

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

ஊனுடுத்தியொன்பதுவாசல்வைத்து
வொள்ளெலும்புதூணுவரோமமேய்ந்து
தாமெடுத்தகூரைதவிரப்போவார்
தயக்கம்பலபடைத்தார்தாமரையினர்
கானெடுத்துமாமயில்களாலுஞ்சோலைக்
கழிப்பாலைமேயகபாலப்பனர்
வானிடத்தையூடறுத்துவல்லைச்செல்லும்
வழிவைத்தார்க்கவ்வழியேபோதுநாமே. (க)

முறையார்ந்தமும்மதிலும்பொடியாச்செற்று
முன்னுமாய்ப்பின்னுமாய்முக்கணெந்தை
பிறையார்ந்தசடைமுடிமேற்பாம்புகங்கை
பிணக்கந்தீர்த்துடன்வைத்தார்பெரியநஞ்சுக்
கறையார்ந்தமிடற்றடங்கக்கண்டவெந்தை
கழிப்பாலைமேயகபாலப்பனர்
மறையார்ந்தவாய்மொழியான்மாயயாக்கை
வழிவைத்தார்க்கவ்வழியேபோதுநாமே. (உ)

நெளிவுண்டாக்கருதாதேநிமலன்றன்னை
நினைமின்கணித்தலுநேரிழையாளாய
ஒளிவண்டார்கருங்குழலியுமையாடன்னை
யொருபாகத்தமர்ந்தடியாருள்கியேத்தக்
களிவண்டார்கரும்பொழில்சூழ்கண்டல்வேலிக்
கழிப்பாலைமேயகபாலப்பனர்
வளியுண்டார்† மாயக்குரம்பைநீங்க
வழிவைத்தார்க்கவ்வழியேபோதுநாமே. (௩)

* இத்திருப்பதிகத்தில் ஏனைச்செய்யுள்கள் இறந்தன. †வளிவண்டார் என்றும் பாடம்.

Koyiloor Digital Library

பொடிநாறுமேனியர்பூதிப்பையர்
புலித்தோலர்பொங்கரவர்பூணநூலர்
அடிநாறுகமலத்தாராராதி
யானஞ்சுமாடுமாதிரையனூர்தாங்
கடிநாறுபூஞ்சோலைகமழ்ந்துநாறுங்
கழிப்பாலைமேயகபாலப்பனூர்
மடிநாறுமேனியிம்மாயநீங்க
வழிவைத்தார்க்கவ்வழியேபோதுநாமே. (ச)

விண்ணானுவிண்ணவர்கள்விரும்பிவந்து
வேதத்தாய்கீதத்தாய்விரவியெங்கும்
எண்ணானுவெழுத்தானுக்கடலேழான
யிறையானுவெம்மிறையேயென்றுநிற்குங்
கண்ணானுக்காரானுப்பாருமானுக்
கழிப்பாலையுள்ளுறையுங்கபாலப்பனூர்*
மண்ணானுப்†மாயக்குரம்பைநீங்க
வழிவைத்தார்க்கவ்வழியேபோதுநாமே. (ரு)

விண்ணப்பவிச்சாதரர்களேத்த
விரிகதிரானெரிசுடரான்விண்ணுமாகிப்
பண்ணப்பன்பத்தர்மனத்துளேயும்
பசுபதிபாசுபதன்றேசமூர்த்தி
கண்ணப்பன்கண்ணப்பக்கண்டுகந்தார்
கழிப்பாலைமேயகபாலப்பனூர்
வண்ணப்பிணிமாயயாக்கைநீங்க
வழிவைத்தார்க்கவ்வழியேபோதுநாமே. (சு)

பிணம்புல்குபிறற்குரம்பைமெய்யாப்
பேதப்படுகின்றபேதைமீர்காள்
நிணம்புல்குசூலத்தர்நீலகண்ட
ரெண்டோளரெண்ணிறைந்தகுணத்தினாலே
கணம்புல்லன்கருத்துகந்தார்காஞ்சியுள்ளார்
கழிப்பாலைமேயகபாலப்பனூர்
மணம்புல்குமாயக்குரம்பைநீங்க
வழிவைத்தார்க்கவ்வழியேபோதுநாமே. (எ)

இயல்பாயவீசனையெந்தைதந்தை
யென்சிந்தைமேவியுறைகின்றானை
முயல்வானைமூர்த்தியைத்தீர்த்தமான
தியம்பகன்றிரிசூலத்தன்னகையன்
கயல்பாயுங்கண்டல்சூழ்வுண்டவேலிக்
கழிப்பாலைமேயகபாலப்பனூர்
மயலாயமாயக்குரம்பைநீங்க
வழிவைத்தார்க்கவ்வழியேபோதுநாமே. (அ)

* கமலப்பாதர் என்றும் பாடம். † மண்ணாய என்றும் பாடம்.

Koviloor Digital Library

செற்றதோர்மனமொழிந்துசிந்தைசெய்து
சிவமூர்த்தியென்றெழுவார்சிந்தையுள்ளால்
உற்றதோர்நோய்களைந்திவ்வுலகமெல்லாங்
காட்டுவானுத்தமன்றானேதாதெல்லாங்
கற்றதோர்நூலினன்களிறுசெற்றான்
கழிப்பாலைமேயகபாலப்பனார்
மற்றிதோர்மாயக்குரம்பைநீங்க
வழிவைத்தார்க்கவ்வழியேபோதுநாமே. (௯)

பொருதலங்கனீண்முடியான்போரரக்கன்*
புட்பகந்தான்பொருப்பின்மீதோடாதாக
இருநிலங்கணடுக்கெய்தவெடுத்திடுதலு
மேந்திழையாடான்வெருவவிறைவனோக்கிக்
காதலங்கள்கதிர்முடியாறஞ்சினோடு
கால்விரலாலூன்றுகழிப்பாலையார்
வருதலங்கமாயக்குரம்பைநீங்க
வழிவைத்தார்க்கவ்வழியேபோதுநாமே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

செடியேன்றீவினையிற்றடுமாறக்கண்டாலும்
அடியானுவவெனுதொழிதறகவாமே
முடிமேன்மாமதியும்மரவும்முடன்றுயிலும்
வடிவேதாமுடையார்மகிழுங்கழிப்பாலையதே. (௧)

எங்கேனும்மிருந்துன்னடியேனுனைநினைந்தால்
அங்கேவந்தென்னொடுமுடனாகிநின்றருளி
இங்கேயென்†வினையையறுத்திட்டெனையாளுங்
கங்காநாயகனேகழிப்பாலைமேயானே. (௨)

ஒறுத்தாய்நின்னருளில்லடியேன்பிழைத்தனகள்
பொறுத்தாயெத்தனையுந்நாயேனைப்பொருட்படுத்துச்
செறுத்தாய்வேலைவிடமறியாமலுண்டுகண்டங்
கறுத்தாய்தண்கழனிக்கழிப்பாலைமேயானே. (௩)

சுரும்பார்விண்டமலரவைதூவித்தூங்குகண்ணீர்
அரும்பாநிற்குமனத்தடியாரொடுமன்புசெய்வன்
விரும்பேனுன்னையல்லாலொருதெய்வமென்மனத்தாற்
கரும்பாருங்கழனிக்கழிப்பாலைமேயானே. (௪)

* அரக்கர்கோன் என்றும் பாடம். † இங்கேயென்வினையை என்றும் பாடம்.

Koviloor Digital Library

ஒழிப்பாயென்வினையையுகப்பாய்முனிந்தருளித்
தெழிப்பாய்மோதுவிப்பாய்விலைபாவணமுடையாய்
கழிப்பால்கண்டடங்கச்சுழியேந்துமாமறுகிற்
கழிப்பாலைமருவுங்கனலேந்துகையானே. (௫)

ஆர்த்தாயாடரவையரையார்புலியதன்மேற்
போர்த்தாயானையின்றோலுரிவைபுலாலுறக்
காத்தாய்தொண்டுசெய்வார்வினைகளவைபோகப்
பார்த்தானுக்கிடமாம்பழியில்கழிப்பாலையதே. (௬)

பருத்தாள்வன்பகட்டைப்படமாகமுன்பற்றியதள்
உரித்தாயானையின்றோலுலகந்தொழுமுத்தமனே
எரித்தாய்முப்புரமுமிமையோர்களிடர்கடியுங்
கருத்தாதண்கழனிக்கழிப்பாலைமேயானே. (௭)

படைத்தாய்ஞாலமெலாம்படர்புன்சடையெம்பரமா
உடைத்தாய்வேள்விதனையுமைபாலையோர்கூறுடையாய்
அடர்த்தாய்வல்லரக்கன்றலைபத்தொடுதோணெரியக்
கடற்சாருங்கழனிக்கழிப்பாலைமேயானே. (௮)

பொய்யாநாவதனாற்புகழ்வார்கண்மனத்தினுள்ளே
மெய்யேநின்றெரியும்விளக்கேயொத்ததேவர்பிரான்
செய்யானுங்கரியநிறத்தானுந்தெரிவரியான்
மையார்கண்ணிபொடுமகிழ்வான்கழிப்பாலையதே. (௯)

பழிசேரில்புகழான்பரமன்பரமேட்டி
கழிபார்செல்வமல்குங்கழிப்பாலைமேயானைத்
தொழுவானாவலர்கோனாரூரனுரைத்ததமிழ்
வழுவாமாலைவல்லார்வானோருலகாள்பவரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருக்கழிப்பாலைத்திருப்பதிகம் - ௮.

ஆ திருப்பதிகம் - ௨௨.

சுவாமி தேவி திருநாமங்கள் - பால்வண்ணநாதர், வேதநாயகி.

௫. திருநல்லூர்ப்பெருமணம்.*

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - அந்தாளிக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

கல்லூர்ப்பெருமணம்வேண்டாகழுமலம்
பல்லூர்ப்பெருமணம்பாட்டுமெய்யாய்த்தில
சொல்லூர்ப்பெருமணஞ்சூடலரேதொண்டர்
நல்லூர்ப்பெருமணமேயநம்பானே. (௧)

* திருநல்லூர்ப்பெருமணம்-ஆச்சாபுரம்.

Koviloor Digital Library

தரும்மணலோதஞ்சேர்தண்கடனித்திலம்
பருமணலாக்கொண்டுபாவைநல்லார்கள்
வருமணங்கூட்டிமணஞ்செயுநல்லூர்ப்
பெருமணத்தான்பெண்ணோர்பாகங்கொண்டானே. (௨)

அன்புறுசிந்தையராகியடியவர்
நன்புறுநல்லூர்ப்பெருமணமேவிநின்
றின்புறுமெந்தையிணையடியேத்துவார்
துன்புறுவாரல்லர்தொண்டுசெய்வாரே. (௩)

வல்லியந்தோலுடையார்ப்பதுபோர்ப்பது
கொல்லியல்வேழத்துரிவிரிகோவணம்
நல்லியலார்தொழுநல்லூர்ப்பெருமணம்
புல்கியவாழ்க்கையெம்புண்ணியனுர்க்கே. (௪)

ஏறுகந்தீரிடுகாட்டெரியாடிவெண்
ணீறுகந்தீர்நிரையார்விரிதேன்கொன்றை
நாறுகந்தீர்திருநல்லூர்ப்பெருமணம்
வேறுகந்தீருமைகூறுகந்தீரே. (௫)

சிட்டப்பட்டார்க்கெளியான்செங்கண்வேட்டுவப்
பட்டங்கட்டுஞ்சென்னியான்பதியாவது
நட்டக்கொட்டாட்டறுநல்லூர்ப்பெருமணத்
திட்டப்பட்டாலொத்திராலெம்பிரானிரே. (௬)

மேகத்தகண்டனெண்டோளன்வெண்ணீற்றுமை
பாகத்தன்பாய்புலித்தோலொடுபந்தித்த
நாகத்தனல்லூர்ப்பெருமணத்தானல்ல
போகத்தன்யோகத்தையேபுரிந்தானே. (௭)

தக்கிருந்தீரன்றுதாளாலரக்கனை
உக்கிருந்தொல்கவுயர்வரைக்கீழிட்டு
நக்கிருந்தீரின்றுநல்லூர்ப்பெருமணம்
புக்கிருந்தீரெமைப்போக்கருளீரே. (௮)

ஏலுந்தண்டாமரையானுமியல்புடை
மாலுந்தம்மான்பறிகின்றிலர்மாமறை
நாலுந்தம்பாட்டென்பர்நல்லூர்ப்பெருமணம்
போலுந்தங்கோயில்புரிசடையார்க்கே. (௯)

ஆதாமனேடுசாக்கியர்தாஞ்சொல்லும்
பேதைமைகேட்டுப்பிணக்குறுவீர்வம்மின்
நாதனைநல்லூர்ப்பெருமணமேவிய
வேதன்தாடொழவீடெளிதாமே. (௧௦)

Koviloor Digital Library

நறும்பொழிற்காழியுண்ஞானசம்பந்தன்
பெறும்பதநல்லூர்ப்பெருமணத்தானை
உறும்பொருளாற்சொன்னவொண்டமிழ்வல்லார்க்
கறும்பழிபாவமவலமிலரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருநல்லூர்ப்பெருமணத்திருப்பதிகம் - ௧.
ஆ திருப்பதிகம் - ௨௩.

சுவாமி தேவி திருநாமங்கள் - சிவலோகத்தியாகர், உமையம்மை.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனாருக்குத் திருக்கலியாணஞ் செய்தருளுதற்குரிய பருவம் வந்தபொழுது சிவபாதவிருதயரும் அவர் சுற்றத்தாரும் ஒருங்கு கூடி, பிள்ளையாரைநோக்கித் தேவரீர் வைதிகச்சடங்கைப் பிறருக்குக் காட்டும்பொருட்டு, ஓர் கன்னியை விவாகஞ் செய்தருளல் வேண்டும் என்று விண்ணப்பஞ்செய்யப் பிள்ளையார் வேதநெறி நிலைப்படும்பொருட்டு அதற்கு உடன்பட்டருளினர். உடனே தந்தையாரும், சுற்றத்தாரும் மனமகிழ்ந்து திருநல்லூர் நம்பாண்டார்நம்பி என்பவருடைய புத்திரியே திருஞானசம்பந்தப்பிள்ளையாருக்கு மனைவியாதற்குத் தகுதியுடையள் என்று எண்ணி விவாகம்பேசினர். நம்பாண்டார்நம்பியும் அதற்கு உடன்பட்டனர். பின்பு திருநல்லூரிலே நம்பாண்டார்நம்பி கிருகத்தில் விவாகம் நடக்கும்போது பிள்ளையார் திருமங்கலியத்தைச்சாத்தி, பொரியை அக்கினியில் இட்டு,அக்கினியாவார் சிவபிரானே எனக்கருதி வேதவிதிப்படி வளர்க்கப்பட்ட அக்கினியை வலஞ்செய்து, தமது திருமணத்திற்கு வந்திருந்த யாவரும் சூழும்படி மனைவியாரோடு திருப்பெருமணம் என்னும் சிவாலயத்திற் பிரவேசித்து, தம்முடைய திருமணத்தைத் தரிசித்தவர்களுடைய பாசத்தை நீக்கத் திருவுளங்கொண்டு, பரம்பொருளே! தேவரீருடைய திருவடிகளை அடையும் பதம் இது என்று "கல்லூர்ப் பெருமணம்" என்னுந் திருப்பதிகத்தைப் பாடியருளலும், அப்பொழுது கருணாநிதியாகிய சிவபெருமான் சுத்த சோதிவடிவாய்த்தோன்றுதலும் அச்சோதியுள் யாவரையுமுன்னர்ச் செலுத்திவிட்டுப் பின்னர்த் தாம் மனைவியாரோடு புகுந்து சாயுச்சியம் அடைந்தார்.

௬. திருமயேந்திரப்பள்ளி.*

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

திரைதருபவளமுஞ்சீர்திகழ்வயிரமுங்
கரைதருமகிலொடுகனவளைபுகுதரும்
வரைவிலாவெழில்வளர்மயேந்திரப்பள்ளியுள்
அரவரையழகனையடியிணைபணிமினே. (௧)

* திருமயேந்திரப்பள்ளி - கோயிலடிப்பாளையம்.

Koviloor Digital Library

கொண்டல்சேர்கோபுரங்கோலமார்மாளிகை
கண்டலுங்கைதையுங்கமலமார்வாவியும்
வண்டுலாம்பொழிலணிமயேந்திரப்பள்ளியிற்
செண்டுசேர்விடையினான்றிருந்தடிபணிமினே. (௨)

கோங்கிளவேங்கையுங்கொழுமலர்ப்புன்னையுந்
தாங்குதேன்கொன்றையுந்தகுமலர்க்குரவமு
மாங்கரும்பும்வயன்மயேந்திரப்பள்ளியுள்
ஆங்கிருந்தவன்கழலடியிணைபணிமினே. (௩)

வங்கமார்சேணுயர்வருகுறியான்மிகு
சங்கமாரொலியகிறருபுகைகமழ்தரு
மங்கையோர்பங்கினன்மயேந்திரப்பள்ளியுள்
எங்கணாயகன்றனதிணையடிபணிமினே. (௪)

நித்திலத்தொகைபலநிரைதருமலரெனச்
சித்திரப்புணரிசேர்த்திடத்திகழ்ந்திருந்தவன்
மைத்திகழ்கண்டனன்மயேந்திரப்பள்ளியுட்
கைத்தலமழுவனைக்கண்டடிபணிமினே. (௫)

சந்திரன்கதிரவன்றகுபுகழயனொடும்
இந்திரன்வழிபடவிருந்தவெம்மிறையவன்
மந்திரமறைவளர்மயேந்திரப்பள்ளியுள்
அந்தமிலழகனையடிபணிந்துய்ம்மினே. (௬)

சடைமுடிமுனிவர்கள்சமைவொடும்வழிபட
நடநவில்புரிவினனறவணிமலரொடு
படர்சடைமதியினன்மயேந்திரப்பள்ளியுள்
அடல்விடையுடையவனடிபணிந்துய்ம்மினே. (௭)

சிரமொருபதுமுடைச்செருவலியரக்கனைக்
கரமிருபதுமிறக்கனவரையடர்த்தவன்
மரவமர்பூம்பொழின்மயேந்திரப்பள்ளியுள்
அரவமர்சடையனையடிபணிந்துய்ம்மினே. (௮)

நாகணைத்துயில்பவனலமிகுமலரவன்
ஆகணைந்தவர்கழலணையவும்பெறுகிலர்
மாகணைந்தலர்பொழின்மயேந்திரப்பள்ளியுள்
யோகணைந்தவன்கழலுணர்ந்திருந்துய்ம்மினே. (௯)

உடைதுறந்தவர்களுமுடைதுவருடையரும்
படுபழியுடையவர்பகர்வனவிடுமினீர்
மடைவளர்வயலணிமயேந்திரப்பள்ளியுள்
இடமுடையீசனையிணையடிபணிமினே. (௧௦)

Koviloor Digital Library

வம்புலாம்பொழிலணிமயேந்திரப்பள்ளியுள்
நம்பனார்கழலடிஞானசம்பந்தன்சொல்
நம்பராமிதுவெனநாவினவில்பவர்
உம்பரரெதிர்கொளவுயர்பதியணைவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருமயேந்திரப்பள்ளித்திருப்பதிகம் - க.
ஆ திருப்பதிகம் - உச.

சுவாமி தேவி திருநாமங்கள் - திருமேனியழகர், வடிவம்மை.

எ. தென்றிருமுல்லைவாயில்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

துளிமண்டியுண்டுநிறம்வந்தகண்டனடமன்னுதுன்னுசுடரோன்
ஒளிமண்டியும்பருலகங்கடந்தவுமைபங்கனெங்களரனூர்
களிமண்டுசோலைகழனிக்கலந்தகமலங்கடங்குமதுவிற்
றெளிமண்டியுண்டுசிறைவண்டுபாடுதிருமுல்லைவாயிலிதுவே. (க)

பருவத்தில்வந்துபயனுற்றபண்பனயனைப்படைத்தபரமன்
அரவத்தொடங்கமவைகட்டியெங்குமாவிக்க* நின்றவரனூர்
உருவத்தின்மிக்கவொளிர்சங்கொடிப்பிபவையோதமோதவெருவித்
தெருவத்தில்வந்துசெழுமுத்தலைக்கொடிருமுல்லைவாயிலிதுவே. (உ)

வாராதநாடன்வருவார்தம்வில்லினுருமெல்கிநாளுமுருகில்
ஆராதவின்பனகலாதவன்பனருண்மேவிநின்றவரனூர்
போராதசோதிபிரியாதமார்பினலர்மேவுபேதைபிரியாள்
தீராதகாதனெதிநேரநீடுதிருமுல்லைவாயிலிதுவே. (ங)

ஒன்றொன்றொடொன்றுமொருநான்கொடைந்துமிருமூன்றொடேழுமுடனாய்
அன்றின்றொடென்றுமறிவானவர்க்குமறியாமைநின்றவரனூர் [குழுமிக்
குன்றொன்றொடொன்றுகுலைபொன்றொடொன்றுகொடியொன்றொடொன்று
சென்றொன்றொடொன்றுசெறிவானிறைந்ததிருமுல்லைவாயிலிதுவே. (ச)

கொம்பன்னமின்னினிடையாளோர்கூறன்விடைநாளுமேறுகுழகன்
நம்பன்னெமன்பன்மறைநாவன்வானின்மதியேறுசென்னியரனூர்
அம்பன்னவொண்கணவராடரங்கினணிகோபுரங்களழகார்
செம்பொன்னசெவ்விதருமாடநீடுதிருமுல்லைவாயிலிதுவே. (ரு)

* அமர்விக்க என்றும் பாடம். † அன்றின்றொடொன்றும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

ஊனேறுவேலி னுருவேறுகண்ணி யொளியேறுகொண்ட வொருவன்
ஆனேறதேறி யழகேறுநீற னரவேறுபூணு மரனூர்
மானேறுகொல்லை மயிலேறிவந்து குயிலேறுசோலை மருவித்
தேனேறுமாவின் வளமேறியாடு திருமுல்லைவாயி லிதுவே. (௬)

நெஞ்சாரநீடு நினைவாரைமூடு வினைதேயநின்ற நிமலன்
அஞ்சாடுசென்னி யரவாடுகையன் அனலாடுமேனி யரனூர்
மஞ்சாருமாட மனைதோறுமைய முளதென்றுவைகி வரினுஞ்
செஞ்சாலிநெல்லின் வளர்சோறளிக்கொ டிருமுல்லைவாயி லிதுவே. (௭)

வரைவந்தெடுத்த வலிவாளரக்கன் முடிபத்துமிற்று நெரிய
உரைவந்தபொன்னி னுருவந்தமேனி யுமைபங்கனெங்க ளரனூர்
வரைவந்தசந்தொ டகிலுந்திவந்து மிளிர்கின்றபொன்னி வடபாற்
றிரைவந்துவந்து செறிதேறலாடு திருமுல்லைவாயி லிதுவே. (௮)

மேலோடிநீடு விளையாடன்மேவு விரிநூலன்வேத முதல்வன்
பாலாடுமேனி கரியானுமுன்னி யவர்தேடநின்ற பரனூர்
காலாடுநீல மலர்துன்றிநின்ற கதிரேறுசெந்நெல் வயலிற்
சேலோடுவாளை குதிகொள்ளமல்கு திருமுல்லைவாயி லிதுவே. (௯)

பனைமல்குதிண்கை மதமாவுரித்த பரமன்னநம்ப னடியே
நினைவன்னசிந்தை யடையாததேர ரமண்மாயநின்ற வரனூர்
வனைமல்குகைதை வகுளங்களெங்கு முகுளங்களெங்கு நெரியச்
சினைமல்கு* புன்னை திகழ்வாசநாறு திருமுல்லைவாயி லிதுவே. (௧௦)

அணிகொண்டகோதை†யவனன்று மேத்த வருள்செய்தவெந்தை மருவார்
திணிகொண்டமூன்று புரமெய்தவில்லி திருமுல்லைவாயி றன்மேற்
றணிகொண்டசிந்தை யவர்காழிஞான மிகுபந்தனொண்ட மிழ்களின்
அணிகொண்டபத்து மிசைபாடபத்தர் கல்வானமாள்வர் மிகவே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

தென்திருமுல்லைவாயிற்றிருப்பதிகம். - ௧.

ஆ திருப்பதிகம் - ௨௫.

சுவாமி தேவி திருநாமங்கள் - முல்லைவனநாதர், கோதையம்மை.

௮. திருக்கலிக்காமூர்.‡

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

மடல்வரையின் மதுவிம்முசோலை வயல்சூழ்ந்தழகாருங்
கடல்வரையோதங்¶ கலந்துமுத்தஞ் சொரியுங்கலிக்காமூர்
உடல்வரையி னுயிர்வாழ்க்கையாய வொருவன்கழலேத்த
இடர்தொடராவினை யானசிந்து மிறைவனருளாமே. (௧)

* மன்னு என்றும் பாடம். † தோகை என்றும் பாடம். ‡ திருக்கலிக்காமூர் - அன்னப்பன்பேட்டை. ¶ கடல்வரையோடும் என்றும் பாடம்.

மைவரைபோற்றிரையோடுகூடிப்புடையேமலிந்தோதங்
கைவரையால்வளர்சங்கமெங்குமிகுக்குங்கலிக்காமூர்
மெய்வரையான்மகள்பாகன்றன்னைவிரும்பவுடல்வாழும்
ஐவரையாசறுத்தாளுமென்பர்துவுஞ்சாதமே. (௨)

தூவியநீர்மலரேந்திவையத்தவர்கடொழுதேத்தக்
காவியினேர்விழிமாதரென்றுங்கவினார்கலிக்காமூர்
மேவியவீசனையெம்பிரானைவிரும்பிவழிபட்டால்
ஆவியுணீங்கலனாதிமூர்த்தியமரர்பெருமானே. (௩)

குன்றுகள்போற்றிரையுந்தியங்கண்மணியார்தரமேதி
கன்றுடன்புல்கியாயம்மனைசூழ்கவினார்கலிக்காமூர்
என்றுணரூழியும்வாழுமெந்தைபெருமானடியேத்தி
நின்றுணர்வாரைநினையகில்லார்நீசர்நமன்றமரே. (௪)

வானிடைவாண்மதிமாடந்தீண்டமருங்கேகடலோதங்
கானிடைநீழலிற்கண்டல்வாழுங்கழிசூழ்கலிக்காமூர்
ஆனிடையைந்துகந்தாடினானையமரர்தொழுதேத்த
நானடைவாம்வணமன்புதந்த* நலமேநினைவோமே. (௫)

துறைவளர்கேதகைமீதுவாசஞ்சூழ்வான்மலிதென்றல்
கறைவளருங்கடலோதமென்றுங்கலிக்கும்† கலிக்காமூர்
மறைவளரும்பொருளாயினானைமனத்தானினைந்தேத்த
நிறைவளரும்புகழெய்தும்வாதைநினையாவினைபோமே. (௬)

கோலநன்மேனியின்மாதர்மைந்தர்கொணர்மங்கலியத்திற்
காலமும்பொய்க்கினுந்தாம்வழுவாதியற்றுங்கலிக்காமூர்
ஞாலமுந்திவளிஞாயிறுயநம்பன்கழலேத்தி
ஓலமிடாதவரூழியென்றுமுணர்வைத்துறந்தாரே. (௭)

ஊரரவந்தலைநீண்முடியாயொலிநீருலகாண்டு
காரரவக்கடல்சூழவாழும்பதியாங்கலிக்காமூர்
தேரரவல்குலம்பேதையஞ்சத்திருந்துவரைபேர்த்தான்
ஆரரவம்படவைத்தபாதமுடையானிடமாமே. (௮)

அருவரையேந்தியமாலுமற்றையலர்மேலுறைவானும்
இருவருமஞ்சவெரியுருவாயெழுந்தான்கலிக்காமூர்
ஒருவரையான்மகள்பாகன்றன்னையுணர்வாற்றொழுதேத்தத்
திருமருவுஞ்சிதைவில்லைச்செம்மைத்தேசுண்டவர்பாலே. (௯)

மாசுபிறக்கியமேனியாருமருவுந்துவராடை
மீசுபிறக்கியமெய்யினாருமறியாரவர்தோற்றங்
காசினிநீர்த்திரண்மண்டியெங்கும்வளமார்கலிக்காமூர்
ஈசனையெந்தைபிரானையேத்திநினைவார்வினைபோமே. (௰)

* நானடைவாவணமன்புதந்த என்றும் பாடம். † கலக்கும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

ஆழியுணஞ்சமுதாரவுண்டன்றமரார்க்கமுதுண்ண
வூழிதொறும்முளராவளித்தானுலகத்துயர்கின்ற
காழியுண்ஞானசம்பந்தன்சொன்னதமிழாற்கலிக்காமூர்
வாழியெம்மானைவணங்கியேத்தமருவாபிணிதானே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருக்கலிக்காமூர்த்திருப்பதிகம் - ௧.
ஆ திருப்பதிகம் - ௨௯.

சுவாமி தேவி திருநாமங்கள் - சுந்தரேசர், அழகம்மை.

௩௦. திருச்சாய்க்காடு.*

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

நித்தலுங்நியமஞ்செய்துநீர்மலர்தூவிச்
சித்தமொன்றவல்லார்க்கருளுஞ்சிவன்கோயில்
மத்தயானையின்கோடும்வண்பீலியும்வாரித்
தத்துநீர்ப்பொன்னிசாகரமேவுசாய்க்காடே. (௧)

பண்டலைக்கொண்டுபூதங்கள்பாடநின்றாடும்
வெண்டலைக்கருங்காடுறைவேதியன்கோயில்
கொண்டலைத்திகழ்பேரிமுழங்கக்குலாவித்
தண்டலைத்தடமாமயிலாடுசாய்க்காடே. (௨)

நாறுகூவிளநாகிளவெண்மதியத்தோ
டாறுசூடுமமார்பிரானுறைகோயில்
ஊறுதேங்கனிமாங்கனியோங்கியசோலைத்
தாறுதண்கதலிப்புதன்மேவுசாய்க்காடே. (௩)

வரங்கள்வண்புகழ்மன்னியவெந்தைமருவார்
புரங்கண்மூன்றும்பொடிபடவெய்தவன்கோயில்
இரங்கலோசையுமீட்டியசரத்தொடு† மீண்டித்
தரங்கநீள்கழித்தண்கரைவைகுசாய்க்காடே. (௪)

ஏழைமார்கடைதோறுமிடுபலிக்கென்று
கூழைவாளரவாட்டும்பிரானுறைகோயில்
மாழையொண்கண்வளைக்கைநுளைச்சியர்வண்பூந்
தாழைவெண்மடற்கொய்துகொண்டாடுசாய்க்காடே. (௫)

* திருச்சாய்க்காடு - சாயாவனம். † மட்டியசரத்தொடும் என்றும் மீட்டிய சரக்கொடும் என்றும் மீட்டியர் சரக்கொடும் என்றும் பாடம். மீட்டியர் சாத்தொடும் என்று பாடங் கொள்வாருமுளர்.

Koviloor Digital Library

துங்கவானவர்சூழ்கடலுங்கடைபோதில்
அங்கொர்நீழலளித்தவெம்மானுறைகோயில்
வங்கமங்கொளிரிப்பியுமுத்துமணியுஞ்
சங்கும்வாரித்தடங்கடலுந்துசாய்க்காடே. (சு)

வேதநாவினர்வெண்பளிங்கின்குழைக்காதர்
ஓதநஞ்சணிகண்டருகந்துறைகோயில்
மாதர்வண்டுதன்காதல்வண்டாடியபுன்னைத்
தாதுகண்டுபொழின்மறைந்தூடுசாய்க்காடே. (எ)

இருக்குநீள்வரைபற்றியடர்த்தன்றெடுத்த
அரக்கனாகநெரித்தருள்செய்தவன்கோயில்
மருக்குலாவியமல்லிகைசண்பகம்வண்பூந்
தருக்குலாவியதண்பொழினீடுசாய்க்காடே. (அ)

மாலினோடயன்காண்டற்கரியவர்வாய்ந்த
வேலைபார்விடமுண்டவர்மேவியகோயில்
சேலினேர்விழியார்மயிலாலச்செருந்தி
காலையேகனகம்மலர்கின்றசாய்க்காடே. (கூ)

ஊத்தைவாய்ச்சமண்கையர்கள்சாக்கியர்க்கென்றும்
ஆத்தமாகவறிவரிதாயவன்கோயில்
வாய்த்தமாளிகைசூழ்தருவண்புகார்மாடே
பூத்தவாவிகள்சூழ்ந்துபொலிந்தசாய்க்காடே. (கo)

ஏனையோர்புகழ்ந்தேத்தியவெந்தைசாய்க்காட்டை
ஞானசம்பந்தன்காழியர்கோனவில்பத்தும்
ஊனமின்றியுரைசெயவல்லவர்தாம்போய்
வானநாடினிதாள்வரிம்மாநிலத்தோரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

மண்புகார்வான்புகுவர்மனமிளையார்பசியாலுங்
கண்புகார்பிணியறியார்கற்றாருங்கேட்டாரும்
விண்புகாரெனவேண்டாவெண்மாடநெடுவீதித்
தண்புகார்ச்சாய்க்காட்டெந்தலைவன்றாள்சார்ந்தாரே. (க)

போய்க்காடேமறைந்துறைதல்புரிந்தானும்பூம்புகார்ச்
சாய்க்காடேபதியாகவுடையானும்விடையானும்
வாய்க்காடுமுதுமரமேயிடமாகவந்தடைந்த
பேய்க்காடல்புரிந்தானும்பெரியோர்கள்பெருமானே. (உ)

Koviloor Digital Library

நீநாளுநன்னெஞ்சேநினைகண்டாயாரறிவார்
சாநாளும்வாழ்நாளுஞ்சாய்க்காட்டெம்பெருமாற்கே
பூநாளுந்தலைசுமப்பப்புகழ்நாமஞ்செவிகேட்ப
நாநாளுநவின்றேத்தப்பெறலாமேநல்வினையே. (௩)

கட்டலர்த்தமலர்தூவிக்கைதொழுமின்பொன்னியன்ற
தட்டலர்த்தபூஞ்செருந்திகோங்கமருந்தாழ்பொழில்வாய்
மொட்டலர்த்ததடந்தாழைமுருகுயிர்க்குங்காவிரிப்பூம்
பட்டினத்துச்சாய்க்காட்டெம்பரமேட்டிபாதமே. (௪)

கோங்கன்னகுவிமுலையாள்கொழும்பணைத்தோட்கொடியிடையைப்
பாங்கென்னவைத்துகந்தான்படர்சடைமேற்பான்மதியந்
தாங்கினான்பூம்புகார்ச்சாய்க்காட்டான்றாணிழற்கீழ்
ஓங்கினாரோங்கினாரெனவுரைக்குமுலகமே. (௫)

சாந்தாகநீறணிந்தான்சாய்க்காட்டான்காமனைமுன்
தீந்தாகமெரிகொளுவச்செற்றுகந்தான்றிருமுடிமேல்
ஒய்ந்தார* மதிசூடியொளிதிகழுமலைமகடோள்
தோய்ந்தாகம்பாகமாவுடையானும்விடையானே. (௬)

மங்குறோய்மணிமாடமதிதவழுநெடுவீதிச்
சங்கெலாங்கரைபொருதுதிரைபுலம்புஞ்சாய்க்காட்டான்
கொங்குலாவரிவண்டின்னிசைபாடுமலர்க்கொன்றைத்
தொங்கலானடியார்க்குச்சுவர்க்கங்கள்பொருளலவே. (௭)

தொடலரியதொருகணையாற்புரமூன்றுமெரியுண்ணப்
படவரவத்தெழிலாரம்பூண்டான்பண்டரக்கனையுந்
தடவரையாற்றடவரைத்தோளூன்றினான்சாய்க்காட்டை
இடவகையாவடைவோ†மென்றெண்ணுவார்க்கிடரிலையே. (௮)

வையநீரேற்றானுமலருறைபுநான்முகனும்
ஐயன்மாரிருவர்க்குமளப்பரிதாலவன்பெருமை
தையலார்பாட்டோவாச்சாய்க்காட்டெம்பெருமானைத் ‡
தெய்வமாப்பேணாதார்தெளிவுடைமைதேறோமே.¶ (௯)

குறங்காட்டுநால்விரலிற்கோவணத்துக்கோலோவிப்போய் §
அறங்காட்டுஞ்சமணருஞ்சாக்கியருமலர்தூற்றுந்
திறங்காட்டல்கேளாதேதெளிவுடையீர்சென்றடைமின்
புறங்காட்டிலாடலான்பூம்புகார்ச்சாய்க்காடே. (௧௦)

நொம்பைந்துபுடைத்தொல்குநூபுரஞ்சேர்மெல்லடியார்
அம்பந்தும்வரிக்கழலுமரவஞ்செய்பூங்காழிச்
சம்பந்தன்றமிழ்பகர்ந்தசாய்க்காட்டுப்பத்தினையும்
எம்பந்தமெனக்கருதியேத்துவார்க்கிடர்கெடுமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

* ஒஞ்சார என்றும் பாடம். † இடவகையாலடைவோ என்றும் பாடம். ‡ பெருமானே என்றும் பாடம். ¶ இது பத்தாஞ்செய்யுளாக இருத்தல்வேண்டும் போலும். § கோவணத்துக் குலாவிப்போய் என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருநாவுக்கரசுநாயனார்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

தோடுலாமலர்கடூவித்தொழுதெழுமார்க்கண்டேயன்
விடுநாளணுகிற்றென்றுமெய்கொள்வான்வந்தகாலன்
பாடுதான்செலலுமஞ்சிப்பாதமேசரணமென்னச்
சாடினார்காலன்மாளச்சாய்க்காடுமேவினாரே. (௧)

வடங்கெழுமலைமத்தாகவானவரசுரரோடு
கடைந்திடவெழுந்தநஞ்சங்கண்டுபஃறேவரஞ்சி
அடைந்துநுஞ்சரணமென்னவருள்பெரிதுடையராகித்
தடங்கடனஞ்சமுண்டார்சாய்க்காடுமேவினாரே. (௨)

அரணிலாவெளியநாவலருநிழலாகவீசன்
வரணியலாகித்தன்வாய்நூலினாற்பந்தர்செய்ய
முரணிலாச்சிலந்திதன்னைமுடியுடைமன்னனாக்கித்
தரணிதானாளவைத்தார்சாய்க்காடுமேவினாரே. (௩)

அரும்பெருஞ்சிலைக்கைவேடனாய்விறற்பார்த்தற்கன்று*
உரம்பெரிதுடைமைகாட்டியொள்ளமர்செய்துமீண்டே
வரம்பெரிதுடையனாக்கிவாளமர்முகத்தின்மன்னுஞ்
சரம்பொலிதூணியீந்தார்சாய்க்காடுமேவினாரே. (௪)

இந்திரன்பிரமனங்கிவெண்வகைவசுக்களோடு
மந்திரமறையதோதிவானவர்வணங்கிவாழ்த்தத்
தந்திரமறியாத்தக்கன்வேள்வியைத்தகர்த்தஞான்று
சந்திரற்கருள்செய்தாருஞ்சாய்க்காடுமேவினாரே. (௫)

ஆமலிபாலுநெய்யுமாட்டியர்ச்சனைகள்செய்து
பூமலிகொன்றைசூட்டப்பொறாததன்றாதைதாளைக்
கூர்மழுவொன்றாலோச்சக்குளிர்சடைக்கொன்றைமாலைத்†
தாமநற்சண்டிக்கீந்தார்சாய்க்காடுமேவினாரே. (௬)

மையறுமனத்தனாயபகீரதன்வரங்கள்வேண்ட
ஐயமிலமரரேத்தவாயிரமுகமதாகி
வையகநெளியப்பாய்வான்வந்திழிகங்கையென்னுந்
தையலைச்சடையிலேற்றார்சாய்க்காடுமேவினாரே. (௭)

குவப்பெருந்தடக்கைவேடன்கொடுஞ்சிலையிறைச்சிப்பாரந்
துவர்ப்பெருஞ்செருப்பானீக்கித்தூயவாய்க்கலசமாட்ட
உவப்பெருங்‡குருதிசோரவொருகணையிடந்தங்கப்பத்
தவப்பெருந்தேவுசெய்தார்சாய்க்காடுமேவினாரே. (௮)

* வேடனாய்விற்பார்த்தற்கன்று என்றும் பாடம். † கொன்றைமாலை - தாமெனத் தண்டிக்கீந்தார் என்றும் பாடம். ‡ அவப்பெரும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

நக்குலாமலர்பன்னூறுகொண்டுநன்ஞானத்தோடு
மிக்கபூசனைகள்செய்வான்மென்மலரொன்றுகாணு
தொக்குமென்மலர்க்கணென்றங்கொருகணையிடந்துமப்பச்
சக்கரங்கொடுப்பர்போலுஞ்சாய்க்காடுமேவினாரே. (௯)

புயங்களைஞ்ஞான்கும்பத்துமாயகொண்டரக்கனோடிச்
சிவன்றிருமலையைப்பேர்க்கத்திருமலர்க்குழலியஞ்ச
வியன்பெறவெய்திவீழவிரல்சிறிதூன்றிமீண்டே
சயம்பெறநாமமீந்தார்சாய்க்காடுமேவினாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

வானத்திளமதியும்பாம்புந்தன்னில்
வளர்சடைமேலாதரிப்பவைத்தார்போலுந்
தேனைத்திளைத்துண்டுவண்டுபாடுந்
தில்லைநடமாடுந்தேவர்போலும்
ஞானத்தினொண்சுடராய்நின்றார்போலு
நன்மையுந்தீமையுமானார்போலுந்
தேனைத்தடியார்க்கினியார்போலுந்
திருச்சாய்க்காட்டினிதுறையுஞ்செல்வர்தாமே. (௧)

விண்ணோர்பரவநஞ்சுண்டார்போலும்
வியன்றுருத்திவேள்விக்குடியார்போலும்
அண்ணாமலையுறையுமண்ணல்போலு
மதியரையமங்கையமர்ந்தார்போலும்
பண்ணார்களிவண்டுபாடியாடும்
பராய்த்துறையுண்மேயபரமர்போலுந்
திண்ணார்புகார்முத்தலைக்குந்தெண்ணீர்த்
திருச்சாய்க்காட்டினிதுறையுஞ்செல்வர்தாமே. (௨)

கானிரியவேழமுரித்தார்போலுங்
காவிரிப்பூம்பட்டினத்துள்ளார்போலும்
வானிரியவருபுரமூன்றெரித்தார்போலும்
வடகயிலைமலையதுதம்மிருக்கைபோலும்
ஊனிரியத்தலைகலனாவுடையார்போலு
முயர்தோணிபுரத்துறையுமொருவர்போலுந்
தேனிரியமீன்பாயுந்தெண்ணீர்ப்பொய்கைத்
திருச்சாய்க்காட்டினிதுறையுஞ்செல்வர்தாமே. (௩)

Koviloor Digital Library

ஊனுற்றவெண்டலைசேர்கையர்போலு
முழிபலகண்டிருந்தார்போலும்
மானுற்றகரதலமொன்றுடையார்போலு
மறைக்காட்டுக்கோடிமகிழ்ந்தார்போலுங்
கானுற்றவாடலமர்ந்தார்போலுங்
காமனையுங்கண்ணழலாற்காய்ந்தார்போலுந்
தேனுற்றசோலைதிகழ்ந்துதோன்றுந்
திருச்சாய்க்காட்டினிதுறையுஞ்செல்வர்தாமே. (௪)

கார்மல்குகொன்றையந்தாரார்போலுங்
காலனையுமோருதையாற்கண்டார்போலும்
பார்மல்கியேத்தப்படுவார்போலும்
பருப்பதத்தேபல்லூழிநின்றார்போலும்
ஊர்மல்குபிச்சைக்குழன்றார்போலு
மோத்தூரோருநாளுநீங்கார்போலுஞ்
சீர்மல்குபாடலுகந்தார்போலுந்
திருச்சாய்க்காட்டினிதுறையுஞ்செல்வர்தாமே. (௫)

மாவாய்ப்பிளந்துகந்தமாலுஞ்செய்ய
மலரவனுந்தாமேயாய்நின்றார்போலும்
மூவாதமேனிமுதல்வர்போலு
முதுகுன்றமூதூருடையார்போலுங்
கோவாயமுனிதன்மேல்வந்தகூற்றைக்
குரைகழலாலன்றுகுமைத்தார்போலுந்
தேவாதிதேவர்க்கரியார்போலுந்
திருச்சாய்க்காட்டினிதுறையுஞ்செல்வர்தாமே. (௬)

கடிவெளியோடோரைந்துமானார்போலுங்
காரோணத்தென்றுமிருப்பார்போலும்
இடிகுரல்வாய்ப்பூதப்படையார்போலு
மேகம்பமேவியிருந்தார்போலும்
படிபொருவில்லாப்படியார்போலும்
பாண்டிக்கொடுமுடியுந்தம்மூர்போலுஞ்
செடிபடுநோயடியாரைத்தீர்ப்பார்போலுந்
திருச்சாய்க்காட்டினிதுறையுஞ்செல்வர்தாமே. (௭)

விலையிலாவாரஞ்சேர்மார்பர்போலும்
வெண்ணீறுமெய்க்கணிந்தவிகிர்தர்போலும்
மலையினார்மங்கைமணாளர்போலு
மாற்பேறுகாப்பாய்மகிழ்ந்தார்போலுந்
தொலைவிலார் * புரமூன்றுந்தொலைத்தார் † போலுஞ்
சோற்றுத்துறைதுருத்தியுள்ளார்போலுஞ்
சிலையினார்செங்கணரவர்போலுந்
திருச்சாய்க்காட்டினிதுறையுஞ்செல்வர்தாமே. (௮)

* தலையிலார் என்றும் தலைவிலார் என்றும் பாடம். † தலைத்தார் என்றும் பாடம்.

Koviloor Digital Library

அல்லலடியார்க்கறுப்பார்போலு
மமருலகந்தம்மடைந்தார்க்காட்சிபோலும்
நல்லமுநல்லூருமேயார்போலு
நள்ளாறுநாளும்பிரியார்போலும்
முல்லைமுகைநகையாள்பாகர்போலு
முன்னமேதோன்றிமுளைத்தார்போலுந்
தில்லைநடமாடுந்தேவர்போலுந்
திருச்சாய்க்காட்டினிதுறையுஞ்செல்வர்தாமே. (கூ)

உறைப்புடையவிராவணன்பொன்மலையைக்கையா
லூக்கஞ்செய்தெடுத்தலுமேயுமையாளஞ்ச
நிறைப்பெருந்தோளிருபதும்பொன்முடிகள்பத்து
நிலஞ்சேரவிரல்வைத்தநிமலர்போலும்
பிறைப்பிளவுசடைக்கணிந்தபெம்மான்போலும்
பெண்ணுணுருவாகிநின்றார்போலுஞ்
சிறப்புடையவடியார்கட்கினியார்போலுந்
திருச்சாய்க்காட்டினிதுறையுஞ்செல்வர்தாமே. (கo)

திருச்சிற்றம்பலம்.

திருச்சாய்க்காட்டுத்திருப்பதிகம். - ச.

ஆ திருப்பதிகம் - நo.

சுவாமி தேவி திருநாமங்கள் - சாயாவனேசுரர், குயிலினுநன்மொழியம்மை.

காவிரிப்பூம்பட்டினத்துப்

ய. பல்லவனீச்சரம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

அடையார்தம்புரங்கண்மூன்றுமாரழலில்லமுந்த
விடையார்மேனியராய்ச்சிறும்வித்தகர்மேயவிடங்
கடையார்மாடநீடியெங்கும் * கங்குல்புறந்தடவப்
படையார்புரிசைப்பட்டினஞ்சேர்பல்லவனீச்சரமே. (க)

என்னுரெயில்கண்மூன்றுஞ்சிறுமெந்தைபிரானிமையோர்
கண்ணுயுலகங்காக்கநின்றகண்ணுதனண்ணுமிடம்
மண்ணுர்சோலைக்கோலவண்டுலாவகறுந்தேனருந்திப்
பண்ணுர்செய்யும்பட்டினத்துப்பல்லவனீச்சரமே. (உ)

* நீடியோங்கும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

மங்கையங்கோர்பாகமாகவாணிலவார்* சடைமேற்
கங்கையங்கேவாழவைத்தகள்வனிருந்தவிடம்
பொங்கயஞ்சேர்புணரியோதமீதுயர்பொய்கையின்மேற்
பங்கயஞ்சேர்பட்டினத்துப்பல்லவனீச்சரமே. (௩)

தாரார்கொன்றைபொன்றயங்கச்சாத்தியமார்பகலம்
நீரார்நீறுசாந்தம்வைத்தநின்மலன்மன்னுமிடம்
போரார்வேற்கண்மாதர்மைந்தர்புக்கிசைபாடலினாற்
பாரார்கின்றபட்டினத்துப்பல்லவனீச்சரமே. (௪)

மைசேர்கண்டரண்டவாணர்வானவருந்துதிப்ப
மெய்சேர்பொடியரடியா† ரேத்தமேவியிருந்தவிடங்
கைசேர்வளையார்விழைவினோடுகாதன்மையாற்கழலே
பைசேரரவாரல்குலார்சேர்பல்லவனீச்சரமே. (௫)

குழலினோசைவீணைமொந்தைகொட்டமுழவதிரக்
கழலினோசையார்க்கவாடுங்கடவுளிருந்தவிடஞ்
சுழியுளாரும்‡ கடலிலோதந்தெண்டிரைமொண்டெறியப்
பழியிலார்கள்பயில்புகாரிற்பல்லவனீச்சரமே. (௬)

வெந்தலாயவேந்தன்வேள்விவேரறச்சாடிவிண்ணோர்
வந்தெலாமுன்பேணநின்றமைந்தன்மகிழ்ந்தவிடம்
மந்தலாயமல்லிகையும்புன்னைவளர்குரவின்
பந்தலாரும்பட்டினத்துப்பல்லவனீச்சரமே. (௭)

தேரரக்கன்மால்வரையைத்தெற்றியெடுக்கவவன்
றாரரக்குந்திண்முடிகளூன்றியசங்கரனூர்
காரரக்குங்கடல்கிளர்ந்தகாலமெலாமுணரப்
பாரரக்கம்பயில்புகாரிற்பல்லவனீச்சரமே. (௮)

அங்கமாறும்வேதநான்குமோதுமயனெடுமால்
தங்கணாலுநேடநின்றசங்கரன்றங்குமிடம்
வங்கமாருமுத்தமிப்பிவார்கடலூடலைப்பப்
பங்கமில்லார்பயில்புகாரிற்பல்லவனீச்சரமே. (௯)

உண்டுடுக்கையின்றியேநின்றார்நகவேதிரிவார்
கண்டுடுக்கைமெய்யிற்போர்த்தார்கண்டறியாதவிடந்
தண்டுடுக்கைதாளந்தக்கைசாரநடம்பயில்வார்
பண்டிடுக்கண்டீரநல்கும்பல்லவனிச்சரமே. (௧௦)

* வானிலவார் என்றும் பாடம். † மெய்சேர் கொடிய ரடியார் என்றும், மெய்சேர் கொடியடியார் என்றும் பாடம். ‡ சுழியிலாரும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

பத்தரேத்தும்பட்டினத்துப்பல்லவனீச்சரத்தெம்
அத்தன்றன்னையணிகொள்காழிஞானசம்பந்தன்சொற்
சித்தஞ்சேரச்செப்புமாந்தர்தீவினைநோயிலராய்
ஒத்தமைந்தவும்பர்வானிலுயர்வினொடோங்குவரே. (கக)
திருச்சிற்றம்பலம்.

பண் - பழம்பஞ்சுரம் - ஈரடி.

திருச்சிற்றம்பலம்.

பரசுபாணியர்பாடல்வீணையர்பட்டினத்துறைபல்லவனீச்சரத்
தரசுபேணிநின்றாரிவர்தன்மையறிவாரார். (க)

பட்டநெற்றியர்நட்டமாடுவர்பட்டினத்துறைபல்லவனீச்சரத்
திட்டமாயிருப்பாரிவர்தன்மையறிவாரார். (உ)

பவளமேனியர்திகழுநீற்றினர்பட்டினத்துறைபல்லவனீச்சரத்
தழகராயிருப்பாரிவர்தன்மையறிவாரார். (ந)

பண்ணில்யாழினர்பயிலுமொந்தையர்பட்டினத்துறைபல்லவனீச்சரத்
தண்ணலாயிருப்பாரிவர்தன்மையறிவாரார். (ச)

பல்லிலோட்டினர்பலிகொண்டுண்பவர்பட்டினத்துறைபல்லவனீச்சரத்
தெல்லியாட்டுகந்தாரிவர்தன்மையறிவாரார். (ரு)

பச்சைமேனியர்பிச்சைகொள்பவர்பட்டினத்துறைபல்லவனீச்சரத்
திச்சையாயிருப்பாரிவர்தன்மையறிவாரார். (சா)

பைங்கணேற்றினர்திங்கள்சூடுவர்பட்டினத்துறைபல்லவனீச்சரத்
தெங்குமாயிருப்பாரிவர்தன்மையறிவாரார். (எ)

பாதங்கைதொழவேதமோதுவர்பட்டினத்துறைபல்லவனீச்சரத்
தாதியாயிருப்பாரிவர்தன்மையறிவாரார். (அ)

படிகொண்மேனியர்கடிகொள்கொன்றையர்பட்டினத்துறைபல்லவனீச்சரத்
தடிகளாயிருப்பாரிவர்தன்மையறிவாரார். (கூ)

பறைகொள்பாணியர்பிறைகொள்சென்னியர்பட்டினத்துறைபல்லவனீச்சரத்
திறைவராயிருப்பாரிவர்தன்மையறிவாரார். (க0)

வானமாள்வதற்கூனமொன்றிலைமாதர்பல்லவனீச்சரத்தானை
ஞானசம்பந்தனற்றமிழ்சொல்லவல்லவர்நல்லவரே. (கக)
திருச்சிற்றம்பலம்.

பல்லவனீச்சரத்திருப்பதிகம் - உ.
ஆ திருப்பதிகம் - நஉ.

சுவாமி தேவி திருநாமங்கள் - பல்லவனாதர், சௌந்தரநாயகி.

Koviloor Digital Library

கக. திருவெண்காடு.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர்.

பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

கண்காட்டுநுதலானுங்கனல்காட்டுங்கையானும்
பெண்காட்டுமுருவானும்பிறைகாட்டுஞ்சடையானும்
பண்காட்டுமிசையானும்பயிர்காட்டும்புயலானும்
வெண்காட்டிலுறைவானும்விடைகாட்டுங்கொடியானே. (க)

பேயடையாபிரிவெய்தும்பிள்ளையினோடுள்ளநினை
வாயினவேவரம்பெறுவரையுறவேண்டாவொன்றும்
வேயனதோளுமைபங்கன்வெண்காட்டுமுக்குளநீர்
தோய்வினையாரவர்தம்மைத்தோயாவாந்தீவினையே.* (உ)

மண்ணொடுநீரனல்காலோடாகாயமதியிரவி
எண்ணில்வருமியமானனிகபரமுமெண்டிசையும்
பெண்ணினொடாண்பெருமையொடுசிறுமையுமாம்பேராளன்
விண்ணவர்கோன்வழிபடவெண்காடிடமாவிரும்பினனே. (ங)

*திருப்பெண்ணாகடமென்னுந்திருப்பதியில்வாழ்ந்த வேளாளகுலதிலகராகிய அச்சுதர்களப்பாளர் என்பவர் நெடுங்காலம் புத்திரப்பேறின்மையால் வருந்தித் தமதாசிரியர் விதித்தபடி தமிழ்வேதமாகிய தேவாரத்தில், கயிறுசாத்தத் திருஞானசம்பந்தப்பிள்ளையார் திருவாய்மலர்ந்தருளிய "கண்காட்டு நுதலானும்" என்னுந் திருவெண்காட்டின் மேலதாகிய திருப்பதிகத்திலே, "பேயடையா" என்னுந் திருப்பாடல் உதயமாயிற்று. அதில், "வெண்காட்டு முக்குளநீர் தோய்வினையார் பிள்ளையினோடு உள்ளநினை வாயினவே வரம்பெறுவர் ஒன்றும் ஐயுறவேண்டா" என்னும் பொருளை ஆசிரியர் மிகமகிழ்ந்து கொண்டாடி, அச்சுதர்களப்பாளர்க்கு உரைத்தனர்.

உடனே அச்சுதர்களப்பாளர் ஆசிரியரிடத்தே விடைபெற்றுக்கொண்டு மனைவியாரோடு திருவெண்காட்டை அடைந்து, முக்குளத்திலே நாடோறும் விதிப்படி ஸ்நானம் பண்ணி, சிவதரிசனஞ் செய்துகொண்டு விரதநியமத்தோடு வழிபடுநாளிலே ஒருநாள், சிவபிரான் அவருக்குச் சொப்பனத்திலே தோன்றி, "உனக்குத் திருஞானசம்பந்தன் என்றே சொல்லும்படி தமிழ்நாடு உய்யும்வண்ணம், தேவாரத்தின் மெய்ப்பொருளை உள்ளடக்கிய சைவசித்தாந்த சாஸ்திரத்தை வெளிப்படுத்தி, சைவஸ்தாபனம் செய்யத்தக்க ஒரு புத்திரன் அவதரிப்பான்" என்று சொல்லி மறைந்தருளினார். அவ்வாறே அவருடைய மனைவியாரது அருமைத் திருவயிற்றிலே ஒரு சற்புத்திரர் திருவவதாரஞ்செய்தார். தந்தையார் அப்புத்திரருக்குச் சுவேதவனப்பெருமாள் என்னுந் திருப்பெயரைத்தரித்தனர்.

பின்பு சுவேதவனப்பெருமாள் திருவெண்ணெய் நல்லூரில் தம்முடைய நன்மாமனார் வீட்டில், இரண்டு பிராயத்திற்றானே மெய்யுணர்வின் முற்றுப்பேறுடையராய் எழுந்தருளியிருக்குநாளிலே, திருக்கைலாச பரம்பரைச் சந்தான குரவருள் ஒருவராகிய பரஞ்சோதி மகாமுனிவர் திருக்கைலாச மலையினின்று நீங்கி, திருவெண்ணெய் நல்லூரை அடைந்து, அவருக்குச் சிவஞானபோதத்தையுபதேசித்து மெய்கண்டதேவர் என்னுஞ் சிறப்புத்திருநாமமுஞ்சாத்தி நீங்கினார். அவ்வாசிரியரருளிய கருத்துநோக்கி அவ்வடமொழிச் சிவஞானபோதத்தைத் தமிழ்மொழிபெயர்த்துத் தமது மாணாக்கர்களுக்குபதேசித்தருளிப் பின்னர் அத்துவிதமுத்தியாகிய சிவசாயுச்சியமடைந்தனர்.

Koviloor Digital Library

விடமுண்டமிடற்றண்ணல்வெண்காட்டின்றண்புறவின்
மடல்விண்டமுடத்தாழைமலர்நிழலைக்குருகென்று
தடமண்டுதுறைக்கெண்டைதாமரையின்பூமறையக்
கடல்விண்டகதிர்முத்தநகைகாட்டுங்காட்சியதே. (௪)

வேலைமலிதண்கானல்வெண்காட்டான்றிருவடிக்கீழ்
மாலைமலிவண்சாந்தால்வழிபடுநன்மறையவன்றன்*
மேலடர்வெங்காலனுயிர்விண்டபினைநமன்றூதர்
ஆலமிடற்றானடியாரென்றடரவஞ்சுவரே. (௫)

தண்மதியும்வெய்யரவுந்தாங்கினான்சடையினுடன்
ஒண்மதியநுதலுமையோர்கூறுகந்தானுறைகோயில்
பண்மொழியாலவனாமம்பலவோதப்பசுங்கிள்ளை
வெண்முகில்சேர்கரும்பெணை † மேல்வீற்றிருக்கும்வெண்காடே. (௬)

சக்கரமாற்கீந்தானுஞ்சலந்தரனைப்பிளந்தானும்
அக்கரைமேலசைத்தானுமடைந்தயிராவதம்பணிய
மிக்கதனுக்கருள்சுரக்கும்வெண்காடும்வினைதுரக்கு
முக்குளநன்குடையானுமுக்கணுடையிறைவனே. (௭)

பண்மொய்த்தவின்மொழியாள்பயமெய்தமலைபெடுத்த
உன்மத்தனுரநெரித்தன்றருள்செய்தானுறைகோயில்
கண்மொய்த்தகருமஞ்ஞைநடமாடக்கடன்முழங்க
விண்மொய்த்தபொழில்வரிவண்டிசைமுரலும்வெண்காடே. (௮)

கள்ளார்செங்கமலத்தான்கடற்கிடந்தானெனவிவர்கள்
ஒள்ளாண்மைகொளற்கோடியுயர்ந்தாழ்ந்துமுணர்வரியான்
வெள்ளானைதவஞ்செய்யுமேதகுவெண்காட்டானென்
றுள்ளாடியுருகாதாருணர்வுடைமையுணரோமே. (௯)

போதியர்கள்பிண்டியர்கண்மிண்டுமொழிபொருளென்னும்
பேதையர்களவர்பிறிமினறிவுடையீரிதுகேண்மின்
வேதியர்கள்விரும்பியசீர்வியன்றிருவெண்காட்டானென்
றோதியவர்யாதுமொருதீதிலரென்றுணருமினே. (௧௦)

தண்பொழில்சூழ்சண்பையர்கோன்றமிழ்ஞானசம்பந்தன்
விண்பொலிவெண்பிறைச்சென்னிவிகிர்தனுறைவெண்காட்டைப்
பண்பொலிசெந்தமிழ்மாலைபாடியபத்திவைவல்லார்
மண்பொலியவாழ்ந்தவர்போய்வான்பொலியப்புகுவாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

* மறையவன்-சுவேதகேது; இவர்பொருட்டும் காலசங்காரம் நடந்தமை அத்தலபுராணத்தானுணர்க. † கரும்பனை என்றும் பாடம்.

Koviloor Digital Library

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

உண்டாய்நஞ்சையுமையோர்பங்காவென்றுள்கித்
தொண்டாய்த்திரியுமடியார்தங்கடுயரங்கள்
அண்டாவண்ணமறுப்பானெந்தையூர்போலும்
வெண்டாமரைமேற்கருவண்டியாழ்செய்வெண்காடே. (க)

நாதனம்மையாள்வானென்றுநவின்றேத்திப்
பாதம்பன்னாள்பணியுமடியார்தங்கண்மேல்
ஏதந்தீரவிருந்தான்வாழுமூர்போலும்
வேதத்தொலியாற்கிளிசொற்பயிலும்வெண்காடே. (உ)

தண்முத்தரும்பத்தடமூன்றுடையான்றனையுன்னிக்
கண்முத்தரும்பக்கழற்சேவடிகைதொழுவார்கள்
உண்முத்தரும்பவுவகைதருவானூர்போலும்
வெண்முத்தருவிப்* புனல்வந்தலைக்கும்வெண்காடே. (ங)

நரையார்வந்துநாளுங்குறுகிநணுகாமுன்
உரையால்வேறுவுள்குவார்களுள்ளத்தே
கரையாவண்ணங்கண்டான்மேவுமூர்போலும்
விரையார்கமலத்தன்னமருவும்வெண்காடே. (ச)

பிள்ளைப்பிறையும்புனலுஞ்சூடும்பெம்மானென்
றுள்ளத்துள்ளித்தொழுவார்தங்களுறுநோய்கள்
தள்ளிப்போகவருளுந்தலைவனூர்போலும்
வெள்ளைச்சுரிசங்குலவித்திரியும்வெண்காடே. (ரு)

ஒளிகொண்மேனியுடையாயும்பராளியென்
றளியராகியழுதாற்றாறு† மடியார்கட்
கெளியானமரர்க்கரியான்வாழுமூர்போலும்
வெளியவுருவத்தானை‡ வணங்கும்வெண்காடே. (சு)

கோள்வித்தனையகூற்றந்தன்னைக்குறிப்பினான்
மாள்வித்தவனைமகிழ்ந்தங்கேத்த¶ மாணிக்காய்
ஆள்வித்தமரருலகமளிப்பானூர்போலும்
வேள்விப்புகையால்வானமிருள்கூர்வெண்காடே. (எ)

வளையார்முன்கைமலையாள்○ வெருவவரையூன்றி
முளையார்மதியஞ்சூடியென்றுமுப்போதும்
இளையாதேத்தவிருந்தானெந்தையூர்போலும்
விளையார்கழனிப்பழனஞ்சூழ்ந்தவெண்காடே. (அ)

* வெண்முத்தருப்பி என்றும் பாடம். † அழுதூற்றூறும் என்றும் பாடம். ‡ வெளியவுருவிலானை என்றும் பாடம். ¶ சேர்த்த என்றும் பாடம். ○ மடவாள் என்றும் பாடம்.

Koviloor Digital Library

கரியானோடுகமலமலரான்காணாமை
எரியாய்நிமிர்ந்தவெங்கள்பெருமானென்பார்கட்
குரியானமரர்க்கரியான்வாழுமூர்போலும்
விரியார்பொழிலின்வண்டுபாடும்வெண்காடே. (கூ)

பாடுமடியார்பலருங்கூடிப்பாிந்தேத்த
ஆடுமரவமசைத்தபெருமானறிவின்றி
மூடமுடையசமண்சாக்கியர்களுணராத
வேடமுடையபெருமான்பதியாம்வெண்காடே. (கo)

விடையார்கொடியான்மேவியுறையும்வெண்காட்டைக்
கடையார்மாடங்கலந்துதோன்றுங்காழியான்
நடையாரின்சொன்ஞானசம்பந்தன்றமிழ்வல்லார்க்
கடையாவினைகளமரலோகமாள்வாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

மந்திரமறையவை* வானவரொடும்
இந்திரன்வழிபடநின்றவெம்மிறை
வெந்தவெண்ணீற்றர்வெண்காடுமேவிய
அந்தமுமுதலுடையடிகளல்லரே. (க)

படையுடைமழுவினர்பாய்புலித்தோலின்
உடைவிரிகோவணமுகந்தகொள்கையர்
விடையுடைக்கொடியர்வெண்காடுமேவிய
சடையிடைப்புனல்வைத்தசதுரரல்லரே. (உ)

பாலொடுநெய்தயிர்பலவுமாடுவர்
தோலொடுநூலிழைதுதைந்தமார்பினர்
மேலவர்பரவுவெண்காடுமேவிய
ஆலமதமர்ந்தவெம்மடிகளல்லரே. (ங)

ஞாழலுஞ்† செருந்தியுநறுமலர்ப்புன்னையுந்
தாழைவெண்குருகயறயங்குகானலில்
வேழமதிரித்தவெண்காடுமேவிய
யாழினதிசையுடையிறைவரல்லரே. (ச)

பூதங்கள்பலவுடைப்புனிதர்புண்ணியர்
ஏதங்கள்பலவிடர்தீர்க்குமெம்மிறை
வேதங்கண்முதல்வர்வெண்காடுமேவிய
பாதங்கடொழநின்றபரமரல்லரே. (ரு)

* மந்திரமறையவர் என்றும் பாடம். † நாழலும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

மன்னவர்விண்ணவர்வணங்கவைகலும்
எண்ணியதேவர்களிறைஞ்சுமெம்மிறை
விண்ணமர்பொழில்கொள்வெண்காடுமேவிய
அண்ணலையடிதொழவல்லலில்லையே. (சு)

நயந்தவர்க்கருள்பலநல்கியிந்திரன்
கயந்திரம்வழிபடநின்றகண்ணுதல்
வியந்தவர்பரவுவெண்காடுமேவிய
பயந்தருமழுவுடைப்பரமரல்லரே. (எ)

மலையுடனெடுத்தவல்லரக்கனீண்முடி
தலையுடனெரித்தருள்செய்தசங்கரர்
விலையுடைநீற்றர்வெண்காடுமேவிய
அலையுடைப்புனல்வைத்தவடிகளல்லரே. (அ)

எடவிழ்நறுமலரயனுமாலுமாய்த்
தேடவுந்தெரிந்தவர்தேரகிற்கிலார்
வேடமதுடையவெண்காடுமேவிய
ஆடலையமர்ந்தவெம்மடிகளல்லரே. (கூ)

போதியர்பிண்டியர்பொருத்தமில்லிகள்
நீதிகள்சொல்லியுநினையகிற்கிலார்
வேதியர்பரவுவெண்காடுமேவிய
ஆதியையடிதொழவல்லலில்லையே. (க0)

நல்லவர்புகலியுண்ஞானசம்பந்தன்
செல்வனெஞ்சிவனுறைதிருவெண்காட்டின்மேற்
சொல்லியவருந்தமிழ்பத்தும்வல்லவர்
அல்லலோடருவினையறுதலாணையே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனர்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பண்காட்டிப்படியாயதன்* பத்தர்க்குக்
கண்காட்டிக்கண்ணினின்றமணியொக்கும்
பெண்காட்டிப்பிறைச்சென்னிவைத்தான்றிரு
வெண்காட்டையடைந்துய்ம்மடநெஞ்சமே. (க)

கொள்ளிவெந்தழல்வீசிநின்றுடுவார்
ஒள்ளியகணஞ்சூழுமையபங்கனர்
வெள்ளியன்கரியன்பசுவேறிய
தெள்ளியன்றிருவெண்காடடைநெஞ்சே. (உ)

* படியாய்த்தன என்றும் பாடம்.

Koviloor Digital Library

ஊனேக்குமின்பம்வேண்டியுழலாதே
வானேக்கும்வழியாவதுநின்மினே
தானேக்குந்தன்னடியவர்நாவினிற்
றேனேக்குந்திருவெண்காடடைநெஞ்சே. (௩)

பருவெண்கோட்டுப்பைங்கண்மதவேழத்தின்
உருவங்காட்டிநின்ருனுமையஞ்சவே
பெருவெண்காட்டிறைவன்ஞுறையுமிடந்
திருவெண்காடடைந்துய்ம்மடநெஞ்சமே. (௪)

பற்றவன்கங்கைபாம்புமதியுடன் *
உற்றவன்சடையானுயர்ஞானங்கள்
கற்றவன்கயவர்புரமோரம்பாற்
செற்றவன்றிருவெண்காடடைநெஞ்சே. (௫)

கூடினுனுமையாளொருபாகமாய்
வேடனுய்விசயற்கருள்செய்தவன்
சேடனூர்சிவனூர்சிந்தைமேயவெண்
காடனூடியேயடைநெஞ்சமே. (௬)

தரித்தவன்கங்கைபாம்புமதியுடன்
புரித்தபுன்சடையான்கயவர்புரம்
எரித்தவன்மறைநான்கினேடாறங்கம்
விரித்தவன்ஞுறைவெண்காடடைநெஞ்சே. (௭)

பட்டமிண்டையவைகொடுபத்தர்கள்
சிட்டனுதியென்றுசிந்தைசெய்யவே
நட்டமூர்த்திஞானச்சுடராய்நின்ற
அட்டமூர்த்திதன்வெண்காடடைநெஞ்சே. (௮)

ஏனவேடத்தினும்பிரமனுந்
தானவேடமுன்ருழ்ந்தறிகின்றிலா
ஞானவேடன்விசயற்கருள்செயுங்
கானவேடன்றன்வெண்காடடைநெஞ்சே. (௯)

பாலையாடுவர்பன்மறையோதுவர்
சேலையாடியகண்ணுமைபங்கனூர்
வேலையார்விடமுண்டவெண்காடர்க்கு
மாலையாவதுமாண்டவரங்கமே. (௧௦)

இராவணஞ்செயமாமதிபற்றவை
யிராவணம்முடையான்றனையுள்குமின்
இராவணன்றனையூன்றியருள்செய்த
இராவணன்றிருவெண்காடடைமினே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

* பற்றவன் பாம்பு கங்கை மதியுடன் என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

தூண்டுசுடர்மேனித்தூநீறாடிச்
சூலங்கையேந்தியோர்சுழல்வாய்நாகம்
பூண்டுபொறியரவங்காதிற்பெய்து
பொற்சடைகளவைதாழப்புரிவெண்ணூலர்
நீண்டுகிடந்திலங்குதிங்கள்சூடி
நெடுந்தெருவேவந்தெனதுநெஞ்சங்கொண்டார்
வேண்டுநடைநடக்கும்வெள்ளேறேறி
வெண்காடுமேவியவிகிர்தனாரே. (க)

பாதந்தனிப்பார்மேல்* வைத்தபாதர்
பாதாளமேழுருவப்பாய்ந்தபாதர்
ஏதம்படாவண்ணநின்றபாத
ரேழுலகுமாய்நின்றவேகபாதர்
ஓதத்தொலிமடங்கியூருண்டேறி
யொத்துலகமெல்லாமொடுங்கியபின்
வேதத்தொலிகொண்டுவீணைகேட்பார்
வெண்காடுமேவியவிகிர்தனாரே. (உ)

நென்னலை † யோரோடேந்திப்பிச்சைக்கென்று
வந்தார்க்குவந்தேனென் ‡ றில்லேபுக்கேன்
அந்நிலையேநிற்கின்றாரையங்கொள்ளா
ரருகேவருவார்போனோக்குகின்றார்
நுந்நிலைமையேதோநும்மூர்தானேதோ
வென்றேனுக்கொன்றாகச்சொல்லமாட்டார்
மென்முலையார்கூடிவிரும்பியாடும்
வெண்காடுமேவியவிகிர்தனாரே. (ங)

ஆகத்துமைபடக்கியாறுசூடி
யைவாயரவசைத்தங்கானேறேறிப்
போகம்பலவுடைத்தாய்ப்பூதஞ்சூழப்
புலித்தோலுடையாப்புகுந்துநின்றார்
பாகிடுவான்சென்றேனைப்பற்றிநோக்கிப்
பரிசழித்தென்வளைகவர்ந்தார்பாவியேனை
மேகமுகிலுரிஞ்சுசோலைசூழ்ந்த
வெண்காடுமேவியவிகிர்தனாரே. (ச)

கொள்ளைக்குழைக்காதிற்குண்டைப்பூதங்
கொடுகொட்டிகொட்டிக்குனித்துப்பாட
உள்ளங்கவர்ந்திட்டுப்போவார்போல
வுழிதருவர்நான்றெரியமாட்டேன்மீண்டேன்

* பாதந்தரிப்பார்மேல் என்றும் பாடம். † நென்னிலை என்றும் பாடம். ‡ வந்தா னென் என்றும் பாடம்.

Koviloor Digital Library

கள்ளவிழிவிழிப்பர்காணாக்கண்ணாற்
கண்ணுளார்போலேகரந்துநிற்பர்
வெள்ளச்சடைமுடியர்வேதநாவர்
வெண்காடுமேவியவிகிர்தனாரே. (௫)

தொட்டிலங்குசூலத்தர்மழுவாளேந்திச்
சுடர்க்கொன்றைத்தாரணிந்துசுவைகள்பேசிப்
பட்டிவெள்ளேறேறிப்பலியுங்கொள்ளார்
பார்ப்பாரைப்பரிசழிப்பாரொக்கின்றாற் *
கட்டிலங்குவெண்ணீற்றர்கனலப்பேசிக்
கருத்தழித்துவளைகவர்ந்தார்காலைமாலை
விட்டிலங்குசடைமுடியர்வேதநாவர்
வெண்காடுமேவியவிகிர்தனாரே. (௬)

பெண்பாலொருபாகம்பேணாவாழ்க்கை
கோணாகம்பூண்பனவு † நாணுஞ்சொல்லார்
உண்பாருறங்குவாரொவ்வாநங்கா
யுண்பதுவுநஞ்சன்றேலோபி ‡ யுண்ணார்
பண்பால்விரி ¶ சடையர்பற்றிநோக்கிப்
பாலைப்பரிசழியப்பேசுகின்றார்
விண்பான்மதிசூடிவேதமோதி
வெண்காடுமேவியவிகிர்தனாரே. (௭)

மருதங்களாமொழிவர்மங்கையோடு
வானவருமாலயனுங்கூடித்தங்கள்
சுருதங்களாற்றுதித்துத்தூநீராட்டித்
தோத்திரங்கள்பலசொல்லித்தூபங்காட்டிக்
கருதுங்கொலெம்பெருமான்செய்குற்றேவ
லென்பார்க்குவேண்டும்வரங்கொடுத்து
விகிர்தங்களாநடப்பர் § வெள்ளேறேறி
வெண்காடுமேவியவிகிர்தனாரே. (௮)

புள்ளானுநான்முகனும்புக்கும்போந்துங்
காணார்பொறி0யழலாய்நின்றான்றன்னை
உள்ளானையொன்றலாவுருவினானை
யுலகுக்கொருவிளக்காய்நின்றான்றன்னைக்
கள்ளேந்து 0 0 கொன்றைதூய்க்காலைமூன்று
மோவாமேநின்றுதவங்கள்செய்த
வெள்ளானைவேண்டும்வரங்கொடுப்பார்
வெண்காடுமேவியவிகிர்தனாரே. (௯)

* சழிப்பார் போகின்றரால் என்றும் பாடம். † பூண்டனவும் என்றும் பாடம். ‡ நஞ்சென்றே லோவி என்றும், நஞ்சென்று லோப்பி என்றும் பாடம். ¶ பண்பால விர் என்றும் பண்பாவவிர் என்றும் பாடம். § விகிர்தங்களானடப்பர் என்றும் பாடம். 0 பொரி என்றும் பாடம். 0 0 கள்ளேறு என்றும் பாடம்.

Koviloor Digital Library

மாக்குன்றெடுத்தோன்* றன்மைந்தனாகி
மாவேழம்வில்லாமதித்தான்றன்னை
நோக்குந்துணைத்தேவரெல்லாநிற்க
கொடிவரையினோவவிழித்தான்றன்னைக்
காக்குங்கடலிலங்கைக்கோமான்றன்னைக்
கதிர்முடியுங்கண்ணும்பிதுங்கவூன்றி
விக்கந்தவிர்த்தவிரலார்போலும்
வெண்காடுமேவியவிகிர்தனாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

படங்கொணாகஞ்சென்னிசேர்த்திப்பாய்புலித்தோலரையில்வீக்கி
அடங்கலாரூரெரியச்சீறியன்றுமூவர்க்கருள்புரிந்தீர்
மடங்கலானைச்செற்றுகந்தீர்மனைகடோறுந்தலைகையேந்தி
விடங்காராகித்திரிவதென்னேவேலைசூழ்வெண்காடனீரே. (௧)

இழித்துகந்தீர்முன்னைவேடமிமையவர்க்குமுரைகள்பேணா
தொழித்துகந்தீர்நீர்முன்கொண்டவுயர்தவத்தையமரர்வேண்ட
அழிக்கவந்தகாமவேளையவனுடையதாதைகாண
விழித்துகந்தவெற்றியென்னேவேலைசூழ்வெண்காடனீரே. (௨)

படைகளேந்திப்பாரிடமும்பாதம்போற்றமாதுநீரும்
உடைபோர்கோவணத்தராகியுண்மைசொல்லீரும்மையன்றே†
சடைகடாழக்கரணமிட்டுத்தன்மைபேசியில்பலிக்கு
விடையதேறித்திரிவதென்னேவேலைசூழ்வெண்காடனீரே. (௩)

பண்ணுளீராய்ப்பாட்டுமானீர்பத்தர்சித்தம்பரவிக்கொண்டீர்
கண்ணுளீராய்க்கருத்திலும்மைக்கருதுவார்கள்காணும்வண்ணம்
மண்ணுளீராய்மதியம்வைத்தீர்வானநாடர்மருவியேத்த
விண்ணுளீராய்நிற்பதென்னேவேலைசூழ்வெண்காடனீரே. (௪)

குடமெடுத்துநீரும்பூவுங்கொண்டுதொண்டரேவல்செய்ய
நடமெடுத்தொன்றாடிப்பாடிநல்குவீர்நீர்புல்கும்வண்ணம்
வடமெடுத்தகொங்கைமாதோர்பாகமாகவார்கடல்வாய்
விடமிடற்றில்வைத்ததென்னேவேலைசூழ்வெண்காடனீரே. (௫)

மாறுபட்டவனத்தகத்தின்மருவவந்தவன்களிற்றைப்
பிறியிட்டமாகப்போர்த்தீர்பெய்பலிக்கென்றில்லந்தோறுங்
கூறுபட்டகொடியுநீருங்குலாவியேற்றைபடாவேறி
வேறுபட்டுத்திரிவதென்னேவேலைசூழ்வெண்காடனீரே. (௬)

* தெடுத்தான் என்றும் பாடம். † சொல்லீருண்மையன்றே என்றும் பாடம்.

Koviloor Digital Library

காதலாலேகருதுதொண்டர்காரணத்தராகி* நின்றே
பூதம்பாடப்புரிந்துநட்டம்புவனியேத்தவாடவல்லீர்
நீதியாகவேழிலோசைநித்தராகிச்சித்தர்சூழ
வேதமோதித்திரிவதென்னேவேலைசூழ்வெண்காடனீரே. (எ)

குரவுகொன்றைமதியமத்தங்கொங்கைமாதர்கங்கைநாகம்
விரவுகின்றசடையுடையீர்விருத்தரானீர்கருத்திலும்மைப்
பரவுமென்மேற்பழிகள்போக்கிர்பாகமாயமங்கையஞ்சி
வெருவவேழஞ்செற்றதென்னேவேலைசூழ்வெண்காடனீரே. (அ)

மாடங்காட்டுங்கச்சியுள்ளீர்நிச்சயத்தானினைப்புளார்பாற்
பாடுங்காட்டிலாடலுள்ளீர்பரவும்வண்ணமெங்ஙனேதான்
நாடுங்காட்டிலயனுமாலுநாணுகாவண்ணமனலுமாய
வேடங்காட்டித்திரிவதென்னேவேலைசூழ்வெண்காடனீரே. (கூ)

விரித்தவேதமோதவல்லார்வேலைசூழ்வெண்காடுமேய
விருத்தனையவேதன்றன்னைவிரிபொழிற்றிருநாவலூரான்
அருத்தியாலாரூரன்றொண்டனடியன்கேட்டமாலைபத்துந்
தெரித்தவண்ணமொழியவல்லார்செம்மையாளர்வானுளாரே. (கo)

திருச்சிற்றம்பலம்.

திருவெண்காட்டுத்திருப்பதிகம் - கூ.

ஆ திருப்பதிகம் - ௬அ.

சுவாமி தேவி திருநாமங்கள் - சுவேதாரணியேசுரர், பிரமவித்தியாநாயகி.

கஉ. கீழைத்திருக்காட்டுப்பள்ளி. †

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

செய்யருகேபுனல்பாயவோங்கிச்செங்கயல்பாயச்சிலமலர்த்தேன்
கையருகேகனிவாழையின்றுகானலெல்லாங்கமழ்காட்டுப்பள்ளிப்
பையருகேயழல்வாயவைவாய்ப்பாம்பணையான்பணைத்தோளிபாகம்
மெய்யருகேயுடையானையுள்கிவிண்டவரேறுவர்மேலுலகே. (க)

திரைகளெல்லாமலருஞ்சுமந்துசெழுமணிமுத்தொடுபொன்வரன்றிக்
கரைகளெல்லாமணிசேர்ந்துரிஞ்சிக்காவிரிகால்பொருகாட்டுப்பள்ளி
உரைகளெல்லாமுணர்வெய்திநல்லவுத்தமராயுயர்ந்தாருலகில்
அரவமெல்லாமரையார்த்தசெல்வர்க்காட்செயவல்லலறுக்கலாமே. (௨)

* கருதுந்தொண்டர் காரணத்தராகி என்றும் பாடம். † இத்திருப்பதிகத்தில் இரண்டாவதுசெய்யுள் மறைந்துபோயிற்று.

Koviloor Digital Library

தோலுடையான்வண்ணப்போர்வையினான்சுண்ணவெண்ணீறுதுதைந்திலங்கு
நூலுடையானிமையோர்பெருமானுண்ணறிவால்வழிபாடுசெய்யுங்
காலுடையான்கரிதாயகண்டன்காதலிக்கப்படுங்காட்டுப்பள்ளி
மேலுடையானிமையாதமுக்கண்மின்னிடையாளொடும்வேண்டினானே. (௪)

சலசலசந்தகிலோடுமுந்திச்சந்தனமேகரைசார்த்தியெங்கும்
பலபலவாய்த்தலையார்த்துமண்டிப்பாய்ந்திழிகாவிரிப்பாங்கரின்வாய்க்
கலகலநின்றதிருங்கழலான்காதலிக்கப்படுங்காட்டுப்பள்ளிச்
சொலவலதொண்டர்களேத்தநின்றசூலம்வல்லான்கழல்சொல்லுவோமே. (௫)

தளையவிழ்தண்ணிறநீலநெய்தற்றாமரைசெங்கழுநீருமெல்லாங்
களையவிழுங்குழலார்கடியக்காதலிக்கப்படுங்காட்டுப்பள்ளித்
துளைபயிலுங்குழல்யாழ்முரலத்துன்னியவின்னிசையாற்றுதைந்த*
அளைபயில்பாம்பரையார்த்தசெல்வர்க்காட்செயவல்லலறுக்கலாமே. (௬)

முடிகையினாற்றொடுமோட்டுழவர்முன்கைத்தருக்கைக்கரும்பின்†கட்டிக்
கடிகையினாலெறிகாட்டுப்பள்ளிகாதல்செய்தான்கரி‡தாயகண்டன்
பொடியணிமேனியினானையுள்கிப்போதொடுநீர்சுமந்தேத்திமுன்னின்
றடிகையினாற்றொழவல்லதொண்டரருவினையைத்துரந்தாட்செய்வாரே. (௭)

பிறையுடையான்பெரியோர்கள்பெம்மான்பெய்கழனாடொறும்பேணியேத்த
மறையுடையான்மழுவாளுடையான்வார்தருமால்கடனஞ்சமுண்ட
கறையுடையான்கனலாடுகண்ணாற்காமனைக்காய்ந்தவன்காட்டுப்பள்ளிக்
குறையுடையான்குறட்பூதச்செல்வன்குரைகழலேகைகள்கூப்பினோமே. (௮)

செற்றவர்தம்மரணம்மவற்றைச்செவ்வழல்வாயெரியூட்டிநின்றுங்¶
கற்றவர்தாந்தொழுதேத்தநின்றான்காதலிக்கப்படுங்காட்டுப்பள்ளி
உற்றவர்தாமுணர்வெய்திநல்லவும்பருள்ளார்தொழுதேத்தநின்ற
பெற்றமரும்§பெருமானையல்லாற்பேசுவதுமற்றோர்பேச்சிலோமே. (௯)

ஒண்டுவரார்துகிலாடைமெய்போர்த்துச்சிகொளாமையுண்டேயுரைக்குங்
குண்டர்களோடரைக்கூறையில்லார்கூறுவதாங்குணமல்லகண்டீர்
அண்டமறையவன்மாலுங்காணாவாதியினானுறைகாட்டுப்பள்ளி
வண்டமரும்மலர்க்கொன்றைமாலைவார்சடையான்கழல்வாழ்த்துவோமே. (௧௦)

பொன்னியறாமரைநீலநெய்தல்போதுகளாற்பொலிவெய்துபொய்கைக்
கன்னியர்தாங்குடைகாட்டுப்பள்ளிக்காதலனைக்கடற்காழியர்கோன்
றுன்னியவின்னிசையாற்றுதைந்துசொல்லியஞானசம்பந்தனல்ல
தன்னிசையாற்சொன்னமாலைபத்துந்தாங்கவல்லார்புகழ்தாங்குவாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

கீழைத்திருக்காட்டுப்பள்ளித்திருப்பதிகம் - ௧.

ஆ திருப்பதிகம் - ௫௧.

சுவாமி தேவி திருநாமங்கள் - ஆரணியசுந்தரர், அகிலாண்டநாயகி.

* துதைந்து—வளைபயில் என்றும் பாடம். † சருகைக்கரும்பின் என்றும் பாடம். ‡ காதலித்தான்கரி என்றும் பாடம். ¶ யூட்டி நன்றும் என்றும் பாடம். § பெற்ற மூரும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

௧௩. திருக்குருகாவூர்வெள்ளடை. *

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - அந்தாளிக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

சுண்ணவெண்ணீறணிமார்பிற்றோல்புனைந்
தெண்ணரும்பல்கணமேத்தநின்றாடுவர்
விண்ணமர்பைம்பொழில்வெள்ளடைமேவிய
பெண்ணமர்மேனியெம்பிஞ்ஞகனாரே. (௧)

திரைபுல்குகங்கைதிகழ்சடைவைத்து
வரைமகளோடுடனாடுதிர்மல்கு
விரைகமழ்தண்பொழில்வெள்ளடைமேவிய
அரைமல்குவாளரவாட்டுகந்தீரே. (௨)

அடையலர்தொன்னகர்மூன்றெரித்தன்ன
நடைமடமங்கையொர்பாகநயந்து
விடையுகந்தேறுதிர்வெள்ளடைமேவிய
சடையமர்வெண்பிறைச்சங்கரனீரே. (௩)

வளங்கிளர்கங்கைமடவரலோடு
களம்படவாடுதிர்காடரங்காக
விளங்கியதண்பொழில்வெள்ளடைமேவிய
இளம்பிறைசேர்சடையெம்பெருமானே. (௪)

சுரிகுழனல்லதுடியிடையோடு
பொரிபுல்குகாட்டிடையாடுதிர்பொங்க
விரிதருபைம்பொழில்வெள்ளடைமேவிய
எரிமழுவாட்படையெந்தைபிரானே. (௫)

காவியங்கண்மடவாளொடுங்காட்டிடைத்
தீயகலேந்திநின்றாடுதிர்தேன்மலர்
மேவியதண்பொழில்வெள்ளடைமேவிய
ஆவினிலைந்துகொண்டாட்டுகந்தீரே. (௬)

திருச்சிற்றம்பலம்.

* இத்திருப்பதிகத்தில் ஏனைச்செய்யுள்கள் மறைந்துபோயின.

Koviloor Digital Library

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

இத்தனையாமாற்றையறிந்திலேனெம்பெருமான்
பித்தரேயென்றும்மைப்பேசுவார்பிறரெல்லாம்
முத்தினைமணிதன்னைமாணிக்கமுளைத்தெழுந்த
வித்தனேகுருகாவூர்வெள்ளடைநீயன்றே. (௧)

ஆவியைப்போகாமேதவிர்த்தென்னையாட்கொண்டாய்
வாவியிற்கயல்பாயக்குளத்திடைமடைதோறுங்
காவியுங்குவளையுங்கமலஞ்செங்கழுநீரும்
மேவியகுருகாவூர்வெள்ளடைநீயன்றே. (௨)

பாடுவார்பசிதீர்ப்பாய்பரவுவார்பிணிகளைவாய்
ஓடுநன்கலனாகவுண்பலிக்குழல்வானே
காடுநின்னிடமாக*க்கடுவிருணடமாடும்
வேடனேகுருகாவூர்வெள்ளடைநீயன்றே. (௩)

வெப்பொடுபிணியெல்லாந்தவிர்த்தெனையாட்கொண்டாய்
ஒப்புடையொளிநீலமோங்கியமலர்ப்பொய்கை
அப்படியழகாயவணிநடைமடவன்னம்
மெய்ப்படுகுருகாவூர்வெள்ளடைநீயன்றே. (௪)

வரும்பழிவாராமேதவிர்த்தென்னையாட்கொண்டாய்
சுரும்புடைமலர்க்கொன்றைச்சுண்ணவெண்ணீற்றானே
அரும்புடைமலர்ப்பொய்கையல்லியுமல்லிகையும்
விரும்பியகுருகாவூர்வெள்ளடைநீயன்றே. (௫)

பண்ணிடைத்தமிழொப்பாய்பழத்தினிற்சுவையொப்பாய்
கண்ணிடைமணியொப்பாய்கடுவிருட்சுடரொப்பாய்
மண்ணிடையடியார்கண்மனத்திடர்வாராமே
விண்ணிடைக்குருகாவூர்வெள்ளடைநீயன்றே. (௬)

போந்தனைதரியாமேநமன்றமர்புகுந்தென்னை
நோந்தனை†செய்தாலுநுன்னலதறியேனான்
சாந்தனைவருமேலுந்தவிர்த்தென்னையாட்கொண்ட
வேந்தனேகுருகாவூர்வெள்ளடைநீயன்றே. (௭)

மலக்கினின்னடியார்கண்மனத்திடைமாறீர்ப்பாய்
சலச்சலமிடுக்குடையதருமனார்தமரென்னைக்
கலக்குவான்வந்தாலுங்கடுந்துயர்வாராமே
விலக்குவாய்குருகாவூர்வெள்ளடைநீயன்றே. (௮)

* காடுநல்லிடமாக என்றும் பாடம். † நோந்தன என்றும் பாடம்.

Koviloor Digital Library

படுவிப்பாயுனக்கேயாட்பலரையும்பணியாமே
தொடுவிப்பாய்துகிலொடுபொன்றோலுடுத்துழல்வானே
கெடுவிப்பாயல்லாதார்கேடிலாப்பொன்னடிக்கே
விடுவிப்பாய்குருகாவூர்வெள்ளடைநீயன்றே. (கூ)

வளங்கனிபொழின்மல்குவயலணிந்தழகாய
விளங்கொளிகுருகாவூர்வெள்ளடையுறைவானை
இளங்கிளையாரூரன்வனப்பகையவளப்பன்
உளங்குளிர்தமிழ்மாலைபத்தர்கட்குரையாமே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருக்குருகாவூர்வெள்ளடைத்திருப்பதிகம் - உ.

ஆ திருப்பதிகம் - சக.

சுவாமி தேவி திருநாமங்கள் - வெள்ளடைநாதர், காவியங்கண்ணி.

சுந்தரமூர்த்திநாயனார், திருக்குருகாவூருக்குப் போம்போது அவர் பசியினாலும் தாகத்தினாலும் வருந்துதலை அறிந்து, சுவாமி வழியில் ஓர் தண்ணீர்ப்பந்தலையுண்டாக்கி, அங்கே பிராமணவேடங்கொண்டு சுந்தரமூர்த்திநாயனாரை எதிர்பார்த்திருந்தனர். அப்பொழுது சுந்தரமூர்த்திநாயனார் திருத்தொண்டர்களுடன் அவ்விடத்திலேவந்து, பந்தரின் கீழேபோய், அந்தப்பிராமணர் சமீபத்திலே பஞ்சாக்ஷரத்தைச் சொல்லிக்கொண்டிருந்தார். பிராமணர் அவரைப்பார்த்து, "நீர்மிகப் பசிகொண்டிருக்கின்றீர் இந்தப்பொதிசோற்றை உண்டு இந்தத்தண்ணீரைக் குடித்து இளைப்பாறும்" என்று சொல்லியருள, சுந்தரமூர்த்திநாயனார் அதற்கு இசைந்து, அந்தப்பொதிசோற்றை வாங்கித் திருத்தொண்டருடன் அமுதுசெய்து அந்த ஐயரைப்புகழ்ந்து,அவர் சமீபத்திலே பரிசனங்களோடு நித்திரைசெய்தனர். ஐயர் அப்போது பந்தருடனே மறைந்தருளினார். சுந்தரமூர்த்திநாயனார் விழித்து எழுந்து ஐயரைக்காணாமையால் அதிசயங்கொண்டு, "இத்தனையாமாற்றையறிந்திலேன்" என்னும் திருப்பதிகம்பாடியருளினர்.

கச. திருப்பிரமபுரம்.*

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

தோடுடையசெவியன்விடையேறியோர்தூவெண்மதிசூடிக்†
காடுடையசுடலைப்பொடிபூசியென்னுள்ளங்‡கவர்கள்வன்
ஏடுடையமலரான்முனைநாட்பணிந்தேத்தவருள்செய்த
பீடுடையபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (க)

முற்றலாமையிளநாகமோடேனமுளைக்கொம்பவைபூண்டு
வற்றலோடுகலனாப்பலிதேர்ந்தெனதுள்ளங்கவர்கள்வன்
கற்றல்கேட்டலுடையார்பெரியார்கழல்கையாற்றொழுதேத்தப்
பெற்றமூர்ந்தபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (உ)

* திருப்பிரமபுரம் — சீர்காழி. † சூடி - காடு என்றும் ‡ பூசியெனதுள்ளம் என்றும் பாடமோதுவாருமுளர்.

Koviloor Digital Library

நீர்பரந்தநிமிர்புன்சடைமேலோர்நிலாவெண்மதிசூடி
ஏர்பரந்தவினவெள்வளைசோரவென்னுள்ளங்கவர்கள்வன்
ஊர்பரந்தவுலகின்முதலாகியவோரூரிதுவென்னப்
பேர்பரந்தபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (௩)

விண்மகிழ்ந்தமதிலெய்ததுமன்றிவிளங்குதலையோட்டில்
உண்மகிழ்ந்துபலிதேரியவந்தெனதுள்ளங்கவர்கள்வன்
மண்மகிழ்ந்தவரவம்மலர்க்கொன்றைமலிந்தவரைமார்பிற்
பெண்மகிழ்ந்தபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (௪)

ஒருமைபெண்மையுடையன்சடையன்விடையூரும்மிவனென்ன
அருமையாகவுரைசெய்யவமர்ந்தெனதுள்ளங்கவர்கள்வன்
கருமைபெற்றகடல்கொள்ளமிதந்ததோர்காலம்மிதுவென்னப்
பெருமைபெற்றபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (௫)

மறைகலந்தவொலிபாடலோடாடலராகிமழுவேந்தி
இறைகலந்தவினவெள்வளைசோரவென்னுள்ளங்கவர்கள்வன்
கறைகலந்தகடியார்பொழினீடுயர்சோலைக்கதிர்சிந்தப்
பிறைகலந்தபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (௬)

சடைமுயங்குபுனலன்னனலன்னெரிவீசிச்சதிர்வெய்த
உடைமுயங்குமரவோடுழிதந்தெனதுள்ளங்கவர்கள்வன்
கடன்முயங்குகழிசூழ்குளிர்கானலம்பொன்னஞ்சிறகன்னம்
பெடைமுயங்குபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (௭)

வியரிலங்குவரையுந்தியதோள்களைவீரம்விளைவித்த
உயரிலங்கையரையன்வலிசெற்றெனதுள்ளங்கவர்கள்வன்
துயரிலங்குமுலகிற்பலவூழிகடோன்றும்பொழுதெல்லாம்
பெயரிலங்குபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (௮)

தாணுதல்செய்திறைகாணியமாலொடுதண்டாமரையானும்
நீணுதல்செய்தொழியந்நிமிர்ந்தானெனதுள்ளங்கவர்கள்வன்
வாணுதல்செய்மகளிர்முதலாகியவையத்தவரேத்தப்
பேணுதல்செய்பிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (௯)

புத்தரோடுபொறியில்சமணும்புறங்கூறநெறிநில்லா
ஒத்தசொல்லவுலகம்பலிதேர்ந்தெனதுள்ளங்கவர்கள்வன்
மத்தயானைமறுகவ்வுரிபோர்த்ததோர்மாயம்மிதுவென்னப்
பித்தர்போலும்பிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (௰)

அருநெறியமறைவல்லமுனியகன்பொய்கையலர்மேய
பெருநெறியபிரமாபுரமேவியபெம்மானிவன்றன்னை
ஒருநெறியமனம்வைத்துணர்ஞானசம்பந்தனுரைசெய்த
திருநெறியதமிழ்வல்லவர்தொல்வினைதீர்தலெளிதாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

Koviloor Digital Library

சோழமண்டலத்திலே, பிரமபுரம் முதலிய பன்னிரண்டு திருநாமங்களையுடைய சீர்காழியிலே பிராமணகுலத்திலே, கௌணியர் கோத்திரத்திலே, சிவபாதவிருதயரென்பவர் ஒருவர் இருந்தார். அவர், சைவசமயஸ்தாபனஞ்செய்து விபூதிசாதனத்தை விளக்குதற்குரிய ஒரு திவ்வியபுத்திரரைப் பெறல்வேண்டுமென்னும் பேராசையினாலே திருத்தோணியப்பரை நோக்கித் தவஞ்செய்தார். அத்தபோபலம்பற்றிப் பெரியநாயகிசமேதராகிய திருத்தோணியப்பருடைய பெருங்கருணையினாலே அவர் மனைவியாராகிய பகவதியாருடைய அருமைத்திருவயிற்றிலே, திருவாதிரைநக்ஷத்திரத்திலே, ஒருசற்புத்திரர்திருவவதாரஞ்செய்தார். அவரது மூன்றாம் ஆண்டிலே, ஒருநாள் தந்தையார் ஸ்நானத்திற்குப் போகப் பிள்ளையார் அழுதுகொண்டுபின்செல்ல அவர் ஆலயத்தினுள்ளிருக்கின்ற தீர்த்தக்கரையில் பிள்ளையாரைவைத்துவிட்டு,தாந்தீர்த்தத்தினுள்ளே இறங்கிச் சங்கற்பம் அகமருஷண சூக்தபடன முதலியனசெய்தார். அப்போது பிள்ளையார் திருத்தோணிச்சிகரத்தைப்பார்த்து, "அம்மே அப்பா" என்று அழ, தோணியப்பர் அவருக்கு அருள்செய்தற்குத் திருவுளங்கொண்டு, பார்வதிதேவியாரோடு இடபாரூடராய் எழுந்தருளி, தீர்த்தக்கரையை அடைந்தனர். உமாதேவியார் தம்முடைய திருமுலைப்பாலைப் பொன்வள்ளத்திலே கறந்து, சிவஞானத்தைக் குழைத்து, பிள்ளையாருடைய கண்ணீரைத் துடைத்து, கையிலே கொடுத்து ஊட்ட; சிவபெருமான் அழுகைதீர்த்து அநுக்கிரகஞ் செய்தருளினார். பிள்ளையார் சிவன் சத்தி இருவராலும் ஆளப்பட்டமையினாலே ஆளுடையபிள்ளையார் என்னும் திருநாமமும், சிவஞானத்தோடு சம்பந்தஞ் செய்தலினாலே திருஞானசம்பந்தமூர்த்தி என்னும் திருநாமமும் உடையராயினார்.

சிவபாதவிருதயர் சிறிதுபொழுதிலே தம்முடைய நியமங்களை முடித்துக்கொண்டு கரையிலேறி, ஆளுடையபிள்ளையாரை நோக்கி, "நீ யார்தந்த பாலை உண்டாய்" என்று கோபித்து "எச்சில் மயங்க உனக்கு இதனைத் தந்தவரைக் காட்டு" என்று சொல்லி, கையில் எடுத்த சிறிய ஒரு மாறுகொண்டோச்ச, பிள்ளையார் ஆனந்தபாஷ்பஞ் சொரிய, உச்சியின்மேல் எடுத்தருளிய ஒரு திருக்கைவிரலினாலே சுட்டி, ஆகாயத்திலே இடபாரூடராகி உமாதேவியாரோடு நின்றருளிய சிவபெருமானைக்காட்டித் தம்முடையபாடல் சிவபெருமானுடைய திருச்செவியில் ஏறும்பொருட்டு முன்னர் அத்திருச்செவியையே சிறப்பித்து,வேதத்திற்கு ஆதியாகிய அக்ஷரத்தைத் தகரமெய்யொடு புணர்த்தித் "தோடுடையசெவியன்" என்று பாடத்தொடங்கியருளினார்.

பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

எம்பிரானெனக்கமுதமாவானுந்தன்னடைந்தார்
தம்பிரானாவானுந்தழலேந்துகையானுங்
கம்பமாகரியுரித்தகாபாலிகறைக்கண்டன்
வம்புலாம்பொழிற்பிரமபுரத்துறையும்வானவனே. (௧)

தாமென்றுமனந்தளராத்தகுதியராயுலகத்துக்
காமென்றுசரண்புகுந்தார்தமைக்காக்குங்கருணையினான்
ஓமென்றுமறைபயில்வார்பிரமபுரத்துறைகின்ற
காமன்றனுடலெரியக்கனல்சேர்ந்தகண்ணானே. (௨)

நன்னெஞ்சேயுனையிரந்தேனம்பெருமான்றிருவடியே
உன்னஞ்செய்திருகண்டாயுய்வதனைவேண்டுதியேல்
அன்னஞ்சேர்பிரமபுரத்தாரமுதையெப்போதும்
பன்னஞ்சீர்வாயதுவேபார்கண்ணேபரிந்திடவே. (௩)

Koviloor Digital Library

சாநாளின்றிம்மனமேசங்கைதனைத்தவிர்ப்பிக்குங்
கோனாருந்திருவடிக்கேகொழுமலர்தூவெத்தனையுந்
தேனாரும்பொழிற்பிரமபுரத்துறையுந்திவனானை
நாநாளுநன்னியமஞ்செய்தவன்சீர்நவின்றேத்தே. (௪)

கண்ணுதலான்வெண்ணீற்றான்கமழ்சடையான்விடையேறி
பெண்ணிதமாமுருவத்தான்பிஞ்ஞகன்பேர்பலவுடையான்
விண்ணுதலாத்தோன்றியசீர்ப்பிரமபுரந்தொழவிரும்பி
எண்ணுதலாஞ்செல்வத்தையியல்பாகவறிந்தோமே. (௫)

எங்கேனும்யாதாகிப்பிறந்திடினுந்தன்னடியார்க்
கிங்கேயென்றருள்புரியுமெம்பெருமானெருதேறிக்
கொங்கேயுமலர்ச்சோலைக்குளிர்பிரமபுரத்துறையுஞ்
சங்கேயொத்தொளிர்மேனிச்சங்கரன்றன்றன்மைகளே. (௬)

சிலையதுவெஞ்* சிலையாகத்திரிபுரமூன்றெரிசெய்த
விலைதனை† வேற்றடக்கையனேந்திழையாளொருகூறன்
அலைபுனல்சூழ்பிரமபுரத்தருமணியையடிபணிந்தால்
நிலையுடையபெருஞ்செல்வநீடுலகிற்பெறலாமே. (௭)

எரிந்தமயிர்வாளரக்கன்வெற்பெடுக்கத்தோளொடுதாள்
நெரித்தருளுஞ்சிவமூர்த்திநீறணிந்தமேனியினான்
உரித்தவரித்தோலுடையானுறைபிரமபுரந்தன்னைத்
தரித்தமனமெப்போதும்பெறுவார்தாந்தக்காரே. (௮)

கரியானுநான்முகனுங்காணாமைக்கனலுருவாய்
அரியானாம்பரமேட்டியரவஞ்சேரகலத்தான்
தெரியாதானிருந்துறையுந்திகழ்பிரமபுரஞ்சேர
உரியார்தாமேழுலகுமுடனாளவுரியாரே. (௯)

உடையிலார்சீவரத்தார்தன்பெருமையுணர்வரியான்
முடையிலார்வெண்டலைக்கைமூர்த்தியாந்திருவுருவன்
பெடையிலார்வண்டாடும்பொழிற்பிரமபுரத்துறையுஞ்
சடையிலார்வெண்பிறையான்றாள்பணிவார்தக்காரே. (௧௦)

தன்னடைந்தார்க்கின்பங்கடருவானைத்தத்துவனைக்
கன்னடைந்தமதிற்பிரமபுரத்துறையுங்காவலனை
முன்னடைந்தான்சம்பந்தன்மொழிபத்துமிவைவல்லார்
பொன்னடைந்தார்போகங்கள்பலவடைந்தார்புண்ணியரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

* சிலையதவே என்றும் பாடம். † விலைதனி என்றும் பாடம்.

Koviloor Digital Library

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

கறையணிவேலிலர்போலுங்கபாலந்தரித்திலர்போலும்
மறையுநவின்றிலர்போலுமாசுணமார்த்திலர்போலும்
பறையுங்கரத்திலர்போலும்பாசம்பிடித்திலர்போலும்
பிறையுஞ்சடைக்கிலர்போலும்பிரமபுரமமர்ந்தாரே. (க)

கூரம்பதுவிலர்போலுங்கொக்கினிறகிலர்போலும்
ஆரமும்பூண்டிலர்போலுமாமையணிந்திலர்போலுந்
தாருஞ்சடைக்கிலர்போலுஞ்சண்டிக்கருளிலர்போலும் *
பேரும்பலவிலர்போலும்பிரமபுரமமர்ந்தாரே. (உ)

சித்தவடிவிலர்போலுந்தேசந்திரிந்திலர்போலுங்
கத்திவருங்கடுங்காளிகதங்கடவிர்த்திலர்போலும்
மெய்த்தநயனமிடந்தார்க்காழியளித்திலர்போலும்
பித்தவடிவிலர்போலும்பிரமபுரமமர்ந்தாரே. (ங)

நச்சரவாட்டிலர்போலுநஞ்சமிடற்றிலர்போலுங்
கச்சுத்தரித்திலர்போலுங்கங்கைதரித்திலர்போலும்
மொய்ச்சவன்பேயிலர்போலுமுப்புரமெய்திலர்போலும்
பிச்சையிரந்திலர்போலும்பிரமபுரமமர்ந்தாரே. (ச)

தோடுசெவிக்கிலர்போலுஞ்சூலம்பிடித்திலர்போலும்
ஆடுதடக்கைவலியவானையுரித்திலர்போலும்
ஓடுகரத்திலர்போலுமொள்ளழல்கையிலர்போலும்
பீடுமிகுத்தெழுசெல்வப்பிரமபுரமமர்ந்தாரே. (ரு)

விண்ணவர்கண்டிலர்போலும்வேள்வியழித்திலர்போலும்
அண்ணலயன்றலைவீழவன்றுமறுத்திலர்போலும்
வண்ணவெலும்பினொடக்குவடங்கடரித்திலர்போலும்
பெண்ணினமொய்த்தெழுசெல்வப்பிரமபுரமமர்ந்தாரே. (சு)

பன்றியின்கொம்பிலர்போலும்பார்த்தற்கருளிலர்போலுங்
கன்றியகாலனைவீழக்கால்கொடுபாய்ந்திலர்போலுந்
துன்றுபிணஞ்சுடுகாட்டிலாடித்துதைந்திலர்போலும்
பின்றியும்பீடும்பெருகும்பிரமபுரமமர்ந்தாரே. (எ)

பரசுதரித்திலர்போலும்படுதலைபூண்டிலர்போலும்
அரசனிலங்கையர்கோனையன்றுமடர்த்திலர்போலும்
புரைசெய்புனத்திளமானும்புலியினதளிலர்போலும்
பிரசமலர்ப்பொழில்சூழ்ந்தபிரமபுரமமர்ந்தாரே. (அ)

அடிமுடிமாலயன்றேடவன்றுமளப்பிலர்போலுங்
கடிமலரைங்கணைவேளைக்கனலவிழித்திலர்போலும்
படிமலர்ப்பாலனுக்காகப்பாற்கடலீந்திலர்போலும்
பிடிநடைமாதர்பெருகும்பிரமபுரமமர்ந்தாரே. (கூ)

* தண்டிக்கருளிலர் போலும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

வெற்றரைச்சிவரத்தார்க்குவெளிப்படநின்றிலர்போலும்
அற்றவரானிழலல்வர்க்கறங்களுரைத்திலர்போலும்
உற்றலரொன்றிலர்* போலுமோடுமுடிக்கிலர்போலும்
பெற்றமூர்ந்திலர்போலும்பிரமபுரமமர்ந்தாரே. (க0)

பெண்ணுருவாணுருவல்லாப்பிரமபுரநகர்மேய
அண்ணல்செய்யாதனவெல்லாமறிந்துவகைவகையாலே
நண்ணியஞானசம்பந்தனவின்றனபத்தும்வல்லார்கள்
விண்ணவரோடினிதாகவீற்றிருப்பாரவர்தாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

காமுனம்மலராற்புனன்மலர்தூவியேகலந்தேத்துமின்
பாமனூர்பலபேரினாற்பொலிபந்தர்சித்தர்கடாம்பயில்
வாமுன்னவ்வருள்செய்யவல்லவெம்மையனுடொறுமேயசீர்†
பிரமனூர்பிரமாபுரத்துறைபிஞ்ஞகன்னருள்பேணியே. (க)

விண்ணிலார்மதிசூடினன்விரும்புமறையவன்றன்றலை
உண்ணநன்பலிபேணினனுலகத்துளுனுயிரான்மலைப்
பெண்ணினூர்திருமேனியான்பிரமாபுரத்துறைகோயிலுள்
அண்ணலாருளாளனுபமர்கின்றவெம்முடையாதியே. (உ)

எல்லையில்புகழாளனும்மிமையோர்கணத்துடன்கூடியும்
பல்லையார்தலையிற்பலியதுகொண்டுகந்தபடிறனுந்
தொல்லைவையகத்தேறுதொண்டர்கடுமலர்சொரிந்தேத்தவே
மல்லையம்பொழிறேன்பில்கும்பிரமாபுரத்துறைமைந்தனே. (ஙு)

அடையலார்புரஞ்சிதியந்தணரேத்தமாமடமாதொடும்
பெடைபெலாங்கடற்கானல்புல்கும்‡பிரமாபுரத்துறைகோயிலான்
றொடையலார்நறுங்கொன்றையான்றொழிலேபாவிநின்றேத்தினல்
இடையிலார்சிவலோகமெய்துதற்கிறுகாரணங்காண்மினே. (சு)

வாயிடைம்மறையோதிமங்கையர்வந்திடப்பலிகொண்டுபோய்ப்
போயிடம்மெரிகானிடைப்புரிநாடகம்மினிதாடினன்
பேயொடுங்குடி¶வாழ்வினன்பிரமாபுரத்துறைபிஞ்ஞகன்
றாயிடைப்பொருடந்தைபாகுமென்றோதுவார்க்கருடன்மையே.§ (ஞ)

ஊடினலினியாவதென்னுயர்0நெஞ்சமேயுறுவல்வினைக்
கோடிநீயுழல்கின்றதென்னழலன்றுதன்கையிலேந்தினன்
பீடுநேர்ந்ததுகொள்கையான்00பிரமாபுரத்துறைவேதியன்
ஏடுநேர்மதியோடராவணிவெந்தையென்றுநின்றேத்திடே. (சா)

* உற்றவரென்றிலர் என்றும் உற்றவரோன்றிலர் என்றும் பாடம். † மெய்யசீர் என்றும் பாடம். ‡ கடற்கான்புகும் என்றும் பாடம். ¶ கூடி என்றும் பாடம். § ஓதுவார்க்குளதன்மையே என்றும் பாடம். 0 தென்னுயிர் என்றும் பாடம். 00 கொள்கையார் என்றும் பாடம்.

Koviloor Digital Library

செய்யன்வெள்ளியனொள்ளியார்சிலரென்றுமேத்திநினைந்திட
ஐயனாண்டகையந்தணன்னருமாமறைப்பொருளாயினான்
பெய்யுமாமழைபானவன்பிரமாபுரம்மிடம்பேணிய
வெய்யவெண்மழுவேந்தியைந்நினைந்தேத்துமின்வினைவீடவே. (எ)

கன்றிருக்கையிலேந்திநல்விளவின்கனிபடநூறியுஞ்
சென்றிருக்கியமாமறைப்பொருடேர்ந்தசெம்மலரோனுமாய்
அன்றரக்கனைச்செற்றவன்னடியும்முடியவைகாண்கிலார்
பின்றருக்கியதண்பொழிற்பிரமாபுரத்தான்பெற்றியே. (அ)

உண்டுடுக்கைவிட்டார்களும்முயர்கஞ்சிமண்டைகொடேரும்
பண்டடக்குசொற்பேசுமப்பரிவொன்றிலார்கள்சொற்கொள்ளன்மின்
றண்டொடக்குவன்சூலமுந்தழன்மாமழுப்படைதன்கையிற்
கொண்டொடுக்கியமைந்தனெம்பிரமாபுரத்துறைகூத்தனே. (கூ)

பித்தனைப்பிரமாபுரத்துறைபிஞ்ஞகன்கழல்பேணியே
மெய்த்தவத்துநின்றோர்களுக்குரைசெய்துநன்பொருண்மேவிட
வைத்தசிந்தையுண்ஞானசம்பந்தன்வாய்நவின்றெழுமாலைகள்
பொய்த்தவம்பொறிநீங்கவின்னிசைபோற்றிசெய்யுமெய்ம்மாந்தரே. (க0)

திருச்சிற்றம்பலம்.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

இறையவனீசனெந்தையிமையோர்தொழுதேத்தநின்ற
கறையணிகண்டன்வெண்டோடணிகாதினன்காலத்தன்று
மறைமொழிவாய்மையினான்மலையாளொடுமன்னுசென்னிப்
பிறையணிசெஞ்சடையான்பிரமாபுரம்பேணுமினே. (க)

சடையினன்சாமவேதன்சரிகோவணவன்மழுவாட்
படையினன்பாய்புலித்தோலுடையான்மறைபல்கலைநூல்
உடையவனூனமில்லியுடனாயுமைநங்கையென்னும்
பெடையொடும்பேணுமிடம்பிரமாபுரம்பேணுமினே. (உ)

மாணியைநாடுகாலனுயிர்மாய்தரச்*செற்றுக்காளி
காணியவாடல்கொண்டான்கலந்தூர்வழிசென்றுபிச்சை
ஊணியல்பாகக்கொண்டங்குடனேயுமைநங்கையொடும்
பேணியகோயின்மன்னும்பிரமாபுரம்பேணுமினே. (௩)

பாரிடம்விண்ணுமெங்கும்பயினஞ்சுபரந்துமிண்டப்†
பேரிடர்த்தேவர்கணம்பெருமானிதுகாவெனலும்
ஓரிடத்தேகரந்தங்குமைநங்கையொடும்முடனே
பேரிடமாகக்கொண்டபிரமாபுரம்பேணுமினே. (ச)

* மாய்ந்தற என்றும் பாடம். † பரந்து மண்ட என்றும் பாடம்.

Koviloor Digital Library

நச்சரவச்சடைமேனளிர்திங்களுமொன்றவைத்தங்
கச்சமெழவிடைமே*லழகார்மழுவேந்திநல்ல
இச்சைபகர்ந்துமிகவிடுமின்பலியென்றுநாளும்
பிச்சைகொளண்ணனன்னுறும்பிரமாபுரம்பேணுமினே. (ரு)

பெற்றவன்முப்புரங்கள்பிழையாவண்ணம்வாளியினாற்
செற்றவன்செஞ்சடையிற்றிகழ்கங்கைதனைத்தரித்திட்
டொற்றைவிடையினனுமுமைநங்கையொடும்முடனே
பெற்றிமையாலிருந்தான்பிரமாபுரம்பேணுமினே. (சு)

வேதமலிந்தவொலிவிழவின்னொலிவீணையொலி
கீதமலிந்துடனேகிளரத்திகழ்பௌவமறை
ஓதமலிந்துயர்வான்முகடேறவொண்மால்வரையான்
பேதையொடும்மிருந்தான்பிரமாபுரம்பேணுமினே. (எ)

இமையவராஞ்சியோடவெதிர்வாரவர்தம்மையின்றி
அமைதருவல்லரக்கன்னடர்த்தும்மலையன்றெடுப்பக்
குமைவதுசெய்துபாடக்கொற்றவாளொடுநாள்கொடுத்திட்
டுமையொடிருந்தபிரான்பிரமாபுரமுன்னுமினே. (அ)

ஞாலமளித்தவனும்மரியும்மடியோடுமுடி
காலம்பலசெலவுங்கண்டிலாமையினாற்கதறி
ஓலமிடவருளியுமைநங்கையொடும்முடனாய்
ஏலவிருந்தபிரான்பிரமாபுரமேத்துமினே. (கூ)

துவருறுமாடையினர்தொக்கபீலியர்நக்கரையர்
அவரவர்தன்மைகள்கண்டனுகேன்மினருள்பெறுவீர்
கவருறுசிந்தையொன்றிக்கழிகாலமெல்லாம்படைத்த
இவரவரென்றிறைஞ்சிப்பிரமாபுரமேத்துமினே. (க0)

உரைதருநான்மறையோர்புகழ்ந்தேத்தவொண்மாதினொடும்
வரையெனவீற்றிருந்தான்மலிகின்றபிரமபுரத்
தரசினையேத்தவல்லவணிசம்பந்தன்பத்தும்வல்லார்
விரைதருவின்னுலகம்மெதிர்கொள்ளவிரும்புவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

வேணுபுரம்.†

பண்-நட்டபாடை

திருச்சிற்றம்பலம்.

வண்டார்குழலரிவையொடுபிரியாவகைபாகம்
பெண்டான்மிகவானன்பிறைச்சென்னிப்பெருமானூர்
தண்டாமரைமலராளுறைதவளந்நெடுமாடம்
விண்டாங்குவபோலும்மிகுவேணுபுரமதுவே. (க)

* கச்சமழவிடைமேல் என்றும் பாடம். † வேணுபுரம்—சீர்காழி.

Koviloor Digital Library

படைப்புந்நிலையிறுதிப்பயன்பருமையொடுநேர்மை
கிடைப்பல்கணமுடையான்கிறிபூதப்படையானூர்
புடைப்பாளையின்கமுகின்னொடுபுன்னைமலர்நாற்றம்
விடைத்தேவருதென்றன்மிகுவேணுபுரமதுவே. (௨)

கடந்தாங்கியகரியையவர்வெருவவுரிபோர்த்துப்
படந்தாங்கியவரவக்குழைப்பரமேட்டிதன்பழவூர்
நடந்தாங்கியநடையார்நலபவளத்துவர்வாய்மேல்
விடந்தாங்கியகண்ணார்பயில்வேணுபுரமதுவே. (௩)

தக்கன்றனசிரமொன்றினையரிவித்தவன்றனக்கு
மிக்கவ்வரமருள்செய்தவெம்விண்ணோர்பெருமானூர்
பக்கம்பலமயிலாடிடமேகம்முழவதிர
மிக்கம்மதுவண்டார்பொழில்வேணுபுரமதுவே. (௪)

நானாவிதவுருவானமை* யாள்வானணுகார்தார்
வானார்திரிபுரமூன்றெரியுண்ணச்சிலைதொட்டான்
றேனார்ந்தெழுகதலிக்கனியுண்பான்றிகழ்மந்தி
மேனோக்கிநின்றிறங்கும்† பொழில்வேணுபுரமதுவே. (௫)

மண்ணோர்களும்விண்ணோர்களும்‡ வெருவிம்மிகவஞ்சக்
கண்ணார்சலமூடிக்கடலோங்கவ்வுயர்ந்தானூர்
தண்ணார்நறுங்கமலம்மலர்சாயவ்விளவாளை
விண்ணார்குதிகொள்ளும்வியன்வேணுபுரமதுவே. (௬)

மலையான்மகளஞ்சவ்வரையெடுத்தவ்வலியரக்கன்
றலைதோளவைநெரியச்சரணுகிர்வைத்தவன்றனூர்
கலையாறொடுசுருதித்தொகைகற்றோர்மிகுகூட்டம்
விலையாயினசொற்றேர்தருவேணுபுரமதுவே, (௮)

வயமுண்டவமாலும்மடிகாணாதலமாக்கும்
பயனாகியபிரமன்படுதலையேந்தியபரனூர்
கயமேவியசங்கந்தருகழி¶ விட்டுயர்செந்நெல்
வியன்மேவி§ வந்துறங்கும்பொழில்வேணுபுரமதுவே. (௯)

மாசேறியவுடலாரமண்குழுக்கள்ளொடுதேரர்
தேசேறியபாதம்வணங்காமைத்தெரியானூர்
தூசேறியவல்குற்றுடியிடையார்துணைமுலையார்
வீசேறியபுருவத்தவர்வேணுபுரமதுவே. (௰)

வேதத்தொலியானும்மிகு0 வேணுபுரந்தன்னைப்
பாதத்தினின்மனம்வைத்தெழுபந்தன்றனபாடல்00
ஏதத்தினையில்லாவிவைபத்தும்மிசைவல்லார்
கேதத்தினையில்லார்சிவகெதியைப்பெறுவாரே. () (௧௧)

திருச்சிற்றம்பலம்.

* வுருவாய்நமை என்றும் பாடம். † மேனோக்கிநின்றிரங்கும் என்றும் பாடம். ‡ விண்ணோர்களு மண்ணோர்களும் என்றும் பாடம். ¶ சயமேவிய சங்கந்தருகழி என்றும் பாடம். § வயன்மேவி என்றும் பாடம். 0 யானம்மிகு என்றும் பாடம். 00 தெழுசம்பந்தன பாடல் என்றும் பாடம். () இத்திருப்பதிகத்தில் ஏழாவதுசெய்யுள் மறைந்துபோயிற்று.

Koviloor Digital Library

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

நிலவும்புனலுந்நிறைவாளரவும்*
இலகுஞ்சடையார்க்கிடமாமெழிலார்
உலவும்வயலுக்கொளியார்முத்தம் †
விலகுங்கடலார்வேணுபுரமே. (க)

அரவார்கரவன்னமையார்திரடோட்
குரவார்குழலாளொருகூறனிடங்
கரவாதகொடைக்கலந்தாரவர்க்கு
விரவாகவல்லார்வேணுபுரமே. (உ)

ஆகம்மழகாயவடான்வெருவ
நாகம்முரிபோர்த்தவனன்னுமிடம்
போகந்தருசீர்வயல்சூழ்பொழில்கண்
மேகந்தவழும்வேணுபுரமே. (ங)

காசக்கடலில்விடமுண்டகண்டத்
தீசர்க்கிடமாவதுவின்னறவ
வாசக்கமலத்தனம்வன்றிரைகள்
வீசத்துயிலும்வேணுபுரமே. (ச)

அரையார்கலைசேரனமென்னடையை
உரையாவுகந்தானுறையும்மிடமாம்
நிரையார்கமுகின்னிகழ்பாளையுடை
விரையார்பொழில்சூழ்வேணுபுரமே. (ரு)

ஒளிரும்பிறையும்முறுகூவிளவின்
தளிருஞ்சடைமேலுடையானிடமாம்
களிரும்புனலின்னலசெங்கயல்கண்
மிளிரும்வயல்சூழ்வேணுபுரமே. (சு)

ஏவும்படைவேந்தனிராவணனை
ஆவென்றலறவடர்த்தானிடமாந்
தாவும்மறிமானொடுதண்மதியம் ‡
மேவும்பொழில்சூழ்வேணுபுரமே. (அ)

கண்ணன்கடிமாமலரிற்றிகழும்
அண்ணல்லிருவரறியாவிறையூர்
வண்ணச்சுதைமாளிகைமேற்கொடிகள்
விண்ணிற்றிகழும்வேணுபுரமே. (கூ)

போகம்மறியார்துவர்போர்த்துழல்வார்
ஆகம்மறியாவடியாரிறையூர்
மூகம்மறிவார்கலைமுத்தமிழ்நூல்
மீகம்மறிவார்வேணுபுரமே. (க0)

* இத்திருப்பதிகத்தில் ஏழாவது செய்யுள் மறைந்துபோயிற்று. † கொளியார்தரளம் என்றும் பாடம். ‡ தண்மதியும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

கலமார்கடல்போல்வளமார்தருநற்
புலமார்தருவேணுபுரத்திறையை
நலமார்தருஞானசம்பந்தன்சொன்ன
குலமார்தமிழ்கூறுவர்கூர்மையரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பூதத்தின்படையினீர்பூங்கொன்றைத்தாரினீர்
ஓதத்தினொலியோடும்பர்வானவர்புகுந்து
வேதத்தினிசைபாடிவிரைமலர்கள்சொரிந்தேத்தும்
பாதத்தீர்வேணுபுரம்பதியாகக்கொண்டீரே. (க)

சுடுகாடுமேவினீர்துன்னம்பெய்கோவணந்தோல்
உடையாடையது* கொண்டீருமையாளையொருபாகம்
அடையாளமதுகொண்டீரங்கையினிற்பரசுவெனும்
படையாள்வீர்வேணுபுரம்பதியாகக்கொண்டீரே. (உ)

கங்கைசேர்சடைமுடியீர்காலனைமுன்செற்றுகந்தீர்
திங்களோடிளவரவந்திகழ்சென்னிவைத்துகந்தீர்
மங்கையோர்கூறுடையீர்மறையோர்கணிறைந்தேத்தப்
பங்கயஞ்சேர்வேணுபுரம்பதியாகக்கொண்டீரே. (ங)

நீர்கொண்டசடைமுடிமேனீண்மதியம்பாம்பினொடும்
ஏர்கொண்டகொன்றையினோடெழின்மத்தமிலங்கவே
சீர்கொண்டமாளிகைமேற்சேயிழையார்வாழ்த்துரைப்பக்
கார்கொண்டவேணுபுரம்பதியாகக்கலந்தீரே. (ச)

ஆலைசேர்தண்கழனியழகாகநறவுண்டு
சோலைசேர்வண்டினங்களிசைபாடத்தூமொழியார்
காலையேபுகுந்திறைஞ்சிக்கைதொழமெய்மாதினொடும்
பாலையாழ்வேணுபுரம்பதியாகக்கொண்டீரே. (ரு)

மணிமல்குமால்வரைமேன்மாதினொடுமகிழ்ந்திருந்தீர்
துணிமல்குகோவணத்தீர்சுடுகாட்டிலாட்டுகந்தீர்
பணிமல்குமறையோர்கள்பரிந்திறைஞ்சவேணுபுரத்
தணிமல்குகோயிலேகோயிலாகவமர்ந்தீரே. (சு)

நீலஞ்சேர்மிடற்றினீர்நீண்டசெஞ்சடையினீர்
கோலஞ்சேர்விடையினீர்கொடுங்காலன்றனைச்செற்றீர்
ஆலஞ்சேர்கழனியழகார்வேணுபுரமமரும்
கோலஞ்சேர்கோயிலேகோயிலாக்கொண்டீரே. (எ)

* உடையாயவது என்றும் பாடம்.

Koviloor Digital Library

இரைமண்டிச்சங்* கேறுங்கடல்சூழ்தென்னிலங்கையர்கோன்
விரைமண்டுமுடிநெரியவிரல்வைத்தீர்வரைதன்னிற்
கரைமண்டிப்பேரோதங்கலந்தெற்றுங்† கடற்கவினார்
விரைமண்டுவேணுபுரமேயமர்ந்து‡ மிக்கீரே. (௮)

தீயோம்புமறைவாணர்க்காதியாந்திசைமுகன்மால்
போயோங்கியிழிந்தாரும்போற்றரியதிருவடியீர்
பாயோங்குமரக்கலங்கள்படுதிரையான்மொத்துண்டு
சேயோங்குவேணுபுரஞ்செழும்பதியாத்திகழ்ந்தீரே. (௯)

நிலையார்ந்தவுண்டியினர்¶ நெடுங்குண்டர்சாக்கியர்கள்
புலையானாரவுரையைப்போற்றாதுன்பொன்னடியே
நிலையாகப்பேணிநீசரணென்றார்தமையென்றும்
விலையாகவாட்கொண்டுவேணுபுரம்விரும்பினையே. § (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருப்புகலி.○

பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

விதியாய்விளைவாய்விளைவின்பயனாகிக்
கொதியாவருகூற்றையுதைத்தவர்சேரும்
பதியாவதுபங்கயநின்றலரத்தேன்
பொதியார்பொழில்சூழ்புகலிந்நகர்தானே. (௧)

ஒன்னார்புரமூன்றுமெரித்தவொருவன்
மின்னாரிடையாளொடுங்கூடியவேடந்
தன்னாலுறைவாவதுதண்கடல்சூழ்ந்த
பொன்னார்வயற்பூம்புகலிந்நகர்தானே. (௨)

வலியின்மதிசெஞ்சடைவைத்தமணாளன்
புலியின்னதள்கொண்டரையார்த்தபுனிதன்
மலியும்பதிமாமறையோர்நிறைந்தீண்டிப்
பொலியும்புனற்பூம்புகலிந்நகர்தானே. (௩)

கயலார்தடங்கண்ணியொடும்மெருதேறி
அயலார்கடையிற்பலிகொண்டவழகன்
இயலாலுறையுமிடமெண்டிசையோர்க்கும்
புயலார்கடற்பூம்புகலிந்நகர்தானே. (௪)

* திரைமண்டிச்சங் என்றும் பாடம். † பெருகோதங்கலந்தேறும் என்றும் பாடம். ‡ மெய்யமர்ந்து என்றும் பாடம். ¶ வுண்டியன என்றும் பாடம். § இத்திருப்பதிகத்தில் பத்தாவது செய்யுள் மறைந்துபோயிற்று. ○ திருப்புகலி—சீர்காழி.

Koviloor Digital Library

காதார்கனபொற்குழைதோடதிலங்கத்
தாதார்மலர்தண்சடையேற* முடித்து
நாதானுறையும்மிடமாவதுநாளும்
போதார்பொழிற்பூம்புகலிந்நகர்தானே. (ரு)

வலமார்படைமான்மழு † வேந்தியமைந்தன்
கலமார்கடனஞ்சமுதுண்டகருத்தன்
குலமார்பதிகொன்றைகள்பொன்சொரியத்தேன்
புலமார்வயற்பூம்புகலிந்நகர்தானே. (சு)

கறுத்தான்கனலான்மதின்மூன்றையும்வேவச்
செறுத்தான்றிகழுங்கடனஞ்சமுதாக
அறுத்தானயன்றன்சிரமைந்திலுமொன்றைப்
பொறுத்தானிடம்பூம்புகலிந்நகர்தானே. (எ)

தொழிலான்மிகுதொண்டர்கடோத்திரஞ்சொல்ல
எழிலார்வரையாலன்றரக்கனைச்செற்ற
கழலானுறையும்மிடங்கண்டல்கண்மிண்டிப்
பொழிலான்மலிபூம்புகலிந்நகர்தானே. (அ)

மாண்டார்சுடலைப்பொடிபூசி ‡ மயானத்
தீண்டாநடமாடியவேந்தன்றன்மேனி
நீண்டானிருவர்க்கெரியாயரவாரம்
பூண்டானகர்பூம்புகலிந்நகர்தானே. (கூ)

உடையார்துகில்போர்த்துழல்வார்சமண்கையர்
அடையாதனசொல்லுவராதர்களோத்தைக்
கிடையாதவன்றன்னகர்நன்மலிபூகம்
புடையார்தருபூம்புகலிந்நகர்தானே. (க0)

இரைக்கும்புனல்செஞ்சடைவைத்தவெம்மான்றன்
புரைக்கும்பொழிற்பூம்புகலிந்நகர்தன்மேல்
உரைக்குந்தமிழ்ஞானசம்பந்தனொண்மாலை
வரைக்குந்தொழில்வல்லவர்நல்லவர்தாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

ஆடலரவசைத்தானருமாமறைதான்விரித்தான் கொன்றை
சூடியசெஞ்சடையான்சுடுகாடமர்ந்தபிரான்
ஏடவிழ்மாமலையாளொருபாகமமர்ந்தடியா ரேத்த
ஆடியவெம்மிறையூர்புகலிப்பதியாமே. (க)

* தன்சடையேற என்றும் பாடம். † படைமாமழு என்றும் பாடம். ‡ பொடிப்பூசி என்றும் பாடம்.

Koviloor Digital Library

எலமலிகுழலாரிசைபாடியெழுந்தருளாற் சென்று
சோலைமலிசுனையிற்குடைந்தாடித்துதிசெய்ய
ஆலைமலிபுகை* போயண்டர்வானத்தைமூடிநின்று நல்ல
மாலைபதுசெய்யும்புகலிப்பதியாமே. (உ)

ஆறணிசெஞ்சடையானழகார்புரமூன்றுமன்று வேவ
நீறணியாகவைத்தநிமிர்புன்சடையெம்மிறைவன்
பாறணிவெண்டலையிற்பகலேபலியென்றுவந்து நின்ற
வேறணிகோலத்தினான்விரும்பும்புகலியதே. (ங)

வெள்ளமதுசடைமேற்கரந்தான்விரவார்புரங்கண் மூன்றுங்
கொள்ளவெரிமடுத்தான்குறைவின்றியுறைகோயில்
அள்ளல்விளைகழனியழகார்விரைத்தாமரைமே லன்னம்
புள்ளினம்வைகியெழும்புகலிப்பதிதானே. (ச)

சூடுமதிச்சடைமேற்சுரும்பார்மலர்க்கொன்றைதுன்ற நட்டம்
ஆடுமமார்பிரானழகாருமையோடுமுடன்
வேடுபடநடந்தவிகிர்தன்குணம்பரவித் தொண்டர்
பாடவினிதுறையும்புகலிப்பதியாமே. (ரு)

மைந்தணிசோலையின்வாய்மதுப்பாய்வரி † வண்டினங்கள் வந்து
நந்திசைபாடநடம்பயில்கின்றநம்பனிடம்
அந்திசெய்மந்திரத்தாலடியார்கள்பரவியெழ விரும்பும்
புந்திசெய்நான்மறையோர்புகலிப்பதிதானே. (சா)

மங்கையோர்கூறுகந்தமழுவாளன்வார்சடைமேற் திங்கள்
கங்கைதனைக்கரந்தகறைக்கண்டன்கருதுமிடஞ்
செங்கயல்வார்கழனிதிகழும்புகலிதனைச் சென்றுதம்
அங்கையினாற்றொழுவாரவலம்மறியாரே. (எ)

வில்லியனுண்ணிடை ‡ யாளுமையாள்விருப்பனவ னண்ணும்
நல்லிடமென்றறியாவலியும்மிலராக்கன்
பல்லொடுதோணெரியவிரலூன்றிப்பாடலுமே கைவாள்
ஒல்லையருள்புரிந்தானுறையும்புகலியதே. (அ)

தாதலர்தாமரைமேலயனுந்திருமாலுந் தேடி
ஓதியுங்காண்பரியவுமைகோனுறையுமிடம்
மாதவிவான்வகுளமலர்ந்தெங்கும்விரைதோய வாய்ந்த
போதலர்சோலைகள்சூழ்புகலிப்பதிதானே. (கூ)

வெந்துவர்மேனியினார்விரிகோவணந்தார் சொல்லும்
அந்தரஞானமெல்லாமவையோர்பொருளென்னேல்
வந்தெதிரும்புரமூன்றெரித்தானுறைகோயில் வாய்ந்த
புந்தியினார்பயிலும்புகலிப்பதிதானே. (க0)

* மலிப்புகை என்றும் பாடம். † மதுப்பாய்விரை என்றும் பாடம். ‡ வல்லிய நுண்ணிடை என்றும் பாடம்.

Koviloor Digital Library

வேதமோர்கீதமுணர்வாணர்தொழுதேத்த மிருவாசப்
போதனைப்போன்மறையோர்பயிலும்புகலிதன்னுள்
நாதனைஞானமிகுசம்பந்தன்றமிழ்மாலை நாவில்
ஓதவல்லாருலகினுறுநோய்களைவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

உகலியாழ்கடலோங்குபாருளீர்
அகலியாவினையல்லல்போயறும்
இகலியார்புரமெய்தவன்றுறை
புகலியாநகர்போற்றிவாழ்மினே. (க)

பண்ணியாள்வதோரேற்றர்பான்மதிக்
கண்ணியார்கமழ்கொன்றைசேர்முடிப்
புண்ணியன்றுறையும்புகலியை
நண்ணுமின்னலமானவேண்டிலே. (உ)

வீசுமின்புரைகாதன்மேதகு
பாசவல்வினைதீர்த்தபண்பினன்
பூசுநீற்றினன்பூம்புகலியைப்
பேசுமின்பெரிதின்பமாகவே.* (ங)

கடிகொள்கூவிளமத்தம்வைத்தவன்
படிகொள்பாரிடம்பேசும்பான்மையன்
பொடிகொண்மேனியன்பூம்புகலியுள்
அடிகளையடைந்தன்புசெய்புமே.† (ச)

பாதத்தாரொலிபல்சிலம்பினன்
ஓதத்தார்விடமுண்டவன்படைப்
பூதத்தான்புகலிந்நகர்தொழ
ஏதத்தார்க்கிடமில்லையென்பரே. (ரு)

மறையினானொலிமல்குவீணையன்
நிறையினார்நிமிர்புன்சடையனெம்
பொறையினானுறையும்புகலியை
நிறையினாற்றொழநேசமாகுமே. (சு)

கரவிடைமனத்தாரைக்காண்கிலான்
இரவிடைப்பலிகொள்ளுமெம்மிறை
பொருவிடையுயர்த்தான்புகலியைப்
பாவிடப்பயில்பாவம்பாறுமே. (எ)

* மாகுமே என்றும் பாடம். † செய்ம்மினே என்றும் பாடம்.

Koviloor Digital Library

அருப்பினார்முலைமங்கைபங்கினன்
விருப்பினானரக்கனுரஞ்செகும்
பொருப்பினான்பொழிலார்புகலியூர்
இருப்பினானடியேத்திவாழ்த்துமே. (௮)

மாலுநான்முகன்றானும்வார்கழற்
சிலமும்முடிதேடநீண்டெரி
போலுமேனியன்பூம்புகலியுட்
பாலதாடியபண்பனல்லனே. (௯)

நின்றுதுய்ப்பவர்நீசர்தேரர்சொல்
ஒன்றதாகவையாவுணர்வினுள் *
நின்றவன்னிகழும்புகலியைச்
சென்றுகைதொழச்செல்வமாகுமே. (௧௦)

புல்லமேறிதன்பூம்புகலியை
நல்லஞானசம்பந்தனவின்றற்
சொல்லுமாலையீரைந்தும்வல்லவர்க்
கில்லையாம்வினையிருநிலத்துளே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவிராகம். பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

முன்னியகலைப்பொருளுமுவுலகில்வாழ்வும்
பன்னியவொருத்தர்பழவூர்வினவின்ஞாலந்
துன்னியிமையோர்கடுதிசெய்துமுன்வணங்குஞ்
சென்னியர்விருப்புறுதிருப்புகலியாமே. (௧)

வண்டிரைமதிச்சடைமிலைத்தபுனல்சூடிப்
பண்டெரிகைபாடுபரமன்பதியதென்பர்
புண்டரிகவாசமதுவீசமலர்†சோலைத்
தெண்டிரைகடற்பொலிதிருப்புகலியாமே. (௨)

பாவணவுசிந்தையவர்பத்தரொடுகூடி
நாவணவுமந்தணன்விருப்பிடமதென்பர்
பூவணவுசோலையிருண்மாலையெதிர்கூரத்
தேவணவிழா‡வளர்திருப்புகலியாமே. (௩)

மைதவழுமாமிடறன்மாநடமதாடிக்
கைவளையினாளொடுகலந்தபதியென்பர்
செய்பணிபெருத்தெழுமுருத்திரர்கள்கூடித்
தெய்வமதினைக்குறுதிருப்புகலியாமே. (௪)

* வையாருணர்விலுள் என்றும் பாடம். † வாசமதுவீசமலர் என்றும் பாடம். ‡ தேவணர்விழா என்றும் பாடம்.

Koviloor Digital Library

முன்னமிருமூன்றுசமயங்களவையாகிப்
பின்னையருள்செய்தபிறையாளனுறைகோயில்
புன்னையமலர்ப்பொழில்* களக்கினொளிகாட்டச்
செந்நெல்வயலார்தருதிருப்புகலியாமே. (ரு)

வங்கமலியுங்கடல்விடத்தினைநுகர்ந்த
அங்கணனருத்திசெய்திருக்குமிடமென்பர்
கொங்கணவியன்பொழிலின்மாசுபனிமூசத் †
தெங்கணவுதேன்மலிதிருப்புகலியாமே. (சு)

நல்குரவுமின்பமுநலங்களவையாகி
வல்வினைகடீர்த்தருளுமைந்தனிடமென்பர்
பல்கு ‡ மடியார்கள்படியாரவிசைபாடிச்
செல்வமறையோருறைதிருப்புகலியாமே. (எ)

பரப்புறுபுகழ்ப்பெருமையாளன்வரைதன்னால்
அரக்கனையடர்த்தருளுமண்ணலிடமென்பர்
நெருக்குறுகடற்றிரைகண்முத்தமணிசிந்தச்
செருக்குறுபொழிற்பொலிதிருப்புகலியாமே. (அ)

கோடலொடுகூன்மதிகுலாயசடைதன்மேல்
ஆடரவம்வைத்தருளுமப்பனிருவர்க்கும்
நேடவெரியாகியிருபாலுமடிபேணித்
தேடவுறையுங்நகர்திருப்புகலியாமே. (கூ)

கற்றமணருற்றுலவுதேரருரைசெய்த
குற்றமொழிகொள்கையதிலாதபெருமானூர்
பொற்றொடிமடந்தையருமைந்தர்புலனைந்துஞ்
செற்றவர்விருப்புறு ¶ திருப்புகலியாமே. (க0)

செந்தமிழ்பரப்புறுதிருப்புகலிதன்மேல்
அந்தமுதலாகிநடுவாயபெருமானைப்
பந்தனுரைசெய்தமிழ்கள் § பத்துமிசைகூர
வந்தவணமேத்துமவர்வானமுடையாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

உருவார்ந்தமெல்லியலோர்பாகமுடையீரடைவோர்க்குக்
கருவார்ந்தவானுலகங்காட்டிக்கொடுத்தல்கருத்தானீர்
பொருவார்ந்ததெண்கடலொண்சங்கந்திளைக்கும்பூம்புகலித்
திருவார்ந்தகோயிலேகோயிலாகத்திகழ்ந்தீரே. (க)

* புன்னைமலரப்பொழில் என்றும் பாடம். † பனிமூச என்றும் பாடம். ‡ மல்கு என்றும் பாடம். ¶ செற்றவர்வனப்புறு என்றும் பாடம். § செந்தமிழ்கள் என்றும் பாடம்.

Koviloor Digital Library

நீரார்ந்தசெஞ்சடையீர்நிரையார்கழல்சேர்பாதத்தீர்
ஊரார்ந்தசில்பலியீருழைமானுரிதோலாடையீர்
போரார்ந்ததெண்டிரைசென்றணையுங்கானற்பூம்புகலிச்
சீரார்ந்தகோயிலேகோயிலாகச்சேர்ந்தீரே. (உ)

அழிமல்குபூம்புனலுமரவுஞ்சடைமேலடைவெய்த
மொழிமல்குமாமறையீர்கறையார்கண்டத்தெண்டோளீர்
பொழின்மல்குவண்டினங்களறையுங்கானற்பூம்புகலி
எழின்மல்குகோயிலேகோயிலாகவிருந்தீரே. (௩)

கையிலார்ந்தவெண்மழுவொன்றுடையீர்கடியகரியின்றோல்
மயிலார்ந்தசாயன்மடமங்கைவெருவமெய்போர்த்தீர்
பயிலார்ந்தவேதியர்கள்பதியாய்விளங்கும்பைம்புகலி
எயிலார்ந்தகோயிலேகோயிலாகவிசைந்தீரே. (௪)

நாவார்ந்தபாடலீராடலரவமரைக்கார்த்தீர்
பாவார்ந்தபல்பொருளினின்பயன்களானீரயன்பேணும்
பூவார்ந்தபொய்கைகளும்வயலுஞ்சூழ்ந்தபொழிற்புகலித்
தேவார்ந்தகோயிலேகோயிலாகத்திகழ்ந்தீரே. (௫)

மண்ணார்ந்தமண்முழவந்ததும்பமலையான்மகளென்னும்
பெண்ணார்ந்தமெய்மகிழப்பேணியெரிகொண்டாடினீர்
விண்ணார்ந்தமதியமிடைமாடத்தாரும்வியன்புகலிக்
கண்ணார்ந்தகோயிலேகோயிலாகக்கலந்தீரே. (௬)

களிபுல்குவல்லவுணரூர்மூன்றெரியக்கணைதொட்டீர்
அளிபுல்குபூமுடியீரமரரேத்தவருள்செய்தீர்
தெளிபுல்குதேனினமுமலருள்விரைசேர்திண்புகலி
ஒளிபுல்குகோயிலேகோயிலாகவுகந்தீரே. (௭)

பரந்தோங்குபல்புகழ்சேரரக்கர்கோனைவரைக்கீழிட்
டுரந்தோன்றும்பாடல்கேட்டுகவையளித்தீருகவாதார்
புரந்தோன்றுமும்மதிலுமெரியச்செற்றீர்பூம்புகலி
வரந்தோன்றுகோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (௮)

சலந்தாங்குதாமரைமேலயனுந்தரணியளந்தானுங்
கலந்தோங்கிவந்திழிந்துங்காணாவண்ணங்கனலானீர்
புலந்தாங்கியைம்புலனுஞ்செற்றார்வாழும்பூம்புகலி
நலந்தாங்குகோயிலேகோயிலாகநயந்தீரே. (௯)

நெடிதாயவன்சமணுநிறைவொன்றில்லாச்சாக்கியருங்
கடிதாயகட்டுரையாற்கழறமேலோர்பொருளானீர்
பொடியாருமேனியினீர்புகலிமறையோர்புரிந்தேத்த
வடியாருங்கோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (௧0)

Koviloor Digital Library

ஒப்பரியபூம்புகலியோங்குகோயின்மேயானை
அப்பரிசிற்பதியானவணிகொண் * ஞானசம்பந்தன்
செப்பரியதண்டமிழாற்றெரிந்தபாடலிவைவல்லார்
எப்பரிசிலிடர்நீங்கியிமையோருலகத்திருப்பாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பண் - செவ்வழி.

திருச்சிற்றம்பலம்.

விடையதேறிவெறியக்கரவார்த்தவிமலனார் †
படையதாகப்பரசுதரித்தார்க்கிடமாவது
கொடையிலோவார்குலமும்முயர்ந்தம்மறையோர்கடாம்
புடைகொள்வேள்விப்புகையும்பருலாவும்புகலியே. (க)

வேலைதன்னின்மிகுநஞ்சினையுண்டிருள்கண்டனார்
ஞாலமெங்கும்பலிகொண்டுழல்வார்நகராவது
சாலநல்லார்பயிலும்மறைகேட்டுப்பதங்களைச்
சோலைமேவுங்கிளித்தான்சொற்பயிலும்புகலியே. (உ)

வண்டுவாழுங்குழன்மங்கையோர்கூறுகந்தார்மதித்
துண்டமேவுஞ்சுடர்த்தொல்சடையார்க்கிடமாவது
கெண்டைபாயமடுவில்லுயர்கேதகைமாதவி
புண்டரீகம்மலர்ப்பொய்கைநிலாவும்புகலியே. (ங)

திரியுமூன்றுபுரமும்மெரித்துத்திகழ்வானவர்க்
கரியபெம்மானரவக்குழையார்க்கிடமாவது
பெரியமாடத்துயருங்கொடியின்மிடைவால்வெயிற்
புரிவிலாததடம்பூம்பொழில்சூழ்தண்புகலியே. (ச)

ஏவிலாருஞ்சிலைப்பார்த்தனுக்கின்னருள்செய்தவர்
நாவினாண்மூக்கரிவித்தநம்பர்க்கிடமாவது
மாவிலாருங்கனிவார்கிடங்கில்விழவாளைபோய்ப்
பூவிலாரும்புனற்பொய்கையில்வைகும்புகலியே. (ரு)

தக்கன்வேள்விதகர்த்ததலைவன்றையலாளொடும்
ஒக்கவேயெம்முரவோனுறையும்மிடமாவது
கொக்குவாழைபலவின்கொழுந்தண்கனிகொன்றைகள்
புக்கவாசப்புன்னைபொன்றிரள்காட்டும்புகலியே. (சா)

தொலைவிலாதவரக்கன்னுரத்தைத்தொலைவித்தவன்
றலையுந்தோளுந்நெரித்தசதுரர்க்கிடமாவது
கலையின்மேவும்மனத்தோரிரப்போர்க்குக்கரப்பிலார்
பொலியுமந்தண்பொழில்சூழ்ந்தழகாரும்புகலியே. (அ)

* அப்பரிசிற்பதியானை யணிகொண் என்றும் பாடம். † இத்திருப்பதிகத்தில் எழாவதுசெய்யுள் மறைந்துபோயிற்று.

Koviloor Digital Library

கிண்டுபுக்கார்பறந்தேயுயர்ந்தார் *கேழலன்னமாய்க்
காண்டுமென்றார்கழல்பணியநின்றார்க்கிடமாவது
நீண்டநாரையிரையாரல்வாரநிறைசெறுவினிற்
பூண்டுமிக்கவ்வயல்காட்டுமந்தண்புகலியதே. (௯)

தடுக்குடுத்துத்தலையைப்பறிப்பாரொடுசாக்கியர்
இடுக்கணுப்பாரிறைஞ்சாதவெம்மாற்கிடமாவது
மடுப்படுக்குஞ்சுருதிப்பொருள்வல்லவர்வாணுளோர்
அடுத்தடுத்துப்புகுந்தீண்டுமந்தண்புகலியதே. (௧௦)

எய்தவொண்ணாவிறைவனுறைகின்றபுகலியைக்
கைதவமில்லாக்கவுணியன்ஞானசம்பந்தன்சீர்
செய்தபத்துமிவைசெப்பவல்லார்சிவலோகத்தில்
எய்திநல்லவிமையோர்களேத்தவிருப்பார்களே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

நாலடிமேல்வைப்பு. பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

இயலிசையெனும்பொருணின்றிறமாம்†
புயலனமிடறுடைப்புண்ணியனே
கயலனவரிநெடுங்கண்ணியொடும்
அயலுலகடிதொழவமர்ந்தவனே
கலனாவதுவெண்டலைகடிபொழிற்புகலிதன்னுள்
நிலனாடொறுமின்புறநிறைமதியருளினனே. (௧)

நிலையுறுமிடர்நிலையாதவண்ணம்
இலையுறுமலர்கள்கொண்டேத்துதும்யாம்
மலையினிலரிவையைவெருவவன் ‡ றோல்
அலைவருமதகரியுரித்தவனே
இமையோர்கணின்றுதொழுவெழில்திகழ்பொழிற்புகலி
உமையாளொடுமன்னினையுயர்திருவடியிணையே. (௨)

பாடினையருமறைவரன்முறையால்
ஆடினைகாணமுன்னருவனத்திற்
சாடினைகாலனைத்தயங்கொளிசேர்
நீடுவெண்பிறைமுடிநின்மலனே
நினையேயடியார்தொழுநெடுமதிற்புகலிந்நகர்
தனையேயிடமேவினைதவநெறியருளெமக்கே. (௩)

நிழறிகழ்மழுவினையானையின்றோல்
அழறிகழ்மேனியிலணிந்தவனே
கழறிகழ்சிலம்பொலியலம்பநல்ல
முழவொடுமருநடமுயற்றினனே
முடிமேன்மதியரவம்முருகமர்பொழிற்புகலி
அடியாரவரேத்துறவழுவொடுமிருந்தவனே. (௪)

* பறந்தாரயர்ந்தார் என்றும் பாடம். † பொருளின்திறமாம் என்றும் பாடம்.
‡ வெருவவன்—றோலைவருமதகரி என்றும் பாடம்.

Koviloor Digital Library

கருமையினொளிர்கடனஞ்சமுண்ட
உரிமையினுலகுயிரளித்தநின்றன்
பெருமையைநிலத்தவர்பேசினல்லால்
அருமையிலளப்பரிதாயவனே
அரவேரிடையாளொடுமலைகடன்மலிபுகலிப்
பொருள்சேர்தரநாடொறும்புவிமிசைப்பொலிந்தவனே. (௫)

அடையரிமாவொடுவேங்கையின்றோல்
புடைபடவரைமிசைப்புனைந்தவனே
படையுடைநெடுமதிற்பரிசழித்த
விடையுடைக்கொடிமல்குவேதியனே
விகிர்தாபரமாநின்னைவிண்ணவர்தொழப்புகலித்
தகுவாய்மடமாதொடுந்தாள்பணிந்தவர்தமக்கே. (௬)

அடியவர்தொழுதெழவமரரேத்தச்
செடியவல்வினைபலதீர்ப்பவனே
துடியிடையகலல்குற்றாமொழியைப்
பொடியணிமார்புறப்புல்கினனே
புண்ணியாபுனிதாபுகரேற்றினைபுகலிந்நகர் *
நண்ணினாய்கழலேத்திடநண்ணகிலாவினையே. (௭)

இரவொடுபகலதாமெம்மானுன்னைப் †
பரவுதலொழிகிலேன்வழியடியேன்
குரவிரிநறுங்கொன்றைகொண்டணிந்த
அரவிரிசடைமுடியாண்டகையே
அனமென்னடையாளொடுமதிர்கடலிலங்கைமன்னை
இனமார்தருதோளடர்த்திருந்தனைபுகலியுளே. (௮)

உருகிடவுவகைதந்துடலினுள்ளாற்
பருகிடமமுதனபண்பினனே
பொருகடல்வண்ணனும்பூவுளானும்
பெருகிடமருளெனப்பிறங்கெரியாய்
உயர்ந்தாயினிநீயெனையொண் ‡ மலரடியிணைக்கீழ்
வயந்தாங்குறநல்கிடுவளர்மதிற்புகலிமனே. (௯)

கையினிலுண்பவர்கணிகைநோன்பர் ¶
செய்வனதவமலாச்செதுமதியார்
பொய்யவருரைகளைப்பொருளெனாத
மெய்யவரடிதொழவிரும்பினனே
வியந்தாய்வெள்ளேற்றினைவிண்ணவர்தொழுபுகலி
உயர்ந்தார்பெருங்கோயிலுளொருங்குடனிருந்தவனே. (௧௦)

* புகலி நன்னகர் என்றும் பாடம். † எம்மானின்னை என்றும் பாடம். ‡ உயர்ந்தாயெனையொண் என்றும், உயர்ந்தாய் நீயெனையொண் என்றும் பாடம். ¶ கணிகை நோன்பவர் என்றும் பாடம்.

புண்ணியர்தொழுதெழுபுகலிந்நகர்
விண்ணவரடிதொழவிளங்கினானை
நண்ணியஞானசம்பந்தன்வாய்மை
பண்ணியவருந்தமிழ்பத்தும்வல்லார்
நடலையவையின்றிப்போய்நண்ணுவர்சிவனுலகம்
இடராயினவின்றித்தாமெய்துவர்தவநெறியே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

கண்ணுதலானும்வெண்ணீற்றினானுங்கழலார்க்கவே
பண்ணிசைபாடநின்றாடினானும்பரஞ்சோதியும்
புண்ணியநான்மறையோர்களேத்தும்புகலிந்நகர்ப்
பெண்ணினல்லாளொடும்வீற்றிருந்தபெருமானன்றே. (க)

சாம்பலோடுந்தழலாடினானுஞ்சடையின்மிசைப்
பாம்பினோடும்மதிசூடினானும்பசுவேறியும்
பூம்படுகல்லிளவாளைபாயும்புகலிந்நகர்க்
காம்பனதோளியொடும்மிருந்தகடவுளன்றே. (உ)

கருப்புநல்வார்சிலைக்காமன்வேவக்கடைக்கண்டானும்
மருப்புநல்லானையினீருரிபோர்த்தமணாளனும்
பொருப்பனமாமணிமாடமோங்கும்புகலிந்நகர்
விருப்பினல்லாளொடும்வீற்றிருந்தவிமலனன்றே. (ங)

அங்கையிலங்கழலேந்தினானும்மழகாகவே
கங்கையைச்செஞ்சடைசூடினானுங்கடலின்னிடைப்
பொங்கொநஞ்சமுதுண்டவனும்புகலிந்நகர்
மங்கைநல்லாளொடும்வீற்றிருந்தமணவாளனே. (ச)

சாமநல்வேதனுந்தக்கன்றன்வேள்விதகர்த்தானும்
நாமநூறாயிரஞ்சொல்லிவானோர்தொழுநாதனும்
பூமல்குதண்பொழின்மன்னுமந்தண்புகலிந்நகர்க்
கோமளமாதொடும்வீற்றிருந்தகுழகனன்றே. (ரு)

இரவிடையொள்ளெரியாடினானுமிமையோர்தொழச்
செருவிடைமுப்புரந்தீயெரித்தசிவலோகனும்
பொருவிடையொன்றுகந்தேறினானும்புகலிந்நகர்
அரவிடைமாதொடும்வீற்றிருந்தவழகனன்றே. (சா)

சேர்ப்பதுதிண்சிலைமேவி* னானுந்திகழ்பாலன்மேல்
வேர்ப்பதுசெய்தவெங்கூற்றுதைத்தானும்வேள்விப்புகை
போர்ப்பதுசெய்தணிமாடமோங்கும்புகலிந்நகர்ப்
பார்ப்பதியோடுடன்வீற்றிருந்தபரமனன்றே. (எ)

* சேர்ப்பொழுதிற்சிலைமேவி என்றும், சேர்ப்பொருது மல்லிலைவி என்றும் பாடம்.

Koviloor Digital Library

கன்னெடுமால்வரைக்கீழரக்கன்னிடர்கண்டானும்
மின்னெடும்போர்விறல்வேடனுகிவிசயற்கொரு
பொன்னெடுங்கோல்கொடுத்தானுமந்தண்புகலிந்நகர்
அன்னமன்னநடைமங்கையொடும்மமர்ந்தானன்றே. (அ)

பொன்னிறநான்முகன்பச்சையானென்றிவர்புக்குழித்
தன்னையின்னனெனக்காண்பரியதழற்சோதியும்
புன்னைபொன்றூதிர்மல்குமந்தண்புகலிந்நகர்
மின்னிடைமாதொடும்வீற்றிருந்தவிமலனன்றே. (௯)

பிண்டியும்போதியும்பேணுவார்பேச்சினைப்பேணாதோர்:*
தொண்டருங்காதல்செய்சோதியாயசுடர்ச்சோதியான்
புண்டரீகம்மலர்ப்பொய்கைசூழ்ந்தபுகலிந்நகர்
வண்டமர்கோதையோடும்மிருந்தமணவாளனே. (௧0)

பூங்கமழ்கோதையோடும்மிருந்தான்புகலிந்நகர்ப்
பாங்கனைஞானசம்பந்தன்சொன்னதமிழ்பத்திவை
ஆங்கமர்வெய்தியவாதியாகவிசைவல்லவர்
ஓங்கமாவதியோர் † தொழச்செல்வதுமுண்மையே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

வினாவுரை.

திருப்புகலியும் திருவீழிமிழலையும்.

பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

மைம்மரு பூங்குழற்கற்றைதுற்றவாணுதன்மான்விழிமங்கையோடும்
பொய்ம்மொழியாமறையோர்களேத்தப்புகலிநிலாவியபுண்ணியனே
எம்மிறையேயிமையாதமுக்கணீசவெனேசவிதென்கொல்சொல்லாய்
மெய்ம்மொழிநான்மறையோர்மிழலைவிண்ணிழிகோயில்விரும்பியதே. (௧)

கழன்மல்குபந்தொடம்மானைமுற்றில்கற்றவர்சிற்றிடைக்கன்னிமார்கள்
பொழின்மல்குகிள்ளையைச்சொற்பயிற்றும்புகலிநிலாவியபுண்ணியனே
எழின்மலரோன்சிரமேந்தியுண்டோரின்புறுசெல்வமிதென்கொல்சொல்லாய்
மிழலையுள்வேதியரேத்திவாழ்த்தவிண்ணிழிகோயில்விரும்பியதே. (௨)

கன்னியராடல்கலந்துமிக்கந்தகவாடைகலந்துதுங்கப்
பொன்னியன்மாடநெருங்குசெல்வப்புகலிநிலாவியபுண்ணியனே
இன்னிசையாழ்மொழியாளோர்பாகத்தெம்மிறையேயிதுவென்கொல்சொல்லாய்
மின்னியனுண்ணிடையார்மிழலைவிண்ணிழிகோயில்விரும்பியதே. (௩)

* பேணுவார் பேச்சைப் பேணாதோர் என்றும் பாடம். † சுமரர்பதியோர் எனப் பாடமோதுவாருமுளர்.

Koviloor Digital Library

நாகபணந்திகழல்குன்மல்குநன்னுதன்மான்விழிமங்கையோடும்
பூகவனப்பொழில்சூழ்ந்தவர்தண்புகலிநிலாவியபுண்ணியனே
எகபெருந்தகையாயபெம்மானெம்மிறையேயிதுவென்கொல்சொல்லாய்
மேகமுரிஞ்செயில்சூழ்மிழலைவிண்ணிழிகோயில்விரும்பியதே. (ச)

சந்தளறேறுதடங்கொள்கொங்கைத்தையலொடுந்தளராதவாய்மைப்
புந்தியினன்* மறையோர்களேத்தும்புகலிநிலாவியபுண்ணியனே
எந்தமையாளுடையீசவெம்மானெம்மிறையேயிதுவென்கொல்சொல்லாய்
வெந்தவெண்ணீறணிவார்மிழலைவிண்ணிழிகோயில்விரும்பியதே. (ரு)

சங்கொலியிப்பி† சுறுமகரந்தாங்கிநிரந்துதரங்கமேன்மேற்
பொங்கொலிநீர்சுமந்தோங்குசெம்மைப்புகலிநிலாவியபுண்ணியனே
எங்கள்பிரானிமையோர்கள்பெம்மானெம்மிறையேயிதுவென்கொல்சொல்லாய்
வெங்கதிர்தோய்ப்பொழில்சூழ்மிழலைவிண்ணிழிகோயில்விரும்பியதே. (சு)

காமனெரிப்பிழம்பாகநோக்கிக்காம்பனதோளியொடுங்கலந்து
பூமருநான்முகன்போல்வரேத்தப்புகலிநிலாவியபுண்ணியனே
ஈமவனத்தெரியாட்டுகந்தவெம்பெருமானிதுவென்கொல்சொல்லாய்
வீமருதண்பொழில்சூழ்மிழலைவிண்ணிழிகோயில்விரும்பியதே. (எ)

இலங்கையர்வேந்தெழில்வாய்த்ததிண்டோளிற்றலறவ்விரலொற்றியைந்து
புலங்களைகட்டவர்போற்றவந்தண்புகலிநிலாவியபுண்ணியனே
இலங்கெரியேந்திநின்றெல்லியாடுமெம்மிறையேயிதுவென்கொல்சொல்லாய்
விலங்கலொண்மாளிகைசூழ்மிழலைவிண்ணிழிகோயில்விரும்பியதே. (அ)

செறிமுளரித்தவிசேறியாறுஞ்செற்றதில்‡ வீற்றிருந்தானுமற்றைப்
பொறியரவத்தணையானுங்காணாப்புகலிநிலாவியபுண்ணியனே
எறிமழுவோடிளமான்கையின்றியிருந்தபிரானிதுவென்கொல்சொல்லாய்
வெறிகமழ்பூம்பொழில்சூழ்மிழலைவிண்ணிழிகோயில்விரும்பியதே. (கூ)

பத்தர்கணம்பணிந்தேத்தவாய்த்தபான்மையதன்றியும்பல்சமணும்
புத்தருநின்றலர்தூற்றவந்தண்புகலிநிலாவியபுண்ணியனே
எத்தவத்தோர்க்குமிலக்காய்நின்றவெம்பெருமானிதுவென்கொல்சொல்லாய்
வித்தகர்வாழ்பொழில்சூழ்மிழலைவிண்ணிழிகோயில்விரும்பியதே. (கo)

விண்ணிழிகோயில்விரும்பிமேவும்வித்தகமென்கொலிதென்றுசொல்லிப்
புண்ணியனைப்புகலிந்நிலாவுபூங்கொடியோடிருந்தானைப்போற்றி
நண்ணியகீர்த்திநலங்கொள்கேள்விநான்மறைஞானசம்பந்தன்சொன்ன
பண்ணியல்பாடல்வல்லார்களிந்தப்பாரொடுவிண்பரிபாலகரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

* புந்தியினர் என்றும் பாடம். † கொலியிப்பி என்றும் பாடம்; ஒலித்தல்-தழைத்தல். ‡ சேறியாறுஞ்சேற்றதில் என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருஞானசம்பந்தப்பிள்ளையார் திருவீழிமிழலையில் இருக்கும்போது சீர்காழிப் பிராமணர் திருவீழிமிழலையை அடைந்து, பிள்ளையாரைச் சீர்காழிக்கு எழுந்தருளல் வேண்டும் என்று பிரார்த்திக்கப் பிள்ளையார் இன்று கழித்து வருவேன் என்றார். தோணியப்பர் அன்றிரவு பிள்ளையாருக்குச் சொப்பனத்திலே தோன்றி, "நாம் திருத்தோணியில் எழுந்தருளியிருக்குந் திருக்கோலத்தை இத்திருவீழிமிழலையிலேயுள்ள விண்ணிழிந்த விமானத்திலே காட்டுவோம் காண்" என்று சொல்லி மறைந்தருளினார். பிள்ளையார் விழித்து எழுந்து, திருக்கோயிலிற்சென்று அவ்வாறே தோணியப்பரைக்கண்டு மனமகிழ்ந்து வணங்கி 'மைம்மருபூங்குழல்' என்னும் வினவுரைப்பதிகம் பாடியருளினார்.

திருவெங்குரு. *

பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

காலைநன்மாமலர்கொண்டடிபரவிக்கைதொழுமாணியைக்கறுத்தவெங்காலன்
ஓலமிடமுன்னுயிரொடுமாளவுதைத்தவனுமையவள்விருப்பனெம்பெருமான்
மாலைவந்தணுகவோதம்வந்துலவிமறிதிரைசங்கொடுபவளமுனுந்தி
வேலைவந்தணையுஞ்சோலைகள்சூழ்ந்தவெங்குருமேவியுள்வீற்றிருந்தாரே. (௧)

பெண்ணினைப்பாகமமர்ந்துசெஞ்சடைமேற்பிறையொடுமரவினையணிந்தழகாகப்
பண்ணினைப்பாடியாடிமுன்பலிகொள்பரமரெம்மடிகளார்பரிசுகள்பேணி
மண்ணினைமூடிவான்முகடேறிமறிதிரைகடன்முகந்தெடுப்பமற்றுயர்ந்து
விண்ணளவோங்கிவந்திழிகோயில்வெங்குருமேவியுள்வீற்றிருந்தாரே. (௨)

ஓரியல்பில்லாவுருவமதாகியொண்டிறல்வேடனதுருவதுகொண்டு [மான்
காரிகைகாணத்தனஞ்சயன்றன்னைக்கறுத்தவற்களித்து † டன்காதல்செய்பெரு
நேரிசையாகவறுபதமுரன்றுநிரைமலர்த்தாதுகண்மூசவிண்டுதிர்ந்து
வேரிகளெங்கும்விம்மியசோலைவெங்குருமேவியுள்வீற்றிருந்தாரே. (௩)

வண்டணைகொன்றைவன்னியுமத்தமருவியகூவிளமெருக்கொடுமிக்க
கொண்டணிசடையர்விடையினர்பூதங்கொடுகொட்டிகுடமுழாக்கூடியுமுழவப்‡
பண்டிகழ்வாகப்பாடியொர்வேதம்பயில்வர்முன்பாய்புனற்கங்கையைச்சடைமேல்
வெண்பிறைசூடியுமையவளோடும்வெங்குருமேவியுள்வீற்றிருந்தாரே. (௪)

சடையினர்மேனிநீறதுபூசித்தக்கைகொள்பொக்கணமிட்டுடனாகக்
கடைதொறும்வந்துபலியதுகொண்டுகண்டவர்மனமவைகவர்ந்தழகாகப்
படையதுவேந்திப்பைங்கயற்கண்ணி ¶ யுமையவள்பாகமுமமர்ந்தருள்செய்து
விடையொடுபூதஞ்சூழ்தரச்சென்றுவெங்குருமேவியுள்வீற்றிருந்தாரே. (௫)

கரைபொருகடலிற்றிரையதுமோதக்கங்குல்வந்தேறியசங்குமுமிப்பி
உரையுடைமுத்தமணலிடைவைகியோங்குவானிருளறத்துரப்பவெண்டிசையும்
புரைமலிவேதம்போற்றுபூசுரர்கள்புரிந்தவர்நலங்கொளாகுதியினினிறைந்த
விரைமலிதூபம்விசும்பினைமறைக்கும்வெங்குருமேவியுள்வீற்றிருந்தாரே. (௬)

* திருவெங்குரு--சீர்காழி. † கறுத்ததற்களித்து என்றும் பாடம். ‡ கூடியமுழவம் என்றும் பாடம். ¶ பங்கயக்கண்ணி என்றும் பாடம்.

Koviloor Digital Library

வல்லிநுண்ணிடையாளுமையவடன்னைமறுகிடவருமதகளிற்றினைமயங்க
ஒல்லையிற்பிடித்தங்குரித்தவள்வெருவல்கெடுத்தவர்விரிபொழின்மிகுதிருவாலில்
நல்லறமுரைத்துஞானமோடிருப்பநலிந்திடலுற்றுவந்தவக்கருப்பு
வில்லியைப்பொடிபடவிழித்தவர்விரும்பிவெங்குருமேவியுள்வீற்றிருந்தாரே.

பாங்கிலாவரக்கன்கயிலையன்றெடுப்பப்பலதலைமுடியொடுதோளவைநெரிய
ஓங்கியவிரலாலூன்றியன்றவற்கேயொளிதிகழ்வாளதுகொடுத்தழகாய [வர்
கோங்கொடுசெருந்திகூவிளமத்தங்கொன்றையுங்குலாவியசெஞ்சடைச்செல்
வேங்கைபொன்மலரார்விரைதரு* கோயில்வெங்குருமேவியுள்வீற்றிருந்தாரே.

ஆறுடைச்சடையெம்மடிகளைக்காணவரியொடுபிரமனுமளப்பதற்காகிச்
சேறிடைத்திகழ்வானத்திடைபுக்குஞ்செலவறத்தவிர்ந்தனரெழிலுடைத்திகழ்வெண்
ணீறுடைக்கோலமேனியர்நெற்றிக்கண்ணினர்விண்ணவர்கைதொழுதேத்த
வேறெமையாளவிரும்பியவிகிர்தர்வெங்குருமேவியுள்வீற்றிருந்தாரே. (௯)

பாடுடைக்குண்டர்சாக்கியர்சமணர்பயிறருமறவுரைவிட்டழகாக
ஏடுடைமலராள்பொருட்டுவன்றக்கனெல்லையில்வேள்வியைத்தகர்த்தருள்செய்து
காடிடைக்கடிநாய்கலந்துடன்சூழக்கண்டவர்வெருவுறவிளித்துவெய்தாய
வேடுடைக்கோலம்விரும்பியவிகிர்தர்வெங்குருமேவியுள்வீற்றிருந்தாரே. (௧௦)

விண்ணியல்விமானம்விரும்பியபெருமான்வெங்குருமேவியுள்வீற்றிருந்தாரை
நண்ணியநூலன்ஞானசம்பந்தனின்றமிழ்வாய்மொழிகலமிகுபத்தும்
பண்ணியல்பாகப்பத்திமையாலேபாடியுமாடியும்பயிலவல்லோர்கள்
விண்ணவர்விமானங்கொடுவரவேறிவியனுலகாண்டுவீற்றிருப்பவர்தாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருமுக்கால். பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

விண்ணவர்தொழுதெழுவெங்குருமேவிய
சுண்ணவெண்பொடியணிவீரே
சுண்ணவெண்பொடியணிவீருமதொழுகழல்
எண்ணவல்லாரிடரிலரே. (௧)

வேதியர்தொழுதெழுவெங்குருமேவிய
ஆதியவருமறையீரே
ஆதியவருமறையீருமையலர்கொடு
ஓதியருணர்வுடையோரே. (௨)

விளங்குதண்பொழிலணிவெங்குருமேவிய
இளம்பிறையணிசடையீரே
இளம்பிறையணிசடையீருமதிணையடி
உளங்கொளவுறுபிணியிலரே. (௩)

* வேங்கைபொன்மலராவிரைதரு என்றும் பாடம்.

Koviloor Digital Library

விண்டலர்பொழிலணிவெங்குருமேவிய
வண்டமர்வளர்சடையீரே
வண்டமர்வளர்சடையீருமைவாழ்த்துமத்
தொண்டர்கடுயர்பிணியிலரே. (ச)

மிக்கவர்தொழுதெழுவெங்குருமேவிய
அக்கினொடரவசைத்தீரே
அக்கினொடரவசைத்தீருமதடியிணை
தக்கவருறுவதுதவமே. (ரு)

வெந்தவெண்பொடியணிவெங்குருமேவிய
அந்தமில்பெருமையினீரே
அந்தமில்பெருமையினீருமையலர்கொடு
சிந்தைசெய்வோர்வினைசிதைவே. (சு)

விழமல்குபொழிலணிவெங்குருமேவிய
அழன்மல்குமங்கையினீரே
அழன்மல்குமங்கையினீருமையலர்கொடு
தொழவல்லல்கெடுவதுதுணிவே. (எ)

வித்தகமறையவர்வெங்குருமேவிய
மத்தநன்மலர்புனைவீரே
மத்தநன்மலர்புனைவீருமதடிதொழுஞ்
சித்தமதுடையவர்திருவே. (அ)

மேலவர்தொழுதெழுவெங்குருமேவிய
ஆலநன்மணிமிடற்றீரே
ஆலநன்மணிமிடற்றீருமதடிதொழுஞ்
சீலமதுடையவர்திருவே. (கூ)

விரைமல்குபொழிலணிவெங்குருமேவிய
அரைமல்குபுலியதளீரே
அரைமல்குபுலியதளீருமதடியிணை
உரைமல்குபுகழவருயர்வே.* (கo)

திருச்சிற்றம்பலம்.

திருத்தோணிபுரம்.†

பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

வண்டரங்கப்புனற்கமலமதுமாந்திப்பெடையினொடும்
ஒண்டரங்கவிசைபாடுமளியரசேயொளிமதியத்
துண்டரங்கப்பூண்மார்பர்திருத்தோணிபுரத்துறையும்
பண்டரங்கர்க்கென்னிலைமைபரிந்தொருகாற்பகராயே (க)

* இத்திருப்பதிகத்தில் பதினோராவது செய்யுள் மறைந்துபோயிற்று. † திருத்தோணிபுரம்—சீர்காழி.

Koviloor Digital Library

எறிசுறவங்கழிகானலிளங்குருகேயென்பயலை
அறிவுறுதொழிவதுவுமருவினையேன்பயனன்றே *
செறிசிறார்பதமோதுந்திருத்தோணிபுரத்துறையும்
வெறிநிறார் † மலர்க்கண்ணிவேதியர்க்குவிளம்பாயே. (உ)

பண்பழனக்கோட்டகத்துவாட்டமிலாச்செஞ்சூட்டுக்
கண்பகத்தின்வாரணமேகடுவினையேனுறுபயலை
செண்பகஞ்சேர்பொழில்புடைசூழ்திருத்தோணிபுரத்துறையும்
பண்பனுக்கென்பரிசுரைத்தாற் ‡ பழியாமோமொழியாயே. (ங)

காண்டகையசெங்காலொண்கழிநாராய்காதலாற்
பூண்டகையமுலைமெலிந்துபொன்பயந்தாளென்றுவளர்
சேண்டகையமணிமாடத்திருத்தோணிபுரத்துறையும்
ஆண்டகையாற்கின்றேசென்றடியறியவுணர்த்தாயே. (ச)

பாராரேபெண்ணைபொருகாற்றொழுகின்றேன்பாங்கமைந்த
காராருஞ்செழுநிறத்துப்பவளக்காற்கபோதகங்காள் ¶
தேராருநெடுவீதித்திருத்தோணிபுரத்துறையும்
நீராருஞ்சடையாருக்கென்னிலைமைநிகழ்த்திரே. (ரு)

சேற்றெழுந்தமலர்க்கமலச்செஞ்சாலிக்கதிர்வீச 0
வீற்றிருந்தவன்னங்காள்விண்ணோடுமண்மறைகள்
தோற்றுவித்ததிருத்தோணிபுரத்தீசன்றுளங்காத
கூற்றுதைத்ததிருவடியேகூடுமாகூறிரே. (சு)

முன்றில்வாய்மடற்பெண்ணைக்குரம்பைவாழ்முயங்குசிறை
அன்றில்காள்பிரிவுறுநோயறியாதிர்மிகவல்லீர்
தென்றலார்புகுந்துலவுந்திருத்தோணிபுரத்துறையுங்
கொன்றைவார்சடையார்க்கென்கூர்பயலைகூறிரே. (எ)

பானுறுமலர்ச்சூதப்பல்லவங்களவைகோதி
ஏனோர்க்குமினிதாகமொழியுமெழிலிளங்குயிலே
தேனுரும்பொழில்புடைசூழ்திருத்தோணிபுரத்தமரர்
கோனரைபென்னிடைக்கே 00 வரவொருகாற்கூவாயே. (அ)

நற்பதங்கண்மிகவறிவாய்கானுன்னைவேண்டுகின்றேன்
பொற்பமைந்தவாயலகிற்பூவைநல்லாய்போற்றுகின்றேன்
சொற்பதஞ்சேர்மறையாளர்திருத்தோணிபுரத்துறையும்
விற்பொலிதோள்விகிர்தனுக்கென்மெய்ப்பயலைவிளம்பாயே. (கூ)

சிறையாருமடக்கிளியேயிங்கேவாதேனொடுபால்
முறையாலேயுணத்தருவன்மொய்பவளத்தொடுதாளந்
துறையாருங்கடற்றோணிபுரத்தீசன்றுளங்குமிளம்
பிறையாளன்றிருநாமமெனக்கொருகாற்பேசாயே. (க0)

* வினையின்பயனன்றே என்றும் பாடம். † வெறிநீமுர் என்றும் பாடம். ‡ கென்மொழியுரைத்தால் என்றும் பாடம். ¶ கபோதங்காள் என்றும் பாடம். 0 செஞ்சாலிகதிர் என்றும் பாடம். 00 யென்னிடத்தே என்றும் பாடம்.

Koviloor Digital Library

போர்மிகுத்தவயற்றோணிபுரத்துறையும்புரிசடையெங்
கார்மிகுத்தகறைக்கண்டத்திறையவனைவண்கமலத்
தார்மிகுத்தவரைமார்பன்சம்பந்தனுரைசெய்த
சீர்மிகுத்ததமிழ்வல்லார்சிவலோகஞ்சேர்வாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவிராகம். பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

சங்கமருமுன்கைமடமாதையொருபாலுடன்விரும்பி
அங்கமுடன்மேலுறவணிந்துபிணிதீரவருள்செய்யும்
எங்கள்பெருமானிடமெனத்தகுமுனைக்கடலின்முத்தந்
துங்கமணியிப்பிகள்கரைக்குவருதோணிபுரமாமே. (க)

சல்லரியியாழ்முழவமொந்தைகுழறாளமதியம்பக்
கல்லரியமாமலையர்பாவையொருபாகநிலைசெய்து
அல்லெரிகையேந்திநடமாடுசடையண்ணலிடமென்பர்
சொல்லரியதொண்டர்துதிசெய்யவளர்தோணிபுரமாமே. (உ)

வண்டரவுகொன்றைவளர்புன்சடையின்மேன்மதியம்வைத்துப்
பண்டரவுதன்னரையிலார்த்தபரமேட்டிபழிதீரக்
கண்டரவவொண்கடலினஞ்சமமுதுண்டகடவுள்ளூர்
தொண்டரவர்மிண்டிவழிபாடுமல்குதோணிபுரமாமே. (ங)

கொல்லைவிடையேறுடையகோவணவனுவணவுமாலை
ஒல்லையுடையானடையலாரரணமொள்ளழல்விளைத்த
வில்லையுடையான்மிகவிரும்புபதிமேவிவளர்தொண்டர்
சொல்லையடைவாகவிடர்தீர்த்தருள்செய்தோணிபுரமாமே. (ச)

தேயுமதியஞ்சடையிலங்கிடவிலங்கன்மலிகானிற்
காயுமடுதிண்கரியினீருரிவைபோர்த்தவனினைப்பார்
தாயெனநிறைந்ததொருதன்மையினர்நன்மையொடுவாழ்வு
தூயமறையாளர்முறையோதிநிறைதோணிபுரமாமே. (ரு)

பற்றலர்தமுப்புரமெரித்தடிபணிந்தவர்கண்மேலைக்
குற்றமதொழித்தருளுகொள்கையினன்வெள்ளின்முதுகானிற்
பற்றவனிசைக்கிளவிபாரிடமதேத்தநடமாடுந்
துற்றசடையத்தனுறைகின்றபதிதோணிபுரமாமே. (சு)

பண்ணமருநான்மறையர்நூன்முறைபயின்றதிருமார்பிற்
பெண்ணமருமேனியினர்தம்பெருமைபேசுமடியார்மெய்த்
திண்ணமரும்வல்வினைகடீரவருள்செய்தலுடையானூர்
துண்ணெனவிரும்புசரிதைத்தொழிலர்தோணிபுரமாமே. (எ)

Koviloor Digital Library

தென்றிசையிலங்கையரையன்றிசைகள்வீரம்விளைவித்து
வென்றிசைபுயங்களை* யடர்த்தருளும்வித்தகனிடஞ்சீர்
ஒன்றிசையியற்கிளவிபாடமயிலாடவளர்சோலை
துன்றுசெயவண்டுமலிதும்பிமுரறோணிபுரமாமே. (அ)

நாற்றமிகுமாமலரின்மேலயனுநாரணனுநாடி
ஆற்றலதனான்மிகவளப்பரியவண்ணமெரியாகி
ஊற்றமிகுகீழுலகுமேலுலகுமோங்கியெழுதன்மைத்
தோற்றமிகநாளுமரியானுறைவு† தோணிபுரமாமே. (௯)

மூடுதுவராடையினர்வேடநிலைகாட்டுமமணாதர்
கேடுபலசொல்லிடுவரம்மொழிகெடுத்தடைவினானக்
காடுபதியாகநடமாடிமடமாதொடிருகாதிற்
றோடுகுழைபெய்தவர்தமக்குறைவுதோணிபுரமாமே. (க0)

துஞ்சிருளினின்றுநடமாடிமிகுதோணிபுரமேய
மஞ்சனைவணங்குதிருஞானசம்பந்தனசொன்மாலை
தஞ்சமெனநின்றிசைமொழிந்தவடியார்கடமாற்றம்
வஞ்சமிலர்நெஞ்சிருணீங்கியருள்பெற்றுவளர்வாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பண் - பழம்பஞ்சரம்.

திருச்சிற்றம்பலம்.

கரும்பமர்வில்லியைக்காய்ந்துகாதற்காரிகைமாட்டருளி‡
அரும்பமர்கொங்கையோர்பான்மகிழ்ந்தவற்புதஞ்செப்பரிதால்
பெரும்பகலேவந்தென்பெண்மைகொண்டுபேர்த்தவர்சேர்ந்தவிடஞ்
சுரும்பமர்சோலைகள்சூழ்ந்தசெம்மைத்தோணிபுரந்தானே. (க)

கொங்கியல்பூங்குழற்கொவ்வைச்செவ்வாய்க்கோமளமாதுமையாள்
பங்கியலுந்திருமேனியெங்கும்பால்வெள்ளைநீறணிந்து
சங்கியல்வெள்வளைசோரவந்தென்சாயல்கொண்டார்தமதூர்
துங்கியன்மாளிகைசூழ்ந்தசெம்மைத்தோணிபுரந்தானே. (௨)

மத்தக்களிற்றுரிபோர்க்கக்கண்டுமாதுமைபேதுறலுஞ்
சித்தந்தெளியநின்றாடியேறூர்தீவண்ணர்சில்பலிக்கென்
றொத்தபடிவந்தென்னுள்ளங்கொண்டவொருவர்க்கிடம்போலுந்
துத்தநல்லின்னிசைவண்டுபாடுந்தோணிபுரந்தானே. (௫)

வள்ளலிருந்தமலையதனைவலஞ்செய்தல்வாய்மையெனா
உள்ளக்கொள்ளாதுகொதித்தெழுந்தன்றெடுத்தோனுரநெரிய
மெள்ளவிரல்வைத்தென்னுள்ளங்கொண்டார்மேவுமிடம்போலுந்
துள்ளொலிவெள்ளத்தின்மேன்மிதந்ததோணிபுரந்தானே. (அ)

* வென்றிசெய்புயங்களை என்றும் பாடம். † மதிபாலுறைவு என்றும் பாடம்.
‡ இத்திருப்பதிகத்தில் ௩, ௪, ௬, ௭ இச்செய்யுள்கள் மறைந்துபோயின.

Koviloor Digital Library

வெல்பறவைக்கொடிமாலுமற்றைவிரைமலர்மேலயனும்
பல்பறவைப்படியாயுயர்ந்தும்பன்றியதாய்ப்பணிந்துஞ்
செல்வறநீண்டெஞ்சிந்தைகொண்டசெல்வரிடம்போலுந்
தொல்பறவை * சுமந்தோங்குசெம்மைத்தோணிபுரந்தானே. (கூ)

குண்டிகைபீலிதட்டோடுநின்றுகோசரங்கொள்ளியரும்
மண்டைகையேந்திமனங்கொள்கஞ்சியூணரும்வாய்மடிய
இண்டைபுனைந்தெருதேறிவந்தெனெழில்கவர்ந்தாரிடமாந்
தொண்டிசைபாடலறாததொன்மைத்தோணிபுரந்தானே. (க0)

தூமருமாளிகைமாடநீடுதோணிபுரத்திறையை
மாமறைநான்கினொடங்கமாறும்வல்லவன்வாய்மையினால்
நாமருகேள்விநலந்திகழுஞானசம்பந்தன்சொன்ன
பாமருபாடல்கள்பத்தும்வல்லார்பார்முழுதாள்பவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

மாதியன்று † மனைக்கிருவென்றக்கால்
நீதிதான்சொலநீயெனக்காரெனுஞ்
சோதியார்தருதோணிபுரவர்க்குத்
தாதியாவனானென்னுமென்றையலே. (க)

நக்கம்வந்துபலியிடென்றார்க்கிட்ட
மிக்கதையலைவெள்வளைகொள்வது
தொக்கநீர்வயற்றோணிபுரவர்க்குந் ‡
தக்கதன்றுதமதுபெருமைக்கே. (உ)

கெண்டைபோனயனத்திமவான்மகள்
வண்டுவார்குழலாளுடனாகவே
துண்டவான்பிறைத்தோணிபுரவரைக்
கண்டுகாமுறுகின்றனள்கன்னியே. (ங)

பாலையாழ்மொழியாளவடாழ்சடை
மேலளாவதுகண்டனள்விண்ணுறச்
சோலையார்தருதோணிபுரவர்க்குச்
சாலநல்லளாகின்றனடையலே. (ச)

பண்ணினேர்மொழியாள்பலியிட்டவிப்
பெண்ணைமால்கொடுபெய்வளைகொள்வது
சுண்ணமாடியதோணிபுரத்துறை
அண்ணலாருக்குச்சாலவழகிதே. (ரு)

* திருக்கழுமலத்திருப்பதிகத்துள் திருநாவுக்கரசுநாயனாரும் 'நின்பாத மெல்லாம்—நாலஞ்சுபுள்ளின மேந்தினவென்பர்' என்று கூறியருளினமை காண்க; தொல்பரவை என்றும் பாடம். † மாதியென்று என்றும் பாடம். ‡ புரவனார் என்றும் பாடம்.

Koviloor Digital Library

முல்லைவெண்ணகைமொய்குழலாயுனக்
கல்லலாவதறிந்திலேநீகனித்
தொல்லையார்பொழிற்றோணிபுரவர்க்கே
நல்லையாயிடுகின்றனைநங்கையே. (சு)

ஒன்றுதானறியாருலகத்தவர்
நின்றுசொல்லிநிகழ்ந்த*நினைப்பிலர்
துன்றுவார்பொழிற்றோணிபுரவர்தங்
கொன்றைசூடுங்குறிப்பதுவாகுமே. (எ)

உறவுபேய்க்கணமுண்பதுவெண்டலை
உறைவதிம்முடலிமேலோர்பெண்கொடி
துறைகளார்கடற்றோணிபுரத்துறை
இறைவனார்க்கிவளென்கண்டன்பாவதே. (அ)

மாகயானைமருப்போர்முலையினர்
போகயானுமவள்புக்கதேபுகத்
தோகைசேர்தருதோணிபுரவர்க்கே
ஆகயானுமவர்க்கினியாளதே. (கூ)

இட்டமாயினசெய்வாளென்பெண்கொடி
கட்டம்பேசியகாரரக்கன்றனைத்
துட்டடக்கியதோணிபுரத்துறை
அட்டமூர்த்திக்குவன்பதுவாகியே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருப்பூந்தராய். †

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

செந்நெலங்கழனிப்பழனத்தயலேசெழும்
புன்னைவெண்கிழியிற்பவளம்புரைபூந்தராய்
துன்னிநல்லிமையோர்முடிதோய்கழலீர் ‡ சொலீர்
பின்னுசெஞ்சடை ¶ யிற்பிறைபாம்புடன்வைத்ததே. (க)

எற்றுதெண்டிரையேறியசங்கினொடிப்பிகள்
பொற்றிகழ்கமலப்பழனம்புகுபூந்தராய்ச்
சுற்றிநல்லிமையோர்தொழுபொற்கழலீர்சொலீர்
பெற்றமேறுதல்பெற்றிமையோபெருமானிரே. (உ)

* நிகழ்த்த என்றும் பாடம். † திருப்பூந்தராய்—சீர்காழி. ‡ நல்லிமையோர் தொழுபொற்கழலீர் என்றும்பாடம். ¶ மின்னுசெஞ்சடைஎன்றும் பாடம்.

Koviloor Digital Library

சங்குசெம்பவளத்திரண்முத்தவைதாங்கொடு
பொங்குதெண்டிரைவந்தலைக்கும்புனற்பூந்தராய்த்
துங்கமால்களிற்றின்னுரிபோர்த்துகந்தீர்சொலீர்
மங்கைபங்குமங்கத்தொடொன்றியமாண்பதே. (௩)

சேமவன்மதில்பொன்னணிமாளிகைசேணுயர்
பூமணங்கமழும்பொழில்சூழ்தருபூந்தராய்ச்
சோமனும்மரவுந்தொடர்செஞ்சடையீர்சொலீர்
காமன்வெண்பொடியாகக்கடைக்கண்சிவந்ததே. (௪)

பள்ளமீனிரைதேர்ந்துழலும்பகுவாயன
புள்ளுநாடொறுஞ்சேர்பொழில்சூழ்தருபூந்தராய்த்
துள்ளுமான்மறியேந்தியசெங்கையினீர்சொலீர்
வெள்ளநீரொருசெஞ்சடைவைத்தவியப்பதே. (௫)

மாதிலங்கியமங்கையராடமருங்கெலாம்
போதிலங்கமலம்மதுவார்புனற்பூந்தராய்ச்
சோதியஞ்சுடர்மேனிவெண்ணீறணிவீர்சொலீர்
காதிலங்குழைசங்கவெண்டோடுடன்வைத்ததே. (௬)

வருக்கமார்தருவான்கடுவன்னொடுமந்திகள்
தருக்கொள்சோலைதருங்கனிமாந்தியபூந்தராய்த்
துரக்குமால்விடைமேல்வருவீரடிகேள்சொலீர்
அரக்கனாற்றலழித்தருளாக்கியவாக்கமே. (அ)

வரிகொள்செங்கயல்பாய்புனல்சூழ்ந்தமருங்கெலாம்
புரிசைநீடியர்மாடநிலாவியபூந்தராய்ச்
சுருதிபாடியபாணியறாமொழியீர்சொலீர்
கரியமாலயனேடியுமைக்கண்டிலாமையே. (௯)

வண்டலங்கழனிம்மடைவாளைகள்பாய்புனற்
புண்டரீகமலர்ந்துமதுத்தருபூந்தராய்த்
தொண்டர்வந்தடிபோற்றிசெய்தொல்கழலீர்சொலீர்
குண்டர்சாக்கியர்கூறியதாங்குறியின்மையே. (௧௦)

மகரவார்கடல்வந்தணவும்மணற்கானல்வாய்ப்*
புகலிஞானசம்பந்தனெழின்மிகுபூந்தராய்ப்
பகவனாரைப்பரவுசொன்மாலைபத்தும்வல்லார்
அகல்வர்தீவினைநல்வினையோடுடனாவரே.† (௧௧)

திருச்சிற்றம்பலம்.

* வாய்—புகலி என்றும் பாடம். †இத்திருப்பதிகத்தில் ஏழாஞ்செய்யுள் மறைந்துபோயிற்று.

Koviloor Digital Library

பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

பந்துசேர்விரலாள்பவளத்துவர்வாயினாள்பனிமாமதிபோன்முகத்
தந்தமில்புகழாண்மலைமாதொடுமாதிப்பிரான்*
வந்துசேர்விடம்வானவரெத்திசையுந்நிறைந்துவலஞ்செய்துமாமலர்
புந்திசெய்திறைஞ்சிப்பொழிபூந்தராய்போற்றுதுமே. (௧)

காவியங்கருங்கண்ணினாள்கனித்தொண்டைவாய்க்கதிர்முத்தநல்வெண்ணகைத்
தூவியம்பெடையன்னநடைச்சுரிமென்குழலாள்
தேவியுந்திருமேனியோர்பாகமாயொன்றிரண்டொருமூன்றொடுசேர்பதி
பூவிலந்தணனொப்பவர்பூந்தராய்போற்றுதுமே. (௨)

பையராவருமல்குன்மெல்லியல்பஞ்சின்னேரடிவஞ்சிகொளுண்ணிடைத்
தையலாளொருபாலுடையெம்மிறைசாருமிடஞ்
செய்யெலாங்கழுநீர்கமலம்மலர்த்தேறலூறலிற்சேறுலராதநற்
பொய்யிலாமறையோர்பயில்பூந்தராய்போற்றுதுமே. (௩)

முள்ளிநாண்முகைமொட்டியல்கோங்கினரும்புதென்கொள்குரும்பைமூவாமருந்
துள்ளியன்றபைம்பொற்கலசத்தியலொத்தமுலை†
வெள்ளிமால்வரையன்னதோர்மேனியின்மேவினார்பதிவீமருதண்பொழிற்
புள்ளினந்துயின்மல்கியபூந்தராய்போற்றுதுமே. (௪)

பண்ணியன்றெழுமென்மொழியாள்பகர்கோதையேர்திகழ்பைந்தளிர்மேனியோர்
பெண்ணியன்றமொய்ம்பிற்பெருமாற்கிடம்பெய்வளையார்
கண்ணியன்றெழுகாவிச்செழுங்கருநீலமல்கியகாமருவாவிநற்
புண்ணியருறையும்பதிபூந்தராய்போற்றுதுமே. (௫)

வாணிலாமதிபோனுதலாள்மடமாழைபொன்கணாள்வண்டரளந்நகை‡
பாணிலாவியவின்னிசையார்மொழிப்பாவையொடுஞ்
சேணிலாத்திகழ்செஞ்சடையெம்மண்ணல்சேர்வதுசிகரப்பெருங்கோயில்சூழ்
போணிலாநுழையும்பொழிற்பூந்தராய்போற்றுதுமே. (௬)

காருலாவியவார்குழலாள்கயற்கண்ணினாள்புயற்காலொளிமின்னிடை
வாருலாவியமென்முலையாண்மலைமாதுடனாய்
நீருலாவியசென்னியன்மன்னிநிகருநாமமுந்நான்குநிகழ்பதி
போருலாவெயில்சூழ்பொழிற்பூந்தராய்போற்றுதுமே. (௭)

காசைசேர்குழலாள்கயலேர்தடங்கண்ணிகாம்பனதோட்கதிர்மென்முலைத்
தேசுசேர்மலைமாதமருந்திருமார்பகலந்
ஈசன்மேவுமிருங்கயிலையெடுத்தானையன்றடர்த்தாளிணைச்சேவடி
பூசைசெய்பவர்சேர்பொழிற்பூந்தராய்போற்றுதுமே. (௮)

* ஆதிபிரான் என்றும் பாடம். † தியல்பொத்தமுலை என்றும் பாடம். ‡ வெண்டாளந்நகை என்றும் பாடம்.

Koviloor Digital Library

கொங்குசேர்குழலாணிழல்வெண்ணகைக்கொவ்வைவாய்க்கொடி யேரிடையா
பங்குசேர்திருமார்புடையார்படர்தீயுருவாய் [ளுமை
மங்குல்வண்ணனுமாமலரோனுமயங்கநீண்டவர்வான்மிசைவந்தெழு
பொங்குநீரின்மிதந்தநற்பூந்தராய்போற்றுதுமே. (கூ)

கலவமாமயிலாரியலாள்கரும்பன்னமென்மொழியாள்கதிர்வாணுதற்
குலவுபூங்குழலாளுமைகூறனைவேறுரையால்
அலவைசொல்லுவார்தேரமணாதர்களாக்கினான்றனைநண்ணலுநல்குநற்
புலவர்தாம்புகழ்பொற்பதிபூந்தராய்போற்றுதுமே. (க0)

தேம்பனுண்ணிடையாள்செழுஞ்சேலனகண்ணியோ டண்ணல்சேர்விடந்தே
பூம்பொழிறிகழ்பொற்பதிபூந்தராய்போற்றுதுமென் [னமர்
றோம்புதன்மையன்முத்தமிழ்நான்மறைஞானசம்பந்தனொண்டமிழ்மாலைகொண்
டாம்படியிவையேத்தவல்லார்க்கடையாவினையே. (கக)

திருச்சிற்றம்பலம்.

ஈரடிமேல்வைப்பு. பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

தக்கன்வேள்விதகர்த்தவன்பூந்தராய்
மிக்கசெம்மைவிமலன்வியன்கழல்
சென்றுசிந்தையில்வைக்கமெய்க்கதி
நன்றதாகியநம்பன்றானே. (க)

புள்ளினம்புகழ்போற்றியபூந்தராய்
வெள்ளந்தாங்குவிகிர்தனடிதொழ
ஞாலத்தில்லுயர்வாருள்குநன்னெறி
மூலமாயமுதலவன்றானே. (௨)

வேந்தராயுலகாளவிருப்புறிற்
பூந்தராய்நகர்மேயவன்பொற்கழல்
நீதியானினைந்தேத்தியுள்கிடச்
சாதியாவினையானதானே. (௩)

பூசுரர்தொழுதேத்தியபூந்தராய்
ஈசன்சேவடியேத்தியிறைஞ்சிடச்
சிந்தைநோயவைதீரநல்கிடும்
இந்துவார்சடையெம்மிறையே. (௪)

பொலிந்தவென்பணிமேனியன்பூந்தராய்
மலிந்தபுந்தியராகிவணங்கிட
நுந்தமேல்வினையோடவீடுசெப்
எந்தையாயவெம்மீசன்றானே. (௫)

Koviloor Digital Library

பூதஞ்சூழப்பொலிந்தவன்பூந்தராய்
நாதன்சேவடிநாளுநவின்றிட
நல்குநாடொறுமின்பநளிர்புனல்
பில்குவார்சடைப்பிஞ்ஞகனே. (சு)

புற்றிலாகமணிந்தவன்பூந்தராய்
பற்றிவாழும்பரமனைப்பாடிடப்
பாவமாயினதீரப்பணித்திடுஞ்
சேவதேறியசெல்வன்றானே. (எ)

போதகத்துரிபோர்த்தவன்பூந்தராய்
காதலித்தான்கழல்விரலொன்றினால்
அரக்கனாற்றலழித்தவனுக்கருள்
பெருக்கிநின்ற* வெம்பிஞ்ஞகனே. (அ)

மத்தமானவிருவர்மருவொணா
அத்தனானவன்மேவியபூந்தராய்
ஆளதாகவடைந்துய்ம்மினும்வினை
மாளுமாறருள்செய்யுந்தானே. (கூ)

பொருத்தமில்சமண்சாக்கியப்பொய்கடிந்†
திருத்தல்செய்தபிரானிமையோர்தொழப்
பூந்தராய்நகர்கோயில்கொண்டுகை
ஏந்துமான்மறியெம்மிறையே. (க0)

புந்தியான்மிகநல்லவர்பூந்தராய்
அந்தமில்லெம்மடிகளைஞானசம்
பந்தன்மாலைகொண்டேத்திவாழுநும்
பந்தமார்வினைபாறிடுமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

மின்னனவெயிறுடைவிரவலோர்கடந்
துன்னியபுரமுகச்சுளிந்ததொன்மையர்
புன்னையம்பொழிலணிபூந்தராய்நகர்
அன்னமன்னநடையரிவைபங்கரே. (க)

மூதணிமுப்புரத்தெண்ணிலோர்களை
வேதணிசாத்தினால்வீட்டினாரவர்
போதணிபொழிலமர்பூந்தராய்நகர்த்
தாதணிகுழலுமைதலைவர்காண்மினே. (உ)

* பெருக்கநின்ற என்றும் பாடம். † சாக்கியர்பொய்கடிந் என்றும் பாடம்.

Koviloor Digital Library

தருக்கியதிரிபுரத்தவர்கடாமுகப்
பெருக்கியசிலேதனைப்பிடித்தபெற்றியர்
பொருக்கடல்புடைதருபூந்தராய்நகர்க்
கருக்கியகுழலுமைகணவர்காண்மினே. (௩)

நாகமும்வரையுமேநாணும்வில்லுமா
மாகமார்புரங்களைமறித்தமாண்பினர்
பூகமார்பொழிலணிபூந்தராய்நகர்ப்
பாகமர்மொழியுமைபங்கர்காண்மினே. (௪)

வெள்ளெயிறுடையவவ்விரவலார்களூர் *
ஒள்ளெரியூட்டியவொருவனொளிர்
புள்ளணிபுறவினிற்பூந்தராய்நகர்க்
கள்ளணிகுழலுமைகணவர்காண்மினே. (௫)

துங்கியருனவர்தோற்றமாநகர்
அங்கியில்வீழ்தரவாய்ந்தவம்பினர்
பொங்கியகடலணிபூந்தராய்நகர்
அங்கயலனகணியரிவைபங்கரே. (௬)

அண்டர்களுய்ந்திடவவுணர்மாய்தரக்
கண்டவர்கடல்விடமுண்டகண்டனூர்
புண்டரீகவ்வயற்பூந்தராய்நகர்
வண்டமர்குழலிதன்மணாளர்காண்மினே. (௭)

மாசினவரக்கனைவரையின்வாட்டிய
காய்சினவெயில்களைக்கறுத்தகண்டனூர்
பூசுரர்பொலிதருபூந்தராய்நகர்க்
காசைசெய்குழலுமைகணவர்காண்மினே. (௮)

தாமுகமாக்கியவசுரர்தம்பதி
வேமுகமாக்கியவிகிர்தர்கண்ணனும்
பூமகனறிகிலாப்பூந்தராய்நகர்க்
கோமகனெழில்பெறுமரிவைகூறரே. (௯)

முத்தரவசுரர்கண்மொய்த்தமுப்புரம்
அத்தருமழலிடைவீட்டினூரமண்
புத்தருமறிவொணாப்பூந்தராய்நகர்க்
கொத்தணிகுழலுமைகூறர்காண்மினே. (௧0)

புரமெரிசெய்தவர்பூந்தராய்நகர்ப்
பரமலிகுழலுமைநங்கைபங்கரைப்
பரவியபந்தன்மெய்ப்பாடல்வல்லவர்
சிரமலிசிவகதிசேர்தறிண்ணமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

* வெள்ளையேறுடையவர் விரவலார்களூர் என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருச்சிரபுரம்.*

பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

பல்லடைந்தவெண்டலையிற்பலிகொள்வதன்றியும்போய்
வில்லடைந்தபுருவநல்லாண்மேனியில்வைத்தலென்னே
சொல்லடைந்ததொன்மறையோடங்கங்கலைகளெல்லாஞ்
செல்லடைந்தசெல்வர்வாழுஞ்சிரபுரமேயவனே. (க)

கொல்லைமுல்லைநகையினளோர்கூறதுவன்றியும்போய்
அல்லல்வாழ்க்கைப்பலிகொண்டுண்ணுமாதரவென்னைகொலாஞ்
சொல்லநின்றபெருமையாளர்தொல்கலைகற்றுவல்லார்
செல்லநின்றசெல்வமல்குசிரபுரமேயவனே. (உ)

நீரடைந்தசடையின்மேலோர்நிகழ்மதியன்றியும்போய்
ஊரடைந்தவேறதேறியுண்பலிகொள்வதென்னே
காரடைந்தசோலைசூழ்ந்துகாமரம்வண்டிசைப்பச்
சீரடைந்தசெல்வமோங்குசிரபுரமேயவனே. (ங)

கையடைந்தமானினோடுகாரரவன்றியும்போய்
மெய்யடைந்தவேட்கையோடுமெல்லியல்வைத்தலென்னே
கையடைந்தகளைகளாகச்செங்கழுநீர்மலர்கள்
செய்யடைந்தவயல்கள்சூழ்ந்தசிரபுரமேயவனே. (ச)

புரமெரித்தபெற்றியோடும்போர்மதயானைதன்னைக்
கரமெடுத்துத்தோலுரித்தகாரணமாவதென்னே
மரமுரித்ததோலுடுத்தமாதவர்தேவரோடுஞ்
சிரமெடுத்தகைகள்கூப்புஞ்சிரபுரமேயவனே. (ரு)

கண்ணுமூன்றுமுடையதன்றிக்கையினில்வெண்மழுவும்
பண்ணுமூன்றுவீணையோடுபாம்புடன்வைத்தலென்னே
எண்ணுமூன்றுகனலுமோம்பியெழுமையும்விழுமியராய்த்
திண்ணமூன்றுவேள்வியாளர்சிரபுரமேயவனே. (சா)

குறைபடாதவேட்கையோடுகோல்வளையாளொருபாற்
பொறைபடாதவின்பமோடுபுணர்தருமெய்ம்மையென்னே †
இறைபடாதமென்முலையார்மாளிகைமேலிருந்து
சிறைபடாதபாடலோங்குசிரபுரமேயவனே. (எ)

மலையெடுத்தவாளரக்கனஞ்சவொருவிரலால்
நிலையெடுத்தகொள்கையானேநின்மலனேநினைவார்
துலையெடுத்தசொற்பயில்வார்மேதகுவீதிதோறுஞ்
சிலையெடுத்ததோளினானேசிரபுரமேயவனே. (அ)

* திருச்சிரபுரம்—சீர்காழி. † புணர்தருமேன்மையென்னே என்றும் பாடம்.

Koviloor Digital Library

மாலினொடுமலரினனும்வந்தவர்காணாது
சாலுமஞ்சப்பண்ணிநீண்டதத்துவமேயதென்னே
நாலுவேதமோதலார்கணந்துணையென்றிறைஞ்சச்
சேலுமேயுங்கழனிசூழ்ந்தசிரபுரமேயவனே. (௯)

புத்தரோடுசமணர்சொற்கள்புறனுரையென்றிருக்கும்
பத்தர்வந்துபணியவைத்தபான்மையதென்னைகொலாம்
மத்தயானையுரியும்போர்த்துமங்கையொடும்முடனே
சித்தர்வந்துபணியுஞ்செல்வச்சிரபுரமேயவனே. (௧0)

தெங்குநீண்டசோலைசூழ்ந்தசிரபுரமேயவனை
அங்கநீண்டமறைகள்வல்லவணிகொள்சம்பந்தனுரை
பங்கநீங்கப்பாடவல்லபத்தர்கள்பாரிதன்மேற்
சங்கமோடுநீடிவாழ்வர்தன்மையினாலவரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

வாருறுவனமுலைமங்கைபங்கன்
நீருறுசடைமுடிநிமலனிடங்
காருறுகடிபொழில்சூழ்ந்தழகார்
சீருறுவளவயற்சிரபுரமே. (௧)

அங்கமொடருமறையருள்புரிந்தான்
றிங்களொடரவணிதிகழ்முடியன்
மங்கையொடினிதுறைவளநகரஞ்
செங்கயன்மிளிர்வயற்சிரபுரமே. (௨)

பரிந்தவன்பன்முடியமரர்க்காகித்
திரிந்தவர்புரமவைதீயின்வேவ
வரிந்தவெஞ்சிலைபிடித்தடுசரத்தைத்
தெரிந்தவன்வளநகர்சிரபுரமே. (௩)

நீறணிமேனியனீண்மதியோ
டாறணிசடையினனணியிழையோர்
கூறணிந்தினிதுறைகுளிர்நகரஞ்
சேறணிவளவயற்சிரபுரமே. (௪)

அருந்திறலவுணர்களரணழியச்
சரந்துரந்தெரிசெய்தசங்கரனூர்
குருந்தொடுகொடிவிடுமாதவிகள்
திருந்தியபுறவணிசிரபுரமே. (௫)

Koviloor Digital Library

கலையவன்மறையவன்காற்றொடுதீ
மலையவன்விண்ணொடுமண்ணுமவன்
கொலையவன்கொடிமதில்கூட்டழித்த
சிலையவன்வளநகர்சிரபுரமே. (௬)

வானமர்மதியொடுமத்தஞ்சூடித்
தானவர்புரமெய்தசைவனிடங்
கானமர்மடமயில்பெடைபயிலுந்
தேனமர்பொழிலணிசிரபுரமே. (௭)

மறுத்தவர்திரிபுரமாய்ந்தழியக்
கறுத்தவன்காரரக்கன்முடிதோள்
இறுத்தவனிருஞ்சினக்காலனைமுன்
செறுத்தவன்வளநகர்சிரபுரமே. (௮)

வண்ணநன்மலருறைமறையவனுங்
கண்ணனுங்கழறொழக்கனலுருவாய்
விண்ணுறவோங்கியவிமலனிடந்
திண்ணநன்மதிலணிசிரபுரமே. (௯)

வெற்றரையுழல்பவர்விரிதுகிலார்
கற்றிலரறவுரை* புறனுரைக்கப்
பற்றலர்திரிபுரமூன்றும்வேவச்
செற்றவன்வளநகர்சிரபுரமே. (௰)

அருமறைஞானசம்பந்தனந்தன்
சிரபுரநகருறைசிவனடியைப்
பரவியசெந்தமிழ்பத்தும்வல்லார்
திருவொடுபுகழ்மல்குதேசினரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

அன்னமென்னடையரிவையொடினிதுறையமர்தம்பெருமானார்
மின்னுசெஞ்சடைவெள்ளெருக்கம்மலர்வைத்தவர்வேதந்தாம்
பன்னுநன்பொருள்பயந்தவர்பருமதிற்சிரபுரத்தார்சீரார்
பொன்னின்மாமலரடிதொழுமடியவர்வினையொடும்பொருந்தாரே. (௧)

கோலமாகரியுரித்தவரரவொடுமேனக்கொம்பிளவாமை
சாலப்பூண்டுதண்மதியதுசூடியசங்கரனார்தம்மைப்
போலத்தம்மடியார்க்குமின்பளிப்பவர்பொருகடல்விடமுண்ட
நீலத்தார்மிடற்றண்ணலார்சிரபுரந்தொழவினைநில்லாவே. (௨)

* கற்றிலாரறவுரை என்றும் பாடம்.

Koviloor Digital Library

மானத்திண்புயவரிசிலைப்பார்த்தனைத்தவங்கெடமதித்தன்று
கானத்தேதிரிவேடனாயமர்செயக்கண்டருள்புரிந்தார்பூந்
தேனைத்தேர்ந்துசேர்வண்டுகடிரிதருஞ்சிரபுரத்துறையெங்கள்
கோனைக்கும்பிடுமடியரைக்கொடுவினைகுற்றங்கள்குறுகாவே. (ங)

மாணிதன்னுயிர்மதித்துணவந்தவக்காலனையுதைசெய்தார்
பேணியுள்குமெய்யடியவர்பெருந்துயர்ப்பிணக்கறுத்தருள்செய்வார்
வேணிவெண்பிறையுடையவர்வியன்புகழ்ச்சிரபுரத்தமர்கின்ற
ஆணிப்பொன்னினையடிதொழுமடியவர்க்கருவினையடையாவே. (ச)

பாருநீரொடுபல்கதிரிரவியும்பனிமதியாகாசம்
ஓரும்வாயுவுமொண்கனல்வேள்வியிற்றலைவனுமாய்நின்றார்
சேருஞ்சந்தனமகிலொடுவந்திழிசெழும்புனற்கோட்டாறு
வாருந்தண்புனல்சூழ்சிரபுரந்தொழுமடியவர்வருந்தாரே. (ரு)

ஊழியந்தத்திலொலிகடலோட்டந்திவ்வுலகங்களவைமூட *
ஆழியெந்தையென்றமரர்கள்சரண்புகவந்தரத்துயர்ந்தார்தாம்
யாழினேர்மொழியேழையோடினிதுறையின்பனெம்பெருமானார்
வாழிமாநகர்ச்சிரபுரந்தொழுதெழவல்வினையடையாவே. (சு)

பேய்கள்பாடப்பல்பூதங்கடுதிசெயப்பிணமிடுசுடுகாட்டில்
வேய்கொடோளிதான்வெள்கிடமாநடமாடும்வித்தகனாரொண்
சாய்கடான்மிகவுடையதண்மறையவர்தகுசிரபுரத்தார்தாந்
தாய்களாயினார்பல்லுயிர்க்குந்தமைத்தொழுமவர்தளராரே. (எ)

இலங்குபூண்வரைமார்புடையிராவணனெழில்கொள்வெற்பெடுத்தன்று
கலங்கச்செய்தலுங்கண்டுதங்கழலடிநெரியவைத்தருள்செய்தார்
புலங்கள் † செங்கழுநீர்மலர்த்தென்றன்மன்றதனிடைப்புகுந்தாரும்
குலங்கொண்மாமறையவர்சிரபுரந்தொழுதெழவினைகுறுகாவே. (அ)

வண்டுசென்றணைமலர்மிசைநான்முகன்மாயனென்றிவரன்று
கண்டுகொள்ளவோரேனமோடன்னமாய்க்கிளறியும்பறந்துந்தாம்
பண்டுகண்டதுகாணவேநீண்டவெம்பசுபதிபரமேட்டி
கொண்டசெல்வத்துச்சிரபுரந்தொழுதெழவினையவைகூடாவே. (கூ)

பறித்தபுன்றலைக்குண்டிகைச்சமணரும்பார்மிசைத்துவர்தோய்ந்த
செறித்தசீவரத்தேரருந்தேர்கிலாத்தேவர்கள்பெருமானார்
முறித்துமேதிகள்கரும்புதின்றூலியின்மூழ்கிடவிளவாளை
வெறித்துப்பாய்வயற்சிரபுரந்தொழவினைவிட்டிடுமிகத்தானே. (கo)

பரசுபாணியைப்பத்தர்களத்தனைப்பையரவோடக்கு
நிரைசெய்பூண்டிருமார்புடைநிமலனைநித்திலப்பெருந்தொத்தை
விரைசெய்பூம்பொழிற்சிரபுரத்தண்ணலைவிண்ணவர்பெருமானைப்
பரவுசம்பந்தன்செந்தமிழ்வல்லவர்பரமனைப்பணிவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

* கடலோட்டந்தியுலகங்களவைமூட என்றும் பாடம். † புலங்கொள் என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருப்புறவம்.*

பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

நறவநிறைவண்டறைதார்க்கொன்றைநயந்துநயனத்தாற்
சுறவஞ்செறிவண்கொடியோனுடலம்பொடியாவிழிசெய்தான்
புறவமுறைவண்பதியாமதியார்புரமூன்றெரிசெய்த
இறைவனறவனிமையோரேத்தவுமையோடிருந்தானே. (௧)

உரவன்புலியினுரிதோலாடையுடைமேற்படநாகம்
விரவிவிரிபூங்கச்சாவசைத்தவிகிர்தனுகிர்தன்னாற்
பொருவெங்களிறுபிளிறவுரித்துப்புறவம்பதியாக
இரவும்பகலுமிமையோரேத்தவுமையோடிருந்தானே. (௨)

பந்தமுடையபூதம்பாடப்பாதஞ்சிலம்பார்க்கக்
கந்தமல்குகுழலிகாணக்கரிகாட்டெரியாடி
அந்தண்கடல்சூழ்ந்தழகார்புறவம்பதியாவமர்வெய்தி
எந்தம்பெருமானிமையோரேத்தவுமையோடிருந்தானே. (௩)

நினைவார்நினையவினியான்பனியார்மலர்தூய்நித்தலுங்
கனையார்விடையொன்றுடையான்கங்கைதிங்கள்கமழ்கொன்றை
புனைவார்சடையின்முடியான்கடல்சூழ்புறவம்பதியாக
எனையாளுடையானிமையோரேத்தவுமையோடிருந்தானே. (௪)

செங்கணரவுநகுவெண்டலையுமுகிழ்வெண்டிங்களுந்
தங்குசடையன்விடையனுடையன்சரிகோவணவாடை
பொங்குதிரைவண்கடல்சூழ்ந்தழகார்புறவம்பதியாக
எங்கும்பரவியிமையோரேத்தவுமையோடிருந்தானே. (௫)

பின்னுசடைகடாழக்கேழலெயிறுபிறழப்போய்
அன்னநடையார்மனைகடோறுமழகாற்பலிதேர்ந்து
புன்னைமடலின்பொழில்சூழ்ந்தழகார்புறவம்பதியாக
என்னையுடையானிமையோரேத்தவுமையோடிருந்தானே. (௬)

உன்னற்கரியநஞ்சையுண்டொருதோழந்தேவர்
விண்ணிற்பொலியவமுதமளித்தவிடைசேர்கொடியண்ணல்
பண்ணிற்சிறைவண்டறைபூஞ்சோலைப்புறவம்பதியாக
எண்ணிற்சிறந்தவிமையோரேத்தவுமையோடிருந்தானே. (௭)

விண்டானதிரவியனூர்கயிலைவேரோடெடுத்தான்றன்
திண்டோளுடலுமுடியுநெரியச்சிறிதேயூன்றிய
புண்டானொழியவருள்செய்பெருமான்புறவம்பதியாக
எண்டோளுடையானிமையோரேத்தவுமையோடிருந்தானே. (௮)

* திருப்புறவம்—சீர்காழி.

Koviloor Digital Library

நெடியானீடாமரைமேலயனுநேடிக்காண்கில்லாப்
படியாமேனியுடையான்பவளவரைபோற்றிருமார்பிற்
பொடியார்கோலமுடையான்கடல்சூழ்புறவம்பதியாக
இடியார்முழவாரிமையோரேத்தவுமையோடிருந்தானே. (கூ)

ஆலும்மயிலின்பீலியமணரறிவில்சிறுதேரர்
கோலும்மொழிகளொழியக்குழுவுந்தழலுமெழில்வானும்
போலும்வடிவுமுடையான்கடல்சூழ்புறவம்பதியாக
ஏலும்வகையாலிமையோரேத்தவுமையோடிருந்தானே. (க0)

பொன்னார்மாடநீடுஞ்செல்வப்புறவம்பதியாக
மின்னாரிடையாளுமையாளோடுமிருந்தவிமலனைத்
தன்னார்வஞ்செய்தமிழின்விரகனுரைத்ததமிழ்மாலை
பன்னாள்பாடியாடப்பிரியார்பரலோகந்தானே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

எய்யாவென்றித்தானவரூர்மூன்றெரிசெய்த
மையார்கண்டன்மாதுமைவைகுந்திருமேனிச்
செய்யான்வெண்ணீறணிவான்றிகழ்பொற்பதிபோலும்
பொய்யாநாவினந்தணர்வாழும்புறவம்மே. (க)

மாதொருபாலுமாலொருபாலும்மகிழ்கின்ற
நாதனென்றேத்துநம்பான்வைகுந்நகர்போலும்
மாதவிமேயவண்டிசைபாடமயிலாடப்
போதலர்செம்பொன்புன்னைகொடுக்கும்புறவம்மே. (உ)

வற்றாநதியும்மதியும்பொதியுஞ்சடைமேலே
புற்றாரரவின்* படமாடவுமிப்புவனிக்கோர்
பற்றாயிடுமின்பலியென்றடைவார்பதிபோலும்
பொற்றாமரையின்பொய்கைநிலாவும்புறவம்மே. (௩)

தன்னார்புரமும்பிரமன்சிரமுந்துணிசெய்து
மின்னார்சடைமேலரவும்மதியும்விளையாடப்
பன்னாளிடுமின்பலியென்றடைவார்பதிபோலும்
பொன்னார்புரிநூலந்தணர்வாழும்புறவம்மே. (௪)

தேவாவரனேசரணென்றிமையோர்திசைதோறுங்
காவாயென்றுவந்தடையக்கார்விடமுண்டு
பாவார்மறையும்பயில்வோருறையும்பதிபோலும்
பூவார்கோலச்சோலைசுலாவும்புறவம்மே. (௫)

* புற்றுடரவின் என்றும் பாடம்.

Koviloor Digital Library

கற்றறிவெய்திக்காமன்முன்னாகம்முகவெல்லாம்
அற்றரனேநின்னடிசரணென்னுமடியோர்க்குப்
பற்றதுவாயபாசுபதன்சேர்பதியென்பர்
பொற்றிகழ்மாடத்தொளிகணிலாவும்புறவம்மே. (௬)

எண்டிசையோரஞ்சிடுவகைகார்சேர்வரையென்னக்
கொண்டெழுகோலமுகில்போற்பெரியகரிதன்னைப்
பண்டுரிசெய்தோன்பாவனைசெய்யும்பதியென்பர்
புண்டரிகத்தோன்போன்மறையோர்சேர்புறவம்மே. (௭)

பரக்குந்தொல்சிர்த்தேவர்கள்சேனைப்பௌவத்தைத்
துரக்குஞ்செந்திப்போலமர்செய்யுந்தொழின்மேவும்
அரக்கன்றிண்டோளழிவித்தானக்காலத்திற்
புரக்கும்வேந்தன்சேர்தருமூதூர்புறவம்மே. (௮)

மீத்திகழண்டங்* தந்தயனோடுமிகுமாலும்
மூர்த்தியைநாடிக்காணவொணாதுமுயல்விட்டாங்
கேத்தவெளிப்பாடெய்தியவன்றனிடமென்பர்
பூத்திகழ்சோலைத்தென்றலுலாவும்புறவம்மே. (௯)

வையகநீர்தீவாயுவும்விண்ணும்முதலானான்†
மெய்யலதேரருண்டிலையென்றேநின்றேதங்
கையினிலுண்போர்காணவொணாதானகரென்பர்
பொய்யகமில்லாப்பூசுரர்வாழும்புறவம்மே. (௧௦)

பொன்னியன்மாடப்புரிசைநிலாவும்புறவத்து
மன்னியவீசன்சேவடிநாளும்பணிகின்ற
தன்னியல்பில்லாச்சண்பையர்கோன்சீர்ச்சம்பந்தன்
இன்னிசையீரைந்தேத்தவல்லோர்கட்கிடர்போமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவிராகம். பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

பெண்ணியலுருவினர்பெருகியபுனல்விரவியபிறைக்
கண்ணியர்கடுநடைவிடையினர்கழறொழுமடியவர்
நண்ணியபிணிகெடவருள்புரிபவர்நணுகுயர்பதி
புண்ணியமறையவர்நிறைபுகழொலிமலிபுறவமே. (௧)

கொக்குடையிறகொடுபிறையொடுகுளிர்சடைமுடியினர்
அக்குடைவடமுமொரரவமுமலரரைமிசையினிற்
திக்குடைமருவியவுருவினர்திகழ்மலைமகளொடும்
புக்குடனுறைவதுபுதுமலர்விரைகமழ்புறவமே. (௨)

* வித்திகழண்டம் என்றும் பாடம். † விண்ணும்முதலானான்—மெய்யலதோராவுண்டிலை என்றும், விண்ணும்முதலான—மெய்யலதோரா வுண்டிலை என்றும் பாடம்.

Koviloor Digital Library

கொங்கியல்சுரிகுழல்வரிவளையிளமுலையுமையொரு
பங்கியறிருவுருவுடையவர்பரசுவொடிரலெமெய்
தங்கியகாதலமுடையவர்விடையவருறைபதி
பொங்கியபொருகடல்கொளவதன்மிசையுயர்புறவமே. (ந)

மாதவமுடைமறையவனுயிர்கொளவருமறலியை
மேதகுதிருவடியிறையுறவுயிரதுவிலகினுர்
சாதகவுருவியல்கானிடையுமைவெருவுறவரு
போதகவுரியதண்மருவினருறைபதிபுறவமே. (ச)

காமனையழல்கொளவிழிசெய்துகருதலர்கடிமதில்
தூமமதுறவிறல்சுடர்கொளுவியவிறைதொகுபதி
ஓமமொடுயர்மறைபிறவியவகைதனொடொளிசெழு
பூமகனலரொடுபுனல்கொடுவழிபடுபுறவமே. (ரு)

சொன்னயமுடையவர்சுருதிகள்கருதியதொழிலினர்
பின்னையர்நடுவுணர்பெருமையர்திருவடிபேணிட
முன்னையமுதல்வினையறவருளினருறைமுதுபதி
புன்னையின்முகைநிதிபொதி* யவிழ்பொழிலணிபுறவமே. (சு)

வரிதருபுலியதளுடையினர்மழுவெறிபடையினர்
பிரிதருநகுதலைவடமுடிமிசையணிபெருமையர்
எரிதருமுருவினரிமையவர்தொழுவதொரியல்பினர்
புரிதருகுழலுமையொடுமினிதுறைபதிபுறவமே. (எ)

வசிதருமுருவொடுமலர்தலையுலகினைவலிசெயும்
நிசிசரனுடலொடுநெடுமுடியொருபதுநெரிவுற
ஒசிதரவொருவிரனிறுவினரொளிவளர்வெளிபொடி
பொசிதருதிருவுருவுடையவருறைபதிபுறவமே. (அ)

தேனகமருவியசெறிதருமுளரிசெய்தவிசினில்
ஊனகமருவியபுலனுகர்வுணர்வுடையொருவனும்
வானகம்வரையகமறிகடனிலனெனுமெழுவகைப்
போனகமருவினனறிவரியவர்பதிபுறவமே. (கூ)

கோசரநுகர்பவர்கொழுகிய † துவரனதுகிலினர்
பாசுரவினைதருபளகர்கள்பழிதருமொழியினர்
நீசரைவிடுமினிநினைவுறுநிமலர்தமுறைபதி
பூசுரர்மறைபயினிறைபுகமொலிமலிபுறவமே. (கo)

போதியல்பொழிலணிபுறவநன்னகருறைபுனிதனை
வேதியரதிபதிமிகுதலைதமிழ்கெழுவிரகினன்
ஓதியவொருபதுமுரியதொரிசைகொளவுரைசெயும்
நீதியரவரிருநிலனிடைநிகழ்தருபிறவியே. (கக)

திருச்சிற்றம்பலம்.

* முகைநெறிபொதி—என்றும், முகைநெறிபொதி என்றும் பாடம். † கொழுவிய என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருச்சண்பைநகர். *

பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

பங்கமேறுமதிசேர்சடையார்விடையார்பலவேதம்
அங்கமாறுமறைநான்கவையுமானார்மீனாரும்
வங்கமேவுகடல்வாழ்பரதர்மனைக்கேநுனைமுக்கின்
சங்கமேறிமுத்தமீனுஞ்சண்பைநகராரே.† (௧)

சூதகஞ்சேர்கொங்கையாளோர்பங்கர்சுடர்க்கமலப்
போதகஞ்சேர்புண்ணியனார்பூதகணநாதர்
மேதகஞ்சேர்மேகமந்தண்சோலையில்மின்னார்ந்த
சாதகஞ்சேர்பாளைநீர்சேர்சண்பைநகராரே. (௨)

மகரத்தாடுகொடியோனுடலம்பொடிசெய்தவனுடைய
நிகரொப்பில்லாத்தேவிக்கருள்செய்நீலகண்டனார்
பகரத்தாராவன்னம்பகன்றில்பாதம்பணிந்தேத்தத்
தகரப்புன்னைதாழைப்பொழில்சேர்சண்பைநகராரே. (௩)

மொய்வல்லசுரர்தேவர்கடைந்தமுழுநஞ்சதுவுண்ட
தெய்வர்செய்யவுருவர்கரியகண்டர்திகழ்சுத்திக்
கையர்கட்டங்கத்தர்கரியினுரியர்காதலாற்
சைவர்பாசுபதர்கள்வணங்குஞ்சண்பைநகராரே. (௪)

கலமார்கடலுள்விடமுண்டமரர்க்கமுதமருள்செய்த
குலமார்கயிலைக்குன்றதுடைய‡கொல்லையெருதேறி
நலமார்வெள்ளைநாளிகேரம்விரியாநறும்பாளை
சலமார்கரியின்மருப்புக்காட்டுஞ்சண்பைநகராரே. (௫)

மாகரஞ்சேரத்தியின்றோல்போர்த்துமெய்ம்மாலான
சூகரஞ்சேரெயிறுபூண்டசோதியன்மேதக்க
ஆகரஞ்சேரிப்பிமுத்தைப்பந்தன்வயலுக்கே
சாகரஞ்சேர்திரைகளுந்துஞ்சண்பைநகராரே. (௬)

இருளைப்புரையுநிறத்திலரக்கன்றனையீடழிவித்து
அருளைச்செய்யுமம்மானோராரந்தண்கந்தத்தின்
மருளைச்சுரும்புபாடியளக்கர்வரையார்திரைக்கையாற்
றரளத்தோடுபவளமீனுஞ்சண்பைநகராரே. (௮)

மண்டான்முழுதுமுண்டமாலுமலர்மிசைமேலயனும்
எண்டானறியாவண்ணநின்றவிறைவன்மறையோதி
தண்டார்குவளைக்கள்ளருந்தித்தாமரைத்தாதின்மேற்
பண்டான்கொண்டுவண்டுபாடுஞ்சண்பைநகராரே. (௯)

* திருச்சண்பைநகர் - சீர்காழி. † இத்திருப்பதிகத்தில் ஏழாவது செய்யுள் மறைந்துபோயிற்று. ‡ கயிலைக் குன்றத்துடைய என்றும் பாடம்.

Koviloor Digital Library

போதியாரும்பிண்டியாரும்புகழலசொன்னாலும்
நீதியாகக்கொண்டங்கருளுநிமலனிருநான்கின்
மாதிசித்தர்மாமறையின்மன்னியதொன்னூலர்
சாதிகீதவர்த்தமானர்சண்பைநகராரே. (க௰)

வந்தியோடுபூசையல்லாப்போழ்தின்மறைபேசிச்
சந்திபோதிற்சமாதிசெய்யுஞ்சண்பைநகர்மேய
அந்திவண்ணன்றன்னையழகார்ஞானசம்பந்தன்சொற்
சிந்தைசெய்துபாடவல்லார்சிவகதிசேர்வாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவிராகம். பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

எந்தமதுசிந்தைபிரியாதபெருமானெனவிறைஞ்சியிமையோர்
வந்துதுதிசெய்யவளர்தூபமொடுதீபமலி* வாய்மையதனால்
அந்தியமர்சந்திபலவர்ச்சனைகள்செய்யவமர்கின்றவழகன்
சந்தமலிகுந்தளநன்மாதினொடுமேவுபதிசண்பைநகரே. (க)

அங்கம்விரிதுத்தியரவாமைவிரவாரமமர்மார்பிலழகன்
பங்கயமுகத்தரிவையோடுபிரியாதுபயில்கின்றபதிதான்
பொங்குபரவைத்திரைகொணர்ந்துபவளத்திரள்பொலிந்தவயலே
சங்குபுரியிப்பிதரளத்திரள்பிறங்கொளிகொள்சண்பைநகரே. (உ)

போழுமதிதாழுநதிபொங்கரவுதங்குபுரிபுன்சடையினன்
யாழின்மொழிமாழைவிழியேழையிளமாதினொடிருந்தபதிதான்
வாழைவளர்ஞாழன்மகிழ்மன்னுபுனைதுன்னுபொழின்மாடமடலார்
தாழைமுகிழ்வேழமிகுதந்தமெனவுந்துதகுசண்பைநகரே. (ங)

கொட்டமுழவிட்டவடிவட்டணைகள்கட்டநடமாடிகுலவும்
பட்டநுதல்கட்டுமலர்மட்டுமலிபாவையொடுமேவுபதிதான்
வட்டமதிதட்டுபொழிலுட்டமதுவாய்மைவழுவாதமொழியாற்
சட்டகலையெட்டுமருவெட்டும்† வளர்தத்தைபயில்சண்பைநகரே. (ச)

பணங்கெழுவுபாடலினொடாடல்பிரியாதபரமேட்டிபகவன்
அணங்கெழுவுபாகமுடையாகமுடையன்பர்பெருமானதிடமாம்
இணங்கெழுவியாடுகொடிமாடமதினீடுவிரையார்புறவெலாந்
தணங்கெழுவியேடலர்கொடாமரையிலன்னம்வளர்சண்பைநகரே. (ரு)

பாலனுயிர்மேலணவுகாலனுயிர்பாறவுதைசெய்தபரமன்
ஆலுமயில்போலியலியாயிழைதனோடுமமர்வெய்துமிடமாம்
ஏலமலிசோலையினவண்டுமலர்கிண்டி‡ நறவுண்டிசைசெயச்
சாலிவயல்கோலமலிசேறுகளநீலம்வளர்சண்பைநகரே. (சூ)

* தீபமொடுதூபமலி என்றும் பாடம். † யெட்டுமருமெட்டும் என்றும் பாடம்.
‡ கெண்டி என்றும் பாடம்.

Koviloor Digital Library

விண்பொயதனன்மழைவிழாதொழியினும்விளைவுதான்மிகவுடை
மண்பொயதனல்வளமிலாதொழியினுந்தமதுவண்மைவழுவார்
உண்பகரவாருலகினூழிபலதோறுநிலையானபதிதான்
சண்பைநகர்ஈசனடிதாழுமடியார்தமதுதன்மையதுவே. (எ)

வரைக்குலமகட்கொருமறுக்கம்வருவிந்தமதியில்வலியுடை
அரக்கனதுரக்கரசிரத்துறவடர்த்தருள்புரிந்தவழகன்
இருக்கையதருக்கன்முதலானவிமையோர்குழுமியேழ்விழவினிற்
றருக்குலநெருக்குமலிதண்பொழில்கள்கொண்டலனசண்பைநகரே. (அ)

நிலவரைபோலநிகழ்கேழலுருநீள்பறவைநேருருவமாம்
மாலுமலராலுமறியாமைவளர்தீயுருவமானவரதன்
சேலுமினவேலுமனகண்ணியொடுநண்ணுபதிசூழ்புறவெலாஞ்
சாலிமலிசோலைகுயில்புள்ளினொடுகிள்ளைபயில்சண்பைநகரே. (கூ)

போதியர்கள்பிண்டியர்கள்போதுவழுவாதவகையுண்டுபலபொய்
ஓதியவர்கொண்டுசெய்வதொன்றுமிலைநன்றதுணர்வீருரைமினோ
ஆதிபெருமையாளுடையவரிவையொடுபிரிவிலியமர்ந்தபதிதான்
சாதிமணிதெண்டிரைகொணர்ந்துவயல்புகவெறிகொள்சண்பைநகரே. (கo)

வாரின்மலிகொங்கையுமைநங்கையொடுசங்கரன்மகிழ்ந்தமருமூர்
சாரின்முரசெண்கடல்* விசும்புறமுழங்கொலிகொள்சண்பைநகர்மேற்
பாரின்மலிகின்றபுகழ்நின்றதமிழ்ஞானசம்பந்தனுரைசெய்
சீரின்மலிசெந்தமிழ்கள்செப்புமவர்சேர்வர்சிவலோகநெறியே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சீர் கா ழி.

பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

பூவார்கொன்றைப்புரிபுன்சடையீசா
காவாயெனநின்றேத்துங்காழியார்
மேவார்புரமூன்றட்டாரவர்போலாம்
பாவாரின்சொற்பயிலும்பரமரே. (க)

எந்தையென்றங்கிமையோர்புகுந்தீண்டிக்
கந்தமாலைகொடுசேர்காழியார்
வெந்தநீற்றர்விமலரவர்போலாம்
அந்திநட்டமாடுமடிகளே. (உ)

தேனைவென்றமொழியாளொருபாகங்
கானமான்கைக்கொண்டகாழியார்
வானமோங்குகோயிலவர்போலாம்
ஆனையின்பமாடுமடிகளே. (ங)

* தெண்கடல் என்றும் பாடம்.

Koviloor Digital Library

மாணாவென்றிக்காலன்மடியவே
காணாமாணிக்களித்தகாழியார்
நாணார்வாளிதொட்டாரவர்போலாம்
பேணார்புரங்களட்டபெருமானே. (௪)

மாடேயோதமெறியவயற்செந்நெற்
காடேறிச்சங்கீனுங்காழியார்
வாடாமலராள்பங்கரவர்போலாம்
ஏடார்புரமூன்றெரித்தவிறைவரே. (௫)

கொங்குசெருந்திகொன்றைமலர்கூடக்
கங்கைபுனைந்தசடையார்காழியார்
அங்கணரவமாட்டுமவர்போலாஞ்
செங்கணரக்கர்புரத்தையெரித்தாரே. (௬)

கொல்லைவிடைமுன்பூதங்குனித்தாடுங்
கல்லவடத்தையுகப்பார்காழியார்
அல்லவிடத்துநடந்தாரவர்போலாம்
பல்லவிடத்தும்பயிலும்பரமரே. (௭)

எடுத்தவரக்கனெரியவிரலூன்றிக்
கடுத்துமுரியவடர்த்தார்காழியார்
எடுத்தபாடற்கிரங்குமவர்போலாம்
பொடிக்கொணீறு* பூசும்புனிதரே. (௮)

ஆற்றலுடையவரியும்பிரமனுந்
தோற்றங்காணாவென்றிக்காழியார்
ஏற்றமேறங்கேறுமவர்போலாங்
கூற்றமறுகக்குமைத்தகுழகரே. (௯)

பெருக்கப்பிதற்றுஞ்சமணர்சாக்கியர்
கரக்குமுரையைவிட்டார்காழியார்
இருக்கின்மலிந்தவிறைவரவர்போலாம்
அருப்பின்முலையாள்பங்கத்தையரே. (௧௦)

காரார்வயல்சூழ்காழிக்கோன்றனைச்
சீரார்ஞானசம்பந்தன்சொன்ன
பாரார்புகழப்பரவவல்லவர்
ஏரார்வானத்தினிதாவிருப்பரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

அடலேறமருங்கொடியண்ணல்
மடலார்குழலாளொடுமன்னுங்
கடலார்புடைசூழ்தருகாழி
தொடர்வாரவர்தூநெறியாரே. (௧)

* பொடிக்கணீறு என்றும் பாடம்.

Koviloor Digital Library

திரையார்புனல்சூடியசெல்வன்
வரையார்மகளோடுமகிழ்ந்தான்
கரையார்புனல்சூழ்தருகாழி
நிரையார்மலர்தூவுமினின்றே. (௨)

இடியார்குரலேறுடையெந்தை
துடியாரிடையாளொடுநின்றுங்
கடியார்பொழில்சூழ்தருகாழி
அடியாரறியாரவலம்மே. (௩)

ஒளியார்விடமுண்டவொருவன்
அளியார்குழன்மங்கையொடன்பாய்க்
களியார்பொழில்சூழ்தருகாழி*
எளிதாமதுகண்டவரின்பே. (௪)

பனியார்மலரார்தருபாதன்
முனிதானுமையோடுமுயங்கிக்
கனியார்பொழில்சூழ்தருகாழி
இனிதாமதுகண்டவரீடே. (௫)

கொலையார்தருகூற்றமுதைத்து
மலையான்மகளோடுமகிழ்ந்தான்
கலையார்தொழுதேத்தியகாழி
தலையாற்றொழுவார்தலையாரே. (௬)

திருவார்சிலையாலெயிலெய்து
உருவாருமையோடுடனானான்
கருவார்பொழில்சூழ்தருகாழி
மருவாதவர்வான்மருவாரே. (௭)

அரக்கன்வலிபொல்கவடர்த்து
வரைக்கும்மகளோடுமகிழ்ந்தான்
சுரக்கும்புனல்சூழ்தருகாழி
நிரக்கும்மலர்தூவுநினைந்தே. (௮)

இருவர்க்கெரியாகிநிமிர்ந்தான்
உருவிற்பெரியாளொடுசேருங்
கருநற்பரவைகமழ்காழி
மருவப்பிரியும்வினைமாய்ந்தே. (௯)

சமண்சாக்கியர்தாமலர்தூற்ற
அமைந்தானுமையோடுடனன்பாய்க்
கமழ்ந்தார்பொழில்சூழ்தருகாழி
சுமந்தார்மலர்தூவுதறொண்டே. (௰)

* களியார்புனல்சூழ்தருகாழி என்றும் பாடம்.

Koviloor Digital Library

நலமாகியஞானசம்பந்தன்
கலமார்கடல்சூழ்தருகாழி
நிலையாகநினைந்தவர்பாடல்
வலரானவர்வானடைவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

நல்லார்தீமேவுந்தொழிலார்நால்வேதஞ்
சொல்லார்கேண்மையார்சுடர்பொற்கழலேத்த
வில்லாற்புரஞ்செற்றான்மேவும்பதிபோலுங்
கல்லார்மதில்சூழ்ந்தகாழிந்நகர்தானே.* (க)

துளிவண்டேன்பாயுமிதழிதூமத்தந்
தெளிவெண்டிங்கண்மாசுணநீர்திகழ்சென்னி
ஒளிவெண்டலைமாலையுகந்தானூர்போலுங்
களிவண்டியாழ்செய்யுங்காழிந்நகர்தானே. (உ)

ஆலக்கோலத்தினஞ்சுண்டமுதத்தைச்
சாலத்தேவர்க்கீந்தளித்தான்றன்மையாற்
பாலற்காய்நன்றும்பரிந்துபாதத்தாற்
காலற்காய்ந்தானூர்காழிந்நகர்தானே. (ங)

இரவிற்றிரிவோர்கட்கிறைதோளிணைபத்தும்
நிரவிக்கரவாளைநேர்ந்தானிடம்போலும்
பரவித்திரிவோர்க்கும்பானீறணிவோர்க்குங்
கரவிற்றடக்கையார்காழிந்நகர்தானே. (அ)

மாலும்பிரமனுமறியாமாட்சியான்
றோலும்புரிநூலுந்துதைந்தவரைமார்பன்
ஏலும்பதிபோலுமிரந்தோர்க்கெந்நாளுங்
காலம்பகராதார்காழிந்நகர்தானே. (கூ)

தங்கையிடவுண்பார்தாழ்சீவரத்தார்கள்
பெங்கையுணராதேபேணித்தொழுமின்கள்
மங்கையொருபாகமகிழ்ந்தான்மலர்ச்சென்னிக்
கங்கைதரித்தானூர்காழிந்நகர்தானே. (கo)

வாசங்கமழ்காழிமதிசெஞ்சடைவைத்த
ஈசன்னகர்தன்னையிணையில்சம்பந்தன்
பேசுந்தமிழ்வல்லோர்பெருநீருலகத்துப்
பாசந்தளையற்றுப்பழியில்புகழாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

* இத்திருப்பதிகத்தில் ச, ரு, சு, எ இச்செய்யுள்கள் மறைந்துபோயின.

Koviloor Digital Library

பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

உரவார்கலையின்கவிதைப்புலவர்க்கொருநாளுங்
கரவாவண்கைக்கற்றவர்சேருங்கலிக்காழி
அரவாரரையாவவுணர்புரமூன்றெரிசெய்த
சரவாவென்பார்தத்துவஞானத்தலையாரே.* (௧)

மொய்சேர்வண்டுண்மும்மதநால்வாய்முரண்வேழக்
கைபோல்வாழைகாய்குலையீனுங்கலிக்காழி
மைசேர்கண்டத்தெண்டோண்முக்கண்மறையோனே
ஐயாவென்பார்க்கல்லல்களானவடையாவே. (௨)

இளகக்கமலத்தீன்களியங்குங்கழிசூழக்
களகப்புரிசைக்கவினார்சாருங்கலிக்காழி
அளகத்திருநன்னுதலிபங்காவரனேயென்
றுளகப்பாடுமடியார்க்குறுநோயடையாவே. (௩)

எண்ணார்முத்தமீன்றுமரகதம்போற்காய்த்துக்
கண்ணார்கமுகுபவளம்பழுக்குங்கலிக்காழிப்
பெண்ணோர்பாகாபித்தாபிரானேயென்பார்க்கு
நண்ணாவினைகணாடொறுமின்பநணுகும்மே. (௪)

மழைபார்சாரற்செம்புனல்வந்தங்கடிவருடக்
கழைபார்கரும்புகண்வளர்சோலைக்கலிக்காழி
உழையார்கரவாவுமையாள்கணவாவொளிர்சங்கக்
குழையாவென்றுகூறவல்லார்கள்குணவோரே. (௫)

குறியார்திரைகள்வரைகணின்றுங்கோட்டாறு
கறியார்கழிசம்பிரசங்கொடுக்குங்கலிக்காழி
வெறியார்கொன்றைச்சடையாவிடையாவென்பாரை
அறியாவினைகளருநோய்பாவம்மடையாவே. (௬)

உலங்கொள்சங்கத்தார்கலியோதத்துதையுண்டு
கலங்கள்வந்துகார்வயலேறுங்கலிக்காழி
இலங்கைமன்னன்றன்னையிடர்கண்டருள்செய்த
சலங்கொள்சென்னிமன்னாவென்னத்தவமாமே. (௮)

ஆவிக்கமலத்தன்னமியங்குங்கழிசூழக்
காவிக்கண்ணார்மங்கலமோவாக்கலிக்காழிப்
பூவிற்றோன்றும்புத்தேளொடுமாலவன்றானும்
மேவிப்பரவுமரசேயென்னவினைபோமே. (௯)

மலைபார்மாடநீடுயரிஞ்சிமஞ்சாருங்
கலைபார்மதியஞ்சேர்தருமந்தண்கலிக்காழித்
தலைவாசமணர்சாக்கியர்க்கென்றுமறிவொண்ணா
நிலையாயென்னத்தொல்வினையாயநில்லாவே. (௧௦)

* இத்திருப்பதிகத்தில் ஏழாவதுசெய்யுள் மறைந்துபோயிற்று.

Koviloor Digital Library

வடிகொள்வாவிச்செங்கழுநீரிற்கொங்காடிக்
கடிகொடென்றன்முன்றினில்வைகுங்கலிக்காழி
அடிகடம்மையந்தமின்ஞானசம்பந்தன்
படிகொள்பாடல்வல்லவர்தம்மேற்பழிபோமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

நல்லானைநான்மறையோடியலாறங்கம்*
வல்லானைவல்லவர்பான்மலிந்தோங்கிய
சொல்லானைத்தொன்மதிற்காழியேகோயிலாம்
இல்லானையேத்தநின்றார்க்குளதின்பமே. (க)

நம்மானமாற்றிநமக்கருளாய்நின்ற
பெம்மானைப்பேயுடனாடல்புரிந்தானை
அம்மானையந்தணர்சேருமணிகாழி
எம்மானையேத்தவல்லார்க்கிடரில்லையே. (உ)

அருந்தானையன்புசெய்தேத்தகில்லார்பாற்
பொருந்தானைப்பொய்யடிமைத்தொழில்செய்வாருள்
விருந்தானைவேதியரோதிமிடைகாழி
இருந்தானையேத்துமினும்வினையேகவே. (ங)

புற்றானைப்புற்றரவம்மரையின்மிசைச்
சுற்றானைத்தொண்டுசெய்வாரவர்தம்மொடும்
அற்றானையந்தணர்காழியமர்கோயில்
பற்றானைப்பற்றிநின்றார்க்கில்லைபாவமே. (ச)

நெதியானைநெஞ்சிடங்கொள்ளநினைவார்தம்
விதியானைவிண்ணவர்தாம்வியந்தேத்திய
கதியானைக்காருலவும்பொழிற்காழியாம்
பதியானைப்பாடுமினும்வினைபாறவே. (ரு)

செப்பானமென்முலையாளைத்திகழ்மேனி
வைப்பானைவார்கழலேத்திநினைவார்தம்
ஒப்பானையோதமுலாவுகடற்காழி
மெய்ப்பானைமேவியமாந்தர்வியந்தாரே. † (சு)

துன்பானைத்துன்பமழித்தருளாக்கிய
இன்பானையேழிசையின்னிலைபேணுவார்
அன்பானையணிபொழிற்காழிநகர்மேய
நம்பானைநண்ணவல்லார்வினைநாசமே. (எ)

* மறையோடிகலாறங்கம் என்றும் பாடம். † மேவியமர்ந்தார்வியந்தாரே என்றும் பாடம்.

Koviloor Digital Library

குன்றானைக்குன்றெடுத்தான்புயநாலைந்தும்
வென்றானைமென்மலரானொடுமாலோட
நின்றானைநேரிழையாளொடுங்காழியுள்
நன்றானைநம்பெருமானைநணுகுமே. (அ)

சாவாயும்வாதுசெய்சாவகர்சாக்கியர்
மேவாதசொல்லவைகேட்டுவெருளேன்மின்
பூவாயகொன்றையினானைப்புனற்காழிக்
கோவாயகொள்கையினானடிகூறுமே. (கூ)

கழியார்சீரோதமல்குங்கடற்காழியுள்
ஒழியாதுகோயில்கொண்டானையுகந்துள்கித்
தழியார்சொன்ஞானசம்பந்தன்றமிழார*
மொழிவார்கண்மூவுலகும்பெறுவார்களே.† (கக)

திருச்சிற்றம்பலம்.

பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

பண்ணினேர்மொழிமங்கைமார்பலர்பாடியாடியவோசைநாடொறுங்
கண்ணினேரயலேபொலியுங்கடற்காழிப்
பெண்ணினேரொருபங்குடைப்பெருமானையெம்பெருமானென்றென்றுன்னும்
அண்ணலாரடியா‡ரருளாலுங்குறைவிலரே. (க)

மொண்டலம்பியவார்திரைக்கடன்மோதிமீதெறிசங்கம்வங்கமுங்
கண்டலம்புடைசூழ்வயல்சேர்கலிக்காழி
வண்டலம்பியகொன்றையானடிவாழ்த்தியேத்தியமாந்தர்தம்வினை
விண்டலங்கெளிதாமதுநல்விதியாமே. (உ)

நாடெலாமொளியெய்தநல்லவர்நன்றுமேத்திவணங்குவார்பொழிற்
காடெலாமலர்தேன்றுளிக்குங்கடற்காழித்
தோடுலாவியகாதுளாய்சுரிசங்கவெண்குழையாயென்றென்றுன்னும்
வேடங்கொண்டவர்கள்வினைநீங்கலுற்றாரே. (ங)

மையினார்பொழில்சூழநீழலில்வாசமார்மதுமல்கநாடொறுங்
கையினார்மலர்கொண்டெழுவார்கலிக்காழி
ஐயனேயரனேயென்றாதரித்தோதிநித்தியுமேநினைப்பவர்
உய்யுமாறுலகில்லுயர்ந்தாரினுள்ளாரே. (ச)

மலிகடுந்திரைமேனிமிர்ந்தெதிர்வந்து¶வந்தொளிர்நித்திலம்விழக்
கலிகடிந்தகையார்மருவுங்கலிக்காழி
வலியகாலனைவீட்டிமாணிதனின்னுயிரளித்தானைவாழ்த்திட
மெலியுந்தீவினைநோயவைமேவுவர்வீடே. (ரு)

* தமிழான என்றும் பாடம். † இத்திருப்பதிகத்தில் பத்தாவதுசெய்யுள் மறைந்து போயிற்று. ‡ அண்ணலானடியார் என்றும் பாடம். ¶ திரைமேனிரந்தெதிர்வந்து என்றும் பாடம்.

Koviloor Digital Library

மற்றுமிவ்வுலகத்துளோர்களும்வானுளோர்களும்வந்துவைகலுங்
கற்றசிந்தையராய்க்கருதுங்கலிக்காழி
நெற்றிமேலமர்கண்ணினானைநினைந்திருந்திசைபாடுவார்வினை
செற்றமாந்தரெனத்தெளிமின்கள்சிந்தையுளே. (சு)

தானலம்புரைவேதியரொடுதக்கமாதவர்தாந்தொழப்பயில்
கானலின்விரைசேரவிம்முங்கலிக்காழி
ஊனுளாருயிர்வாழ்க்கையாயுறவாகிநின்றவொருவனேயென்றென்
றூனலங்கொடுய்ப்பாரருள்வேந்தராவாரே. (எ)

மைத்தவண்டெழுசோலையாலைகள்சாலிசேர்வயலாரவைகலுங்
கத்துவார்கடல்சென்றுலவுங்கலிக்காழி
அத்தனேயரனேயரக்கனையன்றடர்த்துகந்தாயுனகழல்
பத்தராய்ப்பரவும்பயனீங்குநல்காயே. (அ)

பருமராமொடுதெங்குபைங்கதலிப்பருங்கனியுண்ணமந்திகள்
கருவராலுகளும்வயல்சூழ்கலிக்காழித்
திருவினாயகனாயமாலொடுசெய்யமாமலர்ச்செல்வனாகிய
இருவர்காண்பரியானெனவேத்துதலின்பமே. (கூ)

பிண்டமுண்டுழல்வார்களும்பிரியாதுவண்டுகிலாடைபோர்த்தவர்
கண்டுசேரகிலாரழகார்கலிக்காழித்
தொண்டைவாயுமையோடுகூடியவேடனேசுடலைப்பொடியணி
அண்டவாணனென்பார்க்கடையாவல்லலுானே. (கO)

பெயரெனும்மிவை* பன்னிரண்டினுமுண்டெனப்பெயர்பெற்றவூர்திகழ்
கயலுலாம்வயல்சூழ்ந்தழகார்கலிக்காழி
நயனடன்கழலேத்திவாழ்த்தியஞானசம்பந்தன்செந்தமிழுரை
உயருமாமொழிவாருலகத்துயர்ந்தாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

நலங்கொண்முத்துமணியுமணியுந்திரளோதங்
கலங்கடன்னிற்கொண்டுகரைசேர்கலிக்காழி
வலங்கொண்மழுவொன்றுடையாய்விடையாயெனவேத்தி
அலங்கல்சூட்டவல்லார்க்கடையாவருநோயே. (க)

ஊராருவரிச்சங்கம்வங்கங்கொடுவந்து
காராரோதங்கரைமேலுயர்த்துங்கலிக்காழி
நீரார்சடையாய்நெற்றிக்கண்ணாவென்றென்று
பேராயிரமும்பிதற்றத்தீரும்பிணிதானே. (உ)

* பெயர்வெனும்மிவை என்றும் பாடம்.

Koviloor Digital Library

வடிகொள்பொழிலின்மழலைவரிவண்டிசைசெய்யக்
கடிகொள்போதிற்றென்றலணையுங்கலிக்காழி
முடிகொள்சடையாய்முதல்வாவென்றுமுயன்றேத்தி
அடிகைதொழுவார்க்கில்லையல்லலவலமே. (ங)

மனைக்கேயேறவளஞ்செய்பவளம்வளர்முத்தங்
கனைக்குங்கடலுளோதமேறுங்கலிக்காழிப்
பனைக்கைப்பகட்டீருரியாய்பெரியாயெனப்பேணி
நினைக்கவல்லவடியார்நெஞ்சினல்லாரே. (ச)

பரிதியியங்கும்பாரிற்சீரார்பணியாலே
கருதிவிண்ணோர்மண்ணோர்விரும்புங்கலிக்காழிச்
சுருதிமறைநான்கானசெம்மைதருவானைக்
கருதியெழுமின்வழுவாவண்ணந்துயர்போமே. (ரு)

மந்தமருவும்பொழிலிலெழிலார்மதுவுண்டு
கந்தமருவவரிவண்டிசைசெய்கலிக்காழிப்
பந்தநீங்கவருளும்பரனேயெனவேத்திச்
சிந்தைசெய்வார்செம்மைநீங்காதிருப்பாரே. (சு)

புயலார்பூமிநாமமோதிப்புகழ்மல்கக்
கயலார்கண்ணார்பண்ணாரொலிசெய்கலிக்காழிப்
பயில்வான்றன்னைப்பத்தியாரத்தொழுதேத்த
முயல்வார்தம்மேல்வெம்மைக்கூற்றமுடுகாதே. (எ)

அரக்கன்முடிதோணெரியவடர்த்தானடியார்க்குக்
கரக்கில்லாதருள்செய்பெருமான்கலிக்காழிப்
பரக்கும்புகழான்றன்னையேத்திப்பணிவார்மேற்
பெருக்குமின்பந்துன்பமானபிணிபோமே. (அ)

மாணாயுலகங்கொண்டமாலுமலரோனுங்
காணாவண்ணமெரியாய்நிமிர்ந்தான்கலிக்காழிப்
பூணார்முலையாள்பங்கத்தானைப்புகழ்ந்தேத்திக்
கோணாநெஞ்சமுடையார்க்கில்லைக்குற்றமே. (கூ)

அஞ்சிபல்லன்மொழிந்துதிரிவாரமணாதர்
கஞ்சிகாலையுண்பார்க்கரியான்கலிக்காழித்
தஞ்சமாயதலைவன்றன்னைநினைவார்கள்
துஞ்சலில்லாநல்லவுலகம்பெறுவாரே. (க0)

ஊழியாயபாரிலோங்குமுயர்செல்வக்
காழியீசன்கழலேபேணுஞ்சம்பந்தன்
றாழுமனத்தாலுரைத்ததமிழ்களிவைவல்லார்
வாழிநீங்காவானோருலகின்மகிழ்வாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

Koviloor Digital Library

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

விண்ணியங்குமதிக்கண்ணியான்விரியுஞ்சடைப்
பெண்ணயங்கொடிருமேனியாம்* பெருமானனற்
கண்ணயங்கொடிருநெற்றியான் † கலிக்காழியுள்
மண்ணயங்கொண்மறையாளரேத்துமலர்ப்பாதனே. (க)

வலியகாலனுயிர்வீட்டினுன்மடவாளொடும்
பலிவிரும்பியதொர்கையினுன்பரமேட்டியான்
கலியைவென்றமறையாளர்தங்கலிக்காழியுள்
நலியவந்தவினைதீர்த்துகந்தவெந்நம்பனே. (உ)

சுற்றலா ‡ நற்புலித்தோலசைத்தயன்வெண்டலைத்
துற்றலாயதொருகொள்கையான்சுடுநீற்றினுன்
கற்றல்கேட்டலுடையார்கள்வாழ்கலிக்காழியுள்
மற்றயங்குதிரடோளெம்மைந்தனவனல்லனே. (ங)

பல்லயங்குதலையேந்தினுன்படுகானிடை
மல்லயங்குதிரடோள்களாரநடமாடியுங்
கல்லயங்குதிரைசூழநீள்கலிக்காழியுட்
டொல்லயங்குபுகழ்பேணநின்றசுடர்வண்ணனே. (ச)

தூநயங்கொடிருமேனியிற்பொடிப்பூசிப்போய்
நாநயங்கொண்மறையோதிமாதொருபாகமாக்
கானயங்கொள்புனல்வாசமார்கலிக்காழியுட்
டேனயங்கொண்முடியானைநாடியசெல்வனே. (ரு)

சுழியிலங்கும்புனற்கங்கையாள்சடையாகவே
மொழியிலங்கும்மடமங்கைபாகமுகந்தவன்
கழியிலங்குங்கடல்சூழுந்தண்கலிக்காழியுட்
பழியிலங்குந்துயரொன்றிலாப்பரமேட்டியே. (சா)

முடியிலங்கும்முயர்சிந்தையான்முனிவர்தொழ
அடியிலங்குங்கழலார்க்கவேயனலேந்தியுங்
கடியிலங்கும்பொழில்சூழுந்தண்கலிக்காழியுட்
கொடியிலங்கும்மிடையாளொடுங்குடிகொண்டதே. (எ)

வல்லரக்கன்வரைபேர்க்கவந்தவன்றோண்முடி
கல்லரக்கிவ்விறல்வாட்டினுன்கலிக்காழியுள்
நல்லொருக்கியதொர்சிந்தையார்மலர்தூவவே
தொல்லிருக்கும்மறையோத்து ¶ கந்துடன்வாழுமே. (அ)

* பெண்ணயங்கொடிருமேனியான் என்றும், பெண்ணியங்கொடிருமேனியாம் என்றும் பாடம். † கண்ணியங்கொடிருநெற்றியான் என்றும் பாடம். ‡ சுற்றரை என்றும் பாடம். ¶ மறையேத்த என்றும் பாடம்.

மருவுநான்மறையோனுமாமணிவண்ணனும்
இருவர்கூடியிசைந்தேத்தவேபெரியான்றனூர்
வெருவநின்றதிரையோதம்வார்வியன்முத்தவை*
கருவையார்வயற்சங்குசேர்கலிக்காழியே. (௯)

நன்றியொன்றுமுணராதவன்சமண்சாக்கியர்
அன்றியங்கவர்சொன்னசொல்லவைகொள்கிலான்
கன்றுமேதியிளங்கானல்வாழ்கலிக்காழியுள்
வென்றிசேர்வியன்கோயில்கொண்டவிடையாளனே. (௧0)

கண்ணுமூன்றுடையாதிவாழ்கலிக்காழியுள்
அண்ணலந்தண்ணருள்பேணிஞானசம்பந்தன்சொல்
வண்ணமூன்றுந்தமிழிற்றெரிந்திசைபாடுவார்
விண்ணுமண்ணும்விரிகின்றதொல்புகழாளரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

பண் - பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பொங்குவெண்புரிவளரும்பொற்புடைமார்பனெம்பெருமான்
செங்கணாடரவாட்டுஞ்செல்வனெஞ்சிவனுறைகோயில்
பங்கமில்பலமறைகள்வல்லவர்பத்தர்கள்பரவுந்
தங்குவெண்டிரைக்கானற்றண்வயற்காழிநன்னகரே. (௧)

தேவர்தானவர்பரந்துதிண்வரைமால்கடனிறுவி
நாவதாலமிர்துண்ணநயந்தவரிரிந்திடக்கண்டு
ஆவவென்றருநஞ்சமுண்டவனமர்தருமூதூர்
காவலார்மதில்சூழ்ந்தகடிபொழிற்காழிநன்னகரே. (௨)

கரியின்மாமுகமுடையகணபதிதாதைபல்பூதந்
திரியவில்பலிக்கேகுஞ்செழுஞ்சுடர்சேர்தருமூதூர்
சரியின்முன்கைநன்மாதர்சதிபடமாநடமாடி
உரியநாமங்களேத்துமொலிபுனற்காழிநன்னகரே. (௩)

சங்கவெண்குழைச்செவியன்றண்மதிசூடியசென்னி
அங்கம்பூணெனவுடையவப்பனுக்கழகியவூராந்
துங்கமாளிகையுயர்ந்ததொகுகொடிவானிடைமிடைந்து
வங்கவான்மதிதடவுமணிபொழிற்காழிநன்னகரே. (௪)

மங்கைகூறமர்மெய்யான்மான்மறியேந்தியகையான்
எங்களீசனென்றெழுவாரிடர்வினைகெடுப்பவற்கூராஞ்
சங்கையின்றிநன்னியமந்தாஞ்செய்துதகுதியின்மிக்க
கங்கைநாடுயர்கீர்த்திமறையவர்† காழிநன்னகரே. (௫)

* திரையோதமார்வியன் முத்தவை என்றும், திரையோதம்வராவியன் முத்தவை என்றும் பாடம். † கங்கைநாடவர் கீர்த்திமறையவர் என்றும் பாடம்.

Koviloor Digital Library

நாறுகூவிளமத்தநாகமுஞ்சூடியநம்பன்
ஏறுமேறியவீசனிருந்தினிதமர்தருமூதூர்
நீறுபூசியவுருவர்நெஞ்சினுள்வஞ்சமொன்றின்றித்
தேறுவார்கள்சென்றேத்துஞ்சீர்திகழ்காழிநன்னகரே. (சு)

நடமதாடியநாதனந்திதன்முழவிடைக்காட்டில்
விடமமர்ந்தொருகாலம்விரித்தறமுரைத்தவற்கூராம்
இடமதாமறைபயில்வாரிருந்தவர்திருந்தியம்போதிற்*
குடமதார்மணிமாடங்குலாவியகாழிநன்னகரே. (எ)

கார்கொண்மேனியவ்வரக்கன்றன்கடுந்திறலினைக்கருதி
ஏர்கொண்மங்கையுமஞ்சவெழின்மலையெடுத்தவனெரியச்
சீர்கொள்பாதத்தோர்விரலாற்செறுத்தவெஞ்சிவனுறைகோயில்
தார்கொள்வண்டினஞ்சூழ்ந்தண்தவயற்காழிநன்னகரே. (அ)

மாலுமாமலரானுமருவிநின்றிகலியமனத்தாற்†
பாலுங்காண்பரிதாயபரஞ்சுடர்தன்பதியாகுஞ்
சேலும்வாளையுங்கயலுஞ்செறிந்துதன்கிளையொடுமேய
ஆலுஞ்சாலிநற்கதிர்களணிவயற்காழிநன்னகரே. (கூ)

புத்தர்பொய்மிகுசமணர்பொலிகழல்டியிணைகாணுஞ்
சித்தமற்றவர்க்கிலாமைத்திகழ்ந்தநற்செழுஞ்சுடர்க்கூராஞ்
சித்தரோடுநல்லமரர்செறிந்தநன்மாமலர்கொண்டு
முத்தனேயருளென்றுமுறைமைசெய்காழிநன்னகரே. (க0)

ஊழியானவைபலவுமொழித்திடுங்காலத்திலோங்கு.‡ (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவிராகம். பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

நம்பொருணம்மக்களென்றுநச்சியிச்சைசெய்துநீர்
அம்பரமடைந்துசாலவல்லலுய்ப்பதன்முனம்
உம்பர்நாதனுத்தமன்னொளிமிகுத்தசெஞ்சடை
நம்பன்மேவுநன்னகர்நலங்கொள்காழிசேர்மினே. (க)

பாவமேவுமுள்ளமோடுபத்தியின்றிநித்தலும்
ஏவமானசெய்துசாவதன்முனம்மிசைந்துநீர்
தீபமாலைதூபமுஞ்செறிந்தகையராகிநந்
தேவதேவன்மன்னுமூர்திருந்துகாழிசேர்மினே. (உ)

சோறுகூறையின்றியேயுவண்டுதூரமாய்நமக்
கேறுசுற்றமெள்கவேயிடுக்கணுய்ப்பதன்முனம்
ஆறுமோர்சடையினனாதியானைசெற்றவன்
நாறுதேன்மலர்ப்பொழில்நலங்கொள்காழிசேர்மினே. (ங)

* தவர்திருந்தியபோதிற் என்றும் பாடம். † நியலியமனத்தாற் என்றும் பாடம்.
‡ இச்செய்யுளில் பின் மூன்றடிகளும் மறைந்துபோயின.

Koviloor Digital Library

நச்சிநீர்பிறன்கடைநடந்துசெல்ல* நாளையும்
உச்சிவம்மெனும்முரை † யுணர்ந்துகேட்பதன்முனம்
பிச்சர்நச்சரவரைப்பெரியசோதிபேணுவார்
இச்சைசெய்யுமெம்பிரானெழில்கொள்காழிசேர்மினே. (ச)

கண்கள்காண்பொழிந்துமேனிகன்றியொன்றலாதநோய்
உண்கிலாமைசெய்து ‡ நும்மையுய்த்தழிப்பதன்முனம்
விண்குலாவுதேவருய்யவேலைநஞ்சமுதுசெய்
கண்கண்மூன்றுடையவெங்கருத்தர்காழிசேர்மினே. (ரு)

அல்லல்வாழ்க்கையுய்ப்பதற்கவத்தமேபிறந்துநீர்
எல்லையில்பிணக்கினிற்கிடந்திடாதெழும்மினோ
பல்லில்வெண்டலையினிற்பலிக்கியங்குபான்மையான்
கொல்லைமேறதேறுவான்கோலக்காழிசேர்மினே. (சா)

பொய்மிகுத்தவாயராய்ப்பொறாமையோடுசெல்லுநீர்
ஐமிகுத்தகண்டராயடுத்திரைப்பதன்முனம்
மைமிகுத்தமேனிவாளரக்கனைநெரித்தவன்
பைமிகுத்தபாம்பரைப்பரமர்காழிசேர்மினே. (அ)

காலினேறுநகைகளுந்தளர்ந்துகாமநோய்தனால்
ஏலவார்குழலினாரிகழ்ந்துரைப்பதன்முனம்
மாலினோடுநான்முகன்மதித்தவர்கள்காண்கிலா
நீலமேவுகண்டனார்நிகழ்ந்தகாழிசேர்மினே. (கூ)

நிலைவெறுத்தநெஞ்சமோடுநேசமில்புதல்வர்கள்
முலைவெறுத்தபேர்தொடங்கியேமுனிவதன்முனந்
தலைபறித்தகையர்தேரர்தாந்தரிப்பரியவன்
சிலைபிடித்தெயிலெய்தான்றிருந்துகாழிசேர்மினே. (க0)

தக்கனார்தலைபரிந்தசங்கரன்றனதரை
அக்கினோடரவசைத்தவந்திவண்ணர்காழியை
ஒக்கஞானசம்பந்தனுரைத்தபாடல்வல்லவர்
மிக்கவின்பமெய்திவிற்றிருந்துவாழ்தன்மெய்ம்மையே. ¶ (கக)

திருச்சிற்றம்பலம்.

பண் - செவ்வழி.

திருச்சிற்றம்பலம்.

பொடியிலங்குந்திருமேனியாளர்புலிபதளினர்
அடியிலங்குங்கழலார்க்கவாடும்மடிகள்ளிடம்
இடியிலங்குங்குரலோதமல்கவ்வெறிவார்திரைக்
கடியிலங்கும்புனன்முந்தலைக்குங்கடற்காழியே. (க)

* நடந்துசொல்ல என்றும் பாடம். † உச்சிவம்மினெனுமுரை என்றும் பாடம்.
‡ உண்கிலாதுசெய்து என்றும் பாடம். ¶ இத்திருப்பதிகத்தில் ஏழாவதுசெய்யுள் மறைந்துபோயிற்று.

Kovilbor Digital Library

மயலிலங்குந்துயர்மாசறுப்பானருந்தொண்டர்கள்
அயலிலங்கப்பணிசெய்யநின்றவ்வடிகள்ளிடம்
புயலிலங்குங்கொடையாளர்வேதத்தொலிபொலியவே
கயலிலங்கும்வயற்கழனிசூழுங்கடற்காழியே. (உ)

கூர்விலங்குந்திரிசூலவேலர்குழைக்காதினர்
மார்விலங்கும்* புரிநூலுகந்தம்மணவாளனூர்
நேர்விலங்கல்லனதிரைகண்மோதந்நெடுந்தாரை † வாய்ச்
கார்விலங்கல்லெனக்கலந்தொழுகுங்கடற்காழியே. (ங)

குற்றமில்லார்குறைபாடுசெய்வார்பழிதீர்ப்பவர்
பெற்றநல்லகொடிமுன்னுயர்த்தபெருமானிடம்
மற்றுநல்லார்மனத்தாலினியார்மறைகலையெலாங்
கற்றுநல்லார்பிழைதெரிந்தளிக்குங்கடற்காழியே. (ச)

விருதிலங்குஞ்சரிதைத்தொழிலார்விரிசடையினர்
எருதிலங்கப்பொலிந்தேறுமெந்தைக்கிடமாவது
பெரிதிலங்கும்மறைகிளைஞரோதப்பிழைகேட்டலாற்
கருதுகிள்ளைக்குலந்தெரிந்துதீர்க்குங்கடற்காழியே. (ரு)

தோடிலங்குங்குழைக்காதர்வேதர்சுரும்பார்மலர்ப்
பீடிலங்குஞ்சடைப்பெருமையாளர்க்கிடமாவது
கோடிலங்கும்பெரும்பொழில்கண்மல்கப்பெருஞ்செந்நெலின்
காடிலங்கும்வயல்பயிலுமந்தண்கடற்காழியே. (சு)

மலையிலங்குஞ்சிலையாகவேகம்மதின்மூன்றெரித்
தலையிலங்கும்புனற்கங்கைவைத்தவ்வடிகட்கிடம்
இலையிலங்கும்மலர்க்கைதைகண்டல்வெறிவிரவலாற்
கலையிலங்குங்கணத்தினம்பொலியுங்கடற்காழியே. (எ)

முழுதிலங்கும்பெரும்பாருள்வாழும்முரணிலங்கைக்கோன்
அழுதிரங்கச்சிரமுரமொடுங்கவ்வடர்த்தாங்கவன்
றொழுதிரங்கத்துயர்தீர்த்துகந்தார்க்கிடமாவது
கழுதும்புள்ளுமதிற்புறமதாருங்கடற்காழியே. (அ)

பூவினானும்விரிபோதின்மல்குந்திருமகடனை
மேவினானும்வியந்தேத்தநீண்டாரழலாய்நிறைந்
தோவியங்கேயவர்க்கருள்புரிந்தவ்வொருவர்க்கிடங்
காவியங்கண்மடமங்கையர்சேர்கடற்காழியே. (கூ)

உடைநவின்றாருடைவிட்டுழல்வாரிருந்தவத்தார்
முடைநவின்றம்மொழியொழித்துகந்தம்முதல்வன்னிடம்
மடைநவின்றபுனற்கெண்டைபாயும்வயன்மலிதரக்
கடைநவின்றந்நெடுமாடமோங்குங்கடற்காழியே. (க0)

* மார்பிலங்கும் என்றும் பாடம். † மோதுந்நெடுந்தாரை என்றும் பாடம்.

Koviloor Digital Library

கருகமழுந்நீர் * திரையோதமாருங்கடற்காழியுள்
உரகமாருஞ்சடையடிகடம்பாலுணர்ந்துறுதலாற்
பெருகமல்கும்புகழ்பேணுந்தொண்டர்க்கிசையார்தமிழ்
விரகன்சொன்னவிவைபாடியாடக்கெடும்வினைகளே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பண் - கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

சந்தமார்முலையாடனகூறனர்
வெந்தவெண்பொடியாடியமெய்யனர்
கந்தமார்பொழில்சூழ்தருகாழியுள்
எந்தையாரடியென்மனத்துள்ளவே. (க)

மானிடம்முடையார்வளர்செஞ்சடைத்
தேனிடங்கொளுங்கொன்றைபந்தாரினர்
கானிடங்கொளுந்தண்வயற்காழியார்
ஊனிடங்கொண்டெனுச்சியினிற்பரே. (உ)

மைகொள்கண்டத்தர்வான்மதிச்சென்னியர்
பைகொள்வாளரவாட்டும்படிறனர்
கைகொண்மான்மறியார்கடற்காழியுள்
ஐயனந்தணர்போற்றவிருக்குமே. (௩)

புற்றினாகமும்பூளையும்வன்னியுங்
கற்றைவார்சடைவைத்தவர்காழியுட்
பொற்றொடிபொடிருந்தவர்பொற்கழல்
உற்றபோதுடனேத்தியுணருமே. (௪)

நலியுங்குற்றமுநம்முடனோய்வினை
மெலியுமாறதுவேண்டுதிரேல்வெய்ய
கலிகடிந்தகையார்கடற்காழியுள்
அலைகொள்செஞ்சடையாரடிபோற்றுமே. (௫)

பெண்ணொர்கூறினர்பேயுடனாடுவர்
பண்ணுமேத்திசைபாடியவேடத்தர்
கண்ணுமூன்றுடையார்கடற்காழியுள்
அண்ணலாயவடிகள்சரிதையே. (௬)

பற்றுமானுமழுவுமழகுற
முற்றமூர்திரிந்துபலிமுன்னுவர்
கற்றமாந்தன்மறையவர்காழியுட்
பெற்றமேறதுகந்தார் † பெருமையே. (௭)

* கருகழுந்நீர் என்றும் பாடம். † பெற்றமேற்றதுகந்தார் என்றும் பாடம்.

Koviloor Digital Library

எடுத்தவல்லரக்கன்முடிதோளிற
அடர்த்துகந்தருள்செய்தவர்காழியுட்
கொடித்தயங்குநற்கோயிலுளின்புற
இடத்துமாதொடுதாமுமிருப்பரே. (அ)

காலன்றன்னுயிர்வீட்டுகழலடி
மாலுநான்முகன்றானும்வனப்புற
ஓலமிட்டுமுன்றேடியுணர்கிலாச்
சீலங்கொண்டவனூர்திகழ்காழியே. (கூ)

உருவநீத்தவர்தாமுமுறுதுவர்
தருவலாடையினாருந்தகவிலர்
கருமம்வேண்டுதிரேற்கடற்காழியுள்
ஒருவன்சேவடியேயடைந்துய்ம்மினே. (க0)

கானல்வந்துலவுங்கடற்காழியுள்
ஈனமில்லியிணையடியேத்திடும்
ஞானசம்பந்தன்சொல்லியநற்றமிழ்
மானமாக்குமகிழ்ந்துரைசெய்யவே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருமாலைமாற்று. பண் - கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

யாமாமாநீயாமாமாயாழீகாமாகாணுகா
காணுகாமாகாழீயாமாமாயாநீமாமாயா. (க)

யாகாயாழீகாயாகாதாயாராராதாயாயா
யாயாதாராராயாதாகாயாகாழீயாகாயா. (உ)

தாவாமூவாதாசாகாழீநாதாநீயாமாமா
மாமாயாநீதாநாழீகாசாதாவாமூவாதா (ந)

நீவாவாயாகாயாழீகாவாவானோவாராமே
மேராவானோவாவாகாழீயாகாயாவாவாநீ. (ச)

யாகாலாமேயாகாழீயாமேதாவீதாயாவீ
வீயாதாவீதாமேயாழீகாயாமேலாகாயா. (ரு)

மேலேபோகாமேமேதழீகாலாலேகாலானுயே
யேனுலாகாலேலாகாழீதேமேகாபோலேமே. (கா)

நீயாமாநீயேயாமாதாவேழீகாநீதானே
னேதாநீகாழீவேதாமாயாயேநீமாயாநீ. (எ)

னேணவராவிழயாசைழியேவேகதளேரியளா * யுழிகா
காழியுளாயரிளே † தகவேயேழிசையாழவிராவணனே. (அ)

* கதளேருயளா என்றும் பாடம். † யருளே என்றும் பாடம்.

Koviloor Digital Library

காலேமேலேகாணீகாழீகாலேமாலேமேபூ
பூமேலேமாலேகாழீகாணீகாலேமேலேகா. (௯)

வேரியுமேணவகாழியொயேயேனைநிணேமடளோகரதே
தேரகளோடமணேநினையேயேயொழிகாவணமேயுரிவே. (க0)

நேரகழாமிதயாசழிதாயேனனிநீயேனனிளாயுழிகா
காழியுளானினயேனினயேதாழிசயாதமிழாகரனே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருக்கொச்சைவயம்.*

பண் - பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

நீலநன்மாமிடற்றனிறைவன்சினத்தநெடுமாவுரித்தநிகரில்
சேலனகண்ணிவண்ணமொருகூறுருக்கொடிகழ்தேவன்மேவுபதிதான்
வேலனகண்ணிமார்கள்விளையாடுமோசைவிழவோசைவேதவொலியின்
சாலநல்வேலையோசைதருமாடவீதிகொடியாடுகொச்சைவயமே. † (க)

விடையுடையப்பனொப்பினடமாடவல்லவிகிர்தத்துருக்கொள்விமலன்
சடையிடைவெள்ளெருக்கமலர்கங்கைதிங்கடகவைத்தசோதிபதிதான்
மடையிடையன்னமெங்குநிறையப்பரந்துகமலத்துவைகும்வயல்சூழ்
கொடையுடைவண்கையாளர்மறையோர்களென்றும்வளர்கின்றகொச்சைவயமே

படவரவாடுமுன்கையுடையானிடும்பைகளைவிக்குமெங்கள்பரமன்
இடமுடைவெண்டலைக்கைபலிகொள்ளுமின்பனிடமாயவேர்கொள்பதிதான்
நடமிடமஞ்ஞைவண்டுமதுவுண்டுபாடநளிர்சோலைகோலுகனகக்
குடமிடுகூடமேறிவளர்பூவைநல்லமறையோதுகொச்சைவயமே. (௩)

எண்டிசைபாலரெங்குமிகலிப்புகுந்து ‡ முயல்வுற்றசிந்தை ¶ முடுகிப்
பண்டொளிதீபமாலையிடுதூபமோடுபணிவுற்றபாதர்பதிதான்
மண்டியவண்டன்மிண்டிவருநீரபொன்னிவயல்பாயவாளைகுழுமிக்
குண்டகழ்பாயுமோசைபடைநீடதென்னவளர்கின்றகொச்சைவயமே. (௪)

பனிவளர்மாமலைக்குமருகன்குபேரனொடுதோழமைக்கொள்பகவன்
இனியனவல்லவற்றையினிதாகநல்குமிறைவன்னிடங்கொள்பதிதான்
முனிவர்கடொக்குமிக்கமறையோர்களோமம்வளர்தூமமோடியணவிக்
குனிமதிமூடிநீடுயர்வான்மறைத்துநிறைகின்றகொச்சைவயமே. (௫)

புலியதள்கோவணங்களுடையாடையாகவுடையானினைக்குமளவில்
நலிதருமுப்புரங்களெரிசெய்தநாதனலமாவிருந்தநகர்தான்
கலிகெடவந்தணாளர்கலைமேவுசிந்தையுடையார்நிறைந்துவளரப்
பொலிதருமண்டபங்களுயர்மாடநீடுவரைமேவுகொச்சைவயமே. (௬)

* திருக்கொச்சைவயம்—சீர்காழி. † இத்திருப்பதிகத்தில் ஏழாவதுசெய்யுள் மறைந்துபோயிற்று. ‡ மிகலிப்புகுந்து என்றும் பாடம் ¶ முயல்வித்தசிந்தை என்றும் பாடம்.

Koviloor Digital Library

மழைமுகில்போலுமேனியடல்வாளரக்கன்முடியோடுதோள்கணெரியப்
பிழைகெடமாமலர்ப்பொன்னடிவைத்தபேயொடுடனுடிமேயபதிதான்
இழைவளரல்குன்மாதரிசைபாடியாடவிடுமூசலன்னகமுகின்
குழைதருகண்ணிவிண்ணில்வருவார்கடங்களடிதேடுகொச்சைவயமே. (அ)

வண்டமர்பங்கயத்துவளர்வானுமையமுழுதுண்டமாலுமிகலிக்
கண்டிடவொண்ணுமென்றுகிளறிப்பறந்துமறியாதசோதிபதிதான்
நண்டுணநாரைசெந்நெனடுவேயிருந்துவிரைதேரபோதுமதுவிற்*
புண்டரிகங்களோடுகுமுதம்மலர்ந்துவயன்மேவுகொச்சைவயமே. (கூ)

கையினிலுண்டுமேனியுதிர்மாசர்குண்டரிடுசீவரத்தினுடையார்
மெய்யுரையாதவண்ணம்விளையாடவல்லவிகிர்தத்துருக்கொள்விமலன்
பையுடைநாகவாயிலெயிறரமிக்கருவம்பயின்றுமலரச்
செய்யினினீலமொட்டுவிரியக்கமழ்ந்துமணநாறுகொச்சைவயமே. (க0)

இறைவனையொப்பிலாதவொளிமேனியானையுலகங்களேழுமுடனே
மறைதருவெள்ளமேறிவளர்கோயின்மன்னியினிதாவிருந்தமணியைக்
குறைவிலஞானமேவுகுளிர்பந்தன்வைத்ததமிழ்மாலைபாடுமவர்போய்
அறைகழலீசனாளுநகர்மேவியென்றுமழகாவிருப்பதறிவே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பண் - பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

அறையும்பூம்புனலோடுமோடரவச்சடைதன்மேற்
பிறையுஞ்சூடுவர்மார்பிற்பெண்ணொருபாகமமர்ந்தார்
மறையினொல்லொலியோவாமந்திரவேள்வியறாத
குறைவிலந்தணர்வாழுங்கொச்சைவயமமர்ந்தாரே. (க)

சுண்ணத்தர்தோலொடுநூல்சேர்மார்பினர்துன்னியபூதக்
கண்ணத்தர்வெங்கனலேந்திக்கங்குனின்றாடுவர்கேடில்
எண்ணத்தர்கேள்விநல்வேள்வியறாதவர்மாலெரியோம்பும்
வண்ணத்தவந்தணர்வாழுங்கொச்சைவயமமர்ந்தாரே. (உ)

பாலையன்னவெண்ணீறுபூசுவர்பல்சடைதாழ
மாலையாடுவர்கீதமாமறைபாடுதன்மகிழ்வர்
வேலைமால்கடலோதம்வெண்டிரைகரைமிசைவிளங்குங்
கோலமாமணிசிந்துங்கொச்சைவயமமர்ந்தாரே. (ஙு)

கடிகொள்கூவிளமத்தங்கமழ்சடைநெடுமுடிக்கணிவர்
பொடிகள்பூசியமார்பிற்புனைவர்நன்மங்கையொர்பங்கர்
கடிகொணீடொலிசங்கினொலியொடுகலையொலிதுதைந்து
கொடிகளோங்கியமாடக்கொச்சைவயமமர்ந்தாரே. (ச)

* போதுமடுவிற் என்றும் பாடம்.

Koviloor Digital Library

ஆடன்மாமதியுடையாராயினபாரிடஞ்சூழ
வாடல்வெண்டலையேந்திவைபகம்பெலிக்குழல்வார்
ஆடன்மாமடமஞ்ஞையணிதிகழ்பேடையோடாடிக்
கூடுதண்பொழில்சூழ்ந்தகொச்சைவயமமர்ந்தாரே. (௫)

மண்டுகங்கையுமரவுமல்கியவளர்சடைதன்மேற்
றுண்டவெண்பிறையணிவர்தொல்வரைவில்லதுவாக
விண்டதானவராணம்வெவ்வழலெரிகொளவிடைமேற்
கொண்டகோலமதுடையார்கொச்சைவயமமர்ந்தாரே. (௬)

அன்றவானிழலமர்ந்துவறவுரைநால்வர்க்கருளிப்
பொன்றினார்தலையோட்டிலுண்பதுபொருகடலிலங்கை
வென்றிவேந்தனையொல்கவூன்றியவிரலினர்வான்றோய்
குன்றமன்னபொன்மாடக்கொச்சைவயமமர்ந்தாரே. (௮)

சீர்கொண்மாமலரானுஞ்செங்கண்மாலென்றிவரேத்த
வேர்கொள்வெவ்வழலாகிப்பெங்குமுறநிமிர்ந்தாரும்
பார்கொள்விண்ணழல்கானீர்ப்பண்பினர்பான்மொழியோடுங்
கூர்கொள்வேல்வலனேந்திக்கொச்சைவயமமர்ந்தாரே. (௯)

குண்டர்வண்டுவராடைபோர்த்ததொர்கொள்கையினர்கள்
மிண்டர்பேசியபேச்சுமெய்ப்பலமையணிகண்டன்
பண்டைநம்வினைதீர்க்கும்பண்பினரொண்கொடியோடுங்
கொண்டல்சேர்மணிமாடக்கொச்சைவயமமர்ந்தாரே. (௧௦)

கொந்தணிபொழில்சூழ்ந்தகொச்சைவயநகர்மேய
அந்தணனடியேத்துமருமறைஞானசம்பந்தன்
சந்தமார்ந்தழகாயதண்டமிழ்மாலைவல்லோர்போய்
முந்திவானவரோடும்புகவலர்முனைகெடவினையே.* (௧௧)

திருச்சிற்றம்பலம்.

பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

திருந்துமாகளிற்றிளமருப்பொடுதிரண்மணிச்சந்தமுந்திக்
குருந்துமாகுரவமுங்குடசமும்பீலியுஞ்சுமந்துகொண்டு
நிரந்துமாவயல்புகுநீடுகோட்டாறுசூழ்கொச்சைமேவிப்
பொருந்தினார்திருந்தடிபோற்றிவாழ்நெஞ்சமேபுகலதாமே. (௧)

ஏலமாரிலவமோடினமலர்த்தொகுதியாயெங்குநந்திக்
கோலமாமிளகொடுகொழுங்கனிகொன்றையுங்கொண்டுகோட்டா
றாலியாவயல்புகுமணிதருகொச்சையேநச்சிமேவும்
நீலமார்கண்டனைநினைமடநெஞ்சமேயஞ்சனீயே. (௨)

* இத்திருப்பதிகத்தில் ஏழாவதுசெய்யுள் மறைந்துபோயிற்று.

Koviloor Digital Library

பொன்னுமாமணிகொழித்தெறிபுனற்கரைகள்வாய்நுரைகளுந்திக்
கன்னிமார்முலைநலங்கவரவந்தேறுகோட்டாறுசூழ
மன்னினார்மாதொடும்மருவிடங்கொச்சையேமருவினாளும்
முன்னைநோய்தொடருமாறில்லைகாணெஞ்சமேயஞ்சனீயே. (௩)

கந்தமார்கேதகைச்சந்தனக்காடுசூழ்கதலிமாடே
வந்துமாவள்ளையின்பவரளிக்குவளையைச்சாடியோடக்
கொந்துவார்குழலினார்குதிகொள்கோட்டாறுசூழ்கொச்சைமேய
எந்தையாரடிநினைந்துய்யலாநெஞ்சமேயஞ்சனீயே. (௪)

மறைகொளுந்திறலினாராகுதிப்புகைகள்வானண்டமிண்டிச்
சிறைகொளும்புனலணிசெழும்பதிதிகழ்மதிற்கொச்சை * தன்பால்
உறைவிடமெனமனமதுகொளும்பிரமனார்சிரமறுத்த
இறைவனதடியிணையிறைஞ்சிவாழ்நெஞ்சமேயஞ்சனீயே. (௫)

சுற்றமுமக்களுந்தொக்கவத்தக்கனைச்சாடியன்றே
உற்றமால்வரையுமைநங்கையைப்பங்கமாவுள்கினானோர்
குற்றமில்லடியவர்குழுமியவீதிசூழ்கொச்சைமேவி
நற்றவமருள்புரிநம்பனைநம்பிடாய்நாளுநெஞ்சே. (௬)

கொண்டலார்வந்திடக்கோலவார்பொழில்களிற்கூடிமந்தி
கண்டவார்கழைபிடித்தேறிமாமுகிறனைக்கதுவுகொச்சை
அண்டவானவர்களுமமரருமுனிவரும்பணியவாலம்
உண்டமாகண்டனார்தம்மையேயுள்குநீயஞ்சனெஞ்சே. (௭)

அடலெயிற்றரக்கனார்நெருக்கிமாமலையெடுத்தார்த்தவாய்கள்
உடல்கெடத்திருவிரலூன்றினாருறைவிடமொளிகொள்வெள்ளி
மடலிடைப்பவளமுமுத்தமுந்தொத்துவண்புன்னைமாடே
பெடையொடுங்குருகினம்பெருகுதண்கொச்சையேபேணுநெஞ்சே. (௮)

அரவினிற்றுயிறருமரிபுநற்பிரமனுமன்றயர்ந்து
குரைகழற்றிருமுடியளவிடவரியவர்கொங்குசெம்பொன்
விரிபொழிலிடைமிகுமலைமகண்மகிழ்தரவீற்றிருந்த
கரியநன்மிடறுடைக்கடவுளார்கொச்சையேகருதுநெஞ்சே. (௯)

கடுமலியுடலுடையமணருங்கஞ்சிபுண்சாக்கியரும்
இடுமறவுரைதனையிகழ்பவர்கருதுநம்மீசர்வானோர்
நடுவுறை † நம்பனைநான்மறையவர்பணிந்தேத்தஞாலம்
உடையவன்கொச்சையேயுள்கிவாழ்நெஞ்சமேயஞ்சனீயே. (௧0)

காய்ந்துதங்காலினாற்காலனைச்செற்றவர்கடிகொள்கொச்சை
ஆய்ந்துகொண்டிடமெனவிருந்தநல்லடிகளையாதரித்தே
ஏய்ந்ததொல்புகழ்மிகுமெழின்மறைஞானசம்பந்தன்சொன்ன
வாய்ந்தவிஃமாலைகள்வல்லவர்நல்லர்வானுலகின்மேலே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

* செழுமதிதிகழ்மதிற்கொச்சை என்றும் பாடம். † நடுவுரை என்றும் பாடம்.

Koyiloor Digital Library

திருக்கழுமலம். *

திருவிராகம். பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

பிறைபணிபடர்சடைமுடியிடைபெருகியபுனலுடையவனிறை
இறைபணிவளையிணைமுலையவளிணைவனதெழிலுடையிடவகை
கறைபணிபொழினிறைவயலணிகழுமலமமர்கனலுருவினன்
நறைபணிமலர்நறுவிரைபுல்குநலமலிகழலிறைஞ்சமருவுமே. † (க)

பிணிபடுகடல்பிறவிகளறலெளிதுளததுபெருகியதிரை
அணிபடுகழுமலமினிதமரனலுருவினனவிர்சடைமிசை
தணிபடுகதிர்வளரிளமதிபுனைவனையுமைதலைவனைநிற
மணிபடுகறைமிடறனைநலமலிகழலிணைதொழன்மருவுமே. (உ)

வரியுறுபுலியதளுடையினன்வளர்பிறையொளிகிளர்கதிர்பொதி
விரியுறுசடைவிரைபுரைபொழில்விழவொலிமலிகழுமலமமர்
எரியுறுநிறவிறைவனதடியிரவொடுபகல்பரவுவர்தம
தெரியுறுவினைசெறிகதிர்முனையிருள்கெடநனிநினைவெய்துமதே. (ங)

வினைகெடமனநினைவதுமுடிகெனினனிதொழுதெழுகுலமதி
புனைகொடியிடைபொருடருபடுகளிறினதுரிபுதையுடலினன்
மனைகுடவயிறுடையனசிலவருகுறள்படையுடையவன்மலி
கனைகடலடைகழுமலமமர்கதிர்மதியினனதிர்கழல்களே. (ச)

தலைமதிபுனல்விடவரவிவைதலைமையதொருசடையிடையுடன்
நிலைமருவவொரிடமருளினனிழன்மழுவினொடழல்கணையினன்
மலைமருவியசிலைதனின்மதிலெரியுண ‡ மனமருவினனல
கலைமருவியபுறவணிதருகழுமலமினிதமர்தலைவனே. (ரு)

வரைபொருதிழிபருவிகள்பலபருகொருகடல்வரிமணலிடை
கரைபொருதிரைபொலிகெழுமியகழுமலமமர்கனலுருவினன்
அரைபொருபுலியதளுடையினனடியிணைதொழவருவினையெனும்
உரைபொடிபடவுறுதுயர்கெடவுயருலகெய்தலொருதலைமையே. (சு)

முதிருறுகதிர்வளரிளமதிசடையனைநறநிறைதலைதனில்
உதிருறுமயிர்பிணைதவிர்தசையுடைபுலியதளிடையிருள்கடி
கதிருறுசுடரொளிகெழுமியகழுமலமமர்மழுமலிபடை
அதிருறுகழலடிகளதடிதொழுமறிவலதறிவறியமே. (எ)

கடலெனநிறநெடுமுடியவனடுதிறலறவடிசரணென
அடலிறைபடையருளியபுகழரவரையினனணிகிளர்பிறை
விடநிறைமிடறுடையவன்விரிசடையவன்விடையுடையவனுமை
உடலுறைபதிகடன்மருகுடைபுயர்கழுமலவியனகரதே. (அ)

* திருக்கழுமலம்—சீர்காழி. † றைஞ்சமருவுமே என்றும் பாடம். ‡ மதிளெரியுண என்றும் பாடம்.

Koviloor Digital Library

கொழுமலருறைபதியுடையவனெடியவனெனவிவர்களுமவன்
விழுமையையளவறிகிலரிறைவிரைபுணர்பொழிலணிவிழவமர்
கழுமலமமர்கனலுருவினனடியிணைதொழுமவருவினை
எழுமையுமிலநிலவகைதனிலெளிதிமையவர்வியனுலகமே. (கூ)

அமைவனதுவரிழுகிய* துகிலணியுடையினரமணுருவர்கள்
சமையமுமொருபொருளெனுமவைசலநெறியனவறவுரைகளும்
இமையவர்தொழுகழுமலமமரிறைவனதடிபரவுவர்தமை
நமையலவினைநலனடைதலிலுயர்நெறிநனிநணுகுவர்களே. (க0)

பெருகியதமிழ்விரகினன்மலிபெயரவனுறைபிணர்திரையொடு
கருகியநிறவிரிகடலடைகழுமலமுறைவிடமெனநனி
பெருகியசிவனடிபரவியபிணைமொழியனவொருபதுமுடன்
மருவியமனமுடையவர்மதியுடையவர்விதியுடையவர்களே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

அயிலுறுபடையினர்விடையினர்முடிமேலரவமுமதியமும்விரவியவழகர்
மயிலுறுசாயலவனமுலையொருபான்மகிழ்பவர்வானிடைமுகில்புல்குமிடறர்
பயில்வுறுசரிதையரெருதுகந்தேறிப் † பாடியுமாடியும்பலிகொள்வர்வலிசேர்
கயிலையும்பொதியிலுமிடமெனவுடையார்கழுமலநினையநம்வினைகரிசறுமே. (க)

கொண்டலுநீலமும்புரைதிருமிடறர்கொடுமுடியுறைபவர்படுதலைக்கையர்
பண்டலரயன்சிரமரிந்தவர்பொருந்தும்படர்சடையடிகளார்பதியதனயலே [ற்
வண்டலும்வங்கமுஞ்சங்கமுஞ்சுறவுமறிகடற்றிரைகொணர்ந்தெற்றியகரைமே
கண்டலுங்கைதையுநெய்தலுங்குலவுங்கழுமலநினையநம்வினைகரிசறுமே. (உ)

எண்ணிடையொன்றினரிரண்டினருருவமெரியிடைமூன்றினர்நான்மறையாளர்
மண்ணிடையைந்தினராறினரங்கம்வகுத்தனரேழிசையெட்டிருங்கலைசேர்
பண்ணிடையொன்பதுமுணர்ந்தவர்பத்தர்பாடிநின்றடிதொழமதனனைவெகுண்ட
கண்ணிடைக்கனலினர்கருதியகோயில்கழுமலநினையநம்வினைகரிசறுமே. (ங)

எரியொருகரத்தினரிமையவர்க்கிறைவரேறுகந்தேறுவர்நீறுமெய்பூசித்
திரிதருமியல்பினரயலவர்புரங்கடியெழவிழித்தனர்வேய்புரைதோளி
வரிதருகண்ணிணைமடவரலஞ்சமஞ்சுறநிமிர்ந்ததோர்வடிவொடும்வந்த
கரியுரிமருவியவடிகளுக்கிடமாங்கழுமலநினையநம்வினைகரிசறுமே. (ச)

ஊரெதிர்ந்திடுபலிதலைகலனாகவுண்பவர்விண்பொலிந்திலங்கியவுருவர்
பாரெதிர்ந்தடிதொழவிரைதருமார்பிற்படவரவாமையக்கணிந்தவர்க்கிடமாம்
நீரெதிர்ந்திழிமணிநித்திலமுத்தநிரைசுரிசங்கமொடொண் ‡ மணிவரன்றிக்
காரெதிர்ந்தோதம்வன்றிரைகரைக்கெற்றுங்கழுமலநினையநம்வினைகரிசறுமே.()

* அமையனதுவரிழுகிய என்றும் பாடம். † சரிதையரேறுகந்தேறிப் என்றும் பாடம்.
‡ முத்தநிரை சொரிசங்க மொடொண் என்றும் பாடம்.

Koviloor Digital Library

முன்னுயிர்த்தோற்றமுமிறுதியுமாகிமுடியுடையமரர்களடிபணிந்தேத்தப்
பின்னியசடைமிசைப்பிறைநிறைவித்தபேருளாளனூர்பேணியகோயில்
பொன்னியனறுமலர்புனலொடுதூபஞ்சாந்தமுமேந்தியகையினராகிக்
கன்னியர்நாடொறும்வேடமேபரவுங்கழுமலநினையநம்வினைகரிசறுமே. (சு)

கோலக்கனித்தாவருகூற்றுதைசெய்தார்குரைகழல்பணிந்தவர்க்கருளியபொருளின், நிலைக்கனித்தாவரநினையவல்லார்தங்நெடுந்துயர்தவிர்த்தவெந்நிமலருக்கிடமாம், மலைக்கணித்தாவரவன்றிரைமுரலமதுவிரிபுன்னைகண்முத்தெனவரும்பக், கலைக்கணங்கானலினீழலில்வாழுங்கழுமலநினையநம்வினைகரிசறுமே.

புயம்பலவுடையதென்னிலங்கையர்வேந்தன்பொருவரையெடுத்தவன்பொன்முடிதிண்டோள், பயம்பலபடவடர்த்தருளியபெருமான்பரிவொடுமினிதுறைகோயிலதாகும், வியன்பலவிண்ணினுமண்ணினுமெங்கும்வேறுவேறுகங்களிற்பெயருளதென்னக், கயம்பலபடக்கடற்றிரைகரைக்கெற்றுங்* கழுமலநினையநம்வினைகரிசறுமே. (அ)

விலங்கலொன்றேந்திவன்மழைதடுத்தோனும் வெறிகமழ்தாமரையோனுமென்றிவர்தம், பலங்களானேடியுமறிவரிதாயபரிசினன்மருவிநின்றினிதுறைகோயில், மலங்கிவன்றிரைவரையெனப்பரந்தெங்குமறிகடலோங்கிவெள்ளிப்பியுஞ்சுமந்து, கலங்கடன்சரக்கொடுநிரக்கவந்தேறுங் கழுமலநினையநம்வினைகரிசறுமே. (கூ)

ஆம்பலதவமுயன்றறவுரைசொல்லுமறிவிலாச்சமணருந்தேரருங்கணிசேர்
நோம்பலதவமறியாதவர்நொடிந்தமூதுரைகொள்கிலாமுதல்வர்தம்மேனிச்
சாம்பலும்பூசிவெண்டலைகலனாகத்தையலாரிடுபலிவையகத்தேற்றுக்
காம்பனதோளிபொடினிதுறைகோயில்கழுமலநினையநம்வினைகரிசறுமே. (க0)

கலிகெழுபாரிடையூரெனவுளதாங்கழுமலம்விரும்பியகோயில்கொண்டவர்மேல்,வலிகெழுமனமிகவைத்தவன்மறைசேர்வருங்கலைஞானசம்பந்தனதமிழின், ஒலிகெழுமாலையென்றுரைசெய்தபத்துமுண்மையினானினைந்தேத்தவல்லார்மேல், மெலிகெழுதுயரடையாவினைசிந்தும்விண்ணவராற்றலின்மிகப்பெறுவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருத்தாளச்சதி. பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

பந்தத்தால்வந்தெப்பால்பயின்றுநின்றவும்பரப்
பாலேசேர்வாயேனோர்கான்† பயில்கணமுனிவர்களுஞ்
சிந்தித்தேவந்திப்பச்சிலம்பின்மங்கைதன்னொடுஞ்
சேர்வார்நாளுநீள்கயிலைத்திகழ்தருபரிசதெலாஞ்
சந்தித்தேயிந்தப்பார்சனங்கணின்றுதங்கணாற்
றூநேகாணாவாழ்வார்தத்தகவுசெய்தவனதிடங்
கந்தத்தாலெண்டிக்குங்கமழ்த்திலங்குசந்தனக்
காடார்பூவார்சீர்மேவுங்கழுமலவளநகரே. (க)

* கடறிரைகரைக்கெற்றும் என்றும் பாடம். † யேனோர்காண் என்றும் பாடம்.

Kovilqor Digital Library

பிச்சைக்கேபிச்சித்துப்பிசைந்தணிந்தவெண்பொடிப்
பீடார்நீடார்மாடாரும்பிறைநுதலரிவையொடும்
உச்சத்தானச்சிப்போரூடூர்ந்தடர்ந்தவெங்கணே
றூராவூராநீள்வீதிப்பயில்வொடுமொலிசெயிசை
வச்சத்தானச்சுச்சேர்வடங்கொள்கொங்கைமங்கைமார்
வாராநேரேமாலாகும்வசிவலவவனதிடங்
கச்சத்தான்* மெச்சிப்பூக்கலந்திலங்குவண்டினங்
காரார்காரார்நீள்சோலைக்கழுமலவளநகரே. (௨)

திங்கட்கேதும்பைக்கேதிகழ்ந்திலங்குமத்தையின்
சேரேசேரேநீராகச்செறிதருசுரநதியோ
டங்கைச்சேர்வின்றிக்கேயடைந்துடைந்தவெண்டலைப்
பாலேமேலேமாலேயப்படர்வுறுமவனிறகும்
பொங்கப்போர்நஞ்சைச்சேர்புயங்கமங்கள்கொன்றையின்
போதார்தாரேதாமேவிப்புரிதருசடையனிடங்†
கங்கைக்கேயும்பொற்பார்கலந்துவந்தபொன்னியின்
காலேவாராமேலேபாய்கழுமலவளநகரே. (௩)

அண்டத்தாலெண்டிக்குமமைந்தடங்குமண்டலத்
தாறேவேறேவானாள்வாரவரவரிடமதெலாம்
மண்டிப்போய்வென்றிப்போர்மலைந்தலைந்தவும்பரு
மாறேலாதார்தாமேவும்வலிமிகுபுரமெரிய
முண்டத்தேவெந்திட்டேமுடிந்திடிந்தவிஞ்சிசூழ்
மூவாமூதூர்மூதூராமுனிவுசெய்தவனதிடங்
கண்டிட்டேசெஞ்சொற்சேர்கவின்சிறந்தமந்திரக்
காலேயோவாதார்மேவுங்கழுமலவளநகரே. (௪)

திக்கிற்றேவற்றற்றேதிகழ்ந்திலங்கு‡ மண்டலச்
சீறூர்வீறூர்போரார்தாரகனுடலவனெதிரே
புக்கிட்டேவெட்டிட்டேபுகைந்தெழுந்தசண்டத்தீப்
போலேபூநீர்திகான்மீப்புணர்தருமுயிர்கடிறஞ்
சொக்கத்தேநிர்த்தத்தேதொடர்ந்தமங்கைசெங்கதந்
தோடேயாமேமாலோகத்துயர்களைபவனதிடங்
கைக்கப்போர்புக்கத்தே¶ கனன்றுமிண்டுதண்டலைக்§
காடேயோடாவூரேசேர்கழுமலவளநகரே. (௫)

செற்றிட்டேவெற்றிச்சேர்திகழ்ந்ததும்பிமொய்ம்புறுஞ்
சேரேவாராநீள்கோதைத்தெரியிழைபிடியதுவாய்
ஒற்றைச்சேர்முற்றற்கொம்புடைத்தடக்கைமுக்கண்மிக்
கோவாதேபாய்மாதானத்துறுபுகர்முகவிறையைப்
பெற்றிட்டேமற்றிப்பார்பெருத்துமிக்கதுக்கமும்
போராநோய்தாமேயாமைப்பிரிவுசெய்தவனதிடங்
கற்றிட்டேயெட்டெட்டுக்கலைத்துறைக்கரைச்செலக்
காணாதாரேசேராமெய்க்கழுமலவளநகரே. (௬)

* கச்சித்தான் என்றும் பாடம். † புரிவுசெய்தவனதிடம் என்றும் பாடம். ‡ திகழ்ந்தடங்கு என்றும் பாடம். ¶ கைக்கப்போயுக்கத்தே என்றும் பாடம். § கன்றுமிண்டு தண்டலை என்றும் பாடம்.

Koviloor Digital Library

பத்திப்பேர்வித்திட்டேபாந்தவைம்புலன்கள்வாய்ப்
பாலேபோகாமேகாவாப்பகைபறும்வகைநினையா
முத்திக்கேவிக்கத்தேமுடிக்குமுக்குணங்கள்வாய்
— மூடாவூடாநாலந்தக்கரணமுமொருநெறியாய்ச்
சித்திக்கேயுய்த்திட்டுத்திகழ்ந்தமெய்ப்பரம்பொருள்
சேர்வார்தாமேதானாகச்செயுமவனுறையுமிடங்
கத்திட்டோர்சட்டங்கங்கலந்திலங்குநற்பொருள்
காலேயோவாதார்மேவுங்கழுமலவளநகரே. (௭)

செம்பைச்சேரிஞ்சிச்சூழ்செறிந்திலங்குபைம்பொழிற்
சேரேவாராவாரிசத்திரையெறிநகரிறைவன்
இம்பர்க்கேதஞ்செய்திட்டிருந்தான்பயின்றவெற்
போரார்பூநேரோர்பாதத்தெழில்விரலவணிறுவிட்
டம்பொற்பூண்வென்றித்தோளழிந்துவந்தனஞ்செய்தாற்
காரார்கூர்வாள்வாளன்றருள்புரிபவனிடங்
கம்பத்தார்தும்பித்திண்கவுட்சொரிந்தமும்மதக்
காரார்சேறூர்மாவித்திக்கழுமலவளநகரே. (௮)

பன்றிக்கோலங்கொண்டிப்படித்தடம்பயின்றிடப்
பானுமாறுனுமேயப்பறவையினுருவுகொள
ஒன்றிட்டேயம்புச்சேருபர்ந்தபங்கயத்தவ
னோகானோதானஃதுணராதருவினதடிமுடியுஞ்
சென்றிட்டேவந்திப்பத்திருக்களங்கொள்பைங்கணின்
றேசால்வேறாகாரந்தெரிவுசெய்தவனிடங்
கன்றுக்கேமுன்றிற்கேகலந்திலங்கிறைக்கவுங்
காலேவாராமேமேலபாய்கழுமலவளநகரே. (௯)

தட்டிட்டேமுட்டிக்கைத்தடுக்கிடுக்கிநின்றுணாத்
தாமேபேணாதேநாளுஞ்சமணொடுமுழல்பவரும்
இட்டத்தாலத்தந்தானிதன்றதென்று* நின்றவர்க்
கேபாமேவாயேதுச்சொல்லிலைமலிமருதம்பூப்
புட்டத்தேபட்டிட்டுப்புதைக்குமெய்க்கொள்புத்தரும்
போல்வார்தாமோராமேபோய்ப்புணர்வுசெய்தவனிடங்†
கட்டிக்கால்வெட்டித்திங்கரும்புதந்தபைம்புனற்
காலேவாராமேமேலபாய்கழுமலவளநகரே. (௧௦)

கஞ்சத்தேனுண்டிட்டேகளித்துவண்டுசன்பகக்
கானேதேனேபோராருங்கழுமலநகரிறையைத்
தஞ்சைச்சார்சண்பைக்கோன்சமைத்தநற்கலைத்துறை
தாமேபோல்வார்தேனேரார்தமிழ்விரகனமொழிகள்
எஞ்சத்தேய்வின்றிக்கேயிமைத்திசைத்தமைத்தகொண்
டேழேயேழநாலேமூன்றியலிசையிசையியல்பா
வஞ்சத்தேய்வின்றிக்கேமனங்கொளப்பயிற்றுவோர்
மார்பேசேர்வாள்வானோர்சீர்மதிநுதன்மடவரலே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

* இட்டத்தானைத்தந்தானிதன்றதென்று என்றும் பாடம். † போய்ப்புரிவுசெய்தவனிடம் என்றும் பாடம்.

Koviloor Digital Library

பண் - மேகராகக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

சேவுயருந்திண்கொடியான்றிருவடியேசரணென்றுசிறந்தவன்பால்
நாவியலுமங்கையொடுநான்முகன்றான்வழிபட்டநலங்கொள்கோயில்
வாவிதொறும்வண்கமலமுகங்காட்டச்செங்குமுதம்வாய்கள்காட்டக்
காவியிருங்கருங்குவளைகருநெய்தல்கண்காட்டுங்கழுமலமே. (க)

பெருந்தடங்கண்செந்துவர்வாய்ப்பீடுடையமலைச்செல்விபிரியாமேனி
அருந்தகையசுண்ணவெண்ணீறலங்கரித்தானமரர்தொழவமருங்கோயில்
தருந்தடக்கைமுத்தழலோர்மனைகடொறுமிறைவனதுதன்மைபாடிக்
கருந்தடங்கண்ணார்கழல்பந்தம்மானைப்பாட்டயருங்கழுமலமே. (உ)

அலங்கன்மலிவானவருந்தானவருமலைகடலைக்கடையப்பூதம்
கலங்கவெழுகடுவிடமுண்டிருண்டமணிகண்டத்தோன்கருதுங்கோயில்
விலங்கலமர்புயன்மறந்துமீன்சனிபுக்கூன்சலிக்குங்காலந்தானுங்
கலங்கலிலாமனப்பெருவண்கையுடையமெய்யர்வாழ்கழுமலமே. (ங)

பாரிதனைநலிந்தமரர்பயமெய்தச்சயமெய்தும்பரிசுவெம்மைப்
போரிசையும்புரமூன்றும்பொன்றவொருசிலைவளைத்தோன்பொருந்துங்கோயில்
வாரிசைமென்முலைமடவார்மாளிகையின்* சூளிகைமேன்மகப்பாராட்டக்
காரிசையும்விசும்பியங்குங்கணங்கேட்டுமகிழ்வெய்துங்கழுமலமே. (ச)

ஊர்கின்றவரவமொளிவிடுதிங்களொடுவன்னிமத்தமன்னும்
நீர்நின்றகங்கைநகுவெண்டலைசேர்செஞ்சடையானிகழுங்கோயில்
ஏர்தங்கிமலர்நிலவியிசைவெள்ளிமலையென்னநிலவிநின்ற
கார்வண்டின்கணங்களாற்கவின்பெருகுசுதைமாடக்கழுமலமே. (ரு)

தருஞ்சரதந்தந்தருளென்றடிநினைந்துதழலணைந்துதவங்கள்செய்த
பெருஞ்சதுரர்பெயலர்க்கும்பீடார்தோழமையளித்தபெருமான்கோயில்
அரிந்தவயலரவிந்தமதுவுகுப்பவதுகுடித்துக்களித்துவாளை
கருஞ்சகடமிளகவளர்கரும்பிரியவகம்பாயுங்கழுமலமே. (சு)

புவிமுத † லைம்பூதமாய்ப்புலனைந்தாய்நிலைந்தாய்க்கரணநான்காய்
அவையவைசேர்பயனுருவாயல்லவுருவாய் ‡ நின்றானமருங்கோயில்
தவமுயல்வோர்மலர்பறிப்பத்தாழவிடுகொம்புதைப்பக்கொக்கின்காய்கள்
கவணெறிகற்போற்சுனையிற்கரைசேரப்புள்ளிரியுங்கழுமலமே. (எ)

அடல்வந்தவானவரையழித்துலகுதெழித்துழலுமரக்கர்கோமான்
மிடல்வந்தவிருபதுதோணெரியவிரற்பணிகொண்டோன்மேவுங்கோயில்
நடவந்தவுழவரிதுநடவொணாவகைபரலாய்த்தென்றுதுன்று
கடல்வந்தசங்கீன்றமுத்துவயற்கரைகுவிக்குங்கழுமலமே. (அ)

* மாளிகைமென் என்றும் பாடம். † புவமுத என்றும் பாடம். ‡ யல்லவருவாய் என்றும் பாடம்.

Koviloor Digital Library

பூமகடன்கோனயனும்புள்ளினொடுகேழலுருவாகிப்புக்கிட்
டாமளவுஞ்சென்றுமுடியடிகாணாவகைநின்றானமருங்கோயில்
பாமருவுங்கலைப்புலவோர்பன்மலர்கள்கொண்டணிந்துபரிசினாலே
காமனைகள்பூரித்துக்களிகூர்ந்துநின்றேத்துங்கழுமலமே. (கூ)

குணமின்றிப்புத்தர்களும்பொய்த்தவத்தைமெய்த்தவமாய்நின்றுகையில்
உணன்மருவுஞ்சமணர்களுமுணராதவகைநின்றானுறையுங்கோயில்
மணமருவும்வதுவையொலிவிழவினொலியிவையிசையமண்மேற்றேவர்
கணமருவுமறையினொலிகீழ்ப்படுக்கமேற்படுக்குங்கழுமலமே. (க0)

கற்றவர்கள்பணிந்தேத்துங்கழுமலத்துளீசன்றன்கழன்மேனல்லோர்
நற்றுணைபாம்பெருந்தன்மைஞானசம்பந்தன்றானயந்துசொன்ன
சொற்றுணையோரைந்தினொடைந்திவைவல்லார்தூமலராடுணைவராகி
முற்றுலகமதுவாண்டுமுக்கணானடிசேரமுயல்கின்றாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

மண்ணினல்லவண்ணம்* வாழலாம்வைகலும்
எண்ணினல்லகதிக்கியாதுமோர்குறைவிலைக்
கண்ணினல்லஃதுறுங்கழுமலவளநகர்ப்
பெண்ணினல்லாளொடும்பெருந்தகையிருந்ததே. (க)

போதையார்பொற்கிண்ணத்தடிசில்பொல்லாதெனத்
தாதையார்முனிவுறத்தானெனையாண்டவன்
காதையார்குழையினன்கழுமலவளநகர்ப்
பேதையாளவளொடும்பெருந்தகையிருந்ததே. (உ)

தொண்டணைசெய்தொழிற்றுயரறுத்துய்யலாம்
வண்டணைகொன்றையான்மதுமலர்ச்சடைமுடிக்
கண்டுணைநெற்றியான்கழுமலவளநகர்ப்
பெண்டுணையாகவோர்பெருந்தகையிருந்ததே. (ங)

அயர்வுளோமென்றுநீயசைவொழிநெஞ்சமே
நியர்வளைமுன்கையாணேரிழையவளொடுங்
கயல்வயல்குதிகொளுங்கழுமலவளநகர்ப்
பெயர்பலதுதிசெயப்பெருந்தகையிருந்ததே. (ச)

அடைவிலோமென்றுநீயயர்வொழிநெஞ்சமே
விடையமர்கொடியினான்விண்ணவர்தொழுதெழுங்
கடையுயர்மாடமார்கழுமலவளநகர்ப்
பெடைநடையவளொடும்பெருந்தகையிருந்ததே. (ரு)

* மண்ணினல்லவ்வணம் என்றும் பாடம்.

Koviloor Digital Library

மற்றொருபற்றிலநெஞ்சமேமறைபல
கற்றநல்வேதியர்கழுமலவளநகர்ச்
சிற்றிடைப்பேரல்குற்றிருந்திழையவளொடும்
பெற்றெனையாளுடைப்பெருந்தகையிருந்ததே. (௬)

குறைவளைவதுமொழிகுறைவொழிநெஞ்சமே
நிறைவளைமுன்கையாணேரிழையவளொடுங்
கறைவளர்பொழிலணிகழுமலவளநகர்ப்
பிறைவளர்சடைமுடிப்பெருந்தகையிருந்ததே. (எ)

அரக்கனாருவரையெடுத்தவனலறிட
நெருக்கினார்விரலினானீடியாழ்பாடவே
கருக்குவாளருள்செய்தான்கழுமலவளநகர்ப்
பெருக்குநீரவளொடும்பெருந்தகையிருந்ததே. (அ)

நெடியவன்பிரமனுநினைப்பரிதாயவர்
அடியொடுமுடியறியாவழலுருவினன்
கடிகமழ்பொழிலணிகழுமலவளநகர்ப்
பிடிநடையவளொடும்பெருந்தகையிருந்ததே. (௯)

தாருறுதட்டுடைச்சமணர்சாக்கியர்கடம்
ஆருறுசொற்களைந்தடியிணையடைந்துய்ம்மின்
காருறுபொழில்வளர்கழுமலவளநகர்ப்
பேரறத்தாளொடும்பெருந்தகையிருந்ததே. (௧0)

கருந்தடந்தேன்மல்குகழுமலவளநகர்ப்
பெருந்தடங்கொங்கையொடிருந்தவெம்பிரான்றனை
அருந்தமிழ்ஞானசம்பந்தனசெந்தமிழ்
விரும்புவாரவர்கள்போய்விண்ணுலகாள்வரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தப்பிள்ளையார் மதுரையில் எழுந்தருளியிருக்கும் நாளிலே, சீர்காழியிலிருந்த சிவபாதவிருதயர் மதுரையை அடைந்து திருவாலவாயில் வீற்றிருக்குஞ் சொக்கநாத சுவாமியை வணங்கிக்கொண்டு பிள்ளையார் எழுந்தருளியிருக்கின்ற திருமடத்தை அணைந்தார். பிள்ளையார் அவரை எதிர்தொழுது, தமக்குச் சீர்காழியில் சிவஞானம் அருளிய திருத்தோணியப்பரை நினைந்து, "மண்ணினல்லவண்ணம்" என்னுந் திருப்பதிகம் பாடியருளினர்.

பண் - புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

மடன்மலிகொன்றைதுன்றுவாளெருக்கும்வன்னியுமந்தமுஞ்சடைமேற்
படலொலிதிரைகண்மோதியகங்கைத்தலைவனார்தம்மிடம்பகரில்
விடலொலிபரந்தவெண்டிரைமுத்தமிப்பிகள்கொணர்ந்துவெள்ளருவிக்
கடலொலியோதமோதவந்தலைக்குங்கழுமலநகரெனலாமே. (௧)

Koviloor Digital Library

மின்னியவரவும்வெறிமலர்பலவும்விரும்பியதிங்களுந்தங்கு
சென்னியதுடையான்றேவர்தம்பெருமான்சேயிழையொடுமுறைவிடமாம்
பொன்னியன்மணியுமுரிகரிமருப்புஞ்சந்தமுமுந்துவன்றிரைகள்
கன்னியராடக்கடலொலிமலியுங்கழுமலநகரெனலாமே. (உ)

சீருறுதொண்டர்கொண்டடிபோற்றச்செழுமலர்புனலொடுதூபந்
தாருறுகொன்றைதம்முடிவைத்தசைவனார்தங்கிடமெங்கும்
ஊருறுபதிகளுலகுடன்பொங்கியொலிபுனல்கொள*வுடன்மிதந்த
காருறுசெம்மைநன்மையான்மிக்ககழுமலநகரெனலாமே. (ங)

மண்ணினாரேத்தவானுளார்பரசவந்தரத்தமரர்கள்போற்றப்
பண்ணினாரெல்லாம்பலபலவேடமுடையவர்பயில்விடமெங்கும்
எண்ணினான்மிக்காரியல்பினானிறைந்தாரேந்திழையவரொடுமைந்தர்
கண்ணினாலின்பங்கண்டொளிபரக்குங்கழுமலநகரெனலாமே. (ச)

சுருதியான்றலையுநாமகண்மூக்குஞ்சுடரவன்கரமுமுன்னியங்கு
பரிதியான்பல்லுமிறுத்தவர்க்கருளும்பரமனார்பயின்றினிதிருக்கை
விருதினான்மறையுமங்கமோராறும்வேள்வியும்வேட்டவர்ஞானங்
கருதினாருலகிற்கருத்துடையார்சேர்கழுமலநகரெனலாமே. (ரு)

புற்றில்வாளரவுமாமையும்பூண்டபுநிதனார்பனிமலர்க்கொன்றை
பற்றிவான்மதியஞ்சடையிடைவைத்தபடிறனார்பயின்றினிதிருக்கை
செற்றுவன்றிரைகளொன்றொடொன்றோடிச்செயிர்த்துவண்சங்கொடுவங்கங்
கற்றுறைவரைகள்கரைக்குவந்துரைக்குங்கழுமலநகரெனலாமே. (சா)

அலைபுனற்கங்கைதங்கியசடையாரடனெடுமதிலொருமூன்றுங்
கொலையிடைச்செந்திவெந்தறக்கண்டகுழகனார்கோயிலதென்பர்
மலையின்மிக்குபர்ந்தமரக்கலஞ்சரக்குமற்றுமற்றிடையிடையெங்குங்
கலைகளித்தேறிக்கானலில்வாழுங்கழுமலநகரெனலாமே. (எ)

ஒருக்கமுன்னினையாத்தக்கன்றன்வேள்வியுடைதரவுழறியபடையார்
அரக்கனைவரையாலாற்றலன்றழித்தவழகனாரமர்ந்துறைகோயில்
பரக்கும்வண்புகழார்பழியவைபார்த்துப்பலபல†வறங்களேபயிற்றிக்
கரக்குமாறறியாவண்மையால்வாழுங்கழுமலநகரெனலாமே. (அ)

அருவரைபொறுத்தவாற்றலினானுமணிகிளர்தாமரையானும்
இருவருமேத்தவெரியுருவானவிறைவனாருறைவிடம்வினவில்
ஒருவரிவ்வுலகில்வாழ்கிலாவண்ணமொலிபுனல்வெள்ளமுன்பரப்பக்
கருவரைசூழ்ந்தகடலிடைமிதக்குங்கழுமலநகரெனலாமே. (கூ)

உரிந்துயருருவிலுடைதவிர்ந்தாருமத்துகில்போர்த்துழல்வாருந்
தெரிந்துபுன்மொழிகள்செப்பினகேளாச்செம்மையார்நன்மையாலுறைவாங்
குருந்துயர்கோங்குகொடிவிடுமுல்லைமல்லிகைசண்பகம்வேங்கை
கருந்தடங்கண்ணின்மங்கைமார்கொய்யுங்கழுமலநகரெனலாமே. (க0)

* பொங்கியொலிகடல்கொள என்றும் பாடம். † பார்த்துப்பலபட என்றும் பாடம்.

Koviloor Digital Library

கானலங்கழனியோதம்வந்துலவுங்கழுமலநகருறைவார்மேல்
ஞானசம்பந்தனற்றமிழ்மாலைநன்மையாலுரைசெய்துநவில்வார்
ஊனசம்பந்தத்துறுபிணிநீங்கியுள்ளமுமொருவழிக்கொண்டு
வானிடைவாழ்வர்மண்மிசைப்பிறவார்மற்றிதற்காணையுநமதே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பல்பெயர்ப்பத்து. பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

எரியார்மழுவொன்றேந்தியங்கையிடுதலையேகலனா
வரியார்வளையாரையம்வவ்வாய்மாநலம்வவ்வுதியே
சரியாநாவின்வேதகீதன்றாமரைநான்முகத்தன்
பெரியான்பிரமன்பேணியாண்டபிரமபுரத்தானே. (க)

பெயலார்* சடைக்கோர்திங்கள்சூடிப்பெய்பலிக்கென்றயலே
கயலார்தடங்கணஞ்சொனல்லார்கண்டுயில்வவ்வுதியே
இயலானடாவியின்பமெய்திஇந்திரனாண்மண்மேல்
வியலார்முரசமோங்குசெம்மைவேணுபுரத்தானே. (உ)

நகலார்தலையும்வெண்பிறையுநளிர்சடைமாட்டயலே
பகலாப்பலிதேர்ந்தையம்வவ்வாய்பாய்கலைவவ்வுதியே
அகலாதுறையுமாநிலத்திலயலின்மையாலமரர் †
புகலான்மலிந்தபூம்புகலிமேவியபுண்ணியனே. (ங)

சங்கோடிலங்கத்தோடுபெய்துகாதிலோர்தாழ்குழையன்
அங்கோல்வளையாரையம்வவ்வாயானலம்வவ்வுதியே
செங்கோனடாவிப்பல்லுயிர்க்குஞ்செய்வினைமெய்தெரிய
வெங்கோத்தருமன்மேவியாண்டவெங்குருமேயவனே. (ச)

தணிநீர்மதியஞ்சூடிநீடுதாங்கியதாழ்சடையன்
பிணிநீர்மடவாரையம்வவ்வாய்பெய்கலைவவ்வுதியே
அணிநீருலகமாகியெங்குமாழ்கடலாலழுங்கத்
துணிநீர்பணியத்தான்மிதந்ததோணிபுரத்தானே. (ரு)

கவர்பூம்புனலுந்தண்மதியுங்கமழ்சடைமாட்டயலே
அவர்பூம்பலியோடையம்வவ்வாயானலம்வவ்வுதியே
அவர்பூணரையர்க்காதியாயவடன்மன்னனாண்மண்மேல்
தவர்பூம்பதிகளெங்குமெங்குந்தங்குதாயவனே. (சு)

முலையாழ்கெழுவ ‡ மொந்தைகொட்டமுன்கடைமாட்டயலே
நிலையாப்பலிதேர்ந்தையம்வவ்வாய்நீநலம்வவ்வுதியே
தலையாய்க்கிடந்திவ்வையமெல்லாந்தன்னதோராணைநடாய்ச்
சிலையான்மலிந்தசீர்ச்சிலம்பன்சிரபுரமேயவனே. (எ)

* பியலார் என்றும் பாடம். † நிலத்தில்யலின்மயலாலமரர் என்றும் பாடம்.
‡ கெழும என்றும் பாடம்.

Koviloor Digital Library

எருதேகொணர்கென்றேறியங்கையிடுதலையேகலனாக்
கருதேர்மடவாரையம்வவ்வாய்கண்டுயில்வவ்வுதியே
ஒருதேர்கடாவியாரமருளொருபதுதேர்தொலையப்
பொருதேர்வலவன்மேவியாண்டபுறவமர்புண்ணியனே. (௮)

துவர்சேர்கலிங்கப்போர்வையாருந்தூய்மையிலாச்சமணுங்
கவர்செய்துழலக்கண்டவண்ணங்காரிகைவார்குழலார்
அவர்பூம்பலியோடையம்வவ்வாயானலம்வவ்வுதியே
தவர்செய்நெடுவேற்சண்டனாளச்சண்பையமர்ந்தவனே. (௯)

நிழலான்மலிந்தகொன்றைசூடிநீறுமெய்பூசிநல்ல
குழலார்மடவாரையம்வவ்வாய்கோல்வளைவவ்வுதியே
அழலாயுலகங்கவ்வைதீரவைந்தலைநீண்முடிய
கழலாகரையன்காவலாகக்காழியமர்ந்தவனே. (க0)

கட்டார்துழாயன்றாமரையானென்றிவர்காண்பரிய
சிட்டார்பலிதேர்ந்தையம்வவ்வாய்செய்கலைவவ்வுதியே
நட்டார்நடுவேநந்தனாளநல்வினையாலுயர்ந்த
கொட்டாறுடுத்ததண்வயல்சூழ்கொச்சையமர்ந்தவனே. (கக)

கடையார்கொடிநன்மாடவீதிக்கழுமலவூர்க்கவுணி
நடையார்பனுவன்மாலையாகஞானசம்பந்தனல்ல
படையார்மழுவன்மேன்மொழிந்தபல்பெயர்ப்பத்தும்வல்லார்க்
கடையாவினைகளுலகினாளுமமருலகாள்பவரே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

திருவிருக்குக்குறள். பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

அரனையுள்குவீர்
பிரமனூருளெம்
பரனையேமனம்
பரவியுய்ம்மினே. (க)

காணவுள்குவீர்
வேணுநற்புரத்
தாணுவின்கழல்
பேணியுய்ம்மினே. (உ)

நாதனென்பிர்காள்
காதலொண்புகல்
ஆதிபாதமே
ஓதியுய்ம்மினே. (௩)

அங்கமாதுசேர்
பங்கமாயவன்
வெங்குருமன்னும்
எங்களீசனே. (௪)

வாணிலாச்சடைத்
தோணிவண்புரத்
தாணிநம்பொனைக்
காணுமின்களே. (௫)

பாந்தளார்சடைப்
பூந்தராய்மன்னும்
ஏந்துகொங்கையாள்
வேந்தனென்பரே. (௬)

Koviloor Digital Library

கரியகண்டனைச்
சிரபுரத்துளெம்
அரசைநாடொறும்
பரவியுய்ம்மினே. (எ)

நறவமார்பொழிற்
புறவநற்பதி
இறைவனுமமே
மறவனெஞ்சமே. (அ)

தென்றிலரக்கனைக்
குன்றிற்சன்பைமன்
அன்றுநெரித்தவா
நின்றுநினைமினே. (௯)

அயனுமாலுமாய்
முயலுங்காழியான்
பெயல்வையெய்திநின்
றியலுமுள்ளமே. (க0)

தேரமணரைச்
சேர்வில்கொச்சைமன்
நேரில்கழனினைந்
தோருமுள்ளமே. (கக)

தொழுமனத்தவர்
கழுமலத்துறை
பழுதில்சம்பந்தன்
மொழிகள்பத்துமே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

மொழிமாற்று. பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

காடதணிகலங்காரரவம்பதிகாலதனில்
தோடதணிகுவர்சுந்தரக்காதினிற்றூச்சிலம்பர்
வேடதணிவர்விசயற்குருவம்வில்லுங்கொடுப்பர்
பீடதணிமணிமாடப்பிரமபுரத்தாரே. (க)

கற்றைச்சடையதுகங்கணமுன்கையிற்றிங்கள்கங்கை
பற்றித்துமுப்புரம்பார்படைத்தோன்றலைசுட்டதுபண்
டெற்றித்துப்பாம்பையணிந்ததுகூற்றையெழில்விளங்கும்
வெற்றிச்சிலைமதில்வேணுபுரத்தெங்கள்வேதியரே. (உ)

கூவிளங்கையதுபேரிசடைமுடிக்கூட்டத்தது
தூவிளங்கும்பொடிப்பூண்டதுபூசிற்றுத்துத்திநாகம்
ஏவிளங்குந்நுதலாளையும்பாகமுரித்தனரின்
பூவிளஞ்சோலைப்புகலியுண்மேவியபுண்ணியரே. (ங)

உரித்ததுபாம்பையுடன்மிசையிட்டதோரொண்களிற்றை
எரித்ததொராமையையின்புறப்பூண்டதுமுப்புரத்தைச்
செருத்ததுசூலத்தையேந்திற்றுத்தக்கனைவேள்விபன்னூல்
விரித்தவர்வாழ்தருவெங்குருவில்வீற்றிருந்தவரே. (ச)

கொட்டுவரக்கரையார்ப்பதுதக்கைகுறுந்தாளன
விட்டுவர்பூதங்கலப்பிலரின்புகழென்புலவின்
மட்டுவருந்தழல்சூடுவர்மத்தமுமேந்துவர்வான்
தொட்டுவருங்கொடித்தோணிபுரத்துறைசுந்தரரே. (ரு)

சாத்துவர்பாசந்தடக்கையிலேந்துவர்கோவணந்தங்
கூத்தவர்கச்சுக்குலவிநின்றாடுவர்கொக்கிறகும்
பேர்த்தவர்பல்படைபேயவைசூடுவர்பேரெழிலார்
பூத்தவர்கைதொழுபூந்தராய்மேவியபுண்ணியரே. (௬)

Koviloor Digital Library

காலதுகங்கைகற்றைச்சடையுள்ளாற்கழல்சிலம்பு
மாலதுவேந்தன்மழுவதுபாகம்வளர்கொழுங்கோட்
டாலதுவூர்வாடலேற்றிருப்பாணிமணிநீர்ச்
சேலதுகண்ணியொர்பங்கர்சிரபுரமேயவரே. (எ)

நெருப்புருவெள்விடைமேனியரேறுவர்நெற்றியின்கண்
மருப்புருவன்கண்ணர்தாதையைக்காட்டுவர்மாமுருகன்
விருப்புறுபாம்புக்குமெய்த்தந்தையார்விறன்மாதவர்வாழ்
பொருப்புறுமாளிகைத்தென்புறவத்தணிபுண்ணியரே. (அ)

இலங்கைத்தலைவனையேந்திற்றிறுத்ததிரலையின்னாள்
கலங்கியகூற்றுயிர்பெற்றதுமாணிகுமைபெற்றது
கலந்திளர்மொந்தையினாடுவர்கொட்டுவர்காட்டகத்துச்
சலங்கிளர்வாழ்வயற்சண்பையுண்மேவியதத்துவரே. (கூ)

அடியிணைகண்டிலன்றாமரையோன்மான்முடிகண்டிலன்
கொடியணியும்புலியேறுகந்தேறுவர்தோலுடுப்பர்
பிடியணியுந்நடையாள்வெற்பிருப்பதோர்கூறுடையர்
கடியணியும்பொழிற்காழியுண்மேயகறைக்கண்டரே. (க௦)

கையதுவெண்குழைகாததுசூலமமணர்புத்தர்
எய்துவர்தம்மையடியவரெய்தாரொரேனக்கொம்பு
மெய்திகழ்கோவணம்பூண்பதுடுப்பதுமேதகைய
கொய்தலர்பூம்பொழிற்கொச்சையுண்மேவியகொற்றவரே. (கக)

கல்லுயர்கழுமலவிஞ்சியுண்மேவியகடவுடன்னை
நல்லுரைஞானசம்பந்தன்ஞானத்தமிழ்நன்குணரச்
சொல்லிடல்*கேட்டல்வல்லோர்தொல்லைவானவர்தங்களொடுஞ்
செல்குவர்சீருளாற்பெறலாஞ்சிவலோகமதே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

ஏகபாதம். பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

பிரமபுரத்துறைபெம்மானெம்மான்
பிரமபுரத்துறைபெம்மானெம்மான்
பிரமபுரத்துறைபெம்மானெம்மான்
பிரமபுரத்துறைபெம்மானெம்மான். (க)

விண்டலர்பொழிலணிவேணுபுரத்தான்
விண்டலர்பொழிலணிவேணுபுரத்தான்
விண்டலர்பொழிலணிவேணுபுரத்தான்
விண்டலர்பொழிலணிவேணுபுரத்தான். (உ)

* சொல்லுதல் என்றும் பாடம்.

Koviloor Digital Library

புண்டரிகத்தவன்மேவியபுகலியே
புண்டரிகத்தவன்மேவியபுகலியே
புண்டரிகத்தவன்மேவியபுகலியே
புண்டரிகத்தவன்மேவியபுகலியே. (௩)

விளங்கொளிதிகழ்தருவெங்குருமேவினன்
விளங்கொளிதிகழ்தருவெங்குருமேவினன்
விளங்கொளிதிகழ்தருவெங்குருமேவினன்
விளங்கொளிதிகழ்தருவெங்குருமேவினன். (௪)

சுடர்மணிமாளிகைத்தோணிபுரத்தவன்
சுடர்மணிமாளிகைத்தோணிபுரத்தவன்
சுடர்மணிமாளிகைத்தோணிபுரத்தவன்
சுடர்மணிமாளிகைத்தோணிபுரத்தவன். (௫)

பூசுரர்சேர்பூந்தராயவன்பொன்னடி
பூசுரர்சேர்பூந்தராயவன்பொன்னடி
பூசுரர்சேர்பூந்தராயவன்பொன்னடி
பூசுரர்சேர்பூந்தராயவன்பொன்னடி. (௬)

செருக்குவாய்ப்புடையான்சிரபுரமென்னில்
செருக்குவாய்ப்புடையான்சிரபுரமென்னில்
செருக்குவாய்ப்புடையான்சிரபுரமென்னில்
செருக்குவாய்ப்புடையான்சிரபுரமென்னில். (௭)

பொன்னடிமாதவர்சேர்புறவத்தவன்
பொன்னடிமாதவர்சேர்புறவத்தவன்
பொன்னடிமாதவர்சேர்புறவத்தவன்
பொன்னடிமாதவர்சேர்புறவத்தவன். (௮)

தசமுகனெரிதரவூன்றுசண்பையான்
தசமுகனெரிதரவூன்றுசண்பையான்
தசமுகனெரிதரவூன்றுசண்பையான்
தசமுகனெரிதரவூன்றுசண்பையான். (௯)

காழியானயனுள்ளவாகாண்பரே
காழியானயனுள்ளவாகாண்பரே
காழியானயனுள்ளவாகாண்பரே
காழியானயனுள்ளவாகாண்பரே. (௧0)

கொச்சையண்ணலைக்கூடகிலாருடன்மூடரே
கொச்சையண்ணலைக்கூடகிலாருடன்மூடரே
கொச்சையண்ணலைக்கூடகிலாருடன்மூடரே
கொச்சையண்ணலைக்கூடகிலாருடன்மூடரே. (௧௧)

கழுமலமுதுபதிக்கவுணியன்கட்டுரை
கழுமலமுதுபதிக்கவுணியன்கட்டுரை
கழுமலமுதுபதிக்கவுணியன்கட்டுரை
கழுமலமுதுபதிக்கவுணியன்கட்டுரை. (௧௨)

திருச்சிற்றம்பலம்.

Koviloor Digital Library

திருவெழுகூற்றிருக்கை. பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

ஓருருவாயினைமானாங்காரத்
திரியல்பாயொருவிண்முதல்பூதலம்
ஒன்றியவிருசுடரும்பர்கள்பிறவும்
படைத்தளித்தழிப்பமும்மூர்த்திகளாயினை
இருவரோடொருவனாகிநின்றனை
ஓரானீழலொண்கழலிரண்டும்*
முப்பொழுதேத்தியநால்வர்க்கொளிநெறி
காட்டினைநாட்டமூன்றாகக்கோட்டினை
இருநதியரவமோடொருமதிசூடினை
ஒருதாளீரயின்மூவிலைச்சூலம்
நாற்கான்மான்மறியைந்தலையரவம்
ஏந்தினைகாய்ந்தநால்வாய்மும்மதத்
திருகோட்டொருகரியீடழித்துரித்தனை
ஒருதனுவிருகால்வளையவாங்கி
முப்புரத்தோடுநானிலமஞ்சக்
கொன்றுதலத்துறவவுணரையறுத்தனை
ஐம்புலனாலாமந்தக்கரணம்
முக்குணமிருவளியொருங்கியவானோர்
ஏத்தநின்றனையொருங்கியமனத்தோ
டிருபிறப்போர்ந்துமுப்பொழுதுகுறைமுடித்து
நான்மறையோதியைவகைவேள்வி
அமைத்தாறங்கமுதலெழுத்தோதி
வரன்முறைபயின்றெழுவான்றனைவளர்க்கும்
பிரமபுரம்பேணினை
அறுபதமுரலும்வேணுபுரம்விரும்பினை
இகலியமைந்துணர்புகலியமர்ந்தனை
பொங்குநாற்கடல்சூழ்வெங்குருவிளங்கினை
பாணிமூவுலகும்புதையமேன்மிதந்த
தோணிபுரத்துறைந்தனைதொலையாவிருநிதி
வாய்ந்தபூந்தராயேய்ந்தனை
வரபுரமென்றுணர்சிரபுரத்துறைந்தனை
ஒருமலையெடுத்தவிருதிறலரக்கன்
விறல்கெடுத்தருளினைபுறவம்புரிந்தனை
முந்நீர்த்துயின்றோனான்முகனறியாப்
பண்பொடுநின்றனைசண்பையமர்ந்தனை
ஐயுறுமமணருமறுவகைத்தேரரும்
ஊழியுமுணராக்காழியமர்ந்தனை

* ஓராலிழலொண்கழலிரண்டும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

எச்சனேழிசையோன்கொச்சையைமெச்சினை
ஆறுபதமுமைந்தமர்கல்வியும்
மறைமுதனான்கும்
மூன்றுகாலமுந்தோன்றநின்றனை
இருமையினொருமையுமொருமையின்பெருமையும்
மறுவிலாமறையோர்
கழுமலமுதுபதிக்கவுணியன்கட்டுரை
கழுமலமுதுபதிக்கவுணியனறியும்
அனையதன்மையையாதலினின்னை
நினையவல்லவரில்லைநீணிலத்தே.

திருச்சிற்றம்பலம்.

சிவபாதவிருதயர், நித்திய கர்மாநுட்டானங்களை முடித்தவுடனே, ஓதினோர்க்குப் புத்தி முத்திகளைத் தாத்தக்க பிள்ளையாருடைய திருப்பதிகங்களைப் பாராயணஞ்செய்து, போசனஞ் செய்வதாகிய நியமத்தைக் கைக்கொண்டொழுகுவாராயினர். அங்ஙனஞ் சில காலம் நிகழ்ந்துவரும்போது, திருப்பதிகங்கள் பெருகுதல்பற்றி, தந்தையார் கருத்துமுற்றுப்பெறுதல் அருமையைநோக்கி, முற்றுணர்வுடைய ஆளுடையபிள்ளையார் அதுவரையும் பாடியருளிய திருப்பதிகங்களின்பொருளை அமைத்து, "ஒருருவாயினை" என்னும் திருவெழுகூற்றிருக்கையைத் திருவாய்மலர்ந்தருளி, இதனைத் தினந்தோறும் நியமமாக ஓதினோர், திருப்பதிகங்கள் முற்றும் ஓதிய பயன்பெறுவர் எனச் சிவபாதவிருதயருக்கு அருளிச்செய்தனர்.

திருச்சக்கரமாற்று. பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பிரமனூர்வேணுபுரம்புகலிவெங்குருப்பெருநீர்த்தோணி
புரமன்னுபூந்தராய்பொன்னஞ்சிரபுரம்புறவஞ்சண்பை
அரன்மன்னுதண்காழிகொச்சைவயமுள்ளிட்டங்காதியாய
பரமனூர்பன்னிரண்டாய்நின்றதிருக்கழுமலநாம்பரவுமூரே. (க)

வேணுபுரம்பிரமனூர்புகலிபெருவெங்குருவெள்ளத்தோங்குந்
தோணிபுரம்பூந்தராய்தூநீர்ச்சிரபுரம்புறவங்காழி
கோணியகோட்டாற்றுக்கொச்சைவயஞ்சண்பைகூருஞ்செல்வங்
காணியவையகத்தாரேத்துங்கழுமலநாங்கருதுமூரே. (உ)

புகலிசிரபுரம்வேணுபுரஞ்சண்பைபுறவங்காழி
நிகரில்பிரமபுரங்கொச்சைவயநீர்மேனின்றமூதூர்
அகலியவெங்குருவோடந்தண்டராயமரர்பெருமாற்கின்பம்
பகருநகர்நல்லகழுமலநாங்கைதொழுதுபாடுமூரே. (ங)

வெங்குருத்தண்புகலிவேணுபுரஞ்சண்பைவெள்ளங்கொள்ளத்
தொங்கியதோணிபுரம்பூந்தராய்தொகுபிரமபுரந்தொல்காழி
தங்குபொழிற்புறவங்கொச்சைவயந்தலைபண்டாண்டமூதூர்
கங்கைசடைமுடிமேலேற்றான்கழுமலநாங்கருதுமூரே. (ச)

Koviloor Digital Library

தொன்னீரிற்றோணிபுரம்புகலிவெங்குருத்துயர்தீர்காழி
இன்னீரவேணுபுரம்பூந்தராய்பிரமனூரெழிலார்சண்பை
நன்னீரபூம்புறவங்கொச்சைவயஞ்சிலம்பனகராநல்ல
பொன்னீரபுன்சடையான்பூந்தண்கழுமலநாம்புகழுமூரே. (ரு)

தண்ணந்தராய்ப்புகலிதாமரையானூர்சண்பைதலைமுனண்ட
அன்னநகர்கொச்சைவயந்தண்புறவஞ்சிரணியார்காழி
விண்ணியல்சீர்வெங்குருநல்வேணுபுரந்தோணிபுரமேலாலேந்து*
கண்ணுதலான்மேவியநற்கழுமலநாங்கைதொழுதுகருதுமூரே. (சு)

சீரார்சிரபுரமுங்கொச்சைவயஞ்சண்பையொடுபுறவநல்ல
ஆராத்தராய்பிரமனூர்புகலிவெங்குருவோடந்தண்காழி
ஏரார்கழுமலமும்வேணுபுரந்தோணிபுரமென்றென்றுள்கிப்
போனெடியவனுநான்முகனுங்காண்பரியபெருமானூரே. (எ)

புறவஞ்சிரபுரமுந்தோணிபுரஞ்சண்பைமிகுபுகலிகாழி
நறவமிகுசோலைக்கொச்சைவயந்தராய்நான்முகன்றனூர்
விறலாயவெங்குருவும்வேணுபுரம்விசயன்மேலம்பெய்து
திறலாலரக்கனைச்செற்றான்றன்கழுமலநாஞ்சேருமூரே. (அ)

சண்பைபிரமபுரந்தண்புகலிவெங்குருநற்காழிசாயாப்
பண்பார்சிரபுரமுங்கொச்சைவயந்தராய்ப்புறவம்பார்மேல்
நண்பார்கழுமலஞ்சீர்வேணுபுரந்தோணிபுரநாணிலாத
வெண்பற்சமணரொடுசாக்கியரைவியப்பழித்தவிமலனூரே. (கூ)

செழுமலியபூங்காழிபுறவஞ்சிரபுரஞ்சீர்ப்புகலிசெய்ய
கொழுமலரானன்னகரந்தோணிபுரங்கொச்சைவயஞ்சண்பையாய
விழுமியசீர்வெங்குருவோடோங்குதராய்வேணுபுரமிகுநன்மாடக்
கழுமலமென்றின்னபெயர்பன்னிரண்டுகண்ணுதலான்கருதுமூரே. (க0)

கொச்சைவயம்பிரமனூர்புகலிவெங்குருப்புறவங்காழி
நிச்சல்விழவோவாநீடார்சிரபுரநீள்சண்பைமூதூர்
நச்சினியபூந்தராய்வேணுபுரந்தோணிபுரமாகிநம்மேல்
அச்சங்கடர்த்தருளுமம்மான்கழுமலநாமமருமூரே. (கக)

காவிமலர்புரையுங்கண்ணார்கழுமலத்தின்பெயரைநாளும்
பாவியசீர்ப்பன்னிரண்டுநன்னூலாப்பத்திமையாற்பனுவன்மாலை
நாவினலம்புகழ்சீர்நான்மறையான்ஞானசம்பந்தன்சொன்ன
மேவியிசைமொழிவார்விண்ணவரிலெண்ணுதலைவிருப்புளாரே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தப்பிள்ளையார், மங்கையர்க்கரசியாரும், குலச்சிறைநாயனாரும்வேண்டிக்கொள்ள அவ்வேண்டுகோளுக்கிசைந்து பாண்டியன் சுரநோயைத் தீர்க்கும்பொருட்டு அவன் அரமனையுட்செல்ல பாண்டியன் பிள்ளையாரைக்கண்டவுடனே அஞ்சலிசெய்து, இரத்தினாசனத்தில் இருத்திப் பிள்ளையாருடைய திருமேனியைத் தரிசிக்கப்பெற்றதனால் வெப்புநோய் சிறிது நீங்கி, சுவாமி! தேவரீருடைய ஊர் யாது என்று வினவ, பிள்ளையார் "பிரமனூர் வேணுபுரம்" என்றெடுத்துக் "கழுமலநாம்பரவுமூரே" என்று திருப்பதிகத்தினாலே உத்தரங்கொடுத்தருளினர்.

* மேலாரேத்து என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருச்சக்கரமாற்று. பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

விளங்கியசீர்ப்பிரமனூர்வேணுபுரம்புகலிவெங்குருமேற்சோலை
வளங்கவருந்தோணிபுரம்பூந்தராய்சிரபுரம்வண்புறவமண்மேல்
களங்கமிலூர்சண்பைகமழ்காழிவயங்கொச்சைகழுமலமென்றின்ன
விளங்குமரன்றன்னைப்பெற்றிமையவர்தம்பகையெறிவித்திறைவனூரே. (க)

திருவளருங்கழுமலமேகொச்சைதேவேந்திரனூரயனூர்தெய்வத்
தருவளரும்பொழிற்புறவஞ்சிலம்பனூர்காழிதகுசண்பையொண்பா
வுருவளர்வெங்குருப்புகலியோங்குதராய்தோணிபுரமுயர்ந்ததேவர்
வெருவவளர்கடல்விடமதுண்டணிகொள்கண்டத்தோன்விரும்புமூரே. (உ)

வாய்ந்தபுகழ்மறைவளருந்தோணிபுரம்பூந்தராய்சிலம்பன்வாழூர்
ஏய்ந்தபுறவந்திகழுஞ்சண்பையெழிற்காழியிறைகொச்சையம்பொன்
வேய்ந்தமதிற்கழுமலம்விண்ணோர்பணியமிக்கயனூரமரர்கோனூர்
ஆய்ந்தகலையார்புகலிவெங்குருவதரனாளுமமருமூரே. (ங)

மாமலையாள்கணவன்மகிழ்வெங்குருமாப்புகலிதராய்தோணிபுரம்வான்
சேமமதில்புடைதிகழுங்கழுமலமேகொச்சைதேவேந்திரனூர்சீர்ப்
பூமகனூர்பொலிவுடையபுறவம்விறற்சிலம்பனூர்காழிசண்பை
பாமருவுகலையெட்டெட்டுணர்ந்தவற்றின்பயனுகர்வோர்பரவுமூரே. (ச)

தரைத்தேவர்பணிசண்பைதமிழ்க்காழிவயங்கொச்சைதயங்குபூமேல்
விரைச்சேருங்கழுமலமெய்புணர்ந்தயனூர்விண்ணவர்தங்கோனூர்வென்றித்
திரைச்சேரும்புனற்புகலிவெங்குருச்செல்வம்பெருகுதோணிபுரஞ்சீர்
உரைச்சேர்பூந்தராய்சிலம்பனூர்புறவமுலகத்திலுயர்ந்தவூரே. (ரு)

புண்டரிகத்தார்வயல்சூழ்புறவமிகுசிரபுரம்பூங்காழிசண்பை
எண்டிசையோரிறைஞ்சியவெங்குருப்புகலிபூந்தராய்தோணிபுரஞ்சீர்
வண்டமரும்பொழின்மல்குகழுமலநற்கொச்சைவானவர்தங்கோனூர்
அண்டயனூரிவையென்பருங்கூற்றையுதைத்துகந்தவப்பனூரே. (சு)

வண்மைவளர்வரத்தயனூர்வானவர்தங்கோனூர்வண்புகலியிஞ்சி
வெண்மதிசேர்வெங்குருமிக்கோரிறைஞ்சுசண்பைவியன்காழிகொச்சை
கண்மகிழுங்கழுமலங்கற்றோர்புகழுந்தோணிபுரம்பூந்தராய்சீர்ப்
பண்மலியுஞ்சிரபுரம்பார்புகழ்புறவம்பால்வண்ணன்பயிலுமூரே. (எ)

மோடிபுறங்காக்குமூர்புறவஞ்சீர்ச்சிலம்பனூர்காழிமூதூர்
நீடியலுஞ்சண்பைகழுமலங்கொச்சைவேணுபுரங்கமலநீடு
கூடியவனூர் * வளர்வெங்குருப்புகலிதராய்தோணிபுரங்கூடப்போர்
தேடியுழலவுணர்பயிதிரிபுரங்கள்செற்றமலைச்சிலையனூரே. (அ)

இரக்கமுடையிறையவனூர்தோணிபுரம்பூந்தராய்சிலம்பன்றன்னூர்
நிரக்கவருபுனற்புறவநின்றதவத்தயனூர்சீர்த்தேவர்கோனூர்
வரக்கரவாப்புகலிவெங்குருமாசிலாச்சண்பைகாழிகொச்சை
அரக்கன்விறலழித்தருளிகழுமலமந்தணர்வேதமறாதவூரே. (கூ)

* கூடியயனூர் என்றும் பாடம்.

மேலோதுங்கழுமலமெய்த்தவம்வளருங்கொச்சையிந்திரனூர்மெய்ம்மை
நாலோதுமயன்றனூர்நண்ணறிவார்குருப்புகலிதராய்தூநீர்மேல்
சேலோடுந்தோணிபுரந்திகழ்புறவஞ்சிலம்பனூர்செருச்செய்தன்று
மாலோடுமயனறியான்வண்காழிசண்பைமன்னோர்வாழ்த்துமூரே. (௧௦)

ஆக்கமர்சீரூர்சண்பைகாழியமர்கொச்சைகழுமலமன்பானூர்
ஒக்குமுடைத்தோணிபுரம்பூந்தராய்சிரபுரமொண்புறவநண்பார்
பூக்கமலத்தோன்மகிழூர்புரந்தரனூர்புகலிவெங்குருவுமென்பர்
சாக்கியரோடமண்கையர்தாமறியாவகைநின்றான்றங்குமூரே. (௧௧)

அக்கரஞ்சேர்தருமனூர்புகலிதராய்தோணிபுரமணிநீர்ப்பொய்கை
புக்கரஞ்சேர்புறவஞ்சீர்ச்சிலம்பனூர்புகழ்க்காழிசண்பைதொல்லூர்
மிக்கரஞ்சீர்க்கழுமலமேகொச்சைவயம்வேணுபுரமயனூர்மேவிச்
சக்கரஞ்சீர்த்தமிழ்விரகன்றான்சொன்னதமிழ்தரிப்போர்தவஞ்செய்தோரே. ()

திருச்சிற்றம்பலம்.

கோமூத்திரி. பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பூமகனூர்புத்தேளுக்கிறைவனூர்குறைவிலாப்புகலிபூமேல்
மாமகளூர்வெங்குருநற்றோணிபுரம்பூந்தராய்வாய்ந்தவிஞ்சிச்
சேமமிகுசிரபுரஞ்சீர்ப்புறவநிறைபுகழ்ச்சண்பைகாழிகொச்சை
காமனைமுன்காய்ந்தநுதற்கண்ணவனூர்கழுமலநாங்கருதுமூரே. (௧)

கருத்துடையமறையவர்சேர்கழுமலமெய்த்தோணிபுரங்கனகமாட
உருத்திகழ்வெங்குருப்புகலியோங்குதராயுலகாருங்கொச்சைகாழி
திருத்திகழுஞ்சிரபுரந்தேவேந்திரனூர்செங்கமலத்தயனூர்தெய்வத்
தருத்திகழும்பொழிற்புறவஞ்சண்பைசடைமுடியண்ணறங்குமூரே. (௨)

ஊர்மதியைக்கதுவவுயர்மதிற்சண்பையொளிமருவுகாழிகொச்சை
கார்மலியும்பொழில்புடைசூழ்கழுமலமெய்த்தோணிபுரங்கற்றோரேத்துஞ்
சீர்மருவுபூந்தராய்சிரபுரமெய்ப்புறவமயனூர்பூங்கற்பத்
தார்மருவுமிந்திரனூர்புகலிவெங்குருக்கங்கைதரித்தோனூரே. (௩)

தரித்தமறையாளர்மிகுவெங்குருச்சீர்த்தோணிபுரந்தரியாரிஞ்சி
எரித்தவன்சேர்கழுமலமேகொச்சைபூந்தராய்புகலியிமையோர்கோனூர்
நெரித்தபுகழ்ச்சிரபுரஞ்சீர்திகழ்காழிசண்பைசெழுமறைகளெல்லாம்
விரித்தபுகழ்ப்புறவம்விரைக்கமலத்தோனூருலகில்விளங்குமூரே. (௪)

விளங்கயனூர்பூந்தராய்மிகுசண்பைவேணுபுரமேகமேய்க்கும்
இளங்கமுகம்பொழிற்றோணிபுரங்காழியெழிற்புகலிபுறவமோரார்
வளக்கவரும்வயற்கொச்சைவெங்குருமாச்சிரபுரம்வன்னஞ்சமுண்டு
களங்கமலிகளத்தவன்சீர்க்கழுமலங்காமனுடலங்காய்ந்தோனூரே. (௫)

காய்ந்தவனூர்காலனையன்றுதைத்தவனூர்கழுமலமாத்தோணிபுரஞ்சீர்
ஏய்ந்தவெங்குருப்புகலியிந்திரனூரிருங்கமலத்தயனூரின்பம்
வாய்ந்தபுறவந்திகழுஞ்சிரபுரம்பூந்தராய்கொச்சைகாழிசண்பை
சேந்தனைமுன்பயந்துலகிற்றேவர்கடம்பகைகெடுத்தோன்றிகழுமூரே (௬)

Koviloor Digital Library

திகழ்மாடமலிசண்பைபூந்தராய்பிரமனூர்காழிதேசார்
மிகுதோணிபுரந்திகழும்வேணுபுரம்வயங்கொச்சைபுறவம்விண்ணோர்
புகழ்புகலிகழுமலஞ்சீர்ச்சிரபுரம்வெங்குருவெம்போர்மகிடற்செற்று
நிகழ்நீலிநின்மலன்றன்னடியிணைகள்பணிந்துலகினின்றவூரே. (எ)

நின்றமதில்சூழ்தருவெங்குருத்தோணிபுரநிகழும்வேணுமன்றில்
ஒன்றுகழுமலங்கொச்சையுயர்காழிசண்பைவளர்புறவமோடி
சென்றுபுறங்காக்குமூர்சிரபுரம்பூந்தராய்புகலிதேவர்கோனூர்
வென்றிமலிபிரமபுரம்பூதங்கடாங்காக்கமிக்கவூரே. (அ)

மிக்ககமலத்தயனூர்விளங்குபுறவஞ்சண்பைகாழிகொச்சை
தொக்கபொழிற்கழுமலந்தூத்தோணிபுரம்பூந்தராய்சிலம்பன்சேரூர்
மைக்கொள்பொழில்வேணுபுரமதிற்புகலிவெங்குருவல்லரக்கன்றிண்டோள்
ஒக்கவிருபதுமுடிகளொருபதுமீடழித்துகந்தவெம்மானூரே. (கூ)

எம்மான்சேர்வெங்குருச்சீர்ச்சிலம்பனூர்கழுமலநற்புகலியென்றும்
பொய்ம்மாண்பிலோர்புறவங்கொச்சைபுரந்தரனூர்நற்றோணிபுரம்போர்க்
கைம்மாவையுரிசெய்தோன்காழியயனூர்தராய்சண்பைகாரின்
மெய்ம்மால்பூமகனுணராவகைதழலாய்விளங்கியவெம்மிறைவனூரே. (க0)

இறைவனமர்சண்பையெழிற்புறவமயனூரிமையோர்க்கதிபன்சேரூர்
குறைவில்புகழ்ப்புகலிவெங்குருத்தோணிபுரங்குணமார்பூந்தராய்நீர்ச்
சிறைமலிநற்சிரபுரஞ்சீர்க்காழிவளர்கொச்சைகழுமலந்தேசின்றிப்
பறிதலையோடமண்கையர்சாக்கியர்கள்பரிசறியாவம்மானூரே. (கக)

அம்மான்சேர்கழுமலமாச்சிரபுரம்வெங்குருக்கொச்சைபுறவமஞ்சீர்
மெய்ம்மானத்தொண்புகலிமிகுகாழிதோணிபுரந்தேவர்கோனூர்
அம்மான்மன்னுயர்சண்பைதராயயனூர்வழிமுடக்குமாவின்பாச்சல்
தம்மானென்றியஞானசம்பந்தன்றமிழ்கற்போர்தக்கோர்தாமே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

வழிமொழித்திருவிராகம். பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

சுரருலகுநரர்கள்பயிறரணிதலமுரணழியவரணமதின்முப்
புரமெரியவிரவுவகைசரவிசைகொள்கரமுடையபரமனிடமாம்
வரமருளவரன்முறையினிரைநிறைகொள்* வருசுருதிசிரவுரையினாற்
பிரமனுயர்அரனெழில்கொள்சரணவிணைபரவவளர்பிரமபுரமே. (க)

தானுமிகுவாணிசைகொடானுவியர் † பேணுமதுகானுமளவிற்
கோனுநதனீணயனிகோணில்பிடிமாணிமது ‡ நானும்வகையே ¶
ஏனுகரிபூணழிய § வாணியல்கொண்மாணிபதிசேணமரர்கோன்
வேணுவினையேணிநகர்காணிறிவிகாணநடுவேணுபுரமே. (உ)

* ஙிரனிறைகொள் என்றும் பாடம். † வாணிசைகதானுவியர் என்றும் பாடம். ‡ பிடிமானுமது என்றும், ‡‡ பிடியானுமது என்றும் பாடம். ¶ நாணுவகையே என்றும் பாடம். § கரியூணழிய என்றும் பாடம்.

Koviloor Digital Library

பகலொளிசெய்நகமணியைமுகைமலரைநிகழ்சரணவகவுமுனிவர்க்
ககலமலிசகலகலைமிகவுரைசெய்முகமுடையபகவனிடமாம்
பகைகளையும்வகையிலறுமுகவிறையைமிகவருள * நிகரிலிமையோர்
புகவுலகுபுகழவெழிறிகழநிகழலர்பெருகுபுகலிநகரே. (௩)

அங்கண்மதிகங்கைநதிவெங்கணரவங்களெழிறங்குமிதழித்
துங்கமலர்தங்குசடையங்கிநிகரெங்களிறை † தங்குமிடமாம்
வெங்கதிர்விளங்குலகமெங்குமெதிர்பொங்கெரிபுலன்கள்களைவோர்
வெங்குருவிளங்கியுமைபங்கர்சரணங்கள்பணிவெங்குருவதே. (௪)

ஆணியல்பு ‡ காணவணவாணவியல்பேணியெதிர்பாணமழைசேர்
தூணியறநாணியறவேனுசிலைபேணியறநாணிவிசயன்
பாணியமர் ¶ பூணவருண்மாணுபிரமாணி § யிடமேணிமுறையிற் (௫)
பாணியுலகாளமிகவாணின்மலிதோணிநிகர்தோணிபுரமே.

நிராமயபராபரபுராதனபராவுசிவராகவருளென்
றிராவுமெதிராயதுபராநினைபுராணனமராதிபதியாம்
அராமிசையிராதெழிறராயரபராயண 0 வராகவுருவா
தராயனை ‖ விராயெரிபராய்மிகுதராய்மொழிவிராயபதியே. (௬)

அரனை ** யுறுமுரணர்பலர்மரணம்வரவிரணமதிலரமலிபடைக்
கரம்விசிறுவிரகனமர்கரணனுயர்பரனெறிகொள்கரனதிடமாம்
பரவமுதுவிரவவிடல்புரளமுறுமரவையரிசிரமரியவச்
சிரமரனசரணமவைபரவவிருகிரகமமர்சிரபுரமதே. (௭)

அறமழிவுபெறவுலகுதெறுபுயவன்விறலழியநிறுவிவிரன்மா
மறையினொலிமுறைமுரல்செய்பிறையெயிறனுறவருளுமிறைவனிடமாங்
குறைவின்மிகநிறைதையுழிமறையமர்நிறையருளமுறையொடுவரும்
புறவனெதிர்நிறைநிலவுபொறையனுடல்பெறவருளுபுறவமதுவே. (௮)

விண்பயிலமண்பகிரிவண்பிரமனெண்பெரியபண்படைகொண்மால்
கண்பரியு †† மொண்பொழியநுண்பொருள்கடண்புகழ்கொள்கண்டனிடமாம்
மண்பரியுமொண்பொழியநுண்புசகர்புண்பயில ‡‡ விண்படரவச்
சண்பைமொழிபண்பமுனிகண்பழிசெய்பண்புகளை ¶¶ சண்பைநகரே. (௯)

பாழியுறைவேழநிகர்பாழமணர்சூழுமுடலாளருணரா
வேழினிசையாழின்மொழியேழையவள்வாழுமிறைதாழுமிடமாங்
கீழிசைகொண்மேலுலகில்வாழரசுசூழரசுவாழவரனுக்
காழிபசில்காழிசெயவேழுலகிலூழிவளர்காழிநகரே. (௰)

* மிகவருளி என்றும் மிகவருள்செய் என்றும் பாடம். † யங்கிநக ரெங்களிறை என்றும் பாடம். ‡ ஆணியல்வு என்றும் பாடம். ¶ பாணிபருள் என்றும் பாடம். § வருணமாணிபிரமாணி என்றும் பாடம். 0 தெழிறராதயர் பராயண என்றும் பாடம். ‖ தராயணை என்றும், தராபண என்றும் பாடம். ** அரனையுறு முரணர் என்றும் பாடம். †† கண்பொரியு என்றும் பாடம். ‡‡ புசகருண்பயில என்றும் பாடம். ¶¶ கண்பழியில் பண்புகளை என்றும் பாடம்.

Koviloor Digital Library

நச்சரவுகச்செனவசைச்சு * மதியுச்சியின்மிலேச்சொருகையான்
மெய்ச்சிரமணைச்சுலகி † னிச்சமிடுபிச்சையமர்பிச்சனிடமாம்
மச்சமதநச்சிமதமச்சிறுமியைச்செய்தவவச்சவிரதக்
கொச்சைமுரவச்சர்பணியச்சுரர்கணச்சிமிடைகொச்சைநகரே. (கக)

ஒழுகலரிதழிகலியிலுழியுலகுபழிபெருகுவழியைநினையா
முழுதுடலிலெழுமயிர்கடழுவுமுனிகுழுவினொடுகெழுவுசிவனைத்
தொழுதுலகிலிழுகுமலமழியும்வகைகழுவுமுரைகழுமலநகர்ப்
பழுதிலிறையெழுதுமொழிதமிழ்விரகன்வழிமொழிகண்மொழிதகையவே. ()

திருச்சிற்றம்பலம்.

ஈஅடி. பண் - பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

வரமதேகொளாவுரமதேசெயும்புரமெரித்தவன்பிரமநற்புரத்
தரனன்னாமமேபரவுவார்கள்சீர்விரவுநீள்புவியே. (க)

சேணுலாமதில்வேணுமண்ணுளோர்காணமன்றலார்வேணு ‡ நற்புரத்
தாணுவின்கழல்பேணுகின்றவராணி ¶ யொத்தவரே. (உ)

அகலமார்தரைப்புக § லுநான்மறைக்கிகலியோர்கள்வாழ்புகலிமாநகர்ப்
பகல்செய்வோனெதிர்ச்சகலசேகரனகிலநாயகனே. (ங)

துங்கமாகரிபங்கமாவடுஞ்செங்கையானிகழ்வெங்குருத்திகழ்
அங்கணனடிதங்கையாற்றொழத்தங்குமோவினையே. (ச)

காணியொண்பொருட்கற்றவர்க்கீகையுடைமையோரவர்காதல்செய்யுநற்
றோணிவண்புரத்தாணியென்பவர்தூமதியினரே. (ரு)

ஏந்தராவெதிர்வாய்ந்தநுண்ணிடைப்பூந்தணோதியாள்சேர்ந்தபங்கினன்
பூந்தராய்தொழுமாந்தர்மேனிமேற்சேர்ந்திராவினையே. (சு)

சுரபுரத்தினைத்துயர்செய்தாரகன்றுஞ்சவெஞ்சினக்காளியைத்தருஞ்
சிரபுரத்துளானென்னவல்லவர்சித்திபெற்றவரே. (எ)

உறவுமாகியற்றவர்களுக்குமாநெதிகொடுத்துநீள்புவியிலங்குசீர்ப்
புறவமாநகர்க்கிறைவனேயெனத்தெறகிலாவினையே. (அ)

பண்புசேரிலங்கைக்குநாதனன்முடிகள்பத்தையுங்கெடநெரித்தவன்
சண்பையாதியைத்தொழுமவர்களைச்சாதியாவினையே. (கூ)

ஆழியங்கையிற்கொண்டமாலயனறிவொணாதமேதார்வடிவுகொண்டவன்
காழிமாநகர்க்கடவுணாமமேகற்றனற்றவமே. (கo)

விச்சையொன்றிலாச்சமணர்சாக்கியப்பிச்சர்தங்களைக்கரிசறுத்தவன்
கொச்சைமாநகர்க்கன்புசெய்பவர்குணங்கள்கூறுமினே. (கக)

கழுமலத்திலுட்கடவுள்பாதமேகருதுஞானசம்பந்தனின்றமிழ்
முழுதும்வல்லவர்க்கின்பமேதருமுக்கணெம்மிறையே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

* வசைத்து என்றும்பாடம். † மனைத்துலகி என்றும்பாடம். ‡ மன்றிலார்வேணு என்றும்பாடம். ¶ பேணிநின்றவராணி என்றும் பாடம். § அகலமாதரைப்புக என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருவியமகம். பண் - பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

உற்றுமைசேர்வதுமெய்யினையேயுணர்வதுநின்னருண்மெய்யினையே
கற்றவர்காய்வதுகாமனையேகனல்விழிகாய்வதுகாமனையே
அற்றமறைப்பதுமுன்பணியேயமரர்கள்செய்வதுமுன்பணியே
பெற்றுமுகந்ததுகந்தனையேபிரமபுரத்தையுகந்தனையே. (௧)

சதிமிகவந்தசலந்தரனேதடிசிரநேர்கொள்சலந்தரனே
அதிரொளிசேர்திகிரிப்படையாலமர்ந்தனரும்பர்துதிப்படையால்
மதிதவழ்வெற்பதுகைச்சிலையேமருவிடமேற்பதுகைச்சிலையே
விதியினிலிட்டவிரும்பரனேவேணுபுரத்தைவிரும்பரனே. (௨)

காதமரத்திகழ்தோடினனேகானவனாய்க்கடிதோடினனே
பாதமதாற்கூற்றுதைத்தனனேபார்த்தனுடலம்புதைத்தனனே
தாதவிழ்கொன்றைதரித்தனனேசார்ந்தவினையதரித்தனனே
போதமமருமுரைப்பொருளேபுகலியமர்ந்தபரம்பொருளே. (௩)

மைத்திகழ்நஞ்சுமிழ்மாசுணமேமகிழ்ந்தரைசேர்வதுமாசுணமே
மெய்த்துடல்பூசுவர்மேன்மதியேவேதமதோதுவர்மேன்மதியே
பொய்த்தலையோடுறுமத்தமதேபுரிசடைவைத்ததுமத்தமதே
வித்தகராகியவெங்குருவேவிரும்பியமர்ந்தனர்வெங்குருவே. (௪)

உடன்பயில்கின்றனன்மாதவனேயுறுபொறிகாய்ந்திசைமாதவனே
திடம்படமாமறைகண்டனனேதிரிகுணமேவியகண்டனனே
படங்கொளரவரைசெய்தனனேபகடுரிகொண்டரைசெய்தனனே
தொடர்ந்ததுயர்க்கொருநஞ்சிவனேதோணிபுரத்துறைநஞ்சிவனே. (௫)

திகழ்கைபதும்புகைதங்கழலேதேவர்தொழுவதுந்தங்கழலே
இகழ்பவர்தாமொருமானிடமேயிருந்தனுவோடெழின்மானிடமே
மிகவருநீர்கொளுமஞ்சடையேமின்னிகர்கின்றதுமஞ்சடையே
தகவிரதங்கொள்வர்* சுந்தரரேதக்கதராயுறைசுந்தரரே. (௬)

ஓர்வருகண்களிணைக்கயலேயுமையவள்கண்களிணைக்கயலே
ஏர்மருவுங்கழனாகமதேயெழில்கொளுதாசனனாகமதே
நீர்வருகொந்தளகங்கையதேநெடுஞ்சடைமேவியகங்கையதே
சேர்வருயோகதியம்பகனேசிரபுரமேயதியம்பகனே. (௭)

ஈண்டுதுயிலமரப்பினனேயிருங்கணிடந்தடியப்பினனே
தீண்டலரும்பரிசக்கரமேதிகழ்ந்தொளிசேர்வதுசக்கரமே
வேண்டிவருந்தநகைத்தலையேமிகைத்தவரோடுநகைத்தலையே
பூண்டனர்சேரலுமாபதியேபுறவமமர்ந்தவுமாபதியே. (௮)

நின்மணிவாயதுநீழலையேநேசமதானவர்நீழலையே
உன்னிமனத்தெழுசங்கமதேயொளியதனோடுறுசங்கமதே
கன்னியரைக்கவருங்களனேகடல்விடமுண்டகருங்களனே
மன்னிவரைப்பதிசண்பையதேவாரிவயன்மலிசண்பையதே. (௯)

* சோர்வா சுந்தரரே என்று பாடமோதுதலுமொன்று.

Koviloor Digital Library

இலங்கையரக்கர்தமக்கிறையேயிடந்துகயிலையெடுக்கிறையே
புலன்கள்கெடவுடன்பாடினனேபொறிகள்கெடவுடன்பாடினனே
இலங்கியமேனியிராவணனேயெய்துபெயருமிராவணனே
கலந்தருள்பெற்றதுமாவசியேகாழியரனடிமாவசியே. (க0)

கண்ணிகழ்புண்டரிகத்தினனேகலந்திரிபுண்டரிகத்தினனே
மண்ணிகழும்பரிசேனமதேவானகமேய்வகைசேனமதே
நண்ணியடிமுடியெய்தலரேநளிர்மலிசோலையிலெய்தலரே
பண்ணியல்கொச்சைபசுபதியேபசுமிகவூர்வர்பசுபதியே. (கக)

பருமதின்மதுரைமன்னவையெதிரேபதிகமதெழுதிலையவையெதிரே
வருநதியிடைமிசைவருகரனேவசையொடுமலர்கெடவருகரனே
கருதலிலிசைமுரறருமருளேகழுமலமமரிறைதருமருளே
மருவியதமிழ்விரகனமொழியேவல்லவர்தம்மிடர்திடமொழியே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

திருக்கழுமலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

பார்கொண்டுமூடிக்கடல்கொண்டஞான்றுநின்பாதமெல்லாம்
நாலஞ்சுபுள்ளினமேந்தினவென்பர்நளிர்மதியங்
கால்கொண்டவண்கைச்சடைவிரித்தாடுங்கழுமலவர்க்
காளன்றிமற்றுமுண்டோவந்தணுழியகலிடமே. (க)

கடையார்கொடிநெடுமாடங்களெங்குங்கலந்திலங்க
உடையானுடைதலைமாலையுஞ்சூடியுகந்தருளி
விடைதானுடையவவ்வேதியன்வாழுங்கழுமலத்துள்
அடைவார்வினைகளவையெள்கநாடொறுமாடுவரே. (உ)

திரைவாய்ப்பெருங்கடன்முத்தங்குவிப்பமுகந்துகொண்டு
நுரைவாய்நுளைச்சியரோடிக்கழுமலத்துள்ளழுந்து
விரைவாய்நறுமலர்சூடியவிண்ணவன்றன்னடிக்கே
வரையாப்பரிசிவைநாடொறுநந்தமையாள்வனவே. (ந)

விரிக்குமரும்பதம்வேதங்களோதும்விழுமியநூல்
உரைக்கிலரும்பொருளுள்ளுவர்கேட்கிலுலகமுற்றும்
இரிக்கும்பறையொடுபூதங்கள்பாடக்கழுமலவன்
நிருத்தம்பழம்படியாடுங்கழனம்மையாள்வனவே. (௪)

Koviloor Digital Library

சிந்தித்தெழுமனமேநினையாமுன்கழுமலத்தைப்
பந்தித்தவல்வினைதீர்க்கவல்லானைப்பசுபதியைச்
சந்தித்தகாலமறுத்துமென்றெண்ணியிருந்தவர்க்கு
முந்தித்தொழுகழனாடொறுநந்தமையாள்வனவே. (௫)

நிலையும்பெருமையுநீதியுஞ்சாலவழகுடைத்தாய்
அலையும்பெருவெள்ளத்தன்றுமிதந்தவித்தோணிபுரஞ்
சிலையின்றிரிபுர*மூன்றெரித்தார்தங்கழுமலவர்
அலருங்கழலடிநாடொறுநந்தமையாள்வனவே. (௬)

முற்றிக்கிடந்துமுந்நீரின்மிதந்துடன்மொய்த்தமார்
சுற்றிக்கிடந்துதொழப்படுகின்றதுசூழரவந்
தெற்றிக்கிடந்துவெங்கொன்றளந்துன்றிவெண்டிங்கள்சூடுங்
கற்றைச்சடைமுடியார்க்கிடமாயகழுமலமே. (௭)

உடலுமுயிருமொருவழிச்செல்லுமுலகத்துள்ளே
அடையுமுனைவந்தடைந்தாரமராடியிணைக்கீழ்
நடையும்விழவொடுநாடொறுமல்குங்கழுமலத்துள்
விடையன்றனிப்பதநாடொறுநந்தமையாள்வனவே. (௮)

பரவைக்கடனஞ்சமுண்டதுமில்லையிப்பார்முழுதும்
நிரவிக்கிடந்துதொழப்படுகின்றதுநீண்டிருவர்
சிரமப்படவந்துசார்ந்தார்கழலடிகாண்பதற்கே
அரவக்கழலடிநாடொறுநந்தமையாள்வனவே. (௯)

கரையார்கடல்சூழிலங்கையர்கோன்றன்முடிசிதறத்
தொலையாமலரடியூன்றலுமுள்ளம்விதிர்விதிர்த்துத்
தலைபாய்க்கிடந்துயர்ந்தான்றன்கழுமலங்காண்பதற்கே
அலைபாப்பரிசிவை † நாடொறுநந்தமையாள்வனவே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

படையார்மழுவொன்றுபற்றியகையன்பதிவினவில்
கடையார்கொடிநெடுமாடங்களோங்குங்கழுமலமாம்
மடைவாய்க்குருகினம்பாளைவிரிதொறும்வண்டினங்கள்
பெடைவாய்மதுவுண்டுபோதிருக்குப்பெரும்பதியே. ‡ (௧)

திருச்சிற்றம்பலம்.

* சிலைவிற்றிரிபுர என்றும் பாடம். † மலையாப்பரிசிவை என்றும் பாடம். ‡ இத்திருப்பதிகத்தில் ஏனைச்செய்யுள்கள் மறைந்துபோயின.

Koviloor Digital Library

சுந்தரமூர்த்திநாயனர்.

பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

சாதலும்பிறத்தலுந்தவிர்த்தென்னைவகுத்துத்
தன்னருடந்தவெந்தலைவனைமலையின்
மாதினைமதித்தங்கொர்பால்கொண்டமணியை
வருபுனல்சடையிடைவைத்தவெம்மானை
ஏதிலென்மனத்துக்கொரிரும்புண்டநீரை
யெண்வகையொருவனையெங்கள்பிரானைக்
காதில்வெண்குழையனைக்கடல்கொளமிதந்த
கழுமலவளநகர்க்கண்டுகொண்டேனே. (க)

மற்றொருதுணையினிமறுமைக்குங்காணேன்
வருந்தலுற்றேன்மறவாவரம்பெற்றேன்
சுற்றியசுற்றமுந்துணையென்றுகருதேன்
றுணையென்றுநான்றொழப்பட்டவொண்சுடரை
முத்தியுஞானமும்வானவரறியா
முறைமுறைபலபலநெறிகளுங்காட்டிக்
கற்பனைகற்பித்தகடவுளையடியேன்
கழுமலவளநகர்க்கண்டுகொண்டேனே. (உ)

திருத்தினைநகருறைசேந்தனப்பனெ்ன்
செய்வினையறுத்திடுஞ்செம்பொனையம்பொன்
ஒருத்தனையல்லதிங்காரையுமுணரே
னுணர்வுபெற்றேனுய்யுங்காரணந்தன்னால்
விருத்தனைப்பாலனைக்கனவிடைவிரவி
விழித்தெங்குங்காணமாட்டாதுவிட்டிருந்தேன்
கருத்தனைநிருத்தஞ்செய்காலனைவேலைக்
கழுமலவளநகர்க்கண்டுகொண்டேனே. (ங)

மழைக்கரும்புமலர்க்கொன்றையினானை
வளைக்கலுற்றேன்மறவாமனம்பெற்றேன்
பிழைத்தொருகாலினிப்போய்ப்பிறவாமைப்
பெருமைபெற்றேன்பெற்றதார்பெறுகிற்பார்
குழைக்கருங்கண்டனைக்கண்டுகொள்வானே
பாடுகின்றேன்சென்றுகூடவும்வல்லேன்
கழைக்கரும்புங்கதலிப்பலசோலைக்
கழுமலவளநகர்க்கண்டுகொண்டேனே. (ச)

Koviloor Digital Library

குண்டலங்குழைதிகழ்காதனேயென்றுங்
கொடுமழுவாட்படைக்குழகனேயென்றும்
வண்டலம்புமலர்க்கொன்றையனென்றும்
வாய்வெருவித்தொழுதேன்விதியாலே
பண்டைநம்பலமனமுங்களைந்தொன்றாய்ப்
பசுபதிபதிவினவிப்பலநாளுங்
கண்டலங்கழிக்கரையோதம்வந்துலவுங்
கழுமலவளநகர்க்கண்டுகொண்டேனே. (௫)

வரும்பெரும்வல்வினையென்றிருந்தெண்ணி
வருந்தலுற்றேன்மறவாமனம்பெற்றேன்
விரும்பியென்மனத்திடைமெய்குளிர்ப்பெய்தி
வேண்டிநின்றேன்றொழுதேன்*விதியாலே
அரும்பினையலரினையமுதினைத்தேனை
யையனையறவனையென்பிறவிவேரறுக்குங்
கரும்பினைப்பெருஞ்செந்நெனெருங்கியகழனிக்
கழுமலவளநகர்க்கண்டுகொண்டேனே. (௬)

அயலவர்பரவவுமடியவர்தொழவு
மன்பர்கள்சாயலுளடையலுற்றிருந்தேன்
முயல்பவர்பின்†சென்றுமுயல்வலையானை
படுமெனமொழிந்தவர்‡வழிமுழுதெண்ணிப்
புயலினைத்திருவினைப்பொன்னினதொளியை
மின்னினதுருவையென்னிடைப்பொருளைக்
கயலினஞ்சேலொடுவயல்விளையாடுங்
கழுமலவளநகர்க்கண்டுகொண்டேனே. (௭)

நினைதருபாவங்கணாசங்களாக
நினைந்துமுன்றொழுதெழப்பட்டவொண்சுடரை
மனைதருமலைமகள்கணவனைவானோர்
மாமணிமாணிக்கத்தைம்மறைப்பொருளைப்
புனைதருபுகழினையெங்களதொளியை
யிருவருமொருவனென்றுணர்வரியவனைக்
கனைதருகருங்கடலோதம்வந்துலவுங்
கழுமலவளநகர்க்கண்டுகொண்டேனே. (௮)

மறையிடைத்துணிந்தவர்மனையிடையிருப்ப
வஞ்சனைசெய்தவர்பொய்கையு¶மாயத்
துறையுறக்குளித்துளதாகவைத்துய்த்த
வுண்மையெனுந்தகவின்மையையோரேன்
பிறையுடைச்சடையனையெங்கள்பிரானைப்
பேரருளாளனைக்காரிருள்போன்ற
கறையணிமிடறுடையடிகளையடியேன்
கழுமலவளநகர்க்கண்டுகொண்டேனே. (௯)

* வேண்டிநின்றேதொழுதேன் என்றும் பாடம். † முயல்பவர்ப்பின் என்றும் பாடம்.
‡ மொழிந்தவா என்று பாடங்கொள்ளுதலுமொன்று. ¶ போகையு என்றும் பாடம்.

Koviloor Digital Library

செழுமலர்க்கொன்றையுங்கூவிளமலரும்
விரவியசடைமுடியடிகளைநினைந்திட்
டழுமலர்க்கண்ணிணையடியவர்க்கல்லா
லறிவரிதவன்றிருவடியிணையிரண்டுங்
கழுமலவளநகர்க்கண்டுகொண்டூரன்
சடையன்றன்காதலன்பாடியபத்துந்
தொழுமலரெடுத்தகையடியவர்தம்மைத்
துன்பமுமிடும்பையுஞ்சூழகிலாவே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருப்பிரமபுரத்திருப்பதிகம் - எக.

ஆ திருப்பதிகம் - கக௨.

சுவாமி தேவி திருநாமங்கள் - பிரமபுரியீசுரர், தோணியப்பர், திருநிலைநாயகி.

சுந்தரமூர்த்திநாயனர், சபாநாயகருடைய கட்டளையினாலே சிதம்பரத்திலிருந்துதிருவாரூருக்குப்போகக்கருதிக் கனகசபையைப் பிரதக்ஷிணஞ்செய்து வணங்கிக்கொண்டு சென்றுகொள்ளிடம் என்கின்றதிருநதியைத்தாண்டிச்சீர்காழிக்குச்சமீபித்தார். அது திருஞானசம்பந்தப்பிள்ளையார் திருவவதாரஞ்செய்தருளிய திருப்பதியாதலால், அதனுள்ளே மிதிக்கலாகாதென்று நினைந்து, அதின் புறவெல்லையை வணங்கிப் பிரதக்ஷிணம் செய்யும்பொழுது, சிவபெருமான் காட்சிகொடுத்தருள அது கண்டு, "சாதலும்பிறத்தலுந்தவிர்த்து" என்று திருப்பதிகம் எடுத்துத் திருப்பாட்டினிறுதிதோறும் "கழுமலவளநகர்க் கண்டுகொண்டேனே" என்று பாடியருளினர்.

கரு. திருக்கோலக்கா.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

மடையில்வாளைபாயமாதரார்
குடையும்பொய்கைக்கோலக்காவுளான்
சடையும்பிறையுஞ்சாம்பற்பூச்சுங்கீழ்
உடையுங்கொண்டவுருவமென்கொலோ. (க)

பெண்டான்பாகமாகப்பிறைச்சென்னி
கொண்டான்கோலக்காவுகோயிலாக்
கண்டான்பாதங்கையாற்கூப்பவே
உண்டானஞ்சையுலகமுய்யவே. (௨)

பூணற்பொறிகொளரவம்புன்சடை
கோணற்பிறையன்குழகன்கோலக்கா
மாணப்பாடிமறைவல்லானையே
பேணப்பறையும்பிணிகளானவே. (௩)

Koviloor Digital Library

தழுக்கொள்பாவந்தளரவேண்டுவீர்
மழுக்கொள்செல்வன்மறிசேரங்கையான்
குழுக்கொள்பூதப்படையான்கோலக்கா
இழுக்காவண்ணமேத்திவாழ்மினே. (௪)

மயிலார்சாயன்மாதோர்பாகமா
எயிலார்சாயவெரித்த*வெந்தைதன்
குயிலார்சோலைக்கோலக்காவையே
பயிலாநிற்கப்பறையும்பாவமே. (௫)

வெடிகொள்வினையைவீட்டவேண்டுவீர்
கடிகொள்கொன்றைகலந்தசென்னியான்
கொடிகொள்விழவார்கோலக்காவுளெம்
அடிகள்பாதமடைந்துவாழ்மினே. (௬)

நிழலார்சோலைநீலவண்டினங்
குழலார்பண்செய்கோலக்காவுளான்
கழலான்மொய்த்தபாதங்கைகளால்
தொழலார்பக்கற்றுயரமில்லையே. (௭)

எறியார்கடல்சூழிலங்கைக்கோன்றனை
முறியார்தடக்கையடர்த்தமூர்த்திதன்
குறியார்பண்செய்கோலக்காவையே
நெறியாற்றொழுவார்வினைகணீங்குமே. (௮)

நாற்றமலர்மேலயனுநாகத்தில்
ஆற்றலணைமேலவனுங்காண்கிலாக்
கூற்றமுதைத்தகுழகன்கோலக்கா
ஏற்றான்பாதமேத்திவாழ்மினே. (௯)

பெற்றமாசுபிறக்குஞ்சமணரும்
உற்றதுவர்தோயுருவிலாளருங்
குற்றநெறியார்கொள்ளார்கோலக்காப்
பற்றிப்பரவப்பறையும்பாவமே. (௧௦)

நலங்கொள்காழிஞானசம்பந்தன்
குலங்கொள்கோலக்காவுளானையே
வலங்கொள்பாடல்வல்லவாய்மையார்
உலங்கொள்வினைபோயோங்கிவாழ்வரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

* எயிலார்புரமூன்றெரித்த என்றும் பாடம்.

Koviloor Digital Library

சுந்தரமூர்த்திநாயனர்.

பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

புற்றில்வாளரவார்த்தபிரானைப்பூதநாதனைப்பாதமேதொழுவார்
பற்றுவான்றுணையெனக்கெளிவந்தபாவநாசனைமேவரியானை
முற்றலார்திரிபுரமொருமூன்றும்பொன்றவென்றிமால்வரையரியம்பாக்
கொற்றவில்லங்கையேந்தியகோனைக்கோலக்காவினிற்கண்டுகொண்டேனே.(க)

அங்கமாறுமாமறையொருநான்குமாயநம்பனைவேய்புரைதோளி
தங்குமாதிருவுருவுடையானைத்தழன்மதிசடைமேற்புனைந்தானை
வெங்கணானையினீருரியானைவிண்ணுளாரொடுமண்ணுளார்பரசுங்
கொங்குலாம்பொழிற்குரவெறிகமழுங்கோலக்காவினிற்கண்டுகொண்டேனே.

பாட்டகத்திசையாகிநின்றானைப்பத்தர்சித்தம்பரிவினியானை
நாட்டகத்தேவர்செய்கையுளானைநட்டமாடியைநம்பெருமானைக்
காட்டகத்துறுபுலியுரியானைக்கண்ணோர்மூன்றுடையண்ணலையடியேன்
கோட்டகப்புனலார்செழுங்கழனிக்கோலக்காவினிற்கண்டுகொண்டேனே.(ங)

ஆர்த்தமென்றெனையாளுகந்தானையமரர்நாதனைக்குமரனைப்பயந்த
வார்த்தயங்கியமுலைமடமானைவைத்துவான்மிசைக்கங்கையைக்கரந்த
தீர்த்தனைச்சிவனைச்செழுந்தேனைத்தில்லையம்பலத்துண்ணிறைந்தாடுங்
கூத்தனைக்குருமாமணிதன்னைக்கோலக்காவினிற்கண்டுகொண்டேனே. (ச)

அன்றுவந்தெனையகலிடத்தவர்முனாளதாகவென்றுவணங்காட்டி
நின்றுவெண்ணெய்நல்லூர்மிசையொளித்தநித்திலத்திரட்டொத்தினைமுத்திக்
கொன்றினுன்றனையும்பர்பிரானையுயரும்வல்லரணங்கெடச்சீறுங்
குன்றவில்லியைமெல்லியலுடனேகோலக்காவினிற்கண்டுகொண்டேனே. (ரு)

காற்றுத்தீப்புனலாகிநின்றானைக்கடவுளைக்கொடுமால்விடையானை
நீற்றுத்தீயுருவாய்நிமிர்ந்தானைநிரம்புபல்கலையின்பொருளாலே
போற்றித்தன்கழறொழுமவனுயிரைப்போக்குவானுயிர்நீக்கிடத்தாளாற்
கூற்றைத்தீங்குசெய்குரைகழலானைக்கோலக்காவினிற்கண்டுகொண்டேனே.

அன்றயன்சிரமரிந்ததிற்பலிகொண்டமாருக்கருள்வெளிப்படுத்தானைத்
துன்றுபைங்கழலிற்சிலம்பார்த்தசோதியைச்சுடர்போலொளியானை
மின்றயங்கியவிடைமடமங்கைமேவுமீசனைவாசமாமுடிமேற்
கொன்றையஞ்சடைக்குழகனையழகார்கோலக்காவினிற்கண்டுகொண்டேனே.

நாளுமின்னிசையாற்றமிழ்பரப்புஞானசம்பந்தனுக்குலகவர்முன்
தாளமீந்தவன்பாடலுக்கிரங்குந்தன்மையாளனையென்மனக்கருத்தை
ஆளும்பூதங்கள்பாடநின்றாடுமங்கணன்றனையெண்கணமிறைஞ்சுங்
கோளிலிப்பெருங்கோயிலுள்ளானைக்கோலக்காவினிற்கண்டுகொண்டேனே.()

Koviloor Digital Library

அரக்கனுற்றலையழித்தவன்பாட்டுக்கன்றிரங்கியவென்றியினானைப்
பரக்கும்பாரளிக்குண்டுகந்தவர்கள்பரவும்பணிதற்கரியானைச்
சிரக்கண்வாய்செவிமூக்குயர்காயமாகித்தீவினைதீர்த்தவெம்மானைக்
குரக்கினங்குதிகொண்டுகள்வயல்சூழ்கோலக்காவினிற்கண்டுகொண்டேனே. ()

கோடரம்பயில்சடையுடைக்கரும்பைக்கோலக்காவுளெம்மானைமெய்ம்மானப்
பாடரங்குடியடியவர்விரும்பப்பயிலுநாவலாரூரன்வன்றொண்டன்
நாடிரங்கிமுன்னறியுமந்நெறியானவின்றபத்திவைவிளம்பியமாந்தர்
காடரங்கெனநடநவின்றான்பாற்கதியுமெய்துவர்பதியவர்க்கதுவே. (கO)

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தப்பிள்ளையார், திருக்கோலக்கா வென்னுந் திருப்பதியை அடைந்து திருக்கரத்தால் ஒத்தறுத்துத் திருப்பதிகம் பாடத்தொடங்கியபொழுது சிவபெருமானுடைய திருவருளினாலே ஸ்ரீபஞ்சாக்ஷரம் எழுதப்பட்டிருந்த பொற்றாளம் தமது திருக்கரத்தில் வந்திருக்கக்கண்டு திருவாய்மலர்ந்தருளிய திருப்பதிகம் செல்லுமண்மூடியதிருப்பதிகங்களுட் சேர்ந்ததாயினும், அந்த அற்புதத்தை, சுந்தரமூர்த்திநாயனார் தாம் அருளிச்செய்த "புற்றில்வாளரவார்த்தபிரானை" என்னுந் திருப்பதிகத்திலே, "நாளுமின்னிசை யாற்றமிழ் பரப்பு ஞானசம் பந்த னுக்குல கவர்முன்—தாள மீந்தவன் பாடலுக் கிரங்குந் தன்மை யாளனை" என்று எட்டாந்திருப்பாட்டிலே விளக்கியிருத்தல் காண்க.

திருக்கோலக்காத்திருப்பதிகம் - உ.

ஆ திருப்பதிகம் - ககச.

சுவாமி தேவி திருநாமங்கள் - சப்தபுரிநாதர், ஓசைகொடுத்தநாயகி.

கரு. திருப்புள்ளிருக்குவேளூர். *

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

கள்ளார்ந்தபூங்கொன்றைமதமத்தங்கதிர்மதியம்
உள்ளார்ந்தசடைமுடியெம்பெருமானாருறையுமிடந்
தள்ளாயசம்பாதிசடாயென்பார்தாமிருவர்
புள்ளானார்க்கரையனிடம்புள்ளிருக்குவேளூரே. (க)

தையலாளொருபாகஞ்சடைமேலாளவளோடும்
ஐயந்தேர்ந்துழல்வாரோரந்தணனாருறையுமிடம்
மெய்சொல்லாவிராவணனைமேலோடியீடழித்துப்
பொய்சொல்லாதுயிர்போனான்புள்ளிருக்குவேளூரே. (உ)

* புள்ளிருக்குவேளூர்—வைத்தீசுரன்கோயில்.

Koviloor Digital Library

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

வெள்ளெருக்கரவம்விரவுஞ்சடைப்
புள்ளிருக்குவேளூரரன்பொற்கழல்
உள்ளிருக்குமுணர்ச்சியில்லாதவர்
நள்ளிருப்பர்நரகக்குழியிலே.* (க)

மாற்றமொன்றறியீர்மனைவாழ்க்கைபோய்க்
கூற்றம்வந்துமைக்கொள்வதன்முன்னமே
போற்றவல்லீரேற்புள்ளிருக்குவேளூர்
சீற்றமாயினதேய்ந்தறுங்காண்மினே. (உ)

அருமறையனையானொடுபெண்ணனைக்
கருவிடம்மிகவுண்டவெங்கண்டனைப்
புரிவெண்ணூலனைப்புள்ளிருக்குவேளூர்
உருகிநைபவருள்ளங்குளிருமே. (௩)

தன்னுருவையொருவர்க்கறிவொணா
மின்னுருவனைமேனிவெண்ணீற்றனைப்
பொன்னுருவனைப்புள்ளிருக்குவேளூர்
என்னவல்லவர்க்கில்லையிடர்களே. (ச)

செங்கண்மால்பிரமற்குமறிவொணா
அங்கியின்னுருவாகியழல்வதோர்
பொங்கரவனைப்புள்ளிருக்குவேளூர்
மங்கைபாகனைவாழ்த்தவருமின்பே. (ரு)

குற்றமில்லியைக்கோலச்சிலையினாற்
செற்றவர்புரஞ்செந்தழலாக்கியைப்
புற்றரவனைப்புள்ளிருக்குவேளூர்
பற்றவல்லவர்பாவம்பறையுமே. (சு)

கையினோடுகால்கட்டியுமரெலாம்
ஐயன்வீடினனென்பதன்முன்னநீர்
பொய்யிலாவரன்புள்ளிருக்குவேளூர்
மையுலாவியகண்டனைவாழ்த்துமே. (எ)

உள்ளமுள்கியுகந்துசிவனென்று
மெள்ளவுள்கவினைகெடுமெய்ம்மையே
புள்ளினார்பணிபுள்ளிருக்குவேளூர்
வள்ளல்பாதம்வணங்கித்தொழுமினே. (அ)

* இத்திருப்பதிகத்தில் ஒன்பதாவது செய்யுள் மறைந்துபோயிற்று.

Koviloor Digital Library

அரக்கனார்தலைபத்துமழிதர
நெருக்கிமாமலர்ப்பாதநிறுவிய
பொருப்பனாருறைபுள்ளிருக்குவேளூர்
விருப்பினாற்றொழுவார்வினைவீடுமே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

ஆண்டானையடியேனையாளாக்கொண்டு
வடியோடுமுடியயன்மாலறியாவண்ணம்
நீண்டானைநெடுங்களமாநகரான்றன்னை
நேமிவான்படையானிளூரவோனுகம்
கீண்டானைக்கேதாரமேவினானைக்
கேடிலியைக்கிளர்பொறிவாளரவோடென்பு
பூண்டானைப்புள்ளிருக்குவேளூரானைப்
போற்றாதேயாற்றநாள்போக்கினேனே. (க)

சீர்த்தானைச்சிறந்தடியேன்சிந்தையுள்ளே
திகழ்ந்தானைச்சிவன்றன்னைத்தேவதேவைக்
கூர்த்தானைக்கொடுநெடுவேற்கூற்றந்தன்னைக்
குரைகழலாற்குமைத்துமுனிகொண்டவச்சம்
பேர்த்தானைப்பிறப்பிலியையிறப்பொன்றில்லாப்
பெம்மானைக்கைம்மாவினுரிவைபேணிப்
போர்த்தானைப்புள்ளிருக்குவேளூரானைப்
போற்றாதேயாற்றநாள்போக்கினேனே. (உ)

பத்திமையாற்பணிந்தடியேன்றன்னைப்பன்னாட்
பாமாலைபாடப்பயில்வித்தானை
எத்தேவுமேத்துமிறைவன்றன்னை
யெம்மானையென்னுள்ளத்துள்ளேயூறும்
அத்தேனையமுதத்தையாவின்பாலை
யண்ணிக்குந்தீங்கரும்பையரனையாதிப்
புத்தேளைப்புள்ளிருக்குவேளூரானைப்
போற்றாதேயாற்றநாள்போக்கினேனே. (ங)

இருளாயவுள்ளத்தினிருளைநீக்கி
யிடர்பாவங்கெடுத்தேழையேனையுய்யத்
தெருளாதசிந்தைதனைத்தெருட்டித்தன்போற்
சிவலோகநெறியறியச்சிந்தைதந்த
அருளானையாதிமாதவத்துளானை
யாறங்கநால்வேதத்தப்பானின்ற
பொருளானைப்புள்ளிருக்குவேளூரானைப்
போற்றாதேயாற்றநாள்போக்கினேனே. (ச)

Koviloor Digital Library

மின்னுருவைவிண்ணகத்திலொன்றாய்மிக்கு
வீசுங்காறன்னகத்திலிரண்டாய்ச்செந்தீத்
தன்னுருவின்மூன்றாய்த்தாழ்புனலினான்காய்த்
தரணிதலத்தஞ்சாகியெஞ்சாத்தஞ்ச
மன்னுருவைவான்பவளக்கொழுந்தைமுத்தை
வளரொளியைவயிரத்தை* மாசொன்றில்லாப்
பொன்னுருவைப்புள்ளிருக்குவேளூரானைப்
போற்றாதேயாற்றநாள்போக்கினேனே. (௫)

அறையார்பொற்கழலார்ப்பவணியார்தில்லை
யம்பலத்துணடமாடுமழகன்றன்னைக்
கறையார்மூவிலைநெடுவேற்கடவுடன்னைக்
கடனாகைக்காரோணங்கருதினானை
இறையானையென்னுள்ளத்துள்ளேவிள்ளா
திருந்தானையேழ்பொழிலுந்தாங்கிநின்ற
பொறையானைப்புள்ளிருக்குவேளூரானைப்
போற்றாதேயாற்றநாள்போக்கினேனே. (௬)

நெருப்பனையதிருமேனிவெண்ணீற்றானை
நீங்காதென்னுள்ளத்தினுள்ளேநின்ற
விருப்பவனைவேதியனைவேதவித்தை
வெண்காடும்வியன்றுருத்திநகருமேவி
இருப்பவனையிடைமருதோடீங்கோய்நீங்கா
விறையவனையெனையாளுங்கயிலையென்னும்
பொருப்பவனைப்புள்ளிருக்குவேளூரானைப்
போற்றாதேயாற்றநாள்போக்கினேனே. (௭)

பேராயிரம்பரவிவானோரேத்தும்
பெம்மானைப்பிரிவிலாவடியார்க்கென்றும்
வாராதசெல்வம்வருவிப்பானை —
மந்திரமுந்தந்திரமுமருந்துமாகித்
தீராநோய்தீர்த்தருளவல்லான்றன்னைத்
திரிபுரங்கடீயெழத்திண்சிலைக்கைக்கொண்ட
போரானைப்புள்ளிருக்குவேளூரானைப்
போற்றாதேயாற்றநாள்போக்கினேனே. (௮)

பண்ணியனைப்பைங்கொடியாள்பாகன்றன்னைப்
படர்சடைமேற்புனல்கரந்தபடிறன்றன்னை
நண்ணியனையென்னாக்கித்தன்னானானை
நான்மறையினற்பொருளைநளிர்வெண்டிங்கட்
கண்ணியனைக்கடியநடைவிடையொன்றேறுங்
காரணனைநாரணனைக்கமலத்தோங்கும்
புண்ணியனைப்புள்ளிருக்குவேளூரானைப்
போற்றாதேயாற்றநாள்போக்கினேனே. (௯)

* வயிரமதை என்றும் பாடம்.

Koviloor Digital Library

இறுத்தானையிலங்கையர்கோன்சிரங்கள்பத்து
மெழுநரம்பினின்னிசைகேட்டின்புற்றானை
அறுத்தானையடியார்தம்மருநோய்பாவ
மலைகடலிலாலாலமுண்டுகண்டம்
கறுத்தானைக்கண்ணழலாற்காமனாகங்
காய்ந்தானைக்கனன்மழுவுங்கலையுமங்கை
பொறுத்தானைப்புள்ளிருக்குவேளூரானைப்
போற்றாதேயாற்றநாள்போக்கினேனே. (கo)

திருச்சிற்றம்பலம்.

திருப்புள்ளிருக்குவேளூர்த்திருப்பதிகம் - ரு.

ஆ திருப்பதிகம் - ககஎ.

சுவாமி தேவி திருநாமங்கள் - வைத்தியநாதர், தையனாயகி.

கஎ. திருக்கண்ணார்கோயில்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

தண்ணார்திங்கட்பொங்கரவந்தாழ்புனல்சூடிப்
பெண்ணாணாயபேரருளாளன்பிரியாத
கண்ணார்கோயில்கைதொழுவோர்கட்கிடர்பாவம்
நண்ணாவாகுநல்வினையாயநணுகும்மே. (க)

கந்தமர்சந்துங்காரகிலுந்தண்கதிர்முத்தும்*
வந்தமர்தெண்ணீர்மண்ணிவளஞ்சேர்வயன்மண்டிக்
கொந்தலர்சோலைக்கோகிலமாடக் † குளிர்வண்டு
செந்திசைபாடுஞ்சீர்திகழ்கண்ணார்கோயிலே. (உ)

பல்லியல்பாணிப்பாரிடமேத்தப்படுகானின்
எல்லிநடஞ்செய்யீசனெம்மான்றன்னிடமென்பர்
கொல்லையின்முல்லைமல்லிகைமௌவற்கொடிபின்னிக்
கல்லியலிஞ்சிமஞ்சமர்கண்ணார்கோயிலே. (௩)

தருவளர்கானந்தங்கியதுங்கப்பெருவேழம்
மருவளர்கோதையஞ்சவுரித்துமறைநால்வர்க்
குருவளராலநீழலறந்தீங் ‡ குரைசெய்தார்
கருவளர்கண்ணார்கோயிலடைந்தோர் ¶ கற்றோரே. (ச)

* தண்கதிர்முத்தம் என்றும் பாடம். † கொந்தமர்சோலைக்கோகுலமாடக் என்றும் பாடம். ‡ லமர்ந்தீங் என்றும் பாடம். ¶ லணைந்தோர் என்றும் பாடம்.

மறுமாணுரு* வாய்மற்றிணையின்றி வானோரைச்
செறுமாவலிபாற்சென்றுலகெல்லாமளவிட்ட
குறுமாணுருவன்றற்குறியாகக்கொண்டாடும்
கறுமாகண்டன்மேயது கண்ணார்கோயிலே. (ரு)

விண்ணவருக்காய்வேலையுணஞ்சம்விருப்பாக
உண்ணவனைத்தேவர்க்கமுதீந்தெவ்வுலகிற்கும்
கண்ணவனைக்கண்ணார்திகழ்கோயிற்கனிதன்னை
நண்ணவல்லோர்கட்கில்லைநமன்பாலடலையே. (சு)

முன்னொருகாலத்திந்திரனுற்றமுனிசாபம்
பின்னொருநாளவ்விண்ணவரேத்தப்பெயர்வெய்தித்
தன்னருளாற்கண்ணாயிரமீந்தோன்சார்பென்பர்
கன்னியர்நாளுந்துன்னமர்கண்ணார்கோயிலே. (எ)

பெருக்கெண்ணாதபேதையரக்கன்வரைக்கீழால்
நெருக்குண்ணாத்தன்னீள்கழனெஞ்சினினைந்தேத்த
முருக்குண்ணாதோர்மொய்கதிர்வாடேர்முன்னீந்த
திருக்கண்ணாரென்பார்சிவலோகஞ்சேர்வாரே. (அ)

செங்கமலப்போதிற்றிகழ்செல்வன்றிருமாலும்
அங்கமலக்கண்ணோக்கரும்வண்ணத்தழலானன்
தங்கமலக்கண்ணார்திகழ்கோயிறமதுள்ளம்†
அங்கமலத்தோடேத்திடவண்டத்தமர்வாரே. (கூ)

தாறிடுபெண்ணைத்தட்டுடையாருந்தாமுண்ணும்
சோறுடையார்சொற்றேறன்மின்வெண்ணூல்சேர்மார்பன்
ஏறுடையன்பரனென்பணிவானீள்சடைமேலோர்
ஆறுடையண்ணல்சேர்வது கண்ணார்கோயிலே. (க0)

காமருகண்ணார்கோயிலுளானைக்கடல்சூழ்ந்த
பூமருசோலைப்பொன்னியன்மாடப்புகலிக்கோன்
நாமருதொன்மைத்தன்மையுண்ஞானசம்பந்தன்
பாமருபாடல்பத்தும்வல்லார்மேற்பழிபோமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருக்கண்ணார்கோயிற்றிருப்பதிகம் - க.

ஆக திருப்பதிகம் - ககஅ.

சுவாமி தேவி திருநாமங்கள் - கண்ணாயிரநாதர், முருகுவளர்கோதை.

* மறுமாணுரு என்றும் பாடம்; மாண்-மலை. † றமதுள்ளத்—தங்கமலத்தோடேத்திட என்றும் பாடம்.

Koviloor Digital Library

கஅ. திருக்கடைமுடி. *

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

அருத்தனையறவனையமுதனைநீர்
விருத்தனைப்பாலனைவினவுதிரேல்
ஒருத்தனையல்லதிங்குலகமேத்தும்
கருத்தவன்வளநகர்கடைமுடியே. (க)

திரைபொருதிருமுடிதிங்கள்விம்மும்
அரைபொருபுலியதளடிகளிடம்
திரையொடுநுரைபொருதெண்புனல்நீர்
கரைபொருவளநகர்கடைமுடியே. (உ)

ஆலிளமதியினொடரவுகங்கை
கோலவெண்ணீற்றனைத்தொழுதிறைஞ்சி
ஏலநன்மலரொடுவிரைகமழும்
காலனவளநகர்கடைமுடியே. (ங)

கொய்யணிநறுமலர்க்கொன்றையந்தார்
மையணிமிடறுடைமறையவனூர்
பையணியரவொடுமான்மழுவாட்
கையணிபவனிடங்கடைமுடியே. (ச)

மறையவனுலகவன்மாயமவன்
பிறையவன்புனலவனனலுமவன்
இறையவனெனவுலகேத்துங்கண்டம்
கறையவன்வளநகர்கடைமுடியே. (ரு)

படவரவேரல்குற்பல்வளைக்கை
மடவரலாளையொர்பாகம்வைத்துக்
குடதிசைமதியதுசூடுசென்னிக்
கடவுடன்வளநகர்கடைமுடியே. (சா)

பொடிபுல்குமார்பினிற்புரிபுல்குநூல்
அடிபுல்குபைங்கழலடிகளிடம்
கொடிபுல்குமலரொடுகுளிர்சுனைநீர்
கடிபுல்குவளநகர்கடைமுடியே. (எ)

நோதல்செய்தாக்கனைநேர்க்கழியச்
சாதல்செய்தவனடிசரணெனலும்
ஆதரவருள்செய்தவடிகளவர்
காதல்செய்வளநகர்கடைமுடியே. (அ)

* திருக்கடைமுடி—கீழூர்.

Koviloor Digital Library

அடிமுடிகாண்கிலரோரிருவர்
புடைபுல்கியருளென்றுபோற்றிசைப்பச்
சடையிடைப்புனல்வைத்தசதுரனிடம்
கடைமுடியதனயல்காவிரியே. (௯)

மண்ணுதல்பறித்தலுமாயமிவை
எண்ணியகாலவையின்பமல்ல
ஒண்ணுதலுமையையொர்பாகம்வைத்த
கண்ணுதல்வளநகர்கடைமுடியே. (க0)

பொன்றிகழ்காவிரிப்பொருபுனல்சீர்
சென்றடைகடைமுடிச்சிவனடியை
நன்றுணர்ஞானசம்பந்தன்சொன்ன
இன்றமிழிவைசொலவின்பமாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருக்கடைமுடித்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - ககக.

சுவாமி தேவி திருநாமங்கள் - கடைமுடிநாதர், அபிராமியம்மை.

கக௨. திருநின்றியூர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

சூலம்படைசுண்ணப்பொடிசாந்தஞ்சுடுநீறு
பாலம்மதிபவளச்சடைமுடிமேலதுபண்டைக்
காலன்வலிகாலினெடுபோக்கிக்கடிகமழும்
நீலம்மலர்ப்பொய்கைநின்றியூரின்னிலையோர்க்கே. (க)

அச்சம்மிலர்பாவம்மிலர்கேடும்மிலரடியார்
நிச்சம்முறுநோயும்மிலர்தாமுந்நின்றியூரில்
நச்சம்* மிடறுடையார்நறுங்கொன்றைநயந்தாளும் †
பச்சம்முடையடிகடிருப்பாதம்பணிவாரே. (௨)

பறையின்னொலிசங்கின்னொலிபாங்காரவுமார
அறையும்மொலியெங்கும்மவைபறிவாரவர்தன்மை ‡
நிறையும்புனல்சடைமேலுடையடிகணின்றியூரில்
உறையும்மிறையல்லதெனதுள்ளம்முணராதே. (௩)

* நச்சம் என்றும் பாடம். † நயந்தாளும் என்றும் நயந்தாளப் என்றும் பாடம்.
‡ ஈவர்தம்மை என்றும்பாடம்.

Koviloor Digital Library

பூண்டவ்வரைமார்பிற்புரிநூலன்விரிகொன்றை
ஈண்டவ்வதனோடும்மொருபாலம்மதியதனைத்
தீண்டும்பொழில்சூழ்ந்ததிருநின்றியதுதன்னில்
ஆண்டகழறொழிலல்லது* வறியாரவரறிவே. (சு)

குழலின்னிசைவண்டின்னிசைகண்டுகுயில்கூவும்
நிழலின்னெழிறாழ்ந்தபொழில்சூழ்ந்தநின்றியூரில்
அழலின்வலனங்கையதுவேந்தியனலாடும்
கழலின்னொலியாடும்புரிகடவுள்களைகண்ணே. (ரு)

மூரன்முறுவல்வெண்ணகையுடையாளொருபாகம்
சாரன்மதியதனோடுடன்சலவஞ்சடைவைத்த
வீரன்மலியழகார்பொழின்மிடையுந்திருநின்றி
யூரன்கழலல்லாதெனதுள்ளம்முணராதே. (சு)

பற்றியொருதலைகையினிலேந்திப்பலிதேரும்
பெற்றியதுவாகித்திரிதேவர்பெருமானூர்
சுற்றியொருவேங்கையதளோடும்பிறைசூடும்
நெற்றியொருகண்ணூர்நின்றியூரின்னிலையாரே. (எ)

நல்லம்மலர்மேலானொடுஞாலம்மதுவுண்டான்
அல்லரெனவாவரெனநின்றும்மறிவரிய
நெல்லின்பொழில்சூழ்ந்தநின்றியூரின்னிலையாரெம்
செல்வரடியல்லாதெனசிந்தையுணராதே. (அ)

நெறியில்வருபேராவகைநினையாநினைவொன்றை
அறிவில்சமணதருரைகேட்டும்மயராதே
நெறியில்லவர்குறிகண்ணினையாதேநின்றியூரில்
மறியேந்தியகையானடிவாழ்த்தும்மதுவாழ்த்தே. (க0)

குன்றம்மதுவெடுத்தானுடறோளுந்நெரிவாக
நின்றங்கொருவிரலாலுறவைத்தானின்றியூரை
நன்றார்தருபுகலித்தமிழ்ஞானம்மிகுபந்தன்
குன்றாத்தமிழ்சொல்லக்குறைவின்றிநிறைபுகழே. † (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

கொடுங்கண்வெண்டலைகொண்டுகுறைவிலைப்
படுங்கணொன்றிலாய்ப்பலிதேர்ந்துண்பர்
நெடுங்கண்மங்கையராட்டயர்நின்றியூர்க்
கடுங்கைக்கூற்றுதைத்திட்டகருத்தரே. (க)

* தொழலல்லதுஎன்றும்பாடம். † இத்திருப்பதிகத்தில் எட்டாவதுசெய்யுள்மறைந்தது.

Koviloor Digital Library

விதியேவனெடுங்கண்ணியர்வெள்வளை
நிதியேகொளப்பாலதுநின்றியூர்
வேதமோதிவிளங்குவெண்டோட்டராய்க்
காதில்வெண்குழைவைத்தவெங்கள்வரே. (உ)

புற்றினாரரவம்புலித்தோன்மிசைச்
சுற்றினார்சுண்ணப்போர்வைகொண்டார்சுடர்
நெற்றிக்கண்ணுடையாரமர்நின்றியூர்
பற்றினாரைப்பற்றாவினைபாவமே. (ங)

பறையினோசையும்பாடலினோசையும்
மறையினோசையுமல்கியயலெலாம்*
நிறையும்பூம்பொழில்சூழ்திருநின்றியூர்
உறையுமீசனையுள்குமென்னுள்ளமே. (ச)

சுனையுணீலஞ்சுளியுநெடுங்கணாள்
இனையனென்றென்றுமேசுவதென்கொலோ
நினையுந்தண்வயல்சூழ்திருநின்றியூர்ப்
பனையினீருரிபோர்த்தபரமரே. (ரு)

உரைப்பக்கேண்மினுமுச்சியுளான்றனை
நிரைப்பொன்மாமதில்சூழ்திருநின்றியூர்
உரைப்பொற்கற்றையராரிவரோவெனில்
திரைத்துப்பாடித்திரிதருஞ்செல்வரே. (சு)

கன்றியூர்முகில்போலுங்கருங்களி
றின்றியேறலனாலிதுவென்கொலோ
நின்றியூர்பதியாகநிலாயவன்
வென்றியேறுடையெங்கள்விகிர்தனே. (எ)

நிலையிலாவெள்ளைமாலையனிண்டதோர்†
கொலையிலாலெயிலெய்தகொடியவன்
நிலையினார்வயல்சூழ்திருநின்றியூர்
உரையினாற்றொழுவார்வினையோயுமே. (அ)

அஞ்சியாகிலுமன்புபட்டாகிலும்
நெஞ்சம்வாழிநினைநின்றியூரைநீ
இஞ்சிமாமதிலெய்திமையோர்தொழக்
குஞ்சிவான்பிறைசூடியகூத்தனை. (கூ)

எளியனு‡மொழியாவிலங்கைக்கிறை
களியினாற்கயிலாயமெடுத்தவன்
நெளியவூன்றவலானமர்நின்றியூர்
அளியினாற்றொழுவார்வினையல்குமே. (க0)

திருச்சிற்றம்பலம்.

* மல்கியபலெலாம் என்றும் பாடம். † மாலயனிண்டதோர் என்றும் பாடம்.
‡ எளியெனு என்றும் பாடம்.

Koviloor Digital Library

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

அற்றவனாடியார்தமக்காயிழைபங்கினராம்
பற்றவனாரெம்பராபரரென்றுபலர்விரும்பும்
கொற்றவனார்குறுகாதவரூர்நெடுவெஞ்சரத்தால்
செற்றவனார்க்கிடமாவதுநந்திருநின்றியூரே. (க)

வாசத்திணர்மலர்க்கொன்றையுள்ளார்வடிவார்ந்தநீறு
பூசத்தினார்புகலிந்நகர்போற்றுமெம்புண்ணியத்தார்
நேசத்தினாலென்னையாளுங்கொண்டார்நெடுமால்கடல்சூழ் *
தேசத்தினார்க்கிடமாவதுநந்திருநின்றியூரே. (உ)

அங்கையின்மூவிலைவேலரமாரடிபரவச்
சங்கையைநீங்கவருளித்தடங்கடனஞ்சமுண்டார்
மங்கையொர்பாகர்மகிழ்ந்தவிடம்வளமல்குபுனற்
செங்கயல்பாயும்வயல்பொலியுந்திருநின்றியூரே. (ங)

ஆறுகந்தாரங்கநான்மறையாரெங்குமாகியடல்
ஏறுகந்தாரிசையேழுகந்தார்முடிக்கங்கைதன்னை
வேறுகந்தார்விரிநூலுகந்தார்பரிசாந்தமதா
நீறுகந்தாருறையும்மிடமாந்திருநின்றியூரே. (ச)

வஞ்சங்கொண்டார்மனஞ்சேரகில்லார்நறுநெய்தயிர்பால்
அஞ்சுங்கொண்டாடியவேட்கையினாரதிகைப்பதியே
தஞ்சங்கொண்டார்தமக்கென்றுமிருக்கைசரணடைந்தார்
நெஞ்சங்கொண்டார்க்கிடமாவதுநந்திருநின்றியூரே. (ரு)

ஆர்த்தவராடரவம்மரைமேற்புலியீருரிவை
போர்த்தவரானையின்றோலுடல்வெம்புலால்கையகலப்
பார்த்தவரின்னுயிர்பார்படைத்தான்சிரமஞ்சிலொன்றைச்
சேர்த்தவருக்குறையும்மிடமாந்திருநின்றியூரே. (சா)

தலையிடையார்பலிசென்றகந்தோறுந்திரிந்தசெல்வர்
மலையுடையாளொருபாகம்வைத்தார்கற்றுதைந்தநன்னீர்
அலையுடையார்சடையெட்டுஞ்சுழலவருநடஞ்செய்
நிலையுடையாருறையும்மிடமாந்திருநின்றியூரே. (எ)

எட்டுகந்தார்திசையேழுகந்தாரெழுத்தாறுமன்பர்
இட்டுகந்தார்மலர்ப்பூசையிச்சிக்குமிறைவர்முன்னாள்
பட்டுகும்பாரிடைக்காலனைக்காய்ந்துபலியிரந்தூண்
சிட்டுகந்தார்க்கிடமாவதுநந்திருநின்றியூரே. (அ)

* மாகடல்சூழ் என்றும் பாடம்.

Koviloor Digital Library

காலமுனாயிறுமாகிநின்றார்கழல்பேணவல்லார்
சீலமுஞ்செய்கையுங்கண்டுகப்பாரடிபோற்றிசைப்ப
மாலொடுநான்முகனிந்திரன்மந்திரத்தால்வணங்க
நீலநஞ்சுண்டவருக்கிடமாந்திருநின்றியூரே. (கூ)

வாயார்மனத்தாலினைக்குமவருக்கருந்தவத்தில்
தூயார்சுடுபொடியாடியமேனியர்வானிலென்றும்
மேயார்விடையுகந்தேறியவித்தகர்பேர்ந்தவர்க்குச்
சேயாரடியார்க்கணியவருர்திருநின்றியூரே. (க0)

சேரும்புகழ்த்தொண்டர்செய்கையறாத்திருநின்றியூரில்
சீருஞ்சிவகதியாயிருந்தானைத்திருநாவலார்
ஊரனுரைத்தவுறுதமிழ்பத்தும்வல்லார்வினைபோய்ப்
பாரும்விசும்புந்தொழப்பரமன்னடிகூடுவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

திருவும்வண்மையுந்திண்டிறலரசுஞ்
சிலந்தியார்செய்தசெய்பணிகண்டு
மருவுகோச்செங்கணான்றனக்களித்த
வார்த்தைகேட்டுநுன்மலரடியடைந்தேன்
பெருகுபொன்னிவந்துந்துபன்மணியைப்
பிள்ளைப்பல்கணம்பண்ணையுணண்ணித்
தெருவுந்தெற்றியுமுற்றமும்பற்றித்
திரட்டுந்தென்றிருநின்றியூரானே. (க)

அணிகொளாடையம்பூணணிமாலை
யமுதுசெய்தமுதம்பெறசண்டி*
இணைகொளேழெழுநூறிரும்பனுவ
லீன்றவன்றிருநாவினுக்கரையன்
கணைகொள்கண்ணப்பனென்றிவர்பெற்ற
காதலின்னருளாதரித்தடைந்தேன்
திணைகொள்செந்தமிழ்பைங்கிளிதெரியுஞ்
செல்வத்தென்றிருநின்றியூரானே. (உ)

மொய்த்தசீர்முந்நூற்றறுபதுவேலி
மூன்றுநூறுவேதியரொடுநனக்கு
ஒத்தபொன்மணிக்கலசங்களேந்தி
யோங்குநின்றியூரென்றுனக்களிப்பப்
பத்திசெய்தவப்பரசுராமற்குப்
பாதங்காட்டியநீதிகண்டடைந்தேன்
சித்தர்வானவர்தானவர்வணங்குஞ்
செல்வத்தென்றிருநின்றியூரானே. (ங)

* யமுதுசெய்தமுதம்பெறுதண்டி என்றும் பாடம்.

Koviloor Digital Library

இரவிநீள்சுடரெழுவதன்முன்ன
மெழுந்துதன்முலைக்கலசங்களேந்திச்
சுரபிபால்சொரிந்தாட்டிநின்பாதந்
தொடர்ந்தவார்த்தைதிடம்படக்கேட்டுப்
பரவியுள்கிவன்பாசத்தையறுத்துப்
பரமவந்துநுன்பாதத்தையடைந்தேன்
நிரவினித்திலமத்தகுசெம்பொ
னளிக்குந்தென்றிருநின்றியூரானே. (ச)

வந்தொரிந்திரன்வழிபடமகிழ்ந்து
வானநாடுநீயாள்கெனவருளிச்
சந்திமூன்றிலுந்தாபரநிறுத்திச்
சகளிசெய்திறைஞ்சகத்தியர்தமக்குச்
சிந்துமாமணியணிதிருப்பொதியிற்
சேர்வுநல்கியசெல்வங்கண்டடைந்தேன்
செந்தண்மாமலர்த்திருமகண்மருவுஞ்
செல்வத்தென்றிருநின்றியூரானே. (ரு)

காதுபொத்தரைக்கின்னராருழுவை
கடிக்கும்பன்னகம்பிடிப்பருஞ்சீயம்
கோதின்மாதவர்குழுவுடன்கேட்பக்
கோலவானிழற்கீழறம்பகர
வேதஞ்செய்தவரெய்தியவின்ப
மியானுங்கேட்டுநின்னிணையடியடைந்தேன்
நீதிவேதியர்நிறைபுகழுலகி
னிலவுதென்றிருநின்றியூரானே. (சு)

கோடுநான்குடைக்குஞ்சரங்குலுங்க
நலங்கொள்பாதநின்றேத்தியபொழுதே
பீடுவிண்மிசைப்பெருமையும்பெற்ற
பெற்றிகேட்டுநின்பொற்கழலடைந்தேன்
பேடைமஞ்ஞையும்பிணைகளின்கன்றும்
பிள்ளைக்கிள்ளையுமெனப்பிறைநுதலார்
நீடுமாடங்கண்மாளிகைதோறு
நிலவுதென்றிருநின்றியூரானே.* (எ)

திருச்சிற்றம்பலம்.

திருநின்றியூர்த்திருப்பதிகம் - ச.

ஆ திப்பதிகம் - கஉரு.

சுவாமி தேவி திருநாமங்கள் - மகாலட்சுமிநாதர், உலகநாயகி.

* இத்திருப்பதிகத்தில் அ, கூ, க0 இச்செய்யுள்கள் மறைந்துபோயின.

Koviloor Digital Library

௨0. திருப்புன்கூர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

முந்திநின்றவினைகளவைபோகச்
சிந்திநெஞ்சேசிவனார்திருப்புன்கூர்
அந்தமில்லாவடிகளவர்போலும்
கந்தமல்குகமழ்புன்சடையாரே. (க)

மூவராயமுதல்வர்முறையாலே
தேவரெல்லாம்வணங்குந்திருப்புன்கூர்
ஆவரென்னுமடிகளவர்போலும்
ஏவினல்லாரெயின்மூன்றெரித்தாரே. (௨)

பங்கயங்கண்மலரும்பழனத்துச்
செங்கயல்கடிளைக்குந்திருப்புன்கூர்க்
கங்கைதங்குசடையாரவர்போலும்
எங்களுச்சியுறையும்மிறையாரே. (௩)

கரையுலாவுகதிர்மாமணிமுத்தம்
திரையுலாவுவயல்சூழ்திருப்புன்கூர்
உரையினல்லபெருமானவர்போலும்
விரையினல்லமலர்ச்சேவடியாரே. (௪)

பவளவண்ணப்பரிசார்திருமேனி
திகழும்வண்ணமுறையுந்திருப்புன்கூர்
அழகரென்னுமடிகளவர்போலும்
புகழநின்றபுரிபுன்சடையாரே. (௫)

தெரிந்திலங்குகழுநீர்வயற்செந்நெல்
திருந்தநின்றவயல்சூழ்திருப்புன்கூர்ப்
பொருந்திநின்றவடிகளவர்போலும்
விரிந்திலங்குசடைவெண்பிறையாரே. (௬)

பாரும்விண்ணும்பரவித்தொழுதேத்தும்
தேர்கொள்வீதிவிழவார்திருப்புன்கூர்
ஆரநின்றவடிகளவர்போலும்
கூரநின்றவெயின்மூன்றெரித்தாரே. (௭)

மலைபதனாருடையமதின்மூன்றும்
சிலைபதனாலெரித்தார்திருப்புன்கூர்த்
தலைவர்வல்லவரக்கன்றருக்கினை
மலைபதனாலடர்த்துமகிழ்ந்தாரே. (௮)

Koviloor Digital Library

நாடவல்லமலரான்மாலுமாய்த்
தேடநின்றானுறையுந்திருப்புன்கூர்
ஆடவல்லவடிகளவர்போலும்
பாடலாடல்பயிலும்பரமரே. (கூ)

குண்டுமுற்றிக்கூறையின்றியே
பிண்டமுண்ணும்பிராந்தர்சொற்கொளேல்
வண்டுபாடமலரார்திருப்புன்கூர்க்
கண்டுதொழுமின்கபாலிவேடமே. (க0)

மாடமல்குமதில்சூழ்காழிமன்
சேடர்செல்வருறையுந்திருப்புன்கூர்
நாடவல்லஞானசம்பந்தன்
பாடல்பத்தும்பரவிவாழ்மினே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருப்புன்கூரும் திருநீடூரும்.

திருநாவுக்கரசுநாயனர்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

பிறவாதேதோன்றியபெம்மான்றன்னைப்
பேணாதாரவர்தம்மைப்பேணாதானைத்
துறவாதேகட்டறுத்தசோதியானைத்
தூநெறிக்குந்தூநெறியாய்நின்றான்றன்னைத்
திறமாயவெத்திசையுந்தானேயாகித்
திருப்புன்கூர்மேவியசிவலோகனை
நிறமாமொளியானைநீடூரானை
நீதனேனென்னேநானினையாவாறே. (க)

பின்றானுமுன்றானுமானான்றன்னைப்
பித்தர்க்குப்பித்தனாய்நின்றான்றன்னை
நன்றாங்கறிந்தவர்க்குந்தானேயாகி
நல்வினையுந்தீவினையுமானான்றன்னைச்
சென்றோங்கிவிண்ணளவுந்தீயானானைத்
திருப்புன்கூர்மேவியசிவலோகனை
நின்றாயநீடூர்நிலாவினானை
நீதனேனென்னேநானினையாவாறே. (உ)

Koviloor Digital Library

இல்லானையெவ்விடத்துமுள்ளான்றன்னை
யினியநினையாதார்க்கின்னாதானை
வல்லானைவல்லடைந்தார்க்கருளும்வண்ண
மாட்டாதார்க்கெத்திறத்துமாட்டாதானைச்
செல்லாதசெந்நெறிக்கேசெல்விப்பானைத்
திருப்புன்கூர்மேவியசிவலோகனை
நெல்லால்விளைகழனிநிர்ரானை
நீதனேனென்னேநானினையாவாறே. (௩)

கலைஞானங்கல்லாமேகற்பித்தானைக்
கடுநரகஞ்சாராமேகாப்பான்றன்னைப்
பலவாயவேடங்கடானேயாகிப்
பணிவார்கட்கங்கங்கேபற்றானைச்
சிலையாற்புரமெரித்ததீயாடியைத்
திருப்புன்கூர்மேவியசிவலோகனை
நிலையார்மணிமாடநீடூரானை
நீதனேனென்னேநானினையாவாறே. (௪)

நோக்காதேயெவ்வளவுநோக்கினானை
நுணுகாதேயாதொன்றுநுணுகினானை
ஆக்காதேயாதொன்றுமாக்கினானை
யணுகாதாரவர்தம்மையணுகாதானைத்
தேக்காதேதெண்கடனஞ்சுண்டான்றன்னைத்
திருப்புன்கூர்மேவியசிவலோகனை
நீக்காதபேரொளிசேர்நீடூரானை
நீதனேனென்னேநானினையாவாறே. (௫)

பூணலாப்பூணானைப்பூசாச்சாந்த
முடையானைமுடைநாறும்புன்கலத்தில்
ஊணலாவூணானையொருவர்காணா
வுத்தமனையொளிதிகழுமேனியானைச்
சேணுலாஞ்செழும்பவளக்குன்றொப்பானைத்
திருப்புன்கூர்மேவியசிவலோகனை
நீணுலாமலர்க்கழனிநீடூரானை
நீதனேனென்னேநானினையாவாறே. (௬)

உரைபார்பொருளுக்குலப்பிலானை
யொழியாமேயெவ்வுருவுமானான்* றன்னைப்
புரையாய்க்கனமாயாழ்ந்தாழாதானைப்
புதியனவுமாய்மிகவும்பழையான்றன்னைத்†
திரையார்புனல்சேர்மகுடத்தானைத்
திருப்புன்கூர்மேவியசிவலோகனை
நிரையார்மணிமாடநீடூரானை
நீதனேனென்னேநானினையாவாறே. (௭)

* யெவ்வுருமானான் என்றும் பாடம். † புதியானைமிகவும் பழையான்றன்னை என்றும் பாடம்.

Koviloor Digital Library

கூரரவத்தணையானுங்குளிர்தண்பொய்கை
மலரவனுங்கூடிச்சென்றறியமாட்டார்
ஆரொருவரவர்தன்மையறிவார்தேவ
ரறிவோமென்பார்க்கெல்லாமறியலாகாச்
சீரரவக்கழலானைநிழலார்சோலைத்
திருப்புன்கூர்மேவியசிவலோகனை
நீரரவத்தண்கழனிநீடூரானை
நீதனேனென்னேநானினையாவாறே. (அ)

கையெலாநெய்பாயக்கழுத்தேகிட்டக்
கானிமிர்த்துநின்றுண்ணுங்கையர்சொன்ன
பொய்யெலாமெய்யென்றுகருதிப்புக்குப்
புள்ளுவராலகப்படாதுய்யப்போந்தேன்
செய்யெலாஞ்செழுங்கமலப்பழனவேலித்
திருப்புன்கூர்மேவியசிவலோகனை
நெய்தல்வாய்ப்புனற்படப்பைநீடூரானை
நீதனேனென்னேநானினையாவாறே. (கூ)

இகழுமாறெங்ஙனேயேழைநெஞ்சே
யிகழாதுபரந்தொன்றாய்நின்றான்றன்னை
நகழமால்வரைக்கீழிட்டரக்கர்கோனை
நலனழித்துநன்கருளிச்செய்தான்றன்னைத்
திகழுமாமதகரியினுரிபோர்த்தானைத்
திருப்புன்கூர்மேவியசிவலோகனை
நிகழுமாவல்லானைநீடூரானை
நீதனேனென்னேநானினையாவாறே. (க0)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

அந்தணாளனுன்னடைக்கலம்புகுத
வவனைக்காப்பதுகாரணமாக
வந்தகாலன்றனுருயிரதனை
வவ்வினுய்க்குன்றன்வண்மைகண்டடியேன்
எந்தைநீயெனைநமன்றமர்நலியி
லிவன்மற்றென்னடியானெனவிலக்கும் *
சிந்தையால்வந்துன்றிருவடியடைந்தேன்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானே (க)

* விலகும் என்றும் பாடம்; விலகும் என்பது பிறவினையில்வருதலை இத்தேவாரத்துள் ஆங்காங்குக் கண்டுதெளிக.

Koviloor Digital Library

வையகமுற்றுமாமழைமறந்து
வயலினீரிலைமாநிலந்தருகோம்
உய்யக்கொள்கமற்றெங்களையென்ன
வொளிகொள்வெண்முகிலாய்ப்பரந்தெங்கும்
பெய்யுமாமழைப்பெருவெள்ளந்தவிர்த்துப்
பெயர்த்தும்* பன்னிருமேவலிகொண்டருளும்
செய்கைகண்டுநின்றிருவடியடைந்தேன்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானே. (உ)

ஏதநன்னிலமீரறுவேலி
யேயர்கோனுற்றவிரும்பிணிதவிர்த்துக்
கோதனங்களின்பால்கறந்தாட்டக்
கோலவெண்மணற்சிவன்றன்மேற்சென்ற
தாதைதாளறவெறிந்தசண்டிக்குன் †
சடைமிசைமலரருள்செயக்கண்டு
பூதவாளிநின்பொன்னடியடைந்தேன்
பூம்பொழிற்றிருப்புன்கூருளானே. (ங)

நற்றமிழ்வல்லஞானசம்பந்த
னாவினுக்கரையனாளைப்போவானும்
கற்றசூதனற்சாக்கியன்சிலந்தி
கண்ணப்பன்கணம்புல்லனென்றிவர்கள்
குற்றஞ்செய்யினுங்குணமெனக்கருதுங்
கொள்கைகண்டுநின்குரைகழலடைந்தேன்
பொற்றிரண்மணிக்கமலங்கண்மலரும்
பொய்கைசூழ்திருப்புன்கூருளானே. (ச)

கோலமால்வரைமத்தெனநாட்டிக்
கோளரவுசுற்றிக்கடைந்தெழுந்த
ஆலநஞ்சுகண்டவர்மிகவிரிய
வமரர்கட்கருள்புரிவதுகருதி
நீலமார்கடல்விடந்தனையுண்டு
கண்டத்தேவைத்தபித்தநீசெய்த
சீலங்கண்டுநின்றிருவடியடைந்தேன்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானே. (ரு)

இயக்கர்கின்னரர்யமனொடு ‡ வருண
ரியங்குதீவளிஞாயிறுதிங்கள்
மயக்கமில்புலிவானரநாகம்
வசுக்கள்வானவர்தானவரெல்லாம்
அயர்ப்பொன்றின்றிநின்றிருவடியதனை
யர்ச்சித்தார்பெறுமாறருள்கண்டு
திகைப்பொன்றின்றி ¶ நின்றிருவடியடைந்தேன்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானே. (சு)

* பேர்த்தும் என்றும் பாடம். † தண்டிக்குன் என்றும் பாடம். ‡ கின்னரர்ஞமனொடு என்றும் பாடம். ¶ தியைப்பொன்றின்றி என்றும் பாடம்.

Koviloor Digital Library

போர்த்தநீள்செவியாளரந்தணர்க்குப்
பொழில்கொளானிழற்கீழறம்புரிந்து
பார்த்தனுக்கன்றுபாசுபதங்கொடுத்
தருளிஞய்பண்டுபகீரதன்வேண்ட
ஆர்த்துவந்திழியும்புனற்கங்கை
நங்கையாளைநின்சடைமிசைக்கரந்த
தீர்த்தனேநின்றன்றிருவடி*யடைந்தேன்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானே. (எ)

கோவிலூர் ஆண்டவர் A. No. 3917 நூலகம், கோவிலூர்

மூவெயில்செற்றஞான்றுய்ந்தமூவரி†
லிருவர்நின்றிருக்கோயிலின்வாய்தல்
காவலாளரென்றேவியபின்னை
யொருவனீகரிகாடரங்காக
மானைநோக்கியோர்மாநடமகிழ
மணிமுழாமுழக்கவருள்செய்த
தேவதேவநின்றிருவடியடைந்தேன்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானே. (அ)

அறிவிஞன்மிக்கவறுவகைச்சமய
மவ்வவர்க்கங்கேயாரருள்புரிந்து
எறியுமாகடலிலங்கையர்கோனைத்
துலங்கமால்வரைக்கீழடர்த்திட்டுக்
குறிகொள்பாடலினின்னிசைகேட்டுக்
கோலவாளொடுநாளதுகொடுத்த
செறிவுகண்டுநின்றிருவடியடைந்தேன்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானே. (கூ)

கம்பமால்களிற்றின்னுரியானைக்
காமற்காய்ந்ததோர்கண்ணுடையானைச்
செம்பொனேயொக்குந்திருவுருவானைச்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானை
உம்பராளியையுமையவள்கோனை
யூரன்வன்றொண்டனுள்ளத்தாலுகந்
தன்பினாற்சொன்னவருந்தமிழைந்தோ
டைந்தும்வல்லவராருவினையிலரே. (க0)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனர் கலிக்காமநாயனரோடு திருப்புன்கூருக்குப்போய், சுவாமிதரிசனஞ் செய்யும்பொழுது, அந்தஸ்தலத்திலுள்ளார் நெடுங்காலமாக மழையில்லாமல் வருந்துகின்றோம் என்று விண்ணப்பஞ் செய்ய, சுந்தரமூர்த்திநாயனர் மழைவருஷித்தால், சுவாமிக்கு யாது தருவீர்கள் என்று கேட்க; அவர்கள் சுவாமிக்குப் பன்னிருவேலிநிலம் தானஞ் செய்வோம் என்றார்கள். நாயனர் திருவுளம் இரங்கி, திருப்பதிகம்பாடினர். அப்

* நின்றிருவடி என்றும் பாடம். † மூவரிருவர் என்றும் பாடம்.

பொழுது மழைபெய்யத் தொடங்கி, விடாது வருஷித்தது. அதுகண்டு அவர்கள் மழை நிற்கும்படிசெய்தருளினால் இன்னும் பன்னிருவேலிநிலம் சுவாமிக்குத் தானஞ் செய்வோம் என்று விண்ணப்பஞ்செய்தார்கள். நாயனார் மீட்டுந் திருப்பதிகம் பாடினார். உடனே மழை நின்றது. பின்பு சுவாமிதரிசனஞ் செய்து, "அந்தணாளனுன் னடைக்கலம்" என்னுந் திருப்பதிகம் பாடினார். அத்திருப்பதிகத்திலே, "ஏயர்கோ னுற்ற விரும் பிணி தவிர்த்து" என்றும், "வையக முற்று மாமழை மறந்து வயலி னீரிலை மாநிலந் தருகோம்–உய்யக் கொள்கமற் றெங்களை யென்ன வொளிகொள் வெண்முகி லாய்ப்பரந் தெங்கும்–பெய்யு மாமழைப் பெருவெள்ளந் தவிர்த்துப் பெயர்த்தும் பன்னிரு வேலி கொண் டருளும்" என்றும் எடுத்து அருளிச்செய்தார். மழைபெய்யவும் நிற்கவும் பாடிய திருப்பதிகங்கள் செல்லுமண்மூடிய திருப்பதிகங்களுட் சேர்ந்தன.

திருப்புன்கூர்த்திருப்பதிகம் - ங.

ஆ திருப்பதிகம் - கஉசு.

சுவாமி தேவி திருநாமங்கள் – சிவலோகநாதர், சொக்கநாயகியம்மை.

உக. திருநீடூர்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

ஊர்வதோர்விடையொன்றுடையானையொண்ணுதற்றனிக்கண்ணுதலானைக்
காரதார்கறைமாமிடற்றானைக்கருதலார்புரமூன்றெரித்தானை
நீரில்வாளைவரால்குதிகொள்ளுநிறைபுனற்கழனிச்செல்வநீடூர்ப்
பாருளார்பாவித்தொழநின்றபரமனைப்பணியாவிடலாமே. (க)

துன்னுவார்சடைத்தூமதியானைத்துயக்குறுவகை*தோன்றுவிப்பானைப்
பன்னுநான்மறைபாடவல்லானைப்பார்த்தனுக்கருள்செய்தபிரானை
என்னையின்னருளெய்துவிப்பானையேதிலார்தமக்கேதிலன்றன்னைப்
புன்னைமாதவிபோதலர்நீடூர்ப்புனிதனைப்பணியாவிடலாமே. (உ)

கொல்லுமூவிலைவேலுடையானைக்கொடியகாலனையுங்குமைத்தானை
நல்லவாநெறிகாட்டுவிப்பானைநாளுநாமுகக்கின்றபிரானை
அல்லலில்லருளேபுரிவானையாடுநீர்வயல்சூழ்புனனீடூர்க்
கொல்லைவெள்ளெருதேறவல்லானைக்கூறிநாம்பணியாவிடலாமே. (ங)

தோடுகாதிடுதூநெறியானைத்தோற்றமுந்துறப்பாயவன்றன்னைப்
பாடுமாமறைபாடவல்லானைப்பைம்பொழிற்குயில்கூவிடமாடே
ஆடுமாமயிலன்னமோடாடலுறுபுனற்கழனித்திருநீடூர்
வேடனாயபிரானவன்றன்னைவிரும்பிநாம்பணியாவிடலாமே. (ச)

* துயக்குறுவகை என்றும் பாடம்.

Koviloor Digital Library

குற்றமொன்றடியாரிலரானுற்கூடுமாறதனைக்கொடுப்பானைக்
கற்றகல்வியிலும்மினியானைக்காணப்பேணுமவர்க்கெளியானை
முற்றவஞ்சுந்துறந்திருப்பானைமூவரின்முதலாயவன்றன்னைச்
சுற்றுநீள்வயல்சூழ்திருநீடூர்த்தோன்றலைப்பணியாவிடலாமே. (ரு)

காடிலாடியகண்ணுதலானைக்காலனைக்கடிந்திட்டபிரானைப்
பாடியாடும்பரிசேபுரிந்தானைப்பற்றினோடுசுற்றம்மொழிப்பானைத்
தேடிமாலயன்காண்பரியானைச்சித்தமுந்தெளிவார்க்கெளியானைக்
கோடிதேவர்கள்கும்பிடுநீடூர்க்கூத்தனைப்பணியாவிடலாமே. (சு)

விட்டிலங்கெரியார்கையினானைவீடிலாதவியன்புகழானைக்
கட்டுவாங்கந்தரித்தபிரானைக்காதிலார்கனகக்குழையானை
விட்டிலங்குபுரிநூலுடையானைவீந்தவர்தலையோடுகையானைக்
கட்டியின்கரும்போங்கியநீடூர்க்கண்டுநாம்பணியாவிடலாமே. (எ)

மாயமாயமனங்கெடுப்பானைமனத்துளேமதியாயிருப்பானைக்
காயமாயமுமாக்குவிப்பானைக்காற்றுமாய்க்கனலாய்க்கழிப்பானை
ஓயுமாறுறுநோய்புணர்ப்பானையொல்லைவல்வினைகள்கெடுப்பானை
வேய்கொடோளுமைபாகனைநீடூர்வேந்தனைப்பணியாவிடலாமே. (அ)

கண்டமுங்கறுத்திட்டபிரானைக்காணப்பேணுமவர்க்கெளியானைத்
தொண்டரைப்பெரிதும்முகப்பானைத்துன்பமுந்துறந்தின்பினியானைப்
பண்டைவல்வினைகள்கெடுப்பானைப்பாகமாமதியானவன்றன்னைக்
கெண்டைவாளைகிளர்புனனீடூர்க்கேண்மையாற்பணியாவிடலாமே. (கூ)

அல்லலுள்ளனதீர்த்திடுவானையடைந்தவர்க்கமுதாயிடுவானைக்
கொல்லைவல்லரவம்மசைத்தானைக்கோலமார்கரி * யின்னுரியானை
நல்லவர்க்கணியானவன்றன்னைநாளுங்காதல்செய்கின்றபிரானை
எல்லிமல்லிகையேகமழ்நீடூரேத்திநாம்பணியாவிடலாமே. (க0)

பேரோராயிரமும்முடையானைப்பேசினாற்பெரிதும் † மினியானை
நீரூர்வார்சடைநின்மலன்றன்னைநீடூர்நின்றுகந்திட்டபிரானை
ஆரூரன்னடிகாண்பதற்கன்பாயாதரித்தழைத்திட்டவிம்மாலை
பாரூரும்பரவித்தொழவல்லார்பத்தராய்முத்திதாம்பெறுவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநீடூர்த்திருப்பதிகம் - க.

ஆ. திருப்பதிகம் - கஉஎ.

சுவாமி தேவி திருநாமங்கள் - அருட்சோமநாதர், வேயுறுதோளியம்மை.

* கோலமாகரி என்றும் பாடம். † பேரினாற்பெரிதும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

உஉ. திருவன்னியூர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனூர்.

திருவிருக்குக்குறள். பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

மன்னியூரிறை
சென்னியார்பிறை
அன்னியூரமர்
மன்னுசோதியே. (க)

பழகுந்தொண்டர்வம்
அழகனன்னியூர்க்
குழகன்சேவடி
தொழுதுவாழ்மினே. (உ)

நீதிபேணுவீர்
ஆதியன்னியூர்ச்
சோதிநாமமே
ஓதியுய்ம்மினே. (௩)

பத்தராயினீர்
அத்தனன்னியூர்ச்
சித்தர்தாடொழு
முத்தராவரே. (௪)

நிறைவுவேண்டுவீர்
அறவனன்னியூர்
மறையுளான்கழற்
குறவுசெய்ம்மினே. (௫)

இன்பம்வேண்டுவீர்
அன்பனன்னியூர்
நன்பொனென்னுமின்
உம்பராகவே. (௬)

அந்தணாளர்தம்
தந்தையன்னியூர்
எந்தையேயெனப்
பந்தநீங்குமே. (௭)

தூர்த்தனைச்செற்ற
தீர்த்தனன்னியூர்
ஆத்தமாவடைந்
தேத்திவாழ்மினே.* (௮)

இருவர்நாடிய
அரவனன்னியூர்
பரவுவார்விண்ணுக்
கொருவராவரே. (௯)

குண்டர்தேருக்
கண்டனன்னியூர்த்
தொண்டுளார்வினை
விண்டுபோகுமே. (க௦)

பூந்தராய்ப்பந்தன்
ஆய்ந்தபாடலால்
வேந்தனன்னியூர்
சேர்ந்துவாழ்மினே. (கக)

திருச்சிற்றம்பலம்.

* தேத்தியுய்ம்மினே என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பாறலைத்தபடுவெண்டலையினன்
நீறலைத்தசெம்மேனியனேரிழை
கூறலைத்தமெய்கோளரவாட்டிய
ஆறலைத்தசடையன்னியூரரே. (க)

பண்டொத்தமொழியாளையோர்பாகமாய்
இண்டைச்செஞ்சடையன்னிருள்சேர்ந்ததோர் *
கண்டத்தன்கரியின்னுரிபோர்த்தவன்
அண்டத்தப்புறத்தானன்னியூரரே. (உ)

பரவிநாளும்பணிந்தவர்தம்வினை
துரவையாகத்துடைப்பவர் † தம்மிடம்
குரவநாறுங்குழலுமைகூறராய்
அரவமாட்டுவர்போலன்னியூரரே. (ங)

வேதகீதர்விண்ணோர்க்குமுயர்ந்தவர்
சோதிவெண்பிறைதுன்றுசடைக்கணி
நாதர்நீதியினாலடியார்தமக்
காதியாகிநின்றானன்னியூரரே. (ச)

எம்பிரானிமையோர்கடமக்கெலாம்
இன்பராகியிருந்தவெம்மீசனார்
துன்பவல்வினைபோகத்தொழுமவர்க்
கன்பராகிநின்றானன்னியூரரே. (ரு)

வெந்தநீறுமெய்பூசுநன்மேனியர்
கந்தமாமலர்சூடுங்கருத்தினர்
சிந்தையார்சிவனார்செய்யதீவண்ணர்
அந்தணாளர்கண்டீரன்னியூரரே. (சா)

ஊனையார்தலையிற்பலிகொண்டுழல்
வானைவானவர்தாங்கள்வணங்கவே
தேனையார்குழலாளையோர்பாகமா
ஆனையீருரியானன்னியூரரே. (எ)

காலைபோய்ப்பலிதேர்வர்கண்ணார்நெற்றி
மேலைவானவர்வந்துவிரும்பிய
சோலைசூழ்புறங்காடரங்காகவே
ஆலின்கீழறத்தானன்னியூரரே. (அ)

* சூழ்ந்ததோர் என்றும் பாடம். † துரவையாகத்துரப்பவர் என்றும் பாடம்.

Koviloor Digital Library

எரிகொண்மேனியரென்பணிந்தின்பாய்த்
திரியுமூவெயிறியெழச்செற்றவர்
கரியமாலொடுநான்முகன்காண்பதற்
கரியராகிநின்றானன்னியூரரே. (கூ)

வஞ்சரக்கன்கரமுஞ்சிரத்தொடும்
அஞ்சுமஞ்சுமொராறுநான்கும்மிறப்
பஞ்சின்மெல்விரலாலடர்த்தாயிழை
அஞ்சலஞ்சலென்றானன்னியூரரே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருவன்னியூர்த்திருப்பதிகம் - உ.

ஆ திருப்பதிகம் - கஉக.

சுவாமி தேவி திருநாமங்கள் - ஆபத்சகாயர், பெரியநாயகியம்மை.

திருத்துருத்தியும் திருவேள்விக்குடியும்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

ஓங்கிமேலுழிதருமொலிபுனற்கங்கையையொருசடைமேல்
தாங்கினரிடுபலிதலைகலனக்கொண்டதம்மடிகள்
பாங்கினலுமையொடும்பகலிடம்புகலிடம்பைம்பொழில்சூழ்
வீங்குநீர்த்துருத்தியாரிரவிடத்துறைவர்வேள்விக்குடியே. (க)

தூறுசேர்சுடலையிற்சுடரெரியாடுவர்துளங்கொளிசேர்
நீறுசாந்தெனவுகந்தணிவர்வெண்பிறைபுல்கு* சடைமுடியார்
நாறுசாந்திளமுலையரிவையோடொருபகலமர்ந்தபிரான்
வீறுசேர்துருத்தியாரிரவிடத்துறைவர்வேள்விக்குடியே. (உ)

மழைவளரிளமதிமலரொடுதலைபுல்குவார்சடைமேல்
கழைவளர்புனல்புகக்கண்டவெங்கண்ணுதற்கபாலியார்தாம்
இழைவளர்துகிலல்குலரிவையோடொருபகலமர்ந்தபிரான்
விழைவளர்துருத்தியாரிரவிடத்துறைவர்வேள்விக்குடியே. (ஙூ)

கரும்பனவரிசிலைப்பெருந்தகைக்காமனைக்கனழித்த
சுரும்பொடுதேன்மல்குதூமலர்க்கொன்றையஞ்சுடர்ச்சடையார்
அரும்பனவனமுலையரிவையோடொருபகலமர்ந்தபிரான்
விரும்பிடந்துருத்தியாரிரவிடத்துறைவர்வேள்விக்குடியே. (சு)

* வெண்பிறைமல்கு என்றும் பாடம்.

Koviloor Digital Library

வளங்கிளர்மதியமும்பொன்மலர்க்கொன்றையும்வாளரவும்
களங்கொளச்சடையிடைவைத்தவெங்கணுதற்கபாலியார்தாம்
துளங்குநூன்மார்பினரரிவையோடொருபகலமர்ந்தபிரான்
விளங்குநீர்த்துருத்தியாரிரவிடத்துறைவர்வேள்விக்குடியே. (ரு)

பொறியுலாமடிபுலியுரிவையர்வரியராப்பூண்டிலங்கும்
நெறியுலாம்பலிகொளுநீர்மையர்சீர்மையைநினைப்பரியார்
மறியுலாங்கையினர்மங்கையோடொருபகலமர்ந்தபிரான்
வெறியுலாந்துருத்தியாரிரவிடத்துறைவர்வேள்விக்குடியே. (சா)

புரிதருசடையினர்புலியுரியரையினர்பொடியணிந்து
திரிதருமியல்பினர்திரிபுரமூன்றையுந்தீவளைத்தார்
வரிதருவனமுலைமங்கையோடொருபகலமர்ந்தபிரான்
விரிதருதுருத்தியாரிரவிடத்துறைவர்வேள்விக்குடியே. (எ)

நீண்டிலங்கவிரொளிநெடுமுடியரக்கனிந்நீள்வரையைக்
கீண்டிடந்திடுவனென்றெழுந்தவனாள்வினைகீழ்ப்படுத்தார்
பூண்டநூன்மார்பினரரிவையோடொருபகலமர்ந்தபிரான்
வேண்டிடந்துருத்தியாரிரவிடத்துறைவர்வேள்விக்குடியே. (அ)

கரைகடலரவணைக்கடவுளுந்தாமரைநான்முகனும்
குரைகழலடிதொழக்கூரெரியெனநிறங்கொண்டபிரான்
வரைகெழுமகளொடும்பகலிடம்புகலிடம்வண்பொழில்சூழ்
விரைகமழ்துருத்தியாரிரவிடத்துறைவர்வேள்விக்குடியே. (சு)

அயமுகவெயினிலையமணருங்குண்டருஞ்சாக்கியரும்
நயமுகவுரையினர்நகுவனசரிதைகள்செய்துழல்வார்
கயலனவரிநெடுங்கண்ணியோடொருபகலமர்ந்தபிரான்
வியனகர்த்துருத்தியாரிரவிடத்துறைவர்வேள்விக்குடியே. (க0)

விண்ணுலாம்விரிபொழில்விரைமணற்றுருத்திவேள்விக்குடியும்
ஒண்ணுலாமொலிகழலாடுவாரரிவையோடுறைபதியை
நண்ணுலாம்புகலியுளருமறைஞானசம்பந்தன்சொன்ன
பண்ணுலாமருந்தமிழ்பாடுவாராடுவார்பழியிலரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

மின்னுமாமேகங்கள்பொழிந்திழிந்தருவி
வெடி*படக்கரையொடுந்திரைகொணர்ந்தெற்றும்
அன்னமாங்காவிரியகன்கரை†யுறைவா
ரடியிணைதொழுதெழுமன்பராமடியார்

* வெடில்பட என்றும் பாடம். † காவிரியகங்கரை என்றும் பாடம்.

Koviloor Digital Library

சொன்னவாறறிவார்துருத்தியார்வேள்விக்
குடியுளாரடிகளைச்செடியனேனாயேன்
என்னைநான்மறக்குமாறெம்பெருமானை
யென்னுடம்படும்பிணியிடர்கெடுத்தானை. (க)

கூடுமாறுள்ளனகூடியுங்கோத்துங்
கொய்புனலேனலோடைவனஞ்சிதறி
மாடுமாகோங்கமேமருதமேபொருது
மலையெனக்குலைகளைமறிக்குமாறுந்தி
ஓடுமாகாவிரித்துருத்தியார்வேள்விக்
குடியுளாரடிகளைச்செடியனேனாயேன்
பாடுமாறறிகிலேனெம்பெருமானைப்
பழவினையுள்ளனபற்றறுத்தானை. (உ)

கோல்லுமால்யானையின்கொம்பொடுவம்பார்
கொழுங்கனிச்செழும்பயன்கொண்டுகூட்டெய்திப்
புல்கியுந்தாழ்ந்தும்போந்துதவஞ்செய்யும்
போகரும்யோகரும்புலரிவாய்மூழ்கச்
செல்லுமாகாவிரித்துருத்தியார்வேள்விக்
குடியுளாரடிகளைச்செடியனேனாயேன்
சொல்லுமாறறிகிலேனெம்பெருமானைத்
தொடர்ந்தடுங்கடும்பிணித்தொடர்வறுத்தானை.* (ங)

பொறியுமாசந்தனத்துண்டமோடகிலும்
பொழிந்திழிந்தருவிகள்புன்புலங்கவரக்
கறியுமாமிளகொடுகதலியுமுந்திக்
கடலுறவிளைப்பதேகருதித்தன்கைபோய்
எறியுமாகாவிரித்துருத்தியார்வேள்விக்
குடியுளாரடிகளைச்செடியனேனாயேன்
அறியுமாறறிகிலேனெம்பெருமானை
யருவினையுள்ளனவாசறுத்தானை. (ச)

பொழிந்திழிமும்மதக்களிற்றினமருப்பும்
பொன்மலர்வேங்கையினன்மலருந்தி
இழிந்திழிந்தருவிகள்கடும்புனலீண்டி
யெண்டிசையோர்களுமாடவந்திங்கே
சுழிந்திழிகாவிரித்துருத்தியார்வேள்விக்
குடியுளாரடிகளைச்செடியனேனாயேன்
ஒழிந்திலேன்பிதற்றுமாறெம்பெருமானை
யுற்றநோயிற்றையேயுறவொழித்தானை. (ரு)

* தொடர்வொழித்தானை என்றும் பாடம்.

Koviloor Digital Library

புகழுமாசந்தனத்துண்டமோடகிலும்
 பொன்மணிவரன்றியுநன்மலருந்தி
அகழுமாவருங்கரைவளம்படப்பெருகி
 யாடுவார்பாவந்தீர்த்தஞ்சனமலம்பித்
திகழுமாகாவிரித்துருத்தியார்வேள்விக்
 குடியுளாரடிகளைச்செடியனேனாயேன்
இகழுமாறறிகிலேனெம்பெருமானை
 யிழித்தநோயிம்மையேயொழிக்கவல்லானை. (௬)

வரையின்மாங்கனியொடுவாழையின்கனியும்
 வருடியும்வணக்கியுமாமரம்பொருது
கரையுமாகருங்கடல்காண்பதேகருத்தாய்க்
 காம்பீலிசுமந்தொளிர்நித்திலங்கைபோய்
விரையுமாகாவிரித்துருத்தியார்வேள்விக்
 குடியுளாரடிகளைச்செடியனேனாயேன்
உரையுமாறறிகிலேனெம்பெருமானை
 யுலகறிபழவினையறவொழித்தானை. * (௭)

ஊருமாதேசமேமனமுகந்துள்ளிப்
 புள்ளினம்பலபடிந்தொண்கரையுகளக்
காருமாகருங்கடல்காண்பதேகருத்தாய்க்
 கவரிமாமயிர்சுமந்தொண்பளிங்கிடறித்
தேருமாகாவிரித்துருத்தியார்வேள்விக்
 குடியுளாரடிகளைச்செடியனேனாயேன்
ஆருமாறறிகிலேனெம்பெருமானை
 யம்மைநோயிம்மையேயாசறுத்தானை. (௮)

புலங்களைவளம்படப்போக்கறப்பெருகிப் †
 பொன்களேசுமந்தெங்கும்பூசல்செய்தார்ப்ப
இலங்குமாமுத்தினோடினமணியிடறி
 யிருகரைப்பெருமரம்பீழ்ந்துகொண்டெற்றிக் ‡
கலங்குமாகாவிரித்துருத்தியார்வேள்விக்
 குடியுளாரடிகளைச்செடியனேனாயேன்
விலங்குமாறறிகிலேனெம்பெருமானை
 மேலைநோயிம்மையேவீடுவித்தானை. (௯)

மங்கையோர்கூறுகந்தேறுகந்தேறி
 மாறலார்திரிபுரநீறெழச்செற்ற
அங்கையான்கழலடியன்றிமற்றறியா
 னடியவர்க்கடியவன்றொண்டனாரூரன்
கங்கையார்காவிரித்துருத்தியார்வேள்விக்
 குடியுளாரடிகளைச்சேர்த்தியபாடல்
தங்கையாற்றொழுதுதந்நாவின்மேற்கொள்வார்
 தவநெறிசென்றமருலகமாள்பவரே. ¶ (௧0)

திருச்சிற்றம்பலம்.

* பழவினையுற வொழித்தானை என்றும் பாடம். † பெருக்கிப் என்றும் பாடம். ‡ பிளந்துகொண்டெற்றிக் என்றும் பாடம். ¶ றமருலகாள்வாரே என்றும்பாடம்.

Koviloor Digital Library

பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

மூப்பதுமில்லைபிறப்பதுமில்லையிறப்பதில்லை
சேர்ப்பதுகாட்டகத்தூரினுமாகச்சிந்திக்கினல்லால்*
காப்பதுவேள்விக்குடிதண்டுருத்தியெங்கோனரைமேல்
ஆர்ப்பதுநாகமறிந்தோமேனுமிவர்க்காட்படோமே. (க)

கட்டக்காட்டின்னடமாடவரியாவர்க்குங்காட்சியொண்ணார்
சுட்டவெண்ணீறணிந்தாடுவர்பாடுவர்தூயநெய்பால்
வட்டக்குண்டத்திலெரிவளர்த்தோம்பிமறைபயில்வார்
அட்டக்கொண்டுண்பதறிந்தோமேனுமிவர்க்காட்படோமே. (உ)

பேருமோராயிரம்பேருடையார்பெண்ணோடாணுமல்லர்
ஊருமதொற்றியூர்மற்றையூர்பெற்றவாநாமறியோம்
காருங்கருங்கடனஞ்சமுதுண்டுகண்டங்கறுத்தார்க்
காரம்பாம்பாவதறிந்தோமேனுமிவர்க்காட்படோமே. (ங)

ஏனக்கொம்பும்மிளவாமையும்பூண்டங்கோரேறுமேறிக்
கானக்காட்டிற்றொண்டர்கண்டனசொல்லியுங்காமுறவே
மானைத்தோலொன்றையுடுத்துப்† புலித்தோல்பியற்குமிட்டு
யானைத்தோல்போர்ப்பதறிந்தோமேனுமிவர்க்காட்படோமே. (ச)

ஊட்டிக்கொண்டுண்பதோரூணிலரூரிடுபிச்சையல்லால்
பூட்டிக்கொண்டேற்றினையேறுவரேறியோர்பூதந்தம்பால்
பாட்டிக்கொண்டுண்பவர்பாழிதொறும்பலபாம்புபற்றி
ஆட்டிக்கொண்டுண்பதறிந்தோமேனுமிவர்க்காட்படோமே. (ரு)

குறவனார்தம்மகடம்மகனார்மணவாட்டிகொல்லை
மறவனாராயங்கோர்பன்றிப்பின்போவதுமாயங்கண்டீர்
இறைவனாராதிபார்சோதியாராயங்கோர்சோர்வுபடா
அறவனாராவதறிந்தோமேனுமிவர்க்காட்படோமே. (சு)

பித்தரைபொத்தொருபெற்றியர்நற்றவையென்னைப்பெற்ற
முற்றவைதம்மனைதந்தைக்குந்தவ்வைக்குந்தம்பிரானார்
செத்தவர்தந்தலையிற்பலிகொள்வதேசெல்வமாகில்
அத்தவமாவதறிந்தோமேனுமிவர்க்காட்படோமே. (எ)

உம்பரானூழியானாழியானோங்கிமலருறைவான்
தம்பரமல்லவர்சிந்திப்பவர்தடுமாற்றறுப்பார்
எம்பரமல்லவரென்னெஞ்சத்துள்ளுமிருப்பதாகில்
அம்பரமாவதறிந்தோமேனுமிவர்க்காட்படோமே. (அ)

* சிந்திக்கில்லால் என்றும், சிந்திக்கிலல்லால் என்றும் பாடம். † தோலொன்று டுத்துப் என்றும் பாடம்.

Koviloor Digital Library

இந்திரனுக்குமிராவணனுக்குமருள்புரிந்தார்
மந்திரமோதுவர்மாமறைபாடுவர்மான்மறியர்
சிந்துரக்கண்ணனுநான்முகனும்முடனாய்த்தனியே
அந்தரஞ்செல்வதறிந்தோமேனுமிவர்க்காட்படோமே. (௯)

கூடலர்மன்னன்குலநாவலூர்க்கோனலத்தமிழைப்
பாடவல்லபரமன்னடியார்க்கடிமைவழுவா
நாடவல்லதொண்டனாரூரனாட்படுமாறுசொல்லிப்
பாடவல்லார்பரலோகத்திருப்பதுபண்டமன்றே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருவேள்விக்குடித்திருப்பதிகம் - ௩.

ஆ திருப்பதிகம் - ௧௩௨.

சுவாமி தேவி திருநாமங்கள் - கலியாணசுந்தரர், பரிமளசுகந்தநாயகி.

உச. திருவெதிர்கொள்பாடி.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

மத்தயானையேறிமன்னர்சூழவருவீர்காள்
செத்தபோதிலாருமில்லை* சிந்தையுள்வைம்மின்கள்
வைத்தவுள்ளமாற்றவேண்டாவம்மின்மனத்தீரே
அத்தர்கோயிலெதிர்கொள்பாடியென்பதடைவோமே. (௧)

தோற்றமுண்டேன்மரணமுண்டுதுயரமனைவாழ்க்கை
மாற்றமுண்டேல்வஞ்சமுண்டுநெஞ்சமனத்தீரே
நீற்றரேற்றர்நீலகண்டர்நிறைபுனனீள்சடைமேல்
ஏற்றர்கோயிலெதிர்கொள்பாடியென்பதடைவோமே. (௨)

செடிகொளாக்கைசென்றுசென்றுதேய்ந்தொல்லைவீழாமுன்
வடிகொள்கண்ணார்வஞ்சனையுட்பட்டுமயங்காதே
கொடிகொளேற்றர்வெள்ளைநீற்றர்கோவணவாடையுடை
அடிகள்கோயிலெதிர்கொள்பாடியென்பதடைவோமே. (௩)

வாழ்வர்கண்டீர்நம்முளைவர்வஞ்சமனத்தீரே
யாவராலுமிகழப்பட்டிங்கல்லலில்வீழாதே
மூவராயுமிருவராயுமுதல்வனவனேயாம்
தேவர்கோயிலெதிர்கொள்பாடியென்பதடைவோமே. (௪)

* செத்தபோதே லாருமில்லை என்றும் பாடம்.

அரித்துநம்மேலவர்வந்திங்காறலைப்பான்பொருட்டால்
சிரித்தபல்வாய்வெண்டலைபோயூர்ப்புறஞ்சேராமுன்
வரிக்கொடுத்திவ்வாளரக்கர்வஞ்சமதின்மூன்றும்*
எரித்தவில்லியெதிர்கொள்பாடியென்பதடைவோமே. (௫)

பொய்யர்கண்மர்வாழ்க்கையாளர்பொத்தடைப்பான்பொருட்டால்
மையல்கொண்டைம்மோடாடிநீருமனத்தீரே
ஐயவேண்டாவிம்மையேத்தவம்மைநமக்கருளும்
ஐயர்கோயிலெதிர்கொள்பாடியென்பதடைவோமே. (௬)

கூரநீக்கிக்குற்றநீக்கிச்செற்றமனநீக்கி
வாசமல்குகுழலினார்கள்வஞ்சமனைவாழ்க்கை
ஆசைநீக்கியன்புசேர்த்தியென்பணிந்தேறேறும்
ஈசர்கோயிலெதிர்கொள்பாடியென்பதடைவோமே. (௭)

இன்பமுண்டேற்றுன்பமுண்டேழைமனைவாழ்க்கை
முன்புசொன்ன† மோழைமையான்முட்டைமனத்தீரே
அன்பரல்லாலணிகொள்கொன்றையடிகளடிசேரார்
என்பர்கோயிலெதிர்கொள்பாடியென்பதடைவோமே. (௮)

தந்தையாருந்தவ்வையாருமெட்டனைச்சார்வாகார்
வந்துநம்மோடுள்ளளாவிவானநெறிகாட்டும்
சிந்தையீரேநெஞ்சினீரேதிகழ்மதியஞ்சூடும்
எந்தைகோயிலெதிர்கொள்பாடியென்பதடைவோமே. (௯)

குருதிசோரவானையின்றோல்கொண்டகுழற்சடையன்
மருதம்பீறியூடுபோனமாலயனுமறியாச்
சுருதியார்க்குஞ்சொல்லவொண்ணாச்சோதியெம்மாதியான்
கருதுகோயிலெதிர்கொள்பாடியென்பதடைவோமே. (௧௦)

முத்துநீற்றுப்பவளமேனிச்செஞ்சடையானுறையும்
பத்தர்பந்தத்தெதிர்கொள்பாடிப்பரமனையேபணியச்
சித்தம்வைத்ததொண்டர்தொண்டன்சடையனவன்சிறுவன்
பத்தனூரன்பாடவல்லார்பாதம்பணிவாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவெதிர்கொள்பாடித்திருப்பதிகம் - ௧.

ஆ திருப்பதிகம் - ௧௨௧.

சுவாமி தேவி திருநாமங்கள் - ஐராவதநாதர், மலர்க்குழலம்மை.

* மதினூன்றும் என்றும் பாடம். † முன்புசொன்ன என்றும் பாடம்.

Koviloor Digital Library

உரு. திருமணஞ்சேரி.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

அயிலாருமம்பதனாற்புரமூன்றெய்து
குயிலாருமென்மொழியாளொருகூறாகி
மயிலாருமல்கியசோலைமணஞ்சேரிப்
பயில்வானைப்பற்றிநின்றார்க்கில்லைபாவமே. (க)

விதியானைவிண்ணவர்தாந்தொழுதேத்திய
நெதியானைநீள்சடைமேனிகழ்வித்தவான்
மதியானைவண்பொழில்சூழ்ந்தமணஞ்சேரிப்
பதியானைப்பாடவல்லார்வினைபாறுமே. (உ)

எய்ப்பானார்க்கின்புறுதேனளித்தூறிய
இப்பாலாயெனையுமாளவுரியானை
வைப்பானமாடங்கள்சூழ்ந்தமணஞ்சேரி
மெய்ப்பானைமேவிநின்றார்வினைவீடுமே. (ங)

விடையானைமேலுலகேழுமிப்பாரெல்லாம்
உடையானையூழிதோறூழியுளதாய
படையானைப்பண்ணிசைபாடுமணஞ்சேரி
அடைவானையடையவல்லார்க்கில்லை*யல்லலே. (ச)

எறியார்பூங்கொன்றையினோடுமிளமத்தம்
வெறியாருஞ்செஞ்சடையாரமிலைத்தானை
மறியாருங்கையுடையானைமணஞ்சேரிச்
செறிவானைச்செப்பவல்லார்க்கிடர்சேராவே. (ரு)

மொழியானைமுன்னொருநான்மறையாறங்கம்
பழியாமைப்†பண்ணிசையானபகர்வானை
வழியானைவானவரேத்துமணஞ்சேரி
இழியாமையேத்தவல்லார்க்கெய்துமின்பமே. (சு)

என்னானையெண்ணமர்சீரிமையோர்கட்குக்
கண்ணானைக்கண்ணொருமூன்றுமுடையானை
மண்ணானைமாவயல்சூழ்ந்தமணஞ்சேரிப்
பெண்ணானைப்பேசநின்றார்பெரியோர்களே. (எ)

* யடையநின்றார்க்கில்லை என்றும் பாடம். † பழியானைப் என்றும் பாடம்.

Koviloor Digital Library

எடுத்தானையெழின்முடியெட்டுமிரண்டுந்தோள்
கெடுத்தானைக்கேடிலாச்செம்மையுடையானை
மடுத்தாரவண்டிசைபாடுமணஞ்சேரி
பிடித்தாரப்பேணவல்லார்பெரியோர்களே. (அ)

சொல்லானைத்தோற்றங்கண்டானுநெடுமாலும்
கல்லானைக்கற்றனசொல்லித்தொழுதோங்க
வல்லார்நன்மாதவரேத்துமணஞ்சேரி
எல்லாமாமெம்பெருமான்கழலேத்துமே. (கூ)

சற்றேயுந்தாமறிவில்சமண்சாக்கியர்
சொற்றேயும்வண்ணமொர்செம்மையுடையானை
வற்றாதவாவிகள்சூழ்ந்தமணஞ்சேரி
பற்றாகவாழ்பவர்மேல்வினைபற்றாவே. (க௦)

கண்ணாருங்காழியர்கோன்கருத்தார்வித்த
தண்ணார்சீர்ஞானசம்பந்தன்றமிழ்மாலை
மண்ணாருமாவயல்சூழ்ந்தமணஞ்சேரி
பண்ணாரப்பாடவல்லார்க்கில்லைபாவமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பட்டநெற்றியர்பாய்புலித்தோலினர்
நட்டநின்றநவில்பவர்நாடொறும்
சிட்டர்வாழ்திருவார்மணஞ்சேரியெம்
வட்டவார்சடையார்வண்ணம்வாழ்த்துமே. (க)

துன்னுவார்குழலாளுமையாளொடும்
பின்னுவார்சடைமேற்பிறைவைத்தவர்
மன்னுவார்மணஞ்சேரிமருந்தினை
உன்னுவார்வினையாயினவோயுமே. (உ)

புற்றிலாடரவாட்டும்புனிதனார்
தெற்றினார்புரந்தீயெழச்செற்றவர்
சுற்றினார்மதில்சூழ்மணஞ்சேரியார்
பற்றினாரவர்பற்றவர்காண்மினே. (ஙு)

மத்தமும்மதியும்வளர்செஞ்சடை
முத்தர்முக்கணர்மூசரவம்மணி
சித்தர்தீவணர்சீர்மணஞ்சேரியெம்
வித்தர்தாம்விருப்பாரைவிருப்பரே. (௪)

Koviloor Digital Library

துள்ளுமான்மறிதூமழுவாளினர்
வெள்ளநீர்கரந்தார்சடைமேலவர்
அள்ளலார்வயல்சூழ்மணஞ்சேரியெம்
வள்ளலார்கழல்வாழ்த்தல்வாழ்வாவதே. (ரு)

நீர்பரந்தநிமிர்புன்சடையின்மேல்
ஊர்பரந்தவுரகமணிபவர்
சீர்பரந்ததிருமணஞ்சேரியார்
ஏர்பரந்தங்கிலங்குசூலத்தரே. (சு)

சுண்ணத்தர்சுடுநீறுகந்தாடலார்
விண்ணத்தம்மதிசூடியவேதியர்
மண்ணத்தம்முழவார்மணஞ்சேரியார்
வண்ணத்தம்முலையாளுமைவண்ணரே. (எ)

துன்னவாடையர்தூமழுவாளினர்
பின்னுசெஞ்சடைமேற்பிறைவைத்தவர்
மன்னுவார்பொழில்சூழ்மணஞ்சேரியெம்
மன்னனார்கழலேதொழவாய்க்குமே. (அ)

சித்தர்தேவர்கண்மாலொடுநான்முகன்
புத்தர்தேரமண்கையர்* புகழவே
மத்தர்தாமறியார்மணஞ்சேரியெம்
அத்தனாரடியார்க்கல்லலில்லையே. (கூ)

கடுத்தமேனியரக்கன்கயிலையை
எடுத்தவன்னெடுநீண்முடிபத்திறப்
படுத்தலும்மணஞ்சேரியருளெனக்
கொடுத்தனன்கொற்றவாளொடுநாமமே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருமணஞ்சேரித்திருப்பதிகம் - உ.

ஆ. திருப்பதிகம் - கஅடு.

சுவாமி தேவி திருநாமங்கள் - அருள்வள்ளனாதர், யாழினுமென்மொழியாள்.

உசு. திருக்குறுக்கைவீரட்டம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

ஆதியிற்பிரமனார்தாமர்ச்சித்தாரடியிணைக்கீழ்
ஓதியவேதநாவருணருமாறுணரவுற்றார்
சோதியுட்சுடராய்த்தோன்றிச்சொல்லினையிறந்தார்பல்பூக்
கோதிவண்டறைபுஞ்சோலைக்குறுக்கைவீரட்டனாரே. (க)

* சேரமண்கையர் என்றும் பாடம்.

Koviloor Digital Library

நீற்றினைநிறையப்பூசிநித்தலுநியமஞ்செய்து
ஆற்றுநீர்பூரித்தாட்டுமந்தணனாரைக்கொல்வான்
சாற்றுநாளற்றதென்று* தருமராசற்காய்வந்த
கூற்றினைக்குமைப்பர்போலுங்குறுக்கைவீரட்டனாரே. (உ)

தழைத்ததோராத்தியின்கீழ்த்தாபரமணலாற்கூப்பி
அழைத்தங்கேயாவின்பாலைக்கறந்துகொண்டாட்டக்கண்டு
பிழைத்ததன்றாதைதாளைப்பெருங்கொடுமழுவால்வீசக்
குழைத்ததோரமுதமீந்தார்குறுக்கைவீரட்டனாரே. (ங)

சிலந்தியுமானைக்காவிற்றிருநிழற்பந்தர்செய்து
உலந்தவணிறந்தபோதேகோச்செங்கணானுமாகக்
கலந்தநீர்க்காவிரிசூழ்சோணாட்டுச்சோழர்தங்கள்
குலந்தனிற்பிறப்பித்திட்டார்குறுக்கைவீரட்டனாரே. (ச)

ஏறுடனேழடர்த்தானெண்ணியாயிரம்பூக்கொண்டு
ஆறுடைச்சடையினானையர்ச்சித்தானடியிணைக்கீழ்
வேறுமோர்பூக்குறையமெய்ம்மலர்க்கண்ணையீண்டக்†
கூறுமோராழியீந்தார்குறுக்கைவீரட்டனாரே. (ரு)

கல்லினாலெறிந்துகஞ்சிதாமுணுஞ்சாக்கியனார்
நெல்லினார்சோறுணாமேநீள்விசும்பாளவைத்தார்
எல்லியாங்கெரிகையேந்தியெழிறிகழ்நட்டமாடிக்
கொல்லியாம்பண்ணுகந்தார்குறுக்கைவீரட்டனாரே. (சு)

காப்பதோர்வில்லுமம்புங்கையதோரிறைச்சிப்பாரம்‡
தோற்பெருஞ்செருப்புத்தொட்டுத்தூயவாய்க்கலசமாட்டித்
தீப்பெருங்கண்கள்செப்பகுருதிநீரொழுகத்தன்கண்
கோப்பதும்பற்றிக்கொண்டார்குறுக்கைவீரட்டனாரே. (எ)

நிறைமறைக்காடுதன்னினீண்டெரிதீபந்தன்னைக்
கறைநிறத்தெலிதன்மூக்குச்சுட்டிடக்கனன்றுதூண்ட
நிறைகடன்மண்ணும்விண்ணுநீண்டவானுலகுமெல்லாம்
குறைவறக்கொடுப்பர்போலுங்குறுக்கைவீரட்டனாரே. (அ)

அணங்குமைபாகமாகவடக்கியவாதிமூர்த்தி
வணங்குவாரிடர்கடீர்க்குமருந்துநல்லருந்தவத்த
கணம்புல்லர்க்கருள்கள்செய்துகாதலாமடியார்க்கென்றும்
குணங்களைக்கொடுப்பர்போலுங்குறுக்கைவீரட்டனாரே. (கூ)

எடுத்தனனெழிற்கயிலையிலங்கையர்மன்னன்றன்னை
அடுத்தொருவிரலாலூன்றவலறிப்போயவனும்வீழ்ந்து
விடுத்தனன்கைநரம்பால்வேதகீதங்கள்பாடக்
கொடுத்தனர்கொற்றவாணாள்குறுக்கைவீரட்டனாரே. (க0)

திருச்சிற்றம்பலம்.

* சாற்றினாளற்றதென்று என்றும் பாடம். † கண்ணைமிண்ட என்றும் பாடம்.
‡ கையடையிறைச்சிப்பாரம் என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

நெடியமால்பிரமனோடுநீரெனும்பிலயங்கொள்ள
அடியொடுமுடியுங்காணாருச்சுனற்கம்பும்வில்லும்
துடியுடைவேடராகித்தூயமந்திரங்கள்சொல்லிக்
கொடிநெடுந்தேர்கொடுத்தார்குறுக்கைவீரட்டனாரே. (க)

ஆத்தமாமயனுமாலுமன்றிமற்றொழிந்ததேவர்
சோத்தமெம்பெருமானென்றுதொழுதுதோத்திரங்கள்சொல்லத்
தீர்த்தமாமட்டமிமுன்சீருடையேழுநாளும்
கூத்தராய்வீதிபோந்தார்குறுக்கைவீரட்டனாரே. (உ)

திருச்சிற்றம்பலம்.

திருக்குறுக்கைவீரட்டத்திருப்பதிகம் - உ.

ஆ திருப்பதிகம் - கஙஎ.

சுவாமி தேவி திருநாமங்கள் - வீரட்டேசுரர், ஞானம்பிகை.

உஎ. திருக்கருப்பறியலூர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

திருவிராகம். பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

சுற்றமொடுபற்றவைதுயக்கறவறுத்துக்
குற்றமில்குணங்களொடுகூடுமடியார்கள்
மற்றவரைவானவர்தம்வானுலகமேற்றக்*
கற்றவனிருப்பதுகருப்பறியலூரே. (க)

வண்டணைசெய்கொன்றையதுவார்சடைகண்மேலே
கொண்டணைசெய்கோலமதுகோளரவினோடும்
விண்டணைசெய்மும்மதிலும்வீழ்தரவொரம்பால்
கண்டவனிருப்பதுகருப்பறியலூரே. (உ)

வேதமொடுவேதியர்கள்வேள்விமுதலாகப்
போதினொடுபோதுமலர்கொண்டுபுனைகின்ற
நாதனெனநள்ளிருண்முனாடுகுழைதாழும்
காதவனிருப்பதுகருப்பறியலூரே. (ங)

* வேறக்—கற்றவன் என்றும் பாடம்.

Koviloor Digital Library

மடம்படுமலைக்கிறைவன்மங்கையொருபங்கன்
உடம்பினைவிடக்கருதிநின்றமறையோனைத்
தொடர்ந்தணவுகாலனுயிர்காலவொருகாலால்
கடந்தவனிருப்பதுகருப்பறியலூரே. (௪)

ஒருத்தியுமையோடுமொருபாகமதுவாய
நிருத்தனவனீதியவனித்தனெறியாய
விருத்தனவன்வேதமெனவங்கமவையோதும்
கருத்தவனிருப்பதுகருப்பறியலூரே. (௫)

விண்ணவர்கள்வெற்பரசுபெற்றமகண்மெய்த்தேன்
பண்ணமருமென்மொழியினாளையணைவிப்பான்
எண்ணிவருகாமனுடல்வேவவெரிகாலும்
கண்ணவனிருப்பதுகருப்பறியலூரே. (௬)

ஆதியடியைப்பணியவப்பொடுமலர்ச்சேர்
சோதியொளிநற்புகைவளர்க்குவடுபுக்குத்
தீதுசெயவந்தணையுமந்தகனரங்கக்
காதினனிருப்பதுகருப்பறியலூரே. (௭)

வாய்ந்தபுகழ்விண்ணவருமண்ணவருமஞ்சப்
பாய்ந்தமர்செயுந்தொழிலிலங்கைநகர்வேந்தற்
கேய்ந்தபுயமத்தனையுமிற்றுவிழமேனாள்
காய்ந்தவனிருப்பதுகருப்பறியலூரே. (௮)

பரந்ததுநிரந்துவரு*பாய்திரையகங்கை
கரந்தோர்சடைமேன்மிசையுகந்தவளைவைத்து
நிரந்தரநிரந்திருவர்நேடியறியாமல்
கரந்தவனிருப்பதுகருப்பறியலூரே. (௯)

அற்றமறைபாவமணராதமிலிபுத்தர்
சொற்றமறியாதவர்கள்சொன்னசொலைவிட்டுக்
குற்றமறியாதபெருமான்கொகுடிக்கோயில்
கற்றெனவிருப்பதுகருப்பறியலூரே. (௧௦)

நலந்தருபுனற்புகலிஞானசம்பந்தன்
கலந்தவர்கருப்பறியன்மேயகடவுள்ளைப்
பலந்தருதமிழ்க்கிளவிபத்துமிவை † கற்று
வலந்தருமவர்க்குவினைவாடலெளிதாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

* பரந்ததுநிமிர்ந்துவரு என்றும் பாடம். † கிளவிபற்றுமிவை என்றும் பாடம்.

Koviloor Digital Library

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

சிம்மாந்துசிம்புளித்துச்சிந்தையினில்வைத்துகந்துதிறம்பாவண்ணம்
கைம்மாவினுரிவைபோர்த்துமைவெருவக்கண்டானைக்கருப்பறியலூர்க்
கொய்ம்மாவின்மலர்ச்சோலைக்குயில்பாடமயிலாடுங் *கொகுடிக்கோயில்
எம்மானைமனத்தினினைந்தபோதவர்நமக்கினியவாறே. (க)

நீற்றாருமேனியராய்நினைவார்தமுள்ளத்தேநிறைந்துதோன்றும்
காற்றானைத்தீயானைக்கதிரானைமதியானைக்கருப்பறியலூர்க்
கூற்றானைக்கூற்றுதைத்துக்கோல்வளையாளவளோடுங்கொகுடிக்கோயில்
ஏற்றானைமனத்தினினைந்தபோதவர்நமக்கினியவாறே. (உ)

முட்டாமேநாடோறுநீர்மூழ்கிப்பூப்பறித்துமூன்றுபோதும்
கட்டார்ந்தவிண்டைகொண்டடிச்சேர்த்துமந்தணர்தங்கருப்பறியலூர்க்
கொட்டாட்டுப்பாட்டாகிநின்றானைக்குழகனைக்கொகுடிக்கோயில்
எட்டானமூர்த்தியைநினைந்தபோதவர்நமக்கினியவாறே. (ங)

விருந்தாயசொன்மாலைகொண்டேத்திவினைபோகவேலிதோறும்
கருந்தாளவாழைமேற்செங்கனிகடேன்சொரியுங்கருப்பறியலூர்க்
குருந்தாயமுள்ளெயிற்றுக்கோல்வளையாளவளோடுங்கொகுடிக்கோயில்
இருந்தானைமனத்தினினைந்தபோதவர்நமக்கினியவாறே. (ச)

பொடியேறுதிருமேனிப்பெருமானைப்பொங்கரவக்கச்சையானைக்
கடிநாறுபூம்பொய்கைக்கயல்வாளைகுதிகொள்ளுங்கருப்பறியலூர்க்
கொடியேறிவண்டினமுந்தண்டேனும்பண்செய்யுங்கொகுடிக்கோயில்
அடியேறுகழலானைநினைந்தபோதவர்நமக்கினியவாறே. (௫)

பொய்யாதவாய்மையாற்பொடிப்பூசிப்போற்றிசைத்துப்பூசைசெய்து
கையினாலெரியோம்பிமறைவளர்க்குமந்தணர்தங்கருப்பறியலூர்க்
கொய்புலாமலர்ச்சோலைக்குயில்கூவமயிலாலுங்கொகுடிக்கோயில்
ஐயனையென்மனத்தினினைந்தபோதவர்நமக்கினியவாறே. (சூ)

செடிகொணோயுள்ளனவுந்தீவினையுந்தீர்ந்தொழியச்சிந்தைசெய்ம்மின்
கடிகொள்பூந்தடமண்டிக்கருமேதிகண்படுக்குங்கருப்பறியலூர்க்
கொடிகொள்பூநுண்ணிடையாள்கோல்வளையாளவளோடுங்கொகுடிக்கோயில்
அடிகளையென்மனத்தினினைந்தபோதவர்நமக்கினியவாறே. (எ)

பறையாதவல்வினைகள்பறைந்தொழியப்பன்னாளும்பாடியாடிக்
கறையார்ந்தகண்டத்தனெண்டோளன்முக்கண்ணன்கருப்பறியலூர்க்
குறையாதமறைநாவர்குற்றேவலொழியாதகொகுடிக்கோயில்
உறைவானைமனத்தினினைந்தபோதவர்நமக்கினியவாறே. (அ)

* குயில்கூவ மயிலாலும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

சங்கேந்துகையானுந்தாமரையின்மேலானுந்தன்மைகாணக்
கங்கார்ந்தவார்சடைகளுடையானைவிடையானைக்கருப்பறியலூர்க்
கொங்கார்ந்தபொழிற்சோலைசூழ்கனிகள்பலவுதிர்க்குங்கொகுடிக்கோயில்
எங்கோனைமனத்தினானினைந்தபோதவர்நமக்கினியவாறே. (௯)

பண்டாழினிசைமுரலப்பன்னாளும்பாவித்துப்பாடியாடிக்
கண்டார்தங்கண்குளிருங்களிக்கமுகம்பூஞ்சோலைக்கருப்பறியலூர்க்
குண்டாடுஞ்சமணருஞ்சாக்கியரும்புறங்கூறுங்கொகுடிக்கோயில்
எண்டோளெம்பெருமானைநினைந்தபோதவர்நமக்கினியவாறே. (௧0)

கலைமலிந்ததென்புலவர்கற்றோர்தம்மிடர்தீர்க்குங்கருப்பறியலூர்க்
குலைமலிந்தகோட்டெங்குமட்டொழுகும்பூஞ்சோலைக்கொகுடிக்கோயில்
இலைமலிந்தமழுவாளைமனத்தினாலன்புசெய்தின்பமெய்தி
மலைமலிந்ததோளூரன்வனப்பகையப்பன்னுரைத்தவண்டமிழ்களே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருக்கருப்பறியலூர்த்திருப்பதிகம் - ௨.

ஆ திருப்பதிகம் - ௧௨௧.

சுவாமி தேவி திருநாமங்கள் – குற்றம்பொறுத்தநாதர், கோல்வளைநாயகி.

௨அ. திருக்குரக்குக்கா.

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

மரக்கொக்காமெனவாய்விட்டலறிநீர்
சரக்குக்காவித்திரிந்தயராதுகால்
பரக்குங்காவிரிநீரலைக்குங்கரைக்
குரக்குக்காவடையக்கெடுங்குற்றமே. (௧)

கட்டாறேகழிகாவிரிபாய்வயல்
கொட்டாறேபுனலூறுகுரக்குக்கா
முட்டாதுவடியேத்தமுயல்பவர்க்
கிட்டாறுவிடரோடவெடுக்குமே. (௨)

கைபனைத்துங்கலந்தெழுகாவிரி *
செய்பனைத்திலுஞ்சென்றிடுஞ்செம்புனல்
கொய்பனைத்துங்கொணருங்குரக்குக்கா
ஐயனைத்தொழுவார்க்கல்லலில்லையே. (௩)

* கலந்திழிகாவிரி என்றும் பாடம்.

Koviloor Digital Library

மிக்கனைத்துத்திசையுமருவிகள்
புக்குக்காவிரிபோந்தபுனற்கரைக்
கொக்கினம்பயில்சோலைக்குரக்குக்கா
நக்கனைநவில்வார்வினைநாசமே.* (௪)

விட்டுவெள்ளம்விரிந்தெழுகாவிரி
இட்டநீர்வயலெங்கும்பரந்திடக் †
கொட்டமாமுழவோங்குகுரக்குக்கா
இட்டமாயிருப்பார்க்கிடரில்லையே. (௫)

மேலைவானவரோடுவிரிகடல்
மாலுநான்முகனுமளப்பொணாக்
கோலமாளிகைக்கோயிற்குரக்குக்காப்
பாலராய்த்திரிவார்க்கில்லைபாவமே. (௬)

ஆலநீழலமர்ந்தவழகனார்
காலனையுதைகொண்டகருத்தனார்
கோலமஞ்ஞைகளாலுங்குரக்குக்காப்
பாலருக்கருள்செய்வர்பரிவொடே. (எ)

செக்கரங்கெழுசெஞ்சுடர்ச்சோதியார் ‡
அக்கரையரெம்மாதிபுராணனார்
கொக்கினம்வயல்சேருங்குரக்குக்கா
நக்கனைத்தொழநம்வினைநாசமே. (அ)

உருகியூன்குழைந்தேத்தியெழுமினீர்
கரியகண்டன்கழலடிதன்னையே
குரவனஞ்செழுங் ¶ கோயிற்குரக்குக்கா
இரவுமெல்லியுமேத்தித்தொழுமினே. (௯)

இரக்கமின்றிமலையெடுத்தான்முடி
உரத்தையொல்கவடர்த்தானுறைவிடம்
குரக்கினங்குதிகொள்ளுங்குரக்குக்கா
வரத்தனைப்பெற § வானுலகாள்வரே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருக்குரக்குக்காத்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம். - க௪0.

சுவாமி தேவி திருநாமங்கள் - குந்தளநாதர், குந்தளநாயகி.

* நக்கனைநவிலவ்வினைநாசமே என்றும் பாடம். † இட்டநீடவயலே விளைவயற் என்றும் பாடம். ‡ செஞ்சடைச் சோதியார் என்றும், சோதியான்—நக்கரையரெம் என்றும் பாடம். ¶ குரவவன்செழுங் என்றும் பாடம். § வரத்தினைப்பெற என்றும் பாடம்.

Koviloor Digital Library

உகூ. திருவாழ்கொளிபுத்தூர்.*

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

பொடியுடைமார்பினர்போர்விடையேறிப்பூதகணம்புடைசூழக்
கொடியுடையூர்திரிந்தையங்கொண்டுபலபலகூறி
வடிவுடைவாணெடுங்கண்ணுமைபாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்க்
கடிகமழ்மாமலரிட்டுக்கறைமிடற்றானடிகாண்போம். (க)

அரைகெழுகோவணவாடையின்மேலோராடரவம்மசைத்தையம்
புரைகெழுவெண்டலையேந்திப்போர்விடையேறிப்புகழ
வரைகெழுமங்கையதாகமோர்பாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்
விரைகமழ்மாமலர் † தூவிவிரிசடையானடிசேர்வோம். (உ)

பூணெடுநாகமசைத்தனலாடிப்புன்றலையங்கையிலேந்தி
ஊணிடுபிச்சையூரையமுண்டியென்றுபலகூறி
வாணெடுங்கண்ணுமைமங்கையொர்பாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்த்
தாணெடுமாமலரிட்டுத்தலைவனதாணிழல்சார்வோம். (ங)

தாரிடுகொன்றையொர்வெண்மதிகங்கைதாழ்சடைமேலவைசூடி
ஊரிடுபிச்சைகொள்செல்வமுண்டியென்றுபலகூறி
வாரிடுமென்முலைமாதொருபாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்க்
காரிடுமாமலர்தூவிக்கறைமிடற்றானடிகாண்போம். (ச)

கனமலர்க்கொன்றை ‡ யலங்கலிலங்கக்காதிலோர்வெண்குழையோடு
புனமலர்மாலைபுனைந்தூர்புகுதியென்றேபலகூறி
வனமுலைமாமலைமங்கையொர்பாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்
இனமலரேய்ந்தனதூவியெம்பெருமானடிசேர்வோம். (ரு)

அளைவளர்நாகமசைத்தனலாடியலர்மிசையந்தணனுச்சிக்
கழிதலையிற்பலிகொள்ளுங்கருத்தனேகள்வனேயென்னா
வளைபொலிமுன்கைமடந்தையொர்பாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்த்
தளையவிழ்மாமலர்தூவித்தலைவனதாளிணைசார்வோம். (சு)

அடர்செவிவேழத்தினீருரிபோர்த்துவழிதலையங்கையிலேந்தி
உடலிடுபிச்சையோடையமுண்டியென்றுபலகூறி
மடனெடுமாமலர்க்கண்ணியொர்பாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்த்
தடமலராயினதூவித்தலைவனதாணிழல்சார்வோம். (எ)

* திருவாளொளிபுற்றூர் எனினும் அமையும். † விரைகெழுமாமலர் என்றும் பாடம்.
‡ கனமலர்கொன்றை என்றும் பாடம்.

Koviloor Digital Library

உயர்வரையொல்கவெடுத்தவரக்கனொளிர்கடகக்கையடர்த்து
அயலிடுபிச்சையோடையமார்தலையென்றடிபோற்றி
வயல்விரிநீலநெடுங்கணிபாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்ச்
சயவிரிமாமலர்தூவித்தாழ்சடையானடிசார்வோம். (அ)

கரியவனும்முகன்கைதொழுதேத்தக்காணலுஞ்சாரலுமாகா
எரியுருவாகியூரையமிடுபலியுண்ணியென்றேத்தி
வரியரவல்குன்மடந்தையொர்பாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்
விரிமலராயினதூவிவிகிர்தனசேவடிசேர்வோம். (கூ)

குண்டமணர்துவர்க்கூறைகண்மெய்யிற்கொள்கையினார்புறங்கூற
வெண்டலையிற்பலிகொண்டல்விரும்பினையென்றுவிளம்பி
வண்டமர்பூங்குழன்மங்கையொர்பாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்த்
தொண்டர்கண்மாமலர்தூவத்தோன்றிநின்றானடிசேர்வோம். (க0)

கல்லுயர்மாக்கடனின்றுமுழங்குங்கரைபொருகாழியமூதூர்
நல்லுயர்நான்மறைநாவினற்றமிழ்ஞானசம்பந்தன்
வல்லுயர்சூலமும்வெண்மழுவாளும்வல்லவன்வாழ்கொளிபுத்தூர்ச்
சொல்லியபாடல்கள்வல்லார்துயர்கெடுதல்லெளிதாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பண் - பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

சாகையாயிரமுடையார்சாமமுமோதுவதுடையார்
ஈகையார்கடைநோக்கியிரப்பதும்பலபலவுடையார்
தோகைமாமயிலனையதுடியிடைபாகமுமுடையார்
வாகைநுண்டுளிவீசும்வாழ்கொளிபுத்தூருளாரே. (க)

எண்ணிலீரமுமுடையாரெத்தனையோரிவரறங்கள்
கண்ணுமாயிரமுடையார்கையுமொராயிரமுடையார்
பெண்ணுமாயிரமுடையார்பெருமையொராயிரமுடையார்
வண்ணமாயிரமுடையார்வாழ்கொளிபுத்தூருளாரே. (உ)

நொடியொராயிரமுடையார்நுண்ணியராமவர்நோக்கும்
வடிவுமாயிரமுடையார்வண்ணமுமாயிரமுடையார்
முடியுமாயிரமுடையார்மொய்குழலாளையுமுடையார்
வடிவுமாயிரமுடையார்வாழ்கொளிபுத்தூருளாரே. (ங)

பஞ்சிநுண்டுகிலன்னபைங்கழற்சேவடியுடையார்
குஞ்சிமேகலையுடையார்கொந்தணிவேல்வலனுடையார்
அஞ்சும்வென்றவர்க்கணியாரானையினீருரியுடையார்
வஞ்சிநுண்ணிடையுடையார்வாழ்கொளிபுத்தூருளாரே. (ச)

Koviloor Digital Library

பரவுவாரையுமுடையார்பழித்திகழ்வாரையுமுடையார்
விரவுவாரையுமுடையார்வெண்டலைப்பலிகொள்வதுடையார்
அரவம்பூண்பதுமுடையாராயிரம்பேர்மிகவுடையார்
வாழுமாயிரமுடையார்* வாழ்கொளிபுத்தூருளாரே. (௫)

தண்டுந்தாளமுங்குழலுந்தண்ணுமைக்கருவியும்புறவில்
கொண்டபூதமுமுடையார்கோலமும்பலபலவுடையார்
கண்டுகோடலுமரியார்காட்சியுமரியதொர்கரந்தை
வண்டுவாழ்பதியுடையார்வாழ்கொளிபுத்தூருளாரே. (௬)

மானவாழ்க்கையதுடையார்மலைந்தவர்மதிற்பரிசறுத்தார்
தானவாழ்க்கையதுடையார்தவத்தொடுநாம்புகழ்ந்தேத்த
ஞானவாழ்க்கையதுடையார்நள்ளிருண்மகளிர்நின்றேத்த
வானவாழ்க்கையதுடையார்வாழ்கொளிபுத்தூருளாரே. (எ)

ஏழுமூன்றுமோர்தலைகளுடையவனிடர்படவடர்த்து
வேழ்விசெற்றதும்விரும்பிவிருப்பவர்பலபலவுடையார்
கேழல்வெண்பிறைபன்னகெழுமணிமிடறு † நின்றிலங்க
வாழிசாந்தமுமுடையார்வாழ்கொளிபுத்தூருளாரே. (அ)

வென்றிமாமலரோனும்விரிகடற்றுயின்றவன்றானும்
என்றுமேத்துகையுடையாரிமையவர்துதிசெயவிரும்பி
முன்றின்மாமலர்வாசமுதுமதி ‡ தவழ்பொழிற்றில்லை
மன்றிலாடலதுடையார்வாழ்கொளிபுத்தூருளாரே. (௯)

மண்டைகொண்டுழறோர்மாசுடைமேனிவன்சமணர்
குண்டர்பேசியபேச்சுக்கொள்ளன்மின்றிகழொளிநல்ல
துண்டவெண்பிறைசூடிச்சுண்ணவெண்பொடியணிந்தெங்கும்
வண்டுவாழ்பொழில்சூழ்ந்தவாழ்கொளிபுத்தூருளாரே. (௧0)

நலங்கொள்பூம்பொழிற்காழிநற்றமிழ்ஞானசம்பந்தன்
வலங்கொள்வெண்மழுவாளன்வாழ்கொளிபுத்தூருளானை
இலங்குவெண்பிறையானையேத்தியதமிழிவைவல்லார்
நலங்கொள்சிந்தையராகிநன்னெறியெய்துவர்தாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

* வரவுமாயிரமுடையார் என்றும் பாடம். † யன்னகேழ்மணிமிடறு என்றும் பாடம்.
‡ முழுமதி என்றும் பாடம்.

Koviloor Digital Library

சுந்தரமூர்த்திநாயனர்.

பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

தலைக்கலன்றலைமேற்றரித்தானைத்
தன்னையென்னைநினைக்கத்தருவானைக்
கொலைக்கையானையுரிபோர்த்துகந்தானைக்
கூற்றுதைத்தகுரைசேர்கழலானை
அலைத்தசெங்கண்விடையேறவல்லானை
யானையாவடி*யேனடிநாயேன்
மலைத்தசெந்நெல்வயல்வாழ்கொளிபுத்தூர்
மாணிக்கத்தைமறந்தென்னினைக்கேனே. (௧)

படைக்கட்சூலம்பயிலவல்லானைப்
பாவிப்பார்மனம்பாவிக்கொண்டானைக்
கடைக்கட்பிச்சைக்கிச்சைகாதலித்தானைக்
காமனைகந்தனைக்கட்டழித்தானைச்
சடைக்கட்கங்கையைத்தாழவைத்தானைத்
தண்ணீர்மண்ணிக்கரையானைத்தக்கானை
மடைக்கணீலமலர்வாழ்கொளிபுத்தூர்
மாணிக்கத்தைமறந்தென்னினைக்கேனே. (௨)

வெந்தநீறுமெய்பூசவல்லானை
வேதமால்விடையேறவல்லானை
அந்தமாதியறிதற்கரியானை
யாறலைத்தசடையானையம்மானைச்
சிந்தையென்றடுமோற்றறுப்பானைத்
தேவதேவனென்சொன்முனியாதே
வந்தெனுள்ளம்புகும்வாழ்கொளிபுத்தூர்
மாணிக்கத்தைமறந்தென்னினைக்கேனே. (௩)

தடங்கையான்மலர்தூய்த்தொழுவாரைத்
தன்னடிக்கேசெல்லுமாறுவல்லானைப்
படங்கொணகமரையார்த்துகந்தானைப்
பல்லின்வெள்ளைத்தலையூணுடையானை
நடுங்கவானையுரிபோர்த்துகந்தானை
நஞ்சமுண்டுகண்டங்கறுத்தானை
மடந்தைபாகனைவாழ்கொளிபுத்தூர்
மாணிக்கத்தைமறந்தென்னினைக்கேனே. (௪)

* யானையாவடி என்றும் யானையாலடி என்றும் பாடம்.

Koviloor Digital Library

வளைக்கைமுன்கைமலைமங்கைமணாளன்
மாரனுடனிறெழச்செற்றுத்
துளைத்தவங்கத்தொடுதூமலர்க்கொன்றை
தோலுநூலுந்துதைந்தவரைமார்பன்
திளைக்குந்தெவ்வர்திரிபுரமூன்று
மவுணர்பெண்டிருமக்களும்வேவ
வளைத்தவில்லியைவாழ்கொளிபுத்தூர்
மாணிக்கத்தைமறந்தென்னினைக்கேனே. (௫)

திருவினாயகனாகியமாலுக்
கருள்கள்செய்திடுந்தேவர்பிரானை
உருவினானையொன்றுவறிவொண்ணா
மூர்த்தியைவிசயற்கருள்செய்வான்
செருவிலேந்தியோர்கேழற்பின்சென்று
செங்கண்வேடனாயென்னொடும்வந்து
மருவினான்றனைவாழ்கொளிபுத்தூர்
மாணிக்கத்தைமறந்தென்னினைக்கேனே. (௬)

எந்தையையெந்தைதந்தைபிரானை
யேதமாயவிடர்தீர்க்கவல்லானை
முந்தியாகியமூவரின்மிக்க
மூர்த்தியைமுதல்காண்பரியானைக்
கந்தின்மிக்க* கரியின்மருப்போடு
காரகில்கவரிம்மயிர்மண்ணி
வந்துவந்திழிவாழ்கொளிபுத்தூர்
மாணிக்கத்தைமறந்தென்னினைக்கேனே. (௭)

தேனைபாடியகொன்றையினானைத்
தேவர்கைதொழுந்தேவர்பிரானை
ஊனமாயினதீர்க்கவல்லானை
யொற்றையேற்றனைநெற்றிக்கண்ணானைக்
கானவானையின்கொம்பினைப்பீழ்ந்த
கள்ளப்பிள்ளைக்குங்காண்பரிதாய
வானநாடனைவாழ்கொளிபுத்தூர்
மாணிக்கத்தைமறந்தென்னினைக்கேனே (௮)

காளையாகிவரையெடுத்தான்றன்
கைகளிற்றவன்மொய்தலையெல்லாம்
மூளைபோதவொருவிரல்வைத்த
மூர்த்தியைமுதல்காண்பரியானைப்
பாளைதெங்குபழம்விழமண்டிச்
செங்கண்மேதிகள்சேடெறிந்தெங்கும்
வாளைபாய்வயல்வாழ்கொளிபுத்தூர்
மாணிக்கத்தைமறந்தென்னினைக்கேனே. (௯)

* காண்பரியானைக் - கந்தின்மிக்க என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருந்தநான்மறைபாடவல்லானைத்
தேவர்க்குந்தெரிதற்கரியானைப்
பொருந்தமால்விடையேறவல்லானைப்
பூதிப்பைபுலித்தோலுடையானை
இருந்துண்டேருநின்றுணுஞ்சமணு *
மேசநின்றவனுருயிர்க்கெல்லாம்
மருந்தனன்றனைவாழ்கொளிபுத்தூர்
மாணிக்கத்தைமறந்தென்னினைக்கேனே. (௧0)

மெய்யனைமெய்யினின்றுணர்வானை
மெய்யிலாதவர்தங்களுக்கெல்லாம்
பொய்யனைப்புரமூன்றெரித்தானைப்
புனிதனைப்புலித்தோலுடையானைச்
செய்யனைவெளியதிருநீற்றிற்
றிகழுமேனியன்மான்மறியேந்தும்
மைகொள்கண்டனைவாழ்கொளிபுத்தூர்
மாணிக்கத்தைமறந்தென்னினைக்கேனே. (௧௧)

வளங்கிளர்பொழில்வாழ்கொளிபுத்தூர்
மாணிக்கத்தைமறந்தென்னினைக்கேனென்
றுளங்குளிர்தமிழூரன்வன்றொண்டன்
சடையன்காதலன்வனப்பகையப்பன்
நலங்கிளர்வயனுவலர்வேந்த
னங்கைசிங்கடிதந்தைபயந்த
பலங்கிளர்தமிழ்பாடவல்லார்மேற்
பறையுமாஞ்செய்தபாவங்கடானே. (௧௨)

திருச்சிற்றம்பலம்.

திருவாழ்கொளிபுத்தூர்த்திருப்பதிகம் - ௩.

ஆ திருப்பதிகம் - ௧௪௩.

சுவாமி தேவி திருநாமங்கள் - மாணிக்கவண்ணர், வண்டமர்பூங்குழலி.

௩0. திருமண்ணிப்படிக்கரை.

சுந்தரமூர்த்திநாயனர்.

பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

முன்னவனெங்கள்பிரான் † முதல்காண்பரிதாயபிரான்
சென்னியிலெங்கள்பிரான்றிருநீலமிடற்றெம்பிரான்
மன்னியவெங்கள்பிரான்மறைநான்குங்கல்லானிழற்கீழ்ப்
பன்னியவெங்கள்பிரான்பழமண்ணிப்படிக்கரையே. (௧)

* நின்றுண்சமணு என்றும் பாடம். † முன்னிவனெங்கள்பிரான் என்றும் பாடம்.

அண்டகபாலஞ்சென்னியடிமேலலரிட்டுநல்ல
தொண்டங்கடிபரவித்தொழுதேத்திநின்றாடுமிடம்
வெண்டிங்கள்வெண்மழுவன்விரையார்கதிர்மூவிலைய
பண்டங்கன்மேயவிடம்பழமண்ணிப்படிக்கரையே. (௨)

ஆடுமினன்புடையீரடிக்காட்பட்டதூளிகொண்டு
சூடுமின்றொண்டருள்ளீருமரோடமர்சூழவந்து
வாடுமிவ்வாழ்க்கைதன்னைவருந்தாமற்றிருந்தச்சென்று
பாடுமின்பத்தருள்ளீர்பழமண்ணிப்படிக்கரையே. (௩)

அடுதலையேபுரிந்தானவையந்தரமூவெயிலும்
கெடுதலையேபுரிந்தான்கிளருஞ்சிலைநாணியிற்கோல்
நடுதலையேபுரிந்தா* னரிகான்றிட்டவெச்சில்வெள்ளைப்
படுதலையேபுரிந்தான்பழமண்ணிப்படிக்கரையே. (௪)

உங்கைகளாற்கூப்பியுகந்தேத்தித்தொழுமின்றொண்டீர்
மங்கையொர்கூறுடையான்வானோர்முதலாயபிரான்
அங்கையில்வெண்மழுவன்னலையார்கதிர்மூவிலைய
பங்கயபாதனிடம்பழமண்ணிப்படிக்கரையே. (௫)

செடிபடத்திவிளைத்தான்சிலையார்மதிற்செம்புனஞ்சேர்
கொடிபடுமூரிவெள்ளையெருதேற்றையுமேறக்கொண்டான்
கடியவன்காலன்றன்னைக்கறுத்தான்கழற்செம்பவளப்
படியவன்பாசுபதன்பழமண்ணிப்படிக்கரையே. (௬)

கடுத்தவன்றேர்கொண்டோடிக்கயிலாயநன்மாமலையை
எடுத்தவனீரைந்துவாயரக்கன்முடிபத்தலற
விடுத்தவன்கைநரம்பால்வேதகீதங்கள்பாடலுறப்
படுத்தவன்பால்வெண்ணீற்றன்பழமண்ணிப்படிக்கரையே. (௭)

திரிவனமும்மதிலும்மெரித்தானிமையோர்பெருமான்
அரியவனட்டபுட்பமவைகொண்டடிபோற்றிநல்ல
கரியவனான்முகனும்மடியும்முடிகாண்பரிய
பரியவன்பாசுபதன்பழமண்ணிப்படிக்கரையே. (௮)

வெற்றரைக்கற்றமணும்விரையாதுவிண்டாலமுண்ணும்
துற்றரைத்துற்றறுப்பான்றுன்னவாடைத்தொழிலுடையீர்
பெற்றரைப்பித்தரென்றுகருதேன்மின்படிக்கரையுள்
பற்றரைப்பற்றிநின்றுபழிபாவங்கடீர்மின்களே. (௯)

* நாணியிற்கோல்—அடுதலையேபுரிந்தான் என்றும் பாடம்; அடுதல் - அடுத்தல் விகாரம்; நாணின்கட்கோலைச்சேர்த்தான் என்க.

Koviloor Digital Library

பல்லுயிர்வாழுந்தெண்ணீர்ப்பழமண்ணிப்படிக்கரையை
அல்லியந்தாமரைத்தாராரூரனுரைத்ததமிழ்
சொல்லுதல்கேட்டல்வல்லாரவர்க்குந்தமர்க்குங்கிளைக்கும்
எல்லியுநன்பகலு* மிடர்கூருதலில்லையன்றே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருமண்ணிப்படிக்கரைத்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - கசச.

சுவாமி தேவி திருநாமங்கள் - நீலகண்டர், அமிர்தகரவல்லி.

ருக. திருவோமாம்புலியூர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர்.

பண் - புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

பூங்கொடிமடவாளுமையொருபாகம்புரிதருசடைமுடியடிகள்
வீங்கிருணட்டமாடுமெம்விகிர்தர்விருப்பொடுமுறைவிடம்வினவில்
தேங்கமழ்பொழிலிற்செழுமலர்கோதிச்செறிதருவண்டிசைபாடும்
ஓங்கியபுகழாரோமமாம்புலியூருடையவர்வடதளியதுவே. (க)

சம்பரற்கருளிச்சலந்தரன்வீயத்தழலுமிழ்சக்கரம்படைத்த
எம்பெருமானரிமையவரேத்தவினிதினங்குறைவிடம்வினவில்
அம்பரமாகியழலுமிழ்புகையினகுதி † யான்மழைபொழியும்
உம்பர்களேத்துமோமமாம்புலியூருடையவர்வடதளியதுவே. (உ)

பாங்குடைத்தவத்துப்பகீரதற்கருளிப்படர்சடைக்கரந்தநீர்க்கங்கை
தாங்குதறவிர்த்துத்தாதலத்திழித்ததத்துவனுறைவிடம்வினவில்
ஆங்கெரிமூன்றுமமர்ந்துடனிருந்தவங்கையாலாகுதிவேட்கும்
ஓங்கியமறையோரோமமாம்புலியூருடையவர்வடதளியதுவே. (ங)

புற்றரவணிந்துநீறுமெய்பூசிப்பூதங்கள்சூழ்தரவூரூர்
பெற்றமொன்றேறிப்பெய்பலிகொள்ளும்பிரானவனுறைவிடம்வினவில்
கற்றநால்வேதமங்கமோராறுங்கருத்தினாருத்தியாற்றெரியும்
உற்றபல்புகழாரோமமாம்புலியூருடையவர்வடதளியதுவே. (ச)

நிலத்தவர்வானமாள்பவர்கீழோர்துயர்கெடநெடியமாற்கருளால்
அலைத்தவல்லசுரராசறவாழியளித்தவனுறைவிடம்வினவில்
சலத்தினற்பொருள்கள்வேண்டுதல்செய்யாத்தன்மையார்நன்மையான்மிக்க
உலப்பில்பல்புகழாரோமமாம்புலியூருடையவர்வடதளியதுவே. (ரு)

* எல்லியு நண்பகலு என்றும் பாடம்; நண்பகல் ஈண்டுவினைத்தொகை. † யழன் மிகுபுகையினகுதி என்றும் பாடம்.

Koviloor Digital Library

மணந்திகழ்திசைகளெட்டுமேழிசையுமலியுமாறங்கமைவேள்வி
இணைந்தநால்வேதமூன்றெரியிரண்டுபிறப்பெனவொருமையாலுணரும்
குணங்களுமவற்றின்கொள்பொருள்குற்றமற்றவையுற்றதுமெல்லாம்
உணர்ந்தவர்வாழுமோமமாம்புலியூருடையவர்வடதளியதுவே. (எ)

தலையொருபத்துந்தடக்கையதிரட்டிதானுடையரக்கனொண்கயிலை
அலைவதுசெய்த* வவன்றிறல்கெடுத்தவாதியாருறைவிடம்வினவில்
மலையெனவோங்குமாளிகைநிலவுமாமதின்மாற்றலரென்றும்
உலவுபல்புகழாரோமமாம்புலியூருடையவர்வடதளியதுவே. (அ)

கள்ளவிழ்மலர்மேலிருந்தவன்கரியோனென்றிவர்காண்பரிதாய
ஒள்ளெரியுருவருமையவளோடுமுகந்தினிதுறைவிடம்வினவில்
பள்ளநீர்வாளைபாய்தருகழனிப்பனிமலர்ச்சோலைசூழாலை
ஒள்ளியபுகழாரோமமாம்புலியூருடையவர்வடதளியதுவே. (கூ)

தெள்ளியரல்லாத்தேரரோடமணர்தடுக்கொடுசீவரமுடுக்கும்
கள்ளமார்மனத்துக்கலதிகட்கருளாக்கடவுளாருறைவிடம்வினவில்
நள்ளிருள்யாமநான்மறைதெரிந்துநலந்திகழ்மூன்றெரியோம்பும்
ஒள்ளியார்வாழுமோமமாம்புலியூருடையவர்வடதளியதுவே. (க௦)

விளைதருவயலுள்வெயில்செறிபவளமேதிகண்மேய்புலத்திடறி
ஒளிதரமல்குமோமமாம்புலியூருடையவர்வடதளி† யானைக்
களிதருநிவப்பிற்காண்டகுசெல்வக்காழியுண்ஞானசம்பந்தன்
அளிதருபாடல்பத்தும்வல்லார்களமரலோகத்திருப்பாரே. ‡ (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

ஆருமூவிலைவேலங்கையானை
யலைகடனஞ்சயின்றானையமரரேத்தும்
ஏருமதிபொதியுஞ்சடையினானை
பெழுபிறப்புமெனையாளாவுடையான் ¶ றன்னை
ஊரும்படநாகமாட்டுவானை
யுயர்புகழ்சேர்தருமோமாம்புலியூர்மன்னும்
சீரும்வடதளியெஞ்செல்வன்றன்னைச்
சேராதேதிகைத்துநாள்செலுத்தினேனே. (க)

* அலையதுசெய்த என்றும் பாடம். † புலியூருடையசீர்வடதளி என்றும் பாடம்.
‡ இத்திருப்பதிகத்தில் ஏழாவதுசெய்யுள் மறைந்துபோயிற்று. ¶ மெனையாளவுடையான் என்றும் பாடம்.

Koviloor Digital Library

ஆதியானரியயனென்றறியவொண்ணு*
வமரர்தொழுங்கழலானையமலன்றன்னைச்
சோதிமதிகலைதொலையத்† தக்கனெச்சன்
சுடரிரவியயிலெயிறுதொலைவித்தானை
ஓதிமிகவந்தணர்களெரிமூன்றோம்பு
முயர்புகழார்தருமோமாம்புலியூர்மன்னும்
தீதிறிருவடதளியெஞ்செல்வன்றன்னைச்
சேராதேதிகைத்துநாள்செலுத்தினேனே. (உ)

வருமிக்கமதயானையுரித்தான்றன்னை
வானவர்கோன்றோளனைத்துமடிவித்தானைத்
தருமிக்ககுழலுமையாள்பாகன்றன்னைச்
சங்கரனெம்பெருமானைத்தரணிதன்மேல்
உருமிக்கமணிமாடநிலாவுவீதி
யுத்தமர்வாழ்தருமோமாம்புலியூர்மன்னும்
திருமிக்கவடதளியெஞ்செல்வன்றன்னைச்
சேராதேதிகைத்துநாள்செலுத்தினேனே. (ங)

அன்றினவர்புரமூன்றும்பொடியாய்வேவ
வழல்விழித்தகண்ணானையமரர்கோனை
வென்றிமிகுகாலனுயிர்பொன்றிவீழ
விளங்குதிருவடியெடுத்தவிகிர்தன்றன்னை
ஒன்றியசீரிருபிறப்பர்முத்தீயோம்பு
முயர்புகழ்நான்மறையோமாம்புலியூர்நாளும்
தென்றன்மலிவடதளியெஞ்செல்வன்றன்னைச்
சேராதேதிகைத்துநாள்செலுத்தினேனே. (ச)

பாங்குடையவெழிலங்கியருச்சனைமுன்விரும்பப்
பரிந்தவனுக்கருள்செய்தபரமன்றன்னைப்
பாங்கிலாநரகதனிற்றொண்டரானார்
பாராதவகைபண்ணவல்லான்றன்னை
ஓங்குமதில்புடைதழுவுமெழிலோமாம்புலியூ
ருயர்புகழந்தணரேத்தவுலகர்க்கென்றும்
தீங்கிறிருவடதளியெஞ்செல்வன்றன்னைச்
சேராதேதிகைத்துநாள்செலுத்தினேனே. (ரு)

அருந்தவத்தோர்தொழுதேத்துமம்மான்றன்னை
யாராதவின்னமுதையடியார்தம்மேல்
வருந்துயரந்தவிர்ப்பானையுமையாணங்கை
மணவாளநம்பியையென்மருந்துதன்னைப்
பொருந்துபுனறழுவுவயனிலவுதுங்கப்
பொழில்கெழுவுதருமோமாம்புலியூர்நாளும்
திருந்துதிருவடதளியெஞ்செல்வன்றன்னைச்
சேராதேதிகைத்துநாள்செலுத்தினேனே. (சா)

* னென்றறியொணுத என்றும் பாடம். † மதிகலைசிதையத் என்றும் பாடம்.

Koviloor Digital Library

மலையானைவருமலைபன்றுரிசெய்தானை *
மறையானைமறையாலுமறியவொண்ணாக்
கலையானைக்கலைபாருங்கையினானைக்
கடிவானையடியார்கடுயரமெல்லாம் †
உலையாதவந்தணர்கள்வாழுமோமாம்
புலியூரெம்முத்தமனைப்புரமூன்றெய்த
சிலையானைவடதளியெஞ்செல்வன்றன்னைச்
சேராதேதிகைத்துநாள்செலுத்தினேனே. (௭)

சேர்ந்தோடுமணிக்கங்கைசூடினானைச்
செழுமதியும்படவரவுமுடன்வைத்தானைச்
சார்ந்தோர்கட்கினியானைத்தன்னொப்பில்லாத்
தழலுருவைத்தலைமகனைத்தகைநால்வேதம்
ஓர்ந்தோதிப்பயில்வார்வாழ்தருமோமாம்புலியூ
ருள்ளானைக்கள்ளாதவடியார்நெஞ்சில்
சேர்ந்தானைவடதளியெஞ்செல்வன்றன்னைச்
சேராதேதிகைத்துநாள்செலுத்தினேனே. (௮)

வார்கெழுவுமுலையுமையாள்வெருவவன்று
மலையெடுத்தவாளரக்கன்றோளுந்தாளும்
ஏர்கெழுவுசிரம்பத்துமிறுத்துமீண்டே
யின்னிசைகேட்டிருந்தானையிமையோர்கோனைப்
பார்கெழுவுபுகழ்மறையோர்பயிலுமாடப்
பைம்பொழில்சேர்தருமோமாம்புலியூர்மன்னு ‡
சீர்கெழுவுவடதளியெஞ்செல்வன்றன்னைச்
சேராதேதிகைத்துநாள்செலுத்தினேனே. ¶ (௯)

திருச்சிற்றம்பலம்.

திருவோமாம்புலியூர்த்திருப்பதிகம் - ௨.

ஆ திருப்பதிகம் - ௧௪௯.

சுவாமி தேவி திருநாமங்கள் - துயரந்தீர்த்தநாதர், பூங்கொடிநாயகி.

* மலையோன்றுரிசெய்தானை என்றும் பாடம். † யடியவர்கடுயரமெல்லாம் என்றும் பாடம். ‡ மன்றும் என்றும் பாடம். ¶ இத்திருப்பதிகத்தில் பத்தாஞ்செய்யுள் மறைந்துபோயிற்று.

Koviloor Digital Library

௩௨. திருக்கானாட்டுமுள்ளூர்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - கொல்லிக்கௌவாணம்.

திருச்சிற்றம்பலம்.

வள்வாயமதிமிளிரும்வளர்சடையினானை
மறையவனைவாய்மொழியைவானவர்தங்கோனைப்
புள்வாயைக்கீண்டுலகம்விழுங்கியுமிழ்ந்தானைப்
பொன்னிறத்தின்முப்புரிநூலானன்முகத்தினானை
முள்வாயமடறமுவிமுடத்தாழையின்று
மொட்டலர்ந்துவிரைநாறுமுருகுவிரிபொழில்சூழ்
கள்வாயகருங்குவளைகண்வளருங்கழனிக்
கானாட்டுமுள்ளூரிற்கண்டுதொழுதேனே. (க)

ஒருமேகமுகிலாகியொத்துலகந்தானா
யூர்வனவுநிற்பனவுமூழிகளுந்தானாய்ப்
பொருமேவுகடலாகிப்பூதங்களைந்தாய்ப்
புனைந்தவனைப்புண்ணியனைப்புரிசடையினானைத்
திருமேவுசெல்வத்தார்தீமூன்றும்வளர்த்த
திருத்தக்கவந்தணர்களோதுநகரெங்கும்
கருமேதிசெந்தாமரைமேயுங்கழனிக்
கானாட்டுமுள்ளூரிற்கண்டுதொழுதேனே. (உ)

இரும்புயர்ந்தமூவிலையசூலத்தினானை
யிறையவனைமறையவனையெண்குணத்தினானைச்
சுரும்புயர்ந்தகொன்றையொடுதூமதியஞ்சூடுஞ்
சடையானைவிடையானைச்சோதியெனுஞ்சுடரை
அரும்புயர்ந்தவரவிந்தத்தணிமலர்களேறி
யன்னங்கள்விளையாடுமகன்றுறையினருகே
கரும்புயர்ந்துபெருஞ்செந்நெனெருங்கிவிளைகழனிக்
கானாட்டுமுள்ளூரிற்கண்டுதொழுதேனே. (௩)

பூளைபுனைகொன்றையொடுபுரிசடையினானைப்
புனலாகியனலாகிப்பூதங்களைந்தாய்
நாளையின்றுநெருநலாயாகாயமாகி
ஞாயிறாய்* மதியமாய்நின்றவெம்பரனைப்
பாளைபடுபைங்கமுகின்சூழலிளந்தெங்கின்
படுமதஞ்செய்கொழுந்தேறல்வாய்மடுத்துப்பருகிக்
காளைவண்டுபாடமயிலாடும்வளர்சோலைக்
கானாட்டுமுள்ளூரிற்கண்டுதொழுதேனே. (௪)

* யாகாசமாகி—நாயிறாய் என்றும் பாடம்.

Koviloor Digital Library

செருக்குவாய்ப்பைங்கண்வெள்ளரவரையினானைத்
தேவர்கள்சூளாமணியைச்செங்கண்விடையானை
முருக்குவாய்மலரொக்குந்திருமேனியானை
முன்னிலையாய்முழுதுலகமாயபெருமானை
இருக்குவாயந்தணர்களேழுபிறப்புளெங்கும்
வேள்வியிருந்திருநிதியம்* வழங்குநகரெங்கும்
கருக்குவாய்ப்பெண்ணையொடுதெங்கமலிசோலைக்
கானாட்டுமுள்ளூரிற்கண்டுதொழுதேனே. (ரு)

விடையாவக்கொடியேந்தும்விண்ணவர்தங்கோனை
வெள்ளத்துமாலவனும்வேதமுதலானும்
அடியிணையுந்திருமுடியுங்காணவரிதாய
சங்கரனைத்தத்துவனைத்தையன்மடவார்கள்
உடையவிழக்குழலவிழக்கோதைகுடைந்தாடக்
குங்குமங்களுந்திவருங்கொள்ளிடத்தின்கரைமேல்
கடைகள்விடுவார்குவளைகளைவாருங்கழனிக்
கானாட்டுமுள்ளூரிற்கண்டுதொழுதேனே. (சு)

அருமணியைமுத்தினையானஞ்சுமாடு
மமரர்கடம்பெருமானையருமறையின்பொருளைத்
திருமணியைத்தீங்கரும்பினூறலிருந்தேனைத்
தெரிவரியமாமணியைத்திகழ்தருசெம்பொன்னைக்
குருமணிகள்கொழித்திழிந்துசுழித்திழியுந்திரைவாய்க்
கோல்வளையார்குடைந்தாடுங்கொள்ளிடத்தின்கரைமேல்
கருமணிகள்போனீலமலர்கின்றகழனிக்
கானாட்டுமுள்ளூரிற்கண்டுதொழுதேனே. (எ)

இழைதழுவுவெண்ணூலுமேவுதிருமார்பி
னீசன்றனெண்டோள்கள்வீசியெரியாடக்
குழைதழுவுதிருக்காதிற்கோளரவமசைத்துக்
கோவணங்கொள்குழகனைக்குளிர்சடையினானைத்
தழைதழுவுதண்ணிறத்தசெங்நெலதனயலே
தடந்தாளமென்கரும்பின்முழ்கிடங்கினருகே
கழைதழுவித்தேன்றொடுக்குங்கழனிசூழ்பழனக்
கானாட்டுமுள்ளூரிற்கண்டுதொழுதேனே. (அ)

குனிவினியகதிர்மதியஞ்சூடுசடையானைக்
குண்டலஞ்சேர்காதவனைவண்டினங்கள்பாடப்
பனிபுதிருஞ்சடையவனைப்பால்வெண்ணீற்றானைப்
பலவுருவுந்தன்னுருவேயாயபெருமானைத்
துனிவினியதூயமொழித்தொண்டைவாய்நல்லார்
தூநிலங்கள்வளருஞ்சூழ்கிடங்கினருகே
கனிவினியகதலிவனந்தழுவுபொழிற்சோலைக்
கானாட்டுமுள்ளூரிற்கண்டுதொழுதேனே. (கூ)

* திருநிதியம் என்றும் பாடம்.

Koviloor Digital Library

தேவியம்பொன்மலைக்கோமான்றன்பாவையாகத்
தனதுருவமொருபாகஞ்சேர்த்துவித்தபெருமான்
மேவியவெந்நாகத்திலமுந்தாமைநமக்கு
மெய்ந்நெறியைத்* தான்காட்டும்வேதமுதலானைத்
தூவிவாய்நாரையொடுகுருகுபாய்ந்தார்ப்பத்
துறைக்கெண்டைமிளிர்ந்துகயறுள்ளிவிளையாடக்
காவிவாய்வண்டுபலபண்செய்யுங்கழனிக்
கானாட்டுமுள்ளூரிற்கண்டுதொழுதேனே. (க0)

திரையினார்கடல்சூழ்ந்ததென்னிலங்கைக்கோனைச்
செற்றவனைச்செஞ்சடைமேல்வெண்மதியினானைக்
கரையினார்புனறழுவு† கொள்ளிடத்தின்கரைமேற்
கானாட்டுமுள்ளூரிற்கண்டுகழறொழுது
உரையினார்மதயானைநாவலாரூர
னுரிமையாலுரைசெய்தவொண்டமிழ்கள்வல்லார்
வரையினார்வகைஞாலமாண்டவர்க்குந்தாம்போய்
வானவர்க்குந்தலைவராய்நிற்பவர்தாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருக்கானாட்டுமுள்ளூர்த்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - கசஎ.

சுவாமி தேவி திருநாமங்கள் - பதஞ்சலிநாதர், கானார்குழலி, கோல்வளைக்கையம்மை.

நந. திருநாரையூர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

உரையினில்வந்தபாவமுணர்நோய்களும்மசெயதீங்குகுற்றமுலகில்
வரையினிலாமைசெய்தவவைதீரும்வண்ணமிகவேத்திநித்தநினைமின்
வரைசிலையாகவன்றுமதின்மூன்றெரித்துவளர்கங்குனங்கை‡வெருவத்
திரையொலிநஞ்சமுண்டசிவன்மேயசெல்வத்திருநாரையூர்கைதொழவே. (க)

ஊனடைகின்றகுற்றமுதலாகியுற்றபிணிநோயொருங்குமுயரும்¶
வானடைகின்றவெள்ளைமதிசூடுசென்னிவிதியானவேதவிகிர்தன்
கானிடையாடிபூதப்படையானியங்குவிடையானிலங்குமுடிமேல்
தேனடைவண்டுபாடுசடையன்னனன்னு திருநாரையூர்கைதொழவே. (உ)

* மெய்ஞ்ஞெறியைத் என்றும் பாடம். † நுரையினார்கறைதழுவு என்றும், நுரையினார்கரைதழுவு என்றும் பாடம். ‡ கங்குணங்கை என்றும் பாடம். ¶ நோய்வருந்துமுயரும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

ஊரிடைநின்றுவாழுமுயிர்செற்றகாலன்றுயருற்றதீங்குவிரவிப்
பாரிடைமெள்ளவந்துபழியுற்றவார்த்தையொழிவுற்றவண்ணமகலும்*
போரிடையன்றுமூன்றுமதிலெய்தஞான்றுபுகழ்வானுளோர்கள்புணரும்
தேரிடைநின்றவெந்தைபெருமானிருந்ததிருநாரையூர்கைதொழவே. (௩)

தீயுறவாயவாக்கைபதுபற்றிவாழும்வினைசெற்றவுற்றவுலகின்
தாயுறுதன்மையாயதலைவன்றனாமநிலையாகநின்றுமருவும்
பேயுறவாயகானிடைமாடிகோலவிடமுண்டகண்டன்முடிமேல்
தேய்பிறைவைத்துகந்தசிவன்மேயசெல்வத்திருநாரையூர்கைதொழவே. (௪)

வசையபராதமாயவுவரோதநீங்குர்† தவமாயதன்மைவரும்வான்
மிசையவராதியாயதிருமார்பிலங்குவிரிநூலர்விண்ணுநிலனும்
இசையவராகிசொல்ல‡ விமையோர்களேத்தியமையாதகாதலொடுசேர்
திசையவர்போற்றநின்றசிவன்மேயசெல்வத்திருநாரையூர்கைதொழவே. (௫)

உறைவளருனிலாயவுயிர்நிற்கும்வண்ணமுணர்வாக்குமுண்மை¶ யுலகில்
குறைவுளவாகிநின்றகுறைதீர்க்குநெஞ்சினிறைவாற்றுநேசம்வளரும்
மறைவளர்நாவன்மாவினுரிபோர்த்தமெய்யனரவார்த்தவண்ணல்கழலே
திறைவளர்தேவர்தொண்டினருள்§ பேணநின்றதிருநாரையூர்கைதொழவே.()

தனம்வருநன்மையாகுந்தகுதிக்குழந்தவருதிக்குழன்றவுடலின்
இனம்வளரைவர்செய்யும்வினையங்கள்செற்றுநினைவொன்றுசிந்தைபெருகும்
முனமொருகாலமூன்றுபுரம்வெந்துமங்கச்சரமுன்றெரிந்தவவுணர்
சினமொருகாலழித்தசிவன்மேயசெல்வத்திருநாரையூர்கைதொழவே. (௭)

உருவரைநின்றநாளிலுயிர்கொள்ளுங்கூற்றநனியஞ்சுமாதனுறநீர்
மருமலர்தூவியென்றும்வழிபாடுசெய்ம்மினழிபாடிலாத 0 கடலின்
அருவரைசூழிலங்கையரையன்றன்வீரமழியத்தடக்கைமுடிகள்
திருவிரல்வைத்துகந்தசிவன்மேயசெல்வத்திருநாரையூர்கைதொழவே. (௮)

வேறுயர்வாழ்வுதன்மைவினைதுக்கமிக்கபகைதீர்க்குமேயவுடலில்
தேறியசிந்தைவாய்மைதெளிவிக்கநின்றகரவைக்கரந்துதிகழும்
சேறுயர்பூவின்மேயபெருமானுமற்றைத்திருமாலுநேடவெரியாய்ச்**
சீறியசெம்மையாகுஞ்சிவன்மேயசெல்வத்திருநாரையூர்கைதொழவே. (௯)

மிடைபடுதுன்பமின்பமுளதாக்குமுள்ளம்வெளியாக்குமுன்னிபுணரும்
படையொருகையிலேந்திப்பலிகொள்ளும்வண்ணமொலிபாடியாடிபெருமை
உடையினைவிட்டுளோருமுடல்போர்த்துளோருமுரைமாயும்வண்ணமழியச்
செய்படைவைத்துகந்தசிவன்மேயசெல்வத்திருநாரையூர்கைதொழவே. (௧௦)

* யொழியுற்றவண்ணம் என்றும் பாடம். † யாயவுவரோதநீங்குக் என்றும் பாடம். ‡ ராகிசொல்லி என்றும் பாடம் ¶ முணர்வார்க்குமுண்மை என்றும் பாடம். § தேவர்தொண்டினருள் என்றும் பாடம். 0 செய்யுமிழிபாடிலாத என்றும் பாடம். ** நேடவரியாய்ச் என்றும் பாடம்.

Koviloor Digital Library

எரியொருவண்ணமாயவுருவானையெந்தைபெருமானையுள்கிநினையார்
திரிபுரமன்றுசெற்றசிவன்மேயசெல்வத்திருநாரையூர்கைதொழுவான்
பொருபுனல்சூழ்ந்தகாழிமறைஞானபந்தனுரைமாலைபத்துமொழிவார்
திருவளர்செம்மையாகியருள்பேறுமிக்கதுளதென்பர்செம்மையினரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பண் - பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

காம்பினைவென்றமென்றோளிபாகங்கலந்தானலந்தாங்கு
தேம்புனல்சூழ்திகழ்மாமடுவிற்றிருநாரையூர்மேய
பூம்புனல்சேர்புரிபுன்சடையான்புலியின்னுரிதோன்மேல்
பாம்பினைவீக்கியபண்டரங்கன்பாதம்பணிவோமே. (க)

தீவினையாயினதீர்க்கநின்றான்றிருநாரையூர்மேயான்
பூவினைமேவுசடைமுடியான்புடைசூழப்பலபூதம்
ஆவினிலைந்துங்கொண்டாட்டுகந்தானடங்கார்மதின்மூன்றும்
ஏவினையெய்தழித்தான்கழலேபரவாவெழுவோமே. (உ)

மாயவன்சேயவன்வெள்ளியவன்விடஞ்சேருமைமிடற்றன்
ஆயவனாகியொரந்தரமும்மவனென்றுவரையாகம்
தீயவனீரவன்பூமியவன்றிருநாரையூர்தன்னில்
மேயவனைத்தொழுவாரவர்மேல்வினையாயினவீடுமே. (ங)

துஞ்சிருளாடுவர்தூமுறுவறுளங்குமுடம்பினராய்
அஞ்சுடராரெரியாடுவராரழலார்விழிக்கண்
நஞ்சுமிழ்நாகமரைக்கசைப்பர்நலனோங்குநாரையூர்
எஞ்சிவனார்க்கடிமைப்படுவார்க்கினியில்லையேதமே. (ச)

பொங்கிளங்கொன்றையினார்கடலில்விடமுண்டிமையோர்கள்
தங்களையாரிடர்தீரநின்றதலைவர்சடைமேலோர்
திங்களைவைத்தனலாடலினார்திருநாரையூர்மேய
வெங்கனல்வெண்ணீறணியவல்லாரவரேவிழுமியரே. (ரு)

பாருறுவாய்மையினார்பரவும்பரமேட்டிபைங்கொன்றைத்
தாருறுமார்புடையான்மலையின்றலைவன்மலைமகளைச்
சீருறுமாமறுகிற்சிறைவண்டறையுந்திருநாரை
யூருறையெம்மிறைவர்க்கிவையொன்றொடொன்றொவ்வாவே. (சா)

கள்ளியிடுதலையேந்துகையர்கரிகாடர்கண்ணுதலர்
வெள்ளியகோவணவாடைதன்மேன்மிளிராடரவார்த்து
நள்ளிருணட்டமதாடுவர்நன்னலனோங்குநாரையூர்
உள்ளியபோழ்திலெம்மேல்வருவல்வினையாயினவோடுமே. (எ)

Koviloor Digital Library

நாமமெனப்பலவும்முடையானலனோங்குநாரையூர்
தாமொம்மெனப்பறையாழ்குழறாளார்கழல்பயில
ஈமவிளக்கெரிசூழ்சுடலையியம்பும்மிடுகாட்டில்
சாமமுரைக்கநின்றாடுவானுந்தழலாயசங்கரனே. (அ)

ஊனுடைவெண்டலைகொண்டுழல்வானொளிர்புன்சடைமேலோர்
வானிடைவெண்மதிவைத்துகந்தான்வரிவண்டியாழ்முரலத்
தேனுடைமாமலரன்னம்வைகுந்திருநாரையூர்மேய
ஆனிடையைந்துகந்தானடியேபரவாவடைவோமே. (கூ)

தூசுபுனைதுவராடைமேவுந்தொழிலாருடம்பினிலுள்
மாசுபுனைந்துடைநீத்தவர்கண்மயனீர்மைகேளாதே
தேசுடையீர்கடெளிந்தடைமின்றிருநாரையூர்தன்னில்
பூசுபொடித்தலைவரடியாரடியேபொருத்தமே. (க0)

தண்மதிதாழ்பொழில்சூழ்புகலித்தமிழ்ஞானசம்பந்தன்
ஒண்மதிசேர்சடையானுறையுந்திருநாரையூர்தன்மேல்
பண்மதியாற்சொன்னபாடல்பத்தும்பயின்றார்வினைபோகி
மண்மதியாதுபோய்வான்புகுவர்வானோரெதிர்கொளவே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பண் - பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

கடலிடைவெங்கடுநஞ்சமுண்டகடவுள்விடையேறி
உடலிடையிற்பொடிப்பூசவல்லானுமையோடொருபாகன்
அடலிடையிற்சிலைதாங்கியெய்தவம்மானடியார்மேல்
நடலைவினைத்தொகைதீர்த்துகந்தானிடநாரையூர்தானே. (க)

விண்ணின்மின்னேர்மதிதுத்திநாகம்விரிபூமலர்க்கொன்றை
பெண்ணின்முன்னேமிகவைத்துகந்தபெருமானெரியாடி
நண்ணியதன்னடியார்களோடுந்திருநாரையூரானென்
றெண்ணுமினும்வினைபோகும்வண்ணமிறைஞ்சுந்நிறைவாமே. (உ)

தோடொருகாதொருகாதுசேர்ந்தகுழைபாணிழைதோன்றும்
பீடொருகால்பிரியாதுநின்றபிறையான்மறையோதி
நாடொருகாலமுஞ்சேரநின்றதிருநாரையூரானைப்
பாடுமினீர்பழிபோகும்வண்ணம்பயிலுமுயர்வாமே. (ங)

வெண்ணிலவஞ்சடைசேரவைத்துவிளங்குந்தலையேந்திப்
பெண்ணிலமர்ந்தொருகூறதாயபெருமானருளார்ந்த
அண்ணன்மன்னியுறைகோயிலாகுமணிநாரையூர்தன்னை
நண்ணலமர்ந்துறைவாக்குமின்* கணடலைகரிசறுமே. (ச)

* நண்ணவமர்ந்துறை வாக்குமின் என்றும் பாடம்.

Koviloor Digital Library

வானமர்திவளிநீர்நிலனாய்வழங்கும்பழியாகும்
ஊனமரின்னுயிர்தீங்குகுற்றமுறைவாற்பிறிதின்றி
நானமரும்பொருளாகிநின்றான்றிருநாரையூரெந்தை
கோனவனைக்குறுகக்குறுகாகொடுவல்வினைதானே. (ரு)

கொக்கிறகுங்குளிர்சென்னிமத்தங்குலாயமலர்சூடி
அக்கரவோடரையார்த்துகந்தவழகன்குழகாக
நக்கமருந்திருமேனியாளன்றிருநாரையூர்மேவிப்
புக்கமரும்மனத்தோர்கடம்மைப்புணரும்புகழானே. (சு)

ஊழியுமின்பமுங்காலமாகியுயருந்தவமாகி
ஏழிசையின்பொருள்வாழும்வாழ்க்கைவினையின்புணர்ப்பாகி
நாழிகையும்பலஞாயிறாகிநளிர்நாரையூர்தன்னில்
வாழியர்மேதகுமைந்தர்செய்யும்வகையின்விளைவாமே. (எ)

கூசமிலாதரக்கன்வரையைக்குலுங்கவெடுத்தான்றோள்
நாசமதாகியிறவடர்த்தவிரலான்கரவாதார்
பேசவியப்பொடுபேணநின்றபெரியோனிடம்போலும்
தேசமுறப்புகழ்செம்மைபெற்றதிருநாரையூர்தானே. (அ)

பூமகனும்மவனைப்பயந்தபுயலார்நிறத்தானும்
ஆமளவுந்திரிந்தேத்திக்காண்ட*லறிதற்கரியானூர்
பாமருவுங்குணத்தோர்களீண்டிப்பலவும்பணிசெய்யும்
தேமருவுந்திகழ்சோலைசூழ்ந்ததிருநாரையூர்தானே. (கூ)

வெற்றரையாகியவேடங்காட்டித்திரிவார்துவராடை
உற்றரையோர்களுரைக்குஞ்சொல்லையுணராதெழுமின்கள்
குற்றமிலாததோர்கொள்கையெம்மான்குழகன்றொழிலாரப்
பெற்றரவாட்டிவரும்பெருமான்றிருநாரையூர்சேர்வே. (க0)

பாடியலுந்திரைசூழ்புகலித்திருஞானசம்பந்தன்
சேடியலும்புகழோங்குசெம்மைத்திருநாரையூரான்மேல்
பாடியதண்டமிழ்மாலைபத்தும்பரவித்திரிந்தாக †
வாடியசிந்தையினார்க்குநீங்குமவலக்கடலானே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

வீறுதானுடைவெற்பன்மடந்தையோர்
கூறனாகிலுங்கூன்பிறைசூடிலும்
நாறுபூம்பொழினாரையூர்நம்பனுக்
காறுசூடியுமம்மவழகிதே. (க)

* ஏத்தக்காண்ட என்றும் பாடம். † பரவித்திரிந்தார்கள் என்றும் பாடம்.

புள்ளிகொண்டபுலியுரியாடையும்
வெள்ளிகொண்டவெண்பூதிமெய்யாடலும்
நள்ளிதெண்டிரைநாரையூரானஞ்சை
அள்ளியுண்டலுமம்மவழகிதே (௨)

வேடுதங்கியவேடமும்வெண்டலை
ஓடுதங்கியவுண்பலிகொள்கையும்
நாடுதங்கியநாரையூரானடம்
ஆடுபைங்கழலம்மவழகிதே. (௩)

கொக்கின்றாவலுங் * கூவிளங்கண்ணியும்
மிக்கவெண்டலைமாலைவிரிசடை
நக்கனாகிலுநாரையூர்நம்பனுக்
கக்கினாரமுமம்மவழகிதே. (௪)

வடிகொள்வெண்மழுமானமர்கைகளும்
பொடிகொள்செம்பவளம்புரைமேனியும்
நடிகொணன்மயில்சேர்திருநாரையூர்
அடிகடம்வடிவம்மவழகிதே. (௫)

சூலமல்கியகையுஞ்சுடரொடு
பாலுநெய்தயிராடியபான்மையும்
ஞாலமல்கியநாரையூர்நம்பனுக்
காலநீழலுமம்மவழகிதே. (௬)

பண்ணினன்மறைபாடலோடாடலும்
எண்ணிலார்புரமூன் † றெரிசெய்ததும்
நண்ணினார்துயர்தீர்த்தலுநாரையூர்
அண்ணலார்செய்கையம்மவழகிதே. (௭)

என்புபூண்டெருதேறியிளம்பிறை
மின்புரிந்தசடைமேல்விளங்கவே
நன்பகற்பலிதேரினுநாரையூர்
அன்பனுக்கதுவம்மவழகிதே. (௮)

முரலுங்கின்னரமொந்தைமுழங்கவே
இரவினின்றெரியாடலுநீடுலாம் ‡
நரலும்வாரிநன்னாரையூர்நம்பனுக்
கரவும்பூணுதலம்மவழகிதே. (௯)

கடுக்கைபஞ்சடையன்கயிலைம்மலை
எடுத்தவாளரக்கன்றலையிரஞ்சும்
நடுக்கம்வந்திறநாரையூரான்விரல்
அடுத்ததன்மையுமம்மவழகிதே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

* நாகிலுங் என்றும் பாடம். † எண்ணினார்புரமூன் என்றும் பாடம். ‡ நீடுவான் என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

சொல்லானைப்பொருளானைச்சுருதியானைச்
சுடராழிநெடுமாலுக்கருள்செய்தானை
அல்லானைப்பகலானையரியான்றன்னை
யடியார்கட்கெளியானையரண்மூன்றெய்த
வில்லானைச்சரம்விசயற்கருள்செய்தானை
வெங்கதிரோன்மாமுனிவர்விரும்பியேத்தும்
நல்லானைத்தீயாடுநம்பன்றன்னை
நாரையூர்நன்னகரிற்கண்டேனானே. (க)

பஞ்சுண்டமெல்லடியாள்பங்கன்றன்னைப்
பாரொடுநீர்சுடர்படர்காற்றாயினானை
மஞ்சுண்டவானாகிவானந்தன்னின்
மதியாகிமதிசடைமேல்வைத்தான்றன்னை
நெஞ்சுண்டென்னினைவாகி* நின்றான்றன்னை
நெடுங்கடலைக்கடைந்தவர்போய்நீங்கவோங்கும்
நஞ்சுண்டுதேவர்களுக்கமுதீந்தானை
நாரையூர்நன்னகரிற்கண்டேனானே. (உ)

மூவாதியாவர்க்குமூத்தான்றன்னை
முடியாதேமுதனடுவுமுடிவானானைத்
தேவாதிதேவர்கட்குந்தேவன்றன்னைத்
திசைமுகன்றன்சிரமொன்றுசிதைத்தான்றன்னை
ஆவாதவடலேறொன்றுடையான்றன்னை
யடியேற்குநினைதோறுமண்ணிக்கின்ற
நாவானைநாவினினல்லுரையானானை
நாரையூர்நன்னகரிற்கண்டேனானே. (௩)

செம்பொன்னைநன்பவளந்திகழுமுத்தைச்
செழுமணியைத்தொழுமவர்தஞ்சித்தத்தானை
வம்பவிழுமலர்க்கணைவேளுலக்கநோக்கி
மகிழ்ந்தானைமதிற்கச்சிமன்னுகின்ற
கம்பனையெங்கயிலாயமலையான்றன்னைக்
கழுகினொடுகாகுத்தன்கருதியேத்தும்
நம்பனையெம்பெருமானைநாதன்றன்னை
நாரையூர்நன்னகரிற்கண்டேனானே. (௪)

* நெஞ்சுண்டநினைவாகி என்றும் பாடம்.

Koviloor Digital Library

புரையுடையகரியுரிவைப்போர்வையானைப்
புரிசடைமேற்புனலடைத்தபுனிதன்றன்னை
விரையுடையவெள்ளெருக்கங்கண்ணியானை
வெண்ணீறுசெம்மேனிவிரவினானை
வரையுடையமகடவஞ்செய்மணாளன்றன்னை
வருபிணிநோய்பிரிவிக்குமருந்துதன்னை
நரைவிடைநற்கொடியுடையநாதன்றன்னை
நாரையூர்நன்னகரிற்கண்டேனானே. (ரு)

பிறவாதுமிறவாதும்பெருகினானைப்
பேய்பாடநடமாடும்பித்தன்றன்னை
மறவாதமனத்தகத்துமன்னினானை
மலையானைக்கடலானைவனத்துளானை
உறவானைப்பகையானையுயிரானானை
யுள்ளானைப்புறத்தானையோசையானை
நறவாரும்பூங்கொன்றைசூடினானை
நாரையூர்நன்னகரிற்கண்டேனானே. (சு)

தக்கனதுவேள்விகெடச்சாடினானைத்
தலைகலனாப்பலியேற்றதலைவன்றன்னைக்
கொக்கரைசச்சரிவீணைப்பாணியானைக்
கோணாகம்பூணாகக்கொண்டான்றன்னை
அக்கினொடுமென்பணிந்தவழகன்றன்னை
யறுமுகனோடானைமுகற்கப்பன்றன்னை
நக்கனைவக்கரையானைநள்ளாற்றானை
நாரையூர்நன்னகரிற்கண்டேனானே. (எ)

அரிபிரமர்தொழுதேத்துமத்தன்றன்னை
யந்தகனுக்கந்தகனையளக்கலாகா
எரிபுரியுமிலிங்கபுராணத்துளானை
யெண்ணாகிப்பண்ணாரெழுத்தானானைத்
திரிபுரஞ்செற்றொருமூவர்க்கருள்செய்தானைச்
சிலந்திக்குமரசளித்தசெல்வன்றன்னை
நரிவிரவுகாட்டகத்திலாடலானை
நாரையூர்நன்னகரிற்கண்டேனானே. (அ)

ஆலாலமிடற்றணியாவடக்கினானை
யாலதன்கீழறநால்வர்க்கருள்செய்தானைப்
பாலாகித்தேனாகிப்பழமுமாகிப்
பைங்கரும்பாயங்கருந்துஞ்சுவையானானை
மேலாயவேதியர்க்குவேள்வியாகி
வேள்வியினின்பயனாய்விமலன்றன்னை
நாலாயமறைக்கிறைவனாயினானை
நாரையூர்நன்னகரிற்கண்டேனானே. (கூ)

Koviloor Digital Library

மீளாதவாளென்னையுடையான்றன்னை
வெளிசெய்தவழிபாடுமேவினானை
மாளாமைமறையவனுக்குயிரும்வைத்து
வன்கூற்றினுயிர்மாளவுதைத்தான்றன்னைத்
தோளாண்மைகருதிவரையெடுத்ததூர்த்தன்
றோள்வலியுந்தாள்வலியுந்தொலைவித்தாங்கே
நாளோடுவாள்கொடுத்தநம்பன்றன்னை
நாரையூர்நன்னகரிற்கண்டேனானே. (கo)

திருச்சிற்றம்பலம்.

திருநாரையூர்த்திருப்பதிகம் - ௩.
ஆ திருப்பதிகம் - கடுஉ.

சுவாமி தேவி திருநாமங்கள் - சௌந்தரேசுரர், திரிபுரசுந்தரி.

௩௪. திருக்கடம்பூர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

வானமர்திங்களுநீருமருவியவார்சடையானைத்
தேனமர்கொன்றையினானைத்தேவர்தொழப்படுவானைக்
கானமரும்பிணைபுல்கிக்கலைபயிலுங்கடம்பூரில்
தானமர்கொள்கையினானைத்தாடொழவீடெளிதாமே. (க)

அரவினொடாமையும்பூண்டுவந்துகில்வேங்கையதளும்
விரவுந்திருமுடிதன்மேல்வெண்டிங்கள்சூடிவிரும்பிப்
பரவுந்தனிக்கடம்பூரிற்பைங்கண்வெள்ளேற்றண்ணல்பாதம்
இரவும்பகலும்பணியவின்பநமக்கதுவாமே. (உ)

இளிபடுமின்சொலினார் * களிருங்குழன்மேலிசைந்தேறத்
தெளிபடுகொள்கைகலந்ததீத்தொழிலார்கடம்பூரில்
ஒளிதருவெண்பிறைசூடியொண்ணுதலோடுடனாகிப்
புலியதளாடைபுனைந்தான்பொற்கழல்போற்றுதுநாமே. (ங)

பறையொடுசங்கமியம்பப்பல்கொடிசேர்நெடுமாடம்
கறையுடைவேல்வரிக்கண்ணார்கலையொலிசேர்கடம்பூரில்
மறையொலிகூடிய † பாடன்மருவிநின்றாடன்மகிழும்
பிறையுடைவார்சடையானைப்பேணவல்லார்பெரியோரே. (ச)

* இளிபடுமென்சொலினார் என்றும் பாடம். † மறையொடு கூடிய என்றும் பாடம்.

Koviloor Digital Library

தீவிரியக்கழலார்ப்பச்சேயெரிகொண்டிடுகாட்டில்
நாவிரிகூந்தனற்பேய்கணகைசெய்யநட்டநவின்றோன்
காவிரிகொன்றைகலந்தகண்ணுதலான்கடம்பூரில்
பாவிரிபாடல்பயில்வார்பழியொடுபாவமிலாரே. (௫)

தண்புனனீள்வயறோறுந்தாமரைமேலனம்வைகக்
கண்புணர்காவில்வண்டேறக்கள்ளவிழுங்கடம்பூரில்
பெண்புனைகூறுடையானைப்பின்னுசடைப்பெருமானைப்
பண்புனைபாடல்பயில்வார்பாவமிலாதவர்தாமே. (௬)

பலிகெழுசெம்மலர்சாரப்பாடலொடாடலறாத
கலிகெழுவீதிகலந்தகார்வயல்சூழ்கடம்பூரில்
ஒலிதிகழ்கங்கைகரந்தானொண்ணுதலாளுமைகேள்வன்
புலியதளாடையினான்றன்புனைகழல்போற்றல்பொருளே. (௭)

பூம்படுகிற்கயல்பாயப்புள்ளிரியப்புறங்காட்டில்
காம்படுதோளியர்நாளுங்கண்கவருங்கடம்பூரில்
மேம்படுதேவியோர்பாகமேவியெம்மானெனவாழ்த்தித்
தேம்படுமாமலர்தூவித்திசைதொழத்தீயகெடுமே. (௮)

திருமருமார்பிலவனுந்திகழ்தருமாமலரோனும்
இருவருமாயறிவொண்ணாவெரியுருவாகியவீசன்
கருவரைகாலிலடர்த்தகண்ணுதலான்கடம்பூரில்
மருவியபாடல்பயில்வார்வானுலகம்பெறுவாரே. (௯)

ஆடைதவிர்த்தறங்காட்டுமவர்களுமந்துவராடைச்
சோடைகணன்னெறிசொல்லார்சொல்லினுஞ்சொல்லலகண்டீர்
வேடம்பலபலகாட்டும்விகிர்தனம்வேதமுதல்வன்
காடதனினடமாடுங்கண்ணுதலான்கடம்பூரே. (௧௦)

விடைநவிலுங்கொடியானைவெண்கொடிசேர்நெடுமாடம்
கடைநவிலுங்கடம்பூரிற்காதலனைக்கடற்காழி
நடைநவின்ஞானசம்பந்தனன்மையாலேத்தியபத்தும்
படைநவில்பாடல்பயில்வார்பழியொடுபாவமிலாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

தளருங்கோளரவத்தொடுதண்மதி
வளருங்கோலவளர்சடையார்க்கிடம்
கிளரும்பேரிசைக்கின்னரம்பாட்டறாக்
களருங்கார்க்கடம்பூர்க்கரக்கோயிலே. (௧)

Koviloor Digital Library

வெலவலான்புலனைந்தொடுவேதமும்
சொலவலான்சுழலுந்தடுமாற்றமும்
அலவலான்மனையார்ந்தமென்றோளியைக்
கலவலான்கடம்பூர்க்கரக்கோயிலே. (உ)

பொய்தொழாதுபுலியுரியோன்பணி
செய்தெழாவெழுவார்பணிசெய்தெழா
வைதெழாதெழு* வாரவரெள்கநீர்
கைதொழாவெழுமின்கரக்கோயிலே. (௩)

துண்ணெனுமனத்தாற்றொழுநெஞ்சமே
பண்ணினான்முனம்பாடலதுசெய்தே
எண்ணிலாரெயின்மூன்றுமெரித்தமுக்
கண்ணினான்கடம்பூர்க்கரக்கோயிலே. (௪)

சுனையுணீலமலரனகண்டத்தன்
புனையும்பொன்னிறக்கொன்றைபுரிசடைக்
கனையும்பைங்கழலான்கரக்கோயிலை
நினையுமுள்ளத்தவர்வினைநீங்குமே. (௫)

குணங்கள்சொல்லியுங்குற்றங்கள்பேசியும்
வணங்கிவாழ்த்துவரன்புடையாரெலாம்
வணங்கிவான்மலர்கொண்டடிவைகலும்
கணங்கள்போற்றிசைக்குங்கரக்கோயிலே. (௬)

பண்ணினார்மறைபல்பலபூசனை
மண்ணினார்செய்வதன்றியும்வைகலும்
விண்ணினார்கள்வியக்கப்படுவன †
கண்ணினார்கடம்பூர்க்கரக்கோயிலே. (௭)

அங்கையாழலேந்திநின்றாடலன்
மங்கைபாடமகிழ்ந்துடன்வார்சடைக்
கங்கையானுறையுங்கரக்கோயிலைத்
தங்கையாற்றொழுவார்வினைசாயுமே. (௮)

நங்கடம்பனைப்பெற்றவள்பங்கினன்
தென்கடம்பைத்திருக்கரக்கோயிலான்
தன்கடன்னடியேனையுந்தாங்குதல்
என்கடன்பணிசெய்துகிடப்பதே. (௯)

பணங்கொள்பாற்கடற்பாம்பணையானொடு
மணங்கமழ்மலர்த்தாமரையானவன்
பிணங்கும்பேரழலெம்பெருமாற்கிடம்
கணங்கள்போற்றிசைக்குங்கரக்கோயிலே. (௧0)

* வைதொழாதெழு என்றும் பாடம். † வியக்கப்படுமேவன் என்றும் பாடம்.

Koviloor Digital Library

வரைக்கணாலஞ்சுமேதோளுடையான்றலை
அரைக்கவூன்றியருள்செய்தவீசனூர்
திரைக்குந்தண்புனல்சூழ்கரக்கோயிலை
உரைக்குமுள்ளத்தவர்வினையோயுமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

ஒருவராயிருமூவருமாயவன்
குருவதாயகுழகனுறைவிடம்
பருவரால்குதிகொள்ளும்பழனஞ்சூழ்
கருவதாங்கடம்பூர்க்கரக்கோயிலே. (க)

வன்னிமத்தம்வளரிளந்திங்களோர்
கன்னியாளைக்கதிர்முடிவைத்தவன்
பொன்னின்மல்குபுணர்முலையாளொடும்
மன்னினான்கடம்பூர்க்கரக்கோயிலே. (உ)

இல்லக்கோலமுமிந்தவிளமையும்
அல்லற்கோலமறுத்துயவல்லிரே*
ஒல்லைச்சென்றடையுங்கடம்பூர்நகர்ச்
செல்வக்கோயிற்றிருக்கரக்கோயிலே. (ங)

வேறுசிந்தையிலாதவர்தீவினை
கூறுசெய்தகுழகனுறைவிடம்
ஏறுசெல்வத்திமையவர்தாந்தொழும்
ஆறுசேர்கடம்பூர்க்கரக்கோயிலே. (ச)

திங்கடங்கியசெஞ்சடைமேலுமோர்
மங்கைதங்குமணாளனிருப்பிடம்
பொங்குசேர்மணற்புன்னையுஞாழலும்†
தெங்குசேர்கடம்பூர்க்கரக்கோயிலே. (ரு)

மல்லைஞாலத்துவாழுமுயிர்க்கெலாம்
எல்லையானபிரானாரிருப்பிடம்
கொல்லைமுல்லைகொழுந்தகைமல்லிகை
நல்லசேர்கடம்பூர்க்கரக்கோயிலே. (சு)

தளரும்வாளரவத்தொடுதண்மதி
வளரும்பொற்சடையார்க்கிடமாவது
கிளரும்பேரொலிகின்னரம்பாட்டறாக்
களரிபார்கடம்பூர்க்கரக்கோயிலே. (எ)

* மல்லற்கோலம் மறுத்துயவல்லிரே எனப்பிரித்தல் இத்துணைச் சிறந்தபொருள் பயவாது. † புன்னையுஞாழலும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

உற்றாயுறவாகி* யுயிர்க்கெலாம்
பெற்றாயபிரானுறைவிடம்
முற்றார்மும்மதிலெய்தமுதல்வனார்
கற்றார்சேர்கடம்பூர்க்கரக்கோயிலே. (அ)

வெள்ளைநீறணிமேனியவர்க்கெலாம்
உள்ளமாயபிரானுறைவிடம்
பிள்ளைவெண்பிறைசூடியசென்னியான் †
கள்வன்சேர்கடம்பூர்க்கரக்கோயிலே. (க0)

பாப்புநீரிலங்கைக்கிறைவன்னவன்
உரத்தினாலடுக்கல்லெடுக்கல்லுற
இரக்கமின்றியிறைவிரலாற்றலை
அரக்கினான்கடம்பூர்க்கரக்கோயிலே. ‡ (கக)

திருச்சிற்றம்பலம்.

திருக்கடம்பூர்த்திருப்பதிகம் - ௩.

ஆ திருப்பதிகம் - கடுரு.

சுவாமி தேவி திருநாமங்கள் - அமிர்தகடேசர், சோதிமின்னம்மை.

௩ரு. திருப்பந்தணைநல்லூர். ¶

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

இடறினார்கூற்றைப்பொடிசெய்தார்மதிலையிவைசொல்லியுலகெழுந்தேத்தக்
கடறினாரவர்காற்றுளாராவர்காதலித்துறைதருகோயில்
கொடிறனார் § யாதுங்குறைவிலார்தாம்போய்க்கோவணங்கொண்டுகூத்தாடும்
படிறனார் ் போலும்பந்தணைநல்லூர்நின்றவெம்பசுபதியாரே. (க)

கழியுளாரெனவுங்கடலுளாரெனவுங்காட்டுளார்நாட்டுளாரெனவும்
வழியுளாரெனவுமலையுளாரெனவுமண்ணுளார்விண்ணுளாரெனவும்
சுழியுளாரெனவுஞ்சுவடுதாமறியார்தொண்டர்வாய்வந்தனசொல்லும்
பழியுளார்போலும்பந்தணைநல்லூர்நின்றவெம்பசுபதியாரே. (உ)

* உற்றாவுறவாகி என்றும் பாடம். † சூடியொர்சென்னியான் என்றும் பாடம். ‡ இத்திருப்பதிகத்தில் ஒன்பதாவதுசெய்யுள் மறைந்துபோயிற்று. ¶ திருப்பந்தணநல்லூர் என்றும் பிரதிபேதமுளதாயினும் காரணத்தைநோக்கும்பொழுது இதுவேசிறந்தது. § கொடிறினார் என்றும் பாடம். ் படிறினார் என்றும் பாடம்.

Koviloor Digital Library

காட்டினாரெனவுநாட்டினாரெனவுங்கடுந்தொழிற்காலனைக்காலால்
வீட்டினாரெனவுஞ்சாந்தம்வெண்ணீறுபூசியோர்வெண்மதிசடைமேல்
சூட்டினாரெனவுஞ்சுவடுதாமறியார்சொல்லுளசொல்லுநால்வேதப்
பாட்டினார்போலும்பந்தணைநல்லூர்நின்றவெம்பசுபதியாரே. (ங)

முருகினார்பொழில்சூழுலகினாரேத்தமொய்த்தபல்கணங்களின்றுயர்கண்
டுருகினாராகியுறுதிபோந்துள்ளமொண்மையாலொளிதிகழ்மேனி
கருகினாரெல்லாங்கைதொழுதேத்தக்கடலுணஞ்சமுதமாவாங்கிப்
பருகினார்போலும்பந்தணைநல்லூர்நின்றவெம்பசுபதியாரே. (ச)

பொன்னினார்கொன்றையிருவடங்கிடந்துபொறிகிளர்பூணநூல்புரள
மின்னினாருருவின்மிளிர்வதோரரவமேவுவெண்ணீறுமெய்பூசித்
துன்னினார்நால்வர்க்கறமமர்ந்தருளித்தொன்மையார்தோற்றமுங்கேடும்
பன்னினார்போலும்பந்தணைநல்லூர்நின்றவெம்பசுபதியாரே. (ரு)

ஒன்பொனாரனையவண்ணல்வாழ்கெனவுமுமையவள்கணவன்வாழ்கெனவும்
அன்பினார்பிரியாரல்லுநன்பகலுமடியவரடியிணைதொழவே
நண்பினாரெல்லாநல்லரென்றேத்தவல்லவர்தீயரென்றேத்தும்
பண்பினார்போலும்பந்தணைநல்லூர்நின்றவெம்பசுபதியாரே. (சு)

எற்றினாரேதுமிடைகொள்வாரில்லையிருநிலம்வானுலகெல்லை
தெற்றினார்தங்கள்காரணமாகச்செருமலைந்தடியிணைசேர்வான்
முற்றினார்வாழுமும்மதில்வேவமூவிலைச்சூலமுமழுவும்
பற்றினார்போலும்பந்தணைநல்லூர்நின்றவெம்பசுபதியாரே. (எ)

ஒலிசெய்தகுழலின்முழவமதியம்பவோசையாலாடலறாத
கலிசெய்தபூதங்கையினாலிடவேகாலினாற்பாய்தலுமரக்கன்
வலிகொள்வர்புலியினுரிகொள்வரேனைவாழ்வுநன்றுனுமோர்தலையில்
பலிகொள்வர்போலும்பந்தணைநல்லூர்நின்றவெம்பசுபதியாரே. (அ)

சேற்றினார்பொய்கைத்தாமரையானுஞ்செங்கண்மாலிவரிருகூறாத்
தோற்றினார்தோற்றத்தொன்மையையறியார்துணைமையும்*பெருமையுந்தம்மில்
சாற்றினார்சாற்றியாற்றலோமென்னச்சரண்கொடுத்தவர்செய்தபாவம்
பாற்றினார்போலும்பந்தணைநல்லூர்நின்றவெம்பசுபதியாரே. (கூ)

கல்லிசைபூணக்கலைபொலியோவாக்கழுமலமூதுபதிதன்னில்
நல்லிசையாளன்புல்லிசைகேளாநற்றமிழ்ஞானசம்பந்தன்
பல்லிசைபகுவாய்ப்படுதலையேந்திமேவியபந்தணைநல்லூர்
சொல்லியபாடல்†பத்தும்வல்லவர்மேற்றொல்வினைசூழகிலாவே.‡ (கக)

திருச்சிற்றம்பலம்.

* யறியார்தன்மையும் என்றும் பாடம். † சொல்லிசைபாடல் என்றும் பாடம்.
‡ இத்திருப்பதிகத்தில் பத்தாவது செய்யுள் மறைந்துபோயிற்று.

Koviloor Digital Library

திருநாவுக்கரசுநாயனார்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

நோதங்கமில்லாதார்நாகம்பூண்டார்
நூல்பூண்டார்நூன்மேலோராமைபூண்டார்
பேய்தங்குநீள்காட்டினட்டமாடிப்
பிறைசூடுஞ்சடைமேலோர்புனலுஞ்சூடி
ஆதங்குபைங்குழலாள்பாகங்கொண்டா
ரனல்கொண்டாரந்திவாய்வண்ணங்கொண்டார்
பாதங்கணீறேற்றார்பைங்கணேற்றார்
பலியேற்றார்பந்தணைநல்லூராரே. (க)

காடலாற்கருதாதார்கடனஞ்சுண்டார்
களிற்றுரிவைமெய்போர்த்தார்கலனதாக
ஓடலாற்கருதாதாரொற்றியூரா
ருறுபிணியுஞ்செறுபகையுமொற்றைக்கண்ணால்
பீடுலாந்தனைசெய்வார்பிடவமொந்தை
குடமுழவங்கொடுகொட்டிகுழலுமோங்கப்
பாடலாராடலார்பைங்கணேற்றார்
பலியேற்றார்பந்தணைநல்லூராரே. (உ)

பூதப்படையுடையார்பொங்குநூலார்
புலித்தோலுடையினார்போரேற்றினார்
வேதத்தொழிலார்விரும்பநின்றார்
விரிசடைமேல்வெண்டிங்கட்கண்ணிசூடி
ஓதத்தொலிகடல்வாய்நஞ்சமுண்டா
ரும்பரோடம்பொன்னுலகமாண்டு
பாதத்தொடுகழலார்பைங்கணேற்றார்
பலியேற்றார்பந்தணைநல்லூராரே. (ந)

நீருலாஞ்சடைமுடிமேற்றிங்களேற்றார்
நெருப்பேற்றாரங்கையினிறையுமேற்றார்
ஊரெலாம்பலியேற்றாரரவமேற்றா
ரொலிகடல்வாய்நஞ்சமிடற்றிலேற்றார்
வாருலாமுலைமடவாள்பாகமேற்றார்
மழுவேற்றார்மான்மறியோர்கையிலேற்றார்
பாருலாம்புகழேற்றார்பைங்கணேற்றார்
பலியேற்றார்பந்தணைநல்லூராரே. (ச)

Koviloor Digital Library

தொண்டர்தொழுதேத்துஞ்சோதியேற்றூர்
துளங்காமணிமுடியார்தாயநீற்றூர்
இண்டைச்சடைமுடியாரிமஞ்சூழ்ந்த
விடுபிணக்காட்டாடலாரேமங்தோறும்
அண்டத்துக்கப்புறத்தாராதியானு
சருக்கனுபாரழலாயடியார்மேலைப்
பண்டைவினையறுப்பார்பைங்கணேற்றூர்
பலியேற்றூர்பந்தணைநல்லூராரே. (௬)

கடமன்னுகளிபானையுரிவைபோர்த்தார்
கானப்பேர்காதலார்காதல்செய்து
மடமன்னுமடியார்தம்மனத்தினுள்ளார்
மானுரிதோன்மிசைத்தோளார்மங்கைகாண
நடமன்னியாடுவார்நாகம்பூண்டார்
நான்மறையோடாறங்கநவின்றநாவார்
படமன்னுதிருமுடியார்பைங்கணேற்றூர்
பலியேற்றூர்பந்தணைநல்லூராரே. (௭)

முற்றாமதிச்சடையார்மூவரானார்
மூவுலகுமேத்துமுதல்வரானார்
கற்றார்பரவுங்கழலார்திங்கள்
கங்கையாள்காதலார்காம்பேய்தோளி
பற்றாகும்பாகத்தார்பால்வெண்ணீற்றூர்
பான்மையாலூழியுலகமானார்
பற்றார்மதிலெரித்தார்* பைங்கணேற்றூர்
பலியேற்றூர்பந்தணைநல்லூராரே. (௮)

கண்ணமருநெற்றியார்காட்டார்நாட்டார்
கனமழுவாட்கொண்டதோர்கையார்சென்னிப்
பெண்ணமருஞ்சடைமுடியார்பேரொன்றில்லார்
பிறப்பிலாரிறப்பிலார்† பிணியொன்றில்லார்
மண்ணவரும்வானவருமற்றையோரு
மறையவரும்வந்தேத்திரேவணங்கியேத்தப்
பண்ணமரும்பாடலார்‡ பைங்கணேற்றூர்
பலியேற்றூர்பந்தணைநல்லூராரே. (௯)

ஏறேறியேழுலகுமேத்தநின்று
ரிமையவர்களெப்பொழுதுமிறைஞ்சநின்றார்
நீறேறுமேனியார்நீலமுண்டார்
நெருப்புண்டார்அங்கையனலுமுண்டார்
ஆறேறுசென்னியாரானஞ்சாடி¶
யனலுமிழுமைவாயரவுமார்த்தார்
பாறேறுவெண்டலையார்பைங்கணேற்றூர்
பலியேற்றூர்பந்தணைநல்லூராரே. (௧௦)

* மதிலெய்தார் என்றும் பாடம். † பிறப்பிலார் மூப்பிலார் என்றும் பாடம். ‡ பண்ணமருஞ் சடைமுடியார் என்றும் பாடம். ¶ ரானைஞ்சாடி என்றும் பாடம்.

Koviloor Digital Library

கல்லூர்கடிமதில்கண்மூன்றுமெய்தார்
காரோணங்காதலார்காதல்செய்து
நல்லூரார்ஞானத்தார்ஞானமானூர்
நான்மறையோடாறங்கநவின்றநாவார்
மல்லூர்மணிமலையின்மேலிருந்து
வாளரக்கர்கோன்றலையைமாளச்செற்றுப்
பல்லூர்பலிதிரிவார்பைங்கணேற்றூர்
பலியேற்றூர்பந்தணைநல்லூராரே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருப்பந்தணைநல்லூர்த்திருப்பதிகம் - உ.

ஆ திருப்பதிகம் - கடுஎ.

சுவாமி தேவி திருநாமங்கள் - பசுபதிநாதர், காம்பன்னதோளியம்மை.

ந௬௫. திருக்கஞ்சனூர்.

திருநாவுக்கரசுநாயனூர்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

மூவிலைநற்சூலம் * வலனேந்தினானை
மூன்றுசுடர்க்கண்ணானைமூர்த்திதன்னை
நாவலனைநரைவிடையொன்றேறுவானை
நால்வேதமாறங்கமாயினானை
ஆவினிலைந்துகந்தானையமரர்கோவை
யயன்றிருமாலானையனலோன்போற்றும்
காவலனைக்கஞ்சனூராண்டகோவைக்
கற்பகத்தைக்கண்ணாரக்கண்டுய்ந்தேனே. (க)

தலையேந்துகையானையென்பார்த்தானைச்
சவந்தாங்குதோளானைச்சாம்பலானைக்
குலையேறுநறுங்கொன்றைமுடிமேல்வைத்துக்
கோணாகமசைத்தானைக்குலமாங்கைலை
மலையானைமற்றொப்பாரில்லாதானை
மதிகதிரும்வானவருமாலும்போற்றும்
கலையானைக்கஞ்சனூராண்டகோவைக்
கற்பகத்தைக்கண்ணாரக்கண்டுய்ந்தேனே. (உ)

* மூவிலைவேற்சூலம் என்றும் பாடம்.

Koviloor Digital Library

தொண்டர்குழாந்தொழுதேத்த* வருள்செய்வானைச்
சுடர்மழுவாட்படையானைச்சுழிவான்கங்கைத்
தெண்டிரைகள்பொருதிழிசெஞ்சடையினானைச்
செக்கர்வானொளியானைச்சேராதெண்ணிப்
பண்டமரர்கொண்டுகந்தவேள்வியெல்லாம்
பாழ்படுத்துத்தலையறுத்துப்பற்கண்கொண்ட
கண்டகனைக்கஞ்சனூராண்டகோவைக்
கற்பகத்தைக்கண்ணாரக்கண்டுய்ந்தேனே. (௩)

விண்ணவனைமேருவில்லாவுடையான்றன்னை
மெய்யாகிப்பொய்யாகிவிதியானானைப்
பெண்ணவனையாணவனைப்பித்தன்றன்னைப்
பிணமிடுகாடுடையானைப்பெருந்தக்கோனை
எண்ணவனையெண்டிசையுங்கீழுமேலு
மிருவிசும்புமிருநிலமுமாகித்தோன்றும்
கண்ணவனைக்கஞ்சனூராண்டகோவைக்
கற்பகத்தைக்கண்ணாரக்கண்டுய்ந்தேனே. (௪)

உருத்திரனையுமாபதியையுலகானானை
யுத்தமனைநித்திலத்தையொருவன்றன்னைப்
பருப்பதத்தைப்பஞ்சவடிமார்பினானைப்
பகலிரவாய்நீர்வெளியாய்ப்பரந்துநின்ற
நெருப்பதனைநித்திலத்தின்றொத்தொப்பானை
நீறணிந்தமேனியராய்நினைவார்சிந்தைக்
கருத்தவனைக்கஞ்சனூராண்டகோவைக்
கற்பகத்தைக்கண்ணாரக்கண்டுய்ந்தேனே. (௫)

ஏடேறுமலர்க்கொன்றையரவுதும்பை
யிளமதியமெருக்குவானிழிந்தகங்கை
சேடெறிந்தசடையானைத்தேவர்கோவைச்
செம்பொன்மால்வரையானைச்சேர்ந்தார்சிந்தைக்
கேடிலியைக்கீழ்வேளூராளுங்கோவைக்
கிறிபேசிமடவார்பெய்வளைகள்கொள்ளும்
காடவனைக்கஞ்சனூராண்டகோவைக்
கற்பகத்தைக்கண்ணாரக்கண்டுய்ந்தேனே. (௬)

நாரணனுநான்முகனுமறியாதானை
நால்வேதத்துருவானைநம்பிதன்னைப்
பாரிடங்கள்பணிசெய்யப்பலிகொண்டுண்ணும்
பால்வணனைத்தீவணனைப்பகலானானை
வார்பொதியுமுலையாளோர்கூறன்றன்னை
மானிடங்கையுடையானைமலிவார்கண்டம்
கார்பொதியுங்கஞ்சனூராண்டகோவைக்
கற்பகத்தைக்கண்ணாரக்கண்டுய்ந்தேனே. (௭)

* தொண்டர்கழறொழுதேத்த என்றும் பாடம்.

Koviloor Digital Library

வானவனைவலிவலமுமறைக்காட்டானை
மதிசூடும்பெருமானைமறையோன்றன்னை
யேனவனையிமவான்றன்பேதையோடு
மினிதிருந்தபெருமானையேத்துவார்க்குத்
தேனவனைத்தித்திக்கும்பெருமான்றன்னைத்
தீதிலாமறையவனைத்தேவர் * போற்றும்
கானவனைக்கஞ்சனூராண்டகோவைக்
கற்பகத்தைக்கண்ணாரக்கண்டுய்ந்தேனே. (அ)

நெருப்புருவுதிருமேனிவெண்ணீற்றானை
நினைப்பார்தநெஞ்சானைநிறைவானானைத்
தருக்கழியமுயலகன்மேற்றாள்வைத்தானைச்
சலந்தரனைத்தடிந்தோனைத்தக்கோர்சிந்தை
விருப்பவனைவிதியானைவெண்ணீற்றானை
விளங்கொளியாய்மெய்யாகிமிக்கோர்போற்றும்
கருத்தவனைக்கஞ்சனூராண்டகோவைக்
கற்பகத்தைக்கண்ணாரக்கண்டுய்ந்தேனே. (கூ)

மடலாழித்தாமரையாயிரத்திலொன்று
மலர்க்கணிடந்திடுதலுமேமலிவான்கோலச்
சுடராழிநெடுமாலுக்கருள்செய்தானைத்
தும்பியுரிபோர்த்தானைத்தோழன்விட்ட †
அடலாழித்தேருடையவிலங்கைக்கோனை
யருவரைக்கீழடர்த்தானையருளார்கருணைக்
கடலானைக்கஞ்சனூராண்டகோவைக்
கற்பகத்தைக்கண்ணாரக்கண்டுய்ந்தேனே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருக்கஞ்சனூர்த்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - கடுஅ.

சுவாமி தேவி திருநாமங்கள் - அக்கினீசுரர், கற்பகநாயகி.

* தீதிலாமறையோனைத்தேவர் என்றும் பாடம். † போர்த்தான்றன்றோழன்விட்ட என்றும் பாடம்.

Koviloor Digital Library

௩௭. திருக்கோடிகா.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

இன்றுநன்றுநாளைநன்றென்றுநின்றவிச்சையால்
பொன்றுகின்றவாழ்க்கையைப்போகவிட்டுப்போதுமின்
மின்றயங்குசோதியான்வெண்மதிவிரிபுனல்
கொன்றைதுன்றுசென்னியான்கோடிகாவுசேர்மினே. (௧)

அல்லல்மிக்கவாழ்க்கையையாதரித்திராதுநீர்
நல்லதோர்நெறியினைநாடுதுங்கடம்மினோ
வில்லையன்னவாணுதல்வெள்வளையோர்பாகமாம்
கொல்லைவெள்ளையேற்றினான்கோடிகாவுசேர்மினே. (௨)

துக்கமிக்கவாழ்க்கையின்சோர்வினைத்துறந்துநீர்
தக்கதோர்நெறியினைச்சார்தல்செய்யப்போதுமின்
அக்கணிந்தரைமிசையாறணிந்தசென்னிமேல்
கொக்கிறகணிந்தவன்கோடிகாவுசேர்மினே. (௩)

பண்டுசெய்தவல்வினைபற்றறக்கெடும்வகை
உண்டுமக்குரைப்பனானல்லைநீரெழுமினோ
மண்டுகங்கைசெஞ்சடைவைத்துமாதோர்பாகமாக்
கொண்டுகந்தமார்பினான்கோடிகாவுசேர்மினே. (௪)

முன்னைநீர்செய்பாவத்தான்மூர்த்திபாதஞ்சிந்தியா
தின்னநீரிடும்பையின்மூழ்கிறீரெழுமினோ*
பொன்னைவென்றகொன்றையான்பூதம்பாடவாடலான்
கொன்னவிலும்வேலினான் † கோடிகாவுசேர்மினே. (௫)

ஏவமிக்கசிந்தையோடின்பமெய்தலாமெனப்
பாவமெத்தனையுநீர்செய்தொருபயனில்லைக்
காவன்மிக்கமாநகர்காய்ந்துவெங்கனல்படக்
கோவமிக்கநெற்றியான்கோடிகாவுசேர்மினே. (௬)

ஏணழிந்தவாழ்க்கையையின்பமென்றிருந்துநீர்
மாணழிந்தமூப்பினால்வருந்தன்முன்னம்வம்மினோ
பூணல்வெள்ளெலும்பினான்பொன்றிகழ்சடைமுடிக்
கோணல்வெண்பிறையினான்கோடிகாவுசேர்மினே. (௭)

* வீழ்கிறீரெழுமினோ என்றும் பாடம். † கொன்னவில்லும்வேலினான் என்றும்பாடம்.

Koviloor Digital Library

மற்றிவாழ்க்கைமெய்யெனும்மனத்தினைத்தவிர்ந்துநீர்
பற்றிவாழ்மின்சேவடிபணிந்துவந்தெழுமினோ
வெற்றிகொடசமுகன்விறல்கெடவிருந்ததோர்
குற்றமில்வரையினான்கோடிகாவுசேர்மினே. (அ)

மங்குநோயுறும்பிணிமாயும்வண்ணஞ்சொல்லுவன்
செங்கண்மாறிசைமுகன்சென்றளந்துங்காண்கிலா
வெங்கண்மால்விடையுடைவேதியன்விரும்பமூர்
கொங்குலாம்வளம்பொழிற்கோடிகாவுசேர்மினே. (கூ)

தட்டொடுதழைமயிற்பீலிகொள்சமணரும்
பட்டுடைவிரிதுகிலினார்கள்சொற்பயனிலை
விட்டபுன்சடையினான்மேதகும்முழவொடும்
கொட்டமைந்தவாடலான்கோடிகாவுசேர்மினே. (க0)

கொந்தணிகுளிர்பொழிற்கோடிகாவுமேவிய
செந்தழலுருவனைச்சீர்மிகுதிறலுடை
அந்தணர்புகலியுளாயகேள்விஞானசம்
பந்தனதமிழ்வல்லார்பாவமானபாறுமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

நெற்றிமேற்கண்ணினானேநீறுமெய்பூசினானே
கற்றைப்புன்சடையினானேகடல்விடம்பருகினானே
செற்றவர்புரங்கண்மூன்றுஞ்செவ்வழல்செலுத்தினானே
குற்றமில்குணத்தினானேகோடிகாவுடையகோவே. (க)

கடிகமழ்கொன்றையானேகபாலங்கையேந்தினானே
வடிவுடைமங்கைதன்னைமார்பிலோர்பாகத்தானே
அடியிணைபரவநாளுமடியவர்க்கருள்செய்வானே
கொடியணிவிழவதோவாக்கோடிகாவுடையகோவே. (உ)

நீறுமெய்பூசினானேநிழறிகழ்மழுவினானே
ஏறுகந்தேறினானேயிருங்கடலமுதொப்பானே
ஆறுமோர்நான்குவேதமறமுரைத்தருளினானே
கூறுமோர்பெண்ணினானேகோடிகாவுடையகோவே. (௩)

காலனைக்காலாற்செற்றன்றருள்புரிகருணையானே
நீலமார்கண்டத்தானேநீண்முடியமரர்கோவே
ஞாலமாம்பெருமையானேநளிரிளந்திங்கள்சூடும்
கோலமார்சடையினானேகோடிகாவுடையகோவே. (௪)

Koviloor Digital Library

பூணரவாரத்தானேபுலியுரியரையினானே
காணில்வெண்கோவணமுங்கையிலோர்கபாலமேந்தி
ஊணுமோர்பிச்சையானேயுமையொருபாகத்தானே
கோணல்வெண்பிறையினானேகோடிகாவுடையகோவே. (ரு)

கேழல்வெண்கொம்புபூண்டகிளரொளிமார்பினானே
ஏழையேனேழையேனானென்செய்கேனெந்தைபெம்மான்
மாழையொண்கண்ணினார்கள்வலைதனின்மயங்குகின்றேன்
கூழையேறுடையசெல்வாகோடிகாவுடையகோவே. (சு)

அழலுமிழங்கையானேயரிவையோர்பாகத்தானே
தழலுமிழரவமார்த்துத்தலைதனிற்பலிகொள்வானே
நிழலுமிழ்சோலைசூழநீள்வரிவண்டினங்கள்
குழலுமிழ்கீதம்பாடுங்கோடிகாவுடையகோவே. (எ)

ஏவடுசிலையினாலேபுரமவையெரிசெய்தானே
மாவடுவகிர்கொள்கண்ணாள்மலைமகள்பாகத்தானே
ஆவடுதுறையுளானேயைவராலாட்டப்பட்டேன்
கோவடுகுற்றந்தீராய்கோடிகாவுடையகோவே. (அ)

ஏற்றநீர்க்கங்கையானேயிருநிலந்தாவினானும்
நாற்றமாமலர்மேலேறுநான்முகனிவர்கள்கூடி
ஆற்றலாலளக்கலுற்றார்க்கழலுருவாயினானே
கூற்றுக்குங்கூற்றதானாய்கோடிகாவுடையகோவே. (கூ)

பழகநானடிமைசெய்வேன்பசுபதிபாவநாசா
மழகளியானையின்றோன்மலைமகள்வெருவப்போர்த்த
அழகனேயரக்கன்றிண்டோளருவரைநெரியவூன்றும்
குழகனேகோலமார்பாகோடிகாவுடையகோவே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

சங்குலாமுன்கைத்தையலோர்பாகத்தன்
வெங்குலாமதவேழம்வெகுண்டவன்
கொங்குலாம்பொழிற்கோடிகாவாவென
எங்கிலாததோரின்பம்வந்தெய்துமே. (க)

வாடிவாழ்வதென்னாவதுமாதர்பால்
ஓடிவாழ்வினையுள்கிநீர்நாடொறும்
கோடிகாவனைக்கூறீரேற்கூறினேன்
பாடிகாவலிற்பட்டுக்கழிதிரே. (உ)

Koviloor Digital Library

முல்லைநன்முறுவல்லுமைபங்கனூர்
தில்லையம்பலத்தில்லுறைசெல்வனூர்
கொல்லையேற்றினர்கோடிகாவாவென்றங் *
கொல்லையேத்துவார்க்கூனமொன்றில்லையே. (௩)

நாவளம்பெறுமாறுமனன்னுதல்
ஆமளஞ்சொலியன்புசெயின்னலால்
கோமளஞ்சடைக்கோடிகாவாவென
ஏவளின்றெனை † யேசுமவ்வேலையே. (௪)

வீறுதான்பெறுவார்சிலராகிலும்
நாறுபூங்கொன்றைதான்மிகநல்கானேல்
கூறுவேன்கோடிகாவுளாயென்றுமால்
ஏறுவேனும்மாலேசப்படுவனே. (௫)

நாடிநாரணனுன்முகன்வானவர்
தேடியேசறவுந்தெரியாததோர்
கோடிகாவனைக்கூறுதநாளெலாம்
பாடிகாவலிற்பட்டுக்கழியுமே. (௬)

வரங்களால்வரையையெடுத்தான்றனை
அரங்கவூன்றியருள்செய்தவப்பனூர்
குரங்குசேர்பொழிற்கோடிகாவாவென
இரங்குவேன்மனத்தேதங்கடீரவே. ‡ (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

கண்டலஞ்சேர்நெற்றியிளங்காளைகண்டாய்
கன்மதில்சூழ்கந்தமாதனத்தான்கண்டாய்
மண்டலஞ்சேர்மயக்கறுக்குமருந்துகண்டாய்
மதிற்கச்சியேகம்பமேயான்கண்டாய்
விண்டலஞ்சேர்விளக்கொளியாய்நின்றான்கண்டாய்
மீயச்சூர்பிரியாதவிகிர்தன்கண்டாய்
கொண்டலஞ்சேர்கண்டத்தெங்கூத்தன்கண்டாய்
கோடிகாவமர்ந்துறையுங்குழகன்றானே. (௧)

வண்டாடுபூங்குழலாள்பாகன்கண்டாய்
மறைக்காட்டுறையுமணாளன்கண்டாய்
பண்டாடுபழவினைநோய்தீர்ப்பான்கண்டாய்
பரலோகநெறிகாட்டும்பரமன்கண்டாய்
செண்டாடியவுணர்புரஞ்செற்றான்கண்டாய்
திருவாரூர்த்திருமூலட்டானன்கண்டாய்
கொண்டாடுமடியவர்தம்மனத்தான்கண்டாய்
கோடிகாவமர்ந்துறையுங்குழகன்றானே. (௨)

* கோடிகாவேயென்றங் என்றும் பாடம். † மேவநின்றெனை என்றும் பாடம்.
‡ இத்திருப்பதிகத்தில் ௭, ௮, ௯ இச்செய்யுள்கள் மறைந்துபோயின.

Koviloor Digital Library

அலையார்ந்தபுனற்கங்கைச்சடையான்கண்டா
யடியார்கட்காரமுதமானான்கண்டாய்
மலையார்ந்தமடமங்கைபங்கன்கண்டாய்
வானோர்கண்முடிக்கணியாய்நின்றான்கண்டாய்
இலையார்ந்ததிரிசூலப்படையான்கண்டா
யேழுலகுமாய்நின்றவெந்தைகண்டாய்
கொலையார்ந்தகுஞ்சரத்தோல்போர்த்தான்கண்டாய்
கோடிகாவமர்ந்துறையுங்குழகன்றானே. (௩)

மற்றாருந்தன்னொப்பாரில்லான்கண்டாய்
மயிலாடுதுறையிடமாமகிழ்ந்தான்கண்டாய்
புற்றாடரவணிந்தபுனிதன்கண்டாய்
பூந்துருத்திப்பொய்யிலியாய்நின்றான்கண்டாய்
அற்றார்கட்கற்றானாய்நின்றான்கண்டா
யையாறகலாதவையன்கண்டாய்
குற்றாலத்தமர்ந்துறையுங்கூத்தன்கண்டாய்
கோடிகாவமர்ந்துறையுங்குழகன்றானே. (௪)

வாரார்ந்தவனமுலையாள்பங்கன்கண்டாய்
மாற்பேறுகாப்பாமகிழ்ந்தான்கண்டாய்
போரார்ந்தமால்விடையொன்றூர்வான்கண்டாய்
புகலூரையகலாதபுனிதன்கண்டாய்
நீரார்ந்தநிமிர்சடையொன்றுடையான்கண்டாய்
நினைப்பார்தம்வினைப்பாரமிழிப்பான்* கண்டாய்
கூரார்ந்தமூவிலைவேற்படையான்கண்டாய்
கோடிகாவமர்ந்துறையுங்குழகன்றானே. (௫)

கடிமலிந்தமலர்க்கொன்றைச்சடையான்கண்டாய்
கண்ணப்பவிண்ணப்புக்கொடுத்தான்கண்டாய்
படிமலிந்தபல்பிறவியறுப்பான்கண்டாய்
பற்றற்றார்பற்றவனாய்நின்றான்கண்டாய்
அடிமலிந்தசிலம்பலம்பத்திரிவான்கண்டா
யமரர்கணந்தொழுதேத்துமம்மான்கண்டாய்
கொடிமலிந்தமதிற்றில்லைக்கூத்தன்கண்டாய்
கோடிகாவமர்ந்துறையுங்குழகன்றானே. (௬)

உழைபாடுகாதலமொன்றுடையான்கண்டா
யொற்றியூரொற்றியாவுடையான்கண்டாய்
கழைபாடுகழுக்குன்றமமர்ந்தான்கண்டாய்
காளத்திக்கற்பகமாய்நின்றான்கண்டாய்
இழைபாடுமெண்புயத்தவிறைவன்கண்டா
யென்னெஞ்சத்துண்ணிங்காவெம்மான்கண்டாய்
குழைபாடநடமாடுங்கூத்தன்கண்டாய்
கோடிகாவமர்ந்துறையுங்குழகன்றானே. (௭)

* வினைப்பாரமழிப்பான் என்றும் பாடம்.

Koviloor Digital Library

படமாடுபன்னகக்கச்சசைத்தான்கண்டாய்
பாய்த்துறையும்பாரூருமேயாள்கண்டாய்
நடமாடியேழுலகுந்திரிவான்கண்டாய்
நான்மறையின்பொருள்கண்டாய்நாதன்கண்டாய்
கடமாடுகளிறுரித்தகண்டன்கண்டாய்
கயிலாயமேவியிருந்தான்கண்டாய்
குடமாடியிடமாகக்கொண்டான்கண்டாய்
கோடிகாவமர்ந்துறையுங்குழகன்றானே. * (அ)

திருச்சிற்றம்பலம்.

திருக்கோடிகாத்திருப்பதிகம் - ௪.

ஆ திருப்பதிகம் - ௧௧௨.

சுவாமி தேவி திருநாமங்கள் - கோடிகாவீசுரர், வடிவம்மை.

௩அ. திருமங்கலக்குடி.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

சீரினார்மணியும்மகில்சந்துஞ் † செறிவரை
வாரிநீர்வருபொன்னிவடமங்கலக்குடி
நீரின்மாமுனிவன்னெடுங்கைகொடுநீர்தனைப்
பூரித்தாட்டியர்ச்சிக்கவிருந்தபுராணனே. (௧)

பணங்கொளாடரவல்குனல்லார்பயின்றேத்தவே
மணங்கொண்மாமயிலாலும்பொழின்மங்கலக்குடி
இணங்கிலாமறையோரிமையோர் ‡ தொழுதேத்திட
அணங்கினோடிருந்தானடியேசரணாகுமே. (௨)

கருங்கையானையினீருரிபோர்த்திடுகள்வனார்
மருங்கெலாமணமார்பொழில்சூழ்மங்கலக்குடி
அரும்புசேர்மலர்க்கொன்றையினானடியன்பொடு
விரும்பியேத்தவல்லார்வினையாயினவீடுமே. (௩)

பறையினோடொலிபாடலுமாடலும்பாரிடம்
மறையினோடியன்மல்கிடுவார்மங்கலக்குடிக்
குறைவிலாநிறைவேகுணமில்குணமேயென்று
முறையினால்வணங்கும்மவர்முன்னெறிகாண்பரே. (௪)

* இத்திருப்பதிகத்தில் ௯, ௧௦ இச்செய்யுள்கள் மறைந்துபோயின. † மகிழ்சந்துஞ் என்றும் பாடம். ‡ மறையோனிமையோர் என்றும் பாடம்.

Koviloor Digital Library

ஆனிலங்கிளரைந்துமவிர்முடியாடியோர்
மானிலங்கையினான்மணமார்மங்கலக்குடி
யூனில்வெண்டலைக்கையுடையானுயர்பாதமே
ஞானமாகநின்றேத்தவல்லார்வினைநாசமே. (௫)

தேனுமாயமுதாகிநின்றான்றெளிசிந்தையுள்
வானுமாய்மதிசூடவல்லான்மங்கலக்குடி
கோனைநாடொறுமேத்திக்குணங்கொடுகூறுவார்
ஊனமானவைபோயறுமுய்யும்வகையதே. (௬)

வேள்படுத்திடுகண்ணினன்மேருவில்லாகவே
வாளரக்கர்புரமெரித்தான்மங்கலக்குடி
ஆளுமாதிப்பிரானடிகள்ளடைந்தேத்தவே
கோளுநாளவைபோயறுங்குற்றமில்லார்களே. (௭)

பொலியுமால்வரைபுக்கெடுத்தான்புகழ்ந்தேத்திட
வலியும்வாளொடுநாள்கொடுத்தான்மங்கலக்குடிப்
புலியினாடையினானடியேத்திடும்புண்ணியர்
மலியும்வானுலகம்புகவல்லவர்காண்மினே. (௮)

ஞாலமுன்படைத்தானளிர்மாமலர்மேலயன்
மாலுங்காணவொணாவெரியான்மங்கலக்குடி
ஏலவார்குழலாளொருபாகமிடங்கொடு
கோலமாகிநின்றான்குணங்கூறுங்குணமதே. (௯)

மெய்யின்மாசினர்மேனிவிரிதுவராடையர்*
பொய்யைவிட்டிடும்புண்ணியர்சேர்மங்கலக்குடிச்
செய்யமேனிச்செழும்புனற்கங்கைசெறிசடை
ஐயன்சேவடியேத்தவல்லார்க்கழகாகுமே. (௧0)

மந்தமாம்பொழில்சூழ்மங்கலக்குடிமன்னிய
எந்தையையெழிலார்பொழிற்காழியர்காவலன்
சிந்தைசெய்தடிசேர்த்திடுஞானசம்பந்தன்சொல்
முந்தியேத்தவல்லாரிமையோர்முதலாவரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

தங்கலப்பியதக்கன்பெருவேள்வி
அங்கலக்கழித்தாருள்† செய்தவன்
கொங்கலர்க்குழற்கொம்பனையாளொடு
மங்கலக்குடிமேயமணாளனே. (௧)

* துவராடையர் என்றும் பாடம். † அங்கலத்தழித்தாருள் என்றும் பாடம்.

Koviloor Digital Library

காவிரியின்வடகரைக்காண்டகு
மாவிரியும்பொழின்மங்கலக்குடித்
தேவரியும்பிரமனுந்தேடொணாத்
தூவெரிச்சுடர்ச்சோதியுட்சோதியே. (உ)

மங்கலக்குடியீசனைமாகாளி
வெங்கதிர்ச்செல்வன்விண்ணொடுமண்ணுநேர் *
சங்குசக்கரதாரிசதுர்முகன்
அங்ககத்தியனும்மர்ச்சித்தாரன்றே. (௩)

மஞ்சன்வார்கடல்சூழ்மங்கலக்குடி
நஞ்சமாரமுதாகநயந்துகொண்
டஞ்சுமாடலமர்ந்தடியேனுடை
நெஞ்சமாலயமாக்கொண்டுநின்றதே. (௪)

செல்வமல்குதிருமங்கலக்குடி
செல்வமல்குசிவநியமத்தராய்ச்
செல்வமல்குசெழுமறையோர்தொழச்
செல்வன்றேவியொடுந்திகழ்கோயிலே. (௫)

மன்னுசீர்மங்கலக்குடிமன்னிய
பின்னுவார்சடைப்பிஞ்ஞகன்றன்பெயர்
உன்னுவாருமுரைக்கவல்லார்களும்
துன்னுவார்நன்னெறிதொடர்வெய்தவே. (௬)

மாதரார்மருவும்மங்கலக்குடி
ஆதிநாயகனண்டர்கணாயகன்
வேதநாயகன்வேதியர்நாயகன்
பூதநாயகன்புண்ணியமூர்த்தியே. (எ)

வண்டுசேர்பொழில்சூழ்மங்கலக்குடி
விண்டதாதையைத்தாளறவீசிய
சண்டநாயகனுக்கருள்செய்தவன்
துண்டமாமதிசூடியசோதியே. (அ)

கூசுவாரலர்குண்டர்குணமிலர்
நேசமேதுமிலாதவர்நீசர்கள்
மாசர்பான்மங்கலக்குடிமேவிய
ஈசன்வேறுபடுக்கவுய்ந்தேனன்றே. (௯)

மங்கலக்குடியான்கயிலைம்மலை
அங்கலைத்தெடுக்குற்றவரக்கர்கோன்
தன்கரத்தொடுதாடலைதோடகர்ந்
தங்கலைத்தழுதுய்ந்தனன்றானன்றே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருமங்கலக்குடித்திருப்பதிகம் - உ.
ஆ திருப்பதிகம் - ௧௧௪.

சுவாமி தேவி திருநாமங்கள் - புராணேசுரர், மங்களநாயகி.

* மண்ணுளோர் என்றும் பாடம்.

Koviloor Digital Library

ஆனிலங்கிளரைந்துமவிர்முடியாடியோர்
மானிலங்கையினான்மணமார்மங்கலக்குடி
யூனில்வெண்டலைக்கையுடையானுயர்பாதமே
ஞானமாகநின்றேத்தவல்லார்வினைநாசமே. (ரு)

தேனுமாயமுதாகிநின்றான்றெளிசிந்தையுள்
வானுமாய்மதிசூடவல்லான்மங்கலக்குடி
கோனைநாடொறுமேத்திக்குணங்கொடுகூறுவார்
ஊனமானவைபோயறுமுய்யும்வகையதே. (சு)

வேள்படுத்திடுகண்ணினன்மேருவில்லாகவே
வாளரக்கர்புரமெரித்தான்மங்கலக்குடி
ஆளுமாதிப்பிரானடிகள்ளடைந்தேத்தவே
கோளுநாளவைபோயறுங்குற்றமில்லார்களே. (எ)

பொலியுமால்வரைபுக்கெடுத்தான்புகழ்ந்தேத்திட
வலியும்வாளொடுநாள்கொடுத்தான்மங்கலக்குடிப்
புலியினாடையினானடியேத்திடும்புண்ணியர்
மலியும்வானுலகம்புகவல்லவர்காண்மினே. (அ)

ஞாலமுன்படைத்தானளிர்மாமலர்மேலயன்
மாலுங்காணவொணாவெரியான்மங்கலக்குடி
ஏலவார்குழலாளொருபாகமிடங்கொடு
கோலமாகிநின்றான்குணங்கூறுங்குணமதே. (கூ)

மெய்யின்மாசினர்மேனிவிரிதுவராடையர்*
பொய்யைவிட்டிடும்புண்ணியர்சேர்மங்கலக்குடிச்
செய்யமேனிச்செழும்புனற்கங்கைசெறிசடை
ஐயன்சேவடியேத்தவல்லார்க்கழகாகுமே. (க0)

மந்தமாம்பொழில்சூழ்மங்கலக்குடிமன்னிய
எந்தையையெழிலார்பொழிற்காழியர்காவலன்
சிந்தைசெய்தடிசேர்த்திடுஞானசம்பந்தன்சொல்
முந்தியேத்தவல்லாரிமையோர்முதலாவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

தங்கலப்பியதக்கன்பெருவேள்வி
அங்கலக்கழித்தாருள்† செய்தவன்
கொங்கலர்க்குழற்கொம்பனையாளொடு
மங்கலக்குடிமேயமணாளனே. (க)

* துகிலாடையர் என்றும் பாடம். † அங்கலத்தழித்தாருள் என்றும் பாடம்.

Koviloor Digital Library

காவிரியின்வடகரைக்காண்டகு
மாவிரியும்பொழின்மங்கலக்குடித்
தேவரியும்பிரமனுந்தேடொணாத்
தூவெரிச்சுடர்ச்சோதியுட்சோதியே. (உ)

மங்கலக்குடியீசனைமாகாளி
வெங்கதிர்ச்செல்வன்விண்ணொடுமண்ணுநேர் *
சங்குசக்காதாரிசதுர்முகன்
அங்ககத்தியனும்மர்ச்சித்தான்றே. (௩)

மஞ்சன்வார்கடல்சூழ்மங்கலக்குடி
நஞ்சமாரமுதாகநயந்துகொண்
டஞ்சுமாடலமர்ந்தடியேனுடை
நெஞ்சமாலயமாக்கொண்டுநின்றதே. (௪)

செல்வமல்குதிருமங்கலக்குடி
செல்வமல்குசிவநியமத்தராய்ச்
செல்வமல்குசெழுமறையோர்தொழச்
செல்வன்றேவியொடுந்திகழ்கோயிலே. (௫)

மன்னுசீர்மங்கலக்குடிமன்னிய
பின்னுவார்சடைப்பிஞ்ஞகன்றன்பெயர்
உன்னுவாருமுரைக்கவல்லார்களும்
துன்னுவார்நன்னெறிதொடர்வெய்தவே. (௬)

மாதரார்மருவும்மங்கலக்குடி
ஆதிநாயகனண்டர்களுயகன்
வேதநாயகன்வேதியர்நாயகன்
பூதநாயகன்புண்ணியமூர்த்தியே. (எ)

வண்டுசேர்பொழில்சூழ்மங்கலக்குடி
விண்டதாதையைத்தாளறவீசிய
சண்டநாயகனுக்கருள்செய்தவன்
துண்டமாமதிசூடியசோதியே. (அ)

கூசுவாரலர்குண்டர்குணமிலர்
நேசமேதுமிலாதவர்நீசர்கள்
மாசர்பான்மங்கலக்குடிமேவிய
ஈசன்வேறுபடுக்கவுய்ந்தேனன்றே. (௯)

மங்கலக்குடியான்கயிலைம்மலை
அங்கலைத்தெடுக்குற்றவரக்கர்கோன்
தன்கரத்தொடுதாடலைதோள்கள்
தங்கலைத்தழுதுய்ந்தனன்றானன்றே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருமங்கலக்குடித்திருப்பதிகம் - உ.

ஆ திருப்பதிகம் - ௧௩௪.

சுவாமி தேவி திருநாமங்கள் - புராணேசுரர், மங்களநாயகி.

* மண்ணுளோர் என்றும் பாடம்.

Koviloor Digital Library

௩௬. திருப்பனந்தாள்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

கண்பொலிநெற்றியினான்றிகழ்கையிலோர்வெண்மழுவான்
பெண்புணர்கூறுடையான்மிகுபீடுடைமால்விடையான்
விண்பொலிமாமதிசேர்தருசெஞ்சடைவேதியனூர்
தண்பொழில்சூழ்பனந்தாட்டிருத்தாடகையீச்சரமே. (௧)

விரித்தவனான்மறையைமிக்கவிண்ணவர்வந்திறைஞ்ச
எரித்தவன்முப்புரங்களியலேழுலகில்லுயிரும்
பிரித்தவன்செஞ்சடைமேனிறைபேரொலிவெள்ளந்தன்னைத்
தரித்தவனூர்பனந்தாட்டிருத்தாடகையீச்சரமே. (௨)

உடுத்தவன்மானுரிதோல்கழலுள்கவல்லார்வினைகள்
கெடுத்தருள்செய்பவல்லான்கிளர்கீதமோர்நான்மறையான்
மடுத்தவனஞ்சமுதாமிக்கமாதவர்வேள்வியைமுன்
தடுத்தவனூர்பனந்தாட்டிருத்தாடகையீச்சரமே. (௩)

சூழ்தருவல்வினையுமுடறோன்றியபல்பிணியும்
பாழ்படவேண்டுதிரேன்மிகவேத்துமின்பாய்புனலும்
போழிளவெண்மதியுமனல்பொங்கரவும்புனைந்த
தாழ்சடையான்பனந்தாட்டிருத்தாடகையீச்சரமே. (௪)

விடம்படுகண்டத்தினானிருள்வெள்வளைமங்கையொடும்
நடம்புரிகொள்கையினானவனெம்மிறைசேருமிடம்
படம்புரிநாகமொடுதிரைபன்மணியுங்கொணரும்
தடம்புனல்சூழ்பனந்தாட்டிருத்தாடகையீச்சரமே. (௫)

விடையுயர்வெல்கொடியானடிவிண்ணொடுமண்ணுமெல்லாம்
புடைபடவாடவல்லான்மிகுபூதமார்பல்படையான்
தொடைநவில்கொன்றையொடுவன்னிதுன்னெருக்கும்மணிந்த
சடையவனூர்பனந்தாட்டிருத்தாடகையீச்சரமே. (௬)

மலைபவன்முன்பயந்தமடமாதையோர்கூறுடையான்
சிலைமலிவெங்கணையாற்புரமூன்றவைசெற்றுகந்தான்
அலைமலிதண்புனலும்மதியாடரவும்மணிந்த
தலைபவனூர்பனந்தாட்டிருத்தாடகையீச்சரமே. (௭)

செற்றரக்கன்வலியைத்திருமெல்விரலாலடர்த்து
முற்றும்வெண்ணீறணிந்ததிருமேனியன்மும்மையினான்
புற்றரவம்புலியின்னுரிதோலொடுகோவணமும்
தற்றவனூர்பனந்தாட்டிருத்தாடகையீச்சரமே. (௮)

Koyiloor Digital Library

வின்மலைநாணரவம்மிகுவெங்கனலம்பதனால்
புன்மைசெய்தானவர்தம்புரம்பொன்றுவித்தான்புனிதன்
நன்மலர்மேலயனுங்கண்ணனுநாரணனும்மறியாத்
தன்மையனூர்பனந்தாட்டிருத்தாடகையீச்சரமே. (௯)

ஆதர்சமணரொடும்மடையைந்துகில்போர்த்துழலும்
நீதருரைக்குமொழியவைகொள்ளன்மினின்மலனூர்
போதவிழ்பொய்கைதனுட்டிகழ்புள்ளிரியப்பொழில்வாய்த்
தாதவிழும்பனந்தாட்டிருத்தாடகையீச்சரமே. (௧0)

தண்வயல்சூழ்பனந்தாட்டிருத்தாடகையீச்சரத்துக்
கண்ணயலேபிறையானவன்றன்னைமுன்காழியர்கோன்
நண்ணியசெந்தமிழான்மிகுஞானசம்பந்தனல்ல
பண்ணியல்பாடல்வல்லாரவர்தம்வினைபற்றறுமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருப்பனந்தாட்டிருப்பதிகம் - ௧.

ஆ திருப்பதிகம். - ௧௯௫.

சுவாமி தேவி திருநாமங்கள் - சடையப்பர், பெரியநாயகி.

௪0. திருவாப்பாடி.

திருநாவுக்கரசுநாயனர்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

கடலகமேழினோடும்புவனமுங்கலந்தவின்னும்*
உடலகத்துயிரும்பாருமொள்ளழலாகிநின்று
தடமலர்க்கந்தமாலைதண்மதிபகலுமாகி
மடலவிழ்கொன்றைசூடிமன்னுமாப்பாடியாரே. (௧)

ஆதியுமறிவுமாகியறிவினுட்செறிவுமாகிச்
சோதியுட்சுடருமாகித்தூநெறிக்கொருவனாகிப்
பாதியிற்பெண்ணுமாகிப்பரவுவார்பாங்கனாகி
வேதியர்வாழுஞ்சேய்ஞல்விரும்புமாப்பாடியாரே. (௨)

என்னுடையிருக்குமாகியிருக்கினுட்பொருளுமாகிப்
பண்ணொடுபாடறன்னைப்பரவுவார்பாங்கனாகிக்
கண்ணொருநெற்றியாகிக்கருதுவார்கருதலாகாப்
பெண்ணொருபாகமாகிப்பேணுமாப்பாடியாரே. (௩)

* கலந்துவிண்ணும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

அண்டமாரமார்கோமானுதியெம்மண்ணல்பாதம்
கொண்டவன்குறிப்பினாலேகூப்பினான்றாபாத்தைக்
கண்டவன்றாதைபாய்வான்காலறவெறியக்கண்டு
சண்டியார்க்கருள்கள் * செய்ததலைவராப்பாடியாரே. (௪)

சிந்தையுந்தெளிவுமாகித்தெளிவினுட்சிவமுமாகி
வந்தனன்பயனுமாகிவானுதல்பாகமாகி
மந்தமாம்பொழில்கள்சூழ்ந்தமண்ணித்தென்கரைமேன்மன்னி
அந்தமோடளவிலாதவடிகளாப்பாடியாரே. (௫)

வன்னிவாளரவுமத்தமதியமுமாறுஞ்சூடி
மின்னியவுருவாஞ்சோதிமெய்ப்பொருட்பயனுமாகிக்
கன்னியோர்பாகமாகிக்கருதுவார்கருத்துமாகி
இன்னிசைதொண்டர்பாடவிருந்தவாப்பாடியாரே. (௬)

உள்ளுமாய்ப்புறமுமாகியுருவுமாயருவுமாகி
வெள்ளமாய்க்கரையுமாகிவிரிகதிர்ஞாயிறாகிக்
கள்ளமாய்க்கள்ளத்துள்ளார்கருத்துமாயருத்தமாகி
அள்ளுவார்க்கள்ளல்செய்திட்டிருந்தவாப்பாடியாரே. (௭)

மயக்கமாய்த்தெளிவுமாகிமால்வரைவளியுமாகித்
தியக்கமாயொருக்கமாகிச்சிந்தையுளொன்றிநின்று
இயக்கமாயிறுதியாகியெண்டிசைக்கிறைவராகி
அயக்கமாயடக்கமாயவைவராப்பாடியாரே. (அ)

ஆழழலுருவமாகியண்டமேழ்கடந்தவெந்தை
பேரொளியுருவினானைப்பிரமனுமாலுங்காணாச்
சீரவைபரவியேத்திச்சென்றடிவணங்குவார்க்குப்
பேரருளருளிச்செய்வார்பேணுமாப்பாடியாரே. (௯)

திண்டிறலரக்கனோடிச்சிகயிலாயந்தன்னை
எண்டிறலிலனுமாகியெடுத்தலுமேழையஞ்ச
விண்டிறனெரியவூன்றிமிகக்கடுத்தலறிவீழப்
பண்டிறல்கேட்டுகந்தபரமராப்பாடியாரே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருவாப்பாடித்திருப்பதிகம் - ௧.

ஆ திருப்பதிகம் - ௧௧௬.

சுவாமி தேவி திருநாமங்கள் - பாலுகந்தநாதர், பெரியநாயகி.

* தண்டியார்க்கருள்கள் என்றும் பாடம்.

Koviloor Digital Library

சக. திருச்சேய்ஞலூர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

நூலடைந்தகொள்கையாலேநுன்னடிகூடுதற்கு
மாலடைந்தநால்வர்கேட்கநல்கியநல்லறத்தை
ஆலடைந்தநீழன்மேவியருமறைசொன்னதென்னே
சேலடைந்ததண்கழனிச்சேய்ஞலூர்மேயவனே. (க)

நீறடைந்தமேனியின்கணேரிழையாளொருபால்
கூறடைந்தகொள்கையன்றிக்கோலவளர்சடைமேல்
ஆறடைந்ததிங்கள்சூடியரவமணிந்ததென்னே
சேறடைந்ததண்கழனிச்*சேய்ஞலூர்மேயவனே. (உ)

ஊனடைந்தவெண்டலையினோடுபலிதிரிந்து
கானடைந்தபேய்களோடுபூதங்கலந்துடனே
மானடைந்தநோக்கிகாணமகிழ்ந்தெரியாடலென்னே
தேனடைந்தசோலைமல்குசேய்ஞலூர்மேயவனே. (ங)

வீணடைந்தமும்மதிலும்வின்மலையாவரவின்
நாணடைந்தவெஞ்சரத்தானல்லெரியூட்டலென்னே
பாணடைந்தவண்டுபாடும்பைம்பொழில்சூழ்ந்தழகார்
சேணடைந்தமாடமல்குசேய்ஞலூர்மேயவனே. (ச)

பேயடைந்தகாடிடமாப்பேணுவதன்றியும்போய்
வேயடைந்ததோளியஞ்சவேழமுரித்ததென்னே
வாயடைந்தநான்மறையாறங்கமோடைவேள்வித்
தீயடைந்தசெங்கையாளர்சேய்ஞலூர்மேயவனே. (ரு)

காடடைந்தவேனமொன்றின்காரணமாகிவந்து
வேடடைந்தவேடனாகிவிசயனொடெய்ததென்னே
கோடடைந்தமால்களிற்றுக்கோச்செங்கணாற்கருள்செய்
சேடடைந்தசெல்வர்வாழுஞ்சேய்ஞலூர்மேயவனே. (சா)

பீரடைந்தபாலதாட்டப்பேணாதவன்றாதை
வேரடைந்துபாய்ந்ததாளைவேர்த்தடிந்தான்றனக்குத்
தாரடைந்தமாலைசூட்டித்தலைமைவகுத்ததென்னே
சீரடைந்தகோயின்மல்குசேய்ஞலூர்மேயவனே. (எ)

* சேறடைந்தவார்கழனிச் என்றும் பாடம்.

Koviloor Digital Library

மாவடைந்ததேரரக்கன்வலிதொலைவித்தவன்றன்
நாவடைந்தபாடல்கேட்டுநயந்தருள்செய்ததென்னே
பூவடைந்தநான்முகன்போற்பூசுரர்போற்றிசெய்யும்
சேவடைந்தவூர்தியானேசேய்ஞலூர்மேயவனே. (அ)

காரடைந்தவண்ணனோடுகனகமனையானும்
பாரடைந்தும்* விண்பறந்தும்பாதமுடிகாணார்
சீரடைந்துவந்துபோற்றச்சென்றருள்செய்ததென்னே
தேரடைந்தமாமறுகிற்சேய்ஞலூர்மேயவனே. (௯)

மாசடைந்தமேனியாருமனந்திரியாதகஞ்சி
நேசடைந்தவூணினாருநேசமிலாததென்னே
வீசடைந்ததோகையாடவிரைகமழும்பொழில்வாய்த்
தேசடைந்தவண்டுபாடுஞ்சேய்ஞலூர்மேயவனே. (க0)

சேயடைந்தசேய்ஞலூரிற்செல்வனசீர்பரவித்
தோயடைந்தவண்வயல்சூழ்தோணிபுரத்தலைவன்
சாயடைந்தஞானமல்குசம்பந்தனின்னுரைகள்
வாயடைந்துபாடவல்லார்வானுலகாள்பவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருச்சேய்ஞலூர்த்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - க௬எ.

சுவாமி தேவி திருநாமங்கள் - சத்தகிரியீசுரர், சகிதேவி.

திருஞானசம்பந்தப்பிள்ளையார் சிவஸ்தலயாத்திரை செய்துகொண்டு வரும்பொழுது திருச்சேய்ஞலூரின் எல்லையை அடைந்தார், அது சண்டேசுரநாயனர் திருவவதாரஞ்செய்த திருப்பதியாதலால் முத்துச்சிவிகையினின்றும் இறங்கி, அத்திருப்பதியினுள்ளே நடந்துபோய், ஆலயத்திலே பிரவேசித்து,சுவாமிதரிசனஞ்செய்து, "நூலடைந்த கொள்கையாலே" என்னுந் திருப்பதிகம்பாடினர். அந்தத் திருப்பதிகத்திலே, "பீரடைந்தபாலதாட்ட" என்னும் ஏழாந் திருப்பாட்டிலே, சண்டேசுரநாயனர்செய்த திருத்தொண்டின் சிறப்பையும் அதற்குச் சிவபிரான் செய்தருளிய திருவருட்சிறப்பையும் எடுத்து அருளிச்செய்தார்.

௪உ. திருந்துதேவன்குடி.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

மருந்துவேண்டில்லிவைமந்திரங்கள்ளிவை
புரிந்துகேட்கப்படும்புண்ணியங்கள்ளிவை
திருந்துதேவன்குடித்தேவர்தேவெய்திய
அருந்தவத்தோர்தொழுமடிகள்வேடங்களே. (க)

* பாரிடந்தும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

வீதிபோக்காவனவினையைவீட்டுவ்வன
ஓதியோர்க்கப்படாப்பொருளையோர்விப்பன
தீதிறேவன்குடித்தேவர்தேவெய்திய
ஆதியந்தம்மிலாவடிகள்வேடங்களே. (உ)

மானமாக்குவ்வனமாசுநீக்குவ்வன
வானையுள்கச்செலும்வழிகள்காட்டுவ்வன
தேனும்வண்டும்மிசைபாடுந்தேவன்குடி
ஆனஞ்சாடும்முடியடிகள்வேடங்களே. (௩)

செவிகளார்விப்பனசிந்தையுட்சேர்வன
கவிகள்பாடுவ்வனகண்குளிர்விப்பன
புவிகள்பொங்கப்புனல்பாயுந்தேவன்குடி
அவிகளுய்க்கப்படுமடிகள்வேடங்களே. (௪)

விண்ணுலாவுநெறிவீடுகாட்டுநெறி
மண்ணுலாவுநெறிமயக்கந்தீர்க்குநெறி
தெண்ணிலாவெண்மதிதீண்டுதேவன்குடி
அண்ணலானேறுடையடிகள்வேடங்களே. (௫)

பங்கமென்னப்படர்பழிகளென்னப்படா
புங்கமென்னப்படர்புகழ்களென்னப்படும்
திங்கடோயும்பொழிறீண்டுதேவன்குடி
அங்கமாறுஞ்சொன்னவடிகள்வேடங்களே. (௬)

கரைதலொன்றும்மிலைகருதவல்லார்தமக்
குரையிலூனம்மிலையுலகினின்மன்னுவர்
திரைகள்பொங்கப்புனல்பாயுந்தேவன்குடி
அரையில்வெண்கோவணத்தடிகள்வேடங்களே. (௭)

உலகமுட்குந்திறலுடையரக்கன்வலி
விலகுபூதக்கணம்* வெருட்டும்வேடத்தினன்
திலகமாரும்பொழில்சூழ்ந்ததேவன்குடி
அலர்தயங்கும்முடியடிகள்வேடங்களே. (௮)

துளக்கமில்லாதனதூயதோற்றத்தன
விளக்கமாக்குவ்வனவெறிவண்டாரும்பொழில்
திளைக்குந்தேவன்குடித்திசைமுகனோடுமால்
அளக்கவொண்ணாவண்ணத்தடிகள்வேடங்களே. (௯)

செருமருதண்டுவர்த்தேரமணாதர்கள்
உருமருவப்படாத்தொழும்பர்தமுரைகொளேல்
திருமருவும்பொய்கைசூழ்ந்ததேவன்குடி
அருமருந்தாவனவடிகள்வேடங்களே. (௧0)

* விலகுபூதங்கணம் என்றும் பாடம்.

Koviloor Digital Library

சேடர்தேவன்குடித்தேவர்தேவன்றனை
மாடமோங்கும்பொழின்மல்குதண்காழியான்
நாடவல்லதமிழ்ஞானசம்பந்தன *
பாடல்பத்தும்வல்லார்க்கில்லையாம்பாவமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருந்துதேவன்குடித்திருப்பதிகம் - ௧.

ஆ திருப்பதிகம் - ௧௬அ.

சுவாமி தேவி திருநாமங்கள் - கர்க்கடேசுரர், அருமருந்தம்மை.

௩ங. திருவியலூர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

குரவங்கமழ்நறுமென்குழலரிவையவள்வெருவப்
பொருவெங்கரிபடவென்றதனுரிவையுடலணிவோன்
அரவும்மலைபுனலும்மிளமதியுந்நகுதலையும்
விரவுஞ்சடையடிகட்கிடம்விரிநீர்வியலூரே. (௧)

ஏறார்தருமொருவன்பலவுருவன்னிலையானன்
ஆறார்தருசடையன்னனலுருவன்புரிவுடையான்†
மாறார்புரமெரியச்சிலைவளைவித்தவன்மடவாள்
வீறார்தரநின்றானிடம்விரிநீர்வியலூரே. (௨)

செம்மென்சடையவைதாழ்வுறமடவார்மனைதோறும்
பெய்ம்மின்பலிபெனநின்றிசைபகர்வாரவரிடமாம்
உம்மென்றெழுமருவித்திரள்வரைபற்றிடவுரைமேல்
விம்மும்பொழில்கெழுவும்வயல்விரிநீர்வியலூரே. (௩)

அடைவாகியவடியார்தொழவலரோன்றலையதனில்
மடவாரிடுபலிவந்துணலுடையானவனிடமாம்
கடையார்தரவகிலார்கழைமுத்தந்நிரைசிந்தி
மிடையார்பொழில்புடைசூழ்தருவிரிநீர்வியலூரே. (௪)

என்னார்தருபயனாயயனவனாய்மிகுகலையாய்ப்
பண்ணார்தருமறையாயுயர்பொருளாயிறையவனாய்க்
கண்ணார்தருமுருவாகியகடவுள்ளிடமெனலாம்
விண்ணோரொடுமண்ணோர்தொழுவிரிநீர்வியலூரே. (௫)

* ஞானசம்பந்தனற் என்றும் பாடம். † புலியுடையான் என்றும் பாடம்.

·Koviloor Digital Library

வசைவிற்கொடுவருவேடுவனவனாய்நிலையறிவான்
திசையுற்றவர்காணச்செருமலைவானிலையவனை
அசையப்பொருதசையாவணமவனுக்குயர்படைகள்
விசையற்கருள்செய்தானிடம்விரிநீர்வியலூரே. (௬)

மானாரரவுடையானிரவுடையான்பகனட்டம்
ஊனார்தருமுயிரானுயர்விசையான்விளைபொருள்கள்
தானாகியதலைவன்னெனநினைவாரவரிடமாம்
மேனாடியவிண்ணோர் *தொழும்விரிநீர்வியலூரே. (௭)

பொருவாரெனக்கெதிராரெனப்பொருப்பையெடுத்தான்றன்
கருமால்வரைகரந்தோளுரங்கதிர்நீண்முடிநெரிந்து
சிரமாயினகதறச்செறிகழல்சேர்திருவடியின்
விரலாலடர்வித்தானிடம்விரிநீர்வியலூரே. (௮)

வளம்பட்டலர்மலர்மேலயன்மாலும்மொருவகையால்
அளம்பட்டறிவொண்ணாவகையழலாகியவண்ணல்
உளம்பட்டெழுதழற்றூணதனடுவேயொருவுருவம்
விளம்பட்டருள்செய்தானிடம்விரிநீர்வியலூரே. (௯)

தடுக்காலுடன்மறைப்பாரவர்தவர்சீவரமூடிப்
பிடக்கேயுரைசெய்வாரொடுபேணார்நமர்பெரியோர்
கடற்சேர்தருவிடமுண்டமுதமரர்க்கருள்செய்த
விடைச்சேர்தருகொடியானிடம்விரிநீர்வியலூரே. (௧0)

விளங்கும்பிறைசடைமேலுடைவிகிர்தன்வியலூரைத்
தளங்கொண்டதொர்புகலித்தகுதமிழ்ஞானசம்பந்தன்
துளங்கிறமிழ்பரவித்தொழுமடியாரவரென்றும்
விளங்கும்புகழதனோடுயர்விண்ணும்முடையாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவியலூர்த்திருப்பதிகம் - ௧.

ஆ திருப்பதிகம் - ௧௬௧.

சுவாமி தேவி திருநாமங்கள் - யோகாநந்தர், சாந்தநாயகி.

* மேனாடியர்விண்ணோர் என்றும் பாடம்.

Koviloor Digital Library

௪௪. திருக்கொட்டையூர்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

கருமணிபோற்கண்டத்தழகன்கண்டாய்
கல்லானிழற்கீழிருந்தான்கண்டாய்
பருமணிமாநாகம்பூண்டான்கண்டாய்
பவளக்குன்றன்னபரமன்கண்டாய்
வருமணிநீர்ப்பொன்னிவலஞ்சுழியான்கண்டாய்
மாதேவன்கண்டாய்வரதன்கண்டாய்
குருமணிபோலழகமருங்கொட்டையூரிற்
கோடீச்சரத்துறையுங்கோமான்றானே. (க)

கலைக்கன்றுதங்குகரத்தான்கண்டாய்
கலைபயில்வோர்ஞானக்கண்ணானான்கண்டாய்
அலைக்கங்கைசெஞ்சடைமேலேற்றான்கண்டா
யண்டகபாலத்தப்பாலான்கண்டாய்
மலைப்பண்டங்கொண்டுவருநீர்ப்பொன்னி
வலஞ்சுழியின்மேவியமைந்தன்கண்டாய்
குலைத்தெங்கஞ்சோலைசூழ்கொட்டையூரிற்
கோடீச்சரத்துறையுங்கோமான்றானே. (உ)

செந்தாமரைப்போதணிந்தான்கண்டாய்
சிவன்கண்டாய்தேவர்பெருமான்கண்டாய்
பந்தாடுமெல்விரலாள்பாகன்கண்டாய்
பாலோடுநெய்தயிர்தேனாடிகண்டாய்
மந்தாரமுந்திவருநீர்ப்பொன்னி
வலஞ்சுழியின்மன்னுமணாளன்கண்டாய்
கொந்தார்பொழில்புடைசூழ்கொட்டையூரிற்
கோடீச்சரத்துறையுங்கோமான்றானே. (௩)

பொடியாடுமேனிப்புனிதன்கண்டாய்
புட்பாகற்காழிகொடுத்தான்கண்டாய்
இடியார்கடுமுழக்கேறூர்ந்தான்கண்டா
யெண்டிசைக்கும்விளக்காகிநின்றான்கண்டாய்
மடலார்திரைபுரளுங்காவிரிவாய்
வலஞ்சுழியின்மேவியமைந்தன்கண்டாய்
கொடியாடுநெடுமாடக்கொட்டையூரிற்
கோடீச்சரத்துறையுங்கோமான்றானே. (௪)

Koviloor Digital Library

அக்காவமரைக்கசைத்தவம்மான்கண்டா
யருமறைகளாறங்கமானான்கண்டாய்
தக்கனதுபெருவேள்விதகர்த்தான்கண்டாய்
சதாசிவன்காண்சலந்தரனைப்பிளந்தான்கண்டாய்
மைக்கொண்மயிற்றழைகொண்டுவருநீர்ப்பொன்னி
வலஞ்சுழியான்கண்டாய்மழுவன்கண்டாய்
கொக்கமரும்வயல்புடைசூழ்கொட்டையூரிற்
கோடீச்சரத்துறையுங்கோமான்றானே. (ரு)

சண்டனைநல்லண்டர்தொழச்செய்தான்கண்டாய்
சதாசிவன்கண்டாய்சங்கரன்றான்கண்டாய்
தொண்டர்பலர்தொழுதேத்துங்கழலான்கண்டாய்
சுடரொளியாய்த்தொடர்வரிதாய்நின்றான்கண்டாய்
மண்டுபுனற்பொன்னிவலஞ்சுழியான்கண்டாய்
மாமுனிவர்தம்முடையமருந்துகண்டாய்
கொண்டறவழ்கொடிமாடக்கொட்டையூரிற்
கோடீச்சரத்துறையுங்கோமான்றானே. (சு)

அணவரியான் * கண்டாயமலன்கண்டா
யவிநாசிகண்டாயண்டத்தான்கண்டாய்
பணமணிமாநாகமுடையான்கண்டாய்
பண்டரங்கன்கண்டாய்பகவன்கண்டாய்
மணல்வருநீர்ப்பொன்னிவலஞ்சுழியான்கண்டாய்
மாதவற்குநான்முகற்கும்வரதன்கண்டாய்
குணமுடைநல்லடியார்வாழ்கொட்டையூரிற்
கோடீச்சரத்துறையுங்கோமான்றானே. (எ)

விரைகமழுமலர்க்கொன்றைத்தாரான்கண்டாய்
வேதங்கடொழநின்றநாதன்கண்டாய்
அரையதனிற்புள்ளியதளுடையான்கண்டா
யழலாடிகண்டாயழகன்கண்டாய்
வருதிரைநீர்ப்பொன்னிவலஞ்சுழியான்கண்டாய்
வஞ்சமனத்தவர்க்கரியமைந்தன்கண்டாய்
குரவமரும்பொழில்புடைசூழ்கொட்டையூரிற்
கோடீச்சரத்துறையுங்கோமான்றானே. (அ)

தளங்கிளருந்தாமரையாதனத்தான்கண்டாய்
தசரதன்றன்மகனசைவுதவிர்த்தான்கண்டாய்
இளம்பிறையுமுதிர்சடைமேல்வைத்தான்கண்டா
யெட்டெட்டிருங்கலையுமானான்கண்டாய்
வளங்கிளர்நீர்ப்பொன்னிவலஞ்சுழியான்கண்டாய்
மாமுனிகடொழுதெழுபொற்கழலான்கண்டாய்
குளங்குளிர்செங்குவளை † கிளர்கொட்டையூரிற்
கோடீச்சரத்துறையுங்கோமான்றானே. (கூ)

* அணிவரியான் என்றும் பாடம். † குளங்கிளர்செங்குவளை என்றும் பாடம்.

Koviloor Digital Library

விண்டார்புரமூன்றெரித்தான்கண்டாய்
விலங்கலில்வல்லரக்கனுடலடர்த்தான்கண்டாய்
தண்டாமரையானுமாலுந்தேடத்
தழற்பிழம்பாய்நின்றகழலான்கண்டாய்
வண்டார்பூஞ்சோலைவலஞ்சுழியான்கண்டாய்
மாதேவன்கண்டாய்மறையோடங்கம்
கொண்டாடுவேதியர்வாழ்கொட்டையூரிற்
கோடீச்சரத்துறையுங்கோமான்றானே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருக்கொட்டையூர்த்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - கஎ0.

சுவாமி தேவி திருநாமங்கள் - கோடீசுரர், பந்தாடுநாயகி.

சரு. திருவின்னம்பர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

திருமுக்கால். பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

எண்டிசைக்கும்புகழின்னம்பர்மேவிய
வண்டிசைக்குஞ்சடையீரே
வண்டிசைக்குஞ்சடையீருமைவாழ்த்துவார்
தொண்டிசைக்குந்தொழிலோரே. (க)

யாழ்நரம்பின்னிசையின்னம்பர்மேவிய
தாழ்தருசடைமுடியீரே
தாழ்தருசடைமுடியீருமைச்சார்பவர்
ஆழ்துயருவினையிலரே. (உ)

இளமதிநுதலியொடின்னம்பர்மேவிய
வளமதிவளர்சடை*யீரே
வளமதிவளர்சடை†யீருமைவாழ்த்துவார்
உளமதிமிகவுடையோரே. (ங)

இடிகுரலிசைமுரலின்னம்பர்மேவிய
கடிகமழ்சடைமுடியீரே
கடிகமழ்சடைமுடியீருமகழ்றொழும்
அடியவருவினையிலரே. (ச)

* † வளர்மதிவளர்சடை என்றும் பாடம்.

Kavitoor Digital Library

இமையவர்தொழுதெழுமின்னம்பர்மேவிய
உமையொருகூறுடையீரே
உமையொருகூறுடையீருமையுள்குவார்
அமைகிலாகிலரன்பே. (௫)

எண்ணரும்புகழுடையின்னம்பர்மேவிய
தண்ணருஞ்சடை* முடியீரே
தண்ணருஞ்சடை† முடியீருமைச்சார்பவர்
விண்ணவரடைவுடையோரே. (௬)

எழிறிகழும்பொழிலின்னம்பர்மேவிய
நிழறிகழ்மேனியினீரே
நிழறிகழ்மேனியினீருமைநினைபவர்
குழறியகொடுவினையிலரே. (௭)

எத்தரும்புகழணியின்னம்பர்மேவிய
தூர்த்தனைத்தொலைவுசெய்தீரே
தூர்த்தனைத்தொலைவுசெய்தீருமைத்தொழுபவர் ‡
கூர்த்தநற்குணமுடையோரே. (௮)

இயலுளோர்தொழுதெழுமின்னம்பர்மேவிய
அயனுமாலறிவரியீரே
அயனுமாலறிவரியீருமதடிதொழும்
இயலுளார் ¶ மறுபிறப்பிலரே. (௯)

ஏரமர்பொழிலணியின்னம்பர்மேவிய
தேரமண்சிதைவுசெய்தீரே
தேரமண்சிதைவுசெய்தீருமைச்சேர்பவர்
ஆர்துயராருவினை § யிலரே. (௧0)

ஏடமர்பொழிலணியின்னம்பரீசனை
நாடமர்ஞானசம்பந்தன்
நாடமர்ஞானசம்பந்தனநற்றமிழ்
பாடவல்லார்பழியிலரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

விண்ணவர்மகுடகோடிமிடைந்தசேவடியர்போலும்
பெண்ணொருபாகர்போலும்பேடலியாணர்போலும்
வண்ணமாலயனுங்காணுமால்வரையெரியர்போலும்
எண்ணுருவநேகர்போலுமின்னம்பரீசனாரே. (௧)

* † தண்ணறுஞ்சடை என்றும் பாடம். ‡ தொழுமவர் என்றும் பாடம். ¶ மயலுளார் என்றும் பாடம். § ஆழ்துயராருவினை என்றும் பாடம்.

Koviloor Digital Library

பன்னியமறையர்போலும்பாம்பரையுடையர்போலும்
துன்னியசடையர்போலுந்தூமதிமத்தர்போலும்
மன்னியமழுவர்போலுமாதிடமகிழ்வர்போலும்
என்னையுமுடையர்போலுமின்னம்பரீசனாரே. (௨)

மறியொருகையர்போலுமாதுமையுடையர்போலும்
பறிதலைப்பிறவிநீக்கிப்பணிகொளவல்லர்போலும்
செறிவுடையங்கமாலைசேர்திருவுருவர்போலும்
எறிபுனற்சடையர்போலுமின்னம்பரீசனாரே. (௩)

விடமலிகண்டர்போலும்வேள்வியையழிப்பர்போலும்
கடவுநல்விடையர்*போலுங்காலனைக்காய்வர்போலும்
படமலியரவர்போலும்பாய்புலித்தோலர்போலும்
இடர்களைந்தருள்வர்போலுமின்னம்பரீசனாரே. (௪)

அளிமலர்க்கொன்றைதுன்றுமவிர்சடையுடையர்போலும்
களிமயிற்சாயலோடுங்காமனைவிழிப்பர்போலும்
வெளிவளருருவர்போலும்வெண்பொடியணிவர்போலும்
எளியவரடியர்க்கென்றுமின்னம்பரீசனாரே. (௫)

கணையமர்சிலையர்போலுங்கரியுரியுடையர்போலும்
துணையமர்பெண்ணர்போலுந்தூமணிக்குன்றர்போலும்
அணையுடையடியர்†கூடியன்பொடுமலர்கடூவும்
இணையடியுடையர்போலுமின்னம்பரீசனாரே. (௬)

பொருப்பமர்புயத்தர்போலும்புனலணிசடையர்போலும்
மருப்பிளவாமைதாங்குமார்பில்வெண்ணூலர்போலும்
உருத்திரமூர்த்திபோலுமுணர்விலார்புரங்கண்மூன்றும்
எரித்திடுசிலையர்போலுமின்னம்பரீசனாரே. (௭)

காடிடமுடையர்போலுங்கடிகுரல்விளியர்போலும்
வேடுருவுடையர்போலும்வெண்மதிக்கொழுந்தர்போலும்
கோடலர்வன்னிதும்பைகொக்கிறகலர்ந்தகொன்றை
ஏடமர்சடையர்போலுமின்னம்பரீசனாரே. (௮)

காறிடுவிடத்தையுண்டகண்டரெண்டோளர்போலும்
நீறுடையுருவர்போலுநினைப்பினையரியர்போலும்
பாறுடைத்தலைகையேந்திப்பலிதிரிந்துண்பர்போலும்
ஏறுடைக்கொடியர்போலுமின்னம்பரீசனாரே. (௯)

ஆர்த்தெழுமிலங்கைக்கோனையருவரையடர்ப்பர்போலும்
பார்த்தனோடமர்பொருதுபடைகொடுத்தருள்வர்போலும்
தீர்த்தமாங்கங்கைதன்னைத்திருச்சடைவைப்பர்போலும்
ஏத்தவேழுலகும்வைத்தாரின்னம்பரீசனாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

* கடவுணல்விடையர் என்றும் பாடம். †அணைவுடையடியர் என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

மன்னுமலைமகள்கையால்வருடினமாமறைகள்
சொன்னதுறைதொறுந்தூப்பொருளாயினதூக்கமலத்
தன்னவடிவினவன்புடைத்தொண்டர்க்கமுதரும்பி *
இன்னல்களைவனவின்னம்பரான்றனிணையடியே. (க)

பைதற்பிணக்குழைக்காளிவெங்கோபம்பங்கப்படுப்பான்
செய்தற்கரியதிருநடஞ்செய்தனசீர்மறையோன்
உய்தற்பொருட்டுவெங்கூற்றையுதைத்தனவும்பர்க்கெல்லாம்
எய்தற்கரியனவின்னம்பரான்றனிணையடியே. (உ)

சுணங்குநின்றார்கொங்கையாளுமைசூடினதூமலரால்
வணங்கிநின்றும்பர்கள்வாழ்த்தினமன்னுமறைகடம்மில்
பிணங்கிநின்றின்னனவென்றறியாதன † பேய்க்கணத்தோ
டிணங்கிநின்றாடினவின்னம்பரான்றனிணையடியே. (௩)

ஆறொன்றியசமயங்களினவ்வவர்க்கப்பொருள்கள்
வேறொன்றிலாதனவிண்ணோர்மதிப்பனமிக்குவமன் ‡
மாறொன்றிலாதனமண்ணொடுவிண்ணகமாய்நிதிடினும்
ஈறொன்றிலாதனவின்னம்பரான்றனிணையடியே. (௪)

அரக்கர்தமுப்புரமம்பொன்றினாலடலங்கியின்வாய்க்
கரக்கமுன்வைதிகத்தேர்மிசைநின்றனகட்டுருவம்
பரக்கவெங்கானிடைவேடுருவாயினபல்பதிதோ
றிரக்கநடந்தனவின்னம்பரான்றனிணையடியே. (௫)

கீண்டுங்கிளர்ந்தும்பொற்கேழன்முன்றேடினகேடுபடா
ஆண்டும்பலபலவூழியுமாயினவாரணத்தின்
வேண்டும்பொருள்கள்விளங்கநின்றாடினமேவுசிலம்
பீண்டுங்கழலினவின்னம்பரான்றனிணையடியே. (௬)

போற்றுந்தகையனபொல்லாமுயலகன்கோபப்புன்மை
ஆற்றுந்தகையனவாறுசமயத்தவரவரைத்
தேற்றுந்தகையனதேறியதொண்டரைச்செந்நெறிக்கே
ஏற்றுந்தகையனவின்னம்பரான்றனிணையடியே. (௭)

பயம்புன்மைசேர்தருபாவந்தவிர்ப்பனபார்ப்பதிதன்
குயம்பொன்மைமாமலராகக்குலாவினகூடவொண்ணாச்
சயம்புவென்றேதகுதாணுவென்றேசதுர்வேதங்கணின்
றியம்புங்கழலினவின்னம்பரான்றனிணையடியே. (௮)

* யமுதருத்தி என்றும் பாடம். † றின்னளவென்றறியாதன என்றும் பாடம்.
‡ மிக்குபமன் என்றும் பாடம்.

Koviloor Digital Library

அயனொடுமாலிந்திரன்சந்திராதித்தமாரெலாம்*
சயசயவென்றுமுப்போதும்பணிவனதன்கடல்சூழ்
வியனிலமுற்றுக்கும்† விண்ணுக்குநாகர்வியனகர்க்கும்
இயபரமாவனவின்னம்பரான்றனிணையடியே. (கூ)

தருக்கியதக்கன்றன்வேள்விதகர்த்தனதாமரைப்போ
தருக்கியசெம்பொனுவமனிலாதனவொண்கயிலை
நெருக்கியவாளரக்கன்றலைபத்துநெரித்தவன்றன்
இருக்கியல்பாயினவின்னம்பரான்றனிணையடியே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

என்னிலாருமெனக்கினியாரில்லை
என்னிலும்மினியானொருவனுளன்
என்னுளேயுயிர்ப்பாய்ப்புறம்போந்துபுக்
கென்னுளேநிற்குமின்னம்பரீசனே. (க)

மட்டுண்பார்கண்மடந்தையர்வாட்கணால்
கட்டுண்பார்கள்கருதுவதென்கொலோ
தட்டிமுட்டித்தள்ளாடித்தழுக்குழி
எட்டுமூர்த்தியரின்னம்பரீசனே. (உ)

கனலுங்கண்ணியுந்தண்மதியோடுடன்
புனலுங்கொன்றையுஞ்சூடும்புரிசடை
அனலுஞ்சூலமுமான்மறிக்கையினர்
எனலுமென்‡ மனத்தின்னம்பரீசனே. (ங)

மழைக்கண்மாமயிலாளுமகிழ்ச்சியான்
அழைக்குந்தன்னடியார்கடம்மன்பினைக்
குழைக்குந்தன்னைக்குறிக்கொளவேண்டியே
இழைக்குமென்மனத்தின்னம்பரீசனே. (ச)

தென்னவன்னெனைபாளுஞ்சிவனவன்
மன்னவன்மதியம்மறையோதியான்
முன்னமன்னவன்சேர்வனபூழியான்
இன்னமின்புறவின்னம்பரீசனே. (ரு)

விளக்கும்வேறுபடப்பிறருள்ளத்தில்
அளக்குந்தன்னடியார்மனத்தன்பினைக்
குளக்குமென்னைக்குறிக்கொளவேண்டியே
இளக்குமென்மனத்தின்னம்பரீசனே. (சு)

* அயனொடுமாலிந்திரன் சந்திராதித்தாமரரெல்லாம் என்றும்பாடம். † முழுதுக்கும் என்றும் பாடம். ‡ இனலுமென் என்றும் பாடம்.

Koviloor Digital Library

சடைக்கணாள்புனலாளனல்கையதோர்
கடைக்கணான்மங்கைநோக்கிமவான்மகள்
படைக்கணாற்பருகப்படுவானமக்
கிடைக்கணாய்நின்றவின்னம்பரீசனே. (௭)

தொழுதுதூமலர்தூவித்துதித்துநின்
றழுதுகாமுற்றாற்றுகின்றாரையும்
பொழுதுபோக்கிப்புறக்கணிப்பாரையும்
எழுதுங்கீழ்க்கணக்கின்னம்பரீசனே. (அ)

விரியுந்தண்ணிளவேனிலில்வெண்பிறை
புரியுங்காமனைவேவப்புருவமும்
திரியுமெல்லையின்மும்மதிற்யெழுந்
தெரியநோக்கியவின்னம்பரீசனே. (௯)

சனியும்வெள்ளியுந்திங்களுஞாயிறும்
முனிவனாய்முடிபத்துடையான்றனைக்
கனியவூன்றியகாரணமென்கொலோ
இனியனாய்நின்றவின்னம்பரீசனே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

அல்லிமலர்நாற்றத்துள்ளார்போலு
மன்புடையார்சிந்தையகலார்போலும்
சொல்லினருமறைகடாமேபோலுந்
தூநெறிக்குவழிகாட்டுந்தொழிலார்போலும்
வில்லிற்புரமூன்றெரித்தார்போலும்
வீங்கிருளுநல்வெளியுமானார்போலும்
எல்லிநடமாடவல்லார்போலு
மின்னம்பர்த்தான்றோன்றியீசனாரே. (௧)

கோழிக்கொடியோன்றன்றாதைபோலுங்
கொம்பனாள்பாகங்குளிர்ந்தார்போலும்
ஊழிமுதல்வருந்தாமேபோலு
முள்குவாருள்ளத்தினுள்ளார்போலும்
ஆழித்தேர்வித்தகருந்தாமேபோலு
மடைந்தவர்கட்கன்பராய்நின்றார்போலும்
ஏழுபிறவிக்குந்தாமேபோலு
மின்னம்பர்த்தான்றோன்றியீசனாரே. (உ)

Koviloor Digital Library

தொண்டர்கடந்தகவினுள்ளார்போலுந்
தூநெறிக்குந்தூநெறியாய்நின்றார்போலும்
பண்டிருவர்காணாப்படியார்போலும்
பத்தர்கடஞ்சித்தத் * திருந்தார்போலும்
கண்டமிறையேகறுத்தார்போலுங்
காமனையுங்காலனையுங்காய்ந்தார்போலும்
இண்டைச்சடைசேர்முடியார்போலு
மின்னம்பர்த்தான்றோன்றியீசனாரே. (௩)

வானத்திளந்திங்கட்கன்னிதன்னை
வளர்சடைமேல்வைத்துகந்தமைந்தர்போலும்
ஊனொத்தவேலொன்றுடையார்போலு
மொளிநீறுபூசுமொருவர்போலும்
தானத்தின்முப்பொழுதுந்தாமேபோலுந்
தம்மிற்பிறர்பெரியாரில்லைபோலும் †
ஏனத்தெயிறிலங்கப்பூண்டார்போலு
மின்னம்பர்த்தான்றோன்றியீசனாரே. (௪)

சூழுந்துயரமறுப்பார்போலுந்
தோற்றமிறுதியாய்நின்றார்போலும்
ஆழுங்கடனஞ்சையுண்டார்போலு
மாடலுகந்தவழகர்போலும்
தாழ்வின்மனத்தேனையாளாக்கொண்டு
தன்மையளித்ததலைவர்போலும்
ஏழுபிறப்புமறுப்பார்போலு
மின்னம்பர்த்தான்றோன்றியீசனாரே. (௫)

பாதத்தணையுஞ்சிலம்பர்போலும்
பாரூர்விடையொன்றுடையார்போலும்
பூதப்படையாள்புனிதர்போலும்
பூம்புகலூர்மேயபுராணர்போலும்
வேதப்பொருளாய்விளைவார்போலும்
வேடம்பரவித்திரியுந்தொண்டர்
ஏதப்படாவண்ணநின்றார்போலு
மின்னம்பர்த்தான்றோன்றியீசனாரே. (௬)

பல்லார்தலையோட்டிலூணார்போலும்
பத்தர்கடஞ்சித்தத்திருந்தார்போலும்
கல்லாதார்காட்சிக்கரியார்போலுங்
கற்றவர்களேத்தவிளைவார்போலும்
பொல்லாதபூதப்படையார்போலும்
பொருகடலுமேழ்மலையுந்தாமேபோலும்
எல்லாருமேத்தத்தகுவார்போலு
மின்னம்பர்த்தான்றோன்றியீசனாரே. (௭)

* பத்தர்கட்குச்சித்தத் என்றும் பாடம். † ரில்லார்போலும் என்றும்பாடம்.

Koviloor Digital Library

மட்டுமலியுஞ்சடையார்போலு
மாதையோர்பாகமுடையார்போலும்
கட்டம்பிணிகடவிர்ப்பார்போலுங்
காலன்றன்வாணுள்கழிப்பார்போலும்
நட்டம்பயின்றுடும்பர்போலு
ஞாலமெரிநீர்வெளிகாலானூர்போலும்*
எட்டுத்திசைகளுந்தாமேபோலு
மின்னம்பர்த்தான்றேன்றியீசனூரே. (அ)

கருவுற்றகாலத்தேயென்னையாண்டு
கழற்போதுதந்தளித்தகள்வர்போலும்
செருவிற்புரமூன்றுமட்டார்போலுந்
தேவர்க்குந்தேவராஞ்செல்வர்போலும்
மருவிப்பிரியாதமைந்தர்போலு
மலரடிகணுடிவணங்கலுற்ற
இருவர்க்கொருவராய்நின்றூர்போலு
மின்னம்பர்த்தான்றேன்றியீசனூரே. (கூ)

அலங்கற்சடைதாழவையமேற்று
வரவமரையார்க்கவல்லார்போலும்
வலங்கைமழுவொன்றுடையார்போலும்
வான்றக்கன்வேள்விசிதைத்தார்போலும்
விலங்கலெடுத்துகந்தவெற்றியானை
விறலழித்துமெய்ஞ்ஞரம்பாற் †கீதங்கேட்டன்
றிலங்குசுடர்வாள்கொடுத்தார்போலு
மின்னம்பர்த்தான்றேன்றியீசனூரே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருவின்னம்பர்த்திருப்பதிகம் - ஙு.
ஆ திருப்பதிகம் - கஎரு.

சுவாமி தேவி திருநாமங்கள் - எழுத்தறிந்தநாதர், பூங்கொம்புநாயகி.

சசு. திருப்புறம்பயம். ‡

திருஞானசம்பந்தமூர்த்திநாயனூர்.

திருவிராகம். பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

மறம்பயமலைந்தவர் மதிற்பரிசறுத்தனை
நிறம்பசுமைசெம்மையொடிசைந்துன துநீர்மை
திறம்பயனுறும்பொருடெரிந்துணருநால்வர்க்
கறம்பயனுரைத்தனைபுறம்பயமமர்ந்தோய். (க)

* ஞாலமெரிதிவரைகளானூர்போலும் என்றும் பாடம். † மெய்நரம்பாற் என்றும் பாடம். ‡ புறம்பியம் என்றும் பிரதிபேதமுளதாயினும் அது பொருள்பயவாமையின் பாடமன்மையுணர்க.

Koviloor Digital Library

விரித்தனைதிருச்சடையரித்தொழுகுவெள்ளம்
தரித்தனையதன்றியுமிகப்பெரியகாலன்
எருத்திறவுதைத்தனையிலங்கிழையொர்பாகம்
பொருத்துதல்கருத்தினைபுறம்பயமமர்ந்தோய். (௨)

விரிந்தனைகுவிந்தனைவிழுங்குயிருமிழ்ந்தனை
திரிந்தனைகுருந்தொசிபெருந்தகையுநீயும்
பிரிந்தனைபுணர்ந்தனைபிணம்புகுமயானம்
புரிந்தனைமகிழ்ந்தனைபுறம்பயமமர்ந்தோய். (௩)

வளங்கெழுகடும்புனலொடுஞ்சடையொடுங்கத்
துளங்கமிளம்பிறைசுமந்ததுவிளங்க
உளங்கொளவளைந்தவர்சுடுஞ்சுடலைநீறு
புளங்கொளவிளங்கினை* புறம்பயமமர்ந்தோய். (௪)

பெரும்பிணிபிறப்பினொடிறப்பிலையொர்பாகம்
கரும்பொடுபடுஞ்சொலின்மடந்தையைமகிழ்ந்தோய்
சுரும்புணவரும்பவிழ்திருந்தியெழுகொன்றை
விரும்பினைபுறம்பயமமர்ந்தவிறையோனே. (௫)

அனற்படுதடக்கையவரெத்தொழிலரேனும்
நினைப்புடைமனத்தவர்வினைப்பகையுநீயே
தனற்படுசுடர்ச்சடைதனிப்பிறையொடொன்றப்
புனற்படுகிடக்கையைபுறம்பயமமர்ந்தோய். (௬)

மறத்துறைமறுத்தவர்தவத்தடியருள்ளம்
அறத்துறையொறுத்துனதருட்கிழமைபெற்றோர்
திறத்துளதிறத்தினைமதித்தகலநின்றும்
புறத்துளதிறத்தினை† புறம்பயமமர்ந்தோய். (௭)

இலங்கைபரிறைஞ்சிறைவிலங்கலின்முழங்க
உலங்கெழுதடக்கைகளடர்த்திடலுமஞ்சி
வலங்கொளவெழுந்தவனலங்கவினவஞ்சு
புலங்களைவிலங்கினைபுறம்பயமமர்ந்தோய். (௮)

வடங்கெடநுடங்குணவிடந்தவிடையல்லிக்
கிடந்தவனிருந்தவனளந்துணரலாகார்
தொடர்ந்தவருடம்பொடுநிமிர்ந்துடன்வணங்கப்
புடங்கருள்செய்தொன்றினைபுறம்பயமமர்ந்தோய். (௯)

விடக்கொருவர்நன்றெனவிடக்கொருவர்தீதென
உடற்குடைகளைந்தவருடம்பினைமறைக்கும்
படக்கர்கள்பிடக்குரைபடுத்துமையொர்பாகம்
அடக்கினைபுறம்பயமமர்ந்தவுரவோனே. (௧௦)

* புளங்கிளவிளங்கினை என்றும் பாடம். † அறத்துளதிறத்தினை என்றும் பாடம்.

Koviloor Digital Library

கருங்கழிபொருந்திரைகரைக்குலவுமுத்தம்
தருங்கழுமலத்திறைதமிழ்க்கிழமைஞானன்
சுரும்பவிழ்புறம்பயமமர்ந்ததமிழ்வல்லார்
பெரும்பிணிமருங்கறவொருங்குவர்பிறப்பே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

கொடிமாடநீடெருவுகூடல்கோட்டூர்
கொடுங்கோளூர்தண்வளவிகண்டியூரும்
நடமாடுநன்மருகல்வைகிநாளு
நலமாகுமொற்றியூரொற்றியாகப்
படுமாலைவண்டறையும்பழனம்பாசூர்
பழையாறும்பாற்குளமுங்கைவிட்டிந்நாள்
பொடியேறுமேனியாய்ப்பூதஞ்சூழப்
புறம்பயநம்மூரென்றுபோயினாரே. (க)

முற்றொருவர்போலமுழுநீறாடி
முளைத்திங்கள்சூடிமுந்நூலும்பூண்டு
ஒற்றொருவர்போலவுறங்குவேன்கை
யொளிவளையையொன்றொன்றாவெண்ணுகின்றார்
மற்றொருவரில்லைத்துணையெனக்கு
மால்கொண்டாற்போலமயங்குவேற்குப்
புற்றரவக்கச்சார்த்துப்பூதஞ்சூழப்
புறம்பயநம்மூரென்றுபோயினாரே. (உ)

ஆகாதநஞ்சுண்டவந்திவண்ண
ரைந்தலையமாசுணங்கொண்டம்பொற்றோண்மேல்
ஏகாசமாவிட்டோடொன்றேந்திவந்*
திடுதிருவேபலியென்றார்க்கில்லேபுக்கேன்
பாகேதுங்கொள்ளார்பலியுங்கொள்ளார்
பாவியேன்கண்ணுளேபற்றிநோக்கிப்
போகாதவேடத்தர்பூதஞ்சூழப்
புறம்பயநம்மூரென்றுபோயினாரே. (ங)

பன்மலிந்தவெண்டலைகையிலேந்திப்
பனிமுகில்போன்மேனிப்பவந்தநாதர்
நென்மலிந்தநெய்த்தானஞ்சோற்றுத்துறை
நியமந்துருத்தியுநீடூர்பாச்சில்
கன்மலிந்தோங்குகழுநீர்க்குன்றங்
கடனாகைக்காரோணங்கைவிட்டிந்நாள்
பொன்மலிந்தகோதையருந்தாமுமெல்லாம்
புறம்பயநம்மூரென்றுபோயினாரே. (ச)

* விட்டொன்றேந்திவந் என்றும் பாடம்.

Koviloor Digital Library

செத்தவர்தந்தலைமாலைகையிலேந்திச்
சிரமாலைசூடிச்சிவந்தமேனி
மத்தகத்தயானையுரிவைமூடி
மடவாளவளோடுமானொன்றேந்தி
அத்தவத்ததேவராறுபதின்ம
ராறுநூறாயிரவர்க்காடல்காட்டிப்
புத்தகங்கைக்கொண்டுபுலித்தோல்வீக்கிப்
புறம்பயநம்மூரென்றுபோயினாரே. (௫)

நஞ்சடைந்தகண்டத்தர்வெண்ணீறாடி
நல்லபுலியதண்மேனாகங்கட்டிப்
பஞ்சடைந்தமெல்விரலாள்பாகமாகப்
பராய்த்துறையேனென்றோர்பவளவண்ணர்
துஞ்சிடையேவந்துதுடியுங்கொட்டத்
துண்ணென்றெழுந்திருந்தேன்சொல்லமாட்டேன்
புன்சடையின்மேலோர்புனலுஞ்சூடிப்
புறம்பயநம்மூரென்றுபோயினாரே. (௬)

மறியிலங்குகையர்மழுவொன்றேந்தி
மறைக்காட்டேனென்றோர்மழலைபேசிச்
செறியிலங்குதிண்டோண்மேனீறுகொண்டு
திருமுண்டமாவிட்டதிலகநெற்றி
நெறியிலங்குகூந்தலார்பின்பின்சென்று
நெடுங்கண்பனிசோரநின்றுநோக்கிப்
பொறியிலங்குபாம்பார்த்துப்பூதஞ்சூழப்
புறம்பயநம்மூரென்றுபோயினாரே. (௭)

நில்லாதேபல்லூரும்பலிகள்வேண்டி
நிரைவளையார்பலிபெய்யநிறையுங்கொண்டு
கொல்லேறுங்கொக்கரையுங்கொடுகொட்டியுங்
குடமூக்கிலங்கொழிபக்குளிர்தண்பொய்கை
நல்லானைநல்லூரேதவிரேனென்று *
நறையூரிற்றாமுந்தவிர்வார்போலப்
பொல்லாதவேடத்தர்பூதஞ்சூழப்
புறம்பயநம்மூரென்றுபோயினாரே. (௮)

விரையேறுநீறணிந்தோராமைபூண்டு
வெண்டோடுபெய்திடங்கைவீணையேந்தித்
திரையேறுசென்னிமேற்றிங்கடன்னைத்
திசைவிளங்கவைத்துகந்தசெந்திவண்ணர்
அரையேறுமேகலையாள்பாகமாக
வாரிடத்தில்லாடலமர்ந்தவையன்
புரையேறுதாமேறிப்பூதஞ்சூழப்
புறம்பயநம்மூரென்றுபோயினாரே. (௯)

* தவிரே என்றும் பாடம்.

Koviloor Digital Library

கோவாயவிந்திரனுள்ளிட்டாராகக்
குமரனும்விக்கினவிநாயகன்னும்
பூவாயபீடத்துமேலயன்னும்
பூமியளந்தானும்போற்றிசைப்பப்
பாவாயவின்னிசைகள்பாடியாடிப்
பாரிடமுந்தாமும்பரந்துபற்றிப்
பூவார்ந்தகொன்றைபொறிவண்டார்க்கப்
புறம்பயநம்மூரென்றுபோயினாரே. (௧0)
திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

அங்கமோதியோராறைமேற்றளிநின்றும்போந்துவந்தின்னம்பர்த்
தங்கினோமையுமின்னதென்றிலரீசனாரெழுநெஞ்சமே
கங்குலேமங்கள்கொண்டுதேவர்களேத்திவானவர்* தாந்தொழும்
பொங்குமால்விடையேறிசெல்வப்புறம்பயந்தொழப்போதுமே. (௧)

பதியுஞ்சுற்றமும்பெற்றமக்களும்பண்டையாரலர்பெண்டிரும்†
நெதியிலிம்மனை‡ வாழும்வாழ்க்கையுநினைப்பொழிமடநெஞ்சமே
மதியஞ்சேர்சடைக்கங்கையானிடமகிழுமல்லிகைசெண்பகம்
புதியபூமலர்ந்தெல்லிநாறும்புறம்பயந்தொழப்போதுமே. (௨)

புறந்திரைந்துநரம்பெழுந்துநரைத்துநீயுரையாற்றளர்ந்
தறம்புரிந்துநினைப்பதாண்மையரிதுகாணதறிதியேல்¶
திறம்பியாதெழுநெஞ்சமேசிறுகாலைநாமுறுவாணியம்§
புறம்பயத்துறைபூதநாதன்புறம்பயந்தொழப்போதுமே. (௩)

குற்றொருவரைக்கூறைகொண்டுகொலைகள்சூழ்ந்தகளவெலாம்
செற்றொருவரைச்செய்ததீமைகளிம்மையேவருந்திண்ணமே
மற்றொருவரைப்பற்றிலேன்மறவாதெழுமடநெஞ்சமே
புற்றரவுடைப்பெற்றமேறிபுறம்பயந்தொழப்போதுமே. (௪)

கள்ளிநீசெய்ததீமையுள்ளனபாவமும்பறையும்படி
தெள்ளிதாவெழுநெஞ்சமேசெங்கண்சேவுடைச்சிவலோகனார்
துள்ளிவெள்ளிளவாளைபாய்வயற்றோன்றுதாமரைப்பூக்கண்மேல்
புள்ளிநள்ளிகள்பள்ளிகொள்ளும்புறம்பயந்தொழப்போதுமே. (௫)

* தேவர்களோதிவானவர் என்றும் பாடம். † பண்டையாரல்லர்பெண்டிரும் என்றும் பாடம். ‡ நிதியிலிம்மனை என்றும் பாடம். ¶ காணிதறிதியேல் என்றும் பாடம். § வாணிபம் என்றும் பாடம்.

Koviloor Digital Library

படையெலாம்பகடாரவாளினும்பௌவஞ்சூழ்ந்தரசாளினும்
கடையெலாம்பினைத்தேரைவால்* கவலாதெழுமடநெஞ்சமே
மடையெலாங்கழுநீர்மலர்ந்துமருங்கெலாங்கரும்பாடத்தேன்
புடையெலாமணநாறுசோலைப்புறம்பயந்தொழப்போதுமே. (சு)

முன்னைச்செய்வினையிம்மையில்வந்துமூடுமாதலின்முன்னமே
என்னைநீதியக்காதெழுமடநெஞ்சமேயெந்தைதந்தையூர்
அன்னச்சேவலோடிப்பெடைகள்கூடிச்சேருமணிபொழில்
புன்னைக்கன்னிகளக்கரும்பு † புறம்பயந்தொழப்போதுமே. (எ)

மலமெலாமறுமிம்மையேமறுமைக்கும்வல்வினைசார்கிலா
சலமெலாமொழிநெஞ்சமேயெங்கள்சங்கரன்வந்துதங்குமூர்
கலமெலாங்கடன்மண்டுகாவிரிநங்கையாடியகங்கைநீர்
புலமெலாமண்டிப்பொன்விளைக்கும்புறம்பயந்தொழப்போதுமே. (அ)

பண்டரியனசெய்ததீமையும்பாவமும்பறையும்படி
கண்டரியனகேட்டியேற்கவலாதெழுமடநெஞ்சமே
தொண்டரியனபாடித்துள்ளிநின்றாடிவானவர்தாந்தொழும்
புண்டரிகமலரும்பொய்கைப்புறம்பயந்தொழப்போதுமே. (கூ)

துஞ்சியும்பிறந்துஞ்சிறந்துந்துயக்கறாதமயக்கிவை
அஞ்சியூரன்திருப்புறம்பயத்தப்பனைத்தமிழ்ச்சீரினால்
நெஞ்சினாலேபுறம்பயந்தொழுதுய்துமென்றுநினைத்தன
வஞ்சியாதுரைசெய்யவல்லவர்வல்லவாறுலகாள்வரே. ‡ (க0)

திருச்சிற்றம்பலம்.

திருப்புறம்பயத்திருப்பதிகம் - ௩.

ஆ திருப்பதிகம் - ௧எஅ.

சுவாமி தேவி திருநாமங்கள் - சாக்ஷிநாதர், கரும்படுசொல்லன்னம்.

சஎ. திருவிசயமங்கை.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

மருவமர்குழலுமைபங்கர்வார்சடை
அரவமர்கொள்கையெம்மடிகள்கோயிலாம்
குரவமர்சுரபுன்னை ¶ கோங்குவேங்கைகள்
விரவியபொழிலணிவிசயமங்கையே. (க)

* வினைத்தேரைவால் என்றும் பாடம். † புன்னைக்கன்னிசழிக்கணும் என்றும் பாடம். ‡ வல்லர் வல்லர் வாறுலகாளவே என்றும் பாடம். ¶ சுரபுனை என்றும் பாடம்.

Koviloor Digital Library

கீதமுன்னிசைதரக்கிளரும்வீணையர்
பூதமுன்னியல்புடைப்புநிதர்பொன்னகர்
கோதனம்வழிபடக்குலவுநான்மறை
வேதியர்தொழுதெழுவிசயமங்கையே. (உ)

அக்கரவரையினரரிவைபாகமாத்
தொக்கநல்விடையுடைச்சோதி* தொன்னகர்
தக்கநல்வானவர்தலைவர்நாடொறும்
மிக்கவர்தொழுதெழுவிசயமங்கையே. (௩)

தொடைமலியிதழியுந்துன்னெருக்கொடு
புடைமலிசடைமுடியடிகள்பொன்னகர்
படைமலிமழுவினர்பைங்கண்மூரிவெள்
விடைமலிகொடியணல்விசயமங்கையே. (௪)

தோடமர்காதினன்றுதைந்தநீற்றினன்
ஏடமர்கோதையோடினிதமர்விடம்
காடமர்மாகரிகதறப்போர்த்ததோர்
வேடமதுடையணல்விசயமங்கையே. (௫)

மைப்புரைகண்ணுமைபங்கன்வண்டழல்
ஒப்புரைமேனியெம்முடையவன்னகர்
அப்பொடுமலர்கொடங்கிறைஞ்சிவானவர்
மெய்ப்படவருள்புரிவிசயமங்கையே. (௬)

இரும்பொனின்மலைவில்லினெரிசரத்தினல்
வரும்புரங்களைப்பொடிசெய்தமைந்தனூர்
சுரும்பமர்கொன்றையுந்தூயமத்தமும்
விரும்பியசடையணல்விசயமங்கையே. (௭)

உளங்கையவிருபதோடொரு† பதுங்கொடாங்
களந்தரும்வரையெடுத்திடுமரக்கனைத்
தளர்ந்துடனெரிதரவடர்த்ததன்மையன்
விளங்கிழையொடும்புகும்விசயமங்கையே. (௮)

மண்ணினையுண்டவன்மலரின்மேலுறை
அண்ணல்கடமக்களப்பரியவத்தனூர்
தண்ணறுஞ்சாந்தமும்பூவுநீர்கொடு
விண்ணவர்தொழுதெழுவிசயமங்கையே. (௯)

கஞ்சியுங்கவளமுண்கவணர்கட்டுரை
நஞ்சினுங்கொடியனநமர்கடேர்கிலார்
செஞ்சடைமுடியுடைத்தேவனன்னகர்
விஞ்சையர்தொழுதெழுவிசயமங்கையே. (௧0)

* தொக்கநல்வினையுடைச்சோதி என்றும் பாடம். † உளங்கையிலிருபதோடொரு என்றும் பாடம்.

Koviloor Digital Library

விண்ணவர்தொழுதெழுவிசயமங்கையை
நண்ணியபுகலியுண்ஞானசம்பந்தன்
பண்ணியசெந்தமிழ்பத்தும்வல்லவர்
புண்ணியர்சிவகதிபுகுதறிண்ணமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

குசையுமங்கையிற்கோசமுங்கொண்டவவ்*
வசையின்மங்கலவாசகர்வாழ்த்தவே
இசையமங்கையுந்தானுமொன்றாயினான்
விசையமங்கையுள்வேதியன்காண்மினே. (௧)

ஆதிநாதனடல்விடைமேலமர்
பூதநாதன்புலியதளாடையன்
வேதநாதன்விசயமங்கையுளான்
பாதமோதவல்லார்க்கில்லைபாவமே. (௨)

கொள்ளிடக்கரைக்கோவந்தபுத்தூரில்
வெள்விடைக்கருள்செய்விசயமங்கை
உள்ளிடத்துறைகின்றவுருத்திரன்
கிள்ளிடத்தலையற்றதயனுக்கே. (௩)

திசையுமெங்குங்குலுங்கத்திரிபுரம்
அசையவங்கெய்திட்டாரழலூட்டினான்
விசயமங்கைவிருத்தன்புறத்தடி
விசையின்மங்கிவிழுந்தனன்காலனே. (௪)

பொள்ளலாக்கையகத்திலைம்பூதங்கள்
கள்ளமாக்கிக்கலக்கிபகாரிருள்
விள்ளலாக்கிவிசயமங்கைப்பிரான்
உள்ளநோக்கியென்னுள்ளுளுறையுமே. (௫)

கொல்லையேற்றுக்கொடியொடுபொன்மலை
வில்லையேற்றுடையான்விசயமங்கைச்
செல்வபோற்றியென்பாருக்குத்தென்றிசை
எல்லையேற்றலுமின்சொலுமாகுமே. (௬)

கண்பலுக்ககபாலமங்கைக்கொண்டு
உண்பலிக்குழலுத்தமனுள்ளொளி
வெண்பிறைக்கண்ணியான்விசயமங்கை
நண்பனைத்தொழப்பெற்றதுநன்மையே. (௭)

* கோசமுங்கொண்டவன் என்றும், கோசகமுங்கொண்ட என்றும் பாடம்.

Koviloor Digital Library

பாண்டுவின்மகன்பார்த்தன்பணிசெய்து
வேண்டுநல்வரங்கொள்விசயமங்கை
ஆண்டவன்னடியேநினைந்தாசையால்
காண்டலேகருத்தாகியிருப்பனே. * (அ)

வந்துகேண்மின்மயறீர்மனிதர்காள்
வெந்தநீற்றன்விசயமங்கைப்பிரான்
சிந்தையானினைவார்களைச்சிக்கெனப்
பந்துவாக்கியுய்க்கொளுங்காண்மினே. (௯)

இலங்கைவேந்தனிருபதுதோளிற
விலங்கல்சேர்விரலான்விசயமங்கை
வலஞ்செய்வார்களும்வாழ்த்திசைப்பார்களும்
நலஞ்செய்வாரவர்நன்னெறிநாடியே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருவிசயமங்கைத்திருப்பதிகம் - உ.

ஆ திருப்பதிகம் - ௧அ0.

சுவாமி தேவி திருநாமங்கள் - விசயநாதர், மங்கைநாயகி.

௪அ. திருவைகாவூர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

திருவிராகம். பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

கோழைமிடறாககவிகோளுமிலவாகவிசைகூடும்வகையால்
ஏழையடியாரவர்கள்யாவைசொனசொன்மகிழுமீசனிடமாம்
தாழையிளநீர்முதியகாய்கமுகின்வீழநிரைதாறுசிதறி
வாழையுதிர்வீழ்கனிகளூறிவயல்சேறுசெயும்வைகாவிலே. (௧)

அண்டமுறுமேருவரையங்கிகணைநாணரவதாகவெழிலார்
விண்டவர்தமுப்புரமெரித்தவிகிர்தன்னவன்விரும்புமிடமாம்
புண்டரிகமாமலர்கள்புக்குவிளையாடுவயல்சூழ்தடமெலாம்
வண்டினிசைபாடவழகார் † குயின்மிழற்றுபொழில்வைகாவிலே. (உ)

ஊனமிலராகியுயர்நற்றவமெய்கற்றவையுணர்ந்தவடியார்
ஞானமிகநின்றுதொழநாளுமருள்செய்யவலநாதனிடமாம்
ஆனவயல்சூழ்தருமல்சூழியருகேபொழில்கடோறுமழகார்
வானமதியோடுமழைநீண்முகில்கள்வந்தணவும்வைகாவிலே. (௩)

* காண்டலென்கருத்தாகியிருப்பனே என்றும் பாடம். † வண்டினிசைபாடியழகார் என்றும் பாடம்.

Koviloor Digital Library

இன்னவுருவின்னநிறமென்றறிவதேலரிதுநீதிபலவும்
தன்னவுருவாமெனமிகுத்ததவனீதி*யொடுதானமர்விடம்
முன்னைவினைபோய்வகையினான்முழுதுணர்ந்துமுயல்கின்றமுனிவர்
மன்னவிருபோதுமருவித்தொழுதுசேரும்வயல்வைகாவிலே. (௪)

வேதமொடுவேள்விபலவாயினமிகுத்துவிதியாறுசமயம்
ஓதியுமுணர்ந்துமுளதேவர்தொழநின்றருள்செயொருவனிடமாம்
மேதகையகேதகைகள்புன்னையொடுஞாழலவைமிக்கவழகால்
மாதவிமணங்கமழவண்டுபலபாடுபொழில்வைகாவிலே. (௫)

நஞ்சமுதுசெய்தமணிகண்டனமையாளுடையஞானமுதல்வன்
செஞ்சடையிடைப்புனல்கரந்தசிவலோகனமர்கின்றவிடமாம்
அஞ்சுடரொடாறுபதமேழினிசையெண்ணரியவண்ணமுளவாய்
மைஞ்சரொடுமாதர்பலருந்தொழுதுசேரும்வயல்வைகாவிலே. (௬)

நாளுமிகுபாடலொடுஞானமிகுநல்லமலர்வல்லவகையால்
தோளினொடுகைகுளிரவேதொழுமவர்க்கருள்செய்சோதியிடமாம்
நீளவளர்சோலை†தொறுநாளிபலதுன்றுகனிநின்றதுதிர
வாளைகுதிகொள்ளமதுநாறமலர்விரியும்வயல்வைகாவிலே. (௭)

கையிருபதோடுமெய்கலங்கிடவிலங்கலையெடுத்தகடியோன்
ஐயிருசிரங்களையொருங்குடனெரித்தவழகன்றனிடமாம்
கையின்மலர்கொண்டுநலகாலையொடுமாலைகருதிப்பலவிதம்
வையகமெலாமருவிநின்றுதொழுதேத்துமெழில்வைகாவிலே. (௮)

அந்தமுதலாதிபெருமானமரர்கோனையயன்மாலுமிவர்கள்
எந்தைபெருமானிறைவனென்றுதொழநின்றருள்செயீசனிடமாம்
சிந்தைசெய்துபாடுமடியார்பொடிமெய்பூசியெழுதொண்டரவர்கள்
வந்துபலசந்தமலர்முந்தியணையும்பதிநல்வைகாவிலே. (௯)

ஈசனெமையாளுடையவெந்தைபெருமானிறைவனென்றுதனையே
பேசுதல்செயாவமணர்புத்தரவர்சித்தமணையாவவனிடம்
தேசமதெலாமருவிநின்றுபரவித்திகழநின்றபுகழோன்
வாசமலரானபலதூவியணையும்பதிநல்வைகாவிலே. (௧௦)

முற்றுநமையாளுடையமுக்கண்முதல்வன்றிருவைகாவிலதனைச்
செற்றமலினர்‡சிரபுரத்தலைவன்ஞானசம்பந்தனுரைசெய்
உற்றதமிழ்மாலையீரைந்துமிவைவல்லவருருத்திரரெனப்
பெற்றமரலோகமிகவாழ்வர்பிரியாரவர்பெரும்புகழொடே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவைகாவூர்த்திருப்பதிகம் - ௧.

௸ திருப்பதிகம் - ௧௮௧.

சுவாமி தேவி திருநாமங்கள் - வில்வவனநாதர், வளைக்கைநாயகி.

* தவத்தி என்றும் பாடம். † மீளிவளர்சோலை என்றும் பாடம். ‡ செற்றமவினர் என்றும் பாடம்.

Koviloor Digital Library

௪௯. திருவடகுரங்காடுதுறை.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

கோங்கமேகுரவமேகொழுமலர்ப்புன்னையேகொகுடிமுல்லை *
வேங்கையே † ஞாழலேவிம்முபாதிரிகளேவிரவியெங்கும்
ஓங்குமாகாவிரிவடகரையடைகுரங்காடுதுறை
வீங்குநீர்ச்சடைமுடியடிகளாரிடமெனவிரும்பினரே. (௧)

மந்தமாயிழிமதக்களிற்றிளமருப்பொடுபொருப்பினல்ல
சந்தமாரகிலொடுசாதியின்பலங்களுந்தகையமோதி
உந்துமாகாவிரிவடகரையடைகுரங்காடுதுறை
எந்தையாரிணையடியிமையவர்தொழுதெழுமியல்பினரே. (௨)

முத்துமாமணியொடுமுழைவளராரமுமுகந்துநுந்தி
எத்துமாகாவிரிவடகரையடைகுரங்காடுதுறை
மத்தமாமலரொடுமதிபொதிசடைமுடியடிகடம்மேல்
சித்தமாமடியவர்சிவகதிபெறுவதுதிண்ணமன்றே. (௩)

கறியுமாமிளகொடுகதலியின்பலங்களுங்கலந்துநுந்தி
எறியுமாகாவிரிவடகரையடைகுரங்காடுதுறை
மறியுலாங்கையினர்மலரடிதொழுதெழமருவுமுள்ளக்
குறியினரவர்மிகக்கூடுவார்நீடுவானுலகினூடே. (௪)

கோடிடைச்சொரிந்ததேனதனொடுங்கொண்டல்வாய்விண்டமுன்னீர் ‡
காடுடைப்பீலியுங்கடறுடைப்பண்டமுங்கலந்துநுந்தி
ஓடுடைக்காவிரிவடகரையடைகுரங்காடுதுறை
பீடுடைச்சடைமுடியடிகளாரிடமெனப்பேணினரே. (௫)

கோலமாமலரொடுதூபமுஞ்சாந்தமுங்கொண்டுபோற்றி
வாலியார்வழிபடப்பொருந்தினர்திருந்துமாங்கனிகளுந்தி
ஆலுமாகாவிரிவடகரையடைகுரங்காடுதுறை
நீலமாமணிமிடற்றடிகளைநினையவல்வினைகள்வீடே. (௬)

நீலமாமணிநிறத்தரக்கனையிருபதுகரத்தொடொல்க
வாலினற்கட்டியவாலியார்வழிபடமன்னுகோயில்
ஏலமோடிலையிலவங்கமேயிஞ்சியேமஞ்சளுந்தி
ஆலியாவருபுனல்வடகரையடைகுரங்காடுதுறையே. (௮)

* இத்திருப்பதிகத்தில் ஏழாவது செய்யுள் மறைந்துபோயிற்று. † நாழலே என்றும் பாடம். ‡ முன்னீர் கடலெனின் முந்நீர் என்று பாடங்கொள்க.

Koviloor Digital Library

பொருந்திறற்பெருங்கைமாவுரித்துமையஞ்சவேயொருங்குநோக்கிப்
பெருந்திறத்தநங்கனையநங்கமாவிழித்ததும்பெருமைபோலும்
வருந்திறற்காவிரிவடகரையடைகுரங்காடுதுறை
அருந்திறத்திருவரையல்லல்கண்டோங்கியவடிகளாரே. (௯)

கட்டமண்டேரருங்கடுக்கடின்கழுக்களுங்கசிவொன்றில்லாப்
பிட்டர்தம்மறவுரைகொள்ளலும்பெருவரைப்பண்டமுந்தி
எட்டுமாகாவிரிவடகரையடைகுரங்காடுதுறைச்
சிட்டனாடிதொழச்சிவகதிபெறுவதுதிண்ணமாமே. (௧௦)

தாழிளங்காவிரிவடகரையடைகுரங்காடுதுறைப்
போழிளமதிபொதிபுரிதருசடைமுடிப்புண்ணியனைக்
காழியானருமறைஞானசம்பந்தனகருதுபாடல்
கோழையாவழைப்பினுங்கூடுவார்நீடுவானுலகினூடே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவடகுரங்காடுதுறைத்திருப்பதிகம் - ௧.

ஆ திருப்பதிகம் - ௧௮௨.

சுவாமி தேவி திருநாமங்கள் - குலைவணங்குநாதர், அழகுசடைமுடியாள்.

௫௦. திருப்பழனம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

வேதமோதிவெண்ணூல்பூண்டுவெள்ளையெருதேறிப்
பூதஞ்சூழப்பொலியவருவார்புலியினுரிதோலார்
நாதாவெனவுநக்காவெனவுநம்பாவெனநின்று
பாதந்தொழுவார்பாவந்தீர்ப்பார்பழனநகராரே. (௧)

கண்மேற்கண்ணுஞ்சடைமேற்பிறையுமுடையார்காலனைப்
புண்ணாறுதிரமெதிராறோடப்பொன்றப்புறந்தாளால்
எண்ணாதுதைத்தவெந்தைபெருமானிமவான்மகளோடும்
பண்ணார்களிவண்டறைபூஞ்சோலைப்பழனநகராரே. (௨)

பிறையும்புனலுஞ்சடைமேலுடையார்பறைபோல்விழிகட்பேய்
உறையுமயானமிடமாவுடையாருலகர்தலைமகன்
அறையுமலர்கொண்டடியார்பரவிபாடல்பாடல்செய்
பறையுஞ்சங்கும்பலியுமோவாப்பழனநகராரே. (௩)

Koviloor Digital Library

உரமன்னுயர்கோட்டலறுகூகையலறுமயானத்தில்
இரவிற்பூதம்பாடவாடியெழிலாரலர்மேலைப்
பிரமன்றலையினறவமேற்றபெம்மானெமையாளும்
பரமன்பகவன்பரமேச்சுவரன்பழனநகராரே. (௬)

குலவெஞ்சிலையான்மதின்மூன்றெரித்தகொல்லேறுடையண்ணல்
கலவமயிலுங்குயிலும்பயிலுங்கடல்போற்காவேரி
நலமஞ்சுடையநறுமாங்கனிகள்குதிகொண்டெதிருந்திப்
பலவின்கனிகடிரைமுன்சேர்க்கும்பழனநகராரே. (௫)

வீளைக்குரலும்விளிசங்கொலியும்விழவினொலியோவா
மூளைத்தலைகொண்டடியாரேத்தப்பொடியாமதிளெய்தார்
ஈளைப்படுகிலிலையார்தெங்கிற்குலையார்வாழையின்
பாளைக்கமுகின்பழம்வீழ்சோலைப்பழனநகராரே. (௬)

பொய்யாமொழியார்முறையாலேத்திப்புகழ்வார்திருமேனி
செய்யார்கரியமிடற்றூர்வெண்ணூல்சேர்ந்தவகலத்தார்
கையாடலினார்புனலான்மல்குசடைமேற்பிறையோடும்
பைவாயரவமுடனே * வைத்தார்பழனநகராரே. (௭)

மஞ்சோங்குயாமுடையான்மலையைமாறாயெடுத்தான்றோள்
அஞ்சோடஞ்சுமாறுநான்குமடரவூன்றினார்
நஞ்சார்சுடலைப்பொடிநீறணிந்தநம்பான்வம்பாரும்
பைந்தாமரைகள்கழனிசூழ்ந்தபழனநகராரே. (அ)

கடியார்கொன்றைச்சுரும்பின்மாலைகமழ்புன்சடையார்விண்
முடியாப்படிமூவடியாலுலகமுழுதுந்தாவிய
நெடியானீடாமரைமேலயனுநேடிக்காணாத
படியார்பொடியாடகலமுடையார்பழனநகராரே. (௯)

கண்டான்கழுவாமுன்னேயோடிக்கவ்வைக்கஞ்சியை †
உண்டாங்கவர்களுரைக்குஞ்சிறுசொல்லோரார்பாராட்ட
வண்டாமரையின்மலர்மேனறவமதுவாய்மிகவுண்டு
பண்டான்கெழுமவண்டியாழ்செய்யும்பழனநகராரே. (௧0)

வேய்முத்தோங்கிவிரைமுன்பரக்கும்வேணுபுரந்தன்னுள்
நாவுய்த்தனையதிறலான்மிக்கஞானசம்பந்தன்
பேசற்கினியபாடல்பயிலும்பெருமான்பழனத்தை
வாயிற்பொலிந்தமாலைபத்தும்வல்லார்நல்லாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

* பையாடரவமுடனே என்றும் பாடம். † கலவைக்கஞ்சியை என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருநாவுக்கரசுநாயனர்.

பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

சொன்மாலைபயில்கின்றகுயிலினங்காள்சொல்லீரே
பன்மாலைவரிவண்டுபண்மிழற்றும்பழனத்தான்
முன்மாலைநகுதிங்கண்முகிழ்விளங்குமுடிச்சென்னிப்
பொன்மாலைமார்பனென்புதுநலமுண்டிகழ்வானே. (க)

கண்டகங்காண்முண்டகங்காள்கைதைகாணெய்தல்காள்
பண்டரங்கவேடத்தான்பாட்டோவாப்பழனத்தான்
வண்டுலாந்தடமூழ்கிமற்றவனென்றளிர்வண்ணம்
கொண்டநாடானறிவான்குறிக்கொள்ளாதொழிவானே. (உ)

மனைக்காஞ்சியிளங்குருகேமறந்தாயோமதமுகத்த
பனைக்கைம்மாவுரிபோர்த்தான்பலர்பாடும்பழனத்தான்
நினைக்கின்றநினைப்பெல்லாமுரையாயோநிகழ்வண்டே
சுனைக்குவளைமலர்க்கண்ணாள்சொற்றாதாய்ச்சோர்வாளோ. (ங)

புதியையாயினியையாம்பூந்தென்றல்புறங்காடு
பதியாவதிதுவென்றுபலர்பாடும்பழனத்தான்
மதியாதார்வேள்விதனைமதித்திட்டமதிகங்கை
விதியாளனென்னுயிர்மேல்விளையாடல்விடுத்தானே. (ச)

மண்பொருந்திவாழ்பவர்க்குமாதீர்த்தவேதியர்க்கும்
விண்பொருந்துதேவர்க்கும்வீடுபேறாய்நின்றானைப்*
பண்பொருந்தவிசைபாடும்பழனஞ்சேரப்பனையென்
கண்பொருந்தும்போதத்தும் † கைவிடநான்கடவேனே. (ரு)

பொங்குகோதமால்கடலிற்புறம்புறம்போயிரைதேரும்
செங்கால்வெண்மடநாராய்செயற்படுவதறியேனான்
அங்கோலவளைகவர்ந்தானணிபொழில்சூழ்பழனத்தான்
தங்கோலநறுங்கொன்றைத்தாரருளாதொழிவானே. (சு)

துணையாருமுயங்கிப்போய்த்துறைசேருமடநாராய்
பணையாரவாரத்தான்பாட்டோவாப்பழனத்தான்
கணையாரவிருவிசும்பிற்கடியரணம்பொடிசெய்த
இணையாரமார்பனென்னெழிலுமுண்டிகழ்வானே. (எ)

கூவைவாய்மணிவரன்றிக்கொழித்தோடுங்காவிரிப்பூம்
பாவைவாய்முத்திலங்கப்பாய்ந்தாடும்பழனத்தான்
கோவைவாய்மலைமகள்கோன்கொல்லேற்றின்கொடியாடைப்
பூவைகாண்மழலைகாள்போகாதபொழுதுளதே. (அ)

* வீடுபெறாய்நின்றானைப் என்றும் பாடம். † கண்பொருந்தும் போழ்தத்தும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

புள்ளிமான்பொறியரவம்புள்ளுயர்த்தான்மணிநாகப்
பள்ளியான்றொழுதேத்தவிருக்கின்றபழனத்தான்
உள்ளுவார்*வினைதீர்க்குமென்றுரைப்பருலகெல்லாம்
கள்ளியேனனிவர்க்கென்கனவளையுங்கடவேனே. (௯)

வஞ்சித்தென்வளைகவர்ந்தான்வாரானேயாயிடினும்
பஞ்சிக்காற்சிறகன்னம்பரந்தார்க்கும்பழனத்தான்
அஞ்சிப்போய்க்கலிமெலியவழலோம்புமப்பூதி
குஞ்சிப்பூவாய்நின்றசேவடியாய்கொடியையே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனர் சிவஸ்தலயாத்திரை செய்யும்பொழுது திருப்பழனத்தை யடைந்து சுவாமிதரிசனஞ்செய்துகொண்டு திங்களூரின் வழியாகச்சென்றார். செல்லு ம்பொழுது அவ்வூரிலுள்ள அப்பூதியடிகணயனர் தம்மிடத்து அளவிடப்படாத பேரன் புடையராயிருத்தலைக் கேள்வியுற்று அவருடைய வீட்டுக்கு எழுந்தருளினர். அப்பூதி நாயனர் திருநாவுக்கரசுநாயனரைத் தம்முடைய மனைவியார் புத்திரர் முதலாயினரோ டும் வணங்கி, அங்கே திருவமுதுசெய்யும்படி பிரார்த்திக்க அதற்கு அந்நாயனர் உடன் பட்டமைகண்டு அமுது பாகம்பண்ணுவித்தபின் வாழைக்குருத்து அரிந்துகொண்டுவரும் படி அப்பூதிநாயனரால் தோட்டத்திற்கு அனுப்பப்பட்ட அவர் புத்திரராகிய மூத்ததிரு நாவுக்கரசு பாம்புதீண்டி இறந்தமையை அறிந்த அப்பமூர்த்தி "ஒன்றுகொலாமவர்சிந்தை" என்னுந் திருப்பதிகம்பாடி அப்புத்திரர் உயிர்பெற்றெழும்படி செய்தார். அப்பூதிநாய னர் அதுகண்டும் அதைக்குறித்துச்சந்தோஷியாமல் அப்பமூர்த்தி திருவமுது செய்யா திருந்தமையைக்குறித்துத் துக்கித்துவருந்தினர். அவ்வருத்தத்தை நீக்கும்பொருட்டு அப்பமூர்த்தி திருவமுதுசெய்து அவர்வீட்டிலே சிலநாள் எழுந்தருளியிருந்து பின்பு திருப்பழனத்திற்குப்போய், சுவாமிதரிசனஞ்செய்து "சொன்மாலைபயில்கின்ற" என் னுந் திருப்பதிகம்பாடினர். அத்திருப்பதிகத்திலே, அப்பூதிநாயனரை "அழலோம்பு மப்பூதி குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய்" எனச் சிறப்பித்தருளினர்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

ஆடினாரொருவர்போலுமலர்கமழ்குழலினாளைக்
கூடினாரொருவர்போலுங்குளிர்புனல்வளைந்ததிங்கள்
சூடினாரொருவர்போலுந்தூயநன்மறைகளான்கும்
பாடினாரொருவர்போலும்பழனத்தெம்பரமனாரே. (௧)

போவதோர்நெறியுமானார்புரிசடைப்புநிதனார்நான்
வேவதோர்வினையிற்பட்டுவெம்மைதான்விடவுங்கில்லேன்
கூவலானவர்கள்கேளார்குணமிலாவைவர்செய்யும்
பாவமேதீரநின்றார்பழனத்தெம்பரமனாரே. (௨)

கண்டராய்முண்டராகிக்கையிலோர்கபாலமேந்தித்
தொண்டர்கள்பாடியாடித்தொழுகழற்பரமனார்தாம்
விண்டவர்புரங்கள்எய்தவேதியர்வேதநாவர்
பண்டையென்வினைகளைர்ப்பார்பழனத்தெம்பரமனாரே. (௩)

* உள்குவார் என்றும் பாடம்.

Koviloor Digital Library

நீரவன்றீயினோடுநிழலவனெழிலதாய
பாரவன்விண்ணின்மிக்கபரமவன்பரமயோகி
ஆரவனண்டமிக்கதிசையினொடொளிகளாகிப்
பாரகத்தமர்தமானார்பழனத்தெம்பரமனாரே. (௪)

ஊழியாரூழிதோறுமுலகினுக்கொருவராகிப்
பாழியார்பாவந்தீர்க்கும்பராபரர்பரமதாய
ஆழியானன்னத்தானுமன்றவர்க்களப்பரிய
பாழியார்பரவியேத்தும்பழனத்தெம்பரமனாரே. (௫)

ஆலின்கீழறங்களெல்லாமன்றவர்க்கருளிச்செய்து
நூலின்கீழவர்கட்கெல்லாநுண்பொருளாகிநின்று
காலின்கீழ்க்காலன்றன்னைக்கடுகத்தான்பாய்ந்துபின்னும்
பாலின்கீழ்நெய்யுமானார்பழனத்தெம்பரமனாரே. (௬)

ஆதித்தனங்கிசோமனயனொடுமால்புதனும்
போதித்துநின்றுலகிற்போற்றிசைத்தாரிவர்கள்
சோதித்தாரேழுலகுஞ்சோதியுட்சோதியாகிப்
பாதிப்பெண்ணுருவமானார்பழனத்தெம்பரமனாரே. (௭)

காற்றனாற்காலற்காய்ந்து *காருரிபோர்த்தவீசர்
தோற்றனார்கடலுணஞ்சைத்தோடுடைக்காதர்சோதி
ஏற்றினாரிளவெண்டிங்களிரும்பொழில்சூழ்ந்தகாயம்
பாற்றினார்வினைகளெல்லாம்பழனத்தெம்பரமனாரே. (௮)

கண்ணனும்பிரமனோடுகாண்கிலராகிவந்தே
எண்ணியுந்துதித்துமேத்தவெரியுருவாகிநின்று
வண்ணநன்மலர்கடூவிவாழ்த்துவார்வாழ்த்தியேத்தப்
பண்ணுலாம்பாடல்கேட்டார்பழனத்தெம்பரமனாரே. (௯)

குடையுடையரக்கன்சென்றுகுளிர்கயிலாயவெற்பின்
இடைமடவாளையஞ்சவெடுத்தலுமிறைவனோக்கி
விடையுடைவிகிர்தன்றானும்விரலினாலூன்றிமீண்டும்
படைகொடையடிகள்போலும்பழனத்தெம்பரமனாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

மேவித்துநின்றுவிளைந்தனவெந்துயர்துக்கமெல்லாம்
ஆவித்துநின்றுகழிந்தனவல்லலவையறுப்பான்
பாவித்தபாவனைநீயறிவாய்பழனத்தரசே
கூவித்துக்கொள்ளுந்தனையடியேனைக்குறிக்கொள்வதே. (௧)

* காற்றனுங் காலற்காய்ந்து என்றும், காற்றனுங் காலாற்காய்ந்து என்றும் பாடம்.

Koviloor Digital Library

சுற்றிநின்றார்புறங்காவலமரர்கடைத்தலையில்
மற்றுநின்றார் திருமாலொடுநான்முகன்வந்தடிக்கீழ்ப்
பற்றிநின்றார்பழனத்தரசேயுன்பணியறிவான்
உற்றுநின்றாரடியேனைக்குறிக்கொண்டருளுவதே. (௨)

ஆடிநின்றாயண்டமேழுங்கடந்துபோய்மேலவையும்
கூடிநின்றாய்குவிமென்முலையாளையுங்கொண்டுடனே
பாடிநின்றாய்பழனத்தரசேயங்கொர்பான்மதியம்
சூடிநின்றாயடியேனையஞ்சாமைக்குறிக்கொள்வதே. (௩)

எரித்துவிட்டாயம்பினாற்புரமூன்றுமுன்னேபடவும்
உரித்துவிட்டாயுமையாணடுக்கெய்தவொர்குஞ்சரத்தைப்
பரித்துவிட்டாய்பழனத்தரசேகங்கைவார்சடைமேல்
தரித்துவிட்டாயடியேனைக்குறிக்கொண்டருளுவதே. (௪)

முன்னியுமுன்னைமுளைத்தனமூவெயிலும் * முடனே
மன்னியுமங்குமிருந்தனை † மாயமனத்தவர்கள்
பன்னியநூலின்பரிசறிவாய்பழனத்தரசே ‡
உன்னியுமுன்னடியேனைக்குறிக்கொண்டருளுவதே. (௫)

ஏய்ந்தறுத்தாயின்பனாயிருந்தேபடைத்தான்றலையைக்
காய்ந்தறுத்தாய்கண்ணினாலன்றுகாமனைக்காலனையும்
பாய்ந்தறுத்தாய்பழனத்தரசேயென்பழவினைநோய்
ஆய்ந்தறுத்தாயடியேனைக்குறிக்கொண்டருளுவதே. (௬)

மற்றுவைத்தாயங்கொர்மாலொருபாக ¶ மகிழ்ந்துடனே
உற்றுவைத்தாயுமையாளொடுங்கூடும்பரிசனவே §
பற்றிவைத்தாய்பழனத்தரசேயங்கொர்பாம்பொருகை
சுற்றிவைத்தாயடியேனைக்குறிக்கொண்டருளுவதே. (௭)

ஊரினின்றாயொன்றிநின்றுவிண்டாரையுமொள்ளழலால்
போரினின்றாய்பொறையாயுயிராவிசுமந்துகொண்டு
பாரினின்றாய்பழனத்தரசேபணிசெய்பவர்கட்
காரநின்றாயடியேனைக்குறிக்கொண்டருளுவதே. (௮)

போகம்வைத்தாய்புரிபுன்சடைமேலொர்புனலதனை
யாகம்வைத்தாய்மலையார்மடமங்கைமகிழ்ந்துடனே
பாகம்வைத்தாய்பழனத்தரசேயுன்பணியருளால்
ஆகம்வைத்தாயடியேனைக்குறிக்கொண்டருளுவதே. (௯)

* முன்னியு முன்னிமுளைத்தன மூவெயிலும் என்றும், முன்னியு முன்னிமுளைத்தனர்மூவெயிலும் என்றும், முன்னியுமுன்னைமுளைத்தனர் மூவெயிலும் என்றும் பாடம்.
† மன்னியுமங்குமிருந்தன என்றும் பாடம். ‡ பரிசறிவாப்பழனத்தரசே என்றும் பாடம்.
¶ மாதொருபாக என்றும் பாடம். § கூடும்பரிசவனே என்றும் பாடம்.

Koviloor Digital Library

அடுத்திருந்தாயரக்கன்முடிவாயொடுதோணெரியக்
கெடுத்திருந்தாய்கிளர்ந்தார்வலியைக்கிளையோடுடனே
படுத்திருந்தாய்பழனத்தரசேபுலியின்னுரிதோல்
உடுத்திருந்தாயடியேனைக்குறிக்கொண்டருளுவதே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

அருவனுபத்தியிருரிபோர்த்துமை
உருவனுயொற்றியூர்பதியாகிலும்
பருவரால்வயல்சூழ்ந்தபழனத்தான்
திருவினுற்றிருவேண்டுமித்தேவர்க்கே. (க)

வையம்வந்துவணங்கிவலங்கொளும்
ஐயனையறியார்சிலராதர்கள்
பைகொளாடரவார்த்தபழனன்பால்
பொய்யர்காலங்கள்போக்கிடுவார்களே. (உ)

வண்ணமாகமுறுக்கியவாசிகை
திண்ணமாகத்திருச்சடைச்சேர்த்தியே
பண்ணுமாகவேபாடும்பழனத்தான்
எண்ணுநிரவனுயிரநாமமே. (ங)

மூர்க்கப்பாம்பு* பிடித்ததுமுச்சிட
வாக்கப்பாம்பினைக்கண்டதுணிமதி
பாக்கப்பாம்பினைப்பற்றும்பழனத்தான்
தார்க்கொண்மாலைசடைக்கணிந்திட்டதே. † (ச)

நிலமுண்டமிடற்றினனேர்ந்ததோர்
கோலமுண்டகுணத்தானிறைந்ததோர்
பாலுமுண்டுபழனன்பாலென்னிடை
மாலுமுண்டிறையென்றன்மனத்துளே. (ரு)

மந்தமாகவளர்பிறைசூடியோர்
சந்தமாகத்திருச்சடைசாத்துவான்
பந்தமாயினதீர்க்கும்பழனத்தான்
எந்தைதாய்தந்தையெம்பெருமானுமே. (சு)

மார்க்கமொன்றறியார்மதியில்லிகள்
பூக்கரத்திற்புரிகிலர்மூடர்கள்
பார்க்கநின்றுபரவும்பழனத்தான்
தாட்கணின்றுதலைவணங்கார்களே. (எ)

* மூக்கப்பாம்பு என்றும் பாடம். † சடைக்கரந்திட்டதே என்றும் பாடம்.

Koviloor Digital Library

வறினாரிமையோர்கள்பணிகண்டு
தேறுவாரலர்தீவினையாளர்கள்
பாறினார்பணிவேண்டும்பழனத்தான்
கூறினானுமையாளொடுங்கூடவே. (அ)

சுற்றுவார்தொழுவார்சுடர்வண்ணன்மேல்
தெற்றினார்திரியும்புரமூன்றெய்தான்
பற்றினார்வினைதீர்க்கும்பழனனை
எற்றினான்மறக்கேனெம்பிரானையே. (௯)

பொங்குமாகடல்சூழிலங்கைக்கிறை
அங்கமானவிறுத்தருள்செய்தவன்
பங்கனென்றும்பழனனுமையொடும்
தங்கன்றானடியேனுடை* யுச்சியே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

அலையார்கடனஞ்சமுண்டார்தாமே
யமரர்களுக்கருள்செய்யுமாதிதாமே
கொலையாயகூற்றமுதைத்தார்தாமே
கொல்வேங்கைத் † தோலொன்றசைத்தார்தாமே
சிலையாற்புரமூன்றெரித்தார்தாமே
தீநோய்களைந்தென்னையாண்டார்தாமே
பலிதேர்ந்தழகாயபண்பர்தாமே
பழனநகரெம்பிரானார்தாமே. (௧)

வெள்ளமொருசடைமேலேற்றார்தாமே
மேலார்கண்மேலார்கண்மேலார்தாமே
கள்ளங்கடிந்தென்னையாண்டார்தாமே
கருத்துடையபூதப்படையார்தாமே
உள்ளத்துவகைதருவார்தாமே
யுறுநோய்சிறுபிணிகடீர்ப்பார்தாமே
பள்ளப்பரவைநஞ்சுண்டார்தாமே
பழனநகரெம்பிரானார்தாமே. (௨)

இரவும்பகலுமாய்நின்றார்தாமே
யெப்போதுமென்னெஞ்சத்துள்ளார்தாமே
அரவமரையிலசைத்தார்தாமே
யனலாடியங்கைமறித்தார்தாமே

* தங்கன்றாளடியேனுடை என்றும் பாடம். † கோள்வேங்கை என்றும் பாடம்.

Koviloor Digital Library

குரவங்கமழுங்குற்றாலர்தாமே
கோலங்கண்மேன்மேலுகப்பார்தாமே
பரவுமடியார்க்குப்பாங்கர்தாமே
பழனநகரெம்பிரானார்தாமே. (௩)

மாறின்மதின்மூன்றுமெய்தார்தாமே
வரியரவங்கச்சாகவார்த்தார்தாமே
நீறுசேர்திருமேனிநிமலர்தாமே
நெற்றிநெருப்புக்கண்வைத்தார்தாமே
ஏறுகொடுஞ்சூலக்கையார்தாமே*
என்பாபரணமணிந்தார்தாமே
பாறுண்டலையிற்பலியார்தாமே
பழனநகரெம்பிரானார்தாமே. (௪)

சீரால்வணங்கப்படுவார்தாமே
திசைக்கெல்லாந்தேவாகிநின்றார்தாமே
ஆராவமுதமுமானார்தாமே
யளவில்பெருமையுடையார்தாமே
நீரார்நியமமுடையார்தாமே†
நீள்வரைவில்லாகவளைத்தார்தாமே
பாரார்பரவப்படுவார்தாமே
பழனநகரெம்பிரானார்தாமே. (௫)

காலனுயிர்வௌவவல்லார்தாமே
கடிதோடும்வெள்ளைவிடையார்தாமே
கோலம்பலவுமுகப்பார்தாமே
கோணாகநாணாகப்பூண்டார்தாமே
நீலம்பொலிந்தமிடற்றார்தாமே
நீள்வரையினுச்சியிருப்பார்தாமே
பாலவிருத்தருமானார்தாமே
பழனநகரெம்பிரானார்தாமே (௬)

ஏய்ந்தவுமைநங்கைபங்கர்தாமே
யேழூழிக்கப்புறமாய்நின்றார்தாமே
ஆய்ந்துமலர்தூவநின்றார்தாமே
யளவில்பெருமையுடையார்தாமே
தேய்ந்தபிறைசடைமேல்வைத்தார்தாமே
தீவாயரவதனையார்த்தார்தாமே
பாய்ந்தபடர்கங்கையேற்றார்தாமே
பழனநகரெம்பிரானார்தாமே. (௭)

* ஏறுகொடிசூலக்கையார்தாமே என்றும் பாடம். † நீராய்நியமமுடையார்தாமே என்றும் பாடம்.

Koviloor Digital Library

ஓாதாருள்ளத்தினில்லார்தாமே
யுள்ளூறுமன்பர்மனத்தார்தாமே
பேராதென்சிந்தையிருந்தார்தாமே
பிறர்க்கென்றுங்காட்சிக்கரியார்தாமே
ஊராருமூவுலகத்துள்ளார்தாமே*
யுலகைநடுங்காமற்காப்பார்தாமே
பாரார்முழவத்திடையார்தாமே
பழனநகரெம்பிரானார்தாமே. (அ)

நீண்டவர்க்கோர்நெருப்புருவமானார்தாமே
நேரிழையையொருபாகம்வைத்தார்தாமே
பூண்டரவைப்புலித்தோன்மேலார்த்தார்தாமே
பொன்னிறத்தவெள்ளச்சடையார்தாமே
ஆண்டுலகேழனைத்தினையும்வைத்தார்தாமே
யங்கங்கேசிவமாகிநின்றார்தாமே
பாண்டவரிற்பார்த்தனுக்குப்பரிந்தார்தாமே
பழனநகரெம்பிரானார்தாமே. (கூ)

விடையேறிவேண்டுலகத்திருப்பார்தாமே
விரிகதிரோன்சோற்றுத்துறையார்தாமே.
புடைசூழத்தேவர்குழாத்தார்தாமே
பூந்துருத்திநெய்த்தானமேயார்தாமே
அடைவேபுனல்சூழையாற்றார்தாமே
யரக்கனையுமாற்றலழித்தார்தாமே
படையாப்பல்பூதமுடையார்தாமே
பழனநகரெம்பிரானார்தாமே. (கo)

திருச்சிற்றம்பலம்.

திருப்பழனத்திருப்பதிகம் - கூ.

ஆ திருப்பதிகம். - கஅஅ.

சுவாமி தேவி திருநாமங்கள் - ஆபத்சகாயர், பெரியநாயகி.

ருக திருவையாறு.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

கலையார்மதியோடரநீரும்
நிலையார்சடையாரிடமாகும்
மலையாரமுமாமணிசந்தோ
டலையார்புனல்சேருமையாறே. (க)

* ஊராருமூலத்துள்ளார்தாமே என்றும்பாடம்.

Koviloor Digital Library

பதியொன்றியகொன்றைவடத்தன்
மதியொன்றவுதைத்தவர்வாழ்வு
மதியின்னொடுசேர்கொடிமாடம்
மதியம்பயில்கின்றவையாறே. (௨)

கொக்கின்னிறகின்னொடுவன்னி
புக்கசடையார்க்கிடமாகும்
திக்கின்னிசைதேவர்வணங்கும்
அக்கின்னரையாரதையாறே. * (௩)

சிறைகொண்டபுரம்மவைசிந்தக்
கறைகொண்டவர்காதல்செய்கோயில்
மறைகொண்டநல்வானவர்தம்மில்
அறையும்மொலிசேருமையாறே. (௪)

உமையாளொருபாகமதாகச்
சமைவாரவர்சார்விடமாகும்
அமையாருடல்சோர்தரமுத்தம் †
அமையாவருமந்தணையாறே. (௫)

தலையின்றொடைமாலையணிந்து
கலைகொண்டதொர்கையினர்சேர்வாம்
நிலைகொண்டமனத்தவர்நித்தம்
மலர்கொண்டுவணங்குமையாறே. (௬)

வரமொன்றியமாமலரோன்றன்
சிரமொன்றையறுத்தவர்சேர்வாம்
வரைநின்றிழிவார்தருபொன்னி
அரவங்கொடுசேருமையாறே. (௭)

வரைபொன்றதெடுத்தவரக்கன்
சிரமங்கநெரித்தவர் ‡ சேர்வாம்
விரையின்மலர்மேதகுபொன்னித்
திரைதன்னொடுசேருமையாறே. (௮)

சங்கக்கயனும் ¶ மறியாமைப்
பொங்குஞ்சுடரானவர்கோயில்
கொங்கிற்பொலியும்புனல்கொண்டு §
அங்கிக்கெதிர்காட்டுமையாறே. (௯)

* அக்கின்னரையார்த்தவையாறே என்றும் பாடம். † ருடல்சேர்தருமுத்தம் என்றும், ருடல்சேர்தரமுத்தம் என்றும் பாடம். ‡ சிரமங்கைநெரித்தவர்சேர்வு என்றும் பாடம். ¶ சங்கத்தயனும் என்றும் பாடம். § புனல்கொண்ட என்றும், புனல்கொண்-டங்கிக் கெதிர் என்றும் பாடம்.

Koviloor Digital Library

துவராடையர்தோலுடையார்கள்
கவர்வாய்மொழிகாதல்செய்யாதே
தவராசர்கடாமரையானோ
டவர்தாமணையந்தணையாறே. (கo)

கலையார்கலிக்காழியர்மன்னன்
நலமார்தருஞானசம்பந்தன்
அலையார்புனல்சூழுமையாற்றைச்
சொலுமாலைவல்லார்துயர்வீடே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவிராகம். பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

பணிந்தவரருவினைபற்றறுத்தருள்செயத்
துணிந்தவன்றோலொடுநூலுதைமார்பினில்
பிணிந்தவனரவொடுபேரெழிலாமைகொண்
டணிந்தவன்வளநகரந்தணையாறே. (க)

கீர்த்திமிக்கவனகர்கிளரொளியுடனடப்
பார்த்தவன்பனிமதிபடர்சடைவைத்துப்
போர்த்தவன்கரியுரிபுலியதளரவரை
ஆர்த்தவன்வளநகரந்தணையாறே. (உ)

வரிந்தவெஞ்சிலைபிடித்தவுணர்தம்வளநகர்
எரிந்தறவெய்தவனெழிறிகழ்மலர்மேல்
இருந்தவன்சிரமதுவிமையவர்குறைகொள
அரிந்தவன்வளநகரந்தணையாறே. (ங)

வாய்ந்தவல்லவுணர்தம்வளநகரெரியிடை
மாய்ந்தறவெய்தவன்வளர்பிறைவிரிபுனல்
தோய்ந்தெழுசடையினன்றொன்மறையாறங்கம்
ஆய்ந்தவன்வளநகரந்தணையாறே. (ச)

வானமர்மதிபுல்குசடையிடையரவொடு
தேனமர்கொன்றையன்றிகழ்தருமார்பினன் *
மானனமென்விழிமங்கையோர்பாகமும்
ஆனவன்வளநகரந்தணையாறே. (ரு)

முன்பனைமுனிவரோடமரர்களடிதொழும் †
இன்பனையிணையிலவிறைவனையெழிறிகழ்
என்பொனையேதமில்வேதியர்தாந்தொழும்
அன்பனவளநகரந்தணையாறே. ‡ (சு)

* மார்பினின் என்றும் பாடம். † ரோடமரர்கடொழுதெழும் என்றும் பாடம்.
‡ அன்பனன் வளநகரந்தணையாறே என்றும் பாடம்.

வன்றிறலவுணர்தம்* வளநகரெரியிடை
வெந்தறவெய்தவன்விளங்கியமார்பினில்
பந்தமர்மெல்விரல்பாகமதாகிதன்
அந்தமில்வளநகரந்தணையாறே. (௭)

விடைத்தவல்லரக்கனல்வெற்பினையெடுத்தலும்
அடித்தலத்தாலிறையூன்றிமற்றவனது
முடித்தலைதோளவைநெரிதரமுறைமுறை
அடர்த்தவன்வளநகரந்தணையாறே. (௮)

விண்ணவர்தம்மொடுவெங்கதிரோனல
எண்ணிலிதேவர்களிந்திரன்வழிபடக்
கண்ணனும்பிரமனுங்காண்பரிதாகிய
அண்ணறன்வளநகரந்தணையாறே. (௯)

மருளுடைமனத்துவன்சமணர்கண்மாசறு
இருளுடையிணைத்துவர்ப்போர்வையினார்களும்
தெருளுடைமனத்தவர்தேறுமின்றிண்ணமா
அருளுடையடிகடமந்தணையாறே. (௰)

நலமலிஞானசம்பந்தனதின்றமிழ்
அலைமலிபுனன்மல்குமந்தணையாற்றினைக்
கலைமலிதமிழிவைகற்றுவல்லார்மிக
நலமலிபுகழ்மிகுநன்மையர்தாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

பண் - மேகராகக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

புலனைந்தும்பொறிகலங்கிநெறிமயங்கியறிவழிந்திட்டைம்மேலுந்தி
அலமந்தபோதாக† வஞ்சேலென்றருள்செய்வானமருங்கோயில்
வலம்வந்தமடவார்களடமாடமுழவதிரமழையென்றஞ்சிச்
சிலமந்தியலமந்துமரமேறிமுகில்பார்க்குந்திருவையாறே. (௧)

விடலேறுபடநாகமரைக்கசைத்துவெற்பரையன்பாவையோடும்
அடலேறொன்றதுவேறியஞ்சொலீர்பலியென்னுமடிகள்கோயில்
கடலேறித்திரைமோதிக்காவிரியினுடன்வந்துகங்குல்வைகித்
திடலேறிச்சுரிசங்கஞ்செழுமுத்தங்கீன்றலைக்குந்திருவையாறே. (௨)

கங்காளர்கயிலாயமலையாளர்கானப்பேராளர்மங்கை
பங்காளர்திரிசூலப்படையாளர்விடையாளர்பயிலுங்கோயில்
கொங்காளப்பொழினுழைந்துகூர்வாயாலிறகுலர்த்திக்கூதனீங்கிச்
செங்காலவெண்குருகுபைங்கானலிரைதேருந்திருவையாறே. (௩)

* வெந்திறலவுணர்தம் என்றும் பாடம். † அலம்வந்தபோதாக என்றும் பாடம்.

Koviloor Digital Library

ஊன்பாயுமுடைதலைகொண்டூரூரின் * பலிக்குழல்வாருமையாள்பங்கர்
தான்பாயும்விடையேறுஞ்சங்கரனார் தழலுருவர் தங்குங்கோயில்
மான்பாயவயலருகேமரமேறிமந்திபாய்மடுக்கடோறும்
தேன்பாயமீன்பாயச்செழுங்கமலமொட்டலருந்திருவையாறே. (௪)

நீரோடுகூவிளமுநிலாமதியும்வெள்ளெருக்குநிறைந்தகொன்றைத்
தாரோடுதண்கரந்தைசடைக்கணிந்ததத்துவனார் தங்குங்கோயில்
காரோடிவிசும்பளந்துகடிநாறும்பொழிலணைந்தகமழ்தார்வீதித்
தேரோடுமரங்கேறிச்சேயிழையார்நடம்பயிலுந்திருவையாறே. (௫)

வேந்தாகிவிண்ணவர்க்குமண்ணவர்க்குநெறிகாட்டும்விகிர்தனாகிப்
பூந்தாமநறுங்கொன்றைசடைக்கணிந்தபுண்ணியனார்நண்ணுங்கோயில்
காந்தாரமிசையமைத்துக்காரிகையார் பண்பாடக்கவினார்வீதித்
தேந்தாமென்றரங்கேறிச்சேயிழையார்நடமாடுந்திருவையாறே. (௬)

நின்றுலாநெடுவிசும்பினெருக்கிவருபுரமூன்றுநீள்வாயம்பு
சென்றுலாம்படிதொட்டசிலையாளிமலையாளிசேருங்கோயில்
குன்றெலாங்குயில்கூவக்கொழும்பிரசமலர்பாய்ந்துவாசமல்கு
தென்றலாரடிவருடச்செழுங்கரும்புகண்வளருந்திருவையாறே. (௭)

அஞ்சாதேகயிலாயமலையெடுத்தவரக்கர்கோன்றலைகள்பத்தும்
மஞ்சாடுதோணெரியவடர்த்தவனுக்கருள்புரிந்தமைந்தர்கோயில்
இஞ்சாயலிளந்தெங்கின்பழம்வீழவிளமேதியிரிந்தங்கோடிச்
செஞ்சாலிக்கதிருழக்கிச்செழுங்கமலவயல் † படியுந்திருவையாறே. (௮)

மேலோடிவிசும்பணவிவியனிலத்தைமிகவகழ்ந்துமிக்குநாடும்
மாலோடுநான்முகனுமறியாதவகைநின்றான்மன்னுங்கோயில்
கோலோடக்கோல்வளையார்கூத்தாடக்குவிமுலையார்முகத்தினின்று
சேலோடச்சிலையாடச்சேயிழையார்நடமாடுந்திருவையாறே. (௯)

குண்டாடுகுற்றுடுக்கைச்சமணரொடுசாக்கியருங்குணமொன்றில்லா
மிண்டாடுமிண்டருரைகேளாதேயாளாமின்மேவித்தொண்டீர்
எண்டோளர்முக்கண்ணரெம்மீசரிறைவரினிதமருங்கோயில்
செண்டாடுபுனற்பொன்னிச்செழுமணிகள்வந்தலைக்குந்திருவையாறே. (௧0)

அன்னமலிபொழில்புடைசூழையாற்றெம்பெருமானையந்தண்காழி
மன்னியசீர்மறைநாவன்வளர்ஞானசம்பந்தன்மருவுபாடல்
இன்னிசையாலிவைபத்துமிசையுங்காலீசனடியேத்துவார்கள்
தன்னிசையோடமருலகிற்றவநெறிசென்றெய்துவார்தாழாதன்றே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

* ரூரன் என்றும் பாடம். † செங்கமலவயல் என்றும் பாடம்.

Koviloor Digital Library

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

கோடல்கோங்கங்குளிர்கூவிளமாலைகுலாயசீர்
ஓடுகங்கையொளிவெண்பிறைசூடுமொருவனார்
பாடல்வீணைமுழவங்குழன்மொந்தைபண்ணாகவே
ஆடுமாறுவல்லானுமையாறுடையையனே. (௧)

தன்மையாருமறிவாரில்லைதாம்பிறரெள்கவே
பின்னுமுன்னுஞ்சிலபேய்க்கணஞ்சூழத்திரிதர்வர்
துன்னவாடையுடுப்பர்சுடலைப்பொடிப்பூசுவர்
அன்னமாலுந்துறையானுமையாறுடையையனே. (௨)

கூறுபெண்ணுடைகோவணமுண்பதும்வெண்டலை
மாறிலாருங்கொள்வாரில்லைமார்பிலணிகலம்
ஏறுமேறித்திரிவரிமையோர்தொழுதேத்தவே
ஆறுநான்குஞ்சொன்னானுமையாறுடையையனே. (௩)

பண்ணினல்லமொழியார்பவளத்துவர்வாயினார்
எண்ணினல்லகுணத்தாரிணைவேல்வென்றகண்ணினார்
வண்ணம்பாடிவலிபாடித்தம்வாய்மொழிபாடவே
அண்ணல்கேட்டுகந்தானுமையாறுடையையனே. (௪)

வேனலானைவெருவவுரிபோர்த்துமையஞ்சவே
வானையூடறுக்கும்மதிசூடியமைந்தனார்
தேனெய்பாறயிர்தெங்கிளநீர்கரும்பின்றெளி
ஆனஞ்சாடுமுடியானுமையாறுடையையனே. (௫)

எங்குமாகிநின்றானுமியல்பறியப்படா*
மங்கைபாகங்கொண்டானுமதிசூடுமைந்தனும்
பங்கமில்பதினெட்டொடுநான்குக்குணர்வுமாய்
அங்கமாறுஞ்சொன்னானுமையாறுடையையனே. (௬)

ஓதியாருமறிவாரில்லையோதியுலகெலாம்
சோதியாய்நிறைந்தான்சுடர்ச்சோதியுட்சோதியான்
வேதியாகிவிண்ணாகிமண்ணோடெறிகாற்றுமாய்†
ஆதியாகிநின்றானுமையாறுடையையனே. (௭)

குரவநாண்மலர்கொண்டடியார்வழிபாடுசெய்
விரவிநீறணிவார்சிலதொண்டர்வியப்பவே
பரவிநாடொறும்பாடநம்பாவம்பறைதலால்
அரவமார்த்துகந்தானுமையாறுடையையனே. (௮)

* மயலுறியப்படா என்றும் பாடம். † எரிகாற்றுமாய் என்றும் பாடம்.

Koviloor Digital Library

உரைசெய்தொல்வழிசெய்தறியாவிலங்கைக்குமன்
வரைசெய்தோளடர்த்தும்மதிசூடியமைந்தனூர்
கரைசெய்காவிரியின்வடபாலதுகாதலான்
அரைசெய்மேகலையாளுமையாறுடையையனே. (கூ)

மாலுஞ்சோதிமலரானுமறிகிலாவாய்மையான்
காலங்காம்பு* வயிரங்கடிகையன்பொற்கழல்
கோலமாய்க்கொழுந்தீன்றுபவளந்திரண்டதோர்
ஆலநீழலுளானுமையாறுடையையனே. (க0)

கையிலுண்டுழல்வாருங்கமழ்துவராடையால்
மெய்யைப்போர்த்துழல்வாருமுரைப்பனமெய்யல
மைகொள்கண்டத்தெண்டோண்முக்கணான்கழல்வாழ்த்தவே
ஐயந்தேர்ந்தளிப்பானுமையாறுடையையனே. (கக)

பலிதிரிந்துழல்பண்டங்கன்மேயவையாற்றினைக்
கலிகடிந்தகை† யான்கடற்காழியர்காவலன்
ஒலிகொள்சம்பந்தனொண்டமிழ்பத்தும்வல்லார்கள்போய்
மலிகொள்விண்ணிடைமன்னியசீர்பெறுவார்களே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

திருவிராகம். பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

திருத்திகழ்மலைச்சிறுமியோடுமிகுதேசர்
உருத்திகழெழிற்கயிலைவெற்பினுறைதற்கே
விருப்புடையவற்புதரிருக்குமிடமோரார்
மருத்திகழ்பொழிற்குலவுவண்டிருவையாறே. (க)

கந்தமரவுந்துபுகையுந்தலில்விளக்கேர்
இந்திரனுணர்ந்துபணியெந்தையிடமெங்கும்
சந்தமலியுந்தருமிடைந்தபொழில்சார
வந்தவளிநந்தணவு‡ வண்டிருவையாறே. (உ)

கட்டுவடமெட்டுமுறுவட்டமுழவத்தில்
கொட்டுகரமிட்டவொலிதட்டும்வகைநந்திக்
கிட்டமிகநட்டமவையிட்டவரிடஞ்சீர்
வட்டமதிலுட்டிகழும்வண்டிருவையாறே. (ங)

நண்ணியொர்வடத்தினிழனால்வர்முனிவர்க்கன்
றெண்ணிலிமறைப்பொருள்விரித்தவரிடஞ்சீர்த்
தண்ணின்மலிசந்தகிலொடுந்திவருபொன்னி
மண்ணின்மிசைவந்தணவுவண்டிருவையாறே. (ச)

* காலகாம்பு என்றும் பாடம். † கலிகடந்தகை என்றும் பாடம். ‡ வந்தவளினந்தணவு என்றும் பாடம்.

Koviloor Digital Library

வென்றிமிகுதாரகனதாருயிர்மடங்கக்
கன்றிவருகோபமிகுகாளிகதமோவ
நின்றுநடமாடியிடநீடுமலர்மேலால்
மன்றன்மலியும்பொழில்கொள்வண்டிருவையாறே. (௫)

பூதமொடுபேய்கள்பலபாடநடமாடிப்
பாதமுதல்பையரவுகொண்டணிபெறுத்திக்
கோதையரிடும்பலிகொளும்பரனிடம்பூ
மாதவிமணங்கமழும்வண்டிருவையாறே. (௬)

துன்னுகுழன்மங்கையுமைநங்கைசுளிவெய்தப்
பின்னொருதவஞ்செய்துழல்பிஞ்ஞகனுமங்கே
என்னசதி* யென்றுரைசெயங்கணனிடஞ்சீர்
மன்னுகொடையாளர்பயில்வண்டிருவையாறே. (௭)

இரக்கமில்குணத்தொடுலகெங்குநலிவெம்போர்
அரக்கன்முடியத்தலைபுயத்தொடுமடங்கத்
துரக்கவிரலிற்சிறிது† வைத்தவரிடஞ்சீர்
வரக்கருணையாளர்பயில்வண்டிருவையாறே. (௮)

பருத்துருவதாகிவிண்ணடைந்தவனொர்பன்றிப்
பெருத்துருவதாயுலகிடந்தவனுமென்றும்
கருத்துருவொணாவகைநிமிர்ந்தவனிடங்கார்
வருத்துவகைதிர்கொள்‡ பொழில்வண்டிருவையாறே. (௯)

பாக்கியமதொன்றுமில்சமண்பதகர்புத்தர்
சாக்கியர்களென்றுடல்பொதிந்துதிரிவார்தாம்
நோக்கரியதத்துவனிடம்படியின்மேலால்
மாக்கமுறநீடுபொழில்வண்டிருவையாறே. (௧௦)

வாசமலியும்பொழில்கொள்வண்டிருவையாற்றுள்
ஈசனையெழிற்புகலிமன்னவன்மெய்ஞ்ஞானப்
பூசுரனுரைத்ததமிழ்பத்துமிவைவல்லார்
நேசமலிபத்தரவர்நின்மலனடிக்கே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

* சகி என்றும் பாடம். † தாக்கவ்விரலிற்சிறிது என்றும் பாடம். ‡ வகைநீர்
கோள் என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருநாவுக்கரசுநாயனார்.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

மாதர்ப்பிறைக்கண்ணியானைமலையான்மகளொடும்பாடிப்
போதொடுநீர்சுமந்தேத்திப்புகுவாரவர்பின்புகுவேன்
யாதுஞ்சுவடுபடாமலையாறடைகின்றபோது
காதன்மடப்பிடியோடுங்களிறுவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (க)

போழிளங்கண்ணியினானைப்பூந்துகிலாளொடும்பாடி
வாழியம்போற்றி * யென்றேத்திவட்டமிட்டாடாவருவேன்
ஆழிவலவனின்றேத்துமையாறடைகின்றபோது
கோழிபெடையொடுங்கூடிக்குளிர்ந்துவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (உ)

எரிப்பிறைக்கண்ணியினானையேந்திழையாளொடும்பாடி
முரித்தவிலயங்களிட்டுமுகமலர்ந்தாடாவருவேன்
அரித்தொழுகும்வெள்ளருவியையாறடைகின்றபோது
வரிக்குயில்பேடையொடாடிவைகிவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (௩)

பிறையிளங்கண்ணியினானைப்பெய்வளையாளொடும்பாடித்
துறையிளம்பன்மலர்தூவித்தோளைக்குளிரத்தொழுவேன்
அறையிளம்பூங்குயிலாலுமையாறடைகின்றபோது
சிறையிளம்பேடையொடாடிச்சேவல்வருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (௪)

ஏடுமதிக்கண்ணியானையேந்திழையாளொடும்பாடிக்
காடொடுநாடுமலையுங்கைதொழுதாடாவருவேன்
ஆடலமர்ந்துறைகின்றவையாறடைகின்றபோது
பேடைமயிலொடுங்கூடிப்பிணைந்துவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (௫)

தண்மதிக்கண்ணியினானைத்தையனல்லாளொடும்பாடி
உண்மெலிசிந்தையனாகியுணராவுருகாவருவேன்
அண்ணலமர்ந்துறைகின்றவையாறடைகின்றபோது
வண்ணப்பகன்றிலொடாடிவைகிவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (௬)

* வாழியெம்போற்றி என்றும் பாடம்.

Koviloor Digital Library.

கடிமதிக்கண்ணியினானைக்காரிகையாளொடும்பாடி
வடிவோடுவண்ணமிரண்டும்வாய்வேண்டுவசொல்லிவாழ்வேன்
அடியிணைபார்க்குங்கழலானையாறடைகின்றபோது
இடிகுரலன்னதொரேனமிசைந்துவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (எ)

விரும்புமதிக்கண்ணியானைமெல்லியலாளொடும்பாடிப்
பெரும்புலர்காலையெழுந்துபெறுமலர்கொய்யாவருவேன்
அருங்கலம்பொன்மணியுந்து * மையாறடைகின்றபோது
கருங்கலைபேடையொடாடிக்கலந்துவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (அ)

முற்பிறைக்கண்ணியினானைமொய்குழலாளொடும்பாடிப்
பற்றிக்கயிறறுக்கில்லேன்பாடியுமாடாவருவேன்
அற்றருள்பெற்றுநின்றாரோடையாறடைகின்றபோது
நற்றுணைப்பேடையொடாடிநாரைவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (௯)

திங்கண்மதிக்கண்ணியானைத்தேமொழியாளொடும்பாடி
எங்கருணல்குங்கொலெந்தையெனக்கினியென்னாவருவேன்
அங்கிளமங்கையராடுமையாறடைகின்றபோது
பைங்கிளிபேடையொடாடிப்பரந்துவருவன † கண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (௧௦)

வளர்மதிக்கண்ணியினானைவார்குழலாளொடும்பாடிக்
களவுபடாததொர்காலங்காண்பான்கடைக்கணிக்கின்றேன்
அளவுபடாததொரன்போடையாறடைகின்றபோது
இளமணநாகுதழுவியேறுவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார், தென்கைலாசமாகிய திருக்காளத்தியில் எழுந்தருளியிருக்கும்போது உத்தரகைலாசத்திலே சிவபிரான் எழுந்தருளியிருக்கின்ற திருக்கோலத்தைத் தரிசிக்க விரும்பி, திருக்காளத்தி மலையினின்று நீங்கி, உத்தரதிசையிலிருக்கின்ற திருப்பருப்பதத்தை அடைந்து வணங்கி, திருப்பதிகம்பாடிச் சென்று, காசியைவணங்கிக்கொண்டு, அதற்கப்பால் இருக்கின்ற கற்சுரத்திலே சாகமூலபலங்கள் புசித்தலையும் ஒழிந்து, இராப்பகல் விடாது நடந்தார்; அதனால் பாதங்கள் பரடுவரைக்குந் தேய்ந்தன. பின் இரண்டுகைகளையும் ஆதாரமாகக்கொண்டு தாவிச்சென்றார்; கைகளும் மணிக்கட்டு அளவுந் தேய்ந்து சிதைந்தன. பின் மார்பினால் நகர்ந்து போயினார்; மார்புந் தசைநைந்து சிந்த, எலும்புகளும் முறிபலுற்றன. பின் புரண்டு புரண்டு போயினார்; அதனால் தேகமுழுதும் அரைய நாயனார் திருக்கைலாசகிரியினிடத்துப் பதிந்த அன்பின்மிகுதி

* அருங்கலம்பன்மணியுந்து என்றும் பாடம். † பறந்துவருவன என்றும் பாடம்.

Koviloor Digital Library

யினல் மெல்ல நகருதற்கு முயன்றும் கூடாமையால் சத்தியற்றவராய் வழியிலே கிடந்தார். அப்போது சிவபிரான் ஒரு முனிவர்வடிவங்கொண்டு நாயனருக்குமுன் தோன்றி "நீர் அங்கங்கள் எல்லாம் அழிந்துபோக வருத்தத்தோடும் இந்தக்கொடியகாட்டில் எதன்பொருட்டு வந்தீர்" என்று கேட்டார். நாயனர் திருவேடத்தையுடைய அம்முனிவரைக் கண்டபொழுதே பேசுதற்கு அற்பசத்தியுண்டாக, அவரை நோக்கி, "முனிவரே! நமது கடவுளாகிய பரமசிவன், உத்தரகைலாசத்திலே உமாதேவிசமேதராய் வீற்றிருக்கின்ற திருக்கோலத்தைத் தரிசித்து வணங்கும்பொருட்டு விரும்பிவந்தேன்" என்றார். அதற்கு முனிவர் தேவர்களாலும் அடையப்படுதற்கு அரிதாகிய திருக்கைலாசகிரி மனிதர்களால் அடையப்படுதற்கு எளிதா! நீர் இந்தக்கொடுஞ்சுரத்திலே வந்து என்செய்தீர், இனித் திரும்பிவிடுதலே உத்தமம்" என்றார். உடனே நாயனர் திருக்கைலாசத்திலிருக்கின்ற சிவபெருமானுடைய திருக்கோலத்தைத் தரிசித்தன்றி அநித்தியமாகிய இத்தேகத்தைக்கொண்டு திரும்பேன் என்று மறுத்தார். சுவாமி அவருடைய உள்ளக்கருத்தையும் துணிவையுங்கண்டு மறைந்தருளி ஆகாயத்தில் அசரீரியாய், "நாவுக்கரசனே நீ இந்தத் தடாகத்திலே முழுகித் திருவையாற்றை அடைந்து, நம்மைக் கைலாசகிரியில் வீற்றிருந்தபடி அந்தஸ்தலத்திலே தரிசித்து வணங்கு" என்று பணித்தருளினர்.

நாயனர் அப்பணியைச் சிரமேற்கொண்டு, தடாகத்திலே முழுகி, திருவையாற்றிலிருக்கின்ற ஓர் வாவியின்மேலே தோன்றிக் கரையிலேறி, அத்திருப்பதியிலுள்ள சராசரங்கள் தங்கள் தங்கள் துணையோடும் பொலிதலைக் கண்டு, அவைகளைச் சிவமும் சத்தியுமாகப் பார்த்து வணங்கி "மாதர்ப்பிறைக்கண்ணியானை" என்னுந் திருப்பதிகம் பாடிக்கொண்டு, சிவாலயத்துக்கு முன்னே சென்று அவ்வாலயம் திருக்கைலாசகிரியாக விளங்கக்கண்டு ஆனந்தக்கூத்தாடித் திருத்தாண்டகங்கள் பாடினர்.

பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

விடகிலேனடிநாயேன்வேண்டியக்காலியாதொன்றும்
இடகிலேனமணர்கடமறவுரைகேட்டலமந்தேன்
தொடர்கின்றேனுன்னுடையதூமலர்ச்சேவடிகாண்பான்
அடைகின்றேனையாறர்க்காளாய்நானுய்ந்தேனே. (௧)

செம்பவளத்திருவுருவர்திகழ்சோதிகுழைக்காதர்
கொம்பமருங்கொடிமருங்குற்கோல்வளையாளொருபாகர்
வம்பவிழுமலர்க்கொன்றைவளர்சடைமேல்வைத்துகந்த
அம்பவளவையாறர்க்காளாய்நானுய்ந்தேனே. (௨)

நணியானேசேயானேநம்பானேசெம்பொன்னின்
துணியானேதோலானேசுண்ணவெண்ணீற்றானே
மணியானேவானவர்க்குமருந்தாகிப்பிணிதீர்க்கும்
அணியானேயையாறர்க்*காளாய்நானுய்ந்தேனே. (௩)

ஊழித்தீயாய்நின்றாயுள்குவாருள்ளத்தாய்
வாழித்தீயாய்நின்றாய்வாழ்த்துவார்வாயானே
பாழித்தீயாய்நின்றபடர்சடை†மேற்பனிமதியம்
ஆழித்தீயையாறர்க்காளாய்நானுய்ந்தேனே. (௪)

* அணியானவையாறர்க் என்றும் பாடம். † நின்றாய்படர்சடை என்றும் பாடம்.

Koviloor Digital Library

சடையானேசடையிடையேதவழுந்தண்மதியானே
விடையானேவிடையேறிப்புரமெரித்தவித்தகனே
உடையானேயுடைதலைகொண்டேருண்பலிக்* குழலும்
அடையானேயையாறர்க்காளாய்நானுய்ந்தேனே. (ரு)

நீரானேதீயானேநெதியானேகதியானே
ஊரானேயுலகானேயுடலானேயுயிரானே
பேரானேபிறைசூடிபிணிதீர்க்கும்பெருமானென்
றாராதவையாறர்க்காளாய்நானுய்ந்தேனே. (சு)

கண்ணானாய்மணியானாய்கருத்தானாய்அருத்தானாய்
எண்ணானாயெழுத்தானாயெழுத்தினுக்கோரியல்பானாய்
விண்ணானாய்விண்ணிடையேபுரமெரித்தவேதியனே
அண்ணானையையாறர்க்காளாய்நானுய்ந்தேனே. (எ)

மின்னானாயுருவானாய்வேதத்தின்பொருளானாய்
பொன்னானாய்மணியானாய்பொருகடல்வாய்முத்தானாய்
நின்னானாரிருவர்க்குங்காண்பரியநிமிர்சோதி
அன்னானையையாறர்க்†காளாய்நானுய்ந்தேனே. (அ)

முத்திசையும்புனற்பொன்னிமொய்பவளங்கொழித்துந்தப்
பத்தர்பலர்நீர்மூழ்கிப்பலகாலும்பணிந்தேத்த
எத்திசையும்வானவர்களெம்பெருமானெனவிறைஞ்சும்
அத்திசையாமையாறர்க்காளாய்நானுய்ந்தேனே. (கூ)

கருவரைசூழ்கடலிலங்கைக்கோமானைக்கருத்தழியத்
திருவிரலாலுதகாணஞ்செய்துகந்தசிவமூர்த்தி
பெருவரைசூழ்வையகத்தார்பேர்நந்தியென்றேத்தும்
அருவரைசூழையாறர்க்காளாய்நானுய்ந்தேனே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

கங்கையைச்சடையுள்வைத்தார்கதிர்பொதியரவும்‡வைத்தார்
திங்களைத்திகழவைத்தார்திசைதிசைதொழவும்வைத்தார்
மங்கையைப்பாகம்வைத்தார்மான்மறிமழுவும்வைத்தார்
அங்கையுளனலும்வைத்தாரையனையாறனாரே. (க)

பொடிதனைப்பூசவைத்தார்பொங்குவெண்ணூலும்வைத்தார்
கடியதோர்நாகம்வைத்தார்காலனைக்காலவைத்தார்¶
வடிவுடைமங்கைதன்னைமார்பிலோர்பாகம்வைத்தார்
அடியினைதொழவும்வைத்தாரையனையாறனாரே. (உ)

* கொண்டேரின்பலிக் என்றும், கொண்டேரான்பலிக் என்றும் பாடம். † அன்னானையையாறர்க் என்றும் பாடம். ‡ கதிர்ப்பொதியரவும் என்றும், கதிர்பொதியரவும் என்றும் பாடம். ¶ காலனைக்காலில்வைத்தார் என்றும் பாடம்.

Koviloor Digital Library

உடைதருகீளும்வைத்தாருலகங்களனைத்தும்வைத்தார்
படைதருமழுவும்வைத்தார்பாய்புலித்தோலும்வைத்தார்
விடைதருகொடியும்வைத்தார்வெண்புரிநூலும்வைத்தார்
அடைதரவருளும்வைத்தாரையனையாறனாரே. (௩)

தொண்டர்கடொழவும்வைத்தார்தூமதிசடையில்வைத்தார்
இண்டையைத்திகழவைத்தாரெமக்கென்றுமின்பம்வைத்தார்
வண்டுசேர்குழலினாளைமருவியோர்பாகம்வைத்தார்
அண்டவானவர்களேத்துமையனையாறனாரே. (௪)

வானவர்வணங்கவைத்தார்வல்வினைமாயவைத்தார்
கானிடைநடமும்வைத்தார்காமனைக்கனலாவைத்தார்
ஆனிடையைந்தும்வைத்தாராட்டுவார்க்கருளும்வைத்தார்
ஆனையினுரிவைவைத்தாரையனையாறனாரே. (௫)

சங்கணிகுழையும்வைத்தார்சாம்பர்மெய்ப்பூசவைத்தார் *
வெங்கதிரெரியவைத்தார்விரிபொழிலனைத்தும்வைத்தார்
கங்குலும்பகலும்வைத்தார்கடுவினைகளையவைத்தார்
அங்கமதோதவைத்தாரையனையாறனாரே. (௬)

பத்தர்கட்கருளும்வைத்தார்பாய்விடையேறவைத்தார்
சித்தத்தையொன்றவைத்தார் † சிவமதேநினையவைத்தார்
முத்தியைமுற்றவைத்தார்முறைமுறைநெறிகள்வைத்தார்
அத்தியினுரிவைவைத்தாரையனையாறனாரே. (௭)

ஏறுகந்தேறவைத்தாரிடைமருதிடமும்வைத்தார்
நாறுபூங்கொன்றைவைத்தார்நாகமுமரையில்வைத்தார்
கூறுமையாகவைத்தார் ‡ கொல்புலித்தோலும்வைத்தார்
ஆறுமோர்சடையில்வைத்தாரையனையாறனாரே. (௮)

பூதங்கள்பலவும்வைத்தார்பொங்குவெண்ணீறும்வைத்தார்
கீதங்கள்பாடவைத்தார்கின்னரந்தன்னைவைத்தார்
பாதங்கள்பரவவைத்தார்பத்தர்கள்பணியவைத்தார்
ஆதியுமந்தம்வைத்தாரையனையாறனாரே. (௯)

இரப்பவர்க்கீயவைத்தாரீபவர்க்கருளும்வைத்தார்
கரப்பவர்தங்கட்கெல்லாங்கடுநரகங்கள்வைத்தார்
பரப்புநீர்க்கங்கைதன்னைப்படர்சடைப்பாகம்வைத்தார்
அரக்கனுக்கருளும்வைத்தாரையனையாறனாரே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

* மெய்ப்பூசவைத்தார் என்றும் பாடம். † சித்தரையொன்றைவைத்தார் என்றும் பாடம். ‡ கூறுமையாகம்வைத்தார் என்றும், கூறுமைபாகம்வைத்தார் என்றும்பாடம்.

Koviloor Digital Library

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

குண்டனாய்ச்சமணரோடேகூடிநான்கொண்டமாலைத்
துண்டனேசுடர்கொள்சோதிதூநெறியாகிநின்ற
அண்டனேயமரரேறேதிருவையாறமர்ந்ததேனே
தொண்டனேன்றொழுதுன்பாதஞ்சொல்லிநான்றிரிகின்றேனே. * (௧)

பீலிகையிடுக்கிநாளும்பெரியதோர்தவமென்றெண்ணி
வாலியதறிகள்போலமதியிலார்பட்டதென்னே
வாலியார்வணங்கியேத்துந்திருவையாறமர்ந்ததேனோ
டாலியாவெழுந்தநெஞ்சமழகிதாவெழுந்தவாறே. (௨)

தட்டிடுசமணரோடேதருக்கிநான்றவமென்றெண்ணி
ஒட்டிடுமனத்தினீரேயும்மையான்செய்வதென்னே
மொட்டிடுகமலப்பொய்கைத்திருவையாறமர்ந்ததேனோ
டொட்டிடுமுள்ளத்தீரேயும்மைநானுகந்திட்டேனே. (௩)

பாசிப்பன்மாசுமெய்யர்பலமிலாச்சமணரோடு
நேசத்தாலிருந்தநெஞ்சைநீக்குமாறறியமாட்டேன்
தேசத்தார்பரவியேத்துந்திருவையாறமர்ந்ததேனை
வாசத்தால்வணங்கவல்லார்வல்வினைமாயுமன்றே. (௪)

கடுப்பொடியட்டிமெய்யிற்கருதியோர்தவமென்றெண்ணி
வடுக்களோடிசைந்தநெஞ்சேமதியிலி † பட்டதென்னே
மடுக்களில்வாளைபாயுந்திருவையாறமர்ந்ததேனை
அடுத்துநின்றுன்னுநெஞ்சேபெருந்தவஞ்செய்தவாறே. (௫)

துறவியென்றவமதோரேன்சொல்லியசெலவுசெய்து
உறவினாலமணரோடுமுணர்விலேனுணர்வொன்றின்றி
நறவமார்பொழில்கள்சூழ்ந்ததிருவையாறமர்ந்ததேனை
மறவிலாநெஞ்சமேநன்மதியுனக்கடைந்தவாறே. (௬)

பல்லுரைச்சமணரோடேபலபலகாலமெல்லாம்
சொல்லியசெலவுசெய்தேன்சோர்வனுனினைந்தபோது
மல்லிகைமலருஞ்சோலைத்திருவையாறமர்ந்ததேனை
எல்லியும்பகலுமெல்லாநினைந்தபோதினியவாறே. (௭)

மண்ணுளார்விண்ணுளாரும்வணங்குவார்பாவம்போக
எண்ணிலாச்சமணரோடேயிசைந்தனையேழைநெஞ்சே
தெண்ணிலாவெறிக்குஞ்சென்னித்திருவையாறமர்ந்ததேனைக்
கண்ணினாற்காணப்பெற்றுக்கருதிற்றேமுடிந்தவாறே. (௮)

* சொல்லிநானறிகின்றேனே என்றும் பாடம். † மதியிலீ என்பதும் ஒன்று.

Koviloor Digital Library

குருந்தமதொசித்தமாலுங்குலமலர்மேவினானும்
திருந்துநற்றிருவடியுந்திருமுடிகாணமாட்டார்
அருந்தவமுனிவரேத்துந்திருவையாறமர்ந்ததேனைப்
பொருந்திநின்றுன்னுநெஞ்சேபொய்வினைமாயுமன்றே. (௯)

அறிவிலாவரக்கனோடியருவரையெடுக்கலுற்று
முறுகினான்முறுகக்கண்டுமூதறிவாளனோக்கி
நிறுவினான்சிறுவிரலானெரிந்துபோய்நிலத்தில்வீழ
அறிவினாலருள்கள்செய்தான்றிருவையாறமர்ந்ததேனே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

தானலாதுலகமில்லைசகமலாதடிமையில்லை
கானலாதாடலில்லைகருதுவார்தங்களுக்கு
வானலாதருளுமில்லைவார்குழன்மங்கையோடும்
ஆனலாதூர்வதில்லையையனையாறனார்க்கே. (௧)

ஆலலாலிருக்கையில்லையருந்தவமுனிவர்க்கன்று
நூலலாநொடிவதில்லைநுண்பொருளாய்ந்துகொண்டு
மாலுநான்முகனுங்கூடிமலரடிவணங்கவேலை
ஆலலாலமுதமில்லையையனையாறனார்க்கே. (௨)

நரிபுரிசுடலைதன்னினடமலானவிற்றலில்லை
சுரிபுரிகுழலியோடுந்துணையலாலிருக்கையில்லை
தெரிபுரிசிந்தையார்க்குத்தெளிவலாலருளுமில்லை
அரிபுரிமலர்கொடேத்துமையனையாறனார்க்கே. (௩)

தொண்டலாற்றுணையுமில்லைதோலலாதுடையுமில்லை
கண்டலாதருளுமில்லைகலந்தபின்பிரிவதில்லை
பண்டைநான்மறைகள்காணாப்பரிசினனென்றென்றெண்ணி
அண்டவானவர்களேத்துமையனையாறனார்க்கே. (௪)

எரியலாலுருவமில்லையேறலாலேறலில்லை
கரியலாற்போர்வையில்லைகாண்டகுசோதியார்க்குப்
பிரிவிலாவமரர்கூடிப்பெருந்தகைப்பிரானென்றேத்தும்
அரியலாற்றேவியில்லையையனையாறனார்க்கே. (௫)

என்பலாற்கலனுமில்லையெருதலாலூர்வதில்லை
புன்புலானாறுகாட்டிற்பொடியலாற்சாந்துமில்லை
துன்பிலாத்தொண்டர்கூடித்தொழுதழுதாடிப்பாடும்*
அன்பலாற்பொருளுமில்லையையனையாறனார்க்கே. (௬)

* தொழுதெழுந்தாடிப்பாடும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

கீளலாலுடையுமில்லைகிளர்பொறியரவம்பைம்பூண்
தோளலாற்றுணையுமில்லைதொத்தலர்கின்றவேனில்
வேளலாற்காயப்பட்டவீருமில்லைமீளா
ஆளலாற்கைம்மாறில்லையையனையாறனார்க்கே. (எ)

சகமலாதடிமையில்லைதானலாற்றுணையுமில்லை
நகமெலாந்தேயக்கையானாண்மலர்தொழுதுதூவி
முகமெலாங்கண்ணீர்மல்கமுன்பணிந்தேத்துந்தொண்டர்
அகமலாற்கோயிலில்லையையனையாறனார்க்கே. (அ)

உமையலாதுருவமில்லையுலகலாதுடையதில்லை
நமையெலாமுடையராவர்நன்மையேதீமையில்லை
கமையெலாமுடையராகிக்கழலடிபரவுந்தொண்டர்க்
கமைவிலாவருள்கொடுப்பாரையனையாறனார்க்கே. (கூ)

மலையலாலிருக்கையில்லைமதித்திடாவரக்கன்றன்னைத்
தலையலானெரித்ததில்லைதடவரைக்கீழடர்த்து
நிலையிலார்புரங்கள்வேவநெருப்பலால்விரித்ததில்லை
அலையினார்பொன்னிமன்னுமையனையாறனார்க்கே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

அந்திவட்டத்திங்கட்கண்ணியனையாறமர்ந்துவந்தென்
புந்திவட்டத்திடைப்புக்குநின்றானையும்பொய்யென்பனோ
சிந்திவட்டச்சடைக்கற்றையலம்பச்சிறிதலர்ந்த
நந்திவட்டத்தொடுகொன்றைவளாவியநம்பனையே. (க)

பாடகக்கால்கழற்கால்பரிதிக்கதிருக்கவந்தி
காடகக்கானங்கைமுன்செங்கணைத்தின்பின்னடந்த
ஊடகக்கால்கணங்கைதொழுங்காலெங்கணாய்நின்றகால்
ஆடகக்காலரிமான்றேர்வலவனையாற்றனவே.* (உ)

திருச்சிற்றம்பலம்.

திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

குறுவித்தவாகுற்றநோய்வினைகாட்டிக்குறுவித்தநோய்
உறுவித்தவாவுற்றநோய்வினைதீர்ப்பானுகந்தருளி
அறிவித்தவாறடியேனையையாறனடிமைக்கணே
செறிவித்தவாதொண்டனேனைத்தன்பொன்னடிக்கீழெனையே. (க)

* வரிமாறேரவல்லவையாற்றினவே என்றும், வரிமான்றேர்வலவினையாற்றனவே என்றும் பாடம்.

Koviloor Digital Library

கூர்வித்தவாகுற்றநோய்வினைகாட்டியுங்கூர்வித்தநோய்
ஊர்வித்தவாவுற்றநோய்வினைதீர்ப்பானுகந்தருளி
ஆர்வித்தவாறடியேனையையாறனடிமைக்களே
சேர்வித்தவாதொண்டனேனைத்தன்பொன்னடிக்கீழெனையே. (உ)

தாக்கினவாசலமேலவினை * காட்டியுந்தண்டித்தநோய்
நீக்கினவாநெடுநீரினின்றேறநினைந்தருளி
ஆக்கினவாறடியேனையையாறனடிமைக்களே
நோக்கினவாதொண்டனேனைத்தன்பொன்னடிக்கீழெனையே. (ஙு)

தருக்கினநான்றகவின்றியுமேமாடச்சலமதனால்
நெருக்கினவாநெடுநீரினின்றேறநினைந்தருளி
உருக்கினவாறடியேனையையாறனடிமைக்களே
பெருக்கினவாதொண்டனேனைத்தன்பொன்னடிக்கீழெனையே. (ச)

இழிவித்தவாறிட்டநோய்வினைகாட்டியிடர்ப்படுத்துக்
கழிவித்தவாகட்டநோய்வினைதீர்ப்பான்கலந்தருளி
அழிவித்தவாறடியேனையையாறனடிமைக்களே
தொழுவித்தவாதொண்டனேனைத்தன்பொன்னடிக்கீழெனையே. (ரு)

இடைவித்தவாறிட்டநோய்வினைகாட்டியிடர்ப்படுத்து
உடைவித்தவாறுற்றநோய்வினைதீர்ப்பானுகந்தருளி
அடைவித்தவாறடியேனையையாறனடிமைக்களே
தொடர்வித்தவாதொண்டனேனைத்தன்பொன்னடிக்கீழெனையே. (சு)

படக்கினவா † படநின்றுபன்னாளும்படக்கினநோய் ‡
அடக்கினவாறது ¶ வன்றியுந்தீவினைபாவமெல்லாம்
அடக்கினவா § றடியேனையையாறனடிமைக்களே
தொடக்கினவா ○ தொண்டனேனைத்தன்பொன்னடிக்கீழெனையே. (எ)

மறப்பித்தவாவல்லைநோய்வினைகாட்டிமறப்பித்தநோய்
துறப்பித்தவாதுக்கநோய்வினைதீர்ப்பானுகந்தருளி
இறப்பித்தவாறடியேனையையாறனடிமைக்களே
சிறப்பித்தவாதொண்டனேனைத்தன்பொன்னடிக்கீழெனையே. (அ)

துயக்கினவாதுக்கநோய்வினைகாட்டித்துயக்கினநோய்
இயக்கினவாறிட்டநோய்வினைதீர்ப்பானிசைந்தருளி
அயக்கினவாறடியேனையையாறனடிமைக்களே
மயக்கினவாதொண்டனேனைத்தன்பொன்னடிக்கீழெனையே. (கூ)

கறுத்துமிட்டார்கண்டங்கங்கைசடைமேற்கரந்தருளி
இறுத்துமிட்டாரிலங்கைக்கிறைதன்னையிருபதுதோள்
அறுத்துமிட்டாரடியேனையையாறனடிமைக்களே
பொறுத்துமிட்டார்தொண்டனேனைத்தன்பொன்னடிக்கீழெனையே. (க0)

திருச்சிற்றம்பலம்.

* சலமேல்வினை என்றும் பாடம். † படக்கின்றவா, ‡ படக்கின்றநோய், ¶ அடக்கின்றவாறது, § அடக்கின்றவா, ○ தொடக்கின்றவா என்பனவும் பாடம்.

Koviloor Digital Library

திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

சிந்திப்பரியனசிந்திப்பவர்க்குச்சிறந்துசெந்தேன்
முந்திப்பொழிவனமுத்திகொடுப்பனமொய்த்திருண்டு
பந்தித்துநின்றபழவினைதீர்ப்பனபாம்புசுற்றி
அந்திப்பிறையணிந்தாடுமையாறனடித்தலமே. (க)

இழித்தனவேழேழ்பிறப்புமறுத்தனவென்மனத்தே
பொழித்தனபேரெழில்கூற்றை*யுதைத்தனபோற்றவர்க்காய்க்
கிழித்தனதக்கன்கிளரொளிவேள்வியைக்கீழ்முன்சென்†
றழித்தனவாறங்கமானவையாறனடித்தலமே. (உ)

மணிநிறமொப்பனபொன்னிறமன்னினமின்னியல்வாய்‡
கணிநிறமன்னகயிலைப்பொருப்பனகாதல்செய்யத்
துணிவனசிலத்தராகித்தொடர்ந்துவிடாததொண்டர்க்
கணியனசேயனதேவர்க்கையாறனடித்தலமே. (ங)

இருடருதுன்பப்படலமறைப்பமெய்ஞ்ஞானமென்னும்
பொருடருகண்ணிழந்துண்பொருணாடிப்புகலிழந்த
குருடருந்தம்மைப்பரவக்கொடுநரகக்குழிநின்
றருடருகைகொடுத்தேற்றுமையாறனடித்தலமே. (ச)

எழுவாயிறுவாயிலாதனவெங்கட்பிணிதவிர்த்து¶
வழுவாமருத்துவமாவன§மாநரகக்குழிவாய்
விழுவாரவர்தம்மைவீழ்ப்பனமீட்பனமிக்கவன்போ
டழுவார்க்கமுதங்கள்காண்கவையாறனடித்தலமே. (ரு)

துன்பக்கடலிடைத்தோணித்தொழில்பூண்டதொண்டர்தம்மை
இன்பக்கரைமுகந்தேற்றுங் 0 திறத்தனமாற்றயலே
பொன்பட்டொழுகப்பொருந்தொளிசெய்யுமப்பொய்பொருந்தா
அன்பர்க்கணியனகாண்கவையாறனடித்தலமே. (சு)

களித்துக்கலந்ததொர்காதற்கசிவொடுகாவிரிவாய்க்
குளித்துத்தொழுதுமுன்னின்றவிப்பத்தரைக்கோதில்செந்தேன்
தெளித்துச்சுவையமுதூட்டியமரர்கள்சூழிருப்ப
அளித்துப்பெருஞ்செல்வ**மாக்குமையாறனடித்தலமே. (எ)

திருத்திக்கருத்தினைச்செவ்வேநிறுத்திச்செறுத்துடலை
வருத்திக்கடிமலர்வாளெடுத்தோச்சிமருங்குசென்று
விருத்திக்குழக்கவல்லோர்கட்குவிண்பட்டிகையிடுமால்
அருத்தித்தருந்தவரேத்துமையாறனடித்தலமே. (அ)

* போரெழிற்கூற்றை என்றும் பாடம். † கீழ்முன்சென்று—அழித்தன என்றும் பாடம். ‡ மன்னினமின்னிலவாய்க் என்றும் பாடம். ¶ வெங்கள்பிணிதவிர்த்து என்றும் பாடம். § மருந்தவமாயின என்றும் பாடம். 0 கரைமுகத்தேற்றுங் என்றும் பாடம். ** அளித்துட்பெருஞ்செல்வ என்றும் பாடம்.

Koviloor Digital Library

பாடும்பறண்டையுமாந்தையுமார்ப்பப்*பரந்துபல்பேய்
கூடிமுழவக்குவிகவிழ்கொட்டக்குறுநரிகள்
நீடுங்குழல்செய்யவையநெளியநிணப்பிணக்காட்
டாடுந்திருவடிகாண்கவையாறனடித்தலமே. (கூ)

நின்போலமரர்கணீண்முடிசாய்த்துநிமிர்த்துகுத்த
பைம்போதுழக்கிப்பவளந்தழைப்பனபாங்கறியா
என்போலிகள்பறித்திட்டவிலைமுகையுமெல்லாம்
அம்போதெனக்கொள்ளுமையனையாறனடித்தலமே. (க0)

மலையார்மடந்தைமனத்தனவானோர்மகுடமன்னி
நிலையாயிருப்பனநின்றோர்மதிப்பனநீணிலத்துப்
புலையாடுபுன்மைதவிர்ப்பனபொன்னுலகம்மளிக்கும்
அலையார்புனற்பொன்னிசூழ்ந்தவையாறனடித்தலமே. (கக)

பொலம்புண்டரீகப்புதுமலர்போல்வனபோற்றியென்பார்
புலம்பும்பொழுதும்புணர்துணையாவனபொன்னனையாள் †
சிலம்புஞ்செறிபாடகமுஞ்செழுங்கிண்கிணித்திரளும்
அலம்புந்திருவடிகாண்கவையாறனடித்தலமே. (கஉ)

உற்றாரிலாதார்க்குறுதுணையாவனவோதிநன்னூல்
கற்றார்பரவப்பெருமையுடையனகாதல்செய்ய
கிற்பார்தமக்குக்கிளரொளிவானகந்தான்கொடுக்கும்
அற்றார்க்கரும்பொருள்காண்கவையாறனடித்தலமே. (கங)

வானைக்கடந்தண்டத்தப்பான்மதிப்பனமந்திரிப்பார்
ஊனைக்கழித்துய்யக்கொண்டருள்செய்வனவுத்தமர்க்கு
ஞானச்சுடராய்நடுவேயுதிப்பனநங்கையஞ்ச
ஆனையுரித்தனகாண்கவையாறனடித்தலமே. (கச)

மாதிரமா ‡ நிலமாவனவானவர்மாமுகட்டின்
மீதனமென்கழல்வெங்கச்சுவீக்கினவெந்நமனார்
தூதரையோடத்துரப்பனதுன்பறத்தொண்டுபட்டார்க்
காதரமாவனகாண்கவையாறனடித்தலமே. (கரு)

பேணித்தொழுமவர்பொன்னுலகாளப்பிறங்கருளால்
ஏணிப்படிநெறியிட்டுக்கொடுத்திமையோர்முடிமேல்
மாணிக்கமொத்துமரகதம்போன்றுவயிரமன்னி
ஆணிக்கனகமுமொக்குமையாறனடித்தலமே. (கசு)

ஓதியஞானமுஞானப்பொருளுமொலிசிறந்த
வேதியர்வேதமும்வேள்வியுமாவனவிண்ணுமண்ணும்
சோதியஞ்செஞ்சுடர்¶ஞாயிறுமொப்பனதூமதியோ
டாதியுமந்தமுமானவையாறனடித்தலமே. (கஎ)

* பாடும்பறண்டையுமொந்தையுமார்ப்பப் என்றும் பாடம். † பொன்னனைய என்றும் பாடம். ‡ மாதரமா என்றும் பாடம். ¶ சோதியுஞ்செஞ்சுடர் என்றும் பாடம்.

சுணங்குமுகத்துந்துணைமுலைப்பாவைசுரும்பொடுவண்
டணங்குங்குழலியணியார்வளைக்கரங்கூப்பிநின்று
வணங்கும்பொழுதும்வருடும்பொழுதும்வண்காந்தளொண்போ
தனங்குமரவிந்தமொக்குமையாறனடித்தலமே. (கஅ)

சுழலார்துயர்வெயிற்சுட்டிடும்போதடித்தொண்டர்துன்னும்
நிழலாவனவென்றுநீங்காப்பிறவிநிலைகெடுத்துக்
கழலாவினைகள்கழற்றுவகாலவனங்கடந்த
அழலாரொளியனகாண்கவையாறனடித்தலமே. (கசு)

வலியான்றலைபத்தும்வாய்விட்டலறவரையடர்த்து
மெலியாவலியுடைக்கூற்றையுதைத்துவிண்ணோர்கள்முன்னே
பலிசேர்படுகடைபார்த்துப்பன்னாளும்பலரிகழ
அலியாநிலைநிற்குமையனையாறனடித்தலமே. (உ௰)

திருச்சிற்றம்பலம்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

சிந்தைவாய்தலுளான்வந்துசீரியன்
பொந்துவார்புலால்வெண்டலைக்கையினன்
முந்திவாயதோர்மூவிலைவேல்பிடித்
தந்திவாயதோர்பாம்பரையாறரே. (க)

பாகமாலைமகிழ்ந்தனர்பான்மதி
போகவானை * யினீருரிபோர்த்தவர்
கோகமாலைகுலாயதோர்கொன்றையும்
ஆகவானையஞ்சாடுமையாறரே. (உ)

நெஞ்சமென்பதோர்நீள்கயந்தன்னுளே
வஞ்சமென்பதோர்வான்சுழிப்பட்டுநான்
துஞ்சும்போழ்துநின்னாமத்திருவெழுத்
தஞ்சுந்தோன்றவருளுமையாறரே. (ங)

நினைக்குநெஞ்சினுள்ளார்நெடுமாமதில்
அனைத்துமொள்ளழல்வாயெரியூட்டினர்
பனைக்கைவேழத்துரிபுடல்போர்த்தவர்
அனைத்துவாய்தலுள்ளாருமையாறரே. (ச)

பரியர்நுண்ணியர்பார்த்தற்கரியவர்
அரியபாடலராடலரன்றியும்
கரியகண்டத்தர்காட்சிபிறர்க்கெலாம்
அரியர்தொண்டர்க்கெளியரையாறரே. (ரு)

* போகமானை என்றும் பாடம்.

Koviloor Digital Library

புலரும்போதுமிலர்பட்ட*பொற்சுடர்
மலரும்போதுகளாற்பணியச்சிலர்
இலரும்போதுமிலாததுமன்றியும்
அலரும்போதுமணியுமையாறரே. (சு)

பங்கமாலைக்குழலியொர்பானிறக்
கங்கைமாலையர்காதன்மைசெய்தவர்
மங்கைமாலை † மதியமுங்கண்ணியும்
அங்கமாலையுஞ்சூடுமையாறரே. (எ)

முன்னையாறுமுயன்றெழுவீரெலாம்
பின்னையாறுபிரியெனும்பேதைகாள்
மன்னையாறுமருவியமாதவன்
தன்னையாறுதொழத்தவமாகுமே. (அ)

ஆனை ‡ யாறெனவாடுகின்றான்முடி
வானையாறுவளாயதுகாண்மினோ
நானையாறுபுக்கேற்கவனின்னருள்
தேனையாறுதிறந்தாலேயொக்குமே. (கூ)

அரக்கின்மேனியனந்தளிர்மேனிய
அரக்கின்சேவடியாளஞ்சவஞ்சலென்
றரக்கனீரைந்துவாயுமலறவே
அரக்கினானடியாலுமையாறனே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

சிந்தைவண்ணத்தராய்த்திறம்பாவணம்
முந்திவண்ணத்தராய்முழுநீறணி
சந்திவண்ணத்தராய்த்தழல்போல்வதோர்
அந்திவண்ணமுமாவரையாறரே. (க)

மூலவண்ணத்தராய்முதலாகிய
கோலவண்ணத்தராகிக்கொழுஞ்சுடர்
நீலவண்ணத்தராகிநெடும்பளிங்
காலவண்ணத்தராவரையாறரே. (உ)

சிந்தைவண்ணமுந்நியதோர்வண்ணமும்
அந்திப்போதழகாகியவண்ணமும்
பந்திக்காலனைப்பாய்ந்ததோர்வண்ணமும்
அந்திவண்ணமுமாவரையாறரே. (ங)

* மிலாப்பட்ட என்றும் பாடம். † மங்சமாலை என்றும் பாடம் ‡ வெண்ணெய் வெண்ணை என மரீஇனாற்போல ஆனெய் ஆனை என மரீஇயிற்று; எதுகைநோக்கி ஆனையெனப்பட்டது என்றலுமொன்று.

Koviloor Digital Library

இருளின்வண்ணமுமேழிசைவண்ணமும்
சுருளின்வண்ணமுஞ்சோதியின்வண்ணமும்
மருளுநான்முகன்மாலொடுவண்ணமும்
அருளும்வண்ணமுமாவரையாறரே. (௪)

இழுக்கின்வண்ணங்களாகியவெவ்வழல்
குழைக்கும்வண்ணங்களாகியுங்கூடியும்
மழைக்கண்மாமுகிலாகியவண்ணமும்
அழைக்கும்வண்ணமுமாவரையாறரே. (௫)

இண்டைவண்ணமுமேழிசைவண்ணமும்
தொண்டர்வண்ணமுஞ்சோதியின்வண்ணமும்
கண்டவண்ணங்களாய்க்கனன்மாமணி
அண்டவண்ணமுமாவரையாறரே. (௬)

விரும்பும்வண்ணமும்வேதத்தின்வண்ணமும்
கரும்பினின்மொழிக் * காரிகைவண்ணமும்
விரும்புவார்வினைதீர்த்திடும்வண்ணமும்
அரும்பின்வண்ணமுமாவரையாறரே. (௭)

ஊழிவண்ணமுமொண்சுடர்வண்ணமும்
வேழமீருரிபோர்த்ததோர்வண்ணமும்
வாழித்தீயுருவாகியவண்ணமும்
ஆழிவண்ணமுமாவரையாறரே. (௮)

செய்தவன்றிருநீறணிவண்ணமும்
எய்தநோக்கரிதாகியவண்ணமும்
கைதுகாட்சிபரியதோர்வண்ணமும்
ஐதுவண்ணமுமாவரையாறரே. (௯)

எடுத்தவாளரக்கன்றிறல்வண்ணமும்
இடர்க்கள்போற்பெரிதாகியவண்ணமும்
கடுத்தகைந்நரம்பாலிசைவண்ணமும்
அடுத்தவண்ணமுமாவரையாறரே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

ஆரார்திரிபுரங்களீருநோக்கு
மனலாடியாரமுதேயென்றேனானே
கூரார்மழுவாட்படையொன்றேந்திக்
குறட்பூதப்பல்படையாயென்றேனானே
பேராயிரமுடையாயென்றேனானே
பிறைசூடிப்பிஞ்ஞகனேயென்றேனானே
ஆராவமுதேயென்னையாறனே
யென்றென்றேநானரற்றிநைகின்றேனே. (௧)

* கரும்பின்மென்மொழிக் என்றும் பாடம்.

Koviloor Digital Library

திவாயின்முப்புரங்களீறுநோக்குந்
தீர்த்தாபுராணனேயென்றேனானே
மூவாமதிசூடியென்றேனானே
முதல்வாமுக்கண்ணனேயென்றேனானே
ஏவார்சிலையானேயென்றேனானே
யிடும்பைக்கடனின்றுமேறவாங்கி
ஆவாவென்றருள்புரியுமையாறன்னே
யென்றென்றேநானரற்றிநைகின்றேனே. (உ)

அஞ்சுண்ணவண்ணனே* யென்றேனானே
யடியார்கட்காரமுதேயென்றேனானே
நஞ்சணிகண்டனேயென்றேனானே
நாவலர்களுன்மறையேயென்றேனானே
நெஞ்சுணரவுள்புக்கிருந்தபோது
நிறையுமமுதமே † யென்றேனானே
அஞ்சாதேயாள்வானேயையாறன்னே
யென்றென்றேநானரற்றிநைகின்றேனே. (௩)

தொல்லைத்தொடுகடலேயென்றேனானே
துலங்குமிளம்பிறையாயென்றேனானே
எல்லைநிறைந்தானேயென்றேனானே
யேழ்நரம்பினின்னிசையாயென்றேனானே
அல்லற்கடல்புக்கழுந்துவேனை
வாங்கியருள்செய்தாயென்றேனானே
எல்லையாமையாறுவென்றேனானே
யென்றென்றேநானரற்றிநைகின்றேனே. (௪)

இண்டைச்சடைமுடியாயென்றேனானே
யிருசுடர்வானத்தாயென்றேனானே
தொண்டர்தொழப்படுவாயென்றேனானே
துருத்திநெய்த்தானத்தாயென்றேனானே
கண்டங்கறுத்தானேயென்றேனானே
கனலாகுங்கண்ணானேயென்றேனானே
அண்டத்துக்கப்பாலாமையாறன்னே
யென்றென்றேநானரற்றிநைகின்றேனே. (௫)

பற்றார்புரமெரித்தாயென்றேனானே
பசுபதீபண்டரங்காவென்றேனானே
கற்றார்களுவினாயென்றேனானே
கடுவிடையொன்றூர்தியாயென்றேனானே

* அஞ்சணவண்ணனே என்றும் பாடம். † நிறையுமமுதனே என்றும் பாடம்.

Koviloor Digital Library

பற்றானார்நெஞ்சுளாயென்றேனானே
பார்த்தற்கருள்செய்தாயென்றேனானே
அற்றார்க்கருள்செய்யுமையாறன்னே
யென்றென்றேநானரற்றிநைகின்றேனே. (சு)

விண்ணோர்தலைவனேயென்றேனானே
விளங்குமிளம்பிறையாயென்றேனானே
எண்ணாரெயிலெரித்தாயென்றேனானே
யேகம்பமேயானேயென்றேனானே
பண்ணார்மறைபாடியென்றேனானே
பசுபதிபானீற்றாயென்றேனானே
அண்ணாவையாறனேயென்றேனானே
யென்றென்றேநானரற்றிநைகின்றேனே. (எ)

அவனென்றுநானுன்னையஞ்சாதேனை
யல்லலறுப்பானேயென்றேனானே
சிவனென்றுநானுன்னையெல்லாஞ்சொல்லச்
செல்வந்தருவானேயென்றேனானே
பவனாகியென்னுள்ளத்துள்ளேநின்று
பண்டைவினையறுப்பாயென்றேனானே
அவனென்றேயாதியேயையாறன்னே
யென்றென்றேநானரற்றிநைகின்றேனே. (அ)

கச்சியேகம்பனேயென்றேனானே
கயிலாயாகாரோணாவென்றேனானே
நிச்சன்மணாளனேயென்றேனானே
நினைப்பார்மனத்துளாயென்றேனானே
உச்சம்போதேறேறியென்றேனானே
யுள்குவாருள்ளத்தாயென்றேனானே
அச்சம்பிணிதீர்க்குமையாறன்னே
யென்றென்றேநானரற்றிநைகின்றேனே. (கூ)

வில்லாடிவேடனேயென்றேனானே
வெண்ணீறுமெய்க்கணிந்தாயென்றேனானே
சொல்லாயசூழலாயென்றேனானே
சுலாவாயதொன்னெறியேயென்றேனானே
எல்லாமாயென்னுயிரேயென்றேனானே
யிலங்கையர்கோன்றோளிறுத்தாயென்றேனானே
அல்லாவினைதீர்க்குமையாறன்னே
யென்றென்றேநானரற்றிநைகின்றேனே. (க௦)

திருச்சிற்றம்பலம்.

Koviloor Digital Library

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

ஓசையொலியெலாமானாய்நீயே
யுலகுக்கொருவனாய்நின்றாய்நீயே
வாசமலரெலாமானாய்நீயே
மலையான்மருகனாய்நின்றாய்நீயே
பேசப்பெரிதுமினியாய்நீயே
பிரானாயடியென்மேல்வைத்தாய்நீயே
தேசவிளக்கெலாமானாய்நீயே
திருவையாறகலாதசெம்பொற்சோதீ. (க)

நோக்கரியதிருமேனியுடையாய்நீயே
நோவாமேநோக்கருளவல்லாய்நீயே
காப்பரியவைம்புலனுங்காத்தாய்நீயே
காமனையுங்கண்ணழலாற்காய்ந்தாய்நீயே
ஆர்ப்பரியமாநாகமார்த்தாய்நீயே
யடியானென்றடியென்மேல்வைத்தாய்நீயே
தீர்ப்பரியவல்வினைநோய்தீர்ப்பாய்நீயே
திருவையாறகலாதசெம்பொற்சோதீ. (உ)

கனத்தகத்துக்கடுஞ்சுடராய்நின்றாய்நீயே
கடல்வரைவானாகாயமானாய்நீயே
தனத்தகத்துத்தலைகலனாக்கொண்டாய்நீயே
சார்ந்தாரைத்தகைந்தாளவல்லாய்நீயே
மனத்திருந்தகருத்தறிந்துமுடிப்பாய்நீயே
மலர்ச்சேவடியென்மேல்வைத்தாய்நீயே
சினத்திருந்ததிருநீலகண்டனீயே
திருவையாறகலாதசெம்பொற்சோதீ. (ஙு)

வானுற்றமாமலைகளானாய்நீயே
வடகயிலைமன்னியிருந்தாய்நீயே
ஊனுற்றவொளிமழுவாட்படையாய்நீயே
யொளிமதியோடரவுபுனல்வைத்தாய்நீயே
ஆனுற்றவைந்துமமர்ந்தாய்நீயே
யடியானென்றடியென்மேல்வைத்தாய்நீயே
தேனுற்றசொன்மடவாள்பங்கனீயே
திருவையாறகலாதசெம்பொற்சோதீ. (ச)

பெண்ணாண்பிறப்பிலியாய்நின்றாய்நீயே
பெரியார்கட்கெல்லாம்பெரியாய்நீயே
உண்ணாவருநஞ்சமுண்டாய்நீயே
யூழிமுதல்வனாய்நின்றாய்நீயே
கண்ணாயுலகெலாங்காத்தாய்நீயே
கழற்சேவடியென்மேல்வைத்தாய்நீயே
திண்ணார்மழுவாட்படையாய்நீயே
திருவையாறகலாதசெம்பொற்சோதீ. (ரு)

Koviloor Digital Library

உற்றிருந்தவுணர்வெலாமானாய்நீயே
யுற்றவர்க்கோர்சுற்றமாய்நின்றாய்நீயே
கற்றிருந்தகலைஞானமானாய்நீயே
கற்றவர்க்கோர்கற்பகமாய்நின்றாய்நீயே
பெற்றிருந்ததாயவளினல்லாய்நீயே
பிரானாயடியென்மேல்வைத்தாய்நீயே
செற்றிருந்ததிருநீலகண்டனீயே
திருவையாறகலாதசெம்பொற்சோதீ. (௬)

எல்லாவுலகமுமானாய்நீயே
யேகம்பமேவியிருந்தாய்நீயே
நல்லாரைநன்மையறிவாய்நீயே
ஞானச்சுடர்விளக்காய்நின்றாய்நீயே
பொல்லாவினைகளறுப்பாய்நீயே
புகழ்ச்சேவடியென்மேல்வைத்தாய்நீயே
செல்வாயசெல்வந்தருவாய்நீயே
திருவையாறகலாதசெம்பொற்சோதீ. (௭)

ஆவினிலைந்துமமர்ந்தாய்நீயே
யளவில்பெருமையுடையாய்நீயே
பூவினினாற்றமாய்நின்றாய்நீயே
போர்க்கோலங்கொண்டெயிலெய்தாய்நீயே
நாவினடுவுரையாய்நின்றாய்நீயே
நண்ணியடியென்மேல்வைத்தாய்நீயே
தேவரறியாததேவனீயே
திருவையாறகலாதசெம்பொற்சோதீ. (௮)

எண்டிசைக்குமொண்சுடராய்நின்றாய்நீயே
யேகம்பமேயவிறைவனீயே
வண்டிசைக்குநறுங்கொன்றைத்தாராய்நீயே
வாராவுலகருளவல்லாய்நீயே
தொண்டிசைத்துன்னடிபரவநின்றாய்நீயே
தூமலர்ச்சேவடியென்மேல்வைத்தாய்நீயே
திண்சிலைக்கோர்சரங்கூட்டவல்லாய்நீயே
திருவையாறகலாதசெம்பொற்சோதீ. (௯)

விண்டார்புரமூன்றுமெய்தாய்நீயே
விண்ணவர்க்குமேலாகிநின்றாய்நீயே
கண்டாரைக்கொல்லுநஞ்சுண்டாய்நீயே
காலங்களூழியாய்நின்றாய்நீயே
தொண்டாயடியேனையாண்டாய்நீயே
தூமலர்ச்சேவடியென்மேல்வைத்தாய்நீயே
திண்டோள்விட்டெரியாடலுகந்தாய்நீயே
திருவையாறகலாதசெம்பொற்சோதீ. (௧௰)

Koviloor Digital Library

ஆருமறியாவிடத்தாய்நீயே
யாகாயந்தேருரவல்லாய்நீயே
பேரும்பெரியவிலங்கைவேந்தன்
பெரியமுடிபத்திறுத்தாய்நீயே
ஊரும்புரமூன்றுமட்டாய்நீயே
யொண்டாமரையானுமாலுங்கூடித்
தேருமடியென்மேல்வைத்தாய்நீயே
திருவையாறகலாதசெம்பொற்சோதி. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

பரவும்பரிசொன்றறியேனான்பண்டேயுமைப்பயிலாதேன்
இரவும்பகலுநினைந்தாலுமெய்தநினையமாட்டேனான்
காவிலருவிகமுகுண்ணத்தெங்கங்குலைக்கீழ்க்கருப்பாலை
அரவந்திரைக்காவிரிக்கோட்டத்தையாறுடையவடிகளோ.* (௧)

எங்கேபோவேனாயிடினுமங்கேவந்தென்மனத்திராய்ச்
சங்கையொன்றுமின்றியேதலைநாள்கடைநாளொக்கவே
கங்கைசடைமேற்கரந்தானேகலைமான்மறியுங்கனன்மழுவும்
தங்குந்திரைக்காவிரிக்கோட்டத்தையாறுடையவடிகளோ. (௨)

மருவிப்பிரியமாட்டேனான்வழிநின்றொழிந்தேனொழிகிலேன்
பருவிவிச்சிமலைச்சாரற்பட்டைகொண்டுபகடாடிக்
குருவியோப்பிக்கிளிகடிவார்குழன்மேன்மாலைகொண்டோட்டம்
தரவந்திரைக்காவிரிக்கோட்டத்தையாறுடையவடிகளோ. (௩)

பழகாநின்றுபணிசெய்வார்பெற்றபயனொன்றறிகிலேன்
இகழாதுமக்காட்பட்டோர்க்குவேகபடமொன்றரைச்சார்த்தி
குழகாவாழைக்குலைத்தெங்குகொணர்ந்துகரைமேலெறியவே
அழகார்திரைக்காவிரிக்கோட்டத்தையாறுடையவடிகளோ. (௪)

பிழைத்தபிழையொன்றறியேனான்பிழையைத்தீரப்பணியாயே
மழைக்கணல்லார்குடைந்தாடமலையுநிலனுங்கொள்ளாமைக்
கழைக்கொள்பிரசங்கலந்தெங்குங்கழனிமண்டிக்கையேறி
அழைக்குந்திரைக்காவிரிக்கோட்டத்தையாறுடையவடிகளோ. (௫)

கார்க்கொள்கொன்றைசடைமேலொன்றுடையாய்விடையாய்கையினான்
மூர்க்கர்புரமூன்றெரிசெய்தாய்முன்னீபின்னீமுதல்வனீ
வார்க்கொளருவிபலவாரிமணியுமுத்தும்பொன்னுங்கொண்
டார்க்குந்திரைக்காவிரிக்கோட்டத்தையாறுடையவடிகளோ. (௬)

* அடிகேளோ என்றும் பாடம்; இப்பாடபேதத்தை இத்திருப்பதிகமுழுதக்குங்கொள்க.

Koviloor Digital Library

மலைக்கண்மடவாளொரு* பாலாய்ப்பற்றியுலகம்பலிதேர்வாய்
சிலைக்கொள்கணையாலெயிலெய்தசெங்கண்விடையாய்தீர்த்தனீ
மலைக்கொளருவிபலவாரிமணியுமுத்தும்பொன்னுங்கொண்
டலைக்குந்திரைக்காவிரிக்† கோட்டத்தையாறுடையவடிகளோ. (எ)

பொழுபடியும்புனக்கொன்றை‡ புனல்சேர்சென்னிப்புண்ணியா
ருழுபயவச்சுடர்ச்சோதியுன்னைத்தொழுவார்துயர்போக
வாழுமவர்களங்கங்கேவைத்தசிந்தையுய்த்தாட்ட
ஆழுந்திரைக்காவிரிக்கோட்டத்தையாறுடையவடிகளோ. (அ)

கதிர்க்கொள்பசியேயொத்தேநான்கண்டேனும்மைக்காணாதேன்
எதிர்த்துநீந்தமாட்டேனெம்மான்றம்மான்றம்மானே
விதிர்த்துமேகமழைபொழியவெள்ளம்பரந்துநுரைசிதறி
அதிர்க்குந்திரைக்காவிரிக்கோட்டத்தையாறுடையவடிகளோ. (௯)

கூசியடியாரிருந்தாலுங்குணமொன்றில்லீர்குறிப்பிலீர்
தேசவேந்தன்றிருமாலுமலர்மேலயனுங்காண்கிலாத்
தேசமெங்குந்தெளித்தாடத்தெண்ணீரருவிகொணர்ந்தெங்கும்
வாசந்திரைக்காவிரிக்கோட்டத்தையாறுடையவடிகளோ. (௧௦)

கூடியடியாரிருந்தாலுங்குணமொன்றில்லீர்குறிப்பிலீர்
ஊடியிருந்துமுணர்கிலேனும்மைத்தொண்டனூரனேன்
தேடியெங்குங்காண்கிலேன்றிருவாரூரேசிந்திப்பன்
ஆடுந்திரைக்காவிரிக்கோட்டத்தையாறுடையவடிகளோ. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவையாற்றுத்திருப்பதிகம் - ௧அ.

ஆ திருப்பதிகம் - ௨௦௯.

சுவாமி தேவி திருநாமங்கள் - செம்பொற்சோதி, அறம்வளர்த்தநாயகி.

சேரமான்பெருமாணாயனார் சுந்தரமூர்த்திநாயனாருடைய பத்திமகிமையைப் பரமசிவனால் அறிந்து, அவரைத் தருசிக்கவிரும்பித் திருவாரூருக்குவந்து அவரைத் தரிசித்து அளவளாவி அவரோடுசிலகாலம் வசித்துப் பின்பு அவரைத் தம்முடைய ஊருக்கு எழுந்தருளும்படி வணங்கிப் பிரார்த்தித்தார். சுந்தரமூர்த்திநாயனார் அதற்கு இசைந்து, சேரமான்பெருமாணாயனாரோடு திருவாரூரை நீங்கி, காவேரிநதியின் தென்கரையிலுள்ள திருக்கண்டியூரை அடைந்து சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு புறப்பட்டார். அப்பொழுது சேரமான்பெருமாணாயனார் வடகரையிலிருக்கின்ற திருவையாற்றைக் கண்டு சுந்தரமூர்த்திநாயனாரை வணங்கி அடியேன்மனம் திருவையாற்றை வணங்க விரும்புகின்றது என்றார். அதைக்கேட்ட சுந்தரமூர்த்திநாயனார், அக்காவேரிநதி இருகரையையும் அழித்து ஓடக்கஞ்செல்லாதபடி பெருகுதலைக்கண்டு, "பரவும்பரிசொன்றறியேனான்" என்றுதிருப்பதிகந் தொடங்கி, திருப்பாட்டின் இறுதிதோறும் "ஐயாறுடைய வடிகளோ" என்றுசொல்லி அழைத்துப்பாடினார். அப்பொழுது கடவுள், கன்று

* முலைக்கண்மடவாளொரு என்றும் பாடம். † டலைக்கும்புனற்காவிரி என்றும் பாடம். ‡ புனங்கொன்றை என்றும் பாடம்.

Koviloor Digital Library

அழைத்தலைக் கேட்டுக் கதறிக் கனைக்கின்ற பசுப்போல, சராசரங்களெல்லாம் கேட்கும்படி "ஓலம்" என்று சொல்லியருளினார். உடனே காவேரிநதி பிரிந்து வழிகாட்டியது; மேற்றிசையில் நீர் பளிங்குமலைபோல நிற்க, கீழ்த்திசையில் நீர் வடிந்து நடுவழி மணற்பரப்பாய் இருந்தது. அதனைக்கண்ட சுந்தரமூர்த்திநாயனார் சேரமான்பெருமாணாயனார் முதலாகிய அடியார்களோடும் பரிசனங்களோடும் நதியின் மத்தியிலிருக்கின்ற மணல்வழியேபோய், திருவையாற்றை அடைந்து, சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு, திரும்பி முன்சென்றவழியேவந்து தென்கரையிலேறினார். உடனே பிரிந்து மலைபோல நின்ற நீர் தொடர்ந்துபாய்ந்தது. அதைக்கண்டு சுந்தரமூர்த்திநாயனாரும் சேரமான்பெருமாணாயனாரும் அதிசயித்து, திருவருளைத்துதித்துக்கொண்டு மேற்றிசையைநோக்கி வழிக்கொண்டார்கள்.

௫௨. திருநெய்த்தானம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

மையாடியகண்டன்மலைமகள்பாகமதுடையான்
கையாடியகேடில்கரியுரிமூடியவொருவன்
செய்யாடியகுவளைம்மலர்நயனத்தவளோடும்
நெய்யாடியபெருமானிடநெய்த்தானமெனீரே. (௧)

பறையும்பழிபாவம்படுதுயரம்பலதீரும்
பிறையும்புனலரவும்படுசடையெம்பெருமானூர்
அறையும்புனல்வருகாவிரியலைசேர்வடகரைமேல்
நிறையும்புனைமடவார்பயினெய்த்தானமெனீரே. (௨)

பேயாயினபாடப்பெருநடமாடியபெருமான்
வேயாயினதோளிக்கொருபாகம்மிகவுடையான்
தாயாகியவுலகங்களைநிலைபேறுசெய்தலைவன்
நேயாடியபெருமானிடநெய்த்தானமெனீரே. (௩)

சுடுநீறணியண்ணல்சுடர்சூலம்மனலேந்தி
நடுநள்ளிருணடமாடியநம்பன்னுறையிடமாம்*
கடுவாளிளவரவாடுமிழ்† கடனஞ்சமதுண்டான்
நெடுவாளைகள்குதிகொள்ளுயர்நெய்த்தானமெனீரே. (௪)

நுகராரமொடேலம்மணிசெம்பொன்னுரையுந்திப்
பகராவருபுனல்காவிரிபரவிப்பணிந்தேத்தும்
நிகரான்மணலிடுதண்கரைநிகழ்வாயநெய்த்தான
நகரானடியேத்தந்நமைநடலையடையாவே. (௫)

விடையார்கொடியுடையவ்வனல்வீந்தார்வெளையெலும்பும்
உடையார்நறுமாலைசடையுடையாரவர்மேய
புடையேபுனல்பாயும்வயல்பொழில்சூழ்ந்தநெய்த்தானம்
அடையாதவரென்றும்மமருலகம்மடையாரே. (௬)

* னுறைவிடமாம் என்றும் பாடம். † கடுவானிளவரவாடுமிழ் என்றும் பாடம்.

Koviloor Digital Library

நிழலார்வயல்கமழ்சோலைகணிறைகின்றநெய்த்தானத்
தழலானவனனலங்கையிலேந்தியழகாய
கழலானடிநாளுங்கழலாதேவிடலின்றித்
தொழலாரவர்நாளுந்துயரின்றித்தொழுவாரே. (௭)

அறைபார்கடலிலங்கைக்கிறையணிசேர்கயிலாயம்
இறையாரமுனெடுத்தானிருபதுதோளிறவூன்றி
நிறையார்புனனெய்த்தானனன்னிகழ்சேவடிபரவக்
கறையார்கதிர்வாளீந்தவர்கழலேத்துதல்கதியே. (௮)

கோலம்முடிநெடுமாலொடுகொய்தாமரையானும்
சீலம்மறிவரிதாயொளிதிகழ்வாயநெய்த்தானம்
காலம்பெறமலர்நீரவைதூவித்தொழுதேத்தும்
ஞாலம்புகழடியாருடலுறுநோய்நலியாவே. (௯)

மத்தம்மலிசித்தத்திறைமதியில்லவர்சமணர்
புத்தரவர்சொன்னம்மொழிபொருளாநினையேன்மின்
நித்தம்பயின்மலன்றுறைநெய்த்தானமதேத்தும்
சித்தம்முடையடியாருடல்செறுநோயடையாவே. (௧௦)

தலமல்கியபுனற்காழியுட்டமிழ்ஞானசம்பந்தன்
நிலமல்கியபுகழான்மிகுநெய்த்தானனைநிகரில்
பலமல்கியபாடல்லிவைபத்தும்மிகவல்லார்
சிலமல்கியசெல்வன்னடிசேர்வர்சிவகதியே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

காலனைவிழச்செற்றகழலடியிரண்டும்வந்தென்
மேலவாயிருக்கப்பெற்றேன்மேதகத்தோன்றுகின்ற
கோலநெய்த்தானமென்னுங்குளிர்பொழிற்கோயின்மேய
நீலம்வைத்தனையகண்டநினைக்குமாநினைக்கின்றேனே. (௧)

காமனையன்றுகண்ணாற்கனலெரியாகநோக்கித்
தூமமுந்தீபங்காட்டித்தொழுமவர்க்கருள்கள்செய்து
சேமநெய்த்தானமென்னுஞ்செறிபொழிற்கோயின்மேய
வாமனைநினைந்தநெஞ்சம்வாழ்வுறநினைந்தவாறே. (௨)

பிறைதருசடையின்மேலேபெய்புனற்கங்கைதன்னை
உறைதரவைத்தவெங்களுத்தமனூழியாய
நிறைதருபொழில்கள்சூழநின்றநெய்த்தானமென்று
குறைதருமடியவர்க்குக்குழகனைக்கூடலாமே. (௩)

Koviloor Digital Library

வடிதருமழுவொன்றேந்திவார்சடைமதியம்வைத்துப்
பொடிதருமேனிமேலேபுரிதருநூலர்போலும்
நெடிதருபொழில்கள்சூழநின்றநெய்த்தானமேவி
அடிதருகழல்களார்ப்பவாடுமெம்மண்ணலாரே.* (௪)

காடிடமாகநின்றுகனலெரிகையிலேந்திப்
பாடியபூதஞ்சூழப்பண்ணுடன்பலவுஞ்சொல்லி
ஆடியகழலர்சீராரந்தணெய்த்தானமென்றும்
கூடியகுழகனாரைக்கூடுமாறறிகிலேனே. (௫)

வானவர்வணங்கியேத்திவைகலுமலர்கடூவத்
தானவர்க்கருள்கள்செய்புஞ்சங்கரன்செங்கணேற்றன்
தேனமர்பொழில்கள்சூழத்திகழுநெய்த்தானமேய
கூனிளமதியினானைக்கூடுமாறறிகிலேனே. (௬)

காலதிர்கழல்களார்ப்பக் † கனலெரிகையில்வீசி
ஞாலமுங்குழியநின்றுநட்டமதாடுகின்ற
மேலவர்முகடு ‡ தோயவிரிசடைதிசைகள்பாய
மாலொருபாகமாகமகிழ்ந்தநெய்த்தானனாரே. (௭)

பந்தித்தசடையின்மேலேபாய்புனலதனைவைத்து
அந்திப்போதனலுமாடியடிகளையாறுபுக்கார்
வந்திப்பார்வணங்கிநின்றுவாழ்த்துவார்வாயினுள்ளார்
சிந்திப்பார்சிந்தையுள்ளார்திருந்துநெய்த்தானனாரே. (௮)

சோதியாய்ச்சுடருமானார்சுண்ணவெண்சாந்துபூசி
ஓதிவாயுலகமேத்தவுகந்துதாமருள்கள்செய்வார்
ஆதியாயந்தமானார்யாவருமிறைஞ்சியேத்த
நீதியாய்நியமமாகிநின்றநெய்த்தானனாரே. (௯)

இலையுடைப்படைகையேந்துமிலங்கையர்மன்னன்றன்னைத்
தலையுடனடர்த்துமீண்டேதானவற்கருள்கள்செய்து
சிலையுடன்கணையைச்சேர்த்துத்திரிபுரமெரியச்செற்ற
நிலையுடையடிகள்போலுநின்றநெய்த்தானனாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

பாரிடஞ்சாடியபல்லுயிர்வானமரர்க்கருளிக்
காரடைந்தகடல்வாயுமிழ்நஞ்சமுதாகவுண்டான்
ஊரடைந்திவ்வுலகிற்பலிகொள்வதுநாமறியோம்
நீரடைந்தகரைநின்றநெய்த்தானத்திருந்தவனே. (௧)

* ளார்ப்பவாமெம்மண்ணலாரே என்றும் பாடம். † காலதிற்கழல்களார்ப்பக் என்றும் பாடம். ‡ மேலவாமுகடு என்று கொண்டார்பாடம் பொருந்தாமை பொருணோக்கி உணர்க.

Koviloor Digital Library

தேய்ந்திலங்குஞ்சிறுவெண்மதியாய்நின்திருச்சடைமேல்
பாய்ந்தகங்கைப்புனல்பன்முகமாகிப்பரந்தொலிப்ப
ஆய்ந்திலங்கும்* மழுவேலுடையாயடியேற்குரைநீ
ஏந்திளமங்கையுநீயுநெய்த்தானத்திருந்ததுவே. (உ)

கொன்றடைந்தாடிக்குமைத்திடுங்கூற்றமொன்னார்மதின்மேல்
சென்றடைந்தாடிப்பொருததுந்தேசமெல்லாமறியும்
குன்றடைந்தாடுங்குளிர்பொழிற்காவிரியின்கரைமேல்
சென்றடைந்தார்வினைதீர்க்குநெய்த்தானத்திருந்தவனே. (ங)

கொட்டுமுழவரவத்தொடுகோலம்பலவணிந்து
நட்டம்பலபயின்றாடுவர்நாகமரைக்கசைத்துச்
சிட்டர்திரிபுரந்தீயெழச்செற்றசிலையுடையான்
இட்டமுமையொடுநின்றநெய்த்தானத்திருந்தவனே. (ச)

கொய்ம்மலர்க்கொன்றைதுழாய்வன்னிமத்தமுங்கூவிளமும்
மெய்ம்மலர்வேய்ந்தவிரிசடைக்கற்றைவிண்ணோர்பெருமான்
மைம்மலர்நீலநிறங்கருங்கண்ணியோர்பான்மகிழ்ந்தான்
நின்மலனுடனிலயநெய்த்தானத்திருந்தவனே. (ரு)

பூந்தார்நறுங்கொன்றைமாலையைவாங்கிச்சடைக்கணிந்து
கூர்ந்தார்விடையினையேறிப்பல்பூதப்படைநடுவே
போந்தார்புறவிசைபாடவுமாடவுங்கேட்டருளிச்
சேர்ந்தாருமையவளோடுநெய்த்தானத்திருந்தவனே. (சா)

பற்றினபாம்பன்படுத்தபுலியுரித்தோலுடையன்
முற்றினமூன்றுமதில்களைமுட்டியெரித்தறுத்தான்
சுற்றியபூதப்படையினன்சூலமழுவொருமான்
செற்றநந்திவினைதீர்க்குநெய்த்தானத்திருந்தவனே. (எ)

விரித்தசடையினன்விண்ணவர்கோன்விடமுண்டகண்டன்
உரித்தகரியுரிமூடியொன்னார்மதின்மூன்றுடனே
எரித்தசிலையினனீடழியாதென்னையாண்டுகொண்ட
தரித்தவுமையவளோடுநெய்த்தானத்திருந்தவனே. (அ)

தூங்கான்றுளங்கான்றுழாய்கொன்றைதுன்னியசெஞ்சடைமேல்
வாங்காமதியமும்வாளரவுங்கங்கைதான்புனைந்தான்
தேங்கார்திரிபுரந்தீயெழவெய்துதியக்கறுத்து
நீங்காவுமையவளோடுநெய்த்தானத்திருந்தவனே. (கூ)

ஊட்டிநின்றான்பொருவானிலமும்மதிறியம்பினால்
மாட்டிநின்றானன்றிறோர்வெந்துவிழவும்வானவர்க்குக்
காட்டிநின்றான்கதமாக்கங்கைபாயவொர்வார்சடையை
நீட்டிநின்றான்றிருநின்றநெய்த்தானத்திருந்தவனே. (க0)

திருச்சிற்றம்பலம்.

* ஆர்ந்திலங்கும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

கொல்லியான்குளிர் தூங்குகுற்றாலத்தான்
புல்லியார்புரமூன்றெரிசெய்தவன்
நெல்லியானிலையானநெய்த்தானனைச்
சொல்லிமெய்தொழுவார்சுடர்வாணரே. (௧)

இரவனையிடுவெண்டலையேந்தியைப்
பரவனைப்படையார்மதின்மூன்றையும்
நிரவனைந்நிலையானநெய்த்தானனைக்
குரவனைத்தொழுவார்கொடிவாணரே. (௨)

ஆனிடையைந்துமாடுவாரிருள்
கானிடைநடமாடுவர்காண்மினோ
தேனிடைமலர்பாயுநெய்த்தானனை
வானிடைத்தொழுவார்வலிவாணரே. (௩)

விண்டவர்புரமூன்றும்வெண்ணீறெழக்
கண்டவன்கடிதாகியநஞ்சினை
உண்டவன்னொளியானநெய்த்தானனைத்
தொண்டராய்த்தொழுவார்சுடர்வாணரே. (௪)

முன்கைநோவக்கடைந்தவர்நிற்கவே
சங்கியாதுச்முத்திரநஞ்சுண்டான்
நங்கையோடுநவின்றநெய்த்தானனைத்
தங்கையாற்றொழுவார்தலைவாணரே. (௫)

சுட்டநீறுமெய்பூசிச்சுடலையுள்
நட்டமாடுவர்நள்ளிருட்பேயொடே
சிட்டர்வானவர்தேருநெய்த்தானனை
இட்டமாய்த்தொழுவாரின்பவாணரே. (௬)

கொள்ளித்தீயெரிவீசிக்கொடியதோர்
கள்ளிக்காட்டிடையாடுவர்காண்மினோ
தெள்ளித்தேறித்தெளிந்துநெய்த்தானனை
உள்ளத்தாற்றொழுவாரும்பர்வாணரே. (௭)

உச்சிமேல்விளங்கும்மிளவெண்பிறை
பற்றியாடரவோடுஞ்சடைப்பெய்தான்
நெற்றியாரழற்கண்டநெய்த்தானனைச்
சுற்றிமெய்தொழுவார்சுடர்வாணரே. (௮)

மாலொடும்மறையோதியநான்முகன்
காலொடும்முடிகாண்பரிதாயினன்
சேலொடுஞ்செருச்செய்யுநெய்த்தானனை
மாலொடுந்தொழுவார்வினைவாடுமே. (௯)

Koviloor Digital Library

வலிந்ததோள்வலிவாளரக்கன்றனை
நெருங்கநீள்வரையூன்றுநெய்த்தானனூர்
புரிந்துகைந்நரம்போடிசைபாடலும்
பரிந்தனைப்பணிவார்வினைபாறுமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

வகையெலாமுடையாயுநீயேயென்றும்
வான்கயிலைமேவினாய்நீயேயென்றும்
மிகையெலாமிக்காயுநீயேயென்றும்
வெண்காடுமேவினாய்நீயேயென்றும்
பகையெலாந்தீர்த்தாண்டாய்நீயேயென்றும்
பாசூரமர்ந்தாயுநீயேயென்றும்
திகையெலாந்தொழச்செல்வாய்நீயேயென்று
நின்றநெய்த்தானாவென்னெஞ்சுளாயே. (௧)

ஆர்த்தவெனக்கன்பனீயேயென்று
மாதிக்கயிலாயனீயேயென்றும்
கூர்த்தநடமாடிநீயேயென்றுங்
கோடிகாமேயகுழகாவென்றும்
பார்த்தற்கருள்செய்தாய்நீயேயென்றும்
பழையனூர்மேயபண்பாவென்றும்
தீர்த்தன்சிவலோகனீயேயென்று
நின்றநெய்த்தானாவென்னெஞ்சுளாயே. (௨)

அல்லாய்ப்பகலானாய்நீயேயென்று
மாதிக்கயிலாயனீயேயென்றும்
கல்லாலமர்ந்தாயுநீயேயென்றுங்
காளத்திக்கற்பகமுநீயேயென்றும்
சொல்லாய்ப்பொருளானாய்நீயேயென்றுஞ்
சோற்றுத்துறையுறைவாய்நீயேயென்றும்
செல்வாய்த்திருவானாய்நீயேயென்று
நின்றநெய்த்தானாவென்னெஞ்சுளாயே. (௩)

மின்னேரிடைபங்கனீயேயென்றும்
வெண்கயிலைமேவினாய்* நீயேயென்றும்
பொன்னேர்சடைமுடியாய்நீயேயென்றும்
பூதகணநாதனீயேயென்றும்
என்னாவிரதத்தாய்நீயேயென்று
மேகம்பத்தென்னீசனீயேயென்றும்
தென்னூர்ப்பதியுளாய்நீயேயென்று
நின்றநெய்த்தானாவென்னெஞ்சுளாயே. (௪)

* வெண்காடுமேவினாய் என்றுபாடபேதமுளதாயினும் இத்திருப்பதிகத்திருப்பாட்டுக்களின் முதலடிகடோறும் கயிலாயத்தையே கூறியிருத்தலால் அது பாடமன்மைதேர்க.

Koviloor Digital Library

முந்தியிருந்தாயுநீயேயென்று
முன்கயிலைமேவினாய்நீயேயென்றும்
நந்திக்கருள்செய்தாய்நீயேயென்று
நடமாடிநள்ளாறனீயேயென்றும்
பந்திப்பரியாயுநீயேயென்றும்
பைஞ்ஞீலிமேவினாய்நீயேயென்றும்
சிந்திப்பரியாயுநீயேயென்று
நின்றநெய்த்தானாவென்னெஞ்சுளாயே. (௫)

தக்காரடியார்க்குநீயேயென்றுந்
தலையார்கயிலாயனீயேயென்றும்
அக்காரம்பூண்டாயுநீயேயென்று
மாக்கூரிற்றான்றோன்றிநீயேயென்றும்
புக்காயவேழுலகுநீயேயென்றும்
புள்ளிருக்குவேளூராய்நீயேயென்றும்
தெக்கார *மாகோணத்தானேயென்று
நின்றநெய்த்தானாவென்னெஞ்சுளாயே. (௬)

புகழும்பெருமையாய்நீயேயென்றும்
பூங்கயிலைமேவினாய்நீயேயென்றும்
இகழுந்தலையேந்திநீயேயென்று
மிராமேச்சுரத்தின்பனீயேயென்றும்
அகழுமதிலுடையாய்நீயேயென்று
மாலவாய்மேவினாய்நீயேயென்றும்
திகழுமதிசூடிநீயேயென்று
நின்றநெய்த்தானாவென்னெஞ்சுளாயே. (௭)

வானவர்க்குமூத்திளையாய்நீயேயென்றும்
வானக்கயிலாயனீயேயென்றும்
கானநடமாடிநீயேயென்றுங்
கடவூரில்வீரட்டனீயேயென்றும்
ஊனார்முடியறுத்தாய்நீயேயென்று
மொற்றியூராரூராய்நீயேயென்றும்
தேனாயமுதானாய்நீயேயென்று
நின்றநெய்த்தானாவென்னெஞ்சுளாயே. (௮)

தந்தைதாயில்லாதாய்நீயேயென்றுந்
தலையார்கயிலாயனீயேயென்றும்
எந்தாயெம்பிரானானாய்நீயேயென்று
மேகம்பத்தென்னீசனீயேயென்றும்
முந்தியமுக்கணாய்நீயேயென்று
மூவலூர்மேவினாய்நீயேயென்றும்
சிந்தையாய்தேனூராய்நீயேயென்று
நின்றநெய்த்தானாவென்னெஞ்சுளாயே. (௯)

* தெக்காரு என்றும் பாடம்.

Koviloor Digital Library

மறித்தான்* வலிசெற்றாய்நீயேயென்றும்
வான்கயிலைமேவினாய்நீயேயென்றும்
வெறுத்தார்பிறப்பறுப்பாய்நீயேயென்றும்
வீழிமிழலையாய்நீயேயென்றும்
அறுத்தாயமுதிந்தாய்நீயேயென்றும்
யாவர்க்குந்தாங்கொணாநஞ்சமுண்டு
பொறுத்தாய்புலனைந்துநீயேயென்று
நின்றநெய்த்தானாவென்னெஞ்சுளாயே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

மெய்த்தானத்தகம்படியுளைவர்நின்று
வேண்டிற்றுக்குறைமுடித்துவினைக்குக்கூடாம்
இத்தானத்திருந்திங்ஙனுய்வானெண்ணு
மிதனைபொழியியம்பக்கேளேழைநெஞ்சே
மைத்தானநீணயனிபங்கன்வங்கம்
வருதிரைநீர்நஞ்சுண்டகண்டன்மேய
நெய்த்தானநன்னகரென்றேத்திநின்று
நினையுமாநினைந்தக்காலுய்யலாமே. (௧)

ஈண்டாவிரும்பிறவித்துறவா† வாக்கை
யிதுநீங்கலாம்விதியுண்டென்றுசொல்ல
வேண்டாவேநெஞ்சமேவிளம்பக்கேணீ
விண்ணவர்தம்பெருமானார்மண்ணிலென்னை
ஆண்டானன்றருவரையாற்புரமூன்றெய்த
வம்மானையரிபபனுங்காணாவண்ணம்
நீண்டானுறைதுறைநெய்த்தானமென்று
நினையுமாநினைந்தக்காலுய்யலாமே. (௨)

பரவிப்பலபலவுந்தேடியோடிப்
பாழாங்குரம்பையிடைக்கிடந்துவாளா
குரவிக்குடிவாழ்க்கைவாழவெண்ணிக்
குலைகைதவிர்நெஞ்சேகூறக்கேணீ
இரவிக்குலமுதலாவானோர்கூடி
யெண்ணிறந்தகோடியமராராயம்
நிரவிக்கரியவனெய்த்தானமென்று
நினையுமாநினைந்தக்காலுய்யலாமே. (௩)

* மறத்தான் என்றும் பாடம். † விரும்பிறவி துறவா என்றும் பாடம்.

Koviloor Digital Library

அலையார்வினைத்திறஞ்சேராக்கையுள்ளே
யகப்பட்டுள்ளாசையெனும்பாசந்தன்னுள்
தலையாய்க்கடையாகும்வாழ்விலாழ்ந்து
தளர்ந்துமிகநெஞ்சமேயஞ்சவேண்டா
இலையார்புனற்கொன்றையெறிநீர்த்திங்க
ளிருஞ்சடைமேல்வைத்துகந்தானிமையோரேத்தும்
நிலையானுறைநிறைநெய்த்தானமென்று
நினையுமாநினைந்தக்காலுய்யலாமே. (௪)

தினைத்தனையோர்பொறையிலாவுயிர்போங்கூட்டைப்
பொருளென்றுமிகவுன்னிமதியாலிந்த
அனைத்துலகுமாளலாமென்றுபேசு
மகங்காரந்தவிர்நெஞ்சே*யமார்க்காக
முனைத்துவருமதின்மூன்றும்பொன்றவன்று
முடுகியவெஞ்சிலைவளைத்துச்செந்தீமூழ்க
நினைத்தபெருங்கருணையனெய்த்தானமென்று
நினையுமாநினைந்தக்காலுய்யலாமே. (௫)

மிறைப்படுமிவ்வுடல்வாழ்வைமெய்யென்றெண்ணி
வினையிலேகிடந்தழுந்திவியவேனெஞ்சே
குறைவுடையார்மனத்துளான்குமான்றாதை
கூத்தாடுங்குணமுடையான்கொலைவேற்கையான்
அறைகழலுந்திருவடிமேற்சிலம்புமார்ப்ப
வவனிதலம்பெயரவருநட்டநின்ற
நிறைவுடையானிடமாநெய்த்தானமென்று
நினையுமாநினைந்தக்காலுய்யலாமே. (௬)

பேசப்பொருளலாப்பிறவிதன்னைப்
பெரிதென்றுன்சிறுமனத்தால்வேண்டியீண்டு
வாசக்குழன்மடவார்போகமென்னும்
வலைப்பட்டுவீழாதேவருகநெஞ்சே
தூசக்கரியுரித்தான்றூநீறாடித்
துதைந்திலங்குநூன்மார்பன்றொடர்கில்லா
நீசர்க்கரியவனெய்த்தானமென்று
நினையுமாநினைந்தக்காலுய்யலாமே. (௭)

அஞ்சப்புலனிவற்றாலாட்டவாட்டுண்
டருநோய்க்கிடமாயவுடலின்றன்மை
தஞ்சமெனக்கருதித்தாழேனெஞ்சே
தாழக்கருதுதியேதன்னைச்சேரா†

* மாங்காரந்தவிர்நெஞ்சே என்றும் பாடம். † தன்னைச்சோர என்றும் பாடம்.

Koviloor Digital Library

வஞ்சமனத்தவர்கள்காணவொண்ணு
மணிகண்டன்வானவர்தம்பிரானென்றேத்தும்
நெஞ்சர்க்கினியவனெய்த்தானமென்று
நினையுமாநினைந்தக்காலுய்யலாமே. (அ)

பொருந்தாதவுடலகத்திற்புக்கவாவி
போமாறறிந்தறிந்தேபுலைவாழ்வுன்னி
இருந்தாங்கிடர்ப்படநீவேண்டாநெஞ்சே
யிமையவர்தம்பெருமானன்றுமையாளஞ்சக்
கருந்தாண்மதகரியைவெருவச்சீறுங்*
கண்ணுதல்கண்டமாாடிக்கருதார்வேள்வி
நிரந்தரமாவினிதுறைநெய்த்தானமென்று
நினையுமாநினைந்தக்காலுய்யலாமே. (கூ)

உரித்தன்றுனக்கிவ்வுடலின்றன்மை
யுண்மையுரைத்தேன்விரதமெல்லாம்
தரித்துந்தவமுயன்றும்வாழாநெஞ்சே
தம்மிடையிலில்லார்க்கொன்றல்லார்க்கன்னன்†
எரித்தானனலுடையானெண்டோளானே
யெம்பெருமானென்றேத்தாவிலங்கைக்கோனை
நெரித்தானைநெய்த்தானமேவினானை
நினையுமாநினைந்தக்காலுய்யலாமே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருநெய்த்தானத்திருப்பதிகம் - கூ.

ஆ திருப்பதிகம் - உ௯௨.

சுவாமி தேவி திருநாமங்கள் - நெய்யாடியப்பர், வாலாம்பிகை.

௫ந. திருப்பெரும்புலியூர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

மண்ணுமோர்பாகமுடையார்மாலுமோர்பாகமுடையார்
விண்ணுமோர்பாகமுடையார்வேதமுடையவிமலர்
கண்ணுமோர்பாகமுடையார்கங்கைசடையிற்கரந்தார்
பெண்ணுமோர்பாகமுடையார்பெரும்புலியூர்பிரியாரே. (க)

* வெருவச்சிறுங் என்றும் பாடம். † நல்லார்க்கன்ன என்றும் பாடம்.

Koviloor Digital Library

துன்னுகடற்பவளஞ்சேர்தூயனநீண்டதிண்டோள்கள் *
மின்னுசுடர்க்கொடிபோலுமேனியினுளொருகங்கைக் †
கன்னிகளின்புனைபோதுகலைமதிமாலைகலந்த
பின்னுசடைப்பெருமானார்பெரும்புலியூர்பிரியாரே. (௨)

கள்ளமதித்தகபாலங்கைதனிலேமிகவேந்தித்
துள்ளமிதித்து ‡ நின்றாடுந்தொழிலரெழின்மிகுசெல்வர்
வெள்ளநகுதலைமாலைவிரிசடைமேன்மிளிர்கின்ற
பிள்ளைமதிப்பெருமானார்பெரும்புலியூர்பிரியாரே. (௩)

ஆடலிலையமுடையாரருமறைதாங்கியாறங்கம்
பாடலிலையமுடையார்பன்மையொருமைசெய்தஞ்சும்
ஊடலிலையமுடையாரோகெனும்பேரொளிதாங்கிப்
பீடலிலையமுடையார்பெரும்புலியூர்பிரியாரே. (௪)

தோடுடையார்குழைக்காதிற்சுடுபொடியாரனலாடக்
காடுடையாரெரிவீசுங்கையுடையார்கடல்சூழ்ந்த
நாடுடையார்பொருளின்பநல்லவைநாளுநயந்த
பீடுடையார்பெருமானார்பெரும்புலியூர்பிரியாரே. (௫)

கற்றதுறப்பணிசெய்துகாண்டுமென்பாரவர்தங்கள்
முற்றிதறிதுமென்பார்கண்முதலியர்வேதபுராணர்
மற்றிதறிதுமென்பார்கண்மனத்திடையார்பணிசெய்யப்
பெற்றிபெரிதுமுகப்பார்பெரும்புலியூர்பிரியாரே. (௬)

மறையுடையாரொலிபாடன்மாமலர்ச்சேவடிசேர்வார்
குறையுடையார்குறைதீர்ப்பார்குழகாழகர்நஞ்செல்வர்
கறையுடையார்திகழ்கண்டங்கங்கைசடையிற்கரந்தார்
பிறையுடையார்சென்னிதன்மேற்பெரும்புலியூர்பிரியாரே. (௭)

உறவியுமின்புறுசீருமோங்குதல்வீடெளிதாகித்
துறவியுங்கூட்டமுங்காட்டித்துன்பமுமின்பமுந்தோற்றி
மறவியஞ்சிந்தனை ¶ மாற்றிவாழவல்லார்தமக்கென்றும்
பிறவியறுக்கும்பிரானார்பெரும்புலியூர்பிரியாரே. (௮)

சீருடையாரடியார்கள்சேடரொப்பார்சடைசேரும்
நீருடையார்பொடிப்பூசுநினைப்புடையார்விரிகொன்றைத்
தாருடையார்விடையூர்வார்தலைவரைந்நூற்றுப்பத்தாய §
பேருடையார்பெருமானார்பெரும்புலியூர்பிரியாரே. (௯)

உரிமையுடையடியார்களுள்ளுறவுள்கவல்லார்கட்
கருமையுடையனகாட்டியருள்செயுமாதிமுதல்வர்
கருமையுடைநெடுமாலுங்கடிமலரண்ணலுங்காணாப்
பெருமையுடைப்பெருமானார்பெரும்புலியூர்பிரியாரே. (௧௦)

* தூயநீண்டதிரடோள்கள் என்றும் பாடம். † மேனியினுரொருகங்கைக் என்றும் பாடம். ‡ துள்ளமதித்து என்றும் பாடம். ¶ மறவியென்சிந்தனை என்றும் பாடம். § தலைவரந்நூற்றுப்பத்தாய என்றும் பாடம்.

Koviloor Digital Library

பிறைவளரும்முடிச்சென்னிப்பெரும்புலியூர்ப்பெருமானை
நறைவளரும்பொழிற்காழிநற்றமிழ்ஞானசம்பந்தன்
மறைவளருந்தமிழ்மாலைவல்லவர்தந்துயர்நீங்கி
நிறைவளர்நெஞ்சினராகிநீடுலகத்திருப்பாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருப்பெரும்புலியூர்த்திருப்பதிகம் - ௧.

ஆ. திருப்பதிகம் - ௨௧௩.

சுவாமி தேவி திருநாமங்கள் - வியாக்கிரபுரீசரர், சௌந்தரநாயகி.

௫௪. திருமழபாடி.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

களையும்வல்வினையஞ்சனெஞ்சேகருதார்புரம்
உளையும்பூசல்செய்தானுயர்மால்வரைநல்விலா
வளையவெஞ்சரம்வாங்கியெய்தான்மதுத்தும்பிவண்
டளையுங்கொன்றையந்தார்மழபாடியுளண்ணலே. (௧)

காச்சிலாதபொன்னோக்குங்கனவயிரத்திரள்
ஆச்சிலாதபளிங்கினனஞ்சுமுனாடினான்
பேச்சினாலுமக்காவதென்பேதைகாள்பேணுமின்
வாச்சமாளிகைசூழ்மழபாடியைவாழ்த்துமே. (௨)

உரங்கெடுப்பவனும்பர்களாயவர்தங்களைப்
பரங்கெடுப்பவனஞ்சையுண்டுபகலோன்றனை
முரண்கெடுப்பவன்முப்புரந்தீயெழச்செற்றுமுன்
வரங்கொடுப்பவன்மாமழபாடியுள்வள்ளலே. (௩)

பள்ளமார்சடையிற்புடையேயடையப்புனல்
வெள்ளமாதரித்தான்விடையேறியவேதியன்
வள்ளன்மாமழபாடியுண்மேயமருந்தினை
உள்ளமாதரிமின்வினையாயினவோயவே. (௪)

தேனுலாமலர்கொண்டுமெய்த்தேவர்கள்சித்தர்கள்
பானையஞ்சடனாட்டமுன்னாடியபால்வணன்
வானநாடர்கள்கைதொழுமாமழபாடியெம்
கோனைநாடொறுந்தும்பிடவேகுறிகூடுமே. (௫)

Koviloor Digital Library

தெரிந்தவன்புரமூன்றுடன்மாட்டியசேவகன்
பரிந்துகைதொழுவாரவர்தம்மனம்பாவினன்
வரிந்தவெஞ்சிலையொன்றுடையான்மழபாடியைப்
புரிந்துகைதொழுமின்வினையாயினபோகுமே. (௬)

சந்தவார்குழலாளுமைதன்னொருகூறுடை
யெந்தையானிமையாதமுக்கண்ணினனெம்பிரான்
மைந்தன்வார்பொழில்சூழ்மழபாடிமருந்தினைச்
சிந்தியாவெழுவார்வினையாயினதேயுமே. (௭)

இரக்கமொன்றுமிலானிறையான்றிருமாமலை
யுரக்கையாலெடுத்தான்றனதோண்முடி * பத்திற
விரற்றலைநிறுவியுமையாளொடுமேயவன்
வரத்தையேகொடுக்கும்மழபாடியுள்வள்ளலே. (௮)

ஆலமுண்டமுதம்மமரர்க்கருளண்ணலார்
காலனாருயிர்வீட்டியமாமணிகண்டனார்
சாலநல்லடியார்தவத்தார்களுஞ்சார்விடம்
மாலயன்வணங்கும்மழபாடியெம்மைந்தனே. (௯)

கலியின்வல்லமணுங்கருஞ்சாக்கியப்பேய்களும்
நலியுநாள்கெடுத்தாண்டவென்னாதனார்வாழ்பதி
பலியும்பாட்டொடுபண்முழவும்பலவோசையும்
மலியுமாமழபாடியைவாழ்த்திவணங்குமே. (௧0)

மலியுமாளிகைசூழ்மழபாடியுள்வள்ளலைக்
கலிசெய்மாமதில்சூழ்கடற்காழிக்கவுணியன். † (௧௧)

திருச்சிற்றம்பலம்.

பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

காலையார்வண்டினங்கிண்டிய ‡ காருறும்
சோலையார்பைங்கிளிசொற்பொருள்பயிலவே
வேலையார்விடமணிவேதியன்விரும்பிடம்
மாலையார்மதிதவழ்மாமழபாடியே. (௧)

கறையணிமிடறுடைக்கண்ணுதனண்ணிய
பிறையணிசெஞ்சடைப்பிஞ்ஞகன்பேணுமூர்
துறையணிகுருகினந்தூமலர்துதையவே
மறையணிநாவினன்மாமழபாடியே. (௨)

* தோண்முடி என்பதும் ஒன்று. † இத்திருப்பதிகத்திலே இறுதிச்செய்யுளின் பின்னீரடிகளும் மறைந்துபோயின. ‡ வண்டினங்கெண்டிய என்றும் பாடம்.

அந்தணர்வேள்வியுமருமறைத்துழனியும்
செந்தமிழ்க்கிதமுஞ்சிறினல்வளர்தரப்
பந்தணைமெல்விரலாளொடும்பயில்விடம்
மந்தம்வந்துலவுசீர்மாமழபாடியே. (௩)

அத்தியினுரிதனையழகுறப்போர்த்தவன்
முத்தியாய்மூவரின்முதல்வனாய்நின்றவன்
பத்தியாற்பாடிடப்பரிந்தவர்க்கருள்செயும்
அத்தனுறைவிடம்மணிமழபாடியே. (௪)

கங்கையார்சடையிடைக்கதிர்மதியணிந்தவன்
வெங்கண்வாளரவுடைவேதியன்றீதிலாச்
செங்கயற்கண்ணுமையாளொடுஞ்சேர்விடம்
மங்கைமார்நடம்பயின்மாமழபாடியே. (௫)

பாலனாருயிர்பாங்கினாலுணவரும்
காலனாருயிர்செகக்காலினாற்சாடினான்
சேலினார்கண்ணினாடன்னொடுஞ்சேர்விடம்
மாலினார்வழிபடுமாமழபாடியே. (௬)

விண்ணிலாரிமையவர்மெய்ம்மகிழ்ந்தேத்தவே
எண்ணிலார்முப்புரமெரியுணநகைசெய்தார்
கண்ணினாற்காமனைக்கனலெழக்காய்ந்தவெம்
அண்ணலாருறைவிடமணிமழபாடியே. (௭)

காத்திறற்கயிலையையெடுத்தகாரரக்கன
சிரத்தினையூன்றலுஞ்சிவனடிசரணென
இரத்திறற்கைந்நரம்பெடுத்திசைபாடலும்
வரத்தினன்மருவிடமாமழபாடியே. (௮)

ஏடுலாமலர்மிசையயனெழின்மாலுமாய்
நாடினார்க்கரியசீர்நாதனாருறைவிடம்
பாடெலாம்பெண்ணையின்பழம்விழப்பைம்பொழில்
மாடெலாமல்குசீர்மாமழபாடியே. (௯)

உறிபிடித்தூத்தைவாய்ச்சமணொடுசாக்கியர்
நெறிபிடித்தறிவிலாநீசர்சொற்கொள்ளன்மின்
பொறிபிடித்தரவினம்பூணெனக்கொண்டுமான்
மறிபிடித்தானிடமாமழபாடியே. (௰)

ஞாலத்தாராதிரைநாளினான்னொடோறும்
சீலத்தான்மேவியதிருமழபாடியை
ஞாலத்தான்மிக்கசீர்ஞானசம்பந்தன்சொல்
கோலத்தாற்பாடுவார்குற்றமற்றார்களே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

Koviloor Digital Library

பண் - கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

அங்கையாரழலன்னழகார்சடைக்
கங்கையான்கடவுள்ளிடமேவிய
மங்கையாளுறையும்மழபாடியைத்
தங்கையாற்றொழுவார்தகவாளரே. (௧)

விதியுமாம்விளைவாமொளியார்ந்ததோர்
கதியுமாங்கசிவாம்வசியாற்றமா *
மதியுமாம்வலியாமழபாடியுள்
நதியந்தோய்சடைநாதனற்பாதமே. (௨)

முழவினான்முதுகாடுறைபேய்க்கணக்
குழுவினான்குலவுங்கையிலேந்திய
மழுவினானுறையும்மழபாடியைத்
தொழுமினுந்துயரானவைதீரவே. (௩)

கலையினான்மறையான்கதியாகிய
மலையினான்மருவார்புரமூன்றெய்த
சிலையினான்சேர்திருமழபாடியைத்
தலையினால்வணங்கத்தவமாகுமே. (௪)

நல்வினைப்பயனான்மறையின்பொருள்
கல்வியாயகருத்தனுருத்திரன்
செல்வன்மேயதிருமழபாடியைப்
புல்கியேத்துமதுபுகழாகுமே. (௫)

நீடினாருலகுக்குயிராய்நின்றான் †
ஆடினானெரிகானிடைமாநடம்
பாடினாரிசைமாமழபாடியை
நாடினார்க்கில்லைநல்குரவானவே. (௬)

மின்னினாரிடையாளொருபாகமாய்
மன்னினானுறைமாமழபாடியைப்
பன்னினாரிசையால்வழிபாடுசெய்
துன்னினார்வினையாயினவோயுமே. (௭)

தென்னிலங்கையர்மன்னன்செழுவரை
தன்னிலங்கவடர்த்தருள்செய்தவன்
மன்னிலங்கியமாமழபாடியை
உன்னிலங்கவுறுபிணியில்லையே. (௮)

* வசியற்றமா என்றும் பாடம். † குயிராய்நின்று என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருவினாயகனுஞ்செழுந்தாமரை
மருவினானுந்தொழத்தழன்மாண்பமர்
உருவினானுறையும்மழபாடியைப்
பரவினார்வினைபற்றறுப்பார்களே.* (௯)

நலியுநன்றறியாச்சமண்சாக்கியர்
வலியசொல்லினுமாமழபாடியுள்
ஒலிசெய்வார்கழலான்றிறமுள்கவே
மெலியுநம்முடன்மேல்வினையானவே. (௧௦)

மந்தமுந்துபொழின்மழபாடியுள்
எந்தைசந்தமினிதுகந்தேத்துவான்
கந்தமார்கடற்காழியுண்ஞானசம்
பந்தன்மாலைவல்லார்க்கில்லைபாவமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

நீறேறுதிருமேனியுடையான்கண்டாய்
நெற்றிமேலொற்றைக்கண்ணிறைந்தான்கண்டாய்
கூறாகவுமைபாகங்கொண்டான்கண்டாய்
கொடியவிடமுண்டிருண்டகண்டன்கண்டாய்
ஏறேறியெங்குந்திரிவான்கண்டா
யேழுலகுமேழ்மலையுமானான்கண்டாய்
மாறானார்தம்மரணமட்டான்கண்டாய்
மழபாடிமன்னுமணாளன்றானே. (௧)

கொக்கிறகுசென்னியுடையான்கண்டாய்
கொல்லைவிடையேறுங்கூத்தன்கண்டாய்
அக்கரைமேலாடலுடையான்கண்டா
யனலங்கையேந்தியவாதிகண்டாய்
அக்கோடரவமணிந்தான்கண்டா
யடியார்கட்காரமுதமானான்கண்டாய்
மற்றிருந்தகங்கைச்சடையான்கண்டாய்
மழபாடிமன்னுமணாளன்றானே. (௨)

நெற்றித்தனிக்கண்ணுடையான்கண்டாய்
நேரிழையோர்பாகமாய்நின்றான்கண்டாய்
பற்றிப்பாம்பாட்டும்படிறன்கண்டாய்
பல்லூர்பலிதேர்பரமன்கண்டாய்

* வினைபற்றறுப்பார்களே என்றும் பாடம்.

Koviloor Digital Library

செற்றார்புரமூன்றுஞ்செற்றான்கண்டாய்
செழுமாமதிசென்னிவைத்தான்கண்டாய்
மற்றொருகுற்றமிலாதான்கண்டாய்
மழபாடிமன்னுமணாளன்றானே. (௩)

அலையார்ந்தபுனற்கங்கைச்சடையான்கண்டா
யண்டத்துக்கப்பாலாய்நின்றான்கண்டாய்
கொலையானைகூற்றங்குமைத்தான்கண்டாய்
கொல்வேங்கைத்*தோலொன்றுடுத்தான்கண்டாய்
சிலையாற்றிரிபுரங்கள்செற்றான்கண்டாய்
செழுமாமதிசென்னிவைத்தான்கண்டாய்
மலையார்மடந்தைமணாளன்கண்டாய்
மழபாடிமன்னுமணாளன்றானே. (௪)

உலந்தார்தமங்கமணிந்தான்கண்டா
யுவகையோடின்னருள்கள்செய்தான்கண்டாய்
நலந்திகழுங்கொன்றைச்சடையான்கண்டாய்
நால்வேதமாறங்கமானான்கண்டாய்
உலந்தார்தலைகலனாக்கொண்டான்கண்டா
யும்பரார்தங்கள்பெருமான்கண்டாய்
மலர்ந்தார்திருவடியென்றலைமேல்வைத்த
மழபாடிமன்னுமணாளன்றானே. (௫)

தாமரையான்றன்றலையைச்சாய்த்தான்கண்டாய்
தகவுடையார்நெஞ்சிருக்கைகொண்டான்கண்டாய்
பூமலரானேத்தும்புநிதன்கண்டாய்
புணர்ச்சிப்பொருளாகிநின்றான்கண்டாய்
ஏமருவுவெஞ்சிலையொன்றேந்திகண்டா
யிருளார்ந்தகண்டத்திறைவன்கண்டாய்
மாமருவுங்கலைகையிலேந்திகண்டாய்
மழபாடிமன்னுமணாளன்றானே. (௬)

நீராகிநெடுவரைகளானான்கண்டாய்
நிழலாகிநீள்விசும்புமானான்கண்டாய்
பாராகிப்பௌவமேழானான்கண்டாய்
பகலாகிவானாகிநின்றான்கண்டாய்
ஆரேனுந்தன்னடியார்க்கன்பன்கண்டா
யணுவாகியாதியாய்நின்றான்கண்டாய்
வாரார்ந்தவனமுலையாள்பங்கன்கண்டாய்
மழபாடிமன்னுமணாளன்றானே. (௭)

* கோல்வேங்கைத் என்றும் பாடம்.

Koviloor Digital Library

பொன்னியலுந்திருமேனியுடையான்கண்டாய்
பூங்கொன்றைத்தாரொன்றணிந்தான்கண்டாய்
மின்னியலும்வார்சடையெம்பெருமான்கண்டாய்
வேழத்தினுரிவிரும்பிப்போர்த்தான்கண்டாய்
தன்னியல்பார்மற்றொருவரில்லான்கண்டாய்
தாங்கரியசிவந்தானாய்நின்றான்கண்டாய்
மன்னியமங்கையோர்கூறன்கண்டாய்
மழபாடிமன்னுமணாளன்றானே. (௮)

ஆலாலமுண்டுகந்தவாதிகண்டா
யடையலர்தம்புரமூன்றுமெய்தான்கண்டாய்
காலாலக்காலனையுங்காய்ந்தான்கண்டாய்
கண்ணப்பர்க்கருள்செய்தகாளைகண்டாய்
பாலாருமொழிமடவாள்பாகன்கண்டாய்
பசுவேறிப்பலிதிரியும்பண்பன்கண்டாய்
மாலாலுமறிவரியமைந்தன்கண்டாய்
மழபாடிமன்னுமணாளன்றானே. (௯)

ஒருசுடராயுலகேழுமானான்கண்டா
யோங்காரத்துட்பொருளாய்நின்றான்கண்டாய்
விரிசுடராய்விளங்கொளியாய்* நின்றான்கண்டாய்
விழவொலியும்வேள்வொலியுமானான்கண்டாய்
இருசுடர்மீதோடா† விலங்கைக்கோனை
யிடர்பவிருபதுதோளிறுத்தான்கண்டாய்
மருசுடரின்மாணிக்கக்குன்றுகண்டாய்
மழபாடிமன்னுமணாளன்றானே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

அலைபடுத்தபெருங்கடனஞ்சமுதாவுண்டு
வமரர்கடந்தலைகாத்தவையர்செம்பொன்‡
சிலையெடுத்துமாநாகநெருப்புக்கோத்துத்
திரிபுரங்கடீயிட்டசெல்வர்போலும்
நிலைபடுத்தபசும்பொன்னான்முத்தாரீண்ட
நிரைவயிரப்பலகையாற்குவையார்த்துற்ற¶
மலைபடுத்தமழபாடிவயிரத்தூணை
யென்றென்றேநானரற்றிநைகின்றேனே. (௧)

* விளக்கொளியாய் என்றும் பாடம். † இருசுடருமீதோடா என்றும் பாடம். ‡ காத்தவையர்செச்சைச் என்றும் பாடம். ¶ குவையாத்துற்ற என்றும் பாடம்.

Koviloor Digital Library

அறைகலந்தகுழன்மொந்தைவீணையாழு
மந்தரத்திற்கந்தருவரமரரேத்த
மறைகலந்தமந்திரமுநீருங்கொண்டு
வழிபட்டார்வானாளக்கொடுத்தியன்றே
கறைகலந்தபொழிற்கச்சிக்கம்பமேய
கனவயிரத்திரடேனைகலிசூழ்மாட
மறைகலந்தமழபாடிவயிரத்தூணே
யென்றென்றேநானரற்றிநைகின்றேனே. (௨)

உரங்கொடுக்குமிருண்மெய்யர்மூர்க்கர்பொல்லா
வூத்தைவாய்ச்சமணர்தமைபுறவாக்கொண்ட
பரங்கெடுத்திங்கடியேனையாண்டுகொண்ட
பவளத்தின்றிரடேனைபசும்பொன்முத்தே
புரங்கெடுத்துப்பொல்லாதகாமனாகம்
பொடியாகவிழித்தருளிப்புவியோர்க்கென்றும்
வரங்கொடுக்குமழபாடிவயிரத்தூணே
யென்றென்றேநானரற்றிநைகின்றேனே. (௩)

ஊனிகந்தூணுறிகையர்குண்டர்பொல்லா
வூத்தைவாய்ச்சமணருறவாகக்கொண்டு
ஞானகஞ்சேர்ந்துள்ளவயிரத்தைநண்ணு
நாயேனைப்பொருளாகவாண்டுகொண்ட
மீனகஞ்சேர்வெள்ளநீர்விதியாற்சூடும்
வேந்தனேவிண்ணவர்தம்பெருமான்மேக
வானகஞ்சேர்மழபாடிவயிரத்தூணே
யென்றென்றேநானரற்றிநைகின்றேனே. (௪)

சிரமேற்றநான்முகன்றன்றலையுமற்றைத்
திருமாறன்செழுந்தலையும்பொன்றச்சிந்தி
உரமேற்றவிரவிபற்றகர்த்துச்சோம
னொளிகலைகள்* படவுழக்கியுயிரைநல்கி
நரையேற்றவிடையேறிநாகம்பூண்ட
நம்பியையேமறைநான்குமோலமிட்டு
வரமேற்குமழபாடிவயிரத்தூணே
யென்றென்றேநானரற்றிநைகின்றேனே. (௫)

சினந்திருத்துஞ்சிறுப்பெரியார்குண்டர்தங்கள்
செதுமதியார்தீவினைக்கேவிழுந்தேன்றேடிப்
புனந்திருத்தும்பொல்லாதபிண்டிபேணும்
பொறியிலியேன்றனைப்பொருளாவாண்டுகொண்டு

* னொளிர்கலைகள் என்றும் பாடம்.

Koviloor Digital Library

தனந்திருத்துமவர்திறத்தையொழியப்பாற்றித்
தயாமூலதன்மவழியெனக்குநல்கி
மனந்திருத்துமழபாடிவயிரத்தூணே
யென்றென்றேநானரற்றிநைகின்றேனே. (௯)

சுழித்துணையாம்பிறவிவழித்துக்கஞ்நீக்குஞ்
சுருள்சடை* யெம்பெருமானேதூயதென்னீர்
இழிப்பரியபசுபாசப்பிறப்பைநீக்கு
மென்றுணையேயென்னுடையபெம்மான்றம்மான்
பழிப்பரியதிருமாலுமயனுங்காணாப்
பரிதியேசுருதிமுடிக்கணியாய்வாய்த்த
வழித்துணையாமழபாடிவயிரத்தூணே
யென்றென்றேநானரற்றிநைகின்றேனே. † (௭)
திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண்-நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

பொன்னார்மேனியனேபுலித்தோலையரைக்கசைத்து
மின்னார்செஞ்சடைமேன்மிளிர்கொன்றையணிந்தவனே
மன்னேமாமணியேமழபாடியுண்மாணிக்கமே
அன்னேயுன்னையல்லாலினியாரைநினைக்கேனே. (௧)

கீளார்கோவணமுந்திருநீறுமெய்பூசியுன்றன்
தாளேவந்தடைந்தேன்றலைவாவெனையேன்றுகொணீ
வாளார்கண்ணிபங்காமழபாடியுண்மாணிக்கமே
ஆளாய்நின்னை ‡ யல்லாலினியாரைநினைக்கேனே. (௨)

எம்மாவெம்மனையென்றனக்கெட்டனைச்சார்வாகார்
இம்மாயப்பிறவிபிறந்தேயிறந்தெய்த்தொழிந்தேன்
மைம்மாம்பூம்பொழில்சூழ்மழபாடியுண்மாணிக்கமே
அம்மாநின்னை ¶ யல்லாலினியாரைநினைக்கேனே. (௩)

பண்டேநின்னடியேனடியாரடியார்கட்கெல்லாம்
தொண்டேபூண்டொழிந்தேன்றொடராமைத்துரிசறுத்தேன்
வண்டார்பூம்பொழில்சூழ்மழபாடியுண்மாணிக்கமே
அண்டாநின்னையல்லாலினியாரைநினைக்கேனே. (௪)

* சூழ்சடை என்றும் பாடம். † இத்திருப்பதிகத்தில் அ, க, ௧0 இச்செய்யுள்கள் மறைந்துபோயின. ‡ கேளா நின்னை என்றும், கேளாய் நின்னை என்றும் பாடம். ¶ எம்மானின்னை என்றும் பாடம்.

Koviloor Digital Library

கண்ணாயேழுலகுங்கருத்தாயவருத்தமுமாய்ப்
பண்ணாரின்றமிழாய்ப்பரமாயபரஞ்சுடரே
மண்ணார்பூம்பொழில்சூழ்மழபாடியுண்மாணிக்கமே
அண்ணாநின்னையல்லாலினியாரைநினைக்கேனே. (௫)

நாளார்வந்தணுகிநலியாமுனநின்றனக்கே
ஆளாவந்தடைந்தேனடியேனையுமேன்றுகொணீ
மாளாநாளருளுமழபாடியுண்மாணிக்கமே
ஆளாநின்னை *யல்லாலினியாரைநினைக்கேனே. (௬)

சந்தாருங்குழையாய்சடைமேற்பிறைதாங்கிநல்ல
வெந்தார்வெண்பொடியாய்விடையேறியவித்தகனே
மைந்தார்சோலைகள்சூழ்மழபாடியுண்மாணிக்கமே
எந்தாய்நின்னையல்லாலினியாரைநினைக்கேனே. (௭)

வெய்யவிரிசுடரோன்மிகுதேவர்கணங்களெல்லாம்
செய்யமலர்களிடமிகுசெம்மையுணின்றவனே
மையார்பூம்பொழில்சூழ்மழபாடியுண்மாணிக்கமே
ஐயாநின்னையல்லாலினியாரைநினைக்கேனே. (௮)

நெறியேநின்மலனேநெடுமாலயன்போற்றிசெய்யும்
குறியேநீர்மையனேகொடியேரிடையாடலைவா
மறிசேரங்கையனேமழபாடியுண்மாணிக்கமே
அறிவேநின்னையல்லாலினியாரைநினைக்கேனே. (௯)

ஏரார்முப்புரமுமெரியச்சிலைதொட்டவனை
வாரார்கொங்கையுடன்மழபாடியுண்மேயவனைச்
சீரார்நாவலர்கோனாரூரனுரைத்ததமிழ்
பாரோரேத்தவல்லார்பரலோகத்திருப்பாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருமழபாடித்திருப்பதிகம் - ௯.

ஆ. திருப்பதிகம் - ௨௧௧.

சுவாமி தேவி திருநாமங்கள் - வச்சிரத்தம்பநாதர், அழகம்மை.

சுந்தரமூர்த்திநாயனார் சிவஸ்தலயாத்திரை செய்யும்போது திருவாலம்பொழிலைஅடைந்து சுவாமிதரிசனஞ் செய்து, அன்றிரவு நித்திரை செய்யும்பொழுது சுவாமி அவருக்குச் சொப்பனத்திலே தோன்றி, "மழபாடிக்கு வருதற்கு மறந்தாயோ" என்று சொல்லியருளினார். நாயனார் விழித்தெழுந்து, காவிரிநதியைக் கடந்து, திருமழபாடிக்குப்போய், சுவாமிதரிசனஞ்செய்து, "பொன்னார்மேனியனே" என்னுந்திருப்பதிகம்பாடியருளினார்.

* ஆளாநன்னை என்றும் பாடம்.

Koviloor Digital Library

௫௫. திருப்பழுவூர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

முத்தன்மிகுமூவிலைநல்வேலன்விரிநூலன்
அத்தனெமையாளுடையவண்ணலிடமென்பர்
மைத்தழைபெரும்பொழிலின்வாசமதுவீசப்
பத்தரொடுசித்தர்பயில்கின்றபழுவூரே. (௧)

கோடலொடுகோங்கவைகுலாவுமுடிதன்மேல்
ஆடரவம்வைத்தபெருமானதிடமென்பர்
மாடமலிசூளிகையிலேறிமடவார்கள்
பாடலொலிசெய்யமலிகின்றபழுவூரே. (௨)

வாலியபுரத்திலவர்வேவவிழிசெய்த
போலியவொருத்தர்புரிநூலரிடமென்பர்
வேலியின்விரைக்கமலமன்னமுகமாதர்
பாலெனமிழற்றிநடமாடுபழுவூரே. (௩)

எண்ணுமோரெழுத்துமிசையின்கிளவிதேர்வார்
கண்ணுமுதலாயகடவுட்கிடமதென்பர்
மண்ணின்மிசையாடிமலையாளர்தொழுதேத்திப்
பண்ணினொலிகொண்டுபயில்கின்றபழுவூரே. (௪)

சாதல்புரிவார்சுடலைதன்னினடமாடும்
நாதனமையாளுடையநம்பனிடமென்பர்
வேதமொழிசொல்லிமறையாளரிறைவன்றன்
பாதமவையேத்த * நிகழ்கின்றபழுவூரே. (௫)

மேவவருமும்மதிலும்வெந்தழல்விளைத்து
மாவயரவன்றுரிசெய்மைந்தனிடமென்பர்
பூவையைமடந்தையர்கள்கொண்டுபுகழ்சொல்லிப்
பாவையர்கள்கற்பொடுபொலிந்தபழுவூரே. (௬)

மந்தணமிருந்துபுரிமாமடிதன்வேள்வி
சிந்தவிளையாடுசிவலோகனிடமென்பர்
அந்தணர்களாகுதியிலிட்டவகின்மட்டார்
பைந்தொடிநன்மாதர்சுவடொற்றுபழுவூரே. (௭)

* பாதமவையோத என்றும் பாடம்.

Koviloor Digital Library

உரக்கடல்விடத்தினைமிடற்றிலுறவைத்தன்
றரக்கனையடர்த்தருளுமப்பனிடமென்பர்
குரக்கினம்விரைப்பொழிலின்மீதுகனியுண்டு
பரக்குறுபுனற்செய்* விளையாடுபழுவூரே. (அ)

நின்றநெடுமாலுமொருநான்முகனுநேட
அன்றுதழலாய்நிமிருமாதியிடமென்பர்
ஒன்றுமிருமூன்றுமொருநாலுமுணர்வார்கள்
மன்றினிலிருந்துடன்மகிழ்ந்தபழுவூரே. (௯)

மொட்டையமணாதர்துகின்மூடுவிரிதேரர்
முட்டைகண்மொழிந்தமுனிவான்றனிடமென்பர்
மட்டைமலிதாழையிளநீரதிசைபூகம்
பட்டையொடுதாறுவிரிகின்றபழுவூரே. (௧0)

அந்தணர்களானமலையாளரவரேத்தும்
பந்தமலிகின்றபழுவூரரனையாரச்
சந்தமிகுஞானமுணர்பந்தனுரைபேணி †
வந்தவணமேத்துமவர்வானமுடையாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருப்பழுவூர்த்திருப்பதிகம் - ௧.

ஆ திருப்பதிகம் - உஉ0.

சுவாமி தேவி திருநாமங்கள் - வடமூலநாதர், அருந்தவநாயகி.

௫௯. திருக்காணூர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

வானார்சோதிமன்னுசென்னிவன்னிபுனங்கொன்றைத்
தேனார்போதுதானார்கங்கைதிங்களொடுசூடி
மானேர்நோக்கிகண்டங்குவப்பமாலையாடுவார்
கானூர்மேயகண்ணார்நெற்றியானூர்செல்வரே. (௧)

நீந்தலாகாவெள்ளமூழ்குநீள்சடைதன்மேலோர்
ஏய்ந்தகோணற்பிறையோடரவுகொன்றையெழிலாப்
போந்தமென்சொலின்பம்பயந்தமைந்தரவர்போலாம்
காந்தள்விம்முகானூர்மேயசாந்தநீற்றாரே. (உ)

* புணர்செய் என்றும்பாடம். † சந்தமிகுஞானசம்பந்தனுரைபேணி என்றும் பாடம்.

சிறையார்வண்டுந்தேனும்விம்முசெய்யமலர்க்கொன்றை
மறையார்பாடலாடலோடுமால்விடைமேல்வருவார்
இறையார்வந்தெனில்புகுந்தென்னெழினலமுங்கொண்டார்
கறையார்சோலைக்கானூர்மேயபிறையார்சடையாரே. (௩)

விண்ணார்திங்கட்கண்ணிவெள்ளைமாலையதுசூடித்
தண்ணாரக்கோடாமைபூண்டுதழைபுன்சடைதாழ
எண்ணாவந்தெனில்புகுந்தங்கெவ்வநோய்செய்தான்
கண்ணார்சோலைக்கானூர்மேயவிண்ணோர்பெருமானே. (௪)

தார்கொள்கொன்றைக்கண்ணியோடுந்தண்மதியஞ்சூடி
சீர்கொள்பாடலாடலோடுசேடராய்வந்து
ஊர்கடோறமையம்மேற்றென்னுள்வெந்நோய்செய்தார்
கார்கொள்சோலைக்கானூர்மேயகறைக்கண்டத்தாரே. (௫)

முளிவெள்ளெலும்புநீறுநூலுமூழ்குமார்பராய்
எளிவந்தார்போலையமென்றெனில்லேபுகுந்துள்ளத்
தெளிவுநாணுங்கொண்டகள்வர்தேறலார்பூவில்
களிவண்டியாழ்செய்கானூர்மேயவொளிவெண்பிறையாரே. (௬)

மூவாவண்ணர்முளைவெண்பிறையர்முறுவல்செய்திங்கே
பூவார்கொன்றைபுனைந்துவந்தார்பொக்கம்பலபேசிப்
போவார்போலமால்செய்துள்ளம்புக்கபுரிநூலர்
தேவார்சோலைக்கானூர்மேயதேவதேவரே. (௭)

தமிழினீர்மைபேசித்தாளம்வீணைபண்ணிநல்ல
முழவமொந்தைமல்குபாடல்செய்கையிடமோவார்
குமிழின்மேனிதந்துகோலநீர்மையதுகொண்டார்
கமழுஞ்சோலைக்கானூர்மேயபவளவண்ணரே. (௮)

அந்தமாதிபயனுமாலுமார்க்குமறிவரியான்
சிந்தையுள்ளுநாவின்மேலுஞ்சென்னியுமன்னினான்
வந்தென்னுள்ளம்புகுந்துமாலைகாலையாடுவான்
கந்தமல்குகானூர்மேயவெந்தைபெம்மானே. (௯)

ஆமையரவோடேனவெண்கொம்பக்குமாலைபூண்
டாமோர்கள்வர்வெள்ளர்போலவுள்வெந்நோய்செய்தார்
ஓமவேதநான்முகனுங்கோணாகணையானும்
சேமமாயசெல்வர்கானூர்மேயசேடரே. (௧௦)

கழுதுதுஞ்சுங்கங்குலாடுங்கானூர்மேயானைப்
பழுதின்ஞானசம்பந்தன்சொற்பத்தும்பாடியே
தொழுதுபொழுதுதோத்திரங்கள்சொல்லித்துதித்துநின்
றழுதுநக்குமன்புசெய்வாரல்லலறுப்பாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

Koviloor Digital Library.

திருநாவுக்கரசுநாயனர்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

திருவினுதனுஞ்செம்மலர்மேலுறை
உருவனுயுலகத்திறுயிர்க்கெலாம்
கருவனுகிமுளைத்தவன்கானூரில்
பரமனுயபரஞ்சுடர்காண்மினே. (௧)

பெண்டிர்மக்கள்பெருந்துணைநன்னிதி
உண்டின்றேயென்று* கவன்மினேழைகாள்
கண்டுகொண்மினீர்கானூர்முளையினைப்
புண்டரீகப்பொதும்பிலொதுங்கியே. (௨)

தாயத்தார்தமர்நன்னிதியென்னுமிம்
மாயத்தேகிடந்திட்டுமயங்கிடேல்
காயத்தேயுளன்கானூர்முளையினை
வாயத்தால்வணங்கீர்வினைமாயவே. (௩)

குறியினின்றுண்டுகூறையிலாச்சமண்
நெறியைவிட்டுநிறைகழல்பற்றினேன்
அறியனுற்றிரேற்கானூர்முளையவன்
செறிவுசெய்திட்டிருப்பதென்சிந்தையே. (௪)

பொத்தன்மண்சுவர்ப்பொல்லாக்குரம்பையை
மெய்த்தனென்றுவியந்திடலேழைகாள்
சித்தர்பத்தர்கள்சேர்திருக்கானூரில்
அத்தன்பாதமடைதல்கருமமே. (௫)

கல்விஞானக்கலைப்பொருளாயவன்
செல்வமல்குதிருக்கானூரீசனை
எல்லியும்பகலும்மிசைவானவா
சொல்லிடீர்நுந்துயரங்கடீரவே. (௬)

நீரும்பாருநெருப்புமருக்கனும்
காருமாருதங்கானூர்முளைத்தவன்
சேர்வுமொன்றறியாதுதிசைதிசை †
ஓர்வுமொன்றிலரோடித்திரிவரே. (௭)

ஓமத்தோடயன்மாலறியாவணம்
வீமப்பேரொளியாயவிழுப்பொருள்
காமற்காய்ந்தவன்கானூர்முளைத்தவன்
சேமத்தாலிருப்பாவதென்சிந்தையே. (௮)

* உண்டிதேயென்று என்றும் பாடம். † திசைதிசை என்றும் பாடம்.

Koviloor Digital Library

வன்னிகொன்றைபெருக்கணிந்தான்மலை
உன்னியேசென்றெடுத்தவனொண்டிறல்
தன்னைவீழத்தனிவிரல்வைத்தவன்
கன்னிமாமதிற்காறூர்க்கருத்தனே. * (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருக்காறூர்த்திருப்பதிகம் - உ.

ஆ திருப்பதிகம் - உஉஉ.

சுவாமி தேவி திருநாமங்கள் - செம்மேனிநாதர், சிவயோகநாயகி.

௩௭. திருவன்பிலாலந்துறை.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

கணைநீடெரிமாலரவம்வரைவில்லா
இணையாவெயின்மூன்றுமெரித்தவிறைவர்
பிணைமாமயிலுங் † குயில்சேர்மடவன்னம்
அணையும்பொழிலன்பிலாலந்துறையாரே. (௧)

சடையார்சதுரன்முதிராமதிசூடி
விடையார்கொடியொன்றுடையெந்தைவிமலன்
கிடையாரொலியோத்தரவத்திசைகிள்ளை
அடையார்பொழிலன்பிலாலந்துறையாரே. (௨)

ஊரும்மரவஞ்சடைமேலுறவைத்துப்
பாரும்பலிகொண்டொலிபாடும்பரமர்
நீருண்கயலும்வயல்வாளைவராலோ
டாரும்புனலன்பிலாலந்துறையாரே. (௩)

பிறையும்மரவும்முறவைத்தமுடிமேல்
நறையுண்டெழுவன்னியுமன்னுசடையார்
மறையும்பலவேதியரோதவொலிசென்
றறையும்புனலன்பிலாலந்துறையாரே. (௪)

நீடும்புனற்கங்கையுந்தங்கமுடிமேல்
கூடும்மலையாளொருபாகமமர்ந்தார்
மாடும்முழவம்மதிரம்மடமாதர்
ஆடும்பதியன்பிலாலந்துறையாரே. (௫)

* இத்திருப்பதிகத்தில் ஒன்பதாவதுசெய்யுள் மறைந்துபோயிற்று. † பிணையாமயிலுங் என்றும் பாடம்.

Koviloor Digital Library

நீரூர் திருமேனியருனமிலார்பால்
ஊரூர்சுவையாகியவும்பர்பெருமான்
வேறாகிலும்மிருசந்தனமூர்த்தி
ஆரூர்வயலன்பிலாலந்துறையாரே. (சு)

செடியார்தலையிற்பலிகொண்டினிதுண்ட
படியார்பரமன்பரமேட்டிதன்சீரைக்
கடியார்மலரும்புனறூவிநின்றேத்தும்
அடியார்தொழுமன்பிலாலந்துறையாரே. (எ)

விடத்தார்திகழும்மிடறன்னடமாடி
படத்தாரரவம்விரவுஞ்சடையாதி
கொடித்தேரிலங்கைக்குலக்கோன்வரையார
அடர்த்தாரருளன்பிலாலந்துறையாரே. (அ)

வணங்கிம்மலர்மேலயனுந்நெடுமாலும்
பிணங்கியறிகின்றிலர்மற்றும்பெருமை
சுணங்கும்முகத்தம்முலையாளொருபாகம்
அணங்குந்திகழன்பி * லாலந்துறையாரே. (கூ)

தறியார்துகில்போர்த்துழல்வார்சமண்கையர்
நெறியாவுணராநிலைகேடினர்நித்தல்
வெறியார்மலர்கொண்டடிவீழுமவரை
அறிவாரவரன்பிலாலந்துறையாரே. (க0)

அரவார்புனலன்பிலாலந்துறைதன்மேல்
காவாதவர்காழியுண்ஞானசம்பந்தன்
பாவார்தமிழ்பத்திசைபாடவல்லார்போய்
விரவாகுவர்வானிடைவீடெளிதாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

வானஞ்சேர்மதிசூடியமைந்தனை
நீநெஞ்சேகெடுவாய்நினைகிற்கிலை
ஆனஞ்சாடியையன்பிலாலந்துறைக்
கோனெஞ்செல்வனைக்கூறிடகிற்றியே. (க)

காரணத்தர்கருத்தர்கபாலியார்
வாரணத்துரிபோர்த்தமணாளனார்
ஆரணப்பொருளன்பிலாலந்துறை
நாரணற்கரியானொருநம்பியே. (உ)

* அணங்குந்திகழன்பி என்றும் பாடம்.

அன்பினானஞ்சமைந்துடனாடிய*
என்பினானையுரித்துக்களைந்தவன்
அன்பி†லானையம்மானையள்ளூறிய
அன்பினானினைந்தாரறிந்தார்களே. (௩)

சங்கையுள்ளதுஞ்சாவதுமெய்யுமை
பங்கனாடிபாவியேனாய
அங்கணனெந்தையன்பிலாலந்துறைச்
செங்கணாடிசேரவும்வல்லனே. (௪)

கொக்கிறகர்குளிர்மதிச்சென்னியர்
மிக்கரக்கர்புரமெரிசெய்தவர்
அக்கரையினரன்பிலாலந்துறை
நக்குருவருநம்மையறிவரே. (௫)

வெள்ளமுள்ளவிரிசடைநந்தியைக்
கள்ளமுள்ளமனத்தவர்காண்கிலார்
அள்ளலார்வயலன்பிலாலந்துறை
உள்ளவாறறியார்சிலருமரே. (௬)

பிறவிமாயப்பிணக்கிலழுந்தினும்
உறவெலாஞ்சிந்தித்துன்னிப்புகவாதே
அறவனெம்பிரானன்பிலாலந்துறை
மறவாதேதொழுதேத்திவணங்குமே. (௭)

துணங்குநூலயன்மாலுமிருவரும்
பிணங்கியெங்குந்திரிந்தெய்த்துங்காண்கிலா
அணங்கனெம்பிரானன்பிலாலந்துறை
வணங்குநம்வினைமாய்ந்தறும்வண்ணமே. (௮)

பொய்யெலாமுரைக்குஞ்சமண்சாக்கியக்
கையன்மாருரைகேளாதெழுமினோ
ஐயனெம்பிரானன்பிலாலந்துறை
மெய்யன்சேவடியேத்துவார்மெய்யரே. (௯)

இலங்கைவேந்தனிருபதுதோளிற்று
மலங்கமாமலைமேல்விரல்வைத்தவன்
அலங்கலெம்பிரானன்பிலாலந்துறை
வலங்கொள்வாரைவானோர்வலங்கொள்வரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருவன்பிலாலந்துறைத்திருப்பதிகம் - ௨.

ஆ திருப்பதிகம் - ௨௨௪.

சுவாமி தேவி திருநாமங்கள் - சத்தியவாகீசர், சௌந்தரநாயகி.

* அன்பினானஞ்சமர்ந்துடனாடிய என்றும் பாடம். † அன்பிலாலந்துறை அன்பில் என்றும் வழங்கப்படும்.

Koviloor Digital Library

௫அ. திருமாந்துறை.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

செம்பொனார்தருவேங்கையுஞாழலுஞ்* செருந்திசெண்பகமானைக்
கொம்புமாரமுமாதவிசுரபுனைகுருந்தலர்பாரந்தி .
அம்பொனேர்வருகாவிரிவடகரைமாந்துறையுறைகின்ற
எம்பிரானிமையோர்தொழுபைங்கழலேத்துதல்செய்வோமே. (௧)

விளவுதேனொடுசாதியின்பலங்களும்வேய்மணிநிரந்துந்தி
அளவிநீர்வருகாவிரிவடகரைமாந்துறையுறைவானத்
துளவமான்மகனைங்கணைக்காமனைச்சுடவிழித்தவனெற்றி
அளகவாணுதலரிவைதன்பங்கனையன்றிமற்றறியோமே. (௨)

கோடுதேன்சொரிகுன்றிடைப்பூகமுங்கூந்தலின்குலைவாரி
ஓடுநீர்வருகாவிரிவடகரைமாந்துறையுறைநம்பன்
வாடினார்தலையிற்பலிகொள்பவன்வானவர்மகிழ்ந்தேத்தும்
கேடிலாமணியைத்தொழலல்லதுகெழுமுதலறியோமே. (௩)

இலவஞாழலு † மீஞ்சொடுசுரபுன்னையிளமருதிலவங்கம்
கலவிநீர்வருகாவிரிவடகரைமாந்துறையுறைகண்டன்
அலைகொள்வார்புனலம்புலிமத்தமுமாடரவுடன்வைத்த
மலையைவானவர்கொழுந்தினையல்லதுவணங்குதலறியோமே. (௪)

கோங்குசண்பகங்குருந்தொடுபாதிரிகுரவிடைமலருந்தி
ஓங்குநீர்வருகாவிரிவடகரைமாந்துறையுறைவானைப்
பாங்கினாலிடுந்தூபமுந்தீபமும்பாட்டவிமலர்சேர்த்தித்
தாங்குவாரவர்நாமங்களுவினிற்றலைப்படுந்தவத்தோரே. (௫)

பெருகுசந்தனங்காரகில்பீலியும்பெருமரநிமிர்ந்துந்திப் ‡
பொருதுகாவிரிவடகரைமாந்துறைப்புநிதனெம்பெருமானைப்
பரிவினாலிருந்திரவியுமதியமும்பார்மன்னர்பணிந்தேத்த
மருதவானவர்வழிபடுமலரடிவணங்குதல்செய்வோமே. (௬)

நறவமல்லிகைமுல்லையுமௌவலுநாண்மலரவைவாரி
இறவில்வந்தெறிகாவிரிவடகரைமாந்துறையிறையன்றங்
கறவனாகியகூற்றினைச்சாடியவந்தணன்வரைவில்லால் ¶
நிறையவாங்கிவலித்தெயிலெய்தவனிணைகழல்பணிவோமே. (௭)

* † நாழலும் என்றும் பாடம். ‡ பெருமரநிரந்துந்திப் என்றும் பாடம். ¶ வரைவில்லா என்றும் பாடம்.

Koviloor Digital Library

மந்தமார்பொழின்மாங்கனிமாந்திடமந்திகண்மாணிக்கம்
உந்திநீர்வருகாவிரிவடகரைமாந்துறையுறைவானை
நிந்தியாவெடுத்தார்த்தவல்லரக்கனைநெரித்திடுவிரலானைச்
சிந்தியாமனத்தாரவர்சேர்வதுதிகெறியதுதானே. (அ)

நீலமாமணிநித்திலத்தொத்தொடுநிரைமலர்நிரந்துந்தி
ஆலியாவருகாவிரிவடகரைமாந்துறையமர்வானை
மாலுநான்முகன்றேடியுங்காண்கிலாமலரடியிணைநாளும்
கோலமேத்திநின்றாடுமின்பாடுமின்கூற்றுவனலியானே. (௯)

நின்றுணுஞ்சமண்டேரருநிலையிலர்நெடுங்கழைநறவேலம்
நன்றுமாங்கனிகதலியின்பலங்களுநாணலினுரைவாரி
ஒன்றிநேர்வருகாவிரிவடகரைமாந்துறையொருகாலம்
அன்றியுள்ளழிந்தெழும்பரிசழகிறுவதுவவர்க்கிடமாமே. (௧0)

வரைவளங்கவர்காவிரிவடகரைமாந்துறையுறைவானைச்
சிரபுரம்பதியுடையவன்கவுணியன்செழுமறைநிறைநாவன்
அரவெனும்பணிவல்லவன்ஞானசம்பந்தனன்புறுமாலை
பரவிடுந்தொழில்வல்லவரல்லலும்பாவமுமிலர்தாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருமாந்துறைத்திருப்பதிகம் - ௧.

ஆ திருப்பதிகம் - ௨௨௫.

சுவாமி தேவி திருநாமங்கள் - ஆம்பிரவனநாதர், அழகம்மை.

௫௬. திருப்பாற்றுறை.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

காரார்கொன்றைகலந்தமுடியினர்
சீரார்சிந்தைசெலச்செய்தார்
பாரார்நாளும்பரவியபாற்றுறை
ஆராதிமுதல்வரே. (௧)

நல்லாரும்மவர்தியரெனப்படும்
சொல்லார்நன்மலர்சூடினர்
பல்லார்வெண்டலைச்செல்வரெம்பாற்றுறை
எல்லாருந்தொழுமீசரே. (௨)

Koviloor Digital Library

விண்ணார் திங்கள்விளங்குநுதலினர்
எண்ணார்வந்தெனெழில்கொண்டார்
பண்ணார்வண்டினம்பாடல்செய்பாற்றுறை
உண்ணூணுமுறைவரே. (௩)

பூவுந்திங்கள்புனைந்தமுடியினர்
ஏவினல்லாரெயிலெய்தார்
பாவந்தீர்புனன்மல்கியபாற்றுறை
ஓவென்சிந்தையொருவரே. (௪)

மாகந்தோய்மதிசூடிமகிழ்ந்தென
தாகம்பொன்னிறமாக்கினார்
பாகம்பெண்ணுமுடையவர்பாற்றுறை
நாகம்பூண்டநயவரே. (௫)

போதுபொன்றிகழ்கொன்றைபுனைமுடி
நாதர்வந்தெனலங்கொண்டார்
பாதந்தொண்டர்பரவியபாற்றுறை
வேதமோதும்விகிர்தரே. (௬)

வாடல்வெண்டலைசூடினர்மால்விடை
கோடல்செய்தகுறிப்பினார்
பாடல்வண்டினம்பண்செயும்பாற்றுறை
ஆடனாகமசைத்தாரே. (௭)

வெவ்வமேனியராய்வெள்ளைநீற்றினர்
எவ்வஞ்செய்தெனெழில்கொண்டார்
பவ்வநஞ்சடைகண்டரெம்பாற்றுறை
மவ்வல்சூடியமைந்தரே. (௮)

ஏனமன்னமுமானவருக்கெரி
ஆனவண்ணத்தெமண்ணலார்
பானலம்மலர்விம்மியபாற்றுறை
வானவெண்பிறைமைந்தரே. (௯)

வெந்தநீற்றினர்வேலினர்நூலினர்
வந்தெனன்னலம்வெளவினார்
பைந்தண்மாதவிசூழ்தருபாற்றுறை
மைந்தர்தாமோர்மணாளரே. (௧௦)

பத்தர்மன்னியபாற்றுறைமேவிய
பத்துநூறுபெயரானைப்
பத்தன்ஞானசம்பந்தனதின்றமிழ்
பத்தும்பாடிப்பரவுமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருப்பாற்றுறைத்திருப்பதிகம் - ௧.

ஆ திருப்பதிகம் - ௨௨௬.

சுவாமி தேவி திருநாமங்கள் — திருமூலநாதர், மோகநாயகி.

Koviloor Digital Library

௬௦. திருவாவணக்கா.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

மழைபார்மிடறும்மழுவாளுடையாய் *
உழைபார்கரவாவுமையாள்கணவா
விழவாரும்வெண்ணாவலின்மேவியவெம்
அழகாவெனுமாயிழையாளவளே. (௧)

கொலையார்கரியின்னுரிமூடியனே
மலையார்சிலையாவளைவித்தவனே
விலையாலெனையாளும்வெண்ணாவலுளாய்
நிலையாவருளாயெனுநேரிழையே. (௨)

காலாலுயிர்காலனைவீடுசெய்தாய்
பாலோடுநெய்யாடியபால்வணனே
வேலாடுகையாயெம்வெண்ணாவலுளாய்
ஆலார்நிழலாயெனுமாயிழையே. (௩)

சுறவக்கொடிகொண்டவனீறதுவாய்
உறநெற்றிவிழித்தவெழுத்தமனே
விறன்மிக்ககரிக்கருள்செய்தவனே
அறமிக்கதுவென்னுமெனாயிழையே. (௪)

செங்கட்பெயர்கொண்டவன்செம்பியர்கோன்
அங்கட்கருணைபெரிதாயவனே
வெங்கண்விடையாயெம்வெண்ணாவலுளாய்
அங்கத்தயர்வாயினளாயிழையே. (௫)

குன்றேயமர்வாய்கொலையார்புலியின்
தன்றோலுடையாய்சடையாய்பிறையாய்
வென்றாய்புரமூன்றைவெண்ணாவலுளே
நின்றாயருளாயெனுநேரிழையே. (௬)

மலைபன்றெடுத்தவரக்கன்முடிதோள்
தொலையவ்விரலூன்றியதூமழுவா
விலையாலெனையாளும்வெண்ணாவலுளாய்
அலசாமலருளாயெனுமாயிழையே. (௮)

* இத்திருப்பதிகத்தில் ஏழாவதுசெய்யுள் மறைந்துபோயிற்று.

Koviloor Digital Library

திருவார்தருநாரணனுன்முகனும்
மருவாவெருவாவழலாய்நிமிர்ந்தாய்
விரையாரும்வெணுவலுண்மேவியவெம்
அரவாவெனுமாயிழையாளவளே. (௯)

புத்தர்பலரோடமண்பொய்த்தவர்கள்
ஒத்தவ்வுரைசொல்லிவையோரகிலார்
மெய்த்தேவர்வணங்கும்வெணுவலுளாய்
அத்தாவருளாயெனுமாயிழையே. (௧0)

வெண்ணுவலமர்ந்துறைவேதியனைக்
கண்ணார்கமழ்காழியர்தந்தலைவன்
பண்ணோடிவைபாடியபத்தும்வல்லார்
விண்ணோரவரேத்தவிரும்புவரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவிராகம். பண் - கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

வானைக்காவில்வெண்மதி* மல்குபுல்குவார்சடைத்
தேனைக்காவிலின்மொழித்தேவிபாகமாயினான்
ஆனைக்காவிலண்ணலையபயமாகவாழ்பவர்
ஏனைக்காவல்வேண்டுவாரேது† மேதமில்லையே. (௧)

சேறுபட்டதண்வயற்சென்றுசென்றுசேணுலா
வாறுபட்டநுண்டுறையானைக்காவிலண்ணலார்
நீறுபட்டமேனியார்நிகரில்பாதமேத்துவார்
வேறுபட்டசிந்தையார்விண்ணிலெண்ணவல்லரே. (௨)

தாரமாயமாதராடானோர்பாகமாயினான்
ஈரமாயபுன்சடையேற்றதிங்கள்சூடினான்
ஆரமாயமார்புடையானைக்காவிலண்ணலை
வாரமாய்வணங்குவார்வல்வினைகண்மாயுமே. (௩)

விண்ணினண்ணுபுல்கியவீரமாயமால்விடைச்
சுண்ணவெண்ணீறாடினான்சூலமேந்துகையினான்
அண்ணல்கண்ணோர்மூன்றினானானைக்காவுகைதொழ
எண்ணும்வண்ணம்வல்லவர்க்கேதமொன்றுமில்லையே. (௪)

வெய்யபாவங்கைவிடவேண்டுவீர்களாண்டசீர்
மைகொள்கண்டன்வெய்யதீமாலையாடுகாதலான்
கொய்யவிண்டநாண்மலர்க்கொன்றைதுன்றுசென்னியெம்
ஐயன்மேயபொய்கைசூழானைக்காவுசேர்மினே. (௫)

* வானைக்காவல்வெண்மதி என்றும் பாடம். †வேண்டுவார்க்கேது என்றும் பாடம்.

Koviloor Digital Library

நாணுமோர்வுசார்வுமுன்னகையுமுட்குநன்மையும்
பேணுறுதசெல்வமும்பேசநின்றபெற்றியான்
ஆணும்பெண்ணுமாகியவானைக்காவிலண்ணலார்
காணுங்கண்ணுமூன்றுடைக்கறைகொண்மிடறனல்லனே. (௬)

கூருமாலைநண்பகற்கூடிவல்லதொண்டர்கள்
பேருமூருஞ்செல்வமும்பேசநின்றபெற்றியான்
பாரும்விண்ணுங்கைதொழப்பாயுங்கங்கைசெஞ்சடை
ஆரநீரொடேந்தினானானைக்காவுசேர்மினே. (௭)

பொன்னமல்குதாமரைப்போதுதாதுவண்டினம்
அன்னமல்குதண்டுறையானைக்காவிலண்ணலைப்
பன்னவல்லநான்மறைபாடவல்லதன்மையோர்
முன்னவல்லர்மொய்கழறுன்னவல்லர்விண்ணையே. (௮)

ஊனொடுண்டனன்றெனவூனொடுண்டறீதென
ஆனதொண்டரன்பினாற்பேசநின்றதன்மையான்
வானொடொன்றுசூடினான்வாய்மையாகமன்னிநின்
றானொடஞ்சுமாடினானானைக்காவுசேர்மினே. (௯)

கையிலுண்ணுங்கையருங்கடுக்கடின்கழுக்களும்
மெய்யைப்போர்க்கும்பொய்யரும்வேதநெறியையறிகிலார்
தையல்பாகமாயினான்றழலதுருவத்தானெங்கள்
ஐயன்மேயபொய்கைசூழானைக்காவுசேர்மினே. (௧௦)

ஊழியூழிவையகத்துயிர்கடோற்றுவானொடும்
ஆழியானுங்காண்கிலாவானைக்காவிலண்ணலைக்
காழிஞானசம்பந்தன்கருதிச்சொன்னபத்திவை
வாழியாகக்கற்பவர்வல்வினைகண்மாயுமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருக்கயிலாயமும் திருவானைக்காவும் திருமயேந்திரமும்* திருவாரூரும் கூடற்சதுக்கம்.

திருச்சிற்றம்பலம்.

மண்ணதுவுண்டரிமலரோன்காணா †
வெண்ணாவல்விரும்புமயேந்திரரும் ‡
கண்ணதுவோங்கியகயிலையாரும்
அண்ணலாரூராதியானைக்காவே. (௧)

* மயேந்திரமெனினும் மகேந்திரமெனினும் ஒக்கும். † மண்ணதுவுண்டமான்மலரோன்காணா என்றும் பாடம். ‡ வெண்ணாவலுறையுமயேந்திரரும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

வந்துமாலயனவர்காண்பரியார்
வெந்தவெண்ணீறணிமயேந்திரரும்
கந்தவார்சடையுடைக்கயிலையாரும்
அந்தணரூராதியானைக்காவே. (௨)

மாலயன்றேடியமயேந்திரரும்
காலனையுயிர்கொண்டகயிலையாரும்
வேலையதோங்கும்வெண்ணாவலாரும்
ஆலையாரூராதியானைக்காவே. (௩)

கருடனையேறியயனோர்காணார் *
வெருள்விடையேறியமயேந்திரரும்
கருடருகண்டத்தெங்கயிலையாரும்
அருளணரூராதியானைக்காவே. (௪)

மதுசூதனனான்முகன்வணங்கரியார்
மதியதுசொல்லியமயேந்திரரும்
கதிர்முலைபுல்கியகயிலையாரும்
அதியனரூராதியானைக்காவே. (௫)

சக்கரம்வேண்டுமால்பிரமன்காணா
மிக்கவர்கயிலைமயேந்திரரும்
தக்கனைத்தலையரிதழலுருவர்
அக்கணியவராரூரானைக்காவே. (௬)

கண்ணனுநான்முகன்காண்பரியார்
வெண்ணாவல்விரும்புமயேந்திரரும்
கண்ணப்பர்க்கருள்செய்தகயிலையெங்கள்
அண்ணலாரூராதியானைக்காவே. (௭)

கடல்வண்ணனான்முகன்காண்பரியார்
தடவரையரக்கனைத்தலைநெரித்தார்
விடமதுவுண்டவெம்மயேந்திரரும்
அடல்விடையாராரூரானைக்காவே. (௮)

ஆதிமாலயனவர்காண்பரியார்
வேதங்கடுதிசெயுமயேந்திரரும்
காதிலொர்குழையுடைக்கயிலையாரும்
ஆதியாரூரெந்தையானைக்காவே. (௯)

அறிவிலமண்புத்தரறிவுகொள்ளேல்
வெறியமான்கரத்தாரூர்மயேந்திரரும்
மறிகடலோனயன்றேடத்தானும்
அறிவருகயிலையோனானைக்காவே. (௰)

* யயனர் காணர் என்றும் பாடம்.

Koviloor Digital Library

ஏனமாலயனவர்காண்பரியார்
கானமார்கயிலைநன்மயேந்திரும்
ஆனவாருரா தியானைக்காவை
ஞானசம்பந்தன்றமிழ்சொல்லுமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனூர்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

கோனைக்காவிக்குளிர்ந்தமனத்தராய்த்
தேனைக்காவியுண்ணார்சிலதெண்ணர்கள் *
ஆனைக்காவிலெம்மானையணைகிலார்
ஊனைக்காவியுழிதர்வருமரே. (க)

திருகுசிந்தையைத்தீர்த்துச்செம்மைசெய்து
பருகியூறலைப்பற்றிப்பதமறிந்
துருகிநைபவர்க்கூனமொன்றின்றியே
அருகுநின்றிடுமானைக்காவண்ணலே. (உ)

துன்பமின்றித்துயரின்றியென்றுநீர்
இன்பம்வேண்டிலிராப்பகலேத்துமின்
என்பொனீசனிறைவனென்றுள்குவார்க்
கன்பனாயிடுமானைக்காவண்ணலே. (௩)

நாவானன்றுநறுமலர்ச்சேவடி
ஒவாதேத்தியுளத்தடைத்தார்வினை
காவாயென்றுதங்கைதொழுவார்க்கெலாம்
ஆவாவென்றிடுமானைக்காவண்ணலே. (௪)

வஞ்சமின்றிவணங்குமின்வைகலும்
வெஞ்சொலின்றிவிலகுமின்வீடற †
நைஞ்சுநைஞ்சுநின்றுள்குளிர்வார்க்கெலாம்
அஞ்சலென்றிடுமானைக்காவண்ணலே. (௫)

நடையைமெய்யென்றுநாத்திகம்பேசாதே
படைகள்போல்வரும்பஞ்சமாபூதங்கள்
தடையொன்றின்றியேதன்னடைந்தார்க்கெலாம்
அடையநின்றிடுமானைக்காவண்ணலே. (௬)

ஒழுகுமாடத்துளொன்பதுவாய்தலும்
கழுகரிப்பதன்முன்னங்கழலடி
தொழுதுகைகளாற்றூமலர்தூவிநின்
றழுமவர்க்கன்பனானைக்காவண்ணலே. (௭)

* புன்னுச்சிலதெவ்வர்கள் என்றும் பாடம். † வீடுற என்றும் பாடம்.

Koviloor Digital Library

உருளும்போதறிவொண்ணாவுலகத்தீர்
தெருளுஞ்சிக்கெனத்தீவினைசேராதே
இருளறுத்துநின்றீசனென்பார்க்கெலாம்
அருள்கொடுத்திடுமானைக்காவண்ணலே. (அ)

நேசமாகிநினைமடநெஞ்சமே
நாசமாயகுலநலஞ்சுற்றங்கள்
பாசமற்றுப்பராபரவானந்த
ஆசையுற்றிடுமானைக்காவண்ணலே. (௯)

ஓதமாகடல்சூழிலங்கைக்கிறை
கீதங்கின்னரம்பாடக்கெழுவினான்
பாதம்வாங்கிப்பரிந்தருள்செய்தங்கோர்
ஆதியாயிடுமானைக்காவண்ணலே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

எத்தாயரெத்தந்தையெச்சுற்றத்தா
ரெம்மாடுசும்மாடாமேவர்நல்லார்
செத்தால்வந்துதவுவாரொருவரில்லை
சிறுவிறகாற்றீமூட்டிச்செல்லாநிற்பர்
சித்தாயவேடத்தாய்நீடுபொன்னித்
திருவானைக்காவுடையசெல்வாவென்றன்
அத்தாவுன்பொற்பாதமடையப்பெற்றா
லல்லகண்டங்கொண்டடியேனென்செய்கேனே. (௧)

ஊனாகியுயிராகியதனுணின்ற
வுணர்வாகிப்பிறவனைத்துந்நீயாய்நின்றாய்
நானேதுமறியாமேயென்னுள்வந்து
நல்லனவுந்தீயனவுங்காட்டாநின்றாய்
தேனாருங்கொன்றையனேநின்றியூராய்
திருவானைக்காவிலுறைசிவனேஞானம்
ஆனாயுன்பொற்பாதமடையப்பெற்றா
லல்லகண்டங்கொண்டடியேனென்செய்கேனே. (௨)

ஒப்பாயிவ்வுலகத்தோடொட்டிவாழ்வா
னொன்றலாத்தவத்தாரோடுடனேநின்று
துப்பாருங்குறையடிசிறுத்திநற்றுன்
றிறமறந்துதிரிவேனைக்காத்துநீவந்
தெப்பாலுநுண்ணுணர்வேயாக்கியென்னை
யாண்டவனேயெழிலானைக்காவாவானோர்
அப்பாவுன்பொற்பாதமடையப்பெற்றா
லல்லகண்டங்கொண்டடியேனென்செய்கேனே. (௩)

Koviloor Digital Library

நினைத்தவர்கணெஞ்சுளாய்வஞ்சக்கள்வா
நிறைமதியஞ்சடைவைத்தாயடையாதுன்பால்
முனைத்தவர்கள்புரமூன்றுமெரியச்செற்றாய்
முன்னானைத்தோல்போர்த்தமுதல்வாவென்றும்
கனைத்துவருமெருதேறுங்காளகண்டா
கயிலாயமலையாயுன்கழலேசேர்ந்தேன்
அனைத்துலகுமாள்வானேயானைக்காவா
வல்லகண்டங்கொண்டடியேனென்செய்கேனே. (௪)

இம்மாயப்பிறப்பென்னுங்கடலாந்துன்பத்
திடைச்சுழிப்பட்டிளைப்பேனையிளையாவண்ணம்
கைம்மானமனத்துதவிக்கருணைசெய்து
காதலருளவைவைத்தாய்காணாநில்லாய்
வெம்மானமதகரியினுரிவைபோர்த்த
வேதியனேதென்னானைக்காவுண்மேய
அம்மானின்பொற்பாதமடையப்பெற்றா
லல்லகண்டங்கொண்டடியேனென்செய்கேனே. (௫)

உரையாரும்புகழானேயொற்றியூராய்
கச்சியேகம்பனேகாரோணத்தாய்
விரையாருமலர்தூவிவணங்குவார்பான்
மிக்கானேயக்கரவமாரம்பூண்டாய்
திரையாரும்புனற்பொன்னித்தீர்த்தமல்கு
திருவானைக்காவிலுறைதேனேவானோர்
அரையாவுன்பொற்பாதமடையப்பெற்றா
லல்லகண்டங்கொண்டடியேனென்செய்கேனே. (௬)

மையாருமணிமிடற்றாய்மாதோர்கூறாய்
மான்மறியுமாமழுவுமனலுமேந்தும்
கையானேகாலனுடன்மாளச்செற்ற
கங்காளாமுன்கோளும்விளைவுமானாய்
செய்யானேதிருமேனியரியாய்தேவர்
குலக்கொழுந்தேதென்னானைக்காவுண்மேய
வையாவுன்பொற்பாதமடையப்பெற்றா
லல்லகண்டங்கொண்டடியேனென்செய்கேனே. (௭)

இலையாருஞ்சூலத்தாயெண்டோளானே
யெவ்விடத்துநீயல்லாதில்லையென்று
தலையாரக்கும்பிடுவார்தன்மையானே
தழன்மடுத்தமாமேருக்கையில்வைத்த
சிலையானேதிருவானைக்காவுண்மேய
தீயாடிசிறுநாயானலிவுண்டுள்ளம்
அலையாதே* நின்னடியேயடையப்பெற்றா
லல்லகண்டங்கொண்டடியேனென்செய்கேனே. (௮)

* அலசாதே என்றும் பாடம்.

Koviloor Digital Library

விண்ணாரும்புனல்பொதிசெஞ்சடையாய்வேத
நெறியானேயெறிகடலினஞ்சமுண்டாய்
எண்ணாரும்புகழானேயுன்னையெம்மா
னென்றென்றேநாவினிலெப்பொழுதுமுன்னிக்
கண்ணாரக்கண்டிருக்கக்களித்தெப்போதுங்
கடிபொழில்சூழ்தென்னானைக்காவுண்மேய
அண்ணாநின்பொற்பாதமடையப்பெற்றா
லல்லகண்டங்கொண்டடியேனென்செய்கேனே. (௯)

கொடியேயும்வெள்ளேற்றாய்கூளிபாடக்
குறட்பூதங்கூத்தாடநீயுமாடி
வடிவேயுமங்கைதனைவைத்தமைந்தா
மதிலானைக்காவுளாய்மாகாளத்தாய்
படியேயுங்கடலிலங்கைக்கோமான்றன்னைப்
பருமுடியுந்திரடோளுமடர்த்துகந்த
அடியேவந்தடைந்தடிமையாகப்பெற்றா
லல்லகண்டங்கொண்டடியேனென்செய்கேனே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

முன்னானைத்தோல்போர்த்தமூர்த்திதன்னை
மூவாதசிந்தையேமனமேவாக்கே
தன்னானையாப்பண்ணியேறினானைச்
சார்தற்கரியானைத்தாதைதன்னை
யென்னானைக்கன்றினையென்னீசன்றன்னை
யெறிநீர்த்திரையுகளுங்காவிரிசூழ்
தென்னானைக்காவானைத்தேனைப்பாலைச்
செழுநீர்த்திரளை*ச்சென்றாடினேனே. (௧)

மருந்தானைமந்திரிப்பார்மனத்துளானை
வளர்மதியஞ்சடையானைமகிழ்ந்தென்னுள்ளத்
திருந்தானையிறப்பிலியைப்பிறப்பிலானை
யிமையவர்தம்பெருமானையுமையாளஞ்சக்
கருந்தான†மதகளிற்றினுரிபோர்த்தானைக்
கனமழுவாட்படையானைப்பலிகொண்டேகூர்
திரிந்தானைத்திருவானைக்காவுளானைச்
செழுநீர்த்திரளைச்சென்றாடினேனே. (௨)

* நீரத்திரளை என்று பாடமோதில் ஓசைகுன்றுது; நீரம்-நீர். † கருந்தாள என்றும் பாடம்; கருமை-பெருமை.

Koviloor Digital Library

முற்றாதவெண்டிங்கட்கண்ணியானை
முந்நீர்நஞ்சுண்டிமையோர்க்கமுதநல்கும்
உற்றானைப்பல்லுயிர்க்குந்துணையானானை
யோங்காரத்துட்பொருளையுலகமெல்லாம்
பெற்றானைப்பின்னிறக்கஞ்செய்வான்றன்னைப்
பிரானென்றுபோற்றாதார்புரங்கண்மூன்றும்
செற்றானைத்திருவானைக்காவுளானைச்
செழுநீர்த்திரளைச்சென்றாடினேனே. (௩)

காராருங்கறைமிடற்றெம்* பெருமான்றன்னைக்
காதில்வெண்குழையானைக்கமழ்பூங்கொன்றைத்
தாரானைப்புலியதளினுடையானைத்
தானன்றிவேறொன்றுமில்லாஞானப்
பேரானைமணியாரமார்பினானைப்
பிஞ்ஞகனைத்தெய்வநான்மறைகள்பூண்ட
தேரானைத்திருவானைக்காவுளானைச்
செழுநீர்த்திரளைச்சென்றாடினேனே. (௪)

பொய்யேதுமில்லாதமெய்யன்றன்னைப்
புண்ணியனைநண்ணாதார்புரநீறாக
எய்தானைச்செய்தவத்தின்மிக்கான்றன்னை
யேறமரும்பெருமானையிடமானேந்தும்
கையானைக்கங்காளவேடத்தானைக்
கட்டங்கக்கொடியானைக்கனல்போன்மேனிச்
செய்யானைத்திருவானைக்காவுளானைச்
செழுநீர்த்திரளைச்சென்றாடினேனே. (௫)

கலையானைப்பரசுதரபாணியானைக் †
கனவயிரத்திரளானைமணிமாணிக்க
மலையானையென்றலையினுச்சியானை
வார்தருபுன்சடையானைமயானமன்னும்
நிலையானைவரியரவுநாணாக்கோத்து
நினையாதார்புரமெரியவளைத்தமேருச்
சிலையானைத்திருவானைக்காவுளானைச்
செழுநீர்த்திரளைச்சென்றாடினேனே. (௬)

ஆதியனையெறிமணியினோசையானை
யண்டத்தார்க்கறிவொண்ணாதப்பான்மிக்க
சோதியனைத்தூமறையின்பொருளான்றன்னைச்
சுரும்பமருமலர்க்கொன்றைதொன்னூல்பூண்ட
வேதியனையறமுரைத்தபட்டன்றன்னை
விளங்குமலரயன்சிரங்களைந்திலொன்றைச்
சேதியனைத்திருவானைக்காவுளானைச்
செழுநீர்த்திரளைச்சென்றாடினேனே. (௭)

* காராருமணிமிடற்றெம் என்றும், காராருங்கருமிடற்றெம் என்றும் பாடம். † கலையானைப்பாசுபதபாணியானைத் என்றும் பாடம்.

Koviloor Digital Library

மகிழ்ந்தானைக்கச்சியேகம்பன்றன்னை
மறவாதுகழனிணைந்துவாழ்த்தியேத்திப்
புகழ்ந்தாரைப்பொன்னுலகமாள்விப்பானைப்
பூதகணப்படையானைப்புறங்காட்டாடல்
உகந்தானைப்பிச்சையேயிச்சிப்பானை
யொண்பவளத்திரளையென்னுள்ளத்துள்ளே
திகழ்ந்தானைத்திருவானைக்காவுளானைச்
செழுநீர்த்திரளைச்சென்றாடினேனே. (அ)

நசையானைநால்வேதத்தப்பாலானை
நல்குரவுந்தீப்பிணிநோய்காப்பான்றன்னை
இசையானையெண்ணிறந்த* குணத்தான்றன்னை
யிடைமருதுமீங்கோயுநீங்காதேற்றின்
மிசையானைவிரிகடலுமண்ணும்விண்ணு
மிருதீயும்புனலெறிகாற்றாகியெட்டுத்
திசையானைத்திருவானைக்காவுளானைச்
செழுநீர்த்திரளைச்சென்றாடினேனே. (௯)

பார்த்தானைக்காமனுடல்பொடியாய்வீழப்
பண்டயன்மாலிருவர்க்குமறியாவண்ணம்
சீர்த்தானைச்செந்தழல்போலுருவினானைத்
தேவர்கடம்பெருமானைத்திறமுன்னாதே
ஆர்த்தோடிமலையெடுத்தவிலங்கைவேந்த
னாண்மையெல்லாங்கெடுத்தவன்றனிடரப்போதே
தீர்த்தானைத்திருவானைக்காவுளானைச்
செழுநீர்த்திரளைச்சென்றாடினேனே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

மறைகளாயினநான்குமற்றுளபொருள்களுமெல்லாம்
துறையுந்தோத்திரத்திறையுந்தொன்மையுநன்மையுமாய
அறையும்பூம்புனலானைக்காவுடையாதியைநாளும்
இறைவனென்றடிசேர்வாரெம்மையுமாளுடையாரே. (௧)

வங்கமேவியவேலைநஞ்செழவஞ்சர்கள்கூடித்
தங்கண்மேலடராமையுண்ணெனவுண்டிருள்கண்டன்
அங்கமோதியவானைக்காவுடையாதியைநாளும்
எங்களீசனென்பார்களெம்மையுமாளுடையாரே. (௨)

* யெண்ணிறைந்த என்றும் பாடம்.

Koviloor Digital Library

நிலவண்டறைகொன்றைநேரிழைமங்கையோர்திங்கள்
சாலவாளரவங்கடங்கியசெஞ்சடையெந்தை
ஆலநீழலுளானைக்காவுடையாதியைநாளும்
ஏலுமாறுவல்லார்களெம்மையுமாளுடையாரே, (௩)

தந்தைதாயுலகுக்கோர்தத்துவன்மெய்த்தவத்தோர்க்குப்
பந்தமாயினபெருமான்பரிசுடையவர்திருவடிகள்
அந்தண்பூம்புனலானைக்காவுடையாதியைநாளும்
எந்தையென்றடிசேர்வாரெம்மையுமாளுடையாரே. (௪)

கணைசெந்தீயரவநாண்கல்வளையுஞ்சிலையாகத்
துணைசெய்மும்மதின்மூன்றுஞ்சுட்டவனேயுலகுய்ய
அணையும்பூம்புனலானைக்காவுடையாதியைநாளும்
இணைகொள்சேவடிசேர்வாரெம்மையுமாளுடையாரே. (௫)

விண்ணின்மாமதிசூடிவிலையிலிகலனணிவிமலன்
பண்ணிநேர்மொழிமங்கைபங்கினன்பசுவுகந்தேறி
அண்ணலாகியவானைக்காவுடையாதியைநாளும்
எண்ணுமாறுவல்லார்களெம்மையுமாளுடையாரே. (௬)

தாரமாகியபொன்னித்தண்டுறைபாடிவிழுத்தும்
நீரினின்றடிபோற்றிநின்மலாகொள்ளெனவாங்கே
ஆரங்கொண்டவெம்மானைக்காவுடையாதியைநாளும்
ஈரமுள்ளவர்நாளுமெம்மையுமாளுடையாரே. (௭)

உரவமுள்ளதொருழையின்னுரிபுலியதளுடையானை
விரைகொள்கொன்றையினானைவிரிசடைமேற்பிறையானை
அரவம்வீக்கியவானைக்காவுடையாதியைநாளும்
இரவொடெல்லியுமேத்துவாரெம்மையுமாளுடையாரே.* (௮)

வலங்கொள்வாரவர்தங்கள்வல்வினைதீர்க்குமருந்து
கலங்கக்காலனைக்காலாற்காமனைக்கண்சிவப்பானை
அலங்கனீர்பொருமானைக்காவுடையாதியைநாளும்
இலங்குசேவடிசேர்வாரெம்மையுமாளுடையாரே. (௯)

ஆழியாற்கருளானைக்காவுடையாதிபொன்னடியின்
நிழலேசாருகநின்றருள்கூரநினைந்து
வாழவல்லவன்றொண்டன்வண்டமிழ்மாலைவல்லார்போய்
ஏழுமாபிறப்பற்றவெம்மையுமாளுடையாரே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருவானைக்காத்திருப்பதிகம் - ௭.

ஆ திருப்பதிகம் - ௨௩௩.

சுவாமி தேவி திருநாமங்கள் - ஐம்புகேசுவரர், அகிலாண்டநாயகி.

* இரவொடெல்லியும்பகலு மேத்துவாரெமையுடையாரே என்றும் பாடம்.

Koviloor Digital Library

சுந்தரமூர்த்திநாயனர், காவேரிநதியின் மேற்குத்திக்கு யாத்திரை செய்ய நினைந்து திருவானைக்காவுக்குப்போய்ச் சிவபெருமானை வணங்கி "மறைகளாயினநான்கும்" என்னுந் திருப்பதிகம் பாடினார். அத்திருப்பதிகத்திலே எழாந்திருப்பாட்டிலே, உறையூர்ச் சோழமகாராஜா பதக்கம் அணிந்துகொண்டு காவேரியிலே ஸ்நானஞ் செய்தலும், அது வழுவிப்போக, அவர் "சிவபெருமானே கொண்டருளும்" என்று பிரார்த்திக்க, அது திருமஞ்சனக்குடத்துள்ளே புக, அபிஷேகஞ் செய்யப்படும்பொழுது அதனைச் சிவபெருமான் அணிந்து அவருக்கு அருள்புரிந்த தன்மையைச் சிறப்பித்தருளினார்.

௬௧. திருப்பைஞ்ஞீலி.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

ஆரிடம்பாடிலரடிகள்காடலால்
ஓரிடங்குறைவிலருடையர்கோவணம்
நீரிடஞ்சடைவிடையூர்திநித்தலும்
பாரிடம்பணிசெயும்பயில்பைஞ்ஞீலியே. (௧)

மருவிலார் * திரிபுரமெரியமால்வரை
பருவிலாக்குனித்தபைஞ்ஞீலிமேவலான்
உருவிலான்பெருமையையுளங்கொளாதவத்
திருவிலாரவர்களைத் † தெருட்டலாகுமே. (௨)

அஞ்சுரும்பணிமலரமுதமாந்தித்தேன்
பஞ்சுரம்பயிற்றுபைஞ்ஞீலிமேவலான்
வெஞ்சுரந்தனினுமைவெருவவந்ததோர்
குஞ்சரம்படவுரிபோர்த்தகொள்கையே. (௩)

கோடல்கள்புறவணிகொல்லைமுல்லைமேல்
பாடல்வண்டிசைமுரல்பயில்பைஞ்ஞீலியார்
பேடலராணலர்பெண்ணுமல்லதோர்
ஆடலையுகந்தவெம்மடிகளல்லரே. (௪)

விழியிலாநகுதலைவிளங்கிளம்பிறை
சுழியிலார்வருபுனற்சூழலுங்கினான்
பழியிலார்பரவுபைஞ்ஞீலிபாடலான்
கிழியிலார்கேண்மையைக்கெடுக்கலாகுமே. (௫)

விடையுடைக்கொடிவலனேந்திவெண்மழுப்
படையுடைக்கடவுள்பைஞ்ஞீலிமேவலான்
துடியிடைக்கலையல்குலாளோர்பாகமாச்
சடையிடைப்புனல்வைத்தசதுரனல்லனே. (௬)

* மருவலார் என்றும் பாடம். † திருவிலாதவர்களைத் என்றும் பாடம்.

Koviloor Digital Library

தூயவன்றூயவெண்ணீறுமேனிமேல்
பாயவன்பாயபைஞ்ஞீலிகோயிலா
மேயவன்வேய்புரைதோளிபாகமா
ஏயவனெனைச்செயுந்தன்மையென்கொலோ. (௭)

தொத்தினதோண்முடியுடையவன்றலை
பத்தினைநெரித்தபைஞ்ஞீலிமேவலான்
முத்தினைமுறுவல்செய்தாளோர்பாகமாப்
பொத்தினன்றிருந்தடிபொருந்திவாழ்மினே. (௮)

நீருடைப்போதுறைவானுமாலுமாய்ச்
சீருடைக்கழலடிசென்னிகாண்கிலர்
பாருடைக்கடவுள்பைஞ்ஞீலிமேவிய
தாருடைக்கொன்றையந்தலைவர்தன்மையே. (௯)

பீலியார்பெருமையும்பிடகர்நூன்மையும்
சாலியாதவர்களைச்சாதியாததோர்
கோலியாவருவரைகூட்டியெய்தபைஞ்
ஞீலியான்கழலடிநினைந்துவாழ்மினே. (௧0)

கண்புனல்விளைவயற்காழிக்கற்பகம்
நண்புணருமறைஞானசம்பந்தன்
பண்பினர்பரவுபைஞ்ஞீலிபாடுவார்
உண்பினவுலகினிலோங்கிவாழ்வரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனர்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

உடையர்கோவணமொன்றுங்குறைவிலர்
படைகொள்பாரிடஞ்சூழ்ந்தபைஞ்ஞீலியார்
சடையிற்கங்கைதரித்தசதுரரை
அடையவல்லவர்க்கில்லைபவலமே. (௧)

மத்தமாமலர்சூடியமைந்தனர்
சித்தராய்த்திரிவார்வினைதீர்ப்பரால்
பத்தர்தாந்தொழுதேத்துபைஞ்ஞீலியெம்
அத்தனைத்தொழவல்லவர்நல்லரே. (௨)

விழுதசூலத்தன்வெண்மழுவாட்படைக்
கழுதுதுஞ்சிருட்காட்டகத்தாடலான்
பழுதொன்றின்றிப்பைஞ்ஞீலிப்பரமனைத்
தொழுதுசெல்பவர்தம்வினைதூளியே. (௩)

Koviloor Digital Library

ஒன்றிமாலும்பிரமனுந்தம்மிலே
நின்றசூழலறிவரியானிடம்
சென்றுபாரிடமேத்துபைஞ்ஞீலியுள்
என்றுமேவியிருந்தவடிகளே. (௪)

வேழத்தின்னுரிபோர்த்தவிகிர்தனார்
தாழச்செஞ்சடைமேற்பிறைவைத்தவர்
தாழைத்தண்பொழில்சூழ்ந்தபைஞ்ஞீலியார்
யாழின்பாட்டையுகந்தவடிகளே. (௫)

குண்டுபட்டுக்குறியறியாச்சமண்
மிண்டரோடுபடுத்துய்யப்போந்துநான்
கண்டங்கார்வயல்சூழ்ந்தபைஞ்ஞீலியெம்
அண்டவாணனடியடைந்துய்ந்தனே.* (௬)

வரிப்பையாடரவாட்டிமதகரி
உரிப்பைமூடியவுத்தமனூருறை
திருப்பைஞ்ஞீலிதிசைதொழுவார்கள்போய்
இருப்பர்வானவரோடினிதாகவே. (௭)

கோடல்கோங்கம்புறவணிமுல்லைமேல்
பாடல்வண்டிசைகேட்கும்பைஞ்ஞீலியார்
பேடுமாணும்பிறரறியாததோர்
ஆடுநாகமசைத்தவடிகளே. (௮)

காருலாமலர்க்கொன்றையந்தாரினன்
வாருலாமுலைமங்கையொர்பங்கினன்
தேருலாம்பொழில்சூழ்ந்தபைஞ்ஞீலியெம்
ஆர்கிலாவமுதையடைந்தும்மினே. (௯)

தருக்கிச்சென்றுதடவரைபற்றலும்
நெருக்கியூன்றநினைந்துசிவனையே
அரக்கன்பாடவருளுமெம்மானிடம்
இருக்கைஞீலி†யென்பார்க்கிடரில்லையே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

காருலாவியநஞ்சையுண்டிருள்கண்டர்வெண்டலையோடுகொண்
டூரெலாந்திரிந்தென்செய்வீர்பலியோரிடத்திலேகொள்ளுநீர்
பாரெலாம்பணிந்தும்மையேபரவிப்பணியும்பைஞ்ஞீலியீர்
ஆரமாவதுநாகமோசொலுமாரணீயவிடங்கரே. (௧)

* துய்ந்தெனே என்றும் பாடம். † பைஞ்ஞீலியை ஞீலி என்றாற்போல, பாச்சிலாச்சிராமத்தை ஆச்சிராமம் என்பர் பின்னும்.

Koviloor Digital Library

சிலைத்துநோக்கும்வெள்ளேறுசெந்தழல்வாயபாம்பதுமூசெனும்
பலிக்குநீர்வரும்போதுநங்கையிற்பாம்புவேண்டாபிரானிரே
மலைத்தசந்தொடுவேங்கைகோங்கமுமன்னுகாரகில்சண்பகம்
அலைக்கும்பைம்புனல்சூழ்பைஞ்ஞீலியிலாரணியவிடங்கரே. (௨)

தூயவர்கண்ணும்வாயுமேனியுந்துன்னவாடைசுடலையில்
பேயொடாடலைத்தவிருநீரொருபித்தரோவெம்பிரானிரே
பாயுநீர்க்கிடங்கார்கமலமும்பைந்தண்மாதவிபுன்னையும்
ஆயபைம்பொழில்சூழ்பைஞ்ஞீலியிலாரணியவிடங்கரே. (௩)

செந்தமிழ்த்திறம்வல்லீரோசெங்கணரவமுன்கையிலாடவே
வந்துநிற்குமிதென்கொலோபலிமாற்றமாட்டோமிடகிலோம்*
பைந்தண்மாமலருந்துசோலைகள்கந்தநாறுபைஞ்ஞீலியீர்
அந்திவானமுமேனியோசொலுமாரணியவிடங்கரே. (௪)

நீறுநுந்திருமேனிநித்திலநீணெடுங்கண்ணினாளொடும்
கூறராய்வந்துநிற்றிராற்கொணர்ந்திடகிலோம்பலிநடமினோ
பாறுவெண்டலைகையிலேந்திப்பைஞ்ஞீலியேனென்றீரடிகணீர்
ஆறுதாங்கியசடையரோசொலுமாரணியவிடங்கரே. (௫)

குரவநாறியகுழலினார்வளைகொள்வதேதொழிலாகிநீர்
இரவுமிம்மனையறிதிரேயிங்கேநடந்துபோகவும்வல்லிரே
பரவிநாடொறும்பாடுவார்வினைபற்றறுக்கும்பைஞ்ஞீலியீர்
அரவமாட்டவும்வல்லிரோசொலுமாரணியவிடங்கரே. (௬)

ஏடுலாமலர்க்கொன்றைசூடுதிரென்பெலாமணிந்தென்செய்வீர்
காடுநும்பதியோடுகையதுகாதல்செய்பவர்பெறுவதென்
பாடல்வண்டிசையாலுஞ்சோலைப்பைஞ்ஞீலியேனென்றுநிற்றிரால்
ஆடல்பாடலும்வல்லிரோசொலுமாரணியவிடங்கரே. (௭)

மத்தமாமலர்கொன்றைவன்னியுங்கங்கையாளொடுதிங்களும்
மொய்த்தவெண்டலைகொக்கிறகொடுவெள்ளெருக்கமுஞ்சடையதாம்
பத்தர்சித்தர்கள்பாடியாடும்பைஞ்ஞீலியேனென்றுநிற்றிரால்
அத்தியீருரிபோர்த்திரோசொலுமாரணியவிடங்கரே. (௮)

தக்கைதண்ணுமைதாளம்வீணைதகுணிச்சங்கிணைசல்லரி
கொக்கரைகுடமுழவினோடிசைகூடப்பாடிநின்றாடுவீர்
பக்கமேகுயில்பாடுஞ்சோலைப்பைஞ்ஞீலியேனென்றுநிற்றிரால்
அக்குமாலையும்பூண்டிரோசொலுமாரணியவிடங்கரே. (௯)

கையொர்பாம்பரையார்த்தொர்பாம்புகழுத்தொர்பாம்பவைபின்புதாழ்
மெய்யெலாம்பொடிக்கொண்டுபூசுதிர்வேதமோதுதிர்கீதமும்
பையவேவிடங்காகநின்றுபைஞ்ஞீலியேனென்றீரடிகணீர்
ஐயமேற்குமிதென்கொலோசொலுமாரணியவிடங்கரே. (௧௦)

* நிற்குமிதென்னேவேபலிமாற்றமாட்டோமிடகிலேம் என்றும் பாடம்.

Koviloor Digital Library

அன்னஞ்சேர்வயல்சூழ்பைஞ்ஞீலியிலாரணியவிடங்கரை
மின்னுநுண்ணிடைமங்கைமார்பலர்வேண்டிக்காதன்மொழிந்தசொல்
மன்னுதொல்புகழ்நாவலூரன்வன்றொண்டன்வாய்மொழிபாடல்பத்
துன்னியின்னிசைபாடுவாருமைகேள்வன்சேவடிசேர்வரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருப்பைஞ்ஞீலித்திருப்பதிகம் - ௩.

ஆ திருப்பதிகம் - ௨௩௬.

சுவாமி தேவி திருநாமங்கள் - நீலகண்டர், விசாலாக்ஷி.

௩௨. திருப்பாச்சிலாச்சிராமம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

துணிவளர்திங்கடுளங்கிவிளங்கச்சுடர்ச்சடைசுற்றிமுடித்துப்
பணிவளர்கொள்கையர்பாரிடஞ்சூழவாரிடமும்பலிதேர்வர்
அணிவளர்கோலமெலாஞ்செய்துபாச்சிலாச்சிராமத்துறைகின்ற
மணிவளர்கண்டரோமங்கையைவாடமயல்செய்வதோவிவர்மாண்பே. (௧)

கலைபுனைமானுரிதோலுடையாடைகனல்சுடராலிவர்கண்கள்
தலையணிசென்னியர்தாரணிமார்பர்தம்மடிகளிவரென்ன
அலைபுனல்பூம்பொழில்சூழ்ந்தமர்பாச்சிலாச்சிராமத்துறைகின்ற
இலைபுனைவேலரோவேழையைவாடவிடர்செய்வதோவிவரீடே. (௨)

வெஞ்சுடராடுவர்துஞ்சிருண்மாலைவேண்டுவர்பூண்பதுவெண்ணூல்
நஞ்சடைகண்டர்நெஞ்சிடமாகநண்ணுவர்நம்மைநயந்து
மஞ்சடைமாளிகைசூழ்தருபாச்சிலாச்சிராமத்துறைகின்ற
செஞ்சுடர்வண்ணரோபைந்தொடிவாடச்சிதைசெய்வதோவிவர்சீரே. (௩)

கனமலர்க்கொன்றையலங்கலிலங்கக்கனறருதூமதிக்கண்ணி
புனமலர்மாலையணிந்தழகாயபுனிதர்கொலாமிவரென்ன
வனமலிவண்பொழில்சூழ்தருபாச்சிலாச்சிராமத்துறைகின்ற
மனமலிமைந்தரோமங்கையைவாடமயல்செய்வதோவிவர்மாண்பே. (௪)

மாந்தர்தம்பானறுநெய்மகிழ்ந்தாடிவளர்சடைமேற்புனல்வைத்து
மோந்தைமுழாக்குழறாளமொர்வீணைமுதிரவோர்வாய்மூரிபாடி
ஆந்தைவிழிச்சிறுபூதத்தர்பாச்சிலாச்சிராமத்துறைகின்ற
சாந்தணிமார்பரோதையலைவாடச்சதுர்செய்வதோவிவர்சார்வே. (௫)

Koviloor Digital Library

நீறுமெய்பூசிநிறைசடைதாழநெற்றிக்கண்ணாலுற்றுநோக்கி
ஆறதுசூடியாடரவாட்டியைவிரற்கோவணவாடை
பாறருமேனியர்பூதத்தர்பாச்சிலாச்சிராமத்துறைகின்ற
ஏறதுவேறியரேழையைவாடவிடர்செய்வதோவிவரீடே. (௬)

பொங்கிளநாகமொரேகவடத்தோடாமைவெண்ணூல்புனைகொன்றை
கொங்கிளமாலைபுனைந்தழகாயகுழகர்கொலாமிவரென்ன
அங்கிளமங்கையோர்பங்கினர்பாச்சிலாச்சிராமத்துறைகின்ற
சங்கொளிவண்ணரோதாழ்குழல்வாடச்சதிர்செய்வதோவிவர்சார்வே. (௭)

ஏவலத்தால்விசயற்கருள்செய்திராவணனையீடழித்து*
மூவரிலும்முதலாய்நடுவாயமூர்த்தியையன்றிமொழியாள்
யாவர்களும்பரவும்மெழிற்பாச்சிலாச்சிராமத்துறைகின்ற
தேவர்கடேவரோசேயிழைவாடச்சிதைசெய்வதோவிவர்சேர்வே. (௮)

மேலதுநான்முகனெய்தியதில்லைகீழதுசேவடிதன்னை
நிலதுவண்ணனுமெய்தியதில்லையெனவிவர்நின்றதுமல்லால்
ஆலதுமாமதிதோய்பொழிற்பாச்சிலாச்சிராமத்துறைகின்ற
பாலதுவண்ணரோபைந்தொடிவாடப்பழிசெய்வதோவிவர்பண்பே. (௯)

நாணொடுகூடியசாயினரேனுநகுவரவரிருபோதும்
ஊணொடுகூடியவுட்குநகையாலுரைகளவைகொளவேண்டா
ஆணொடுபெண்வடிவாயினர்பாச்சிலாச்சிராமத்துறைகின்ற
பூணெடுமார்பரோபூங்கொடிவாடப்புனைசெய்வதோவிவர்பொற்பே. (௧0)

அகமலியன்பொடுதொண்டர்வணங்கவாச்சிராமத்துறைகின்ற
புகைமலிமாலைபுனைந்தழகாயபுனிதர்கொலாமிவரென்ன
நகைமலிதண்பொழில்சூழ்தருகாழிநற்றமிழ்ஞானசம்பந்தன்
தகைமலிதண்டமிழ்கொண்டிவையேத்தச்சாரகிலாவினைதானே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் காவேரிக்கு வடபாலிலே மேற்றிசைநோக்கிச் சென்று, திருப்புள்ளிருக்குவேளூர், திருநின்றியூர், திருநீடூர்முதலிய தலங்கடோறும் போய்ச் சுவாமிதரிசனஞ்செய்து திருப்பதிகம் பாடிக்கொண்டு,பின் மழநாட்டிலே காவேரிக்கு வடகரையேசென்று, திருப்பாச்சிலாச்சிராமத்துக்குச் சமீபிக்குமுன்; அந்நகரத்திலே கொல்லிமழவன் தன்னுடைய புத்திரி முயலகனென்னும் நோயினால் வருந்துதலைக்கண்டு கவலையுற்று வேறொரு பரிசினாலும் நீங்காமை கண்டு, அவளைத்திருக்கோயிலினுள்ளே கொண்டுபோய்ச் சுவாமி சந்நிதானத்திலே இட்டுவைத்தான். பிள்ளையார் திருக்கோயிற்கோபுரத்துக்குச் சமீபித்தவுடனே, முத்துச்சிவிகையினின்றும் இறங்கி, உள்ளே பிரவேசித்து, வலஞ்செய்துகொண்டு, சந்நிதானத்திலேபோனார். போனபொழுது, அறிவுகெட்டு நிலத்திலே கிடக்கின்ற கன்னியைக்கண்டு, "இஃதென்னை" என்று வினவ, மழவன் வணங்கிநின்று, "இவள் அடியேனுடைய புத்திரி, இவள் முயலகனென்னும் நோயினால் மிக வருந்துகின்றமையால் இவளைச் சுவாமிசந்நிதானத்திலே கொணர்வித்தேன்" என்று விண்ணப்பஞ் செய்தான். பிள்ளையார் அதைக்கேட்டு,

* செய்திராவணன்றன்னையிடழித்து என்றும் பாடம்.

Koviloor Digital Library

அருள் சுரந்து, அவ்விடத்தில் நின்றே சுவாமியை நமஸ்கரித்து, அவளுடைய நோயை நீக்கும்பொருட்டு, "துணிவளர் திங்கள்" என்றெடுத்து, "மணிவளர் கண்டரோ மங்கையை வாட மயல்செய்வ தோவிவர் மாண்பே" என்னுந்திருப்பதிகத்தைப் பாடியருளினர். அப்பொழுது அந்தக்கன்னி நோய் நீங்கி, எழுந்து ஓல்கிவந்து, தந்தையின்பக்கத்தை அடைந்தாள். அதுகண்ட மழவன் மிகுந்த மகிழ்ச்சிகொண்டு, அவளோடும் பிள்ளையாரை விழுந்து நமஸ்கரித்தான். பிள்ளையார் அங்கே சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு, சிலநாள் எழுந்தருளியிருந்தார்.

சுந்தரமூர்த்திநாயனர்.

பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

வைத்தனன்றனக்கேதலையுமென்னாவுநெஞ்சமும்வஞ்சமொன்றின்றி
உய்த்தனன்றனக்கேதிருவடிக்கடிமையுரைத்தக்கானுவமனேயொக்கும்
பைத்தபாம்பார்த்தோர்கோவணத்தோடுபாச்சிலாச்சிராமத்தெம்பரமர்
பித்தரேயொத்தோர்நச்சிலராகிலிவரலாதில்லையோபிரானர். (௧)

அன்னையேயென்னேனத்தனேயென்னேனடிகளேயமையுமென்றிருந்தேன்
என்னையுமொருவனுளனென்றுகருதியிறையிறைதிருவருள்காட்டாய்
அன்னமாம்பொய்கைசூழ்தருபாச்சிலாச்சிராமத்துறையடிகள்
பின்னையேயடியார்க்கருள்செய்வதாகிலிவரலாதில்லையோபிரானர். (௨)

உற்றபோதல்லாலுறுதியையுணரேனுள்ளமேயமையுமென்றிருந்தேன்
செற்றவர்புரமூன்றெரியெழச்செற்றசெஞ்சடைநஞ்சடைகண்டர்
அற்றவர்க்கருள்செய்பாச்சிலாச்சிராமத்தடிகடாமியாதுசொன்னாலும்
பெற்றபோதுகந்துபெறாவிடிலிகழிலிவரலாதில்லையோபிரானர். (௩)

நாச்சிலபேசிநமர்பிறரென்றுநன்றுதீதென்கிலர்மற்றோர்
பூச்சிலைநெஞ்சேபொன்விளைகழனிப்புள்ளினஞ்சிலம்புமாம்பொய்கைப்
பாச்சிலாச்சிராமத்தடிகளென்றிவர்தாம்பலரையுமாட்கொள்வர்பரிந்தோர்
பேச்சிலரொன்றைத்தரவிலராகிலிவரலாதில்லையோபிரானர். (௪)

வரிந்தவெஞ்சிலையாலந்தரத்தெயிலைவாட்டியவகையினரேனும்
புரிந்தவன்னாளேபுகழ்புக்க* வடிமைபோகுநாள்வீழுநாளாகிப்
பரிந்தவர்க்கருள்செய்பாச்சிலாச்சிராமத்தடிகடாமியாதுசொன்னாலும்
பிரிந்திறைப்போதிற்பேர்வதே† யாகிலிவரலாதில்லையோபிரானர். (௫)

செடித்தவஞ்செய்வார்சென்றுழிச்செல்லேன்றீவினைசெற்றிடுமென்று
அடித்தவமல்லாலாரையுமறியேனுவதுமறிவரெம்மடிகள்
படைத்தலைச்சூலம்பற்றியகையர்பாச்சிலாச்சிராமத்தெம்பரமர்
பிடித்தவெண்ணீறேபூசுவதானு‡ லிவரலாதில்லையோபிரானர். (௬)

* புகழ்தக்க என்றும் பாடம். † திறைப்போதிற் போவதே என்பதும் ஒன்று.
‡ பூசுதலானு என்றும் பாடம்.

Koviloor Digital Library

மைபருகபாலங்காடுறைவாழ்க்கைகட்டங்கமேந்தியகையர்
மெய்யதுபுரிநான்மிளிரும்புன்சடைமேல்வெண்டிங்கள்சூடியவிகிர்தர்
பையரவல்குற்பாவையராடும்பாச்சிலாச்சிராமத்தெம்பரமர்
மெய்பரேயொத்தோர்பொய்செய்வதாகிலிவரலாதில்லையோபிரானார். (எ)

நிணம்படுமுடலைநிலைமையென்றோரேனெஞ்சமேதஞ்சமென்றிருந்தேன்
கணம்படிந்தேத்திக்கங்குலும்பகலுங்கருத்தினாற்கைதொழுதெழுவேன்
பணம்படமாவம்பற்றியகையர்பாச்சிலாச்சிராமத்தெம்பரமர்
பிணம்படுகாட்டிலாடுவதாகிலிவரலாதில்லையோபிரானார். (அ)

குழைத்துவந்தோடிக்கூடுதிநெஞ்சேகுற்றேவலொடுறுஞ்செய்வான்
இழைத்தநாள்கடவாரன்பிலரேனுமெம்பெருமானென்றெப்போதும்
அழைத்தவர்க்கருள்செய்பாச்சிலாச்சிராமத்தடிகடாமியாதுசொன்னாலும்
பிழைத்ததுபொறுத்தொன்றிகிலராகிலிவரலாதில்லையோபிரானார். (௯)

துணிப்படுமுடையுஞ்சுண்ணவெண்ணீறுந்தோற்றமுஞ்சிந்தித்துக்காணில்
மணிப்படுகண்டனைவாயினாற்கூறிமனத்தினாற்றொண்டனேனினைவேன்
பணிப்படமாவம்பற்றியகையர்பாச்சிலாச்சிராமத்தெம்பரமர்
பிணிப்படவாண்டுபணிப்பிலராகி* லிவரலாதில்லையோபிரானார். (௧௦)

ஒருமையேயல்லேனெழுமையுமடியேனடியவர்க்கடியனுமானேன்
உரிமையாலுரியேனுள்ளமுமுருகுமொண்மலர்ச்சேவடிகாட்டாய்
அருமையாம்புகழார்க்கருள்செயும்பாச்சிலாச்சிராமத்தெம்மடிகள்
பெருமைகள்பேசிச்சிறுமைகள்செய்யிலிவரலாதில்லையோபிரானார். (௧௧)

ஏசினவல்லவிகழ்ந்தனவல்லவெம்பெருமானென்றெப்போதும்
பாயினபுகழான்பாச்சிலாச்சிராமத்தடிகளையடிதொழப்பன்னாள்
வாயினாற்கூறிமனத்தினானினைவான்வளவயனாவலாரூரன்
பேசினபேச்சைப்பொறுக்கிலராகிலிவரலாதில்லையோபிரானார். (௧௨)

திருச்சிற்றம்பலம்.

திருப்பாச்சிலாச்சிராமத்திருப்பதிகம் - ௨.

ஆ திருப்பதிகம் - ௨௬அ.

சுவாமி தேவி திருநாமங்கள் - மாற்றறிவரதர், பாலசுந்தரி.

சுந்தரமூர்த்திநாயனார், திருப்பாச்சிலாச்சிராமத்தை அடைந்து, சிவபெருமானை வணங்கி, அவர் தமக்குப் பொன்னளித்தருளாமையினாலே திருவுளம் புழுங்கி, "வைத்தனன்றனக்கேதலையுமென்னாவும்" என்று திருப்பதிகம் எடுத்து, திருப்பாட்டின் இறுதிதோறும் "இவரலாதில்லையோபிரானார்" என்று பாடிப் பொற்குவை பெற்று மகிழ்ந்தார்.

* பிணிப்படவாண்டுபேணிப்பிலராகி என்றும் பாடம்.

Koviloor Digital Library

௬௩. திருவீங்கோய்மலை.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

வானத்துயர்தண்மதிதோய்சடைமேன்மத்தமலர்சூடித்
தேனொத்தனமென்மொழிமான்விழியாடேவிபாகமாக்
கானத்திரவிலெரிகொண்டாடுங்கடவுளுலகேத்த
ஏனத்திரள்வந்திழியுஞ்சாரலீங்கோய்மலையாரே. (௧)

சூலப்படையொன்றேந்தியிரவிற்சுடுகாடிடமாகக்
கோலச்சடைகடாழக்குழல்யாழ்மொந்தைகொட்டவே
பாலொத்தனையமொழியாள்காணவாடும்பரமனார்
ஏலத்தொடுநல்லிலவங்கமழுமீங்கோய்மலையாரே. (௨)

கண்கொணுதலார்கறைகொண்மிடற்றார்கரியினுரிதோலார்
விண்கொண்மதிசேர்சடையார்விடையார்கொடியார்வெண்ணீறு
பெண்கொடிருமார்பதனிற்பூசும்பெம்மானெமையாள்வார்
எண்குமரியுந்திரியுஞ்சாரலீங்கோய்மலையாரே. (௩)

மறையின்னிசையார்நெறிமென்கூந்தன்மலையான்மகளோடும்
குறைவெண்பிறையும்புனலுந்நிலவுங்குளிர்புன்சடைதாழப்
பறையுங்குழலுங்கழலுமார்ப்பப்படுகாட்டெரியாடும்
இறைவர்சிறைவண்டறைபூஞ்சாரலீங்கோய்மலையாரே. (௪)

நொந்தசுடலைப்பொடிநீறணிவார்நுதல்சேர்கண்ணினார்
கந்தமலர்கள்பலவுந்நிலவுகமழ்புன்சடைதாழப்
பந்தண்விரலாள்பாகமாகப்படுகாட்டெரியாடும்
எந்தம்மடிகள்கடிகொள்சாரலீங்கோய்மலையாரே. (௫)

நீருரகலமுடையார்நிரையார்கொன்றையரவோடும்
ஆரூர்சடையாரயில்வெங்கணையாலவுணர்புரமூன்றும்
சீரூவெரிசெய்தேவர்பெருமான்செங்கணடல்வெள்ளை
ஏரூர்கொடியாருமையாளோடுமீங்கோய்மலையாரே. (௬)

வினையாயினதீர்த்தருளேபுரியும்விகிர்தன்விரிகொன்றை
நனையார்முடிமேன்மதியஞ்சூடும்நம்பானலமல்கு
தனையார்கமலமலர்மேலுறைவான்றலையோடனலேந்தும்
எனையாளுடையானுமையாளோடுமீங்கோய்மலையாரே. (௭)

பாக்கும்பெருமையிலங்கையென்னும்பதியிற்பொலிவாய
அரக்கர்க்கிறைவன்முடியுந்தோளுமணியார்விரலான்
நெருக்கியடர்த்துநிமலாபோற்றியென்றுநின்றேத்த
இரக்கம்புரிந்தாருமையாளோடுமீங்கோய்மலையாரே. (௮)

வரியார்புலியினுரிதோலுடையான்மலையான்மகளோடும்
பிரியாதுடனாய்பாடல்பேணும்பெம்மான்திருமேனி
அரியோடயனுமறியாவண்ணமளவில்பெருமையோ
டெரியாய்நிமிர்ந்தவெங்கள்பெருமானீங்கோய்மலையாரே. (௯)

பிண்டியென்றுபெயராநிற்கும்பிணங்குசமணரும்
மண்டைகலனாக்கொண்டுதிரியுமதியிறேரரும்
உண்டிவயிறருரைகள்கொள்ளாதுமையோடுடனாகி
இண்டைச்சடையானிமையோர்பெருமானீங்கோய்மலையாரே. (௧௦)

விழவாரொலியுமுழவுமோவாவேணுபுரந்தன்னுள்
அழலார்வண்ணத்தடிகளருள்சேரணிகொள்சம்பந்தன்
எழிலார்சுனையும்பொழிலும்புடைசூழீங்கோய்மலையீசன்
கழல்சேர்பாடல்பத்தும்வல்லார்கவலைகளைவாரே. * (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவீங்கோய்மலைத்திருப்பதிகம் - ௧.

ஆக திருப்பதிகம் - ௨௩௧.

சுவாமி தேவி திருநாமங்கள் - மரகதாசலர், மரகதாம்பிகை.

சோழநாட்டிலே காவேரிக்கு வடகரையிலுள்ள தலங்கள்

முற்றுப்பெற்றன.

.. திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் அருளிச்செய்த திருப்பதிகங்கள் ௧௩௮; இத்திருப்பதிகங்களைப்பெற்றதலங்கள் ௫௪. திருநாவுக்கரசுநாயனார் அருளிச்செய்த திருப்பதிகங்கள் ௭௧; இத்திருப்பதிகங்களைப்பெற்றதலங்கள் ௩௩. சுந்தரமூர்த்திநாயனார் அருளிச்செய்ததிருப்பதிகங்கள் ௨௨; இத்திருப்பதிகங்களைப்பெற்றதலங்கள் ௨௧. ஆக திருப்பதிகம் ௨௩௧. ஆக தலங்கள். ௬௩.

* கவலைகழல்வாரே என்றும் பாடம்.

Koviloor Digital Library

சோழநாட்டிலே காவேரிக்குத் தென்கரையில் உள்ள தலங்கள்.

க. திருவாட்போக்கி. *

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

காலபாசம்பிடித்தெழுதூதுவர்
பாலகர்விருத்தர்பழையாரெனார்
ஆலநீழலமர்ந்தவாட்போக்கியார்
சீலமார்ந்தவர்செம்மையுணிற்பரே. † (௧)

விடுத்ததூதுவர் ‡ வந்துவினைக்குழிப்
படுத்தபோதுபயனில்லைபாவிகாள்
அடுத்தகின்னரங்கேட்கும்வாட்போக்கியை
எடுத்துமேத்தியுமின்புறுமின்களே. (௨)

வந்திவ்வாறுவளைத்தெழுதூதுவர்
உந்தியோடிநரகத்திடாமுனம்
அந்தியின்னொளிதாங்கும்வாட்போக்கியார்
சிந்தியாவெழுவார்வினைதீர்ப்பரே. (௩)

கூற்றம்வந்துகுமைத்திடும்போதினால்
தேற்றம்வந்துதெளிவுறலாகுமே
ஆற்றவும்மருள்செய்யும்வாட்போக்கிபால்
ஏற்றுமின்விளக்கையிருணீங்கவே. (௪)

மாறுகொண்டுவளைத்தெழுதூதுவர்
வேறுவேறுபடுப்பதன்முன்னமே
ஆறுசெஞ்சடைவைத்தவாட்போக்கியார்க்
கூறியூறியுருகுமென்னுள்ளமே. (௫)

கானமோடிக்கடிதெழுதூதுவர்
தானமோடுதலைபிடியாமுனம்
ஆனஞ்சாடியுகந்தவாட்போக்கியார்
ஊனமில்லவர்க்குண்மையினிற்பரே. (௬)

பார்த்துப்பாசம்பிடித்தெழுதூதுவர்
கூர்த்தவேலாற்குமைப்பதன்முன்னமே
ஆர்த்தகங்கையடக்கும்வாட்போக்கியார்
கீர்த்திமைகள்கிளர்ந்துரைமின்களே. (௭)

* திருவாட்போக்கி - இரத்தினகிரி. † செம்மை மறப்பரே என்றும் பாடம். ‡ விடுத்துத்தூதுவர் என்றும் பாடம்.

Koviloor Digital Library

காடிவந்துகமன்றமர்கல்கிருள்
கூடிவந்துகுமைப்பதன்முன்னமே
ஆடல்பாடலுகந்தவாட்போக்கியை
வாடியேத்தநம்வாட்டந்தவிருமே. (அ)

கட்டறுத்துக்கடிதெழுதூதுவர்
பொட்டனூக்கிப்* புறப்படாமுன்னமே
அட்டமாமலர்சூடும்வாட்போக்கியார்க்
கிட்டமாகி† யிணையடியேத்துமே. (கூ)

இரக்கமுன்னறியாதெழுதூதுவர்
பரக்கழித்தவர்பற்றுதன்முன்னமே
அரக்கனுக்கருள்செய்தவாட்போக்கியார்
கரப்பதுங்கரப்பாரவர்தங்கட்கே. (கo)

திருச்சிற்றம்பலம்.

திருவாட்போக்கித்திருப்பதிகம் - க.

சுவாமி தேவி திருநாமங்கள் - இரத்தினகிரிநாதர், சுரும்பார்குழலி.

உ. திருக்கடம்பந்துறை.

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

முற்றிலாமுலையாளிவளாகிலும்
அற்றந்தீர்க்குமறிவிலளாகிலும்
கற்றைச்செஞ்சடையான்கடம்பந்துறைப்
பெற்றமூர்திபென்றாளெங்கள்பேதையே.‡ (க)

தனகிருந்ததோர்தன்மையராகிலும்
முனகுதிரத்தொழுதெழுமின்களோ
கனகப்புன்சடையான்கடம்பந்துறை
நினையவல்லவர்நீள்விசும்பாள்வரே. (உ)

ஆரியந்தமிழோடிசையானவன்
கூரியகுணத்தார்குறிநின்றவன்
காரிகையுடையான்கடம்பந்துறைச்
சீரியல்பத்தர்சென்றடைமின்களே. (ங)

* பொட்டத்தூக்கி என்றும் பாடம். † இட்டமாக என்றும் பாடம். ‡ பெண்ணென்றான் பேதையே என்றும் பாடம்.

Koviloor Digital Library

பண்ணினின்மொழிகேட்கும்பரமனை
வண்ணநன்மலரான்பலதேவரும்
கண்ணனும்மறியான்கடம்பந்துறை
நண்ணநம்வினையாயினநாசமே. (௪)

மறைகொண்டம்மனத்தானைமனத்துளே
நிறைகொண்டநெஞ்சினுள்ளுறவைம்மினோ
கறைகொண்டானுறையும் * கடம்பந்துறை
சிறைகொண்டவ்வினைதீரத்தொழுமினே. (௫)

நங்கைபாகம்வைத்தந்நறுஞ்சோதியைப்
பங்கமின்றிப்பணிந்தெழுமின்களோ
கங்கைச்செஞ்சடையான்கடம்பந்துறை
அங்கமோதியரனுறைகின்றதே. (௬)

அரியநான்மறையாறங்கமாயைந்து
புரியன்றேவர்களேத்தநஞ்சுண்டவன்
கரியகண்டத்தினன்கடம்பந்துறை
உரியவாறுநினைமடநெஞ்சமே. (௭)

பூமென்கோதையுமையொருபாகனை
ஓமஞ்செய்துமுணர்மின்களுள்ளத்தால்
காமற்காய்ந்தபிரான்கடம்பந்துறை
நாமமேத்தநந்தீவினைநாசமே. † (௮)

பாரணங்கிவணங்கிப்பணிசெய
நாரணன்பிரமன்னறியாததோர்
காரணன்கடம்பந்துறைமேவிய
ஆரணங்கொருபாலுடைமைந்தனே. (௯)

நூலானன்றுநினைமின்கணோய்கெடப்
பாலானஞ்சுடனாடும்பரமனார்
காலாலூன்றுகந்தான்கடம்பந்துறை
மேலானாஞ்செய்தவல்வினைவீடுமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருக்கடம்பந்துறைத்திருப்பதிகம் - ௧.

ஷ திருப்பதிகம் - ௨.

சுவாமி தேவி திருநாமங்கள் – கடம்பவனநாதர், முற்றிலாமுலை.

* கறைகண்டனுறையும் என்றும் பாடம். † நந்தம்வினைநாசமே என்றும் பாடம்.

௩. திருப்பராய்த்துறை.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - மேகராகக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

நீறுசேர்வதொர்மேனியர்நேரிழை
கூறுசேர்வதொர்கோலமாய்ப்
பாறுசேர்தலைக்கையர்பராய்த்துறை
ஆறுசேர்சடையண்ணலே. (௧)

கந்தமாமலர்கொன்றைகமழ்சடை
வந்தபூம்புனல்வைத்தவர்
பைந்தண்மாதவிசூழ்ந்தபராய்த்துறை
அந்தமில்லவடிகளே. (௨)

வேதர்வேதமெல்லாமுறையால்விரித்
தோதநின்றவொருவனார்
பாதிபெண்ணுருவாவர்பராய்த்துறை
ஆதியாயவடிகளே. (௩)

தோலுந்தம்மரையாடைசுடர்விடு
நூலுந்தாமணிமார்பினர்
பாலுநெய்பயின்றாடுபராய்த்துறை
ஆலநீழலடிகளே. (௪)

விரவிநீறுமெய்ப்பூசுவர்மேனிமேல்
இரவினின்றெரியாடுவர்
பரவினாவர்வேதம்பராய்த்துறை
அரவமார்த்தவடிகளே. (௫)

மறையுமோதுவர்மான்மறிக்கையினர்
கறைகொள்கண்டமுடையவர்
பறையுஞ்சங்குமொலிசெய்பராய்த்துறை
அறையநின்றவடிகளே. (௬)

விடையுமேறுவர்வெண்பொடிப்பூசுவர்
சடையிற்கங்கைதரித்தவர்
படைகொள்வெண்மழுவாளர்பராய்த்துறை
அடையநின்றவடிகளே. (௭)

தருக்கின்மிக்கதசக்கிரிவன்றனை
நெருக்கினார்விரலொன்றினால்
பருக்கினாவர்போலும்பராய்த்துறை
அரக்கன்றன்னையடிகளே. (௮)

Koviloor Digital Library

நாற்றமாமலரானொடுமாலுமாய்த்
தோற்றமும்மறியாதவர்
பாற்றினார்வினையானபராய்த்துறை
ஆற்றன்மிக்கவடிகளே. (௯)

திருவிலிச்சிலதேரமணாதர்கள்
உருவிலாவுரைகொள்ளேனும்
பருவிலாலெயிலெய்துபராய்த்துறை
மருவினான்றனைவாழ்த்துமே. (௧௦)

செல்வமல்கியசெல்வர்பராய்த்துறைச்
செல்வர்மேற்சிதையாதன*
செல்வன்ஞானசம்பந்தனசெந்தமிழ்
செல்வமாமிவைசெப்பவே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

காப்பர்காலமடைந்தவர்தம்வினை
சுருக்குமாறுவல்லார்கங்கைசெஞ்சடைப்
பரப்புநீர்வருகாவிரித்தென்கரைத்
திருப்பராய்த்துறைமேவியசெல்வரே. (௧)

மூடினார்களியானையினீருரி
பாடினார்மறைநான்கினோடாறங்கம்
சேடனார்தென்பராய்த்துறைச்செல்வரைத்
தேடிக்கொண்டடியேன்சென்றுகாண்பனே. (௨)

பட்டநெற்றியர்பான்மதிக்கீற்றினர்
நட்டமாடுவர்நள்ளிருளேமமும்
சிட்டனார்தென்பராய்த்துறைச்செல்வனார்
இட்டமாயிருப்பாரையறிவரே. (௩)

முன்பெலாஞ்சிலமோழைமைபேசுவர்
என்பெலாம்பலபூண்டங்குழிதர்வர்
தென்பராய்த்துறைமேவியசெல்வனார்
அன்பராயிருப்பாரையறிவரே. (௪)

போதுதாதொடுகொண்டுபுனைந்துடன்
தாதவிழ்சடைச்சங்கரன்பாதத்துள்
வாதைதீர்க்கவென்றேத்திப்பராய்த்துறைச்
சோதியானைத்தொழுதெழுந்துய்ம்மினே. (௫)

* சிதையாதவன் என்றும் பாடம்.

Koviloor Digital Library

நல்லநான்மறையோதியநம்பனைப்
பல்லில்வெண்டலையிற்பலிகொள்வனைத்
தில்லையான்றெனப்பராய்த்துறைச்செல்வனை
வல்லையாய்வணங்கித்தொழுவாய்மையே. (௬)

நெருப்பினுற்குவித்தாலொக்குநீள்சடைப்
பருப்பதம்மதயானையுரித்தவன்
திருப்பராய்த்துறையார்திருமார்பினூல்
பொருப்பராவியிழிபுனல்போன்றதே. (௭)

எட்டவிட்டவிடுமனலெக்கர்மேல்
பட்டநுண்டுளிபாயும்பராய்த்துறைச்
சிட்டன்சேவடிசென்றடைகிற்றிரேல்
விட்டுநம்வினையுள்ளனவிடுமே. (௮)

நெருப்பராய்கிமிர்ந்தாலொக்குநீள்சடை
மருப்பராய்வளைந்தாலொக்கும்வாண்மதி
திருப்பராய்த்துறைமேவியசெல்வனார்
விருப்பராயிருப்பாரையறிவரே. (௯)

தொண்டுபாடியுந்தூமலர்தூவியும்
இண்டைகட்டியிணையடியேத்தியும்
பண்டரங்கர்பராய்த்துறைப்பாங்கரைக்
கண்டுகொண்டடியேனுய்ந்துபோவனே. (௧௦)

அரக்கனுற்றலழித்தவழகனைப்
பரக்குநீர்ப்பொன்னிமன்னுபராய்த்துறை
இருக்கைமேவியவீசனையேத்துமின்
பொருக்கநும்* வினைபோயறுங்காண்மினே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருப்பராய்த்துறைத்திருப்பதிகம் - ௨.

ஆ திருப்பதிகம் - ௪.

சுவாமி தேவி திருநாமங்கள் - பராய்த்துறைநாதர், பொன்மயிலம்மை.

* பொருக்கநம்வினை என்றும் பாடம்.

Koviloor Digital Library

௪. திருக்கற்குடி.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

வடந்திகழ்மென்முலையாளைப்பாகமதாகமதித்துத்
தடந்திரைசேர்புனன்மாதைத்தாழ்சடைவைத்தசதுரர்
இடந்திகழ்முப்புரிநூலர்துன்பமொடின்பமதெல்லாம்
கடந்தவர்காதலில்வாழுங்கற்குடிமாமலையாரே. (௧)

அங்கமொராறுடைவேள்வி* யானவருமறைநான்கும்
பங்கமில்பாடலோடாடல்பாணிபயின்றபடிறர்
சங்கமதார்குறமாதர்தங்கையின்மைந்தர்கடாவிக்
கங்குலின்மாமதிபற்றுங்கற்குடிமாமலையாரே. (௨)

நீரகலந்தருசென்னிநீடியமத்தமும்வைத்துத்
தாரகையின்னொளிசூழ்ந்ததண்மதிசூடியசைவர்
போரகலந்தருவேடர்புனத்திடையிட்டவிறகில்
காரகிலின்புகைவிம்முங்கற்குடிமாமலையாரே. (௩)

ஒருங்களிநீயிறைவாவென்றும்பர்களோலமிடக்கண்
டிருங்களமாரவிடத்தையின்னமுதுண்ணியவீசர்†
மருங்களியார்பிடிவாயில்வாழ்வெதிரின்முளைவாரிக்
கருங்களியானைகொடுக்குங்கற்குடிமாமலையாரே. (௪)

போர்மலிதிண்சிலைகொண்டுபூதகணம்புடைசூழப்
பார்மலிவேடுருவாகிப்பண்டொருவர்க்கருள்செய்தார்
ஏர்மலிகேழல்கிளைத்தவின்னொளிமாமணியெங்கும்
கார்மலிவேடர்குவிக்குங்கற்குடிமாமலையாரே. (௫)

உலந்தவரென்பதணிந்தேயூரிடுபிச்சையராகி
விலங்கல்வில்வெங்கனலாலேமூவெயில்வேவமுனிந்தார்
நலந்தருசிந்தையராகிநாமலிமாலையினாலே
கலந்தவர்காதலில்வாழுங்கற்குடிமாமலையாரே. (௬)

மானிடமார்தருகையர்மாமழுவாரும்வலத்தார்
ஊனிடையார்தலையோட்டிலுண்கலனாகவுகந்தார்
தேனிடையார்தருசந்தின்றிண்சிறையாற்றினைவித்திக்
கானிடைவேடர்விளைக்குங்கற்குடிமாமலையாரே. (௭)

* அங்கமொராறுடைவேள்வி என்றும் பாடம். † யின்னமுதன்னியவீசர் என்றும் பாடம்.

Koyiloor Digital Library

வாளமர்வீரநினைந்தவிராவணன்மாமலையின்கீழ்த்
தோளமர்வன்றலைகுன்றத்தொல்விரலூன்றுதுணைவர்
தாளமர்வேய்தலைபற்றித்தாழ்கரிவிட்டவிசைபோய்க்
காளமதார்முகில்கிழிக்குங்கற்குடிமாமலையாரே. (அ)

தண்டமர்தாமரையானுந்தாவியிம்மண்ணையளந்து
கொண்டவனும்மறிவொண்ணாக்கொள்கையர்வெள்விடையூர்வர்
வண்டிசையாயினபாடநீடியவார்பொழினீழல்
கண்டமர்மாமயிலாடுங்கற்குடிமாமலையாரே. (௯)

மூத்துவராடையினாருமுசுகடிப்பொடியாரும்
நாத்துவர்பொய்ம்மொழியார்கணயமிலராமதிவைத்தார்
ஏத்துயர்பத்தர்கள்சிந்தரிறைஞ்சவவரிடரெல்லாம்
காத்தவர்காமருசோலைக்கற்குடிமாமலையாரே. (௧௦)

காமருவார்பொழில்சூழுங்கற்குடிமாமலையாரை
நாமருவண்புகழ்க்காழிநலந்திகழ்ஞானசம்பந்தன்
பாமருசெந்தமிழ்மாலைபத்திவைபாடவல்லார்கள்
பூமலிவானவரோடும்பொன்னுலகிற்பொலிவாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

முத்தவனைவானவர்க்குமூவாமேனி
முதல்வனைத்திருவரையின்மூக்கப்பாம்பொன்
றார்த்தவனையக்கரவமாரமாக
வணிந்தவனைப்பணிந்தடியாரடைந்தவன்போ
டேத்தவனையிறவரையிற்றேனைமேனோர்க்
கின்னமுதமளித்தவனையிடரையெல்லாம்
காத்தவனைக்கற்குடியில்விழுமியானைக்
கற்பகத்தைக்கண்ணாரக்கண்டேனானே. (௧)

செய்யானைவெளியானைக்கரியான்றன்னைத்
திசைமுகனைத்திசையெட்டுஞ்செறிந்தான்றன்னை
ஐயானைநொய்யானைச்சீரியானை
யணியானைச்சேயானையானஞ்சாடும்
மெய்யானைப்பொய்யாதுமில்லான்றன்னை*
விடையானைச்சடையானைவெறித்தமான்கொள்
கையானைக்கற்குடியில்விழுமியானைக்
கற்பகத்தைக்கண்ணாரக்கண்டேனானே. (௨)

* மிலாதான்றன்னை என்றும் பாடம்.

Koviloor Digital Library

மண்ணதனிலைந்தைமாரீரன்னைகை
வயங்கெரியின்மூன்றைமாருதத்திரண்டை
விண்ணதனிலொன்றைவிரிகதிரைத்
தண்மதியைத்தாரகைகடம்மின்மிக்க
எண்ணதனிலெழுத்தையேழிசையைக்காம
னெழிலழியவெரியுமிழ்ந்தவிமையாநெற்றிக்
கண்ணவனைக்கற்குடியில்விழுமியானைக்
கற்பகத்தைக்கண்ணாரக்கண்டேனானே. (௩)

நற்றவனைப்புற்றரவநாணினானை
நாணாதநகுதலையூணயர்ந்தான்றன்னை
முற்றவனைமூவாதமேனியானை
முந்நீரினஞ்சமுகந்துண்டான்றன்னைப்
பற்றவனைப்பற்றார்தம்பதிகள்செற்ற
படையானையடைவார்தம்பாவம்போக்கக்
கற்றவனைக்கற்குடியில்விழுமியானைக்
கற்பகத்தைக்கண்ணாரக்கண்டேனானே. (௪)

சங்கைதனைத்தவிர்த்தாண்டதலைவன்றன்னைச்
சங்கரனைத்தழலுறுதாண்மழுவாடாங்கும்
அங்கையனையங்கமணியாகத்தானை
யாகத்தோர்பாகத்தேயமரவைத்த
மங்கையனைமதியொடுமாசுணமுந்தம்மின்
மருவவிரிசடைமுடிமேல்வைத்தவானீர்க்
கங்கையனைக்கற்குடியில்விழுமியானைக்
கற்பகத்தைக்கண்ணாரக்கண்டேனானே. (௫)

பெண்ணவனையாணவனைப்பேடானானைப்
பிறப்பிலியையிறப்பிலியைப்போரார்வாணி
விண்ணவனைவிண்ணவர்க்குமேலானானை *
வேதியனைவேதத்தின்கிதம்பாடும்
பண்ணவனைப்பண்ணில்வருபயனானானைப்
பாரவனைப்பாரில்வாழுயிர்கட்கெல்லாம்
கண்ணவனைக்கற்குடியில்விழுமியானைக்
கற்பகத்தைக்கண்ணாரக்கண்டேனானே. (௬)

பண்டானைப்பரந்தானைக்குவிந்தான்றன்னைப்
பாரானைவிண்ணாயிவ்வுலகமெல்லாம்
உண்டானையுமிழ்ந்தானையுடையான்றன்னை
யொருவருந்தன்பெருமைதனையறியவொண்ணா
விண்டானைவிண்டார்தம்புரங்கண்மூன்றும்
வெவ்வழலில்வெந்துபொடியாகிவீழக்
கண்டானைக்கற்குடியில்விழுமியானைக்
கற்பகத்தைக்கண்ணாரக்கண்டேனானே. (௭)

* மேலாவாய என்றும் பாடம்.

Koviloor Digital Library

வானவனைவானவர்க்குமேலானானை
வணங்குமடியார்மனத்துள்மருவிப்புக்க
தேனவனைத்தேவர்தொழுகழலான்றன்னைச்
செய்குணங்கள்பலவாகிநின்றவென்றிக்
கோனவனைக்கொல்லைவிடையேற்றினானைக்
குழன்முழவமியம்பக்கூத்தாடவல்ல
கானவனைக்கற்குடியில்விழுமியானைக்
கற்பகத்தைக்கண்ணாரக்கண்டேனானே. (அ)

கொலையானையுரிபோர்த்தகொள்கையானைக்
கோளரியைக்கூரம்பாவரைமேற்கோத்த
சிலையானைச்செம்மைதருபொருளான்றன்னைத்
திரிபுரத்தோர்மூவர்க்குச்செம்மைசெய்த
தலையானைத்தத்துவங்களானான்றன்னைத்
தையலோர்பங்கினனைத்தன்கையேந்து
கலையானைக்கற்குடியில்விழுமியானைக்
கற்பகத்தைக்கண்ணாரக்கண்டேனானே. (௯)

பொழிலானைப்பொழிலாரும்புன்கூரானைப்
புறம்பயனையறம்புரிந்தபுகலூரானை
எழிலானையிடைமருதினிடங்கொண்டானை
யீங்கோய்நீங்காதுறையுமிறைவன்றன்னை
அழலாடுமேனியனையன்றுசென்றக்*
குன்றெடுத்தவரக்கன்றோணெரியவூன்றும்
கழலானைக்கற்குடியில்விழுமியானைக்
கற்பகத்தைக்கண்ணாரக்கண்டேனானே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண்-நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

விடையாருங்கொடியாய்வெறியார்மலர்க்கொன்றையினாய்
படையார்வெண்மழுவாபரமாயபரம்பரனே
கடியார்பூம்பொழில்சூழ்திருக்கற்குடிமன்னிநின்ற
அடிகேளெம்பெருமானடியேனையுமஞ்சலென்னே. (௧)

மறையோர்வானவருந்தொழுதேத்திவணங்கநின்ற
இறைவாவெம்பெருமானெனக்கின்னமுதாயவனே
கறையார்சோலைகள்சூழ்திருக்கற்குடிமன்னிநின்ற
அறவாவங்கணனேயடியேனையுமஞ்சலென்னே. (௨)

* யன்றுசென்று என்றும் பாடம்.

Koviloor Digital Library

சிலையான்முப்புரங்கள்பொடியாகச்சிதைத்தவனே
மலைமேன்மாமருந்தேமடமா திடங்கொண்டவனே
கலைசேர்கையினனே திருக்கற்குடிமன்னிநின்ற
அலைசேர்செஞ்சடையாயடியேனையுமஞ்சலென்னே. (௩)

செய்யார்மேனியனே திருநீலமிடற்றினனே
மையார்கண்ணிபங்காமதயானையுரித்தவனே
கையார்சூலத்தினாய் திருக்கற்குடிமன்னிநின்ற
ஐயாவெம்பெருமானடியேனையுமஞ்சலென்னே. (௪)

சந்தார்வெண்குழையாய்சரிகோவணவாடையனே
பந்தாரும்விரலாளொருபாகமமர்ந்தவனே
கந்தார்சோலைகள்சூழ் திருக்கற்குடிமன்னிநின்ற
எந்தாயெம்பெருமானடியேனையுமேன்றுகொள்ளே. (௫)

அரையார்கீளொடுகோவணமும்மரவும்மசைத்து
விரையார்கொன்றையுடன்விளங்கும்பிறைமேலுடையாய்
கரையாரும்வயல்சூழ் திருக்கற்குடிமன்னிநின்ற
அரையாவெம்பெருமானடியேனையுமஞ்சலென்னே. (௬)

பாரார்* விண்ணவரும்பரவிப்பணிந்தேத்தநின்ற
சீரார்மேனியனே திகழ்நீலமிடற்றினனே
காரார்பூம்பொழில்சூழ் திருக்கற்குடிமன்னிநின்ற
ஆராவின்னமுதேயடியேனையுமஞ்சலென்னே. (௭)

நிலனேநீர்வளிதீநெடுவானகமாகிநின்ற
புலனேபுண்டரிகத்தயன்மாலவன்போற்றிசெய்யும்
கனலேகற்பகமே திருக்கற்குடிமன்னிநின்ற
அனல்சேர்கையினனேயடியேனையுமஞ்சலென்னே. (௮)

வருங்காலன்னுயிரைமடியத்திருமெல்விரலால்
பெரும்பாலன்றனக்காய்ப்பிரிவித்தபெருந்தகையே
கரும்பாரும்வயல்சூழ் திருக்கற்குடிமன்னிநின்ற
விரும்பாவெம்பெருமானடியேனையும்வேண்டுதியே. (௯)

அலையார்தண்புனல்சூழ்ந்தழகாகிவிழவமரும்
கலையார்மாதவர்சேர் திருக்கற்குடிக்கற்பகத்தைச்
சிலையார்வாணுதலாணல்லசிங்கடியப்பனுரை
விலையார்மாலைவல்லார்வியன்மூவுலகாள்பவரே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருக்கற்குடித்திருப்பதிகம் - ௩.

ஆ திருப்பதிகம் - ௭.

சுவாமி தேவி திருநாமங்கள் - உச்சிநாதர், அஞ்சனாக்ஷி.

* பாரோர் என்றும் பாடம்.

Koviloor Digital Library

௫. திருமூக்கீச்சரம். *

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - செவ்வழி.

திருச்சிற்றம்பலம்.

சாந்தம்வெண்ணீறெனப்பூசிவெள்ளஞ்சடைவைத்தவர்
காந்தளாரும்விரலேழையொடாடியகாரணம்
ஆய்ந்துகொண்டாங்கறியந்நிறைந்தாரவரார்கொலோ
வேந்தன்மூக்கிச்சரத்தடிகள்செய்கின்றதோர்மெய்ம்மையே. (௧)

வெண்டலையோர்கலனாப்பலிதேர்ந்துவிரிசடைக்
கொண்டலாரும்புனல்சேர்த்து† மையாளொடுங்கூட்டமா
விண்டவர்தம்மதிலெய்தபின்வேனில்வேள்வெந்தெழக்
கண்டவர்மூக்கிச்சரத்தெம்மடிகள்செய்கன்மமே. (௨)

மருவலார்தம்மதிலெய்ததுவும்மான்மதலையை
உருவிலாரவ்வெரியூட்டியதும்முலகுண்டதால்
செருவிலாரும்புலிசெங்கயலானையினான்செய்த‡
பொருவின்மூக்கிச்சரத்தெம்மடிகள்செயும்பூசலே. (௩)

அன்னமன்னந்நடைச்சாயலாளோடழகெய்தவே
மின்னையன்னசடைக்கங்கையாள்மேவியகாரணம்
தென்னன்கோழியெழில்வஞ்சியுமோங்குசெங்கோலினான்.
மன்னன்மூக்கிச்சரத்தடிகள்செய்கின்றதோர்மாயமே. (௪)

விடமுனாவ்வழல்வாயதோர்பாம்பரைவீக்கியே
நடமுனாவ்வழலாடுவர்பேயொடுநள்ளிருள்
வடமனிடுபுகழ்ப்பூழியன்றென்னவன்கோழிமன்
அடன்மன்மூக்கிச்சரத்தடிகள்செய்கின்றதோரச்சமே. (௫)

வெந்தநீறுமெய்யிற்பூசுவராடுவர்வீங்கிருள்
வந்தெனாவ்வளைகொள்வதுமிங்கொருமாயமாம்
அந்தண்மாமானதன்னேரியன்செம்பியனாக்கிய
எந்தைமூக்கிச்சரத்தடிகள்செய்கின்றதோரேதமே. (௬)

அரையிலாருங்கலையில்லவனொடுபெண்ணுமாய்
உரையிலாவ்வழலாடுவரொன்றலர்காண்மினோ
விரவலார்தம்மதின்மூன்றுடன்வெவ்வழலாக்கினான்
அரையன்மூக்கிச்சரத்தடிகள்செய்கின்றதோரச்சமே. (௭)

* திருமூக்கீச்சரம்—உறையூர். † கொண்டலரும்புனல்சேர்த்து என்றும் பாடம்.
‡ லாணையினான்செய்த என்றும் பாடம்.

Koviloor Digital Library

ஈர்க்குநீர்செஞ்சடைக்கேற்றதுங்கூற்றையுதைத்ததும்
கூர்க்குநன்மூவிலைவேல்வலனேந்தியகொள்கையும்
ஆர்க்கும்வாயானரக்கனூரத்தைநெரித்தவ்வடல்
மூர்க்கன்மூக்கீச்சரத்தடிகள்செய்யாநின்றமொய்ம்பதே. (அ)

நீருளாரும்மலர்மேலுறைவானெடுமாலுமாய்ச்
சீருளாருங்கழறேடமெய்த்தீத்திரளாயினான்
சீரினாலங்கொளிர்தென்னவன்செம்பியன்வில்லவன்
சேருமூக்கீச்சரத்தடிகள்செய்கின்றதோர்செம்மையே. (௯)

வெண்புலான்மார்பிடுதுகிலினர்வெற்றரையுழல்பவர்
உண்பினாலேயுரைப்பார்மொழியூனமதாக்கினான்
ஒண்புலால்வேன்மிகவல்லவனோங்கெழிற்கிள்ளிசேர்
பண்பின்மூக்கீச்சரத்தடிகள்செய்கின்றதோர்பச்சையே. (௧௦)

மல்லையார்மும்முடிமன்னர்மூக்கீச்சரத்தடிகளைச்
செல்வராகநினையும்படிசேர்த்தியசெந்தமிழ்
நல்லராய்வாழ்பவர்காழியுண்ஞானசம்பந்தன
சொல்லவல்லாரவர்வானுலகாளவும் * வல்லரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருமூக்கீச்சரத்திருப்பதிகம் - ௧.

ஆ திருப்பதிகம் - அ.

சுவாமி தேவி திருநாமங்கள் - பஞ்சவர்ணநாதர், காந்திமதியம்மை.

௬௱. திருச்சிராப்பள்ளி.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

நன்றுடையானைத்தீயதிலானைநரைவெள்ளே
றொன்றுடையானையுமையொருபாகமுடையானைச்
சென்றடையாததிருவுடையானைச்சிராப்பள்ளிக்
குன்றுடையானைக்கூறவென்னுள்ளங்குளிருமே. (௧)

கைம்மகவேந்திக்கடுவனொடிக்கழைபாய்வான்
செம்முகமந்திகருவரையேறுஞ்சிராப்பள்ளி
வெம்முகவேழத்தீருரிபோர்த்தவிகிர்தாநீ
பைம்முகநாகம்மதியுடன்வைத்தல்பழியன்றே. (௨)

* சொல்வல்லாரவராவர்வானுலகாளவும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

மந்தம்முழவம்மழலைததும்பவரைநீழல்
செந்தண்புனமுஞ்சுனையுஞ்சூழ்ந்தசிராப்பள்ளிச்
சந்தம்மலர்கள்சடைமேலுடையார்விடையூரும்
எந்தம்மடிகளடியார்க்கல்லலில்லையே. (௩)

துறைமல்குசாரற்சுனைமல்குநீலத்திடைவைகிச்
சிறைமல்குவண்டுந்தும்பியும்பாடுஞ்சிராப்பள்ளிக்
கறைமல்குகண்டன்கனலெரியாடுங்கடவுளெம்
பிறைமல்குசென்னியுடையவனெங்கள்பெருமானே. (௪)

கொலைவரையாதகொள்கையர்தங்கண்மதின்மூன்றுஞ்
சிலைவரையாகச்செற்றனரேனுஞ்சிராப்பள்ளித்
தலைவரைநாளுந்தலைவரல்லாமையுரைப்பீர்காள்
நிலவரைநிலமுண்டதும்வெள்ளைநிறமாமே. (௫)

வெய்யதண்சாரல்விரிநிறவேங்கைத்தண்போது
செய்யபொன்சேருஞ்சிராப்பள்ளிமேயசெல்வனார்
தையலொர்பாகமகிழ்வர்நஞ்சுண்பர்தலையோட்டில்
ஐயமுங்கொள்வாராரிவர்செய்கையறிவாரே. (௬)

வேயுயர்சாரற்கருவிரலூகம்விளையாடும்
சேயுயர்கோயிற்சிராப்பள்ளிமேயசெல்வனார்
பேயுயர்கொள்ளிகைவிளக்காகப்பெருமானார்
தீயுகந்தாடற்றிருக்குறிப்பாயிற்றாகாதே. (௭)

மலைமல்குதோளன்வலிகெடவூன்றிமலரோன்றன்
தலைகலனாகப்பலிதிரிந்துண்பர்பழியோரார்
சொலவலவேதஞ்சொலவலகீதஞ்சொல்லுங்கால்
சிலவலபோலுஞ்சிராப்பள்ளிச்சேடர்செய்கையே. (௮)

அரப்பள்ளியானுமலருறைவானுமறியாமைக்
கரப்புள்ளிநாடிக்கண்டிலரேனுங்கல்சூழ்ந்த *
சிரப்பள்ளிமேயவார்சடைச்செல்வர்மனைதோறும்
இரப்புள்ளீரும்மையேதிலர்கண்டாலிகழாரே. (௯)

நாணாதுடைநீத்தோர்களுங்கஞ்சிநாட்காலே
ஊணாப்பகலுண்டோதுவோர்களுரைக்குஞ்சொல்
பேணாதுறுசீர்பெறுதுமென்பீரெம்பெருமானார்
சேணார்கோயில்சிராப்பள்ளிசென்றுசேர்மினே. (௧௦)

தேனயம்பாடுஞ்சிராப்பள்ளியானைத்திரைசூழ்ந்த
கானல்சங்கேறுங்கழுமலவூரிற்கவுணியன்
ஞானசம்பந்தனலமிகுபாடலிவைவல்லார்
வானசம்பந்தத்தவரொடுமன்னிவாழ்வாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

* கண்டிலரேனுங்கடல்சூழ்ந்த என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

மட்டுவார்குழலாளொடுமால்விடை
இட்டமாவுகந்தேறுமிறைவனார்
கட்டுநீத்தவர்க்கின்னருளேசெயும்
சிட்டர்போலுஞ்சிராப்பள்ளிச்செல்வரே.* (௧)

அரியயன்றலைவெட்டிவட்டாடினார்
அரியயன்றொழுதேத்துமரும்பொருள்
பெரியவன்சிராப்பள்ளியைப்பேணுவார்
அரியயன்றொழவங்கிருப்பார்களே. (௨)

அரிச்சிராப்பகலைவராலாட்டுண்டு
சுரிச்சிராதுநெஞ்சேயொன்றுசொல்லக்கேள்
திருச்சிராப்பள்ளியென்றலுந்தீவினை
நரிச்சிராதுநடக்குநடக்குமே. (௩)

தாயுமாயெனக்கேதலைகண்ணுமாய்ப்
பேயனேனையுமாண்டபெருந்தகை
தேயநாதன்சிராப்பள்ளிமேவிய
நாயனாரெனநம்வினைநாசமே. (௰)

திருச்சிற்றம்பலம்.

திருச்சிராப்பள்ளித்திருப்பதிகம் - ௨.

ஆ திருப்பதிகம் - ௰.

சுவாமி தேவி திருநாமங்கள் – தாயுமானவர், மட்டுவார்குழலி.

எ. திருவெறும்பியூர்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

விரும்பியூறுவிடேன்மடநெஞ்சமே
கரும்பினூறல்கண்டாய்கலந்தார்க்கவன்
இரும்பினூறலறாததோர்வெண்டலை
எறும்பியூர்மலையானெங்களீசனே. (௧)

* இத்திருப்பதிகத்தில் ௪, ௫, ௬, ௭, ௮, ௯ இச்செய்யுள்கள் மறைந்துபோயின.

Koviloor Digital Library

பிறங்குசெஞ்சடைப்பின்னகன்பேணுசீர்
கறங்குபூதகணமுடைக்கண்ணுதல்
நறுங்குழன்மடவாளொடுநாடொறும்
எறும்பியூர்மலையானெங்களீசனே. (௨)

மருந்துவானவர்தானவர்க்கின்சுவை
புரிந்தபுன்சடைப்புண்ணியன்கண்ணுதல்
பொருந்துபூண்முலைமங்கைநல்லாளொடும்
எறும்பியூர்மலையானெங்களீசனே. (௩)

நிறங்கொள்கண்டத்துநின்மலனெம்மிறை
மறங்கொள்வேற்கண்ணிவாணுதல்பாகமா
அறம்புரிந்தருள்செய்தவெமங்கனன்
எறும்பியூர்மலையானெங்களீசனே. (௪)

நறும்பொனுண்மலர்க்கொன்றையுநாகமும்
துறும்புசெஞ்சடைத்தூமதிவைத்து* வான்
உறும்பொன்மால்வரைப்பேதையொடோர்தொறும்
எறும்பியூர்மலையானெங்களீசனே. (௫)

கறும்பியூர்வனவைந்துளகாயத்தில்
திறம்பியூர்வனமற்றும்பலவுள
குறும்பியூர்வதோர்கூட்டகத்திட்டெனை
எறும்பியூரான்செய்தவியற்கையே. (௬)

மறந்துமற்றிதுபேரிடர்நாடொறும்
திறம்பிநிக்கிலேயென்மடநெஞ்சமே
புறஞ்செய்கோலக்குரம்பையிலிட்டெனை
எறும்பியூரான்செய்தவியற்கையே. (௭)

இன்பமும்பிறப்பும்மிறப்பின்னொடு
துன்பமும்முடனேவைத்தசோதியான்
அன்பனேயரனேயென்றரற்றுவார்க்
கின்பனாகுமெறும்பியூரீசனே. (௮)

கண்ணிறைந்தகனபவளத்திரள்
விண்ணிறைந்தவிரிசுடர்ச்சோதியான்
உண்ணிறைந்துருவாயுயிராயவன்
எண்ணிறைந்தவெறும்பியூரீசனே. (௯)

நிறங்கொண்மால்வரையூன்றியெடுத்தலும்
நறுங்குழன்மடவாளடுக்கெய்திட
மறங்கொள்வாளரக்கன்வலிவாட்டினான்
எறும்பியூர்மலையெம்மிறைகாண்மினே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

* வைத்த என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

பன்னியசெந்தமிழறியேன்கவியேன்மாட்டே
னெண்ணோடுபண்ணிறைந்தகலைகளாய
தன்னையுந்தன்றிறத்தறியாப்பொறியிலேனைத்
தன்றிறமுமறிவித்துநெறியுங்காட்டி
அன்னையையுமத்தனையும்போலவன்பா
யடைந்தேனைத்தொடர்ந்தென்னையாளாக்கொண்ட
தென்னெறும்பியூர்மலைமேன்மாணிக்கத்தைச்
செழுஞ்சுடரைச்சென்றடையப்பெற்றேனானே. (க)

பளிங்கினிழலுட்பதித்தசோதியானைப்
பசுபதியைப்பாசுபதவேடத்தானை
விளிங்தெழுந்தசலந்தரனைவீட்டினானை
வேதியனைவிண்ணவனைமேவிவையம்
அளந்தவனைநான்முகனையல்லறீர்க்கு
மருமருந்தையாமாறறிந்தெனுள்ளம்
தெளிந்தெறும்பியூர்மலைமேன்மாணிக்கத்தைச்
செழுஞ்சுடரைச்சென்றடையப்பெற்றேனானே. (உ)

கருவையென்றன்மனத்திருந்தகருத்தைஞானக்
கடுஞ்சுடரைப்படிந்துகிடந்தமரரேத்தும்
உருவையண்டத்தொருமுதலையோதவேலி
யுலகினிறைதொழிலிறுதிநடுவாய்நின்ற
மருவைவென்றகுழன்மடவாள்பாகம்வைத்த
மயானத்துமாசிலாமணியைவாசத்
திருவெறும்பியூர்மலைமேன்மாணிக்கத்தைச்
செழுஞ்சுடரைச்சென்றடையப்பெற்றேனானே. (௩)

பகழிபொழிந்தடலரக்கர்புரங்கண்மூன்றும்
பாழ்படுத்தபரஞ்சுடரைப்பரிந்துதன்னைப்
புகழுமன்பர்க்கின்பமருமமுதைத்தேனைப்*
புண்ணியனைப்புவனியதுமுழுதும்போத †
உமிழுமம்பொற்குன்றத்தைமுத்தின்றூணை
யுமையவடம்பெருமானையிமையோரேத்தும்
திகழெறும்பியூர்மலைமேன்மாணிக்கத்தைச்
செழுஞ்சுடரைச்சென்றடையப்பெற்றேனானே. (௪)

பாரிடங்களுடன்பாடப்பயின்றுநட்டம்
பயில்வானையயில்வாய்சூலமேந்தி
நேரிடும்போர்மிகவல்லநிமலன்றன்னை
நின்மலனையம்மலர்கொண்டயனுமாலும்

* கின்பமருமுத்தைத்தேனை என்றும் பாடம். † போக என்றும் பாடம்.

Koviloor Digital Library

பாரிடந்துமேலுயர்ந்துங்காணாவண்ணம்
பரந்தானைநிமிர்ந்து* முனிகணங்களேத்தும்
சீரெறும்பியூர்மலைமேன்மாணிக்கத்தைச்
செழுஞ்சுடரைச்சென்றடையப்பெற்றேனானே. (௫)

கார்முகிலாய்ப்பொழிவானைப்பொழிந்தமுன்னீர்
காப்பானைக்கடியநடைவிடையொன்றேறி
ஊர்பலவுந்திரிவானையூரதாக
வொற்றியூருடையனாய்முற்றுமாண்டு
பேரெழுத்தொன்றுடையானைப்பிரமனோடு
மாலவனுமிந்திரனுமந்திரத்தாலேத்தும்†
சீரெறும்பியூர்மலைமேன்மாணிக்கத்தைச்
செழுஞ்சுடரைச்சென்றடையப்பெற்றேனானே. (௬)

நீணிலவுமந்தியுநீருமற்றை
நெறியிலங்குமிகுகாலு‡மாகாசமும்
வானிலவுதாரகையுமண்ணும்விண்ணு
மன்னுயிருமென்னுயிருந்தானாஞ்செம்பொன்
ஆணியென்றுமஞ்சனமாமலையேயென்று
மம்பவளத்திரளென்றுமறிந்தோரேத்தும்
சேணெறும்பியூர்மலைமேன்மாணிக்கத்தைச்
செழுஞ்சுடரைச்சென்றடையப்பெற்றேனானே. (௭)

அறந்தெரியாவூத்தைவாயறிவில்சிந்தை
யாரம்பக்குண்டரோடயர்த்துநாளும்
மறந்துமரன்றிருவடிகணினையமாட்டா
மதியிலியேன்வாழ்வெலாம்வாளாமண்மேல்
பிறந்தநாளுளல்லவாளாவீசன்
பேர்பிதற்றிச்சீரடிமைத்திறத்துளன்பு
செறிந்தெறும்பியூர்மலைமேன்மாணிக்கத்தைச்
செழுஞ்சுடரைச்சென்றடையப்பெற்றேனானே. (௮)

அறிவிலங்குமனத்தானையறிவார்க்கன்றி
யறியாதார்தந்திறத்தொன்றறியாதானைப்
பொறியிலங்குவாளரவம்புனைந்துபூண்ட
புண்ணியனைப்பொருதிரைவாய்நஞ்சமுண்ட
குறியிலங்குமிடற்றானைமடற்றேன்கொன்றைச்
சடையானைமடைதோறுங்கமலமென்பூச்
செறியெறும்பியூர்மலைமேன்மாணிக்கத்தைச்
செழுஞ்சுடரைச்சென்றடையப்பெற்றேனானே. (௯)

* நிமிர்ந்து பரந்தானை என்க; நிரந்து என்னும் பாடபேதம் முனிகணங்கட்கு அடையாதலின் இத்துணைச் சிறப்பின்று. † மிந்திரன்மந்திரத்தாலேத்தும் என்னும் பாடம். ‡ மிருகாலு என்னும் பாடம்.

Koviloor Digital Library

அருந்தவத்தின்பெருவலியாலறிவதன்றி
யடலரக்கன்றடவரையையெடுத்தான்றிண்டோள்
முரிந்துநெரிந்தழிந்துபாதாளமுற்று
முன்கைநரம்பினையெடுத்துக்கீதம்பாட
இருந்தவனையேழுலகுமாக்கினானை
யெம்மானைக்கைம்மாவினுரிவைபோர்த்த
திருந்தெறும்பியூர்மலைமேன்மாணிக்கத்தைச்
செழுஞ்சுடரைச்சென்றடையப்பெற்றேனானே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருவெறும்பியூர்த்திருப்பதிகம் - ௨.

ஆ திருப்பதிகம் - ௧௨.

சுவாமி தேவி திருநாமங்கள் - எறும்பீசர், நறுங்குழலாயகி.

அ. திருநெடுங்களம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

மறையுடையாய்தோலுடையாய்வார்சடைமேல்வளரும்
பிறையுடையாய்பிஞ்ஞகனேயென்றுனைப்பேசினல்லால்
குறையுடையார்குற்றமோராய்கொள்கையினாலுயர்ந்த
நிறையுடையாரிடர்களையாய்நெடுங்களமேயவனே. (௧)

கனைத்தெழுந்தவெண்டிரைசூழ்கடலிடைநஞ்சுதன்னைத்
தினைத்தனையாமிடற்றில்வைத்ததிருந்தியதேவநின்னை
மனத்தகத்தோர்பாடலாடல்பேணியிராப்பகலும்
நினைத்தெழுவாரிடர்களையாய்நெடுங்களமேயவனே. (௨)

நின்னடியேவழிபடுவானிமலாநினைக்கருத
என்னடியானுயிரைவவ்வேலென்றடற்கூற்றுதைத்த
பொன்னடியேபரவிநாளும்பூவொடுநீர்சுமக்கும்
நின்னடியாரிடர்களையாய்நெடுங்களமேயவனே. (௩)

மலைபுரிந்தமன்னவன்றன்மகளையோர்பான்மகிழ்ந்தாய்
அலைபுரிந்தகங்கைதங்குமவிர்சடையாரூரா
தலைபுரிந்தபலிமகிழ்வாய்தலைவநின்றாணிழற்கீழ்
நிலைபுரிந்தாரிடர்களையாய்நெடுங்களமேயவனே. (௪)

Koviloor Digital Library

பாங்கினல்லார்* படிமஞ்செய்வார்பாரிடமும்பலிசேர்
தூங்கிநல்லார்பாடலோடுதொழுகழலேவணங்கித்
தாங்கிநில்லா† வன்பினோடுந்தலைவநின்றாணிழற்கீழ்
நீங்கிநில்லாரிடர்களையாய்நெடுங்களமேயவனே. (௫)

விருத்தனாகிப்பாலனாகிவேதமோர்நான்குணர்ந்து
கருத்தனாகிக்கங்கையாளைக்கமழ்சடைமேற்கரந்தாய்
அருத்தனாயவாதிதேவனடியிணையேபரவும்
நிருத்தகீதரிடர்களையாய்நெடுங்களமேயவனே. (௬)

கூறுகொண்டாய்மூன்றுமொன்றாக்கூட்டியோர்வெங்கணையால்
மாறுகொண்டார்புரமெரித்தமன்னவனேகொடிமேல்
ஏறுகொண்டாய்சாந்தமீதென்றெம்பெருமானணிந்த
நீறுகொண்டாரிடர்களையாய்நெடுங்களமேயவனே. (௭)

குன்றினுச்சிமேல்விளங்குங்கொடிமதில்சூழிலங்கை
அன்றிநின்றவரக்கர்கோனையருவரைக்கீழடர்த்தாய்
என்றுநல்லவாய்மொழியாலேத்தியிராப்பகலும்
நின்றுநைவாரிடர்களையாய்நெடுங்களமேயவனே. (௮)

வேழவெண்கொம்பொசித்தமாலும்விளங்கியநான்முகனும்
சூழவெங்குநேடவாங்கோர்சோதியுளாகிநின்றாய்
கேழல்வெண்கொம்பணிந்தபெம்மான்கேடிலாப்பொன்னடியின்
நிழல்வாழ்வாரிடர்களையாய்நெடுங்களமேயவனே. (௯)

வெஞ்சொற்றஞ்சொல்லாக்கிநின்றவேடமில்லாச்சமணும்
தஞ்சமில்லாச்சாக்கியருந்தத்துவமொன்றறியார்
துஞ்சலில்லாவாய்மொழியாற்றோத்திரநின்னடியே
நெஞ்சில்வைப்பாரிடர்களையாய்நெடுங்களமேயவனே. (௧0)

நீடவல்லவார்சடையான்மேயநெடுங்களத்தைச்
சேடர்வாழுமாமறுகிற்சிரபுரக்கோனலத்தால்
நாடவல்லபனுவன்மாலைஞானசம்பந்தன்சொன்ன
பாடல்பத்தும்பாடவல்லார்பாவம்பறையுமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருநெடுங்களத்திருப்பதிகம் - ௧.

ஆ. திருப்பதிகம் - ௧௩.

சுவாமி தேவி திருநாமங்கள் - நித்தியசுந்தரர், ஒப்பிலாநாயகி.

* பாங்கிநல்லார் என்றும் பாடம். † தாங்கிநல்லா என்றும் பாடம்.

Koviloor Digital Library

௬௦. மேலைத்திருக்காட்டுப்பள்ளி.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

வாருமன்னும்முலைமங்கையோர்பங்கினன்
ஊருமன்னும்பலியுண்பதும்வெண்டலை
காருமன்னும்பொழில்சூழ்ந்தகாட்டுப்பள்ளி
நீருமன்னுஞ்சடைநிமலர்தந்நீர்மையே. (௧)

நிருத்தனார்நீள்சடைமதியொடுபாம்பணி
கருத்தனார்கடிபொழில்சூழ்ந்தகாட்டுப்பள்ளி
அருத்தனாரழகமர்மங்கையோர்பாகமாப்
பொருத்தனார்கழலிணைபோற்றுதல்பொருளதே. (௨)

பண்ணினாருமறைபாடினார்நெற்றியோர்
கண்ணினார்கடிபொழில்சூழ்ந்தகாட்டுப்பள்ளி
விண்ணினார்விரிபுனன்மேவினார்சடைமுடி
அண்ணலாரெம்மையாளுடையவெம்மடிகளே. (௩)

பணங்கொளாகம்மரைக்கார்ப்பதுபல்பலி
உணங்கலோடுண்கலனுறைவதுகாட்டிடைக்
கணங்கள்கூடித்தொழுதேத்துகாட்டுப்பள்ளி
நிணங்கொள்சூலப்படைநிமலர்தந்நீர்மையே. (௪)

வரையுலாஞ்சந்தொடுவந்திழிகாவிரிக்
கரையுலாமிடுமணல்சூழ்ந்தகாட்டுப்பள்ளித்
திரையுலாங்கங்கையுந்திங்களுஞ்சூடியங்
கரையுலாங்கோவணத்தடிகள்வேடங்களே. (௫)

வேதனார்வெண்மழுவேந்தினாரங்கமுன்
ஓதினாருமையொருகூறனாரொண்குழைக்
காதினார்கடிபொழில்சூழ்ந்தகாட்டுப்பள்ளி
நாதனார்திருவடிநாளுநின்றேத்துமே. (௬)

மையினார்மிடறனார்மான்மழுவேந்திய
கையினார்கடிபொழில்சூழ்ந்தகாட்டுப்பள்ளித்
தையலோர்பாகமாத்தண்மதிசூடிய
ஐயனாரடிதொழவல்லலொன்றில்லையே. (௭)

சிலைதனான்முப்புரஞ்செற்றவன்சீரினார்
மலைதனால்வல்லரக்கன்வலிவாட்டினான்
கலைதனார்புறவணிமல்குகாட்டுப்பள்ளி
தலைதனால்வணங்கிடத்தவமதுவாகுமே. (௮)

Koviloor Digital Library

செங்கண்மாநிகழ்தருமலருறைதிசைமுகன்
தங்கையாற்றொழுதெழத்தழலுருவாயினான்
கங்கையார்சடையினான்கருதுகாட்டுப்பள்ளி
அங்கையாற்றொழுமவர்க்கல்லலொன்றில்லையே. (௯)

போதியார்பிண்டியாரென்றவப்பொய்யர்கள்
வாதினாலுரையவைமெய்யலவைகலும்
காரினார்கடிபொழில்சூழ்ந்தகாட்டுப்பள்ளி
ஏரினாற்றொழுதெழவின்பம்வந்தெய்துமே. (௧௦)

பொருபுனல்புடையணிபுறவநன்னகர்மன்னன்
அருமறையவைவல்லவணிகொள்சம்பந்தன்சொல்
கருமணிமிடற்றினன்கருதுகாட்டுப்பள்ளி
பரவியதமிழ்சொல்லப்பறையுமெய்ப்பாவமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

மாட்டுப்பள்ளிமகிழ்ந்துறைவீர்க்கெலாம்
கேட்டுப்பள்ளிகண்டீர்கெடுவீரிது
ஓட்டுப்பள்ளிவிட்டோடலுறுமுனம்
காட்டுப்பள்ளியுளான்கழல்சேர்மினே. (௧)

மாட்டைத்தேடிமகிழ்ந்துநீர்நும்முளே
நாட்டுப்பொய்யெலாம்பேசிநாணிலீர்
கூட்டைவிட்டுயிர்போவதன்முன்னமே
காட்டுப்பள்ளியுளான்கழல்சேர்மினே. (௨)

தேனைவென்றசொல்லாளொடுசெல்வமும்
ஊனைவிட்டுயிர்போவதன்முன்னமே
கானவேடர்கருதுங்காட்டுப்பள்ளி
ஞானநாயகனைச்சென்றுநண்ணுமே. (௩)

அருத்தமும்மனையாளொடுமக்களும்
பொருத்தமில்லைபொல்லாததுபோகடும் *
கருத்தன்கண்ணுதலண்ணல்காட்டுப்பள்ளித்
திருத்தன்சேவடியைச்சென்றுசேர்மினே. (௪)

சுற்றமுந்துணையும்மனைவாழ்க்கையும்
அற்றபோதணையாரவரென்றென்றே
கற்றவர்கள்கருதுங்காட்டுப்பள்ளிப்
பெற்றமேறும்பிரானடிசேர்மினே. (௫)

* போக்கிடும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

அடும்புங்* கொன்றையும்வன்னியுமத்தமும்
துடும்பல்செய்சடைத்தூமணிச்சோதியான்
கடம்பன்றாதைகருதுங்காட்டுப்பள்ளி
உடம்பினார்க்கோருறுதுணையாகுமே. (௬)

மெய்யின்மாசுடையாருடன்மூடுவார்
பொய்யைமெய்யென்றுபுக்குடன்வீழன்மின்
கையின்மானுடையான்காட்டுப்பள்ளியெம்
ஐயன்றன்னடியேயடைந்துய்ம்மினே. (௭)

வேலைவென்றகண்ணாரைவிரும்பிநீர்
சீலங்கெட்டுத்திகையன்மின்பேதைகாள்
காலையேதொழுங்காட்டுப்பள்ளியுறை
நீலகண்டனைநித்தநினைமினே. (௮)

இன்றுளார்நாளையில்லையெனும்பொருள்
ஒன்றுமோராதுழிதருமூமர்காள்
அன்றுவானவர்க்காகவிடமுண்ட
கண்டனார்காட்டுப்பள்ளிகண்டுய்ம்மினே. (௯)

எண்ணிலாவரக்கன்மலையேந்திட
எண்ணிநீண்முடிபத்துமிறுத்தவன்
கண்ணுளார்கருதுங்காட்டுப்பள்ளியை
நண்ணுவாரவர்தம்வினைநாசமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

மேலைத்திருக்காட்டுப்பள்ளித்திருப்பதிகம் - ௨.

ஆ திருப்பதிகம் - ௧௫.

சுவாமி தேவி திருநாமங்கள் - தீயாடியப்பர், வார்கொண்டமுலையாள்.

௧௦. திருவாலம்பொழில்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

கருவாகிக்கண்ணுதலாய்நின்றான்றன்னைக்
கமலத்தோன்றலையரிந்தகாபாலியை
உருவார்ந்தமலைமகளோர்பாகத்தானை
யுணர்வெலாமானானையோசையாகி

* அடும்பை இக்காலத்து அடம்பு என்று வழங்குவர்.

Koviloor Digital Library

வருவானைவலஞ்சுழியெம்பெருமான்றன்னை
மறைக்காடுமாவடுதண்டுறையுமேய
திருவானைத்தென்பரம்பைக்குடியின்மேய
திருவாலம்பொழிலானைச்சிந்திநெஞ்சே. (௧)

உரித்தானைக்களிறதன்றோல்போர்வையாக
வுடையானையுடைபுலியினதளேயாகத்
தரித்தானைச்சடையதன்மேற்கங்கையங்கைத்
தழலுருவைவிடமமுதாவுண்டிதெல்லாம்
பரித்தானைப்பவளமால்வரையன்னானைப் *
பாம்பணியான்றனக்கன்றங்காழிநல்கிச்
சிரித்தானைத்தென்பரம்பைக்குடியின்மேய
திருவாலம்பொழிலானைச்சிந்திநெஞ்சே. (௨)

உருமூன்றாயுணர்வின்கணொன்றானானை
யோங்காரமெய்ப்பொருளையுடம்பினுள்ளால்
கருவீன்றவெங்களவையறிவான்றன்னைக்
காலனைத்தன்கழலடியாற்காய்ந்துமாணிக்
கருளீன்றவாரமுதையமரர்கோனை
யள்ளூறியெம்பெருமானென்பார்க்கென்றும்
திருவீன்றதென்பரம்பைக்குடியின்மேய
திருவாலம்பொழிலானைச்சிந்திநெஞ்சே. (௩)

பார்முழுதாய்விசும்பாகிப்பாதாளமாம்
பரம்பரனைச்சுரும்பமருங்குழலாள்பாகத்
தாரமுதாமணிதில்லைக்கூத்தன்றன்னை
வாட்போக்கியம்மானையெம்மானென்று
வாரமதாமடியார்க்குவாரமாகி
வஞ்சனைசெய்வார்க்கென்றும்வஞ்சனாகும்
சீரரசைத்தென்பரம்பைக்குடியின்மேய
திருவாலம்பொழிலானைச்சிந்திநெஞ்சே. (௪)

வரையார்ந்தமடமங்கைபங்கன்றன்னை
வானவர்க்கும்வானவனைமணியைமுத்தை
அரையார்ந்தபுலித்தோன்மேலரவமார்த்த
வம்மானைத்தம்மானையடியார்க்கென்றும்
புரையார்ந்தகோவணத்தெம்புனிதன்றன்னைப்
பூந்துருத்திமேயானைப்புகலூரானைத்
திரையார்ந்ததென்பரம்பைக்குடியின்மேய
திருவாலம்பொழிலானைச்சிந்திநெஞ்சே. (௫)

* மால்வரையானானைப் என்றும் பாடம்.

Koviloor Digital Library

விரிந்தானைக்குவிந்தானைவேதவித்தை
வியன்பிறப்போடிறப்பாகிநின்றான்றன்னை
அரிந்தானைச்சலந்தரன்றனுடலம்வேறா
வாழ்கடனஞ்சுண்டிமையோரெல்லாமுய்யப்
பரிந்தானைப்பல்லசுரர்புரங்கண்மூன்றும்
பாழ்படப்பான்சிலைமலைநாணேற்றியம்பு
தெரிந்தானைத்தென்பரம்பைக்குடியின்மேய
திருவாலம்பொழிலானைச்சிந்திநெஞ்சே. (௬)

பொல்லாதவென்னழுக்கிற்புகுவானென்னைப்
புறம்புறமேசோதித்தபுனிதன்றன்னை
எல்லாருந்தன்னையிகழவந்நாள்
ளிடுபலியென்றகந்திரியுமெம்பிரானைச்
சொல்லாதாரவர்தம்மைச்சொல்லாதானைத்
தொடர்ந்துதன்பொன்னடியேபேணுவாரைச்
செல்லாதநெறிசெலுத்தவல்லான்றன்னைத்
திருவாலம்பொழிலானைச்சிந்திநெஞ்சே. (௭)

ஐந்தலையநாகவணைக்கிடந்தமாலோ
டயன்றேடிநாடரியவம்மான்றன்னைப்
பந்தணவுமெல்விரலாள்பாகத்தானைப்
பராய்த்துறையும்வெண்காடும்பயின்றான்றன்னைப்
பொந்துடையவெண்டலையிற்பலிகொள்வானைப்
பூவணமும்புறம்பயமும்பொருந்தினானைச்
சிந்தியவெந்தீவினைகடீரநின்ற *
திருவாலம்பொழிலானைச்சிந்திநெஞ்சே. (அ)

கையினுண்டுழல்வாருஞ்சாக்கியருங்
கல்லாதவன்மூடர்க்கல்லாதானைப்
பொய்யிலாதவர்க்கென்றும்பொய்யிலானைப்
பூணநாணாகப்பொருப்புவில்லாக்
கையினாரம்பெரிகாலீர்க்குக்கோலாக்
கடுந்தவத்தோர்நெடும்புரங்கள்கனல்வாய்வீழ்த்த
செய்யினார்தென்பரம்பைக்குடியின்மேய
திருவாலம்பொழிலானைச்சிந்திநெஞ்சே. † (௯)

திருச்சிற்றம்பலம்.

திருவாலம்பொழிற்றிருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - கசு.

சுவாமி தேவி திருநாமங்கள் - ஆத்மநாதர், ஞானம்பிகை.

* தீவினைகடீர்ப்பான்றன்னைத் என்றும் பாடம். † இத்திருப்பதிகத்தில் பத்தாவது செய்யுள் மறைந்து போயிற்று.

Koviloor Digital Library

௧௧. திருப்பூந்துருத்தி.

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

கொடிகொள்செல்வவிழாக்குணலையருக்
கடிகொள்பூம்பொழிற்கச்சியேகம்பனர்
பொடிகள்பூசியபூந்துருத்திநகர்
அடிகள்சேவடிக்கீழ்நாமிருப்பதே. (௧)

ஆர்த்ததோலுடைகட்டியோர்வேடனய்ப்
பார்த்தனேடுபடைதொடுமாகிலும்
பூத்தநீள்பொழிற்பூந்துருத்திநகர்த்
தீர்த்தன்சேவடிக்கீழ்நாமிருப்பதே. (௨)

மாதினைமதித்தானொருபாகமாக்
காதலாற்கரந்தான்சடைக்கங்கையைப்
பூதநாயகன்பூந்துருத்திநகர்க்
காதிசேவடிக்கீழ்நாமிருப்பதே. (௩)

மூவனாய்முதலாயிவ்வுலகெலாம்
காவனாய்க்கடுங்காலனைக்காய்ந்தவன்
பூவினாபகன்பூந்துருத்திநகர்த்
தேவன்சேவடிக்கீழ்நாமிருப்பதே. (௪)

செம்பொனேபொக்குமேனியன்றேசத்தில்
உம்பராரவரோடங்கிருக்கினும்
பொன்பொனார்செல்வப்பூந்துருத்திநகர்
நம்பன்சேவடிக்கீழ்நாமிருப்பதே. (௫)

வல்லம்பேசிவலிசெய்மூன்றூரினைக்
கொல்லம்பேசிக்கொடுஞ்சாரூறினன்
புல்லம்பேசியும்பூந்துருத்திநகர்ச்
செல்வன்சேவடிக்கீழ்நாமிருப்பதே. (௬)

ஒருத்தனாயுலகேழுந்தொழநின்று
பருத்தபாம்பொடுபான்மதிகங்கையும்
பொருத்தனாகிலும்பூந்துருத்திநகர்த்
திருத்தன்சேவடிக்கீழ்நாமிருப்பதே. (௭)

அதிர்தேவரியக்கர்விச்சாதரர்
கருதநின்றவர்காண்பரிதாயினன்
பொருதநீர்வருபூந்துருத்திநகர்ச்
சதுரன்சேவடிக்கீழ்நாமிருப்பதே. (௮)

Koviloor Digital Library

செதுகருமனத்தார்புறங்கூறினும்
கொதுகருக்கண்ணிடுனான்பிகள்கூறினும்
பொதுவினுபகன்பூந்துருத்திந்நகர்க்
கதிபன்சேவடிக்கீழ்நாமிருப்பதே. (௯)

துடித்ததோள்வலிவாளரக்கன்றனைப்
பிடித்தகைஞ்ஞெரிந்துற்றனகண்ணெலாம்
பொடிக்கவூன்றியபூந்துருத்திந்நகர்ப்
படிக்கொள்சேவடிக்கீழ்நாமிருப்பதே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

மாலினைமாலுறநின்றான்மலைமகடன்னுடைய
பாலனைப்பான்மதிசூடியைப்பண்புணரார்மதின்மேல்
போலனைப்போர்விடையேறியைப்பூந்துருத்திம்மகிழும்
ஆலனையாதிபுராணனைநாமடிபோற்றுவதே. (௧)

மறியுடையான்மழுவாளினன்மாமலைமங்கையொர்பால்
குறியுடையான்குணமொன்றறிந்தாரில்லைகூறிலவன்
பொறியுடைவாளரவத்தவன்பூந்துருத்திய்புறையும்
அறிவுடையாதிபுராணனைநாமடிபோற்றுவதே. (௨)

மறுத்தவர்மும்மதின்மாயவொர்வெஞ்சிலைகோத்தொரம்பால்
அறுத்தனையாலதன்கீழனையால்விடமுண்டதனைப்
பொறுத்தனைப்பூதப்படையனைப்பூந்துருத்திய்புறையும்
நிறத்தனைநீலமிடற்றனையானடிபோற்றுவதே. (௩)

உருவினையூழிமுதல்வனையோதிநிறைந்துநின்ற
திருவினைத்தேசம்படைத்தனைச்சென்றடைந்தேனுடைய
பொருவினையெல்லாந்துரந்தனைப்பூந்துருத்திய்புறையும்
கருவினைக்கண்மூன்றுடையனையானடிபோற்றுவதே. (௪)

தக்கன்றன்வேள்விதகர்த்தவன்சாரமதுவன்றுகோள் *
மிக்கனமும்மதில்வீயவொர்வெஞ்சிலைகோத்தொரம்பால்
புக்கனன்பொன்றிகழ்ந்தன்னதொர்பூந்துருத்திய்புறையும்
நக்கனைநங்கள்பிரான்றனைநானடிபோற்றுவதே. (௫)

அருகடைமாலையுந்தானுடையானழகாலமைந்த
உருவுடைமங்கையுந்தன்னொருபாலுலகாயுநின்றான்
பொருபடைவேலினன்வில்லினன்பூந்துருத்திய்புறையும்
திருவுடைத்தேசமதியனையானடிபோற்றுவதே. (௬)

* சாரமதுவன்றுகேள் என்றும் பாடம்.

மன்றியுந்நின்றமதிலரைமாயவகைகெடுக்கக்
கன்றியுந்நின்றுகடுஞ்சிலைவாங்கிக்கனலம்பினால்
பொன்றியும்போகப்புரட்டினன்பூந்துருத்தியுறையும்
அன்றியுஞ்செய்தபிரான்றனையானடிபோற்றுவதே. (௭)

மின்னிறமிக்கவிடையுமைநங்கையொர்பான்மகிழ்ந்தான்
என்னிறமென்றமரர்பெரியாரின்னந்தாமறியார்
பொன்னிறமிக்கசடையவன்பூந்துருத்தியுறையும்
என்னிறவெந்தைபிரான்றனையானடிபோற்றுவதே. (௮)

அந்தியைநல்லமதியினையார்க்குமறிவரிய
செந்தியைவாட்டுஞ்செம்பொன்னினைச்சென்றடைந்தேனுடைய
புந்தியைப்புக்கவறிவினைப்பூந்துருத்தியுறையும்
நந்தியைநங்கள்பிரான்றனைநானடிபோற்றுவதே. (௯)

பைக்கையும்பாந்திவிழிக்கையும்பாம்புசடையிடையே
வைக்கையும்வானிழிகங்கையுமங்கைநடுக்குறவே
மொய்க்கையாக்கனையூன்றினன்பூந்துருத்தியுறையும்
மிக்கால்வேதவிகிர்தனைநானடிபோற்றுவதே. (௰)

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

நில்லாதநீர்சடைமேனிற்பித்தானை
நினையாவென்னெஞ்சைநினைவித்தானைக்
கல்லாதனவெல்லாங்கற்பித்தானைக்
காணாதனவெல்லாங்காட்டினானைச்
சொல்லாதனவெல்லாஞ்சொல்லியென்னைத்
தொடர்ந்திங்கடியேனையாளாக்கொண்டு
பொல்லாவென்னோய்தீர்த்தபுநிதன்றன்னைப்
புண்ணியனைப்பூந்துருத்திக்கண்டேனானே. (௧)

குற்றாலங்கோகரணமேவினானைக்
கொடுங்கைக்கடுங்கூற்றைப்பாய்ந்தான்றன்னை
உற்றாலநஞ்சுண்டொடுக்கினானை
யுணராவென்னெஞ்சையுணர்வித்தானைப்
பற்றாலின்கீழங்கிருந்தான்றன்னைப்
பண்ணார்ந்தவீணைபயின்றான்றன்னைப்
புற்றாடரவார்த்தபுநிதன்றன்னைப்
புண்ணியனைப்பூந்துருத்திக்கண்டேனானே. (௨)

எனக்கென்றுமினியானையெம்மான்றன்னை
யெழிலாருமேகம்பமேயான்றன்னை
மனக்கென்றும்வருவானைவஞ்சர்நெஞ்சி
னில்லானைநின்றியூர்மேயான்றன்னைத்

Koviloor Digital Library

தனக்கென்றுமடியேனையாளாக்கொண்ட
சங்கரனைச்சங்கவார்குழையான்றன்னைப்
புனக்கொன்றைத்தாரணிந்தபுநிதன்றன்னைப்
பொய்யிலியைப்பூந்துருத்திக்கண்டேனானே. (௩)

வெறியார்மலர்க்கொன்றைசூடினானை
வெள்ளானைவந்திறைஞ்சும்வெண்காட்டானை
அறியாதடியேனகப்பட்டேனை
யல்லற்கடனின்றுமேறவாங்கி
நெறிதானிதுவென்றுகாட்டினானை
நிச்சனலிபிணிகடீர்ப்பான்றன்னைப்
பொறியாடரவார்த்தபுநிதன்றன்னைப்
பொய்யிலியைப்பூந்துருத்திக்கண்டேனானே. (௪)

மிக்கானைவெண்ணீறுசண்ணித்தானை
விண்டார்புரமூன்றும்வேவநோக்கி
நக்கானைநான்மறைகள்பாடினானை
நல்லார்கள்பேணிப்பரவநின்ற
தக்கானைத்தண்டாமரைமேலண்ண
றலைகொண்டுமாத்திரைக்கணுலகமெல்லாம் *
புக்கானைப்புண்ணியனைப்புநிதன்றன்னைப்
பொய்யிலியைப்பூந்துருத்திக்கண்டேனானே. (௫)

ஆர்த்தானைவாசுகியையரைக்கோர்கச்சா
வசைத்தானையழகாயபொன்னார்மேனிப் †
பூத்தானத்தான்முடியைப்பொருந்தாவண்ணம்
புணர்த்தானைப்பூங்கணையானுடலம்வேவப்
பார்த்தானைப்பரிந்தானைப்பனிநீர்க்கங்கை
படர்சடைமேற்பயின்றானைப்பதைப்பயானை
போர்த்தானைப்புண்ணியனைப்புநிதன்றன்னைப்
பொய்யிலியைப்பூந்துருத்திக்கண்டேனானே. (௬)

எரித்தானையெண்ணார்புரங்கண்மூன்று
மிமைப்பளவிற்பொடியாகவெழிலார்கையால்
உரித்தானைமதகரியையுற்றுப்பற்றி
யுமையதனைக்கண்டஞ்சிநடுங்கக்கண்டு
சிரித்தானைச்சீரார்ந்தபூதஞ்சூழத்
திருச்சடைமேற்றிங்களும்பாம்புநீரும்
புரித்தானைப்புண்ணியனைப்புநிதன்றன்னைப்
பொய்யிலியைப்பூந்துருத்திக்கண்டேனானே. (௭)

* மாத்திரைக்குளுலகமெல்லாம் என்றும் பாடம். † பொன்னேர்மேனிப் என்றும் பாடம்.

Koviloor Digital Library

வைத்தானைவானோருலகமெல்லாம்
வந்திறைஞ்சிமலர்கொண்டுநின்றுபோற்றும்
வித்தானைவேண்டிற்றொன்றீவான்றன்னை
விண்ணவர்தம்பெருமானைவினைகள்போக
உய்த்தானையொலிகங்கைசடைமேற்றாங்கி
யொளித்தானையொருபாகத்துமையோடாங்கே
பொய்த்தானைப்புண்ணியனைப்புநிதன்றன்னைப்
பொய்யிலியைப்பூந்துருத்திக்கண்டேனானே. (௮)

ஆண்டானைவானோருலகமெல்லா
மந்நாளறியாததக்கன்வேள்வி
மீண்டானைவிண்ணவர்களோடுங்கூடி
விரைமலர்மேனான்முகனுமாலுந்தேர *
நீண்டானைநெருப்புருவமானான்றன்னை
நிலையிலார்மும்மதிலும்வேவவில்லைப்
பூண்டானைப்புண்ணியனைப்புநிதன்றன்னைப்
பொய்யிலியைப்பூந்துருத்திக்கண்டேனானே. (௯)

மறுத்தானைமலைகோத்தங்கெடுத்தான்றன்னை
மணிமுடியோடிருபதுதோணெரியக்காலால்
இறுத்தானையெழுநரம்பினிசைகேட்டானை
யெண்டிசைக்குங்கண்ணானைச்சிரமேலொன்றை †
அறுத்தானையமரர்களுக்கமுதீந்தானை
யாவர்க்குந்தாங்கொணாநஞ்சமுண்டு
பொறுத்தானைப்புண்ணியனைப்புநிதன்றன்னைப்
பொய்யிலியைப்பூந்துருத்திக்கண்டேனானே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருப்பூந்துருத்தித்திருப்பதிகம் - ௩.

ஆ திருப்பதிகம் - ௧௧.

சுவாமி தேவி திருநாமங்கள் - புஷ்பவனநாதர், அழகார்ந்தநாயகி.

௧௨. திருக்கண்டியூர்வீரட்டம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

வினவினேனறியாமையில்லுரைசெய்ம்மினீரருள்வேண்டுவீர்
கனைவிலார்புனற்காவிரிக்கரைமேயகண்டியூர்வீரட்டன்
தனமுனேதனக்கின்மையோதமராயினாரண்டமாளத்தான்
வனனில்வாழ்க்கைகொண்டாடிப்பாடியிவ்வையமாப்பலிதேர்ந்ததே. (௧)

* மாலுந்தேட என்றும் பாடம். † கண்ணானைஞ்சிரமேலொன்றை என்றும் பாடம்.

Koviloor Digital Library

உள்ளவாறெனக்குரைசெய்மின்னுயர்வாயமாதவம்பேணுவீர்
கள்ளவிழ்பொழில்சூழுங்கண்டியூர்வீரட்டத்துறைகாதலான்
பிள்ளைவான்பிறைசெஞ்சடைம்மிசைவைத்ததும்பெருநீரொலி
வெள்ளந்தாங்கியதென்கொலோமிகுமங்கையாளுடனாகவே. (௨)

அடியராயினீர்சொல்லுமின்னறிகின்றிலேனரன்செய்கையைப்
படியெலாந்தொழுதேத்துகண்டியூர்வீரட்டத்துறைபான்மையான்
முடிவுமாய்முதலாயிவ்வையமுழுதுமாயழகாயதோர்
பொடியதார்திருமார்பினிற்புரிநூலும்பூண்டெழுபொற்பதே. (௩)

பழையதொண்டர்கள்பகருமின்பலவாயவேதியன்பான்மையைக்
கழையுலாம்புனன்மல்குகாவிரிமன்னுகண்டியூர்வீரட்டன்
குழையொர்காதினிற்பெய்துகந்தொருகுன்றின்மங்கைவெருவுறப்
புழைநெடுங்கைநன்மாவுரித்ததுபோர்த்துகந்தபொலிவதே. (௪)

விரவிலாதுமைக்கேட்கின்றேனடிவிரும்பியாட்செய்வீர்விளம்புமின்
கரையெலாந்திரைமண்டுகாவிரிக்கண்டியூருறைவீரட்டன்
முரவமொந்தைமுழாவொலிக்கமுழங்குபேயொடுங்கூடிப்போய்ப்
பரவுவானவர்க்காகவார்கடனஞ்சமுண்டபரிசதே. (௫)

இயலுமாறெனக்கியம்புமின்னிறைவன்னுமாய்நிறைசெய்கையைக்
கயனெடுங்கண்ணினார்கடாம்பொலிகண்டியூருறைவீரட்டன்
புயல்பொழிந்திழிவானுளோர்களுக்காகவன்றயன்பொய்ச்சிரம்
அயனகவ்வதரிந்துமற்றதிலூனுகந்தவருத்தியே. (௬)

திருந்துதொண்டர்கள்செப்புமின்மிகச்செல்வன்றன்னதுதிறமெலாம்
கருந்தடங்கண்ணினார்கடாந்தொழுகண்டியூருறைவீரட்டன்
இருந்துநால்வரொடானிழல்லறமுரைத்ததும்மிகுவெம்மையார்
வருந்தவன்சிலையாலம்மாமதின்மூன்றுமாட்டியவண்ணமே. (௭)

நாவிரித்தான்றெல்புகழ்பலபேணுவீரிறைநல்குமின்
காவிரித்தடம்புனல்செய்கண்டியூர்வீரட்டத்துறைகண்ணுதல்
கோவிரிப்பயனானஞ்சாடியகொள்கையுங்கொடிவரைபெற
மாவரைத்தலத்தாலரக்கனைவலியைவாட்டியமாண்பதே. (அ)

பெருமையேசரணாகவாழ்வுறுமாந்தர்காளிறைபேசுமின்
கருமையார்பொழில்சூழுந்தண்வயற்கண்டியூருறைவீரட்டன்
ஒருமையாலுயர்மாலுமற்றைமலரவன்னுணர்ந்தேத்தவே
அருமையாலவருக்குயர்ந்தெரியாகிநின்றவத்தன்மையே. (௯)

நமரெழுபிறப்பறுக்குமாந்தர்காணவிறுமின்னுமைக்கேட்கின்றேன்
கமழிவயல்சூழுந்தண்புனற்கண்டியூருறைவீரட்டன்
தமழிந்தெழுசாக்கியச்சமணாதரோதுமதுகொளா
தமரானவரேத்தவந்தகன்றன்னைச்சூலத்திலாய்ந்ததே. (௧௦)

கருத்தனைப்பொழில்சூழுங்கண்டியூர்வீரட்டத்துறைகள்வனை
அருத்தனைத்திறமடியர்பான்மிகக்கேட்டுகந்தவினாவுரை
திருத்தமாந்திகழ்காழிஞானசம்பந்தன்செப்பியசெந்தமிழ்
ஒருத்தராகிலும்பலர்களாகிலுமுரைசெய்வாருயர்ந்தார்களே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

வானவர்தானவர்வைகன்மலர்கொணர்ந்திட்டிறைஞ்சித்
தானவர்மால்பிரமன்னறியாததகைமையினான்
ஆனவனாதிபுராணனன்றோடியப்பன்றியெய்த
கானவனைக்கண்டியூரண்டவாணர்தொழுகின்றதே. (௧)

வானமதியமும்வாளரவும்புனலோடுசடைத்
தானமிதுவெனவைத்துழல்வான்றழல்போலுருவன்
கானமறியொன்றுகையுடையான்கண்டியூரிருந்த
ஊனமில்வேதமுடையனைநாமடியுள்குவதே. (௨)

பண்டங்கறுத்ததோர்கையுடையான்படைத்தான்றலையை
உண்டங்கறுத்ததுமூரோடுநாடவைதானறியும்
கண்டங்கறுத்தமிடறுடையான்கண்டியூரிருந்த
தொண்டர்பிரானைக்கண்டீரண்டவாணர்தொழுகின்றதே. (௩)

முடியின்முற்றாததொன்றில்லையெல்லாமுடன்றானுடையான்
கொடியுமுற்றவ்விடையேறியோர்கூற்றொருபாலுடையான்
கடியமுற்றவ்வினைநோய்களைவான்கண்டியூரிருந்தான்
அடியுமுற்றார்தொண்டரில்லைகண்டீரண்டவானவரே. (௪)

பற்றியோரானையுரித்தபிரான்பவளத்திரள்போல்
முற்றுமணிந்ததோர்நீறுடையான்முன்னமேகொடுத்த
கற்றங்குடையவன்றானறியான்கண்டியூரிருந்த
குற்றமில்வேதமுடையானையாமண்டர்கூறுவதே. (௫)

போர்ப்பனையானையுரித்தபிரான்பொறிவாயரவம்
சேர்ப்பதுவானத்திரைகடல்சூழுலகம்மிதனைக்
காப்பதுகாரணமாகக்கொண்டான்கண்டியூரிருந்த
கூர்ப்புடையொள்வாண்மழுவனையாமண்டர்கூறுவதே. (௬)

அட்டதுகாலனையாய்ந்ததுவேதமாறங்கமன்று
சுட்டதுகாமனைக்கண்ணதனாலேதொடர்ந்தெரியக்
கட்டவைமூன்றுமெரித்தபிரான்கண்டியூரிருந்த
குட்டமுன்வேதப்படையனையாமண்டர்கூறுவதே. (௭)

Koviloor Digital Library

அட்டுமொலிநீரணிமதியும்மலரானவெல்லாம்
இட்டுப்பொதியுஞ்சடைமுடியானிண்டைமாலையங்கைக்
கட்டுமரவதுதானுடையான்கண்டியூரிருந்த
கொட்டும்பறையுடைக்கூத்தனையாமண்டர்கூறுவதே. (அ)

மாய்ந்தனதீவினைமங்கினநோய்கண்மறுகிவிழத்
தேய்ந்தனபாவஞ்செறுக்ககில்லாநமைச்செற்றநங்கைக் *
காய்ந்தபிரான்கண்டியூரெம்பிரானங்கமாறினையும்
ஆய்ந்தபிரானல்லனோவடியேனையாட்கொண்டவனே. (கூ)

மண்டிமலையையெடுத்துமத்தாக்கியவ்வாசுகியைத்
தண்டியமரர்கடைந்தகடல்விடங்கண்டருளி
உண்டபிரானஞ்சொளித்தபிரானஞ்சியோடிநண்ணக்
கண்டபிரானல்லனோகண்டியூரண்டவானவனே. (கo)

திருச்சிற்றம்பலம்.

திருக்கண்டியூர்த்திருப்பதிகம் - உ.

ஆ திருப்பதிகம். - உக.

சுவாமி தேவி திருநாமங்கள் - வீரட்டேசர், மங்களநாயகி.

கந. திருச்சோற்றுத்துறை.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர்.

பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

செப்பநெஞ்சேநெறிகொள்சிற்றின்பம் †
துப்பனென்னுதருளேதுணையாக
ஒப்பரொப்பர்பெருமானொளிவெண்ணீற்
றப்பர்சோற்றுத்துறைசென்றடைவோமே. (க)

பாலுநெய்யுந்தயிரும்பயின்றாடித்
தோலுநூலுந்துதைந்தவரைமார்பர்
மாலுஞ்சோலைபுடைசூழ்மடமஞ்ஞை
ஆலுஞ்சோற்றுத்துறைசென்றடைவோமே. (உ)

செய்யர்செய்யசடையர்விடையூர்வர்
கைகொள்வேலர்கழலர்கரிகாடர்
தையலாளொர்பாகமாயவெம்
ஐயர்சோற்றுத்துறைசென்றடைவோமே. (ந)

* செறுக்கில்லாநம்மைச்செற்றநங்கைக் என்றும் பாடம். † நெறிகள் சிற்றின்பம் என்றும் பாடம்.

Koviloor Digital Library

பிணிகொளாக்கையொழியப்பிறப்புளீர்
துணிகொள்போரார்துளங்குமழுவாளர்
மணிகொள்கண்டர்மேயவார்பொழில்
அணிகொள்சோற்றுத்துறைசென்றடைவோமே. (௪)

பிறையுமரவும்புனலுஞ்சடைவைத்து
மறையுமோதிமயானமிடமாக
உறையுஞ்செல்வமுடையார்காவிரி
அறையுஞ்சோற்றுத்துறைசென்றடைவோமே. (௫)

துடிகளோடுமுழவம்விம்மவே
பொடிகள்பூசிப்புறங்காடரங்காகப்
படிகொள்பாணிபாடல்பயின்றாடும்
அடிகள்சோற்றுத்துறைசென்றடைவோமே. (௬)

சாடிக்காலன்மாளத்தலைமாலை
சூடிமிக்குச்சுவண்டாய்வருவார்தாம்
பாடியாடிப்பரவுவாருள்ளத்
தாடிசோற்றுத்துறைசென்றடைவோமே. (௭)

பெண்ணோர்பாகமுடையார்பிறைச்சென்னிக்
கண்ணோர்பாகங்கலந்தநுதலினார்
எண்ணாதரக்கனெடுக்கவூன்றிய
அண்ணல்சோற்றுத்துறைசென்றடைவோமே. (௮)

தொழுவாரிருவர்துயரநீங்கவே
அழலாயோங்கியருள்கள்செய்தவன்
விழவார்மறுகில்விதியான்மிக்கவெம் *
எழிலார்சோற்றுத்துறைசென்றடைவோமே. (௯)

கோதுசாற்றித்திரிவாரமண்குண்டர்
ஓதுமோத்தையுணராதெழுநெஞ்சே
நீதிநின்றுநினைவார்வேடமாம்
ஆதிசோற்றுத்துறைசென்றடைவோமே. (௧0)

அந்தண்சோற்றுத்துறையெம்மாதியைச்
சிந்தைசெய்ம்மினடியாராயினீர்
சந்தம்பரவுஞானசம்பந்தன்
வந்தவாறேபுனைதல்வழிபாடே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

* விதியான்மிக்க—எழிலார்சோற்றுத்துறை என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருநாவுக்கரசுநாயனார்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

பொய்விராமேனிதன்னைப்பொருளெனக்காலம்போக்கி
மெய்விராமனத்தனல்லேன்வேதியாவேதநாவா
ஐவராலலைக்கப்பட்டவாக்கைகொண்டயர்த்துப்போனேன்
செய்வராலுகளுஞ்செம்மைத்திருச்சோற்றுத்துறையனாரே. (௧)

கட்டராய்நின்றுநீங்கள்காலத்தைக்கழிக்கவேண்டா
எட்டவாங்கைகள்வீசியெல்லிநின்றுடுவானை
அட்டகாமலர்கள் * கொண்டேயானஞ்சுமாட்டவாடிச்
சிட்டராயருள்கள்செய்வார்திருச்சோற்றுத்துறையனாரே. (௨)

கல்லினாற்புரமூன்றெய்தகடவுளைக்காதலாலே
எல்லியும்பகலுமுள்ளேயேகாந்தமாகவேத்தும்
பல்லில்வெண்டலைகையேந்திப்பல்லிலந்திரியுஞ்செல்வர்
சொல்லுநன்பொருளுமாவார்திருச்சோற்றுத்துறையனாரே. (௩)

கறையராய்க்கண்டநெற்றிக்கண்ணராய்ப்பெண்ணோர்பாகம்
இறையராயினியராகித்தனியராய்ப்பனிவெண்டிங்கட்
பிறையராய்ச்செய்தவெல்லாம்பீடராய்க்கேடில்சோற்றுத்
துறையராய்ப்புகுந்தென்னுள்ளச்சோர்வுகண்டருளினாரே. (௪)

பொந்தையைப்பொருளாவெண்ணிப்பொருக்கெனக்காலம்போனேன்
எந்தையேயேகமூர்த்தியென்றுநின்றேத்தமாட்டேன்
பந்தமாய்வீடுமாகிப்பரம்பரமாகிநின்று
சிந்தையுட்டேறல்போலுந்திருச்சோற்றுத்துறையனாரே. (௫)

பேர்த்தினிப்பிறவாவண்ணம்பிதற்றுமின்பேதைபங்கன்
பார்த்தனுக்கருள்கள்செய்தபாசுபதன்றிறமே
ஆர்த்துவந்திழிவதொத்தவலைபுனற்கங்கையேற்றுத்
தீர்த்தமாய்ப்போதவிட்டார்திருச்சோற்றுத்துறையனாரே. (௬)

கொந்தார்பூங்குழலினாரைக்கூறியேகாலம்போன
எந்தையெம்பிரானாய்நின்றவிறைவனையேத்தாதந்தோ
முந்தராவல்குலாளையுடன்வைத்தவாதிமூர்த்தி
செந்தாதுபுடைகள்சூழ்ந்ததிருச்சோற்றுத்துறையனாரே. (௭)

அங்கதிரோனவனையண்ணலா † க்கருதவேண்டா
வெங்கதிரோன்வழியேபோவதற்கமைந்துகொண்மின்
அங்கதிரோனவனையுடன்வைத்தவாதிமூர்த்தி
செங்கதிரோன்வணங்குந்திருச்சோற்றுத்துறையனாரே. (௮)

* அட்டமாமலர்கள் என்றும் பாடம். † யண்ணமாக் என்றும் பாடம்.

Koviloor Digital Library

ஒதியேகழிக்கின்றீர்களுலகத்தீரொருவன்றன்னை
நீதியானினையமாட்டீர்நின்மலனென்றுசொல்லீர்
சாதியாநான்முகனுஞ்சக்கரத்தானுங்காணாச்
சோதியாய்ச்சுடராதானார்திருச்சோற்றுத்துறையனாரே. (௯)

மற்றுநீர்மனம்வையாதேமறுமையைக்கழிக்கவேண்டில்
பெற்றதோருபாயந்தன்னாற்பிரானையேபிதற்றுமின்கள்
கற்றுவந்தரக்கனோடிக்கயிலாயமலையெடுக்கச்
செற்றுகந்தருளிச்செய்தார்திருச்சோற்றுத்துறையனாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

காலையெழுந்துகடிமலர்தூயனதாங்கொணர்ந்து
மேலையமரர்விரும்புமிடம்விரையான்மலிந்த
சோலைமணங்கமழ்சோற்றுத்துறையுறைவார்சடைமேல்
மாலைமதியமன்றோவெம்பிரானுக்கழகியதே. (௧)

வண்டணைகொன்றையும்வன்னியுமத்தமும்வாளரவும்
கொண்டணைந்தேறுமுடியுடையான்குரைசேர்கழற்கே
தொண்டணைந்தாடியசோற்றுத்துறையுறைவார்சடைமேல்
வெண்டலைமாலையன்றோவெம்பிரானுக்கழகியதே. (௨)

அளக்குநெறியினனன்பர்கடம்மனத்தாய்ந்துகொள்வான்
விளக்குமடியவர்மேல்வினைதீர்த்திடும்விண்ணவர்கோன்
துளக்குங்குழைபணிசோற்றுத்துறையுறைவார்சடைமேல்
திளைக்குமதியமன்றோவெம்பிரானுக்கழகியதே. (௩)

ஆய்ந்தகைவாளரவத்தொடுமால்விடையேறியெங்கும்
பேர்ந்தகைமானடமாடுவர்பின்னுசடையிடையே
சேர்ந்தகைம்மாமலர்துன்னியசோற்றுத்துறையுறைவார்
ஏந்துகைச்சூலமழுவெம்பிரானுக்கழகியதே. (௪)

கூற்றைக்கடந்ததுங்கோளரவார்த்ததுங்கோளுழுவை *
நீற்றிற்றுதைந்துதிரியும்பரிசதுநாமறியோம்
ஆற்றிற்கிடந்தங்கலைப்பவலைப்புண்டசைந்ததொக்கும்
சோற்றுத்துறையுறைவார்சடைமேலதோர்தூமதியே. (௫)

வல்லாடிநின்றுவலிபேசுவார்கோளர்வல்லசுரர்
கொல்லாடிநின்றுகுமைக்கிலும்வானவர்வந்திறைஞ்சச்
சொல்லாடிநின்றுபயில்கின்றசோற்றுத்துறையுறைவார்
வில்லாடிநின்றநிலையெம்பிரானுக்கழகியதே. (௬)

* கோளுருவை என்றும் பாடம்.

Koyiloor Digital Library

ஆயமுடையதுநாமறியோமாணந்தவரைக்
காயக்கணைசிலைவாங்கியுமெய்துந்துயக்குறுத்தான்
தூயவெண்ணீற்றினன்சோற்றுத்துறையுறைவார்சடைமேல்
பாயும்வெண்ணீர்த்திரைக்கங்கை*யெம்மானுக்கழகியதே. (௭)

அண்டரமரர்கடைந்தெழுந்தோடியநஞ்சதனை†
உண்டுமதனையொடுக்கவல்லான்மிக்கவும்பர்கள்கோன்
தொண்டுபயில்கின்றசோற்றுத்துறையுறைவார்சடைமேல்
இண்டைமதியமன்றேயெம்பிரானுக்கழகியதே. (அ)

கடன்மணிவண்ணன்கருதியநான்முகன்றானறியா‡
விடமணிகண்டமுடையவன்றானெனையாளுடையான்
சுடரணிந்தாடியசோற்றுத்துறையுறைவார்சடைமேல்
படமணிநாகமன்றேயெம்பிரானுக்கழகியதே. (௯)

இலங்கைக்கிறைவனிருபதுதோளுமுடிநெரியக்
கலங்கவிரலினாலூன்றியவனைக்கருத்தழித்த
துலங்கன்மழுவினன்சோற்றுத்துறையுறைவார்சடைமேல்
இலங்குமதியமன்றேயெம்பிரானுக்கழகியதே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

கொல்லையேற்றினர்கோளரவத்தினர்
தில்லைச்சிற்றம்பலத்துறைசெல்வனார்
தொல்லையூழியர்சோற்றுத்துறையர்க்கே
வல்லையாய்ப்பணிசெய்மடநெஞ்சமே. (௧)

முத்தியாகவொருதவஞ்செய்திலை
அத்தியாலடியார்க்கொன்றளித்திலை
தொத்துநின்றலர்சோற்றுத்துறையர்க்கே
பத்தியாய்ப்பணிசெய்மடநெஞ்சமே. (௨)

ஒட்டிநின்றவுடலுறுநோய்வினை
கட்டிநின்றகழிந்தவைபோயறத்
தொட்டுநின்றுமச்சோற்றுத்துறையர்க்கே
பட்டியாய்ப்பணிசெய்மடநெஞ்சமே. (௩)

ஆதியானண்டவாணர்க்கருணல்கும்
நீதியானென்றுநின்மலனேயென்றும்
சோதியானென்றுஞ்சோற்றுத்துறையர்க்கே
வாதியாய்ப்பணிசெய்மடநெஞ்சமே. (௪)

* னீர்த்திரட்கங்கை என்றும் பாடம். † நஞ்சுதனை என்றும்பாடம். ‡ றானறியான் என்றும் பாடம்.

Koviloor Digital Library

ஆட்டினாயடியேன்வினையாயின
ஓட்டினாயொருகாதிலிலங்குவெண்
தோட்டினாயென்றுசோற்றுத்துறையர்க்கே
நீட்டிநீபணிசெய்மடநெஞ்சமே. (௫)

பொங்கிநின்றெழுந்தகடனஞ்சினைப்
பங்கியுண்டதோர்தெய்வமுண்டோசொலாய்
தொங்கிநீயென்றுஞ்சோற்றுத்துறையர்க்குத்
தங்கிநீபணிசெய்மடநெஞ்சமே. (௬)

ஆணிபோலநீயாற்றவலியைகாண்
வணிபோலிழிந்தேறியுமேங்கியும்
தோணியாகியசோற்றுத்துறையர்க்கே
பூணியாய்ப்பணிசெய்மடநெஞ்சமே. (௭)

பெற்றமேறிலென்பேய்ப்படையாகிலென்
புற்றிலாடரவேயதுபூணிலென்
சுற்றிநீயென்றுஞ்சோற்றுத்துறையர்க்கே
பற்றிநீபணிசெய்மடநெஞ்சமே. (௮)

அல்லியானரவைந்தலைநாகணைப்
பள்ளியானறியாதபரிசெலாம்
சொல்லிநீயென்றுஞ்சோற்றுத்துறையர்க்கே
புல்லிநீபணிசெய்மடநெஞ்சமே. (௯)

மிண்டரோடுவிரவியும்விறிலாக்
குண்டர்தம்மைக்கழிந்துய்யப்போந்துநீ
தொண்டுசெய்தென்றுஞ்சோற்றுத்துறையர்க்கே
உண்டுநீபணிசெய்மடநெஞ்சமே. (௧௦)

வாழ்ந்தவன்வலிவாளரக்கன்றனை
ஆழ்ந்துபோயலறவ்விரலூன்றினான்
சூழ்ந்தபாரிடஞ்சோற்றுத்துறையர்க்குத்
தாழ்ந்துநீபணிசெய்மடநெஞ்சமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

மூத்தவனாயுலகுக்குமுந்தினானை
முறைமையாலெல்லாம்படைக்கின்றானை
எத்தவனாயேழுலகுமாயினானை
யின்பனாய்த்துன்பங்களைகின்றானை
காத்தவனாயெல்லாந்தான்காண்கின்றானை
கடுவினையேன்றீவினையைக்கண்டுபோகத்
தீர்த்தவனைதிருச்சோற்றுத்துறையுளானை
திகழொளியேசிவனையுன்னபயனானே. (௧)

Koviloor Digital Library

தலையவனாயுலகுக்கோர்தன்மையானே
 தத்துவனாய்ச்சார்ந்தார்க்கின்னமுதானானே
நிலையவனாய்நின்றொப்பாரில்லாதானே
 நின்றுணராக்கூற்றத்தைச்சீறிப்பாய்ந்த
கொலையவனேகொல்யானைத்தோன்மேலிட்ட
 கூற்றுவனேகொடிமதில்கண்மூன்றுமெய்த
சிலையவனேதிருச்சோற்றுத்துறையுளானே
 திகழொளியேசிவனேயுன்னபயநானே. (௨)

முற்றாதபான்மதியஞ்சூடினானே
 முளைத்தெழுந்தகற்பகத்தின்கொழுந்தொப்பானே
உற்றாரென்றொருவரையுமில்லாதானே
 யுலகோம்புமொண்சுடரேயோதும்வேதம்
கற்றானேயெல்லாக்கலைஞானமுங்
 கல்லாதேன்றீவினைநோய்கண்டுபோகச்
செற்றானேதிருச்சோற்றுத்துறையுளானே
 திகழொளியேசிவனேயுன்னபயநானே. (௩)

கன்னவனாயுலகெல்லாங்காக்கின்றானே
 காலங்களூழிகண்டிருக்கின்றானே
விண்ணவனாய்விண்ணவர்க்குமருள்செய்வானே
 வேதனாய்வேதம்விரித்திட்டானே
எண்ணவனேயெண்ணார் * புரங்கண்மூன்று
 மிமையாமுனெரிகொளுவநோக்கிநக்க
தின்னவனேதிருச்சோற்றுத்துறையுளானே
 திகழொளியேசிவனேயுன்னபயநானே. (௪)

நம்பனேநான்மறைகளாயினானே
 நடமாடவல்லானேஞானக்கூத்தா
கம்பனேகச்சிமாநகருளானே
 கடிமதில்கண்மூன்றினையும்பொடியாவெய்த
அம்பனேயளவிலாப்பெருமையானே
 யடியார்கட்காரமுதேயானேறேறும்
செம்பொனேதிருச்சோற்றுத்துறையுளானே
 திகழொளியேசிவனேயுன்னபயநானே. (௫)

ஆர்ந்தவனேயுலகெலாநீயேயாகி †
 யமைந்தவனேயளவிலாப்பெருமையானே
கூர்ந்தவனேகுற்றாலமேயகூத்தா
 கொடுமழுவிலைய்தோர்சூலமேந்திப்

* எண்ணவனாயெண்ணார் என்றும் பாடம். † யுலகேழுநீயேயாகி என்றும் பாடம்.

Koviloor Digital Library

பேர்ந்தவனேபிரளயங்க*ளெல்லாமாய
பெம்மானென்றெப்போதும்பேசுநெஞ்சில்
சேர்ந்தவனே திருச்சோற்றுத்துறையுளானே
திகழொளியேசிவனேயுன்னபயநானே. (௬)

வானவனுய்வன்மைமனத்தினுனே
மாமணிசேர்வானோர்பெருமானீயே
கானவனுமேனத்தின்பின்சென்றானே
கடியவரணங்கண்மூன்றட்டானே
தானவனுத்தண்கயிலைமேவினுனே
தன்னொப்பாரில்லாதமங்கைக்கென்றும்
தேனவனே திருச்சோற்றுத்துறையுளானே
திகழொளியேசிவனேயுன்னபயநானே. (எ)

தன்னவனுயுலகெல்லாந்தானேயாகித்
தத்துவனுய்ச்சார்ந்தார்க்கின்னமுதானுனே
என்னவனுயென்னிதயமேவினுனே
யீசனேபாசவினைகளர்க்கும்
மன்னவனேமலைமங்கைபாகமாக
வைத்தவனேவானோர்வணங்கும்பொன்னித்
தென்னவனே திருச்சோற்றுத்துறையுளானே
திகழொளியேசிவனேயுன்னபயநானே. (அ)

எறிந்தானேயெண்டிசைக்குங்கண்ணானுனே
யேழுலகமெல்லா†முன்னுய்நின்றானே
அறிந்தார்தாமோரிருவரறியாவண்ண
மாதியுமந்தமுமாகியங்கே
பிறிந்தானேபிறரொருவரறியாவண்ணம்
பெம்மானென்றெப்போதுமேத்துநெஞ்சில்
செறிந்தானே திருச்சோற்றுத்துறையுளானே
திகழொளியேசிவனேயுன்னபயநானே. (௯)

மையனையகண்டத்தாய்மாலுமற்றை
வானவருமறியாதவண்ணச்சூலக்
கையவனேகடியிலங்கைக்கோனையன்று
கால்விரலாற்கதிர்முடியுந்தோளுஞ்செற்ற
மெய்யவனேயடியார்கள்வேண்டிற்றீயும்
விண்ணவனேவிண்ணப்பங்கேட்டுநல்கும்
செய்யவனே திருச்சோற்றுத்துறையுளானே
திகழொளியேசிவனேயுன்னபயநானே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

* பிலயங்க என்றும் பாடம். † யேழுலகுமெல்லா என்றும் பாடம்.

Koviloor Digital Library

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

அழனீரொழுகியனையசடையும்
உழையீருரியும்முடையானிடமாம்
கழைநீர்முத்துங்கனகக்குவையும்
சுழனீர்ப்பொன்னிச்சோற்றுத்துறையே. (௧)

பண்டைவினைகள்பறியநின்ற
அண்டமுதல்வனமலன்னிடமாம்
இண்டைகொண்டன்பிடையறாத
தொண்டர்பரவுஞ்சோற்றுத்துறையே. (௨)

கோலவரவுங்கொக்கினிறகும்
மாலைமதியும்வைத்தானிடமாம்
ஆலும்மயிலுமாடலளியும்
சோலைதருநீர்ச்சோற்றுத்துறையே. (௩)

பளிக்குத்தாரைபவளவெற்பில்
குளிக்கும்போனாற்கோமாற்கிடமாம்
அளிக்கும்மாத்தியல்லான்மதுவம்
துளிக்குஞ்சோலைச்சோற்றுத்துறையே. (௪)

உதையுங்கூற்றுக்கொல்காவிதிக்கு
வதையுஞ்செய்தமைந்தனிடமாம்
திதையுந்தாதுந்தேனுஞ்ஞிமிறும்
துதையும்பொன்னிச்சோற்றுத்துறையே. (௫)

ஓதக்கடனஞ்சினையுண்டிட்ட
பேதைப்பெருமான்பேணும்பதியாம்
சீதப்புனலுண்டெரியைக்காலும்
சூதப்பொழில்சூழ்சோற்றுத்துறையே. (௬)

இறந்தாரென்புமெருக்குஞ்சூடிப்
புறங்காட்டாடும்புநிதன்கோயில்
சிறந்தார்சுற்றந்திருவென்றின்ன
துறந்தார்சேருஞ்சோற்றுத்துறையே. (௭)

காமன்பொடியாக்கண்ணொன்றிமைத்த
ஓமக்கடலாருகந்தவிடமாம்
தேமென்குழலார்சேக்கைபுகைத்த
தூமம்விசும்பார்சோற்றுத்துறையே. (௮)

Koviloor Digital Library

இலையாலன்பாலேத்துமவர்க்கு
நிலையாவாழ்வைத்தாரிடமாம்
தலையாற்றுமுந்தவத்தோரென்றும்*
தொலையாச்செல்வச்சோற்றுத்துறையே. (௯)

சுற்றார்தருநீர்ச்சோற்றுத்துறையுள்
முற்றாமதிசேர்முதல்வன்பாதத்
தற்றாரடியாரடிநாவூரன்
சொற்றானிவைகற்றார்துன்பிலரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருச்சோற்றுத்துறைத்திருப்பதிகம் - ௯.

ஆ திருப்பதிகம் - ௨௭.

சுவாமி தேவி திருநாமங்கள் - தொலையாச்செல்வர், ஒப்பிலாவம்மை.

௧௪. திருவேதிகுடி.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

நீறுவரியாடரவொடாமைமனவென்புநிரைபூண்பரிடபம்
ஏறுவரியாவருமிறைஞ்சுகழலாதிபரிருந்தவிடமாம்
தாறுவிரிபூகமலிவாழைவிரைநாறவிணைவாளை† மடுவில்
வேறுபிரியாதுவிளையாடவளமாரும்வயல்வேதிகுடியே. (௧)

சொற்பிரிவிலாதமறைபாடிநடமாடுவர்தொலானையுரிவை
மற்புரிபுயத்தினிதுமேவுவரெந்நாளும்வளர்வானவர்தொழத்
துற்பரியநஞ்சமுதமாக‡ முனயின்றவரியன்றதொகுசீர்
வெற்பரையன்மங்கையொருபங்கர்நகரென்பர்திருவேதிகுடியே. (௨)

போழுமதிபூணரவுகொன்றைமலர்துன்றுசடைவென்றிபுகமேல்
வாழுநதிதாழுமருளாளரிருளார்மிடறர்மாதரிமையோர்
சூழுமிரவாளர்திருமார்பில்விரிநூலர்வரிதோலருடைமேல்
வேழவுரிபோர்வையினர்மேவுபதியென்பர்திருவேதிகுடியே. (௩)

காடர்கரிகாலர்கனல்கையரனல்மெய்யருடல்செய்யர்செவியில்
தோடர்தெரிகீளர்சரிகோவணவராவணவர்தொல்லைநகர்தான்
பாடலுடையார்களடியார்கண்மலரோடுபுனல்கொண்டுபணிவார்
வேடமொளியானபொடிபூசியிசைமேவுதிருவேதிகுடியே. (௪)

* தலத்தோர்க்கென்றும் என்றும் பாடம். † விளைவாளை என்றும் பாடம். ‡ துய்ப்ப சிய நஞ்சமுதாக என்றும் பாடம்.

Koviloor Digital Library

சொக்கர்துணைமிக்கவெயிலுக்கறமுனிந்துதொழுமூவர்மகிழத்
தக்கவருள்பக்கமுறவைத்தவரனூரினிதுதங்குநகர்தான்
கொக்கரவமுற்றபொழில்வெற்றிநிழல்பற்றி* வரிவண்டிசைகுலாம்
மிக்கமரர்மெச்சியினிதச்சமிடர்போகநல்குவேதிகுடியே. (௫)

செய்யதிருமேனிமிசைவெண்பொடியணிந்துகருமானுரிவைபோர்த்
தையமிடுமென்றுமடமங்கையொடகந்திரியுமண்ணலிடமாம்
வையம்விலைமாறிடினுமேறுபுகழ்மிக்கிழிவிலாதவகையார்
வெய்யமொழிதண்புலவருக்குரைசெயாதவவர்வேதிகுடியே. (௬)

உன்னியிருபோதுமடிபேணுமடியார்தமிடரொல்கவருளித்
துன்னியொருநால்வருடனானிழலிருந்ததுணைவன்றனிடமாம்
கன்னியரொடாடவர்கண்மாமணம்விரும்பியருமங்கலமிக
மின்னியலுநுண்ணிடைநன்மங்கையரியற்றுபதிவேதிகுடியே. (௭)

உரக்கரநெருப்பெழநெருக்கிவரைபற்றியவொருத்தன்முடிதோள்
அரக்கனையடர்த்தவனிசைக்கினிதுநல்கியருளங்கணனிடம்
முருக்கிதழ்மடக்கொடிமடந்தையருமாடவருமொய்த்தகலவை
விரைக்குழன்மிகக்கமழவிண்ணிசையுலாவுதிருவேதிகுடியே. (௮)

பூவின்மிசையந்தணனொடாழிபொலியங்கையனுநேடவெரியாய்த்
தேவுமிவரல்லரினியாவரெனநின்றுதிகழ்கின்றவரிடம்
பாவலர்களோசையியல்கேள்வியதரூதகொடையாளர்பயில்வாம்
மேவரியசெல்வநெடுமாடம்வளர்வீதிநிகழ்வேதிகுடியே. (௯)

வஞ்சமணர்தேரர்மதிகேடர்தமனத்தறிவிலாதவர்மொழி
தஞ்சமெனவென்றுமுணராதவடியார்கருதுசைவனிடமாம்
அஞ்சுபுலன்வென்றறுவகைப்பொருடெரிந்தெழுவிசைக்கிளவியால்
வெஞ்சினமொழித்தவர்கண்மேவிநிகழ்கின்றதிருவேதிகுடியே. (௧0)

கந்தமலிதண்பொழினன்மாடமிடைகாழிவளர்ஞானமுணர்சம்
பந்தன்மலிசெந்தமிழின்மாலைகொடுவேதிகுடியாதிகழலே
சிந்தைசெயவல்லவர்களல்லவர்களென்னநிகழ்வெய்தியிமையோர்
அந்தவுலகெய்தியரசாளுமதுவேசரதமாணைநமதே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

* பற்ற என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருநாவுக்கரசுநாயனார்.

திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

கையதுகாலெரிநாகங்கனல்விடுசூலமது
வெய்யதுவேலைநஞ்சுண்டவிரிசடைவிண்ணவர்கோன்
செய்யினினீலமணங்கமழுந்திருவேதிகுடி
ஐயனையாராவமுதினைநாமடைந்தாடுதுமே. (க)

கைத்தலைமான்மறியேந்தியகையன்கனன்மழுவன் *
பொய்த்தலையேந்திநற்பூதிபணிந்துபலிதிரிவான்
செய்த்தலைவாளைகள்பாய்ந்துகளுந்திருவேதிகுடி
அத்தனையாராவமுதினைநாமடைந்தாடுதுமே. (உ)

முன்பின்முதல்வன்முனிவனெம்மேலைவினைகழித்தான்
அன்பிணிலைபிலவுணர்புரம் † பொடியானசெய்யும்
செம்பொனனன்மலர்மேலவன்சேர்திருவேதிகுடி
அன்பனைநம்மையுடையனைநாமடைந்தாடுதுமே. (ங)

பத்தர்களுளுமறவார்பிறவியையொன்றறுப்பான்
முத்தர்கண்முன்னம்பணிசெய்துபாரிடமுன்னுயர்த்தான் ‡
கொத்தனகொன்றைமணங்கமழுந்திருவேதிகுடி
அத்தனையாராவமுதினைநாமடைந்தாடுதுமே. (ச)

ஆனணைந்தேறுங்குறிகுணமாரறிவாரவர்கை
மானணைந்தாடுமதியும்புனலுஞ்சடைமுடியன்
தேனணைந்தாடியவண்டுபயில்திருவேதிகுடி
ஆனணைந்தாடுமழுவனைநாமடைந்தாடுதுமே. (ரு)

என்றுமெழுத்துஞ்சுருதியுமறிபவர்தாமொழியப்
பண்ணினிசைமொழிபாடியவானவர்தாம்பணிவார்
திண்ணென்வினை ¶ களைத்தீர்க்கும்பிரான்திருவேதிகுடி
நண்ணரியவமுதினைநாமடைந்தாடுதுமே. (சு)

ஊர்ந்தவிடையுகந்தேறியசெல்வனைநாமறியோம்
ஆர்ந்தமடமொழிமங்கைபொர்பாகமகிழ்ந்துடையான்
சேர்ந்தபுனற்சடைச்செல்வப்பிரான்திருவேதிகுடிச்
சார்ந்தவயலணிதண்ணமுதையடைந்தாடுதுமே. (எ)

எரியுமழுவினனெண்ணியுமற்றொருவன்றலையுள்
திரியும்பலியினனேறமுநாடெல்லாமுடையான்
விரியும்பொழிலணிசேறுதிகழ்திருவேதிகுடி
அரியவமுதினையன்பர்களோடடைந்தாடுதுமே. (அ)

* கையனகன்மழுவன் என்றும் பாடம். † அன்பனிலைபிலவுணர்புரம் என்றும் பாடம். ‡ னுயர்ந்தான் என்றும் பாடம். ¶ திண்ணென்வினை. என்றும் பாடம்.

Koviloor Digital Library

மையணிகண்டன்மறைவிரிநாவன்மதித்துகந்த
மெய்யணிநீற்றன்விழுமியவெண்மழுவாட்படையான்
செய்யகமலமணங்கமழுந்திருவேதிகுடி
ஐயனையாராவமுதினைநாமடைந்தாடுதுமே. (௯)

வருத்தனைவாளரக்கன்முடிதோளொடுபத்திறுத்த
பொருத்தனைப்பொய்யாவருளனைப்பூதப்படையுடைய
திருத்தனைத்தேவர்பிரான்றிருவேதிகுடியுடைய *
அருத்தனையாராவமுதினைநாமடைந்தாடுதுமே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருவேதிகுடித்திருப்பதிகம் - ௨.

ஆ திருப்பதிகம் - ௨௧.

சுவாமி தேவி திருநாமங்கள் – வேதபுரியீசர், மங்கையர்க்கரசி.

௧௫. திருத்தென்குடித்திட்டை.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

முன்னைநான்மறையவைமுறைமுறைகுறையொடும்
தன்னதாடொழுதெழநின்றவன்றன்னிடம் †
மன்னுமாகாவிரிவந்தடிவருடநல்
செந்நெலார்வளவயற்றென்குடித்திட்டையே. (௧)

மகரமாடுங்கொடிமன்மதவேடனை
நிகரலாகாநெருப்பெழவிழித்தானிடம்
பகரபாணித்திலம்பன்மகரத்தொடும்
சிகரமாளிகைதொகுந்தென்குடித்திட்டையே. (௨)

கருவினாலன்றியேகருவெலாமாயவன்
உருவினாலன்றியேயுருவுசெய்தானிடம்
பருவநாள்விழவொடும்பாடலோடாடலும்
திருவினான்மிகுபுகழ்த்தென்குடித்திட்டையே. (௩)

உண்ணிலாவாவியாயோங்குதன்றன்மையை
விண்ணிலாரறிகிலாவேதவேதாந்தனூர்
எண்ணிலாரெழின்மணிக்கனகமாளிகையிளந்
தெண்ணிலாவிரிதருந்தென்குடித்திட்டையே. (௪)

* குடியமர்ந்த என்றும் பாடம். † நின்றவன்னிடம் என்றும் பாடம்.

Koviloor Digital Library

வருந்திவானோர்கள்வந்தடையமாநஞ்சுதான்
அருந்திபாரமுதவர்க்கருள்செய்தானமரும்மூர்
செருந்திபூமாதவிப்பந்தர்வண்செண்பகம்
திருந்துநீள்வளர்பொழிற்றென்குடித்திட்டையே. (ரு)

ஊறினாரோசையுள்ளொன்றினாரொன்றிமால்
கூறினாரமர்தருங்குமரவேடாதையூர்
ஆறினார்பொய்யகத்தையுணர்வெய்திமெய்
தேறினார்வழிபடுந்தென்குடித்திட்டையே. (சு)

கானலைக்கும்மவன்கண்ணிடந்தப்பநீள்
வானலைக்குந்தவத்தேவுவைத்தானிடம்
தானலைத்தெள்ளமூர்தாமரைத்தண்டுறை
தேனலைக்கும்வயற்றென்குடித்திட்டையே. (எ)

மாலொடும்பொருதிறல்வாளரக்கன்னெரிந்
தோலிடும்படிவிரலொன்றுவைத்தானிடம்
காலொடுங்கனகமூக்குடன்வரக்* கயல்வரால்
சேலொடும்பாய்வயற்றென்குடித்திட்டையே. (அ)

நாரணன்றன்னொடுநான்முகன்றானுமாய்க்
காரணன்னடிமுடிகாணவொண்ணானிடம்
ஆரணங்கொண்டுபூசுரர்கள்வந்தடிதொழச்
சீரணங்கும்புகழ்த்தென்குடித்திட்டையே. (கூ)

குண்டிகைக்கையுடைக்குண்டரும்புத்தரும்
பண்டுரைத்தேயிடும்பற்றுவிட்டீர்தொழும்
வண்டிரைக்கும்பொழிற்றண்டலைக்கொண்டலார்
தெண்டிரைத்தண்புனற்றென்குடித்திட்டையே. (க0)

தேனலார்சோலைசூழ்தென்குடித்திட்டையைக்
கானலார்கடிபொழில்சூழ்தருங்காழியுள்
ஞானமார்† ஞானசம்பந்தனசெந்தமிழ்
பானலார்மொழிவலார்க்கில்லைபாம்பாவமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருத்தென்குடித்திட்டைத்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - ௯0.

சுவாமி தேவி திருநாமங்கள் - பசுபதிநாதர், உலகாயகி.

* கனகமூக்குடன்வரக் என்பதும் ஒன்று. † ஞானவார் என்றும் பாடம்.

Koviloor Digital Library

கசா. திருப்புள்ளமங்கை. *

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

பாலுந்துறுதிரளாயினபரமன்பிரமன்றான்
போலுந்திறலவர்வாழ்தருபொழில்சூழ்புளமங்கைக்
காலன்றிறலறச்சாடியகடவுள்ளிடங்கருதில்
ஆலந்துறைதொழுவார்தமையடையாவினைதானே. (க)

மலையான்மகள்கணவன்மலிகடல்சூழ்தருதன்மைப்
புலையாயினகளைவானிடம்பொழில்சூழ்புளமங்கைக்
கலையான்மலிமறையோரவர்கருதித்தொழுதேத்த
அலையார்புனல்வருகாவிரியாலந்துறையதுவே. (உ)

கறையார்மிடறுடையான்கமழ்கொன்றைச்சடைமுடிமேல்
பொறையார்தருகங்கைப்புனலுடையான்புளமங்கைச்
சிறையார்தருகளிவண்டறைபொழில்சூழ்திருவாலந்
துறையானவனறையார்கழறொழுமின்றுதிசெய்தே. (ங)

தணியார்மதியரவின்னொடுவைத்தானிடமொய்த்தெம்
பணியாயவனடியார்தொழுதேத்தும்புளமங்கை
மணியார்தருகனகம்மவைவயிரத்திரளோடும்
அணியார்மணலணைகாவிரியாலந்துறையதுவே. (ச)

மெய்த்தன்னுறும்வினைதீர்வகைதொழுமின்செழுமலரின்
கொத்தின்னொடுசந்தாரகில்கொணர்காவிரிக்கரைமேல்
பொத்தின்னிடையாந்தைபலபாடும்புளமங்கை
அத்தன்னமையாள்வானிடமாலந்துறையதுவே. (ரு)

மன்னனவனுலகிற்கொருமழையானவன்பிழையில்
பொன்னனவன்முதலானவன்பொழில்சூழ்புளமங்கை
என்னனவனிசையானவனிளஞாயிறின் † சோதி
அன்னனவனுறையும்மிடமாலந்துறையதுவே. (சு)

முடியார்தருசடைமேன்முளையிளவெண்மதிசூடிப்
பொடியாடியதிருமேனியர்பொழில்சூழ்புளமங்கைக்
கடியார்மலர்புனல்கொண்டுதன்கழலேதொழுதேத்தும்
அடியார்நமக்கினியாவிடமாலந்துறையதுவே. (எ)

* திருப்புள்ளமங்கை - ஆலந்துறை. † ஞாயிறின் என்றும் பாடம்.

Koviloor Digital Library

இலங்கைமனன்முடிதோளிறவெழிலார்திருவிரலால்
விலங்கல்லிடையடர்த்தானிடம்வேதம்பயின்றேத்திப்
புலன்கடமைவென்றார்புகழவர்வாழ்புளமங்கை
அலங்கன்மலிசடையானிடமாலந்துறையதுவே. (அ)

செறியார்தருவெள்ளைத்திருநீற்றின்றிருமுண்டப்
பொறியார்தருபுரிநூல்வரைமார்பன்புளமங்கை
வெறியார்தருகமலத்தயன்மாலுந்தனைநாடி
அறியாவகைநின்றானிடமாலந்துறையதுவே. (கூ)

நீதியறியாதாரமண்கையரொடுமண்டைப்
போதியவரோதும்முரைகொள்ளார்புளமங்கை
ஆதியவர்கோயிற்றிருவாலந்துறைதொழுமின்
சாதிம்மிகுவானோர்தொழுதன்மைபெறலாமே. (க0)

பொந்தின்னிடைத்தேனூறியபொழில்சூழ்புளமங்கை
அந்தண்புனல்வருகாவிரியாலந்துறையானைக்
கந்தம்மலிகமழ்காழியுட்கலைஞானசம்பந்தன்
சந்தம்மலிபாடல்சொலியாடத்தவமாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருப்புள்ளமங்கைத்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - நக.

சுவாமி தேவி திருநாமங்கள் - பசுபதிநாதர், பல்வளைநாயகி.

கஎ. திருச்சக்கரப்பள்ளி.*

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

படையினார் † வெண்மழுப்பாய்புலித்தோலரை
உடையினா ‡ ருமையொருகூறனூர்வதோர்
விடையினார் ¶ வெண்பொடிப்பூசியார்விரிபுனல்
சடையினா § றுறைவிடஞ்சக்கரப்பள்ளியே. (க)

பாடினாருமறைபனிமதிசடைமிசைச்
சூடினார்படுதலைதன்னொருக்கதனொடும்
காடினார்டிபலிநண்ணியோர்காலனைச்
சாடினார்வளநகர்சக்கரப்பள்ளியே. (உ)

மின்னினார்சடைமிசைவிரிகதிர்மதியமும்
பொன்னினார்கொன்றையும்பொறிகிளரரவமும்
துன்னினாருலகெலாந்தொழுதெழநான்மறை
தன்னினார்வளநகர்சக்கரப்பள்ளியே. (ங)

* திருச்சக்கரப்பள்ளி—ஐயம்பேட்டை. † படையனார், ‡ உடையனார், ¶ விடையனார், § சடையனார் என்றும் பாடம்.

Koviloor Digital Library

நலமலிகொள்கையார்நான்மறைபாடலார்
வலமலிமழுவினர்மகிழுமூர்வண்டறை
மலர்மலிசலமொடுவந்திழிகாவிரி
சலசலமணிகொழிசக்கரப்பள்ளியே. (௪)

வெந்தவெண்பொடியணிவேதியர்விரிபுனல்
அந்தமிலணிமலைமங்கையோடமருமூர்
கந்தமார்மலரொடுகாரகில்பன்மணி
சந்தினோடணைபுனற்சக்கரப்பள்ளியே. (௫)

பாங்கினன்முப்புரம்பாழ்படவெஞ்சிலை
வாங்கினர்வானவர்தானவர்வணங்கிட
ஓங்கினருமையொருகூறுடுமொலிபுனல்
தாங்கினருறைவிடஞ்சக்கரப்பள்ளியே. (௬)

பாரினர்தொழுதெழுபரவுபல்லாயிரம்
பேரினர்பெண்ணொருகூறனர்பேரொலி
நீரினர்சடைமுடிநிரைமலர்க்கொன்றையம்
தாரினர்வளநகர்சக்கரப்பள்ளியே. (௭)

முதிரிலாவெண்பிறைசூடினர்முன்னநாள்
எதிரிலாமுப்புரமெரிசெய்தார்வரைதனால்
அதிரிலாவல்லரக்கன்வலிவாட்டிய
சதிரினர்* வளநகர்சக்கரப்பள்ளியே. (௮)

துணிபடுகோவணஞ்சுண்ணவெண்பொடியினர்
பணிபடுமார்பினர்பனிமதிச்சடையினர்
மணிவணனவனொடுமலர்மிசையானையும்
தணிவினர் † வளநகர்சக்கரப்பள்ளியே. (௯)

உடம்புபோர்சீவரரூண்டொழிற்சமணர்கள்
விடம்படுமுரையவைமெய்யலவிரிபுனல்
வடம்படுமலர்கொடுவணங்குமின்வைகலும்
தடம்புனல்சூழ்தருசக்கரப்பள்ளியே. (௧௦)

தண்வயல்புடையணிசக்கரப்பள்ளியெம்
கண்ணுதலவனடிக்கழுமலவளநகர்
நண்ணியசெந்தமிழ்ஞானசம்பந்தன்சொல்
பண்ணியவிவைசொலப்பறையுமெய்ப்பாவமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருச்சக்கரப்பள்ளித்திருப்பதிகம் - ௧.

ஆ திருப்பதிகம் - ௬௨.

சுவாமி தேவி திருநாமங்கள் - ஆலந்துறைநாதர், அல்லியங்கோதை.

* சதுரனர் என்றும் பாடம். † தணியினர் என்றும் பாடம்.

Koviloor Digital Library

௧௮. திருக்கருகாவூர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

முத்திலங்குமுறுவலுமையஞ்சவே
மத்தயானைமறுகவ்வுரிவாங்கியக்*
கத்தைபோர்த்தகடவுள்கருகாவூரெம்
அத்தர்வண்ணம்மழலும்மழல்வண்ணமே. (௧)

விழுதவல்ல† சடையான்வினை‡யுள்குவார்க்
கழுதநீழலகலாததோர்செல்வமாம்
கழுதமுல்லை¶ கமழ்கின்றகருகாவூர்
அமுதர்வண்ணம்மழலும்மழல்வண்ணமே. (௨)

பழகவல்லசிறுத்தொண்டர்பாவின்னிசைக்
குழகரென்றுகுழையாவழையாவரும்
கழல்கொள்பாடலுடையார்கருகாவூரெம்
அழகர்வண்ணம்மழலும்மழல்வண்ணமே. (௩)

பொடிமெய்ப்பூசிமலர்கொய்துபுணர்ந்துடன்
செடியரல்லாவுள்ளநல்கியசெல்வத்தர்
கடிகொண்முல்லைகமழுங்கருகாவூரெம்
அடிகள்வண்ணம்மழலும்மழல்வண்ணமே. (௪)

மையலின்றிமலர்கொய்துவணங்கிடச்
செய்பவுள்ளம்மிகநல்கியசெல்வத்தர்
கைதன்முல்லைகமழுங்கருகாவூரெம்
ஐயர்வண்ணம்மழலும்மழல்வண்ணமே. (௫)

மாசிறொண்டர்மலர்கொண்டுவணங்கிட
ஆசையாரவருணல்கியசெல்வத்தர்
காய்சினத்தவிடையார்கருகாவூரெம்
ஈசர்வண்ணம்மெரியும்மெரிவண்ணமே. (௬)

வெந்தநீறுமெய்ப்பூசியவேதியன்
சிந்தைநின்றவருணல்கியசெல்வத்தன்
கந்தமௌவல்கமழுங்கருகாவூரெம்
எந்தைவண்ணம்மெரியும்மெரிவண்ணமே. (௭)

* வாங்கிச் என்றும் பாடம். † விழுதல்வல்ல என்றும் பாடம். ‡ சடையான்றனை என்றும் பாடம். ¶ கமுகமுல்லை என்றும் பாடம்.

Koviloor Digital Library

பண்ணினேர்மொழியாளையோர்பாகனூர்
மன்னுகோலம்முடையம்மலரானொடும்
கண்ணனேடவரியார்கருகாவூரெம்
அண்ணல்வண்ணம்மழலும்மழல்வண்ணமே. (௯)

போர்த்தமெய்யினர்போதுழல்வார்கள்சொல்
தீர்த்தமென்றுதெளிவீர்தெளியேன்மின் *
கார்த்தண்முல்லைகமழுங்கருகாவூரெம்
ஆத்தர் † வண்ணம்மழலும்மழல்வண்ணமே. (௧0)

கலவமஞ்ஞையுலவுங்கருகாவூர்
நிலவுபாடலுடையான்றனநீள்கழல் ‡
குலவுஞானசம்பந்தனசெந்தமிழ்
சொலவலாரவர்தொல்வினைதீருமே. ¶ (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசு நாயனார்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

குருகாம்வயிரமாங்கூறுநாளாங்
கொள்ளுங்கிழமையாங்கோளேதானும்
பருகாவமுதமாம்பாலினெய்யாம்
பழத்தினிரதமாம்பாட்டிற்பண்ணும்
ஒருகாலுமையாளோர்பாகனுமா
முண்ணின்றநாவிற்குரையாடியாம்
கருவாயுலகுக்குமுன்னேதோன்றுங்
கண்ணுங்கருகாவூரெந்தைதானே. (௧)

வித்தாமுளையாகும்வேரேதானும்
வேண்டுமுருவமாம்விரும்பிநின்ற
பத்தாமடியார்க்கோர்பாங்கனுமாம்
பானிறமுமாம்பரஞ்சோதிதானும்
தொத்தாமமரர்கணஞ்சூழ்ந்துபோற்றத்
தோன்றாதென்னுள்ளத்தினுள்ளேநின்ற
கத்தாமடியேற்குக்காணாகாட்டுங்
கண்ணுங்கருகாவூரெந்தைதானே. (௨)

பூத்தானும்பூவினிறத்தானுமாம்
பூக்குளால்வாசமாய்மன்னிநின்ற
கோத்தானுங்கோல்வளையாள்கூறனாகுங்
கொண்டசமயத்தார்தேவனாகி

* தெளியன்மின் என்றும் பாடம். † ஆர்த்தர் என்றும் பாடம். ‡ றன்னிள்கழல் என்றும் பாடம். ¶ இத்திருப்பதிகத்தில் எட்டாவதுசெய்யுள் மறைந்துபோயிற்று.

Koviloor Digital Library

ஏத்தாதார்க்கென்றுமிடரேதுன்ப
மீவானுமென்னெஞ்சத்துள்ளேநின்று
காத்தானுங்காலனடையாவண்ணங்
கண்ணாங்கருகாவூரெந்தைதானே. (௩)

இராவணுமெல்லிநடமாடியா
மெண்டிசைக்குந்தேவனுமென்னுளானும்
அரவனுமல்லலறுப்பானுமா
மாகாசமூர்த்தியாமானேறேறும்
குரவனுங்கூற்றையுதைத்தான்றானுங்
கூறுதவஞ்சக்குபலர்க்கென்றும்
காவனுங்காட்சிக்கெளியானுமாங்
கண்ணாங்கருகாவூரெந்தைதானே. (௪)

படைத்தானும்பாரையிடந்தானுகும்
பரிசொன்றறியாமைநின்றான்றானும்*
உடைத்தானுமொன்னார்புரங்கண்மூன்று
மொள்ளழலான்மூட்டியொருக்கிநின்று
அடைத்தானுஞ்சூலமழுவோர்நாக
மசைத்தானுமானேறேன்றூர்ந்தானுகும்
கடைத்தானுங்கள்ளமறிவார்நெஞ்சிற்†
கண்ணாங்கருகாவூரெந்தைதானே. (௫)

மூலனுமூர்த்தியாமுன்னேதானு
மூவாதமேனிமுக்கண்ணினானும்
சீலனுஞ்சேர்ந்தாரிடர்கடீர்க்குஞ்
செல்வனுஞ்செஞ்சுடர்க்கோர்சோதிதானும்
மாலனுமங்கையோர்பங்கனாகு
மன்றாடியாம்வானோர்தங்கட்கெல்லாம்
காலனுங்காலனைக்காய்ந்தானுகுங்
கண்ணாங்கருகாவூரெந்தைதானே. (௬)

அரைசேரரவனுமாலத்தானு
மாதிரைநாளானுமண்டவானோர்
திரைசேர்திருமுடித்திங்களானுந்
தீவினைநாசனென்சிந்தையானும்
உரைசேருலகத்தாருள்ளானுமா
முமையாளோர்பாகனுமோதவேலிக்
கரைசேர்கடனஞ்சையுண்டானுகுங்
கண்ணாங்கருகாவூரெந்தைதானே. (௭)

* நின்றானுகும் என்றும் பாடம். † கள்ளமறிவார்நெஞ்சிற் என்றும் பாடம்.

Koviloor Digital Library

துடியார்துடியின்முழக்கந்தானுஞ்
சொல்லுவார்சொல்லெல்லாஞ்சோதிப்பானும்
படிதானும்பாவமறுப்பானுரும்
பானீற்றனும்பரஞ்சோதிதானும்
கொடியானுங்கூற்றையுதைத்தானுருங்
கூறுதவஞ்சக்குயலர்க்கென்றும்
கடியானுங்காட்சிக்கரியானுருங்
கண்ணுங்கருகாவூரெந்தைதானே. (அ)

விட்டுருவங்கிளர்கின்றசோதியானும்
விண்ணவர்க்குமறியாதசூழலானும்
பட்டுருவமால்யானைத்தோல்கீண்டானும்
பலபலவும்பாணிபயின்றான்றானும்
எட்டுருவமூர்த்தியாமெண்டோளானு
மென்னுச்சிமேலானுமெம்பிரானும்
கட்டுருவங்கடியானைக்காய்ந்தானுருங்
கண்ணுங்கருகாவூரெந்தைதானே. (கூ)

பொறுத்திருந்தபுள்ளூர்வானுள்ளானாகி
யுள்ளிருந்தங்குண்ணோய்களைவான்றானுய்ச்
செறுத்திருந்தமும்மதில்கண்மூன்றும்வேவச்
சிலைகுனியத்தீமூட்டுந்திண்மையானும்
அறுத்திருந்தகையானுமந்தாரல்லி
யிருந்தானையொருதலையைத்தெரியநோக்கிக்
கறுத்திருந்தகண்டமுடையான்போலுங்
கண்ணுங்கருகாவூரெந்தைதானே. (க0)

ஒறுத்தானுமொன்னார்புரங்கண்மூன்று
மொள்ளழலைமாட்டியுடனேவைத்து
இறுத்தானுமெண்ணான்முடிகள்பத்து
மிசைந்தானுமின்னிசைகள்கேட்டானுரும்
அறுத்தானுமஞ்சுமடக்கியங்கே*
யாகாசமந்திரமுமானானுரும்
கறுத்தானுங்காலனைக்காலால்வீழக்
கண்ணுங்கருகாவூரெந்தைதானே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருக்கருகாவூர்த்திருப்பதிகம் - உ.

ஆ திருப்பதிகம் - ௩௪.

சுவாமி தேவி திருநாமங்கள் - முல்லைவனநாதர், கரும்பனையாள்.

* யங்கை என்றும் பாடம்.

Koviloor Digital Library

கச௱. திருப்பாலைத்துறை.

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

நீலமாமணிகண்டத்தர்நீள்சடைக்
கோலமாமதிகங்கையுங்கூட்டினார்
சூலமான்மழுவேந்திச்சுடர்முடிப்
பானெய்பாடுவர்பாலைத்துறையரே. (க)

கவளமாகளிற்றின்னுரிபோர்த்தவர்
தவளவெண்ணகைமங்கையோர்பங்கினர்
திவளவானவர்போற்றித்திசைதொழும்
பவளமேனியர்பாலைத்துறையரே. (உ)

மின்னினுண்ணிடைக்கன்னியர்மிக்கெங்கும்
பொன்னிநீர்மூழ்கிப்போற்றியடிதொழ
மன்னிநான்மறையோடுபல்கீதமும்
பன்னினாரவர்பாலைத்துறையரே. (ங)

நீடுகாடிடமாய்நின்றபேய்க்கணம்
கூடுபூதங்குழுமிநின்றார்க்கவே
ஆடினாரழகாகியநான்மறை
பாடினாரவர்பாலைத்துறையரே. (ச)

சித்தர்கன்னியர்தேவர்கடானவர்
பித்தர்நான்மறைவேதியர்பேணிய
அத்தனேநமையாளுடையாயெனும்
பத்தர்கட்கன்பர்பாலைத்துறையரே. (ரு)

விண்ணினார்பணிந்தேத்தவியப்புறும்
மண்ணினார்மறவாதுசிவாயவென்
றெண்ணினார்க்கிடமாவெழில்வானகம்
பண்ணினாரவர்பாலைத்துறையரே. (சு)

குரவனார்கொடுகொட்டியுங்கொக்கரை
விரவினார்பண்கெழுமியவீணையும்
மருவுநான்மலர்மல்லிகைசெண்பகம்
பரவுநீர்ப்பொன்னிப்பாலைத்துறையரே. (எ)

தொடருந்தொண்டரைத்துக்கந்தொடர்ந்துவந்
தடரும்போதாருபருள்செய்பவர்
கடலினஞ்சணிகண்டர்கடிபுனல்
படருஞ்செஞ்சடைப்பாலைத்துறையரே. (அ)

Koviloor Digital Library

மேகந்தோய்பிறைசூடுவர்மேகலை
நாகந்தோய்ந்தவரையினர்நல்லியல்
போகந்தோய்ந்தபுணர்முலைமங்கையோர்
பாகந்தோய்ந்தவர்பாலைத்துறையரே. (௯)

வெங்கண்வாளரவாட்டிவெருட்டுவர்
அங்கணாரடியார்க்கருணல்குவர்
செங்கண்மாலயன்றேடற்கரியவர்
பைங்கணேற்றினர்பாலைத்துறையரே. (௧0)

உரத்தினாலரக்கன்னுயர்மாமலை
நெருக்கினானைநெரித்தவன்பாடலும்
இரக்கமாவருள்செய்தபாலைத்துறை
கரத்தினாற்றொழுவார்வினையோயுமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருப்பாலைத்துறைத்திருப்பதிகம் - ௧.

ஆ திருப்பதிகம். - ௩௫.

சுவாமி தேவி திருநாமங்கள் - பாலைவனநாதர், தவளவெண்ணகையாள்.

௨0. திருநல்லூர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

கொட்டும்பறைசீராற்குழுமவனலேந்தி
நட்டம்பயின்றாடுநல்லூர்ப்பெருமானை
முட்டின்றிருபோதுமுனியாதெழுந்தன்பு
பட்டமனத்தார்களறியார்பாவமே. (௧)

ஏறிலெருதேறுமெழிலாயிழையோடும்
வேறும்முடனுமாம்விகிர்தரவரென்ன
நாறும்மலர்ப்பொய்கைநல்லூர்ப்பெருமானைக்
கூறும்மடியார்கட்கடையாகுற்றமே. (௨)

சூடுமிளந்திங்கட்சுடர்பொற்சடைதாழ
ஓடுங்கலனாகவூருரிடுபிச்சை
நாடுந்நெறியானைநல்லூர்ப்பெருமானைப்
பாடும்மடியார்கட்கடையாபாவமே. (௩)

Koviloor Digital Library

நித்தநெறியானைநீங்காத்தவத்தானை
நாத்தநெறியானைநல்லூர்ப்பெருமானைக்
காத்தநெறியானைக்கைகூப்பித்தொழு
தேத்துமடியார்கட்கில்லையிடர்தானே. (௪)

ஆகத்துமைகேள்வனரவச்சடைதாழ
நாகம்மசைத்தானைநல்லூர்ப்பெருமானைத்
தாகம்புகுந்தண்மித்தாள்கடொழுந்தொண்டர்
போகம்மனத்தராய்ப்புகழத்திரிவாரே. (௫)

கொல்லுங்களியானையுரிபோர்த்துமையஞ்ச
நல்லநெறியானைநல்லூர்ப்பெருமானைச்
செல்லுநெறியானைச்சேர்ந்தாரிடர்தீரச்
சொல்லுமடியார்களறியார்துக்கமே. (௬)

எங்கள்பெருமானையிமையோர்தொழுதேத்தும்
நங்கள்பெருமானைநல்லூர்பிரிவில்லாத்
தங்கைதலைக்கேற்றியாளென்றடிநீழல்
தங்குமனத்தார்கடமோற்றறுப்பாரே. (௭)

காமனெழில்வாட்டிக்கடல்சூழிலங்கைக்கோன்
நாமமிறுத்தானை* நல்லூர்ப்பெருமானை
வமமனத்தாரா † யிகழாதெழுந்தொண்டர்
திபமனத்தார்களறியார்தியவே. (௮)

வண்ணமலரானும்வையமளந்தானும்
நண்ணலரியானைநல்லூர்ப்பெருமானைத்
தண்ணமலர் ‡ தூவித்தாள்கடொழுதேத்த
வென்னுமடியார்கட்கில்லையிடுக்கணே. (௯)

பிச்சக்குடைநீழற்சமணர்சாக்கியர்
நிச்சமலர்தூற்றநின்றபெருமானை
நச்சுமிடற்றானைநல்லூர்ப்பெருமானை
யெச்சுமடியார்கட்கில்லையிடர்தானே. (௧௦)

தண்ணம்புனற்காழிஞானசம்பந்தன்
நண்ணும்புனல்வேலிநல்லூர்ப்பெருமானை
வண்ணம்புனைமாலைவைகலேத்துவார்
விண்ணுந்நிலனுமாய்விளங்கும்புகழாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

* ஆகமிறுத்தானை என்றும் பாடம். † எசமனத்தாரா என்றும், எவமனத்தாரா என்றும் பாடம். ‡ தண்ணன்மலர் என்றும் பாடம்.

Koviloor Digital Library

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பெண்ணமருந்திருமேனியுடையீர்பிறங்குசடைதாழப்
பண்ணமருநான்மறையேபாடியாடல்பயில்கின்றீர்
திண்ணமரும்பைம்பொழிலும்வயலுஞ்சூழ்ந்ததிருநல்லூர்
மண்ணமருங்கோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (க)

அலைமல்குதண்புனலும்பிறையுஞ்சூடியங்கையில்
கொலைமல்குவெண்மழுவுமனலுமேந்துங்கொள்கையீர்
சிலைமல்குவெங்கணையாற்புரமூன்றெரித்தீர்திருநல்லூர்
மலைமல்குகோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (உ)

குறைநிரம்பாவெண்மதியஞ்சூடிக்குளிர்புன்சடைதாழப்
பறைநவின்றபாடலோடாடல்பேணிப்பயில்கின்றீர்
சிறைநவின்றதண்புனலும்வயலுஞ்சூழ்ந்ததிருநல்லூர்
மறைநவின்றகோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (ந)

கூனமரும்வெண்பிறையும்புனலுஞ்சூடுங்கொள்கையீர்
மானமருமென்விழியாள்பாகமாகுமாண்பினீர்
தேனமரும்பைம்பொழிலின்வண்டுபாடுந்திருநல்லூர்
வானமருங்கோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (ச)

நிணங்கவருமூவிலையுமனலுமேந்திநெறிகுழலாள்
அணங்கமரும்பாடலோடாடன்மேவுமழகினீர்
திணங்கவருமாடரவும்பிறையுஞ்சூடித்திருநல்லூர்
மணங்கமழுங்கோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (ரு)

கார்மருவுபூங்கொன்றைசூடிக்கமழ்புன்சடைதாழ
வார்மருவுமென்முலையாள்பாகமாகுமாண்பினீர்
தேர்மருவுநெடுவீதிக்கொடிகளாடுந்திருநல்லூர்
ஏர்மருவுகோயிலேகோயிலாகவிருந்தீரே. (சு)

ஊன்றோயும்வெண்மழுவுமனலுமேந்தியுமைகாண
மீன்றோயுந்திசைநிறையவோங்கியாடும்வேடத்தீர்
தேன்றோயும்பைம்பொழிலின்வண்டுபாடுந்திருநல்லூர்
வான்றோயுங்கோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (எ)

காதமரும்வெண்குழையீர்கறுத்தவரக்கன்மலையெடுப்ப
மாதமருமென்மொழியாண்மறுகும்வண்ணங்கண்டுகந்தீர்
தீதமராவந்தணர்கள்பரவியேத்துந்திருநல்லூர்
மாதமருங்கோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (அ)

போதின்மேலயன்றிருமால்போற்றியும்மைக்காணாது
நாதனேயிவனென்றுநயந்தேத்தமகிழ்ந்தளித்தீர்
தீதிலாவந்தணர்கடீமூன்றோம்புந்திருநல்லூர்
மாதராளவளோடுமன்னுகோயின்மகிழ்ந்தீரே. (கூ)

Koviloor Digital Library

பொல்லாதசமணரொடுபுறங்கூறுஞ்சாக்கியரொன்*
அல்லாதாரறவுரைவிட்டடியார்கள்போற்றிசைவா
நல்லார்களந்தணர்களுறைமேத்துந்திருநல்லூர்
மல்லார்ந்தகோயிலேகோயிலாகமகிழ்ந்திரே. (௧௦)

கொந்தணவும்பொழில்புடைசூழ்கொச்சைமேவுகுலவேந்தன்
செந்தமிழின்சம்பந்தன்சிறைவண்புனல்சூழ்திருநல்லூர்ப்
பந்தணவுமெல்விரலாள்பங்கன்றன்னைப்பயில்பாடல்
சிந்தனையாலுரைசெய்வார்சிவலோகஞ்சேர்ந்திருப்பாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவிராகம். பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

வண்டிரியவிண்டமலர்மல்குசடைதாழவிடையேறிப்
பண்டெரிகைகொண்டபரமன்பதியதென்பாதனயமேல
நண்டிரியநாரையிரைதேரவரைமேலருவிமுத்தம்
தெண்டிரைகண்மோதவிரிபோதுகமழுந்திருநல்லூரே. (௧)

பல்வளருநாகமரையார்த்துவரைமங்கையொருபாகம்
மல்வளர்புயத்திலணிவித்துமகிழும்பரமனிடமாம்
சொல்வளரிசைக்கிளவிபாடிமடவார்நடமதாடச்
செல்வமறையோர்கண்முறையேத்தவளருந்திருநல்லூரே. (௨)

நீடுவரைமேருவிலதாகநிகழ்நாகமழலம்பால்
கூடலர்கண்மூவெயிலெரித்தகுழகன்குலவுசடைமேல்
ஏடுலவுகொன்றைபுனனின்றுதிகழுந் † நிமலனிடமாம்
சேடுலவுதாமரைகணீடுவயலார்திருநல்லூரே. (௩)

கருகுபுரிமிடறர்கரிகாடரெரிகையதனிலேந்தி
அருகுவருகரியினுரியதளர்படவரவரிடம்விளவில்
முருகுவிரிபொழிலின்மணநாறமயிலாலமரமேறித்
திருகுசினமந்திகனிசிந்தமதுவார்திருநல்லூரே. (௪)

பொடிகொடிருமார்பர்புரிநூலர்புனல்பொங்கரவுதங்கும்
முடிகொள்சடைதாழவிடையேறுமுதலாளரவரிடமாம்
இடிகொண்முழவோசையெழிலார்செய்தொழிலாளர்விழமல்கச்
செடிகொள்வினைபகலமனமினியவர்கள்சேர்திருநல்லூரே. (௫)

புற்றரவர்நெற்றியொர்கணொற்றைவிடையூர்வதுடையாளம்
சுற்றமிருள்பற்றியபல்பூதமிசைபாடநசையாலே
கற்றமறையுற்றுணர்வர்பற்றலர்கண்முற்றுமெயின்மாளச்
செற்றவரிருப்பிடநெருக்குபுனலார்திருநல்லூரே. (௬)

* சாக்கியரென்-றல்லா என்றும், பறங்கூறுசாக்கியரொன்றும்-அல்லாதாரறவுரைகேட்டடியார்கள் என்றும் பாடம். † நின்றுதிகழும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

பொங்கரவரங்கமுடன்மேலணிவர்ஞாலமிடுபிச்சை
தங்கரவமாகவுழிதந்துமெய்துலங்கியவெண்ணீற்றர்
கங்கையரவம்விரவுதிங்கள்சடையடிகளிடம்வினவில்
செங்கயல்வதிக்குதிகொளும்புனலதார்திருநல்லூரே. (எ)

ஏறுபுகழ்பெற்றதெனிலங்கையவர்கோனையருவரையில்
சீறியவனுக்கருளுமெங்கள்சிவலோகனிடமாகும்
கூறுமடியார்களிசைபாடிவலம்வந்தயருமருவிச்
சேறுகமானவழியத்திகழ்தருந்திருநல்லூரே. (அ)

மாலுமலர்மேலயனுநேடியறியாமையெரியாய
கோலமுடையானுணர்வுகோதில்புகழானிடமதாகும்
நாலுமறையங்கமுதலாறுமெரிமூன்றுதழலோம்பும்
சீலமுடையார்கணெடுமாடம்வளருந்திருநல்லூரே. (கூ)

கீறுமுடை* கோவணமிலாமையிலொலோவியதவத்தர்
பாறுமுடன்மூடுதுவராடையர்கள்வேடமவைபாரேல்
ஏறுமடவாளொடினிதேறிமுனிருந்தவிடமென்பர்
தேறுமனவாரமுடையார்குடிசெயுந்திருநல்லூரே. (க0)

திரைகளிருகரையும்வருபொன்னிநிலவுந்திருநல்லூர்மேல்
பரசுதருபாணியைநலந்திகழ்செய்தோணிபுரநாதன்
உரைசெய்தமிழ்ஞானசம்பந்தனிசைமாலைமொழிவார்போய்
விரைசெய்மலர்தூவவிதிபேணுகதிபேறுபெறுவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

அட்டுமினில்பலியென்றென்றகங்கடைதோறும்வந்து
மட்டவிழுங்குழலார்வளைகொள்ளும்வகையென்கொலோ
கொட்டியபாணியெடுத்திட்டபாதமுங்கோளரவும்
நட்டநின்றாடியநாதர்நல்லூரிடங்கொண்டவரே. (க)

பெண்ணிட்டம்பண்டையதன்றிவைபெய்பலிக்கென்றுழல்வார்
நண்ணிட்டுவந்துமனைபுகுந்தாருநல்லூரகத்தே
பண்ணிட்டபாடலாடலராய்ப்பற்றிநோக்கிநின்று
கண்ணிட்டுப்போயிற்றுக்காரணமுண்டுகறைக்கண்டரே. (உ)

படவேரரவல்குற்பாவைநல்லீர்பகலேயொருவர்
இடுவாரிடைப்பலிகொள்பவர்போல்வந்தில்புகுந்து
நடவாரடிகணடம்பயின்றாடியகூத்தர்கொலோ
வடபாற்கயிலையுந்தென்பானல்லூருந்தம்வாழ்பதியே. (ங)

* நீறுமுடை என்றும் பாடம்.

Koviloor Digital Library

செஞ்சுடர்ச்சோதிப்பவளத்திரடிகழ்முத்தனைய
நஞ்சணிகண்டனல்லூருறைநம்பனைநானொருகால்
துஞ்சிடைக்கண்டுகனவின்றலைத்தொழுதேற்கவன்றான்
நெஞ்சிடைநின்றகலான்பலகாலமுநின்றனனே. (௪)

வெண்மதிசூடிவிளங்கநின்றானைவிண்ணோர்கடொழ
நண்ணிலயத்தொடுபாடலறாதநல்லூரகத்தே
திண்ணிலயங்கொண்டுநின்றான்றிரிபுரமூன்றெரித்தான்
கண்ணாருநெஞ்சத்தகத்துளுமுளகழற்சேவடியே. (௫)

தேற்றப்படத்திருநல்லூரகத்தேசிவனிருந்தால்
தோற்றப்படச்சென்றுகண்டுகொள்ளார்தொண்டர்துன்மதியால்
ஆற்றிற்கெடுத்துக்குளத்தினிற்றேடியவாதரைப்போல்
காற்றிற்கடுத்துலகெல்லாந்* திரிதர்வர்காண்பதற்கே. (௬)

நாட்கொண்டதாமரைப்பூத்தடஞ்சூழ்ந்தநல்லூரகத்தே
கிட்கொண்டகோவணங்காவென்றுசொல்லிக்கிறிபடத்தான்
வாட்கொண்டநோக்கிமனைவியொடுமங்கோர்வாணிகனை
ஆட்கொண்டவார்த்தையுரைக்குமன்றோவிவ்வகலிடமே. (௭)

அறைமல்குபைங்கழலார்க்க† நின்றானணியார்சடைமேல்
நறைமல்குகொன்றையந்தாருடையானுநல்லூரகத்தே
பறைமல்குபாடலனாடலனாகிப்பரிசழித்தான்
பிறைமல்குசெஞ்சடைதாழநின்றாடியபிஞ்ஞகனே. (௮)

மன்னியமாமறையோர்மகிழ்ந்தேத்தமருவியெங்கும்
துன்னியதொண்டர்களின்னிசைபாடித்தொழுது‡ நல்லூர்க்
கன்னியர்தாமுங்கனவிடையுன்னியகாதலரை
அன்னியாற்றவராங்கணனேயருணல்கென்பரே. (௯)

திருவமர்தாமரைசீர்வளர்செங்கழுநீர்கொணெய்தல்
குருவமர்கோங்கங்குராமகிழ்சண்பகங்கொன்றைவன்னி
மருவமர்நீள்கொடிமாடமலிமறையோர்கணல்லூர்
உருவமர்பாகத்துமையவள்பாகனையுள்குதுமே. (௧௰)

செல்லோகொடியன்சிவன்பெருங்கோயில்சிவபுரமும்
வல்லேன்புகவுமதிற்சூழிலங்கையர்காவலனைக்
கல்லார்முடியொடுதோளிறச்செற்றகழலடியான்
நல்லூரிருந்தபிரானல்லனோநம்மையாள்பவனே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

* காற்றிற்கெடுத்துலகெல்லாந் என்றும் பாடம். † கழலார்ப்ப என்றும் பாடம்.
‡ பாடத்தொழுது என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

நினைந்துருகுமடியாரைநையவைத்தார்
நில்லாமேதீவினைகணீங்கவைத்தார்
சினந்திருகுகளிற்றுரிவைப்போர்வைவைத்தார்
செழுமதியின்றளிர்வைத்தார்சிறந்துவானோர்
இனந்துருவிமணிமகுடத்தேறத்துற்ற
வினமலர்கள்போதவிழ்ந்துமதுவாய்ப்பில்கி
நனைந்தனையதிருவடியென்றலைமேல்வைத்தார்
நல்லூரெம்பெருமானார்நல்லவாறே. (க)

பொன்னலத்தநறுங்கொன்றைசடைமேல்வைத்தார்
புலியுரியினதள்வைத்தார்புனலும்வைத்தார்
மன்னலத்ததிரடோண்மேன்மழுவாள்வைத்தார்
வார்காதிற்குழைவைத்தார்மதியும்வைத்தார்
மின்னலத்தநுண்ணிடையாள்பாகம்வைத்தார்
வேழத்தினுரிவைத்தார்வெண்ணூல்வைத்தார்
நன்னலத்ததிருவடியென்றலைமேல்வைத்தார்
நல்லூரெம்பெருமானார்நல்லவாறே. (உ)

தோடேறுமலர்க்கொன்றைசடைமேல்வைத்தார்
துன்னெருக்கின்வடம்வைத்தார்துவலைசிந்தப்
பாடேறுபடுதிரைகளெறியவைத்தார்
பனிமத்தமலர்வைத்தார்பாம்பும்வைத்தார்
சேடேறுதிருநுதன்மேனாட்டம்வைத்தார்
சிலைவைத்தார்மலைபெற்றமகளைவைத்தார்
நாடேறுதிருவடியென்றலைமேல்வைத்தார்
நல்லூரெம்பெருமானார்நல்லவாறே. (ந)

வில்லருளிவருபுருவத்தொருத்திபாகம்
பொருத்தாகிவிரிசடைமேலருவிவைத்தார்
கல்லருளிவரிசிலையாவைத்தாரூராக்
கைலாயமலைவைத்தார்கடவூர்வைத்தார்
சொல்லருளியறநால்வர்க்கறியவைத்தார்
சுடுசுடலைப்பொடிவைத்தார்துறவிவைத்தார்
நல்லருளாற்றிருவடியென்றலைமேல்வைத்தார்
நல்லூரெம்பெருமானார்நல்லவாறே. (ச)

விண்ணிரியுந்திரிபுரங்களெரியவைத்தார்
வினைதொழுவார்க்கறவைத்தார்துறவிவைத்தார்
கண்ணெரியாற்காமனையும்பொடியாவைத்தார்
கடிக்கமலமலர்வைத்தார்கையில்வைத்தார்

Koviloor Digital Library

திண்ணெரியுந்தண்புனலுமுடனேவைத்தார்
திசைதொழுதுமிசையமரர்திகழ்ந்துவாழ்த்தி
நண்ணரியதிருவடியென்றலைமேல்வைத்தார்
நல்லூரெம்பெருமானார்நல்லவாறே. (௫)

உற்றுலவும்பிணியுலகத்தெழுமைவைத்தா
ருயிர்வைத்தாருயிர்செல்லுங்கதிகள்வைத்தார்
மற்றமரர்கணம்வைத்தாரமரர்காணா
மறைவைத்தார்குறைமதியம்வளரவைத்தார்
செற்றமலியார்வமொடுகாமலோபஞ்
சிறவாதநெறிவைத்தார்துறவிவைத்தார்
நற்றவர்சேர்திருவடியென்றலைமேல்வைத்தார்
நல்லூரெம்பெருமானார்நல்லவாறே. (௬)

மாறுமலைந்தாரரணமெரியவைத்தார்
மணிமுடிமேலரவைத்தாரணிகொண்மேனி
நீறுமணிந்தெரியாடனிலவவைத்தார்
நெற்றிமேற்கண்வைத்தார்நிலயம்வைத்தார்
ஆறுமலைந்தறுதிரைகளெறியவைத்தா
ரார்வத்தாலடியமரர்பரவவைத்தார்
நாறுமலர்த்திருவடியென்றலைமேல்வைத்தார்
நல்லூரெம்பெருமானார்நல்லவாறே. (௭)

குலங்கண்மிகுமலைகடல்கண்ஞாலம்வைத்தார்
குருமணிசேரரவைத்தார்கோலம்வைத்தார்
உலங்கிளருமரவத்தினுச்சிவைத்தா
ருண்டருளிவிடம்வைத்தாரெண்டோள்வைத்தார்
நிலங்கிளரும்புனல்கனலுமனிலம்வைத்தார்
நிமிர்விசும்பின்மிசைவைத்தார்நினைந்தாரிந்நாள்
நலங்கிளருந்திருவடியென்றலைமேல்வைத்தார்
நல்லூரெம்பெருமானார்நல்லவாறே. (௮)

சென்றுருளுங்கதிரிரண்டும்விசும்பில்வைத்தார்
திசைபத்துமிருநிலத்திற்றிருந்தவைத்தார்
நின்றருளியடியமரர்வணங்கவைத்தார்
நிறைதவமுமறைபொருளுநிலவவைத்தார்
கொன்றருளிக்கொடுங்கூற்றநடுங்கியோடக்
குரைகழற்சேவடிவைத்தார்விடையும்வைத்தார்
நன்றருளுந்திருவடியென்றலைமேல்வைத்தார்
நல்லூரெம்பெருமானார்நல்லவாறே. (௯)

Koviloor Digital Library

பாம்புரிஞ்சிமதிகிடந்துதிரைகளேங்கப்
பனிக்கொன்றைசடைவைத்தார்பணிசெய்வானோர்
ஆம்பரிசுதமக்கெல்லாமருளும்வைத்தா
ரடுசுடலைப்பொடிவைத்தாரழரும்வைத்தார்
ஓம்பரியவல்வினைநோய்தீரவைத்தா
ருமையையொருபால்வைத்தாருகந்துவானோர்
நாம்பரவுந்திருவடியென்றலைமேல்*வைத்தார்
நல்லூரெம்பெருமானார்நல்லவாறே. (கo)

குலங்கிளரும்வருதிரைகளேழும்வைத்தார்
குருமணிசேர்மலைவைத்தார்மலையைக்கையால்
உலங்கிளரவெடுத்தவன்றோண்முடிபுநோவ
வொருவிரலாலுறவைத்தாரிறைவாவென்று
புலம்புதலுமருளொடுபோர்வாளும்வைத்தார்
புகழ்வைத்தார்புரிந்தாளாக்கொள்ளவைத்தார்
நலங்கிளருந்திருவடியென்றலைமேல்வைத்தார்
நல்லூரெம்பெருமானார்நல்லவாறே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநல்லூர்த்திருப்பதிகம் - ௫.

ஆ. திருப்பதிகம் - சo.

சுவாமி தேவி திருநாமங்கள் - பெரியவாண்டவர், பருவதசுந்தரி.

திருநாவுக்கரசுநாயனர் திருச்சத்திமுற்றத்தை அடைந்து சுவாமிதரிசனஞ்செய்து, திருவடிசூட்டும்படி "கோவாய் முடுகி யடுதிறற் கூற்றங் குமைப்ப தன்முன்—பூவா ரடிச்சுவ டென்மேற் பொறித்துவை" என்னுந் திருப்பதிகம் பாடவும்; சிவபிரான் "நல்லூருக்குவாவா" என்று அருளிச்செய்தனர். நாயனர் திருநல்லூருக்குச்சென்று சுவாமியை வணங்கி எழும்பொழுது சுவாமி "உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம்" என்று சொல்லித் தம்முடைய திருவடியை அவர்சிரசின்மேலே சூட்டியருளினர். நாயனர் "நினைந்துருகு மடியாரை" என்று திருத்தாண்டகமெடுத்து, திருப்பாட்டிறுதிதோறும் "திருவடியென் றலைமேல் வைத்தார் நல்லூரெம் பெருமானர் நல்லவாறே" என்று பாடியருளினர்.

* நாம்பரவுமடியிணையென்றலைமேல் என்றும் பாடம்.

Koviloor Digital Library

உக. திருவாவூர்ப்பசுபதீச்சரம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

புண்ணியர்பூதியர்பூதநாதர்புடைபடுவார்தம்மனத்தார்திங்கட்
கண்ணியரென்றென்றுகாதலாளர்கைதொழுதேத்தவிருந்தவூராம்
விண்ணுயர்மாளிகைமாடவீதிவிரைகமழ்சோலைசுலாவியெங்கும்
பண்ணியல்பாடலறாதவாவூர்ப்பசுபதியீச்சரம்பாடுநாவே. (க)

முத்தியர்மூப்பிலராப்பிணுள்ளார்முக்கணர்தக்கன்றன்வேள்விசாடும்
அத்தியரென்றென்றடியரேத்துமையனணங்கொடிருந்தவூராம்
தொத்தியலும்பொழின்மாடுவண்டுதுதைந்தெங்குந்தூமதுப்பாயக்கோயிற்
பத்திமைப்பாடலறாத* வாவூர்ப்பசுபதியீச்சரம்பாடுநாவே. (உ)

பொங்கிவரும்புனல்சென்னிவைத்தார்போம்வழிவந்திழிவேற்றமானர்
இங்குயர்ஞானத்தர்வானேரேத்துமிறையவரென்றுமிருந்தவூராம்
தெங்குயர்சோலைசேராலைசாலிதிளைக்கும்விளைவயல்சேரும்பொய்கைப்
பங்கயமங்கைவிரும்புமாவூர்ப்பசுபதியீச்சரம்பாடுநாவே. (ங)

தேவியோர்கூறினரேறதேறுஞ்செலவினர்நல்குரவென்னைநீக்கும்
ஆவியரந்தணரல்லறீர்க்குமப்பனராங்கேயமர்ந்தவூராம்
பூவியலும்பொழில்வாசம்வீசப்புரிகுழலார்சுவடொற்றிமுற்றப்
பாவியல்பாடலறாதவாவூர்ப்பசுபதியீச்சரம்பாடுநாவே. (ச)

இந்தணையுஞ்சடையார்விடையாரிப்பிறப்பென்னையறுக்கவல்லார்
வந்தணைந்தின்னிசைபாடுவார்பான்மன்னினர்மன்னியிருந்தவூராம்
கொந்தணையுங்குழலார்விழவிற்கூட்டமிடையிடைசேரும்வீதிப்
பந்தணையும்விரலார்தமாவூர்ப்பசுபதியீச்சரம்பாடுநாவே. (ரு)

குற்றமறுத்தார்குணத்தினுள்ளார்கும்பிடுவார்தமக்கன்புசெய்வார்
ஒற்றைவிடையினர்நெற்றிக்கண்ணருறைபதியாகுஞ்செறிகொண்மாடம்
சுற்றியவாசலின்மாதர்விழாச்சொற்கவிபாடநிதானநல்கப்
பற்றியகையினர்வாழுமாவூர்ப்பசுபதியீச்சரம்பாடுநாவே. (சா)

நீறுடையார்நெடுமால்வணங்குநிமிர்சடையார்நினைவார்தமுள்ளம்
கூறுடையாருடைகோவணத்தார்குவலயமேத்தவிருந்தவூராம்
தாறுடைவாழையிற்கூழைமந்திதகுகனியுண்டுமிண்டிட்டினத்தைப்
பாறிடப்பாய்ந்துபயிலுமாவூர்ப்பசுபதியீச்சரம்பாடுநாவே. (எ)

* பத்திசைபாடலறாத என்றும் பாடம்.

Koviloor Digital Library

வெண்டலைமாலைவிரவிப்பூண்டமெய்யுடையார்விறலாரக்கன்
வண்டமர்பூமுடிசெற்றுகந்தமைந்தரிடம்வளமோங்கியெங்கும்
கண்டவர்* சிந்தைக்கருத்தின்மிக்கார்கதியருளென்றுகையாரக்கூப்பிப்
பண்டலர்கொண்டுபயிலுமாவூர்ப்பசுபதியீச்சரம்பாடுநாவே. (அ)

மாலுமயனும்வணங்கிநேடமற்றவருக்கெரியாகிநீண்ட
சீலமறிவரிதாகிநின்றசெம்மையினாரவர்சேருமூராம்
கோலவிழாவினரங்கதேறிக்கொடியிடைமாதர்கண்மைந்தரோடும்
பாலெனவேமொழிந்தேத்துமாவூர்ப்பசுபதியீச்சரம்பாடுநாவே. (கூ)

பின்னியதாழ்சடையார்பிதற்றும்பேதையராஞ்சமண்சாக்கியர்கள்
தன்னியலும்முரைகொள்ளகில்லாச்சைவரிடந்தளவேறுசோலைத்
துன்னியமாதருமைந்தர்தாமுஞ்சுனையிடைமூழ்கித்தொடர்ந்தசிந்தைப்
பன்னியபாடல்பயிலுமாவூர்ப்பசுபதியீச்சரம்பாடுநாவே. (க0)

எண்டிசையாரும்வணங்கியேத்துமெம்பெருமானையெழில்கொளாவூர்ப்
பண்டுரியார்சிலர்தொண்டர்போற்றும்பசுபதியீச்சரத்தாதிதன்மேல்
கண்டல்கண்மிண்டியகானற்காழிக்கவுணியன்ஞானசம்பந்தன்சொன்ன
கொண்டினிதாவிசைபாடியாடிக்கூடுமவருடையார்கள்வானே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவாவூர்ப்பசுபதீச்சரத்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - சக.

சுவாமி தேவி திருநாமங்கள் – பசுபதீச்சுரர், மங்களநாயகி.

உஉ. திருச்சத்திமுற்றம்.†

திருநாவுக்கரசுநாயனார்.

திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

கோவாய்முடுகியடுதிறற்கூற்றங்குமைப்பதன்முன்
பூவாரடிச்சுவடென்மேற்பொறித்துவைபோகவிடில்
மூவாமுழுப்பழிமூடுங்கண்டாய்முழங்குந்தழற்கைத்
தேவாதிருச்சத்திமுற்றத்துறையுஞ்சிவக்கொழுந்தே. (க)

காய்ந்தாயனங்கனுடலம்பொடிபடக்காலனைமுன்
பாய்ந்தாயுயிர்செகப்பாதம்பணிவார்தம்பல்பிறவி
ஆய்ந்தாய்ந்தறுப்பாயடியேற்கருளாயுன்னன்பர்சிந்தை
சேர்ந்தாய்திருச்சத்திமுற்றத்துறையுஞ்சிவக்கொழுந்தே. (உ)

* கண்டலர் என்றும் பாடம். † சத்தி சிவத்துக்கு முத்தமிட்டபடியால் சத்திமுத்தம் என்பது இத்திருப்பதிக்குக் காரணப்பெயர் என்ப. சத்தி சிவத்துக்கு முத்தமிட்டபடி அமைந்த திருவுருவம் இத்திருப்பதியில் இன்றும் இருக்கின்றது. சத்திமுற்றம் என்று ஏடுகளில் இருந்தபடியே பதிப்பிக்கப்பட்டது.

Koviloor Digital Library

பொத்தார்குரம்பைபுகுந்தைவர்நாளும்புகலழிப்ப
மத்தார்தயிர்போன்மறுகுமென்சிந்தைமறுக்கொழிவி
அத்தாவடியேனடைக்கலங்கண்டாயமரர்கடம்
சித்தாதிருச்சத்திமுற்றத்துறையுஞ்சிவக்கொழுந்தே. (௩)

நில்லாக்குரம்பைநிலையாக்கருதியிந்நீணிலத்தொன்
றல்லாக்குழிவீழ்ந்தயர்வுறுவேனைவந்தாண்டுகொண்டாய் *
வில்லேர்புருவத்துமையாள்கணவாவிடிற்கெடுவேன்
செல்வாதிருச்சத்திமுற்றத்துறையுஞ்சிவக்கொழுந்தே. (௪)

கருவுற்றிருந்துன்கழலேநினைந்தேன்கருப்புவியில்
தெருவிற்புகுந்தேன்றிகைத்தடியேனைத்திகைப்பொழிவி †
உருவிற்றிகழுமுமையாள்கணவாவிடிற்கெடுவேன்
திருவிற்பொலிசத்திமுற்றத்துறையுஞ்சிவக்கொழுந்தே. (௫)

வெம்மைநமன்றமர்மிக்குவிரவிவிழுப்பதன்முன்
இம்மையுன்றாளென்றனெஞ்சத்தெழுதிவையீங்கிகழில்
அம்மையடியேற்கருளுதியென்பதிங்காரறிவார்
செம்மைதருசத்திமுற்றத்துறையுஞ்சிவக்கொழுந்தே. (௬)

விட்டார்புரங்களொருங்கொடிவேவவோர்வெங்கணையால்
சுட்டாயென்பாசத்தொடர்பறுத்தாண்டுகொடும்பிபம்பும் ‡
மட்டார்குழலிமலைமகள்பூசைமகிழ்ந்தருளும்
சிட்டாதிருச்சத்திமுற்றத்துறையுஞ்சிவக்கொழுந்தே. (௭)

இகழ்ந்தவன்வேள்வியழித்திட்டிமையோர்பொறையிரப்ப
நிகழ்ந்திடவன்றேவிசயமுங்கொண்டதுநீலகண்டா
புகழ்ந்தவடியேன்றன்புன்மைகடீரப்புரிந்துநல்காய்
திகழ்ந்ததிருச்சத்திமுற்றத்துறையுஞ்சிவக்கொழுந்தே. (௮)

தக்கார்வமெய்திச்சமண்டவிர்ந்துன்றன்சரண்புகுந்தேன்
எக்காதலெப்பயனுன்றிறமல்லாலெனக்குளதே
மிக்கார்தில்லையுள்விருப்பாமிகவடமேருவென்னும்
திக்காதிருச்சத்திமுற்றத்துறையுஞ்சிவக்கொழுந்தே. (௯)

பொறித்தேரரக்கன்பொருப்பெடுப்புற்றவன்பொன்முடிதோள்
இறத்தாளொருவிரலூன்றிட்டலறவிரங்கியொள்வாள்
குறித்தேகொடுத்தாய்கொடியேன்செய்குற்றக்கொடுவினைநோய்
செறுத்தாய்திருச்சத்திமுற்றத்துறையுஞ்சிவக்கொழுந்தே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருச்சத்திமுற்றத்திருப்பதிகம் - ௧.

ஆக திருப்பதிகம் - ௪௨.

சுவாமி தேவி திருநாமங்கள் - சிவக்கொழுந்தீசர், பெரியநாயகி.

* வந்தாண்டுகொண்ட என்றும் பாடம். † திகைத்தடியேன்றன்றிகைப்பொழிவி என்றும் பாடம். ‡ டும்பிலவ்வும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருநாவுக்கரசுநாயனூர் பல தலங்களையும் பணிந்து திருப்பதிகம் பாடி, திருச்சத்தி முற்றத்தை அடைந்தார். அங்கே சுவாமிதரிசனஞ்செய்து "கோவாய் முடுகி யடுதிறற் கூற்றங் குமைப்பதன்முன்—பூவா ரடிச்சுவ டென்மேற் பொறித்துவை" என்னுந் திருப் பதிகம் பாடவும்; சிவபிரான் "நல்லூருக்கு வாவா" என்று அருளிச்செய்தார்.

உந. திருப்பட்டீச்சரம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனூர்.

திருவிராகம். பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

பாடன்மறைசூடன்மதிபல்வளையொர்பாகமதின்மூன்றொர்கணையால்
கூடவெரியூட்டியெழில்காட்டிநிழல்கூட்டுபொழில்* சூழ்பழையையுள்
மாடமழபாடியுறைபட்டிசரமேயகடிகட்டரவினர்
வேடநிலைகொண்டவரைவீடுநெறிகாட்டிவினைவீடுமவரே. (க)

நீரின்மலிபுன்சடையர்நீளரவுகச்சையதுநச்சிலையதோர்
கூரின்மலிசூலமதுவேந்தியுடைகோவணமுமானினுரிதோல்
காரின்மலிகொன்றைவிரிதார்கடவுள்காதல்செய்துமேயநகர்தான்
பாரின்மலிசீர்பழையைபட்டிசரமேத்தவினைபற்றழியுமே. (உ)

காலைமடவார்கள்புனலாடுவதுகௌவைகடியார்மறுகெலாம்
மாலைமணநாறுபழையாறைமழபாடியழகாயமலிசீர்ப்
பாலையனநீறுபுனைமார்பனுறைபட்டிசரமேபரவுவார்
மேலையொருமால்கடல்கள்போல்பெருகிவிண்ணுலகமாளுமவரே. (ங)

கண்ணின்மிசைநண்ணியிழிவிப்பமுகமேத்துகமழ்செஞ்சடையினன்
பண்ணின்மிசைநின்றுபலபாணிபடவாடவலபான்மதியினன்
மண்ணின்மிசைநேரின்மழபாடிமலிபட்டிசரமேமருவுவார்
விண்ணின்மிசைவாழுமிமையோரொடுடனாதலதுமேவலெளிதே. (ச)

மருவமுழவதிரமழபாடிமலிமத்தவிழவார்க்கவரையார்
பருவமழைபண்கவர்செய்பட்டிசரமேயபடர்புன்சடையினன்
வெருவமதயானையுரிபோர்த்துமையையஞ்சவருவெள்விடையினன்
உருவமெரிகழல்கடொழவுள்ளமுடையாரையடையாவினைகளே. (ரு)

மறையினொலிகீதமொடுபாடுவனபூதமடிமருவிவிரவார்
பறையினொலிபெருகநிகழ்நட்டமமர்பட்டிசரமேயபனிகூர்
பிறையினொடுமருவியதொர்சடையினிடையேற்றபுனறோற்றநிலையாம்
இறைவனடிமுறைமுறையினேத்துமவர்தீத்தொழில்களில்லர்மிகவே. (சு)

* காட்டுநிழல்கூடுபொழில் என்றும், காட்டிநிழல்கூடுபொழில் என்றும் பாடம்.

Koviloor Digital Library

பிறவிபிணிமூப்பினொடுநீங்கியிமையோருலகுபேணலுறுவார்
துறவியெனுமுள்ளமுடையார்கள்கொடிவீதியழகாயதொகுசீர்
இறைவனுறைபட்டிசரமேத்தியெழுவார்கள்வினையேதுமிலவாய்
நறவிரையாலுமொழியாலும்வழிபாடுமறவாதவவரே. (எ)

நேசமிகுதோள்வலவனாகியிறைவன்மலையைநீக்கியிடலும்
நீசன்விறல்வாட்டிவரையுற்றதுணராதநிரம்பாமதியினான்
ஈசனுறைபட்டிசரமேத்தியெழுவார்கள்வினையேதுமிலவாய்
நாசமறவேண்டுதலினன்னெறிதாமமார்வின்னுலகமே. (அ)

தூயமலரானுநெடியானுமறியாரவனதோற்றநிலையின்
ஏயவகையானதனையாரதறிவாரணிகொண்மார்பினகலம்
பாயநலநீறதணிவானுமைதனோடுமுறைபட்டிசரமே
மேயவனதீரடியுமேத்தவெளிதாகுநலமேலுலகமே. (கூ)

தடுக்கினையிடுக்கிமடவார்களிடுபிண்டமதுவுண்டுழறரும்
கடுப்பொடியுடற்கவசர்* கத்துமொழிகாதல்செய்திடாதுகமழ்சேர்
மடைக்கயல்வயற்கொண்மழபாடிநகர்நீடுபழையாறையதனுள்
படைக்கொருகரத்தன்மிகுபட்டிசரமேத்தவினைபற்றறுதலே. (க0)

மந்தமலிசோலைமழபாடிநகர்நீடுபழையாறையதனுள்
பந்தமுயர்வீடுநலபட்டிசரமேயபடர்புன்சடையனை
அந்தண்மறையோரினிதுவாழ்புகலிஞானசம்பந்தனணியார்
செந்தமிழ்கள்கொண்டினிதுசெப்பவலதொண்டர்வினைநிற்பதிலவே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருப்பட்டீச்சரத்திருப்பதிகம் - க.

௸ திருப்பதிகம் - சங.

சுவாமி தேவி திருநாமங்கள் - பட்டீச்சரநாதர், பல்வளைநாயகி.

திருஞானசம்பந்தப்பிள்ளையார் திருவலஞ்சுழியை அடைந்து, சுவாமிதரிசனஞ் செய்துகொண்டிருக்குநாளிலே, முதிர்வேனிற்காலம் வந்தது. அம்முதிர்வேனிற்காலத்திலே பிள்ளையார் திருவலஞ்சுழியினின்றும் நீங்கி, திருப்பழையாறைக்குப் போதற்கு அடியார்கள் உடன் செல்லச் சென்றருளி, திருவாறைமேற்றளியை அடைந்து வணங்கி, திருச்சத்திமுற்றத்திற் சென்று, சுவாமிதரிசனஞ்செய்துகொண்டு, திருப்பட்டீச்சரத்திற்குப்போகப் புறப்பட்டார். அப்பொழுது வெய்யில் வெப்பத்தைத் தணிக்கும் பொருட்டு, பிள்ளையாருடைய திருமுடியின்மேலே, சிவபூதம் முத்துப்பந்தரை எடுத்து, "பட்டீசர் எம்மை விடுத்தருளினர்" என்று சொல்லிற்று. அந்தச்சொல்லும் முத்துப்பந்தரும் ஆகாயத்திலே தோன்ற; பிள்ளையார் திருவருளைத் துதித்து, பூமியிலே விழுந்து நமஸ்கரித்தார். பிள்ளையாருடைய பரிசனங்கள் அந்த முத்துப்பந்தரைக் காம்பிலே பிடித்தார்கள். பிள்ளையார் அந்த முத்துப்பந்தர் நிழற்றச்சென்று திருப்பட்டீச்சரத்தை அடைந்து சுவாமிதரிசனஞ் செய்தார்.

* யுடற்கசவர் என்றும், யுடற்கயவர் என்றும் பாடம்.

Koviloor Digital Library

௨௪. திருப்பழையாறைவடதளி.

திருநாவுக்கரசு நாயனார்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

தலையெலாம்பறிக்குஞ்சமண்கையருள்
நிலையினான்மறைத்தான்மறைக்கொண்ணுமே
அலையினார்பொழிலாறைவடதளி
நிலையினானடியேநினைந்துய்ம்மினே. (௧)

மூக்கினான்முரன்றோதியக்குண்டிகை
தூக்கினார்குலந்தூரறுத்தேதனக்
காக்கினானணியாறைவடதளி
நோக்கினார்க்கில்லையாலருநோய்களே. (௨)

குண்டரைக்குணமில்லரைக்கூறையில்
மிண்டரைத்துரந்தவிமலன்றனை
அண்டரைப்பழையாறைவடதளிக்
கண்டரைத்தொழுதுய்ந்தனகைகளே. (௩)

முடையரைத்தலைமுண்டிக்குமொட்டரைக்
கடையரைக்கடிந்தார்கனல்வெண்மழுப்
படையரைப்பழையாறைவடதளி
உடையரைக்குளிர்ந்துள்குமென்னுள்ளமே. (௪)

ஒள்ளரிக்கணார்முன்னமணின்றுணும்
கள்ளரைக்கடிந்தகருப்பூறலை
அள்ளலம்புன*லாறைவடதளி
வள்ளலைப்புகழத்துயர்வாடுமே. (௫)

நீதியைக்கெடநின்றமணேயுணும்
சாதியைக்கெடுமாசெய்தசங்கரன்
ஆதியைப்பழையாறைவடதளிச்
சோதியைத்தொழுவார்துயர்தீருமே. (௬)

திரட்டிரைக்கவளந்திணிக்குஞ்சமண்
பிரட்டரைப்பிரித்தபெருமான்றனை
அரட்டிறத்தணியாறைவடதளித்
தெருட்டரைத்தொழத்தீவினைதீருமே. (௭)

ஓதினத்தெழுத்தஞ்சுணராச்சமண்
வேதனைப்படுத்தானைவெங்கூற்றுதை
பாதனைப்பழையாறைவடதளி
நாதனைத்தொழநம்வினைநாசமே. (௮)

* அள்ளலைப்புன என்றும் பாடம்.

Koviloor Digital Library

வாயிருந்தமிழேபடித்தாளுறு
ஆயிரஞ்சமணும்மழிவாக்கினான்
பாயிரும்புனலாறைவடதளி
மேயவன்னெனவல்வினைவீடுமே. (கூ)

செருத்தனைச்செயுஞ்சேனைக்கன்றுடல்
எருத்திறவிரலாலிறையூன்றிய
அருத்தனைப்பழையாறைவடதளித்
திருத்தனைத்தொழுவார்வினைதேயுமே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருப்பழையாறைவடதளித்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - சச.

சுவாமி தேவி திருநாமங்கள் - சோமேசர், சோமகலாநாயகி.

திருநாவுக்கரசுநாயனார் திருப்பழையாறையிற்சென்று, அங்கே வடதளி என்னும் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கின்ற சிவலிங்கப்பெருமானைச் சமணர்கள் மறைத்திருத்தலைக் கேள்வியுற்று, சமீபமாகிய ஓரிடத்திற்சென்று, திருவமுதுசெய்யாமல் சுவாமியைத் தியானித்து, "சுவாமி, அடியேன் தேவரீருடைய திருவுருவைக்கண்டு வணங்கியன்றிப் போகேன். அந்தத் திருவுருவை மறைத்த சமணர்களுடைய செய்கையைக் கெடுத்தருளும்" என்று சொல்லிக்கொண்டிருந்தார். சிவபெருமான் அரசனுக்குச் சொப்பனத்திலேதோன்றி, "நாம் சமணர்களால் மறைக்கப்பட்டிருக்கின்றோம். நாவுக்கரசன் நம்மை வெளிப்படக்கண்டு வணங்கவேண்டும் என்று சிந்தித்துக்கொண்டிருக்கின்றான். நீ அந்தச் சமணர்களை அழித்து நமக்கு ஆலயம் செய்யவேண்டும்" என்று அருளிச்செய்து, தாம் இருக்கின்ற இடத்தின் அடையாளங்களைத் தெரிவித்து மறைந்தருளினார். அரசன் விழித்தெழுந்து ஆச்சரியமடைந்து, மந்திரிமாரோடும் விரைவிலே திருக்கோயிலிற்சென்று, சுவாமி அருளிச்செய்த அடையாளத்தின் வழி அவரைக்கண்டு, சமணர்கள் செய்தவஞ்சனையை உணர்ந்து, அப்பமூர்த்தியை வணங்கி, அந்தச் சமணர்களை யானைகளாலே மிதிப்பித்துக் கொன்று, சிவபெருமானுக்கு விமானஞ்செய்து, நிபந்தங்கள் அமைத்தான். அப்பமூர்த்தி உள்ளேபுகுந்து, சுவாமியைத் தரிசித்து, "தலையெலாம்பறிக்குஞ்சமண்கையருள்-நிலையினான்மறைத்தான்மறைக்கொண்ணுமோ-அலையினார்பொழிலாறைவடதளி-நிலையினானடியேநினைந்துய்ம்மினே." என்றுந் திருப்பதிகம்பாடியருளினார்.

உரு. திருவலஞ்சுழி.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

விண்டெலாமலரவ்விரைநாறுதண்டேன்விம்மி
வண்டெலாநசையாலிசைபாடும்வலஞ்சுழித்
தொண்டெலாம்பரவுஞ்சுடர்போலொளியீர்சொலீர்
பண்டெலாம்பலிதேர்ந்தொலிபாடல்பயின்றதே. (க)

Koviloor Digital Library

பாரல்வெண்குருகும்பகுவாயனநாரையும்
வாரல்வெண்டிரைவாயிரைதேரும்வலஞ்சுழி
மூரல்வெண்முறுவன்னகுமொய்யொளியீர்சொலீர்
ஊரல்வெண்டலைகொண்டுலகொக்கவுழன்றதே. (உ)

கிண்ணவண்ணமலருங்கிளர்தாமரைத்தாதளாய்
வண்ணநுண்மணன்மேலனம்வைகும்வலஞ்சுழிச்
சுண்ணவெண்பொடிக்கொண்டுமெய்பூசவலீர்சொலீர்
விண்ணவர்தொழவெண்டலையிற்பலிகொண்டதே. (௩)

கோடெலாநிறையக்குவளைம்மலருங்குழி
மாடெலாமலிநீர்மணநாறும்வலஞ்சுழிச்
சேடெலாமுடையீர்சிறுமான்மறியீர்சொலீர்
நாடெலாமறியத்தலையின்னறவேற்றதே. (௪)

கொல்லைவென்றபுனத்திற்குருமாமணிகொண்டுபோய்
வல்லைநுண்மணன்மேலனம்வைகும்வலஞ்சுழி
முல்லைவெண்முறுவன்னகையாளொளியீர்சொலீர்
சில்லைவெண்டலையிற்பலிகொண்டுழல்செல்வமே. (ரு)

பூசநீர் * பொழியும்புனற்பொன்னியிற்பன்மலர்
வாசநீர்குடைவாரிடர்தீர்க்கும்வலஞ்சுழித்
தேசநீர்திருநீர்சிறுமான்மறியீர்சொலீர்
ஏசவெண்டலை † யிற்பலிகொள்வதிலாமையே. (௬)

கந்தமாமலர்ச்சந்தொடுகாரகிலுந்தழீஇ
வந்தநீர்குடைவாரிடர்தீர்க்கும்வலஞ்சுழி
அந்தநீர்முதனீர்நடுவாமடிகேள்சொலீர்
பந்தநீர்கருதாதுலகிற்பலிகொள்வதே. (௭)

தேனுற்றநறுமாமலர்ச்சோலையில்வண்டினம்
வானுற்றநசையாலிசைபாடும்வலஞ்சுழிக்
கானுற்றகளிற்றின்னுரிபோர்க்கவலீர்சொலீர்
ஊனுற்றதலைகொண்டுலகொக்கவுழன்றதே. (அ)

தீர்த்தநீர்வந்திழிபுனற்பொன்னியிற்பன்மலர்
வார்த்தநீர்குடைவாரிடர்தீர்க்கும்வலஞ்சுழி
ஆர்த்துவந்தவரக்கனையன்றடர்த்தீர்சொலீர்
சீர்த்தவெண்டலையிற்பலிகொள்வதுஞ்சீர்மையே. (௯)

உரமனுஞ்சடையீர்விடையீருமதின்னருள்
வரமனும்பெறலாவதுமெங்கைதவலஞ்சுழிப்
பிரமனுந்திருமாலுமளப்பரியீர்சொலீர்
சிரமெனுங்கலனிற்பலிவேண்டியசெல்வமே. (௧0)

* பூசுநீர் என்றும் பாடம். † ஏசல்வெண்டலை என்றும் பாடம்.

வீடுஞானமும்வேண்டுதிரேல்விரதங்களால்
வாடிஞானமென்னாவதுமெந்தைவலஞ்சுழி
நாடிஞானசம்பந்தனசெந்தமிழ்கொண்டிசை
பாடுஞானம்வல்லாரடிசேர்வதுஞானமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

என்னபுண்ணியஞ்செய்தனைநெஞ்சமே* யிருங்கடல்வையத்து
முன்னநீபுரிநல்வினைப்பயனிடைமுழுமணித்தரளங்கள்
மன்னுகாவிரிசூழ்திருவலஞ்சுழிவாணனைவாயாரப்
பன்னியாதரித்தேத்தியும்பாடியும்வழிபடுமதனாலே. (க)

விண்டொழிந்தனநம்முடைவல்வினைவிரிகடல்வருநஞ்சம்
உண்டிறைஞ்சுவானவர்தமைத்தாங்கியவிறைவனையுலகத்தில்
வண்டுவாழ்குழல் † மங்கையொர்பங்கனைவலஞ்சுழியிடமாகக்
கொண்டநாதன்மெய்த்தொழில்புரிதொண்டரோடினிதிருந்தமையாலே. (உ)

திருந்தலார்புரந்தீயெழச்செறுவனவிறலின் ‡ கடியாரைப்
பரிந்துகாப்பனபத்தியில்வருவனமத்தமாம்பிணிநோய்க்கு
மருந்துமாவனமந்திரமாவனவலஞ்சுழியிடமாக
இருந்தநாயகனிமையவரேத்தியவிணையடித்தலந்தானே. (ங)

கறைகொள்கண்டத்தர்காய்கதிர்நிறத்தினரறத்திறமுனிவர்க்கன்
றிறைவராலிடைநீழலிலிருந்துகந்தினிதருள்பெருமானார்
மறைகளோதுவர்வருபுனல்வலஞ்சுழியிடமகிழ்ந்தருங்கானத்
தறைகழல்சிலம்பார்க்கநின்றாடியவற்புதமறியோமே. (ச)

மண்ணர்நீரர்விண்காற்றினராற்றலாமெரியுருவொருபாகம்
பெண்ணராணெனத்தெரிவருவடிவினர்பெருங்கடற்பவளம்போல்
வண்ணராகிலும்வலஞ்சுழிபிரிகிலார்பரிபவர்மனம்புக்க
எண்ணராகிலுமெனைப்பலவியம்புவரிணையடிதொழுவாரே. (ரு)

ஒருவராலுவமிப்பதையரியதோர்மேனியர்மடமாதர்
இருவராதரிப்பார்பலபூதமும்பேய்களுமடையாளம்
அருவராததோர்வெண்டலைகைப்பிடித்தகந்தொறும்பலிக்கென்று
வருவரேலவர்வலஞ்சுழியடிகளேவரிவளைகவர்ந்தாரே. (சா)

குன்றியூர்குடமூக்கிடம்வலம்புரங்குலவியநெய்த்தானம்
என்றிவ்வூர்களிலோமென்றுமியம்புவரிமையவர்பணிகேட்பார்
அன்றியூர்தமக்குள்ளனவறிகிலோம்வலஞ்சுழியரனார்பால்
சென்றவூர்தனிற்றலைப்படலாமென்றுசேயிழைதளர்வாமே. (எ)

* செய்தனை நெஞ்சமே என்றும் பாடம். † வண்டுவார்குழல் என்றும் பாடம். ‡ விற லின் என்றும் பாடம்.

Koviloor Digital Library

குயிலினேர்மொழிக்கொடியிடைவெருவுறக்குலவரைப்பரப்பாய *
கயிலையைப்பிடித்தெடுத்தவன்கதிர்முடிதோளிருபதுமூன்றி
மயிலினேரனசாயலோடமர்ந்தவன்வலஞ்சுழியெம்மானைப்
பயிலவல்லவர்பரகதிகாண்பவரல்லவர்காணாரே. (அ)

அழலதோம்பியவலர்மிசையண்ணலுமரவணைத்துயின்றானும்
கழலுஞ்சென்னியுங்காண்பரிதாயவர்மாண்பமர்தடக்கையில்
மழலைவீணையர்மகிழ்திருவலஞ்சுழிவலங்கொடுபாதத்தால்
சுழலுமாந்தர்கடொல்வினையதனொடுதுன்பங்கள்களைவாரே. (கூ)

அறிவிலாதவன்சமணர்கள்சாக்கியர்தவம்புரிந்தவஞ்செய்வார்
நெறியலாதனகூறுவர்மற்றவைதேறன்மின்மாறாநீர்
மறியுலாந்திரைக்காவிரிவலஞ்சுழிமருவியபெருமானைப்
பிறிவிலாதவர்பெறுகதிபேசிடிலளவறுப்பொண்ணாதே. (க0)

மாதொர்கூறனைவலஞ்சுழிமருவியமருந்தினைவயற்காழி
நாதன்வேதியன்ஞானசம்பந்தன்வாய்நவிற்றியதமிழ்மாலை
ஆதரித்திசைகற்றுவல்லார்சொலக்கேட்டுகந்தவர்தம்மை
வாதியாவினைமறுமைக்குமிம்மைக்கும்வருத்தம்வந்தடையாவே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பண் - பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

பள்ளமதாயபடர்சடைமேற்பயிலுந்திரைக்கங்கை
வெள்ளமதாரவிரும்பிநின்றவிகிர்தன்விடையேறும்
வள்ளல்வலஞ்சுழிவாணனென்றுமருவிநினைந்தேத்தி
உள்ளமுருகவுணருமின்களுறுநோயடையாவே. (க)

காரணிவெள்ளைமதியஞ்சூடிக்கமழ்புன்சடைதன்மேல்
தாரணிகொன்றையுந்தண்ணெருக்குந்தழையநுழைவித்து
வாரணிகொங்கைநலாடனோடும்வலஞ்சுழிமேவியவர்
ஊரணிபெய்பலிகொண்டுகந்தவுவகையறியோமே. (உ)

பொன்னியலுந்திருமேனிதன்மேற்புரிநூல்பொலிவித்து
மின்னியலுஞ்சடைதாழவேழவுரிபோர்த்தரவாட
மன்னியமாமறையோர்கள்போற்றும்வலஞ்சுழிவாணர்தம்மேல்
உன்னியசிந்தையினீங்ககில்லார்க்குயர்வாம்பிணிபோமே. (ங)

விடையொருபாலொருபால்விரும்புமெல்லியல்புல்கியதோர்
சடையொருபாலொருபாலிடங்கொடாழ்குழல்போற்றிசைப்ப
நடையொருபாலொருபால்சிலம்புநாளும்வலஞ்சுழிசேர்
அடையொருபாலடையாதசெப்புஞ்செய்கையறியோமே. (ச)

* வரைப்டார்ப்பாய என்றும், வரைப்பாற்பாய என்றும், வரைபாற்பாய என்றும் பாடம்.

Koviloor Digital Library

கையமரும்மழுநாகம்வீணைகலைமான்மறியேந்தி
மெய்யமரும்பொடிப்பூசிவீசுங்குழையார்தருதோடும்
பையமரும்மரவாடவாடும்படர்சடையார்க்கிடமாம்
மையமரும்பொழில்சூழும்வேலிவலஞ்சுழிமாநகரே. (ரு)

தண்டொடுசூலந்தழையவேந்தித்தையலொருபாகம்
கண்டிடுபெய்பலிபேணிநாணூர்கரியினுரிதோலர்
வண்டிடுமொய்பொழில்சூழ்ந்தமாடவலஞ்சுழிமன்னியவர்
தொண்டொடுகூடித்துதைந்துநின்றதொடர்பைத்தொடர்வோமே. (சு)

கல்லியலும்மலையங்கைநிங்கவளைத்துவளையாதார்
சொல்லியலும்மதின்மூன்றுஞ்செற்றசுடரானிடர்நீங்க
மல்லியலுந்திரடோளெமாதிவலஞ்சுழிமாநகரே
புல்கியவேந்தனைப்புல்கியேத்தியிருப்பவர்புண்ணியரே. (எ)

வெஞ்சினவாளரக்கன்வரையைவிறலாலெடுத்தான்றோள்
அஞ்சுமொராதிருநான்குமொன்றுமடர்த்தாரழகாய
நஞ்சிருள்கண்டத்துநாதரென்றுநணுகுமிடம்போலும்
மஞ்சுலவும்பொழில்வண்டுகெண்டும்வலஞ்சுழிமாநகரே. (அ)

ஏடியனூன்முகன்சீர்நெடுமாலெனநின்றவர்காணூர்
கூடியகூரெரியாய்நிமிர்ந்தகுழகருலகேத்த
வாடியவெண்டலைகையிலேந்திவலஞ்சுழிமேயவெம்மான்
பாடியநான்மறையாளர்செய்யுஞ்சரிதைபலபலவே. (கூ)

குண்டரும்புத்தருங்கூறையின்றிக்குழுவாருரைநீத்துத்
தொண்டருந்தன்றொழில்பேணிநின்றகழலானழலாடி
வண்டமரும்பொழின்மல்குபொன்னிவலஞ்சுழிவாணனெம்மான்
பண்டொருவேள்விமுனிந்துசெற்றபரிசேபகர்வோமே. (க0)

வாழியெம்மானெனக்கெந்தைமேயவலஞ்சுழிமாநகர்மேல்
காழியுண்ஞானசம்பந்தன்சொன்னகருத்தின்றமிழ்மாலை
ஆழியிவ்வையகத்தேத்தவல்லாரவர்க்குந்தமருக்கும்
ஊழிபொருபெருமின்பமோக்குமுருவும்முயர்வாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

ஓதமார்கடலின்விடமுண்டவர்
பூதநாயகர்பொற்கயிலைக்கிறை
மாதொர்பாகன்வலஞ்சுழியீசனைப்
பாதமேத்தப்பறையுநம்பாவமே. (க)

Koviloor Digital Library

கயிலைநாதன்கறுத்தவர்முப்புரம்
எயில்கடியெழுவெல்வலவித்தகன்
மயில்களாலும்வலஞ்சுழியீசனைப்
பயில்கிலார்சிலர்பாவித்தொழும்பரே. (௨)

இளையகாலமெம்மானையடைகிலாத்
துளையிலாச்செவித்தொண்டர்காணும்முடல்
வளையுங்காலம்வலஞ்சுழியீசனைக்
களைகணுகக்கருதிநீருய்ம்மினே. (௩)

நறைகொள்பூம்புனல்கொண்டெழுமாணிக்காய்க்
குறைவிலாக்கொடுங்கூற்றுதைத்திட்டவன்
மறைகொணுவன்வலஞ்சுழிமேவிய
இறைவனையினியென்றுகொல்காண்பதே. (௪)

விண்டவர்புரமூன்றுமெரிகொளத்
திண்டிறற்சிலையாலெரிசெய்தவன்
வண்டுபண்முரலுந்தண்வலஞ்சுழி
அண்டனுக்கடிமைத்திறத்தாவனே. (௫)

படங்கொள்பாம்பொடுபான்மதியஞ்சடை
அடங்கவாழவல்லானும்பர்தம்பிரான்
மடந்தைபாகன்வலஞ்சுழியானடி
அடைந்தவர்க்கடிமைத்திறத்தாவனே. (௬)

நாக்கொண்டுபரவும்மடியார்வினை
போக்கவல்லபுரிசடைப்புண்ணியன்
மாக்கொள்சோலைவலஞ்சுழியீசன்றன்
நக்கொளப்புரமூன்றெரியானவே. (௭)

தேடுவார்பிரமன்றிருமாலவர்
ஆடுபாதமவருமறிகிலார்
மாடவீதிவலஞ்சுழியீசனைத்
தேடுவானுறுகின்றதென்சிந்தையே. (௮)

கண்பனிக்குங்கைகூப்புங்கண்மூன்றுடை
நண்பனுக்கெனைநான்கொடுப்பேனெனும்
வண்பொனித்தென்வலஞ்சுழிமேவிய
பண்பனிப்பொனைச்செய்தபரிசிதே. (௯)

இலங்கைவேந்தனிருபதுதோளிற
நலங்கொள்பாதத்தொருவிரலூன்றினன்
மலங்குபாய்வயல்சூழ்ந்தவலஞ்சுழி
வலங்கொள்வாரடியென்றலைமேலவே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

———

Koviloor Digital Library

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

அலையார்புனற்கங்கைநங்கைகாணவம்பலத்திலருநட்டமாடிவேடம்
தொலையாதவென்றியார்நின்றியூரு * நெடுங்களமுமேவிவிடையைமேல்கொண்
டிலையார்படைகையிலேந்திபெங்குமிமையவருமுமையவளுமிறைஞ்சியேத்த
மலையார்திரளருவிப்பொன்னிசூழ்ந்தவலஞ்சுழியேபுக்கிடமாமருவினாரே. † ()

திருச்சிற்றம்பலம்.

திருவலஞ்சுழித்திருப்பதிகம் - ௩.

ஆ திருப்பதிகம் - சக.

சுவாமி தேவி திருநாமங்கள் - கபர்த்திசர், பெரியநாயகி.

உசா. திருக்குடமூக்கு. ‡

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

அரவிரிகோடனீடலணிகாவிரியாற்றயலே
மரவிரிபோதுமௌவன்மணமல்லிகைகள்ளவிழும்
குரவிரிசோலைசூழ்ந்தகுழகன்குடமூக்கிடமா
இரவிரிதிங்கள்சூடியிருந்தானவனெம்மிறையே. (க)

ஒத்தரவங்களோடுமொலிகாவிரியாற்றயலே
பூத்தரவங்களோடும்புகைகொண்டடிபோற்றிநல்ல
கூத்தரவங்களோவாக்குழகன்குடமூக்கிடமா
ஏத்தரவங்கள்செய்யவிருந்தானவனெம்மிறையே. (உ)

மயில்பெடைபுல்கியாலமணன்மேன்மடவன்னமல்கும்
பயில்பெடைவண்டுபண்செய்பழங்காவிரிப்பைம்பொழில்வாய்க்
குயில்பெடையோடுபாடலுடையான்குடமூக்கிடமா
இயலொடுவானமேத்தவிருந்தானவனெம்மிறையே. (ங)

மிக்கரைதாழவேங்கையுரிபோர்த்துமையாள்வெருவ
அக்கரவாமையேனமருப்போடவைபூண்டழகார்
கொக்கரையோடுபாடலுடையான்குடமூக்கிடமா
எக்கரையாருமேத்தவிருந்தானவனெம்மிறையே. (ச)

* வென்றியாய்நின்றியூரு என்றும் பாடம். † மன்னினாரே என்றும் பாடம். இத்திருப்பதிகத்தில் ஏனையசெய்யுள்கள் மறைந்துபோயின. ‡ திருக்குடமூக்கு-கும்பகோணம்.

Koviloor Digital Library

வடிவுடைவாட்டடங்கண்ணுமையஞ்சவோர்வாரணத்தைப்
பொடியணிமேனிமூடவுரிகொண்டவன்புன்சடையான்
கொடிநெடுமாடமோங்குங்குழகன்குடமூக்கிடமா
இடிபடுவானமேத்தவிருந்தானவனெம்மிறையே. (௫)

கழைவளர்கவ்வைமுத்தங்கமழ்காவிரியாற்றயலே
தழைவளர்மாவினல்லபலவின்கனிகடயங்கும்
குழைவளர்சோலைசூழ்ந்தகுழகன்குடமூக்கிடமா
இழைவளர்மங்கையோடுமிருந்தானவனெம்மிறையே. (௬)

மலைமலிமங்கைபாகம்மகிழ்ந்தானெழில்வையமுய்யச்
சிலைமலிவெங்கணையாற்சிதைத்தான்புரமூன்றினையும்
குலைமலிதண்பலவின்பழம்வீழ்குடமூக்கிடமா
இலைமலிசூலமேந்தியிருந்தானவனெம்மிறையே. (௭)

நெடுமுடிபத்துடையநிகழ்வாளரக்கன்னுடலைப்
படுமிடர்கண்டயாரப்பருமால்வரைக்கீழடர்த்தான்
கொடுமடறங்குதெங்குபழம்வீழ்குடமூக்கிடமா
இடுமணலெக்கர்சூழவிருந்தானவனெம்மிறையே. (௮)

ஆரெரியாழியானுமலரானுமளப்பரிய
நீரிரிபுன்சடைமேனிரம்பாமதிசூடிநல்ல
கூரெரியாகிநீண்டகுழகன்குடமூக்கிடமா
ஈருரிகோவணத்தோ*டிருந்தானவனெம்மிறையே. (௯)

மூடியசீவரத்தார்முதுமட்டையர்மோட்டமணர்
நாடியதேவரெல்லாநயந்தேத்தியநன்னலத்தான்
கூடியகுன்றமெல்லாமுடையான்குடமூக்கிடமா
ஏடலர்கொன்றைசூடியிருந்தானவனெம்மிறையே. (௧0)

வெண்கொடிமாடமோங்குவிறல்வெங்குருநன்னகரான்
நண்பொடுநின்றசீரான்றமிழ்ஞானசம்பந்தனல்ல
தண்குடமூக்கமர்ந்தானடிசேர்தமிழ்பத்தும்வல்லார்
விண்புடைமேலுலகம்வியப்பெய்துவர்வீடெளிதே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனர்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பூவணத்தவன்புண்ணியனண்ணியங்
காவணத்துடையானடியார்களைத்
தீவணத்திருநீறுமெய்பூசியோர்
கோவணத்துடையான்குடமூக்கிலே. (௧)

பூத்தாடிக்கழியாதேநீர்பூமியீர்
தீத்தாடித்திறஞ்சிந்தையுள்வைம்மினே
வேர்த்தாடுங்காளிதன்விசைதீர்கென்று
கூத்தாடியுறையுங்குடமூக்கிலே. (௨)

* ஈரிருகோவணத்தோ என்றும் பாடம்.

Koviloor Digital Library

நங்கையாளுமையாளுறைநாதனார்
அங்கையாளொடறுபதந்தாழ்சடைக்
கங்கையாளவள்கன்னியெனப்படும்
கொங்கையாளுறையுங்குடமூக்கிலே. (௩)

ஓதாநாவன்றிறத்தையுரைத்திரேல்
ஏதாலும்மினிதாகும்மியமுனை
சேதாவேறுடையானமர்ந்தவிடம்
கோதாவிரியுறையுங்குடமூக்கிலே. (௪)

நக்கரையனைநாடொறுநன்னெஞ்சே
வக்கரையுறைவானைவணங்குநீ
அக்கரையோடரவரையார்த்தவன்
கொக்கரையுடையான்குடமூக்கிலே. (௫)

துறவிநெஞ்சினராகியதொண்டர்காள்
பிறவிநீங்கப்பிதற்றுமின்பித்தராய்
மறவனாய்ப்பார்த்தன்மேற்கணைதொட்டவெம்
குறவனாருறையுங்குடமூக்கிலே. (௬)

தொண்டராகித்தொழுதுபணிமினோ
பண்டைவல்வினைபற்றறவேண்டுவீர்
விண்டவர்புரமூன்றொருமாத்திரைக்
கொண்டவன்னுறையுங்குடமூக்கிலே. (௭)

காமியஞ்செய்துகாலங்கழியாதே
ஓமியஞ்செய்தங்குள்ளத்துணர்மினோ
சாமியோடுசரச்சுவதியவள்
கோமியும்முறையுங்குடமூக்கிலே. (௮)

சிரமஞ்செய்துசிவனுக்குப்பத்தராய்ப்
பாமனைப்பலநாளும்பயிற்றுமின்
பிரமன்மாலொடுமற்றொழிந்தார்க்கெலாம்
குரவனாருறையுங்குடமூக்கிலே. (௯)

அன்றுதானரக்கன்கயிலாயத்தைச்
சென்றுதானெடுக்கவுமையஞ்சலும்
நன்றுதானக்குநல்விரலூன்றிப்பின்
கொன்றுகீதங்கேட்டான்குடமூக்கிலே.* (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருக்குடமூக்குத்திருப்பதிகம் - ௨.

ஆ_ திருப்பதிகம் - ௫௧.

சுவாமி தேவி திருநாமங்கள் - கும்பேசர், மங்களநாயகி.

* இத்திருப்பதிகத்தில் ௫-ம் திருப்பாட்டு ஏழாவதாகவும், ௬-ம் ,,எட்டாவதாகவும், ௭-ம் ,, ஒன்பதாவதாகவும், ௮-ம் ,, ஐந்தாவதாகவும், ௯-ம் ,, ஆறாவதாகவும் சில ஏட்டுப்பிரதிகளில் காணப்படுகின்றன.

Koyiloor Digital Library

௨எ. திருக்குடந்தைக்கீழ்க்கோட்டம்.

திருநாவுக்கரசுநாயனர்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

சொன்மலிந்தமறைநான்காறங்கமாகிச்
சொற்பொருளுங்கடந்தசுடர்ச்சோதிபோலும்
கன்மலிந்தகயிலைமலைவாணர்போலும்
கடனஞ்சமுண்டிருண்டகண்டர்போலும்
மன்மலிந்தமணிவரைத்திண்டோளர்போலும்
மலையரையன்மடப்பாவைமணாளர்போலும்
கொன்மலிந்தமூவிலைவேற்குழகர்போலும்
குடந்தைக்கீழ்க்கோட்டத்தெங்கூத்தனரே. (௧)

கானவிளங்கலிமறவனாகிப்பார்த்தன்
கருத்தளவுசெருத்தொகுதிகண்டார்போலும்
ஆனவிளங்கடுவிடையொன்றேறியண்டத்
தப்பாலும்பலிதிரியுமழகர்போலும்
தேனவிளந்துவலைமலிதென்றன்முன்றிற்
செழும்பொழிற்பூம்பாளைவிரிதேறனாறும்
கூனவிளம்பிறைதடவுகொடிகொண்மாடக்
குடந்தைக்கீழ்க்கோட்டத்தெங்கூத்தனரே. (௨)

நீறலைத்ததிருவுருவுநெற்றிக்கண்ணு
நிலாவலைத்தபாம்பினொடுநிறைநீர்க்கங்கை
ஆறலைத்தசடைமுடியுமம்பொற்றோளு
மடியவர்க்குக்காட்டியருள்புரிவார்போலும்
ஏறலைத்தநிமிர்கொடியொன்றுடையர்போலு
மேழுலகுந்தொழுகழலெம்மீசர்போலும்
கூறலைத்தமலைமடந்தைகொழுநர்போலுங்
குடந்தைக்கீழ்க்கோட்டத்தெங்கூத்தனரே. (௩)

தக்கனதுபெருவேள்விதகர்த்தார்போலுஞ்
சந்திரனைக்கலைகவர்ந்துதரித்தார்போலும்*
செக்கரொளிபவளவொளிமின்னின்சோதி
செழுஞ்சுடர்த்தீஞாயிறெனச்செய்யர்போலும்
மிக்கதிறன்மறையவரால்விளங்குவேள்வி
மிகுபுகைபோய்விண்பொழியக்கழனியெல்லாம்
கொக்கினியகனிசிதறித்தேறல்பாயுங்
குடந்தைக்கீழ்க்கோட்டத்தெங்கூத்தனரே. (௪)

* தவிர்த்தார்போலும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

காலன்வலிதொலைத்தகழற்காலர்போலுங்
காமனெழிலழல்விழுங்கக்கண்டார்போலும்
ஆலதனிலறநால்வர்க்களித்தார்போலு
மாணொடுபெண்ணலியல்லானார்போலும்
நீலவுருவயிரநிரைபச்சைசெம்பொ
னெடும்பளிங்கென்றறிவரியநிறத்தார்போலும்
கோலமணிகொழித்திழியும்பொன்னிநன்னீர்க்
குடந்தைக்கீழ்க்கோட்டத்தெங்கூத்தனாரே. (௫)

முடிகொண்டவளர்மதியுமூன்றாய்த்தோன்று
மூவிளஞாயிறன்னமலர்க்கண்கண்மூன்றும்
அடிகொண்டசிலம்பொலியுமருளார்சோதி
யணிமுறுவற்செவ்வாயுமழகாய்த்தோன்றத்
துடிகொண்டவிடைமடவாள்பாகங்கொண்டு
சுடர்ச்சோதிக்கடிச்செம்பொன் * மலைபோலிந்நாள்
குடிகொண்டென்மனத்தகத்தேபுகுந்தார்போலுங்
குடந்தைக்கீழ்க்கோட்டத்தெங்கூத்தனாரே. (௬)

காரிலங்குதிருவுருவத்தவற்குமற்றைக்
கமலத்திற்காரணற்குங்காட்சியொண்ணாச்
சீரிலங்குதழற்பிழம்பிற்சிவந்தார்போலுஞ்
சிலைவளைவித்தவுணர்புரஞ்சிதைத்தார்போலும்
பாரிலங்குபுனலனல்கால்பரமாகாசம்
பரிதிமதிசுருதியுமாய்ப்பரந்தார்போலும்
கூரிலங்குவேற்குமரன்றாதைபோலுங்
குடந்தைக்கீழ்க்கோட்டத்தெங்கூத்தனாரே. (௭)

பூச்சூழ்ந்தபொழினறுவுபுகலூருள்ளார்
புறம்பயத்தாரம்புரிபூந்துருத்திபுக்கு
மாச்சூழ்ந்தபழனத்தார்நெய்த்தானத்தார்
மாதவத்துவளர்சோற்றுத்துறையார்நல்ல
நீச்சூழ்ந்தகிரிதிருமாலுக்கிந்து
திருவானைக்காவிலோர்சிலந்திக்கந்நாள்
கோச்சோழர்குலத்தரசுகொடுத்தார்போலுங்
குடந்தைக்கீழ்க்கோட்டத்தெங்கூத்தனாரே. (௮)

பொங்கரவர்புலித்தோலர்புராணர்மார்பிற்
பொறிகிளர்வெண்பூணூற்புனிதர்போலும்
சங்கரவக்கடன்முகடுதட்டவிட்டுச்
சதுரநடமாட்டுகந்தசைவர்போலும்
அங்கரவத்திருவடிக்காட்பிழைப்பத்தந்தை
யந்தணனையறவெறிந்தார்க்கருளப்போதே
கொங்கரவச்சடைக்கொன்றைகொடுத்தார்போலுங்
குடந்தைக்கீழ்க்கோட்டத்தெங்கூத்தனாரே. (௯)

* சுடர்ச்சோதிகடிசெம்பொன் என்றும் பாடம்.

Koviloor Digital Library

ஏவியிடர்க்கடலிடைப்பட்டிளைக்கின்றேனை
யிப்பிறவியறுத்தேறவாங்கியாங்கே
கூவியமருலகனைத்து * முருவிப்போகக்
குறியிலறுகுணத்தாண்டுகொண்டார்போலும்
தாவிமுதற்காவிரிநல்யமுனைகங்கை
தலைச்சதி † பொற்றாமரைபுட்கரணிதென்னீர்க்
கோவியொடுகுமரிவருதீர்த்தஞ்சூழ்ந்த
குடந்தைக்கீழ்க்கோட்டத்தெங்கூத்தனாரே. (கo)

செறிகொண்டசிந்தைதனுட்டெளிந்துதேறித்
தித்திக்குஞ்சிவபவனத்தமுதம் ‡ போலும்
நெறிகொண்டகுழலியுமைபாகமாக
நிறைந்தமார்கணம்வணங்கநின்றார்போலும்
மறிகொண்டகரதலத்தெம்மைந்தர்போலு
மதிளிலங்கைக்கோன்மலங்கவரைக்கீழிட்டுக்
குறிகொண்டவின்னிசைகேட்டுகந்தார்போலுங்
குடந்தைக்கீழ்க்கோட்டத்தெங்கூத்தனாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருக்குடந்தைக்கீழ்க்கோட்டத்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம். - ௫உ.

சுவாமி தேவி திருநாமங்கள் – மடந்தைபாகர், பெரியநாயகி.

உஅ. திருக்குடந்தைக்காரோணம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

வாரார்கொங்கைமாதோர்பாகமாகவார்சடை
நீரார்கங்கைதிங்கள்சூடிநெற்றியொற்றைக்கண்
கூரார்மழுவொன்றேந்தியந்தண்குழகன்குடமூக்கில்
காரார்கண்டத்தெண்டோளெந்தைகாரோணத்தாரே. (க)

முடியார்மன்னர்மடமான்விழியார்மூவுலகும்மேத்தும்
படியார்பவளவாயார்பலரும்பரவிப்பணிந்தேத்தக்
கொடியார்விடையார்மாடவீதிக்குடந்தைக்குழகாரும்
கடியார்சோலைக்கலவமயிலார்காரோணத்தாரே. (உ)

மலையார்மங்கைபங்கரங்கையனலர்மடலாரும்
குலையார்தெங்குகுளிர்கொள்வாழையழகார்குடமூக்கில்
முலையாரணிபொன்முளைவெண்ணகையார்மூவாமதியினர்
கலையார்மொழியார்காதல்செய்யுங்காரோணத்தாரே. (ங)

* கூவிமலருலகனைத்து என்றும், கூவியவருலகனைத்து என்றும் பாடம். † சரசுவதியென்பாருமுளர். ‡ சிவபுவனத்தமுதம் என்றும் பாடம்.

Koyiloor Digital Library

போதார்புனல்சேர்கந்தமுந்திப்பொலியவ்வழகாரும்
தாதார்பொழில்சூழ்ந்தெழிலார்புறவிலந்தண்குடமூக்கில்
மாதார்மங்கைபாகமாகமனைகள்பலிதேர்வார்
காதார்குழையர்காளகண்டர்காரோணத்தாரே. (௪)

பூவார்பொய்கையலர்தாமரைசெங்கழுநீர்புறமெல்லாம்
தேவார்சிந்தைபந்தனுளர்சிராலடிபோற்றக்
கூவார்குயில்களாலுமயில்களின்சொற்கிளிப்பிள்ளை
காவார்பொழில்சூழ்ந்தழகார்குடந்தைக்காரோணத்தாரே. (௫)

முப்பூர்நலியநெதிபார்விதிபாய்முன்னேயனல்வாளி
கோப்பார்பார்த்தனிலைகண்டருளுங்குழகர்குடமூக்கில்
நிர்ப்பாருடலிலடுநோயவலம்வினைகளலியாமைக்
காப்பார்காலனடையாவண்ணங்காரோணத்தாரே. (௬)

ஊனார்தலைகையேந்திபுலகம்பலிதேர்ந்தழல்வாழ்க்கை
மானார்தோலார்புலியினுடையார்கரியின்னுரிபோர்வை
தேனார்மொழியார்திளைத்தங்காடித்திகழுங்குடமூக்கில்
கானார்நட்டமுடையார்செல்வக்காரோணத்தாரே. (௭)

வரையார்திரடோண்மதவாளரக்கனெடுப்பமலைசேரும்
விரையார்பாதநுதியாலூன்றநெரிந்துசிரம்பத்தும்
உரையார்கீதம்பாடக்கேட்டங்கொளிவாள்கொடுத்தாரும்
கரையார்பொன்னிசூழ்தண்குடந்தைக்காரோணத்தாரே. (௮)

கரியமாலுஞ்செய்யபூமேலயனுங்கழறிப்போய்
அரியவண்டந்தேடிப்புக்குமளக்கவொண்கிலார்
தெரியவரியதேவர்செல்வந்திகழுங்குடமூக்கில்
கரியகண்டர்காலகாலர்காரோணத்தாரே. (௯)

நாணாமணர்நல்லதறியார்நாளுங்குரத்திகள்
பேணார்தூய்மைமாசுகழியார் * பேசேலவரோடும்
சேணார்மதிதோய்மாடமல்குசெல்வநெடுவீதிக்
கோணாகமொன்றுடையார்குடந்தைக்காரோணத்தாரே. (௧௦)

கருவார்பொழில்சூழ்ந்தழகார்செல்வக்காரோணத்தாரைத்
திருவார்செல்வமல்குசண்பைத்திகழுஞ்சம்பந்தன்
உருவார்செஞ்சொன்மாலையிவைபத்துரைப்பாருலகத்துக்
கருவார்பிடம்பைப்பிறப்பதறுத்துக்கவலைகழிவாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருக்குடந்தைக்காரோணத்திருப்பதிகம் - ௧.

ஆ. திருப்பதிகம் - ௫௭.

சுவாமி தேவி திருநாமங்கள் - சோமநாதர், தேனார்மொழியாள்.

* பே. ஞர்தாய்மையாசுகழியார் என்றும் பாடம்.

Koviloor Digital Library

உகூ. திருநாகேச்சரம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

பொன்னேர்தருமேனியனேபுரியும்
மின்னேர்சடையாய்விரைகாவிரியின் *
நன்னீர்வயனாகேச்சரநகரின்
மன்னேயெனவல்வினைமாய்ந்தறுமே. (க)

சிறவார்புரமூன்றெரியச்சிலையில்
உறவார்கணையுய்த்தவனேயுயரும்
நறவார்பொழினாகேச்சரநகருள்
அறவாவெனவல்வினையாசறுமே. (உ)

கல்லானிழன்மேயவனேகரும்பின்
வில்லானெழில்வேவவிழித்தவனே
நல்லார்தொழுநாகேச்சரநகரில்
செல்வாவெனவல்வினைதேய்ந்தறுமே. (ங)

நகுவான்மதியோடரவும்புனலும்
தகுவார்சடையின்முடியாய்தளவம்
நகுவார்பொழினாகேச்சரநகருள்
பகவாவெனவல்வினைபற்றறுமே. (ச)

கலைமான்மறியுங்கனலும்மழுவும்
நிலையாகியகையினனேநிகழும்
நலமாகியநாகேச்சரநகருள்
தலைவாவெனவல்வினைதானறுமே. (ரு)

குரையார்கழலாடநடங்குலவி
வரையான்மகள்காணமகிழ்ந்தவனே
நரையார்விடையேறுநாகேச்சரத்தெம்
அரைசேயெனநீங்குமருந்துயரே. (சு)

முடையார்தருவெண்டலைகொண்டுலகில்
கடையார்பலிகொண்டுழல்காரணனே
நடையார்தருநாகேச்சரநகருள்
சடையாவெனவல்வினைதானறுமே. (எ)

ஓயாதவரக்கனொடிந்தலற
நீயாரருள்செய்துநிகழ்ந்தவனே
வாயாரவழுத்துவர்நாகேச்சரத்
தாயேயெனவல்வினைதானறுமே. (அ)

* விரிகாவிரியின் என்றும் பாடம்.

Koviloor Digital Library

நெடியானொடுநான்முகனேடலுறச்
சுடுமாலெரியாய்நிமிர்சோதியனே
நடுமாவயனாகேச்சரநகரே
இடமாவுறைவாயெனவின்புறுமே. (௯)

மலம்பாவியகையொடுமண்டையதுண்
கலம்பாவியர்கட்டுரைவிட்டுலகில்
நலம்பாவியநாகேச்சரநகருள்
சிலம்பாவெனத்தீவினைதேய்ந்தறுமே. (௰)

கலமார்கடல்சூழ்தருகாழியர்கோன்
தலமார்தருசெந்தமிழின்விரகன்
நலமார்தருநாகேச்சரத்தரனைச்
சொலமாலைகள்சொல்லநிலாவினையே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

பண் - செவ்வழி.

திருச்சிற்றம்பலம்.

தழைகொள்சந்தும்மகிலும்மயிற்பீலியுஞ்சாதியின்
பழமுமுந்திப்புனல்பாய்பழங்காவிரித்தென்கரை
நழுவில்வானோர்தொழநல்குசீர்மல்குநாகேச்சரத்
தழகர்பாதந்தொழுதேத்தவல்லார்க்கழகாகுமே. (௧)

பெண்ணொர்பாகம்மடையச்சடையிற்புனல்பேணிய
வண்ணமானபெருமான்மருவும்மிடமண்ணுளார்
நண்ணிநாளுந்தொழுதேத்திநன்கெய்துநாகேச்சரம்
கண்ணினாற்காணவல்லாரவர்கண்ணுடையார்களே. (௨)

குறவர்கொல்லைப்புனங்கொள்ளைகொண்டும்மணிகுலவுநீர்
பறவையாலப்பரக்கும்பழங்காவிரித்தென்கரை
நறவநாறும்பொழில்சூழ்ந்தழகாயநாகேச்சரத்
திறைவர்பாதந்தொழுதேத்தவல்லார்க்கிடரில்லையே. (௩)

கூசநோக்காதுமுன்சொன்னபொய்கொடுவினைகுற்றமும்
நாசமாக்கும்மனத்தார்கள்வந்தாடுநாகேச்சரம்
தேசமாக்குந்திருக்கோயிலாக்கொண்டசெல்வன்கழல்
நேசமாக்குந்திறத்தாரறத்தார்நெறிப்பாலரே. (௪)

வம்புநாறும்மலரும்மலைப்பண்டமுங்கொண்டுநீர்
பைம்பொன்வாரிக்கொழிக்கும்பழங்காவிரித்தென்கரை
நம்பனாருமமர்கின்றநாகேச்சரநண்ணுவார்
உம்பர்வானோர்தொழச்சென்றுடனாவதுமுண்மையே. (௫)

Koviloor Digital Library

காளமேகந்நிறக்காலனோடந்தகன்கருடனும்
நீளமாய்நின்றெய்தகாமனும்பட்டனநினைவுறின்
நாளுநாதனமர்கின்றநாகேச்சரநண்ணுவார்
கோளுநாளுந்தீயவேனுநன்காங்குறிக்கொண்மினே. (௬)

வேயுதிர்முத்தொடுமத்தயானைமருப்பும்விராய்ப்
பாய்புனல்வந்தலைக்கும்பழங்காவிரித்தென்கரை
நாயிறுந்திங்களுங்கூடிவந்தாடுநாகேச்சரம்
மேயவன்றன்னடிபோற்றியென்பார்வினைவீடுமே. (௭)

இலங்கைவேந்தன்சிரம்பத்திரட்டியெழிற்றோள்களும்
மலங்கிவீழ்மலையாலடர்த்தானிடமல்கிய
நலங்கொள்சிந்தையவர்நாடொறுநண்ணுநாகேச்சரம்
வலங்கொள்சிந்தையுடையாரிடராயினமாயுமே. (௮)

கரியமாலும்மயனும்மடியும்முடிகாண்பொணு
எரியதாகிந்நிமிர்ந்தானமரும்மிடமீண்டுகா
விரியினீர்வந்தலைக்குங்கரைமேவுநாகேச்சரம்
பிரிவிலாதவ்வடியார்கள்வானிற்பிரியார்களே. (௯)

தட்டிடுக்கியுறிதூக்கியகையினர்சாக்கியர்
கட்டுரைக்கும்மொழிகொள்ளலும்வெள்ளிலங்காட்டிடை
நட்டிருட்கண்ணடமாடியநாதனுகேச்சரம்
மட்டிருக்கும்மலரிட்டடிவீழ்வதுவாய்மையே. (௧௦)

கந்தநாறும்புனற்காவிரித்தென்கரைக்கண்ணுதல்
நந்திசேருந்திருநாகேச்சரத்தின்மேன்ஞானசம்
பந்தனுவிற்பனுவல்லிவைபத்தும்வல்லார்கள்போய்
எந்தையீசனிருக்கும்முலகெய்தவல்லார்களே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனுர்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

கச்சைசேரரவர்போலுங்கறையணிமிடறர்போலும்
பிச்சைகொண்டுண்பர்போலும்பேரருளாளர்போலும்
இச்சையான்மலர்கடூவியிரவொடுபகலுந்தம்மை
நச்சுவார்க்கினியர்போலுநாகவீச்சரவனுரே. (௧)

வேடுறுவேடராகிவிசயனோடெய்தார்போலும்
காடுறுபதியர்போலுங்கடிபுனற்கங்கைநங்கை
சேடெறிசடையர்போலுந்தீவினைதீர்க்கவல்ல
நாடறிபுகழர்போலுநாகவீச்சரவனுரே. (௨)

Koviloor Digital Library

கற்றுணைவில்லதாகக்கடியரண்செற்றார்போலும்
பொற்றுணைப்பாதர்போலும்புலியதளுடையர்போலும்
சொற்றுணைமாலைகொண்டுதொழுதெழுவார்கட்கெல்லாம்
நற்றுணையாவர்போலுநாகவீச்சரவனாரே. (௩)

கொம்பனாள்பாகர்போலுங்கொடியுடைவிடையர்போலும்
செம்பொனாருருவர்போலுந்திகழ்திருநீற்றர்போலும்
எம்பிரானெம்மையாளுமிறைவனேயென்றுதம்மை
நம்புவார்க்கன்பர்போலுநாகவீச்சரவனாரே. (௪)

கடகரியுரியர்போலுங்கனன்மழுவாளர்போலும்
படவரவரையர்போலும்பாரிடம்பலவுங்கூடிக்
குடமுடைமுழவமார்ப்பக்கூளிகள்பாடநாளும்
நடநவிலடிகள்போலுநாகவீச்சரவனாரே. (௫)

பிறையுறுசடையர்போலும்பெண்ணொருபாகர்போலும்
மறையுறுமொழியர்போலுமான்மறையவன்றனோடும்
முறைமுறையமரர்கூடிமுடிகளால்வணங்கநின்ற
நறவமர்கழலர்போலுநாகவீச்சரவனாரே. (௬)

வஞ்சகர்க்கரியர்போலுமருவினார்க்கெளியர்போலும்
குஞ்சரத்துரியர்போலுங்கூற்றினைக்குமைப்பர்போலும்
விஞ்சையரிரியவன்றுவேலைவாய்வந்தெழுந்த
நஞ்சணிமிடறர்போலுநாகவீச்சரவனாரே. (௭)

போகமார்மோடிகொங்கைபுணர்தருபுனிதர்போலும்*
வேகமார்விடையர்போலும்வெண்பொடியாடுமேனிப்
பாகமாலுடையர்போலும்பருப்பதவில்லர்போலும்
நாகநாணுடையர்போலுநாகவீச்சரவனாரே. (௮)

கொக்கரைதாளம்வீணைபாணிசெய்குழகர்போலும்
அக்கரையணிவர்போலுமைந்தலையரவர்போலும்
வக்கரையமர்வர்போலுமாதரைமையல்செய்யும்
நக்கரையுருவர்போலுநாகவீச்சரவனாரே. (௯)

வின்மையாற்புரங்கண்மூன்றும்வெந்தழல்விரித்தார்போலும்
தன்மையாலமரர்தங்கடலைவர்க்குந்தலைவர்போலும்
வன்மையான்மலையெடுத்தான்வலியினைத்தொலைவித்தாங்கே
நன்மையாலளிப்பர்போலுநாகவீச்சரவனாரே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

* புணர்ந்தருள்புனிதர்போலும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

நல்லர்நல்லதோர்நாகங்கொண்டாட்டுவர்
வல்லர்வல்வினைதீர்க்குமருந்துகள்
பல்லிலோடுகையேந்திப்பலிதிரி
செல்வர்போற்றிருநாகேச்சரவரே. (௧)

நாவலம்பெருந்தீவினில்வாழ்பவர்
மேவிவந்துவணங்கிவினையொடு
பாவமாயினபற்றறுவித்திடும்
தேவர்போற்றிருநாகேச்சரவரே. (௨)

ஓதமார்கடலின்விடமுண்டவர்
ஆதியாரயன்மாலொடமரர்க்கெலாம்
மாதொர்கூறர்மழுவலனேந்திய
நாதர்போற்றிருநாகேச்சரவரே. (௩)

சந்திரனொடுசூரியர்தாமுடன்
வந்துசீர்வழிபாடுகள்செய்தபின்
ஐந்தலையரவின்பணிகொண்டருள்
மைந்தர்போன்மணிநாகேச்சரவரே. (௪)

பண்டொர்நாளிகழ்வான்பழித்தக்கனார்
கொண்டவேள்விக்குமண்டையதுகெடத்
தண்டமாவிதாதாவின்றலைகொண்ட
செண்டர்போற்றிருநாகேச்சரவரே. (௫)

வம்புபூங்குழன்மாதுமறுகவோர்
கம்பயானையுரித்தகரத்தினர்
செம்பொனாரிதழிம்மலர்ச்செஞ்சடை
நம்பர்போற்றிருநாகேச்சரவரே. (௬)

மானையேந்தியகையினர்மையறு
ஞானச்சோதியராதியர்நாமந்தான்
ஆனவஞ்செழுத்தோதவந்தண்ணிக்கும்
தேனர்போற்றிருநாகேச்சரவரே. (௭)

கழல்கொள்காலினர்காலனைக்காய்ந்தவர்
தழல்கொண்மேனியர்சாந்தவெண்ணீறணி
அழகரானிழற்கீழறமோதிய
குழகர்போற்குளிர்நாகேச்சரவரே. (௮)

வட்டமாமதின்மூன்றுடன்வல்லரண்
சுட்டசெய்கைபராகிலுஞ்சூழ்ந்தவர்
குட்டவல்வினைதீர்த்துக்குளிர்விக்கும்
சிட்டர்போற்றிருநாகேச்சரவரே. (௯)

Koyiloor Digital Library

தூர்த்தன்றோண்முடிதாளுந்தொலையவே
சேர்த்தினார்திருப்பாதத்தொருவிரல்
ஆர்த்துவந்துலகத்தவராடிடும்
தீர்த்தர்போற்றிருநாகேச்சரவரே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

தாயவனைவானோர்க்குமேனோருக்குந்
தலையவனைமலையவனையுலகமெல்லாம்
ஆயவனைச்சேயவனையணியான்றன்னை
யழலவனைநிழலவனையறியவொண்ணா
மாயவனைமறையவனைமறையோர்தங்கள்
மந்திரனைத்தந்திரனைவளராநின்ற
தீயவனைத்திருநாகேச்சரத்துளானைச்
சேராதார்நன்னெறிக்கட்சேராதாரே. (௧)

உரித்தானைமதவேழந்தன்னைமின்னா
ரொளிமுடியெம்பெருமானையுமையோர்பாகம்
தரித்தானைத்தரியலர்தம்புரமெய்தானைத்
தன்னடைந்தார்தம்வினைநோய்பாவமெல்லாம்
அரித்தானையாலதன்கீழிருந்துநால்வர்க்
கறம்பொருள்வீடின்பமாறங்கம்வேதம்
தெரித்தானைத்திருநாகேச்சரத்துளானைச்
சேராதார்நன்னெறிக்கட்சேராதாரே. (௨)

காரானையுரிபோர்த்தகடவுடன்னைக்
காதலித்துநினையாதகயவர்நெஞ்சில்
வாரானைமதிப்பவர்தம்மனத்துளானை
மற்றொருவர்தன்னொப்பாரொப்பிலாத
ஏரானையிமையவர்தம்பெருமான்றன்னை
யியல்பாகியுலகெலாநிறைந்துமிக்க
சீரானைத்திருநாகேச்சரத்துளானைச்
சேராதார்நன்னெறிக்கட்சேராதாரே. (௩)

தலையானையெவ்வுலகுந்தானானானைத்
தன்னுருவம்யாவர்க்குமறியவொண்ணா
நிலையானைநேசர்க்குநேசன்றன்னை
நீள்வானமுகடதனைத்தாங்கிநின்ற
மலையானைவரியரவுநாணாக்கோத்து
வல்லசுரர்புரமூன்றுமடியவெய்த
சிலையானைத்திருநாகேச்சரத்துளானைச்
சேராதார்நன்னெறிக்கட்சேராதாரே. (௪)

Koviloor Digital Library

மெய்யானைத்தன்பக்கல்விரும்புவார்க்கு
விரும்பாதவரும்பாவியவர்கட்கென்றும்
பொய்யானைப்புறங்காட்டிலாடலானைப்
பொன்பொதிந்த*சடையானைப்பொடிகொள்பூதிப்
பையானைப்பையரவமசைத்தான்றன்னைப்
பரந்தானைப்பவளமால்வரைபோன்மேனிச்
செய்யானைத்திருநாகேச்சரத்துளானைச்
சேராதார்நன்னெறிக்கட்சேராதாரே. (ரு)

துறந்தானையறம்புரியாத்துரிசர்தம்மைத்
தோத்திரங்கள்பலசொல்லிவானோரேத்த
நிறைந்தானைநீர்நிலந்தீவெளிகாற்றாகி
நிற்பனவுநடப்பனவுமாயினானை
மறந்தானைத்தன்னினையாவஞ்சர்தம்மை
யஞ்செழுத்தும்வாய்நவிலவல்லோர்க்கென்றும்
சிறந்தானைத்திருநாகேச்சரத்துளானைச்
சேராதார்நன்னெறிக்கட்சேராதாரே. (சு)

மறையானைமால்விடையொன்றூர்தியானை
மால்கடனஞ்சுண்டானைவானோர்தங்கள்
இறையானையென்பிறவித்துயர்தீர்ப்பானை
யின்னமுதைமன்னியசிரேகம்பத்தில்
உறைவானையொருவருமீங்கறியாவண்ண
மென்னுள்ளத்துள்ளேயொளித்துவைத்த
சிறையானைத்திருநாகேச்சரத்துளானைச்
சேராதார்நன்னெறிக்கட்சேராதாரே. (எ)

எய்தானைப்புரமூன்றுமிமைக்கும்போதி
லிருவிசும்பில்வருபுனலைத்திருவார்சென்னிப்
பெய்தானைப்பிறப்பிலியையறத்தினில்லாப்
பிரமன்றன்சிரமொன்றைக்கரமொன்றினால்
கொய்தானைக்கூத்தாடவல்லான்றன்னைக்
குறியிலாக்கொடியேனையடியேனாகச்
செய்தானைத்திருநாகேச்சரத்துளானைச்
சேராதார்நன்னெறிக்கட்சேராதாரே. (அ)

அளியானையண்ணிக்குமான்பாறன்னை †
வான்பயிரையப்பயிரின்வாட்டந்தீர்க்கும்
துளியானையயன்மாலுந்தேடிக்காணாச் ‡
சுடரானைத்துரிசறத்தொண்டுபட்டார்க்
கெளியானையாவர்க்குமரியான்றன்னை
யின்கரும்பின்றன்னுள்ளாலிருந்ததேறற்
றெளியானைத்திருநாகேச்சரத்துளானைச்
சேராதார்நன்னெறிக்கட்சேராதாரே. (௯)

* பொலிந்த என்றும் பாடம். † யண்ணிக்குமன்பன்றன்னை என்றும், அண்ணிக்குமாண்பன்றன்னை என்றும்பாடம். ‡ மாலுநேடிக்காணாச் என்றும் பாடம்.

Koviloor Digital Library

சீர்த்தானையுலகேழுஞ்சிறந்துபோற்றச்
சிறந்தானைநிறைந்தோங்குசெல்வன்றன்னைப்
பார்த்தானைமதனவேள்பொடியாய்வீழப்
பனிமதியஞ்சடையானைப்புநிதன்றன்னை
ஆர்த்தோடிமலையெடுத்தவரக்கனஞ்ச
வருவிரலாலடர்த்தானையடைந்தோர்பாவம்
தீர்த்தானைத்திருநாகேச்சரத்துளானைச்
சேராதார்நன்னெறிக்கட்சேராதாரே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

பிறையணிவாணுதலாளுமையாளவள்பேழ்கணிக்க
நிறையணிநெஞ்சனுங்கநீலமால்விடமுண்டதென்னே
குறையணிகுல்லை* முல்லையளைந்துகுளிர்மாதவிமேல்
சிறையணிவண்டுகள்சேர்திருநாகேச்சரத்தரனே. (௧)

அருந்தவமாமுனிவர்க்கருளாகியோராலதன்கீழ்
இருந்தறமேபுரிதற்கியல்பாகியதென்னைகொலாம்
குருந்தயலேகுரவம்மரவின்னெயிறேற்றரும்பச்
செருந்திசெம்பொன்மலருந்திருநாகேச்சரத்தரனே. (௨)

பாலனதாருயிர்மேற்பரியாதுபகைத்தெழுந்த†
காலனைவிடுவித்துக்கருத்தாக்கிய‡தென்னைகொலாம்
கோலமலர்க்குவளைகழுநீர்வயல்சூழ்கிடங்கில்
சேலொடுவாளைகள்பாய்திருநாகேச்சரத்தரனே. (௩)

குன்றமலைக்குமரிகொடியேரிடையாள்வெருவ
வென்றிமதகரியின்னுரிபோர்த்ததுமென்னைகொலாம்
முன்றிலிளங்கமுகின்முதுபாளைமதுவளைந்து
தென்றல்புகுந்துலவுந்திருநாகேச்சரத்தரனே. (௪)

அரைவிரிகோவணத்தோடரவார்த்தொருநான்மறைநூல்
உரைபெருகவ்வுரைத்தன்றுகந்தருள்செய்ததென்னே
வரைதருமாமணியும்வரைச்சந்தகிலோடுமுந்தித்
திரைபொருதண்பழனத்திருநாகேச்சரத்தரனே. (௫)

தங்கியமாதவத்தின்றழல்வேள்வியினின்றெழுந்த
சிங்கமுநீள்புலியுஞ்செழுமால்கரியோடலறப்
பொங்கியபோர்புரிந்துபிளந்தீருரிபோர்த்ததென்னே
செங்கயல்பாய்கழனித்திருநாகேச்சரத்தரனே. (௬)

* கொல்லை என்றும் பாடம். † பதைத்தெழுந்த என்றும் பாடம். ‡ கருத்து ஆக்கியது—மார்க்கண்டேயமுனிவருடைய கருத்தை முடித்தது.

Koviloor Digital Library

நின்றவிம்மாதவத்தையொழிப்பான்சென்றணைந்துமிகப்
பொங்கியபூங்கணைவேள்பொடியாகவிழித்தலென்னே
பங்கயமாமலர்மேன்மதுவுண்டுவண்டேன்முரலச்
செங்கயல்பாய்வயல்சூழ்திருநாகேச்சரத்தரனே. (எ)

வரியாநாணதாகமாமேரு* வில்லதாக
அரியனமுப்புரங்கள்ளவையாரழலூட்டலென்னே
விரிதருமல்லிகையும்மலர்ச்சண்பகமும்மளைந்து
திரிதருவண்டுபண்செய்திருநாகேச்சரத்தரனே. (அ)

அங்கியல்யோகுதனையழிப்பான்சென்றணைந்துமிகப்
பொங்கியபூங்கணைவேள்பொடியாகவிழித்தலென்னே
பங்கயமாமலர்மேன்மதுவுண்டுபண்வண்டறையச்
செங்கயனின்றுகளுந்திருநாகேச்சரத்தரனே. (௯)

குண்டரைக்கூறையின்றித்திரியுஞ்சமண்சாக்கியப்பேய்
மிண்டரைக்கண்டதன்மைவிரவாகியதென்னைகொலோ
தொண்டிரைத்துவணங்கித்தொழில்பூண்டடியார்பரவும்
தெண்டிரைத்தண்வயல்சூழ்திருநாகேச்சரத்தரனே. (கo)

கொங்கணைவண்டரற்றக்குயிலும்மயிலும்பயிலும்
தெங்கணைபூம்பொழில் † சூழ்திருநாகேச்சரத்தானை
வங்கமலிகடல்சூழ்வயனாவலாரூரன் ‡ சொன்ன
பங்கமில்பாடல்வல்லாரவர்தம்வினைபற்றறுமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநாகேச்சரத்திருப்பதிகம் - ௯.

ஆ திருப்பதிகம் - ௬க.

சுவாமி தேவி திருநாமங்கள் - சண்பகாரணியர், குன்றமுலைநாயகி.

௩o. திருவிடைமருதூர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

ஓடேகலனுண்பதுமூரிடுபிச்சை
காடேயிடமாவதுகல்லானிழற்கீழ்
வாடாமுலைமங்கையுந்தானுமகிழ்ந்
தீடாவுறைகின்றவிடைமருதீதோ. (க)

* நாணதாகவரிமேரு என்றும் பாடம். † தெங்கமழ் பூம்பொழில் என்றும் பாடம்; தேம் தெம்மெனக்குறுகிற்று. ‡ வயனாவலவூரன் என்றும் பாடம்.

Koviloor Digital Library

தடங்கொண்டதோர்தாமரைப்பொன்முடிதன்மேல்
குடங்கொண்டடியார்குளிர்நீர்சுமந்தாட்டப்
படங்கொண்டதோர்பாம்பரையார்த்தபரமன்
இடங்கொண்டிருந்தான்றனிடைமருதீதோ. (௨)

வெண்கோவணங்கொண்டொருவெண்டலையேந்தி
அங்கோல்வளையாளையொர்பாகமமர்ந்து
பொங்காவருகாவிரிக்கோலக்கரைமேல்
எங்கோனுறைகின்றவிடைமருதீதோ. (௩)

அந்தம்மறியாதவருங்கலமுந்திக்
கந்தங்கமழ்காவிரிக்கோலக்கரைமேல்
வெந்தபொடிப்பூசியவேதமுதல்வன்
எந்தையுறைகின்றவிடைமருதீதோ. (௪)

வாசங்கமழ்மாமலர்ச்சோலையில்வண்டே
தேசம்புகுந்தீண்டிபொர்செம்மையுடைத்தாய்ப்
பூசம்புகுந்தாடிப்பொலிந்தழகாய
ஈசனுறைகின்றவிடைமருதீதோ. (௫)

வன்புற்றிளநாகமசைத்தழகாக
என்பிற்பலமாலையும்பூண்டெருதேறி
அன்பிற்பிரியாதவளோடுமுடனாய்
இன்புற்றிருந்தான்றனிடைமருதீதோ. (௬)

தேக்குந்திமிலும்பலவுஞ்சுமந்துந்திப்
போக்கிப்புறம்பூசலடிப்பவருமால்
ஆர்க்குந்திரைக்காவிரிக்கோலக்கரைமேல்
ஏற்கவிருந்தான்றனிடைமருதீதோ. (௭)

பூவார்குழலாரகில்கொண்டுபுகைப்ப
ஓவாதடியாரடிகள்குளிர்ந்தேத்த*
ஆவாவரக்கன்† றனையாற்றலழித்த
ஏவார்சிலையான்றனிடைமருதீதோ. (௮)

முற்றாததோர்பான்மதிசூடுமுதல்வன்
நற்றாமரையானொடுமாலயந்தேத்தப்
பொற்றோளியுந்தானும்பொலிந்தழகாக
எற்றேயுறைகின்றவிடைமருதீதோ. (௯)

சிறுதேரருஞ்சில்சமணும்புறங்கூற
நெறியேபலபத்தர்கள்கைதொழுதேத்த
வெறியாவருகாவிரிக்கோலக்கரைமேல்
எறியார்மழுவாளனிடைமருதீதோ. (௧௦)

* ரடியுக்குளிர்ந்தேத்த என்றும் பாடம். † ஆவாவரக்கனை என்றும் பாடம்.

Koviloor Digital Library

கண்ணார்கமழ்காழியுள்ஞானசம்பந்தன்
எண்ணார்புகழெந்தையிடைமருதின்மேல்
பண்ணோடிசைபாடியபத்தும்வல்லார்கள்
விண்ணோருலகத்தினில்வீற்றிருப்பாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவிருக்குக்குறள். பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

தோடொர்காதினன்
பாடுமறையினன்
காடுபேணிநின்
றாடுமருதனே. (௧)

கருதார்புரமெய்வர்
எருதேயினிதூர்வர்
மருதேயிடமாகும்
விருதாம்வினைதீர்ப்பே. (௨)

எண்ணுமடியார்கள்
அண்ணன்மருதரைப்
பண்ணின்மொழிசொல்ல
விண்ணுந்தமதாமே. (௩)

விரியார்சடைமேனி
எரியார்மருதரைத்
தரியாதேத்துவார்
பெரியாருலகிலே. (௪)

பந்தவிடையேறும்
எந்தைமருதரைச்
சிந்தைசெய்பவர்
புந்திநல்லரே. (௫)

கழலுஞ்சிலம்பார்க்கும்
எழிலார்மருதரைத்
தொழலேபேணுவார்க்
குழலும்வினைபோமே. (௬)

பிறையார்சடையண்ணல்
மறையார்மருதரை
நிறையானினைபவர்
குறையாரின்பமே. (௭)

எடுத்தான்புயந்தன்னை
அடுத்தார்மருதரைத்
தொடுத்தார்மலர்சூட்ட
விடுத்தார்வேட்கையே. (௮)

இருவர்க்கெரியாய
உருவமருதரைப்
பரவியேத்துவார்
மருவிவாழ்வரே. (௯)

நின்றுண்சமண்டேரர்
என்றுமருதரை
அன்றியுரைசொல்ல
நன்றுமொழியாரே. (௧0)

கருதுசம்பந்தன்
மருதரடிபாடிப்
பெரிதுந்தமிழ்சொல்லப்
பொருதவினைபோமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

மருந்தவன்வானவர்தானவர்க்கும்
பெருந்தகைபிறவினொடிறவுமானான்
அருந்தவமுனிவரொடாலீழற்கீழ்
இருந்தவன்வளநகரிடைமருதே. (௧)

Koviloor Digital Library

தோற்றவன்கேடவன்றுணைமுலையாள்
கூற்றவன்கொல்புலித்தோலசைத்த
நீற்றவனிறைபுனனீள்சடைமேல்
ஏற்றவன்வளநகரிடைமருதே. (௨)

படையுடைமழுவினன்பால்வெண்ணீற்றன்
நடைநவிலேற்றினன்ஞாலமெல்லாம்
உடைதலையிடுபலிகொண்டுழல்வான்
இடைமருதினிதுறையெம்மிறையே. (௩)

பணைமுலையுமையொருபங்கனென்னார்
துணைமதின்மூன்றையுஞ்சுடரின்மூழ்கக்
கணைதுரந்தடுதிறற்காலற்செற்ற
இணையிலிவளநகரிடைமருதே. (௪)

பொழிலவன்புயலவன்புயலியக்கும்
தொழிலவன்றுயரவன்றுயரகற்றும்
கழலவன்கரியுரிபோர்த்துகந்த
எழிலவன்வளநகரிடைமருதே. (௫)

நிறையவன்புனலொடுமதியும்வைத்த
பொறையவன்புகழவன்புகழநின்ற
மறையவன்மறிகடனஞ்சையுண்ட
இறையவன்வளநகரிடைமருதே. (௬)

நனிவளர்மதியொடுநாகம்வைத்த
பனிமலர்க்கொன்றைபம்படர்சடையன்
முனிவரொடமரர்கண்முறைவணங்க
இனிதுறைவளநகரிடைமருதே. (௭)

தருக்கியவரக்கனதாளுந்தோளும்
நெரித்தவனெடுங்கைமாமதகரியன்
றுரித்தவனொன்னலர்புரங்கண்மூன்றும்
எரித்தவன்வளநகரிடைமருதே. (௮)

பெரியவன்பெண்ணினொடாணுமானான்
வரியரவணைமறிகடற்றுயின்ற
கரியவனலரவன்காண்பரிய
எரியவன்வளநகரிடைமருதே. (௯)

சிந்தையில்சமணொடு* தேரர்சொன்ன
புந்தியிலுரையவைபொருள்கொளாதே
அந்தணரோத்தினொடாவமோவா
எந்தைதன்வளநகரிடைமருதே. (௧௦)

* சிந்தையிலமணொடு என்றும் பாடம்.

Koviloor Digital Library

இலைமலிபொழிலிடைமருதிறையை
நலமிகுஞானசம்பந்தன்சொன்ன
பலமிகுதமிழிவைபத்தும்வல்லார்
உலகுறுபுகழினொடோங்குவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவிராகம். பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

நடைமருதிரிபுரமெரியுணநகைசெய்த
படைமருதழலெழமழுவலபகவன்
புடைமருதிளமுகில்வளமமர்பொதுளிய
இடைமருதடையநம்மிடர்கெடலெளிதே. (க)

மழைநுழைமதியமொடழிதலைமடமஞ்ஞை
கழைநுழைபுனல்பெய்தகமழ்சடைமுடியன்
குழைநுழைதிகழ்செவியழகொடுமிளிர்வதோர்
இழைநுழைபுரியணலிடமிடைமருதே. (உ)

அருமையனெளிமையனழல்விடமிடறினன்
கருமையினொளிபெறுகமழ்சடைமுடியன்
பெருமையன்சிறுமையன்பிணைபெணொடொருமையின்
இருமையுமுடையணலிடமிடைமருதே. (ங)

பொரிபடுமுதுகுறமுளிகளிபுடைபுல்கு
நரிவளர்சுடலையுளடமெனநவில்வோன்
வரிவளர்குளிர்மதியொளிபெறமிளிர்வதோர்
எரிவளர்சடையணலிடமிடைமருதே. (ச)

வருநலமயிலன * மடநடைமலைமகள்
பெருநலமுலையிணைபிணைசெய்தபெருமான்
செருநலமதிலெய்தசிவனுறைசெழுநகர்
இருநலபுகழ்மல்குமிடமிடைமருதே. (ரு)

கலைபுடைவிரிதுகில்கமழ்குழலகில்புகை
மலைபுடைமடமகடனையிடமுடையோன்
விலைபுடையணிகலனிலனெனமழுவினோ
டிலைபுடைபடையவனிடமிடைமருதே. (சா)

வளமெனவளர்வனவரிமுரல்பறவைகள்
இளமணலணைகரையிசைசெயுமிடைமரு
துளமெனநினைபவரொலிகழலிணையடி
குளமணலுறமுழ்கிவழிபடல்குணமே. (எ)

* மயிலென என்றும் பாடம்.

Koviloor Digital Library

மறையவனுலகவன்மதியவன்மதிபுல்கு
துறையவனெனவலவடியவர்துயரிலர்
கறையவன்மிடறதுகனல்செய்தகமழ்சடை
இறையவனுறைதருமிடமிடைமருதே. (௮)

மருதிடைநடவியமணிவணர்பிரமரும்
இருதுடையகலமொடிகலினரினதெனக்
கருதிடலரியதொருருவொடுபெரியதொர்
எருதுடையடிகடமிடமிடைமருதே. (௯)

துவருறுவிரிதுகிலுடையருமமணரும்
அவருறுசிறுசொலைநயவன்மினிடுமனல்
கவருறுபுனலிடைமருதுகைதொழுதெழும்
அவருறுவினைகெடலணுகுதல்குணமே. (௧0)

தடமலிபுகலியர்தமிழ்கெழுவிரகினன்
இடமலிபொழிலிடைமருதினையிசைசெய்த
படமலிதமிழிவைபரவவல்லவர்வினை
கெடமலிபுகழொடுகிளரொளியினரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவிராகம். பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

விரிதருபுலிபுரிவிரவியவரையினர்
திரிதருமெயிலவைபுனைகணையினிலெய்த
எரிதருசடையினரிடைமருதடைவுனல்*
புரிதருமனனவர்புகழ்மிகவுளதே. (௧)

மறிதிரைபடுகடல்விடமடைமிடறினர்
எறிதிரைகரைபொருமிடைமருதெனுமவர்
செறிதிரைநரைபொடுசெலவிலருலகினில்
பிறிதிரைபெறுமுடல்பெறுகுவதரிதே. (௨)

சலசலசொரிபுனல்சடையினர்மலைமகள்
நிலவியவுடலினர்நிறைமறைமொழியினர்
இலரெனவிடுபலியவரிடைமருதினை
வலமிடவுடனலிவிலதுளவினையே. (௩)

விடையினர்வெளியதொர்தலைகலனெனநனி
கடைகடைதொறுபலியிடுகெனமுடுகுவர்
இடைவிடலரியவரிடை† மருதெனுநகர்
உடையவரடியிணைதொழுவதெம்முயர்வே. (௪)

* தடைவுனல் என்றும் பாடம். † இடைவிடலியாவரிடை என்றும் பாடம்.

Koviloor Digital Library

உரையருமுருவினருணர்வருவகையினர்
அரைபொருபுலியதளுடையினரதன்மிசை
இரைமருமரவினரிடை* மருதெனவுளம்
உரைகளதுடையவர்புகழ்மிகவுளதே. (௫)

ஒழுகியபுனன்மதியரவமொடுறைதரும்
அழகியமுடியுடையடிகளதறைகழல்
எழிலினருறையிடைமருதினைமலர்கொடு
தொழுதல்செய்தெழுமவர்துயருறவிலரே. (௬)

கலைமலிவிரலினர்கடியதொர்மழுவொடும்
நிலையினர்சலமகளுலவியசடையினர்
மலைமகண்முலையிணைமருவியவடிவினர்
இலைமலிபடையவரிடமிடைமருதே. (௭)

செருவடையிலவலசெயல்செயத்திறலொடும்
அருவரையினிலொருபதுமுடிநெரிதர
இருவகைவிரனிறியவரிடைமருததது
பரவுவாருவினையொருவுதல்பெரிதே. (௮)

அரியொடுமலரவனெனவிவரடிமுடி
தெரிவகையரியவர்திருவடிதொழுதெழ
எரிதருமுருவர்தமிடைமருதடைவுறல்
புரிதருமனனவர்புகழ்மிகவுளதே. (௯)

குடைமயிலினதழைமருவியவுருவினர்
உடைமருதுவரினர்பலசொலவுறவிலை
அடைமருதிருவினர்தொழுதெழுகழலவர்
இடைமருதெனமனநினைவதுமெழிலே. (௧௦)

பொருகடலடைதருபுகலியர்தமிழொடு
விரகினன்விரிதருபொழிலிடைமருதினைப்
பரவியவொருபதுபயிலவல்லவரிடர்
விரவிலர்வினையொடுவியனுலகுறவே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பொங்குநூன்மார்பினீர்பூதப்படையீர்பூங்கங்கை
தங்குசெஞ்சடையினீர்சாமவேதமோதினீர்
எங்குமெழிலார்மறையோர்கண்முறையாலேத்தவிடைமருதில்
மங்குனுேய்கோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (௧)

* மருவரவினரிடை என்றும் பாடம்.

Koviloor Digital Library

நீரார்ந்தசெஞ்சடையீர்நெற்றித்திருக்கண்ணிகழ்வித்தீர்
போரார்ந்தவெண்மழுவொன்றுடையீர்பூதம்பாடலீர்
ஏரார்ந்தமேகலையாள்பாகங்கொண்டீரிடைமருதில்
சீரார்ந்தகோயிலேகோயிலாகச்சேர்ந்தீரே. (௨)

அழன்மல்குமங்கையிலேந்திப்பூதமவைபாடச்
சுழன்மல்குமாடலீர்சுடுகாடல்லாற்கருதாதீர்
எழின்மல்குநான்மறையோர்முறையாலேத்தவிடைமருதில்
பொழின்மல்குகோயிலேகோயிலாகப்பொலிந்தீரே. (௩)

பொல்லாப்படுதலையொன்றேந்திப்புறங்காட்டாடலீர்
வில்லாற்புரமூன்றுமெரித்தீர்விடையார்கொடியினீர்
எல்லாக்கணங்களுமுறையாலேத்தவிடைமருதில்
செல்வாயகோயிலேகோயிலாகச்சேர்ந்தீரே. (௪)

வருந்தியமாதவத்தோர்வானோரேனோர்வந்தீண்டிப்
பொருந்தியதைப்பூசமாடியுலகம்பொலிவெய்தத்
திருந்தியநான்மறையோர்சீராலேத்தவிடைமருதில்
பொருந்தியகோயிலேகோயிலாகப்புக்கீரே. (௫)

சலமல்குசெஞ்சடையீர்சாந்தநீறுபூசினீர்
வலமல்குவெண்மழுவொன்றேந்திமயானத்தாடலீர்
இலமல்குநான்மறையோரினிதாயேத்தவிடைமருதில்
புலமல்குகோயிலேகோயிலாகப்பொலிந்தீரே. (௬)

புனமல்குகொன்றையீர்புலியினதளீர்பொலிவார்ந்த
சினமல்குமால்விடையீர்செய்யீர்கரியகண்டத்தீர்
இனமல்குநான்மறையோரேத்துஞ்சீர்கொளிடைமருதில்
கனமல்குகோயிலேகோயிலாகக்கலந்தீரே. (௭)

சிலையுய்த்தவெங்கணையாற்புரமூன்றெரித்தீர்திறலரக்கன்
தலைபத்துந்திண்டோளுநெரித்தீர்தையல்பாகத்தீர்
இலைமொய்த்ததண்பொழிலும்வயலுஞ்சூழ்ந்தவிடைமருதில்
நலமொய்த்தகோயிலேகோயிலாகநயந்தீரே. (௮)

மறைமல்குநான்முகனுமாலுமறியாவண்ணத்தீர்
கறைமல்குகண்டத்தீர்கபாலமேந்துகையினீர்
அறைமல்குவண்டினங்களாலுஞ்சோலையிடைமருதில்
நிறைமல்குகோயிலேகோயிலாகநிகழ்ந்தீரே. (௯)

சின்போர்வைச்சாக்கியருமாசுசேருஞ்சமணரும்
துன்பாயகட்டுரைகள்சொல்லியல்லறூற்றவே
இன்பாயவந்தணர்களேத்துமேர்கொளிடைமருதில்
அன்பாயகோயிலேகோயிலாகவமர்ந்தீரே. (௧௰)

Koviloor Digital Library

கல்வின்மணிமாடக்கழுமலத்தார்காவலவன்
நல்லவருமறையானற்றமிழ்ஞானசம்பந்தன்
எல்லியிடைமருதிலேத்துபாடலிவைபத்தும்
சொல்லுவார்க்குங்கேட்பார்க்குந்துயரமில்லையே.* (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

காடுடைச்சுடலைநீற்றர்கையில்வெண்டலையர்தையல்
பாடுடைப்பூதஞ்சூழப்பரமனார்மருதவைப்பில்
தோடுடைக்கைதையோடுசூழ்கிடங்கதனைச்சூழ்ந்த
ஏடுடைக்கமலவேலியிடைமருதிடங்கொண்டாரே. (௧)

முந்தையார்முந்தியுள்ளார்மூவர்க்குமுதல்வானார்
சந்தியார்சந்தியுள்ளார்† தவநெறிதரித்துநின்றார்
சிந்தையார்சிந்தையுள்ளார்சிவநெறியனைத்துமானார்
எந்தையாரெம்பிரானாரிடைமருதிடங்கொண்டாரே. (௨)

காருடைக்கொன்றைமாலைகதிர்மதியரவினோடு
நீருடைச்சடையுள்‡ வைத்தநீதியார்நீதியாய
போருடைவிடையொன்றேறவல்லவர்பொன்னித்தென்பால்
ஏருடைக்கமலமோங்குமிடைமருதிடங்கொண்டாரே. (௩)

விண்ணினார்விண்ணின்மிக்கார்வேதங்களோன்குமங்கம்
பண்ணினார்பண்ணின்மிக்கபாடலார்பாவந்தீர்க்கும்
கண்ணினார்கண்ணின்மிக்கநுதலினார்காமற்காய்ந்த¶
எண்ணினாரெண்ணின்மிக்கவிடைமருதிடங்கொண்டாரே. (௪)

வேதங்களோன்குங்கொண்டுவிண்ணவர்பரவியேத்தப்
பூதங்கள்பாடியாடலுடையவன்புநிதனெந்தை
பாதங்கள்பரவிநின்றபத்தர்கடங்கண்மேலை
ஏதங்கடீரநின்றாரிடைமருதிடங்கொண்டாரே. (௫)

பொறியரவரையிலார்த்துப்பூதங்கள்பலவுஞ்சூழ
முறிதருவன்னிகொன்றைமுதிர்சடைமுழ்கவைத்து
மறிதருகங்கைதங்கவைத்தவரெத்திசையும்
எறிதருபுனல்கொள்வேலியிடைமருதிடங்கொண்டாரே. (௬)

* துயரமில்லையில்லையே என்றும் பாடம். † சந்தியாரந்தியுள்ளார் என்றும் பாடம்.
‡ சடையில் என்றும் பாடம். ¶ நுதலினாற்காமற்காய்ந்த என்றும் பாடம்.

Koviloor Digital Library

படரொளிசடையினுள்ளாற்* பாய்புனலரவினோடு
சுடரொளிமதியம்வைத்துத்தூவொளிதோன்றுமெந்தை
அடரொளிவிடையொன்றேறவல்லவான்பர்தங்கள்
இடரவைகெடநின்றானிடைமருதிடங்கொண்டாரே. (எ)

கமழ்தருசடையினுள்ளாற்* கடும்புனலரவினோடு
தவழ்தருமதியம்வைத்துத்தன்னடிபலருமேத்த
மழுவதுவலங்கையேந்திமாதொருபாகமாகி
எழிறருபொழில்கள்சூழ்ந்தவிடைமருதிடங்கொண்டாரே. (அ)

பொன்றிகழ்கொன்றைமாலைபுதுப்புனல்வன்னிமத்தம்
மின்றிகழ்சடையில்வைத்துமேதகத்தோன்றுகின்ற
அன்றவரளக்கலாகாவனலெரியாகிநீண்டார்
இன்றுடனுலகமேத்தவிடைமருதிடங்கொண்டாரே. (கூ)

மலையுடன்விரவிநின்றுமதியிலாவரக்கனாக்கத்
தலையுடனடர்த்துமீண்டேதலைவனுவருள்களைல்கிச்
சிலையுடைமலையைவாங்கித்திரிபுரமூன்றுமெய்தார்
இலையுடைக்கமலவேலியிடைமருதிடங்கொண்டாரே. (கO)

திருச்சிற்றம்பலம்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பாசமொன்றிலராய்ப்பலபத்தர்கள்
வாசநாண்மலர்கொண்டடிவைகலும்
ஈசனெம்பெருமானிடைமருதினில்
பூசநாம்புகுதும்புனலாடவே. (க)

மறையினுண்மலர்கொண்டடிவானவர்
முறையினுன்முனிகள்வழிபாடுசெய்
இறைவனெம்பெருமானிடைமருதினில்
உறையுமீசனையுள்குமெனுள்ளமே. (உ)

கொன்றைமாலையுங்கூவிளமத்தமும்
சென்றுசேரத்திகழ்சடைவைத்தவன்
என்றுமெந்தைபிரானிடைமருதினை
நன்றுகைதொழுவார்வினைநாசமே. (ங)

இம்மைவானவர்செல்வம்விளைத்திடும்
அம்மையேற்பிற† வித்துயர்நீத்திடும்
எம்மையாளுமிடைமருதன்கழல்
செம்மையேதொழுவார்வினைசிந்துமே. (ச)

* * சடையினுள்ளார் என்றும் பாடம். † அம்மையேபிற என்றும் பாடம்.

Koviloor Digital Library

வண்டணைந்தனவன்னியுங்கொன்றையும்
கொண்டணிந்த* சடைமுடிக்கூத்தனார்
எண்டிசைக்குமிடைமருதாவென
விண்டுபோயறுமேலைவினைகளே. (௫)

ஏறதேறுமிடைமருதீசனார்
கூறுவார்வினைதீர்க்குங்குழகனார்
ஆறுசெஞ்சடைவைத்தவழகனார்க்
கூறியூறியுருகுமெனுள்ளமே. (௬)

விண்ணுளாரும்விரும்பப்படுபவர் †
மண்ணுளாருமதிக்கப்படுபவர் ‡
எண்ணினார்பொழில்சூழிடைமருதினை
நண்ணினாரைநண்ணாவினைநாசமே. (எ)

வெந்தவெண்பொடிப்பூசும்விகிர்தனார்
கந்தமாலைகள்சூடுங்கருத்தனார்
எந்தையென்னிடைமருதினிலீசனைச்
சிந்தையானினைவார்வினைதேயுமே. (அ)

வேதமோதும்விரிசடையண்ணலார்
பூதம்பாடநின்றாடும்புனிதனார்
ஏதந்தீர்க்குமிடைமருதாவென்று
பாதமேத்தப்பறையுநம்பாவமே. (௯)

கனியினுங்கட்டிபட்டகரும்பினும்
பனிமலர்க்குழற்பாவைநல்லாரினும்
தனிமுடிகவித்தாளுமரசினும்
இனியன்றன்னடைந்தார்க்கிடைமருதனே. (க0)

முற்றிலாமதிசூடுமுதல்வனார்
ஒற்றினார்மலையாலரக்கன்முடி
எற்றினார்கொடியாரிடைமருதினைப்
பற்றினாரைப்பற்றாவினைபாவமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பறையினோசையும்பாடலினோசையும்
மறையினோசையும்வைகுமயலெலாம் ¶
இறைவனெங்கள்பிரானிடைமருதினில்
உறையுமீசனையுள்குமென்னுள்ளமே. (க)

* கொண்டணைந்த என்றும் பாடம். † விரும்பப்படுமவர் என்றும் பாடம். ‡ மதிக்கப்படுமவர் என்றும் பாடம். ¶ வைகும்வயலெலாம் என்றும் பாடம்.

Koviloor Digital Library

மனத்துண்மாயனைமாசறுசோதியைப்
புனிற்றுப்பிள்ளைவெள்ளைம்மதிசூடியை
எனக்குத்தாயையெம்மானிடைமருதனை
நினைத்திட்டுநின்றைந்த* தென்னுள்ளமே. (௨)

வண்டணைந்தனவன்னியுமத்தமும்
கொண்டணிந்தசடைமுடிக்கூத்தனை
எண்டிசைக்குமிடைமருதாவென
விண்டுபோயறுமேலைவினைகளே. (௩)

துணையிலாமையிற்றாங்கிருட்பேய்களோ
டணையலாவதெமக்கரிதேயெனா
இணையிலாவிடைமாமருதில்லெழு
பணையிலாகமஞ்சொல்லுந்தன்பாங்கிக்கே. (௪)

மண்ணையுண்டமால்காணான்மலரடி
விண்ணைவிண்டயன்காணான்வியன்முடி
மொண்ணைமாமருதாவென்றென்மொய்குழல்
பண்ணையாயமுந்தானும்பயிலுமே. (௫)

மங்கைகாணக்கொடார் † மணமாலையைக்
கங்கைகாணக்கொடார் † முடிக்கண்ணியை
நங்கைமீரிடைமருதரிந்நங்கைக்கே
எங்குவாங்கிக்கொடுத்தாரிதழியே. ‡ (௬)

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

சூலப்படையார்தாமேபோலுஞ்
சுடர்த்திங்கட்கண்ணியுடையார்போலும்
மாலைமகிழ்ந்தொருபால்வைத்தார்போலு
மந்திரமுந்தந்திரமுமானார்போலும்
வேலைக்கடனஞ்சையுண்டார்போலும் ¶
மேல்வினைகடீர்க்கும்விகிர்தர்போலும்
ஏலக்கமழ்குழலாள்பாகர்போலு
மிடைமருதுமேவியவீசனாரே. (௧)

காரார்கமழ்கொன்றைக்கண்ணிபோலுங்
காரானையீருரிவைபோர்த்தார்போலும்
பாரார்பரவப்படுவார்போலும்
பத்துப்பல்லூழிபரந்தார்போலும்

* நினைந்த என்றும் பாடம். †† கொண்டார் என்றும் பாடம். ‡ இத்திருப்பதிகத்தில் ௭, ௮, ௯, ௰ இச்செய்யுள்கள் மறைந்துபோயின. ¶ நஞ்சமுண்டார்போலும்என்றும்பாடம்.

Koviloor Digital Library

சொல்வணங்கப்படுவார்போலுந்
திசையனைத்துமாய்மற்றுமானார்போலும்
ஏரார்கமழ்குழலாள்பாகர்போலு
மிடைமருதுமேவியவீசனாரே. (௨)

வேதங்கள்வேள்விபயந்தார்போலும்
விண்ணுலகுமண்ணுலகுமானார்போலும்
பூதங்களாயபுராணர்போலும்
புகழவளரொளியாய்நின்றார்போலும்
பாதம்பரவப்படுவார்போலும்
பத்தர்களுக்கின்பம்பயந்தார்போலும்
ஏதங்களானகடிவார்போலு
மிடைமருதுமேவியவீசனாரே. (௩)

திண்குணத்தார்தேவர்கணங்களேத்தித்
திசைவணங்கச்சேவடியைவைத்தார்போலும்
விண்குணத்தார்வேள்விசிதையநூறி
வியன்கொண்டன்மேற்செல்விகிர்தர்போலும்
பண்குணத்தார்பாடலோடாடலோவாப்
பரங்குன்றமேயபரமர்போலும்
எண்குணத்தாரெண்ணாயிரவர்*போலு
மிடைமருதுமேவியவீசனாரே. (௪)

ஊகமுகிலுரிஞ்சுசோலைசூழ்ந்த
வுயர்பொழிலண்ணாவிலுறைகின்றாரும்
பாகம்பணிமொழி†யாள்பாங்கராகிப்
படுவெண்டலையிற்பலிகொள்வாரும்
மாகமடைமும்மதிலு‡மெய்தார்தாமு
மணிபொழில்சூழாரூருறைகின்றாரும்
ஏகம்பமேயாருமெல்லாமாவா
ரிடைமருதுமேவியவீசனாரே. (௫)

ஐயிரண்டுமாறொன்றுமானார்போலு
மறுமூன்றுநான்மூன்றுமானார்போலும்
செய்வினைகள்வினைகளானார்போலுந்
திசையனைத்துமாய்நிறைந்தசெல்வர்போலும்
கொய்மலரங்கொன்றைச்¶சடையார்போலுங்
கூத்தாடவல்லகுழகர்போலும்
எய்யவந்தகாமனையுங்காய்ந்தார்போலு
மிடைமருதுமேவியவீசனாரே. (௬)

பிரியாதகுணமுயிர்கட்கஞ்சோடஞ்சாய்ப்
பிரிவுடையகுணம்பேசிற்பத்தோடொன்றாய்
விரியாதகுணமொருகாலுன்கேயென்பர்
விரிவிலாக்குணநாட்டத்தாறேயென்பர்

* ரெண்ணாயிரத்தார் என்றும், ரெண்ணாயிருந்தார் என்றும் பாடம். † பணிமொழி என்றும் பாடம். ‡ மாகமுனடூம்மதிளு என்றும் பாடம். ¶ கொய்மலருங்கொன்றைச் என்றும், கொய்மலராங்கொன்றைச் என்றும் பாடம்.

தெரிவாய்* குணமஞ்சுஞ்சமிதையஞ்சும்
பதமஞ்சுங்கதியஞ்சுஞ்செப்பினாரும்
எரிபாயதாமரைமேலியங்கினாரு
மிடைமருதுமேவியவீசனாரே. (எ)

தோலிற்பொலிந்தவுடையார்போலுஞ்
சுடர்வாயரவசைத்தசோதிபோலும்
ஆலமமுதாகவுண்டார்போலு
மடியார்கட்காரமுதமானார்போலும்
காலனையுங்காய்ந்தகழலார்போலுங்
கயிலாயந்தம்மிடமாக்கொண்டார்போலும்
ஏலங்கமழ்குழலாள்பாகர்போலு
மிடைமருதுமேவியவீசனாரே. (அ)

பைந்தளிர்க்கொன்றையந்தாரார்போலும்
படைக்கணாள்பாகமுடையார்போலும்
அந்திவாய்வண்ணத்தழகர்போலு
மணிநீலகண்டமுடையார்போலும்
வந்தவரவுஞ்செலவுமாகி
மாறாதென்னுள்ளத்திருந்தார்போலும்
எந்தம்மிடர்தீர்க்கவல்லார்போலு
மிடைமருதுமேவியவீசனாரே. (கூ)

கொன்றையங்கூவிளமாலைதன்னைக்
குளிர்சடைமேல்வைத்துகந்தகொள்கையாரும்
நின்றவநங்கனைநேரேநோக்கி
நெருப்புருவமாய்நின்ற† நிமலனாரும்
அன்றவரக்கனலறிவீழ
வருவரையைக்காலாலழுத்தினாரும்‡
என்றுமிடுபிச்சையேற்றுண்பாரு
மிடைமருதுமேவியவீசனாரே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

ஆறுசடைக்கணிவரங்கைத்தீப
ரழகர்படை¶ யுடையார்பொற்றோண்மேல்
நீறுதடவந்திடபமேறி
நித்தம்பலிகொள்வர்மொய்த்தபூதம்
கூறுந்துறையுடையர்கோவணத்தர்
கோடாலவேடத்தர்கொள்கைசொல்லின்
ஈறுநடுமுதலுமாவா
ரிடைமருதுமேவியிடங்கொண்டாரே. (க)

* தெரிவரிய என்றும் பாடம். † நெருப்புருவாய்நின்ற என்றும் பாடம். ‡ லழுக்கினார் என்றும் பாடம். ¶ ரழகர்படை என்றும் பாடம்.

Koviloor Digital Library

மங்குன்மதிவைப்பர்வானநாடர்
மடமானிடமுடையர்மாதராளைப்
பங்கின்மிகவைப்பர்பால்போனீற்றர்
பளிக்குவடம்புனைவர்பாவநாசர்
சங்குதிரையுகளுஞ்சாய்க்காடாள்வர்
சரிதைபலவுடையர்தன்மைசொல்லின்
எங்கும்பலிதிரிவரென்னு* னீங்கா
ரிடைமருதுமேவியிடங்கொண்டாரே. (உ)

ஆலநிழலிருப்பராகாசத்த †
ரருவரையினுச்சியராணர்பெண்ணர் ‡
காலம்பலகழித்தார்கறைசேர்கண்டர்
கருத்துக்குச்சேயார் ¶ தாங்காணாதார்க்குக்
கோலம்பலவுடையர்கொல்லையேற்றர்
கொடுமுழுவர்கோழம்பமேயவீசர்
ஏலமணநாறுமீங்கோய்நீங்கா
ரிடைமருதுமேவியிடங்கொண்டாரே. (௩)

தேசர்திறநினைவார்சிந்தைசேருஞ்
செல்வர்திருவாரூரென்றுமுள்ளார்
வாசமலரின்கண்மான்றோல்போர்ப்பர்
மருவுங்கரியுரியர்வஞ்சக்கள்வர்
நேசரடைந்தார்க்கடையாதார்க்கு
நிட்டரவர் § கட்டங்கர்நினைவார்க்கென்றும்
ஈசர்புனற்பொன்னித்தீர்த்தர்வாய்த்த
விடைமருதுமேவியிடங்கொண்டாரே. (௪)

காப்பர்கரியமனக்கள்வர்க்குள்ளங்
கரவாதேதந்நினையகிற்பார்பாவம்
தீர்ப்பர்தொடுகடலினஞ்சமுண்பர்
தூயமறைமொழியர்தீயாலொட்டி
நிரப்பர்புரமூன்றுநீறுசெய்வர் ௦
நீள்சடையர்பாய்விடைகொண்டெங்குமையம்
இரப்பரெமையாள்வரென்னுணீங்கா
ரிடைமருதுமேவியிடங்கொண்டாரே. (௫)

கொடியாரிடபத்தர்கூத்துமாடிக்
குளிர்கொன்றைமேல்வைப்பர்கோலமார்ந்த
பொடியாருமேனியர்பூதிப்பையர்
புலித்தோலர்பொங்கரவர்பூணநூலர்

* எங்குந்திரிதருவரென்னு என்றும் பாடம். † ஆலநிழல்விருப்பராகாயத்த என்றும் பாடம். ‡ ரானோர்பெண்ணோர் என்றும் பாடம். ¶ கருத்துக்குஞ்சேயார் என்றும் பாடம். § நிட்டுருவர் என்றும் பாடம். ௦ நீறுசேரு என்றும் பாடம்.

Koviloor Digital Library

அடியார்குடியாவரந்தணாள
ராகுதியின்மந்திரத்தாரமார்போற்ற
இடியார்களிற்றுரியரெவரும்போற்ற
விடைமருதுமேவியிடங்கொண்டாரே. (௬)

பச்சைநிறமுடையர்பாலர்சாலப்
பழையர்பிழையெலாநீக்கியாள்வர்
கச்சைக்கதநாகம்பூண்டதோளர்
கலனொன்றுகையேந்தியில்லந்தோறும்
பிச்சைகொளநுகர்வர்பெரியர்சாலப்
பிறங்குசடைமுடியர்பேணுந்தொண்டர்
இச்சைமிகவறிவரென்றுமுள்ளா*
ரிடைமருதுமேவியிடங்கொண்டாரே. (௭)

காவார்சடைமுடியர்காரோணத்தர்
கயிலாயமன்னினார்பன்னுமின்சொற்
பாவார்பொருளாளர்வாளார்கண்ணி
பயிலுந்திருவுருவம்பாகமேயார்
பூவார்புனலணவுபுன்கூர்வாழ்வர்
புரமூன்றுமொள்ளழலாக்காயத்தொட்ட
ஏவார்சிலைமலையரெங்குந்தாமே
யிடைமருதுமேவியிடங்கொண்டாரே. (அ)

புரிந்தார்நடத்தின்கட்பூதநாதர்
பொழிலாரூர்புக்குறைவர்போந்துதம்மிற்
பிரிந்தாரகல்வாயபேர்†யுந்தாமும்
பிரியாரொருநாளும்பேணுகாட்டில்
எரிந்தாரனலுகப்பரேழிலோசை
யெவ்விடத்துந்தாமேயென்றேத்துவார்பால்
இருந்தாரிமையவர்கள்போற்றவென்று
மிடைமருதுமேவியிடங்கொண்டாரே. (௯)

விட்டிலங்குமாமழுவர்வேலைநஞ்சர்
விடங்கர்விரிபுனல்சூழ்வெண்காட்டுள்ளார்
மட்டிலங்குதார்மாலைமார்பினீற்றர்
மழபாடியுள்ளுறைவர்மாகாளத்தர்
சிட்டிலங்குவல்லரக்கர்கோனையன்று
செழுமுடியுந்தோளைஞ்ஞான்கடரக்காலால்
இட்டிரங்கிமற்றவனுக்கீந்தார்வென்றி
யிடைமருதுமேவியிடங்கொண்டாரே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

* இச்சைபறிவரிவரென்றுமுள்ளா என்றும் பாடம். † ரகல்வாய்ப்பே என்றும் பாடம்.

Koviloor Digital Library

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

கழுதைகுங்குமந்தான்சுமந்தெய்த்தாற்கைப்பர்பாழ்புகமற்றதுபோலப்
பழுதுநானுழன்றுட்டடுமாறிப்படுசுழித்தலைப்பட்டனனெந்தாய்
அழுதுநீயிருந்தென்செய்திமனனேயங்கணாவரனேயெனமாட்டா
இழுதையேனுக்கொருய்வகையருளாயிடைமருதுறையெந்தைபிரானே. (௧)

நரைப்புமூப்பொடுபிணிவருமின்னே * நன்றியில்வினையேதுணிந்தெய்த்தேன்
அரைத்தமஞ்சளதாவதையறிந்தேனஞ்சினேனமனாரவர்தம்மை
உரைப்பனானுனசேவடிசேரவுணரும்வாழ்க்கையையொன்றறியாத
இரைப்பனேனுக்கொருய்வகையருளாயிடைமருதுறையெந்தைபிரானே. (௨)

புன்னுனைப்பனிவெங்கதிர்கண்டாற்போலும்வாழ்க்கைபொருளிலைநாளும்
என்னெனக்கினியிற்றைக்குநாளையென்றிருந்திடருற்றனனெந்தாய்
முன்னமேயுனசேவடிசேராமூர்க்கனாகிக்கழிந்தனகாலம்
இன்னமென்றனக்குய்வகையருளாயிடைமருதுறையெந்தைபிரானே. (௩)

முந்திச்செய்வினையிம்மைக்கணலியமூர்க்கனாகிக்கழிந்தனகாலம்
சிந்தித்தேமனம் † வைக்கவுமாட்டேன்சிறுச்சிறிதேயிரப்பார்கட்கொன்றீயேன்
அந்திவெண்பிறைசூடுமெம்மானேயாரூர்மேவியவமரர்கடலைவா
எந்தைநீயெனக்குய்வகையருளாயிடைமருதுறையெந்தைபிரானே. (௪)

அழிப்பரைவர்புரவுடையார்களைவரும்புரவாசறவாண்டு
கழித்துக்காற்பெய்துபோயினபின்னைக்கடைமுறையுனக்கேபொறையானேன்
விழித்துக்கண்டனன்மெய்ப்பொருடன்னைவேண்டேன்மானுடவாழ்க்கையீதாகில்
இழித்தேனென்றனக்குய்வகையருளாயிடைமருதுறையெந்தைபிரானே. (௫)

குற்றந்தன்னொடுகுணம்பலபெருக்கிக்கோலநுண்ணிடையாரொடுமயங்கிக்
கற்றிலேன்கலைகள்பலஞானங்கடியவாயினகொடுமைகள்செய்தேன்
பற்றலாவதோர்பற்றுமற்றில்லேன்பாவியேன்பலபாவங்கள்செய்தேன்
எற்றுளேனெனக்குய்வகையருளாயிடைமருதுறையெந்தைபிரானே. (௬)

கொடுக்ககிற்றிலேனொண்பொருடன்னைக்குற்றஞ்செற்றமிவைமுதலாக
விடுக்ககிற்றிலேன்வேட்கையுஞ்சினமும்வேண்டிலைம்புலனென்வசமல்ல
நடுக்கமுற்றதோர்மூப்புவந்தெய்த ‡ நமன்றமர்நரகத்திடலஞ்சி
இடுக்கணுற்றனனுய்வகையருளாயிடைமருதுறையெந்தைபிரானே. (௭)

ஐவகையரையரவராகியாட்சிகொண்டொருகாலவர்நீங்கார்
அவ்வகையவர்வேண்டுவதானாலவரவர்வழியொழுகிநான்வந்து
செய்வகையறியேன்சிவலோகாதீவணாசிவனேயெரியாடீ
எவ்வகையெனக்குய்வகையருளாயிடைமருதுறையெந்தைபிரானே. (௮)

*மென்னே என்றும்பாடம். †சிந்தித்தென்மனம் என்றும்பாடம் ‡தெய்தி என்றும்பாடம்.

Koviloor Digital Library

எழைமா நடவின்பிணை நோக்கியிளையவர்வலைப்பட்டிருந்தின்னம்
வாழைதான்பழுக்குநமக்கென்றுவஞ்சவல்வினையுள்வலைப்பட்டுக்
கூழைமாந்தர்தஞ்செல்கதிப்பக்கம்போகமும்பொருளொன்றறியாத
ஏழையேனுக்கோருய்வகையருளாயிடைமருதுறையெந்தைபிரானே. (கூ)

அரைக்குஞ்சந்தனத்தோடகிலுந்திவைவனஞ்சுமந்தார்த்திருபாலும்
இரைக்குங்காவிரித்தென்கரைதன்மேலிடைமருதுறையெந்தைபிரானை
உரைக்குமூரனொளிதிகழ்மாலையுள்ளத்தாலுகந்தேத்தவல்லார்கள்
நரைப்புமூப்பொடுநடலையுமின்றிநாதன்சேவடிநண்ணுவர்தாமே. * (க0)

திருச்சிற்றம்பலம்.

திருவிடைமருதூர்த்திருப்பதிகம் - க௨.

ஆ திருப்பதிகம் - எக.

சுவாமி தேவி திருநாமங்கள் - மருதப்பர், நன்முலைநாயகி.

நக. திருத்தென்குரங்காடுதுறை.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

பாவக்கெடும்வல்வினைபாரிடஞ்சூழ
இரவிற்புறங்காட்டிடைநின்றெரியாடி
அரவச்சடையந்தணன்மேயவழகார்
குரவப்பொழில்சூழ்குரங்காடுதுறையே. (க)

விண்டார்புரமூன்றுமெரித்தவிமலன்
இண்டார்புறங்காட்டிடைநின்றெரியாடி
வண்டார்கருமென்குழன்மங்கையொர்பாகம்
கொண்டானகர்போல்குரங்காடுதுறையே. (௨)

நிறைவில்புறங்காட்டிடைநேரிழையோடும்
இறைவில்லெரியான்மழுவேந்திநின்றாடி
மறையின்னொலிவானவர்தானவரேத்தும்
குறைவில்லவனூர்குரங்காடுதுறையே. (ந)

விழிக்குந்நுதன்மேலொருவெண்பிறைசூடித்
தெழிக்கும்புறங்காட்டிடைச்சேர்ந்தெரியாடிப்
பழிக்கும்பரிசேபலிதேர்ந்தவனூர்பொன்
கொழிக்கும்புனல்சூழ்குரங்காடுதுறையே. (ச)

* இத்திருப்பதிகத்தில் எ-ம் திருப்பாட்டு ஒன்பதாவதாகவும், அ-ம் ,, எழாவதாகவும், க-ம் ,, எட்டாவதாகவும் சில எட்டுப்பிரதிகளிற் காணப்படுகின்றன.

Koviloor Digital Library

நீரூர் தருமேனியனெற்றியோர்கண்ணன்
ஏரூர்கொடியெம்மிறைவீண்டெரியாடி
ஆரூர்சடையந்தணனாயிழையாளோர்
கூறனகர்போல்குரங்காடுதுறையே. (ரு)

நளிரும்மலர்க்கொன்றையுநாறுகரந்தைத்
துளிருஞ்சுலவிச்சுடுகாட்டெரியாடி
மிளிரும்மரவார்த்தவன்மேவியகோயில்
குளிரும்புனல்சூழ்குரங்காடுதுறையே. (சா)

பழகும்வினைதீர்ப்பவன்பார்ப்பதியோடும்
முழவங்குழன்மொந்தைமுழங்கெரியாடும்
அழகன்னயின்மூவிலைவேல்வலனேந்தும்
குழகன்னகர்போல்குரங்காடுதுறையே. (எ)

வரையார்த்தெடுத்தவ்வரக்கன்வலியொல்க
நிரையார்விரலானெரித்திட்டவனூராம்
கரையார்ந்திழிகாவிரிக்கோலக்கரைமேல்
குரையார்பொழில்சூழ்குரங்காடுதுறையே. (அ)

நெடியானொடுநான்முகனுந்நினைவொண்ணாப்
படியாகியபண்டங்கனின்றெரியாடி
செடியார்தலையேந்தியசெங்கண்வெள்ளேற்றின்
கொடியானகர்போல்குரங்காடுதுறையே. (கூ)

துவராடையர்வேடமலாச்சமண் * கையர்
கவர்வாய்மொழிகாதல்செய்யாதவனூராம்
நவையார்மணிபொன்னகில்சந்தனமுந்திக்
குவையார்கரைசேர்குரங்காடுதுறையே. (க0)

நல்லார்பயில்காழியுண்ஞானசம்பந்தன்
கொல்லேறுடையான்குரங்காடுதுறைமேல்
சொல்லார்தமிழ்மாலைபத்துந்தொழுதேத்த
வல்லாரவர்வானவரோடுறைவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

இரங்காவன்மனத்தார்களியங்குமுப்
புரங்காவல்லழியப்பொடியாக்கினன்
தரங் † காடுந்தடநீர்ப்பொன்னித்தென்கரைக்
குரங்காடுதுறைக்கோலக்கபாலியே. (க)

* வேடமிலாச்சமண் என்றும் பாடம். † தரங்கம் தரங்கென அம்முக்கெட்டு நாகனை போனின்றது.

Koviloor Digital Library

முத்தினைமணியைப்பவளத்தொளிர்
தொத்தினைச்சுடர்ச்சோதியைச்சோலைசூழ்
கொத்தலர்குராங்காடுதுறையுறை
அத்தனென்னவன்னித்திட்டிருந்ததே. (௨)

குளிர்புனற்குராங்காடுதுறையனைத்
தளிர்நிறத்தையல்பங்கனைத்தண்மதி
ஒளியனைநினைந்தேனுக்கென்னுள்ளமும்
தெளிவினைத்தெளியத்தெளிந்திட்டதே. (௩)

மணவன்காண்மலையாளொடுமங்கலக்
கணவன்காண்கலைஞானிகள்காதலெண்
குணவன்காண்குராங்காடுதுறைதனில்
அணவன்காணன்புசெய்யுமடியர்க்கே. (௪)

ஞாலத்தார்தொழுதேத்தியநன்மையன்
காலத்தானுயிர்போக்கியகாலினன்
நீலத்தார்மிடறன் * வெள்ளைநீறணி
கோலத்தான்குராங்காடுதுறையனே. (௫)

ஆட்டினான்முன்னமணாரொடென்றனைப்
பாட்டினான்றனபொன்னடிக்கின்னிசை
வீட்டினான்வினைமெய்யடியாரொடும்
கூட்டினான்குராங்காடுதுறையனே. (௬)

மாத்தன்றான்மறையார்முறையான்மறை
ஓத்தன்றாரகன்றன்னுயிருண்டபெண்
போத்தன்றானவன்பொங்குசினந்தணி
கூத்தன்றான்குராங்காடுதுறையனே. (௭)

நாடிநந்தமராயின † தொண்டர்காள்
ஆடுமின்னழுமின்றொழுமின்னடி
பாடுமின்பரமன்பயிலும்மிடம்
கூடுமின்குராங்காடுதுறையையே. (௮)

தென்றனன்னெடுந்தேருடையானுடல்
பொன்றவெங்கனல்பொங்கவிழித்தவன்
அன்றவன்றகனையயிற்சூலத்தால்
கொன்றவன்குராங்காடுதுறையனே. (௯)

நற்றவஞ்செய்தநால்வர்க்குநல்லறம்
உற்றநன்மொழி ‡ யாலருள்செய்தநல்
கொற்றவன்குராங்காடுதுறைதொழப்
பற்றுந்தீவினையாயினபாறுமே. (௰)

* மிடற்றன், மிடற்றான் என்றும் பாடம். † நந்மராயின என்றும் பாடம். ‡ உற்ற வன்மொழி என்றும் பாடம்.

Koviloor Digital Library

கடுத்ததேராக்கன்கயிலேமலை
எடுத்ததோடலையிற்றலறவ்விரல்
அடுத்தலும்மவனின்னிசைகேட்டருள்
கொடுத்தவன்குரங்காடுதுறையனே. (கக)

திருச்சிற்றம்பலம்.

தென்குரங்காடுதுறைத்திருப்பதிகம் - உ.

ஆ திருப்பதிகம் - எந.

சுவாமி தேவி திருநாமங்கள் - ஆபத்சகாயர், பவளக்கொடியாள்.

நஉ. திருநீலக்குடி.

திருநாவுக்கரசுநாயனர்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

வைத்தமாடமனைவியுமக்களிர்
செத்தபோதுசெறியார்பிறிவதே
நித்தநீலக்குடியானைநினை
சித்தமாகிற்சிவகதிசேர்திரே. (க)

செய்யமேனியன்றேனெடுபாறயிர்
நெய்யதாடியநீலக்குடியரன்
மையலாய்மறவாமனத்தார்க்கெலாம்
கையிலாமலகக்கனியொக்குமே. (உ)

ஆற்றநீள்சடையாயிழையாளொரு
கூற்றன்மேனியிற்கோலமதாகிய
நீற்றனீலக்குடியுடையானடி
போற்றினரிடர்போக்கும்புநிதனே. (ங.)

நாலுவேதியர்க்கின்னருணன்னிழல்
ஆலனாலநஞ்சுண்ட*கண்டத்தமர்
நீலனீலக்குடியுறைநின்மலன்
காலனாருயிர்போக்கியகாலனே. (ச)

நேசநீலக்குடியானேயென
நீசராய்நெடுமால்செய்தமாயத்தால்
ஈசனோர்சரமெய்யவெரிந்துபோய்
நாசமானார்திரிபுரநாதரே. (ரு)

* நஞ்சுண்டு என்றும் பாடம்.

Koviloor Digital Library

கொன்றைசூடியைக்குன்றமகளொடு
நின்றநீலக்குடியரனேயெனீர்
என்றும்வாழ்வுகந்தேயிறுமாக்குநீர்
பொன்றும்போதுநுமக்கறிவொண்ணுமே. (௬)

கல்லினோடெனைப்பூட்டியமண்கையர்
ஒல்லைநீர்புகநூக்கவென்வாக்கினால்
நெல்லுநீள்வயனீலக்குடியரன்
நல்லநாமநவிற்றியுய்ந்தேனன்றே. (எ)

அழகியோமிளையோமெனுமாசையால்
ஒழுகியாவியுடல்விடன்முன்னமே
நிழலதார்பொழினீலக்குடியரன்
கழல்கொள்சேவடிகைதொழுதுய்ம்மினே. (அ)

கற்றைச்செஞ்சடைக்காய்கதிர்வெண்டிங்கள்
பற்றிப்பாம்புடன்வைத்தபராபரன்
நெற்றிக்கண்ணுடைநீலக்குடியரன்
சுற்றித்தேவர்தொழுங்கழற்சோதியே. (௯)

தருக்கிவெற்பதுதாங்கியவீங்குதோள்
அரக்கனாருடலாங்கொர்விரலினால்
நெரித்துநீலக்குடியரன்பின்னையும்
இரக்கமாயருள்செய்தனனென்பரே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருநீலக்குடித்திருப்பதிகம் - ௧.

ஆ திருப்பதிகம். - எச.

சுவாமி தேவி திருநாமங்கள் - நீலக்குடியீசர், அழகம்மை.

௩௩. திருவைகன்மாடக்கோயில்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

துளமதியுடைமறிதோன்றுகையினர்
இளமதிபணிசடையெந்தைபாரிடம்
உளமதியுடையவர்வைகலோங்கிய
வளமதிதடவியமாடக்கோயிலே. (௧)

மெய்யகமிளிரும்வெண்ணூலர்வேதியர்
மையகண்மலைமகளோடும்வைகிடம்
வையகமகிழ்தரவைகன்மேற்றிசைச்
செய்யகண்வளவன்முன்செய்தகோயிலே. (௨)

Koviloor Digital Library

கணியணிமலர்கொடுகாலைமாலையும்
பணியணிபவர்க்கருள்செய்தபான்மையர்
தணியணியுமையொடுதாமுந்தங்கிடம்
மணியணிகிளர்வைகன்மாடக்கோயிலே. (௩)

கொம்பியல்கோதைமுன்னஞ்சக்குஞ்சரத்
தும்பியதுரிசெய்ததுங்கர்தங்கிடம்
வம்பியல்சோலைசூழ்வைகன்மேற்றிசைச்
செம்பியன்கோச்செங்கணான்செய்கோயிலே. (௪)

விடமடைமிடற்றினர்வேதநாவினர்
மடமொழிமலைமகளோடும்வைகிடம்
மடவனநடைபயில்வைகன்மாநகர்க்
குடதிசைநிலவியமாடக்கோயிலே. (௫)

நிறைபுனல்பிறையொடுநிலவுநீள்சடை
இறையவருறைவிடமிலங்குமுவெரி
மறையொடுவளர்வுசெய்வாணர்வைகலில்
திறையுடைநிறைசெல்வன்செய்தகோயிலே. (௬)

எரிசரம்வரிசிலைவளையவேவிமுன்
திரிபுரமெரிசெய்தசெல்வர்சேர்விடம்
வரிவளையவர்பயில்வைகன்மேற்றிசை
வருமுகிலணவியமாடக்கோயிலே. (௭)

மலையனவிருபதுதோளினான்வலி
தொலைவுசெய்தருள்செய்தசோதியாரிடம்
மலர்மலிபொழிலணிவைகல்வாழ்வர்கள்
வலம்வருமலையனமாடக்கோயிலே. (௮)

மாலவன்மலரவனேடிமால்கொள
மாலெரியாகியவரதர்வைகிடம்
மாலைகொடணி* மறைவாணர்வைகலில்
மாலனமணியணிமாடக்கோயிலே. (௯)

கடுவுடைவாயினர்கஞ்சிவாயினர்
பிடகுரைபேணிலார்பேணுகோயிலாம்
மடமுடையவர்பயில்வைகன்மாநகர்
வடமலையனையநன்மாடக்கோயிலே. (௧௦)

மைந்தனதிடம்வைகன்மாடக்கோயிலைச்
சந்தமர்பொழிலணிசண்பைஞானசம்
பந்தனதமிழ்கெழுபாடல்பத்திவை
சிந்தைசெய்பவர்சிவலோகஞ்சேர்வரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவைகன்மாடக்கோயிற்றிருப்பதிகம் - ௧.
ஆ திருப்பதிகம் - எ௫.

சுவாமி தேவி திருநாமங்கள் – வைசுநாதர், கொம்பியனங்கோதை.

* மாலைகொண்டணி என்றும் பாடம்.

A. No.........

Koviloor Digital Library

நச. திருநல்லம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

கல்லானிழன்மேயகறைசேர்கண்டாவென்
றெல்லாமொழியாலுமிமையோர்தொழுதேத்த
வில்லாலரண்மூன்றும்வெந்துவிழவெய்த
நல்லானமையாள்வானல்லநகரானே. (க)

தக்கன்பெருவேள்விதன்னிலமரரைத்
துக்கம்பலசெய்துசுடர்பொற்சடைதாழக்
கொக்கின்னிறகோடுகுளிர்வெண்பிறைசூடும்
நக்கன்னமையாள்வானல்லநகரானே. (உ)

அந்திமதியோடுமரவச்சடைதாழ
முந்தியனலேந்திமுதுகாட்டெரியாடி
சிந்தித்தெழ*வல்லார்தீராவினைதீர்க்கும்
நந்திநமையாள்வானல்லநகரானே. (ங)

குளிரும்மதிசூடிக்கொன்றைச்சடைதாழ
மிளிரும்மரவோடுவெண்ணூறிகழ்மார்பில்
தளிருந்திகழ்மேனித்தையல்பாகமாய்
களிரும்வயல்சூழ்ந்தநல்லநகரானே. (ச)

மணியார்திகழ்கண்டமுடையான்மலர்மல்கு
பிணிவார்சடையெந்தைபெருமான்கழல்பேணித்
துணிவார்மலர்கொண்டுதொண்டர்தொழுதேத்த
நணியானமையாள்வானல்லநகரானே. (ரு)

வாசம்மலர்மல்குமலையான்மகளோடும்
பூசஞ்சுடுநீறுபுனைந்தான்விரிகொன்றை
ஈசன்னெனவுள்கியெழுவார்வினைகட்கு
நாசன்னமையாள்வானல்லநகரானே. (சு)

அங்கோல்வளைமங்கைகாணவனலேந்திக்
கொங்கார்நறுங்கொன்றைசூடிக்குழகாக
வெங்காடிடமாகவெந்தீவிளையாடும்
நங்கோனமையாள்வானல்லநகரானே. (எ)

பெண்ணார்திருமேனிப்பெருமான்பிறைமல்கு†
கண்ணார்நுதலினன்கயிலைகருத்தினால்
எண்ணாதெடுத்தானையிறையேவிரலூன்றி
நண்ணார்புரமெய்தானல்லநகரானே. (அ)

* சிந்தித்தொழ என்றும் பாடம். † புல்கு என்றும் பாடம்.

Koviloor Digital Library

நாகத்தணையானுநளிர்மாமலரானும்
போகத்தியல்பினாற்பொலியவழகாகும்
ஆகத்தவளோடுமமர்ந்தங்கழகாரும்
நாகம்மரையார்த்தானல்லநகரானே. (௯)

குறியில்சமணோடுகுண்டர்வண்டேரர்
அறிவில்லுரைகேட்டங்கவமேகழியாதே
பொறிகொள்ளரவார்த்தான்பொல்லாவினைதீர்க்கும்
நறைகொள்பொழில்சூழ்ந்தநல்லநகரானே. (௧௦)

நலமார்மறையோர்வாழ்நல்லநகர்மேய
கொலைசேர்மழுவானைக்கொச்சையமர்ந்தோங்கு
தலமார்தமிழ்ஞானசம்பந்தன்சொன்ன
கலைகளிவைவல்லார்கவலைகழிவாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

கொல்லத்தானமனார்தமர்வந்தக்கால்
இல்லத்தார்செய்யலாவதெனேழைகாள்
நல்லத்தானமையாளுடையான்கழல்
சொல்லத்தான்வல்லிரேற்றுயர்தீருமே. (௧)

பொக்கம்பேசிப்பொழுதுகழியாதே
துக்கந்தீர்வகைசொல்லுவன்கேண்மினோ
தக்கன்வேள்விதகர்த்ததழல்வண்ணன்
நக்கன்சேர்நல்லநண்ணுதனன்மையே. (௨)

பிணிகொள்வார்குழற்பேதையர்காதலால்
பணிகண்மேவிப்பயனில்லைபாவிகாள்
அணுகவேண்டிலரனெறியாவது
நணுகுநாதனகர்திருநல்லமே. (௩)

தமக்குநல்லதுதம்முயிர்போயினால்
இமைக்கும்போதுமிராதிக்குரம்பைதான்
உமைக்குநல்லவன்றானுறையும்பதி
நமக்குநல்லதுநல்லமடைவதே. (௪)

உரைதளர்ந்துடலார்நடுங்காமுனம்
நரைவிடையுடையானிடநல்லமே
பரவுமின்பணிமின்பணிவாரொடே
விரவுமின்விரவாரைவிடுமினே. (௫)

அல்லலாகவைம்பூதங்களாட்டினும்
வல்லவாறுசிவாயநமவென்று
நல்லமேவியநாதனடிதொழ
வெல்லவந்தவினைப்பகைவிடுமே. (௬)

மாதராரொடுமக்களுஞ்சுற்றமும்
பேதமாகிப்பிரிவதன்முன்னமே
நாதன்மேவியநல்லநகர்தொழப்
போதுமின்னெழுமின்புகலாகுமே. (௭)

வெம்மையானவினைக்கடனீங்கினீர்
செம்மையாயசிவகதிசேரலாம்
கம்மையார்மலர்தூவித்தொழுமினோ
நம்மையாளுடையானிடநல்லமே. (௮)

காலமானகழிவதன்முன்னமே
வலுமாறுவணங்கிநின்றேத்துமின்
மாலுமாமலரானொடுமாமறை
நாலும்வல்லவர்கோனிடநல்லமே. (௯)

மல்லைமல்கியதோளரக்கன்வலி
ஒல்லையில்லொழித்தானுறையும்பதி
நல்லநல்லமெனும்பெயர்நாவினால்
சொல்லவல்லவர்தூநெறிசேர்வரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருநல்லத்திருப்பதிகம் - ௨.

ஆ திருப்பதிகம் - ௭௭.

சுவாமி தேவி திருநாமங்கள் - உமாமகேசர், மங்களநாயகி.

நரு. திருக்கோழம்பம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

நீற்றானைநீள்சடைமேனிறைவுள்ளதோர்
ஆற்றானையழகமர்மென்முலையாளையோர்
கூற்றானைக்குளிர்பொழிற்கோழம்பமேவிய
ஏற்றானையேத்துமினும்மிடரேகவே. (௧)

Koviloor Digital Library

மையானகண்டனைமான்மறியேந்திய
கையானைக்கடிபொழிற்கோழம்பமேவிய
செய்யானைத்தேனெய்பாலுந்திகழ்ந்தாடிய
மெய்யானைமேவுவார்மேல்வினைமேவாவே. (௨)

ஏதனையேதமிலாவிமையோர்தொழும்
வேதனைவெண்குழைதோடுவிளங்கிய
காதனைக்கடிபொழிற்கோழம்பமேவிய
நாதனையேத்துமினும்வினைநையவே. (௩)

சடையானைத்தண்மலரான்சிரமேந்திய
விடையானைவேதமும்வேள்வியுமாயநன்
குடையானைக்குளிர்பொழில்சூழ்திருக்கோழம்பம்
உடையானையுள்குமினுள்ளங்குளிரவே. (௪)

காரானைக்கடிகமழ்கொன்றையம்போதணி
தாரானைத்தையலொர்பான்மகிழ்ந்தோங்கிய
சீரானைச்செறிபொழிற்கோழம்பமேவிய
ஊரானையேத்துமினும்மிடரொல்கவே. (௫)

பண்டாலின்னீழலானைப்பரஞ்சோதியை
விண்டார்கடம்புரமூன்றுடனேவேவக்
கண்டானைக்கடிகமழ்கோழம்பங்கோயிலாக்
கொண்டானைக்கூறுமினுள்ளங்குளிரவே. (௬)

சொல்லானைச்சுடுகணையாற்புரமூன்றெய்த
வில்லானைவேதமும்வேள்வியுமானானைக்
கொல்லானையுரியானைக்கோழம்பமேவிய
நல்லானையேத்துமினும்மிடர்நையவே. (௭)

விற்றானைவல்லரக்கர்விறல்வேந்தனைக்
குற்றானைத்திருவிரலாற்கொடுங்காலனைச்
செற்றானைச்சீர்திகழுந்திருக்கோழம்பம்
பற்றானைப்பற்றுவார்மேல்வினைபற்றாவே. (௮)

நெடியானோடயனறியாவகைநின்றதோர்
படியானைப்பண்டங்கவேடம்பயின்றானைக்
கடியாருங்கோழம்பமேவியவெள்ளேற்றின்
கொடியானைக்கூறுமினுள்ளங்குளிரவே. (௯)

புத்தருந்தோகையம்பீலிகொள்பொய்ம்மொழிப்
பித்தரும்பேசுவபேச்சல்லபீடுடைக்
கொத்தலர்தண்பொழிற்கோழம்பமேவிய
அத்தனையேத்துமினல்லலறுக்கவே. (௧௦)

Koyiloor Digital Library

தண்புனலோங்குதண்ணந்தராய்மாநகர்
நண்புடைஞானசம்பந்தனம்பானுறை
விண்பொழிற்கோழம்பமேவியபத்திவை
பண்கொளப்பாடவல்லார்க்கில்லைபாவமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

வேழம்பத்தைவர்வேண்டிற்றுவேண்டிப்போய்
ஆழம்பற்றிவீழ்வார்பலவாதர்கள்
கோழம்பத்துறைகூத்தன்குரைகழல்
தாழும்பத்தர்கள்சாலச்சதுரரே. (௧)

கயிலைநன்மலையாளுங்கபாலியை *
மயிலியன்மலைமாதின்மணாளனைக்
குயில்பயில்பொழிற்கோழம்பமேயவென்
உயிரினைநினைந்துள்ளமுருகுமே. (௨)

வாழும்பான்மையராகியவான்செல்வம்
தாழும்பான்மையராகித்தம்வாயினால்
தாழம்பூமணநாறியதாழ்பொழிற்
கோழம்பாவெனக்கூடியசெல்வமே. (௩)

பாடலாக்கிடும்பண்ணொடுபெண்ணிவள்
கூடலாக்கிடுங்குன்றின்மணற்கொடு
கோடல்பூத்தலர்கோழம்பத்துண்மகிழ்ந்
தாடுங்கூத்தனுக்கன்புபட்டாளன்றே. (௪)

தளிர்கொண்மேனியடான்மிகவஞ்சவோர்
பிளிறுவாரணத்திருரிபோர்த்தவன்
குளிர்கொணீர்வயற்கோழம்பமேவினான்
நளிர்கொணீர்சடைமேலுநபந்தமே. (௫)

நாதராவர்நமக்கும்பிறர்க்குந்தாம்
வேதநாவர்விடைக்கொடியார்வெற்பில்
கோதைமாதொடுங்கோழம்பங்கோயில்கொண்
டாதிபாதமடையவல்லார்களே. (௬)

முன்னைநான்செய்தபாவமுதலறப்
பின்னைநான்பெரிதும்மருள்பெற்றது †
அன்னமார்வயற்கோழம்பத்துள்ளமர்
பின்னல்வார்சடையானைப்பிதற்றியே. (௭)

* கவாலியை என்றும் பாடம். † பெற்றதும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

ஏழைமாரிடநின்றிருகைக்கொண்டுண்
கோழைமாரொடுங்* கூடியகுற்றமாம்
கூழைபாய்† வயற்கோழம்பத்தானடி
ஏழையேன்முன்மறந்தங்கிருந்ததே. (௯)

அரவணைப்பயின்மாலயன்‡ வந்தடி
பரவனைப்பரமாம்பரஞ்சோதியைக்¶
குரவனைக்குரவார்பொழிற்கோழம்பத்
துரவனையொருவர்க்குணர்வொண்ணுமே. (௯)

சமாசூரபன்மாவைத்§ தடிந்தவேற்
குமரன்றாதைநற்கோழம்பமேவிய
அமரர்கோவினுக்கன்புடைத்தொண்டர்கள்
அமரலோகமதாள்வுடை○ யார்களே. (௧௦)

துட்டனாகிமலையெடுத்தஃதின்கீழ்ப்**
பட்டுவீழ்ந்துபடர்ந்துய்யப்போயினான்
கொட்டநாறியகோழம்பத்தீசனென்
றிட்டகீதமிசைத்தவரக்கனே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருக்கோழம்பத்திருப்பதிகம் - உ.

ஆ திருப்பதிகம் - எகூ.

சுவாமி தேவி திருநாமங்கள் - கோகிலேசுரர், சௌந்தரநாயகி.

௩௬. திருவாவடுதுறை.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

நாலடிமேல்வைப்பு. பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

இடரினுந்தளரினுமெனதுறுநோய்
தொடரினுமுனகழறொழுதெழுவேன்
கடறனிலமுதொடுகலந்தநஞ்சை
மிடறினிலடக்கியவேதியனே

இதுவோவெமையாளுமாறீவதொன்றெமக்கில்லையேல்
அதுவோவுனதின்னருளாவடுதுறையரனே. (௧)

* கூழைமாரொடுங் என்றும், † கோழைபாய் என்றும் பாடம். ‡ மாலவன் என்றும் பாடம். ¶ பரமாபரஞ்சோதியை என்றும் பாடம். § சூரவன்மார்பைத் என்றும், சூரவன்மாவைத் என்றும் பாடம். ○ தாளுடை என்றும் பாடம். ** யெடுத்தானுங்கீழ்ப் என்றும், யெடுத்தாதின்கீழ்ப் என்றும் பாடம்.

Koviloor Digital Library

வாழினுஞ்சாவினும்வருந்தினும்போய்
வீழினுமுனகழல்விடுவேனல்லேன்
தாழிளந்தடம்புனறயங்குசென்னிப்
போழிளமதிவைத்தபுண்ணியனே
இதுவோவெமையாளுமாறீவதொன்றெமக்கில்லையேல்
அதுவோவுனதின்னருளாவடுதுறையரனே. (உ)

நனவினுங்கனவினுநம்பாவுன்னை
மனவினும்வழிபடன்மறவேனம்மான்
புனல்விரிநறுங்கொன்றைப்போதணிந்த
கனலெரியனல்புல்குகையவனே
இதுவோவெமையாளுமாறீவதொன்றெமக்கில்லையேல்
அதுவோவுனதின்னருளாவடுதுறையரனே. (ஙு)

தும்மலோடருந்துயர்தோன்றிடினும்
அம்மலரடியலாலரற்று* தென்னாக்
கைமல்குவரிசிலைக்கணையொன்றினால்
மும்மதிளெரியெழமுனிந்தவனே
இதுவோவெமையாளுமாறீவதொன்றெமக்கில்லையேல்
அதுவோவுனதின்னருளாவடுதுறையரனே. (சு)

கையதுவீழினுங்கழிவுறினும்
செய்கழலடியலாற்சிந்தைசெய்யேன்
கொய்யணிநறுமலர்குலாயசென்னி
மையணிமிடறுடைமறையவனே
இதுவோவெமையாளுமாறீவதொன்றெமக்கில்லையேல்
அதுவோவுனதின்னருளாவடுதுறையரனே. (ரு)

வெந்துயர்தோன்றியோர்வெருவுறினும்
எந்தாயுன்னடியலாலேத்தாதென்னா
ஐந்தலையரவுகொண்டரைக்கசைத்த
சந்தவெண்பொடியணிசங்கரனே
இதுவோவெமையாளுமாறீவதொன்றெமக்கில்லையேல்
அதுவோவுனதின்னருளாவடுதுறையரனே. (சூ)

வெப்பொடுவிரவியோர்வினைவரினும்
அப்பாவுன்னடியலாலரற்று† தென்னா
ஒப்புடைபொருவனையுருவழிய
அப்படியழலெழவிழித்தவனே
இதுவோவெமையாளுமாறீவதொன்றெமக்கில்லையேல்
அதுவோவுனதின்னருளாவடுதுறையரனே. (எ)

* † ரடியலாவலற்று என்றும் பாடம்.

Koviloor Digital Library

பேரிடர்பெருகியோர்பிணிவரினும்
சீருடைக்கழலலாற்சிந்தைசெய்யேன்
ஏருடைமணிமுடியிராவணனை
ஆரிடர்படவரையடர்த்தவனே
இதுவோவெமையாளுமாறீவதொன்றெமக்கில்லையேல்
அதுவோவுனதின்னருளாவடுதுறையரனே. (௮)

உண்ணினும்பசிப்பினுமுறங்கினுநின்
ஒண்மலரடியலாலுரையாதென்னாக்
கண்ணனுங்கடிகமழ்தாமரைமேல்
அண்ணலுமளப்பரிதாயவனே
இதுவோவெமையாளுமாறீவதொன்றெமக்கில்லையேல்
அதுவோவுனதின்னருளாவடுதுறையரனே. (௯)

பித்தொடுமயங்கியோர்பிணிவரினும்
அத்தாவுன்னடியலாலரற்றா*தென்னாப்
புத்தருஞ்சமணரும்புறனுரைக்கப்
பத்தர்கட்கருள்செய்துபயின்றவனே
இதுவோவெமையாளுமாறீவதொன்றெமக்கில்லையேல்
அதுவோவுனதின்னருளாவடுதுறையரனே. (௧௦)

அலைபுனலாவடுதுறையமர்ந்த
இலைநுனைவேற்படையெம்மிறையை
நலமிகுஞானசம்பந்தன்சொன்ன
விலையுடையருந்தமிழ்மாலைவல்லார்
வினையாயினநீங்கிப்போய்விண்ணவர்வியனுலகம் †
நிலையாகமுன்னேறுவர்நிலமிசைநிலையிலரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தப்பிள்ளையார், திருப்பட்டீச்சரத்தினின்றும் நீங்கி, திருவாவடுதுறையை அடைந்து, சுவாமிதரிசனஞ் செய்துகொண்டிருக்கு நாளிலே, சிவபாதவிருதயர் பிள்ளையாரை நோக்கி, "நான் யாகஞ் செய்தற்கு உரியகாலஞ் சமீபித்தது. அது செய்யும்படி போதற்குப் பொருள் தரல்வேண்டும்" என்றார். பிள்ளையார் அதைக் கேட்டு, திருக்கோயிலிற் சென்று வணங்கி, "இடரினுந் தளரினும்" என்னுந் திருப்பதிகம் பாடினார். அப்பொழுது சிவபெருமானுடைய திருவருளினாலே, ஒரு சிவபூதம் விரைந்துவந்து, பீடத்தின்மேலே ஆயிரம்பொன் பொருந்திய கிழி யொன்று வைத்து, முன்னே நின்று, "இந்தக்கிழி பொன்னுலவாக் கிழி. இது சிவபெருமானால் உமக்கு அருளிச்செய்யப்பட்டது." என்று சொல்ல; பிள்ளையார் திருவருளை நினைந்து, நமஸ்கரித்து எழுந்து அஞ்சலி செய்து, பீடத்தின்மேலே வைக்கப்பட்ட பொற்கிழியைச் சிரமேற்கொண்டு, தந்தையார் கையிற் கொடுத்து, "சிவபெருமானையே தலைவராக நினைந்து வேத விதிப்படி செய்யப்படும் யாகத்தை நீரும் சீர்காழியில் இருக்கின்ற மற்றப் பிராமணர்கள் சமஸ்தரும்

* ரடியலாலலற்றா என்றும் பாடம். † வியனுலகில் என்றும் பாடம்.

Koviloor Digital Library

செய்ய, இக்கிழி குறையாது மிகும்" என்று சொல்லி, சீர்காழிக்குப்போம்படி அவருக்கு விடைகொடுத்து அனுப்பி, தாந் திருவாவடுதுறையில் எழுந்தருளி யிருந்தார்.

இருக்கும் நாளிலே, ஒருநாள் பிள்ளையார் சுவாமிதரிசனஞ் செய்து, பத்திரலிங்கமாகிய பலிபீடத்துக்குச் சமீபித்தபோது "இங்கே தமிழ்மணம் கமழ்கின்றது" என்று திருவாய்மலர்ந்தருளினர், உடனே அங்குள்ளார் அப்பலிபீடத்தை வேறாக எழுந்தருளச் செய்தனர். பிள்ளையார் உற்றுநோக்கி, அதனடியிலே சேமித்திருந்த திருமந்திரத் திருமுறையைத் தம்முடைய அருமைத்திருக்கையால் எடுத்து, "இது திருமூலநாயனர் இத்திருக்கோயிலின் மேலைத்திசையிலே உள்ள அரசின்கீழே, மூவாயிரம் வருஷமளவு சிவயோகத்தில் இருந்து, ஒவ்வொருவருஷத்திற்கு ஒவ்வொரு திருப்பாட்டாக மூவாயிரம் திருப்பாட்டினலே, சிவபெருமானுடைய திருவுளப்பாங்கின்படி, சிவாகமங்களிலே உணர்த்தப்பட்ட மெய்ப்பொருளை ஞானம், யோகம், கிரியை, சரியை என்னு நான்கு பாதங்களாகத் தமிழ்நாட்டாருக்கு உபயோகமாகும் பொருட்டுச் செய்தருளினர்" என்று அத்திருமந்திரத்தின் அருமை பெருமைகளை யெல்லாம் சொல்லி, அதனைத் தமிழ்நாடெங்கும் பரவச் செய்தனர்.

திருநாவுக்கரசுநாயனர்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

மாயிருஞாலமெல்லாமலரடிவணங்கும்போலும்
பாயிருங்கங்கையாளைப்படர்சடைவைப்பர்போலும்
காயிரும்பொழில்கள்சூழ்ந்தகழுமலவூரர்க்கம்பொன்
ஆயிரங்கொடுப்பர்போலுமாவடுதுறையனரே. (க)

மடந்தைபாகத்தர்போலுமான்மறிக்கையர்போலும்
குடந்தையிற்குழகர்போலுங்கொல்புலித்தோலர்* போலும்
கடைந்தநஞ்சுண்பர்போலுங்காலனைக்காய்வர்போலும்
அடைந்தவர்க்கன்பர்போலுமாவடுதுறையனரே. (உ)

உற்றநோய்தீர்ப்பர்போலுமுறுதுணையாவர்போலும்
செற்றவர்புரங்கண்மூன்றுந்தீயெழச்செறுவர்போலும்
கற்றவர்பரவியேத்தக்கலந்துலந்தலந்துபாடும்
அற்றவர்க்கன்பர்போலுமாவடுதுறையனரே. (ங)

மழுவமர்கையர்போலுமாதவள்பாகர்போலும்
எழுநுனைவேலர்போலுமென்புகொண்டணிவர்போலும்
தொழுதெழுந்தாடிப்பாடித்தோத்திரம்பலவுஞ்சொல்லி
அழுமவர்க்கன்பர்போலுமாவடுதுறையனரே. (ச)

பொடியணிமெய்யர்போலும்பொங்குவெண்ணூலர்போலும்
கடியதோர்விடையர்போலுங்காமனைக்காய்வர்போலும்
வெடிபடுதலையர்போலும்வேட்கையாற்பரவுந்தொண்டர்
அடிமையையளப்பர்போலு† மாவடுதுறையனரே. (ரு)

* கோட்புலித்தோலர் என்றும் பாடம். † அடிமையையாள்வார்போலு என்றும் பாடம்.

Koviloor Digital Library

வக்கரனுயிரைவவ்வக்கண்மலர்கொண்டுபோற்றச்
சக்கரங்கொடுப்பர்போலுந்தானவர்தலைவர்போலும்
துக்கமாமூடர்தம்மைத்துயரிலேவீழ்ப்பர்போலும்
அக்கரையார்ப்பர்போலுமாவடுதுறையனாரே. (சு)

விடைதருகொடியர்போலும்வெண்புரிநூலர்போலும்
படைதருமழுவர்போலும்பாய்புலித்தோலர்போலும்
உடைதருகீளர்போலுமுலகமுமாவர்போலும்
அடைபவரிடர்களைக்குமாவடுதுறையனாரே. (எ)

முந்திவானோர்கள்வந்துமுறைமையால்வணங்கியேத்த
நந்திமாகாளரென்பார்நடுவுடையார்கணிற்பச்
சிந்தியாதேயொழிந்தார்திரிபுரமெரிப்பர்போலும்
அந்திவான்மதியஞ்சூடுமாவடுதுறையனாரே. (அ)

பானமரேனமாகிப்பாரிடந்திட்டமாலும்
தேனமர்ந்தேறுமல்லித்திசைமுகமுடையகோவும்
தீனரைத்தியக்கறுத்ததிருவுருவுடையர்போலும்
ஆனரையேற்றர்போலுமாவடுதுறையனாரே. (கூ)

பார்த்தனுக்கருள்வர்போலும்படர்சடைமுடியர்போலும்
ஏத்துவாரிடர்களைவரின்பங்கள்கொடுப்பர்போலும்
கூத்தராய்ப்பாடியாடிக்கொடுவலியரக்கன்றன்னை
ஆர்த்தவாயலறுவிப்பாராவடுதுறையனாரே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார், வேதாரணியத்திலே சிலநாள் இருந்து, பின் அதனை நீங்கி, திருநாகைக்காரோணம் முதலிய ஸ்தலங்களை வணங்கிக்கொண்டு திருவீழிமிழலையை அடைந்து, சிலநாள் அங்கிருந்து, பின் திருவாவடுதுறையிற்சென்று, சுவாமிதரிசனஞ் செய்து, திருஞானசம்பந்தமூர்த்திநாயனாருக்கு ஒரு திருப்பதிகத்தின் பொருட்டு ஆயிரஞ் செம்பொன் கொடுத்தருளிய திறத்தை "மாயிருஞாலமெல்லாம்" என்னுந் திருப்பதிகத்திலே புகழ்ந்துபாடி, பழையாறையிற் சென்றார்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

மஞ்சனேமணியுமானாய்மரகதத்திரளுமானாய்
நெஞ்சுளேபுகுந்துநின்றுநினைதரு* நிகழ்வினானே
துஞ்சும்போதாகவந்துதுணையெனக்காகிநின்று
அஞ்சலென்றருளவேண்டுமாவடுதுறையுளானே. (க)

நானுகந்துன்னைநாளுநணுகுமாகருதியேயும்
ஊனுகந்தோம்புநாயேனுள்ளுறவைவர்நின்றார்
தானுகந்தேயுகந்ததகவிலாத்தொண்டனேனான்
ஆனுகந்தேறுவானேயாவடுதுறையுளானே. (உ)

* நிறைதரு என்றும் பாடம்.

கட்டமேவினைகளானகாத்திவைநோக்கியாளாய்
ஒட்டவேயொட்டிநாளு* முன்னையுள்வைக்கமாட்டேன்
பட்டவான்றலைகையேந்திப்பலிதிரிந்தூர்கடோறும்
அட்டமாவுருவினானேயாவடுதுறையுளானே. (௩)

பெருமைநன்றுடையதில்லையென்றுநான்பேசமாட்டேன்
ஒருமையாலுன்னையுள்கியுகந்துவானேறமாட்டேன்
கருமையிட்டாயவூனைக்கட்டமேகழிக்கின்றேனான்
அருமையாநஞ்சமுண்டவாவடுதுறையுளானே. (௪)

துட்டனாய்வினையதென்னுஞ்சுழித்தலையகப்பட்டேனைக்
கட்டனாவைவர்வந்துகலக்காமைக்காத்துக்கொள்வாய்
மட்டவிழ்கோதைதன்னைமகிழ்ந்தொருபாகம்வைத்து
அட்டமாநாகமாட்டுமாவடுதுறையுளானே. (௫)

காரழல்கண்டமேயாய்கடிமதிட்புரங்கண்மூன்றும்
ஓரழலம்பினாலேயுகைத்துத்தீயெரியமூட்டி
நீரழற்சடையுளானேநினைப்பவர்வினைகளீர்ப்பாய்
ஆரழலேந்தியாடுமாவடுதுறையுளானே. (௬)

செறிவிலேன்சிந்தையுள்ளேசிவனடிதெரியமாட்டேன்
குறியிலேன்குணமொன்றில்லேன்கூறுமாகூறமாட்டேன்
நெறிபடுமதியொன்றில்லேனினையுமாநினையமாட்டேன்
அறிவிலேனயர்த்துப்போனேனாவடுதுறையுளானே. (௭)

கோலமாமங்கைதன்னைக்கொண்டொருகோலமாய
சீலமேயறியமாட்டேன்செய்வினைமூடிநின்று
ஞாலமாமிதனுளென்னைநைவியாவண்ணநல்காய்
ஆலமாநஞ்சமுண்டவாவடுதுறையுளானே. (௮)

நெடியவன்மலரினானுநேர்ந்திருபாலுநேடக்
கடியதோருருவமாகிக்கனலெரியாகிநின்ற
வடிவினைவண்ணமென்றேயென்றுதாம்பேசலாகா
அடியனேனெஞ்சினுள்ளாராவடுதுறையுளானே. (௯)

மலைக்குநேராயரக்கன்சென்றுறமங்கையஞ்சத்
தலைக்குமேற்கைகளாலேதாங்கினான்வலியைமாள
வுலப்பிலாவிரலாலூன்றிப்பொறுத்தவற்கருள்கள்செய்து
அலைத்தவான்கங்கைசூடுமாவடுதுறையுளானே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

* ஒட்டவேயோடிநாளு என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

நிறைக்கவாலியளல்லளிந்நேரிழை
மறைக்கவாலியளல்லளிம்மாதராள்
பிறைக்கவாலப்* பெரும்புனலாவடு
துறைக்கவாலியோடாடியசுண்ணமே. (க)

தவளமாமதிச்சாயலோர்சந்திரன்
பிளவுசூடியபிஞ்ஞகனெம்மிறை
அளவுகண்டிலளாவடுதண்டுறைக்
களவுகண்டனளொத்தனள்கன்னியே. (உ)

பாதிப்பெண் † ணொருபாகத்தன்பன்மறை
ஓதியென்னுளங்கொண்டவனொண்பொருள்
ஆதியாவடுதண்டுறைமேவிய
சோதியேசுடரேயென்றுசொல்லுமே. (௩)

கார்க்கொண்மாமுகில்போல்வதோர்கண்டத்தன்
வார்க்கொண்மென்முலைசேர்ந்திருமாந்திவள்
ஆர்க்கொள்கொன்றையனாவடுதண்டுறைத்
தார்க்குநின்றிவடாழுமாகாண்மினே. (௪)

கருகுகண்டத்தன்காய்கதிர்ச்சோதியன்
பருகுபாலமுதேயெனும்பண்பினன்
அருகுசென்றிலளாவடு ‡ தண்டுறை
ஒருவனென்னையுடையகோவென்னுமே. (௫)

குழலுங்கொன்றையுங்கூவிளமத்தமும்
தழலுந்தையலோர்பாகமாத்தாங்கினான்
அழகனாவடுதண்டுறையாவெனக்
கழலுங்கைவளைகாரிகையாளுக்கே. (௬)

பஞ்சின்மெல்லடிப்பாவையோர்பங்கனைத்
தஞ்சமென்றிருமாந்திவளாரையும்
அஞ்சுவாளல்லளாவடுதண்டுறை
மஞ்சனேயடிவளாடியமையலே. (௭)

பிறையுஞ்சூடிநற்பெண்ணொடாணாகிய ¶
நிறையுநெஞ்சமுநீர்மையுங்கொண்டவன்
அறையும்பூம்பொழிலாவடுதண்டுறை
இறைவனென்னையுடையவனென்னுமே. (௮)

* பிறைக்கவாலிப் என்று பாடமோதுவாருமுளர். † ஆதிபெண் என்றும் பாடம்.
‡ சென்றிவளாவடு என்றும் பாடம். ¶ டாணாகியென் என்றும் பாடம்.

Koviloor Digital Library

வையந்தானளந்தானுமயனுமாய்
மெய்யைக்காணலுற்றார்க்கழலாயினான்
ஐயனாவடுதண்டுறையாவெனக்
கையில்வெள்வளையுங்கழல்கின்றதே. (௯)

பக்கம்பூதங்கள்பாடப்பலிகொள்வான்
மிக்கவாளரக்கன்வலிவிட்டினான்
அக்கணிந்தவனாவடுதண்டுறை
நக்கனென்னுமிந்நாணிலிகாண்மினே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

நம்பனைநால்வேதங்கரைகண்டானை
ஞானப்பெருங்கடலைநன்மைதன்னைக்
கம்பனைக்கல்லாலிருந்தான்றன்னைக்
கற்பகமாயடியார்கட்கருள்செய்வானைச்
செம்பொன்னைப்பவளத்தைத்திரளுமுத்தைத்
திங்களைஞாயிற்றைத்தீயைநீரை
அம்பொன்னையாவடுதண்டுறையுண்மேய
வரனடியேயடிநாயேனடைந்துய்ந்தேனே. (௧)

மின்னானைமின்னிடைச்சேருருமினானை
வெண்முகிலாயெழுந்துமழைபொழிவான்றன்னைத்
தன்னானைத்தன்னொப்பாரில்லாதானைத்
தாயாகிப்பல்லுயிர்க்கோர்தந்தையாகி
என்னானையெந்தைபெருமான்றன்னை
யிருநிலமுமண்டமுமாய்ச்செக்கர்வானே
அன்னானையாவடுதண்டுறையுண்மேய
வரனடியேயடிநாயேனடைந்துய்ந்தேனே. (௨)

பத்தர்கள்சித்தத்தேபாவித்தானைப்
பவளக்கொழுந்தினைமாணிக்கத்தின்
தொத்தினைத்தூநெறியாய்நின்றான்றன்னைச்
சொல்லுவார்சொற்பொருளின்றோற்றமாகி
வித்தினைமுளைக்கிளையைவேரைச்சீரை
வினைவயத்தின்றன்சார்பைவெய்யதீர்க்கும்
அத்தனையாவடுதண்டுறையுண்மேய
வரனடியேயடிநாயேனடைந்துய்ந்தேனே. (௩)

பேணியநற்பிறைதவழ்செஞ்சடையினானைப்
பித்தராமடியார்க்குமுத்திகாட்டும்
ஏணியையிடர்க்கடலுட்சுழிக்கப்பட்டிங்
கிளைக்கின்றேற்கக்கரைக்கேயேறவாங்கும்

Koviloor Digital Library

தோணியைத்தொண்டனேன்றூயசோதிச்
சுலாவெண்குழையானைச்சுடர்பொற்காசின்
ஆணியையாவடுதண்டுறையுண்மேய
வரனடியேயடிநாயேனடைந்துய்ந்தேனே. (௪)

ஒருமணியையுலகுக்கோருறுதிதன்னை
யுதயத்தினுச்சியையுருமானானைப்
பருமணியைப்பாலோடஞ்சாடினானைப்
பவித்திரனைப்பசுபதியைப்பவளக்குன்றைத்
திருமணியைத்தித்திப்பைத்தேனதாகித்
தீங்கரும்பினின்சுவையைத்திகழுஞ்சோதி
அருமணியையாவடுதண்டுறையுண்மேய
வரனடியேயடிநாயேனடைந்துய்ந்தேனே. (௫)

ஏற்றானையெண்டோளுடையான்றன்னை
யெல்லிநடமாடவல்லான்றன்னைக்
கூற்றானைக்கூற்றமுதைத்தான்றன்னைக்
குரைகடல்வாய்நஞ்சுண்டகண்டன்றன்னை
நீற்றானைநீளரவொன்றார்த்தான்றன்னை
நீண்டசடைமுடிமேனீரார்கங்கை
ஆற்றானையாவடுதண்டுறையுண்மேய
வரனடியேயடிநாயேனடைந்துய்ந்தேனே. (௬)

கைம்மானமதக்களிற்றை* யுரித்தான்றன்னைக்
கடல்வரைவானாகாசமானான்றன்னைச்
செம்மானப்பவளத்தைத்திகழுமுத்தைத்
திங்களைஞாயிற்றைத்தீயானானை
எம்மானையென்மனமேகோயிலாக
விருந்தானையென்புருகுமடியார்தங்கள்
அம்மானையாவடுதண்டுறையுண்மேய
வரனடியேயடிநாயேனடைந்துய்ந்தேனே. (௭)

மெய்யானைப்பொய்யரொடுவிரவாதானை
வெள்ளடையைத்தண்ணிழலைவெந்தீயேந்தும்
கையானைக்காமனுடல்வேவக்காய்ந்த
கண்ணானைக்கண்மூன்றுடையான்றன்னைப்
பையாடரவுமதியுடனேவைத்த
சடையானைப்பாய்புலித்தோலுடையான்றன்னை
ஐயானையாவடுதண்டுறையுண்மேய
வரனடியேயடிநாயேனடைந்துய்ந்தேனே. (௮)

வேண்டாமைவேண்டுவதுமில்லான்றன்னை
விசயனைமுன்னசைவித்தவேடன்றன்னைத்
தூண்டாமைச்சுடர்விடுநற்சோதிதன்னைச்
சூலப்படையானைக்காலன்வாழ்நாள்

* மதகளிற்றை என்னும் பாடம்.

Koviloor Digital Library

மாண்டோடவுதைசெய்தமைந்தன்றன்னை
மண்ணவரும்விண்ணவரும்வணங்கியேத்தும்
ஆண்டானையாவடுதண்டுறையுண்மேய
வானடியேயடிநாயேனடைந்துய்ந்தேனே. (கூ)

பந்தணவுமெல்விரலாள்பாகன்றன்னைப்
பாடலோடாடல்பயின்றான்றன்னைக்
கொந்தணவுநறுங்கொன்றைமாலையானைக்
கோலமாநிலமிடற்றான்றன்னைச்
செந்தமிழோடாரியனைச்சீரியானைத்
திருமார்பிற்புரிவெண்ணூறிகழப்பூண்ட
அந்தணனையாவடுதண்டுறையுண்மேய
வானடியேயடிநாயேனடைந்துய்ந்தேனே. (கo)

தரித்தானைத்தன்கடனஞ்சுண்டான்றன்னைத்
தக்கன்றன்பெருவேள்விதகர்த்தான்றன்னைப்
பிரித்தானைப்பிறைதவழ்செஞ்சடையினானைப்
பெருவலியான்மலையெடுத்தவரக்கன்றன்னை
நெரித்தானைநேரிழையாள்பாகத்தானை
நிசனெனுடலுறுநோயானதிர
அரித்தானையாவடுதண்டுறையுண்மேய
வானடியேயடிநாயேனடைந்துய்ந்தேனே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

திருவேயென்செல்வமேதேனேவானோர்
செழுஞ்சுடரேசெழுஞ்சுடர்நற்சோதிமிக்க
உருவேயென்னுறவேயென்னூனேயூனி
னுள்ளமேயுள்ளத்தினுள்ளேநின்ற
கருவேயென்கற்பகமேகண்ணேகண்ணிற்
கருமணியேமணியாடுபாவாய்காவாய்
அருவாயவல்வினைநோயடையாவண்ணா
மாவடுதண்டுறையுறையுமமரரேறே. (க)

மாற்றேனெழுத்தஞ்சுமென்றனாவின்
மறவேன்றிருவருள்கள்வஞ்சநெஞ்சின்
ஏற்றேன்பிறதெய்வமென்னாநாயே
னெம்பெருமான்றிருவடியேயென்னினல்லால்
மேற்றான்செய்வனகள்செய்யக்கண்டு
வேதனைக்கேயிடங்கொடுத்துநாளுநாளும்
ஆற்றேனடியேனையஞ்சேலென்னு
மாவடுதண்டுறையுறையுமமரரேறே. (௨)

Koviloor Digital Library

வரையார்மடமங்கைபங்காகங்கை
மணவாளாவார்சடையாய்நின்றனாமம்
உரையாவுயிர்போகப்பெறுவேனாகி
லுறுநோய்வந்தெத்தனையுமுற்றாலென்னே
கரையாநினைந்துருகிக்கண்ணீர்மல்கிக்
காதலித்துநின்கழலேயேத்துமன்பர்க்
கரையாவடியேனையஞ்சேலென்னா
யாவடுதண்டுறையுறையுமமரரேறே. (௩)

சிலைத்தார்திரிபுரங்கடீயில்வேவச்
சிலைவளைவித்துமையவளையஞ்சநோக்கிக்
கலித்தாங்கிரும்பிடிமேற்கைவைத்தோடுங்
களிறுரித்தகங்காளாவெங்கள்கோவே
நிலத்தாரவர்தமக்கேபொறையாய்நாளு
நில்லாவுயிரோம்புநீதனேனான்
அலுத்தேனடியேனையஞ்சேலென்னா
யாவடுதண்டுறையுறையுமமரரேறே. (௪)

நறுமாமலர்கொய்துநீரின்மூழ்கி
நாடோறுநின்கழலேயேத்திவாழ்த்தித்
துறவாததுன்பந்துறந்தேன்றன்னைச்
சூழுலகிலூழ்வினைவந்துற்றாலென்னே
உறவாகிவானவர்கண்முற்றும்வேண்ட
வொலிதிரைநீர்க்கடனஞ்சுண்டுய்யக்கொண்ட
அறவாவடியேனையஞ்சேலென்னா
யாவடுதண்டுறையுறையுமமரரேறே. (௫)

கோனாரணனங்கந்தோண்மேற்கொண்டு
கொழுமலரான்றன்சிரத்தைக்கையிலேந்திக்
கானார்களிற்றுரிவைப்போர்வைமூடிக்
கங்காளவேடராவெங்குஞ்செல்வீர்
நானுமக்கோர்வினைக்கேடனே
னல்வினையுந்தீவினையுமெல்லாமுன்னே
ஆனாயடியேனையஞ்சேலென்னா
யாவடுதண்டுறையுறையுமமரரேறே. (௬)

உழையுரித்தமானுரிதோலாடையானே
யுமையவடம்பெருமானேயிமையோரேறே
கழையிறுத்தகருங்கடனஞ்சுண்டகண்டா
கயிலாயமலையானேயுன்பாலன்பர்
பிழைபொறுத்தியென்பதுவும்பெரியோய்நின்றன்
கடனன்றேபேரருளுன்பாலதன்றே
அழையுறுத்துமாமயில்களாலுஞ்சோலை*
யாவடுதண்டுறையுறையுமமரரேறே. (௭)

* மயில்களாடுஞ்சோலை என்றும் பாடம்.

Koviloor Digital Library

உலந்தார்தலைகலனென்றேந்திவானோ
ருலகம்பலிதிரிவாயுன்பாலன்பு
கலந்தார்மனங்கவருங்காதலானே
கனலாடுங்கையவனேயையாமெய்யே
மலந்தாங்குயிர்ப்பிறவிமாயக்காய
மயக்குளேவிழுந்தழுந்திநாளுநாளும்
அலந்தேனடியேனையஞ்சேலென்னா
யாவடுதண்டுறையுறையுமமரரேறே. (௮)

பல்லார்ந்தவெண்டலைகையிலேந்திப்
பசுவேறியூரூரன்பலிகொள்வானே
கல்லார்ந்தமலைமகளுநீருமெல்லாங் *
கரிகாட்டிலாட்டுகந்தீர்கருதீராகில்
எல்லாருமென்றன்னையிகழ்வர்போரு
மேழையமண்குண்டர்சாக்கியரொன்றுக் †
கல்லாதார்திறத்தொழிந்தேனஞ்சேலென்னா
யாவடுதண்டுறையுறையுமமரரேறே. (௯)

துறந்தார்தந்தூநெறிக்கட்சென்றேனல்லேன்
றுணைமாலைசூட்டநான்றூயேனல்லேன்
பிறந்தேனின்றிருவருளேபேசினல்லாற்
பேசாதநாளெல்லாம்பிறவாநாளே
செறிந்தார்மதிலிலங்கைக்கோமான்றன்னைச்
செறுவரைக்கீழடர்த்தருளிச்செய்கையெல்லாம்
அறிந்தேனடியேனையஞ்சேலென்னா
யாவடுதண்டுறையுறையுமமரரேறே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

மறையவனொருமாணிவந்தடையவாரமாயவனாருயிர்நிறுத்தக்
கறைகொள்வேலுடைக்காலனைக்காலாற்கடந்தகாரணங்கண்டுகண்டடியேன்
இறைவனெம்பெருமானென்றெப்போதுமேத்திநின்றஞ்சலிசெய்துன்
அறைகொள்சேவடிக்கன்பொடுமடைந்தேனாவடுதுறையாதியெம்மானே. (௧)

தெருண்டவாயிடைநூல்கொண்டுசிலந்திசித்திரப்பந்தர்சிக்கெனவியற்றச்
சுருண்டசெஞ்சடையாயதுதன்னைச்சோழனாக்கியதொடர்ச்சிகண்டடியேன்
புரண்டுவீழ்ந்துநின்பொன்மலர்ப்பாதம்போற்றிபோற்றியென்றன்பொடுபுலம்பி
அருண்டேனென்மேல்வினைக்கஞ்சிவந்தடைந்தேனாவடுதுறையாதியெம்மானே. ()

* நீயுமெல்லாங் என்றும் பாடம். † சாக்கியர்களொன்றுக் என்றும் பாடம்.

Koviloor Digital Library

திகழுமாலவனுயிரமலராலேத்துவானெருநீண்மலர்குறையப்
புகழினலவன்கண்ணிடந்திடலும்புரிந்துசக்கரங்கொடுத்தல்கண்டடியேன்
திகழுநின்றிருப்பாதங்கள்பரவித்தேவதேவநின்றிறம்பலபிதற்றி
அகழும்வல்வினைக்கஞ்சிவந்தடைந்தேனுவடுதுறையாதியெம்மானே. (௩)

வீரத்தாலொருவேடுவனுகிவிசைத் * தொர்கேழலைத்தொர்ந்துசென்றணைந்து[ன்
போரைத்தான்விசயன்றனக்கன்பாய்ப்புரிந்தவான்படைகொடுத்தல்கண்டடியே
வாரத்தானுனநாமங்கள்பரவிவழிபட்டுன்றிறமேநினைந்துருகி
ஆர்வத்தோடும்வந்தடியிணை † யடைந்தேனுவடுதுறையாதியெம்மானே. (௪)

ஒக்கமுப்புரமோங்கெரிதூவவுன்னையுன்னியமூவர்நின்சரணம்
புக்குமற்றவர்பொன்னுலகாளப்புகழினலருளீந்தமையறிந்து
மிக்கநின்கழலேதொழுதாற்றி ‡ வேதியாவாதிமூர்த்திநின்னரையில்
அக்கணிந்தவெம்மானுனையடைந்தேனுவடுதுறையாதியெம்மானே. ¶ (௫)

திருச்சிற்றம்பலம்.

பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

கங்கைவார்சடையாய்கணநாதாகாலகாலனேகாமனுக்கனலே
பொங்குமாகடல்விடமிடற்றானேபூதநாதனேபுண்ணியாபுனிதா
செங்கண்மால்விடையாய்தெளிதேனேதீர்த்தனேதிருவாவடுதுறையுள்
அங்கணாவெனையஞ்சலென்றருளாயாரெனக்குறவமரர்களேறே. (௧)

மண்ணின்மேன்மயங்கிக்கிடப்பேனைவலியவந்தெனையாண்டுகொண்டானே
கண்ணிலேனுடம்பில்லடுநோயாற்கருத்தழிந்துனக்கேபொறையானேன்
தெண்ணிலாவெறிக்குஞ்சடையானேதேவனேதிருவாவடுதுறையுள்
அண்ணலேயெனையஞ்சலென்றருளாயாரெனக்குறவமரர்களேறே. (௨)

ஒப்பிலாமுலையாளொருபாகாவுத்தமாமத்தமார்தருசடையாய்
முப்புரங்களைத்தீவளைத்தங்கேமூவருக்கருள்செய்யவல்லானே
செப்பவானிழற்கீழிருந்தருளுஞ்செல்வனேதிருவாவடுதுறையுள்
அப்பனேயெனையஞ்சலென்றருளாயாரெனக்குறவமரர்களேறே. (௩)

கோதியினல்வருகாளிதன்கோபங்குறையவாடியகூத்துடையானே
மதியிலேனுடம்பாலடுநோயின் § மயங்கினேன்மணியேமணவாளா
விதியினலிமையோர்தொழுதேத்தும்விகிர்தனேதிருவாவடுதுறையுள்
அதியனே ٥ யெனையஞ்சலென்றருளாயாரெனக்குறவமரர்களேறே. (௪)

வந்தவாளரக்கன்வலிதொலைத்துவாழுநாள்கொடுத்தாய்வழிமுதலே
வெந்தவெண்பொடிப்பூசவல்லானேவேடனுய்விசயற்கருள்புரிந்த
இந்துசேகரனேயிமையோர்சீசனேதிருவாவடுதுறையுள்
அந்தணாவெனையஞ்சலென்றருளாயாரெனக்குறவமரர்களேறே. (௫)

* விசைந்தும் பாடம். † தடியிணை என்றும் பாடம். ‡ தொழுதலற்றி என்றும் பாடம்.
¶ இத்திருப்பதிகத்தில் ௬, ௭, ௮, ௯, ௧0 இச்செய்யுள்கள் மறைந்துபோயின. § னுடம்பிலடுநோயான் என்றும் பாடம். ٥ அதிகனே என்றும், அதிபனே என்றும் பாடம்.

Koviloor Digital Library

குறைவிலாநிறைவேகுணக்குன்றேகூத்தனேகுழைக்காதுடையானே
உறவிலேனுனையன்றிமற்றடியேனொருபிழைபொறுத்தாலழிவுண்டே*
சிறைவண்டார்பொழில்சூழ்திருவாரூர்ச்செம்பொனேதிருவாவடுதுறையுள்
அறவனேயெனையஞ்சலென்றருளாயாரெனக்குறவமரர்களேறே. (௬)

வெய்யமாகரியீருரியானேவெங்கையாடையினுய்விதிமுதலே
மெய்யனேயடலாழியன்றரிதான்வேண்டநீகொடுத்தருள்புரிவிகிர்தா
செய்யமேனியனேதிகழொளியேசெங்கணேதிருவாவடுதுறையுள்
ஐயனேயெனையஞ்சலென்றருளாயாரெனக்குறவமரர்களேறே. (௭)

கோதிலாவமுதேயருள்பெருகுகோலமேயிமையோர்தொழுகோவே
பாதிமாதொருகூறுடையானேபசுபதிபரமாபரமேட்டி
தீதிலாமலையேதிருவருள்சேர்சேவகாதிருவாவடுதுறையுள்
ஆதியேயெனையஞ்சலென்றருளாயாரெனக்குறவமரர்களேறே. (௮)

வானநாடனேவழித்துணைமருந்தேமாசிலாமணியேமறைப்பொருளே
ஏனமாவெயிறாமையுமெலும்புமீடுதாங்கியமார்புடையானே
தேனெய்பாறயிராட்டுகந்தானேதேவனேதிருவாவடுதுறையுள்†
ஆனையேயெனையஞ்சலென்றருளாயாரெனக்குறவமரர்களேறே. (௯)

வெண்டலைப்பிறைகொன்றையுமரவும்வேரிமத்தமும்விரவிமுன்முடித்த
இண்டைமாமலர்ச்செஞ்சடையானையீசனைத்திருவாவடுதுறையுள்
அண்டவாணனைச்சிங்கடியப்பனணுக்கவன்றொண்டனூர்வத்தாலுரைத்த
தண்டமிழ்மலர்பத்தும்வல்லார்கள்சாதலும்பிறப்புமறுப்பாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார், திருவாவடுதுறையிற் சேர்ந்து, சுவாமியைவணங்கி, ஒரு கண்ணில்லாமையைக்குறித்து மனங்கவன்று "கங்கைவார்சடையாய்" என்னுந் திருப்பதிகம் எடுத்து, ஐந்து திருப்பாட்டுப் பாடி, "குறைவிலாநிறைவே" என்னும் ஆறுந் திருப்பாட்டுத் தொடங்கிய அளவில், சிவபிரான் அவ்வாலயத்தில், திருவாரூரில் எழுந்தருளியிருக்கும் திருக்கோலத்தைத் தரிசிப்பித்தருளினர். அங்ஙனந்தரிசித்த குறிப்புத் தோன்ற அத்திருப்பாட்டில், "சிறைவண் டார்பொழில் சூழ்திரு வாரூர்ச் செம்பொனே" என்று அருளிச்செய்தார்.

திருவாவடுதுறைத்திருப்பதிகம் - ௮.

ஆ திருப்பதிகம் - ௮௭.

சுவாமி தேவி திருநாமங்கள் - மாசிலாமணிஈசர்; செம்பொற்தியாகர், ஒப்பிலாமுலையம்மை.

* விழிவுண்டோ என்றும் பாடம். † தேவதேவனேயாவடுதுறையுள் என்றும் பாடம்.

Koviloor Digital Library

௩௭. திருத்துருத்தி.*

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

திருவிராகம். பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

வரைத்தலைப்பசும்பொனோடருங்கலன்† களுந்திவந்
திரைத்தலைச்சுமந்துகொண்டெறிந்திலங்குகாவிரிக்
கரைத்தலைத்துருத்திபுக்கிருப்பதேகருத்தினாய்
உரைத்தலைப்பொலிந்துனக்குணர்த்துமாறுவல்லமே. (௧)

அடுத்தடுத்தகத்தியோடுவன்னிகொன்றைகூவிளம்
தொடுத்துடன்சடைப்பெய்தாய்துருத்தியாயோர்காலனைக்
கடுத்தடிப்புறத்தினாணிறத்துதைத்தகாரணம்
எடுத்தெடுத்துரைக்குமாறுவல்லமாகினல்லமே. (௨)

கங்குல்கொண்டதிங்களோடுகங்கைதங்குசெஞ்சடைச்
சங்கிலங்குவெண்குழைசரிந்திலங்குகாதினாய்
பொங்கிலங்குபூணநூலுருத்திராதுருத்திபுக்
கெங்குநின்னிடங்களாவடங்கிவாழ்வதென்கொலோ. (௩)

கருத்தினாலோர்காணியில்விருத்தியில்லைதொண்டர்தம்
அருத்தியாற்றம்மல்லல்சொல்லியையமேற்பதன்றியும்
ஒருத்திபால்பொருத்திவைத்துடம்புவிட்டியோகியாய்
இருத்திநீதுருத்திபுக்கிதென்னமாயமென்பதே. (௪)

துறக்குமாசொலப்படாய்துருத்தியாய்திருந்தடி
மறக்குமாறிலாதவென்னைமையல்செய்திம்மண்ணின்மேல்
பிறக்குமாறுகாட்டினாய்பிணிப்படுமுடம்புவிட்
டிறக்குமாறுகாட்டினாய்க்கிழுக்குகின்றதென்னையே. (௫)

வெயிற்கெதிர்ந்திடங்கொடாதகங்குளிர்ந்தபைம்பொழில்
துயிற்கெதிர்ந்தபுள்ளினங்கண்மல்குதண்டுருத்தியாய்
மயிற்கெதிர்ந்தணங்குசாயன்மாதொர்பாகமாகமூ
எயிற்கெதிர்ந்தொரம்பினாலெரித்தவில்லியல்லையே. (௬)

கணிச்சியம்படைச்செல்வாகழிந்தவர்க்கொழிந்தசீர்
துணிச்சிரக்கிரந்தையாய்கரந்தையாய்துருத்தியாய்
அணிப்படுந்தனிப்பிறைப்பனிக்கதிர்க்கவாவுநல்
மணிப்படும்பைநாகநீமகிழ்ந்தவண்ணலல்லையே. (௭)

* திருத்துருத்தி—சோழநாட்டுக் குற்றாலம். † டொருங்கலன் என்றும் பாடம்.

Koviloor Digital Library

சுடப்பொடிந்துடம்பிழந்தநங்கனுபமன்மதன்
இடர்ப்படக்கடந்திடந்துருத்தியாகவெண்ணினாய்
கடற்படையுடையவக்கடலிலங்கைமன்னனை
அடற்படவடுக்கவல்லடர்த்தவண்ணலல்லையே. (௮)

களங்குளிர்ந்திலங்குபோதுகாதலானுமாலுமாய்
வளங்கிளம்பொனங்கழல்வணங்கிவந்துகாண்கிலார்
துளங்கிளம்பிறைச்செனித்துருத்தியாய்திருந்தடி
உளங்குளிர்ந்தபோதெலாமுகந்துகந்துரைப்பனே. (௯)

புத்தர்தத்துவமிலாச்சமணுரைத்தபொய்தனை
உத்தமமெனக்கொளாதுகந்தெழுந்துவண்டினம்
துத்தநின்றுபண்செயுஞ்சூழ்பொழிற்றுருத்தியெம்
பித்தர்பித்தனைத்தொழப்பிறப்பறுத்தல்* பெற்றியே. (௧௦)

கற்றுமுற்றினார்தொழுங்கழும்மலத்தருந்தமிழ்
சுற்றுமுற்றுமாயினானவன்பகர்ந்தசொற்களால்
பெற்றமொன்றுயர்த்தவன்பெருந்துருத்திபேணவே
குற்றமுற்றுமின்மையிற்குணங்கள்வந்துகூடுமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

பொருத்தியகுரம்பைதன்னைப்பொருளெனக்கருதவேண்டா
இருத்தியெப்பொழுதுநெஞ்சு† ளிறைவனையேத்துமின்கள்
ஒருத்தியைப்பாகம்வைத்தங்கொருத்தியைச்சடையுள்வைத்த
துருத்தியஞ்சுடரினானைத்தொண்டனேன்கண்டவாறே. (௧)

சவைதனைச்செய்துவாழ்வான்சலத்துளேயழுந்துகின்ற
இவையொருபொருளுமல்லவிறைவனையேத்துமின்னோ
அவைபுரமூன்றுமெய்துவடியவர்க்கருளிச்செய்த
சுவையினைத்துருத்தியானைத்தொண்டனேன்கண்டவாறே. (௨)

உன்னியெப்போதுநெஞ்சுளொருவனையேத்துமின்னோ
கன்னியையொருபால்வைத்துக்கங்கையைச்சடையுள்வைத்துப்
பொன்னியினடுவுதன்னுட்பூம்புனல்பொலிந்துதோன்றும்
துன்னியதுருத்தியானைத்தொண்டனேன்கண்டவாறே. (௩)

ஊன்றலைவலையனாகியுலகத்துளுயிர்கட்கெல்லாம்
தான்றலைப்பட்டுநின்றுசார்கனலகத்துவிழ
வான்றலைத்தேவர்கூடிவானவர்க்கிறைவாவென்னும்
தோன்றலைத்துருத்தியானைத்தொண்டனேன்கண்டவாறே. (௪)

* பிறப்பறுதல் என்றும் பாடம். † யெப்போதுநெஞ்சு என்றும் பாடம்.

Koviloor Digital Library

உடறனைக்கழிக்கலுற்றவுலகத்துளுயிர்கட்கெல்லாம்
இடர்தனைக்கழியவேண்டி* லிறைவனையேத்துமின்னோ
கடறனினஞ்சமுண்டுகொண்பரிதாகிநின்ற
சுடர்தனைத்துருத்தியானைத்தொண்டனேன்கண்டவாறே. (௫)

அள்ளலைக்கடக்கவேண்டிலரனையேநினைமினீர்கள்
பொள்ளலிக்காயந்தன்னுட்புண்டரீகத்திருந்த
வள்ளலைவானவர்க்குங்காண்பரிதாகிநின்ற
துள்ளலைத்துருத்தியானைத்தொண்டனேன்கண்டவாறே. (௬)

பாதியிலுமையாடன்னைப்பாகமாவைத்தபண்பன்
வேதியனென்றுசொல்லிவிண்ணவர்விரும்பியேத்தச்†
சாதியாஞ்சதுர்முகனுஞ்சக்கரத்தானுங்காணச்
சோதியைத்துருத்தியானைத்தொண்டனேன்கண்டவாறே. (௭)

சாமனைவாழ்க்கையானசலத்துளேயழுந்தவேண்டா
தூமநல்லகிலுங்காட்டித்தொழுதடிவணங்குமின்னோ
சோமனைச்சடையுள்வைத்துத்தொன்னெறிபலவுங்காட்டும்
தூமனத்துருத்தியானைத்‡ தொண்டனேன்கண்டவாறே. (௮)

குண்டரேசமணர்புத்தர்குறியறியாதுநின்று
கண்டதேகருதுவார்கள்கருத்தெண்ணுதொழிமினீர்கள்¶
விண்டவர்புரங்களெய்துவிண்ணவர்க்கருள்கள்செய்த
தொண்டர்கடுணையினானைத்துருத்திநான்கண்டவாறே. (௯)

பிண்டத்தைக்கழிக்கவேண்டிற்பிரானையேபிதற்றுமின்கள்
அண்டத்தைக்கழியநீண்டவடலரக்கன்றனுண்மை
கண்டொத்துக்கால்விரலாலூன்றிமீண்டருளிச்செய்த
துண்டத்துத்துருத்தியானைத்தொண்டனேன்கண்டவாறே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருத்துருத்தியும் திருவேள்விக்குடியும்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

மின்னுமாமேகங்கள்பொழிந்திழிந்தருவி
வெடிபடக்கரையொடுதிரைகொணர்ந்தெற்றும்
அன்னமாங்காவிரியகன்கரையுறைவா
ரடியிணைதொழுதெழுமன்பராமடியார்

* கழிக்கவேண்டில் என்றும் பாடம். † விரும்பியேத்தும் என்றும் பாடம் ‡ தூமனற்றுருத்தியானை, தூமணற்றுருத்தியானை என்றும் பாடம். ¶ தொழிமினீங்கள் என்றும்பாடம்.

Koviloor Digital Library

சொன்னவாறறிவார்துருத்தியார்வேள்விக்
குடியுளாரடிகளைச்செடியனேனாயேன்
என்னைநான்மறக்குமாறெம்பெருமானை
யென்னுடம்படும்பிணியிடர்கெடுத்தானை. (க)

கூடுமாறுள்ளனகூடியுங்கோத்தும் *
கொய்புனவேனலோடைவனஞ்சிதறி
மாடுமாகோங்கமேமருதமேபொருது
மலையெனக்குலைகளைமறிக்குமாறுந்தி
ஓடுமாகாவிரித்துருத்தியார்வேள்விக்
குடியுளாரடிகளைச்செடியனேனாயேன்
பாடுமாறறிகிலேனெம்பெருமானைப்
பழவினையுள்ளனபற்றறுத்தானை. (உ)

கொல்லுமால்யானையின்கொம்பொடுவம்பார்
கொழுங்கனிச்செழும்பயன்கொண்டுகூட்டெய்திப்
புல்கியுந்தாழ்ந்தும்போந்துதவஞ்செய்யும்
போகரும்யோகரும்புலரிவாய்மூழ்கச்
செல்லுமாகாவிரித்துருத்தியார்வேள்விக்
குடியுளாரடிகளைச்செடியனேனாயேன்
சொல்லுமாறறிகிலேனெம்பெருமானைத்
தொடர்ந்தடுங்கடும்பிணிதொடர்வொழித்தானை.† (ங)

பொறியுமாசந்தனத்துண்டமோடகிலும்
பொழிந்திழிந்தருவிகள்புன்புலங்கவரக்
கறியுமாமிளகொடுகதலியுமுந்திக்
கடலுறவிளைப்பதேகருதித்தன்கைபோய்
எறியுமாகாவிரித்துருத்தியார்வேள்விக்
குடியுளாரடிகளைச்செடியனேனாயேன்
அறியுமாறறிகிலேனெம்பெருமானை
யருவினையுள்ளனவாசறுத்தானை. (ச)

பொழிந்திழிமும்மதக்களிற்றினமருப்பும்
பொன்மலர்வேங்கையினன்மலருந்தி
இழிந்திழிந்தருவிகள்கடும்புனலீண்டி
யெண்டிசையோர்களுமாடவந்திங்கே
சுழிந்திழிகாவிரித்துருத்தியார்வேள்விக்
குடியுளாரடிகளைச்செடியனேனாயேன்
ஒழிந்திலேன்பிதற்றுமாறெம்பெருமானை
யுற்றநோயிற்றையேயுறவொழித்தானை. (ரு)

* கூடியுங்கோடுத்தும் என்றும் பாடம். † பிணித்தொடர்வறுத்தானை என்றும் பாடம்.

Koviloor Digital Library

புகழுமாசந்தனத்துண்டமோடகிலும்
பொன்மணிவரன்றியுநன்மலருந்தி
அகழுமாவருங்கரைவளம்படப்பெருகி
யாடுவார்பாவந்தீர்த்தஞ்சனமலம்பித்
திகழுமாகாவிரித்துருத்தியார்வேள்விக்
குடியுளாரடிகளைச்செடியனேனாயேன்
இகழுமாறறிகிலேனெம்பெருமானை
யிழித்தநோயிம்மையேயொழிக்கவல்லானை. (சு)

வரையின்மாங்கனியொடுவாழையின்கனியும்
வருடியும்வணக்கியுமாமரம்பொருது
கரையுமாகருங்கடல்காண்பதேகருத்தாய்க்
காம்பீலிசுமந்தொளிர்நித்திலங்கைபோய்
விரையுமாகாவிரித்துருத்தியார்வேள்விக்
குடியுளாரடிகளைச்செடியனேனாயேன்
உரையுமாறறிகிலேனெம்பெருமானை
உலகறிபழவினையறவொழித்தானை. (எ)

ஊருமாதேசமேமனமுகந்துள்ளிப்
புள்ளினம்பலபடிந்தொண்கரையுகளக்
காருமாகருங்கடல்காண்பதேகருத்தாய்க்
கவரிமாமயிர்சுமந்தொண்பளிங்கிடறித்
தேருமாகாவிரித்துருத்தியார்வேள்விக்
குடியுளாரடிகளைச்செடியனேனாயேன்
ஆருமாறறிகிலேனெம்பெருமானை
யம்மைநோயிம்மையேயாசறுத்தானை. (அ)

புலங்களைவளம்படப்போக்கறப்பெருகிப் *
பொன்களேசுமந்தெங்கும்பூசல்செய்தார்ப்ப
இலங்குமார்முத்தினோடினமணியிடறி
யிருகரைப்பெருமரம்பீழ்ந்துகொண்டெற்றிக்
கலங்குமாகாவிரித்துருத்தியார்வேள்விக்
குடியுளாரடிகளைச்செடியனேனாயேன்
விலங்குமாறறிகிலேனெம்பெருமானை
மேலைநோயிம்மையேவீடுவித்தானை. (கூ)

மங்கையோர்கூறுகந்தேறுகந்தேறி
மாறலார்திரிபுரநீறெழச்செற்ற
அங்கையான்கழலடியன்றிமற்றறியா
னடியவர்க்கடியவன்றொழுவனாரூரன்
கங்கையார்காவிரித்துருத்தியார்வேள்விக்
குடியுளாரடிகளைச்சேர்த்தியபாடல்
தங்கையாற்றொழுதுதங்நாவின்மேற்கொள்வார்
தவநெறிசென்றமருலகமாள்வாரே. † † (கo)

திருச்சிற்றம்பலம்.

* பெருக்கி என்றும் பாடம். † நமருலகமாள்பவரே என்றும் பாடம். † இத்திருப்பதிகம் முன்னர்த் திருவேள்விக்குடித்திருப்பதிகமாகவும் பதிப்பிக்கப்பட்டது.

Koviloor Digital Library

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாவடுதுறையை அகன்று, திருத்துருத்திக்குப் போய்ச் சுவாமியை வணங்கி, "அடியேனுடைய சரீரத்தின்மேலே பொருந்திய நோயை நீக்கியருளல் வேண்டும்" என்று பிரார்த்தித்தார். அதற்குக்கடவுள் "நீ இக்கோயிலுக்கு வடபுறத்தில் இருக்கின்ற குளத்திலே ஸ்நாநம்பண்ணுவாயாகில், இந்நோய் நீங்கிவிடும்" என்று திருவாய்மலர்ந்தருளினர். அதுகேட்டுச் சுந்தரமூர்த்திநாயனர் கைதொழுது புறப்பட்டு, அந்தத் தீர்த்தத்தை அடைந்து, சுவாமியை வணங்கிக்கொண்டு, அவருடைய திருவடிகளிலே அன்போடு பதிந்த இருதயத்துடனே அத்தீர்த்தத்திலே ஸ்நாநம்பண்ணினர். உடனே அவருடைய திருமேனி நோய் நீங்கிப் பிரகாசித்தது. அவர் கண்டவர்கள் அதிசயிக்கும்படி கரையேறி, வஸ்திரந் தரித்துக்கொண்டு, திருக்கோயிலிலேபோய், சுவாமியை வணங்கி, "மின்னுமாமேகங்கள்" என்னுந் திருப்பதிகம் பாடியருளினர்.

திருத்துருத்தித்திருப்பதிகம் - ௩.

ஆ திருப்பதிகம் - ௯௦.

சுவாமி தேவி திருநாமங்கள் - உத்தரவேதிச்சுரர், மிருதுமுகிழாம்பிகை.

௩அ. திருவழுந்தூர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

தொழுமாறுவல்லார்துயர்தீரநினைந்
தெழுமாறுவல்லாரிசைபாடவிம்மி
அழுமாறுவல்லாரழுந்தைமறையோர்
வழிபாடுசெய்மாமடமன்னினையே. (௧)

கடலேறியநஞ்சமுதுண்டவனே
உடலேயுயிரேயுணர்வேயெழிலே
அடலேறுடையாயழுந்தைமறையோர்
விடமேலதொழுமாமடமேவினையே. (௨)

கழிகாடலனேகனலாடலினுப்
பழிபாடிலனேயவையேபயிலும்
அழிபாடிலராயழுந்தைமறையோர்
வழிபாடுசெய்மாமடமன்னினையே. (௩)

வானேமலையேயெனமன்னுயிரே
தானேதொழுவார்தொழுதாண்மணியே
ஆனேசிவனேயழுந்தையவரெம்
மானேயெனமாமடமன்னினையே. (௪)

Koviloor Digital Library

அலையார்புனல்சூழழுந்தைப்பெருமான்
நிலையார்மறியுந்நிறைவெண்மழுவும்
இலையார்படையும்மிவையேந்துசெல்வ*
நிலையாவதுகொள்கெனநீநினையே. (௫)

நறவார்தலையின்னயவாவுலகில்
பிறவாதவனேபிணியில்லவனே
அறையார்கழலாயழுந்தைமறையோர்
மறவாதெழுமாமடமன்னினையே. (௬)

தடமாறுவல்லாய்தலைவாமதியம்
சுடமாறுவல்லாய்சுடரார்சடையில்
அடமாறுவல்லாயழுந்தைமறையோர்
நெடமாநகர்கைதொழநின்றனையே. (௭)

பெரியாய்சிறியாய்பிறையாய்மிடறும்
கரியாய்கரிகாடுயர்வீடுடையாய்
அரியாயெளியாயழுந்தைமறையோர்
வெரியார்தொழுமாமடமேவினையே. (௮)

மணிநீண்முடியான்மலையையரக்கன்
தணியாதெடுத்தானுடலந்நெரித்த
அணியார்விரலாயழுந்தைமறையோர்
பணிமாமடமன்னி † யிருந்தனையே. (௯)

முடியார்சடையாய்முனநாளிருவர்
நெடியான்மலரானிகழ்வாலிவர்கள்
அடிமேலறியாரழுந்தைமறையோர்
படியாற்றொழுமாமடம்பற்றினையே. (௧0)

அருஞானம்வல்லாரழுந்தைமறையோர்
பெருஞானமுடைப்பெருமானவனைத்
திருஞானசம்பந்தனசெந்தமிழ்கள்
உருஞானமுண்டாமுணர்ந்தார்தமக்கே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவழுந்தூர்த்திருப்பதிகம் - ௧.

ஆ திருப்பதிகம். - ௯௧.

சுவாமி தேவி திருநாமங்கள் - வேதபுரியீசர், சௌந்தரியாள்.

* செல்வா, செல்வன் என்றும் பாடம். † மணிமாமடமன்னி என்றும் பாடம்.

Koviloor Digital Library

௩௯. திருமயிலாடுதுறை.*

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

கரவின்றிநன்மாமலர்கொண்டு†
இரவும்பகலுந்தொழுவார்கள்
சிரமொன்றியசெஞ்சடையான்வாழ்
வரமாமயிலாடுதுறையே. (௧)

உரவெங்கரியின்னுரிபோர்த்த
பரமன்னுறையும்பதியென்பர்
குரவஞ்சுரபுன்னையும்வன்னி
மருவும்மயிலாடுதுறையே. (௨)

ஊனத்திருணீங்கிடவேண்டில்
ஞானப்பொருள்கொண்டடிபேணும்
தேனொத்தினியானமருஞ்சேர்
வானம்மயிலாடுதுறையே. (௩)

அஞ்சொண்புலனும்மவைசெற்ற
மஞ்சன்மயிலாடுதுறையை
நெஞ்சொன்றிநினைந்தெழுவார்மேல்
துஞ்சும்பிணியாயினதானே. (௪)

தணியார்மதிசெஞ்சடையான்றன்
அணியார்ந்தவருக்கருளென்றும்
பிணியாயினதீர்த்தருள்செய்யும்
மணியான்மயிலாடுதுறையே. (௫)

தொண்டரிசைபாடியுங்கூடிக்
கண்டுதுதிசெய்பவனூராம்
பண்டும்பலவேதியரோத
வண்டார்மயிலாடுதுறையே. (௬)

அணங்கோடொருபாகமமர்ந்து
இணங்கியருள்செய்தவனூராம்
நுணங்கும்புரிநூலர்கள்கூடி
வணங்கும்மயிலாடுதுறையே. (௭)

* திருமயிலாடுதுறை—மாயூரம். † கொண்டே என்றும் பாடம்.

Koviloor Digital Library

சிரங்கையினிலேந்தியிரந்த
பரங்கொள்பரமேட்டிவரையால்
அரங்கவ்வரக்கன்வலிசெற்ற
வரங்கொண்மயிலாடுதுறையே. (அ)

ஞாலத்தைநுகர்ந்தவன்றானும்
கோலத்தயனும்மறியாத
சீலத்தவனூர்சிலர்கூடி
மாலைத்தீர்மயிலாடுதுறையே. (௯)

நின்றுண்சமணுங்நெடுந்தேரர்
ஒன்றும்மறியாமையுயர்ந்த
வென்றியருளானவனூராம் *
மன்றன்மயிலாடுதுறையே. (௧௦)

நயர்காழியுண்ஞானசம்பந்தன்
மயதீர்மயிலாடுதுறைமேல்
செயலாலுரைசெய்தனபத்தும்
உயர்வாமிவையுற்றுணர்வார்க்கே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவிராகம். பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

ஏனவெயிறாடரவொடென்புவரியாமையிவைபூண்டிளைஞாய்க்
கானவரிநீடுழுவையதளுடையபடர்சடையர்காணியெனலாம்
ஆனபுகழ்வேதியர்களாகுதியின்மீதுபுகைபோகியழகார்
வானமுறுசோலைமிசைமாசுபடமூசுமயிலாடுதுறையே. (௧)

அந்தண்மதிசெஞ்சடையரங்கணெழில்கொன்றையொடணிந்தழகாம்
எந்தமடிகட்கினியதானமதுவேண்டிலெழிலார்பதியதாம்
கந்தமலிசந்திரொடுகாரகிலும்வாரிவருகாவிரியுளால்
வந்ததிரையுந்தியெதிர்மந்திமலர்சிந்துமயிலாடுதுறையே. (௨)

தோளின்மிசைவரியரவநஞ்சழலவீக்கிமிகுநோக்கரியராய்
மூளைபடுவெண்டலையிலுண்டுமுதுகாடுறையுமுதல்வரிடமாம்
பாளைபடுபைங்கமுகுசெங்கனியுதிர்த்திடநிரந்துகமழ்பூ
வாளைகுதிகொள்ளமடல்விரியமணநாறுமயிலாடுதுறையே. (௩)

ஏதமிலராியமறைமலையர்மகளாகியவிலங்குநுதலொண்
பேதைதடமார்பதிடமாகவுறைகின்றபெருமானதிடமாம்
காதன்மிருகவ்வையொடுமவ்வலவைகூடிவருகாவிரியுளால்
மாதர்மறிதிரைகள்புகவெறியவெறிகமழுமயிலாடுதுறையே. (௪)

* யருளாமவனூராம் என்றும் பாடம்.

Koviloor Digital Library

பூவிரிகதுப்பின்மடமங்கைபாகந்தோறுநடந்றுபலிதேர்
பாவிரியிசைக்குரியபாடல்பயிலும்பரமர்பழமையெனலாம்
காவிரிநுரைத்திருகரைக்குமணிசிந்தவரிவண்டுகவர
மாவிரிமதுக்கிழியமந்திகுதிகொள்ளுமயிலாடுதுறையே. (௫)

கடந்திகழ்கருங்களிறுரித்துமையுமஞ்சமிகநோக்கரியாய்
விடந்திகழுமூவிலைநல்வேலுடையவேதியர்விரும்புமிடமாம் [ய்
தொடர்ந்தொளிர்கிடந்ததொருசோதிமிகுதொண்டையெழில்கொண்டதுவர்வா
மடந்தையர்குடைந்தபுனல்வாசமிகநாறுமயிலாடுதுறையே. (௬)

அவ்வதிசையாருமடியாருமுளராகவருள்செய்தவர்கண்மேல்
எவ்வமறவைகலுமிரங்கியெரியாடுமெமதீசனிடமாம்
கவ்வையொடுகாவிரிகலந்துவருதென்கரைநிரந்துகமழ்பூ
மவ்வலொடுமாதவிமபங்கிமனநாறுமயிலாடுதுறையே. (௭)

இலங்கைநகர்மன்னன்முடியொருபதினொடிருபதுதொணெரியவிரலால்
விலங்கலிலடர்த்தருள்புரிந்தவரிருந்தவிடம்வினவுதிர்களேல்
கலங்கலுரையுந்தியெதிர்வந்தகயமூழ்கிமலர்கொண்டுமகிழா
மலங்கிவருகாவிரிநிரந்துபொழிகின்றமயிலாடுதுறையே. (௮)

ஒண்டிறலினான்முகனுமாலுமிகநேடியுணராதவகையால்
அண்டமுறவங்கியுருவாகிமிகநின்றவரனாதிடமாம்
கெண்டையிரைகொண்டுகெளிறுடனிருந்துகிளர்வாயறுதல்சேர்
வண்டன்மணல்கெண்டி* மடநாரைவிளையாடுமயிலாடுதுறையே. (௯)

மிண்டுதிறலமணரொடுசாக்கியருமலர்தூற்றமிக்கதிறலோன்
இண்டைகுடிகொண்டசடையெங்கள்பெருமானதிடமென்பரெழிலார்
தெண்டிரைபரந்தொழுகுகாவிரியதென்கரைநிரந்துகமழ்பூ
வண்டவைதிளைக்க† மதுவந்தொழுகுசோலைமயிலாடுதுறையே. (௧௦)

நிணந்தருமயானநிலவானமதியாததொருசூலமொடுபேய்க்
கணந்தொழுகபாலி‡ கழலேத்திமிகவாய்த்ததொருகாதன்மையினல்
மணந்தண்மலிகாழிமறைஞானசம்பந்தன்மயிலாடுதுறையைப்
புணர்ந்ததமிழ்பத்துமிசையாலுரைசெய்வார்பெறுவர்பொன்னுலகமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

கொள்ளுங்காதன்மைபெய்துறுங்கோல்வளை
உள்ளமுள்கியுரைக்குந்திருப்பெயர்
வள்ளன்மாமயிலாடுதுறையுறை
வெள்ளந்தாங்குசடையனைவேண்டியே. (௧)

* கிண்டி என்றும் பாடம். † கிளைக்க என்றும் பாடம். ‡ கவாலி என்றும் பாடம்.

Koviloor Digital Library

சித்தந்தேறுஞ்செறிவனைசிக்கெனும்
பச்சைதீருமென்பைங்கொடிபான்மதி
வைத்தமாமயிலாடுதுறையான்
கொத்தினிற்பொலிகொன்றைகொடுக்கிலே. (உ)

அண்டர்வாழ்வுமமரிருக்கையும்
கண்டுவீற்றிருக்குங்கருத்தொன்றிலோம்
வண்டுசேர்மயிலாடுதுறையான்
தொண்டர்பாதங்கள்சூடித்துதையிலே. (௩)

வெஞ்சினக்கடுங்காலன்விரைகிலான்
அஞ்சிறப்பும்* பிறப்புமறுக்கலாம்
மஞ்சன்மாமயிலாடுதுறையுறை
அஞ்சொலாளுமைபங்கனருளிலே. (௪)

குறைவிலோங்கொடுமாநுடவாழ்க்கையால்
கறைநிலாவியகண்டனெண்டோளினன்
மறைவலான்மயிலாடுதுறையுறை
இறைவனீள்கழலேத்தியிருக்கிலே. (௫)

நிலைமைசொல்லுநெஞ்சேதவமென்செய்தாய்
கலைகளாயவல்லான்கயிலாயநல்
மலையன்மாமயிலாடுதுறையனம்
தலையின்மேலுமனத்துளுந்தங்கவே. (௬)

நீற்றினனிமிர்புன்சடையான்விடை
ஏற்றினனமையாளுடையான்புலன்
மாற்றினன்மயிலாடுதுறையென்று
போற்றுவார்க்குமுண்டோபுவிவாழ்க்கையே. (௭)

கோலும்புல்லுமொருகையிற்கூர்ச்சமும்
தோலும்பூண்டுதுயாமுற்றென்பயன்
நீலமாமயிலாடுதுறையனே
நூலும்வேண்டுமோநுண்ணுணர்ந்தோர்கட்கே. (அ)

பணங்கொளாடரவல்குற்பகீரதி
மணங்கொளச்சடைவைத்தமறையவன்
வணங்குமாமயிலாடுதுறையான்
அணங்கொர்பால்கொண்டகோலமழகிதே. (௯)

நீணிலாவரவச்சடைநேசனைப்
பேணிலாதவர்பேதுறவோட்டினோம்
வாணிலாமயிலாடுதுறைதனைக்
காணிலார்க்குங்கடுந்துயரில்லையே. (௧௦)

* ஐஞ்சிறப்பும் என்றும், இஞ்சிறப்பும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

பருத்ததோளுமுடியும்பொடிபட
இருத்தினானவனின்னிசைகேட்டலும்
வரத்தினான்மயிலாடுதுறைதொழும்
கரத்தினார்* வினைகட்டறுங்காண்மினே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருமயிலாடுதுறைத்திருப்பதிகம் - ௩.

ஆ திருப்பதிகம் - ௯௪.

சுவாமி தேவி திருநாமங்கள் - மாயூரர், அஞ்சனாபகி.

௪0. திருவிளநகர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

ஒளிரிளம்பிறைசென்னிமேலுடையர்கோவணவாடையர்
குளிரிளம்மழைதவழ்பொழிற்கோலநீர்மல்குகாவிரி
நளிரிளம்புனல்வார்துறைநங்கைகங்கையைநண்ணினார்
மிளிரிளம்பொறியரவினார்மேயதுவிளநகரதே. (௧)

அக்கரவ்வணிகலனெனவதனோடார்த்ததோராமைபூண்
டக்கவர்சுடுநீறணிந்தொளிமல்குபுனற்காவிரிப்
புக்கவர்துயர்கெடுகெனப்பூசுவெண்பொடிமேவிய
மிக்கவர்வழிபாடுசெய்விளநகரவர்மேயதே. (௨)

வாளிசேரடங்கார்மதிறொலையநூறியவம்பின்வேய்த்
தோளிபாகமமர்ந்தவருயர்ந்ததொல்கடனஞ்சுடன்†
காளமல்கியகண்டத்தர்கதிர்விரிசுடர்முடியினர்
மீளியேறுகந்தேறினார்மேயதுவிளநகரதே. (௩)

கால்விளங்கெரிகழலினார்கையிலங்கிய‡வேலினார்
நூல்விளங்கியமார்பினார்நோயிலார்பிறப்புமிலார்
மால்விளங்கொளிமல்கியமாசிலாமணிமிடறினார்
மேல்விளங்குவெண்பிறையினார்மேயதுவிளநகரதே. (௪)

பன்னினார்மறைபாடினார்பாயசீர்ப்பழங்காவிரித்
துன்னுதண்டுறைமுன்னினார்தூநெறிபெறுவாரெனச்
சென்னிதிங்களைப்பொங்கராக்கங்கையோடுடன்சேர்த்தினார்
மின்னுபொன்புரிநூலினார்மேயதுவிளநகரதே. (௫)

* கருத்தினார் என்றும் பாடம். † தொல்கடனஞ்சுண்ட என்றும் பாடம். ‡ கைவிளங்கிய என்றும் பாடம்.

Koviloor Digital Library

தேவரும்மமரர்களுந்திசைகண்மேலுளதெய்வமும்
யாவரும்மறியாததோரமைதியாற்றழலுருவினர்
மூவரும்மிவரென்னவுமுதல்வரும்மிவரென்னவும் *
மேவரும்பொருளாயினர்மேயதுவிளநகரதே. (௬)

சொற்றரும்மறைபாடினர்சுடர்விடுஞ்சடைமுடியினர்
கற்றருவ்வடங்கையினர்காவிரித்துறைகாட்டினர்
மற்றருந்திரடோளினர்மாசில்வெண்பொடிப்பூசினர்
விற்றரும்மணிமிடறினர்மேயதுவிளநகரதே. (௭)

படர்தருஞ்சடைமுடியினர்பைங்கழல்லடிபரவுவார்
அடர்தரும்பிணிகெடுகெனவருளுவாரரவரையினர்
விடர்தரும்மணிமிடறினர்மின்னுபொன்புரிநூலினர்
மிடறரும்படைமழுவினர்மேயதுவிளநகரதே. (௮)

கையிலங்கியவேலினர்தோலினர்கரிகாலினர்
பையிலங்கரவல்குலாள்பாகமாகியபரமனர்
மையிலங்கொளிமல்கியமாசிலாமணிமிடறினர்
மெய்யிலங்குவெண்ணீற்றினர்மேயதுவிளநகரதே. (௯)

உள்ளதன்றனைக்காண்பன்கீழென்றமாமணிவண்ணனும்
உள்ளதன்றனைக்காண்பன்மேலென்றமாமலரண்ணலும்
உள்ளதன்றனைக்கண்டிலாரொளியார்தருஞ்சடைமுடியின்மேல்
உள்ளதன்றனைக்கண்டிலாவொளியார்விளநகர்மேயதே. (௧௦)

மென்சிறைவண்டியாழ்முரல்விளநகர்த்துறைமேவிய
நன்பிறைநுதலண்ணலைச்சண்பைஞானசம்பந்தன்சீர்
இன்புறுந்தமிழாற்சொன்னவேத்துவார்வினைநீங்கிப்போய்த்
துன்புறுந்துயரம்மிலாத்தூநெறிபெறுவார்களே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவிளநகர்த்திருப்பதிகம் - ௧.

ஆ திருப்பதிகம் - ௧௫.

சுவாமி தேவி திருநாமங்கள் – துறைகாட்டும்வள்ளல், தோழியம்மை.

* மூவரும்மவரென்னவுமுதல்வரும்மவரென்னவும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

சக. திருப்பறியலூர்வீரட்டம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர்.

பண் - மேகராகக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

கருத்தன்கடவுள்கனலேந்தியாடும்
நிருத்தன்சடைமேனிரம்பாமதியன்
திருத்தமுடையார்திருப்பறியலூரில்
விருத்தனெனத்தகும்வீரட்டத்தானே. (க)

மருந்தன்னமுதன்மயானத்துண்மைந்தன்
பெருந்தண்புனற்சென்னிவைத்தபெருமான்
திருந்துமறையோர்திருப்பறியலூரில்
விரிந்தமலர்ச்சோலைவீரட்டத்தானே. (உ)

குளிர்ந்தார்சடையன்கொடுஞ்சிலைவிற்காமன்
விளிந்தானடங்கவீந்தெய்தச்*செற்றான்
தெளிந்தார்மறையோர்திருப்பறியலூரில்
மிளிர்ந்தார்மலர்ச்சோலைவீரட்டத்தானே. (௩)

பிறப்பாதியில்லான்பிறப்பார்பிறப்புச்
செறப்பாதியந்தஞ்செலச்செய்யுந்தேசன்
சிறப்பாடுடையார்திருப்பறியலூரில்
விறற்பாரிடஞ்சூழவீரட்டத்தானே. (ச)

கரிந்தாரிடுகாட்டிலாடுங்கபாலி
புரிந்தார்படுதம்புறங்காட்டிலாடும்
தெரிந்தார்மறையோர்திருப்பறியலூரில்
விரிந்தார்மலர்ச்சோலைவீரட்டத்தானே. (ரு)

அரவுற்றநாணுவனலம்பதாகச்
செருவுற்றவர்புரந்தீயெழச்செற்றான்
தெருவிற்கொடிசூழ்திருப்பறியலூரில்
வெருவுற்றவர்தொழும்வீரட்டத்தானே. (சு)

நரையார்விடையானலங்கொள்பெருமான்
அரையாரரவம்மழகாவசைத்தான்
திரையார்புனல்சூழ்திருப்பறியலூரில்
விரையார்மலர்ச்சோலைவீரட்டத்தானே. (எ)

* வியந்தெய்தச் என்றும்பாடம்.

Koviloor Digital Library

வளைக்கும்மெயிற்றின்னரக்கன்வரைக்கீழ்
இளைக்கும்படிதானிருந்தேழையன்னம்
திளைக்கும்படுகர்த்திருப்பறியலூரில்
விளைக்கும்வயல்சூழ்ந்தவீரட்டத்தானே. (அ)

விளங்கொண்,* மலர்மேலயனோதவண்ணன்
துளங்கும்மனத்தார்தொழத்தழலாய்நின்றான்
இளங்கொம்பனாளோடிணைந்தும்பிணைந்தும்
விளங்குந்திருப்பறியல்வீரட்டத்தானே. (கூ)

சடையன்பிறையன்சமண்சாக்கியரோ
டடையன்பிலாதானடியார்பெருமான்
உடையன்புலியினுரிதோலரைமேல்
விடையன்றிருப்பறியல்வீரட்டத்தானே. (கo)

நறுநீருகுங்காழிஞானசம்பந்தன்
வெறிநீர்த்திருப்பறியல்வீரட்டத்தானைப்
பொறிநீடரவன்புனைபாடல்வல்லார்க்
கறுநீடவலமறும்பிறப்புத்தானே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருப்பறியலூர்வீரட்டத்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - கூகூ.

சுவாமி தேவி திருநாமங்கள் - வீரட்டேசர், இளங்கொம்பனையாள்.

சஉ. திருச்செம்பொன்பள்ளி.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

மருவார்குழலிமாதோர்பாகமாய்த்
திருவார்செம்பொன்பள்ளிமேவிய
கருவார்கண்டத்தீசன்கழல்களை
மருவாதவர்மேன்மன்னும்பாவமே. (க)

வாரார்கொங்கைமாதோர்பாகமாய்ச்
சீரார்செம்பொன்பள்ளிமேவிய
ஏரார்புரிபுன்சடையெம்மீசனைச்
சேராதவர்மேற்சேரும்வினைகளே. (உ)

* வளங்கொண் என்றும் பாடம்.

Koviloor Digital Library

வரையார்சந்தோடகிலும்வருபொன்னித்
திரையார்செம்பொன்பள்ளிமேவிய
நரையார்விடையொன்றூருநம்பனை
உரையாதவர்மேலொழியாவூனமே. (௩)

மழுவாளேந்திமாதோர்பாகமாய்ச்
செழுவார்செம்பொன்பள்ளிமேவிய
எழிலார்புரிபுன்சடையெம்மிறைவனைத்
தொழுவார்தம்மேற்றுயரமில்லையே. (௪)

மலையான்மகளோடுடனாய்மதிலெய்த
சிலையார்செம்பொன்பள்ளியானையே
இலையார்மலர்கொண்டெல்லிநன்பகல்
நிலையாய்வணங்கநில்லாவினைகளே. (௫)

அறையார்புனலோடகிலும்வருபொன்னிச்
சிறையார்செம்பொன்பள்ளிமேவிய
கறையார்கண்டத்தீசன்கழல்களை
நிறைபால்வணங்கநில்லாவினைகளே. (௬)

பையாரரவேரல்குலாளொடும்
செய்யார்செம்பொன்பள்ளிமேவிய
கையார்சூலமேந்துகடவுளை
மெய்யால்வணங்கமேவாவினைகளே. (௭)

வானார்திங்கள்வளர்புன்சடைவைத்துத்
தேனார்செம்பொன்பள்ளிமேவிய
ஊனார்தலையிற்பலிகொண்டுழல்வாழ்க்கை
ஆனான்கழலேயடைந்துவாழ்மினே. (௮)

காரார்வண்ணன்கனகமனையானும்
தேரார்செம்பொன்பள்ளிமேவிய
நீரார்நிமிர்புன்சடையெந்நிமலனை
ஓராதவர்மேலொழியாவூனமே. (௯)

மாசாருடம்பர்மண்டைத்தேரும்
பேசாவண்ணம்பேசித்திரியவே
தேசார்செம்பொன்பள்ளிமேவிய
ஈசாவென்னநில்லாவிடர்களே. (௧0)

நறவார்புகலிஞானசம்பந்தன்
செறுவார்செம்பொன்பள்ளிமேயானைப்
பெறுமாறிசையாற்பாடலிவைபத்தும்
உறுமாசொல்லவோங்கிவாழ்வரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

Koviloor Digital Library

திருநாவுக்கரசுநாயனார்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

ஊனினுள்ளுயிரைவாட்டியுணர்வினார்க்கெளியராகி
வானினுள்வானவர்க்குமறியலாகாதவஞ்சர்
நானெனிற்றானேயென்னுஞானத்தார்பத்தர்நெஞ்சுள்
தேனுமின்னமுதுமானார் திருச்செம்பொன்பள்ளியாரே. (௧)

நொய்யவர்விழுமியாருநூலினுண்ணெறியைக்காட்டும்
மெய்யவர்பொய்யுமில்லாருடலெனுமிடிஞ்சிறன்னில்
நெய்யமர்திரியுமாகிநெஞ்சத்துள்விளக்குமாகிச்
செய்யவர்கரியகண்டர் திருச்செம்பொன்பள்ளியாரே. (௨)

வெள்ளியர்கரியர்செய்யர்விண்ணவரவர்கணெஞ்சுள்
ஒள்ளியரூழியூழியுலகமதேத்தநின்ற
பள்ளியர்நெஞ்சத்துள்ளார்பஞ்சமம்பாடியாடும்
தெள்ளியார்கள்ளந்தீர்ப்பார் திருச்செம்பொன்பள்ளியாரே. (௩)

தந்தையுந்தாயுமாகித்தானவன்ஞானமூர்த்தி
முந்தியதேவர்கூடிமுறைமுறையிருக்குச்சொல்லி
எந்தைநீசரணமென்றங்கிமையவர்பரவியேத்தச்
சிந்தையுட்சிவமதானார் திருச்செம்பொன்பள்ளியாரே. (௪)

ஆறுடைச்சடையர்போலுமன்பருக்கன்பர்போலும்
கூறுடைமெய்யர்போலுங்கோளரவரையர்போலும்
நீறுடையழகர்போலுநெய்தலேகமழுநீர்மைச்
சேறுடைக்கமலவேலித் திருச்செம்பொன்பள்ளியாரே. (௫)

ஞாலமுமறியவேண்டினன்றென * வாழலுற்றீர்
காலமுங்கழியலானகள்ளத்தையொழியகில்லீர்
கோலமும்வேண்டாவார்வச்செற்றங்கள்குரோதநீக்கில் †
சீலமுநோன்புமாவார் திருச்செம்பொன்பள்ளியாரே. (௬)

புரிகாலேநேசஞ்செய்ய ‡ விருந்தபுண்டரீகத்தாரும்
எரிகாலேமூன்றுமாகியிமையவர்தொழநின்றாரும்
தெரிகாலேமூன்றுசந்தியானித்துவணங்கநின்று ¶
திரிகாலங்கண்டவெந்தை திருச்செம்பொன்பள்ளியாரே. (௭)

காருடைக்கொன்றைமாலைகதிர்மதியரவினோடும்
நீருடைச்சடையுள்வைத்தநீதியார்நீதியுள்ளார்
பாரொடுவிண்ணுமண்ணும்பதினெட்டுக்கணங்களேத்தச்
சீரொடுபாடலானார் திருச்செம்பொன்பள்ளியாரே. (௮)

* வேண்டிநன்றென என்றும் பாடம். † நீக்கிச் என்றும் பாடம். ‡ நெஞ்சஞ்செய்ய என்றும் பாடம். ¶ வணங்கிநின்று என்றும் பாடம்.

Koviloor Digital Library

ஓவாதமறைவல்லானுமோதநீர்வண்ணன்காணு
மூவாதபிறப்பிலாருமுனிகளானார்களேத்தும்
பூவானமூன்றமூஞ்நூற்றறுபதுமாகுமெந்தை
தேவாதிதேவரென்றுந்திருச்செம்பொன்பள்ளியாரே. (கூ)

அங்கங்களாறுநான்குமந்தணர்க்கருளிச்செய்து
சங்கங்கள்பாடவாடுஞ்சங்கரன்மலையெடுத்தான்
அங்கங்களுதிர்ந்துசோரவலறிடவடர்த்துநின்றும்
செங்கண்வெள்ளேறதேறுந்திருச்செம்பொன்பள்ளியாரே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

கானறுதகடிபொழில்வண்டினம்
தேனறுத திருச்செம்பொன்பள்ளியான்
ஊனறுதவோர்வெண்டலையிற்பலி
தானறுதவோர்கொள்கையன்காண்மினே. (க)

என்புமாமையும்பூண்டங்குழிதர்வர்க்
கன்புமாயிடுமாயிழையீரினிச்
செம்பொன்பள்ளியுளான்சிவலோகனை
நம்பொன்பள்ளியுள்கவினைநாசமே. (உ)

வேறுகோலத்தராணலர்பெண்ணலர்
கீறுகோவணவைதுகிலாடையர் *
தேறலாவதொன்றன்றுசெம்பொன்பள்ளி
ஆறுசூடியவண்ணலவண்ணமே. (ங)

அருவராதவோர்வெண்டலையேந்திவந்
திருவராயிடுவார்கடைதேடுவார்
தெருவெலாமுழல்வார்செம்பொன்பள்ளியார்
ஒருவர்தாம்பலபேருளர்காண்மினே. (ச)

பூவுலாஞ்சடைமேற்புனல்சூடினன்
ஏவலாலெயின்மூன்றெரித்தவன்
தேவர்சென்றிறைஞ்சுஞ்செம்பொன்பள்ளியான்
மூவராய்முதலாய்நின்றமூர்த்தியே. (ரு)

சலவராபொருபாம்பொடுதண்மதி
கலவராவதின்காரணமென்கொலோ
திலகநின்முடியார்செம்பொன்பள்ளியார்
குலவிலாலெயின்மூன்றெய்தகூத்தரே. (சா)

* ஐவர்துகிலாடையர் என்றும் பாடம்.

Koviloor Digital Library

கைகொள்சூலத்தர்கட்டுவாங்கத்தினர்
மைகொள்கண்டத்தராகியிருசுடர்
செய்யமேனிவெண்ணீற்றர்செம்பொன்பள்ளி
ஐயர்கையதோரைந்தலைநாகமே. (எ)

வெங்கணாகம்வெருவுறவார்த்தவர்
பைங்கணானையினீருரிபோர்த்தவர்
செங்கண்மால்விடையார்செம்பொன்பள்ளியார்
அங்கணாயடைந்தார்வினைதீர்ப்பரே. (அ)

நன்றிநாரணனான்முகனென்றிவர்
நின்றநீண்முடியோடடிகாண்புற்றுச்
சென்றுகாண்பரியான்செம்பொன்பள்ளியான்
நின்றசூழலினீளெரியாகியே. (கூ)

திரியுமும்மதில்செங்கணையொன்றினால்
எரியவெய்தனலோட்டியிலங்கைக்கோன்
நெரியவூன்றியிட்டார்செம்பொன்பள்ளியார்
அரியவானமவாருள்செய்வரே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருச்செம்பொன்பள்ளித்திருப்பதிகம் - ௲.

ஆ_ திருப்பதிகம் - கக.

சுவாமி தேவி திருநாமங்கள் - சொர்ணபுரேச்சரர், சுகந்தவனப்பாவை.

சஙு. திருநனிபள்ளி.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

காரைகள்கூகைமுல்லைகளவாகைபீகைபடர்தொடரிகள்ளிகவினிச்
சூரைகள்பம்மிவிம்முசுடுகாடமர்ந்தசிவன்மேயசோலைநகர்தான்
தேரைகளாரைசாயமிதிகொள்ளவாளைகுதிகொள்ளவள்ளைதுவள
நாரைகளாரல்வாரிவயன்மேதிவைகுநனிபள்ளிபோலுநமர்காள். (க)

சடையிடைப்புக்கொடுங்கியுளதங்குவெள்ளம்வளர்திங்கள்கண்ணியயலே
இடையிடைவைத்ததொக்குமலர்தொத்துமாலையிறைவன்னிடங்கொள்பதிதான்
மடையிடைவாளைபாயமுகிழ்வாய்நெரிந்துமணநாறுநீலமலரும்
நடையுடையன்னம்வைகுபுனலம்படப்பைநனிபள்ளிபோலுநமர்காள். (உ)

Koviloor Digital Library

பெறுமலர்கொண்டுதொண்டர்வழிபாடுசெய்யலொழிபாடிலாதபெருமான்
கறுமலர்கண்டமாகவிடமுண்டகாளையிடமாயகாதனகர்தான்
வெறுமலர்தொட்டுவிட்டவிசைபோனகொம்பின்விடுபோதலர்ந்தவிரைசூழ்
நறுமலரல்லிபல்லியொலிவண்டுறங்குநனிபள்ளிபோலுநமர்காள். (௩)

குளிர்தருகங்கைதங்குசடைமாடிலங்குதலைமாலையோடுகுலவி
ஒளிர்தருதிங்கள்சூடியுமைபாகமாகவுடையானுகந்தநகர்தான்
குளிர்தருகொம்மலோடுகுயில்பாடல்கேட்டபெடைவண்டுதானுமுரல
நளிர்தருசோலைமாலைநரைகுருகுவைகுநனிபள்ளிபோலுநமர்காள். (௪)

தோடொருகாதனொடொருகாதிலங்குசரிசங்குநின்றுபுரளக்
காடிடமாகநின்றுகனலாடுமெந்தையிடமாயகாதனகர்தான்
வீடுடனெய்துவார்கள்விதியென்றுசென்றுவெறிநீர்தெளிப்பவிரலால்
நாடுடனாடுசெம்மையொலிவெள்ளமாருநனிபள்ளிபோலுநமர்காள். (௫)

மேகமொடோடுதிங்கண்மலராவணிந்துமலையான்மடந்தைமணிபொன்
ஆகமோர்பாகமாகவனலாடுமெந்தைபெருமானமர்ந்தநகர்தான்
ஊகமொடாடுமந்திபுகளுஞ்சிலம்பவகிலுந்தியொண்பொனிடறி
நாகமொடாரம்வாருபுனல்வந்தலைக்குநனிபள்ளிபோலுநமர்காள். (௬)

தகைமலிதண்டுசூலமனலுமிழுநாகங்கொடுகொட்டிவீணைமுரல
வகைமலிவன்னிகொன்றைமதமத்தம்வைத்தபெருமானுகந்தநகர்தான்
புகைமலிகந்தமாலைபுனைவார்கள்பூசல்பணிவார்கள்பாடல்பெருகி
நகைமலிமுத்திலங்குமணல்சூழ்கிடக்கைநனிபள்ளிபோலுநமர்காள். (௭)

வலமிகுவாளன்வேலன்வளைவாளெயிற்றுமதியாவரக்கன்வலியோ
டுலமிகுதோள்களொல்கவிரலாலடர்த்தபெருமானுகந்தநகர்தான்
நிலமிகுகீழுமேலுநிகராதுமில்லையெனநின்றநீதியதனை
நலமிகுதொண்டர்நாளுமடிபரவல்செய்யுநனிபள்ளிபோலுநமர்காள். (௮)

நிறவுருவொன்றுதோன்றியெரியொன்றிநின்றதொருநீர்மைசீர்மைநினையார்
அறவுருவேதநாவனயனுமாலுமறியாதவண்ணனகர்தான்
புறவிரிமுல்லைமௌவல்குளிர்பிண்டிபுன்னைபுனைகொன்றைதுன்றுபொதுளி
நறவிரிபோதுதாதுபுதுவாசநாறுநனிபள்ளிபோலுநமர்காள். (௯)

அனமிகுசெல்குசோறுகொணர்கென்றுகையிலிடவுண்டுபட்டவமணும்
மனமிகுகஞ்சிமண்டையதிலுண்டுதொண்டர்குணமின்றிநின்றவடிவும்
வினமிகுவேதநான்குவிரிவித்தநாவின்விடையானுகந்தநகர்தான்
நலமிகுதொண்டர்நாளுமடிபரவல்செய்யுநனிபள்ளிபோலுநமர்காள். (௧௦)

கடல்வரையோதமல்குகழிகானல்பானல்கமழ்காழியென்றுகருதப்
படுபொருளாறுநாலுமுளதாகவைத்தபதியானஞானமுனிவன்
இடுபறையொன்றவத்தர்பியன்மேலிருந்தின்னிசையாலுரைத்தபனுவல்
நடுவிருளாடுமெந்தைநனிபள்ளியுள்கவினைகெடுதலாணைநமதே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

Koviloor Digital Library

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் பல தலங்களையும் பணிந்துகொண்டு, திருநனிபள்ளியைச் சமீபிக்கும்போது, அது பாலைநிலமாக விருந்தபடியால், அங்குள்ள அடியார்கள் வேண்டுகோளின்படி, நெய்தனிலமாகும் வண்ணம் "காரைகள் கூகைமுல்லை" என்னுந் திருப்பதிகம் பாடியருளினர். இவ்வற்புதச் செயலைத் திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனர் சைவசித்தாந்தசாத்திரம் பதினன்கினுளொன்ருகிய திருக்களிற்றுப்படியாரிலே "பாலைநெய்தல் பாடியதும்" என்றெடுத்தருளிச்செய்தார்.

திருநாவுக்கரசுநாயனர்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

முற்றுணையாயினனைமூவர்க்குமுதல்வன்றன்னைச்
சொற்றுணையாயினனைச்சோதியையாதரித்து
உற்றுணர்ந்துருகியூறியுள்கசிவுடையவர்க்கு
நற்றுணையாவர்போலுநனிபள்ளியடிகளாரே. (க)

புலர்ந்தகால்பூவுநீருங்கொண்டடிபோற்றமாட்டா
வலஞ்செய்துவாயினூலால்வட்டணைப்பந்தர்செய்த
சிலந்தியையரையனுக்கிச்சீர்மைகளருளவல்லார்
நலந்திகழ்சோலைசூழ்ந்தநனிபள்ளியடிகளாரே. (உ)

எண்பதும்பத்துமாறுமென்னுளேயிருந்துமன்னிக்
கண்பழக்கொன்றுமின்றிக்கலக்கநானலக்கழிந்தேன்
செண்பகந்திகழும்புன்னைசெழுந்திரட்குரவம்வேங்கை
நண்புசெய்சோலைசூழ்ந்தநனிபள்ளியடிகளாரே. (ங)

பண்ணினூர்பாடலாகிப்பழத்தினிலிரதமாகிக்
கண்ணினூர்பார்வையாகிக்கருத்தொடுகற்பமாகி
எண்ணினூரெண்ணமாகியேழுலகனைத்துமாகி
நண்ணினூர்வினைகளர்ப்பார்நனிபள்ளியடிகளாரே. (ச)

துஞ்சிருள்காலைமாலைதொடர்ச்சியைமறந்திராதே
அஞ்செழுத்தோதினுளுமரனடிக்கன்பதாகும்
வஞ்சனைப்பாற்சோறுக்கிவழக்கிலாவமணர்தந்த
நஞ்சமுதாக்குவித்தார்நனிபள்ளியடிகளாரே. (ரு)

செம்மலர்க்கமலத்தோனுந்திருமுடிகாணமாட்டான்
அம்மலர்ப்பாதங்காண்பானழியானகழ்ந்துங்காணுன்
நின்மலனென்றங்கேத்துநினைப்பினையருளிநாளும்
நம்மலமறுப்பர்போலுநனிபள்ளியடிகளாரே. (சு)

அரவத்தால்வரையைச்சுற்றியமரரோடசுரர்கூடி
அரவித்துக்கடையத்தோன்றுமாலநஞ்சமுதாவுண்டார்
விரவித்தம்மடியராகிவீடிலாத்தொண்டர்தம்மை
நரகத்தில்வீழவொட்டார்நனிபள்ளியடிகளாரே. (எ)

Koviloor Digital Library

மன்றுளேதிரியும்போதுவருவனபலவுங்குற்றம்
புன்றுளேபுரைபுரையன்புழுப்பொதிபொள்ளலாக்கை. (அ)

பத்துமோரிரட்டிதோளான்பாரித்துமலையெடுக்கப்
பத்துமோரிரட்டிதோள்கள்படருடம்படாவூன்றிப்
பத்துவாய்கீதம்பாடப்பரிந்தவற்கருள்கொடுத்தார்
பத்தர்தாம்பாவியேத்துநனிபள்ளிப்பரமனரே. * (௧௦)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

ஆதியனாதிரையன்னயன்மாலறிதற்கரிய
சோதியன்சொற்பொருளாய்ச்சுருங்காமறைநான்கினையும்
ஓதியனும்பர்தங்கோனுலகத்தினுளெவ்வுயிர்க்கும்
நாதியனம்பெருமானன்றுமூர்நனிபள்ளியதே. (௧)

உறவிலியூனமிலியுணரார்புரமூன்றெரியச்
செறுவிலிதன்னினைவார்வினையாயினதேய்ந்தழிய
அறவிலகும்மருளான்மருளார்மொழிவண்டறையும்
நறவிரிகொன்றையினானன்றுமூர்நனிபள்ளியதே. (௨)

வானுடையான்பெரியான்மனத்தாலுநினைப்பரியான்
ஆனிடையைந்தமர்ந்தானனுவாகியோர்தீயுருக்கொண்
டூனுடையிவ்வுடலமொடுங்கிப்புகுந்தான்பரந்தான்
நானுடைமாடெம்பிரானன்றுமூர்நனிபள்ளியதே. (௩)

ஓடுடையன்கலனாவுடைகோவணவன்னுமையோர்
பாடுடையன்பலிதேர்ந்துணும்பண்புடையன்பயிலக்
காடுடையன்னிடமாமலையேழுங்கருங்கடல்சூழ்
நாடுடைநம்பெருமானன்றுமூர்நனிபள்ளியதே. (௪)

பண்ணற்கரியதொருபடையாழிதனைப்படைத்துக்
கண்ணற்கருள்புரிந்தான்கருதாதவர்வேள்வியவி
உண்ணற்கிமையவரையுருண்டோடவுதைத்துகந்து
நண்ணற்கரியபிரானன்றுமூர்நனிபள்ளியதே. (௫)

மல்கியசெஞ்சடைமேன்மதியும்மரவும்முடனே
புல்கியவாரணனெம்புனிதன்புரிநூல்விகிர்தன்
மெல்கியவிற்றொழிலான்விருப்பன்பெரும்பார்த்தனுக்கு
நல்கியநம்பெருமானன்றுமூர்நனிபள்ளியதே. (௬)

* இத்திருப்பதிகத்தில் எட்டாவது செய்யுள் இரண்டடியும், ஒன்பதாவதுசெய்யுளும் மறைந்துபோயின.

Koviloor Digital Library

அங்கமொராறவையும்மருமாமறைவேள்விகளும்
எங்குமிருந்தந்தணரெரிமூன்றவையோம்புமிடம்
பங்கயமாமுகத்தாளுமைபங்கனுறைகோயில்
செங்கயல்பாயும்வயற்றிருவூர்நனி * பள்ளியதே. (எ)

திங்கட்குறுந்தெரியற்றிகழ்கண்ணியனுண்ணியனாய்
நங்கட்பிணிகளைவானருமாமருந்தேழ்பிறப்பும்
மங்கத்திருவிரலாலடர்த்தான்வல்லரக்கனையும்
நங்கட்கருளும்பிரானணனூமூர்நனிபள்ளியதே. † (அ)

ஏனமருப்பினொடுமெழிலாமையும்பூண்டுகந்து
வானமதிளரணம்மலையேசிலையாவளைத்தான்
ஊனமில்காழிதன்னுள்ளுயர்ஞானசம்பந்தர்க்கன்று
ஞானமருள்புரிந்தானணனூமூர்நனிபள்ளியதே. (கூ)

காலமுநாழிகையுந்நனிபள்ளிமனத்தினுள்கிக்
கோலமதாயவனைக்குளிர்நாவலவூரன்சொன்ன
மாலைமதித்துரைப்பார்மண்மறந்துவானோருலகில்
சாலநல்லின்பமெய்தித்தவலோகத்திருப்பவரே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருநனிபள்ளித்திருப்பதிகம் - ந.

ஆ திருப்பதிகம் - க0உ.

சுவாமி தேவி திருநாமங்கள் - நற்றுணையப்பர், பருவதராஜபுத்திரி.

சச. திருவலம்புரம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

கொடியுடைமும்மதிலூடுருவக்குனிவெஞ்சிலைதாங்கி
இடிபடவெய்தவமரர்பிரானடியாரிசைந்தேத்தத்
துடியிடையாளையொர்பாகமாகத்துதைந்தாரிடம்போலும்
வடிவுடைமேதிவயல்படியும்வலம்புரநன்னகரே. (க)

கோத்தகல்லாடையுங்கோவணமுங்கொடுகொட்டிகொண்டொருகைத்
தேய்த்தன்றநங்கனைத்தேசழித்துத்திசையார்தொழுதேத்தக்
காய்த்தகல்லாலதன்கீழிருந்தகடவுள்ளிடம்போலும்
வாய்த்தமுத்தீத்தொழிலான்மறையோர்வலம்புரநன்னகரே. (உ)

* வயலதிருநனி என்றும் பாடம். † இத்திருப்பாட்டு, சில எட்டுப்பிரதிகளில் 'ஏன மருப்பினொடு' என்னுந் திருப்பாட்டின்பின்னர்க் காணப்படுகின்றது.

Koviloor Digital Library

நொய்யதோர்மான்மறிகைவிரலின்னுனைமேனிலையாக்கி
மெய்யெரிமேனிவெண்ணீறுபூசிவிரிபுன்சடைதாழ
மையிருஞ்சோலைமணங்கமழவிருந்தாரிடம்போலும்
வைகலுமாமுழவம்மதிரும்வலம்புரநன்னகரே. (௩)

ஊனமராக்கையுடம்புதன்னையுணரிற்பொருளன்று
தேனமர்கொன்றையினானடிக்கேசிறுகாலையேத்துமினோ
ஆனமரைந்துங்கொண்டாட்டுகந்தவடிகளிடம்போலும்
வானவர்நாடோறும்வந்திறைஞ்சும்வலம்புரநன்னகரே. (௪)

செற்றெறியுந்திரையார்கலுழிச்செழுநீர்கிளர்செஞ்சடைமேல்
அற்றறியாதனலாடுநட்டமணியார்தடங்கண்ணி
பெற்றறிவாரெருதேறவல்லபெருமானிடம்போலும்
வற்றறியாப்புனல்வாய்ப்புடையவலம்புரநன்னகரே. (௫)

உண்ணவண்ணத்தொளிநஞ்சமுண்டுமையோடுடனாகிச்
சுண்ணவண்ணப்பொடிமேனிபூசிச்சுடர்ச்சோதிநின்றிலங்கப்
பண்ணவண்ணத்தனபாணிசெய்யப்பயின்றானிடம்போலும்
வண்ணவண்ணப்பறைபாணியறாவலம்புரநன்னகரே. (௬)

புரிதருபுன்சடைபொன்றயங்கப்புரிநூல்புரண்டிலங்க
விரைதருவேழத்தினீருரிதோன்மேன்மூடிவேய்புரைதோள்
அரைதருபூந்துகிலாரணங்கையமர்ந்தாரிடம்போலும்
வரைதருதொல்புகழ்வாழ்க்கையறாவலம்புரநன்னகரே. (௭)

தண்டணைதோளிருபத்தினொடுந்தலைபத்துடையானை
ஒண்டணைமாதுமைதானடுங்கவொருகால்விரலூன்றி
மீண்டதிர்த்தருள்செய்யவல்லவிகிர்தர்க்கிடம்போலும்
வண்டணைதன்னொடுவைகும்பொழில்வலம்புரநன்னகரே. (௮)

தாருறுதாமரைமேலயனுந்தரணியளந்தானும்
தேர்வறியாவகையாலிகலித்திகைத்துத்திரிந்தேத்தப்
பேர்வறியாவகையானிமிர்ந்தபெருமானிடம்போலும்
வாருறுசோலைமணங்கமழும்வலம்புரநன்னகரே. (௯)

காவியநற்றுவராடையினார்கடுநோன்புமேல்கொள்ளும்
பாவிகள்சொல்லைப்பயின்றறியாப்பழந்தொண்டருள்ளுருக
ஆவியுணின்றருள்செய்யவல்லவழகரிடம்போலும்
வாவியினீர்வயல்வாய்ப்புடையவலம்புரநன்னகரே. (௧௦)

நல்லியனான்மறையோர்புகலித்தமிழ்ஞானசம்பந்தன்
வல்லியந்தோலுடையாடையினான்வலம்புரநன்னகரைச்
சொல்லியபாடல்கள்பத்துஞ்சொல்லவல்லவர்தொல்வினைபோய்ச்
செல்வனசேவடிசென்றணுகிச்சிவலோகஞ்சேர்வாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

Koviloor Digital Library

திருநாவுக்கரசுநாயனார்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

தெண்டிரைதேங்கி* யோதஞ்சென்றடிவீழுங்காலைத்
தொண்டிரைத்தண்டர்கோனைத்தொழுதடிவணங்கியெங்கும்
வண்டுகண்மதுக்கண்மாந்தும்வலம்புரத்தடிகடம்மைக்
கொண்டுநற்கீதம்பாடக்குழகர்தாமிருந்தவாறே. (௧)

மடக்களில்வாளைபாயவண்டினமிரிந்தபொய்கைப்
பிடிக்களிறென்னத்தம்மிற்பிணைபயின்றணைவரால்கள்
தொடுத்தநன்மாலையேந்தித்தொண்டர்கள்பரவியேத்த
வடித்தடங்கண்ணிபாகர்வலம்புரத்திருந்தவாறே. (௨)

தேனுடைமலர்கள்கொண்டுதிருந்தடிபொருந்தச்சேர்த்தி
ஆனிடையஞ்சுங்கொண்டுவன்பினாலமரவாட்டி
வானிடைமதியஞ்சூடும்வலம்புரத்தடிகடம்மை
நானடைந்தேத்தப்பெற்றுநல்வினைப்பயனுற்றேனே. (௩)

முளையெயிற்றிளநல்லேனம்பூண்டுமொய்சடைகடாழ
வளையெயிற்றிளையநாகம்வலித்தரையிசையவீக்கிப்
புழைகையபோர்வைபோர்த்துப்புனலொடுமதியஞ்சூடி
வளைபயிலிளையரேத்தும்வலம்புரத்தடிகடாமே. (௪)

சுருளுறுவரையின்மேலாற்றுளங்கிளம்பளிங்குசிந்த
இருளுறுகதிர்நுழைந்தவிளங்கதிர்ப்பசலைத்திங்கள்
அருளுறுமடியரெல்லாமங்கையின்மலர்களேந்த
மருளுறுகீதங்கேட்டார்வலம்புரத்தடிகளாரே. (௫)

நினைக்கின்றேனெஞ்சுதன்னானீண்டபுன்சடையினானை
அனைத்துடன்கொண்டுவந்தங்கன்பினாலமையவாட்டிப்
புனைக்கின்றேன்பொய்ம்மைதன்னைமெய்ம்மையைப்புணரமாட்டேன்
எனக்குநான் † செய்வதென்னேயினிவலம்புரவனீரே. (௬)

செங்கயல்சேல்கள்பாய்ந்துதேம்பழமினியநாடித்
தங்கயந்துறந்துபோந்துதடம்பொய்கையடைந்துநின்று
கொங்கையர்குடையுங்காலைக்கொழுங்கனியழுங்கினாராம்
மங்கலமனையின்மிக்கார்வலம்புரத்தடிகளாரே. (௭)

அருகெலாங்குவளைசெந்நெலகவிலையாம்பனெய்தல்
தெருவெலாந்தெங்குமாவும்பழம்விழும்படப்பையெல்லாம்
குருகினங்கூடியாங்கேகும்மலித்திறகுலர்த்தி
மருவலாமிடங்கள்காட்டும்வலம்புரத்தடிகளாரே. (௮)

* யோங்கி என்றும் பாடம். † னெனக்குநான் என்றும், நினைக்குநான் என்றும் பாடம்.

Koviloor Digital Library

கருவரையனையமேனிக்கடல்வண்ணனவனுங்காணான்
திருவரையனையபூமேற்றிசைமுகனவனுங்காணான்
ஒருவரையுச்சியேறியோங்கினாரோங்கிவந்து
அருமையிலெளிமையானாரவர்வலம்புரவனாரே. (௯)

வாளெயிறிலங்கநக்குவளர்கயிலாயந்தன்னை
ஆள்வலிகருதிச்சென்றவரக்கனைவரைக்கிழன்று
தோளொடுபத்துவாயுந்தொலைந்துடனழுந்தவூன்றி
ஆண்மையும்வலியுந்தீர்ப்பாரவர்வலம்புரவனாரே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

மண்ணளந்தமணிவண்ணர்தாமுமற்றை
மறையவனும்வானவருஞ்சூழநின்று
கண்மலிந்ததிருநெற்றியுடையாரொற்றைக்
கதநாகங்கையுடையார்காணீரன்றே
பண்மலிந்தமொழியவருமியானுமெல்லாம்
பணிந்திறைஞ்சித்தம்முடையபின்பின்செல்ல
மண்மலிந்தவயல்புடைசூழ்மாடவீதி
வலம்புரமேபுக்கங்கேமன்னினாரே. (௧)

சிலைநவின்றதொருகணையாற்புரமூன்றெய்த
தீவண்ணர்சிறந்திமையோரிறைஞ்சியேத்தக்
கொலைநவின்றகளியானையுரிவைபோர்த்துக்
கூத்தாடித்திரிதருமக்கூத்தர்நல்ல
கலைநவின்றமறையவர்கள்காணக்காணக்
கடுவிடைமேற்பாரிடங்கள்சூழக்காதல்
மலைமகளுங்கங்கையுந்தாமுமெல்லாம்
வலம்புரமேபுக்கங்கேமன்னினாரே. (௨)

தீக்கூருந்திருமேனியொருபான்மற்றை
யொருபாலுமரியுருவந்திகழ்ந்தசெல்வர்
ஆக்கூரிற்றான்றோன்றிப்புகுவார்போல
வருவினையேன்செல்வதுமேயப்பாலெங்கும்
நோக்காரொருவிடத்துநாலுந்தோலுந்
துதைந்திலங்குந்திருமேனிவெண்ணீறுமூடி
வாக்கான்மறைவிரித்துவாயம்பேசி*
வலம்புரமேபுக்கங்கேமன்னினாரே. (௩)

மூவாதமுக்கப்பாம்பரையிற்சாத்தி
மூவுருவாயமுதல்வரிங்காள்
கோவாதவெரிகணைபைச்சிலைமேற்கோத்த
குழகனார்குளிர்கொன்றைசூடியிங்கே

* மாயம்பேசி என்றும் பாடம்.

Koviloor Digital Library

போவாரைக்கண்டடியேன்பின்பின்செல்லப்
புறக்கணித்துத்தம்முடையபூதஞ்சூழ
வாவாவெனவுரைத்துமாயம்பேசி
வலம்புரமேபுக்கங்கேமன்னினாரே. (௪)

அனலொருகையதுவேந்தியதளினோடே
யைந்தலையமாநாகமரையிற்சாத்திப்
புனல்பொதிந்தசடைக்கற்றைப்பொன்போன்மேனிப்
புனிதனார்புரிந்தமரரிறைஞ்சியேத்தச்
சினவிடையைமேல்கொண்டுதிருவாரூருஞ்
சிரபுரமுமிடைமருதுஞ்சேர்வார்போல
மனமுருகவளைகழலமாயம்பேசி
வலம்புரமேபுக்கங்கேமன்னினாரே. (ரு)

கறுத்ததொருகண்டத்தர்காலன்வீழக்
காலினாற்காய்ந்துகந்தகாபாலியார்
முறித்ததொருதோலுடுத்துமுண்டஞ்சாத்தி
முனிகணங்கள்புடைசூழமுற்றந்தோறும்
தெறித்ததொருவீணையராய்ச்செல்வார்தம்வாய்ச்
சிறுமுறுவல்வந்தெனதுசிந்தைவௌவ
மறித்தொருகானோக்காதேமாயம்பேசி
வலம்புரமேபுக்கங்கேமன்னினாரே. (சு)

பட்டுடுத்துப்பவளம்போன்மேனியெல்லாம்
பசுஞ்சாந்தங்கொண்டணிந்துபாதநோவ
இட்டெடுத்துநடமாடியிங்கேவந்தார்க்
கெவ்வூரீரெம்பெருமானென்றேனாவி
விட்டிடுமாறதுசெய்துவிரைந்துநோக்கி
வேறோர்பதிபுகப்போவார்போல
வட்டணைகள்படநடந்துமாயம்பேசி
வலம்புரமேபுக்கங்கேமன்னினாரே. (எ)

பல்லார்பயில்பழனம்பாசூரென்று
பழநம்பதிபழமைசொல்லிநின்றார்
நல்லார்நனிபள்ளியின்றுவைகி
நாளைப்போய்நள்ளாறுசேர்துமென்றார்
சொல்லாரொருவிடமாத்தோள்கைவீசிச்
சுந்தரராய்வெந்தநீறாடியெங்கும்
மல்லார்வயல்புடைசூழ்மாடவீதி
வலம்புரமேபுக்கங்கேமன்னினாரே. (அ)

Koviloor Digital Library

பொங்காடரவொன்றுகையிற்கொண்டு
போர்வெண்மழுவேந்திப்போகாநிற்பர்
தங்காரொருவிடத்துந்தம்மேலார்வந்
தவிர்த்தருளார்தத்துவத்தேநின்றேனென்பர்
எங்கேயிவர்செய்கையொன்றொன்றொவ்வா
வென்கண்ணினின்றகலாவேடங்காட்டி
மங்குன்மதிதவழுமாடவீதி
வலம்புரமேபுக்கங்கேமன்னினாரே. (௯)

செங்கண்மால்சிலைபிடித்துச்சேனையோடுஞ்
சேதுபந்தனஞ்செய்துசென்றுபுக்குப்
பொங்குபோர்பலசெய்துபுகலால்வென்ற
போரரக்கனெடுமுடிகள்பொடியாய்வீழ
அங்கொருதன்றிருவிரலாலிறையேயூன்றி
யடர்த்தவற்கேயருள்புரிந்தவடிகளிந்நாள்
வங்கமலிகடல்புடைசூழ்மாடவீதி
வலம்புரமேபுக்கங்கேமன்னினாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

எனக்கினித்தினைத்தனைப்புகலிடமறிந்தேன்
பனைக்கனிபழம்படும்பரவையின்கரைமேல்
எனக்கினியவன்றமர்க்கினியவனெழுமையும்
மனக்கினியவன்றனதிடம்வலம்புரமே. (௧)

புரமவையெரிதரவளைந்தவில்லினனவன்
மரவுரிபுலியதளரைமிசைமருவினன்
அரவுரியிரந்தயனிரந்துணவிரும்பிநின்
றிரவெரியாடிதனிடம்வலம்புரமே. (௨)

நீறணிமேனியனெருப்புமிழாவினன்
கூறணிகொடுமழுவேந்தியோர்கையினன்
ஆறணிபவிர்சடையழல்வளர்மழலைவெள்
ளேறணியடிகடமிடம்வலம்புரமே. (௩)

கொங்கணைசுரும்புணநெருங்கியகுளிரிளம்
தெங்கொடுபனைபழம்படுமிடந்தேவர்கள்
தங்கிடுமிடந்தடங்கடற்றிரைபுடைதர
எங்களதடிகணல்லிடம்வலம்புரமே. (௪)

Koviloor Digital Library

கொடுமழுவிரகினன்கொலைமலிசிலையினன்
நெடுமதிள்சிறுமையினிரவவல்லவனிடம்
படுமணிமுத்தமும்பவளமுமிகச்சுமந்
திடுமணலடைகரையிடம்வலம்புரமே. (௫)

கருங்கடக்களிற்றுரிக்கடவுளதிடங்கயல் *
நெருங்கியநெடும்பெணையடும்பொடுவிரவிய
மருங்கொடுவலம்புரிசலஞ்சலமணம்புணர்ந்
திருங்கடலடைகரையிடம்வலம்புரமே. (௬)

நரிபுரிகாடரங்காநடமாடுவர்
வரிபுரிபாடநின்றாடுமெம்மானிடம்
புரிசுரிவரிகுழலரிவையொர்பான்மகிழ்ந்
தெரியெரியாடிதனிடம்வலம்புரமே. (௭)

பாறணிமுடைதலைகலனெனமருவிய
நீறணிதிமிர்சடைமுடியினனிலவிய
மாறணிவருதிரைவயலணிபொழிலது
ஏறுடையடிகடமிடம்வலம்புரமே. (௮)

சடசடவிடுபெணைபழம்படுமிடவகை
படபடகத்தொடுபலிகலந்துலவிய
கடைகடைபலிதிரிகபாலிதனிடமது
இடிகரைமணலடையிடம்வலம்புரமே. (௯)

குண்டிகைப்படப்பினில்விடக்கினையொழித்தவர்
கண்டவர்கண்டடிவீழ்ந்தவர்கனைகழல்
தண்டுடைத்தண்டிதனினமுடையாவுடன்
எண்டிசைக்கொருசுடரிடம்வலம்புரமே. (௧௦)

வருங்கலமும்பலபேணுதல்கருங்கடல்
இருங்குலப்பிறப்பர்தமிடம்வலம்புரத்தினை
அருங்குலத்தருந்தமிழூரன்வன்றொண்டன்சொல்
பெருங்குலத்தவரொடுபிதற்றுதல் † பெருமையே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவலம்புரத்திருப்பதிகம் - ௪.

ஆ திருப்பதிகம் - ௧௦௬.

சுவாமி தேவி திருநாமங்கள் — வலம்புரநாதர், வடுவகிர்க்கண்ணி.

* நெடுங்கடல் என்றும் பாடம். † தவர்கொடுபிதற்றுதல் என்றும் பாடம்.

௪௫. திருத்தலைச்சங்காடு.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

நலச்சங்கவெண்குழையுந்தோடும்பெய்தோர்நால்வேதம்
சொலச்சங்கையில்லாதீர்சுடுகாடல்லாற்கருதாதீர்
குலைச்செங்காய்ப்பைங்கமுகின்குளிர்கொள்சோலைக்குயிலாலும்
தலைச்சங்கைக்கோயிலேகோயிலாகத்தாழ்ந்தீரே.* (௧)

துணிமல்குகோவணமுந்தோலுங்காட்டித்தொண்டாண்டீர்
மணிமல்குகண்டத்தீரண்டர்க்கெல்லாமாண்பானீர்
பிணி† மல்குநூன்மார்பர்பெரியோர்வாழுந்தலைச்சங்கை
அணிமல்குகோயிலேகோயிலாகவமர்ந்தீரே. (௨)

சீர்கொண்டபாடலீர்செங்கண்வெள்ளேறூர்தியீர்
நீர்கொண்டும்பூக்கொண்டுநீங்காத்தொண்டர்நின்றேத்தத்
தார்கொண்டநூன்மார்பர்தக்கோர்வாழுந்தலைச்சங்கை
ஏர்கொண்டகோயிலேகோயிலாகவிருந்தீரே. (௩)

வேடஞ்சூழ்கொள்கையீர்வேண்டிநீண்டவெண்டிங்கள்
ஓடஞ்சூழ்கங்கையுமுச்சிவைத்தீர்தலைச்சங்கைக்
கூடஞ்சூழ்மண்டபமுங்குலாயவாசற்கொடித்தோன்றும்
மாடஞ்சூழ்கோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (௪)

சூலஞ்சேர்கையினீர்சுண்ணவெண்ணீறாடலீர்
நீலஞ்சேர்கண்டத்தீர்நீண்டசடைமேனீரேற்றீர்
ஆலஞ்சேர்தண்கானலன்னமன்னுந்தலைச்சங்கைக்
கோலஞ்சேர்கோயிலேகோயிலாகக்கொண்டீரே. (௫)

நிலநீரொடாகாசமனல்காலாகிநின்றைந்து
புலநீர்மைபுறங்கண்டார்பொக்கஞ்செய்யார்போற்றோவார்
சலநீதரல்லாதார்தக்கோர்வாழுந்தலைச்சங்கை
நலநீரகோயிலேகோயிலாகநயந்தீரே. (௬)

அடிபுல்குபைங்கழல்களார்ப்பப்பேர்ந்தோரனலேந்திக்
கொடிபுல்குமென்சாயலுமையோர்பாகங்கூடினீர்
பொடிபுல்குநூன்மார்பர்புரிநூலாளர்தலைச்சங்கைக்
கடிபுல்குகோயிலேகோயிலாகக்கலந்தீரே. (௭)

* கோயிலாகச்சார்ந்தீரே என்றும் பாடம். † பிணி - முதனிலைத்தொழிற்பெயர்.

Koviloor Digital Library

திரையார்ந்தமாகடல்சூழ்தென்னிலங்கைக்கோமானை
வரையார்ந்ததோளடரவிரலாலூன்றுமாண்பினீர்
அரையார்ந்தமேகலையீரந்தணாளர்தலைச்சங்கை
நிரையார்ந்தகோயிலேகோயிலாகநினைந்திரே. (அ)

பாயோங்குபாம்பணைமேலானும்பைந்தாமரையானும்
போயோங்கிக்காண்கிலார்புறநின்றோரார்போற்றோவார்
தீயோங்குமறையாளர்திகழுஞ்செல்வத்தலைச்சங்கைச்
சேயோங்குகோயிலேகோயிலாகச்சேர்ந்திரே. (கூ)

அலையாரும்புனலுறந்தவமணர்குண்டர்சாக்கியர்
தொலையாதங்கலர்தூற்றத்தோற்றங்காட்டியாட்கொண்டீர்
தலையானநால்வேதந்தரித்தார்வாழுந்தலைச்சங்கை
நிலையார்ந்தகோயிலேகோயிலாகநின்றிரே. (கo)

நளிரும்புனற்காழிநல்லஞானசம்பந்தன்
குளிருந்தலைச்சங்கையோங்குகோயின்மேயானை
ஒளிரும்பிறையானையுரைத்தபாடலிவைவல்லார்
மிளிருந்திரைசூழ்ந்தவையத்தார்க்குமேலாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருத்தலைச்சங்காட்டுத்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம். - கoஎ.

சுவாமி தேவி திருநாமங்கள் - சங்கருணாயகர், சௌந்தரியம்மை.

சகூ. திருவாக்கூர்த்தான்றோன்றிமாடம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - சீ கா ம ர ம்.

திருச்சிற்றம்பலம்.

அக்கிருந்தவாரமுமாடரவுமாமையும்
தொக்கிருந்தமார்பினன்றோலுடையான்வெண்ணீற்றான்
புக்கிருந்ததொல்கோயில்பொய்யிலாமெய்ந்நெறிக்கே
தக்கிருந்தாராக்கூரிற்றான்றோன்றிமாடமே. (க)

நீராவார்சடையானீறுடையானேறுடையான்
காரார்பூங்கொன்றையினான்காதலித்ததொல்கோயில்
கூராரல்வாய்நிறையக்கொண்டயலேகோட்டகத்தில்
தாராமல்காக்கூரிற்றான்றோன்றிமாடமே. (உ)

Koviloor Digital Library

வாளார்கண்செந்துவர்வாய்மாமலையான்றன்மடந்தை
தோளாகம்பாகமாப்புல்கினான்றொல்கோயில்
வேளாளரென்றவர்கள்வள்ளன்மையான்மிக்கிருக்கும்
தாளாளராக்கூரிற்றான்றோன்றிமாடமே. (௩)

கொங்குசேர்தண்கொன்றைமாலையினான்கூற்றடாப்
பொங்கினான்பொங்கொளிசேர்வெண்ணீற்றான்பூங்கோயில்
அங்கமாறோடுமருமறைகளைவேள்வி
தங்கினாராக்கூரிற்றான்றோன்றிமாடமே. (௪)

விக்கினானாடரவம்விந்தழிந்தார்வெண்டலையென்
பாக்கினான்பலகலன்களாதரித்துப்பாகம்பெண்
ஆக்கினான்றொல்கோயிலாம்பலம்பூம்பொய்கைபுடை
தாக்கினாராக்கூரிற்றான்றோன்றிமாடமே. (௫)

பண்ணொளிசேர்நான்மறையான்பாடலினோடாடலினான்
கண்ணொளிசேர்நெற்றியினான்காதலித்ததொல்கோயில்
விண்ணொளிசேர்மாமதியந்தீண்டியக்கால்வெண்மாடம்
தண்ணொளிசேராக்கூரிற்றான்றோன்றிமாடமே. (௬)

வீங்கினார்மும்மதிலும்வில்வரையால்வெந்தவிய
வாங்கினார்வானவர்கள்வந்திறைஞ்சுந்தொல்கோயில்
பாங்கினார்நான்மறையோடாறங்கம்பலகலைகள்
தாங்கினாராக்கூரிற்றான்றோன்றிமாடமே. (௭)

கன்னெடியகுன்றெடுத்தான்றோளடாக்காலூன்றி
இன்னருளாலாட்கொண்டவெம்பெருமான்றொல்கோயில்
பொன்னடிக்கேநாடோறும்பூவோடுநீர்சுமக்கும்
தன்னடியாராக்கூரிற்றான்றோன்றிமாடமே. (௮)

நன்மையானாரணனுநான்முகனுங்காண்பரிய
தொன்மையான்றோற்றங்கேடில்லாதான்றொல்கோயில்
இன்மையாற்சென்றிரந்தார்க்கில்லையென்னாதீந்துவக்கும்
தன்மையாராக்கூரிற்றான்றோன்றிமாடமே. (௯)

நாமருவுபுன்மைநவிற்றச்சமண்டேரர்
பூமருவுகொன்றையினான்புக்கமருந்தொல்கோயில்
சேன்மருவுபைங்கயத்துச்செங்கழுநீர்பைங்குவளை
தாமருவுமாக்கூரிற்றான்றோன்றிமாடமே. (௧௦)

ஆடலமர்ந்தானையாக்கூரிற்றான்றோன்றி
மாடமமர்ந்தானைமாடஞ்சேர்தண்காழி
நாடற்கரியசீர்ஞானசம்பந்தன்சொல்
பாடலிவைவல்லார்க்கில்லையாம்பாவமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

Koviloor Digital Library

திருநாவுக்கரசுநாயனர்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

முடித்தாமரையணிந்தமூர்த்திபோலு
மூவுலகுந்தாமாகிநின்றார்போலும்
கடித்தாமரையேய்ந்தகண்ணார்போலுங்
கல்லலகுபாணிபயின்றார்போலும்
கொடித்தாமரைக்காடேநாடுந்தொண்டர்
குற்றேவலாருமகிழ்ந்தகுழகர்போலும்
அடித்தாமரைமலர்மேல்வைத்தார்போலு
மாக்கூரிற்றான்றோன்றியப்பனாரே. (க)

ஓதிற்றொருநூலுமில்லைபோலு
முணரப்படாததொன்றில்லைபோலும்
காதிற்குழையிலங்கப்பெய்தார்போலுங்
கவலைப்பிறப்பிடும்பைகாப்பார்போலும்
வேதத்தோடாறங்கஞ்சொன்னார்போலும்
விடஞ்சூழ்ந்திருண்டமிடற்றார்போலும்
ஆதிக்களவாகிநின்றார்போலு
மாக்கூரிற்றான்றோன்றியப்பனாரே. (உ)

மையார்மலர்க்கண்ணாள்பாகர்போலு
மணிநீலகண்டமுடையார்போலும்
நெய்யார்திரிசூலங்கையார்போலு
நீறேறுதோளெட்டுடையார்போலும்
வையார்மழுவாட்படையார்போலும்
வளர்ஞாயிறன்னவொளியார்போலும்
ஐவாயரவமொன்றார்த்தார்போலு
மாக்கூரிற்றான்றோன்றியப்பனாரே. (ங)

வடிவிளங்குவெண்மழுவாள்வல்லார்போலும்
வஞ்சக்கருங்கடனஞ்சுண்டார்போலும்
பொடிவிளங்குமுந்நூல்சேர்மார்பர்போலும்
பூங்கங்கைதோய்ந்தசடையார்போலும்
கடிவிளங்குகொன்றையந்தாரார்போலும்
கட்டங்கமேந்தியகையார்போலும்
அடிவிளங்குசெம்பொற்கழலார்போலு
மாக்கூரிற்றான்றோன்றியப்பனாரே. (ச)

Koviloor Digital Library

ஏகாசமாம்புலித்தோல்பாம்புதாழ
விடுவெண்டலைகலனாவேந்தினாளும்
மேகாசங்கட்டழித்தவெள்ளிமாலை
புனலார்சடைமுடிமேற்புனைந்தார்போலும்
மாகாசமாயவெண்ணிருந்தியு
மதியுமதிபிறந்தவின்றுமன்றும்
ஆகாசமென்றிவையுமானார்போலு
மாக்கூரிற்றான்றோன்றியப்பனாரே. (௫)

மாதூரும்வாணெடுங்கண்செவ்வாய்மென்றோண்
மலைமகளைமார்பத்தணைத்தார்போலும்
மூதூர்முதுதிரைகளானார்போலு
முதலுமிறுதியுமில்லார்போலும்
தீதூரநல்வினையாய்* நின்றார்போலுந்
திசையெட்டுந்தாமேயாஞ்செல்வர்போலும்
ஆதிரைநாளாவமர்ந்தார்போலு
மாக்கூரிற்றான்றோன்றியப்பனாரே. (௬)

மால்யானைமத்தகத்தைக்கீண்டார்போலு
மான்றோலுடையாமகிழ்ந்தார்போலும்
கோலானைக்கோவழலாற்காய்ந்தார்போலுங்
குழவிப்பிறைசடைமேல்வைத்தார்போலும்
காலனைக்காலாற்கடந்தார்போலுங்
கயிலாயந்தம்மிடமாக்கொண்டார்போலும்
ஆலானைந்தாடலுகப்பார்போலு
மாக்கூரிற்றான்றோன்றியப்பனாரே. (௭)

கண்ணார்ந்தநெற்றியுடையார்போலுங்
காமனையுங்கண்ணழலாற்காய்ந்தார்போலும்
உண்ணாவருநஞ்சமுண்டார்போலு
மூழித்தீயன்னவொளியார்போலும்
எண்ணாயிரங்கோடிபேரார்போலு
மேறேறிச்செல்லுமிறைவர்போலும்
அண்ணாவுமாரூருமேயார்போலு
மாக்கூரிற்றான்றோன்றியப்பனாரே. (௮)

கடியார்தளிர்கலந்தகொன்றைமாலை
கதிர்போதுதாதணிந்தகண்ணிபோலும்
நெடியான்சதுர்முகனுநேடநின்ற
நிலநற்கண்டத்திறையார்போலும்
படிமேலழல்வண்ணஞ்செம்பொன்மேனி
மணிவண்ணந்தம்வண்ணமாவார்போலும்
அடியார்புகலிடமதானார்போலு
மாக்கூரிற்றான்றோன்றியப்பனாரே. (௯)

* தீதூரல்வினை என்றும் பாடம்.

Koviloor Digital Library

திரையானுஞ்செந்தாமரைமேலானுந்
தேர்ந்தவர்கடாந்தேடிக்காணார்நாணும்
புரையானெனப்படுவார்தாமேபோலும்
போரேறுதாமேறிச்செல்வார்போலும்
கரையாவரைவில்லேநாகநாணுக்
காலத்தீயன்னகனலார்போலும்
வரையார்மதிலெய்தவண்ணர்போலு
மாக்கூரிற்றான்றோன்றியப்பனாரே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருவாக்கூர்த்தான்றோன்றிமாடத்திருப்பதிகம் - உ.

ஆ திருப்பதிகம் - ௬0௧.

சுவாமி தேவி திருநாமங்கள் - சுயம்புநாதர், கட்கநேத்திரி.

௪எ. திருக்கடவூர்வீரட்டம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

சடையுடையானுநெய்யாடலானுஞ்சரிகோவண
உடையுடையானுமையார்ந்த* வொண்கணுமைகேள்வனும்
கடையுடைநன்னெடுமாடமோங்குங்கடவூர்தனுள்
விடையுடையண்ணலும்வீரட்டானத்தானல்லனே. (க)

எரிதருவார்சடையானும்வெள்ளையெருதேறியும்
புரிதருமாமலர்க்கொன்றைமாலைபுனைந்தேத்தவே
கரிதருகாலனைச்சாடினானுங்கடவூர்தனுள்
விரிதருதொல்புகழ்வீரட்டானத்தரனல்லனே. (உ)

நாதனுநள்ளிருளாடினானுநளிர்போதின்கண்
பாதனும்பாய்புலித்தோலினானும்பசுவேறியும்
காதலர்தண்கடவூரினானுங்கலந்தேத்தவே
வேதமதோதியும்வீரட்டானத்தரனல்லனே. (௩)

மழுவமர்செல்வனுமாசிலாதபல்பூதமுன்
முழவொலியாழ்குழன்மொந்தைகொட்டமுதுகாட்டிடைக்
கழல்வளர்கால்குஞ்சித்தாடினானுங்கடவூர்தனுள்
விழவொலிமல்கியவீரட்டானத்தரனல்லனே. (௪)

* உடையுடையானுழையார்ந்த என்றும் பாடம்.

Koviloor Digital Library

சுடர்மணிச்சுண்ணவெண்ணீற்றினானுஞ்சுழல்வாயதோர்
படமணிநாகமரைக்கசைத்தபரமேட்டியும்
கடமணிமாவுரித்தோலினானுங்கடவூர்தனுள்
விடமணிகண்டனும்வீரட்டானத்தானல்லனே. (ரு)

பண்பொலிநான்மறைபாடியாடிப்பலவூர்கள்போய்
உண்பலிகொண்டுழல்வானும்வானின்னொளிமல்கிய
கண்பொலிநெற்றிவெண்டிங்களானுங்கடவூர்தனுள்
வெண்பொடிப்பூசியும்வீரட்டானத்தானல்லனே. (சு)

செவ்வழலாய்நிலனாகிநின்றசிவமூர்த்தியும்
முவ்வழனான்மறையைந்துமாயமுனிகேள்வனும்
கவ்வழல்வாய்க்கதநாகமார்த்தான்கடவூர்தனுள்
வெவ்வழலேந்துகைவீரட்டானத்தானல்லனே. (எ)

அடியிரண்டோருடம்பைஞ்ஞான்கிருபதுதோடச
முடியுடைவேந்தனைமூர்க்கழித்தமுதன்மூர்த்தியும்
கடிகமழும்பொழில்சூழுமந்தண்கடவூர்தனுள்
வெடிதலையேந்தியும்வீரட்டானத்தானல்லனே. (அ)

வரைகுடையாமழைதாங்கினானும்வளர்போதின்கண்
புரைகடிந்தோங்கிநான்முகத்தான்புரிந்தேத்தவே
கரைகடல்சூழ்வையங்காக்கின்றானுங்கடவூர்தனுள்
விரைகமழ்பூம்பொழில்வீரட்டானத்தானல்லனே. (கூ)

தேருமாசுகொண்மேனியாருந்தெளியாததோர்
ஆருஞ்சொற்பொருளாகிநின்றவெமதாதியான்
காரிளங்கொன்றைவெண்டிங்களானுங்கடவூர்தனுள்
வீரமுஞ்சேர்கழல்வீரட்டானத்தானல்லனே. (க0)

வெந்தவெண்ணீறணிவீரட்டானத்துறைவேந்தனை
அந்தணர்தங்கடவூருளானையணிகாழியான்
சந்தமெல்லாமடிச்சாத்த* வல்லமறைஞானசம்
பந்தனசெந்தமிழ்பாடியாடக்கெடும்பாவமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

பொள்ளத்தகாயமாயப்பொருளினைப்போகமாதர்†
வெள்ளத்தைக்கழிக்கவேண்டில்விரும்புமின்விளக்குத்தூபம்
உள்ளத்ததிரி‡பொன்றேற்றியுணருமாறுணரவல்லார்
கள்ளத்தைக்கழிப்பர்போலுங்கடவூர்வீரட்டனாரே. (க)

* மடிச்சார்த்த என்றும் பாடம். † பொள்ளொத்தகாயமாயபொருளினைப்போகமாதர் என்றும், பொன்னத்தகாயமாயப்பொருளிலபோகமாகா என்றும் பாடம். ‡ உள்ளொத்ததிரி என்றும் பாடம்.

Koviloor Digital Library

மண்ணிடைக்குரம்பைதன்னைமதித்துநீர்மையலெய்தில்
விண்ணிடைத்தருமராசன்வேண்டினல்விலக்குவாரார்
பண்ணிடைச்சுவைகள்பாடியாடிடும்பத்தர்க்கென்றும்
கண்ணிடைமணியர்போலுங்கடவூர்வீரட்டனாரே. (உ)

பொருத்தியகுரம்பைதன்னுட்பொய்ந்நடை *செலுத்துகின்றீர்
ஒருத்தனையுணரமாட்டீருள்ளத்திற்கோடுமைநீக்கீர்
வருத்தினகளிறு † தன்னைவருத்துமாவருத்தவல்லார்
கருத்தினிலிருப்பர்போலுங்கடவூர்வீரட்டனாரே. (௩)

பெரும்புலர்காலைமூழ்கிப்பித்தர்க்குப்பத்தராகி
அரும்பொடுமலர்கள்கொண்டாங்கார்வத்தையுள்ளேவைத்து
விரும்பிநல்விளக்குத்தூபம்விதியினாலிடவல்லார்க்குக்
கரும்பினிற்கட்டிபோல்வார்கடவூர்வீரட்டனாரே. (௪)

தலக்கமேசெய்துவாழ்ந்துதக்கவாறென்றுமின்றி
விலக்குவாரிலாமையாலேவிளக்கத்திற்கோழிபோன்றேன்
மலக்குவார்மனத்தினுள்ளேகாலனார்தமர்கள்வந்து
கலக்கநான்கலங்குகின்றேன்கடவூர்வீரட்டனீரே. (ரு)

பழியுடையாக்கைதன்னிற்பாழுக்கேநீரிறைத்து
வழியிடைவாழமாட்டேன்மாயமுந்தெளியகில்லேன்
அழிவுடைத்தாயவாழ்க்கையைவாலலைக்கப்பட்டுக்
கழியிடைத்தோணிபோன்றேன்கடவூர்வீரட்டனீரே. (சா)

மாயத்தையறியமாட்டேன்மையல்கொண்மனத்தனாகிப்
பேயொத்துக்கூகையானேன்பிஞ்ஞகாபிறப்பொன்றில்லீ
நேயத்தானினையமாட்டேனீதனேநீசனேனான்
காயத்தைக்கழிக்கமாட்டேன்கடவூர்வீரட்டனீரே. (எ)

பற்றிலாவாழ்க்கைவாழ்ந்துபாழுக்கேநீரிறைத்தேன்
உற்றலாற்கயவர்தேருரென்னுங்கட்டுரையோடொத்தேன்
எற்றுளேனென்செய்கேனானிடும்பையான்ஞானமேதும்
கற்றிலேன்களைகண்காணேன்கடவூர்வீரட்டனீரே. (அ)

சேவினேசனையகண்ணார்திறம்விட்டுச்சிவனுக்கன்பாய்ப்
பாலுநற்றயிர்நெய்யோடுபலபலவாட்டியென்றும்
மாலினைத்தவிரநின்றமார்க்கண்டற்காகவன்று
காலனையுதைப்பர்போலுங்கடவூர்வீரட்டனாரே. (கூ)

முந்துருவிருவரோடுமூவருமாயினாரும்
இந்திரனோடுதேவரிருடிகளின்பஞ்செய்ய
வந்திருபதுகடோளாலெடுத்தவன்வலியைவாட்டிக்
கந்திருவங்கள்கேட்டார்கடவூர்வீரட்டனாரே. (க0)

திருச்சிற்றம்பலம்.

* தன்னுட்பொருளுடைச் என்றும் பாடம். † வருத்தினக்களிறு என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

மருட்டுயர்தீரவன்றர்ச்சித்தமாணிமார்க்கண்டேயற்காய்
இருட்டியமேனிவளைவாளெயிற்றெரிபோலுங்குஞ்சிச்
சுருட்டியநாவில்வெங்கூற்றம்பதைப்பவுதைத்துங்ஙனே
உருட்டியசேவடியான்கடவூருறையுத்தமனே. (௧)

பதத்தெழுமந்திரமஞ்செழுத்தோதிப்பரிவினொடும்
இதத்தெழுமாணிதனின்னுயிருண்ணவெகுண்டடர்த்த
கதத்தெழுகாலனைக்கண்குருதிப்புனலாறொழுக
உதைத்தெழுசேவடியான்கடவூருறையுத்தமனே. (௨)

காப்புறுசிந்தையர்காண்டற்கரியவன்காமனையும்
நெருப்புமிழ்கண்ணினனீள்புனற்கங்கையும்பொங்கரவும்
பரப்பியசெஞ்சடைப்பால்வண்ணன்காலனைப்பண்டொருகால்
உரப்பியசேவடியான்கடவூருறையுத்தமனே. (௩)

மறித்திகழ்கையினன்வானவர்கோனைமனமகிழ்ந்து
குறித்தெழுமாணிதனாருயிர்கொள்வான்கொதித்தசிந்தைக்
கறுத்தெழுமூவிலைவேலுடைக்காலனைத்தானலற
உறுக்கியசேவடி * யான்கடவூருறையுத்தமனே. (௪)

குழைத்திகழ்காதினன்வானவர்கோனைக்குளிர்ந்தெழுந்து
பழக்கமொடர்ச்சித்தமாணிதனாருயிர்கொள்ளவந்த
தழற்பொதிமூவிலைவேலுடைக்காலனைத்தானலற
உழக்கியசேவடியான்கடவூருறையுத்தமனே. (௫)

பாலனுக்காயன்றுபாற்கடலீந்துபணைத்தெழுந்த
ஆலினிற்கீழிருந் † தாரணமோதியருமுனிக்காய்ச்
சூலமும்பாசமுங்கொண்டுதொடர்ந்தடர்ந்தோடிவந்த
காலனைக்காய்ந்தபிரான்கடவூருறையுத்தமனே. (௬)

படர்சடைக்கொன்றையும்பன்னகமாலைபணிகயிறு
உடைதலைகோத்துழன்மேனியனுண்பலிக்கென்றுழல்வான்
சுடர்பொதிமூவிலைவேலுடைக்காலனைத்துண்டமதா
உடறியசேவடியான்கடவூருறையுத்தமனே. (௭)

வெண்டலைமாலையுங்கங்கைகரோடிவிரிசடைமேல்
பெண்டணிநாயகன் ‡ பேயுகந்தாடும்பெருந்தகையான்
கண்டணிநெற்றியன்காலனைக்காய்ந்துகடலின்விடம்
உண்டருள்செய்தபிரான்கடவூருறையுத்தமனே. (௮)

* உழக்கியசேவடி என்றும் பாடம். † ஆனிழற்கீழிருந் என்றும் பாடம். ‡ பெண்டனிநாயகன் என்றும் பாடம்.

Koviloor Digital Library

கேழலதாகிக்கிளறியகேசவன்காண்பரிதாய்
வாழிநன்மாமலர்க்கண்ணிடந்திட்டவம்மாலவற்கன் *
ருழியுமீந்துவடிதிறற்காலனையன்றடர்த்து
ஊழியுமாயபிரான்கடவூருறையுத்தமனே. (கூ)

தேன்றிகழ்கொன்றையுங்கூவிளமாலைதிருமுடிமேல்
ஆன்றிகழைந்துகந்தாடும்பிரான்மலையார்த்தெடுத்த
கூன்றிகழ்வாளரக்கன்முடிபத்துங்குலைந்துவிழ
ஊன்றியசேவடியான்கடவூருறையுத்தமனே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

மலைக்கொளானைமயக்கியவல்வினை
நிலைக்கொளானைநினைப்புறுநெஞ்சமே
கொலைக்கையானையுங்கொன்றிடுமாதலால்
கலைக்கையானைகண்டீர்கடவூரரே. (க)

வெள்ளிமால்வரைபோல்வதொரானையார்
உள்ளவாறெனையுள்புகுமானையார்
கொள்ளமாகியகோயிலுளானையார்
கள்ளவானைகண்டீர்கடவூரரே. (உ)

ஞானமாகியநன்குணரானையார்
ஊனைவேவவுருக்கியவானையார்
வேனலானை † யுரித்துமையஞ்சவே
கானலானை † கண்டீர்கடவூரரே. (ங)

ஆலமுண்டழகாயதொரானையார்
நீலமேனிநெடும்பளிங்கானையார்
கோலமாயகொழுஞ்சுடரானையார்
காலவானைகண்டீர்கடவூரரே. (ச)

அளித்தவானஞ்சுமாடியவானையார்
வெளுத்தநீள்கொடியேறுடையானையார்
எளித்தவேழத்தையெள்குவித்தானையார்
களித்தவானைகண்டீர்கடவூரரே. (ரு)

விடுத்தமால்வரைவின்றுறவானையார்
தொடுத்தமால்வரைதூயதொரானையார்
கடுத்தகாலனைக்காய்ந்ததொரானையார்
கடுத்தவானைகண்டீர்கடவூரரே. (கு)

* கண்ணிடந்திட்டமாலவற்கன் என்றும் பாடம். † † வேனவானை கானவானை என்று பாடமோதுவாருமுளர்.

Koviloor Digital Library

மண்ணுளாரைமயக்குறுமானையார்
எண்ணுளார்பலரேத்திடுமானையார்
விண்ணுளார்பலரும்மறியானையார்
கண்ணுளானைகண்டீர்கடவூரரே. (எ)

சினக்குஞ்செம்பவளத்திரளானையார்
மனக்கும்வல்வினைதீர்த்திடுமானையார்
அனைக்குமன்புடையார்மனத்தானையார்
கனைக்குமானைகண்டீர்கடவூரரே. (அ)

வேதமாகியவெஞ்சுடரானையார்
நீதியானிலனாகியவானையார்
ஓதியூழிதெரிந்துணரானையார்
காதலானைகண்டீர்கடவூரரே. (கூ)

நீண்டமாலொடுநான்முகன்றானுமாய்க்
காண்டுமென்றுபுக்கார்களிருவரும்
மாண்டவாரழலாகியவானையார்
காண்டலானைகண்டீர்கடவூரரே. (க0)

அடுத்துவந்தவிலங்கையர்மன்னனை
எடுத்ததோள்களிறநெரித்தானையார்
கடுத்தகாலனைக்காய்ந்ததோரானையார்
கடுக்கையானை * கண்டீர்கடவூரரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண்-நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

பொடியார்மேனியனேபுரிநூலொருபாற்பொருந்த
வடியார்மூவிலைவேல்வளரங்கையின் † மங்கையொடும்
கடியார்கொன்றையனேகடவூர்தனுள்வீரட்டத்தெம்
அடிகேளென்னமுதேயெனக்கார்துணைநீயலதே. (க)

பிறையாருஞ்சடையாய்பிரமன்றலையிற்பலிகொள்
மறையார்வானவனேமறையின்பொருளானவனே
கறையாரும்மிடற்றாய்கடவூர்தனுள்வீரட்டத்தெம்
இறைவாவென்னமுதேயெனக்கார்துணைநீயலதே. (உ)

அன்றாலின்னிழற்கீழறநால்வர்க்கருள்புரிந்து
கொன்றாய்காலனுயிர்கொடுத்தாய்மறையோனுக்குமான்
கன்றாருங்கரவாகடவூர்த்திருவீரட்டத்துள் ‡
என்றாதைபெருமானெனக்கார்துணைநீயலதே. (ங)

* கடுத்தவானை என்றும் பாடம். † வளர்கங்கையின் என்றும் பாடம். ‡ கடவூர்தனுள்வீரட்டத் என்றும் பாடம்.

Koviloor Digital Library

போராருங்கரியின்னுரிபோர்த்துப்பொன்மேனியின்மேல்
வாராரும்முலையாளொருபாகமகிழ்ந்தவனே
காராரும்மிடற்ருய்கடவூர்தனுள்வீரட்டானத்
தாராவென்னமுதேயெனக்கார்துணைநீயலதே. (ச)

மையார்கண்டத்தினய்மதமாவுரிபோர்த்தவனே
பொய்யாதென்னுயிருட்புகுந்தாயின்னம்போந்தறியாய்
கையாராடரவாகடவூர்தனுள்வீரட்டத்தெம்
ஐயாவென்னமுதேயெனக்கார்துணைநீயலதே. (ரு)

மண்ணீர்தீவெளிகால்வருபூதங்களாகிமற்றும்
பெண்ணேடாணலியாய்ப்பிறவாவுருவானவனே
கண்ணாரும்மணியேகடவூர்தனுள்வீரட்டத்தெம்
அண்ணுவென்னமுதேயெனக்கார்துணைநீயலதே. (சு)

எரியார்புன்சடைமேலிளநாகமணிந்தவனே
நரியாருஞ்சுடலைநகுவெண்டலைகொண்டவனே
கரியாரீருரியாய்கடவூர்தனுள்வீரட்டத்தெம்
அரியாயென்னமுதேயெனக்கார்துணைநீயலதே. (எ)

வேறுவுன்னடியேன்விளங்குங்குழைக்காதுடையாய்
தேறேனுன்னையல்லாற்சிவனேயென்செழுஞ்சுடரே
காருர்வெண்மருப்பாகடவூர்த்திருவீரட்டத்துள்
ஆருர்செஞ்சடையாயெனக்கார்துணைநீயலதே. (அ)

அயனேடன்றரியும்மடியும்முடிகாண்பரிய
பயனேயெம்பரனேபரமாயபரஞ்சுடரே
கயமாருஞ்சடையாய்கடவூர்த்திருவீரட்டத்துள்
அயனேயென்னமுதேயெனக்கார்துணைநீயலதே. (கூ)

காராரும்பொழில்சூழ்கடவூர்த்திருவீரட்டத்துள்
ஏராரும்மிறையைத்துணையாவெழினாவலர்கோன்
ஆரூரன்னடியானடித்தொண்டனுரைத்ததமிழ்
பாரோரேத்தவல்லார்பரலோகத்திருப்பாரே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருக்கடவூர்வீரட்டத்திருப்பதிகம் - ௩.

ஆ திருப்பதிகம் - ககச.

சுவாமி தேவி திருநாமங்கள் - அமிர்தகடேசர், அபிராமி.

Koviloor Digital Library

௪அ. திருக்கடவூர்மயானம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

வரியமறையார்பிறையார்மலையோர்சிலையாவணக்கி
எரியமதில்களெய்தாரெறியுமுசலமுடையார்
கரியமிடறுமுடையார்கடவூர்மயானமமர்ந்தார்
பெரியவிடைமேல்வருவாரவரெம்பெருமானடிகளே. (௧)

மங்கைமணந்தமார்பர்மழுவாள்வலனொன்றேந்திக்
கங்கைசடையிற்கரந்தார்கடவூர்மயானமமர்ந்தார்
செங்கண்வெள்ளேறேறிச்செல்வஞ்செய்யாவருவார்
அங்கையேறியமறியாரவரெம்பெருமானடிகளே. (௨)

ஈடலிடபமிசையவேறிமழுவொன்றேந்திக்
காடதிடமாவுடையார்கடவூர்மயானமமர்ந்தார்
பாடலிசைகொள்கருவிபடுதம்பலவும்பயில்வார்
ஆடலரவமுடையாரவரெம்பெருமானடிகளே. (௩)

இறைநின்றிலங்குவளையாளிளையாளொருபாலுடையார்
மறைநின்றிலங்குமொழியார்மலையார்மனத்தின்மிசையார்
கறைநின்றிலங்குபொழில்சூழ்கடவூர்மயானமமர்ந்தார்
பிறைநின்றிலங்குசடையாரவரெம்பெருமானடிகளே. (௪)

வெள்ளையெருத்தின்மிசையார்விரிதோடொருகாதிலங்கத்
துள்ளுமிளமான்மறியார்சுடர்பொற்சடைகடுளங்கக்
கள்ளநகுவெண்டலையார்கடவூர்மயானமமர்ந்தார்
பிள்ளைமதியமுடையாரவரெம்பெருமானடிகளே. (௫)

பொன்றாதுதிருமணங்கொள்புனைபூங்கொன்றைபுனைந்தார்
ஒன்றுவெள்ளேறுயர்த்ததுடையாரதுவேயூர்வார்
கன்றாவினஞ்சூழ்புறவிற்கடவூர்மயானமமர்ந்தார்
பின்றாழ்சடையாரொருவரவரெம்பெருமானடிகளே. (௬)

பாசமானகளைவார்பரிவார்க்கமுதமனையார்
ஆசைதீரக்கொடுப்பாரலங்கல்விடைமேல்வருவார்
காசைமலர்போன்மிடற்றார்கடவூர்மயானமமர்ந்தார்
பேசவருவாரொருவரவரெம்பெருமானடிகளே. (௭)

செற்றவரக்கனலறத்திகழ்சேவடிமெல்விரலால்
கற்குன்றடர்த்தபெருமான்கடவூர்மயானமமர்ந்தார்
மற்றொன்றிணையில்வலியமாசில்வெள்ளிமலைபோல்
பெற்றொன்றேறிவருவாரவரெம்பெருமானடிகளே. (௮)

Koviloor Digital Library

வருமாகரியினுரியார்வளர்புன்சடையார்விடையார்
கருமானுரிதோலுடையார்கடவூர்மயானமமர்ந்தார்
திருமாலொடுநான்முகனுந்தேர்ந்துங்காணமுன்னொண்ணாப்
பெருமானெனவும்வருவாரவரெம்பெருமானடிகளே. (கூ)

தூயவிடைமேல்வருவார்துன்னாருடையமதில்கள்
காயவேவச்செற்றார்கடவூர்மயானமமர்ந்தார்
தீயகருமஞ்சொல்லுஞ்சிறுபுன்றேரரமணர்
பேய்பேயென்னவருவாரவரெம்பெருமானடிகளே. (கo)

மரவம்பொழில்சூழ்கடவூர்மன்னுமயானமமர்ந்த
அரவமசைத்தபெருமானகலமறியலாகப்*
பரவுமுறையேபயிலும்பந்தன்செஞ்சொன்மாலை
இரவும்பகலும்பரவிநினைவார்வினைகளிலரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

குழைகொள்காதினர்கோவணவாடையர்
உழையர்தாங்கடவூரின்மயானத்தார்
பழையதம்மடியார்செய்தபாவமும்
பிழையுந்தீர்ப்பர்பெருமானடிகளே. (க)

உன்னிவானவரோதியசிந்தையில்
கன்னறேன்கடவூரின்மயானத்தார்
தன்னைநோக்கித்தொழுதெழுவார்க்கெலாம்
பின்னையென்னார்பெருமானடிகளே. (உ)

சூலமேந்துவர்தோலுடையாடையர்
ஆலமுண்டமுதேமிகத்தேக்குவர்
காலகாலர்கடவூர்மயானத்தார்
மாலைமார்பர்பெருமானடிகளே. (ங)

இறைவனாரிமையோர்தொழுபைங்கழல்
மறவனார்கடவூரின்மயானத்தார்
அறவனாரடியாரடியார்தங்கள்
பிறவிதீர்ப்பர்பெருமானடிகளே. (ச)

கத்துகாளிகதந்தணிவித்தவர்
மத்தர்தாங்கடவூரின்மயானத்தார்
ஒத்தொவ்வாதனசெய்துழல்வாரொரு
பித்தர்காணும்பெருமானடிகளே. (ரு)

* லாகா என்றும் பாடம்.

Koviloor Digital Library

எரிகொண்மேனியிளம்பிறைவைத்தவர்
கரியர்தாங்கடவூரின்மயானத்தார்
அரியரண்டத்துளோரயன்மாலுக்கும்
பெரியர்காணும்பெருமானடிகளே. (௬)

அணங்குபாகத்தாரணநான்மறை
கணங்கள்சேர்கடவூரின்மயானத்தார்
வணங்குவாரிடர்தீர்ப்பர்மயக்குறும்
பிணங்கொள்காடர்பெருமானடிகளே. (௭)

அரவுகையினராதிபுராணனார்
மரவுசேர்கடவூரின்மயானத்தார்
பரவுவாரிடர்தீர்ப்பர்பணிகொள்வர்
பிரமன்மாற்கும்பெருமானடிகளே. * (௮)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

மருவார்கொன்றைமதிசூடிமாணிக்கத்தின்மலைபோல
வருவார்விடைமேன்மாதோடுமகிழ்ந்துபூதப்படைசூழத்
திருமால்பிரமனிந்திரற்குந்தேவர்நாகர்தானவர்க்கும்
பெருமான்கடவூர்மயானத்துப்பெரியபெருமானடிகளே. (௧)

விண்ணோர்தலைவர்வெண்புரிநூன்மார்பர்வேதகீதத்தர்
கண்ணார்நுதலர்நகுதலைபர்காலகாலர்கடவூரார்
எண்ணார்புரமூன்றெரிசெய்தவிறைவரிமையோரொருபாகம்
பெண்ணாணவர்மயானத்துப்பெரியபெருமானடிகளே. (௨)

காயும்புலியினதளுடையர்கண்டரெண்டோட்கடவூரார்
தாயுந்தந்தைபல்லுயிர்க்குந்தாமேயாயதலைவனார்
பாயும்விடையொன்றதுவேறிப்பலிதேர்ந்துண்ணும்பரமேட்டி
பேய்கள்வாழுமயானத்துப்பெரியபெருமானடிகளே. (௩)

நறைசேர்மலரைங்கணையானைநயனத்தியாற்பொடிசெய்த
இறைபாராவரெல்லார்க்குமில்லையென்னாதருள்செய்வார்
பறையார்முழவம்பாட்டோடுபயிறுந்தொண்டர்பயில்கடவூர்ப்
பிறையார்சடையார்மயானத்துப்பெரியபெருமானடிகளே. (௪)

* இத்திருப்பதிகத்தில் ௯, ௰ இச்செய்யுள்கள் மறைந்துபோயின.

Koviloor Digital Library

கொத்தார்கொன்றைமதிசூடிக்கோணாகங்கள்பூணாக
மத்தயானையுரிபோர்த்துமருப்புமாமைத்தாலியார்
பத்திசெய்துபாரிடங்கள்பாடியாடப்பலிகொள்ளும்
பித்தர்கடவூர்மயானத்துப்பெரியபெருமானடிகளே. (௫)

துணிவார்கீளுங்கோவணமுந்துதைந்துசுடலைப்பொடியணிந்து
பணிமேலிட்டபாசுபதர்பஞ்சவடிமார்பினர்கடவூர்த்
திணிவார்குழையார்புரமூன்றுந்தீவாய்ப்படுத்தசேவகனார்
பிணிவார்சடையார்மயானத்துப்பெரியபெருமானடிகளே. (௬)

காரார்கடலினஞ்சுண்டகண்டர்கடவூருறைவாணர்
தேரார்அரக்கன்போய்வீழ்ந்துசிதையவிரலாலூன்றினார்
ஊர்தானாவதுலகேழுமுடையார்க்கொற்றியூராரூர்
பேராயிரவர்மயானத்துப்பெரியபெருமானடிகளே. (௭)

வாடாமுலையாடன்னோடும்மகிழ்ந்துகானில்வேடுவனாய்க்
கோடார்கேழற்பின்சென்றுகுறுகிவிசயன்றவமழித்து
நாடாவண்ணஞ்செருச்செய்துவாவநாழிநிலையருள்செய்
பீடார்சடையார்மயானத்துப்பெரியபெருமானடிகளே. (௮)

வேழமுரிப்பர்மழுவாளர்வேள்வியழிப்பர்சிரமறுப்பர்
ஆழியளிப்பாரிதனக்குவானஞ்சுகப்பாறமுரைப்பர்
ஏழைதலைவர்கடவூரிலிறைவர்சிறுமான்மறிக்கையர்
பேழைச்சடையர்மயானத்துப்பெரியபெருமானடிகளே. (௯)

மாடமல்குகடவூரின்மறையோரேத்துமயானத்துப்
பீடைதீரவடியாருக்கருளும்பெருமானடிகள்சீர்
நாடிநாவலாரூரனம்பிசொன்னநற்றமிழ்கள்
பாடுமடியார்கேட்பார்மேற்பாவமானபறையுமே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருக்கடவூர்மயானத்திருப்பதிகம் - ௩.

ஆ திருப்பதிகம் - ௧௭.

சுவாமி தேவி திருநாமங்கள் - பிரமபுரீசர், அமலக்குயமின்.

Koviloor Digital Library

சகூ. திருவேட்டக்குடி.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

வண்டிரைக்கும்மலர்க்கொன்றைவிரிசடைமேல்வரியரவம்
கண்டிரைக்கும்பிறைச்சென்னிக்காபாலிகனைகழல்கள்
தொண்டிரைத்துத்தொழுதிறைஞ்சத்துளங்கொளிநீர்ச்சுடர்ப்பவளம்
தெண்டிரைக்கள்கொணர்ந்தெறியுந்திருவேட்டக்குடியாரே. (௧)

பாய்திமிலர்வலையோடுமீன்வாரிப்பயின்றெங்கும்
காசினியிற்கொணர்ந்தட்டுங்கைதல்சூழ்கழிக்கானல்
போயிரவிற்பேயோடும்புறங்காட்டிற்புரிந்தழகார்
தீபெரிகைமகிழ்ந்தாருந்திருவேட்டக்குடியாரே. (௨)

தோத்திரமாமணலிலிங்கந்தொடங்கியவானிரையிற்பால்
பாத்திரமாவாட்டுதலும்பாஞ்சோதிபரிந்தருளி*
ஆத்தமெனமறைநால்வர்க்கறம்புரிநூலன்றுரைத்த
தீர்த்தமல்குசடையாருந்திருவேட்டக்குடியாரே. (௩)

கலவஞ்சேர்கழிக்கானல்கதிர்முத்தங்கலந்தெங்கும்
அலவஞ்சேரணைவாரிக்கொணர்ந்தெறியுமகன்றுறைவாய்
நிலவஞ்சேர்நுண்ணிடையநேரிழையாளவளோடும்
திலகஞ்சேர்நெற்றியினார்திருவேட்டக்குடியாரே. (௪)

பங்கமார்கடலலறப்பருவரையோடரவுழலச்†
செங்கண்மால்கடையவெழுநஞ்சருந்துஞ்சிவமூர்த்தி
அங்கநான்மறைநால்வர்க்கறம்பொருளின்பயனளித்த
திங்கள்சேர்சடையாருந்திருவேட்டக்குடியாரே. (௫)

நாவாயபிறைச்சென்னிநலந்திகழுமிலங்கிப்பி
கோவாதசித்திலங்கள்கொணர்ந்தெறியுங்குளிர்கானல்
ஏவாரும்வெஞ்சிலைபாலையின்மூன்றுமெரிசெய்த
தேவாதிதேவனார்திருவேட்டக்குடியாரே. (௬)

பானிலவும்பங்கயத்துப்பைங்கானல்வெண்குருகு
கானிலவுமலர்ப்பொய்கைக்கைதல்‡சூழ்கழிக்கானல்
மானின்விழிமலைமகளோடொருபாகம்பிரிவரியார்
தேனிலவுமலர்ச்சோலைத்திருவேட்டக்குடியாரே. (௭)

துறையுலவுகடலோதஞ்சுரிசங்கமிடறிப்போய்
நறையுலவும்பொழிற்புன்னைநன்னீழற்கீழமரும்
இறையவிலங்கைராவணன்றன்னலைபத்துமிருபதுதோள்
திறலழியவடர்த்தாருந்திருவேட்டக்குடியாரே. (௮)

* அருசி - பெயர். † டரவுழவச் என்றும் பாடம். ‡ பொய்கைகைதல் என்றும் பாடம்.

Koviloor Digital Library

அருமறைநான்முகத்தானுமகலிடநீரேற்றானும்
இருவருமாயளப்பரியவெரியுருவாய்நீண்டபிரான்
வருபுனலின்மணியுந்திமறிதிரையார்சுடர்ப்பவளத்
திருவுருவில்வெண்ணீற்றார்திருவேட்டக்குடியாரே. (கூ)

இகழ்ந்துரைக்குஞ்சமணர்களுமிடும்போர்வைச்சாக்கியரும்
புகழ்ந்துரையாப்பாவிகள்சொற்கொள்ளேன்மின்பொருளென்ன
நிகழ்ந்திலங்குவெண்மணலின்னிறைத்துண்டப்பிறைக்கற்றை
திகழ்ந்திலங்குசெஞ்சடையார்திருவேட்டக்குடியாரே. (க0)

தெண்டிரைசேர்வயலுடுத்ததிருவேட்டக்குடியாரைத்
தண்டலைசூழ்கலிக்காழித்தமிழ்ஞானசம்பந்தன்
ஒண்டமிழ்நாவிவைபத்துமுணர்ந்தேத்தவல்லார்போய்
உண்டுடுப்பில்வானவரோடுயர்வானத்திருப்பாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவேட்டக்குடித்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - ககஅ.

சுவாமி தேவி திருநாமங்கள் - திருமேனியழகர், சாந்தநாயகி.

ருo. திருத்தெளிச்சேரி.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

பூவலர்ந்தனகொண்டுமுப்போதும்பொற்கழல்
தேவர்வந்துவணங்குமிகுதெளிச்சேரியீர்
மேவருந்தொழிலாளொடுகேழற்பின்வேடனும்
பாவகங்கொடுநின்றதுபோலுநும்பான்மையே. (க)

விளைக்கும்பத்திக்குவிண்ணவர்மண்ணவரேத்தவே
திளைக்குந்தீர்த்தமறாததிகழ்தெளிச்சேரியீர்
வளைக்குந்திண்சிலைமேலைந்துபாணமுந்தானெய்து
களிக்குங்காமனையெங்ஙனநீர்கண்ணிற்காய்ந்ததே. (உ)

வம்படுத்தமலர்ப்பொழில்சூழமதிதவழ்
செம்படுத்தசெழும்புரிசைத்தெளிச்சேரியீர்
கொம்படுத்ததொர்கோலவிடைமிசைக்கூர்மையோ
டம்படுத்தகண்ணாளொடுமேவலழகிதே. (ங)

Koviloor Digital Library

காருலாங்கடலிப்பிகண்முத்தங்கரைப்பெயும்
தேருலாநெடுவீதியதார்தெளிச்சேரியீர்
ஏருலாம்பலிக்கேகிடைவைப்பிடமின்றியே
வாருலாமுலையாளையொர்பாகத்துவைத்ததே. (௪)

பக்கநுந்தமைப்* பார்ப்பதியேத்திமுன்பாவிக்கும்
செக்கர்மாமதிசேர்மதில்சூழ்தெளிச்சேரியீர்
மைக்கொள்கண்ணியர்கைவளைமால்செய்துவெளவவே
நக்காயுலகெங்கும்பலிக்குநடப்பதே. (௫)

தவளவெண்பிறைதோய்தருதாழ்பொழில்சூழநல்
திவளமாமணிமாடந்திகழ்தெளிச்சேரியீர்
குவளைபோற்கண்ணிதுன்னனவந்துகுறுகிய
கவளமால்கரியெங்ஙனநீர்கையிற்காய்ந்ததே. (௬)

கோடடுத்தபொழிலின்மிசைக்குயில்கூவிடும்
சேடடுத்ததொழிலின்மிகுதெளிச்சேரியீர்
மாடடுத்தமலர்க்கண்ணினாள்கங்கைநங்கையைத்
தோடடுத்தமலர்ச்சடையென்கொனீர்சூடிற்றே. (௭)

கொத்திரைத்தமலர்க்குழலாள்குயில்கோலஞ்சேர்
சித்திரக்கொடிமாளிகைசூழ்தெளிச்சேரியீர்
வித்தகப்படைவல்லவரக்கன்விறற்றலை
பத்திரட்டிக்கரநெரித்திட்டதும்பாதமே. (௮)

காலெடுத்ததிரைக்கைகரைக்கெறிகானல்சூழ்
சேலடுத்தவயற்பழனத்தெளிச்சேரியீர்
மாலடித்தலமாமலரான்முடிதேடியே
ஓலமிட்டிடவெங்ஙனமோருருக்கொண்டதே. (௯)

மந்திரந்தருமாமறையோர்கடவத்தவர்
செந்திலங்குமொழியவர்சேர்தெளிச்சேரியீர்
வெந்தலாகியசாக்கியரோடுசமணர்கள்
தந்திறத்தனநிக்குவித்திரோர்சதிரே. (௧0)

திக்குலாம்பொழில்சூழ்தெளிச்சேரியெஞ்செல்வனை
மிக்ககாழியுண்ஞானசம்பந்தன்விளம்பிய
தக்கபாடல்கள்பத்தும்வல்லார்கடடமுடித்
தொக்கவானவர்சூழவிருப்பவர்சொல்லிலே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருத்தெளிச்சேரித்திருப்பதிகம் - ௧.

ஆ திருப்பதிகம் - ௧௧௧.

சுவாமி தேவி திருநாமங்கள் - பார்ப்பதீச்சரர், சத்தியம்மை.

* பக்கனுந்தமைப் என்றும் பாடம்.

Koviloor Digital Library

ருக. திருத்தருமபுரம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

யாழ்மூரி.

திருச்சிற்றம்பலம்.

மாதர்ம டப்பிடியும் மட வன்னமு மன்னதோர்
நடை யுடைம் மலை மக டுணையென மகிழ்வர்
பூதவி னப்படைநின் றிசை பாடவு மாடுவ
ரவர் படர் சடைந் நெடு முடியதோர் புனலர்
வேதமொ டேழிசைபா டுவ ராழ்கடல் வெண்டிரை
யிரைந் நுரை கரை பொரு துவிம்மிநின் றயலே
தாதவிழ் புன்னைதயங் கும லர்ச்சிறை வண்டறை
யெழில் பொழில் குயில் பயி றருமபு ரம்பதியே. (க)

பொங்குந டைப்புகலில் விடை யாமவ ரூர்திவெண்
பொடி யணி தடங் கொண்மார் புபூணநூல் புரள
மங்குலி டைத்தவழும் மதி சூடுவ ராடுவர்
வளங் கிளர் புன லர வம்வைகிய சடையர்
சங்குக டற்றிரையா லுதை யுண்டுசே ரிந்திரிந்
தொசிந் தசைந் திசைந் துசே ரும்வெண்மணற் குவைமேல்
தங்குக திர்ம்மணிநித் தில மெல்லிரு ளொல்கநின்
றிலங் கொளிந் நலங் கெழிற் றருமபு ரம்பதியே. (உ)

விண்ணுறு மால்வரைபோல் விடை யேறுவ ராறுசூ
டுவர் விரி சுரி யொளி கொடேடுநின் றிலங்கக்
கண்ணுற நின்றொளிருங் கதிர் வெண்மதிக் கண்ணியர்
கழிந் தவ ரிழிந் திடும் * முடைதலை கலனுப்
பெண்ணுற நின்றவர்தம் முரு வம்மயன் மாறொழவ்
வரி வையைப் பிணைந் திணைந் தணைந்ததும் பிரியார்
தண்ணிதழ் முல்லையொடெண் ணிதழ் மௌவன்ம ருங்கலர்
கருங் கழிந் நெருங் குறத் றருமபு ரம்பதியே. (௩)

வாருறு மென்முலைநன் னுத லேழையொ டாடுவர்
வளங் கிளர் விளங் குதிங் கள்வைகிய சடையர்
காருற நின்றலரும் மலர்க் கொன்றையங் கண்ணியர்
கடுவ் விடை கொடி வெடி கொள்காடுறை பதியர்
பாருற விண்ணுலகம் பர வப்படு வோரவர்
படு தலைப் பலி கொளல் பரிபவந் நினையார்
தாருறு நல்லரவம் மலர் துன்னிய தாதுதிர்
தழை பொழின் மழைந் நுழை தருமபு ரம்பதியே. (ச)

* ரழிந்திடும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

நேருமவர்க் குணரப் புகி லில்லைநெ டுஞ்சடைக்
 கடும் புனல் படர்ந் திடம் படுவ்வதோர் நிலையர்
பேருமவர்க் கெணையா யிர முன்னைப்பி றப்பிறப்
 பிலா தவ ருடற் றடர்த் தபெற்றியா ரறிவார்
ஆரமவர்க் கழல்வா யதோர் நாகம ழஃகுறவ்
 வெழுஃ கொழும் மலர் கொள்பொன் னிதழிநல் லலங்கல்
தாரமவர்க் கிமவான் மக ளூர்வது போர்விடை
 கடி படு செடி பொழிற் றருமபு ரம்பதியே. (௫)

கூழையங் கோதைகுலா யவ டம்பிணை புல்கமல்
 குமென் முலைப் பொறி கொள்பொற் கொடியிடைத் துவர்வாய்
மாழையொண் கண்மடவா ளையொர் பாகம கிழ்ந்தவர்
 வலம் மலி படை விடை கொடிகொடும் மழுவ்வாள்
யாழையும் மெள்கிடவே ழிசை வண்டுமு ரன்றினந்
 துவன் றிமென் சிறஃ கறை யுறநறவ் விரியுநல்
தாழையு ஞாழலுநீ டிய கானலி னள்ளலி
 சைபுள் ளினந் துயில் பயி றருமபு ரம்பதியே. (௬)

தேமரு வார்குழலன் னந டைப்பெடை மான்விழித்
 திருந் திழை பொருந் துமே னிசெங்கதிர் விரியத்
தூமரு செஞ்சடையிற் றுதை வெண்மதி துன்றுகொன்
 றைதோல் புனல் சிரங் கரந் துரிந்ததோ லுடையர்
காமரு தண்கழிநீ டிய கானல கண்டகங்
 கடல் லடை கழி யிழி யமுண்டகத் தயலே
தாமரை சேர்குவளைப் படு கிற்கழு நீர்மலர்
 வெறி கமழ் செறிவ் வயற் றருமபு ரம்பதியே. (௭)

தூவண நீறகலம் பொசி யவ்விரை புல்கமல்
 குமென் மலர் வரை புரை திரள்புயம் மணிவர்
கோவண மும்முழையின் னத ளும்முடை யாடையர்
 கோலம் மலி படை போர்கு லமேந்திய குழகர்
பாவண மாவலறத் தலை பத்துடை யவ்வரக்
 கனவ் வலி பொர்கவ் வைசெய் தருள்புரி தலைவர்
தாவண வேறுடையெம் மடி கட்கிடம் வன்றடங்
 கடல் லிடுந் தடங் கரைத் தருமபு ரம்பதியே. (௮)

வார்மலி மென்முலைமா தொரு பாகம தாகுவர்
 வளங் கிளர் மதி யர வம்வைகிய சடையர்
கூர்மலி குலமும்வெண் மழு வும்மவர் வெல்படை
 குனி சிலை தனிம் மலை யமேந்திய குழகர்
ஆர்மலி யாழிகொள்செல் வனு மல்லிகோ டாமரைம்
 மிசை யவன் னடிம் முடி யளவுதா மறியார்
தார்மலி கொன்றைபலங் கலு கந்தவர் தங்கிடந்
 தடங் கடல் லிடுந் திரைத் தருமபு ரம்பதியே. (௯)

· Koviloor Digital Library

புத்தர்க டத்துவர்மொய்த் துறி புல்கிய கையர்பொய்ம்
மொழிந் தழி வில்பெற் றியுற் றநற்றவர் புலவோர்
பத்தர்க ளத்தவமெய்ப் பய னாகவு கந்தவர்
நிகழ்ந் தவர் சிவந் தவர் சுடலைப்பொடி யணிவர்
முத்தன வெண்ணகையொண் மலை மாதுமை பொன்னணி
புணர்ம் முலை யிணை துணை யணைவதும் பிரியார்
தத்தரு வித்திரளுந் திய மால்கட லோதம்வந்
தடர்ந் திடுந் தடம் பொழிற் றருமபுரம் பதியே. (க0)

பொன்னெடு நன்மணிமா ளிகை சூழ்விழ வம்மலி
பொருஉ புன லிருஉ வமர் புகலியென் றுலகில்
தன்னொடு நேர்பிறவில் பதி ஞானசம் பந்தனஃ
துசெந் தமிழ்த் தடங் கடற் றருமபுரம் பதியைப்
பின்னொடு வார்சடையிற் பிறை யும்மர வும்முடை
யவன் பிணை துணை கழல் கள்பேணுத லுரியார்
இன்னொடு நன்னுலகெய் துவ ரெய்திய போகமும்
முறு வர்கள் ளிடர் பிணி துயரணைவ் விலரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருத்தருமபுரத்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - கஉ0.

சுவாமி தேவி திருநாமங்கள் – யாழ்மூரிநாதர், மதுரமின்னம்மை.

திருஞானசம்பந்தப்பிள்ளையார் திருவாவடுதுறையை அகன்று, திருக்கோழம்பம் முதலிய தலங்களைத் தரிசித்துக்கொண்டு தருமபுரத்தை அடைந்தார். அந்தத்தருமபுரம் திருநீலகண்டப்பெரும்பாணருடைய தாயார் பிறந்த தலமாதலால், அங்குள்ள அவருடைய சுற்றத்தார்கள் வந்து எதிர்கொண்டு வணங்கித் துதித்தார்கள். அதுகண்டு, திருநீலகண்டப்பெரும்பாணர் பிள்ளையார் அருளிச்செய்த அருமையாகிய திருப்பதிகங்களின் இசையைத் தாம் யாழில் இட்டு வாசிக்கப்பெற்ற பெரும்பேற்றை அவர்களுக்கு அருளிச்செய்தார். அவர்கள் அதைக்கேட்டு, "நீர் திருப்பதிகவிசையை அளவுபெற யாழிலே அமைத்து வாசித்தலினாலே உலகமுழுதிலும் இசை விளங்குக" என்றார்கள். உடனே பெரும்பாணர் மன நடுங்கி, பிள்ளையாருடைய திருவடிகளை வணங்கி நின்று, "சுவாமீ, திருப்பதிகவிசை அளவுபடாத தன்மையை இவர்களேயன்றி உலகத்திலுள்ள மற்றை யாவரும் அறிந்து உண்மையை உணர்ந்து உய்யும்பொருட்டுத் தேவரீர் ஒரு திருப்பதிகம் பாடியருளுவீராகில், அடியேன் அதனிசை யாழிலே அடங்காமையைக் காட்டப்பெறுவேன்" என்றார். அப்பொழுது பிள்ளையார் சிவபிரானை வணங்கிக்கொண்டு, திருப்பதிகத்தின் உண்மை பூமியிலுள்ளோருடைய கண்டத்திலும் யாழிலும் இசைநூலிற் கூறப்பட்ட இசைமுயற்சிகளினால் அடங்காமையைக் காட்டும்பொருட்டு, "மாதர் மடப்பிடி" என்னுந் திருப்பதிகத்தைப் பாடியருளினார். திருநீலகண்டப்பெரும்பாணர் அத்திருப்பதிகவிசையைத் தம்முடைய யாழ்நரம்பிலே முன்போல இட்டு வாசிக்கப்புக; அது அதனிடத்தே அடங்கிற்றில்லை. அப்பொழுது திருநீலகண்டப்பெரும்பாணர் அதனை விட்டு அச்சங்கொண்டு பிள்ளையாருடைய திருவடிகளிலே விழுந்து நமஸ்காரி

Koviloor Digital Library

த்து எழுந்து, "சுவாமி அருளிச்செய்த திருப்பதிகத்தினிசையை யாழிலே ஏற்பேன் என்று சொல்லப் பண்ணியது இந்த யாழன்றோ" என்று அதனை உடைக்கும்படி ஓங்கினார். உடனே பிள்ளையார் தடுத்தருளி, "ஐயரே, இந்தயாழைத்தாரும்" என்று வாங்கிக்கொண்டு, "ஐயரே நீர் இந்த யாழை முரிப்பது என்னை! சிவபெருமானும் உமாதேவியாரும் அருளிச்செய்த திருவருளின் பெருமையெல்லாம் இந்தக்கருவியில் அளவுபடுமோ! மனசினாலும் அளவுபடாத இசைப்பெருமை செய்கையினால் அளவுபடுமோ! அளவுபடாதே. நீர் இந்த யாழைக்கொண்டே சுவாமியுடைய திருப்பதிகவிசையை இயன்றமட்டும் இதில் அமைத்து வாசியும்" என்று சொல்லி, திருநீலகண்டப்பெரும்பாணர் கையிலே யாழைக்கொடுத்தருளினார். பெரும்பாணர் பிள்ளையாரைத்தொழுது, யாழை வாங்கி, சிரமேற்கொண்டார்.

ருஉ. திருநள்ளாறும் திருவாலவாயும்.

வினாவுரை.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

பாடகமெல்லடிப்பாவையோடும்படுபிணக்காடிடம்பற்றிநின்று
நாடகமாடுநள்ளாறுடையநம்பெருமானிதுவென்கொல்சொல்லாய்
சூடகமுன்கைமடந்தைமார்கடுணைவரொடுந்தொழுதேத்திவாழ்த்த
ஆடகமாடநெருங்குகூடலாலவாயின்கணமர்ந்தவாறே. (க)

திங்களம்போதுஞ்செழும்புனலுஞ்செஞ்சடைமாட்டயல்வைத்துகந்து
நங்கண்மகிழுநள்ளாறுடையநம்பெருமானிதுவென்கொல்சொல்லாய்
பொங்கிளமென்முலையார்களோடும்புனமயிலாடநிலாமுளைக்கும்
அங்கழகச்சுதை* மாடக்கூடலாலவாயின்கணமர்ந்தவாறே. (உ)

தண்ணாறு† மத்தமுங்கூவிளமும்வெண்டலைமாலையுந்தாங்கியார்க்கும்
நண்ணலரியநள்ளாறுடையநம்பெருமானிதுவென்கொல்சொல்லாய்
புண்ணியவாணருமாதவரும்புகுந்துடனேத்தப்புனையிழையார்
அண்ணலின்பாடலெடுக்குங்கூடலாலவாயின்கணமர்ந்தவாறே. (ங)

பூவினில்வாசம்புனலிற்பொற்புப்புதுவிரைச்சாந்தினினாற்றத்தோடு
நாவினிற்பாடனள்ளாறுடையநம்பெருமானிதுவென்கொல்சொல்லாய்
தேவர்கடானவர்சித்தர்விச்சாதரர்கணத்தோடுஞ்சிறந்துபொங்கி
ஆவினிலைந்துகந்தாட்டுங்கூடலாலவாயின்கணமர்ந்தவாறே. (ச)

செம்பொன்செய்மாலையும்வாசிகையுந்திருந்துபுகையுமவியும்பாட்டும்
நம்பும்பெருமைநள்ளாறுடையநம்பெருமானிதுவென்கொல்சொல்லாய்
உம்பருநாகருலகந்தானுமொலிகடல்சூழ்ந்தவுலகத்தோரும்
அம்புதநால்களானீடுங்கூடலாலவாயின்கணமர்ந்தவாறே. (ரு)

* அங்கணபச்சுதை என்றும் பாடம். † தண்ணாறு என்றும் பாடம்.

Koviloor Digital Library

பாகமுந்தேவியைவைத்துக்கொண்டுபைவிரிதுத்திப்பரியபேழ்வாய்
நாகமும்பூண்டநள்ளாறுடையநம்பெருமானிதுவென்கொல்சொல்லாய்
போகமுநின்னைமனத்துவைத்துப்புண்ணியர்நண்ணும்புணர்வுபூண்ட
ஆகமுடையவர்சேருங்கூடலாலவாயின்கணமர்ந்தவாறே. (சு)

கோவணவாடையுநீறுப்பூச்சுங்கொடுமழுவேந்தலுஞ்செஞ்சடையும்
நாவணப்பாட்டுநள்ளாறுடையநம்பெருமானிதுவென்கொல்சொல்லாய்
பூவணமேனியிளையமாதர்பொன்னும்மணியுங்கொழித்தெடுத்து
ஆவணவீதியிலாடுங்கூடலாலவாயின்கணமர்ந்தவாறே. (எ)

இலங்கையிராவணன்வெற்பெடுக்கவெழில்விரலூன்றியிசைவிரும்பி
நலங்கொளச்சேர்ந்தநள்ளாறுடையநம்பெருமானிதுவென்கொல்சொல்லாய்
புலன்களைச்செற்றுப்பொறியைநீக்கிப்புந்தியிலுந்நினைச்சிந்தைசெய்யும்
அலங்கனல்லார்களமருங்கூடலாலவாயின்கணமர்ந்தவாறே. (அ)

பணியுடைமாலும்மலரினோனும்பன்றியும்வென்றிப்பறவையாயும்
நணுகலரியநள்ளாறுடையநம்பெருமானிதுவென்கொல்சொல்லாய்
மணியொலிசங்கொலியோடுமற்றைமாமுரசின்னொலியென்றுமோவா
தணிகிளர்வேந்தர்புகுதுங்கூடலாலவாயின்கணமர்ந்தவாறே. (கூ)

தடுக்குடைக்கையருஞ்சாக்கியருஞ்சாதியினீங்கியவத்தவத்தர்
நடுக்குறநின்றநள்ளாறுடையநம்பெருமானிதுவென்கொல்சொல்லாய்
எடுக்கும்விழவுநன்னாள்விழவுமிரும்பலியின்பினோ * டெத்திசையும்
அடுக்கும்பெருமைசேர்மாடக்கூடலாலவாயின்கணமர்ந்தவாறே. (க0)

அன்புடையானையரனைக்கூடலாலவாய்மேவியதென்கொலென்று
நன்பொனைநாதனைநள்ளாற்றானைநயம்பெறப்போற்றிநலங்குலாவும்
பொன்புடைசூழ்தருமாடக்காழிப்பூசுரன்ஞானசம்பந்தன்சொன்ன
இன்புடைப்பாடல்கள்பத்தும்வல்லாரிமையவரேத்தவிருப்பர்தாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநள்ளாறு.

பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

போகமார்த்தபூண்முலையாடன்னோடும்பொன்னகலம்
பாகமார்த்தபைங்கண்வெள்ளேற்றண்ணல்பரமேட்டி
ஆகமார்த்ததோலுடையன்கோவணவாடையின்மேல்
நாகமார்த்தநம்பெருமான்மேயதுநள்ளாறே. (க)

தோடுடையகாதுடையன்றோலுடையன்றொலையாப்
பீடுடையபோர்விடையன்பெண்ணுமோர்பாலுடையன்
ஏடுடையமேலுலகோடேழ்கடலுஞ்சூழ்ந்த
நாடுடையநம்பெருமான்மேயதுநள்ளாறே. (உ)

* பலியன்பினோடு என்றும் பாடம்.

Koviloor Digital Library

ஆன்முறை* யாலாற்றவெண்ணீறுடியணியிழையோர்
பான்முறையால்வைத்தபாதம்பத்தர்பணிந்தேத்த
மான்மறியும்வெண்மழுவுஞ்சூலமும்பற்றியகை
நான்மறையானம்பெருமான்மேயதுநள்ளாறே. (௩)

புல்கவல்லவார்சடைமேற்பூம்புனல்பெய்தயலே
மல்கவல்லகொன்றைமாலைமதியோடுடன்சூடிப்
பல்கவல்லதொண்டர்தம்பொற்பாதநிழற்சேர
நல்கவல்லநம்பெருமான்மேயதுநள்ளாறே. (௪)

ஏறுதாங்கியூர்திபேணியேர்கொளிளமதியம்
ஆறுதாங்குஞ்சென்னிமேலோராடரவஞ்சூடி
நீறுதாங்கிநூல்கிடந்தமார்பினிரைகொன்றை
நாறுதாங்குநம்பெருமான்மேயதுநள்ளாறே. (௫)

திங்களுச்சிமேல்விளங்குந்தேவனிமையோர்கள்
எங்களுச்சியெம்மிறைவனென்றடியேயிறைஞ்சத்
தங்களுச்சியால்வணங்குந்தன்னடியார்கட்கெல்லாம்
நங்களுச்சிநம்பெருமான்மேயதுநள்ளாறே. (௬)

வெஞ்சுடர்த்தீயங்கையேந்திவிண்கொண்முழவதிர
அஞ்சிடத்தோராடல்பாடல்பேணுவதன்றியும்போய்ச்
செஞ்சடைக்கோர்திங்கள்சூடித்திகழ்தருகண்டத்துள்ளே
நஞ்சடைத்தநம்பெருமான்மேயதுநள்ளாறே. (௭)

சிட்டமார்ந்தமும்மதிலுஞ்சிலைவரைத்தீயம்பினால்
சுட்டுமாட்டிச்சுண்ணவெண்ணீறாடுவதன்றியும்போய்ப்
பட்டமார்ந்தசென்னிமேலோர்பான்மதியஞ்சூடி
நட்டமாடுநம்பெருமான்மேயதுநள்ளாறே. (௮)

உண்ணலாகாநஞ்சுகண்டத்துண்டுடனேயொடுக்கி
அண்ணலாகாவண்ணனீழலாரழல்போலுருவம்
எண்ணலாகாவுள்வினையென்றெள்கவலித்திருவர்
நண்ணலாகாநம்பெருமான்மேயதுநள்ளாறே. (௯)

மாசுமெய்யர்மண்டைத்தேரர்குண்டர்குணமிலிகள்
பேசும்பேச்சைமெய்யென்றெண்ணியந்நெறிசெல்லேன்மின்
மூசுவண்டார்கொன்றைசூடிமும்மதிலும்முடனே
நாசஞ்செய்தநம்பெருமான்மேயதுநள்ளாறே. (௧௦)

தண்புனலும்வெண்பிறையுந்தாங்கியதாழ்சடையன்
நண்புநல்லார்மல்குகாழிஞானசம்பந்தனல்ல
பண்புநள்ளாறேத்துபாடல்பத்தும்வல்லார்
உண்புநீங்கிவானவரோடுலகிலுறைவாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

* ஆனமுறை ஆன்முறையென் குறுகிற்று.

Koviloor Digital Library

திருஞானசம்பந்தப்பிள்ளையார் தருமபுரத்தை அகன்று, திருநள்ளாற்றை அடைந்து, திருக்கோயிலிற் பிரவேசித்து, சுவாமியை வணங்கி, "போகமார்த்தபூண்முலையாள்" என்னுந் திருப்பதிகத்தை யாழ்நரம்பிலே இசை கூடும்படி பாடிமுடித்து, புறத்தணைந்து, திருநீலகண்டப் பெரும்பாணரை நோக்கி, யாழில் இட்டு வாசிக்கும்படி பணித்து, தாந்திருத்தாளங்கொண்டு பாடினார். பெரும்பாணர் அத்திருப்பதிகவிசையை யாழில் இட்டு வாசித்தார். அதுகேட்டுப் பிள்ளையார் திருவுளமகிழ்ந்தருளினார்.

பிள்ளையார் மதுரைத்திருப்பதியில் எழுந்தருளியிருக்கும்போது, சமணர்கள் பிள்ளையாருடைய சொல்வெற்றியை, அவர் தமிழ்ப்பதிகத்தினாலே பாண்டியனுடைய வெப்புநோயை நீக்கினமையால், அறிந்தபின் "தருக்கம்பேசி இவரை வெல்லுதல் கூடாது. அக்கினியினாலும் ஜலத்தினாலும் வெல்லல்வேண்டும்" என்று தங்களுள்ளே சிந்தித்தார்கள். பிள்ளையார் சமணர்களை நோக்கி, "இனி உங்கள் சமயநூற்றுணிவைப் பேசுங்கள்" என்று அருளிச்செய்ய; சமணர்கள் "தருக்கம்பேசி வெல்லவேண்டுவதில்லை. நாமிருபக்ஷத்தேமும் எங்கள் எங்கள் சமய உண்மையை உள்ளபடி பிரத்தியக்ஷமாகக் காட்டி வெல்லுவோம்" என்று ஓட்டினார்கள். அப்பொழுது பாண்டியராஜர் "என்னுடைய வெப்புநோயை நீங்கள் ஒழித்திலீர்கள். உங்களுக்கு என்னவாது" என்று சொல்ல; சமணர்கள் அரசர் உங்களுக்கு என்னவாது என்றதையே வினவாகக் கொண்டு, "நாங்கள் இருபக்ஷத்தேமும் எங்கள் எங்கள் சமயக்கருத்தை ஏட்டிலே தீட்டி, அக்கினியில் இடக்கடவோம் வேவப்பெருமையே வெற்றி" என்றார்கள். அப்போது அரசர் ஒன்றுஞ் சொல்லுமுன், பிள்ளையார் "நீங்கள் சொல்லியது நன்று. அரசனெதிரே அப்படியே செய்வோம், வாருங்கள்" என்று சொல்லியருளினார். பிள்ளையாருடைய ஆஞ்ஞையினாலே பாண்டியர் சபைமுன்னே அக்கினி அமைக்கும்படி ஏவலாளர்களை ஏவ; அவர்களும் அக்கினி அமைத்தார்கள். பிள்ளையார் சமீபத்திலே எழுந்தருளிவந்து, பரமசிவனே மெய்ப்பொருள் என்று தாம் பாடியருளிய தமிழ்வேதத் திருமுறையை தோத்திரஞ்செய்து, "நம்முடைய சிவபெருமானே பரம்பொருள்" என்றுசொல்லி வணங்கி, திருக்கரத்தினால் எடுத்து, சிரசின்மேற்கொண்டு, திருக்காப்பிட்ட கயிற்றை அவிழ்த்து, அத்திருமுறையைத் தமது திருக்கரத்தினால் மறிக்க; திருநள்ளாற்றின்மேலதாகிய "போகமார்த்தபூண்முலையாள்" என்னுந் திருப்பதிகம் வந்து நேர்ந்தது. பிள்ளையார் அத்திருப்பதிகத்தையே விரும்பி, திருநள்ளாறரை வணங்கி, அது எழுதப்பட்ட திருவேட்டைக் கழற்றி, திருக்கரத்திலே கொண்டு, பரமசிவனே மெய்ப்பொருள் என்பதைச் சமஸ்தருக்கும் உணர்த்தும்பொருட்டு, "இவை அக்கினியில் இடப்படுமாயிற் பழுதில்லை. இது சத்தியம்" என்னுங் கருத்தையுடைய "தளிரிளவளரொளி" என்னுந் திருப்பதிகத்தைப்பாடி, அங்குள்ளார்களெல்லாருங்காண, சமணர்களுடைய சிந்தை வேவ, அவ்வக்கினியிலே அவ்வேட்டை இட்டருளினார். இட்ட ஏட்டில் எழுதப்பட்ட திருப்பதிகம், பரஞானம் அபரஞானம் என்கின்ற இருதனங்களையுடைய உமாதேவிபாகரும் அட்டமூர்த்தியுமாகிய பரமசிவனையே பொருளென உடைமையால், மிகச்சுவாலிக்கின்ற அக்கினியிலே பச்சையாய் விளங்கிற்று. சமணர்களும் தங்கள் நூற்பொருளை எழுதிய ஏட்டை, "இது உய்யுமோ" என்கின்ற கவலையோடு, நடுங்கிநின்று, அக்கினியில் இட்டார்கள். அது தகிக்கப்பட்டொழிந்தது. அது கண்டு பயத்தினாலே மனஞ்சோர்ந்து நின்றார்கள். திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் தாம் அக்கினியில் இட்ட ஏட்டை, குறித்தநாழிகையிலே ஈனமின்மை கண்டு, யாவரும் வியக்கும்படி எடுத்தருளினார். அது முன்னையிலும் பசுமையும் புதுமையும் உடைத்தாய் விளங்கிற்று. பிள்ளையார் அவ்வேட்டைச் சபைமுன்னே காட்டி, திருமுறையிலே முன்போலக் கோத்தருளினார். அரசர் அத்தியந்த ஆச்சரியம் அடைந்து, சமணர்களை நோக்கி, "நீங்கள் இட்ட ஏட்டைக் காட்டுங்கள்" என்றார். சமணர்கள் தாங்கள் இட்ட ஏட்டை எடுக்கும்படி சென்றணையும்போது, அக்கினி மிகச் சுவாலித்தலைக்கண்டு, திரும்பிவிட்டார்கள். அது

Koviloor Digital Library

கண்ட அரசர் ஜலத்தினாலே அக்கினியைத் தணிப்பித்தார். சமணர்கள் அங்கே சாம்பருங் கரியுமன்றி, மற்றொன்றுங் காணார்களாகி, செய்வதொன்றறியாது, திகைப்பினாலே, திரண்டசாம்பரைக் கையினாலே பிசைந்து தூற்றிப் பார்த்தார்கள். அதுகண்ட அரசர் புன்முறுவல்செய்து, "ஏட்டை இன்னும் அரித்துப்பாருங்கள். பொய்ந்நெறியையே மெய்ந்நெறியாகக் கொண்டு உலைகின்றவர்களே! போங்கள். முன் நான் வெப்பாகிய தீயினின்றும் உய்ய, நீங்கள் அப்பொழுது தோற்றீர்கள். ஆதலால், அதுவே வழியாக இப்பொழுது அக்கினியில் இடப்பட்ட ஏடு உய்ந்ததில்லை என்றால், நீங்கள் தோற்றிலீர்கள்போலும்" என்றார்.

திருவிராகம். பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

ஏடுமலிகொன்றையரவிந்துவிளவன்னி
மாடவலசெஞ்சடையெமைந்தனிடமென்பர்
கோடுமலிஞாழல்குரவேறுசுரபுன்னை
நாடுமலிவாசமதுவீசியநள்ளாறே. (௧)

விண்ணியல்பிறைப்பிளவறைப்புனன்முடித்த
புண்ணியனிருக்குமிடமென்பர்புவிதன்மேல்
பண்ணியநடத்தொடிசைபாடுமடியார்கள்
நண்ணியமனத்தின்வழிபாடுசெய்நள்ளாறே. (௨)

விளங்கிழைமடந்தைமலைமங்கையொருபாகத்
துளங்கொளிருத்தியவொருத்தனிடமென்பர்
வளங்கெழுவுதீபமொடுதூபமலர்தூவி
நளன்கெழுவிநாளும்வழிபாடுசெய்நள்ளாறே. (௩)

கொக்கரவர்கூன்மதியர்கோபர்திருமேனிச்
செக்கரவர்சேருமிடமென்பர்தடமூழ்கிப்
புக்கரவர்விஞ்சையருவிண்ணவருநண்ணி
நக்கரவர்நாமநினைவெய்தியநள்ளாறே. (௪)

நெஞ்சமிதுகண்டுகொளுனக்கெனநினைந்தார்
வஞ்சமதறுத்தருளுமற்றவனைவானோர்
அஞ்சமுதுகாகியவர்கைதொழவெழுந்த
நஞ்சமுதுசெய்தவனிருப்பிடநள்ளாறே. (௫)

பாலனடிபேணவவனாருயிர்குறைக்கும்
காலனுடன்மாளமுனுதைத்தவனூராம்
கோலமலர்நீர்க்குடமெடுத்துமறையாளர்
நாலின்வழிநின்றுதொழில்பேணியநள்ளாறே. (௬)

நீதியர்நெடுந்தகையர்நீண்மலையர்பாவை
பாதியர்பராபரர்பரம்பரரிருக்கை
வேதியர்கள்வேள்வியொழியாதுமறைநாளும்
ஓதியரனாமமுமுணர்த்திடுநள்ளாறே. (௭)

Koviloor Digital Library

கடுத்து* வலரக்கன்முனெருக்கிவரைதன்னை
எடுத்தவன்முடித்தலைகள்பத்துமிகுதோளும்
அடர்த்தவர்தமக்கிடமதென்பரளிபாட
நடத்தகலவைத்திரள்கள்வைகியநள்ளாறே. (௮)

உயர்ந்தவனுருக்கொடுதிரிந்துலகமெல்லாம்
பயந்தவனினைப்பரியபண்பனிடமென்பர்
வியந்தமார்மெச்சமலர்மல்குபொழிலெங்கும்
நயந்தருமவேதவொலியார்திருநள்ளாறே. (௯)

சிந்தைதிருகற்சமணர்தேரர்தவமென்னும்
பந்தனையறுத்தருளுகின்றபரமன்னூர்
மந்தமுழவந்தருவிழாவொலியும்வேதச்
சந்தம்விரவிப்பொழின்முழங்கியநள்ளாறே. (௧0)

ஆடலரவார்சடையனாயிழைதன்னோடும்
நாடுமலிவெய்திடவிருந்தவனள்ளாற்றை
மாடமலிகாழிவளர்பந்தனதுசெஞ்சொல்
பாடலுடையாரையடையாபழிகணோயே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவிராகம். பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

தளிரிளவளரொளிதனதெழிறருதிகழ்மலைமகள்
குளிரிளவளரொளிவனமுலையிணையவைகுலவலின்
நளிரிளவளரொளிமருவுநள்ளாறர்தந்நாமமே
மிளிரிளவளரெரியிடிலிவைபழுதிலைமெய்ம்மையே. (௧)

போதமர்தருபுரிகுழலெழின்மலைமகள்பூணணி
சீதமதணிதருமுகிழிளவனமுலைசெறிதலின்
நாதமதெழிலுருவனையநள்ளாறர்தந்நாமமே
மீதமதெரியினிலிடிலிவைபழுதிலைமெய்ம்மையே. (௨)

இட்டுறுமணியணியிணர்புணர்வளரொளியெழில்வடம்
கட்டுறுகதிரிளவனமுலையிணையொடுகலவலின்
நட்டுறுசெறிவயன்மருவுநள்ளாறர்தந்நாமமே
இட்டுறுமெரியினிலிடிலிவைபழுதிலைமெய்ம்மையே. (௩)

மைச்சணிவரியரிநயனிதொன்மலைமகள்பயனுறு
கச்சணிகதிரிளவனமுலையவையொடுகலவலின்
நச்சணிமிடறுடையடிகணள்ளாறர்தந்நாமமே
மெச்சணியெரியினிலிடிலிவைபழுதிலைமெய்ம்மையே. (௪)

* தடுத்து என்றும் பாடம்.

Koyiloor Digital Library

பண்ணியன்மலைமகள்கதிர்விடுபருமணியணிநிறக்
கண்ணியல்கலசமதனமுலையிணையொடுகலவலின்
நண்ணியகுளிர்புனல்புகுதுநள்ளாறர்தந்நாமமே
விண்ணியலெரியினிலிடிலிவைபழுதிலைமெய்ம்மையே. (௫)

போதுறுபுரிகுழன்மலைமகளிளவளர்பொன்னணி
சூதுறுதளிர்நிறவனமுலையவையொடுதுதைதலின்
தாதுறுநிறமுடையடிகணள்ளாறர்தந்நாமமே
மீதுறுமெரியினிலிடிலிவைபழுதிலைமெய்ம்மையே. (௬)

கார்மலிநெறிபுரிசுரிகுழன்மலைமகள்கவினுறு
சீர்மலிதருமணியணிமுலைதிகழ்வொடுசெறிதலின்
தார்மலிநகுதலையுடையநள்ளாறர்தந்நாமமே
ஏர்மலியெரியினிலிடிலிவைபழுதிலைமெய்ம்மையே. (௭)

மன்னியவளரொளிமலைமகடளிர்நிறமதமிகு
பொன்னியன்மணியணிகலசமதனமுலைபுணர்தலின்
தன்னிபறசமுகனெரியநள்ளாறர்தந்நாமமே
மின்னியலெரியினிலிடிலிவைபழுதிலைமெய்ம்மையே. (௮)

கான்முகமயிலியன்மலைமகள்கதிர்விடுகனமிகு
பான்முகமியல்பணையிணைமுலைதுணையொடுபயிறலின்
நான்முகனரியறிவரியநள்ளாறர்தந்நாமமே
மேன்முகவெரியினிலிடிலிவைபழுதிலைமெய்ம்மையே. (௯)

அத்திரநயனிதொன்மலைமகள்பயனுறுமதிசயச்
சித்திரமணியணிதிகழ்முலையிணையொடுசெறிதலின்
புத்தரொடமணர்பொய்பெயருநள்ளாறர்தந்நாமமே
மெய்த்திரளெரியினிலிடிலிவைபழுதிலைமெய்ம்மையே. (௧0)

சிற்றிடையரிவைதன்வனமுலையிணையொடுசெறிதரும்
நற்றிறமுறுகழுமலநகர்ஞானசம்பந்தன
கொற்றவனெதிரிடையெரியினிலிடவிவைகூறிய
சொற்றெரியொருபதுமறிபவர்துயரிலர்தூயரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தப்பிள்ளையார் மதுரைத் திருப்பதியில் எழுந்தருளி யிருந்து, தமிழ் வேதத் திருமுறையில் உதயமான "போகமார்த்த பூண்முலையாள்" என்னுந் திருப்பதிகம் எழுதப்பட்ட திருவேட்டைத் திருக்கரத்திலே கொண்டு, பாண்டியர் சபைமுன்னே,பரமசிவனே பரம்பொருள் என்பதைச் சமஸ்தருக்கும் உணர்த்தும் பொருட்டு "இவை அக்கினியில் இடப்படுமாயிற் பழுதில்லை இது சத்தியம்" என்னுங் கருத்தையுடைய "தளிரிள வளரொளி" என்றுமித் திருப்பதிகம் பாடியருளினர்.

Koviloor Digital Library

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

உள்ளாறுதநோர்புண்டரீகத்திரள்
தெள்ளாறுச்சிவச்சோதித்திரளினைக்
கள்ளாறுதபொற்கொன்றைகமழ்சடை
நள்ளாறுவெனநம்வினைநாசமே. (க)

ஆரணப்பொருளாமருளாளனார்
வாரணத்துரிபோர்த்தமணாளனார்
நாரணன்னண்ணியேத்துநள்ளாறனார்
காரணக்கலைஞானக்கடவுளே. (உ)

மேகம்பூண்டதோர்மேருவிற்கொண்டெயில்
சோகம்பூண்டழல்சோரத்தொட்டானவன்
பாகம்பூண்டமால்பங்கயத்தானொடு
நாகம்பூண்டுகூத்தாடுநள்ளாறனே. (ங)

மலியுஞ்செஞ்சடைவாளரவம்மொடு
பொலியும்பூம்புனல்வைத்தபுனிதனார்
நலியுங்கூற்றைநலிந்தநள்ளாறர்தம்
வலியுங்கண்டிறுமாந்துமகிழ்வனே. (ச)

உறவனாய்நிறைந்துள்ளங்குளிர்ப்பவன்
இறைவனாகிநின்றெண்ணிறைந்தானவன்
நறவநாறும்பொழிற்றிருநள்ளாறன்
மறவனாய்ப்பன்றிப்பின்சென்றமாயமே. (ரு)

செக்காங்கழிசெஞ்சுடர்ச்சோதியார்
நக்காங்கரவார்த்தநள்ளாறனார்
வக்கரன்னுயிர்வவ்வியமாயற்குச்
சக்கரம்மருள்செய்தசதுரரே. (சு)

வஞ்சநஞ்சிற்பொலிகின்றகண்டத்தர்
விஞ்சையிற்செல்வப்பாவைக்குவேந்தனார்
வஞ்சநெஞ்சத்தவர்க்குவழிகொடார்
நஞ்சநெஞ்சர்க்கருளுநள்ளாறரே. (எ)

அல்லனென்றுமலர்க்கருளாயின
சொல்லனென்றுசொல்லாமறைச்சோதியான்
வல்லனென்றும்வல்லார்வளமிக்கவர்
நல்லனென்றுநல்லார்க்குநள்ளாறனே. (அ)

Koviloor Digital Library

பாம்பணைப்பள்ளிகொண்டபாமனும்
பூம்பணைப்பொலிகின்றபுராணனும்
தாம்பணிந்தளப்பொண்ணுத்தனித்தழல்
நாம்பணிந்தடிபோற்றுநள்ளாறனே. (௯)

இலங்கைமன்னனிருபதுதோளிற
மலங்கமால்வரைமேல்விரல்வைத்தவர்
நலங்கொணிற்றர்நள்ளாறரைநாடொறும்
வலங்கொள்வார்வினையாயினமாயுமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

ஆதிக்கனுன்முகத்திலொன்றுசென்று
வல்லாதசொல்லுரைக்கத்தன்கைவாளால்
சேதித்ததிருவடியைச்செல்லநல்ல
சிவலோகநெறிவகுத்துக்காட்டுவானை
மாதிமையமாதொரு* கூறுயினானை
மாமலர்மேலயனொடு† மாலுங்காணு
நாதியைநம்பியைநள்ளாற்றானை
நானடியேனினைக்கப்பெற்றுய்ந்தவாறே. ‡ (௧)

படையானைப்பாசுபதவேடத்தானைப்
பண்டனங்கற்பார்த்தானைப்பாவமெல்லாம்
அடையாமைக்காப்பானையடியார்தங்க
ளருமருந்தையாவாவென்றருள்செய்வானைச்
சடையானைச்சந்திரனைத்தரித்தான்றன்னைச்
சங்கத்தமுத்தனையவெள்ளையேற்றின்
நடையானைநம்பியைநள்ளாற்றானை
நானடியேனினைக்கப்பெற்றுய்ந்தவாறே. (௨)

படவரவமொன்றுகொண்டரையிலார்த்த
பராபரனைப்பைஞ்ஞீலிமேவினானை
அடலரவம்பற்றிக்கடைந்தநஞ்சை
யமுதாகவுண்டானையாதியானை
மடலரவமன்னுபூங்கொன்றையானை
மாமணியைமாணிக்காய்க்காலன்றன்னை
நடலரவஞ்செய்தானைநள்ளாற்றானை
நானடியேனினைக்கப்பெற்றுய்ந்தவாறே. (௩)

* மாதிமையமாதொரு என்றும் பாடம். † மாமலர்மேலானொடு என்றும் பாடம். ‡ நானடியே னினைக்கப்பெற்றுய்ந்தவாறே என்றும் பாடம்; இதனை இத்திருப்பதிகமுழுதுங்கொள்க.

Koviloor Digital Library

கட்டங்கமொன்றுதங்கையிலேந்திக்
கங்கணமுங்காதில்விடுதோடுமிட்டுச்*
சுட்டங்கங்கொண்டுதுதையைப்பூசிச்
சுந்தரனாய்ச்சூலங்கையேந்தினானைப்
பட்டங்கமாலைநிறையச்சூடிப்
பல்கணமுந்தாமும்பாந்தகாட்டில்
நட்டங்கமாடியைநள்ளாற்றானை
நானடியேனினைக்கப்பெற்றுய்ந்தவாறே. (௪)

உலந்தார்தம்மங்கங்கொண்டுலகமெல்லா
மொருநொடியிலுழல்வானையுலப்பில்செல்வம்
சிலந்திதனக்கருள்செய்ததேவதேவைத்
திருச்சிராப்பள்ளியெஞ்சிவலோகனைக்
கலந்தார்தம்மனத்தென்றுங்காதலானைக்
கச்சியேகம்பனைக்கமழ்பூங்கொன்றை
நலந்தாங்குநம்பியைநள்ளாற்றானை
நானடியேனினைக்கப்பெற்றுய்ந்தவாறே. (௫)

குலங்கொடுத்துக்கோணிக்கவல்லான்றன்னைக்
குலவரையின்மடப்பாவை† யிடப்பாலானை
மலங்கெடுத்துமாதீர்த்தமாட்டிக்கொண்ட
மறையவனைப்பிறைதவழ்செஞ்சடையினானைச்
சலங்கெடுத்துத்தயாமூலதன்மமென்னுந்
தத்துவத்தின்வழிநின்றுதாழ்ந்தோர்க்கெல்லா
நலங்கொடுக்குநம்பியைநள்ளாற்றானை
நானடியேனினைக்கப்பெற்றுய்ந்தவாறே. (௬)

பூவிரியுமலர்க்கொன்றைச்சடையினானைப்
புறம்பயத்தெம்பெருமானைப்புகலூரானை
மாவிரியக்களிறுரித்தமைந்தன்றன்னை
மறைக்காடும்வலிவலமுமன்னினானைத்
தேவிரியத்திகழ்தக்கன்வேள்வியெல்லாஞ்
சிதைத்தானைபுதைத்தவன்றன்சிரங்கொண்டானை
நாவிரியமறைநவின்றநள்ளாற்றானை
நானடியேனினைக்கப்பெற்றுய்ந்தவாறே. (௭)

சொல்லானைச்சுடர்ப்பவளச்சோதியானைத்
தொல்லவுணர்புரமூன்றுமெரியச்செற்ற
வில்லானையெல்லார்க்குமேலானானை
மெல்லியலாள்பாகனைவேதநான்கும்
கல்லாலினீழற்கிழறங்கண்டானைக்
காளத்தியானைக்கயிலைமேய
நல்லானைநம்பியைநள்ளாற்றானை
நானடியேனினைக்கப்பெற்றுய்ந்தவாறே. (௮)

* தோடதிட்டு என்றும் பாடம். † வரையன்மடப்பாவை என்றும் பாடம்.

குன்றாதமாமுனிவன்சாபநீங்கக்
குரைகழலாற்கூற்றுவனைக்குமைத்தகோனை
அன்றாகவவுணர்புரமூன்றும்வேவ
வாரழல்வாயோட்டியடர்வித்தானைச்
சென்றாதிவேண்டிற்றொன்றீவான்றன்னைச்
சிவனையெம்பெருமானென்றிருப்பார்க்கென்றும்
நன்றாகுநம்பியைநள்ளாற்றானை
நானடியேனினைக்கப்பெற்றுய்ந்தவாறே. (௯)

இறவாமேவரம்பெற்றேனென்றுமிக்க
விராவணனையிருபதுதோணெரியவூன்றி
உறவாகியின்னிசைகேட்டிரங்கிமீண்டே
யுற்றபிணிதவிர்த்தருளவல்லான்றன்னை
மறவாதார்மனத்தென்றுமன்னினானை
மாமதியமலர்க்கொன்றைவன்னிமத்தம்
நறவார்செஞ்சடையானைநள்ளாற்றானை
நானடியேனினைக்கப்பெற்றுய்ந்தவாறே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

செம்பொன்மேனிவெண்ணீறணிவானைக்கரியகண்டனைமாலயன்காணாச்
சம்புவைத்தழலங்கையினானைச்சாமவேதனைத்தன்னொப்பிலானைக்
கும்பமாகரியின்னுரியானைக்கோவின்மேல்வருங்கோவினையெங்கள்
நம்பனைநள்ளாறனையமுதைநாயினேன்மறந்தென்னினைக்கேனே. (௧)

விரைசெய்மாமலர்க்கொன்றையினானைவேதகீதனைமிகச்சிறந்துருகிப்
பரசுவார்வினைபற்றறுப்பானைப்பாலொடானஞ்சுமாடவல்லானைக்
குரைகடல்வரையேழுலகுடையகோனைஞானக்கொழுந்தினைக்கொல்லை
நரைவிடையுடைநள்ளாறனையமுதைநாயினேன்மறந்தென்னினைக்கேனே. (௨)

பூவில்வாசத்தைப்பொன்னினைமணியைப்புவியைக்காற்றினைப்புனலனல்வெளியைச்
சேவின்மேல்வருஞ்செல்வனைச்சிவனைத்தேவதேவனைத்தித்திக்குந்தேனைக்
காவியங்கண்ணிபங்கனைக்கங்கைச்சடையனைக்காமரத்திசைபாட
நாவிலூறுநள்ளாறனையமுதைநாயினேன்மறந்தென்னினைக்கேனே. (௩)

தஞ்சமென்றுதன்றாளதுவடைந்தபாலன்மேல்வந்தகாலனையுருள
நெஞ்சிலோருதைகொண்டபிரானைநினைப்பவர்மனநீங்ககில்லானை
விஞ்சைவானவர்தானவர்கூடிக்கடைந்தவேலையுண்மிக்கெழுந்தெரியும்
நஞ்சமுண்டநள்ளாறனையமுதைநாயினேன்மறந்தென்னினைக்கேனே. (௪)

Koviloor Digital Library

மங்கைபங்கனைமாசிலாமணியைவானநாடனையேனமோடன்னம்
எங்குநாடியுங்காண்பரியானையேழையேற்கெளிவந்தபிரானை
அங்கநான்மறையானிறைகின்றவந்தணாளரடியதுபோற்றும்
நங்கள்கோனைநள்ளாறனையமுதைநாயினேன்மறந்தென்னினைக்கேனே. (௫)

கற்பகத்தினைக்கனகமால்வரையைக்காமகோபனைக்கண்ணுதலானைச்
சொற்பதப்பொருளிருளறுத்தருளுந்தூயசோதியைவெண்ணெய்நல்லூரில்
அற்புதப்பழவாவணங்காட்டியடியனாவென்னையாளதுகொண்ட
நற்பதத்தைநள்ளாறனையமுதைநாயினேன்மறந்தென்னினைக்கேனே. (௬)

மறவனையன்றுபன்றிப்பின்சென்றமாயனைநால்வர்க்காலின்கீழுரைத்த
அறவனையமரர்க்கரியானையமரர்சேனைக்குநாயகனான
குறவர்மங்கைதன்கேள்வனைப்பெற்றகோனைநான்செய்தகுற்றங்கள்பொறுக்கும்
நறைவிரியுநள்ளாறனையமுதைநாயினேன்மறந்தென்னினைக்கேனே. (௭)

மாதினுக்குடம்பிடங்கொடுத்தானைமணியினைப்பணிவார்வினைகெடுக்கும்
வேதனைவேதவேள்வியர்வணங்கும்விமலனையடியேற்கெளிவந்த [கும்
தூதனைத்தன்னைத்தோழமையருளித்தொண்டனேன்செய்ததுரிசுகள்பொறுக்
நாதனைநள்ளாறனையமுதைநாயினேன்மறந்தென்னினைக்கேனே. (௮)

இலங்கைவேந்தனெழிறிகழ்கயிலையெடுப்பவாங்கிமவான்மகளஞ்சத்
துலங்குநீண்முடியொருபதுந்தோள்களிருபதுந்நெரித்தின்னிசைகேட்டு
வலங்கைவாளொடுநாமமுங்கொடுத்தவள்ளலைப்பிள்ளைமாமதிச்சடைமேல்
நலங்கொள்சோதிநள்ளாறனையமுதைநாயினேன்மறந்தென்னினைக்கேனே. (௯)

செறிந்தசோலைகள்சூழ்ந்தநள்ளாற்றெஞ்சிவனைநாவலூர்ச்சிங்கடிதந்தை
மறந்துநான்மற்றுநினைப்பதேதென்றுவனப்பகையப்பனூரன்வன்றொண்டன்
சிறந்தமாலைகளஞ்சினோடஞ்சுஞ்சிந்தையுள்ளுருகிச்செப்பவல்லார்க்
கிறந்துபோக்கில்லைவரவில்லையாகியின்பவெள்ளத்துளிருப்பர்களினிதே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருநள்ளாற்றுத்திருப்பதிகம் - ௭.

ஆ திருப்பதிகம் - ௧௨௭.

சுவாமி தேவி திருநாமங்கள் - தர்ப்பாரணியேச்சுரர், போகமார்த்தபூண்முலையாள்

௫௩. திருக்கோட்டாறு.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

கருந்தடங்கணின்மாதராரிசைசெய்பக்காரதிர்கின்றபூம்பொழிற்
குருந்தமாதவியின்விரைமல்குகோட்டாற்றில்
இருந்தவெம்பெருமானையுள்கியிணையடிதொழுதேத்துமாந்தர்கள்
வருந்துமாறறியார்நெறிசேர்வர்வானூடே. (௧)

நின்றுமேய்ந்துநினைந்துமாகரிநீரொடும்மலர்வேண்டிவான்மழை
குன்றினேர்ந்துகுத்திப்பணிசெய்யுங்கோட்டாற்றுள்
என்றுமன்னியவெம்பிரான்கழலேத்திவானரசாளவல்லவர்
பொன்றுமாறறியார்புகழார்ந்தபுண்ணியரே. (௨)

விரவிநாளும்விழாவிடைப்பொலிதொண்டர்வந்துவியந்துபண்செயக்
குரவமாருநிழற்பொழின்மல்குகோட்டாற்றில்
அரவநீள்சடையானையுள்கிநின்றுதரித்துமுனன்புசெய்தடி
பரவுமாறுவல்லார்பழிபற்றறுப்பாரே. (௩)

அம்பினேர்விழிமங்கைமார்பலராடகம்பெறுமாடமாளிகைக்
கொம்பினேர்துகிலின்கொடியாடுகோட்டாற்றில்
நம்பனேநடனேநலந்திகழ்நாதனேயென்றுகாதல்செய்தவர்
தம்பினேர்ந்தறியார்தடுமாற்றவல்வினையே. (௪)

பழையதம்மடியார்துதிசெயப்பாருளோர்களும்விண்ணுளோர்தொழக்
குழலுமொந்தைவிழாவொலிசெய்யுங்கோட்டாற்றில்
கழலும்வண்சிலம்பும்மொலிசெயக்கானிடைக்கணமேத்தவாடிய
அழகனென்றெழுவாரணியாவர்* வானவர்க்கே. (௫)

பஞ்சின்மெல்லடிமாதராடவர்பத்தர்சித்தர்கள்பண்புவைகலும்
கொஞ்சியின்மொழியாற்றொழின்மல்குகோட்டாற்றில்
மஞ்சனேமணியேமணிமிடற்றண்ணலேயெனவுண்ணெகிழ்ந்தவர்
துஞ்சுமாறறியார்பிறவாரித்தொன்னிலத்தே. (௬)

கலவமாமயிலாளொர்பங்கனைக்கண்டுகண்மிசைநீர்நெகிழ்த்திசை
குலவுமாறுவல்லார்குடிகொண்டகோட்டாற்றில்
நிலவுமாமதிசேர்சடையுடைநின்மலாவெனவுன்னுவாரவர்
உலவுவானவரினுயர்வாகுவதுண்மையதே. (௭)

வண்டலார்வயற்சாலியாலைவளம்பொலிந்திடவார்புனற்றிரை
கொண்டலார்கொணர்ந்தங்குலவுந்திகழ்கோட்டாற்றில்
தொண்டெலாந்துதிசெய்யநின்றதொழிலனேகழலாலரக்கனை
மிண்டெலாந்தவிர்த்தென்னுகந்திட்டவெற்றிமையே. (௮)

* ரணியார்வர் என்றும் பாடம்.

Koviloor Digital Library

கருதிவந்தடியார்தொழுதெழக்கண்ணனோடயன்றேடவானையின்
குருதிமெய்கலப்பவுரிகொண்டு *கோட்டாற்றில்
விருதினன்மடமாதுநீயும்வியப்பொடும்முயர்கோயின்மேவிவெள்
எருதுகந்தவனேயிரங்காயுனதின்னருளே. (கூ)

உடையிலாதுழல்கின்றகுண்டருமூணருந்தவத்தாயசாக்கியர்
கொடையிலாமனத்தார்குறையாருங்கோட்டாற்றில்
படையிலார்மழுவேந்தியாடியபண்பனேயிவரென்கொலோநுனை
அடைகிலாதவண்ணம்மருளாயுன்னடியவர்க்கே. (க0)

காலனைக்கழலாலுதைத்தொருகாமனைக்கனலாகச்சீறிமெய்
கோலவார்குழலாள்குடிகொண்டகோட்டாற்றில்
மூலனைம்முடிவொன்றிலாதவெம்முத்தனைப்பயில்பந்தன்சொல்லிய
மாலைபத்தும்வல்லார்க்கெளிதாகும்வானகமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

வேதியன்விண்ணவரேத்தநின்றுன்விளங்கும்மறை
ஓதியவொண்பொருளாகிநின்றானொளியார்கிளி
கோதியதண்பொழில்சூழ்ந்தழகார்திருக்கோட்டாற்றுள்
ஆதியையேநினைந்தேத்தவல்லார்க்கல்லலில்லையே. (க)

ஏலமலர்க்குழன்மங்கைநல்லாளிமவான்மகள்
பாலமருந்திருமேனியெங்கள்பரமேட்டியும்
கோலமலர்ப்பொழில்சூழ்ந்தெழிலார்திருக்கோட்டாற்றுள்
ஆலநீழற்கீழிருந்தறஞ்சொன்னவழகனே. (உ)

இலைமல்குசூலமொன்றேந்தினானுமிமையோர்தொழ
மலைமல்குமங்கையோர்பங்கனாயம்மணிகண்டனும்
குலைமல்குதண்பொழில்சூழ்ந்தழகார்திருக்கோட்டாற்றுள்
அலைமல்குவார்சடையேற்றுகந்தவழகனன்றே. (ங)

ஊனமருமுடலுள்ளிருந்தவ்வுமைபங்கனும்
வானமரும்மதிசென்னிவைத்தமறையோதியும்
தேனமரும்மலர்ச்சோலைசூழ்ந்ததிருக்கோட்டாற்றுள்
தானமரும்விடையானுமெங்கடலைவனன்றே. (ச)

வம்பலரும்மலர்க்கோதைபாகம்மகிழ்மைந்தனும்
செம்பவளத்திருமேனிவெண்ணீறணிசெல்வனும்
கொம்பமரும்மலர்வண்டுகெண்டுந்திருக்கோட்டாற்றுள்
நம்பனெனப்பணிவார்க்கருள்செய்யெங்களுாதனே. (ரு)

* கொண்ட என்றும் பாடம்.

Koviloor Digital Library

பந்தமரும்விரன்மங்கைநல்லாளொருபாகமா
வெந்தமரும்பொடிப்பூசவல்லவிகிர்தன்மிகும்
கொந்தமரும்மலர்ச்சோலைசூழ்ந்ததிருக்கோட்டாற்றுள்
அந்தணனைநினைந்தேத்தவல்லார்க்கில்லையல்லலே. (௬)

துண்டமரும்பிறைசூடிநீடுசுடர்வண்ணனும்
வண்டமருங்குழன்மங்கைநல்லாளொருபங்கனும்
தெண்டிரைநீர்வயல்சூழ்ந்தழகார்திருக்கோட்டாற்றுள்
அண்டமுமெண்டிசையாகிநின்றவழகனன்றே. (௭)

இரவமருந்நிறம்பெற்றுடையவிலங்கைக்கிறை
கரவமாக்கயிலையெடுத்தான்வலிசெற்றவன்
குரவமரும்மலர்ச்சோலைசூழ்ந்ததிருக்கோட்டாற்றுள்
அரவமருஞ்சடையானடியார்க்கருள்செய்யுமே. (௮)

ஓங்கியநாரணனான்முகனும்முணராவகை
நீங்கியதீயுருவாகிநின்றநிமலன்னிழற்
கோங்கமரும்பொழில்சூழ்ந்தெழிலார்திருக்கோட்டாற்றுள்
ஆங்கமரும்பெருமானமரர்க்கமரனன்றே. (௯)

கடுக்கொடுத்ததுவராடையர்காட்சியில்லாததோர்
தடுக்கிடுக்கிச்சமணேதிரிவார்கட்குத்தன்னருள்
கொடுக்ககில்லாக்குழகன்னமருந்திருக்கோட்டாற்றுள்
இடுக்கணின்றித்தொழுவாரமரர்க்கிறையாவரே. (௧0)

கொடியுயர்மால்விடையூர்தியினன்றிருக்கோட்டாற்றுள்
அடிகழலார்க்கநின்றாடவல்லவருளாளனைக்
கடிகமழும்பொழிற்காழியுண்ஞானசம்பந்தன்சொல்
படியிவைபாடிநின்றாடவல்லார்க்கில்லைபாவமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருக்கோட்டாற்றுத்திருப்பதிகம் - ௨.

ஆ திருப்பதிகம் - ௧௨௧.

சுவாமி தேவி திருநாமங்கள் - ஐராவதநாதர், வண்டமர்பூங்குழலி.

ருச. திருவம்பர்ப்பெருந்திருக்கோயில்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

எரிதரவனல்கையிலேந்தியெல்லியில்
நரிதிரிகானிடைநட்டமாடுவார்
அரிசிலம்பொருபுனலம்பர்மாநகர்க்
குரிசில்செங்கண்ணவன்கோயில்சேர்வரே. (௧)

Koviloor Digital Library

மையகண்மலைமகள்பாகமாயிருள்
கையதோர்கனலெரிகனலவாடுவர்
ஐயநன்பொருபுனலம்பர்ச்செம்பியர்
செய்யகண்ணிறைசெய்தகோயில்சேர்வரே. (உ)

மறைபுனைபாடலர்சுடர்கைமல்கவோர்
பிறைபுனைசடைமுடிபெயரவாடுவர்
அறைபுனனிறைவயலம்பர்மாநகர்
இறைபுனையெழில்வளரிடமதென்பரே. (௩)

இரவுமல்கிளமதிசூடிமீடுயர்
பரவமல்கருமறைபாடியாடுவர்
அரவமோடுயர்செம்மலம்பர்க் * கொம்பலர்
மாவமல்கெழினகர்மருவிவாழ்வரே. (௪)

சங்கணிகுழையினர்சாமம்பாடுவர்
வெங்கனல்கனறரவீசியாடுவர்
அங்கணிவிழவமரம்பர்மாநகர்ச்
செங்கணவிறைசெய்தகோயில்சேர்வரே. (௫)

கழல்வளர்காலினர்சுடர்கைமல்கவோர்
சுழல்வளர்குளிர்புனல்சூடியாடுவர்
அழல்வளர்மறையவரம்பர்ப்பைம்பொழில்
நிழல்வளர்நெடுநகரிடமதென்பரே. (௬)

இகலுறுசுடரெரியிலங்கவீசியே
பகலிடம்பலிகொளப்பாடியாடுவர்
அகலிடமலிபுகழம்பர்வம்பவிழ்
புகலிடநெடுநகர்புகுவர்போலுமே. (௭)

எரியனமணிமுடியிலங்கைக்கோன்றன
கரியனதடக்கைகளடர்த்தகாலினர்
அரியவர்வளநகரம்பரின்பொடு
புரியவர்பிரிவிலாப்பூதஞ்சூழவே. (௮)

வெறிகிளர்மலர்மிசையவனும்வெந்தொழிற்
பொறிகிளரரவணைப்புல்குசெல்வனும்
அறிகிலவரியவரம்பர்ச்செம்பியர்
செறிகழலிறைசெய்தகோயில்சேர்வரே. (௯)

வழிதலைபறிதலையவர்கள்கட்டிய
மொழிதலைப்பயனெனமொழியல்வம்மினோ
அழிதலைபொருபுனலம்பர்மாநகர்
உழிதலையொழிந்துளருமைபுந்தாமுமே. (௧௦)

* செம்மரம்பர்க் என்றும் பாடம்.

Koviloor Digital Library

அழகரையடிகளையம்பர்மேவிய
நிழறிகழ்சடைமுடிநீலகண்டரை
உமிழ்திரையுலகினிலோதுவீர்கொண்மின்
தமிழ்கெழுவிரகினன்றமிழ்செய்மாலையே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவம்பர்ப்பெருந்திருக்கோயிற்றிருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - கஙூ0.

சுவாமி தேவி திருநாமங்கள் - பிரமபுரிநாதர், பூங்குழனாயகி.

திருஞானசம்பந்தப்பிள்ளையார் திருப்புகலூரை அகன்று, திருநாவுக்கரசுநாயனாரைவிட்டுப் பிரியாமல், முத்துச்சிவிகை பின்வர, வழிக்கொள்ளும்பொழுது, அப்பமூர்த்தி பிள்ளையாரை நோக்கி, "சிவபெருமான் தேவரீருக்கு அருளிச்செய்த இம் முத்துச்சிவிகை மின்மேலே எழுந்தருளும்" என்று சொல்ல; பிள்ளையார் "நீர் அடியார்களோடும் எங்கே முன் போவீரோ அங்கே நான் பின்வருவேன்" என்றார். அப்பமூர்த்தி "தேவரீர் அருளிச்செய்தபடியே செய்வேன்" என்று சொல்லிக்கொண்டு, அன்றுமுதல் அவருடன் செல்லுநாளெல்லாம் அப்படியே செய்வாராகி, நடந்து முன்னே அடியாரோடும் திருவம்பருக்குச் சென்றார். பிள்ளையார் சிவபிரானுடைய திருவருள்வழியே நிற்பாராகி, முத்துச்சிவிகையில் ஏறித் திருப்புகலூரைக் கடந்து சென்று, "அப்பமூர்த்தி எங்கே சென்றார்" என்றுவினவிப் போய், திருவம்பரை அடைந்து, மாகாளத்தில் இருக்கின்ற சுவாமியை வணங்கித் திருப்பதிகம்பாடி, அப்பமூர்த்தியோடும் அந்தத் திருப்பதியில் எழுந்தருளியிருந்தார். அங்கே கோச்செங்கட் சோழநாயனார்செய்த பெருந்திருக்கோயிலை அடைந்து, சுவாமிதரிசனஞ்செய்து, அந்நாயனாரைச் சிறப்பித்து "எரிதாவனலேந்தி" என்னுந் திருப்பதிகம்பாடியருளினார்.

ருரு. திருவம்பர்மாகாளம். *

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

அடையார்புரமூன்றுமனல்வாய் † விழவெய்து
மடையார்புனலம்பர்மாகாளம்மேய
விடையார்கொடியெந்தைவெள்ளைப்பிறைசூடும்
சடையான்கழலேத்தச்சாராவினைதானே. (க)

தேனார்மதமத்தந்திங்கள்புனல்சூடி
வானார்பொழிலம்பர்மாகாளம்மேய
ஊனார்தலைதன்னிற்பலிகொண்டுழல்வாழ்க்கை
ஆனான்கழலேத்தவல்லலடையாவே. (உ)

* கோயிற்றிருமாகாளம். † மனலால்விழ என்றும், மனலாய்விழ என்றும் பாடம்.

Koviloor Digital Library

திரையார்புனலோடுசெல்வமதிசூடி
விரையார்பொழிலம்பர்மாகாளம்மேய
நரையார்விடையூருநம்பான்கழனாளும்
உரையாதவர்கண்மேலொழியாவூனம்மே. (௩)

கொந்தண் * பொழிற்சோலைக்கோலவரிவண்டு
மந்தம்மலியம்பர்மாகாளம்மேய
கந்தங்கமழ்கொன்றைகமழ்புன்சடைவைத்த
எந்தைகழலேத்தவிடர்வந்தடையாவே. (௪)

அணியார்மலைமங்கையாகம்பாகமாய்
மணியார்புனலம்பர்மாகாளம்மேய
துணியாருடையினான்றுதைபொற்கழனாளும்
பணியாதவர்தம்மேற்பறையாபாவம்மே. (௫)

பண்டாழ்கடனஞ்சையுண்டுகளிமாந்தி
வண்டார்பொழிலம்பர்மாகாளம்மேய
விண்டார்புரம்வேவமேருச்சிலையாகக்
கொண்டான்கழலேத்தக்குறுகாகுற்றம்மே. (௬)

மிளிரும்மரவோடுவெள்ளைப்பிறைசூடி
வளரும்பொழிலம்பர்மாகாளம்மேய
கிளருஞ்சடையண்ணல்கேடில்கழலேத்தத்
தளரும்முறுநோய்கள்சாருந்தவந்தானே. (௭)

கொலையார்மழுவோடுகோலச்சிலையேந்தி
மலையார்புனலம்பர்மாகாளம்மேய
இலையார்திரிசூலப்படையான்கழனாளும்
நிலையாநினைவார்மேனில்லாவினைதானே. (௮)

சிறையார்வரிவண்டுதேனுண்டிசைபாட
மறையார்நிறை † யம்பர்மாகாளம்மேய
நறையார்மலரானும்மாலுங்காண்பொண்ணா
இறையான்கழலேத்தவெய்தும்மின்பம்மே. (௯)

மாசூர்வடிவின்னார்மண்டையுணல்கொள்வார்
கூசாதுரைக்குஞ்சொற்கொள்கைகுணமல்ல
வாசார்பொழிலம்பர்மாகாளம்மேய
ஈசாவென்பார்கட்கில்லையிடர்தானே. (௧0)

வெரிநீர்கொள ‡ வோங்கும்வேணுபுரந்தன்னுள்
திருமாமறைஞானசம்பந்தனசேணார்
பெருமான்மலியம்பர்மாகாளம்பேணி
உருகாவுரைசெய்வாருயர்வானடைவாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

* கொந்தம் என்றும் பாடம். † மறையாநிறை என்றும் பாடம். ‡ நீர்வெரிங்கொள என மாறுக; வெருநீர் என்றும் பாடம்.

Koviloor Digital Library

பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

புல்குபொன்னிறம்புரிசடைநெடுமுடிப்போழிளமதிசூடிப்
பில்குதேனுடைநறுமலர்க்கொன்றையும்பிணையல்செய்தவர்மேய
மல்குதண்டுறையரிசிலின்வடகரைவருபுனன்மாகாளம்
அல்லுநன்பகலுந்தொழுமடியவர்க்கருவினையடையாவே. (௧)

அரவமாட்டுவரந்துகில்புலியதளங்கையிலனலேந்தி
இரவுமாடுவரிவையிவர்சரிதைகளிசைவனபலபூதம்
மரவந்தோய்பொழிலரிசிலின்வடகரைவருபுனன்மாகாளம்
பரவியும்பணிந்தேத்தவல்லாரவர்பயன்றலைப்படுவாரே. (௨)

குணங்கள்கூறியுங்குற்றங்கள்பரவியுங்குரைகழலடிசேரக்
கணங்கள்பாடவுங்கண்டவர்பரவவுங்கருத்தறிந்தவர்மேய
மணங்கொள்பூம்பொழிலரிசிலின்வடகரைவருபுனன்மாகாளம்
வணங்குமுள்ளமோடணையவல்லார்களைவல்வினையடையாவே. (௩)

எங்குமேதுமோர்பிணியிலர்கேடிலரிழைவளர்நறுங்கொன்றை
தங்குதொங்கலுந்தாமமுங்கண்ணியுந்தாமகிழ்ந்தவர்மேய
மங்குறோய்ப்பொழிலரிசிலின்வடகரைவருபுனன்மாகாளம்
கங்குலும்பகலுந்தொழுமடியவர்காதன்மையுடையாரே. (௪)

நெதியமென்னுளபோகமற்றென்னுளநிலமிசைநலமாய
கதியமென்னுளவானவரென்னுளர்கருதியபொருள்கூடில்
மதியந்தோய்பொழிலரிசிலின்வடகரைவருபுனன்மாகாளம்
புதியபூவொடுசாந்தமும்புகையுங்கொண்டேத்துதல்புரிந்தோர்க்கே. (௫)

கண்ணுலாவியகதிரொளிமுடிமிசைக்கனல்விடுசுடர்நாகம்
தெண்ணிலாவொடுதிலகமுநகுதலைதிகழவைத்தவர்மேய
மண்ணுலாம்பொழிலரிசிலின்வடகரைவருபுனன்மாகாளம்
உண்ணிலாநினைப்புடையவரியாவரிவ்வுலகினிலுயர்வாரே. (௬)

நாசுதானரைத்தோலுடைக்கண்ணிபஞ்சுடர்விடுநறுங்கொன்றை
பூசுவெண்பொடிப்பூசுவதன்றியும்புகழ்புரிந்தவர்மேய
மாகலாம்பொழிலரிசிலின்வடகரைவருபுனன்மாகாளம்
பேசுநீர்மையரியாவரிவ்வுலகினிற்பெருமையைப்பெறுவாரே. (௭)

பௌவமார்கடலிலங்கையர்கோன்றனைப்பருவரைக்கீழூன்றி
எவ்வந்திரவன்றிமையவர்க்கருள்செய்தவிறையவனுறைகோயில்
மவ்வந்தோய்பொழிலரிசிலின்வடகரைவருபுனன்மாகாளம்
கவ்வையாற்றொழுமடியவர்மேல்வினைகனலிடைச்செதிளன்றே. (௮)

உய்யுங்காரணமுண்டென்றுகருதுமின்னொளிகிளர்மலரோனும்
பைகொள்பாம்பணைப்பள்ளிகொள்வானும்பரவநின்றவர்மேய
மையுலாம்பொழிலரிசிலின்வடகரைவருபுனன்மாகாளம்
கையினாற்றொழுதவலமும்பிணியுந்தங்கவலையுங்களைவாரே. (௯)

Koviloor Digital Library

பிண்டிபாலருமண்டைகொடேரும்பீலிகொண்டுழல்வாரும்
கண்டநூலருங்கடுந்தொழிலாளருங்கழறநின்றவர்மேய
வண்டுலாம்பொழிலரிசிலின்வடகரைவருபுனன்மாகாளம்
பண்டுநாஞ்செய்தபாவங்கள்பற்றறப்பரவுதல்செய்வோமே. (க0)

மாறுதன்னொடுமண்மிசையில்லதுவருபுனன்மாகாளத்
தீறுமாதியுமாகியசோதியையேறமர்பெருமானை
நாறுபூம்பொழிற்காழியுண்ஞானசம்பந்தனதமிழ்மாலை
கூறுவாரையுங்கேட்கவல்லாரையுங்குற்றங்கள்குறுகாவே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

படியுளார்விடையினர்பாய்புலித்தோலினர்பாவநாசர்
பொடிகொண்மாமேனியர்பூதமார்படையினர்பூணநூலர்
கடிகொண்மாமலரிடுமடியினர்பிடிநடைமங்கையோடும்
அடிகளாரருள்புரிந்திருப்பிடமம்பர்மாகாளந்தானே. (க)

கையின்மாமழுவினர் * கடுவிடமுண்டவெங்காளகண்டர்
செய்யமாமேனியரூனமருடைதலைப் † பலிதிரிவார்
வையமார்பொதுவினின்மறையவர்தொழுதெழநடமதாடும்
ஐயன்மாதேவியோடிருப்பிடமம்பர்மாகாளந்தானே. (உ)

பரவினவடியவர்படுதுயர்கெடுப்பவர்பரிவிலார்பால்
கரவினர்கனலனவுருவினர்படுதலைப்பலிகொடேகும்
இரவினர்பகலெரிகானிடையாடியவேடர்பூணும்
அரவினரரிவையோடிருப்பிடமம்பர்மாகாளந்தானே. (ங)

நீற்றினர்நீண்டவார்சடையினர்படையினர்நிமலர்வெள்ளை
ஏற்றினரெரிபுரிகரத்தினர்புரத்துளாருயிரைவவ்வும்
கூற்றினர்கொடியிடைமுனிவுறநனிவருங்குலவுகங்கை
ஆற்றினரரிவையோடிருப்பிடமம்பர்மாகாளந்தானே. (ச)

புறத்தினரகத்துளர்போற்றிநின்றழுதெழுமன்பர்சிந்தைத்
திறத்தினரறிவிலாச்செதுமதித்தக்கன்றன்வேள்விசெற்ற
மறத்தினர்மாதவர்நால்வருக்காலின்கீழருள்புரிந்த
அறத்தினரரிவையோடிருப்பிடமம்பர்மாகாளந்தானே. (ரு)

பழகமாமலர்பறித்திண்டைகொண்டிறைஞ்சுவார்பாற்செறிந்த
குழகனார்குணம்புகழ்ந்தேத்துவாரவர்பலர்கூடநின்ற
கழகனார்கரியுரித்தாடுகங்காளர்நங்காளியேத்தும்
அழகனாரரிவையோடிருப்பிடமம்பர்மாகாளந்தானே. (சு)

* கையின்மான்மழுவினர் என்றும் பாடம். † ரூனமாருடைதலைப் என்றும் பாடம்.

Koviloor Digital Library

சங்கவார்குழையினர்தழலனவுருவினர்தமதருளே
எங்குமாயிருந்தவருந்தவமுனிவருக்களித்துகந்தார்
பொங்குமாபுனல்பரந்தரிசிலின்வடகரைதிருத்தம்பேணி
அங்கமாறோதுவாரிருப்பிடமம்பர்மாகாளந்தானே. (௭)

பொருசிலைமதனனைப்பொடிபடவிழித்தவர்பொழிலிலங்கைக்
குரிசிலைக்குலவரைக்கீழுறவடர்த்தவர்கோயில்கூறில்
பெருசிலைநலமணிபீலியோடேலமும்பெருகநுந்தும்
அரிசிலின்வடகரையழகமாம்பர்மாகாளந்தானே. (௮)

வரியராவதன்மிசைத்துயின்றவன்றானுமாமலருளானும்
எரியராவணிகழலேத்தவொண்ணாவகையுயர்ந்துபின்னும்
பிரியராமடியவர்க்கணியராய்ப்பணிவிலாதவருக்கென்றும்
அரியராயரிவையோடிருப்பிடமம்பர்மாகாளந்தானே. (௯)

சாக்கியக்கயவர்வன்றலைபறிக்கையரும்பொய்யினானூல்
ஆக்கியமொழியவைபிழையவையாதலில்வழிபடுவீர்
வீக்கியவரவுடைக்கச்சையானிச்சையானவர்கட்கெல்லாம்
ஆக்கியவரனுறையம்பர்மாகாளமேயடைமினீரே. (௧௰)

செம்பொன்மாமணிகொழித்தெழுதிரைவருபுனலரிசில்சூழ்ந்த
அம்பர்மாகாளமேகோயிலாவணங்கினோடிருந்தகோனைக்
கம்பினார்நெடுமதிற்*காழியுண்ஞானசம்பந்தன்சொன்ன
நம்பினான்மொழிபவர்க்கில்லையாம்வினைநலம்பெறுவர்தாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவம்பர்மாகாளத்திருப்பதிகம் - ௩.

ஆ திருப்பதிகம் - ௧௩௩.

சுவாமி தேவி திருநாமங்கள் - காளகண்டேசுரர், பக்ஷநாயகி.

௫௬. திருமீயச்சூர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

காயச்செவ்விக்காமற்காய்ந்துகங்கையைப்
பாயப்படர்புன்சடையிற்பதித்தபரமேட்டி
மாயச்சூரன்றறுத்தமைந்தன்றாதைதன்
மீயச்சூரைத்தொழுதுவினையைவிட்டுமே. (௧)

* கம்பினார்நெடுமதில் - ஆகாயத்திற்பட்டிருக்க மேற்பட்டமதில்; ஆர் - ஆர.

Koviloor Digital Library

பூவார்சடையின்முடிமேற்புனலரனல்கொள்வர்
நாவார்மறையர்பிறையர்நறவெண்டலை*யேந்தி
ஏவார்மலையேசிலையாக்கழியம்பெரிவாங்கி
மேவார்புரமூன்றெரித்தார்மீயச்சூராரே. (௨)

பொன்னேர்கொன்றைமாலைபுரளுமகலத்தான்
மின்னேர்சடைகளுடையான்மீயச்சூரானைத்
தன்னேர்பிறரில்லானைத்தலையால்வணங்குவார்
அந்நேரிமையோருலகமெய்தலரிதன்றே.† (௩)

வேகமதநல்லியானைவெருவவுரிபோர்த்துப்
பாகமுமையோடாகப்படிதம்பலபாட
நாகமரைமேலசைத்துநடமாடியநம்பன்
மேகமுரிஞ்சும்பொழில்சூழ்மீயச்சூரானே. (௪)

விடையார்கொடியார்சடைமேல்விளங்கும்பிறைவேடம்
படையார்பூதஞ்சூழப்பாடலாடலார்
பெடையார்வரிவண்டணையும்பிணைசேர்கொன்றையார்
விடையார்நடையொன்றுடையார்மீயச்சூராரே. (௫)

குளிருஞ்சடைகொண்முடிமேற்கோலமார்கொன்றை
ஒளிரும்பிறையொன்றுடையானொருவன்கைகோடி
நளிரும்மணிசூழ்மாலைநட்டநவினம்பன்
மிளிரும்மரவமுடையான்மீயச்சூரானே. (௬)

நீலவடிவர்மிடறு‡நெடியர்நிகரில்லார்
கோலவடிவுதமதாங்கொள்கையறிவொண்ணார்¶
காலர்கழலர்கரியினுரியர்மழுவாளர்
மேலர்மதியர்விதியர்மீயச்சூராரே. (௭)

புலியினுரிதோலாடைபூசும்பொடிநீற்றர்
ஒலிகொள்புனலோர்சடை§மேற்கரந்தாருமையஞ்ச
வலியதிரடோள்வன்கணரக்கர்கோன்றன்னை
மெலியவரைக்கீழடர்த்தார்மீயச்சூராரே. (௮)

காதின்மிளிருங்குழையர்கரியகண்டத்தார்
போதிலவனுமாலுந்தொழப்பொங்கெரியானார்○
கோதிவரிவண்டறைபூம்பொய்கைப்புனன்மூழ்கி
மேதிபடியும்வயல்சூழ்மீயச்சூராரே. (௯)

கண்டார்நாணும்படியார்கலிங்கமுடைபட்டைக்**
கொண்டார்சொல்லைக்குறுகாருயர்ந்தகொள்கையார்
பெண்டான்பாகமுடையார்பெரியவரைவில்லா
விண்டார்புரமூன்றெரித்தார்மீயச்சூராரே. (௧௦)

* நகுவெண்டலை என்றும் பாடம். † மெய்தற்கரிதன்றே என்றும் பாடம். ‡ நீலவடிவாமிடறு என்பாருமுளர். ¶ யறிவண்ணார் என்றும் பாடம். § புனல்வார்சடை என்றும் பாடம். ○ பொங்கொளியானார் என்றும் பாடம். ** முடைப்பட்டைக் என்றும் பாடம்.

Koviloor Digital Library

வேடமுடையபெருமானுறையுமீயச்சூர்
நாடம்புகழார்புகலிஞானசம்பந்தன்
பாடலாயதமிழீரைந்துமொழிந்துள்கி
ஆடுமடியாரகல்வானுலகமடைவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருமீயச்சூர்த்திருப்பதிகம் - க.
ஆ திருப்பதிகம் - கரு௪.

சுவாமி தேவி திருநாமங்கள் - முயற்கிநாயகர், சுந்தரநாயகி.

ருஎ. திருமீயச்சூரிளங்கோயில்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

தோற்றுங்கோயிலுந்தோன்றியகோயிலும்
வேற்றுக்கோயில்பலவுளமீயச்சூர்க்
கூற்றம்பாய்ந்தகுளிர்புன்சடையாற்
கேற்றங்கோயில்கண்டீரிளங்கோயிலே. (க)

வந்தனையடைக்கும்மடித்தொண்டர்கள்
பந்தனைசெய்துபாவிக்கநின்றவன்
சிந்தனைதிருத்துந்திருமீயச்சூர்
எந்தமையுடையாரிளங்கோயிலே. (உ)

பஞ்சமந்திரமோதும்பரமனார்
அஞ்சவானையுரித்தனலாடுவார்
நெஞ்சம்வாழிநினைந்திருமீயச்சூர்
எந்தமையுடையாரிளங்கோயிலே. (ங)

நாறுமல்லிகைகூவிளஞ்செண்பகம்
வேறுவேறுவிரித்தசடையிடை
ஆறுகொண்டுகந்தான்றிருமீயச்சூர்
ஏறுகொண்டுகந்தாரிளங்கோயிலே. (௪)

வெவ்வவண்ணத்துநாகம்வெருவவே
கவ்வவண்ணக்கனல்விரித்தாடுவர்
செவ்வவண்ணந்திகழ்திருமீயச்சூர்
எவ்வவண்ணம்பிரா * னிளங்கோயிலே. (ரு)

* எவ்வவண்ணப்பிரான் என்றும் பாடம்.

Koviloor Digital Library

பொன்னங்கொன்றையும்பூவணிமாலையும்
பின்னுஞ்செஞ்சடைமேற்பிறைசூடிற்று
மின்னுமேகலையாளொடுமீயச்சூர்
இன்னநாளகலாரிளங்கோயிலே. (௬)

படைகொள்பூதத்தன்பைங்கொன்றைத்தாரினன்
சடைகொள்வெள்ளத்தன்சாந்தவெண்ணீற்றினன்
விடைகொளூர்தியினான்றிருமீயச்சூர்
இடைகொண்டேத்தநின்றாரிளங்கோயிலே. (௭)

ஆறுகொண்டசடையினர்தாமுமோர்
வேறுகொண்டதோர்வேடத்தராகிலும்
கூறுகொண்டுகந்தாளொடுமீயச்சூர்
ஏறுகொண்டுகந்தாரிளங்கோயிலே. (௮)

வேதத்தானென்பர்வேள்வியுளானென்பர்
பூதத்தானென்பர்புண்ணியன்றன்னையே
கீதத்தான்கிளருந்திருமீயச்சூர்
ஏதந்தீர்க்கநின்றாரிளங்கோயிலே. (௯)

கடுக்கண்டன்கயிலாயமலைதனை
எடுக்கலுற்றவிராவணனீடற
விடுக்கணின்றிவெருண்டவன்மீயச்சூர்
இடுக்கண்டீர்க்கநின்றாரிளங்கோயிலே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருமீயச்சூரிளங்கோயிற்றிருப்பதிகம் - ௧.

ஆ திருப்பதிகம் - ௧௨௫.

சுவாமி தேவி திருநாமங்கள் - சகலபுவனேசர், மின்னுமேகலையாள்.

௫௮. திருத்திலதைப்பதி.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - செவ்வழி.

திருச்சிற்றம்பலம்.

பொடிகள்பூசிப்பலதொண்டர்கூடிப்புலர்காலையே
அடிகளாரத்தொழுதேத்தநின்றவ்வழகன்னிடம்
கொடிகளோங்கிக்குலவும்விழவார்திலதைப்பதி
வடிகொள்சோலைம்மலர்மணங்கமழும்மதிமுத்தமே. (௧)

Koviloor Digital Library

தொண்டர்மிண்டிப்புகைவிம்முசாந்துங்கமழ்துணையலும்
கொண்டுகண்டார்குறிப்புணரநின்றகுழகன்னிடம்
தெண்டிரைப்பூம்புனலரிசில்சூழ்ந்ததிலதைப்பதி
வண்டுகெண்டற்றிசை*பயிலுஞ்சோலைம்மதிமுத்தமே. (௨)

அடலுளேறுய்த்துகந்தானடியாரமார்தொழக்
கடலுணஞ்சமுதாகவுண்டகடவுள்ளிடம்
திடலடங்கச்செழுங்கழனிசூழ்ந்ததிலதைப்பதி
மடலுள்வாழைக்கனிதேன்பிலிற்றும்மதிமுத்தமே. (௩)

கங்கைதிங்கள்வன்னிதுன்னெருக்கின்னொடுகூவிளம்
வெங்கணாகம்விரிசடையில்வைத்தவிகிர்தன்னிடம்
செங்கயல்பாய்புனலரிசில்சூழ்ந்ததிலதைப்பதி
மங்குறோயும்பொழில்சூழ்ந்தழகார்மதிமுத்தமே. (௪)

புரவியேழும்மணிபூண்டியங்குங்கொடித்தேரினான்
பரவிநின்றுவழிபாடுசெய்யும்பரமேட்டியூர்
விரவிஞாழல்விரிகோங்குவேங்கைசுரபுன்னைகள்
மரவமவ்வன்மலருந்திலதைம்மதிமுத்தமே. (௫)

விண்ணர்வேதம்விரித்தோதவல்லாரொருபாகமும்
பெண்ணரெண்ணாரெயில்செற்றுகந்தபெருமானிடம்
தெண்ணிலாவின்னொளிதீண்டுசோலைத்திலதைப்பதி
மண்ணுளோர்வந்தருள்பேணநின்றம்மதிமுத்தமே. (௬)

ஆறுசூடியடையார்புரஞ்செற்றவர்பொற்றொடி
கூறுசேரும்முருவர்க்கிடமாவதுகூறுங்கால்
தேறலாரும்பொழில்சூழ்ந்தழகார்திலதைப்பதி
மாறிலாவண்புனலரிசில்சூழ்ந்தம்மதிமுத்தமே. (௭)

கடுத்துவந்தகனன்மேனியினன்கருவரைதனை
எடுத்தவன்றன்முடிதோளடர்த்தார்க்கிடமாவது
புடைக்கொள்பூகத்திளம்பாளைபுல்கும்மதுப்பாயவாய்
மடுத்துமந்திபுகளுந்திலதைம்மதிமுத்தமே. (௮)

படங்கொணாகத்தணையானும்பைந்தாமரையின்மிசை
இடங்கொணால்வேதனுமேத்தநின்றவிறைவன்னிடம்
திடங்கொணாவின்னிசைதொண்டர்பாடுந்திலதைப்பதி
மடங்கல்வந்துவழிபாடுசெய்யும்மதிமுத்தமே. (௯)

புத்தர்தேரர்பொறியில்சமணர்கருவிறிலாப்
பித்தர்சொன்னம்மொழிகேட்கிலாதபெருமானிடம்
பத்தர்சித்தர்பணிவுற்றிறைஞ்சும்† திலதைப்பதி
மத்தயானைவழிபாடுசெய்யும்மதிமுத்தமே. (௧௦)

* கெண்டற்றிசை என்றும் பாடம். † பணிவுற்றிறைஞ்சக் என்றும் பாடம்.

Koviloor Digital Library

மந்தமாரும்பொழில்சூழ்திலதைம்மதிமுத்தர்மேல்
கந்தமாருங்கடற்காழியுள்ளான்றமிழ்ஞானசம்
பந்தன்மாலைபழிதீரநின்றேத்தவல்லார்கள்போய்ச்
சிந்தைசெய்வார்சிவன்சேவடிசேர்வதுதிண்ணமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருத்திலதைப்பதித்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - கருசு.

சுவாமி தேவி திருநாமங்கள் – முத்தேசர், பொற்கொடிநாயகி.

ருசு. திருப்பாம்புரம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

சீரணிதிகழ்திருமார்பில்வெண்ணூலர்திரிபுரமெரிசெய்தசெல்வர்
வாரணிவனமுலைமங்கையோர்பங்கர்மான்மறியேந்தியமைந்தர்
காரணிமணிதிகழ்மிடறுடையண்ணல்கண்ணுதல்விண்ணவரேத்தும்
பாரணிதிகழ்தருநான்மறையாளர்பாம்புரநன்னகராரே. (க)

கொக்கிறகோடுகூவிளமத்தங்கொன்றையொடெருக்கணிசடையர்
அக்கினொடாமைபூண்டழகாகவனலதுவாடுமெம்மடிகள்
மிக்கநல்வேதவேள்விபுளெங்கும்விண்ணவர்விரைமலர்தூவப்
பக்கம்பல்பூதம்பாடிடவருவார்பாம்புரநன்னகராரே. (உ)

துன்னலினுடையுடுத்ததன்மேலோர்சூறைநல்லரவதுசுற்றிப்
பின்னுவார்சடைகடாழவிட்டாடிப்பித்தராய்த்திரியுமெம்பெருமான்
மன்னுமாமலர்கடேவிடநாளுமாமலையாட்டியுந்தாமும்
பன்னுநான்மறைகள்பாடிடவருவார்பாம்புரநன்னகராரே. (௩)

துஞ்சுநாடுறந்துதோற்றமுமில்லாச்சுடர்விடுசோதியெம்பெருமான்
நஞ்சுசேர்கண்டமுடையவென்னுதர்நள்ளிருணடஞ்செயுநம்பர்
மஞ்சுதோய்சோலைமாமயிலாடமாடமாளிகைதன்மேலேறிப்
பஞ்சுசேர்மெல்லடிப்பாவையர்பயிலும்பாம்புரநன்னகராரே. (ச)

நதியதனயலேநகுதலைமாலைநாண்மதிசடைமிசையணிந்து
கதியதுவாகக்காளிமுன்காணக்கானிடைநடஞ்செய்தகருத்தர்
விதியதுவழுவாவேதியர்வேள்விசெய்தவரோத்தொலியோவாப்
பதியதுவாகப்பாவையுந்தாமும்பாம்புரநன்னகராரே. (ரு)

Koviloor Digital Library

ஓதிநன்குணர்வார்க்குணர்வுடையொருவரொளிதிகழுருவஞ்சேரொருவர்
மாதினையிடமாவைத்தவெம்வள்ளன்மான்மறியேந்தியமைந்தர்
ஆதிநீயருளென்றமரர்கள்பணியவலைகடல்கடையவன்றெழுந்த
பாதிவெண்பிறைசடைவைத்தவெம்பரமர்பாம்புரநன்னகராரே. (சு)

மாலினுக்கன்றுசக்கரமீந்துமலரவற்கொருமுகமொழித்து
ஆலின்கீழறமோர்நால்வருக்கருளியனலதுவாடுமெம்மடிகள்
காலனைக்காய்ந்துதங்கழலடியாற்காமனைப்பொடிபடநோக்கிப்
பாலனுக்கருள்கள்செய்தவெம்மடிகள்பாம்புரநன்னகராரே. (எ)

விடைத்த* வல்லரக்கன்வெற்பினையெடுக்கமெல்லியதிருவிரலூன்றி
அடர்த்தவன்றனக்கன்றருள்செய்தவடிகளனலதுவாடுமெம்மண்ணல்
மடக்கொடியவர்கள்வருபுனலாடவந்திழியரிசிலின்கரைமேல்
படப்பையிற்கொணர்ந்துபருமணிசிதறும்பாம்புரநன்னகராரே. (அ)

கடிபடுகமலத்தயனொடுமாலுங்காதலோடடிமுடிதேடச்
செடிபடுவினைகடீர்த்தருள்செய்யுந்திவணரெம்முடைச்செல்வர்
முடியுடையமரர்முனிகணத்தவர்கண்முறைமுறையடிபணிந்தேத்தப்
படியதுவாகப்பாவையுந்தாமும்பாம்புரநன்னகராரே. (கூ)

குண்டர்சாக்கியருங்குணமிலாதாருங்குற்றுவிட்டுடுக்கையர்† தாமும்
கண்டவாறுரைத்துக்காணிமிர்த்துண்ணுங்‡ கையர்தாமுள்ளவாறறியார்
வண்டுசேர்குழலிமலைமகணடுங்கவாரணமுரிசெய்துபோர்த்தார்
பண்டுநாஞ்செய்தபாவங்கடீர்ப்பார்பாம்புரநன்னகராரே. (க0)

பார்மலிந்தோங்கிப்பருமதில்சூழ்ந்தபாம்புரநன்னகராரைக்
கார்¶ மலிந்தழகார்கழனிசூழ்மாடக்கழுமலமுதுபதிக்கவுணி
நார்மலிந்தோங்கு§ நான்மறைஞானசம்பந்தன்செந்தமிழ்வல்லார்
சீர்மலிந்தழகார்செல்வமதோங்கிச்சிவனடிநண்ணுவர்தாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருப்பாம்புரத்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - சருஎ.

சுவாமி தேவி திருநாமங்கள் - பாம்புரேச்சுரர், வண்டார்பூங்குழலி.

* விடைத்தல் - பெருங்கோபம். † குற்றவிட்டுடுக்கையர் - தலைமயிரைப்பறித்து உடையை நீக்கினவர்கள்; குற்றல் - பறித்தல்; விட்ட என்னும் பெயரெச்சத்தகரம் தொக்கது; "புகழ்புரிந்தில்லிலோர்க்கு" என்புழிப்போல. ‡ காணிமிர்த்துண்ணல் - நின்றுண்ணல். ¶ கார்-நீர். § நாமலிந்தோங்கு என்றும் பாடம்.

Koviloor Digital Library

௬௦. திருச்சிறுகுடி.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

திருமுக்கால். பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

திடமலிமதிளணிசிறுகுடிமேவிய
படமலியரவுடையீரே
படமலியரவுடையீருமைப்பணிபவர்
அடைவதுமமருலகதுவே. (க)

சிற்றிடையுடன்மகிழ்சிறுகுடிமேவிய
சுற்றியசடைமுடியீரே
சுற்றியசடைமுடியீருமதொழுகழல்
உற்றவருறுபிணியிலரே. (உ)

தெள்ளியபுனலணிசிறுகுடிமேவிய
துள்ளியமானுடையீரே
துள்ளியமானுடையீருமதொழுகழல்
உள்ளுதல்செயநலமுறுமே. (௩)

செந்நெலவயலணிசிறுகுடிமேவிய
ஒன்னலர்புரமெரித்தீரே
ஒன்னலர்புரமெரித்தீருமையுள்குவார்
சொன்னலமுடையவர்தொண்டே. (௪)

செற்றினின் * மலிபுனற்சிறுகுடிமேவிய
பெற்றிகொள்பிறைமுடியீரே
பெற்றிகொள்பிறைமுடியீருமைப்பேணிநஞ்
சுற்றவ † ருருவினையிலரே. (௫)

செங்கயல்புனலணிசிறுகுடிமேவிய
மங்கையையிடமுடையீரே
மங்கையையிடமுடையீருமைவாழ்த்துவார்
சங்கையதிலர்நலர்தவமே. ‡ (௬)

செறிபொழிறழுவியசிறுகுடிமேவிய
வெறிகமழ்சடைமுடியீரே
வெறிகமழ்சடைமுடியீருமைவிரும்பிமெய்ந்
நெறியுணர்வோருயர்ந்தோரே. (௭)

திசையவர்தொழுதெழுசிறுகுடிமேவிய
தசமுகனுரநெரித்தீரே
தசமுகனுரநெரித்தீருமைச்சார்பவர்
வசையறுமதுவழிபாடே. (௮)

* சேற்றினின் என்பது செற்றினின் எனக்குறுக்கல்விகாரம்பெற்றது. † நஞ்சு அற்றவர் - மனமுருகி இருவகைப்பற்றுமற்றவர்; "அற்றவர்க்கற்றசோதி" என்புழி அற்றவர் என்பது மதி. ‡ நலதவமே என்றும் பாடம்.

Koviloor Digital Library

செருவரைவயலமர்சிறுகுடிமேவிய
இருவரையசைவுசெய்தீரே
இருவரையசைவுசெய்திருமையெத்துவார்
அருவினையொடுதுயரிலரே. (௯)

செய்த்தலைபுனலணிசிறுகுடிமேவிய
புத்தரோடமண்புறத்தீரே
புத்தரொடமண்புறத்திருமைப்போற்றுதல்
பத்தர்கடம்முடைப்பரிசே. (௧0)

தேனமர்பொழிலணிசிறுகுடிமேவிய
மானமர்கரமுடையீரே
மானமர்கரமுடையிருமைவாழ்த்திய
ஞானசம்பந்தனதமிழே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருச்சிறுகுடித்திருப்பதிகம் - ௧.

ஆ திருப்பதிகம் - ௧௬அ.

சுவாமி தேவி திருநாமங்கள் - மங்களநாதர், மங்களநாயகி.

௬௧. திருவீழிமிழலை.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - நட்டபாடை

திருச்சிற்றம்பலம்.

சடையார்புனலுடையானொருசரிகோவணமுடையான்
படையார்மழுவுடையான்பலபூதப்படையுடையான்
மடமான்விழியுமைமாதிடமுடையானெனையுடையான்
விடையார்கொடியுடையானிடம்வீழிம்மிழலையே. (௧)

ஈறாய்முதலொன்றாயிருபெண்ணாண்குணமூன்றாய்
மாறாமறைநான்காய்வருபூதம்மவையைந்தாய்
ஆறார்சுவையேழோசையொடெட்டுத்திசைதானாய்
வேறாயுடனானானிடம்வீழிம்மிழலையே. (௨)

வம்மின்னடியீர்நான்மலரிட்டுத்தொழுதுய்ய
உம்மன்பினொடெம்மன்புசெய்தீசனுறைகோயில்
மும்மென்றிசைமுரல்வண்டுகள்கெண்டித்திசையெங்கும்
விம்மும்பொழில்சூழ்தண்வயல்வீழிம்மிழலையே. (௩)

Koviloor Digital Library

பண்ணும்பதமேழும்பலவோசைத்தமிழவையும்
உண்ணின்றதோர்சுவையும்முறுதாளத்தொலிபலவும்
மண்ணும்புனலுயிரும்வருகாற்றுஞ்சுடர்மூன்றும்
விண்ணும்முழுதானானிடம்வீழிம்மிழலையே. (௪)

ஆயாதனசமயம்பலவறியாதவனெறியின்
தாயானவனுயிர்கட்குமுன்றலையானவன்மறைமுத்
தீயானவன்சிவனெம்மிறைசெல்வத்திருவாரூர்
மேயானவனுறையும்மிடம்வீழிம்மிழலையே. (௫)

கல்லானிழற்கீழாயிடர்காவாயெனவானோர்
எல்லாமொருதேராயயன்மறைபூட்டிநின்றுய்ப்ப
வல்லா * யெரிகாற்றீர்க்கரிகோல்வாசுகிநாண்கல்
வில்லாலெயிலெய்தானிடம்வீழிம்மிழலையே. (௬)

கரத்தான்மலிசிரத்தான் † கரியுரித்தாயதொர்படத்தான்
புரத்தார்பொடிபடத்தன்னடிபணிமூவர்கட்கோவா
வரத்தான்மிகவளித்தானிடம்வளர்புன்னைமுத்தரும்பி
விரைத்தாதுபொன்மணியீன்றணிவீழிம்மிழலையே. (௭)

முன்னிற்பவரில்லாமுரணரக்கன்வடகயிலை
தன்னைப்பிடித்தெடுத்தான்முடிதடந்தோளிறவூன்றிப்
பின்னைப்பணிந்தேத்தப்பெருவாள்பேரொடுங்கொடுத்த
மின்னிற்பொலிசடையானிடம்வீழிம்மிழலையே. (௮)

பண்டேழுலகுண்டானவைகண்டானு ‡ முன்னறியா
ஒண்டீயுருவானானுறைகோயின்னிறைபொய்கை
வண்டாமரைமலர்மேன்மடவன்னந்நடைபயில
வெண்டாமரைசெந்தாதுதிர்வீழிம்மிழலையே. (௯)

மசங்கற் ¶ சமண்மண்டைக்கையர்குண்டக்குணமிலிகள்
இசங்கும் § பிறப்பறுத்தானிடமிருந்தேன்களித்திரைத்துப்
பசும்பொற்கிளிகளிமஞ்ஞைகளொளிகொண்டெழுபகலோன்
விசும்பைப்பொலிவிக்கும்பொழில்வீழிம்மிழலையே. (௧௦)

வீழிம்மிழலைம்மேவியவிகிர்தன்றனைவிரைசேர்
காழிந்நகர்க்கலைஞானசம்பந்தன்றமிழ்பத்தும்
யாழின்னிசைவல்லார்சொலக்கேட்டாரவரெல்லாம்
ஊழின்மலி 0 வினைபோயிடவுயர்வானடைவாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

* வல்வாய் என்றும் பாடம். † சிவபிரான் நஞ்சைத் திருமிடற்றில் அடக்கியிருத்தலாலும், "பிரமனுதியோர் சிரமெலாந் தொடுத்து அணியலாவணிந்திருத்தலாலும்" கரத்தான் மலிசிரத்தான் என்றார்; கரம் - நஞ்சு. ‡ அவைகண்டான் - அவ்வேழுலகைப்படைத்தபிரமா; கண்டான் வினைப்பெயர்; காணல் - படைத்தல். ¶ மசங்கல் - மயங்கல். § இசங்கல் - இயங்கல். 0 ஊழின்வலி என்றும்பாடம்.

திருவிராகம். பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

தடநிலவியமலைநிறுவியொர்தழலுமிழ்தருபடவரவுகொ
டடலசுரரொடமரர்களலைகடல்கடைவுழியெழுமிகுசின
விடமடைதருமிடறுடையவன்விடைமிசைவருமவனுறைபதி
திடமலிதருமறைமுறையுணர்மறையவர்நிறைதிருமிழலையே. (௧)

தரையொடுதிவி * தலநலிதருதகுதிறலுறுசலதரனது
வரையனதலைவிசையொடுவருதிகிரியையரிபெறவருளினன்
உரைமலிதருசுரநதிமதிபொதிசடையவனுறைபதிமிகு
திரைமலிகடன்மணலணிதருபெறுதிடர்வளர்திருமிழலையே. (௨)

மலைமகடனையிகழ்வதுசெய்தமதியறுசிறுமனவனதுயர்
தலையினொடழலுருவனகரமறமுனிவுசெய்தவனுறைபதி
கலைநிலவியபுலவர்களிடர்களைதருகொடைபயில்பவர்மிகு
சிலைமலிமதில்புடைதழுவியதிகழ்பொழில்வளர்திருமிழலையே. (௩)

மருவலர்புரமெரியினின்மடிதரவொருகணைசெலநிறுவிய
பெருவலியினனலமலிதருகரனுரமிகுபிணமமர்வன
இருளிடையடையுறவொடுநடவிசையுறுபரனினிதுறைபதி
தெருவினில்வருபெருவிழவொலிமலிதரவளர்திருமிழலையே. (௪)

அணிபெறுவடமரநிழலினிலமர்வொடுமடியிணையிருவர்கள்
பணிதரவறநெறிமறையொடுமருளியபரனுறைவிடமொளி
மணிபொருவருமரகதநிலமலிபுனலணைதருவயலணி
திணிபொழிறருமணமதுநுகரறுபதமுரறிருமிழலையே. (௫)

வசையறுவலிவனசரவுருவதுகொடுநினைவருதவமுயல்
விசையனதிறன்மலைமகளறிவுறுதிறலமர்மிடல்கொடுசெய்து
அசைவிலபடையருள்புரிதருமவனுறைபதியதுமிகுதரு
திசையினின்மலர்குலவியசெறிபொழின்மலிதருதிருமிழலையே. (௬)

நலமலிதருமறைமொழியொடுநதியுறுபுனல்புகையொளிமுதல்
மலரவைகொடுவழிபடுதிறன்மறையவனுயிரதுகொளவரு
சலமலிதருமறலிதனுயிர்கெடவுதைசெய்தவரனுறைபதி
திலகமிதெனவுலகுகள்புகழ்தருபொழிலணிதிருமிழலையே. (௭)

அரனுறைதருகயிலையைநிலைகுலைவதுசெய்ததசமுகனது
கரமிருபதுநெரிதரவிரலுறவியகழலடியுடையவன்
வரன்முறையுலகவைதருமலர்வளர்மறையவன்வழிவழுவிய
சிரமதுகொடுபலிதிரிதருசிவனுறைபதிதிருமிழலையே. (௮)

அயனொடுமெழிலமர்மலர்மகண்மகிழ்கணனளவிட †லொழியவொர்
பயமுறுவகைதழனிகழ்வதொர்படியுருவதுவரவரன்முறை
சயசயவெனமிகுதுதிசெயவெளியுருவியவவனுறைபதி
செயநிலவியமதின்மதியதுதவழ்தரவுயர்திருமிழலையே. (௯)

* திவி - சுவர்க்கம். † மகிழ்வணனளவிட என்றும் பாடம்.

Koviloor Digital Library

இகழுருவொடுபறிதலைகொடுமிழிதொழின்மலிசமண்விரகினர்
திகழ்துவருடையுடல்பொதிபவர்கெடவடியவர்மிகவருளிய
புகழுடையிறைபுறைபதிபுனலணிகடல்புடைதழுவியபுவி
திகழ்சுரர்தருநிகர்கொடையினர் * செறிவொடுதிகழ்திருமிழலையே. (க0)

சினமலிகரியுரிசெய்தசிவனுறைதருதிருமிழலையைமிகு
தனமனர்சிரபுரநகரிறைதமிழ்விரகனதுரையொருபதும்
மனமகிழ்வொடுபயில்பவரெழின்மலர்மகள்கலைமகள்சயமகள்
இனமலிபுகழ்மகளிசைதரவிருநிலனிடையினிதமர்வரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

அரையார்விரிகோவணவாடை
நரையார்விடையூர்திநயந்தான்
விரையார்பொழில்வீழிம்மிழலை
உரையாலுணர்வாருயர்வாரே. (க)

புனைதல்புரிபுன்சடைதன்மேல்
கனைதல்லொருகங்கைகரந்தான்
வினையில்லவர்வீழிம்மிழலை
நினைவில்லவர்நெஞ்சமுநெஞ்சே. (உ)

அழவல்லவராடியும்பாடி
எழவல்லவரெந்தையடிமேல்
விழ † வல்லவர்வீழிம்மிழலை
தொழவல்லவர்நல்லவர்தொண்டே. (ங)

உரவம்புரிபுன்சடைதன்மேல்
அரவம்மரையார்த்தவழகன்
விரவும்பொழில்வீழிம்மிழலை
பரவும்மடியாரடியாரே. (ச)

கரிதாகியநஞ்சணிகண்டன்
வரிதாகியவண்டறைகொன்றை
விரிதார்பொழில்வீழிம்மிழலை
உரிதாநினைவாருயர்வாரே. (ரு)

சடையார்பிறையான்சரிபூதப்
படையான்கொடிமேலதொர்பைங்கண்
விடையானுறைவீழிம்மிழலை
அடைவாரடியாரவர்தாமே. (சு)

* தருநிகழ்கொடையினர் என்றும் பாடம். † விழுதல் - வணங்குதல்.

Koviloor Digital Library

செறியார்கழலுஞ்சிலம்பார்க்க
நெறியார்குழலாளொடுநின்றான்
வெறியார்பொழில்வீழிம்மிழலை
அறிவாரவலம்மறியாரே. (௭)

உளையாவலியொல்கவரக்கன்
வளையாவிரலூன்றியமைந்தன்
விளையார்வயல்வீழிம்மிழலை
அளையாவருவாரடியாரே. (௮)

மருள்செய்திருவர்மயலாக
அருள்செய்தவனாரழலாகி
வெருள்செய்தவன்வீழிம்மிழலை
தெருள்செய்தவர்தீவினைதேய்வே. (௯)

துளங்குநெறியாரவர்தொன்மை
வளங்கொள்ளன்மின்புல்லமண்டேரை
விளங்கும்பொழில்வீழிம்மிழலை
உளங்கொள்பவர்தம்வினையோய்வே. (௧0)

நளிர்காழியுண்ஞானசம்பந்தன்
குளிரார்சடையானடிகூற
மிளிரார்பொழில்வீழிம்மிழலை
கிளர்பாடல்வல்லார்க்கிலைகேடே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

இரும்பொன்மலைவில்லாவெரியம்பாநாணில்
திரிந்தபுரமூன்றுஞ்செற்றானுறைகோயில்
தெரிந்தவடியார்கள்சென்றுதிசைதோறும்
விரும்பியெதிர்கொள்வார்வீழிம்மிழலையே. (௧)

வாதைப்படுகின்றவானோர்துயர்தீர
ஓதக்கடனஞ்சையுண்டானுறைகோயில்
கீதத்திசையோடுங்கேள்விக்கிடை* யோடும்
வேதத்தொலியோவாவீழிம்மிழலையே. (௨)

பயிலும்மறையாளன்றலையிற்பலிகொண்டு
துயிலும்பொழுதாடுஞ்சோதியுறைகோயில்
மயிலும்மடமானும்மதியுமிளவேயும்
வெயிலும்பொலிமாதர்† வீழிம்மிழலையே. (௩)

* இடை - வேதமோதும்பள்ளி, வேதமோதும்மாணவர். † போன்மாதர் என்றும் பாடம்.

Koviloor Digital Library

இரவன்பகலோனுமெச்சத்திமையோரை
நிரவிட்டருள்செய்தநிமலனுறைகோயில்
குரவஞ்சுரபுன்னைகுளிர்கோங்கிளவேங்கை
விரவும்பொழிலந்தண்வீழிமிழலையே. (ச)

கண்ணிற்கனலாலேகாமன்பொடியாகப்
பெண்* ணுக்கருள்செய்தபெருமானுறைகோயில்
மண்ணிற்பெருவேள்விவளர்தீப்புகைநாளும்
விண்ணிற்புயல்காட்டும்வீழிமிழலையே. (ரு)

மாலாயிரங்கொண்டுமலர்க்கண்ணிடவாழி
ஏலாவலயத்தோடீந்தானுறைகோயில்
சேலாகியபொய்கைச்செழுநீர்க்கமலங்கள்
மேலாலெரிகாட்டும்வீழிமிழலையே. (சு)

மதியால்வழிபட்டான்வாணாள்கொடுபோவான்
கொதியாவருகூற்றைக்குமைத்தானுறை† கோயில்
நெதியான்மிகுசெல்வர்நித்தநியமங்கள்
விதியானிற்கின்றூர்வீழிமிழலையே. (எ)

எடுத்தான்றருக்கினையிழித்தான்விரலூன்றிக்
கொடுத்தான்வாளாளாக்கொண்டானுறைகோயில்
படித்தார்மறைவேள்வியயின்றூர்பாவத்தை
விடுத்தார்மிகவாழும்வீழிமிழலையே. (அ)

கிடந்தானிருந்தானுங்கீழ்மேல்காணாது
தொடர்ந்தாங்கவரேத்தச்சுடராயவன்கோயில்
படந்தாங்கரவல்குற்பவளத்துவர்வாய்மேல்
விடந்தாங்கியகண்ணார்வீழிமிழலையே. (கூ)

சிக்கார்துவராடைச்சிறுதட்டுடையாரும்
நக்காங்கலர்தூற்றுந்நம்பானுறைகோயில்
தக்கார்மறைவேள்வித்தலையாயுலகுக்கு
மிக்காரவர்வாழும்வீழிமிழலையே. (க0)

மேனின்றிழிகோயில்வீழிமிழலையுள்
ஏனத்தெயிற்றானையெழிலார்பொழிற்காழி
ஞானத்துயர்கின்றநலங்கொள்சம்பந்தன்
வாய்மைத்திவை‡ சொல்லவல்லோர்நல்லோரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

* பெண் - இரதி. † குறைத்தானுறை என்றும் பாடம். ‡ வாய்மெய்த்திவை என்றும், வாய்மெத்திவை என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருவிருக்குக்குறள். பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

வாசிதீரவே
காசுநல்குவீர் *
மாசின்மிழலையீர்
ஏசலில்லையே. (க)

இறைவராயினீர்
மறைகொண்மிழலையீர்
கறைகொள்காசினை
முறைமைநல்குமே. (உ)

செய்யமேனியீர்
மெய்கொண்மிழலையீர்
பைகொளரவினீர்
உய்யநல்குமே. (ங)

நீறுபூசினீர்
ஏறதேறினீர்
கூறுமிழலையீர் †
பேறுமருளுமே. (ச)

காமன்வேவவோர்
தூமக்கண்ணினீர்
நாமமிழலையீர்
சேமநல்குமே. (ரு)

பிணிகொள்சடையினீர்
மணிகொண்மிடறினீர்
அணிகொண்மிழலையீர்
பணிகொண்டருளுமே. (சு)

மங்கைபங்கினீர்
துங்கமிழலையீர்
கங்கைமுடியினீர்
சங்கைதவிர்மினே. (எ)

அரக்கனெரிதர
இரக்கமெய்தினீர்
பரக்குமிழலையீர்
கரக்கைதவிர்மினே. (அ)

அயனுமாலுமாய்
முயலுமுடியினீர்
இயலுமிழலையீர்
பயனுமருளுமே. (கூ)

பறிகொடலையினர்
அறிவதறிகிலார்
வெறிகொண்மிழலையீர்
பிறிவதரியதே. (க0)

காழிமாநகர்
வாழிசம்பந்தன்
வீழிமிழலைமேல்
தாழுமொழிகளே. (கக)

திருச்சிற்றம்பலம்.

ஆளுடையபிள்ளையார் அப்பமூர்த்தியோடும் சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு திருவீழிமிழலையில் இருக்குநாளிலே, மழையின்மையாலும் காவேரிப்பெருக்கு இன்மையாலும் பஞ்சம் உண்டாக; அதனால் உயிர்களெல்லாம் வருத்தமுற்றன. சிவனடியார்களையும் பசிநோய் வருத்திற்று. அது கண்டு, பாலறாவாயராகிய பிள்ளையாரும் அப்பமூர்த்தியும் "சிவபெருமானது விபூதியைத் தரித்த அடியார்களுக்கும் கவலை வருமோ" எனத் திருவுளமிரங்கி, பரமசிவனுடைய திருவடிகளைச் சிந்தித்துக்கொண்டு, அன்றிரவு துயின்றார்கள். துயிலும்போது, பரமசிவன் அவ்விருவருக்கும் சொப்பனத்திலே தோன்றி, "காலபேதத்தினாலே நீங்கள் மனவாட்டம் அடையீர்களாயினும், உங்களை வழிபடுகின்ற அடியார்களுடைய வருத்தத்தை நீக்கும்பொருட்டு, இப்பஞ்சம் நீங்கும்வரைக்கும் நாம் தினந்தோறும் திருக்கோயிலின் கிழக்குப்பீடத்திலும் மேற்குப்பீடத்திலும் ஒவ்வொரு காசு உங்களுக்குத்தருகின்றோம்" என்று சொல்லி, மறைந்தருளினார். பிள்ளையார் விழித்தெழுந்து, திருவருளைத் துதித்து, அப்பமூர்த்தியோடு திருக்கோயிலிற் புகுந்தபோது,

* நல்குவீர் என்றும், நல்கியர் என்றும் பாடம். † கூறுமுறையினீர் என்றும், கூறுமையினீர் என்றும் பாடம்.

Koviloor Digital Library

கிழக்குப்பீடத்திலே காசு இருத்தலைக் கண்டு, விருப்பத்தோடுந்தொழுது, அதனை எடுத்து, "நாடோறும் சிவனடியார்களெல்லாரும்வந்து அமுதுசெய்யக்கடவர்கள்" என்று இரண்டுகாலங்களிலும் பறைசாற்றித் தெரிவித்து, தம்முடைய திருமடத்தில் வரும் அடியார்களுக்குக் கறி நெய் பால். தயிரோடு அன்னம் இட்டுக்கொண்டிருந்தார். அப்பமூர்த்தியும் மேற்குப்பீடத்தில் வைக்கப்படும் காசை எடுத்து, அப்படியே அடியார்களைத் திருவமுது செய்வித்தார். இப்படி நிகழுநாளிலே, பிள்ளையார், அப்பமூர்த்தியுடைய திருமடத்திலே அடியார்கள் காலம்பெறத் திருவமுதுசெய்தலைக் கண்டு, தம்முடைய திருமடத்திற் பாகுகர்களை நோக்கி, "நீங்கள் காலம்பெற அமுதுபாகம்பண்ணி இங்கே வரும் அடியார்களுக்குக் கொடாமைக்குக் காரணம்யாது" என்று வினவியருளினர். பாகுகர்கள் பாலறுவாயரை வணங்கிநின்று, "சுவாமீ! தேவரீர் கடவுளிடத்திற் பெறும் படிக்காசைத் தினந்தோறும் பண்டம் வாங்குதற்குக் கொண்டுபோனால் அதற்கு வாசி கேட்கின்றார்கள். அப்பமூர்த்தி பெற்றகாசையோ வாசியின்றி ஏற்றுக்கொள்கின்றார்கள். இதினாலே காலந்தாழ்க்கின்றது" என்றார்கள். பிள்ளையார் அதைக்கேட்டு, அப்பமூர்த்தி கைத்தொண்டு செய்தலால் அவர் பெறுங்காசு வட்டமின்றி ஏற்கப்படுகின்றது என்று சிந்தித்து, "இனி வரும் நாட்களிலே தருங்காசு வாசிதீரும்பொருட்டுப் பாடுவேன்" எனத் திருவுளங்கொண்டார். மற்றநாள் திருக்கோயிலிலே புகுந்து, பரமசிவனை வணங்கி, "வாசி தீரவே—காசு நல்குவீர்—மாசின் மிழலையீர்—ஏச லில்லையே" என்னுந் திருப்பதிகம்பாடி, நற்காசுபெற்றார்.

திருவிராகம். பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

அலர்மகன்மலிதரவவனியினிகழ்பவர்
மலர்மலிகுழலுமைதனையிடமகிழ்பவர்
நலமலியுருவுடையவர்நகர்மிகுபுகழ்
நிலமலிமிழலையைநினையவலவரே. (௧)

இருநிலமிதன்மிசையெழில்பெறுமுருவினர்
கருமலிதருமிகுபுவிமுதலுலகினில்
இருளறுமதியினரிமையவர்தொழுதெழு
நிருபமன்மிழலையைநினையவலவரே. (௨)

கலைமகடலை* மகனிவனெனவருபவர்
அலைமலிதருபுனலரவொடுநகுதலை
இலைமலியிதழியுமிசைதருசடையினர்
நிலைமலிமிழலையைநினையவலவரே. (௩)

மாடமர்சனமகிழ்தரு† மனமுடையவர்
காடமர்கழுதுகளவைமுழவொடுமிசை
பாடலினவில்பவர்மிகுதருமுலகினில்
நீடமர்மிழலையைநினையவலவரே. (௪)

புகழ்மகடுணையினர்புரிகுழலுமைதனை
இகழ்வுசெய்தவனுடையெழின்மறைவழிவளர்
முகமதுசிதைதரமுனிவுசெய்தவன்மிகு
நிகழ்தருமிழலையைநினையவலவரே. (௫)

* தலைமகடலை என்றும் பாடம். † மகிழ்தர என்றும் பாடம்.

Koviloor Digital Library

அன்றினரரியெனவருபவரரிதினில்
ஒன்றியதிரிபுரமொருநொடியினிலெரி
சென்றுகொள்வகைசிறுமுறுவல்கொடொளிபெற
நின்றவன்மிழலையைநினையவல்லவரே. (௬)

காம்பயில்கொடையினர்கடிமலரயனதோர்
சிரம்பயில்வறவெறிசிவனுறைசெழுநகர்
வாம்பயில்கலைபலமறைமுறையறநெறி*
நிரம்பினர்மிழலையைநினையவல்லவரே. (௭)

ஒருக்கியவுணர்வினொடொளிநெறிசெலுமவர்
அரக்கனன்மணிமுடியொருபதுமிருபது
கரக்கனநெரிதரமலரடிவிரல்கொடு
நெருக்கினன்மிழலையைநினையவல்லவரே. (௮)

அடியவர்குழுமிடவவனியினிகழ்பவர்
கடிமலரயனரிகருதருவகைதழல்
வடிவுருவியல்பினொடுலகுகணிறைதரு
நெடியவன்மிழலையைநினையவல்லவரே. (௯)

மன்மதனெனவொளிபெறுமவர்மருதமர்
வன்மலர்துவருடையவர்களுமதியிலர்
துன்மதியமணர்கடொடர்வருமிகுபுகழ்
நின்மலன்மிழலையைநினையவல்லவரே. (௧௦)

நித்திலன்மிழலையைநிகரிலிபுகலியுள்
வித்தகமறைமலிதமிழ்விரகனமொழி
பத்தியில்வருவனபத்திவைபயில்வொடு
கற்றுவல்லவருலகினிலடியவரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

பண் - மேகராகக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

ஏரிசையும்வடவாலின்கீழிருந்தங்கிருவர்க்கிரங்கிநின்று
நேரியநான்மறைப்பொருளையுரைத்தொளிசேர்நெறியளித்தோனின்றகோயில்
பாரிசையும்பண்டிதர்கள்பன்னாளும்பயின்றோதுமோசைகேட்டு
வேரிமலிபொழிற்கிள்ளைவேதங்கள்பொருட்சொல்லுமிழலையாமே. (௧)

பொறியரவமதுசுற்றிப்பொருப்பேமத்தாகப்புத்தேளிர்கூடி
மறிகடலைக்கடைந்திட்டவிடமுண்டகண்டத்தோன்மன்னுங்கோயில் [செந்நெல்
செறியிதழ்த்தாமரைத்† தவிசிற்றிகழ்ந்தோங்குமிலைக்குடைக்கீழ்ச்செய்யார்
வெறிகதிர்ச்சாமரையிரட்டவிளவன்னம்வீற்றிருக்குமிழலையாமே. (௨)

* யறிநெறி என்றும் பாடம். † செறிவிதட்டாமரைத் என்றும் பாடம்.

Koviloor Digital Library

எழுந்துலகைநலிந்துழலுமவுணர்கடம்புரமூன்றுமெழிற்கணாடி [யில்
உழுந்துருளுமளவையினொள்ளெரிகொளவெஞ்சிலைவளைத்தோனுறையுங்கோ
கொழுந்தரளநகைகாட்டக்கோகநதமுகங்காட்டக்குதித்துநீர்மேல்
விழுந்தகயல்விழிகாட்டவிற்பவளம்வாய்காட்டுமிழலையாமே. (௩)

உரைசேரு* மெண்பத்துநான்குநூறாயிரமாம்யோனிபேத
நிரைசேரப் † படைத்தவற்றினுயிர்க்குயிராயங்கங்கேநின்றான்கோயில்
வரைசேரு ‡ முகின்முழவமயில்கள்பலநடமாடவண்டுபாட
விரைசேர் ¶ பொன்னிதழிதரமென்காந்தள்கையேற்குமிழலையாமே. (௪)

காணுமாறரியபெருமானாகிக்காலமாய்க்குணங்கண்மூன்றாய்ப்
பேணுமூன்றுருவாகிப்பேருலகம்படைத்தளிக்கும்பெருமான் § கோயில்
தாணுவாய்நின்றபரதத்துவனையுத்தமனையிறைஞ்சிரென்று
வேணுவார்கொடிவிண்ணோர்தமைவிளிப்பபோலோங்குமிழலையாமே. (௫)

அகனமர்ந்தவன்பினராயறுபகைசெற்றைம்புலனுமடக்கிஞானம்
புகலுடையோர்தம்முள்ளப்புண்டரிகத்துள்ளிருக்கும்புராணர்கோயில்
தகவுடைநீர்மணித்தலத்துச்சங்குளவர்க்கந்திகழச்சலசத்தீயுள்
மிகவுடையபுன்குமலர்ப்பொரியட்டமணஞ்செய்யுமிழலையாமே. (௬)

ஆறாடுசடைமுடியனனலாடுமலர்க்கையனிமயப்பாவை
கூறாடுதிருவுருவன்கூத்தாடுங்குணமுடையோன்குளிருங்கோயில்
சேறாடுசெங்கழுநீர்த்தாதாடிமதுவுண்டுசிவந்தவண்டு
வேறாயவுருவாகிச்செவ்வழிநற்பண்பாடுமிழலையாமே. (௭)

கருப்பமிகுமுடலடர்த்துக்காலூன்றிக்கைமறித்துக்கயிலையென்னும்
பொருப்பெடுக்கலுறுமரக்கன்பொன்முடிதோணெரித்தவிறற்புனிதர்கோயில்
தருப்பமிகுசலந்தரன்றனுடறடிந்தசக்கரத்தைவேண்டியீண்டு
விருப்பொடுமால்வழிபாடுசெய்யவிழிவிமானஞ்சேர்மிழலையாமே. (௮)

செந்தளிர்மாமலரோனுந்திருமாலுமேனமோடன்னமாகி
அந்தமடிகாணாதேயவரேத்தவெளிப்பட்டோனமருங்கோயில்
புந்தியினான்மறைவழியேபுற்பரப்பிநெய்சமிதைகையிற்கொண்டு
வெந்தழலின்வேட்டுலகின்மிகவளிப்போர்சேருமூர்மிழலையாமே. (௯)

எண்ணிறந்தவமணர்களுமிழிதொழில்சேர்சாக்கியருமென்றுந்தன்னை
நண்ணரியவகைமயக்கித்தன்னடியார்க்கருள்புரியுநாதன்கோயில்
பண்ணமருமென்மொழியார்பாலகரைப்பாராட்டுமோசைகேட்டு
விண்ணவர்கள்வியப்பெய்திவிமானத்தோடும்மிழியுமிழலையாமே. (௧௦)

மின்னியலுமணிமாடமிடைவீழிமிழலையான்விரையார்பாதம்
சென்னிமிசைக்கொண்டொழுகுஞ்சிரபுரக்கோன்செழுமறைகள்பயிலுநாவன்
பன்னியசீர்மிகுஞானசம்பந்தன்பரிந்துரைத்தபத்துமேத்தி
இன்னிசையாற்பாடவல்லாரிருநிலத்திலீசனெனுமியல்பினோரே. ० (௧௧)

திருச்சிற்றம்பலம்.

* உரைச்சேரு, † நிரைச்சேரப், ‡ வரைச்சேரு, ¶ விரைச்சேர் என்றும் பாடம். § பெம்மான் என்றும் பாடம். ० இத்திருப்பதிகத்தில் மூன்றாந்திருப்பாட்டு நான்காந் திருப்பாட்டாகவும் நான்காவது மூன்றாவதாகவும் சில பிரதிகளில் காணப்படுகின்றன.

Koviloor Digital Library

பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

கேள்வியர்நாடொறுமோதுநல்வேதத்தர்கேடிலா
வேள்விசெயந்தணர்வேதியர்வீழிமிழலையார்
வாழியர்தோற்றமுங்கேடும்வைப்பாருயிர்கட்கெலாம்
ஆழியர்தம்மடிபோற்றியென்பார்கட்கணியரே. (க)

கல்லினற்பாவையொர்பாகத்தர்காதலித்தேத்திய
மெல்லினத்தார்பக்கன்மேவினர்வீழிமிழலையார்
நல்லினத்தார்செய்தவேள்விசெகுத்தெழுஞாயிற்றின்
பல்லினைத்துந்தகர்த்தாரடியார்பாவநாசரே. (உ)

நஞ்சினையுண்டிருள்கண்டர்பண்டந்தகனைச்செற்ற
வெஞ்சினமூவிலைச்சூலத்தர்வீழிமிழலையார்
அஞ்சனக்கண்ணுமைபங்கினர்கங்கையங்காடிய
மஞ்சனச்செஞ்சடையாரெனவல்வினைமாயுமே. (ங)

கலையிலங்கும்மழுகட்டங்கங்கண்டிகைகுண்டலம்
விலையிலங்கும்மணிமாடத்தர்வீழிமிழலையார்
தலையிலங்கும்பிறைதாழ்வடஞ்சூலந்தமருகம்
அலையிலங்கும்புனலேற்றவர்க்கும்மடியார்க்குமே. (ச)

பிறையுறுசெஞ்சடையார்விடையார்பிச்சைநச்சியே
வெறியுறுநாட்பலிதேர்ந்துழல்வீழிமிழலையார்
முறைமுறையாலிசைபாடுவாராடிமுன்றொண்டர்கள்
இறையுறைவாஞ்சியமல்லதெப்போதுமென்னுள்ளமே. (ரு)

வசையறுமாதவங்கண்டுவரிசிலைவேடனாய்
விசையனுக்கன்றருள்செய்தவர்வீழிமிழலையார்
இசைவரவிட்டியல்கேட்பித்துக்கல்லவடமிட்டுத்
திசைதொழுதாடியும்பாடுவார்சிந்தையுட்சேர்வரே. (சூ)

சேடர்விண்ணோர்கட்குத்தேவர்நன்மூவிருதொன்னூலர்
வீடர்முத்தியர்நால்வேதத்தர்வீழிமிழலையார்
காடரங்காவுமைகாணவண்டத்திமையோர்தொழ
நாடகமாடியையேத்தவல்லார்வினைநாசமே. (எ)

எடுத்தவன்மாமலைக்கிழவிராவணன்வீழ்தர
விடுத்தருள்செய்திசைகேட்டவர்வீழிமிழலையார்
படுத்துவெங்காலனைப்பால்வழிபாடுசெய்பாலற்குக்
கொடுத்தனரின்பங்கொடுப்பர்தொழக்குறைவில்லையே. (அ)

நிக்கமர்நான்முகன்மாலண்டமண்டலந்தேடிட
மிக்கமர்தீத்திரளாயவர்வீழிமிழலையார்
சொக்கமதாடியும்பாடியும்பாரிடஞ்சூழ்தரும்
நக்கர்தந்நாமநமச்சிவாயவென்பார்நல்லரே. (கூ)

Koviloor Digital Library

துற்றரையார்துவராடையர்துப்புரவொன்றிலா
வெற்றரையாரறியாநெறிவீழிமிழலையார்
சொற்றெரியாப்பொருள்சோதிக்கப்பானின்றசோதிதான்
மற்றறியாவடியார்கடஞ்சிந்தையுண்மன்னுமே. (க0)

வேதியர்கைதொழுவீழிமிழலைவிரும்பிய
ஆதியைவாழ்பொழிற்காழிபுண்ஞானசம்பந்தனுய்ந்
தோதியவொண்டமிழ்பத்திவைபுற்றுரைசெய்பவர்
மாதியல்பங்கன்மலரடிசேரவும்வல்லரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவிராகம். பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

சீர்மருவுதேசினொடுதேசமலிசெல்வமறையோர்கள்பணியத்
தார்மருவுகொன்றையணிதாழ்சடையினனமர்சயங்கொள்பதிதான்
பார்மருவுபங்கயமுயர்ந்தவயல்சூழ்பழனநீடவருகே
கார்மருவுவெண்கனக* மாளிகைகவின்பெருகுவீழிநகரே. (க)

பட்டமுழவிட்டபணிலத்தினொடுபன்மறைகளோதுபணிநல்
சிட்டர்கள் † சயத்துதிகள்செய்யவருள்செய்தழல்கொண்மேனியவனூர்
மட்டுலவுசெங்கமலவேலிவயல்செந்நெல்வளர்மன்னுபொழில்வாய்
விட்டுலவுதென்றல்விரைநாறுபதிவேதியர்கள்வீழிநகரே. (உ)

மண்ணிழிசுரர்க்குவளமிக்கபதிமற்றுமுளமன்னுயிர்களுக்
கெண்ணிழிவிலின்பநிகழ்வெய்தவெழிலார்பொழிலிலங்கறுபதம்
பண்ணிழிவிலாதவகைபாடமடமஞ்ஞைநடமாடவழகார்
விண்ணிழிவிமானமுடைவிண்ணவர்பிரான்மருவுவீழிநகரே. (ங)

செந்தமிழர்தெய்வமறைநாவர்செழுநற்கலைதெரிந்தவவரோ
டந்தமில்குணத்தவர்களர்ச்சனைகள்செய்யவமர்கின்றவரனூர்
கொந்தலர்பொழிற்பழனவேலிகுளிர்தண்புனல்வளம்பெருகவே
வெந்திறல்விளங்கிவளர்வேதியர்விரும்புபதிவீழிநகரே. (ச)

பூதபதியாகியபுராணமுனிபுண்ணியநன்மாதைமருவிப்
பேதமதிலாதவகைபாகமிகவைத்தபெருமானதிடமாம்
மாதவர்களன்னமறையாளர்கள்வளர்த்தமலிவேள்வியதனல்
ஏதமதிலாதவகையின்பமமர்கின்றவெழில்வீழிநகரே. (ரு)

மண்ணின்மறையோர்மருவுவைதிகமுமாதவமுமற்றுமுலகத்
தெண்ணில்பொருளாயவைபடைத்தவிமையோர்கள்பெருமானதிடமாம்
நண்ணிவருநாவலர் ‡ கணொடாறும்வளர்க்குநிகழ்கின்றபுகழ்சேர்
விண்ணுலவுமாளிகைநெருங்கிவளர்நீள்புரிசைவீழிநகரே. (சு)

* வெண்களப என்றும் பாடம். † சட்டர்கள் என்றும் பாடம்; சட்ட - செப்பம்.
‡ நாவலர் - புலவர்; அது "கவிகள் புலவர் கவிஞர் நாவலர்" என்னும் சூத்திரத்தாலுணர்க.

Koviloor Digital Library

மந்திரநன்மாமறையினோடுவளர்வேள்விமிசைமிக்கபுகைபோய்
அந்தரவிசும்பணவியற்புதமெனப்படருமாழியிருள்வாய்
மந்தரநன்மாளிகைநிலாவுமணிநீடுகதிர்விட்டவொளிபோய்
வெந்தழல்விளக்கெனவிரும்பினர்திருந்துபதிவீழிநகரே. (எ)

ஆனவலியிற்றசமுகன்றலையரங்க* வணியாழிவிரலால்
ஊனமருயர்ந்தருநதிப்புனலில்வீழ்தரவுணர்ந்தபரனூர்
தேனமர்திருந்துபொழில்செங்கனகமாளிகைதிகழ்ந்தமதிளோ
டானதிருவுற்றுவளரந்தணர்நிறைந்தவணிவீழிநகரே. (அ)

ஏனவுருவாகிமண்டைந்தவிமையோனுமெழிலன்னவுருவம்
ஆனவனுமாதியினொடந்தமறியாதவழன்மேனியவனூர்
வானணவுமாமதின்மருங்கலர்நெருங்கியவளங்கொள்பொழில்வாய்
வேனலமர் † வெய்திடவிளங்கொளியின்மிக்கபுகழ்வீழிநகரே. (கூ)

குண்டமணராகியொருகோலமிகுபீலியொடுகுண்டிகைபிடித்
தெண்டிசையுமில்லதொருதெய்வமுளதென்பரதுவென்னபொருளாம்
பண்டையயனன்னவர்கள்பாவனைவிரும்புபரன்மேவுபதிசீர்
வெண்டரளவாணகைநன்மாதர்கள்விளங்குமெழில்வீழிநகரே. (கo)

மத்தமலிகொன்றைவளர்வார்சடையில்வைத்தபரன்வீழிநகர்சேர்
வித்தகனைவெங்குருவில்வேதியன்விரும்புதமிழ்மாலைகள்வலார்
சித்திரவிமானமமர்செல்வமலிகின்றசிவலோகமருவி
அத்தகுகுணத்தவர்களாகியனுபோகமொடியோகம்மவராதே. ‡ (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவிராகம். பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

மட்டொளிவிரிதருமலர்நிறைசுரிகுழன்மடவரல்
பட்டொளிமணியல்குலுமைபமையுருவொருபாகமாக்
கட்டொளிர்புனலொடுகடியரவுடனுறைமுடிமிசை
விட்டொளிபுதிர்பிதிர்மதியவர்பதிவிழிமிழலையே. ¶ (க)

ஒண்ணிற § வரிவளைநெறிகுழலெழின்மொழியிளமுலைப்
பெண்ணுறுமுடலினர்பெருகியகடல்விடமிடறினர்
கண்ணுறுநுதலினர்கடியதொர்விடையியினர்கனலினர்
விண்ணுறுபிறையணிசடையினர்பதிவிழிமிழலையே. (உ)

மைத்தகுமதர்விழிமலைமகளுருவொருபாகமா
வைத்தவர்மதகரியுரிவை0 செய்தவர்தமைமருவினோர்
தெத்தெனவிசைமுரல்சரிதையர்திகழ்தருமாவினர் 00
வித்தகநுதலையுடையவரிடம்விழிமிழலையே. (ங)

* அரங்கல் - அழிதல். † வேணமலர் என்றும், வேணன்மலர் என்றும் பாடம். ‡ யோகரவரே என்றும், யோகவாதே என்றும் பாடம். ¶ வீழிமிழலையே என்பதுமொன்று. § ஒண்ணிற என்றும் பாடம். 0 உரிவை தொழிற்பெயர், உரித்தலைச்செய்தவரென்க. 00 திகடருமாவினர் என்றும் பாடம்.

Koviloor Digital Library

செவ்வழலெனநனிபெருகியவுருவினர்செறிதரு
கவ்வழலரவினர்கதிர்முதிர்மழுவினர்தொழுவிலா *
முவ்வழனிசிசரர்விறலவையழிதரமுதுமதில்
வெவ்வழல்கொளநனிமுனிபவர்பதிவிழிமிழலையே. (௪)

பைங்கணதொருபெருமழலைவெளேற்றினர்பலியெனு
எங்கணுமுழிதர்வரிமையவர்தொழுதெழுமியல்பினர்
அங்கணரமரர்களடியிணைதொழுதெழவாரமா †
வெங்கணவரவினருறைதருபதிவிழிமிழலையே. (௫)

பொன்னனபுரிதருசடையினர்பொடியணிவடிவினர்
உன்னினர்வினையவைகளைதலைமருவியவொருவனர்
தென்னெனவிசைமுரல்சரிதையர்திகழ்தருமார்பினில்
மின்னெனமிளிர்வதொரரவினர்பதிவிழிமிழலையே. (௬)

அக்கினொடரவரையணிதிகழொளியதொராமைபூண்
டிக்குகமலிதலைகலனெனவிடுபலியேகுவர்
கொக்கரைகுழன்முழவிழவொடுமிசைவதொர்சரிதையர்
மிக்கவருறைவதுவிரைகமழ்பொழில்விழிமிழலையே. (௭)

பாதமொர்விரலுறமலையடர்பலதலைநெரிதரப்
பூதமொடடியவர்புனைகழறொழுதெழுபுகழினர்
ஓதமொடொலிதிரைபடுகடல்விடமுடைமிடறினர்
வேதமொடுறுதொழின்மதியவர்பதிவிழிமிழலையே. (௮)

நீரணிமலர்மிசையுறைபவனிறைகடலுறுதுயில்
நாரணனெனவிவரிருவருநறுமலரடிமுடி
ஓருணர் ‡ வினர்செலலுறலருமுருவினொடொளிதிகழ்
வீரனருறைவதுவெறிகமழ்பொழில்விழிமிழலையே. (௯)

இச்சையரினிதெனவிடுபலிபடுதலைமகிழ்வதோர்
பிச்சையர்பெருமையையிறைபொழுதறிவெனவுணர்விலர்
மொச்சையவமணருமுடைபடுதுகிலருமழிவதோர்
விச்சையருறைவதுவிரைகமழ்பொழில்விழிமிழலையே. (௰)

உன்னியவருமறையொலியினைமுறைமிகுபாடல்செய்
இன்னிசையவருறையெழிறிகழ்பொழில்விழிமிழலையை
மன்னியபுகலியுண்ஞானசம்பந்தனவண்டமிழ்
சொன்னவர்துயரிலர்வியனுலகுறுகதிபெறுவரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

* தொழுவிலா - தொழுதலில்லாத; தொழு - முதனிலைத்தொழிற்பெயர்; தொழுவிலாநிசிசரர் எனக்கூட்டுக. † தெழுவாரமர் என்றும் பாடம். ‡ ஓருணர்வு வினைத்தொகை; அடிமுடியை அறியவேண்டுமென்னுங்கருத்தினர் என்க.

Koviloor Digital Library

திருமுக்கால். பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

வெண்மதிதவழ்மதின்மிழலையுளீர்சடை
ஒண்மதியணியுடையீரே
ஒண்மதியணியுடையீருமையுணர்பவர்
கண்மதிமிகுவதுகடனே. (௧)

விதிவழிமறையவர்மிழலையுளீர்நடம்
சதிவழிவருவதொர்சதிரே
சதிவழிவருவதொர்சதிருடையீருமை
அதிகுணர்புகழ்வதுமழகே. (௨)

விரைமலிபொழிலணிமிழலையுளீரொரு
வரைமிசையுறைவதும்வலதே
வரைமிசையுறைவதொர்வலதுடையீருமை
உரைசெயுமவைமறையொலியே. (௩)

விட்டெழில்பெறுபுகழ்மிழலையுளீர்கையில்
இட்டெழில்பெறுகிறதெரியே
இட்டெழில்பெறுகிறதெரியுடையீர்புரம்
அட்டதுவரைசிலையாலே. (௪)

வேனிகர்கண்ணியர்மிழலையுளீர்நல
பானிகருருவுடையீரே
பானிகருருவுடையீருமதுடனுமை
தான்மிகவுறைவதுதவமே. (௫)

விரைமலிபொழிலணிமிழலையுளீர்சென்னி
நிரையுறவணிவதுநெறியே
நிரையுறவணிவதொர்நெறியுடையீருமதரையுறவணிவனவரவே. (௬)

விசையுறுபுனல்வயன்மிழலையுளீரர
வசையுறவணிவுடையீரே
அசையுறவணிவுடையீருமையறிபவர்
நசையுறுநாவினர்தாமே. (௭)

விலங்கலொண்மதிளணிமிழலையுளீரன்றவ்
இலங்கைமனிடர்கெடுத்தீரே
இலங்கைமனிடர்கெடுத்தீருமையேத்துவார்
புலன்களைமுனிவதுபொருளே. (௮)

வெற்பமர்பொழிலணிமிழலையுளீருமை
அற்புதனயனறியானே
அற்புதனயனறியாவகைநின்றவ *
நற்பதமறிவதுநயமே. (௯)

* நின்றவன் என்றும் பாடம்.

Koviloor Digital Library

வித்தகமறையவர்மிழலையுளீரன்று
புத்தரொடமணழித்தீரே
புத்தரொடமணழித்தீருமைப்போற்றுவார்
பத்திசெய்மனமுடையவரே. (க0)

விண்பயில்பொழிலணிமிழலையுளீசனைச்
சண்பையுண்ஞானசம்பந்தன
சண்பையுண்ஞானசம்பந்தனதமிழிவை
ஒண்பொருளுணர்வதுமுணர்வே. (கக)

திருச்சிற்றம்பலம்.

ஈ ர டி.

திருச்சிற்றம்பலம்.

வேலினேர்தருகண்ணினளுமைபங்கனங்கணன்மிழலைமாநகர்
ஆலநீழலின்மேவினானடிக்கன்பர்துன்பிலரே. (க)

விளங்குநான்மறைவல்லவேதியர்மல்குசீர்வளர்மிழலையானடி
உளங்கொள்வார்தமையுளங்கொள்வார்வினையொல்லையாசறுமே. (உ)

விசையினோடெழுபசையுநஞ்சினைபசைவுசெய்தவன்மிழலைமாநகர்
இசையுமீசனைநசையின்மேவினான்மிசைசெயாவினையே. (ந)

வென்றிசேர்கொடிமூடுமாமதிண்மிழலைமாநகர்மேவிநாடொறும்
நின்றவாதிதன்னடிநினைப்பவர்துன்பமொன்றிலரே. (ச)

போதகந்தனையுரிசெய்தோன்புயனேர்வரும்பொழின்மிழலைமாநகர்
ஆதரஞ்செய்தவடிகள்பாதமலாலொர்பற்றிலமே. (ரு)

தக்கன்வேள்வியைச்சாடினார்மணிதொக்கமாளிகைமிழலைமேவிய
நக்கனாரடிதொழுவர்மேல்வினைநாடொறுங்கெடுமே. (சா)

போரணவுமுப்புரமெரித்தவன்பொழில்கள்சூழ்தருமிழலைமாநகர்ச்
சேருமீசனைச்சிந்தைசெய்பவர்தீவினைகெடுமே. (எ)

இரக்கமில்தொழி* லரக்கனுருடனெருக்கினான்மிகுமிழலையானடி
சிரக்கொள்பூவெனவொருக்கினார்புகழ்பாக்குநீள்புவியே. (அ)

துன்றுபூமகன்பன்றியானவனொன்றுமோர்கிலாமிழலையானடி
சென்றுபூம்புனனின்றுதூவினார்நன்றுசேர்பவரே. (கூ)

புத்தர்கைச்சமண்பித்தர்பொய்க்குவைவைத்தவித்தகன்மிழலைமாநகர்
சித்தம்வைத்தவரித்தலத்தினுண்மெய்த்தவத்தவரே. (க0)

சந்தமார்பொழின்மிழலையீசனைச்சண்பைஞானசம்பந்தன்வாய்நவில்
பந்தமார்தமிழ்பத்தும்வல்லவர்பத்தராகுவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

* இல்தொழில் - இல்லாததொழில்.

Koviloor Digital Library

திருவியமகம்.

திருச்சிற்றம்பலம்.

துன்றுகொன்றைநஞ்சடையதேதூயகண்டநஞ்சடையதே
கன்றின்மானிடக்கையதேகல்லின்மானிடக்கையதே
என்றுமேறுவதிடவமேயென்னிடைப்பலியிடவமே
நின்றதும்மிழலையுள்ளுமேநீரெனைச்சிறிதுமுள்ளுமே. (க)

ஒதிவாயதும்மறைகளேயுரைப்பதும்பலமறைகளே
பாதிகொண்டதும்மாதையேபணிகின்றேன்மிகுமாதையே
காதுசேர்கனங்குழையரேகாதலார்கனங்குழையரே
விதிவாய்மிகும்வேதியாமிழலைமேவியவேதியா. (உ)

பாடுகின்றபண்டாரமேபத்தரன்னபண்டாரமே
சூடுகின்றதுமத்தமேதொழுதவென்னையுன்மத்தமே
நிடுசெய்வதுந்தக்கதேநின்னரைத்திகழ்ந்தக்கதே
நாடுசேர்மிழலையூருமேநாகநஞ்சழலையூருமே. (௩)

கட்டுகின்றகழனாகமேகாய்ந்ததும்மதனனாகமே
இட்டமாவதிசைபாடலேயிசைந்தநூலினமர்பாடலே
கொட்டுவான்முழவம்வாணனேகுலாயசீர்மிழலைவாணனே
நட்டமாடுவதுசந்தியேநானுய்ப்தற்கிரவுசந்தியே. (௪)

ஒ*விலாதிடுங்கரணமேயுன்னுமென்னுடைக்கரணமே
எவுசேர்வுநின்னாணையேயருளினின்ன †பொற்றுணையே
பாவியாதுரைமெய்யிலேபயின்றநின்னடிமெய்யிலே
மேவினான்விறற்கண்ணனேமிழலைமேயமுக்கண்ணனே. (௫)

வாய்ந்தமேனியெரிவண்ணமேமகிழ்ந்துபாடுவதுவண்ணமே
காய்ந்துவீழ்ந்தவன்காலனேகடுநடஞ்செயுங்காலனே
போந்ததெம்மிடையிரவிலேயும்மிடைக்கள்வமிரவிலே
யேய்ந்ததும்மிழலையென்பதேவிரும்பியேயணிவதென்பதே. (௬)

அப்பியன்றகண்ணயனுமேயமரர்கோமகனுமயனுமே
ஒப்பிலின்றமரர்தருவதேயொண்கையாலமரர்தருவதே
மெய்ப்பயின்றவிருக்கையேமிழலையூருமதிருக்கையே
செப்புமின்னெருதுமேயுமேசேர்வுமக்கெருதுமேயுமே. (௭)

தானவக்குலம்விளக்கியேதாரகைச்செலவிளக்கியே
வானடர்த்தகயிலாயமேவந்துமேவுகயிலாயமே
தானெடுத்தவல்லரக்கனேதடமுடித்திரளரக்கனே
மேனடைச்செலவிருப்பனேமிழலைநற்பதிவிருப்பனே. (௮)

காயமிக்கதொருபன்றியேகலந்தநின்னவுருபன்றியே
ஏயவிப்புவிமயங்கவேயிருவர்தாமனமயங்கவே
தூயமெய்த்திரளகண்டனேதோன்றிநின்றமணிகண்டனே
மேயவித்துயில்விலக்கணாமிழலைமேவியவிலக்கணா. (௯)

* ஒவு முதனிலைத்தொழிற்பெயர். † ஏவுசேர்நின்னாணையேயிருளினின்ன என்றும்பாடம்.

Koviloor Digital Library

கஞ்சியைக்குலவுகையரேகலக்கமாரமணர்கையரே
அஞ்சவாதிலருள்செய்யநீயணைந்திடும்பரிசுசெய்யநீ
வஞ்சனேவரவும்வல்லையேமதித்தெனைச்சிறிதும்வல்லையே
வெஞ்சலின்றிவருவித்தகாமிழலைசேரும்விறல்வித்தகா. (க0)

மேயசெஞ்சடையினப்பனேமிழலைமேவியவெனப்பனே
ஏயுமாசெயவிருப்பனேயிசைந்தவாசெயவிருப்பனே
காயவர்க்கசம்பந்தனேகாழிஞானசம்பந்தனே
வாயுரைத்ததமிழ்பத்துமேவல்லவர்க்குமிவைபத்துமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பண் - புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

புள்ளித்தோலாடைபூண்பதுநாகம்பூசுசாந்தம்பொடிநீறு
கொள்ளித்தீவிளக்குக்கூளிகள்கூட்டங்காளியைக்குணஞ்செய்கூத்துடையோன்
அள்ளற்காராமையகடுவான்மதியமேய்க்கமுட்டாழைகளானை
வெள்ளைக்கொம்பீனும்விரிபொழில்வீழிமிழலையானெனவினைகெடுமே. (க)

இசைந்தவாறடியாரிடுதுவல்வானோரிழுகுசந்தனத்திளங்கமலப்
பசும்பொன்வாசிகைமேற்பரப்புவாய்கரப்பாய்பத்திசெய்யாதவர்பக்கல்
அசும்புபாய்கழனி* யலர்கயன்முதலோடடுத்தரிந்தெடுத்தவான்சும்மை
விசும்புதூர்ப்பனபோல்விம்மியவீழிமிழலையானெனவினைகெடுமே. (உ)

நிருத்தனாறங்கனீற்றனான்மறையனீலமார்மிடற்றனெற்றிக்கண்
ஒருத்தன்மற்றெல்லாவுயிர்கட்குமுயிராயுளனிலன்கேடிலியுமைகோன்
திருத்தமாய்நாளுமாடுநீர்ப்பொய்கைசிறியவரறிவினின்மிக்க
விருத்தரையடிவீழ்ந்திடம்புகும்வீழிமிழலையானெனவினைகெடுமே. (௩)

தாங்கருங்காலந்தவிரவந்திருவர்தம்மொடுங்கூடினானங்கம்
பாங்கினாற்றரித்துப்பண்டுபோலெல்லாம்பண்ணியகண்ணுதற்பரமர்
தேங்கொள்பூங்கமுகுதெங்கிளங்கொடிமாச்செண்பகம்வண்பலாவிலுப்பை
வேங்கைபூமகிழால்வெயிற்புகாவீழிமிழலையானெனவினைகெடுமே. (ச)

கூசுமாமயானங்கோயில்வாயிற்கட்குடவயிற்றனசிலபூதம்
பூசுமாசாந்தம்பூதிமெல்லோதிபாதிநற்பொங்கரவரையோன்
வாசமாம்புன்னைமௌவல்செங்கழுநீர்மலரணைந்தெழுந்தவான்றென்றல்
வீசுமாம்பொழிற்றேன்றுவலைசேர்வீழிமிழலையானெனவினைகெடுமே. (ரு)

பாதியோர்மாதர்மாலுமோர்பாகர்பங்கயத்தயனுமோர்பாலர்
ஆதியாய்நடுவாய்அந்தமாய்நின்றவடிகளாரமரர்கட்கமரர்
போதுசேர்சென்னிப்புரூரவாப்பணிசெய்பூசுரர்பூமகனனைய
வேதியர்வேதத்தொலியறாவீழிமிழலையானெனவினைகெடுமே. (சு)

* அசும்புவாய்கழனி என்றும் பாடம்; அசும்பு - நீர்ப்பொசிவு, ஊற்று.

Koviloor Digital Library

தன்றவம்பெரியசலந்தரனுடலந்தடிந்தசக்கரமெனக்கருளென்
றன்றரிவழிபட்டிழிச்சியவிமானத்திறையவன்பிறையணிசடையன்
நின்றநாள்காலையிருந்தநாண்மாலைகிடந்தமண்மேல்வருகலியை
வென்றவேதியர்கள்விழாவறாவீழிமிழலையானெனவினைகெடுமே. (௭)

கடுத்தவாளரக்கன்கைலையன்றெடுத்தகரமுரஞ்சிரநெரிந்தலற
அடர்த்ததோர்விரலாலஞ்செழுத்துரைக்கவருளினன்றடமிகுநெடுவாள்
படித்தநான்மறைகேட்டிருந்தபைங்கிளிகள்பதங்களையோதப்பாடிருந்த
விடைக்குலம்பயிற்றும்* விரிபொழில்வீழிமிழலையானெனவினைகெடுமே. (௮)

அளவிடலுற்றவயனொடுமாலுமண்டமண்கெண்டியுங்காணா
முளையெரியாயமூர்த்தியைத்தீர்த்தமுக்கணெம்முதல்வனைமுத்தைத்
தளையவிழ்கமலத்தவிசின்மேலன்னந்தன்னிளம்பெடையொடும்புல்கி
விளைகதிர்க்கவரிவீசவீற்றிருக்குமிழலையானெனவினைகெடுமே. (௯)

கஞ்சிப்போதுடையார்கையிற்கோசாரக்கலதிகள்கட்டுரைவிட்டு
அஞ்சித்தேவிரியவெழுந்தநஞ்சதனையுண்டமரர்க்கமுதருளி
இஞ்சிக்கேகதலிக்கனிவிழக்கமுகின்குலையொடும்பழம்விழத்தெங்கின்
மிஞ்சுக்கேமஞ்சுசேர்பொழில்வீழிமிழலையானெனவினைகெடுமே. (௧௦)

வேந்தர்வந்திறைஞ்ச† வேதியர்வீழிமிழலையுள்விண்ணிழிவிமானத்
தேய்ந்ததன்றேவியோடுறைகின்றவீசனையெம்பெருமானைத்
தோய்ந்தநீர்த்தோணிபுரத்துறைமறையோன்றாமொழிஞானசம்பந்தன்
வாய்ந்தபாமாலைவாய்நவில்வாரைவானவர்வழிபடுவாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

பூதத்தின்படையர்பாம்பின்பூணினர்பூணநூலர்
சீதத்திற்பொலிந்ததிங்கட்கொழுந்தர்நஞ்சழுந்துகண்டர்
கீதத்திற்பொலிந்தவோசைக்கேள்வியர்வேள்வியாளர்
வேதத்தின்பொருளர்வீழிமிழலையுள்விகிர்தனாரே. (௧)

காலையிற்கதிர்செய்மேனிகங்குலிற்கறுத்தகண்டர்
மாலையின்மதியஞ்சேர்ந்தமகுடத்தர்மதுவும்பாலும்
ஆலையிற்பாகும்போலவண்ணித்திட்‡டடியார்க்கென்றும்
வேலையினமுதர்வீழிமிழலையுள்விகிர்தனாரே. (௨)

வருந்தினநெருநலின்றாய்வழங்கினநாளராற்கீழ்
இருந்துநன்பொருள்கணால்வர்க்கியம்பினரிருவரோடும்
பொருந்தினர்பிரிந்துதம்பாற்பொய்யராமவர்கட்கென்றும்
விருந்தினர்திருந்துவீழிமிழலையுள்விகிர்தனாரே. (௩)

* பயிற்றும் ஈண்டுத்தன்வினை; "தேற்றுவொழுக்கம்" என்புழிப்போல. † வேந்தர் வந்திறைஞ்சும் என்றும் பாடம்; ‡ அண்ணித்தல்-தித்தித்தல்.

Koviloor Digital Library

நிலையிலாவூர்மூன்றொன்றநெருப்பரிகாற்றம்பாகச்
சிலையுநாணதுவு* நாகங்கொண்டவர்தேவர்தங்கள்
தலையினாற்† றரித்தவெண்புந்தலைமயிர்வடமும்பூண்ட
விலையிலாவேடர்வீழிமிழலையுள்விகிர்தனாரே. (௪)

மறையிடைப்‡ பொருளர்மொட்டின்மலர்வழிவாசத்தேனர்
கறவிடைப்¶ பாலினெய்யர்கரும்பினிற்கட்டியாளர்
பிறையிடைப்§ பாம்புகொன்றைப்பிணையல்சேர்சடையுணீரர்
விறகிடைத்தீயர்வீழிமிழலையுள்விகிர்தனாரே. (௫)

எண்ணகத்தில்லையல்லருளரல்லரிமவான்பெற்ற
பெண்ணகத்தரையர்காற்றிற்பெருவலியிருவராகி
மண்ணகத்தைவர்நீரினால்வர்தீயதனின்மூவர்
விண்ணகத்தொருவர்வீழிமிழலையுள்விகிர்தனாரே. (௬)

சந்தணிகொங்கையாளோர்பங்கினர்சாமவேதர்
எந்தையுமெந்தைதந்தைதந்தையுமாயவீசர்
அந்தியோடுதயமந்தணாளரானெய்யால்வேட்கும்
வெந்தழலுருவர்வீழிமிழலையுள்விகிர்தனாரே. (௭)

நீற்றினைநிறையப்பூசிநித்தலாயிரம்பூக்கொண்டு
ஏற்றுழியொருநாளொன்றுகுறையக்கண்ணிறையவிட்ட
ஆற்றலுக்காழிநல்கியவன்கொணர்ந்திழிச்சுங்கோயில்
வீற்றிருந்தளிப்பர்வீழிமிழலையுள்விகிர்தனாரே. (௮)

சித்திசெய்பவர்கட்கெல்லாஞ்சேர்விடஞ்சென்றுகூடப்
பத்திசெய்பவர்கள்பாவம்பறைப்பவரிறப்பிலாளர்
முத்திசெய்○ பவளமேனிமுதிரொளிநீலகண்டர்
வித்தினின்முளையர்வீழிமிழலையுள்விகிர்தனாரே. (௯)

தருக்கினவரக்கன்றேரூர்சாரதிதடைநிலாது
பொருப்பினையெடுத்ததோளும்பொன்முடிபத்தும்புண்ணாய்
நெரிப்புண்டங்** கலறிமீண்டுநினைந்தடிபரவத்தம்வாள்
விருப்பொடுங்கொடுப்பர்வீழிமிழலையுள்விகிர்தனாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

* சிலையினாணதுவும் என்றும் பாடம். † தலையினால் தலையோடு; ஆல் ஓடுருபின் பொருட்டு; "தூங்குகையா னோங்குநடைய" என்றாற்போல. ‡ மறையுடைப் என்றும் பாடம். ¶ கறவையிடை கறவிடை என்றாயிற்று; கறவை-பசு. § பிறையுடைப் என்றும் பாடம். ○ முத்திசை என்றும் பாடம். ** நெருப்புண்டங் என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

வான் * சொட்டச்சொட்டநின்றட்டும் † வளர்மதியோடயலே
தேன்சொட்டச்சொட்டநின்றட்டுந்திருக்கொன்றைசென்னிவைத்தீர்
மான்பெட்டைநோக்கிமணாளீர்மணிநீர்மிழலையுள்ளீர்
நான்சட்டவும்மைமறக்கினுமென்னைக்குறிக்கொண்மினே. (க)

அந்தமுமாதியுமாகிநின்றீரண்டமெண்டிசையும் ‡
பந்தமும் ¶ விடும்பரப்புகின்றீர் § பசுவேற்றுகந்தீர்
வெந்தழலோம்புமிழலையுள்ளீரென்னைத்தென்றிசைக்கே
உந்திடும்போதுமறக்கினுமென்னைக்குறிக்கொண்மினே. (உ)

அலைக்கின்றநீர்நிலங்காற்றனலம்பரமாகிநின்றீர்
கலைக்கன்றுசேருங்கரத்தீர்கலைப்பொருளாகிநின்றீர்
விலக்கின்றிநல்குமிழலையுள்ளீர்மெய்பிற்கையொடுகால்
குலைக்கின்று ⁰ நும்மைமறக்கினுமென்னைக்குறிக்கொண்மினே. (௩)

தீத்தொழிலான்றலைதீயிலிட்டுச்செய்தவேள்விசெற்றீர்
பேய்த்தொழிலாட்டியைப்பெற்றுடையீர்பிடித்துத்திரியும்
வேய்த்தொழிலாளர்மிழலையுள்ளீர்விக்கியஞ்செழுத்தும்
ஓத்தொழிந்தும்மைமறக்கினுமென்னைக்குறிக்கொண்மினே. (௪)

தோட்பட்டநாகமுஞ்சூலமுஞ்சுற்றியும்பத்திமையால்
மேற்பட்டவந்தணர்வீழியுமென்னையும்வேறுடையீர்
நாட்பட்டுவந்துபிறந்தேனிறக்க ** நமன்றமர்தம்
கோட்பட்டுநும்மைமறக்கினுமென்னைக்குறிக்கொண்மினே. (௫)

கண்டியிற்பட்டகழுத்துடையீர்கரிகாட்டிலிட்ட
பண்டியிற்பட்டபரிகலத்தீர்பதிவீழிகொண்டீர்
உண்டியிற்பட்டினிநோயிலுறக்கத்திலும்மையைவர்
கொண்டியிற்பட்டுமறக்கினுமென்னைக்குறிக்கொண்மினே. (௬)

தோற்றங்கண்டான்சிரமொன்றுகொண்டீர்தூயவெள்ளெருதொன்
றேற்றங்கொண்டீரெழில்வீழிமிழலையிருக்கைகொண்டீர்
சீற்றங்கொண்டென்மேற்சிவந்ததோர்பாசத்தால்வீசியவெம்
கூற்றங்கண்டும்மைமறக்கினுமென்னைக்குறிக்கொண்மினே. (௭)

* வான் - அமுதம். † அட்டல் - சொரிதல். ‡ மெண்டிசைக்கும் என்றும் பாடம். ¶ பந்தம் சண்டு மாயேயம்; அஃதாவது தநுகரணபுவனபோகங்கள். § பரப்புதல் அவற்றை முதற்காரணத்தினின்றும் தோற்றுவித்தல்; "பந்தமும்விடும்படைப்போன்காண்க" என்றார் திருவாசகத்தும். ⁰ குலைக்கின்று-நடுக்கும்போது. ** வந்துபிறந்தேன் நாட்பட்டிறக்க எனமாறுக; நாட்படுதல் - ஆயுசுமுடிதல்

Koviloor Digital Library

சுழிப்பட்டகங்கையுந்திங்களுஞ்சூடிச்சொக்கம்பயின்றீர்
பழிப்பட்டபாம்பரைப்பற்றுடையீர்படர்தீப்பருக
விழிப்பட்டகாமனைவிட்டீர்மிழலையுள்ளீர்பிறவிச்
சுழிப்பட்டுநும்மைமறக்கினுமென்னைக்குறிக்கொண்மினே. (அ)

பிள்ளையிற்பட்டபிறைமுடியீர்மறையோதவல்லீர்
வெள்ளையிற்பட்டதொர்நீற்றீர்விரிநீர்மிழலையுள்ளீர்
நள்ளையிற்பட்டைவர்நக்கரைப்பிக்கநமன்றமர்தம்
கொள்ளையிற்பட்டுமறக்கினுமென்னைக்குறிக்கொண்மினே. (கூ)

கறுக்கொண்டரக்கன்கயிலையைப்பற்றியகையுமெய்யும்
நெறுக்கென்றிறச்செற்றசேவடியாற்கூற்றைநீறுசெய்தீர்
வெறிக்கொன்றைமாலைமுடியீர்விரிநீர்மிழலையுள்ளீர்
இறக்கின்றுநும்மைமறக்கினுமென்னைக்குறிக்கொண்மினே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

கரைந்துகைதொழுவாரையுங்காதலன்
வரைந்துவைதெழுவாரையும்வாடலன்
நிரந்தபாரிடத்தோடவர் * நித்தனும்
விரைந்துபோவதுவீழிமிழலைக்கே. (க)

ஏற்றுவெல்கொடியீசன்றனதிரை
நாற்றஞ்சூடுவர்நன்னறுந்திங்களார்
நீற்றுச்சந்தனவெள்ளைவிரவலார்
வேற்றுக்கோலங்கொள்வீழிமிழலையே. (உ)

புனைபொற்சூலத்தன்போர்விடையூர்தியான்
வினைவெனுகத்தன்வெண்மழுவாளினன்
நினையநின்றவனீசனையேயெனு
வினையிலார்தொழும்வீழிமிழலையே. (ஙு)

மாடத்தாடுமனத்துடன்வைத்தவர்
கோடத்தார்குருக்கேத்திரத்தார்பலர்
பாடத்தார்பழிப்பார்பழிப்பல்லதோர் †
வேடத்தார்தொழும்வீழிமிழலையே. (ச)

எடுத்தவெல்கொடியேறுடையான்றமர்
உடுப்பர்கோவணமுண்பதுபிச்சையே
கெடுப்பதாவதுகீழ்நின்ற ‡ வல்வினை
விடுத்துப்போவதுவீழிமிழலைக்கே. (ரு)

*தோரவர் என்றும் பாடம். † பழிப்பல்லாத என்றும் பாடம். ‡ கீணின்ற என்றும்பாடம்.

Koviloor Digital Library

குழலை* யாழ்மொழியாரிசைவேட்கையால்
உழலையாக்கையையூனுமுணர்விலீர்
தழலைநீர்மடிக்கொள்ளன்மின்சாற்றினேன்
மிழலையானடிசாரவின்னாள்வரே. (சு)

திரன்றித்திரளன்சடைத்தங்கிய
நீருடியநீற்றன்வண்டார்கொன்றைத்
தாரன்மாலையன்† றண்ணறுங்கண்ணியன்
வீரன்வீழிமிழலைவிகிர்தனே. (எ)

எரியினாரிறையாரிடுகாட்டிடை
கரியினார்பரியாமகிழ்கின்றதோர்
பெரியினார்தம்பிறப்பொடுசாதலை
விரியினார்தொழும்வீழிமிழலையே. (அ)

நீண்டசூழ்சடைமேலோர்நிலாமதி
காண்டுசேவடிமேலோர்கனைகழல்
வேண்டுவாரவர்வீதிபுகுந்திலர்
மீண்டும்போவதுவீழிமிழலைக்கே. (கூ)

பாலையாழொடுசெவ்வழிபண்கொள
மாலைவானவர்வந்துவழிபடும்
ஆலைபாரழலந்தணராகுதி
வேலையார்‡ தொழும்வீழிமிழலையே. (க0)

மழலையேற்றுமணாளன்றிருமலை
சுழலவார்த்தெடுத்தான்முடிதோளிறக்
கழல்கொள்காலிற்றிருவிரலூன்றலும்
மிழலையானடிவாழ்கெனவிட்டதே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

என்பொனேயிமையோர்தொழுபைங்கழல்
நன்பொனேநலந்தீங்கறிவொன்றிலேன் ¶
செம்பொனேதிருவீழிமிழலையுள்
அன்பனேயடியேனைக்குறிக்கொளே. (க)

கண்ணினாற்களிகூரக்கையாற்றொழு
தெண்ணுமாறறியாதிகைப்பென்றனை
விண்ணுளார்தொழும்வீழிமிழலையுள்
அண்ணலேயடியேனைக்குறிக்கொளே. (உ)

* மிழலை என்றும் பாடம். † தார்நன்மாலையன் என்றும் பாடம். ‡ அந்தணராகுதி வேலையார் - அந்தணராகிய ஆகுதித்தொழிலையுடையோர். ¶ அறிவு ஒன்றிலேன்—அறிதல் சிறிதுமிலேன்; ஒன்றும் என்னும் முற்றும்மை விகாரத்தாற்றொக்கது.

Koviloor Digital Library

ஞாலமேவிசும்பேபாலந்தீமையே
காலமேகருத்தேகருத்தாற்றொழும்
சீலமேதிருவீழிமிழலையுள்
கோலமேயடியேனைக்குறிக்கொளே. (௩)

முத்தனேமுதல்வாமுகிழும்முனை
ஒத்தனேயொருவாவுருவாகிய
சித்தனேதிருவீழிமிழலையுள்
அத்தனேயடியேனைக்குறிக்கொளே. (௪)

கருவனேகருவாய்த்தெளிவார்க்கெலாம்
ஒருவனேயுயிர்ப்பாயுணர்வாய்நின்ற
திருவனேதிருவீழிமிழலையுள்
குருவனேயடியேனைக்குறிக்கொளே. (௫)

காத்தனேபொழிலேழையுங்காதலால்
ஆத்தனேயமரர்க்கயன்றன்றலை
சேர்த்தனேதிருவீழிமிழலையுள்
கூத்தனேயடியேனைக்குறிக்கொளே. (௬)

நீதிவானவர்நித்தனியமஞ்செய்
தோதிவானவரும்முணராததோர்
வேதியாவிகிர்தாதிருவீழியுள்
ஆதியேயடியேனைக்குறிக்கொளே. (௭)

பழகநின்னடிசூடியபாலனைக்
கழகின்மேல்வைத்தகாலனைச்சாடிய
அழகனேயணிவீழிமிழலையுள்
குழகனேயடியேனைக்குறிக்கொளே. (௮)

அண்டவானவர்கூடிக்கடைந்தநஞ்
சுண்டவானவனேயுணர்வொன்றிலேன்
விண்டவான்பொழில்வீழிமிழலையுள்
கொண்டனேயடியேனைக்குறிக்கொளே. (௯)

ஒருத்தனேங்கலைத்தாங்கலுற்றானாம்
வருத்தினைவஞ்சனேன் * மனமன்னிய
திருத்தனேதிருவீழிமிழலையுள்
ஒருத்தனேயடியேனைக்குறிக்கொளே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

* மஞ்சனேமனமன்னிய என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

போரானையீருரிவைப்போர்வையானைப்
புலியதளேயுடையாடைபோற்றினானைப்
பாரானைமதியானைப்பகலானானைப்
பல்லுயிராய்நெடுவெளியாய்ப்பரந்துநின்ற
நீரானைக்காற்றானைத்தீயானானை
நினையாதார்புரமெரியநினைந்ததெய்வத்
தேரானைத்திருவீழிமிழலையானைச்
சேராதார்தீநெறிக்கேசேர்கின்றாரே. (௧)

சவந்தாங்குமயானத்துச்சாம்பலென்பு
தலையோடுமயிர்க்கயிறுதரித்தான்றன்னைப்
பவந்தாங்குபாசுபதவேடத்தானைப்
பண்டமரர்கொண்டுகந்தவேள்வியெல்லாம்
கவர்ந்தானைக்கச்சியேகம்பன்றன்னைக்
கழலடைந்தான்மேற்கறுத்தகாலன்வீழச்
சிவந்தானைத்திருவீழிமிழலையானைச்
சேராதார்தீநெறிக்கேசேர்கின்றாரே. (௨)

அன்றாலின்கீழிருந்தங்கறஞ்சொன்னானை
யகத்தியனையுகப்பானையயன்மாறேட
நின்றானைக்கிடந்தகடனஞ்சுண்டானை
நேரிழையைக்கலந்திருந்தேபுலன்களைந்தும்
வென்றானைமீயச்சூர்மேவினானை
மெல்லியலாடவத்தினிறையளக்கலுற்றுச்
சென்றானைத்திருவீழிமிழலையானைச்
சேராதார்தீநெறிக்கேசேர்கின்றாரே. (௩)

தூயானைச்சுடர்ப்பவளச்சோதியானைத்
தோன்றியவெவ்வுயிர்க்குந்துணையாய்நின்ற
தாயானைச்சக்கரமாற்கீந்தான்றன்னைச்
சங்கரனைச்சந்தோகசாமமோதும்
வாயானைமந்திரிப்பார்மனத்துளானை
வஞ்சனையாலஞ்செழுத்தும்வழுத்துவார்க்குச்
சேயானைத்திருவீழிமிழலையானைச்
சேராதார்தீநெறிக்கேசேர்கின்றாரே. (௪)

நற்றவத்தினல்லானைத்தீதாய்வந்த
நஞ்சமுதுசெய்தானையமுதமுண்ட
மற்றமரருலந்தாலுமுலவாதானை
வருகாலஞ்செல்காலம்வந்தகாலம்
உற்றவத்தையுணர்ந்தாருமுணரலாகா
வொருசுடரையிருவிசும்பினூர்மூன்றொன்றச்
செற்றவனைத்திருவீழிமிழலையானைச்
சேராதார்தீநெறிக்கேசேர்கின்றாரே. (௫)

Koviloor Digital Library

மைவானமிடற்றானையவ்வான்மின்போல்
வளர்சடைமேன்மதியானைமழையாயெங்கும்
பெய்வானைப்பிச்சாடலாடுவானைப்
பிலவாயபேய்க்கணங்களார்க்கச்சூலம்
பொய்வானைப்பொய்யிலாமெய்யன்றன்னைப்
பூதலமுமண்டலமும்பொருந்துவாழ்க்கை
செய்வானைத்திருவீழிமிழலையானைச்
சேராதார்தீநெறிக்கேசேர்கின்றாரே. (சு)

மிக்கானைக்குறைந்தடைந்தார்மேவலானை
வெவ்வேறாயிருமூன்றுசமயமாகிப்
புக்கானையெப்பொருட்கும்பொதுவானானைப்
பொன்னுலகத்தவர்போற்றும்பொருளுக்கெல்லாம்
தக்கானைத்தானன்றிவேறொன்றில்லாத்
தத்துவனைத்தடவரையைநடுவுசெய்த
திக்கானைத்திருவீழிமிழலையானைச்
சேராதார்தீநெறிக்கேசேர்கின்றாரே. (எ)

வானவர்கோன்றோளிறுத்தமைந்தன்றன்னை
வளைகுளமுமறைக்காடுமன்னினானை
யூனவனையுயிரவனையொருநாட்பார்த்த
னுயர்தவத்தினிலையறியவுற்றுச்சென்ற
கானவனைக்கயிலாயமேவினானைக்
கங்கைசேர்சடையானைக்கலந்தார்க்கென்றுந்
தேனவனைத்திருவீழிமிழலையானைச்
சேராதார்தீநெறிக்கேசேர்கின்றாரே. (அ)

பரத்தானையிப்பக்கம்பலவானானைப்
பசுபதியைப்பத்தர்க்குமுத்திகாட்டும்
வரத்தானைவணங்குவார்மனத்துளானை
மாருதமாலெரிமூன்றும்வாயம்பீர்க்காம்
சரத்தானைச்சரத்தையுந்தன்றாட்கீழ் * வைத்த
தபோதனனைச்சடாமகுடத்தணிந்தபைங்கட்
சிரத்தானைத்திருவீழிமிழலையானைச்
சேராதார்தீநெறிக்கேசேர்கின்றாரே. (கூ)

அறுத்தானையயன்றலைகளஞ்சிலொன்றை
யஞ்சாதேவரையெடுத்தவரக்கன்றோள்கள்
இறுத்தானையெழுநரம்பினிசைகேட்டானை
யிந்துவினைத்தேய்த்தானையிரவிதன்பல்
பறித்தானைப்பகீரதற்காய்வானோர்வேண்டப்
பரந்திழியும்புனற்கங்கைபனிபோலாங்குச் †
செறித்தானைத்திருவீழிமிழலையானைச்
சேராதார்தீநெறிக்கேசேர்கின்றாரே. (க0)

திருச்சிற்றம்பலம்.

* றாழ்க்கீழ் என்றும் பாடம். † பனிபோலாகச் என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

கயிலாயமலையுள்ளார்காரோணத்தார்
கந்தமாதனத்துளார்காளத்தியார்
மயிலாடுதுறையுளார்மாகாளத்தார்
வக்கரையார்சக்கரமாற்கீந்தார்வாய்ந்த
அயில்வாயசூலமுங்காபாலமு
மமருந்திருக்கரத்தாரானேறேறி
வெயிலாயசோதிவிளங்குநீற்றார்
வீழிமிழலையேமேவினாரே. (க)

பூதியணிபொன்னிறத்தர்பூணநூலர்
பொங்கரவர்சங்கரர்வெண்குழையோர்காதர்
கேதிசரமேவினார்கேதாரத்தார்
கெடிலவடவதிகைவீரட்டத்தார்
மாதுயரந்தீர்த்தென்னையுய்யக்கொண்டார்
மழபாடிமேயமழுவாளனார் *
வேதிகுடியுள்ளார்மீயச்சூரார்
வீழிமிழலையேமேவினாரே. (௨)

அண்ணாமலையமர்ந்தாராரூருள்ளா †
ரளப்பூரரந்தணர்கண்மாடக்கோயில் ‡
உண்ணாழிகையாருமையாளோடு
மிமையோர்பெருமானாரொற்றியூரார்
பெண்ணாகடத்துப்பெருந்தூங்கானை
மாடத்தார்கூடத்தார்பேராவூரார்
விண்ணோர்களெல்லாம்விரும்பியேத்த
வீழிமிழலையேமேவினாரே. (௩)

வெண்காட்டார்செங்காட்டங்குடியார்வெண்ணி
நன்னகரார்வேட்களத்தார்வேதநாவார்
பண்காட்டும்வண்டார்பழனத்துள்ளார்
பராய்த்துறையார்சிராப்பள்ளியுள்ளார்பண்டோர்
வெண்கோட்டுக்கருங்களிற்றைப்பிளிறப்பற்றி
யுரித்துரிவைபோர்த்தவிடலைவேடம்
விண்காட்டும்பிறைநுதலியஞ்சக்காட்டி
வீழிமிழலையேமேவினாரே. (௪)

புடைசூழ்ந்தபூதங்கள்வேதம்பாடப்
புலியூர்ச்சிற்றம்பலத்தேநடமாடுவார்
உடைசூழ்ந்தபுலித்தோலர்கலிக்கச்சிமேற்
றளியுளார்குளிர்சோலையேகம்பத்தார்

* மழுவாளனார் என்றும் பாடம். † ராரூருள்ளார் என்றும் பாடம். ‡ ரந்தணர்கள்பாடக்கோயில் என்றும் பாடம்.

Koviloor Digital Library

கடைசூழ்ந்துபலிதேருங்கங்காளனர்
கழுமலத்தார்செழுமலர்த்தார்க்குழலியோடும்
விடைசூழ்ந்தவெல்கொடியார்மல்குசெல்வ
வீழிமிழலையேமேவினரே. (ரு)

பெரும்புலியூர்விரும்பினர்பெரும்பாழிய்யார்
பெரும்பற்றப்புலியூர்மூலட்டானத்தார் *
இரும்புதலாரிரும்பூளையுள்ளாரேரா
ரின் † னம்பாரீங்கோய்மலையாரின்சொல்
கரும்பனையாளுமையோடுங்கருகாவூரார்
கருப்பறியலூரார்கரவீரத்தார்
விரும்பமாரிரவுபகற்பரவியேத்த ‡
வீழிமிழலையேமேவினரே. (சு)

மறைக்காட்டார்வலிவலத்தார்வாய்மூர்மேயார்
வாள்கொளிபுத்தூரார்மாகாளத்தார்
கறைக்காட்டுங்கண்டனர்காபாலிய்யார்
கற்குடியார்விற்குடியார்கானப்போரார்
பறைக்காட்டுங்குழிவிழிகட்பல்பேய்சூழப்
பழையனூராலங்காட்டடிகள்பண்டோர்
மிறைக்காட்டுங்கொடுங்காலன்வீடப்பாய்ந்தார்
வீழிமிழலையேமேவினரே. (எ)

அஞ்சைக்களத்துள்ளாரையாற்றுள்ளா
ராரூரார்பேரூராரழுந்தூருள்ளார் ¶
தஞ்சைத்தளிக்குளத்தார்தக்களூரார்
சாந்தையயவந்திதங்கினர்தாம்
நஞ்சைத்தமக்கமுதாவுண்டநம்பர்
நாகேச்சரத்துள்ளார் § நாரையூரார்
வெஞ்சொற்சமண்சிறையிலென்னைமீட்டார்
வீழிமிழலையேமேவினரே. (அ)

கொண்டலுள்ளார்கொண்டீச்சரத்தினுள்ளார்
கோவலூர்வீரட்டங்கோயில்கொண்டார்
தண்டலையார்தலையாலங்காட்டினுள்ளார்
தலைச்சங்கைப்பெருங்கோயிறங்கினர்தாம்
வண்டலொடுமணற்கொணரும்பொன்னிநன்னீர்
வலஞ்சுழியார்வைகலின்மேன்மாடத்துள்ளார்
வெண்டலைமான்கைக்கொண்ட ʋ விகிர்தவேடர்
வீழிமிழலையேமேவினரே. (கூ)

* மூலத்தானத்தார் என்றும் பாடம். † இரும்புகலாரிரும்பூளையுள்ளாரோரின் என்றும் பாடம். ‡ வணங்கியேத்த என்றும் பாடம். ¶ பேரூரழுந்தூருள்ளார் என்றும் பாடம். § நாகசுரத்துள்ளார் என்றும் பாடம். ʋ வெண்டலைகைக்கொண்ட என்றும் பாடம்.

அரிச்சந்திரத்துள்ளாரம்பருள்ளா
ரரிபிரமரிந்திரர்க்குமரியானார்
புரிச்சந்திரத்துள்ளார்போகத்துள்ளார்
பொருப்பரையன்மகளோடுவிருப்பாகி
எரிச்சந்திரவேட்கு*மிடத்தாரேம
கூடத்தார்பாடத்தேனிசையார்கீதர்†
விரிச்சங்கையெரிக்கொண்டங்காடும்வேடர்
விழிமிழலையேமேவினாரே. (௧௦)

புன்கூரார்புறம்பயத்தார்புத்தூருள்ளார்
பூவணத்தார்புலிவலத்தார்வலியின்மிக்க
தன்கூர்மைகருதிவரையெடுக்கலுற்றான்
றலைகளொடுமலைகளனைத்தாளுந்தோளும்
பொன்கூருங்கழலடியோர்விரலாலூன்றிப்
பொருப்பதன்கீழ்நெரித்தருள்செய்புவனநாதர்
மின்கூருஞ்சடைமுடியார்விடையின்பாகர்
விழிமிழலையேமேவினாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

கண்ணவன்காண்கண்ணொளிசேர்காட்சியான்காண்
கந்திருவம்பாட்டிசையிற்காட்டுகின்ற
பண்ணவன்காண்பண்ணவற்றின்றிறலானான்காண்
பழமாகிச்சுவையாகிப்பயக்கின்றான்காண்
மண்ணவன்காண்மயவன்காணிரானான்காண்
வந்தலைக்குமாருதன்காண்மழைமேகஞ்சேர்
விண்ணவன்காண்விண்ணவர்க்குமேலானான்காண்
விண்ணிழிதண்வீழிமிழலையானே. (௧)

ஆலைப்படுகரும்பின்சாறுபோல
வண்ணிக்குமஞ்செழுத்தினமைத்தான்காண்
சிலமுடையடியார்சிந்தையான்காண்
டிரிபுரமூன்றெரிபடுத்தசிலையினான்காண்
பாலினொடுதயிர்நறுநெய்யாடினான்காண்
பண்டரங்கவேடன்காண்பலிதேர்வான்காண்
வேலைவிடமுண்டமிடற்றினான்காண்
விண்ணிழிதண்வீழிமிழலையானே. (௨)

தன்மையொடுவெம்மைதானாயினான்காண்
சக்கரம்புட்பாகற்கருள்செய்தான்காண்
கண்ணுமொருமூன்றுடையகாபாலிகாண்
காமனுடல்வேவித்தகண்ணினான்காண்

* எரிச்சந்திவேட்கும் என்றும் பாடம். † னிசையர்கீதர் என்றும் பாடம்.

Koviloor Digital Library

என்னில்சமண்டீர்த்தென்னையாட்கொண்டான்கா
ணிருவர்க்கெரியாயருளினான்காண்
விண்ணவர்கள்போற்றவிருக்கின்றான்காண்
விண்ணிழிதண்வீழிமிழலையானே. (௩)

காதிசைந்தசங்கக்குழையினான்காண்
கனகமலையனையகாட்சியான்காண்
மாதிசைந்தமாதவமுஞ்சோதித்தான்காண்
வல்லேனவெள்ளெயிற்றாபரணத்தான்காண்
ஆதியன்காணண்டத்துக்கப்பாலான்கா
ணைந்தலைமாநாகநாணாக்கினான்காண்
வேதியன்காண்வேதவிதிகாட்டினான்காண்
விண்ணிழிதண்வீழிமிழலையானே. (௪)

நெய்யினொடுபாலிளநீராடினான்கா
ணித்தமணவாளனென்கின்றான்காண் *
கையின்மழுவாளொடுமானேந்தினான்காண்
காலனுயிர்காலாற்கழிவித்தான்காண்
செய்யதிருமேனிவெண்ணீற்றினான் † காண்
செஞ்சடைமேல்வெண்மதியஞ்சேர்த்தினான்காண்
வெய்யகனல்விளையாட்டாடினான்காண்
விண்ணிழிதண்வீழிமிழலையானே. (௫)

கண்டுஞ்சுங்கருநெடுமாலாழிவேண்டிக்
கண்ணிடந்தருட்டக்கண்டருளுவான்காண்
வண்டுண்ணுமதக்கொன்றை ‡ வன்னிமத்தம்
வான்கங்கைசடைக்கரந்தமாதேவன்காண்
பண்டங்குமொழிமடவாள்பாகத்தான்காண்
பரமன்காண்பரமேட்டியாயினான்காண்
வெண்டிங்களரவொடுசெஞ்சடைவைத்தான்காண்
விண்ணிழிதண்வீழிமிழலையானே. (௬)

கற்பொலிதோட்சலந்தரனைப்பிளந்தவாழி
கருமாலுக்கருள்செய்தகருணையான்காண்
விற்பொலிதோள்விசயன்வலிதேய்வித்தான்காண்
வேடுவனாய்ப்போர்பொருதுகாட்டினான்காண்
தற்பரமாந்தற்பரமாய் ¶ நிற்கின்றான்காண்
சதாசிவன்காண்டன்னொப்பாரில்லாதான்காண்
வெற்பரையன்பாவைவிருப்புளான்காண்
விண்ணிழிதண்வீழிமிழலையானே. (௭)

* நித்தன்மணவாளனெனநிற்கின்றான்காண் என்றும் பாடம். † மேனியில்வெண்ணீற்றினான் என்றும் பாடம். ‡ மலர்க்கொன்றை என்றும் பாடம். ¶ தற்பரமாய் நற்பரமாய் என்றும் பாடம்.

Koviloor Digital Library

மெய்த்தவன்காண்மெய்த்தவத்தினிற்பார்க்கெல்லாம்
விருப்பிலாவிருப்புமனவினையர்க்கென்றும்
பொய்த்தவன்காண்புத்தன்மறவாதோடி
யெறிசல்லிபுதுமலர்களாக்கினான்காண்
உய்த்தவன்காணுயர்கதிக்கேயுள்கினாரை
யுலகனைத்துமொளித்தளித்திட்டுய்யச்செய்யும்
வித்தகன்காண்வித்தகர்தாம்விரும்பியேத்தும்
விண்ணிழிதண்வீழிமிழலையானே. (௮)

சந்திரனைத்திருவடியாற்றளர்வித்தான்காண்
டக்கனையுமுனிந்தெச்சன்றலைகொண்டான்காண்
இந்திரனைத்தோண்முரிவித்தருள்செய்தான்கா
ணீசன்காணேசன்காணினைவோர்க்கெல்லாம்
மந்திரமுமறைப்பொருளுமாயினான்காண்
மாலோடயன்மேலோடுகீழறியாவண்ணம்
வெந்தழலின்விரிசுடராயோங்கினான்காண்
விண்ணிழிதண்வீழிமிழலையானே. (௯)

ஈங்கைப்பேரிமவனத்திருக்கின்றான்கா
ணெம்மான்காண்கைம்மாவினுரிபோர்த்தான்காண்
ஓங்குமலைக்கரையன்றன்பாவையோடு
மோருருவாய்நின்றான்காணோங்காரன்காண்
கோங்குமலர்க்கொன்றையந்தார்க்கண்ணியான்காண்
கொல்லேறுவெல்கொடிமேற்கூட்டினான்காண்
வேங்கைவரிப்புலித்தோன்மேலாடையான்காண்
விண்ணிழிதண்வீழிமிழலையானே. (௧௰)

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

மானேறுகரமுடையவரதர்போலு
மால்வரைகால்வளைவில்லாவளைத்தார்போலும்
கானேறுகரிகதறவுரித்தார்போலுங்
கட்டங்கங்கொடிதுடிகைக்கொண்டார்போலும்
தேனேறுதிருவிதழித்தாரார்போலுந்
திருவீழிமிழலையமர்செல்வர்போலும்
ஆனேறதேறுமழகர்போலு
மடியேனையாளுடையவடிகடாமே.* (௧)

சமரமிகுசலந்தரன்போர்வேண்டினானைச்
சக்கரத்தாற்பிளப்பித்தசதுரர்போலும்
நமனைபொருகால்குறைத்தநாதர்போலு
நாரணனையிடப்பாகத்தடைத்தார்போலும்

* வடிகளாரே என்றும் பாடம்.

Koviloor Digital Library

குமானையுமகனாகவுடையார்போலுங்
குளிர்வீழிமிழலையமர்குழகர்போலும்
அமரர்கள்பினமுதுணாநஞ்சுண்டார்போலு
மடியேனையாளுடையவடிகடாமே. (உ)

நீறணிந்ததிருமேனிநிமலர்போலு
நேமிநெடுமாற்கருளிச்செய்தார்போலும்
ஏறணிந்தகொடியுடையெம்மிறைவர்போலு
மெயின்மூன்றுமெரிசரத்தாலெய்தார்போலும்
வேறணிந்தகோலமுடைவேடர்போலும்
வியன்வீழிமிழலையுறைவிகிர்தர்போலும்
ஆறணிந்தசடாமகுடத்தழகர்போலு
மடியேனையாளுடையவடிகடாமே. (ங)

கைவேழமுகத்தவனைப்படைத்தார்போலுங்
கயாசுரனையவனாற்கொல்வித்தார்போலும்
செய்வேள்வித்தக்கனைமுன்சிதைத்தார்போலுந்
திசைமுகன்றன்சிரமொன்று *சிதைத்தார்போலும்
மெய்வேள்விமூர்த்திதலையறுத்தார்போலும்
வியன்வீழிமிழலையிடங்கொண்டார்போலும்
ஐவேள்வியாறங்கமானார்போலு
மடியேனையாளுடையவடிகடாமே. (ச)

துன்னத்தின்கோவணமொன்றுடையார்போலுஞ்
சுடர்மூன்றுஞ்சோதியுமாய்த்தூயார்போலும்
பொன்னொத்ததிருமேனிப்புனிதர்போலும்
பூதகணம்புடைசூழவருவார்போலும்
மின்னொத்தசெஞ்சடைவெண்பிறையார்போலும்
வியன்வீழிமிழலைசேர்விமலர்போலும்
அன்னத்தேரயன் † முடிசேரடிகள்போலு
மடியேனையாளுடையவடிகடாமே. (ரு)

மாலாலுமறிவரியவரதர்போலு
மறவாதார்பிறப்பறுக்கவல்லார்போலும்
நாலாயமறைக்கிறைவரானார்போலு
நாமவெழுத்தஞ்சாயநம்பர்போலும்
வேலார்கைவீரியைமுன்படைத்தார்போலும்
வியன்வீழிமிழலையமர்விகிர்தர்போலும்
ஆலாலமிடற்றடக்கியளித்தார்போலு
மடியேனையாளுடையவடிகடாமே. (சு)

* திசைமுகனார்சிரமொன்று என்றும் பாடம். † அன்னத்தேறயன் என்றும், அன்னத்தோனயன் என்றும், அன்னத்தோடயன் என்றும் பாடம். "அன்னத்தேரினனயன்" என்பது திருவிளையாடற்புராணம்.

Koviloor Digital Library

பஞ்சடுத்தமெல்விரலாள்பங்கர்போலும்
பைந்நாகமரைக்கசைத்தபரமர்போலும்
மஞ்சடுத்தமணிநிலகண்டர்போலும்
வடகயிலைமலையுடையமணாளர்போலும்
செஞ்சடைக்கண்வெண்பிறைகொண்டணிந்தார்போலுந்
திருவீழிமிழலையமர்சிவனார்போலும்
அஞ்சடக்குமடியவர்கட்கணியார்போலு
மடியேனையாளுடையவடிகடாமே. (எ)

குண்டரொடுபிரித்தெனையாட்கொண்டார்போலுங்
குடமூக்கிலிடமாக்கிக்கொண்டார்போலும்
புண்டரிகப்புதுமலராதனத்தார்போலும்
புள்ளரசைக்கொன்றுயிர்பின்கொடுத்தார்போலும்
வெண்டலையிற்பலிகொண்டவிகிர்தர்போலும்
வியன்வீழிமிழலைநகருடையார்போலும்
அண்டத்துப்புறத்தப்பாலானார்போலு
மடியேனையாளுடையவடிகடாமே. (அ)

முந்தனையமுகிழ்முறுவலுடையார்போலு
மொய்பவளக்கொடியனையசடையார்போலும்
எந்தனையும்பத்திசெய்வார்க்கினியார்போலு
மிருநான்குமூர்த்திகளுமானார்போலும்
மித்திரவச்சிரவணற்குவிருப்பர்போலும்
வியன்வீழிமிழலையமர்விகிர்தர்போலும்
அந்தணனுமம்மையெனக்கானார்போலு
மடியேனையாளுடையவடிகடாமே. (கூ)

கரியுரிசெய்துமைவெருவக்கண்டார்போலுங்
கங்கையையுஞ்செஞ்சடைமேற்கரந்தார்போலும்
எரியதொருகைதரித்தவிறைவர்போலு
மேனத்தின்கூனெயிறுபூண்டார்போலும்
விரிகதிரோரிருவரைமுன்வெகுண்டார்போலும்
வியன்வீழிமிழலையமர்விமலர்போலும்
அரிபிரமர்துதிசெயநின்றளித்தார்போலு
மடியேனையாளுடையவடிகடாமே. (கo)

கயிலாயமலையெடுத்தான்கதறிவீழக்
கால்விரலாலடர்த்தருளிச்செய்தார்போலும்
குயிலாயமென்மொழியாள்* குளிர்ந்துநோக்கக்
கூத்தாடவல்லகுழகர்போலும்
வெயிலாயசோதிவிளக்கானார்போலும்
வியன்வீழிமிழலையமர்விகிர்தர்போலும்
அயிலாயமுயிலை† வேற்படையார்போலு
மடியேனையாளுடையவடிகடாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

* குயிலாருமென்மொழியாள் என்றும், குயிலாலுமென்மொழியாள் என்றும் பாடம்.
† அயிலாருமுயிலை என்றும் பாடம்.

Koviloor Digital Library

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

நம்பினார்க்கருள்செய்யுமந்தணர்நான்மறைக்கிடமாயவேள்வியுள்
செம்பொனேர்மடவாரணிபெற்றதிருமிழலை
உம்பரார்தொழுதேத்தமாமலையாளொடும்முடனேயுறைவிடம்
அம்பொன்வீழிகொண்டீரடியேற்குமருளுதிரே. (க)

விடங்கொண்மாமிடற்றீர்வெள்ளைச்சுருளொன்றிட்டுவிட்டகாதினீரென்று
திடங்கொள்சிந்தையினார்கலிகாக்குந்திருமிழலை
மடங்கல்பூண்டவிமானமண்மிசைவந்திழிச்சியவானநாட்டையும்
அடங்கல்வீழிகொண்டீரடியேற்குமருளுதிரே. (உ)

ஊனையுற்றுயிராயினீரொளிமூன்றுமாய்த்தெளிநீரோடானஞ்சின்
தேனையாட்டுகந்தீர்செழுமாடத்திருமிழலை
மானைமேவியகையினீர்மழுவேந்தினீர்மங்கைபாகத்தீர்விண்ணில்
ஆனவீழிகொண்டீரடியேற்குமருளுதிரே. (ங)

பந்தம்வீடிவைபண்ணினீர்படிதீர்மதிப்பிதிர்க்கண்ணியீரென்று
சிந்தைசெய்திருக்குஞ்செங்கையாளர்திருமிழலை
வந்துநாடகம்வானநாடியராடமாலயனேத்தநாடொறும்
அந்தண்வீழிகொண்டீரடியேற்குமருளுதிரே. (ச)

புரிசைமூன்றையும்பொன்றக்குன்றவில்லேந்திவேதப்புரவித்தேர்மிசைத்
திரிசெய்நான்மறையோர்சிறந்தேத்துந்திருமிழலைப்
பரிசினாலடிபோற்றும்பத்தர்கள்பாடியாடப்பரிந்துநல்கினீர்
அரியவீழிகொண்டீரடியேற்குமருளுதிரே. (ரு)

எறிந்தசண்டியிடந்தகண்ணப்பனைத்துபத்தர் * கட்கேற்றநல்கினீர்
செறிந்தபூம்பொழிற்றேன்றுளிவீசுந்திருமிழலை
நிறைந்தவந்தணர்நித்தநாடொறுநேசத்தாலுமைப்பூசிக்கும்மிடம்
அறிந்துவீழிகொண்டீரடியேற்குமருளுதிரே. (சா)

பணிந்தபார்த்தன்பகீரதன்பலபத்தர்சித்தர்க்குப்பண்டுநல்கினீர்
திணிந்தமாடந்தொறுஞ்செல்வமல்குதிருமிழலைத்
தணிந்தவந்தணர்சந்திநாடொறுமந்திவானிடுபூச்சிறப்பவை
அணிந்துவீழிகொண்டீரடியேற்குமருளுதிரே. (எ)

பரந்தபாரிடமூரிடைப்பலிபற்றிப்பார்த்துறுஞ்சுற்றமாயினீர்
தெரிந்தநான்மறையோர்க்கிடமாயதிருமிழலை
இருந்துநீர்தமிழோடிசைகேட்குமிச்சையாற்காசுநித்தநல்கினீர்
அருந்தண்வீழிகொண்டீரடியேற்குமருளுதிரே. (அ)

* னேற்றபத்தர் என்றும் பாடம்.

Koviloor Digital Library

தூயநீரமுதாயவாறதுசொல்லுகென்றுமைக்கேட்கச்சொல்லினீர்
தியராக்குலையாளர்* செழுமாடத்திருமிழலை
மேயநீர்பலியேற்றதென்னென்று† விண்ணப்பஞ்செய்பவர்க்குமெய்ப்பொருள்
ஆயவீழிகொண்டீரடியேற்குமருளுதிரே. (௯)

வேதவேதியர்வேதநீதியரோதுவார்விரிநீர்மிழலையுள் ‡
ஆதிவீழிகொண்டீரடியேற்குமருளுகென்று
நாதகீதம்வண்டோதுவார்பொழினாவலூரன்வன்றொண்டனற்றமிழ்
பாதமோதவல்லார்பரனோடுகூடுவரே. (௰)

திருச்சிற்றம்பலம்.

திருவீழிமிழலைத்திருப்பதிகம் - உ௯.

ஆ திருப்பதிகம் - ௧௬௧.

சுவாமி தேவி திருநாமங்கள் - வீழிபழகர், சுந்தரகுசாம்பிகை.

௬௨. திருவன்னியூர்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

காடுகொண்டரங்காக்கங்குல்வாய்க்கணம்
பாடமாநடமாடும்பரமனார்
வாடமானிறங்கொள்வர்மணங்கமழ்
மாடமாமதில்சூழ்வன்னியூரரே. (௧)

* நியராக்கொலையாளர் என்றும் பாடம். † யேற்றற்கென்னென்று என்றும் பாடம்.
‡ இத்திருப்பதிக்குத் திருப்பதிகக்கோவையின்படி இருபத்துநான்கு திருப்பதிகம் இருத்தல்வேண்டும்; திருப்புகலிக்கும் திருவீழிமிழலைக்கும் பொதுவாகிய "மைம்மலி பூங்குழல்" என்னுந் திருப்பதிகத்தை இத்திருப்பதிக்குஞ் சேர்த்தால் இருபத்துநான்காகும்; கிடைத்தபிரதிகளிற் சேர்க்கப்படாமையால் தவிர்க்கப்பட்டது. திருவேள்விக்குடிக்குத் திருப்பதிகக்கோவையின்படி இரண்டு திருப்பதிகம் என்பது பெறப்பட்டிருக்க "மின்னுமாமேகங்கள்" என்னும் பொதுத்திருப்பதிகம் அத்திருப்பதிக்குஞ் சேர்க்கப்பட்டதென்னை யெனின் பிரதிகளிற்சேர்க்கப்பட்டிருத்தலாலென்றுணர்க.

இன்னும் திருப்பதிகக்கோவையின்படி திருமறைக்காட்டுக்குப் பதினொருதிருப்பதிகங்களும், திருச்சோற்றுத்துறைக்கு எழுதிருப்பதிகங்களும், திருப்பழனத்துக்கு ஐந்துதிருப்பதிகங்களும் இருத்தல் வேண்டும். கிடைத்தபிரதிகளில் முன்னிரண்டு திருப்பதிகளுக்கும் ஒவ்வொருதிருப்பதிகம் குறைவாகவும் பின்னுள்ளதிருப்பதிக்கு ஒருதிருப்பதிகம் அதிகமாகவும் காணப்படுகின்றன. திருப்பதிகக்கோவையாசிரியர்க்குக் கிடைத்த பிரதிகளில் அவ்வாறு காணப்பட்டனபோலும்.

Koviloor Digital Library

செங்கணாகமரையதரீத்திரள்
அங்கையேந்திநின்றெரியாடுவர்
கங்கைவார்சடைமேலிடங்கொண்டவர்
மங்கைபாகம்வைத்தார்வன்னியூரரே. (௨)

ஞானங்காட்டுவர்நன்னெறிகாட்டுவர்
தானங்காட்டுவர்தம்மடைந்தார்க்கெலாம்
தானங்காட்டித்தன்னருளடைந்தார்கட்கு
வானங்காட்டுவர்போல்வன்னியூரரே. (௩)

இம்மையம்மையெனவிரண்டும்மிவை
மெய்ம்மை * தானறியாதுவிளம்புவர்
மெய்ம்மையானினைவார்கடம்வல்வினை †
வம்மின்றீர்ப்பர்கண்டீர்வன்னியூரரே. (௪)

பிறைகொள்வாணுதற்பெய்வளைத்தோளியர்
நிறையைக்கொள்பவர்நீறணிமேனியர்
கறைகொள்கண்டத்தர்வெண்மழுவாளினர்
மறைகொள்வாய்மொழியார்வன்னியூரரே. (௫)

திளைக்கும்வண்டொடுதேன்படுகொன்றையர்
துளைக்கைவேழத்தர்தோலர்சுடர்மதி
முளைக்குமூறற்கதிர்கண்டுநாகநா
வளைக்கும்வார்சடையார்வன்னியூரரே. (௬)

குணங்கொள்கோளெட்டு ‡ மூர்த்தியிணையடி
இணங்குவார்கட்கினியனுமாய்நின்றான்
வணங்கிமாமலர்கொண்டவர்வைகலும்
வணங்குவார்மனத்தார்வன்னியூரரே. (௭)

இயனுமாலொடுநான்முகன்செய்தவம்
முயலிற்காண்பரிதாய்நின்றமூர்த்திதான்
அயலெலாமன்னமேயுமந்தாமரை
வயலெலாங்கயல்பாய்வன்னியூரரே. (௮)

நலங்கொள்பாகனைநன்றுமுனிந்திடா
விலங்கல்கோத்தெடுத்தானதுமிக்கிடவ்
இலங்கைமன்னனிருபதுதோளினை ¶
மலங்கவூன்றிவைத்தார்வன்னியூரரே. § (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருவன்னியூர்த்திருப்பதிகம் - ௧.

ஆ திருப்பதிகம் - ௧௬௨.

சுவாமி தேவி திருநாமங்கள் - அக்கினீச்சுரர், பார்வதியம்மை.

* அம்மை என்றும், செம்மை என்றும் பாடம். † வினைவார்தளராவணம் என்றும் பாடம். ‡ குணங்கடோளெட்டு, குணங்கொடோளெட்டு, குணங்கள்கோளெட்டு என்றும் பாடம். ¶ இலங்கைமன்னன்விலங்கல்கோத்தெடுத்தானது மிக்கிடு அவ்விருபதுதோளினை எனக் கூட்டுக. § இத்திருப்பதிகத்தில் ஒன்பதாவது செய்யுள் மறைந்து போயிற்று.

Koviloor Digital Library

௬௩. திருக்கருவிலிக்கொட்டிட்டை.*

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

மட்டிட்டகுழலார்சுழலில்வலைப்
பட்டிட்டுமயங்கிப்பரியாதுநீர்
கட்டிட்டவினைபோகக்கருவிலிக்
கொட்டிட்டையுறைவான்கழல்கூடுமே.† (௧)

ஞாலமல்குமனிதர்காணாடொறும்
ஏலமாமலரோடிலைகொண்டுநீர்
காலனார்வருதன்முன்கருவிலிக்
கோலவார்பொழிற்கொட்டிட்டைசேர்மினே. (௨)

பங்கமாயினபேசப்பறைந்துநீர்
மங்குமாநினையாதேமலர்கொடு
கங்கைசேர்சடையான்றன்கருவிலிக்
கொங்குவார்பொழிற்கொட்டிட்டைசேர்மினே. (௩)

வாடிநீர்வருந்தாதேமனிதர்காள்
வேடனாய்விசயற்கருள்செய்தவெண்
காடனாருறைகின்றகருவிலிக்
கோடுநீள்பொழிற்கொட்டிட்டைசேர்மினே. (௪)

உய்யுமாறிதுகேண்மினுலகத்தீர்
பைகொள்பாம்பரையான்படையார்மழுக்
கையினானுறைகின்றகருவிலிக்
கொய்கொள்பூம்பொழிற்கொட்டிட்டைசேர்மினே. (௫)

அற்றவும்மவலந்தழுந்தாதுநீர்
தோற்றந்தீயொடுநீர்நிலந்துவெளி
காற்றுமாகிநின்றான்றன்கருவிலிக்
கூற்றங்காய்ந்தவன்கொட்டிட்டைசேர்மினே. (௬)

நில்லாவாழ்வுநிலைபெறுமென்றெண்ணிப்
பொல்லாவாறுசெயப்புரியாதுநீர்
கல்லாரும்மதிள்சூழ்தண்கருவிலிக்
கொல்லேறூர்பவன்கொட்டிட்டைசேர்மினே. (௭)

* திருக்கருவிலி என்றும், திருக்கருவிலியூர் என்றும் பிரதிபேதமுண்டு. † கூறுமே என்றும்பாடம்.

Koviloor Digital Library

பிணிந்தநோய்ப்பிறவிப்பிறிவெய்துமா
றுணர்ந்தலாமிதுகேண்மினுருத்திர
கணத்தினர்* தொழுதேத்துங்கருவிலிக்
குணத்தினனுறைகொட்டிட்டைசேர்மினே. (அ)

நம்புவீரிதுகேண்மின்கணுடொறும்
எம்பிரானென்றிமையவரேத்துமே
கம்பனுருறைகின்றகருவிலிக்
கொம்பனூர்பயில்கொட்டிட்டைசேர்மினே. (கூ)

பாருளீரிதுகேண்மின்பருவரை
பேருமாறெடுத்தானையடர்த்தவன்
கார்கொணீர்வயல்சூழ்தண்கருவிலிக்
கூர்கொள்வேலினன்கொட்டிட்டைசேர்மினே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருக்கருவிலிக்கொட்டிட்டைத்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - கசூரு.

சுவாமி தேவி திருநாமங்கள் - சற்குணநாயகர், சர்வாங்கநாயகி.

கூச. திருப்பேணுபெருந்துறை.†

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

பைம்மாநாகம்பன்மலர்கொன்றைபன்றிவெண்கொம்பொன்றுபூண்டு
செம்மாந்தையம்பெய்கென்றுசொல்லிச்செய்தொழில்பேணியோர்செல்வர்
அம்மானேக்கியந்தளிர்மேனியரிவையோர்பாகமமர்ந்த
பெம்மானல்கியதொல்புகழாளர்பேணுபெருந்துறையாரே. (க)

மூவருமாகியிருவருமாகிமுதல்வனுமாய்நின்றமூர்த்தி
பாவங்கடீர்தரநல்வினைநல்கிப்பல்கணநின்றுபணியச்
சாவமதாகியமால்வரைகொண்டுதண்மதின்மூன்றுமெரித்த
தேவர்கடேவரெம்பெருமானூர்திதில்பெருந்துறையாரே. (உ)

செய்பூங்கொன்றைகூவிளமாலைசென்னியுட்சேர்புனல்சேர்த்திக்
கொய்பூங்கோதைமாதுமைபாகங்கூடியோர்பீடுடைவேடர்
கைபோனுன்றகனிகுலைவாழைகாய்குலையிற்கமுகினைப்
பெய்பூம்பாளைபாய்ந்திழிதேறல்பில்குபெருந்துறையாரே. (ரு)

* உருத்திரகணம்-சிவனடியார்களென்றலுமாம்; அது "உருத்திரபல்கணத்தார்க்—கட்டிட் டல்காணுதேபோதியோபூம்பாவாய்" எனவும், "உருத்திரரென்னுநாமமொப்பிலாவரற்கு மன்னுன்—தரத்தகுசிறூர்களானேர்தங்கட்குமனையன்பாதம்-கருத்திடையுன்னிப்போற்று ங்கணங்கட்குமவன்றன்மேனி—பரித்திடுவோர்க்குஞ்செந்தீப்பண்ணவன்றனக்குமாமால்" எனவும் வருவனவற்ருலறிக. † இதனை இக்காலத்துத் திருப்பந்துறையென்றும்வழங்குப.

Koviloor Digital Library

நிலனொடுவானுநீரொடுதீயும்வாயுவுமாகியோரைந்து
புலனொடுவென்றுபொய்ம்மைகடீர்ந்தபுண்ணியர்வெண்பொடிப்பூசி
நலனொடுதீங்குந்தானலதின்றிநன்கெழுசிந்தையராகி
மலனொடுமாசுமில்லவர்வாழுமல்குபெருந்துறையாரே. (௪)

பணிவாயுள்ளநன்கெழுநாவின்பத்தர்கள்பத்திமைசெய்யத்
துணிவார்தங்களுள்ளமிலாதசுமடர்கள்சோதிப்பரியார்
அணியார்நீலமாகியகண்டரரிசிலுரிஞ்சுகரைமேல்
மணிவாய்நீலம்வாய்கமழ்தேறன்மல்குபெருந்துறையாரே. (௫)

எண்ணார்தங்கண்மும்மதில்வேவவேவலங்காட்டியவெந்தை
விண்ணோர்சாரத்தன்னருள்செய்தவித்தகர்வேதமுதல்வர்
பண்ணார்பாடலாடலறாதபசுபதியீசனோர்பாகம்
பெண்ணாறாபவார்சடையண்ணல்பேணுபெருந்துறையாரே. (௬)

விழையாருள்ளநன்கெழுநாவில்வினைகெடவேதமாறங்கம்
பிழையாவண்ணம்பண்ணியவாற்றாற்பெரியோரேத்தும்பெருமான்
தழையார்மாவின்றாழ்கனியுந்தித்தண்ணரிசில்புடைசூழ்ந்து
குழையார்சோலைமென்னடையன்னங்கூடுபெருந்துறையாரே. (௭)

பொன்னங்கானல்வெண்டிரைசூழ்ந்தபொருகடல்வேலியிலங்கை
மன்னனொல்கமால்வரையூன்றிமாமுரணாகமுந்தோளும்
முன்னவைவாட்டிப்பின்னருள்செய்தமுதிலைவேலுடைமூர்த்தி
அன்னங்கன்னிப்பேடைபொடாடியணவுபெருந்துறையாரே. (௮)

புள்வாய்போழ்ந்துமாநிலங்கீண்டபொருகடல்வண்ணனும்பூவின்
உள்வாயல்லிமேலுறைவானுமுணர்வரியானுமைகேள்வன்
முள்வாய்தாளின்றாமரைமொட்டின்முகமலரக்கயல்பாயக்
கள்வாய்நீலங்கண்மலரேய்க்குங்காமர்பெருந்துறையாரே. (௯)

குண்டுந்தேருங்கூறைகளைந்துங்கூப்பிலர்செப்பிலராகி
மிண்டும்மிண்டர்மிண்டவைகண்டுமிண்டுசெயாதுவிரும்பும்
தண்டும்பாம்பும்வெண்டலைசூலந்தாங்கியதேவர்தலைவர்
வண்டுந்தேனும்வாழ்பொழிற்சோலைமல்குபெருந்துறையாரே. (௧௦)

கடையார்மாடநன்கெழுவீதிக்கழுமலவூரன்கலந்து
நடையாரின்சொன்ஞானசம்பந்தனல்லபெருந்துறைமேய
படையார்சூலம்வல்லவன்பாதம்பரவியபத்திவைவல்லார்
உடையாராகி*யுள்ளமுமொன்றி†யுலகினின்‡மன்னுவர்தாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருப்பேறுபெருந்துறைத்திருப்பதிகம் - ௧.

ஆ. திருப்பதிகம் - ௧௧௪.

சுவாமி தேவி திருநாமங்கள் - சிவானந்தர், மலையரசி.

* உடையாராகி-திருவருட்பேறுடையராய். † உள்ளமுமொன்றி-சித்தவிருத்தியின்றி; உள்ளமும் என்றும் உம்மை மனமேயன்றி என்றும் பொருளைத்தருதலால் எச்சம்; மனம் சிவபிரானிடத்தொன்ற என்பதாம். ஒன்றி ஒன்ற. ‡ உலகினில்-வீட்டுலகில்.

Koviloor Digital Library

சூரு. திருநறையூர்ச்சித்தீச்சரம்.*

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

ஊருலாவுபலிகொண்டுலகேத்த
நீருலாவுநிமிர்புன்சடையண்ணல்
சீருலாவுமறையோர்நறையூரில்
சேருஞ்சித்தீச்சரஞ்சென்றடைநெஞ்சே. (க)

காடுநாடுங்கலக்கப்பலிநண்ணி
ஓடுகங்கையொளிர்புன்சடைதாழ
வீடுமாக † மறையோர்நறையூரில்
நீடுஞ்சித்தீச்சரமேநினைநெஞ்சே. (உ)

கல்வியாளர்கனகம்மழன்மேனி
புல்குகங்கைபுரிபுன்சடையானூர்
மல்குதிங்கட்பொழில்சூழ்நறையூரில்
செல்வர்சித்தீச்சரஞ்சென்றடைநெஞ்சே. (ங)

நீடவல்லநிமிர்புன்சடைதாழ
ஆடவல்லவடிகளிடமாகும்
பாடல்வண்டுபயிலுநறையூரில்
சேடர்சித்தீச்சரமேதெளிநெஞ்சே. (ச)

உம்பராலுமுலகின்னவராலும்
தம்பெருமையளத்தற்கரியானூர்
நண்புலாவுமறையோர்நறையூரில்
செம்பொன்சித்தீச்சரமேதெளிநெஞ்சே. (ரு)

கூருலாவுபடையான்விடையேறி
போருலாவுமழுவானனலாடி
பேருலாவுபெருமானறையூரில்
சேருஞ்சித்தீச்சரமேயிடமாமே. (சு)

அன்றி ‡ நின்றவவுணர்புரமெய்த
வென்றிவில்லிவிமலன்விரும்புமூர்
மன்றில்வாச ¶ மணமார்நறையூரில்
சென்றுசித்தீச்சரமேதெளிநெஞ்சே. (எ)

அரக்கனுண்மையழியவரைதன்னுல்
நெருக்கவூன்றும்விரலான்விரும்புமூர்
பரக்குங்கீர்த்தியுடையார்நறையூரில்
திருக்கொள்சித்தீச்சரமேதெளிநெஞ்சே. (அ)

* திருநறையூர் என்றும் பிரதிபேதமுண்டு. † வீடமாக என்றும் பாடம். ‡ அன்றல்—பகைத்தல். ¶ மன்றல்வாச என்றும் பாடம்.

Koviloor Digital Library

ஆழியானுமலரினுறைவானும்
ஊழிநாடியுணரார்திரிந்துமேல்
சூழுநேடவெரியாமொருவன்சீர்
நீழல்சித்திச்சரமேநினைநெஞ்சே. (௯)

மெய்யின்மாசர்விரிதண்டுகிலிலார்*
கையிலுண்டுகழறுமுரைகொள்ளேல்
உய்யவேண்டிலிறைவன்னறையூரில்
செய்யுஞ்சித்திச்சரமேதவமாமே. (௰)

மெய்த்துலாவுமறையோர்நறையூரில்
சித்தன்சித்திச்சரத்தையுயர்காழி
அத்தன்பாதமணிஞானசம்பந்தன்
பத்தும்பாடப்பறையும்பாவமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

பிறைகொள்சடையர்புலியினுரியர்பேழ்வாய்நாகத்தர்
கறைகொள்கண்டர்கபாலமேந்துங்கையர்கங்காளர்
மறைகொள்கீதம்பாடச்சேடர்மனையின்மகிழ்வெய்திச்
சிறைகொள்வண்டுதேனார்நறையூர்ச்சித்திச்சரத்தாரே. (௧)

பொங்கார்சடையர்புனலரனலர்பூதம்பாடவே
தங்காதலியுந்தாமுமுடனாய்த்தனியோர்விடையேறிக்
கொங்கார்கொன்றைவன்னிமத்தஞ்சூடிக்குளிர்பொய்கைச்
செங்காலனமும்பெடையுஞ்சேருஞ்சித்திச்சரத்தாரே. (௨)

முடிகொள்சடையர்முளைவெண்மதியர்மூவாமேனிமேல்
பொடிகொளூலர்புலியினதளர்புரிபுன்சடைதாழக்
கடிகொள்சோலைவயல்சூழ்மடுவிற்கயலாரினம்பாயக்
கொடிகொண்மாடக்குழாமார்நறையூர்ச்சித்திச்சரத்தாரே. (௩)

பின்றாழ்சடைமேனகுவெண்டலையர்பிரமன்றலையேந்தி
மின்றாழுருவிற்சங்கார்குழைதான்மிளிருமொருகாதர்
பொன்றாழ்கொன்றைசெருந்திபுன்னைபொருந்துசெண்பகம்
சென்றார்செல்வத்திருவார்நறையூர்ச்சித்திச்சரத்தாரே. (௪)

நீரார்முடியர்கறைகொள்கண்டர்மறைகணிறைநாவர்
பாரார்புகழாற்பத்தர்சித்தர்பாடியாடவே
தேரார்வீதிமுழவார்விழவினொலியுந்திசைசெல்லச்
சீரார்கோலம்பொலியுநறையூர்ச்சித்திச்சரத்தாரே. (௫)

நீண்டசடையர்நிரைகொள்கொன்றைவிரைகொண்மலர்மாலை
தூண்டுசுடர்பொன்னொளிகொண்மேனிப்பவளத்தெழிலார்வந்
தீண்டுமாடமெழிலார்சோலையிலங்குகோபுரம்
தீண்டுமதியந்திகழுநறையூர்ச்சித்திச்சரத்தாரே. (௬)

* தண்டுகிலினர் என்றும் பாடம்.

Koviloor Digital Library

குழலார்சடையர்கொக்கினிறகர்கோலநிறமத்தம்
தழலார்மேனித்தவளநீற்றர்சரிகோவணக்கீளர்
எழிலார்நாகம்புலியினுடைமேலிசைத்து* விடையேறிக்
கழலார்சிலம்புபுலம்பவருவார்சித்தீச்சரத்தாரே. (எ)

கரையார்கடல்சூழிலங்கைமன்னன்கயிலைமலைதன்னை
வரையார்தோளாலெடுக்கமுடிகணெரித்துமனமொன்றி
உரையார்கீதம்பாடநல்லவுலப்பிலருள்செய்தார்
திரையார்புனல்சூழ்செல்வநறையூர்ச்சித்தீச்சரத்தாரே. (அ)

நெடியான்பிரமனேடிக்காணார்நினைப்பார்மனத்தாராய்
அடியாரவருமருமாமறையுமண்டத்தமரரும்
முடியால்வணங்கிக்குணங்களேத்திமுதல்வாவருளென்னச்
செடியார்செந்நெற்றிகழுநறையூர்ச்சித்தீச்சரத்தாரே. (கூ)

நின்றுண்சமணரிருந்துண்டேரர்நீண்டபோர்வையார்
ஒன்றுமுணராவூமர்வாயிலுரைகேட்டுழல்வீர்காள்
கன்றுண்பயப்பாலுண்ணமுலையிற்கபாலமயல்பொழியச்†
சென்றுண்டார்ந்துசேருநறையூர்ச்சித்தீச்சரத்தாரே. (க0)

குயிலார்கோலமாதவிகள்குளிர்பூஞ்சுரபுன்னை
செயிலார்பொய்கைசேருநறையூர்ச்சித்தீச்சரத்தாரை
மயிலார்சோலைசூழ்ந்தகாழிமல்குசம்பந்தன்
பயில்வார்க்கினியபாடல்வல்லார்பாவநாசமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பண் - பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

நேரியனாகுமல்லனொருபாலுமேனியரியான்முனாயவொளியான்
நீரியல்காலுமாகிநிறைவானுமாகியுறுதீயுமாயநிமலன்‡
ஊரியல்பிச்சைபேணியுலகங்களேத்தநல்குண்டு¶பண்டுசுடலை
நாரியொர்பாகமாகநடமாடவல்லநறையூரினம்பனவனே. (க)

இடமயிலன்னசாயன்மடமங்கைதன்கையெதிர்நாணிபூணவரையில்
கடுமயிலம்புகோத்துவெயில்செற்று§கந்துவமரர்க்களித்ததலைவன்
மடமயிலூர்திதாதையெனநின்றுதொண்டர்மனநின்றமைந்தன்மருவும்
நடமயிலாலநீடுகுயில்கூவுசோலைநறையூரினம்பனவனே. (உ)

சூடகமுன்கைமங்கையொருபாகமாகவருள்காரணங்கள்வருவான்
ஈடகமானநோக்கியிடுபிச்சைகொண்டுபடுபிச்சனென்றுபரவத்
தோடகமாயொர்காதுமொருகாதிலங்குகுழைதாழவேழவுரியன்
நாடகமாகவாடிமடவார்கள்பாடுநறையூரினம்பனவனே. (ங)

* விசைந்து என்றும் பாடம். † கபாலமயல்வழியச் என்றும் பாடம். ‡ தீயுமானவிமலன் என்றும், தீயுமாயவொருவன் என்றும்பாடம். ¶ நலகண்டு என்றும் பாடம். § கோத்தவெயில்செற்று என்றும் பாடம்.

Koviloor Digital Library

சாயனன்மாதோர்பாகன்விதியாயசோதிகதியாகநின்றகடவுள்
ஆயகமென்னுள்வந்தவருளாயசெல்வனிருளாயகண்டனவனித்
தாயெனநின்றுகந்ததலைவன்விரும்புமலையின்கண்வந்துதொழுவார்
நாயகமென்றிறைஞ்சிமறையோர்கள்பேணுநறையூரினம்பனவனே. (௪)

நெதிபடுமெய்யெமையனிறைசோலை* சுற்றிநிகழம்பலத்தினடுவே
அதிர்படவாடவல்லவமரர்க்கொருத்தனெமர்சுற்றமாயவிறைவன்
மதிபடுசென்னிமன்னுசடைதாழவந்துவிடையேறியில்பலிகொள்வான்
நதிபடவுந்திவந்துவயல்வாளைபாயுநறையூரினம்பனவனே. (௫)

கணிகைபொர்சென்னிமன்னுமதுவன்னிகொன்றைமலர்துன்றுசெஞ்சடையினன்
பணிகையின்முன்னிலங்கவருவேடமன்னுபலவாகிநின்றபரமன்
அணுகியவேதவோசையகலங்கமாறின்பொருளானவாதியருளான்
நணுகியதொண்டர்கூடிமலர்தூவியேத்துநறையூரினம்பனவனே. (௬)

ஒளிர்தருகின்றமேனி† யுருவெங்குமங்கமவையாரவாடலரவம்
மிளிர்தருகையிலங்கவனலேந்தியாடுமிகிர்தன்விடங்கொண்மிடறன்
துளிதருசோலையாலைதொழின்மேவவேதமெழிலாரவென்றியருளும்
நளிர்மதிசேருமாடமடவார்களாருநறையூரினம்பனவனே. (௭)

அடலெருதேறுகந்தவதிருங்கழற்களெதிருஞ்சிலம்பொடிசையக்
கடலிடைநஞ்சமுண்டுகனிவுற்றகண்டன்முனிவுற்றிலங்கையரையன்
உடலொடுதோளனைத்துமுடிபத்திறுத்துமிசைகேட்டிரங்கியொருவாள்
நடலைகடீர்த்துநல்கிநமையாளவல்லநறையூரினம்பனவனே. (௮)

குலமலர்மேவினானுமிகுமாயனானுமெதிர்கூடிநேடிநினைவுற்
றிலபலவெய்தொணாமைபெரியாயுயர்ந்தபெரியானிலங்குசடையன்
சிலபலதொண்டர்நின்றுபெருமைக்கள்பேசவருமைத்திகழ்ந்தபொழிலின்
நலமலர்சிந்தவாசமணநாறுவீதிநறையூரினம்பனவனே. (௯)

துவருறுகின்றவாடையுடல்போர்த்துழன்றவவர்தாமுமல்லசமணும்
கவருறுசிந்தையாளருரைநீத்துகந்தபெருமான்பிறங்குசடையன்
தவமலிபத்தர்சித்தர்மறையாளர்பேணமுறைமாதர்பாடிமருவும்
நவமணிதுன்றுகோயிலொளிபொன்செய்மாடநறையூரினம்பனவனே. (௧௦)

கானலுலாவியோதமெதிர்மல்குகாழிமிகுபந்தன்முந்தியுணர
ஞானமுலாவுசிந்தைபடிவைத்துகந்தநறையூரினம்பனவனை
ஈனமிலாதவண்ணமிசையாலுரைத்ததமிழ்மாலைபத்துநினைவார்
வானநிலாவவல்லர்நிலமெங்குநின்றுவழிபாடுசெய்யுமிகவே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

* நெதிபடுமெய்ப்பமையமிறைசோலை என்றும் பாடம். † ஒளிதருகின்றமேனி என்றும் பாடம். இப்பாடத்திற்குச் சத்தியினாற்றோற்றுவிக்கின்றதிருமேனி எனப்பொருள் கொள்க; "உலகெலாமாகிவேறுமுடனுமாயொளியாயோங்கி" என்புழி ஒளி என்பதுமது. தருதல் - தானேதோற்றுவித்தல்; எனவே ஐந்தொழிலிற்பட்டுப் பாரதந்திரப்படுபவரல்லர் என்றபடி.

Koviloor Digital Library

சுந்தரமூர்த்திநாயனர்.

பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

நீரும்மலருநிலவுஞ்சடைமேல்
ஊரும்மரவமுடையானிடமாம்
வாரும்மருவிமணிபொன்கொழித்துச்
சேருந்நறையூர்ச்சித்தீச்சரமே. (க)

அளைப்பையரவேரிடையாளஞ்சத்
துளைக்கைக்கரித்தோ லுரித்தானிடமாம்
வளைக்கைம்மடவார்மடுவிற்றடநீர்த்
திளைக்குந்நறையூர்ச்சித்தீச்சரமே. (உ)

இகழுந்தகையோரெயின்மூன்றெரித்த
பகழியொடுவில் லுடையோன்பதிதான்
முகிழ்மென்முலையார்* முகமேகமலம்
திகழுந்நறையூர்ச்சித்தீச்சரமே. (ங.)

மறக்கொளரக்கன்வரைதோள்வரையால்
இறக்கொள்விரற்கோனிருக்குமிடமாம்
நறக்கொள்கமலந்நனிபள்ளியெழத்
திறக்குந்நறையூர்ச்சித்தீச்சரமே. (ச)

முழுநீறணிமேனியன்மொய்குழலார்
எழுநீர்மைகொள்வானமருமிடமாம்
கழுநீர்கமழக்கயல்சே லுகளும்
செழுநீர்நறையூர்ச்சித்தீச்சரமே. (ரு)

ஊனருடைவெண்டலைபுண்பலிகொண்
டானாடலேறமர்வானிடமாம்
வானார்மதியம்பதிவண்பொழில்வாய்த்
தேனார்நறையூர்ச்சித்தீச்சரமே. (சு)

காளூர்கடலில்விடமுண்டருள்செய்
நீளூர்சடையன்னிலவும்மிடமாம்
வாளூர்முலையார்மருவும்மறுகில்
தேளூர்நறையூர்ச்சித்தீச்சரமே. (எ)

கரியின்னுரியுங்கலைமான்மறியும்
எரியும்மழுவுமுடையானிடமாம்
புரியும்மறையோர்நிறைசொற்பொருள்கள்
தெரியுந்நறையூர்ச்சித்தீச்சரமே. (அ)

* முகிண்மென்முலையார் என்றும் பாடம்; முகிழ்மென் முலை முகிண்மென்முலை என்று புணர்ந்தமைக்குவிதி வீரசோழியம் சந்திப்படலம் உக-ம் கலித்துறையிற் காண்க.

Koviloor Digital Library

பேணுமுனிவன்பெருவேள்வியெலாம்
மாணுமைசெய்தான்மருவும்மிடமாம்
பாணார்குழலும்முழவும்விழவில்
சேணார்கறையூர்ச்சித்திச்சரமே. (௯)

குறியில்வழுவாக்கொடுங்கூற்றுதைத்த
எறியும்மழுவாட்படையானிடமாம்
நெறியில்வழுவாநியமத்தவர்கள்
செறியுங்கறையூர்ச்சித்திச்சரமே. (௧௦)

போரார்புரமெய்புனிதனமரும்
சீரார்கறையூர்ச்சித்திச்சரத்தை
ஆரூரன்சொல்லிவைவல்லவர்கள்
ஏராரிமையோருலகெய்துவரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருக்கறையூர்ச்சித்திச்சரத்திருப்பதிகம் - ௪.

ஆ திருப்பதிகம் - ௧௬௮.

சுவாமி தேவி திருநாமங்கள் - படிக்காசர், அழகம்மை.

௯௯. அரிசிற்கரைப்புத்தூர்.*

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

மின்னுஞ்சடைமேலிளவெண்டிங்கள்விளங்கவே
துன்னுங்கடனஞ்சிருடோய்கண்டர்தொன்மூதூர்
அன்னம்படியும்புனலாரரிசிலலைகொண்டு
பொன்னும்மணியும்பொருதென்கரைமேற்புத்தூரே. (௧)

மேவாவசுரர்மேவெயில்வேவமலைவில்லால்
ஏவாரெரிவெங்கணையாலெய்தானெய்துமூர்
நாவானாதனாமமோதிநாடோறும்
பூவானீராற்பூசுரர்போற்றும்புத்தூரே. (௨)

பல்லார்தலைசேர்மாலைசூடிப்பாம்புப்பூண்
டெல்லாவிடமும்வெண்ணீறணிந்தோரேறேறிக்
கல்லார்மங்கைபங்கரேனுங்காணுங்கால்
பொல்லாரல்லரழகியபுத்தூர்ப்புனிதரே. (௩)

* அரிசிற்கரைப்புத்தூர் எனினும், அழகார்புத்தூர் எனினும், திருப்புத்தூர் எனினும் ஒக்கும். பாண்டிநாட்டுத்திருப்புத்தூர்வேறு. அரிசில் - ஓர்நதி; அரிசொல்லவந்தமையால் அதற்கு அரிசொல் என்பது காரணப்பெயர்; அது அரிசில் என மரீஇயிற்று.

Koviloor Digital Library

வரியேர்வளையாளரிவையஞ்சவருகின்ற
கரியேருரிவைபோர்த்தகடவுள்கருதுமூர்
அரியேர்கழனிப்பழனஞ்சூழ்ந்தங்கழகாய
பொரியேர்புன்குசொரிபூஞ்சோலைப்புத்தூரே. (ச)

என்போடரவமேனத்தெயிற்றோடெழிலாமை
மின்போற்புரிநூல்விரவிப்பூண்டவரைமார்பர் *
அன்போடுருகுமடியார்க்கன்பரமருமூர்
பொன்போதலர்கோங்கோங்குசோலைப்புத்தூரே. (ரு)

வள்ளிமுலைதோய்குமரன்றாதைவான்றோயும்
வெள்ளிமலைபோல்விடையொன்றுடையான்மேவுமூர்
தெள்ளிவருநீரரிசிற்றென்பாற்சிறைவண்டும்
புள்ளுமலிபூம்பொய்கைசூழ்ந்தபுத்தூரே. (சு)

நிலந்தணீரோடனல்கால்விசும்பினீர்மையான்
சிலந்திசெங்கோற்சோழனாகச் † செய்தானூர்
அலந்தவடியானற்றைக்கன்றோர்காசெய்திப்
புலர்ந்தகாலைமாலைபோற்றும்புத்தூரே. ‡ (எ)

இத்தேரேக ¶ விம்மலைபேர்ப்பனென்றேந்தும்
பத்தோர்வாயான்வரைக்கீழலறப்பாதந்தான்
வைத்தாரருள்செய்வாரதன்மருவும்மூரான
புத்தூர்காணப்புகுவார்வினைகள்போகுமே. (அ)

முள்ளார்கமலத்தயன்மான்முடியோடடிதேட
ஒள்ளாரெரியாயுணர்தற்கரியானூர்போலும்
கள்ளார்நெய்தல்கழுநீராம்பல்கமலங்கள்
புள்ளார்பொய்கைப்பூப்பலதோன்றும்புத்தூரே. (கூ)

* மணிமார்பர் என்றும் பாடம். † செங்கட்சோழனாகச் என்றும் பாடம். ‡ 'அலந்தவடியானற்றைக்கன்றோர்காசெய்திப்—புலர்ந்தகாலைமாலைபோற்றும்புத்தூரே' என்று இங்கே சுவாமிகள் சிறப்பித்துக் கூறியது புகழ்த்துணைநாயனருக்குச் சிவபெருமானருள்செய்ததை.

புகழ்த்துணைநாயனர் சிவாகமவிதிப்படி பரமசிவனை அருச்சனைசெய்து வருங்காலத்திலே, பஞ்சம் உண்டாயினமையால் பசி மிகப் பெற்றும், "அருச்சனையை விடுவேனல்லேன்" என்று, அல்லும் பகலும் அருச்சித்து வந்தார். ஒருநாள் திருமஞ்சனமாட்டும்பொழுது,மிகுந்த பசிநோயினல் கைசோர்ந்து அபிஷேக கலசந் திருமுடிமேல்விழ, தாந் திருவடியிலே விழுந்து அயர்ந்து, திருவருளினலே நித்திரை அடைந்தார். அப்பொழுது பரமசிவன் அவருக்குச் சொப்பனத்திலே தோன்றி, "பஞ்சம் நீங்கும் வரைக்கும் உனக்குத் தினந்தோறும் இங்கே ஒவ்வொருகாசு வைப்போம்" என்று அருளிச்செய்தார். புகழ்த்துணைநாயனர் விழித்து எழுந்து, பீடத்தின்கீழே ஒருகாசு இருக்கக்கண்டு, அதனைக் கைக்கொண்டு வாழ்ந்தார். அந்நாளிலேபோல எந்நாளிலும் அப்படியே ஒவ்வொருகாசு பெற்று,பஞ்சநீங்கியபின்னும் நெடுங்காலம் மெய்யடிமைத் தொழில்செய்து, பரமசிவனது திருவடிநீழலை அடைந்தார். ¶ இத்தேர்போக வென்றும் பாடம்.

Koviloor Digital Library

கைபார்சோறுகவர்குண்டர்களுந்துவருண்ட
மெய்பார்போர்வைமண்டையர்சொல்லுமெய்யல்ல
பொய்யாமொழியாலந்தணர்போற்றும்புத்தூரில்
ஐயாவென்பார்க்கையுறவின்றியழகாமே. (௧௦)

நறவங்கமழ்பூங்காழிஞானசம்பந்தன்
பொறிகொளரவம்பூண்டானாண்டபுத்தூர்மேல்
செறிவண்டமிழ்செய்மாலைசெப்பவல்லார்கள்
அறவன்கழல்சேர்ந்தன்போடின்பமடைவாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

முத்தூரும்புனன்மொய்யரிசிற்கரைப்
புத்தூரன்னடிபோற்றியென்பாரெல்லாம்
பொய்த்தூரும்புலனைந்தொடுபுல்கிய
மைத்தூரும்வினைமாற்றவும்வல்லரே. (௧)

பிறைக்கணிச்சடையெம்பெருமானென்று
கறைக்கணித்தவர்கண்டவணக்கத்தாய்
உறக்கணித்துருகாமனத்தார்களைப்
புறக்கணித்திடும்புத்தூர்ப்புனிதரே. (௨)

அரிசிலின்கரைமேலணியார்தரு
புரிசைசூழ்திருப்புத்தூர்ப்புனிதனைப்
பரிசொடும்பரவிப்பணிவார்க்கெலாம்
துரிசிலன்னெறிதோன்றிடுங்காண்மினே. (௩)

வேதனைமிகுவினையின்மேவிய
சிதனைக்கிளருங்கறுங்கொன்றைபம்
போதனைப்புனல்சூழ்ந்தபுத்தூரனை
நாதனைநினைந்தென்மனநைபுமே. (௪)

அருப்புப்போன்முலையாரல்லல்வாழ்க்கைமேல்
விருப்புச்சேர்நிலைவிட்டுநல்லிட்டமாய்த்
திருப்புத்தூரனைச்சிந்தைசெயச்செயக்
கருப்புச்சாற்றினுமண்ணிக்குங்காண்மினே. (௫)

பாம்பொடுமதியும்படர்புன்சடைப்
பூம்புனலும்பொதிந்தபுத்தூருளான்
காம்பணிந்தடிபோற்றிடகாடொறும்
சாம்பலென்புதனக்கணியாகுமே.* (௬)

* தமக்கணிவாகுமே என்றும் பாடம்.

Koviloor Digital Library

கனலங்கைதனிலேந்திவெங்காட்டிடை
அனலங்கெய்திநின்றாடுவர்பாடுவர்
பினலஞ்செஞ்சடைமேற்பிறையுந்தரு*
புனலுஞ்சூடுவர்போலும்புத்தூரரே. (எ)

காற்றினுங்கடிதாகிநடப்பதோர்
ஏற்றினும்மிசைந்தேறுவரென்பொடு
நீற்றினையணிவர்நினைவாய்த்தமைப்
போற்றியென்பவர்க்கன்பர்புத்தூரரே. (அ)

முன்னுமுப்புரஞ்செற்றனராயினும்
அன்னமொப்பாலந்தடைந்தார்க்கெலாம் †
மின்னுமொப்பர்விரிசடைமேனிசெம்
பொன்னுமொப்பர்புத்தூரெம்புனிதரே. (கூ)

செருத்தனாற்றனதேர்செலவுய்த்திடும்
கருத்தனைக்கயிலையெடுத்தானுடல்
பருத்ததோள்கெடப்பாதத்தொருவிரல்
பொருத்தினார்பொழிலார்ந்தபுத்தூரரே. (க0)

திருச்சிற்றம்பலம்.

சு ந் த ர மூ ர் த் தி நா ய னா ர்.

ப ண் - இ ந் த ள ம்.

திருச்சிற்றம்பலம்.

மலைக்குமகளஞ்சமதகரியையுரித்திரெரித்தீர்வருமுப்புரங்கள் [ழியீர்
சிலைக்குங்கொலைச்சேவுகந்தேற்றொழியீர் ‡ சில்பலிக்கில்கடொறுஞ்செலவொ
கலைக்கொம்புங்கரிமருப்பும்மிடறிக்கலவம்மயிற்பீலியுங்காரகிலும்
அலைக்கும்புனல்சேரரிசிற்றென்கரையழகார்திருப்புத்தூரழகனீரே. (க)

அருமலரோன்சிரமொன்றறுத்தீர்செறுத்தீரழற்சூலத்திலந்தகனைத்
திருமகள்கோனெடுமால்பலநாள்சிறப்பாகியபூசனைசெய்பொழுதில்
ஒருமலராயிரத்திற்குறைவாநிறைவாகவொர்கண்மலர்சூட்டலுமே
பொருவிறலாழிபுரிந்தளித்தீர்பொழிலார்திருப்புத்தூர்ப்புனிதனீரே. (உ)

தரிக்குந்தரைநீர்தழல்காற்றந்தரஞ்சந்திரன்சவிதாவியமானனானீர்
சரிக்கும்பலிக்குத்தலையங்கையேந்தித்தையலார்பெய்யக்கொள்வதுதக்கதன்றால்
முரிக்குந்தளிர்ச்சந்தனத்தோடுவேயுமுழங்குந்திரைக்கைகளால்வாரிமோதி
அரிக்கும்புனல்சேரரிசிற்றென்கரையழகார்திருப்புத்தூரழகனீரே. (ங)

கொடியுடைமும்மதில்வெந்தழியக்குன்றம்வில்லாநாணியிற்¶கோலொன்றினால்
இடிபடவெய்தெரித்திரிமைக்குமளவிலுமக்காரெதிரெம்பெருமான்
கடிபடுபூங்கணையான்கருப்புச்சிலைக்காமனைவேவக்கடைக்கண்ணினால்
பொடிபடநோக்கியதென்னைகொல்லோபொழிலார்திருப்புத்தூர்ப்புனிதனீரே.

* சடைமேற்பிலயந்தரு என்றும், பினலஞ்செஞ்சடைமேன்மிலையந்தரு என்றும், மினலஞ்செஞ்சடைமேன்மிலையந்தரு என்றும் பாடம். † மொப்பால்வந்தடைந்தார்க்கெலாம் என்றும் பாடம். ‡ தேறொழியீர் என்றும் பாடம். ¶ குன்றவில்லானாணியிற் என்றும் பாடம்.

Koviloor Digital Library

வணங்கித்தொழுவாரவர்மால்பிரமன்மற்றும்வானவர்தானவர்மாமுனிவர்
உணங்கற்றலையிற்பலிகொண்டலென்னேயுலகங்களெல்லாமுடையீருரையீர்
இணங்கிக்கயல்சேலிளவாளைபாயவினக்கெண்டைதுள்ளக்கண்டிருந்தவன்னம்
அணங்கிக்குணங்கொள்ளரிசிற்றென்கரையழகார்திருப்புத்தூரழகனீரே. (ரு)

அகத்தடிமைசெய்யுமந்தணன்றானரிசிற்புனல்கொண்டுவந்தாட்டுகின்றான்
மிகத்தளர்வெய்திக்குடத்தையுநம்முடிமேல்விழுத்திட்டுநடுங்குதலும்
வகுத்தவனுக்குநித்தற்படியும்* வருமென்றொருகாசினைநின்றநன்றிப்
புகழ்த்துணைகைப்புகச்செய்துகந்தீர்பொழிலார்திருப்புத்தூர்ப்புனிதனீரே.†()

பழிக்கும்பெருந்தக்கனெச்சம்மழியப்பகலோன்முதலாப்பலதேவரையும் [நீர்
தெழித்திட்டவரங்கஞ்சிதைத்தருளுஞ்செய்கையென்னைகொலோ‡மைகொள்செம்மிடற்
விழிக்குந்தழைப்பீலியொடேலமுந்திவிளங்கும்மணிமுத்தொடுபொன்வரன்றி
அழிக்கும்புனல்சேரிசிற்றென்கரையழகார்திருப்புத்தூரழகனீரே. (எ)

பறைக்கண்ணெடும்பேய்க்கணம்பாடல்செய்யக்குறட்பாரிடங்கள்பறைதாமுழக்கப்
பிறைக்கொள்சடைதாழப்பெயர்ந்துநட்டம்பெருங்காடரங்காகநின்றாடலென்னே
கறைக்கொண்மணிகண்டமுந்திண்டோள்களுங்கரங்கள்சிரந்தன்னிலுங்கச்சுமாகப்
பொறிக்கொள்ளரவம்¶புன்னைந்நீர்பலவும்பொழிலார்திருப்புத்தூர்ப்புனிதனீரே.

மழைக்கண்மடவாளையோர்பாகம்வைத்தீர்வளர்புன்சடைக்கங்கையைவைத்துகந்தீர்
முழைக்கொள்ளரவோடென்பணிகலனாமுழுநீறுமெய்பூசுதலென்னைகொலோ
கழைக்கொள்கரும்புங்கதலிக்கனியுங்கமுகின்பழுக்காயுங்கவர்ந்துகொண்டிட்
டழைக்கும்புனல்சேரிசிற்றென்கரையழகார்திருப்புத்தூரழகனீரே. (கூ)

கடிக்கும்மரவான்மலையாலமர்கடலைக்கடையவெழுகாளகூடம்
ஒடிக்கும்முலகங்களையென்றதனையுமக்கேயமுதாகவுண்டருமிழீர்
இடிக்கும்மழைவீழ்த்திழுத்திட்டருவிருபாலுமோடியிரைக்குந்திரைக்கை
அடிக்கும்புனல்சேரிசிற்றென்கரையழகார்திருப்புத்தூரழகனீரே. (க0)

காருர்மழைபெய்துபொழிபருவிக்கழையோடகிலுந்திட்டிருகரையும்
போருர்புனல்சேரிசிற்றென்கரைப்பொழிலார்திருப்புத்தூர்ப்புனிதர்தம்மை
ஆரூரனருந்தமிழைந்தினொடைந்தழகாலுரைப்பார்களுங்கேட்பவரும்
சீருர்தருதேவர்கணங்களொடுமிணங்கிச்சிவலோகமதெய்துவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

அரிசிற்கரைப்புத்தூர்த்திருப்பதிகம் - ௩.

ஆ திருப்பதிகம் - ௧௭௧.

சுவாமி தேவி திருநாமங்கள் - படிக்காசுவைத்தபரமர், அழகம்மை.

* நித்தப்படியும் என்றும், நற்றப்படியும் என்றும் பாடம். † திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் இத்தலத் திருப்பதிகத்தில் பரமசிவன் புகழ்த்துணைநாயனாருக்குச்செய்த அருளைச் சிறப்பித்துக் கூறியருளினாற்போலச் சுந்தரமூர்த்திநாயனாரும் சிறப்பித்துக் கூறியருளினார். ‡ என்னைகொலாம் என்றும் பாடம். ¶ பொறிக்கொள்ளரவும் என்றும் பாடம்.

Kovjloor Digital Library

௬௭. திருச்சிவபுரம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

திருவிராகம். பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

புவம்வளிகனல்புனல்புவிகலையுரைமறைதிரிகுணமமர்நெறி
திவமலிதருசுரர்முதலியர்திகழ்தருமுயிரவையவைதம
பவமலிதொழிலதுநினைவொடுபதுமநன்மலரதுமருவிய
சிவனதுசிவபுரநினைபவர்செழுநிலனினினிலைபெறுவரே. (௧)

மலைபலவளர்தருபுவியிடைமறைதருவழிமலிமனிதர்கள்
நிலைமலிசுரர்முதலுலகுகணிலைபெறுவகைநினைவொடுமிகும்
அலைகடனடுவறிதுயிலமரரியுருவியல்பரனுறைபதி
சிலைமலிமதில்சிவபுரநினைபவர்திருமகளொடுதிகழ்வரே. (௨)

பழுதிலகடல்புடைதழுவியபடிமுதலியவுலகுகண்மலி
குழுவியசுரர்பிறர்மனிதர்கள்குலமலிதருமுயிரவையவை
முழுவதுமழிவகைநினைவொடுமுதலுருவியல்பரனுறைபதி
செழுமணியணிசிவபுரநகர்தொழுமவர்புகழ்மிகுமுலகிலே. (௩)

நறைமலிதருமளறொடுமுகைநகுமலர்புகைமிகுவளரொளி
நிறைபுனல்கொடுதனைநினைவொடுநியதமும்வழிபடுமடியவர்
குறைவிலபதமணைதரவருள்குணமுடையிறையுறைவனபதி
சிறைபுனலமர்சிவபுரமதுநினைபவர்செயமகடலைவரே. (௪)

சினமலியறுபகைமிகுபொறிசிதைதருவகைவளிநிறுவிய
மனனுணர்வொடுமலர்மிசையெழுதருபொருணியதமுமுணர்பவர்
தனதெழிலுருவதுகொடுவடைதகுபரனுறைவதுநகர்மதிள்
கனமருவியசிவபுரநினைபவர்கலைமகடரநிகழ்வரே. (௫)

சுருதிகள்பலநலமுதல்கலைதுகளறுவகைபயில்வொடுமிகு
உருவியலுலகவைபுகழ்தர * வழியொழுகுமெய்யுறுபொறியொழி
அருதவமுயல்பவர் † தனதடியடைவகைநினையரனுறைபதி
திருவளர்சிவபுரநினைபவர்திகழ்குலனிலனிடைநிகழுமே. (௬)

கதமிகுகருவுருவொடுவுகிரிட ‡ வடவரைகணகணவென
மதமிகுநெடுமுகனமர்வளைமதிதிகழெயிறதனுதிமிசை
இதமமர்புவியதுநிறுவியவெழிலரிவழிபடவருள்செய்த
பதமுடையவனமர்சிவபுரநினைபவர்நிலவுவர்படியிலே. (௭)

அசைவுறுதவமுயல்வினிலயனருளினில்வருவலிகொடுசிவன்
இசைகயிலையையெழுதருவகை ¶ யிருபதுகரமவைநிறுவிய
நிசிசரன்முடியுடைதரவொருவிரல்பணிகொளுமவனுறைபதி
திசைமலிசிவபுரநினைபவர்செழுநிலனினினிகழ்வுடையரே. (௮)

* புகடர என்றும் பாடம்; புகழ்தர புகடர வென்று புணர்ந்தமைக்குவீரசோழியம் சந்திப்படலம் ௧௮-ம் கலித்துறையிற் காண்க. † தருதவமுயல்பவர் என்றும் பாடம். ‡ வுகிரிடை என்றும் பாடம். ¶ எழுதருவகை—நிலைபெயரும்படி.

Koviloor Digital Library

அடன்மழுபடையரியயனொடுமறிவரியதொரழன்மலிதரு
சுடருருவொடுநிகழ்தரவவர்வெருவொடுதுதியதுசெயவெதிர்
விடமலிகளநுதலமர்கணதுடையுருவெளிபடுமவனகர்
திடமலிபொழிலெழில்சிவபுரநினைபவர்வழிபுவிதிகழுமே. (௯)

குணமறிவுகணிலவிலபொருளுரைமருவியபொருள்களுமில
திணமெனுமவரொடுசெதுமதிமிகுசமணருமலிதமதுரை
உணர்வுடையவருணர்வருபரனுறைதருபதியுலகினில
கணமருவியசிவபுரநினைபவரெழிலுருவுடையவர்களே. (௧0)

திகழ்சிவபுரநகர்மருவியசிவனடியிணைபணிசிரபுர
நகரிறைதமிழ்விரகனதுரைநலமலியொருபதுநவில்பவர்
நிகழ்குலநிலநிறைதிருவுருநிகரிலகொடைமிகுசயமகள்
புகழ்புவிவளர்வழியடிமையின்மிகைபுணர்தர* நலமிகுவரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

இன்குரலிசைகெழும்யாழ்முரலத்
தன்கரமருவியசதுரனகர்
பொன்கரைபொருபழங்காவிரியின்
தென்கரைமருவியசிவபுரமே. (௧)

அன்றடற்காலனைப்பாலனுக்காய்ப்
பொன்றிடவுதைசெய்தபுனிதனகர்
வென்றிகொளெயிற்றுவெண்பன்றிமுன்னாள்
சென்றடிவீழ்தருசிவபுரமே. (௨)

மலைமகண்மறுகிடமதகரியைக்
கொலைமல்கவுரிசெய்தகுழகனகர்
அலைமல்குமரிசிலினதனயலே
சிலைமல்குமதிளணிசிவபுரமே. (௩)

மண்புனலனலொடுமாருதமும்
விண்புணர்மருவியவிகிர்தனகர்
பண்புணர்குரல்வழிவண்டுகெண்டிச் †
செண்பகமலர்பொழிற்சிவபுரமே. (௪)

வீறுநன்குடையவண்மேனிபாகம்
கூறுநன்குடையவன்குளிர்நகர்தான்
நாறுநன்குரவிரிவண்டுகெண்டித் †
தேறலுண்டெழுதருசிவபுரமே. (௫)

* யடிமையின்மிசைபுணர்தர என்றும், யடிமையின் மகபுணர்தர என்றும் பாடம்.
† † கிண்டி என்றும் பாடம்.

Koviloor Digital Library

மாறெதிர்வருதிரிபுரமெரித்து
நீறதுவாக்கியநிமலனகர்
நாறுடைநடுபவருழவரொடும் *
சேறுடைவயலணிசிவபுரமே. (சு)

ஆவிலேந்தமர்ந்தவனரிவையொடு
மேவிநன்கிருந்ததோர்வியனகர்தான்
பூவில்வண்டமர்தருபொய்கையன்னச்
சேவறன்பெடைபுல்குசிவபுரமே. (எ)

எழின்மலையெடுத்தவல்லிராவணன்றன்
முழுவலியடக்கியமுதல்வனகர்
விழவினிலெடுத்தவெண்கொடிமிடைந்து
செழுமுகிலடுக்கும் † வண்சிவபுரமே. (அ)

சங்களவியகையன்சதுர்முகனும்
அங்களவறிவரியவனகர்தான்
கங்குலும்பறவைகள்கமுகுதோறும்
செங்கனிநுகர்தருசிவபுரமே. (கூ)

மண்டையிற்குண்டிகைமாசுதரும் ‡
மிண்டரைவிலக்கியவிமலனகர்
பண்டமர்தருபழங்காவிரியின்
தெண்டிரைபொருதெழுசிவபுரமே. (க0)

சிவனுறைதருசிவபுரநகரைக்
கவுணியர்குலபதிகாழியர்கோன்
தவமல்குதமிழிவைசொல்லவல்லார்
நவமொடுசிவகதிநண்ணுவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவிராகம். பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

கலைமலியகலல்குலரிவைதனுருவினன்
முலைமலிதருதிருவுருவமதுடையவன்
சிலைமலிமதில்பொதிசிவபுரநகர்தொழ
இலைநலிவினையிருமையுமிடர்கெடுமே. (க)

படரொளிசடையினன்விடையினன்மதிலவை
சுடரெரிகொளுவியசிவனவனுறைபதி
திடலிடுபுனல்வயல்சிவபுரமடையநம்
இடர்கெடுமுயர்கதிபெறுவதுதிடனே. (உ)

* நடுவளருழவரொடும் என்றும் பாடம். † செழுமுகிலெடுக்கும் என்றும் பாடம்.
‡ மாசுதூரும் என்றும் பாடம்; தூர்தல்—நிறைதல்.

வரைதிரிதரவரவகடழலெழவரு
நுரைதருகடல்விடநுகர்பவனெழிறிகழ்
திரைபொருபுனலரிசிலதடைசிவபுரம்
உரைதருமடியவருயர்கதியினரே. (௩)

துணிவுடையவர்சுடுபொடியினருடலடு
பிணிபடைவிலர்பிறவியுமறவிசிறுவர்
தணிவுடையவர்* பயில்சிவபுரமருவிய
மணிமிடறனதடியிணைதொழுமவரே. (௪)

மறையவன்மதியவன்மலையவனிலையவன்
நிறையவனுமையவண்மகிழ்நடநவில்பவன்
இறையவனிமையவர்பணிகொடுசிவபுரம்
உறைவெனவுடையவனெமையுடையவனே. (௫)

முதிர்சடையிளமதிநதிபுனல்பதிவுசெய்
ததிர்கழலொலிசெயவருநடநவில்பவன் †
எதிர்பவர்புரமெய்தவிணையிலியணைபதி
சதிர்பெறுமுளமுடையவர்சிவபுரமே. (௬)

வடிவுடைமலைமகள்சலமகளுடனமர்
பொடிபடுமுழைபதன் ‡ பொலிதிருவுருவினன்
செடிபடுபலிதிரிசிவனுறைசிவபுரம்
அடைதருமடியவரருவினையிலரே. (௭)

கரமிருபதுமுடிபொருபதுமுடையவன்
உரநெரிதரவரையடர்வுசெய்தவனுறை
பரனெனவடியவர்பணிதருசிவபுர
நகரதுபுகுதனமுயர்கதியதுவே. (௮)

அன்றியலுருவுகொளரியயனெனுமவர்
சென்றளவிடலரியவனுறைசிவபுரம்
என்றிருபொழுதுமுன்வழிபடுமவர்துயர்
ஒன்றிலர்புகழொடுமுடையரிவ்வுலகே. (௯)

புத்தரொடமணர்களறவுரைபுறவுரை
வித்தகமொழிகிலவிடையுடையடிகடம்
இத்தவமுயல்வுறிலிறைவனசிவபுரம்
மெய்த்தகவழிபடல்விழுமியகுணமே. (௧0)

புந்தியர்மறைநவில்புகலிமன்ஞானசம்
பந்தனதமிழ்கொடுசிவபுரநகருறை
எந்தையையுரைசெய்தவிசைமொழிபவர்வினை
சிந்திமுனுறவுயர்கதிபெறுவர்களே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

* திணிவுடையவர் என்றும் பாடம். † நவில்வோன் என்றும் பாடம். ‡ பொடிபடமிழைபதன் என்றும் பாடம்; இழை நஞ்சுப் பூநூல்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

திருநாவுக்கரசு நாயனார்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

வானவன்காண்வானவர்க்குமேலானான்காண்
வடமொழியுந்தென்றமிழுமறைகணான்கும்
ஆனவன்காணானைந்துமாடினான்கா
ணையன்காண்கையிலனலேந்தியாடும்
கானவன்காண்கானவனுக்கருள்செய்தான்காண்
கருதுவாரிதயத்துக் * கமலத்தூறும்
தேனவன்காண்சென்றடையாச்செல்வன்றான்காண்
சிவனவன்காண்சிவபுரத்தெஞ்செல்வன்றானே. (க)

நக்கன்காணக்கரவமரையிலார்த்த
நாதன்காண்பூதகணமாடவாடும்
சொக்கன்காண்கொக்கிறகுசூடினான்காண்
டுடியிடையாடுணைமுலைக்குச்சேர்வதாகும்
பொக்கன்காண்பொக்கணத்த † வெண்ணீற்றான்காண்
புவனங்கண்மூன்றினுக்கும்பொருளாய்நின்ற ‡
திக்கன்காண்செக்கரதுதிகழுமேனிச்
சிவனவன்காண்சிவபுரத்தெஞ்செல்வன்றானே. (உ)

வம்பின்மலர்க்குழலுமையாண்மணவாளன்காண்
மலரவன்மால்காண்பரியமைந்தன்றான்காண்
கம்பமதக்கரிபிளிறவுரிசெய்தோன்காண்
கடனஞ்சமுண்டிருண்டகண்டத்தான்காண்
அம்பர்நகர்ப்பெருங்கோயிலமர்கின்றான்கா
ணயவந்தியுள்ளான்காணையாறன்காண்
செம்பொனெனத்திகழ்கின்றவுருவத்தான்காண்
சிவனவன்காண்சிவபுரத்தெஞ்செல்வன்றானே. (ங)

பித்தன்காண்டக்கன்றன்வேள்வியெல்லாம்
பீடழியச்சாடியருள்கள்செய்த
முத்தன்காண்முத்தீயுமாயினான்காண்
முனிவர்க்கும்வானவர்க்குமுதலாய்மிக்க
அத்தன்காண்புத்தூரிலமர்ந்தான்றான்கா
ணரிசிற்பெருந்துறையேயாட்சிகொண்ட
சித்தன்காண்சித்தீச்சரத்தான்றான்காண்
சிவனவன்காண்சிவபுரத்தெஞ்செல்வன்றானே. (ச)

* கருதுவாரிர்தயத்துக் என்றும் பாடம். † பொக்கணம் - விபூதிப்பை. ‡ பொருவாய் நின்ற என்றும் பாடம்; பொருவாய்நிற்றல் - சமநிறைவாய்நிற்றல்.

Koviloor Digital Library

தூயவன்காணீறுதுதைந்தமேனித்
துளங்கும்* பளிங்கனையசோதியான்காண்
தீயவன்காண்டீயவுணர்புரஞ்செற்றான்காண்
சிறுமான்கொள்செங்கையெம்பெருமான்றான்காண்
ஆயவன்காணாரூரிலம்மான்றான்கா
ணடியார்கட்காரமுதமாயினான்காண்
சேயவன்காண்சேமநெறியாயினான்காண்
சிவனவன்காண்சிவபுரத்தெஞ்செல்வன்றானே. (௫)

பாரவன்காண்பாரதனிற்பயிரானான்காண்
பயிர்வளர்க்குந்துளியவன்காண்டுளியினின்ற
நீரவன்காணீர்சடைமேனிகழ்வித்தான்கா
ணிலவேந்தர்பரிசாகநினைவுற்றோங்கும்
பேரவன்காண்பிறையெயிற்றுவெள்ளைப்பன்றி
பிரியாதுபலநாளும்வழிபட்டேத்தும்
சீரவன்காண்சீருடையதேவர்க்கெல்லாஞ்
சிவனவன்காண்சிவபுரத்தெஞ்செல்வன்றானே. (௬)

வெப்பவன்காண்வெய்யகனலேந்தினான்காண்
வியன்கெடிலவீரட்டமேவினான்காண்
மெய்ப்பவன்காண்பொய்யர்மனம்விரவாதான்காண்
வீணையோடிசைந்துமிகுபாடன்மிக்க
கையவன்காண்கையின்மழுவேந்தினான்காண்
காமரங்கம்பொடிவிழித்த† கண்ணினான்காண்
செய்யவன்காண்செய்யவளைமாலுக்கீந்த
சிவனவன்காண்சிவபுரத்தெஞ்செல்வன்றானே. (௭)

கலையாருநூலங்கமாயினான்காண்
கலைபயிலுங்கருத்தன்காண்டிருத்தமாகி
மலையாகிமறிகடலேழ்சூழ்ந்துநின்ற
மண்ணாகிவிண்ணாகிநின்றான்றான்காண்
தலையாயமலையெடுத்ததகவிலோனைத்
தகர்ந்துவிழவொருவிரலாற்சாதித்தாண்ட
சிலையாருமடமகளோர்‡ கூறன்றான்காண்
சிவனவன்காண்சிவபுரத்தெஞ்செல்வன்றானே. ¶ (௰)

திருச்சிற்றம்பலம்.

திருச்சிவபுரத்திருப்பதிகம் - ௪.

ஆ திருப்பதிகம் - ௧௭௫.

சுவாமி தேவி திருநாமங்கள் - பிரமபுரிநாதர், பெரியநாயகி.

*மேனிதுளங்கும் என்றும் பாடம். † பொடிவிழ்த்த என்றும் பாடம். ‡ மலைமகளோர் என்றும் பாடம். ¶ இத்திருப்பதிகத்தில் ௮, ௯ இச்செய்யுள்கள் மறைந்துபோயின.

Koviloor Digital Library

௬அ. திருக்கலயநல்லூர். *

சுந்தரமூர்த்திநாயனூர்.

பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

குரும்பைமுலைமலர்க்குழலிகொண்டதவங்கண்டு
குறிப்பினொடுசென்றவடன்குணத்தினைநன்கறிந்து
விரும்பும்வரங்கொடுத்தவளைவேட்டருளிச்செய்த
விண்ணவர்கோன்கண்ணுதலோன்மேவியவூர்வினவில்
அரும்பருகேசுரும்பருவவறுபதம்பண்பாட
வணிமயில்கணடமாடுமணிபொழில்சூழ்வயலின்
கரும்பருகேகருங்குவளைகன்வளருங்கழனிக்
கமலங்கண்முகமலருங்கலயநல்லூர்காணே. (௧)

செருமேவுசலந்தரனைப்பிளந்தசுடராழி
செங்கண்மலர்பங்கயமாச்சிறந்தானுக்கருளி
இருண்மேவுமந்தகன்மேற்றிரிசூலம்பாய்ச்சி
யிந்திரனைத்தோண்முரித்தவிறையவனூர்வினவில்
பெருமேதைமறையொலியும்பேரிமுழவொலியும்
பிள்ளையினந்துள்ளிவிளையாட்டொலியும்பெருகக்
கருமேதிபுனன்மண்டக்கயன்மண்டக்கமலங்
களிவண்டின்கணமிரியுங்கலயநல்லூர்காணே. (௨)

இண்டைமலர்கொண்டுமணலிலிங்கமதுவியற்றி
யினத்தாவின்பாலாட்டவிடறியதாதையைத்தாள்
துண்டமிடுசண்டியடியண்டர்தொழுதேத்தத்
தொடர்ந்தவனைப்பணிகொண்டவிடங்கனதூர்வினவில்
மண்டபமுங்கோபுரமுமாளிகைசூளிகையும்
மறையொலியும்விழவொலியுமறுகுநிறைவெய்திக்
கண்டவர்கண்மனங்கவரும்புண்டரிகப்பொய்கைக்
காரிகையார்குடைந்தாடுங்கலயநல்லூர்காணே. (௩)

மலைமடந்தைவிளையாடிவளையாடுகரத்தான்
மகிழ்ந்தவள்கண் † புதைத்தலுமேவல்லிருளாயெல்லா
உலகுடன்றான்மூடவிருளோடும்வகைநெற்றி
யொற்றைக்கண்படைத்துகந்தவுத்தமனூர்வினவில்
அலையடைந்தபுனல்பெருகியானைமருப்பிடறி
யகிலொடுசந்துந்திவருமரிசிலின்றென்கரைமேல்
கலையடைந்துகலிகடியந்தணரோமப்புகையாற்
கனமுகில்போன்றணிகிளருங்கலயநல்லூர்காணே. (௪)

* திருக்கலயநல்லூர்—சாக்கோட்டை. † மகிழ்ந்தவன்கண் என்றும் பாடம்.

Koviloor Digital Library

நிற்பானுங்கமலத்திலிருப்பானுமுதலா
நினைந்தமரர்குறைந்திரப்பநினைந்தருளியவர்க்காய்
வெற்பார்வில்லரவுநாணெரியம்பால்விரவார்
புரமூன்றுமெரிவித்தவிகிர்தனூர்வினவில்
சொற்பாலபொருட்பாலசுருதியொருநான்குந்
தோத்திரமும்பலசொல்லித்துதித்திறைதன்றிறத்தே
கற்பாருங்கேட்பாருமாயெங்குநன்கார்
கலைபயிலந்தணர்வாழுங்கலயநல்லூர்காணே. (௫)

பெற்றிமையொன்றறியாததக்கனதுவேள்விப்
பெருந்தேவர்சிரந்தோள்பற்கரங்கண்பீடழியச்
செற்றுமதிக்கலை* சிதையத்திருவிரலாற்றேய்வித்
தருள்பெருகுசிவபெருமான்சேர்தருமூர்வினவில்
தெற்றுகொடிமுல்லையொடுமல்லிகைசெண்பகமுந்
திரைபொருதுவருபுனல்சேரரிசிலின்றென்கரைமேல்
கற்றின† நன்கரும்பின்முளைகறிகற்கக்கறவை
கமழ்கழுநீர்கவர்கழனிக்கலயநல்லூர்காணே. (௬)

இலங்கையர்கோன்சிரம்பத்தோடிருபதுதிண்டோளு
மிற்றலறவொற்றைவிரல்வெற்பதன்மேலூன்றி
நிலங்கிளர்நீர்நெருப்பொடுகாற்றாகாசமாகி
நிற்பனவுநடப்பனவாநின்மலனூர்வினவில்
பலங்கள்பலதிரையுந்திப்பருமணிபொன்கொழித்துப்
பாதிரிசந்தகிலினொடுகேதகையும்பருகிக் ‡
கலந்துபுனலலம்பிவருமரிசிலின்றென்கரைமேற்
கயலுகளும்வயல்புடைசூழ்கலயநல்லூர்காணே. (௭)

மாலயனுங்காண்பரியமாலெரியாய்நிமிர்ந்தோன்
வன்னிமதிசென்னிமிசைவைத்தவன்மொய்த்தெழுந்த
வேலைவிடமுண்டமணிகண்டன்விடையூரும்
விமலனுமைபவளோடுமேவியவூர்வினவில்
சோலைமலிகுயில்கூவக்கோலமயிலாலச்
சுரும்பொடுவண்டிசைமுரலப்பசுங்கிளிசொற்றுதிக்கக்
காலையிலுமாலையிலுங்கடவுளடிபணிந்து
கசிந்தமனத்தவர்பயிலுங்கலயநல்லூர்காணே. (௮)

பொரும்பலமதுடையசுரன்றாரகனைப்பொருது
பொன்றுவித்தபொருளினை¶ முன்படைத்துகந்தபுனிதன்
கரும்புவிலின்மலர்வாளிக்காமனுடல்வேவக்
கனல்விழித்தகண்ணுதலோன்கருதுமூர்வினவில்
இரும்புனல்வெண்டிரைபெருகியேலமிலவங்க
மிருகரையும்பொருதலைக்குமரிசிலின்றென்கரைமேல்
கரும்புனைவெண்முத்தரும்பிப்பொன்மலர்ந்துபவளக்
கவின்காட்டுங்கடிபொழில்சூழ்கலயநல்லூர்காணே. (௯)

* மதிக்கலை என்றும் பாடம். † கற்றினம்—கன்றின்கூட்டம். ‡ பருகி - தன்னுளடக்கி; கேதகையும்பருக்கி என்றும் பாடம். ¶ பொருள்—பிள்ளை; பொன்னினை என்றும் பாடம்.

Koviloor Digital Library

தண்கமலப்பொய்கைபுடைசூழ்ந்தழகார்தலத்திற்
றடங்கொள்பெருங்கோயிறனிற்றக்கவகையாலே
வண்கமலத்தயன்முன்னாள்வழிபாடுசெய்ய
மகிழ்ந்தருளியிருந்தபரன்மருவியவூர்வினவில்
வெண்கவரிகரும்பீலிவேங்கையொடுகோங்கின்
விரைமலரும்விரவுபுனலரிசிலின்றென்கரைமேல்
கண்கமுகின்பூம்பாளைமதுவாசங்கலந்த
கமழ்தென்றல்புகுந்துலவுகலயநல்லூர்காணே. (க0)

தண்புனலும்வெண்மதியுந்தாங்கியசெஞ்சடையன்
றாமரையோன்றலைகலனாக்காமமுன்பாடி
உண்பலிகொண்டுழல்பரமனுறையுமூர்நிறைநீ
ரொழுகுபுனலரிசிலின்றென்கலயநல்லூரதனை
நண்புடையநன்சடையனிசைஞானிசிறுவ
னாவலர்கோனாரூரனுவினயந்துரைசெய்
பண்பயிலும்பத்துமிவைபத்திசெய்துபாட
வல்லவர்களல்லலொடு* பாவமிலர்தாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருக்கலயநல்லூர்த்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - கஎசு.

சுவாமி தேவி திருநாமங்கள் - அமிர்தகலாநாதர், அமிர்தவல்லி.

சூகூ. திருக்கருக்குடி. †

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

நனவிலுங்கனவிலுநாளுந்தன்னொளி
நினைவிலுமெனக்குவந்தெய்துநின்மலன்
கனைகடல்வையகந்தொழுகருக்குடி
அனலெரியாடுமெம்மடிகள்காண்மினே. (க)

வேதியன்விடையுடைவிமலனொன்னலர்
மூதெயிலெரியெழமுனிந்தமுக்கணன்
காதியல்குழையினன்கருக்குடியமர்
ஆதியையடிதொழவல்லலில்லையே. (உ)

* பத்திசெய்துநித்தம்பாடவல்லாரல்லலொடு என்றும் பாடம். † மருதாந்தநல்லூர்.

Koviloor Digital Library

மஞ்சுறுபொழில்வளமலிகருக்குடி
நஞ்சுறுதிருமிடறுடையநாதனுர்
அஞ்சுரும்பார்குழலரிவைபஞ்சவே
வெஞ்சுரந்தனில்விளையாடலென்கொலோ. (௩)

ஊனுடைப்பிறவியையறுக்கவுன்னுவீர்
கானிடையாடலான்பயில்கருக்குடிக்
கோனுயர்கோயிலைவணங்கிவைகலும்
வானவர்தொழுகழல்வாழ்த்திவாழ்மினே. (௪)

சூடுவர்சடையிடைக்கங்கைநங்கையைக்
கூடுவருலகிடையையங்கொண்டொலி
பாடுவரிசைபறைகொட்டநட்டிருள்
ஆடுவர்கருக்குடியண்ணல்வண்ணமே. (௫)

இன்புடையாரிசைவீணைபூணரா
என்புடையாரெழின்மேனிமேலெரி
முன்புடையார்முதலேத்துமன்பருக்
கன்புடையார்கருக்குடியெம்மண்ணலே. (௬)

காலமுஞாயிறுந்தீயுமாயவர்
கோலமுமுடியரவணிந்தகொள்கையர்
சீலமுமுடையவர்திருக்கருக்குடிச்
சாலவுமினிதவருடையதன்மையே. * (௭)

எறிகடல்புடைதழுவிலங்கைமன்னனை
முறிபடவரையிடையடர்த்தமூர்த்தியார்
கறைபடுபொழின் † மதிதவழ்கருக்குடி
அறிவொடுதொழுமவராள்வர்நன்மையே. (௮)

பூமனுந்திசைமுகன்றானும்பொற்பமர்
வாமனனறிகிலாவண்ணமோங்கெரி
ஆமெனவுயர்ந்தவனணிகருக்குடி
நாமனனினில்வரநினைதனன்மையே. (௯)

சாக்கியர்சமண்படுகையர்பொய்ம்மொழி
ஆக்கியவுரைகொளேலருந்திருக் ‡ நமக்
காக்கியவரனுறையணிகருக்குடிப்
பூக்கமழ்கோயிலேபுடைபட்டுய்ம்மினே. (௰)

* கருக்குடி-சாலவுமினிதவருடையதன்மையே என்றும் பாடம். † கறைபடுபொழில் - இருளுண்டாகின்றசோலை; கறைபடுமதிதவழ்பொழிற்கருக்குடி எனமாற்றிப் பொருள் கொள்ளினுமிழுக்காது. ‡ அருந்திரு - அருட்செல்வம்.

Koviloor Digital Library

கானலில்விரைமலர்விம்முகாழியான்
வானவன்கருக்குடிமைந்தன்றன்னொளி
ஆனமெய்ஞ்ஞானசம்பந்தன்சொல்லிய
ஊனமின்மொழிவலார்க்குயருமின்பமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருக்கருக்குடித்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - களஎ.

சுவாமி தேவி திருநாமங்கள் - சற்குணநாதர், சர்வாலங்கிருதமின்னம்மை.

எ0. திருவாஞ்சியம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

வன்னிகொன்றைமதமத்தமெருக்கொடுகூவிளம்
பொன்னியன்றசடையிற்பொலிவித்தபுராணனார்
தென்னவென்றுவரிவண்டிசைசெய்திருவாஞ்சியம்
என்னையாளுடை* யானிடமாகவுகந்ததே. (க)

காலகாலர்கரிகானிடைமாநடமாடுவர்
மேலர்வேலைவிடமுண்டிருள்கின்றமிடற்றினர்
மாலைகோலமதிமாடமன்னுந்திருவாஞ்சியம்
ஞாலம்வந்துபணியப்பொலிகோயினயந்ததே. (உ)

மேவிலொன்றர்விரிவுற்றவிரண்டினர்மூன்றுமாய்
நாவினலருடலஞ்சினராறரேழோசையர்
தேவிலெட்டர்திருவாஞ்சியமேவியசெல்வனார்
பாவந்தீர்ப்பர்பழிபோக்குவர்தம்மடியார்கட்கே. (ங)

சூலமேந்திவளர்கையினர்மெய்சுவண்டாகவே
சாலநல்லபொடிப்பூசுவர்பேசுவர்மாமறை
சீலமேவுபுகழாற்பெருகுந்திருவாஞ்சியம்
ஆலமுண்டவடிகள்ளிடமாகவமர்ந்ததே. (ச)

கையிலங்குமறியேந்துவர்காந்தளம்மெல்விரல் †
தையல்பாகமுடையாரடையார்புரஞ்செற்றவர்
செய்யமேனிக்கரியம்மிடற்றார்திருவாஞ்சியத்
தையர்பாதமடைவார்க்கடையாவருநோய்களே. (ரு)

* என்னையாள்வுடை என்றும் பாடம். † காந்தளமெல்விரல் என்றும் பாடம்.

Keviloor Digital Library

அரவம்பூண்பரணியுஞ்சிலம்பார்க்கவகந்தொறும்
இரவினல்லபலிபேணுவர்நாணிலர்நாமமே
பரவுவார்வினைதீர்க்கநின்றார்திருவாஞ்சியம்
மருவியேத்தமடமாதொடுநின்றவெம்மைந்தரே. (௬)

விண்ணிலானபிறை* சூடுவர்தாழ்ந்துவிளங்கவே
கண்ணினாலநங்கன்னுடலம்பொடியாக்கினார்
பண்ணிலானவிசைபாடன்மல்குந்திருவாஞ்சியத்
தண்ணலார்தம்மடிபோற்றவல்லார்க்கில்லையல்லலே. (௭)

மாடநீடுகொடிமன்னியதென்னிலங்கைக்குமன்
வாடியூடவரையாலடர்த்தன்றருள்செய்தவர்
வேடவேடர்திருவாஞ்சியமேவியவேந்தரைப்
பாடநீடுமனத்தார்வினைபற்றறுப்பார்களே. (௮)

செடிகொணோயின்னடையார்நிறம்பார்செறுதீவினை
கடியகூற்றமுங்கண்டகலும்புகழான்வரும்
நெடியமாலொடயனேத்தநின்றார்திருவாஞ்சியத்
தடிகள்பாதம்மடைந்தாரடியாரடியார்கட்கே. (௯)

பிண்டமுண்டுதிரிவார்பிரியுந்துவராடையார்
மிண்டர்மிண்டும்மொழிமெய்யலபொய்யிலையெம்மிறை
வண்டுகெண்டிமருவும்பொழில்சூழ்திருவாஞ்சியத்
தண்டவாணனடிகைதொழுவார்க்கில்லையல்லலே. (௧௦)

தென்றறுன்றும்பொழில்சென்றணையுந்திருவாஞ்சியத்
தென்றுநின்றவிறையானையுணர்ந்தடியேத்தலால்
நன்றுகாழிமறைஞானசம்பந்தனசெந்தமிழ்
ஒன்றுமுள்ளமுடையாரடைவாருயர்வானமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

படையும்பூதமும்பாம்பும்புல்வாயதள்
உடையுந்தாங்கியவுத்தமனார்க்கிடம்
புடைநிலாவியபூம்பொழில்வாஞ்சியம்
அடையவல்லவர்க்கல்லலொன்றில்லையே. (௧)

* விண்ணில்வான்பிறை என்றும் பாடம்.

Koviloor Digital Library

பறப்பையும்பசுவும்படுத்துப்பல
திறத்தவும்முடையோர்திகழும்பதி
கறைப்பிறைச்சடைக்கண்ணுதல்சேர்தரு
சிறப்புடைத்திருவாஞ்சியஞ்சேர்மினே. (௨)

புற்றிலாடரவோடுபுனன்மதி*
தெற்றுஞ்செஞ்சடைத்தேவர்பிரான்பதி
சுற்றுமாடங்கள்சூழ்திருவாஞ்சியம்
பற்றிப்பாடுவார்க்குப்பாவமில்லையே. (௩)

அங்கமாறுமருமறைநான்குடன்
தங்குவேள்வியர்தாம்பயிலுங்நகர்
செங்கண்மாலிடமார்திருவாஞ்சியம்
தங்குவார்நம்மமரர்க்கமரரே. (௪)

நீறுபூசிநிமிர்சடைமேற்பிறை
ஆறுசூடுமடிகளுறைபதி
மாறுதானெருங்கும்வயல்வாஞ்சியம்
தேறிவாழ்பவர்க்குச்செல்வமாகுமே. (௫)

அற்றுப்பற்றின்றியாரையுமில்லவர்க்
குற்றநற்றுணையாவானுறைபதி
தெற்றுமாடங்கள்சூழ்திருவாஞ்சியம்
கற்றுச்சேர்பவர்க்குக்கருத்தாவதே. (௬)

அருக்கனங்கியமனொடுதேவர்கள்
திருத்துஞ்சேவடியான்றிகழுங்நகர்
ஒருத்திபாகமுகந்தவன்வாஞ்சியம்
அருத்தியாலடைவார்க்கில்லையல்லலே.† (௰)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பொருவனார்புரிநூலர்புணர்முலையுமையவளோடு
மருவனார்மருவார்பால்வருவதுமில்லைநம்மடிகள்
திருவனார்பணிந்தேத்துந்திகழ்திருவாஞ்சியத்துறையும்
ஒருவனாரடியாரையூழ்வினை‡நலியவொட்டாரே. (௧)

* டரவோடப்புனன்மதி என்றும் பாடம். † இத்திருப்பதிகத்தில் எ, அ, க இச்செய்யுட்கள் மறைந்துபோயின. ‡ யுளவினை என்றும் பாடம்.

Koviloor Digital Library

தொறுவிலானிளவேறுதுண்ணென * விடிகுரல்வெருவிச்
செறுவில்வாளைகளோடச்செங்கயல்பங்கயத்தொதுங்கக்
கறுவிலாமனத்தார்கள்காண்டகுவாஞ்சியத்தடிகள்
மறுவிலாதவெண்ணீறுபூசுதன்மன்னுமொன்றுடைத்தே. (௨)

தூர்த்தர்மூவெயிலெய்துசுடுநுனைப்பகழியதொன்றால்
பார்த்தனார்திரடோண்மேற்பன்னுனைப்பகழிகள்பாய்ச்சித்
தீர்த்தமாமலர்ப்பொய்கைத்திகழ்திருவாஞ்சியத்தடிகள்
சாத்துமாமணிக்கச்சங்கொருதலைபலதலையுடைத்தே. (௩)

சள்ளைவெள்ளையங்குருகுதானதுவாமெனக்கருதி
வள்ளைவெண்மலரஞ்சிமறுகியோர்வாளையின்வாயில்
துள்ளுதெள்ளுநீர்ப்பொய்கைத்துறைமல்குவாஞ்சியத்தடிகள்
வெள்ளைநுண்பொடிப்பூசும்விகிர்தமொன்றொழிகிலர்தாமே. (௪)

மைகொள்கண்ட † ரெண்டோளர்மலைமகளுடனுறைவாழ்க்கைக்
கொய்தகூவிளமாலைகுலவியசடைமுடிக்குழகர்
கைதைநெய்தலங்கழனிகமழ் ‡ புகழ்வாஞ்சியத்தடிகள்
பைதல்வெண்பிறையோடுபாம்புடன்வைப்பதுபரிசே. (௫)

கரந்தைகூவிளமாலைகடிமலர்க்கொன்றையுஞ்சூடிப்
பரந்தபாரிடஞ்சூழவருவர்நம்பரமர்தம்பரிசால்
திருந்துமாடங்கணீடுதிகழ்திருவாஞ்சியத்துறையும்
மருந்தனாரடியாரைவல்வினைநலியவொட்டாரே. (௬)

அருவிபாய்தருகழனியலர்தருகுவளையங்கண்ணார்
குருவியாய் ¶ கிளிசேர்ப்பக்குருகினமிரிதருகிடங்கில்
பருவரால்குதிகொள்ளும்பைம்பொழில்வாஞ்சியத்துறையும்
இருவராலறியொண்ணாவிறைவனதறைகழல்சரணே. (௭)

களங்களார்தருகழனியளிதரக்களிதருவண்டு
உளங்களார்கலிப்பாட § லும்பரிலொலித்திடுங்காட்சி
குளங்களானிழற்கீழ்நற்குயில்பயில்வாஞ்சியத்தடிகள்
விளங்குதாமரைப்பாதநினைப்பவர்வினைநலிவிலரே. (௮)

வாழையின்கனிதானுமதுவிம்முவருக்கையின்சுளையும்
கூழைவானரந்தம்மிற்கூறிதுசிறிதெனக்குழறித்
தாழைவாழைப்பந்தண்டாற்செருச்செய்துதருக்குவாஞ்சியத்துள்
ஏழைபாகனையல்லாலிறையெனக்கருதுதலிலமே. (௯)

* துண்ணென்ன என்றும் பாடம் † மையகண்டர் என்றும் பாடம். ‡ கழனிக்கமழ் என்றும் பாடம். ¶ குருவிபாய் என்றும் பாடம். § கவிப்பாடல் என்றும் பாடம்.

Koviloor Digital Library

செங்நெலங்கலங்கழனித்திகழ்திருவாஞ்சியத்துறையும்
மின்னலங்கலஞ்சடையெம்மிறைவனதறைகழல்பரவும்
பொன்னலங்கனன்மாடப்பொழிலணிநாவலாரூரன்
பன்னலங்கனன்மாலைபாடுமின்பத்தருளீரே. * (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவாஞ்சியத்திருப்பதிகம் - ங.

ஆ திருப்பதிகம் - கஅ0.

சுவாமி தேவி திருநாமங்கள் - வாஞ்சியநாதர், வாழவந்தநாயகி.

எக. திருநன்னிலத்துப்பெருங்கோயில்.

சுந்தரமூர்த்தி நாயனார்.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

தண்ணியல்வெம்மையினான்றலையிற்கடைதோறும்பலி
பண்ணியன்மென்மொழியாரிடக்கொண்டுழல் † பண்டரங்கன்
புண்ணியநான்மறையோர்முறையாலடிபோற்றிசைப்ப
நண்ணியநன்னிலத்துப்பெருங்கோயினயந்தவனே. (க)

வலங்கிளர்மாதவஞ்செய்மலைமங்கையொர்பங்கினனாய்ச்
சலங்கிளர்கங்கைதங்கச்சடையொன்றிடையேதரித்தான்
பலங்கிளர்பைம்பொழிறண்பனிவெண்மதியைத்தடவ
நலங்கிளர்நன்னிலத்துப்பெருங்கோயினயந்தவனே. (உ)

கச்சியனின்கருப்பூர்விருப்பன்கருதிக்கசிவார்
உச்சியன்பிச்சையுண்ணியுலகங்களெல்லாமுடையான்
நொச்சியம்பச்சிலையானுரைதீர்புனலாற்றொழுவார்
நச்சியநன்னிலத்துப்பெருங்கோயினயந்தவனே. (ங)

பாடியநான்மறையான்படுபல்பிணக்காடரங்கா
ஆடியமாநடத்தானடிபோற்றியென்றன்பினராய்ச்
சூடியசெங்கையினர்பலதோத்திரம் ‡ வாய்த்தசொல்லி
நாடியநன்னிலத்துப்பெருங்கோயினயந்தவனே. (ச)

பிலந்தருவாயினொடுபெரிதும்வலிமிக்குடைய
சலந்தரனாகமிருபிளவாக்கியசக்கரமுன்
நிலந்தருமாமகள்கோனெடுமாற்கருள்செய்தபிரான்
நலந்தருநன்னிலத்துப்பெருங்கோயினயந்தவனே. (ரு)

* இத்திருப்பதிகத்தில் க0-ம் செய்யுள் மறைந்துபோயிற்று. † மொழியாரிடங்கொண் டுழல் என்றும் பாடம். ‡ பலர்தோத்திரம் என்றும் பாடம்.

Koviloor Digital Library

வெண்பொடிமேனியினன்கருநீலமணிமிடற்றன்
பெண்படிசெஞ்சடையான்பிரமன்சிரம்பீடழித்தான்
பண்புடைநான்மறையோர்பயின்றேத்திப்பல்கால்வணங்கும்
நண்புடைநன்னிலத்துப்பெருங்கோயினயந்தவனே. (௬)

தொடைமலிகொன்றைதுன்றுஞ்சடையன்சுடர்வெண்மழுவாட்
படைமலிகையன்மெய்யிற்பகட்டுரிப்போர்வையினன்
மடைமலிவண்கமலம்* மலர்மேன்மடவன்னமன்னி
நடைமலிநன்னிலத்துப்பெருங்கோயினயந்தவனே. (௭)

குளிர்தருதிங்கள்கங்கைகுரவோடராக்கூவிளமும்
மிளிர்தருபுன்சடைமேலுடையான்விடையான்விரைசேர்
தளிர்தருகோங்குவேங்கைதடமாதவிசண்பகமும்
நளிர்தருநன்னிலத்துப்பெருங்கோயினயந்தவனே. (௮)

கமர்பயில்வெஞ்சுரத்துக்கடுங்கேழற்பின்கானவனாய்
அமர்பயில்வெய்தியருச்சுனனுக்கருள்செய்தபிரான்
தமர்பயிறண்விழவிற்றகுசைவர்தவத்தின்மிக்க
நமர்பயினன்னிலத்துப்பெருங்கோயினயந்தவனே. (௯)

கருவரைபோலரக்கன்கயிலைம்மலைக்கீழ்க்கதற
ஒருவிரலாலடர்த்தின்னருள்செய்தவுமாபதிதான்
திரைபொருபொன்னிநன்னீர்த்துறைவன்றிகழ்செம்பியர்கோன்
நரபதிநன்னிலத்துப்பெருங்கோயினயந்தவனே. (௧௦)

கோடுயர்வெங்களிற்றுத்திகழ்கோச்செங்கணான்செய்கோயில்
நாடியநன்னிலத்துப்பெருங்கோயினயந்தவனைச்
சேடியல்சிங்கிதந்தைசடையன்றிருவாரூரன்
பாடியபத்தும்வல்லார்புகுவார்பரலோகத்துளே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருநன்னிலத்துப்பெருங்கோயிற்றிருப்பதிகம் - ௧.

ஆ திருப்பதிகம் - ௧௮௧.

சுவாமி தேவி திருநாமங்கள் - பிரமேசுரர், பிரமேசுவரி.

* வெண்கமலம் என்றும் பாடம்.

எ௨. திருக்கொண்டீச்சரம். *

திருநாவுக்கரசுநாயனூர்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

வரைகிலேன்புலன்களைந்தும்வரைகிலாப்பிறவிமாயப்
புரையிலேயடங்கிநின்றுபுறப்படும்வழியுங்காணேன்
அரையிலேமிளிருநாகத்தண்ணலேயஞ்சலென்னுய்
திரைபுலாம்பழனவேலித்திருக்கொண்டீச்சரத்துளானே. (௧)

தொண்டனேன்பிறந்துவாளாதொல்வினைக்குழியில்வீழ்ந்து
பிண்டமேசுமந்துழைந்துபேர்வதோர்வழியுங்காணேன்
அண்டனேயண்டவாணுவறிவனேயஞ்சலென்னுய்
தெண்டிரைப்பழனஞ்சூழ்ந்ததிருக்கொண்டீச்சரத்துளானே. (௨)

கால்கொடுத்தெலும்புமூட்டிக்கதிர்நரம்பாக்கையார்த்துத்
தோலுடுத்துதிரமட்டித்தொகுமயிர்மேய்ந்தகூரை
ஓலெடுத்துழைஞர்கூடியொளிப்பதற்கஞ்சுகின்றேன்
சேலுடைப்பழனஞ்சூழ்ந்ததிருக்கொண்டீச்சரத்துளானே. (௩)

கூட்டமாயைவர் † வந்துகொடுந்தொழிற்குணத்தராகி
ஆட்டுவார்க்காற்றகில்லேனுடரவசைத்தகோவே
காட்டிடையரங்கமாகவாடியகடவுளேயோ
சேட்டிரும்பழனவேலித்திருக்கொண்டீச்சரத்துளானே. (௪)

பொக்கமாய்நின்றபொல்லாப்புழுமிடைமுடைகொளாக்கை
தொக்குநின்றைவர்தொண்ணூற்றறுவருந்துயக்கமெய்த
மிக்குநின்றிவர்கள்செய்யும்வேதனைக்கலந்துபோனேன்
செக்கரேதிகழுமேனித்திருக்கொண்டீச்சரத்துளானே. (௫)

ஊனுலாமுடைகொளாக்கையுடைகலமாவதென்றும்
மானுலாமழைக்கணூர்தம்வாழ்க்கையைமெய்யென்றெண்ணி
நானெலாமினையகாலநண்ணிலேனெண்ணமில்லேன்
தேனுலாம்பொழில்கள்சூழ்ந்ததிருக்கொண்டீச்சரத்துளானே. (௬)

சாணிருமடங்கு ‡ நீண்டசழக்குடைப்பதிக்குநாதர்
வாணிகரைவர்தொண்ணூற்றறுவருமயக்கஞ்செய்து
பேணியபதியினின்று ¶ பெயரும்போதறியமாட்டேன்
சேணுயர்மாடநீடுதிருக்கொண்டீச்சரத்துளானே. (எ)

* திருக்கொண்டீச்சரமெனினும் திருக்கொண்டீச்சுரமெனினும் ஒக்கும். † கூட்டமாமைவர் என்றும் பாடம். ‡ சாணிருமருங்கும் பாடம். ¶ பதியினின்றும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

பொய்ம்மறித்தியற்றிவைத்துப்புலால்கமழ்பண்டம்பெய்து
பைம்மறித்தியற்றியன்னபாங்கிலாக்கூரம்பைநின்று
கைம்மறித்தனையவாவிகழியும்போதறியமாட்டேன்
செந்நெறிச்செலவு* காணேன்றிருக்கொண்டீச்சரத்துளானே. (அ)

பாலனாய்க்கழிந்தநாளும்பனிமலர்க்கோதைமார்தம்
மேலனாய்க்கழிந்தநாளுமெலிவொடுமூப்புவந்து
கோலனாய்க்கழிந்தநாளுங்குறிக்கோளிலாதுகெட்டேன்
சேலுலாம்பழனவேலித்திருக்கொண்டீச்சரத்துளானே. (௯)

விரைதருகருமென்கூந்தல்விளங்கிழைவேலொண்கண்ணாள்
வெருவரவிலங்கைக்கோமான்விலங்கலையெடுத்தஞான்று
பருவரையனையதோளுமுடிகளும்பாறிவீழத்
திருவிரலூன்றினானைதிருக்கொண்டீச்சரத்துளானே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

கண்டபேச்சினிற்காளையர்தங்கள்பால்
மண்டியேச்சுணுமாதரைச்சேராதே
சண்டியீச்சுரவர்க்கருள்செய்தவக்
கொண்டியீச்சுரவன்கழல்கூறுமே. (௧)

சுற்றமுந்துணைநன்மடவாளொடு
பெற்றமக்களும்பேணலொழிந்தனர்
குற்றமில்புகழ்க்கொண்டீச்சுரவனார்
பற்றலாலொருபற்றுமற்றில்லையே. (௨)

மாடுதானதுவில்லெனின்மாநுடர்
பாடுதான்செல்வாரில்லைபன்மாலையால்
கூடநீர்சென்றுகொண்டீச்சுரவனைப்
பாடுமின்பரலோகத்திருத்துமே. (௩)

தந்தைதாயொடுதாரமெனுந்தளைப்
பந்தமாங்கறுத்துப்பயில்வெய்திய
கொந்தவிழ்பொழிற்கொண்டீச்சுரவனைச்
சிந்தைசெய்ம்மின்கள்சேவடிசேரவே.† (௪)

கேளுமின்னிளமைப்பதுகேடுவந்
நீளுமோடிருமல்லதுவெய்தன்முன்
கோளரவணி‡ கொண்டீச்சுரவனை
நாளுமேத்தித்தொழுமினன்காகுமே. (௫)

* செந்நெறிச்செலவு என்றும் பாடம். † செய்ம்மினவனடிச்சேரவே என்றும், செய்ம்மினவனடிசேரவே என்றும் பாடம். ‡ கோளராவணி என்றும் பாடம்.

Koviloor Digital Library

வெம்புநோயுமிடரும்வெறுமையும்
துன்பமுந்துயரும்மெனுஞ்சூழ்வினை
கொம்பனார்பயில்கொண்டீச்சுரவனை
எம்பிரானெனவல்லவர்க்கில்லையே. (௬)

அல்லலோடருநோயிலழுந்திநீர் *
செல்லுமாநினையாதேகனைகுரல்
கொல்லையேறுடைக்கொண்டீச்சுரவனை
வல்லவாறுதொழவினைமாயுமே. (௭)

நாறுசாந்தணிநன்முலைமென்மொழி
மாறிலாமலைமங்கையொர்பாகமாக்
கூறனாருறைகொண்டீச்சுரநினைந்
தூறுவார்தமக்கூனமொன்றில்லையே. (௮)

அயிலாரம்பெரிமேருவிலாகவே
எயிலாரும்பொடியாய்விழவெய்தவன்
குயிலாரும்பொழிற்கொண்டீச்சுரவனைப்
பயில்வாரும்பெருமைபெறும்பாலரே. (௯)

நிலையினார்வரைநின்றெடுத்தான்றனை
மலையினாலடர்த்துவிறல்வாட்டினான்
குலையினார்பொழிற்கொண்டீச்சுரவனைத்
தலையினால்வணங்கத்தவமாகுமே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருக்கொண்டீச்சரத்திருப்பதிகம் - ௨.

ஆ திருப்பதிகம் - ௧௮௩.

சுவாமி தேவி திருநாமங்கள் - பசுபதிநாதர், சாந்தநாயகி.

௭௩. திருப்பனையூர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

அரவச்சடைமேன்மதிமத்தம்
விரவிப்பொலிகின்றவனூராம்
நிரவிப்பலதொண்டர்களேரும்
பரவிப்பொலியும்பனையூரே. (௧)

* லழுந்துநீர் என்றும் பாடம்.

எண்ணொன்றிநினைந்தவர்தம்பால்
உண்ணின்றுமகிழ்ந்தவனூராம்
கண்ணின்றெழு *சோலையில்வண்டு
பண்ணின்றொலிசெய்பனையூரே. (௨)

அலரும்மெறிசெஞ்சடைதன்மேல்
மலரும்பிறையொன்றுடையானூர்
சில †ரென்றுமிருந்தடிபேணப்
பலரும்பரவும்பனையூரே. (௩)

இடியார்கடனஞ்சமுதுண்டு
பொடியாடியமேனியினானூர்
அடியார்தொழமன்னவரேத்தப்
படியார்பணியும்பனையூரே. (௪)

அறையார்கழன்மேலரவாட
இறையார்பலிதேர்ந்தவனூராம்
பொறையார்மிகுசீர்விழமல்கப்
பறையாரொலிசெய்பனையூரே. (௫)

அணியார்தொழவல்லவரேத்த
மணியார்மிடறொன்றுடையானூர்
தணியார்மலர்கொண்டிருபோதும்
பணிவார்பயிலும்பனையூரே. (௬)

அடையாதவர்மூவெயில்சீறும்
விடையான்விறலார்கரியின்றோல்
உடையானவனெண்பலபூதப் ‡
படையானவனூர்பனையூரே. (௭)

இலகும்முடிபத்துடையானை
அலல்கண்டருள்செய்தவெம்மண்ணல்
உலகில்லுயிர்நீர்நிலமற்றும்
பலகண்டவனூர்பனையூரே. (௮)

வரமுன்னிமகிழ்ந்தெழுவீர்காள்
சிரமுன்னடிதாழவணங்கும்
பிரமன்னொடுமாலறியாத
பரமன்னுறையும்பனையூரே. (௯)

அழிவல்லமணரொடுதேரர்
மொழிவல்லனசொல்லியபோதும்
இழிவில்லதொர்செம்மையினானூர்
பழியில்லவர்சேர்பனையூரே. (௧௰)

* கண்ணன்றெழு என்றும் பாடம். † சிலர் - அருக்கத்தொண்டர். ‡ னவனெண் பலபூதப் என்றும் பாடம்.

Koviloor Digital Library

பாரார்விடையான்பனையூர்மேல்
சீரார்தமிழ்ஞானசம்பந்தன்
ஆராதசொன்மாலைகள்பத்தும்
ஊரூர்நினைவாருயர்வாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

மாடமாளிகைகோபுரத்தொடுமண்டபம்வளரும்வளர்பொழில்
பாடல்வண்டறையும்பழனத்திருப்பனையூர்த்
தோடுபெய்தொருகாதினிற்குழைதூங்கத்தொண்டர்கடுள்ளிப்பாடநின்
றாடுமாறுவல்லாரவரேயழகியரே. (க)

நாறுசெங்கழுநீர்மலர்நல்லமல்லிகைசண்பகத்தொடு
சேறுசெய்கழனிப்பழனத்திருப்பனையூர்
நீறுபூசிநெய்யாடிதன்னைநினைப்பவர்தம்மனத்தனாகிநின்
றூறுசூடவல்லாரவரேயழகியரே. (உ)

செங்கண்மேதிகள்சேடெறிந்துதடம்படிதலிற்சேலினத்தொடு
பைங்கண்வாளைகள்பாய்பழனத்திருப்பனையூர்த்
திங்கள்சூடியசெல்வனாடியார்தம்மேல்வினைதீர்ப்பாாய்விடில்
அங்கிருந்துறைவாரவரேயழகியரே. (ஙு)

வாளைபாயமலங்கிளங்கயல்வரிவராலுகளுங்கழனியுள் *
பாளையொண்கமுகம்புடைசூழ்திருப்பனையூர்த்
தோளுமாகமுந்தோன்றநட்டமிட்டாடுவாரடித்தொண்டர்தங்களை
ஆளுமாறுவல்லாரவரே † யழகியரே. (ச)

கொங்கையார்பலருங்குடைந்தாடநீர்க்குவளைமலர்தரப் ‡
பங்கயம்மலரும்பழனத்திருப்பனையூர்
மங்கைபாகமுமாலோர்பாகமுந்தாமுடையவர்மான்மழுவினொ
டங்கைத்தீயுகப்பாரவரேயழகியரே. (ரு)

காவிரிபுடைசூழ்சோணாட்டவர்தாம்பரவியகருணையங்கடலப்
பாவிரிபுலவர்பயிலுந்திருப்பனையூர்
மாவிரிமடநோக்கியஞ்சமதகரிபுரிபோர்த்துகந்தவர்
ஆவிலைந்துகப்பாரவரேயழகியரே. (சு)

மரங்கண்மேன்மயிலாலமண்டபமாடமாளிகைகோபுரத்தின்மேல்
திரங்கல்வன்முகவன்புகப்பாய்திருப்பனையூர்த்
தூரங்கன்வாய் ¶ பிளந்தாலுந்தூமலர்த்தோன்றலுமறியாமற்றோன்றிநின் §
றாங்கிலாடவல்லாரவரேயழகியரே. (எ)

* கழனிப் என்றும் பாடம். † ஆளுமாளவல்லாரவரே என்றும் பாடம். ‡ கொங்கையர் பலருங்குடைந்தாடக்குவளைமலர்தரப் என்றும் பாடம். ¶ தூரங்கவாய் என்றும் பாடம். § மறியாமைத்தோன்றநின் என்றும் பாடம்.

Koviloor Digital Library

மண்ணெலாமுழவம்மதிர்தரமாடமாளிகைகோபுரத்தின்மேல்
பண்ணியாழ்முரலும்பழனத்திருப்பனையூர்
வெண்ணிலாச்சடைமேவியவிண்ணவரொடுமண்ணவர்தொழ
அண்ணலாகிநின்றாரவரேயழகியரே. (அ)

குரக்கினங்குதிகொள்ளத்தேனுகக்குண்டுதண்வயற்கெண்டைபாய்தரப்
பரக்குந்தண்கழனிப்பழனத்திருப்பனையூர்
இரக்கமில்லவரைந்தொடைந்தலைதோளிருபதுதாளெரிதர
அரக்கனையடர்த்தாரவரேயழகியரே. (௯)

வஞ்சிநுண்ணிடைமங்கைபங்கினர்மாதவர்வளரும்வளர்பொழில்
பஞ்சிமெல்லடியார்* பயிலுந்திருப்பனையூர்
வஞ்சியும்வளர்நாவலூரன்வனப்பகையவளப்பன்வன்றொண்டன்
செஞ்சொற்கேட்டுகப்பாரவரேயழகியரே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருப்பனையூர்த்திருப்பதிகம் - ௨.

ஆ. திருப்பதிகம் - ௧௮௫.

சுவாமி தேவி திருநாமங்கள் - சௌந்தரநாதர், பெரியநாயகி.

சுந்தரமூர்த்திநாயனார் செங்கற்கள் பொன்னாகப் பெற்றுகொண்டு திருப்புகலூரினின்றும் புறப்பட்டு, திருப்பனையூருக்குப் புறத்தே போனார். அப்பொழுது பரமசிவன் திருக்கூத்தோடுங் காட்சிகொடுத்தருள, நாயனார் எதிர்சென்று வணங்கி, "மாடமாளிகை" என்று திருப்பதிகம் எடுத்து, "ஆடுமாறுவல்லாரவரேயழகியரே" என்று பாடியருளினார்.

௭௪. திருவிற்குடிவீரட்டம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

வடிகொண்மேனியர்வானமாமதியினர்நதியினர்மதுவார்ந்த
கடிகொள்கொன்றையஞ்சடையினர்கொடியினருடைபுலியதளார்ப்பர்
விடையதேறுமெம்மான†மர்ந்தினிதுறைவிற்குடிவீரட்டம்
அடியராகிநின்றேத்தவல்லார்தமையருவினையடையாவே. (௧)

களங்கொள்கொன்றையுங்கதிர்விரிமதியமுங்கடிகமழ்சடைக்கேற்றி
உளங்கொள்பத்தர்பாலருளியபெருமையர்பொருகரியுரிபோர்த்து
விளங்குமேனியரெம்பெருமானுறைவிற்குடிவீரட்டம்
வளங்கொண்மாமலரானினைந்தேத்துவார்வருத்தமதறியாரே. (௨)

* பஞ்சின்மெல்லடியார் என்றும் பாடம். † விடையதேறுமம்மான் என்றும் பாடம்.

Koviloor Digital Library

கரியகண்டத்தர்வெளியவெண்பொடியணிமார்பினர்வலங்கையில்
எரியர்புன்சடையிடம்பெறக்காட்டகத்தாடியவேடத்தர்
விரியுமாமலர்ப்பொய்கைசூழ்மதுமலிவிற்குடிவீரட்டம்
பிரிவிலாதவர்பெருந்தவத்தோரெனப்பேணுவருலகத்தே. (௩)

பூதஞ்சேர்ந்திசைபாடலராடலர்பொலிதாநலமார்ந்த
பாதஞ்சேரிணைச்சிலம்பினர்கலம்பெறுகடலெழுவிடமுண்டார்
வேதமோதியநாவுடையானிடம்விற்குடிவீரட்டம்
சேருநெஞ்சினர்க்கல்லதுண்டோபிணிதீவினைகெடுமாறே. (௪)

கடியவேற்றினர்கனலனமேனியரனலெழவூர்மூன்றும்
இடியமால்வரைகால்வளைத்தான்றனதடியவர்மேலுள்ள
வெடியவல்வினைவீட்டுவிப்பானுறைவிற்குடிவீரட்டம்
படியதாகவேபரவுமின்பரவினாற்பற்றறுமருநோயே. (௫)

பெண்ணொர்கூறினர்பெருமையர்சிறுமறிக்கையினர்மெய்யார்ந்த
அண்ணலன்புசெய்வாரவர்க்கெளியவரரியவரல்லார்க்கு
விண்ணிலார்பொழின்மல்கியமலர்விரிவிற்குடிவீரட்டம்
எண்ணிலாவியசிந்தையினார்தமக்கிடர்கள்வந்தடையாவே. (௬)

இடங்கொண்மாகடலிலங்கையர்கோன்றனையிகலழிதரவூன்று
திடங்கொண்மால்வரையானுரையார்தருபொருளினனிருளார்ந்த
விடங்கொண்மாமிடறுடையவனுறைபதிவிற்குடி* வீரட்டம்
தொடங்குமாறிசைபாடிநின்றார்தமைத்துன்பநோயடையாவே. (௮)

செங்கண்மாலொடுநான்முகன்றேடியுந்திருவடியறியாமை
எங்குமாரெரியாகியவிறைவனையறைபுனன்முடியார்ந்த
வெங்கண்மால்வரைக்கரியுரித்துகந்தவன்விற்குடிவீரட்டம்
தங்கையாற்றொழுதேத்தவல்லாரவர்தவமல்குகுணத்தாரே. (௯)

பிண்டமுண்டுழல்வார்களும்பிரிதுவராடையரவர்வார்த்தை
பண்டுமின்றுமோர்பொருளெனக்கருதன்மின்பரிவுறுவீர்கேண்மின்
விண்டமாமலர்ச்சடையவனிடமெனில்விற்குடிவீரட்டம்
கண்டுகொண்டடிகாதல்செய்வாரவர்கருத்துறுங்குணத்தாரே. (௧௦)

விலங்கலேசிலையிடமெனவுடையவன்விற்குடிவீரட்டத்
திலங்குசோதியையெம்பெருமான்றனையெழிறிகழ்கழல்பேணி
நலங்கொள்வாழ்பொழிற்காழியுண்ஞானசம்பந்தனற்றமிழ்மாலை
வலங்கொடேயிசைமொழியுமின்மொழிந்தக்கான்மற்றதுவரமாமே. † (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவிற்குடிவீரட்டத்திருப்பதிகம் - ௧.

ஆ திருப்பதிகம் - ௧௮௬.

சுவாமி தேவி திருநாமங்கள் - வீரட்டநாதர், ஏலவார்குழலி.

* ஹுறைதிருவிற்குடி என்றும் பாடம். † இத்திருப்பதிகத்தில் ஏழாவதுசெய்யுள் மறைந்துபோயிற்று.

Koviloor Digital Library

எரு. திருப்புகலூர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

குறிகலந்தவிசைபாடலினானசையாலிவ்வுலகெல்லாம்
நெறிகலந்ததொருசீர்மையனுபெருநேதிப்பலிபேணி*
முறிகலந்ததொருதோலரைமேலுடையானிடமொய்ம்மலரின்
பொறிகலந்தபொழில்சூழ்ந்தயலேபுயலாரும்புகலூரே. (க)

காதிலங்குகுழையன்னிழைசேர்திருமார்பன்னொருபாகம்
மாதிலங்குதிருமேனியினன்கருமானின்னுரியாடை
மீதிலங்கவணிந்தானிமையோர்தொழமேவுமிடஞ்சோலைப்
போதிலங்குநசையால்வரிவண்டிசைபாடும்புகலூரே. (உ)

பண்ணிலாவும்மறைபாடலினானிறைசேரும்வளையங்கைப்
பெண்ணிலாவவுடையான்பெரியார்கழலென்றுந்தொழுதேத்த
உண்ணிலாவியவர்சிந்தையுணீங்காவொருவன்னிடமென்பர்†
மண்ணிலாவும்மடியார்குடிமைத்தொழின்மல்கும்புகலூரே. (ங)

நீரின்மல்குசடையன்விடையன்னடையார்தம்மரண்மூன்றும்
சீரின்மல்குமலையேசிலையாகமுனிந்தானுலகுய்யக்‡
காரின்மல்குகடனஞ்சமதுண்டகடவுள்ளிடமென்பர்
ஊரின்மல்கிவளர்செம்மையினாலுயர்வெய்தும்புகலூரே. (ச)

செய்யமேனிவெளியபொடிப்பூசுவர்சேரும்மடியார்மேல்
பையநின்றவினைபாற்றுவர்போற்றிசைத்தென்றும்பணிவாரை
மெய்யநின்றபெருமானுறையுமிடமென்பரருள்பேணிப்
பொய்யிலாதமனத்தார்பிரியாதுபொருந்தும்புகலூரே. (ரு)

கழலினோசைசிலம்பின்னொலியோசைகலிக்கப்பயில்கானில்
குழலினோசைகுறட்பாரிடம்போற்றக்குனித்தாரிடமென்பர்
விழவினோசையடியார்மிடைவுற்றுவிரும்பிப்பொலிந்தெங்கும்
முழவினோசைமுந்நீ¶ரயர்வெய்தமுழங்கும்புகலூரே. (சா)

* நெறிகலந்தொருசீர்மையனுபெருநேரும்பலிபேணி என்றும் பாடம். † வொருவர்க்கிடமென்பர் என்றும் பாடம். ‡ முனிந்தன்றலகுப்ப என்றும் பாடம். ¶ நிலத்தைப் படைத்தலும் காத்தலும் அழித்தலுமாகிய மூன்று தொழிலுமுடைமையின், முந்நீர் - ஆகுபெயர்; முன்னீர் என்றும் பாடம்; இப்பாடத்திற்கு மழைக்கு முதலாய நீரென்க; என்றது கடலை.

Kovilpoor Digital Library

வெள்ளமார்ந்துமிளிர்செஞ்சடைதன்மேல்விளங்கும்மதிசூடி
உள்ளமார்ந்தவடியார்தொழுதேத்தவுகக்கும்மருடந்தெம்
கள்ளமார்ந்துகழியப்பழிதீர்த்தகடவுள்ளிடமென்பர் *
புள்ளையார்ந்தவயலின்விளைவால்வளமல்கும்புகலூரே. (௮)

தென்னிலங்கையரையன்வரைபற்றியெடுத்தான்முடிதிண்டோள்
தன்னிலங்குவிரலானெரிவித்திசைகேட்டன்றருள்செய்த
மின்னிலங்குசடையான்மடமாதொடுமேவும்மிடமென்பர்
பொன்னிலங்குமணிமாளிகைமேன்மதிதோயும்புகலூரே. (௮)

நாகம்வைத்தமுடியானடிகைதொழுதேத்தும்மடியார்கள்
ஆகம்வைத்தபெருமான்பிரமன்னொடுமாலுந்தொழுதேத்த
ஏகம்வைத்தவெரியாய்மிகவோங்கியவெம்மானிடம்போலும்
போகம்வைத்தபொழிலின்னிழலான்மதுவாரும்புகலூரே. (௯)

செய்தவத்தர்மிகுதேரர்கள்சாக்கியர்செப்பிற்பொருளல்லாக்
கைதவத்தர்மொழியைத்தவிர்வார்கள்கடவுள்ளிடம்போலும்
கொய்துபத்தர்மலரும்புனலுங்கொடுதூவித்துதிசெய்து
மெய்தவத்தின்முயல்வாருயர்வானகமெய்தும்புகலூரே. (௧0)

புற்றில்வாழுமரவம்மரையார்த்தவன்மேவும்புகலூரைக்
கற்றுநல்லவவர்காழியுண்ஞானசம்பந்தன்றமிழ்மாலை
பற்றியென்றும்மிசைபாடியமாந்தர்பரமன்னடிசேர்ந்து
குற்றமின்றிக்குறைபாடொழியாப்புகழோங்கிப்பொலிவாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

பண் - செவ்வழி.

திருச்சிற்றம்பலம்.

வெங்கள்விம்முகுழலிளையாடவ்வெறிவிரவுநீர்ப்
பொங்குசெங்கட்கருங்கயல்கள்பாயும்புகலூர்தனுள்
திங்கள்சூடித்திரிபுரமொரம்பாலெரியூட்டிய
எங்கள்பெம்மானடிபரவநாளும்மிடர்கழியுமே. (௧)

வாழ்ந்தநாளும்மினிவாழுநாளும்மிவையறிதிரேல்
வீழ்ந்தநாளெம்பெருமானையேத்தாவிதியில்லிகாள்
போழ்ந்ததிங்கட்புரிசடையினன்றன்புகலூரையே
சூழ்ந்தவுள்ளம்முடையீர்களுங்கடுயர்தீருமே. (௨)

மடையிநெய்தல்கருங்குவளைசெய்யம்மலர்த்தாமரை
புடைகொள்செந்நெல்விளைகழனிமல்கும்புகலூர்தனுள்
தொடைகொள்கொன்றைபுனைந்தானோர்பாகம்மதிசூடியை
அடையவல்லாரமருலகமாளப்பெறுவார்களே. (௩)

* தீர்த்தகடவுட்கிடமென்பர் என்றும் பாடம்.

Koviloor Digital Library

பூவுந்நீரும்பலியுஞ்சுமந்துபுகலூரையே
நாவினாலேநவின்றேத்தலோவார்செவித்துளைகளால்
யாவுங்கேளாரவன்பெருமையல்லாலடியார்கடாம்
ஓவுநாளுமுணர்வொழிந்தநாளென்றுளங்கொள்ளவே. (௪)

அன்னங்கன்னிப்பெடைபுல்கிபொல்கியணிநடையவாய்ப்
பொன்னங்காஞ்சிமலர்ச்சின்னமாலும்புகலூர்தனுள்
முன்னம்மூன்றுமதிலெரித்தமூர்த்திதிறங்கருதுங்கால்
இன்னவென்னப்பெரிதரியரேத்தச்சிறிதெளியரே. (௫)

குலவராகக்குலமிலருமாகக்குணம்புகழுங்கால்
உலகினல்லகதிபெறுவரேனும்மலரூறுதேன்
புலவ*மெல்லாம்வெறிகமழுமந்தண்புகலூர்தனுள்
நிலவமல்குசடையடிகள்பாதந்நினைவார்களே. (௬)

ஆணும்பெண்ணும்மெனநிற்பரேனும்மரவாரமாப்
பூணுமேனும்புகலூர்தனக்கோர்பொருளாயினான்
ஊணுமூராரிடுபிச்சையேற்றுண்டுடைகோவணம்
பேணுமேனும்பிரானென்பராலெம்பெருமானையே. (௭)

உய்யவேண்டில்லெழுபோதநெஞ்சேயுயரிலங்கைக்கோன்
கைகளொல்கக்கருவரையெடுத்தானையோர்விரலினால்
செய்கைதோன்றச்†சிதைத்தருள‡வல்லசிவன்மேயபூம்
பொய்கைசூழ்ந்தபுகலூர்புகழப்பொருளாகுமே. (௮)

நேமியானும்முகநான்குடையந்நெறியண்ணலும்
ஆமிதென்றுதகைந்தேத்தப்போயாரழலாயினான்
சாமிதாதைசரணாகுமென்றுதலைசாய்மினோ
பூமியெல்லாம்புகழ்செல்வமல்கும்புகலூரையே. (௯)

வேர்த்தமெய்ப்பருவத்துடைவிட்டுழல்வார்களும்
போர்த்தகூறைப்போதிநிழலாரும்புகலூர்தனுள்
தீர்த்தமெல்லாஞ்சடைக்கரந்ததேவன்றிறங்கருதுங்கால்
ஓர்த்துமெய்யென்றுணராதுபாதந்தொழுதுய்ம்மினே. (௧௦)

புந்தியார்ந்தபெரியோர்களேத்தும்புகலூர்தனுள்
வெந்தசாம்பற்பொடிப்பூசவல்லவிடையூர்தியை
அந்தமில்லாவனலாடலானையணிஞானசம்
பந்தன்சொன்னதமிழ்பாடியாடக்கெடும்பாவமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

* புலவம் - புலம். † செய்கைதோன்ற - நிக்கிரகாநுக்கிரகம் யார்க்கும் வெளிப்பட.
‡ சிதைத்து அருள எனப்பிரிக்க; ஒருசொன்னீர்மைத்தன்று.

Koviloor Digital Library

திருநாவுக்கரசுநாயனூர்.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

செய்யர்வெண்ணூலர்கருமான்மறிதுள்ளும்
கையர்கனைகழல்கட்டியகாலினர்
மெய்யர்மெய்ந்நின்ற* வர்க்கல்லாதவர்க்கென்றும்
பொய்யர்புகலூர்ப்புரிசடையாரே. (௧)

மேகநூர்தியர்மின்போன்மிளிர்சடைப்
பாகமதிநுதலாளையொர்பாகத்தர்
நாகவளையினர்நாகவுடையினர்
போகர்புகலூர்ப்புரிசடையாரே. (௨)

பெருந்தாழ்சடைமுடிமேற்பிறைசூடிக்
கருந்தாழ்குழலியுந்தாமுங்கலந்து
திருந்தாமனமுடையார்திறத்தென்றும்
பொருந்தார்புகலூர்ப்புரிசடையாரே. (௩)

அக்காரணிவடமாகத்தர்நாகத்தர்
நக்காரிளமதிக்கண்ணியர்நாடொறும்
உக்கார்தலைபிடித்துண்பலிக்கூர்தொறும்
புக்கார்புகலூர்ப்புரிசடையாரே. (௪)

ஆர்த்தாருயிரடுமந்தகன்றன்னுடல்
பேர்த்தார்பிறைநுதற்பெண்ணினல்லாளுட்கக்
கூர்த்தார்மருப்பிற்கொலைக்களிற்றீருரி
போர்த்தார்புகலூர்ப்புரிசடையாரே. (௫)

தூமன்சுறவன்† துதைந்தகொடியுடைக்
காமன்கணைவலங்காய்ந்தமுக்கண்ணினர்
சேமநெறியினர்சீரையுடையவர்
பூமன்புகலூர்ப்புரிசடையாரே. ‡ (௬)

உதைத்தார்மறலியுருளவொர்காலால்
சிதைத்தார்திகழ்தக்கன்செய்தநல்வேள்வி
பதைத்தார்சிரங்கரங்கொண்டுவெய்யோன்கண்
புதைத்தார்புகலூர்ப்புரிசடையாரே. (௭)

கரிந்தார் ¶ தலையர்கடிமதின்மூன்றும்
தெரிந்தார்கணைகள்செழுந்தழலுண்ண
விரிந்தார்சடைமேல்விரிபுனற்கங்கை
புரிந்தார்புகலூர்ப்புரிசடையாரே. (௮)

* மெய்ஞ்ஞின்ற என்றும் பாடம். † தூமன்சுறவம் - ஊன்மிக்கசுறுமீன்; தூமன் சுத்தமாகியபதியுமாம்; தூவும் மன் தூமன் என்றாயது எனக்கொண்டு பஞ்சபாணங் ளைச் சொரியும் தலைவன் என்றலுமாம். ‡ சில ஏட்டுப்பிரதிகளில் ௬-ம் திருப்பாட்டு ஏழாவதாகவும் ஏழாவது ஆறாவதாகவும் காணப்படுகின்றன. ¶ கருந்தார் என்றும் பாடம்.

Koviloor Digital Library

ஈண்டாரழலினிருவருங்கைதொழ
நீண்டார்நெடுந்தடுமாற்றநிலையஞ்ச
மாண்டார்தமென்புமலர்க்கொன்றைமாலையும்
பூண்டார்புகலூர்ப்புரிசடையாரே. (௯)

கறுத்தார்மணிகண்டங்கால்விரலூன்றி
இறுத்தாரிலங்கையர்கோன்முடிபத்தும்
அறுத்தார்புலனைந்துமாயிழைபாகம்
பொறுத்தார்புகலூர்ப்புரிசடையாரே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

பகைத்திட்டார்புரங்கண்மூன்றும்பாறிநீறாகிவீழப்
புகைத்திட்டதேவர்கோவேபொறியிலேனுடலந்தன்னுள்
அகைத்திட்டங்கதனைநாளுமைவர்கொண்டாட்டவாடித்
திகைத்திட்டேன்செய்வதென்னேதிருப்புகலூரனீரே. (௧)

மையரிமதர்த்தவொண்கண்மாதரார்வலையிற்பட்டுக்
கையெரிசூலமேந்துங்கடவுளைநினையமாட்டேன்
ஐநெரிந்தகமிடற்றே* யடைக்கும்போதாவியார்தாம்
செய்வதொன்றறியமாட்டேன்றிருப்புகலூரனீரே. (௨)

முப்பதுமுப்பத்தாறுமுப்பதுமிடுகுரம்பை
அப்பர்† போலைவர்வந்துவதுதருகிதுவிடென்று
ஒப்பவேநகையுற்றாற்றுய்யுமாறறியமாட்டேன்
செப்பமேதிகழுமேனித்திருப்புகலூரனீரே. (௩)

பொறியிலாவழுக்கையோம்பிப்பொய்யினைமெய்யென்றெண்ணி
நெறியலாநெறிகள்சென்றேனீதனைநினையேதும்
அறிவிலேனமரர்கோவேயமுதினைமனனில்வைக்கும் ‡
செறிவிலேன்செய்வதென்னேதிருப்புகலூரனீரே. (௪)

அளியினார்குழலினார்களவர்களுக்கன்பதாகிக்
களியினார்பாடலோவாக்கடவூர்வீரட்டமென்னும்
தளியினார்பாதநாளுநினைவிலாத்தகவினெஞ்சம்
தெளிவிலேன்செய்வதென்னேதிருப்புகலூரனீரே. (௫)

இலவினார்மாதர்பாலேயிசைந்துநானிருந்துபின்னும்
நிலவுநாள்பலவென்றெண்ணிநீதனையுநினைந்திலேன்
உலவினாளுங்க¶ மாட்டேனுன்னடிபரவுஞானம்
செலவிலேன்செய்வதென்னேதிருப்புகலூரனீரே. (

* ஐநெரிந்தக்கோளைபிறசல்; ஐநெரிந்தகமிடற்றைஎன்றும் பாடம். † குரம்பை அப். குரம்பைக்கதிபர். ‡ மன்னில்வைக்கும் என்றும்பாடம். ¶ உலவினாளுங்க என்றும்பா

Koviloor Digital Library

துன்னஞ்சேர்கோவணத்தாய்தூயநீற்றாய்
துதைந்திலங்குவெண்மழுவாள்கையிலேந்தித்
தன்னனையுந்தண்மதியும்* பாம்புநீருஞ்
சடைமுடிமேல்வைத்துகந்ததன்மையானே
அன்னநடைமடவாள்பாகத்தானே
யக்காரம்பூண்டானேயாதியானே
பொன்னங்கழலடிக்கேபோதுகின்றேன்
பூம்புகலூர்மேவியபுண்ணியனே. (௯)

ஒருவனையுமல்லாதுணராதுள்ள
முணர்ச்சித்தடமாற்றத்துள்ளேநின்ற
இருவரையுமூவரையுமென்மேலேவி
யில்லாததராவறுத்தாய்க்கில்லேனேலக்
கருவரைசூழ்கானலிலங்கைவேந்தன்
கடுந்தேர்மீதோடாமைக்காலாற்செற்ற
பொருவரையாயுன்னடிக்கேபோதுகின்றேன்
பூம்புகலூர்மேவியபுண்ணியனே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார், புகலூரர் என்னை இனிச் சேவடிக்கீழிருத்திடும் என்று எழுகின்ற ஞானத்தினால், திருவிருத்தங்கள் பலவற்றைப் பாடி, சித்திரைமாசத்திலே, சதயநக்ஷத்திரத்திலே, "எண்ணுகேனென்சொல்லி யெண்ணுகேனோ" என்று திருத்தாண்டகம் எடுத்துத் திருப்பாட்டிறுதிதோறும் "உன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே" என்றுபாடி, பரமசிவனுடைய திருவடியை அடைந்தார்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

தம்மையேபுகழ்ந்திச்சைபேசினுஞ்சார்வினுந்தொண்டர்தருகிலாப் †
பொய்ம்மையாளரைப்பாடாதேயெந்தைபுகலூர்பாடுமின்புலவீர்காள்
இம்மையேதருஞ்சோறுங்கூறையுமேத்தலாமிடர்கெடலுமாம் ‡
அம்மையேசிவலோகமாள்வதற்கியாதுமையுறவில்லையே. (௧)

மிடுக்கிலாதானைவீமனேவிறல்விசயனேவில்லுக்கிவனென்று
கொடுக்கிலாதானைப்பாரியேயென்றுகூறினுங்கொடுப்பாரிலை
பொடிக்கொண்மேனியெம்புண்ணியனெந்தைபுகலூர்பாடுமின் ¶ புலவீர்காள்
அடுக்குமேலமருலகமாள்வதற்கியாதுமையுறவில்லையே. (௨)

காணியேற்பெரிதுடையனேகற்றுநல்லனேசுற்றநற்கிளை §
பேணியேவிருந்தோம்புமேயென்றுபேசினுங்கொடுப்பாரிலை
பூணிபூண்டுழப்புட்சிலம்புந்தண்புகலூர்பாடுமின்புலவீர்காள்
ஆணியாயமருலகமாள்வதற்கியாதுமையுறவில்லையே. (௩)

* தன்னையுந்தண்மதியும் என்றும் பாடம். † தரகிலாப் என்றும் பாடம். ‡ மிடைபெறலுமாம் என்றும் பாடம். ¶ புண்ணியன்புகலூரைப்பாடுமின் என்றும் பாடம். § சுற்றநன்கிளை என்றும் பாடம்.

Koviloor Digital Library

நரைகள்போந்துமெய்தளர்ந்துமூத்துடனடுங்கிநிற்குமிக்கிழவனை
வரைகள்போற்றிரடோளனேயென்றுவாழ்த்தினுங்கொடுப்பாரிலை
புரைவெள்ளேறுடைப்புண்ணியன்புகலூரைப்பாடுமின்புலவீர்காள்
அரையனாயமருலகமாள்வதற்கியாதுமையுறவில்லையே. (ச)

வஞ்சநெஞ்சனைமாசழக்கனைப்பாவியைவழக்கில்லியைப்
பஞ்சதுட்டனைச்சாதுவேயென்றுபாடினுங்கொடுப்பாரிலை
பொன்செய்செஞ்சடைப்புண்ணியன்புகலூரைப்பாடுமின்புலவீர்காள்
நெஞ்சினோயறுத்துஞ்சுபோவதற்கியாதுமையுறவில்லையே. (ரு)

நலமிலாதானைநல்லனேயென்றுநரைத்தமாந்தரையிளையனே
குலமிலாதானைக்குலவனேயென்றுகூறினுங்கொடுப்பாரிலை
புலமெலாம்வெறிகமழும்பூம்புகலூரைப்பாடுமின்புலவீர்காள்
அலமராதமருலக*மாள்வதற்கியாதுமையுறவில்லையே. (சு)

நோயனைத்தடந்தோளனேயென்றுநொய்யமாந்தரைவிழுமிய
தாயன்றோபுலவோர்க்கெலாமென்றுசாற்றினுங்கொடுப்பாரிலை
போயுழன்றுகண்குழியாதேயெந்தைபுகலூர்பாடுமின்புலவீர்காள்
ஆயமின்றிப்போயண்டமாள்வதற்கியாதுமையுறவில்லையே. (எ)

எள்விழுந்திடம்†பார்க்குமாகிலுமீக்குமீகிலனாகிலும்
வள்ளலேயெங்கண்மைந்தனேயென்றுவாழ்த்தினுங்கொடுப்பாரிலை
புள்ளெலாஞ்சென்றுசேரும்பூம்புகலூரைப்பாடுமின்புலவீர்காள்
அள்ளற்பட்டழுந்தாது‡போவதற்கியாதுமையுறவில்லையே. (அ)

கற்றிலாதானைக்கற்றுநல்லனேகாமதேவனையொக்குமே
முற்றிலாதானைமுற்றனே¶யென்றுமொழியினுங்கொடுப்பாரிலை
பொத்திலாந்தைகள்பாட்டறாப்புகலூரைப்பாடுமின்புலவீர்காள்
அத்தனாயமருலகமாள்வதற்கியாதுமையுறவில்லையே. (கூ)

தையலாருக்கோர்காமனேயென்றுஞ்சாலநல்வழக்குடையனே
கையுலாவியவேலனேயென்றுகழறினுங்கொடுப்பாரிலை
பொய்கைபாவியின்மேதிபாய்ப்புகலூரைப்பாடுமின்புலவீர்காள்
ஐயனாயமருலக§மாள்வதற்கியாதுமையுறவில்லையே. (க0)

செறுவினிற்செழுங்கமலமோங்குதென்புகலூர்மேவியசெல்வனை
நறவம்பூம்பொழினாவலூரன்வனப்பகையப்பன்சடையன்றன்
சிறுவன்வன்றொண்டனூரன்பாடியபாடல்பத்திவைவல்லவர்
அறவனாடிசென்றுசேர்வதற்கியாதுமையுறவில்லையே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருப்புகலூர்த்திருப்பதிகம் - அ.

ஆ திருப்பதிகம் - ககச.

சுவாமி தேவி திருநாமங்கள் - அக்கினீசுரர், கருந்தார்க்குழலி.

* அலம்வராதமருலகம் என்றும் பாடம். † எள்விழுந்தடம் என்றும் பாடம். ‡ அல்லற்பட்டழுந்தாது என்றும் பாடம். ¶ முத்திலாதானைமுத்தனே என்றும் பாடம். § ஐயனாமருலகம் என்றும் பாடம்.

Koviloor Digital Library

சுந்தரமூர்த்திநாயனர் திருவாரூரில் எழுந்தருளியிருக்கும்பொழுது, பங்குனி உத்தி ரத்திருநாள் சமீபித்தலும், பரவையார் திருவிழாச்செலவிற்குக் கொடுப்பதற்குப் பொன் கொண்டு வரும்பொருட்டு, திருப்புகலூரை அடைந்து கோயிலிற்சென்று, சுவாமியை வணங்கித் திருப்பதிகம்பாடி, சமீபத்தில் இருக்கின்ற மடாலயத்திற்குப் போகத் திரு வுளங்கொண்டு புறப்பட்டுவந்து, கோயிற்றிருமுன்றிலின் ஒருபக்கத்திலே அடியார்க ளோடும் இருந்தருளினர். அப்பொழுது பரமசிவனது திருவருளினலே நித்திரை வந் தது. உடனே அங்கே திருப்பணிக்காகச் சுடப்பட்ட செங்கற்கள் பலவற்றை வருவித்து உயரம்பண்ணி, அதனையே தலையணையாகக் கொண்டு, உத்தரீயத்தை விரித்து நித்திரை செய்தார். பின் விழித்தெழுந்தபோது, அந்தச் செங்கற்கள் எல்லாம் பொற்கல்லாய் இருக்கக் கண்டு, திருவருளைத் துதித்து, திருக்கோயிலினுள்ளே போய் "தம்மையே புகழ்ந்திச்சைபேசினும்" என்னுந் திருப்பதிகம் பாடியருளினர்.

எசுா. திருப்புகலூர்வர்த்தமானீச்சரம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண் - பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பட்டம்பானிறமதியம்படர்சடைச்சுடர்விடுபாணி
நட்டநள்ளிருளாடுநாதனுர்நவின்றுறைகோயில்
புட்டன்பேடையொடாடும்பூம்புகலூர்த்தொண்டர்போற்றி
வட்டஞ்சூழ்ந்தடிபரவும்வர்த்தமானீச்சரத்தாரே. (க)

முயல்வளாவியதிங்கள்வாண்முகத்தரிவையிற்றெரிவை
இயல்வளாவியதுடையவின்னமுதெந்தையெம்பெருமான்
கயல்வளாவியகழனிக்கருநிறக்குவளைகண்மலரும்
வயல்வளாவியபுகலூர்வர்த்தமானீச்சரத்தாரே. (உ)

தொண்டர்தண்கயமூழ்கித்துணையலுஞ்சாந்தமும்புகையும்
கொண்டுகொண்டடிபரவிக்குறிப்பறிமுருகன்செய்கோலம்
கண்டுகண்டுகண்குளிரக்களிபரந்தொளிமல்குகள்ளார்
வண்டுபண்செயும்புகலூர்வர்த்தமானீச்சரத்தாரே.* (ங)

* சுவாமிகள் இத்திருப்பாட்டில் முருகநாயனர்செய்த புஷ்பகைங்கரியத்தைச் சிறப்பித்துக்கூறியருளிற்று. ஒ-ம் திருப்பாட்டிலும் அங்ஙனம் கூறியருளினமைகாண்க.

சோழமண்டலத்திலே, திருப்புகலூரிலே, பிராமணகுலத்திலே, சிவபத்தியிற் சிறந்தவராகிய முருகநாயனர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் தினந்தோறும் சூரியோ தயத்துக்குமுன் எழுந்து ஸ்நானம்பண்ணிச் சந்தியாவந்தனம் முடித்துக்கொண்டு போய், கோட்டுப்பூ கொடிப்பூ நீர்ப்பூ நிலப்பூ என்கின்ற நால்வகைப் பூக்களில் உரிய பூக்களைக் கொய்து திருப்பூங்கூடைகளிலே இட்டுக்கொண்டு வந்து, தனியிடத்திலிருந்து, பலவ கைப்பட்ட திருமாலைகள்செய்து, அந்த ஸ்தலத்திலுள்ள வர்த்தமானீச்சரம் என்னும் ஆலயத்தில் வீற்றிருக்கின்ற பரமசிவனுக்குச் சாத்தி அருச்சனைசெய்தும், திவ்விய மந்தி ரமாகிய ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தைச் செபித்தும் வருவார்.

இப்படிச் செய்துவருங்காலத்திலே, திருஞானசம்பந்தமூர்த்திநாயனருக்குச் சிநே கராகிய பெருமையையும் பெற்றூர். பெற்ற அம்முருகநாயனர் அந்தத் திருஞானசம்பந் தமூர்த்திநாயனருடைய திருமணத்திலே தம்முடைய சிவபூசாபலத்தினலே போய், பர மசிவனுடைய திருவடிநிழலை அடைந்தார்.

Koviloor Digital Library

பண்ணவண்ணத்தராகிப்பாடலொடாடலறாத
விண்ணவண்ணத்தராயவிரிபுகலூரரொர்பாகம்
பெண்ணவண்ணத்தராகும்பெற்றியொடாணிணை * பிணைந்த
வண்ணவண்ணத்தெம்பெருமான்வர்த்தமானீச்சரத்தாரே. (ரு)

ஈசனேறமர்கடவுளின்னமுதெந்தையெம்பெருமான்
பூசுமாசில்வெண்ணீற்றர்பொலிவுடைப்பூம்புகலூரில்
மூசுவண்டறைகொன்றைமுருகன்முப்போதுஞ்செய்முடிமேல் †
வாசமாமலருடையார்வர்த்தமானீச்சரத்தாரே. (௬)

தளிரிளங்கொடிவளரத்தண்கமழ்விரியவண்டேறிக்
கிளரிளம்முழைநுழையக்கிழிதருபொழிற்புகலூரில் ‡
உளரிளஞ்சுனைமலரு ¶ மொளிதருசடைமுடியதன்மேல் §
வளரிளம்பிறையுடையார்வர்த்தமானீச்சரத்தாரே. (௬)

தென்சொல்விஞ்சமர் 0 வடசொற்றிசைமொழியெழினரம்பெடுத்துத்
துஞ்சுநெஞ்சிருணீக்கத்தொழுதெழுதொல்புகலூரில்
அஞ்சனம்பிதிர்ந்தனையவல்லகடல்கடையவன்றெழுந்த
வஞ்சநஞ்சணிகண்டர்வர்த்தமானீச்சரத்தாரே. (எ)

சாமவேதமோர்கீதமோதியத்தசமுகன்பரவும்
நாமதேயமதுடையார்நன்குணர்ந்தடிகளென்றேத்தக்
காமதேவனைவேவக்கனலெரிகொளுவியகண்ணார்
வாமதேவர்தண்புகலூர்வர்த்தமானீச்சரத்தாரே. (அ)

பிரமனுங்குறநின்றசெருவுறுதிசைமுகனோடு
நாரணன்கருத்தழியநகைசெய்தசடைமுடிநம்பர்
ஆரணங்குறுமுமையையஞ்சுவித்தருளுதல்பொருட்டால்
வாரணத்துரிபோர்த்தார்வர்த்தமானீச்சரத்தாரே. (௯)

கையிலுண்டுழல்வாருங்கமழ்துவராடையினாற்றம்
மெய்யைப்போர்த்துழல்வாருமுரைப்பனமெய்யெனவிரும்பேல்
செய்யில்வாளைகளோடுசெங்கயல்குதிகொளும்புகலூர்
மைகொள்கண்டத்தெம்பெருமான்வர்த்தமானீச்சரத்தாரே. (க0)

பொங்குதண்புனல்சூழ்ந்துபோதணிபொழிற்புகலூரில்
மங்குன்மாமதிதவழும்வர்த்தமானீச்சரத்தாரைத்
தங்குசீர்திகழ்ஞானசம்பந்தன்றண்டமிழ்பத்தும்
எங்குமேத்தவல்லார்களெய்துவரிமையவருலகே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருப்புகலூர்வர்த்தமானீச்சரத்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - கசுதி.

சுவாமி தேவி திருநாமங்கள் - வர்த்தமானீசுவரர், கருந்தார்க்குழலி.

* ஆணிணை - பிணைமிட்டுறுக்கண் † முப்பொழுதுமெசய்முடிமேல் என்றும் பாடம். ‡ தருபூம்புகலூரில் என்றும் பாடம். ¶ சினைமலரும் என்றும் பாடம். § சடைமுடிதன் மேல் என்றும் பாடம். 0 விஞ்சமர் இடைக்குறைந்தபகரமாகலான் தென்சொல்லுக்கும் அடையாக்குக; விஞ்சுதல் - மேம்படல்.

Koviloor Digital Library

எஎ. திருவிராமனதீச்சரம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

சங்கொளிர்முன்கையர்தம்மிடையே
அங்கிடுபலிகொளுமவன்* கோபப்
பொங்கரவாடலோன்புவனியோங்க
எங்குமனிராமனதீச்சரமே. (௧)

சந்தநன்மலரணிதாழ்சடையன்
தந்தமதத்தவன் † றாதையோதான்
அந்தமில்பாடலோனழகனல்ல
எந்தவனிராமனதீச்சரமே. (௨)

தழைமயிலேறவன்றாதையோதான்
மழைபொழிசடையவன் ‡ மன்னுகாதில்
குழையதுவிலங்கியகோலமார்பின்
இழையவனிராமனதீச்சரமே. (௩)

சத்தியுளாதியோர்தையல் ¶ பங்கன்
முத்தியதாகியமூர்த்தியோதான்
அத்தியகையினிலழகுசூலம்
வைத்தவனிராமனதீச்சரமே. (௪)

தாழ்ந்தகுழற்சடைமுடியதன்மேல்
தோய்ந்தவிளம்பிறைதுளங்குசென்னிப்
பாய்ந்தகங்கையொடுபடவரவம்
ஏய்ந்தவனிராமனதீச்சரமே. (௫)

சரிகுழலிலங்கியதையல்காணும்
பெரியவன்காளிதன்பெரியகூத்தை
அரியவனாடலோனங்கையேந்தும்
எரியவனிராமனதீச்சரமே. (௬)

மாறிலாமாதொருபங்கன்மேனி
நீறதுவாடலோனீள்சடைமேல்
ஆறதுசூடுவானழகன்விடை
ஏறவனிராமனதீச்சரமே. (௭)

* மகன் என்றும் பாடம். † தந்தமதத்தவன் - மூத்தபிள்ளையார். ‡ மழைபொதிசடையவன் என்றும் பாடம். ¶ சத்தியுளாதியோர்தையல் - சத்தியாகக்கருதப்படுகின்ற முதன்மையையுடைய தையல் என்க; சத்திகளுள் ஆதிசத்தியாகிய தையல் எனினுமாம்; சத்தியுளாகியோர்தையல் என்றும் பாடம்.

Koviloor Digital Library

தடவரையரக்கனைத்தலைநெரித்தோன்
படவரவாட்டியபடர்சடையன்
நடமதுவாடலானான்மறைக்கும்
இடமவனிராமனதிச்சரமே. (௮)

தனமணிதையறன்பாகன்றன்னை
அனமணியயனணிமுடியுங்காணான்
பனமணிவரவரி* பாதங்காணான்
இனமணியிராமனதிச்சரமே. (௯)

தறிபோலாஞ்சமணர்சாக்கியர்சொற்கொளேல்
அறிவோரானும† மறிந்துரைமின்
மறிகையோன்றன்முடிமணியார்கங்கை
எறிபவ‡ னிராமனதிச்சரமே. (௧௦)

தேன்மலர்க்கொன்றையோன்****
** முந்தமக்கூனமன்றே. ¶ (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவிராமனதிச்சரத்திருப்பதிகம் - ௧.

ஆ திருப்பதிகம் - ௧௧௯.

சுவாமி தேவி திருநாமங்கள் - இராமநாதர், சரிவார்குழலி.

௭௮. திருப்பயற்றூர். §

திருநாவுக்கரசுநாயனார்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

உரித்திட்டாரானையின்றோ லுதிரவாறொழுகியோட
விரித்திட்டாருமையாளஞ்சிவிரல்விதிர்த்தலக்கநோக்கித் ○
தரித்திட்டார்சிறிதுபோதுதரிக்கிலாராகித்தாமும்
சிரித்திட்டாரெயிறுதோன்றத்திருப்பயற்றூரனாரே. (௧)

உவந்திட்டங்குமையோர்பாகம்வைத்தவரூழியூழி
பவந்திட்ட** பரமனார்தாமலைசிலை†† நாகமேற்றிக்
கவர்ந்திட்டபுரங்கண்மூன்றுங்கனலெரியாகச்சீறிச்
சிவந்திட்டகண்ணர்போலுந்திருப்பயற்றூரனாரே. (௨)

* பணமணிபரவரி என்றும், பணமணிவாகரி என்றும் பாடம். † அறிவோரார நாமம் என்றும் பாடம். ‡ எறியவன் என்றும் பாடம். ¶ ௧௧-வது திருப்பாட்டில் மற்றைய அடிகள்மறைந்துபோயின. § திருப்பயற்றூர் - திருப்பயற்றங்குடி. ○ விதிர்த்தலக்கநோக்கி என்றும், விதிர்த்தரக்கநோக்கி என்றும் பாடம். ** ஊழியூழி-பவந்திட்ட- ஊழிதோறும் ஊழிதோறும் இறவாமற்றோன்றிய; பவந்திடுதல் ஒருசொல்; தோன்றுதல். ஊழிதோறும் ஊழிதோறும் உலகத்தைத் தோற்றுவிக்கின்ற என்றலுமாம். †† மலைச்சிலை என்றும் பாடம்.

Koviloor Digital Library

நங்களுக்கருளதென்றுநான்மறையோதுவார்கள்
தங்களுக்கருளுமெங்கடத்துவன்றழலன்றன்னை
எங்களுக்கருள்செயென்னநின்றவனுகமஞ்சும்
திங்களுக்கருளிச்செய்தார் திருப்பயற்றூரனூரே. (௫)

பார்த்தனுக்கருளும்வைத்தார்பாம்பரையாடவைத்தார்
சாத்தனைமகனுவைத்தார்சாமுண்டிசாமவேதம்
கூத்தொடும்பாடவைத்தார்கோளராமதியநல்ல
தீர்த்தமுஞ்சடையில்வைத்தார் திருப்பயற்றூரனூரே. (௬)

மூவகைமூவர்போலுமுற்றுமாநெற்றிக்கண்ணர்
நாவகைநாவர்போலு* நான்மறைஞானமெல்லாம்
ஆவகையாவர்போலுமாதிரைநாளர்போலும்
தேவர்கடேவர்போலுந்திருப்பயற்றூரனூரே. (௭)

ஞாயிறாய்நமனுமாகிவருணனுய்ச்சோமனுகித்
தீயறுநிருதிவாயுத்திப்பியசாந்தனுகிப் †
பேயறுக்காட்டிலாடும்பிஞ்ஞகனெந்தைபெம்மான்
நீயறுக்கையர்போலுந்திருப்பயற்றூரனூரே. (௮)

ஆவியாயவியுமாகியருக்கமாய்ப்பெருக்கமாகிப்
பாவியாய்ப்பாவந் ‡ தீர்க்கும்பரமனுப்பிரமனுகிக்
காவியங்கண்ணளாகிக்கடல்வண்ணமாகிநின்ற ¶
தேவியைப்பாகம்வைத்தார் திருப்பயற்றூரனூரே. (௭)

தந்தையாய்த்தாயுமாகித்தாணியாய்த்தரணியுள்ளார்க்
கெந்தையுமென்னநின்றவேழுலகுடனுமாகி
எந்தையெம்பிரானேயென்றென்றுள்குவாருள்ளத்தென்றும்
சிந்தையுஞ்சிவமுமாவார் திருப்பயற்றூரனூரே. (௮)

புலன்களைப்போகநீக்கிப்புந்தியையொருங்கவைத்து
இலங்களைப்போகநின்றுவிரண்டையு § நீக்கியொன்றாய் ०
மலங்களைமாற்றவல்லார்மனத்தினுட்போகமாகிச்
சினங்களைக்களைவர்போலுந்திருப்பயற்றூரனூரே. (௯)

மூர்த்திதன்மலையின்மீதுபோகாதா ००முனிந்துநோக்கிப்
பார்த்துத்தான்பூமிமேலாற்பாய்ந்துடன்மலையைப்பற்றி
ஆர்த்திட்டான்முடிகள்பத்துமடர்த்துநல்லிரிவையஞ்சத்
தேத்தெத்தாவென்னக்கேட்டார் திருப்பயற்றூரனூரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருப்பயற்றூர்த்திருப்பதிகம் - ௧.
ஆ திருப்பதிகம் - ௧௬௭.

சுவாமி தேவி திருநாமங்கள் - பயற்றூர்நாதர், காவியங்கண்ணி.

* நால்வகைநால்வர்போலும் என்றும் பாடம். † வாயவியனோடீசாந்தனுகி என்றும், வாயுப்பியனோடீசாந்தனுகி என்றும், வாயப்பியனோடீசாந்தனுகி என்றும் பாடம். ‡ பாவியர்பாவம் என்றும் பாடம். ¶ கடல்வண்ணனுகிநின்ற என்றும் பாடம். § இனங்களைப்போகநின்றீரிரண்டையும் என்றும் பாடம்; இரண்டு - வேண்டுதல்வேண்டாமை; ० ஒன்றாய் - அத்துவிதமாக; ஆய் ஆகவென்பதன்றிரிபு. ०० போகாதாக என்பது போகாதா எனநின்றது; போகாதால் என்றும் பாடம்; போகாததால் போகாதால் என நின்றது.

௭௯. திருச்செங்காட்டங்குடி.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

நறைகொண்டமலர்தூவிவிரையளிப்பநாடோறும்
முறைகொண்டுநின்றடியார்முட்டாமேபணிசெய்யச்
சிறைகொண்டவண்டறையுஞ்செங்காட்டங்குடியதனுள்
கறைகொண்டகண்டத்தான்கணபதீச்சரத்தானே. (௧)

வாரேற்றபறைபொலியுஞ்சங்கொலியும்வந்தியம்ப
வூரேற்றசெல்வத்தோடோங்கியசீர்விழவோவாச்
சீரேற்றமுடைத்தாயசெங்காட்டங்குடியதனுள்
காரேற்றகொன்றையான்கணபதீச்சரத்தானே. (௨)

வரந்தையான்சோபுரத்தான்மந்திரத்தான்றந்திரத்தான்
கிரந்தையான்கோவணத்தான்கிண்கிணியான்கையதோர்
சிரந்தையான்செங்காட்டங்குடியான்செஞ்சடைச்சேரும்
கரந்தையான்வெண்ணீற்றான்கணபதீச்சரத்தானே. (௩)

தொங்கலுங்கமழ்சாந்துமகிற்புகையுந்தொண்டர்கொண்
டங்கையாற்றொழுதேத்தவருச்சுனற்கன்றருள்செய்தான்
செங்கயல்பாய்வயலுடுத்தசெங்காட்டங்குடியதனுள்
கங்கைசேர்வார்* சடையான்கணபதீச்சரத்தானே. (௪)

பாலினானறுநெய்யாற்பழத்தினாற்பயின்றாட்டி
நூலினான்மணமாலைகொணர்ந்தடியார்புரிந்தேத்தச்
சேலினார்வயல்புடைசூழ்செங்காட்டங்குடியதனுள்
காலினாற்கூற்றுதைத்தான்கணபதீச்சரத்தானே. (௫)

நுண்ணியான்மிகப்பெரியானோவுளார்† வாயுளான்
தண்ணியான்வெய்யானந்தலைமேலான்மனத்துளான்
திண்ணியான்செங்காட்டங்குடியான்செஞ்சடைமதியக்
கண்ணியான்கண்ணுதலான்கணபதீச்சரத்தானே. (௬)

மையினார்மலர்நெடுங்கண்மலைமகளோர்பாகமாம்
மெய்யினான்பையரவமரைக்கசைத்தான்மீன்பிறழச்
செய்யினாரகன்கழனிச்‡ செங்காட்டங்குடியதனுள்
கையினார்கூரெரியான்கணபதீச்சரத்தானே. (௭)

* கங்கையோர்வார் என்றும் பாடம். † ஓவுளார் வாயுளான்-பிரணவம் உள்ளே பொருந்திய வாயின்கணுள்ளான், பிரிதலைக்கருதாதார்மாட்டுள்ளான்; இப்பொருட்கு ஓ முதனிலை. ஓயுவார் வாயுளான் என்றும் பாடம்; இப்பாடத்திற்குக் காமச்சேட்டை யற்றவிடத் துள்ளான் என்க. ஓய்தல் ஓய் என முதனிலைத்தனிவினை; ஓய்தல் - அறுதல்; ஓவுவார் ஓயுவார் என்று பிரிப்பின் பொருட்சிறப்பின்று. ‡ செய்யினார்தண்கழனிச் என்றும் பாடம்.

Koviloor Digital Library

தோடுடையான்குழையுடையானரக்கன்றன்றோளடர்த்த
பீடுடையான்போர்விடையான்பெண்பாகமிகப்பெரியான்
சேடுடையான்செங்காட்டங்குடியுடையான்சேர்ந்தாடும்
காடுடையானாடுடையான்கணபதீச்சரத்தானே. (அ)

ஆனூராவுழிதருவானன்றிருவர்தேர்ந்துணரா
வானூரான்வையகத்தான்வாழ்த்துவார்மனத்துளான்
தேனூரான்செங்காட்டங்குடியான்சிற்றம்பலத்தான்
கானூரான்கழுமலத்தான்கணபதீச்சரத்தானே. (கூ)

செடிநுகருஞ்சமணர்களுஞ்சீவரத்தசாக்கியரும்*
படிநுகராதயருழப்பார்க்கருளாதபண்பினான்
பொடிநுகருஞ்சிறுத்தொண்டர்க்கருள்செய்யும்பொருட்டாகக்
கடிநகராய்வீற்றிருந்தான்கணபதீச்சரத்தானே.† (கo)

கறையிலங்குமலர்க்குவளைகண்காட்டக்கடிபொழிலின்
நறையிலங்குவயற்காழித்தமிழ்ஞானசம்பந்தன்
சிறையிலங்குபுனற்படப்பைச்செங்காட்டங்குடிசேர்த்தும்
மறையிலங்குதமிழ்வல்லார்வானுலகத்திருப்பாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

பைங்கோட்டுமலர்ப்புன்னைப்பறவைகாள்பயப்பூரச்
சங்காட்டந்தவிர்த்தென்னைத்தவிராநோய்தந்தானே
செங்காட்டங்குடிமேயசிறுத்தொண்டன்பணிசெய்ய
வெங்காட்டுளனலேந்திவிளையாடும்பெருமானே. (க)

பொன்னம்பூங்கழிக்கானற்புணர்துணையோடுடன்வாழும்
அன்னங்காளன்றில்காளகன்றும்போய்வருவீர்காள்
கன்னவின்றோட்சிறுத்தொண்டன்கணபதீச்சரமேய
இன்னமுதனிணையடிக்கீழெனதல்லலுரையீரே. (உ)

குட்டத்துங்குழிக்கரையுங்குளிர்பொய்கைத்தடத்தகத்தும்
இட்டத்தாலிரைதேருமிருஞ்சிறகின்மடநாராய்
சிட்டன்சீர்ச்சிறுத்தொண்டன்செங்காட்டங்குடிமேய
வட்டவார்சடையார்க்கென்வருத்தஞ்சென்றுரையாயே. (ங)

கானருகும்வயலருகுங்கழியருகுங்கடலருகும்
மீனிரியவருபுனலிலிரைதேர்வெண்மடநாராய்
தேனமர்தார்ச்சிறுத்தொண்டன்செங்காட்டங்குடிமேய
வானமருஞ்சடையார்க்கென்வருத்தஞ்சென்றுரையாயே. (ச)

* சீவரச்சாக்கியரும் என்றும், சீவரர்சாக்கியரும் என்றும் பாடம். † இதனால் சிறுத்தொண்டர்க்குச் சிவபிரான்செய்த அருட்டிறம் விளக்கியருளினர்.

Koviloor Digital Library

ஆலாஞ்சுறவமேய்ந்தகன்கழவிச்சிறகுலர்த்தும்
பாரல்வாய்ச்சிறுகுருகேபயிராவிமடநாராய்
சீருலாஞ்சிறுத்தொண்டன்செங்காட்டங்குடிமேய
நீருலாஞ்சடையார்க்கென்நிலைமைசென்றுரையீரே. (ரு)

குறைக்கொண்டாரிடர்நீர்த்தல்கடனன்றேகுளிர்பொய்கைத்
துறைக்கெண்டைகவர்குருகேதுணைபிரியாமடநாராய்
கறைக்கண்டன்பிறைச்சென்னிக்கணபதீச்சரமேய
சிறுத்தொண்டன்பெருமான்சீருளொருநாட்பெறலாமே. (சு)

கருவடியபசுங்கால்வெண்குருகேயொண்கழிநாராய்
ஒருவடியாளிரந்தாளென்றொருநாட்சென்றுரையீரே
செருவடிதோட்சிறுத்தொண்டன்செங்காட்டங்குடிமேய
திருவடிதன்றிருவருளேபெறலாமோதிறத்தவர்க்கே. (எ)

கூராரல்லிரைதேர்ந்துகுளமுலவிவயல்வாழும்
தாராவேமடநாராய்* தமியேற்கொன்றுரையீரே
சீராளன்சிறுத்தொண்டன்செங்காட்டங்குடிமேய
பேராளன்பெருமான்றனருளொருநாட்பெறலாமே. (அ)

நறப்பொலிபூங்கழிக்கானனவில்குருகேபுலகெல்லாம்
அறப்பலிதேர்ந்துழல்வார்க்கென்னலர்கோடலழகியதே
சிறப்புலவன்சிறுத்தொண்டன்செங்காட்டங்குடிமேய
பிறப்பிலிபேர்பிதற்றிநின்றிழக்கோவெம்பெருநலமே. (கூ)

செந்தண்பூம்புனல்பரந்தசெங்காட்டங்குடிமேய
வெந்தநீறணிமார்பன்சிறுத்தொண்டனவன்வேண்ட
அந்தண்பூங்கலிக்காழிபடிகளேயேயடிபரவும்
சந்தங்கொள்சம்பந்தன்றமிழுரைப்போர்தக்கோரே. † (க0)

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் திருச்சாத்தமங்கையை நீங்கி, திருநாகைக்காரோணம், கீழ்வேளூர் என்னுந் தலங்களை வணங்கிக்கொண்டு, பிறதலங்களையும் வணங்கும்படி எழுந்தருளினர். அப்பொழுது திருச்செங்காட்டங்குடியில் இருக்கின்ற சிறுத்தொண்டநாயனர் அதனைக் கேள்வியுற்று ஓடிச்சென்று, ஆளுடையபிள்ளையாரை எதிர்கொண்டு, தம்முடைய திருப்பதியில் அழைத்துக்கொண்டு போனர். பிள்ளையார் அப்பதியிலிருக்கின்ற கணபதிச்சரமென்னுந் திருக்கோயிலை வணங்கி, சிறுத்தொண்டநாயனரைச் சிறப்பித்துத் திருப்பதிகம்பாடி, அந்நாயனருடைய வீட்டிலேபோய்த் திருவமுது செய்துகொண்டு சிலநாள் அங்கெழுந்தருளியிருந்தார்.

* தாராவெண்மடநாராய் என்றும் பாடம். † இத்திருப்பதிகத்தில் பதினொராவது செய்யுள் மறைந்துபோயிற்று.

Koviloor Digital Library

திருநாவுக்கரசுநாயனார்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

பெருந்தகையைப்பெறற்கரியமாணிக்கத்தைப்
பேணிநினைந்தெழுவார்தம்மனத்தேமன்னி
இருந்தமணிவிளக்கதனைநின்றபூமே
லெழுந்தருளியிருந்தானையெண்டோள்வீசி
அருந்திறன்மாநடமாடுமெம்மான்றன்னை
யங்கனகச்சுடர்க்குன்றையன்றாலின்கீழ்த்
திருந்துமறைப்பொருணால்வர்க்கருள்செய்தானைச்
செங்காட்டங்குடியதனுட்கண்டேனானே. * (க)

துங்கநகத்தாலன்றித்தொலையாவென்றித்
தொகுதிறலவ்விரணியனையாகங்கீண்ட
அங்கனகத்திருமாலுமயனுந்தேடு
மாரழலையநங்கனுடல்பொடியாய்வீழ்ந்து
மங்கநகத் † தான்வல்லமருந்துதன்னை
வண்கயிலைமாமலைமேன்மன்னிநின்ற
செங்கனகத்திரடோளெஞ்செல்வன்றன்னைச்
செங்காட்டங்குடியதனுட்கண்டேனானே. (உ)

உருகுமனத்தடியவர்கட்கூறுந்தேனை
யும்பர்மணிமுடிக்கணியையுண்மைநின்ற
பெருகுநிலைக்குறியாளரறிவுதன்னைப்
பேணியவந்தணர்க்குமறைப்பொருளைப்பின்னும்
முருகுவிரிநறுமலர்மேலயற்குமாற்கு
முழுமுதலைமெய்த்தவத்தோர்துணையைவாய்த்த
திருகுகுழலுமைநங்கைபங்கன்றன்னைச்
செங்காட்டங்குடியதனுட்கண்டேனானே. (ங)

கந்தமலர்க்கொன்றையணிசடையான்றன்னைக்
கதிர்விடுமாமணிபிறங்குகனகச்சோதிச்
சந்தமலர்த்தெரிவையொருபாகத்தானைச்
சராசரநற்றாயானைநாயேன்முன்னைப்
பந்தமறுத்தாளாக்கிப்பணிகொண்டாங்கே
பன்னியநூற்றமிழ்மாலைபாடுவித்தென்
சிந்தைமயக்கறுத்ததிருவருளினானைச்
செங்காட்டங்குடியதனுட்கண்டேனானே. (ச)

* குடியதனிற்கண்டேனானே என்றும் பாடம்; இப்பாடத்தை இத்திருப்பதிக முற்றுக்குங்கொள்க. † நக - கண்விழிக்க, சிரிக்க; நகவல்லமருந்து என்க; தான் அசை.

Koviloor Digital Library

நஞ்சடைந்தகண்டத்துநாதன்றன்னை
நளிர்மலர்ப்பூங்கணைவேளைநாசமாக
வெஞ்சினத்தீவிழித்ததொருநயனத்தானை
வியன்கெடிலவீரட்டமேவினானை
மஞ்சடுத்தநீள்சோலைமாடவீதி
மதிளாரூரிடங்கொண்டமைந்தன்றன்னைச்
செஞ்சினத்ததிரிசூலப்படையான்றன்னைச்
செங்காட்டங்குடியதனுட்கண்டேனானே. (௫)

கன்னியையங்கொருசடையிற்கரந்தான்றன்னைக்
கடவூரில்வீரட்டங்கருதினானைப்
பொன்னிகுழைபாற்றெம்புனிதன்றன்னைப்*
பூந்துருத்திநெய்த்தானம்பொருந்தினானைப்
பன்னியநான்மறைவிரிக்கும்பண்பன்றன்னைப்
பரிந்திமையோர்தொழுதேத்திப்பரனேயென்று
சென்னிமிசைக்கொண்டணிசேவடியினானைச்†
செங்காட்டங்குடியதனுட்கண்டேனானே. (௬)

எத்திக்குமாய்நின்றவிறைவன்றன்னை
யேகம்பமேயானையில்லாத்தெய்வம்
பொத்தித்தம்மயிர்பறிக்குஞ்சமணர்பொய்யிற்
புக்கழுந்திவீழாமேபோதவாங்கிப்
பத்திக்கேவழிகாட்டிப்பாவந்தீர்த்துப்
பண்டைவினைப்பயமானவெல்லாம்போக்கித்
தித்தித்தென்மனத்துள்ளேயூறுந்தேனைச்
செங்காட்டங்குடியதனுட்கண்டேனானே. (௭)

கல்லாதார்மனத்தணுகாக்கடவுடன்னைக்
கற்றார்களுற்றோருங்காதலானைப்
பொல்லாதநெறியுகந்தார்புரங்கண்மூன்றும்
பொன்றிவிழவன்றுபொருசரந்தொட்டானை
நில்லாதநீணிலக்குரம்பைப்பிணக்குநீங்க
நிறைதவத்தையடியேற்குநிறைவித்தென்றும்
செல்லாதசெந்நெறிக்கேசெல்விப்பானைச்
செங்காட்டங்குடியதனுட்கண்டேனானே. (௮)

அரியபெரும்பொருளாகிநின்றான்றன்னை
யலைகடலிலாலாலமமுதுசெய்த
கரியதொருகண்டத்துச்செங்கணேற்றுக்
கதிர்விடுமாமணிபிறங்குகாட்சியானை

* புராணன்றன்னை என்றும் பாடம். † சேவடியான்றன்னை என்றும் பாடம்.

Koviloor Digital Library

உரியபலதொழில்செய்யுமடியார்தங்கட்
குலகமெலாமுழுதளிக்குமுலப்பிலானைத்
தெரிவையொருபாகத்துச்சேர்த்தினானைச்
செங்காட்டங்குடியதனுட்கண்டேனானே. (கூ)

போரரவமால்விடையொன்றூர்தியானைப்
புறம்பயமும்புகலூருமன்னினானை
நீரரவச்செஞ்சடைமேனிலாவெண்டிங்க
ளிங்காமைவைத்தானைநிமலன்றன்னைப்
போரவப்புட்பகத்தேருடையவென்றிப்
பிறங்கொளிவாளரக்கன்முடியிடியச்செற்ற
சீரரவக்கழலானைச்செல்வன்றன்னைச்
செங்காட்டங்குடியதனுட்கண்டேனானே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருச்செங்காட்டங்குடித்திருப்பதிகம் - ௩.

ஆ திருப்பதிகம் - ௨00.

சுவாமி தேவி திருநாமங்கள் - கணபதீச்சரர், திருக்குழன்மாது.

அ0. திருமருகலும் திருச்செங்காட்டங்குடியும்.

வினாவுரை.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

அங்கமும்வேதமுமோதுநாவரந்தணர்நாளுமடிபரவ
மங்குன்மதிதவழ்மாடவீதிமருகனிலாவியமைந்தசொல்லாய்
செங்கயலார்புனற்செல்வமல்குசீர்கொள்செங்காட்டங்குடியதனுள்
கங்குல்விளங்கெரியேந்தியாடுங்கணபதியீச்சரங்காமுறவே. (க)

நெய்தவழ்மூவெரிகாவலோம்புநேர்புரிநூன்மறையாளரேத்த
மைதவழ்மாடமலிந்தவீதிமருகனிலாவியமைந்தசொல்லாய்
செய்தவநான்மறையோர்களேத்துஞ்சீர்கொள்செங்காட்டங்குடியதனுள்
கைதவழ்கூரெரியேந்தியாடுங்கணபதியீச்சரங்காமுறவே. (௨)

தோலொடுநூலிழைசேர்ந்தமார்பர்தொகுமறையோர்கள்வளர்த்தசெந்தீ
மால்புகைபோய்விம்முமாடவீதிமருகனிலாவியமைந்தசொல்லாய்
சேல்புல்குதண்வயற்சோலைசூழ்ந்தசீர்கொள்செங்காட்டங்குடியதனுள்
கால்புல்குபைங்கழலார்க்கவாடுங்கணபதியீச்சரங்காமுறவே. (௩)

Koviloor Digital Library

காமருகேள்வியர்வேள்வியோவாநான்மறையோர்வழிபாடுசெய்ய
மாமருவும்மணிக்கோயின்மேயமருகனிலாவியமைந்தசொல்லாய்
தேமருபூம்பொழிற்சோலைசூழ்ந்தசீர்கொள்செங்காட்டங்குடியதனுள்
காமருசீர்மகிழ்ந்தெல்லியாடுங்கணபதியீச்சரங்காமுறவே. (௪)

பாடன்முழவும்விழவுமோவாப்பன்மறையோரவர்தாம்பரவ
மாடநெடுங்கொடிவிண்டடவுமருகனிலாவியமைந்தசொல்லாய்
சேடகமாமலர்ச்சோலைசூழ்ந்தசீர்கொள்செங்காட்டங்குடியதனுள்
காடகமே* யிடமாகவாடுங்கணபதியீச்சரங்காமுறவே. (௫)

புனையழலோம்புகையந்தணாளர்பொன்னடிநாடொறும்போற்றிசைப்ப
மனைகெழுமாடமலிந்தவீதிமருகனிலாவியமைந்தசொல்லாய்
சினைகெழுதண்வயற்சோலைசூழ்ந்தசீர்கொள்செங்காட்டங்குடியதனுள்
கனைவளர்கூரெரியேந்தியாடுங்கணபதியீச்சரங்காமுறவே. (௬)

பூண்டங்குமார்பினிலங்கைவேந்தன்பொன்னெடுந்தோள்வரையாலடர்த்து
மாண்டங்குநான்மறையோர்பரவமருகனிலாவியமைந்தசொல்லாய்
சேண்டங்குமாமலர்ச்சோலைசூழ்ந்தசீர்கொள்செங்காட்டங்குடியதனுள்
காண்டங்குதோள்பெயர்த்தெல்லி † யாடுங்கணபதியீச்சரங்காமுறவே. (௮)

அந்தமுமாதியுநான்முகனுமரவணையானுமறிவரிய
மந்திரவேதங்களோதுநாவர்மருகனிலாவியமைந்தசொல்லாய்
செந்தமிழோர்கள்பரவியேத்துஞ்சீர்கொள்செங்காட்டங்குடியதனுள்
கந்தமகிற்புகையேகமழுங்கணபதியீச்சரங்காமுறவே. (௯)

இலைமருதேயழகாகநாளுமிடுதுவர்க்காயொடுசுக்குத்தின்னும்
நிலையமண்டேரரைநீங்கிநின்றுநீதரல்லார் ‡ தொழுமாமருகல்
மலைமகடோள்புணர்வாயருளாய்மாசில்செங்காட்டங்குடியதனுள்
கலைமல்குதோலுடுத்தெல்லியாடுங்கணபதியீச்சரங்காமுறவே. (௧௦)

நாலுங்குலைக்கமுகோங்குகாழிஞானசம்பந்தனலந்திகழும்
மாலின்மதிதவழ்மாடமோங்குமருகலின்மற்றதன்மேன்மொழிந்த
சேலுங்கயலுந்திளைத்தகண்ணார்சீர்கொள்செங்காட்டங்குடியதனுள்
சூலம்வல்லான்கழலேத்துபாடல்சொல்லவல்லார்வினையில்லையாமே. ¶ (௧௧)

திருச்சிற்றம்பலம்.

* காடமலை என்றும் பாடம். † பெயர்த்தெல்லி என்றும் பாடம். ‡ நீங்கிநின்ற நீதரல்லார் என்றும், நீக்கிநின்ற நீதரல்லார் என்றும் பாடம். ¶ இத்திருப்பதிகத்தில் ஏழாவதுசெய்யுள் மறைந்துபோயிற்று.

Koviloor Digital Library

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருமருகலில் எழுந்தருளியிருக்குநாளிலே, சிறுத்தொண்டநாயனார் வந்து பிரார்த்திக்க, ஆளுடையபிள்ளையார் மீண்டும் திருச்செங்காட்டங்குடிக்கு எழுந்தருள விரும்பி, அடியாரோடும் அத்திருமருகற் கோயிலிற்சென்று வணங்க, பரமசிவன் தாம் திருச்செங்காட்டங்குடியிலிருக்கின்ற திருக்கோலத்தை அவருக்கு அங்கே காட்டியருளினார். பிள்ளையார் அதுகண்டு மனமகிழ்ந்து "அங்கமும் வேதமு மோதுநாவர்" என்னுந் திருப்பதிகம்பாடி, அந்தத் திருப்பதியிலேதானே சில நாள் எழுந்தருளியிருந்தார்.

திருமருகல்.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

சடையாயெனுமால்சரணீயெனுமால்
விடையாயெனுமால்வெருவாவிழுமால்
மடையார்குவளைமலரும்மருகல்
உடையாய்தகுமோவிவளுண்மெலிவே. (௧)

சிந்தாயெனுமால்சிவனேயெனுமால்
முந்தாயெனுமான்முதல்வாவெனுமால்
கொந்தார்குவளைகுலவும்மருகல்
எந்தாய்தகுமோவிவளேசறவே. (௨)

அறையார்கழலும்மழல்வாயரவும்
பிறையார்சடையும்முடையாய்பெரிய
மறையார்மருகன்மகிழ்வாயிவளை
இறையார்வளைகொண்டெழில்வவ்வினையே. (௩)

ஒலிநீர்சடையிற்கரந்தாயுலகம்
பலிநீதிரிவாய்பழியில்புகழாய்
மலிநீர்மருகன்மகிழ்வாயிவளை
மெலிநீர்மையளாக்கவும்வேண்டினையே. (௪)

துணிநீலவண்ணம்முகில்தோன்றியன்ன *
மணிநீலகண்டம்முடையாய்மருகல்
கணிநீலவண்டார்குழலாளிவடன்
அணிநீலவொண்கண்ணயர்வாக்கினையே. (௫)

பலரும்பரவப்படுவாய்சடைமேல்
மலரும்பிறையொன்றுடையாய்மருகல்
புலருந்தனையுந்துயிலாள்புடைபோந்
தலரும்படுமோவடியாளிவளே. (௬)

* தோன்றியநன் என்றும் பாடம்.

Koviloor Digital Library

வழுவாள்பெருமான்கழல்வாழ்கவென
எழுவாளிவளா*ளிரவும்பகலும்
மழுவாளுடையாய்மருகற்பெருமான்
தொழுவாளிவளைத்துயராக்கினையே. (எ)

இலங்கைக்கிறைவன்விலங்கல்லெடுப்பத்
துலங்கவ்விரலூன்றலுந்†தோன்றலனாய்
வலங்கொண்மதிள்சூழ்மருகற்பெருமான்
அலங்கல்லிவளையலராக்கினையே.‡ (அ)

எரியார்சடையும்மடியுமிருவர்
தெரியாததோர்தீத்திரளாயவனே
மரியார்பிரியாமருகற்பெருமான்
அரியாளிவளையபர்வாக்கினையே. (௯)

அறிவில்சமணும்மலர்சாக்கியரும்
நெறியல்லனசெய்தனர்நின்றுழல்வார்
மறியேந்துகையாய்மருகற்பெருமான்
நெறியார்குழலிநிறைநீக்கினையே. (௧௦)

வயஞானம்வல்லார்மருகற்பெருமான்
உயர்ஞானமுணர்ந்தடியுள்குதலால்
இயன்ஞானசம்பந்தனபாடல்வல்லார்
வியன்ஞாலமெல்லாம்விளங்கும்புகழே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருச்செங்காட்டங்குடியினின்று புறப்பட்டுத் திருமருகலுக்குப்போய், சுவாமிதரிசனஞ்செய்துகொண்டு சிலநாள் அங்கிருந்தார். அந்நாளிலே, ஒருவணிகன் வழிச்செல்வோனாகி ஒரு கன்னியையும் உடன்கொண்டு கோயிலுக்குப்புறத்திலே ஒரு திருமடத்தில் இராத்திரியில் நித்திரைசெய்யும்போது பாம்பினாலே தீண்டப்பட்டு மாண்டான். அதுகண்டு, அக்கன்னியானவள் தளர்ந்து அவனைப்பாம்பு தீண்டியும் தான் தீண்டாமல், சமீபத்திலே வீழ்ந்து புரண்டு அழுதாள். அப்பொழுது விஷவைத்தியர் வந்து தீர்க்கவுந் தீராதாயிற்று. விடியற்காலத்திலே அக்கன்னிகை மிக அயர்ந்து புலம்பி, திருக்கோயிலின் வாயிற்றிக்கை நோக்கிக் கைதொழுது, "தேவர்கள் உய்யும்பொருட்டு நஞ்சை அமுதாக்கிய கடவுளே, வெந்து பொடியாகிய மன்மதனுடைய உயிரை அவன் மனைவியாகிய இரதிவேண்ட அருளிச்செய்த கருணாநிதியே, மார்க்கண்டேயர்பொருட்டு இயமனை உதைத்த திருவடித்தாமரையையுடையவரே, திருமருகலில் எழுந்தருளியிருக்கும் பரமசிவனே, தேவரீர் இந்தக் கொடியவிஷம் நீங்கும்பொருட்டும் அடியேன் துக்கசாகரத்தினின்று கரையேறும்பொருட்டும் அருள்செய்யும்" என்று பிரார்த்தித்தாள். அவ்வோசையைச் சுவாமிதரிசனஞ் செய்யும்படி எழுந்தருளிவருகின்ற திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் கேட்டு, திருவுளம் இரங்கி, அவளுக்கு அருள்செய்யும்பொருட்டு அடியார்களோடு எழுந்தருளிவந்து நின்று, அவளைநோக்கி "பயப்படாதே, நிகழ்ந்தசமாசாரத்தைச்சொல்" என்று அருளிச்செய்தார். கன்னிகை கண்ணீர்சொரிய,

* எழுவாளிவைவாள் என்றும் பாடம். † துலங்கல்விரலூன்றலும் என்றும் பாடம்.
‡ விவளையயர்வாக்கினையே என்றும் பாடம்.

Koviloor Digital Library

பிள்ளையாருடைய திருவடியிலேவிழுந்து நமஸ்கரித்து எழுந்துநின்று "வைப்பூரில் இருக்கின்ற தாமனென்னும் பெயரையுடைய என்பிதாவுக்குப் புத்திரிகள் எழுவர். அவர்களில் என்னை ஒழிய மூத்தோர் அறுவரையும் தன்மருகனாகிய இவனுக்கே விவாகஞ்செய்துகொடுப்பேன் என்று சொல்லிச் சொல்லி, பிறரிடத்திலே திரவியம் வாங்கிக்கொண்டு, அவர்களுக்கு விவாகஞ்செய்து கொடுத்துவிட்டான்; அது கண்டு மனவருத்தமுற்ற இவனுக்கே நான் மனைவியாதல் வேண்டும் என நினைந்து,பின் பிதா மாதாக்களை மறைத்து இவனையே சார்ந்து வந்தேன்; இவனும் பாம்பினாலே தீண்டப்பட்டு இறந்தான்; அடியேன் கடனடுவே கலங்கவிழப் பெற்றாற்போல நிற்கின்றேன்; தேவரீர் எழுந்தருளிவந்து, அடியேனுடைய துன்பமெல்லாம் நீங்க அருள்செய்தீர்" என்றாள். பிள்ளையார் விஷம் நீங்கும்பொருட்டுத் திருமருகற்கடவுள்மேல் "சடையாயெனுமால்" என்னுந் திருப்பதிகம் பாடியருளினார். உடனே வணிகன் விடந்தீர்ந்து எழுந்து, பிள்ளையாரை நமஸ்கரித்தான். அதுகண்ட திருத்தொண்டர்களெல்லாரும் ஆரவாரித்தார்கள். கன்னிகை மனமகிழ்ந்து, பிள்ளையாருடைய திருவடியிலே விழுந்து வணங்கினாள். பிள்ளையார் அக்கன்னிகையையும் வணிகனையும் மணம் செய்வித்து அவர்களுக்கு விடைகொடுத்தனுப்பிவிட்டு, அங்கே சிலநாள் எழுந்தருளியிருந்தார்.

திருநாவுக்கரசு நாயனார்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பெருகலாந்தவம்பேதைமைதீரலாம்
திருகலாகியசிந்தைதிருத்தலாம்
பருகலாம்பரமாயதோரானந்தம்
மருகலானடிவாழ்த்திவணங்கவே. (க)

பாடங்கொள்பனுவற்றிறங்கற்றுப்போய்
நாடங்குள்ளனதட்டியநாணிலீர்
மாடஞ்சூழ்மருகற்பெருமான்றிரு
வேடங்கைதொழவீடெளிதாகுமே. (உ)

சினத்தினல்வருஞ்செய்தொழிலாமவை
அனைத்துநீங்கிநின்றாதரவாய்மிக
மனத்தினான்மருகற்பெருமான்றிறம்
நினைப்பினார்க்கில்லைநீணிலவாழ்க்கையே. (ங)

ஓதுபைங்கிளிக்கொண்பாலமுதட்டிப்*
பாதுகாத்துப்பலபலகற்பித்து
மாதுதான்மருகற்பெருமானுக்குத்
தூதுசொல்லவிடத்† தான்றொடங்குமே. (ச)

இன்னவாறென்பதுண்டறியேனின்று
துன்னுகைவளைசோரக்கண்ணீர்மல்கும்
மன்னுதென்மருகற்பெருமான்றிறம்
உன்னியொண்கொடியுள்ளமுருகுமே. (ரு)

* பாலமுதூட்டிப் என்றும் பாடம். † தூதுசெல்லவிட என்றும் பாடம்.

Koviloor Digital Library

சங்குசோரக்கலையுஞ்சரியவே
மங்கைதான்மருகற்பெருமான்வரும்
அங்கவீதியருகணையாநிற்கும்
நங்கைமீரிதற்கென்செய்கேனாளுமே. (௬)

காட்சிபெற்றிலளாகிலுங்காதலே
மீட்சியொன்றறியாதுமிகுவதே
மாட்சியார்மருகற்பெருமானுக்குத்
தாழ்ச்சிசாலவுண்டாகுமென்னையலே. (௭)

நீடுநெஞ்சுணினைந்துகண்ணீர்மல்கும்
ஓடுமாலினோடொண்கொடிமாதராள்
மாடநீண்மருகற்பெருமான்வரில்
கூடுநீயென்றுகூடலிழைக்குமே. (௮)

கந்தவார்குழல்கட்டிலள்காரிகை
அந்திமால்விடை* யோடுமன்பாய்மிக
வந்திடாய்மருகற்பெருமானென்று
சிந்தைசெய்துதிகைத்திடுங்காண்மினே. (௯)

ஆதிமாமலையன்றெடுத்தானிற்றுச்
சோதியென்றலுந்தொல்லருள்செய்திடும்
ஆதியான்மருகற்பெருமான்றிறம்
ஓதுவாரவரும்பர்க்குமும்பரே. † (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருமருகற்றிருப்பதிகம் - ௫.

ஆ திருப்பதிகம் - ௨௦௫.

சுவாமி தேவி திருநாமங்கள் - மாணிக்கவண்ணர், வண்டுவார்குழலி.

௮௧. திருச்சாத்தமங்கை. ‡

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

திருமலர்க்கொன்றைமாலைதிளைக்குமதிசென்னிவைத்தீர்
இருமலர்க்கண்ணிதன்னொடுடனாவதுமேற்பதொன்றே
பெருமலர்ச்சோலைமேகமுரிஞ்சும்பெருஞ்சாத்தமங்கை
அருமலராதிமூர்த்தியயவந்தியமர்ந்தவனே. (௧)

* பந்திமால்விடை அந்தமால்விடை என்றும் பாடம். † ஓதிவாழ்பவரும்பர்க்குமும்பரே என்றும் பாடம். ‡ இதனை இக்காலத்துச் செய்யாத்தமங்கை என்று வழங்குப.

Koviloor Digital Library

பொடிதனைப்பூசுமார்பிற்புரிநூலொருபாற்பொருந்தக்
கொடியனசாயலாளோடுடனாவதுங்கூடுவதே
கடிமணமல்கிநாளுங்கமழும்பொழிற்சாத்தமங்கை
அடிகணக்கன்பரவ* வயவந்தியமர்ந்தவனே. (௨)

நூனலந்தங்குமார்பினுகர்நீறணிந்தேறதேறி
மானனநோக்கிதன்னோடுடனாவதுமாண்பதுவே
தானலங்கொண்டுமேகந்தவழும்பொழிற்சாத்தமங்கை
ஆனலந்தோய்ந்தவெம்மானயவந்தியமர்ந்தவனே. (௩)

மற்றவின்மால்வரையாமதிலெய்துவெண்ணீறுபூசிப்
புற்றரவல்குலாளோடுடனாவதும்பொற்பதுவே
கற்றவர்சாத்தமங்கைநகர்கைதொழச்செய்தபாவம்
அற்றவர்நாளுமேத்தவயவந்தியமர்ந்தவனே. (௪)

வெந்தவெண்ணீறுபூசிவிடையேறியவேதகீதன்
பந்தணவும்விரலாளுடனாவதும்பாங்கதுவே
சந்தமாறங்கம்வேதந்தரித்தார்தொழுஞ்சாத்தமங்கை
அந்தமாயாதியாகியயவந்தியமர்ந்தவனே. (௫)

வேதமாய்வேள்வியாகிவிளங்கும்பொருள்வீடதாகிச்
சோதியாய்மங்கைபாகந்நிலைதான்சொல்லலாவதொன்றே
சாதியான்மிக்கசீராற்றகுவார்தொழுஞ்சாத்தமங்கை
ஆதியாய்நின்றபெம்மா† னயவந்தியமர்ந்தவனே. (௬)

இமயமெல்லாமிரியமதிலெய்துவெண்ணீறுபூசி
உமையையொர்பாகம்வைத்தநிலைதானுன்னலாவதொன்றே
சமயமாறங்கம்வேதந்தரித்தார்தொழுஞ்சாத்தமங்கை
அமையவேறோங்குசீரானயவந்தியமர்ந்தவனே. (௭)

பண்ணுலாம்பாடல்வீணைபயில்வானோர்பரமயோகி
விண்ணுலாமால்வரையான்மகள்பாகமும்வேண்டினையே
தண்ணிலாவெண்மதியந்தவழும்பொழிற்சாத்தமங்கை
அண்ணலாய்நின்றவெம்மானயவந்தியமர்ந்தவனே. (௮)

பேரெழிற்றோளரக்கன்வலிசெற்றதும்பெண்ணோர்பாகம்
ஈரெழிற்கோலமாகியுடனாவதுமேற்பதொன்றே
காரெழில்வண்ணனோடுகனகம்மனையானுங்காணா
ஆரழல்வண்ணமங்கையயவந்தியமர்ந்தவனே. (௯)

* திருநீலநக்கநாயனார் செய்த வழிபாட்டின் சிறப்புத்தோன்ற இங்ஙனம் கூறியருளினார்; ௧௧-ம் திருப்பாட்டிலும் அவ்வாறருளிச்செய்தமை காண்க † நின்றவெம்மான் என்றும் பாடம்.

Koviloor Digital Library

கங்கையோர்வார்சடைமேலடையப்புடையேயகமழும்
மங்கையோடொன்றிநின்றம்மதிதான்சொல்லலாவதொன்றே
சங்கையில்லாமறையோரவர்தாந்தொழுசாத்தமங்கை
அங்கையிற்சென்னிவைத்தாயயவந்தியமர்ந்தவனே. (௧௦)

மறையினர்மல்குகாழித்தமிழ்ஞானசம்பந்தன்மன்னும்
நிறையினர்நீலநக்க* னெடுமாநகரென்றுதொண்டர்
அறையுமூர்சாத்தமங்கையயவந்திமேலாய்ந்தபத்தும்
முறைமையாலேத்தவல்லாரிமையோரிலுமுந்துவரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருச்சாத்தமங்கைத்திருப்பதிகம் - ௧.

ஆ திருப்பதிகம் - ௨௦௪.

சுவாமி தேவி திருநாமங்கள் - அயவந்திநாதர், மலர்க்கண்ணம்மை.

* சோழமண்டலத்திலே, சாத்தமங்கையிலே, பிராமணகுலத்திலே, திருநீலநக்கநாயனார் என்பவர் ஒருவர் இருந்தார் அவர் வேதத்தின் உள்ளுறையாவது பரமசிவனையும் அவருடைய அடியார்களையும் அன்பினோடு அருச்சித்து வணங்குதலே என்று துணிந்து, தினந்தோறுஞ் சைவாகமவிதிப்படி சிவார்ச்சனைபண்ணி, சிவபத்தர்களுக்குத் திருவமுது செய்வித்தல் முதலாகிய பலவகைப்பட்ட பணிகளையுஞ்செய்வார்.

அப்படிச்செய்யுநாளிலே, ஒரு திருவாதிரை நக்ஷத்திரத்திலே சிவபூசையை முடித்துக்கொண்டு, அந்தஸ்தலத்திலுள்ள அயவந்தி என்னும் ஆலயத்தில் வீற்றிருக்கின்ற சுவாமியையும் அருச்சிக்கவிரும்பி, தம்முடைய மனைவியார் பூசைக்கு வேண்டும் உபகரணங்களைக் குறைவறக் கொண்டுவர, அவ்வாலயத்திற்சென்று, பூசைபண்ணிப் பிரதக்ஷிணஞ்செய்து, சந்நிதானத்திலே நமஸ்கரித்து, இருந்துகொண்டு, வேதாகமாதி சமஸ்த சாஸ்திரங்களின் உண்மைப்பொருளாகிய ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை ஜபித்தார். ஜபிக்கும்பொழுது, ஒரு சிலம்பி மேலே நின்று வழுவி, சிவலிங்கத்தின்மேல் விழுந்தது. அதைச் சமீபத்திலே நின்ற மனைவியார் கண்டு, அச்சமடைந்து, விரைந்து, குழந்தைமேல் விழுஞ் சிலம்பி நீங்கும்படி ஊதித்துமிபவர்போல அன்பு மிகுதியினாலே அந்தச்சிலம்பி நீங்கும்படி ஊதித் துமிந்தார். திருநீலநக்கநாயனார் அதைக்கண்டு, தம்முடைய கண்ணைப் புதைத்து, "அறிவில்லாதவளே, நீ இப்படிச் செய்ததென்னை" என்று சொல்ல; மனைவியார் "சிலம்பி விழுந்தபடியால் ஊதித் துமிந்தேன்" என்றார். நாயனார் மனைவியாருடைய அன்பின் செய்கையை நன்குமதியாமல், அது அநுசிதம் என்று நினைந்து, அவரை நோக்கி, 'நீ சிவலிங்கத்தின்மேலே விழுந்த சிலம்பியை வேறொருபரிசினாலே நீக்காமல், முற்பட்டுவந்து, ஊதித் துமிந்தாய். இந்த அநுசிதத்தைச் செய்த உன்னை நான் இனித் துறந்தேன்; நீங்கிவிடு" என்றார். அப்பொழுது சூரியாஸ்தமயனமாயிற்று. மனைவியார் நாயகருடைய ஏவலினாலே ஒருவழி நீங்க; நாயகர் பூசையை முடித்துக்கொண்டு, வீட்டிற்குத் திரும்பிவிட்டார். மனைவியார் அஞ்சுகின்ற உள்ளத்தோடும், அவரிடத்திற் செல்லமாட்டாதவராகி, ஆலயத்தில் இருந்தார். நாயனார் நித்திரைசெய்யும்பொழுது, பரமசிவன் அவருக்குச் சொப்பனத்திலே தோன்றி, தம்முடைய திருமேனியைக்காட்டி, "உன் மனைவி ஊதித் துமிந்த இடமொழிய, இப்புறம் சிலம்பியின் கொப்புளம்" என்று சொல்லியருளினார். நாயனார் அச்சத்துடனே அஞ்சலிசெய்துகொண்டு விழித்து எழுந்து, கூத்தாடினார்; பாடினார்; சிவபிரானுடைய திருவருளை வியந்து நின்று

Koviloor Digital Library

அழுதார். விடிந்தபின், ஆலயத்துக்குப்போய், சுவாமியை நமஸ்கரித்து, ஸ்தோத்திரஞ் செய்து, மனைவியாரையும் அழைத்துக்கொண்டு, வீட்டுக்குத் திரும்பினார். அதற்குப் பின், முன்னினும்பார்க்க மிகுந்த மகிழ்ச்சியோடு, சிவார்ச்சனையையும் மாகேசுரபூசை யையுஞ் செய்துகொண்டிருந்தார்.

அப்படியிருக்குநாளிலே, பரமாசாரியராகிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனாருடைய மகிமையைக் கேள்வியுற்று, அவருடைய ஸ்ரீ பாதாரவிந்தங்களைத் தரிசிக்கவேண்டும் என்னும் அத்தியந்த ஆசையையுடையராயினர். அப்படி யிருக்கும்பொழுது, திருஞான சம்பந்தமூர்த்திநாயனார் அயவந்திநாதரை வணங்கும்பொருட்டுத் திருக்கூட்டத்தோடும் சாத்தமங்கைக்கு எழுந்தருளிவர; திருநீலநக்கநாயனார் கேள்வியுற்று, மிகுந்த மகிழ்ச்சி யோடும் நடைப்பந்தரிட்டு, வாழைகளையும் கமுகுகளையும் நாட்டி, தோரணங்கள் கட்டி, நிறைகுடங்களும் தூபதீபங்களும் வைத்து, தம்முடைய சுற்றத்தார்கள் சமஸ்தரோடும் அவரை எதிர்கொண்டு நமஸ்கரித்து, தம்முடைய வீட்டிற்கு அழைத்துக்கொண்டுபோய், திருவமுதுசெய்வித்தார். திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் அன்றிரவிலும் அங்கேதானே திருவமுதுசெய்து, திருநீலநக்கநாயனாரை அழைத்து, "திருநீலகண்டப் பெரும்பாண ருக்கும் விறலியாருக்கும் இன்று தங்குதற்கு ஓரிடங்கொடும்" என்று சொல்லியருள; திருநீலநக்கநாயனார் வீட்டுக்கு நடுவிலிருக்கின்ற வேதிகையின் பக்கத்திலே அவர்க ளுக்கு இடங்கொடுத்தார். பெரும்பாணர், அவ்விடத்திலே வேதிகையிலுள்ள நித்தியாக் கினி வலஞ்சுழித்து ஓங்கி முன்னையிலுஞ் சிறந்து பிரகாசித்து, வருணமன்று பத்தியே மகிமைதருவது என்பதை விளக்கவும், அதுகண்ட திருநீலநக்கநாயனார் மகிழ்ச்சியடைய வும், விறலியாரோடு நித்திரைசெய்தார்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார், விடிந்தபின், அயவந்தியிற்சென்று சுவாமிமேலே திருநீலநக்கநாயனாரைச் சிறப்பித்துத் திருப்பதிகம்பாடி, சிலநாள் அங்கிருந்து, பின் திரு நீலநக்கநாயனாருக்கு விடைகொடுத்து, அந்தத்திருப்பதியினின்றும் நீங்கியருளினார். திருநீலநக்கநாயனார் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்மேலே பதிந்த அன்பும் அவரு டைய கேண்மையும் அவருக்குப் பின் செல்லும்படி தம்மை வலிந்தனவாயினும், தாம் அவருடைய ஆஞ்ஞையை வலியமாட்டாமையால், அந்தத்திருப்பதியிலே அவருடைய திருவடிகளைத் தியானித்துக்கொண்டிருந்தார். திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் செல் லுந்தலங்களிலே இடைநாட்களிற் சென்று அவரோடிருந்து, பின் திரும்பிவிடுவார். இப் படி நெடுநாட்சென்றபின், திருஞானசம்பந்தமூர்த்திநாயனாருடைய திருமணத்தைச் சேவித்துச்சிவபதமடைந்தார்.

அ௨. திருநாகைக்காரோணம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

புனையும்விரிகொன்றைக்கடவுள்புனல்பாய
நனையுஞ்சடைமேலோர்நகுவெண்டலைசூடி
வினையில்லடியார்கள்விதியால்வழிபட்டுக்*
கனையுங்கடனாகைக்காரோணத்தானே. (க)

* பட்டு - பட; எச்சத்திரிபு; வழிபட என்றும் பாடம்.

Koviloor Digital Library

பெண்ணாணெனநின்றபெம்மான்பிறைச்சென்னி
அண்ணாமலைநாடனாரூருறையம்மான்
மண்ணார்முழவோவாமாடநெடுவீதிக்
கண்ணார்கடனாகைக்காரோணத்தானே. (௨)

பாரோர்தொழவிண்ணோர்பணியமதின்மூன்றும்
ஆராரழலூட்டியடியார்க்கருள்செய்தான்
தேரார்விழவோவாச்செல்வன்றிரைசூழ்ந்த *
காரார்கடனாகைக்காரோணத்தானே. (௩)

மொழிசூழ்மறைபாடிமுதிருஞ்சடைதன்மேல்
அழிசூழ்புனலேற்றவண்ணலணியாய
பழிசூழ்விலராயபத்தர்பணிந்தேத்தக்
கழிசூழ்கடனாகைக்காரோணத்தானே. (௪)

ஆணும்பெண்ணுமாயடியார்க்கருணல்கிச்
சேணின்றவர்க்கின்னஞ்சிந்தைசெயவல்லான்
பேணிவழிபாடுபிரியாதெழுந்தொண்டர்
காணுங்கடனாகைக்காரோணத்தானே. (௫)

ஏனத்தெயிறோடும்மரவமெய்ப்பூண்டு
வானத்திளந்திங்கள்வளருஞ்சடையண்ணல்
ஞானத்துரைவல்லார்நாளும்பணிந்தேத்தக்
கானற்கடனாகைக்காரோணத்தானே. (௬)

அரையாரழனாகமக்கோடசைத்திட்டு
விரையார்வரைமார்பின்வெண்ணீறணியண்ணல்
வரையார்வனபோலவளரும்வங்கங்கள்
கரையார்கடனாகைக்காரோணத்தானே. (௭)

வலங்கொள்புகழ்பேணிவரையாலுயர்திண்டோள்
இலங்கைக்கிறைவாடவடர்த்தங்கருள்செய்தான்
பலங்கொள்புகழ்மன்னிற்பத்தர்பணிந்தேத்தக்
கலங்கொள்கடனாகைக்காரோணத்தானே. (௮)

திருமாலடிவீழத்திசைநான்முகனேத்தப்
பெருமானெனநின்றபெம்மான்பிறைச்சென்னிச்
செருமால்விடையூருஞ்செல்வன்றிரைசூழ்ந்த
கருமால்கடனாகைக்காரோணத்தானே. (௯)

நல்லாரறஞ்சொல்லப்பொல்லார்புறங்கூற
அல்லாரலர்தூற்றவடியார்க்கருள்செய்வான்
பல்லார்தலைமாலையணிவான்பணிந்தேத்தக்
கல்லார்கடனாகைக்காரோணத்தானே. (௧௰)

* செல்வத்திரைசூழ்ந்த என்றும் பாடம்.

Koviloor Digital Library

கரையார்கடனாகைக்காரோணம்மேய
நரையார்விடையானைநவிலுஞ்சம்பந்தன்
உரையார்தமிழ்மாலைபாடும்மவரெல்லாம்
கரையாவுருவாகிக்கலிவானடைவாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

பண் - செவ்வழி.

திருச்சிற்றம்பலம்.

கூனற்றிங்கட்குறுங்கண்ணிகான்றநெடுவெண்ணிலா
ஏனற்பூத்தம்மராங்கோதையோடும்விராவுஞ்சடை
வானநாடன்னமரர்பெருமாற்கிடமாவது
கானல்வேலிகழிசூழ்கடனாகைக்காரோணமே. (௧)

விலங்கலொன்றுசிலையாமதின்மூன்றுடன்வீட்டினான்
இலங்குகண்டத்தெழிலாமைபூண்டாற்கிடமாவது
மலங்கியோங்கிவ்வருவெண்டிரைமல்கியமால்கடல்
கலங்கலோதம்* கழிசூழ்கடனாகைக்காரோணமே. (௨)

வெறிகொளாருங்கடற்கைதைநெய்தல்விரிபூம்பொழில்
முறிகொண்ஞாழன்முடப்புன்னைமுல்லைம்முகைவெண்மலர்
நறைகொள்கொன்றைந்நயந்தோங்குநாதற்கிடமாவது
கறைகொளோதங்கழிசூழ்கடனாகைக்காரோணமே. (௩)

வண்டுபாடவ்வளர்† கொன்றைமாலைம்மதியோடுடன்
கொண்டகோலங்குளிர்கங்கைதங்குங்குருள்குஞ்சியுள்‡
உண்டுபோலும்மெனவைத்துகந்தவ்வொருவற்கிடம்
கண்டல்வேலிகழிசூழ்கடனாகைக்காரோணமே. (௪)

வார்கொள்கோலம்முலைமங்கைநல்லார்மகிழ்ந்தேத்தவே
நீர்கொள்கோலச்சடைநெடுவெண்டிங்கண்ணிகழ்வெய்தவே
போர்கொள்சூலப்படைபுல்குகையார்க்கிடமாவது
கார்கொளோதங்கழிசூழ்கடனாகைக்காரோணமே. (௫)

விடையதேறிவ்விடவரவசைத்தவ்விகிர்தரவர்
படைகொள்பூதம்பலபாடவாடும்பரமாயவர்¶
உடைகொள்வேங்கையுரிதோலுடையார்க்கிடமாவது
கடைகொள்செல்வங்கழிசூழ்கடனாகைக்காரோணமே. (௬)

பொய்துவாழ்வார்மனம்பாழ்படுக்கும்மலர்ப்பூசனை
செய்துவாழ்வார்சிவன்சேவடிக்கேசெலுஞ்சிந்தையார்
எய்தவாழ்வாரெழினக்கரெம்மாற்கிடமாவது
கைதல்வேலிகழிசூழ்கடனாகைக்காரோணமே. (௭)

* கலங்களோதம் என்றும் பாடம். † வண்டுபாடல்வளர் என்றும் பாடம். ‡ குருட்குஞ்சியுள் என்றும், குளிர்குஞ்சியுள் என்றும் பாடம். ¶ பரமரவர் என்றும் பாடம்.

Koviloor Digital Library

பத்திரட்டிதிரடோளுடையான்முடிபத்திற
அத்திரட்டிவிரலாலடர்த்தார்க்கிடமாவது
மைத்திரட்டிவ்வருவெண்டிரைமல்கியமாகடல்
கத்திரட்டுங்* கழிசூழ்கடனாகைக்காரோணமே. (அ)

நல்லபோதில்லுறைவானுமாலுந்நடுக்கத்தினால்
அல்லராவரென † நின்றபெம்மாற்கிடமாவது
மல்லலோங்கிவ்வருவெண்டிரைமல்கியமாகடல்
கல்லலோதங்கழிசூழ்கடனாகைக்காரோணமே. (கூ)

உயர்ந்தபோதின்னுருவத்துடைவிட்டுழல்வார்களும்
பெயர்ந்தமண்டையிடுபிண்டமாவுண்டுழல்வார்களும்
நயந்துகாணாவகைநின்றநாதர்க்கிடமாவது
கயங்கொளோதங்கழிசூழ்கடனாகைக்காரோணமே. (க0)

மல்குதண்பூம்புனல்வாய்ந்தொழுகும்வயற்காழியான்
நல்லகேள்வித்தமிழ்ஞானசம்பந்தனல்லார்கண்முன்
வல்லவாறேபுனைந்தேத்துங்காரோணத்துவண்டமிழ்
சொல்லுவார்க்குமிவைகேட்பவர்க்குந்துயரில்லையே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசு நாயனார்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

மனைவிதாய்தந்தைமக்கண்மற்றுளசுற்றமென்னும்
வினையுளேவிழுந்தழுந்திவேதனைக்கிடமாகாதே
கனையுமாகடல்சூழ்நாகைமன்னுகாரோணத்தானை
நினையுமாவல்லீராகிலுய்யலாநெஞ்சினீரே. (க)

வையனைவையமுண்டமாலங்கந்தோண்மேற்கொண்ட
செய்யனைச்செய்யபோதிற்றிசைமுகன்சிரமொன்றேந்தும்
கையனைக்கடல்சூழ்நாகைக்காரோணங்கோயில்கொண்ட
ஐயனைநினைந்தநெஞ்சேயம்மநாமுய்ந்தவாறே. (உ)

நிருத்தனைநிமலன்றன்னைநீணிலம்விண்ணின்மிக்க
விருத்தனைவேதவித்தைவிளைபொருண்மூலமான
கருத்தனைக்கடல்சூழ்நாகைக்காரோணங்கோயில்கொண்ட
ஒருத்தனையுணர்தலாலுய்ந்தவாநெஞ்சினீரே. (ங)

மண்டனையிரந்துகொண்டமாயனோடசுரர்வானோர்
தெண்டிரைகடையவந்ததீவிடந்தன்னையுண்ட
கண்டனைக்கடல்சூழ்நாகைக்காரோணங்கோயில்கொண்ட
அண்டனைநினைந்தநெஞ்சேயம்மநாமுய்ந்தவாறே. (ச)

* மல்கியவார்கடல்—கைத்திரட்டும் என்றும் பாடம். † அல்லலாவரென என்றும் பாடம்.

Koviloor Digital Library

நிறைபுனலணிந்தசென்னிநீணிலாவரவஞ்சூடி
மறையொலிபாடியாடன்மயானத்துமகிழ்ந்தமைந்தன்
கறைமலிகடல்சூழ்நாகைக்காரோணங்கோயில்கொண்ட
இறைவனைநாளுமேத்தவிடும்பைபோயின்பமாமே. (ரு)

வெம்பனைக்கருங்கையானைவெருவவன்றுரிவைபோர்த்த
கம்பனைக்காலற்காய்ந்தகாலனைஞாலமேத்தும்
உம்பனையும்பர்கோனைநாகைக்காரோணமேய
செம்பொனைநினைந்தநெஞ்சேதிண்ணநாமுய்ந்தவாறே. (சு)

வெங்கடுங்கானத்தேழைதன்னொடும்வேடனாய்ச்சென்
றங்கமர்மலைந்துபார்த்தற்கடுசரமருளினானை
மங்கைமாராடலோவாமன்னுகாரோணத்தானைக்
கங்குலும்பகலுங்காணப்பெற்றுநான்களித்தவாறே. (எ)

தெற்றினர்புரங்கண்மூன்றுந்தீயினில்விழவோரம்பால்
செற்றவெஞ்சிலையர்வஞ்சர்சிந்தையுட்சேர்விலாதார்
கற்றவர்பயிலுநாகைக்காரோணங்கருதியேத்தப்
பெற்றவர்பிறந்தார்மற்றுப்பிறந்தவர்பிறந்திலாரே. (அ)

கருமலிகடல்சூழ்நாகைக்காரோணர்கமலபாதத்
தொருவிரனுதிக்குநில்லாதொண்டிறலரக்கனுக்கான்
இருதிறமங்கைமாரோடெம்பிரான்செம்பொனாகம்
திருவடிதரித்துநிற்கத்திண்ணநாமுய்ந்தவாறே. * (கo)

திருச்சிற்றம்பலம்.

திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

வடிவுடைமாமலைமங்கைபங்காகங்கைவார்சடையாய்
கடிகமழ்சோலைசுலவுகடனாகைக்காரோணனே
பிடிமதவாரணம்†பேணுந்துரகநிற்கப்பெரிய
இடிகுரல்வெள்ளெருதேறுமிதென்னைகொலெம்மிறையே. (க)

கற்றார்பயில்கடனாகைக்காரோணத்தெங்கண்ணுதலே
விற்றாங்கியகரம்வேனெடுங்கண்ணிவியன்கரமே
நற்றாணெடுஞ்சிலைநாண்வலித்தகரநின்கரமே
செற்றார்புரஞ்செற்றசேவகமென்னைகொல்செப்புமினே. (உ)

தூமென்மலர்க்கணைகோத்துத்தீவேள்விதொழிற்படுத்த‡
காமன்பொடிபடக்காய்ந்தகடனாகைக்காரோணநின்
நாமம்பரவிநமச்சிவாயவென்னுமஞ்செழுத்தும்
சாமன்றுரைக்கத்தருதிகண்டாயெங்கள்சங்கரனே. (ங)

* இத்திருப்பதிகத்தில் ஒன்பதாவது செய்யுள் மறைந்துபோயிற்று. † பிடிமடவாரணம் என்றும் பாடம். ‡ வேள்வித்தொழிற்படுத்த என்றும் பாடம்.

Koviloor Digital Library

பழிவழியோடியபாவிப்பறிதலைக்குண்டர்தங்கள்
மொழிவழியோடிமுடிவேன்முடியாமைக்காத்துக்கொண்டாய்
கழிவழியோதமுலவுகடனாகைக்காரோணவென்
வழிவழியாளாகும்வண்ணமருளெங்கள்வானவனே. (௪)

செந்துவர்வாய்க்கருங்கண்ணிணைவெண்ணகைத்தேன்மொழியார்
வந்துவலஞ்செய்துமாநடமாடமலிந்தசெல்வக்
கந்தமலிபொழில்சூழ்கடனாகைக்காரோணமென்றும்
சிந்தைசெய்வாரைப்பிரியாதிருக்குந்திருமங்கையே. (௫)

பனைபுரைகைம்மதயானையுரித்தபரஞ்சுடரே
கனைகடல்சூழ்தருநாகைக்காரோணத்தெங்கண்ணுதலே
மனைதுறந்தல்லுணாவல்லமண்குண்டர்மயக்கநீக்கி*
எனைநினைந்தாட்கொண்டாய்க்கென்னினியான்செயுமிச்சைகளே. (௬)

சீர்மலிசெல்வம்பெரிதுடையசெம்பொன்மாமலையே
கார்மலிசோலைசுலவுகடனாகைக்காரோணனே
வார்மலிமென்முலையார்பலிவந்திடச்சென்றிரந்து
ஊர்மலிபிச்சைகொண்டுண்பதுமாதிமையோவுரையே. (௭)

வங்கமலிகடனாகைக்காரோணத்தெம்வானவனே
எங்கள்பெருமானோர்விண்ணப்பமுண்டதுகேட்டருளீர்†
கங்கைசடையுட்கரந்தாயக்கள்ளத்தைமெள்ளவுமை
நங்கையறியிற்பொல்லாதுகண்டாயெங்கணாயகனே. (௮)

கருந்தடங்கண்ணியுந்தானுங்கடனாகைக்காரோணத்தான்
இருந்ததிருமலையென்றிறைஞ்சாதன்றெடுக்கலுற்றான்
பெருந்தலைபத்துமிருபதுதோளும்பிதிர்ந்தலற
இருந்தருளிச்செய்ததேமற்றுஞ்செய்திலனெம்மிறையே. ‡ (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பாணத்தான்மதின்மூன்றுமெரித்தவன்
பூணத்தானரவாமைபொறுத்தவன்
காணத்தா ¶ னினியான்கடனாகைக்கா
ரோணத்தானெனநம்வினைபோயுமே. (௧)

வண்டலம்பியவார்சடையீசனை
விண்டலம்பணிந்தேத்தும்விகிர்தனைக்
கண்டலங்கமழ்நாகைக்காரோணனைக்
கண்டறும்வினைபாவகழலுமே. (௨)

* மயக்கைநீக்கி என்றும் பாடம். † கேட்டருளில் என்றும் பாடம். ‡ இத்திருப்பதிகத்தில் ஒன்பதாவது செய்யுள்மறைந்துபோயிற்று. ¶ பேணத்தான் என்றும் தேணத்தான் என்றும் பாடம்; தேடல் தேணல் என்பது.

Koviloor Digital Library

புனையுமாமலர்கொண்டுபுரிசடை
நனையுமாமலர்சூடியநம்பனைக்
கனையும்வார்கடனாகைக்காரோணனை
நினையவேவினையாயினநீங்குமே. * (௩)

கொல்லைமால்விடையேறியகோவினை
எல்லிமாநடமாடுமிறைவனைக்
கல்வினார்மதினாகைக்காரோணனைச்
சொல்லவேவினையானவைசோருமே. (௪)

மெய்யனைவிடையூர்தியைவெண்மழுக்
கையனைக்கடனாகைக்காரோணனை
மையனுக்கிய † கண்டனைவானவர்
ஐயனைத்தொழுவார்க்கல்லலில்லையே. (௫)

அலங்கல்சேர்சடையாதிபுராணனை
விலங்கன்மெல்லியல்பாகம்விருப்பனைக்
கலங்கள்சேர்கடனாகைக்காரோணனை
வலங்கொள்வார்வினையாயினமாயுமே. (௬)

சினங்கொண்மால்கரிசிறியவேறினை
இனங்கொள்வானவரேத்தியவீசனைக்
கனங்கொண்மாமதினாகைக்காரோணனை
மனங்கொள்வார்வினையாயினமாயுமே. (௭)

அந்தமில்புகழாயிழையார்பணிந்
தெந்தையீசனென்றேத்துமிறைவனைக்
கந்தவார்பொழினாகைக்காரோணனைச்
சிந்தைசெய்யக்கெடுந்துயர்திண்ணமே. (௮)

கருவனைக்கடனாகைக்காரோணனை
இருவருக்கறிவொண்ணாவிறைவனை
ஒருவனையுணரார்புரமூன்றெய்த
செருவனைத்தொழத்தீவினைதீருமே. (௯)

கடல்கழிதழி ‡ நாகைக்காரோணன்றன்
வடவரையெடுத்தார்த்தவரக்கனை
அடரவூன்றியபாதமணைதரத்
தொடரவஞ்சுந்துயக்கறுங்காலனே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

* நினையவென்வினையானவைநீங்குமே என்றும் பாடம். † மையணுகிய என்றும் பாடம். ‡ கடல்கழிசுழி என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

பாரார்பரவும்பழனத்தானைப்
பருப்பதத்தானைப்பைஞ்ஞீலியானைச்
சீரார்செழும்பவளக்குன்றொப்பானைத்
திகழுந்திருமுடிமேற்றிங்கள்சூடிப்
பேராயிரமுடையபெம்மான்றன்னைப்
பிறர்தன்னைக்காட்சிக்கரியான்றன்னைக்
காரார்கடல்புடைசூழந்தணாகைக்
காரோணத்தெஞ்ஞான்றுங்காணலாமே. (௧)

விண்ணோர்பெருமானைவீரட்டானை *
வெண்ணீறுமெய்க்கணிந்தமேனியானைப்
பெண்ணானைபாணானைப்பேடியானைப்†
பெரும்பற்றத்தண்புலியூர்பேணினானை
அண்ணாமலையானையானைந்தாடு
மணியாரூர்வீற்றிருந்தவம்மான்றன்னைக்
கண்ணார்கடல்புடைசூழந்தணாகைக்
காரோணத்தெஞ்ஞான்றுங்காணலாமே. (௨)

சிறையார்வரிவண்டுதேனேபாடுந்
திருமறைக்காட்டெந்தைசிவலோகனை
மறையான்ற ‡ வாய்மூருங்கீழ்வேளூரும்
வலிவலமுந்தேவூருமன்னியங்கே
உறைவானையுத்தமனையொற்றியூரிற்
பற்றியாள்கின்றபரமன்றன்னைக்
கறைபார்கடல்புடைசூழந்தணாகைக்
காரோணத்தெஞ்ஞான்றுங்காணலாமே. (௩)

அன்னமாம்பொய்கைசூழம்பரானை
யாச்சிராமங்கருமானைக்காவும்
முன்னமேகோயிலாக்கொண்டான்றன்னை
மூவுலகுந்தானாயமூர்த்திதன்னைச்
சின்னமாம்பன்மலர்களன்றே ¶ சூடிச்
செஞ்சடைமேல்வெண்மதியஞ்சேர்த்தினானைக்
கன்னியம்புன்னைசூழந்தணாகைக்
காரோணத்தெஞ்ஞான்றுங்காணலாமே. (௪)

நடையுடையநல்லெருதொன்றூர்வான்றன்னை
ஞானப்பெருங்கடலைநல்லூர்மேய
படையுடையமழுவாளொன்றேந்தினானைப்
பன்மையேபேசும்படிறன்றன்னை

* விரட்டனை என்றும் பாடம். † பேடிதனை என்றும் பாடம். ‡ மறையான்றன் என்றும் பாடம். ¶ பன்மலர்களைக்கொண்டே என்றும் பாடம்.

Koviloor Digital Library

மடையிடையேவாளையுகளும்பொய்கை
மருகல்வாய்ச்சோதிமணிகண்டனைக்
கடையுடையநெடுமாடமோங்குநாகைக்
காரோணத்தென்ஞான்றுங்காணலாமே. (ரு)

புலங்கள்பூந்தேறல்வாய்ப்புகலிக்கோனைப்
பூம்புகார்க்கற்பகத்தைப்புன்கூர்மேய
அலங்கலங்கழனிசூழணிநீர்க்கங்கை
யவிர்சடைமேலாதரித்தவம்மான்றன்னை
இலங்குதலைமாலைபாம்புகொண்
டேகாசமிட்டியங்குமீசன்றன்னைக்
கலங்கற்கடல்புடைசூழந்தணுநாகைக்
காரோணத்தென்ஞான்றுங்காணலாமே. (சு)

பொன்மணியம்பூங்கொன்றைமாலையானைப்
புண்ணியனைவெண்ணீறுபூசினானைச்
சின்மணியமூவிலையசூலத்தானைத்
தென்சிராப்பள்ளிச்சிவலோகனை
மன்மணியைவான்சுடலையூராப்பேணி
வல்லேருதொன்றேறுமறைவல்லானைக்
கன்மணிகள்வெண்டிரைசூழந்தணுநாகைக்
காரோணத்தென்ஞான்றுங்காணலாமே. (எ)

வெண்டலையும்வெண்மழுவுமேந்தினானை
விரிகோவணமசைத்தவெண்ணீற்றானைப்
புண்டலையமால்யானையுரிபோர்த்தானைப்
புண்ணியனைவெண்ணீறணிந்தான்றன்னை
எண்டிசையுமெரியாடவல்லான்றன்னை
யேகம்பமேயானையெம்மான்றன்னைக்
கண்டலங்கழனிசூழந்தணுநாகைக்
காரோணத்தென்ஞான்றுங்காணலாமே. (அ)

சொல்லார்ந்தசோற்றுத்துறையான்றன்னைத்
தொன்னரகநன்னெறியாற்றார்ப்பான்* றன்னை
வில்லானைமீயச்சூர்மேவினானை
வேதியர்களுல்வர்க்கும்வேதஞ்சொல்லிப்
பொல்லாதார்தம்மரணமூன்றும்பொன்றப்
பொறியரவமார்பாரப்பூண்டான்றன்னைக்
கல்லாலின்கீழானைக்கழிசூழ்நாகைக்
காரோணத்தென்ஞான்றுங்காணலாமே. (கூ)

மனைதுறந்தவல்லமணர்தங்கள்பொய்யு
மாண்புரைக்குமனக்குண்டர்தங்கள்பொய்யும்
சினைபொதிந்தசீவரத்தர்தங்கள்பொய்யு
மெய்யென்றுகருதாதேபோதநெஞ்சே

* னெறியாத்தூர்ப்பான் என்றும் பாடம்.

Koviloor Digital Library

பணையுரியைத்* தன்னுடலிற்போர்த்தவெந்தை
யவன்பற்றேபற்றாகக்காணினல்லால்
கணைகடலின்றென்கழி† சூழ்தணாகைக்
காரோணத்தெஞ்ஞான்றுங்காணலாமே. (௧௦)

நெடியானுமலரவனு‡ நேடியாங்கே
நேருருவங்காணாமேசென்றுநின்ற
படியானைப்பாம்புரமேகாதலானைப்
பாம்பரையோடார்த்தபடிறன்றன்னைச்
செடிநாறும்வெண்டலையிற்பிச்சைக்கென்று
சென்றானைநின்றியூர்மேயான்றன்னைக்
கடிநாறும்பூஞ்சோலைபந்தணாகைக்
காரோணத்தெஞ்ஞான்றுங்காணலாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்தி நாயனார்.

பண் - கொல்லிக்கௌவாணம்.

திருச்சிற்றம்பலம்.

பத்தூர்புக்கிரந்துண்டுபலபதிகம்பாடிப்
பாவையரைக்கிறிபேசிப்படிறாடித்திரிவீர்
செத்தார்தம்மெலும்பணிந்துசேவேறித்திரிவீர்
செல்வத்தைமறைத்துவைத்தீரெனக்கொருநாளிரங்கீர்
முத்தாரமிலங்கிமிளிர்மணிவயிரக்கோவை
யவைபூணத்தந்தருளிமெய்க்கினிதாநாறும்
கத்தூரிகமழ்சாந்தும்பணித்தருளவேண்டும்
கடனாகைக்காரோணமேவியிருந்தீரே. (௧)

வேம்பினொடுதீங்கரும்புவிரவியெனைத்தீற்றி
விருத்திநானுமைவேண்டத்துருத்திபுக்கங்கிருந்தீர்
பாம்பினொடுபடர்சடைகளவைகாட்டிவெருட்டிப்
பகட்டநானொட்டுவனோபலகாலுமுழன்றேன் ¶
செம்பினொடுசெங்கழுநீர்தண்கிடங்கிற்றிகழுந்
திருவாரூர்புக்கிருந்ததீவண்ணர்நீரே
காம்பினொடுநேத்திரங்கள்பணித்தருளவேண்டுங்
கடனாகைக்காரோணமேவியிருந்தீரே. (௨)

பூண்பதோ§ ரிளவாமைபொருவிடையொன்றேறிப்
பொல்லாதவேடங்கொண்டெல்லாருங்காணப்
பாண்பேசிப்படுதலையிற்பலிகொள்கைதவிரீர்
பாம்பினொடுபடர்சடைமேன்மதிவைத்தபண்பீர்

* மணைபுரியைத் என்றும் பாடம். † கடலின்றெண்கழி என்றும், கடலின்றண் கழி என்றும் பாடம். ‡ மலரயனும் என்றும் பாடம். ¶ பலகாலமுழன்றேன் என்றும் பாடம். § பூண்டதோர் என்றும் பாடம்.

Koviloor Digital Library

வீண்பேசிமடவார்கைவெள்வளைகள் * கொண்டால்
வெற்பரையன்மடப்பாவைபொறுக்குமோசொல்லீர்
காண்பினியமணிமாடநிறைந்தநெடுவீதிக்
கடனாகைக்காரோணமேவியிருந்தீரே. (௩)

விட்டதோர்சடைதாழவீணைவிடங்காக
வீதிவிடையேறுவீர்வீணடிமையுகந்தீர் †
துட்டராயினபேய்கள்சூழநடமாடிச்
சுந்தரராய்த்தூமதியஞ்சூடுவதுசுவண்டே
வட்டவார்குழன்மடவார்தம்மைமயல்செய்தன்
மாதவமோமாதிமையோவாட்டமெலாந்தீரக்
கட்டியெமக்கீவதுதானெப்போதுசொல்லீர்
கடனாகைக்காரோணமேவியிருந்தீரே. (௪)

மிண்டாடித்திரிதந்துவெறுப்பனவேசெய்து
வினைக்கேடுபலபேசிவேண்டியவாதிரிவீர்
தொண்டாடித்திரிவேனைத்தொழும்புதலைக்கேற்றுஞ்
சுந்தரனேகந்தமுதலாடையாபரணம்
பண்டாரத்தேயெனக்குப்பணித்தருளவேண்டும்
பண்டுதான்பிரமாணமொன்றுண்டே ‡ நம்மைக்
கண்டார்க்குங்காண்பரிதாய்க்கனலாகிநிமிர்ந்தீர்
கடனாகைக்காரோணமேவியிருந்தீரே. (௫)

இலவவிதழ்வாயுமையோடெருதேறிப்பூத
மிசைபாடவிடுபிச்சைக்கெச்சுச்சம்போது
பலவகம்புக்குழிதர்வீர்பட்டோடுசாந்தம்
பணித்தருளாதிருக்கின்றபரிசென்னபடிறே
உலவுதிரைக்கடனஞ்சையன்றமரர்வேண்ட
வுண்டருளிச்செய்ததுமக்கிருக்கொண்ணாதிடவே
கலவமயிலியலவர்களடமாடுஞ்செல்வக்
கடனாகைக்காரோணமேவியிருந்தீரே. (௬)

தூசுடையவகலல்குற்றூமொழியாளூட
றொலையாதகாலத்தோர்சொற்பாடாய்வந்து
தேசுடையவிலங்கையர்கோன்வரையெடுக்கவடர்த்துத்
திப்பியகீதம்பாடத்தேரொடுவாள்கொடுத்தீர்
நேசமுடையடியவர்கள்வருந்தாமையருந்த
நிறைமறையோருறைவீழிமிழலைதனினித்தல்
காசருளிச்செய்தீரின்றெனக்கருளவேண்டுங்
கடனாகைக்காரோணமேவியிருந்தீரே. (௭)

மாற்றமேலொன்றுரையீர்வாளாநீரிருந்தீர்
வாழ்விப்பனெனவாண்டீர்வழியடியேனுமக்கு
ஆற்றவேற்றிருவுடையீர்நல்கூர்ந்தீரல்லீ
ரணியாரூர்புகப்பெய்தவருநெதியமதனில்

* மடவார்கள்வெள்வளைகள் என்றும் பாடம். † விண்ணடிமையுகந்தீர் என்றும் பாடம்.
‡ மொன்றுண்டோ என்றும் பாடம்.

Koviloor Digital Library

தோற்றமிகுமுக்கூற்றிலொருகூறுவேண்டுந்
தாரீரேலொருபொழுதுமடியெடுக்கலொட்டேன்
காற்றனையகடும்பரிமாவேறுவதுவேண்டுங்
கடனாகைக்காரோணமேவியிருந்தீரே. (அ)

மண்ணுலகும்விண்ணுலகுமும்மதேயாட்சி
மலைபரையன்பொற்பாவைசிறுவனையுந்தேறேன்
எண்ணிலியுண்பெருவயிறன் * கணபதியொன்றறியா
னெம்பெருமானிதுதகவோவியம்பியருள்செய்யீர்
திண்ணெனவென்னுடல்விருத்திதாரீரேயாகிற்
றிருமேனிவருந்தவேவலைக்கின்றேனைக்
கண்ணறையன்கொடும்பாடனென்றுரைக்கவேண்டா
கடனாகைக்காரோணமேவியிருந்தீரே. (கூ)

மறியேறுகரதலத்தீர்மாதிமையேலுடையீர்
மாநெதியந்தருவனென்றுவல்லீராயாண்டீர்
கிறிபேசிக்கீழ்வேளூர்புக்கிருந்தீரடிகேள்
கிறியும்மாற்படுவேனோதிருவாணையுண்டேல்
பொறிவிரவுநற்புகர்கொள்பொற்சுரிகைமேலோர்
பொற்பூவும்பட்டிகையும்புரிந்தருளவேண்டும்
கறிவிரவுநெய்சோறுமுப்போதும்வேண்டுங்
கடனாகைக்காரோணமேவியிருந்தீரே. (க0)

பண்மயத்தமொழிப்பாவைசங்கிலிக்குமெனக்கும்
பற்றாயபெருமானேமற்றாரையுடையேன்
உண்மயத்தவுமக்கடியேன்குறைதீர்க்கவேண்டு
மொளிமுத்தம்பூணாரமொண்பட்டும்பூவும்
கண்மயத்தகத்தூரிகமழ்சாந்தும்வேண்டுங்
கடனாகைக்காரோணமேவியிருந்தீரென்
றண்மயத்தாலணிநாவலாரூரன்சொன்ன
வருந்தமிழ்களிவைவல்லாரமருலகாள்பவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இது வெள்ளிப்பாடல்.

திருநாகைக்காரோணத்திருப்பதிகம் - எ.

ஆ திருப்பதிகம் - உகக.

சுவாமி தேவி திருநாமங்கள் - காயாரோகணேசர், நீலாயதாக்ஷியம்மை.

சுந்தரமூர்த்திநாயனார் திருவாரூரினின்றும் புறப்பட்டு, திருநாகைக்காரோணத்துக்குப் போய், சுவாமிதரிசனஞ்செய்து திருப்பதிகம்பாடி, பொன்னும் நவரத்தினங்களும் ஆபரணங்களும் வஸ்திரங்களும் குதிரைகளும் உடைவாளும் பிறவும் பெற்று, பிறதலங்களையும் வணங்கிக்கொண்டு, மீண்டு அத்திருவாரூரிற்சேர்ந்து எழுந்தருளியிருந்தார்.

* யுன்பெருவயிறன் என்றும் பாடம்.

Koviloor Digital Library

அரு. திருச்சிக்கல்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

வானுலாவும்மதிவந்துலாவும்* மதின்மாளிகை
தேனுலாவும்மலர்ச்சோலைமல்குந்திகழ்சிக்கலுள்
வேனல்வேளைவிழித்திட்டவெண்ணெய்ப்பெருமானடி
ஞானமாகந்நினைவார்வினையாயினநையுமே. (க)

மடங்கொள்வாளைகுதிகொள்ளுமணமலர்ப்பொய்கைசூழ்
திடங்கொண்மாமறையோரவர்மல்கியசிக்கலுள்
விடங்கொள்கண்டத்துவெண்ணெய்ப்பெருமானடிமேவியே
அடைந்துவாழும்மடியாரவரல்லலறுப்பரே. (உ)

நீலநெய்தன்னிலவிம்மலருஞ்சுனைநீடிய
சேலுமாலுங்கழனிவ்வளமல்கியசிக்கலுள்
வேலவொண்கண்ணியினாளையொர்பாகன்வெண்ணெய்ப்பிரான்
பாலவண்ணன்கழலேத்தநம்பாவம்பறையுமே. (ந)

கந்தமுந்தக்கைதைபூத்துக்கமழ்ந்துசேரும்பொழிற்
செந்துவண்டின்னிசைபாடன்மல்குந்திகழ்சிக்கலுள்
வெந்தவெண்ணீற்றண்ணல்வெண்ணெய்ப்பிரான்விரையார்கழல்
சிந்தைசெய்வார்வினையாயினதேய்வதுதிண்ணமே. (ச)

மங்குறங்கும்மறையோர்கண்மாடத்தயலேமிகு
தெங்குதுங்கப்பொழில்செல்வ† மல்குந்திகழ்சிக்கலுள்
வெங்கண்வெள்ளேறுடைவெண்ணெய்ப்பிரானடிமேவவே
தங்குமேன்மைசரதந்‡ திருநாளுந்தகையுமே. (ரு)

வண்டிரைத்தும்மதுவிம்மியமாமலர்ப்பொய்கைசூழ்
தெண்டிரைக்கொள்புனல்வந்தொழுகும்வயற்சிக்கலுள்
விண்டிரைத்தம்மலராற்றிகழ்வெண்ணெய்ப்பெருமானடி
கண்டிரைத்தும்மனமேமதியாய்கதியாகவே. (சு)

முன்னுமாடம்மதின்மூன்றுடனேயெரியாய்விழத்
துன்னுவார்வெங்கணையொன்றுசெலுத்தியசோதியான்
செந்நெலாரும்வயற்சிக்கல்வெண்ணெய்ப்பெருமானடி
உன்னிநீடம்மனமேநினையாய்வினையோயவே. (எ)

* துலவும் என்றும் பாடம். † பொழிற்செல்வம் என்றும் பாடம். ‡ மேற்சரதம் என்றும் பாடம்.

Koviloor Digital Library

தெற்றலாகியதென்னிலங்கைக்கிறைவன்மலை
பற்றினான்முடிபத்தொடுதோள்கணெரியவே
செற்றதேவனஞ்சிக்கல்வெண்ணெய்ப்பெருமானடி
உற்றுநீநினையாய்வினையாயினவோயவே. (அ)

மாலினோடருமாமறைவல்லமுனிவனும்
கோலினார்குறுகச்சிவன்சேவடிகோலியும்
சிலந்தாமறியார்திகழ்சிக்கல்வெண்ணெய்ப்பிரான்
பாலும்பன்மலர்தூவப்பறையுநம்பாவமே. (கூ)

பட்டைநற்றுவராடையினாரொடும்பாங்கிலாக்
கட்டமண்கழுக்கள்சொல்லினைக்கருதாதுநீர்
சிட்டன்சிக்கல்வெண்ணெய்ப்பெருமான்செழுமாமறைப்
பட்டன்சேவடியேபணிமின்பிணிபோகவே. (க0)

கந்தமார்பொழிற்காழியுண்ஞானசம்பந்தனல்
செந்தண்பூம்பொழிற்சிக்கல்* வெண்ணெய்ப்பெருமானடிச்
சந்தமாச்சொன்னசெந்தமிழ்வல்லவர்வானிடை
வெந்தநீறணியும்பெருமானடிமேவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருச்சிக்கற்றிருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - உசஉ.

சுவாமி தேவி திருநாமங்கள் - நவநீதநாதர், வேனெடுங்கண்ணியம்மை.

அச. திருக்கீழ்வேளூர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

மின்னுலாவியசடையினர்விடையினர்மிளிர்தருமரவோடும்
பன்னுலாவியமறைபொலிநாவினர்கறையணிகண்டத்தர்
பொன்னுலாவியகொன்றையந்தாரினர்புகழ்மிகுகீழ்வேளூர்
உன்னுலாவியசிந்தையர்மேல்வினையோடிடவீடாமே. (க)

நீருலாவியசடையிடையரவொடுமதிசிரநிரைமாலை
வாருலாவியவனமுலையவளொடுமணிசிலம்பவையார்க்க
ஏருலாவியவிறைவனதுறைவிடமெழில்திகழ்கீழ்வேளூர்
சீருலாவியசிந்தைசெய்தவர்பிணிபோய்விடும்வினைபோமே. (உ)

* பூம்புனற்சிக்கல் என்றும் பாடம்.

Koviloor Digital Library

வெண்ணிலாமிகுவிரிசடையரவொடுவெள்ளெருக்கலர்மத்தம்
பண்ணிலாவியபாடலோடாடலர்பயில்வுறுகீழ்வேளூர்ப்
பெண்ணிலாவியபாகனைப்பெருந்திருக்கோயிலெம்பெருமானை
உண்ணிலாவிநின்றுள்கியசிந்தையாருலகினி * லுள்ளாரே. (௩)

சேடுலாவியகங்கையைச்சடையிடைத்தொங்கவைத்தழகாக
நாடுலாவியபலிகொளுநாதனூர்நலமிகுகீழ்வேளூர்ப்
பீடுலாவியபெருமையர்பெருந்திருக்கோயிலுட்பிரியாது
நீடுலாவியநிமலனைப்பணிபவர்நிலைமிகப்பெறுவாரே. (௪)

தூன்றுவார்சடைச்சுடர்மதிநகுதலைவடமணிசிரமாலை
மின்றுலாவியமாதவரினிதியன்மணமிகு † கீழ்வேளூர்
நின்றுநீடியபெருந்திருக்கோயிலினிமலனைநினைவோடும்
சென்றுலாவிநின்றேத்தவல்லார்வினைதேய்வதுதிணமாமே. (௫)

கொத்துலாவியகுழறிகழ்சடையனைக்கூத்தனைமகிழ்ந்துள்கித்
தொத்துலாவியநூலணிமார்பினர்தொழுதெழுகீழ்வேளூர்ப்
பித்துலாவியபத்தர்கள்பேணியபெருந்திருக்கோயின்மன்னு
முத்துலாவியவித்தினையேத்துமின்முடுகியவிடர்போமே. (௬)

பிறைநிலாவியசடையிடைப்பின்னலும்வன்னியுந்துன்னரும்
கறைநிலாவியகண்டரெண்டோளினர்காதல்செய்கீழ்வேளூர்
மறைநிலாவிய ‡ வந்தணர்மலிதருபெருந்திருக்கோயின்மன்னு
நிறைநிலாவிய ‡ வீசனைநேசத்தானினைபவர்வினைபோமே. (௭)

மலைநிலாவியமைந்தனம்மலையினையெடுத்தலுமரக்கன்றன்
தலையெலாநெரிந்தலறிடவூன்றினானுறைதருகீழ்வேளூர்க்
கலைநிலாவியநாவினர்காதல்செய்பெருந்திருக்கோயிலுள்
நிலைநிலாவியவீசனைநேசத்தானினையவல்வினைபோமே. (௮)

மஞ்சுலாவியகடற்கிடந்தவனொடுமலரவன்காண்பொண்ணாப்
பஞ்சுலாவியமெல்லடிப்பார்ப்பதிபாகனைப்பரிவோடும்
செஞ்சொலார்பலர்பரவியதொல்புகழ்மல்கியகீழ்வேளூர்
நஞ்சுலாவியகண்டனைநணுகுமின்னடலைகணணுகாவே. (௯)

சீறுலாவியதலையினர்நிலையிலாவமணர்கள்சிவரார் ¶
வீறிலாதவெஞ்சொற்பலவிரும்பன்மின்சுரும்பமர்கீழ்வேளூர்
ஏறுலாவியகொடியனையேதமில்பெருந்திருக்கோயின்மன்னு
பேறுலாவியபெருமையன்றிருவடிபேணுமின்றவமாமே. (௧௰)

குருண்டவார்குழற்சடையுடைக்குழகனையழகமர்கீழ்வேளூர்த்
திரண்டமாமறையவர்தொழும்பெருந்திருக்கோயிலெம்பெருமானை
இருண்டமேதியினினமிகுவயன்மல்குபுகலிமன்சம்பந்தன்
தெருண்டபாடல்வல்லாரவர்சிவகதிபெறுவதுதிடமாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

* உலகு - வீட்டுலகு. † மணிமிகு என்றும் பாடம். ‡‡ மறைபுலாவிய நிறையுலாவிய என்றும் பாடம். ¶ சிவரத்தார் என்றும் பாடம்

திருநாவுக்கரசுநாயனார்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

ஆளானவடியவர்கட்கன்பன்றன்னை
யானஞ்சுமாடியைநானபயம்புக்க
தாளானைத்தன்னொப்பாரில்லாதானைச்
சந்தனமுங்குங்குமமுஞ்சாந்துந்தோய்ந்த
தோளானைத்தோளாதமுத்தொப்பானைத்
தூவெளுத்தகோவணத்தையரையிலார்த்த
கீளானைக்கீழ்வேளூராளுங்கோவைக்
கேடிலியைநாடுமவர்கேடிலாரே. (௧)

சொற்பாவும்* பொருடெரிந்துதூய்மைநோக்கித்
தூங்காதார்மனத்திருளைவாங்காதானை
நற்பான்மையறியாதநாயினேனை
நன்னெறிக்கேசெலும்வண்ணநல்கினானைப்
பற்பாவும்† வாயாரப்பாடியாடிப்
பணிந்தெழுந்துகுறைந்தடைந்தார்பாவம்போக்க
கிற்பானைக்கீழ்வேளூராளுங்கோவைக்
கேடிலியைநாடுமவர்கேடிலாரே. (௨)

அளைவாயிலரவசைத்தவழகன்றன்னை
யாதரிக்குமடியவர்கட்கன்பேயென்றும்
விளைவானைமெய்ஞ்ஞானப்பொருளானானை
வித்தகனையெத்தனையும்பத்தர்பத்திக்
குளைவானையல்லாதார்க்குளையாதானை
யுலப்பிலியையுள்புக்கென்மனத்துமாசு‡
கிளைவானைக்கீழ்வேளூராளுங்கோவைக்
கேடிலியைநாடுமவர்கேடிலாரே. (௩)

தாட்பாவுகமலமலர்த்தயங்குவானைத்
தலைபறுத்துமாவிரதந்தரித்தான்றன்னைக்¶
கோட்பாவுநாளெல்லாமானான்றன்னைக்
கொடுவினையேன்கொடுநரகக்குழியினின்றால்
மீட்பானைவித்துருவின்கொத்தொப்பானை
வேதியனைவேதத்தின்பொருள்கொள்வீணை
கேட்பானைக்கீழ்வேளூராளுங்கோவைக்
கேடிலியைநாடுமவர்கேடிலாரே. (௪)

* சொற்பாவு என்றும் பாடம். † பற்பாவு என்றும் பாடம். ‡ மனப்பசாசு என்றும், மனப்பிசாசு என்றும் பாடம். ¶ தலைபறுத்துமாவிரதந்தவிர்த்தான்றன்னை என்றும், தலையறுத்துமாவிரதந்தரித்தான்றன்னை என்றும் பாடம்.

Koviloor Digital Library

நல்லானைநரைவிடையொன்றூர்தியானை
நால்வேதத்தாறங்கநூறுகமாட்டாச்
சொல்லானைச்சுடர்மூன்றுமானான்றன்னைத்
தொண்டாகிப்பணிவார்கட்கினியான்றன்னை *
வில்லானைமெல்லியலோர்பங்கன்றன்னை
மெய்பாய்நினையாதார்வினைகடீர்க்க
கில்லானைக்கீழ்வேளூராளுங்கோவைக்
கேடிலியைநாடுமவர்கேடிலாரே. (௫)

சுழித்தானைக்கங்கைமலர்வன்னிகொன்றை
தூமத்தம்வாளரவஞ்சூடினானை
அழித்தானையரணங்கண்மூன்றும்வேவ
வாலாலநஞ்சதனையுண்டான்றன்னை
விழித்தானைக்காமனுடல்பொடியாய்வீழ
மெல்லியலோர்பங்கனைமுன்வேனலானை †
கிழித்தானைக்கீழ்வேளூராளுங்கோவைக்
கேடிலியைநாடுமவர்கேடிலாரே. (௬)

உளரொளியையுள்ளத்தினுள்ளேநின்ற
வோங்காரத்துட்பொருடானாயினானை ‡
விளரொளியைவிடுசுடர்களிரண்டுமொன்றும்
விண்ணொடுமண்ணாகாசமாயினானை
வளரொளியைமாகதத்தினுருவினானை
வானவர்களெப்பொழுதும்வாழ்த்தியேத்தும்
கிளரொளியைக்கீழ்வேளூராளுங்கோவைக்
கேடிலியைநாடுமவர்கேடிலாரே. (௭)

தடுத்தானைக்காலனைக்காலாற்பொன்றத்
தன்னடைந்தமாணிக்கன்றருள்செய்தானை
உடுத்தானைப்புலியதளோடக்கும்பாம்பு
முள்குவாருள்ளத்தினுள்ளான்றன்னை
மடுத்தானையருநஞ்சமிடற்றுட்டங்க
வானவர்கள்கூடியவத்தக்கன்வேள்வி
கெடுத்தானைக்கீழ்வேளூராளுங்கோவைக்
கேடிலியைநாடுமவர்கேடிலாரே. (௮)

மாண்டாரெலும்பணிந்தவாழ்க்கையானை ¶
மயானத்திற்கூத்தனைவாளரவோடென்பு
பூண்டானைப்புறங்காட்டிலாடலானைப் §
போகாதென்னுள்புகுந்திடங்கொண்டென்னை
ஆண்டானையறிவரியசிந்தையானை
யசங்கையனையமரர்கடஞ்சங்கையெல்லாம்
கீண்டானைக்கீழ்வேளூராளுங்கோவைக்
கேடிலியைநாடுமவர்கேடிலாரே. (௯)

* கட்கணியான்றன்னை என்றும் பாடம். † வேனிலானை என்றும் பாடம். ‡ ஓங்காரத்துறுபொருடானாயினானை என்றும், ஓங்காரத்துட்பொருளதாயினானை என்றும் பாடம். ¶ வாட்கையானை என்றும் பாடம்; "எழிசை-வாட்கையர்" என்றார் பிறரும்; வாழ் கை வாட்கை எனப் புணர்தற்கு விதி வீரசோழியம் சந்திப்படலம் உஉ-ம் கலித்துறையிற் காண்க. § காட்டிலாடினானை என்றும் பாடம்.

முறிப்பானைப்பேசிமலையெடுத்தான்றோளு
முதுகிறமுன்கைந்நரம்பையெடுத்துப்பாடப்
பறிப்பான்கைச்சிற்றறிவானிட்டினானைப்*
பாவியேனெஞ்சகத்தேபாதப்போது
பொறித்தானைப்புரமூன்றுமெரிசெய்தானைப்
பொய்யர்களைப்பொய்செய்துபோதுபோக்கிக்
கிறிப்பானைக்கீழ்வேளூராளுங்கோவைக்
கேடிலியைநாடுமவர்கேடிலாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருக்கீழ்வேளூர்த்திருப்பதிகம் - ௨.

ஆ திருப்பதிகம் - ௨௧௪.

சுவாமி தேவி திருநாமங்கள் - அக்ஷயநாதர், வனமுலைநாயகி.

௮௫. திருத்தேவூர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பண்ணிலாவியமொழியுமைபங்கனெம்பெருமான்
விண்ணில்வானவர்கோன்விமலன்விடையூர்தி
தெண்ணிலாமதிதவழ்தருமாளிகைத்தேவூர்
அண்ணல்சேவடியடைந்தனமல்லலொன்றிலமே. (௧)

ஓதிமண்டலத்தோர்முழுதுய்யவெற்பேறு
சோதிவானவன்றுதிசெயமகிழ்ந்தவன்றானிர்த்
தீதில்பங்கயந்தெரிவையர்முகமலர்தேவூர்
ஆதிசேவடியடைந்தனமல்லலொன்றிலமே. (௨)

மறைகளான்மிகவழிபடுமாணியைக்கொல்வான்
கறுவுகொண்டவக்காலனைக்காய்ந்தவெங்கடவுள்
செறுவில்வாளைகள்சேலவைபொருவயற்றேவூர்
அறவன்சேவடியடைந்தனமல்லலொன்றிலமே. (௩)

முத்தன்சில்பலிக்கூர்தொறுமுறைமுறைதிரியும்
பித்தன்செஞ்சடைப்பிஞ்ஞகன்றன்னடியார்கள்
சித்தன்மாளிகைசெழுமதிதவழ்பொழிற்றேவூர்
அத்தன்சேவடியடைந்தனமல்லலொன்றிலமே. (௪)

* வாளிட்டினானை என்றும் பாடம்.

Koviloor Digital Library

பாடுவாரிசைபல்பொருட்பயனுகந்தன்பால்*
கூடுவார்துணைக்கொண்டதம்பற்றறப்பற்றித்
தேடுவார்பொருளானவன்செறிபொழிற்றேவூர்
ஆடுவானடியடைந்தனமல்லலொன்றிலமே. (௫)

பொங்குபூண்முலைப்புரிகுழல்வரிவளைப்பொருப்பின் †
மங்கைபங்கினன்கங்கையை ‡ வளர்சடைவைத்தான்
திங்கள்சூடியதீநிறக்கடவுடென்றேவூர்
அங்கணன்றனையடைந்தனமல்லலொன்றிலமே. (௬)

வன்புயத்தவத்தானவர்புரங்களையெரியத்
தன்புயத்துறத்தடவரைவளைத்தவன்றக்க
தென்றமிழ்க்கலைதெரிந்தவர்பொருந்தியதேவூர்
அன்பன்சேவடியடைந்தனமல்லலொன்றிலமே. (௭)

தருவுயர்ந்தவெற்பெடுத்தவத்தசமுகனெரிந்து
வெருவவூன்றியதிருவிரனெகிழ்த்துவாள்பணித்தான்
தெருவுதோறுநற்றென்றல்வந்துலவியதேவூர்
அரவுசூடியையடைந்தனமல்லலொன்றிலமே. (௮)

முந்திக்கண்ணனுநான்முகனும்மவர்காணா
எந்தைதிண்டிறலிருங்களிறுரித்தவெம்பெருமான்
செந்தினத்திசையறுபதமுரறிருத்தேவூர்
அந்திவண்ணனையடைந்தனமல்லலொன்றிலமே. (௯)

பாறுபுத்தருந்தவமணிசமணரும்பலநாள்
கூறிவைத்ததோர்குறியினைப்பிழையெனக்கொண்டு
தேறிமிக்கநஞ்செஞ்சடைக்கடவுடென்றேவூர்
ஆறுசூடியையடைந்தனமல்லலொன்றிலமே. (௧௦)

அல்லலின்றிவிண்ணுள்வர்கள்காழியர்க்கதிபன்
நல்லசெந்தமிழ்வல்லவன்ஞானசம்பந்தன்
எல்லையில்புகழ்மல்கியவெழில்வளர்தேவூர்த்
தொல்லைநம்பனைச்சொல்லியபத்தும்வல்லாரே. ¶ (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவிராகம். பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

காடுபயில்வீடுமுடையோடுகலன்மூடுமுடையாடைபுலிதோல்
தேடுபலியூணதுடைவேடமிகுவேதியர்திருந்துபதிதான்
நாடகமதாடமஞ்ஞைபாடவரிகோடல்கைமறிப்பநலமார்
சேடுமிகுபேடையனமூடிமகிழ்மாடமிடைதேவூரதுவே. (௧)

* பயனகத்தன்பால் என்றும், பயனகந்தன்பால் என்றும் பாடம். † பொருப்பன் என்றும் பாடம். ‡பங்கன்றண்கங்கையை என்றும் பாடம். ¶வல்லோரே என்றும் பாடம்.

Koviloor Digital Library

கோளரவுகொன்றைநகுவெண்டலைபெருக்குவனிகொக்கிறகொடும்
வாளரவுதண்சலமகட்குலவுசெஞ்சடைவரத்திறைவனூர்
வேளரவுகொங்கையிளமங்கையர்கள்குங்குமம்விரைக்குமணமார்
தேளரவுதென்றறெருவெங்குநிறைவொன்றிவருதேவூரதுவே. (௨)

பண்டடவுசொல்லின்மலைவல்லியுமைபங்கனெமையாளுமிறைவன்
எண்டடவுவானவரிறைஞ்சுகழலோனினிதிருந்தவிடமாம்
விண்டடவு* வார்பொழிலுகுத்தநறவாடிமலர்சூடிவிரையார்
செண் † டடவுமாளிகைசெறிந்ததிருவொன்றிவளர்தேவூரதுவே. (௩)

மாசின்மனநேசர்தமதாசைவளர்சூலதரன்மேலையிமையோர்
ஈசன்மறையோதியெரியாடிமிகுபாசுபதன்மேவுபதிதான்
வாசமலர்கோதுகுயில்வாசகமுமாதரவர்பூவைமொழியும்
தேசவொலிவீணையொடுகீதமதுவீதிநிறைதேவூரதுவே. (௪)

கானமுறுமான்மறியனானையுரிபோர்வைகனலாடல்புரிவோன்
ஏனவெயிறாமையிளநாகம்வளர்மார்பினிமையோர்தலைவனூர்
வானணவுசூதமிளவாழை ‡ மகிழ்மாதவிபலாநிலவிவார்
தேனமுதுவுண்டுவரிவண்டுமருள்பாடிவருதேவூரதுவே. (௫)

ஆறினொடுகீறுமதியேறுசடையேறனுடையார்நகர்கடான்
சீறுமவைவேறுபடநீறுசெய்தநீறனமையாளுமரனூர்
வீறுமலருறுமதுவேறிவளர்வாயவிளைகின்றகழனிச்
சேறுபடுசெங்கயல்விளிப்பயிளவாளைவருதேவூரதுவே. (௬)

கன்றியெழுவென்றிநிகழ்துன்றுபுரமன்றவியநின்றுநகைசெய்
என்றனதுசென்றுநிலையெந்தைதனதந்தையமரின்பநகர்தான்
முன்றின்மிசைநின்றபலவின்கனிசடின்றுகறவைக்குருளைகள்
சென்றிசையநின்றுதுளிபொன்றவிளையாடிவளர்தேவூரதுவே. (௭)

ஓதமலிகின்றதெனிலங்கையரையன்மலிபுயங்கணெரியப்
பாதமலிகின்றவிரலொன்றினிலடர்த்தபரமன்றனதிடம்
போதமலிகின்றமடவார்கணடமாடலொடுபொங்குமுரவம்
சேதமலிகின்றகரம்வென்றிதொழிலாளர்புரிதேவூரதுவே. (௮)

வண்ணமுகிலன்னவெழிலண்ணலொடுசுண்ணமலிவண்ணமலர்மேல்
நண்ணவனுமெண்ணரியவிண்ணவர்கள்கண்ணவனலங்கொள்பதிதான்
வண்ணவனநுண்ணிடையினெண்ணரியவன்னநடையின்மொழியினார்
திண்ணவணமாளிகைசெறிந்தவிசையாழ்மருவுதேவூரதுவே. (௯)

பொச்சமமர்பிச்சைபயிலச்சமணுமெச்சமறுபோதியருமா
மொச்சைபயிலிச்சைகடிபிச்சன்மிகுநச்சரவன்மொச்சநகர்தான்
மைச்சின்முகில்வைச்சபொழில். ¶ * * * * * * * * * (௧௦)
* * * * * * * * * * * * * * * * * *

* வண்டடவு என்றும் பாடம். † சேண் செண் எனக் குறுகிற்று. ‡ சூதமினவாழை என்றும் பாடம். ¶ ௧௦-வது திருப்பாட்டில் மற்றைய அடிகள்மறைந்துபோயின.

Koviloor Digital Library

துங்கமிகுபொங்கரவுதங்குசடைநங்களிறைதுன்றுகுழலார்
செங்கயல்கண்மங்கையுமைநங்கையொருபங்கனமர்தேவூர்தன்மேல்
பைங்கமலமங்கணிகொடின்புகலிஞானசம்பந்தனுரைசெய்
சங்கமலிசெந்தமிழ்கள்பத்துமிவைவல்லவர்கள்சங்கையிலரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருத்தேவூர்த்திருப்பதிகம் - உ.

ஆ திருப்பதிகம் - உகக.

சுவாமி தேவி திருநாமங்கள் - தேவகுருநாதர், மதுரபாஷணியம்மை.

அசூ. திருப்பள்ளியின்முக்கூடல். *

திருநாவுக்கரசுநாயனார்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

ஆராதவின்னமுதையம்மான்றன்னை
யயனொடுமாலறியாதவாதியானைத்
தாராருமலர்க்கொன்றைச்சடையான்றன்னைச்
சங்கரனைத்தன்னொப்பாரில்லாதானை
நீரானைக்காற்றானைத்தீயானானை
நீள்விசும்பாயாழ்கடல்களேழுஞ்சூழ்ந்த
பாரானைப்பள்ளியின்முக்கூடலானைப்
பயிலாதேபாழேநாளுழன்றவாறே. (க)

விடையானைவிண்ணவர்களெண்ணத்தானை
வேதியனைவெண்டிங்கள்சூடுஞ்சென்னிச்
சடையானைச்சாமம் † போற்கண்டத்தானைத்
தத்துவனைத்தன்னொப்பாரில்லாதானை
அடையாதார்மும்மதிலுந்தீயின்மூழ்க
வடுகணைகோத்தெய்தானையயில்கொள்சூலப்
படையானைப்பள்ளியின்முக்கூடலானைப்
பயிலாதேபாழேநாளுழன்றவாறே. (உ)

பூதியனைப்பொன்வரையேபோல்வான்றன்னைப்
புரிசடைமேற்புனல்கரந்தபுனிதன்றன்னை
வேதியனைவெண்காடுமேயான்றன்னை
வெள்ளேற்றின்மேலானைவிண்ணோர்க்கெல்லாம்

* இதனை அரிக்கரியான்பள்ளி என்றும் வழங்குப. † சாமம் - இரா; கருமையெனவும் வேதமெனவும் கொள்ளின் போல் ஒப்பில்போலி.

Koviloor Digital Library

ஆதியனையாதிரைநன்னாளான்றன்னை
யம்மானைமைம்மேவுகண்ணியாளோர்
பாதியனைப்பள்ளியின்முக்கூடலானைப்
பயிலாதேபாழேநாளுழன்றவாறே. (௩)

போர்த்தானையானையின்றோல்புரங்கண்மூன்றும்
பொடியாகவெய்தானைப்* புனிதன்றன்னை
வார்த்தாங்குவனமுலையாள்பாகன்றன்னை
மறிகடலுணஞ்சுண்டுவானோரச்சம்
தீர்த்தானைத்தென்றிசைக்கேகாமன்செல்லச்
சிறிதளவிலவனுடலம்பொடியாவங்கே †
பார்த்தானைப்பள்ளியின்முக்கூடலானைப்
பயிலாதேபாழேநாளுழன்றவாறே. (௪)

அடைந்தார்தம்பாவங்களல்லனோய்க
ளருவினைகணல்குரவுசெல்லாவண்ணம்
கடிந்தானைக்கார்முகில்போற்கண்டத்தானைக்
கடுஞ்சினத்தோன்றன்னுடலைநேமியாலே
தடிந்தானைத்தன்னொப்பாரில்லாதானைத்
தத்துவனையுத்தமனைநினைவார்நெஞ்சில்
படிந்தானைப்பள்ளியின்முக்கூடலானைப்
பயிலாதேபாழேநாளுழன்றவாறே. (௫)

கரந்தானைச்செஞ்சடைமேற்கங்கைவெள்ளங்
கனலாடுதிருமேனிக்கமலத்தோன்றன்
சிரந்தாங்குகையானைத்தேவதேவைத்
திகழொளியைத்தன்னடியேபேசிந்தைசெய்வார்
வருந்தாமைக்காப்பானைமண்ணாய்விண்ணாய்
மறிகடலாய்மால்விசும்பாய்மற்றுமாகிப்
பரந்தானைப்பள்ளியின்முக்கூடலானைப்
பயிலாதேபாழேநாளுழன்றவாறே. (௬)

நதியாருஞ்சடையானைநல்லூரானை
நள்ளாற்றின்மேயானைநல்லத்தானை
மதுவாரும் ‡ பொழில்புடைசூழ்வாய்மூரானை
மறைக்காடுமேயானையாக்கூரானை
நெதியாளன்றோழனைநிரானை
நெய்த்தானமேயானையாரூரென்றும்
பதியானைப்பள்ளியின்முக்கூடலானைப்
பயிலாதேபாழேநாளுழன்றவாறே. (௭)

* பொடியாகச்செய்தானை என்றும் பாடம். † பொடியாவாங்கே என்றும் பாடம்.
‡ மதிலாரும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

நற்றவனைநான்மறைகளாயினானை
நல்லானைநணுகாதார்புரங்கண்மூன்றும்
செற்றவனைச்செஞ்சடைமேற்றிங்கள்சூடுந்
திருவாரூர்த்திருமூலட்டானமேய *
கொற்றவனைக்கூரரவம் † பூண்டான்றன்னைக்
குறைந்தடைந்துதன்றிறமேகொண்டார்க்கென்றும்
பற்றவனைப்பள்ளியின்முக்கூடலானைப்
பயிலாதேபாழேநாளுழன்றவாறே. (௮)

ஊனவனையுடலவனையுயிரானானை
யுலகேழுமானானை ‡ யும்பர்கோவை
வானவனைமதிசூடும்வளவியானை
மலைமகண்முன்வராகத்தின்பின்பேசென்ற
கானவனைக்கயிலாயமலையுளானைக்
கலந்துருகிநைவார் ¶ தந்நெஞ்சினுள்ளே
பானவனைப்பள்ளியின்முக்கூடலானைப்
பயிலாதேபாழேநாளுழன்றவாறே. (௯)

தடுத்தானைத்தான்முனிந்துதன்றோள்கொட்டித்
தடவரையையிருபதுதோடலையினாலும்
எடுத்தானைத்தாள்விரலான்மாளவூன்றி
யெழுநரம்பினிசைபாடலினிதுகேட்டுக்
கொடுத்தானைப்பேரோடுங்கூர்வாடன்னைக்
குறைகழலாற்கூற்றுவனைமாளவன்று
படுத்தானைப்பள்ளியின்முக்கூடலானைப்
பயிலாதேபாழேநாளுழன்றவாறே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருப்பள்ளியின்முக்கூடற்றிருப்பதிகம் - ௧.

ஆ திருப்பதிகம் - ௨௧௭.

சுவாமி தேவி திருநாமங்கள் - முக்கோணநாதர், மைமேவுங்கண்ணி.

* மூலத்தானமேய என்றும் பாடம். † கூரரவம் - சீந்தரவம்; சீந்தல் - கோபித்தல்; கூர்தல் - மிகுதல்; ஈண்டுக் கோபக்குறிப்புணர்த்திற்று; "எரிமுச்சிப்பொறிவிழிவெண் பற்குறளன்-சீந்தரவத்துடனரவந்திகழவா" என்றார் பிறரும். ‡ ஊனாகியூனுளுயிராயுயிர்தோறுமாகி-வானாகியானபொருளாய்மதியாகிவெய்யோன்-றானாகியாண்பெண்ணுருவாகிச்சராசரங்க-ளானான்சிவன்" என்பதுமது. ¶ கலந்துருகிநினைவார் என்றும் பாடம்.

Koviloor Digital Library

அஎ. திருவாரூர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

திருவிருக்குக்குறள். பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

சித்தந்தெளிவீர்காள்
அத்தனாரூரைப்
பத்திமலர்தூவ
முத்தியாகுமே. (க)

பிறவியறுப்பீர்காள்
அறவனாரூரை
மறவாதேத்துமின்
துறவியாகுமே. (உ)

துன்பந்துடைப்பீர்காள்
அன்பனணியாரூர்
நன்பொன்மலர்தூவ
இன்பமாகுமே. (ங)

உய்யலுறுவீர்காள்
ஐயனாரூரைக்
கையினற்றொழ
நையும்வினைதானே. (ச)

பிண்டமறுப்பீர்காள்
அண்டனாரூரைக்
கண்டுமலர்தூவ
விண்டுவினைபோமே. (ரு)

பாசமறுப்பீர்காள்
ஈசனணியாரூர்
வாசமலர்தூவ
நேசமாகுமே. (சு)

வெய்யவினைதீர
ஐயனணியாரூர்
செய்யமலர்தூவ
வையமுமதாமே. (எ)

அரக்கனாண்மையை
நெருக்கினாரூர்
கரத்தினாற்றொழத்
திருத்தமாகுமே. (அ)

துள்ளுமிருவர்க்கும்
வள்ளலாரூரை
உள்ளுமவர்தம்மேல்
விள்ளும்வினைதானே. (கூ)

கடுக்கொள்சீவரை
அடக்கினாரூர்
எடுத்துவாழ்த்துவார்
விடுப்பர்வேட்கையே. (க0)

சீரூர்சம்பந்தன்
ஆரூரைச்சொன்ன
பாரூர்பாடலார்
பேராரின்பமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

பாடலனான்மறைபன்படிபட்டகோலத்தன் றிங்கள்
சூடலன்மூவிலைச்சூலம்வலனேந்திக்
கூடலர்மூவெயிலும்மெரியுண்ணக்கூரெரிகொண் டெல்லி
ஆடலனாதிரையனாரமர்ந்தானே. (க)

Koviloor Digital Library

சோலையில்வண்டினங்கள்சுரும்போடிசைமுரலச் சூழ்ந்த
ஆலையின்வெம்புகைபோய்முகில்தோயுமாரூரில்
பாலொடுநெய்தயிரும்பயின்றாடும்பரமேட்டி பாதம்
காலையுமாலையும்போய்ப்பணிதல்கருமமே. (௨)

உள்ளமோரிச்சையினாலுகந்தேத்தித்தொழுமின்றொண்டீர் மெய்யே
கள்ளமொழிந்திடுமின்கரவா திருபொழுதும்
வெள்ளமோர்வார்சடைமேற்கரந்திட்டவெள்ளேற்றான் மேய
அள்ளலகன்கழனியாரூரடைவோமே. (௩)

வெந்தநீறுவெண்மழுவாட்படையான்மணிமிடற்றா னரையின்
ஐந்தலையாடரவமசைத்தானணியாரூர்ப்
பைந்தளிர்க்கொன்றையந்தார்ப்பரமனடிபரவப் பாவம்
நைந்தறும்வந்தணையுநாடொறுநல்லனவே. (௪)

வீடுபிறப்பெளிதாமதனைவினவுதிரேல் வெய்ய
காடிடமாகநின்றுகனலேந்திக்கைவீசி
ஆடுமவிர்சடையானவன்மேயவாரூரைச் சென்று
பாடுதல்கைதொழுதல்பணிதல்கருமமே. (௫)

கங்கையோர்வார்சடைமேற்கரந்தான்கிளிமழலைக் கேடில்
மங்கையோர்கூறுடையான்மறையான்மழுவேந்தும்
அங்கையினானடியேபரவியவன்மேய வாரூர்
தங்கையினாற்றொழுவார்தடுமாற்றறுப்பாரே: (௬)

நீறணிமேனியனாய்நிரம்பாமதிசூடி நீண்ட
ஆறணிவார்சடையானாரூரினிதமர்ந்தான்
சேறணிமாமலர்மேற்பிரமன்சிரமரிந்த செங்கண்
ஏறணிவெல்கொடியானவனெம்பெருமானே. (௭)

வல்லியந்தோலுடையான்வளர்திங்கட்கண்ணியினான் வாய்த்த
நல்லியனான்முகத்தோன்றலையினறவேற்றான்
அல்லியங்கோதைதன்னையாகத்தமர்ந்தருளி யாரூர்ப்
புல்லியபுண்ணியனைத்தொழுவாரும்புண்ணியரே. (௯)

செந்துவராடையினாருடைவிட்டுநின்றுழல்வார் சொன்ன
இந்திரஞாலமொழிந்தின்புறவேண்டுதிரேல்
அந்தரமூவெயிலும்மரணம்மெரியூட்டி யாரூர்த்
தந்திரமாவுடையானவனெந்தலைமையனே. (௧௦)

நல்லபுனற்புகலித்தமிழ்ஞானசம்பந்த னல்ல
அல்லிமலர்க்கழனியாரூரமர்ந்தானை
வல்லதோரிச்சையினால்வழிபாடிவைபத்தும் வாய்க்கச்
சொல்லுதல்கேட்டல்வல்லார்துன்பந்துடைப்பாரே.* (௧௧)

திருச்சிற்றம்பலம்.

* இத்திருப்பதிகத்தில் அ-வது செய்யுள் மறைந்துபோயிற்று.

Kovilnool Digital library

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பவனமாய்ச்சோடையாய்நாவெழாப்பஞ்சுதோய்ச்சட்டவுண்டு
சிவனதாட்சிந்தியாப்பேதைமார்போலநீவெள்கினாயே
கவனமாய்ப்பாய்வதோரேறுகந்தேறியகாளகண்டன்
அவனதாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே. (௧)

தந்தையார்போயினார்தாயரும்போயினார்தாமும்போவார்
கொந்தவேல்கொண்டொருகூற்றத்தார்பார்க்கின்றார்கொண்டுபோவார் *
எந்தநாள்வாழ்வதற்கேமனம்வைத்தியாலேழைநெஞ்சே
அந்தணாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே. (௨)

நிணங்குடர்தோனரம்பென்புசேராக்கைதானிலாயதன்றால்
குணங்களார்க்கல்லதுகுற்றநீங்காதெனக்குலுங்கினாயே
வணங்குவார்வானவர்தானவர்வைகலுமனங்கொடேத்தும் †
அணங்கனாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே. (௩)

நிதியால்வாழ்கிலைநாள்செலாநின்றனநித்தநோய்கள்
வாதியாவாதலானாளின்பமேமருவினாயே
சாதியார்கின்னரர்தருமனும்வருணனுமேத்து ‡ முக்கண்
ஆதியாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே. (௪)

பிறவியால்வருவனகேடுளவாதலாற்பெரியவின்பத்
துறவியார்க்கல்லதுதுன்பநீங்காதெனத்தூங்கினாயே
மறவனீமார்க்கமேநண்ணினாய்த்தீர்த்தநீர்மல்குசென்னி
அறவனாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே. (௫)

செடிகொணோயாக்கைபம்பாம்பின் ¶ வாய்த்தேரையாய்ச்சிறுபறவை
கடிகொள்பூந்தேன்சுவைத்தின்புறலாமென்றுகருதினாயே
முடிகளால்வானவர்முன்பணிந்தன்பராயேத்துமுக்கண்
அடிகளாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே. (௬)

ஏறுமால்யானையேசிவிகையந்தளகமீச்சோப்பிவட்டில் §
மாறிவாழுடம்பினார்படுவதோர்நடலைக்குமயங்கினாயே
மாறிலாவனமுலைமங்கையோர்பங்கினர்மதியம்வைத்த
ஆறனாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே. (௭)

என்பினாற்கழிநிரைத்திறைச்சிமண்சுவரெறிந்திதுநம்மில்லம்
புன்புலானாறுதோல்போர்த்துப்பொல்லாமையான்முகடுகொண்டு
முன்பெலாமொன்பதுவாய்தலார்குரம்பையின்மூழ்கிடாதே
அன்பனாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே. (௮)

* கொண்டுபோவான் என்றும் பாடம். † மணங்கொடேத்தும் என்றும், மணங்கொண்டேத்தும் என்றும் பாடம். ‡ வருணர்களேத்தும் என்றும் பாடம். ¶ யாக்கையம் பாம்பின் என்றும் பாடம். § சேர்ப்பில்வட்டி என்றும், சேர்ப்பிவட்டி என்றும் பாடம்.

Koviloor Digital Library

தந்தைதாய்தன்னுடன்றோன்றினார்புத்திரர்தாரமென்னும்
பந்தநீங்காதவர்க்குய்ந்துபோக்கில்லெனப்பற்றினாயே
வெந்தநீறாடியாராதியார்சோதியார்வேதகீதர்
எந்தையாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே. (கூ)

நெடியமால்பிரமனுநீண்டுமண்ணிடந்தின்னநேடிக்காணாப்
படியனார்பவளம்போலுருவனார்பனிவளர்மலையாள்பாக
வடிவனார்மதிபொதிசடையனார்மணியணிகண்டத்தெண்டோள்
அடிகளாரூர்தொழுதுய்யலாமையல்கொண்டஞ்சனெஞ்சே. (க0)

பல்லிதழ்மாதவியல்லிவண்டியாழ்செயுங்காழியூரன்
நல்லவேநல்லவேசொல்லியஞானசம்பந்தனாரூர்
எல்லியம்போதெரியாடுமெம்மீசனையேத்துபாடல்
சொல்லவேவல்லவர்தீதிலரோதநீர்வையகத்தே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவிராகம். பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

பருக்கையானைமத்தகத்தரிக்குலத்துகிர்ப்புக
நெருக்கிவாய * நித்திலங்கிரக்குநீள்பொருப்பனார்
கருக்கொள்சோலைசூழநீடுமாடமாளிகைக்கொடி
அருக்கன்மண்டலத்தணவுமந்தணாரூரென்பதே. (க)

விண்டவெள்ளெருக்கலர்ந்தவன்னிகொன்றைமத்தமும்
இண்டைகொண்டசெஞ்சடைமுடிச்சிவனிருந்தவூர்
கெண்டைகொண்டலர்ந்தகண்ணினார்கள்கீதவோசைபோய்
அண்டரண்டமூடறுக்குமந்தணாரூரென்பதே. (உ)

கறுத்தநஞ்சமுண்டிருண்டகண்டர்காலனின்னுயிர்
மறுத்துமாணிதன்றனக்கும்வண்மைசெய்தமைந்தனார்
வெறித்துமேதியோடிமூசு † வள்ளைவெள்ளைநீள்கொடி
அறுத்துமண்டியாவிபாயுமந்தணாரூரென்பதே. (ங)

அஞ்சுமொன்றியாறுவீசிநீறுபூசிமேனியில்
குஞ்சியாரவந்திசெய்யவஞ்சலென்னி ‡ மன்னுமூர்
பஞ்சியாருமெல்லடிப்பணைத்தகொங்கைநுண்ணிடை
அஞ்சொலாரரங்கெடுக்குமந் ¶ தணாரூரென்பதே. (ச)

சங்குலாவுதிங்கள்சூடிதன்னையுன்னுவார்மனத்
தங்குலாவிநின்றவெங்களாதிதேவன்மன்னுமூர்
தெங்குலாவுசோலைநீடுதேனுலாவுசெண்பகம்
அங்குலாவியண்டநாறுமந்தணாரூரென்பதே. (ரு)

* நெருக்குவாய என்றும் பாடம். † மூசி என்றும் பாடம். ‡ அஞ்சலென்னி - வினைப்பெயர். ¶ ரரங்கடுக்கும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

கள்ளநெஞ்சவஞ்சகக்கருத்தைவிட்டருத்தியோ
டுள்ளமொன்றியுள்குவாருளத்துளானுகந்தவூர்
துள்ளிவாளை * பாய்வயற்சுரும்புலாவுநெய்தல்வாய் †
அள்ளனாரையாரல்வாருமந்தணாரூரென்பதே. (௬)

கங்கைபொங்குசெஞ்சடைக்கரந்தகண்டர்காமனை
மங்கவெங்கணால்விழித்தமங்கைபங்கன்மன்னுமூர்
தெங்கினூடுபோகி ‡ வாழைகொத்திறுத்துமாவின்மேல்
அங்கண்மந்திமுந்தியேறுமந்தணாரூரென்பதே. (௭)

வரைத்தலம்மெடுத்தவன்முடித்தலம்முரத்தொடும்
நெரித்தவன்புரத்தைமுன்னெரித்தவன்னிருந்தவூர்
நிரைத்தமாளிகைத்திருவின்னேரனார்கள்வெண்ணகை
அரத்தவாய்மடந்தைமார்களாடுமாரூரென்பதே. (௮)

இருந்தவன்கிடந்தவன்னிடந்துவிண்பறந்துமெய்
வருந்தியுமளப்பொணாதவானவன்மகிழ்ந்தவூர்
செருந்திஞாழல்புன்னைவன்னிசெண்பகஞ்செழுங்குரா
அரும்புசோலைவாசநாறுமந்தணாரூரென்பதே. (௯)

பறித்தவெண்டலைக்கடுப்படுத்தமேனியார்தவம்
வெறித்தவேடன்வேலைநஞ்சமுண்டகண்டன்மேவுமூர்
மறித்துமண்டுவண்டல்வாரிமிண்டுநீர்வயற்செநெல்
அறுத்தவாயசும்புபாயுமந்தணாரூரென்பதே. (௧௦)

வல்லிசோலைசூதநீடுமன்னுவீதிபொன்னுலா
வல்லிமாதமர்ந்திருந்தவந்தணாரூராதியை
நல்லசொல்லுஞானசம்பந்தனாவினின்றுரை
வல்லதொண்டர்வானமாளவல்லர்வாய்மையாகவே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

பண் - கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

அந்தமாயுலகாதியுமாயினான்
வெந்தவெண்பொடிப்பூசியவேதியன்
சிந்தையேபுகுந்தான்றிருவாரூரெம்
எந்தைதானெனையேன்றுகொளுங்கொலோ. (௧)

கருத்தனைக்கருதார்புரமூன்றெய்த
ஒருத்தனையுமையாளொருகூறனை
திருத்தனைத்திருவாரூரெந்திவண்ணனை
அருத்தவென்னெனையஞ்சலென்னாததே. (௨)

* தள்ளுவாளை என்றும் பாடம். † சுரும்புநாறுநெய்தல்வாய் என்றும் பாடம்.
‡ கொங்கினூடுபொங்கி என்றும் பாடம்.

Koviloor Digital Library

மறையன்மாமுனிவன்மருவார்புரம்
இறையின்மாத்திரையில்லெரியூட்டினன்
சிறைவண்டார்பொழில்சூழ்திருவாரூரெம்
இறைவன்றனெனையேன்றுகொளுங்கொலோ. (௩)

பல்லிலோடுகையேந்திப்பலிதிரிந்
தெல்லிவந்திடுகாட்டெரியாடுவான்
செல்வமல்கியதென்றிருவாரூரான்
அல்லறீர்த்தெனையஞ்சலெனுங்கொலோ. (௪)

குருந்தமேறிக்கொடிவிடுமாதவி
விரிந்தலர்ந்தவிரைகமழ்தேன்கொன்றை
திருந்துமாடங்கள்சூழ்திருவாரூரான்
வருந்தும்போதெனைவாடலெனுங்கொலோ. (௫)

வார்கொண்மென்முலையாளொருபாகமா
வூர்களாரிடுபிச்சைகொளுத்தமன்
சீர்கொண்மாடங்கள்சூழ்திருவாரூரான்
ஆர்கணுவெனையஞ்சலெனுதமே. * (௬)

வளைக்கைமங்கைநல்லாளையோர்பாகமாத்
துளைக்கையானைதுயர்படப்போர்த்தவன்
திளைக்குந்தண்புனல்சூழ்திருவாரூரான்
இளைக்கும்போதெனையேன்றுகொளுங்கொலோ. (௭)

இலங்கைமன்னனிருபதுதோளிறக்
கலங்கக்கால்விரலாற்கடைக்கண்டவன்
வலங்கொள்மாமதில்சூழ்திருவாரூரான்
அலங்கறந்தெனையஞ்சலெனுங்கொலோ. (௮)

நெடியமாலும்பிரமனுநேர்கிலாப்
படியவன்பனிமாமதிச்சென்னியான்
செடிகணீக்கியதென்றிருவாரூரெம்
அடிகடானெனையஞ்சலெனுங்கொலோ. (௯)

மாசுமெய்யினர்வண்டுவராடைகொள்
காசைபோர்க்குங்கலதிகள்சொற்கொளேல்
தேசமல்கியதென்றிருவாரூரெம்
ஈசன்றனெனையேன்றுகொளுங்கொலோ. (௧0)

வன்னிகொன்றைமதியொடுகூவிளம்
சென்னிவைத்தபிரான்றிருவாரூரை
மன்னுகாழியுண்ஞானசம்பந்தன்வாய்ப்
பன்னுபாடல்வல்லார்க்கில்லைபாவமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

* ஆர்கணுவெனையஞ்சலெனுங்கொலோ என்றும் பாடம்.

 Koviloor Digital Library

தேவாரம்.

திருநாவுக்கரசுநாயனார்.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பாடிளம்பூதத்தினானும்பவளச்செவ்வாய்வண்ணத்தானும்
கூடிளமென்முலை* யாளைக்கூடியகோலத்தினானும்
ஓடிளவெண்பிறையானுமொளிதிகழ்சூலத்தினானும்
ஆடிளம்பாம்பசைத்தானுமாரூரமர்ந்தவம்மானே. (௧)

நரியைக்குதிரைசெய்வானுநரகரைத்தேவுசெய்வானும்
விரதங்கொண்டாடவல்லானும்விச்சின்றிநாறுசெய்வானும்
முரசதிர்ந்தானைமுன்னோடமுன்பணிந்தன்பர்களேத்த
அரவரைச்சாத்திநின்றானுமாரூரமர்ந்தவம்மானே. (௨)

நீறுமெய்பூசவல்லானுநினைப்பவர்நெஞ்சத்துளானும்
ஏறுகந்தேறவல்லானுமெரிபுரைமேனியினானும்
நாறுகரந்தையினானுநான்மறைக்கண்டத்தினானும்
ஆறுசடைக்கரந்தானுமாரூரமர்ந்தவம்மானே. (௩)

கொம்புநல்வேனிலவனைக்குழையமுறுவல்செய்தானும்
செம்புனல்கொண்டெயின்மூன்றுந்தீயெழக்கண்சிவந்தானும்
வம்புநற்கொன்றையினானும்வாட்கண்ணிவாட்டமதெய்த
அம்பரவீருரியானுமாரூரமர்ந்தவம்மானே. (௪)

ஊழியளக்கவல்லானுமுகப்பவருச்சியுள்ளானும்
தாழிளஞ்செஞ்சடையானுந்தண்ணமர்திண்கொடியானும்
தோழியர்தூதிடையாடத்தொழுதடியார்கள்வணங்க
ஆழிவளைக்கையினானுமாரூரமர்ந்தவம்மானே. (௫)

ஊர்திரைவேலையுள்ளானுமுலகிறந்தொண்பொருளானும்
சீர்தருபாடலுள்ளானுஞ்செங்கண்விடைக்கொடியானும்
வார்தருபூங்குழலாளைமருவியுடன்வைத்தவனும்
ஆதிரைநாளுகந்தானுமாரூரமர்ந்தவம்மானே. (௬)

தொழற்கங்கைதன்னிநின்றார்க்குத்தோன்றியருளவல்லானும்
கழற்கங்கைபன்மலர்கொண்டுகாதல்கனற்றநின்றானும்
குழற்கங்கையாளையுள்வைத்துக்கோலச்சடைக்கரந்தானும்
அழற்கங்கையேந்தவல்லானுமாரூரமர்ந்தவம்மானே. (௭)

ஆயிரந்தாமரைபோலுமாயிரஞ்சேவடியானும்
ஆயிரம்பொன்வரைபோலுமாயிரந்தோளுடையானும்
ஆயிரஞாயிறுபோலுமாயிரநீண்முடியானும்
ஆயிரம்பேருகந்தானுமாரூரமர்ந்தவம்மானே. (௮)

* கூடிளமென்முலை - ஈர்க்கிடைபோகாமற்செறிந்தவிளமுலை; கோடிளமென்முலை என்றும் பாடம்.

Koviloor Digital Library

வீடரங்காநிறுப்பானும்விசும்பினைவேதிதொடர
ஓடரங்காகவைத்தானுமோங்கியோரூழியுள்ளானும்
காடரங்காமகிழ்ந்தானுங்காரிகையார்கண்மனத்துள்
ஆடரங்கத்திடையானுமாரூரமர்ந்தவம்மானே. (சு)

பையஞ்சுடர்விடுநாகப்பள்ளிகொள்வானுள்ளத்தானும்*
கையஞ்சுநான்குடையானைக்கால்விரலாலடர்த்தானும்
பொய்யஞ்சிவாய்மைகள்பேசிப்புகழ்புரிந்தார்க்கருள்செய்யும்
ஐயஞ்சினப்புறத்தானுமாரூரமர்ந்தவம்மானே. (க0)

திருச்சிற்றம்பலம்.

பழமொழி. பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

மெய்யெலாம்வெண்ணீறுசண்ணித்தமேனியான்றாடொழாதே
உய்யலாமென்றெண்ணியுறிதூக்கியுழிதந்தேனுள்ளம்விட்டு †
கொய்புலாமலர்ச்சோலைக்குயில்கூவமயிலாலுமாரூரரைக்
கையினாற்றொழாதொழிந்துகனியிருக்கக்காய்கவர்ந்தகள்வனேனே. (க)

என்பிருத்திநரம்புதோல்புகப்பெய்திட்டென்னையோருருவமாக்கி
இன்பிருத்திமுன்பிருந்தவினைதீர்த்திட்டென்னுள்ளங்கோயிலாக்கி
அன்பிருத்தியடியேனைக்கூழாட்கொண்டருள்செய்தவாரூரர்தம்
முன்பிருக்கும்விதியின்றிமுயல்விட்டுக்காக்கைப்பின்போனவாறே. (உ)

பெருகுவித்தென்பாவத்தைப்பண்டெலாங்குண்டர்கடஞ்சொல்லேகேட்டு
உருகுவித்தென்னுள்ளத்தினுள்ளிருந்தகள்ளத்தைத்தள்ளிப்போக்கி
அருகுவித்துப்பிணிகாட்டி ‡ யாட்கொண்டுபிணிதீர்த்தவாரூரர்தம்
அருகிருக்கும்விதியின்றியறமிருக்கமறங்விலைக்குக்கொண்டவாறே. (ந)

குண்டனாய்த்தலைபறித்துக்குவிமுலையார்நகைநாணாதுழிதர்வேனைப்
பண்டமாப்படுத்தென்னைப்பாறலையிற்றெளித்துத்தன்பாதங்காட்டித்
தொண்டெலாமிசைபாடத்தூமுறுவலருள்செய்யுமாரூரரைப்
பண்டெலாமறியாதேபனிநீராற்பரவைசெயப்பாவித்தேனே. (ச)

துன்னாகத்தேனாகித்துர்ச்சனவர்சொற்கேட்டுத்துவர்வாய்க்கொண்டு
என்னாகத்திரிதந்தீங்கிருகையேற்றிடவுண்டவேழையேனான் ¶
பொன்னாகத்தடியேனைப்புகப்பெய்துபொருட்படுத்தவாரூரரை
என்னாகத்திருத்தாதேயேதன்போர்க்காதனாபகப்பட்டேனே. (ரு)

பப்போதிப்பவணனைப்பறித்ததொருதலையோடேதிரிதர்வேனை
ஒப்போடவோதுவித்தென் § னுள்ளத்தினுள்ளிருந்தங்குறுதிகாட்டி
அப்போதைக்கப்போதுமடியவர்கட்காரமுதாமாரூரரை
எப்போதுநினையாதேயிருட்டறையின்மலடுகறந்தெய்த்தவாறே. (சு)

* "பெருவடிவமைந்தமாயன்பிறங்கியமனத்திற்றண்ணென்—றெரிசுடர்விளக்கத்துச்சியிருந்திடுமீசன்" என்றார் பிறரும் † யுழிதந்தென்னுள்ளம்விட்டு என்றும் பாடம். ‡ பிணிகாட்டி - சூலைநோயையுண்டாக்கி; பணிகாட்டி என்றும் பாடம். ¶ வுண்டேனேழையேனான் என்றும் பாடம். § ஒப்போடேயோதுவித்தென் என்றும் பாடம்.

கதியொன்றுமறியாதேகண்ணழலத்தலைபறித்துக்கையிலுண்டு
பதியொன்றுநெடுவீதிப்பலர்காணநகைநாணாதுழிதர்வேற்கு
மதிதந்தவாரூரில்வார்தேனைவாய்மடுத்துப்பருகியுய்யும்
விதியின்றிமதியிலியேன்விளக்கிருக்கமின்மினித்தீக்காய்ந்தவாறே. (எ)

பூவையாய்த்தலைபறித்துப்பொறியற்றசமணர்சொல்லேகேட்டுக்
காவிசேர்கண்மடவார்க்கண்டோடிக்கதவடைக்குங்கள்வனேன்றன்
ஆவியைப்போகாமேதவிர்த்தென்னையாட்கொண்டவாரூரைப்
பாவியேனறியாதேபாழூரிற்பயிக்கம்* புக்கெய்த்தவாறே. (அ)

ஒட்டாதவாளவுணர்புரமூன்றுமோரம்பின்வாயின்வீழக்
கட்டானைக்காமனையுங்காலனையுங்கண்ணினொடுகாலின்வீழ
அட்டானையாரூரிலம்மானையார்வச்செற்றக்குரோதம்
தட்டானைச்சாராதேதவமிருக்கவவஞ்செய்துதருக்கினேனே. (கூ)

மறுத்தானொர்வல்லரக்கனீரைந்துமுடியினொடுதோளுந்தாளும்
இறுத்தானையெழின்முளரித்தவிசின்மிசையிருந்தான்றன்றலையிலொன்றை
அறுத்தானையாரூரிலம்மானையாலாலமுண்டுகண்டம்
கறுத்தானைக்கருதாதேகரும்பிருக்கவிரும்புகடித்தெய்த்தவாறே. (கo)

திருச்சிற்றம்பலம்.

பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

சூலப்படையானைச்சூழாக† வீழருவிக்
கோலத்தோட்டுக்குழையுந்தோட்டுடையானைப்
பாலொத்தமென்மொழியாள்பங்கனைப்பாங்காய
ஆலத்தின்கீழானைநான்கண்டதாரூரே. (க)

பக்கமேபாரிடங்கள்சூழப்படுதலையில்
புக்கவூர்ப்பிச்சையேற்றுண்டுபொலிவுடைத்தாய்க்
கொக்கிறகின்றூவல்கொடியெடுத்தகோவணத்தோ
டக்கணிந்தவம்மானைநான்கண்டதாரூரே. (உ)

சேயவுலகமுஞ்செல்சார்வுமானானை
மாயப்போர்வல்லானைமாலைதாழ்மார்பானை
வேயொத்ததோளியர்தம்மென்முலைமேற்றண்சாந்தின்
ஆயத்திடையானைநான்கண்டதாரூரே. (ங)

ஏறேற்றமாவேறியெண்கணமும்பின்படர
மாறேற்றார்வல்லரணஞ்சீறியபானத்தில்
நீறேற்றமேனியனாய்நீள்சடைமேனீர்ததும்ப
ஆறேற்றவந்தணனைநான்கண்டதாரூரே. (ச)

* பயிக்கம் - பிச்சை. † சூதாக என்றும் பாடம்.

Koviloor Digital Library

தாங்கோலவெள்ளெலும்புபூண்டுதம்மேறேறிப்
பாங்கானவூர்க்கெல்லாஞ்செல்லும்பரமனார்
தேங்காவிநாறுந்திருவாரூர்த்தொன்னகரில்*
பூங்கோயிலுண்மகிழ்ந்துபோகாதிருந்தாரே. (௫)

எம்பட்டம்பட்டமுடையானையேர்மதியின்
நும்பட்டஞ்சேர்ந்தநுதலானையந்திவாய்ச்
செம்பட்டுடுத்துச்சிறுமானுரியாடை
அம்பட்டசைத்தானைநான்கண்டதாரூரே. (௬)

போழொத்தவெண்மதியஞ்சூடிப்பொலிந்திலங்கு†
வேழத்துரிபோர்த்தான்வெள்வளையாடான்வெருவ
ஊழித்தீயன்னானையோங்கொலிமாப்பூண்டதோர்
ஆழித்தேர்வித்தகனைநான்கண்டதாரூரே. (௭)

வஞ்சனையாரார்பாடுஞ்சாராதமைந்தனைத்
துஞ்சிருளிலாட‡லுகந்தானைத்தன்றொண்டர்
நெஞ்சிருள்கூரும்பொழுதுநிலாப்பாரித்
தஞ்சுடராய்நின்றானைநான்கண்டதாரூரே. (௮)

காரமுதுகொன்றைகடிநாறுதண்ணென்ன
நீரமுதுகோதையோடாடியநீண்மார்பன்
பேரமுதமுண்டார்களுய்யப்பெருங்கடனஞ்
சாரமுதாவுண்டானைநான்கண்டதாரூரே. (௯)

தாடவுடுக்கையன்றாமரைப்பூஞ்சேவடியன்
கோடலாவேடத்தன்¶கொண்டதோர்வீணையினான்
ஆடரவக்கிண்கிணிக்காலன்றானோர்சேடனை
ஆடுந்தீக்கூத்தனைநான்கண்டதாரூரே. (௰)

மஞ்சாடுகுன்றடரவூன்றிமணிவிரலால்
துஞ்சாப்போர்வாளரக்கன்றோணெரியக்கண்குருதிச்
செஞ்சாந்தணிவித்துத்தன்மார்பிற்பால்வெண்ணீற்
றஞ்சாந்தணிந்தானைநான்கண்டதாரூரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

காண்டலேகருத்தாய்நினைந்திருந்தேன்மனம்புகுந்தாய்கழலடி
பூண்டுகொண்டொழிந்தேன்புறம்போயினாலறையோ
ஈண்டுமாடங்கணீண்டமாளிகைமேலெழுகொடிவானிளம்மதி
தீண்டிவந்துலவுந்திருவாரூரம்மானே. (௧)

*தேங்காவினாறுந்திருவாரூர்ப்பொன்னகரில் என்றும் பாடம். † பொலிந்திலங்க என்றும் பாடம். ‡ துஞ்சிருள்ளாடல் என்றும் பாடம். ¶ கோடாலவேடத்தன் என்றும் பாடம்.

Koviloor Digital Library

கடம்படந்நடமாடினாய்களைகண்ணினக்கொரு* காதல்செய்யடி
ஒடுங்கிவந்தடைந்தேனொழிப்பாய்பிழைப்பவெல்லாம்
முடங்கிறான்முதுநீர் † மலங்கிளவாளைசெங்கயல்சேல்வரால்களி
றுடைந்ததண்கழனியணியாரூரம்மானே. (௨)

அருமணித்தடம்பூண்முலையரம்பையரொடருளிப்பாடியர் ‡
உரிமையிற்றொழுவாருருத்திரபல்கணத்தார்
விரிசடைவிரதிகளந்தணர்சைவர்பாசுபதர்கபாலிகள்
தெருவினிற்பொலியுந்திருவாரூரம்மானே. (௩)

பூங்கழற்றொழுதும்பரவியும்புண்ணியாபுனிதாவுன்பொற்கழல்
ஈங்கிருக்கப்பெற்றேனென்னகுறையுடையேன்
ஓங்குதெங்கிலையார்கமுகிளவாழைமாவொடுமாதுளம்பல
தீங்கனிசிதறுந்திருவாரூரம்மானே. (௪)

நீறுசேர்செழுமார்பினாய்நிரம்பாமதியொடுநீள்சடையிடை
ஆறுபாயவைத்தாயடியேயடைந்தொழிந்தேன்
எறிவண்டொடுதும்பியஞ்சிறகூன்றவிண்டமலரிதழ்வழி
தேறல்பாய்ந்தொழுகுந்திருவாரூரம்மானே. (௫)

அளித்துவந்தடிகைதொழுமவர்மேல்வினைகெடுமென்றிவ்வையகம்
களித்துவந்துடனேகலந்தாடக்காதலராய்க் ¶
குளித்துமூழ்கியுந்தூவியுங்குடைந்தாடுகோதையர்குஞ்சியுட்புகத்
தெளிக்குந்தீர்த்தமறாத்திருவாரூரம்மானே. (௬)

திரியுமூவெயிறீயெழச்சிலைவாங்கிநின்றவனேயென்சிந்தையுள்
பிரியுமாறெங்ஙனேபிழைத்தேயும்போகலொட்டேன் §
பெரியசெந்நெற்பிரம்புரிகெந்தசாலிதிப்பியமென்றிவ்வையகத்
தரியுந்தண்கழனியணியாரூரம்மானே. (௭)

பிறத்தலும்பிறந்தாற்பிணிப்படவாய்ந்தசைந்துடலம்புகுந்துநின்
றிறக்குமாறுளதேயிழித்தேன்பிறப்பினைநான்
அறத்தையேபுரிந்தமனத்தனாயார்வச்செற்றக்குரோதநீக்கியுன்
திறத்தனாயொழிந்தேன்றிருவாரூரம்மானே. (௮)

முளைத்தவெண்பிறைமொய்சடையுடையா யெப்போதுமென்னெஞ்சிடங்கொ
வளைத்துக்கொண்டிருந்தேன்வலிசெய்துபோகலொட்டேன் § [ள்ள
அளைப்பிரிந்தவலவன்போய்ப்புகுதந்தகாலமுங்கண்டு 0 தன்பெடை
திளைக்குந்தண்கழனித்திருவாரூரம்மானே. (௯)

நாடினார்கமலம்மலரயனோடிரணியனாகங்கீண்டவன்
நாடிக்காணமாட்டாத்தழலாயநம்பானைப்
பாடுவார்பணிவார்பல்லாண்டிசைகூறுபத்தர்கள்சித்தத்துள்புக்குத்
தேடிக்கண்டுகொண்டேன்றிருவாரூரம்மானே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

* களைகண்ணினர்க்கொரு என்றும், களைகண்ணெனக்கொரு என்றும் பாடம். † முடக்கிறமுதநீர் என்றும் பாடம். ‡ யருளப்பாடியர் என்றும் பாடம். ¶ காதலாய்த் என்றும் பாடம். § § போகவொட்டேன் என்றும் பாடம். 0 புகுந்தகாலமுங்கண்டு என்றும், புகுந்தக்காலமுக்கண்டு என்றும் பாடம்.

Koviloor Digital Library

பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

முத்துவிதானமணிப்பொற்கவரி * முறையாலே
பத்தர்களோடுபாவையர்சூழப்பலிப்பின்னே
வித்தகக்கோலவெண்டலைமாலைவிரதிகள்
அத்தனாரூராதிரைநாளாலதுவண்ணம். (க)

நணியார்சேயார்நல்லார்தீயார்நாடோறும்
பிணிதான்தீருமென்றுபிறங்கிக் † கிடப்பாரும்
மணியேபொன்னேமைந்தாமணாளாவென்பார்கட்
கணியாரூராதிரைநாளாலதுவண்ணம். (உ)

வீதிகடோறும்வெண்கொடியோடுவிதானங்கள்
சோதிகள்விட்டுச்சுடர்மாமணிகளொளிதோன்றச்
சாதிகளாயபவளமுமுத்துத்தாமங்கள்
ஆதியாரூராதிரைநாளாலதுவண்ணம். (ங)

குணங்கள்பேசிக்கூடிப்பாடித்தொண்டர்கள்
பிணங்கித்தம்மிற்பித்தரைப்போலப்பிதற்றுவார்
வணங்கிநின்றுவானவர்வந்துவைகலும்
அணங்கனாரூராதிரைநாளாலதுவண்ணம். (ச)

நிலவெண்சங்கும்பறையுமார்ப்பநிற்கில்லாப்
பலருமிட்டகல்லவடங்கள்பரந்தெங்கும் ‡
கலவமஞ்ஞைகாரென்றெண்ணிக்களித்துவந்
தலமாரூராதிரைநாளாலதுவண்ணம். (ரு)

விம்மாவெருவாவிழியாத்தெழியாவெருட்டுவார்
தம்மாண்பிலராய்த்தரியார்தலையான்முட்டுவார்
எம்மானீசனெந்தையெனப்பனென்பார்கட்
கம்மானாரூராதிரைநாளாலதுவண்ணம். (சு)

செந்துவர்வாயார்செல்வனசேவடிசிந்திப்பார்
மைந்தர்களோடுமங்கையர்கூடிமயங்குவார்
இந்திரனாதிவானவர்சித்தரெடுத்தேத்தும்
அந்திரனாரூராதிரைநாளாலதுவண்ணம். (எ)

முடிகள்வணங்கிமூவாதார்கண்முன்செல்ல
அடிகொள்வேய்த்தோள்வானரமங்கையர் ¶ பின்செல்லப்
பொடிகள்பூசிப்பாடுந்தொண்டர்புடைசூழ
அடிகளாரூராதிரைநாளாலதுவண்ணம். (அ)

* அணிபொற்கவரி என்றும் பாடம். † மென்றுவணங்கி என்றும் பாடம். ‡ வடங்கள்கலந்தெங்கும் என்றும் பாடம். ¶ வானலமங்கையர் என்றும் பாடம்.

துன்பநும்மைத்தொழாதநாள்களென்பாரும்
இன்பநும்மையேத்துநாள்களென்பாரும்
நும்பினெம்மைநுழையப்பணியேயென்பாரும்
அன்பனாரூராதிரைநாளாலதுவண்ணம். (௯)

பாரூர்பௌவத்தானைப்பத்தர்பணிந்தேத்தச்
சீரூர்பாடலாடலறாதசெம்மாப்பார்ந்
தோரூரொழியாதுலகமெங்கும்பணிந்தேத்தும் *
ஆரூரன்றனாதிரைநாளாலதுவண்ணம்.† (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார் திருப்பழனத்தினின்றும் புறப்பட்டு, திருநல்லூர் முதலிய தலங்களை வணங்கிக்கொண்டு, திருவாரூரை அடைந்து சுவாமிதரிசனஞ்செய்து திருப்பதிகங்கள் பாடிக்கொண்டிருந்தார். இருக்கும்பொழுது திருவாதிரை நக்ஷத்திரத்திலே வீதிவிடங்கப்பெருமானுடைய திருவிழாவை அடியார்களுடன் சேவித்து மகிழ்ந்தார். பின்னர்த் திருப்புகலூருக்குப் போம்படி கருதி, திருவாரூரினின்றும் புறப்பட்டுப் பலதலங்களையும் வணங்கிச்சென்றார். அவர்செல்லுதற்குமுன் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருப்புகலூருக்கு வந்து சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு முருகநாயனாருடைய திருமடத்திலே எழுந்தருளியிருந்தார். அவர் திருநாவுக்கரசுநாயனார் திருவாரூரினின்றும் திருப்புகலூரைநோக்கி எழுந்தருளிவருகின்றார் என்று கேள்வியுற்று, அடியார் கூட்டத்தோடுஞ்சென்று அப்பமூர்த்தியை எதிர்கொண்டார். அப்பமூர்த்தி திருஞானசம்பந்தசுவாமிகளைவணங்க, திருஞானசம்பந்தசுவாமிகளும் அப்பமூர்த்திகளை வணங்கி, "அப்பரே நீர் வரும் நாளிலேதிருவாரூரிலே நடந்த சிறப்பைச் சொல்லுமென்றார். அப்பமூர்த்தி திருவாதிரைச்சிறப்பை "முத்துவிதானமணிப்பொற்கவரி" என்னுந்திருப்பதிகத்திலே சொல்லியருளினார்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

படுகுழிப்பவ்வத்தன்னபண்டியைப்பெய்தவாற்றால்
கெடுவதிம்மனிதர்வாழ்க்கைகாண்டொறுங்கேதுகின்றேன்
முடுகுவரிருந்துளைவர்மூர்க்கரேயிவர்களோடும் ‡
அடியனேன்வாழமாட்டேனாரூர்மூலட்டனீரே. (௧)

புழுப்பெய்தபண்டிதன்னைப்புறமொருதோலான்மூடி
ஒழுக்கறுமொன்பதுவாயொற்றுமையொன்றுமில்லை
சழக்குடையிதனுளைவர்சங்கடம்பலவுஞ்செய்ய
அழிப்பனாய்வாழமாட்டேனாரூர்மூலட்டனீரே. (௨)

பஞ்சின்மெல்லடியினார்கள்பாங்கராயவர்களின்று
நெஞ்சிலேநோய்ப்பலவுஞ்செய்துநினையினுநினையவொட்டார் ¶
நஞ்சணிமிடற்றினானேநாதனேநம்பனேநான்
அஞ்சினேற்கஞ்சலென்னீராரூர்மூலட்டனீரே. (௩)

* மெங்குமெடுத்தேத்தும் என்றும் பாடம். † இத்திருப்பதிகம் திருவாதிரைத் திருப்பதிகமென்று பிரதிகளிற்கூறப்படுகின்றது. ‡ மூர்க்கரோயிவர்களோடும் என்றும் பாடம். ¶ நிலையவொட்டார் என்றும் பாடம்.

Koviloor Digital Library

கெண்டையந்தடங்கணல்லார்தம்மையேகெழுமவேண்டிக்
குண்டராய்த்திரிதந்தைவர்குலைத்திட்டுக்குழியினூக்க *
கண்டுநான்றரிக்ககில்லேன்காத்துக்கொள்கறைசேர்கண்டா
அண்டவானவர்கள்போற்றுமாரூர்மூலட்டனீரே. (௪)

தாழ்குழலின்சொனல்லார்தங்களைத் † தஞ்சமென்று
ஏழையேனாகினாளுமென்செய்கேனெந்தைபெம்மான்
வாழ்வதேலரிதுபோலுமைவகளுமைவர்வந்து
ஆழ்குழிப்படுக்கவாற்றேனாரூர்மூலட்டனீரே. (௫)

மாற்றமொன்றருளகில்லீர்மதியிலேன்விதியிலாமை
சீற்றமுந்தீர்த்தல்செய்யீர்சிக்கனவுடையராகிக்
கூற்றம்போலைவர்வந்துகுலைத்திட்டுக்கோகுசெய்ய
ஆற்றவுங்கில்லேனாயேனாரூர்மூலட்டனீரே. (௬)

உயிர்நிலையுடம்பேகாலாவுள்ளமேதாழியாகத்
துயரமேயேற்றமாகத்துன்பக்கோலதனைப்பற்றிப்
பயிர்தனைச்சுழியவிட்டுப்பாழ்க்குநீரிறைத்துமிக்க
அயர்வினாலைவர்க்காற்றேனாரூர்மூலட்டனீரே. (எ)

கற்றதேலொன்றுமில்லைகாரிகையாரோடாடிப்
பெற்றதேற்பெரிதுந்துன்பம்பேதையேன்பிழைப்பினாலே
முற்றினாலைவர்வந்துமுறைமுறைதுயரஞ்செய்ய
அற்றுநானலந்துபோனே ‡ னாரூர்மூலட்டனீரே. (அ)

பத்தனாய்வாழமாட்டேன்பாவியேன்பரவிவந்து
சித்தத்துளைவர்தீயசெய்வினைபலவுஞ்செய்ய
மத்துறுதயிரேபோலமறுகுமென்னுள்ளந்தானும்
அத்தனேயமரர்கோவேயாரூர்மூலட்டனீரே. (௯)

தடக்கைநாலைந்துங்கொண்டு ¶ தடவரைதன்னைப்பற்றி
எடுத்தவன்பேர்க்கவோடியிரிந்தனபூதமெல்லாம்
முடித்தலைபத்துந்தோளு § முறிதரவிறையேயூன்றி
அடர்த்தருள்செய்ததென்னேயாரூர்மூலட்டனீரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

குழல்வலங்கொண்டசொல்லாள்கோலவேற்கண்ணிதன்னைக்
கழல்வலங்கொண்டுநீங்காக்கணங்களாக்கணங்களார
அழல்வலங்கொண்டகையானருட்கதிரெறிக்குமாரூர்
தொழல்வலங்கொண்டல்செய்வான்றோன்றினார்தோன்றினாரே. (௧)

* குலைத்திடர்க்குழியினூக்க என்றும் பாடம். † வின்சொலார்கடங்களை என்றும் பாடம். ‡ நானலைந்துபோனேன் என்றும் பாடம். ¶ நாலைந்துகொண்டு என்றும், நாலஞ்சுங்கொண்டு என்றும் பாடம். § முடித்தலையனைத்தும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

நாகத்தைநங்கையஞ்சநங்கையைமஞ்ஞையென்று
வேகத்தைத்தவிரநாகம்வேழத்தினுரிவைபோர்த்துப்
பாகத்தினிமிர்தல்செய்யாத்திங்களைமின்னென்றஞ்சி
ஆகத்திற்கிடந்தநாகமடங்குமாரூரனார்க்கே. (உ)

தொழுதகங்குழையமேவித்தோட்டிமையுடையதொண்டர்
அழுதகம்புகுந்துநின்றாரவரவர்போலுமாரூர்
எழிலகநடுவெண்முத்தமன்றியு*மேர்கொள்வேலிப்
பொழிலகம்விளங்குதிங்கட்புதுமுகிழ்சூடினாரே. (௩)

நஞ்சிருண்மணிகொள்கண்டர்நகையிருளீமக்கங்குல்
வெஞ்சுடர்விளக்கத்தாடி†விளங்கினார்போலுமூவா
வெஞ்சுடர்முகடுதீண்டிவெள்ளிநாராசமன்ன
அஞ்சுடரணிவெண்டிங்களணியுமாரூரனாரே. (௪)

எந்தளிர்நீர்மைகோலமேனியென்றிமையோரேத்தப்
பைந்தளிர்க்கொம்பரன்னபடர்கொடிபயிலப்பட்டுத்
தஞ்சடைத்தொத்தினாலுந்தம்மதோர்நீர்மையாலும்
அந்தளிராகம்போலும்வடிவாரூரனாரே. (ரு)

வானகம்விளங்கமல்கும்வளங்கெழுமதியஞ்சூடித்
தானகமழியவந்துதாம்பலிதேர்வர்போலும்
ஊனகங்கழிந்தவோட்டிலுண்பதுமொளிகொணஞ்சம்
ஆனகமஞ்சு‡மாடுமடிகளாரூரனாரே. (சு)

அஞ்சனைகணையினானையழலுறவன்றுநோக்கி
அஞ்சனைகுழலினாளையமுதமாவணைந்துநக்கு
அஞ்சனையஞ்சுமாடியாடரவாட்டுவார்தாம்
அஞ்சனைவேலியாரூராதரித்திடங்கொண்டாரே. (எ)

வணங்கிமுன்னமரரேத்தவல்வினையானதீரப்
பிணங்குடைச்சடை¶யில்வைத்தபிறையுடைப்பெருமையண்ணல்
மணங்கமழோதிபாகர்மதிநிலாவட்டத்தாடி
அணங்கொடி§மாடவீதியாரூரெம்மடிகளாரே. (அ)

நகலிடம்பிறர்கட்காகநான்மறையோர்கடங்கள்
புகலிடமாகிவாழும்புகலிலியிருவர்கூடி
இகலிடமாகநீண்டங்கிண்டெழிலழலதாகி
அகலிடம்பரவியேத்தவடிகளாரூரனாரே. (௯)

* முற்றமன்றியும் என்றும் பாடம். † விளக்கதாடி என்றும், விளக்கதாகி என்றும் பாடம். ‡ ஆனைவெஞ்சம் என்றும் பாடம். ¶ பிணங்குடைச்சடை - தெற்றுதலுடையசடை; தெற்றுதல் பின்னல்; பிணங்கு முதனிலை. § மதிநிலா வட்டத்து ஆடி—அண் அம் கோடி எனப்பிரித்து நிலாவையுடைய சந்திரமண்டலத்தில் அசைந்துபொருந்திய அழகிய கொடி எனப் பொருள்கொள்க; மதிநிலா நிலாமதியென மாறுக.

Koviloor Digital Library

ஆயிரந்திங்கண்மொய்த்தவலைகடலமுதம்வாங்கி
ஆயிரமசுரர்வாழுமணிமதின்மூன்றும்வேவ
ஆயிரந்தோளுமட்டித்தாடியவசைவுதீர
ஆயிரமடியும்வைத்த * வடிகளாரூரனாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

குலம்பலம்பாவருகுண்டர்முன்னேநமக்குண்டுகொலோ
அலம்பலம்பாவருதண்புனலாரூரவிர்சடையான்
சிலம்பலம்பாவருசேவடியான்றிருமூலட்டானம்
புலம்பலம்பாவருதொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே. (௧)

மற்றிடமின்றிமனைதுறந்தல்லுணாவல்லமணர்
சொற்றிடமென்றுதுரிசுபட்டேனுக்குமுண்டுகொலோ
விற்றிடம்வாங்கிவிசயனொடன்றொருவேடுவனாய்ப்
புற்றிடங்கொண்டான்றன்றொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே. (௨)

ஒருவடிவின்றிநின்றுண்குண்டர்முன்னமக்குண்டுகொலோ
செருவடிவெஞ்சிலையாற்புரமட்டவன்சென்றடையாத்
திருவுடையான்றிருவாரூர்த்திருமூலட்டானன்செங்கண்
பொருவிடையானடித்தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே. (௩)

மாசினையேறியமேனியர்வன்கண்ணர்மொண்ணரைவிட்
டீசனையேநினைந்தேசறுவேனுக்குமுண்டுகொலோ
தேசனையாரூர்த்திருமூலட்டானனைச்சிந்தைசெய்து
பூசனைப்பூசுரர்தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே. (௪)

அருந்தும்பொழுதுரையாடாவமணர்திறமகன்று
வருந்திநினைந்தரனேயென்றுவாழ்த்துவேற்குண்டுகொலோ
திருந்தியமாமதிலாரூர்த்திருமூலட்டானனுக்குப்
பொருந்துந்தவமுடைத்தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே. (௫)

வீங்கியதோள்களுந்தாள்களுமாய்நின்றுவெற்றரையே
மூங்கைகள்போலுண்ணுமூடர்முன்னேநமக்குண்டுகொலோ
தேங்கமழ்சோலைத்தென்னாரூர்த்திருமூலட்டானன்செய்ய
பூங்கழலானடித்தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே. (௬)

பண்ணியசாத்திரப்பேய்கள்பறிதலைக்குண்டரைவிட்
டெண்ணில்புகழீசன்றன்னருள்பெற்றேற்குமுண்டுகொலோ
திண்ணியமாமதிலாரூர்த்திருமூலட்டானனெங்கள்
புண்ணியன்றன்னடித்தொண்டர்க்குத்தொண்டராம்புண்ணியமே. (௭)

* ஆயிரம்வடிவும்வைத்த என்றும் பாடம்.

Koviloor Digital Library

காப்பர்கள்மெய்யைத்தலைபறிக்கச்சுகமென்றுங்குண்டர்
உரைப்பனகேளாதிங்குய்யப்போந்தேனுக்குமுண்டுகொலோ
திருப்பொலியாரூர்த்திருமூலட்டானன்றிருக்கயிலைப்
பொருப்பன்விருப்பமர்தொண்டர்க்குத்தொண்டாம்புண்ணியமே. (௮)

கையிலிடுசோறுநின்றுண்ணுங்காதலமணரைவிட்
டுய்யுநெறிகண்டிங்குய்யப்போந்தேனுக்குமுண்டுகொலோ
ஐயனணிவயலாரூர்த்திருமூலட்டானனுக்குப்
பொய்யன்பிலாவடித்தொண்டர்க்குத்தொண்டாம்புண்ணியமே. (௯)

குற்றமுடையவமணர்திறமதுகையகன்றிட்
டுற்றகருமஞ்செய்துய்யப்போந்தேனுக்குமுண்டுகொலோ
மற்பொலிதோளானிராவணன்றன்வலிவாட்டுவித்த
பொற்கழலானடித்தொண்டர்க்குத்தொண்டாம்புண்ணியமே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

வேம்பினைப்பேசிவிடக்கினையோம்பிவினைபெருக்கித்
தூம்பினைத்தூர்த்தங்கோர்சுற்றந்துணையென்றிருத்திர்தொண்டீர்
ஆம்பலம்பூம்பொய்கையாரூரமர்ந்தானடிநிழற்கீழ்ச்
சாம்பலைப்பூசிச்சலமின்றித்தொண்டுபட்டுய்ம்மின்களே. (௧)

ஆராய்ந்தடித்தொண்டராணிப்பொனாரூரகத்தடக்கிப்
பாரூர்பரிப்பத்* தம்பங்குனியுத்திரம்பாற்படுத்தான்
ஆரூர்நறுமலர்நாதனடித்தொண்டனம்பிநந்தி
நீராற்றிருவிளக்கிட்டமைநீணாடறியுமன்றே.† (௨)

பூம்படிமக்கலம்பொற்படிமக்கலமென்றிவற்றுள்
ஆம்படிமக்கலமாகிலுமாரூரினிதமர்ந்தார்
தாம்படிமக்கலம்வேண்டுவரேற்றமிழ்மாலைகளால்
நாம்படிமக்கலஞ்செய்துதொழுது‡ மடநெஞ்சமே. (௩)

துடிக்கின்றபாம்பரையார்த்துத்துளங்காமதியணிந்து
முடித்தொண்டராகிமுனிவர்பணிசெய்வதேயுமன்றிப்
பொடிக்கொண்டுபூசிப்புகுந்தொண்டர்பாதம்பொறுத்தபொற்பால்
அடித்தொண்டனந்தியென்பானுளனாரூரமுதினுக்கே. (௪)

கரும்புபிடித்தவர்காயப்பட்டாரங்கோர்கோடலியால்
இரும்புபிடித்தவரின்புறப்பட்டாரிவர்கணிற்க
அரும்பவிழ்தண்பொழில்சூழணியாரூரமர்ந்தபெம்மான்
விரும்புமனத்தினையாதொன்றுநானுன்னைவேண்டுவனே.¶ (௫)

* பாரூர்பரப்ப என்றும் பாடம். † இத்திருப்பாட்டினால் நமிநந்தியடிகணாயனாரையும் அவர்செய்த திருத்தொண்டினையுஞ் சிறப்பித்துக் கூறியருளினார்; பின்னருமங்ஙனம் கூறியருளுதல் காண்க. நந்தி—நமிநந்தியடிகணாயனார். ‡ தொழுதுப் என்றும் பாடம்; இப்பாடத்திற்கு ஆம்படிமக்கலமெனப் பிரிக்க. ¶ யாதொன்றுநானுன்னை வேண்டுவதே என்றும் பாடம்.

Koviloor Digital Library

கொடிகொள்விதானங்கவரிபறைசங்கங்கைவிளக்கோ
டிடிவில்பெருஞ்செல்வமெய்துவரெய்திபுமுனமில்லா
அடிகளுமாரூரகத்தினராயிறுமந்தவளப்
பொடிகொண்டணிவார்க்கிருளொக்குநந்திபுறப்படிலே. (௯)

சங்கொலிப்பித்திடுமின்சிறுகாலைத்தடவழலில்
குங்குலியப்புகைக்கூட்டென்றுங்காட்டியிருபதுதோள்
அங்குலம்வைத்தவன்செங்குருதிப்புனலோடவஞ்ஞான்
றங்குலிவைத்தானடித்தாமரையென்னையாண்டனவே. * (௧௦)

திருச்சிற்றம்பலம்.

சோழமண்டலத்திலே, எமம்பேறூரிலே, பிராமணகுலத்திலே பரமசிவனுடைய திருவடிகளை மிகுந்த அன்போடும் ஒழியாதே அகோராத்திரம் வழிபடுதலே இன்பமெனக்கொண்ட நமிநந்தியடிகள் என்பவர் ஒருவர் இருந்தார்.

அவர் பலநாளுந் திருவாரூருக்குப் போய் வன்மீகநாதரை வணங்கினர். ஒருநாள் வணங்கிக்கொண்டு, புறப்பட்டுத் திருமுன்றிலை அடைந்து, பக்கத்தில் இருக்கின்ற அரநெறி என்னும் ஆலயத்துட்புகுந்து, சுவாமியை நமஸ்கரித்து, அங்கே செய்யவேண்டிய பலதொண்டுகளைச் செய்து, இரவிலே அங்கே எண்ணில்லாத தீபமேற்றுதற்கு விரும்பி, எழுந்தார். எழுந்தபொழுது, மாலைக்கால மாதலைக் கண்டு, அப்பாற் செல்லிற் பொழுது செல்லும் என்று நினைந்து, சமீபத்திலே ஓர் வீட்டில், அது சமணர்வீடென்று அறியாமையினாலே, புகுந்து, "சிவாலயத்தில் விளக்கேற்றுதற்கு நெய்தாருங்கள்" என்று கேட்டார். அதற்கு அவர்கள் "கையிலே சுவாலிக்கின்ற அக்கினியையுடைய பரமசிவனுக்கு விளக்கு மிகையன்றோ? இங்கே நெய்யில்லை. விளக்கெரிப்பீராகில், நீரைமுகந்து எரியும்" என்றார்கள். நமிநந்தியடிகளுயனர் அந்தச்சொல்லைப் பொறாதவராகி, அப்பொழுதே மிகுந்த மனவருத்தத்தோடு திரும்பிப்போய், சுவாமி சந்நிதானத்திலே விழுந்து நமஸ்கரித்தார். அப்பொழுது ஆகாயத்திலே "நமிநந்தியே" நீ உன்னுடைய கவலையை நீக்கு. இதற்குச் சமீபத்தில் இருக்கின்ற குளத்தில் நீரை முகந்து கொண்டுவந்து விளக்கேற்று" என்று ஒரு அசரீரிவாக்குத் தோன்றிற்று. நமிநந்தியடிகளுயனர் அதைக்கேட்டு, மனமகிழ்ந்து திருவருளை வியந்துகொண்டு எழுந்து போய், குளத்தில் இறங்கி, சிவநாமத்தை உச்சரித்து, நீரை முகந்துகொண்டு, திருக்கோயிலிலேவந்து, அகலிலே முறுக்கிய திரியின்மேலே அந்நீரைவார்த்து, விளக்கேற்றினார். அது சுடர்விட்டெழுந்தது. அது கண்டு, அவ்வாலயம் முழுதிலும் சமணர்களெதிரே மிகுந்த களிப்புடனே நாடறிய நீரினாலே திருவிளக்கெரித்தார். திருவிளக்கு விடியுமளவும் நின்று எரியும்படி, குறைகின்ற தகழிகளுக்கெல்லாம் நீர்வார்த்து, இரவிலே தானே தம்முடைய ஊருக்குப் போய், சிவார்ச்சனைபண்ணி, திருவமுதுசெய்து நித்திரைகொள்வார், உதயகாலத்திலே பூசையை முடித்துக்கொண்டு, திருவாரூரை அடைந்து, அரநெறி என்னும் ஆலயத்திற் சென்று, சுவாமிதரிசனம்பண்ணி, பகன்முழுதினும் திருத்தொண்டுகள் செய்து, இரவிலே எங்கும் விளக்கேற்றுவார்.

இப்படி நிகழுங்காலத்திலே, தண்டியடிகளாலே சமணர்கள் கலக்கம் விளைந்து நாசமடைய; திருவாரூர் பெருமையடைந்து விளங்கியது, சோழமகாராஜா, நமிநந்தியடிகளுயனரே அத்தியக்ஷராக, வன்மீகநாதருக்கு வேண்டும் நிபந்தங்கள் பலவற்றையும் வேதாகமவிதி விளங்க அமைத்தார். நமிநந்தியடிகள் வீதிவிடங்கப் பெருமானுக்குப் பங்குனி

* இத்திருப்பதிகத்தில் எ, அ, ௯ இச்செய்யுள்கள் மறைந்து போயின.

Koviloor Digital Library

மாதத்திலே மகோற்சவம் நடத்துவித்தார். நடத்துவிக்கும்பொழுது, சுவாமி ஒருநாள் திருமணலிக்கு எழுந்தருள; சகலசாதியார்களும் ஒருங்கு சேவித்துப் போனார்கள். நமிநந்தியடிகளாயனாரும் சேவித்துப் போய், அங்கே சுவாமியுடைய திருவோலக்கத்தைக் கண்டு களிப்படைந்தார். பொழுதுபட, சுவாமி திரும்பித் திருக்கோயிலிலே புக, நமிநந்தியடிகள் வணங்கிக்கொண்டு, தம்முடைய ஊரை அடைந்து, வீட்டினுள்ளே புகாமல் புறக்கடையிலே படுக்க, மனைவியார் வந்து, "உள்ளே எழுந்தருளிச் சிவார்ச்சனையையும் அக்கினிகாரியத்தையும் முடித்துக்கொண்டு பள்ளிகொள்ளும்" என்றார். நமிநந்தியடிகள் "இன்றைக்குச் சுவாமி திருமணலிக்கு எழுந்தருளியபோது நானும் சேவித்துப்போனேன். சகல சாதியும் கலந்துவந்தபடியால், தீட்டுண்டாயிற்று. ஆதலால் ஸ்நானம்பண்ணிப் பிராயச்சித்தஞ் செய்துகொண்டே உள்ளே புகுந்து சிவார்ச்சனையைத் தொடங்கல் வேண்டும். அதற்கு நீ ஜலமுதலாயின கொண்டுவா" என்று சொல்ல; மனைவியாரும் கொண்டுவரும்பொருட்டு விரைந்துசென்றார். அப்பொழுது நமிநந்தியடிகளாயனார் சிறிது உறக்கம் வர, நித்திரை செய்தார். செய்யும்பொழுது, வீதிவிடங்கப்பெருமாள் அவருக்குச் சொப்பனத்திலேதோன்றி, "திருவாரூரிலே பிறந்தவர்களெல்லாரும் நம்முடைய கணங்கள். அதை நீ காண்பாய்" என்று சொல்லி மறைந்தருளினார். நமிநந்தியடிகளாயனார் விழித்தெழுந்து, தாம் நினைந்தது, குற்றமென்று கருதி, எழுந்தபடியே சிவார்ச்சனையை முடித்து, மனைவியாருக்கு நிகழ்ந்ததைச் சொல்லி, விடிந்தபின் திருவாரூருக்குப் போனார். போனபொழுது, அந்தத் திருப்பதியிலே பிறந்தவர்களெல்லாரும் சிவசாரூப்பியமுள்ளவர்களாய்ப் பிரகாசிக்கக் கண்டு, பூமியிலே விழுந்து நமஸ்கரித்து, அவர்கள் அவ்வுருவம் நீங்கி முன்போலாயினமையையுங்கண்டு, "அடியேன் செய்த குற்றத்தைப்பொறுத்தருளும்" என்று சுவாமியைப் பிரார்த்தித்தார்.

பின்பு திருவாரூரிலேதானே குடிபுகுந்து, தம்முடைய திருத்தொண்டுகளைச் செய்துகொண்டிருந்தார். நெடுங்காலம் சிவனடியார்களுக்கு நியதியாக வேண்டுவன எல்லாவற்றையும் செய்துகொண் டிருந்தமையால், தொண்டர்களுக்கு ஆணிப்பொன் என்று, திருநாவுக்கரசுநாயனாராலே, தேவாரப்பதிகத்திலே சிறப்பித்துப் பாடப்பட்டார். இவர் இந்தப்பிரகாரம் சமஸ்தலோகங்களும் தொழும்படி திருப்பணிகளைச் செய்துகொண்டிருந்து, சிவபதத்தை அடைந்தார்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

எப்போதும்மிறையும்மறவாதுநீர்
முப்போதும்பிரமன்றொழுநின்றவன்
செப்* போதும்பொனின்மேனிச்சிவனவன்
அப்போதைக்கஞ்சலென்னுமாரூரனே. (௧)

சடையின்மேலுமோர்தையலைவைத்தவர் †
அடைகிலாவரவைப்பரையார்த்தவர்
படையினேர்தடங்கண்ணுமைபாகமா
அடைவர்போலிடைகொடாரூரரே. (௨)

* செ - குறுக்கல்விகாரம்; சேப்போதும் சிவனவனென்க. † தையலைத்தைவர என்றும் பாடம்; தைவருதலைத் தையலோடும் அரவோடும் கூட்டுக; சடையின்மேல் ஓர் தையலையும் அரையின்மேல் அரவையும் ஆர்த்தவர் என்க; ஆர்த்தல் - கட்டுதல்; தையலென்றது கங்கையையாதலின் ஆர்த்தல்வினை அதற்குமேற்குமாறுகாண்க.

Koviloor Digital Library

விண்டவெண்டலையேகலனாகவே
கொண்டகம்பலிதேருங்குழகனார்
துண்டவெண்பிறைவைத்தவிறையவர் *
அண்டவாணர்க்கருளுமாரூரே. (௩)

விடையுமேறுவர்வெண்டலையிற்பலி
கடைகடோறுந்திரியுமெங்கண்ணுதல்
உடையுஞ்சீரையுறைவதுகாட்டிடை
அடைவர்போலரங்காகவாரூரே. (௪)

துளக்கைவேழத்துரியுடல்போர்த்தவர்
வளைக்கையாளையோர்பாகமகிழ்வெய்தித்
திளைக்குந்திங்கட்சடையிற்றிசை † முழு
தளக்குஞ்சிந்தையர்போலுமாரூரே. (௫)

பண்ணினின்மொழியாளையோர்பாகமா
விண்ணினார்விளங்குமதிசூடியே
சுண்ணநீறுமெய்ப்பூசிச்சுடலையின்
அண்ணியாடுவர்போலுமாரூரே. (௬)

மட்டுவார்குழலாளொடுமால்விடை
இட்டமாவுகந்தேறுமிறைவனார்
கட்டுவாங்கங்கனன்மழுமான்றனோ ‡
டட்டமாம்புயமாகுமாரூரே. (௭)

தேய்ந்ததிங்கட் ¶ கமழ்சடையன்கனல்
ஏந்தியெல்லியுளாடுமிறைவனார்
காய்ந்துகாமனைநோக்கினகண்ணினார்
ஆய்ந்தநான்மறையோதுமாரூரே. (௮)

உண்டுநஞ்சுகண்டத்துளடக்கியங்
கிண்டைசெஞ்சடைவைத்தவியல்பினான்
கொண்டகோவணவாடையன்கூரெரி
அண்டவாணரடையுமாரூரே. (௯)

மாலுநான்முகனுமறிகிற்கிலார்
காலனாயவவனைக்கடந்திட்டுச்
சூலமான்மறி § யேந்தியகையினார்
ஆலமுண்டழகாயவாரூரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

* விடையவர் என்றும் பாடம். † சடையுட்டிசை என்றும் பாடம். ‡ மழுவாளினோ என்றும் பாடம். ¶ தோய்ந்ததிங்கட் என்றும் பாடம். § சூலமான்மழு என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

கொக்கரைகுழல்வீணைகொடுகொட்டி
பக்கமேபகுவாயனபூதங்கள்
ஒக்கவாடலுகந்துடன்கூத்தராய்*
அக்கினோடரவார்ப்பராரூரரே. (க)

எந்தமாதவஞ்செய்தனைநெஞ்சமே
பந்தம்விடவையாயபராபரன்
அந்தமில்புகழாரூரனெறி
சிந்தையுள்ளுஞ்சிரத்துளுந்தங்கவே. (உ)

வண்டுலாமலர்கொண்டுவளர்சடைக்
கிண்டைமாலைபுனைந்துமிராப்பகல்
தொண்டராகித்தொடர்ந்துவிடாதவர்க்
கண்டமாளவும்வைப்பராரூரரே. (ங)

துன்பெலாமறநீங்கிச்சுபத்தராய்
என்பெலாநெக்கிராப்பகலேத்திநின்
றின்பராய்நினைந்தென்றுமிடையறு
அன்பராமவர்க்கன்பராரூரரே. (ச)

முருட்டுமெத்தை † யின்முன்கிடத்தாமுனம்
அரட்டரைவரையாசறுத்திட்டுநீர்
முரட்டடித்தவத்தக்கன்றன்வேள்வியை
அரட்டடக்கிதனாரூரடைமினே. (ரு)

எம்மைபாரிலையாளுமுளேனலேன்
எம்மையாருமிதுசெயவல்லரே
அம்மையாரெனக்கென்றென்றாற்றினேற்
கம்மையாரைத்தந்தா ‡ ராரூரையரே. (சு)

தண்டவாளியைத்தக்கன்றன்வேள்வியைச்
செண்டதாடியதேவரகண்டனைக் ¶
கண்டுகண்டிவள்காதலித்தன்பதாய்க்
கொண்டியாயினவாறென்றன்கோதையே. (எ)

இவணமைப்பலபேசத்தொடங்கினாள்
அவண § மன்றெனிலாரூரனெனும்
பவனிவீதிவிடங்கனைக்கண்டிவள்
தவனியாயினவாறென்றன்றையலே. (அ)

* லுகந்துமன்கூத்தராய் என்றும் பாடம். † முருட்டுமெத்தை - விறகுமெத்தை; முருடு - விறகு. ‡ அம்மையாரத்தந்தார் என்றும் பாடம்; ¶ தேவர்கள்கண்டனை என்றும் பாடம்; கண்டன் - கண்டித்தவன், தண்டித்தவன். § அவ்வண்ணம் - தொகுத்தல்.

Koviloor Digital Library

நீரைச்செஞ்சடைவைத்தநிமலனார்
காரொத்தமிடற்றர்கனல்வாயரா
ஆரத்தருறையும்மணியாரூரைத்
தூரத்தேதொழுவார்வினைதூளியே. (கூ)

உள்ளமேயொருறுதி* யுரைப்பனான்
வெள்ளந்தாங்குவிரிசடைவேதியன்
அள்ளனீர்வயலாரூரமர்ந்தவெம்
வள்ளல்சேவடிவாழ்த்திவணங்கிடே. (க0)

விண்டமாமலர்மேலுறைவானொடும்
கொண்டல்வண்ணனுங்கூடியறிகிலா
அண்டவாணன்றனாரூரடிதொழப் †
பண்டைவல்வினைநில்லாபறையுமே. (கக)

மையுலாவியகண்டத்தனண்டத்தன்
கையுலாவியசூலத்தன்கண்ணுதல்
ஐயனாரூரடிதொழுவார்க்கெலாம்
உய்யலாமல்லலொன்றிலைகாண்மினே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

கைம்மானமதகளிற்றினுரிவையான்காண்
கறைக்கண்டன்காண்கண்ணார்நெற்றியான்காண்
அம்மான்காணாடரவொன்றாட்டினான்கா
ணனலாடிகாணயில்வாய்ச்சூலத்தான்காண்
எம்மான்காணேழுலகுமாயினான்கா
ணெரிசுடரோன்காணிலங்குமழுவாளன்காண்
செம்மானத்தொளியன்னமேனியான்காண்
டிருவாரூரான்காணென்சிந்தையானே. (க)

ஊனேறுபடுதலையிலுண்டியான்கா
ணோங்காரன்காணூழிமுதலானான்காண்
ஆனேறொன்றூர்ந்துழலுமையாறன்கா
ணண்டன்காணண்டத்துக்கப்பாலான்காண்
மானேறுகரதலத்தெம்மணிகண்டன்காண்
மாதவன்காண்மாதவத்தின்விளைவானான்காண்
தேனேறுமலர்க்கொன்றைக்கண்ணியான்காண்
டிருவாரூரான்காணென்சிந்தையானே. (உ)

* யொன்றுறுதி என்றும் பாடம். † ஆரூரண்டவாணனடிதொழ எனமாற்றிப் பொருள் கொள்க; அண்டவாணன்றன் ஆரூரையும் அவன்றனடியையுந் தொழ என்றலுமாம்.

Koviloor Digital Library

ஏவணத்தசிலையான்முப்புரமெய்தான்கா
ணிறையவன்காண்மறையவன்காணீசன்றான்காண்
தூவணத்தசுடர்ச்சூலப்படையினான்காண்
சுடர்மூன்றுங்கண்மூன்றாக்கொண்டான்றான்காண்
ஆவணத்தாலென்றன்னையாட்கொண்டான்கா
ணனலாடிகாணடியார்க்கமிர்தானான்காண்
தீவணத்ததிருவுருவிற்கரியுருவன்காண்
டிருவாரூரான்காணென்சிந்தையானே. (௩)

கொங்குவார்மலர்க்கண்ணிக்குற்றாலன்காண்
கொடுமழுவன்காண்கொல்லைவெள்ளேற்றான்காண்
எங்கள்பாற்றுயர்கெடுக்குமெம்பிரான்கா
ணேழ்கடலுமேழ்மலையுமாயினான்காண்
பொங்குமாகருங்கடனஞ்சுண்டான்* றான்காண்
பொற்றூண்காண்செம்பவளத்திரள்போல்வான்காண்
செங்கண்வாளராமதியோடுடன்† வைத்தான்காண்
டிருவாரூரான்காணென்சிந்தையானே. (௪)

காரேறுநெடுங்குடுமிக்கயிலாயன்காண்
கறைக்கண்டன்காண்கண்ணார்நெற்றியான்காண்
போரேறுநெடுங்கொடிமேலுயர்த்தினான்காண்
புண்ணியன்காணெண்ணரும்பல்குணத்தினான்காண்
நீரேறுசுடர்ச்சூலப்படையினான்கா
ணின்மலன்காணிகரேதுமில்லாதான்காண்‡
சீரேறுதிருமாலோர்பாகத்தான்காண்
டிருவாரூரான்காணென்சிந்தையானே. (௫)

பிறைபரவக்குறுங்கண்ணிச்சடையினான்காண்
பிறப்பிலிகாண்பெண்ணோடாணாயினான்காண்
கறையுருவமணிமிடற்றுவெண்ணீற்றான்காண்
கழறொழுவார்பிறப்பறுக்குங்காபாலிகாண்
இறையுருவக்கனவளையாளிடப்பாகன்கா
ணிருநிலன்காணிருநிலத்துக்கியல்பானான்காண்
சிறையுருவக்களிவண்டார்செம்மையான்காண்
டிருவாரூரான்காணென்சிந்தையானே. (௬)

தலையுருவச்சிரமாலை¶ சூடினான்காண்
டமருலகந்தலைகலனாப்பலிகொள்வான்காண்
அலையுருவச்சுடராழியாக்கினான்கா
ணவ்வாழிநெடுமாலுக்கருளினான்காண்
கொலையுருவக்கூற்றுதைத்தகொள்கையான்காண்
கூரெரிநீர்மண்ணொடுகாற்றாயினான்காண்
சிலையுருவச்சரந்துரந்ததிறத்தினான்காண்
டிருவாரூரான்காணென்சிந்தையானே. (௭)

* பொங்குமாகடனஞ்சமுண்டான் என்றும் பாடம். † ளரவமதியுடன் என்றும் பாடம்.
‡ மில்லான்றான்காண் என்றும் பாடம். ¶ சிராமாலை என்றும் பாடம்.

Koviloor Digital Library

ஐயன்காண்குமரன்காணாதியான்கா
ணடன்மழுவாடானொன்றுபியன்மேலேந்து
கையன்காண்கடற்பூதப்படையினான்காண்
கண்ணெரியாலைங்கணையோனுடல்காய்ந்தான்காண்
வெய்யன்காண்டண்புனல்சூழ்செஞ்சடையான்காண்
வெண்ணீற்றான்காண்விசயற்கருள்செய்தான்காண்
செய்யன்காண்கரியன்காண்வெளியோன்றான்காண்
டிருவாரூரான்காணென்சிந்தையானே. (அ)

மலைவளர்த்தமடமங்கைபாகத்தான்காண்
மயானத்தான்காண்மதியஞ்சூடினான்காண்
இலைவளர்த்தமலர்க்கொன்றைமாலையான்கா
ணிறையவன்காணெறிதிரைநீர்நஞ்சுண்டான்காண்
கொலைவளர்த்தமூவிலையசூலத்தான்காண்
கொடுங்குன்றன்காண்கொல்லையேற்றினான்காண்
சிலைவளர்த்தசரந்துரந்ததிறத்தினான்காண்
டிருவாரூரான்காணென்சிந்தையானே. (கூ)

பொற்றாதுமலர்க்கொன்றைசூடினான்காண்
புரிநூலன்காண்பொடியார்மேனியான்காண்
மற்றாருந்தன்னொப்பாரில்லாதான்காண்
மறையோதிகாணெறிநீர்நஞ்சுண்டான்காண்
எற்றாலுங்குறைவொன்றுமில்லாதான்கா
ணிறையவன்காண்மறையவன்காணீசன்றான்காண்
செற்றார்கள்புரமூன்றுஞ்செற்றான்றான்காண்
டிருவாரூரான்காணென்சிந்தையானே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

உயிராவணமிருந்துற்றுநோக்கி
யுள்ளக்கிழியினுருவெழுதி *
உயிராவணஞ்செய்திட்டுன்கைத்தந்தா
லுணரப்படுவாரோடொட்டிவாழ்தி
அயிராவணமேறாதானேறேறி
யமரர்நாடாளாதேயாரூராண்ட
அயிராவணமேயென்னம்மானேநின்
னருட்கண்ணானோக்காதாரல்லாதாரே. (க)

எழுதுகொடியிடையாரேழைமென்றோ
ளிளையார் † கணம்மையிகழாமுன்னம்
பழுதுபடநினையேல்பாவிநெஞ்சே
பண்டுதானென்னோடுபகைதானுண்டோ

* கிழியிலுருவெழுதி என்றும் பாடம். † இளையார்-பெண்கள்; ளிளையவர்கணம்மை என்றும் பாடம்.

Koviloor Digital Library

முழுதுலகில்வானவர்கள்முற்றுங்கூடி
　　முடியாலுறவணங்கிமுற்றம்பற்றி *
அழுதுதிருவடிக்கேபூசைசெய்ய
　　விருக்கின்றாரார்போலுமாரூர்தாமே. (௨)

நேருரார்மாவூரார்திங்களூரார்
　　திகழ்புன்சடைமுடிமேற்றிங்கள்சூடிக்
காரூராகின்றகழனிச்சாயற்
　　கண்ணார்ந்தநெடுமாடங்கலந்துதோன்றும்
ஓரூராவுலகேலாமொப்பக்கூடி
　　யுமைபாண்மணவாளாவென்றுவாழ்த்தி
ஆரூராவாரூராவென்கின்றார்க
　　ளமரர்கடம்பெருமானேயெங்குற்றாயே. (௩)

கோவணமோதோலோவுடையாவது
　　கொல்லேறோவேழமோவூர்வதுதான்
பூவணமோபுறம்பயமோவன்றாயிற்றான்
　　பொருந்தாதார்வாழ்க்கைதிருந்தாமையோ
தீவணத்தசெஞ்சடைமேற்றிங்கள்சூடித்
　　திசைநான்கும்வைத்துகந்தசெந்தீவண்ணர்
ஆவணமோவொற்றியோவம்மானார்தா
　　மறியேன்மற்றூராமாறாரூர்தானே. (௪)

எந்தமழுவாளரின்னம்பரா
　　ரெரிபவளவண்ணர்குடமூக்கிலார்
வாய்ந்தவளைக்கையாள்பாகமாக
　　வார்சடையார்வந்துவலஞ்சுழியார்
போந்தாரடிகள்புறம்பயத்தே
　　புகலூர்க்கேபோயினார்போரேறேறி
ஆய்ந்தேயிருப்பார்போயாரூர்புக்கா
　　ரண்ணலார்செய்கின்றகண்மாயமே. (௫)

கருவாகிக்குழம்பிருந்துகலித்துமூளை †
　　கருநரம்புமெல்லெலும்புஞ்சேர்ந்தொன்றாகி ‡
உருவாகிப்புறப்பட்டிங்கொருத்திதன்னால்
　　வளர்க்கப்பட்டுயிராருங்கடைபோகாரால்
மருவாகிநின்னடியேமறவேனம்மான் ¶
　　மறித்தொருகாற்பிறப்புண்டேன்மறவாவண்ணம்
திருவாரூர்மணவாளாதிருத்தெங்கூராய்
　　செம்பொனேகம்பனேநினைந்திட்டேனே. (௬)

முன்னமவனுடையநாமங்கேட்டாள்
　　மூர்த்தியவனிருக்கும்வண்ணங்கேட்டாள்
பின்னையவனுடையவாரூர்கேட்டாள்
　　பெயர்த்தும்§அவனுக்கேபிச்சியானாள்

* முற்றப்பற்றி என்றும் பாடம். † மூளைக் என்றும் பாடம். ‡ செறிந்தொன்றாகி என்றும் பாடம். ¶ மறவேனெம்மான் என்றும் பாடம். § பேர்த்தும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

அன்னையையுமத்தனையுமன்றேநீத்தா
ளகன்றாளகலிடத்தாராசாரத்தைத்
தன்னைமறந்தாடன்னாமங்கெட்டா
டலைப்பட்டாணங்கைதலைவன்றாளே. (௭)

ஆடுவாய்நீநட்டமளவிற்குன்றா
வவியடுவாருமறையோரறிந்தேனுன்னைப்
பாடுவார்தும்புருவுநாரதாதி
பரவுவாரமரர்களுமமரர்கோனும்
தேடுவார் * திருமாலுநான்முகனுந்
தீண்டுவார் † மலைமகளுங்கங்கையாளும்
கூடுமே ‡ நாயடியேன்செய்குற்றேவல்
குறையுண்டே ¶ திருவாரூர்குடிகொண்டீர்க்கே. (௮)

நீருருஞ்செஞ்சடையாய்நெற்றிக்கண்ணாய்
நிலாத்திங்கட்டுண்டத்தாய்நின்னைத்தேடி
ஓரூருமொழியாமேயொற்றித்தெங்கு
முலகமெலாந்திரிதந்தாநின்னைக்காண்பான்
தேரூருநெடுவீதிபற்றிநின்று
திருமாலுநான்முகனுந்தேர்ந்துங்காணா
தாரூராவாரூராவென்கின்றார்க
ளமரர்கடம்பெருமானேயாரூராயே. (௯)

நல்லூரேநன்றாகநட்டமிட்டு
நரையேற்றைப்பழையாறேபாயவேறிப்
பல்லூரும்பலிதிரிந்துசேற்றூர்மீதே
பலர்காணத்தலையாலங்காட்டினூடே
இல்லார்ந்தபெருவேளூர்த்தளியேபேணி
யிராப்பட்டீச்சரங்கடந்துமணற்கால்புக்கு
எல்லாருந்தளிச்சாத்தங்குடி § யிற்காண
விறைப்பொழுதிற்றிருவாரூர்புக்கார்தாமே. (௧௦)

கருத்துத்திக்கதநாகங்கையிலேந்திக்
கருவரைபோற்களியானைகதறக்கையால்
உரித்தெடுத்துச்சிவந்ததன்றோல்பொருந்தமூடி
யுமையவளையச்சுறுத்துமொளிகொண்மேனித்
திருத்துருத்திதிருப்பழனந்திருநெய்த்தானந்
திருவையாறிடங்கொண்டசெல்வரிந்நாள்
அரிப்பெருத்தவெள்ளேற்றை 0 யடரவேறி
யப்பனாரிப்பருவமாரூராரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

* தேடுவான் என்றும் பாடம். † தீண்டுவாண் என்றும் பாடம். ‡ கூடுமோ என்றும் பாடம். ¶ குறையுண்டோ என்றும் பாடம். § தனிச்சாத்தங்குடி என்றும் பாடம். 0 அரியாகிய ஏறு என்க; அரி - விட்டுணு; திணவுபொருந்திய எருத்தத்தையுடைய ஏறுமாம்.

Koviloor Digital Library

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

பாதித்தன்றிருவுருவிற்பெண்கொண்டானைப்
பண்டொருகாற்றசமுகனையழுவித்தானை*
வாதித்துத்தடமலரான்சிரங்கொண்டானை
வன்கருப்புச்சிலைக்† காமனுடலட்டானைச்‡
சோதிச்சந்திரன்மேனிமறுச்செய்தானைச்
சுடராங்கிதேவனை¶ யோர்கைக்கொண்டானை
ஆதித்தன்பற்கொண்டவம்மான்றன்னை
யாரூரிற்கண்டடியேனயர்த்தவாறே. (௧)

வெற்புறுத்ததிருவடியாற்கூற்றட்டானை
விளக்கினொளிமின்னினொளிமுத்தின்சோதி
ஒப்புறுத்ததிருவுருவத்தொருவன்றன்னை
யோதாதேவேதமுணர்ந்தான்றன்னை
அப்புறுத்தகடனஞ்சமுண்டான்றன்னை
யமுதுண்டாருலந்தாலுமுலவாதானை
அப்புறுத்தநிரகத்தேயழலானானை
யாரூரிற்கண்டடியேனயர்த்தவாறே. (௨)

ஒருகாலத்தொருதேவர்கண்கொண்டானை
யூழிதோறூழியுயர்ந்தான்றன்னை
வருகாலஞ்செல்காலமாயினானை
வன்கருப்புச்சிலைக்† காமனுடலட்டானைப்
பொருவேழக்களிற்றுரிவைப்போர்வையானைப்
புள்ளரையனுடறன்னைப்பொடிசெய்தானை
அருவேள்விதகர்த்தெச்சன்றலைகொண்டானை
யாரூரிற்கண்டடியேனயர்த்தவாறே. (௩)

மெய்ப்பால்வெண்ணீறணிந்தமேனியானை
வெண்பளிங்கினுட்பதித்த§ சோதியானை
ஒப்பானையொப்பிலாவொருவன்றன்னை
யுத்தமனைநித்திலத்தையுலகமெல்லாம்
வைப்பானைக்களைவானைவருவிப்பானை
வல்வினையேன்மனத்தகத்தேமன்னினானை
அப்பாலைக்கப்பாலைக்கப்பாலானை
யாரூரிற்கண்டடியேனயர்த்தவாறே. (௪)

பிண்டத்திற்பிறந்ததொருபொருளைமற்றைப்
பிண்டத்தைப்படைத்ததனைப்o பெரியவேதத்
துண்டத்திற்றுணிபொருளைச்சுடர்தியாகிச்
சுழல்காலாய்நீராகிப்பாராயிற்றைக்

* யழிவித்தானை என்றும் பாடம். †† வன்கருப்புச்சிலை என்றும் பாடம். ‡ னுடல் கொண்டானை என்றும் பாடம். ¶ சுடராங்கித்தேவனை என்றும் பாடம். § னுடல்பதித்த என்றும் பாடம். o பிண்டத்தைப்படைத்தானை என்றும் பாடம்.

Koviloor Digital Library

கண்டத்திற்றீதினஞ்சமுதுசெய்து *
கண்மூன்றுபடைத்ததொருகரும்பைப்பாலை
அண்டத்துக்கப்புறத்தார்தமக்குவித்தை
யாரூரிற்கண்டடியேனயர்த்தவாறே. (ரு)

நீதியாய்நிலனாகிநெருப்பாய்நீராய்
நிறைகாலாயிவையிற்றினியமமாகிப்
பாதியாயொன்றாகியிரண்டாய் † மூன்றாய்ப்
பரமாணுவாய்ப்பழுத்தபண்களாகிச்
சோதியாயிருளாகிச்சுவைகளாகிச்
சுவைகலந்தவப்பாலாய்வீடாய்வீட்டின்
ஆதியாயந்தமாய்நின்றான்றன்னை
யாரூரிற்கண்டடியேனயர்த்தவாறே. ‡ (சு)

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

பொய்ம்மாயப்பெருங்கடலிற்புலம்பாநின்ற
புண்ணியங்காடீவினைகாடிருவேவீங்கள்
இம்மாயப்பெருங்கடலையரித்துத்தின்பீர்க்
கில்லையேகிடந்ததுதான்யானேல்வானோர்
தம்மானைத்தலைமகனைத்தண்ணலாரூர்த்
தடங்கடலைத்தொடர்ந்தோரையடங்கச்செய்யும்
எம்மான்றனடித்தொடர்வானுழிதர்கின்றே
னிடையிலேன்கெடுவீர்காளிடறேன்மின்னே. (க)

ஐம்பெருமாபூதங்காளொருவீர்வேண்டிற்
றொருவீர்வேண்டீரீண்டிவ்வவனியெல்லாம்
உம்பரமேயும்வசமேயாக்கவல்லீர்க்
கில்லையேநுகர்போகம் ¶ யானேல்வானோர்
உம்பருமாயூழியுமாயுலகேழாகி
யொள்ளாரூர்நள்ளமிர்தாம்வள்ளல்வானோர்
தம்பெருமானாய்நின்றவரனைக்காண்பேன்
றடைப்படுவேனாக்கருதித்தருக்கேன்மின்னே. (உ)

சில்லுருவிற்குறியிருத்திநித்தல்பற்றிச்
செழுங்கணாநோக்குமிதுவூக்கமன்று
பல்லுருவிற்றொழில்பூண்டபஞ்சபூதப்
பளகீரும்வசமன்றேபாரேலெல்லாம் §
சொல்லுருவிற்சுடர்மூன்றாயுருவமூன்றாய்த்
தூநயனமூன்றாகியாண்டவாரூர்
நல்லுருவிற்சிவனடியேயடைவேனும்மா
னமைப்புண்ணேன்கமைத்துநீர்நடமின்களே. (௩)

* தேவர்க்குத்தீமை இல்லையாக நஞ்சை அமுதசெய்து; தீதினையுடைய நஞ்சுமாம்; தீதுநஞ்சு என்றும் பாடம். † யொன்றடுக்கியிரண்டாய் என்றும், யொன்றொடுக்கியிரண் டாய் என்றும் பாடம். ‡ இத்திருப்பதிகத்தில் எ, அ, க, க0 இச்செய்யுட்கள் மறைந்து போயின. ¶ கில்லையேனுகர்போகம் என்றும் பாடம். § பாகரெல்லாம் என்றும் பாடம்.

Koviloor Digital Library

உன்னுருவிற்சுவையொளியூறோசைநாற்றத்
துறுப்பினதுகுறிப்பாகுமைவீர்* நுங்கள்
மன்னுருவத்தியற்கைகளால்வைப்பீர்க்கையோ
வையகமேபோதாதேயானேல்வானோர்
பொன்னுருவைத்தென்னாரூர்† மன்னுகுன்றைப்
புலிக்கெழிலாஞ்சிவக்கொழுந்தைப்புகுந்தென்சிந்தை
தன்னுருவைத்தந்தவனையெந்தைதன்னைத்
தலைப்படுவேன்றலைப்படுப்பான்றருக்கேன்மின்னே. (௪)

துப்பினைமுன்பற்றறுவிறலேமிக்க
சோர்வுபடுசூட்சியமேசுகமேநீங்கள்
ஒப்பினையைப்‡ பாவித்திவ்வுலகமெல்லா
முழுதுமிதுகுறைமுடிப்பீர்க்கரிதேயென்றன்
வைப்பினைப்பொன்மதிலாரூர்மணியைவைகன்
மணாளனையெம்பெருமானைவானோர்தங்கள்
அப்பனைச்செப்பிடவடைவே¶ னும்மாலு
மாட்டேனோட்டந்திங்கலையேன்மின்னே. (௫)

பொங்குமதமானமேயார்வச்செற்றக்
குரோதமேயுலோபமேபொறையேநீங்கள்
உங்கள்பெருமாநிலத்தினெல்லையெல்லா
முழுதுமிது§ குறைமுடிப்பீர்க்கரிதேயானேல்
அங்கமலத்தயனொடுமாலாகிமற்று
மதற்கப்பாலொன்றாகியறியவொண்ணாச்
செங்கனகத்தனிக்குன்றைச்சிவனையாரூர்ச்
செல்வனைச்சேர்வேனும்மாற்செறுத்துணேனே. (௬)

இடர்பாவமெனமிக்கதுக்கவேட்கை0
வெறுப்பேயென்றனைவிருமுலகையோடிக்00
குடைகின்றீர்க்குலகங்கள்குலுங்கிநுங்கள்
குறிநின்றதமையாதேயானேல்வானோர்
அடையார்தம்புரமூன்றுமெரிசெய்தானை
யமரர்கடம்பெருமானையரனையாரூர்
உடையானைக்கடுகச்சென்றடைவேனும்மா
லாட்டேனோட்டந்திங்கலையேன்மின்னே. (௭)

விரைந்தாளுநல்குரவேசெல்வேபொல்லா
வெகுட்சியேமகிழ்ச்சியேவெறுப்பேநீங்கள்
நிரந்தோடி**மாநிலத்தையரித்துத்தின்பீர்க்
கில்லையேநுகர்போகம்††யானேல்வானோர்
கரந்தோடவருநஞ்சையமுதுசெய்த
கற்பகத்தைத்தற்பரத்தைத்திருவாரூரில்
பரஞ்சோதிதனைக்காண்பேன்படேறும்பண்பிற்
பரிந்தோடியோட்டந்துபகட்டேன்மின்னே. (௮)

* குறிப்பாகவுறைவீர் என்றும் பாடம். † பொன்னுருவத்தென்னாரூர் என்றும் பாடம். ‡ ஒப்பினையைப் என்றும் பாடம். ¶ செப்படைவடைவேன் என்றும், செப்படவடைவேன் என்றும் பாடம் § முழுதுமது என்றும் பாடம். 0 துட்கவேட்கை என்றும் பாடம். 00 றனைவிரிவ்வுலகையோடி என்றும், றனைவிரில்வுலகையோடி என்றும் பாடம். ** நிரைந்தோடி என்றும் பாடம். †† இல்லையேனுகர்போகம் என்றும் பாடம்.

Koviloor Digital Library

மூள்வாயதொழிற்பஞ்சேந்திரியவஞ்ச
முகரிகாண்முழுதுமிவ்வுலகையோடி
நாள்வாயுநம்முடைய * மம்மானை
நடாத்துகின்றீர்க்கமையாதேயானேல்வானோர்
நீள்வானமுகடதனைத்தாங்கிநின்ற
நெடுந்தூணைப்பாதாளக்கருவையாரூர்
ஆள்வானைக்கடுகச்சென்றடைவேனும்மா
லாட்டுணேனோட்டந்தீங்கலையேன்மின்னே. (கூ)

சுருக்கமொடுபெருக்கநிலைநித்தல்பற்றித் †
துப்பறையென்றனைவீ ‡ ரிவ்வுலகையோடிச்
செருக்கிமிகைசெலுத்தியுமசெய்கைவைகல்
செய்கின்றீர்க்கமையாதேயானேன்மிக்க
தருக்கிமிகவரையெடுத்தவரக்கனகந்
தளரவடியெடுத்தவன்றன்பாடல்கேட்டு
இரக்கமெழுந்தருளியவெம்பெருமான்பாதத்
திடையிலேன்கெடுவீர்காளிடறேன்மின்னே. (கய)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனர் திருப்புகலூரிலே தினந்தோறும் சுவாமிதரிசனம் பண்ணி, திருமுன்றிலிலே கைத்தொண்டு செய்துகொண்டிருந்தார். இருக்குநாட்களிலே, நின்ற திருத்தாண்டகம், தனித்திருத்தாண்டகம், க்ஷேத்திரக்கோவை, குறைந்ததிருநேரிசை, தனித்திருநேரிசை, நினைந்தநிருநேரிசை, ஆருயிர்த்திருவிருத்தம், தசபுராணத்தடைவு, பாவநாசத்திருப்பதிகம், சரக்கறைத்திருவிருத்தம், முதலிய திருப்பதிகங்களைப்பாடினர். பரமசிவன் அந்நாயனருடைய வைராக்கியத்தை யாவருக்கும் காட்டுதற்குத் திருவுளங் கொண்டு, அவர் திருமுன்றிலிலே கைத்தொண்டு செய்யும்பொழுது உழைவாரம் நுழை ந்தவிடங்களெங்கும் பொன்னும் நவரத்தினங்களும் பிரகாசித்துக் கிடக்கும்படி அருள் செய்தார். நாயனர் அவைகளைக் கண்டு, அவைகளை அங்கேகிடக்கின்ற பருக்கைக்கற்க ளோடு சமமாக எண்ணி உழைவாரத்தில் ஏந்திக் குளத்திலே விழ எறிந்துவிட்டார்.

பின்பு சிவபிரானுடைய திருவருளினல் அரம்பையர்கள் சுவர்க்கத்தினின்றும் இறங்கிவந்து, நாயனர் திருமுன்னின்று, இசைபாடியும், கூத்தாடியும், அவர்மேற் பூக்க ளைப் பொழிந்தும், அவரை அணைபவர்கள்போலச் சமீபித்தும், அளகம் அவிழ இடை நுடங்க ஓடியும், திரும்பியும், வஸ்திரம் அசையநின்றும் இப்படி அவரை மோகிப்பித் தற்கு யத்தினஞ் செய்தார்கள். செய்தும், சிவபிரானுடைய திருவருளையே முன்னிட்டு ஒழுகுகின்ற வாகீசர் தம்முடைய சித்தநிலை சிறிதும் வேறுபடாதபடி, தாஞ்செய் யுந் திருப்பணியிலே உறுதிகொண்டு இருவினை முதலியவைகளை முன்னிலைப்படுத்தி "நான் திருவாரூரில் எழுந்தருளியிருக்கின்ற பரமசிவனுக்கு ஆளானேன். உங்களாலே நான் ஆட்டுண்ணேன் நீங்கள் என்னை அலையன்மின்" என்றுங் கருத்தால், "பொய்ம் மாயப்பெருங்கடலில்" என்னும் திருத்தாண்டகத்தைப்பாடினர். அரம்பையர்கள் தங் கள் கருத்து முற்ருமையால், அவரை நமஸ்கரித்துக்கொண்டு போய்விட்டார்கள். இந்த நிலைமையைச் சமஸ்தலோகத்தார்களும் அறிந்து துதிக்கலுற்ருர்கள்.

* நாள்வாயிலும்முடைய என்றும் பாடம். † நிலைநிற்றல்பற்றி என்றும் பாடம்.
‡ துப்பாவொன்றனைவீர் என்றும் பாடம்

Koviloor Digital Library

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

நீற்றினையுநெற்றிமேலிட்டார்போலு
நீங்காமேவெள்ளெலும்புபூண்டார்போலும்
காற்றினையுங்கடிதாகநடந்தார்போலுங்
கண்ணின்மேற்கண்ணொன்றுடையார்போலும்
கூற்றினையுங்குரைகழலாலுதைத்தார்போலுங்
கொல்புலித்தோலாடைக்குழகர்போலும்
ஆற்றினையுஞ்செஞ்சடைமேல்வைத்தார்போலு
மணியாரூர்த்திருமூலட்டானனாரே. * (க)

பரியதோர்பாம்பரைமேலார்த்தார்போலும்
பாசுபதம்பார்த்தற்களித்தார்போலும்
கரியதோர்களிற்றுரிவைபோர்த்தார்போலுங்
காபாலங்கட்டங்கக்கொடியார்போலும்
பெரியதோர்மலைவில்லாவெய்தார்போலும்
பேர்நந்தியென்னும்பெயரார்போலும்
அரியதோரரணங்களட்டார்போலு
மணியாரூர்த்திருமூலட்டானனாரே. (௨)

துணியுடையர்தோலுடையரென்பார்போலுந்
தூயதிருமேனிச்செல்வர்போலும்
பிணியுடையவடியாரைத்தீர்ப்பார்போலும்
பேசுவார்க்கெல்லாம்பெரியார்போலும்
மணியுடையமாநாகமார்ப்பார்போலும்
வாசுகிமாநாணாகவைத்தார்போலும்
அணியுடையநெடுவீதிநடப்பார்போலு
மணியாரூர்த்திருமூலட்டானனாரே. (௩)

ஓட்டகத்தேயூணாகவுகந்தார்போலு
மோருருவாய்த்தோன்றியுயர்ந்தார்போலும்
நாட்டகத்தேநடைபலவுநவின்றார்போலு
ஞானப்பெருங்கடற்கோர்நாதர்போலும்
காட்டகத்தேயாடலுடையார்போலுங்
காமரங்கள்பாடித்திரிவார்போலும்
ஆட்டகத்திலானைந்துகந்தார்போலு †
மணியாரூர்த்திருமூலட்டானனாரே. (௪)

ஏனத்திளமருப்புப்பூண்டார்போலு
மிமையவர்களேத்தவிருந்தார்போலும்
கானக்கல்லாற்கீழ்நிழலார்போலுங்
கடனஞ்சமுண்டிருண்டகண்டர்போலும்

* மூலத்தானனாரே என்றும் பாடம். † துகப்பார்போலும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

வானத்திளமதிசேர்சடையார்போலும்
வான்கயிலைவெற்பின்மகிழ்ந்தார்போலும்
ஆனத்துமுன்னெழுத்தாய்நின்றார்போலு
மணியாரூர்த்திருமூலட்டானனாரே. (௫)

காமனையுங்கரியாகக்காய்ந்தார்போலுங்
கடனஞ்சமுண்டிருண்டகண்டர்போலும்
சோமனையுஞ்செஞ்சடைமேல்*வைத்தார்போலுஞ்
சொல்லாகிச்சொற்பொருளாய்நின்றார்போலும்
நாமனையும்வேதத்தார்தாமேபோலு
நங்கையோர்பான்மகிழ்ந்தநம்பர்போலும்†
ஆமனையும்திருமுடியார்தாமேபோலு
மணியாரூர்த்திருமூலட்டானனாரே. (௬)

முடியார்மதியரவம்வைத்தார்போலு
மூவுலகுந்தாமேயாய்நின்றார்போலும்
செடியார்தலைப்பலிகொண்டுழல்வார்போலுஞ்
செல்கதிதான்கண்டசிவனார்போலும்
கடியார்நஞ்சுண்டிருண்டகண்டர்போலுங்
கங்காளவேடக்கருத்தர்போலும்
அடியாரடிமையுகப்பார்போலு
மணியாரூர்த்திருமூலட்டானனாரே. (௭)

இந்திரத்தையினிதாகவீந்தார்போலு
மிமையவர்கள்வந்திறைஞ்சுமிறைவர்போலும்
சுந்தரத்தபொடிதன்னைத்துதைந்தார்போலுந்
தூத்தூயதிருமேனித்தோன்றல்போலும்
மந்திரத்தைமனத்துள்ளேவைத்தார்போலு
மாநாகநாணாக‡வளைத்தார்போலும்
அந்திரத்தே¶யணியாநஞ்சுண்டார்போலு
மணியாரூர்த்திருமூலட்டானனாரே. (௮)

பிண்டத்தைக்காக்கும்பிரானார்போலும்
பிறவியிறவியிலாதார்போலும்
முண்டத்துமுக்கண்ணுடையார்போலு
முழுநீறுபூசுமுதல்வர்போலும்
கண்டத்திறையேகறுத்தார்போலுங்
காளத்திகாரோணமேயார்போலும்
அண்டத்துக்கப்புறமாய்நின்றார்போலு
மணியாரூர்த்திருமூலட்டானனாரே. (௯)

ஒருகாலத்தொன்றாகிநின்றார்போலு
மூழிபலகண்டிருந்தார்போலும்
பெருகாமேவெள்ளந்தவிர்த்தார்போலும்
பிறப்பிடும்பைசாக்காடொன்றில்லார்போலும்

* யுஞ்சடைமுடிமேல் என்றும் பாடம். † நாதர்போலும் என்றும் பாடம். ‡ யாணாகாணாக என்றும் பாடம். ¶ அந்தரத்தே என்றும், அந்திரத்தை என்றும் பாடம்.

Koviloor Digital Library

உருகாதாருள்ளத்துநில்லார்போலு
முகப்பார்தம்மனத்தென்றுங்ங்காார்போலும்
அருகாகவக்தென்னையஞ்சேலென்பா *
ரணியாரூர்த்திருமூலட்டானனாரே. (௧0)

நன்றாகநடைபலவுநவின்றார்போலு
ஞானப்பெருங்கடற்கோர்நாதர்போலும்
கொன்றாகிக்கொன்றதொன்றுண்டார்போலுங்
கோளரக்கர்கோன்றலைகள்குறைத்தார்போலும்
சென்றார்திரிபுரங்களெய்தார்போலுந்
திசையனைத்தா † மாயனைத்துமானார்போலும்
அன்றாகிலாயிரம்பேரார்போலு
மணியாரூர்த்திருமூலட்டானனாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

திருமணியைத்தித்திக்குந்தேனைப்பாலைத்
தீங்கரும்பினின்சுவையைத்தெளிந்ததேறற்
குருமணியைக்குழன்மொந்தைதாளம்வீணை
கொக்கரையின்சச்சரியின்பாணியானைப்
பருமணியைப்பவளத்தைப்பசும்பொன்முத்தைப்
பருப்பதத்திலருங்கலத்தைப்பாவந்தீர்க்கும்
அருமணியையாரூரிலம்மான்றன்னை
யறியாதடிநாயேனயர்த்தவாறே. (௧)

பொன்னேபோற்றிருமேனியுடையான்றன்னைப்
பொங்குவெண்ணூலானைப்புனிதன்றன்னை
மின்னானைமின்னிடையாள்பாகன்றன்னை
வேழத்தினுரிவிரும்பிப்போர்த்தான்றன்னைத்
தன்னானைத்தன்னொப்பாரில்லாதானைத்
தத்துவனையுத்தமனைத்தழல்போன்மேனி
அன்னானையாரூரிலம்மான்றன்னை
யறியாதடிநாயேனயர்த்தவாறே. (௨)

ஏற்றானையேழுலகுமானான்றன்னை
யேழ்கடலுமேழ்மலையுமானான்றன்னைக்
கூற்றானைக்கூற்றமுதைத்தான்றன்னைக்
கொடுமழுவாள்கொண்டதோர்கையான்றன்னைக்
காற்றானைத்தீயானைநீருமாகிக்
கடிகமழும்புன்சடைமேற்கங்கைவெள்ள
மாற்றானையாரூரிலம்மான்றன்னை
யறியாதடிநாயேனயர்த்தவாறே. (௩)

* வக்தென்னையஞ்சலென்பார்போலும் என்றும் பாடம். † திசையனைத்தும் என்றும்பாடம்.

Koviloor Digital Library

முந்தியவல்வினைகடீர்ப்பான்றன்னை
மூவாதமேனிமுக்கண்ணினானைச்
சந்திரனும்வெங்கதிருமாயினானைச்
சங்கரனைச்சங்கக்குழையான்றன்னை
மந்திரமுமறைப்பொருளுமானான்றன்னை
மறுமையுமிம்மையுமானான்றன்னை
அந்திரனை * யாரூரிலம்மான்றன்னை
யறியாதடிநாயேனயர்ந்தவாறே. (௪)

பிறநெறியாய்ப்பீடாகிப்பிஞ்ஞகனுமாய்ப்
பித்தனைப்பத்தர்மனத்தினுள்ளே
உறநெறியாயோமமாயீமக்காட்டி
லோரிபலவிடநட்டமாடினானைத்
துறநெறியாய்த்தூபமாய்த்தோற்றமாகி
நாற்றமாய்நன்மலர்மேலுறையாநின்ற †
அறநெறியையாரூரிலம்மான்றன்னை
யறியாதடிநாயேனயர்த்தவாறே. (௫)

பழகியவல்வினைகள்பாற்றுவானைப்
பசுபதியைப்பாவகனைப்பாவந்தீர்க்கும்
குழகனைக்கோளரவொன்றாட்டுவானைக்
கொடுகொட்டிகொண்டதோர்கையான்றன்னை
விழவனைவீரட்டமேவினானை
விண்ணவர்களேத்திவிரும்புவானை
அழகனையாரூரிலம்மான்றன்னை
யறியாதடிநாயேனயர்த்தவாறே. (௬)

சூளாமணிசேர்முடியான்றன்னைச்
சுண்ணவெண்ணீறணிந்தசோதியானைக்
கோள்வாயரவமசைத்தான்றன்னைக்
கொல்புலித்தோலாடைக்குழகன்றன்னை
நாள்வாயும்பத்தர்மனத்துளானை
நம்பனைநக்கனைமுக்கணானை
ஆள்வானையாரூரிலம்மான்றன்னை
யறியாதடிநாயேனயர்த்தவாறே. (௭)

முத்தினைமணிதன்னைமாணிக்கத்தை
மூவாதகற்பகத்தின்கொழுந்துதன்னைக்
கொத்தினைவயிரத்தைக்கொல்லேறூர்ந்து
கோளரவொன்றாட்டுங்குழகன்றன்னைப்
பத்தனைப்பத்தர்மனத்துளானைப்
பரிதிபோற்றிருமேனியுடையான்றன்னை
அத்தனையாரூரிலம்மான்றன்னை
யறியாதடிநாயேனயர்த்தவாறே. (௮)

* அந்தரனை என்றும் பாடம். † லுறைவாய்நின்ற என்றும் பாடம்.

பையாடரவங்கையேந்தினானைப்
பரிதிபோற்றிருமேனிப்பானீற்றானை
நெய்யாடுதிருமேனிநிமலன்றன்னை
நெற்றிமேன்மற்றொருகண்ணிறைவித்தானைச்
செய்யானைச்செழும்பவளத்திரளொப்பானைச்
செஞ்சடைமேல்வெண்டிங்கள்சேர்த்தினானை
ஐயாறுமேயானையாரூரானை
யறியாதடிநாயேனயர்த்தவாறே. (௯)

சீரார்முடிபத்துடையான்றன்னைத்
தேசழியத்திருவிரலாற்சிதையநூக்கிப் *
பேரார்பெருமைகொடுத்தான்றன்னைப்
பெண்ணிரண்டுமாணுமாய்நின்றான்றன்னைப்
போரார்புரங்கள்புரளநூறும்
புண்ணியனைவெண்ணீறணிந்தான்றன்னை
ஆரானையாரூரிலம்மான்றன்னை
யறியாதடிநாயேனயர்த்தவாறே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

எம்பந்தவல்வினைநோய்தீர்த்திட்டான்கா
ணேழ்கடலுமேழுலகுமாயினான்காண்
வம்புந்துகொன்றையந்தார்மாலையான்காண்
வளர்மதிசேர்கண்ணியன்காண்வானோர்வேண்ட
அம்பொன்றான்மூவெயிலுமெரிசெய்தான்கா
ணனலாடியானஞ்சு † மாடினான்காண்
செம்பொன்செய்மணிமாடத்திருவாரூரிற்
றிருமூலட்டானத்தெஞ்செல்வன்றானே. (௧)

அக்குலாமரையினன்காணடியார்க்கென்று
மாரமுதாயண்ணிக்குமையாற்றான்காண்
கொக்குலாம்பீலியொடுகொன்றைமாலை
குளிர்மதியுங்கூரரவுநீருஞ்சென்னித்
தொக்குலாஞ்சடையினன்காண்டொண்டர்செல்லுந்
தூநெறிகாண்வானவர்கடுதிசெய்தேத்தும்
திக்கெலாநிறைந்தபுகழ்த்திருவாரூரிற்
றிருமூலட்டானத்தெஞ்செல்வன்றானே. (௨)

நீரேறுசடைமுடியெந்நிமலன்றான்கா
ணெற்றிமேலொற்றைக்கண்ணிறைவித்தான்காண்
வாரேறுவனமுலையாள்பாகத்தான்காண்
வளர்மதிசேர்சடையான்காண்மாதேவன்காண்

* நோக்கி என்றும் பாடம்; நோக்கல் காண்டல் என்றும் பிறபதத்தினாலே செய்தல் என்றும் பொருடரும். † ணனலாடிகாணைஞ்சும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

காரேறுமுகிலனையகண்டத்தான்காண்
கல்லாலின்கீழறங்கள்சொல்லினான்காண்
சீரேறுமணிமாடத்திருவாரூரிற்
றிருமூலட்டானத்தெஞ்செல்வன்றானே. (௩)

கானேறுகளிற்றுரிவைப்போர்வையான்காண்
கற்பகங்காண்காலனையன்றுதைசெய்தான்காண்
ஊனேறுமுடைதலையிற் * பலிகொள்வான்கா
ணுத்தமன்காணொற்றியூர்மேவினான்காண்
ஆனேறொன்றதுவேறுமண்ணான்கா
ணாதித்தன்பல்லிறுத்தவாதிதான்காண்
தேனேறுமலர்ச்சோலைத்திருவாரூரிற்
றிருமூலட்டானத்தெஞ்செல்வன்றானே. (௪)

பிறப்போடிறப்பென்றுமில்லாதான்காண்
பெண்ணுருவோடாணுருவுமாயினான்காண்
மறப்படுமென்சிந்தைமருணீக்கினான்காண்
வானவருமறியாதநெறிதந்தான்காண்
நறப்படுபூமலர்தூபந்தீபநல்ல
நறுஞ்சாந்தங்கொண்டேத்திநாளும்வானோர்
சிறப்போடுபூசிக்குந்திருவாரூரிற்
றிருமூலட்டானத்தெஞ்செல்வன்றானே. (௫)

சங்கரன்காண்சக்கரமாற்கருள்செய்தான்காண்
டருணேந்து † சேகரன்காண்டலைவன்றான்காண்
அங்கமலத்தயன்சிரங்களைந்திலொன்றை
யறுத்தவன்காணணிபொழில்சூழையாற்றான்காண்
எங்கள்பெருமான்காணென்னிடர்கள்போக
வருள்செய்யுமிறைவன்காணிமையோரேத்தும்
செங்கமலவயல்புடைசூழ்திருவாரூரிற்
றிருமூலட்டானத்தெஞ்செல்வன்றானே. (௬)

நன்றருளித்தீதகற்றுநம்பிரான்கா
ணான்மறையோடாறங்கமாயினான்காண்
மின்றிகழுஞ்சோதியன்காணாதிதான்காண்
வெள்ளேறுநின்றுலவுகொடியினான்காண்
துன்றுபொழிற்கச்சி ‡ யேகம்பன்றான்காண்
சோற்றுத்துறையான்காண்சோலைசூழ்ந்த
தென்றலார் ¶ மணங்கமழுந்திருவாரூரிற்
றிருமூலட்டானத்தெஞ்செல்வன்றானே. (௭)

* படுதலையில் என்றும் பாடம். † தருணேந்து - பாலசந்திரன்; தருண இந்து தரு ணேந்து எனப்புணர்ந்தது. ‡ புகழ்க்கச்சி என்றும் பாடம். ¶ தென்றலான் என்றும் பாடம்.

Koviloor Digital Library

பொன்னலத்தநறுங்கொன்றைச்சடையினான்காண்
புகலூருமபூவணமும்பொருந்தினான்காண்
மின்னலத்தநுண்ணிடையாள்பாகத்தான்காண்
வேதியன்காண்வெண்புரிநூன்மார்பினான்காண்
கொன்னலத்தமூவிலைவேலேந்தினான்காண்
கோலமாநீறணிந்தமேனியான்காண்
செந்நலத்த* வயல்புடைசூழ்திருவாரூரிற்
திருமூலட்டானத்தெஞ்செல்வன்றானே. (அ)

விண்டவர்தம்புரமூன்றுமெரிசெய்தான்காண்
வேலைவிடமுண்டிருண்டகண்டத்தான்காண்
மண்டலத்திலொளிவளரவிளங்கினான்காண்
வாய்மூருமறைக்காடுமருவினான்காண்
புண்டரிகக்கண்ணானும்பூவின்மேலைப்
புத்தேளுங்காண்பரியபுராணன்றான்காண்
தெண்டிரைநீர்வயல்புடைசூழ்திருவாரூரிற்
திருமூலட்டானத்தெஞ்செல்வன்றானே. (௯)

செருவளருஞ்செங்கண்மாலேற்றினான்காண்
தென்னானைக்காவன்காண்டியில்வீழ
மருவலர்தம்புரமூன்றுமெரிசெய்தான்காண்
வஞ்சகர்பாலணுகாதமைந்தன்றான்காண்
அருவரையையெடுத்தவன்றன்சிரங்கள்பத்து
மைந்நான்குதோளுநெரிந்தலறவன்று
திருவிரலாலடர்த்தவன்காண்டிருவாரூரிற்
திருமூலட்டானத்தெஞ்செல்வன்றானே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

இடர்கெடுமாறெண்ணுதியேல்னெஞ்சேநீவா
விண்டொளிசேர்கங்கைச்சடையாயென்றும்
சுடரொளியாயுள்விளங்குசோதியென்றுந்
தூநீறுசேர்ந்திலங்குதோளாவென்றும்
கடல்விடமதுண்டிருண்டகண்டாவென்றுங்
கலைமான்மறியேந்துகையாவென்றும்
அடல்விடையாயாரமுதேயாதியென்று
மாரூராவென்றென்றேயலறுநில்லே. (௧)

செடியேறுதீவினைகடீரும்வண்ணஞ்
சிந்தித்தேநெஞ்சமே† திண்ணமாகப்
பொடியேறுதிருமேனியுடையாயென்றும்
புரந்தான்றன்றோடணிந்தபுனிதாவென்றும்

* செந்நலத்த என்றும் பாடம்; செல் கார் என்னும் பிரதி பதத்தால் நிரை உண ர்த்தும். † சிந்தித்தேனெஞ்சமே என்றும், சிந்தித்தேநெஞ்சமே என்றும் பாடம்.

Koviloor Digital Library

அடியேனையாளாகக்கொண்டாயென்று
மம்மானேயாரூரெம்மரசேயென்றும்
கடிநாறுபொழிற்கச்சிக்கம்பாவென்றுங்
கற்பகமேயென்றென்றேகதறுநில்லே. * (௨)

நிலைபெறுமாறெண்ணுதியேனெஞ்சேநீவா
நித்தலுமெம்பிரானுடையகோயில்புக்குப்
புலர்வதன்முன்னலகிட்டுமெழுக்குமிட்டுப்
பூமாலைபுனைந்தேத்திப்புகழ்ந்துபாடித்
தலையினாற்கும்பிட்டுக் † கூத்துமாடிச்
சங்கராசயபோற்றிபோற்றியென்றும்
அலைபுனல்சேர்செஞ்சடையெம்மாதியென்று
மாரூராவென்றென்றேயலறுநில்லே. (௩)

புண்ணியமுநன்னெறியுமாவதெல்லா
நெஞ்சமேயிதுகண்டாய்பொருந்தக்கேணீ
நுண்ணியவெண்ணூல்கிடந்தமார்பாவென்று
நுந்தாதவொண்சுடரேயென்றுநாளும்
விண்ணியங்குதேவர்களும்வேதநான்கும்
விரைமலர்மேனான்முகனுமாலுங்கூடி
எண்ணரியதிருநாமமுடையாயென்று
மெழிலாரூராவென்றேயேத்தாநில்லே. (௪)

இழைத்தநாளெல்லைகடப்பதன்று ‡
விரவினொடுநன்பகலுமேத்திவாழ்த்திப்
பிழைத்தவெலாம்பொறுத்தருள்செய்பெரியோயென்றும்
பிஞ்ஞகனேமைஞ்ஞவிலுங்கண்டாவென்றும்
அழைத்தலறியடியேனுன்னரணங்கண்டா
யணியாரூரிடங்கொண்டவழகாவென்றும்
குழற்சடையெங்கோனென்றுங்கூறுநெஞ்சே
குற்றமில்லையென்மேனான்கூறினேனே. (௫)

நீப்பரிய ¶ பல்பிறவிநீக்கும்வண்ண
நினைந்திருந்தேன்காணெஞ்சேநித்தமாகச்
சேப்பிரியாவெல்கொடியினானேயென்றுஞ்
சிவலோகநெறிதந்தசிவனேயென்றும்
பூப்பிரியாநான்முகனும்புள்ளின்மேலைப்
புண்டரிகக்கண்ணானும்போற்றியென்னத்
தீப்பிழம்பாய்நின்றவனேசெல்வமல்குந்
திருவாரூராவென்றேபேசிந்திநெஞ்சே. (௬)

பற்றிநின்றபாவங்கள்பாற்றவேண்டிற்
பரகதிக்குச்செல்வதொருபரிசுவேண்டில்
சுற்றிநின்றசூழ்வினைகள்வீழ்க்கவேண்டிற்
சொல்லுகேன்கேணெஞ்சேதுஞ்சாவண்ணம்

* கழறுநில்லே என்றும் பாடம். † தலையாரக்கும்பிட்டு என்றும் பாடம். ‡ கடப்பதென்றால் என்றும் பாடம். ¶ நீக்கரிய என்றும் பாடம்.

Koviloor Digital Library

உற்றவரு முறுதுணையு நீயே யென்று
முன்னையல்லா லொருதெய்வ முள்கே னென்றும்
புற்றரவக் கச்சார்த்த புனிதா வென்றும்
பொழிலாரூரா வென்றே போற்றா நில்லே. (எ)

மதிதருவ னெஞ்சமே யுஞ்சு போக
வழியாவ திதுகண்டாய் வானோர்க் கெல்லாம்
அதிபதியே யாரமுதே யாதீ யென்று
மம்மானே யாரூரெம் மையா வென்றும்
துதிசெய்து துன்றுமலர் கொண்டு தூவிச்
சூழும் வலஞ்செய்து தொண்டு பாடிக்
கதிர்மதிசேர் சென்னியனே காலகாலா
கற்பகமே* யென்றென்றே கதறா நில்லே. (அ)

பாசத்தைப் பற்றறுக்க லாகு நெஞ்சே
பரஞ்சோதி பண்டரங்கா பாவநாசா
தேசத் தொளிவிளக்கே தேவ தேவே
திருவாரூர்த் திருமூலட்டானா வென்று
நேசத்தை நீபெருக்கி நேர் நின்றுள்கி
நித்தலுஞ் சென்றடிமேல் வீழ்ந்து நின்று
ஏசற்று நின்றிமையோ ரேறே யென்று
மெம்பெருமா னென்றென்றே யேத்தா நில்லே. (கூ)

புலன்களைந் தாலாட்டுண்டு போது போக்கிப்
புறம்புறமே திரியாதே போது நெஞ்சே†
சலங்கொள் சடைமுடியுடைய தலைவா வென்றுந்
தக்கன் செய் பெருவேள்வி தகர்த்தா யென்றும்
இலங்கையர்கோன்‡ சிரநெரித்த விறைவா வென்றும்
மெழிலாரூ ரிடங்கொண்ட வெந்தா யென்றும்
நலங்கொளடி யென்றலைமேல் வைத்தா யென்று
நாடோறு நவின்றேத்தாய் நன்மையாமே. (க0)

திருச்சிற்றம்பலம்.

போற்றித் திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

கற்றவர்க ளுண்ணுங் கனியே போற்றி
கழலடைந்தார் செல்லுங் கதியே போற்றி
அற்றவர்கட் காரமுத மானாய் போற்றி
யல்லலறுத் தடியேனை யாண்டாய் போற்றி
மற்றொருவ ரொப்பில்லா மைந்தா போற்றி
வானவர்கள் போற்று மருந்தே போற்றி
செற்றவர்தம் புரமெரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. (க)

* கண்ணுதலே என்றும் பாடம். † போதநெஞ்சே என்றும் பாடம். ‡ இலங்கை யான் என்றும் பாடம்.

Koviloor Digital Library

வங்கமலிகடனஞ்சமுண்டாய்போற்றி
மதயானையீருரிவைபோர்த்தாய்போற்றி
கொங்கலருநறுங்கொன்றைத்தாராய்போற்றி
கொல்புலித்தோலாடைக்குழகாபோற்றி
அங்கணனேயமரர்கடம்மிறைவாபோற்றி
யாலமாநீழல * றஞ்சொன்னாய்போற்றி
செங்கனகத்தனிக்குன்றேசிவனேபோற்றி
திருமூலட்டானனேபோற்றிபோற்றி. (உ)

மலையான்மடந்தைமணாளாபோற்றி
மழவிடையாய்நின்பாதம்போற்றிபோற்றி
நிலையாகவென்னெஞ்சினின்றாய்போற்றி
நெற்றிமேலொற்றைக்கண்ணுடையாய்போற்றி
இலையார்ந்தமூவிலைவேலேந்திபோற்றி
யேழ்கடலுமேழ்பொழிலுமானாய்போற்றி
சிலையாலன்றெயிலெரித்தசிவனேபோற்றி
திருமூலட்டானனேபோற்றிபோற்றி. (௩)

பொன்னியலுமேனியனேபோற்றிபோற்றி
பூதப்படையுடையாய்போற்றிபோற்றி
மன்னியசீர்மறைநான்குமானாய்போற்றி
மறியேந்துகையானே † போற்றிபோற்றி
உன்னுமவர்க்குண்மையனேபோற்றிபோற்றி
யுலகுக்கொருவனேபோற்றிபோற்றி
சென்னிமிசைவெண்பிறையாய்போற்றிபோற்றி
திருமூலட்டானனேபோற்றிபோற்றி. (௪)

நஞ்சுடையகண்டனேபோற்றிபோற்றி
நற்றவனேநின்பாதம்போற்றிபோற்றி
வெஞ்சுடரோன்பல்லிறுத்தவேந்தேபோற்றி
வெண்மதியங்கண்ணிவிகிர்தாபோற்றி
துஞ்சிருளிலாடலுகந்தாய்போற்றி
தூநீறுமெய்க்கணிந்தசோதிபோற்றி
செஞ்சடையாய்நின்பாதம்போற்றிபோற்றி
திருமூலட்டானனேபோற்றிபோற்றி. (௫)

சங்கரனேநின்பாதம்போற்றிபோற்றி
சதாசிவனேநின்பாதம்போற்றிபோற்றி
பொங்கரவாநின்பாதம்போற்றிபோற்றி
புண்ணியனேநின்பாதம்போற்றிபோற்றி

* யாலமாநீழல் என்று பாடங்கொள்வாருமுளர். † மறியேறுகையானே என்றும் பாடம்.

அங்கமலத்தயனோடுமாலுங்காணா
வனலுருவாநின்பாதம்போற்றிபோற்றி
செங்கமலத்திருப்பாதம்போற்றிபோற்றி
திருமூலட்டானனேபோற்றிபோற்றி. (௬)

வம்புலவுகொன்றைச்சடையாய்போற்றி
வான்பிறையும்வாளரவும்வைத்தாய்போற்றி
கொம்பனையநுண்ணிடையாள்கூறாபோற்றி
குரைகழலாற்கூற்றுதைத்தகோவேபோற்றி
நம்புமவர்க்கரும்பொருளேபோற்றிபோற்றி
நால்வேதமாறங்கமானாய்போற்றி
செம்பொனேமரகதமேமணியேபோற்றி
திருமூலட்டானனேபோற்றிபோற்றி. (௭)

உள்ளமாயுள்ளத்தேநின்றாய்போற்றி
யுகப்பார்மனத்தென்றுநீங்காய்போற்றி
வள்ளலேபோற்றிமணாளாபோற்றி
வானவர்கோன்றோடுணித்தமைந்தாபோற்றி
வெள்ளையேறேறும்விகிர்தாபோற்றி
மேலோர்க்குமேலோர்க்குமேலாய்போற்றி
தெள்ளுநீர்க்கங்கைச்சடையாய்போற்றி
திருமூலட்டானனேபோற்றிபோற்றி. (௮)

பூவார்ந்தசென்னிப்புனிதாபோற்றி
புத்தேளிர்போற்றும்பொருளேபோற்றி
தேவார்ந்ததேவர்க்குந்தேவேபோற்றி
திருமாலுக்காழியளித்தாய்போற்றி
சாவாமேகாத்தென்னையாண்டாய்போற்றி
சங்கொத்தநிறத்தெஞ்சதுராபோற்றி
சேவார்ந்தவெல்கொடியாய்போற்றிபோற்றி
திருமூலட்டானனேபோற்றிபோற்றி. (௯)

பிரமன்றன்சிரமரிந்தபெரியோய்போற்றி
பெண்ணுருவோடாணுருவாய்நின்றாய்போற்றி
கரநான்குமுக்கண்ணுமுடையாய்* போற்றி
காதலிப்பார்க்காற்றவெளியாய்போற்றி
அருமந்ததேவர்க்கரசேபோற்றி
யன்றரக்கனைஞ்ஞான்கு† தோளுந்தாளும்
சிரநெரித்தசேவடியாய்போற்றிபோற்றி
திருமூலட்டானனேபோற்றிபோற்றி. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

* முக்கணுடையாய் என்றும் பாடம். † கைந்நான்கு என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

ஒருவனாயுலகேத்தநின்றநாளோ
வோருருவேமூவுருவமானநாளோ
கருவ * னாய்க்காலனைமுன்காய்ந்தநாளோ
காமனையுங்கண்ணழலால்விழித்தநாளோ
மருவனாய்மண்ணும்விண்ணுந்தெரித்தநாளோ
மான்மறிக்கையேந்தியோர்மாதோர்பாகம்
திருவினாள்சேர்வதற்குமுன்னோபின்னோ
திருவாரூர்கோயிலாக்கொண்டநாளே. (௧)

மலையார்பொற்பாவையொடுமகிழ்ந்தநாளோ
வானவரைவலியமுதமூட்டியந்நாள்
நிலைபேறுபெறுவித்துநின்றநாளோ
நினைப்பரியதழற்பிழம்பாய்நிமிர்ந்தநாளோ
அலைசாமேயலைகடனஞ்சுண்டநாளோ
வமரர்கணம்புடைசூழவிருந்தநாளோ
சிலையான்முப்புரமெரித்தமுன்னோபின்னோ
திருவாரூர்கோயிலாக்கொண்டநாளே. (௨)

பாடகஞ்சேர்மெல்லடிநற்பாவையாளு
நீயும்போய்ப்பார்த்தனதுபலத்தைக் † காண்பான்
வேடனாய்வில்வாங்கியெய்தநாளோ
விண்ணவர்க்குங்கண்ணவனாய்நின்றநாளோ
மாடமொடுமாளிகைகண்மல்குதில்லை ‡
மணிதிகழுமம்பலத்தேமன்னிக்கூத்தை
ஆடுவான்புகுவதற்குமுன்னோபின்னோ
வணியாரூர்கோயிலாக்கொண்டநாளே. (௩)

ஓங்கியுயர்ந்தெழுந்துநின்றநாளோ
வோருகம்போலேழுகமாய்நின்றநாளோ
தாங்கியசீர்த்தலையானவானோர்செய்த
தக்கன்றன்பெருவேள்விதகர்த்தநாளோ
நீங்கியநீர்த்தாமரையானெடுமாலோடு
நில்லாயெம்பெருமானேயென்றங்கேத்தி
வாங்கிமதிவைப்பதற்குமுன்னோபின்னோ
வளராரூர்கோயிலாக்கொண்டநாளே. (௪)

பாலனாய்வளர்ந்திலாப்பான்மையானே
பணிவார்கட்கங்கங்கேபற்றானானே
நீலமாமணிகண்டத்தெண்டோளானே
நெருநலையாயின்றாகி ¶ நாளையாகும்

* கருவன் - கர்வமுடையவன். † பார்த்தன்றன்பலத்தை என்றும் பாடம். ‡ மாளிகைகளமருந்தில்லை என்றும் பாடம். ¶ நெருநலாயின்றாகி என்றும் பாடம்.

Koviloor Digital Library

சீலமேசிவலோகநெறியேயாகுஞ்
சீர்மையேகூர்மையேகுணமேநல்ல
கோலநீகொள்வதற்குமுன்னோபின்னோ
குளிராரூர்கோயிலாக்கொண்டநாளே. (ரு)

திறம்பலவும்வழிகாட்டிச்செய்கைகாட்டிச்
சிறியையாய்ப்பெரியையாய்நின்றநாளோ
மறம்பலவுமுடையாரைமயக்கந்தீர்த்து
மாமுனிவர்க்கருள்செய்தங்கிருந்தநாளோ
பிறங்கியசீர்ப்பிரமன்றன்றலைகையேந்திப்
பிச்சையேற்றுண்டுழன்று* நின்றநாளோ
அறம்பலவுமுரைப்பதற்குமுன்னோபின்னோ
வணியாரூர்கோயிலாக்கொண்டநாளே. (சு)

நிலந்தரத்துநீண்டுருவமானநாளோ
நிற்பனவுநடப்பனவுநீயேயாகிக்
கலந்துரைக்கக்கற்பகமாய்நின்றநாளோ
காரணத்தானாரணனைக்கற்பித்தன்று
வலஞ்சுருக்கிவல்லசுரர்மாண்டுவீழ
வாசுகியைவாய்மடுத்துவானோருய்யச்
சலந்தரனைக்கொல்வதற்குமுன்னோபின்னோ
தண்ணாரூர்கோயிலாக்கொண்டநாளே. (எ)

பாதத்தான்முயலகனைப்பாதுகாத்துப்
பாரகத்தேபரஞ்சுடராய்நின்றநாளோ
கீதத்தைமிகப்பாடுமடியார்க்கென்றுங்
கேடிலாவானுலகங்கொடுத்தநாளோ
பூதத்தான்பொருநீலிபுனிதன்மேவிப்
பொய்யுரையாமறைநால்வர்விண்ணோர்க்கென்றும்
வேதத்தைவிரிப்பதற்குமுன்னோபின்னோ
விழவாரூர்கோயிலாக்கொண்டநாளே. (அ)

புகையெட்டும்போக்கெட்டும்புலன்களெட்டும்
பூதலங்களவையெட்டும்பொழில்களெட்டும்
கலையெட்டுங்காப்பெட்டுங்காட்சியெட்டுங்
கழற்சேவடியடைந்தார்களைகணெட்டும்†
நகையெட்டுநாளெட்டுநன்மையெட்டு
நலஞ்சிறந்தார்மனத்தகத்துமலர்களெட்டும்
திசையெட்டுந்தெரிப்பதற்குமுன்னோபின்னோ
திருவாரூர்கோயிலாக்கொண்டநாளே. (கூ)

* றுண்டேகந்து என்றும் பாடம். † களைகளெட்டும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

ஈசனாயுலகேழுமலையுமாகி
யிராவணனையிடழித்திட்டிருந்தநாளோ
வாசமலர்மகிழ்தென்றலானநாளோ
மதயானையுரிபோர்த்துமகிழ்ந்தநாளோ
தாதுமலர்சண்டிக்குக்கொடுத்தநாளோ
சகரர்களைமறித்திட்டாட்கொண்டநாளோ
தேசமுமையறிவதற்குமுன்னோபின்னோ
திருவாரூர்கோயிலாக்கொண்டநாளே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்தி நாயனார்.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

இறைகளோடிசைந்தவின்பமின்பத்தோடிசைந்தவாழ்வு
பறைகிழித்தனையபோர்வைபற்றியானோக்கினேற்குத் *
திறைகொணர்ந்தீண்டித்தேவர்செம்பொனுமணியுந்தூவி
அறைகழலிறைஞ்சுமாரூரப்பனேயஞ்சினேனே. (௧)

ஊன்மிசையுதிரக்குப்பையொருபொருளிலாதமாயம்
மான்மறித்தனையநோக்கிமடந்தைமார்மதிக்குமிந்த †
மானுடப்பிறவிவாழ்வுவாழ்வதோர்வாழ்வுவேண்டேன்
ஆனல்வெள்ளேற்றவாரூரப்பனேயஞ்சினேனே. (௨)

அறுபதும்பத்துமெட்டுமாறினோடஞ்சுநான்கும்
துறுபறித்தனையநோக்கிச்சொல்லிற்றொன்றாகச்சொல்லார் ‡
நறுமலர்ப்பூவுநீருநாடொறும்வணங்குவார்க்கு
அறிவினைக் ¶ கொடுக்குமாரூரப்பனேயஞ்சினேனே. (௩)

சொல்லிடிலெல்லையில்லைசுவையிலாப்பேதைவாழ்வு
நல்லதோர்கூரைபுக்குநலமிகவறிந்தேனல்லேன்
மல்லிகைமாடநீடுமருங்கொடுநெருங்கியெங்கும்
அல்லிவண்டியங்குமாரூரப்பனேயஞ்சினேனே. (௪)

நரம்பினோடெலும்புகட்டிநசையினோடிசைவொன்றில்லாக்
குரம்பைவாய்க்குடியிருந்துகுலத்தினால்வாழமாட்டேன்
விரும்பிய § கமழும்புன்னைமாதவித்தொகுதியென்றும்
அரும்புவாய்மலருமாரூரப்பனேயஞ்சினேனே. (௫)

* தனையபார்வைபத்தியானோக்கினேற்கு என்றும் பாடம். † மதிக்குஞ்செல்வ என்றும் பாடம். ‡ சொல்லித்தொன்றாகச்சொல்லார் என்றும் பாடம். ¶ வாருக்—கறிவினை என்றும் பாடம். § விரும்பிய - வினையெச்சம்.

Koyiloor Digital Library

மணமெனமகிழ்வர்முன்னேமக்கடாய்தந்தைசுற்றம்
பிணமெனச்சுடுவர்பேர்த்தேபிறவியைவேண்டேனாயேன்
பணையிடைச்சோலைதோறும்பைம்பொழில்விளாகத்தெங்கள்
அணைவினைக்கொடுக்குமாரூரப்பனேயஞ்சினேனே. (௬)

தாழ்வெனுந்தன்மைவிட்டுத்தனத்தையேமனத்தில்வைத்து
வாழ்வதேகருதித்தொண்டர்மறுமைக்கொன்றீயகில்லார்
ஆழ்குழிப்பட்டபோதுவலக்கணிலொருவர்க்காவர்
யாழ்முயன்றிருக்குமாரூரப்பனேயஞ்சினேனே. (௭)

உதிரநீரிறைச்சிக்குப்பையெடுத்ததுமலக்கு* கைம்மேல்
வருவதோர்மாயக்கூரைவாழ்வதோர்வாழ்வுவேண்டேன்
கரியமாலயனுந்தேடிக்கழலடி† காணமாட்டா
அரியனாய்நின்றவாரூரப்பனேயஞ்சினேனே. (௮)

பொய்த்தன்மைத்தாயமாயப்போர்வையைமெய்யென்றெண்ணும்
வித்தகத்தாயவாழ்வுவேண்டிநான்விரும்பகில்லேன்
முத்தினைத்தொழுதுநாளுமுடிகளால்வணங்குவார்க்கு
அத்தன்மைத்தாகுமாரூரப்பனேயஞ்சினேனே. (௯)

தஞ்சொலாருள்பயக்குந்தமியனேன்றடமுலைக்கண்
அஞ்சொலார்பயிலுமாரூரப்பனையூரனஞ்சிச்
செஞ்சொலானயந்தபாடல்சிந்தியா‡ வேத்தவல்லார்
நஞ்சுலாங்கண்டத்தெங்களத்தனைநணுகுவாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

குருகுபாயக்கொழுங்கரும்புகள்நெரிந்தசா
றருகுபாயும்வயலந்தணாரூரைப்
பருகுமாறும்பணிந்தேத்துமாறுந்நினைந்
துருகுமாறுமிவையுணர்த்தவல்லீர்களே. (௧)

பறக்குமெங்கிள்ளைகாள்பாடுமெம்பூவைகாள்
அறக்கணென்னத்தகுமடிகளாரூரரை
மறக்ககில்லாமையும்வளைகளில்லாமையும்
உறக்கமில்லாமையுமுணர்த்தவல்லீர்களே. (௨)

சூழுமோடிச்சுழன்றுழலும்வெண்ணாரைகாள்
ஆளுமம்பொற்கழலடிகளாரூரர்க்கு
வாழுமாறும்வளைகழலுமாறும்மெனக் ¶
கூழுமாறுமிவையுணர்த்தவல்லீர்களே. (௩)

* மலக்குக்கைமேல் என்றும் பாடம். † கழலிணை என்றும் பாடம். ‡ சிந்தையா என்றும் பாடம். ¶ மாறும்மினக் என்றும் பாடம்.

Koviloor Digital Library

சக்ரவாளத்திளம்பேடைகாள்சேவல்காள்
அக்ரமங்கள்செய்யும்மடிகளாரூரர்க்கு
வக்ரமில்லாமையும்வளைகணில்லாமையும்
உக்ரமில்லாமையுமுணர்த்தவல்லீர்களே. (௪)

இலைகொள்சோலைத்தலையிருக்கும்வெண்ணாரைகாள்
அலைகொள் * சூலப்படையடிகளாரூரர்க்குக்
கலைகள்சோர்கின்றதுங்கனவளைகழன்றதும்
முலைகள்பீர்கொண்டதும்மொழியவல்லீர்களே. (௫)

வண்டுகள்கொண்டல்காள்வார்மணற்குருகுகாள்
அண்டவாணர்தொழுமடிகளாரூரரைக்
கண்டவாறுங்காமத்தீக்கனன்றெரிந்துமெய்
உண்டவாறும்மிவையுணர்த்தவல்லீர்களே. (௬)

தேனலங்கொண்டதேன்வண்டு † காள்கொண்டல்காள்
ஆனலங்கொண்டவெம்மடிகளாரூரர்க்குப்
பானலங்கொண்டவெம்பணைமுலைபயந்து ‡ பொன்
ஊனலங்கொண்டதும்முணர்த்தவல்லீர்களே. (எ)

சுற்றுமுற்றுஞ்சுழன்றுழலும்வெண்ணாரைகாள்
அற்றமுற்றப்பகர்ந்தடிகளாரூரர்க்குப்
பற்றுமற்றின்மையும்பாடமெற்றின்மையும்
உற்றுமற்றின்மையுமுணர்த்தவல்லீர்களே. ¶ (அ)

குரவநாறக்குயில்வண்டினம்பாடநின்
றரவமாடும்பொழிலந்தணாரூரரைப்
பரவிநாடும்மதும்பாடிநாடும்மதும்
உருகிநாடும்மதும்முணர்த்தவல்லீர்களே. (௯)

கூடுமன்னப்பெடைகாள்குயில்வண்டுகாள்
ஆடுமம்பொற்கழலடிகளாரூரரைப்
பாடுமாறும்பணிந்தேத்துமாறுங்கூடி
ஊடுமாறும்மிவையுணர்த்தவல்லீர்களே. (௧௦)

நித்தமாகநினைந்துள்ளமேத்தித்தொழும்
அத்த § னம்பொற்கழலடிகளாரூரரைச்
சித்தம்வைத்தபுகழ்ச்சிங்கடியப்பன்மெய்ப்
பத்தனூரன்சொன்னபாடமின்பத்தரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

* அலைகள் என்றும் பாடம்; கள் அசை. † தேன்வண்டு - வண்டினுள் ஒருசாதி.
‡ பயத்தல் - பசத்தல். ¶ முற்றுமற்றின்மையுமொழியவல்லீர்களே என்றும் பாடம்.
§ தொழு-அத்தன் என்றும் பாடம்.

Koviloor Digital Library

சுந்தரமூர்த்திநாயனார் திருத்துருத்தி என்னுந் திருப்பதியை நீங்கி, திருவாரூரிற் சென்று, மாலைக்காலத்திலே முன்னே தூவாயரை வணங்கும்படி அடியார்களோடு பரவையுண் மண்டளி என்னுந் திருக்கோயிலிலே பிரவேசித்து வணங்கிக் கண் தந்தருளும்படி திருப்பதிகம்பாடி, வெளியே போய், ஓரிடத்தில் இருந்து, பின் அடியார்களோடு திருமூலட்டானத்திலே திருவத்தயாமத்திலே சுவாமிதரிசனஞ் செய்வதற்கு எழுந்து வழிக்கொள்ளும்போது, வழியிலே அடியார்கள் தமக்கெதிரே வர அவர்கள் முகத்தைப்பார்த்து, கைக்கிளையினாலே "குருகுபாய" என்னுந் திருப்பதிகம் பாடியருளினார்.

திருத்தொண்டத்தொகை.

பண் - கொல்லிக்கௌவாணம்.

திருச்சிற்றம்பலம்.

தில்லைவாழந்தணர் தம்மடியார்க்குமடியேன்
திருநீலகண்டத்துக்குயவனார்க்கடியேன்
இல்லையேயென்னாதவியற்பகைக்குமடியே
னிளையான்றன்குடிமாறனடியார்க்குமடியேன்
வெல்லுமாமிகவல்லமெய்ப்பொருளுக்கடியேன்
விரிபொழில்சூழ்குன்றையார்விறன்மிண்டற்* கடியேன்
அல்லிமென்முல்லையந்தாரமர்நீதிக்கடியே
னாரூரனாரூரிலம்மானுக்காளே. (௧)

இலைமலிந்தவேனம்பியெறிபத்தற்கடியே
னேனாதிநாதன்றனடியார்க்குமடியேன்
கலைமலிந்தசீர்நம்பிகண்ணப்பற்கடியேன்
கடவூரிற்கலயன்றனடியார்க்குமடியேன்
மலைமலிந்ததோள்வள்ளன்மானக்கஞ்சாற
னெஞ்சாதவாட்டாயனடியார்க்குமடியேன்
அலைமலிந்தபுனன்மங்கையானாயற்கடியே
னாரூரனாரூரிலம்மானுக்காளே. (௨)

மும்மை† யாலுலகாண்டமூர்த்திக்குமடியேன்
முருகனுக்குமுருத்திரபசுபதிக்குமடியேன்
செம்மையேதிருநாளைப்போவாற்குமடியேன்
திருக்குறிப்புத்தொண்டர்தம்மடியார்க்குமடியேன்
மெய்ம்மையேதிருமேனிவழிபடாநிற்க
வெகுண்டெழுந்ததாதைதாளைமழுவினாலெறிந்த ‡
அம்மையானடிச்சண்டிப்பெருமானுக்கடியே
னாரூரனாரூரிலம்மானுக்காளே. (௩)

* இத்திருப்பதிகத்திலே இதுவும், இதுபோல்வன பிறவும் சில ஏட்டுப்பிரதிகளில் அர் விகுதி கொடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. † மும்மை - விபூதி, உருத்திராக்கம், சடைமுடி; "இருமைவகைதெரிந்து" என்புழிப்போல மும்மை என்றது ஈண்டு எண்ணின்கணின்றது. ‡ தாதைதாள்மழுவினாலெறிந்த என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருநின்றசெம்மையேசெம்மையாக்கொண்ட
திருநாவுக்கரையன்றனடியார்க்குமடியேன்
பெருநம்பிகுலச்சிறைதனடியார்க்குமடியேன்
பெருமிழலைக்குறும்பற்கும்பேயார்க்குமடியேன்
ஒருநம்பியப்பூதியடியார்க்குமடியே
ளொலிபுனல்சூழ்சாத்தமங்கைநீலநக்கற்கடியேன்
அருநம்பிநமிநந்தியடியார்க்குமடியே
னாரூரனாரூரிலம்மானுக்காளே. (ச)

வம்பறுவரிவண்டுமணநாறமலரு
மதுமலர்நற்கொன்றையானடியலாற்பேணு
எம்பிரான்சம்பந்தனடியார்க்குமடியே
னேயர்கோன்கலிக்காமனடியார்க்குமடியேன்
நம்பிரான்றிருமூலனடியார்க்குமடியே
னாட்டமிகுதண்டிக்கு* மூர்க்கற்குமடியேன்
அம்பரான்சோமாசிமாறனுக்குமடியே
னாரூரனாரூரிலம்மானுக்காளே. (ரு)

வார்கொண்டவனமுலையாளுமைபங்கன்கழலே
மறவாதுகல்லெறிந்தசாக்கியற்குமடியேன்
சீர்கொண்டபுகழ்வள்ளல்சிறப்புலிக்குமடியேன்
செங்காட்டங்குடிமேயசிறுத்தொண்டற்கடியேன்
கார்கொண்டகொடைக்கழறிற்றறிவாற்குமடியேன்
கடற்காழிக்கணநாதனடியார்க்குமடியேன்
ஆர்கொண்டவேற்கூற்றன்களந்தைக்கோனடியே
னாரூரனாரூரிலம்மானுக்காளே. (சு)

பொய்யடிமையில்லாதபுலவர்க்குமடியேன்
பொழிற்கருவூர்த்துஞ்சியபுகழ்ச்சோழற்கடியேன்
மெய்யடியானரசிங்கமுனையரையற்கடியேன்
விரிதிரைசூழ்கடனாகையதிபத்தற்கடியேன்
கைதடிந்தவரிசிலையான்கலிக்கம்பன்கலியன்
கழற்சத்திவரிஞ்சையர்கோனடியார்க்குமடியேன்
ஐயடிகள்காடவர்கோனடியார்க்குமடியே
னாரூரனாரூரிலம்மானுக்காளே. (எ)

கறைக்கண்டன்கழலடியேகாப்புக்கொண்டிருந்த
கணம்புல்லநம்பிக்குங்காரிக்குமடியேன்
நிறைக்கொண்டசிந்தையானெல்வேலிவென்ற
நின்றசீர்நெடுமாறனடியார்க்குமடியேன்

* பிறவிக்குருடராயிருந்து தியாகராசருடைய திருவருளினாலே சீரிய கண்பெற்றவரென்பார்; நாட்டமிகுதண்டி என்றார்.

Koviloor Digital Library

துறைக்கொண்டசெம்பவளமிருளகற்றுஞ்சோதித்
தொன்மயிலைவாயிலானடியார்க்குமடியேன்
அறைக்கொண்டவேனம்பிமுனையடுவார்க்கடியே
னாரூரனாரூரிலம்மானுக்காளே. (அ)

கடல்சூழ்ந்தவுலகெலாங்காக்கின்றபெருமான்
காடவர்கோன்கழற்சிங்கனடியார்க்குமடியேன்
மடல்சூழ்ந்ததார்நம்பியிடங்கழிக்குந்தஞ்சை
மன்னவனாஞ்செருத்துணைதன்னடியார்க்குமடியேன்
புடைசூழ்ந்தபுலியதண்மேலரவாடவாடி
பொன்னடிக்கேமனம்வைத்த * புகழ்த்துணைக்குமடியேன்
அடல்சூழ்ந்தவேனம்பிகோட்புலிக்குமடியே
னாரூரனாரூரிலம்மானுக்காளே. (௯)

பத்தராய்ப்பணிவார்களெல்லார்க்குமடியேன்
பரமனையேபாடுவாரடியார்க்குமடியேன்
சித்தத்தைச்சிவன்பாலேவைத்தார்க்குமடியேன்
திருவாரூர்ப்பிறந்தார்களெல்லார்க்குமடியேன்
முப்போதுந் † திருமேனிதீண்டுவார்க்கடியேன்
முழுநீறுபூசியமுனிவர்க்குமடியேன்
அப்பாலுமடிச்சார்ந்தவடியார்க்கு ‡ மடியே
னாரூரனாரூரிலம்மானுக்காளே. (௧0)

மன்னியசீர்மறைநாவனின்றவூர்ப்பூசல்
வரிவளையாண்மானிக்குநேசனுக்குமடியேன்
தென்னவனாயுலகாண்டசெங்கணார்க்கடியேன்
திருநீலகண்டத்துப்பாணனார்க்கடியேன்
என்னவனாமரனடியேயடைந்திட்டசடைய
னிசைஞானிகாதலன்றிருநாவலூர்க்கோன்
அன்னவனாமாரூரனடிமைகேட்டுவப்பா
ராரூரிலம்மானுக்கன்பராவாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார், பரவையாரை விவாகஞ்செய்துகொண்டு அவரோடுகூடித் திருவாரூரிலே வாழ்ந்திருக்குங் காலத்திலே, ஒருநாள் திருக்கோயிலை அடைந்தபோது, தேவாசிரிய மண்டபத்திலே சிவனடியார்கள் கூடியிருந்ததைக் கண்டு, அவர்கண்மேலே பத்தி மிகுந்து, "இவர்களுக்கு நான் அடியனாகும்நாள் எந்நாள்" என்று நினைத்துக்கொண்டு, சுவாமி தரிசனஞ் செய்வதற்குத் திருக்கோயிலினுள்ளே போனார். அப்பொழுது, அடியார்க்கு அடியனாகவேண்டுமென்று அவர்விரும்பிய வரத்தைக் கொடுக்கும்பொருட்டு, சுவாமி அவருக்குக் காட்சி கொடுத்தருளி, "நீ நம்முடைய அடியார்களைவணங்கி

* பொன்னடிக்கேமனம்வைத்த என்றும் பாடம். † முப்பொழுதும் என்றும் பாடம்.
‡ மடிச்சார்ந்தாரடியார்க்கும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

அவர்கண்மேலே பதிகம் பாடு" என்று அருளிச்செய்ய, சுந்தரமூர்த்திநாயனார் வணங்கி நின்று, "சுவாமீ! அடியார்களுடைய வரலாறு இன்னது என்றும் அவர்கள் தன்மை இப்படிப்பட்டது என்றும் அறியாத தமியேன் எப்படிப்பாடுவேன்? அவர்களைக்குறித்துப் பாடுஞ் சத்தியைச் சர்வஞ்ஞத்துவம் உடையதேவரீரே அடியேனுக்கு அருளிச்செய்ய வேண்டும்" என்று பிரார்த்தித்தார். சுவாமி அதற்கு இசைந்து, அடியார்களுடைய வழித்தொண்டு அவருக்குத் தெரியும்படிசெய்து, உலகத்தார் உய்யும் வண்ணம் வேதசிவாகமங்களை அருளிச்செய்த தமது அருமைத் திருவாக்கினாலே "தில்லைவா ழந்தணர்தம் மடியார்க்குமடியேன்" என்று அடியெடுத்துக்கொடுத்து மறைந்தருளினார். அது கண்டு, சுந்தரமூர்த்திநாயனார் புறப்பட்டுத் தேவாசிரயமண்டபத்தை அடைந்து, அடியார் திருக்கூட்டத்தைப் பலமுறை வணங்கி, அந்த அடியார்கள் யாவர்க்கும் வெவ்வேறாக அடியேன் அடியேன் என்று திருத்தொண்டத்தொகை என்னுந் திருப்பதிகம் பாடி, அவர்களை வணங்கினார்.

பண் - பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

பத்திமையும்மடிமையையுங்* கைவிடுவான்பாவியேன்
பொத்தினநோயதுவிதனைப்பொருளறிந்தேன்போய்த்தொழுவேன்
முத்தினைமாமணிதன்னைவயிரத்தைமூர்க்கனேன்
எத்தனைநாட்பிரிந்திருக்கேனென்னாரூரிறைவனையே. (௧)

ஐவணமாம்பகழியுடையடன்மதனன்பொடியாகச்
செவ்வணமாந்திருநயனம்விழிசெய்தசிவமூர்த்தி
மையனவுங்கண்டத்துவளர்சடையெம்மாரமுதை
எவ்வணநான்பிரிந்திருக்கேனென்னாரூரிறைவனையே. (௨)

சங்கலக்குந்தடங்கடல்வாய்விடஞ்சுடவந்தமரர்தொழ
அங்கலக்கண்டீர்த்து† விடமுண்டுகந்தவம்மானை
இங்கலக்குமுடற்பிறந்தவறிவிலியேன்செறிவின்றி
எங்குலக்கப்பிரிந்திருக்கேனென்னாரூரிறைவனையே. (௩)

இங்ஙனம்வந்திடர்ப்பிறவிப்பிறந்தயர்வேனயராமே
அங்ஙனம்வந்தெனையாண்டவருமருந்தெனாரமுதை
வெங்கனன்மாமேனியனைமான்மருவுங்கையானை‡
எங்ஙனநான்பிரிந்திருக்கேனென்னாரூரிறைவனையே. (௪)

செப்பரியவயனொடுமால்சிந்தித்துந்தெரிவரிய
அப்பெரியதிருவினையேபறியாதேயருவினையேன்
ஒப்பரியகுணத்தானையிணையிலியையணைவின்றி
எப்பரிசுபிரிந்திருக்கேனென்னாரூரிறைவனையே. (௫)

* பத்திமையும்படிமையையுங் என்றும் பாடம். † அங்கலக்கந்தீர்த்து என்றும் பாடம்.
‡ வெங்ஙனமாமேனியனைமானமருங்கையானை என்றும் பாடம்.

Koviloor Digital Library

வன்னாகநாண் * வரைவில்லங்கிகணையரிபகழி
தன்னாகமுறவாங்கிப்புரமெரித்ததன்மையனை
முன்னாகநினையாதமூர்க்கனேனாக்கைசுமந்
தென்னாகப்பிரிந்திருக்கேனென்னாரூரிறைவனையே. (௬)

வன்சயமாயடியான்மேல் † வருங்கூற்றினுரங்கிழிய
முன்சயமார்பாதத்தான்முனிந்துகந்தமூர்த்திதனை
மின்செயும்வார்சடையானைவிடையானையடைவின்றி
என்செயநான்பிரிந்திருக்கேனென்னாரூரிறைவனையே. (௭)

முன்னெறிவானவர்கூடித்தொழுதேத்துமுழுமுதலை
அந்நெறியை ‡ யமரர்தொழுநாயகனையடியார்கள்
செந்நெறியைத் ‡ தேவர்குலக்கொழுந்தைமறந்திங்ஙனநான்
என்னறிவான்பிரிந்திருக்கேனென்னாரூரிறைவனையே. (௮)

கற்றுளவான்கனியாயகண்ணுதலைக்கருத்தார
உற்றுளனாமொருவனைமுன்னிருவர்நினைந்தினிதேத்தப்
பெற்றுளனாம்பெருமையனைப்பெரிதடியேன்கையகன்றிட்
டெற்றுளனாப்பிரிந்திருக்கேனென்னாரூரிறைவனையே. (௯)

ஏழிசையாயிசைப்பயனாயின்னமுதாயென்னுடைய
தோழனுமாயான்செய்யுந்துரிசுகளுக்குடனாகி
மாழையொண்கண்பரவையைத்தந்தாண்டானைமதியில்லா
ஏழையேன்பிரிந்திருக்கேனென்னாரூரிறைவனையே. (௧௦)

வங்கமலிகடனஞ்சைவானவர்கடாமுய்ய
நுங்கியமுதவர்க்கருளிநொய்யேனைப்பொருட்படுத்துச்
சங்கிலியோடெனைப்புணர்த்ததத்துவனைச்சழக்கனேன்
எங்குலக்கப்பிரிந்திருக்கேனென்னாரூரிறைவனையே. (௧௧)

பேரூருமதகரியினுரியானைப்பெரியவர்தம் ¶
சீரூருந்திருவாரூர்ச்சிவனடியேதிறம்விரும்பி
ஆரூரனடித்தொண்டனடியன்சொல்லகலிடத்தில்
ஊரூரனிவைவல்லாருலகவர்க்குமேலாரே. § (௧௨)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார் சங்கிலியாரை விவாகஞ்செய்துகொண்டு அவரோடு கூடித் திருவொற்றியூரிலே வாழ்ந்திருக்கும் நாளிலே, ஒருநாள் திருவாரூரில் எழுந்தருளியிருக்கின்ற வீதிவிடங்கப்பெருமானுடைய வசந்தோற்சவகாலம் சமீபித்ததை அறிந்து, "வன்மீகநாதரை இவ்வளவு காலமும் மறந்திருந்தேனே" என்று துக்கித்து, அவர்மேலே "பத்திமையு மடிமையையுங் கைவிடுவான் பாவியேன்" என்னும் திருப்பதிகத்தைப் பாடியருளினார்.

* பன்னகநாண் என்றும் பாடம். † யடியார்மேல் என்றும் பாடம்; இருவர்பொருட்டுக் காலசங்காரம் இருமுறைசெய்யப்பட்டமையின் அடியார் என்றலும் பொருந்துமாறுணர்க. ‡‡ அந்நெறியை, செந்நெறியை என்றும் பாடம். ¶ பெரியார்தம் என்றும்பாடம். § மேலவரே என்றும் பாடம்.

Koviloor Digital Library

பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

பொன்னுமெய்ப்பொருளுந்தருவானைப்போகமுந்திருவும்புணர்ப்பானைப்
பின்னையென்பிழையைப்பொறுப்பானைப்பிழையெலாந்தவிரப்பணிப்பானை
இன்னதன்மையனென்றறியொண்ணா* வெம்மானையெளிவந்தபிரானை
அன்னம்வைகும்வயற்பழனத்தணியாரூரானைமறக்கலுமாமே. (க)

கட்டமும்பிணியுங்களைவானைக்காலற்சீறியகாலுடையானை
விட்டவேட்கைவெந்நோய்† களைவானைவிரவினால்விடுதற்கரியானைப்
பட்டவார்த்தைபடநின்றவார்த்தை‡ வாராமேதவிரப்பணிப்பானை
அட்டமூர்த்தியைமட்டவிழ்சோலையாரூரானைமறக்கலுமாமே. (உ)

கார்க்குன்றமழை¶ யாய்ப்பொழிவானைக்கலைக்கெலாம்பொருளாயுடன்கூடிப்
பார்க்கின்றவுயிர்க்குப்பரிந்தானைப்பகலுங்கங்குலுமாகிநின்றானை
ஓர்க்கின்றசெவியைச்சுவைதன்னையுணருநாவினைக்காண்கின்றகண்ணை
ஆர்க்கின்றகடலைமலைதன்னையாரூரானைமறக்கலுமாமே. (ங)

செத்தபோதினின்முன்னின்றுநம்மைச்சிலர்கள்கூடிச்சிரிப்பதன்முன்னம்
வைத்தசிந்தையுண்டேமனமுண்டேமதியுண்டேவிதியின்பயனுண்டே
முத்தனெங்கள்பிரானென்றுவானோர்தொழநின்றதிமிலேறுடையானை
அத்தனெந்தைபிரானெம்பிரானையாரூரானைமறக்கலுமாமே. (ச)

செறிவுண்டேன்மனத்தாற்றெளிவுண்டேற்றேற்றத்தால்வருஞ்சிக்கனவுண்டேல்§
மறிவுண்டேன்மறுமைப்பிறப்புண்டேல்வாணாண்மேற்செல்லும்வஞ்சனையுண்டேல்
பொறிவண்டியாழ்செய்யும்பொன்மலர்க்கொன்றைபொன்போலுஞ்சடைமேற்
அறிவுண்டேயுடலத்துயிருண்டேயாரூரானைமறக்கலுமாமே. [புனைந்தானை

பொள்ளலிவ்வுடலைப்பொருளென்றுபொருளுஞ்சுற்றமும்போகமுமாகி
மெள்ளநின்றவர்செய்வனவெல்லாம்வாராமேதவிர்க்கும்விதியானை
வள்ளலெந்தமக்கேதுணையென்றுநாளுமமரர்தொழுதேத்தும்
அள்ளலங்கழனிப்பழனத்தணியாரூரானைமறக்கலுமாமே. (சு)

கரியானையுரிகொண்டகையானைக்கண்ணின்மேலொருகண்ணுடையானை
வரியானைவருத்தங்களைவானைமறையானைக்குறைமாமதிசூடற்
குரியானையுலகத்துயிர்க்கெல்லாமொளியானையுகந்துள்கிநண்ணாதார்க்
கரியானையடியேற்கெளியானையாரூரானைமறக்கலுமாமே. (எ)

வாளாநின்றுதொழுமடியார்கள்வானாளப்பெறும்வார்த்தையைக்கேட்டும்
நாளும்மலரிட்டுவணங்கார்நம்மையாள்கின்றதன்மையையோரார்
கேளாநான்கிடந்தேயுழைக்கின்றேன்கிளைக்கெலாந்துணையாமெனக்கருதி
ஆளாவான்பலர்முன்பழைக்கின்றேனாரூரானைமறக்கலுமாமே. (அ)

* யறிவொண்ணா என்றும் பாடம். † வென்னோய்ப் என்றும் பாடம். ‡ படாநின்ற வார்த்தை என்றும் பாடம். ¶ கார்க்கின்றமழை என்றும் பாடம்; காக்கின்ற எனற்பாலது எதுகைநோக்கிக் கார்க்கின்றவெனப்பட்டது. § சிக்கெனவுண்டேல் என்றும் பாடம்.

Koviloor Digital Library

விடக்கையேபெருக்கிப்பலநாளும்வேட்கையாற்பட்டவேதனைதன்னைக்
கடக்கிலேனெறிகாணவுமாட்டேன்கண்குழிந்திரப்பார்கையிலொன்றும்
இடக்கிலேன்பரவைத்திரைக்கங்கைச்சடையானையுமையாளையோர்பாகத்
தடக்கினானையந்தாமரைப்பொய்கையாரூரானைமறக்கலுமாமே. (கூ)

ஒட்டியாட்கொண்டுபோயொளித்திட்டவுச்சிப்போதனைநச்சரவார்த்த
பட்டிபைப்பகலையிருடன்னைப்பாவிப்பார்மனத்தூறுமத்தேனைக்
கட்டியைக்கரும்பின்றெளிதன்னைக்காதலாற்கடற்சூர்தடிந்திட்ட
செட்டியப்பனைப்பட்டனைச்செல்வவாரூரானைமறக்கலுமாமே. (க0)

ஒருரென்றுலகங்களுக்கெல்லாமுரைக்கெலாம்* பொருளாயுடன்கூடிக்
காருருங்கமழ்கொன்றைநன்மாலைமுடியன்காரிகைகாரணமாக
ஆரூரைம்மறத்தற்கரியானையம்மான்றன்றிருப்பேர்கொண்டதொண்டன்
ஆரூரன்னடிநாயுரைவல்லாரமரலோகத்திருப்பவர்தாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனர் சேரமான்பெருமாளுநாயனாரோடு கொடுங்கோளூரிலே இருக்குங்காலத்திலே ஒருநாள் திருவாரூரில் எழுந்தருளியிருக்கின்ற வன்மீகநாதருடைய திருவடிகளை நினைந்து, "பொன்னுமெய்ப்பொருளும்" என்று திருப்பதிகம் எடுத்துத் திருப்பாட்டிறுதிதோறும் "ஆரூரானை மறக்கலுமாமே" என்று பாடி, திருவாரூருக்குச் செல்லும்பொருட்டு அடியார்களோடு எழுந்து வழிக்கொண்டு சென்றார்.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

கரையுங்கடலுமலையுங்காலையுமாலையுமெல்லாம்
உரையில்விரவிவருவானொருவனுருத்திரலோகன்
வரையின்மடமகள்கேள்வன்வானவர்தானவர்க்கெல்லாம்
அரையனிருப்பதுமாரூரவரெம்மையுமாள்வரோகேளீர். (க)

தனியனென்றெள்கியறியேன்றம்மைப்பெரிதுமுகப்பன்
முனிபவர்தம்மைமுனிவன்முகம்பலபேசிமொழியேன்
கனிகள்பலவுடைச்சோலைக்காய்க்குலை† யீன்றகமுகின்
இனியனிருப்பதுமாரூரவரெம்மையுமாள்வரோகேளீர். (உ)

சொல்லிற்குலாவன்றிச்சொல்லேன்றொடர்ந்தவர்க்குந்துணையல்லேன்
கல்லில்வலியமனத்தேன்கற்றபெரும்புலவாணர்
அல்லல்பெரிதுமறுப்பானருமறையாறங்கமோதும்
எல்லையிருப்பதுமாரூரவரெம்மையுமாள்வரோகேளீர். (ங)

நெறியுமறிவுஞ்செறிவுநீதியு‡ நான்மிகப்பொல்லேன்
மிறையுந்தறியுமுகப்பன்வேண்டிற்றுச்செய்துதிரிவன்
பிறையுமரவும்புனலும்பிறங்கியசெஞ்சடைவைத்த
இறைவனிருப்பதுமாரூரவரெம்மையுமாள்வரோகேளீர். (ச)

* முரைக்கலாம் என்றும்பாடம். † காய்க்குலை என்றும் பாடம். ‡ நெறிவுமறியுஞ் செறிபுந்தியும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

நீதியிலொன்றும்வழுவேனிட்கண்டகஞ்* செய்துவாழ்வேன்
வேதியர்தம்மைவெருளேன்வெகுண்டவர்க்குந்துணையாகேன்
சோதியிற்சோதியெம்மானைச்சுண்ணவெண்ணீறணிந்திட்ட
ஆதியிருப்பதுமாரூரவரெம்மையுமாள்வரோகேளீர். (ரு)

அருத்தம்பெரிதுமுகப்பனல்லலையே † னலந்தார்கள்
ஒருத்தர்க்குதவியேனல்லேனுற்றவர்க்குந்துணையல்லேன்
பொருத்தமேலொன்றுமிலாதேன்புற்றெடுத்திட்டிடங்கொண்ட
அருத்தனிருப்பதுமாரூரவரெம்மையுமாள்வரோகேளீர். (சு)

சந்தம்பலவறுக்கில்லேன்சார்ந்தவர்தம்மடிச்சாரேன்
முந்திப்பொருவிடையேறிமூவுலகுந்திரிவானே
கந்தங்கமழ்கொன்றைமாலைக்கண்ணியன்விண்ணவரேத்தும்
எந்தையிருப்பதுமாரூரவரெம்மையுமாள்வரோகேளீர். (எ)

நெண்டிக்கொண்டேயுங்கிலாய்ப்ப ‡ னிச்சயமேயிதுதிண்ணம்
மிண்டர்க்குமிண்டலாற்பேசேன்மெய்ப்பொருளன்றியுணரேன்
பண்டங்கிலங்கையர்கோனைப்பருவரைக்கீழடர்த்திட்ட
அண்டனிருப்பதுமாரூரவரெம்மையுமாள்வரோகேளீர். (அ)

நமர்பிறரென்பதறியேனான்கண்டதேகண்டுவாழ்வேன்
தமரம்பெரிதுமுகப்பன்றக்கவாறொன்றுமிலாதேன்
குமரன்றிருமால்பிரமன்கூடியதேவர்வணங்கும்
அமரனிருப்பதுமாரூரவரெம்மையுமாள்வரோகேளீர். (கூ)

ஆசைபலவறுக்கில்லேனாரையுமன்றியுரைப்பன் ¶
பேசிற்சழக்கலாற்பேசேன்பிழைப்புடையேன்மனந்தன்னால்
ஓசைபெரிதுமுகப்பானொலிகடனஞ்சமுதுண்ட
ஈசனிருப்பதுமாரூரவரெம்மையுமாள்வரோகேளீர். (க0)

எந்தையிருப்பதுமாரூரவரெம்மையுமாள்வரோவென்று
சிந்தைசெயுந்திறம்வல்லான்றிருமருவுந்திரடோளன்
மந்தமுழவமியம்பும்வளவயனாவலாரூரன்
சந்தமிசையொடும்வல்லார்தாம்புகழெய்துவர்தாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார் சீர்காழியை அகன்று, திருக்கோலக்கா முதலிய ஸ்தலங்களை வணங்கிக்கொண்டு, திருவாரூருக்குச் சமீபித்தார். உடனே வன்மீகநாதர் திருவாரூரில் வாழ்பவர்களெல்லாருக்கும் "நம்முடைய அடியானாகிய நம்பியாரூரன் நாம் அழைக்க வருகின்றான். நீங்கள் அவனை எதிர்கொள்ளக்கடவீர்கள்" என்று பணித்தருள; அவர்களெல்லாரும் ஆச்சரியங்கொண்டு மனமகிழ்ந்து, வீதிகளெல்லாவற்றையும் மிகவலங்கரித்து நானாவித வாத்தியங்கள் ஒலிக்க, திருமதில்வாயிற் புறத்து வந்து, சுந்தரமூர்த்தி நாயனாரை எதிர்கொண்டு வணங்கினார்கள். சுந்தரமூர்த்தி நாயனார் அவர்களெதிரே அஞ்

* னிர்க்கண்டகஞ் என்றும் பாடம். † னல்லவல்லையேன் என்றும் பாடம். ‡ யுங்கலாய்ப்பன் என்றும் பாடம். ¶ யன்றியுரைப்பேன் என்றும் பாடம்.

Koviloor Digital Library

சவிகூப்பி வந்து, திருவீதியிற் செல்லும்பொழுது, அவர்களைநோக்கி, "கரையுங்கடலும்" என்றெடுத்து, "எந்தையிருப்பது மாரூ ரவரெம்மையு மாள்வரோ கேளீர்" என்னுந் திருப்பதிகத்தைப் பாடிக்கொண்டு, திருக்கோயிற்றிருவாயிலை அடைந்தார்.

பண் - புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

அந்தியுநண்பகலு* மஞ்சுபதஞ்† சொல்லி
முந்தியெழும்பழையவல்வினைமூடாமுன்
சிந்தைபராமரியாத்தென்றிருவாரூர்புக்
கெந்தைபிரானாரையென்றுகொலெய்துவதே. (க)

நின்றவினைக்கொடுமைநீங்கவிருபொழுதும்
துன்றுமலரிட்டுச்சூழும்வலஞ்செய்து
தென்றன்மணங்கமழுந்தென்றிருவாரூர்புக்
கென்றன்மனங்குளிரவென்றுகொலெய்துவதே. (உ)

முன்னைமுதற்பிறவிமூதறியாமையினல்
பின்னைநினைந்தனவும்பேதுறவும்மொழியச்
செந்நெல்வயற்‡ கழனித்தென்றிருவாரூர்புக்
கென்னுயிர்க்கின்னமுதையென்றுகொலெய்துவதே. (ங)

நல்லநினைப்பொழியநாள்களிலாருயிரைக்
கொல்லநினைப்பனவுங்குற்றமுமற்றொழியச்
செல்வவயற்கழனித்தென்றிருவாரூர்புக்
கெல்லைமிதித்தடியேனென்றுகொலெய்துவதே. (சு)

கடுவரிமாக்கடலுட்காய்ந்தவன்றாதையைமுன்
சுடுபொடிமெய்க்கணிந்தசோதியைவன்றலைவாய்
அடுபுலிபாடையனையாதியையாரூர்புக்
கிடுபலிகொள்ளியைநானென்றுகொலெய்துவதே. (ரு)

சூழொளிநீர்நிலந்தீத்தாழ்வளி¶ யாகாசம்
வானுயர்வெங்கதிரோன்வண்டமிழ்வல்லவர்கள்
ஏழிசையேழ்நரம்பினோசையையாரூர்புக்
கேழுலகாளியைநானென்றுகொலெய்துவதே. (சா)

கொம்பனநுண்ணிடையாள்கூறனைநீறணிந்த
வம்பனையெவ்வுயிர்க்கும்வைப்பினையொப்பமராச் §
செம்பொனைநன்மணியைத்தென்றிருவாரூர்புக்
கென்பொனையென்மணியையென்றுகொலெய்துவதே. (எ)

* நண்பகலும் என்றும் பாடம்; நண்பகல் - நடுப்பகல். † அஞ்சுபதம் - பஞ்சாக்கரம்; பொருளைபுணர்த்து மோரெழுத் தொருமொழிகளாதலின் பஞ்சாக்கரங்கள் அஞ்சுபதமெனப்பட்டன. ‡ செந்நெல்வயல் என்றும் பாடம். ¶ தாழ்வளி என்றும் பாடம். § வைப்பினையொப்பமரர் என்றும் பாடம்.

Koviloor Digital Library

ஆறணிநின்முடிமேலாடரவஞ்சூடிப்
பாறணிவெண்டலையிற்பிச்சைகொணச்சரவன்
சேறணிதண்கழனித்தென்றிருவாரூர்புக்
கேறணியெம்மிறையையென்றுகொலெய்துவதே. (அ)

மண்ணினையுண்டுமிழ்ந்தமாயனுமாமலர்மேல்
அண்ணலுநண்ணரியவாதியைமாதினொடும்
திண்ணியமாமதில்சூழ்தென்றிருவாரூர்புக்
கெண்ணியகண்குளிரவென்றுகொலெய்துவதே. (கூ)

மின்னெடுஞ்செஞ்சடையான்மேவியவாரூரை
நன்னெடுங்காதன்மையானாவலர்கோனூரன்
பன்னெடுஞ்சொன்மலர்கொண்டிட்டனபத்தும்வல்லார்
பொன்னுடைவிண்ணுலகந்நண்ணுவர்புண்ணியரே. (க0)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்தி நாயனார் காஞ்சிபுரத்தை நீங்கி, வழியிலே, "அந்தியு நண்பகலும்" என்றெடுத்து, "தென்றிரு வாரூர்புக்-கெந்தைபி ரானாரை யென்றுகொ லெய்துவதே" என்னுந் திருப்பதிகத்தைப்பாடியருளி, மற்றுந்தலங்களை வணங்கிக்கொண்டு திருவாரூரை அடைந்தார்.

பண் - செந்துருத்தி.

திருச்சிற்றம்பலம்.

மீளாவடிமையுமக்கேயாளாய்ப்பிறரைவேண்டாதே
மூளாத்தீப்போலுள்ளேகனன்றுமுகத்தான்மிகவாடி
ஆளாயிருக்குமடியார் * தங்களல்லல்சொன்னக்கால் †
வாளாங்கிருப்பீர் திருவாரூரீர்வாழ்ந்துபோதீரே. (க)

விற்றுக்கொள்வீரொற்றியல்லேன் ‡ விரும்பியாட்பட்டேன்
குற்றமொன்றுஞ்செய்ததில்லைகொத்தை ¶ யாக்கினீர்
எற்றுக்கடிகேளென்கண்கொண்டீர்நீரேபழிப்பட்டீர்
மற்றைக்கண்டான்றாராதொழிந்தால்வாழ்ந்துபோதீரே. (உ)

அன்றின்முட்டாதடையுஞ்சோலையாரூரகத்தீரே
கன்றுமுட்டியுண்ணச்சுரந்தகாலியவைபோல
என்றுமுட்டாப்பாடுமடியார்தங்கண்காணாது
குன்றின்முட்டிக்குழியில்வீழ்ந்தால்வாழ்ந்துபோதீரே. (ங)

துருத்தியுறைவீர்பழனம்பதியாச்சோற்றுத்துறையாள்வீர்
இருக்கைதிருவாரூரேயுடையீர்மனமேயெனவேண்டா §
அருத்தியுடையவடியார்தங்களல்லல்சொன்னக்கால் 0
வருத்திவைத்துமறுமைபணித்தால்வாழ்ந்துபோதீரே. (ச)

* யிருக்கும்மடியார் என்றும் பாடம். † சொன்னாக்கால் என்றும் பாடம். ‡ விற்றுக் கொள்ளீரொற்றியல்லேன் என்றும் பாடம். ¶ கொத்தை - கேடு; ஈண்டுக்கண்கெடுதல். § வேண்டாம் என்றும் பாடம். 0 சொன்னாக்கால் என்றும் பாடம்.

Koviloor Digital Library

செந்தண்பவளந்திகழுஞ்சோலையிதுவோ திருவாரூர் *
எந்தம்மடிகேளிதுவேயாமா றுமக்காட்பட்டோர்க்குச்
சந்தம்பலவும்பாடும்மடியார் தங்கண்காணாது
வந்தெம்பெருமான்முறையோவென்றால்வாழ்ந்துபோதீரே. (ரு)

தினைத்தாளன்னசெங்காணாரைசேருந்திருவாரூர்ப்
புனத்தார்கொன்றைப்பொன்போன்மாலைப்புரிபுன்சடையீரே †
தனத்தாலின்றித்தாந்தாமெலிந்துதங்கண்காணாது
மனத்தால்வாடியடியாரிருந்தால்வாழ்ந்துபோதீரே. (சு)

ஆயம்பேடையடையுஞ்சோலையாரூரகத்தீரே
ஏயெம்பெருமானிதுவேயாமாறுமக்காட்பட்டோர்க்கு
மாயங்காட்டிப்பிறவிகாட்டிமறவாமனங்காட்டிக்
காயங்காட்டிக்கண்ணீர்கொண்டால்வாழ்ந்துபோதீரே. (எ)

கழியாய்க்கடலாய்க்கலனாய்நிலனாய்க்கலந்தசொல்லாகி ‡
இழியாக்குலத்திற்பிறந்தோமும்மையிகழாதேத்துவோம்
பழிதானாவதறியீரடிகேள்பாடும்பத்தரோம்
வழிதான்காணாதலமந்திருந்தால் ¶ வாழ்ந்துபோதீரே. § (அ)

பேயோடேனும்பிரிவொன்றின்னாதென்பர் ௦ பிறரெல்லாம்
காய்தான்வேண்டிற்கனிதானன்றோகருதிக்கொண்டக்கால்
நாய்தான்போலநடுவேதிரிந்துமுமக்காட்பட்டோர்க்கு
வாய்தான்திறவீர் திருவாரூரீர்வாழ்ந்துபோதீரே. (கூ)

செருந்திசெம்பொன்மலருஞ்சோலையிதுவோ திருவாரூர்
பொருந்தித்திருமூலட்டானம்மேயிடமாக்கொண்டீரே ௦௦
இருந்துநின்றுங்கிடந்துமும்மையிகழாதேத்துவோம்
வருந்திவந்துமுமக்கொன்றுரைத்தால்வாழ்ந்துபோதீரே. (க௦)

காரூர்கண்டத்தெண்தோண்முக்கண்கலைகள்பலவாகி
ஆரூர்த்திருமூலட்டானத்தேபடிப்பேராரூரன்
பாரூரறியவென்கண்கொண்டீர்நீரேபழிப்பட்டீர்
வாரூர்முலையாள்பாகங்கொண்டீர்வாழ்ந்துபோதீரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவாரூர்த்திருப்பதிகம் - நச.

ஆ திருப்பதிகம் - உகூக.

சுவாமி தேவி திருநாமங்கள் - வன்மீகநாதர், அல்லியங்கோதையம்மை.

* மிதவாதிருவாரூர் என்றும் பாடம். † மாலைபுரிபுன்சடையீரே என்றும் பாடம். ‡ கழிந்த சொல்லாகி என்றும் பாடம். ¶ தலம்வந்திருந்தால் என்றும் பாடம். § சிலபிரதிகளில் அ-ம் திருப்பாட்டு க௦-வதாகவும் கூ-வது அ-வதாகவும் க௦-வது கூ-வதாகவும் காணப்படுகின்றன ௦ பேயோடாலும் பிரிவொன்றின்னாதென்பர் என்றும், பேயோடேனும் பிறிவொன்றின்னாதென்பர் என்றும் பாடம். ௦௦ கொண்டீரை என்றும் பாடம்; ஐ அசை.

Koviloor Digital Library

சுந்தரமூர்த்தி நாயனர் திருவாரூரிலே சுவாமியைத் தரிசனஞ்செய்தற்கு ஒரு கண் போதாமையால் அதிக துக்கங்கொண்டு "சுவாமீ! அடியேனுக்கு வலக்கண்ணையுந் தந்து அடியேனை இத்துக்கசாகரத்தினின்றும் கரையேற்றி யருளல்வேண்டும்" என்று பிரார்த்தித்து, "மீளாவடிமை யுமக்கேயாளாய்" என்னுந் திருப்பதிகம் பாடினர். அப்பொழுது வன்மீகநாதர் திருவுளமிரங்கி அவருக்கு வலக்கண்ணையுங் கொடுத்தருளினர். உடனே சுந்தரமூர்த்திநாயனர் பரவசமாய்ப் பலமுறை விழுந்தும், எழுந்தும், மிகுந்த களிப்பினலே ஆடியும், பாடியும், ஆனந்தசாகரத்தில் அமிழ்ந்தி, வன்மீகநாதருடைய திருக்கோலத்தை இரண்டுகண்களினலுந் தரிசனஞ்செய்து வணங்கித் துதித்தார்.

அஅ. திருவாரூரரநெறி.

திருநாவுக்கரசுநாயனர்.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

எத்தீபுகினு* மெமக்கொருதீதிலை
தெத்தேயெனமுரன்றெம்முளுழிதர்வர்
முத்தீயனையதொர்மூவிலைவேல்பிடித்
தத்திநிறத்தாரரநெறியாரே. (க)

வீரமும்பூண்பர்விசயனொடாயதொர்
தாரமும்பூண்பர்தமக்கன்புபட்டவர்
பாரமும்பூண்பர்நற்பைங்கண்மிளிரர
வாரமும்பூண்பாரநெறியாரே. (உ)

தஞ்சவண்ணத்தர்சடையினர்தாமுமோர்
வஞ்சவண்ணத்தர்வண்டார்குழலாளொடும்
துஞ்சவண்ணத்தர்துஞ்சாதகண்ணர்தொழும்†
அஞ்சவண்ணத்தரரநெறியாரே. (ங)

விழித்தனர்காமனைவீழ்தரவிண்ணின்
றிழித்தனர்கங்கையையேத்தினர்பாவம்
கழித்தனர்கல்சூழ்கடியரண்மூன்றும்
அழித்தனராரூரரநெறியாரே. (ச)

துற்றவர்வெண்டலையிற்சுருள்கோவணம்
தற்றவர்தம்வினையானவெலாமற
அற்றவராரூரரநெறிகைதொழ
உற்றவர்தாமொளிபெற்றனர்தாமே.‡ (ரு)

* எத்திப்புகினும் என்றும், எத்தீப்புகினும் என்றும், எத்திசைபுகினும் என்றும் பாடம்.
† கண்ணார்தொழும் என்றும் பாடம். ‡ பெற்றவர்தாமே என்றும் பாடம்.

Koviloor Digital Library

கூடரவத்தர்குரற்கிண்கிணியடி
நீடரவத்தர்முன்மாலையிடையிருள்
பாடரவத்தர்பணமஞ்ஞைவிரித்
தாடரவத்தாரநெறியாரே. (சு)

கூடவல்லார்குறிப்பிலுமையாளொடும்
பாடவல்லார்பயின்றந்தியுஞ்சந்தியும்
ஆடவல்லார்திருவாரூராநெறி
நாடவல்லார்வினைவிடவல்லாரே. (எ)

பாலைநகுபனிவெண்மதிபைங்கொன்றை
மாலையுங்கண்ணியுமாவனசேவடி
காலையுமாலையுங்கைதொழுவார்மனம்
ஆலயமாரூராநெறியார்க்கே. * (அ)

முடிவண்ணம்வானமின்வண்ணந்தம்மார்பின் †
பொடிவண்ணந்தம்புகழூர்தியின்வண்ணம்
படிவண்ணம்பாற்கடல்வண்ணஞ்செஞ்ஞாயி
றடிவண்ணமாரூராநெறியார்க்கே. ‡ (கூ)

பொன்னவில்புன்சடையானடியின்னிழல்
இன்னருள்சூடியெள்காதுமிராப்பகல்
மன்னவர்கின்னரர்வானவர்தாந்தொழும்
அன்னவராரூராநெறியாரே. (கo)

பொருண்மன்னனைப்பற்றிப்புட்பகங்கொண்ட
மருண்மன்னனைப்பெற்றிவாளுடனீர்ந்து
கருண்மன்னுகண்டங்கறுக்கநஞ்சுண்ட
அருண்மன்னராரூராநெறியாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

* ரரநெறியாரே என்றும் பாடம்; இப்பாடத்திற்கு அரநெறியார்க்கு எனக்குவ்வுருபுவிரிக்க. † மார்பில் என்றும் பாடம். ‡ ரரநெறியாரே என்றும் பாடம்; இங்ஙனமே பொன்வண்ணத்தந்தாதியிற் சேரமான்பெருமாணாயனாரும் "பொன்வண்ணமெவ்வண்ணமவ்வண்ணமேனிபொலிந்திலங்கும்—மின்வண்ணமெவ்வண்ணமவ்வண்ணம் வீழ்சடைவெள்ளிக்குன்றம்—தன்வண்ணமெவ்வண்ணமவ்வண்ணமால்விடைதன்னைக்கண்ட—என்வண்ணமெவ்வண்ணமவ்வண்ணமாகியவீசற்கே." என்றருளிச்செய்தார்.

Koviloor Digital Library

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

பொருங்கைமதகரியுரிவைப்போர்வையானைப்
பூவணமும்வலஞ்சுழியும்பொருந்தினானைக்
கரும்புதருகட்டியையின்னமிர்தைத்தேனைக்
காண்பரியசெழுஞ்சுடரைக்கனகக்குன்றை
இருங்கனகமதிலாரூர்மூலட்டானத்
தெழுந்தருளியிருந்தானையிமையோரேத்தும்
அருந்தவனையரநெறியிலப்பன்றன்னை *
யடைந்தடியேனருவினைநோயறுத்தவாறே. (௧)

கற்பகமுமிருசுடரு † மாயினானைக்
காளத்திகயிலாயமலையுளானை
விற்பயிலுமதனழியவிழித்தான்றன்னை
விசயனுக்குவேடுவனாய்நின்றான்றன்னைப்
பொற்பமரும்பொழிலாரூர்மூலட்டானம்
பொருந்தியவெம்பெருமானைப்பொருந்தார்சிந்தை
அற்புதனையரநெறியிலப்பன்றன்னை
யடைந்தடியேனருவினைநோயறுத்தவாறே. (௨)

பாதியொருபெண்முடிமேற்கங்கையானைப்
பாசூரும்பரங்குன்று ‡ மேயான்றன்னை
வேதியனைத்தன்னடியார்க்கெளியான்றன்னை
மெய்ஞ்ஞானவிளக்கானைவிரையேநாறும்
போதியலும்பொழிலாரூர்மூலட்டானம்
புற்றிடங்கொண்டிருந்தானைப்போற்றுவார்கள்
ஆதியனையரநெறியிலப்பன்றன்னை
யடைந்தடியேனருவினைநோயறுத்தவாறே. (௩)

நந்திபணிகொண்டருளுநம்பன்றன்னை
நாகேச்சரமிடமாநண்ணினானைச்
சந்திமலரிட்டணிந்துவானோரேத்துந்
தத்துவனைச்சக்கரமாற்கீந்தான்றன்னை
இந்துநுழைபொழிலாரூர்மூலட்டான
மிடங்கொண்டபெருமானையிமையோர்போற்றும் ¶
அந்தணனையரநெறியிலப்பன்றன்னை
யடைந்தடியேனருவினைநோயறுத்தவாறே. (௪)

* யரநெறியிலையன்றன்னை என்றும் பாடம். † கற்பகமும்விரிசுடரும் என்றும் பாடம். ‡ பாசூர்பரங்குன்றம் என்றும் பாடம். ¶ யிமையோரேத்தும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

சுடர்ப்பவளத்திருமேனிவெண்ணீற்றானைச்
சோதிலிங்கத்* தூங்கானைமாடத்தானை
விடக்கிடுகாட்டிடமாகவுடையான்றன்னை
மிக்கரணமெரியூட்டவல்லான்றன்னை
மடற்குலவுபொழிலாரூர்மூலட்டான
மன்னியவெம்பெருமானைமதியார்வேள்வி
அடர்த்தவனையரநெறியிலப்பன்றன்னை
யடைந்தடியேனருவினைநோயறுத்தவாறே. (௫)

தாயவனையெவ்வுயிர்க்குந்தன்னொப்பில்லாத்
தகுதில்லைநடம்பயிலுந்தலைவன்றன்னை
மாயவனுமலரவனும்வானோரேத்த
மறிகடனஞ்சுண்டுகந்தமைந்தன்றன்னை
மேயவனைப்பொழிலாரூர்மூலட்டானம்
விரும்பியவெம்பெருமானையெல்லாமுன்னே
ஆயவனையரநெறியிலப்பன்றன்னை
யடைந்தடியேனருவினைநோயறுத்தவாறே. (௬)

பொருளியனற்சொற்பதங்களாயினானைப்
புகலூரும்புறம்பயமுமேயான்றன்னை
மருளியனுஞ்சிந்தையர்க்குமருந்துதன்னை
மறைக்காடுஞ்சாய்க்காடுமன்னினானை
இருளியனற்பொழிலாரூர்மூலட்டானத்
தினிதமரும்பெருமானையிமையோரேத்த
அருளியனையரநெறியிலப்பன்றன்னை
யடைந்தடியேனருவினைநோயறுத்தவாறே. (௭)

காலனைக்காலாற்காய்ந்தகடவுடன்னைக்
காரோணங்கழிப்பாலைமேயான்றன்னைப்
பாலனுக்குப்பாற்கடலன்றீந்தான்றன்னைப்
பணியுகந்தவடியார்கட்கினியான்றன்னைச்
சேலுகளும்வயலாரூர்மூலட்டானஞ்
சேர்ந்திருந்தபெருமானைப்பவளமின்ற
ஆலவனையரநெறியிலப்பன்றன்னை
யடைந்தடியேனருவினைநோயறுத்தவாறே. (௮)

ஒப்பொருவரில்லாதவொருவன்றன்னை
யோத்தூருமுறையூருமேவினானை
வைப்பவனைமாணிக்கச்சோதியானை
மாருதமுந்தீவெளிநீர்மண்ணானானைப்
பொ† * * * * * * * * * * (௯)

* சோதிலக்கு என்றும் பாடம். † பெ என்றும் பாடம்; இத்திருப்பாட்டில் ஏனைய அடிகள் மறைந்துபோயின.

Koviloor Digital Library

பகலவன்றன்பல்லுகுத்த * படிறன்றன்னைப்
பராய்த்துறைபைஞ்ஞீலியிடம்பாவித்தானை
இகலவனையிராவணனையிடர்செய்தானை
யேத்தாதார்மனத்தகத்துளிருளானானைப்
புகழ்நிலவுபொழிலாரூர்மூலட்டானம்
பொருந்தியவெம்பெருமானைப்போற்றார்சிந்தை
அகலவனையரநெறியிலப்பன்றன்னை
யடைந்தடியேனருவினைநோயறுத்தவாறே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருவாரூரரநெறித்திருப்பதிகம் - உ.

ஆ திருப்பதிகம் - உ௫௩.

சுவாமி தேவி திருநாமங்கள் - அகிலேசுவரர், அகிலேசுவரி.

அ௬. திருவாரூர்ப்பரவையுண்மண்டளி. †

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

தூவாயாதொண்டுசெய்வார்படுதுக்கங்கள்
காவாயா ‡ கண்டுகொண்டாரைவர்காக்கிலும்
நாவாயாலுன்னையேநல்லனசொல்லுவேற்
காவாவென்பரவையுண்மண்டளியம்மானே. (௧)

பொன்னானேபுலவர்க்குநின்புகழ்போற்றலாம்
தன்னானேதன்னைப்புகழ்ந்திடுந்தற்சோதி
மின்னானேசெக்கர்வானத்திளஞாயி
றன்னானேபரவையுண்மண்டளியம்மானே. (உ)

நாமாறாதுன்னையேநல்லனசொல்லுவார்
போமாறென்புண்ணியாபுண்ணியமானானே
பேய்மாறாப்பிணமிடுகாடுகந்தாடுவாய்க்
காமாறென்பரவையுண்மண்டளியம்மானே. (௩)

நோக்குவேனுன்னையேநல்லனநோக்காமைக்
காக்கின்றார் ¶ கண்டுகொண்டாரைவர்காக்கிலும்
வாக்கென்னுமாலைகொண்டுன்னையென்மனத்
தார்க்கின்றேன்பரவையுண்மண்டளியம்மானே. (௪)

* பல்லுதிர்த்த என்றும் பாடம். † இதனைத் துலாநாயனார் கோயில் என்றும் வழங்குப. ‡ காவாயே என்றும் பாடம். ¶ காக்கின்றாய் என்றும் பாடம்.

Koviloor Digital Library

பஞ்சேருமெல்லடியாளையோர்பாகமாய்
நஞ்சேருநன்மணிகண்டமுடையானை
நெஞ்சேரநின்னையேயுள்கிக்கிளைவாரை
அஞ்சேலென்பரவையுண்மண்டளியம்மானே. (௫)

அம்மானேயாகமசீலர்க்கருணல்கும்
பெம்மானேபேரருளாளன்பிடவூரன்
தம்மானேதண்டமிழ்நூற்புல* வாணர்க்கோர்
அம்மானேபரவையுண்மண்டளியம்மானே. (௬)

விண்டானேமேலையார்மேலையார்மேலாய
எண்டானேயெழுத்தேசொற்பொருளெல்லாமுன்
கண்டானேகண்டனைக்கொண்டிட்டுக்காட்டாயே
அண்டானேபரவையுண்மண்டளியம்மானே. (௭)

காற்றானேகார்முகில்போல்வதோர்கண்டத்தெம்
கூற்றானேகோல்வளையாளையோர்பாகமாய்
நீற்றானேநீள்சடைமேனிறைவுள்ளதோர்
ஆற்றானேபரவையுண்மண்டளியம்மானே. (௮)

செடியேனுஞ்செய்வினைநல்லனசெய்யாத
கடியேனுன்கண்டதேகண்டதேகாமுறும்
கொடியேனுன்கூறுமாறுன்பணி† கூறாத
அடியேனுன்பரவையுண்மண்டளியம்மானே. (௯)

கரந்தையும்வன்னியுமத்தமுங்கூவிளம்
பரந்தசீர்ப்பரவையுண்மண்டளியம்மானை
நிரம்பியவூரனுரைத்தனபத்திவை
விரும்புவார்மேலையார்மேலையார்மேலாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருவாரூர்ப்பரவையுண்மண்டளித்திருப்பதிகம் - ௧.

ஆ திருப்பதிகம் - ௨௫௪.

சுவாமி தேவி திருநாமங்கள் - மண்டலேசுரர், பஞ்சின்மெல்லடியாள்.

* நூற்புலம் பண்புத்தொகை; புலம் - நூல்; அது "புலந்தொகுத்தோனே" என்பதனுமறிக. † கூறுமாறுன்பணி என்றும் பாடம்.

Koviloor Digital Library

கூ0. திருவிளமர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

திருவிராகம். பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

மத்தகமணிபெறமலர்வதோர்மதிபுரைநுதல்கரம்
ஒத்தகநகமணிமிளிர்வதோரரவினரொளிகிளர்
அத்தகவடிதொழவருள்பெறுகண்ணொடு* முமையவள்
வித்தகருறைவதுவிரிபொழில்வளநகர்விளமரே. (க)

பட்டிலகியமுலையரிவையருலகினிலிடுபலி
ஒட்டிலகிணைமரவடியினருமைபுறுவடிவினர்
சிட்டிலகழகியபொடியினர்விடைமிசைசேர்வதோர்
விட்டிலகழகொளிபெயரவருறைவதுவிளமரே. (உ)

அங்கதிரொளியினரரையிடைமிளிர்வதோரரவொடு
செங்கதிரெனநிறமனையதோர்செழுமணிமார்பினர்
சங்கதிர்பறைகுழன்முழவினொடிசைதருசரிதையர்
வெங்கதிருறுமழுவுடையவரிடமெனில்விளமரே. (ந)

மாடமதெனவளர் † மதிலவை ‡ யெரிசெய்வர்விரவுசீர்ப்
பீடெனவருமறைபுரைசெய்வர்பெரியபல்சரிதைகள்
பாடலராடியசுடலையிலிடமுறநடநவில்
வேடமதுடையவர்வியனகரதுசொலில்விளமரே. (ச)

பண்டலைமழலைசெயாழெனமொழியுமைபாகமாக்
கொண்டலைகுரைகழலடிதொழுமவர்வினைகுறுகிலர்
விண்டலையமரர்கடுதிசெயவருள்புரிவிறலினர்
வெண்டலைபலிகொளும்விமலர்தம்வளநகர்விளமரே. (ரு)

மனைகடொறிடுபலியதுகொள்வர்மதிபொதிசடையினர்
கனைகடலடுவிடமமுதுசெய்கறையணிமிடறினர்
முனைகெடவருமதிளெரிசெய்தவவர்கழல்பரவுவார்
வினைகெடவருள்புரிதொழிலினர்செழுநகர்விளமரே. (சு)

நெறிகமழ்தருமுரையுணர்வினர்புணர்வுறுமடவரல்
செறிகமழ்தருமுருவுடையவர்படைபலபயில்பவர்
பொறிகமழ்தருபடவரவினர்விரவியசடைமிசை
வெறிகமழ்தருமலரடைபவரிடமெனில்விளமரே. (எ)

* கணணொடும் என்றும் பாடம். † மாடமர்மதில்வளர் என்றும், மாடமதினம்வளர் என்றும் பாடம். ‡ மதிலவை - முப்புரத்தொகுதி; அவை-தொகுதி; சுட்டுப்பெயருமாம்.

Koviloor Digital Library

தென்கடல்புடையணிநெடுமதிலிலங்கையர்தலைவனைப்
பண்படவரைதனிலடர்செய்தபைங்கழல்வடிவினர்
திண்கடலடைபுனறிகழ்சடைபுகுவதோர்சேர்வினர்
விண்கடல்விடமலி * யடிகடம்வளநகர்விளமரே. (௮)

தொண்டசையுறவருதுபருறுகாலனைமாள்வுற
அண்டல்செய்திருவரைவெருவுறவாழலாயினர்
கொண்டல்செய்தருதிருமிடறினரிடமெனிலளியினம்
விண்டிசையுறுமலர்நறுமதுவிரிபொழில் † விளமரே. (௯)

ஒள்ளியர்தொழுதெழவுலகினிலுரைசெயுமொழிபல
கொள்ளியகளவினர்குண்டிகையவர்தவமறிகிலார் ‡
பள்ளியைமெய்யெனக்கருதன்மின்பரிவொடுபேணுவீர்
வெள்ளியபிறையணிசடையினர்வளநகர்விளமரே. (௧௦)

வெந்தவெண்பொடியணியடிகளைவிளமருள்விகிர்தரைச்
சிந்தையுளிடைபெறவுரைசெய்ததமிழிவைசெழுவிய
வந்தணர்புகலியுளழகமருமறைஞானசம்
பந்தனமொழியிவைபுரைசெயுமவர்வினைபறையுமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவிளமர்த் திருப்பதிகம் - ௧.

ஆ திருப்பதிகம் - ௨௫௫.

சுவாமி தேவி திருநாமங்கள் - பதஞ்சலிமனோகரர், யாழினுமென்மொழியாள்.

௯௧. திருக்கரவீரம். ¶

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

அரியுநம்வினையுள்ளனவாசற
வரிகொண்மாமணிபோற்கண்டம்
கரியவன்றிகழுங்கரவீரத்தெம்
பெரியவன்கழல்பேணவே. (௧)

* விழுமலி என்றும் பாடம். † விண்திசை உறு பொழில் என்க; விண்டு என ஒரு சொல்லாக்கில் முகில், காற்று, மூங்கில் எனப்பொருள் கொள்க; விண்டசைவுறு என்றும், விண்டசைவுற என்றும் பாடம். ‡ மறிவிலார் என்றும் பாடம். ¶ திருக்கரவீரம்—கரையபுரம்.

Koviloor Digital Library

தங்குமோவினை தாழ்சடைமேலவன்
திங்களோடுடன்சூடிய
கங்கையான்றிகழுங்கரவீரத்தெம்
சங்கரன்கழல்சாரவே. (உ)

ஏதம்வந்தடையாவினிநல்லன
பூதம்பல்படையாக்கிய
காதலான்றிகழுங்கரவீரத்தெம்
நாதன்பாதநணுகவே. (௩)

பறையுநம்வினையுள்ளனபாழ்பட
மறையுமாமணிபோற்கண்டம்
கறையவன்றிகழுங்கரவீரத்தெம்
இறையவன்கழலேத்தவே. (௪)

பண்ணினார்மறைபாடலனாடலன்
விண்ணினார்மதிலெய்தமுக்
கண்ணினானுறையுங்கரவீரத்தை
நண்ணுவார்வினைநாசமே. (௫)

நிழலினார்மதிசூடியநீள்சடை*
அழலினாரழலேந்திய †
கழலினாருறையுங் ‡ கரவீரத்தைத்
தொழவல்லார்க்கில்லைதுக்கமே. (௬)

வண்டர்மும்மதின்மாய்தரவெய்தவன்
அண்டனாரழல்போலொளிர்
கண்டனாருறையுங்கரவீரத்துத்
தொண்டர்மேற்றுயர்தூரமே. (௭)

புனலிலங்கையர்கோன்முடிபத்திறச்
சினவலாண்மைசெகுத்தவன்
கனலவனுறைகின்றகரவீரம்
எனவல்லார்க்கிடரில்லையே. (௮)

வெள்ளத்தாமரையானொடுமாலுமாய்த்
தெள்ளத்தீத்திரளாகிய
கள்ளத்தானுறையுங்கரவீரத்தை
உள்ளத்தான்வினையோயுமே. (௯)

செடியமண்ணொடுசீவரத்தாரவர்
கொடியவெவ்வுரைகொள் ¶ ளேன்மின்
கடியவனுறைகின்றகரவீரத்
தடியவர்க்கில்லையல்லலே. (௧௦)

* சூடினனீள்சடை என்றும் பாடம். † ரனலேந்திய என்றும் பாடம். ‡ கழலினானுறையுங் என்றும் பாடம். ¶ கொள்ளன்மின் என்றும் பாடம்.

விடிலான்விளங்குங்கரவீரத்தெம்
சேடன்மேற்கசிவாற்றமிழ்
நாடுஞானசம்பந்தன*சொல்லிவை
பாடுவார்க்கில்லைபாவமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருக்கரவீரத்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - உ௬௬.

சுவாமி தேவி திருநாமங்கள் - கரவீரநாதர், பிரத்தியக்ஷமின்னம்மை.

கூஉ. திருப்பெருவேளூர்.†

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

அண்ணாவுங்கழுக்குன்றமாயமலையவைவாழ்வார்
விண்ணோருமண்ணோரும்வியந்தேத்தவருள்செய்வார்
கண்ணாவாருலகுக்குக்கருத்தானார்‡புரமெரித்த
பெண்ணாணாம்பெருமானார்பெருவேளூர்பிரியாரே. (க)

கருமானினுரியுடையர்கரிகாடரிமவானார்
மருமானாரிவரென்றுமடவாளோடுடனாவர்
பொருமானவிடையூர்வதுடையார்வெண்பொடிப்பூசும்
பெருமானார்பிஞ்ஞகனார்பெருவேளூர்பிரியாரே. (உ)

குணக்குந்தென்றிசைக்கண்ணுங்குடபாலும்வடபாலும்
கணக்கென்னவருள்செய்வார்கழிந்தோர்க்குமொழிந்தோர்க்கும்
வணக்கஞ்செய்மனத்தராய்வணங்காதார்தமக்கென்றும்
பிணக்கஞ்செய்பெருமானார்பெருவேளூர்பிரியாரே. (௩)

இறைக்கொண்டவளையாளோடிருகூறுமொருகூறு
மறைக்கண்டத்திறைநாவர்¶மதிலெய்தசிலைவலவர்§
கறைக்கொண்டமிடறுடையர்கனல்கிளருஞ்சடைமுடிமேல்
பிறைக்கொண்டபெருமானார்பெருவேளூர்பிரியாரே. (ச)

* நாடிஞானசம்பந்தன என்றும் பாடம்; இப்பாடத்திற்கு நாடி - பெயர். † திருப்பெருவேளூர்-காட்டூர் ஐயன்பேட்டை. ‡ ருலகுக்கோர்கருத்தானர் என்றும் பாடம். ¶ கண்டத்தொருநாவர் என்றும் பாடம். § சிலைவல்லார் என்றும் பாடம்.

Koviloor Digital Library

விழையாதார்விழைவார்போல்விசிர்தங்கள்பலபேசிக்
குழையாதார்குழைவார்போற்குணநல்லபலகூறி
அழையாவுமரற்றுவு* மடிவீழ்வார்தமக்கென்றும்
பிழையாதபெருமானூர்பெருவேளூர்பிரியாரே. (௫)

விரித்தார்நான்மறைப்பொருளையுமையஞ்சவிறல்வேழம்
உரித்தாராமுரிபோர்த்துமதின்மூன்றுமொருகணையால்
எரித்தாராமிமைப்பளவிலிமையோர்கடொழுதிறைஞ்சப்
பெருத்தாரெம்பெருமானூர்பெருவேளூர்பிரியாரே. (௬)

மறப்பிலா † வடிமைக்கண்மனம்வைப்பார்தமக்கெல்லாம்
சிறப்பிலார் † மதிலெய்தசிலைவல்லாரொருகணையால்
இறப்பிலார் †பிணியில்லார்தமக்கென்றுங்கேடிலார் ‡
பிறப்பிலாப் † பெருமானூர்பெருவேளூர்பிரியாரே. (௭)

எரியார்வேற்கடற்றானையிலங்கைக்கோன்றனைவீழ
முரியார்ந்ததடந்தோள்களடர்த்துகந்தமுதலாளர்
வரியார்வெஞ்சிலைபிடித்துமடவாளையொருபாகம்
பிரியாதபெருமானூர்பெருவேளூர்பிரியாரே. (௮)

சேணியலுநெடுமாலுந்திசைமுகனுஞ்செருவெய்திக்
காணியல்பை ¶ யறிவிலராய்க்கனல்வண்ணரடியிணைக்கீழ்
நாணியவர்தொழுதேத்தநாணுமேயருள்செய்து
பேணியவெம்பெருமானூர்பெருவேளூர்பிரியாரே. (௯)

புற்றேறிபுணங்குவார்புகையார்ந்ததுகில்போர்ப்பார்
சொற்றேறவேண்டாநீர்தொழுமின்கள்சுடர்வண்ணம்
மற்றேறும்பரிமாவுமதகளிறுமிவையொழியப்
பெற்றேறும்பெருமானூர்பெருவேளூர்பிரியாரே. (௧௦)

பைம்பொன்சீர்மணிவாரிப்பலவுஞ்சேர்கனிபுந்தி
அம்பொன்செய்மடவரலாரணிமல்குபெருவேளூர்
நம்பன்றன்கழல்பரவிநவில்கின்றமறைஞான
சம்பந்தன்றமிழ்வல்லார்க்கருவினைநோய்சாராவே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

மறையணிநாவினானைமறப்பிலார்மனத்துளானைக்
கறையணிகண்டன்றன்னைக்கனலெரியாடினானைப்
பிறையணிசடையினானைப்பெருவேளூர்பேணினானை
நறையணிமலர்கடூவிநாடோறும்வணங்குவேனே. (௧)

* மலற்றுவும் என்றும் பாடம். † மறப்பில்லா என்றும், சிறப்பில்லார் என்றும், இறப்பில்லார் என்றும், பிறப்பில்லா என்றும் பாடம். ‡ கேடில்லார் என்றும் பாடம். ¶ காணியல்வை என்றும் பாடம்.

Koviloor Digital Library

நாதனாயுலகமெல்லாநம்பிரானெனவுநின்ற
பாதனாம்பரமயோகிபலபலதிறத்தினாலும்
பேதனாய்த்தோன்றினானைப்பெருவேளூர்பேணினானை
ஓதநாவுடையனாகியுரைக்குமாறுரைக்கிற்றேனே. * (உ)

குறவிதோண்மணந்த † செல்வக்குமரவேடாதையென்றும்
நறவிளநறுமென்கூந்தனங்கையோர்பாகத்தானைப்
பிறவியைமாற்றுவானைப்பெருவேளூர்பேணினானை
உறவினால்வல்லனாகியுணருமாறுணர்த்துவேனே. ‡ (௩)

மைஞ்ஞவில்கண்டன்றன்னைவலங்கையின்மழுவொன்றேந்திக்
கைஞ்ஞவின்மானினோடுங்கனலெரியாடினானைப்
பிஞ்ஞகன்றன்னையந்தண்பெருவேளூர்பேணினானைப்
பொய்ஞ்ஞெகாநினையமாட்டாப்பொறியிலாவறிவிலேனே. ¶ (௪)

ஓடைசேர்நெற்றியானையுரிவையைமூடினானை
வீடதேகாட்டுவானைவேதநான்காயினானைப்
பேடைசேர்புறவநீங்காப் § பெருவேளூர்பேணினானைக்
கூடநான்வல்லமாற்றங்குறுகுமாறறிகிலேனே. (௫)

கச்சைசேர்நாகத்தானைக்கடல்விடங்கண்டத்தானைக்
கச்சியேகம்பன்றன்னைக்கனலெரியாடுவானைப்
பிச்சைசேர்ந்துழல்வினானைப்பெருவேளூர்பேணினானை
இச்சைசேர்ந்தமரநானு 0 மிறைஞ்சுமாறிறைஞ்சுவேனே. (௬)

சித்தராய்வந்துதன்னைத்திருவடிவணங்குவார்கள்
முத்தனைமூர்த்தியாய ** முதல்வனைமுழுதுமாய
பித்தனைப்பிறருமேத்தப்பெருவேளூர் †† பேணினானை
மெத்தநேயவனை ‡‡ நாளும்விரும்புமாறறிகிலேனே. (௭)

முண்டமேதாங்கினானைமுற்றியஞானத்தானை
வண்டுலாங்கொன்றைமாலைவளர்மதிக்கண்ணியானைப்
பிண்டமேயாயினானைப்பெருவேளூர்பேணினானை
அண்டமாமாதியானையறியுமாறறிகிலேனே. (௮)

விரிவிலாவறிவினார்கள்வேறொருசமயஞ்செய்து
எரிவினாற்சொன்னாரேனுமெம்பிராற்கேற்றதாகும்
பரிவினாற்பெரியோரேத்தும்பெருவேளூர்பற்றினானை
மருவிநான்வாழ்த்தியுய்யும்வகையதுநினைக்கின்றேனே. (௯)

* றுரைக்கின்றேனே என்றும் பாடம். † குறவிதோளமர்ந்த என்றும் பாடம். ‡ யுணருமாறுணர்த்துவோமே என்றும் பாடம். ¶ வறிவனேனே என்றும் பாடம். § புறவுநீங்கா என்றும் பாடம். 0 சேர்ந்தமர்ந்துநானும் என்றும் பாடம். ** முத்தனைமுத்தியாய என்றும் பாடம். †† மேத்தும்பெருவேளூர் என்றும் பாடம். ‡‡ மெத்தனேயவனை என்றும் பாடம்.

Koviloor Digital Library

பொருகடலிலங்கைமன்னனுடல்கெடப்பொருத்திநல்ல
கருகியகண்டத்தானைக்கதிரிளங்கொழுந்துசூடும்
பெருகியசடையினானைப்பெருவேளூர்பேணினானை
உருகியவடியரேத்துமுள்ளத்தானுள்குவேனே. (௰)

திருச்சிற்றம்பலம்.

திருப்பெருவேளூர்த்திருப்பதிகம் - ௨.

ஆ திருப்பதிகம் - ௨௱௮.

சுவாமி தேவி திருநாமங்கள் - பிரியாதநாதர், ஏலவார்குழலி.

௯௩. திருத்தலையாலங்காடு.

திருநாவுக்கரசுநாயனார்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

தொண்டர்க்குத்தூநெறியாய்நின்றான்றன்னைச்
சூழ்நரகில்வீழாமேகாப்பான்றன்னை
அண்டத்துக்கப்பாலைக்கப்பாலானை
யாதிரைநாளாதரித்தவம்மான்றன்னை
முண்டத்தின்முளைத்தெழுந்ததீயானானை
மூவுருவத்தோருருவாய்முதலாய்நின்ற
தண்டத்திற்றலையாலங்காடன்றன்னைச்
சாராதேசாலநாட்போக்கினேனே. (௧)

அக்கிருந்தவரையானையம்மான்றன்னை
யவுணர்புரமொருநொடியிலெரிசெய்தானைக்
கொக்கிருந்தமகுடத்தெங்கூத்தன்றன்னைக்
குண்டலஞ்சேர்காதானைக்குழைவார்சிந்தை
புக்கிருந்துபோகாதபுனிதன்றன்னைப்
புண்ணியனையெண்ணருஞ்சீர்போகமெல்லாம் *
தக்கிருந்ததலையாலங்காடன்றன்னைச்
சாராதேசாலநாட்போக்கினேனே. (௨)

மெய்த்தவத்தைவேதத்தைவேதவித்தை
விளங்கிளமாமதிசூடும்விகிர்தன்றன்னை
எய்த்தவமேயுழிதந்தவேழையேனை
யிடர்க்கடலில்வீழாமேயேறவாங்கிப்
பொய்த்தவத்தாரறியாதநெறிநின்றானைப்
புனல்கரந்திட்டுமையொடொருபாகநின்ற
தத்துவனைத்தலையாலங்காடன்றன்னைச்
சாராதேசாலநாட்போக்கினேனே. (௩)

* சீர்ப் போகமெல்லாம் என்றும் பாடம்.

Koviloor Digital Library

சிவனாகித்திசைமுகனாய்த்திருமாலாகிச்
செழுஞ்சுடராய்த்தீயாகிநீருமாகிப்
புவனாகிப்புவனங்களனைத்துமாகிப்
பொன்னாகிமணியாகிமுத்துமாகிப்
பவனாகிப்பவனங்களனைத்துமாகிப்
பசுவேறித்திரிவானோர்பவனாய்நின்ற
தவனாயதலையாலங்காடன்றன்னைச்
சாராதேசாலநாட்போக்கினேனே. (௪)

கங்கையெனுங்கடும்புனலைக்கரந்தான்றன்னைக்
காமருபூம்பொழிற்கச்சிக்கம்பன்றன்னை
அங்கையினின்மான்மறியொன்றேந்தினானை
யையாறுமேயானையாரூரானைப்
பங்கமிலாவடியார்க்குப்பரிந்தான்றன்னைப்
பரிதிநியமத்தானைப்பாசூரானைச்
சங்கரனைத்தலையாலங்காடன்றன்னைச்
சாராதேசாலநாட்போக்கினேனே. (௫)

விடந்திகழுமரவரைமேல்விக்கினானை
விண்ணவர்க்குமெண்ணரியவளவினானை *
அடைந்தவரையமருலகமாள்விப்பானை
யம்பொன்னைக்கம்பமாகளிறட்டானை
மடந்தைபொருபாகனைமகுடந்தன்மேல்
வார்புனலும்வாளரவுமதியும்வைத்த
தடங்கடலைத்தலையாலங்காடன்றன்னைச்
சாராதேசாலநாட்போக்கினேனே. (௬)

விடையேறிக்கடைதோறும்பலிகொள்வானை
வீரட்டமேயானைவெண்ணீற்றானை
முடைநாறுமுதுகாட்டிலாடலானை
முன்னானைப்பின்னானையந்நாளானை
உடையாடைபுரிதோலேயுகந்தான்றன்னை
யுமையிருந்தபாகத்தொருவன்றன்னைச்
சடையானைத்தலையாலங்காடன்றன்னைச்
சாராதேசாலநாட்போக்கினேனே. (௭)

கரும்பிருந்தகட்டிதனைக்கனியைத்தேனைக்
கன்றாப்பினடுதறியைக்காறையானை
இரும்பமர்ந்த† மூவிலைவேலேந்தினானை
யென்னானைத்தென்னானைக்காவான்றன்னைச்
கரும்பமருமலர்க்கொன்றைசூடினானைத்
தாயானைத்தாயாகியுலகுக்கெல்லாம்
தரும்பொருளைத்தலையாலங்காடன்றன்னைச்
சாராதேசாலநாட்போக்கினேனே. (௮)

* உளவிலானை என்றும் பாடம். † இருப்பார்ந்த என்றும் பாடம்.

Koviloor Digital Library

பண்டளவுநரம்போசைப்பயனைப்பாலைப்
படுபயனைக்கடுவெளியைக்கனலைக்காற்றைக்
கண்டளவிற்களிகூர்வார்க்கெளியான்றன்னைக்
காரணனைநாரணனைக்கமலத்தோனை
எண்டளவிலென்னெஞ்சத்துள்ளேநின்ற
வெம்மானைக்கைம்மாவினுரிவைபேணுந்
தண்டரனைத்தலையாலங்காடன்றன்னைச்
சாராதேசாலநாட்போக்கினேனே. (கூ)

கைத்தலங்களிருபதுடையரக்கர்கோமான்
கயிலைமலையதுதன்னைக்கருதாதோடி
முத்திலங்குமுடிதுளங்கவளைகளெற்றி
முடுகுதலுந்திருவிரலொன்றவன்மேல்வைப்பப்
பத்திலங்குவாயாலும்பாடல்கேட்டுப்
பரிந்தவனுக்கிராவணனென்றீந்தநாம
தத்துவனைத்தலையாலங்காடன்றன்னைச்
சாராதேசாலநாட்போக்கினேனே. (கo)

திருச்சிற்றம்பலம்.

திருத்தலையாலங்காட்டுத்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - உடுக.

சுவாமி தேவி திருநாமங்கள் - ஆடவல்லவரதர், திருமடந்தை.

சூச. திருக்குடவாயில்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

திகழுந்திருமாலொடுநான்முகனும்
புகழும்பெருமானடியார்புகல
மகிழும்பெருமான்குடவாயின்மன்னி
நிகழும்பெருங்கோயினிலாயவனே. (க)

ஓடுந்நதியும்மதியோடுரகம்
சூடுஞ்சடையன் * விடைதொல்கொடிமேல் †
கூடுங்குழகன்குடவாயிறனில்
நீடும்பெருங்கோயினிலாயவனே. (உ)

* இங்ஙனமே "சிந்துமென்புஞ்சிரம்பிறைதாங்கினேன்" என்றார் பிறரும். † விடை கொல்கொடிமேல் என்றும் பாடம்.

Koviloor Digital Library

கலையான்மறையான்கனலேந்துகையான்
மலையாளவள்பாகமகிழ்ந்தபிரான்
கொலையார்சிலையான்குடவாயிறனில்
நிலையார்பெருங்கோயினிலாயவனே. (௩)

சுலவுஞ்சடையான்சுடுகாடிடமா
நலமென்முலையாணகைசெய்யநடம்
குலவுங்குழகன்குடவாயிறனில்
நிலவும்பெருங்கோயினிலாயவனே. (௪)

என்றன்னுளமேவியிருந்தபிரான்
கன்றன்மணிபோன்மிடறன்கயிலைக்
குன்றன்குழகன்குடவாயிறனில்
நின்றபெருங்கோயினிலாயவனே. (௫)

அலைசேர்புனலன்னனலன்னமலன்
தலைசேர்பலியன்சதுரன் * விதிரும்
கொலைசேர்படையன்குடவாயிறனில்
நிலைசேர்பெருங்கோயினிலாயவனே. (௬)

அறையார்கழலன்னழலன் † னியலின்
பறையாழ்முழவும்மறைபாடநடம்
குறையாவழகன்குடவாயிறனில்
நிறையார்பெருங்கோயினிலாயவனே. (௭)

வரையார்திரடோளரக்கன்மடியவ்
வரையாரவொர்கால்விரல்வைத்தபிரான்
வரையார்மதில்சூழ்குடவாயின்மன்னும்
வரையார்பெருங்கோயின்மகிழ்ந்தவனே. (௮)

பொன்னொப்பவனும்புயலொப்பவனும்
தன்னொப்பறியாத்தழலாய்நிமிர்ந்தான்
கொன்னற்படையான்குடவாயிறனில்
மன்னும்பெருங்கோயின்மகிழ்ந்தவனே. (௯)

வெயிலின்னிலைபார்விரிபோர்வையினார்
பயிலும்முரையே ‡ பகர்பாவிகள்பால்
குயிலன்குழகன் ¶ குடவாயிறனின்
உயரும்பெருங்கோயிலுயர்ந்தவனே. (௧௦)

கடுவாய்மலிநீர்குடவாயிறனில்
நெடுமாபெருங்கோயினிலாயவனைத்
தடமார்புகலித்தமிழார்விரகன்
வடமார்தமிழ்வல்லவர்நல்லவரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

* தலைசேர்பலியார்சதுரன் என்றும் பாடம். † னமலன் என்றும் பாடம். ‡ முறையே என்றும் பாடம். ¶ குயிலின்குழகன் என்றும் பாடம்.

Koviloor Digital Library

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

கலைவாழுமங்கையீர்கொங்கையாருங்கருங்கூந்தல்
அலைவாழுஞ்செஞ்சடையிலரவும்பிறையுமமர்வித்தீர்
குலைவாழைகமுகம்பொன்பவளம்பழுக்குங்குடவாயில்
நிலைவாழுங்கோயிலேகோயிலாகநின்றீரே. (௧)

அடியார்ந்தபைங்கழலுஞ்சிலம்புமார்ப்ப * வங்கையில்
செடியார்ந்தவெண்டலையொன்றேந்தியுலகம்பலிதேர்வீர்
குடியார்ந்தமாமறையோர்குலாவியேத்துங்குடவாயில்
படியார்ந்தகோயிலேகோயிலாகப்பயின்றீரே. (௨)

கழலார்பூம்பாதத்தீரோதக்கடலில்விடமுண்டன்
றழலாருங்கண்டத்தீரண்டர்போற்றுமளவினீர் †
குழலாரவண்டினங்கள்கீதத்தொலிசெய்குடவாயில்
நிழலார்ந்தகோயிலே ‡ கோயிலாகநிகழ்ந்தீரே. (௩)

மறியாருங்கைத்தலத்தீர்மங்கைபாகமாகச்சேர்ந்
தெறியாருமாமழுவுமெரியுமேந்துங்கொள்கையீர்
குறியாரவண்டினங் ¶ கடேன்மிழற்றுங்குடவாயில்
நெறியாருங்கோயிலேகோயிலாகநிகழ்ந்தீரே. § (௪)

இழையார்ந்தகோவணமுங்கீளுமெழிலாருடையாகப்
பிழையாதசூலம்பெய்தாடல்பாடல்பேணினீர்
குழையாரும்பைம்பொழிலும்வயலுஞ்சூழ்ந்தகுடவாயில்
விழவார்ந்த () கோயிலேகோயிலாகமிக்கீரே. (௫)

அரவார்ந்ததிருமேனியானவெண்ணீறாடினீர் **
இரவார்ந்தபெய்பலிகொண்டிமையோரேத்தநஞ்சுண்டீர்
குரவார்ந்தபூஞ்சோலைவாசம்வீசுங்குடவாயில்
திருவார்ந்தகோயிலேகோயிலாகத்திகழ்ந்தீரே. (௬)

பாடலார்வாய்மொழியீர்பைங்கண்வெள்ளேறூர்தியீர்
ஆடலார்மாநடத்தீரரிவைபோற்றுமாற்றலீர்
கோடலார்தும்பிமுரன்றிசைமிழற்றுங்குடவாயில்
நீடலார்கோயிலேகோயிலாகநிகழ்ந்தீரே. (௭)

கொங்கார்ந்தபைங்கமலத்தயனுங்குறளாய்நிமிர்ந்தானும்
அங்காந்து †† தள்ளாடவழலாய்நிமிர்ந்தீரிலங்கைக்கோன்
தங்காதன்மாமுடியுந்தாளுமடர்த்தீர்குடவாயில்
பங்கார்ந்தகோயிலேகோயிலாகப்பரிந்தீரே. (௮)

* மார்க்க என்றும் பாடம். † மரவினீர் என்றும் பாடம். ‡ நிழலாருங்கோயிலே என்றும் பாடம். ¶ குறியார்ந்தவண்டினம் என்றும் பாடம். § நினைந்தீரே என்றும் பாடம். () விழைவார்ந்த என்றும் பாடம். ** றாடலீர் என்றும் படாம் †† அங்கார்ந்து என்றும் பாடம்.

தூசார்ந்தசாக்கியருந்தூய்மையில்லாச்சமணரும்
ஏசார்ந்தபுன்மொழிநீத்தெழில்கொண்மாடக்குடவாயில்
ஆசாரஞ்செய்மறையோரளவிற்குன்றாதடிபோற்றத்
தேசார்ந்தகோயிலேகோயிலாகச்சேர்ந்தீரே. (க0)

நளிர்பூந்திரைமல்குகாழிஞானசம்பந்தன்
குளிர்பூங்குடவாயிற்கோயின்மேயகோமானை
ஒளிர்பூந்தமிழ்மாலையுரைத்தபாடலிவைவல்லார்
தளர்வானதானொழியத்தகுசீர்வானத்திருப்பாரே. * (கக)

திருச்சிற்றம்பலம்.

திருக்குடவாயிற்றிருப்பதிகம் - உ.

ஆக திருப்பதிகம் - உகூக.

சுவாமி தேவி திருநாமங்கள் - கோணேசுவரர், பெரியநாயகி.

கூரு. திருச்சேறை.†

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

திருவிராகம். பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

முறியுறுநிறமல்குமுகிழ்முலை‡மலைமகள்வெருவமுன்
வெறியுறுமதகரியதள்படவுரிசெய்தவிறலினர்
நறியுறுமிதழியின்மலரொடுநதிமதிநகுதலை
செறியுறுசடைமுடியடிகடம்வளநகர்சேறையே. (க)

புனமுடைநறுமலர்பலகொடுதொழுவதொர்புரிவினர்
மனமுடையடியவர்படுதுயர்களைவதொர்வாய்மையர்
இனமுடைமணியினொடரசிலையொளிபெறமிளிர்வதோர்
சினமுடைவிடையுடையடிகடம்வளநகர்சேறையே. (உ)

புரிதருசடையினர்புலியதளரையினர்பொடிபுல்கும்
எரிதருமுருவினரிடபமதேறுவரீடிலா
வரிதருவளையினரவரவர்மகிழ்தருமனைதொறும்
திரிதருசரிதையருறைதருவளநகர்சேறையே. (ங)

துடிபடுமிடையுடைமடவரலுடனொருபாகமா
இடிபடுகுரலுடைவிடையினர்படமுடையரவினர்
பொடிபடுமுருவினர்புலியுரிபொலிதருமரையினர்
செடிபடுசடைமுடியடிகடம்வளநகர்சேறையே. (ச)

* இத்திருப்பதிகத்தில் கூவது செய்யுள் மறைந்துபோயிற்று. † இதனை உடையார் கோயிலென்றும் வழங்குப. ‡ மல்குமிளமுலை என்றும் பாடம்.

Kovilboor Digital Library

அந்தாமுழிதருதிரிபுரமொருநொடியளவினில்
மந்தரவரிசிலையதனிடையரவரிவாளியால்
வெந்தழிதரவெய்தவிடலையர்விடமணிமிடறினர்
செந்தழனிறமுடையடிகடம்வளநகர்சேறையே. (ரு)

மத்தாமுறுதிறன்மறவர்தம்வடிவுகொடுருவுடைப்
பத்தொருபெயருடைவிசயனை * யசைவுசெய்பரிசினல்
அத்திரமருளுநமடிகளதணிகிளர்மணியணி
சித்திரவளநகர்செறிபொழிறழுவியசேறையே. (சு)

பாடினருமறைமுறைமுறைபொருளெனவருநடம்
ஆடினருலகிடையலர்கொடுமடியவர்துதிசெய
வாடினர்படுதலையிடுபலியதுகொடுமகிழ்தரும்
சேடர்தம்வளநகர்செறிபொழிறழுவியசேறையே. (எ)

கட்டுரமதுகொடுகயிலைநன்மலைநலிகரமுடை †
நிட்டுரனுடலொடுநெடுமுடியொருபதுநெரிசெய்தார் ‡
மட்டுரமலரடியடியவர்தொழுதெழவருள்செயும்
சிட்டர்தம்வளநகர்செறிபொழிறழுவியசேறையே. (அ)

பன்றியர்பறவையர்பரிசுடைவடிவொடுபடர்தர
அன்றியவவரவரடியொடுமுடியவையறிகிலார்
நின்றிருபுடைபடநெடுவெரிநடுவெயோர்நிகழ்தரச்
சென்றுயர்வெளிபடவருளியவவர்நகர்சேறையே. (கூ)

துகடுறுவிரிதுகிலுடையவராமணெனும்வடிவினர்
விகடமதுறுசிறுமொழியவைநலமிலவினவிடல்
முகிடருமிளமதியரவொடுமழகுறமுதநதி
திகடருசடைமுடியடிகடம்வளநகர்சேறையே. (க0)

கற்றநன்மறைபயிலடியவரடிதொழுகவினுறு
சிற்றிடையவளொடுமிடமெனவுறைவதொர்சேறைமேல்
குற்றமில்புகலியுளிகலறு ¶ ஞானசம்பந்தன
சொற்றகவுறமொழிபவரழிவிலர்துயர்தீருமே. § (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

பெருந்திருவிமவான்பெற்றபெண்கொடிபிரிந்தபின்னை
வருந்துவான்றவங்கள்செய்யமாமணம்புணர்ந்துமன்னும்
அருந்திருமேனிதன்பாலங்கொருபாகமாகத்
திருந்திடவைத்தார்சேறைச்செந்நெறிச்செல்வனரே. (க)

* "ஐயிருநாமத்தோனும்" என்றூர் பிறரும். † மலைமலிகரமுடை என்றும் பாடம். ‡ பதுநொடிசெய்தார் என்றும் பாடம்; நொடித்தல் - அழித்தல். ¶ ளிகலுறு என்றும் பாடம். § துயர்திர்வரே என்றும் பாடம்.

ஓர்த்துளவாறுநோக்கியுண்மையையுணராக்குண்டர்
வார்த்தையைமெய்யென்றெண்ணிமயக்கில்வீழ்ந்தழுந்துவேனைப்
பேர்த்தெனையாளாக்கொண்டுபிறவிவான்பிணிகளெல்லாம்
தீர்த்தருள்செய்தார்சேறைச்செந்நெறிச்செல்வனாரே. (௨)

ஒன்றியதவத்துமன்னியுடையனாயுலப்பில்காலம்
நின்றுதங்கழல்களேத்துநீள்சிலைவிசயனுக்கு
வென்றிகொள்வேடனாகிவிரும்பிவெங்கானகத்துச்
சென்றருள்செய்தார்சேறைச்செந்நெறிச்செல்வனாரே. (௩)

அஞ்சையுமடக்கியாற்றலுடையனாயநேககாலம்
வஞ்சமிறவத்துணின்றுமன்னியபகீரதற்கு
வெஞ்சினமுகங்களாகிவிசையொடுபாயுங்கங்கை
செஞ்சடையேற்றார்சேறைச்செந்நெறிச்செல்வனாரே. (௪)

நிறைந்தமாமணலைக்கூப்பிநேசமோடாவின்பாலைக்
கறந்துகொண்டாட்டக்கண்டுகறுத்ததன்றாதைதாளை
எறிந்தமாணிக்கப்போதேயெழில்கொள்சண்டீசனென்னச் *
சிறந்தபேரளித்தார்சேறைச்செந்நெறிச்செல்வனாரே. (௫)

விரித்தபல்கதிர்கொள்சூலம்வெடிபடுதமருகங்கை
தரித்ததோர்கோலகாலபயிரவனாகிவேழம்
உரித்துமையஞ்சக்கண்டுவொண்டிருமணிவாய்விள்ளச்
சிரித்தருள்செய்தார்சேறைச்செந்நெறிச்செல்வனாரே. (௬)

சுற்றுமுன்னிமையோர்நின்றுதொழுதுதூமலர்கடூவி
மற்றெமையுயக்கொளென்னமன்னுவான்புரங்கண்மூன்றும்
உற்றொருநொடியின்முன்னமொள்ளழல்வாயின்வீழச்
செற்றருள்செய்தார்சேறைச்செந்நெறிச்செல்வனாரே. (௭)

முந்தியிவ்வுலகமெல்லாம்படைத்தவன்மாலினோடும்
எந்தனிநாதனேயென்றிறைஞ்சிநின்றேத்தல்செய்ய
அந்தமில்சோதிதன்னையடிமுடியறியாவண்ணம்
செந்தழலானார்சேறைச்செந்நெறிச்செல்வனாரே. (௮)

ஒருவருநிகரிலாதவொண்டிறலரக்கனோடிப்
பெருவரையெடுத்தநீண்டோள்பிறங்கியமுடிகளிற்று
மருவியெம்பெருமானென்னமலரடிமெள்ளவாங்கித்
திருவருள்செய்தார்சேறைச்செந்நெறிச்செல்வனாரே. † (௧௦)

திருச்சிற்றம்பலம்.

* யெழிற்கோடண்டீசனென்ன என்றும் பாடம். † இத்திருப்பதிகத்தில் ௯-வது செய்யுள் மறைந்துபோயிற்று.

Koviloor Digital Library

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பூரியாவரும்புண்ணியம்பொய்கெடும்
கூரிதாயவறிவுகைகூடிடும்
சீரியார்பயில்சேறையுட்செந்நெறி
நாரிபாகன்றனாமநவிலவே. (௧)

என்னமாதவஞ்செய்தனைநெஞ்சமே
மின்னுவார்சடைவேதவிழுப்பொருள்
செந்நெலார்வயற்சேறையுட்செந்நெறி
மன்னுசோதிநம்பால்வந்துவைகவே. (௨)

பிறப்புமூப்புப்பெரும்பசிவான்பிணி
இறப்புநீங்கியிங்கின்பம்* வந்தெய்திடும்
சிறப்பர்சேறையுட்செந்நெறியான்கழல்
மறப்பதின்றிமனத்தினுள்வைக்கவே. (௩)

மாடுதேடிமயக்கினில்வீழ்ந்துநீர்
ஓடியெய்த்தும்பயனிலையூமர்காள்
சேடர்வாழ்சேறைச்செந்நெறிமேவிய
ஆடலான்றன்னடியடைந்துய்ம்மினே. (௪)

எண்ணிநாளுமெரிமயிர்க்கூற்றுவன் †
துண்ணென்றோன்றிற் ‡ றூக்கும்வழிகண்டேன்
திண்ணன்சேறைத்திருச்செந்நெறியுறை
அண்ணலாருளரஞ்சுவதென்னுக்கே. (௫)

தப்பிவானந் ¶ தரணிகம்பிக்கிலென்
ஒப்பில்வேந்தரொருங்குடன்சீறிலென்
செப்பமாஞ்சேறைச்செந்நெறிமேவிய
அப்பனாருளரஞ்சுவதென்னுக்கே. (௬)

வைத்தமாடுமடந்தைநல்லார்களும்
ஒத்தொவ்வாதவுற்றார்களுமென்செய்வார்
சித்தர்சேறைத்திருச்செந்நெறியுறை
அத்தர்தாமுளரஞ்சுவதென்னுக்கே. (௭)

குலங்களென்செய்வகுற்றங்களென்செய்வ §
துலங்கிநீநின்றுசோர்ந்திடனெஞ்சமே
இலங்குசேறையிற்செந்நெறிமேவிய
அலங்கனாருளரஞ்சுவதென்னுக்கே. (௮)

* இறப்புநீங்கிடுமின்பம் என்றும் பாடம். † யெரியயிற்கூற்றுவன் என்றும் பாடம். ‡ துண்ணென்றொன்றில் என்றலும் பொருந்தும். ¶ தப்பில்வானம் என்றும் பாடம். § குற்றந்தானென்செய்வ என்றும் பாடம்.

பழகினால்வரும்பண்டைசுற்றமும்
விழவிடாவிடில்வேண்டியவெய்தொணா*
திகழ்கொள்சேறையிற்செங்நெறிமேவிய
அழகனாருளாரஞ்சுவதென்னுக்கே. (௯)

பொருந்துநின்மலையைப்பிடித்தேந்தினான்
வருந்தவூன்றிமலரடிவாங்கினான்
திருந்துசேறையிற்செங்நெறி†மேவியங்
கிருந்தசோதியென்பார்க்கிடரில்லையே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருச்சேறைத்திருப்பதிகம் - ங.

ஆ திருப்பதிகம் - உகச.

சுவாமி தேவி திருநாமங்கள் - செங்நெறியப்பர், ஞானவல்லி.

சுசு. திருநாலூர்மயானம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

பாலூருமலைப்பாம்பும்பனிமதியுமத்தமும்
மேலூருஞ்செஞ்சடையான்வெண்ணூல்சேர்மார்பினான்
நாலூர்மயானத்துநம்பான்றனடிநினைந்து
மாலூருஞ்‡சிந்தையர்பால்வந்தூராமறுபிறப்பே. (க)

சூடும்பிறைச்சென்னிச்¶சூழ்காடிடமாக
ஆடும்பறைசங்கொ§லியோடழகாக
நாடுஞ்சிறப்போவாநாலூர்மயானத்தைப்
பாடுஞ்சிறப்போர்பாற்பற்றாவாம்பாவமே. (உ)

கல்லானிழன்மேவிக்காமுறுசீர்நால்வர்க்கன்
றெல்லாவறனுரையுமின்னருளாற்சொல்லினான்
நல்லார்தொழுதேத்துநாலூர்மயானத்தைச்
சொல்லாதவரெல்லாஞ்செல்லாதார்தொன்னெறிக்கே. (ங)

கோலத்தார்கொன்றையான்கொல்புலித்தோலாடையான்
நீலத்தார்கண்டத்தானெற்றிபோர்கண்ணினான்
ஞாலத்தார்சென்றேத்துநாலூர்மயானத்தில்
சூலத்தானென்பார்பாற்சூழாவாந்தொல்வினையே. (ச)

* வேண்டியதெய்தொணா என்றும் பாடம். † சேறையுட்செங்நெறி என்றும் பாடம். ‡ மாலூர்தல்-விருப்பமிகுதல். ¶ பிறைசென்னி என்றும் பாடம். § பறைச்சங்கொலி என்றும் பாடம்.

Koviloor Digital Library

கறையார்மணிமிடற்றான்காபாலிகட்டங்கன்
பிறையார்வளர்சடையான்பெண்பாகனண்பாய
நறையார்பொழில்புடைசூழ்நாலூர்மயானத்தெம்
இறையானென்றேத்துவார்க்கெய்துமாமின்பமே. (ரு)

கண்ணார்நுதலான்கனலாடிடமாகப்
பண்ணார்மறைபாடியாடும்பரஞ்சோதி
நண்ணார்புரமெய்தானாலூர்மயானத்தை
நண்ணாதவரெல்லாநண்ணாதார்நன்னெறியே. (சு)

கண்பாவுவேகத்தாற்காமனைமுன்காய்ந்துகந்தான்
பெண்பாவுபாகத்தானாகத்தோலாகத்தான்
நண்பாவுகுணத்தோர்க*ணாலூர்மயானத்தை
எண்பாவுசிந்தையார்க்கேலாவிடர்தானே. (எ)

பத்துத்தலையோனைப்பாதத்தொருவிரலால்
வைத்துமலையடர்த்துவாளோடுநாள்கொடுத்தான்
நத்தினொலியோவாநாலூர்மயானத்தென்
அத்தனடிநினைவார்க்கல்லலடையாவே. (அ)

மாலோடுநான்முகனுநேடவளரெரியாய்
மேலோடுகீழ்காணாமேன்மையான்வேதங்கள்
நாலோடுமாறங்கநாலூர்மயானத்தெம்
பாலோடுநெய்யாடிபாதம்பணிவோமே. (கூ)

துன்பாயமாசார்துவராயபோர்வையார்
புன்பேச்சுக்கேளாதேபுண்ணியனைநண்ணுமின்கள்
நண்பாற்சிவாய†வெனுநாலூர்மயானத்தே
இன்பாயிருந்தானையேத்துவார்க்கின்பமே. (க0)

ஞாலம்புகழ்காழிஞானசம்பந்தன்றான்
நாலுமறையோதுநாலூர்மயானத்தைச்
சீலம்புகழாற்சிறந்தேத்தவல்லாருக்
கேலும்புகழ்வானத்தின்பாயிருப்பாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

‡ திருநாலூர்மயானத்திருப்பதிகம் - க.

ஆக திருப்பதிகம் - உகூரு.

சுவாமி தேவி திருநாமங்கள் - பலாசவனநாதர், பெரியநாயகி.

* நண்பார்குணத்தோர்கள் என்றும் பாடம். † அன்பாற்சிவாய என்றும் பாடம்.
‡ இதனை நாத்தூர் என்றும்வழங்குப.

Koviloor Digital Library

கூஎ. திருக்கடுவாய்*க்கரைப்புத்தூர்.†

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

ஒருத்தனைமூவுலகொடுதேவர்க்கும்
அருத்தனையடியேன்மனத்துள்ளமர்
கருத்தனைக்கடுவாய்ப்புனலாடிய
திருத்தனைப்புத்தூர்ச்சென்று ‡ கண்டுய்ந்தேனே. (க)

யாவருமறிதற்கரியான்றனை
மூவரின்முதலாகியமூர்த்தியை
நாவினல்லுரையாகியநாதனைத்
தேவனைப்புத்தூர்ச்சென்று ‡ கண்டுய்ந்தேனே. (உ)

அன்பனையடியாரிடர்நீக்கியைச்
செம்பொனைத்திகழுந்திருக்கச்சியே
கம்பனைக்கடுவாய்க்கரைத்தென்புத்தூர்
நம்பனைக் ¶ கண்டுநானுய்யப்பெற்றேனே. (ங)

மாதனத்தைமாதேவனைமாறிலாக்
கோதனத்திலைந்தாடியைவெண்குழைக் §
காதனைக்கடுவாய்க்கரைத்தென்புத்தூர்
நாதனைக்கண்டுநானுய்யப்பெற்றேனே. (ச)

குண்டுபட்டகுற்றந்தவிர்த்தென்னையாட்
கொண்டுநற்றிறங்காட்டியகூத்தனைக்
கண்டனைக்கடுவாய்க்கரைத்தென்புத்தூர்
அண்டனைக்கண்டருவினையற்றேனே. (ரு)

பந்தபாசமறுத்தெனையாட்கொண்ட
மைந்தனைமணவாளனைமாமலர்க்
கந்தநீர்க்கடுவாய்க்கரைத்தென்புத்தூர்
எந்தையீசனைக்கண்டினிதாயிற்றே. (சு)

உம்பரானையுருத்திரமூர்த்தியை
அம்பரானையமலனையாதியைக்
கம்புநீர்க்கடுவாய்க்கரைத்தென்புத்தூர்
எம்பிரானைக்கண்டின்பமதாயிற்றே. (எ)

* கடுவாய் - ஓர்நதி. † இதனை ஆண்டார்கோயில் என்றும் ஆண்டாங்கோயில் என்றும் வழங்குப. ‡ புத்தூர்சென்று என்றும் பாடம். ¶ நன்பொனை என்றும் பாடம். § தாடியவெண்குழைக் என்றும் பாடம்.

Koviloor Digital Library

மாசார்பாசமயக்கறுவித்தெனுள் *
நேசமாகியநித்தமணுளனைப் †
பூசநீர்க் ‡ கடுவாய்க்கரைத்தென்புத்தூர்
ஈசனேயெனவின்பமதாயிற்றே. (அ)

இடுவாரிட்டகவளங்கவர்ந்திரு
கடுவாயிட்டவர்கட்டுரைகொள்ளாதே
கடுவாய்த்தென்கரைப்புத்தூரடிகட்காட்
படவேபெற்றுநான்பாக்கியஞ்செய்தேனே. (கூ)

அரக்கனுற்றலழித்தவன்பாடல்கேட்
டிரக்கமாகியருள்புரியீசனைத்
திரைக்கொணீர்க்கடுவாய்க்கரைத்தென்புத்தூர்
இருக்குநாதனைக்காணப்பெற்றுய்ந்தேனே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருக்கடுவாய்க்கரைப்புத்தூர்த்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - உகூகூ.

சுவாமி தேவி திருநாமங்கள் - சொர்ணபுரேசுரர், சொர்ணபுரேசுரி.

கூஅ. திருவிரும்பூளை.¶

திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர்.

வினவுரை. பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

சீரார்கழலேதொழுவீரிதுசெப்பீர்
வாரார்முலைமங்கையொடும்முடனுகி
ஏராரிரும்பூளையிடங்கொண்டவீசன்
காரார்கடனஞ்சமுதுண்டகருத்தே. (க)

தொழலார்கழலேதொழுதொண்டர்கள்சொல்லீர்
குழலார்மொழிக்கோல்வளையோடுடனுகி
எழிலாரிரும்பூளையிடங்கொண்டவீசன்
கழலுன்கரிகானிடையாடுகருத்தே. (உ)

* மயக்கறுத்தென்னுளம் என்றும் பாடம். † நித்தன்மணுளனை என்றும் பாடம் ‡ பூசுநீர்க் என்றும் பாடம். ¶ திருவிரும்பூளை—ஆலங்குடி.

Koviloor Digital Library

அன்பாலடிகைதொழுவீரறியீரே*
மின்போன்மருங்குன்மடவாளொடுமேவி
இன்பாயிரும்பூளையிடங்கொண்டவீசன்
பொன்போற்சடையிற்புனல்வைத்தபொருளே. (௩)

நச்சித்தொழுவீர்கணமக்கிதுசொல்லீர்
கச்சிப்பொலிகாமக்கொடி†யுடன்கூடி
இச்சித்திரும்பூளையிடங்கொண்டவீசன்
உச்சித்தலையிற்பலிகொண்டுழலூணே. (௪)

சுற்றார்ந்தடியேதொழுவீரிதுசொல்லீர்
நற்றாழ்குழனங்கையொடும்முடனாகி
எற்றேயிரும்பூளையிடங்கொண்டவீசன்
புற்றாடரவோடென்புபூண்டபொருளே. (௫)

தோடார்மலர்தூய்த்தொழுதொண்டர்கள்சொல்லீர்
சேடார்குழற்சேயிழையோடுடனாகி
ஈடாயிரும்பூளையிடங்கொண்டவீசன்
காடார்கடுவேடுவனானகருத்தே. (௬)

ஒருக்கும்மனத்தன்பருள்ளீரிதுசொல்லீர்
பருக்கைம்மதவேழமுரித்துமையோடும்
இருக்கையிரும்பூளையிடங்கொண்டவீசன்
அரக்கன்னுரந்தீர்த்தருளாக்கியவாறே. (௮)

துயராயினநீங்கித்தொழுந்தொண்டர்‡சொல்லீர்
கயலார்கருங்கண்ணியொடும்முடனாகி
இயல்பாயிரும்பூளையிடங்கொண்டவீசன்
முயல்வாரிருவர்க்கெரியாகியமொய்ம்பே. (௯)

துணைநன்மலர்தூய்த்தொழுந்தொண்டர்கள்சொல்லீர்
பணைமென்முலைப்பார்ப்பதியோடுடனாகி
இணையில்லிரும்பூளையிடங்கொண்டவீசன்
அணைவில்சமண்சாக்கியமாக்கியவாறே. (௧௦)

எந்தையிரும்பூளையிடங்கொண்டவீசன்
சந்தம்பயில்சண்பையுண்ஞானசம்பந்தன்
செந்தண்டமிழ்செப்பியபத்திவைவல்லார்
பந்தம்மறுத்தோங்குவர்பான்மையினாலே.¶ (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவிரும்பூளைத் திருப்பதிகம் - ௧.

ஆ திருப்பதிகம் - ௨௧௭.

சுவாமி தேவி திருநாமங்கள் - காசியாரணியர், உமையம்மை.

* தொழுவீரறியீரேன் என்றும் பாடம். † காமக்கொடி - காமாக்ஷியம்மை. ‡ நீங்கத்தொழுதொண்டர் என்றும் பாடம். ¶ இத்திருப்பதிகத்தில் ௭-வது செய்யுள் மறைந்துபோயிற்று.

Koviloor Digital Library

௯௧௯. திருவரதைப்பெரும்பாழி.*

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

பைத்தபாம்போடரைக்கோவணம்பாய்புலி
மொய்த்தபேய்கண்முழக்கமுதுகாட்டிடை
நித்தமாகந்நடமாடிவெண்ணீறணி
பித்தர்கோயில்லரதைப்பெரும்பாழியே. (க)

கயலசேலகருங்கண்ணியர்நாடொறும்
பயலைகொள்ளப்பலிதேர்ந்துழல்பான்மையார்
இயலைவானோர்நினைந்தோர்களுக்கென்னரும்
பெயரர்கோயில்லரதைப்பெரும்பாழியே. (உ)

கோடல்சாலவ்வுடையார்கொலையானையின்
மூடல்சாலவ்வுடையார்முளிகானிடை
ஆடல்சாலவ்வுடையாரழகாகிய
பீடர்கோயில்லரதைப்பெரும்பாழியே. (௩)

மண்ணர்நீராரழலார்மலிகாலினர்
விண்ணர்வேதம்விரித்தோதுவார்மெய்ப்பொருள்
பண்ணர்பாடலுடையாரொருபாகமும்
பெண்ணர்கோயில்லரதைப்பெரும்பாழியே. (௪)

மறையர்வாயின்மொழிமானொடுவெண்மழுக்
கறைகொள்சூலம்முடைக்கையர்காரார்தரும்
நறைகொள்கொன்றைநயந்தார்தருஞ்† சென்னிமேல்
பிறையர்கோயில்லரதைப்பெரும்பாழியே. (௫)

புற்றரவம்புலித்தோலரைக்கோவணம்
தற்றிரவின்னடமாடவர்தாழ்தரு
சுற்றமர்பாரிடந்தொல்கொடியின்மிசைப்
பெற்றர்கோயில்லரதைப்பெரும்பாழியே. (௬)

துணையிறுத்தஞ்சுரிசங்கமர்வெண்பொடி
இணையிலேற்றையுகந்தேறுவரும்மெரி
கணையினுன்முப்புரஞ்செற்றவர்கையினில்
பிணையர்கோயில்லரதைப்பெரும்பாழியே. (௭)

* திருவரதைப்பெரும்பாழி—அரித்துவாரமங்கலம். † நயந்தார்தருஞ் என்றும் பாடம்.

Koviloor Digital Library

சரிவிலாவல்லரக்கன்றடந்தோடலை
நெரிவிலாரவ்வடர்த்தார்நெறிமென்குழல்
அரிவைபாகம்மமர்ந்தாரடியாரொடும்
பிரிவில்கோயில்லரதைப்பெரும்பாழியே. (அ)

வரியராவென்பணிமார்பினர்நீர்மல்கும்
எரியராவுஞ்சடைமேற்பிறையேற்றவர்
கரியமாலோடயன்காண்பரிதாகிய
பெரியர்கோயில்லரதைப்பெரும்பாழியே. (கூ)

நாணிலாதசமண்சாக்கியர்நாடொறும்
ஏணிலாதம்மொழிபவ்வெழிலாயவர்
சேணுலாமும்மதிறியெழச்செற்றவர்
பேணுகோயில்லரதைப்பெரும்பாழியே. (க0)

நீரினார்புன்சடைநிமலனுக்கிடமெனப்
பாரினார்பரவரதைப்பெரும்பாழியைச்
சீரினார்காழியுண்ஞானசம்பந்தன்செய்
ஏரினார்தமிழ்வல்லார்க்கில்லையாம்பாவமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவரதைப்பெரும்பாழித்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - உகஅ.

சுவாமி தேவி திருநாமங்கள் - பாதாளவரதர், அலங்காரவம்மை.

க00. திருவவளிவணல்லூர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

திருவிராகம். பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

கொம்பிரியவண்டுலவுகொன்றைபுரிநூலொடுகுலாவித்
தம்பரிசினொடுசுடுநீறுதடவந்திடபமேறிக்
கம்பரியசெம்பொனெடுமாடமதில்கல்வரைவிலாக
அம்பெரியவெய்தபெருமானுறைவதவளிவணலூரே. (க)

ஓமையனகள்ளியனவாகையனகூகைமுரலோசை
ஈமமெரிசூழ்சுடலைவாசமுதுகாடுநடமாடித்
தூமமுடையக்கொடரவம்விரவிமிக்கொளிதுளங்க
ஆமையொடுபூணுமடிகள்ளுறைவதவளிவணலூரே. (உ)

Koviloor Digital Library

நீறுடையமார்பிலிமவான்மகளோர்பாகநிலைசெய்து
கூறுடையவேடமொடுகூடியழகாயதொருகோலம்
ஏறுடையரேனுமிடுகாடிரவினின்றுநடமாடும்
ஆறுடையவார்சடையினனுறைவதவளிவணலூரே. (ச)

பிணியுமிலர்கேடுமிலர்தோற்றமிலரென்றுலகுபேணிப்
பணியுமடியார்களனபாவமறவின்னருள்பயந்து
துணியுடையதோலுமுடைகோவணமுநாகமுடன்றொங்க
அணியுமழகாகவுடையானுறைவதவளிவணலூரே. (ரு)

குழலின்வரிவண்டுமுரன்மெல்லியனபொன்மலர்கள்கொண்டு
கழலின்மிசையின்டைபுனைவார்கடவுளென்றமரர்கூடித்
தொழலும்வழிபாடுமுடையார்துயருநோயுமிலராவர்
அழலுமழுவேந்துகையினனுறைவதவளிவணலூரே. (சு)

துஞ்சலிலராயமரர்நின்றுதொழுதேத்தவருள்செய்து
நஞ்சுமிடறுண்டுகரிதாயவெளிதாகியொருநம்பன்
மஞ்சுறநிமிர்ந்துமைநடுங்கவகலத்தொடுவளாவி
அஞ்சமதவேழவுரியானுறைவதவளிவணலூரே. (எ)

கூடரவமொந்தைகுழல்யாழ்முழவினோடுமிசைசெய்யப்
பீடரவமாகுபடரம்புசெய்துபேரிடபமோடும்
காடரவமாகுகனல்கொண்டிரவினின்றுநடமாடி
ஆடரவமார்த்தபெருமானுறைவதவளிவணலூரே. (அ)

ஒருவரையுமேல்வலிகொடேனெனவெழுந்தவிறலோனிப்
பெருவரையின்மேலோர்பெருமானுமுளனோவெனவெகுண்ட
கருவரையுமாழ்கடலுமன்னதிறல்கைகளுடையோனை
அருவரையிலூன்றியடர்த்தானுறைவதவளிவணலூரே. (கூ)

பொறிவரியநாகமுயர்பொங்கணையணைந்தபுகழோனும்
வெறிவரியவண்டறையவிண்டமலர்மேல்விழுமியோனும்
செறிவரியதோற்றமொடுவாற்றன்மிகநின்றுசிறிதேயும்
அறிவரியனயபெருமானுறைவதவளிவணலூரே. (க0)

கழியருகுபள்ளியிடமாகவடுமீன்கள்கவர்வாரும்
வழியருகுசாரவெயினின்றடிசிலுள்கிவருவாரும்
பழியருகினுரொழிகபான்மையொடுநின்றுதொழுதேத்தும்
அழியருவிதோய்ந்தபெருமானுறைவதவளிவணலூரே. (கக)

ஆனமொழியானதிறலோர்* பரவுமவளிவணலூர்மேல்
போனமொழிநன்மொழிகளாயபுகழ்தோணிபுரவூரன்
ஞானமொழிமாலைபல† நாடுபுகழ்ஞானசம்பந்தன்
தேனமொழிமாலைபுகழ்வார்துயர்கடீயதிலர்தாமே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

* ஆனமொழியாயதிறலோர் என்றும் பாடம். † நல என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருநாவுக்கரசுநாயனார்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

தோற்றினானெயிறுகவ்வித்தொழிலுடையரக்கன்றன்னைத்
தேற்றுவான்சென்றுசொல்லச்சிக்கெனத்தவிருமென்று
வீற்றினையுடையனாகிவெடுவெடுத்தெழுந்தவன்றன்
ஆற்றலைப்பழிக்கவல்லாரவளிவணல்லூராரே. (௧)

வெம்பினாரரக்கரெல்லாமிகச்சழக்காயிற்றென்று
செம்பினாலெடுத்தகோயில்சிக்கெனச்சிதையுமென்ன
நம்பினாரென்றுசொல்லிநன்மையான்மிக்குநோக்கி
அம்பினாலழியவெய்தாரவளிவணல்லூராரே. (௨)

கீழ்ப்படக்கருதலாமோகீர்த்திமையுள்ளதாகில்
தோட்பெருவலியினாலேதொலைப்பன்யான்மலையையென்று
வேட்படவைத்தவாறேவிதிர்விதிர்த்தரக்கன்வீழ்ந்து
ஆட்படக்கருதிப்புக்காரவளிவணல்லூராரே. (௩)

நிலைவலம்வல்லனல்லனேர்மையைநினையமாட்டான்
சிலைவலங்கொண்டசெல்வன்சீரியகயிலைதன்னைத்
தலைவலங்கருதிப்புக்குத்தாக்கினான்* றன்னையன்று
அலைகுலையாக்குவித்தா† ரவளிவணல்லூராரே. (௪)

தவ்வலிபொன்றனாகித்தனதொருபெருமையாலே
மெய்வ்வலி‡ யுடையனென்றுமிகப்பெருந்தேரையூர்ந்து
செவ்வலிகூர்விழியாற்சிரம்பத்தா¶ லெடுக்குற்றானை
அவ்வலிதீர்க்கவல்லாரவளிவணல்லூராரே. (௫)

நன்மைதானறியமாட்டானடுவிலாவரக்கர்கோமான்
வன்மையேகருதிச்சென்றுவலிதனைச்செலுத்தலுற்றுக்
கன்மையான்மலையையோடிக்கருதித்தானெடுத்துவாயால்
அம்மையோவென்னவைத்தாரவளிவணல்லூராரே. (௬)

கதம்படப்போதுவார்கள்போதுமக்கருத்தினாலே
சிதம்படநின்றநீர்கள்சிக்கெனத்தவிருமென்று
மதம்படமனத்தனாகிவன்மையான்மிக்குநோக்க§
அதம்பழத்துருவு0 செய்தாரவளிவணல்லூராரே. (௭)

* தாக்கினான் என்றும் பாடம். † யாக்கிவைத்தார் என்றும் பாடம். ‡ மெவ்வலி என்றும் பாடம். ¶ சிரமத்தால் என்றும் பாடம். § நோக்கி என்றும் பாடம். 0 அதம்பழித்தருவு என்றும் பாடம்.

Koviloor Digital Library

நாடமிக்குழிதர்கின்றநடுவிலாவரக்கர்கோனை
ஓடமிக்கென்றுசொல்லியூன்றினானுகிரினாலே
பாடமிக்குய்வனென்றுபணியநற்றிறங்கள்காட்டி
ஆடமிக்காவம்பூண்டாரவளிவணல்லூராரே. (அ)

ஏனமாயிடந்தமாலுமெழிற்றருமுளரியானும்
ஞானந்தானுடையராகிநன்மையையறியமாட்டார்
சேனந்தானிலாவரக்கன்செழுவரையெடுக்கவூன்றி
ஆனந்தவருள்கள்செய்தாரவளிவணல்லூராரே. (கூ)

ஊக்கினான்மலையையோடியுணர்விலாவரக்கன்றன்னைத்
தாக்கினான்விரலினாலேதலைபத்துந்தகரவூன்றி
நோக்கினானஞ்சத்தன்னைநோன்பிறவூன்றுசொல்லி
ஆக்கினாரமுதமாகவவளிவணல்லூராரே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருவவளிவணல்லூர்த்திருப்பதிகம் - உ.

ஆ திருப்பதிகம் - உஎ0.

சுவாமி தேவி திருநாமங்கள் - சாக்ஷிநாதர், சௌந்தரவல்லி.

க0க. திருப்பரிதிநியமம்.*

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

விண்கொண்டதூமதிசூடிநீடுவிரிபுன்சடைதாழப்
பெண்கொண்டமார்பில்வெண்ணீறுபூசிப்பேணார்பலிதேர்ந்து
கண்கொண்டசாயலொடேர்கவர்ந்தகள்வர்க்கிடம்போலும்
பண்கொண்ட † வண்டினம்பாடியாடும்பரிதிந்நியமமே. (க)

அரவொலிவில்லொலியம்பினொலியடங்கார்புரமூன்றும்
நிரவவல்லார்நிமிர்புன்சடைமேனிரம்பாமதிசூடி
இரவில்புகுந் ‡ தென்னெழில்கவர்ந்தவிறைவர்க்கிடம்போலும்
பரவவல்லார்வினைபாழ்படுக்கும்பரிதிந்நியமமே. (உ)

வாண்முகவார்குழல்வாணெடுங்கண்வளைத்தோண்மாதஞ்ச
நீண்முகமாகிய ¶ பைங்களிற்றினுரிமேனிகழ்வித்து
நாண்முகங்காட்டிநலங்கவர்ந்தநாதர்க்கிடம்போலும்
பாண்முகவண்டினம்பாடியாடும்பரிதிந்நியமமே. (ங)

* இதனைப் பரிதியப்பர்கோயில் என்று வழங்குப. † கொண்டு என்றும் பாடம்.
‡ இரவிற்புகுந்து என்றும் பாடம். ¶ நீண்முகடாகிய என்றும் பாடம்.

Koviloor Digital Library

வெஞ்சுரஞ்சேர்விளையாடல்பேணிவிரிபுன்சடைதாழத்
துஞ்சிருண்மாலையுநன்பக* லுந்துணையார்பலிதேர்ந்து
அஞ்சுரும்பார்குழல்சோரவுள்ளங்கவர்ந்தார்க்கிடம்போலும்
பஞ்சுரம்பாடிவண்டியாழ்முரலும்பரிதிந்நியமமே. (௪)

நீர்புல்குபுன்சடைநின்றிலங்கநெடுவெண்மதிசூடித்
தார்புல்குமார்பில்வெண்ணீறணிந்துதலையார்பலிதேர்வார்
ஏர்புல்குசாயலெழில்கவர்ந்தவிறைவர்க்கிடம்போலும்
பார்புல்குதொல்புகழால்விளங்கும்பரிதிந்நியமமே. (௫)

வெங்கடுங்காட்டகத்தாடல்பேணிவிரிபுன்சடைதாழத்
திங்கடிருமுடிமேல்விளங்கத்திசையார்பலிதேர்வார்
சங்கொடுசாயலெழில்கவர்ந்தசைவர்க்கிடம்போலும்
பைங்கொடிமுல்லைபடர்புறவிற்பரிதிந்நியமமே. (௬)

பிறைவளர்செஞ்சடைபின்றயங்கப்பெரியமழுவேந்தி
மறையொலிபாடிவெண்ணீறுபூசிமனைகள்பலிதேர்வார்
இறைவளைசோரவெழில்கவர்ந்தவிறைவர்க்கிடம்போலும்
பறையொலிசங்கொலியால்விளங்கும்பரிதிந்நியமமே. (௭)

ஆசடைவானவர்தானவரோடடியாரமர்ந்தேத்த
மாசடையாதவெண்ணீறுபூசிமனைகள்பலிதேர்வார்
காசடைமேகலைசோரவுள்ளங்கவர்ந்தார்க்கிடம்போலும் †
பாசடைத்தாமரைவைகுபொய்கைப்பரிதிந்நியமமே. (௮)

நாடினர்காண்கிலர்நான்முகனுந்திருமானயந்தேத்தக்
கூடலராடலராகிநாளுங்குழகர்பலிதேர்வார்
ஏடலர்சோரவெழில்கவர்ந்தவிறைவர்க்கிடம்போலும்
பாடலராடலராய்வணங்கும்பரிதிந்நியமமே. (௯)

கல்வளராடையர்கையிலுண்ணுங்கழுக்களிழுக்கான
சொல்வளமாகநினைக்கவேண்டாசுடுநீறதுவாடி ‡
நல்வளைசோரநலங்கவர்ந்தநாதர்க்கிடம்போலும்
பல்வளர்முல்லைபங்கொல்லைவேலிப்பரிதிந்நியமமே. (௧௦)

பையரவம்விரிகாந்தள்விம்முபரிதிந்நியமத்துத்
தையலோர்பாகமமர்ந்தவனைத்தமிழ்ஞானசம்பந்தன்
பொய்யிலிமாலைபுனைந்தபத்தும்பாவிப்புகழ்ந்தேத்த
ஐயுறவில்லைபிறப்பறுத்தல்லவலம்மடையாவே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருப்பரிதிநியமத்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - உஎக.

சுவாமி தேவி திருநாமங்கள் - பரிதியப்பர், மங்களநாயகி.

* நண்பகல் என்றும்பாடம்; நண்பகல் - நடுப்பகல். † கவர்ந்தாரிடம்போலும் என்றும் பாடம். ‡ வேண்டாச்சுடுநீறதுவாடி என்றும்பாடம்.

Koviloor Digital Library

௧௦௨. திருவெண்ணியூர்.*

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

சடையானைச்சந்திரனோடுசெங்கண்ணரா
உடையானையுடைதலையிற்பலிகொண்டூரும்
விடையானைவிண்ணவர்தாந்தொழும்வெண்ணியை
உடையானையல்லதுள்காதெனதுள்ளமே. (௧)

சோதியைச்சுண்ணவெண்ணீறணிந்திட்டவெம்
ஆதியையாதியுமந்தமுமில்லாத
வேதியைவேதியர்தாந்தொழும்வெண்ணியில்
நீதியைநினையவல்லார்வினைநில்லாவே. (௨)

கனிதனைக்கனிந்தவரைக்கலந்தாட்கொள்ளும்
முனிதனைமூவுலகுக்கொருமூர்த்தியை
நனிதனைநல்லவர்தாந்தொழும்வெண்ணியில்
இனிதனையேத்துவரேதமிலாதாரே. (௩)

மூத்தானைமூவுலகுக்கொருமூர்த்தியாய்க்
காத்தானைக்கனிந்தவரைக்கலந்தாளாக
ஆர்த்தானையழகமர்வெண்ணியம்மான்றன்னை
ஏத்தாதாரென்செய்வாரேழையப்பேய்களே. † (௪)

நீரானைநிறைபுனல்சூழ்தருநீள்கொன்றைத்
தாரானைத்தையலோர்பாகமுடையானைச்
சீரானைத்திகழ்தருவெண்ணியமர்ந்துறை
ஊரானையுள்கவல்லார்வினையோயுமே. (௫)

முத்தினை ‡ முழுவயிரத்திரண்மாணிக்கத்
தொத்தினைத்துளக்கமிலாதவிளக்காய
வித்தினைவிண்ணவர்தாந்தொழும்வெண்ணியில்
அத்தனையடையவல்லார்க்கில்லையல்லலே. (௬)

காய்ந்தானைக்காமனையுஞ்செறுகாலனைப்
பாய்ந்தானைப்பரியகைமாவுரித்தோன்மெய்யில்
மேய்ந்தானைவிண்ணவர்தாந்தொழும்வெண்ணியில்
நீந்தானைநினையவல்லார்வினைநில்லாவே. (௭)

மறுத்தானைமாமலையைமதியாதோடிச்
செறுத்தானைத்தேசழியத்திகழ்தோண்முடி
இறுத்தானையெழிலமர்வெண்ணியெம்மானெனப்
பொறுத்தானைப்போற்றுவாராற்றலுடையாரே. (௮)

* இதனைக் கோயில்வெண்ணி என்றும் வழங்குப. † யேழைப்பேய்களே என்றும் பாடம். ‡ முத்தனை என்றும் பாடம்.

Koviloor Digital Library

மண்ணினைவானவரோடுமனிதர்க்கும்
கண்ணினைக்கண்ணனுநான்முகனுங்காணு
விண்ணினைவிண்ணவர்தாந்தொழும்வெண்ணியில்
அண்ணலையடையவல்லார்க்கில்லையல்லலே. (௯)

குண்டருங்குணமிலாதசமண்சாக்கிய*
மிண்டர்கண்மிண்டவைகேட்டுவெகுளேன்மின் †
விண்டவர்தம்புரமெய்தவன்வெண்ணியில்
தொண்டராயேத்தவல்லார்துயர்தோன்றுவே. (௧0)

மருவாருமல்குகாழித்திகழ்சம்பந்தன்
திருவாருந்திகழ்தருவெண்ணியமர்ந்தானை
உருவாருமொண்டமிழ்மாலையிவைவல்லார்
பொருவாகப்புக்கிருப்பார்புவலோகத்தே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

முத்தினைப்பவளத்தைமுளைத்தவெம்
தொத்தினைச்சுடரைச்சுடர்போலொளிப்
பித்தனைக்கொ(று ‡)நஞ்சினைவானவர்
நித்தனைநெருநற்கண்டவெண்ணியே. (௧)

வெண்ணித்தொன்னகர்மேயவெண்டிங்களார்
கண்ணித்தொத்தசடையர்கபாலியார்
எண்ணித்தம்மைநினைந்திருந்தேனுக்கு
அண்ணித்திட்டமுதூறுமென்னாவுக்கே. (௨)

காற்றினைக்கனலைக்கதிர்மாமணி
நீற்றினைநினைப்பார்வினைநீக்கிடும்
கூற்றினையுதைத்திட்டகுணமுடை
வீற்றினைநெருநற்கண்டவெண்ணியே. (௩)

நல்லனைத்திகழ்நான்மறையோதியைச்
சொல்லினைச்சுடரைச்சுடர்போலொளிர்
கல்லினைக் ¶ கடிமாமதின்மூன்றெய்த
வில்லனைநெருநற்கண்டவெண்ணியே. (௪)

சுடரைப்போலொளிர் கண்ணை § வெண்ணிற்றனை
அடருஞ்சென்னியில்வைத்தவமுதினைப்
படருஞ்செஞ்சடைப்பான்மதிசூடியை
இடரைநீக்கியையான்கண்டவெண்ணியே. (௫)

* குணமிலாச்சமணசாக்கிய என்றும் பாடம். † வெகுளன்மின்மின் என்றும் பாடம். ‡ பித்தினைக்கொறு என்றும் பாடம். ¶ லொளிர்—கல்லினை என்றும் பாடம். § லொளிர்கண்ண என்றும் பாடம்.

Koviloor Digital Library

பூதநாதனைப்பூம்புகலூரனைத்
தாதெனத்தவழும்மதிசூடியை
நாதனைநல்லநான்மறையோதியை
வேதனைநெருநற்கண்டவெண்ணியே. (சு)

ஒருத்தியையொருபாகத்தடக்கியும்
பொருத்தியபுனிதன்புரிபுன்சடைக்
கருத்தனைக்கறைக்கண்டனைக்கண்ணுதல்
நிருத்தனைநெருநற்கண்டவெண்ணியே. (எ)

சடையனைச்சரிகோவணவாடைகொண்
டுடையனையுணர்வார்வினைதீர்த்திடும்
படையனைமழுவாளொடுபாய்தரும்
விடையனைநெருநற்கண்டவெண்ணியே. (அ)

பொருப்பனைப்புனலாளொடுபுன்சடை
அருப்பனையிளந்திங்களங்கண்ணியான்
பருப்பதம்பரவித்தொழுந்தொண்டர்கள்
விருப்பனைநெருநற்கண்டவெண்ணியே. (கூ)

சூலவஞ்சனைவல்ல* வெஞ்சுந்தரன்
கோலமாவருள்செய்ததோர்கொள்கையான்
காலனஞ்சவுதைத்திருள்கண்டமாம்
வேலைநஞ்சனைக்கண்டதுவெண்ணியே. (கo)

இலையினார்கொன்றைசூடியவீசனார்
மலையினாலரக்கன்றிறல்வாட்டினார்
சிலையினான்மதிலெய்தவன்வெண்ணியைத்
தலையினாற்றொழுவார்வினைதாவுமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

தொண்டிலங்குமடியவர்க்கோர்நெறியினாருந் †
தூநீறுதுதைந்திலங்குமார்பினாரும்
புண்டரிகத்தயனொடுமால்காணாவண்ணம்
பொங்குதழற்பிழம்பாயபுராணனாரும்
வண்டமருமலர்க்கொன்றைமாலையாரும்
வானவர்க்காய்நஞ்சுண்டமைந்தனாரும்
விண்டவர்தம்புரமூன்றுமெரிசெய்தாரும்
வெண்ணியமர்ந்துறைகின்றவிகிர்தனாரே. (க)

* வெல்ல என்றும் பாடம். † நெறியானாருந் என்றும் பாடம்.

Koviloor Digital Library

நெருப்பனையமேனிமேல்வெண்ணீற்றாரு
நெற்றிமேலொற்றைக்கண்ணிறைவித்தாரும்
பொருப்பரையன்மடப்பாவையிடப்பாலாரும்
பூந்துருத்திநகர்மேயபுராணனாரும்
மருப்பனையவெண்மதியக்கண்ணியாரும்
வளைகுளமுமறைக்காடுமன்னினாரும்
விருப்புடையவடியவர்தம்முள்ளத்தாரும்
வெண்ணியமர்ந்துறைகின்றவிகிர்தனாரே. (௨)

கையுலாமூவிலைவேலேந்தினாருங்
கரிகாட்டிலெரியாடுங்கடவுளாரும்
பையுலாநாகங்கொண்டாட்டுவாரும்
பரவுவார்பாவங்கள்பாற்றுவாரும்
செய்யுலாங்கயல்பாயவயல்கள்* சூழ்ந்த
திருப்புன்கூர்மேவியசெல்வனாரும்
மெய்யெலாம்வெண்ணீறுசண்ணித்தாரும்
வெண்ணியமர்ந்துறைகின்றவிகிர்தனாரே. (௩)

சடையேறுபுனல்வைத்தசதுரனாருந்
தக்கன்றன்பெருவேள்விதகர்த்திட்டாரும் †
உடையேறுபுலியதன்மேனாகங்கட்டி
யுண்பலிக்கென்றூரூரினுழிதர்வாரும் ‡
மடையேறிக்கயல்பாயவயல்கள்சூழ்ந்த
மயிலாடுதுறையுறையுமணாளனாரும்
விடையேறுவெல்கொடியெம்விமலனாரும்
வெண்ணியமர்ந்துறைகின்றவிகிர்தனாரே. (௪)

மண்ணிலங்குநீரனல்கால்வானுமாகி
மற்றவற்றின்குணமெலாமாய்நின்றாரும்
பண்ணிலங்குபாடலோடாடலாரும்
பருப்பதமும்பாசூருமன்னினாரும்
கண்ணிலங்குநுதலாருங்கபாலமேந்திக்
கடைதோறும்பலிகொள்ளுங்காட்சியாரும்
விண்ணிலங்கு ¶ வெண்மதியக்கண்ணியாரும்
வெண்ணியமர்ந்துறைகின்றவிகிர்தனாரே. (௫)

விடுதலைமெய்படியார்க்கருள்செய்வாரும் §
வேலைவிடமுண்டிருண்டகண்டத்தாரும்
கூடலர்தம்மூவெயிலுமெரிசெய்தாருங்
குரைகழலாற்கூற்றுவனைக்குமைசெய்தாரும்
ஆடரவரைக்கசைத்தங்காடுவாரு
மாலமர்நிழலிருந்தறஞ்சொன்னாரும்
வேடுவனாய்மேல்விசயற்கருள்செய்தாரும்
வெண்ணியமர்ந்துறைகின்றவிகிர்தனாரே. (௬)

* கயல்பாயும்வயல்கள் என்றும் பாடம். † தடைசெய்தாரும் என்றும் பாடம். ‡ றூரூரா னுழிதர்வாரும் என்றும் பாடம். ¶ விண்ணியங்கு என்றும் பாடம். § செய்தாரும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

மட்டிலங்குகொன்றையந்தார்மாலைசூடி
மடவாளவளோடுமானொன்றேந்திச்
சிட்டிலங்குவேடத்தராகி* நாளுஞ்
சில்பலிக்கென்றாரூர் திரிதர்வாரும் †
கட்டிலங்குபாசத்தால்வீசவந்த
காலன்றன்காலமறுப்பார்தாமும்
விட்டிலங்குவெண்குழைசேர்காதினாரும்
வெண்ணியமர்ந்துறைகின்றவிகிர்தனாரே. (எ)

செஞ்சடைக்கோர்வெண்டிங்கள்சூடினாருந்
திருவாலவாயுறையுஞ்செல்வனாரும்
அஞ்சனக்கணரிவையொருபாகத்தாரு
மாறங்கநால்வேதமாய்நின்றாரும்
மஞ்சடுத்தநீள்சோலைமாடவீதி
மதிலாரூர்புக்கங்கேமன்னினாரும்
வெஞ்சினத்தவேழமதுவுரிசெய்தாரும்
வெண்ணியமர்ந்துறைகின்றவிகிர்தனாரே. (அ)

வளங்கிளர்மாமதிசூடும்வேணியாரும் ‡
வானவர்க்காய்நஞ்சுண்டமைந்தனாரும்
களங்கொளவென்சிந்தையுள்ளேமன்னினாருங்
கச்சியேகம்பத்தெங்கடவுளாரும்
உளங்குளிரவமுதூறியண்ணிப்பாரு
முத்தமராயெத்திசையுமன்னினாரும்
விளங்கிளரும்வெண்மழுவொன்றேந்தினாரும்
வெண்ணியமர்ந்துறைகின்றவிகிர்தனாரே. (கூ)

பொன்னிலங்குகொன்றையந்தார்மாலைசூடிப்
புகலூரும்பூவணமும்பொருந்தினாரும்
கொன்னிலங்குமூவிலை ¶ வேலேந்தினாருங்
குளிரார்ந்த § செஞ்சடையெங்குழகனாரும்
தென்னிலங்கைமன்னவர்கோன்சிரங்கள்பத்துந்
திருவிரலாலடர்த்தவனுக்கருள்செய்தாரும்
மின்னிலங்குநுண்ணிடையாள்பாகத்தாரும்
வெண்ணியமர்ந்துறைகின்றவிகிர்தனாரே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருவெண்ணியூர்த்திருப்பதிகம் - ௩.

ஆ திருப்பதிகம் - உஎச.

சுவாமி தேவி திருநாமங்கள் - வெண்ணிநாதர், அழகியநாயகி.

* வேடத்தாராகி என்றும் பாடம். † றாரூரன்றிரிதர்வாரும் என்றும் பாடம். ‡ சூடு மேனியாரும் என்றும் பாடம். ¶ கொன்னலங்கன்மூவிலை என்றும் பாடம். § குருளார்ந்த என்றும் பாடம்.

Koviloor Digital Library

கoரு. திருப்பூவனூர்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பூவனூர்ப்புனிதன்றிருநாமந்தான்
நாவினூறுநூறாயிரநண்ணினார்
பாவமாயினபாறிப்பறையவே
தேவர்கோவினுஞ்செல்வர்களாவரே. (க)

என்னனென்மனையெந்தையென்னாருயிர்
தன்னன்றன்னடியேன்றனமாகிய
பொன்னன்பூவனூர்மேவியபுண்ணியன்
இன்னனென்றறிவொண்ணானியற்கையே. (உ)

குற்றங்கூடிக்குணம்பலகூடாதீர்
மற்றுந்தீவினைசெய்தனமாய்க்கலாம்
புற்றராவினன்பூவனூரீசன்பேர்
கற்றுவாழ்த்துங்கழிவதன்முன்னமே. (ந)

ஆவின்மேவியவைந்தமர்ந்தாடுவான் *
தூவெண்ணீறு † துதைந்தசெம்மேனியான்
மேவநூல்விரிவெண்ணியின்றென்கரைப் ‡
பூவனூர்புகுவார்வினைபோகுமே. (ச)

புல்லமூர்தி ¶ யூர்பூவனூர்பூம்புனல்
நல்லமூர்தி ¶ நல்லூர்நனிபள்ளியூர்
தில்லையூர்திருவாரூர்சீர்காழிநல்
வல்லமூரெனவல்வினைமாயுமே. (ரு)

அனுசயப்பட்டதுவிதுவென்னாதே
கனிமனத்தொடுகண்களுநீர்மல்கிப்
புனிதனைப்பூவனூரனைப்போற்றுவார்
மனிதரிற்றலையானமனிதரே. (சு)

ஆதிநாதனமரர்களர்ச்சிதன்
வேதநாவன்வெற்பின்மடப்பாவையோர்
பாதியானான்பரந்தபெரும்படைப்
பூதநாதன்றென்பூவனூர்நாதனே. (எ)

* வைந்தமைந்தாடுவான் என்றும் பாடம். † தூவெணீறு என்றும் பாடம். ‡ மேவநூல் என்றும், மேவிநூல்விரிவெண்ணியின்றென்கரை என்றும் படாம். ¶¶ புல்லமூர்த்தி என்றும், நல்லமூர்த்தி என்றும் பாடம் திருவாருமூர்.

Koviloor Digital Library

பூவனூர்தண்புறம்பயம்பூம்பொழில்
நாவலூர்நள்ளாறுநென்னிலம்
கோவலூர்குடவாயில்கொடுமுடி
மூவனூருமுக்கண்ணனூர்காண்மினே. (அ)

ஏவமேதுமிலாவமணேதலர்
பாவகாரிகள்சொல்வலைப்பட்டுநான்
தேவதேவன்றிருநெறியாகிய *
பூவனூர்புகுதப்பெற்றநாளின்றே. (௯)

நாரணன்னொடுநான்முகனிந்திரன்
வாரணன்குமரன்வணங்குங்கழற்
பூரணன்றிருப்பூவனூர்மேவிய
காரணன்னெனையாளுடைக்காளையே. (௧௦)

மைக்கடுத்தநிறத்தரக்கன்வரை
புக்கெடுத்தலும்பூவனூரன்னடி
மிக்கடுத்தவிரல்சிறிதூன்றலும்
பக்கடுத்தபின்பாடியுய்ந்தானன்றே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருப்பூவனூர்த்திருப்பதிகம் - ௧.

ஆ திருப்பதிகம் - உஎ௫.

சுவாமி தேவி திருநாமங்கள் - புஷ்பவனநாதர், கற்பகவல்லி.

௧௦௪. திருப்பாதாளீச்சரம்.†

திருஞானசம்பந்தமூர்த்திநாயனூர்.

பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

மின்னியல்செஞ்சடை ‡மேல்விளங்கும்மதிமத்தமொடு நல்ல
பொன்னியல்கொன்றையினன்புனல்சூடிப்பொற்பமரும் ¶
அன்னமனநடையாளொருபாகத்தமர்ந்தருளி நாளும்
பன்னியபாடலினனுறைகோயில்பாதாளே. (௧)

நீடலர்கொன்றையொடுநிரம்பாமதிசூடி வெள்ளைத்
தோடமர்காதினல்லகுழையான்சுடுநீற்றன்
ஆடரவம்பெருகவனலேந்திக்கைவீசி வேதம்
பாடலினலினியானுறைகோயில்பாதாளே. (௨)

* திறநெறியாகிய என்றும் பாடம். † இதனைப் பாம்பணி என்றும், பாமணி என்றும் வழங்குப. ‡ மன்னியசெஞ்சடை என்றும் பாடம். ¶ போதமரும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

நாகமும்வான்மதியுந்* நலமல்குசெஞ்சடையான் சாமம்†
போகநல்வில்வரையாற்புரமூன்றெரித்துகந்தான்
தோகைநன்மாமயில்போல்வளர்சாயற்றூமொழியைக் கூடப்
பாகமும்வைத்துகந்தானுறைகோயில்பாதாளே. (௩)

அங்கமுநான்மறையும்மருள்செய்தழகார்ந்த வஞ்சொல்
மங்கையோர்கூறுடையான்மறையோனுறைகோயில்
செங்கயனின்றுகளுஞ்செறுவிற்றிகழ்கின்ற சோதிப்
பங்கயநின்றலரும்வயல்சூழ்ந்தபாதாளே. (௪)

பேய்பலவுந்நிலவப்பெருங்காடரங்காகவுன்னி நின்று
தீயொடுமான்மறியும்மழுவுந்திகழ்வித்துத்
தேய்பிறையும்மரவும்பொலிகொன்றைச்சடைதன்மேற்‡ சேரப்
பாய்புனலும்முடையானுறைகோயில்பாதாளே. (௫)

கண்ணமர்நெற்றியினான்கமழ்கொன்றைச்சடைதன்மே னன்று¶
விண்ணியன்மாமதியும்முடன்வைத்தவன்விரும்பும்
பெண்ணமர்மேனியினான்பெருங்காடரங்காக வாடும்
பண்ணியல்பாடலினானுறைகோயில்பாதாளே. (௬)

விண்டலர்மத்தமொடுமிளிரும்மிளநாகம்வன் னிதிகழ்
வண்டலர்கொன்றைநகுமதிபுல்குவார்சடையான்
விண்டவர்தம்புரமூன்றெரிசெய்துரைவேதநான் கும்மவை
பண்டிசைபாடலினானுறைகோயில்பாதாளே. (௭)

மல்கியநுண்ணிடையாளுமைநங்கைமறுகவன் றுகையால்
தொல்லைமலையெடுத்தவரக்கன்றலைதோணெரித்தான்
கொல்லைவிடையுகந்தான்குளிர்திங்கள்சடைக்க ணிந்தோன்§
பல்லிசைபாடலினானுறைகோயில்பாதாளே. (௮)

தாமரைமேலயனும்மரியுந்தமதாள்வினையாற் றேடிக்
காமனைவிடுவித்தான்கழல்காண்பிலராயகன்றார்
பூமருவுங்குழலாளுமைநங்கைபொருந்தியிட்ட நல்ல
பாமருவுங்குணத்தானுறைகோயில்பாதாளே. (௯)

காலையிலுண்பவருஞ்சமண்கையருங்கட்டுரை விட்டன்○
ஆலவிட நுகர்ந்தானவன்றன்னடியேபரவி
மாலையில்வண்டினங்கண்மதுவுண்டிசைமுரல வாய்ந்த
பாலையாழ்ப்பாட்டுகந்தானுறைகோயில்பாதாளே. (௧௦)

* வான்மதியம் என்றும் பாடம். † சாபம் என்றும் பாடம். ‡ சடையதன்மேல் என்றும் பாடம். ¶ மேனின்றும் என்றும் பாடம். § சடைக்கணிந்தொலி என்றும் பாடம். ○ விட்டன்று - விட்டு; புக்கன்று, தொட்டன்று என்றாற்போல ஒருசொல்.

Koviloor Digital Library

பன்மலர்வைகுபொழில்புடைசூழ்ந்தபாதாளீச் சேரப்
பொன்னியன்மாடமல்குபுகலிந்நகர்மன்னன்
தன்னொளிமிக்குயர்ந்ததமிழ்ஞானசம்பந்தன் சொன்ன
இன்னிசைபத்தும்வல்லாரெழில்வானத்திருப்பாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருப்பாதாளீச்சரத்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - உஎசு.

சுவாமி தேவி திருநாமங்கள் - சர்ப்பபுரேசர், அமுதநாயகி.

கO௫. திருக்களர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

நீருளார்கயல்வாவிசூழ்பொழினீண்டமாவயலீண்டுமாமதில்
தேரினார்மறுகில்விழாமல்குதிருக்களருள்
ஊருளாரிடுபிச்சைபேணுமொருவனேயொளிர்செஞ்சடைம்மதி
ஆரநின்றவனேயடைந்தார்க்கருளாயே. (க)

தோளின்மேலொளிநீறுதாங்கியதொண்டர்வந்தடிபோற்றிமிண்டிய *
தாளினார்வளருந்தவமல்குதிருக்களருள்
வேளினேர்விசயற்கருள்புரிவித்தகாவிரும்பும்மடியாரை
ஆளுகந்தவனேயடைந்தார்க்கருளாயே. (உ)

பாடவல்லநன்மைந்தரோடுபனிமலர்பலகொண்டுபோற்றிசெய்
சேடர்வாழ்பொழில்சூழ்செழுமாடத்திருக்களருள்
நீடவல்லநிமலனேயடிநிரைகழல்சிலம்பார்க்கமாநடம்
ஆடவல்லவனேயடைந்தார்க்கருளாயே. (௩)

அம்பினேர்தடங்கண்ணினாருடனாடவர்பயின்மாடமாளிகை
செம்பொனார்பொழில்சூழ்ந்தழகாயதிருக்களருள்
என்புபூண்டதோர்மேனியெம்மிறைவாவிணையடிபோற்றிநின்றவர்க்
கன்புசெய்தவனேயடைந்தார்க்கருளாயே. (௪)

கொங்குலாமலர்ச்சோலைவண்டினங்கெண்டிமாமதுவுண்டிசைசெயத்
தெங்குபைங்கமுகம்புடைசூழ்ந்ததிருக்களருள்
மங்கைதன்னொடுங்கூடியமணவாளனேபிணைகொண்டோர்கைத்தலத்
தங்கையிற்படையாயடைந்தார்க்கருளாயே. (௫)

* போற்றமிண்டிய என்றும் பாடம்.

Koviloor Digital Library

கோலமாமயிலாலக்கொண்டல்கள்சேர்பொழிற்குலவும்வயலிடைச்
சேலிளங்கயலார்புனல்சூழ்ந்ததிருக்களருள்
நிலமேவியகண்டனேநிமிர்புன்சடைப்பெருமானெனப்பொலி
ஆலநிழலுளாயடைந்தார்க்கருளாயே. (சு)

தம்பலம்மறியாதவர்மதிருங்கு* மால்வரையாலழலெழத்
திண்பலங்கெடுத்தாய்திகழ்கின்றதிருக்களருள்
வம்பலர்மலர்தூவிநின்னடி † வானவர்தொழக்கூத்துகந்துபேர்
அம்பலத்துறைவாயடைந்தார்க்கருளாயே. (எ)

குன்றடுத்த ‡ நன்மாளிகைக்கொடிமாடநீடுயர்கோபுரங்கண்மேல்
சென்றடுத்துயர் ‡ வான்மதிதோயுந்திருக்களருள்
நின்றடுத்துயர்மால்வரைதிரடோளினு ‡ லெடுத்தான்றனீண்முடி
அன்றடர்த்துகந்தாயடைந்தார்க்கருளாயே. (அ)

பண்ணியாழ்பயில்கின்றமங்கையர்பாடலாடலோடாரவாழ்பதி
தெண்ணிலாமதியம்பொழில்சேருந்திருக்களருள்
உண்ணிலாவியவொருவனே ¶ யிருவர்க்குநின்கழல்காட்சியாரழல்
அண்ணலாயவெம்மானடைந்தார்க்கருளாயே. (கூ)

பாக்கியம்பலசெய்தபத்தர்கள்பாட்டொடும்பலபணிகள்பேணிய
தீக்கியல்குணத்தார்சிறந்தாருந்திருக்களருள்
வாக்கினான்மறையோதினாயமண்டேரர்சொல்லியசொற்களானபொய்
ஆக்கிநின்றவனேயடைந்தார்க்கருளாயே. (க0)

இந்துவந்தெழுமாடவீதியெழில்கொள்காழிநகர்க்கவுணியன்
செந்துநேர்மொழியாரவர்சேருந்திருக்களருள்
அந்திவன்னதொர்மேனியானையமரர்தம்பெருமானைஞானசம்
பந்தன்சொல்லிவைபத்தும்பாடத்தவமாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருக்களர்த்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - உஎஎ.

சுவாமி தேவி திருநாமங்கள் - களர்முளைநாதர், இளங்கொம்பன்னாள்.

* யாதவரேயிருக்கு என்றும் பாடம். † வம்புலாமலர்தூவிநின்றடி என்றும் பாடம். ‡ ‡ ‡ குன்றெடுத்தன என்றும், சென்றெடுத்துயர் என்றும், நின்றெடுத்துயர்மால்வரைத் திரடோளினுல் என்றும் பாடம். ¶ யுண்ணிலாயவருவனே என்றும் பாடம்.

Koviloor Digital Library

௧௦௬. திருச்சிற்றேமம்.*

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - கொல்லிக்கௌவாணம்.

திருச்சிற்றம்பலம்.

நிறைவெண்டிங்கள்வாண்முகமாதர்பாடநீள்சடைக்
குறைவெண்டிங்கள்சூடியோராடன்மேயகொள்கையான்
சிறைவண்டியாழ்செய்பைம்பொழிற்பழனஞ்சூழ்சிற்றேமத்தான்
இறைவனென்றேயுலகெலாமேத்தநின்றபெருமானே. (௧)

மாகத்திங்கள்வாண்முகமாதர்பாடவார்சடைப்
பாகத்திங்கள்சூடியோராடன்மேயபண்டங்கன்
மேகத்தாடுசோலைசூழ்மிடைசிற்றேமமேவினான்
ஆகத்தோர்கொளாமையைப்பூண்டவண்ணலல்லனே. (௨)

நெடுவெண்டிங்கள்வாண்முகமாதர்பாடநீள்சடைக்
கொடுவெண்டிங்கள்சூடியோராடன்மேயகொள்கையான்
படுவண்டியாழ்செய்பைம்பொழிற்பழனஞ்சூழ்சிற்றேமத்தான்
கடுவெங்கூற்றைக்காலினாற்காய்ந்தகடவுளல்லனே. (௩)

கதிரார்திங்கள்வாண்முகமாதர்பாடக்கண்ணுதல்
முதிரார்திங்கள்சூடியோராடன்மேயமுக்கணன் †
எதிரார்புனலம்புன்சடையெழிலாருஞ்சிற்றேமத்தான்
அதிரார்பைங்கணேறுடையாதிமூர்த்தியல்லனே. (௪)

வானார்திங்கள்வாண்முகமாதர்பாடவார்சடைக்
கூனார்திங்கள்சூடியோராடன்மேயகொள்கையான்
தேனார்வண்டுபண்செயுந்திருவாருஞ்சிற்றேமத்தான்
மானார்விழிநன்மாதொடும்மகிழ்ந்தமைந்தனல்லனே. (௫)

பனிவெண்டிங்கள்வாண்முகமாதர்பாடப்பல்சடைக்
குனிவெண்டிங்கள்சூடியோராடன்மேயகொள்கையான்
தனிவெள்விடையன்புள்ளினத்தாமஞ் ‡ சூழ்சிற்றேமத்தான்
முனிவுமூப்புநீக்கிய ¶ முக்கண்மூர்த்தியல்லனே. (௬)

கிளருந்திங்கள்வாண்முகமாதர்பாடக்கேடிலா
வளருந்திங்கள்சூடியோராடன்மேயமாதவன்
தளிருங்கொம்புமதுவுமார்தாமஞ்சூழ்சிற்றேமத்தான்
ஒளிரும்வெண்ணூன்மார்பனென்றுள்ளத்துள்ளானல்லனே. (௭)

* இதனைச் சிற்ரும்பூர் என்றும், சிற்ருய்மூர் என்றும், எழிலூர்நேமம் என்றும் வழங்குப. † முக்கணன் என்றும் பாடம். ‡ புள்ளினத்தாமம் - வண்டின்கூட்டங்களையுடையமாலை. ¶ நீங்கிய என்றும் பாடம்.

Koviloor Digital Library

சூழ்ந்ததிங்கள்வாண்முகமாதர்பாடச்சூழ்சடைப்
போழ்ந்ததிங்கள்சூடியோராடன்மேயபுண்ணியன்
தாழ்ந்தவயற்சிற்றேமத்தான்றடவரையைத்தன்றாளினால்
ஆழ்ந்தவரக்கனொல்கவன்றடர்த்தவண்ணலல்லனே. (அ)

தனிவெண்டிங்கள்வாண்முகமாதர்பாடத்தாழ்சடைத்
துணிவெண்டிங்கள்சூடியோராடன்மேயதொன்மையான்
அணிவண்ணச்சிற்றேமத்தானலர்மேலந்தணாளனும்
மணிவண்ணனுமுன்காண்கிலாமழுவாட்செல்வனல்லனே. (கூ)

வெள்ளைத்திங்கள்வாண்முகமாதர்பாடவீழ்சடைப் *
பிள்ளைத்திங்கள்சூடியோராடன்மேயபிஞ்ஞகன்
உள்ளத்தார்சிற்றேமத்தானுருவார்புத்தரொப்பிலாக்
கள்ளத்தாரைத்தானாக்கியுட் † கரந்துவைத்தானல்லனே. (க0)

கல்லிலோதமல்குதண்கானல்சூழ்ந்தகாழியான்
நல்லவாயவின்றமிழ்நவிலுஞானசம்பந்தன்
செல்வனூர்சிற்றேமத்தைப்பாடல்சீரார்நாவினால்
வல்லராகிவாழ்த்துவாரல்லலின்றிவாழ்வரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றேமத்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - உஎஅ.

சுவாமி தேவி திருநாமங்கள் - பொன்வைத்தநாயகர், அகிலாண்டேசுவரி.

க0எ. திருவுசாத்தானம். ‡

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

நீரிடைத்துயின்றவன்றம்பிநீள்சாம்புவான்
போருடைச்சுக்கிரீவனநுமான்றொழுக்
காருடைநஞ்சுண்டுகாத்தருள்செய்தவெம்
சீருடைச்சேடர்வாழ்திருவுசாத்தானமே. (க)

கொல்லையேறுடையவன்கோவணவாடையன்
பல்லையார்படுதலைப்பலிகொளும்பரமனார்
முல்லையார்புறவணிமுதுபதிநறைகமழ்
தில்லையானுறைவிடந்திருவுசாத்தானமே. (உ)

* விரிசடைப் என்றும் பாடம். † கள்ளத்தாரைத்தனுதியுட் என்றும் பாடம். ‡ இதனைத் திருக்கோயிலூர் என்றுவழங்குப.

Koviloor Digital Library

தாமலார்போலவே * தக்கனார்வேள்வியை
ஊமனார்தங்கனவாக்கினானொருநொடிக்
காமனாருடல்கெடக்காய்ந்தவெங்கண்ணுதல்
சேமமாவுறைவிடந்திருவுசாத்தானமே. (ரு)

மறிதருகரத்தினன்மால்விடையேறியான்
குறிதருகோலநற்குணத்தினாடிதொழ
நெறிதருவேதியர்நித்தலுநியமஞ்செய்
செறிதருபொழிலணிதிருவுசாத்தானமே. (சு)

பண்டிரைத்தயனுமாலும்பலபத்தர்கள்
தொண்டிரைத்தும்மலர்தூவித்தோத்திரஞ்சொலக்
கொண்டிரைக்கொடியொடுங்குருகினினல்லினம்
தெண்டிரைக்கழனிசூழ் † திருவுசாத்தானமே. (எ)

மடவரல்பங்கினன்மலைதனைமதியாது
சடசடவெடுத்தவன்றலைபத்துநெரிதர
அடர்தரவூன்றியங்கேயவற்கருள்செய்தான்
திடமெனவுறைவிடந்திருவுசாத்தானமே. (அ)

ஆணலார்பெண்ணலாரயனொடுமாலுக்கும்
காணொணாவண்ணத்தான்கருதுவார்மனத்துளான்
பேணுவார்பிணியொடும்பிறப்பறுப்பானிடம்
சேணுலாமாளிகைத்திருவுசாத்தானமே. (கூ)

கானமார்வாழ்க்கையான் ‡ காரமண்டேரர்சொல்
ஊனமாக்கொண்டுநீருரைமினுய்யவெனில்
வானமார்மதிலணிமாளிகைவளர்பொழில்
தேனமாமதியந்தோய்திருவுசாத்தானமே. (கo)

வரைதிரிந்திழியுநீர்வளவயற்புகலிமன்
திரைதிரிந்தெறிகடற்றிருவுசாத்தானரை
உரைதெரிந்துணருஞ்சம்பந்தனொண்டமிழ்வல்லார்
நரைதிரையின்றியேநன்னெறிசேர்வரே. ¶ (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவுசாத்தானத்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - உஎக.

சுவாமி தேவி திருநாமங்கள் - மந்திரபுரேசர், பெரியநாயகி.

* தாமனார்போலவே என்றும் பாடம். † கழிகள்சூழ் என்றும் பாடம். ‡ வாட்கை யான் என்றும் பாடம். ¶ இத்திருப்பதிகத்தில் ரு, சு இச்செய்யுள் மறைந்துபோயின.

Koviloor Digital Library

க0அ. திருவிடும்பாவனம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

மனமார்தருமடவாரொடுமகிழ்மைந்தர்கண்மலர்தூய்த்
தனமார்தருசங்கக்கடல்வங்கத்திரளுந்திச்
சினமார்தருதிறல்வாளெயிற்றரக்கன்மிகுகுன்றில்
இனமாதவரிறைவர்க்கிடமிடும்பாவனமிதுவே. (க)

மலையார்தருமடவாளொருபாகம்மகிழ்வெய்தி
நிலையார்தருநிமலன்வலிநிலவும்புகழொளிசேர்
கலையார்தருபுலவோரவர்காவன்மிகுகுன்றில்
இலையார்தருபொழில்சூழ்தருமிடும்பாவனமிதுவே. (உ)

சீலம்மிகுசித்தத்தவர்சிந்தித்தெழுமெந்தை *
ஞாலம்மிகுகடல்சூழ்தருமுலகத்தவர்நலமார்
கோலம்மிகுமலர்மென்குழன்மடவார்மிகுகுன்றில்
ஏலங்கமழ்பொழில்சூழ்தருமிடும்பாவனமிதுவே. (ந)

பொழிலார்தருகுலைவாழைகளெழிலார்திகழ்போழ்தில் †
தொழிலான்மிகுதொண்டரவர்தொழுதாடியமுன்றில்
குழலார்தருமலர்மென்குழன்மடவார்மிகுகுன்றில்
எழிலார்தருமிறைவர்க்கிடமிடும்பாவனமிதுவே. (ச)

பந்தார்விரன்மடவாளொருபங்காகங்கைமுடிமேல்
செந்தாமரைமலர்மல்கியசெழுநீர்வயற்கரைமேல்
கொந்தார்மலர்புன்னை ‡ மகிழ்குரவங்கமழ்குன்றில்
எந்தாயெனவிருந்தானிடமிடும்பாவனமிதுவே. (ரு)

நெறிநீர்மையர்நீள்வானவர்நினையுந்நினைவாகி
அறிநீர்மையிலெய்தும்மவர்க்கறியும்மறிவருளிக்
குறிநீர்மையர்குணமார்தரு ¶ மணமார்தருகுன்றில்
எறிநீர்வயல்புடைசூழ்தருமிடும்பாவனமிதுவே. (சு)

நீறேறியதிருமேனியர்நிலவும்முலகெல்லாம்
பாறேறியபடுவெண்டலைகையிற்பலிவாங்காக் §
கூறேறியமடவாளொருபாகம்மகிழ்வெய்தி
ஏறேறியவிறைவர்க்கிடமிடும்பாவனமிதுவே. (எ)

* சித்தரச்சிந்தித்தொழுமெந்தை என்றும் பாடம்; சிந்தித்துத்தொழு சிந்தித்தொழுவென்றாயது. † போதில் என்றும் பாடம். ‡ மலர்ப்புன்னை என்றும் பாடம். ¶ குளமார்தரு என்று பாடமோதுவாருமுளர். § பலிபாங்காய்க் என்றும் பாடம்.

Koviloor Digital Library

தோரார்தருதிகழ்வாளெயிற்றரக்கன்சிவன்மலையை
ஓராதெடுத்தார்த்தான்முடியொருபஃதவைநெரித்துக்
கூரார்தருகொலைவாளொடுகுணநாமமுங்கொடுத்த
ஏரார்தருமிறைவர்க்கிடமிடும்பாவனமிதுவே. (அ)

பொருளார்தருமறையோர்புகழ்விருத்தர்பொலிமலிசீர்த்
தெருளார்தருசிந்தையொடுசந்தம்மலர்பலதூய்
மருளார்தருமாயன்னயன்காணார்மயலெய்த
இருளார்தருகண்டர்க்கிடமிடும்பாவனமிதுவே. (கூ)

தடுக்கையுடனிடுக்கித்தலைபறித்துச்சமணடப்பார் *
உடுக்கைபலதுவர்க்கூறைகளுடம்பிட்டுழல்வாரும்
மடுக்கண்மலர்வயல்சேர்செந்நென்மலிநீர்மலர்க்கரைமேல்
இடுக்கண்பலகளைவானிடமிடும்பாவனமிதுவே. (க0)

கொடியார்நெடுமாடக்குன்றளூரிற்கரைக்கோல
இடியார்கடலடிவீழ்தருமிடும்பாவனத்திறையை
அடியாருமந்தணர்காழியுளணிஞானசம்பந்தன்
படியாற்சொன்ன † பாடல்சொலப்பறையும்வினைதானே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவிடும்பாவனத்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - உஅ0.

சுவாமி தேவி திருநாமங்கள் - சற்குணநாதர், மங்களநாயகி.

க0கூ. திருக்கடிக்குளம். ‡

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

பொடிகொண்மேனிவெண்ணூலினர்தோலினர்புலியுரியதளாடை
கொடிகொளேற்றினர்மணிகிணினெனவருகுரைகழல்சிலம்பார்க்கக்
கடிகொள்பூம்பொழில்சூழ்தருகடிக்குளத்துறையுங்கற்பகத்தைத்தம்
முடிகள்சாய்த்தடிவீழ்தருமடியரைமுன்வினைமூடாவே. (க)

விண்களார்தொழும்விளக்கினைத்துளக்கிலாவிகிர்தனைவிழவாரும்
மண்களார்துதித்தன்பராயின்புறும்வள்ளலைமருவித்தம்
கண்களார்தரக்கண்டுநங்கடிக்குளத்துறைதருகற்பகத்தைப்
பண்களார்தரப்பாடுவார்கேடிலர்பழியிலர்புகழாமே. (உ)

* சமண்டப்பர் என்று பாடமோதுவாருமுளர். † படியார்சொன்ன என்று பாடமோதுவாருமுளர். ‡ இதனைக்கற்பகநாதர்கோயில் என்றும், கற்பகனார்கோயில் என்றும், கற்பனூ குளம் என்றும் வழங்குப.

Koviloor Digital Library

பொங்குநற்கரியுரியதுபோர்ப்பதுபுலியதளழனாகம்*
தங்குமங்கையைப்பாகமதுடையவர்கழல்புரைதிருமேனிக்
கங்கைசேர்தருசடையினர்கடிக்குளத்துறைதருகற்பகத்தை
எங்குமேத்திநின்றின்புறுமடியவரையிடும்பைவந்தடையாவே. (ங)

நீர்கொணீள்சடைமுடியனைநித்திலத்தொத்தினைநிகரில்லாப்
பார்கொள்பாரிடத்தவர்தொழும்பவளத்தைப்பசும்பொனைவிசும்பாரும்
கார்கொள்பூம்பொழில்சூழ்தருகடிக்குளத்துறையுங்கற்பகந்தன்னைச்
சீர்கொள்செல்வங்களேத்தவல்லார் † வினைதேய்வதுதிணமே. (ச)

சுரும்புசேர்சடைமுடியினன்மதியொடுதுன்னியதழனாகம்
அரும்புதாதவிழ்ந்தலர்ந்தனமலர்பலகொண்டடியவர்போற்றக்
கரும்புகார்மலிகொடிமிடைகடிக்குளத்துறைதருகற்பகத்தை
விரும்புவேட்கையோடுளமகிழ்ந்துரைப்பவர் ‡ விதியுடையவர்தாமே. (ரு)

மாதிலங்கியபாகத்தன்மதியமொடலைபுனலழனாகம்
போதிலங்கியகொன்றையுமத்தமும்புரிசடைக்கழகாகக்
காதிலங்கியகுழையினன்கடிக்குளத்துறைதருகற்பகத்தின்
பாதங்கைதொழுதேத்தவல்லார்வினைபற்றறக்கெடுமன்றே. (சு)

குலவுகோலத்த ¶ கொடிநெடுமாடங்கள்குழாம்பலகுளிர்பொய்கை
உலவுபுள்ளினமன்னங்களாலிடும்பூவைசேருங்கூந்தல்
கலவைசேர்தருகண்ணியன்கடிக்குளத்துறையுங்கற்பகத்தைச்சீர்
நிலவிநின்றுநின்றேத்துவார்மேல்வினைநிற்ககில்லாதானே. (எ)

மடுத்தவாளரக்கனவன்மலைதன்மேன்மதியிலாமையிலோடி
எடுத்தலும்முடிதோள்கரநெரிந்திற § விறைவன்விரலூன்றக்
கடுத்துவாயொடுகைகெடுத்தலறிடக்கடிக்குளந்தனின்மேவிக் 0
கொடுத்தபேரருட்கூத்தனையேத்துவார்குணமுடையவர்தாமே. (அ)

நீரினார்கடற்றுயின்றவனயனொடுநிகழடிமுடிகாணார்
பாரினார்விசும்புறப்பரந்தெழுந்ததோர்பவளத்தின்படியாகிக்
காரினார்பொழில்சூழ்தருகடிக்குளத்துறையுங்கற்பகத்தின்றன்
சீரினார்கழலேத்தவல்லார்களைத்தீவினையடையாவே. (கூ)

குண்டர்தம்மொடுசாக்கியர்சமணருங்குறியினினெறிநில்லா
மிண்டர்மிண்டுரைகேட்டவைமெய்யெனக்கொள்ளன்மின்விடமுண்ட
கண்டர்முண்டநன்மேனியர்கடிக்குளத்துறைதருபெம்மீசர்
தொண்டர்தொண்டரைத்தொழுதடிபணிமின்கடிநெறியெளிதாமே. (க0)

* பலியதனுடைநாகம் என்றும் பாடம். † செல்வங்கொண்டேத்தவல்லார் என்றும் பாடம். ‡ விரும்பும்வேட்கையோடுண்மகிழ்ந்துரைப்பவர் என்றும் பாடம். ¶ குலவுகோலத்தர் என்றும் பாடம். § மெரிந்திட என்றும் பாடம். 0 கடிக்குளமதுமேவி என்றும் பாடம்.

Koviloor Digital Library

தனமலிபுகழ்தயங்குபூந்தாரயவர்மன்னனற்சம்பந்தன்
மனமலிபுகழ்வண்டமிழ்மாலைகண்மாலதாய் * மகிழ்வோடும்
கனமலிகடலோதம்வந்துலவியகடிக்குளத்தமர்வானை
இனமலிந்திசைபாடவல்லார்கள்போயிறைவனோடுறைவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருக்கடிக்குளத்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - உஅக.

சுவாமி தேவி திருநாமங்கள் - கற்பகநாதர், சௌந்தரநாயகி.

ககO. திருத்தண்டலைநீணெறி.†

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

விரும்புந்திங்களுங்கங்கையும்விம்மவே
சுரும்புந்தும்பியுஞ்சூழ்சடையார்க்கிடம்
கரும்புஞ்செந்நெலுங்காய்கமுகின்வளம்
நெருங்குந்தண்டலைநீணெறிகாண்மினே. (க)

இகழுங்காலனிதயத்துமென்னுளும்
திகழுஞ்சேவடியான்றிருந்தும்மிடம்
புகழும்பூமகளும்புணர்பூசுரர்
நிகழுந்தண்டலைநீணெறிகாண்மினே. (உ)

பரந்தநீலப்படரெரிவல்விடம்
கரந்தகண்டத்தினன்கருதும்மிடம்
சுரந்தமேதிதுறைபடிந்தோடையில்
நிரந்ததண்டலைநீணெறிகாண்மினே. (ங)

தவந்தவெண்புந்தவளப்பொடியுமே
உவந்தமேனியினானுறையும்மிடம்
சிவந்தபொன்னுஞ்செழுந்தரளங்களும்
நிவந்ததண்டலைநீணெறிகாண்மினே. (ச)

இலங்கைவேந்தனிருபதுதோளிற
விலங்கலில்லடர்த்தான்விரும்பும்மிடம்
சலங்கொளிப்பிதரளமுஞ்சங்கமும்
நிலங்கொடண்டலைநீணெறிகாண்மினே. (ரு)

* மாலதாய் - விருப்பமாக; அது பகுதிப்பொருள்விகுதி; மலரதாய் என்றும் பாடம்.
† இதனைத் தண்டலைச்சேரி என்ப.

கருவருந்தியிற்றான்முகன்கண்ணனென்
றிருவருந்தெரியாவொருவன்னிடம்
செருவருந்தியசெம்பியன்கோச்செங்கண்
நிருபர்தண்டலைநீணெறிகாண்மினே. (௯)

கலவுசீவரத்தார்கையிலுண்பவர்
குலவமாட்டாக்குழகனுறைவிடம்
சுலவுமாமதிலுஞ்சுதைமாடமும்
நிலவுதண்டலைநீணெறிகாண்மினே. (௧௦)

நீற்றர்தண்டலைநீணெறிநாதனைத்
தோற்றுமேன்மையர்தோணிபுரத்திறை
சாற்றுஞானசம்பந்தன்றமிழ்வல்லார்
மாற்றில்செல்வர்மறப்பர்பிறப்பையே. * (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருத்தண்டலைநீணெறித்திருப்பதிகம் - க.

ஆ. திருப்பதிகம் - உஅஉ.

சுவாமி தேவி திருநாமங்கள் - நீணெறிநாதர், ஞானம்பிகை.

ககக. திருக்கோட்டூர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

நீலமார்தருகண்டனைநெற்றியோர்கண்ணனையொற்றைவிடைச்
சூலமார்தருகையனைத்துன்றுபைம்பொழில்கள்சூழ்ந்தழகாய
கோலமாமலர்மணங்கமழ்கோட்டூர்நற்கொழுந்தேயென்றெழுவார்கள்
சாலநீடலமதனிடைப்புகழ்மிகத்தாங்குவர்பாங்காலே. † (க)

பங்கயம்மலர்ச்சிறடிப்பஞ்சுறுமெல்விரலரவல்குல்
மங்கைமார்பலர்மயில்குயில்கிளியெனமிழற்றியமொழியார்மென்
கொங்கையார்குழாங்குணலைசெய்கோட்டூர்நற்கொழுந்தேயென்றெழுவார்கள்
சங்கையொன்றிலராகிச்சங்கரன் ‡ றிருவருள்பெறலெளிதாமே. (௨)

நம்பனார்நலமலர்கொடுதொழுதெழுமடியவர்தமக்கெல்லாம்
செம்பொனார்தருமெழிறிகழ்முலையவர்செல்வமல்கியநல்ல
கொம்பனார்தொழுதாடியகோட்டூர்நற்கொழுந்தேயென்றெழுவார்கள்
அம்பொனார்தருமுலகினிலமரரோடமர்ந்தினிதிருப்பாரே. (௩)

* இத்திருப்பதிகத்தில் ௫, ௬, ௭ இச்செய்யுட்கள் மறைந்துபோயின. †சாலநீளகலத்திடைப்புகழ்மிகத்தாங்குவர்பாங்காலே என்றும் பாடம். ‡சங்கையொன்றிலராகிநற்சங்கரன் என்றும் பாடம்; சங்கையொன்றிலராகின்றசங்கரன் என்று பாடமோதுவாருமுளர்.

Koviloor Digital Library

பலவுநீள்பொழிற்றீங்கனிதேன்பலாமாங்கனிபயில்வாய
கலவமஞ்ஞைகணிலவுசொற்கிள்ளைகளன்னஞ்சேர்ந்தழகாய
குலவுநீள்வயற்கயலுகள்கோட்டூர்நற்கொழுந்தேயென்றெழுவார்கள்
நிலவுசெல்வத்தராகிநீணிலத்திடைநீடியபுகழாரே. (ச)

உருகுவாருள்ளத்தொண்சுடர்தனக்கென்றுமன்பாராமடியார்கள்
பருகுமாரமுதெனநின்றுபரிவொடுபத்திசெய்தெத்திசையும்
குருகுவாழ்வயல்சூழ்தருகோட்டூர்நற்கொழுந்தேயென்றெழுவார்கள்
அருகுசேர்தருவினைகளுமகலும்போயவனருள்பெறலாமே. (ரு)

துன்றுவார்சடைத்தூமதிமத்தமுந்துன்னெருக்கார்வன்னி
பொன்றினார்தலைக்கலனொடு * பரிகலம்புலியுரியுடையாடை
கொன்றைபொன்னெனமலர்தருகோட்டூர்நற்கொழுந்தேயென்றெழுவாரை
என்றுமேத்துவார்க்கிடரிலைகேடிலையேதம்வந்தடையாவே. (சா)

மாடமாளிகைகோபுரங்கூடங்கண்மணியரங்கணிசாலை
பாடுசூழ்மதிற்பைம்பொன்செய்மண்டபம்பரிசொடுபயில்வாய
கூடுபூம்பொழில்சூழ்தருகோட்டூர்நற்கொழுந்தேயென்றெழுவார்கள்
கேடதொன்றிலராகிநல்லுலகினிற்கெழுவுவர்புகழாலே. (எ)

ஒளிகொள்வாளெயிற்றரக்கனவ்வுயர்வரையெடுத்தலுமுமையஞ்சிச்†
சுளியவூன்றலுஞ்சோர்ந்திடவாளொடுநாளவற்கருள்செய்த
குளிர்கொள்பூம்பொழில்சூழ்தருகோட்டூர்நற்கொழுந்தினைத்தொழுவார்கள்
தளிர்கொடாமரைப்பாதங்களருள்பெறுந்தவமுடையவர்தாமே. (அ)

பாடியாடுமெய்ப்பத்தர்கட்கருள்செயுமுத்தினைப்பவளத்தைத்
தேடிமாலயன்காணவொண்ணாதவத்திருவினைத்தெரிவைமார்
கூடியாடவர்கைதொழுகோட்டூர்நற்கொழுந்தேயென்றெழுவார்கள்
நீடுசெல்வத்தராகியிவ்வுலகினினிகழ்தருபுகழாரே. (கூ)

கோணல்வெண்பிறைச்சடையனைக்கோட்டூர்நற்கொழுந்தினைச்செழுந்திரளைப்
பூணல்செய்தடிபோற்றுமின்பொய்யிலாமெய்யனல்லருளென்றும்
காணலொன்றிலாக்காரமண்டேரர்குண்டாக்கர்சொற்கருதாதே
பேணல்செய்தரனைத்தொழுமடியவர்பெருமையைப்பெறுவாரே. (கO)

பந்துலாவிரற்பவளவாய்த்தேன்மொழிப்பாவையோடுருவாரும்
கொந்துலாமலர்விரிபொழிற்கோட்டூர்நற்கொழுந்தினைச்செழும்பவளம்
வந்துலாவியகாழியுண்ஞானசம்பந்தன்வாய்ந்துரைசெய்த
சந்துலாந்தமிழ்மாலைகள்வல்லவர்தாங்குவர்புகழாலே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருக்கோட்டூர்த்திருப்பதிகம்-க.

ஆ திருப்பதிகம் - உ௲அ௩.

சுவாமி தேவி திருநாமங்கள் – கொழுந்தநாதர், மதுரவசனியம்மை.

* தலைகலனொடு என்றும் பாடம். † அஞ்சி - அஞ்ச.

Koviloor Digital Library

ககஉ. திருவெண்டுறை.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

ஆதியனாதிரையன்னனலாடியவாரழகன்
பாதியோர்மாதினொடும்பயிலும்பரமாபரமன்
போதியலும்முடிமேற்புனலோடரவம்புனைந்த *
வேதியன்மாதிமையால்விரும்புமிடம்வெண்டுறையே. (க)

காலனையோருதையில்லுயிர்வீடுசெய்வார்கழலான்
பாலொடுநெய்தயிரும்பயின்றாடியபண்டரங்கன்
மாலைமதியொடுநீரரவம்புனைவார் † சடையான்
வேலனகண்ணியொடும்விரும்புமிடம்வெண்டுறையே. (உ)

படைநவில்வெண்மழுவான்பல ‡ பூதப்படையுடையான்
கடைநவின்மும்மதிலும்மெரியூட்டியகண்ணுதலான்
உடைநவிலும்புலித்தோலுடையாடையினான்கடிய
விடைநவிலுங்கொடியான்விரும்புமிடம்வெண்டுறையே. (ங)

பண்ணமர்வீணையினான்பரவிப்பணிதொண்டர்கடம்
எண்ணமர்சிந்தையினானிமையோர்க்குமறிவரியான்
பெண்ணமர்கூறுடையான்பிரமன்றலையிற்பலியான்
விண்ணவர்தம்பெருமான்விரும்புமிடம்வெண்டுறையே. (ச)

பாரியலும்பலியான்படியார்க்குமறிவரியான்
சீரியலும்மலையாளொருபாகமுஞ்சேரவைத்தான்
போரியலும்புரமூன்றுடன்பொன்மலையேசிலையா
வீரியநின்றுசெய்தான்விரும்புமிடம்வெண்டுறையே. (ரு)

ஊழிகளாயுலகாயொருவர்க்குமுணர்வரியான்
போழிளவெண்மதியும்புனலும்மணிபுன்சடையான்
யாழின்மொழியுமையாள்வெருவவ்வெழில்வெண்மருப்பின்
வேழமுரித்தபிரான்விரும்புமிடம்வெண்டுறையே. (சு)

கன்றியகாலனையும்முருளக்கனல்வாயலறிப்
பொன்றமுனின்றபிரான்பொடியாடியமேனியினான்
சென்றிமையோர்பரவுந்திகழ்சேவடியான்புலன்கள் ¶
வென்றவனெம்மிறைவன்விரும்புமிடம்வெண்டுறையே. (எ)

* டரவம்புனைந்த என்றும் பாடம். † மாசமதியொடுநீரரவம்புனைவார் என்றும் பாடம்.
‡ மழுவாட்பல என்றும் பாடம். ¶ புரங்கள் என்றும் பாடம்.

Koviloor Digital Library

காமிருபத்தினுலுங்கடுவென்சினமா * யெடுத்த
சிரமொருபத்துமுடையரக்கன்வலிசெற்றுகந்தான்
பரவவல்லார்வினைகளறுப்பானொருபாகமும்பெண்
விரவியவேடத்தினன்விரும்புமிடம்வெண்டுறையே. (அ)

கோலமலரயனுங்குளிர்கொண்டனிறத்தவனும்
சீலமறிவரிதாய்த்திகழ்ந்தோங்கியசெந்தழலான்
மூலமதாகிநின்றான்முதிர்புன்சடைவெண்பிறைபான்
வேலைவிடமிடற்றான்விரும்புமிடம்வெண்டுறையே. (கூ)

நக்குருவாயவருந்துவராடைநயந்துடையாம்
பொக்கர்கடம்முரைகள்ளவைபொய்யெனவெம்மிறைவன்
திக்குநிறைபுகழார்தருதேவர்பிரான்கனகம்
மிக்குயர்சோதியவன்விரும்புமிடம்வெண்டுறையே. (க0)

திண்ணமரும்புரிசைத்திருவெண்டுறைமேயவனைத்
தண்ணமரும்பொழில்சூழ்தருசண்பையர்தந்தலைவன்
எண்ணமர்பல்கலையானிசைஞானசம்பந்தன்சொன்ன
பண்ணமர்பாடல்வல்லார்வினையாயினபற்றறுமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவெண்டுறைத்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - உஅச.

சுவாமி தேவி திருநாமங்கள் - வெண்டுறைநாதர், வேனெடுங்கண்ணியம்மை.

ககந. திருக்கொள்ளம்பூதூர்.†

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

ஈரடிமேல்வைப்பு. பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

கொட்டமேகமழுங்கொள்ளம்பூதூர்
நட்டமாடியநம்பனையுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. (க)

கோட்டகக்கழனிக்கொள்ளம்பூதூர்
நாட்டகத்துறைநம்பனையுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. (உ)

* கடுவெஞ்சினமாய் என்றும் பாடம். † இதனைத் திருக்களம்பூர் என்று வழங்குப.

Koviloor Digital Library

குலையினார்தெங்குசூழ்கொள்ளம்பூதூர்
விலையிலாட்கொண்டவிகிர்தனையுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. (௩)

குவளைகண்மலருங்கொள்ளம்பூதூர்த்
தவளநீறணிதலைவனையுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. (௪)

கொன்றைபொன்சொரியுங்கொள்ளம்பூதூர்
நின்றபுன்சடைநிமலனையுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. (௫)

ஓடம்வந்தணையுங்கொள்ளம்பூதூர்
ஆடல்பேணியவடிகளையுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. (௬)

ஆறுவந்தணையுங்கொள்ளம்பூதூர்
ஏறுதாங்கியவிறைவனையுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. (௭)

குராக்*கினம்பயிலுங்கொள்ளம்பூதூர்
அரக்கனைச்செற்றவாதியையுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. (௮)

பருவராலுகளுங்கொள்ளம்பூதூர்
இருவர்காண்பரியான்கழலுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. (௯)

நீரகக்கழனிக்கொள்ளம்பூதூர்த்
தேரமண்செற்றசெல்வனையுள்கச்
செல்லவுந்துகசிந்தையார்தொழ
நல்குமாறருணம்பனே. (௧௦)

* குராக்கு என்பதே இயற்சொல் என்பர் நச்சினார்க்கினியர்; குராங்கெனவரின் மெலித்து நின்றதென்பர்.

Koviloor Digital Library

கொன்றைசேர்சடையான்கொள்ளம்பூதூர்
நன்றுகாழியுண் ஞானசம்பந்தன்
இன்றுசொன்மாலைகொண்டேத்தவல்லார்போய்
என்றும்வானவரோடிருப்பாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருக்கொள்ளம்பூதூர்த்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - உஅ௫.

சுவாமி தேவி திருநாமங்கள் - வில்வவனநாதர், சௌந்தரநாயகி.

திருஞானசம்பந்தப்பிள்ளையார், திருக்கூட்டத்தோடு முள்ளிவாய்க்கரையை அணைந்தபோது, அங்கே ஆறு மிகப்பெருகுதலால், நீர்வாணர்கள் ஓடத்தை ஓடக்கோல் நிலையில்லாமைபற்றிக் கரையிலே நிறுத்திப் போய்விட்டார்கள். பிள்ளையார் அதுகண்டு கரையிலே எழுந்தருளி நின்றபோது, கொள்ளம்பூதூர் எதிரேதோன்ற அங்கே சென்று சுவாமிதரிசனஞ் செய்தற்குத் திருவுளம் விரும்புதலால் அதிசீக்கிரம் ஓடத்தின் கட்டை அவிழ்த்து, சிவனடியார்களை அதிலே ஏற்றி, நாவலமேகோலாக அதன்மேல் நின்று, "கொட்டமேகமழும்"என்னுந் திருப்பதிகத்தைப் பாடியருளினர். சிவபெருமானுடையதிருவருளினல் ஓடஞ்சென்று மற்றக்கரையை அடைந்தது.

ககச. திருப்பேரெயில்.*

திருநாவுக்கரசுநாயனர்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

மறையுமோதுவர்மான்மறிக்கையினர்
கறைகொள்கண்டமுடையகபாலியார்
துறையும்போகுவர்தூயவெண்ணீற்றினர்
பிறையுஞ்சூடுவர்பேரெயிலாளரே. (க)

கணக்கிலாரையுங்கற்றுவல்லாரையும்
வணக்கிலாநெறிகண்டுகொண்டாரையும்
தனக்குவார்தனிப்பாரெப்பொருளையும்
பிணக்குவாரவர்பேரெயிலாளரே. (உ)

சொரிவிப்பார்மழைசூழ்கதிர்த்திங்களை
விரிவிப்பார்வெயிற்பட்டவிளங்கொளி
எரிவிப்பார்தனிப்பாரெப்பொருளையும்
பிரிவிப்பாரவர்பேரெயிலாளரே. (௩)

* இதனை வங்காரம்பேரையூர் என்றும், ஓகைப்பேரையூர் என்றும் வழங்குப.

Koviloor Digital Library

செறுவிப்பார்சிலைபான்மதிற்றங்கள்
உறுவிப்பார்பலபத்தர்களுழ்வினை *
அறுவிப்பாரதுவன்றியுநல்வினை
பெறுவிப்பாரவர்பேரெயிலாளரே. (௪)

மற்றையாரறியார்மழுவாளினார்
பற்றியாட்டியோரைந்தலைப்பாம்பரைச்
சுற்றியாரவர்தூநெறியான்மிகு
பெற்றியாரவர்பேரெயிலாளரே. (௫)

திருக்குவார்குழற்செல்வனசேவடி
இருக்குவாய்மொழியாற்றனையேத்துவார்
சுருக்குவார்துயர்தோற்றங்களாற்றறப் †
பெருக்குவாரவர்பேரெயிலாளரே. (௬)

முன்னையார்மயிலூர்திமுருகவேள்
தன்னையாரெனிற்றானோர்தலைமகன்
என்னையாளுமிறைவனெம்பிரான்
பின்னையாரவர்பேரெயிலாளரே. (௭)

உழைத்துந்துள்ளியுமுள்ளத்துளேயுரு
இழைத்துமெந்தைபிரானென்றிராப்பகல்
அழைக்குமன்பினராயவடியவர்
பிழைப்புநீக்குவர்பேரெயிலாளரே. (௮)

நிருலாநிமிர்புன்சடையாவெனா
வருலாவரக்கன் ‡ திறல்வாட்டிய
வாருலாவனமென்முலையாளொடும்
பேருளாரவர்பேரெயிலாளரே. (௯)

பாணியார்படுதப்பெயர்ந்தாடுவர்
தூணியார்விசயற்கருள்செய்தவர்
மாணியாய்மண்ணளந்தவனான்முகன்
பேணியாரவர்பேரெயிலாளரே. (௧௦)

மதத்தவாளரக்கன்மணிப்புட்பகம்
சிதைக்கவேதிருமாமலைக்கீழ்ப்புக்குப்
பதைத்தங்கார்த்தெடுத்தான்பத்துநின்முடி
பிதக்கவூன்றியபேரெயிலாளரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருப்பேரெயிற்றிருப்பதிகம் - ௧.

ஆ திருப்பதிகம் - உ௮௬.

சுவாமி தேவி திருநாமங்கள் - ஐகதீசுவரர், பெண்ணமிர்தநாயகி.

* பத்தர்களுள்வினை என்றும் பாடம். † சுருக்குவாரவர்தோற்றங்களாலறப் என்றும் பாடம். ‡ வருலாவரக்கன் என்றும் பாடம்.

Koviloor Digital Library

௧௧௫. திருக்கொள்ளிக்காடு.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

நிணம்படுசுடலையினீறுபூசிநின்
றிணங்குவர்பேய்களோடிடுவர்மாநடம்
உணங்கல்வெண்டலை* தனிலுண்பராயினும்
குணம்பெரிதுடையர்நங்கொள்ளிக்காடரே. (௧)

ஆற்றநல்லடியிணையலர்கொண்டேத்துவான் †
சாற்றியவந்தணன்றருதிகண்டநாள்
மாற்றலனாகிமுன்னடர்த்துவந்தணை
கூற்றினையுதைத்தனர்கொள்ளிக்காடரே. (௨)

அத்தகுவானவர்க்காகமால்விடம்
வைத்தவர்மணிபுரைகண்டத்தின்னுளே
மத்தமும்வன்னியுமலிந்தசென்னிமேல்
கொத்தலர்கொன்றையர்கொள்ளிக்காடரே. (௩)

பாவணமேவுசொன்மாலையிற்பல
நாவணங்கொள்கையினவின்றசெய்கையர்
ஆவணங்கொண்டெமையாள்வராயினும்
கோவணங்கொள்கையர்கொள்ளிக்காடரே. (௪)

வாரணிவனமுலைமங்கையாளொடும்
சீரணிதிருவுருத்திகழ்ந்தசென்னியர்
நாரணிசிலைதனை னுகலாரெயில்
கூரெரிகொளுவினர்கொள்ளிக்காடரே. (௫)

பஞ்சுதோய்மெல்லடிப்பாவையாளொடும்
மஞ்சுதோய்கயிலையுண்மகிழ்வர்நாடொறும்
வெஞ்சினமருப்பொடுவிரையவந்தடை
குஞ்சரமுரித்தனர்கொள்ளிக்காடரே. (௬)

இறையுறுவரிவளையிசைகள்பாடிட
அறையுறுகழலடியார்க்கவாடுவர்
சிறையுறுவிரிபுனல்சென்னியின்மிசைக்
குறையுறுமதியினர்கொள்ளிக்காடரே. (௭)

எடுத்தனன்கயிலையையியல்வலியினால்
அடர்த்தனர்திருவிரலாலலறிடப் ‡
படுத்தனரென்றவன்பாடல்பாடலும்
கொடுத்தனர்கொற்றவாள்கொள்ளிக்காடரே. (௮)

* உணங்குவெண்டலை என்றும் பாடம். † ஆற்றனல்லடியிணையலர்கொடேத்துவான் என்றும் பாடம். ‡ லலற்றிட என்றும் பாடம்.

Koviloor Digital Library

தேடினாயன்முடிமாலுஞ்சேவடி
நாடினாரவரொன்றுநணுககிற்றிலர்*
பாடினார்பரிவொடுபத்தர்சித்தமும்
கூடினார்க்கருள்செய்வர்கொள்ளிக்காடரே. (௯)

நாடிநின்றறிவிலானிலிகள்சாக்கியர்
ஓடிமுன்னோதியவுரைகண்மெய்யல
பாடுவர்நான்மறைபயின்றமாதொடும்
கூடுவர்திருவுருக்கொள்ளிக்காடரே. (௧0)

நற்றவர்காழியுண்ஞானசம்பந்தன்
குற்றமில்பெரும்புகழ்க்கொள்ளிக்காடனைச்
சொற்றமிழின்னிசைமாலைசோர்வின்றிக்
கற்றவர்கழலடிகாணவல்லரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருக்கொள்ளிக்காட்டுத்திருப்பதிகம் - ௧.

ஆ திருப்பதிகம் - உஅஎ.

சுவாமி தேவி திருநாமங்கள் - அக்கினீசுரர், பஞ்சின்மெல்லடியாள்.

௧௧௬. திருத்தெங்கூர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

புரைசெய்வல்வினைதீர்க்கும்புண்ணியர்விண்ணவர்போற்றக்
கரைசெய்மால்கடனஞ்சையுண்டவர்கருதலர்புரங்கள்
இரைசெய்தாரழலூட்டியுழல்பவரிடுபலிக்கெழில்சேர்
விரைசெய்பூம்பொழிற்றெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரே. (௧)

சித்தர்தன்னடிநினைவார்செடிபடுகொடுவினைதீர்க்கும்
கொத்தின்†றாழ்சடைமுடிமேற்கோளெயிற்றரவொடுபிறையன்
பத்தர்தாம்பணிந்தேத்தும்பரம்பரன்பைம்புனல்பதித்த
வித்தன்றாழ்பொழிற்றெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரே. (௨)

அடையும்வல்வினையகலவருள்பவரனலுடைமழுவாட்
படையர்பாய்புலித்தோலர்பைம்புனற்கொன்றையர்படர்புன்
சடையில்வெண்பிறைசூடித்தார்மணியணிதருதறுகண்
விடையர்வீங்கெழிற்றெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரே. (௩)

* நண்ணுகிற்றிலர் என்றும் பாடம். † கொத்தன் என்றும் பாடம்.

Koviloor Digital Library

பண்டுநான்செய்த * வினைகள்பறையவோர்நெறியருள்பயப்பார்
கொண்டல்வான்மதிசூடிக்குரைகடல்விடமணிகண்டர்
வண்டுமாமலரூதிமதுவுணவிதழ்மறிவெய்தி
விண்டவார்பொழிற்றெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரே. (ச)

சுழித்தவார்புனற்கங்கைசூடியொர்காலனைக்காலால்
தெழித்துவானவர்நடுங்கச்செற்றவர்சிறையணிபறவை
கழித்தவெண்டலையேந்திக்காமனதுடல்பொடியாக
விழித்தவர்திருத்தெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரே. (ரு)

தொல்லைவல்வினைதீர்ப்பார்சுடலைவெண்பொடியணிசுவண்டர்
எல்லிசூடி † நின்றாடுமிறையவரிமையவரேத்தச்
சில்லைமால்விடையேறித்திரிபுரந்தீயெழச்செற்ற
வில்லினார்திருத்தெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரே. (சு)

நெறிகொள்சிந்தையராகிநினைபவர் ‡ வினைகெடநின்றார்
முறிகொண்மேனிமுக்கண்ணர்முளைமதிநடுநடுத்திலங்கப்
பொறிகொள்வாளரவணிந்தபுண்ணியர்வெண்பொடிப்பூசி
வெறிகொள்பூம்பொழிற்றெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரே. (எ)

எண்ணிலாவிறலரக்கனெழிறிகழ்மால்வரையெடுக்கக்
கண்ணெலாம்பொடிந்தலறக்கால்விரலூன்றியகருத்தர்
தண்ணுலாம்புனற்கன்னிதயங்கியசடைமுடிச்சதுரார்
விண்ணுலாம்பொழிற்றெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரே. (அ)

தேடித்தானயன்மாலுந்திருமுடியடியிணைகாணார்
பாடத்தான்பலபூதப்படையினர்சுடலையிற்பலகால்
ஆடத்தான்மிகவல்லாருச்சுனற்கருள்செயக்கருதும்
வேடத்தார்திருத்தெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரே. (கூ)

சடங்கொள்சீவரப்போர்வைச்சாக்கியர்சமணர்சொற்றவிர
இடங்கொள்வல்வினைதீர்க்குமேத்துமினிருமருப்பொருகைக்
கடங்கொண்மால்களிற்றுரியர்கடல்கடைந்திடக்கனன்றெழுந்த
விடங்கொள்கண்டத்தர்தெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரே. (க௦)

வெந்தநீற்றினர்தெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரைக்
கந்தமார்பொழில்சூழ்ந்தகாழிபுன்ஞானசம்பந்தன்
சந்தமாயினபாடற்றண்டமிழ்பத்தும்வல்லார்மேல்
பந்தமாயினபாவம்பாறுதறேறுதல்பயனே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருத்தெங்கூர்த்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - உஅஅ.

சுவாமி தேவி திருநாமங்கள் - வெள்ளிமலைநாதர், பெரியநாயகி.

* நாஞ்செய்த என்றும் பாடம். † சுவண்டார்—அல்லிசூடி என்றும் பாடம். ‡ நினைப்பவர் என்றும் பாடம்.

Koviloor Digital Library

௧௧௭. திருநெல்லிக்கா.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

அறத்தானுயிர்காவலமர்ந்தருளி
மறத்தான்மதின்மூன்றுடன்மாண்பழித்த
திறத்தாற்றெரிவெய்தியதிவெண்டிங்கள்
நிறத்தானெல்லிக்காவுணிலாயவனே. (௧)

பதிதானிடுகாடுபைங்கொன்றைதொங்கல்
மதிதானதுசூடியமைந்தனுந்தான்
விதிதான்வினைதான்விழுப்பம்பயக்கும்
நெதிதானெல்லிக்காவுணிலாயவனே. (௨)

நலந்தானவனான்முகன்றன்றலையைக்
கலந்தானதுகொண்டகபாலியுந்தான் *
புலந்தான்புகழாலெரிவிண்புகழும்
நிலந்தானெல்லிக்காவுணிலாயவனே. (௩)

தலைதானதுவேந்தியதம்மடிகள்
கலைதான்றிரிகாடிடநாடிடமா
மலைதானெடுத்தான்மதின்மூன்றுடைய
நிலைதானெல்லிக்காவுணிலாயவனே. (௪)

தவந்தான்கதிதான்மதிவார்சடைமேல்
உவந்தான்சுறவேந்தனுருவழியச்
சிவந்தான்செயச்செய்துசெறுத்துலகில்
நிவந்தானெல்லிக்காவுணிலாயவனே. (௫)

வெறியார்மலர்க்கொன்றையந்தார்விரும்பி
மறியார்மலைமங்கைமகிழ்ந்தவன்றான்
குறியாற்குறி † கொண்டவர்போய்க்குறுகும்
நெறியானெல்லிக்காவுணிலாயவனே. (௬)

பிறைதான்சடைச்சேர்த்தியவெந்தைபெம்மான்
இறைதானிறவாக்கயிலைம்மலையான்
மறைதான்புனலொண்மதிமல்குசென்னி
நிறைதானெல்லிக்காவுணிலாயவனே. (௭)

மறைத்தான்பிணிமாதொருபாகந்தன்னை
மிறைத்தான்வரையாலரக்கன்மிகையைக்
குறைத்தான்சடைமேற்குளிர்கோல்வளையை
நிறைத்தானெல்லிக்காவுணிலாயவனே. (௮)

* கவாலியுந்தான் என்றும் பாடம். † குறியார்குறி என்றும் பாடம்.

Koviloor Digital Library

தழலுருமரையான்வையந்தாயவனும்
கழலுன்முடிகாணியநாணொளிரும்
அழலுருனடியார்க்கருளாய்ப்பயக்கும்
நிழலுருனெல்லிக்காவுணிலாயவனே. (௯)

கனத்தார்திரைமாண்டழற்கான்றநஞ்சை
எனத்தாவெனவாங்கியதுண்டகண்டன்
மனத்தாற்சமண்சாக்கியர்மாண்பழிய
நினைத்தானெல்லிக்காவுணிலாயவனே. (க௦)

புகரேதுமிலாதபுத்தேளுலகில்
நிகராநெல்லிக்காவுணிலாயவனை
நகராநலஞானசம்பந்தன் * சொன்ன
பகர்வாரவர்பாவமிலாதவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநெல்லிக்காத்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - உ௪க.

சுவாமி தேவி திருநாமங்கள் - நெல்லிவனநாதர், மங்களநாயகி.

ககஅ. திருநாட்டியத்தான்குடி.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

பூணணவதொரரவங்கண்டஞ்சேன்புறங்காட்டாடல்கண்டிகழேன்
பேணீராகிலும்பெருமையையுணர்வேன் † பிறவேனாகிலுமறவேன்
காணீராகிலுங்காண்பனென்மனத்தாற்கருதீராகிலுங்கருதி ‡
நானேலும்மடிபாடுதலொழியேனாட்டியத்தான்குடிநம்பீ. (க)

கச்சேர்பாம்பொன்று ¶ கட்டிநின்றிடுகாட்டெல்லியிலாடலைக்கவர்வன்
துச்சேனென்மனம் § புகுந்திருக்கின்றமைசொல்லாய்திப்பியமூர்த்தி
வைச்சேயிடர்களைக்களைந்திடவல்லமணியேமாணிக்கவண்ணா
நச்சேனொருவரைநானுமையல்லானாட்டியத்தான்குடிநம்பீ. (உ)

அஞ்சாதேயுமக்காட்செயவல்லேனியாதினுக்காசைப்படுகேன்
பஞ்சேர்மெல்லடிமாமலைமங்கைபங்காவெம்பரமேட்டீ
மஞ்சேர்வெண்மதிசெஞ்சடைவைத்தமணியேமாணிக்கவண்ணா
நஞ்சேர்கண்டாவெண்டலையேந்திநாட்டியத்தான்குடிநம்பீ (௩)

* நகரானலஞானசம்பந்தன் என்றும், நகரார்நலஞானசம்பந்தன் என்றும், நகரநல ஞானசம்பந்தனசொல் என்றும் பாடம். † யுணர்வன் என்றும் பாடம். ‡ கருதிடிலிக ழேன் என்றும் பாடம்; ஒருசீர் கூடுகின்றது. ¶ கச்சோரவொன்று என்றும் பாடம். § துச்சேயென்மனம் என்றும் பாடம்.

Koviloor Digital Library

கல்லேனல்லேனின்புகழடிமைகல்லாதேபலகற்றேன்
நில்லேனல்லேனின்வழிநின்றார்தம்முடைநீதியைநினைய
வல்லேனல்லேன்பொன்னடிபரவமாட்டேன்மறுமையைநினைய
நல்லேனல்லேனானுமக்கல்லானாட்டியத்தான்குடிநம்பீ. (௪)

மட்டார்பூங்குழன்மலைமகள்கணவனைக்கருதாதார்தமைக்கருதேன்
ஒட்டாராகிலுமொட்டுவனடியேனும்மடியடைந்தவர்க்கடிமைப்
பட்டேனாகிலும்பாடுதலொழியேன்பாடியுநாடியுமறிய
நட்டேனாதலானான்மறக்கில்லேனாட்டியத்தான்குடிநம்பீ. (௫)

படப்பாற்றன்மையினான்பட்டதெல்லாம்படுத்தாயென்றல்லல்பறையேன்
குடப்பாச்சில்லுறைகோக்குளிர்வானேகோனேகூற்றுதைத்தானே
மடப்பாற்றயிரொடுநெய்மகிழ்ந்தாடுமறையோதிமங்கைபங்கா
நடப்பீராகிலுநடப்பனும்மடிக்கேநாட்டியத்தான்குடிநம்பீ. (௬)

ஐவாயரவினைமதியுடன்வைத்தவழகாவமரர்கடலைவா
எய்வான்வைத்ததொரிலக்கினையணைதரநினைந்தேனுள்ளமுள்ளளவும்
உய்வானெண்ணிவந்தும்மடியடைந்தேனுகவீராகிலுமுகப்பன்
நைவானன்றுமக்காட்பட்டதடியேனாட்டியத்தான்குடிநம்பீ. (௭)

கலியேன்மாநுடவாழ்க்கையொன்றாகக்கருதிடிற்கண்கணீர்பில்கும்*
பலிதேர்ந்துண்பதோர்பண்புகண்டிகழேன்பசுவேயேறிலும்பழியேன்
வலியேயாகிலும்வணங்குதலொழியேன்மாட்டேன்மறுமையைநினையேன்
நலியேயொருவரைநானுடையல்லானாட்டியத்தான்குடிநம்பீ. (௮)

குண்டாடிச்சமண்சாக்கியப்பேய்கள்கொண்டாராகிலுங்கொள்ளக்
கண்டாலுங்கருதேனெருதேறுங்கண்ணாநின்னலதறியேன்
தொண்டாடித்தொழுவார்தொழக்கண்டுதொழுதேனென்வினைபோக
நண்டாடும்வயற்றண்டலைவேலிநாட்டியத்தான்குடிநம்பீ. (௯)

கூடாமன்னரைக்கூட்டத்துவென்றகொடிறன்கோட்புலிசென்னி
நாடார்தொல்புகழ்நாட்டியத்தான்குடிநம்பியைநாளுமறவாச்
சேடார்பூங்குழற்சிங்கடியப்பன்றிருவாரூரனுரைத்த
பாடாகிலும்பாடுமின்றொண்டீர்பாடநும்பாவம்பற்றறுமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருநாட்டியத்தான்குடித்திருப்பதிகம் - ௬.

ஆ திருப்பதிகம் - ௨௧௦.

சுவாமி தேவி திருநாமங்கள் - இரத்நகிரிநாதர், மலர்மங்கைநாயகி.

சுந்தரமூர்த்திநாயனார், திருநாட்டியத்தான்குடியை அடைந்தபோது, அங்கிருந்த கோட்புலிநாயனார் எதிர்கொண்டு வணங்கி, நாயனாரைத் தம்முடைய வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய், விதிப்படி அருச்சனைசெய்து, திருவமுது செய்வித்து, சிங்கடியார், வனப்பகையார், என்கின்ற தமதுபுத்திரிகள் இருவரையுங்கொண்டுவந்து, அவரை

* கண்கணீர்மல்கும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

நமஸ்கரிப்பித்து, தாமும் வணங்கி, அவ்விருவரையும் அடிமையாகக் கொண்டருளவேண்டும் என்று பிரார்த்திக்க, நாயனர் அப்பெண்கள் இருவரும் தனக்குப் புத்திரிகள் என்று சொல்லி, அவர்களைத் தம்முடைய திருத்தொடையின்மேலிருத்தி, மனக்கசிவுடனே அணைத்து உச்சிமோந்து, அவர்கள் விரும்பியவைகளைக் கொடுத்தருளி, சிவபிரான் எழுந்தருளியிருக்கும் ஆலயத்தை அடைந்து அவரை வணங்கி, "பூணணுவதோரரவம்" என்னுந்திருப்பதிகம் பாடியருளினர். அப்பதிகத்தின் திருக்கடைக்காப்பிலே கோட்புலிநாயனரைச்சிறப்பித்து, சிங்கடியாருக்குத் தம்மைப் பிதாவாக நினைத்தபடியினுல் தம்மைச் "சிங்கடியப்பன்" என்று வைத்தருளினர்.

௧௧௯. திருக்காறாயில்.*

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

நீரானேநீள்சடைமேலொர்நிரைகொன்றைத் †
தாரானேதாமரைமேலயன்றான்றொழும்
சீரானேசீர்திகழுந்திருக்காறாயில்
ஊரானேயென்பவரூனமிலாதாரே. (௧)

மதியானேவரியரவோடுடன்மத்தஞ்சேர்
விதியானேவிதியுடைவேதியர்தாந்தொழும்
நெதியானேநீர்வயல்சூழ்திருக்காறாயிற்
பதியானேயென்பவர்பாவமிலாதாரே. (௨)

விண்ணானேவிண்ணவரேத்தி ‡ விரும்புஞ்சீர்
மண்ணானேமண்ணிடைவாழுமுயிர்க்கெல்லாம்
கண்ணானேகடிபொழில்சூழ்திருக்காறாயில்
எண்ணானேயென்பவரேதமிலாதாரே. (௩)

தாயானேதந்தையுமாகியதன்மைகள் ¶
ஆயானேயாயநல்லன்பர்க்கணியானே
சேயானேசீர்திகழுந்திருக்காறாயில்
மேயானேயென்பவர்மேல்வினைமேவாவே. (௪)

கலையானேகலைமலிசெம்பொற் § கயிலாய
மலையானேமலைபவர்மும்மதின்மாய்வித்த
சிலையானேசீர்திகழுந்திருக்காறாயில்
நிலையானேயென்பவர்மேல்வினைநில்லாவே. (௫)

ஆற்றானேயாறணிசெஞ்சடையாடர
வேற்றானேயேழுலகும்மிமையோர்களும்
போற்றானேபொழிதிகழுந்திருக்காறாயில்
நீற்றானேயென்பவர்மேல்வினைநில்லாவே. (௬)

* இதனைத் திருக்காறைவாசல் என்ப. † மேலோர்நிரைகொன்றை என்றலுமாம்; மேலொருநிரைகொன்றை எனப் பாடமோதுவாருமுளர். ‡ ரேத்த என்றும் பாடம். ¶ தன்மைக்கள் என்றும் பாடம். § செம்பொன் - செப்பமாகியவெண்பொன்.

Koyiloor Digital Library

சேர்த்தானேதீவினைதேய்ந்தறத்தேவர்கள்
எத்தானையேத்துநன்மாமுனிவர்க்கிடர் *
காத்தானைகார்வயல்சூழ்திருக்காறுயில்
ஆர்த்தானையென்பவர்மேல்வினையடாவே.† (௭)

கடுத்தானைகாலனைக்காலாற்கயிலாயம்
எடுத்தானையேதமாகம்முனிவர்க்கிடர்
கெடுத்தானைகேழ்கிளருந்திருக்காறுயில்
அடுத்தானையென்பவர்மேல்வினையடாவே. (அ)

பிறையானைபேணியபாடலொடின்னிசை
மறையானைமாலொடுநான்முகன்காணாத
இறையானையெழிறிகழுந்திருக்காறுயில்
உறைவானையென்பவர்மேல்வினையோடுமே. (௯)

செடியாரும்புன்சமண்சீவரத்தார்களும்
படியாரும்பாவிகள்பேச்சுப்பயனில்லை
கடியாரும்பூம்பொழில்சூழ்திருக்காறுயில்
குடியாருங்கொள்கையினார்க்கில்லைகுற்றமே. (௧௦)

ஏய்ந்தசீரெழிறிகழுந்திருக்காறுயில்
ஆய்ந்தசீரானடியேத்தியருள்பெற்ற
பாய்ந்தநீர்க்காழியுண்ஞானசம்பந்தன்சொல்
வாய்ந்தவாறேத்துவார்வானுலகாள்வாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருக்காறுயிற்றிருப்பதிகம் - ௧.

ஆ திருப்பதிகம் - உ௧௧.

சுவாமி தேவி திருநாமங்கள் - கண்ணாயிரநாதர், கைலாசநாயகி.

௧உ௦. திருக்கன்றாப்பூர்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

மாதினையோர்கூறுகந்தாய்மறைகோனாவா
மதிசூடிவானவர்கடங்கட்கெல்லாம்
நாதனேயென்றென்றுபாவிநாளு
நைந்துருகி ‡ வஞ்சகமற்றன்புகூர்ந்து

* முனிவர்க்கிடர் என்றும் பாடம். † யடையாவே என்றும் பாடம். ‡ நைஞ்சுருகி என்றும் பாடம்.

Koviloor Digital Library

வாதனையான்முப்பொழுதும்பூநீர்கொண்டு
வைகன்மறவாதுவாழ்த்தியேத்திக்
காதன்மையாற்றொழுமடியார்நெஞ்சினுள்ளே
கன்ருப்பூர்நடுதறியைக்காணலாமே. (க)

விடிவதுமேவெண்ணீற்றைமெய்யிற்பூசி
வெளுத்தமைந்தகீளொடுகோவணமுந்தற்றுச்
செடியுடையவல்வினைநோய்தீர்ப்பாயென்றுஞ்
செல்கதிக்குவழிகாட்டுஞ்சிவனேயென்றும்
துடியனையவிடைமடவாள்பங்காவென்றுஞ்
சுடலைதனிநடமாடுஞ்சோதியென்றும்
கடிமலர்தூய்த்தொழுமடியார்நெஞ்சினுள்ளே
கன்ருப்பூர்நடுதறியைக்காணலாமே. (உ)

எவரேனுந்தாமாகவிலாடத்திட்ட
திருநீறுஞ்சாதனமுங்கண்டாலுள்கி
உவராதேயவரவரைக்கண்டபோது
வுகந்தடிமைத் * திறநினைந்தங்குவந்துநோக்கி
இவர்தேவரவர்தேவரென்றுசொல்லி
யிரண்டாட்டாதொழிந்தீசன்றிறமேபேணிக்
கவராதேதொழுமடியார்நெஞ்சினுள்ளே
கன்ருப்பூர்நடுதறியைக்காணலாமே. (ங)

இலங்காலஞ்செல்லாநாளென்றுநெஞ்சத்
திடையாதேயாவர்க்கும்பிச்சையிட்டு
விலங்காதேநெறிநின்றங்கறிவேமிக்கு
மெய்யன்புபுகப்பெய்துபொய்யைநீக்கித்
துலங்காமெய்வானவரைக் † காத்துநஞ்ச
முண்டபிரானடியிணைக்கே ‡ சித்தம்வைத்துக்
கலங்காதேதொழுமடியார்நெஞ்சினுள்ளே
கன்ருப்பூர்நடுதறியைக்காணலாமே. (ச)

விருத்தனேவேலைவிடமுண்டகண்டா
விரிசடைமேல்வெண்டிங்கள்விளங்கச்சூடும்
ஒருத்தனேயுமைகணவாவுலகமூர்த்தி
நுந்தாதவொண்சுடரேயடியார்தங்கள்
பொருத்தனேயென்றென்றுபுலம்பிநாளும்
புலனைந்துமகத்தடக்கிப்புலம்பிநோக்கிக்
கருத்தினாற்றொழுமடியார்நெஞ்சினுள்ளே
கன்ருப்பூர்நடுதறியைக்காணலாமே. (ரு)

* கண்டபோதேயுகந்தடிமைத் என்றும் பாடம். † துலங்காமேவானவரை என்றும் பாடம்; துளங்காமே என்பது ளளவொற்றுமைபற்றித் துலங்காமே என நின்றது. ‡ பிரானிணையடிக்கே என்றும் பாடம்.

பொசியினான்மிடைந்துபுழுப்பொதிந்தபோர்வைப்
பொல்லாதபுலாலுடம்பைநிலாசமென்று
பசியினான்மீதூரப்பட்டேயிட்டிப்
பலர்க்குதவலதுவொழிந்துபவளவாயார்
வசியினாலகப்பட்டுவீழாமுன்னம்
வானவர்கோன்றிருநாமமஞ்சுஞ்சொல்லிக்
கசிவினாற்றொழுமடியார்நெஞ்சினுள்ளே
கன்றாப்பூர்நடுதறியைக்காணலாமே. (சு)

ஐயினான்மிடறடைப்புண்டாக்கைவிட்டு
வாலியார் * போவதுமேபகத்தார்கூடி
மையினாற்கண்ணெழுதிமாலைசூட்டி
மயானத்திலிடுவதன்முன்மதியஞ்சூடும்
ஐயனார்க்காளாகியன்புமிக்கு
வகங்குழைந்துமெய்யரும்பியடிகள்பாதம்
கையினாற்றொழுமடியார்நெஞ்சினுள்ளே
கன்றாப்பூர்நடுதறியைக்காணலாமே. (எ)

திருதிமையாலைவரையுங்காவலேவித்
திகையாதேசிவாயநமவென்றுஞ்சிந்தைச்
சுருதிதனைத்துயக்கறுத்துத்துன்பவெள்ளக்
கடனீந்திக்கரையேறுங்கருத்தேமிக்குப்
பருதிதனைப்பற்பறித்தபாவநாசா
பரஞ்சுடரேயென்றென்று † பரவிநாளும்
கருதிமிகத்தொழுமடியார்நெஞ்சினுள்ளே
கன்றாப்பூர்நடுதறியைக்காணலாமே. (அ)

குனிந்தசிலையாற்புரமூன்றெரித்தாயென்றுங்
கூற்றுதைத்தகுரைகழற்சேவடியாயென்றும்
தனஞ்சயற்குப்பாசுபதமீந்தாயென்றுந்
தசக்கிரீவன்மலையெடுக்கவிரலாலூன்றி
முனிந்தவன்றன்சிரம்பத்துந் ‡ தாளுந்தோளு
முரணழித்திட்டருள்கொடுத்தமூர்த்தியென்றும்
கனிந்துமிகத்தொழுமடியார்நெஞ்சினுள்ளே
கன்றாப்பூர்நடுதறியைக்காணலாமே. ¶ (க௦)

திருச்சிற்றம்பலம்.

திருக்கன்றாப்பூர்த்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - உகஉ.

சுவாமி தேவி திருநாமங்கள் - நடுதறியப்பர், உமைநாயகி.

* டாக்கைவிட்டாவியார் என்றும் பாடம். † யென்றென்றே என்றும் பாடம். ‡ முனிந்தவன்சிரம்பத்தும் என்றும் பாடம். ¶ இத்திருப்பதிகத்தில் கூ-வது செய்யுள் மறைந்துபோயிற்று.

Koviloor Digital Library

கஉக. திருவலிவலம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர்.

பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

ஒல்லையாறியுள்ளமொன்றிக்கள்ளமொழிந்துவெய்ய
சொல்லையாறித்தூய்மைசெய்துகாமவினையகற்றி
நல்லவாறேயுன்றனுமநாவினவின்றேத்த *
வல்லவாறேவந்துநல்காய்வலிவலமேயவனே. † (க)

இயங்குகின்றவிரவிதிங்கண்மற்றுநற்றேவரெல்லாம்
பயங்களாலேபற்றிநின்பாற்சித்தந்தெளிகின்றிலர்
தயங்குசோதிசாமவேதாகாமனைக்காய்ந்தவனே
மயங்குகின்றேன்வந்துநல்காய்வலிவலமேயவனே. (உ)

பெண்டிர்மக்கள்சுற்றமென்னும்பேதைப்பெருங்கடலை
விண்டுபண்டேவாழமாட்டேன்வேதனைநோய்நலியக்
கண்டுகண்டேயுன்றனுமங்காதலிக்கின்றதுள்ளம்
வண்டுகிண்டிப்பாடுஞ்சோலைவலிவலமேயவனே. (ங)

மெய்யராகிப்பொய்யைநீக்கிவேதனையைத்துறந்து ‡
செய்யரானார்சிந்தையானேதேவர்குலக்கொழுந்தே
நைவனுயேனுன்றனுமநாளுநவிற்றுகின்றேன்
வையமுன்னேவந்துநல்காய்வலிவலமேயவனே. (ச)

துஞ்சும்போதுந்துற்றும்போதுஞ்சொல்லுவனுன்றிறமே
தஞ்சமில்லாத்தேவர்வந்துன்றாளிணைக்கீழ்ப்பணிய
நஞ்சையுண்டாய்க்கென்செய்கேனோநாளுநினைந்தடியேன்
வஞ்சமுண்டென்றஞ்சுகின்றேன்வலிவலமேயவனே. (ரு)

புரிசடையாய்புண்ணியனேநண்ணலார்மூவெயிலும்
எரியவெய்தாயெம்பெருமானென்றிமையோர்பரவும்
கரியுரியாய்காலகாலாநீலமணிமிடற்று
வரியரவாவந்துநல்காய்வலிவலமேயவனே. (சு)

தாயுநீயேதந்தைநீயேசங்கரனேயடியேன்
ஆயுநின்பாலன்புசெய்வானுதரிக்கின்றதுள்ளம்
ஆயமாயகாயந்தன்னுளைவர்நின்றொன்றலொட்டார்
மாயமேயென்றஞ்சுகின்றேன்வலிவலமேயவனே. (எ)

* நாவினவிற்றுகின்றேன் என்றும் பாடம். † வல்லவாறே நல்குகண்டாய் வலிவலமேயானே என்றும் பாடம். ‡ மெய்பராகப்பொய்மைநீக்கிவேதனையைத்துரந்து என்றும் பாடம்.

Koviloor Digital Library

நீரொடுங்குஞ்செஞ்சடையாய்நின்னுடையபொன்மலையை
வேரொடும்பீழ்ந்தேந்தலுற்றவேந்தனிராவணனைத்
தேரொடும்போய்வீழ்ந்தலறத்திருவிரலாலடர்த்த
வாரொடுங்குங்கொங்கைபங்காவலிவலமேயவனே. (௮)

ஆதியாயநான்முகனுமாலுமறிவரிய
சோதியானேநீதியில்லேன்சொல்லுவனின்றிறமே*
ஓதினாலுமுன்னையேத்துமென்னை† வினையவலம்
வாதியாமேவந்துநல்காய்வலிவலமேயவனே. (௯)

போதியிலானேபூவணத்தாய்பொன்றிகழுங்கயிலைப்
பதியிலானேபத்தர்சித்தம்பற்றுவிடாதவனே
விதியிலாதார்வெஞ்சமணர்சாக்கியரென்றிவர்கள்
மதியிலாதாரென்செய்வாரோவலிவலமேயவனே. (௰)

வன்னிகொன்றைமத்தஞ்சூடும்வலிவலமேயவனைப்
பொன்னிநாடன்புகலிவேந்தன்ஞானசம்பந்தன்சொன்ன
பன்னுபாடல்பத்தும்வல்லார்மெய்த்தவத்தோர்விரும்பும்
மன்னுசோதியீசனோடே‡ மன்னியிருப்பாரே.¶ (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவிராகம். பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

பூவியல்புரிகுழல்வரிசிலைநிகர்நுதல்
ஏவியல்கணைபிணைசெயிர்விழியுமையவள்
மேவியதிருவுருவுடையவன்விரைமலர்
மாவியல்பொழில்வலிவலமுறையிறையே. (௧)

இட்டமதமர்பொடியிசைதலினசைபெறு
பட்டவிர்பவளநன்மணியெனவணிபெறு
விட்டொளிர்திருவுருவுடையவன்விரைமலர்
மட்டமர்பொழில்வலிவலமுறையிறையே. (௨)

உருமலிகடல்கடைவுழியுலகமருயிர்
வெருவுறவகைபெழுவிடம்வெளிமலையணி
கருமணிநிகர்களமுடையவன்மிடைதரு
மருமலிபொழில்வலிவலமுறையிறையே. (௩)

அனனிகர்சடையழலவிர்புற§வெனவரு
புனனிகழ்வதுமதிநனைபொறியரவமும்
எனநினைவொடு0வருமிதுமெலமுடிமிசை
மனமுடையவர்வலிவலமுறையிறையே. (௪)

* சொல்லுவதென்றிறமே என்றும் பாடம். † யேத்தவென்னை என்றும் பாடம். ‡ னோடு என்றும் பாடம். ¶ "இத்திருப்பதிகத்தின் முதற்றிருப்பாடலில்" ["யாறியுள்" என்பது முதல் ஒன்பதாந் திருப்பாடலில் "யோ"] என்பதுவரை வெள்ளிப்பாட்டென்ப. § யழலவிர என்றும் பாடம். 0 எனவினையொடு என்றும் பாடம்.

Koviloor Digital Library

பிடியதனுருவுமைகொளமிகுகரியது
வடிகொடுதனதடிவழிபடுமவரிடர்
கடிகணபதிவரவருளினன்மிகுகொடை
வடிவினர்பயில்வலிவலமுறையிறையே. (ரு)

தரைமுதலுலகினிலுயிர்புணர்தகைமிக
விரைமலிகுழலுமையொடுவிரவதுசெய்து
நரைதிரைகெடுதகையதுவருளினனெழில் *
வரைதிகழ்மதில்வலிவலமுறையிறையே. (சு)

நலிதருதரைவர † நடைவருமிடையவர்
பொலிதருமடவரலியர்மனையதுபுகு
பலிகொளவருபவனெழின்மிகுதொழில்வளர்
வலிவருமதில்வலிவலமுறையிறையே. (எ)

இரவணனிருபதுகரமெழின்மலைதனின்
இரவணநினைதரவவன்முடிபொடிசெய்து
இரவணமமர்பெயரருளினனகநெதி
இரவணநிகர் ‡ வலிவலமுறையிறையே. (அ)

தேனமர்தருமலரணைபவன் ¶ வலிமிகும்
ஏனமதாய்நிலமகழரியடிமுடி
தானணையாவுருவுடையவன்மிடைகொடி
வானணமதில்வலிவலமுறையிறையே. (கூ)

இலைமலிதரமிகுதுவருடையவர்களும்
நிலைமையிலுணலுடையவர்களுநினைவது
தொலைவலிநெடுமறைதொடர்வகையுருவினன்
மலைமலிமதில்வலிவலமுறையிறையே. (க0)

மன்னியவலிவலநகருறையிறைவனை
இன்னியல்கழுமலநகரிறை § யெழின்மறை
தன்னியல்கலைவலதமிழ்விரகனதுரை
உன்னியவொருபதுமுயர்பொருடருமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

நல்லான்காணான்மறைகளாயினான்கா
ணம்பன்காணனுகாதார்புரமூன்றெய்த
வில்லான்காண்விண்ணவர்க்குமேலானன்காண் 0
மெல்லியலாள்பாகன்காண்வேதவேள்விச்

* கெடுதகவதுவருளினனெழில் என்றும் பாடம். † நலிதருகரைவர என்றும் பாடம். ‡ இரவணனிகர் என்றும் பாடம். ¶ மலரணையவன் என்றும் பாடம். § நகருறை என்றும் பாடம். 0 வில்லான்காண் மேலவர்க்குமேலானன்காண் என்றும் பாடம்.

Koviloor Digital Library

சொல்லான்காண்சுடர்மூன்றுமாயினான்கா
ண்டொண்டாகிப்பணிவார்க்குத்தொல்வானீய
வல்லான்காண்வானவர்கள்வணங்கியேத்தும்
வலிவலத்தான்காணவனென்மனத்துளானே. (௧)

ஊனவன்காணுடறனக்கோருயிரானான்கா
ணுள்ளவன்காணில்லவன்கா * ணுமையாட்கென்றும்
தேனவன்காண்டிருவவன்காண்டிசையானான்காண்
டீர்த்தன்காண்பார்த்தன்றன்பணியைக்கண்ட
கானவன்காண்கடலவன்காண்மலையானான்காண்
களியானையீருரிவைகதறப்போர்த்த
வானவன்காண்வானவர்கள்வணங்கியேத்தும்
வலிவலத்தான்காணவனென்மனத்துளானே. (௨)

ஏயவன்காணெல்லார்க்குமியல்பானான்கா
ணின்பன்காண்டுன்பங்களில்லாதான்காண்
தாயவன்காணுலகுக்கோர்தன்னொப்பில்லாத்
தத்துவன்காணுத்தமன்காண்டானேயெங்கும்
ஆயவன்காணண்டத்துக்கப்பாலான்கா
ணகங்குழைந்துமெய்வருந்தி † யழுவார்தங்கள்
வாயவன்காண்வானவர்கள்வணங்கியேத்தும்
வலிவலத்தான்காணவனென்மனத்துளானே. (௩)

உய்த்தவன்காணுடறனக்கோருயிரானான்கா
ணோங்காரத்தொருவன்காணுலகுக்கெல்லாம்
வித்தவன்காண்விண்பொழியுமழையானான்காண்
விளைவவன்காண்விரும்பாதார்நெஞ்சத்தென்றும்
பொய்த்தவன்காண்பொழிலேழுந்தாங்கினான்காண்
புனலோடுவளர்மதியும்பாம்புஞ்சென்னி
வைத்தவன்காண்வானவர்கள்வணங்கியேத்தும்
வலிவலத்தான்காணவனென்மனத்துளானே. (௪)

கூற்றவன்காண்குணமவன்காண்குறியானான்காண்
குன்றங்களனைத்துங்காண்கோலமாய
நிற்றவன்காணிழலவன்காணெருப்பானான்கா
ணிமிர்புன்சடைமுடிமேனீரார்கங்கை
ஏற்றவன்காணேழுலகுமாயினான்கா
ணிமைப்பளவிற்காமனைமுன்பொடியாய்விழ
மாற்றவன்காண்வானவர்கள்வணங்கியேத்தும்
வலிவலத்தான்காணவனென்மனத்துளானே. (௫)

* சிவஞானமொன்றானே அறியப்படுதலின் உள்ளவன்காண் என்றும், பாசஞான பசு ஞானங்களான் அறியப்படாமையின் இல்லவன்காண் என்றுங் கூறினர். † மெய்யரும்பி என்றும் பாடம்.

Koviloor Digital Library

நிலையவன்காண்டோற்றவன்காணிறையானுன்கா
ணிரவன்காண்பாரவன்கானூர்மூன்றெய்த
சிலையவன்காண்செய்யவாய்க்கரியகூந்தற்
றேன்மொழியையொருபாகஞ்சேர்த்தினுன்காண்
கலையவன்காண்காற்றவன்காண்காலன்வீழக்
கறுத்தவன்காண்கயிலாயமென்னுந்தெய்வ
மலையவன்காண்வானவர்கள்வணங்கியேத்தும்
வலிவலத்தான்காணவனென்மனத்துளானே. (சு)

பெண்ணவன்காணுணவன்காண்பெரியோர்க்கென்றும்
பெரியவன்காணரியவன்காணயனுனுன்காண்
எண்ணவன்காணெழுத்தவன்காணின்பக்கேள்வி
யிசையவன்காணியலவன்காணெல்லாங்காணும்
கண்ணவன்காண்கருத்தவன்காண்கழிந்தோர்செல்லுங்
கதியவன்காண்மதியவன்காண்கடலேழ்சூழ்ந்த
மண்ணவன்காண்வானவர்கள்வணங்கியேத்தும்
வலிவலத்தான்காணவனென்மனத்துளானே. (எ)

முன்னவன்காண்பின்னவன்காண்மூவாமேனி
முதலவன்காண் * முடிவவன்காண்மூன்றுசோதி
அன்னவன்காணடியார்க்குமண்டத்தார்க்கு
மணியவன்காண்சேயவன்காணளவில்சோதி
மின்னவன்காணுருமவன்காண்டிருமால்பாகம்
வேண்டினன்காணீண்டுபுனற்கங்கைக்கென்றும்
மன்னவன்காண்வானவர்கள்வணங்கியேத்தும்
வலிவலத்தான்காணவனென்மனத்துளானே. (அ)

நெதியவன்காண்யாவர்க்குநினையவொண்ணு
நீதியன்காண்வேதியன்காணினைவார்க்கென்றும்
கதியவன்காண்காரவன்காண்கனலானுன்காண்
காலங்களூழியாய்க்கலந்துநின்ற
பதியவன்காண்பழமவன்காணிரதந்தான்காண்
பாம்போடுதிங்கள்பயிலவைத்த
மதியவன்காண்வானவர்கள்வணங்கியேத்தும்
வலிவலத்தான்காணவனென்மனத்துளானே. (கூ)

பங்கயத்தின்மேலானும்பாலகனு
யுலகளந்தபடியானும்பரவிக்காணு
தங்கைவைத்தசென்னியராயளக்கமாட்டா
வனலவன்காணலைகடல்சூழிலங்கைவேந்தன்
கொங்கலர்த்த † முடிநெரியவிரலானூன்றுங்
குழகன்காணழகன்காண்கோலமாய
மங்கையர்க்கோர்கூறன்காண்வானோரேத்தும்
வலிவலத்தான்காணவனென்மனத்துளானே. (க0)

திருச்சிற்றம்பலம்.

* முதல்வன்காண் என்றுபாடமோதுவாருமுளர். † கொங்கலர்ந்த என்றும் பாடம்.

Koviloor Digital Library

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

ஊனங்கத்து*யிர்ப்பாயுயிர்க்கெல்லா†மோங்காரத்துருவாகிநின்றானை
வானங்கத்தவர்க்*கும்மளப்பரியவல்லனையடியார்கடம்முள்ளத்
தேனங்கத்தமு*தாகியுள்ளூறுந்தேசனைத்தினைத்தற்கினியானை
மானங்கைத்தலத்தேந்தவல்லானைவலிவலந்தனில்வந்துகண்டேனே. (க)

பல்லடியார்பணிக்குப்பரிவானைப்‡பாடியாடும்பத்தர்க்கன்புடையானைச்
செல்லடியேநெருக்கித்திறம்பாதுசேர்ந்தவர்க்கேசித்திமுத்திசெய்வானை
நல்லடியார்மனத்தெய்ப்பினில்வைப்பைநாளுறுகுறையறிந்தருள்புரிவானை
வல்லடியார்மனத்திச்சையுளானைவலிவலந்தனில்வந்துகண்டேனே. (உ)

ஆழியனுபகன்றேடியுயர்ந்தானையாதியந்தம்பணிவார்க்கணியானைக்¶
கூழையாகிப்§பொய்யேகுடியோம்பிக்குழைந்துமெய்யடியார்குழுப்பெய்யும்
வாழியர்க்கேவழுவாநெறிகாட்டிமறுபிறப்பென்னைமாசறுத்தானை
மாழையொண்கண்ணுமையைமகிழ்ந்தானைவலிவலந்தனில்வந்துகண்டேனே. ()

நாத்தானுன்றிறமேதிறம்பாதுநன்னிபன்னித்தமுதம்பொதிந்தூறும்
ஆத்தானையடியேன்றனக்கென்றுமளவிறந்தபஃறேவர்கள் 0 போற்றும்
சோத்**தானைச்சுடர்மூன்றிலுமொன்றித்துருவிமால்பிரமன்னறியாத
மாத்தானைமாத்தெனக்குவைத்தானைவலிவலந்தனில்வந்துகண்டேனே. (ச)

நல்லிசைஞானசம்பந்தனுநாவினுக்கரசரும்††பாடியநற்றமிழ்மாலை
சொல்லியவேசொல்லியேத்துகப்பானைத்தொண்டனேனறியாமையறிந்து
கல்லியன்மனத்தைக்கசிவித்துக்கழலடிகாட்டியென்களைகளையறுக்கும்
வல்லியல்வானவர்வணங்கநின்றானைவலிவலந்தனில்வந்துகண்டேனே. (ரு)

பாடுமாபாடிப்பணியுமாறறியேன்பனுவுமாபனுவிப்‡‡பரவுமாறறியேன்
தேடுமாதேடித்திருத்துமாறறியேன்செல்லுமாசெல்லச்செலுத்துமாறறியேன்
கூடுமாறெங்ஙனமோவென்றுகூறக்குறித்துக்காட்டிக்கொணர்ந்தெனையாண்டு
வாடிநீவாளாவருந்தலென்பானைவலிவலந்தனில்வந்துகண்டேனே. (சு)

பந்தித்தவல்வினைப்பற்றறப்¶¶பிறவிப்படுகடற்பரப்புத்தவிர்ப்பானைச்
சந்தித்ததிறலாற்§§பணிபூட்டித்தவத்தையீட்டியதம்மடியார்க்குச்
சிந்தித்தற்கெளிதாய்த்திருப்பாதஞ்சிவலோகந்திறந்தேற்றவல்லானை
வந்திப்பார்தம்மனத்திலுள்ளானைவலிவலந்தனில்வந்துகண்டேனே. (எ)

* * * ஊனங்கைத்து என்றும், வானங்கைத்தவர்க் என்றும், தேனங்கைத்தமுது என்றும் பாடமோதுவாருமுளர். † யுலகெல்லாம் என்றும் பாடம். ‡ பரிக்கும்பரிவானை என்றும் பாடம். ¶ பணியார்க்கணியானை என்றும் பாடம்; பணியார் - தொண்டுடையார். § கூழையாகப் என்றும் பாடம். 0 பலதேவர்கள் என்றும் பாடம். ** சோத்து-இழிந்தார்செய்யுமஞ்சலி; அது அம்முப்பெற்றுச் சோத்தமெனவும்வரும்; "சோத்தமெம்பெருமானே" என்றார் திருவாசகத்துள். †† நாவுக்கரசரும் என்றும் பாடம். ‡‡ பனுவுமாபரவிப் என்றும்; பனுவுமாபனவி என்றும் பாடம். ¶¶ பந்தித்தவ்வினைபற்றற என்றும் பாடம். §§ திறலார் என்றும் பாடம்.

Koviloor Digital Library

எவ்வவர்தேவரிருடிகண்மன்னரெண்ணிறந்தார்கண்மற்றெங்குநின்றேத்த
அவ்வவர்வேண்டியதேயருள்செய்துவடைந்தவர்க்கேயிடமாகிநின்றானை
இவ்வவர்கருணையெங்கற்பகக்கடலையெம்பெருமானருளாயென்றபின்னை
வவ்வியென்னாவிமனங்கலந்தானைவலிவலந்தனில்வந்துகண்டேனே. (அ)

திரியுமுப்புரஞ்செற்றதுங்குற்றத்திறலரக்கனைச்செறுத்ததுமற்றைப்
பெரியநஞ்சமுதுண்டதுமுற்றும்* பின்னையாய்முன்னமேமுளைத்தானை
அரியநான்மறையந்தணரோவாதடிபணிந்தறிதற்கரியானை
வரையின்பாவைமணாளனெம்மானைவலிவலந்தனில்வந்துகண்டேனே. (கூ)

என்றவன்தனைன்றலையினையறுத்துநிறைக்கமாலுதிரத்தினையேற்றுத்
தோன்றுதோண்மிசைக்களேபரந்தன்னைச்சுமந்தமாவிரதத்தகங்காளன்
சான்றுகாட்டுதற்கரியவனெளியவன்றன்னைத்தன்னிலாமனத்தார்க்கு
மான்றுசென்றணையாதவன்றன்னைவலிவலந்தனில்வந்துகண்டேனே. (கo)

கலிவலங்கெடவாரழலோம்புங்கற்றநான்மறைமுற்றனலோம†
வலிவலந்தனில்வந்துகண்டடியேன்மன்னுநாவலாரூரன்வன்றொண்டன்
ஒலிகொளின்னிசைச்செந்தமிழ்பத்துமுள்ளத்தாலுகந்தேத்தவல்லார்போய்
மெலிவில்வானுலகத்தவரேத்தவிரும்பிவிண்ணுலகெய்துவர்தாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவலிவலத்திருப்பதிகம் - ச.

ஆ திருப்பதிகம் - உககூ.

சுவாமி தேவி திருநாமங்கள் - மனத்துணைநாதர், மாழையங்கண்ணி.

கஉஉ. திருக்கைச்சினம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

தையலோர்கூறுடையான்றண்மதிசேர்செஞ்சடையான்
மையுலாமணிமிடற்றான்மறைவிளங்குபாடலான்
நெய்யுலாமூவிலைவேலேந்திநிவந்தொளிசேர்
கையுடையான்மேவியுறைகோயில்கைச்சினமே. (க)

விடமல்குகண்டத்தான்வெள்வளையோர்கூறுடையான்
படமல்குபாம்பரையான்பற்றார்புரமெரித்தான்
நடமல்குமாடலினானான்மறையோர்பாடலினான்
கடமல்குமாவுரியானுறைகோயில்கைச்சினமே. (உ)

* துண்டதுமற்றும் என்றும் பாடம். † லோம்பும் என்றும்பாடம்.

Koviloor Digital Library

பாடலார்நான்மறையான்பைங்கொன்றைபாம்பினொடும்
சூடலான்வெண்மதியந்துன்றுகரந்தையொடும்
ஆடலானங்கையனலேந்தியாடரவக்
காடலான்மேவியுறைகோயில்கைச்சினமே. (௩)

பண்டமார்கூடிக்கடைந்தபடுகடனஞ்
சுண்டபிரானென்றிறைஞ்சியும்பர்தொழுதேத்த
விண்டவர்தொன்னகர்மூன்றுடனேவெந்தவியக்
கண்டபிரான்மேவியுறைகோயில்கைச்சினமே. (௪)

தேய்ந்துமலிவெண்பிறையான்செய்யதிருமேனியினான்
வாய்ந்திலங்குவெண்ணீற்றன்மாதினையோர்கூறுடையான்
சாய்ந்தமரர்வேண்டத்தடங்கடனஞ்சுண்டநங்கைக்
காய்ந்தபிரான்மேவியுறைகோயில்கைச்சினமே. (௫)

மங்கையோர்கூறுடையான்மன்னுமறைபயின்றான்
அங்கையோர்வெண்டலையானாடரவம்பூண்டுகந்தான்
திங்களொடுபாம்பணிந்தசீரார்திருமுடிமேல்
கங்கையினான்மேவியுறைகோயில்கைச்சினமே. (௬)

வரியரவேநாணாகமால்வரையேவில்லாக
எரிகணையான்முப்புரங்களெய்துகந்தவெம்பெருமான்
பொரிசுடலையிமப்புறங்காட்டான்போர்த்ததோர்
கரியுரியான்மேவியுறைகோயில்கைச்சினமே. (௭)

போதலவுகொன்றைபுனைந்தான்திருமுடிமேல்
மாதுமையாளஞ்சமலைபெடுத்தவாளரக்கன்
நீதியினாலேத்தநிகழ்வித்துநின்றாடும்
காதலினான்மேவியுறைகோயில்கைச்சினமே. (௮)

மண்ணினைமுன்சென்றிரந்தமாலுமலரயனும் *
எண்ணறியாவண்ணமெரியுருவமாயபிரான்
பண்ணிசைபாலேத்தப்படுவான்றன்னெற்றியின்மேல்
கண்ணுடையான்மேவியுறைகோயில்கைச்சினமே. (௯)

தண்வயல்சூழ்காழித்தமிழ்ஞானசம்பந்தன்
கண்ணுதலான்மேவியுறைகோயில்கைச்சினத்தைப்
பண்ணிசைபாலேத்திப்பயின்றவிவைவல்லார்
விண்ணவராயோங்கிப்பலுலகமாள்வாரே. † (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருக்கைச்சினத்திருப்பதிகம் - ௧.

ஆக திருப்பதிகம் - ௨௧௭.

சுவாமி தேவி திருநாமங்கள் - கைச்சினநாதர், வெள்வளைநாயகி.

* மறையவனும் என்றும், மலரவனும் என்றும் பாடம். † இத்திருப்பதிகத்தில் ௰-வது செய்யுள் மறைந்துபோயிற்று.

Koviloor Digital Library

கஉரு. திருக்கோளிலி.*

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

நாளாயபோகாமே † நஞ்சணியுங்கண்டனுக்கே
ஆளாயவன்பு ‡ செய்வோமடநெஞ்சேயரனுமம்
கேளாய்நங்கிளைகிளைக்குங்கேடுபடாத்திறமருளிக்
கோளாயநீக்குமவன்கோளிலியெம்பெருமானே. (க)

ஆடரவத்தழகாமையணிகேழற்கொம்பார்த்த
தோடரவத்தொருகாதன்றுணைமலர்நற்சேவடிக்கே
பாடரவத்திசைபயின்றுபணிந்தெழுவார்தம்மனத்தில்
கோடரவந்தீர்க்குமவன்கோளிலியெம்பெருமானே. (உ)

நன்றுநகுநாண்மலரானல்லிருக்குமந்திரங்கொண்
டொன்றிவழிபாடுசெயலுற்றவன்றனுேங்குயிர்மேல்
கன்றிவருகாலனுயிர்கண்டவனுக்கன்றளித்தான்
கொன்றைமலர்பொன்றிகழுங்கோளிலியெம்பெருமானே. (ங)

வந்தமணலாலிலிங்கமண்ணியின்கட்பாலாட்டும்
சிந்தைசெய்வோன்றன்கருமந்தேர்ந்துசிதைப்பான்வருமத்
தந்தைதனைச்சாடுதலுஞ்சண்டீசனென்றருளிக்
கொந்தணவுமலர்கொடுத்தான்கோளிலியெம்பெருமானே. (ச)

வஞ்சமனத்தஞ்சொடுக்கிவைகலுநற்பூசனையால்
நஞ்சமுதுசெய்தருளுநம்பியெனவேநினையும்
பஞ்சவரிற்பார்த்தனுக்குப்பாசுபதமீந்துகந்தான்
கொஞ்சுகிளிமஞ்சணவுங்கோளிலியெம்பெருமானே. (ரு)

தாவியவ¶னுடனிருந்துங்காணுததற்பரனை
ஆவிதனிலஞ்சொடுக்கியங்கணனென்றுதரிக்கும்
நாவியல்சீர்நமிநந்தியடிகளுக்குநல்குமவன்
கோவியலும்பூவெழுகோற்கோளிலியெம்பெருமானே. (சு)

கன்னவிலுமால்வரையான்கார்திகழுமாமிடற்றுன்
சொன்னவிலுமாமறையான்றோத்திரஞ்செய்§வாயினுளான்
மின்னவிலுஞ்செஞ்சடையான்வெண்பொடியானங்கையினில்
கொன்னவிலுஞ்சூலத்தான்கோளிலியெம்பெருமானே. (எ)

* இதனைத் திருக்குவளை என்று வழங்குப. † நாளானபோகாமே என்றும் பாடம். ‡ ஆளானவன்பு என்றும், ஆளாகவன்பு என்றும் பாடம். ¶ காவியவன் என்றும் பாடம். § தோத்திரஞ்சேர் என்றும், தோத்திரஞ்சொல் என்றும் பாடம்.

Koviloor Digital Library

அந்தரத்திற்றேருருமாக்கன்மலையன்றெடுப்பச்
சுந்தரத்தன்றிருவிரலாலூன்றவவனுடனெரிந்து
மந்திரத்தமறைபாடவாளவனுக்கீந்தானும்
கொந்தரத்தமதிச்சென்னிக்கோளிலியெம்பெருமானே. (அ)

நாணமுடைவேதியனுநாரணனுநண்ணவொணாத்
தாணுவெனையாளுடையான்றன்னடியார்க்கன்புடைமை
பாண*னிசைபத்திமையாற்பாடுதலும்பரிந்தளித்தான்
கோணலிளம்பிறைச்சென்னிக்கோளிலியெம்பெருமானே. (௯)

தடுக்கமருஞ்சமணரோடுதர்க்கசாத்திரத்தவர்சொல்
இடுக்கண்வருமொழிகேளாதீசனையேயேத்துமின்கள்
நடுக்கமிலாவமருலகந்நண்ணலுமாமண்ணல்கழல்
கொடுக்ககிலாவரங்கொடுக்குங்கோளிலியெம்பெருமானே. (௧௦)

நம்பனைநல்லடியார்களுமுடைமாடென்றிருக்கும்
கொம்பனையாள்பாகனெழிற்கோளிலியெம்பெருமானை
வம்பமருந்தண்காழிச்சம்பந்தன்வண்டமிழ்கொண்
டின்பமரவல்லார்களெய்துவரீசனையே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

மைக்கொள்கண்ணுமைபங்கினன்மான்மழுத்
தொக்ககையினன்செய்யதோர்சோதியன்
கொக்கமர்பொழில்† சூழ்தருகோளிலி
நக்கனைத்தொழநம்வினைநாசமே. (௧)

முத்தினைமுதலாகியமூர்த்தியை
வித்தினைவிளைவாயவிகிர்தனைக்
கொத்தலர்பொழில்சூழ்தருகோளிலி
அத்தனைத்தொழநீங்குநம்மல்லலே. (௨)

வெண்டிரைப்பரவைவிடமுண்டதோர்
கண்டனைக்கலந்தார்தமக்கன்பனைக்
கொண்டலம்பொழிற்கோளிலிமேவிய
அண்டனைத்தொழுவார்க்கல்லலில்லையே. (௩)

பலவும்வல்வினைபாறும்பரிசினால்
உலவுங்கங்கையுந்திங்களுமொண்சடை
குலவினான்குளிரும்பொழிற்கோளிலி
நிலவினான்றனை நித்தனினைமினே. (௪)

* கன்புடைமைப-பாணன் என்றும் பாடம். † தொக்கமர்பொழில் என்றும் பாடம்.

Koviloor Digital Library

அல்லலாயினதீருமழகிய
முல்லைவெண்முறுவல்லுமையஞ்சவே
கொல்லையானையுரித்தவன்கோளிலிச்
செல்வன்சேவடிசென்றுதொழுமினே. (௫)

ஆவின்பால்கண்டளவிலருந்தவப்
பாலன் * வேண்டலுஞ்செல்லென்றுபாற்கடல்
கூவினான் † குளிரும்பொழிற்கோளிலி
மேவினானைத்தொழவினைவீடுமே. (௬)

சீர்த்தநன்மனையாளுஞ்சிறுவரும்
ஆர்த்தசுற்றமும்பற்றிலையாதலால்
கூத்தனாருறைபுந்திருக்கோளிலி
யத்திநீர்தொழுமின்னிடர்தீருமே. ‡ (௭)

மாலதாகிமயங்குமனிதர்காள்
காலம்வந்துகடைமுடியாமுனம்
கோலவார்பொழிற்கோளிலிமேவிய
நீலகண்டனைநின்றுநினைமினே. (அ)

கேடுமூடிக்கிடந்துண்ணுநாடது
தேடிநீர்திரியாதேசிவகதி
கூடலாந்திருக்கோளிலியீசனைப்
பாடுமின்னிரவோடுபகலுமே. (௯)

மடுத்துமாமலையேந்தலுற்றான்றனை
அடர்த்துப்பின்னுமிரங்கியவற்கருள்
கொடுத்தவன்னுறைகோளிலியேதொழ
விடுத்துநீங்கிடுமேலவினைகளே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

முன்னமேநினையாதொழிந்தேனுனை
இன்னநாளுனசேவடியேத்திலேன்
செந்நெலார்வயல்சூழ்திருக்கோளிலி
மன்னனேயடியேனைமறவலே. (௧)

விண்ணுளார்தொழுதேத்தும்விளக்கினை
மண்ணுளார்வினைதீர்க்குமருந்தினைப்
பண்ணுளார்பயிலுந்திருக்கோளிலி
அண்ணலாரடியேதொழுதுய்ம்மினே. (௨)

* வருந்தவம்—பாலன் என்றும் பாடம். † "பாலுக்குப்பாலகன்வேண்டியழுதிடப் பாற்கடலீந்தபிரான்" என்பது இங்கேசிந்திக்கற்பாலது. ‡ தீரவே என்றும் பாடம்.

Koviloor Digital Library

நாளுநம்முடை* நாள்களறிகிலோம்
ஆறுநோய்களோரைம்பதோடாறெட்டும்
ஏழைமைப்பட்டிருந்துநீர்நையாதே
கோளிலியான்பாதமேகூறுமே. (௩)

விழவினோசையொலியறாத்தண்பொழில்
பழகினார்வினைதீர்க்கும்பழம்பதி
அழல்கையானமருந்திருக்கோளிலிக்
குழகனார்திருப்பாதமேகூறுமே. (௪)

மூலமாகியமூவர்க்குமூர்த்தியைக்
காலனாகியகாலற்குங்காலனைக்
கோலமாம்பொழில்சூழ்திருக்கோளிலிச்
சூலபாணிதன்பாதந்தொழுமினே. (௫)

காற்றனைக்கடனஞ்சமுதுண்டவெண்
நீற்றனைநிமிர்புன்சடையண்ணலை
ஆற்றனையமருந்திருக்கோளிலி
ஏற்றனாடியேதொழுதேத்துமே. (௬)

வேதமாயவிண்ணோர்கடலைவனை
ஓதிமன்னுயிரேத்துமொருவனைக்
கோதிவண்டறையுந்திருக்கோளிலி
வேதநாயகன்பாதம்விரும்புமே. † (௭)

நீதியாற்றொழுவார்கடலைவனை
வாதையானவிடுக்குமணியினைக்
கோதிவண்டறையுந்திருக்கோளிலி
வேதநாயகன்பாதம்விரும்புமே. (௮)

மாலுநான்முகனாலுமறிவொணாப்
பாலின்மென்மொழி ‡ யாளொருபங்கனைக்
கோலமாம்பொழில்சூழ்திருக்கோளிலி
நீலகண்டனைநித்தனினைமினே. (௯)

அரக்கனாயவிலங்கையர்மன்னனை
நெருக்கியம்முடிபத்திறுத்தானவற்
கிரக்கமாகியவன்றிருக்கோளிலி ¶
அருத்தியாயடியேதொழுதுய்ம்மினே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

* நாமும்முடை என்றும் பாடம். † இவ்வடி, சூலபாணிதன்பாதந்தொழுமினே என்று பத்துப்பிரதிகளிற்காணப்படுகின்றது. ‡ பாலுமென்மொழி என்றும் பாடம். ¶ இரக்கமாயவன்திருக்கோளிலி என்றும் பாடம்.

Koviloor Digital Library

சுந்தரமூர்த்திநாயனூர்.

பண்-நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

நீளநினைந்தடியேனுமைநித்தலுங்கைதொழுவேன்
வாளனகண்மடவாளவள்வாடிவருந்தாமே
கோளிலியெம்பெருமான்குண்டையூர்ச்சிலநெல்லுப்பெற்றேன்
ஆளிலையெம்பெருமானவையட்டித்தரப்பணியே. (௧)

வண்டமருங்குழலாளுமைநங்கையொர்பங்குடையாய்
விண்டவர்தம்புரமூன்றெரிசெய்தவெம்மேதியனே
தெண்டிரைநீர்வயல்சூழ்திருக்கோளிலியெம்பெருமான்
அண்டமதாயவனேயவையட்டித்தரப்பணியே. (௨)

பாதியொர்பெண்ணைவைத்தாய்படருஞ்சடைக்கங்கைவைத்தாய்
மாதர்நல்லார் * வருத்தமதுநீயுமறிதியன்றே
கோதில்பொழில்புடைசூழ்குண்டையூர்ச்சிலநெல்லுப்பெற்றேன்
ஆதியேயற்புதனேயவையட்டித்தரப்பணியே. (௩)

சொல்லுவதென்னுனைநான்றெண்டைவாயுமைநங்கையைநீ
புல்கியிடத்தில்வைத்தாய்க்கொருபூசல்செய்தாருளரோ †
கொல்லைவளம்புறவிற்குண்டையூர்ச்சிலநெல்லுப்பெற்றேன்
அல்லல்களைந்தடியேற்கவையட்டித்தரப்பணியே. (௪)

முல்லைமுறுவலுமையொருபங்குடைமுக்கணனே
பல்லயர்வெண்டலையிற்பலிகொண்டுழல்பாசுபதா
கொல்லைவளம்புறவிற்றிருக்கோளிலியெம்பெருமான்
அல்லல்களைந்தடியேற்கவை ‡ யட்டித்தரப்பணியே. (௫)

குரவமருங்குழலாளுமைநங்கையொர்பங்குடையாய்
பரவைபசிவருத்தமதுநீயுமறிதியன்றே
குரவமரும்பொழில்சூழ்குண்டையூர்ச்சிலநெல்லுப்பெற்றேன்
அரவமசைத்தவனேயவையட்டித்தரப்பணியே. (௬)

எம்பெருமானுனையேநினைந்தேத்துவனெப்பொழுதும்
வம்பமருங்குழலாளொருபாகமமர்ந்தவனே
செம்பொனின்மாளிகைசூழ்திருக்கோளிலியெம்பெருமான்
அன்பதுவாயடியேற்கவையட்டித்தரப்பணியே. (௭)

அரக்கன்முடிகரங்களடர்த்திட்டவெம்மாதிப்பிரான்
பரக்குமரவல்குலாள்பரவையவள்வாடுகின்றாள்
குரக்கினங்கள்குதிகொள்குண்டையூர்ச்சிலநெல்லுப்பெற்றேன்
இரக்கமதாயடியேற்கவையட்டித்தரப்பணியே. ¶ (அ)

* நல்லாள் என்றும் பாடம். † ருளரே என்றும் பாடம். ‡ யல்லல்களைந்தடியேன வை என்றும் பாடம். ¶ கவையிட்டுத்தரப்பணியே என்றும் பாடம்.

Koviloor Digital Library

பண்டைமால்பிரமன்பறந்தும்இடந்தும்மயர்ந்தும்
கண்டிலராயவர்கள்கழல்காண்பரிதாயபிரான்
தெண்டிரைநீர்வயல்சூழ்திருக்கோளிலியெம்பெருமான்
அண்டமதாயவனையவை*யட்டித்தரப்பணியே. (௯)

கொல்லைவளம்புறவிற்றிருக்கோளிலிமேயவனை
நல்லவர்தாம்பரவுந்திருநாவலவூரனவன்
நெல்லிடவாட்கள்வேண்டிநினைந்தேத்தியபத்தும்வல்லார்
அல்லல்களைந்துலகினண்டர்வானுலகாள்பவரே.† (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருக்கோளிலித்திருப்பதிகம் - ௪.

ஆ திருப்பதிகம் - ௯0௧.

சுவாமி தேவி திருநாமங்கள் - கோளிலிநாதர், வண்டமர்பூங்குழலி.

குண்டையூர்க்கிழவர், தாம் சுந்தரமூர்த்திநாயனார்பொருட்டுப் பரவையார்வீட்டுக்கு நெடுங்காலமாக அனுப்பிவந்த நெல்லுக்கு ஒருநாள் முட்டுவந்தமையினாலே பெருங்கவலை கொள்ள, அதுகண்டு சிவபெருமான் கொடுத்தருளிய நென்மலை, தம்மாலும் மற்றைமனிதராலும் எடுக்கப்படும் அளவினையுடையதன்றென வுணர்ந்து, அதனைச் சுந்தரமூர்த்திநாயனாருக்கு விண்ணப்பஞ்செய்ய, சுந்தரமூர்த்திநாயனார் அவரோடு குண்டையூர்க்குப் போய் நென்மலையைக் கண்டு அதிசயித்துத் திருவருளை வியந்து, பரவையார்வீட்டுக்கு இந்நெல்லை எடுக்க ஆளும் சிவபெருமானே தந்தருளினன்றி முடியாது என்று திருவுளங்கொண்டு, சமீபத்திலுள்ள கோளிலியென்னும் ஸ்தலத்திலிருக்கின்ற சிவாலயத்தை அடைந்து சிவபெருமானை வணங்கி, "நீளநினைந்தடியேன்" என்னுந் திருப்பதிகம் பாடியருளினார். அப்போது சிவபெருமான் சிவகணங்களை ஏவி நென்மலையைப் பரவை. யார் திருமாளிகைக்குச் சேர்ப்பித்தருளினார்.

௧௨௪. திருவாய்மூர்.‡

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

தளிரிளவளரொளிமனவுமைபாடத்தாளம்மிடவோர்கழல்வீசிக் ¶
கிளரிளமணிஅரவரையார்த்தாடும்வேடக்கிறிமையார்
விளரிளமுலையவர்க்கருணல்கிவெண்ணீறணிந்தோர்சென்னியின்மேல் §
வளரிளமதியமொடிவராணீர்வாய்மூரடிகள்வருவாரே. (௧)

வெந்தழல்வடிவினர்பொடிப்பூசிவிரிதருகோவணவுடைமேலோர்
பந்தஞ்செய்தரவசைத்தொலிபாடிப்பலபலகடைதொறும்பலிதேர்வார்
சிந்தனைபுகுந்தெனக்கருணல்கிச்செஞ்சுடர்வண்ணர்தம்மடிபரவ
வந்தனைபலசெயவிவராணீர்வாய்மூரடிகள்வருவாரே. (௨)

* அண்டமதாயபிரானவை என்றும் பாடம். † தலகினண்டவானுலகாள்பவரே என்றும் பாடம். ‡ இதனைத் திருத்தென்திருவாய்மூர் என்ப. ¶ வோர்தழல்வீசிக் என்றும் பாடம். § சென்னிமேல் என்றும் பாடம்.

Koviloor Digital Library

பண்ணிற்பொலிந்தவீணையர்பதினெண்கணமுமுணராநஞ்
சுண்ணப்பொலிந்தமிடற்றினருள்ளமுருகினுடனாவார்
சுண்ணப்பொடிநீறணிமார்பர்சுடர்பொற்சடைமேற்றிகழ்கின்ற
வண்ணப்பிறையோடிவராணீர்வாய்மூரடிகள்வருவாரே. (௩)

எரிகிளர்மதியமொடெழினுதன்மேலெறிபொறியரவினொடாறுமூழ்க
விரிகிளர்சடையினர்விடையேறிவெருவவந்திடர்செய்தவிகிர்தனர்
புரிகிளர்பொடியணிதிருவகலம்பொன்செய்தவாய்மையர் * பொன்மிளிரும்
வரியரவரைக்கசைத்திவராணீர்வாய்மூரடிகள்வருவாரே. (௪)

அஞ்சனமணிவணமெழினிறமாவகமிடறணிகொளவுடறிமில
நஞ்சினையமார்களமுதமெனநண்ணியநறுநுதலுமைநடுங்க
வெஞ்சினமால்களியானையின்றோல்வெருவுறப்போர்த்ததனிறம்மஃதே †
வஞ்சனைவடிவினொடிவராணீர்வாய்மூரடிகள்வருவாரே. (௫)

அல்லியமலர்புல்குவிரிகுழலார்கழலிணையடிநிழலவைபரவ
எல்லியம்போதுகொண்டெரியேந்தியெழிலொடுதொழிலவைபிசையவல்லார்
சொல்லியவருமறையிசைபாடிச்சூடிளமதியினர்தோடுபெய்து
வல்லியந்தோலுடுத்திவராணீர்வாய்மூரடிகள்வருவாரே. (௬)

கடிபடுகொன்றைநன்மலர்திகழுங்கண்ணியர்விண்ணவர்கனம்மணிசேர்
முடியில்குமிறையவர் ‡ மறுகினல்லார்முறைமுறைபலிபெயமுறுவல்செய்வார்
பொடியணிவடிவொடுதிருவகலம்பொன்னெனமிளிர்வதொரரவினொடும்
வடிநுனைமழுவினொடிவராணீர்வாய்மூரடிகள்வருவாரே. (௭)

கட்டிணைபுதுமலர்க்கமழ்கொன்றைக் ¶ கண்ணியர்வீணையர்தாமுமஃதே
எட்டிணைசாந்தமொடுமைதுணையாவிறைவனுறைவதொரிடம்வினவில்
பட்டிணையகலல்குல்விரிகுழலார்பாவையர்பலியெதிர்கொணர்ந்துபெய்ய
வட்டணையாடலொடிவராணீர்வாய்மூரடிகள்வருவாரே. (௮)

ஏனமருப்பினொடெழிலாமையிசையப்பூண்டோரேறேறிக்
கானமதிடமாவுறைகின்றகள்வர்கனவிற்றுயர்செய்து
தேனுணமலர்களுந்திவிம்மித்திகழ்பொற்சடைமேற்றிகழ்கின்ற
வானநன்மதியினொடிவராணீர்வாய்மூரடிகள்வருவாரே. (௯)

சூடல்வெண்பிறையினர்சுடர்முடியர்சுண்ணவெண்ணீற்றினர்சுடர்மழுவாள்
பாடல்வண்டிசைமுரல்கொன்றையந்தார்பாம்பொடுநூலவைபசைந்திலங்கக்
கோடனன்முகிழ்விரல்கூப்பிநல்லார்குறைபுறுபலியெதிர்கொணர்ந்துபெய்ய
வாடல்வெண்டலைபிடித்திவராணீர்வாய்மூரடிகள்வருவாரே. (௧0)

திங்களொடருவரைப்பொழிற்சோலைத்தேனலங்கானலந்திருவாய்மூர்
அங்கமொடருமறையொலிபாடலழனிறவண்ணர்தம்மடிபரவி
நங்கடம்வினைகெடமொழியவல்லஞானசம்பந்தன்றமிழ்மாலை
தங்கியமனத்தினாற்றொழுதெழுவார்தமர்நெறியுலகுக்கோர்தவநெறியே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

* வாமையர் என்றும் பாடம். † னிறமுமதே என்றும் பாடம். ‡ முடிபுல்குபிறையவர் என்றும் பாடம். ¶ மலர்கமழ்கொன்றைக் என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருஞானசம்பந்தப்பிள்ளையாரும், திருநாவுக்கரசுநாயனரும், திருமறைக்காட்டில் வேதங்களாலே திருக்காப்பிடப்பட்ட திருக்கதவு திறக்கவும் அடைக்கவும் பாடி, மடாலயத்தை அடைந்தபின், திருநாவுக்கரசுநாயனர் தாம் பதிகம் முழுதும் பாடின பின் திருக்கதவு திறக்கப்பட்ட அருமையையும், பிள்ளையார் முதற்பாட்டைப்பாடின வுடனே அஃதடைக்கப்பட்ட எளிமையையும் சிந்தித்து அருநித்திரை செய்தார். அப்பொழுது சிவபிரான் அவரிடத்திற்சென்று, "நாம் திருவாய்மூரிலே இருப்போம், அவ்விடத்திற்குத் தொடர்ந்துவா" என்று அருளிச்செய்துபோக, வாகீசமூர்த்தி அவருக்குப்பின் னெடுந்தூரம் தொடர்ந்துசெல்ல, சுவாமி சமீபத்திலே காட்சிகொடுப்பவர் போல ஒரு திருக்கோயிலை எதிரே காண்பித்து, அதனுள்ளே புகுந்தருளினர். பிள்ளையார், நாயனர் திருவாய்மூருக்குப் போவதைக் கேள்வியுற்று அங்குவந்து சேர்ந்தார். அப்போது சிவபிரான் உமாதேவியாரோடு ஆடல் காட்டப் பிள்ளையார் தரிசித்து, "தளிரிளவளர்" என்னுந் திருப்பதிகம்பாடியருளினர்.

திருநாவுக்கரசுநாயனர்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

எங்கேயென்னையிருந்திடந்*தேடிக்கொண்

டங்கேவந்தடையாளமருளினர்

தெங்கேதோன்றுந்திருவாய்மூர்ச்செல்வனர்

அங்கேவாவென்றுபோனதென்கொலோ. (௧)

மன்னுமாமறைக்காட்டுமணாளனர்

உன்னியுன்னியுறங்குகின்றேனுக்குத்

தன்னைவாய்மூர்த்தலைவனுமாசொல்லி

என்னைவாவென்றுபோனதென்கொலோ. (௨)

தஞ்சேகண்டேன்றரிக்கிலாதாரென்றேன்

அஞ்சேலுன்னையழைக்கவந்தேனென்றார்

உஞ்சேனென்றுகந்தேயெழுந்தோட்டந்தேன்

வஞ்சேவல்லரேவாய்மூரடிகளே. (௩)

கழியக்கண்டிலேன்கண்ணெதிரேகண்டேன்

ஒழியப்போந்திலேனுக்கவேயோட்டந்தேன்

வழியிற்கண்டிலேன்வாய்மூரடிகடம்

சுழியிற்பட்டுச்சுழல்கின்றதென்கொலோ. (௪)

ஒள்ளியாரிவரன்றிமற்றில்லையென்

றுள்கியுள்கியுகந்திருந்தேனுக்குத்

தெள்ளியாரிவர்போலத்திருவாய்மூர்க்

கள்ளியாரவர்போலக்கரந்ததே. (௫)

* எங்கேயென்னையிருந்திடந் என்றும், எங்கேயென்னையிருந்தடந் என்றும் பாடம்.

Koviloor Digital Library

யாதேசெய்துமியாமலோநீயென்னில்
ஆதேயேயுமளவில்பெருமையான்
மாதேவாகியவாய்மூர்மருவினூர்
போதேயென்றும்புகுந்ததும்பொய்கொலோ. (௬)

பாடிப்பெற்றபரிசில்பழங்காசு
வாடி* வாட்டந்தவிர்ப்பாரவரைப்போல்
தேடிக்கொண்டுதிருவாய்மூர்க்கேயெனு
ஓடிப்போந்திங்கொளித்தவாறென்கொலோ. (எ)

திறக்கப்பாடியவென்னினுஞ்செந்தமிழ்
உறைப்புப்பாடியடைப்பித்தாருந்நின்றூர்
மறைக்கவல்லரோதம்மைத்திருவாய்மூர்ப்
பிறைக்கொள்செஞ்சடையாரிவர்பித்தரே. (அ)

தனக்கேறுமைதவிர்க்கென்று † வேண்டினும்
நினைத்தேன்பொய்க்கருள்செய்திடுநின்மலன்
எனக்கேவந்தெதிர்வாய்மூருக்கேயெனப்
புனற்கேபொற்கோயில்புக்கதும்பொய்கொலோ. (௯)

தீண்டற்கரியதிருவடியொன்றினல்
மீண்டற்கும்மிதித்தாரக்கன்றனை
வேண்டிக்கொண்டேன்றிருவாய்மூர்விளக்கினைத்
தூண்டிக்கொள்வனுனென்றலுந்தோன்றுமே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருமறைக்காட்டில், திருநாவுக்கரசுநாயனூர் நித்திரைசெய்யும்போது, சுவாமி அவரிடத்திற்சென்று திருவாய்மூருக்குவா என்று கட்டளையிட, நாயனூர் "எங்கேயென்னை" என்னும் திருப்பதிகம்பாடிக்கொண் டெழுந்து சுவாமியின்பின் தொடர்ந்தனர்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

பாடவடியார்பரவக்கண்டேன்
பத்தர்கணங்கண்டேன்மொய்த்தபூதம்
ஆடன்முழவமதிரக்கண்டே
னங்கையனல்கண்டேன்கங்கையாளைக்
கோடலரவார்சடையிற்கண்டேன்
கொக்கினிதழ்கண்டேன்கொன்றைகண்டேன்
வாடற்றலையொன்றுகையிற்கண்டேன்
வாய்மூரடிகளைநான்கண்டவாறே. (௧)

* வாடி வாட; வாடவாட்டம் என்றும் பாடம். † தவிர்கென்று என்றும் பாடம்.

Koviloor Digital Library

பாலின்மொழியாளோர்பாகங்கண்டேன்
 பதினெண்கணமும்பயிலக்கண்டேன்
நிலநிறமுண்டகண்டங்கண்டே
 னெற்றிநுதல்கண்டேன்பெற்றங்கண்டேன்
காலைக்கதிர்செய்மதியங்கண்டேன்
 கரந்தைதிருமுடிமேற்றோன்றக்கண்டேன்
மாலைச்சடையுமுடியுங்கண்டேன்
 வாய்மூரடிகளைநான்கண்டவாறே. (௨)

மண்ணைத்திகழநடமதாடும்
 வரைசிலம்பார்க்கின்றபாதங்கண்டேன்
விண்ணிற்றிகழுமுடியுங்கண்டேன்
 வேடம்பலவாஞ்சரிதைகண்டேன்
நண்ணிப்பிரியாமழுவுங்கண்டே
 னாறுமறையங்கமோதக்கண்டேன்
வண்ணப்பொலிந்திலங்கு*கோலங்கண்டேன்
 வாய்மூரடிகளைநான்கண்டவாறே. (௩)

விளைத்தபெரும்பத்திகூரநின்று
 மெய்யடியார்தம்மைவிரும்பக்கண்டேன்
இளைக்குங்கத†நாகமேனிகண்டே
 னென்பின்கலந்திகழ்ந்து‡தோன்றக்கண்டேன்
திளைக்குந்திருமார்பினீறுகண்டேன்
 சென்றோர்மதின்மூன்றும்பொன்றவன்று
வளைத்தவரிசிலையுங்கையிற்கண்டேன்
 வாய்மூரடிகளைநான்கண்டவாறே. (௪)

கான்மறையும்போதகத்தினுரிவை¶கண்டேன்
 காலிற்கழல்கண்டேன்கரியின்றோல்கொண்
டுன்மறைப்போர்த்தவடிவுங்கண்டே§
 னுள்கமனம்வைத்தவுணர்வுங்கண்டேன்
நான்மறையானோடுநெடியமாலு
 நண்ணிவரக்கண்டேன்றிண்ணமாக
மான்மறிதங்கையின்மருவக்கண்டேன்
 வாய்மூரடிகளைநான்கண்டவாறே. (௫)

அடியார்சிலம்பொலிகளார்ப்பக்கண்டே
 னவ்வவர்க்கேயீந்தகருணைகண்டேன்
முடியார்சடைமேலரவமூழ்க○
 மூரிப்பிறைபோய்மறையக்கண்டேன்
கொடியாரதன்மேலிடபங்கண்டேன்
 கோவணமுங்கீளுங்குலாவக்கண்டேன்
வடியாருமூவிலைவேல்கையிற்கண்டேன்
 வாய்மூரடிகளைநான்கண்டவாறே. (௬)

* வண்ணம்பொலிந்திலங்கு என்றும் பாடம். † கதம் - கோபம். ‡ னென்பினக லந்திகழ்ந்து என்று பாடம் ஓதுவாருமுளர். ¶ போதகத்தின்போர்வை என்றும் பாடம். § வடிவுங்கண்டேன் என்றும் பாடம். ○ ஊழ்க - ஊர; ஊழ்கி என்றும் பாடம்.

Koviloor Digital Library

குழையார் திருத்தோடு காதிற்கண்டேன்
கொக்கரையுஞ்சச்சரியுங்கொள்கைகண்டேன்
இழையார்புரிநூல்வலத்தேகண்டே
னேழிசையாழ்வீணைமுரலக்கண்டேன்
தழையார்சடைகண்டேன்றன்மைகண்டேன்
றக்கையொடுதாளங்கறங்கக்கண்டேன்
மழையார்திருமிடறுமற்றுங்கண்டேன்
வாய்மூரடிகளைநான்கண்டவாறே. (எ)

பொருந்தாதசெய்கைபொலியக்கண்டேன் *
போற்றிசைத்து † விண்ணோர்புகழக்கண்டேன்
பரிந்தார்க்கருளும்பரிசுங்கண்டேன்
பாராகிப்புனலாகி ‡ நிற்கைகண்டேன்
விருந்தாய்ப்பரந்ததொகுதிகண்டேன்
மெல்லியலும்விநாயகனுந்தோன்றக்கண்டேன்
மருந்தாய்ப்பிணிதீர்க்குமாறுகண்டேன்
வாய்மூரடிகளைநான்கண்டவாறே. (அ)

மெய்யன்பரானார்க்கருளுங்கண்டேன்
வேடுவனாய்நின்றநிலையுங்கண்டேன்
கையம்பரனெரித்தகாட்சிகண்டேன்
கங்கணமுமங்கைக்கனலும் ¶ கண்டேன்
ஐயம்பலவூர்திரியக்கண்டே
னன்றவன் § றன்வேள்வியழித்துகந்து
வையம்பரவவிருத்தல்கண்டேன்
வாய்மூரடிகளைநான்கண்டவாறே. (கூ)

கலங்கவிருவர்க்கழலாய்நீண்ட
காரணமுங்கண்டேன்கருவாய்நின்று
பலங்கடரித்துகந்தபண்புங்கண்டேன்
பாடலொலியெலாங்கூடக்கண்டேன்
இலங்கைத்தலைவன்சிரங்கள்பத்து
மிறுத்தவனுக்கீந்தபெருமைகண்டேன்
வலங்கைத்தலத்துளனலுங்கண்டேன்
வாய்மூரடிகளைநான்கண்டவாறே. (கo)

திருச்சிற்றம்பலம்.

திருவாய்மூர்த்திருப்பதிகம் - ௩.

ஆ திருப்பதிகம் - ௩௦௪.

சுவாமி தேவி திருநாமங்கள் - வாய்மூர்நாதர், பாலினுநன்மொழியாள்.

* பொருந்தக்கண்டேன் என்றும் பாடம். † போற்றிசைத்தும் என்றும் பாடம்.
‡ பாராய்ப்புனலாகி என்றும் பாடம். ¶ கங்கணமுமுன்கைக்கனலும் என்றும் பாடம்.
§ அன்றவன் என்பதற்குப் பகைத்த அத்தக்கன் என்றலு மொருபொருள்.

Koviloor Digital Library

திருநாவுக்கரசுநாயனார், திருமறைக்காட்டினின்றும் சுவாமியின் கட்டளைப்படி அவரைத் தொடர்ந்து திருவாய்மூருக்குச் செல்லும்போது, எதிரே தோன்றிய ஒரு திருக்கோயிலில் சுவாமி மறைந்தருள, நாயனார் பின்தொடர்ந்துசென்று அவரைக் காணாமல் "அடியார்களிற் சிறந்த திருஞானசம்பந்தப்பிள்ளையாரே திருக்கதவு திறக்க வேண்டும் என்பதை நினையாமல் திறந்த குற்றஞ்செய்த சிறியேனுக்கு ஒளிக்கலாம், ஒரு திருப்பதிகத்தின் முதற்பாட்டாலேயே அத் திருக்கதவை அடைப்பித்த அப்பிள்ளையார் இங்கே வந்திருக்கின்றார்; அவருக்கு எப்படி ஒளிக்கலாம்" என்றார்; உடனே சிவபிரான் பிள்ளையாருக்குக் காட்சிகொடுத்தருளப் பிள்ளையார் தரிசித்து நாயனாருக்குங்காட்ட நாயனாரும் தரிசித்து "பாடவடியார்பரவக்கண்டேன்" என்னுந் திருப்பதிகம் பாடியருளினார்.

கஉரு. திருமறைக்காடு.*

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

திருவிராகம். பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

சிலைதனைநடுவிடைநிறுவியொர்சினமலியரவதுகொடுதிவி
தலமலிசுரரசுரர்களொலிசலசலகடல்கடைவுழிமிகு
கொலைமலிவிடமெழவவருடல்குலைதரவதுநுகர்பவனெழில்
மலைமலிமதில்புடைதழுவியமறைவனமமர்தருபரமனே. (க)

கரமுதலியவவயவமவைகடுவிடவரவதுகொடுவரு
வரன்முறைபணிதருமவனடல்வலிமிகுபுலியதளுடையினன்
இரவலர்துயர்கெடுவகைநினையிமையவர்புரமெழில்பெறவளர்
மர † நிகர்கொடைமனிதர்கள்பயின்மறைவனமமர்தருபரமனே. (உ)

இழைவளர்தருமுலைமலைமகளினிதுறைதருமெழிலுருவினன்
முழையினின்மிகுதுயிலுறுமரிமுசிவொடுமெழுமுளரியொடெழு
கழைநுகர்தருகரியிரிதருகயிலையின்மலிபவனிருளுறும்
மழைதவழ்தருபொழினிலவியமறைவனமமர்தருபரமனே. (ங)

நலமிகுதிருவிதழியின்மலர்நகுதலையொடுகனகியின்முகை
பலசுரநதிபடவரவொடுமதிபொதிசடைமுடியினன்மிகு
தலநிலவியமனிதர்களொடுதவமுயறருமுனிவர்கடம
மலமறுவகைமனநினைதருமறைவனமமர்தருபரமனே. (ச)

கதிமலிகளிறதுபிளிறிடவுரிசெய்தவதிகுணனுயர்பசு
பதி ‡ யதன்மிசைவருபசுபதிபலகலையவைமுறைமுறையுணர்
விதியறிதருநெறியமர்முனிகணனொடுமிகுதவமுயறரும்
அதிநிபுணர்கள் ¶ வழிபடவளர்மறைவனமமர்தருபரமனே. (ரு)

* திருமறைக்காடு—வேதாரணியம். † மரம் - தெய்வமரம்; என்றது ஐந்துக்கற்பகதருவை; மரநிரை என்றும் பாடம். ‡ பசுபதி-இடபம். ¶ மதிநிபுணர்கள் என்றலுமாம்.

Koviloor Digital Library

கறைமலி திரிசிகைபடையடல்கனன்மழுவெழுதாவெறிமறி
முறைமுறையொலிதமருகமுடைதலைமுகிழ்மலிகணிவடமுகம்
உறைதருகரனுலகினிலுபரொளிபெறுவகைநினைவொடுமலர்
மறையவன்மறைவழிவழிபடுமறைவனமமர்தருபரமனே. (௬)

இருநிலனதுபுனலிடைமடிதரவெரிபுகவெரியதுமிகு
பெருவளியினிலவிதரவளிகெடவியனிடைமுழுவதுகெட
இருவர்களுடல்பொறையொடுதிரியெழிலுருவுடையவனினமலர்
மருவியவறுபதமிசைமுரன்மறைவனமமர்தருபரமனே. (௭)

சனம்வெருவுறவருதசமுகனொருபதுமுடியொடுமிருபது
கனமருவியபுயநெரிவகைகழலடியிலொர்விரனிறுவினன்
இனமலிகணநிசிசரன்மகிழ்வுறவருள்செய்தகருணையனென
மனமகிழ்வொடுமறைமுறையுணர்மறைவனமமர்தருபரமனே. (௮)

அணிமலர்மகட்டலைமகனயனறிவரியதொர்பரிசினிலெரி
திணிதருதிரளுருவளர்தரவவர்வெருவுறலொடுதுதிசெய்து
பணியுற* வெளியுருவியபரனவனுரைமலிகடறிரளெழும்
மணிவளரொளிவெயின்மிகுதருமறைவனமமர்தருபரமனே. (௯)

இயல்வழிதரவிதுசெலவுறவினமயிலிறகுறுதழைபொடு
செயன்மருவியசிறுகடமுடியடைகையர்தலைபறிசெய்துதவம்
முயல்பவர்துவர்படமுடல்பொதிபவரறிவருபரனவனணி
வயலினில்வளைவளமருவியமறைவனமமர்தருபரமனே. (௧௦)

வசையறுமலர்மகணிலவியமறைவனமமர்பரமனைநினை
பசையொடுமிகுகலைபலபயில்புலவர்கள்புகழ்வழிவளர்தரு
இசையமர்கழுமலநகரிறைதமிழ்விரகனதுரையியல்வல
இசைமலிதமிழொருபதும்வலவவருலகினிலெழில்பெறுவரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

சதுரம்மறைதான்றுதிசெய்துவணங்கும்
மதுரம்பொழில்சூழ்மறைக்காடுறைமைந்தா
இதுநன்கிறைவைத்தருள்செய்கவெனக்குன்
கதவந்திருக்காப்புக்கொள்ளுங்கருத்தாலே. (௧)

சங்கந்தரளம்மவைதான்கரைக்கெற்றும்
வங்கக்கடல்சூழ்மறைக்காடுறைமைந்தா
மங்கையுமைபாகமுமாகவிதென்கொல்
கங்கைசடைமேலடைவித்தகருத்தே. (௨)

* பணிவுற என்றும் பாடம்.

Koyiloor Digital Library

குரவங்குருக்கத்திகள்புன்னைகண்ஞாழல்
மருவும்பொழில்சூழ்மறைக்காட்டுறைமைந்தா
சிரமும்மலருந்திகழ்செஞ்சடைதன்மேல்
அரவம்மதியோடடைவித்தலழகே. (௩)

படர்செம்பவளத்தொடுபன்மலர்முத்தம்
மடலம்பொழில்சூழ்மறைக்* காட்டுறைமைந்தா
உடலம்முமைபங்கமதாகியு † மென்கொல்
கடனஞ்சமுதாவதுவுண்டகருத்தே. (௪)

வானோர்மறைமாதவத்தோர்வழிபட்ட
தேனார்பொழில்சூழ்மறைக்காட்டுறைசெல்வா
ஏனோர்தொழுதேத்தவிருந்தநீயென்கொல்
கானார்கடுவேடுவனானகருத்தே. (௫)

பலகாலங்கள்வேதங்கள்பாதங்கள்போற்றி
மலரால்வழிபாடுசெய்மாமறைக்காடா
உலகேழுடையாய்கடைதோறுமுன்னென்கொல்
தலைசேர்பலிகொண்டதிலுண்டதுதானே. (௬)

வேலாவலயத்தயலேமிளிர்வெய்தும்
சேலார்திருமாமறைக்காட்டுறைசெல்வா
மாலோடயனிந்திரனஞ்சமுனென்கொல்
காலார்சிலைக்காமனைக்காய்ந்தகருத்தே. (௭)

கலங்கொள்கடலோதமுலாவுங்கரைமேல்
வலங்கொள்பவர்வாழ்த்திசைக்கும்மறைக்காடா
இலங்கையுடையானடர்ப்பட்டிடரெய்த
அலங்கல்விரலூன்றியருள்செய்தவாறே. (௮)

கோனென்றுபல்கோடியுருத்திரர்போற்றும்
தேனம்பொழில்சூழ்மறைக்காட்டுறைசெல்வா
ஏனங்கழுகானவருன்னைமுனென்கொல்
வானந்தலமண்டியுங்கண்டிலவாறே. (௯)

வேதம்பலவோமம்வியந்தடிபோற்ற
ஓதம்முலவும்மறைக்காட்டிலுறைவாய்
ஏதில்சமண்சாக்கியர்வாக்கிவையென்கொல்
ஆதரொடுதாமலர்தூற்றியவாறே. (௧௦)

காழிந்நகரான்கலைஞானசம்பந்தன்
வாழிம்மறைக்காடனைவாய்ந்தறிவித்த
ஏழின்னிசைமாலையீரைந்திவைவல்லார்
வாழிபுலகோர்தொழவானடைவாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

* மடலம்பொழின்மாமறைக் என்றும் பாடம். † பாகமதாகியும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருமறைக்காட்டிலே, திருநாவுக்கரசுநாயனுர் வேண்டுகோளின்படி, திருஞான சம்பந்தப்பிள்ளையார் "சதுரம்மறை" என்னும் திருப்பதிகம்பாட அதன்முதற்பாட்டிலேயே திருக்கதவு அடைக்கப்பட்டது.

பண் - பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பொங்குவெண்மணற்கானற்பொருகடற்றிரைதவழ்முத்தம்
கங்குலாரிருள்போழுங்கலிமறைக்காடமர்ந்தார்தாம்
திங்கள்சூடினரேனுந்திரிபுரமெரித்தனரேனும்
எங்குமெங்கள்பிரானுர்புகழலதிகழ்பழியிலரே. (க)

கூனிளம்பிறைசூடிக்கொடுவரித்தோலுடையாடை
ஆனிலங்கிள * ரைந்துமாடுவர்பூண்பதுமரவம்
கானலங்கழியோதங்கரையொடுகதிர்மணிததும்பத்
தேனலங்கமழ்சோலைத்திருமறைக்காடமர்ந்தாரே. (உ)

நுண்ணிதாய்வெளிதாகிநூல்கிடந்திலங்குபொன்மார்பில்
பண்ணியாழெனமுரலும்பணிமொழி † யுமையொருபாகன்
தண்ணிதாயவெள்ளருவிசலசலநுரை ‡ மணிததும்பக்
கண்ணிதானுமோர்பிறையார்கலிமறைக்காடமர்ந்தாரே. (ங)

ஏழைவெண்குருகயலேயிளம்பெடைதனதெனக்கருதித்
தாழைவெண்மடற்புல்குந்தண்மறைக்காடமர்ந்தார்தாம்
மாழையங்கயலொண்கண்மலைமகள்கணவனதடியின்
நீழலேசரணுகநினைபவர்வினைநலிவிலரே. (ச)

அரவம்வீக்கியவரையுமதிர்கழறழுவியவடியும்
பரவநாஞ்செய்தபாவம்பறைதரவருள்பவர்பதிதான்
மரவநீடுயர்சோலைமழலைவண்டியாழ்செயுமறைக்காட்
டிரவுமெல்லியும் ¶ பகலுமேத்துதல்குணமெனலாமே. (ரு)

பல்லிலோடுகையேந்திப்பாடியுமாடியும்பலிதேர்
அல்லல்வாழ்க்கையரேனுமழகியதறிவரெம்மடிகள்
புல்லமேறுவர்பூதம்புடைசெலவுழிதர்வர்க்கிடமாம்
மல்குவெண்டிரை § யோதமாமறைக்காடதுதானே. (சு)

நாகந்தான்கயிறாகநளிர்வரையதற்குமத்தாகப்
பாகந்தேவரொடசுரர்படுகடலளறெழக்கடைய
வேகநஞ்செழவாங்கேவெருவொடுமிரிந்தெங்குமோட
ஆகந்தன்னில்வைத்தமிர்தமாக்குவித்தான்மறைக்காடே. (எ)

* ஆனலங்கிளர் என்றும் பாடம். † பனிமொழி என்றும் பாடம். ‡ ளருவிச்சலசல நுரை என்றும் பாடம். ¶ மறைக்கா—டிரவுமெல்லியும் என்றும் பாடம். § மல்குதெண்டிரை என்றும் பாடம்.

Koviloor Digital Library

தக்கன்வேள்வியைத்தகர்த்தோன்றனதொருபெருமையையோரான்
மிக்குமேற்சென்றுமலையையெடுத்தலுமலைமகணடுங்க
நக்குத்தன்றிருவிரலானூன்றலுநெடுநெடுத்தரக்கன்
பக்கவாயும்விட்டலறப்பரிந்தவன்பதிமறைக்காடே. (அ)

விண்டமாமலரோனும்விளங்கொளியரவணையானும்
பண்டுங்காண்பரிதாயபரிசினனவனுறைபதிதான்
கண்டலங்கழியோதங்கரையொடுகதிர்மணிததும்ப
வண்டலங்கமழ்சோலைமாமறைக்காடதுதானே. (௯)

பெரியவாகியகுடையும்பீலியுமவைவெயிற்கரவாக்
கரியமண்டைகையேந்திக்கல்லெனவுழிதருங்கழுக்கள்
அரியவாகவுண்டோதுமவர்திறமொழிந்துநம்மடிகள்
பெரியசீர்மறைக்காடேபேணுமின்மனமுடையீரே. (௧௦)

மையுலாம்பொழில்சூழ்ந்தமாமறைக்காடமர்ந்தாரைக்
கையினாற்றொழுதெழுவான்காழியுண்ஞானசம்பந்தன்
செய்தசெந்தமிழ்பத்துஞ்சிந்தையுட்சேர்க்கவல்லார்* போய்ப்
பொய்யில்வானவரோடும்புகவலர்கொளவலர்புகழே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவிராகம். பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

கற்பொலிசுரத்தினெரிகானினிடைமாநடமதாடுமடவார்
இற்பலி†கொளப்புகுதுமெந்தைபெருமானதிடமென்பர்புவிமேல்
மற்பொலிகலிக்கடன்மலைக்குவடெனத்திரைகொழித்தமணியை
விற்பொலிநுதற்கொடியிடைக்கணிகைமார்கவரும்வேதவனமே. (௧)

பண்டிரைபவப்புணரியிற்கனகமால்வரையைநட்டரவினைக்
கொண்டுகயிறிற்கடையவந்தவிடமுண்டகுழகன்றனிடமாம்
வண்டிரைநிழற்பொழிலின்மாதவியின்மீதணவுதென்றல்வெறியார்
வெண்டிரைகள்செம்பவளமுந்துகடல்வந்தமொழிவேதவனமே. (௨)

காரியன்மெல்லோதிநதிமாதைமுடிவார்சடையில்வைத்துமலையார்
நாரியொருபான்மகிழுநம்பருறைவென்பர்நெடுமாடமறுகில்
தேரியல்விழாவினொலிதிண்பணிலமொண்படகநாளுமிசையால்
வேரிமலிவார்குழன்மாதரிசைபாடலொலிவேதவனமே. (௩)

நீறுதிருமேனியின்மிசைத்தொளிபெறத்தடவிவந்திடபமே
ஏறியுலகங்கடொறும்பிச்சைநுகரிச்சையரிருந்தபதியாம்
ஊறுபொருளின்றமிழியற்கிளவிதேருமடமாதருடனார்
வேறுதிசைபாடவர்கள்கூறவிசை‡தேருமெழில்வேதவனமே. (௪)

* செய்ததண்டமிழ்பத்துஞ் சிந்தையுட்சேர்த்தவல்லார் என்றும் பாடம். † இற்பொலி என்றும் பாடம்; பொலி-தூற்றாதநெல்; ஆகுபெயராக்குக. ‡ கூறுமிசை என்றும் பாடம்.

Koviloor Digital Library

கத்திரிகைதுத்திரிகறங்குதுடிதக்கையொடுடக்கைபடகம்
எத்தனையுலப்பில்கருவித்திரளலம்பவிமையோர்கள்பரச
ஒத்தறமிதித்துநட்டமிட்டவொருவர்க்கிடமதென்பருலகில்
மெய்த்தகையபத்தரொடுசித்தர்கண்மிடைந்துகளும்வேதவனமே. (௫)

மாலைமதிவாளரவுகொன்றைமலர்துன்றுசடைநின்றுசுழலக்
காலையிலெழுந்தகதிர்தாரகைமடங்கவனலாடுமரனூர்
சோலையின்மரங்கடொறுமிண்டியினவண்டுமதுவுண்டிசைசெய
வேலையொலிசங்குதிரைவங்கசுறவங்கொணரும்வேதவனமே. (௬)

வஞ்சகமனத்தவுணர்வல்லரணமன்றவிபவார்சிலைவளைத்
தஞ்சகமவித்தவமரர்க்கமரனாதிபெருமானதிடமாம்
கிஞ்சுகவிதழ்க்கனிகளூறியசெவ்வாயவர்கள்பாடல்பயில
விஞ்சகவியக்கர்முனிவக்கணநிறைந்துமிடைவேதவனமே. (௭)

முடித்தலைகள்பத்துடைமுருட்டுருவரக்கனைநெருக்கிவிரலால்
அடித்தலமுன்வைத்தலமரக்* கருணைவைத்தவனிடம்பலதுயர்
கெடுத்தலைநினைத்தறவியற்றுதல்கிளர்ந்துபுலவாணர்வறுமை
விடுத்தலைமதித்துநிதிநல்குமவர்மல்குபதிவேதவனமே. (௮)

வாசமலர்மேவியுறைவானுநெடுமாலுமறியாதநெறியைக்
கூசுதல்செயாதவமணாதரொடுதேரர்குறுகாதவரனூர்
காசுமணிவார்கனகநீடுகடலோடுதிரைவார்துவலைமேல்
வீசுவலைவாணரவைவாரிவிலைபேசுமெழில்வேதவனமே. (௯)

மந்தமுரவம்† கடல்வளங்கெழுவுகாழிபதிமன்னுகவுணி
வெந்தபொடிநீறணியும்வேதவனமேவுசிவனின்னருளினால்
சந்தமிவை‡ தண்டமிழினின்னிசையெனப்பரவுபாடலுலகில்
பந்தனுரைகொண்டுமொழிவார்கள்பயில்வார்களுயர்வானுலகமே. ¶ (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

இந்திரனோடுதேவரிருடிகளேத்துகின்ற
சுந்தரமானார்போலுந்துதிக்கலாஞ்சோதிபோலும்
சந்திரனோடுகங்கையரவையுஞ்சடையுள்வைத்து
மந்திரமானார்போலுமாமறைக்காடனாரே. (௧)

* விரலார்—அடித்தலமுன்வைத்தலம்வரக் என்றும் பாடம். † முழவம் என்றும் பாடம்.
‡ சந்தமிசை என்றும் பாடம். ¶ இத்திருப்பதிகத்தில் ௧௦-வது செய்யுள் மறைந்துபோயிற்று.

Koviloor Digital Library

தேயனநாடாகித்தேவர்கடேவர்போலும்
பாயனநாடறுக்கும்பத்தர்கள்பணியவம்மின்
காயனநாடுகண்டங்கதனுளார்காளகண்டர்
மாயனநாடர்போலுமாமறைக்காடனாரே. (௨)

அறுமையிவ்வுலகுதன்னையாமெனக்கருதிநின்று
வெறுமையின்மனைகள்வாழ்ந்துவினைகளானலிவுறாதே
சிறுமதியரவுகொன்றைதிகழ்தருசடையுள்வைத்து
மறுமையுமிம்மையாவார்மாமறைக்காடனாரே. (௩)

கால்கொடுத்திருகையேற்றிக்கழிநிரைத்திறைச்சிமேய்ந்து
தோல்படுத்துதிரநீராற்சுவரெடுத்திரண்டுவாசல்
ஏல்வுடைத்தாவமைத்தங்*கேழுசாலேகம்பண்ணி
மால்கொடுத்தாவிவைத்தார்மாமறைக்காடனாரே. (௪)

விண்ணினார்விண்ணின்மிக்கார்வேதங்கள்விரும்பியோதப்
பண்ணினார்கின்னரங்கள்பத்தர்கள்பாடியாடக்
கண்ணினார்கண்ணினுள்ளேசோதியாய்நின்றவெந்தை
மண்ணினார்வலங்கொண்டேத்துமாமறைக்காடனாரே. (௫)

அங்கையுளனலும்வைத்தாரறுவகைச்சமயம்வைத்தார்
தங்கையில்வீணைவைத்தார்தம்மடிபரவவைத்தார்
திங்களைக்கங்கையோடுதிகழ்தருசடையுள்வைத்தார்
மங்கையைப்பாகம்வைத்தார்மாமறைக்காடனாரே. (௬)

கீதராய்க்கீதங்கேட்டுக்கின்னரந்தன்னைவைத்தார்
வேதராய்வேதமோதிவிளங்கியசோதிவைத்தார்
ஏதராய்நட்டமாடியிட்டமாய்க்கங்கையோடு
மாதையோர்பாகம்வைத்தார்மாமறைக்காடனாரே. (௭)

கனத்தினார்வலியுடையகடிமதிலரணமூன்றும்
சினத்தினுட்சினமாய்நின்றுதீயெழச்செற்றார்போலும்
தனத்தினைத்தவிர்ந்துநின்றுதம்மடிபரவுவார்க்கு
மனத்தினுண்மாசுதீர்ப்பார்மாமறைக்காடனாரே. (௮)

தேசனைத்தேசன்றன்னைத்தேவர்கள்போற்றிசைப்பார்
வாசனைசெய்துநின்றுவைகலும்வணங்குமின்கள்
காசினைக்கனலையென்றுங்கருத்தினில்வைத்தவர்க்கு
மாசினைத்தீர்ப்பர்போலுமாமறைக்காடனாரே. (௯)

* வுடைத்தாகவைத்தங் என்றும் பாடம்.

Koviloor Digital Library

பிணியுடையாக்கைதன்னைப்பிறப்பறுத்துய்யவேண்டில்
பணியுடைத்தொழில்கள்பூண்டுபத்தர்கள்பற்றினாலே
துணிவுடை* யரக்கனோடியெடுத்தலுந்தோகையஞ்ச
மணிமுடிப்பத்திறுத்தார்மாமறைக்காடனாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

தேரையுமேல்கடாவித்திண்ணமாத்தெழித்துநோக்கி
ஆரையுமேலுணராவாண்மையான்மிக்கான்றன்னைப் †
பாரையும்விண்ணுமஞ்சப்பரந்ததோண்முடியடர்த்துக்
காரிகையஞ்சலென்பார்கலிமறைக்காடனாரே. (௧)

முக்கிமுன்வெகுண்டெடுத்தமுடியுடையரக்கர்கோனை
நக்கிருந் ‡ தூன்றிச்சென்னிநாண்மதிவைத்தவெந்தை
அக்கரவாமைபூண்டவழகனார்கருத்தினாலே
தெக்குநீர்த்திரைகண்மோதுந்திருமறைக்காடனாரே. (௨)

மிகப்பெருத்துலாவமிக்கானக்கொருதேர்கடாவி
அகப்படுத்தென்றுதானுமாண்மையான்மிக்கரக்கன்
உகைத்தெடுத்தான்மலையையூன்றலுமவனையாங்கே
நகைப்படுத்தருளினானூர்நான்மறைக்காடுதானே. (௩)

அந்தரந்தேர்கடாவியாரிவனென்றுசொல்லி
உந்தினான்மாமலையையூன்றலுமொள்ளரக்கன்
பந்தமாந்தலைகள்பத்தும்வாய்கள்விட்டலறிவீழச்
சிந்தனைசெய்துவிட்டார்திருமறைக்காடனாரே. (௪)

தடுக்கவுந்தாங்கவொண்ணாத்தன்வலியுடையனாகிக்
கடுக்கவோர்தேர்கடாவிக்கையிருபதுகளாலும்
எடுப்பனானென்னபண்டமென்றெடுத்தானையேங்க
அடுக்கவேவல்லனூராமணிமறைக்காடுதானே. (௫)

நாண்முடிக்கின்றசீரானடுங்கியேமீதுபோகான் ¶
கோள்பிடித்தார்த்தகையான்கொடியன்மாவலியனென்று §
நீண்முடிச்சடையர்சேருநீள்வரையெடுக்கலுற்றான்
தோண்முடிநெரியவைத்தார்தொன்மறைக்காடனாரே. (௬)

* துணியுடை என்றும் பாடம். † வாண்மையால்வல்லரக்கன் என்றும் பாடம். ‡ இக்கிருந் என்றும் பாடம். ¶ நடுங்கியோ என்றும் பாடம். § வலியனன்று என்றும் பாடம்.

Koviloor Digital Library

பத்துவாயிரட்டிக்கைகளுடையன்மாவலியனென்று
பொத்திவாய்தீமைசெய்தபொருவலியரக்கர்கோனைக்
கத்திவாய்கதறவன்றுகால்விரலூன்றியிட்டார்
முத்துவாய்திரைகண்மோதுமுதுமறைக்காடனாரே. (௭)

பக்கமேவிட்டகையான் * பாங்கிலாமதியனாகிப்
புக்கனன்மாமலைக்கீழ்ப்போதுமாறறியமாட்டான்
மிக்கமாமதிகள்கெட்டுவீரமுமிழந்தவாறே
நக்கனபூதமெல்லாநான்மறைக்காடனாரே. (௮)

நாணஞ்சுகையனாகிநன்முடிபத்தினோடு
பாணஞ்சுமுன்னிழந்துபாங்கிலாமதியனாகி
நீணஞ்சுதானுணராநின்றெடுத்தானையன்று
ஏணஞ்சுகைகள்செய்தாரெழின்மறைக்காடனாரே. (௯)

கங்கைநீர்சடையுள்வைக்கக்காண்டலுமங்கையூடத்
தென்கையான்றேர்கடாவிச்சென்றெடுத்தான்மலையை
முன்கைமாநரம்புவெட்டி † முன்னிருக்கிசைகள்பாட
அங்கைவாளருளினானூரணிமறைக்காடுதானே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

ஓதமால்கடல்பாவியுலகெலாம் ‡
மாதரார்வலங்கொண்மறைக்காடரோ ¶
காதல்செய்துகருதப்படுமவர்
பாதமேத்தப்பறையுநம்பாவமே. (௧)

பூக்குந்தாழைபுறணியருகெலாம்
ஆக்குந்தானுடைமாமறைக்காடரோ
ஆர்க்குங்காண்பரியீரடியார்தம்மை
நோக்கிக்காண்பதுநும்பணிசெய்யிலே. (௨)

புன்னைஞாழல்புறணியருகெலாம்
மன்னினார்வலங்கொண்மறைக்காடரோ
அன்னமென்னடையாளையொர்பாகமாச் §
சின்னவேடமுகப்பதுசெல்வமே. (௩)

* பக்கமேலிட்டகையான் என்றும் பாடம். † முன்கையானரம்புவெட்டி என்றும் பாடம். ‡ கடல்பரவியுலகெலாம் என்றுபாடமோதுவாருமுளர்; கடல்வாவியுலகெலாம் என்றும் பாடம். ¶ காடரைக் என்றும் பாடம். § பாகமாம் என்றும் பாடம்.

Koviloor Digital Library

அட்டமாமலர்சூடியடும்பொடு
வட்டப்புன்சடைமாமறைக்காடரோ
நட்டமாடியுநான்மறைபாடியும்
இட்டமாகவிருக்குமிடமிதே. * (ச)

நெய்தலாம்பனிநைவயல்சூழ்தரும்
மெய்யினார்வலங்கொண்மறைக்காடரோ
தையல்பாகங்கொண்டீர்கவர்புன்சடைப்
பைதல்வெண்பிறைபாம்புடன்வைப்பதே. (ரு)

துஞ்சும்போதுந்துயிலின்றியேத்துவார்
வஞ்சின்றிவலங்கொண்மறைக்காடரோ
பஞ்சின்மெல்லடிப்பாவைபலிகொணர்ந்
தஞ்சிநிற்பதுமைந்தலைநாகமே. (சு)

விண்ணுளார்விரும்பியெதிர்கொள்ளவே
மண்ணுளார்வணங்கும் † மறைக்காடரோ
கண்ணினாலுமைக்காணக்கதவினைத்
திண்ணமாகத்திறந்தருள்செய்ம்மினே. ‡ (எ)

திருவினார்செல்வமல்குவிழாவணி
மருவினார்வலங்கொண்மறைக்காடரோ
உருவினாளுமைமங்கையொர்பாகமாய் ¶
மருவினாய்கங்கையைச்சென்னிதன்னிலே. (அ)

சங்குவந்தலைக்குந்தடங்கானல்வாய்
வங்கமார்வலங்கொண்மறைக்காடரோ
கங்கைசெஞ்சடைவைப்பதுமன்றியே
அங்கையில்லனலேந்தலழகிதே. (கூ)

குறைக்காட்டான்விட்டதேர்குத்தமாமலை
இறைக்காட்டியெடுத்தான்றலையீரைந்தும்
மறைக்காட்டானிறையூன்றலும்வாய்விட்டான்
இறைக்காட்டாயெம்பிரானுனையேத்தவே. (க0)

திருச்சிற்றம்பலம்.

* மிடமதே என்றும் பாடம். † மண்ணுளார்வலங்கொண் என்றும் பாடம். ‡ விண்ணுளார் என்னும் பாட்டு இரண்டு ஏடுகளில் இல்லை. கூ பாட்டுக்களே உள்ளன. கூ-ம் பாட்டில் கூ-க0 என்றது ஒரேடு. மற்றையேடு கூ என்றே நின்றது; நின்று, அடுத்த 'பண்ணினேர்' என்னும்பதிகத்தில் இந்த 'விண்ணுளார்' என்பதை க0-ம் பாட்டாகக்காட்டி, 'அரக்கனை' என்பதை கக-ம் பாட்டாகக்காட்டியது. ¶ ளுமையாளையொர்பாகமாய் என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பண்ணினேர்மொழியாளுமைபங்கரோ
மண்ணினார்வலஞ்செய்ம்மறைக்காடரோ
கண்ணினாலுமைக்காணக்கதவினைத்
திண்ணமாகத்திறந்தருள்செய்ம்மினே. (௧)

ஈண்டுசெஞ்சடையாகத்துளீசரோ
மூண்டகார்முகிலின்முறிக்கண்டரோ
ஆண்டுகொண்டநீரேயருள்செய்திடும்
நீண்டமாக்கதவின்வலிநீக்குமே. (௨)

அட்டமூர்த்தியதாகியவப்பரோ
துட்டர்வான்புரஞ்சுட்டசுவண்டரோ
பட்டங்கட்டியசென்னிப்பரமரோ
சட்டவிக்கதவந்திறப்பிம்மினே. (௩)

அரியநான்மறை*யோதியநாவரோ
பெரியவான்புரஞ்சுட்டசுவண்டரோ
விரிகொள்கோவணவாடைவிருத்தரோ
பெரியவாக்கதவம்பிரிவிக்கவே.† (௪)

மலையினிடிருக்கும்‡மறைக்காடரோ
கலைகள்வந்திறைஞ்சுங்கழலேத்தரோ
விலையின்மாமணிவண்ணவுருவரோ¶
தொலைவிலாக்கதவந்துணைநீக்குமே. (௫)

பூக்குந்தாழைபுறணியருகெலாம்
ஆக்குந்தண்பொழில்சூழ்மறைக்காடரோ
ஆர்க்குங்காண்பரியீரடிகேளுமை
நோக்கிக்காணக்கதவைத்திறவுமே. (௬)

வெந்தவெண்பொடிப்பூசும்விகிர்தரோ
அந்தமில்லியணிமறைக்காடரோ
சிந்தைநீயடியார்வந்திறைஞ்சிட
இந்தமாக்கதவம்பிணிநீக்குமே. § (௭)

ஆறுசூடுமணிமறைக்காடரோ
கூறுமாதுமைக்கிந்தகுழகரோ
ஏறுதேறியவெம்பெருமானிந்த
மாறிலாக்கதவம்வலிநீக்குமே. (௮)

* அரியமாமறை என்றும் பாடம். † கதவைப்பிரிவிக்கவே என்றும் பாடம். ‡ மலையின்மேலிருக்கும் என்றும் பாடம். ¶ மணியன்னவுருவரோ என்றும் பாடம். § பிணிநீக்குமே என்றும் பாடம்.

Koviloor Digital Library

சுண்ணவெண்பொடிப்பூசுஞ்சுவண்டரோ
பண்ணியேறுகந்தேறும்பரமரோ
அண்ணலாதியணிமறைக்காடரோ
திண்ணமாக்கதவந்திறப்பிம்மினே. (கூ)

அரக்கனைவிரலாலடர்த்திட்டநீர்
இரக்கமொன்றிலீரெம்பெருமானிரே
சுரக்கும்புன்னைகள்சூழ்மறைக்காடரோ
சரக்கவிக்கதவந்திறப்பிம்மினே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனாரும், திருஞானசம்பந்தப்பிள்ளையாரும் பல ஸ்தலங்களை வணங்கிக்கொண்டு, திருமறைக்காட்டை அடைந்து, ஆலயத்துட்சென்று வலம்வந்து, வேதங்கள் அருச்சித்துத் திருக்காப்புச்செய்த திருக்கதவுக்குமுன் நின்று, பிள்ளையார் நாயனாரைநோக்கி "அப்பரே! நாம் சுவாமியை அபிமுகத் திருவாயில்வழியே சென்று தரிசித்தற்குத் திருக்கதவுதிறக்கும்படி திருப்பதிகம்பாடும்" என்றார். நாயனார் "பண்ணினேர் மொழியாள்" என்னுந் திருப்பதிகம்பாட, கதவு திறக்கப்படாமல் தாழ்த்ததுகண்டு, "இரக்கமொன்றிலீர்" என்று திருக்கடைக்காப்பிலே பாடி வணங்கினார். உடனே திருக்கதவு திறக்கப்பட்டது.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

தூண்டுசுடரனையசோதிகண்டாய்
தொல்லமரர்சூளாமணிதான்கண்டாய்
காண்டற்கரியகடவுள்கண்டாய்
கருதுவார்க்காற்றவெளியான்கண்டாய்
வேண்டுவார்வேண்டுவதே*யீவான்கண்டாய்
மெய்ந்நெறிகண்டாய்விரதமெல்லாம்
மாண்டமனத்தார்மனத்தான்கண்டாய்
மறைக்காட்டுறையுமணாளன்றானே. (க)

கைகிளரும்வீணைவலவன்கண்டாய்
காபாலிகண்டாய்திகழுஞ்சோதி
மெய்கிளருஞானவிளக்குக்கண்டாய்
மெய்யடியாருள்ளத்துவித்துக்கண்டாய்
பைகிளருநாகமசைத்தான்கண்டாய்
பராபரன்கண்டாய்பாரூரான்கண்டாய்
வைகிளருங்கூர்வாட்படையான்கண்டாய்
மறைக்காட்டுறையுமணாளன்றானே. (உ)

* வேண்டினார்வேண்டியதே என்றும், வேண்டுவார்வேண்டியதே என்றும் பாடம்.

Koyiloor Digital Library

சிலந்திக்கருண்முன்னஞ்செய்தான்கண்டாய்
திரிபுரங்கடீவாய்ப்படுத்தான்கண்டாய்
நிலந்துக்கநீர்வளிதீயானான்கண்டாய்
நிருபியாய்ரூபியுமாய்நின்றான் * கண்டாய்
சலந்துக்கசென்னிச்சடையான்கண்டாய்
தாமரையான்செங்கண்மாறானேகண்டாய்
மலந்துக்கமால்விடையொன்றூர்ந்தான்கண்டாய்
மறைக்காட்டுறையுமணாளன்றானே. (௩)

கள்ளிமுதுகாட்டிலாடிகண்டாய்
காலனையுங்காலாற்கடந்தான்கண்டாய்
புள்ளியுழைமானின்றோலான்கண்டாய்
புலியுரிசேராடைப்புனிதன்கண்டாய்
வெள்ளிமிளிர்பிறைமுடிமேற்சூடிகண்டாய்
வெண்ணீற்றான்கண்டாய்நஞ்செந்தின்மேய
வள்ளிமணாளற்குத்தாதைகண்டாய்
மறைக்காட்டுறையுமணாளன்றானே. (௪)

மூரிமுழங்கொலிநீரானான்கண்டாய்
முழுத்தழல்போன்மேனிமுதல்வன்கண்டாய்
எரி † நிறைந்தனையசெல்வன்கண்டா
யின்னடியார்க்கின்பம்விளைப்பான்கண்டாய்
ஆரியன்கண்டாய்தமிழன்கண்டா
யண்ணாமலையுறையெம்மண்ணல்கண்டாய் ‡
வாரிமதகளிறேபோல்வான்கண்டாய்
மறைக்காட்டுறையுமணாளன்றானே. (௫)

ஆடன்மால்பானையுரித்தான்கண்டா
யகத்தியான்பள்ளியமர்ந்தான்கண்டாய்
கோடியான்கண்டாய்குழகன்கண்டாய்
குளிராரூர்கோயிலாக்கொண்டான்கண்டாய்
நாடியநன்பொருள்களானான்கண்டாய்
நன்மையோடிம்மை ¶ மற்றம்மையெல்லாம்
வாடியவாட்டந்தவிர்ப்பான்கண்டாய்
மறைக்காட்டுறையுமணாளன்றானே. (௬)

வேலைசேர்நஞ்சமிடற்றான்கண்டாய்
விண்டடவுபூங்கயிலைவெற்பன்கண்டாய்
ஆலைசேர்வேள்வியழித்தான்கண்டா
யமரர்கடாமேத்துமண்ணல்கண்டாய்

* நிருபியருபியுமாய்நின்றான் என்றும் பாடம். † எரி - இங்கே உள்ளூர்க்குளம்; "ஊருணிநீர்நிறைந்தற்றாலுலகவாம்—பேரறிவாளன்றிரு" என்றும் அருமைத்திருக்குறள் இங்கே சிந்திக்கற்பாலது. ‡ புறையுமண்ணல்கண்டாய் என்றும் பாடம். ¶ நன்மையோடின்மை என்றும் பாடம்.

Koviloor Digital Library

பானெய்சேரானஞ்சுமாடிகண்டாய்
பருப்பதத்தான்கண்டாய்பரவைமேனி
மாலேயோர்கூறுடையமைந்தன்கண்டாய்
மறைக்காட்டுறையுமணாளன்றானே. (எ)

அம்மைபயக்குமமிர்துகண்டா
யந்தேன்றெளிகண்டாயாக்கஞ்செய்திட்
டிம்மைபயக்குமிறைவன்கண்டா
யென்னெஞ்சேயுன்னிலினியான்கண்டாய்
மெய்ம்மையேஞானவிளக்குக்கண்டாய்
வெண்காடன்கண்டாய்வினைகள்போக
மம்மாறுக்குமருந்துகண்டாய்
மறைக்காட்டுறையுமணாளன்றானே. (அ)

மூலநோய்தீர்க்குமுதல்வன்கண்டாய்
முத்தமிழுநான்மறையுமானான்கண்டாய்
ஆலின்கீழ்நால்வர்க்கறத்தான்கண்டா
யாதியுமந்தமுமானான்கண்டாய்
பாலவிருத்தனுமானான்கண்டாய்
பவளத்தடவரையேபோல்வான்கண்டாய்
மாலேசேர்கொன்றைமலிந்தான்கண்டாய்
மறைக்காட்டுறையுமணாளன்றானே. (கூ)

அயனவனுமாலவனுமறியாவண்ண *
மாரழலாய்நீண்டுகந்தவண்ணல்கண்டாய்
துயரிலங்கைவேந்தன்றுளங்கவன்று †
சோதிவிரலானுற ‡ வைத்தான்கண்டாய்
பெயரவற்குப்பேரருள்கள்செய்தான்கண்டாய்
பேரும்பெரும்படையோடீந்தான்கண்டாய்
மயருறுவல்வினைநோய்தீர்ப்பான்கண்டாய்
மறைக்காட்டுறையுமணாளன்றானே. (கo)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

யாழைப்பழித்தன்னமொழிமங்கையொருபங்கன்
பேழைச்சடைமுடிமேற்பிறைவைத்தானிடம்பேணில்
தாழைப்பொழிலூடேசென்றுபூழைத்தலைநுழைந்து
வாழைக்கனிகூழைக்குரங்குண்ணும்மறைக்காடே. (க)

* மாலுமறியாவண்ணம் என்றும் பாடம். † துலங்கவன்று என்றும் பாடம்; துளங்க துலங்க ளளவொற்றுமை. ‡ விரலூற என்றும் பாடம்.

Koviloor Digital Library

சிகரத்திடையிளவெண்பிறைவைத்தானிடந்தெரியில்
முகரத்திடைமுத்தின்னொளிபவளத்திரளோதத்
தகரத்திடைதாழைத்திரண்ஞாழற்றிரணீழல்
மகரத்தொடுசுறவங்கொணர்ந்தெற்றும்மறைக்காடே. (௨)

அங்கங்களுமறைநான்குடன்விரித்தானிடமறிந்தோம்
தெங்கங்களுநெடும்பெண்ணையும்பழம்வீழ்மணற்படப்பைச்
சங்கங்களுமிலங்கிப்பியும்வலம்புரிகளுமிடறி
வங்கங்களுமுயர்கூம்பொடுவணங்கும்மறைக்காடே. (௩)

நரைவிரவியமயிர்தன்னொடுபஞ்சவ்வடிமார்பன்
உரைவிரவியவுத்தமன்னிடமுணரல்லுறுமனமே
குரைவிரவியகுலசேகரக்கொண்டற்*றலைவிண்ட
வரைபுரைவனதிரைபொருதிழிந்தெற்றும்மறைக்காடே. (௪)

சங்கைப்படநினையாதெழுநெஞ்சேதொழுதேத்தக்
கங்கைச்சடைமுடியுடையவர்க்கிடமாவதுபரவை
அங்கக்கடலருமாமணியுந்திக்கரைக்கேற்ற
வங்கத்தொடுசுறவங்கொணர்ந்தெற்றும்மறைக்காடே. (௫)

அடல்விடையினன்மழுவாளினனல்லாரணிகொன்றைப் †
படருஞ்சடைமுடியுடையவர்க்கிடமாவதுபரவைக்
கடலிடையிடைகழிபருகினிற்கடிநாறுதண்கைதை
மடலிடையிடைவெண்குருகெழுமணிநீர்மறைக்காடே. (௬)

முளைவளரிளமதியுடையவன்முன்செய்தவல்வினைகள்
களைகளைந்தெனையாளல்லுறுகண்டன்னிடஞ்செந்நெல்
வளைவிளைவயற்கயல்பாய்தருகுணவார்மணற்கடல்வாய்
வளைவளையொடுசலஞ்சலங்கொணர்ந்தெற்றும்மறைக்காடே. (௭)

நலம்பெரியனசுரும்பார்ந்தனநங்கோனிடமறிந்தோம்
கலம்பெரியனசாருங்கடற்கரைபொருதிழிகங்கைச்
சலம்புரிசடைமுடியுடையவர்க்கிடமாவதுபரவை
வலம்புரியொடுசலஞ்சலங்கொணர்ந்தெற்றும்மறைக்காடே. (௮)

குண்டாடியுஞ்சமணாடியுங்குற்றுடுக்கையர்தாமும்
கண்டார்கண்டகாரணம்மவைகருதாதுகைதொழுமின்
எண்டோளினன்முக்கண்ணினனேழிசையினனறுகால்
வண்டாடுதண்பொழில்சூழ்ந்தெழுமணிநீர்மறைக்காடே. (௯)

* குலசேகரக்கொண்டல் என்றும் பாடம். † வாளினனலாலணிகொன்றை என்றும் பாடம்.

Koviloor Digital Library

பாரூர்பலபுடைசூழ்வளவய* ஞவலர்வேந்தன்
வாரூர்வனமுலையாளுமைபங்கன்மறைக்காட்டை
ஆரூரானதமிழ்மாலைகள்பாடும்மடித்தொண்டர்
நீரூர்தருநிலனோடுயர்புகழாகுவர்தாமே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருமறைக்காட்டுத்திருப்பதிகம் - ௧0.

ஆ திருப்பதிகம் - ௩௧௪.

சுவாமி தேவி திருநாமங்கள் - மறைக்காட்டீசர், யாழைப்பழித்தமொழியாள்.

௧௨௬. திருவகத்தியான்பள்ளி.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

வாடியவெண்டலைமாலைசூடிமயங்கிருள்
நீடெரிகொள்ளிவிளக்குமாகநிவந்தெரி
ஆடியவெம்பெருமானகத்தியான்பள்ளியைப்
பாடியசிந்தையினார்கட்கில்லையாம்பாவமே. (௧)

துன்னங்கொண்டவுடையான்துதைந்தவெண்ணீற்றினன்
மன்னுங்கொன்றைமதமத்தஞ்சூடினன்மாநகர்
அன்னந்தங்கும்பொழில்சூழகத்தியான்பள்ளியை
உன்னஞ்செய்தமனத்தார்கடம்வினையோடுமே. (௨)

உடுத்ததுவும்புலித்தோல்பலிதிரிந்துண்பதும்
கடுத்துவந்தகழற்காலன்றன்னையுங்காலினால்
அடர்த்ததுவும் † பொழில்சூழகத்தியான்பள்ளியான்
தொடுத்ததுவுஞ்சரமுப்புரந்துகளாகவே. (௩)

காய்ந்ததுவும்மன்றுகாமனைநெற்றிக்கண்ணினால்
பாய்ந்ததுவுங்கழற்காலனைப்பண்ணினன்மறை
ஆய்ந்ததுவும்பொழில்சூழகத்தியான்பள்ளியான்
ஏய்ந்ததுவும்மிமவான்மகளொருபாகமே. (௪)

போர்த்ததுவுங்கரியின்னுரிபுலித்தோலுடை
கூர்த்ததோர்வெண்மழுவேந்திக்கோளரவம்மரைக்
கார்த்ததுவும்பொழில்சூழகத்தியான்பள்ளியான்
பார்த்ததுவும்மரணம்படவெரிமூழ்கவே. (௫)

* சூழ்வனவயல் என்றும் பாடம். † அடுத்ததுவும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

தெரிந்ததுவுங்கணையொன்றுமுப்புரஞ்சென்றுடன்
எரிந்ததுவுமுன்னெழிலார்மலருறைவான்றலை
அரிந்ததுவும்பொழில்சூழகத்தியான்பள்ளியான்
புரிந்ததுவும்முமையாளோர்பாகம்புனைதலே. (௬)

ஓதியெல்லாமுலகுக்கோரொண்பொருளாகிமெய்ச்*
சோதியென்றுதொழுவாரவர்துயர்தீர்த்திடும்
ஆதியெங்கள்பெருமானகத்தியான்பள்ளியை
நீதியாற்றொழுவா†ரவர்வினைநீங்குமே. (௭)

செறுத்ததுவுந்தக்கன்வேள்வியைத்திருந்தார்புரம்
ஒறுத்ததுவும்மொளிமாமலருறைவான்சிரம்
அறுத்ததுவும்பொழில்சூழகத்தியான்பள்ளியான்
இறுத்ததுவுமரக்கன்றன்றோள்களிருபதே. (௮)

சிரமுநல்லமதிமத்தமுந்திகழ்கொன்றையும்
அரவமல்குஞ்சடையானகத்தியான்பள்ளியைப்
பிரமனோடுதிருமாலுந்தேடியபெற்றிமை‡
பரவவல்லாரவர்தங்கண்மேல்வினைபாறுமே. (௯)

செந்துவராடையினாரும்வெற்றரையேதிரி
புந்தியிலார்களும்பேசும்பேச்சவைபொய்ம்மொழி
அந்தணனெங்கள்பிரானகத்தியான்பள்ளியைச்
சிந்திமினும்வினையானவைசிதைந்¶தோடுமே. (௧௦)

ஞாலமல்குந்தமிழ்ஞானசம்பந்தன்மாமயில்
ஆலுஞ்சோலைபுடைசூழகத்தியான்பள்ளியுள்
சூலநல்லபடையானடிதொழுதேத்திய
மாலைவல்லாரவர்தங்கண்மேல்வினைமாயுமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவகத்தியான்பள்ளித்திருப்பதிகம் - ௧.

ஆ திருப்பதிகம் - ௩௱௧௫.

சுவாமி தேவி திருநாமங்கள் - அகத்தீசுவரர், பாகம்பிரியாள்.

* முலகுக்கொருபொருளாகிமெய் என்றும் பாடம். † நீதியினாற்றொழுவார் என்றும் பாடம். ‡ பெற்றியைப் என்றும் பாடம். ¶ யாயினசிதைந் என்றும் பாடம்.

Koviloor Digital Library

கஉஎ. திருக்கோடிக்குழகர்.*

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

கடிதாய்க்கடற்காற்றுவந்தெற்றக்கரைமேல்
குடிதானயலேயிருந்தாற்குற்றமாமோ
கொடியேன்கண்கள்கண்டனகோடிக்குழகீர்
அடிகேளுமக்கார்துணையாகவிருந்தீரே. (க)

முன்றான்கடனஞ்சமுண்டவதனாலோ
பின்றான்பரவைக்குபகாரஞ்செய்தாயோ
குன்றாப்பொழில்சூழ்தருகோடிக்குழகா
என்றான்றனியேயிருந்தாயெம்பிரானே. (உ)

மத்தம்மலிசூழ்மறைக்காடதன்றென்பால்
பத்தர்பலர்பாடவிருந்தபரமா
கொத்தார்பொழில்சூழ்தருகோடிக்குழகா
எத்தாற்றனியேயிருந்தாயெம்பிரானே. (௩)

காடேன்மிகவாலிதுகாரிகையஞ்சக்
கூடிப்பொந்திலாந்தைகள்† கூகைகுழற
வேடித்தொண்டர்சாலவுந்தீயர்சழக்கர்
கோடிக்குழகாவிடங்கோயில்கொண்டாயே. (௪)

மையார்தடங்கண்ணிபங்காகங்கையாளும்
மெய்யாகத்திருந்தனள்வேறிடமில்லை
கையார்வளைக்காடுகாளோடுமுடனாய்க்
கொய்யார்பொழிற்கோடியேகோயில்கொண்டாயே. (௫)

அரவேரல்குலாளையொர்பாகமமர்ந்து
மரவங்கமழ்மாமறைக்காடதன்றென்பால்
குரவம்பொழில்‡ சூழ்தருகோடிக்குழகா
இரவேதுணையாயிருந்தாயெம்பிரானே. (௬)

பறையுங்குழலும்மொலிபாடலியம்ப
அறையுங்கழலார்க்கநின்றாடுமமுதே
குறையாப்பொழில்சூழ்தருகோடிக்குழகா
இறைவாதனியேயிருந்தாயெம்பிரானே. (எ)

* இதனைக் குழகர்கோயில் என்ப. † பொத்திலாந்தைகள் என்றும் பாடம். ‡ குரவப்பொழில் என்றும் பாடம்.

Koviloor Digital Library

ஒற்றியூரென்றவூனத்தினாலதுதானோ
அற்றப்படவாரூரதென்றகன்றாயோ
முற்றாமதிசூடியகோடிக்குழகா
எற்றாற்றனியேயிருந்தாயெம்பிரானே. (அ)

நெடியானெடுநான்முகனும்மறிவொண்ணாப்
படியான்பலிகொள்ளுமிடங்குடியில்லை
கொடியார்பலர்வேடர்கள்வாழுங்கரைமேல்
அடிகேளன்பதா* யிடங்கோயில்கொண்டாயே. (கூ)

பாரூர்மலிசூழ்மறைக்காடதன்றென்பால்
ஏரார்பொழில்சூழ்தருகோடிக்குழகை
ஆரூரனுரைத்தனபத்திவைவல்லார்
சிரூர்சிவலோகத்திருப்பவர்தாமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருக்கோடிக்குழகர்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - ௩௧௬.

சுவாமி தேவி திருநாமங்கள் - அமிர்தகடநாதர், மையார்தடங்கண்ணி.

சோழநாட்டிலே காவேரிக்குத் தென்கரையிலுள்ள தலங்கள்

முற்றுப்பெற்றன.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் அருளிச்செய்த திருப்பதிகங்கள் ௧௪௪; இத்திருப்பதிகங்களைப்பெற்றதலங்கள் ௧௦௦. திருநாவுக்கரசுநாயனார் அருளிச்செய்த திருப்பதிகங்கள் ௧௩௨; இத்திருப்பதிகங்களைப்பெற்றதலங்கள் ௬௬. சுந்தரமூர்த்திநாயனார் அருளிச்செய்ததிருப்பதிகங்கள் ௩௫; இத்திருப்பதிகங்களைப்பெற்றதலங்கள் ௨௭. ஆ திருப்பதிகங்கள் ௩௧௬. ஆ தலங்கள் ௧௨௭.

சோழநாட்டுத்திருப்பதிகங்கள் ஆ ௫௫௫.

தலங்கள் ஆ ௧௯௦.

* அடிகேளின்பதாய் என்றும் பாடம்.

Koviloor Digital Library

ஈழநாட்டில் உள்ள தலங்கள்.

க. திருக்கோணமலை.*

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

நிரைகழலரவஞ்சிலம்பொலியலம்புநிமலர்நீறணிதிருமேனி
வரைகெழுமகளோர்பாகமாப்புணர்ந்தவடிவினர்கொடியணிவிடையர்
கரைகெழுசந்துங்காரகிற்பிளவுமளப்பருங்கனமணிவரன்றிக்
குரைகடலோதநித்திலங்கொழிக்குங்கோணமாமலையமர்ந்தாரே. (க)

கடிதெனவந்தகரிதனையுரித்துவவ்வுரிமேனிமேற்போர்ப்பர்
பிடியனநடையாள்பெய்வளைமடந்தைபிறைநுதலவளொடுமுடனாய்க்
கொடிதெனக்கதறுங்குரைகடல்சூழ்ந்துகொள்ளமுனித்திலஞ்சுமந்து †
குடிதனைநெருங்கிப் ‡ பெருக்கமாய்த்தோன்றுங்கோணமாமலையமர்ந்தாரே. (உ)

பனித்திளந்திங்கட்பைந்தலைநாகம்படர்சடைமுடியிடைவைத்தார்
கனித்திளந்துவர்வாய்க்காரிகைபாகமாகமுன்கலந்தவர்மதின்மேல்
தனித்தபேருருவவிழித்தழனாகந் ¶ தாங்கியமேருவெஞ்சிலையாக்
குனித்ததோர்வில்லார்குரைகடல்சூழ்ந்தகோணமாமலையமர்ந்தாரே. (௩)

பழித்திளங்கங்கைசடையிடைவைத்துப் § பாங்குடைமதனனைப்பொடியா
விழித்தவன்றேவிவேண்டமுன்கொடுத்தவிமலனார்கமலமார்பாதர்
தெழித்துமுன்னரற்றுஞ் 0 செழுங்கடற்றரளஞ்செம்பொனுமிப்பியுஞ்சுமந்து
கொழித்துவன்றிரைகள்கரையிடைச்சேர்க்குங்கோணமாமலையமர்ந்தாரே. (௪)

* திருக்கோணமாமலை என்று பிரதிகளிற்காணப்படுகின்றது; இதனைத் திருக்கணாமலை என வழங்குப. இது தக்ஷிணகைலாசமூன்றனுள் ஒன்று. இதற்குப்பிரமாணம்: செவ்வந்திப்புராணம், திருமலைச்சருக்கம். "வந்து வாயுவும் வந்துவந் தறைந்தனன் வரையை—முந்தி வேரறப் பறித்தனன் கொடுமுடி மூன்றை—அந்த மூன்றையுங் கொடுநமன் றிசையினி லடைவே—சிந்தி னான்றல மூன்றிலே விழுந்தன சிகரம். முன்னர் வீழ்ந்திடு சிகரிகா ளத்தியா மொழிவர்—பின்னர் வீழ்ந்தது திரிசிரா மலையெனும் பிறங்கல்—அன்னதின்பிற கமைந்தது கோணமா வசலம்—இன்ன மூன்றையுந் தக்கிண கயிலையென் றிசைப்பர். வெள்ளி மால்வரை தனினுமன் றிமையவர் விடைகொண்—டுள்ள மானது மகிழ்ந்துதம் முறையுளிற் புகுந்தார்—எள்ளு றாததென் கயிலையா மூவகை யிடத்தும்—வள்ள லார்மலைக் கொழுந்தெனும் வடிவமாய் வளர்ந்தார்." † கொள்ளமுனித்திலஞ்சுமந்து என்றும் பாடம். ‡ குடிதனைநெருக்கி என்றும் பாடம். ¶ விழுத்தழனாகந் என்றும் பாடம். § சடைமுடிவைத்து என்றும் பாடம். 0 முன்னலற்றும் என்றும், முன்னலறும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

தாயினு* நல்லதலைவரென்றடியார்தம்மடிபோற்றிசைப்பார்கள்
வாயினு* மனத்துமருவிநின்றகலாமாண்பினர்காண்பலவேடர்
நோயிலும்* பிணியுந்தொழிலர்பானீக்கி† நுழைதருநூலினர்ஞாலம்
கோயிலுஞ்சுனையுங்கடலுடன்சூழ்ந்தகோணமாமலையமர்ந்தாரே. (௫)

பரிந்துநன்மனத்தால்வழிபடுமாணிதன்னுயிர்மேல்வருங்கூற்றைத்
திரிந்திடாவண்ணமுதைத்தவற்கருளுஞ்செம்மையார்நம்மையாளுடையார்
விரிந்துயர்மௌவன்மாதவிபுன்னைவேங்கைவண்செருந்திசெண்பகத்தின்
குருந்தொடுமுல்லைகொடிவிடும்பொழில்சூழ்கோணமாமலையமர்ந்தாரே. (௬)

எடுத்தவன்றருக்கையிழித்தவர்விரலாலேத்திடவாத்தமாம்பேறு
தொடுத்தவர்செல்வந்‡ தோன்றியபிறப்புமிறப்பறியாதவர்வேள்வி
தடுத்தவர்வனப்பால்வைத்ததோர்கருணைதன்னருட்பெருமையும்வாழ்வும்
கொடுத்தவர்விரும்பும்பெரும்புகழாளர்கோணமாமலையமர்ந்தாரே. (௮)

அருவராதொருகைவெண்டலையேந்தியகந்தொறும்பலியுடன்புக்க
பெருவராயுறையுநீர்மையர்சீர்மைப்பெருங்கடல்வண்ணனும்பிரமன்
இருவருமறியாவண்ணமொள்ளெரியாயுயர்ந்தவர்பெயர்ந்தநன்மாற்கும்
குருவாய்நின்றார்குரைகழல்வணங்கக்கோணமாமலையமர்ந்தாரே. (௯)

நின்றுணுஞ்சமணுமிருந்துணுந்தேரு¶ நெறியலாதனபுறங்கூற
வென்றுநஞ்சுண்ணும்பரிசினரொருபான்மெல்லியலொடுமுடனாகித்
துன்றுமொண்பௌவமவ்வலுஞ்சூழ்ந்துதாழ்ந்துறுதிரைபலமோதிக்
குன்றுமொண்கானல்வாசம்வந்துலவுங்கோணமாமலையமர்ந்தாரே. (௧௦)

குற்றமிலாதார்குரைகடல்சூழ்ந்தகோணமாமலையமர்ந்தாரைக்
கற்றுணர்கேள்விக்காழியர்பெருமான்கருத்துடைஞானசம்பந்தன் §
உற்றசெந்தமிழார்மாலையீரைந்துமுரைப்பவர்கேட்பவருயர்ந்தோர்
சுற்றமுமாகித்தொல்வினையடையார்தோன்றுவர்வானிடைப்பொலிந்தே. ೦ ()

திருச்சிற்றம்பலம்.

திருக்கோணமலைத்திருப்பதிகம் - க.

சுவாமி தேவி திருநாமங்கள் - கோணேசரர், மாதுமையாள்.

* * * தாயிலும், வாயிலும், நோயிலும் என்றும் பாடம். † தொழிலர்பானீங்கி என்றும் பாடம். ‡ கொடுத்தவர்செல்வந் எறன்ம் பாடம். ¶ தோரும் என்று சிலபிரதிகளிற் காணப்படும் பாடம் விளக்கோதலால் அது பாடமன்மையுணர்க. § கருத்துடன்ஞானசம்பந்தன் என்றும் பாடம். ೦ இத்திருப்பதிகத்தில் எ-வது செய்யுள்மறைந்துபோயிற்று.

Koviloor Digital Library

உ. திருக்கேதீச்சரம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

விருதுகுன்றமாமேருவினாணரவாவனலெரியம்பாப் *
பொருதுமூவெயில் † செற்றவன்பற்றிநின்றுறைபதியெந்நாளும்
கருதுகின்றவூர்கனைகடற்கடிகமழ்பொழிலணிமாதோட்டம்
கருதநின்ற ‡ கேதீச்சரங்கைதொழக்கடுவினையடையாவே. (க)

பாடல்வீணையர்பலபலசரிதையரெருதுகைத்தருநட்டம்
ஆடல்பேணுவரமரர்கள்வேண்டநஞ்சுண்டிருள்கண்டத்தர்
ஈட ¶ மாவதுவிருங்கடற்கரையினிலெழிறிகழ்மாதோட்டம்
கேடிலாதகேதீச்சரந்தொழுதெழக் § கெடுமிடர்வினைதானே. (உ)

பெண்ணொர்பாகத்தர்பிறைதவழ்சடையினரறைகழல்சிலம்பார்க்கச்
சுண்ணமாதரித்தாடுவர்பாடுவரகந்தொறுமிடுபிச்சைக்
குண்ணலாவதோரிச்சையினுழல்பவருயர்தருமாதோட்டத்
தண்ணனண்ணுகேதீச்சரமடைபவர்க்கருவினையடையாவே. (௩)

பொடிகொண்மேனியர்புலியதளரையினர்விரிதருகரத்தேந்தும்
வடிகொண்மூவிலைவேலினர்நூலினர்மறிகடன் ○ மாதோட்டத்
தடிகளாதரித்திருந்தகேதீச்சரம்பரிந்தசிந்தையராகி
முடிகள்சாய்த்தடிபேணவல்லார்தம்மேன்மொய்த்தெழும்வினைபோமே. (௪)

நல்லராற்றவுஞானநன்குடையர்தம்மடைந்தவர்க்கருளீய
வல்லர்பார்மிசைவான்பிறப்பிறப்பிலர்மலிகடன்மாதோட்டத்
தெல்லையில்புகழெந்தைகேதீச்சரமிராப்பகனினைந்தேத்தி
அல்லலாசறுத்தரனடியிணைதொழுமன்பராமடியாரே. (௫)

பேழைவார்சடைப்பெருந்திருமகடனைப்பொருந்தவைத்தொருபாகம்
மாழையங்கயற்கண்ணிபாலருளியபொருளினர்குடிவாழ்க்கை
வாழையம்பொழின்மந்திகள்களிப்புறமருவியமாதோட்டக் **
கேழல்வெண்மருப்பணிந்தநீண்மார்பர்கேதீச்சரம்பிரியாரே. (௬)

பண்டுநால்வருக்கறமுரைத்தருளிப்பல்லுலகினிலுயிர்வாழ்க்கை
கண்டநாதனார்கடலிடங்கைதொழக்காதலித்துறைகோயில்
வண்டுபண்செயுமாமலர்ப்பொழின்மஞ்ஞைநடமிடுமாதோட்டம்
தொண்டர்நாடொறுந்துதிசெயவருள்செய்கேதீச்சரமதுதானே. (௭)

* லெரியம்பால் என்றும் பாடம். † பொருதமூவெயில் என்றும் பாடம். ‡ கருதிநின்ற என்றும் பாடம். ¶ இடம் ஈடம் என நீட்டல் விகாரம் பெற்றது. § கேதீச்சரங்கைதொழக் என்றும்பாடம். ○ மலிகடல் என்றும் பாடம். ** மாதோட்டம் என்றும் பாடம்.

Koviloor Digital Library

தென்னிலங்கையர்குலபதிமலைநலிந்தெடுத்தவன்முடிதிண்டோள்
தன்னலங்கெடவடர்த்தவற்கருள்செய்ததலைவனூர்கடல்வாயப்
பொன்னிலங்கியமுத்துமாமணிகளும்பொருந்தியமாதோட்டத்
துன்னியன்பொடுமடியவரிறைஞ்சுகேதிச்சரத்துள்ளாரே. (அ)

பூவுளானுமப்பொருகடல்வண்ணனும்புவியிடந்தெழுந்தோடி
மேவிநாடிநுன்னடியிணைகாண்கிலா* வித்தகமென்னாகும்
மாவும்பூகமுங்கதலியுநெருங்குமாதோட்டநன்னகர்மன்னித்
தேவிதன்னொடுந்திருந்து † கேதிச்சரத்திருந்தவெம்பெருமானே. (௯)

புத்தராய்ச்சிலபுனைதுகிலுடையவர்புறனுரைச்சமணாதர்
எத்தராகிநின்றுண்பவரியம்பியவேழைமைகேளேன்மின் ‡
மத்தயானையைமறுகிடவுரிசெய்துபோர்த்தவர்மாதோட்டத்
தத்தர்மன்னுபாலாவியின்கரையிற்கேதிச்சரமடைமின்னே. (௧௦)

மாடெலாமணமுரசெனக்கடலினதொலிகவர்மாதோட்டத்
தாடலேறுடையண்ணல்கேதிச்சரத்தடிகளையணிகாழி
நாடுளார்க்கிறைஞானசம்பந்தன்சொனவின்றெழுபாமாலைப்
பாட ¶ லாயினபாடுமின்பத்தர்கள்பரகதிபெறலாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

நத்தார்புடைஞானன் § பசுவேறிநனைகவிழ்வாய்
மத்தம்மதயானையுரிபோர்த்தமழுவாளன் 0
பத் ** தாகியதொண்டர்தொழுபாலாவியின்கரைமேல்
செத்தாரெலும்பணிவான்றிருக்கேதிச்சரத்தானே. (௧)

சுடுவார்பொடிநீறுநல †† துண்டப்பிறைக்கீளும்
கடமார்களியானையுரியணிந்தகறைக்கண்டன்
படவேரிடைமடவாளொடுபாலாவியின்கரைமேல்
திடமாவுறைகின்றான்றிருக்கேதிச்சரத்தானே. (௨)

அங்கம்மொழியன்னாவரமர்தொழுதேத்த
வங்கம்மலிகின்றகடன்மாதோட்டநன்னகரில்
பங்கஞ்செய்தபிறைசூடினன்பாலாவியின்கரைமேல்
செங்கண்ணர ‡‡ வசைத்தான்றிருக்கேதிச்சரத்தானே. (௩)

* நின்னடியிணைகாண்கிலார் என்றும் பாடம். † தன்னொடுதிருந்து என்றும் பாடம். ‡ கேளன்மின் என்றும் பாடம். ¶ மாலை—பாடல் என்றும் பாடம். § நத்தார்புடைஞானன் - விட்டுணுமூர்த்தியைப் பாகத்திற்கொண்ட ஞானசொரூபி; நத்தார்படைஞானன் என்றும் பாடம். 0 மணவாளன் என்றும் பாடம். ** பற்று எதுகை நோக்கிப் பத்தெனப்பட்டது. †† நீறுநல்ல என்றும் பாடம். ‡‡ திங்கண்ணரவு என்றும் பாடம்; தீங்கு அண் அரவு எனப் பிரிக்க; தீங்கு தீங்கெனக் குறுக்கல்.

Koviloor Digital Library

கரியகறைக்கண்டன்னல* கண்மேலொருகண்ணன்
வரியசிறைவண்டியாழ்செயுமாதோட்டநன்னகருள்
பரியதிரையெறியாவருபாலாவியின்கரைமேல்
தெரியும்மறைவல்லான் † திருக்கேதீச்சரத்தானே. (௪)

அங்கத்துறுநோய்கள்ளடியார்மேலொழித்தருளி
வங்கம்மலிகின்றகடன்மாதோட்டநன்னகரில்
பங்கஞ்செய்தமடவாளொடுபாலாவியின்கரைமேல்
தெங்கம்பொழில்சூழ்ந்ததிருக்கேதீச்சரத்தானே. (௫)

வெய்யவினையாயவ்வடியார்மேலொழித்தருளி
வையமலிகின்றகடன்மாதோட்டநன்னகரில்
பையேரிடைமடவாளொடுபாலாவியின்கரைமேல்
செய்யசடைமுடியான்றிருக்கேதீச்சரத்தானே. (௬)

ஊனத்துறுநோய்கள்ளடியார்மேலொழித்தருளி
வானத்துறுமலியுங்கடன்மாதோட்டநன்னகரில்
பானத்துறு ‡ மொழியாளொடுபாலாவியின்கரைமேல்
ஏனத்தெயிறணிந்தான்றிருக்கேதீச்சரத்தானே. (௭)

அட்டன்னழகாகவ்வரைதன்மேலரவார்த்து
மட்டுண்டுவண்டாலும்பொழின்மாதோட்டநன்னகரில்
பட்டவ்வரிநுதலாளொடுபாலாவியின்கரைமேல்
சிட்டன்னமையாள்வான்றிருக்கேதீச்சரத்தானே. (௮)

மூவரெனவிருவரெனமுக்கண்ணுடைமூர்த்தி
மாவின்கனிதூங்கும்பொழின்மாதோட்டநன்னகரில்
பாவம்வினையறுப்பார்பயில்பாலாவியின்கரைமேல்
தேவன்னெனையாள்வான்றிருக்கேதீச்சரத்தானே. (௯)

கறைபார்கடல்சூழ்ந்தகழிமாதோட்டநன்னகருள்
சிறையார்பொழில்வண்டியாழ்செயுங்கேதீச்சரத்தானை
மறையார்புகழூரன்னடித்தொண்டன்னுரைசெய்த
குறையாத்தமிழ்பத்துஞ்சொலக்கூடாகொடுவினையே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருக்கேதீச்சரத்திருப்பதிகம்-உ.

ஆ திருப்பதிகம் - ௩.

சுவாமி தேவி திருநாமங்கள் – கேதீச்சுரர், கௌரியம்மை.

ஈழநாட்டிலுள்ள தலங்கள் முற்றுப்பெற்றன.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரும், சுந்தரமூர்த்திநாயனாரும் இராமேச்சுரத்துக்கு எழுந்தருளியபோது, அங்கிருந்துகொண்டே, ஈழநாட்டில் உள்ள திருக்கோணமலை, திருக்கேதீச்சரம் என்னுந் தலங்களை வணங்கி, திருப்பதிகங்கள் பாடியருளினார்கள்.

* கண்டனல்ல என்றும் பாடம். † மறைவல்லார் என்றும் பாடம். ‡ பானுத்துறு என்றும் பாடம்.

Koviloor Digital Library

பாண்டிநாட்டில் உள்ள தலங்கள்.

க. திருவாலவாய். *

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

திருவிருக்குக்குறள். பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

நீலமாமிடற்
றாலவாயிலான்
பாலதாயினார்
ஞாலமாள்வரே. (க)

ஞாலமேழுமாம்
ஆலவாயிலார்
சீலமேசொலீர்
காலன்வீடவே. (உ)

ஆலநீழலார்
ஆலவாயிலார்
காலகாலனார்
பாலதாமினே. (௩)

அந்தமில்புகழ்
எந்தையாலவாய்
பந்தியார்கழல்
சிந்தைசெய்ம்மினே. (௪)

ஆடலேற்றினான்
கூடலாலவாய்
பாடியேமனம்
நாடிவாழ்மினே. (௫)

அண்ணலாலவாய்
நண்ணினான்றனை
எண்ணியேதொழத்
திண்ணமின்பமே. (௬)

அம்பொனாலவாய்
நம்பனார்கழல்
நம்பி † வாழ்பவர்
துன்பம்வீடுமே. (௭)

அரக்கனார்வலி ‡
நெருக்கனாலவாய்
உரைக்குமுள்ளத்தார்க்
கிரக்கமுண்மையே. (௮)

அருவனாலவாய்
மருவினான்றனை
இருவரேத்தநின்
றுருவமோங்குமே. (௯)

ஆரநாகமாம்
சீரனாலவாய்த்
தேரமண்செற்ற
வீரனென்பரே. (௧௦)

அடிகளாலவாய்ப்
படிகொள்சம்பந்தன்
முடிவிலின்றமிழ்
செடிகணீக்குமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

* திருவாலவாய்—மதுரை. † நம்பல் - விரும்பல்; அது "நம்பு மேவு நசையா கும்மே" என்னுஞ் சூத்திரத்தாலறிக; விசுவசித்தலுமாம். ‡ அரக்கனுள்வலி என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருநீற்றுப்பதிகம்.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

மந்திரமாவதுநீறுவானவர்மேலதுநீறு
சுந்தரமாவதுநீறுதுதிக்கப்படுவதுநீறு
தந்திரமாவதுநீறுசமயத்திலுள்ளதுநீறு
செந்துவர்வாயுமைபங்கன்றிருவாலவாயான்றிருநீறே. (க)

வேதத்திலுள்ளதுநீறுவெந்துயர்தீர்ப்பதுநீறு
போதந்தருவதுநீறுபுன்மைதவிர்ப்பதுநீறு
ஓதத்தகுவதுநீறுவுண்மையிலுள்ளதுநீறு
சீதப்புனல்வயல்சூழ்ந்ததிருவாலவாயான்றிருநீறே. (உ)

முத்திதருவதுநீறுமுனிவரணிவதுநீறு
சத்தியமாவதுநீறு* தக்கோர்புகழ்வதுநீறு
பத்திதருவதுநீறுபரவவினியதுநீறு
சித்திதருவதுநீறுதிருவாலவாயான்றிருநீறே. (ங)

காணவினியதுநீறுகவினைத்தருவதுநீறு
பேணியணிபவர்க்கெல்லாம்பெருமைகொடுப்பதுநீறு
மாணந்தகைவதுநீறுமதியைத்தருவதுநீறு
சேணந்தருவதுநீறுதிருவாலவாயான்றிருநீறே. (ச)

பூசவினியதுநீறுபுண்ணியமாவதுநீறு
பேசவினியதுநீறுபெருந்தவத்தோர்களுக்கெல்லாம்
ஆசைகெடுப்பதுநீறுவந்தமதாவதுநீறு
தேசம்புகழ்வதுநீறுதிருவாலவாயான்றிருநீறே. (ரு)

அருத்தமதாவதுநீறுவவலமறுப்பதுநீறு
வருத்தந்தணிப்பதுநீறுவானமளிப்பதுநீறு
பொருத்தமதாவதுநீறுபுண்ணியர்பூசும்வெண்ணீறு
திருத்தகுமாளிகைசூழ்ந்ததிருவாலவாயான்றிருநீறே. (சு)

எயிலதுவட்டதுநீறுவிருமைக்குமுள்ளதுநீறு
பயிலப்படுவதுநீறுபாக்கியமாவதுநீறு
துயிலைத்தடுப்பதுநீறுசுத்தமதாவதுநீறு
அயிலைப்பொலிதருசூலத்தாலவாயான்றிருநீறே. (எ)

இராவணன்மேலதுநீறுவெண்ணத்தகுவதுநீறு
பராவணமாவதுநீறுபாவமறுப்பதுநீறு
தராவணமாவதுநீறுதத்துவமாவதுநீறு
அராவணங்குந்திருமேனியாலவாயான்றிருநீறே. (அ)

* சத்தியுமாவது நீறு என்றும் பாடம்; இங்கே "நீற்றுப் பதிக நிகழ்த்துங் காலை— மாற்றுப் பரையின் வரலா ருகும்" என்னும் அபியுக்தர்வாக்குச்சிந்திக்கற்பாலது.

Koviloor Digital Library

மாலொடயனறியாதவண்ணமுமுள்ளதுநீறு
மேலுறைதேவர்கடங்கண்மெய்யதுவெண்பொடிநீறு
ஏலவுடம்பிடர்தீர்க்குமின்பந்தருவதுநீறு
ஆலமதுண்ட*மிடற்றெம்மாலவாயான்றிருநீறே. (௯)

குண்டிகைக்கையர்களோடுசாக்கியர்கூட்டமுங்கூடக்†
கண்டிகைப்பிப்பதுநீறுகருதவினியதுநீறு
எண்டிசைப்பட்டபொருளாரேத்துந்தகையதுநீறு
அண்டத்தவர்பணிந்தேத்துமாலவாயான்றிருநீறே. (௧௦)

ஆற்றலடல்விடையேறுமாலவாயான்றிருநீற்றைப்
போற்றிப்புகலிநிலாவும்பூசுரன்ஞானசம்பந்தன்
தேற்றித்தென்னனுடலுற்றதீப்பிணியாயினதீரச்
சாற்றியபாடல்கள்பத்தும்வல்லவர்நல்லவர்தாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

மதுரைத்திருப்பதியில் பாண்டியன் திருஞானசம்பந்தப்பிள்ளையாரையும் சமணர்களையும் நோக்கி, என்னுடைய வெப்புநோயைத் தீர்த்தவர் எவரோ அவரே வாதில்வென்றவர் என்று சொல்ல, சமணர்கள் நாங்கள் இடப்பாகத்து நோயைத்தீர்ப்போம், அவர் வலப்பாகத்து நோயைத் தீர்க்கக்கடவர் என்று சொல்லி, அரசனுடைய இடப்பாகத்தைப் பீலியினாலே தடவினார்கள். அதனால் வெப்புநோய்வளர, பாண்டியன் அதைப் பொறுக்கலாற்றாதவனாகி, பிள்ளையாரைநோக்க, பிள்ளையார் "மந்திரமாவதுநீறு" என்னுந் திருநீற்றுத்திருப்பதிகத்தைப் பாடி, அவனுடைய வலப்பாகத்தை விபூதிகொண்டு திருக்கரத்தினாலே தடவியருள அவ்வலப்பாகத்து வெப்புநோய் நீங்கிற்று. இடப்பாகத்து வெப்புநோய் முன்னையிலும் மிகுந்து பொங்க, பாண்டியன் சமணர்களை விட்டுப் பிள்ளையாரை நோக்கி, இடப்பாகத்து வெப்பையும் தேவரீரே நீக்கியருளும் என்று மனசினால் வணங்கிப் பிரார்த்தித்தான். பிள்ளையார் இடப்பாகத்தையும் விபூதிகொண்டு தடவியருளப் பாண்டியன் வெப்புநோய் முழுதும் நீங்கி உய்ந்தான்.

பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

மானினேர்விழிமாதராய்வழுதிக்குமாபெருந்தேவிகேள்
பானல்வாயொருபாலனிங்கிவனென்றுநீபரிவெய்திடேல்
ஆனைமாமலையாதியாயவிடங்களிற்பலவல்லல்சேர்
ஈனர்கட்‡கெளியேனலேன்திருவாலவாயரனிற்கவே. (௧)

ஆகமத்தொடுமந்திரங்களமைந்த¶சங்கதபங்கமாப்
பாகதத்தொடிரைத்துரைத்தசனங்கள்வெட்குறுபக்கமா
மாகதக்கரிபோற்றிரிந்துபுரிந்துநின்றுணுமாசுசேர்
ஆகதர்க்கெளியேனலேன்திருவாலவாயரனிற்கவே. (௨)

* ஆலமுதுண்ட என்றும் பாடம். † கூடாக் என்றும் பாடம். ‡ தீனர்கட் என்றும், தீனர்க் என்றும் பாடம். ¶ அமைத்த என்றும் பாடம்.

Koviloor Digital Library

அத்தகுபொருளுண்டுமில்லையுமென்றுநின்றவர்க்கச்சமா
ஒத்தொவ்வாமைமொழிந்துவாதிலழிந்தெழுந்தகவிப்பெயர்ச்
சத்திரத்தின்மடிந்தொடிந்துசனங்கள்வெட்குறநக்கமே
சித்திரர்க்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (௩)

சந்துசேனனுமிந்துசேனனுந்தருமசேனனுங்கருமைசேர்
கந்துசேன* னுங்கனகசேனனுமுதலதாகியபெயர்கொளா
மந்திபோற்றிரிந்தாரியத்தொடுசெந்தமிழ்ப்பயனறிகிலா
அந்தகர்க்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (௪)

கூட்டினூர்கிளியின்விருத்தமுரைத்ததோரொலியின்றொழிற்
பாட்டுமெய்சொலிப்பக்கமேசெலுமெக்கர்தங்களைப்பல்லறம்
காட்டியேவருமாடலாங்கவர்கையரைக்கசிவொன்றிலாச்
சேட்டைகட்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (௫)

கனகநந்தியும்புட்பநந்தியும்பவணநந்தியுங்குமணமா
சுனகநந்தியுங்குனகநந்தியுந்திவணநந்தியுமொழிகொளா
அனகநந்தியர்மதுவொழிந்தவமேதவம்புரிவோமெனும்
சினகருக்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (௬)

பந்தணம்மவையொன்றிலம்பரிவொன்றிலம்மெனவாசக
மந்தணம் † பலபேசிமாசறுசீர்மையின்றியநாயமே
அந்தணம்மருகந்தணம்மதுபுத்தணம்மதுசித்தணச்
சிந்தணர்க்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (௭)

மேலெனக்கெதிரில்லையென்றவரக்கனூர்மிகைசெற்றதீப்
போலியைப்பணியக்கிலாதொருபொய்த்தவங்கொடுகுண்டிகை
பீலிகைக்கொடுபாயிடுக்கிநடுக்கியேபிறர்பின்செலும்
சீலிகட்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (௮)

பூமகற்குமரிக்குமோர்வருபுண்ணியன்னடிபோற்றிலார்
சாமவத்தையினூர்கள்போறலையைப்பறித்தொருபொய்த்தவம்
வேமவத்தைசெலுத்திமெய்ப்பொடியட்டிவாய்சகதிக்குநேர்
ஆமவர்க்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (௯)

தங்களுக்குமச்சாக்கியர்க்குந்தரிப்பொணாதநற்சேவடி
எங்களுாயகனைத்தொழிந்திடுக்கேமடுத்தொருபொய்த்தவம் ‡
பொங்குநூல்வழியன்றியேபுலவோர்களைப்பழிக்கும்பொலா
அங்கதர்க்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (௧௦)

எக்காரமமண்கையருக்கெளியேனலேன்றிருவாலவாய்ச்
சொக்கனென்னுளிருக்கவேதுளங்கும்முடித்தென்னன்முன்னிவை
தக்கசீர்ப்புகலிக்குமன்றமிழ்நாதன்ஞானசம்பந்தன்வாய்
ஒக்கவேயுரைசெய்தபத்துமுரைப்பவர்க்கிடரில்லையே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

* கந்திசேனன் என்றும் பாடம். † வாசகம்—மந்தணம் என்று ஒரேட்டிற் பிரித்தெழுதப்பட்டது. ‡ பொய்த்தம என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருஞானசம்பந்தப்பிள்ளையார், மதுரைத்திருப்பதியில் பாண்டியனுடைய வெப்பு நோயைத்தீர்க்க எழுந்தருளியிருந்தபோது, சமீபத்திலிருந்த சமணர்கள் பொருமைகொண்டு கோபாக்கினி சொலிக்கக் கண்கள்சிவந்து, அவரை வாதினால் வெல்லக்கருதி, தங்கள் சமயநூல்களை எடுத்துச்சொல்லிக் குரைத்தார்கள். பாண்டிமாதேவியார் அதுகண்டு பொருராகி, மனநடுங்கி, பாண்டியனைநோக்கி, சுவாமிகள் சிறு பாலர். இச்சமணர்களோ எண்ணில்லாதவர்கள். என்பிராணநாயகரே! எம்பெருமானர் உம்முடையநோயை நீங்கியருளியபின் இச்சமணர்கள் பேசவல்லவராயிற் பேசக்கடவர்கள் என்ருர். அப்போது பிள்ளையார் பாண்டிமாதேவியாரை நோக்கி, மாதேவியே, என்னை நீ பாலன் என்று அஞ்சவேண்டாம், திருவாலவாயரன் நிற்க நான் சமணர்களுக்கு எளியேனல்லேன், என்னுங் கருத்தினையுடைய "மானினேர்விழிமாதராய்" என்னுந் திருப்பதிகத்தைப் பாடியருளினர்.

பண் - கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

காட்டுமாவதுரித்துரிபோர்த்துடல்
நாட்டமூன்றுடையாயுரைசெய்வனன்
வேட்டுவேள்விசெய்பாவமண்கையரை
ஓட்டிவாதுசெயத் * திருவுள்ளமே. (க)

மத்தயானையினீருரிமூடிய
அத்தனேயணியாலவாயாய்பணி
பொய்த்தவன்றவவேடத்தாஞ்சமண்
சித்த † ரையழிக்கத்திருவுள்ளமே. (உ)

மண்ணகத்திலும்வானிலுமெங்குமாம் ‡
திண்ணகத்திருவாலவாயாயருள்
பெண்ணகத்தெழிற்சாக்கியப்பேயமண்
தெண்ணர்கற்பழிக்கத்திருவுள்ளமே. (ங)

ஓதிபோத்தறியாவமணுதரை
வாதில்வென்றழிக்கத்திருவுள்ளமே
ஆதியேதிருவாலவாயண்ணலே
நீதியாகநினைந்தருள்செய்திடே. (ச)

வையமார்புகழாயடியார்தொழும்
செய்கையார்திருவாலவாய்செப்பாய்
கையிலுண்டுழலுமமண்கையரைப்
பையவாதுசெயத்திருவுள்ளமே. (ரு)

நாறுசேர்வயற்றண்டலைமிண்டிய
தேறலார்திருவாலவாயாய்செப்பாய்
வீறிலாத்தவமோட்டமண்வேடரைச்
சீறிவாதுசெயத்திருவுள்ளமே. (சூ)

* செய்ய என்றும் பாடம். † சமண்-சித்தர் - சமணசமயமே மெய்ச்சமயம் என்னுஞ் சித்தத்தையுடையோர்; சமணருட் சித்திபெற்ருேர், சமணராகிய சித்தியினையுடையோர் என்றலுமாம். ‡ மண்ணகத்திலும் வானிலுமெங்குமாம் என்றும் பாடம்.

Koviloor Digital Library

பண்டடித்தவத்தார்பயில்வாற்றொழும்
தொண்டருக்கெளியாய்திருவாலவாய்
அண்டனேயமண்கையரை * வாதினில்
செண்டடித்துளறத் † திருவுள்ளமே. (௭)

அரக்கன்ருன்கிரியேற்றவன்றன்முடிச்
செருக்கினைத்தவிர்த்தாய்திருவாலவாய்ப்
பரக்குமாண்புடையாயமண்பாவரைக்
காக்கவாதுசெயத்திருவுள்ளமே. (அ)

மாலுநான்முகனும்மறியாநெறி
ஆலவாயுறையும்மண்ணலேபணி
மேலைவீடுணராவெற்றரையரைச்
சாலவாதுசெயத்திருவுள்ளமே. (௯)

கழிக்கரைப்படுமீன்கவர்வாரமண்
அழிப்பரையழிக்கத்திருவுள்ளமே
தெழிக்கும்பூம்புனல்சூழ்திருவாலவாய்
மழுப்படையுடைமைந்தனேநல்கிடே. (௧0)

செந்தெனு ‡ முரலுந்திருவாலவாய்
மைந்தனேயென்றுவல்லமனுசரறச்
சந்தமார்தமிழ்கேட்டமெய்ஞ்ஞானசம்
பந்தன்சொற்பகரும்பழிநீங்கவே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தப்பிள்ளையார் சமணர்களை வாதுசெய்து வெல்லுதற்குச் சொக்கலிங்கப் பெருமானுடைய திருவுள்ளத்தை அறியும்பொருட்டு, மடாலயத்தினின்றும் நீங்கி, திருக்கூட்டத்துடன் திருவாலவாயிற்புகுந்து, "காட்டுமாவதுரித்து" என்னுந் திருப்பதிகம் பாடி, சிவபிரானுடைய திருவுள்ளத்தை அறிந்தருளினர்.

பண் - கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

செய்யனேதிருவாலவாய்மேவிய
ஐயனேயஞ்சலென்றருள்செய்யெனைப்
பொய்யராமமணர்கொளுவுஞ்சுடர்
பையவேசென்றுபாண்டியற்காகவே. (௧)

சித்தனேதிருவாலவாய்மேவிய
அத்தனேயஞ்சலென்றருள்செய்யெனை
எத்தராமமணர்கொளுவுஞ்சுடர்
பத்திமன்றென்னன்பாண்டியற்காகவே. (௨)

* யமண்கள்ளரை என்றும் பாடம். † துழற என்றும் பாடம். ‡ செந்தனு என்றும் பாடம்.

Koviloor Digital Library

தக்கன்வேள்விதகர்த்தருளாலவாய்ச்
சொக்கனேயஞ்சலென்றருள்செய்யெனை
எக்கராமமணர்கொளுவுஞ்சுடர்
பக்கமேசென்றுபாண்டியற்காகவே. (ந)

சிட்டனேதிருவாலவாய்மேவிய
அட்டமூர்த்தியனேயஞ்சலென்றருள்
துட்டராமமணர்கொளுவுஞ்சுடர்
பட்டிமன் * றென்னன்பாண்டியற்காகவே. (ச)

நண்ணலார்புரமூன்றெரியாலவாய்
அண்ணலேயஞ்சலென்றருள்செய்யெனை
எண்ணிலாவமணர்கொளுவுஞ்சுடர்
பண்ணியற்றமிழ்ப்பாண்டியற்காகவே. (ரு)

தஞ்சமென்றுன்சரண்புகுந்தேனையும்
அஞ்சலென்றருளாலவாயண்ணலே
வஞ்சஞ்செய்தமணர்கொளுவுஞ்சுடர்
பஞ்சவன்றென்னன்பாண்டியற்காகவே. (சு)

செங்கண்வெள்விடையாய்திருவாலவாய்
அங்கணாவஞ்சலென்றருள்செய்யெனைக்
கங்குலாரமண்கையரிடுங்கனல் †
பங்கமிறென்னன்பாண்டியற்காகவே. (எ)

தூர்த்தன்வீரந்தொலைத்தருளாலவாய்
ஆத்தனே ‡ யஞ்சலென்றருள்செய்யெனை
ஏத்திலாவமணர்கொளுவுஞ்சுடர்
பார்த்திவன்றென்னன்பாண்டியற்காகவே. (அ)

தாவிணா ¶ னயன்றானறியாவகை
மேவினாய்திருவாலவாயாயருள்
தூவிலாவமணர்கொளுவுஞ்சுடர்
பாவினான்றென்னன்பாண்டியற்காகவே. (கூ)

எண்டிசைக்கெழிலாலவாய்மேவிய
அண்டனேயஞ்சலென்றருள்செய்யெனைக்
குண்டராமமணர்கொளுவுஞ்சுடர்
பண்டிமன்றென்னன்பாண்டியற்காகவே. (க0)

* பாண்டிமன் பண்டிமன்னெனக் குறுக்கல்விகாரம் பெற்று எதுகை நோக்கிப் பட்டிமன்னெனப்பட்டது; பின்னும் பாண்டிமன் என்பதைப் பண்டிமன் என்பர்; பாண்டிமன், தென்னன், பாண்டியன் என்பன ஒருபொருட் பன்மொழி; "ஒருபொருட் பன்மொழி சிறப்பி னின்வழா" என்பதோத்தாகலின் இங்ஙனம் புணர்த்தோதினர். † கையரிடுமனல் என்றும் பாடம். ‡ ஆர்த்தனே என்றும் பாடம். ¶ தாவினான் - உலகத்தையளந்தவிட்டுணுமூர்த்தி; தாவுதல் ஈண்டு அளத்தல்; "மூந்நியிவ்வையந்தாவியமாலும்" என்பர் திருப்பரங்குன்றத்திருப்பதிகத்துள்ளும்.

Koviloor Digital Library

அப்பனாலவாயாதியருளினால்
வெப்பந்தென்னவன்மேலுறமேதினிக்
கொப்பஞானசம்பந்தனுரைபத்தும்
செப்பவல்லவர்தீதிலாச்செல்வரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

மதுரைத்திருப்பதியிலே திருஞானசம்பந்தப்பிள்ளையார் அடியார்களோடு எழுந்தருளியிருக்கின்ற திருமடத்திலே திருத்தொண்டர்கள் ஓதுகின்ற திருப்பதிக விசையின் பேரொலிசெவிப்புலப்பட, சமணர்கள் அது பொறாராகிப் பாண்டியன் அனுமதியுடன் அத்திருமடத்திலே அக்கினிபற்றும்படி மந்திரஞ் செபித்தார்கள். உயர்வொப்பில்லாத ஸ்ரீபஞ்சாக்கரத்தை ஓதும் அடியாருறையுந் திருமடத்திலே தங்கள்மந்திரசாதனைகள் பலியாமையைக் கண்ட சமணர்கள் மனந்தளர்ந்து,அக்கினியைக்கொண்டுபோய்த் திருமடப்புறச்சுற்றிலே கொளுத்தினார்கள். அதைப்பரிசனத்தவர்கள் பிள்ளையாரிடத்தில் விண்ணப்பஞ்செய்ய, பிள்ளையார் சிவனடியார்களுக்குத் தீங்குவருமோ எனத் திருவுளங்கொண்டு, "செய்யனே திருவாலவாய்" என்னுந் திருப்பதிகத்தைப் பாடியருளினார். உடனே அவ்வக்கினிவெம்மை போய் அத்தீமைக் குக்காரணனாகிய பாண்டியனை அடைந்தது.

திருவிராகம். பண் - கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

வீடலாலவாயிலாய்விழுமியார்கணின்கழல்
பாடலாலவாயிலாய்பரவநின்றபண்பனே
காடலாலவாயிலாய்கபாலிநீள்கடிம்மதில்
கூடலாலவாயிலாய்குலாயதென்னகொள்கையே. (க)

பட்டிசைந்தவல்குலாள்பாவையாளோர்பாகமா *
ஒட்டிசைந்ததன்றியும்முச்சியாளொருத்தியாக் †
கொட்டிசைந்தவாடலாய்கூடலாலவாயிலாய்
எட்டிசைந்தமூர்த்தியாயிருந்தவாறிதென்னையே. (உ)

குற்றநீகுணங்கணீகூடலாலவாயிலாய்
சுற்றநீபிரானுநீதொடர்ந்திலங்குசோதிநீ
கற்றநூற்கருத்துநீயருத்தமின்பமென்றிவை
முற்றுநீபுகழ்ந்துமுன்னுரைப்பதென்முகம்மனே. (ங)

முதிருநீர்ச்சடைமுடிமுதல்வனீமுழங்கழல்
அதிரவீசியாடுவாயழகனீபுயங்கனீ
மதுரனீமணாளனீமதுரையாலவாயிலாய்
சதுரனீசதுர்முகன்கபாலமேந்துசம்புவே. (ச)

கோலமாயநீண்மதிற்கூடலாலவாயிலாய்
பாலனாயதொண்டுசெய்துபண்டுமின்றுமுன்னை ‡யே
நீலமாயகண்டனேநின்னையன்றிநித்தலும்
சீலமாயசிந்தையிற்றேர்வதில்லைதேவரே. (ரு)

* பாகமாய் என்றும் பாடம். † யொருத்தியாய் என்றும் பாடம். ‡ உன்னை - உனக்கு என்க; இரண்டாவது நான்காவதாயிற்று, "யாதனுருபிற் கூறிற்றாயினும்—பொருள் சென்மருங்கின் வேற்றுமைசாரும்" ஆகலான்; பண்டும் இன்றும் உனக்கே தொண்டு செய்து எனக் கூட்டுக; உன்னையே என்னும் ஏகாரத்தை நின்னை என்பதனோடுங் கூட்டிப் பிரிநிலையோடு தேற்றமுமாகக்கொள்க.

Koilogr Digital Library

பொன்றயங்கிலங்கொளிர்நலங்குளிர்ந்தபுன்சடை
பின்றயங்கவாடுவாய்பிஞ்ஞகாபிறப்பிலீ
கொன்றையம்முடியினாய்கூடலாலவாயிலாய்
நின்றயங்கியாடலேநினைப்பதேநியமமே. * (௬)

ஆதியந்தமாயினாயாலவாயிலண்ணலே
சோதியந்தமாயினாய்ச்சோதியுள்ளொர்சோதியாய்
கீதம்வந்தவாய்மையாற்கிளர்தருக்கினார்க்கலால்
ஓதிவந்தவாய்மையா † லுணர்ந்துரைக்கலாகுமே. (௭)

கறையிலங்குகண்டனேகருத்திலாக்கருங்கடற்
றுறையிலங்கைமன்னனைத்தோளடாவூன்றினாய்
மறையிலங்குபாடலாய்மதுரையாலவாயிலாய்
நிறையிலங்குநெஞ்சினானினைப்பதேநியமமே. (௮)

தாவணவ்விடையினாய்தலைமையாகநாடொறும்
கோவணவ்வுடையினாய்கூடலாலவாயிலாய்
நிவணம்மலர்மிசைத்திசைமுகனுமாலுநின்
தூவணம்மளக்கிலார்துளக்கமெய்துவார்களே. (௯)

தேற்றமில்வினைத்தொழிற்றேரருஞ்சமணரும்
போற்றிசைத்துநின் ‡ கழற்புகழ்ந்துபுண்ணியங்கொளார்
கூற்றுதைத்ததாளினாய்கூடலாலவாயிலாய்
நாற்றிசைக்குமூர்த்தியாகிநின்றதென்னநன்மையே. (௧௦)

போயநீர்வளங்கொளும்பொருபுனற்புகலியான்
பாயகேள்விஞானசம்பந்தனல்லபண்பினால்
ஆயசொல்லின்மாலைகொண்டாலவாயிலண்ணலைத்
தீயதீரவெண்ணுவார்கள்சிந்தையாவர்தேவரே. ¶ (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தப்பிள்ளையார் மதுரைத்திருப்பதியிலே சமணசமயத்தைப் பாழாக்கிச் சைவசமயத்தைப்பரப்பியபின் அங்ஙனஞ் செய்தற்கருள்புரிந்த சொக்கலிங்கப்பெருமானைத் தரிசிக்க விரும்பி, பாண்டியராஜரும் மாதேவியாரும் மந்திரியாராகிய குலச்சிறைநாயனாரும் தம்மைத் தோத்திரஞ்செய்துகொண்டு உடன்புகத் திருக்கோயிலினுட் புகுந்து, வலஞ்செய்து சந்நிதானத்தை அடைந்து, சொக்கலிங்கப்பெருமானை வணங்கி, "வீடலாலவாயிலாய்" என்னுந் திருப்பதிகம் பாடியருளினார்.

* நின்றியங்கியாடலே நினைப்பதென்னியமமே என்றும் பாடம். † ஓதிவந்தவாய்மையால் எனவே பாசஞானம் என்றவாறாயிற்று; அதனாலுணர்ந்துரைக்கலாகாமை, "பாசஞானத்தாலும் பசுஞானத்தாலும் பார்ப்பரிய பரம்பரனை" என்னுஞ் சிவஞானசித்தித்திருவிருத்தத்தானு மறிக. ‡ போற்றிசெய்துநின் என்றும் பாடம். ¶ சிந்தையார்வர்தேவரே என்றும் பாடம்; தேவர் - சிவபெருமான்; "செய்யுந்தேவே" என்புழித் தேவென்பது மது.

Koviloor Digital Library

நாலடிமேல்வைப்பு. பண் - பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

வேதவேள்வியைநிந்தனைசெய்துழல்
ஆதமில்லியமணொடுதேரரை
வாதில்வென்றழிக்கத்திருவுள்ளமே
பாதிமாதுடனாயபரமனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்
ஆலவாயிலுறையுமெம்மாதியே. (க)

வைதிகத்தின்வழியொழுகாதவக்
கைதவம்முடைக்காரமண்டேரரை
எய்திவாதுசெ * யத்திருவுள்ளமே
மைதிகழ்தருமாமணிகண்டனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்
ஆலவாயிலுறையுமெம்மாதியே. (உ)

மறைவழக்கமிலாதமாபாவிகள்
பறிதலைக்கையர்பாயுடுப்பார்களை
முறியவாதுசெயத்திருவுள்ளமே
மறியுலாங்கையின்மாமழுவாளனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்
ஆலவாயிலுறையுமெம்மாதியே. (௩)

அறுத்தவங்கமாறாயினநீர்மையைக்
கறுத்த † வாழமண்கையர்கடம்மொடும்
செறுத்துவாதுசெயத்திருவுள்ளமே
முறித்தவாண்மதிக்கண்ணிமுதல்வனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்
ஆலவாயிலுறையுமெம்மாதியே. (ச)

அந்தணாளர்புரியுமருமறை
சிந்தைசெய்யாவருகர்திறங்களைச்
சிந்தவாதுசெயத்திருவுள்ளமே
வெந்தநீறதணியும்விகிர்தனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்
ஆலவாயிலுறையுமெம்மாதியே. (ரு)

* எய்தவாதுசெய்ய என்றும் பாடம்; செய்ய என்பதை இத்திருப்பதிகமுற்றுக்குங் கொள்க. † கறுத்து என்றும் பாடம்.

Koviloor Digital Library

வேட்டுவேள்விசெயும்பொருளைவிளி *
மூட்டுசிந்தை † முருட்டமண்குண்டரை
ஓட்டிவாதுசெயத்திருவுள்ளமே
காட்டிலானையுரித்தவெங்கள்வனே

ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்
ஆலவாயிலுறையுமெம்மாதியே. (சா)

அழலதோம்புமருமறையோர்திறம்
விழலதென்னுமருகர்திறத்திறம் ‡
கழலவாதுசெயத்திருவுள்ளமே
தழலிலங்குதிருவுருச்சைவனே.

ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்
ஆலவாயிலுறையுமெம்மாதியே. (எ)

நீற்றுமேனியராயினர்மேலுற்ற
காற்றுக்கொள்ளவுநில்லாவமணரைத்
தேற்றிவாதுசெயத்திருவுள்ளமே
ஆற்றவாளரக்கற்குமருளினாய்

ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்
ஆலவாயிலுறையுமெம்மாதியே. (அ)

நீலமேனியமணர்திறத்துநின்
சீலம்வாதுசெயத்திருவுள்ளமே
மாலுநான்முகனுங்காண்பரியதோர்
கோலமேனியதாகியகுன்றமே

ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்
ஆலவாயிலுறையுமெம்மாதியே. (கூ)

அன்றுமுப்புரஞ்செற்றவழகநின்
துன்றுபொற்கழல்பேணவருகரைத்
தென்றவாதுசெயத்திருவுள்ளமே
கன்றுசாக்கியர்காணாத்தலைவனே

ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்
ஆலவாயிலுறையுமெம்மாதியே. (க0)

கூடலாலவாய்க்கோனைவிடைகொண்டு
வாடன்மேனியமணரைவாட்டிட
மாடக்காழிச்சம்பந்தன்மதித்தவிப்
பாடல்வல்லவர்பாக்கியவாளரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

* வேள்விசெய்யும்பொருளைவிளி என்றும் பாடம். † மூட்டுச்சிந்தை என்றும் பாடம். ‡ மருகர்திறங்களைக் என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருஞானசம்பந்தப்பிள்ளையார் 'காட்டுமாவதுரித்து' என்னுந் திருப்பதிகம் பாடிச் சிவபிரான்றிருவுளக்கருத்தை யறிந்த பின்னர், சமணர்களை வாதில்வென்று அழிக்கும் பொருட்டும், சிவநாமத்தையே பரப்பும் பொருட்டும், "வேதவேள்வியை" என்னுந் திருப்பதிகம் பாடியருளினார்.

திருவியமகம்.

திருச்சிற்றம்பலம்.

ஆலநீழலுகந்ததிருக்கையேயானபாடலுகந்ததிருக்கையே
பாலினேர்மொழியாளொருபங்கனேபாதமோதலர்* சேர்புரபங்கனே
கோலநீறணிமேதகுபூதனேகோதிலார்மனமேவியபூதனே
ஆலநஞ்சமுதுண்டகளத்தனேயாலவாயுறையண்டர்களத்தனே. (க)

பாதியாவுடன்கொண்டதுமாலையேபாம்புதார் † மலர்க்கொன்றைநன்மாலையே
கோதினீறதுபூசிடுமாகனேகொண்டநற்கையின்மானிடமாகனே
நாதனுடொருமாடவதானையேநாடியன்றுரிசெய்ததுமானையே
வேதநூல்பயில்கின்றதுவாயிலேவிகிர்தனூர்திருவாலநல்வாயிலே. (உ)

காடுநீடதுறப்பலகத்தனேகாதலானினைவார்தமகத்தனே ‡
பாடுபேயொடுபூதமசிக்கவேபல்பிணத்தசைநாடியசிக்கவே¶
நீடுமாநடமாடவிருப்பனேநின்னடித்தொழ§நாளுமிருப்பனே
ஆடனீள்சடைமேவியவப்பனேயாலவாயினின்மேவியவப்பனே. (ங)

பண்டயன்றலையொன்றுமறுத்தியேபாதமோதினர்பாவமறுத்தியே
துண்டவெண்பிறைசென்னியிருத்தியேதூயவெள்ளெருதேறியிருத்தியே
கண்டுகாமனைவேவவிழித்தியேகாதலில்லவர்தம்மையிழித்தியே 0
அண்டநாயகனேமிகுகண்டனேயாலவாயினின்மேவியகண்டனே. (ச)

சென்றுதாதையுகுத்தனன்பாலையேசீறியன்புசெகுத்தனன்பாலையே
வென்றிசேர்மழுக்கொண்டுமுன்காலையேவீடவெட்டிடக்கண்டுமுன்காலையே
நின்றமாணியையோடினகங்கையானிலவமல்கியுதித்தனகங்கையால்
அன்றுநின்னுருவாகத்தடவியேயாலவாயரனுகத்தடவியே. (ரு)

நக்கமேகுவர்நாடுமோரூருமே** நாதன்மேனியின்மாசுணமூருமே
தக்கபூமனைச்சுற்றக்கரு†† ளொடேதாரமுய்த்ததுபாணற்கருளொடே
மிக்கதென்னவன்றேவிக்கணியையேமெல்லநல்கியதொண்டர்க்கணியையே
அக்கினூரமுதுண்கலனோடுமே ‡‡ யாலவாயரனூருமையோடுமே. (சு)

வெய்யவன்பல்லுகுத்ததுகுட்டியேவெங்கண்மாசுணங்கையதுகுட்டியே
ஐயனேயனலாடியமெய்யனேயன்பினானினைவார்க்கருண்மெய்யனே
வையமுய்யவன்றுண்டதுகாளமேவள்ளல்கையதுமேவுகங்காளமே
ஐயமேற்பதுரைப்பதுவீணையேயாலவாயரன்கையதுவீணையே. (எ)

* மோதவர் என்றும் பாடம். † பரமர்தார் என்றும், பம்புதார் என்றும் பாடம். ‡தமக்கத்தனே என்றும் பாடம். ¶ நாடிவசிக்கவே என்றும் பாடம். § னடிதொழ என்றும் பாடம். 0 விழித்தியே என்றும்பாடம். ** நாடுமொரேமே என்றும் பாடம். †† மனச்சுற்றக்கரு என்றும், மனைச்சுற்றக்கரு என்றும், மனைசுத்தக்கரு என்றும், மணைசுற்றக் கரு என்றும் பாடம். ‡‡ அக்கினூரமதுண்கலனோடுமே என்றும் பாடம்.

Koviloor Digital Library

தோள்கள்பத்தொடு* பத்துமயக்கியேதொக்கதேவர்செருக்கைமயக்கியே
வாளரக்கனிலத்துக்களித்துமேவந்தமால்வரை † கண்டுகளித்துமே
நீள்பொருப்பையெடுத்தவுன்மத்தனேநின்விரற்றலையான்மதமத்தனே
ஆளுமாதிமுறித்ததுமெய்கொலோவாலவாயரனுய்த்ததுமெய்கொலோ. (அ)

பங்கயத்துளநான்முகன்மாலொடேபாதநீண்முடிநேடிடமாலொடே
துங்கநற்றழலின்னுருவாயுமேதூயபாடல்பயின்றதுவாயுமே
செங்கயற்கணினாரிடுபிச்சையேசென்றுகொண்டுரைசெய்வதுபிச்சையே
அங்கியைத்திகழ்விப்பதிடக்கையேயாலவாயரனாரதிடக்கையே. (கூ)

தோரோடமணர்க்குநல்காலையேதேவர்நாடொறுஞ்சேர்வதுகாலையே
கோரமட்டதுபுண்டரிகத்தையேகொண்டநீள்கழல்புண்டரிகத்தையே
நேரிலூர்களழித்ததுநாகமேநீள்சடைத்திகழ்கின்றது ‡ நாகமே
ஆரமாகவுகந்ததுமென்பதேயாலவாயரனாரிடமென்பதே. (க0)

ஈனஞானிகடம்மொடுவிரகனேயேறுபல்பொருண்முத்தமிழ்விரகனே
ஆனகாழியுண்ஞானசம்பந்தனேயாலவாயினின்மேயசம்பந்தனே
ஆனவானவர்வாயினுளத்தனே ¶ யன்பரானவர்வாயினுளத்தனே ¶
நானுரைத்தனசெந்தமிழ்பத்துமேவல்லவர்க்கிவைநற்றமிழ்பத்துமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தப்பிள்ளையார், மதுரைத்திருப்பதியில் எழுந்தருளியிருந்தபோது, "ஆலநீழலுகந்ததிருக்கையே" என்னும் திருவியமகத் திருப்பதிகம்பாடியருளி, அதிலே, திருநீலகண்டப்பெரும்பாணருக்குச் சிவபிரான் அருளியதிறத்தையும் அமைத்துத் துதித்தருளினார்.

பண் - புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

மங்கையர்க்கரசிவளவர்கோன்பாவைவரிவளைக்கைம்மடமானி
பங்கயச்செல்விபாண்டிமாதேவிபணிசெய்துநாடொறும்பரவப்
பொங்கழலுருவன்பூதநாயகனால்வேதமும்பொருள்களுமருளி
அங்கயற்கண்ணிதன்னொடுமமர்ந்தவாலவாயாவதுமிதுவே. (க)

வெற்றவேயடியாரடிமிசைவீழும்விருப்பினன்வெள்ளைநீறணியும்
கொற்றவன்றனக்குமந்திரியாயகுலச்சிறைகுலாவிநின்றேத்தும்
ஒற்றைவெள்விடையனும்பரார்தலைவனுலகினிலியற்கையையொழிந்திட்
டற்றவர்க்கற்றசிவனுறைகின்றவாலவாயாவதுமிதுவே. (உ)

செந்துவர்வாயாள்சேலனகண்ணாள்சிவன்றிருநீற்றினைவளர்க்கும்
பந்தணைவிரலாள்பாண்டிமாதேவிபணிசெயப்பாரிடைநிலவும் §
சந்தமார்தாளம்பாம்புநீர் 0 மத்தந்தண்ணெருக்கம்மலர்வன்னி
அந்திவான்மதிசேர்சடைமுடியண்ணலாலவாயாவதுமிதுவே. (ஙு)

* பத்தொடும் என்றும் பாடம். † நிலத்துகளித்துமேவந்துமால்வரை என்றும் பாடம். ‡ திகழ்கின்றவும் என்றும், திகழ்கின்றன என்றும் பாடம். ¶¶ வாயிலுளத்தனே என்றும் பாடம். § பாரிடைநிலவும் என்றும் பாடம். 0 பரம்புநீர் எனப்பாடமோதுவாருமுளர்.

Koviloor Digital Library

கணங்களாய்வரினுந்தமியராய்வரினுமடியவர் தங்களைக்கண்டால்
குணங்கொடுபணியுங்குலச்சிறைகுலாவுங் * கோபுரஞ்சூழ்மணிக்கோயில்
மணங்கமழ்கொன்றைவாளராமதியம்வன்னிவண் கூவிளமாலை
அணங்குவீற்றிருந்தசடைமுடியண்ணலாலவாயாவதுமிதுவே. (ச)

செய்யதாமரைமேலன்னமேயனையசேயிழைதிருநுதற்செல்வி
பையரவல்குற்பாண்டிமாதேவிநாடொறும்பணிந்தினிதேத்த
வெய்யவேற்சூலம்பாசமங்குசமான்விரிகதிர்மழுவுடன்றரித்த
ஐயனாருமையோடின்புறுகின்றவாலவாயாவதுமிதுவே. (ரு)

நலமிலாராகநலமதுண்டாகநாடவர்நாடறிகின்ற
குலமிலாராகக்குலமதுண்டாகத்தவம்பணிகுலச்சிறைபரவும்
கலைமலிகரத்தன்மூவிலைவேலன்கரியுரிமூடியகண்டன்
அலைமலிபுனல்சேர்சடைமுடியண்ணலாலவாயாவதுமிதுவே. (சு)

முத்தின்றாழ்வடமுஞ்சந்தனக்குழம்புநீறுந்தன்மார்பினின்முயங்கப்
பத்தியார்கின்றபாண்டிமாதேவிபாங்கொடுபணிசெயநின்ற
சுத்தமார்பளிங்கின்பெருமலையுடனேசுடர்மரகதமடுத்தாற்போல்
அத்தனாருமையோடின்புறுகின்றவாலவாயாவதுமிதுவே. (எ)

நாவணங்கியல்பாமஞ்செழுத்தோதிநல்லராய்நல்லியல்பாகும்
கோவணம்பூதிசாதனங்கண்டாற்றொழுதெழுகுலச்சிறைபோற்ற
ஏவணங்கியல்பாமிராவணன்றிண்டோளிருபதுநெரிதரவூன்றி
ஆவணங்கொண்டசடைமுடியண்ணலாலவாயாவதுமிதுவே. (அ)

மண்ணெலாநிகழமன்னனாய்மன்னுமணிமுடிச்சோழன்றன்மகளாம்
பண்ணினேர்மொழியாள்பாண்டிமாதேவிபாங்கினாற்பணிசெய்துபரவ
விண்ணுளாரிருவர்கீழொடுமேலுமளப்பரிதாம்வகைநின்ற
அண்ணலாருமையோடின்புறுகின்றவாலவாயாவதுமிதுவே. (கூ)

தொண்டராயுள்ளார்திசைதிசைதோறுந்தொழுதுதன்குணத்தினைக்குலாவக்
கண்டுநாடோறுமின்புறுகின்றகுலச்சிறைகருதிநின்றேத்தக்
குண்டராயுள்ளார்சாக்கியர்தங்கள்குறியின்கணெறியிடைவாரா
அண்டநாயகன்றானமர்ந்துவீற்றிருந்தவாலவாயாவதுமிதுவே. (க0)

பன்னலம்புணரும் † பாண்டிமாதேவிகுலச்சிறையெனுமிவர்பணியும்
அந்நலம்பெறுசீராலவாயீசன்றிருவடியாங்கவைபோற்றிக்
கன்னலம்பெரியகாழியுண்ஞானசம்பந்தன்செந்தமிழிவைகொண்
டின்னலம்பாடவல்லவரிமையோரேத்தவீற்றிருப்பவரினிதே. (கக)

திருச்சிற்றம்பலம்.

* குலச்சிறைபரவும் என்றும் பாடம். † பன்னலம் புணர்தலைக் குலச்சிறைக்குங் கூட்டுக.

Koviloor Digital Library

திருஞானசம்பந்தப்பிள்ளையார், மதுரைத்திருப்பதிக்குச் சமீபித்த செய்தியை மங்கையர்க்கரசியார் கேள்வியுற்றுக் குலச்சிறைநாயனாரை நோக்கி நமது தம்பிரானாராகிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரை எதிர்கொள்ளுமென்று ஏவி, தாம் தம்முடைய பரிசனங்கள்சூழ ஆலயத்திற்சென்று சொக்கலிங்கப்பெருமானை நமஸ்கரித்து, பிள்ளையாருடைய நல்வரவை எற்று நின்றார்.

குலச்சிறைநாயனார் அவ்வாறே மதுரைத்திருப்பதிக்குப்புறத்திலேபோய்ப் பிள்ளையாரையெதிர்கொண்டு பாண்டிமாதேவியார் தேவரீர் இங்கெழுந்தருளுதலைக்கேட்டுப் பெருமகிழ்ச்சிகொண்டு, நமது பெருவாழ்வு எழுந்தருளியது, நீர் போய் எதிர்கொண்டு திருவடிபணிவீரென அடியேனை ஏவினாரென்று விண்ணப்பஞ்செய்து, பணிந்து தோத்திரம் பண்ணினார்.

பிள்ளையார் அங்ஙனம் பணிந்து துதித்த குலச்சிறைநாயனாருக்கு அருண்மொழி கூறியருளும்பொழுது, திருவாலவாய்த்திருக் கோபுரம் எதிரே தோன்றக்கண்டு, கைகுவித்து மிகுந்த அன்போடு பூமியின்மேல் விழுந்து நமஸ்கரித்து, "மங்கையர்க்கரசி" என்று எடுத்து, மங்கையர்க்கரசியாரும், குலச்சிறைநாயனாருமாகிய இருவருடைய திருத்தொண்டைச் சிறப்பித்துத் திருப்பாட்டிறுதிதோறும் "ஆலவாயாவது மிதுவே" என்பதை அமைத்துத் திருப்பதிகம்பாடிக்கொண்டே திருவாலவாயை அடைந்தனர்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

வேதியாவேதகீதாவிண்ணவரண்ணாவென்றென்
றோதியேமலர்கடூவியொருங்கிநின்கழல்கள்காணப்
பாதியோர்பெண்ணைவைத்தாய்படர்சடைமதியஞ்சூடும்
ஆதியேயாலவாயிலப்பனேயருள்செயாயே. (௧)

நம்பனேநான்முகத்தாய்நாதனேஞானமூர்த்தீ
என்பொனேயீசாவென்றென்றேத்திநானேசற்றென்றும்
பின்பினேதிரிந்துநாயேன்பேர்த்தினிப்பிறவாவண்ணம்
அன்பனேயாலவாயிலப்பனேயருள்செயாயே. (௨)

ஒருமருந்தாகியுள்ளாயும்பரோடுலகுக்கெல்லாம்
பெருமருந்தாகிநின்றாய்பேரமுதின்சுவையாய்க்
கருமருந்தாகியுள்ளாயாளும்வல்வினைகடீர்க்கும்
அருமருந்தாலவாயிலப்பனேயருள்செயாயே. (௩)

செப்பநின்* கமலபாதஞ்சேருமாதேவர்தேவே
மைபணிகண்டத்தானேமான்மறிமழுவொன்றேந்தும்
சைவனேசாலஞானங்கற்றறிவிலாதநாயேன்
ஐயனேயாலவாயிலப்பனேயருள்செயாயே. (௪)

* செப்பதன் என்றும் பாடம்.

Koviloor Digital Library

வெண்டலைகையிலேந்திமிகவுமூர்பலிகொண்டென்றும்
உண்டதுமில்லைசொல்லிலுண்டதாநஞ்சுதன்னைப்
பண்டுனைநினையமாட்டாப்பளகனேனுளமதார*
அண்டனேயாலவாயிலப்பனேயருள்செயாயே. (௫)

எஞ்சலில்புகலிதென்றென்றேத்திநானேசற்றென்றும்
வஞ்சகமொன்றுமின்றிமலரடிகாணும்வண்ணம்
நஞ்சினைமிடற்றில்வைத்தநற்பொருட்பதமேநாயேற்
கஞ்சலென்றாலவாயிலப்பனேயருள்செயாயே. (௬)

வழுவிலாதுன்னைவாழ்த்திவழிபடுந்தொண்டனேனுன்
செழுமலர்ப்பாதங்காணத்தெண்டிரைநஞ்சமுண்ட
குழகனேகோலவில்லீகூத்தனேமாத்†தாயுள்ள
அகழனேயாலவாயிலப்பனேயருள்செயாயே. (௭)

நறுமலர்நீருங்கொண்டுநாடொறுமேத்திவாழ்த்திச்
செறிவனசித்தம்வைத்துத்திருவடிசேரும்வண்ணம்
மறிகடல்வண்ணன்பாகாமாமறையங்கமாறும்
அறிவனேயாலவாயிலப்பனேயருள்செயாயே. (௮)

நலந்திகழ்வாயினூலாற்சருகிலைப்பந்தர்செய்த
சிலந்தியையரசதாளவருளினையென்றுதிண்ணம்
கலந்துடன்வந்துநின்றாள்கருதிநான்காண்பதாக
அலந்தனனாலவாயிலப்பனேயருள்செயாயே. (௯)

பொடிக்கொடுபூசிப்பொல்லாக்குரம்பையிற்புந்தியொன்றிப்
பிடித்துநின்றாள்க‡ளென்றும்பிதற்றிநானிருக்கமாட்டேன்
எடுப்பனென்றிலங்கைக்கோன்வந்தெடுத்தலுமிருபதுதோள்
அடர்த்தனே¶யாலவாயிலப்பனேயருள்செயாயே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

முளைத்தானையெல்லார்க்குமுன்னேதோன்றி
முதிருஞ்சடைமுடிமேன்முகிழ்வெண்டிங்கள்
வளைத்தானைவல்லசுரர்புரங்கண்மூன்றும்
வரைசிலையாவாசுகிமாநாணாக்கோத்துத்
துளைத்தானைச்சுடுசரத்தாற்றுவளநீறாத்
தூமுத்தவெண்முறுவலுமையோடாடித்
திளைத்தானைத்தென்கூடற்றிருவாலவாய்ச்
சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. (௧)

* பளகனென்னுளமதார என்றும் பாடம்; பளகன் - குற்றமுடையவன். † மாத்து-மகத்து. ‡ பிடிக்கநின்றாள்கள் என்றும் பாடம். ¶ அடர்த்தனை என்றும் பாடம்.

Koviloor Digital Library

விண்ணுலகின்மேலார்கண்மேலான்றன்னை
மேலாடுபுரமூன்றும்பொடிசெய்தானைப்
பண்ணிலவுபைம்பொழில்சூழ்பழனத்தானைப்
பசும்பொன்னினிறத்தானைப்பானீற்றானை
உண்ணிலவுசடைக்கற்றைக்கங்கையானைக்
கரந்து* மையோடுடனாகியிருந்தான்றன்னைத்
தெண்ணிலவுதென்கூடற்றிருவாலவாய்ச்
சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. (௨)

நீர்த்திரளைநீள்சடைமேனிறைவித்தானை
நிலமருவிநீரோடக்கண்டான்றன்னைப்
பாற்றிரளைப்பயின்றாடவல்லான்றன்னைப்
பகைத்தெழுந்த† வெங்கூற்றைப்பாய்ந்தான்றன்னைக்
காற்றிரளாய்மேகத்தினுள்ளேநின்று
கடுங்குரலாயிடிப்பானைக்‡ கண்ணோர்நெற்றித்
தீத்திரளைத்தென்கூடற்றிருவாலவாய்ச்
சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. (௩)

வானமிதுவெல்லாமுடையான்றன்னை
வரியரவக்கச்சானைவன்பேய்சூழக்
கானமதிலடமாடவல்லான்றன்னைக்
கடைக்கண்ணான்மங்கையையுநோக்காவென்மேல்
ஊனமதுவெல்லாமொழித்தான்றன்னை
யுணர்வாகியடியேனதுள்ளேநின்ற
தேனமுதைத்தென்கூடற்றிருவாலவாய்ச்
சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. (௪)

ஊரானையுலகேழாய்நின்றான்றன்னை
பொற்றைவெண்பிறையானையுமையோடென்றும்
பேரானைப்பிறர்க்கென்றுமரியான்றன்னைப்
பிணக்காட்டினடமாடல்பேயோடென்றும்
ஆரானையமரர்களுக்கமுதீந்தானை
யருமறையானான்முகனுமாலும்போற்றும்
சீரானைத்தென்கூடற்றிருவாலவாய்ச்
சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. (௫)

மூவனைமூர்த்தியைமூவாமேனி
யுடையானைமூவுலகுந்தானேயெங்கும்
பாவனைப்பாவமறுப்பான்றன்னைப்
படிபெழுதலாகாதமங்கையோடு

* கங்கையானைக்கலந்து என்றும், கங்கையானைக்கரந்து என்றும் பாடம். † பகைத்தெழுந்த என்றும் பாடம். ‡ குரலாலிடிப்பானை என்றும் பாடம்.

Koviloor Digital Library

மேவனைவிண்ணோர்நடுங்கக்கண்டு
விரிகடலினஞ்சுண்டமுதமீந்த
தேவனைத்தென்கூடற்றிருவாலவாய்ச்
சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. (௬)

துறந்தார்க்குத்தூநெறியாய்* நின்றான்றன்னைத்
துன்பந்துடைத்தாளவல்லான்றன்னை
இறந்தார்களென்பேயணிந்தான்றன்னை
யெல்லிநடமாடவல்லான்றன்னை
மறந்தார்மதின்மூன்றுமாய்த்தான்றன்னை
மற்றொருபற்றில்லாவடியேற்கென்றும் †
சிறந்தானைத்தென்கூடற்றிருவாலவாய்ச்
சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. (எ)

வாயானைமனத்தானைமனத்துணின்ற
கருத்தானைக்கருத்தறிந்துமுடிப்பான்றன்னைத்
தூயானைத்தூவெள்ளையேற்றான்றன்னைச்
சுடர்த்திங்கட்சடையானைத்தொடர்ந்துநின்றென் ‡
தாயானைத்தவமாயதன்மையானைத்
தலையாயதேவாதிதேவர்க்கென்றும்
சேயானைத்தென்கூடற்றிருவாலவாய்ச்
சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. (அ)

பகைச்சுடராய்ப்பாவமறுப்பான்றன்னைப்
பழியிலியாய்நஞ்சுண்டமுதீந்தானை ¶
வகைச்சுடராய்வல்லசுரர்புரமட்டானை
வளைவிலியா § யெல்லார்க்குமருள்செய்வானை
மிகைச்சுடரைவிண்ணவர்கண்மேலப்பாலை 0
மேலாயதேவாதிதேவர்க்கென்றும்
திகைச்சுடரைத்தென்கூடற்றிருவாலவாய்ச்
சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. (௯)

மலையானைமாமேருமன்னினானை
வளர்புன்சடையானைவானோர்தங்கள்
தலையானையென்றலையினுச்சியென்றுந்
தாபித்திருந்தானைத்தானேயெங்கும்
துலையாகவொருவரையுமில்லாதானைத்
தோன்றாதார்மதின்மூன்றுந்துவளவெய்த**
சிலையானைத்தென்கூடற்றிருவாலவாய்ச்
சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. (க0)

* துறந்தார்க்குந்தூநெறியாய் என்றும்பாடம். † வடியார்க்கென்றும் என்றும் பாடம். ‡தொடர்ந்துநின்ற என்று பாடமோதுவாருமுளர். ¶ நஞ்சமுண்டமிர்தீந்தானை என்றும் பாடம். §வளையிலியாய் என்றும் பாடம். 0 மிகைச்சுடராய்விண்ணவர்கண்மேலப்பாலஎன்றும் பாடம். ** துவளப்பெய்தஎன்றும்பாடம்; தூளாவெய்த எனப்பாடமோதுவாருமுளர்.

Koviloor Digital Library

தூர்த்தனைத்தோண்முடிபத்திறுத்தான்றன்னைத்
தொன்னரம்பினின்னிசைகேட்டருள்செய்தானைப்
பார்த்தனைப்பணிகண்டுபரிந்தான்றன்னைப்
பரிந்தவற்குப்பாசுபதமீந்தான்றன்னை
ஆத்தனையடியேனுக்*கன்பன்றன்னை
யளவிலாப்பல்லூழிகண்டுநின்ற
தீர்த்தனைத்தென்கூடற்றிருவாலவாய்ச்
சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவாலவாய்த்திருப்பதிகம் - கக.

சுவாமி தேவி திருநாமங்கள் - சொக்கலிங்கமூர்த்தி, மீனாக்ஷியம்மை.

உ. திருவாப்பனூர்.†

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

முற்றுஞ்சடைமுடிமேன்முதிராவிளம்பிறையன்
ஒற்றைப்படவரவமதுகொண்டரைக்கணிந்தான்
செற்றமில்சீரானைத்திருவாப்பனூரானைப்
பற்றுமனமுடையார்வினைபற்றறுப்பாரே. (க)

குரவங்கமழ்குழலாள்குடிகொண்டுநின்றுவிண்ணோர்
விரவுந்திருமேனிவிளங்கும்வளையெயிற்றின்
அரவமணிந்தானையணியாப்பனூரானைப்
பரவுமனமுடையார்வினைபற்றறுப்பாரே. (உ)

முருகுவிரிகுழலார்மனங்கொளநங்கனைமுன் ‡
பெரிதுமுனிந்துகந்தான்பெருமான்பெருங்காட்டின்
அரவமணிந்தானையணியாப்பனூரானைப்
பரவுமனமுடையார்வினைபற்றறுப்பாரே. (ங)

பிணியும்பிறப்பறுப்பான்பெருமான்பெருங்காட்டில்
துணியினுடைதாழச்சுடரேந்தியாடுவான்
அணியும்புனலானையணியாப்பனூரானைப்
பணியுமனமுடையார்வினைபற்றறுப்பாரே. (ச)

* ஆர்த்தனையடியேனுக் என்றும் பாடம். † இதனைத் திருவாப்புடையார்கோயில் என வழங்குப. ‡ வாக்கனைப் என்றும் பாடம்.

Koviloor Digital Library

தகரமணியருவித்தடமால்வரைசிலையா
நகரமொருமூன்றுநலங்குன்றவென்றுகந்தான்
அகரமுதலானை *யணியாப்பனூரானைப்
பகருமனமுடையார்வினைபற்றறுப்பாரே. (ரு)

ஓடுந்திரிபுரங்களுடனேயுலந்தவியக்
காடதிடமாகக்கனல்கொண்டுநின்றிரவில்
ஆடுந்தொழிலானையணியாப்பனூரானைப்
பாடுமனமுடையார்வினைபற்றறுப்பாரே. (சு)

இயலும்விடையேறியெரிகொண்மழுவீசிக்
கயலினிணைக்கண்ணாளொருபாற்கலந்தாட
இயலுமிசையானையெழிலாப்பனூரானைப்
பயிலுமனமுடையார்வினைபற்றறுப்பாரே. (எ)

கருக்குமணிமிடறன்கதநாகக்கச்சையினன்
உருக்குமடியவரையொளிவெண்பிறைசூடி
அரக்கன்றிறலழித்தானணியாப்பனூரானைப்
பருக்கு † மனமுடையார்வினைபற்றறுப்பாரே. (அ)

கண்ணன்கடிக்கமலமலர்மேலினிதுறையும்
அண்ணற்களப்பரிதாய்நின்றங்கடியார்மேல்
எண்ணில்வினைகளைவானெழிலாப்பனூரானைப்
பண்ணின்னிசைபகர்வார்வினைபற்றறுப்பாரே. (கூ)

செய்யகலிங்கத்தார்சிறுதட்டுடையார்கள்
பொய்யர்புறங்கூறப்புரிந்தவடியாரை
ஐயமகற்றுவானணியாப்பனூரானைப்
பையநினைந்தெழுவார்வினைபற்றறுப்பாரே. (க0)

அந்தண்புனல்வைகையணியாப்பனூர்மேய
சந்தமலர்க்கொன்றைசடைமேலுடையானை
நந்தியடிபரவுநலஞானசம்பந்தன்
சந்தமிவைவல்லார்தடுமாற்றறுப்பாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவாப்பனூர்த்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - கஉ.

சுவாமி தேவி திருநாமங்கள் - ஆப்பனூர்க்காரணர், அம்பிகை.

* அகரமுதலானை—அக்கரங்களுக்கு அகரம் முதலாயினாற்போல, உலகுக்கு முதலானவனை; இங்கே "அகர முதல வெழுத்தெல்லா மாதி—பகவன் முதற்றே யுலகு" என்னும் அருமைத் திருக்குறள் சிந்திக்கற்பாலது. † பருகு பருக்கு விரித்தல்; பரக்குமனமுடையார் என்றும் பாடம்.

Koviloor Digital Library

௩. திருப்பரங்குன்றம்.*

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

நீடலர்சோதிவெண்பிறையோடுநிரைகொன்றை
சூடல†வந்திச்சுடரெரி‡யேந்திச்சுடுகானில்
ஆடலனஞ்சொலணியிழை¶யாளையொருபாகம்
பாடலன்மேயநன்னகர்போலும்பரங்குன்றே. (௧)

அங்கமோராறும்மருமறைநான்கும்மருள்செய்து
பொங்குவெண்ணூலும்பொடியணிமார்பிற்பொலிவித்துத்
திங்களும்பாம்புந்திகழ்சடைவைத்தோர்தேன்மொழி
பங்கினன்மேயநன்னகர்போலும்பரங்குன்றே. (௨)

நீரிடங்கொண்டநிமிர்சடைதன்மேனிரைகொன்றை
சீரிடங்கொண்ட§வெம்மிறைபோலுஞ்சேய்தாய
ஓருடம்புள்ளேயுமையொருபாகமுடனாகிப்
பாரிடம்பாடவினிதுறைகோயில்பரங்குன்றே. (௩)

வளர்பூங்கோங்கமாதவியோடுமல்லிகைக்
குளிர்பூஞ்சாரல்0வண்டறைசோலைப்பரங்குன்றம்
தளிர்போன்மேனித்தையனல்லாளோடொருபாகம்
நளிர்பூங்கொன்றைசூடினன்மேயநகர்தானே. (௪)

பொன்னியல்கொன்றைபொறிகிளர்நாகம்புரிசடைத்
துன்னியசோதியாகியவீசன்றொன்மறை
பன்னியபாடலாடலன்மேயபரங்குன்றை
உன்னியசிந்தையுடையவர்க்கில்லையுறுநோயே. (௫)

கடைநெடுமாடக்கடியரண்மூன்றுங்கனன்மூழ்கத்
தொடைநவில்கின்றவில்லினனந்திச்சுடுகானில்**
புடைநவில்பூதம்பாடநின்றாடும்பொருசூலப்
படைநவில்வான்றனன்னகர்போலும்பரங்குன்றே. (௬)

அயிலுடைவேலோரனல்புல்குகையினம்பொன்றால்††
எயில்படவெய்தவெம்மிறைமேயவிடம்போலும்
மயில்பெடைபுல்கிமாநடமாடும்வளர்சோலைப்
பயில்பெடைவண்டுபாடலறாதபரங்குன்றே. (௭)

* திருப்பரங்குன்றம் எனினும் திருப்பரங்கிரி எனினும் ஒக்கும்; இது சுப்பிரமணியக் கடவுளுடைய முதற்றிருப்படைவீடாம். † கொன்றைச்—சூடலன் என்றும் பாடம். ‡ தீச்சுடரெரி என்றும் பாடம். ¶ சொல்லணியிழை என்றும் பாடம். § கொன்றைச்—சீரிடக்கொண்ட என்றும் பாடம். 0 மல்லிகை—குளிர்பூஞ்சாரல் என்றும் பாடம். ** தீச்சுடுகானில் என்றும் பாடம். †† லம்பொன்றால் என்றும் பாடம்.

Koviloor Digital Library

மைத்தகுமேனிவாளரக்கன்றன்மகுடங்கள்
பத்தினதிண்டோளிருபதுஞ்செற்ருன்பரங்குன்றைச்
சித்தமதொன்றிச்செய்கழலுன்னிச்சிவனென்று
நித்தலுமேத்தத்தொல்வினைநம்மேனில்லாவே. (அ)

முந்தியிவ்வையந்தாவியமாலுமொய்யொளி
உந்தியில்வந்திங்கருமறையீந்தவுரவோனும்
சிந்தையினாலுந்தெரிவரிதாகித்திகழ்சோதி
பந்தியலங்கை* மங்கையொர்பங்கன்பரங்குன்றே. (கூ)

குண்டாய்முற்றுந்திரிவார்கூறைமெய்போர்த்து
மிண்டாய்மிண்டர்பேசியபேச்சுமெய்யல்ல
பண்டானீழன்மேவியவீசன்பரங்குன்றைத்
தொண்டாலேத்தத்† தொல்வினைநம்மேனில்லாவே. (க0)

தடமலிபொய்கைச்சண்பைமன்ஞானசம்பந்தன்
படமலிநாகமரைக்கசைத்தான்றன்பரங்குன்றைத்
தொடைமலிபாடல்பத்தும்வல்லார்தந்துயர்போகி
விடமலிகண்டனருள்பெறுந்தன்மைமிக்கோரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

கோத்திட்டையும் கோவலும் என்றெடுத்துப் பாடியது. ‡

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

கோத்திட்டையுங்கோவலுங்கோயில்கொண்டிருமைக்
கொண்டுழல்கின்றதோர்கொல்லைச்சில்லைச்
சேத்திட்டுக்குத்தித்¶ தெருவேதிரியுஞ்
சில்பூதமுநீருந்திசை திசையன
சோத்திட்டுவிண்ணோர்பலருந்தொழநும் §
மரைக்கோவணத்தோடொருதோல்புடைசூழ்ந்
தார்த்திட்டதும்பாப்புகைக்கொண்டதும்பாம்
படிகேளுமக்காட்செயவஞ்சுதுமே. 0 (க)

* பந்தியலுங்கை என்றும் பாடம். † தொண்டாயேத்த என்றும் பாடம். ‡ இவ்வாறு சில பிரதிகளிற் காணப்படுகின்றது. ¶சேத்திட்டக்குத்தி என்றும் பாடம். § தொழுநும் என்றும் பாடம். 0 திருப்பாட்டிறுதிதோறும் அடியோமுமக்காட்செயவஞ்சுதுமே என்று சிலபிரதிகளிற்காணப்படும் பாடம் பொருட்சிறப்புடைத்தாயினும், அடிகேளுமக்காட்செயவஞ்சுதுமென்றமரர்பெருமானை என வருளிச்செய்த பதினொராந்திருப்பாட்டுக்கு முரணுகின்றது.

முண்டந்தரித்திர்முதுகாடுறைவிர்
முழுநீறுமெய்பூசுதிர்மூக்கப்பாம்பைக்
கண்டத்திலுந்தோளிலுங்கட்டிவைத்திர்
கடலைக்கடைந்திட்டதோர்நஞ்சையுண்டீர்
பிண்டஞ்சுமந்தும்மொடுங்கூடமாட்டோம்
பெரியாரொடுநட்பினிதென்றிருத்தும் *
அண்டங்கடந்தப்புறத்துமிருந்தி
ரடிகேளுமக்காட்செயவஞ்சுதுமே. (உ)

மூடாயமுயலகன்மூக்கப்பாம்பு
முடைநாறியவெண்டலைமொய்த்தபல்பேய்
பாடாவருபூதங்கள்பாய்புலித்தோல்
பரிசொன்றறியாதனபாரிடங்கள்
தோடார்மலர்க்கொன்றையுந்துன்னெருக்குந்
துணைமாமணிநாகமரைக்கசைத்தொன்
றூடாதெனவே † செய்திரெம்பெருமா
னடிகேளுமக்காட்செயவஞ்சுதுமே. (ஙு)

மஞ்சுண்டமாலைமதிசூடுசென்னி
மலையான்மடந்தைமணவாளநம்பி
பஞ்சுண்ட ‡ வல்குற்பணைமென்முலையா
ளொடுநீருமொன்றாயிருத்தலொழியீர்
நஞ்சுண்டுதேவர்க்கமுதங்கொடுத்த
நலமொன்றறியோமுங்கைநாகமதற்
கஞ்சுண்டுபடமதுபோகவிடீ
ரடிகேளுமக்காட்செயவஞ்சுதுமே. (ச)

பொல்லாப்புறங்காட்டகத்தாட்டொழியீர்
புலால்வாயனபேயொடுபூச்சொழியீர்
எல்லாமறிவீரிதுவேபறியீ ¶
ரென்றிரங்குவேனெல்லியுநண்பகலும் §
கல்லானிழற்கீழொருநாட்கண்டதுங்
கடம்பூர்க்கரக்கோயிலின்முன்கண்டதும்
அல்லால்விரகொன்றிலமெம்பெருமா
னடிகேளுமக்காட்செயவஞ்சுதுமே. (ரு)

தென்னாத்தெனாத்தெத்தெனாவென்றுபாடிச்
சில்பூதமுநீருந்திசைதிசையன
பன்னான்மறைபாடுதிர்பாசூருளீர்
படம்பக்கங்கொட்டுந்திருவொற்றியூரீர்

* பிணிதென்றிருத்தும் என்றும்பாடம். † றூடாதனவே என்றும்பாடம். ‡ பஞ்சுண்ட - செம்பஞ்சையென்ற. ¶ ரிதுவேவறியீர் என்றும் பாடம். § திரங்குவனெல்லியு நண்பகலும் என்றும்பாடம்.

Koviloor Digital Library

பண்ணார்மொழியாளையோர்பங்குடையீர்
படுகாட்டகத்தென்றுமோர்பற்றொழியீர்
அண்ணாமலையேனென்றீராரூருளீ
ரடிகேளுமக்காட்செயவஞ்சுதுமே. (சூ)

சிங்கத்துரிமூடுதிர்தேவர்கணந்
தொழநிற்றீர்பெற்றமுகந்தேறிடுதிர்
பங்கம்பலபேசிடப்பாடுந்தொண்டர்
தமைப்பற்றிக்கொண்டாண்டுவிடவுங்கில்லீர்
கங்கைச்சடையீருங்கருத்தறியோங்
கண்ணுமூன்றுடையீர்கண்ணேயாயிருந்தால் *
அங்கத்துறுநோய்களைந்தாளிகில்லீ
ரடிகேளுமக்காட்செயவஞ்சுதுமே. (எ)

பிணிவண்ணத்தவல்வினைதீர்த்தருளீர்
பெருங்காட்டகத்திற்பெரும்பேயுநீரும்
துணிவண்ணத்தின்மேலுமோர்தோலுடுத்துச் †
சுற்றுநாகத்தராய்ச்சுண்ணநீறுபூசி
மணிவண்ணத்தின்மேலுமோர்வண்ணத்தராய்
மற்றுமற்றும்பல்பலவண்ணத்தராய்
அணிவண்ணத்தராய்நிற்றீரெம்பெருமா
னடிகேளுமக்காட்செயவஞ்சுதுமே. (அ)

கோளாளியகுஞ்சரங்கோளிழைத்தீர்
மலையின்றலையல்லதுகோயில்கொள்ளீர்
வேளாளியகாமனைவெந்தழிய
விழித்தீரதுவன்றியும்வேய்புரையும்
தோளாளுமைநங்கையோர்பங்குடையீ
ருடுகூறையுஞ்சோறுந்தாளகில்லீர்
ஆளாளியவேகிற்றீ ‡ ரெம்பெருமா
னடிகேளுமக்காட்செயவஞ்சுதுமே. (கூ)

பாரோடுவிண்ணும்பகலுமாகிப்
பனிமால்வரையாகிப்பரவையாகி
நீரோடுதீயுநெடுங்காற்றுமாகி
நெடுவெள்ளிடையாகிநிலனுமாகித் ¶
தேரோடவரையெடுத்தவரக்கன்
சிரம்பத்திறுத்தீருமசெய்கையெல்லாம்
ஆரோடுங்கூடாவடிகேளிதுவென்
னடியோ§முமக்காட்செயவஞ்சுதுமே. (க0)

* றுடையீர்கருத்தாயிருந்தால் என்றும் பாடம். † துணிவண்ணத்துநீருமோர்தோலுடுத்து என்றும் பாடம். ‡ ஆளாளியவேகற்றீர் என்றும், ஆளாளியபெறுகிற்றீர் என்றும் பாடம். ¶ நெடுவெள்ளடையாகிநிழலுமாகி என்றும் பாடம். § னடிசேளும் பாடம்.

Koviloor Digital Library

அடிகேளுமக்காட்செயவஞ்சுதுமென்
றமரர்பெருமானையாரூரனஞ்சி
முடியாலுலகாண்டமூவேந்தர்முன்னே
மொழிந்தாறுமோர்நான்குமோரொன்றினையும்
படியாவிவைகற்றுவல்லவடியார்
பரங்குன்றமேயபரமனடிக்கே
குடியாகிவானோர்க்குமோர்கோவுமாகிக்
குலவேந்தராய்விண்முழுதாள்பவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருப்பரங்குன்றத்திருப்பதிகம்-உ.

ஆ திருப்பதிகம் - கச.

சுவாமி தேவி திருநாமங்கள் - பரங்கிரிநாதர், ஆவுடைநாயகி.

சுந்தரமூர்த்திநாயனார் மதுரைத் திருப்பதியினின்றும் புறப்பட்டு, சேரசோழபாண்டியராகிய தமிழ்நாட்டு மூவேந்தரோடும் திருப்பரங்குன்றுக்குப்போய், சுவாமிதரிசனஞ்செய்து, சிவபெருமானுடைய திருவடிகளுக்குத் தொண்டுசெய்யும் அருமையை நினைந்தஞ்சுதும் என்று, "கோத்திட்டையுங்கோவலும்" என்னுந் திருப்பதிகம் பாடியருளி, பதினொராந்திருப்பாட்டிலே அவ்வேந்தர் பெருமைதோன்ற முடியாலுலகாண்ட மூவேந்தர்முன்னே என்று கூறியருளினர். அவ்வருமையையும் பெருமையையும் அரசர் மூவருங் கேட்டு அஞ்சி நாயனாரை வணங்கினர்கள்.

ச. திருவேடகம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

வன்னியுமத்தமுமதிபொதிசடையினன்
பொன்னியறிருவடிபுதுமலரவைகொடு
மன்னியமறையவர்வழிபடவடியவர்
இன்னிசைபாடலரேடகத்தொருவனே.* (க)

கொடிநெடுமாளிகைகோபுரங்குளிர்மதி
வடிவுறவமைதருமருவியவேடகத்
தடிகளைபடிபணிந்தரற்றுமினன்பினால்†
இடிபடும்வினைகள்போயில்லையதாகுமே. (உ)

* இன்னிசைப்பாடலரேடகத்தொருவரே என்றும் பாடம். † தலைற்றுமினன்பினால் என்றும் பாடம்.

Koviloor Digital Library

குண்டலந்திகழ்தரு*காதுடைக்குழகனை
வண்டலம்பும்மலர்க்கொன்றைவான்மதியணி†
செண்டலம்பும்விடைச்சேடனூரேடகம்
கண்டுகைதொழுதலுங்கவலைநோய்கழலுமே.‡ (௩)

ஏலமார்தருகுழலேழையோடெழில்பெறும்
கோலமார்தருவிடைக்குழகனூருறைவிடம்
சாலமாதவிகளுஞ்சந்தனஞ்சண்பகம்
சீலமாரேடகஞ்சேர்தலாஞ்செல்வமே. (௪)

வரியணிநயனிநன்மலைமகண்மறுகிடக்
கரியினையுரிசெய்தகறையணிமிடறினன்
பெரியவன்பெண்ணினோடாணலியாகிய
எரியவனுறைவிட¶மேடகக்கோயிலே. (௫)

பொய்கையின்பொழிலுறுபுதுமலர்த்தென்றலார்
வைகையின்வடகரைமருவியவேடகத்
தையனையடிபணிந்தாற்றுமின்னடர்தரும்
வெய்யவன்§பிணிகெடவீடெளிதாகுமே. (௬)

தடவரையெடுத்தவன்றருக்கிறத்தோளடர்
பட0விரலூன்றியேபரிந்தவற்கருள்செய்தான்
மடவரலெருக்கொடுவன்னியுமத்தமும்
இடமுடைச்சடையினனேடகத்திறைவனே.** (௮)

பொன்னுமாமணிகளும்பொருதிரைச்சந்தகில்
தன்னுளார்வைகையின்கரைதனிற்சமைவுற
அன்னமாமயனுமாலடிமுடிதேடியும்
இன்னவாறெனவொணானேடகத்தொருவனே. (௯)

குண்டிகைக்கையினர்குணமிலாத்தேரர்கள்
பண்டியைப்பெருக்கிடும்பளகர்கள்பணிகிலர்
வண்டிரைக்கும்மலர்க்கொன்றையும்வன்னியும்
இண்டைசேர்க்குஞ்சடை††யேடகத்தெந்தையே. (௧௦)

கோடுசந்தனமகில்கொண்டிழிவைகைநீர்
ஏடுசென்றணைதருமேடகத்தொருவனை
நாடுதென்புகலியுண்ஞானசம்பந்தன‡‡
பாடல்பத்திவைவல்லார்க்கில்லையாம்பாவமே.¶¶ (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவேடகத்திருப்பதிகம் - ௧.

ஆ திருப்பதிகம் - ௧௫.

சுவாமி தேவி திருநாமங்கள் - ஏடகநாதர், உமாதேவி.

* திகடரு என்றும் பாடம். † வாண்மதியணி என்றும் பாடம். ‡ நோயகலுமே என்றும் பாடம். ¶ அரியவனுறைவிடம் என்றும் பாடம். § தலற்றுமின்னடர்தரு—வெய்யவன் என்றும் பாடம். 0 ளடர்ப்—பட என்றும் பாடம். ** னேடகத்தொருவனே என்றும் பாடம். †† தேக்குஞ்சடை என்றும் பாடம். ‡‡ சம்பந்தனற் என்றும் பாடம். ¶¶ இத்திருப்பதிகத்தில் எ-வது செய்யுள்மறைந்துபோயிற்று.

Koviloor Digital Library

திருஞானசம்பந்தப்பிள்ளையார், தமக்குஞ் சமணர்களுக்கும் மதுரைத்திருப்பதியிலே சமயவாதம் சம்பவித்தபொழுது அவர்கள் கேள்விப்படி "வாழ்கவந்தணர்" என்னுந் திருப்பாசுரத்தைப்பாடி, எட்டில் எழுதி அத்திருவேட்டை வைகைநதியிலே இட்டருளியவுடன், அத்திருவேடு நதியிலே எதிர்ந்து சென்றது. குலச்சிறைநாயனர் அத்திருவேட்டைத் தொடர்ந்து எடுத்தற்கு விரும்பி, காற்றைப்போல அதிவேகத்தோடு செல்கின்ற குதிரைமேல் ஏறிக்கொண்டு பின் சென்றார். பிள்ளையார் அவ்வேடு தங்கும்பொருட்டு, "வன்னியுமத்தமும்" என்னும் திருப்பதிகம் பாடியருளினர்.

௫. திருக்கொடுங்குன்றம்.*

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

வானிற்பொலிவெய்தும்மழைமேகங்கிழித்தோடிக்
கூனற்பிறைசேருங்குளிர்சாரற்கொடுங்குன்றம்
ஆனிற்பொலிவைந்தும்†மமர்ந்தாடியுலகேத்தத்
தேனிற்பொலிமொழியாளொடுமேயான்றிருநகரே. (க)

மயில்புல்குதண்பெடையோடுடனாடும்வளர்சாரல்
குயிலின்னிசைபாடுங்குளிர்சோலைக்கொடுங்குன்றம்
அயில்வேன்மலிநெடுவெஞ்சுடரனலேந்திநின்றாடி
எயின்முன்படவெய்தானவன்மேயவ்வெழினகரே.‡ (உ)

மிளிரும்மணிபைம்பொன்னொடுவிரைமாமலருந்திக்
குளிரும்புனல்பாயுங்குளிர்சாரற்கொடுங்குன்றம்
கிளர்கங்கையொடிளவெண்மதிகெழுவுஞ்சடைதன்மேல்
வளர்கொன்றையுமதமத்தமும்வைத்தான்வளநகரே. (௩)

பருமாமதகரியோடரியிரியும்¶விரிசாரல்
குருமாமணிபொன்னோடிழியருவிக்கொடுங்குன்றம்
பொருமாவெயில்வரைவிற்பருகணையிற்பொடிசெய்த
பெருமானவனுமையாளொடுமேவும்பெருநகரே. (௪)

மேகத்திடிகுரல்வந்தெழவெருவிவ்வரையிழியும்
கூகைக்குலமோடத்திரிசாரற்கொடுங்குன்றம்
காகத்தொடுமிளவெண்பிறைசூடிந்நலமங்கை
பாகத்தவனிமையோர்தொழமேவும்பழநகரே. (௫)

கைம்மாமதகரியின்னினமிடியின்குரலதிரக்
கொய்ம்மாமலர்ச்சோலைபுகமண்டுங்கொடுங்குன்றம்
அம்மானெனவுள்கித்தொழுவார்கட்கருள்செய்யும்
பெம்மானவனிமையோர்தொழமேவும்பெருநகரே. (௬)

* திருக்கொடுங்குன்றம்—பிரான்மலை. † பொலிவைந்தும் என்றும் பாடம். ‡ மேயவெழினகரே என்றும் பாடம். ¶ டரியிழியும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

மாவத்தொடுமணமாதவிமௌவல்லதுவிண்ட
குரவத்தொடுவிரவும்பொழில்சூழ்தண்கொடுங்குன்றம்,
அரவத்தொடுமிளவெண்பிறைவிரவும்மலர்க்கொன்றை
நிரவச்சடைமுடிமேலுடன்வைத்தானெடுநகரே. (எ)

முட்டாமுதுகரியின்னினமுதுவேய்களைமுனிந்து
குட்டாச்சுனை * யவைமண்டிநின்றுடுங்கொடுங்குன்றம்
ஒட்டாவரக்கன்றன்முடி † யொருபஃதவைபுடனே
பிட்டானவனுமையாளொடுமேவும்பெருநகரே. (அ)

அறையும்மரிகுரலோசையையஞ்சியடிமானை
குறையும்மனமாகிம்முழைவைகுங்கொடுங்குன்றம்
மறையும்மவையுடையானெனநெடியானெனவிவர்கள்
இறையும்மறிவொண்ணுதவன்மேயவ்வெழினகரே. ‡ (கூ)

மத்தக்களிறுளிவ்வரவஞ்சிம்மலைதன்னைக் ¶
குத்திப்பெருமுழைதன்னிடைவைகுங்கொடுங்குன்றம்
புத்தரொடுபொல்லாமனச்சமணர்புறங்கூறப்
பத்தர்க்கருள்செய்தானவன்மேயபழநகரே. (கo)

கூனற்பிறைசடைமேன்மிகவுடையான்கொடுங்குன்றைக்
கானற்கழுமலமாநகர்த்தலைவன்னலகவுணி
ஞானத்துயர்சம்பந்தனநலங்கொடமிழ்வல்லார்
ஊனத்தொடுதுயர்தீர்ந்துலகேத்தும்மெழிலோரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருக்கொடுங்குன்றத்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - கசு.

சுவாமி தேவி திருநாமங்கள் - கொடுங்குன்றீசர், குயிலமுதநாயகி.

௬. திருப்புத்தூர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

வெங்கள்விம்முவெறியார்பொழிற்சோலை
திங்களோடுதிளைக்குந்திருப்புத்தூர்க்
கங்கைதங்குமுடியாரவர்போலும்
எங்களுச்சியுறையுமிறையாரே. (க)

* குட்டச்சுனை என்பது எதுகைநோக்கிக் குட்டாச்சுனை யெனப்பட்டது. † வரக்கன்னைமுடி என்றும் பாடம். ‡ மேயவெழினகரே என்றும் பாடம். ¶ மலையதனைக் என்றும் பாடம்.

வேனல்விம்முவெறியார்பொழிற்சோலைத்
தேனும்வண்டுந்திளைக்குந்திருப்புத்தூர்
ஊனமின்றியுறைவாரவர்போலும்
ஏனமுள்ளுமெயிறும்புனைவாரே. (௨)

பாங்குநல்லவரிவண்டிசைபாடத்
தேங்கொள்கொன்றைதிளைக்குந்திருப்புத்தூர்
ஓங்குகோயிலுறைவாரவர்போலும்
தாங்குதிங்கடவழ்புன்சடையாரே. (௩)

நாறவிண்டநறுமாமலர்கவ்வித்
தேறல்வண்டுதிளைக்குந்திருப்புத்தூர்
ஊறல்வாழ்க்கையுடையாரவர்போலும்
ஏறுகொண்டகொடியெம்மிறையாரே. (௪)

இசைவிளங்குமெழில்சூழ்ந்தியல்பாகத்
திசைவிளங்கும்பொழில்சூழ்திருப்புத்தூர்ப்
பசைவிளங்கப்படித்தாரவர்போலும்
வசைவிளங்கும்வடிசேர்நுதலாரே.* (௫)

வெண்ணிறத்தவிரையோடலருந்தித்
தெண்ணிறத்தபுனல்பாய்திருப்புத்தூர்
ஒண்ணிறத்தவொளியாரவர்போலும்
வெண்ணிறத்தவிடைசேர்கொடியாரே. (௬)

நெய்தலாம்பல்கழுநீர்மலர்ந்தெங்கும்
செய்கண்மல்குசிவனார்திருப்புத்தூர்த்
தையல்பாகமகிழ்ந்தாரவர்போலும்
மையுணஞ்சமருவுமிடற்றாரே. (௭)

கருக்க† மெல்லாங்கமழும்பொழிற்சோலைத்
திருக்கொள்செம்மைவிழவார்திருப்புத்தூர்
இருக்கவல்லவிறைவரவர்போலும்
அரக்கனொல்கவிரலாலடர்த்தாரே. (௮)

மருவிபெக்கும்வளரும்மடமஞ்ஞை
தெருவுதோறுந்திளைக்குந்திருப்புத்தூர்ப்
பெருகிவாழும்பெருமானவன்போலும்
பிரமன்மாலுமறியாப்பெரியோனே. (௯)

கூறைபோர்க்குந்தொழிலாரமண்கூறல்
தேறல்வேண்டாதெளிமின்றிருப்புத்தூர்
ஆறுநான்குமமர்ந்தாரவர்போலும்
ஏறுகொண்டகொடியெம்மிறைபாரே. (௧௰)

* மடிசேர்நுதலாரே என்றும் பாடம். † கருக்கம் - சூற்கொண்டமேகம்.

Koviloor Digital Library

நல்லகேள்விஞானசம்பந்தன்
செல்வர்சேடருறைபுந்திருப்புத்தூர்ச்
சொல்லல்பாடல்வல்லார்தமக்கென்றும்
அல்லறீருமவலமடையாவே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

புரிந்தமரர்தொழுதேத்தும்புகழ்தக்கோன்காண் *
போர்விடையின்பாகன்காண்புவனமேழும்
விரிந்துபலவுயிராகிவிளங்கினான்காண்
விரைக்கொன்றைக்கண்ணியன்காண்வேதநான்கும்
தெரிந்துமுதற்படைத்தோனைச்சிரங்கொண்டோன்காண்
மூர்த்தன்காண்டிருமாலோர்பங்கத்தான்காண் †
திருந்துவயல்புடைதழுவுதிருப்புத்தூரிற்
றிருத்தளியான்காணவனென்சிந்தையானே. (க)

வாராருமுலைமங்கைபங்கத்தான்காண்
மாமறைகளாயவன்காண்மண்ணும்விண்ணும்
கூரார்வெந்தழலவனுங்காற்றுநீருங்
குலவரையுமாயவன்காண்கொடுநஞ்சுண்ட
காராருங்கண்டன்காணெண்டோளன்காண்
கயிலைமலைப்பொருப்பன்காண்விருப்போடென்றும்
தேராருநெடுவீதித்திருப்புத்தூரிற்
றிருத்தளியான்காணவனென்சிந்தையானே. (உ)

மின்காட்டுங்கொடிமருங்குலுமையாட்கென்றும்
விருப்பவன்காண்பொருப்புவலிச்சிலைக்கை ‡ யோன்காண்
நன்பாட்டுப்புலவனாய்ச்சங்கமேறி
நற்கனகக்கிழிதருமிக்கருளினோன்காண்
பொன்காட்டக்கடிக்கொன்றைமருங்கேநின்ற
புனக்காந்தள்கைகாட்டக்கண்டுவண்டு
தென்காட்டுஞ்செழும்புறவிற்றிருப்புத்தூரிற்
றிருத்தளியான்காணவனென்சிந்தையானே. (ந)

ஏடேறுமலர்க்கமலத்தயனுமாலு
மிந்திரனும்பணிந்தேத்தவிருக்கின்றான்காண்
தோடேறுமலர்க்கடுக்கைவன்னிமத்தந்
துன்னியசெஞ்சடையான்காண்டுகமூர்சங்கம்

* தக்கான்காண் என்றும் பாடம். † பாகத்தான்காண் என்றும் பாடம். ‡ வலிசிலைக்கை என்றும் பாடம்; இது வினைத்தொகை; பொருப்புச்சிலை வலிசிலை எனத் தனித்தனி கூட்டுக; வலித்தல் - வளைத்தல்.

Koviloor Digital Library

யாடேறிமுத்தினுங்கானல்வேலி
　　மறைக்காட்டுமாமணிகாண்வளங்கொண்மேதி
சேடேறி* மடுப்படியுந்திருப்புத்தூரிற்
　　றிருத்தளியான்காணவனென்சிந்தையானே. (௪)

கருமருவுவல்வினைநோயகற்றி† னான்காண்
　　காமருபூங்கச்சியேகம்பத்தான்காண்
பெருமருவுபேருலகிற்பிணிகடீர்க்கும்
　　பெரும்பற்றப்புலியூர்மன்றாடிகாண்
அருமருவுகொடைத்தடக்கைவளைக்கைக்கோன்றன் ‡
　　சங்காத்தியாரூரிற்¶ றனியானைகாண்
திருமருவுபொழில்புடைசூழ்திருப்புத்தூரிற்
　　றிருத்தளியான்காணவனென்சிந்தையானே. (௫)

காம்பாடுதோளுமையாள்காணநட்டங்
　　கலந்தாடல்புரிந்தவன்காண்கையில்வெய்ய
பாம்பாடப்படுதலையிற்பலிகொள்வோன்காண் §
　　பவளத்தின்பருவரைபோற்படிமத்தான்காண்
தாம்பாடுசினவிடையேபகடாக்கொண்ட
　　சங்கரன்காண்பொங்கரவக்கச்சையோன்காண்
சேம்பாடுவயல்புடைசூழ்திருப்புத்தூரிற்
　　றிருத்தளியான்காணவனென்சிந்தையானே. (௬)

வெறிவிரவுமலர்க்கொன்றைவிளங்குதிங்கள்
　　வன்னியொடுவிரிசடைமேன்மிலைச்சினான்காண்
பொறிவிரவுகதநாகமக்கினோடு
　　பூண்டவன்காண்பொருபுலித்தோலாடையான்காண்
அறிவரியநுண்பொருள்களாயினான்கா
　　ணாயிரம்பேருடையவன்காணந்தண்கானல்
செறிபொழில்சூழ்மணிமாடத்திருப்புத்தூரிற்
　　றிருத்தளியான்காணவனென்சிந்தையானே. (௭)

புக்கடைந்தவேதியற்காய்0 காலற்காய்ந்த
　　புண்ணியன்காண்வெண்ணகைவெள்வளையாளஞ்ச
மிக்கெதிர்ந்தகரிவெருவவுரித்தகோன்காண்**
　　வெண்மதியைக்கலைசேர்த்ததிண்மையோன்காண் ††
அக்கரும்புபெரும்புன்னைநெருங்குசோலை
　　யாரூருக்கதிபதிகா ‡‡ ணந்தண்டென்றல் ¶¶
திக்கனைத்துவருமருங்கிற்றிருப்புத்தூரிற்
　　றிருத்தளியான்காணவனென்சிந்தையானே. (அ)

* சேடேறிந்து என்றும் பாடம். † நோய்மாற்றி என்றும், நோய்காற்றி என்றும் பாடம். ‡ யனைக்கோன்காண் என்றும் பாடம். ¶ சங்காதியாரூரிற் என்றும்; சங்காற்றியாரூரிற் என்றும் பாடம். § கொள்வான்காண் என்றும் பாடம். 0 வேதியர்க்காய் என்றும் பாடம்; இப்பாடமுஞ்சரி என்பது முன்னர் விளக்கப்பட்டது. ** வுரித்தோன்காண் என்றும் பாடம்; இவ்வாறுவரும் பாடங்களும் பலவுள. †† வெண்மதியக்கலைசேர்த்த திண்மையோன்காண் என்றும், வெண்மதியைத்தலைசேர்த்ததன்மையோன்காண் என்றும், வெண்மதியைக் கலைசேர்த்தன்மையோன்காண் என்றும் பாடம். ‡‡ கதிபன்காண் என்றும் பாடம். ¶¶ ணந்தண்டேறல் என்றும் பாடம்.

Koviloor Digital Library

பற்றவன்காணோனோர்க்கும்வானோருக்கும்
பராபரன்காண்டக்கன்றன்வேள்விசெற்ற
கொற்றவன்காண்கொடுஞ்சினத்தையடங்கச்செற்று
ஞானத்தைமேன்மிகுத்தல்கோளாக்கொண்ட
பெற்றியன்காண்பிறங்கருவிக்கழுக்குன்றத்தெம்
பிஞ்ஞகன்காண்பேரெழிலார்காமவேளைச்
செற்றவன்காண்சீர்மருவுதிருப்புத்தூரிற்
றிருத்தளியான்காணவனென்சிந்தையானே. (கூ)

உரமதித்தசலந்தரன்றனுகங்கீண்ட
வோராழிபடைத்தவன்காணுலகுசூழும்
வரமதித்தகதிரவனைப்பற்கொண்டான்*காண்
வானவர்கோன்புயநெரித்தவல்லாளன்காண்
அரமதித்துச்செம்பொன்னினாரம்பூணு
வணிந்தவன்காணலைகடல்சூழிலங்கைவேந்தன்
சிரநெரித்தசேவடிகாண்டிருப்புத்தூரிற்
றிருத்தளியான்காணவனென்சிந்தையானே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருப்புத்தூர்த் திருப்பதிகம் - உ.

ஆ திருப்பதிகம் - கஅ.

சுவாமி தேவி திருநாமங்கள் - புத்தூரீசர், சிவகாமியம்மை.

எ. திருப்புனவாயில்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

மின்னியல்செஞ்சடை † வெண்பிறையன்விரிநூலினன்
பன்னியநான்மறைபாடியாடிப்பலவூர்கள்போய்
அன்னமன்னந்நடையாளொடும்மமரும்மிடம் ‡
புன்னைநன்மாமலர்பொன்னுதிர்க்கும்புனவாயிலே. (க)

விண்டவர்தம்புரமூன்றெரித்துவிடையேறிப்போய்
வண்டமருங்குழன்மங்கையொடும்மகிழ்ந்தானிடம்
கண்டலுஞாழலுநின்றுபெருங்கடற்கானல்வாய்ப்
புண்டரிகம்மலர்ப்பொய்கை ¶ சூழ்ந்தபுனவாயிலே. (உ)

* கொண்டோன் என்றும் பாடம். † மின்னியசெஞ்சடை என்றும் பாடம். ‡ ளொடுமேயமரும்மிடம் என்றும் பாடம். ¶ மலர்பொய்கை என்றும் பாடம்.

Koviloor Digital Library

விடையுடைவெல்கொடியேந்தினானும்விறற்பாரிடம்
புடைபடவாடியவேடத்தானும்புனவாயிலில்
தொடைநவில்கொன்றையந்தாரினானுஞ்சுடர்வெண்மழுப்
படைவலனேந்தியபானெய்யாடும்பரமனன்றே. (௩)

சங்கவெண்டோடணிகாதினானுஞ்சடைதாழவே
அங்கையிலங்கழலேந்தினானும்மழகாகவே
பொங்கரவம்* மணிமார்பினானும்புனவாயிலில்
பைங்கண்வெள்ளேற்றண்ணலாகிநின்றபரமேட்டியே. (௪)

கலிபடுதண்கடனஞ்சமுண்டகறைக்கண்டனும்
புலியதள்பாம்பரைச்சுற்றினானும்புனவாயிலில்
ஒலிதருதண்புனலோடெருக்கும்மதமத்தமும்
மெலிதருவெண்பிறைசூடிநின்றவிடையூர்தியே. (௫)

வாருறுமென்முலைமங்கைபாடநடமாடிப்போய்க்
காருறுகொன்றைவெண்டிங்களானுங்கனல்வாயதோர்
போருறுவெண்மழுவேந்தினானும்புனவாயில்
சீருறுசெல்வமல்கவ்விருந்தசிவலோகனே. (௬)

பெருங்கடனஞ்சமுதுண்டுகந்துபெருங்காட்டிடைத்
திருந்திளமென்முலைத்தேவிபாடநடமாடிப்போய்ப்
பொருந்தலர்தம்புரமூன்றுமெய்துபுனவாயிலில்
இருந்தவன்றன்கழலேத்துவார்கட்கிடரில்லையே. (௭)

மனமிகுவேலனவ்வாளரக்கன்வலியொல்கிட
வனமிகுமால்வரையாலடர்த்தானிடமன்னிய
இனமிகுதொல்புகழ்பாடலாடல்லெழின்மல்கிய
புனமிகுகொன்றையந்தென்றலார்ந்தபுனவாயிலே. (௮)

திருவளர்தாமரைமேவினானுந்திகழ்பாற்கடற்
கருநிறவண்ணனுங்காண்பரியகடவுளிடம்
நரல்சுரிசங்கொடுமிப்பி † யுந்திந்நலமல்கிய
பொருகடல்வெண்டிரைவந்தெறியும்புனவாயிலே. (௯)

போதியெனப்பெயராயினாரும்பொறியில்சமண்
சாதியுரைப்பனகொண்டயர்ந்துதளர்வெய்தன்மின்
போதவிழ்தண்பொழின்மல்குமந்தண்புனவாயிலில்
வேதனைநாடொறுமேத்துவார்மேல்வினைவீடுமே. (௧௦)

பொற்றொடியாளுமைபங்கன்மேவும்புனவாயிலைக்
கற்றவர்தாந்தொழுதேத்தநின்றகடற்காழியான்
நற்றமிழ்ஞானசம்பந்தன்சொன்னதமிழ்நன்மைபால்
அற்றமில்பாடல்பத்தேத்தவல்லாருள்சேர்வரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

* பொங்கரவும் என்றும் பாடம். † சங்கொடிப்பி என்றும் பாடம்.

Koviloor Digital Library

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

சித்தநீநினையென்னொடுசூளறும்வைகலும்
மத்தயானையினீருரிபோர்த்தமணாளனூர்
பத்தர்தாம்பலர்பாடிநின்றாடும்பழம்பதி
பொத்திலாந்தைகள்பாட்டறாப்புனவாயிலே. (க)

கருதிநீ* மனமென்னொடுசூளறும்வைகலும்
எருதுமேற்கொளுமெம்பெருமாற்கிடமாவது
மருதவானவர்வைகுமிடம்மறவேடுவர்
பொருதுசாத்தொடு† பூசலறாப்புனவாயிலே. (உ)

தொக்காய்மனமென்னொடுசூளறும்வைகலும்
நக்கானமையாளுடையானவிளும்மிடம்
அக்கோடரவார்த்தபிரானடிக்கன்பராய்ப்
புக்காரவர்போற்றொழியாப்புனவாயிலே. (ங)

வற்கென்றிருத்திகண்டாய்மனமென்னொடுசூளறும்வைகலும்
பொற்குன்றஞ்சேர்ந்ததோர்காக்கைபொன்னாமதுவேபுகல்
கற்குன்றுந்தூறுங்கடுவெளியுங்கடற்கானல்வாய்ப்
புற்கென்றுதோன்றிடுமெம்பெருமான்புனவாயிலே. (ச)

நில்லாய்மனமென்னொடுசூளறும்வைகலும்
நல்லானமையாளுடையானவிளும்மிடம்
வில்வாய்க்கணைவேட்டுவராட்டவெருண்டுபோய்ப்
புல்வாய்க்கணம்புக்கொளிக்கும்புனவாயிலே. (ரு)

மறவனீமனமென்னொடுசூளறும்வைகலும்
உறவுமூழியுமாயபெம்மாற்கிடமாவது
பிறவுகள்ளியினீள்கவட்டேறித்தன்பேடையைப்
புறவங்கூப்பிடப்பொன்புனஞ்சூழ்புனவாயிலே. (சு)

ஏசற்றுநீநினையென்னொடுசூளறும்வைகலும்
பாசற்றவர்‡ பாடிநின்றாடும்பழம்பதி
தேசத்தடியவர்வந்திருபோதும்வணங்கிடப்
பூசற்றுடிபூசலறாப்புனவாயிலே. (எ)

கொள்ளிவாயினகூரெயிற்றேனங்கிழிக்கவே
தெள்ளிமாமணிதீவிழிக்குமிடஞ்செந்தறை
கள்ளிவற்றிப்புற்றீந்துவெங்கானங்கழிக்கவே
புள்ளிமானினம்புக்கொளிக்கும்புனவாயிலே. (அ)

* கருதுநீ என்றும் பாடம். † பொருசரத்தொடு என்றும் பாடம். ‡ பாசமற்றவர் என்றும் பாடம்.

Koviloor Digital Library

ஏற்றேற்கினையென்றொடுசூளறும்வைகலும்
மற்றேறதும்வேண்டாவல்வினையாயினமாய்ந்தறக்
கற்றாறுகார்க்காட்டிடைமேய்ந்தகார்க்கோழியோய்ப்
புற்றேறிக்கூகூவெனவழைக்கும்புனவாயிலே. (கூ)

பொடியாடுமேனியன்பொன்புனஞ்சூழ்புனவாயிலை
அடியாரடியன்னாவலவூரனுரைத்தன
மடியாதுகற்றிவைபத்தவல்லார்வினைமாய்ந்துபோய்க்
குடியாகிப்பாடி * நின்றாடவல்லார்க்கில்லைகுற்றமே. † (கக)

திருச்சிற்றம்பலம்.

திருப்புனவாயிற்றிருப்பதிகம் - உ.

ஆ திருப்பதிகம் - உ௦.

சுவாமி தேவி திருநாமங்கள் - பழம்பதிநாதர், கருணைநாயகி.

அ. திருவிராமேச்சுரம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

அலைவளர்தண்மதியோடயலேயடக்கியுமை
முலைவளர்பாகமுயங்கவல்லமுதல்வன்முனி
இலைவளர்தாழைகள்விம்முகானவிராமேச்சுரம்
தலைவளர்கோலநன்மாலைபன்றானிருந்தாட்சியே. (க)

தேவியைவவ்வியதென்னிலங்கைத்தசமாமுகன்
பூவியலும்முடிபொன்றுவித்தபழிபோயற
ஏவியலுஞ்சிலையண்ணல்செய்தவிராமேச்சுரம்
மேவியசிந்தையினார்கடம்மேல்வினைவீடுமே. (உ)

மானனநோக்கிவைதேவிதன்னையொருமாயையால்
கானதில்வவ்வியகாரரக்கன்றுயிர்செற்றவன்
ஈனமிலாப்புகழண்ணல்செய்தவிராமேச்சுரம்
ஞானமுநன்பொருளாகிநின்றதொருநன்மையே. (ங)

உரையுணராதவன்காமமென்னும்முறுவேட்கையான்
வரைபொருதோளிறச்செற்றவில்லிமகிழ்ந்தேத்திய
விரைமருவுங்கடலோதமல்குமிராமேச்சுரத்
தரையாவாடநின்றாடல்பேணுமம்மானல்லனே. (ச)

* குடியாகப்பாடி எனப்பாடபேதமாருமுளர். † இத்திருப்பதிகத்தில் ௧௦-வது செய்யுள்மறைந்துபோயிற்று.

Koviloor Digital Library

ஊறுடைவெண்டலைகையிலேந்திப்பலவூர்தொறும்
வீறுடைமங்கையரையம்பெய்யவிறலார்ந்ததோர்
ஏறுடைவெல்கொடியெந்தைமேயவிராமேச்சுரம்
பேறுடையான்பெயரேத்துமாந்தர்பிணிபேருமே. (ரு)

அணையலைசூழ்கடலன்றடைத்துவழிசெய்தவன்
பணையிலங்கும்முடிபத்திறுத்தபழிபோக்கிய
இணையிலியென்றுமிருந்தகோயிலிராமேச்சுரம்
துணையிலிதூமலர்ப்பாதமேத்தத்துயர்நீங்குமே.* (சு)

சனிபுதன்ஞாயிறுவெள்ளிதிங்கட்பலதீயன
முனிவதுசெய்து† கந்தானைவென்றவ்வினைமுடிட
இனியருணல்கிடென்றண்ணல்செய்தவிராமேச்சுரம்
பனிமதிசூடிநின்றாடவல்லபரமேட்டியே. (எ)

பெருவரையன்றெடுத்தேந்தினான்றன்பெயர்சாய்கெட‡
அருவரையாலடர்த்தன்றுநல்கியயன்மாலெனும்
இருவருநாடிநின்றேத்துகோயிலிராமேச்சுரத்
தொருவனுமேபலவாகிநின்றதொருவண்ணமே. (அ)

சாக்கியர்வன்சமண்கையர்மெய்யிற்றடுமாற்றத்தார்
வாக்கியலும்முரைபற்றுவிட்டுமதியொண்மையால்
வக்கியலுஞ்சிலையண்ணல்செய்தவிராமேச்சுரம்
ஆக்கியசெல்வனையேத்திவாழ்மின்னருளாகவே. (க0)

பகலவன்மீதியங்காமைக்காத்தபதியோன்றனை
இகலழிவித்தவனேத்துகோயிலிராமேச்சுரம்
புகலியுண்ஞானசம்பந்தன்சொன்னதமிழ்புந்தியால்
அகலிடமெங்குநின்றேத்தவல்லார்க்கில்லையல்லலே. ¶ (கக)

திருச்சிற்றம்பலம்.

பண் - பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

திரிதருமாமணிநாகமாடத்திளைத்தொருநீயழல்வாய்
நரிகதிக்கவெரியேந்தியாடுநலமேதெரிந்துணர்வார்
எரிகதிர்முத்தமிலங்குகானலிராமேச்சுரமேய
விரிகதிர்வெண்பிறைமல்குசென்னிவிமலர்செயுஞ்செயலே. (க)

பொறிகிளர்பாம்பரையார்த்தயலேபுரிவோடுமைபாடத்
தெறிகிளரப்பெயர்ந்தெல்லியாடுந்திறமேதெரிந்துணர்வார்
எறிகிளர்வெண்டிரைவந்துபேருமிராமேச்சுரமேய
மறிகிளர்மான்மழுப்புல்குகையெம்மணாளர்செயுஞ்செயலே. (உ)

* துயர்தீருமே என்றும் பாடம். † முனிவனசெய்து என்பாருமுளர். ‡ பெயர்சாய்கெட - கீர்த்திசாய்ந்துகெட; சாய்ந்துகெடுதல் பின்னர்த் தோன்றுதழிதல். ¶ இத்திருப்பதிகத்தில் கூ-வது செய்யுள் மறைந்துபோயிற்று.

Koviloor Digital Library

அலைவளர்தண்புனல்வார்சடைமேலடக்கியொருபாகம்
மலைவளர்காதலிபாடவாடிமயக்காவருமாட்சி
இலைவளர்தாழைமுகிழ்விரியுமிராமேச்சுரமேயார்
தலைவளர்கோலநன்மாலைசூடுந்தலைவர்செயுஞ்செயலே. (௩)

மாதனநேரிழை* யேர்தடங்கண்மலையான்மகள்பாடத்
தேதெரியங்கையிலேந்தியாடுந்திறமேதெரிந்துணர்வார்
ஏதமிலார்தொழுதேத்திவாழ்த்துமிராமேச்சுரமேயார்
போதுவெண்டிங்கள்பைங்கொன்றைசூடும்புனிதர்செயுஞ்செயலே. (௪)

சூலமோடொண்மழுநின்றிலங்கச்சுடுகாடிடமாகக்
கோலநன்மாதுடன்பாடவாடுங்குணமேகுறித்துணர்வார்
ஏலநறும்பொழில்வண்டுபாடுமிராமேச்சுரமேய
நீலமார்கண்டமுடையவெங்கணிமலர்செயுஞ்செயலே. (௫)

கணைபிணைவெஞ்சிலைகையிலேந்திக்காமனைக்காய்ந்தவர்தாம்
இணைபிணைநோக்கிநல்லாளொடாடுமியல்பினராகிநல்ல
இணைமலர்மேலன்னம்வைகுகானலிராமேச்சுரமேயார்
அணைபிணைபுல்கு† காந்தைசூடுமடிகள்செயுஞ்செயலே. (௬)

நீரினார்புன்சடைபின்புதாழநெடுவெண்மதிசூடி
ஊரினார்துஞ்சிருள்பாடியாடுமுவகைதெரிந்துணர்வார்
ஏரினார்பைம்பொழில்வண்டுபாடுமிராமேச்சுரமேய
காரினார்கொன்றைவெண்டிங்கள்சூடுங்கடவுள்செயுஞ்செயலே. (௭)

பொன்றிகழ்சுண்ணவெண்ணீறு‡ பூசிப்புலித்தோலுடையாக
மின்றிகழ்சோதியர்பாடலாடன்மிக்கார்வருமாட்சி
என்றுநல்லோர்கள்பரவியேத்துமிராமேச்சுரமேயார்
குன்றியலன்றரக்கன்றடந்தோளடர்த்தார்கொளுங்கொள்கையே. (௮)

கோவலனான்முகனோக்கொணாதகுழகனழகாய
மேவலனொள்ளெரியேந்திபாடுமிமையோரிறைமெய்ம்மை
ஏவலனார்புகழ்ந்தேத்தி¶ வாழ்த்துமிராமேச்சுரமேய
சேவலவெல்கொடியேந்துகொள்கைபெம்மிறைவர்செயுஞ்செயலே. § (௯)

பின்னொடுமுன்னிடுதட்டைச்சாத்திப்பிரட்டேதிரிவாரும்○
பொன்னெடுஞ்சீவரப்போர்வையார்கள்புறங்கூறல்கேளாதே
இன்னெடுஞ்சோலைவண்டியாழ்முரலுமிராமேச்சுரமேய
பன்னெடுவெண்டலைகொண்டுழலும்பரமர்செயுஞ்செயலே. (௧௦)

* மாதெனநேரிழை என்றும் பாடம்; மாதெனப் பாட ஆடுந்திறம் என்க; மாது - அழகு. † அணைமணைபல்கு என்றும், அணைபிணைபல்கு என்றும் பாடம். ‡ பொன்றினர் [illegible]ண்ணவெண்ணீறு என்றும் பாடம். ¶ ஏவலனன்புகுந்தேத்தி என்றும், ஏவலனார்புகுந் [illegible]த்தி என்றும், ஏவலனன்புகழ்ந்தேத்தி என்றும் பாடம். § யெம்மிறைசெய்செயலே என்றும் பாடம். ○ பிறதேதிரிவாரும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

தேவியைவவ்வியதென்னிலங்கையரையன்றிறல்வாட்டி
ஏவியல்வெஞ்சிலையண்ணலனன்னுமிராமேச்சுரத்தாரை
நாவியன்ஞானசம்பந்தனல்லமொழியானவின்றேத்தும்
யாவியன்மாலைவல்லாரவர்தம்வினையாயினபற்றறுமே. * (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனர்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

பாசமுங்கழிக்ககில்லாவரக்கரைப்படுத்துத்தக்க
வாசமிக்கலர்கள்கொண்டுமதியினன்மால்செய்கோயில்
நேசமிக்கன்பினாலேநினைமினீர்நின்றுநாளும் †
தேசமிக்கானிருந்ததிருவிராமேச்சுரமே. (க)

முற்றினநாள்களென்று ‡ முடிப்பதேகாரணமாய்
உற்றவன்போர்களாலேயுணர்விலாவரக்கர்தம்மைச்
செற்றமால்செய்தகோயிறிருவிராமேச்சுரத்தைப்
பற்றிநீபரவுநெஞ்சேபடர்சடையீசன்பாலே. (உ)

கடலிடைமலைகடம்மாலடைத்துமால்கருமமுற்றித்
திடலிடைச்செய்தகோயிறிருவிராமேச்சுரத்தைத்
தொடலிடைவைத்துநாவிற்சுழல்கின்றேன்றூய்மையின்றி
உடலிடைநின்றும்பேராவைவராட்டுண்டு ¶ நானே. (ங)

குன்றுபோற்றோளுடையகுணமிலாவரக்கர்தம்மைக்
கொன்றுபோராழியம்மால்வேட்கையாற்செய்தகோயில்
நன்றுபோனெஞ்சமே § நீநன்மையையறிதியாயில் ○
சென்றுநீதொழுதுய்கண்டாய்திருவிராமேச்சுரமே. (ச)

வீரமிக்கெயிறுகாட்டிவிண்ணுறநீண்டரக்கன்
கூரமிக்கவனைச்சென்றுகொன்றுடன்கடற்படுத்துத்
தீரமிக்கானிருந்ததிருவிராமேச்சுரத்தைக்
கோரமிக்கார்தவத்தாற்கூடுவார் ** குறிப்புளாரே. (ரு)

ஆர்வலநம்மின்மிக்கா †† ரென்றவவ்வரக்கர்கூடிப்
போர்வலஞ்செய்துமிக்குப்பொருதவர்தம்மைவீட்டித்
தேர்வலஞ்செற்றமால்செய்திருவிராமேச்சுரத்தைச்
சேர்மடநெஞ்சமேநீசெஞ்சடையெந்தைபாலே. (சு)

* வினையானபற்றறுமே என்றும் பாடம். † னீர்சென்றுநாளும் என்றும் பாடம். ‡ முற்றினனாள்களென்று என்றும் பாடம். ¶ ஐவராட்டுண்டு - ஐவரால் ஆட்டுண்டு. § நன்றுபோர்நெஞ்சமே என்றும் பாடம். ○ நன்மையையுறுதியாயில் என்றும் பாடம். ** கூறுவார் என்றும் பாடம். †† ஆர்வலனம்மின்மிக்கார் என்றும், ஆர்வலர்நம்மின்மிக்கார் என்றும் பாடம்.

Koviloor Digital Library

வாக்கினுலின்புரைத்துவாழ்கிலார்தம்மையெல்லாம்
போக்கினுற்புடைத்தவர்களுயிர்தனையுண்டுமாறுன்
தேக்குநீர்செய்தகோயிறிருவிராமேச்சுரத்தை
நோக்கினுல்வணங்குவார்களைப்பிணி*நணுகுமன்றே. (எ)

பலவுநாடமைசெய்துபார்தன்மேற்குழுமிவந்து
கொலைவிலார்கொடியராயவரக்கரைக்கொன்றுவீழ்த்த
சிலையினுன்செய்தகோயிறிருவிராமேச்சுரத்தைத்
தலையினுல்வணங்குவார்கடாழ்வராந்தவமதாமே. (அ)

கோடிமாதவங்கள்செய்துகுன்றினுர்தம்மையெல்லாம்
வீடவேசக்கரத்தாலெறிந்துபின்னன்புகொண்டு
தேடிமால்செய்தகோயிறிருவிராமேச்சுரத்தை
நாடிவாழ்நெஞ்சமேநீநன்னெறியாகுமன்றே. (கூ)

வன்கண்ணர்வாளரக்கர்வாழ்வினையொன்றறியார்
புன்கண்ணராகிநின்றுபோர்கள்செய்தாரைமாட்டிச்
செங்கண்மால்செய்தகோயிறிருவிராமேச்சுரத்தைத்
தங்கணுலெய்தவல்லார்தாழ்வராந்தலைவன்பாலே. (க0)

வரைகளொத்தேயுயர்ந்தமணிமுடியரக்கர்கோனை
விரையமுற்றறவொடுக்கிமீண்டுமால்செய்தகோயில்
திரைகண்முத்தால்வணங்குந்திருவிராமேச்சுரத்தை
உரைகள்பத்தாலுரைப்பாருள்குவாரன்பினுலே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவிராமேச்சுரத்திருப்பதிகம் - ந.

ஆ திருப்பதிகம் - உந.

சுவாமி தேவி திருநாமங்கள் - இராமநாதர், பருவதவர்த்தனி.

கூ. திருவாடானை.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர்.

பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

மாதோர்கூறுகந்தேறதேறிய
ஆதியானுறைபாடானை
போதினுற்புனைந்தேத்துவார்தமை
வாதியாவினையாயுமே. (க)

* வணங்குவார்க்குநோய்வினை என்றும் பாடம்.

Koviloor Digital Library

வாடல்வெண்டலையங்கையேந்திநின்
றாடலானுறையாடானை
தோடலாமலர்தூவிக்கைதொழ
வீடுநுங்கள்வினைகளே. (உ)

மங்கைகூறினன்மான்மறியுடை
அங்கையானுறையாடானை
தங்கையாற்றொழுதேத்தவல்லவர்
மங்குநோய்பிணிமாயுமே. (ங)

சுண்ணநீறணிமார்பிற்றோல்புனை
அண்ணலானுறையாடானை
வண்ணமாமலர்தூவிக்கைதொழ
எண்ணுவாரிடரேகுமே. (ச)

கொய்யணிம்மலர்க்கொன்றைசூடிய
ஐயன்மேவியவாடானை
கையணிம்மலரால்வணங்கிட
வெய்யவல்வினைவீடுமே. (ரு)

வானிளம்மதிமல்குவார்சடை
ஆனஞ்சாடலனாடானை
தேனணிம்மலர்சேர்த்தமுன்செய்த
ஊனமுள்ளவொழியுமே. (சு)

துலங்குவெண்மழுவேந்திச்சூழ்சடை
அலங்கலானுறையாடானை
நலங்கொண்மாமலர்தூவிநாடொறும்
வலங்கொள்வார்வினைமாயுமே. (எ)

வெந்தநீறணிமார்பிற்றோல்புனை
அந்தமில்லவனாடானை
கந்தமாமலர்தூவிக்கைதொழும்
சிந்தையார்வினைதேயுமே. (அ)

மறைவலாரொடுவானவர்தொழு
தறையுந்தண்புனலாடானை
உறையுமீசனையேத்தத்தீவினை
பறையுநல்வினைபற்றுமே. (கூ)

மாயனும்மலரானுங்கைதொழ
ஆயவந்தணனாடானை
தூயமாமலர்தூவிக்கைதொழத்
தீயவல்வினைதீருமே. (கo)

Koviloor Digital Library

விடினார்மலிவெங்கடத்துநின்
றுடலாதுறையாடானை
நாடிஞானசம்பந்தன்செந்தமிழ்
பாடநோய்பிணிபாறுமே. (கக)
திருச்சிற்றம்பலம்.

திருவாடானைத்திருப்பதிகம்-க.
ஆ திருப்பதிகம் - உச.

சுவாமி தேவி திருநாமங்கள் - ஆதிரத்னநாதர், அம்பாயிரவல்லி.

கO. திருக்கானப்பேர்.*

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

பிடியெலாம்பின்செலப்பெருங்கைமாமலர்தழீஇ
விடியலேதடமூழ்கிவிதியினால்வழிபடும்
கடியுலாம்பூம்பொழிற்கானப்பேரண்ணலின்
அடியலாலடைசரணுடையரோவடியரே. (க)

நண்ணிடைப்போல்குனாபுரமெல்லடிப்
பெண்ணினல்லாளையோர்பாகமாப்பேணினன்
கண்ணுடைநெற்றியான்கருதியகானப்பேர்
விண்ணிடைவேட்கையார்விரும்புதல்கருமமே. (உ)

வாவிவாய்த்தங்கியநண்சிறைவண்டினம்
காவிவாய்ப்பண்செயுங்கானப்பேரண்ணலை
நாவிவாய்ச்சாந்துளும்பூவுளுஞானநீர்
தூவிவாய்ப்பெய்துநின்றாட்டுவார்தொண்டரே. (௩)

நிறையுடைநெஞ்சுளுநீருளும்பூவுளும்
பறையுடைமுழவுளும்பலியுளும்பாட்டுளும்
கறையுடைமிடற்றண்ணல்கருதியகானப்பேர்
குறையுடையவர்க்கலாற்களைகிலார்குற்றமே. (௪)

ஏனப்பூண்மார்பின்மேலென்புபூண்டீறிலா
ஞானப்பேராயிரம்பேரினானண்ணிய
கானப்பேரூர்தொழுங்காதலார்தீதிலர்
வானப்பேரூர்புகும்வண்ணமும்வல்லரே. (௫)

* திருக்கானப்பேர்—காளையார்கோயில்.

Koviloor Digital Library

பள்ளமேபடர்சடைப்பாற்படப்பாய்ந்தநீர்
வெள்ளமேதாங்கினன்வெண்மதிசூடினன்
கள்ளமேசெய்கிலார்கருதியகானப்பேர்
உள்ளமேகோயில்கொள்குமென்னுள்ளமே. (சு)

மானமாமடப்பிடிவன்கையாலலகிடக்
கானமார்கடகரிவழிபடுங்கானப்பேர்
ஊனமாமுடம்பினிலுறுபிணிகெடவெண்ணில் *
ஞானமாமலர்கொடுநணுகுதனன்மையே. (எ)

வாளினன்வேலினன்மால்வரையெடுத்ததிண்
தோளினனெடுமுடிதொலையவேயூன்றிய
தாளினன்கானப்பேர்தலையினல்வணங்குவார்
நாளுநாளுயர்வதோர்நன்மையைப்பெறுவரே. (அ)

சிலையினன்முப்புரந்தீயெழச்செற்றவன்
நிலையிலாவிருவரைநிலைமைகண்டோங்கினன்
கலையினர்புறவிற்றேன்கமழ்தருகானப்பேர்
தலையினல்வணங்குவார்தவமுடையார்களே. (கூ)

உறித்தலைச்சுரையொடுகுண்டிகைபிடித்துச்சி
பறித்தலும்போர்த்தலும்பயனிலைபாவிகாள்
மறித்தலைமடப்பிடிவளரிளங்கொழுங்கொடி
கறித்தெழுகானப்பேர்கைதொழல்கருமமே. (க0)

காட்டகத்தாடலான்கருதியகானப்பேர்
கோட்டகத்திளவரால்குதிகொளுங்காழியான்
நாட்டகத்தோங்குசீர்ஞானசம்பந்தன
பாட்டகத்திவைவலார்க்கில்லையாம்பாவமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்தி நாயனார்.

பண் - புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

தொண்டாடித்தொழுதுஞ்சோதியிளம்பிறையுஞ்
சூதனமென்முலையாள்பாகமுமாகிவரும் †
புண்டரிகப்பரிசாமேனியும்வானவர்கள்
பூசலிடக்கடனஞ்சுண்டகருத்தமரும்
கொண்டலெனத்திகழுங்கண்டமுமெண்டோளுங்
கோலநறுஞ்சடைமேல்வண்ணமுங்கண்குளிரக்
கண்டுதொழப்பெறுவதென்றுகொலோவடியேன்
கார்வயல்சூழ்கானப்பேருறைகாளையையே. (க)

* வெண்ணில் என்றும் பாடம். † பாகமுமாகவரும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

கூதலிடுஞ்சடையுங்கோளரவும்விரவுங்
கொக்கிறகுங்குளிர்மாமத்தமுமொத்துனதாள்
ஒதலுணர்ந்தடியாருன்பெருமைக்குநினைந்
துள்ளுருகாவிரசும்மோசையைப்பாடலுநீ
ஆதலுணர்ந்தவரோடன்புபெருத்தடியே
னங்கையின்மாமலர்கொண்டென்கணதல்லல்கெடக்
காதலுறத்தொழுவதென்றுகொலோவடியேன்
கார்வயல்சூழ்கானப்பேருறைகாளையையே. (௨)

நானுடைமாடெனவேகன்மைகரும்பரனை
நற்பதமென்றுணர்வார்சொற்பதமார்சிவனைத்
தேனிடையின்னமுதைமற்றதனிற்றெளியைத்
தேவர்கணாயகனைப்பூவுயர்சென்னியனை
வானிடைமாமதியைமாசறுசோதியனை
மாருதமும்மனலும்* மண்டலமும்மாய
கானிடைமாநடனென்றெய்துவதென்றுகொலோ
கார்வயல்சூழ்கானப்பேருறைகாளையையே. (௩)

செற்றவர்முப்புரமன்றட்டசிலைத்தொழிலார்
சேவகமுந்நினைவார்பாவகமுந்நெறியும்
குற்றமிறன்னடியார்கூறுமிசைப்பரிசுங்
கோசிகமும்மரையிற்கோவணமும்மதளும்
மற்றிகழ்திண்புயமுமார்பிடைநீறுதுதை
மாமலைமங்கையுமைசேர்சுவடும்புகழக்
கற்றனவும்பரவிக்கைதொழலென்றுகொலோ
கார்வயல்சூழ்கானப்பேருறைகாளையையே. (௪)

கொல்லைவிடைக்கழகுங்கோலநறுஞ்சடையிற்†
கொத்தலரும்மிதழித்தொத்துமதனருகே
முல்லைபடைத்தநகைமெல்லியலாளொருபால்
மோகமிகுத்திலகுங்கூறுசெயெப்பரிசும்‡
தில்லைநகர்ப்பொதுவுற்றாடியசீர்நடமுந்
திண்மழுவுங்கைமிசைக்கூரெரியும்மடியார்
கல்லவடப்பரிசுங்காணுவதென்றுகொலோ
கார்வயல்சூழ்கானப்பேருறைகாளையையே. (௫)

பண்ணுதலைப்பயனார்பாடலுநீடுதலும்
பங்கயமாதனையார்பத்தியுமுத்தியளித்
தெண்ணுதலைப்பெருமானென்றெழுவாரவர்தம்
மேசறவும்பிறையாமெந்தையையும்விரவி
நண்ணுதலைப்படுமாறெங்ஙனமென்றயலே
நைகிறவென்னை¶ மதித்துய்யும்வணம்மருளும்
கண்ணுதலைக்கனியைக்காண்பதுமென்றுகொலோ
கார்வயல்சூழ்கானப்பேருறைகாளையையே. (௬)

* மாருதமும் புனலும் என்றும் பாடம். † சடைமேற் என்றும் பாடம். ‡ கூறுசெயெப்பரிசம் என்றும் பாடம். ¶ நைகின்றவென்னை என்றும் பாடம்.

Koviloor Digital Library

மாவையுரித்ததள்கொண்டங்கமணிந்தவனை
வஞ்சர்மனத்திறையுநெஞ்சணுகாதவனை
மூவருருத்தனதாமூலமுதற்கருவை
மூசிடுமால்விடையின்பாகனையாகமுறப்
பாவகமின்றிமெய்யேபற்றுமவர்க்கமுதைப்
பானறுநெய்தயிரைந்தாடுபரம்பரனைக்
காவலெனக்கிறையென்றெய்துவதென்றுகொலோ
கார்வயல்சூழ்கானப்பேருறைகாளையையே. (எ)

தொண்டர்தமக்கெளியசோதியைவேதியனைத்
தூயமறைப்பொருளாநீதியைவார்கடனஞ்
சுண்டதனுக்கிறவாதென்றுமிருந்தவனை
யூழிபடைத்தவனோடொள்ளரியுமுணரா
அண்டனையண்டர்தமக்காகமநூன்மொழியும்
ஆதியைமேதகுசீரோதியைவானவர்தம்
கண்டனையன்பொடுசென்றெய்துவதென்றுகொலோ
கார்வயல்சூழ்கானப்பேருறைகாளையையே. (அ)

நாதனைநாதமிகுத்தோசையதானவனை
ஞானவிளக்கொளியாமூனுயிரைப்பயிரை
மாதனைமேதகுதன்பத்தர்மனத்திறையும்
பற்றுவிடாதவனைக்குற்றமில்கொள்கையரைத்
தூதனையென்றனையாளோழனைநாயகனைத்
தாழ்மகரக்குழையுந்தோடுமணிந்ததிருக்
காதனைநாயடியேனெய்துவதென்றுகொலோ
கார்வயல்சூழ்கானப்பேருறைகாளையையே. (கூ)

கன்னலையின்னமுதைக்கார்வயல்சூழ்கானப்
பேருறைகாளையையொண்சீருறைதண்டமிழால்
உன்னிமனத்தயராவுள்ளுருகிப்பரவு
மொண்பொழினாவலர்கோனாகியவாரூரன்
பன்னுமிசைக்கிளவிபத்திவைபாடவல்லார்
பத்தர்குணத்தினராயெத்திசையும்புகழ
மன்னியிருப்பவர்கள்வானினிழிந்திடினு
மண்டலநாயகராய்வாழ்வதுநிச்சயமே. (கய)

திருச்சிற்றம்பலம்.

திருக்கானப்பேர்த்திருப்பதிகம் - உ.

ஆ திருப்பதிகம் - உகூ.

சுவாமி தேவி திருநாமங்கள் - காளையப்பர், மகமாயி.

Koviloor Digital Library

சுந்தரமூர்த்திநாயனார் திருவிராமேச்சுரத்தை நீங்கித் திருச்சுழியலிலேபோய்ச் சுவாமிதரிசனஞ்செய்து, திருப்பதிகம் பாடிக்கொண்டு, அங்கே இருக்க, சுவாமி அவருக்குச் சொப்பனத்திலே காளைவடிவங்கொண்டு கையிலே பொற்செண்டும் முடியின்மேல் சுழியமும் உடையவராகித் தோன்றி, "நம்முடைய வாசஸ்தானம் கானப்பேர்" என்று சொல்லி மறைந்தருளினார். நாயனார் விழித்தெழுந்து, திருவருளை வியந்து, தாங்கண்ட சொப்பனத்தைத் தம்மோடுகூட வந்திருக்கின்ற சேரமான்பெருமாணாயனாருக்குத் தெரிவித்து, திருச்சுழியலை நீங்கி, "தொண்டரடித்தொழலும்" என்று எடுத்து, "கண்டுதொழப்பெறுவதென்றுகொலோவடியேன் கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே" என்று திருப்பதிகம் பாடிக்கொண்டு திருக்கானப்பேரென்னுந் திருப்பதியை யடைந்தார்

கக. திருப்பூவணம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

அறையார்புனலுமாமலருமாடரவார்சடைமேல்
குறையார்மதியஞ்சூடிமாதோர்கூறுடையானிடமாம்
முறையார்* முடிசேர்தென்னர்சேரர்சோழர்கடாம்வணங்கும்
திறையாரொளிசேர்செம்மையோங்குந்தென்றிருப்பூவணமே. (க)

மருவார்மதின்மூன்றொன்றவெய்துமாமலையான்மடந்தை
ஒருபால்பாகமாகச்செய்தவும்பர்பிரானவனூர்
கருவார்சாலியாலைமல்கிக்கழன்மன்னர்காத்தளித்த
திருவான்மலிந்தசேடர்வாழுந்தென்றிருப்பூவணமே. (உ)

போரார்மதமாவுரிவைபோர்த்துப்பொடியணிமேனியனுக்
காரார்கடனஞ்சமுண்டகண்ணுதல்விண்ணவனூர்
பாரார்வைகைப்புனல்வாய்பரப்பிப்பன்மணி† பொன்கொழித்துச்
சீரார்வாரிசேரநின்றதென்றிருப்பூவணமே. (ந)

கடியாரலங்கற்கொன்றைசூடிக்காதிலோர்வார்குழையன்
கொடியார்வெள்ளையேறுகந்தகோவணவன்னிடமாம்
படியார்கூடிநீடியோங்கும்பல்புகழாற்பரவச்
செடியார்வைகைசூழநின்றதென்றிருப்பூவணமே. (ச)

கூரார்வாளிசிலையிற்கோத்துக்கொடிமதில்கூட்டழித்த
போரார்வில்லி‡ மெல்லியலாளோர்பான்மகிழ்ந்தானிடமாம்
ஆராவன்பிற்றென்னர்சேரர்சோழர்கள்போற்றிசைப்பத்
தேரார்வீதிமாடநீடுந்தென்றிருப்பூவணமே. (ரு)

* முறையான் என்றும் பாடம். † புனல்பரப்பிப்பன்மணி என்றும் பாடம். ‡ போரான்வில்லி என்றும், போரான்வில்லி என்றும், பாரார்வில்லி என்றும் பாடம்.

Koviloor Digital Library

நன்றுதீதென்றென்றிலாதநான்மறையோன்கழலே
சென்றுபேணியேத்தநின்றதேவர்பிரானிடமாம்
குன்றிலொன்றியோங்கமல்குகுளிர்பொழில்சூழ்மலர்மேல்
தென்றலொன்றிமுன்றிலாருந்தென்றிருப்பூவணமே. (சு)

பைவாயரவமரையிற்சாத்திப்பாரிடம்போற்றிசைப்ப
மெய்வாய்மேனிநீறுபூசியேறுகந்தானிடமாம்
கைவாழ்வளையார் * மைந்தரோடுங்கலவியினுனெருங்கிச் †
செய்வார்தொழிலின்பாடலோவாத்தென்றிருப்பூவணமே. (எ)

மாடவீதிமன்னிலங்கைமன்னனைமாண்பழித்துக்
கூடவென்றிவாள்கொடுத்தாள்கொள்கையினார்க்கிடமாம் ‡
பாடலோடுமாடலோங்கிப்பன்மணிபொன்கொழித்து
ஓடிநீரால் ¶ வைகைசூழுமுயர் திருப்பூவண்மே. (அ)

பொய்யாவேதநாவினானும்பூமகள்காதலனும்
கையாற்றொழுதுகழல்கள்போற்றக்கனலெரியானவனூர்
மையார்பொழிலின்வண்டுபாடவைகைமணிகொழித்துச்
செய்யார்கமலந்தேனரும்புந்தென்றிருப்பூவணமே. (கூ)

அலையார்புனலைநீத்தவருந்தேருமன்புசெய்யா
நிலையாவண்ணமாயம்வைத்தநின்மலன்றன்னிடமாம்
மலைபோற்றுன்னிவென்றியோங்குமாளிகைசூழ்ந்தயலே
சிலையார்புரிசைபரிசுபண்ணுந்தென்றிருப்பூவணமே. (க0)

திண்ணார்புரிசைமாடமோங்குந்தென்றிருப்பூவணத்துப்
பெண்ணார்மேனியெம்மிறையைப்பேரியலின்றமிழால்
நண்ணாருட்கக்காழிமல்குஞானசம்பந்தன்சொன்ன
பண்ணார்பாடல்பத்தும்வல்லார்பயில்வதுவானிடையே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

மாதமர்மேனியனாகிவண்டொடு
போதமர்பொழிலணிபூவணத்துறை
வேதனைவிரவலரரண § மூன்றெய்த
நாதனையடிதொழநன்மையாகுமே. (க)

வானணிமதிபுல்குசென்னிவண்டொடு
தேனணிபொழிற்றிருப்பூவணத்துறை
ஆனநல்லருமறையங்கமோதிய
ஞானனையடிதொழநன்மையாகுமே. (உ)

* கைவாழ்வினையார் என்றும் பாடம். † நெருங்கச் என்றும் பாடம். ‡ தாட்கொள் கையினார்க்கிடமாம் என்றும் பாடம். ¶ ஓடநீரால் என்றும் பாடம். § விரவலாரரணம் என்றும் பாடம்.

Koviloor Digital Library

வெந்துயருறுபிணிவினைகடீர்வதோர்
புந்தியர்தொழுதெழுபூவணத்துறை
அந்திவெண்பிறையினோடாறுசூடிய
நந்தியையடிதொழநன்மையாகுமே. (௩)

வாசநன்மலர்மலிமார்பில்வெண்பொடிப்
பூசனைப்பொழிறிகழ்பூவணத்துறை
ஈசனைமலர்புனைந்தேத்துவார்வினை
நாசனையடிதொழநன்மைபாகுமே. (௪)

குருந்தொடுமாதவிகோங்குமல்லிகை
பொருந்தியபொழிற்றிருப்பூவணத்துறை
அருந்திறலவுணர்தமரணமூன்றெய்த
பெருந்தகையடிதொழப்பீடையில்லையே. (௫)

வெறிகமழ்புன்னைபொன்ஞாழல்விம்மிய
பொறியரவணிபொழிற்பூவணத்துறை
கிறிபடுமுடையினன்கேடில்கொள்கையன்
நறுமலரடிதொழநன்மையாகுமே. (௬)

பறைமல்குமுழவொடுபாடலாடலன்
பொறைமல்குபொழிலணிபூவணத்துறை
மறைமல்குபாடலன்மாதொர்கூறினன்
அறைமல்குகழறொழவல்லலில்லையே. (௭)

வரைதனையெடுத்தவல்லரக்கனீண்முடி
விரனிலடர்த்தவன்வெள்ளைநீற்றினன்
பொருபுனல்புடையணிபூவணந்தனைப்
பரவியவடியவர்க்கில்லைபாவமே. (௮)

நீர்மல்குமலருறைவானுமாலுமாய்ச்
சீர்மல்குதிருந்தடிசேரகிற்கிலர்
போர்மல்குமழுவினன்மேயபூவணம்
ஏர்மல்குமலர்புனைந்தேத்தலின்பமே. (௯)

மண்டைகொண்டுழிதருமதியிறேரரும்
குண்டருங்குணமலபேசுங்கோலத்தர் *
வண்டமர்வளர்பொழின்மல்குபூவணம்
கண்டவரடிதொழுதேத்தல்கன்மமே. (௧௦)

புண்ணியர்தொழுதெழுபூவணத்துறை
அண்ணலையடிதொழுதந்தண்காழியுள்
நண்ணியவருமறைஞானசம்பந்தன்
பண்ணியதமிழ்சொலப்பறையும்பாவமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

* குணம்பலபேசுங்கோலத்தர் என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருநாவுக்கரசுநாயனார்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

வடியேறு * திரிசூலந்தோன்றுந்தோன்றும்
வளர்சடைமேலிளமதியந்தோன்றுந்தோன்றும்
கடியேறுகமழ்கொன்றைக்கண்ணிதோன்றுங்
காதில்வெண்குழைதோடுகலந்துதோன்றும்
இடியேறுகளிற்றுரிவைப்போர்வைதோன்று
மெழிறிகழுந்திருமுடியுமிலங்கித்தோன்றும்
பொடியேறுதிருமேனிபொலிந்துதோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (க)

ஆணாகிப்பெண்ணாயவடிவுதோன்று
மடியவர்கட்காரமுதமாகித்தோன்றும்
ஊனாகியூர்திரிவானாகித்தோன்று
மொற்றைவெண்பிறைதோன்றும்பற்றார்தம்மேல்
சேனாகவரைவில்லாலெரித்தறோன்றுஞ்
செத்தவர்தம்மெலும்பினாற்செறியச்செய்த
பூணாணுமரைநாணும் † பொலிந்துதோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (உ)

கல்லாலினீழற்கலந்துதோன்றுங்
கவின்மறையோர்நால்வர்க்குநெறிகளன்று
சொல்லாகச்சொல்லியவாதோன்றுந்தோன்றுஞ்
சூழரவுமான்மறியுந்தோன்றுந்தோன்றும்
அல்லாதகாலனைமுன்னடர்த்தறோன்று
மையவகையானினைவார்பாலமர்ந்துதோன்றும்
பொல்லாதபுலாலெலும்புப்பூணாய்த்தோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (௩)

படைமலிந்தமழுவாளுமானுந்தோன்றும்
பன்னிரண்டுகையுடையபிள்ளைதோன்றும்
நடைமலிந்தவிடையோடுகொடியுந்தோன்று
நான்மறையினொலிதோன்றுநயனந்தோன்றும்
உடைமலிந்தகோவண ‡ முங்கீளுந்தோன்று
மூரல்வெண்சிரமாலை ¶ யுலாவித்தோன்றும்
புடைமலிந்தபூதத்தின்பொலிவுதோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (௪)

* வடிவேறு என்றும் பாடம். † மரைநாணும் என்றும் பாடம். ‡ முடைமலிந்தகோவணம் என்றும் பிரிக்கலாம்; முடைதல் - பின்னுதல்; முடை முதனிலை. ¶ சிரமாலை என்றும் பாடம்.

Koviloor Digital Library

மயலாகுந்தன்னடியார்க்கருளுந்தோன்று
மாசிலாப்புன்சடைமேன்மதியந்தோன்றும்
இயல்பாகவிடுபிச்சையேற்றறோன்று
மிருங்கடனஞ்சுண்டிருண்டகண்டந்தோன்றும்
கயல்பாயக்கடுங்கலுழிக்கங்கைநங்கை
யாயிரமாமுகத்தினொடுவானிற்றோன்றும்
புயல்பாயச்சடைவிரித்தபொற்புத்தோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (ரு)

பாராழிவட்டத்தார்பரவியிட்ட
பன்மலருநறும்புகையும்பரந்துதோன்றும்
சீராழித்தாமரையின்மலர்களன்ன
திருந்தியமாநிறத்தசேவடிகடோன்றும்
ஓராழித்தேருடையவிலங்கைவேந்த
னுடலுணித்தவிடர்பாவங்கெடுப்பித்தன்று
பேராழிமுன்னீந்தபொற்புத்தோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (சு)

தன்னடியார்க்கருள்புரிந்தசகவுதோன்றுஞ்
சதுர்முகனைத்தலையரிந்ததன்மைதோன்றும்
மின்னனையநுண்ணிடையாள்பாகந்தோன்றும்
வேழத்தினுரிவிரும்பிப்போர்த்ததோன்றும்
துன்னியசெஞ்சடைமேலோர்புனலும்பாம்புந்
தூயமாமதியுடனேவைத்ததோன்றும்
பொன்னனையதிருமேனிபொலிந்துதோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (எ)

செறிகழலுந்திருவடியுந்தோன்றுந்தோன்றுந்
திரிபுரத்தைபெரிசெய்தசிலையுந்தோன்றும்
நெறியதனைவிரித்துரைத்தநேர்மைதோன்று*
நெற்றிமேற்கண்டோன்றும்பெற்றந்தோன்றும்
மறுபிறவியறுத்தருளும்வகையுந்தோன்று
மலைமகளுஞ்சலமகளுமலிந்துதோன்றும்
பொறியரவுமிளமதியும்பொலிந்துதோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (அ)

அருப்போட்டுமுலைமடவாள்பாகந்தோன்று
மணிகிளருமுருமென்னவடர்க்குங்கேழல்
மருப்போட்டுமணிவயிரக்கோவைதோன்று
மணமலிந்தநடந்தோன்றுமணியார்வைகைத்

* சீர்மைதோன்றும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருக்கோட்டினின்றமதோர் திறமுந்தோன்றுஞ்
　　செக்கர்வானொளிமிக்குத்திகழ்ந்தசோதிப்
பொருப்போட்டிநின்றதிண்புயமுந்தோன்றும்
　　பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (கூ)

ஆங்கணைந்தசண்டிக்குமருளியன்று
　　தன்முடிமேலலர்மாலையளித்தருேன்றும்
பாங்கணைந்துபணிசெய்வார்க்கருளியன்று *
　　பலபிறவியறுத்தருளும்பரிசுந்தோன்றும்†
கோங்கணைந்தகூவிளமுமதமத்தமுங்
　　குழற்கணிந்தகொள்கையொடுகோலந்தோன்றும்
பூங்கணைவேளுருவழித்தபொற்புத்தோன்றும்
　　பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (க0)

ஆருருவவுள்குவா ‡ருள்ளத்துள்ளே
　　யவ்வுருவாய்நிற்கின்றவருளுந்தோன்றும்
வாருருவப்பூண்முலைநன்மங்கைதன்னை
　　மகிழ்ந்தொருபால்வைத்துகந்தவடிவுந்தோன்றும் ¶
நீருருவக்கடலிலங்கையரக்கர்கோனை
　　நெறுநெறெனவடர்த்திட்டநிலையுந்தோன்றும்
போருருவக்கூற்றுதைத்தபொற்புத்தோன்றும்
　　பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

திருவுடையார்திருமாலயனாலும்
உருவுடையாருமையாளையொர்பாகம்
பரிவுடையாரடைவார்வினைதீர்க்கும் §
புரிவுடையாருறைபூவணமீதோ. (க)

எண்ணியிருந்துகிடந்துநடந்தும்
அண்ணலெனாநினைவார்வினைதீர்ப்பார்
பண்ணிசையார்மொழியார்பலர்பாடப்
புண்ணியனாருறைபூவணமீதோ. 0 (உ)

* பணிசெய்வார்க்கருளுந்தோன்றும் என்றும் பாடம். † பரிசுதோன்றும் என்றும் பாடம். ‡ ஆரொருவருள்குவார் என்றும் பாடம். ¶ வடிவுதோன்றும் என்றும் பாடம். § ரடையாவினைதீர்க்கும் என்றும் பாடம். 0 இத்திருப்பதிகத்தில் உ-வது செய்யுள் ச-வதாகவும், ரு-வது உ-வதாகவும், ச-வது ரு-வதாகவும் சிலபிரதிகளிற்காணப்படுகின்றன.

Koviloor Digital Library

தெள்ளியபேய்பலபூதமவற்றொடு
நள்ளிருணட்டமதாடனவின்றோர்
புள்ளுவராகுமவர்க்கவர்தாமும்
புள்ளுவனாருறைபூவணமீதோ. (௩)

நிலனுடைமான்மறிகையதுதெய்வக்
கனலுடைமாமழுவேந்தியோர்கையில்
அனலுடையாரழகார்தருசென்னிப்
புனலுடையாருறைபூவணமீதோ. (௪)

நடையுடைநல்லெருதேறுவர்நல்லார்
கடைகடைதோறிடுமின்பலியென்பார்
துடியிடைநன்மடவாளொடுமார்பில்
பொடியணிவாருறைபூவணமீதோ. (௫)

மின்னனையாடிருமேனி * விளங்கவோர்
தன்னமர்பாகமதாகியசங்கரன்
முன்னினையார் † புரமூன்றெரியூட்டிய
பொன்னனையானுறைபூவணமீதோ. (௬)

மிக்கிறையேயவன்றன்மதியாலிட ‡
நக்கிறையேவிரலாலிறவூன்றி
நெக்கிறையேநினைவார்தனிநெஞ்சம்
புக்குறைவானுறைபூவணமீதோ. (௭)

சீரின்மிகப்பொலியுந்திருப்பூவணம்
ஆரிருப்பிடமாவுறைவான்றனை
ஊரனுரைத்தசொன்மாலைகள்பத்திவை
பாரிலுரைப்பவர்பாவமறுப்பரே. ¶ (௰)

திருச்சிற்றம்பலம்.

திருப்பூவணத்திருப்பதிகம் - ௪.

ஆ. திருப்பதிகம் - ௯௦.

சுவாமி தேவி திருநாமங்கள் - பூவணநாதர், மின்னாம்மை.

சுந்தரமூர்த்திநாயனார், சேரசோழபாண்டியராகிய மூவரசர்களோடும் மதுரைத்திருப்பதியை நீங்கி, திருப்பூவணத்துக்குச் சமீபித்து, பக்கத்திலேவருந் திருத்தொண்டர்கள் அந்தஸ்தலத்தைக்காட்ட; அதன்மேல் "திருவுடையார்" என்றெடுத்து "பூவணமீதோ" என்னுந் திருப்பதிகம் பாடிக்கொண்டு அந்த திருப்பதிக்குட்சென்றனர்.

* மின்னனையாடிருமேனி என்றும் பாடம். † முன்னினையார் என்றும் பாடம்; முன்னினைவார் எனவே விட்டுணுமூர்த்திபால் புத்தசமயர்தைக் கேட்டபின் நினையாதவர் என்பது பெறப்படும். ‡ இட - சேரைக்கைலாசத்தின்மீது செலுத்த; தன்மதியாய் விட எனப்பாடமோதுவாருமுளர். ¶ இத்திருப்பதிகத்தில் அ, க இச்செய்யுட்கள் மறைந்துபோயின.

Koviloor Digital Library

கஉ, திருச்சுழியல்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - நட்டபாடை.*

திருச்சிற்றம்பலம்.

ஊனாயுயிர்புகலாயகலிடமாய்முகில்பொழியும்
வானாயதன்மதியாய் † விதிவருவானிடம்பொழிலின்
தேனாதரித்திசைவண்டினமிழற்றுந்திருச்சுழியல்
நானாவிதநினைவார்தமைநலியார்நமன்றமரே. (க)

தண்டேர்மழுப்படையான்மழவிடையானெழுகடனஞ் ‡
சுண்டேபுரமெரியச்சிலைவளைத்தானிமையவர்க்காத்
திண்டேர்மிசைநின்றானவனுறையுந்திருச்சுழியற்
றொண்டேசெயவல்லாரவர்நல்லார்துயரிலரே. (உ)

கவ்வைக்கடல்கதறிக்கொணர்முத்தங்கரைக்கேற்றக் ¶
கொவ்வைத்துவர்வாயார்குடைந்தாடுந்திருச்சுழியற்
றெய்வத்தினைவழிபாடுசெய்தெழுவாரடிதொழுவார்
அவ்வத்திசைக்கரசாகுவரலராள்பிரியாளே. (௩)

மலையான்மகண்மடமாதிடமாகத்தவன்மற்றுக்
கொலையானையினுரிபோர்த்தவெம்பெருமான்றிருச்சுழியல்
அலையார்சடையுடையானடிதொழுவார்பழுதுள்ளம்
நிலையார்திகழ்புகழானெடுவானத்துயர்வாரே. § (ச)

உற்றானமக்குயரும்மதிச்சடையான்புலனைந்தும்
செற்றார்திருமேனிப்பெருமானூர்திருச்சுழியல்
பெற்றானினிதுறையத்திறம்பாமைத்திருநாமம்
கற்றாரவர்கதியுட்செல்வரேத்தும்மதுகடனே. (ரு)

மலந்தாங்கியபாசப்பிறப்பறுப்பீர்துறைக்கங்கைச்
சலந்தாங்கியமுடியானமர்ந்திடமாந்திருச்சுழியல்
நிலந்தாங்கியமலராற்கொழும்புகையானினைந்தேத்தும்
தலந்தாங்கியபுகழாமிகுதவமாஞ் 0 சதுராமே. (சா)

சைவத்தசெவ்வுருவன்றிருநீற்றன்னுருமேற்றன்
கைவைத்தொருசிலையாலரண்மூன்றும்மெரிசெய்தான்
தெய்வத்தவர்தொழுதேத்தியகுழகன்றிருச்சுழியல்
மெய்வைத்தடிநினைவார்வினைதீர்தல்லெளிதன்றே. (எ)

* இது அச்சுப்புத்தகங்களில் நட்டராகம் என்று பதிப்பிக்கப்பட்டிருக்கின்றது. † வானாய்வருமதியாய் என்றும் பாடம். ‡ கடல் எழு நஞ்சு என மாறுக. ¶ கரையேற்றக் என்றும், கரையேறக் என்றும் பாடம். § புகழ்வானெடுவானத்துயர்வாரே என்றும் பாடம். 0 நலந்தாங்கியபுகழான்மிகுதவமாஞ் என்றும் பாடம்.

Koviloor Digital Library

பூவேந்தியபீடத்தவன்றானும்மடலரியும்
கோவேந்தியவினயத்தொடுகுறுகப்புகலறியார்
சேவேந்தியகொடியானவனுறையுந்திருச்சுழியல்
மாவேந்தியகரத்தானெமசிரத்தான்றனதடியே. (அ)

கொண்டாடுதல்புரியாவருதக்கன்பெருவேள்வி
சென்டாடுதல்புரிந்தான்றிருச்சுழியற்பெருமானைக்
குண்டாடியசமறைதர்கள்குடைச்சாக்கியரறியா
மிண்டாடியவதுசெய்ததுவானால்வருவிதியே. * (கூ)

நீரூர்தருநிமலன்றிருமலையார்க்கயலருகே
தேரூர்தருமாக்கன் † சிரகெரித்தான்றிருச்சுழியல்
பேரூரெனவுறைவானடிபெயர் ‡ நாவலர்கோமான்
ஆரூரனதமிழ்மாலைபத்தறிவார்துயரிலரே. (க௦)

திருச்சிற்றம்பலம்.

திருச்சுழியற்றிருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - கூக.

சுவாமி தேவி திருநாமங்கள் - திருமேனிநாதர், துணைமாலைநாயகி.

கரு. திருக்குற்றாலம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

வம்பார்குன்றநீடுயர்சாரல்வளர்வேங்கைக்
கொம்பார்சோலைக்கோலவண்டியாழ்செய்குற்றாலம்
அம்பாலெய்போடாடலமர்ந்தானலர்கொன்றை
நம்பான்மேயநன்னகர்போலுநமராங்காள். (க)

பொடிகள்பூசித்தொண்டர்பின்செல்லப்புகழ்விம்மக்
கொடிகளோடுநாள்விழமல்குகுற்றாலம்
கடிகொள்கொன்றைகூவிளமாலைகாதல்செய்
அடிகண்மேயநன்னகர்போலுமடியீர்காள். (உ)

செல்வமல்குசெண்பகம்வேங்கைசென்றேறிக்
கொல்லைமுல்லைமெல்லரும்பீனுங்குற்றாலம்
வில்லினெல்கழும்மதிலெய்துவினைபோக
நல்குநம்பானன்னகர்போலுநமராங்காள். (ங)

* வருமதியே என்றும் பாடம். † தேருர்தருமூர்க்கன் என்றும் பாடம். ‡ னடிப்பெயர் என்றும் பாடம்.

Koviloor Digital Library

பக்கம்வாழைப்பாய்கனியோடுபலவின்றேன்
கொக்கின்கோட்டுப்பைங்கனிதூங்குங்குற்றாலம்
அக்கும்பாம்புமாமையும்பூண்டோரனலேந்தும்*
நக்கன்மேயநன்னகர்போலுந்நமரங்காள். (௪)

மலையார்சாரன்மகவுடன்வந்தமடமந்தி
குலையார்வாழைத்தீங்கனிமாந்துங்குற்றாலம்
இலையார்சூலமேந்தியகையானெயிலெய்த
சிலையான்மேயநன்னகர்போலுஞ்சிறுதொண்டீர். (௫)

மைம்மாநீலக்கண்ணியர்† சாரன்மணிவாரிக்
கொய்ம்மாவேனலுண்கிளியோப்புங்குற்றாலம்
கைம்மாவேழத்தீருரிபோர்த்தகடவுள்ளெம்
பெம்மான்மேயநன்னகர்போலும்பெரியீர்காள். (௬)

நீலநெய்தறண்சுனைசூழ்ந்தநீள்சோலைக்
கோலமஞ்ஞைபேடையொடாடுங்குற்றாலம்
காலன்றன்னைக்காலாற்காய்ந்தகடவுள்ளெம்
சூலபாணிநன்னகர்போலுந்தொழுவீர்காள். (௭)

போதும்பொன்னுமுந்தியருவிபுடைசூழக்
கூதன்மாரிநுண்டுளிதூங்குங்குற்றாலம்
மூதூரிலங்கைமுட்டியகோனைமிறைசெய்த‡
நாதன்மேயநன்னகர்போலுந்நமரங்காள். (௮)

அரவின்வாயின்முள்ளெயிறேய்ப்பவரும்பீன்று
குரவம்பாவைமுருகமர்சோலைக்குற்றாலம்
பிரமன்னோடுமாலறியாதபெருமையெம்
பரமன்மேயநன்னகர்போலும்பணிவீர்காள். (௯)

பெருந்தண்சாரல்வாழ்சிறைவண்டுபெடைபுல்கிக்
குருந்தம்மேறிச்செவ்வழிபாடுங்குற்றாலம்
இருந்துண்டேருநின்றுண்சமணுமெடுத்தார்ப்ப
அருந்தண்மேயநன்னகர்போலுமடியீர்காள். (௧௦)

மாடவீதிவருபுனற்காழியார்மன்னன்
கோடலீன்றுகொழுமுனைகூம்புங்குற்றாலம்
நாடவல்லநற்றமிழ்ஞானசம்பந்தன்
பாடல்பத்தும்பாடநம்பாவம்பறையுமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

* ரனலேந்தி என்றும் பாடம். † மைம்மாநீலக்கண்ணியர் என்றும் பாடம். ‡ முறை செய்த எனப்பாடமோதுவாருமுளர்.

Koviloor Digital Library

திருக்குறும்பலா.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

திருந்தமதிசூடித்தெண்ணீர்சடைக்கரந்துதேவிபாகம்
பொருந்திப்பொருந்தாதவேடத்தாற்காடுறைதல்புரிந்தசெல்வர்
இருந்தவிடம்வினவிலேலங்கமழ்சோலையின* வண்டியாழ்செய்
குருந்தமணநாறுங்குன்றிடஞ்சூழ்தண்சாரற்குறும்பலாவே. (க)

நாட்பலவுஞ்சேர்மதியஞ்சூடிப்பொடியணிந்தநம்பானம்மை
ஆட்பலவுந்தானுடையவம்மானிடம்போலுமந்தண்சாரல்
கீட்பலவுங்கீண்டுகிளைகிளையன்மந்தி † பாய்ந்துண்டுவிண்ட
கோட்பலவின்றீங்கனியைமாக்கடுவனுண்டுகளுங்குறும்பலாவே. (உ)

வாடற்றலைமாலைசூடிப்புலித்தோல்வலித்துவீக்கி
ஆடலரவசைத்தவம்மானிடம்போலுமந்தண்சாரல்
பாடற்பெடைவண்டுபோதலர்த்தத்தாதவிழ்ந்துபசும்பொனுந்திக்
கோடன்மணங்கமழுங்குன்றிடஞ்சூழ்தண்சாரற்குறும்பலாவே. (ங)

பால்வெண்மதிசூடிப்பாகத்தோர்பெண்கலந்துபாடியாடிக்
காலனுடல்கிழியக்காய்ந்தாரிடம்போலுங்கல்சூழ்வெற்பில்
நீலமலர்க்குவளைகண்டிறக்கவண்டாற்றுநெடுந்தண்சாரல்
கோலமடமஞ்ஞைபெடையோடாட்டயருங்குறும்பலாவே. (ச)

தலைவாண்மதியங்கதிர்விரியத்தண்புனலைத்தாங்கித்தேவி
முலைபாகங்காதலித்தமூர்த்தியிடம்போலுமுதுவேய்சூழ்ந்த
மலைவாயசும்புபசும்பொன்கொழித்திழியுமல்குசாரல்
குலைவாழைத்தீங்கனியுமாங்கனியுந்தேன்பிலிற்றுங்குறும்பலாவே. (ரு)

நீற்றேதுதைந்திலங்குவெண்ணூலர்தண்மதியர்நெற்றிக்கண்ணர்
கூற்றேர்சிதையக்கடிந்தாரிடம் ‡ போலுங்குளிர்சூழ்வெற்பில்
ஏற்றேனமேனமிவையோடவைவிரவி ¶ யிழிபூஞ்சாரற்
கோற்றேனிசைமுரலக்கேளாக்குயில்பயிலுங்குறும்பலாவே. (சு)

பொன்றொத்தகொன்றையும்பிள்ளைமதியும்புனலுஞ்சூடிப்
பின்றொத்தவார்சடையெம்பெம்மானிடம்போலும்பிலயந்தாங்கி
மன்றத்துமண்முழவமோங்கிமணிகொழித்துவயிரமுந்திக்
குன்றத்தருவியயலேபுனறதும்புங்குறும்பலாவே. (எ)

ஏந்துதிணிதிண்டோளிராவணனைமால்வரைக்கீழடரவூன்றிச்
சாந்தமெனநீறணிந்தசைவரிடம்போலுஞ்சாரற்சாரல்
பூந்தணறுவேங்கைக்கொத்திறுத்துமத்தகத்திற்பொலியவேந்திக்
கூந்தற்பிடியுங்களிறுமுடன்வணங்குங்குறும்பலாவே. (அ)

* சோலையின் என்று பாடமோதுவாருமுளர். † கிளைகிளையின்மந்தி என்றும், கிளைகிளையென்மந்தி என்றும் பாடம். ‡ கடந்தாரிடம் என்றும் பாடம். ¶ யேனமவையோடிவைவிரவி என்றும், யேனமவையோடிவைவெருவி என்றும் பாடம்.

Koviloor Digital Library

அரவினணையானுநான்முகனுங்காண்பரியவண்ணல்சென்னி
விரவிமதியணிந்தவிகிர்தர்க்கிடம்போலும்விரிபூஞ்சாரல்
மரவமிருகரையுமல்லிகையுஞ்சண்பகமுமலர்ந்துமாந்தக்
குரவமுறுவல்செய்யுங்குன்றிடஞ்சூழ்* தண்சாரற்குறும்பலாவே. (கூ)

மூடியசீவரத்தர்முன்கூறுண்டேறுதலும்பின்கூறுண்டு
காடிதொடுசமணைக்காய்ந்தாரிடம்போலுங்கல்சூழ்வெற்பில்
நீடுயர்வேய்குனியப்பாய்கடுவனீள்கழைமேனிருத்தஞ்செய்யக்
கூடியவேடுவர்கள்குய்விளியாக் † கைமறிக்குங்குறும்பலாவே. (க0)

கொம்பார்பூஞ்சோலைக்குறும்பலாமேவியகொல்லேற்றண்ணல்
நம்பானடிபரவுநான்மறையான்ஞானசம்பந்தன்சொன்ன
இன்பாயபாடலிவைபத்தும்வல்லார்விரும்பிக்கேட்பார்
தம்பாலதீவினைகள்போயகலுநல்வினைகடளராவன்றே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருக்குற்றாலத்திருப்பதிகம் - உ.

ஆ திருப்பதிகம் - ருரு.

சுவாமி தேவி திருநாமங்கள் - குறும்பலாநாதர், குழல்வாய்மொழியம்மை.

கச. திருநெல்வேலி.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர்.

பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

மருந்தவைமந்திரமறுமைநன்னெறியவைமற்றுமெல்லாம்
அருந்துயர்கெடுமவர்நாமமேசிந்தைசெய்நன்னெஞ்சமே
பொருந்துதண்புறவினிற்கொன்றைபொன்சொரிதரத்துன்றுபைம்பூம் ‡
செருந்திசெம்பொன்மலர்திருநெல்வேலியுறைசெல்வர்தாமே. (க)

என்றுமோரியல்பினரெனநினைவரியவரேறதேறிச்
சென்றுதாஞ்செடிச்சியர்மனைதொறும்பலிகொளுமியல்பதுவே
துன்றுதண்பொழினுழைந்தெழுவியகேதகைப்போதளைந்து
தென்றல்வந்துலவியதிருநெல்வேலியுறைசெல்வர்தாமே. (உ)

பொறிகிளரரவமும் ¶ போழிளமதியமுங்கங்கையென்னும்
நெறிபடுகுழலியைச்சடைமிசைச்சுலவிவெண்ணீறுபூசிக்
கிறிபடநடந்துநற்கிளிமொழியவர்மனங்கவர்வர்போலும்
செறிபொழிறழுவியதிருநெல்வேலியுறைசெல்வர்தாமே. (ரு)

காண்டகுமலைமகள்கதிர்நிலாமுறுவல்செய்தருளவேயும்
பூண்டநாகம்புறங்காடரங்காநடமாடல்பேணி
ஈண்டுமாமாடங்கண்மாளிகைமீதெழுகொடிமதியம்
தீண்டிவந்துலவியதிருநெல்வேலியுறைசெல்வர்தாமே. (ச)

* குன்றிடைசூழ் என்றும் பாடம். † கூய்விளியாக் என்றும் பாடம். ‡ துன்றுதண் பூம் என்றும் பாடம். ¶ பொறிவளரரவமும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

ஏனவெண்கொம்பொடுமெழிறிகழ்மத்தமுமிளவரவும்
கூனல்வெண்பிறைதவழ்சடையினர்கொல்புலித்தோலுடையார்*
ஆனினல்லைந்துகந் †தாடுவர்பாடுவரருமறைகள்
தேனில்வண்டமர்பொழிற்றிருநெல்வேலியுறைசெல்வர்தாமே. (ரு)

வெடிதருதலையினர்வேனல்வெள்ளேற்றினர்விரிசடையர்
பொடியணிமார்பினர்புலியதளாடையர்பொங்கரவர்
வடிவுடைமங்கையோர்பங்கினர்மாதரைமையல்செய்வார்
செடிபடுபொழிலணிதிருநெல்வேலியுறைசெல்வர்தாமே. (சு)

அக்குலாமரையினர்திரையுலாமுடியின‡ரடிகளன்று
தக்கனார்வேள்வியைச்சாடியசதுரனார்கதிர்கொள்செம்மை
புக்கதோர்புரிவினர்வரிதருவண்டுபண்முரலுஞ்சோலைத்
திக்கெலாம்புகழுறுந்¶ திருநெல்வேலியுறைசெல்வர்தாமே. (எ)

முந்திமாவிலங்கலன்றெடுத்தவன்முடிகடோணெரிதரவே
உந்திமாமலரடியொருவிரலுகிர்நுதியாலடர்த்தார்
கந்தமார்தருபொழின்மந்திகள்பாய்தரமதுத்திவலை
சிந்துபூந்துறைகமழ்திருநெல்வேலியுறைசெல்வர்தாமே. (அ)

பைங்கண்வாளரவணையவனொடுபனிமலரோனுங்காணா
அங்க§ணாவருளெனவவரவர்முறைமுறையிறைஞ்சநின்றார்
சங்கநான்மறையவர்நிறைதரவரிவையராடல்பேணத்
திங்கணாள்விழமல்குதிருநெல்வேலியுறைசெல்வர்தாமே. (கூ)

துவருறுவிரிதுகிலாடையர்வேடமில்சமணரென்னும்
அவருறுசிறுசொலைபவமெனநினையுமெம்மண்ணலார்தாம்
கவருறுகொடிமல்குமாளிகைச்சூளிகைமயில்களாலத்
திவருறுமதிதவழ்திருநெல்வேலியுறைசெல்வர்தாமே. (க0)

பெருந்தண்மாமலர்மிசையயனவனனையவர்பேணுகல்வித்
திருந்துமாமறையவர்திருநெல்வேலியுறைசெல்வர்தம்மைப்
பொருந்துநீர்த்தடமல்குபுகலியுண்ஞானசம்பந்தன்சொன்ன
அருந்தமிழ்மாலைகள்பாடியாடக்கெடுமருவினையே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநெல்வேலித்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - ஙச.

சுவாமி தேவி திருநாமங்கள் - வேணுவனநாதர், காந்திமதிநாயகி.

பாண்டிநாட்டிலுள்ள தலங்கள் முற்றுப்பெற்றன.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் அருளிச்செய்த திருப்பதிகங்கள் உச; இத்திருப்பதிகங்களைப்பெற்றதலங்கள் கச. திருநாவுக்கரசுநாயனார் அருளிச்செய்த திருப்பதிகங்கள் ரு; இத்திருப்பதிகங்களைப்பெற்றதலங்கள் ச. சுந்தரமூர்த்திநாயனார் அருளிச்செய்ததிருப்பதிகங்கள் ரு; இத்திருப்பதிகங்களைப்பெற்றதலங்கள் ரு. ஆ திருப்பதிகங்கள் ஙச.

* கோட்புலித்தோலுடையார் என்றும் பாடம். † ஆனினிலைந்துகந் என்றும் பாடம்.
‡ அக்குலாவரையினர்திரைகுலாமுடியினர் என்றும் பாடம். ¶ புகழ்வுறுந் என்றும் பாடம்.
§ காணா—தக்கண் என்றும் பாடம்.

Koviloor Digital Library

மலைநாட்டில் உள்ள தலம்.

க. திருவஞ்சைக்களம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

தலைக்குத்தலைமாலையணிந்ததென்னே
சடைமேற்கங்கைவெள்ளந்தரித்ததென்னே
அலைக்கும்புலித்தோல்கொண்டசைத்ததென்னே
யதன்மேற்கதநாகங்கச்* சார்த்ததென்னே
மலைக்குந்நிகரொப்பனவன்றிரைகள்
வலித்தெற்றிமுழங்கிவலம்புரிகொண்
டலைக்குங்கடலங்கரைமேன்மகோதை
யணியார்பொழிலஞ்சைக்களத்தப்பனே. (க)

பிடித்தாட்டியோர்நாகத்தைப்பூண்டதென்னே
பிறங்குஞ்சடைமேற்பிறைசூடிற்றென்னே
பொடித்தான்கொண்டுமெய்ம்முற்றும்பூசிற்றென்னே
புகரேறுகந்தேறல்புரிந்ததென்னே
மடித்தோட்டந்துவன்றிரையெற்றியிட
வளர்சங்கமங்காந்துமுத்தஞ்சொரிய
அடித்தார்கடலங்கரைமேன்மகோதை
யணியார்பொழிலஞ்சைக்களத்தப்பனே. (உ)

சிந்தித்தெழுவார்க்குநெல்லிக்கனியே
சிறியார்பெரியார்மனத்தேறலுற்றால்
முந்தித்தொழுவாரிறவார்பிறவார்
முனிகண்முனியேயமரர்க்கமரா
சந்தித்தடமால்வரைபோற்றிரைக
ளணியாதிடறுங்கடலங்கரைமேல்
அந்தித்தலைச்செக்கர்வானேயொத்தியா
லணியார்பொழிலஞ்சைக்களத்தப்பனே. (ங)

இழைக்குமெழுத்துக்குயிரேயொத்தியா †
லிலையேயொத்தியாலுனையே ‡ யொத்தியால்
குழைக்கும்பயிர்க்கோர்புயலேயொத்தியா
லடியார்தமக்கோர்குடியேயொத்தியால்
மழைக்குந்நிகரொப்பனவன்றிரைகள்
வலித்தெற்றிமுழங்கிவலம்புரிகொண்
டழைக்குங்கடலங்கரைமேன்மகோதை
யணியார்பொழிலஞ்சைக்களத்தப்பனே. (ச)

* கதநாகக்கச்சு என்றும் பாடம். † இங்கே "அகர வுயிர்போ லறிவாகி யெங்கும்-நிகரிலிறை நிற்கு நிறைந்து" என்னுந் திருவருட்பயன் சிந்திக்கற்பாலது. ‡யாலிணையே என்றும், யாலுளையே என்றும் பாடமோதுவாருமுளர்.

Koviloor Digital Library

வீடின்பயனென்பிறப்பின்பயனென்
விடையேறுவதென்மதயானைநிற்கக்
கூடும்மலைமங்கைபொருத்தியுடன்
சடைமேற்கங்கையானைநிசூடிற்றென்னே
பாடும்புலவர்க்கருளும்பொருளென்
நெதியம்பலசெய்தகலச்செலவில்
ஆடுங்கடலங்கரைமேன்மகோதை
யணியார்பொழிலஞ்சைக்களத்தப்பனே. (ரு)

இரவத்திடுகாட்டெரியாடிற்றென்னே
யிறந்தார்தலையிற்பலிகொண்டலென்னே *
பரவித்தொழுவார்பெறுபண்டமென்னே
பரமாபரமேட்டிபணித்தருளாய்
உரவத்தொடுசங்கமொடிப்பிமுத்தங்
கொணர்ந்தெற்றிமுழங்கிவலம்புரிகொண்
டரவக்கடலங்கரைமேன்மகோதை
யணியார்பொழிலஞ்சைக்களத்தப்பனே. (சு)

ஆக்கும்மழிவும்மையனீயென்பனுன்
சொல்லுவார்சொற்பொருளவைநீயென்பனுன்
நாக்குஞ்செவியுங்கண்ணுநீயென்பனு
வலனேயினிநானுன்னைநன்குணர்ந்தேன்
நோக்குந்நெதியம்பலவெத்தனையுங்
கலத்திற்புகப்பெய்துகொண்டேறநுந்தி
ஆர்க்குங்கடலங்கரைமேன்மகோதை
யணியார்பொழிலஞ்சைக்களத்தப்பனே. (எ)

வெறுத்தேன்மனைவாழ்க்கையைவிட்டொழிந்தேன்
விளங்குங்குழைக்காதுடைவேதியனே
இறுத்தாயிலங்கைக்கிறையாயவனைத்
தலைபத்தொடுதோள்பலவிற்றுவிழக்
கறுத்தாய்கடனஞ்சமுதுண்டுகண்டங்
கடுகப்பிரமன்றலையைந்திலுமொன்
றறுத்தாய்கடலங்கரைமேன்மகோதை
யணியார்பொழிலஞ்சைக்களத்தப்பனே. (அ)

பிடிக்குக்களிறே † யொத்தியாலெம்பிரான்
பிரமற்கும்பிரான்மற்றைமாற்கும்பிரான்
கொடிக்கும்மதிற்புரமூன்றெரியச்
சிலைதொட்டவனேயுனைநான்மறவேன்
வடிக்கின்றனபோற்சிலவன்றிரைகள்
வலித்தெற்றிமுழங்கிவலம்புரிகொண்
டடிக்குங்கடலங்கரைமேன்மகோதை
யணியார்பொழிலஞ்சைக்களத்தப்பனே. (கூ)

* கோடலென்னே என்றும் பாடம். † பிடிக்குக்களிறே என்றும் பாடம்.

Koviloor Digital Library

எந்தம்மடிகளிமையோர்பெருமா
னெனக்கென்றுமளிக்குமணிமிடற்றன்
அந்தண்கடலங்கரைமேன்மகோதை
யணியார்பொழிலஞ்சைக்களத்தப்பனை
மந்தம்முழவுங்குழலும்மியம்பும்
வளர்நாவலர்கோனம்பியூரன்சொன்ன
சந்தம்மிகுதண்டமிழ்மாலைகள்கொண்
டடிவீழவல்லார்தடுமாற்றிலரே. (கo)

திருச்சிற்றம்பலம்.

திருவஞ்சைக்களத்திருப்பதிகம் - க.

சுவாமி தேவி திருநாமங்கள் - அஞ்சைக்களத்தப்பர், உமையம்மை.

மலைநாட்டிலுள்ள தலம் முற்றுப்பெற்றது.

சுந்தரமூர்த்திநாயனர் திருப்புக்கொளியூரிலே முதலைவாய்ப்பிள்ளையை மீட்டு, கொங்கதேசத்தைக் கடந்து மலைநாட்டை அடைந்தார். அதனை யறிந்த அம்மலைநாட்டிலுள்ள சிவனடியார்கள் விரைந்தோடிப்போய்ச் சேரமான்பெருமாணுயனர் திருமுன் சென்று, "மஹாராஜாவே, சுந்தரமூர்த்திநாயனர் எழுந்தருளிவருகின்றார்" என்று விஞ்ஞாபித்தார்கள். அதுகேட்ட சேரமான்பெருமாணுயனர் பேரானந்தப் பெருங்கடலின் மூழ்கி, அவர்களுக்குப் பொற்கிழிகளையும் இரத்தினபரணங்களையும் வஸ்திரங்களையும் கொடுத்தார். கொடுத்தபின், "திருவாரூரிற் சைவசிகாமணியார் எழுந்தருளிவருகின்றார்; நம்மையாண்டருளுஞ் சுந்தரமூர்த்திநாயனர் எழுந்தருளி வருகின்றார்; நமக்கு உயிர்த்துணைவராகிய தலைவர் எழுந்தருளிவருகின்றார்;உலகமெல்லாம் உய்யும்பொருட்டுத் திருவவதாரஞ்செய்தருளிய பரமாசாரியர் எழுந்தருளிவருகின்றார்;என்று முரசறைவித்து, தமது திருநகரமெங்கும் மிக அலங்கரிப்பித்து, யானைமேற்கொண்டு, மந்திரிமார்களும் சேனைகளும் சூழப் புறப்பட்டுச் சென்று, தூரத்தே சுந்தரமூர்த்திநாயனரைக் கண்டவுடனே யானையினின்றும் இறங்கி விரைந்தோடிப்போய், அவருடைய திருவடிகளை நமஸ்கரித்தார். சுந்தரமூர்த்திநாயனரும் சேரமான்பெருமாணுயனரை வணங்கித் தழுவினர். அதுகண்ட இருபக்கத்தாரும் ஆனந்தசாகரத்தின் மூழ்கி ஆரவாரித்தார்கள். சேரமான்பெருமாணுயனர் சுந்தரமூர்த்திநாயனரை யானைமேலேற்றித் தாம் பின்னே அவருக்கு வெள்ளைக்குடை பிடித்துக்கொண்டு, நானாவித வாத்தியங்கள் ஒலிக்கச் சென்று, தமது திருநகரத்திற்புகுந்து, தமது திருமாளிகைவாயிலை அடைந்து, அந்நாயனரை யானையினின்றும் இறக்கி, உள்ளே அழைத்துக்கொண்டுபோய்ச் சிங்காசனத்தில் இருத்திப் பூசித்து வணங்கினர். சுந்தரமூர்த்திநாயனர் அங்கே எழுந்தருளி யிருந்தார். இருந்த நாட்களிலே அம்மலைநாட்டிலிருக்கின்ற சிவஸ்தலங்கள் பலவற்றிற்கும் போய்ச் சுவாமி தரிசனஞ்செய்துகொண்டு மகோதைநகரத்தை அடைந்தார்.

சுந்தரமூர்த்திநாயனர் சேரமான்பெருமாணுயனர் திருமாளிகையில் எழுந்தருளியிருக்கும்போது, ஒருநாள் திருவஞ்சைக்களத்துக்கு எழுந்தருளி, அங்குள்ள சிவாலயத்தைப் பிரதக்ஷிணஞ்செய்து, உள்ளேபுகுந்து, சந்நிதானத்திலே விழுந்து நமஸ்கரித்து, எழுந்துநின்று, அக்கினியிற்பட்டமெழுகுபோல மனங்கசிந்துருக, இரண்டு கண்ணினின்றும் ஆனந்தவருவிசொரிய, சரீரத்திலே உரோமாஞ்சங்கொள்ள, இரண்டு கைத

Koviloor Digital Library

ளும் சிரசின்மேல் எறிக்குவிய, அடியேனை இப்பிரபஞ்ச வாழ்க்கையினின்றும் நீக்கித் தேவரீருடைய திருவடியிலே சேர்த்தருளல் வேண்டுமென்னுங் குறிப்போடு "தலைக்குத் தலைமாலை" என்னுந் திருப்பதிகம் பாடியருளினார். உடனே கைலாசகிரியில் சிவபிரான் பிரமேந்திராதி தேவர்களை நோக்கி, "நீங்கள் போய் நம்முடைய தோழனாகிய சுந்தரனை வெள்ளையானையின்மீதேற்றிக்கொண்டு வாருங்கள்" என்று ஆஞ்ஞாபித்தருளினார். அவ்வாறே தேவர்கள் சென்று அவரைப் பிரதக்ஷிணஞ்செய்து வெள்ளையானையின் மீதேற்ற; அவர் பஞ்சவாத்தியங்கள் ஆரவாரிக்கவும், தேவர்களெல்லாம் ஸ்தோத்திரஞ் செய்து புஷ்பமாரி பொழியவும், திருக்கைலைக்குச் சென்றருளினார்.

கொங்குநாட்டில் உள்ள தலங்கள்.

க. திருப்புக்கொளியூரவிநாசி.‡

சுந்தரமூர்த்தி நாயனார்.

பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

எற்றான் * மறக்கேனெழுமைக்குமெம்பெருமானையே
உற்றாயென்றுன்னையேயுள்குகின்றேனுணர்ந்துள்ளத்தால்
புற்றாடரவாபுக்கொளியூரவிநாசியே †
பற்றாகவாழ்வேன்பசுபதியேபரமேட்டியே. ‡ (க)

வழிபோவார்தம்மோடும்வந்துடன்கூடியமாணி நீ ¶
ஒழிவதழகோசொல்லாயருளோங்குசடையானே §
பொழிலாருஞ்சோலைப்புக்கொளியூரிற்குளத்திடை
இழியாக்குளித்தமாணியென்னைக்கிறிசெய்ததே. ० (உ)

எங்கேனும்போகினு ** மெம்பெருமானைநினைந்தக்கால்
கொங்கேபுகினுங்கூறைகொண்டாறலைப்பாரிலை
பொங்காடரவாபுக்கொளியூரவிநாசியே
எங்கோனேயுனைவேண்டிக் †† கொள்வேன்பிறவாமையே. (௩)

உரைப்பாருரையுகந்துள்கவல்லார்தங்களுச்சியாய்
அரைக்காடரவாவாதியுமந்தமுமாயினாய்
புரைக்காடுசோலைப்புக்கொளியூரவிநாசியே
கரைக்கான்முதலையைப்பிள்ளைதரச்சொல்லுகாலனையே. (௪)

அரங்காவதெல்லாமாயிடுகாடதுவன்றியும்
சரங்கோலைவாங்கிவரிசிலை ‡‡ நாரியிற்சந்தித்துப்
புரங்கோட ¶¶ வெய்தாய்புக்கொளியூரவிநாசியே
குரங்காடுசோலைக்கோயில்கொண்டகுழைக்காதனே. (௫)

‡ இதனை அவிநாசி என்றும் வழங்குப. * எத்தான் என்றும் பாடம். † புற்றாடரவப்புக்கொளியூரவிநாசியே என்றும் பாடம். ‡ பசுபதியெம்பரமேட்டியே என்றும் பாடம். ¶ மாமணீ நீ எனப்பாடமோதுவாருமுளர். § சடையனே என்றும் பாடம். ० யெனைக்கிறி செய்ததே என்றும் பாடம். ** போகேனும் என்றும் பாடம். †† யுன்னைவேண்டி என்றும் பாடம். ‡‡ வருஞ்சிலை என்றும்பாடம். ¶¶ புரங்கெட என்றுபாடமோதுவாருமுளர்.

Koviloor Digital Library

நாத்தானுமுனைப்பாடலன்றி* நவிலாதெனுச்
சோத்தென்றுதேவர்தொழுநின்றசுந்தரச்சோதியாய்
பூத்தாழ்சடையாய்புக்கொளியூரவிநாசியே
கூத்தாவுனக்குநானுட்பட்டகுற்றமுங்குற்றமே. (சு)

மந்திகடுவனுக்குண்பழநாடி † மலைப்புறம்
சந்திகடோறுஞ்சலபுட்பமிட்டு ‡ வழிபடப்
புந்தியுறைவாய்புக்கொளியூரவிநாசியே
நந்தி ¶ யுனைவேண்டிக்கொள்வே § னரகம்புகாமையே. (எ)

பேணுதொழிந்தேனுன்னையல்லாற்பிறதேவரைக்
காணுதொழிந்தேன்காட்டுதியேலின்னங்காண்பனுன்
பூணுணரவாபுக்கொளியூரவிநாசியே
காணுதகண்கள்காட்டவல்லகறைக்கண்டனே. (அ)

நள்ளாறுதெள்ளாறரத்துறைவாயெங்கணம்பனே
வெள்ளாடைவேண்டாய்வேங்கையின்றோலைவிரும்பினுய்
புள்ளேறுசோலைப்புக்கொளியூரிற்குளத்திடை
உள்ளாடப்புக்கமாணியென்னைக் o கிறிசெய்ததே. (கூ)

நீரேறவேறுநிமிர்புன்சடைநின்மலமூர்த்தியைப்
போரேறதேறியைப்புக்கொளியூரவிநாசியைக்
காரேறுகண்டனைத்தொண்டனாரூரன்கருதிய
சீரேறுபாடல்கள்செப்பவல்லார்க் ** கில்லைதுன்பமே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருப்புக்கொளியூரவிநாசித்திருப்பதிகம் - க.

சுவாமி தேவி திருநாமங்கள் - அவிநாசியப்பர், பெருங்கருணைநாயகி.

சுந்தரமூர்த்திநாயனுர் சேரமான்பெருமாணுயனுரை நினைந்து, திருவாரூரினின்றும் புறப்பட்டு, அவரிடத்திற்குப் போம்படி கருதி, சோழமண்டலத்தைக்கடந்து, கொங்க தேசத்தை அடைந்து, திருப்புக்கொளியூரிற்சென்று, அங்கே ஒருவீதியிலே இரண்டு வீடுகளில், ஒன்றிலே மங்கலவொலியும், மற்றதிலே அழுகையொலியும் எழுதலைக்கேட்டு, அங்கே இருந்த பிராமணர்களைநோக்கி, இவ்விரண்டொலியும் ஒருங்கு நிகழ்வது என்னை என்று வினவினர். அதுகேட்ட பிராமணர்கள் வணங்கி, ஐந்துவயசுடைய இரண்டு புதல்வர்கள் குளத்திலே குளித்தபொழுது, ஒரு புதல்வனை முதலை விழுங்கிற்று; மற்றப்புதல்வன் பிழைத்துக்கொண்டான். இந்தவீட்டில் ஒலி பிழைத்த புதல்வனுக்கு உபநயனஞ்செய்யும் ஒலி; இந்த வீட்டில் ஒலி இறந்த புதல்வனைக்குறித்து அழும் ஒலி என்று சொன்னார்கள். அதைக்கேட்டுத் திருவுளமிரங்கி நின்ற நாயனுரை, புதல்

* நாத்தானும்முன்னைப்பாடலின்றி என்றும் பாடம். † குணப்பழநாடி எனப்பாடமோதுவாருமுளர். ‡ சலம்புட்பமிட்டு என்றும் பாடம். ¶ விளிக்கப்படும் பொழுது நந்தி என நீளவேண்டியது எதுகைநோக்கி நந்தியெனக்குறுகிநின்றது; சிலபிரதிகளில் நந்தீ என மேல்விலங்கு சுழித்தெழுதப்பட்டிருக்கின்றது. § கொள்வென் என்றும் பாடம். o யெனைக் என்றும் பாடம். ** பாடல்கள்சொல்லவல்லார்க் என்றும் பாடம்.

Koviloor Digital Library

வினை இழந்தபிராமணனும் மனைவியுங்கண்டு, ஓடிவந்து; முகமலர்ச்சியோடு அவருடைய திருவடிகளை நமஸ்கரித்துத் துதித்தார்கள். அதைக்கண்ட நாயனார், "இந்தப் பிராமணனும் மனைவியும் தங்கள் புதல்வனை இழந்த துன்பத்தை மறந்து நாம் வந்ததற்காக மனமகிழ்கின்றார்கள். ஆகையால், நாம் இவர்கள் புதல்வனை அம்முதலைவாயினின்றும் அழைத்துக்கொடுத்து, அவிநாசியில் எழுந்தருளியிருக்கின்ற நமது கடவுளை வணங்குவோம்" என்று அருளிச்செய்து, அந்தப்புதல்வனை முதலை விழுங்கிய வாவியின்கரையிலே எழுந்தருளி அம்முதலை தான் விழுங்கிய புதல்வனைக்கொண்டு வரும்பொருட்டு "எற்றான்மறக்கேன்" என்னுந் திருப்பதிகம் பாடத்தொடங்கினார். "உரைப்பா ருரையுகந் துள்கவல்லார்தங்க ளுச்சியாய்—அரைக்கா டரவா வாதியு மந்தமு மாயினாய்—புரைக்காடு சோலைப் புக்கொளி யூரவி நாசியே—கரைக்கான் முதலையைப் பிள்ளை தரச்சொல்லு காலனையே" என்று நான்காந் திருப்பாட்டு முடிதற்கு முன், இயமன் அந்தப் புதல்வனுடைய உயிரைக்கொண்டுவந்து, அவ்வாவியிலுள்ள முதலைவயிற்றினுள்ளே முந்தின தேகத்தைச் சென்ற ஆண்டுகளின் வளர்ச்சியையும் உடையதாகத் தோற்றுவித்து, அதனுள்ளே புகுத்திவிட்டான். உடனே முதலை அந்தப் புதல்வனைக் கரையிலே கொண்டுபோய் உமிழ்ந்தது. அதைக்கண்ட தாய்தந்தையர்கள் நாயனாரை வணங்கித் துதித்துப் புதல்வனை எடுத்தணைக்கத் தேவர்கள் புஷ்பமாரிபொழிந்தார்கள்.

உ. திருமுருகன்பூண்டி.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

கொடுகுவெஞ்சிலைவடுகவேடுவர்விரவலாமைசொல்லித்
திடுகுமொட்டெனக்குத்திக்கூறைகொண்டாறலைக்குமிடம்
முடுகுநாறியவடுகர்வாழ்முருகன்பூண்டிமாநகர்வாய்
இடுகுநுண்ணிடைமங்கைதன்னொடுமெத்துக்கிங்கிருந்தீரெம்பிரானிரே. * (௧)

வில்லைக்காட்டிவெருட்டிவேடுவர்விரவலாமைசொல்லிக்
கல்லினாலெறிந்திட்டுமோதியுங்கூறைகொள்ளுமிடம்
முல்லைத்தாதுமணங்கமழ்முருகன்பூண்டிமாநகர்வாய்
எல்லைகாப்பதொன்றில்லையாகினீரெத்துக்கிங்கிருந்தீரெம்பிரானிரே. (௨)

பசுக்களேகொன்றுதின்றுபாவிகள்பாவமொன்றறியார்
உயிர்க்கொலை† பலநேர்ந்துநாடொறுங்கூறைகொள்ளுமிடம்
முசுக்கள்போற்பலவேடர்வாழ்முருகன்பூண்டிமாநகர்வாய்
இசுக்கழியப்‡ பயிக்கங்கொண்டுநீரெத்துக்கிங்கிருந்தீரெம்பிரானிரே. (௩)

* மெற்றுக்கிட்கிருந்தீரெம்பிரானிரே என்றும் பாடம்; இதனை இத்திருப்பதிகமுற்றுங்கொள்க. † உசிர்க்கொலை என்று பலபிரதிகளிற் காணப்படுகின்றது; இப்பாட்டிற்கு உயிர் உசிர் என மரீயதாகக்கொள்க. ‡ இசுக்கிழியப் எனப்பாடமோதுவாருமுளர்.

Koviloor Digital Library

பீறற்கூறையுடுத்தோர்பத்திரங்கட்டிவெட்டனராய்ச்
சூறைப்பங்கியராகிநாடொறுங்கூறைகொள்ளுமிடம்
மோறைவேடுவர்கூடிவாழ்முருகன்பூண்டிமாநகர்வாய்
ஏறுகாலிற்றதில்லையாய்விடிலெத்துக்கிங்கிருந்தீரெம்பிரானிரே. (ச)

தயங்குதோலையுடுத்துச்சங்கரா * சாமவேதமோதி
மயங்கியூரிடுபிச்சைகொண்டுணுமார்க்கமொன்றறியீர்
முயங்குபூண்முலைமங்கையாளொடுமுருகன்பூண்டிமாநகர்வாய்
இயங்கவும்மிடுக்குடையாய்விடி † லெத்துக்கிங்கிருந்தீரெம்பிரானிரே. (ரு)

விட்டிசைப்பனகொக்கரைகொடுகொட்டிதத்தளகம்
கொட்டிப்பாடுமித்துந்துமியொடுகுடமுழாநீர்மகிழ்வீர்
மொட்டலர்ந்துமணங்கமழ்முருகன்பூண்டிமாநகர்வாய்
இட்டபிச்சைகொட்டுண்பதாகினீ ‡ ரெத்துக்கிங்கிருந்தீரெம்பிரானிரே. (சு)

வேதமோதிவெண்ணீறுபூசிவெண்கோவணந்தற்றயலே
ஓதமேவியவொற்றியூரையுமுத்திராநீர்மகிழ்வீர் ¶
மோதிவேடுவர்கூறைகொள்ளுமுருகன்பூண்டிமாநகர்வாய்
ஏதுகாரணமேதுகாவல்கொண்டெத்துக்கிங்கிருந்தீரெம்பிரானிரே. (எ)

படவாவுநுண்ணேரிடைப்பணைத்தோள்வரிநெடுங்கண்
மடவாலுமைநங்கைதன்னையொர்பாகம்வைத்துகந்தீர்
முடவரல்லீரிடரிலீர்முருகன்பூண்டிமாநகர்வாய்
இடவமேறியும்போவதாகினீரெத்துக்கிங்கிருந்தீரெம்பிரானிரே. (அ)

சாந்தமாகவெண்ணீறுபூசிவெண்பற்றலைகலனு §
வேய்ந்தவெண்பிறைக்கண்ணிதன்னையொர்பாகம்வைத்துகந்தீர்
மோந்தையோடுமுழக்கறுமுருகன்பூண்டிமாநகர்வாய்
ஏந்துபூண்முலைமங்கைதன்னொடுமெத்துக்கிங்கிருந்தீரெம்பிரானிரே. (கூ)

முந்திவானவர்தாந்தொழுமுருகன்பூண்டிமாநகர்வாய்ப்
பந்தணைவிரற்பாவைதன்னையொர்பாகம்வைத்தவனைச்
சிந்தையிற்சிவதொண்டனூரனுரைத்தனபத்துந் 0 கொண்
டெந்தம்மடிகளையேத்துவாரிடரொன்றுந்தாமிலரே. (கo)

திருச்சிற்றம்பலம்.

திருமுருகன்பூண்டித்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - உ.

சுவாமி தேவி திருநாமங்கள் - முருகாவுடையார், ஆவுடைநாயகி.

* யுடுத்தசங்கரா எனப்பாடமோதுவாருமுளர். † குடையிராய்விடில் என்றும் பாடம். ‡ தாயினீர் என்றும் பாடம். ¶ முத்திநீர்மகிழ்வீர் என்றும் பாடம். § கலனுக என்றும் பாடம். 0 சிறுதொண்டனூரனுரைத்தபத்தும் என்றும்பாடம்.

Koviloor Digital Library

சுந்தரமூர்த்திநாயனார் கொடுங்கோளூரிலிருந்து திருவாரூருக்குச் செல்லும்பொழுது, சேரமான்பெருமாணாயனார் தம்முடைய களஞ்சியத்திலுள்ள பொன் இரத்தினம் ஆபரணம் வஸ்திரம் சுகந்தவர்க்கம் முதலிய திரவியங்களெல்லாம் பல ஆட்களின்மேலே சுமத்தி அந்தச் சுமையாட்களைச் சுந்தரமூர்த்திநாயனாருடைய பரிசனத்துக்குமுன் செல்லும்படி அனுப்பினார். அவர்கள் திருமுருகன்பூண்டிக்குப் போகும்பொழுது வழியில் சிவபிரான் தம்முடைய பூதகணங்களைநோக்கி, சுந்தரனுடைய பண்டாரங்களைக் கவருங்கள் என்று ஆஞ்ஞாபிக்க, அவைகள், நாயனாருடைய சுமையாட்கள் வரும்வழியிலே வேடுவர்களாகிப்போய் அந்தத் திரவியங்களெல்லாவற்றையுங் கவர்ந்துகொண்டன. அவர்கள் ஓடிப்போய் நாயனாருக்கு விண்ணப்பஞ்செய்ய, நாயனார் திருமுருகன்பூண்டியிலே சென்று திருக்கோயிலிலே பிரவேசித்து, சுவாமியை வணங்கி, "கொடுகு வெஞ்சிலை வடுகவேடுவர்" என்று திருப்பதிகமெடுத்துத் திருப்பாட்டிறுதிதோறும் "எத்துக்கிங்கிருந்தீ ரெம்பிரானிரே" என்று பாடியருளினார். உடனே வேடுவர்களாய்வந்த பூதகணங்கள் தாங்கள் பறித்த திரவியங்களெல்லாவற்றையும் திருக்கோயிலின் வாயிலிலே கொண்டுபோய்க் குவித்தன.

௩. திருநணா.*

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பந்தார்விரன்மடவாள்பாகமாநாகம்பூண்டேறதேறி†
அந்தாரரவணிந்தவம்மானிடம்போலுமந்தண்சாரல்
வந்தார்மடமந்திகூத்தாடவார்பொழிலில்வண்டுபாடச்
செந்தேன்றெளிபொளிரத்தேமாக்கனியுதிர்க்குந்திருநணாவே. (க)

நாட்டம்பொலிந்திலங்குநெற்றியினன்மற்றொருகைவீணையேந்தி
ஈட்டுந்துயரறுக்குமெம்மானிடம்போலுமிலைசூழ்கானில்
ஓட்டந்தருமருவிவீழும்விசை‡காட்டமுந்தமோசைச்
சேட்டார்மணிகளணியுந்திரைசேர்க்குந்திருநணாவே. (௨)

நன்றுங்கிசைமொழிந்தநன்னுதலாள்பாகமாய்ஞாலமேத்த
மின்றங்குசெஞ்சடையெம்விகிர்தர்க்கிடம்போலும்விரைசூழ்வெற்பில்
குன்றிறங்கிவன்றிரைகண்மோதமயிலாலுஞ்சாரற்செவ்வி
சென்றோங்கிவானவர்களேத்திபடிபணியுந்திருநணாவே. (௩)

கையின்மழுவேந்திக்காலிற்சிலம்பணிந்துகரித்தோல்கொண்டு
மெய்யின்முழுதணிந்தவிகிர்தர்க்கிடம்போலுமிடைந்துவானோர்
ஐயவரனேபெருமா¶னருளென்றென்றுதரிக்கச்
செப்பகமலம்பொழிதேனளித்தியலுந்§திருநணாவே. (௪)

* இத்தலைப் பவானிகூடல் என்றும், பவானிமுக்கூடல் என்றும், பவானி என்றும் வழங்கும். † மடவாள்பாகமாநாகம்பூண்டெருதேறி என்றும், டேறமேறி என்றும் பாடம். ‡ ஓட்டந்தருமருவிவீழ்வவிசை என்றும் பாடம். ¶ ஐயாவரனேபெருமான் என்றும் பாடம்; ஐயாவெரம்பெருமான் என்று பாடமோதுவாருமுளர். § றேனளித்தியலும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

முத்தேர்நகையாளிடமாகத்தம்மார்பில்* வெண்ணூல்பூண்டு
தொத்தேர்மலர்சடையில்வைத்தாரிடம்போலுஞ்சோலைசூழ்ந்த
அத்தேனளிபுண்களியாலிசைமுரலவாலத்தும்பி
தெத்தேயெனமுரலக்கேட்டார்வினைகெடுக்குந்திருநணாவே. (௫)

வில்லார்வரையாகமாநாகநாணாகவேடங்கொண்டு
புல்லார்புரமூன்றெரித்தார்க்கிடம்போலும்புலியுமானும்
அல்லாதசாதிகளுமங்கழன்மேற்கைகூப்பவடியார்கூடிச்
செல்லாவருநெறிக்கேசெல்லவருள்புரியுந்திருநணாவே. (௬)

கானார்களிற்றுரிவைமேன்மூடியாடரவொன்றரைமேற்சாத்தி
ஊனார்தலையோட்டிலூணுகந்தான்றானுகந்தகோயிலெங்கும்
நானாவிதத்தால்விரதிகணன்னாமமேயேத்திவாழ்த்தத்
தேனார்மலர்கொண்டடியாரடிவணங்குந்திருநணாவே. (௭)

மன்னீரிலங்கையர்தங்கோமான்வலிதொலையவிரலாலூன்றி
முந்நீர்க்கடனஞ்சையுண்டார்க்கிடம்போலுமுனைசேர்சீயம்
அன்னீர்மைகுன்றியழலால்விழிகுறையவழியுமுன்றிற்
செந்நீர்பரப்பச்சிறந்துகரியொளிக்குந்திருநணாவே. (௮)

மையார்மணிமிடறன்மங்கையோர்பங்குடையான்மனைகடோறும்
கையார்பலியேற்றகள்வனிடம்போலுங்கழல்கணேடிப்
பொய்யாமறையானும்பூமியளந்தானும்போற்றமன்னிச்
செய்யாரெரியா† முருவமுறவணங்குந்திருநணாவே. (௯)

ஆடையொழித்தங்கமணேதிரிந்துண்பாரலல்பேசி ‡
மூடுருவமுகந்தாருரையகற்றுமூர்த்திகோயில்
ஓடுநதிசேரு ¶ நித்திலமுமொய்த்தகிலுங்கரையிற்சாரச்
சேடர்சிறந்தேத்தத்தோன்றியொளிபெருகுந்திருநணாவே. (௧௦)

கல்வித்தகத்தாற்றிரைசூழ்கடற்காழிக்கவுணிசீரார்
நல்வித்தகத்தாலினிதுணருஞானசம்பந்தனென்னும்
சொல்வித்தகத்தா § விறைவன்றிருநணாவேத்துபாடல்
வல்வித்தகத்தான்மொழிவார்பழியிலரிம்மண்ணின்மேலே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருநணாத்திருப்பதிகம் - ௧.

ஆ திருப்பதிகம் - ௩.

சுவாமி தேவி திருநாமங்கள் - சங்கமுகநாதர், வேதமங்கையம்மை.

* தன்மார்பில் என்றும் பாடம். † செய்யாவெரியா என்றும் பாடம். ‡ துண்பரல்லல்பேசி என்றும் பாடம். ¶ ஓடுந்திரைசேரும் என்றும் பாடம். § சம்பந்தனென்னு—சொல்வித்தகத்தால் என்றும், சம்பந்தனென்று—சொல்வித்தகத்தால் என்றும் பாடம்.

Koviloor Digital Library

ச. திருக்கொடிமாடச்செங்குன்றூர். *

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

வெந்தவெண்ணீறணிந்துவிரிநூறிகழ்மார்பி னல்ல
பந்தணவும்விரலாளொருபாகமமர்ந்தருளிக்
கொந்தணவும்பொழில்சூழ்கொடிமாடச்செங்குன்றூர் நின்ற
அந்தணனைத்தொழுவாரவலமறுப்பாரே. (க)

அலைமலிதண்புனலோடரவஞ்சடைக்கணிந் தாகம்
மலைமகள்கூறுடையான்மலையாரிளவாழைக்
குலைமலிதண்பொழில்சூழ்கொடிமாடச்செங்குன்றூர் நின்ற
தலைமகனைத்தொழுவார்தடுமாற்றறுப்பாரே. (௨)

பாலனநீறுபுனைதிகழ்மார்பிற் † பல்வளைக்கை நல்ல
ஏலமலர்க்குழலாளொருபாகமமர்ந்தருளிக்
கோலமலர்ப்பொழில்சூழ்கொடிமாடச்செங்குன்றூர் மல்கும்
நீலநன்மாமிடற்றான்கழலேத்தனீதியே. (௩)

வாருறுகொங்கைநல்லமடவாடிகழ்மார்பி னண்ணும் ‡
காருறுகொன்றையொடுங்கதநாகம் ¶ பூண்டருளிச்
சீருறுமந்தணர்வாழ்கொடிமாடச்செங்குன்றூர் நின்ற
நீருறுசெஞ்சடையான்கழலேத்தனீதியே. (௪)

பொன்றிகழாமையொடுபுரிநூறிகழ்மார்பி னல்ல
பன்றியின்கொம்பணிந்துபணைத்தோளியோர்பாகமாகக்
குன்றனமாளிகைசூழ்கொடிமாடச்செங்குன்றூர் வானில்
மின்றிகழ்செஞ்சடையான்கழலேத்தன்மெய்ப்பொருளே. (௫)

ஓங்கியமூவிலைநற்சூலமொருகைபன் சென்னி §
தாங்கியகங்கையொடுமதியஞ்சடைக்கணிந்து
கோங்கணவும்பொழில்சூழ்கொடிமாடச்செங்குன்றூர் வாய்ந்த
பாங்கனதாடொழுவார்வினையாயபற்றறுமே. (௬)

நீடலர்கொன்றையொடுநிமிர்புன்சடைதாழ வெள்ளை
வாடலுடைதலை 0 யிற்பலிகொள்ளுநம்வாழ்க்கையனுய்க்
கோடல்வளம்புறவிற்கொடிமாடச்செங்குன்றூர் நின்ற
சேடனதாடொழுவார்வினையாய ** தேயுமே. (௭)

* திருக்கொடிமாடச் செங்குன்றூர்—திருச்செங்கோடு; திருச்செங்குன்றூர் என்றும், நாகாசலம் என்றும் வழங்குப. இது சுப்பிரமணியக்கடவுளுடைய திருப்படைவீடாகிய குன்றுதோறாடலுளொன்று. † திருமார்பில் என்றும் பாடம். ‡ மடவார்திகழ்மார்பின ன்றும் என்றும் பாடம். ¶ கொன்றையொடுகதநாகம் என்றும் பாடம். § கையின்சென் னித் என்றும் பாடம். 0 லுடைத்தலை என்றும் பாடம். ** வினையான என்றும்பாடம்.

Koviloor Digital Library

மத்தநன்மாமலரும்மதியும்வளர்கொன்றையுடன் றுன்று
தொத்தலர்செஞ்சடைமேற்றுதையவுடன்சூடிக்
கொத்தலர்தண்பொழில்சூழ்கொடிமாடச்செங்குன்றூர் மேய
தத்துவனைத்தொழுவார்தடுமாற்றறுப்பாரே. (௮)

செம்பொனின்மேனியனாம்பிரமன்றிருமாலுந்தேட நின்ற
அம்பவளத்திரள்போலொளியாயவாதிபிரான் *
கொம்பணவும்பொழில்சூழ்கொடிமாடச்செங்குன்றூர் மேய
நம்பனதாடொழுவார்வினையாயநாசமே. (௯)

போதியர்பிண்டியரென்றிவர்கள்புறங்கூறும் பொய்ந்நூல்
ஓதியகட்டுரைகேட்டுழல்வீர்வரிக்குயில்கள்
கோதியதண்பொழில்சூழ்கொடிமாடச்செங்குன்றூர் நின்ற
வேதியனைத்தொழநும்வினையானவீடுமே. (௧௦)

அலைமலிதண்புனல்† சூழ்ந்தழகார்புகலிந்நகர் பேணும்
தலைமகனாகிநின்றதமிழ்ஞானசம்பந்தன்
கொலைமலிமூவிலையான்கொடிமாடச்செங்குன்றூ ரேத்தும்
நலமலிபாடல்வல்லார்வினையானநாசமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருக்கொடிமாடச்செங்குன்றூர்த்திருப்பதிகம் - ௧.

ஆ திருப்பதிகம் - ௪.

சுவாமி தேவி திருநாமங்கள் - அர்த்தநாரீசுவரர், அர்த்தநாரீசுவரி.

௫. திருவெஞ்சமாக்கூடல்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - கொல்லிக்கௌவாணம்.

திருச்சிற்றம்பலம்.

எறிக்குங்கதிர்வேயுதிர்முத்தமொடேல‡மிலவங்கந்தக்கோலமிஞ்சி [மேல்
செறிக்கும்புனலுட்பெய்துகொண்டுமண்டித்திளைத்தெற்றுசிற்றாறதன்கீழ்க்கரை
முறிக்குந்தழைமாமுடப்புன்னை¶ ஞாழல்குருக்கத்திகண்மேற்குயில்கூவலறா §
வெறிக்குங்கலைமாவெஞ்சமாக்கூடல்விகிர்தாவடியேனையும்வேண்டுதியே. (௧)

குளங்கள்பலவுங்குழியுந்நிறையக்குடமாமணிசந்தனமும்மகிலும் [மேல்
துளங்கும்புனலுட்பெய்துகொண்டுமண்டித்திளைத்தெற்றுசிற்றாறதன்கீழ்க்கரை
வளங்கொண்மதின்மாளிகை○கோபுரமும்மணிமண்டபமும்மிவைமஞ்சுதன்னுள்
விளங்கும்மதிதோய்வெஞ்சமாக்கூடல்விகிர்தாவடியேனையும்வேண்டுதியே. (௨)

* வாதிப்பிரான் என்றும் பாடம். † அலைமலிதண்பொழில் என்றும் பாடம். ‡ முத்தமொடுமேலம் என்றும் பாடம். ¶ முறிக்குந்தாழைமாமுடப்புன்னை என்றும் பாடம்; முறிக்குந்தடமாமுடப்புன்னை எனப்பாடமோதுவாருமுளர். § கூவலால் என்றும் பாடம். ○ வளங்கொண்மாடமாளிகை என்றும் பாடம்.

Koviloor Digital Library

வரைமானனையார்மயிற்சாயனல்லார்வடிவேற்கணல்லார்பலர்வந்திறைஞ்சத்
திரையார்புனலுட்பெய்துகொண்டுமண்டித்திளைத்தெற்றுசிற்றாறதன்கீழ் கரை
நிரையார்கமுகுக்கெடுந்தாட்டெங்குங்குறுந்தாட்பலவும்விரவிக்குளிரும் [மேல்
விரையார்பொழில்சூழ்வெஞ்சமாக்கூடல்விகிர்தாவடியேனையும்வேண்டுதியே.

பண்ணேர்மொழியாளையொர்பங்குடையாய்படுகாட்டகத்தென்றுமோர்பற்றொ
தண்ணாரகிலுங்* நலசாமரையும்மலைத்தெற்றுசிற்றாறதன்கீழ்கரைமேல்[ழியாய்
மண்ணார்முழவுங்குழலுமியம்பமடவார்நடமாடுமணியரங்கில்
விண்ணார்மதிதோய்வெஞ்சமாக்கூடல்விகிர்தாவடியேனையும்வேண்டுதியே. (௪)

துளைவெண்குழையுஞ்சுருள்வெண்டோடுந்தூங்குங்காதிற்றுளங்கும்படியாய்
களையேகமழும்மலர்கொன்றையினாய் † கலந்தார்க்கருள்செய்திடுங்கற்பகமே
பிளைவெண்பிறையாய்பிறங்குஞ்சடையாய்பிறவாதவனேபெறுதற்கரியாய்
வெள்ளைமால்விடையாய்வெஞ்சமாக்கூடல்விகிர்தாவடியேனையும்வேண்டுதியே. ()

தொழுவார்க்கெளியாய்துயர்தீரநின்றாய்சுரும்பார்மலர்க்கொன்றைதுன்றுஞ்ச
உழுவார்க்கரியவிடையேறிபொன்னார்புரந்தீயெழவோடுவித்தாயழகா [டையாய்
முழவாரொலி ‡ பாடலொடாடலறாமுதுகாடரங்காநடமாடவல்லாய்
விழவார்மறுகில்வெஞ்சமாக்கூடல்விகிர்தாவடியேனையும்வேண்டுதியே. (௬)

கடமாகளியானை ¶ யுரித்தவனேகரிகாடிடமாவனல்வீசிநின்று
நடமாடவல்லாய்நரையேறுகந்தாய்நல்லாய்நறுங்கொன்றைநயந்தவனே
படமாயிரமாம்பருத்துத்திப்பைங்கண்பகுவாயெயிற்றோடழலேயுமிழும்
விடவாரரவாவெஞ்சமாக்கூடல்விகிர்தாவடியேனையும்வேண்டுதியே. (௭)

காடும்மலையுங்நாடும்மிடறிக்கதிர்மாமணிசந்தனமும்மகிலும்
சேடன்னுறையும்மிடந்தான்விரும்பித்திளைத்தெற்றுசிற்றாறதன்கீழ்கரைமேல்
பாடன்முழவுங்குழலும்மியம்பப்பணைத்தோளியர்பாடலொடாடலறா
வேடர்விரும்பும்வெஞ்சமாக்கூடல்விகிர்தாவடியேனையும்வேண்டுதியே. (௮)

கொங்கார்மலர்க்கொன்றைபந்தாரவனேகொடுகொட்டியொர்வீணையுடையவனே
பொங்காடரவும்புனலுஞ்சடைமேற்பொதியும்புனிதாபுனஞ்சூழ்ந்தழகார் [ல்
துங்கார்புனலுட்பெய்துகொண்டுமண்டித்திளைத்தெற்றுசிற்றாறதன்கீழ்கரைமே
வெங்கார்வயல்சூழ்வெஞ்சமாக்கூடல்விகிர்தாவடியேனையும்வேண்டுதியே. (௯)

வஞ்சிநுண்ணிடையார்மயிற்சாயலன்னார் § வடிவேற்கணல்லார்பலர்வந்திறைஞ்சு
வெஞ்சமாக்கூடல்விகிர்தாவடியேனையும்வேண்டுதியேயென்றுதான்விரும்பி [ம்
வஞ்சியாதளிக்கும்வயனாவலர்கோன்வனப்பகையப்பன்வன்றொண்டன்சொன்ன
செஞ்சொற்றமிழ்மாலைகள்பத்தும்வல்லார்சிவலோகத்திருப்பதுதிண்ணமன்றே.

திருச்சிற்றம்பலம்.

திருவெஞ்சமாக்கூடற்றிருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - ௫.

சுவாமி தேவி திருநாமங்கள் - விகிர்தேசுவரர், விகிர்தேசுவரி.

* தண்ணார்முகிலும் என்றும் பாடம். † களையேகமழும்மலர்க்கொன்றையினாய் என்றும் பாடம். ‡ யழகார்–முழவாரொலி என்றும் பாடம். ¶ கடமார்களியானை என்றும் பாடம். § சாயனல்லார் என்றும் பாடம்.

Koviloor Digital Library

கூ. திருப்பாண்டிக்கொடுமுடி.*

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பெண்ணமர்மேனியினாரும்பிறைபுல்குசெஞ்சடையாரும்
கண்ணமர்நெற்றியினாருங்காதமருங்குழையாரும்
எண்ணமருங்குணத்தாருமிமையவரேத்தநின்றாரும்
பண்ணமர்பாடலினாரும்பாண்டிக்கொடுமுடியாரே. (க)

தனைக்கணிமாமலர் † கொண்டுதாடொழுவாரவர்தங்கள்
வினைப்பகையாயினதீர்க்கும்விண்ணவர்விஞ்சையர்நெஞ்சில்
நினைத்தெழுவார்துயர்தீர்ப்பார் ‡ நிரைவளைமங்கைநடுங்கப்
பனைக்கைப்பகட்டுரிபோர்த்தார்பாண்டிக்கொடுமுடியாரே. (௨)

சடையமர்கொன்றையினாருஞ்சாந்தவெண்ணீறணிந்தாரும்
புடையமர்பூதத்தினாரும்பொறிகிளர்பாம்பசைத்தாரும்
விடையமருங்கொடியாரும்வெண்மழுமூவிலைச்சூலப்
படையமர்கொள்கையினாரும்பாண்டிக்கொடுமுடியாரே. (௩)

நறைவளர்கொன்றையினாருஞாலமெல்லாந்தொழுதேத்தக்
கறைவளர்மாமிடற்றாருங்காடரங்காக்கனலேந்தி
மறைவளர்பாடலினோடுமண்முழவங்குழன்மொந்தை
பறை ¶ வளர்பாடலினாரும்பாண்டிக்கொடுமுடியாரே. (௪)

போகமுமின்பமுமாகிப்போற்றியென்பாரவர்தங்கள்
ஆகமுறைவிடமாகவமர்ந்தவர்கொன்றையினோடும்
நாகமுந்திங்களுஞ்சூடிநன்னுதன்மங்கைதன்மேனிப்
பாகமுகந்தவர்தாமும்பாண்டிக்கொடுமுடியாரே. (௫)

கடிபடுகூவிளமத்தங்கமழ்சடைமேலுடையாரும்
பொடிபடமுப்புரஞ்செற்றபொருசிலையொன்றுடையாரும்
வடிவுடைமங்கைதன்னோடுமணம்படுகொள்கையினாரும்
படிபடுகோலத்தினாரும்பாண்டிக்கொடுமுடியாரே. (௬)

ஊனமர்வெண்டலையேந்தியுண்பலிக்கென்றுழல்வாரும்
தேனமரும்மொழிமாதுசேர்திருமேனியினாரும்
கானமர்மஞ்ஞைகளாலுங்காவிரிக்கோலக்கரைமேல்
பானலநீறணிவாரும்பாண்டிக்கொடுமுடியாரே. (௭)

* இதனைத் திருக்கொடுமுடி எனவும் வழங்குப. † தன்னைக் கண்ணி தனைக்கணி எனத் தொகுத்தல்விகாரம் பெற்றது; கண்ணல் – கருதல்; தனக்கணிமாமலர் என்றும் பாடம். ‡ நினைத்தெழுவார்வினைதீர்ப்பார் என்றும் பாடம். ¶ மொந்தைப்–பறை என்றும் பாடம்.

Koviloor Digital Library

புரந்தரன்றன்னொடுவானோர்போற்றியென்றேத்தநின்றாரும்
பெருந்திறல்வாளரக்கனைப்பேரிடர்செய்துகந்தாரும்
கருந்திரைமாமிடற்றாருங்காரகில்பன்மணியுந்திப்
பாய்ந்திழிகாவிரிப்பாங்கர்ப்பாண்டிக்கொடுமுடியாரே. (௮)

திருமகள்காதலினானுந்திகழ்தருமாமலர்மேலைப்
பெருமகனும்மவர்காணாப்பேரழலாகியபெம்மான்
மருமலிமென்மலர்ச்சந்துவந்திழி* காவிரிமாடே
பருமணிநீர்த்துறையாரும்பாண்டிக்கொடுமுடியாரே. (௯)

புத்தரும்புந்தியிலாதசமணரும்பொய்ம்மொழியல்லால்
மெய்த்தவம்பேசிடமாட்டார்வேடம்பலபலவற்றால்†
சித்தருந்தேவருங்கூடிச்செழுமலர்நல்லனகொண்டு
பத்தியினாற்பணிந்தேத்தும்‡ பாண்டிக்கொடுமுடியாரே. (௧0)

கலமல்குதண்கடல்சூழ்ந்தகாழியுண்ஞானசம்பந்தன்
பலமல்குவெண்டலையேந்திப்பாண்டிக்கொடுமுடிதன்னைச்
சொலமல்குபாடல்கள்பத்துஞ்சொல்லவல்லார்துயர்தீர்ந்து
நலமல்குசிந்தையராகிநன்னெறியெய்துவர்தாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

சிட்டனைச்சிவனைச்செழுஞ்சோதியை
அட்டமூர்த்தியையாலநிழலமர்
பட்டனைத்திருப்பாண்டிக்கொடுமுடி
நட்டனைத்தொழுநம்வினைநாசமே. (௧)

பிரமன்மாலறியாதபெருமையன்
தருமமாகியதத்துவனெம்பிரான்
பரமனூருறைபாண்டிக்கொடுமுடி
கருமமாகத்தொழுமடநெஞ்சமே. (௨)

ஊசலாளல்லளொண்கழலாளல்லள்
தேசமாந்திருப்பாண்டிக்கொடுமுடி
ஈசனேயெனுமித்தனையல்லது
பேசுமாறறியாளொருபேதையே. (௩)

தூண்டியசுடர்போலொக்குஞ்சோதியான்
காண்டலாமெளியன்னடியார்கட்குப்¶
பாண்டிக்கொடுமுடிமேயபரமனைக்
காண்டுமென்பவர்க்கேதுங்கருத்தொணான். § (௪)

* மலர்சந்துவந்திழி என்றும், மலர்ச்சந்தும்வந்திழி என்றும், மலர்ச்சாந்துகவந்திழி என்றும் பாடம். † பலபலவாற்றால் என்றும் பாடம். ‡ பத்தர்கடாம்பணிந்தேத்தும் என்றும் பாடம். ¶ மெளியானடியார்கட்குப் என்றும்பாடம். § செய்துங்கருத்தினன் என்றும் பாடம்.

Koviloor Digital Library

நெருக்கியம்முடிநின்றிசைவானவர்
இருக்கொடும்பணிந்தேத்தவிருந்தவன்
திருக்கொடும்முடியென்றலுந்தீவினைக்
கருக்கெடும்*மிதுகைக்கண்டயோகமே. † (ரு)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

மற்றுப்பற்றெனக்கின்றிநின்றிருப்பாதமேமனம்பாவித்தேன்
பெற்றலும்பிறந்தேனினிப்பிறவாததன்மைவந்தெய்தினேன்
கற்றவர்தொழுதேத்துஞ்சீர்க்கறையூரிற்பாண்டிக்கொடுமுடி
நற்றவாவுனைநான்மறக்கினுஞ்‡சொல்லுநாநமச்சிவாயவே. (க)

இட்டனும்மடியேத்துவாரிகழ்ந்திட்டநாண்மறந்திட்டநாள்
கெட்டநாளிவையென்றலாற்கருதேன்கிளர்புனற்காவிரி
வட்டவாசிகைகொண்டடிதொழுதேத்துபாண்டிக்கொடுமுடி
நட்டவாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (உ)

ஓவுநாளுணர்வழியுநாளுயிர்போகுநாளுயர்பாடைமேல்
காவுநாளிவையென்றலாற்கருதேன்கிளர்புனற்காவிரிப்
பாவுதண்புனல்வந்திழிபரஞ்சோதிபாண்டிக்கொடுமுடி
நாவலாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (ந)

எல்லையில்புகழெம்பிரானெந்தைதம்பிரானென்பொன்மாமணி
கல்லையுந்திவளம்பொழிந்திழிகாவிரியதன்வாய்க்கரை
நல்லவர்தொழுதேத்துஞ்சீர்க்கறையூரிற்பாண்டிக்கொடுமுடி
வல்லவாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (ச)

அஞ்சினார்க்கரணாதியென்றடியேனுநான்மிகவஞ்சினேன்
அஞ்சலென்றடித்தொண்டனேற்கருணல்கினாய்க்கழிகின்றதென்
பஞ்சின்மெல்லடிப்பாவைமார்குடைந்தாடுபாண்டிக்கொடுமுடி
நஞ்சணிகண்டநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (ரு)

ஏடுவானிளந்திங்கள்சூடினையென்பின்கொல்புலித்தோலின்மேல்
ஆடுபாம்பதரைக்கசைத்தவழகனேயந்தண்காவிரிப்
பாடுதண்புனல்வந்திழிபரஞ்சோதிபாண்டிக்கொடுமுடிச்
சேடனேயுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (சு)

* தீவினை—கருக்கெடும் என்றும் பாடம். † இத்திருப்பதிகத்தில் கூ, எ, அ, க, க0 இச்செய்யுள்கள் மறைந்துபோயின. ‡ மறக்கிலும் என்றும் பாடம்; இப்பாடத்தை இத் திருப்பதிகமுழுதுங் கொள்க.

Koviloor Digital Library

விரும்பிநின்மலர்ப்பாதமேநினைந்தேன்வினைகளும்விண்டனன்
நெருங்கிவண்பொழில்சூழ்ந்தெழில்பெறநின்றகாவிரிக்கோட்டிடைக்
குரும்பைமென்முலைக்கோதைமார்குடைந்தாடுபாண்டிக்கொடுமுடி
விரும்பனேயுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (எ)

செம்பொனேர்சடையாய்திரிபுரந்தீயெழச்சிலைகோலினாய்
வம்புலாங்குழலாளைப்பாகமமர்ந்துகாவிரிக்கோட்டிடைக்
கொம்பின்மேற்குயில்கூவமாமயிலாடு* பாண்டிக்கொடுமுடி
நம்பனேயுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (அ)

சாரணன்றந்தையெம்பிரானெந்தைதம்பிரானென்பொன்மாமணியென்று
பேரணாயிரகோடிதேவர்பிதற்றிநின்றுபிரிகிலார்
நாரணன்பிரமன்றொழுங்கறையூரிற்பாண்டிக்கொடுமுடிக்
காரணாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (கூ)

கோணியபிறைசூடியைக்கறையூரிற்பாண்டிக்கொடுமுடி
பேணியபெருமானைப்பிஞ்ஞகப்பித்தனைப்பிறப்பில்லியைப்
பாணுலாவரிவண்டறைகொன்றைத்தாரனைப்படப்பாம்பரை
நாணனைத்தொண்டனூரன்சொல்லிவைசொல்லுவார்க்கில்லைத்துன்பமே.† ()

திருச்சிற்றம்பலம்.

திருப்பாண்டிக்கொடுமுடித்திருப்பதிகம் - ௩.

ஆ திருப்பதிகம் - அ.

சுவாமி தேவி திருநாமங்கள் - கொடுமுடிநாதர், பண்மொழியம்மை.

எ. திருக்கருவூரானிலை.‡

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

தொண்டெலாமலர்தூவியேத்தநஞ்
சுண்டலாருபிராயதன்மையர் ¶
கண்டனூர்கருவூருளானிலை
அண்டனாருளியுமன்பரே.§ (க)

* கூவமாமயிலாடு என்றும் பாடம்; இப்பாடத்திற்குக் கூவுமாறு மயிலாடும் எனப் பொருள் கொள்க; மாறு மாவெனவிகாரம். † இல்லைதுன்பமே என்றும் பாடம். ‡ திருக்கருவூர்ச்சிவாலயத்திற்கு ஆனிலையென்றுபெயர். ¶ சுண்டவாருயிராயதன்மையர் என்றும், சுண்டலாவுயிராயதன்மையர் என்றும் பாடம். § அருள்செய்யுமன்பரே என்றும் பாடம்.

Koviloor Digital Library

நீதியார்நினைந்தாயநான்மறை
ஓதியாரொடுங்கூடலார் * குழைக்
காதினர்கருவூருளானிலை
ஆதியாரடியார்தமன்பரே. (உ)

விண்ணுலாமதிசூடிவேதமே
பண்ணுளார்பரமாயபண்பினர்
கண்ணுளார்கருவூருளானிலை
அண்ணலாரடியார்க்குநல்லரே. (ங)

முடியர்மும்மதயானையீருரி
பொடியர்பூங்கணைவேளைச்செற்றவர்
கடியுளார்கருவூருளானிலை
அடிகள்யாவையுமாயவீசரே. (ச)

பங்கயம்மலர்ப்பாதர்பாதியோர்
மங்கையர்மணிநீலகண்டர்வான்
கங்கையர்கருவூருளானிலை
அங்கையாடரவத் † தெம்மண்ணலே. (ரு)

தேவர்திங்களும்பாம்புஞ்சென்னியில்
மேவர்மும்மதிலெய்தவில்லியர் ‡
காவலர் ¶ கருவூருளானிலை
மூவராகியமொய்ம்பரல்லரே. (சு)

பண்ணினர்படியேயற்றர்நீற்றர்மெய்ப்
பெண்ணினர்பிறைதாங்குநெற்றியர்
கண்ணினர்கருவூருளானிலை
நண்ணினர்நமையாளுநாதரே. (எ)

கடுத்தவாளரக்கன்கயிலையை
எடுத்தவன்றலைதோளுந்தாளினால்
அடர்த்தவன்கருவூருளானிலை
கொடுத்தவன்னருள் கூத்தனல்லனே. (அ)

உழுதுமாநிலத்தேனமாகிமால்
தொழுதுமாமலரோனுங்காண்கிலார்
கழுதினன்கருவூருளானிலை
முழுதுமாகியமூர்த்திபாதமே. (கூ)

புத்தர்புன்சமணர்பொய்யுரைப்
பித்தர்பேசியபேச்சைவிட்டுமெய்ப்
பத்தர்சேர்கருவூருளானிலை
அத்தர்பாதமடைந்துவாழ்மினே. (க0)

* கூடிலார் என்றும் பாடம். † அங்கையோடரவத் என்றும் பாடம். ‡ லெய்தவே ட்கையர் என்றும் பாடம். ¶ காவலார் என்றும் பாடம்.

Koviloor Digital Library

கந்தமார்பொழிற்காழிஞானசம்
பந்தன்சேர்கருவூருளானிலை
எந்தையைச்சொன்னபத்தும்வல்லவர்
சிந்தையிற்றுயராயதீர்வரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருக்கருவூரானிலைத்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - ௬.

சுவாமி தேவி திருநாமங்கள் - பசுபதிநாதர், கிருபாநாயகி.

கொங்கநாட்டிலுள்ள தலங்கள் முற்றுப்பெற்றன.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் அருளிச்செய்த திருப்பதிகங்கள் ௪; இத்திருப்பதிகங்களைப்பெற்றதலங்கள் ௪. திருநாவுக்கரசுநாயனார் அருளிச்செய்த திருப்பதிகம் க; இத்திருப்பதிகத்தைப்பெற்றதலம் க. சுந்தரமூர்த்திநாயனார் அருளிச்செய்ததிருப்பதிகங்கள் ௪; இத்திருப்பதிகங்களைப்பெற்றதலங்கள் ௪. ஆ திருப்பதிகங்கள் ௬. தலங்கள் எ.

நடுநாட்டில் உள்ள தலங்கள்.

க. திருநெல்வாயிலரத்துறை. *

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

எந்தையீசனெம்பெருமானேறமர்கடவுளென்றேத்திச்
சிந்தைசெய்பவர்க்கல்லாற்சென்றுகைகூடுவதன்றால்
கந்தமாமலருந்திக்கடும்புனனிவாமல்குகரைமேல்
அந்தண்சோலைநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (க)

ஈரவார்சடைதன்மேலிளம்பிறையணிந்தவெம்பெருமான்
சீருஞ்செல்வமுமேத்தாச்சிதடர்கள் † தொழச்செல்வதன்றால்
வாரிமாமலருந்திவருபுனனிவாமல்குகரைமேல்
ஆருஞ்சோலைநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (உ)

பிணிகலந்தபுன்சடைமேற்பிறையணிசிவனெனப்பேணிப்
பணிகலந்துசெய்யாதபாவிகடொழச்செல்வதன்றால்
மணிகலந்துபொன்னுந்திவருபுனனிவாமல்குகரைமேல்
அணிகலந்தநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (௩)

* திருநெல்வாயிலரத்துறை எனினும் திருவரத்துறை எனினும் பொருந்தும்.
† செல்வமுமேத்தாச்சித்தர்கள் என்றும்பாடம்; சித்தர் - சித்தத்தையுடையோர்; செல்வமுமேய்த்தாச்சிதடர்கள் என்று பாடமோதுவாருமுளர்.

Koviloor Digital Library

துன்னவாடை* யொன்றுடுத்துத்தூயவெண்ணீற்றினராகி
உன்னிநைபவர்க்கல்லாலொன்றுங்கைகூடுவதன்றால்
பொன்னுமாமணியுந்திப்பொருபுனனிவாமல்குகரைமேல்
அன்னமாருநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (௪)

வெருகுரிஞ்சுவெங்காட்டிலாடியவிமலனென்றுள்கி
உருகிநைபவர்க்கல்லாலொன்றுங்கைகூடுவதன்றால்
முருகுரிஞ்சுபூஞ்சோலைமொய்ம்மலர்சுமந்திழிநிவாவந்
தருகுரிஞ்சுநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (௫)

உரவுநீர்சடைக்கரந்தவொருவனென்றுள்குளிர்ந்தேத்திப்
பரவிநைபவர்க்கல்லாற்பரிந்துகைகூடுவதன்றால்
குரவமாமலருந்திக்குளிர்புன† னிவாமல்குகரைமேல்
அரவமாருநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (௬)

நீலமாமணிமிடற்றுநீறணிசிவனெனப்பேணும்
சீலமாந்தர்கட்கல்லாற்சென்றுகைகூடுவதன்றால்
கோலமாமலருந்திக்குளிர்புனனிவாமல்குகரைமேல்
ஆலுஞ்சோலைநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (௭)

செழுந்தண்மால்வரையெடுத்தசெருவலியிராவணனலற
அழுந்தவூன்றியவிரலான்போற்றியென்பார்க்கல்லதருளான்
கொழுங்கனிசுமந்துந்திக்குளிர்புனனிவாமல்குகரைமேல்
அழுந்துஞ்சோலைநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (௮)

நுணங்குநூலயன்மாலுமிருவருநோக்கரியானை
வணங்கிநைபவர்க்கல்லால்வந்துகைகூடுவதன்றால்
மணங்கமழ்ந்துபொன்னுந்திவருபுனனிவாமல்குகரைமேல்
அணங்குஞ்சோலைநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (௯)

சாக்கியப்படுவாருஞ்சமண்படுவார்களுமற்றும்
பாக்கியப்படகில்லாப்பாவிகடொழச்செல்வதன்றால்
பூக்கமழ்ந்துபொன்னுந்திப்பொருபுனனிவாமல்குகரைமேல்
ஆர்க்குஞ்சோலைநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (௧௦)

கறையினூர்பொழில்சூழ்ந்தகாழியுண்ஞானசம்பந்தன்
அறையும்பூம்புனல்பரந்தவரத்துறையடிகடம்மருளை
முறைமையாற்சொன்னபாடன்மொழியுமாந்தர்தம்வினைபோய்ப்
பறையுமையுறவில்லைப்பாட்டிவைபத்தும்வல்லார்க்கே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

* துன்ன ஆடை—(பலதுணிகளைத் தொடுத்துத்) தைத்த ஆடை; துன்னம் - தைத்தல்; "பெருங்குளிர்க் குடைந்த காலைக் கருந்துணி—பலதொடுத் திசைத்த வொருதுணி யல்லது—பிறிதொன்று கிடையா தாக" என்றார்பிறரும்; "கந்தை மிகையாங் கருத்தும்" என்பதும் நோக்குக. † குரவநீடுயர்சோலைக்குளிர்புனல் என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருஞானசம்பந்தப்பிள்ளையார், திருநெல்வாயிலரத்துறைக்குப் போகும்போது தந்தையாருடைய தோண்மேலிருத்தலை ஒழிந்து, திருவடித்தாமரைநோவ, மெய்யப் பைய நடந்து, மாறன்பாடி என்னும் பதியிற்சென்று அன்றிரவு அப்பதியிலேயே தங்கினார். திருவரத்துறையில் எழுந்தருளியிருக்கின்ற கடவுள் தம்முடைய திருக்குமாரராகிய பிள்ளையாருடைய வழிவருத்தத்தைத் திருவுளத்தடைத்து, அந்த ஸ்தலத்திலிருக்கின்ற பிராமணர்கள் அனைவருக்கும் தனித்தனியே சொப்பனத்திலேதோன்றி, பிள்ளையாருக்கு முத்துச்சிவிகையும், முத்துக்குடையும், முத்துச்சின்னங்களும் தம்மிடத்தில் எடுத்துக்கொண்டுபோய்க் கொடுக்கும்படி ஆஞ்ஞாபித்து மறைந்தருளினார். உடனே பிராமணர்கள் விழித்தெழுந்து, மகிழ்ந்து, அற்புதமெய்தியசிந்தையோடும் ஆலயத்தில் வந்துகூடி, திருப்பள்ளியெழுச்சிக்காலம் வர, திருக்காப்பைநீக்கி, முத்துச்சிவிகையையும், முத்துக்குடையையும், முத்துச்சின்னங்களையும் கண்டு, ஆனந்தங்கொண்டு, துந்துபி முதலிய வாத்தியங்கள் ஒலிப்ப, சிவனடியார்களோடு, அந்தச் சிவிகை முதலியவற்றைத் தாங்கிக்கொண்டு, ஆளுடையபிள்ளையாரிடத்திற்குப் போனார்கள். அதற்குமுன் சிவபிரான் ஆளுடையபிள்ளையாருக்கும் சொப்பனத்திலே தோன்றி, "நாம் உனக்கு முத்துச்சிவிகையும், முத்துக்குடையும், முத்துச்சின்னங்களும் அனுப்புகின்றோம். நீ அவைகளை எற்றுக்கொள்" என்று திருவாய்மலர்ந்தருளினார். பிள்ளையார் விழித்தெழுந்து, தாங்கண்ட சொப்பனத்தைத் தந்தையாருக்கும், அடியார்களுக்கும் அருளிச்செய்து, வைகறையிலே விபூதி தரித்து ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை ஓதிக்கொண்டு எழுந்தருளினார். சூரியோதயகாலத்திலே பிராமணர்கள் சிவனடியார்களோடு ஹரஹர என்னும் ஓசையுடனே முத்துச்சிவிகை முதலியவற்றைக் கொண்டு எதிரே வந்து, பிள்ளையாரை வணங்கி நின்று, "இவை திருவரத்துறையில் எழுந்தருளியிருக்கிற கடவுள் தந்த பொருள்கள் ஏற்றருளும்" என்றார்கள். பிள்ளையார் அதைக்கேட்டு, அக்கடவுளுடைய திருவருளை "எந்தையீசனெம்பெருமான்" என்னுந் திருப்பதிகத்தினலேபாடி, திருவருள்வடிவாகிய முத்துச் சிவிகையை வலஞ்செய்து, பூமியிலே விழுந்து நமஸ்கரித்து எழுந்து, ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை ஓதிக்கொண்டு, உலகமெல்லாம் உய்யும்படி அதில் ஏறியருளினார். அப்பொழுது சிவனடியார்கள் அனைவரும் ஆரவாரித்தார்கள். பிராமணர்கள் சமஸ்தரும் வேதகோஷஞ்செய்தார்கள். இந்திராதி தேவர்கள் ஆரவாரித்துப் புஷ்பமாரி பொழிந்தார்கள். பலவகைப்பட்ட மங்கலவாத்தியங்கள் ஒலித்தன. முத்துச்சிவிகையிலே ஏறியருளிய பரமகருணாநிதியாகிய திருஞானசம்பந்தப்பிள்ளையார் மேலே முத்துக்குடை நிழற்றவும், சிவனடியார்களும், பிராமணர்களும் நெருங்கி ஆனந்தமேலீட்டினாலே கூத்தாடித் தங்கள் கண்களினின்றும் பொழிகின்ற ஆனந்த வெள்ளத்தினுள்ளே குளிக்கவும், முத்துச் சின்னங்கள் "சமஸ்தலோகங்களும், சிவனடியார்களும், வேதங்களும் உய்யும்படி சைவசிகாமணி வந்தார்; சிதசித்துப் பிரபஞ்சங்களெங்கும் வியாபித்திருக்கின்ற உமாதேவியார் ஞானப்பாலூட்ட உண்ட ஸ்ரீ ஞானசம்பந்தமூர்த்தி வந்தார்; வேதசிவாகமாதி சமஸ்த சாத்திரங்களையும் ஓதாதுணர்ந்த முத்தமிழ் விரகர் வந்தார்" என்று ஊதவும், சென்று, திருவரத்துறையை அடைந்து, கோபுரவாயிலுக்குத் தூரத்திலே முத்துச் சிவிகையினின்றும் இறங்கி, நமஸ்கரித்து எழுந்து, திருக்கோயிலினுள்ளே பிரவேசித்து வலஞ்செய்து சந்நிதானத்தில் நமஸ்கரித்து, திருப்பதிகம் பாடி, சிலநாள் அந்த ஸ்தலத்தில் எழுந்தருளியிருந்தார்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

கடவுளைக்கடலுள்ளெழுநஞ்சுண்ட
உடலுளானையொப்பாரி*யிலாதவெம்
அடலுளானையரத்துறைமேவிய
சுடருளானைக்கண்டீர்நாந்தொழுவதே. (௧)

* ஒப்பாரி - ஒப்பு; இகரத்தை அசையாக்கி ஒப்பார் எனினு மமையும்.

Koviloor Digital Library

கரும்பொப்பானைக்கரும்பினிற்கட்டியை
விரும்பொப்பானைவிண்ணோருமறிகிலா
அரும்பொப்பானையரத்துறைமேவிய
சுரும்*பொப்பானைக்கண்டீர்நாந்தொழுவதே. (௨)

ஏறொப்பானையெல்லாவுயிர்க்குமிறை
வேறொப்பானைவிண்ணோருமறிகிலா
ஆறொப்பானையரத்துறைமேவிய
ஊறொப்பானைக்கண்டீர்நாந்தொழுவதே. (௩)

பாரொப்பானைப்பகலிருளன்னிலா
இரப்பொப்பானையிளமதிசூடிய
அரப்பொப்பானையரத்துறைமேவிய
சுரப்பொப்பானைக்கண்டீர்நாந்தொழுவதே. (௪)

நெய்யொப்பானைநெய்யிற்சுடர்போல்வதோர்
மெய்யொப்பானைவிண்ணோருமறிகிலார்
ஐயொப்பானையரத்துறைமேவிய
கையொப்பானைக்கண்டீர்நாந்தொழுவதே. (௫)

நெதியொப்பானைநெதியிற்கிழவனை
விதியொப்பானைவிண்ணோருமறிகிலார்
அதியொப்பானையரத்துறைமேவிய
கதியொப்பானைக்கண்டீர்நாந்தொழுவதே. (௬)

புனலொப்பானைப்பொருந்தலர்தம்மையே
மினலொப்பானைவிண்ணோருமறிகிலார்
அனலொப்பானையரத்துறைமேவிய
கனலொப்பானைக்கண்டீர்நாந்தொழுவதே. (௭)

பொன்னொப்பானைப்பொன்னிற்சுடர்போல்வதோர்
மின்னொப்பானைவிண்ணோருமறிகிலார்
அன்னொப்பானையரத்துறைமேவிய
தன்னொப்பானைக்கண்டீர்நாந்தொழுவதே. (௮)

காழியானைக்கனவிடையூருமெய்
வாழியானைவல்லோருமென்றின்னவர்
ஆழியான்பிரமற்குமரத்துறை
ஊழியானைக்கண்டீர்நாந்தொழுவதே. (௯)

கலையொப்பானைக்கற்றார்க்கோரமுதினை
மலையொப்பானைமணிமுடியூன்றிய
அலையொப்பானையரத்துறைமேவிய
நிலையொப்பானைக்கண்டீர்நாந்தொழுவதே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

* சுரும்பு - தும்பி என்னும் பிரதி பதத்தால் யானையை உணர்த்தும்; மலையுமாம்; "தோளிரண்டினுநாடொறுமிரண்டந்தண்சுரும்பினைவிரும்பினன்சுமந்து" என்புழியும் சுரும்பு இவ்விரண்டு பொருளு முணர்த்திற்று.

Koviloor Digital Library

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

கல்வாயகிலுங்கதிர்மாமணியுங்கலந்துந்திவருந்நிவவின்கரைமேல்
நெல்வாயிலரத்துறைநீடுறையுந்நிலவெண்மதிசூடியநின்மலனே
நல்வாயில்செய்தார்நடந்தாருடுத்தார்நரைத்தாரிறந்தாரென்றுநானிலத்தில்
சொல்லாய்க்கழிகின்றததறிந்தடியேன்றொடர்ந்தேனுய்யப்போவதொர்சூழல்சொல்லே.

கறிமாமிளகும்மிகுவன்மரமும்மிகவுந்திவருந்நிவவின்கரைமேல்
நெறிவார்குழலாரவர்காணநடஞ்செய்நெல்வாயிலரத்துறைநின்மலனே
வறிதேநிலையாதவிம்மண்ணுலகின்னரனாகவகுத்தனைநானிலையேன்
பொறிவாயிலிவ்வைந்தினையும்* மவியப்பொருதுன்னடியேபுகுஞ்சூழல்சொல்லே.

புற்றாடரவம்மரையார்த்துகந்தாய்புனிதாபொருவெள்விடையூர்தியினாய்
எற்றேயொருகண்ணிலனின்னையல்லானெல்வாயிலரத்துறைநின்மலனே
மற்றேலொருபற்றில†னெம்பெருமான்வண்டார்குழலாண்மங்கைபங்கினனே
அற்றார்பிறவிக்கடனீந்தியேறியடியேனுய்யப்போவதொர்சூழல்சொல்லே. (௩)

கோடுயர்கோங்கலர்வேங்கையலர்மிகவுந்திவருந்நிவவின்கரைமேல்
நீடுயர்சோலைநெல்வாயிலரத்துறைநின்மலனேநினைவார்மனத்தாய்
ஓடுபுனற்கரையாமிளமையுறங்கிவிழித்தாலொக்குமிப்பிறவி‡
வாடியிருந்துவருந்தல்செய்யாதடியேனுய்யப்போவதொர்சூழல்சொல்லே. (௪)

உலவும்முகிலிற்றலைகற்பொழியவுயர்வேயொடிழி¶நிவவின்கரைமேல்
நிலவும்மயிலாரவர்தாம்பயிலுநெல்வாயிலரத்துறைநின்மலனே
புலனைந்துமயங்கியகங்குழையப்பொருவேலொர்நமன்றமர்தாநலிய
அலமந்து§மயங்கியயர்வதன்முன்னடியேனுய்யப்போவதொர்சூழல்சொல்லே.

ஏலம்மிலவங்கமெழிற்கனகம்மிகவுந்திவருந்நிவவின்கரைமேல்
நீலம்மலர்ப்பொய்கையிலன்னமலிநெல்வாயிலரத்துறையாயொருநெல்
வாலூன்றவருந்துமுடம்பிதனைமகிழாதழகாவலந்தேனினியான்o
ஆலந்நிழலிலமர்ந்தாயமராவடியேனுய்யப்போவதொர்சூழல்சொல்லே. (௬)

சிகரம்முகத்திற்றிரளாரகிலும்மிகவுந்திவருந்நிவவின்கரைமேல்
நிகரின்மயிலாரவர்தாம்பயிலுந்நெல்வாயிலரத்துறைநின்மலனே
மகரக்குழைபாய்மணக்கோலமதேபிணக்கோலமதாம்** பிறவியிதுதான்
அகரம்முதலினெழுத்தாகிநின்றா††யடியேனுய்யப்போவதொர்சூழல்சொல்லே.

* பொறிவாயிலிவைந்தனையும் என்றும் பாடம். † மற்றேயொருபற்றிலன் என்றும் பாடம். ‡ "பெருக்காற்றிடிகரையொத்ததிளமை" "உறங்கி—விழிப்பது போலும் பிறப்பு." என்றார்பிறரும். ¶ யுயர்வேயொடிழியும் என்றுபாடமோதுவாருமுளர். § அலம்வந்து என்றும் பாடம். o வினி நான் என்றும் பாடம். ** "மணமகனே பிணமகனாய்" என்பது இங்கேசிந்திக்கற்பாலது. †† அகரவெழுத்தின்முதலாகி நின்றாய் எனக் கூட்டுக.

Koviloor Digital Library

திண்டேர்நெடுவீதியிலங்கையர்கோன்றிரடோளிருபஃது* நெரித்தருளி
ஞெண்டாடுநெடுவயல்சூழ்புறவின்னெல்வாயிலரத்துறைநின்மலனே
பண்டேமிகநான்செய்தபாக்கியத்தாற்பரஞ்சோதிநின்னாமம்பயிலப்பெற்றேன்
அண்டாவமரர்க்கமரர்பெருமானடியேனுய்யப்போவதோர்சூழல்சொல்லே. ()

மாணுருவாகியோர்மண்ணளந்தான்மலர்மேலவனேடியுங்காண்பரியாய்
நீணீண்முடிவானவர்வந்திறைஞ்சுநெல்வாயிலரத்துறைநின்மலனே
வாணார்நுதலார்† வலைப்பட்டடியேன்பலவின்கனியீந்ததுபோல்வதன்முன்
ஆணோடுபெண்ணுமுருவாகிநின்றாயடியேனுய்யப்போவதோர்சூழல்சொல்லே.

நீரூருநெடுவயல்சூழ்புறவின்னெல்வாயிலரத்துறைநின்மலனைத்
தேரூர்நெடுவீதிநன்மாடமலிதென்னாவலர்கோனடித்தொண்டனணி
ஆரூரனுரைத்தனநற்றமிழின்மிகுமாலையோர்பத்திவைகற்றுவல்லார்
காரூர்களிவண்டறையானைமன்னரவராகியோர்விண்முழுதாள்பவரே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருநெல்வாயிலரத்துறைத்திருப்பதிகம் - ௩.

சுவாமி தேவி திருநாமங்கள் - அரத்துறைநாதர், ஆனந்தநாயகி.

உ. திருத்தூங்கானைமாடம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

ஒடுங்கும்பிணிபிறவிகேடென்றிவையுடைத்தாயவாழ்க்கையொழியத்தவம்
அடங்கும்மிடங்கருதிநின்றீரெல்லாமடிகளடிநிழற்கீழாளாம்வண்ணம்
கிடங்கும்மதிலுஞ்சுலாவியெங்குங்கெழுமனைகடோறுமறையின்னொலி
தொடங்குங்கடந்தைத்தடங்கோயில்சேர்தூங்கானைமாடந்தொழுமின்களே. ()

பிணிநீரசாதல்பிறத்தலிவைபிரியப்பிரியாதபேரின்பத்தோ
டணிநீரமேலுலகமெய்தலுறிலறிமின்குறைவில்லையானேறுடை
மணிநீலகண்டமுடையபிரான்மலைமகளுந்தானுமகிழ்ந்துவாழும்
துணிநீர்க்கடந்தைத்தடங்கோயில்சேர்தூங்கானைமாடந்தொழுமின்களே. (உ)

சாநாளும்வாழ்நாளுந்தோற்றமிவைசலிப்பாயவாழ்க்கையொழியத்தவம்
ஆமாறறியாதலமந்துநீ‡ ரயர்ந்துங்குறைவில்லையானேறுடைப்
பூமாணலங்கலிலங்குகொன்றைபுனல்பொதிந்தபுன்சடையினானுறையும்
தூமான்கடந்தைத்தடங்கோயில்சேர்தூங்கானைமாடந்தொழுமின்களே. (௩)

* ளிருபத்து என்றும் பாடம். † வாளார்நுதலார் என்றும் பாடம். ‡ தலம்வந்துநீர் என்றும் பாடம்.

Koviloor Digital Library

ஊன்றும்பிணிபிறவிகேடென்றிவை * யுடைத்தாயவாழ்க்கையொழியத்தவம்
மான்றுமனங்கருதிநின்றீரெல்லாமனந்திரிந்துமண்ணின்மயங்காதுநீர்
மூன்றுமதிலெய்தமூவாச்சிலைமுதல்வர்க்கிடம்போலும்முகிறோய்கொடி
தோன்றுங்கடந்தைத்தடங்கோயில்சேர்தூங்கானைமாடந்தொழுமின்களே.(ச)

மயறீர்மையில்லாததோற்றம்மிவைமாணத்தொடொத்தழியுமாறுதலால்
வியறீரமேலுகமெய்தனுறின்மிக்கொன்றும்வேண்டாவிமலனிடம்
உயர்தீரமோங்கியநாமங்களாலோவாதுநாளுமடிபரவல்செய்
துயர்தீர்கடந்தைத்தடங்கோயில்சேர்தூங்கானைமாடந்தொழுமின்களே. (ரு)

பன்னீர்மைகுன்றிச்செவிகேட்பிலா † படர்நோக்கிற்கண்பவளந்நிற
நன்னீர்மைகுன்றித்திரைதோலொடுநரைதோன்றுங்காலநமக்காதன்முன் [ம்
பொன்னீர்மைதுன்றப்புறந்தோன்றுநற்புனல்பொதிந்தபுன்சடையினானுறையு
தொன்னீர்க்கடந்தைத்தடங்கோயில்சேர்தூங்கானைமாடந்தொழுமின்களே. ()

இறையூண்டுகளோடிடுக்கணெய்தியிழிப்பாயவாழ்க்கை ‡ யொழியத்தவம்
நிறையூணெறிகருதிநின்றீரெல்லாநீள்கழலேநாளுநினைமின்சென்னிப்
பிறைசூழலங்கலிலங்குகொன்றைபிணையும்பெருமான்பிரியாதநீர்த்
துறைசூழ்கடந்தைத்தடங்கோயில்சேர்தூங்கானைமாடந்தொழுமின்களே. (எ)

பல்வீழ்ந்துநாத்தளர்ந்துமெய்யில்வாடிப்பழிப்பாயவாழ்க்கையொழியத்தவம்
இல்சூழிடங்கருதிநின்றீரெல்லாமிறையேபிரியாதெழுந்துபோதும்
கல்சூழரக்கன்கதறச்செய்தான்காதலியுந்தானுங்கருதிவாழும்
தொல்சீர்க்கடந்தைத்தடங்கோயில்சேர்தூங்கானைமாடந்தொழுமின்களே.(அ)

நோயும்பிணியுமருந்துயரமுநுகருடையவாழ்க்கையொழியத்தவம்
வாயுமனங்கருதிநின்றீரெல்லாமலர்மிசையநான்முகனுமண்ணும்விண்ணும்
தாயவடியளந்தான் ¶ காணமாட்டாத்தலைவர்க்கிடம்போலுந்தண்சோலைவிண்
தோயுங்கடந்தைத்தடங்கோயில்சேர்தூங்கானைமாடந்தொழுமின்களே. (கூ)

பகடூர்பசிநலியநோய்வருதலாற்பழிப்பாயவாழ்க்கை § யொழியத்தவம்
முகடூர்மயிர்கடிந்தசெய்கைபாருமூடுதுவராடையருநாடிச்சொன்ன [ழும்
நிகடர்த்தபொய்ம்மொழிகேடறவேண்டாதிருந்திழையுந்தானும்பொருந்திவா
துகடீர்கடந்தைத்தடங்கோயில்சேர்தூங்கானைமாடந்தொழுமின்களே. (க0)

மண்ணார்முழவதிருமாடவீதிவயற்காழிஞானசம்பந்தனல்ல
பெண்ணாகடத்துப்பெருங்கோயில்சேர்பிறையுரிஞ்சுந்தூங்கானைமாடமேயான்
கண்ணார்கழல்பரவுபாடல்பத்துங்கருத்துணராக்கற்றாருங்கேட்டாரும்போய்
விண்ணோருலகத்துமேவிவாழும்விதியதுவேயாகும்வினைமாயுமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

* பிறவிக்கேடென்றிவை என்றும் பாடம். † கேட்பிலாப் என்றும், கேட்பில என்றும் பாடம். ‡ வாட்கை என்றும் பாடம். ¶ அடியளந்தான் என்றது வாளாபெயராய்நின்றது; "அடியளந்தான்றாயது" என்புழிப்போல. § வாட்கை என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருநாவுக்கரசுநாயனார்.

திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

பொன்னார்திருவடிக்கொன்றுண்டுவிண்ணப்பம்போற்றிசெய்யும்
என்னாவிகாப்பதற்கிச்சையுண்டேலிருங்கூற்றகல*
மின்னாருமூவிலைச்சூலமென்மேற்பொறிமேவுகொண்டல்
துன்னார்கடந்தையுட்டூங்கானைமாடச்சுடர்க்கொழுந்தே. (௧)

ஆவாசிறுதொண்டனென்னினைந்தானென்றரும்பிணிநோய்
காவாதொழியிற்கலக்குமுன்மேற்பழிகாதல்செய்வார்
தேவா† திருவடிநீறென்னைப்பூசுசெந்தாமரையின்
பூவார்கடந்தையுட்டூங்கானைமாடத்தெம்புண்ணியனே. ‡ (௨)

கடவுந்திகிரிகடவாதொழியக்கயிலையுற்றான்
படவுந்திருவிரலொன்றுவைத்தாய்பனிமால்வரைபோல்
இடவம்பொறித்தென்னையேன்றுகொள்ளாயிருஞ்சோலைதிங்கள்
தடவுங்கடந்தையுட்டூங்கானைமாடத்தெந்தத்துவனே. ¶ (௧0)

திருச்சிற்றம்பலம்.

§ திருத்தூங்கானைமாடத்திருப்பதிகம் - ௨.

ஆ திருப்பதிகம் - ௫.

சுவாமி தேவி திருநாமங்கள் - சுடர்க்கொழுந்நாதர்; கடந்தைநாயகி.

திருநாவுக்கரசுநாயனார், திருவதிகை வீரட்டானத்தினின்றும் புறப்பட்டு, சிவஸ்தலங்கள் பலவற்றையும் தரிசித்துத் திருப்பதிகம் பாடிக்கொண்டு, திருப்பெண்ணாகடத்திற்குச் சென்று, திருத்தூங்கானைமாடம் என்னும் சிவாலயத்திற்பிரவேசித்து, சுவாமியை வணங்கி, "சுவாமீ! அடியேன் இழிவினையுடைய சமணசமயத் தொடக்குண்டு வருந்திய இத்தேகத்துடனே உயிர்வாழ்தற்குத் தரியேன். அடியேன் தரிக்கும் பொருட்டுத் தேவரீருடைய இலச்சினையாகிய சூலத்தையும் இடபத்தையும் அடியேன் மேற் பொறித்தருளல்வேண்டும்" என்னுங் கருத்தால் "பொன்னார் திருவடிக்கொன்றுண்டு விண்ணப்பம்" என்னுந் திருப்பதிகம் பாடினார். உடனே சிவபெருமானுடைய திருவருளினால் ஒரு சிவபூதம் மற்றொருவருக்கும் தெரியாதபடி அவ்வாகீசருடைய திருத்தோளிலே சூலக்குறியையும், இடபக்குறியையும் பொறித்தது. நாயனார் தம்முடைய திருத்தோளிலே பொறிக்கப்பட்ட இலச்சினைகளைக் கண்டு மனமகிழ்ந்து திருவருளைச்சிந்தித்துக் கண்ணீர்சொரிய விழுந்து நமஸ்கரித்து எழுந்தார்.

* யுண்டேயிருங்கூற்றகல என்றும் பாடம். † தேவே என்றும் பாடம். ‡ இது அச்சுப்புத்தகத்தில் ஐந்தாஞ்செய்யுளாகக்காணப்படுகின்றது. ¶ இத்திருப்பதிகத்தில் ௩, ௪, ௫, ௬, ௭, ௮, ௯ இச்செய்யுள்கள் மறைந்துபோயின. § திருத்தூங்கானைமாடம்—திருப்பெண்ணாகடத்துச்சிவாலயம்; பெண்ணாகடம் கடந்தையெனமரீயிற்று.

Koviloor Digital Library

ந. திருக்கூடலையாற்றூர்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

வடிவுடைமழுவேந்திமதகரியுரிபோர்த்துப்
பொடியணிதிருமேனிப்புரிகுழலுமையோடும்
கொடியணிநெடுமாடக்கூடலையாற்றூரில்
அடிகளிவ்வழிபோந்தவதிசயமறியேனே.* (க)

வையகமுழுதுண்டமாலொடுநான்முகனும்
பையரவிளவல்குற்† பாவையொடும்முடனே
கொய்யணிமலர்ச்சோலைக்கூடலையாற்றூரில்
ஐயனிவ்வழிபோந்தவதிசயமறியேனே. (உ)

ஊர்தொறும்வெண்டலைகொண்டுண்பலியிடுமென்று
வார்தருமென்முலையாண்மங்கையொடும்முடனே
கூர்நுனைமழுவேந்திக்கூடலையாற்றூரில்
ஆர்வனிவ்வழிபோந்தவதிசயமறியேனே. (ந)

சந்தணவும்புனலுந்தாங்கியதாழ்சடையன்
பந்தணவும்விரலாள்பாவையொடும்முடனே
கொந்தணவும்பொழில்சூழ்கூடலையாற்றூரில்
அந்தணன்வழிபோந்தவதிசயமறியேனே. (ச)

வேதியர்விண்ணவரும்மண்ணவருந்தொழநற்
சோதியதுருவாகிச்சுரிகுழலுமையோடும்
கோதியவண்டறைபுங்கூடலையாற்றூரில்
ஆதியிவ்வழிபோந்தவதிசயமறியேனே. (ரு)

வித்தகவீணையொடும்வெண்புரிநூல்பூண்டு
முத்தனவெண்முறுவன்மங்கையொடும்முடனே
கொத்தலரும்பொழில்சூழ்கூடலையாற்றூரில்
அத்தனிவ்வழிபோந்தவதிசயமறியேனே. (சு)

மழைநுழைமதியமொடுவாளரவஞ்சடைமேல்
இழைநுழைதுகிலல்குலேந்திழைபாகனொடும்
குழைபணிதிகழ்சோலைக்கூடலையாற்றூரில்
அழகனிவ்வழிபோந்தவதிசயமறியேனே. (எ)

* மறியேமே என்றும் பாடம்; இதனையித்திருப்பதிகமுழுதுங்கொள்க. † பையிள வரவல்குல் என்றும் பாடம்.

Koviloor Digital Library

மறைமுதல்வானவரும்மாலயனிந்திரனும்
பிறைநுதன்மங்கையொடும்பேய்க்கணமுஞ்சூழக்
குறள்படை*யதனோடுங்கூடலையாற்றூரில்
அறவனிவ்வழிபோந்தவதிசயமறியேனே. (அ)

வேலையினஞ்சுண்டுவிடையதுதானேறிப்
பாலனமென்மொழியாள்பாவையொடும்முடனே
கோலமதுருவாகிக்† கூடலையாற்றூரில்
ஆலனிவ்வழிபோந்தவதிசயமறியேனே. (கூ)

கூடலையாற்றூரிற்கொடியிடையவளோடும்
ஆடலுகந்தானையதிசயமிதுவென்று
நாடியவின்றமிழானாவலவூரன்சொல்
பாடல்கள்பத்தும்வல்லார்தம்வினைபற்றறுமே. (கo)

திருச்சிற்றம்பலம்.

திருக்கூடலையாற்றூர்த்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - கூ.

சுவாமி தேவி திருநாமங்கள் - நெறிகாட்டுநாயகர், புரிகுழனாயகி.

சுந்தரமூர்த்திநாயனார், மேலைச்சிதம்பரமாகிய திருப்பேரூரை அடைந்து, அங்கே சிவபிரான் கனகசபையிலே நடனஞ்செய்யும் திருக்கோலத்தைத் தமக்குக் காட்டக் கண்டு வணங்கி, சிதம்பரத்துக்கு மீண்டெழுந்தருளுதற்குத் திருவுளங்கொண்டு புறப்பட்டு, திருவெஞ்சமாக்கூடல் முதலிய ஸ்தலங்களுக்கு யாத்திரைபண்ணி, திருக்கூடலையாற்றூருக்குச் சமீபித்தும், அதற்குப்போகாமல் திருமுதுகுன்றை நோக்கிச்சென்றார். செல்லும் வழியிலே சிவபிரான் ஒரு பிராமணராகி, சுந்தரமூர்த்திநாயனாருக்கு முன்னின்றார். நின்ற அந்தப்பிராமணரைச் சுந்தரமூர்த்திநாயனார் பார்த்து, "ஐயரே, திருமுதுகுன்றுக்குப்போம்வழி எது? சொல்லும்" என்றுகேட்க; ஐயர் "இது கூடலையாற்றூருக்குப் போம்வழி" என்று சொல்லி வழிகாட்டிக்கொண்டு முன்னே சென்றார். சுந்தரமூர்த்திநாயனார் அவரைத் தொடர்ந்து சென்று, பின் அவரைக் காணாதவராய், "வடிவுடைமழுவேந்தி" என்றெடுத்து, "அடிகளிவ் வழிபோந்த வதிசயமறியேனே" என்னுந் திருப்பதிகத்தைப்பாடி, கூடலையாற்றூரை அடைந்து சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு திருமுதுகுன்றுக்குப் போனார்.

ச. திருவெருக்கத்தம்புலியூர்.‡

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

படையார்தருபூதப்பகடாருரிபோர்வை
உடையானுமையோடுமுடனாயிடுகங்கைச்
சடையானெருக்கத்தம்புலியூர்த்தகுகோயில்
விடையானடியேத்தமேவாவினைதானே. (க)

* குறள் படை என்பது வினையடிகளின் ஓசைநோக்கி இயல்பாயிற்று. † வுருவாக என்றும் பாடம். ‡ திருவெருக்கத்தம்புலியூர் - இராசேந்திரபட்டினம்.

Koviloor Digital Library

இலையார்தருசூலப்படையெம்பெருமானாய்
நிலையார்மதின்மூன்றுநீறாய்விழவெய்த
சிலையானெருக்கத்தம்புலியூர்த்திகழ்கோயில்
கலையானடியேத்தக்கருதாவினைதானே. (௨)

விண்ணோர்பெருமானேவிகிர்தாவிடையூர்தீ
பெண்ணாணலியாகும்பித்தாபிறைசூடீ
எண்ணாரெருக்கத்தம்புலியூருறைகின்ற
அண்ணாவெனவல்லார்க்கடையாவினைதானே. (௩)

அரையார்தருநாகமணிவானலர்மாலை
விரையார்தருகொன்றையுடையான்விடையேறி
வரையானெருக்கத்தம்புலியூர்மகிழ்கின்ற
திரையார்சடையானைச்சேரத்திருவாமே. (௪)

வீறார்முலையாளைப்பாகமிகவைத்துச்
சீறுவருகாலன்சினத்தையழிவித்தான்
ஏறானெருக்கத்தம்புலியூரிறையானை*
வேறாநினைவாரைவிரும்பாவினைதானே. (௫)

நகுவெண்டலையேந்திநானா†விதம்பாடிப்
புகுவானயம்பெய்யப்புலித்தோல்பியற்கிட்டுத்‡
தகுவானெருக்கத்தம்புலியூர்த்தகைந்தங்கே
தொகுவான்கழலேத்தத்தொடராவினைதானே.¶ (௬)

ஆவாவெனவரக்கனலறவடர்த்திட்டுத்
தேவாவெனவருளார்செல்வங்கொடுத்திட்ட
கோவேயெருக்கத்தம்புலியூர்மிகுகோயில்
தேவேயெனவல்லறீர்தறிடமாமே. (௮)

மறையானெடுமால்காண்பரியான்மழுவேந்தி
நிறையாமதிசூடிநிகழ்முத்தின்றொத்தே
இறையானெருக்கத்தம்புலியூரிடங்கொண்ட
கறையார்மிடற்றானைக்கருதக்கெடும்வினையே. (௯)

புத்தாருகர்தம்பொய்கள்புறம்போக்கிச்
சுத்திதரித்துறையுஞ்சோதியுமையோடும்
நித்தனெருக்கத்தம்புலியூர்நிகழ்வாய
அத்தனறவன்றன்னடியேயடைவோமே. (௧௦)

* ஏறாரெருக்கத்தம்புலியூருறைவானை என்றும் பாடம். † நானாவிதம் என்றும் பாடம். ‡ புலித்தோல்பெயர்த்திட்டுத் என்றும் பாடம். ¶ இத்திருப்பதிகத்தில் ௭-வது செய்யுள் மறைந்துபோயிற்று.

Koviloor Digital Library

ஏரார்எருக்கத்தம்புலியூருறைவானைச்
சீரார்திகழ்காழித்திருவார்சம்பந்தன்
ஆராவருந்தமிழ்மாலையிவைவல்லார்
பாராரவரேத்தப்பதிவாழுறைவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவெருக்கத்தம்புலியூர்த்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - எ.

சுவாமி தேவி திருநாமங்கள் - நீலகண்டர், நீலமலர்க்கண்ணி.

ரு. திருத்தினைநகர்.*

சுந்தரமூர்த்திநாயனர்.

பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

நீறுதாங்கியதிருநுதலானைநெற்றிக்கண்ணனைநிரைவளைமடந்தை
கூறுதாங்கியகொள்கையினானைக்குற்றமில்லியைக்கற்றையஞ்சடைமேல்
ஆறுதாங்கியவழகனையமரர்க்கரியசோதியைவரிவராலுகளும் †
சேறுதாங்கியதிருத்தினைநகருட்சிவக்கொழுந்தினைச்சென்றடைமனனே. (க)

பிணிகொளாக்கைபிறப்பிறப்பென்னுமிதனை ‡ நீக்கியீசன்றன்றிருவடியிணைக்காட்
டணியவேண்டிடிற்சொல்லுவன்கேணீயஞ்சனெஞ்சமேவஞ்சர்வாழ்மதின்மூன்
றணிகொள்வெஞ்சிலையாலுகச்சீறுமையன்வையகம்பரவிநின்றேத்தும்
திணியும்வார்பொழிற்றிருத்தினைநகருட்சிவக்கொழுந்தினைச்சென்றடைமனனே

வடிகொள்கண்ணிணைமடந்தையர்தம்பான்மயலதுற்றுவஞ்சனைக்கிடமாகி
முடியுமாகருதேலெருதேறுமூர்த்தியைமுதலாயபிரானை
அடிகளென்றடியார்தொழுதேத்துமப்பனொப்பிலாமுலையுமைகோனைச்
செடிகொள்கான்மலிதிருத்தினைநகருட்சிவக்கொழுந்தினைச்சென்றடைமனனே.

பாவமேபுரிந்தகலிடந்தன்னிற்பலபகர்ந்தலமந்துயிர்வாழ்க்கைக்
காவவென்றுழந்தயர்ந்துவீழாதேயண்ணறன்றிறமறிவினுற்கருதி
மாவினீருரியுடைபுனைந்தானைமணியைமைந்தனைவானவர்க்கமுதைத்
தேவதேவனைத்திருத்தினைநகருட்சிவக்கொழுந்தினைச்சென்றடைமனனே.(ச)

ஒன்றலாவுயிர்வாழ்க்கையைநினைந்திட்டுடறளர்ந்தருமாநிதியியற்றி §
என்றும்வாழலாமெமக்கெனப்பேசுமிதுவும்பொய்யெனவேநினையுளமே
குன்றுலாவியபுயமுடையானைக்கூத்தனைக்குலாவிக்குவலயத்தோர்
சென்றெலாம்பயிறிருத்தினைநகருட்சிவக்கொழுந்தினைச்சென்றடையமனனே.()

* இது இக்காலத்து, தீர்த்தனகிரி என வழங்குகின்றது. † வரிவயலுகளும் என்றும் பாடம். ‡ ளாக்கையிற்பிறப்பென்னுமிதனை என்றும் பாடம். ¶ தலம்வந்து என்றும் பாடம். § மாநெறியியற்றி என்றும் பாடம்.

Koviloor Digital Library

வேந்தராயுலகாண்டறம்புரிந்துவீற்றிருந்தவிவ்வுடலிதுதன்னைத்
தேய்ந்திறந்துவெந்துயருழந்திடும்பிப்பொக்கவாழ்வினைவிட்டிடுநெஞ்சே
பாந்தளங்கையிலாட்டுகந்தானைப்பரமனைக்கடற்சூர்தடிந்திட்ட
சேந்தர்தாதையைத்திருத்தினைநகருட்சிவக்கொழுந்தினைச்சென்றடைமனனே.

தன்னிலாசறுசித்தமுமின்றித்தவமுயன்றவமாயினபேசிப்
பின்னலார்சடை* கட்டியென்பணிந்தாற்பெரிதுநீந்துவதரிததுநிற்க
முன்னெலாமுழுமுதலென்றுவானோர்மூர்த்தியாகியமுதலவன் † றன்னைச்
செந்நெலார்வயற்றிருத்தினைநகருட்சிவக்கொழுந்தினைச்சென்றடைமனனே. ()

பரிந்தசுற்றமுமற்றவன்றுணையும்பலருங்கண்டழுதெழவுயிருடலைப்
பிரிந்துபோமிது ‡ நிச்சயமறிந்தாற்பேதைவாழ்வெனும்பிணக்கினைத்தவிர்ந்து
கருந்தடங்கண்ணிபங்கனையுயிரைக்காலகாலனைக்கடவுளைவிரும்பிச்
செருந்திபொன்மலர்திருத்தினைநகருட்சிவக்கொழுந்தினைச்சென்றடைமனனே.

நமையெலாம்பலரிகழ்ந்துரைப்பதன்முனன்மையொன்றிலாத்தேரர்புன்சமணும்
சமயமாகியதவத்தினாவத்தத்தன்மைவிட்டொழிநன்மையைவேண்டில் ¶
உமையோர்கூறனையேறுகந்தானையும்பாதியையெம்பெருமானைச்
சிமயமார்பொழிற்றிருத்தினைநகருட்சிவக்கொழுந்தினைச்சென்றடைமனனே.

நீடுபொக்கையிற்பிறவியைப்§ பழித்துநீங்கலாமென்றுமனத்தினைத்தெருட்டிச்
சேடுலாம்பொழிற்றிருத்தினைநகருட்சிவக்கொழுந்தினதிருவடியிணைதான்0
நாடெலாம்புகழ்**நாவலூராளிநம்பிவன்றொண்டனூரனுரைத்த
பாடலாந்தமிழ்பத்திவைவல்லார்முத்தியாவதுபாகதிப்பயனே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருத்தினைநகர்த்திருப்பதிகம் - ௧.

ஆ திருப்பதிகம் - அ.

சுவாமி தேவி திருநாமங்கள் - திருந்திசுவரர். இளங்கொம்பன்னாள்.

௬௱. திருச்சோபுரம்.††

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

வெங்கணானையினுரிவைபோர்த்துவிளங்குமொழி‡‡
மங்கைபாகம்வைத்துகந்தமாண்பதுவென்னைகொலாம்
கங்கையோடுதிங்கள்சூடிக்கடிகமழுங்கொன்றைத்
தொங்கலானேதூயநீற்றாய்சோபுரமேயவனே. (௧)

* பின்னுவார்சடை என்றும், பின்னிவார்சடை என்றும், பின்னிலார்சடை என்றும் பாடம். † மூர்த்தியாமெய்ம்முதலவன் என்றும் பாடம். ‡ போமது என்றும் பாடம். ¶ விட்டொழிநன்மையைவேண்டில் என்றும் பாடம். § பொக்கவிப்பிறவியைப் என்றும் பாடம். 0 சிவக்கொழுந்தினைத்திருவடியிணைதான் என்றும் பாடம். ** நாடலாம்புகழ் என்றும் பாடம். †† திருச்சோபுரம் – தியாகவல்லி. ‡‡ விளங்குமெழில் என்றும் பாடம்.

Koviloor Digital Library

விடையமர்ந்துவெண்மழுவொன்றேந்திவிரிந்திலங்கு
சடையொடுங்கத்தண்புனலைத்தாங்கியதென்னைகொலாம்
கடையுயர்ந்தமும்மதிலுங்காய்ந்தனலுள்ளழுந்தத்
தொடைநெகிழ்ந்த*வெஞ்சிலையாய்சோபுரமேயவனே. (௨)

தீயராயவல்லரக்கர்செந்தழலுள்ளழுந்தச்
சாயவெய்துவானவரைத்தாங்கியதென்னைகொலாம்
பாயும்வெள்ளையேற்றையேறிப்பாய்புலித்தோலுடுத்த †
தூயவெள்ளைநீற்றினனேசோபுரமேயவனே. (௩)

பல்லிலோடுகையிலேந்திப்பல்கடையும்பலிதேர்ந்
தல்லல்வாழ்க்கைமேலதானவாதரவென்னைகொலாம்
வில்லைவென்றநுண்புருவவேனெடுங்கண்ணியொடும்
தொல்லையூழியாகிநின்றாய்சோபுரமேயவனே. (௪)

நாற்றமிக்ககொன்றைதுன்றுசெஞ்சடைமேன்மதியம்
ஏற்றமாகவைத்துகந்தகாரணமென்னைகொலாம்
ஊற்றமிக்ககாலன்றன்னையொல்கவுதைத்தருளித்
தோற்றமீறுமாகிநின்றாய்சோபுரமேயவனே. (௫)

கொன்னவின்றமூவிலைவேற்கூர்மழுவாட்படையன்
பொன்னைவென்றகொன்றைமாலைசூடும்பொற்‡பென்னைகொலாம்
அன்னமன்னமென்னடையாள்பாகமமர்ந்தரைசேர்
துன்னவண்ணவாடையினாய்சோபுரமேயவனே. (௬)

குற்றமின்மையுண்மைநீயென்றுன்னடியார்பணிவார்
கற்றகேள்வி ¶ ஞானமானகாரணமென்னைகொலாம்
வற்றலாமைவாளரவம்பூண்டயன்வெண்டலையில்
துற்றலானகொள்கையானேசோபுரமேயவனே. (௭)

விலங்கலொன்றுவெஞ்சிலையாக்கொண்டுவிறலரக்கர்
குலங்கள்வாழுமூரெரித்தகொள்கையிதென்னைகொலாம்
இலங்கைமன்னுவாளவுணர்கோனையெழில்விரலால்
துலங்கவூன்றிவைத்துகந்தாய்சோபுரமேயவனே. (௮)

விடங்கொளாகமால்வரையைச்சுற்றிவிரிதிரைநீர்
கடைந்தநஞ்சையுண்டுகந்தகாரணமென்னைகொலாம்
இடந்துமண்ணையுண்டமாலுமின்மலர்மேலயனும்
தொடர்ந்துமுன்னங்காணமாட்டாச்சோபுரமேயவனே. (௯)

புத்தரோடுபுன்சமணர்பொய்யுரையேயுரைத்துப்
பித்தராகக்கண்டுகந்தபெற்றிமையென்னைகொலாம்
மத்தயானையீருரிவைபோர்த்துவளர்சடைமேல்
துத்திநாகஞ்சூடினானேசோபுரமேயவனே. (௧௦)

* தொடைநிகழ்ந்த என்றும் பாடம். † லுடுத்துத் என்றும் பாடம். ‡ சூடுபொற்பு என்றும் பாடம். ¶ கற்றல் கேள்வி என்றும் பாடம்.

Koviloor Digital Library

சோலைமிக்கதண்வயல்சூழ்சோபுரமேயவனைச்
சீலமிக்கதொல்புகழார்சிரபுரக்கோனலத்தான்
ஞாலமிக்க* தண்டமிழான்ஞானசம்பந்தன்சொன்ன
கோலமிக்கமாலைவல்லார்கூடுவர்வானுலகே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருச்சோபுரத்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - கூ.

சுவாமி தேவி திருநாமங்கள் - சோபுரநாதர், சோபுரநாயகி.

எ. திருவதிகைவீரட்டம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

குண்டைக்குறட்பூதங்குழுமவனலேந்திக்
கெண்டைப்பிறழ்தெண்ணீர்க்கெடிலவடபக்கம்
வண்டுமருள்பாடவளர்பொன்விரிகொன்றை
விண்டதொடையலானாடும்வீரட்டானத்தே. (க)

அரும்புக்குரும்பையுமலைத்தமென்கொங்கைக்
கரும்பின்மொழியாளோடுடன்கைவனல்வீசிச்
சுரும்புண்விரிகொன்றைச்சுடர்பொற்சடைதாழ
விரும்புமதிகையுளாடும்வீரட்டானத்தே. (உ)

ஆடலழ† நாகமரைக்கிட்டசைத்தாடப்
பாடன்மறைவல்லான்படுதம்பலிபெயர்வான்
மாடமுகட்டின்மேன்மதிதோயதிகையுள்
வேடம்பலவல்லானாடும்வீரட்டானத்தே. (ங)

எண்ணாரெயிலெய்தானிறைவனனலேந்தி
மண்ணார்முழவதிரமுதிராமதிசூடிப்
பண்ணார்மறைபாடப்பரமனதிகையுள்
விண்ணோர்பரவநின்றாடும்வீரட்டானத்தே. (ச)

கரிபுன்புறமாயகழிந்தாரிடுகாட்டில் ‡
திருநின்றொருகையாற்றிருவாமதிகையுள்
எரிபேந்தியபெருமானெரிபுன்சடைதாழ
விரியும்புனல்சூடியாடும்வீரட்டானத்தே. (ரு)

* ஞானமிக்க என்றும்பாடம். † அழல் - நஞ்சு. ‡ கரிகாடு புன்காடு புறமாயகாடு இடுகாடு எனத் தனித்தனி கூட்டுக.

Koviloor Digital Library

துளங்குஞ்சுடரங்கைத்துதையவிளையாடி
இளங்கோம்பனசாயலுமையோடிசைபாடி
வளங்கொள்புனல்சூழ்ந்தவயலாரதிகையுள்
விளங்கும்பிறைசூடியாடும்வீரட்டானத்தே. (சு)

பாதம்பலரேத்தப்பரமன்பரமேட்டி
பூதம்புடைசூழப்புலித்தோலுடையாகக்
கீதமுமைபாடக்கெடிலவடபக்கம்
வேதமுதல்வனின்றாடும்வீரட்டானத்தே. (எ)

கல்லார்வரையரக்கன்றடந்தோள்கவின்வாட
ஒல்லையடர்த்தவனுக்கருள்செய்ததிகையுள்
பல்லார்பகுவாயநகுவெண்டலைசூடி
வில்லாலெயிலெய்தானாடும்வீரட்டானத்தே. (அ)

நெடியானான்முகனுநிமிர்ந்தானைக்காண்கிலார்
பொடியாடுமார்பானைப்புரிநூலுடையானைக்
கடியார்கழுநீலம்மலரும்மதிகையுள்
வெடியார்தலையேந்தியாடும்வீரட்டானத்தே. (கூ)

அரை * யோடலர்பிண்டிமருவிக்குண்டிகை
சுரை † யோடுடனேந்தியுடைவிட்டுழல்வார்கள்
உரையோடுரையொவ்வாதுமையோடுடனாகி
விரைதோயலர்தாரானாடும்வீரட்டானத்தே. (கo)

ஞாழல்கமழ்காழியுண்ஞானசம்பந்தன் ‡
வேழம்பொருதெண்ணீரதிகைவீரட்டானத்துச்
சூழுங்கழலானைச்சொன்னதமிழ்மாலை
வாழுந்துணையாகநினைவார்வினையிலரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தப்பிள்ளையார், திருவதிகை வீரட்டானத்தை அடைந்து, திருக்கோயிலில் சுவாமிதரிசனஞ் செய்யும்போது, அவருக்குமுன்னே சிவபிரான் திருநடனங்காட்ட, பிள்ளையார் அதனைத் தரிசித்து, "குண்டைக்குறட்பூதம்" என்று திருப்பதிகம் எடுத்து, திருப்பாட்டிறுதிதோறும் "ஆடும் வீரட்டானத்தே" என்று பாடியருளினர்.

திருநாவுக்கரசுநாயனார்.

பண் - கொல்லி

திருச்சிற்றம்பலம்.

கூற்றாயினவாறுவிலக்ககிலீர்கொடுமைபலசெய்தனநானறியேன்
ஏற்றாயடிக்கே ¶ யிரவும்பகலும்பிரியாதுவணங்குவனெப்பொழுதும்
தோற்றாதென்வயிற்றினகம்படியேகுடரோடுதுடக்கி § முடக்கியிட
ஆற்றேனடியேனதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே. (க)

* அரை - வெற்றரை. † குண்டிகைச்—சுரை என்றும் பாடம். ‡ காழிஞானசம்பந்தன் என்றும் பாடம். ¶ ஏற்றாவடிக்கே என்றும் பாடம். § தொடக்கியெனப்பாடமோதுவாருமுளர்.

நெஞ்சம்முமக்கேயிடமாகவைத்தேனினையாதொருபோதுமிருந்தறியேன்
வஞ்சம்மிதுவொப்பதுகண்டறியேன்வயிற்றோடுதுடக்கிமுடக்கியிட
நஞ்சாகிவந்தென்னைநலிவதனைநணுகாமற்றுரந்துகரந்துமிடீர் *
அஞ்சேலுமென்னீரதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே. (௨)

பணிந்தாரனபாவங்கள்பாற்றவல்லீர்படுவெண்டலையிற்பலிகொண்டுழல்வீர்
துணிந்தேயுமக்காட்செய்துவாழலுற்றாற்சுடுகின்றதுசூலைதவிர்த்தருளீர்
பிணிந்தார்பொடிகொண்டு† மெய்பூசவல்லீர்பெற்றமேற்றுகந்தீர்சுற்றும்வெண்
டணிந்தீரடிகேளதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே. [டலைகொண்

முன்னமடியேனறியாமையினான்முனிந்தென்னைநலிந்துமுடக்கியிடப்
பின்னையடியேனுமக்காளும்பட்டேன்சுடுகின்றதுசூலைதவிர்த்தருளீர்
தன்னையடைந்தார்வினைதீர்ப்பதன்றோதலையாயவர்தங்கடனாவதுதான்
அன்னநடையா ‡ ரதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே. (௪)

காத்தாள்பவர்காவலிகழ்ந்தமையாற் ¶ கரைநின்றவர்கண்டுகொளென்றுசொல்
நீத்தாயகயம்புகநூக்கியிடநிலைக்கொள்ளும்வழித்துறையொன்றறியேன் [லி
வார்த்தையிதுவொப்பதுகேட்டறியேன்வயிற்றோடுதுடக்கிமுடக்கியிட
ஆர்த்தார்புனலாரதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே. (௫)

சலம்பூவொடுதூபமறந்தறியேன்றமிழோடிசைபாடன்மறந்தறியேன்
நலந்தீங்கிலுமுன்னைமறந்தறியேனுன்னாமமென்னாவின்மறந்தறியேன்
உலந்தார்தலையிற்பலிகொண்டுழல்வாயுடலுள்ளுறுசூலைதவிர்த்தருளாய்
அலந்தேனடியேனதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே. (௬)

உயர்ந்தேன்மனைவாழ்க்கையுமொண்பொருளுமொருவர்தலைகாவலிலாமையினா
வயந்தேயுமக்காட்செய்துவாழலுற்றால்வலிக்கின்றதுசூலைதவிர்த்தருளீர் [ல்
பயந்தேயென்வயிற்றினகம்படியேபறித்துப்புரட்டியறுத்தீர்த்திடநான்
அயர்ந்தேனடியேனதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே. (௭)

வலித்தேன்மனைவாழ்க்கைமகிழ்ந்தடியேன்வஞ்சம்மனமொன்றுமிலாமையினால்
சலித்தாலொருவர்துணையாருமில்லைச்சங்கவெண்குழைக்காதுடை யெம்பெரு
கலித்தேயென்வயிற்றினகம்படியேகலக்கிமலக்கிட்டுக்கவர்ந்துதின்ன [மான்
அலுத்தேனடியேனதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே. (௮)

பொன்போலமிளிர்வதோர்மேனியினீர்புரிபுன்சடையீர்மெலியும்பிறையீர்
துன்பேகவலைபிணியென்றிவற்றைநணுகாமற்றுரந்துகரந்துமிடீர் §
என்போலிகளும்மையினித்தெளியாரடியார்படுவதிதுவேயாகில்
அன்பேயமையுமதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே. (௯)

போர்த்தாயங்கொரானையினீருரிதோல்புறங்காடரங்காநடமாடவல்லாய்
ஆர்த்தானரக்கன்றனை ⁰ மால்வரைக்கீழடர்த்திட்டருள்செய்தவதுகருதாய்
வேர்த்தும்புரண்டும்விழுந்துமெழுந்தாலென்வேதனையானவிலக்கியிடாய்
ஆர்த்தார்புனல்சூழதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

* துரந்துகரந்துமிடீர் என்றும் பாடம். † பொடிக்கொண்டு என்றும் பாடம். ‡ அன்னநடையார் என்றும் பாடம். ¶ காவலிகழ்ந்தமையால் என்றும் பாடம். § கரந்துமிடீர் என்றும் பாடம். ⁰ ஆர்த்தாயரக்கன்றனை என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருமுனைப்பாடி நாட்டிலே, திருவாமூரிலே, வேளாளர் குலத்திலே, குறுக்கையர் குடியிலே, புகழனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் மனைவியார் மாதினியார் வயிற்றில் திலகவதியார் என்கின்ற புத்திரியும் மருணீக்கியார் என்கின்ற புத்திரரும் அவதரித்தார்கள். மருணீக்கியார், தந்தையாருக்குப் பெருமகிழ்ச்சியுண்டாகும்படி பல கலைகளையுங் கிரமமாகக்கற்று வல்லராயினார்.

திலகவதியாருக்குப் பன்னிரண்டுவயசு ஆனபொழுது, சிவபத்தியிற் சிறந்தவரும், அரசனிடத்திற் சேனாதிபதியுமாகிய கலிப்பகையார் என்பவர், சில முதியோர்களைக் கொண்டு திலகவதியாருக்குந் தமக்கும் மணம்பேசுவித்துத் தாம் விவாகஞ்செய்தற்கு முன், தம்முடைய அரசனது ஆஞ்ஞையினாலே சேனைகளுடன் வடதேசத்தரசனோடு யுத்தஞ்செய்யச்சென்றார். அப்போது, இங்கே புகழனாரும், அவர் மனைவியாராகிய மாதினியாரும் தேகவியோகம் அடைந்தார்கள். அங்கே கலிப்பகையார் யுத்தகளத்தில் தம்முடைய பூதவுடம்பை விட்டுப் புகழுடம்பைப் பெற்றனர். அதைத் திலகவதியார் கேள்வியுற்றுத் தாமும் உயிர் நீக்கத்துணிந்தார். அது கண்ட மருணீக்கியார் வருந்தத் திலகவதியார் தம்பியார் உயிரோடு இருக்கவேண்டித் தமது கருத்தைத் தடுத்து உயிர்தாங்கி, வேறொருவரையும் விவாகஞ்செய்துகொள்ளாமல் வீட்டிலே தவஞ்செய்துகொண்டிருந்தார்.

மருணீக்கியார், யாக்கைநிலையாமையையும், செல்வநிலையாமையையும் நினைந்து தருமஞ்செய்யவிரும்பி, அன்புடனே திரவியங்களைச்செலவழித்து, அறச்சாலை, தண்ணீர்ப்பந்தர் முதலியவற்றை அமைத்தார். எல்லாச்சமயங்களுள்ளும் சற்சமயம் இது என்று அறியுமறிவு அவருக்குத்தலைப்படாமையால் அவர் பாடலிபுத்திரம் என்னும் நகரத்திற்சென்று, சமணர்களுடைய பள்ளியை அடைந்து, அங்குள்ள சமணர்களுடைய போதனாசத்தியினாலே அவர்கள் அநுட்டிக்கின்ற ஆருகதசமயமே முத்தியை அடைதற்குத் தகுந்த நெறியென்று துணிந்து, அச்சமயத்திற் பிரவேசித்து, சமணசமயநூல்களெல்லாவற்றையும் கற்று, அவைகளிலே மகாபாண்டித்தியம் உடையவராயினார். சமணர்கள் அவருக்குத் தருமசேனர் என்று பெயரிட்டு, அவரைத் தங்கள் மதாசாரியாராகக்கொண்டு வழிபட்டார்கள். அதுநிற்க.

திருவாமூரில் இருந்த திலகவதியார் சிவபெருமானிடத்தில் பத்தி மிகுந்து, சிவபுண்ணியங்கள் செய்ய விரும்பி, கெடிலநதிக்கு வடகரையில் இருக்கின்ற திருவதிகைவீரட்டானம் என்னுந் திருப்பதியிற்சென்று சிவபிரானை வணங்கி, சிவசின்னங்களைத் தரித்து, தினந்தோறும் சூரியோதயத்துக்கு முன்னே திருக்கோயிலின் உள்ளும் புறமும் திருவலகிடுதல், கோமயத்தினாலே மெழுகுதல், திருநந்தனவனங்களிற் சென்று புஷ்பங்களைப் பறித்துக்கொண்டு வந்து, திருமாலை தொடுத்துச் சுவாமிக்குச் சாத்தக்கொடுத்தல் முதலாகிய சிவபுண்ணியங்களைச் செய்துவருநாளிலே, தம்முடைய தம்பியாராகிய மருணீக்கியார் கபடமார்க்கமாகிய ஆருகதத்திலே பிரவேசித்தமையை நினைந்து, துக்கசாகரத்தில் அமிழ்ந்தி, வீரட்டானேசுரரை வணங்கிச் சமணர்களுடைய கபடமார்க்கமாகிய படுகுழியிலே விழுந்த தம்முடைய தம்பியை அதினின்றும் தூக்கிக் காப்பாற்றியருளல்வேண்டும் என்று பலமுறை விண்ணப்பஞ்செய்ய, சிவபிரான் திலகவதியாருக்குச் சொப்பனத்திலே தோன்றி, "தபோதனியே" நீ உன்மனக்கவலையை ஒழி; உன்னுடைய தம்பி முறவியாகி நம்மை அடையும்பொருட்டுப் பூர்வஜன்மத்திலே தவஞ்செய்திருக்கின்றான்; அந்தத் தவத்திற் சிறிது வழுவுற்றதினால் அந்நியமதத்திலே பிரவேசித்தான்; இனி அவனைச் சூலைநோயினால் வருத்தி ஆட்கொள்வோம்" என்று சொல்லி மறைந்தருளினார்.

சிவபிரான் திருவாய்மலர்ந்தருளியபடியே, அவருடைய திருவருளினாலே, தருமசேனருடைய வயிற்றில் கொடியசூலைநோய் உண்டாகிக் குடலைக் குடைதலுற்றது.

Koviloor Digital Library

அதனால் அவர் வருந்தி நடுக்கமுற்று, தமக்குக் கைவந்த சமணசமயமந்திரோச்சாரணத்தால் தடுக்கவும், அச்சூலைநோய் தடைப்படாமல் மேற்கொள்ள, சர்ப்பவிஷந் தலைக்கொண்டாற்போல மயங்கி மூர்ச்சை அடைந்தார். அது கண்ட சமணர் பலர் கமண்டல ஜலத்தை அபிமந்திரித்துக் குடிப்பித்தும், மயிற்பீலிகொண்டு தடவியும் சூலைநோய் தணியாமல் முன்னிலும் அதிகப்பட, அவர்கள் இந்நோயை நீக்குதற்கு நாம் வல்லமல்லேம் என்று சொல்லிக்கொண்டு, அவரைக் கைவிட்டுப் போயினார்கள். பின் தருமசேனர் தம்முடைய சகோதரியாராகிய திலகவதியாரை நினைந்து, அவரே தமக்கு உதவிசெய்ய வல்லர் எனத்துணிந்து, தம்முடைய பாகுகனை அவரிடத்துக்கு அனுப்பினார். அப்பாகுகன் திருவதிகையிற்சென்று, அச்சமாசாரத்தைச் சகோதரியாராகிய திலகவதியாருக்குத் தெரிவிக்கத் திலகவதியார் சமணர்களுடைய பள்ளிக்கு நான் வரேன் என்றார். அதைப் பாகுகன் தருமசேனரிடத்திற் சென்று தெரிவிக்க, தருமசேனர் சிவபெருமானுடைய திருவருள் கூடுதலால், சற்சமயமாகிய சைவசமயத்தை அநுட்டிக்கின்ற திலகவதியாருடைய திருவடிகளை அடையக்கருதித் தமக்குப் பற்றுக்கோடாகக் கைதந்து வருகின்றவர்களைப் பற்றிக்கொண்டு, ஒருவருங் காணாதபடி இரவிலே திருவதிகையிற்சென்று, திலகவதியாருடைய திருமடத்தை அடைந்து, அடியேன் கொடிய சூலைநோயைச் சகிக்கலாற்றாமையால், உம்மையே கதியென்று அடைந்தேன், இனித் தமியேன் உய்ந்து கரையேறும் வழியை அருளிச்செய்யும் என்று விண்ணப்பஞ்செய்து, அவர் பாதத்திலே விழுந்து அயர்ந்தார். திலகவதியார் தம்பியாரை நோக்கி, தமக்குச் சொப்பனத்திலே சிவபிரான் அருளிச்செய்தபடி முடித்ததை நினைந்து, மனங்கசிந்துருகிக் கடவுளை அஞ்சலி செய்து, இது சிவபிரானுடைய திருவருளே யாகலான் அக்கடவுளையே வணங்கி அவருக்கே திருத்தொண்டு செய்யும் என உபதேசித்தார். உடனே மருணீக்கியார் அவ்வுபதேசத்தை ஏற்றுக்கொண்டு வணங்கி நிற்க, திலகவதியார் திருவருளை நினைந்து, அவருக்கு விபூதியை ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை ஓதிக்கொடுக்க மருணீக்கியார் மிகுந்த ஆசையோடு வணங்கி, அவ்விபூதியை வாங்கிச் சரீரமுழுதிலும் அணிந்துகொண்டார்.

திலகவதியார் திருப்பள்ளியெழுச்சியிலே, திருவலகும், திருமெழுக்குத் தோண்டியும் எடுத்துக்கொண்டு, திருக்கோயிலுக்குத் தம்பியாரை அழைத்துக்கொண்டுபோனார். தம்பியார் வீரட்டானேசுவரரைப் பிரதக்ஷிணஞ்செய்து, சந்நிதானத்திலேவிழுந்து நமஸ்கரித்து எழுந்து நின்று, அவருடைய திருவருளினாலே தமிழ்ச்செய்யுள் பாடுஞ் சத்தி உண்டாகப்பெற்று, தம்முடைய சூலைநோய் நீங்கும்பொருட்டும், பிற்காலத்திலே அன்போடு ஓதுகின்ற யாவருடைய துன்பமும் நீங்கும்பொருட்டும், சிவபெருமான்மேல் "கூற்றாயினவாறு விலக்ககிலீர்" என்னுந் திருப்பதிகத்தைப் பாடியருளினார். உடனே சூலைநோய் நீங்கிற்று. அப்பொழுது மருணீக்கியார் தமக்கு உயிரையுந்தந்து முத்திநெறியையுந்தந்த சிவபெருமானுடைய கருணைக்கடலில் அமிழ்ந்தி, ஆனந்த பாஷ்பஞ்சொரிய நிலத்திலே விழுந்து புரண்டு, சமணசமயப்படுகுழியில் விழுந்து மயங்கியபாவியேன் இப் பேரின்பவாழ்வைப் பெறும்படிசெய்த சூலைநோய்க்கு என்ன பிரதியுபகாரஞ் செய்வேன் என்றார். அப்பொழுது, வீரட்டானேசுவருடைய திருவருளினால், "நீ அற்புத சின்மய அதிமதுரமாகிய தேவாரப்பதிகத்தைப் பாடினபடியால், உனக்கு நாவுக்கரசு என்னும் பெயரே சத்தலோகங்களினும் வழங்குக" என்று ஒரு அசரீரிவாக்கு ஆகாயத்திலே தோன்றிற்று. திருவதிகையிலுள்ள சமஸ்தஜனங்களும் அதைக்கேட்டு "திருநாவுக்கரசுநாயனார் சமணசமயம் பொய்மார்க்கம் என்பது புலப்படும்படி சைவசமயத்திலே பிரவேசித்துத் திருவருள்பெற்றபடியால் உலகம் உய்ந்தது உய்ந்தது" என்று சொல்லிக் களிப்புற்றார்கள்.

Koviloor Digital Library

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

சுண்ணவெண்சந்தனச்சாந்துஞ்சுடர்த்திங்கட்சூளாமணியும்
வண்ணவுரிவையுடையும்வளரும்பவளநிறமும்
அண்ணலரண்முரணேறுமகலம்வளாயவரவும்
திண்ணன் * கெடிலப்புனலுமுடையாரொருவர்தமர்நாம்
அஞ்சுவதியாதொன்றுமில்லை யஞ்சவருவதுமில்லை. (க)

பூண்டதொர்கேழலெயிறும்பொன்றிகழாமைபுரள
நீண்டதிண்டோள்வலஞ்சூழ்ந்துநிலாக்கதிர்போலும்வெண்ணூலும் †
காண்டகுபுள்ளின்சிறகுங்கலந்தகட்டங்கக்கொடியும்
ஈண்டுகெடிலப்புனலுமுடையாரொருவர்தமர்நாம்
அஞ்சுவதியாதொன்றுமில்லை யஞ்சவருவதுமில்லை. (உ)

ஒத்தவடத்திளநாகமுருத்திரபட்டமிரண்டும்
முத்துவடக்கண்டிகையுமுளைத்தெழுமூவிலைவேலும்
சித்தவடமுமதிகைச்சேணுயர்வீரட்டஞ் ‡ சூழ்ந்து
தத்துங்கெடிலப்புனலுமுடையாரொருவர்தமர்நாம்
அஞ்சுவதியாதொன்றுமில்லை யஞ்சவருவதுமில்லை. (௩)

மடமான்மறிபொற்கலையுமழுப்பாம்பொருகையில்வீணை
குடமால்வரையதிண்டோளுங்குனிசிலைக்கூத்தின்பயில்வும்
இடமாறழுவியபாகமிருநிலனேற்றசுவடும்
தடமார்கெடிலப்புனலுமுடையாரொருவர்தமர்நாம்
அஞ்சுவதியாதொன்றுமில்லை யஞ்சவருவதுமில்லை. (௪)

பலபலகாமத்தராகிப்பதைத்தெழுவார் ¶ மனத்துள்ளே
கலமலக்கிட்டுத்திரியுங்கணபதியென்னுங்களிறும்
வலமேந்திரண்டு § சுடரும்வான்கயிலாயமலையும்
நலமார்கெடிலப் ο புனலுமுடையாரொருவர்தமர்நாம்
அஞ்சுவதியாதொன்றுமில்லை யஞ்சவருவதுமில்லை. (௫)

கரந்தனகொள்ளிவிளக்குங்கறங்குதுடியின்முழக்கும்
பரந்தபதினெண்கணமும்பயின்றறியாதனபாட்டும்
அரங்கிடைநூலறிவாளரறியப்படாததொர்கூத்தும்
நிரந்தகெடிலப்புனலுமுடையாரொருவர்தமர்நாம்
அஞ்சுவதியாதொன்றுமில்லை யஞ்சவருவதுமில்லை. (௬)

* திண்ணென் என்றும் பாடம். † சூழ்ந்தநிலாக்கதிர்போலவெண்ணீறும் என்றும் பாடம். ‡ சித்தவடமுந்திகழச்சேணுயர்வீரட்டம் என்றும் பாடம். ¶ பதைத்தெழுவார் என்றும் பாடம். § நலமேந்திரண்டு என்றும் பாடம். ο நலமாங்கெடிலப் என்றும் பாடம்.

கோலவரிவேங்கைபதளுங்குலவோடிலங்குபொற்றோடும்
விலைபெறுசங்கக்குழையும்விலையில்கபாலக்கலனும்
மலைமகள்கைக்கொண்டமார்புமணியார்ந்திலங்குமிடறும்
உலவுகெடிலப்புனலுமுடையாரொருவர்தமர்நாம்
அஞ்சுவதியாதொன்றுமில்லை யஞ்சவருவதுமில்லை. (௭)

ஆடல்புரிந்தநிலையுமரையிலசைத்தவரவும்*
பாடல்பயின்றபல்பூதம்பல்லாயிரங்கொள்கருவி
நாடற்கரியதோர்கூத்துநன்குயர்வீரட்டஞ்சூழ்ந்து
ஓடுங்கெடிலப்புனலுமுடையாரொருவர்தமர்நாம்
அஞ்சுவதியாதொன்றுமில்லை யஞ்சவருவதுமில்லை. (௮)

சூழுமரவத்துகிலுந்துகில்கிழிகோவணக்கீளும்
யாழின்மொழியவளஞ்சவஞ்சாதருவரைபோன்ற
வேழமுரித்தநிலையும்விரிபொழில்வீரட்டஞ்சூழ்ந்து
தாழுங்கெடிலப்புனலுமுடையாரொருவர்தமர்நாம்
அஞ்சுவதியாதொன்றுமில்லை யஞ்சவருவதுமில்லை. (௯)

நரம்பெழுகைகள்பிடித்துநங்கைநடுங்கமலையை
உரங்களெல்லாங்கொண்டெடுத்தானொன்பதுமொன்றுமலற
வரங்கள்கொடுத்தருள்செய்வான்வளர்பொழில்வீரட்டஞ்சூழ்ந்து
நிரம்புகெடிலப்புனலுமுடையாரொருவர்தமர்நாம்
அஞ்சுவதியாதொன்றுமில்லை யஞ்சவருவதுமில்லை. (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனாருக்கு எதிரே சமணர்கள் கோபங்கொண்டு, யானையைக் கொண்டுவந்துவிட, நாயனார் சிறிதும் பயமின்றிச் சிவபெருமானுடைய திருவடிகளைச் சிந்தித்து, அவ்யானையைநோக்கி, "சுண்ணவெண் சந்தனச் சாந்தும்" என்று திருப்பதிகமெடுத்து, திருப்பாட்டிறுதிதோறும், "கெடிலப்புனலு முடையா ரொருவர் தமர் நாம் அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை" என்று பாடியருளினர். யானை அந்நாயனாரை வலஞ்செய்து எதிராக நிலத்திலே தாழ்ந்து இறைஞ்சி எழுந்து, சமீபத்திலிருந்த சமணர்களைக் கிழித்தெறிந்துவிட்டு அப்புறம்போயிற்று.

திருக்கெடிலவாணர்.

பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

முளைக்கதிரிளம்பிறைமூழ்கவெள்ளநீர்
வளைத்தெழுசடையினர்மழலைவீணையர்
திளைத்ததோர்மான்மறிக்கையர்செய்யபொன்
கிளைத்துழித்தோன்றிடுங்கெடிலவாணரே. † (௧)

* மரையிலிசைத்தவரவும் என்றும் பாடம். † இத்திருப்பதிகத்திற்கு மகுடம் திருக்கெடிலவாணர் என்று ஏட்டுப்பிரதிகளிற் காணப்படுகின்றது.

Koviloor Digital Library

ஏறினரேறினையேழைதன்னொரு
கூறினர்கூறினர்வேதமங்கமும்
ஆறினராறிடுசடையர்பக்கமும்
நீறினவுடையினர்கெடிலவாணரே. (௨)

விடந்திகழ்கெழுதருமிடற்றர்வெள்ளைநீ
றுடம்பழகெழுதுவர்முழுதும்வெண்ணிலாப்
படர்ந்தழகெழுதருசடையிற்பாய்புனல்
கிடந்தழகெழுதியகெடிலவாணரே. (௩)

விழுமணியயிலெயிற்றம்புவெய்யதோர்
கொழுமணிநெடுவரைகொளுவிக்கோட்டினார்
செழுமணிமிடற்றினர்செய்யவெய்யதோர்
கெழுமணியரவினர்கெடிலவாணரே. (௪)

குழுவினர்தொழுதெழுமடியர்மேல்வினை
தழுவினகழுவுவர்பவளமேனியர்
மழுவினர்மான்மறிக்கையர்மங்கையைக்
கெழுவினயோகினர்கெடிலவாணரே. (௫)

அங்கையிலனலெரியேந்தியாறெனும்
மங்கையைச்சடையிடைமணப்பர்மால்வரை
நங்கையைப்பாகமுநயப்பர்தென்றிசைக்
கெங்கையதெனப்படுங்கெடிலவாணரே. (௬)

கழிந்தவர்தலைகலனேந்திக்காடுறைந்
திழிந்தவரொருவரென்றெள்கவாழ்பவர்
வழிந்திழிமதுகரமிழற்றமந்திகள்
கிழிந்ததேனுகர்தருங்கெடிலவாணரே. (௭)

கிடந்தபாம்பருகுகண்டரிவைபேதுறக்
கிடந்தபாம்பவளையோர்மயிலென்றையுறக்
கிடந்தநீர்ச்சடைமிசைப்பிறையுமேங்கவே
கிடந்துதானகுதலைக்கெடிலவாணரே. (௮)

வெறியுறுவிரிசடைபுரளவீசியோர்
பொறியுறுபுலியுரியரையதாகவும்
நெறியுறுகுழலுமைபாகமாகவும்
கிறிபடவுழிதர்வர்கெடிலவாணரே. (௯)

பூண்டதேரரக்கனைப்பொருவின்மால்வரைத்
தூண்டுதோளவைபடவடர்த்ததாளினார்
ஈண்டுநீர்க்கமலவாய்மேதிபாய்தரக்
மீண்டுதேன்சொரிதருங்கெடிலவாணரே. (௧௰)

திருச்சிற்றம்பலம்.

Kovilur Digital Library

கொப்பளித்த திருநேரிசை. *

திருச்சிற்றம்பலம்.

இரும்புகொப்பளித்தயானையி ருரிபோர்த்தவீசன்
கரும்புகொப்பளித்தவின்சொற்காரிகைபாகமாகச்
சுரும்புகொப்பளித்தகங்கைத்துவலைநீர்சடையிலேற்ற
அரும்புகொப்பளித்தசென்னியதிகைவீரட்டனாரே. (க)

கொம்புகொப்பளித்ததிங்கட்கோணல்வெண்பிறையுஞ்சூடி
வம்புகொப்பளித்தகொன்றைவளர்சடைமேலும்வைத்துச்
செம்புகொப்பளித்தமூன்றுமதிலுடன்சுருங்கவாங்கி
அம்புகொப்பளிக்கவெய்தாரதிகைவீரட்டனாரே. (உ)

விடையுங்கொப்பளித்தபாதம்விண்ணவர்பரவியேத்தச்
சடையுங்கொப்பளித்ததிங்கட்சாந்தம்வெண்ணீறுபூசி
உடையுங்கொப்பளித்தநாகமுள்குவாருள்ளத்தென்றும்
அடையுங்கொப்பளித்தசீரரதிகைவீரட்டனாரே. (ங)

கறையுங்கொப்பளித்தகண்டர்காமவேளுருவமங்க
இறையுங்கொப்பளித்தகண்ணாரேத்துவாரிடர்களைப்பார்
மறையுங்கொப்பளித்தநாவர்வண்டுண்டுபாடுங்கொன்றை †
அறையுங்கொப்பளித்தசென்னியதிகைவீரட்டனாரே. ‡ (ச)

நீறுகொப்பளித்தமார்பர்நிழறிகழ்மழுவொன்றேந்திக்
கூறுகொப்பளித்தகோதைக்கோல்வளைமாதோர்பாகம்
ஏறுகொப்பளித்தபாதமிமையவர்பரவியேத்த
ஆறுகொப்பளித்தசென்னியதிகைவீரட்டனாரே. (ரு)

வணங்குகொப்பளித்தபாதம்வானவர்மருவியேத்தப் ¶
பிணங்குகொப்பளித்தசென்னிச்சடையுடைப்பெருமையண்ணல்
சுணங்குகொப்பளித்தகொங்கைச்சுரிகுழல்பாகமாக
அணங்குகொப்பளித்தமேனியதிகைவீரட்டனாரே. (சு)

சூலங்கொப்பளித்தகையர்சுடர்விடுமழுவாள்வீசி
ஆலுங்கொப்பளித்தமார்பினுண்பொறியரவஞ்சேர்த்தி
மாலுங்கொப்பளித்தபாகர்வண்டுண்டுபாடுங் § கொன்றை
ஆலங்கொப்பளித்தகண்டத்ததிகைவீரட்டனாரே. (எ)

நாகங்கொப்பளித்தகையர்நான்மறைபாயபாடி
மேகங்கொப்பளித்ததிங்கள்விரிசடைமேலும்வைத்துப்
பாகங்கொப்பளித்தமாதர்பண்ணுடன்பாடியாட
ஆகங்கொப்பளித்ததோளாரதிகைவீரட்டனாரே. (அ)

* இடைத்தபிரதிகளுள் ஒன்றில், கொப்பிளித்ததிருநேரிசை என்றும், ஏனையவற்றில் கொப்பளித்ததிருநேரிசை என்றும் காணப்படுகின்றன; செய்யுள்களும் அவ்வாறே. † வண்டுபண்பாடுங்கொன்றை என்றும் பாடம். ‡ ஏட்டுப்பிரதியில் இச்செய்யுள் ரு-வது செய்யுளாகவும் ரு-வது செய்யுள் ச-வது செய்யுளாகவும் காணப்படுகின்றன. ¶ வானவர்பரவியேத்த என்றும் பாடம். § வண்டுபண்பாடுங், வண்டெனப்பாடுங் என்றும் பாடம்.

Koviloor Digital Library

பரவுகொப்பளித்தபாடல்பண்ணுடன்பத்தரேத்த
விரவுகொப்பளித்தகங்கைவிரிசடைமேவவைத்து
இரவுகொப்பளித்தகண்டரேத்துவாரிடர்கடீர்ப்பார்
அரவுகொப்பளித்தகையரதிகைவீரட்டனாரே. (கூ)

தொண்டைகொப்பளித்தசெவ்வாய்த்துடியிடைப்பாவையல்குற்
கொண்டைகொப்பளித்தகோதைக்கோல்வளைபாகமாக
வண்டுகொப்பளித்ததீங்தேன்வரிக்கயல்பருகிமாந்தக்*
கெண்டைகொப்பளித்ததெண்ணீர்க்கெடிலவீரட்டனாரே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

வெண்ணிலாமதியந்தன்னைவிரிசடைமேவவைத்து
உண்ணிலாப்புகுந்துநின்றங்குணர்வினுக்குணரக்கூறி
விண்ணிலார்மீயச்சூரார் † வேண்டுவார்வேண்டுவார்க்கே
அண்ணியார்பெரிதுஞ்சேயாரதிகைவீரட்டனாரே. (க)

பாடினார்மறைகணான்கும்பாயிருள்புகுந்தென்னுள்ளம்
கூடினார்கூடலாலவாயிலார்நல்லகொன்றை
சூடினார்சூடன்மேவிச்சூழ்சுடர்ச்சுடலைவெண்ணீ
றாடினாராடன்மேவியதிகைவீரட்டனாரே. (உ)

ஊனையேகழிக்கவேண்டி ‡ லுணர்மின்களுள்ளத்துள்ளே
தேனையமலர்கள்கொண்டுசிந்தையுட்சிந்திக்கின்ற
ஏனையபலவுமாகியிமையவரேத்தநின்று
ஆனையினுரிவைபோர்த்தாரதிகைவீரட்டனாரே. (ரு)

துருத்தியாங்குரம்பைதன்னிற்றொண்ணூற்றங்கறுவர்நின்று
விருத்திதான்றருகவென்றுவேதனைபலவுஞ்செய்ய
வருத்தியால்வல்லவாறுவந்துவந்தடையநின்ற
அருத்தியார்க்கன்பர்போலுமதிகைவீரட்டனாரே. (ச)

பத்தியாலேத்திநின்றுபணிபவர்நெஞ்சத்துள்ளார்
துத்தியைந்தலையநாகஞ்சூழ்சடைமுடிமேல்வைத்து
உத்தரமலையர்பாவையுமையவளடுங்கவன்று
அத்தியினுரிவைபோர்த்தாரதிகைவீரட்டனாரே. (ரு)

வரிமுரிபாடியென்றும்வல்லவாறடைந்துநெஞ்சே
கரியுரிமூடவல்லகடவுளைக்காலத்தாலே
சுரிபுரிவிரிகுழலாடிடியிடைப்பாவையல்குல்
அரிவையோர்பாகர்போலுமதிகைவீரட்டனாரே. (சு)

* மாந்திக் என்றும் பாடம். † விண்ணிலாமீயச்சூரார் என்றும் பாடம். ‡ யூனைமெய்கழிக்கவேண்டில் என்றும் பாடம்.

Koviloor Digital Library

நீதியானினைசெய்நெஞ்சேநிமலனைநித்தமாகப்
பாதியாமுமைதன்னோடும்பாகமாய்நின்றவெந்தை
சோதியாய்ச்சுடர்விளக்காய்ச்சுண்ணவெண்ணீறதாடி
ஆதியுமீறுமானாரதிகைவீரட்டனாரே. (௭)

எல்லியும்பகலுமெல்லாந்துஞ்சுவேற்கொருவர்வந்து
புல்லிய* மனத்துக்கோயில்புக்கனர்காமனென்னும்
வில்லியைங்கணையினானைவெந்துகநோக்கியிட்டார்
அல்லியம்பழனவேலியதிகைவீரட்டனாரே. (௮)

ஒன்றவேயுணர்திராகிலோங்காரத்தொருவனாகும்
வென்றவைம்புலன்கடம்மை† விலக்குதற்குரியீரெல்லாம்
நன்றவனாரணனுநான்முகனுடிக்காண்குற்
றன்றவர்க்கரியர்போலு‡மதிகைவீரட்டனாரே. (௯)

தடக்கையாலெடுத்துவைத்துத்தடவரைகுலுங்கவார்த்துக்
கிடக்கையாலிடர்களோங்கக்கிளர்மணிமுடிகள்சாய
முடக்கினார்திருவிரலான்¶ முருகமர்கோதைபாகத்
தடக்கினானென்னையாளுமதிகைவீரட்டனாரே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

நம்பனேயெங்கள்கோவேநாதனேயாதிமூர்த்தி
பங்கனேபரமயோகியென்றென்றேபரவிநாளும்
செம்பொனேபவளக்குன்றேதிகழ்மலர்ப்பாதங்காண்பான்
அன்பனேயலந்துபோனே§னதிகைவீரட்டனீரே. (௧)

பொய்யினான்மிடைந்தபோர்வைபுரைபுரையழுகிவீழ
மெய்யனாய்வாழமாட்டேன்வேண்டிற்றொன்றைவர்வேண்டார்
செய்யதாமரைகளன்னசேவடியிரண்டுங்காண்பான்
ஐயனாவலந்துபோனே0னதிகைவீரட்டனீரே. (௨)

நீதியால்வாழமாட்டேனித்தலுந்தூயனல்லேன்
ஓதியுமுணரமாட்டேனுன்னையுள்வைக்கமாட்டேன்
சோதியேசுடரேயுன்றன்றூமலர்ப்பாதங்காண்பான்
ஆதியேயலந்துபோனேனதிகைவீரட்டனீரே. (௩)

தெருளுமாதெருளமாட்டேன்றீவினைச்சுற்ற**மென்றும்
பொருளுளேயழுந்திநாளும்போவதோர்நெறியுங்காணேன்
இருளுமாமணிகண்டாநின்னிணையடியிரண்டுங்காண்பான் ††
அருளுமாறருளவேண்டுமதிகைவீரட்டனீரே. (௪)

* புல்லியன் என்றும் பாடம். † புலன்கடன்னை என்றே ஏடுகளிற் காணப்படுகின்றது. ‡ காணு-தன்றவர்க்கரியர்போலும் என்றும் பாடம். ¶ திருவிரலன் என்றும் பாடம். § யம்பொனேயலந்துபோனேன் என்றும் பாடம். 0 ஐயனேயலந்துபோனேன் என்றும் பாடம். ** தீவினைசுற்றம் என்றும் பாடம். †† யிரண்டுங்காண என்றும் பாடம்.

Koviloor Digital Library

அஞ்சினாலியற்றப்பட்டவாக்கைபெற்றதனுள்வாழும்
அஞ்சினாலடர்க்கப்பட்டிங்குழிதருமாதனேனை
அஞ்சினாலுய்க்கும்வண்ணங்காட்டினாய்க்கச்சந்தீர்ந்தேன்
அஞ்சினாற்பொலிந்தசென்னியதிகைவீரட்டனீரே. (௫)

உறுகயிறூசல்*போலவொன்றுவிட்டொன்றுபற்றி
மறுகயிறூசல்*போலவந்துவந்துலவுநெஞ்சம்
பெறுகயிறூசல்*போலப்பிறைபுல்குசடையாய்பாதத்
தறுகயிறூச*லானேனதிகைவீரட்டனீரே. (௬)

கழித்திலேன்காமவெந்நோய்காதன்மையென்னும்பாசம்
ஒழித்திலேனூன்கணோக்கி†யுணர்வெனுமிமைதிறந்து
விழித்திலேன்வெளிறுதோன்றவினையெனுஞ்சரக்குக்கொண்டேன்
அழித்திலேனயர்த்துப்போனேனதிகைவீரட்டனீரே. (௭)

மன்றத்துப்புன்னைபோல‡மரம்படுதுயரமெய்தி
ஒன்றினாலுணரமாட்டே¶னுன்னையுள்வைக்கமாட்டேன்
கன்றியகாலன்வந்துகழுக்குழி§விழுப்பதற்கே
அன்றினானலமந்திட்டே0னதிகைவீரட்டனீரே. (௮)

பிணிவிடாவாக்கைபெற்றேன்பெற்றமொன்றேறுவானே
பணிவிடாவிடும்பையென்னும்பாசனத்தழுந்துகின்றேன்
துணிவிலேன்றூயனல்லேன்றூமலர்ப்பாதங்காண்பான்
அணியனாயறியமாட்டேனதிகைவீரட்டனீரே. (௯)

திருவினாள்கொழுநனாருந்திசைமுகமுடையகோவும்
இருவருமெழுந்தும்வீழ்ந்து**மிணையடிகாணமாட்டா††
ஒருவனேயெம்பிரானேயுன்றிருப்பாதங்காண்பான்
அருவனேயருளவேண்டுமதிகைவீரட்டனீரே. (௰)

திருச்சிற்றம்பலம்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

மடக்கினார்புலியின்றோலைமாமணிநாகங்கச்சா
முடக்கினார்முகிழ்வெண்டிங்கள்மொய்சடைக்கற்றைதன்மேல்
தொடக்கினார்‡‡தொண்டைச்செவ்வாய்த்துடியிடைப்பரவையல்குல்
அடக்கினார்கெடிலவேலியதிகைவீரட்டனாரே. (௧)

சூடினார்கங்கையாளைச்சூடியதுழனிகேட்டங்
கூடினாரங்கையாளுமுடலையொழிக்கவேண்டிப்
பாடினார்சாமவேதம்பாடியபாணியாலே¶¶
ஆடினார்கெடிலவேலியதிகைவீரட்டனாரே. (௨)

* உறுகயிற்றூசல், மறுகயிற்றூசல், பெறுகயிற்றூசல், தறுகயிற்றூசல் என்றும் பாடம். † ஊன்கணோக்கி என்றும் பாடம். ‡ போலும் என்றும் பாடம். ¶ ஒன்றினானுணரமாட்டேன் என்றும் பாடம். § கருக்குழி எனப்பாடமோதுவாருமுளர். 0 னலம்வந்திட்டேன் என்றும் பாடம். ** எழுந்துவீழ்ந்தும் என்றும் பாடம். †† மிணையடிகாணமாட்டார் என்றும் பாடம். ‡‡ துடக்கினார் என்றும் பாடம். ¶¶ பாடியப்பாணியாலே என்றும் பாடம்.

Koviloor Digital Library

கொம்பினார்குழைத்தவேனற்கோமகன்கோலநீர்மை
நம்பினார்காணலாகாவகையதோர்நடலைசெய்தார்
வெம்பினார்மதில்கண்மூன்றும்வில்லிடையெரித்துவீழ்த்த
அம்பினார்கெடிலவேலியதிகைவீரட்டனாரே. (௩)

மறிபடக்கிடந்தகையர்வளரிளமங்கைபாகம்
செறிபடக்கிடந்தசெக்கர்ச்செழுமதிக்கொழுந்துசூடிப்
பொறிபடக்கிடந்தநாகம்புகையுமிழ்ந்தழலவீக்கிக்
கிறிபடநடப்பர்போலுங்கெடிலவீரட்டனாரே. (௪)

நரிவரால்கவ்வச்சென்றுநற்றசையிழந்ததொத்த
தெரிவரான்மால்கொள்சிந்தை* தீர்ப்பதோர்சிந்தைசெய்வார்
வரிவராலுகளுந்தெண்ணீர்க்கழனிசூழ்பழனவேலி
அரிவரால்வயல்கள்சூழ்ந்தவதிகைவீரட்டனாரே. (௫)

புள்ளலைத்துண்டவோட்டிலுண்டுபோய்ப்பலாசங்கொம்பின்
கள்ளலைச்சுடலைவெண்ணீறணிந்தவர்மணிவெள்ளேற்றுத்
துள்ளலைப்பாகன்றன்னைத்தொடர்ந்திங்கேகிடக்கின்றேனை
அள்ளலைக்கடப்பித்தாளுமதிகைவீரட்டனாரே. † (௬)

நீறிட்டநுதலர்வேலைநீலஞ்சேர்கண்டர்மாதர்
கூறிட்டமெய்யராகிக்கூறினாராறுநான்கும்
கீறிட்டதிங்கள்சூடிக்கிளர்தருசடையினுள்ளால்
ஆறிட்டுமுடிப்பர்போலுமதிகைவீரட்டனாரே. (௭)

காணிலார்கருத்தில்வாரார்திருத்தலார்பொருத்தலாகார்
ஏணிலாரிறப்புமில்லார்பிறப்பிலார்துறக்கலாகார்
நாணிலாரைவரோடு‡மிட்டெனைவிரவிவைத்தார்
ஆணலார்பெண்ணுமல்லாரதிகைவீரட்டனாரே. (௮)

தீர்த்தமாமலையைநோக்கிச்செருவலியரக்கன்சென்று
பேர்த்தலும்பேதையஞ்சப்பெருவிரலதனையூன்றிச்
சீர்த்தமாமுடிகள்பத்துஞ்சிதறுவித்தவனையன்று
ஆர்த்தவாயலறவைத்தாரதிகைவீரட்டனாரே. ¶ (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

முன்பெலாமிளையகாலம்§ மூர்த்தியைநினையாதோடிக்
கண்கணாவிரும்புநாளுங்கருத்தழிந்தருத்தமின்றிப்
பின்பகலுணங்கலட்டும்பேதைமார்போன்றேனுள்ளம்0
அன்பனாய்வாழமாட்டேனதிகைவீரட்டனீரே. (௧)

* தெரிவரான்மாலசிந்தை என்றும், தெரிவரான்மாசில்சிந்தை என்றும் பாடம். † கடப்பித்தாளும் என்பது வேண்டிக்கோடற்பொருளாயின் வீரட்டனீரே எனவிளியாக்குக. ‡ நாணலாரைவரோடும் என்றும் பாடம். ¶ இத்திருப்பதிகத்தில் ௯-வது செய்யுள் மறைந்துபோயிற்று. § மினையகாலம் என்றும்பாடம். 0 போன்றேனுள்ளம் என்றும் பாடம்.

Koviloor Digital Library

கறைப்பெருங்கண்டத்தானேகாய்கதிர்நமனையஞ்சி
நிறைப்பெருங்கடலுங்கண்டேனீள்வரையுச்சிகண்டேன்
பிறைப்பெருஞ்சென்னியானேபிஞ்ஞகாவிவையனைத்தும்
அறுப்பதோருபாயங்காணேனதிகைவீரட்டனீரே. (உ)

நாதனுரென்னநாளுநடுங்கினராகித்தங்கள்
ஏதங்களறியமாட்டாரிணையடிதொழுதோமென்பார்
ஆதனனவனென்றெள்கியதிகைவீரட்டனேநின்
பாதநான்பரவாதுய்க்கும்பழவினைப்பரிசிலேனே. (ஙூ)

சுடலைசேர்சுண்ணமெய்யர்சுரும்புணவிரிந்தகொன்றைப்
படலைசேரலங்கன்மார்பர்பழனஞ்சேர்கழனித்தெங்கின்
மடலைநீர்கிழியவோடி* யதனிடைமணிகள்சிந்தும்
கெடிலவீரட்டமேயகிளர்சடைமுடியனூரே. (ச)

மந்திரமுள்ளதாகமறிகடலெழுநெய்யாக †
இந்திரன்வேள்வித்தீயிலெழுந்ததோர்கொடியின்வண்ணம் ‡
சிந்திரமாகநோக்கித்தெருட்டுவார்தெருட்டவந்து
கந்திரமுரலுஞ் ¶ சோலைக்கானலங்கெடிலத்தாரே. (ரு)

மைஞ்ஞலமனையகண்ணாள்பங்கன்மாமலையையோடி
மெய்ஞ்ஞரம்புதிரம்பில்கவிசைதணிந்தரக்கன்வீழ்ந்து
கைஞ்ஞரம் § பெழுவிக்கொண்டுகாதலாலினிதுசொன்ன
கின்னரங்கேட்டுகந்தார்கெடிலவீரட்டனூரே. ० (கo)

திருச்சிற்றம்பலம்.

திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

மாசிலொள்வாள்போன்மறியுமணிநீர்த்திரைத்தொகுதி
ஊசலையாடியங்கொன்சிறையன்னமுறங்கலுற்றுல் **
பாசறைநீலம்பருகியவண்டுபண்பாடல்கண்டு
வீசுங்கெடிலவடகரைத்தே †† யெந்தைவீரட்டமே. (க)

பைங்காற்றவளைபறைகொட்டப்பாசிலைநீர்ப்படுகர்
அங்காற்குவளைமேலாவியுயிர்ப்பவருகுலவும்
செங்காற்குருகிவைசேருஞ்செறிகெடிலக்கரைத்தே
வெங்காற்குருசிலைவீரனருள்வைத்தவீரட்டமே. (உ)

அம்மலர்க்கண்ணியரஞ்சனஞ்செந்துவர்வாயினையார்
வெம்முலைச்சாந்தம்விலைபெறுமாலையெடுத்தவர்கள்
தம்மருங்குற்கிரங்கார்தடந்தோண்மெலியக்குடைவார்
விம்முபுனற்கெடிலக் ‡‡ கரைத்தேயெந்தைவீரட்டமே. (ஙூ)

* நீர்கழியவோடி என்றும் பாடம். † கடலேழுநெய்யா என்றும் பாடம். ‡ கொழுந்தின்வண்ணம் எனப்பாடமோதுவாருமுளர். ¶ கந்தாமுரலுஞ் என்றும் பாடம். § கைந்நரம்பு என்றும் பாடம். ० இத்திருப்பதிகத்திலே சு, எ, அ, கூ இச்செய்யுள்கள் மறைந்து போயின. ** லுற்ற, லுற்றூர் என்றும் பாடம். ††வடகரைக்கே என்றும் பாடம்; இப்பாடத்தை இத்திருப்பதிகமுழுதுங் கொள்க. ‡‡ விம்மும்புனற்கெடிலக் என்றும் பாடம்.

Koviloor Digital Library

மீறுடைத்தன்புனல்வீரட்டரே நும்மைவேண்டுகின்ற
றியாறுடைச்சில்குறையொன்று* ளதானறுந்தன்னொருக்கின்
தேறுடைக்கொன்றைச்சடையுடைக்கங்கைத்திரைதவழும்
கூறுடைத்திங்கட்குழவிபெப்போதுங்குறிக்கொண்மினே. (௪)

ஆரட்டதேனுமிரந்துண்டகமகவன்றிரிந்து
வேரட்டநிற்பித்திடுகின்றதால்விரிநீர்ப்பாவைச்
சூரட்டவேலவன்றாதையைச்சூழ்வயலாரதிகை
வீரட்டத்தானைவிரும்பாவரும்பாவவேதனையே. (௫)

படர்பொற்சடையும்பகுவாயரவும்பனிமதியும்
சுடலைப்பொடியுமெல்லாமுளவேயவர்தூயதெண்ணீர்க்
கெடிலக்கரைத்திருவீரட்டராவர்கெட்டேனடைந்தார்
நடலைக்குநற்றுணை† யாகுங்கண்டீரவர்நாமங்களே. (௬)

காளங்கடந்ததோர்கண்டத்தராகிக்கண்ணார்கெடில
நாளங்கடிக்கோர்நகரமுமாதிற்கு‡ நன்கிசைந்த
தாளங்கள்கொண்டுங்குழல்கொண்டுந்தாமங்ஙனே
வேடங்கள்கொண்டும்விசும்புசெல்வா¶ ரவர்வீரட்டரே.§ (௭)

திருச்சிற்றம்பலம்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

கோணல்மாமதிசூடியோர்கோவணம்
நாணில்வாழ்க்கைநயந்தும்பயனிலை
பாணில்வீணை⁰ பயின்றவன்வீரட்டம்
காணிலல்லதென்கண்டுயில்கொள்ளுமே. (௧)

பண்ணினைப்பவளத்திரண்மாமணி
அண்ணலையமரர்தொழுமாதியைச்
சுண்ணவெண்பொடியான்றிருவீரட்டம்
நண்ணிலல்லதென்கண்டுயில்கொள்ளுமே. ** (௨)

உற்றவர்தம்முறுநோய்களைபவர்
பெற்றமேறும்பிறங்குசடையினர்
சுற்றும்பாய்புனல்சூழ்திருவீரட்டம்
கற்கிலல்லதென்கண்டுயில்கொள்ளுமே. (௩)

முற்றுவெண்மதிசூடுமுதல்வனார்
செற்றார்வாழுந்திரிபுரந்தீயெழ
விற்றான்கொண்டெயிலெய்தவர்†† வீரட்டம்
கற்றாலல்லதென்கண்டுயில்கொள்ளுமே. (௪)

* குறையொன்று என்றும் பாடம். † நடலைக்குநற்றுணை என்றதைப் 'பிணிக்குமருந்து' என்றாற்போற் கொள்க. ‡ நகரமுமாகிற்கும் என்றும், நாகமுமாகிற்கும் என்றும், நகரமுமாகிற்கும் என்றும் பாடம். ¶ கொண்டுவிசும்புசெல்வார் என்றும் பாடம். § வீரட்டமே என்றும் பாடம்; இத்திருப்பதிகத்தில் ௮, ௯, ௰ இச்செய்யுள்கள் மறைந்துபோயின. ⁰ பாணிவீணை என்றும் பாடம். ** இத்திருப்பாட்டு எட்டுப்பிரதிகளில் மூன்றாவதாகவும் உ-வது இரண்டாவதாகவும் காணப்படுகின்றன. †† வெய்தவன் என்றும் பாடம்.

Koviloor Digital Library

பல்லாரும்பலதேவர்பணிபவர்
நல்லாருந்நயந்தேத்தப்படுபவன் *
வில்லான்மூவெயிலெய்தவன்வீரட்டம்
கல்லேனாகிலென்கண்டுயில்கொள்ளுமே. (ரு)

வண்டார்கொன்றையுமத்தம்வளர்சடைக்
கொண்டான்கோலமதியோடரவமும்
விண்டார்மும்மதிலெய்தவன்வீரட்டம்
கண்டாலல்லதென்கண்டுயில்கொள்ளுமே. (சு)

அரையார்கோவணவாடையனாறெலாம்
திரையாரொண்புனல்பாய்கெடிலக்கரை
விரையார்நீற்றன்விளங்குவீரட்டன்பால்
கரையேனாகிலென்கண்டுயில்கொள்ளுமே. (எ)

நீறுடைத்தடந்தோளுடைநின்மலன்
ஆறுடைப்புனல்பாய்கெடிலக்கரை
ஏறுடைக்கொடியான்திருவீரட்டம்
கூறிலல்லதென்கண்டுயில்கொள்ளுமே. (அ)

செங்கண்மால்விடையேறியசெல்வனார்
பைங்கணானையினீருரிபோர்த்தவர் †
அங்கண்ஞாலமதாகியவீரட்டம்
கங்குலாக ‡ வென்கண்டுயில்கொள்ளுமே. (கூ)

பூணாணாரம்பொருந்தவுடையவர்
நாணாகவ்வரைவில்லிடையம்பினால்
பேணார்மும்மதிலெய்தவன்வீரட்டம்
காணேனாகிலென்கண்டுயில்கொள்ளுமே. (கo)

வரையார்ந்தவயிரத்திரண்மாணிக்கம்
திரையார்ந்தபுனல்பாய்கெடிலக்கரை
விரையார்நீற்றன் ¶ விளங்கியவீரட்டம்
உரையேனாகிலென்கண்டுயில்கொள்ளுமே. (கக)

உலந்தார்வெண்டலையுண்கலனாகவே
வலந்தான்மிக்கவவ்வாளரக்கன்றனைச் §
சிலம்பார்சேவடியூன்றினான்வீரட்டம்
புலம்பேனாகிலென்கண்டுயில்கொள்ளுமே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

* படுபவர் என்றும் பாடம். † போர்த்தவன் என்றும் பாடம். ‡ கங்கிலாக என்றும் பாடம். ¶ நீற்றினன் என்றும் பாடம். § மிக்கவன்வாளரக்கன்றனைச் என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

எட்டுநாண்மலர்கொண்டவன்சேவடி
மட்டலரிடுவார்வினைமாயுமால்
கட்டித்தேன்கலந்தன்னகெடிலவீ
ரட்டனாரடிசேருமவருக்கே. (க)

நீளமாநினைந்தெண்மலரிட்டவர்
கோளவல்வினையுங்குறைவிப்பால்
வாளமாலிழியும்* கெடிலக்கரை
வேளிசூழ்ந்தழகாயவிரட்டரே. (உ)

கள்ளினாண் † மலரோரிருநான்குகொண்
டுள்குவாரவர் ‡ வல்வினையோட்டுவார்
தெள்ளுநீர் ¶ வயல்பாய்கெடிலக்கரை
வெள்ளைநீறணிமேனிவிரட்டரே. (ங)

பூங்கொத்தாயினமூன்றொடோரைந் § திட்டு
வாங்கிநின்றவர் 0 வல்வினையோட்டுவார்
வீங்குதண்புனல்பாய்கெடிலக்கரை
வேங்கைத்தோலுடையாடைவிரட்டரே. (ச)

தேனப்போது** கண்மூன்றொடோரைந்துடன்
தானப்போதிடுவார்வினைதீர்ப்பவர்††
மீனத்தண்புனல்பாய்கெடிலக்கரை
வேனலானையுரித்தவிரட்டரே. (ரு)

ஏழித்தொன்மலர்கொண்டுபணிந்தவர்
ஊழித்தொல்வினையோடவகற்றுவார்
பாழித்தண்புனல்பாய்கெடிலக்கரை
வேழத்தின்னுரிபோர்த்தவிரட்டரே. (சு)

உரைசெய்நூல்வழியொண்மலரெட்டிடத்
திரைகள்போல்வருவல்வினைதீர்ப்பரால்
வரைகள்வந்திழியுங்கெடிலக்கரை
விரைகள்சூழ்ந்தழகாயவிரட்டரே. (எ)

* வானமாலிழியுங் என்றும், வானைமாலிழியும் என்றும் பாடம். † நள்ளிநாண் என்றும் பாடம். ‡ டுள்ளுவாரவர் என்றும் பாடம். ¶ தெள்ளநீர் என்றும், தெள்ளிநீர் என்றும் பாடம். § மூன்றொடு ஒரைந்து பூங்கொத்து என்க; என்றது அட்டபுட்பங்களை; அவை புன்னைப்பூ, வெள்ளெருக்கம்பூ, செண்பகப்பூ, நந்தியாவர்த்தப்பூ, நீலோற்பலப்பூ, பாதிரிப்பூ, அலரிப்பூ, செந்தாமரைப்பூ என்பன; இவை புறப்பூசையாகியகிரியாபூசைக்குரியன: அகப்பூசையாகியஞானபூசைக்கு ஐம்பொறியடக்கன் முதலியவட்டபுட்பங்கொள்ளப்படும். 0 வாங்கிநிற்றல்—வணங்கிநிற்றல்; ரைந்திட—நுங்கிநின்றவர் என்றும் பாடம். ** தேனைப்போது என்றும் பாடம்; தேனை என்பதில் ஐ அசை. †† தீர்ப்பவன் என்றும் பாடம்.

Koviloor Digital Library

ஒலிவண்*டறையொண்மலரெட்டினால்
காலையேத்தவினையைக்கழிப்பரால்
ஆலி†வந்திழியுங்கெடிலக்கரை
வேலிசூழ்ந்தழகாயவீரட்டரே. (அ)

தாரித்துள்ளித்தடமலரெட்டினால்
பாரித்தேத்தவல்லார்வினைபாற்றுவார்
மூரித்தெண்டிரைபாய்கெடிலக்கரை
வேரிச்செஞ்சடைவேய்ந்தவீரட்டரே. (கூ)

அட்டபுட்பமவைகொளுமாறுகொண்
டட்டமூர்த்தியனாதிதன்பாலணைந்
தட்டமாறுசெய்கிற்பவதிகைவீ
ரட்டனாரடிசேருமவர்களே. (க0)

திருச்சிற்றம்பலம்.

ஏழைத்திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

வெறிவிரவுகூவிளநற்றொங்கலானை
வீரட்டத்தானைவெள்ளேற்றினானைப்
பொறியரவினானைப்புள்ளூர்தியானைப்
பொன்னிறத்தினானைப்புகழ்தக்கானை
அறிதற்கரியசீரம்மான்றன்னை
யதியரையமங்கை‡யமர்ந்தான்றன்னை
எறிகெடிலத்தானையிறைவன்றன்னை¶
யேழையேனான்பண்டிகழ்ந்தவாறே. (க)

வெள்ளிக்குன்றன்னவிடையான்றன்னை§
வில்வலான்0வில்வட்டங்காய்ந்தான்றன்னைப்
புள்ளிவரிநாகம்பூண்டான்றன்னைப்
பொன்பிதிர்ந்தன்னசடையான்றன்னை
வள்ளிவளைத்தோண்முதல்வன்றன்னை
வாராவுலகருளவல்லான்றன்னை
எள்கவிடுபிச்சையேற்பான்றன்னை
யேழையேனான்பண்டிகழ்ந்தவாறே. (உ)

முந்தியுலகம்படைத்தான்றன்னை
மூவாமுதலாய**மூர்த்திதன்னைச்
சந்தவெண்டிங்களணிந்தான்றன்னைத்
தவநெறிகள்சாதிக்கவல்லான்றன்னைச்

* ஒலிவண்டு - ஓலத்தையுடையதாகியவண்டு; ஒலி - பெயர்; ஓலம் - ஒலி. † ஆலி வினையெச்சம்; ஆலல் - அசைதல், ஒலித்தல். ‡ யதியரையன்மங்கை என்றும் பாடம். ¶ யிறையான்றன்னை என்றும் பாடம். § "வெள்ளிக்குன்றம்—தன்வண்ண மெவ்வண்ண மவ்வண்ண மால்விடை" என்றார் பொன்வண்ணத்தந்தாதியினும். 0 வில்வல்லான் என்றும் பாடம். ** § மூவர்முதலாய எனப்பாடமோதலுமொன்று.

Koviloor Digital Library

சிந்தையிற்றீர்வினையைத்தேனைப்பாலைச்
செழுங்கெடிலவீரட்டமேவினானை
எந்தைபெருமானையீசன்றன்னை
யேழையேனான்பண்டிகழ்ந்தவாறே. (௩)

மந்திரமுமறைப்பொருளுமானான்றன்னை
மதியமுஞாயிறுங்காற்றுந்தீயும்
அந்தரமுமலைகடலுமானான்றன்னை
யதியரையமங்கை* யமர்ந்தான்றன்னைக்
கந்தருவஞ்† செய்திருவர்கழல்கைகூப்பிக்
கடிமலர்கள்பலதூவிக்காலைமாலை
இந்திரனும்வானவருந்தொழச்செல்வானை
யேழையேனான்பண்டிகழ்ந்தவாறே. (௪)

ஒருபிறப்பிலாவடியை‡ யுணர்ந்துங்காணா
ருயர்கதிக்குவழிதேடிப்போகமாட்டார்
வருபிறப்பொன்றுணராதுமாசூசி
வழிகாணாதவர்போல்வார்மனத்தனாகி
அருபிறப்பையறுப்பிக்குமதிகையூர
னம்மான்றனடியிணையேயணைந்துவாழா ¶
திருபிறப்பும்வெறுவியராயிருந்தார்சொற்கேட்
டேழையேனான்பண்டிகழ்ந்தவாறே. § (௫)

ஆறேற்கவல்லசடையான்றன்னை
யஞ்சனம்போலுமிடற்றான்றன்னைக்
கூறேற்கக்கூறமரவல்லான்றன்னைக் 0
கோல்வளைக்கைமாதராள்பாகன்றன்னை **
நீறேற்கப்பூசுமகலத்தானை
நின்மலன்றன்னைநிமலன்றன்னை
ஏறேற்கவேறுமாவல்லான்றன்னை
யேழையேனான்பண்டிகழ்ந்தவாறே. (௬)

குண்டாக்கனா†† யுழன்றுகையிலுண்டு
குவிமுலையார்தம்முன்னேநாணமின்றி
உண்டியுகந்தமணேநின்றார்சொற்கேட்
டுடனாகியுழிதந்தே‡‡ னுணர்வொன்றின்றி
வண்டுலவுகொன்றையங்கண்ணியானை
வானவர்களேத்தப்படுவான்றன்னை
எண்டிசைக்குமூர்த்தியாய்நின்றான்றன்னை
யேழையேனான்பண்டிகழ்ந்தவாறே. (௭)

* யரையன்மங்கை என்றும் பாடம். † கந்திருவஞ் என்றும் பாடம். ‡ பிறப்பிலானடியை எனப்பாடமோதவாருமுளர். ¶ யிணையையணைந்துவாழா என்றும் பாடம். § இத்திருப்பாட்டு ஏட்டுப்பிரதிகளில் ௯-வதாகவும், ௯-வது ௫-வதாகவும் காணப்படுகின்றன. 0 கூறேற்கக்கூறமரவல்லான்றன்னைக் என்றும் பாடம். ** மாதராள்பங்கன்றன்னை என்றும் பாடம். †† குண்டாக்கனாய் எனப்பாடமோதவாருமுளர். ‡‡ டுடனாயுழிதந்தேன் என்றும் பாடம்.

Koviloor Digital Library

உறிமுடித்த * குண்டிகைதங்கையிற்றூக்கி
யூத்தைவாய்ச்சமணர்க்கோர்குண்டாக்கனாய்†
கறிவிரவுநெய்சோறுகையிலுண்டு
கண்டார்க்குப்பொல்லாதகாட்சியானேன்
மறிதிரைநீர்ப்பவ்வநஞ்சுண்டான்றன்னை
மறித்தொருகால்வல்வினையேனினைக்கமாட்டேன்
எறிகெடிலநாடர்பெருமான்றன்னை ‡
யேழையேனான்பண்டிகழ்ந்தவாறே. (அ)

நிறைவார்ந்த ¶ நீர்மையாய்நின்றான்றன்னை
நெற்றிமேற்கண்ணொன்றுடையான்றன்னை
மறையானைமாசொன்றிலாதான்றன்னை
வானவர்மேன்மலரடியைவைத்தான்றன்னைக்
கறையானைக் § காதார்குழையான்றன்னைக்
கட்டங்கமேந்தியகையினானை 0
இறையானையெந்தைபெருமான்றன்னை
யேழையேனான்பண்டிகழ்ந்தவாறே. (கூ)

தொல்லைவான்சூழ்வினைகள்சூழப்போந்து
தூற்றியேனாற்றியேன்சுடராய்நின்று
வல்லையேயிடர்தீர்த்திங்கடிமைகொண்ட **
வானவர்க்குந்தானவர்க்கும்பெருமான்றன்னைக்
கொல்லைவாய்க்குருந்தொசித்துக்குழலுமூதுங்
கோவலனுநான்முகனுங்கூடியெங்கும் ††
எல்லைகாண்பரியானையெம்மான்றன்னை
யேழையேனான்பண்டிகழ்ந்தவாறே. (க0)

முலைமறைக்கப்பட்டுநீராடாப்பெண்கள்
முறைமுறையானந்தெய்வ ‡‡ மென்றுதீண்டித்
தலைபறிக்குந்தன்மையர்களாகிநின்று
தவமேயென்றவஞ்செய்து ¶¶ தக்கதோரார்
மலைமறிக்கச்சென்ற §§ விலங்கைக்கோனை
மத 00 னழியச்செற்றசேவடியினானை
இலைமறித்தகொன்றை *** யந்தாரான்றன்னை
யேழையேனான்பண்டிகழ்ந்தவாறே. (கக)

திருச்சிற்றம்பலம்.

* உறிபிடித்த என்றும் பாடம். † குண்டரக்கனாய் எனப்பாடமோதுவாருமுளர். ‡ எறிகெடிலத்தானையிறைவன்றன்னை என்றும் பாடம். ¶ நிறையார்ந்த என்றும் பாடம். § கறையானை—நஞ்சையுடையானை. 0 கையான்றன்னை என்றும் பாடம். ** கடிமைக் கொண்ட என்றும் பாடம். †† கோவலனுன்முகன்கூடியெங்கும் என்றும் பாடம். ‡‡ முறைமுறையேநந்தெய்வம் என்றும் பாடம். ¶¶ தவமென்றவஞ்செய்த என்றும் பாடம். §§ மலைபறிக்கச்சென்ற என்றும் பாடம். 00 மதன் - வலி. *** இலைமறைத்த கொன்றை என்றும், இலைபறித்தகொன்றை என்றும் பாடம்.

திருநாவுக்கரசுநாயனர் சமணர்கள் செய்த இடர்களனைத்தையும் ஜயித்து, திருவதிகை வீரட்டானேசுரரைத் தரிசிக்கவேண்டும் என்னும் பேராசையினால் திருக்கெடிலநதியைக்கடந்து தம்மை எதிர்கொண்ட சிவனடியார்களோடு ஆலயத்திற் சென்று, சுவாமியை வணங்கி "வெறிவிரவு கூவிளம்" என்னும் ஏழைத்திருத்தாண்டகத்தை எடுத்து "ஏழையேனான் பண்டிகழ்ந்தவாறே" என்று திருப்பதிகம்பாடியருளினர்.

அடையாளத்திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

சந்திரனைமாகங்கைதிரையான்மோதச்
சடாமகுடத்திருத்துமேசாமவேத*
கந்தருவம் † விரும்புமேகபாலமேந்து
கையனைமெய்ப்பனைகனகமேனிப்
பந்தணவுமெல்விரலாள்பாகனுமே
பசுவேறுமேபரமயோகியாமே ‡
ஐந்தலைபமாசுணங்கொண்டரையார்க்குமே
யவனுகிலதிகைவீரட்டனுமே. (௧)

ஏறேறியேழுலகுமுழிதர்வானை
யிமையவர்கடொழுதேத்தவிருக்கின்றானை
பாறேறுபடுதலையிற்பலிகொள்வானை
படவரவந்தடமார்பிற்பயில்வித்தானை
நீறேறுசெழும்பவளக்குன்றொப்பானை
நெற்றிமேலொற்றைக்கண்ணிறைவைத்தானை
ஆறேறுசடைமுடிமேற்பிறைவைத்தானை
யவனுகிலதிகைவீரட்டனுமே. (௨)

முண்டத்திற்பொலிந்திலங்குநெற்றியானை ¶
முதலாகிநடுவாகிமுடிவானானை
கண்டத்தில்வெண்மருப்பின்காறையானை
கதநாகங்கொண்டாடுங்காட்சியானை
பிண்டத்தினியற்கைக்கோர்பெற்றியானை
பெருநிலநீர்நிவாரிபாகாசமாகி
அண்டத்துக்கப்பாலாயிப்பாலானை
யவனுகிலதிகைவீரட்டனுமே. (௩)

செய்யனைகரியனைகண்டம்பைங்கண்
வெள்ளெயிற்றுடாவனைவினைகள்போக
வெய்யனைதண்கொன்றைமிலைந்தசென்னிச்
சடையனைவிளங்குமழுச்சூலமேந்தும்
கையனைகாலங்கண்மூன்றானானை
கருப்புவிற்றனிக்கொடும்பூண்காமற்காய்ந்த §
ஐயனைபருத்துபார்த்தவானைத்தானை
யவனுகிலதிகைவீரட்டனுமே. (௪)

* வேதக் என்றும் பாடம். † கந்திருவம் என்றும் பாடம். ‡ பசுவேறுமெம்பரமயோகியாமே என்றும் பாடம். ¶ முண்டத்திற்பொலிந்திலங்குமேனியானை என்றும் பாடம். § கொடும்பூட்காமற்காய்ந்த என்றும் பாடம்.

Koviloor Digital Library

பாடுமேயொழியாமேநால்வேதம்மும்
படர்சடைமேலொளிதிகழப்பனிவெண்டிங்கள்
சூடுமேயரைதிகழத்தோலும்பாம்புஞ்
சுற்றுமேதொண்டைவாயுமையோர்பாகம்
கூடுமேகுடமுழவம்வீணைதாளங்
குறுநடையசிறுபூதமுழக்கமாக்கூத் *
தாடுமேயந்தடக்கையனலேந்தும்மே
யவனுகிலதிகைவீரட்டனுமே. (ரு)

ஒழித்திடுமேயுள்குவாருள்ளத்துள்ள
வுறுபிணியுஞ் † செறுபகையுமொற்றைக்கண்ணால்
விழித்திடுமேகாமனையும்பொடியாவீழ
வெள்ளப்புனற்கங்கைசெஞ்சடைமேல்
இழித்திடுமேயேழுலகுந்தானுகும்மே
யியங்குந்திரிபுரங்களோரம்பினல்
அழித்திடுமேயாதிமாதவத்துளானே
யவனுகிலதிகைவீரட்டனுமே. (சு)

குழலோடுகொக்கரைகைத்தாளமொந்தை
குறட்பூதமுன்பாடத்தானுடும்மே
கழலாடுதிருவிரலாற்கரணஞ்செய்து
கனவின்கட்டிருவுருவந்தான்காட்டும்மே
எழிலாருந்தோள்வீசிநடமாடும்மே
யீமப்புறங்காட்டிலேமந்தோறும்
அழலாடுமேயட்டமூர்த்தியாமே
யவனுகிலதிகைவீரட்டனுமே. (எ)

மாலாகிமதமிக்ககளிறுதன்னை
வதைசெய்துமற்றதனினுரிவைகொண்டு
மேலாலுங்கீழாலுந்தோன்றுவண்ணம்
வெம்புலால்கைகலக்கமெய்போர்த்தானே
கோலாலம்படவரைநட்டரவுசுற்றிக்
குரைகடலைத்திரையலறக்கடைந்துகொண்ட
ஆலாலமுண்டிருண்டகண்டத்தானே
யவனுகிலதிகைவீரட்டனுமே. (அ)

செம்பொனுற்செய்தழகுபெய்தாற்போலுஞ்
செஞ்சடையெம்பெருமானேதெய்வநாறும்
வம்பினுண்மலர்க் ‡ கூந்தலுமையாள்காதன்
மணவாளனேவலங்கைமழுவாளனே
நம்பனேநான்மறைகடொழநின்றானே
நடுங்காதார்புரமூன்றுநடுங்கச்செற்ற
அம்பனேயண்டகோசரத்துளானே ¶
யவனுகிலதிகைவீரட்டனுமே. (கூ)

* முழக்கமாகூத் என்றும் பாடம். † ருள்ளத்துள்ளே—யுறுபிணியுஞ் என்றும் பாடம். ‡ வம்பினுர்மலர்க் என்றும், வம்புலாமலர்க் என்றும் பாடம். ¶ யண்டகோசத்துளானே என்று பாடமோதுவாருமுளர்.

Koviloor Digital Library

எழுந்ததிரைநதித்துவலை* நனைந்ததிங்க
ளிளநிலாத்திகழ்கின்றவளர்சடையனை
கொழும்பவளச்செங்கனிவாய்க்காமக்கோட்டி
கொங்கையிணையமர்பொருதுகோலங்கொண்ட
தழும்புளவேவரைமார் † பில்வெண்ணூலுண்டே
சாந்தமொடுசந்தனத்தினளறுதங்கி
அழுந்தியசெந்திருவுருவில்வெண்ணீற்றானை
யவனுகிலதிகைவீரட்டனுமே. (கo)

நெடியானுநான்முகனுநேடிக்காணு
நீண்டானைநேரொருவரில்லாதானை
கொடியேறுகோலமாமணிகண்டனை ‡
கொல்வேங்கையதளனைகோவணவனை
பொடியேறுமேனியனைபைம்வேண்டிப்
புவலோகந்திரியுமேபுரிநூலானை ¶
அடியாரையமருலகமாள்விக்குமே
யவனுகிலதிகைவீரட்டனுமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

போற்றித்திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

எல்லாஞ்சிவனென்ன § நின்றாய்போற்றி
பெரிசுடராய்நின்றவிறைவாபோற்றி
கொல்லார்மழுவாட்படையாய்போற்றி
கொல்லுங்கூற்றொன்றையுதைத்தாய்போற்றி
கல்லாதார்காட்சிக்கரியாய்போற்றி
கற்றாரிடும்பைகளைவாய்போற்றி
வில்லால்வியனரணமெய்தாய்போற்றி
வீரட்டங்காதல்விமலாபோற்றி. (க)

பாட்டுக்குமாட்டுக்கும்பண்பாபோற்றி
பல்லூழியாயபடைத்தாய்போற்றி o
ஓட்டகத்தேயூணுவகந்தாய்போற்றி
யுள்குவாருள்ளத்துறைவாய்போற்றி
காட்டகத்தேயாடன்மகிழ்ந்தாய்போற்றி
கார்மேகமன்னமிடற்றாய்போற்றி
ஆட்டுவதோர்நாகமசைத்தாய்போற்றி
யலைகெடிலவீரட்டத்தாள்வாய்போற்றி. (உ)

* நதித்திவலை என்றும் பாடம். † வரைமார்பு - உத்தமவிலக்கணமாகிய மூன்றுவரி பொருந்தியமார்பு; "வரையகன்மார்பிடைவரையுமூன்றுள" என்றார்பிறரும். ‡ கோலமா மணிகண்டனே என்றும் பாடம். ¶ புரிநூலனே என்றும் பாடம். § எல்லாருஞ்சிவனென்ன என்றும் பாடம். o பல்லூழியாய்ப்படைத்தாய்போற்றி என்றும் பாடம்.

Koviloor Digital Library

முல்லையங்கண்ணிமுடியாய்போற்றி
முழுநீறுபூசியமூர்த்திபோற்றி
எல்லைநிறைந்தகுணத்தாய்போற்றி
யேழ்நரம்பினோசைபடைத்தாய்போற்றி
சில்லைச்சிரைத்தலை* யிலூணாபோற்றி
சென்றடைந்தார்தீவினைகடீர்ப்பாய்போற்றி
தில்லைச்சிற்றம்பலமேயாய்போற்றி
திருவீரட்டானத்தெஞ்செல்வாபோற்றி. (௩)

சாம்பரகலத்தணிந்தாய்போற்றி†
தவநெறிகள்சாதித்துநின்றாய்போற்றி ‡
கூம்பித்தொழுவார்தங்குற்றேவலைக்
குறிக்கொண்டிருக்குங்குழகாபோற்றி
பாம்புமதியும்புனலுந்தம்மிற்
பகைதீர்த்துடன்வைத்தபண்பாபோற்றி
ஆம்பன்மலர்கொண்டணிந்தாய்போற்றி
யலைகெடிலவீரட்டத்தாள்வாய்போற்றி. (௪)

நீறேறுநீலமிடற்றாய்போற்றி
நிழறிகழும்வெண்மழுவாள்வைத்தாய்போற்றி
கூறேறுமையொருபாற்கொண்டாய்போற்றி
கோளரவமாட்டுங்குழகாபோற்றி
ஆறேறுசென்னியுடையாய்போற்றி
யடியார்கட்¶ காரமுதமானாய்போற்றி
ஏறேறவென்றுமுகப்பாய்போற்றி
யிருங்கெடிலவீரட்டத்தெந்தாய்போற்றி. (௫)

பாடுவார்பாடலுகப்பாய்போற்றி
பழையாற்றுப்பட்டீச்சுரத்தாய் § போற்றி
வீடுவார்வீடருள 0 வல்லாய்போற்றி
வேழத்துரிவெருவப்போர்த்தாய்போற்றி
நாடுவார்நாடற்கரியாய்போற்றி
நாகமரைக்கசைத்தநம்பாபோற்றி
ஆடுமானஞ்சு**முகப்பாய்போற்றி
யலைகெடிலவீரட்டத்தாள்வாய்போற்றி. (௬)

மண்டுளங்கவாடன்மகிழ்ந்தாய்போற்றி
மால்கடலுமால்விசும்புமானாய்போற்றி
விண்டுளங்கமும்மதிலுமெய்தாய்போற்றி
வேழத்துரிமூடும்விகிர்தாபோற்றி ††

* சில்லைச்சிரைத்தலை - இழிவானநரம்புபொருந்தியதலையோடு. † சாம்பலகலத்தணிந்தாய்போற்றி என்றும் பாடம். ‡ சாதிக்கவல்லாய்போற்றி என்றும் பாடம். ¶ யடியவர்கட் என்றும் பாடம். § பட்டீச்சரத்தாய் என்றும் பாடம். 0 வீடுவார்வீடு அருள - பாசநீக்கமும் சிவத்துவப்பேறும் நல்க; இருவகைப்பற்றையும் விடுவார்க்கு முத்திகொடுக்க எனினுமாம்; குவ்வுருபு விரிக்க. ** ஆடுமானைந்தும் என்றும் பாடம். †† மூடும்வித்தே போற்றி என்றும் பாடம்.

Koviloor Digital Library

பண்ணிளங்கப்பாடல்பயின்றாய்போற்றி
பார்முழுதுமாயபரமாபோற்றி
கண்ணிளங்கக்காமனைமுன்காய்ந்தாய்போற்றி
கார்க்கெடிலங்கொண்டகபாலீபோற்றி. (எ)

வெஞ்சினவெள்ளேறூர்தி*யுடையாய்போற்றி
விரிசடைமேல்வெள்ளம்படைத்தாய்போற்றி
துஞ்சாப்பலிதேருந்தோன்றால்போற்றி
தொழுதகைதுன்பந்துடைப்பாய்போற்றி
நஞ்சொடுங்குங்கண்டத்துநாதாபோற்றி
நான்மறையோடாறங்கமானாய்போற்றி
அஞ்சொலாள்பாகமமர்ந்தாய்போற்றி
யலைகெடிலவீரட்டத்தாள்வாய்போற்றி. (அ)

சிந்தையாய்நின்றசிவனேபோற்றி
சீபர்ப்பதஞ்†சிந்தைசெய்தாய்போற்றி
புந்தியாய்ப்புண்டரிகத்துள்ளாய்போற்றி
புண்ணியனேபோற்றிபுனிதாபோற்றி
சந்தியாய்நின்றசதுராபோற்றி
தத்துவனேபோற்றியென்றாதாய்போற்றி
அந்தியாய்நின்றவரனேபோற்றி
யலைகெடிலவீரட்டத்தாள்வாய்போற்றி. (கூ)

முக்கணாபோற்றிமுதல்வாபோற்றி
முருகவேடன்னைப்பயந்தாய்போற்றி
தக்கணா‡போற்றிதருமாபோற்றி
தத்துவனேபோற்றியென்றாதாய்போற்றி
தொக்கணாவென்றிருவர்தோள்கைகூப்பத்¶
துளங்காதெரிசுடராய்நின்றாய்போற்றி
எக்கண்ணுங்கண்ணிலேனெந்தாய்போற்றி
யெறிகெடிலவீரட்டத்தீசாபோற்றி. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருவடித்திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

அரவணையான்சிந்தித்தரற்றுமடி
யருமறையான்சென்னிக்கணியாமடி
சரவணத்தான்கைதொழுதுசாருமடி
சார்ந்தார்கட்கெல்லாஞ்சரணாமடி
பரவுவார்பாவம்பறைக்குமடி§
பதினெண்கணங்களும்பாடுமடி
திரைவிரவுதென்கெடிலநாடன்னடி○
திருவீரட்டானத்தெஞ்செல்வனடி. (க)

* வெள்ளூர்தி என்றும் பாடம். † சீபற்பதம் என்றும் பாடம். ‡ தக்கணன் - தக்ஷிணாமூர்த்தி; தக்கணநோக்கியிருத்தலால் இவரிப்பெயர்பெற்றார்; தக்ஷிணம் - தெற்கு. ¶ இருவர் தொக்கு அன்று என்று தோள் கை கூப்ப என மாறுக. § பறிக்குமடி என்றும் பாடம். ○ விரவுநீர்த்தென்கெடிலநாடன்னடி என்றும் பாடம்.

Koviloor Digital Library

கொடுவினையாரென்றுங்குறுகாவடி
குறைந்தடைந்தாராழாமைக்காக்குமடி
படுமுழவம்பாணிபயிற்றுமடி
பதைத்தெழுந்தவெங்கூற்றைப்பாய்ந்தவடி
கடுமுரணேறூர்ந்தான்கழற்சேவடி
கடல்வையங்காப்பான்கருதுமடி
நெடுமதியங்கண்ணியணிந்தானடி
நிறைகெடிலவீரட்டநீங்காவடி. (உ)

வைதெழுவார் * காமம்பொய்போகாவடி
வஞ்சவலைப்பாடொன்றில்லாவடி †
கைதொழுதுநாமேத்திக்காணுமடி
கணக்குவழக்கைக்கடந்தவடி
நெய்தொழுதுநாமேத்தியாட்டுமடி
நீள்விசும்பையூடறுத்துநின்றவடி
தெய்வப்புனற்கெடிலநாடனடி
திருவீரட்டானத்தெஞ்செல்வனடி. (ங)

அரும்பித்தசெஞ்ஞாயி‡றேய்க்குமடி
யழகெழுதலாகாவருட்சேவடி
சுரும்பித்தவண்டினங்கள்சூழ்ந்தவடி
சோமனையுங்காலனையுங்காய்ந்தவடி
பெரும்பித்தர்கூடிப்பிதற்றுமடி
பிழைத்தார்பிழைப்பறியவல்லவடி ¶
திருந்துநீர்த்தென்கெடிலநாடனடி
திருவீரட்டானத்தெஞ்செல்வனடி. (ச)

ஒருகாலத்தொன்றாகிநின்றவடி
யூழிதோறூழியுயர்ந்தவடி
பொருகழலும்பல்சிலம்புமார்க்குமடி
புகழ்வார்புகழ்தகையவல்லவடி
இருநிலத்தாரின்புற்றங்கேத்துமடி
யின்புற்றாரிட்டபூவேறுமடி
திருவதிகைத்தென்கெடிலநாடனடி
திருவீரட்டானத்தெஞ்செல்வனடி. (ரு)

திருமகட்குச்செந்தாமரையாமடி
சிறந்தவர்க்குத்தேனாய்விளைக்குமடி
பொருளவர்க்குப்பொன்னுரையாய்நின்றவடி
புகழ்வார்புகழ்தகையவல்லவடி
உருவிரண்டுமொன்றோடொன்றொவ்வாவடி
யுருவென்றுணரப்படாதவடி
திருவதிகைத்தென்கெடிலநாடனடி
திருவீரட்டானத்தெஞ்செல்வனடி. (சூ)

* வைதொழுவார் என்றும் பாடம். † றிலாதவடி என்றும் பாடம். ‡ செஞ்ஞாயிறு என்றும் பாடம். ¶ பிழைப்பரியவல்லவடி என்றும் பாடம்.

Koviloor Digital Library

உரைமாலையெல்லாமுடையவடி
யுரையாலுணரப்படாதவடி
வரைமாதைவாடாமைவைக்கும்மடி
வானவர்கடாம்வணங்கிவாழ்த்தும்மடி
அரைமாத்திரையிலடங்கும்மடி
யகலமளக்கிற்பாரில்லாவடி
கரைமாங்கலிக்கெடிலநாடன்னடி *
கமழ்வீரட்டானக்காபாலியடி. (எ)

நறுமலராய்நாறுமலர்ச்சேவடி
நடுவாயுலகநாடாயவடி
செறிகதிருந்திங்களுமாய்நின்றவடி
தீத்திரளாயுள்ளேதிகழ்ந்தவடி
மறுமதியைமாசுகழுவும்மடி
மந்திரமுந்தந்திரமுமாயவடி
செறிகெடிலநாடர்பெருமானடி †
திருவீரட்டானத்தெஞ்செல்வன்னடி. (அ)

அணியனவுஞ்சேயனவுமல்லாவடி
யடியார்கட்காரமுதமாயவடி
பணிபவர்க்குப் ‡ பாங்காகவல்லவடி
பற்றற்றார்பற்றும்பவளவடி
மணியடிபொன்னடிமாண்பாமடி
மருந்தாய்ப்பிணிதீர்க்கவல்லவடி
தணிபாடுதண்கெடிலநாடன்னடி
தகைசார்வீரட்டத்தலைவன்னடி. (கூ)

அந்தாமரைப்போதலர்ந்தவடி
யரக்கனையுமாற்றலழித்தவடி
முந்தாகிமுன்னேமுளைத்தவடி
முழங்கழலாய்நீண்டவெம்மூர்த்தியடி ¶
பந்தாடுமெல்விரலாள்பாகன்னடி
பவளத்தடவரையேபோல்வானடி
வெந்தார்சுடலைநீறாடும்மடி
வீரட்டங்காதல்விமலன்னடி. (க0)

திருச்சிற்றம்பலம்.

காப்புத்திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

செல்வப்புனற்கெடிலவீரட்டமுஞ்
சிற்றேமமும்பெருந்தண்குற்றாலமும்
தில்லைச்சிற்றம்பலமுந்தென்கூடலுந்
தென்னானைக்காவுஞ்சிராப்பள்ளியும்

* கரைமாகலிக்கெடிலநாடன்னடி என்றும் பாடம். † எறிகெடிலநாடர்பெருமானடி என்றும் பாடம். ‡ பணியவர்க்குப் என்றும் பாடம். ¶ முழங்கழலாய்நின்றவெம்மூர்த்தியடி என்றும் பாடம்.

Koviloor Digital Library

நல்லூருந்தேவன்குடிமருகலு
நல்லவர்கடொழுதேத்து * நாரையூரும்
கல்லலகுநெடும்புருவக்கபாலமேந்திக்
கட்டங்கத்தோடுறைவார்காப்புக்களே. (௧)

தீர்த்தப்புனற்கெடிலவீரட்டமுந்
திருக்கோவல்வீரட்டம்வெண்ணெய்நல்லூர்
ஆர்த்தருவிவீழ்சுனைநீரண்ணாமலை
யறையணிநல்லூருமரநெறியும்
ஏத்துமின்கணீரேத்தநின்றவீச
னிடைமருதின்னம்பரேகம்பமும்
கார்த்தயங்குசோலைக் † கயிலாயமுங்
கண்ணுதலான்றன்னுடையகாப்புக்களே. (௨)

சிறையார்புனற்கெடிலவீரட்டமுந்
திருப்பாதிரிப்புலியூர்திருவாமாத்தூர்
துறையார்வனமுனிகளேத்தநின்ற
சோற்றுத்துறைதுருத்திநெய்த்தானமும்
அறையார்புனலொழுகுகாவிரிசூ
ழையாற்றமுதன்பழனநல்ல
கறையார்பொழில்புடைசூழ்கானப்பேருங்
கழுக்குன்றுந் ‡ தம்முடையகாப்புக்களே. (௩)

திரையார்புனற்கெடிலவீரட்டமுந்
திருவாரூர்தேவூர்திருநெல்லிக்கா
உரையார்தொழநின்றவொற்றியூரு
மோத்தூருமாற்பேறுமார்துறையும்
வரையாருவிசூழ்மாநதியு ¶
மாகாளங்கேதாரமாமேருவும்
கரையார்புனலொழுகுகாவிரிசூழ்
கடம்பந்துறையுறைவார்காப்புக்களே. (௪)

செழுநீர்ப்புனற்கெடிலவீரட்டமுந்
திரிபுராந்தகந்தென்னார்தேவீச்சரம்
கொழுநீர்புடைசுழிக்குங்கோட்டுக்காவுங்
குடமூக்குங்கோகரணங்கோலக்காவும்
பழிநீர்மையில்லாப்பனங்காட்டூரும்
பனையூர்பயற்றூர்பராய்த்துறையும்
கழுநீர்மதுவிரியுங்காளிங்கமுங்
கணபதீச்சரத்தார்தங்காப்புக்களே. (௫)

* நல்லவர்கடாமேத்தும் என்றும், நல்லார்கடொழுதேத்தும் என்றும் பாடம்.
† காத்தயங்குசோலை எனப்பாடமோதுவாருமுளர். ‡ கழுக்குன்றந் என்றும் பாடம்.
¶ மாநிதியும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

தெய்வப்புனற்கெடிலவீரட்டமுஞ்
செழுந்தண்பிடவூருஞ்சென்றுநின்று
பவ்வந்திரியும்பருப்பதமும்
பறியலூர்வீரட்டம்பாவநாசம்
மவ்வந்திரையுமணிமுத்தமு
மறைக்காடும்வாய்மூர்வலஞ்சுழியும்
கவ்வைவரிவண்டுபண்ணேபாடுங்
கழிப்பாலைதம்முடையகாப்புக்களே. (௬)

தெண்ணீர்ப்புனற்கெடிலவீரட்டமுஞ்
சீர்காழி* வல்லந்திருவேட்டியும்
உண்ணீராரேடகமு† மூறலம்ப
ருறையூர்நறையூரரணநல்லூர்
விண்ணார்விடையான்விளமர்வெண்ணி
மீபச்சூர்வீழிமிழலைமிக்க
கண்ணார்நுதலார்காபுரமுங்
காபாலியாரவர்தங்காப்புக்களே. (௭)

தெள்ளும்புனற்கெடிலவீரட்டமுந்
திண்டீச்சரமுந்திருப்புகலூர்
எள்ளும்படையானிடைத்தானமு
மேயிச்சர‡ முநல்லேமங்கூடல்
கொள்ளுமிலயத்தார்கோடிகாவுங்
குரக்கணின்முட்டமும்¶ குறும்பலாவும்
கள்ளருந்தத்தெள்ளியாருள்கியேத்துங்
காரோணந்தம்முடையகாப்புக்களே. (௮)

சீரார்புனற்கெடிலவீரட்டமுந்
திருக்காட்டுப்பள்ளிதிருவெண்காடும்
பாரார்பரவுஞ்சீர்ப்பைஞ்ஞீலியும்
பந்தணைநல்லூரும்பாசூர்நல்ல
நீரார்நிறைவயல்சூழ்நின்றியூரு
நெடுங்களமுநெல்வெண்ணெய்நெல்வாயிலும்
காரார்கமழ்கொன்றைத்தாரார்க்கென்றுங்
கடவூரில்வீரட்டங்காப்புக்களே. (௯)

சிந்தும்புனற்கெடிலவீரட்டமுந்
திருவாஞ்சியமுந்திருநள்ளாறும்
அந்தண்பொழில்புடைசூழயோகந்தியு
மாக்கூருமாவூருமான்பட்டியும்
எந்தம்பெருமாற்கிடமாவது
விடைச்சுரமு§ மெந்தைதலைச்சங்காடும்
கந்தங்கமழுங்காவிரமுங்
கடம்பூர்காக்கோயில்o காப்புக்களே. (௧௦)

* சிக்காலி என்றும் பாடம்; சிக்காலி எனப்பாடமோதுவாருமுளர். † உண்ணீரோரேடகமும் என்றும் பாடம். ‡ மேயிச்சரம் என்றும் பாடம். ¶ முட்டங்குறும்பலாவும் என்றும் பாடம். § இடமாவதும்விடைச்சுரமும் என்றும் பாடம். o கடம்பூர்க்கரக்கோயில் என்றும் பாடம்.

Koviloor Digital Library

கோவிலூர் ... A. No........

தேனார்புனற்கெடிலவீரட்டமுந்
திருச்செம்பொன்பள்ளிதிருப்பூவணம்
வானோர்வணங்குமணஞ்சேரியு
மதிலுஞ்சைமாகாளம்வாரணாசி
ஏனோர்களேத்தும்வெகுளீச்சர*
மிலங்கார்பருப்பதத்தோடேனார்சோலைக்
கானார்மயிலார்கருமாரியுங்
கறைமிடற்றார்தம்முடையகாப்புக்களே. (கக)

திருநீர்ப்புனற்கெடிலவீரட்டமுந்
திருவளப்பூர்தெற்கேறுசித்தவடம்†
வருநீர்வளம்பெருகுமாநிருபமு
மயிலாப்பின்மன்னினார்மன்னியேத்தும்
பெருநீர்வளர்சடையான்பேணிநின்ற
பிரமபுரஞ்சுழியல்பெண்ணாகடம்
கருநீலவண்டாற்றுங்காளத்தியுங்
கயிலாயந்தம்முடையகாப்புக்களே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - கொல்லிக்கௌவாணம்.

திருச்சிற்றம்பலம்.

தம்மானையறியாதசாதியாருளரே
சடைமேற்கொள்பிறையானைவிடைமேற்கொள்விகிர்தன்
கைம்மாவினுரியானைக்கரிகாட்டிலாட
லுடையானைவிடையானைக்கறைகொண்டகண்டத்
தெம்மான்றனடிக்கொண்டென்முடிமேல்வைத்திடுமென்னு
மாசையால்வாழ்கின்றவறிவிலாநாயேன்
எம்மானையெறிகெடிலவடவீரட்டானத்
துறைவானையிறைபோதுமிகழ்வன்போலியானே. (க)

முன்னேயெம்பெருமானைமறந்தென்கொன்மறவா
தொழிந்தென்கொன்மறவாதசிந்தையால்வாழ்வேன்
பொன்னேநன்மணியேவெண்முத்தேசெம்பவளக்
குன்றமேயீசனென்றுன்னையேபுகழ்வேன்
அன்னேயென்னத்தாவென்றமராலமரப்
படுவானையதிகைமாநகருள்வாழ்பவனை
என்னேயென்னெறிகெடிலவடவீரட்டானத்
துறைவானையிறைபோதுமிகழ்வன்போலியானே. (உ)

* ஏத்துமெகளீச்சரம் என்றும், ஏத்துமெகுளீச்சரம் என்றும் பாடம். † திருவளப்பூர்தேவதேவசித்தவடம் என்றும் பாடம்.

Koviloor Digital Library

விரும்பினேற்கெனதுள்ளம்விடகிலா*விதியே
விண்ணவர்தம்பெருமானேமண்ணவர்நின்றேத்தும்
கரும்பேயென்கட்டியென்றுள்ளத்தாலுள்கிக்
காதல்சேர்மாதராள்கங்கையாளங்கை
வரும்புனலுஞ்சடைக்கணிந்துவளராதபிறையும்
வரியரவுமுடன்றுயிலவைத்தருளுமெந்தை†
இரும்புனல்வந்தெறிகெடிலவடவீரட்டானத்
துறைவானையிறைபோதுமிகழ்வன்போலியானே. (௩)

நாற்றானத்தொருவனைநானாயபரனை
நள்ளாற்றுநம்பியைவெள்ளாற்றுவிதியைக்
காற்றானைத்தீயானைக்கடலானைமலையின்
றலையானைக்கடுங்கலுழிக்கங்கைநீர்வெள்ள
ஆற்றானைப்பிறையானையம்மானையெம்மான்
றம்மானையாவர்க்குமறிவரியசெங்கண்
ஏற்றானையெறிகெடிலவடவீரட்டானத்
துறைவானையிறைபோதுமிகழ்வன்போலியானே. (௪)

சேந்தர்தாய்மலைமங்கைதிருநிறமும்பரிவு‡
முடையானையதிகைமாநகருள்வாழ்பவனைக்
கூந்தலாழ்புனன்மங்கைகுயிலன்னமொழியாள்
சடையிடையிற்கயலினங்கள்குதிகொள்ளக்குலாவி
வாய்ந்தநீர்வரவுந்திமராமரங்கள்வணக்கி
மறிகடலையிடங்கொள்வான்மலையாரம்வாரி
ஏந்துநீரெறிகெடிலவடவீரட்டானத்
துறைவானையிறைபோதுமிகழ்வன்போலியானே. (௫)

மைம்மானமணிநீலகண்டத்தெம்பெருமான்
வல்லேனக்கொம்பணிந்தமாதவனைவானோர்
தம்மானைத்தலைமகனைத்தண்மதியும்பாம்புந்
தடமாறுஞ்சடையானைத்தாழ்வரைக்கைவென்ற
வெம்மான¶மதகரியினுரியானைவேத
விதியானைவெண்ணீறுசண்ணித்தமேனி
எம்மானையெறிகெடிலவடவீரட்டானத்
துறைவானையிறைபோதுமிகழ்வன்போலியானே. (௬)

வெய்தாயவினைக்கடலிற்றடுமாறுமுயிர்க்கு
மிகவிரங்கியருள்புரிந்துவீடுபேறாக்கம்
பெய்தானைப்பிஞ்ஞகனைமைஞ்ஞவிலுங்கண்டத்
தெண்டோளெம்பெருமானைப்பெண்பாகமொருபால்

* விடகிலா எனப்பாடமோதுவாருமுளர். † வைத்தாளுமெந்தை என்றும் பாடம்.
‡ நிறமும்பரிவு என்றும் பாடம். ¶ வெம்மானை என்றும் பாடம்; ஆனையாகியகரி என்க.

Koviloor Digital Library

செய்தானைச்செக்கர்வானொளியானைத்தீவா
யரவாடுசடையானைத்திரிபுரங்கள்வேவ
எய்தானையெறிகெடிலவடவீரட்டானத்
துறைவானையிறைபோதுமிகழ்வன்போலியானே. (எ)

பொன்னானைமயிலூர்திமுருகவேடாதை
பொடியாடுதிருமேனிநெடுமாறன்முடிமேல்
தென்னானைக்குடபாலின்வடபாலின்குணபாற்
சேராதசிந்தையான்செக்கர்வானந்தி
அன்னானையமரர்கடம்பெருமானைக்கருமானி
னுரியானையதிகைமாநகருள்வாழ்பவனை
என்னானையெறிகெடிலவடவீரட்டானத்
துறைவானையிறைபோதுமிகழ்வன்போலியானே. (அ)

திருந்ாதவாளவுணர்புரமூன்றும்வேவச்
சிலைவளைவித்தொருகணையாற்றொழில்பூண்டசிவனைக்
கருந்தாளமதகளிற்றி * னுரியானைப்பெரிய
கண்மூன்றுமுடையானைக்கருதாதவரக்கன்
பெருந்தோள்களுலைந்துமீரைந்துமுடியு †
முடையானைப்பேயுருவமூன்றுமுற ‡ மலைமேல்
இருந்தானையெறிகெடிலவடவீரட்டானத்
துறைவானையிறைபோதுமிகழ்வன்போலியானே. (கூ)

என்பினையேகலனாகவணிந்தானையெங்க
ளொருதேறும்பெருமானையிசைஞானிசிறுவன்
வன்பனையவளர்பொழில்சூழ்வயனாவலூர்க்கோன்
வன்றொண்டனாரூரன்மதியாதுசொன்ன
அன்பனையாவர்க்குமறிவரியவத்தர்
பெருமானையதிகைமாநகருள்வாழ்பவனை
என்பொன்னையெறிகெடிலவடவீரட்டானத்
துறைவானையிறைபோதுமிகழ்வன்போலியானே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருவதிகைவீரட்டானத்திருப்பதிகம் - கஅ.

ஆ திருப்பதிகம் - உஎ.

சுவாமி தேவி திருநாமங்கள் - அதிகைவீரட்டநாதர், அதிகைநாயகி.

* மதக்களிற்றின் என்றும் பாடம். † தோள்கனுலஞ்சுமீரஞ்சுமுடியும் என்றும் பாடம். ‡ பேயுருமூன்றுமுற என்றும் பாடம்.

Koviloor Digital Library

சுந்தரமூர்த்திநாயனார், சிதம்பரத்திலே திருநடனஞ்செய்கின்ற சபாநாயகரைத் தரிசிக்க விரும்பி, பெண்ணை நதியைக்கடந்து, அஸ்தமயன காலத்திலே திருவதிகையினெல்லையையடைந்து, திருநாவுக்கரசுநாயனார் உழைவாரத்தினாலே நமது சிவபெருமானுக்குக் கைத்தொண்டு செய்த ஸ்தலத்தில் அடியிட அஞ்சி அதற்கு உள்ளே போகாமல் சமீபத்திலிருந்த சித்தவட மடத்திற்குப்போய், திருவதிகை வீரட்டானத்தில் எழுந்தருளியிருக்கின்ற கடவுளுடைய திருவடிகளைத் தியானித்துக்கொண்டு நித்திரை செய்தார். அப்பொழுது, வீரட்டானேசுரர் ஒரு விருத்தப்பிராமணராகி அம்மடத்தினுள்ளே புகுந்து, சுந்தரமூர்த்திநாயனாருடைய சிரசின்மேலே பாதத்தை வைத்து நித்திரைசெய்பவர்போலக் காட்டியருளினார். நாயனார் விழித்து, ஐயரே! என் உம்முடைய பாதத்தை என் சிரசின்மேல் வைத்தீர் என்ன, ஐயர் மூப்பினால் அறியாமற் செய்துபோட்டேன் என்றார். நாயனார் தம்முடைய சிரசை வேறொருதிக்கில் வைத்துக்கொண்டு நித்திரைசெய்தார். எம்பெருமான் அவ்விடத்திலும் சென்று நாயனாருடைய சிரசின்மேலே பின்னும் தம்முடைய பாதத்தை நீட்ட, நாயனார் இங்கே என்னைப் பலமுறை மிதித்த நீர் யாவர் என்று கேட்டார். உடனே சிவபெருமான் "என்னை நீ அறியாயா" என்று சொல்லி மறைந்தருளினார். அதுகண்டு நாயனார் தம்மை மிதித்தவர் கடவுளென்று அறிந்து, "தமியேன் இறுமாப்படைந்து ஆண்டவரை அறியாமல் என்ன செய்தேன்" என்று சொல்லி வீரட்டானேசுரர்மேல் "தம்மானையறியாத சாதியாருளரே" என்று திருப்பதிகம் எடுத்துத் திருப்பாட்டிறுதிதோறும் "எறிகெடிலவீரட்டானத்துறைவானையிறைபோதுமிகழ்வன்போலியானே" என்று பாடியருளினார்.

அ. திருநாவலூர்.*

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

கோவலனான்முகன்வானவர்கோனுங்குற்றேவல்செய்ய
மேவலர்முப்புரந்தீயெழுவித்தவனோரம்பினால்
ஏவலனார்வெண்ணெய்நல்லூரில்வைத்தென்னையாளுங்கொண்ட†
நாவலனார்க்கிடமாவதுநந்திருநாவலூரே. (௧)

தன்மையினாலடியேனைத்தாமாட்கொண்டநாட்சபைமுன்
வன்மைகள்பேசிடவன்றொண்டனென்பதோர்வாழ்வுதந்தார்
புன்மைகள்பேசவும்பொன்னைத்தந்தென்னைப்போகம்புணர்த்த
நன்மையினார்க்கிடமாவதுநந்திருநாவலூரே. (௨)

வேகங்கொண்டோடியவெள்விடையேறியோர்மெல்லியலை
ஆகங்கொண்டார்வெண்ணெய்நல்லூரில்வைத்தென்னையாளுங்கொண்டார்
போகங்கொண்டார்கடற்கோடியின்மோடியைப்பூண்பதாக
நாகங்கொண்டார்க்கிடமாவதுநந்திருநாவலூரே. (௩)

* இது "திருவெண்ணெய்நல்லூரும் திருநாவலூரும்" என்று ஏட்டுப்பிரதிகளிற்காணப்படுகின்றது; 'சபைமுன்...வன்றொண்டனென்பதோர்வாழ்வுதந்தார்' என்பதனால் இரண்டாந்திருப்பாட்டிலும் திருவெண்ணெய்நல்லூர்பெறப்படுதலால் இது பொருத்தமுடைத்துப்போலும். † வைத்தென்னையாளுட்கொண்ட என்றும் பாடம்; இப்பாடத்தை இத்திருப்பதிமுழுதுங் கொள்க.

Koviloor Digital Library

அஞ்சுங்கொண்டாடவராவினிற்சேவினை * யாட்சிகொண்டார்
தஞ்சங்கொண்டாரடிச்சண்டியைத்தாமெனவைத்துகந்தார்
நெஞ்சங்கொண்டார்வெண்ணெய்நல்லூரில்வைத்தெனையாளுங்கொண்டு
நஞ்சங்கொண்டார்க்கிடமாவதுநந்திருநாவலூரே. (௪)

உம்பரார்கோனைத்திண்டோண்முரித்தாருரித்தார்களிற்றைச்
செம்பொனார்தீவண்ணர்தூவண்ணநீற்றரோராவணத்தால்
எம்பிரானார்வெண்ணெய்நல்லூரில்வைத்தெனையாளுங்கொண்ட
நம்பிரானார்க்கிடமாவதுநந்திருநாவலூரே. (௫)

கோட்டங்கொண்டார்குடமூக்கிலுங்கோவலுங்கோத்திட்டையும்
வேட்டங்கொண்டார்வெண்ணெய்நல்லூரில்வைத்தெனையாளுங்கொண்டார்
ஆட்டங்கொண்டார்தில்லைச்சிற்றம்பலத்தேபருக்கனைமுன்
நாட்டங்கொண்டார்க்கிடமாவதுநந்திருநாவலூரே. (௬)

தாயவளாய்த்தந்தையாகிச்சாதல்பிறத்தலின்றிப்
போயகலாமைத்தன்பொன்னடிக்கென்னைப்பொருந்தவைத்த †
வேயவனார்வெண்ணெய்நல்லூரில்வைத்தெனையாளுங்கொண்ட
நாயகனார்க்கிடமாவதுநந்திருநாவலூரே. (௭)

வாயாடிமாமறையோதியோர்வேதியனாகிவந்து
தீயாடியார்சினக்கேழலின்பின்சென்றோர்வேடுவனாய்
வேயாடியார்வெண்ணெய்நல்லூரில்வைத்தெனையாளுங்கொண்ட
நாயாடியார்க்கிடமாவதுநந்திருநாவலூரே. (௮)

படமாடுபாம்பணையானுக்கும்பாவைநல்லாடனக்கும்
வடமாடுமால்விடையேற்றுக்கும்பாகனாய்வந்தொருநாள்
இடமாடியார்வெண்ணெய்நல்லூரில்வைத்தெனையாளுங்கொண்ட
நடமாடியார்க்கிடமாவதுநந்திருநாவலூரே. (௯)

மிடுக்குண்டென்றோடியோர்வெற்பெடுத்தான்வலியைநெரித்தார்
அடக்கங்கொண்டாவணங்காட்டிநல்வெண்ணெயூராளுங்கொண்டார்
தடுக்கவொண்ணாததோர்வேழத்தினையுரித்திட்டுமையை
நடுக்கங்கண்டார்க்கிடமாவதுநந்திருநாவலூரே. (௧௦)

நாதனுக்கூர்நமக்கூர்நரசிங்கமுனையரையன்
ஆதரித்தீசனுக்காட்செயுமூரணிநாவலூரென்
றோதநற்றக்கவன்றொண்டனாரூரனுரைத்ததமிழ்
காதலித்துங்கற்றுங்கேட்பவர்தம்வினைக்கட்டறுமே. ‡ (௧௧)

திருச்சிற்றம்பலம்.

¶ திருநாவலூர்த்திருப்பதிகம் - ௧.

ஆ திருப்பதிகம் - ௨௮.

சுவாமி தேவி திருநாமங்கள் - நாவலேசுவரர், சுந்தராம்பிகை.

* ராவினிற்சேவினை என்றும் பாடம். † வைத்தே என்றும் பாடம். ‡ வினைகட்டறுமே என்றும் பாடம். ¶ திருநாவலூர் இக்காலத்துத் திருநாமநல்லூர் என்று வழங்குகின்றது.

Koviloor Digital Library

கூ. திருமுதுகுன்றம்.*

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

மத்தாவரைநிறுவிக்கடல்கடைந்தவ்விடமுண்ட
தொத்தார்தருமணிநீண்முடிச்சுடர்வண்ணனதிடமாம்
கொத்தார்மலர்குளிர்சந்தகிலொளிர்குங்குமங்கொண்டு
முத்தாறுவந்தடிவீழ்தருமுதுகுன்றடைவோமே. (க)

தழையார்வடவியவீதனிற்றவமேபுரிசைவன்
இழையாரிடைமடவாளொடுமினிதாவுறைவிடமாம்
மழைவானிடைமுழவவ்வெழில்வளைவாளுகிரெரிகண்
முழைவாளரிகுமிறும்முயர்முதுகுன்றடைவோமே. (உ)

விளையாதவொர்பரிசில்வருபசுபாசவேதனையொண்
டளையாயினதவிரவ்வருடலைவன்னதுசார்பாம்
களையார்தருகதிராயிரமுடையவ்வவனோடு
முளைமாமதிதவழும்முயர்முதுகுன்றடைவோமே. (ங)

சுரர்மாதவர்தொகுகின்னரரவரோதொலைவில்லா
நரரானபன்முனிவர்தொழவிருந்தானிடநலமார்
அரசார்வரவணி† பொற்கலன்வைகொண்டுபன்னாளும்
முரசார்வருமணமொய்ம்புடைமுதுகுன்றடைவோமே. (ச)

அறையார்கழலந்தன்றனையயின்மூவிலையழகார்
கறையார்நெடுவேலின்மிசையேற்றானிடங்கருதில்
மறையாயினபலசொல்லியொண்மலர்சாந்தவைகொண்டு
முறையான்மிகுமுனிவர்தொழுமுதுகுன்றடைவோமே. (ரு)

ஏவார்சிலையெயினன்னுருவாகியெழில்விசயற்
கோவாதவின்னருள்செய்தவெம்மொருவற்கிடமுலகில்
சாவாதவர்பிறவாதவர்தவமேமிகவுடையார்
மூவாதபன்முனிவர்தொழுமுதுகுன்றடைவோமே. (சா)

தழல்சேர்தருதிருமேனியர்சசிசேர்சடைமுடியர்
மழமால்விடைமிகவேறியமறையோனுறைகோயில்
விழவோடொலிமிகுமங்கையர்தருமாடகசாலை
முழவோடிசைநடமுன்செயுமுதுகுன்றடைவோமே. (எ)

* திருமுதுகுன்றம்—விருத்தாசலம். † அரசாரரவணி என்றும் பாடம்.

Koviloor Digital Library

செதுவாய்மைகள்கருதிவ்வரையெடுத்ததிறலரக்கன்
கதுவாய்கள்பத்தலறியிடக்கண்டானுறைகோயில்
மதுவாயசெங்காந்தண்மலர்நிறையக்குறைவில்லா*
முதுவேய்கண்முத்துதிரும்பொழின்முதுகுன்றடைவோமே. (அ)

இயலாடியபிரமன்னரியிருவர்க்கறிவரிய
செயலாடியதீயாருருவாகியெழுசெல்வன்
புயலாடுவண்பொழில்சூழ்புனற்படப்பைத்தடத்தருகே
முயலோடவெண்கயல்பாய்தருமுதுகுன்றடைவோமே. (கூ)

அருகரொடுபுத்தரவரறியாவரன்மலையான்
மருகன்வருமிடபக்கொடியுடையானிடமலரார்
கருகுகுழன்மடவார்கடிகுறிஞ்சியதுபாடி
முருகன்னதுபெருமைபகர்முதுகுன்றடைவோமே. (கம)

முகில்சேர்தருமுதுகுன்றுடையானைமிகுதொல்சீர்ப்
புகலிந்நகர்மறைஞானசம்பந்தனுரைசெய்த
நிகரில்லனதமிழ்மாலைகளிசையோடிவைபத்தும்
பகரும்மடியவர்கட்கிடர்பாவம்மடையாவே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

தேவராயுமசுரராயுஞ்சித்தர்செழுமறைசேர்
நாவராயுநண்ணுபாரும்விண்ணெரிகாணீரும்
மேவராயவிரைமலரோன்செங்கண்மாலீசனென்னும்
மூவராயமுதலொருவன்மேயதுமுதுகுன்றே. (க)

பற்றுமாகிவானுளோர்க்குப்பல்கதிரோன்மதிபார்
எற்றுநீர்தீக்காலு † மேலைவிண்ணியமானனோடு
மற்றுமாதோர்பல்லுயிராய்மாலயனும்மறைகள்
முற்றுமாகிவேறுமானன்மேயதுமுதுகுன்றே. (உ)

வாரிமாகம்வைகுதிங்கள்வாளரவஞ்சூடி
நாரிபாக ‡ நயந்துபூமேலன்முகன்றன்றலையில்
சீரிதாகப்பலிகொள்செல்வன்செற்றலுந்தோன்றியதோர்
மூரிநாகத்துரிவைபோர்த்தான்மேயதுமுதுகுன்றே. (ங)

பாடுவாருக்கருளுமெந்தைபனிமுதுபௌவமுந்நீர்
நீடுபாருமுழுதுமோடியண்டர்நிலைகெடலும்
நாடுதானுமூடுமோடிஞாலமுநான்முகனும்
ஊடுகாணமூடும்வெள்ளத்துயர்ந்ததுமுதுகுன்றே. (ச)

* குறையில்லா என்றும் பாடம். † தீகாலும் என்றும் பாடம். ‡ நாரிபாகர் என்றும் பாடம்.

Koviloor Digital Library

வழங்குதிங்கள்வன்னிமத்தமாசுணமீசணவிச்
செழுங்கல்வேந்தன்செல்விகாணத்தேவர்திசைவணங்கத்
தழங்குமொந்தைதக்கைமிக்கபேய்க்கணம்பூதஞ்சூழ
முழங்குசெந்தீயேந்தியாடிமேயதுமுதுகுன்றே. (சு)

சுழிந்தகங்கைதோய்ந்ததிங்கட்டொல்லராநல்லிதழி
சழிந்தசென்னிச்சைவவேடந்தாளிணைத்* தைம்புலனும்
அழிந்தசிந்தையந்தணாளர்க்கறம்பொருளின்பம்வீடு
மொழிந்தவாயான்முக்கணாதிமேயதுமுதுகுன்றே.† (எ)

மயங்குமாயம்வல்லராகிவானிநெருடுநீரும்
இயங்குவோருக்கிறைவனுபவிராவணன்றோளிறுக்க
புயங்கராகமாநடத்தன்புணர்முலைமாதுமையாள்
முயங்குமார்பன்முனிவரேத்தமேயதுமுதுகுன்றே. (அ)

ஞாலமுண்டமாலுமற்றைநான்முகனும்மறியாக்
கோலமண்டர்சிந்தைகொள்ளாராயினுங்கொய்மலரால்
ஏலவிண்டைகட்டிநாமமிசையவெப்போதுமேத்தும்
மூலமுண்டநீற்றர்வாயான்மேயதுமுதுகுன்றே. (கூ)

உறிகொள்கையர்சீவரத்தருண்டுழன்மிண்டர்சொல்லை
நெறிகளென்னநினைவுறாதேநித்தலுங்கைதொழுமின்
மறிகொள்கையன்வங்கமுந்நீர்ப்பொங்குவிடத்தையுண்ட
முறிகொண்மேனிமங்கைபங்கன்மேயதுமுதுகுன்றே. (க0)

மொய்த்தவானோர்பல்கணங்கள்வணங்குமுதுகுன்றைப்
பித்தர்வேடம்பெருமையென்னும்பிரமபுரத்தலைவன்.‡ (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவிருக்குக்குறள். பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

நின்றுமலர்தூவி
இன்றுமுதுகுன்றை
நன்றுமேத்துவீர்க்
கென்றுமின்பமே. (க)

அத்தன்முதுகுன்றைப்
பத்தியாகிநீர்
நித்தமேத்துவீர்க்
குத்தமசெல்வமே. (உ)

ஐயன்முதுகுன்றைப்
பொய்கள்கெடநின்று
கைகள்கூப்புவீர்
வையமுமதாமே. (ங)

* வேடந்தானினைந்து எனப்பாடமோதுவாருமுளர். † ஒருபிரதியில் இச்செய்யுள் எ-வதாகவும் சு-வது மறைந்ததாகவும், மற்றப்பிரதிகளில் எ-வது மறைந்ததாகவும் இச்செய்யுள் சு வதாகவும் காணப்படுகின்றன. ‡ இத்திருப்பாட்டில் பின்னிரண்டடிகளும் மறைந்துபோயின.

Koviloor Digital Library

ஈசன்முதுகுன்றை
நேசமாகிநீர்
வாசமலர்தூவப்
பாசவினைபோமே. (௪)

மணியார்முதுகுன்றைப்
பணிவாரவர்கண்டீர்
பிணியாயினகெட்டுத்
தணிவாருலகிலே. (௫)

மொய்யார்முதுகுன்றில்
ஐயாவெனவல்லார்
பொய்யாரிரவோர்க்குச்
செய்யாளணியாளே. (௬)

விடையான்முதுகுன்றை
இடையாதேத்துவார்
படையாயினசூழ
உடையாருலகமே. (௭)

பத்துத்தலையோனைக்
கத்தவிரலூன்றும்
அத்தன்முதுகுன்றை
மொய்த்துப்பணிமினே. (௮)

இருவரறியாத
ஒருவன்முதுகுன்றை
உருகிநினைவார்கள்
பெருகிநிகழ்வோரே. (௯)

தேரமணரும்
சேரும்வகையில்லான்
நேரின்முதுகுன்றை*
நீர்நின்றுள்குமே. (௧0)

நின்றுமுதுகுன்றை
நன்றுசம்பந்தன்
ஒன்றுமுரைவல்லார்
என்றுமுயர்வாரே. † (௧௧)

திருச்சிற்றம்பலம்.

பண் - மேகராகக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

மெய்த்தாறுசுவையுமேழிசையுமெண்குணங்களும்விரும்புநால்வே
தத்தாலுமறிவொண்ணாநடைதெளியபளிங்கேபோ ‡ லரிவைபாகம்
ஒத்தாறுசமயங்கட்கொருதலைவன்கருதுமூருலவுதெண்ணீர்
முத்தாறுவெதிருதிரநித்திலம்வாரிக்கொழிக்குமுதுகுன்றமே. (௧)

வேரிமிகுகுழலியொடுவேடுவனாய்வெங்கானில்விசயன்மேவு
போரின்மிகுபொறையளந்துபாசுபதம்புரிந்தளித்தபுராணர்கோயில்
காரின்மலிகடிபொழில்கள்கனிகள்பலமலருதிர்த்துக்கயமுயங்கி
மூரிவளங்கிளர்தென்றறிருமுன்றிற்புகுந்துலவுமுதுகுன்றமே. (௨)

தக்கனதுபெருவேள்விச்சந்திரனிந்திரனெச்சனருக்கனங்கி
மிக்கவிதாதாவினொடும்விதிவழியேதண்டித்தவிமலர்கோயில்
கொக் ¶ கினியகொழும்வருக்கைகதலிகமுகுயர்தெங்கின்குவைகொள்சோலை
முக்கனியின்சாறொழுகிச்சேறுலராநீள்வயல்சூழ்முதுகுன்றமே. (௩)

வெம்மைமிகுபுரவாணர்மிகைசெய்யவிறலழிந்துவிண்ணுளோர்கள்
செம்மலரோனிந்திரன்மால்சென்றிரப்பத்தேவர்களேதேரதாக
மைம்மருவுமேருவிலுமாசுணநாணரியெரிகால்வாளியாக
மும்மதிலுநொடியளவிற்பொடிசெய்தமுதல்வனிடமுதுகுன்றமே. (௪)

* சேரும்வகையில்லா—நேரின்முதுகுன்றை என்றும் பாடம். † முயர்வோரே என்றும் பாடம். ‡ தெளியப்பளிங்கேபோல் என்றும் பாடம். ¶ கொக்கு - மாமரம்.

Kovilooor Digital Library

இழைமேவுகலையல்குலேந்திழையாளொருபாலாயொருபாலெள்கா *
துழைமேவுமுரியுடுத்தவொருவனிருப்பிடமென்ப † ரும்பரோங்கு
கழைமேவுமடமந்திமழைகண்டுமகவினொடும்புகவொண்கல்லின்
முழைமேவுமால்யானை ‡ யிரைதேரும்வளர்சாரன்முதுகுன்றமே. (ரு)

நகையார்வெண்டலைமாலைமுடிக்கணிந்தநாதனிடநன்முத்தாறு
வகையாரும்வரைப்பண்டங்கொண்டிரண்டுகரையருகுமறியமோதித்
தகையாரும்வரம்பிடறிச்சாலிகழுநீர்குவளைசாயப்பாய்ந்து
முகையார்செந்தாமரைகண்முகமலரவயறழுவுமுதுகுன்றமே. (சு)

அறங்கிளருநால்வேதமாலின்கீழிருந்தருளியமரர்வேண்ட
நிறங்கிளர்செந்தாமரையோன்சிரமைந்தினொன்றறுத்தநிமலர்கோயில்
திறங்கொண்மணித்தரளங்கள்வரத்திரண்டங்கெழிற்குறவர்சிறுமிமார்கள்
முறங்களினாற்கொழித்துமணிசெலவிலக்கிமுத்துலைப்பெய்முதுகுன்றமே. ()

கதிரொளியநெடுமுடிபத்துடையகடலிலங்கையர்கோன்கண்ணும்வாயும்
பிதிரொளியகனல்பிறங்கப்பெருங்கயிலைமலையைநிலைபெயர்த்தஞான்று
மதிலளைக்கிறைமுரலமலரடிபோன்றூன்றிமறைபாடவாங்கே
முதிரொளியசுடர்நெடுவாண்முன்னீந்தான்வாய்ந்தபதிமுதுகுன்றமே. (அ)

பூவார்பொற்றவிசின்மிசையிருந்தவனும்பூந்துழாய்புனைந்தமாலும்
ஓவாதுகழுகேனமாயுயர்ந்தாழ்ந்துறநாடியுண்மைகாணாத்
தேவாருந்திருவுருவன்சேருமலைசெழுநிலத்தைமுடவந்த
மூவாதமுழங்கொலிநீர்கிழ்தாழமேலுயர்ந்தமுதுகுன்றமே. (கூ)

மேனியிற்சீவரத்தாரும்விரிதருதட்டுடையாரும்விரவலாகா
ஊனிகளாயுள்ளார்சொற்கொள்ளாதுமுள்ளுணர்ந்தங்குய்மின்றொண்டீர்
ஞானிகளாயுள்ளார்களுன்மறையைமுழுதுணர்ந்தைம்புலன்கள்செற்று
மோனிகளாய்முனிச்செல்வர்தனித்திருந்துதவம்புரியுமுதுகுன்றமே. (கய)

முழங்கொலிநீர்முத்தாறுவலஞ்செய்யுமுதுகுன்றத்திறையைமூவாப்
பழங்கிழமைப்பன்னிருபேர்படைத்துடையகழுமலமேபதியாக்கொண்டு
தழங்கெரிமூன்றோம்புதொழிற்றமிழ்ஞானசம்பந்தன்சமைத்தபாடல்
வழங்குமிசைகூடும்வகைபாடுமவர்நீடுலகமாள்வர்தாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

தேவாசிறியோம்பிழையைப்பொறுப்பாய்பெரியோனே
ஆவாவென்றங்கடியார்தங்கட்கருள்செய்வாய்
ஓவாவுவரிகொள்ளவுயர்ந்தாயென்றேத்தி
மூவாமுனிவர்வணங்குங்கோயின்முதுகுன்றே. (க)

* யொருபால்வெள்காத எனப்பாடமோதுவாருமுளர். † வொருவன்விருப்பிடமென்பர் என்றும் பாடம். ‡ மாவானை என்றும் பாடம்.

Koviloor Digital Library

எந்தையிவனென்றிரவிமுதலாவிறைஞ்சுவார்
சிந்தையுள்ளேகோயிலாகத்திகழ்வானை
மந்தியேறியினமாமலர்கள்பலகொண்டு
முந்தித்தொழுதுவணங்குங்கோயின்முதுகுன்றே. (உ)

நீடுமலரும்புனலுங்கொண்டுநிரந்தரம்
தேடுமடியார்சிந்தையுள்ளேதிகழ்வானைப்
பாடுங்குயிலினயலேகிள்ளைபயின்றேத்த
மூடுஞ்சோலைமுகிறோய்கோயின்முதுகுன்றே. (ங)

தெரிந்தவடியார்சிவனேயென்றுதிசைதோறும்
குருந்தமலருங்குரவினலருங்கொண்டேந்தி
இருந்துநின்றுமிரவும்பகலுமேத்துஞ்சீர்
முரிந்துமேகந்தவழுஞ்சோலைமுதுகுன்றே. (ச)

வைத்தநிதியேமணியேயென்றுவருந்தித்தம்
சித்தைநைந்துசிவனேயென்பார்சிந்தையார்
கொத்தார்சந்துங்குரவும்வாரிக்கொணர்ந்துந்தும்
முத்தாறுடையமுதல்வர்கோயின்முதுகுன்றே. (ரு)

வம்பார்கொன்றைவன்னிமத்தமலர்தூவி
நம்பாவென்னநல்கும்பெருமானுறைகோயில்
கொம்பார்குரவுகொகுடிமுல்லைகுவிந்தெங்கும்
மொய்ம்பார்சோலைவண்டுபாடுமுதுகுன்றே. (சு)

வாசங்கமழும்பொழில்சூழிலங்கைவாழ்வேந்தை
நாசஞ்செய்தநங்கள்பெருமானமர்கோயில்
பூசைசெய்தவடியார்நின்றுபுகழ்ந்தேத்த
மூசிவண்டு* பாடுஞ்சோலைமுதுகுன்றே. (அ)

அல்லிமலர்மேலயனுமரவினணையானும்
சொல்லிப்பரவித்தொடரவொண்ணாச்சோதியூர்
கொல்லைவேடர்கூடிநின்றுகும்பிட
முல்லையயலேமுறுவல்செய்புமுதுகுன்றே. (கூ)

கருகுமுடலார்கஞ்சியுண்டுகடுவேதின்
றுருகுசிந்தையில்லார்க்கயலானுறைகோயில்
திருகல்வேய்கள்சிறிதேவளையச்சிறுமந்தி
முருகின்பணைமேலிருந்துநடஞ்செய்முதுகுன்றே. (க0)

அறையார்கடல்சூழ்ந்தண்காழிச்சம்பந்தன்
முறையான்முனிவர்வணங்குங்கோயின்முதுகுன்றைக்
குறையாப்பனுவல்கூடிப்பாடவல்லார்கள்
பிறையார்சடையெம்பெருமான்கழல்கள்பிரியாரே. † (கக,

திருச்சிற்றம்பலம்.

* மூசுவண்டு என்றும் பாடம். இத்திருப்பதிகத்தில் எ—வது செய்யுள் மறைந்து போயிற்று.

Koviloor Digital Library

பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

வண்ணமாமலர்கொடுவானவர்வழிபட
அண்ணலாராயிழையாளொடுமமர்விடம்
விண்ணின்மாமழைபொழிந்திழியவெள்ளருவிசேர்
திண்ணிலார்புறவணிதிருமுதுகுன்றமே. (௧)

வெறியுலாங்கொன்றையந்தாரினன்மேதகு
பொறியுலாமா* வசைத்தாடியோர்புண்ணியன்
மறியுலாங்கையினன்மங்கையோடமர்விடம்
செறியுளார்புறவணிதிருமுதுகுன்றமே. (௨)

ஏறினார் † விடைமிசையிமையவர்தொழவுமை
கூறனார்கொல்புலித்தோலினார்மேனிமேல்
நீறனார்நிறைபுனற்சடையனார்நிகழ்விடம்
தேறலார்பொழிலணிதிருமுதுகுன்றமே. (௩)

உரையினாருறுபொருளாயினானுமையொடும் ‡
விரையினார்கொன்றைசேர்சடையினார்மேவிடம்
உரையினாரொலியெனவோங்குமுத்தாறுமெய்த்
திரையினாரெறிபுனற்றிருமுதுகுன்றமே. (௪)

கடியவாயினகுரற்களிற்றினைப்பிளிறவோர்
இடியவெங்குரலினோடாளிசென்றிடுநெறி¶
வடியவாய்மழுவினன்மங்கையோடமர்விடம்
செடியதார்புறவணிதிருமுதுகுன்றமே. (௫)

கானமார்கரியினீருரிவைபார்பெரியதோர்
வானமார்மதியினோடரவர்தாமருவிடம்
ஊனமாயினபிணியவைகெடுத்துமையொடும்
தேனமார்பொழிலணிதிருமுதுகுன்றமே. (௬)

மஞ்சர்தாமலர்கொடுயானவர்வணங்கிட
வெஞ்சொலார்வேடரோடாடவர்விரும்பமேவ
அஞ்சொலாளுமையொடும்மமர்விடமணிகலைச்
செஞ்சொலார்பயிறருந்திருமுதுகுன்றமே. (௭)

காரினாமர்தருங்கயிலைநன்மலையினை
ஏரினார்முடியிராவணனெடுத்தானிற
வாரினார்முலையொடும்மன்னினார்மருவிடம்
சீரினார்திகழ்தரும்§திருமுதுகுன்றமே. (௮)

* பொறியுலாவரவு என்றும் பாடம். † ஏறனார் என்றும் பாடம். ‡ ளாயவன்றனுமை யொடும் என்றும் பாடம். ¶ யாளிசென்றடுநெறி எனப்பாடமோதுவாருமுளர். § திகடரும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

ஆடினார்கானகத்தருமறையின்பொருள்
பாடினார்பல* புகழ்ப்பரமனாரிணையடி
ஏடினார்மலர்மிசை † யயனுமாலிருவரும்
தேடினாரறிவொணார் திருமுதுகுன்றமே. (௯)

மாசுமெய்தூசுகொண்டுழல்சமண்சாக்கியர்
பேசுமெய்புளவல்லபேணுவீர்காணுமின்
வாசமார்தருபொழில்வண்டினம்மிசைசெயத்
தேசமார்புகழ்மிகுந் திருமுதுகுன்றமே. (௧௦)

திண்ணினார்புறவணி திருமுதுகுன்றரை
நண்ணினான்காழியுண்ஞானசம்பந்தன்சொல்
எண்ணினானீரைந்துமாலைபுமியனுமாப்
பண்ணினாற் ‡ பாடுவார்க்கில்லையாம்பாவமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருமுக்கால். பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

முரசதிர்ந்தெழுதருமுதுகுன்றமேவிய
பரசமர்படையுடையீரே
பரசமர்படையுடையீருமைப்பரவுவார்
அரசர்களுலகிலாவாரே. (௧)

மொய்குழலாளொடுமுதுகுன்றமேவிய
பையரவம்மசைத்தீரே
பையரவம்மசைத்தீருமைப்பாடுவார் ¶
நைவிலர்நாடொறுநலமே. (௨)

முழவமர்பொழிலணிமுதுகுன்றமேவிய
மழவிடையதுவுடையீரே
மழவிடையதுவுடையீருமைவாழ்த்துவார்
பழியொடுபகையிலர்தாமே. (௩)

முருகமர்பொழிலணிமுதுகுன்றமேவிய
உருவமர்சடைமுடியீரே §
உருவமர்சடைமுடியீருமை ೦ யோதுவார்
திருவொடுதேசினர்தாமே. (௪)

முத்திதருமுயர்முதுகுன்றமேவிய
பத்துமுடியடர்த்தீரே
பத்துமுடியடர்த்தீருமைப்பாடுவார்
சித்தநல்லவ்வடியாரே. (௫)

* பாடினார்பலர் என்றும் பாடம். † ஏடினாரலர்மிசை என்றும் பாடம். ‡ எண்ணினானீரைந்துமாலையும்மியனுமா—பண்ணினாற் என்றும் பாடம். ¶ ருமைப்பரவுவார் என்றும் பாடம். § சடையுடையீரே என்றும் பாடம். ೦ சடையுடையீருமை என்றும் பாடம்.

Koviloor Digital Library

முயன்றவரருள்பெறுமுதுகுன்றமேவியன்
றியன்றவர்றிவரியீரே
இயன்றவர்றிவரியிருமையேத்துவார்
பயன்றலைநிற்பவர்தாமே. (௯)

மொட்டலர்பொழிலணிமுதுகுன்றமேவிய
கட்டமண்டேரைக்*காய்ந்தீரே
கட்டமண்டேரைக்*காய்ந்திருமைக்கருதுவார்
சிட்டர்கள்சீர்பெறுவாரே. (க0)

முடியசோலைசூழ்முதுகுன்றத்தீசனை
நாடியஞானசம்பந்தன்
நாடியஞானசம்பந்தனசெந்தமிழ்
பாடியவவர்பழியிலரே.† (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

கருமணியைக்கனகத்தின்குன்றொப்பானைக்
கருதுவார்க்காற்றவெளியான்றன்னைக்
குருமணியைக்கோளரவமாட்டுவானைக்‡
கொல்வேங்கை¶யதளானைக்கோவணவன்றன்னை
அருமணியையடைந்தவர்கட்கமுதொப்பானை
யானைந்து§மாடியைநானபயம்புக்க
திருமணியைத்திருமுதுகுன்றுடையான்றன்னைத்
தீவினையேனறியாதேதிகைத்தவாறே. (க)

காரொளியகண்டத்தெங்கடவுடன்னைக்
காபாலிகட்டங்கமேந்தினானைப்
பாரொளியைவிண்ணொளியைப்பாதாளத்தானைப்
பான்மதியஞ்சூடியோர்பண்பன்றன்னைப்
பேரொளியைப்பெண்பாகம்வைத்தான்றன்னைப்
பேணுவார்தம்வினையைப்பேணிவாங்கும்
சீரொளியைத்திருமுதுகுன்றுடையான்றன்னைத்
தீவினையேனறியாதேதிகைத்தவாறே. (உ)

* தேரரை எனப்பாடமோதவாருமுளர். † இத்திருப்பதிகத்தில் ௫, ௬, எ இச்செய்யுட்கள் மறைந்துபோயின. ‡ கோளரவொன்றாட்டுவானைக் என்றும் பாடம். ¶ கோள்வேங்கை என்றும் பாடம். § மானைந்து என்றும் பாடம்.

Koviloor Digital Library

எத்திசையும்வானவர்கடொழநின்றானை
யேறார்ந்தபெம்மானை * யெம்மானென்று
பத்தனுப்பணிந்தடியேன்றன்னைப்பன்னாட்
பாமாலைபாடப்பயில்வித்தானை
முத்தினையென்மணியைமாணிக்கத்தை
முளைத்தெழுந்தசெழும்பவளக் † கொழுந்தொப்பானைச்
சித்தனையென்றிருமுதுகுன்றுடையான்றன்னைத்
தீவினையேனறியாதே திகைத்தவாறே. (௩)

ஊன்கருவினுண்ணின்றசோதியானை
யுத்தமனைப்பத்தர்மனங்குடிகொண்டானைக்
கான்றிரிந்துகாண்டீபமேந்தினானைக்
கார்மேகமிடற்றானைக்கனலைக்காற்றைத்
தான்றெரிந்தங்கடியேனையாளாக்கொண்டு
தன்னுடைய திருவடியென்றலைமேல்வைத்த
தின்கரும்பைத்திருமுதுகுன்றுடையான்றன்னைத்
தீவினையேனறியாதே திகைத்தவாறே. (௪)

தக்கனதுபெருவேள்விதகர்த்தானாகித்
தாமரையானான்முகனுந் ‡ தானேயாகி
மிக்கதொருதீவளிநீராகாசமாய்
மேலுலகுக்கப்பாலாயிப்பாலானை
அக்கினொடுமுத்தினையுமணிந்துதொண்டர்க்
கங்கங்கேயறுசமயமாகிநின்ற
திக்கினையென்றிருமுதுகுன்றுடையான்றன்னைத் ¶
தீவினையேனறியாதே திகைத்தவாறே. (௫)

புகழொளியைப்புரமெரித்தபுனிதன்றன்னைப்
பொன்பொதிந்தமேனியனைப்புராணன்றன்னை
விழவொலியும்விண்ணொலியுமானான்றன்னை
வெண்காடுமேவியவிகிர்தன்றன்னைக்
கழலொலியுங்கைவளையுமார்ப்பவார்ப்பக்
கடைதோறுமிடுபிச்சைக்கென்றுசெல்லும்
திகழொளியைத்திருமுதுகுன்றுடையான்றன்னைத்
தீவினையேனறியாதே திகைத்தவாறே. (௬)

போர்த்தானையின்னுரிதோல்பொங்கப்பொங்கப்
புலியதளேயுடையாகத்திரிவான்றன்னைக்
காத்தானையைம்புலனும்புரங்கண்மூன்றுங்
காலனையுங்குரைகழலாற்காய்ந்தான்றன்னை

* பெருமானை என்றும் பாடம். † செம்பவளக் என்றும் பாடம். ‡ தாமரையார்நான் முகனும் என்றும் பாடம். ¶ திக்கனையெந்திருமுதுகுன்றுடையன்றன்னை என்றும்பாடம்.

Koviloor Digital Library

பாத்தாடிப்பத்தராய்வணங்குந்தொண்டர்
வல்வினைவேரறும்வண்ணமருந்துமாகித்
தீர்த்தானைத்திருமுதுகுன்றுடையான்றன்னைத்
தீவினையேனறியாதேதிகைத்தவாறே. (எ)

துறவாதேயாக்கைதுறந்தான்றன்னைச் *
சோதிமுழுமுதலாய்நின்றான்றன்னைப்
பிறவாதேயெவ்வுயிர்க்குந்தானேயாகிப்
பெண்ணினோடாணுருவாய்நின்றான்றன்னை
மறவாதேதன்றிறமேவாழ்த்துந்தொண்டர்
மனத்தகத்தேயனவரதமன்னிநின்ற
திறலானைத்திருமுதுகுன்றுடையான்றன்னைத்
தீவினையேனறியாதேதிகைத்தவாறே. (அ)

பொற்றானைப்புலானாறுகபாலமேந்திப்
புவலோகமெல்லாமுழிதந்தானை
முற்றாதவெண்டிங்கட்கண்ணியானை
முழுமுதலாய்மூவுலகுமுடிவொன்றில்லாக்
கற்றானைக்காளத்திமலையான்றன்னைக்
கருதாதார்புரமூன்றுமெரியவம்பால்
செற்றானைத்திருமுதுகுன்றுடையான்றன்னைத்
தீவினையேனறியாதேதிகைத்தவாறே. (கூ)

இகழ்ந்தானையிருபதுதோணெரியவூன்றி
யெழுநரம்பினிசைபாடலினிதுகேட்டுப் †
புகழ்ந்தானைப்பூந்துருத்திமேயான்றன்னைப்
புண்ணியனைவிண்ணவர்கணிதியந்தன்னை ‡
மகிழ்ந்தானைமலைமகளோர்பாகம்வைத்து
வளர்மதியஞ்சடைவைத்துமாலோர்பாகம்
நிகழ்ந்தானைத்திருமுதுகுன்றுடையான்றன்னைத்
தீவினையேனறியாதேதிகைத்தவாறே. (க௦)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண்-நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

பொன்செய்தமேனியினீர்புலித்தோலையரைக்கசைத்தீர்
முன்செய்தமூவெயிலுமெரித்தீர்முதுகுன்றமர்ந்தீர்
மின்செய்தநுண்ணிடையாள்பரவையிவடன்முகப்பே
என்செய்தவாறடிகேளடியேனிட்டளங்கெடவே. (க)

* யாகத்தைத்துறந்தான்றன்னைச் என்றும் பாடம். † பாடவினிதுகேட்டுப் என்றும் பாடம். ‡ விண்ணவர்கணைதியந்தன்னை என்றும் பாடம்.

Koviloor Digital Library

உம்பரும்வானவரும்முடனேநிற்கவேயெனக்குச்
செம்பொனைத்தந்தருளித்திகழும்முதுகுன்றமர்ந்தீர்
வம்பமருங்குழலாள்பரவையிவள்வாடுகின்றாள்
எம்பெருமானருளீரடியேனிட்டளங்கெடவே. (உ)

பத்தாபத்தர்களுக்கருள்செய்யும்பரம்பரனே
முத்தாமுக்கணனேமுதுகுன்றமமர்ந்தவனே
மைத்தாருந்தடங்கண்பரவையிவள்வாடாமே
அத்தாதந்தருளாயடியேனிட்டளங்கெடவே. (௩)

மங்கையொர்கூறமர்ந்தீர்மறைநான்கும்விரித்துரைத்தீர் *
திங்கள்சடைக்கணிந்தீர்திகழும்முதுகுன்றமர்ந்தீர்
கொங்கைநல்லாள்பரவைகுணங்கொண்டிருந்தாண்முகப்பே
அங்கணனேயருளாயடியேனிட்டளங்கெடவே. (௪)

மையாரும்மிடற்றாய்மருவார்புரமூன்றெரித்த
செய்யார்மேனியனேதிகழும்முதுகுன்றமர்ந்தாய்
பையாரும்மரவேரல்குலாளிவள்வாடுகின்றாள்
ஐயாதந்தருளாயடியேனிட்டளங்கெடவே. (௫)

நெடியானான்முகனுமிரவியொடுமிந்திரனும்
முடியால்வந்திறைஞ்சமுதுகுன்றமமர்ந்தவனே
படியாரும்மியலாள்பரவையிவடன்முகப்பே
அடிகேடந்தருளீ † ரடியேனிட்டளங்கெடவே. (௬)

கொந்தணவும்பொழில்சூழ்குளிர்மாமதின்மாளிகைமேல்
வந்தணவும்மதிசேர்சடைமாமுதுகுன்றுடையாய்
பந்தணவும்விரலாள்பரவையிவடன்முகப்பே
அந்தணனேயருளாயடியேனிட்டளங்கெடவே. (௭)

பரசாருங்கரவாபதினெண்கணமுஞ்சூழ
முரசார்வந்ததிராமுதுகுன்றமமர்ந்தவனே
விரைசேருங்குழலாள்பரவையிவடன்முகப்பே
அரசேதந்தருளாயடியேனிட்டளங்கெடவே. (௮)

ஏத்தாதிருந்தறியேனிமையோர்தனிநாயகனே
மூத்தாயுலகுக்கெல்லாமுதுகுன்றமமர்ந்தவனே
பூத்தாருங்குழலாள்பரவையிவடன்முகப்பே
கூத்தாதந்தருளாய்கொடியேனிட்டளங்கெடவே. (௯)

பிறையாருஞ்சடையெம்பெருமானருளாயென்று
முறையால்வந்தமரர்வணங்கும்முதுகுன்றர்தம்மை
மறையார்தங்குரிசில்வயனாவலாரூரன்சொன்ன
இறையார்பாடல்வல்லார்க்கெளிதாஞ்சிவலோகமதே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

* விரித்துகந்தீர் என்றும் பாடம். † டந்தருளாய் என்றும் பாடம்.

Koviloor Digital Library

சுந்தரமூர்த்திநாயனார், திருவாரூரிலே பரவையாரோடு கூடியிருக்கும் நாளில், ஒருநாள் பரவையாரை நோக்கி, எனக்குத் திருமுதுகுன்றர் தந்தருளிய பொன்னை மணிமுத்தாநதியிலே புகவிட்டு வந்தேன். இப்போது இத்தலத்திலே இருக்கின்ற திருக்கோயிலுக்கு மேற்றிசையிலுள்ள குளத்திலே அதை எடுத்துக்கொண்டு வருவோம் வா என்று சொல்லி, பரவையாருடன் திருக்கோயிலை வலம்வந்து மேற்றிசையிலிருக்கின்ற திருக்குளத்தை அடைந்து, அதன் வடகீழ்க்கரையிலேபோய், பரவையாரை நிறுத்தி, சுவாமியை வணங்கி, குளத்தில் இறங்கித் தடவினார். அப்பொழுது, சிவபிரான், சுந்தரமூர்த்திநாயனாரைக்கொண்டு திருப்பதிகம் பாடுவிக்கவேண்டும் என்னும் திருவிளையாட்டினாலே, பொன்னை அக்குளத்திலே வருவியாதொழிந்தருள, பரவையார் "ஆற்றிலே இட்டுக் குளத்திலே தேடுகிறீரா" என்றார். அதுகேட்ட நாயனார் பரவையார் நகையாதபடி பொன்னைத்தாரும் என்று திருமுதுகுன்றர்மேல் "பொன்செய்தமேனியினீர்" என்னும் திருப்பதிகம்பாடி, சிவபிரானுடைய திருவருளினாலே வந்தெழுந்த பொற்றிரளை எடுத்து, கரையிலேற்றி, அந்தப் பொன்னையும், முன் கொண்டுவந்த மச்சத்தையும் உரைப்பித்து, அது மச்சத்திலும்பார்க்க உரை தாழ்ந்ததுகண்டு, பின்னும் கடவுளைப்பாடக் கடவுளானவர் உரைதாழாது அருள்செய்தனர்.

பண் - கொல்லிக்கௌவாணம்.

திருச்சிற்றம்பலம்.

நஞ்சியிடையின்று* நாளையென்றும்மைநச்சுவார்
துஞ்சியிட்டாற்பின்னைச்செய்வதென்னடிகேள்சொலீர்
பஞ்சியிடப்புட்டில்கீறுமோபணியீரருள்
முஞ்சியிடைச்சங்கமார்க்குஞ்சீர்முதுகுன்றரே. (க)

ஏரிக்கனகக்கமலமலரன்னசேவடி†
ஊரித்தலையுந்திரிந்தக்காலவைநோங்கொலோ
வாரிக்கட்சென்றுவளைக்கப்பட்டுவருந்திப்போய்
மூரிக்களிறுமுழக்கறாமுதுகுன்றரே. (உ)

தொண்டர்கள்பாடவிண்ணோர்களேத்தவுழிதர்வீர்
பண்டகந்தோறும்பலிக்குச்செல்வதும்பான்மையே‡
கண்டகர்வாளிகள்வில்லிகள்புறங்காக்குஞ்சீர்
மொண்டகைவேள்விமுழக்கறாமுதுகுன்றரே. (ங)

இளைப்பறியீரிம்மை¶யேத்துவார்க்கம்மைசெய்வதென்
விளைப்பறியாத§வெங்காலனையுயிர்வீட்டினீர்
அளைப்பிரியா0 அரவல்குலாளொடுகங்கைசேர்
முளைப்பிறைச்சென்னிச்சடைமுடிமுதுகுன்றரே. (ச)

* நஞ்சிடையின்று என்றும் பாடம். † ஏரிக்கணக்கமலமான்னசேவடி என்றும் பாடம். ‡ மண்டகந்தோறும்பலிக்குச்செல்வதுபான்மையே என்றும் பாடம். ¶ இளைப்பறியீரும்மை என்றும் பாடம். § விளைப்பு அறியாத—உமதுசெயலையறியாத; விளைப்பு - செயல். 0 அளைப்பறியா என்றும் பாடம்.

Koviloor Digital Library

ஆடியசைந்தடியாருநீருமகந்தொறும்
பாடிப்படைத்தபொருளெல்லாமுமையாளுக்கோ
மாடமதிலணிகோபுரம்மணிமண்டபம்
மூடிமுகிறவழ்சோலைசூழ்முதுகுன்றரே. (௫)

இழைவளர்நுண்ணிடைமங்கையோடிடுகாட்டிடைக்
குழைவளர்காதுகண்மோதநின்றுகுனிப்பதே
மழைவளருந்நெடுங்கோட்டிடைமதயானைகள்
முழைவளராளிமுழக்கறுமுதுகுன்றரே. (௬)

சென்றிலிடைச்செடிநாய்குரைக்கச்செடிச்சிகள் *
மன்றிலிடைப்பலிதேரப்போவதுவாழ்க்கையே
குன்றிலிடைக்களிறாளிகொள்ளக்குறத்திகள்
முன்றிலிடைப்பிடிகன்றிடும்முதுகுன்றரே. (௭)

அந்திதிரிந்தடியாருநீருமகந்தொறும்
சந்திகடோறும்பலிக்குச்செல்வதுதக்கதே
மந்திகடுவனுக்குண்பழநாடிமலைப்புறம்
முந்தியடிதொழநின்றசீர்முதுகுன்றரே. (௮)

செட்டிநின்காதலியூர்கடோறுமறஞ்செய
அட்டமின்சில்பலிக்கென்றகங்கடைநிற்பதே †
பட்டிவெள்ளேறுகந்தேறுவீர்பரிசென்கொலோ
முட்டியடிதொழநின்றசீர்முதுகுன்றரே. (௯)

எத்திசையுந்திரிந்தேற்றக்காற்பிறரென்சொலார்
பத்திமினுலிடுவாரிடைப்பலிகொண்மினோ
எத்திசையுந்திரையேறமோதிக்கரைகண்மேல்
முத்திமுத்தாறுவலஞ்செயும்முதுகுன்றரே. (௧0)

முத்திமுத்தாறுவலஞ்செயும்முதுகுன்றரைப்
பித்தனெப்பானடித்தொண்டனூரன்பிதற்றிவை
தத்துவஞானிகளாயினோர் ‡ தடுமாற்றிலார்
எத்தவத்தோர்களுமேத்துவார்க்கிடரில்லையே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

நம்பி ¶ யென்றதிருப்பதிகம். பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

மெய்யைமுற்றப்பொடிப்பூசியொர்நம்பிவேதநான்கும்விரித்தோதியொர்நம்பி
கையிலோர்வெண்மழுவேந்தியோர்நம்பிகண்ணுமூன்றுடையாயொருநம்பி §
செய்யநம்பிசிறுச்செஞ்சடைநம்பிதிரிபுரந்தீயெழச்செற்றதோர்வில்லால்
எய்தநம்பியென்னையாளுடைநம்பியெழுபிறப்புமெங்கணம்பிகண்டாயே. o (௧)

* குலைக்கச்செடிச்சில என்றும் பாடம். † நிற்பதென் என்றும் பாடம். ‡ ளாகினோர் என்றும் பாடம். ¶ நம்பீ என்றும் பாடம். § யாரொருநம்பி என்றும் பாடம். o யெழுபிறப்பும் மெங்கணம்பிகண்டாயே என்றும் பாடம்; இப்பாடத்தை இத்திருப்பதிகமுற்றுங்கொள்க.

Koviloor Digital Library

திங்கணம்பிமுடிமேலடியார்பாற்* சிறந்தநம்பிபிறந்தவுயிர்க்கெல்லாம்
அங்கணம்பியருண்மால்விசும்பாளுமமரர்நம்பிகுமரன்முதற்றேவர்
தங்கணம்பிதவத்துக்கொருநம்பிதாதையென்றுன்சரண்பணிந்தேத்தும்†
எங்கணம்பியென்னையாளுடைநம்பியெழுபிறப்புமெங்கணம்பிகண்டாயே. (௨)

வருந்தவன்றம்மதயானை‡ யுரித்தவழக்குநம்பிமுழக்குங்கடனஞ்சம்
அருந்துநம்பியமரர்க்கமுதீந்தவருளனம்பி¶ பொருளால்வருநட்டம்
புரிந்தநம்பிபுரிநூலுடைநம்பிபொழுதும்விண்ணும்முழுதும்பலவாகி
இருந்தநம்பியென்னையாளுடைநம்பியெழுபிறப்புமெங்கணம்பிகண்டாயே. (௩)

ஊறுநம்பியமுதாவுயிர்க்கெல்லாமுரியநம்பிதெரியம்மறையங்கம்
கூறுநம்பிமுனிவர்க்கருங்கூற்றைக்குமைத்தநம்பிகுமையாப்புலனைந்தும்§
சீறுநம்பிதிருவெள்ளடைநம்பிசெங்கண்வெள்ளைச்செழுங்கோட்டெருதென்றும்
ஏறுநம்பியென்னையாளுடைநம்பியெழுபிறப்புமெங்கணம்பிகண்டாயே. (௪)

குற்றநம்பிகுறுகாரெயின்மூன்றைக்குலைத்தநம்பிசிலையாவரைகையில்
பற்றுநம்பிபரமானந்தவெள்ளம்பணிக்குநம்பியெனப்பாடுதலல்லால்
மற்றுநம்பியுனக்கென்செயவல்லேன்மதியிலியேன் 0 படுவெந்துயரெல்லாம்
எற்றுநம்பியென்னையாளுடைநம்பியெழுபிறப்புமெங்கணம்பிகண்டாயே. (௫)

அரித்தநம்பிபடிகைதொழுவார்நோயாண்டநம்பிமுன்னையீண்டுலகங்கள்
தெரித்தநம்பியொருசேவுடைநம்பிசில்பலிக்கென்றகந்தோறுமெய்வேடம்
தரித்தநம்பிசமயங்களினம்பிதக்கன்றன்வேள்விபுக்கன்றிமையோரை
இரித்தநம்பியென்னையாளுடைநம்பியெழுபிறப்புமெங்கணம்பிகண்டாயே. (௬)

பின்னைநம்பும்பு** யத்தானெடுமாலும்பிரமனுமென்றிவர்நாடியுங்காணா
உன்னைநம்பியொருவர்க்கெய்தலாமேயுலகுநம்பியுரைசெய்யுமதல்லால்
முன்னைநம்பிபின்னும்வார்சடைநம்பிமுழுதிவையித்தனையுந்தொகுத்தாண்ட
தென்னைநம்பிபெம்பிரானுபநம்பியெழுபிறப்புமெங்கணம்பிகண்டாயே. (௭)

சொல்லைநம்பி†† பொருளாய்நின்றநம்பி‡‡ தோற்றமீறும்முதலாகியநம்பி
வல்லைநம்பியடியார்க்கருள்செய்பவருந்திநம்பியுனக்காட்செயகில்லார்
அல்லனம்பிபடுகின்றதென்னாழியணங்கொருபாகம்வைத்தெண்கணம்போற்ற
இல்லநம்பியிடுபிச்சைகொணம்பியெழுபிறப்புமெங்கணம்பிகண்டாயே. (௮)

* லணியார்பாற் என்றும் பாடம். † தாதையென்றுசரண்பணிந்தேத்தும் என்றும், தாதைபென்றுசரணம்பணிந்தேத்தும் என்றும் பாடம். ‡ வன்றுமதயானை என்றும் பாடம். ¶ வருளுநம்பி என்றும் பாடம். § குமையாப்புலனைந்தும் என்றும் பாடம். 0 மதியிலேன் என்றும் பாடம். ** பின்னை நம்பு—இலக்குமி விரும்புகின்ற "நம்புமேவுநசையாகும்மே" என்றார் தொல்காப்பியனாரும். †† சொல்லைநம்பி - நால்வகைவாக்கின் பகுதியாகிய வேதமுதலிய சொற்பிரபஞ்சமாய் நின்றநம்பி. ‡‡ பொருளாய் நின்ற நம்பி — நிலமுதலனைத்துமாகிய பொருட்பிரபஞ்சமாய் நின்றநம்பி.

Koviloor Digital Library

காண்டநம்பிகழற்சேவடியென்றுங்கலந்துனேக்காதலித்தாட்செய்கிற்பாரை
ஆண்டநம்பியவர்முன்கதிசேர * வருளுநம்பிகுருமாப்பிறைபாம்பைத்
தீண்டநம்பிசென்னியிற்கன்னிதங்கத் † திருந்துநம்பிபொய்ச்சமண்பொருளாகி
ஈண்டநம்பியிமையோர்தொழுநம்பியெழுபிறப்புமெங்கணம்பிகண்டாயே. (௯)

காக்குநம்பி ‡ கசியாதவர்தம்மைக்கசிந்தவர்க்கிம்மையோடம்மையிலின்பம்
பெருக்குநம்பிபெருகக்கருத்தா.¶ (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருமுதுகுன்றத்திருப்பதிகம் - ௧௧.

ஆ திருப்பதிகம் - ௩௧.

சுவாமி தேவி திருநாமங்கள் - பழமலைநாதர், பெரியநாயகி.

௧0. திருநெல்வெண்ணெய். §

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

திருமுக்கால். பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

நல்வெணெய்விழுதுபெய்தாடுதிர்நாடொறும்
நெல்வெணெய்மேவியநீரே
நெல்வெணெய்மேவியநீருமைநாடொறும்
சொல்வணமிடுவதுசொல்லே. 0 (௧)

நிச்சலுமடியவர்தொழுதெழுநெல்வெணெய்க்
கச்சிளவரவசைத்தீரே
கச்சிளவரவசைத்தீருமைக்காண்பவர்
அச்சமொடருவினையிலரே. (௨)

நிரைவிரிதொல்புகழ்நெல்வெணெய்மேவிய
அரைவிரிகோவணத்தீரே
அரைவிரிகோவணத்தீருமையலர்கொடு
உரைவிரிப்போருயர்ந்தோரே. (௩)

நீர்மல்குதொல்புகழ்நெல்வெணெய்மேவிய
ஊர்மல்கியுறையவல்லீரே
ஊர்மல்கியுறையவல்லீருமையுள்குதல்
பார்மல்குபுகழவர்பண்பே. (௪)

* நம்பிபரமுன்கதிச்சேர என்றும் பாடம். †கன்னிதங்க என்றும், கங்கைதங்க என்றும் பாடம். ‡ காத்திநம்பி என்றும் பாடம். ¶ இத்திருப்பாட்டில் பின்னுள்ள அடிகள் மறைந்துபோயின. § திருநெல்வெண்ணே என்றும் பாடம்; செய்யுள்களுமவ்வாறே; இதனை இக்காலத்து நெய்வெண்ணெய் என்றுவழங்குப. 0 மிடுவதுஞ்சொல்லே என்றும் பாடம்.

Koviloor Digital Library

நிடிளம்பொழிலணிநெல்வெணெய்மேவிய
ஆடிளம்பாப்பசைத்திரே*
ஆடிளம்பாப்பசைத்திருமை*யன்பொடு
பாடுளமுடையவர்பண்பே. (ரு)

நெற்றியோர்கண்ணுடைநெல்வெணெய்மேவிய
பெற்றிகொள்பிறைநுதலீரே
பெற்றிகொள்பிறைநுதலீருமைப்பேணுதல்
கற்றறிவோர்கடங்கடனே.† (சு)

நிறையவர்தொழுதெழுநெல்வெணெய்மேவிய
கறையணிமிடறுடையீரே
கறையணிமிடறுடையீருமைக்காண்பவர்
உறைவதுமும்மடிக்கீழே. (எ)

நெருக்கியபொழிலணிநெல்வெணெய்மேவிய
அரக்கனையசைவுசெய்தீரே
அரக்கனையசைவுசெய்திருமையன்புசெய்
திருக்கவல்லாரிடரிலரே. (அ)

நிரைவிரிசடைமுடிநெல்வெணெய்மேவியன்
றிருவரையிடர்கள்செய்தீரே
இருவரையிடர்கள்செய்திருமையிசைவொடு
பரவவல்லார்பழியிலரே. ‡ (கூ)

நீக்கியபுனலணிநெல்வெணெய்மேவிய
சாக்கியச்சமண்கெடுத்தீரே
சாக்கியச்சமண்கெடுத்திருமைச்சார்வது
பாக்கியமுடையவர்பண்பே. (க

நிலமல்குதொல்புகழ்நெல்வெணெயீசனை
நலமல்குஞானசம்பந்தன்
நலமல்குஞானசம்பந்தனசெந்தமிழ்
சொலமல்குவார்துயரிலரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநெல்வெண்ணெய்த்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - சO.

சுவாமி தேவி திருநாமங்கள் - வெண்ணெயப்பர், நீலமலர்க்கண்ணி.

** பாப்பசைத்திரே என்றும், பாம்பசைத்திருமை என்றும் பாடம்; பாப்பு பாம்பென மெலிந்துநின்றதென்பர் நச்சினார்க்கினியர். † இங்கே "கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன் - நற்றா டொழாஅ ரெனின்" என்னுந் திருக்குறள் சிந்திக்கற்பாலது. ‡ பழியிலமே என்றும் பாடம்.

Koviloor Digital Library

கக. திருக்கோவலூர்வீரட்டம்.*

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

திருவிராகம். பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

படைகொள்கூற்றம்வந்துமெய்ப்பாசம்விட்டபோதின்கண்
இடைகொள்வாரெமக்கிலையெழுகபோதுநெஞ்சமே
குடைகொள்வேந்தன் † மூதாதைகுழகன்கோவலூர்தனுள் ‡
விடையதேறுங்கொடியினான்வீரட்டானஞ்சேர்துமே. (க)

கரவலாளர்தம்மனைக்கடைகடோறுங்கானிமிர்த்
திரவலாழிநெஞ்சமேயினியதெய்தவேண்டினீ
குரவமேறிவண்டினங்குழலொடியாழ்செய்கோவலூர்
விரவிநாறுகொன்றையான்வீரட்டானஞ்சேர்துமே. (உ)

உள்ளத்தீரேபோதுமின்னுறுதியாவதறிதிரேல்
அள்ளற்சேற்றிற்காலிட்டிங்கவலத்துள் ¶ ளழுந்தாதே
கொள்ளப்பாடுகீதத்தான்குழகன்கோவலூர்தனுள்
வெள்ளந்தாங்குசடையினான்வீரட்டானஞ்சேர்துமே. (ங)

கனைகொளிருமல்சூலைநோய்கம்பதாளிகுன்மமும்
இனையபலவுமூப்பினோடெய்திவந்துநலியாமுன்
பனைகளுலவுபைம்பொழிற்பழனஞ்சூழ்ந்தகோவலூர்
வினையைவென்றவேடத்தான்வீரட்டானஞ்சேர்துமே. (ச)

உளங்கொள்போகமுய்த்திடாருடம்பிழந்த § போதின்கண்
துளங்கிநின்றுநாடொறுந்துயராலாழிநெஞ்சமே 0
வளங்கொள்பெண்ணைவந்துலாவயல்கள்சூழ்ந்தகோவலூர்
விளங்குகோவணத்தினான்வீரட்டானஞ்சேர்துமே. (ரு)

கேடுமூப்புச்சாக்காடுகெழுமிவந்து** நாடொறும்
ஆடுபோலநரைகளா †† யாக்கைபோக்கதன்றியும்
கூடிநின்றுபைம்பொழிற்குழகன்கோவலூர்தனுள்
வீடுகாட்டுநெறியினான்வீரட்டானஞ்சேர்துமே. (சு)

* இது திருக்கோவலூர்த்திருவீரட்டம் என்றும் பிரதிகளிற் காணப்படுகின்றது; திருக்கோவலூர் மேலூர் கீழூர் என இரண்டுபாகமுடையது; சிவாலயம் கீழூரிலிருக்கின்றது. † கொடைகொள்வேந்தன் என்றும் பாடம். ‡ லூர்தனில் என்றும் பாடம்; இப்பாடத்தை இத்திருப்பதிகமுற்றுங்கொள்க. ¶ காலிட்டங்கவலத்துள் என்றும் பாடம். § முய்த்திடருடம்பிழந்த என்றும் பாடம். 0 துயரல்வாழிநெஞ்சமே எனப்பாடமோதுவாருமுளர். ** கெழுமிநின்று என்றும் பாடம். †† ஆடுபோனரைகளாய் என்றும்பாடம்.

Koviloor Digital Library

உரையும்பாட்டுந்தளர்வெய்தியுடம்புமுத்தபோதின்கண்
நரையுந்திரையுங்கண்டெள்கிநகுவர்நமர்களாதலால்
வரைகொள்பெண்ணைவந்துலாவயல்கள்சூழ்ந்தகோவலூர்
விரைகொள்சீர்வெண்ணீற்றினன் * வீரட்டானஞ்சேர்துமே. (௭)

ஏதமிக்கமூப்பினோடிருமலிஃதோவென்றிவை
ஊதலாக்கையோம்புவீருறுதியாவதறிதிரேல்
போதில்வண்டுபண்செயும்பூந்தண்கோவலூர்தனுள்
வேதமோதுநெறியினன்வீரட்டானஞ்சேர்துமே. (௮)

ஆறுபட்டபுன்சடையழகனாயிழைக்கொரு
கூறுபட்டமேனியான்குழகன்கோவலூர்தனுள்
நீறுபட்டகோலத்தானீலகண்டனிருவர்க்கும்
வேறுபட்டசிந்தையான்வீரட்டானஞ்சேர்துமே. (௯)

குறிகொளாழிநெஞ்சமேகூறைதுவரிட்டார்களும்
அறிவிலாதவமணர்சொல்லவத்தமாவதறிதியேல் †
பொறிகொள்வண்டுபண்செயும்பூந்தண்கோவலூர்தனுள்
வெறிகொள்கங்கைதாங்கினான்வீரட்டானஞ்சேர்துமே. (௧௦)

கழியொடுலவுகானல்சூழ்காழிஞானசம்பந்தன்
பழிகடீரச்சொன்னசொற்பாவநாசமாதலால்
அழிவிலீர்கொண்டேத்துமின்னந்தண்கோவலூர்தனுள்
விழிகொள்பூதப்படையினான்வீரட்டானஞ்சேர்துமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

செத்தையேன்சிதம்பநாயேன் ‡ செடியனேனழுக்குப்பாயும்
பொத்தையேபோற்றிநாளும்புகலிடமறியமாட்டேன்
எத்தைநான்பற்றிநிற்கேனிருளறநோக்கமாட்டாக்
கொத்தையேன்செய்வதென்னேகோவல்வீரட்டனீரே. (௧)

தலைசுமந்திருகைநாற்றித்தரணிக்கேபொறையதாகி
நிலையிலாநெஞ்சந்தன்னுணித்தலுமைவர்வேண்டும்
விலைகொடுத்தறுக்கமாட்டேன்வேண்டிற்றேவேண்டியெய்த்தேன் ¶
குலைகொண்மாங்கனிகள்சிந்துங்கோவல்வீரட்டனீரே. (௨)

* பலபிரதிகள் விரைகொள்சேர்வெண்ணீற்றினன் என்கின்றன; சேர்தல்—எப்பொழுதும் நீங்காதிருத்தல்; விரைகொள்வெண்ணீறு சேர்வெண்ணீறு எனக்கூட்டுக; "[illegible]" என்னுஞ் சூத்திரப் பொருள் நன்குப்பொருத்தமின்று. † தறிதியே என்றும் பாடம். ‡ சிதம்பனேயேன் என்றும் பாடம். ¶ வேண்டிற்றென்வேண்டியெய்த்தேன் என்றும், வேண்டிற்றேன் வேண்டியெய்த்தேன் என்றும் பாடம்.

Koviloor Digital Library

வழித்தலைப்படவுமாட்டேன்வைகலுந்தூய்மைசெய்து
பழித்திலேன் * பாசமற்றுப்பரமநான்பரவமாட்டேன்
இழித்திலேன்பிறவிதன்னையென்னினைந்திருக்கமாட்டேன்
கொழித்துவந்தலைக்குந்தெண்ணீர்க்கோவல்வீரட்டனீரே. (ங)

சாற்றுவரைவர்வந்துசந்தித்தகுடியமவேண்டிக்
காற்றுவர்கனலப்பேசிக்கண்செவிமூக்குவாயுள்
ஆற்றுவரலந்துபோனேனுநியையறிவொன்றின்றிக்
கூற்றுவர்வாயிற்பட்டேன்கோவல்வீரட்டனீரே. (ச)

தடுத்திலேனைவர்தம்மைத்தத்துவத்துயர்வுநீர்மைப்
படுத்திலேன்பரப்புநோக்கிப்பன்மலர்ப்பாதமுற்ற †
அடுத்திலேன்சிந்தையாரவார்வலித்தன்புதிண்ணம்
கொடுத்திலேன்கொடியவாநான்கோவல்வீரட்டனீரே. (ரு)

மாச்செய்தகுரம்பைதன்னைமண்ணிடைமயக்கமெய்து
நாச்செய்துநாலுமைந்துநல்லனவாய்தல்வைத்துக் ‡
காச்செய்தகாயந்தன்னுணித்தலுமைவர்வந்து
கோச்செய்துகுமைக்கவாற்றேன்கோவல்வீரட்டனீரே. (சூ)

படைகள்போல்வினைகள்வந்துபற்றியென்பக்கனின்றும்
விடகிலாவாதலாலேவிகிர்தனைவிரும்பியேத்தும்
இடையிலேனென்செய்கேனுனிரப்பவர்தங்கட்கென்றும்
கொடையிலேன்கொள்வதேநான்கோவல்வீரட்டனீரே. (எ)

பிச்சிலேன்பிறவிதன்னைப்பேதையேன்பிணக்கமென்னும்
துச்சுளேயழுந்திவீழ்ந்துதுயரமேயிடும்பைதன்னுள்
அச்சனுயாதிமூர்த்திக்கன்பனாய் ¶ வாழமாட்டாக்
கொச்சையேன்செய்வதென்னேகோவல்வீரட்டனீரே. (அ)

நிணத்திடையாக்கைபேணிநியமஞ்செய்திருக்கமாட்டேன்
மணத்திடையாட்டம்பேசிமக்களேசுற்றமென்னும்
கணத்திடையாட்டப்பட்டுக்காதலாலுன்னைப்பேணும்
குணத்திடைவாழமாட்டேன்கோவல்வீரட்டனீரே. (கூ)

விரிகடலிலங்கைக்கோனைவியன்கயிலாயத்தின்கீழ்
இருபதுதோளும்பத்துச்சிரங்களுநெரியவூன்றிப்
பரவியபாடல்கேட்டுப்படைகொடுத்தருளிச்செய்தார்
குரவொடுகோங்குசூழ்ந்தகோவல்வீரட்டனாரே. (கo)

திருச்சிற்றம்பலம்.

திருக்கோவலூர்வீரட்டத்திருப்பதிகம் - உ.

ஆ திருப்பதிகம் - சஉ.

சுவாமி தேவி திருநாமங்கள் - வீரட்டநாதர், சிவானந்தவல்லி.

* பழுத்திலேன் என்றும் பாடம். † பன்மலர்பாதமுற்ற என்றும் பாடம். ‡ வாசல் வைத்து என்றும் பாடம். ¶ கன்பினால் என்றும் பாடம்.

௧௭. திருவறையணிநல்லூர். *

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பீடினாற்பெரியோர்களும்பேதைமைகெடத்தீதிலா
வீடினாலுயர்ந்தார்களும்வீடிலாரிளவெண்மதி
சூடினார்மறைபாடினார்சுடலைநீறணிந்தாரழல்
ஆடினாரறையணிநல்லூரங்கையாற்றொழுவார்களே. (௧)

இலையினார்சூலமேறுகந்தேறியேயிமையோர்தொழ
நிலையினாலொருகாலுறச்சிலையினான்மதிலெய்தவன்
அலையினார்புனல்சூடியவண்ணலாரறையணிநல்லூர்
தலையினாற்றொழுதோங்குவார்நீங்குவார்தடுமாற்றமே. (௨)

என்பினார்கனல்சூலத்தாரிலங்குமாமதியுச்சியான்
பின்பினாற்பிறங்குஞ்சடைப்பிஞ்ஞகன்பிறப்பிலியென்று
முன்பினார்மூவர்தாந்தொழுமுக்கண்மூர்த்திதன்றாள்களுக்
கன்பினாரறையணிநல்லூரங்கையாற்றொழுவார்களே. (௩)

விரவுநீறுபொன்மார்பினில்விளங்கப்பூசியவேதியன்
உரவுநஞ்சமுதாகவுண்டுறுதிபேணுவதன்றியும்
அரவுநீள்சடைக்கண்ணியாரண்ணலாரறையணிநல்லூர்
பரவுவார்பழிநீங்கிடப்பறையுந்தாஞ்செய்தபாவமே. (௪)

தீயினார்திகழ்மேனியாய்தேவர்தாந்தொழுதேவனீ †
ஆயினாய்கொன்றையாயனலங்கையாயறையணிநல்லூர்
மேயினார்தமதொல்வினைவீட்டினாய்வெய்யகாலனைப்
பாயினாயதிர்கழலினாய்பரமனேயடிபணிவனே. (௫)

விரையினார்கொன்றைசூடியும்வேகநாகமும்வீக்கிய ‡
அரையினாரறையணிநல்லூரண்ணலாரழகாயதோர்
நரையினார்விடையூர்தியார்நக்கனார்நறும்போதுசேர்
உரையினாலுயர்ந்தார்களுமுரையினாலுயர்ந்தார்களே. (௬)

வீரமாகியவேதியர்வேகமாகளியானையின்
ஈரமாகியவுரிவைபோர்த்தரிவைமேற்சென்றவெம்மிறை
ஆரமாகியபாம்பினாரண்ணலாரறையணிநல்லூர்
வாரமாய்நினைப்பார்கடம்வல்வினையவைமாயுமே. (௭)

* இத்தலம் இக்காலத்து அறைகண்டநல்லூரென வழங்குப. † தேவநீ என்றும் பாடம்.
‡ வேதநாகமும்வீக்கிய என்றுபாடமோதுவாருமுளர்.

Koviloor Digital Library

தக்கனூர்பெருவேள்வியைத்தகர்த்துகந்தவன்றாழ்சடை
முக்கணான்மறைபாடியமுறைமையான்முனிவர்தொழ *
அக்கினோடெழிலாமைபூணண்ணலாரறையணிநல்லூர்
நக்கனாரவர்சார்வலானல்குசார்விலோநாங்களே. (அ)

வெய்யநோயிலர்தீதிலர்வெறியராய்ப்பிறர்பின்செலார்
செய்வதேயலங்காரமாமிவையிவைதேறியின்புறில்
ஐயமேற்றுணுந்தொழிலாமண்ணலாரறையணிநல்லூர்ச்
சைவனாரவர்சார்வலால்யாதுஞ்சார்விலோநாங்களே. (கூ)

வாக்கியஞ்சொல்லியாரொடும்வகையலாவகைசெய்யன்மின்
சாக்கியஞ்சமணென்றிவைசாரேலும்மரணம்பொடி
ஆக்கியம்மழுவாட்படையண்ணலாரறையணிநல்லூர்ப்
பாக்கியங்குறையுடையீரேற்பறையுமாஞ்செய்தபாவமே. (க0)

கழியுலாங்கடற்கானல்சூழ்கழுமலமமர்தொல்பதிப்
பழியிலாமறைஞானசம்பந்தனல்லதோர்பண்பினர்
மொழியினாலறை † யணிநல்லூர்முக்கண்மூர்த்திதன்றாடொழக்
கெழுவினாரவர்தம்மொடுங்கேடில்வாழ்பதிபெறுவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவறையணிநல்லூர்த்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - சரு.

சுவாமி தேவி திருநாமங்கள் - அறையணிநாதர், அருளுயகி.

கரு. திருவிடையாறு.

சுந்தரமூர்த்திநாயனூர்.

பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

முந்தையூர்முதுகுன்றங்குரங்கணின்முட்டம் ‡
சிந்தையூர்நன்றுசென்றடைவான்றிருவாரூர்
பந்தையூர்பழையாறுபழனம்பைஞ்ஞீலி
எந்தையூரெய்தமானிடையாறிடைமருதே. (க)

சுற்றுமூர்சுழியற்திருச்சோபுரந்தொண்டர்
ஒற்றுமூரொற்றியூர்திருவூறலொழியாப்
பெற்றமேறி ¶ பெண்பாதியிடம்பெண்ணைத்தெண்ணீர்
எற்றுமூரெய்தமானிடையாறிடைமருதே. (உ)

* முனிகடொழ என்றும் பாடம். † மொழியினாரறை என்றும் பாடம். ‡ குரங்கணிமுட்டம் என்றே எல்லாப்பிரதிகளிலுமிருக்கின்றது. ¶ பெற்றமூர்தி என்றும் பாடம்.

Koviloor Digital Library

கடங்களூர் திருக்காரிக்கரைகயிலாயம்
விடங்களூர் திருவெண்ணியண்ணாமலைவெய்ய
படங்களூர்கின்றபாம்பரையான்பரஞ்சோதி
இடங்கொளூ* ரெய்தமானிடையாறிடைமருதே. (௩)

கச்சையூர்காவங்கழுக்குன்றங்காரோணம்
பிச்சையூர்திரிவான்கடலூர்வடபேறூர்
கச்சியூர்கச்சிசிக்கனெய்த்தானமிழலை
இச்சையூரெய்தமானிடையாறிடைமருதே. (௪)

நிறையனூர்நின்றியூர்கொடுங்குன்றமமர்ந்த
பிறையனூர்பெருமூர்பெரும்பற்றப்புலியூர்
மறையனூர்மறைக்காடுவலஞ்சுழிவாய்த்த
இறையனூ † ரெய்தமானிடையாறிடைமருதே. (௫)

திங்களூர்திருவாதிரையான்பட்டினமூர்
நங்களூர்நறையூர்நனிநாலிசைநாலூர் ‡
தங்களூர்தமிழானென்றுபாவிக்கவல்ல
எங்களூரெய்தமானிடையாறிடைமருதே. (௬)

கருக்கநஞ்சமுதுண்டகல்லாலன்கொல்லேற்றன்
தருக்கருக்கனைச் ¶ செற்றுகந்தான்றன்முடிமேல்
எருக்கநாண்மலரிண்டையுமத்தமுஞ்சூடி
இருக்குமூரெய்தமானிடையாறிடைமருதே. (௭)

தேசனூர்வினைதேயநின்றான்றிருவாக்கூர்
பாசனூர்பரமேட்டிபவித்திரபாவ §
நாசனூர்நனிபள்ளிநள்ளாறையமர்ந்த
ஈசனூரெய்தமானிடையாறிடைமருதே. (௮)

பேறனூர்பிறைச்சென்னியினான்பெருவேளூர்
தேறனூர்திருமாமகள்கோன்றிருமாலோர்
கூறனூர்குரங்காடுதுறைதிருக்கோவல்
ஏறனூரெய்தமானிடையாறிடைமருதே. (௯)

ஊறிவாயன ○ நாடியவன்றொண்டனூரன்
தேறுவார்சிந்தைதேறுமிடஞ்செங்கண்வெள்ளே **
றேறுவாரெய்தமானிடையாறிடைமருதைக்
கூறுவார்வினைபெவ்விடமெய்குளிர்வாரே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருவிடையாற்றுத்திருப்பதிகம் - க.

ஆக திருப்பதிகம் - சச.

சுவாமி தேவி திருநாமங்கள் - இடையாற்றுநாதர், சிற்றிடைநாயகி.

* இடங்களூர் என்றும் பாடம். † இறைவனூர் என்றும் பாடம். ‡ நாலிசைநாவலூர் என்றும் பாடம். ¶ தருக்காக்கனைச் என்றும், தருக்கன்றக்கனைச் என்றும், அருக்கன்றக்கனைச் என்றும் பாடம். § பவத்திரபாவ என்றும் பாடம். ○ வாயின என்றும் பாடம். ** வெள்ளேற் என்றும் பாடம்.

Koviloor Digital Library

கச. திருவெண்ணெய்நல்லூர்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

பித்தாபிறைசூடிபெருமானேயருளாளா
எத்தான்மறவாதேநினைக்கின்றேன்மனத்துன்னை
வைத்தாய்பெண்ணைத்தென்பால்* வெண்ணெய்நல்லூரருட்டுறையுள்
அத்தாவுனக்காளாயினியல்லேனெனலாமே. (க)

நாயேன்பலநாளுநினைப்பின்றிமனத்துன்னைப்
பேயாய்த்திரிந்தெய்த்தேன்பெறலாகாவருள்பெற்றேன்
வேயார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையுள்
ஆயாவுனக்காளாயினியல்லேனெனலாமே. (உ)

மன்னேமறவாதேநினைக்கின்றேன்மனத்துன்னைப்
பொன்னேமணிதானேவயிரம்மேபொருதுந்தி
மின்னார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையுள்
அன்னேயுனக்காளாயினியல்லேனெனலாமே. (ங)

முடியேனினிப்பிறவேன்பெறின்மூவேன்பெற்றமூர்தீ
கொடியேன்பலபொய்யேயுரைப்பேனைக்குறிக்கொண்ணீ
செடியார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையுள்
அடிகேளுனக்காளாயினியல்லேனெனலாமே. (ச)

பாதம்பணிவார்கள்பெறுபண்டம்மதுபணியாய் †
ஆதன்பொருளானேனறிவில்லேனருளாளா
தாதார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையுள்
ஆதீயுனக்காளாயினியல்லேனெனலாமே. (ரு)

தண்ணார்மதிசூடிதழல்போலுந்திருமேனீ ‡
எண்ணார்புரமூன்றுமெரியுண்ணநகைசெய்தாய்
மண்ணார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையுள்
அண்ணாவுனக்காளாயினியல்லேனெனலாமே. (சு)

ஊனாயுயிரானாயுடலானாயுலகானாய்
வானாய்நிலனானாய்கடலானாய்மலையானாய்
தேனார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையுள்
ஆனாயுனக்காளாயினியல்லேனெனலாமே. (எ)

* பெண்ணைத்தென்பால் என்றும் பாடம்; இப்பாடத்தை இத்திருப்பதிகமுற்றுங் கொள்க. † பெறும்பண்டமதுபணியாய் என்றும் பாடம். ‡ மேனீ மேனியையுடையானையுணர்த்திற்று; "சூலியோ நேமியோ" என்புழி நேமி நேமியையுடையானை யுணர்த்தினாற்போல.

Koviloor Digital Library

ஏற்றார்புரமூன்றுமெரியுண்ணச்சிலைதொட்டாய்
தேற்றாதனசொல்லித்திரிவேனோசெக்கர்வானீர்
ஏற்றாய்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையுள்
ஆற்றாயுனக்* காளாயினியல்லேனெனலாமே. (அ)

மழுவாள்வலனேந்திமறையோதிமங்கைபங்கா
தொழுவாரவர்துயராயினதீர்த்தலுனதொழிலே
செழுவார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையுள்
அழகாவுனக்காளாயினியல்லேனெனலாமே. (கூ)

காரூர்புனலெய்திக்கரைகல்லித்திரைக்கையால்
பாரூர்புகழெய்தித்திகழ்பன்மாமணியுந்திச்
சீரூர்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையுள்
ஆரூரனெம்பெருமாற்காளல்லேனெனலாமே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருவெண்ணெய்நல்லூர்த்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - சரு.

சுவாமி தேவி திருநாமங்கள் - தடுத்தாட்கொண்டநாதர், வேற்கண்ணிநாயகி.

திருக்கைலாசமலையிலே, சிவபெருமானுடைய அடியார் திருக்கூட்டத்துள் ஒருவராகிய ஆலாலசுந்தரர், ஒருநாள், புஷ்பங்கொய்தற்குத் திருநந்தன வனத்துக்குப்போனபோது, பார்வதிதேவியார் பொருட்டு அந்தத் திருநந்தனவனத்திலே புஷ்பங் கொய்து கொண்டு நின்ற அவருடைய சேடியர்களாகிய அனிந்திதை, கமலினி என்னும் பெயர்களையுடைய பெண்களிருவரையுங்கண்டு அவர்கண்மேல் ஆசைவைத்தார். அவர்களும் ஆலாலசுந்தரரைக்கண்டு அவர்மேல் ஆசைகொண்டார்கள். பின்பு ஒருபிரகாரம் மனசைத் திருப்பி, புஷ்பங்களைக் கொய்துகொண்டு, ஆலாலசுந்தரர் சிவசந்நிதானத்துக்கும், சேடியர்கள் தேவிசந்நிதானத்துக்கும் திரும்பிவிட்டார்கள். அப்பொழுது, சர்வான்மாக்களிடத்திலும் வியாபித்திருந்து, அந்த அந்த ஆன்மாக்கள் மனம் வாக்குக் காயங்களினாலே செய்கின்ற கர்மங்களை அறிந்து, அந்த அந்தக் கர்மங்களுக்கு ஏற்ற பலங்களை ஊட்டி, அக்கர்மங்களைத் தொலைப்பிக்கின்ற காருண்ணிய ஸ்வரூபியாகிய கடவுளானவர், ஆலாலசுந்தரரைநோக்கி, "நீ பெண்கண்மேல் இச்சைகொண்டபடியால், தக்ஷிணபூமியிலே பிறந்து அந்தப் பெண்களோடு இன்பம் அநுபவிப்பாய்" என்று திருவாய் மலர்ந்தருளினார். அதைக்கேட்ட ஆலாலசுந்தரர் மனங்கலங்கி, சாஷ்டாங்கமாக நமஸ்காரம்பண்ணி, அஞ்சலியஸ்தராகி, "எம்பெருமானே, மயக்கம்பொருந்திய மனிதப்பிறப்பை எடுத்து, செய்யவேண்டியது இன்னது என்றும், நீக்கவேண்டியது இன்னது என்றும் அறியாது, பிரபஞ்ச வாழ்க்கையிலே மயங்கும்போது, தேவரீர் வெளிப்பட்டுவந்து அடியேனைத் தடுத்து ஆட்கொண்டருளல்வேண்டும்" என்று பிரார்த்திக்க; வேண்டுவார் வேண்டியவைகளை ஈந்தருளுங் கடவுளும் அவ்வேண்டுகோளுக்கு இசைந்தருளினார்.

பின்பு ஆலாலசுந்தரர், பூமியிலே திருமுனைப்பாடிநாட்டிலே திருநாவலூரென்னுந் திருப்பதியிலே, ஆதிசைவப்பிராமணகுலத்திலே, சடையனாரென்னுஞ் சிவாசாரியருடைய மனைவியாராகிய இசைஞானியாரிடத்திலே, திருவவதாரஞ் செய்தருளினார்.

* ஆற்றவுனக் என்றும் பாடம்.

Koviloor Digital Library

அவருக்கு நம்பியாரூரர் என்று நாமகரணஞ் செய்தார்கள். அப்பிள்ளையார் ஒருநாள் வீதியிலே சிறுதேர் உருட்டி விளையாடும்போது, அந்தத் திருமுனைப்பாடிநாட்டுக்கு அரசராகிய நரசிங்கமுனையரென்பவர் அப்பிள்ளையாரைக்கண்டு, அவர்மேல் ஆசைமிகுந்து, அவருடைய தந்தையாராகிய சடையனாரிடத்துக்குப்போய், "இந்தப்பிள்ளையை எனக்குத்தாரும்" என்று கேட்டுப் பெற்றுக்கொண்டுபோய், அவரை அபிமான புத்திரராகப் பாவித்து வளர்த்தார். அந்தப்பிள்ளையார் அரசரால் வளர்க்கப்படினும், தமது பிராமண வருணத்திற்குரிய ஒழுக்கத்தையே உடையவராகி வளர்ந்து, உரிய காலத்திலே உபநயனஞ் செய்யப்பெற்று, வேதங்களை அத்தியயனஞ்செய்து, சகலகலைகளிலும் மகாபாண்டித்தியமுடையவராய் விவாகஞ்செய்தற்கு உரிய பருவத்தை அடைந்தார்.

அதுகண்டு, தந்தையாராகிய சடையனார், புத்தூரில் இருக்கின்ற சடங்கவிசிவாசாரியருடைய புத்திரிக்கும்; தம்முடைய புத்திரருக்கும், விவாகம்பேசுவித்து விவாகத்துக்குச் சுபமுகூர்த்தம் நிச்சயித்தனர். பின்பு நம்பியாரூரராகிய சுந்தரமூர்த்திநாயனார் திருமணக்கோலங்கொண்டு, குதிரைமேல் ஏறி, மகாலங்காரத்தோடு புத்தூரில் சடங்கவிசிவாசாரியர் வீட்டிலே திருக்கல்யாணப் பந்தருக்குமுன் சென்று குதிரையினின்றும் இறங்கி, உள்ளேபோய், ஆசனத்தில் இருந்தார்.

அப்பொழுது, ஊரும் பேரும் உருவும் இல்லாதவராயினும், ஆன்மாக்களுக்கு வினைவயத்தால் வந்த ஊரையும், பேரையும், உருவையும், இருவினை யொப்பாகிய பக்குவகாலத்திலே ஒழிக்கும்பொருட்டு, அருள்வயத்தால் ஊரும், பேரும், உருவுங்கொண்டருளுகின்ற சிவபெருமான், தாம் திருக்கைலாசத்திலே சுந்தரமூர்த்திநாயனாருக்கு வாக்குத்தத்தம் பண்ணியபிரகாரம், அவரைப் பிரபஞ்சவாழ்க்கையில் மயங்கவிடாமல் தடுத்து ஆட்கொண்டருளும்பொருட்டு, ஒரு வயோதிகப்பிராமண வடிவங்கொண்டு எழுந்தருளிவந்து நின்று, அவ்விடத்தில் இருந்த எல்லோருக்கும் கேட்கும்படி நம்பியாரூரரை நோக்கி, "எனக்கும் உனக்கும் ஒருவழக்கு இருக்கின்றது, அதை முடித்துக்கொண்டு உன்னுடைய விவாகத்தை நடத்து" என்று அருளிச்செய்தார், நம்பியாரூரர் "உமக்கும் எனக்கும் ஒருவழக்கு உளதாயின், அதை முடித்தன்றி நான் விவாகஞ்செய்யேன், அதைத் தெரியும்படி சொல்லும்" என்று கேட்க; அந்த ஐயர் பிராமணர்களைப் பார்த்து, "இந்தத் திருநாவலூரனாகிய நம்பியாரூரன் எனக்கு அடியவன்" இவனுடைய பாட்டன் எனக்கு எழுதித்தந்த அடிமையோலை இதுவே என்றார். உடனே நம்பியாரூரர் ஐயரைப்பார்த்து, "பிராமணருக்குப் பிராமணர் அடிமையாதல் இன்றைக்கு நீயே சொல்லக்கேட்டோம். நீ பித்தனோ" என்று சொல்லி, அவர் கையில் இருக்கும் ஓலையைப் பறிக்கும்படி அவருக்கு எதிரே விரைந்து சென்றபோது, அவர் ஓடத் தாமும் ஓடி, அவரைப் பின்றொடர்ந்து பிடித்து, ஓலையைப்பறித்து, "பிராமணர்கள் அடிமையாய் ஊழியஞ் செய்தல், என்னமுறை" என்று சொல்லிக் கிழிக்க, ஐயர் சுந்தரமூர்த்தியைப் பிடித்துக்கொண்டு, "இது முறையோ" என்று சத்தமிட, சமீபத்தில் நின்றவர்கள், அவ்விருவரையும் விலக்கி, "பிராமணரே, நீர் எங்கே இருக்கின்றவர்" சொல்லும் என்ன, ஐயர், "நான் இந்தத் திருவெண்ணெய்நல்லூரில் இருக்கின்றவன்" என்றார். அப்பொழுது சுந்தரமூர்த்திநாயனார் "நீர் திருவெண்ணெய்நல்லூரில் இருக்கிறவராகில், இந்த வழக்கை அங்கேதானே பேசித் தீர்ப்புச்செய்ய வாரும்" என்று சொல்ல; ஐயர் அதைக் கேட்டு, "திருவெண்ணெய்நல்லூரில் இருக்கின்ற பிராமணர்களுக்கு முன்னே, ஆதியில் எழுதப்பட்ட மூலவோலையைக் காட்டி நீ எனக்கு அடிமை என்பதைச் சாதிப்பேன்" என்று சொல்லித் தண்டை ஊன்றிக்கொண்டு முன்னே நடந்து சுந்தரமூர்த்தியோடும் மற்றப்பிராமணர்களோடும் திருவெண்ணெய்நல்லூரை அடைந்து, அங்கே இருக்கின்ற பிராமணர்களுடைய சபையிலே போய், நடந்தவற்றைச்சொல்ல, அவர்கள் ஐயரை நோக்கி இந்த ஆரூரர் உமக்கு அடிமையென்பதற்கு அநுபவம், லிகிதம், சாக்ஷியென்

Koviloor Digital Library

றெ மூன்றில் ஒன்றுயினும் காட்டும் என்றார்கள். "அப்பொழுது ஐயர் இவன் கிழித்த ஓலை மூலவோலையைப் பார்த்து எழுதிய படியோலை, மூலவோலையோ என்னிடத்தில் இருக்கின்றது. ஆரூரன் அதையும் பறித்துக் கிழியாதபடி செய்வீர்களாயின் அதைக் காட்டுவேன் என்று சொன்னார்." அதற்கு அவர்கள் நாங்கள் கிழிக்கவிடோம் என்று சொல்ல, ஐயர் மூலவோலையைச் சபையாரிடத்தில் கொடுக்க, அவர்கள் அதில் "திருநாவலூரில் இருக்கின்ற ஆதிசைவனாகிய ஆரூரன் என்கின்ற நான் திருவெண்ணெய்நல்லூரில் இருக்கின்ற பித்தனுக்கு நானும் என் சந்ததியாரும் வழித்தொண்டு செய்வதற்கு உள்ளும் புறமும் ஒப்ப உடன்பட்டு எழுதிக்கொடுத்தேன். இப்படிக்கு ஆரூரன்" என்று இருக்கவும், அதிற்கையெழுத்திட்டோர் தங்கள் கையெழுத்தென்றே ஒத்துக்கொள்ளவும் சுந்தரமூர்த்திபாட்டனார் எழுதியகைச்சாத்து ஒன்று அழைப்பித்து, அதின் எழுத்தும் அடிமையோலையின் எழுத்தும் ஒத்திருக்கவும் கண்டு சுந்தரமூர்த்தியை நோக்கி, ஐயர் கருத்தின்படி அவருக்கு ஏவல்செய்வதே கடன் என்று சொல்லி, ஐயரைப்பார்த்து, நீர் காட்டிய அடிமையோலையில் எங்கள் ஊரே உம்முடைய ஊராக எழுதப்பட்டிருப்பதால், உமக்கு இவ்வூரில் தலைமுறையாக இருக்கின்ற வீடும், ஸ்திதியும் காட்டும் என்றனர். பிராமணவடிவங்கொண்ட கடவுள், இத்தனை விருத்தர்களில்ஒருவரும் என்னுடைய வீடு முதலியவற்றை அறியாதிருப்பீரானால், காட்டுகிறேன் வாருங்கள் என்று சொல்லி, சுந்தரமூர்த்தியும் பிராமணர்களும் பின்னே வர, தாம் அவ்வூரிலிருக்கின்ற திருவருட்டுறை என்னும் சிவாலயத்தினுள்ளேபோக, சபையார் அவரைக்காணாது திகைத்து நின்றார்கள்.

அப்போது, சுந்தரமூர்த்திநாயனார் தன்னை அடிமைகொண்ட பிராமணர் சிவபெருமானே எனத் தேர்ந்து அத்தியந்த ஆசையோடு தனியே அவரைத் தொடர்ந்துபோய்க் கூப்பிட, சிவபெருமான் இடபவாகனத்தின்மேல் உமாதேவி சமேதராய் வெளிப்பட்டு, சுந்தரமூர்த்திநாயனாருக்கு, "நீ முன்னே நமக்குத் தொண்டனாயிருந்து பெண்கண்மேல் இச்சை வைத்ததினால், நம்முடைய ஆஞ்ஞையின்படி பூமியிலே பிறந்தாய், இப்பொழுது துன்பத்தைத்தருகின்ற சமுசாரபந்தமானது உன்னைத்தொடாதபடி, நாமே வலியவந்து உன்னைத்தடுத்து ஆட்கொண்டோம் என்று திருவாய்மலர்ந்தருள, சுந்தரமூர்த்திநாயனார் அடியற்ற மரம்போல நிலத்தில் விழுந்து நமஸ்கரித்து, எழுந்துநின்று, இரண்டுகைகளையும் சிரசின்மேல் ஏறக் குவித்து ஆனந்தபாஷ்பம்சொரிய, சிவபெருமான் தமிழ்நாட்டில் உள்ளவர்கள், தாமே மெய்ப்பொருளென்று உணர்ந்து தம்மை வழிபட்டுப் பேரின்பம் அநுபவிக்கவேண்டும் என்னும் பெருங்கருணையினால், சுந்தரமூர்த்திநாயனாரை நோக்கி, "நீ நம்மோடு வன்சொற்களைச் சொல்லியபடியால் வன்றொண்டன் என்கிற பெயரைப்பெற்றாய், நமக்கு அன்பினோடு செய்யத்தக்க அருச்சனையாவது பாடலேயாகலான், நம்மேலே தமிழ்ப்பாடல்களைப்பாடு" என்று அருளிச்செய்ய, சுந்தரமூர்த்திநாயனார் அஞ்சலியஸ்தராகி, அடியேன் தேவரீருடைய அநந்த குணங்களில் எதையறிவேன்? என்னசொல்லிப் பாடுவேன் என்றார். அதற்குக் கடவுள் "நீ முன்னே என்னைப் பித்தனென்றுசொன்னாய், ஆகையால் என்பெயர் பித்தனென்றே பாடு" என்று சொல்லியருள, சுந்தரமூர்த்திநாயனார் "பித்தாபிறைசூடி" என்று திருப்பதிகமெடுத்துத் திருப்பாட்டுதோறும் "உனக்காளாயினியல்லேனெனலாமே" எனப்பாடியருளினார். அதன்பின்கடவுளானவர் சுந்தரமூர்த்திநாயனாரை நோக்கி, "தொண்டனே, நீ இன்னும் நம்முடைய புகழைக்குறித்துப் பலவகையாகப் பாடு" என்று அருளிச்செய்து அந்தர்த்தானமாயினார்.

Koyiloor Digital Library

கரு. திருத்துறையூர்.*

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

மலையாரருவித்திரண்மாமணியுந்திக்
குலையாரக்கொணர்ந்தெற்றியோர்பெண்ணைவடபால்
கலையாரல்குற்கன்னியராடுந்துறையூர்த்
தலைவாவுனைவேண்டிக்கொள்வேன்றவநெறியே. (க)

மத்தம்மதயானையின்வெண்மருப்புந்தி
முத்தங்கொணர்ந்தெற்றியோர்பெண்ணைவடபால்
பத்தர்பயின்றேத்திப்பரவுந்துறையூர்
அத்தாவுனைவேண்டிக்கொள்வேன்றவநெறியே. (உ)

கந்தங்கமழ்காரகில்சந்தனமுந்திச்
செந்தண்புனல்வந்திழிபெண்ணைவடபால்
மந்திபலமாநடமாடுந்துறையூர்
எந்தாயுனைவேண்டிக்கொள்வேன்றவநெறியே. (ங)

அரும்பார்ந்தனமல்லிகைசண்பகஞ்சாடிச்
சுரும்பாரக்கொணர்ந்தெற்றியோர்பெண்ணைவடபால்
கரும்பார்மொழிக்கன்னியராடுந்துறையூர்
விரும்பாவுனைவேண்டிக்கொள்வேன்றவநெறியே. (ச)

பாடார்ந்தன † மாவும்பலாக்களுஞ்சாடி
நாடாரவந்தெற்றியோர்பெண்ணைவடபால்
மாடார்ந்தனமாளிகைசூழுந்துறையூர்
வேடாவுனைவேண்டிக்கொள்வேன்றவநெறியே. (ரு)

மட்டார்மலர்க்கொன்றையும்வன்னியுஞ்சாடி
மொட்டாரக்கொணர்ந்தெற்றியோர்பெண்ணைவடபால்
கொட்டாட்டொடுபாட்டொலியோவாத்துறையூர்ச்
சிட்டாவுனைவேண்டிக்கொள்வேன்றவநெறியே. (சு)

மாதார்மயிற்பீலியும்வெண்ணுரையுந்தித்
தாதாரக்கொணர்ந்தெற்றியோர்பெண்ணைவடபால்
போதார்ந்தனபொய்கைகள்சூழுந்துறையூர்
நாதாவுனைவேண்டிக்கொள்வேன்றவநெறியே. (எ)

* இதனை இக்காலத்து, திருத்தலூர் என்றும், திருத்தளூர் என்றும் வழங்குப.
† மாடார்ந்தன என்றும் பாடம்.

Koviloor Digital Library

கொய்பாமலர்க்*கோங்கொடுவேங்கையுஞ்சாடிச்
செய்பாரக்கொணர்ந்தெற்றியோர்பெண்ணைவடபால்
மையார்தடங்கண்ணிய†ாடுந்துறையூர்
ஐயாவுனைவேண்டிக்கொள்வேன்றவநெறியே. (அ)

விண்ணார்ந்தனமேகங்களின்றுபொழிய
மண்ணாரக்கொணர்ந்தெற்றியோர்பெண்ணைவடபால்
பண்ணார்மொழிப்பாவையராடுந்துறையூர்
அண்ணாவுனைவேண்டிக்கொள்வேன்றவநெறியே. (௯)

மாவாய்ப்பிளந்தானுமலர்மிசையானும்
ஆவாவவர்தேடித்திரிந்தலமந்தார்
பூவார்ந்தனபொய்கைகள்சூழுந்துறையூர்த்
தேவாவுனைவேண்டிக்கொள்வேன்றவநெறியே. (௧௦)

செய்யார்கமலம்மலர்நாவலூர்மன்னன்‡
கையாற்றொழுதேத்தப்படுந்துறையூர்மேல்
பொய்யாத்தமிழூரனுரைத்தனவல்லார்
மெய்யேபெறுவார்கடவநெறிதானே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருத்துறையூர்த்திருப்பதிகம் - ௧.

ஆ திருப்பதிகம் - ௪௬.

சுவாமி தேவி திருநாமங்கள் - துறையூர்நாதர், பூங்கோதைநாயகி.

௧௬. திருவடுகூர்.¶

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

சுடுகூரெரிமாலையணிவர்சுடர்வேலர்
கொடுகூர்மழுவாளொன்றுடையார்விடையூர்வர்
கடுகூர்பசிகாமங்கவலைபிணியில்லார்
வடுகூர்புனல்சூழ்ந்தவடுகூரடிகளே. (௧)

* கொய்யார்மலர் என்றும் பாடம். † மையார்நெடுங்கண்ணியர் என்றும் பாடம். ‡ நாவலர்மன்னன் என்றும் பாடம். ¶ இதனை இக்காலத்து ஆண்டார்கோயில் என்று வழங்குப.

Koviloor Digital Library

பாலுநறுநெய்யுந்தயிரும்பயின்றாடி
ஏலுஞ்சுடுநீறு* மென்புமொளிமல்கக்
கோலம்பொழிற்சோலைக்கூடிமடவன்னம்
ஆலும்வடுகூரிலாடும்மடிகளே. (உ)

சூடுமிளந்திங்கட்சுடர்பொற்சடைதன்மேல்
ஓடுங்களியானையுரிபோர்த்துமையஞ்ச
ஏடுமலர்மோந்தங்கெழிலார்வரிவண்டு
பாடும்வடுகூரிலாடும்மடிகளே. (ங)

துவரும்புரிசையுந்துதைந்தமணிமாடம்
கவரவெரியோட்டிக் † கடியமதிலெய்தார்
கவருமணிகொல்லைக்கடியமுல்லைநல்லார்
பவரும்வடுகூரிலாடும்மடிகளே. (ச)

துணியாருடையாடைதுன்னியரைதன்மேல்
தணியாவழலாகந்தரியாவகைவைத்தார்
பணியாரடியார்கள்பலரும்பயின்றேத்த
அணியார்வடுகூரிலாடும்மடிகளே. (ரு)

தளருங்கொடியன்னாடன்னோடுடனாகிக்
கிளருமரவார்த்துக் ‡ கிளருமுடிமேலோர்
வளரும்பிறைசூடிவரிவண்டிசைபாட
ஒளிரும்வடுகூரிலாடும்மடிகளே. (சு)

நெடியர்சிறிதாயநிரம்பாமதிசூடும்
முடியர்விடையூர்வர்கொடியர்மொழிகொள்ளார் ¶
கடியதொழிற்காலன்மடியவுதைகொண்ட
அடியர்வடுகூரிலாடும்மடிகளே. (எ)

பிறையுநெடுநீரும்பிரியாமுடியினர்
மறையும்பலபாடிமயானத்துறைவாரும்
பறையுமதிர்குழலும்போலப்பலவண்டாங்
கறையும்வடுகூரிலாடும்மடிகளே. (அ)

சந்தம்மலர்வேய்ந்தசடையின்னிடைவிம்மு
கந்தம்மிகுதிங்கட்சிந்துகதிர்மாலை
வந்துநயந்தெம்மைநன்றுமருள்செய்வார்
அந்தண்வடுகூரிலாடும்மடிகளே. (சு)

திருமாலடிவீழத்திசைநான்முகனாய
பெருமானுணர்கில்லாப்பெருமா § னெடுமுடிசேர்
செருமால்விடையூருஞ்செம்மான்றிசைவில்லா
அருமாவடுகூரிலாடும்மடிகளே. (க0)

* மேலுஞ்சுடுநீறும் என்றும் பாடம். † வெரியூட்டிக் என்றும் பாடம். ‡ மரவாட்டிக் என்றும் பாடம். ¶ கொடியமொழியுள்ளார் என்றும் பாடம். § னுணர்கில்லான்பெருமான் என்றும் பாடம்.

Koviloor Digital Library

படிநோன்பவையாவர்பழியில்புகழான
கடிநாணிகழ்சோலைகமழும்வடுகூரைப்
படியானசிந்தைமொழியார்சம்பந்தன்
அடிஞானம்வல்லாரடிசேர்வார்களே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவடுகூர்த்திருப்பதிகம் - ௧.

ஆ திருப்பதிகம் - ௬எ.

சுவாமி தேவி திருநாமங்கள் - வடுகூர்நாதர், வடுவகிர்க்கண்ணியம்மை.

௬எ. திருமாணிகுழி.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

திருவிராகம். பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

பொன்னியல்பொருப்பரையன்மங்கையொருபங்கர்புனறங்குசடைமேல்
வன்னியொடுமத்தமலர்வைத்தவிறல்வித்தகர்மகிழ்ந்துறைவிடம்
கன்னியிளவாளைகுதிகொள்ளவிளவள்ளைபடரள்ளல்வயல்வாய்
மன்னியிளமேதிகள்படிந்துமனைசேருதவிமாணிகுழியே. (௧)

சோதிமிகுநீறதுமெய்பூசியொருதோலுடைபுனைந்துதெருவே
மாதர்மனைதோறுமிசைபாடிவசிபேசுமரனூர்மகிழ்விடம்
தாதுமலிதாமரைமணங்கமழவண்டுமுரறண்பழனமிக்
கோதமலிவேலிபுடைசூழலகினீடுதவிமாணிகுழியே. (௨)

அம்பனையகண்ணுமைமடந்தையவளஞ்சிவெருவச்சினமுடைக்
கம்பமதயானையுரிசெய்தவரனூர்கருதிமேயவிடமாம் *
வம்புமலிசோலைபுடைசூழமணிமாடமதுநீடி † யழகார்
உம்பரவர்கோனகரமென்னமிகமன்னுதவிமாணிகுழியே. (௩)

நித்தநியமத்தொழிலனாகிநெடுமால்குறளனாகிமிகவும்
சித்தமதொருக்கிவழிபாடுசெயநின்றசிவலோகனிடமாம்
கொத்தலர்மலர்ப்பொழிலினீடுகுலமஞ்ஞைநடமாடலதுகண் ‡
டொத்தவரிவண்டுகளுலாவியிசைபாடுதவிமாணிகுழியே. (௪)

மாசின்மதிசூடுசடைமாமுடியர்வல்லசுரர் ¶ தொன்னகரமுன்
நாசமதுசெய்துநலவானவர்களுக்கருள்செய்நம்பனிடமாம்
வாசமலிமென்குழன்மடந்தையர்கண்மாளிகையின்மன்னியழகார்
ஊசன்மிசையேறியினிதாகவிசைபாடுதவிமாணிகுழியே. (௫)

* மேவவிடமாம் என்றும் பாடம். † மதினீடி என்றும்பாடம். ‡ லதுகொண் என்றும் பாடம். ¶ வல்லவுணர் என்றும் பாடம்.

Koviloor Digital Library

மந்தமலர்கொண்டுவழிபாடுசெயுமாணியுயிர்வவ்வமனமாய்
வந்தவொருகாலனுயிர்மாளவுதைசெய்தமணிகண்டனிடமாம்
சந்தினொடுகாரகில்சுமந்துதடமாமலர்கள்கொண்டுகெடிலம்
உந்துபுனல்வந்துவயல்பாயுமணமாருதவிமாணிகுழியே. (௬)

எண்பெரியவானவர்கணின்றுதுதிசெய்யவிறையேகருணையாய்
உண்பரியநஞ்சதனை *யுண்டுலகமுய்யவருளுந்தமனிடம்
பண்பயிலும்வண்டுபலகெண்டிமதுவுண்டுநிறைபைம்பொழிலின்வாய்
ஒண்பலவினின்கனிசொரிந்துமணநாறுதவி † மாணிகுழியே. (௭)

எண்ணமதுவின்றியெழிலார்கைலைமாமலையெடுத்ததிறலார்
திண்ணியவரக்கனைநெரித்தருள்புரிந்தசிவலோகனிடமாம்
பண்ணமருமென்மொழியினார்பணைமுலைப்பவளவாயழகதார்
ஒண்ணுதன்மடந்தையர்குடைந்துபுனலாடுதவிமாணிகுழியே. (௮)

நேடுமயனொடுதிருமாலுமுணராவகைநிமிர்ந்தமுடிமேல்
ஏடுலவுதிங்கண்மதமத்தமிதழிச்சடையெம்மீசனிடமாம்
மாடுலவுமல்லிகைகுருந்துகொடிமாதவிசெருந்திகுராவின்
ஊடுலவுபுன்னைவிரைதாது ‡ மலிசேருதவிமாணிகுழியே. (௯)

மொட்டையமணாதர்முதுதேரர்மதியில்லிகண்முயன்றனபடும்
முட்டைகண்மொழிந்தமொழிகொண்டருள்செய்யாதமுதல்வன்றனிடமாம்
மட்டைமலிதாழையிளநீர்முதியவாழையில்விழுந்தவதரில்
ஒட்டமலிபூகநிரைதாறுதிரவேறுதவிமாணிகுழியே. (௧௦)

உந்திவருதண்கெடிலமோடுபுனல்சூழுதவிமாணிகுழிமேல்
அந்திமதிசூடியவெம்மானையடிசேருமணிகாழிநகரான்
சந்தநிறைதண்டமிழ்தெரிந்துணருஞானசம்பந்தனதுசொல்
முந்தியிசைசெய்துமொழிவார்களுடையார்கணெடுவானநிலனே. ¶ (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருமாணிகுழித்திருப்பதிகம் - ௧.

ஆக திருப்பதிகம் - ௪௮.

சுவாமி தேவி திருநாமங்கள் - மாணிக்கவரதர், மாணிக்கவல்லி.

* உண்பரியநஞ்சுதனை என்றும் பாடம். † மணமாருதவி என்றும் பாடம். ‡ விரிதாறு என்றும் பாடம். ¶ வானுலகமே என்றும் பாடம்.

Koviloor Digital Library

கஅ. திருப்பாதிரிப்புலியூர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண் - செவ்வழி.

திருச்சிற்றம்பலம்.

முன்னநின்றமுடக்கான்முயற்கருள்செய்துநீள்
புன்னைநின்றுகமழ்பாதிரிப்புலியூருளான்
தன்னைநின்றுவணங்குந்தனைத்தவமில்லிகள்
பின்னைநின்றபிணியாக்கையைப்பெறுவார்களே. (க)

கொள்ளிநக்கபகுவாயபேய்கள் * குழைந்தாடவே
முள்ளிலவம்முதுகாட்டுறையும்முதல்வன்னிடம்
புள்ளினங்கள்பயிலும்பாதிரிப்புலியூர்தனை
உள்ளநம்மேல்வினையாயினவொழியுங்களே. (உ)

மருளினல்லார்வழிபாடுசெய்யும்மழுவாளர்மேல்
பொருளினல்லார்பயில்பாதிரிப்புலியூருளான்
வெருளின்மானின் † பிணைநோக்கல்செய்துவெறிசெய்தபின்
அருளியாகத்திடைவைத்ததுவும்மழகாகவே. (ஈ)

போதினாலும்புகையாலுமுய்த்தேயடியார்கடாம்
போதினாலேவழிபாடுசெய்யப்புலியூர்தனுள்
ஆதினாலும் ‡ அவலம்மிலாதவடிகண்மறை
ஓதிநாளும்மிடும்பிச்சை ¶ யேற்றுண்டுணப்பாலதே. (ச)

ஆகநல்லாரமுதாக்கவுண்டானழலேந்தலை
நாகநல்லார்பரவந்நயந்தங்கரையார்த்தவன்
போகநல்லார்பயிலும்பாதிரிப்புலியூர்தனுள்
பாகநல்லாளொடுநின்றவெம்பரமேட்டியே. (ரு)

மதியமொய்த்தகதிர்போலொளிம்மணற்கானல்வாய்ப்
புதியமுத்தந்திகழ்பாதிரிப்புலியூரெனும்
பதியில்வைக்கப்படுமெந்தைதன்பழந்தொண்டர்கள்
குதியுங்கொள்வர்விதியுஞ்செய்வர்குழகாகவே. (சு)

கொங்கரவப்படுவண்டறைகுளிர்கானல்வாய்ச்
சங்கரவப்பறையின்னொலியவைசார்ந்தெழப்
பொங்கரவம்முயர்பாதிரிப்புலியூர்தனுள்
அங்கரவம்மரையில்லசைத்தானையடைமினே. (எ)

* கொள்ளிநக்கப்பகுவாய்ப்பேய்கள் என்றும் பாடம். † வெருளிமானின் என்றும் பாடம். ‡ ஆதினாலும் என்றும் பாடம். ¶ மடும்பிச்சை என்றும் பாடம்.

Koviloor Digital Library

வீக்கமெழும்மிலங்கைக்கிறைவிலங்கல்லிடை
ஊக்கமொழிந்தலறவ்விரலாலிறையூன்றினன்
பூக்கமழும்புனற்பாதிரிப்புலியூர்தனை
நோக்கமெலிந்தணுகாவினைநாணுருங்களே. (அ)

அன்னந்தாவும்மணியார்பொழின்மணியார்புன்னை
பொன்னந்தாதுசொரிபாதிரிப்புலியூர்தனுள்
முன்னந்தாவியடிமூன்றளந்தவன்னான்முகன்
தன்னந்தாளுற்றுணராததோர்தவநீதியே. (கூ)

உரிந்தகூறையுருவத்தொடுதெருவத்திடைத்
திரிந்துதின்னுஞ்சிறுநோன்பரும்பெருந்தேரரும்
எரிந்துசொன்னவ்வுரைகொள்ளாதேயெடுத்தேத்துமின்
புரிந்த * வெண்ணீற்றண்ணல்பாதிரிப்புலியூரையே. (கΩ)

அந்தணல்லாரகன்காழியுண்ஞானசம்
பந்த † னல்லார்பயில்பாதிரிப்புலியூர்தனுள்
சந்தமாலைத்தமிழ்பத்திவைதரித்தார்கண்மேல்
வந்துதீயவ்வடையாமையால்வினைமாயுமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

ஈன்றாளுமாயெனக்கெந்தையுமாயுடன்றோன்றினராய்
மூன்றாயுலகம்படைத்துகந்தான்மனத்துள்ளிருக்க
ஏன்றானிமையவர்க்கன்பன்றிருப்பாதிரிப்புலியூர்த்
தோன்றாத்துணையாயிருந்தனன்றன்னடியோங்களுக்கே. (க)

பற்றாய்நினைந்திடப்போதுநெஞ்சே ‡ யிந்தப்பாரைமுற்றும்
சுற்றாயலைகடன்மூடினுங்கண்டேன்புகனமக்கு
உற்றானுமையவட்கன்பன்றிருப்பாதிரிப்புலியூர்
முற்றாமுளைமதிக்கண்ணியினான்றனமொய்கழலே. (உ)

விடையான்விரும்பியென்னுள்ளத்திருந்தானினிநமக்கிங்
கடையாவவலமருவினைசாராநமனையஞ்சோம்
புடையார்கமலத்தயன்போல்பவர்பாதிரிப்புலியூர்
உடையானடியாரடியடியோங்கட்கரியதுண்டே. ¶ (௩)

* பரிந்து என்றுபாடமோதுவாருமுளர். † காழியுளணிஞானசம்பந்தன் என்றும் பாடம். ‡ நினைந்திட்டெப்போதுநெஞ்சே என்றும் பாடம். ¶ னடியாரடியாரடியோங் கட்கரியதுண்டே என்றும் பாடம்.

Koviloor Digital Library

மாயயெல்லாமுற்றவிட்டிருணீங்கமலைமகட்கே*
நேயநிலாவவிருந்தானவன்றன்றிருவடிக்கே†
தேயமெல்லாநின்றிறைஞ்சுந்திருப்பாதிரிப்புலியூர்
மேயநல்லான்மலர்ப்பாதமென்சிந்தையுணின்றனவே. (௪)

வைத்தபொருணமக்காமென்றுசொல்லிமனத்தடைத்துச்
சித்தமொருக்கிச்சிவாயநமவென்றிருக்கினல்லால்
மொய்த்தகதிர்மதிபோல்வாரவர்பாதிரிப்புலியூர்‡
அத்தனருள்பெறலாமோவறிவிலாப்பேதைநெஞ்சே. (௫)

கருவாய்க்கிடந்துன்கழலேநினையுங்கருத்துடையேன்
உருவாய்த்தெரிந்துன்றனாமம்பயின்றேனுனதருளால்
திருவாய்ப்பொலியச்¶ சிவாயநமவென்றுநீறணிந்தேன்
தருவாய்சிவகதிநீபாதிரிப்புலியூரானே. (௬)

என்னாதமாரிருக்கப்§ பாவையுணஞ்சமுண்டாய்○
தின்னாசுரர்** திரிபுரந்தீயெழச்செற்றவனே
பண்ணார்ந்தமைந்தபொருள்கள்பயில்பாதிரிப்புலியூர்க்
கண்ணார்நுதலாய்கழனங்கருத்தினுடையனவே. (௭)

புழுவாய்ப்பிறக்கினும்புண்ணியாவுன்னடியென்மனத்தே
வழுவாதிருக்கவரந்தரவேண்டுமிவ்வையகத்தே
தொழுவார்க்கிரங்கியிருந்தருள்செய்பாதிரிப்புலியூர்ச்
செழுநீர்ப்புனற்கங்கைசெஞ்சடைமேல்வைத்ததீவண்ணனே. (௮)

மண்பாதலம்புக்குமால்கடன்மூடிமற்றேழுலகும்
விண்பாறிசைகெட்டிருசுடர்வீழினுமஞ்சனெஞ்சே
திண்பானமக்கொன்றுகண்டோந்திருப்பாதிரிப்புலியூர்க்
கண்பாவுநெற்றிக்கடவுட்சுடரான்கழலிணையே. (௯)

திருந்தாவமணர்தந்நெறிப்பட்டுத்திகைத்துமுத்தி
தருந்தாளிணைக்கேசரணம்புகுந்தேன்வரையெடுத்த††
பொருந்தாவரக்கனுடனெரித்தாய்பாதிரிப்புலியூர்
இருந்தாயடியேனினிப்பிறவாமல்வந்தேன்றுகொள்ளே. (௰)

திருச்சிற்றம்பலம்.

திருப்பாதிரிப்புலியூர்த்திருப்பதிகம் - ௨.

ஆ திருப்பதிகம் - ௯0.

சுவாமி தேவி திருநாமங்கள் - தோன்றாத்துணைநாதர், தோகைநாயகி.

* னிங்கமலைமகட்கே என்றும் பாடம். † விருந்தானன்னவன்றன்றிருந்தடிக்கே என்றும், விருந்தானவன்றன்றிருந்தடிக்கே என்றும் பாடம். ‡ போல்வார்திருப்பாதிரிப்புலியூர் என்றும் பாடம். ¶ வாய்பொலியச் என்றும் பாடம். § ரிருக்கப் என்றும் பாடம். ○ மஞ்சையுண்டாய் என்றும் பாடம். ** தின்னுவசுரர் என்றும் பாடம். †† புகுந்தேனவ்வரையெடுத்த என்றும் பாடம்.

Koviloor Digital Library

௧௧௯. திருமுண்டீச்சரம்.*

திருநாவுக்கரசுநாயனார்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

ஆர்த்தான்காணழுகமரைக்குநாணு
வடியவர்கட்கன்பன்காணுனைத்தோலைப்
போர்த்தான்காண்புரிசடைமேற்புனலேற்றான்காண்
புறங்காட்டிலாடல்புரிந்தான்றான்காண்
காத்தான்காணுலகேழுங்கலங்காவண்ணங்
கனைகடல்வாய்நஞ்சதனைக்கண்டத்துள்ளே
சேர்த்தான்காண்டிருமுண்டீச்சரத்துமேய
சிவலோகன்காணவனென்சிந்தையானே. (௧)

கருத்தன்காண்கமலத்தோன்றலையிலொன்றைக்
காய்ந்தான்காண்பாய்ந்தநீர்பரந்தசென்னி
ஒருத்தன்காணுமையவளோர்பாகத்தான்கா
ணோருருவின்மூவுருவாயொன்றாய்நின்ற
விருத்தன்காண்விண்ணவர்க்குமேலானான்காண்
மெய்யடியாருள்ளத்தேவிரும்பிநின்ற
திருத்தன்காண்டிருமுண்டீச்சரத்துமேய
சிவலோகன்காணவனென்சிந்தையானே. (௨)

நம்பன்காணரைவிடையொன்றேறினான்கா
ணாதன்காண்கீதத்தைநவிற்றினான்காண்
இன்பன்காணிமையாமுக்கண்ணினான்கா
னேசற்றுமனமுருகுமடியார்தங்கட்
கன்பன்கா † ணாழலதாடினான்கா
ணவனிவனென்றியாவர்க்குமறியவொண்ணாச்
செம்பொன்காண்டிருமுண்டீச்சரத்துமேய
சிவலோகன்காணவனென்சிந்தையானே. (௩)

மூவன்காண்மூவர்க்குமுதலானான்காண்
முன்னுமாய்ப்பின்னுமாய்முடிவானான்காண்
காவன்காணுலகுக்கோர்கண்ணானான்காண்
கங்காளன்காண்கயிலைமலையினான்காண்
ஆவன்காணாவகத்தஞ்சாடினான்கா
ணாழலாயயற்கரிக்குமறியவொண்ணாத்
தேவன்காண்டிருமுண்டீச்சரத்துமேய
சிவலோகன்காணவனென்சிந்தையானே. (௪)

* இதனைத்திருக்கண்டீச்சரம் எனவழங்குப. † மடியார்தங்களன்பன்காண் என்றும் பாடம்.

Koviloor Digital Library

கானவன்காண்கானவனுப்பொருதான்றான்காண்
கனலாடவல்லான்காண்கையிலேந்தும்
மானவன்காண்மறைநான்குமாயினான்காண்
வல்லேறொன்றதுவேறவல்லான்றான்காண்
ஊனவன்காணுலகத்துக்குயிரானான்கா
ணுரையவன்காணுணர்வவன்காணுணர்ந்தார்க்கென்றும்
தேனவன்காண்டிருமுண்டீச்சரத்துமேய
சிவலோகன்காணவனென்சிந்தையானே. (௫)

உற்றவன்காணுறவெல்லாமாவான்றான்கா *
ணொழிவறநின்றெங்குமுலப்பிலான்காண்
புற்றரவேயாடையுமாய்ப்பூணுமாகிப் †
புறங்காட்டிலெரியாடல்புரிந்தான்றான்காண்
நற்றவன்காணடியடைந்த ‡ மாணிக்காக
நணுகியதோர்பெருங்கூற்றைச்சேவடியினால்
செற்றவன்காண்டிருமுண்டீச்சரத்துமேய
சிவலோகன்காணவனென்சிந்தையானே. (௬)

உதைத்தவன்காணுணராததக்கன்வேள்வி
யுருண்டோடத்தொடர்ந்தருக்கன்பல்லையெல்லாம்
தகர்த்தவன்காண்டக்கன்றன்றலையைச்செற்ற ¶
தலையவன்காண் § மலைமகளாமுமையைச்சால
மதிப்பொழிந்தவல்லமரர்மாண்டார்வேள்வி
வந்தவியுண்டவரோடுமதனையெல்லாம்
சிதைத்தவன்காண்டிருமுண்டீச்சரத்துமேய
சிவலோகன்காணவனென்சிந்தையானே. (௭)

உரிந்தவுடையார்துவராலுடம்பைமூடி
யுழிதருமவ்வூமரவருணாராவண்ணம்
பரிந்தவன்காண்பனிவரைமீப்பண்டமெல்லாம் 0
பரித்துடனே ** நிரந்துவருபாய்நீர்ப்பெண்ணை
நிரந்துவரு †† மிருகரையுந்தடவாவோடி
நின்மலனைவலங்கொண்டுநீளநோக்கித்
திரிந்தலவுதிருமுண்டீச்சரத்துமேய
சிவலோகன்காணவனென்சிந்தையானே. (அ)

அறுத்தவன்காணடியவர்களல்லலெல்லா
மரும்பொருளாய்நின்றவன்காணநங்கனுகம்
மறுத்தவன்காண்மலைதன்னைமதியாதோடி
மலைமகடன்மனநடுங்கவாானைஞ்சக்

* மாவான்றான்காண் என்றும் பாடம். † மாகப் என்றும் பாடம். ‡ நற்றவனுயடியடைந்த என்றும் பாடம். ¶ தகர்த்தவன்காணெச்சனவன்றலையைச்செற்ற என்றும் பாடம். § தலைவன்காண் என்றும் பாடம். 0 வரையிற்பண்டமெல்லாம் என்றும் பாடம். ** பறித்துடனே என்றும் பாடம். †† நிரைந்துவரும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

கறுத்தவனுக்கயிலாயமெடுத்தோன்கையுங்
கதிர்முடியுங்கண்ணும்பிதுங்கியோடச்
செறுத்தவன்காண்டிருமுண்டீச்சரத்துமேய
சிவலோகன்காணவனென்சிந்தையானே. * (க0)

திருச்சிற்றம்பலம்.

திருமுண்டீச்சரத்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - ௫க.

சுவாமி தேவி திருநாமங்கள் - முண்டீசுரர், கானார்குழலியம்மை.

உ0. திருப்புறவார்பனங்காட்டூர்.†

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - சீ கா ம ர ம்.

திருச்சிற்றம்பலம்.

விண்ணமர்ந்தனமும்மதில்களைவீழவெங்கணையாலெய்தாய்விரி
பண்ணமர்ந்தொலிசேர்புறவார்பனங்காட்டூர்ப்
பெண்ணமர்ந்தொருபாகமாகியபிஞ்ஞகாபிறைசேர்நுதலிடைக்
கண்ணமர்ந்தவனேகலந்தார்க்கருளாயே. (க)

நீடல்கோடலலரவெண்முல்லைநீர்மலர்நிரைத்தாதளஞ்செயப்
பாடல்வண்டறையும்புறவார்பனங்காட்டூர்த்
தோடிலங்கியகாதயன்மின்றுளங்க ‡ வெண்குழைதுள்ளநள்ளிருள்
ஆடுஞ்சங்கரனேயடைந்தார்க்கருளாயே. (உ)

வாளையுங்கயலும்மிளிர்பொய்கைவார்புனற்கரையருகெலாம்வயற்
பாளையொண்கமுகம்புறவார்பனங்காட்டூர்ப்
பூளையுந்நறுங்கொன்றையும்மதமத்தமும்புனைவாய்கழலிணைத்
தாளையேபரவுந்தவத்தார்க்கருளாயே. (௩)

மேய்ந்திளஞ்செந்நென்மென்கதிர்கவ்விமேற்படுதலின் ¶ மேதிவைகறை
பாய்ந்ததண்பழனப்புறவார்பனங்காட்டூர்
ஆய்ந்தநான்மறைபாடியாடுமடிகளென்றென்றரற்றிநன்மலர்
சாய்ந்தடிபரவுந்தவத்தார்க்கருளாயே. (௪)

* இத்திருப்பதிகத்தில் கூ-வது செய்யுள் மறைந்துபோயிற்று. † இதனை இக்காலத்து, பனையபுரம் எனவழங்குப. ‡ றுலங்க என்றும் பாடம். ¶ மேற்படுகலின் என்றும் பாடம்.

Koviloor Digital Library

செங்கயல்லொடுசேல்செருச்செயச்சீறியாழ்முரறேனினத்தொடு
பங்கயம்மலரும்புறவார்பனங்காட்டூர்க்
கங்கையும்மதியுங்கமழ்சடைக்கேண்மையாளொடுங்கூடிமான்மறி
அங்கைபாடலனேயடியார்க்கருளாயே. (௫)

நீரினார்வரைகோலி* மால்கடனீடியபொழில்சூழ்ந்துவைகலும்
பாரினார்பிரியாப்புறவார்பனங்காட்டூர்க்
காரினார்மலர்க்கொன்றைதாங்குகடவுளென்றுகைகூப்பிநாடொறும்
சீரினால்வணங்குந்திறத்தார்க்கருளாயே. (௬)

கையரிவையர்மெல்விரல்லவைகாட்டியம்மலர்க்காந்தளங்குறி†
பையராவிரியும்புறவார்பனங்காட்டூர்
மெய்யரிவையொர்பாகமாகவுமேவினாய்கழலேத்திநாடொறும்
பொய்யிலாவடிமைபுரிந்தார்க்கருளாயே. (௭)

தூவியஞ்சிறைமென்னடையனமல்கியொல்கியதூமலர்ப்பொய்கைப்
பாவில்வண்டறையும்புறவார்பனங்காட்டூர்
மேவியந்நிலையாயரக்கனதோளடர்த்தவன்பாடல்கேட்டருள்
ஏவியபெருமானென்பவர்க்கருளாயே. (௮)

அந்தண்மாதவிபுன்னைநல்லவசோகமும்மரவிந்தமல்லிகை
பைந்தஞாழல்கள்சூழ்புறவார்பனங்காட்டூர்
எந்திளம்முகில்வண்ணனான்முகனென்றிவர்க்கரிதாய்நிமிர்ந்ததொர்
சந்தமாயவனேதவத்தார்க்கருளாயே. (௯)

நணைமார்முருகுண்டுவண்டினநீலமாமலர்கவ்விநேரிசை
பாணில்யாழ்‡முரலும்புறவார்பனங்காட்டூர்
நாணழிந்துழல்வார்சமணருநண்பில்¶ சாக்கியருந்நகத்தலை
ஊணுரியவனேபுகப்பார்க்கருளாயே. (௧௦)

மையினார்மணிபோன்மிடற்றனைமாசில்வெண்பொடிப்பூசுமார்பனைப்
பையதேன்பொழில்சூழ்புறவார்பனங்காட்டூர்
ஐயனைப்புகழானகாழியுளாய்ந்தநான்மறைஞானசம்பந்தன்
செய்யுள்பாடவல்லார்§ சிவலோகஞ்சேர்வாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருப்புறவார்பனங்காட்டூர்த்திருப்பதிகம் - க.

ஆக திருப்பதிகம் - ௫௨.

சுவாமி தேவி திருநாமங்கள் - பனங்காட்டீசுவரர், புறவம்மை.

* நீரினார்கரைகோலி என்றும் பாடம். † கையரிவ்வையர்மெல்விரல்லவைகாட்டியும் மலர்க்காந்தளங்குறி என்றும் பாடம். ‡ பாணியாழ்என்றும் பாடம். ¶ நம்பில் என்றும் பாடம்; நம்பு முதநிலை; நம்புதலில்லாத. § பாடல்வல்லார் என்றும் பாடம்.

Koviloor Digital Library

உக. திருவாமாத்தூர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

துன்னம்பெய்கோவணமுந்தோலுமுடையாடை
பின்னஞ்சடை* மேலோர்பிள்ளைமதிசூடி
அன்னஞ்சேர் தண்கானலாமாத்தூரம்மான்றன்
பொன்னங்கழல்பரவாப்பொக்கமும்பொக்கமே. (க)

கைம்மாவின்றோல்போர்த்தகாபாலிவானுலகில்
மும்மாமதிலெய்தான்முக்கணன்பேர்பாடி
அம்மாமலர்ச்சோலையாமாத்தூரம்மானெம்
பெம்மானென்றேத்தாதார்பேயரிற்பேயரே. (உ)

பாம்பரைச்சாத்தி† யோர்பண்டரங்கன்விண்டதோர்
தேம்பலிளமதியஞ்சூடியசென்னியான்
ஆம்பலம்பூம்பொய்கையாமாத்தூரம்மான்றன்
சாம்பலகலத்தார்சார்பல்லாற்சார்பிலமே. (ங)

கோணாகப்பேரல்குற்கோல்வளைக்கைமாதராள்
பூணாகம்பாகமாப்புல்கியவளோடும்
ஆணாகக்காதல்செய்யாமாத்தூரம்மானைக்
காணாதகண்ணெல்லாங்காணாதகண்களே. (ச)

பாடனெறிநின்றான்பைங்கொன்றைத்தண்டாரே
சூடனெறிநின்றான்சூலஞ்சேர்கையினான்
ஆடனெறிநின்றானாமாத்தூரம்மான்றன்
வேடநெறிநில்லாவேடமும்வேடமே. (ரு)

சாமவரை‡ வில்லாகச்சந்தித்த¶ வெங்கணையால்
காவன்மதிலெய்தான்கண்ணுடைநெற்றியான்
யாவருஞ்சென்றேத்துமாமாத்தூரம்மானைத்
தேவர்தலைவணங்குந்தேவர்க்குந்தேவனே. (சு)

மாறுதவெங்கூற்றைமாற்றிமலைமகளை
வேறாகநில்லாதவேடமேகாட்டினான்
ஆறாதீயாடியாமாத்தூரம்மானைக்
கூறாதநாவெல்லாங்கூறாதநாக்களே. (எ)

* பின்னுஞ்சடை என்றும் பாடம். † சார்த்தி என்றும் பாடம். ‡ சாவவரை என்றும், சாவம்வரை என்றும் பாடம். ¶ வில்லாச்சந்தித்த என்று பலபிரதிகளிற்காணப்படுகின்றது; வில்லாற்சந்தித்த என்கின்றதொருபிரதி.

Kovilloor Digital Library

தாளாலரக்கன்றோள்சாய்த்ததலைமகன்றன்
நாளாதிரையென்றேநம்பன்றனாமத்தால்
ஆளானார்சென்றேத்துமாமாத்தூரம்மானைக்
கேளாச்செவியெல்லாங்கேளாச்செவிகளே. (௮)

புள்ளுங்கமலமுங்கைக்கொண்டார்தாமிருவர்
உள்ளுமவன்பெருமையொப்பளக்குந்தன்மையதே
அள்ளல்விளைகழனியாமாத்தூரம்மானெம்
வள்ளல்கழல்பரவாவாழ்க்கையும்வாழ்க்கையே. (௯)

பிச்சைபிறர்பெய்யப்பின்சாரக்கோசாரக்*
கொச்சைபுலானாற†வீருரிவைபோர்த்துகந்தான்
அச்சந்தன்மாதேவிக்கீந்தான்றனாமாத்தூர்
நிச்சனினையாதார்நெஞ்சமுநெஞ்சமே. (௧௦)

ஆடலரவசைத்தவாமாத்தூரம்மானைக்
கோடலிரும்புறவிற்கொச்சைவயத்தலைவன்
நாடலரியசீர்ஞானசம்பந்தன்றன்
பாடலிவைவல்லார்க்கில்லையாம்பாவமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

குன்றவார்சிலைநாணராவரிவாளிகூரெரிகாற்றின்மும்மதில்
வென்றவாறெங்ஙனேவிடையேறும்வேதியனே
தென்றலார்மணிமாடமாளிகைசூளிகைக்கெதிர்நீண்டபெண்ணைமேல்
அன்றில்வந்தணையுமாமாத்தூரம்மானே. (௧)

பரவிவானவர்தானவர்பலருங்கலங்கிடவந்தகார்விடம்
வெருவவுண்டுகந்தவருளென்கொல்விண்ணவனே
கரவின்மாமணிபொன்கொழித்திழிசந்துகாரகிறந்துபம்மைநீர்
அருவிவந்தலைக்குமாமாத்தூரம்மானே. (௨)

நீண்டவார்சடைதாழநேரிழைபாடநீறுமெய்பூசிமாலயன்
மாண்டவார்சுடலைநடமாடுமாண்பதுவென்
பூண்டகேழன்மருப்பராவிரிகொன்றைவாள்வரியாமைபூணென
ஆண்டநாயகனேயாமாத்தூரம்மானே. (௩)

சேலினேரனகண்ணிவெண்ணகைமான்விழித்திருமாதைப்பாகம்வைத்
தேலமாதவநீமுயல்கின்றவேடமிதென்
பாலினேர்மொழிமங்கைமார்நடமாடியின்னிசைபாடநீள்பதி
அலைசூழ்கழனியாமாத்தூரம்மானே. (௪)

* சோசாரம் என்றும் பாடம். † கொச்சைப்புலானாற என்றும் பாடம்.

Koviloor Digital Library

தொண்டர்வந்துவணங்கிமாமலர்தூவிநின்கழலேத்துவாரவர்
உண்டியால்வருந்தவிரங்காததென்னைகொலாம்
வண்டலார்கழனிக்கலந்துமலர்ந்ததாமரைமாதர்வாண்முகம்
அண்டவாணர்தொழுமாமாத்தூரம்மானே. (ரு)

ஓதியாரணமாயநுண்பொருளன்றுநால்வர்முன்கேட்கநன்னெறி
நீதியாலநீழலுரைக்கின்றநீர்மையதென்
சோதியேசுடரேசுரும்பமர்கொன்றையாய்திருநின்றியூருறை
ஆதியேயரனேயாமாத்தூரம்மானே. (சு)

மங்கைவாணுதன்மான்மனத்திடைவாடியூடமணங்கமழ்சடைக்
கங்கையாளிருந்தகருத்தாவதென்னை * கொலாம்
பங்கயமதுவுண்டுவண்டிசைபாடமாமயிலாடவிண்முழ
வங்கையாலதிர்க்குமாமாத்தூரம்மானே. (எ)

நின்றடர்த்திடுமைம்புலன்னிலையாதவண்ணநினைந்துளத்திடை
வென்றடர்த்தொருபான்மடமாதைவிரும்புதலென்
குன்றெடுத்தநிசாசரன்றிரடோளிருபதுதானெரிதர
அன்றடர்த்துகந்தாயாமாத்தூரம்மானே. (அ)

செய்யதாமரைமேலிருந்தவனோடுமாலடிதேடநீண்முடி
வெய்யவாரழலாய்நிமிர்கின்றவெற்றிமையென் †
தையலாளொடுபிச்சைக்கிச்சைதயங்குதோலரையார்த்தவேடங்கொண்
டையமேற்றுகந்தாயாமாத்தூரம்மானே. (கூ)

புத்தர்புன்சமணர்பொய்ம்மொழிநூல்பிடித்தலர்தூற்றநின்னடி
பத்தர்பேணநின்றபரமாயபான்மையதென்
முத்தைவென்றமுறுவலாளுமைபங்கனென்றிமையோர்பரவிடும்
அத்தனேயரியாயாமாத்தூரம்மானே. (க0)

வாடல்வெண்டலைமாலையார்த்துமயங்கிருள்ளெரியேந்திமாநடம்
ஆடன்மேயதென்னென்றுமாத்தூரம்மானைக்
கோடனாகமரும்புபைம்பொழிற்கொச்சையாரிறைஞானசம்பந்தன்
பாடல்பத்தும்வல்லார்பரலோகஞ்சேர்வாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

மாமாத்தாகியமாலயன்மால்கொடு
தாமாத்தேடியுங்காண்கிலர்தாண்முடி
ஆமாத்தூரரனேயருளாயென்றென் ‡
றேமாப்பெய்திக்கண்டாரிறையானையே. (க)

* கருத்தாயதென்னை என்றும் பாடம். † வேற்றுமையென் என்றுபாடமோதுவாருமுளர். ‡ யருளாயென்றே என்றும், யருளாயென்று என்றும் பாடம்.

Koviloor Digital Library

சந்தியானைச்சமாதிசெய்வார்தங்கள்
புந்தியானைப்புத்தேளிர்தொழப்படும்
அந்தியானையாமாத்தூரழகனைச்
சிந்தியாதவர்தீவினையாளரே. (௨)

காமாத்தம்மெனுங்கார்வலைப்பட்டுநான்
போமாத்தையறியாதுபுலம்புவேன்
ஆமாத்தூரரனேயென்றழைத்தலும்
தேமாத்திங்கனிபோலத்தித்திக்குமே. (௩)

பஞ்சபூதவலையிற்படுவதற்
கஞ்சினானுமாமாத்தூரழகனை
நெஞ்சினுள்ளினைந்தேனினைவெய்தலும்
வஞ்சவாறுகள்வற்றினகாண்மினே. (௪)

குராமனுங்குழலாளொருகூறனார்
அராமனுஞ்சடையான்றிருவாமாத்தூர்
இராமனும்வழிபாடுசெய்யீசனை
நிராமயன்றனைநாளுநினைமினே. * (௫)

பித்தனைப்பெருந்தேவர்தொழப்படும்
அத்தனையணியாமாத்தூர்மேவிய
முத்தினையடியேனுன்முயறலும்
பத்திவெள்ளம்பரந்ததுகாண்மினே. (௬)

நீற்றினார்திருமேனியனேரிழை
கூற்றினான்குழற்கோலச்சடையிலோர்
ஆற்றினானணியாமாத்தூர்மேவிய
ஏற்றினானெமை† யாளுடையீசனே. (௭)

பண்ணிற்பாடல்கள்பத்திசெய்வித்தகர்க்
கண்ணித்தாகுமமுதினையாமாத்தூர்
சண்ணிப்பானைத்தமர்க்கணித்தாயதோர்
கண்ணிற்பாவையன்னானவன்காண்மினே. (௮)

குண்டர்பீலிகள்கொள்ளுங்குணமிலா
மிண்டரோடேனைவேறுபடுத்துய்யக்
கொண்டநாதன்குளிர்புனல்வீரட்டத்
தண்டனாரிடமாமாத்தூர்காண்மினே. (௯)

வானஞ்சாடுமதியரவத்தொடு
தானஞ்சாதுடன்வைத்தசடையிடைத்
தேனஞ்சாடியதெங்கிளநீரோடும்
ஆனஞ்சாடியவாமாத்தூரையனே. (௧௦)

* நினைமனே என்றும் பாடம். † ஏற்றினனமை என்றும் பாடம்.

Koviloor Digital Library

விடலையாய்விலங்கல்லெடுத்தான்முடி
அடரவோர்விரலூன்றியவாமாத்தூர்
இடமதாக்கொண்டவீசனுக்கென்னுளம்
இடமதாகக்கொண்டின்புற்றிருப்பனே. (கக)
திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

வண்ணங்கடாம்பாடிவந்துநின்று
வலிசெய்துவளைகவர்ந்தார்வகையானம்மைக்
கண்ணம்பானின்றெய்துகனலப்பேசிக்*
கடியமேதோர்விடையேறிக்காபாலியார்
சுண்ணங்கடாங்கொண்டுதுதையப்பூசித்
தோலுடுத்துநூல்பூண்டுதோன்றத்தோன்ற
அண்ணலார்போகின்றார்வந்துகாணீ
ரழகியரேயாமாத்தூரையனாரே. (க)

வெந்தார்வெண்பொடிப்பூசி † வெள்ளைமாலை
விரிசடைமேற்றாஞ்சூடிவீணையேந்திக்
கந்தாரந்தாமூலாப்போகாநிற்க்‡
கறைசேர்மணிமிடற்றீரூரேதென்றேன்
நொந்தார்போல்வந்தெனதில்லேபுக்கு
நுடங்கேரிடைமடவாய்நம்மூர்கேட்கில்
அந்தாமரைமலர்மேலளிவண் ¶ டியாழ்செய்
யாமாத்தூரென்றடிகள்போயினாரே. (உ)

கட்டங்கந்தாமொன்றுகையிலேந்திக்
கடியவிடையேறிக்காபாலியார்
இட்டங்கடாம்பேசியில்லேபுக்கு
விடும்பலியு § மிடக்கொள்ளார்போவாரல்லர்
பட்டிமையும்படிறுமேபேசாநின்றார் 0
பார்ப்பாரைப்பரிசழிப்பார்போல்கின்றார்தாம்
அட்டியசில்பலியுங்கொள்ளார்விள்ளா
ரழகியரேயாமாத்தூரையனாரே. (௩)

பசைந்தபலபூதத்தர்பாடலாடல்
படநாகக்கச்சையர்பிச்சைக்கென்றங்
கிசைந்ததோரியல்பினரெரியின்மேனி
யிமையாமுக்கண்ணினர்நால்வேதத்தர்

* கண்ணம்பாநின்றெய்துகழலப்பேசி என்றும் பாடம். † வெந்தார்பொடிப்பூசி என்றும் பாடம். ‡ போதாநிற்கக் என்றும் பாடம். ¶ மலர்மேலணிவண்டு என்றும் பாடம். § விடுபலியும் என்றும் பாடம். 0 பேசுகின்றார் என்றும் பாடம்.

Koviloor Digital Library

பிசைந்ததிருநீற்றினர்பெண்ணோர்பாகம்
பிரிவறியாப்பிஞ்ஞகனார்*தெண்ணீர்க்கங்கை
அசைந்ததிருமுடியரங்கைத்தீய
ரழகியரேயாமாத்தூரையனாரே. (சு)

உருளுடையதேர்புரவியோடும்யானை
யொன்றாலுங்குறைவில்லையூர்திவெள்ளே
திருளுடையகண்டத்தர்செந்திவண்ண
ரிமையவர்கடொழுதேத்துமிறைவனார்தாம்
பொருளுடையரல்லரிலருமல்லர்
புலித்தோலுடையாகப்பூதஞ்சூழ
அருளுடையவங்கோதைமாலைமார்ப
ரழகியரேயாமாத்தூரையனாரே. (ரு)

வீறுடையவேறேறிநீறுபூசி
வெண்டோடுபெய்திடங்கைவீணையேந்திக்
கூறுடையமடவாளோர்பாகங்கொண்டு
குழைபாடக்கொடுகொட்டிகொட்டாவந்து
பாறுடையபடுதலையோர்கையிலேந்திப்
பலிகொள்வாரல்லர்படிறேபேசி
ஆறுடையசடைமுடியெம்மடிகள்போலு
மழகியரேயாமாத்தூரையனாரே. (சா)

கையோர்கபாலத்தர்மானின்றோலர்
கருத்துடையர்நிருத்தராய்†காண்பார்முன்னே
செய்யதிருமேனிவெண்ணீறாடித்
திகழ்புன்சடைமுடிமேற்றிங்கள்சூடி
மெய்யொருபாகத்துமையைவைத்து
மேவார்திரிபுரங்கள்வேவச்செய்து
ஐயனார்போகின்றார்வந்துகாணீ
ரழகியரேயாமாத்தூரையனாரே. (எ)

ஒன்றாலுங்குறைவில்லையூர்திவெள்ளே
றேற்றியூரும்மூரேயுணரக்கூறீர்
நின்றுதானென்செய்வீர்போவீராகி
னெற்றிமேற்கண்காட்டிநிறையுங்கொண்மீர்
என்றுந்தானிவ்வகையேயிடர்செய்கின்றீ
ரிருக்குமூரினியறிந்தோமேகம்பமோ
அன்றித்தான்போகின்றீரடிகளெம்மோ
டழகியரேயாமாத்தூரையனீரே. (அ)

* பிரிவறியார்பிஞ்ஞகனார் என்றும் பாடம். † கருத்துடையநிருத்தராய் என்றும் பாடம்.

Koviloor Digital Library

கல்லலகுதாங்கொண்டுகொளத்தியார்
 கடியவிடையேறிக்காணக்காண
இல்லமேதாம்புகுதாவிடுமின்பிச்சை
 யென்றுருக்கெதிரெழுந்தே*னெங்குங்காணேன்
சொல்லாதேபோகின்றீரும்மூரேது
 துருத்திபழனமோநெய்த்தானமோ
அல்லலேசெய்தடிகள்போகின்றீர்தா†
 மழகியரேயாமாத்தூரையனாரே. (கூ)

மழுங்கலாநீறுடுமார்பர்போலு
 மணிமிழலைமேயமணாளர்போலும்
கொழுங்குவளைக்கோதைக்கிறைவர்போலுங்
 கொடுகொட்டிதாளமுடையார்போலும்
செழுங்கயிலாயத்தெஞ்செல்வர்போலுந்
 தென்னதிகைவீரட்டஞ்சேர்ந்தார்போலும்
அழுங்கினரையுறவுதீர்ப்பார்போலு
 மழகியரேயாமாத்தூரையனாரே. (க௦)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - கொல்லிக்கெளவாணம்.

திருச்சிற்றம்பலம்.

காண்டனன்காண்டனன்காரிகையாடன்கருத்தனாய்
ஆண்டனனாண்டனனாமாத்தூரெம்மடிகட்காட்
பூண்டனன்பூண்டனன்பொய்யன்றுசொல்லுவன்கேண்மின்கள்
மீண்டனன்மீண்டனன்வேதவித்தல்லாதவர்கட்கே. (க)

பாடுவன்பாடுவன்பார்ப்பதிதன்னடிபற்றிநான்
தேடுவன்றேடுவன்றிண்ணெனப்பற்றிச்செறிதர
ஆடுவனாடுவனாமாத்தூரெம்மடிகளைக்
கூடுவன்கூடுவன்குற்றமதற்றென்குறிப்பொடே.‡ (உ)

காய்ந்தவன்காய்ந்தவன்கண்ணழலாலன்றுகாமனைப்
பாய்ந்தவன்பாய்ந்தவன்பாதத்தினாலன்றுகூற்றத்தை
ஆய்ந்தவனாய்ந்தவனாமாத்தூரெம்மடிகளார்
வய்ந்தவனேய்ந்தவனெம்பிராட்டியைப்பாகமே. (௩)

* யென்றூர்க்கெதிரெழுந்தேன் என்றும், யென்றூர்க்கெதி ரேனெழுந்தேன் என்றும் பாடம். † போகின்றூர்தாம் என்றும் பாடம். ‡ குற்றமற் றென்குறிப் போடே என்றும் பாடம்.

Koviloor Digital Library

ஓர்ந்தனனோர்ந்தனனுள்ளத்துள்ளேநின்றவொண்பொருள்
சேர்ந்தனன்சேர்ந்தனன்சென்றுதிருவொற்றியூர்புக்குச்
சார்ந்தனன்சார்ந்தனன்சங்கிலிமென்றோட்டடமுலை
ஆர்ந்தனனார்ந்தனனாமாத்தூரையனருளதே. (ச)

வென்றவன்வென்றவன்வேள்வியில்விண்ணவர்தங்களைச்
சென்றவன்சென்றவன்சில்பலிக்கென்றுதெருவிடை
நின்றவனின்றவனீதிநிறைந்தவர்தங்கள்பால்
அன்றவனன்றவன்செய்யருளாமாத்தூரையனே. * (ரு)

காண்டவன்காண்டவன்காண்டற்கரியகடவுளாய்
நீண்டவனீண்டவனாரணனான்முகனேடவே
ஆண்டவனாண்டவனாமாத்தூரையுமெனையுமாட் †
பூண்டவன்பூண்டவன்மார்பிற்புரிநூல்புரளவே. (சா)

எண்ணவனெண்ணவனேழுலகத்துயிர்தங்கட்குக்
கண்ணவன்கண்ணவன்காண்டுமென்பாரவர்தங்கட்குப்
பெண்ணவன்பெண்ணவன்மேனியோர்பாகமாம்பிஞ்ஞகன்
அண்ணவனண்ணவனாமாத்தூரெம்மடிகளே. (எ)

பொன்னவன்பொன்னவன்பொன்னைத்தந்தென்னைப்போகவிடா
மின்னவன்மின்னவன்வேதத்தினுட்பொருளாகிய
அன்னவனன்னவனாமாத்தூரையனையார்வத்தால்
என்னவனென்னவனென்மனத்தின்புற்றிருப்பனே. (அ)

தேடுவன்றேடுவன்செம்மலர்ப்பாதங்கணாடோறும்
நாடுவனாடுவனாபிக்குமேலையோர்நால்விரல்
மாடுவன்மாடுவன்வன்கைபிடித்துமகிழ்ந்துளே
ஆடுவனாடுவனாமாத்தூரெம்மடிகளே. ‡ (கூ)

உற்றனனுற்றவர்தம்மையொழிந்துள்ளத்துள்பொருள்
பற்றினன்பற்றினன்பங்கயச்சேவடிக்கேசெல்ல
அற்றனனற்றனனாமாத்தூர்மேயானடியார்கட்காள்
பெற்றனன்பெற்றனன்பெயர்த்தும்பெயர்த்தும்பிறவாமைக்கே. ¶ (க0)

ஐயனையத்தனையாளுடையாமாத்தூரண்ணலை
மெய்யனைமெய்யர்க்குமெய்ப்பொருளானவிமலனை
மையனைமையவரிகண்டனைவன்றொண்டனூரன்சொல்
பொய்யொன்றுமின்றிப்புலம்புவார்பொற்கழல்சேர்வரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவாமாத்தூர்த்திருப்பதிகம் - ங.

ஆ திருப்பதிகம் - ஙஎ.

சுவாமி தேவி திருநாமங்கள் - அழகுநாதலர், அழகியநாயகி.

* மாத்துரெம்மையனே என்றும் பாடம். † மென்னையுமாட் என்றும் பாடம். ‡ ரெம்மடிகட்கே என்றும் பாடம். ¶ பேர்த்தும்பேர்த்தும்பிறவாமைக்கே என்றும் பாடம்.

Koviloor Digital Library

௨௨. திருவண்ணாமலை.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

உண்ணாமுலையுமையாளொடுமுடனாகியவொருவன்
பெண்ணாகியபெருமான்மலைதிருமாமணிதிகழ
மண்ணார்ந்தனவருவித்திரண்மழலைம்முழவதிரும்
அண்ணாமலைதொழுவார்வினைவழுவாவண்ணமறுமே. (௧)

தேமாங்கனிகடுவன்கொளவிடுகொம்பொடுதீண்டித்
தூமாமழைதுறுவன்மிசை*சிறுநுண்டுளிசிதற
ஆமாம்பிணையணையும்பொழிலண்ணாமலையண்ணல்
பூமாங்கழல்புனைசேவடிநினைவார்வினையிலரே. (௨)

பீலிம்மயில்பெடையோடுறைபொழில்சூழ்கழைமுத்தம்
சூலிம்மணிதரைமேனிறைசொரியும்விரிசாரல்
ஆலிம்மழைதவழும்பொழிலண்ணாமலையண்ணல்
காலன்வலிதொலைசேவடிதொழுவாரனபுகழே. (௩)

உதிரும்மயிரிடுவெண்டலைகலனாவுலகெல்லாம்
எதிரும்பலியுணலாகவு†மெருதேறுவதல்லால்
முதிருஞ்சடையிளவெண்பிறைமுடிமேல்கொளவடிமேல்
அதிருங்கழலடிகட்கிடமண்ணாமலையதுவே. (௪)

மரவஞ்சிலைதரளம்மிகுமணியுந்துவெள்ளருவி
அரவஞ்செயமுரவம்படுமண்ணாமலையண்ணல்
உரவஞ்சடையுலவும்புனலுடனாவதுமோரார்
குரவங்கமழ்நறுமென்குழலுமைபுல்குதல்குணமே. (௫)

பெருகும்புனலண்ணாமலைபிறைசேர்கடனஞ்சைப்
பருகுந்தனை‡துணிவார்பொடியணிவாரதுபருகிக்
கருகும்மிடறுடையார்கமழ்சடையார்கழல்பரவி
உருகும்மனமுடையார்தமக்குறுநோயடையாவே. (௬)

கரிகாலனகுடர்கொள்வனகழுகாடியகாட்டில்
நரியாடியநகுவெண்டலையுதையுண்டவையுருள¶
எரியாடியவிறைவர்க்கிடமினவண்டிசைமுரல§
அரியாடியகண்ணாளொடுமண்ணாமலையதுவே. (௭)

* துறுவண்டிசை என்றும் பாடம். † யுணவாகவும் என்றும் பாடம். ‡ பருகுந்தனை-உண்ணுமளவு; பருகுதல் ஈண்டு உண்ணுதல். ¶ யுருளவ் என்றும் பாடம். § முரலவ் என்றும் பாடம்.

Koviloor Digital Library

ஒளிறூபுலியதளாடையனுமையஞ்சுதல்பொருட்டால்
பிளிறூகுரன்மதவாரணவதனம்பிடித்துரித்து
வெளிறூபடவிளையாடியவிகிர்தன்னிராவணனை
அளறூபடவடர்த்தானிடமண்ணாமலையதுவே. (௮)

விளவார்கனிபடநூறியகடல்வண்ணனும்வேதக்
கிளர்தாமரைமலர்மேலுறைகேடில்புகழோனும்
அளவாவணமழலாகியவண்ணாமலையண்ணல்
தளராமுலைமுறுவல்லுமைதலைவன்னடிசரணே. (௯)

வேர்வந்துறமாசூர்தரவெயினின்றுழல்வாரும்
மார்பம்புதைமலிசீவரமறையாவருவாரும்
ஆரம்பர்தமுரைகொள்ளன்மினண்ணாமலையண்ணல்
கூர்வெண்மழுப்படையானல்லகழல்சேர்வதுகுணமே. (௧௦)

வெம்புந்தியகதிரோனொளிவிலகும்விரிசாரல்
அம்புந்திமூவெயிலெய்தவனண்ணாமலையதனைக்
கொம்புந்துவகுயிலாலுவகுளிர்காழியுண்ஞான
சம்பந்தனதமிழ்வல்லவரடிபேணுதறவமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

பூவார்மலர்கொண்டடியார்தொழுவார்புகழ்வார்வானோர்கள்
மூவார்புரங்களெரித்தவன்றுமூவர்க்கருள்செய்தார்
தூமாமழைநின்றதிரவெருவித்தொறுவின்னிரையோடும்
ஆமாம்பிணைவந்தணையுஞ்சாரலண்ணாமலையாரே. (௧)

மஞ்சைப்போழ்ந்தமதியஞ்சூடும்வானோர்பெருமானார்
நஞ்சைக்கண்டத்தடக்குமதுவுநன்மைப்பொருள்போலும்
வெஞ்சொற்பேசும்வேடர்மடவாரிதணமதுவேறி
அஞ்சொற்கிளிகளாயோவென்னுமண்ணாமலையாரே. (௨)

ஞானத்திரளாய்நின்றபெருமானல்லவடியார்மேல்
ஊனத்திரளைநீக்குமதுவுமுண்மைப்பொருள்போலும்
ஏனத்திரளோடினமான்கரடியிழியுமிரவின்கண்
ஆனைத்திரள்வந்தணையுஞ்சாரலண்ணாமலையாரே. (௩)

இழைத்த* விடையாளுமையாள்பங்கரிமையோர்பெருமானார்
தழைத்தசடையார்விடையொன்றேறித்திரியார்புரமெய்தார்
பிழைத்தபிடியைக்காணாதோடிப்பெருங்கைமதவேழம்
அழைத்துத்திரிந்தங்குறங்குஞ்சாரலண்ணாமலையாரே. (௪)

* இளைத்த என்பது எதுகைநோக்கி இழைத்த எனப்பட்டது.

Koviloor Digital Library

உருவிற்றிகழுமுமையாள்பங்கரிமையோர்பெருமானார்
செருவில்லொருகால்வளையவூன்றிச்செந்தீயெழுவித்தார்
பருவிக்குறவர்புனத்திற்குவித்தபருமாமணிமுத்தம்
அருவித்திரளோடிழியுஞ்சாரலண்ணாமலையாரே. (௫)

எனைத்தோரூழியடியாரேத்தவிமையோர்பெருமானார்
நினைத்துத்தொழுவார்பாவந்தீர்க்குநிமலருறைகோயில்
கனைத்தமேதிகாணாதாயன்கைம்மேற்குழலூத
அனைத்துஞ்சென்றுதிரளுஞ்சாரலண்ணாமலையாரே. (௬)

வந்தித்திருக்குமடியார்தங்கள்வருமேல்வினையோடு
பந்தித்திருந்தபாவந்தீர்க்கும்பரமனுறைகோயில்
முந்தியெழுந்தமுழவினோசைமுதுகல்வரைகண்மேல்
அந்திப்பிறைவந்தணையுஞ்சாரலண்ணாமலையாரே. (எ)

மறந்தான்கருதிவலியைநினைந்துமாறாயெடுத்தான்றோள்
நிறந்தான்முரிய* நெரியவூன்றிநிறையவருள்செய்தார்
திறந்தான்காட்டியருளாயென்றுதேவரவர்வேண்ட
அறந்தான்காட்டியருளிச்செய்தாரண்ணாமலையாரே. (அ)

தேடிக்காணார்திருமால்பிரமன்றேவர்பெருமானை
மூடியோங்கிமுதுவேய்புகுத்தமுத்தம்பலகொண்டு
கூடிக்குறவர்மடவார்குவித்துக்கொள்ளவம்மினென்
றூடிப்பாடியளக்குஞ்சாரலண்ணாமலையாரே. (௯)

தட்டையிடுக்கித்தலையைப்பறித்துச்சமணேநின்றுண்ணும்
பிட்டர்சொல்லுக்கொள்ளவேண்டாபேணித்தொழுமின்கள் †
வட்டமுலையாளுமையாள்பங்கர்மன்னியுறைகோயில்
அட்டமாளித்திரள்வந்தணையுமண்ணாமலையாரே. (கО)

அல்லாடரவமியங்குஞ்சாரலண்ணாமலையாரை
நல்லார்பரவப்படுவான்காழிஞானசம்பந்தன்
சொல்லான்மலிந்தபாடலானபத்துமிவைகற்று
வல்லாரெல்லாம்வானோர்வணங்கமன்னிவாழ்வாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

* நிறந்தான்முறிய என்றும் பாடம்; நிறம் - மார்பு. † பேணத்தொழுமின்கள் என்றும் பாடம்; பேண - உங்களைப்பாதுகாக்க.

Koviloor Digital Library

திருநாவுக்கரசுநாயனார்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

ஓதிமாமலர்கடூவியுமையவள்பங்காமிக்க
சோதியேதுளக்குமெண்டோட்* சுடர்மழுப்படையினானே
ஆதியேயமரர்கோவேயணியணாமலையுளானே
நீதியானின்னையல்லானினையுமாநினைவிலேனே. (௧)

பண்டனைவென்றவின்சொற்பாவையோர்பங்கநீல
கண்டனேகார்கொள்கொன்றைக்கடவுளேகமலபாதா
அண்டனேயமரர்கோவேயணியணாமலையுளானே
தொண்டனேனுன்னையல்லாற்சொல்லுமாசொல்லிலேனே. (௨)

உருவமுமுயிருமாகியோதியவுலகுக்கெல்லாம்
பெருவினைபிறப்புவீடாய்நின்றவெம்பெருமான் † மிக்க
அருவிபொன்சொரியுமண்ணாமலையுளாயண்டர்கோவே
மருவிநின்பாதமல்லான்மற்றொருமாடிலேனே. (௩)

பைம்பொனேபவளக்குன்றேபரமனேபால்வெண்ணீறு
செம்பொனேமலர்செய்பாதாசீர்தருமணியேமிக்க
அம்பொனேகொழித்துவீழுமணியணாமலையுளானே
என்பொனேயுன்னையல்லாலேதுநானினைவிலேனே. (௪)

பிறையணிமுடியினானேபிஞ்ஞகாபெண்ணோர்பாகா
மறைவலாவிறைவாவண்டார்கொன்றையாய்வாமதேவா
அறைகழலமரரேத்துமணியணாமலையுளானே
இறைவனேயுன்னையல்லாலியாதுநானினைவிலேனே. (௫)

புரிசடைமுடியின்மேலோர்பொருபுனற்கங்கைவைத்துக்
கரியுரிபோர்வையாகக்கருதியகாலகாலா
அரிகுலமலிந்தவண்ணாமலையுளாயலரின்மிக்க
வரிமிகுவண்டுபண்செய்பாதநான்மறப்பிலேனே. (௬)

* துலக்குமெண்டோட் என்றும் பாடம். † பெருவினைப்பிறப்புவீடாய் நின்றவெம் பெருமான் என்றும் பாடம்; வினைப்பிறப்பு - வினையாலாகிய பிறப்பு; வினைபிறப்பு - வினையும் பிறப்பும். சிவபெருமான் ஆன்மாக்களுக்குத் தநுகரணபுவன போகங்களை முதற்காரணமாகிய மாயையினின்றுந் தோற்றுவித்துக்கொடுத்து வினைப்பயனை நுகர்வித்துத் தொலைப்பித்து முத்திகொடுத்தலான் 'பெருவினைபிறப்புவீடாய் நின்றவெம்பெருமான்' என்றார். பிறப்பெனவே உயிருக்கு நிலைக்களமாகிய தநுவும், அதற்கு ஆதாரமாகிய புவனமும் அவ்வுயிர் நுகர்தற்குரிய போகமும் பெறப்பட்டன; இவைகள் மாயேயமாகிய பந்தம். இக்கருத்துப்பற்றியே திருவாசகத்திலும் "பந்தமும்வீடும்படைப்போன் காண்க" என்றருளிச்செய்தார்.

Koyiloor Digital Library

இரவியுமதியும்விண்ணுமிருநிலம்புனலுங்காற்றும்
உரகமார்பவனமெட்டுந்திசையொளியுருவமானாய்
அரவுமிழ்மணிகொள்சோதியணியண்ணாமலையுளானே
பரவுநின்பாதமல்லாற்பரமநான்பற்றிலேனே. (எ)

பார்த்தனுக்கன்றுநல்கிப்பாசுபதத்தையீந்தாய்
நீர்த்ததும்புலாவுகங்கைநெடுமுடிநிலாவவைத்தாய்
ஆர்த்துவந்தீண்டுகொண்டலணியண்ணாமலையுளானே
தீர்த்தனேநின்றன்பாதத்திறமலாற்றிறமிலேனே. (அ)

பாலுநெய்முதலாமிக்கபசுவிலைந்தாடுவானே
மாலுநான்முகனுங்கூடிக்காண்கிலாவகையுணின்றாய்
ஆலுநீர்கொண்டல்பூகமணியண்ணாமலையுளானே
வாலுடைவிடையாயுன்றன்மலரடிமறப்பிலேனே. (கூ)

இரக்கமொன்றியாதுமில்லாக்காலனைக்கடிந்தவெம்மான் *
உரத்தினால்வரையையூக்கவொருவிரலுதியினாலே
அரக்கனைநெரித்தவண்ணாமலையுளாயமரரேறே
சிரத்தினால்வணங்கியேத்தித்திருவடிமறப்பிலேனே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

வட்டனைம்மதிசூடியைவானவர்
சிட்டனைத்திருவண்ணாமலையனை
இட்டனையிகழ்ந்தார்புரமூன்றையும்
அட்டனையடியேன்மறந்துய்வனோ. (க)

வானனைம்மதிசூடியமைந்தனைத்
தேனனைத்திருவண்ணாமலையனை
ஏனனையிகழ்ந்தார்புரமூன்றெய்த
ஆனனையடியேன்மறந்துய்வனோ. (உ)

மத்தனைம்மதயானையுரித்தவெம்
சித்தனைத்திருவண்ணாமலையனை
முத்தனைம்முனிந்தார்புரமூன்றெய்த
அத்தனையடியேன்மறந்துய்வனோ. (ங)

காற்றனைக்கலக்கும்வினைபோயறத்
தேற்றனைத்திருவண்ணாமலையனைக்
கூற்றனைக்கொடியார்புரமூன்றெய்த
ஆற்றனையடியேன்மறந்துய்வனோ. (ச)

மின்னனைவினைதீர்த்தெனையாட்கொண்ட
தென்னனைத்திருவண்ணாமலையனை
என்னனையிகழ்ந்தார்புரமூன்றெய்த
அன்னனையடியேன்மறந்துய்வனோ. (ரு)

* காலனைக்கடந்தவெம்மான் என்றும் பாடம்.

Koyiloor Digital Library

மன்றனைம்மதியாதவன்வேள்விமேல்
சென்றனைத்திருவண்ணாமலையனை
வென்றனைவெகுண்டார்புரமூன்றையும்
கொன்றனைக்கொடியேன்மறந்துய்வனே. (௬)

வீரனைவிடமுண்டனைவிண்ணவர்
தீரனைத்திருவண்ணாமலையனை
ஊரனையுணரார்புரமூன்றெய்த
ஆரனையடியேன்மறந்துய்வனே. (௭)

கருவினை*க்கடல்வாய்விடமுண்டவெம்
திருவினை*த்திருவண்ணாமலையனை
உருவினை*யுணரார்புரமூன்றெய்த
அருவினை*யடியேன்மறந்துய்வனே. (௮)

அருத்தனையரவைந்தலைநாகத்தைத்
திருத்தனைத்திருவண்ணாமலையனைக்
கருத்தனைக்கடியார்புரமூன்றெய்த
அருத்தனையடியேன்மறந்துய்வனே. (௯)

அரக்கனையலறவ்விரலூன்றிய
திருத்தனைத்திருவண்ணாமலையனை
இரக்கமாயென்னுடலுறுநோய்களைத்
தூக்கனைத்தொண்டனேன்மறந்துய்வனே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பட்டியேறுகந்தேறிப்பலவிலம்
இட்டமாகவிரந்துண்டுழிதரும்
அட்டமூர்த்திபண்ணாமலைகைதொழக்
கெட்டுப்போம்வினைகேடில்லைகாண்மினே. (௧)

பெற்றமேறுவர்பெய்பலிக்கென்றவர்
சுற்றமாமிகுதொல்புகழாளொடும் †
அற்றந்தீர்க்குமண்ணாமலைகைதொழ
நற்றவத்தொடுஞானத்திருப்பரே. (௨)

பல்விலோடுகையேந்திப்பலவிலம்
ஒல்லைசென்றுணங்கல்கவர்வாரவர்
அல்லறீர்க்குமண்ணாமலைகைதொழ
நல்லவாயினநம்மையடையுமே. (௩)

* * * * கருவினை, திருவினை, உருவினை, அருவினை என்றும் பாடம். † தொல்குழலாளோடும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

பாடிச்சென்றுபலிக்கென்றுநின்றவர்
ஓடிப்போயினர்செய்வதொன்றென்கொலோ
ஆடிப்பாடியண்ணாமலைகைதொழ
ஓடிப்போகுநம்மேலைவினைகளே. * (௪)

தேடிச்சென்றுதிருந்தடியேத்துமின்
நாடிவந்தவர்நம்மையுமாட்கொள்வர்
ஆடிப்பாடியண்ணாமலைகைதொழ
ஓடிப்போநமதுள்ளவினைகளே. (௫)

கட்டியொக்குங்கரும்பினிடைத்துணி
வெட்டிவீணைகள்பாடும்விகிர்தனார்
அட்டமூர்த்தியண்ணாமலைமேவிய
நட்டமாடியைநண்ணநன்காகுமே. (௬)

கோணிக்கொண்டையர்வேட † முன்கொண்டவர்
பாணிநட்டங்களாடும்பரமனார்
ஆணிப்பொன்னனண்ணாமலைகைதொழப்
பேணிநின்றபெருவினைபோகுமே. (௭)

கண்டந்தான்கறுத்தான்காலனாருயிர்
பண்டுகால்கொடுபாய்ந்தபரமனார்
அண்டத்தோங்குமண்ணாமலைகைதொழ
விண்டுபோகுநம்மேலைவினைகளே. ‡ (௮)

முந்திச்சென்றுமுப்போதும்வணங்குமின்
அந்திவாயொளியான்றனண்ணாமலை
சிந்தியாவெழுவார்வினைதீர்த்திடும்
கந்தமாமலர்சூடுங்கருத்தனே. (௯)

மறையினானொடுமாலவன்காண்கிலா
நிறையுநீர்மையுணின்றருள்செய்தவன்
உறையுமாண்பினண்ணாமலைகைதொழப்
பறையுநாஞ்செய்தபாவங்களானவே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருவண்ணாமலைத்திருப்பதிகம் - ௫.

ஆ திருப்பதிகம் - ௬௨.

சுவாமி தேவி திருநாமங்கள் - அருணாசலேசுவரர், உண்ணாமுலையம்மை.

நடுநாட்டிலுள்ள தலங்கள் முற்றுப்பெற்றன.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் அருளிச்செய்த திருப்பதிகங்கள் உ௩; இத்திருப்பதிகங்களைப்பெற்றதலங்கள் ௧௫. திருநாவுக்கரசுநாயனார் அருளிச்செய்த திருப்பதிகங்கள் உ௭; இத்திருப்பதிகங்களைப்பெற்றதலங்கள் ௯. சுந்தரமூர்த்திநாயனார் அருளிச்செய்ததிருப்பதிகங்கள் ௧உ; இத்திருப்பதிகங்களைப்பெற்றதலங்கள் ௧0. ஆ திருப்பதிகங்கள் ௬உ. தலங்கள் உஉ.

* ஓடிப்போநம்மல்லல்வினைகளே என்றும், ஓடிப்போனநம்மல்லல்வினைகளே என்றும் பாடம். † கோணிக்கொண்டயர்வேடம் என்றும், கோணிக்கொண்டவர்வேடம் என்றும் பாடம். ‡ நம்மேலவினைகளே என்றும் பாடம்.

Koviloor Digital Library

தொண்டைநாட்டில் உள்ள தலங்கள்.

க. திருக்கச்சியேகம்பம். *

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - மேகராகக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

வெந்தவெண்பொடிப்பூசுமார்பின்விரிநூலொருபால்பொருந்தக்
கந்தமல்குகுழலியோடுங்கடிபொழிற்கச்சிதன்னுள்
அந்தமில்குணத்தாரவர்போற்றவணங்கினொடாடல்புரி
எந்தைமேவியவேகம்பந்தொழுதேத்தவிடர்கெடுமே. (௧)

வரந்திகழுமவுணர்மாநகர்மூன்றுடன்மாய்ந்தவியச்
சரந்துரந்தெரிசெய்ததாழ்சடைச்சங்கரன்மேயவிடம்
குருந்தமல்லிகைகோங்குமாதவிநல்லகுராமரவம்
திருந்துபைம்பொழிற்கச்சியேகம்பஞ்சேரவிடர்கெடுமே. (௨)

வண்ணவெண்பொடிப்பூசுமார்பின்வரியரவம்புனைந்து
பெண்ணமர்ந்தெரியாடல்பேணியபிஞ்ஞகன்மேயவிடம்
விண்ணமர்நெடுமாடமோங்கிவிளங்கியகச்சி † தன்னுள்
திண்ணமாம்பொழில்சூழ்ந்தவேகம்பஞ்சேரவிடர்கெடுமே. (௩)

தோலுநூலுந்துதைந்தவரைமார்பிற்சுடலைவெண்ணீறணிந்து
காலன்மாள்வுறக்காலாற்காய்ந்தகடவுள்கருதுமிடம்
மாலைவெண்மதிதோயுமாமதிற்கச்சிமாநகருள்
ஏலநாறியசோலைசூழேகம்பமேத்தவிடர்கெடுமே. (௪)

தோடணிம்மலர்க்கொன்றைசேர்சடைத்தூமதியம்புனைந்து
பாடலன்மறைபாடப்பல்கணப்பேய்களவைசூழ
வாடல்வெண்டலையோடனலேந்திமகிழ்ந்துடனாடல்புரி
சேடர்சேர்கலிக்கச்சியேகம்பஞ்சேரவிடர்கெடுமே. (௫)

* இது திருவேகம்பம் என்று பிரதிகளிற் காணப்படுகின்றது. † மாடமோங்குவிளங்கியகச்சி என்றும் பாடம்; ஓங்குகச்சி விளங்கிய கச்சி எனத்தனித்தனி கூட்டுக; விளங்குதல் முத்திநகரத்துட்சிறந்ததென்று பிரசித்திபடைத்தல். இதனை, "அழகியவயோத்திமதுரைமாயையவந்திகைகாசிநற்காஞ்சி—விழுமியதுவாரையெனப்புவிதன்னின்மேலவாய்வீடருள்கின்ற—எழுநகரத்துட்சிறந்ததுகாஞ்சியென்றமுன்னெம்பிரானுமைக்கு—மொழிதருகாரணமேனிலதற்குமூவுலகத்துநேருளதோ" எனவும், "இன்னமுமுமையாளொற்றிமாக்கேயிறப்பிறும்பிறப்பிறுங்கிலாய்—மன்னியேயுதிறுமொருகணமேனுமங்கிறுமறைகளாந்தனிமா—நன்னிழலிருந்தபரஞ்சுடர்புரியுநடந்தரிசிக்கினுமதனை—உன்னினுமுத்திவழங்குகாஞ்சியைப்போலுலகில்வேறுளதோ" எனவும் வருவனமுதலியவற்றாலறிக.

Koviloor Digital Library

சாகம்* பொன்வரையாகத்தானவர்மும்மதில்சாயவெய்து
ஆகம்பெண்ணொருபாகமாகவரவொடுநூலணிந்து
மாகந்தோய்மணிமாடமாமதிற்கச்சிமாநகருள்
ஏகம்பத்துறையீசன்சேவடியேத்தவிடர்கெடுமே. (அ)

வாணிலாமதிபுல்குசெஞ்சடைவாளரவம்மணிந்து
நாணிடத்தினில்வாழ்க்கைபேணிநகுதலையிற்பலிதேர்ந்
தேணிலாவரக்கன்றனீண்முடிபத்துமிறுத்தவனூர்
சேணுலாம்பொழிற்கச்சியேகம்பஞ்சேரவிடர்கெடுமே. (அ)

பிரமனுந்திருமாலுங்கைதொழப்பேரழலாயபெம்மான்
அரவஞ்சேர்சடையந்தணனணங்கினொடமருமிடம்
கரவில்வண்கையினர்கள்வாழ்கலிக்கச்சிமாநகருள்
மரவஞ்சூழ்பொழிலேகம்பந்தொழவல்வினைமாய்ந்தறுமே. (கூ)

குண்டுபட்டமணாயவரொடுங்கூறைதம்மெய்போர்க்கும்
மிண்டர்கட்டியகட்டுரையவைகொண்டுவிரும்பேன்மின்
விண்டவர்புரமூன்றும்வெங்கணையொன்றினாலவியக்
கண்டவன்கலிக்கச்சியேகம்பங்காணவிடர்கெடுமே. (கO)

ஏரினார்பொழில்சூழ்ந்தகச்சியேகம்பமேயவனைக்
காரினார்மணிமாடமோங்குகழுமலநன்னகருள்
பாரினார்தமிழ்ஞானசம்பந்தன்பரவியபத்தும்வல்லார்
சீரினார்புகழோங்கிவிண்ணவரோடுஞ்சேர்பவரே. † (கக)

திருச்சிற்றம்பலம்.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

மறையானைமாசிலாப்புன்சடைமல்குவெண்
பிறையானைப்பெண்ணொடாணாகியபெம்மானை
இறையானையேர்கொள்கச்சித்திருவேகம்பத்
துறைவானையல்லதுள்காதெனதுள்ளமே. (க)

நொச்சியேவன்னிகொன்றைமதிகூவிளம்
உச்சியேபுனைதல்வேடம்விடையூர்தியான்
கச்சியேகம்பம்மேயகறைக்கண்டனை
நச்சியேதொழுமினும்மேல்வினைநையுமே. (உ)

பாராருமுழவமொந்தைகுழல்யாழொலி
சீராலேபாடலாடல்சிதைவில்லதோர்
ஏரார்பூங்கச்சியேகம்பனையெம்மானைச்
சேராதாரின்பமாயநெறி‡சேராரே. (௩)

* சாபம் எதுகைநோக்கிச் சாகமெனப்பட்டது. † இத்திருப்பதிகத்தில் எ-வது செய்யுள் மறைந்துபோயிற்று. ‡ ரின்பமாயநன்னெறி என்றும் பாடம்; இதனை ரின்பமாய்நன்னெறி என்றும்பாடமோதலாம்.

Koviloor Digital Library

குன்றேய்க்குநெடுவெண்மாடக்கொடிகூடிப்போய்
மின்றேய்க்குமுகில்கடோயும்வியன்கச்சியுள்
மன்றேய்க்குமல்குசீரான்மலியேகம்பம்
சென்றேய்க்குஞ்சிந்தையார்மேல்வினைசேராவே. (௪)

சடையானைத்தலைகையேந்திப்பலிதருவார் * தம்
கடையேபோய்மூன்றுங்கொண்டான் † கலிக்கச்சியுள்
புடையேபொன்மலருங்கம்பைக்கரையேகம்பம்
உடையானையல்லதுள்காதெனதுள்ளமே. (௫)

மழுவாளோடெழில்கொள்சூலப்படைவல்லார்தம்
கெழுவாளோரிமையாருச்சியுமையாள்கங்கை
வழுவாமேமல்குசீரால்வளரேகம்பம்
தொழுவாரேவிழுமியார்மேல்வினைதுன்னாவே. (௬)

மின்னுளார்மறைகள்வேதம்விரித்தோதுவார்
கண்ணுளார்கழலின்வெல்வார்கரிகாலனை
நண்ணுவாரெழில்கொள்கச்சிநகரேகம்பத்
தண்ணலாராடுகின்றவலங்காரமே. (௭)

தூயானைத்தூயவாயம்மறையோதிய
வாயானைவாளரக்கன்வலிவாட்டிய
தீயானைத்தீதில்கச்சித்திருவேகம்பம்
மேயானைமேவுவாரென்றலைமேலாரே. (௮)

நாகம்பூணேறதேறனாறுங்கொன்றைதார்
பாகம்பெண்பலியுமேற்பர்மறைபாடுவர்
ஏகம்பமேவியாடுமிறையிருவர்க்கும்
மாகம்பமறியும்வண்ணத்தவனல்லனே. (௯)

போதியார்பிண்டியாரென்றிவர்பொய்ந்நூலை
வாதியாவம்மினம்மாவெனுங்கச்சியுள்
ஆதியார்மேவியாடுந்திருவேகம்பம்
நீதியாற்றொழுமினும்மேல்வினைநில்லாவே. (௧௦)

அந்தண்பூங்கச்சியேகம்பனையம்மானைக்
கந்தண்பூங்காழியூரன்கலிக்கோவையால்
சந்தமேபாடவல்லதமிழ்ஞானசம்
பந்தன்சொற்பாடியாடக்கெடும்பாவமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

* பலிதருவார் - பிச்சையிடும் பெண்கள். † மூன்றுங்கொண்முன் என்றும் பாடம்; மூன்று—நாணம், மடம், அச்சம். பயிர்ப்புத் தீண்டப்பெறுமையின் ஒழிக்கப்பட்டது. மந்திரம், மனை, மேகலை ஆகிய மூன்று மென்பது மொன்று; இதற்குக் கொண்டான் என்றபாடமேகொள்க.

Tamil Digital Library

திருவிருக்குக்குறள். பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

கருவார்கச்சித்
திருவேகம்பத்
தொருவாவென்ன
மருவாவினையே. (௧)

மதியார்கச்சி
நதியேகம்பம்
விதியாலேத்தப்
பதியாவாரே. (௨)

கலியார்கச்சி
மலியேகம்பம்
பலியாற்*போற்ற
நலியாவினையே. (௩)

வரமார்கச்சிப்
புரமேகம்பம்
பரவாவேத்த
விரவாவினையே. (௪)

படமார்கச்சி
இடமேகம்பத்
துடையாயென்ன
அடையாவினையே. (௫)

நலமார்கச்சி
நிலவேகம்பம்
குலவாவேத்தக்
கலவாவினையே. (௬)

கரியின்னுரியன்
திருவேகம்பன்
பெரியபுரமூன்
றெரிசெய்தானே. (௭)

இலங்கையரசைத்
துலங்கவூன்றும்
நலங்கொள்கம்பன்
இலங்குசரணே. (௮)

மறையோனரியும்
அறியாவனலன்
நெறியேகம்பம்
குறியாற்றொழுமே. (௯)

பறியாத்தேரர் †
நெறியில்கச்சிச்
செறிகொள்கம்பம்
குறுகுவோமே. (௧௦)

கொச்சைவேந்தன்
கச்சிக்கம்பம்
மெச்சுஞ்சொல்லை
நச்சும்புகழே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவியமகம்.

திருச்சிற்றம்பலம்.

பாயுமால்விடைமேலொருபாகனேபாவைதன்னுருமேலொருபாகனே
தூயவானவர்வேதத்துவனியேசோதிமாலெரிவேதத்துவனியே
ஆயுநன்பொருளுண்பொருளாதியேயாலநீழலரும்‡பொருளாதியே
காயவின்மதன் ¶ பட்டதுகம்பமேகண்ணுதற்பரமற்கிடங்கம்பமே. (௧)

* பலியார் என்றும் பாடம். † பறியர்தேரர் என்றேபிரதிகளிற்காணப்படுகின்றது; பறியர் - தலைமயிர்பறித்தலைச்செய்யுஞ்சமணர்கள். ‡ நீழல்வரும் என்று பாடமோதுவாருமுளர். ¶ காயவன்மதன் என்றும் பாடம்.

Koviloor Digital Library

சடையணிந்ததும்வெண்டலைமாலையே *தம்முடம்பினும்வெண்டலைமாலையே
படையிலங்கையிற்சூலமதென்பதேபார்ந்திலங்கையிற்சூலமதென்பதே
புடைபரப்பன †பூதகணங்களேபோற்றிசைப்பனபூதகணங்களே
கடைகடோறமிரப்பதுமிச்சை ‡யேகம்பமேவியிருப்பதுமிச்சையே. (௨)

வெள்ளெருக்கொடுதும்பைமிலைச்சியேவேறுமுன்செலத்தும்பைமிலைச்சியே
அள்ளினீறது ¶ பூசுவதாகமேயானமாசுணமூசுவதாகமே
புள்ளியாடையுடுப்பதுகத்துமேபோனவூழியுடுப்பதுகத்துமே
கள்ளுலாமலர்க்கம்பமிருப்பதேகாஞ்சிமாநகர்க்கம்பமிருப்பதே. (௩)

முற்றலாமையணிந்தமுதல்வரேமூரியாமையணிந்தமுதல்வரே
பற்றிவாளரவாட்டும்பரிசரேபாலுநெய்யுகந்தாட்டும்பரிசரே
வற்றலோடுகலம்பலிதேர்வதேவானினோடுகலம்பலிதேர்வதே
கற்றிலாமனங்கம்பமிருப்பதேகாஞ்சிமாநகர்க்கம்பமிருப்பதே. (௪)

வேடனாகிவிசைபற்கருளியேவேலைநஞ்சமிசையற்கருளியே
ஆடுபாம்பரையார்த்ததுடையதேயஞ்சுபூதமுமார்த்ததுடையதே
கோடுவான்மதிக்கண்ணி §யழகிதேகுற்றமின்மதிக்கண்ணியழகிதே
காடுவாழ்பதியாவதுமும்மதேகம்பமாபதியாவதுமும்மதே. (௫)

இரும்புகைக்கொடிதங்கழல்கையதேயிமயமாமகடங்கழல்கையதே [கியே
அரும்புமொய்த்தமலர்ப்பொறைதாங்கியேயாழியான்றன்மலர்ப்பொறைதாங்
பெரும்பகனடமாடுதல்செய்துமேபேதைமார்மனம்வாடுதல்செய்துமே
கரும்புமொய்த்தெழுகம்பமிருப்பதேகாஞ்சிமாநகர்க்கம்பமிருப்பதே. (௬)

முதிரமங்கைதவஞ்செய்தகாலமேமுன்புமங்கைதவஞ்செய்தகாலமே
வெதிர்களோடகில்சந்தமுருட்டியேவேழமோடகில்சந்தமுருட்டியே
அதிரவாருவரத்தழுவத்தொடேயானையாடுவரத்தழுவத்தொடே 0
கதிர்கொள்பூண்முலைக்கம்பமிருப்பதேகாஞ்சிமாநகர்க்கம்பமிருப்பதே. (௭)

பண்டரக்கனெடுத்தபலத்தையேபாய்ந்தரக்கனெடுத்தபலத்தையே
கொண்டரக்கியதுங்கால்விரலையேகோளரக்கியதுங்கால்விரலையே
உண்டுழன்றதுமுண்டத்தலையிலேயுடுபதிக்கிடமுண்டத்தலையிலே
கண்டநஞ்சமடக்கினகம்பமேகடவுணீயிடங்கொண்டதுகம்பமே. (௮)

ஞானியாவசுடர்விடுசோதியேசுத்தமானசுடர்விடுசோதியே
பேணியோடுபிரமப்பறவையேபித்தனானபிரமப்பறவையே
சேணினோடுகீழூழிதிரிந்துமேசித்தமோடுகீழூழிதிரிந்துமே
காணநின்றனருற்றதுகம்பமேகடவுணீயிடமுற்றதுகம்பமே. (௯)

* யணிந்ததுவெண்டலைமாலையே என்றும் பாடம். † புடைபரப்பின என்றும் பாடம். ‡ மிச்சை மித்தை; பொய்; என்றது இல்லாமையினாலிரப்பதன்றென்பது கருத்து. ¶ அன்னீறது என்றும் பாடம். § வான்மதிக்கண்ணி என்றும் பாடம். 0 யானை யாடுவாரத்தழுவத்தொடே என்றும் பாடம்.

Koviloor Digital Library

ஒருடம்பினையீருருவாகவேயுன்பொருட்டிறமீருருவாகவே
ஆருமெய்தற்கரிதுபெரிதுமேயாற்றவெய்தற்கரிது* பெரிதுமே
தேரும்மறியாதுதிகைப்பரேசித்தமும்மறியாதுதிகைப்பரே
கார்நிறத்தமணர்க்கொருகம்பமேகடவுணீயிடங்கொண்டதுகம்பமே. (கഠ)

கந்தமார்பொழில்சூழ்தருகம்பமேகாதல்செய்பவர்தீர்த்திடுகம்பமே
புந்திசெய்துவிரும்பிப்புகலியேபூசுரன்றன்விரும்பிப்புகலியே
அந்தமில்பொருளாயினகொண்டுமேயண்ணலின்பொருளாயினகொண்டுமே
பந்தனின்னியல்பாடியபத்துமேபாடவல்லவராயினபத்துமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

கரவாடும்வன்னெஞ்சர்க்கரியானைக்கரவார்பால்
விரவாடும்பெருமானைவிடையேறும்வித்தகனை
அரவாடச்சடைதாழவங்கையினிலனலேந்தி
இரவாடும்பெருமானையென்மனத்தேவைத்தேனே. (க)

தேனோக்குங்கிளிமழலையுமைகேள்வன்செழும்பவளம்
தானோக்குந்திருமேனிதழலுருவாஞ்சங்கரனை †
வானோக்கும்வளர்மதிசேர்சடையானைவானோர்க்கும்
ஏனோர்க்கும்பெருமானையென்மனத்தேவைத்தேனே. (உ)

கைப்போதுமலர்தூவிக்காதலித்துவானோர்கள்
முப்போதுமுடிசாய்த்துத்தொழநின்றமுதல்வனை
அப்போதுமலர்தூவியைம்புலனுமகத்தடக்கி
எப்போதுமினியானையென்மனத்தேவைத்தேனே. (௩)

அண்டமாயாதியாயருமறையொடைம்பூதப்
பிண்டமாயுலகுக்கோர்பெய்பொருளாம்பிஞ்ஞகனைத்
தொண்டர்தாமலர்தூவிச்சொன்மாலைபுனைகின்ற
இண்டைசேர்சடையானையென்மனத்தேவைத்தேனே. (௪)

ஆறேறுசடையானையாயிரம்பேரம்மானைப்
பாறேறுபடுதலையிற்பலிகொள்ளும்பரம்பரனை
நீறேறுதிருமேனிநின்மலனைநெடுந்தூவி
ஏறேறும்பெருமானையென்மனத்தேவைத்தேனே. (௫)

* யாற்றலெய்தற்கரிது என்றும் பாடம். † மேனித்தழலுருவாஞ்சங்கரனை என்றும் பாடம்; இப்பாடத்திற்கு மேனிச்சங்கரன் தழலுருவாஞ் சங்கரன் எனக் கூட்டுக.

Koviloor Digital Library

தேசனைத்தேசங்கடொழநின்றதிருமாலால்
பூசனைப்பூசனைகளுகப்பானைப்பூவின்கண்
வாசனை* மலைநிலநீர்தீவளியாகாசமாம்
ஈசனையெம்மானையென்மனத்தேவைத்தேனே. (௬)

நல்லானைநல்லானநான்மறையோடாறங்கம்
வல்லானைவல்லார்கண்மனத்துறையுமைந்தனைச்
சொல்லானைச்சொல்லார்ந்தபொருளானைத்துகளேதும்
இல்லானையெம்மானையென்மனத்தேவைத்தேனே. (௭)

விரித்தானைநால்வர்க்குவெவ்வேறுவேதங்கள்
புரித்தானைப்பதஞ்சந்திப்பொருளுருவாம்புண்ணியனைத்
தரித்தானைக்கங்கைநீர்தாழ்சடைமேன்மதின்மூன்றும்
எரித்தானையெம்மானையென்மனத்தேவைத்தேனே. (௮)

ஆகம்பத்தரவணையா† னயனறிதற்கரியானைப்
பாகம்பெண்ணாண்பாகமாய்நின்றபசுபதியை
மாகம்பமறையோதுமிறையானைமதிற்கச்சி
ஏகம்பமேயானையென்மனத்தேவைத்தேனே. (௯)

அடுத்தானையுரித்தானையருச்சுனற்குப்பாசுபதம்
கொடுத்தானைக்குலவரையேசிலையாகக்கூரம்பு
தொடுத்தானைப்புரமெரியச்சினமல்குகயிலாயம்
எடுத்தானைத்தடுத்தானையென்மனத்தேவைத்தேனே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

நம்பனைநகரமூன்றுமெரியுணவெருவநோக்கும்
அம்பனையமுதையாற்றைப்பணிபொழிற்கச்சியுள்ளே
கம்பனைக்கதிர்வெண்டிங்கட்செஞ்சடைக்கடவுடன்னைச்
செம்பொனைப்பவளத்தூணைச்சிந்தியாவெழுகின்றேனே. (௧)

ஒருமுழமுள்ளகுட்டமொன்பதுதுறையுடைத்தாய்
அரைமுழமதனகலமதனில்வாழ்முதலையைந்து
பெருமுழைவாய்தல்பற்றிக்கிடந்துநான்பிதற்றுகின்றேன்
கருமுகிறவழுமாடக்கச்சியேகம்பனீரே. (௨)

மலையினார்மகளோர்பாகமைந்தனார்மழுவொன்றேந்திச்
சிலையினான்மதில்கண்மூன்றுந்தீயெழச்செற்றசெல்வர்
இலையினார்சூலமேந்திஏகம்பமேயினாரைத்
தலையினால்வணங்கவல்லார்தலைவர்க்குந்தலைவர்தாமே. (௩)

* இதற்கு, "பார்க்கின்றமலர்க்கடோறுநீயேயிருத்தி" என்றபடிபொருள்கொள்ளுதலு மொன்று. † ஆகம் பத்து அரவணையான்—பத்து உருவங்களைக்கொண்ட விட்டுணுமூர்த்தி.

Koviloor Digital Library

பூத்தபொற்கொன்றைமாலைபுரிசடைக்கணிந்தசெல்வர்
தீர்த்தமாங்கங்கையாளைத்திருமுடிதிகழவைத்து
ஏத்துவாரேத்தநின்றவேகம்பமேவினானை
வாழ்த்துமாறறியமாட்டேன்மால்கொடுமயங்கினேனே. (ச)

மையினார்மலர்நெடுங்கண்மங்கையோர்பங்காகிக்
கையிலோர்கபாலமேந்திக்கடைதொறும்பலிகொள்வார்தாம்
எய்வதோரேனமோட்டியேகம்பமேவினாரைக்
கையினாற்றொழவல்லார்க்குக்கடுவினைகளையலாமே. (ரு)

தருவினை * மருவுங்கங்கைதங்கியசடையனெங்கள்
அருவினையகலநல்குமண்ணலையமரர்போற்றும்
திருவினைத்திருவேகம்பஞ்செப்பிடவுறையவல்ல
உருவினையுருகியாங்கேயுள்ளத்தாலுகக்கின்றேனே. (சா)

கொண்டதோர்கோலமாகிக்கோலக்காவுடையகூத்தன்
உண்டதோர்நஞ்சமாகிலுலகெலாமுய்யவுண்டான்
எண்டிசையோருமேத்தநின்றவேகம்பன்றன்னைக்
கண்டுநானடிமைசெய்வான்கருதியேதிரிகின்றேனே. (எ)

படமுடையரவினோடுபனிமதியதனைச்சூடிக்
கடமுடையுரிவைமூடிக்கண்டவரஞ்சவம்ம
இடமுடைக்கச்சிதன்னுளேகம்பமேவினான்றன்
நடமுடையாடல்காணஞாலந்தானுய்ந்தவாறே. (அ)

பொன்றிகழ்கொன்றைமாலைபொருந்தியநெடுந்தண்மார்பர்
நன்றியிற்புகுந்தெனுள்ளமெள்ளவேநவிலநின்று
குன்றியிலடுத்தமேனிக்குவளையங்கண்டரெம்மை
இன்றுயில்போதுகண்டாரினியரேகம்பனாரே. (கூ)

துருத்தியார்பழனத்துள்ளார்தொண்டர்கள்பலருமேத்த
அருத்தியாலன்புசெய்வாரவரவர்க்கருள்கள்செய்தே †
எருத்தினையிசையவேறியேகம்பமேவினார்க்கு
வருத்திநின்றடிமைசெய்வார்வல்வினைமாயுமன்றே. (கo)

திருச்சிற்றம்பலம்.

திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

ஓதுவித்தாய்முன்னறவுரைகாட்டியமணரொடே
காதுவித்தாய்கட்டநோய்பிணிதீர்த்தாய்கலந்தருளிப்
போதுவித்தாய்நின்பணிபிழைக்கிற்புளியம்வளாரால்
மோதுவிப்பாயுகப்பாய்முனிவாய்கச்சியேகம்பனே. (க)

* கருவினை என்றும் பாடம். † செய்து என்றும் பாடம்.

Koviloor Digital Library

எத்தைக்கொண்டெத்தகையேழையமணொடிசைவித்தெனைக் *
கொத்தைக்குழுங்கர்வழிகாட்டுவித்தென்னைக்கோகுசெய்தாய்
முத்தின்றிரளும்பளிங்கினிற்சோதியுமொய்பவளத்
தொத்தினையேய்க்கும்படியாய்பொழிற்கச்சியேகம்பனே. (௨)

மெய்யம்புகோத்தவிசயனொடன்றொருவேடுவனாய்ப் †
பொய்யம்பெய்தாவமருளிச்செய்தாய்புரமூன்றெரியக்
கையம்பெய்தாய்நின்கழலடிபோற்றாக்கயவர்நெஞ்சில்
குய்யம் ‡ பெய்தாய்கொடிமாமதில்சூழ்கச்சியேகம்பனே. (௩)

குறிக்கொண்டிருந்துசெந்தாமரையாயிரம்வைகல்வைகல்
நெறிப்படவிண்டைபுனைகின்றமாலைநிறையழிப்பான்
கறைக்கண்டனீபொருபூக்குறைவித்துக்கண்சூல்விப்பதே
பிறைத்துண்டவார்சடையாய்பெருங்காஞ்சியெம்பிஞ்ஞகனே. (௪)

உரைக்குங்கழிந்திங்குணர்வரியா ¶ னுள்குவார்வினையைக்
கரைக்குமெனக்கைதொழுவதல்லாற்கதிரோர்களெல்லாம்
விரைக்கொண்மலரவன்மாலெண்வசுக்களேகாதசர்கள்
இரைக்குமமிர்தர்க்கறியவொண்ணானெங்களேகம்பனே. (௫)

கருவுற்றநாண்முதலாகவுன்பாதமேகாண்பதற்கு
உருகிற்றெனுள்ளமுநானுங்கிடந்தலந்தெய்த்தொழிந்தேன்
திருவொற்றியூரா திருவாலவாயா திருவாரூரா §
ஒருபற்றிலாமையுங்கண்டிரங்காய்கச்சியேகம்பனே. (௬)

அரியயனிந்திரன்சந்திராதித்தரமரரெல்லாம் 0
உரியநின்கொற்றக்கடைத்தலைபாருணங்காக்கிடந்தார்
புரிதருபுன்சடைப்போகமுனிவர் ** புலம்புகின்றார்
எரிதருசெஞ்சடையேகம்பவென்னோதிருக்குறிப்பே. (௭)

பாம்பரைச்சேர்த்திப்படருஞ்சடைமுடிப்பால்வண்ணனே
கூம்பலைச்செய்தகரதலத்தன்பர்கள்கூடிப்பன்னாள்
சாம்பரைப்பூசித் †† தரையிற்புரண்டுநின்றாள்சரணென்
றேம்பலிப்பார்கட்கிரங்குகண்டாய்கச்சியேகம்பனே. (௮)

என்றுகொண்டாயென்னையெம்பெருமானினியல்லமென்னில்
சான்றுகண்டாயிவ்வுலகமெல்லாந்தனியேனென்றென்னை
ஊன்றிநின்றாரைவர்க்கொற்றிவைத்தாய்பின்னையொற்றியெல்லாம்
சோன்றுகொண்டாய்கச்சியேகம்பமேயசுடர்வண்ணனே. (௯)

* எத்தைக்கொண்டேதகையேழையமணொடிசைவித்தென்னை என்றும் பாடம். † விசயன்றனொடொருவேடுவனாய்ப் என்றும், விசயனொடன்றொருவேடனாகிப் என்றும் பாடம். ‡ குய்யம்—வஞ்சகம்; 'நட்பிடைக்குய்யம்வைத்தான்' என்றார்பிறரும். ¶ கழிந்தக்குணர்வரியான் என்றும் பாடம். § திருவொற்றியூராய்திருவாலவாயாய் திருவாரூராய் என்றும் பாடம். 0 சந்திரனாதித்தரமரரெல்லாம் என்றும் பாடம். ** போகர்முனிவர் எனப்பாடமோதவாருமுளர். †† சாம்பலைப்பூசித் என்றும் பாடம்.

Koviloor Digital Library

உந்திநின்றருன்றமேனுலக்கச்சூளைகள்வாய்தல்பற்றித்
துன்றிநின்றார்தொல்லைவானவரீட்டம்பணியறிவான்
வந்துநின்றாயனுந்திருமாலுமதிற்கச்சியாய்
இந்தநின்றேமினியெங்ஙனமோவந்திறைஞ்சுவதே. (கo)

திருச்சிற்றம்பலம்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பண்டுசெய்தபழவினையின்பயன்
கண்டுங்கண்டுங்களித்திகாணெஞ்சமே*
வண்டுலாமலர்ச்செஞ்சடையேகம்பன்
தொண்டனுய்த்திரியாய்துயர்தீரவே. (க)

நச்சிநாளுநயந்தடியார்தொழ
இச்சையாலுமைநங்கைவழிபடக்
கொச்சையார்குறுகார்செறிநீம்பொழிற்
கச்சியேகம்பமேகைதொழுமினே. (உ)

ஊனிலாவியியங்கிபுலகெலாம்
தானுலாவியதன்மையராகிலும்
வானுலாவியபாணிபிறங்க† வெம்
கானிலாடுவர்கச்சியேகம்பரே. (௩)

இமையாமுக்கணரென்னெஞ்சத்துள்ளவர்
தமையாரும்மறிவொண்ணுத்தகைமையர்
இமையோரேத்தவிருந்தவனேகம்பன்
நமையாளும்மவனைத்தொழுமின்களே. (௪)

மருந்தினேடுநற்சுற்றமுமக்களும்
பொருந்திநின்றெனக்காயவெம்புண்ணியன்
கருந்தடங்கண்ணினுளுமைகைதொழ
இருந்தவன்கச்சியேகம்பத்தெந்தையே. (௫)

பொருளினேடுநற்சுற்றமும்பற்றிலர்க்
கருளுநன்மைதந்தாயவரும்பொருள்
சுருள்கொள்செஞ்சடையான்கச்சியேகம்பம்
இருள்கெடச்சென்றுகைதொழுதேத்துமே. (௬)

மூக்குவாய்செவிகண்ணுடலாகிவந்
தாக்குமைவர்தமாட்டையவிழ்த்தருள்
நோக்குவானமைநோய்வினைவாராமே
காக்குநாயகன்கச்சியேகம்பனே. (எ)

* களித்திர்காணெஞ்சமே என்றும் பாடம். † பாணியிறங்க என்றும் பாடம்.

Koviloor Digital Library

பண்ணிலோசைபழத்தினிலின்சுவை
பெண்ணொடாணென்றுபேசற்கரியவன்
வண்ணமில்லிவடிவுவேறாயவன்
கண்ணிலுண்மணிகச்சியேகம்பனே. (௮)

திருவினாயகன்செம்மலர்மேலயன்
வெருவநீண்டவிளங்கொளிச்சோதியான்
ஒருவனாயுணர்வாயுணர்வல்லதோர்
கருவுனாயகன்கச்சியேகம்பனே. (௯)

இடுகுநுண்ணிடையேந்திளமென்முலை
வடிவின்மாதர்திறமனம்வையன்மின்
பொடிகொண்மேனியன்பூம்பொழிற்கச்சியுள்
அடிகளெம்மைபருந்துயர்தீர்ப்பரே. (௧௦)

இலங்கைவேந்தனிராவணன்சென்றுதன்
விலங்கலையெடுக்கவ்விரலூன்றலும்
கலங்கிக்கச்சியேகம்பவோவென்றலும்
நலங்கொள்செல்வளித்தானெங்கணாதனே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பூமேலானும்பூமகள்கேள்வனும்
நாமேதேவரெனாமைகடிக்குறத்
தீமேவும்முருவாதிருவேகம்பா
ஆமோவல்லற்படவடியோங்களே. (௧)

அருந்திறலமராயன்மாலொடு
திருந்தநின்றுவழிபடத்தேவியோ
டிருந்தவன்னெழிலார்கச்சியேகம்பம்
பொருந்தச்சென்றுபுடைபட்டெழுதுமே. (௨)

கறைகொள்கண்டத்தெண்டோளிறைமுக்கணன்
மறைகொணாவினன்வானவர்க்காதியான்
உறையும்பூம்பொழில்சூழ்கச்சியேகம்பம்
முறைமையாற்சென்றுமுந்தித்தொழுதுமே. (௩)

பொறிப்புலன்களைப்போக்கறுத்துள்ளத்தை
நெறிப்படுத்து* நினைந்தவர்சிந்தையுள்
அறிப்புறும்மமுதாயவனேகம்பம்
குறிப்பினாற்சென்றுகூடித்தொழுதுமே. (௪)

* உள்ளத்தைநெறிப்படுத்தல் - மனத்தைத் திருவருள் வழித்தாக்கல்; இது "இறைபணிவழுவாதுநிற்றல்" என்று கூறப்படும்; உள்ளத்தை ஒருவழிப்படுத்தலுமாம்; இது ஏகாக்கிரசித்தம் என்றுசொல்லப்படும்.

Koviloor Digital Library

சிந்தையுட்சிவமாய்நின்றசெம்மையோ
டந்தியாயனலாய்ப்புனல்வானமாய்ப்
புந்தியாய்ப்புகுந்துள்ளநிறைந்தவெம்
எந்தையேகம்பமேத்தித்தொழுமினே. (௫)

சாக்கியத்தொடமற்றுஞ்சமண்படும்
பாக்கியம்மிலார்பாடுசெலாதுறப்
பூக்கொள்சேவடியான்கச்சியேகம்பம்
நாக்கொடேத்திநயந்துதொழுதுமே. (௬)

மூப்பினோடுமுனிவுறுத்தெந்தமை
ஆர்ப்பதன்மூன் * னணியமரார்க்கிறை
காப்பதாயகடிபொழிலேகம்பம்
சேர்ப்பதாகநாஞ்சென்றடைந்துய்துமே. (௭)

ஆலுமாமயிற்சாயனல்லாரொடும்
சாலநீயுறுமாறவிர்நெஞ்சமே
நீலமாமிடற்றண்ணலேகம்பனார்
கோலமாமலர்ப்பாதமேகும்பிடே. (௮)

பொய்யனைத்தையும்விட்டவர்புந்தியுள்
மெய்யனைச்சுடர்வெண்மழுவேந்திய
கையனைக்கச்சியேகம்பமேவிய
ஐயனைத்தொழுவார்க்கில்லையல்லலே. (௯)

அரக்கன்றன்வலியுன்னிக்கயிலையை
நெருக்கிச்சென்றெடுத்தான்முடிதோணெரித்
திரக்கவின்னிசைகேட்டவனேகம்பம்
தருக்கதாகநாஞ்சார்ந்துதொழுதுமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

கூற்றுவன்காண்கூற்றுவனைக்குமைத்தகோன்காண்
குவலயன்காண்குவலயத்தினீரானன்காண்
காற்றவன்காண்கனலவன்காண்கலிக்குமின்காண்
கனபவளச்செம்மேனிகலந்தவெள்ளை
நீற்றவன்காணிலாவூருஞ்சென்னியான்கா
ணிறையார்ந்தபுனற்கங்கைநிமிர்சடைமேல்
ஏற்றவன்காணெழிலாரும்பொழிலார்கச்சி
யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே. (௧)

* யாப்பதன்மூன் என்றும் பாடம்; இதனை ஆப்பதன்மூன் என்றும் பிரிக்கலாம்.

Koviloor Digital Library

பரந்தவன்காண்பல்லுயிர்களாகியெங்கும்
பணிந்தெழுவார்பாவமும்வினையும்போகத்
துரந்தவன்காண்டூமலரங்கண்ணியான்காண்
டோற்றநிலையிறுதிப்பொருளாய்வந்த
மருந்தவன்காண்வையகங்கள்* பொறைதீர்ப்பான்காண்
மலர்தூவிநினைந்தெழுவாருள்ளநீங்கா
திருந்தவன்காணெழிலாரும்பொழிலார்கச்சி
யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே. (௨)

நீற்றவன்காணீராகித்தீயானான்கா
ணிறைமழுவுந்தமருகமுமெரியுங்கையில்
தோற்றவன்காண்டோற்றக்கேடில்லாதான்காண்
டுணையிலிகாண்டுணையென்றுதொழுவாருள்ளம்
போற்றவன்காண்புகழ்கடமைப்படைத்தான்றான்காண்
பொதியரவும்விரிசடைமேற்புனலுங்கங்கை
ஏற்றவன்காணெழிலாரும்பொழிலார்கச்சி
யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே. (௩)

தாயவன்காணுலகிற்குத்† தன்னொப்பில்லாத்
தத்துவன்காண்மலைமங்கைபங்காவென்பார்
வாயவன்காண்வரும்பிறவிநோய்தீர்ப்பான்காண்
வானவர்க்குந்தானவர்க்குமண்ணுளோர்க்கும்
சேயவன்காணினைவார்க்குச்சித்தமாரத்
திருவடியேயுள்கிநினைந்தெழுவாருள்ளம்
ஏயவன்காணெழிலாரும்பொழிலார்கச்சி
யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே. (௪)

அடுத்தானையுரித்தான்காண். ‡ (௫)

அழித்தவன்காணெயின்மூன்றுமயில்வாயம்பா
லையாறுமிடைமருதுமாள்வான்றான்காண்
பழித்தவன்காணடையாரையடைவார்தங்கள்
பற்றவன்காண்புற்றரவநாணினான்காண்
சுழித்தவன்காண்முடிக்கங்கையடியேபோற்றுந்
தூயமாமுனிவர்க்காய்ப்பார்மேனிற்க
இழித்தவன்காணெழிலாரும்பொழிலார்கச்சி
யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே. (௬)

அசைந்தவன்காணடமாடிப்பாடல்பேணி
யழல்வண்ணத்தில்லடியுமுடியுந்தேடப்
பசைந்தவன்காண்பேய்க்கணங்கள்பரவியேத்தும்
பான்மையன்காண்பரவிநினைந்தெழுவார்தம்பால்

* வையங்கள் என்றும் பாடம். † னுலகுக்குத் என்றும் பாடம். ‡ இத்திருப்பாட்டில் எஞ்சியபாகம் மறைந்துபோயிற்று.

Koviloor Digital Library

கசிந்தவன்காண்கரியிலுரிபோர்த்தான்றான்காண்
 கடல்விடமுண்டமரர்க்கமுதமீய
இசைந்தவன்காணெழிலாரும்பொழிலார்கச்சி
 யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே. (எ)

முடித்தவன்காண்வன்கூற்றைச்சீற்றத்தீயால்
 வலியார்தம்புரமூன்றும்வேவச்சாபம்
பிடித்தவன்காண்பிஞ்ஞகனும்வேடத்தான்காண்
 பிணையல்வெறிகமழ்கொன்றையரவுசென்னி
முடித்தவன்காண்மூவிலைநல்வேலினான்காண்
 முழங்கியுருமெனத்தோன்றுமழையாய்மின்னி
இடித்தவன்காணெழிலாரும்பொழிலார்கச்சி
 யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே. (அ)

வருந்தான்காண் * மனமுருகிநினையாதார்க்கு
 வஞ்சகன்கா † ணஞ்செழுத்துநினைவார்க்கென்றும்
மருந்தவன்காண்வான்பிணிகடீரும்வண்ணம்
 வானகமுமண்ணகமுமற்றுமாகிப்
பரந்தவன்காண்படர்சடையெட்டுடையான்றான்காண்
 பங்கயத்தோன்றன்சிரத்தையேந்தியூரூர்
இரந்தவன்கா ‡ ணெழிலாரும்பொழிலார்கச்சி
 யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே. (கூ)

வெம்மானவுழுவையதளுரிபோர்த்தான்காண்
 வேதத்தின்பொருளான்காணென்றியம்பி
விம்மாநின்றழுவார்கட்களிப்பான்றான்காண்
 விடையேறித்திரிவான்காணடஞ்செய்பூதத்
தம்மான்காணகலிடங்கடாங்கினான்கா
 ணற்புதன்காண்சொற்பதமுங்கடந்துநின்ற
எம்மான்காணெழிலாரும்பொழிலார்கச்சி
 யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே. (கo)

அறுத்தான்காணயன்சிரத்தையமரர்வேண்ட
 வாழ்கடலினஞ்சுண்டங்கணிநீர்க்கங்கை
செறுத்தான்காண்டேவர்க்குந்தேவன்றான்காண்
 டிசையனைத்துந்தொழுதேத்தக்கலைமான்கையில்
பொறுத்தான்காண்புகலிடத்தைநலியவந்து
 பொருகயிலையெடுத்தவன்றன்முடிதோளலஞ்
சிறுத்தான் ¶ காணெழிலாரும்பொழிலார்கச்சி
 யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே. (கக)

திருச்சிற்றம்பலம்.

* வருந்தவன்காண் என்றும் பாடம். † வஞ்சன்காண் என்றும் பாடம். ‡ திரிந்தவன்காண் என்றும் பாடம். ¶ ஞெலர்—நிறுத்தான் என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

உரித்தவன்காணுரக்களிற்றையுமையாளொல்க
வோங்காரத்தொருவன் * காணுணர்மெய்ஞ்ஞானம்
விரித்தவன்காண்விரித்தநால்வேதத்தான்காண்
வியனுலகிற்பல்லுயிரைவிதியினாலே
தெரித்தவன்காண்சில்லுருவாய்த்தோன்றியெங்குந்
திரண்டவன்காண்டிரிபுரத்தைவேவவில்லால்
எரித்தவன்காணெழிலாரும்பொழிலார்கச்சி
யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே. (௧)

நேசன்காணேசர்க்குநேசந்தன்பா
லில்லாதநெஞ்சத்துநீசர்தம்மைக்
கூசன்காண்கூசாதார்நெஞ்சுதஞ்சே
குடிகொண்டகுழகன்காணழகார்கொன்றை
வாசன்காண்மலைமங்கைபங்கன்றான்காண்
வானவர்களெப்பொழுதும்வணங்கியேத்தும்
ஈசன்காணெழிலாரும்பொழிலார்கச்சி
யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே. (௨)

பொறையவன்காண்பூமியேழ்தாங்கியோங்கும்
புண்ணியன்காணண்ணியபுண்டரிகப்போதில்
மறையவன்காண்மறையவனைப்பயந்தோன்றான்காண்
வார்சடைமாசுணமணிந்துவளரும்பிள்ளைப்
பிறையவன்காண்பிறைதிகழுமெயிற்றுப்பேழ்வாய்ப்
பேயோடங்கிடுகாட்டிலெல்லியாடும்
இறையவன்காணெழிலாரும்பொழிலார்கச்சி
யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே. (௩)

பாரவன்காண்விசும்பவன்காண்பவ்வந்தான்காண்
பனிவரைகளிரவினொடுபகலாய்நின்ற
சீரவன்காண்டிசையவன்காண்டிசைகளெட்டுஞ்
செறிந்தவன்காண்சிறந்தடியார்சிந்தைசெய்யும்
பேரவன்காண்பேராயிரங்களேத்தும்
பெரியவன்காணரியவன்காண்பெற்றமூர்ந்த
ஏரவன்காணெழிலாரும்பொழிலார்கச்சி
யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே. (௪)

பெருந்தவத்தெம்பிஞ்ஞகன்காண்பிறைசூடிகாண்
பேதையேன்வாதையுறுபிணியைத்தீர்க்கும்
மருந்தவன்காண்மந்திரங்களாயினான்காண்
வானவர்கடாம்வணங்குமாதேவன்காண்

* ஒங்காரத்தொருவன் என்பதற்கு ஓங்காரம் என்னும் தலத்தில் வீற்றிருக்கும் ஈசன் என்பது மொன்று.

Koviloor Digital Library

அருந்தவத்தாளாயிழையாளுமையாள்பாக
மமர்ந்தவன்காணமரர்கடாமர்ச்சித்தேத்த
இருந்தவன்காணெழிலாரும்பொழிலார்கச்சி
யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே. (௫)

ஆய்ந்தவன்காணருமறையோடங்கமாறு
மணிந்தவன்காணுடரவோடென்புமாமை
காய்ந்தவன்காண்கண்ணழலாற்காமனுகங்
கனன்றெழுந்தகாலனுடல்பொடியாய்வீழப்
பாய்ந்தவன்காண்பண்டுபலசருகாற்பந்தர்
பயின்றநூற்சிலந்திக்குப்பாராள்செல்வம்
ஈந்தவன்காணெழிலாரும்பொழிலார்கச்சி
யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே. (௬)

உமையவளையொருபாகஞ்சேர்த்தினான்கா
ணுகந்தொலிநீர்க்கங்கை* சடையொழுக்கினான்காண்
இமயவடகயிலைச்செல்வன்றான்கா
ணில்பலிக்குச்சென்றுழலுநல்கூர்ந்தான்காண்
சமயமவையாறினுக்குந்தலைவன்றான்காண்
டத்துவன்காணுத்தமன்காண்டானேயாய
இமையவன்காணெழிலாரும்பொழிலார்கச்சி
யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே. (௭)

தொண்டுபடுதொண்டர்துயர்தீர்ப்பான்றான்காண்
டூமலர்ச்சேவடியிணையெஞ்சோதியான்காண்
உண்டுபடுவிடங்கண்டத்தொடுக்கினான்கா
ணொலிகடலிலமுதமரர்க்குதவினான்காண்
வண்டுபடுமலர்க்கொன்றைமாலையான்காண்
வாண்மதியாய்நாண்மீனுமாயினான்காண்
எண்டிசையுமெழிலாரும்பொழிலார்கச்சி
யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே. (௮)

முந்தைகாண்மூவரினுமுதலானான்காண்
மூவிலைவேன்மூர்த்திகாண்முருகவேட்குத்
தந்தைகாண்டண்கடமாமுகத்தினாற்குத்
தாதைகாண்டாழ்ந்தடியேவணங்குவார்க்குச்
சிந்தைகாண்சிந்தாதசித்தத்தார்க்குச்
சிவனவன்காண்செங்கண்மால்விடைபொன்றேறும்
எந்தைகாணெழிலாரும்பொழிலார்கச்சி
யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே. (௯)

பொன்னிசையும்புரிசடையெம்புனிதன்றான்காண்
பூதகணநாதன்காண்புலித்தோலாடை
தன்னிசையவைத்தவெழிலாவினான்காண்
சங்கவெண்குழைக்காதிற்சதுரன்† றான்காண்

* தொளிர்நீர்க்கங்கை என்றும் பாடம். † சதிரன் என்றும் பாடம்.

Koviloor Digital Library

மின்னிசையும்வெள்ளெயிற்றோன்வெகுண்டுவெற்பை
யெடுக்கவடியடர்ப்பமீண்டவன்றன்வாயில்
இன்னிசைகேட்டிலங்கொளிவாளீந்தோன்கச்சி
யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

ஆலந்தானுகந்தமுதுசெய்தானையாதியையமரர்தொழுதேத்தும்
சீலந்தான்பெரிதும்முடையானைச்சிந்திப்பாரவர்சிந்தையுளானை
ஏலவார்குழலாளுமைநங்கையென்றுமேத்திவழிபடப்பெற்ற
காலகாலனைக்கம்பனெம்மானைக்காணக்கண்ணடியேன்பெற்றவாறே. (௧)

உற்றவர்க்குதவும்பெருமானையூர்வதொன்றுடையானும்பர்கோனைப்
பற்றினார்க்கென்றும்பற்றவன்றன்னைப்பாவிப்பார்மனம்பாவிக்கொண்டானை *
அற்றமில்புகழாளுமைநங்கையாதரித்துவழிபடப்பெற்ற
கற்றைவார்சடைக்கம்பனெம்மானைக்காணக்கண்ணடியேன்பெற்றவாறே. (௨)

திரியுமுப்புரந்தீப்பிழம்பாகச்செங்கண்மால்விடைமேற்றிகழ்வானைக்
கரியினீருரிபோர்த்துகந்தானைக்காமனைக்கனலாவிழித்தானை
வரிகொள்வெள்வளையாளுமைநங்கைமருவியேத்திவழிபடப்பெற்ற
பெரியகம்பனை † யெங்கள்பிரானைக்காணக்கண்ணடியேன்பெற்றவாறே. (௩)

குண்டலந்திகழ்காதுடையானைக்கூற்றுதைத்தகொடுந்தொழிலானை
வண்டலம்புமலர்க்கொன்றையினானைவாளராமதிசேர்சடையானைக்
கெண்டையந்தடங்கண்ணுமைநங்கை ‡ கெழுமியேத்திவழிபடப்பெற்ற
கண்டநஞ்சுடைக்கம்பனெம்மானைக்காணக்கண்ணடியேன்பெற்றவாறே. (௪)

வெல்லும்வெண்மழுவொன்றுடையானைவேலைநஞ்சுண்டவித்தகன்றன்னை
அல்லறீர்த்தருள்செய்யவல்லானையருமறையவையங்கம்வல்லானை
எல்லையில்புகழாளுமைநங்கையென்றுமேத்திவழிபடப்பெற்ற
நல்லகம்பனை ¶ யெங்கள்பிரானைக்காணக்கண்ணடியேன்பெற்றவாறே. (௫)

திங்கடங்கியசடையுடையானைத்தேவதேவனைச்செழுங்கடல்வளரும்
சங்கவெண்குழைக்காதுடையானைச்சாமவேதம்பெரிதுகப்பானை
மங்கைநங்கைமலைமகள்கண்டுமருவியேத்திவழிபடப்பெற்ற
கங்கையாளனைக்கம்பனெம்மானைக்காணக்கண்ணடியேன்பெற்றவாறே. (௬)

* பாவிக்கொண்டானை எனப்பாடமோதுவாருமுளர். † பெரியகம்பன் - ஏகாம்பரநாதர். ‡ உமைமங்கை என்றும் பாடம். 'உமைநங்கையென்று மேத்திவழிபடப்பெற்ற நல்லகம்பனை' ¶ என்றது, நல்லகம்பனுக்கும் பெரியகம்பனுக்கும் வேற்றுமையின்மைபற்றியென்றுணர்க; நல்லகம்பன் - உருத்திரராற் பூசிக்கப்பட்ட சிவலிங்கப்பெருமான்.

Koviloor Digital Library

விண்ணவர்தொழுதேத்தநின்றானைவேதந்தான்விரித்தோதவல்லானை
நண்ணினார்க்கென்றுநல்லவன்றன்னைநாளுநான்முகக்கின்றபிரானை
எண்ணிறெல்புகழாளுமைநங்கையென்றுமேத்திவழிபடப்பெற்ற
கண்ணுமூன்றுடைக்கம்பனெம்மானைக்காணக்கண்ணடியேன்பெற்றவாறே.(எ)

சிந்தித்தென்றுநினைந்தெழுவார்கள்சிந்தையிற்றிகழுஞ்சிவன்றன்னைப்
பந்தித்தவினைப்பற்றறுப்பானைப்* பாலொடானஞ்சுமாட்டுகந்தானை
அந்தமில்புகழாளுமைநங்கையாதரித்துவழிபடப்பெற்ற
கந்தவார்சடைக்கம்பனெம்மானைக்காணக்கண்ணடியேன்பெற்றவாறே. (அ)

வரங்கள்பெற்றுழல்வாளரக்கர்தம்வாலியபுரமூன்றெரித்தானை
நிரம்பியதக்கன்றன்பெருவேள்விநிரந்தரஞ்செய்தநிட்கண்டகனைப்
பரந்ததொல்புகழாளுமைநங்கைபரவியேத்திவழிபடப்பெற்ற
கரங்களெட்டுடைக்கம்பனெம்மானைக்காணக்கண்ணடியேன்பெற்றவாறே. (கூ)

எள்கலின்றியிமையவர்கோனையீசனைவழிபாடுசெய்வாள்போல்
உள்ளத்துள்கியுகந்துமைநங்கைவழிபடச்சென்றுநின்றவாகண்டு
வெள்ளங்காட்டிவெருட்டிடவஞ்சிவெருவி†யோடித்தழுவவெளிப்பட்ட
கள்ளக்கம்பனை‡யெங்கள்பிரானைக்காணக்கண்ணடியேன்பெற்றவாறே. (க0)

பெற்றமேறுகந்தேறவல்லானைப்பெரியவெம்பெருமானென்றெப்போதும்
கற்றவர்பரவப்படுவானைக்காணக்கண்ணடியேன்பெற்றதென்று
கொற்றவன்கம்பன்கூத்தனெம்மானைக்குளிர்பொழிற்றிருநாவலாரூரன்
நற்றமிழிவையீரைந்தும்வல்லார்நன்னெறியுலகெய்துவர்தாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருக்கச்சியேகம்பத்திருப்பதிகம் - கஉ.

சுவாமி தேவி திருநாமங்கள் - ஏகாம்பரநாதர், காமாக்ஷியம்மை.

சுந்தரமூர்த்திநாயனார், காஞ்சிபுரத்தை அடைந்து அங்கே முன் காமக்கோட்டத்திற்சென்று, தருமத்தை வளர்க்கின்ற பெருங்கருணையையுடைய உலகமாதாவாகிய காமாக்ஷியம்மையை வணங்கித் துதித்துக்கொண்டு, திருவேகம்பத்தை அடைந்து, ஏகாம்பரநாதசுவாமியை வணங்கி, "ஆதிகாலத்திலே திருப்பாற்கடலினின்று எழுந்து தேவர்களை வருத்தத்தொடங்கிய ஆலாகலவிஷத்தைத் திருமிடற்றிலடைத்து அவர்கள் அமுதுண்ண அருள்செய்த கருணாநிதியே, சிறியேன் செய்த பிழையைப் பொறுத்துச் சிறியேனுக்குத் தேவரீரைத் தரிசிக்கும்பொருட்டுக் கண்ணைத்தந்தருளும்" என்று பிரார்த்தித்தார். அப்பொழுது சுவாமி இடக்கண்ணைமாத்திரம் கொடுத்து, தமது திருக்கோலத்தைக்காட்ட; சுந்தரமூர்த்திநாயனார் கண்டு பரவசமாகி அடியற்றமரம்போல வீழ்ந்து நமஸ்கரித்து எழுந்து, "ஆலந்தானுகந்தமுது செய்தானை" என்னுந் திருப்பதிகத்தைப்பாடியருளினார்.

* வினைபற்றறுப்பானை என்றும் பாடம். † அஞ்சிவெருவி - மிகப்பயந்து; வஞ்சி எனக்கொண்டு அந்த உமாதேவியார் எனப்பொருள்கொள்ளுதலுமொன்று. ‡ கள்ளக்கம்பன் - விட்டுணுமூர்த்தியாற் பூசிக்கப்பெற்ற சிவலிங்கப்பெருமான்; இதுவும் ஒற்றுமை பற்றிக் கூறியது.

Koviloor Digital Library

உ. திருக்கச்சிமேற்றளி.*

திருநாவுக்கரசுநாயனார்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

மறையதுபாடிப்பிச்சைக்கென்றகந்திரிந்துவாழ்வார்
பிறையதுசடைமுடிமேற்பெய்வளையாடனோடும்
கறையதுகண்டங்கொண்டார்காஞ்சிமாநகர்தன்னுள்ளால்†
இறையவர்பாடலாடலிலங்குமேற்றளியனாரே. (க)

மாலனமாயன் ‡ றன்னைமகிழ்ந்தனர்விருத்தராகும்
பாலனார்பசுபதியார்பால்வெள்ளைநீறுபூசிக்
காலனைக்காலாற்செற்றார் ¶ காஞ்சிமாநகர்தன்னுள்ளால்
ஏலநற்கடம்பன்றந்தை § யிலங்குமேற்றளியனாரே. (உ)

விண்ணிடைவிண்ணவர்கள்விரும்பிவந்திறைஞ்சிவாழ்த்தப்
பண்ணிடைச்சுவையின்மிக்ககின்னரம்பாடல்கேட்பார் 0
கண்ணிடைமணியினொப்பார்காஞ்சிமாநகர்தன்னுள்ளால்
எண்ணிடையெழுத்துமானா ரிலங்குமேற்றளியனாரே. (ங)

சோமனையரவினோடுசூழ்தரக்கங்கைசூடும்
வாமனைவானவர்கள் ** வலங்கொடுவந்துபோற்றக்
காமனைக்காய்ந்தகண்ணார்காஞ்சிமாநகர்தன்னுள்ளால்
ஏமநின்றாடுமெந்தையிலங்குமேற்றளியனாரே. (ச)

ஊனவருயிரினோடுமுலகங்களூழியாகித்
தானவர்தனமுமாகித்தனஞ்சயனோடெதிர்ந்த
கானவர்காளகண்டர்காஞ்சிமாநகர்தன்னுள்ளால்
ஏனமக்கோடுபூண்டாரிலங்குமேற்றளியனாரே. (ரு)

மாயனும்மா †† லனாகிமலரவனாகிமண்ணாய்த்
தேயமாய்த்திசைபெட்டாகித்தீர்த்தமாய்த்திரிதர்கின்ற
காயமாய்க்காயத்துள்ளார்காஞ்சிமாநகர்தன்னுள்ளால்
ஏயமென்றோளிபாகரிலங்குமேற்றளியனாரே. (சா)

* ஸ்ரீ காஞ்சித்திருமேற்றளி என்றும், திருமேற்றளி என்றும் பிரதிபேதங்களுண்டு. † நகர்தன்னுள்ளார் என்றும் பாடம்; இப்பாடத்தை இத்திருப்பதிகமுழுதுங்கொள்க. ‡ மாலியமாயன்எனப்பாடமோதுவாருமுளர். ¶ காலாற்காய்ந்தார் என்றும் பாடம். § றந்தை என்றும்பாடம். 0 கேட்டார் என்று பாடமோதுவாருமுளர். ** வாமனல்வானவர்கள் என்றும் பாடம். †† மால் - உருத்திரன்; அது "மேவிய வவர்தமை வீட்டினிற் பயக்கும்-தீயமாகிய சிவனே போற்றி-மாலோய் போற்றி" என்பதனானுமுணர்க.

Koviloor Digital Library

மண்ணினையுண்டமாயன்றன்னையோர்பாகங்கொண்டார்
பண்ணினைப்பாடியாடும்பத்தர்கள்சித்தங்கொண்டார்
கண்ணினைமூன்றுங்கொண்டார்காஞ்சிமாநகர்தன்னுள்ளால்
எண்ணினையெண்ணவைத்தாரிலங்குமேற்றளியனாரே. (௭)

செல்வியைப்பாகங்கொண்டார்சேந்தனைமகனாக்கொண்டார்
மல்லிகைக்கண்ணியோடுமாமலர்க்கொன்றைசூடிக்
கல்வியைக்கரையிலாதகாஞ்சிமாநகர்தன்னுள்ளால்
எல்லியைவிளங்கநின்றாரிலங்குமேற்றளியனாரே. (௮)

வேறிணையின்றியென்றும்விளங்கொளிமருங்கினாளைக்
கூறியல்பாகம்வைத்தார் * கோளராமதியும்வைத்தார்
ஆறினைச்சடையுள்வைத்தாரணிபொழிற்கச்சிதன்னுள்
ஏறினையேறுமெந்தையிலங்குமேற்றளியனாரே. (௯)

தென்னவன் † மலையெடுக்கச்சேயிழைநடுங்கக்கண்டு
மன்னவன்விரலாலூன்றமணிமுடிநெரியவாயால்
கன்னலின்கீதம்பாடக்கேட்டவர்காஞ்சிதன்னுள்
இன்னவற்கருளிச்செய்தா ‡ ரிலங்குமேற்றளியனாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

நொந்தாவொண்சுடரே நுனையேநினைந்திருந்தேன்
வந்தாய்போயறியாய்மனமேபுகுந்துநின்ற
சிந்தாயெந்தைபிரான்றிருமேற்றளியுறையும்
எந்தாயுன்னையல்லாலினியேத்தமாட்டேனே. (௧)

ஆட்டான்பட்டமையாலடியார்க்குத்தொண்டுபட்டுக்
கேட்டேன்கேட்பதெல்லாம்பிறவாவகைகேட்டொழிந்தேன் ¶
சேட்டார்மாளிகைசூழ்திருமேற்றளியுறையும்
மாட்டேயுன்னையல்லான்மகிழ்ந்தேத்தமாட்டேனே. (௨)

மோறாந்தோரொருகானினையாதிருந்தாலும்
வேறாவந்தென்னுள்ளம்புகவல்லமெய்ப்பொருளே
சேறார்தண்கழனித்திருமேற்றளியுறையும்
ஏறேயுன்னையல்லாலினியேத்தமாட்டேனே. (௩)

* கூறியலாகவைத்தார் என்றும் பாடம். † தென்னவன்—இராவணன்; இவன் தென்றிசையிலிருந்தவனாதலாற் றென்னவனென்னப்பட்டான். ‡ இன்னவர்க்கருளிச்செய்தார் என்றும் பாடம்; இதனை இன்னவாக்கருளிச்செய்தார் என்றும் பாடமோதலாம். ¶ பிறவாமைகேட்டொழிந்தேன் என்றும் பாடம்.

Koviloor Digital Library

உற்றார்சுற்றமெனுமதுவிட்டுநுன்னடைந்தேன்
எற்றாலென்குறைவென்னிடரைத்துறந்தொழிந்தேன்
செற்றாய்மும்மதிலுந்திருமேற்றளியுறையும்
பற்றேநுன்னை*யல்லாற்பணிந்தேத்தமாட்டேனே. (௪)

எம்மானெம்மனையென்றவர்†இட்டிறந்தொழிந்தார்
மெய்ம்மாலாயினதீர்த்தருள்செய்யுமெய்ப்பொருளே
மைம்மாவீருரியாய்கனமேற்றளியுறையும்
பெம்மானுன்னையல்லாற்பெரிதேத்தமாட்டேனே. (௫)

நானேனுன்னடியேநினைந்தேனினைதலுமே
ஊனேரிவ்வுடலம்‡புகுந்தாயென்னொண்சுடரே
தேனேயின்னமுதேதிருமேற்றளியுறையும்
கோனேயுன்னையல்லாற்குளிர்ந்தேத்தமாட்டேனே. (௬)

கையார்வெஞ்சிலைநாணதன்மேற்சரங்கோத்தே
எய்தாய்மும்மதிலும்மெரியுண்ணவெம்பெருமான்
செய்யார்பைங்கமலத்திருமேற்றளியுறையும்
ஐயாவுன்னையல்லாலறிந்தேத்தமாட்டேனே. (௭)

விரையார்கொன்றையினாய்விமலாவினியுன்னையல்லால்
உரையேனாவதனாலுடலில்லுயிருள்ளளவும்
திரையார்தண்கழனித்திருமேற்றளியுறையும்
அரையாவுன்னையல்லாலறிந்தேத்தமாட்டேனே. (௮)

நிலையாய்நின்னடியேநினைந்தேனினைதலுமே
தலைவாநின்னினையப்பணித்தாய்சலமொழிந்தேன்
சிலையார்மாமதில்சூழ்திருமேற்றளியுறையும்
மலையேயுன்னையல்லான்மகிழ்ந்தேத்தமாட்டேனே. (௯)

பாரூர்பல்லவனூர்மதிற்காஞ்சிமாநகர்வாய்ச்
சீரூரும்புறவிற்றிருமேற்றளிச்சிவனை
ஆரூரன்னடியானடித்தொண்டனாரூரன்சொன்ன
சீரூர்பாடல்வல்லார்சிவலோகஞ்சேர்வாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருக்கச்சிமேற்றளித்திருப்பதிகம் - ௨.

ஆ திருப்பதிகம் - ௧௪.

சுவாமிதிருநாமம் - மேற்றளிநாயகர்.¶

* பற்றேயுன்னை என்றும் பாடம். † எம்மானெம்மனையேயெலென்றவர் என்றும் பாடம்; எம்மானெம்மனையேயெலென்பவர் எனப்பாடமோதுவாருமுளர். ‡ ஊனரிவ்வுடலம் என்றும் பாடம். ¶ திருக்கச்சிமேற்றளி முதல் திருக்கச்சிநெறிக்காரைக்காடு இறுதியாயுள்ள நான்குதலங்களுக்கும் தேவி காமாக்ஷியம்மை.

Koviloor Digital Library

௩. திருவோணகாந்தன்றளி.

சுந்தரமூர்த்தி நாயனார்.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

நெய்யும்பாலுந்தயிருங்கொண்டுநித்தல்பூசனை * செய்யலுற்றார்
கையிலொன்றுங்காணமில்லைக்கழலடிதொழுதுய்யினல்லால்
ஐவர்கொண்டிங்காட்டவாடியாழ்குழிப்பட்டழுந்துவேற்கு †
உய்யுமாறென்றருளிச்செய்யீரோணகாந்தன்றளியுளீரே. (௧)

திங்கடங்குசடையின்மேலோர் ‡ திரைகள்வந்துபுரளவீசும்
கங்கையாளேல்வாய்திறவாள்கணபதியேல்வயிறுதாரி
அங்கைவேலோன்குமரன்பிள்ளைதேவியார்கோற்றட்டியாளார் ¶
உங்களுக்காட்செய்யமாட்டோமோணகாந்தன்றளியுளீரே. (௨)

பெற்றபோழ்தும்பெறாதபோழ்தும் § பேணியுங்கழலேத்துவார்கள்
மற்றோர்பற்றிலரென்றிரங்கிமதியுடையவர்செய்கைசெய்வீர் ०
அற்றபோழ்துமலர்ந்தபோழ்துமாபற்காலத் ** தடிகேளும்மை
ஒற்றிவைத்திங்குண்ணலாமோவோணகாந்தன்றளியுளீரே. (௩)

வல்லதெல்லாஞ்சொல்லியும்மைவாழ்த்தினாலும்வாய்திறந்தொன்
றில்லையென்னீருண்டுமென்னீரெம்மையாள்வானிருப்பதென்னீர் ††
பல்லையுக்கபடுதலையிற்பகலெலாம்போய்ப்பலிதிரிந்திங் ‡‡
கொல்லைவாழ்க்கையொழியமாட்டீரோணகாந்தன்றளியுளீரே. (௪)

கூடிக்கூடித்தொண்டர்தங்கள்கொண்டபாணிகுறைபடாமே
ஆடிப்பாடியழுதுநெக்கங்கன்புடையவர்க்கின்பமோரீர்
தேடித்தேடித்திரிந்தெய்த்தாலுஞ்சித்தமென்பால்வைக்கமாட்டீர்
ஓடிப்போகீர்பற்றுந்தாரீரோணகாந்தன்றளியுளீரே. (௫)

வாரிருங்குழன்வாணெடுங்கண் ¶¶ மலைமகண்மதுவிம்முகொன்றைத்
தாரிருந்தடமார்புநீங்காத்தையலாளுலகுய்யவைத்த
காரிரும்பொழிற்கச்சிமூதூர்க்காமக்கோட்டமுண்டாகநீர்போய்
ஊரிடும்பிச்சைகொள்வதென்னேயோணகாந்தன்றளியுளீரே. (௬)

* நித்தம்பூசனை என்றும் பாடம். † வேனுக் என்றுபாடமோதுவாருமுளர். ‡ சடைக்கண்மேலோர் என்றும் பாடம். ¶ கோற்றட்டியாளால் எனப்பாடமோதுவாருமுளர். § பெற்றபோதும்பெறாதபோதும் என்றும் பாடம். ० செய்யீர் என்றும் பாடம். ** அலந்தபோழ்துமாவற்காலத் என்றும் பாடம். †† னிருப்பதேநீர் என்றும் பாடம். ‡‡ திரிந்தங் என்றும் பாடம். ¶¶ குழன்மைவாணெடுங்கண் என்றும் பாடம்.

Koyiloor Digital Library

பொய்ம்மையாலேபோதுபோக்கிப்புறத்துமில்லையகத்துமில்லை
மெய்ம்மைசொல்லியாளமாட்டீர்மேலைநாளொன்றிடவுங்கில்லீர்
எம்மைப்பெற்றாலென்றும்வேண்டீரேதுந்தாரீரேதுமோரீர் *
உம்மையன்றேயெம்பெருமானோணகாந்தன்றளியுளீரே. (எ)

வலையம்வைத்தகூற்றமீவான்வந்துநின்றவார்த்தைகேட்டுச்
சிலையமைத்த † சிந்தையாலேதிருவடிதொழுதுய்யினல்லால் ‡
கலையமைத்த † காமச்செற்றக்குரோதலோபமதவருடை
உலையமைத்திங் † கொன்றமாட்டேனோணகாந்தன்றளியுளீரே. (அ)

வாரமாகித்திருவடிக்குப்பணிசெய்தொண்டர்பெறுவதென்னே
ஆரம்பாம்புவாழ்வதாரூரொற்றியூரேயும்மதன்று
தாரமாகக்கங்கையாளைச்சடையில்வைத்தவடிகேளுந்தம்
ஊருங்காடுவுடையுந்தோலேயோணகாந்தன்றளியுளீரே. (கூ)

ஓவணமேலெருதொன்றேறுமோணகாந்தன்றளியுளார்தாம்
ஆவணஞ்செய்தாளுங்கொண்டுவரைதுகிலொடுபட்டுவீக்கிக்
கோவணமேற்கொண்டவேடங்கோவையாகவாரூரன்சொன்ன
பாவணத்தமிழ்பத்தும்வல்லார்பறையுந்தாஞ்செய்தபாவந்தானே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருவோணகாந்தன்றளித்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - கஓ.

சுவாமிதிருநாமம் - ஓணகாந்தீசுவரர்.

சுந்தரமூர்த்திநாயனார், காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருந்தபொழுது, திருமேற்றளியை அடைந்து சுவாமிதரிசனஞ்செய்து திருப்பதிகம்பாடி, திருவோணகாந்தன்றளியை அடைந்து "நெய்யும் பாலும்" என்னுந் திருப்பதிகம்பாடிப் பொன்பெற்றருளினார்.

ச. திருக்கச்சியனேகதங்காவதம். ¶

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

தேனெய்புரிந்துழல்செஞ்சடையெம்பெருமானதிடந்திகழைங்கணையக்
கோனை § யெரித்தெரிபாடியிடங்குலவானதிடங்குறையாமறையாம்
மானையிடத்ததொர்கையனிடம் 0 மதமாறுபடப்பொழியும்மலைமேல்
யானை ** யுரித்தபிரானதிடங்கலிக்கச்சியனேகதங்காவதமே. (க)

* மோதிர் எனப்பாடமோதுவாருமுளர். † சிலையம்வைத்த என்றும், கலையம்வைத்த என்றும், உலையம்வைத்திங் என்றும் பாடம். ‡ துய்யிலல்லால் என்றும் பாடம். ¶ காபதம் என்றே எல்லாப்பிரதிகளிலுங்காணப்படுகின்றது; திருவனேகதங்காபதம் என்றும் பிரதிபேதமுண்டு. § கணைய-கோனை என்றும் பாடம். 0 யிடத்தோர்கையனிடம் என்றும் பாடம். ** ஆனை என்றும் பாடம்.

Koviloor Digital Library

கூறுநடைக்குழிகட்பகுவாயனபேயுகந்தாடநின்றோரியிட
வேறுபடக்குடகத்திலையம்பலவாணனின்றாடல்விரும்புமிடம்
ஏறுவிடைக்கொடியெம்பெருமானிமையோர்பெருமானுமையாள்கணவன்
ஆறுசடைக்குடையப்பனிடங்கலிக்கச்சியனேகதங்காவதமே. (௨)

கொடிகளிடைக்குயில்கூவுமிடம்மயிலாலுமிடம்மழுவாளுடைய
கடிகொள்புனற்சடைகொண்டநுதற்கறைக்கண்டனிடம்பிறைத்துண்டமுடிச்
செடிகொள்வினைப்பகைதீருமிடந்திருவாகுமிடந்* திருமார்பகலத்
தடிகளிடம்மழல்வண்ணனிடங்கலிக்கச்சியனேகதங்காவதமே. (௩)

கொங்குநுழைத்தனவண்டறைகொன்றையுங்கங்கையுந்திங்களுஞ்சூடுசடை
மங்குனுழைமலைமங்கையைநங்கையைப்பங்கினிற்றங்கவுவந்தருள்செய் †
சங்குகுழைச்செவிகொண்டருவித்திரள்பாயவியர்த் ‡ தழல்போலுடைத்தம்
அங்கைமழுத்திகழ்கையனிடங்கலிக்கச்சியனேகதங்காவதமே. (௪)

பைத்தபடத்தலையாடரவம்பயில்கின்றவிடம்பயிலப்புகுவார்
சித்தமொருநெறிவைத்தவிடந்திகழ்கின்றவிடந்திருவானடிக்கே
வைத்தமனத்தவர்பத்தர்மனங்கொளவைத்தவிடம்மழுவாளுடைய
அத்தனிடம்மழல்வண்ணனிடங்கலிக்கச்சியனேகதங்காவதமே. (௫)

தண்டமுடைத்தருமன்றமரென்றமரைச்செயும்வன்றுயர்தீர்க்குமிடம்
பிண்டமுடைப்பிறவித்தலைநின்றுநினைப்பவராக்கையைநீக்குமிடம்
கண்டமுடைக்கருநஞ்சைநுகர்ந்தபிரானதிடங் ¶ கடலேழுகடந்
தண்டமுடைப்பெருமானதிடங்கலிக்கச்சியனேகதங்காவதமே. (௬)

கட்டுமயக்கமறுத்தவர்கைதொழுதேத்துமிடங்கதிரோனொளியால்
விட்டுமிடம் § விடையூர்தியிடங்குயிற்பேடைதன்சேவலொடாடுமிடம்
மட்டுமயங்கியவிழ்ந்தமலரொருமாதவியோடுமணம்புணரும்
அட்டபுயங்கபிரானதிடம் 0 கலிக்கச்சியனேகதங்காவதமே. (௭)

புல்லியிடந்தொழுதுய்துமென்னுதவர்தம்புரமூன்றும்பொடிபடுத்த
வில்லியிடம்விரவாதுயிருண்ணும்வெங்காலனைக்கால்கொடுவீந்தவியக்
கொல்லியிடங்குளிர்மாதவிமவ்வல்குராவகுளங்குருக்கத்திபுன்னை
அல்லியிடைப்பெடைவண்டுறங்குங்கலிக்கச்சியனேகதங்காவதமே. (௮)

சங்கையவர்புணர்தற்கரியான்றளவேனகையாடவிராமிகுசீர்
மங்கையவண்மகிழச்சுடுகாட்டிடைநட்டநின்றாடியசங்கரனெம் **
அங்கையனல்லனலேந்துமவன் †† கனல்சேரொளியன்னதோர்பேரகலத்
தங்கையவன்னுறைகின்றவிடங்கலிக்கச்சியனேகதங்காவதமே. (௯)

* திருவாருமிடந் என்றும் பாடம். † வுகந்தருள்செய் என்றும் பாடம். ‡ பாயவியாத் என்றும் பாடம். ¶ நஞ்சுகரந்தபிரானதிடங் என்றும் பாடம். § விட்டவிடம் எனப்பாடமோதுவாருமுளர். 0 புயங்கப்பிரானதிடங் என்றும் பாடம். ** சங்கரனே எனப்பாடமோதுவாருமுளர். †† அம் கை அனல் அனல் ஏந்துமவன் எனப்பிரிக்க; அனல் அனல் - சுடுகின்ற அக்கினி; அங்கையினனலேந்துமவன் எனப்பாடமோதுவாருமுளர்.

Koviloor Digital Library

வீடுபெறப்பலவூழிகளின்றுநினைக்குமிடம்வினைதீருமிடம்
பீடுபெறப்பெரியோரதிடங்கலிக்கச்சியனேகதங்காப்பனிடம் *
பாடுமிடத்தடியான்புகழூரனுரைத்ததமிழ்மாலைகள்பத்தும்வல்லார்
கூடுமிடஞ்சிவலோகனிடங்கலிக்கச்சியனேகதங்காவதமே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருக்கச்சியனேகதங்காவதத்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - கக.

சுவாமிதிருநாமம் - காவதநாதர்.

ரு. திருக்கச்சிநெறிக்காரைக்காடு. †

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்

வாரணவுமுலைமங்கைபங்கினராயங்கையினில்
போரணவுமழுவொன்றங்கேந்திவெண்பொடியணிவர்
காரணவுமணிமாடங்கடைநவின்றகலிக்கச்சி
நீரணவுமலர்ப்பொய்கைநெறிக்காரைக்காட்டாரே. (க)

காருருமணிமிடற்றர் ‡ கரிகாடருடைதலைகொண்
டூரூரன்பலிக்குழல்வாருழையானினுரியதளர்
தேருருநெடுவீதிச்செழுங்கச்சிமாநகர்வாய்
நீருருமலர்ப்பொய்கைநெறிக்காரைக்காட்டாரே. (உ)

கூறணிந்தார்கொடியிடையைக்குளிர்சடைமேலிளமதியோ
டாறணிந்தாராடரவம்பூண்டுகந்தாரான்வெள்ளை
ஏறணிந்தார்கொடியதன்மேலென்பணிந்தார்வரைமார்பில்
நீறணிந்தார்கலிக்கச்சிநெறிக்காரைக்காட்டாரே. (ங)

பிறைநவின்றசெஞ்சடைகள்பின்றாழப்பூதங்கள்
மறைநவின்றபாடலோடாடலராய்மழுவேந்திச்
சிறைநவின்றவண்டினங்கடீங்கனிவாய்த்தேன்கதவும்
நிறைநவின்றகலிக்கச்சிநெறிக்காரைக்காட்டாரே. (ச)

அன்றாலின்கீழிருந்தங்கறம்புரிந்தவருளாளர் ¶
குன்றாதவெஞ்சிலையிற்கோளரவநாண்கொளுவி
ஒன்றாதார்புரமூன்றுமோங்கெரியில்வெந்தவிய
நின்றாருங்கலிக்கச்சிநெறிக்காரைக்காட்டாரே. (ரு)

* பெரியோர்திடங்கொண்டுமேவினர்தங்களுக்காக்குமிடம் என்று பாடமோதுவாருமுளர். † திருநெறிக்காரைக்காடு எனவும் பிரதிபேதமுண்டு; இது திருக்காலீசுரன் கோயில் என்றும், திருக்காவிசுவரர்கோயில் என்றும் வழங்குகின்றது. ‡ மிடற்றர் என்றும்பாடம். ¶ கறமுரைத்தவருளாளர் என்றும் பாடம்.

Koviloor Digital Library

பன்மலர்கள்கொண்டடிக்கீழ்வானோர்கள்பணிந்திறைஞ்ச
நன்மையிலாவல்லவுணர்நகர்மூன்றுமொருநொடியில்
வின்மலையினாண்கொளுவிவெங்கணையாலெய்தழித்த
நின்மலனார்கலிக்கச்சிநெறிக்காரைக்காட்டாரே. (௬)

புற்றிடைவாளரவினொடுபுனைகொன்றைமதமத்தம்
எற்றொழியாவலைபுனலோடிளமதியமேந்துசடைப்
பெற்றுடையாரொருபாகம்பெண்ணுடையார்கண்ணமரும்
நெற்றியினார்கலிக்கச்சிநெறிக்காரைக்காட்டாரே. (௭)

ஏழ்கடல்சூழ்தென்னிலங்கைக்கோமானையெழில்வரைவாய்த்
தாழ்* விரலாலூன்றியதோர்தன்மையினார்நன்மையினார்
ஆழ்கிடங்குஞ்சூழ்வயலுமதில்புல்கியழகமரும்
நீண்மறுகிற்கலிக்கச்சிநெறிக்காரைக்காட்டாரே. (௮)

ஊண்டானுமொலிகடனஞ்சுடைதலையிற்பலிகொள்வர்
மாண்டார்தம்மெலும்பணிவர்வரியரவோடெழிலாமை
பூண்டாருமோரிருவரறியாமைப்பொங்கெரியாய்
நீண்டாருங்கலிக்கச்சிநெறிக்காரைக்காட்டாரே. (௯)

குண்டாடிச்சமண்படுவார்கூறைதனைமெய்போர்த்து
மிண்டாடித்திரிதருவாருரைப்பனகண்மெய்யல்ல
வண்டாருங்குழலாளைவரையாகத்தொருபாகம்
கண்டாருங்கலிக்கச்சிநெறிக்காரைக்காட்டாரே. (௧௦)

கண்ணாருங்கலிக்கச்சிநெறிக்காரைக்காட்டுறையும்
பெண்ணாருந்திருமேனிப்பெருமானதடிவாழ்த்தித்
தண்ணாரும்பொழிற்காழித்தமிழ்ஞானசம்பந்தன்
பண்ணாருந்தமிழ்வல்லார்பரலோகத்திருப்பாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருக்கச்சிநெறிக்காரைக்காட்டுத்திருப்பதிகம் - ௧.

ஆ திருப்பதிகம் - ௧௭.

சுவாமிதிருநாமம் - காரைத்திருநாதர்.

* தாள் தாழ் என எதுகைநோக்கிற்று.

Koviloor Digital Library

சா. திருக்குரங்கணின்முட்டம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர்.

பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

விழுநீர்மழுவாட்படையண்ணல்விளங்கும்
கழுநீர்குவளைம்மலரக்கயல்பாயும்
கொழுநீர்வயல்சூழ்ந்தகுரங்கணின்முட்டம்
தொழுநீர்மையர்தீதுறுதுன்பமிலரே. (க)

விடைசேர்கொடியண்ணல்விளங்குயர்மாடக்
கடைசேர்கருமென்குளத்தோங்கியகாட்டில்*
குடையார்புனன்மல்குகுரங்கணின்முட்டம்
உடையானெனையாளுடையெந்தைபிரானே. (உ)

சூலப்படையான்விடையான்சுடுநீற்றன்
காலன்றனையாருயிர்வவ்வியகாலன்
கோலப்பொழில்சூழ்ந்தகுரங்கணின்முட்டத்
தேலங்கமழ்புன்சடையெந்தைபிரானே. (ங)

வாடாவிரிகொன்றைவலத்தொருகாதில்
தோடார்குழையானலபாலனநோக்கிக்
கூடாதனசெய்தகுரங்கணின்முட்டம்
ஆடாவருவாரவரன்புடையாரே. (ச)

இறையார்வளையாளையொர்பாகத்தடக்கிக்
கறையார்மிடற்றான்கரிகீறியகையான்
குறைபார்மதிசூடிகுரங்கணின்முட்டத்
துறைவானெமையாளுடையொண்சுடரானே. (ரு)

பலவும்பயனுள்ளனபற்றுமொழிந்தோம்
கலவம்மயில்காமுறுபேடையொடாடிக்
குலவும்பொழில்சூழ்ந்தகுரங்கணின்முட்டம்
நிலவும்பெருமானடிநித்தனினைந்தே. (சா)

மாடார்மலர்க்கொன்றைவளர்சடைவைத்துத்
தோடார்குழைதானொருகாதிலிலங்கக்†
கூடார்மதிலெய்தகுரங்கணின்முட்டத்
தாடரவம்மரையார்த்தமர்வானே. (எ)

* குழமொங்கியகாட்டில் எனப்பாடமோதுவாருமுளர். † காதினிலங்கக் என்றும் பாடம்.

Koviloor Digital Library

மையார்நிறமேனியரக்கர்தங்கோனை
உய்யாவகையாலடர்த்தின்னருள்செய்த
கொய்யார்மலர்சூடிகுரங்கணின்முட்டம்
கையாற்றொழுவார்வினைகாண்டலரிதே. (அ)

வெறியார்மலர்த்தாமரையானொடுமாலும்
அறியாதசைந்தேத்தவோராரழலாகும்
குறியாநிமிர்ந்தான்றன்குரங்கணின்முட்டம்
நெறியாற்றொழுவார்வினைநிற்ககிலாவே. * (கூ)

கழுவார்துவராடைகலந்துமெய்போர்க்கும்
வழுவாச்சமண்சாக்கியர்வாக்கவைகொள்ளேல்
குழுமின்சடையண்ணல்குரங்கணின்முட்டத்
தெழில்வெண்பிறையானடிசேர்வதியல்பே. (க0)

கல்லார்மதிற்காழியுண்ஞானசம்பந்தன்
கொல்லார்மழுவேந்திகுரங்கணின்முட்டம்
சொல்லார்தமிழ்மாலைசெவிக்கினிதாக
வல்லார்க்கெளிதாம்பிறவாவகைவீடே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருக்குரங்கணின்முட்டத்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - கஅ.

சுவாமி தேவி திருநாமங்கள் - வாலீசுவரர், இறையார்வளையம்மை.

எ. திருமாகறல்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

திருவிராகம். பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

விங்குவிளைகழனிமிகுகடைசியர்கள்பாடல்விளையாடலரவம்
மங்குலொடுநீள்கொடிகண்மாடமலிநீடுபொழின்மாகறலுளான்
கொங்குவிரிகொன்றையொடுகங்கைவளர்திங்களணிசெஞ்சடையினான்
செங்கண்விடையண்ணலடிசேர்பவர்கடீவினைகடீருமுடனே. (க)

கலையினொலிமங்கையர்கள்பாடலொலியாடல்கவினெய்தியழகார்
மலையினிகர்மாடமுயர்நீள்கொடிகள்வீசுமலி † மாகறலுளான்
இலையின்மலிவேனுனையசூலம்வலனேந்தியெரிபுன்சடையினுள்
அலைகொள்புனலேந்துபெருமானடியையேத்தவினையகலுமிகவே. (உ)

காலையொடுதுந்துபிகள்சங்குகுழல்யாழ்முழவுகாமருவுசீர்
மாலைவழிபாடுசெய்துமாதவர்களேத்திமகிழ்மாகறலுளான்
தோலையுடைபேணியதன்மேலொர்சுடர்நாகமசையாவழகிதாப்
பாலையனநீறுபுனைவானடியையேத்தவினைபறையுமுடனே. (ங)

* நிற்கிலாவே என்றும் பாடம். † மொலி என்றுபாடமோதவாருமுளர்.

Koviloor Digital Library

இங்குகதிர்முத்தினொடுபொன்மணிகளுந்தியெழில்மெய்யுளுடனே
மங்கையருமைந்தர்களுமன்னுபுனலாடிமகிழ்மாகறலுளான்
கொங்குவளர்கொன்றைகுளிர்திங்களணிசெஞ்சடையினானடியையே
நங்கள்வினைதீரமிகவேத்திவழிபாடுநுகராவெழுமினே. (௪)

துஞ்சுநறுநீலமிருணீங்க*வொளிதோன்றுமதுவார்கழனிவாய்
மஞ்சுமலிபூம்பொழிலின்மயில்களடமாடன்மலி†மாகறலுளான்
வஞ்சமதயானையுரிபோர்த்துமகிழ்வானோர்மழுவாளன்வளரும்
நஞ்சமிருள்கண்டமுடைநாதனடியாரைநலியாவினைகளே. (௫)

மன்னுமறையோர்களொடுபல்படிமமாதவர்கள்கூடியுடனாய்
இன்னவகையாலினிதிறைஞ்சியிமையோரிலெழுமாகறலுளான்
மின்னைவிரிபுன்சடையின்மேன்மலர்கள்கங்கையொடுதிங்களெனவே
உன்னுமவர்தொல்வினைகளோல்கவுயர்வானுலகமேறலெளிதே. (௬)

வெய்யவினைநெறிகள்செலவந்தணையுமேல்வினைகள்வீட்டலுறுவீர்
மைகொள்விரிகானன்மதுவார்கழனிமாகறலுளானெழிலதார்
கையகரிகால்வரையின்மேலதுரிதோலுடையமேனியழகார்
ஐயனடிசேர்பவரையஞ்சியடையாவினைகளகலுமிகவே. (௭)

தூசுதுகிலின்கொடிகண்மேகமொடுதோய்வனபொன்‡மாடமிசையே
மாசுபடுசெய்கைமிகமாதவர்களோதிமலிமாகறலுளான்
பாசுபதவிச்சைவரிநச்சரவுகச்சையுடைபேணியழகார்
பூசுபொடியீசனெனவேத்தவினைநிற்றலிலபோகுமுடனே. (௮)

தூயவிரிதாமரைகணெய்தல்கழுநீர்குவளைதோன்றமதுவுண்¶
பாயவரிவண்டுபலபண்முரலுமோசைபயின்மாகறலுளான்
சாயவிரலூன்றியவிராவணனதன்மைகெடநின்றபெருமான்
ஆயபுகழேத்துமடியார்கள்வினையாயினவுமகல்வதெளிதே. (௯)

காலினலபைங்கழல்கணீண்முடியின்மேலுணர்வுகாமுறவினார்§
மாலுமலரானுமறியாமையெரியாகியுயர்மாகறலுளான்
நாலுமெரிதோலுமுரிமாமணியநாகமொடுகூடியுடனாய்
ஆலும்விடையூர்தியுடையடிகளடியாரையடையாவினைகளே. (௧௦)

கடைகொணெடுமாடமிகவோங்குகமழ்வீதிமலிகாழியவர்கோன்
அடையும்வகையாற்பரவியரனையடிகூடுசம்பந்தனுரையால்
மடைகொள் ० புனலோடுவயல்கூடுபொழின்மாகறலுளானடியையே
உடையதமிழ்பத்துமுணர்வாரவர்கடொல்வினைகளொல்குமுடனே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருமாகறற்றிருப்பதிகம் - ௧.

ஆ திருப்பதிகம் - ௧௧.

சுவாமி தேவி திருநாமங்கள் - அடைக்கலங்காத்தநாதர், புவனநாயகி.

* மிருணீங்க என்றும் பாடம். † மாடமலி என்றும் பாடம். ‡ தோய்வனபோன் என்றும் பாடம். ¶ தோன்றமருவுண் என்றும் பாடம். § காமுறவினுல் எனப்பாடமோதுவாருமுளர். ० மடைகள் என்றும் பாடம்.

Koviloor Digital Library

அ. திருவோத்தூர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

பூத்தேர்ந்தாயனகொண்டுநின்பொன்னடி
ஏத்தாதாரில்லையெண்ணுங்கால்
ஓத்தூர்மேயவொளிமழுவாளங்கைக்
கூத்தீரும்மகுணங்களே. (க)

இடையீர்போகாவிளமுலையாளையோர்
புடையீரேபுள்ளிமானுரி
உடையீரேயும்மையேத்துதுமோத்தூர்ச்
சடையீரேயுமதாளே. (உ)

உள்வேர்போலநொடிமையினார்திறம்
கொள்வீரல்குல்*லோர்கோவணம்
ஒள்வாழைக்கனிதேன்சொரியோத்தூர்க்
கள்வீரேயுமகாதலே. (ங)

தோட்டீரேதுத்தியைந்தலைநாகத்தை
ஆட்டீரேயடியார்வினை†
ஓட்டீரேயும்மையேத்துது‡மோத்தூர்
நாட்டீரேயருணல்குமே. (ச)

குழையார்காதீர்¶கொடுமழுவாட்படை
உழையாள்வீர்திருவோத்தூர்
பிழையாவண்ணங்கள்பாடிநின்றுடுவார்
அழையாமேயருணல்குமே. (ரு)

மிக்கார்வந்துவிரும்பிப்பலியிடத்
தக்கார்தம்மக்களீரென்§
றுட்காதாருளரோதிருவோத்தூர்
நக்கீரேயருணல்குமே. (சு)

தாதார்கொன்றைதயங்குமுடியுடை
நாதாவென்றுநலம்புகழ்ந்
தோதாதாருளரோதிருவோத்தூர்
ஆதீரேயருணல்குமே. (எ)

* அல்குல் - அரை. † யடியார்வினையை என்றும் பாடம். ‡ யுமையேத்துதும் என்றும் பாடம். ¶ காதா என்றும் பாடம். § தக்கார்தம்மடிகளீரென் என்றும், தக்கார்தம் மகளீரென்று— உட்காதாருளரோ என்றும் பாடம்; தக்கார்தம்மடியிர்களென் எனப்பாட மோதுவாருமுளர்.

Koviloor Digital Library

என்றுனிம்மலையென்றவரக்கனை
வென்றார்போலும்விரலினால்
ஒன்றார்மும்மதிலெய்தவனோத்தூர்
என்றார்மேல்வினையேகுமே. (அ)

நன்றுநான்மறையானொடுமாலுமாய்ச்
சென்றார்போலுந்திசையெலாம்
ஒன்றாயொள்ளெரியாய்மிகவோத்தூர்
நின்றீரே* யுமைநேடியே. (கூ)

காரமண்கலிங்கத்துவராடையர்
தேரர்சொல்லவைதேறன்மின்†
ஓரம்பாலெயிலெய்தவனோத்தூர்ச்
சீரவன்கழல்சேர்மினே. (கO)

குரும்பையாண்பனையின்குலையோத்தூர்
அரும்புகொன்றையடிகளைப்
பெரும்புகலியுண்ஞானசம்பந்தன்சொல்
விரும்புவார்வினைவீடே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவோத்தூர்த்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - உO.

சுவாமி தேவி திருநாமங்கள் - வேதநாதர், இளமுலைநாயகி.

திருஞானசம்பந்தப்பிள்ளையார், சிதம்பரமுதலிய தலங்களை வணங்கிக்கொண்டு, தொண்டைநாட்டை அடைந்து அங்கே திருவோத்தூரிற் சென்று சுவாமிதரிசனஞ்செய்துகொண்டு எழுந்தருளியிருக்குநாளிலே, அந்தத் தலத்திலுள்ள சிவனடியார் ஒருவர் பிள்ளையாரை வணங்கி நின்று, சிவபெருமானுக்கு அடியேன் ஆக்கும் பனைகளெல்லாம் மிக உயர்வாக வளர்ந்தும், ஆண்பனைகளாகி, காயாவாயின. அதுகண்ட சமணர்கள் நீர் ஆக்கும் ஆண்பனைகளெல்லாவற்றையும் காய்க்கப்பண்ணுதல் கூடுமோ என்று நகைசெய்து இகழ்கின்றனர் என்று விண்ணப்பஞ் செய்ய, பிள்ளையார் அதுகேட்டுப் பரிந்தருளி, எழுந்து விரைந்து திருக்கோயிலிற் சென்று, சுவாமியை வணங்கி, "பூத்தேர்ந்தாயன" என்னும் திருப்பதிகம் பாடி அதன் திருக்கடைக்காப்பிலே "குரும்பை யாண்பனை யின்குலை யோத்தூர்" என்று அருளிச்செய்தார். உடனே ஆண்பனைகளெல்லாம் குரும்பைகளையுடையனவாய்ப் பெண்பனைகளாயின.

* நின்றீரே என்றும் பாடம். † தேறலும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

சூ. திருவன்பார்த்தான்பனங்காட்டூர்.*

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

விடையின்மேல்வருவானைவேதத்தின்பொருளானை
அடையிலன்புடையானையாவர்க்குமறிவொண்ணா †
மடையில்வாளைகள்பாயும்வன்பார்த்தான்பனங்காட்டூர்ச்
சடையிற்கங்கைதரித்தானைச்சாராதார்சார்பென்னே. ‡ (க)

அறையும்பைங்கழலார்ப்பவரவாடவனலேந்திப்
பிறையுங்கங்கையுஞ்சூடிப்பெயர்ந்தாடும்பெருமானார்
பறையுஞ்சங்கொலியோவாப்படிறன்றன்பனங்காட்டூர்
உறையுமெங்கள்பிரானை ¶ யுணராதாருணர்வென்னே. (உ)

தண்ணார்மாமதிசூடித்தழல்போலுந்திருமேனிக்
கெண்ணார்நாண்மலர்கொண்டங்கிசைந்தேத்துமடியார்கள்
பண்ணார்பாடலறாதபடிறன்றன்பனங்காட்டூர்ப்
பெண்ணாணாயபிரானைப்பேசாதார்பேச்சென்னே. (ங)

நெற்றிக்கண்ணுடையானைநீறேறுந்திருமேனிக்
குற்றமில்குணத்தானைக்கோணாதார்மனத்தானைப்
பற்றிப்பாம்பரையார்த்தபடிறன்றன்பனங்காட்டூர்ப்
பெற்றொன்றேறும்பிரானைப்பேசாதார்பேச்சென்னே. (ச)

உரமென்னும் § பொருளானையுருகிலுள்ளுறைவானைச்
சிரமென்னுங் § கலனானைச்செங்கண்மால்விடையானை
வரமுன்ன § மருள்செய்வான்வன்பார்த்தான்பனங்காட்டூர்ப்
பரமனெங்கள்பிரானைப்பரவாதார்பரவென்னே. (ரு)

எயிலார்பொக்கமெரித்தவெண்டோண்முக்கணிறைவன்
வெயிலாய்க்காற்றெனவீசிமின்னாய்த்தீயெனநின்றான்
மயிலார்சோலைகள்சூழ்ந்தவன்பார்த்தான்பனங்காட்டூர்ப்
பயில்வானுக்கடிமைக்கட்பயிலாதார்பயில்வென்னே. (சு)

மெய்யன்வெண்பொடிபூசும் ० விகிர்தன்வேதமுதல்வன்
கையின்மான்மழுவேந்திக்காலன்காலமறுத்தான்
பைகொள்பாம்பரையார்த்தபடிறன்றன்பனங்காட்டூர்
ஐயனெங்கள்பிரானையறியாதாரறிவென்னே. (எ)

* திருப்பனங்காடு. † அறிவுண்ணா என்றும், அறியுண்ணா என்றும் பாடம். ‡ சார் வென்னே என்றும் பாடம். ¶ பிரானுரை என்றும் பாடம். §§§ உரமெனும், சிரமெனுங், வரமுன என்றும் பாடம். ० பொடிப்பூசி என்றும் பாடம்; பூசி - பெயர்.

Koviloor Digital Library

வஞ்சமற்றமனத்தாரைமறவாதபிறப்பிலியைப்
பஞ்சிச்சீறடியாளைப்* பாகம்வைத்துகந்தானை
மஞ்சுற்றமணிமாடவன்பார்த்தான்பனங்காட்டூர்
நெஞ்சத்தெங்கள்பிரானைநினையாதார்நினைவென்னே. (௮)

மழையானுந்திகழ்கின்றமலரோனென்றிருவர்தாம்
உழையாநின்றவர் †குள்கவுயர்வானத்துயர்வானைப்
பழையானைப்பனங்காட்டூர்பதியாகத்திகழ்கின்ற
குழைகாதற்கடிமைக்கட்குழையாதார்குழைவென்னே. (௯)

பாரூரும்பனங்காட்டூர்ப்பவளத்தின்படியானைச்
சீரூருந்திருவாரூர்ச்சிவன்பேர்சென்னியில்வைத்த
ஆரூரன்னடித்தொண்டன்னடியன்சொல்லடிநாய்சொல்
ஊரூரன்னுரைசெய்வாருயர்வானத்துயர்வாரே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

திருவன்பார்த்தான்பனங்காட்டூர்த்திருப்பதிகம் - ௧.

ஆ திருப்பதிகம் - ௨௧.

சுவாமி தேவி திருநாமங்கள் - பனங்காட்டீசர், அமிர்தவல்லி.

௧0. திருவல்லம்.‡

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்

எரித்தவன்முப்புரமெரியின்மூழ்கத்
தரித்தவன்கங்கையைத்தாழ்சடைமேல்
விரித்தவன்வேதங்கள்வேறுவேறு
தெரித்தவனுறைவிடந்திருவல்லமே. (௧)

தாயவனுலகுக்குத்தன்னொப்பிலாத்
தூயவன்றூமதிசூடியெல்லாம்
ஆயவனமரர்க்குமுனிவர்கட்கும்
சேயவனுறைவிடந்திருவல்லமே. (௨)

பார்த்தவன்காமனைப்பண்பழியப்
போர்த்தவன்போதகத்தின்னுரிவை
ஆர்த்தவனான்முகன்றலையைஅன்று
சேர்த்தவனுறைவிடந்திருவல்லமே. (௩)

* பஞ்சிற்சீறடியாளைப் என்றும் பாடம். † உழையாநின்றவர் மழையானுந் திகழ்கின்ற மலரோனென்றிருவர்தாம் உள்க உயர்வானத்துயர்வானை என்க. உழை - பக்கம்.
‡ இது திருவலம் என்று வழங்குகின்றது.

Koviloor Digital Library

கொய்தவம்மலரடிகூடுவார்தம்
மைதவழ்திருமகள்வணங்கவைத்துப்
பெய்தவன்பெருமழையுலகமுய்யச்
செய்தவனுறைவிடந்திருவல்லமே. (௪)

சார்ந்தவர்க்கின்பங்கடழைக்கும்வண்ணம்
நேர்ந்தவனேரிழையோடுங்கூடித்
தேர்ந்தவர்தேடுவார்தேடச்செய்தே
சேர்ந்தவனுறைவிடந்திருவல்லமே. (ரு)

பதைத்தெழுகாலனைப்பாதமொன்றால்
உதைத்தெழுமாமுனிக்குண்மைநின்று
விதிர்த்தெழு * தக்கன்றன்வேள்வியன்று
சிதைத்தவனுறைவிடந்திருவல்லமே. (சு)

இகழ்ந்தருவரையினைபெடுக்கலுற்றாங்
ககழ்ந்தவல்லரக்கனையடர்த்தபாதம்
நிகழ்ந்தவர்நேடுவார்நேடச்செய்தே
திகழ்ந்தவனுறைவிடந்திருவல்லமே. (அ)

பெரியவன்சிறியவர்சிந்தைசெய்ய
அரியவனருமறையங்கமானான்
கரியவனான்முகன்காணவொண்ணாத்
தெரியவன்வளநகர்திருவல்லமே. † (கூ)

அன்றியவமணர்கள்சாக்கியர்கள்
குன்றியவறவுரைகூறுவண்ணம்
வென்றவன்புலனைந்தும்விளங்கவெங்கும்
சென்றவனுறைவிடந்திருவல்லமே. (கo)

கற்றவர்திருவல்லங்கண்டுசென்று
நற்றமிழ்ஞானசம்பந்தன்சொன்ன
குற்றமில்செந்தமிழ்கூறவல்லார்
பற்றுவரீசன்பொற்பாதங்களே. ‡ (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவல்லத்திருப்பதிகம் - க.

ஆக திருப்பதிகம் - உஉ.

சுவாமி தேவி திருநாமங்கள் - வல்லநாதர், வல்லாம்பிகை.

* நின்றவ்—விதிர்த்தெழு என்றும், நின்ற—அதிர்த்தெழு என்றும், நின்றாங்—கதிர்த்தெழு என்றும்பாடம். † தெரியவனுறைவிடந்திருவல்லமே என்றும் பாடம். ‡ இத்திருப்பதிகத்தில் எ--வது செய்யுள் மறைந்துபோயிற்று.

Koviloor Digital Library

கக. திருமாற்பேறு.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

ஊறியார்தருநஞ்சினையுண்டுமை
நீறுசேர்திருமேனியர்
சேறுசேர்வயற்றென்றிருமாற்பேற்றின்
மாறிலாமணிகண்டரே. (க)

தொடையார்மாமலர்கொண்டிருபோதும்மை
அடைவாராமடிகள்ளென
மடையார்நீர்மல்குமன்னியமாற்பே
றுடையீரேயுமையுள்கியே. (உ)

பையாரும்மரவங்கொடுவாட்டிய
கையானென்றுவணங்குவர்
மையார்நஞ்சுண்டுமாற்பேற்றிருக்கின்ற
ஐயாநின்னடியார்களே. (ங)

சாலமாமலர்கொண்டுசரணென்று
மேலையார்கள்விரும்புவர்
மாலினார்வழிபாடுசெய்மாற்பேற்று
நீலமார்கண்டநின்னையே. (ச)

மாறிலாமணியேயென்றுவானவர்
ஏறவேமிகவேத்துவர்
கூறனேகுலவுந்திருமாற்பேற்றின்
நீறனேயென்றுநின்னையே. (ரு)

உரையாதாரில்லையொன்றுநின்றன்மையைப்
பரவாதாரில்லைநாள்களும்
திரையார்பாலியின்றென்கரைமாற்பேற்
றரையானேயருணல்கிடே. (சு)

அரசளிக்குமரக்கனவன்றனை
உரைகெடுத்தவனொல்கிட
வரமிகுத்தவெம்மாற்பேற்றடிகளைப்
பரவிடக்கெடும்பாவமே. (எ)

இருவர்தேவருந்தேடித்திரிந்தினி *
ஒருவராலறிவொண்ணிலன் †
மருவுநீள்கழன்மாற்பேற்றடிகளைப்
பரவுவார்வினைபாறுமே. ‡ (அ)

* திரிந்தநில் என்றும் பாடம். † லறிவுண்டிலன் என்றும், லறியுண்டிலன் என்றும் பாடம். ‡ பரவிடக்கெடும்பாவமே என்றும் பாடம்.

Koviloor Digital Library

தூசுபோர்த்துழல்வார்கையிற்றுற்* றுணும்
நீசர்தம்முரைகொள்ளெலும்†
தேசமல்கியதென்றிருமாற்பேற்றின்
ஈசனென்றெடுத்‡ தேத்துமே. (கO)

மன்னிமாலொடுசோமன்பணிசெயும்
மன்னுமாற்பேற்றடிகளை
மன்னுகாழியுண்ஞானசம்பந்தன்சொல்
பன்னவேவினைபாறுமே.¶ (கக)

திருச்சிற்றம்பலம்.

பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

குருந்தவன்குருகவன்கூர்மையவன்
பெருந்தகைபெண்ணவனாணுமவன்
கருந்தடமலர்க்கண்ணிகாதல்செய்யும்
மருந்தவன்வளநகர்மாற்பேறே. (க)

பாறணிவெண்டலைகையிலேந்தி
வேறணிபலிகொளும்வேட்கையனாய்
நீறணிந்துமையொருபாகம்வைத்த
மாறிலிவளநகர்மாற்பேறே. (உ)

கருவுடையாருலகங்கள்வேவச்
செருவிடையேறியுஞ்சென்றுநின்
றுருவுடை§ யாளுமையாளுந்தானும்
மருவியவளநகர்மாற்பேறே. (ங)

தலையவன்றலையணிமாலைபூண்டு
கொலைநவில்கூற்றினைக்கொன்றுகந்தான்
கலைநவின்றான்கயிலாயமென்னும்
மலையவன்வளநகர்மாற்பேறே. (ச)

துறையவன்றொழிலவன்றொல்லுயிர்க்கும்
பிறையணிசடைமுடிப்பெண்ணோர்பாகன்
கறையணிமிடற்றண்ணல்காலற்செற்ற
மறையவன்வளநகர்மாற்பேறே. (ரு)

பெண்ணினல்லாளையொர்பாகம்வைத்துக்
கண்ணினாற்காமனைக்காய்ந்தவன்றன்
விண்ணவர்தானவர்முனிவரொடு
மண்ணவர்வணங்குநன்மாற்பேறே. (சு)

* துற்று - உணவு. † கொள்ளலும் என்றும் பாடம். ‡ மாற்பேற்—றீசனென்றெடுத் என்றும் பாடம். ¶ இத்திருப்பதிகத்தில் எ—வது செய்யுள் மறைந்துபோயிற்று. § யேறி முன்சென்றுநின்று—உருவுடை என்றும், யேறியுஞ்சென்றுநின்று—உருவுடை என்றும் பாடம்.

Koviloor Digital Library

திதிலாமலையெடுத்தவ்வரக்கன் *
நிதியால்வேதகீதங்கள்பாட
ஆதியாகியவண்ணலெங்கள்
மாதிதன்வளநகர் † மாற்பேறே. (அ)

செய்யதண்டாமரைக்கண்ணனொடும் ‡
கொய்யணிநறுமலர்மேலயனும்
ஐயனன்சேவடியதனையுள்க
மையல்செய்வளநகர்மாற்பேறே. (கூ)

குளித்துணவமணர்குண்டாக்கரென்றும் ¶
களித்துநன்கழலடிகாணலுற்றார்
முளைத்தவெண்மதியினொடரவஞ்சென்னி
வளைத்தவன்வளநகர்மாற்பேறே. (கo)

அந்தமின்ஞானசம்பந்தனல்ல
செந்திசை § பாடல்செய்மாற்பேற்றைச்
சந்தமின்றமிழ்கள்கொண்டேத்தவல்லார்
எந்தைதன்கழலடியெய்துவரே. o (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

மாணிக்குயிர்பெறக்கூற்றையுதைத்தனமாவலிபால்
காணிக்கிரந்தவன்காண்டற்கரியனகண்டதொண்டர்
பேணிக்கிடந்துபரவப்படுவனபேர்த்துமஃதே
மாணிக்கமாவனமாற்பேறுடையான்மலரடியே. (க)

கருடத்தனிப்பாகன்காண்டற்கரியனகாதல்செய்யில்
குருடர்க்குமுன்னேகுடிகொண்டிருப்பனகோலமல்கு
செருடக்கடிமலர்ச்செல்விதன்செங்கமலக்காத்தால்
வருடச்சிவப்பனமாற்பேறுடையான்மலரடியே. ** (உ)

திருச்சிற்றம்பலம்.

* பெடுத்தலையரக்கன் என்றும் பாடம். † மாதிகன்வளநகர் என்றும் பாடம். ‡ கண்ணனொடு என்றும் பாடம். ¶ வமணர்கள்குண்டரென்றும் எனவும் பாடம். § செந்திசை இருபெயரொட்டு; செந்துவாகிய இசை; செந்து - ஓசை. ஓசை ஒலி இசை என்பன ஒருபொருட்சொற்கள். o இத்திருப்பதிகத்தில் எ-வது செய்யுள் மறைந்துபோயிற்று.
** இத்திருப்பதிகத்தில் ஏனையசெய்யுள்கள் மறைந்துபோயின.

Koviloor Digital Library

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பொருமாற்றின்படைவேண்டிநற்பூம்புனல்
வருமாற்றின்மலர்கொண்டுவழிபடும்
கருமாற்கின்னருள்செய்தவன்காண்டகு
திருமாற்பேறுதொழவினைதேயுமே. (க)

ஆலத்தார்நிழலில்லறநால்வர்க்குக்
கோலத்தாலுரைசெய்தவன்குற்றமில்
மாலுக்காரருள்செய்தவன்மாற்பேறு
ஏலத்தான்றொழுவார்க்கிடரில்லையே. (உ)

துணிவண்ணச்சுடராழிகொள்வானெண்ணி
அணிவண்ணத்தலர்கொண்டடியர்ச்சித்த
மணிவண்ணற்கருள்செய்தவன்மாற்பேறு
பணிவண்ணத்தவர்க்*கில்லையாம்பாவமே. (௩)

தீதவைசெய்துதீவினைவீழாதே
காதல்செய்துகருத்தினினின்றநன் †
மாதவர்பயின்மாற்பேறுகைதொழப்
போதுமின்வினையாயினபோகுமே. (௪)

வார்கொண்மென்முலைமங்கையொர்பங்கினன்
வார்கொணன்முரசம்மறையவ்வறை
வார்கொள்பைம்பொழின்மாற்பேறுகைதொழு
வார்கண்மன்னுவர்பொன்னுலகத்திலே. (௫)

பண்டைவல்வினைபற்றறுக்கும்வகை
உண்டுசொல்லுவன்கேண்மின்னொளிகிளர்
வண்டுசேர்பொழில்சூழ்திரு‡மாற்பேறு
கண்டுகைதொழத்தீருங்கவலையே. (௬)

மழுவலான்றிருநாமமகிழ்ந்துரைத்
தழுவலார்களுக்கன்புசெய்தின்பொடும்
வழுவிலாவருள்செய்தவன்மாற்பேறு ¶
தொழுவலார்தமக்கில்லைதுயரமே. (௭)

முன்னவன்னுலகுக்குமுழுமணிப்
பொன்னவன்றிகழ்முத்தொடுபோகமாம்
மன்னவன் § திருமாற்பேறுகைதொழும்
அன்னவரெமையாளுடையார்களே. (௮)

* வண்ணற்றவர்க் என்றும் பாடம். † நின்றவன் என்றும் பாடம். ‡ சூழ்தரு என்றும் பாடம். ¶ செய்யவன்மாற்பேறு என்றும் பாடம். § இறைவன் சத்தியுஞ் சிவமுமாய் உலகத்துக்கெல்லாம் போகத்தை உண்டாக்கலின், போகமாம் மன்னவன் என்றார்; இங்ஙனமே "போகமீன்றபுண்ணியன்" என்றார் பிறரும். "தரைமுதலுலகினிலுயிர் புணர்தகைமிக—விரைமலிகுழலுமையொடுவிரவதுசெய்து" என்னும் பிள்ளையார் திருவாக்கும் ஈண்டுச் சிந்திக்கற்பாலது.

Koviloor Digital Library

வேடனாய்விசயன்னொடுமெய்துவெம்
காடுநீடுகந்தாடியகண்ணுதல்
மாடநீடுயருந்திருமாற்பேறு
பாடுவார்பெறுவார்பரலோகமே. (௯)

கருத்தனாய்க்கயிலாயமலைதனைத்
தருக்கினாலெடுத்தானைத்தகரவே
வருத்தியாருள்செய்தவன்மாற்பேறு
அருத்தியாற்றொழுவார்க்கில்லையல்லலே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

ஏதுமொன்றுமறிவிலராயினும்
ஓதியஞ்செழுத்துமுணர்வார்கட்குப்
பேதமின்றியவரவருள்ளத்தே
மாதுந்தாமுமகிழ்வர்மாற்பேறரே. (௧)

அச்சமில்லைநெஞ்சேயரனாமங்கள்
நிச்சலுந்நினையாய்வினைபோயறக்
கச்சமாவிடமுண்டகண்டாவென
வைச்சமாநிதியாவர்மாற்பேறரே. (௨)

சாத்திரம்பலபேசுஞ்சழக்கர்காள்
கோத்திரமுங்குலமுங்கொண்டென்செய்வீர்
பாத்திரஞ்சிவமென்றுபணிதிரேல்
மாத்திரைக்குளருளு* மாற்பேறரே. (௩)

இருந்துசொல்லுவன்கேண்மின்களேழைகாள்
அருந்தவந்தருமஞ்செழுத்தோதினால்
பொருந்துநோய்பிணிபோகத்துரப்பதோர்
மருந்துமாகுவர்மன்னுமாற்பேறரே. (௪)

சாற்றிச் † சொல்லுவன்கேண்மின்றாணியீர்
ஏற்றின்மேல்வருவான்கழலேத்தினால்
கூற்றைநீக்கிக்குறைவறுத்தாள்வதோர்
மாற்றிலாச்செம்பொனாவர்மாற்பேறரே. (௫)

ஈட்டமாநிதிசாலவிழக்கினும்
வீட்டுங்காலன்விரையவழைக்கினும்
காட்டின்மாநடமாடுவாய்காவெனில்
வாட்டந்தீர்க்கவும்வல்லர்மாற்பேறரே. (௬)

* மாத்திரைக்கணருளும் என்றும் பாடம். † சாற்றல் - ஈண்டு (நாக்கடிப்பாக வாய்ப்பறை) அறைதல்; பலரறியக்கூறுதலுமாம்.

Koviloor Digital Library

ஐயனேயரனேயென்றாற்றினல்
உய்யலாமுலகத்தவர்பேணுவர்
செய்யபாதமிரண்டுநினையவே
வையமாளவும்வைப்பர்மாற்பேறரே. (௯)

உந்திச்சென்றுமலையையெடுத்தவன்
சந்துதோளொடுதாளிறவூன்றினன்
மந்திபாய்பொழில்சூழுமாற்பேறெனை
அந்தமில்லதோரின்பமணுகுமே. * (கO)

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

பாரானைப்பாரினதுபயனானானைப் †
படைப்பாகிப்பல்லுயிர்க்கும் ‡ பரிவோன்றன்னை
ஆராதவின்னமுதையடியார்தங்கட்
கனைத்துலகுமானானையமரர்கோனைக்
காருங்கண்டனைக்கயிலைவேந்தைக்
கருதுவார்மனத்தானைக்காலற்செற்ற
சீரானைச்செல்வனைத்திருமாற்பேற்றெஞ்
செம்பவளக்குன்றினைச்சென்றடைந்தேனானே. (க)

விளைக்கின்றநீராகிவித்துமாகி
விண்ணோடுமண்ணாகிவிளங்குசெம்பொன்
துளைக்கின்றதுளையாகிச்சோதியாகித்
தூண்டரியசுடராகித்துளக்கில்வான்மேல்
முளைக்கின்றகதிர்மதியுமரவுமொன்றி
முழங்கொலிநீர்க்கங்கையொடுமூவாதென்றும்
திளைக்கின்றசடையானைத்திருமாற்பேற்றெஞ்
செம்பவளக்குன்றினைச்சென்றடைந்தேனானே. (உ)

மலைமகடங்கோனவனைமாநீர்முத்தை
மாகதத்தைமாமணியைமல்குசெல்வக்
கலைநிலவுகையானைக்கம்பன்றன்னைக்
காண்பினியசெழுஞ்சுடரைக்கனகக்குன்றை
விலைபெரியவெண்ணீற்றுமேனியானை
மெய்யடியார்வேண்டுவதேவேண்டுவானைச் ¶
சிலைநிலவுகரத்தானைத்திருமாற்பேற்றெஞ்
செம்பவளக்குன்றினைச்சென்றடைந்தேனானே. (௩)

* இத்திருப்பதிகத்தில் அ, க இச்செய்யுள்கள் மறைந்துபோயின. † பாரின்பயனானைப் என்றும் பாடம். ‡ படைப்பானைப்பல்லுயிர்க்கும் என்றும் பாடம். ¶ வேண்டியதேவேண்டுவானைச் என்றும் பாடம்.

உற்றானையுடறனக்கோருயிரானானை
யோங்காரத்தொருவனையங்குமையோர்பாகம்
பெற்றானைப்பிஞ்ஞகனைப்பிறவாதானைப்
பெரியனவுமரியனவுமெல்லாமுன்னே
கற்றானைக்கற்பனவுந்தானேயாய
கச்சியேகம்பனைக்காலன்வீழச்
செற்றானைத்திகழொளியைத்திருமாற்பேற்றெஞ்
செம்பவளக்குன்றினைச்சென்றடைந்தேனானே. (௪)

நீறாகிநீறுமிழுநெருப்புமாகி
நினைவாகிநினைவினியமலையான்மங்கை *
கூறாகிக்கூற்றாகிக்கோளுமாகிக்
குணமாகிக்குறையாதவுவகைக்கண்ணீர் †
ஆறாதவானந்தத்தடியார்செய்த
வனாசாரம்பொறுத்தருளியவர்மேலென்றும்
சீறாதபெருமானைத்திருமாற்பேற்றெஞ்
செம்பவளக்குன்றினைச்சென்றடைந்தேனானே. (௫)

மருவினியமறைப்பொருளைமறைக்காட்டானை
மறப்பிலியைமதியேந்துசடையான்றன்னை
உருநிலவுமொண்சுடரையும்பரானை
யுரைப்பினியதவத்தானையுலகில்வித்தைக்
கருநிலவுகண்டனைக்காளத்தியைக்
கருதுவார்மனத்தானைக்கல்விதன்னைச்
செருநிலவுபடையானைத்திருமாற்பேற்றெஞ்
செம்பவளக்குன்றினைச்சென்றடைந்தேனானே. (௬)

பிறப்பானைப்பிறவாதபெருமையானைப்
பெரியானையரியானைப்பெண்ணாணாய
நிறத்தானைநின்மலனைநினையாதாரை
நினையானைநினைவோரைநினைவோன்றன்னை
அறத்தானையறவோனையையன்றன்னை
யண்ணறனைநண்ணரியவமரரேத்தும்
திறத்தானைத்திகழொளியைத்திருமாற்பேற்றெஞ்
செம்பவளக்குன்றினைச்சென்றடைந்தேனானே. (௭)

வானகத்தில்வளர்முகிலைமதியந்தன்னை
வணங்குவார்மனத்தானைவடிவார்பொன்னை
ஊனகத்திலுறுதுணையையுலவாதானை
யொற்றியூருத்தமனையூழிக்கன்றைக்

* மலையாண்மங்கை என்றும் பாடம்; இது மலையாளாகியமங்கையென இருபெயரொட்டு. † வுகவைக்கண்ணீர் என்றும் பாடம்; உகவை - தொழிற்பெயர்; உகத்தல்.

Koviloor Digital Library

கானகத்துக்கருங்களிற்றைக்காளத்தியைக்
கருதுவார்கருத்தானைக்கருவைமூலத்
தேனகத்திலின்சுவையைத்திருமாற்பேற்றெஞ்
செம்பவளக்குன்றினைச்சென்றடைந்தேனனே. (அ)

முற்றாதமுழுமுதலைமுளையைமொட்டை
முழுமலரின்மூர்த்தியைமுனியாதென்றும்
பற்றாகிப்பல்லுயிர்க்கும்பரிவோன்றன்னைப்
பராபரனைப்பரஞ்சுடரைப்பரிவோர்நெஞ்சில்
உற்றானையுயர்கருப்புச்சிலையோனீறா
யொள்ளழல்வாய்வேவவுருநோக்கத்தானைச் *
செற்றானைத்திரிபுரங்கடிருமாற்பேற்றெஞ்
செம்பவளக்குன்றினைச்சென்றடைந்தேனனே. (கூ)

விரித்தானைநான்மறையோடங்கமாறும்
வெற்பெடுத்தவிராவணனைவிரலாலூன்றி
நெரித்தானைநின்மலனையம்மான்றன்னை
நிலாநிலவுசெஞ்சடை † மேனிறைநீர்க்கங்கை
தரித்தானைச்சங்கரனைச்சம்புதன்னைத்
தரியலர்கள்புரமூன்றுந்தழல்வாய்வேவச் ‡
சிரித்தானைத்திகழொளியைத்திருமாற்பேற்றெஞ்
செம்பவளக்குன்றினைச்சென்றடைந்தேனனே. (கo)

திருச்சிற்றம்பலம்.

திருமாற்பேற்றுத்திருப்பதிகம் - கூ.

ஆ திருப்பதிகம் - உஅ.

சுவாமி தேவி திருநாமங்கள் — மால்வணங்குமீசர், கருணைநாயகி.

கஉ. திருவூறல். ¶

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

மாறிலவுணரரணம்மவைமாயவோர்வெங்கணையா லன்று
நீறெழவெய்தவெங்கணிமலனிடம்வினவில்
தேறலிரும்பொழிலுந்திகழ்செங்கயல்பாய்வயலுஞ் சூழ்ந்த
ஊறலமர்ந்தபிரானொலியார்கழலுள்குதுமே. (க)

* யொள்ளழல்வாய்வேவவொருநோக்கத்தானைச் என்றும், யொள்ளழலாய் வேவவொருநோக்கத்தானைச் என்றும் பாடம். † நிலவுலவுசெஞ்சடை என்றும் பாடம். ‡ தழலாய்வேவச் என்றும் பாடம். ¶ திருவூறல்—தக்கோலம்.

Koviloor Digital Library

மத்தமதக்கரியைமலேயான்மகளஞ்சவன்று கையால்
மெத்தவுரித்தவெங்கள்விமலன்விரும்புமிடம்
தொத்தலரும்பொழில்சூழ்வயல்சேர்ந்தொளிர்நீலநாளுந் நயனம்
ஒத்தலருங்கழனித்திருவூறலையுள்குதுமே. (உ)

ஏனமருப்பினொடுமெழிலாமையும்பூண்டழகார் நன்றும் *
கானமர்மான்மறிக்கைக்கடவுள்கருதுமிடம்
வானமதிதடவும்வளர்சோலைகள்சூழ்ந்தழகார் நம்மை
ஊனமறுத்தபிரான்திருவூறலையுள்குதுமே. (ங)

நெய்யணிமூவிலைவேலிறைவெண்மழுவும்மனலு மன்று
கையணிகொள்கையினான்கடவுளிடம்வினவில்
மையணிகண்மடவார்பலர்வந்திறைஞ்சமன்னி நம்மை
உய்யும்வகைபுரிந்தான்திருவூறலையுள்குதுமே. (ச)

எண்டிசையோர்மகிழவெழின்மாலையும்போனகமும் பண்டு
சண்டிதொழவளித்தானவன்றாழு† மிடம்வினவில்
கொண்டல்கடங்குபொழிற்குளிர்பொய்கைகள்சூழ்ந்து நஞ்சை
உண்டபிரானமருந்திருவூறலையுள்குதுமே. (ரு)

கறுத்தமனத்தினொடுங்கடுங்காலன்வந்தெய்துதலுங் கலங்கி
மறுக்குறுமாணிக்கருளமகிழ்ந்தானிடம்வினவில்
செறுத்தெழுவாளரக்கன்சிரந்தோளுமெய்யுந்நெரிய வன்று
ஒறுத்தருள்செய்தபிரான்திருவூறலையுள்குதுமே. (அ)

நீரின்மிசைத்துயின்றோனிறைநான்முகனும்மறியா தன்று
தேரும்வகைநிமிர்ந்தானவன்சேருமிடம்வினவில்
பாரின்மிசையடியார்பலர்வந்திறைஞ்சமகிழ்ந் தாகம்
ஊருமரவசைத்தான்திருவூறலையுள்குதுமே. (கூ)

பொன்னியல்சீவரத்தார்புளித்தட்டையர்மோட்டமணர் குண்டர்
என்றுமிவர்க்கருளாவீசனிடம்வினவில்
தென்னெனவண்டினங்கள்செறியார்பொழில்சூழ்ந்தழகார் தன்னை
உன்னவினைகெடுப்பான்திருவூறலையுள்குதுமே. (கO)

கோடலிரும்புறவிற்கொடிமாடக்கொச்சையர்மன் மெச்ச
ஓடுபுனல்சடைமேற்கரந்தான்திருவூறல்
நாடலரும்புகழான்மிகுஞானசம்பந்தன்சொன்ன நல்ல
பாடல்கள்பத்தும்வல்லார்பரலோகத்திருப்பாரே. ‡ (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவூறற்றிருப்பதிகம்-க.

ஆ திருப்பதிகம் - உக.

சுவாமி தேவி திருநாமங்கள் - உமாபதி, உமையம்மை.

* நன்றும் கருதுமிடம் என்க; நன்றும் - பெரிதும்; அது "நன்றுபெரிதாகும்" என்னுந் தொல்காப்பியச்சூத்திரத்தாலறிக. † தாழ்தல் - தங்குதல், விரும்புதல். ‡ இத்திருப்பதிகத்தில் சா, எ இச்செய்யுட்கள்மறைந்துபோயின.

Koviloor Digital Library

கங. திருவிலம்பையங்கோட்டூர். *

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

மலையினார்பருப்பதந்துருத்திமாற்பேறு
மாசிலாச்சீர்மறைக்காடுநெய்த்தானம்
நிலையினானெனதுரைதனதுரையாக
நீறணிந்தேறுகந்தேறியநிமலன்
கலையினார்மடப்பிணைதுணையொடுந்துயிலக்
கானலம்பெடைபுல்கிக்கணமயிலாலும்
இலையினார்பைம்பொழிலிலம்பையங்கோட்டூ
ரிருக்கையாப்பேணியென்னெழில்கொள்வதியல்பே. (க)

திருமலர்க்கொன்றையானின்றியூர்மேயான்
றேவர்கடலைமகன்றிருக்கழிப்பாலை
நிருமலனெனதுரைதனதுரையாக்
நீறணிந்தேறுகந்தேறியநிமலன்
கருமலர்க்கமழ்சுனைநீண்மலர்க்குவளை
கதிர்முலையிளையவர்மதிமுகத்துலவும்
இருமலர்த் † தண்பொய்கையிலம்பையங்கோட்டூ
ரிருக்கையாப்பேணியென்னெழில்கொள்வதியல்பே. (உ)

பாலனும்விருத்தனும்பசுபதிதானும்
பண்டுவெங்கூற்றுதைத்தடியவர்க்கருளும்
காலனுமெனதுரைதனதுரையாகக்
கனலெரியங்கையிலேந்தியகடவுள்
நீலமாமலர்ச்சுனைவண்டுபண்செய்ய
நீர்மலர்க்குவளைகடாதுவிண்டோங்கும் ‡
ஏலநாறும்பொழிலிலம்பையங்கோட்டூ
ரிருக்கையாப்பேணியென்னெழில்கொள்வதியல்பே. (ங)

உளங்கொள்வாருச்சியார்கச்சியேகம்ப
னொற்றியூருறையுமண்ணாமலையண்ணல்
விளம்புவானெனதுரைதனதுரையாக
வெள்ளநீர்விரிசடைத்தாங்கியவிமலன்

* இருவிலம்பயங்கோட்டூர் என்றும் பிரதிபேதமுண்டு; செய்யுள்களுமவ்வாறே.
† இருமலர் - செந்தாமரைப்பூ வெண்டாமரைப்பூ. ‡ விண்டேங்கும் என்றும், விண்டெங்கும் என்றும் பாடம்.

குளம்புறக்கலைதுளமலைகளுஞ்சிலம்பக்
கொழுங்கொடியெழுந்தெங்குங்கூவிளங்கொள்ள
இளம்பிறைதவழ்பொழிலிலம்பையங்கோட்டூர்
இருக்கையாப்பேணியென்னெழில்கொள்வதியல்பே. (௪)

தேனுமாயமுதுமாய்த்தெய்வமுந்தானாய்த்
தீயொடுநீருடன்வாயுவாந்தெரியில்
வானுமாமெனதுரைதனதுரையாக
வரியராவரைக்கசைத்துழிதருமைந்தன்
கானமான்வெருவுறக்கருவிரலூகங்
கடுவனோடுகளுமூர்கற்கடுஞ்சாரல்
ஏனமானுழிதருமிலம்பையங்கோட்டூர்
இருக்கையாப்பேணியென்னெழில்கொள்வதியல்பே. (௫)

மனமுலாமடியவர்க்*கருள்புரிகின்ற
வகையலாற்பலிதிரிந்துண்பிலான்மற்றோர்
தனமிலானெனதுரைதனதுரையாகத்
தாழ்சடையிளமதிதாங்கியதலைவன்
புனமெலாமருவிகளிருவிசேர்முத்தம்
பொன்னொடுமணிகொழித்தீண்டிவந்தெங்கும்
இனமெலாமடைகரையிலம்பையங்கோட்டூர்
இருக்கையாப்பேணியென்னெழில்கொள்வதியல்பே. † (௬)

நீருளான்றீயுளானந்தரத்துள்ளா
னினைப்பவர்மனத்துளானித்தமாவேத்தும்
மூருளானெனதுரைதனதுரையாக
வொற்றைவெள்ளேறுகந்தேறியவொருவன்
பாருளார்பாடலோடாடலறாத
பண்முரன்றஞ்சிறைவண்டினம்பாடும்
ஏருளார்பைம்பொழிலிலம்பையங்கோட்டூர்
இருக்கையாப்பேணியென்னெழில்கொள்வதியல்பே. (௭)

வேருலாமாழ்கடல்வருதிரையிலங்கை
வேந்தனதடக்கைகளடர்த்தவனுலகில்
ஆருலாமெனதுரைதனதுரையாக
வாகமோரரவணிந்துழிதருமண்ணல்
வாருலாநல்லனமாக்களுஞ்சார
வாரணமுழிதருமல்லலங்கானல் ‡
ஏருலாம்பொழிலணியிலம்பையங்கோட்டூர் ¶
இருக்கையாப்பேணியென்னெழில்கொள்வதியல்பே. (௮)

* மனமுலாவடியவர்க் என்றும் பாடம். † ஒருபிரதியில் இது ௭-வதாகவும், ௭-வது ௬-வதாகவும் காணப்படுகின்றன. ‡ கானல் ஈண்டு மலைப்புறச்சோலை; மல்லலங்கானல் என்றும் பாடம். ¶ ஏருலாம்பைம்பொழிலிலம்பையங்கோட்டூர் என்றும் பாடம்.

Koviloor Digital Library

கிளர்மழைதாங்கினானன்முகமுடையோன்
கீழடிமேன்முடிதேர்ந்தளக்கில்லா
உளமழை* யெனதுரைதனதுரையாக
வொள்ளழலங்கையிலேந்தியவொருவன்
வளமழையெனக்கழைவளர்துளிசோர †
மாசுணமுழிதருமணியணிமாலை
இளமழைதவழ்பொழிலிலம்பையங்கோட்டூ
ரிருக்கையாப்பேணியென்னெழில்கொள்வதியல்பே. (கூ)

உரிஞ்சனகூறைகளுடம்பினராகி
யுழிதருசமணருஞ் ‡ சாக்கியப்பேய்கள்
பெருஞ்செல்வனெனதுரைதனதுரையாகப்
பெய்பலிக்கென்றுழல்பெரியவர்பெருமான்
கருஞ்சுனைமுல்லைநன்பொன்னடைவேங்கை
களிமுகவண்டொடுதேனினமூதும்
இருஞ்சுனைமல்கியவிலம்பையங்கோட்டூ
ரிருக்கையாப்பேணியென்னெழில்கொள்வதியல்பே. (கO)

கந்தனைமலிகனைகடலொலியோதங்
கானலங்கழிவளர்கழுமலமென்னும்
நந்தியாருறைபதிநான்மறைநாவ
னற்றமிழ்க்கின்றுணைஞானசம்பந்தன்
எந்தையார்வளநகரிலம்பையங்கோட்டூ
ரிசையொடுகூடியபத்தும்வல்லார்போய்
வெந்துயர்கெடுகிடவிண்ணவரோடும்
வீடுபெற்றிம்மையின் ¶ வீடெளிதாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவிலம்பையங்கோட்டூர்த்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - ௩O.

சுவாமி தேவி திருநாமங்கள் - சந்திரசேகரர், கோடேந்துமுலை.

* உளமலை என்பது உளமழையென எதுகைநோக்கி நின்றது. † கழை முத்துக்களைச் சொரிய; துளி உவமையாகுபெயராய் முத்தை உணர்த்திற்று; "வாரை கான்ற நித்தி லமென வாலிகண் மயங்க" என்பதனாலும் நீர்த்துளி முத்துக் குவமையாதல் இனிது விளங்கும்; வளர்தலை இடைநிலைத்தீபமாகக்கொண்டு கழைக்குந் துளிக்கும் அடையாக்குக; கழை - மூங்கில். வளர்தல் - துளிக்குப் பருத்தல். ‡ யுழிதருமமணருஞ் என்றும் பாடம். ¶ வீடுபேறின்மையின் என்றும் பாடம்.

Koviloor Digital Library

கச. திருவிற்கோலம்.*

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

உருவினருமையொடுமொன்றிநின்றதோர்
திருவினன்வளர்சடைத்திங்கள்கங்கையான்
வெருவிவானவர்தொழவெகுண்டுநோக்கிய
செருவினனுறைவிடந்திருவிற்கோலமே.† (க)

சிற்றிடையுமையொருபங்கனங்கையில்
உற்றதோரெரியினனெருசரத்தினல்
வெற்றிகொளவுணர்கள்புரங்கள்வெந்தறச்
செற்றவனுறைவிடந்திருவிற்கோலமே. (உ)

ஐயனல்லதிசய‡னயன்விண்ணோர்தொழும்
மையணிகண்டனர்வண்ணவண்ணம்வான்¶
பையரவல்குலாள்பாகமாகவும்§
செய்பவனுறைவிடந்திருவிற்கோலமே. (ங)

விதைத்தவன்முனிவருக்கறமுன்காலனை
உதைத்தவனுயிரிழந்துருண்டுவீழ்தரப்
புதைத்தவனெடுநகர்ப்புரங்கண்மூன்றையும்
சிதைத்தவனுறைவிடந்திருவிற்கோலமே. (ச)

முந்தினன்மூவருண்முதல்வனுயினன்
கொந்தலாமலர்ப்பொழிற்கூகo மேவினன்
அந்திவான்பிறையினனடியர்மேல்வினை
சிந்துவானுறைவிடந்திருவிற்கோலமே. (ரு)

தொகுத்தவனருமறையங்கமாகமம்
வகுத்தவன்வளர்பொழிற்கூகமேவினன்
மிகுத்தவன்மிகுத்தவர்புரங்கள்வெந்தறச்
செகுத்தவனுறைவிடந்திருவிற்கோலமே. (சு)

* திருவிற்கோலம்—கூவம். † ஊறைதருந்திருவிற்கோலமே என்றும் பாடம்; இப்பாடத்தை இத்திருப்பதிமுழுதுங்கொள்க. திருவிற்கோலத்தில் உறைதரும் என முற்றுக்குக; உறைதருதல் உறைதல்; ஒருசொல்விழுக்காடு. ‡ இத்தலமூர்த்தியின் திருமேனியில் அதிகமழைபெய்கிறதாயிருந்தால் வெண்ணிறம் படர்தலும் யுத்தமுண்டாகிறதாயிருந்தால் செந்நிறம்படர்தலுமுண்மையின் ஐயனல்லதிசயன் என்றருளிச்செய்தார். ¶ வண்ணம்வண்ணவான் என்றும், வண்ணம்வண்ணர்வான் என்றும் பாடம். § மாகமும் என்றும் பாடம். o கொந்தலர்மலர்ப்பொழிற் கூகம் என்றும் பாடம்; கூகம் இக்காலத்துக் கூவமென வழங்கப்படுகின்றது.

Koviloor Digital Library

விரித்தவனருமறைவிரிசடைவெள்ளம்
தரித்தவன்றரியலர்புரங்களாசற
எரித்தவனிலங்கையர்கோனிடர்படச்
சிரித்தவனுறைவிடந்திருவிற்கோலமே. (எ)

திரிதருபுரமெரிசெய்தசேவகன்
வரியரவொடுமதிசடையில்வைத்தவன்
அரியொடுபிரமனதாற்றலானுருத்
தெரியலனுறைவிடந்திருவிற்கோலமே. (சூ)

சீர்மையில்சமணொடுசீவரக்கையர்
நீர்மையினுரைகள்கொள்ளாதநேசர்க்குப்
பார்மலிபெருஞ்செல்வம்பரிந்துநல்கிடும்
சீர்மையினனிடந்திருவிற்கோலமே. (கO)

கோடல்வெண்பிறையனைக்கூடமேவிய
சேடனசெழுமதிற்றிருவிற்கோலத்தை
நாடவல்லதமிழ்* ஞானசம்பந்தன
பாடல்வல்லார்களுக்கில்லைபாவமே. † (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவிற்கோலத்திருப்பதிகம் - க.

ஆ_ திருப்பதிகம் - ஙக.

சுவாமி தேவி திருநாமங்கள் - திரிபுராந்தகர், திரிபுராந்தகி.

கரு. திருவாலங்காடு. ‡

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

துஞ்சவருவாருந்தொழுவிப்பாரும்வழுவிப்போய்
நெஞ்சம்புகுந்தென்னைநினைவிப்பாருமுனைநட்பாய்
வஞ்சப்படுத்தொருத்திவாணாள்கொள்ளும்வகைகேட்
டஞ்சும்பழையனூராலங்காட்டெம்மடிகளே. (க)

கேடும்பிறவியுமாக்கினாருங்கேடிலா
வீடுமாநெறிவிளம்பினரெம்விகிர்தனார்
காடுஞ்சுடலையுங்கைக்கொண்டெல்லிக்கணப்பேயோ ¶
டாடும்பழையனூராலங்காட்டெம்மடிகளே. (உ)

* நாடவல்லார்தமிழ் என்றும், நாடவல்லஃதமிழ் என்றும் பாடம். † இத்திருப்பதிகத்தில் அ—வது செய்யுள் மறைந்துபோயிற்று. ‡ பழையனூராலங்காடு என்பதுமிதுவே; பழையனூர் - திருவாலங்காட்டுக்குமிகச்சமீபத்திலுள்ளது. ¶ எல்லி - இரவு; டல்லிற்கணப்பேயோ என்றும் பாடம்.

Koviloor Digital Library

கந்தங்கமழ்கொன்றைக்கண்ணிசூடிகனலாடி
வெந்தபொடிநீற்றைவிளங்கப்பூசும்விகிர்தனார்
கொந்தண்பொழிற்சோலையரவிற்றோன்றிக்கோடல்பூத்
தந்தண்பழையனூராலங்காட்டெம்மடிகளே. (௩)

பாலமதிசென்னிபடரச்சூடிப்பழியோராக்
காலனுயிர்செற்றகாலனாயகருத்தனார்
கோலம்பொழிற்சோலைப்பெடையோடாடிமடமஞ்ஞை
ஆலும்பழையனூராலங்காட்டெம்மடிகளே. (௪)

ஈர்க்கும்புனல்சூடியிளவெண்டிங்கண்முதிரவே
பார்க்குமரவம்பூண்டாடிவேடம்பயின்றாரும்
கார்க்கொள்கொடிமுல்லைகுருந்தமேறிக்கருந்தேன்மொய்த்
தார்க்கும்பழையனூராலங்காட்டெம்மடிகளே. (௫)

பறையுஞ்சிறுகுழலும்யாழும்பூதம்பயிற்றவே
மறையும்பலபாடிமயானத்துறையுமைந்தனார்
பிறையும்பெரும்புனல்சேர்சடையினாரும்பேடைவண்
டறையும்பழையனூராலங்காட்டெம்மடிகளே. (௬)

நுணங்குமறைபாடியாடிவேடம்பயின்றாரும்
இணங்குமலைமகளோடிருகூறொன்றாயிசைந்தாரும்
வணங்குஞ்சிறுத்தொண்டர்வைகலேத்தும்வாழ்த்துங்கேட்
டணங்கும்பழையனூராலங்காட்டெம்மடிகளே. (௭)

கணையும்வரிசிலையுமெரியுங்கூடிக்கவர்ந்துண்ண
இணையிலெயின்மூன்றுமெரித்திட்டாரெம்மிறைவனார்
பிணையுஞ்சிறுமறியுங்கலையுமெல்லாங்கங்குல்சேர்ந்
தணையும்பழையனூராலங்காட்டெம்மடிகளே. (௮)

கவிழமலைதளரக்கடகக்கை *யாலெடுத்தான்றோள்
பவழநுனைவிரலாற்பையவூன்றிப்பரிந்தாரும்
தவழுங்கொடிமுல்லைபுறவஞ்சேரநறவம்பூத்
தவிழும்பழையனூராலங்காட்டெம்மடிகளே. (௯)

பகலுமிரவுஞ்சேர்பண்பினாருநண்போரா
திகலுமிருவர்க்குமெரியாய்த்தோன்றிநிமிர்ந்தாரும்
புகலும் † வழிபாடுவல்லார்க்கென்றுந்தீயபோய்
அகலும்பழையனூராலங்காட்டெம்மடிகளே. (க0)

போழம்பலபேசிப்போதுசாற்றித்திரிவாரும்
வேழம்வருமளவும்வெயிலேதுற்றித்திரிவாரும்
கேழல்வினைபோகக்கேட்பிப்பாருங்கேடிலா
ஆழ்வர்பழையனூராலங்காட்டெம்மடிகளே. (கக)

* மலைதாழக்கடகக்கை என்றும் பாடம்; தாழ் அக் கடகக்கை எனப் பிரித்து முழந்தாளளவுந் தாழ்ந்த அந்த உத்தமவிலக்கணத்தையுடைய கடகக்கை எனப் பொருள் கொள்க. † பகழும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

சாந்தங்கமழ்மறுகிற்சண்பைஞானசம்பந்தன்
ஆந்தண்பழையனூராலங்காட்டெம்மடிகளை
வேந்தனருளாலேவிரித்தபாடலிவைவல்லார்
சேர்ந்தவிடமெல்லாந்தீர்த்தமாகச்சேர்வாரே.* (கஉ)

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தப்பிள்ளையார், பழையனூர்த்திருவாலங்காட்டைச் சமீபித்து அது காரைக்காலம்மையார் திருத்தலையாலே நடந்த திருப்பதியாதலால், அதை மிதிக்க அஞ்சி, அதற்குச் சமீபத்திலுள்ள ஒரூரிலே அன்றிரவு பள்ளிகொண்டருளினர். திருவாலங்காட்டில் எழுந்தருளியிருக்குங் கடவுள், அர்த்தயாமத்திலே அவருக்குச் சொப்பனத்திலே தோன்றி, "நம்மைப் பாடுதற்கு மறந்தனையோ" என்று அருளிச்செய்ய; உடனே பிள்ளையார் விழித்தெழுந்து, திருவருளைத் துதித்து, "துஞ்சவருவாரும்" என்னுந் திருப்பதிகம் பாடியருளினர்.

திருநாவுக்கரசுநாயனர்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

வெள்ளநீர்ச்சடையர்போலும்விரும்புவார்க்கெளியர்போலும்
உள்ளுளேயுருகிநின்றங்குகப்பவர்க்கன்பர்போலும்
கள்ளமேவினைகளெல்லாங்கரிசறுத்திடுவர்போலும்
அள்ளலம்பழனைமேய† வாலங்காட்டடிகளாரே. (க)

செந்தழலுருவர்போலுஞ்சினவிடையுடையர்போலும்
வெந்தவெண்ணீறுகொண்டுமெய்க்கணிந்திடுவர்போலும்
மந்தமாம்பொழிற்பழனைமல்கியவள்ளல்போலும்‡
அந்தமிலடிகள்போலுமாலங்காட்டடிகளாரே. (உ)

கண்ணினாற்காமவேளைக்கனலெழவிழிப்பர்போலும்
எண்ணிலார்புரங்கண்மூன்றுமெரியுணச்சிரிப்பர்போலும்
பண்ணினார்முழவமோவாப்பைம்பொழிற்பழனைமேய
அண்ணலாரெம்மையாளுமாலங்காட்டடிகளாரே. (ங)

காறிடுவிடத்தையுண்டகண்டரெண்டோளர்போலும்
தூறிடுசுடலைதன்னிற்சுண்ணவெண்ணீற்றர்போலும்
கூறிடுமுருவர்போலுங்குளிர்பொழிற்பழனைமேய
ஆறிடுசடையர்போலுமாலங்காட்டடிகளாரே. (ச)

* சேர்ந்த இடமெல்லாம் தீர்த்தம் ஆகச் சேர்வார் - அடைந்த இடமெல்லாம் பரிசுத்தமாக இருப்பார்கள். † அள்ளலார்பழனைமேய என்றும், அள்ளலார்பழனைவேலி என்றும் பாடம். ‡ மல்கியசெல்வர்போலும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

பார்த்தனோடமர்பொருதுபத்திமைகாண்பர்போலும்
கூர்த்தவாயம்புகோத்துக்குணங்களையறிவர்போலும்
பேர்த்துமோராவநாழியம்பொடுங்கொடுப்பர்போலும்
தீர்த்தமாம்பழனைமேயதிருவாலங்காடனாரே. (ரு)

வீட்டினார்சுடுவெண்ணீறுமெய்க்கணிந்திடுவர்போலும்
காட்டினின்றுடல்பேணுங்கருத்தினையுடையர்போலும்
பாட்டினார்முழவமோவாப்பைம்பொழிற்பழனைமேயார்
ஆட்டினாரரவந்தன்னையாலங்காட்டடிகளாரே. (சு)

தாளுடைச்செங்கமலத்தடங்கொள்சேவடியர்போலும்
காளுடைக்காலன்வீழவுதைசெய்தநம்பர்போலும்
கோளுடைப்பிறவிதீர்ப்பார்குளிர்பொழிற்பழனைமேய
ஆளுடையண்ணல்போலுமாலங்காட்டடிகளாரே. (எ)

கூடினாருமைதனோடேகுறிப்புடைவேடங்கொண்டு
சூடினார்கங்கையாளைச்சுவறிடுசடையர்போலும்
பாடினார்சாமவேதம்பைம்பொழிற்பழனைமேயார்
ஆடினார்காளிகாணவாலங்காட்டடிகளாரே. (அ)

வெற்றரைச்சமணரோடுவிலையுடைக்கூறைபோர்க்கும்
ஒற்றரைச்சொற்கள்கொள்ளார்குணங்களையுகப்பர்போலும்
பெற்றமேயுகந்தங்கேறும்பெருமையையுடையர்போலும்
அற்றங்களறிவர்போலுமாலங்காட்டடிகளாரே. (கூ)

மத்தனாய்மலையெடுத்தவரக்கனைக்கரத்தோடோல்க
ஒத்தினார்திருவிரலாலூன்றியிட்டருள்வர்போலும்
பத்தர்தம்* பாவந்தீர்க்கும்பைம்பொழிற்பழனைமேய
அத்தனார்நம்மையாள்வாராலங்காட்டடிகளாரே. (கo)

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

ஒன்றாவுலகனைத்துமானார்தாமே
ஊழிதோறூழியுயர்ந்தார்தாமே
நின்றாகிஎங்குநிமிர்ந்தார்தாமே
நீர்வளிதீயாகாசமானார்தாமே
கொன்றாடுங்கூற்றையுதைத்தார்தாமே
கோலப்பழனையுடையார்தாமே
சென்றாடுதீர்த்தங்களானார்தாமே
திருவாலங்காடுறையுஞ்செல்வர்தாமே. (க)

* பத்தர்தாம் என்றும் பாடம்.

Koviloor Digital Library

மலைமகளைப்பாகமமர்ந்தார்தாமே
வானோர்வணங்கப்படுவார்தாமே
சலமகளைச்செஞ்சடைமேல்வைத்தார்தாமே
சரணென்றிருப்பார்கட்கன்பர்தாமே
பலபலவும்வேடங்களானார்தாமே
பழனைபதியாவுடையார்தாமே
சிலைமலையாமூவெயிலுமட்டார்தாமே
திருவாலங்காடுறையுஞ்செல்வர்தாமே. (உ)

ஆவுற்றவைந்துமுகந்தார்தாமே*
யளவில்பெருமையுடையார்தாமே
பூவுற்றநாற்றமாய்நின்றார்தாமே
புனிதப்பொருளாகிநின்றார்தாமே
பாவுற்றபாடலுகப்பார்தாமே
பழனைபதியாவுடையார்தாமே
தேவுற்றடிபரவநின்றார்தாமே
திருவாலங்காடுறையுஞ்செல்வர்தாமே. (ங)

நாறுபூங்கொன்றைமுடியார்தாமே
நான்மறையோடாறங்கஞ்சொன்னார்தாமே
மாறிலாமேனியுடையார்தாமே
மாமதியஞ்சடைமேல்†வைத்தார்தாமே
பாறினார்வெண்டலையிலுண்டார்தாமே
பழனைபதியாவுடையார்தாமே
தேறினார்சித்தத்திருந்தார்தாமே
திருவாலங்காடுறையுஞ்செல்வர்தாமே. (ச)

அல்லும்பகலுமாய்நின்றார்தாமே
யந்தியுஞ்சந்தியுமானார்தாமே
சொல்லும்பொருளெலாமானார்தாமே
தோத்திரமுஞ்சாத்திரமுமானார்தாமே
பல்லுரைக்கும்பாவெலாமானார்தாமே
பழனைபதியாவுடையார்தாமே
செல்லுநெறிகாட்டவல்லார்தாமே
திருவாலங்காடுறையுஞ்செல்வர்தாமே. (ரு)

தொண்டாய்ப்பணிவார்க்கணியார்தாமே
தூநீறணியுஞ்சுவண்டர்தாமே
தண்டாமரையானுமாலுந்தேடத்
தழலுருவாயோங்கிநிமிர்ந்தார்தாமே
பண்டாணிசைபாடநின்றார்தாமே
பழனைபதியாவுடையார்தாமே
திண்டோள்களெட்டுமுடையார்தாமே
திருவாலங்காடுறையுஞ்செல்வர்தாமே. (சு)

* வைந்துமமர்ந்தார்தாமே என்றும் பாடம். † மாமதியஞ்செஞ்சடைமேல் என்றும் பாடம்.

Koviloor Digital Library

மையாருங்கண்டமிடற்றார்தாமே
 மயானத்திலாடன்மகிழ்ந்தார்தாமே
ஐயாறுமாரூருமானைக்காவு
 மம்பலமுங்கோயிலாக்கொண்டார்தாமே
பையாடரவமசைத்தார்தாமே
 பழனபதியாவுடையார்தாமே
செய்யாள்வழிபடநின்றார்தாமே
 திருவாலங்காடுறையுஞ்செல்வர்தாமே. (எ)

விண்முழுதுமண்முழுதுமானார்தாமே
 மிக்கோர்களேத்துங்குணத்தார்தாமே
கண்விழியாற்காமனையுங்காய்ந்தார்தாமே
 காலங்களூழிகடந்தார்தாமே
பண்ணியலும்பாடலுகப்பார்தாமே
 பழனபதியாவுடையார்தாமே
திண்மழுவாளேந்துகரத்தார்தாமே
 திருவாலங்காடுறையுஞ்செல்வர்தாமே. (அ)

காரார்கடனஞ்சையுண்டார்தாமே
 கயிலைமலையையுடையார்தாமே
ஊராவேகம்ப* முகந்தார்தாமே
 பொற்றியூர்பற்றியிருந்தார்தாமே
பாரார்புகழப்படுவார்தாமே
 பழனபதியாவுடையார்தாமே
தீராதவல்வினைநோய்தீர்ப்பார்தாமே
 திருவாலங்காடுறையுஞ்செல்வர்தாமே. (கூ)

மாலைப்பிறைசென்னிவைத்தார்தாமே
 வண்கயிலைமாமலைவந்தியாத
நிலக்கடல்சூழிலங்கைக்கோனை
 நெரியவிரலாலடர்த்தார்தாமே
பாலொத்தமேனிநிறத்தார்தாமே
 பழனபதியாவுடையார்தாமே
சீலத்தாரேத்துந்திறத்தார்தாமே (கo)
 திருவாலங்காடுறையுஞ்செல்வர்தாமே.

திருச்சிற்றம்பலம்.

* ஊராவேகம்ப என்றும்பாடம்.

Koviloor Digital Library

சுந்தரமூர்த்தி நாயனார்.

பண் - பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

முத்தாமுத்திதரவல்லமுகிழ்மென்முலையாளுமைபங்கா
சித்தாசித்தித்திறங்காட்டுஞ்சிவனேதேவர்சிங்கமே
பத்தாபத்தர்பலர்போற்றும்பரமாபழையனூர்மேய
அத்தாவாலங்காடாவுன்னடியார்க்கடியேனாவேனே. (க)

பொய்யேசெய்துபுறம்புறமேதிரிவேன்றன்னைப்போகாமே
மெய்யேவந்திங்கெனையாண்டமெய்யாமெய்யர்மெய்ப்பொருளே
பையாடரவமரைக்கசைத்தபரமாபழையனூர்மேய
ஐயாவாலங்காடாவுன்னடியார்க்கடியேனாவேனே. (உ)

தூண்டாவிளக்கினற்சோதீதொழுவார்தங்கடுயர்தீர்ப்பாய்
பூண்டாயெலும்பைப்புரமூன்றும்பொடியாச்செற்றபுண்ணியனே
பாண்டாழ்* வினைகளவைதீர்க்கும்பரமாபழையனூர்மேய
ஆண்டா* வாலங்காடாவுன்னடியார்க்கடியேனாவேனே. (ங)

மறிநேரொண்கண்மடநல்லார்வலையிற்பட்டுமதிமயங்கி
அறிவேயழிந்தேனையாநான்மையார்கண்டமுடையானே
பறியாவினைகளவைதீர்க்கும்பரமாபழையனூர்மேய
அறிவேயாலங்காடாவுன்னடியார்க்கடியேனாவேனே. (ச)

வேலங்காடுதடங்கண்ணார்வலையுட்பட்டுன்னெறிமறந்து
மாலங்காடிமறந்தொழிந்தேன்மணியேமுத்தேமாகதமே
பாலங்காடீநெய்யாடீபடர்புன்சடையாய்பழையனூர்
ஆலங்காடாவுன்னுடையவடியார்க்கடியேனாவேனே. (ரு)

எண்ணார்தங்களெயிலெய்தவெந்தாயெந்தைபெருமானே
கண்ணாயுலகங்காக்கின்றகருத்தாதிருத்தலாகாதாய்
பண்ணாரிசைகளதுகொண்டுபலருமேத்தும்பழையனூர்
அண்ணாவாலங்காடாவுன்னடியார்க்கடியேனாவேனே. (சு)

வண்டார்குழலியுமைநங்கைபங்காகங்கைமணவாளா
விண்டார்புரங்களெரிசெய்தவிடையாய்வேதநெறியானே
பண்டாழ்வினைகள்பலதீர்க்கும்பரமாபழையனூர்மேய
அண்டாவாலங்காடாவுன்னடியார்க்கடியேனாவேனே. (எ)

பேழ்வாயரவினணையானும்பெரியமலர்மேலுறைவானும்
தாழாதுன்றன்சரண்பணியத்தழலாய்நின்றதத்துவனே
பாழாம்வினைகளவைதீர்க்கும்பரமாபழையனூர்தன்னை
ஆள்வாயாலங்காடாவுன்னடியார்க்கடியேனாவேனே. (அ)

* * பண்டாழ், அண்டா என்பன விகாரவகையால் பாண்டாழ் ஆண்டா எனப்பட்டன.

Koviloor Digital Library

எம்மானெந்தைமுத்தப்ப*னேமேழ்படிகாலெமையாண்ட
பெம்மானிமப்புறங்காட்டிற்பேயோடாடல்புரிவானே
பன்மாமலர்களவைகொண்டுபலருமேத்தும்பழையனூர்
அம்மாவாலங்காடாவுன்னடியார்க்கடியேனாவேனே. (கூ)

பத்தர்சித்தர்பலரேத்தும்பாமன்பழையனூர்மேய
அத்தனாலங்காடன்றனடிமைத்திறமேயன்பாகிச்
சித்தர்சித்தம்வைத்தபுகழ்ச்சிறுவனூரனொண்டமிழ்கள்
பத்தும்பாடியாடுவார்பரமனடியேபணிவாரே. (கo)

திருச்சிற்றம்பலம்.

திருவாலங்காட்டுத்திருப்பதிகம் - ச.

ஆ திருப்பதிகம் - ௩ரு.

சுவாமி தேவி திருநாமங்கள் - ஊர்த்ததாண்டவர், வண்டார்குழலியம்மை.

சுந்தரமூர்த்திநாயனர், காரைக்காலம்மையார் திருத்தலையாலே பிரதக்ஷிணஞ்செய்த பழையனூர்த்திருவாலங்காட்டை மிதிக்க அஞ்சி அதன் சமீபத்திலே நின்று அதனை வணங்கி, "முத்தாமுத்திதரவல்ல" என்னுந் திருப்பதிகம் பாடியருளினர்.

கசா. திருப்பாசூர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

சிந்தையிடையார்தலையின்மிசையார்செஞ்சொல்லார்
வந்துமாலைவைகும்போழ்தென்மனத்துள்ளார்
மைந்தர்மணாளரென்னமகிழ்வாரூர்போலும்
பைந்தண்மாதவிசோலைசூழ்ந்தபாசூரே. (க)

பேரும்பொழுதும்பெயரும்பொழுதும்பெம்மானென்
றாருந்தனையுமடியாரேத்தவருள்செய்வார்
ஊருமரவமுடையார்வாழுமூர்போலும்
பாரின்மிசையார்பாடலோவாப்பாசூரே. (உ)

கையாற்றொழுதுதலைசாய்த்துள்ளங்கசிவார்கள்
மெய்யார்குறையுந்துயருந்தீர்க்கும்விமலனார்†
நெய்யாடுதலஞ்சுடையார்‡நிலாவுமூர்போலும்
பைவாய்நாகங்கோடலீனும்பாசூரே. (௩)

* இதனை முத்தப்பன் என்று பாடங்கொண்டோர் 'எம்மானெந்தை மூத்தப்பன்' என முறைப்பெயர்களடுக்கிக் கூறப்பட்டிருத்தலை நோக்கிலர்போலும். † விகிர்தனர் என்றும் பாடம். ‡ லைந்துடையார் என்றும் பாடம்.

Koviloor Digital Library

பொங்காடரவும்புனலுஞ்சடைமேற்பொலிவெய்தக்
கொங்கார்கொன்றைசூடியென்னுள்ளங்குளிர்வித்தார்
தங்காதலியுந்தாமும்வர்முமூர்போலும்
பைங்கான்முல்லைபல்லரும்பீனும்பாசூரே. (௪)

ஆடற்புரியுமைவாயரவொன்றரைச்சாத்தும்
சேடச்செல்வர்சிந்தையுளென்றும்பிரியாதார்
வாடற்றலையிற்பலிதேர்கையாரூர்போலும்
பாடற்குயில்கள்பயில்பூஞ்சோலைப்பாசூரே. (௫)

கானின்றதிரக்கனல்வாய்நாகங்கச்சாகத்
தோலொன்றுடையார்விடையார்தம்மைத்தொழுவார்கள்
மால்கொண்டோடமையறீர்ப்பாரூர்போலும்
பால்வெண்மதிதோய்மாடஞ்சூழ்ந்தபாசூரே. (௬)

கண்ணினயலேகண்ணொன்றுடையார்கழலுன்னி
எண்ணுந்தனையுமடியாரேத்தவருள்செய்வார்
உண்ணின்றுருகவுகவை * தருவாரூர்போலும்
பண்ணின்மொழியார்பாடலோவாப்பாசூரே. (௭)

தேசுகுன்றாத்தெண்ணீரிலங்கைக்கோமானைக்
கூசவடர்த்துக்கூர்வாள்கொடுப்பார்தம்மையே
பேசிப்பிதற்றப்பெருமைதருவாரூர்போலும்
பாசித்தடமும்வயலுஞ்சூழ்ந்தபாசூரே. (௮)

நகுவாய்மலர்மேலயனுநாகத்தணையானும்
புகுவாயறியார்புறநின்றோரார்போற்றோவார்
செகுவாயுகுபற்றலைசேர்கையாரூர்போலும்
பகுவாய்நாரையாரல்வாரும்பாசூரே. (௯)

தூயவெயினின்றுழல்வார்துவர்தோயாடையார்
நாவில்வெய்யசொல்லித்திரிவார்நயமில்லார்
காவல் † வேவக்கணையொன்றெய்தாரூர்போலும்
பாவைக்குரவம்பயில்பூஞ்சோலைப்பாசூரே. (கο)

ஞானமுணர்வான்காழிஞானசம்பந்தன்
தேனும்வண்டுமின்னிசைபாடுந்திருப்பாசூர்க்
கானம்முறைவார்கழல்சேர்பாடலிவைவல்லார்
ஊனமிலராயும்பர்வானத்துறைவாரே. ‡ (கக)

திருச்சிற்றம்பலம்.

* வுவகை என்றும் பாடம். † காவல் - மும்மதில். ‡ வானத்திருப்பாரே என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

முந்திமூவெயிலெய்தமுதல்வனார்
சிந்திப்பார்வினைதீர்த்திடுஞ்செல்வனார்
அந்திக்கோன்*றனக்கேயருள்செய்தவர்
பந்திச்செஞ்சடைப்பாசூரடிகளே. (க)

மடந்தைபாகமகிழ்ந்தமணாளனார்
தொடர்ந்தவல்வினைபோக்கிடுஞ்சோதியார்
கடந்தகாலனைக்கால்கொடுபாய்ந்தவர்
படர்ந்தநாகத்தர்பாசூரடிகளே. (உ)

நாறுகொன்றையுநாகமுந்திங்களும்
ஆறுஞ்செஞ்சடைவைத்தவழகனார்†
காறுகண்டத்தர்கையதோர்சூலத்தர்
பாறினோட்டினர்பாசூரடிகளே. (ங)

வெற்றியூருறைவேதியராவர்நல்
ஒற்றியேறுகந்தேறுமொருவனார்
நெற்றிக்கண்ணினர்நீளரவந்தனைப்
பற்றியாட்டுவர்பாசூரடிகளே.‡ (ச)

மட்டவிழ்ந்தமலர்நெடுங்கண்ணிபால்
இட்டவேட்கையராகியிருப்பவர்
துட்டரேலறியேனிவர்சூழ்ச்சிமை
பட்டநெற்றியர்பாசூரடிகளே. (ரு)

பல்லிலோடுகையேந்திப்பகலெலாம்
எல்லிநின்றிடுபெய்பலியேற்பவர்
சொல்லிப்போய்ப்புகுமூரறியேன்சொலீர்
பல்குநீற்றினர்பாசூரடிகளே. (சா)

கட்டிவிட்டசடையர்கபாலியர்
எட்டிநோக்கிவந்தில்புகுந்தவ்வவர்
இட்டமாவறியேனிவர்செய்வன
பட்டநெற்றியர்பாசூரடிகளே. (எ)

வேதமோதிவந்தில்புகுந்தாரவர்
காதில்வெண்குழைவைத்தகபாலியார்
நீதிபொன்றறியார்நிறைகொண்டனர்
பாதிவெண்பிறைப்பாசூரடிகளே. (அ)

* அந்திக்கோன்--சந்திரன். † வைத்தமுல்வனார் என்றும், வைத்தவமுதனார் என்றும் பாடம். ‡ சமணர்கள், கரிகாற் சோழனுக்குப் பகைவனாகிய ஓர் குறுநிலமன்னனுக்குச் சார்பாகக் குடத்திலடைத்து அச்சோழனுக்கு அனுப்பிய பெரும்பாம்பை, சிவபெருமான் சோழனுக்குஉதவியாகத்திருப்பாசூரில் எடுத்து ஆட்டியருளினமையின், 'நீளரவந்தனைப்பற்றியாட்டுவர்பாசூரடிகளே' என்றருளிச்செய்தார். இத்தலத்திருப்பதிகங்களுள் பின்னர் இவ்வாறு வருவனவுமக்கருத்துப்பற்றி அருளிச்செய்யப்பட்டன.

Koviloor Digital Library

சாம்பல்பூசுவர்தாழ்சடைகட்டுவர்
ஓம்பன்மூதெரு* தேறுமொருவனர்
தேம்பல்வெண்மதிசூடுவர்தீயதோர்
பாம்புமாட்டுவர்பாசூரடிகளே. (கூ)

மாலினோடுமறையவன்றானுமாய்
மேலுங்கீழுமளப்பரிதாயவர்
ஆலினீழலறம்பகர்ந்தார்மிகப்
பால்வெண்ணீற்றினர்பாசூரடிகளே. (கO)

திரிபுமூவெயில்செங்கணையொன்றினால்
எரியவெய்தனரேனுமிலங்கைக்கோன்
நெரியவூன்றியிட்டார்விரலொன்றினால்
பரியர்நுண்ணியர்பாசூரடிகளே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

விண்ணாகிநிலனாகிவிசும்புமாகி
வேலைசூழ்ஞாலத்தார்விரும்புகின்ற
எண்ணாகியெழுத்தாகியியல்புமாகி
யேழுலகுந்தொழுதேத்திக்காணநின்ற
கண்ணாகிமணியாகிக்காட்சியாகிக்
காதலித்தங்கடியார்கள்பரவநின்ற
பண்ணாகியின்னமுதாம்பாசூர்மேய
பரஞ்சுடரைக்கண்டடியேனுய்ந்தவாறே. (க)

வேதமோர்நான்காயாறங்கமாகி
விரிக்கின்றபொருட்கெல்லாம்† வித்துமாகிக்
கூதலாய்ப்பொழிகின்றமாரியாகிக்
குவலயங்கண்முழுதுமாய்க்கொண்டலாகிக்
காதலால்வானவர்கள்போற்றியென்று‡
கடிமலர்களவைதூவியேத்தநின்ற
பாதியோர்மாதினனைப்பாசூர்மேய
பரஞ்சுடரைக்கண்டடியேனுய்ந்தவாறே. (உ)

தடவரைகளேழுமாய்க்காற்றாய்த்தீயாய்த்
தண்விசும்பாய்த்தண்விசும்பினுச்சியாகிக்
கடல்வலயஞ்சூழ்ந்ததோர்ஞாலமாகிக்
காண்கின்றகதிரவனுமதியுமாகிக்

* ஓம்பன்மூத்தெருது என்றும் பாடம்; மூத்த எருது மூத்தெருதெனப்பெயரெச்சத்தகரம் தொக்கது. † விரிகின்றபொருட்கெல்லாம் என்றும் பாடம். ‡ போற்றியென்றும் எனவும் பாடம்; என்றும் - எந்நாளும்.

Koviloor Digital Library

குடமுழவச்சதிவழியே*யனல்கையேந்திக்
கூத்தாடவல்லகுழகனாகிப்
படவரவொன்றதுவாட்டிப்பாசூர்மேய
பரஞ்சுடரைக்கண்டடியேனுய்ந்தவாறே. (௩)

நீராருஞ்செஞ்சடைமேலரவங்கொன்றை
நிறைமதியமுடன்சூடிநீதியாலே
சீராருமறையோதியுலகமுய்யச்
செழுங்கடலைக்கடைந்தகடனஞ்சமுண்ட
காராருங்கண்டனைக்கச்சிமேய
கண்ணுதலைக்கடலொற்றிகருதினானைப்
பாரோரும்விண்ணோரும்பரசும்பாசூர்ப்
பரஞ்சுடரைக்கண்டடியேனுய்ந்தவாறே. (௪)

வேடனாய்விசயன்றன்வியப்பைக்காண்பான்
விற்பிடித்துக்கொம்புடையவேனத்தின்பின்
கூடினாருமையவளுங்கோலங்கொள்ளக்
கொலைப்பகழியுடன்கோத்துக்கோரப்பூசல்
ஆடினார்பெருங்கூத்துக்காளிகாண
வருமறையோடாறங்கமாய்ந்துகொண்டு
பாடினார்நால்வேதம்பாசூர்மேய
பரஞ்சுடரைக்கண்டடியேனுய்ந்தவாறே. (௫)

புத்தியினாற்சிலந்தியுந்தன்வாயினூலாற்
பொதுப்பந்தரது†விழைத்துச்சருகான்மேய்ந்த
சித்தியினாலரசாண்டுசிறப்புச்செய்யச்
சிவகணத்துப்புகப்பெய்தார்திறலான்மிக்க
வித்தகத்தால்வெள்ளானைவிள்ளாவன்பு
விரவியவாகண்டதற்குவீடுகாட்டிப்
பத்தர்களுக்கின்னமுதாம்பாசூர்மேய
பரஞ்சுடரைக்கண்டடியேனுய்ந்தவாறே. (௬)

இணையொருவர்தாமல்லாலியாருமில்லா
ரிடைமருதோடேகம்பத்தென்றுநீங்கார்
அணைவரியரியாவர்க்குமாதிதேவ
ரருமந்தநன்மையெல்லா‡மடியார்க்கீவர்
தனன்முழுதும்பொடியாடுஞ்செக்கர்மேனித்
தத்துவனைச்சாந்தகிலினளறுதோய்ந்த
பணைமுலையாள்பாகனையெம்பாசூர்மேய
பரஞ்சுடரைக்கண்டடியேனுய்ந்தவாறே. (௭)

அண்டவர்கள்கடல்கடையவதனுட்டோன்றி
யதிர்ந்தெழுந்த¶வாலாலம்வேலைஞாலம்
எண்டிசையுஞ்சுடுகின்றவாற்றைக்கண்டு
மிமைப்பளவிலுண்டிருண்டகண்டர்தொண்டர்

* குடமுழவச்சரிவழியே என்றும் பாடம்; சரிவழி - ஒருபொருட்பன்மொழி, சரி - வழி. † பந்தலது என்றும் பாடம். ‡ ரும்பெருந்தன்மையெல்லாம் என்றும் பாடம். ¶ யதிர்த்தெழுந்த என்றும் பாடம்.

Koviloor Digital Library

வண்டுபடுமதுமலர்கடுவிநின்று
வானவர்கடானவர்கள்வணங்கியேத்தும்
பண்டரங்கவேடனையெம்பாசூர்மேய
பரஞ்சுடரைக்கண்டடியேனுய்ந்தவாறே. (அ)

ஞாலத்தையுண்டதிருமாலுமற்றை
நான்முகனுமறியாதநெறியான்கையில்
சூலத்தாலந்தகனைச்சுருளக்கோத்துத்
தொல்லுலகிற்பல்லுயிரைக்கொல்லுங்கூற்றைக்
காலத்தா* லுதைசெய்துகாதல்செய்த
வந்தணனைக்கைக்கொண்டசெவ்வான்வண்ணர்
பாலொத்தவெண்ணீற்றர்பாசூர்மேய
பரஞ்சுடரைக்கண்டடியேனுய்ந்தவாறே. (௯)

வேந்தனெடுமுடியுடையவரக்கர்கோமான்
மெல்லியலாளுமைவெருவவிரைந்திட்டோடிச்
சாந்தமெனநீறணிந்தான்கயிலைவெற்பைத்
தடக்கைகளாலெடுத்திடலுந்தாளாலூன்றி
ஏந்துதிரடிண்டோளுந்தலைகள்பத்து
மிறுத்தவன்றனிசைகேட்டுவிரக்கங்கொண்ட
பாந்தளணிசடைமுடியெம்பாசூர்மேய
பரஞ்சுடரைக்கண்டடியேனுய்ந்தவாறே. (கO)

திருச்சிற்றம்பலம்.

திருப்பாசூர்த்திருப்பதிகம் - ௩.

ஆ திருப்பதிகம் - ௩அ.

சுவாமி தேவி திருநாமங்கள் - பாசூர்நாதர், பசுபதிநாயகி.

கஎ. திருவெண்பாக்கம்.†

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

பிழையுளனபொறுத்திடுவரென்றடியேன்பிழைத்தக்கால்
பழியதனைப்பாராதேபடலமென்கண்மறைப்பித்தாய்
குழைவிரவுவடிகாதாகோயிலுளாயேயென்ன
உழையுடையானுள்ளிருந்துவுளோம்போகீரென்றானே. (க)

* காலத்தால் - காலால்; அத்துச்சாரியை; காலதனால் என்பது காலத்தால் என நின்றதெனினுமாம். † இது திருவுளம்பூர் என்றும், திருவுளம்பூதூர் என்றும் வழங்கப் படுகின்றது; சுந்தரமூர்த்திநாயனார் இத்தலத்திருப்பதிகத்தில் "உளோம்போகீரென்றானே" என்றருளிச்செய்தமையால் 'உளோம் போகீர்' என்பது உளம்பூர் உளம்பூதூர் எனமருவித் திருவென்னும் அடைமொழிசேர்த்து திருவுளம்பூர் திருவுளம்பூதூர் என வழங்கப்படுகின்றதுபோலும்.

Koviloor Digital Library

இடையறியேன்றலையறியேனெம்பெருமான்சரணமென்பேன்
அடையுடையனம்மடியா*னென்றவற்றைப்பாராதே
விடையுடையான்விடநாகன்†வெண்ணீற்றன்புலியின்றோல்
உடையுடையானெனையுடையானுளோம்போகீரென்றானே. (௨)

செய்வினையொன்றறியாதேன்றிருவடியேசரணென்று
பொய்யடியேன்பிழைத்திடினும்‡பொறுத்திடநீவேண்டாவோ
பையரவாவிங்கிருந்தாயோவென்னப்பரிந்தென்னை
உய்யவருள்செய்யவல்லானுளோம்போகீரென்றானே. (௩)

கம்பமருங்¶கரியுரியன்கறைமிடற்றன்காபாலி
செம்பவளத்திருவுருவன்சேயிழையோடுடனாகி
நம்பியிங்கேயிருந்தீரேயென்றுநான்கேட்டலுமே
உம்பர்தனித்துணையெனக்குவுளோம்போகீரென்றானே. (௪)

பொன்னிலங்குநறுங்கொன்றைபுரிசடைமேற்பொலிந்திலங்க
மின்னிலங்குநுண்ணிடையாள்பாகமாவெருதேறி
துன்னியிருபாலடியார்தொழுதேத்தவடியேனும்
உன்னமதாய்க்§கேட்டலுமேயுளோம்போகீரென்றானே. (௫)

கண்ணுதலாற்காமனையுங்காய்ந்ததிறற்கங்கைமலர்
தெண்ணிலவுசெஞ்சடைமேற்றிமலர்ந்தகொன்றையினான்
கண்மணியைமறைப்பித்தாயிங்கிருந்தாயோவென்ன
ஒண்ணுதலிபெருமானாருளோம்போகீரென்றானே. (௬)

பார்நிலவுமறையோரும்பத்தர்களும்பணிசெய்யத்
தார்நிலவுநறுங்கொன்றைச்சடையனார்தாங்கரிய
கார்நிலவுமணிமிடற்றீரிங்கிருந்தீரேயென்ன
ஊரரவமரைக்கசைத்தானுளோம்போகீரென்றானே. (௭)

வாரிடங்கொள்வனமுலையாடன்னோடுமயானத்துப்
பாரிடங்கள்பலசூழப்பயின்றாடும்பரமேட்டி
காரிடங்கொள்கண்டத்தன்கருதுமிடந்திருவொற்றி
ஊரிடங்கொண்டிருந்தபிரானுளோம்போகீரென்றானே. (௮)

பொன்னவிருங்கொன்றையினாய்போய்மகிழ்க்கீழிருவென்று
சொன்னவெனைக்காணாமேசூளுறவுமகிழ்க்கீழே
என்னவல்லபெருமானேயிங்கிருந்தாயோவென்ன
ஒன்னலரைக்கண்டாற்போலுளோம்போகீரென்றானே. (௯)

மான்றிகழுஞ்சங்கிலியைத்தந்துவருபயன்களெல்லாம்
தோன்றவருள்செய்தளித்தாயென்றுரைக்கவுலகமெலாம்
ஈன்றவனேவெண்கோயிலிருந்தாயோவென்ன
ஊன்றுவதோர்கோலருளியுளோம்போகீரென்றானே. (௧௦)

* அடைவுடையாம்மடியான் என்றும் பாடம். † விடநாதன் என்றும் பாடம்; விடத்தையுடையதலைவர் என்க. ‡ பொய்யடியேன்செய்திடினும் என்றும் பாடம். ¶ கம்பமருவும் என்பது கம்பமரும் என்றாயது. § உன்னதமாய்க் என்றும் பாடம்.

Koviloor Digital Library

ஏராரும்பொழினிலவுவெண்பாக்கமிடங்கொண்ட
காராருமிடற்றானைக்காதலித்திட்டன்பினொடும் *
சீராருந்திருவாரூர்ச்சிவன்பேர்சென்னியில்வைத்த
ஆரூரன்றமிழ்வல்லார்க்கடையாவல்வினைதானே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவெண்பாக்கத்திருப்பதிகம் - க.

ஆ. திருப்பதிகம் - ௩க.

சுவாமி தேவி திருநாமங்கள் - வெண்பாக்கநாதர், கனிவாய்மொழி.

சுந்தரமூர்த்திநாயனர், திருவெண்பாக்கத்தை அடைந்து, சிவபெருமானை வணங்கி, "திருக்கோயிலுள்ளீரே" என்று விண்ணப்பஞ் செய்ய; சிவபெருமான் அவருக்கு ஊன்றுகோல் கொடுத்து "உள்ளோம் போகீர்" என்று சொல்லியருளினர். பின்பு நாயனர் "பிழையுளனபொறுத்திடுவர்" என்னுந் திருப்பதிகம் பாடியருளினர்.

கஅ. திருக்கள்ளில். †

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

முள்ளின்மேன்முதுகூகைமுரலுஞ்சோலை
வெள்ளின்மேல்விடுகூறைக்கொடிவிளைந்த
கள்ளின்மேயவண்ணல்கழல்களுளும்
உள்ளுமேலுயர்வெய்தலொருதலையே. (க)

ஆடலான்பாடலானரவங்கள்பூண்டான்
ஓடலாற்கலனில்லானுறைபதியால்
காடலாற்கருதாதகள்ளின்மேயான்
பாடெலாம்‡பெரியார்கள்பரசுவாரே. (உ)

எண்ணார்மும்மதிலெய்தவிமையாமுக்கண்
பண்ணார்நான்மறைபாடும்பரமயோகி
கண்ணார்நீறணிமார்பன்கள்ளின்மேயான்
பெண்ணாணும்பெருமானெம்பிஞ்ஞகனே. (௩)

பிறைபெற்றசடையண்ணல்பெடைவண்டாலும்
நறைபெற்றவிரிகொன்றைத்தார்நயந்த
கறைபெற்றமிடற்றண்ணல்கள்ளின்மேயான்
நிறைபெற்றவடியார்கணெஞ்சுளானே.¶ (௪)

* திட்டன்போடும் என்றும் பாடம். † இதனை இக்காலத்து திருக்கள்ளம் என்று வழங்குப. ‡ பாடலாம் என்றும் பாடம். ¶ வடியார்தநெஞ்சுளானே என்றும் பாடம்.

Koviloor Digital Library

விரையாலுமலராலும்விழுமைகுன்று
உரையாலுமெதிர்கொள்ளவூராரம்மாக்
கரையார்பொன்புனல்வேலிக்கள்ளின்மேயான்
அரையார்வெண்கோவணத்தவண்ணலுனே.* (௫)

நலனுயபலிகொள்கைநம்பானல்ல
வலனுயமழுவாளும்வேலும்வல்லான்
கலனுயதலையோட்டான்கள்ளின்மேயான்
மலனுயதீர்த்தெய்துமாதவத்தோர்க்கே. (௬)

பொடியார்மெய்பூசினும்புறவினறவம்
குடியாவூர்திரியினுங்கூப்பிடினும்
கடியார்பூம்பொழிற்சோலைக்கள்ளின்மேயான்
அடியார்பண்பிகழ்வார்களாதர்களே. (௭)

திருநீலமலரொண்கண்டேவிபாகம்
புரிநூலுந்திருநீறும்புல்குமார்பில்
கருநீலமலர்விம்முகள்ளிலென்றும்
பெருநீலமிடற்றண்ணல்பேணுவதே. (௮)

வரியாயமலராலும்வையந்தன்னை
உரிதாயவளந்தானுமுள்ளுதற்கங்
கரியானுமரிதாய†கள்ளின்மேயான்
பெரியானென்றறிவார்கள்பேசுவாரே. (௯)

ஆச்சியப்பேய்களோடமணர்குண்டர்
பேச்சிவைநெறியல்லபேணுமின்கள்
மாச்செய்தவளவயன்மல்குகள்ளில்
தீச்செய்தசடையண்ணறிருந்தடியே. (௧0)

திகைநான்கும்புகழ்காழிச்செல்வமல்கு
பகல்போலும்பேரொளியான்பந்தனல்ல
முகைமேவுமுதிர்சடையான்கள்ளிலேத்தப்
புகழோடும்பேரின்பம்புகுதுமன்றே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருக்கள்ளித்திருப்பதிகம் - ௧.

ஆ திருப்பதிகம் - ௪0.

சுவாமி தேவி திருநாமங்கள் - சிவானந்தர், ஆனந்தவல்லி.

* கோவணத்தண்ணலுனே என்றும் பாடம். † மறியாத என்றும் பாடம்.

Koviloor Digital Library

கக௯. திருக்காளத்தி.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர்.

பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

சந்தமாரகிலொடுசாதிதேக்கம்மாம்
உந்துமாமுகலியின்கரையினிலுமையொடும்
மந்தமார்பொழில்வளர்மல்குவண்காளத்தி
எந்தையாரிணையடியென்மனத்துள்ளவே. (க)

ஆலமாமரவமோடமைந்தசீர்ச்சந்தனம்
சாலமாபீலியுஞ்சண்பகமுந்தியே
காலமார்முகலிவந்தணைதருகாளத்தி
நீலமார்கண்டனைநினையுமாநினைவதே. (உ)

கோங்கமேகுரவமேகொன்றையம்பாதிரி
மூங்கில்வந்தணைதருமுகலியின்கரையினில்
ஆங்கமர்காளத்தியடிகளையடிதொழ
வீங்குவெந்துயர்கெடும்வீடெளிதாகுமே. (௩)

கரும்புதேன்கட்டிபுங்கதலியின்கனிகளும்
அரும்புநீர்முகலியின்கரையினிலணிமதி *
ஒருங்குவார்சடையினன்காளத்தியொருவனை
விரும்புவாரவர்கடாம்விண்ணுலகாள்வரே. (௪)

வரைதருமகிலொடுமாமுத்தமுந்தியே
திரைதருமுகலியின்கரையினிற்றேமலர்
விரைதருசடைமுடிக்காளத்திவிண்ணவன்
நிரைதருகழலிணைநித்தலுநினைமினே. (௫)

முத்துமாமணிகளுமுழுமலர்த்திரள்களும்
எத்து†மாமுகலியின்கரையினிலெழில்பெறக்
கத்திடவரக்கனைக்கால்விரலூன்றிய
அத்தன்றன்காளத்தியணைவதுகருமமே. (௬)

மண்ணுமாவேங்கையும்மருதுகள்பீழ்ந்துந்தி
நண்ணுமாமுகலியின்கரையினிநன்மைசேர்
வண்ணமாமலரவன்‡மாலவன்காண்கிலா
அண்ணலார்காளத்தியாங்கணைந்துய்ம்மினே. (௭)

* லணிமணி என்றும் பாடம். † எற்று எதுகைநோக்கி எத்து எனநின்றது. ‡ மலராயன் என்றும் பாடம்.

Koviloor Digital Library

விங்கியவுடலினர்விரிதருதுவருடைப்
பாங்கிலார்சொலைவிடும்பானடிபணியுமின்
ஒங்குவன்காளத்தியுள்ளமோடுணர்தர
வாங்கிடும்வினைகளைவானவர்க்கொருவனே. (கO)

அட்டமாசித்திகளணைதருகாளத்தி
வட்டவார்சடையனைவயலணிகாழியான்
சிட்டநான்மறைவலஞானசம்பந்தன்சொல்
இட்டமாப்பாடுவார்க்கில்லையாம்பாவமே.* (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவிராகம். பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

வானவர்கடானவர்கள்வாதைபடவந்ததொருமாகடல்†விடம்
தானமுதுசெய்தருள்புரிந்தசிவன்மேவுமலைதன்னைவினவில்
ஏனமினமானினொடு‡கிள்ளைதினைகொள்ளவெழிலார்கவணினால்
கானவர்தமாமகளிர்கனகமணிவிலகுகாளத்திமலையே. (க)

முதுசினவிலவுணர்புரமூன்றுமொருநொடிவரையின்மூளவெரிசெய்
சதாரர்மதிபொதிசடையர்சங்கரர்விரும்புமலைதன்னைவினவில்
எதிரெதிரவெதிர்பிணையவெழுபொறிகள்சிதறவெழிலேனமுழுத
கதிர்மணியின்வளரொளிகளிருளகலநிலவுகாளத்திமலையே. (உ)

வல்லைவருகாளியைவகுத்துவலியாகிமிகுதாரகனைநீ
கொல்லெனவிடுத்தருள்புரிந்தசிவன்மேவுமலைகூறிவினவில்
பல்பலவிருங்கனிபருங்கிமிகவுண்டவைநெருங்கியினமாய்க்
கல்லதிரநின்றுகருமந்திவிளையாடுகாளத்திமலையே. (ங)

வேயனையதோளுமைபொர்பாகமதுவாகவிடையேறிசடைமேல்
தூயமதிசூடிசுடுகாடினடமாடிமலைதன்னைவினவில்
வாய்கலசமாகவழிபாடுசெயும்வேடன்மலராகுநயனம்
காய்கணையினாலிடந்தீசனடிகூடுகாளத்திமலையே. (ச)

மலையின்மிசைதனின்முகில்போல்வருவதொருமதகரியைமழைபொலலறக்
கொலைசெய்துமைபஞ்சவுரிபோர்த்தசிவன்மேவுமலைகூறிவினவில்
அலைகொள்புனலருவிபலசுனைகள்வழியிழியவயனிலவுமுதுவேய்
கலகலெனவொளிகொள்கதிர்முத்தமவைசிந்துகாளத்திமலையே. (ரு)

பாரகம்விளங்கியபகீரதனருந்தவமுயன்றபணிகண்
டாரருள்புரிந்தலைகொள்கங்கைசடையேற்றவரன்மலையைவினவில்
வாரதிருங்குறவர்சேவலின்மடுத்தவரெரித்தவிறகில்
காரகிலிரும்புகைவிசும்புகமழ்கின்றகாளத்திமலையே. (சு)

* இத்திருப்பதிகத்தில் க, எ இச்செய்யுள்கள் மறைந்துபோயின. † மால்கடல் என்றும் பாடம். ‡ மினமானினொடு என்றும் பாடம்.

Koviloor Digital Library

ஆருமெதிராதவலியாகியசலந்தரனையாழியதனல்
ஈரும்வகைசெய்தருள்புரிந்தவனிருந்தமலைதன்னைவினவில்
ஊருமரவம்மொளிகொண்மாமணியுமிழ்ந்தவைபுலாவிவரலால்
காரிருள்கடிந்துகனகம்மெனவிளங்குகாளத்திமலையே. (எ)

எரியனையசுரிமயிரிராவணனையீடழியவெழில்கொள்விரலால்
பெரியவரையூன்றியருள்செய்தசிவன்மேவுமலைபெற்றிவினவில்
வரியசிலைவேடுவர்களாடவர்கணீடுவரையூடுவரலால்
கரியினொடுவரிபுழுவையரியினமும்வெருவுகாளத்திமலையே. (அ)

இனதளவிலிவனதடியிணையுமுடியறிதுமெனவிகலுமிருவர்
தனதுருவமறிவரியசகலசிவன்மேவுமலைதன்னைவினவில்
புனவர்புனமயிலனையமாதரொடுமைந்தருமணம்புணருநாள்
கனகமெனமலர்களணிவேங்கைகணிலாவுகாளத்திமலையே. (கூ)

நின்றுகவளம்பலகொள்கையரொடுமெய்யிலிடுபோர்வையரும்
நன்றியறியாதவகைநின்றசிவன்மேவுமலைநாடிவினவில்
குன்றின்மலிதுன்றுபொழினின்றகுளிர்சந்தின்முறிதின்றுகுலவிக்
கன்றினொடுசென்றுபிடிநின்றுவிளையாடுகாளத்திமலையே. (கo)

காடதிடமாகநடமாடுசிவன்மேவுகாளத்திமலையை
மாடமொடுமாளிகைகணீடுவளர்கொச்சைவயமன்னுதலைவன்
நாடுபலநீடுபுகழ்* ஞானசம்பந்தனுரைநல்லதமிழின்
பாடலொடுபாடுமிசைவல்லவர்கணல்லர்பரலோகமெளிதே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தப்பிள்ளையார், திருக்காளத்திமலைக்குச் சமீபித்து, கண்ணப்பநாயனுர் திருத்தொண்டைச் சிறப்பித்து "வானவர்கடானவர்கள்" என்னுந் திருப்பதிகம் பாடிக்கொண்டே மலைமேல் ஏறி, சந்நிதானத்தை அடைந்து, சுவாமியைவணங்கி அங்கு அன்புருவமாகிய கண்ணப்பநாயனுரைக்கண்டு, ஆனந்தவருவிசொரிய விழுந்து நமஸ்கரித்தார். பின்பு வடதிசையிலும், மேற்றிசையிலும் தமிழ்மொழி வழக்கு இன்மையால், உத்தரகைலாசம், திருக்கேதாரம், திருக்கோகர்ணம், திருப்பருப்பதம், இந்திரநீலபருப்பதம் முதலிய தலங்களை அங்கிருந்தே வணங்கித் திருப்பதிகம்பாடியருளினுர்.

திருநாவுக்கரசுநாயனுர்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

விற்றானொன்றில்லாதநல்கூர்ந்தான்காண்
வியன்கச்சிக்கம்பன்காண்பிச்சையல்லால்
மற்றானொன்றில்லாதமாசதுரன்காண்
மயானத்துமைந்தன்காண்மாசொன்றில்லாப்

* நாமெலிநீடுபுகழ் என்றும் பாடம்.

Koviloor Digital Library

பொற்றான்காண்மாமணிநற்குன்றொப்பான்காண்
பொய்யாதுபொழி*லேழுந்தாங்கிநின்ற
கற்றான்காண்காளத்திகாணப்பட்ட
கணநாதன்காணவனென்கண் ணுளானே. (க)

இடிப்பான்காணென்வினையையேகம்பன்கா
ணெனும்பாபாவனன்காணெல்லாமுன்னே
முடிப்பான்காண்மூவுலகுமாயினான்காண்
முறைமையாலெம்புரியும்வழுவாவண்ணம்
படித்தான்றலையறுத்தபாசுபதன்காண்
பராய்த்துறையான்பழனம்பைஞ்ஞீலியான்காண்
கடித்தார்கமழ்கொன்றைக்கண்ணியான்காண்
காளத்தியானவனென்கண் ணுளானே. (உ)

நாரணன்காணான்முகன்காணால்வேதன்காண்
ஞானப்பெருங்கடற்கோர்நாவாயன்ன
பூரணன்காண்புண்ணியன்காண்புராணன்றான்காண்
புரிசடைமேற்புனலேற்றபுனிதன்றான்காண்
சாரணன்காண்சந்திரன்காண்கதிரோன்றான்காண்
டன்மைக்கட்டானேகாண்டக்கோர்க்கெல்லாம்
காரணன்காண்காளத்திகாணப்பட்ட
கணநாதன்காணவனென்கண் ணுளானே. (ங)

செற்றான்காணென்வினையைத்தியாடிகாண்
டிருவொற்றியூரான்காண்சிந்தைசெய்வார்க்
குற்றான்காணேகம்பமேவினான்கா
ணுமையாணற்கொழுநன்காணிமையோரேத்தும்
சொற்றான்காண்சோற்றுத்துறையுளான்காண்
சுறுவேந்தனேவலத்தைநீறுநோக்கக்
கற்றான்காண்காளத்திகாணப்பட்ட
கணநாதன்காணவனென்கண் ணுளானே. (ச)

மனத்தகத்தான்றலைமேலான்வாக்கினுள்ளான்
வாயாரத்தன்னடியேபாடுந்தொண்டர்
இனத்தகத்தானிமையவர்தஞ்சிரத்தின்மேலா
னேழண்டத்தப்பாலானிப்பாற்செம்பொன்
புனத்தகத்தான்நறுங்கொன்றைப்†போதினுள்ளான்
பொருப்பிடையானெருப்பிடையான்காற்றினுள்ளான்
கனத்தகத்தான்கயிலாயத்துச்சியுள்ளான்
காளத்தியானவனென்கண் ணுளானே. (ரு)

* பொழில் - பூமி. † புனத்தகத்தானறுங்கொன்றை என்றும் பாடம்.

Koviloor Digital Library

எல்லாமுன்றோன்றுமேதோன்றினான்கா
ணேகம்பமேயான்காணிமையோரேத்தப்
பொல்லாப்புலனைந்தும்போக்கினான்காண்
புரிசடைமேற்பாய்கங்கைபூரித்தான்காண்
நல்லவிடைமேல்கொண்டுநாகம்பூண்டு
நளிர்சிரமொன்றேந்தியோர்நாணுயற்ற
கல்லாடைமேல்கொண்டகாபாலிகாண்
காளத்தியானவனென்கண்ணுளானே. (௬)

கரியுருவுகண்டத்தெங்கண்ணுளான்காண்*
கண்டன்காண்வண்டுண்டகொன்றையான்காண்
எரிபவளவண்ணன்காணேகம்பன்கா
ணெண்டிசையுந்தானாயகுணத்தினான்காண்
திரிபுரங்கடீயிட்டதீயாடிகாண்
டீவினைகடீர்த்திடுமென்சிந்தையான்காண்
கரியுரிவைபோர்த்†துகந்தகாபாலிகாண்
காளத்தியானவனென்கண்ணுளானே. (எ)

இல்லாடிச்சில்பலிசென்றேற்கின்றான்கா
ணிமையவர்கடொழுதிறைஞ்சவிருக்கின்றான்காண்
வில்லாடிவேடனாயோடினான்காண்
வெண்ணூலுஞ்சேர்ந்த‡வகலத்தான்காண்
மல்லாடுதிரடோண்மேன்மழுவாளன்காண்
மலைமகடன்மணாளன்காண்மகிழ்ந்துமுன்னாள்
கல்லாலின்கீழிருந்தகாபாலிகாண்
காளத்தியானவனென்கண்ணுளானே. (அ)

தேனப்பூவண்டுண்டகொன்றையான்காண்
டிருவேகம்பத்தான்காண்டேனார்ந்துக்க
ஞானப்பூங்கோதையாள்பாகத்தான்கா
ணம்பன்காண்ஞானத்தொளியானான்காண்
வானப்பேரூருமறியவோடி
மட்டித்துநின்றான்காண்வண்டார்சோலைக்
கானப்பேரூரான்காண்கறைக்கண்டன்காண்
காளத்தியானவனென்கண்ணுளானே. (௯)

இறையவன்காணேழுலகுமாயினான்கா
ணேழ்கடலுஞ்சூழ்மலையுமாயினான்காண்
குறையுடையார்¶குற்றேவல்கொள்வான்றான்காண்
குடமூக்கிற்கீழ்க்கோட்டமேவினான்காண்

* கண்டத்தன்கண்ணுளான்காண் என்றும் பாடம். † கரியுரிமெய்போர்த் என்றும் பாடம். ‡ சார்ந்த என்றும் பாடம். ¶ குறைவுடையார் என்றும் பாடம்.

Koviloor Digital Library

மறையுடையவானோர்பெருமான்றான்காண்
மறைக்காட்டுறையுமணிகண்டன்காண்
கறையுடையகண்டத்தெங்காபாலிகாண்
காளத்தியானவனென்கண்ணுளானே. (க௦)

உண்ணாவருநஞ்சமுண்டான்றான்கா
ணூழித்தீயன்னான்காணுகப்பார்காணப்
பண்ணாரப்பல்லியம்பாடினான்காண்
பயின்றநால்வேதத்தின்பண்பினான்காண்
அண்ணாமலையான்காணடியாரிட்ட
மடியிணைகடொழுதேத்தவருளுவான்காண்
கண்ணாக்காண்பார்க்கோர்காட்சியான்காண்
காளத்தியானவனென்கண்ணுளானே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

செண்டாடும்விடையாய்சிவனேயென்செழுஞ்சுடரே
வண்டாருங்குழலா* ளுமைபாகமகிழ்ந்தவனே
கண்டார்காதலிக்குங்கணநாதனெங்காளத்தியாய்
அண்டாவுன்னையல்லாலறிந்தேத்தமாட்டேனே. (க)

இமையோர்நாயகனேயிறைவாவென்னிடர்த்துணையே†
கமையார்கருணையினாய்கருமாமுகில்போன்மிடற்றாய்
உமையோர்கூறுடையாயுருவேதிருக்காளத்தியுள்
அமைவே‡ யுன்னையல்லாலறிந்தேத்தமாட்டேனே. (உ)

படையார்வெண்மழுவா¶ பகலோன்பல்லுகுத்தவனே
விடையார்வேதியனேவிளங்குங்குழைக்காதுடையாய்
கடையார்மாளிகைசூழ்கணநாதனெங்காளத்தியாய்
உடையாயுன்னையல்லாலுகந்தேத்தமாட்டேனே. (ங)

மறிசேர்கையினனேமதமாவுரிபோர்த்தவனே
குறியேயென்னுடையகுருவேயுன்குற்றேவல்செய்வேன்
நெறியேநின்றடியார்நினைக்குந்திருக்காளத்தியுள்
அறிவேயுன்னையல்லாலறிந்தேத்தமாட்டேனே. (ச)

* வண்டாடுங்குழலாள் என்றும் பாடம். † இடர்த்துணை என்பதை துன்பத்திற்கி யாரே துணையாவார், மறத்திற்குமஃதேதுணை, பிணிக்கு மருந்து என்பனபோற் கொள்க. ‡ அமையே என்றும் பாடம். ¶ மழுவாய்என்றும் பாடம்.

Koviloor Digital Library

செஞ்சேலன்னகண்ணார் திறத்தேகிடந்துற்றலறி
நஞ்சேனனடியேனலமொன்றறியாமையினல்
துஞ்சேனனொருகாற்றொழுதேன் றிருக்காளத்தியாய்.
அஞ்சாதுன்னையல்லாலறிந்தேத்தமாட்டேனே. (ரு)

பொய்யவனயடியேன்புகவேநெறியொன்றறியேன்
செய்யவனகிவந்திங்கிடரானவை* தீர்த்தவனே
மெய்யவனேதிருவேவிளங்குந்திருக்காளத்தியென்
ஐயநுன்றன்னையல்லாலறிந்தேத்தமாட்டேனே.† (சு)

கடியேன்காதன்மையாற்கழற்போதறியாதவென்னுள்
குடியாக்கோயில்கொண்டகுளிர்வார்சடையெங்குழகா
முடியால்வானவர்கண்முயங்குந்திருக்காளத்தியாய்
அடியேனுன்னையல்லாலறியேன்மற்றொருவரையே. (எ)

நீருர்மேனியனேநிமலாநினையன்றிமற்றுக்
கூறேனவதனற்கொழுந்தேயென்குணக்கடலே
பாருர்வெண்டலையிற்பலிகொண்டுழல்காளத்தியாய்
ஏறேயுன்னையல்லாலினியேத்தமாட்டேனே. (அ)

தளிர்போன்மெல்லடியாடனையாகத்தமர்ந்தருளி
எளிவாய்வந்தெனுள்ளம்புகுதவல்லவெம்பெருமான்
களியார்வண்டறையுந்திருக்காளத்தியுள்ளிருந்த
ஒளியேயுன்னையல்லாலினியொன்றுமுணரேனே. (கூ)

காருரும்‡பொழில்சூழ்கணநாதனெங்காளத்தியுள்
ஆராவின்னமுதையணிநாவலாரூரன்சொன்ன
சீரூர்செந்தமிழ்கள்செப்புவார்வினையாயினபோய்ப்
போய்விண்ணுலகம்பெறுவார்பிழைப்பொன்றிலரே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருக்காளத்தித்திருப்பதிகம் - ௪.

ஆ திருப்பதிகம் - ௬௪.

சுவாமி தேவி திருநாமங்கள் - காளத்திநாதர், ஞானப்பூங்கோதை.

* செய்யவனகியேவந்திடரானவை என்றும், செய்யவனகிவந்துவிடரானவை என்றும் பாடம். † லறியேன்மற்றொருவரையே என்றும் பாடம். ‡ காராரும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

உ0. திருவொற்றியூர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

விடையவன்விண்ணுமண்ணுந்தொழநின்றவன்வெண்மழுவாட்
படையவன்பாய்புலித்தோலுடைகோவணம்பல்கரந்தைச்
சடையவன்சாமவேதன்சசிதங்கியசங்கவெண்டோ
டுடையவன்னூனமில்லியுறையும்மிடமொற்றியூரே. (க)

பாரிடம்பாணிசெய்யப்பறைக்கட்*செறுபல்கணப்பேய்
சீரொடும்பாடலாடலிலயஞ்சிதையாதகொள்கைத்
தாரிடும்போர்விடையன்றலைவன்றலையேகலனா
ஊரிடும்பிச்சைகொள்வானுறையும்மிடமொற்றியூரே. (உ)

விளிதருநீருமண்ணும்விசும்போடனல்காலுமாகி
அளிதருபேரருளானரனாகியவாதிமூர்த்தி
களிதருவண்டுபண்செய்கமழ்கொன்றையினோடணிந்த
ஒளிதருவெண்பிறையானுறையும்மிடமொற்றியூரே. (ங)

அரவமேகச்சதாகவசைத்தானலர்கொன்றையந்தார்
விரவிவெண்ணூல்கிடந்தவிரையார்வரைமார்பனெந்தை
பரவுவார்பாவமெல்லாம்பறைத்துப்படர்புன்சடைமேல்
உரவுநீரேற்றபெம்மானுறையும்மிடமொற்றியூரே. (ச)

விலகினார்வெய்யபாவம்விதியாலருள்செய்துநல்ல
பலகினார்மொந்தைதாளந்தகுணிச்சமும்பாணியாலே
அலகினால்வீசிநீர்கொண்டடிமேலலரிட்டுமுட்டா
துலகினாரேத்தநின்றானுறையும்மிடமொற்றியூரே. (ரு)

கமையொடுநின்றசீரான்கழலுஞ்சிலம்புமொலிப்பச்
சுமையொடுமேலும்வைத்தான்விரிகொன்றையுஞ்சோமனையும்
அமையொடுநீண்டதிண்டோளழகாயபொற்றோடிலங்க
உமையொடுங்கூடிநின்றானுறையும்மிடமொற்றியூரே. (சு)

நன்றியால்வாழ்வதுள்ளமுலகுக்கொருநன்மையாலே
கன்றினார்மும்மதிலுங்கரு†மால்வரையேசிலையாப்
பொன்றினார்வார்சுடலைப்பொடிநீறணிந்தாரழலம்
பொன்றினாலெய்தபெம்மானுறையும்மிடமொற்றியூரே. (எ)

* செய்வார்பறைக்கட் என்றும் பாடம். † கருமை - பெருமை.

Koviloor Digital Library

பெற்றியாற்பித்தனெப்பான்பெருமான்கருமானுரிதோல்
சுற்றியான்சுத்திருலஞ்சுடர்க்கண்ணுதன்மேல்விளங்கத்
தெற்றியாற்செற்றரக்கனுடலைச்செழுமால்வரைக்கீழ்
ஒற்றியான்முற்றுமாள்வானுறையுமிடமொற்றியூரே. (அ)

திருவினார்போதினானுந்திருமாலுமொர்தெய்வமுன்னித்
தெரிவினாற்காணமாட்டார்திகழ்சேவடிசிந்தைசெய்து
பாவினார்பாவமெல்லாம்பறையப்படர்பேரொளியோ
டொருவனாய்நின்றபெம்மானுறையுமிடமொற்றியூரே. (௯)

தோகையம்பீலிகொள்வார்துவர்க்கூறைகள்போர்த்துழல்வார்
ஆகமசெல்வனாரையலர்தூற்றுதல்காரணமாக்
கூகையம்மாக்கள்சொல்லைக்குறிக்கொள்ளன்மினேழுலகும்
ஓகைதந்தாளவல்லானுறையுமிடமொற்றியூரே. (க0)

ஒண்பிறைமல்குசென்னியிறைவன்னுறையொற்றியூரைச்
சண்பையர்தந்தலைவன்றமிழ்ஞானசம்பந்தன்சொன்ன
பண்புனைபாடல்பத்தும்பரவிப்பணிந்தேத்தவல்லார்
விண்புனைமேலுலகம்விருப்பெய்துவர்வீடெளிதே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

வெள்ளத்தைச்சடையில்வைத்தவேதகீதன்றன்பாதம்
மெள்ளத்தானடையவேண்டின்மெய்தருஞானத்தீயால்
கள்ளத்தைக்கழியநின்றார்காயத்துக்கலந்துநின்று*
உள்ளத்துளொளியுமாகுமொற்றியூருடையகோவே. (க)

வசிப்பெனும்வாழ்க்கைவேண்டாவானவரிறைவனின்று
புசிப்பதோர்பொள்ளலாக்கையதனொடும்புணர்வுவேண்டில்†
அசிர்ப்பெனு‡மருந்தவத்தாலான்மாவினிடமதாகி
உசிர்ப்பெனு‡முணர்வுமுள்ளா¶ரொற்றியூருடையகோவே. (உ)

தானத்தைச்செய்துவாழ்வான்சலத்துளேயழுந்துகின்றீர்
வானத்தைவணங்கவேண்டில்வம்மின்கள்வல்லீராகில்
ஞானத்தைவிளக்கையேற்றிநாடிபுள்விரவவல்லார்
ஊனத்தையொழிப்பர்போலுமொற்றியூருடையகோவே. (௩)

* காயத்தைக்கலந்துநின்று என்றும், காலத்துட்கலந்துநின்று என்றும், காயத்துட்கலந்துநின்று என்றும் பாடம். † புணரவேண்டி என்றும் பாடம். ‡‡ அசிப்பெனும் உசிப்பெனும் என்றும் பாடம். ¶ முணர்விலுள்ளார் என்றும்பாடம்.

Koviloor Digital Library

காமத்துளழுந்திநின்றுகண்டாரா*லொறுப்புண்ணாதே
சாமத்துவேதமாகிநின்றதோர்சயம்புதன்னை
ஏமத்துமிடையிராவுமேகாந்தமியம்புவார்க்கு
ஓமத்து†ளொளியதாகுமொற்றியூருடையகோவே. (௪)

சமையமேலாறுமாகித்தானொருசயம்புவாகி
இமையவர்பரவியேத்தவினிதினங்கிருந்தவீசன்
கமையினையுடையராகிக்கழலடிபரவுவார்க்கு
உமையொருபாகர்‡போலுமொற்றியூருடையகோவே. (௫)

ஒருத்திதன்றலைச்சென்றானைக்கரந்திட்டானுலகமேத்த
ஒருத்திக்குநல்லனாகிமறுப்படுத்தொளித்துமீண்டே
ஒருத்தியைப்பாகம்வைத்தானுணர்வினாலையமுண்ணி
ஒருத்திக்குநல்லனல்லனொற்றியூருடையகோவே. (௬)

பிணமுடையுடலுக்காகப்பித்தராய்த்திரிந்துநீங்கள்
புணர்வெனும்போகம்வேண்டாபோக்கலாம்பொய்யைநீங்க
நிணமுடைநெஞ்சினுள்ளானினைக்குமாநினைக்கின்றார்க்கு
உணர்வினோடிருப்பர்¶போலுமொற்றியூருடையகோவே. (௭)

பின்னுவார்சடையான்றன்னைப்பிதற்றிலாப்பேதைமார்கள்
துன்னுவார்நரகந்தன்னுட்டொல்வினைதீரவேண்டில்
மன்னுவான்மறைகளோதிமனத்தினுள்விளக்கொன்றேற்றி
உன்னுவாருள்ளத்துள்ளாரொற்றியூருடையகோவே. (௮)

முள்குவார்போகம்வேண்டின்முபற்றியாவிடர்கள்வந்தால்
எள்குவாரெள்கிநின்றங்கிதுவொருமாயமென்பார்
பள்குவார்பத்தராகிப்பாடியுமாடிநின்றும்
உள்குவா§ருள்ளத்துள்ளாரொற்றியூருடையகோவே. (௯)

வெறுத்துகப்புலன்களைந்தும்வேண்டிற்றுவேண்டுநெஞ்சே
மறுத்துகவார்வச்செற்றக்குரோதங்களானமாயப்
பொறுத்துகப்புட்பகத்தேருடையானையடரவூன்றி
ஒறுத்துகந்தருள்கள்செய்தாரொற்றியூருடையகோவே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

* கண்டாரால் என்றும் பாடம். † வாருக்—கோமத்துள் என்றும் பாடம். ‡ பரவுவாருக்—குமையொருபாகர் என்றும் பாடம். ¶ நினைக்கின்றாருக்—கு ணர்வினோடிருப்பர் என்றும் பாடம். § மாடிநின்று—உள்குவார் என்றும், மாடியுநின்—றுள்குவார் என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருவொற்றியூர்.

3917

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

ஓம்பினேன்கூட்டைவாளாவுள்ளத்தோர்கொடுமைவைத்துக்
காம்பிலாமூழைபோலக்கருதிற்றேமுகக்கமாட்டேன்
பாம்பின்வாய்த்தேரைபோலப்பலபலநினைக்கின்றேனை
ஓம்பிநீயுய்யக்கொள்ளாயொற்றியூருடையகோவே. (௧)

மனமெனுந்தோணிபற்றிமதியெனுங்கோலையூன்றிச்
சினமெனுஞ்சரக்கையேற்றிச்செறிகடலோடும்போது
மதனெனும்பாறைதாக்கி* மறியும்போதறியவொண்ணா
துனையுனுமுணர்வைநல்காயொற்றியூருடையகோவே. † (௨)

திருச்சிற்றம்பலம்.

திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

செற்றுக்களிற்றுரிகொள்கின்றஞான்றுசெருவெண்கொம்பொன்
றிற்றுக்கிடந்ததுபோலுமிளம்பிறைபாம்பதனைச்
சுற்றிக்கிடந்ததுகிம்புரிபோலச்சுடரிமைக்கும்
நெற்றிக்கண்மற்றதன்முத்தொக்குமாலொற்றியூரனுக்கே. (௧)

சொல்லக்கருதியதொன்றுண்டுகேட்கிற்றொண்டாயடைந்தார்
அல்லற்படக்கண்டுபின்னென்கொடுத்தியலைகொண்முந்நீர்
மல்லற்றிரைச்சங்கநித்திலங்கொண்டுவம்பக்கரைக்கே
ஒல்லைத்திரைகொணர்ந்தெற்றொற்றியூருறையுத்தமனே. (௨)

பரவைவருதிரைநீர்க்கங்கைபாய்ந்துக்கபல்சடைமேல்
அரவமணிதருகொன்றையிளந்திங்கள்சூடியதோர்
குரவநறுமலர்கோங்கமணிந்துகுலாயசென்னி
உரவுதிரைகொணர்ந்தெற்றொற்றியூருறையுத்தமனே. (௩)

தானகங்காடரங்காகவுடையதுதன்னடைந்தார்
ஊனகநாறுமுடைதலையிற்பலிகொள்வதுந்தான்
தேனகநாறுந்திருவொற்றியூருறைவாரவர்தாம்
தானகமேவந்துபோனகம்வேண்டியுழிதர்வரே. (௪)

வேலைக்கடனஞ்சமுண்டுவெள்ளேற்றொடும்வீற்றிருந்த
மாலைச்சடையார்க்குறைவிடமாவதுவாரிகுன்றா
ஆலைக்கரும்பொடுசெங்நெற்கழனியருகணைந்த
சோலைத்திருவொற்றியூரையெப்போதுந்தொழுமின்களே. (௫)

* பாரைத்தாக்கி என்றும் பாடம்; பாரை - பாரில். † இத்திருப்பதிகத்தில் ஏனைச் செய்யுள்கள் மறைந்துபோயின.

Koviloor Digital Library

புற்றினில்வாழுமரவுக்குந்திங்கட்குங்கங்கையென்னும்
சிற்றிடையாட்குஞ்செறிதருகண்ணிக்குஞ்சேர்விடமாம்
பெற்*றுடையான்பெரும்பேச்சுடையான்பிரியாதெனையாள்
விற்றுடையானொற்றியூருடையான்றன்விரிசடையே. (சு)

இன்றரைக்கண்ணுடையாரெங்குமில்லையிமயமென்னும்
குன்றரைக்கண்ணன்குலமகட்பாவைக்குக்கூறிட்டநாள்
அன்றரைக்கண்ணுங்கொடுத்துமையாளையும்பாகம்வைத்த
ஒன்றரைக்கண்ணன்கண்டீரொற்றியூருறையுத்தமனே. (எ)

சுற்றிவண்டியாழ்செயுஞ்சோலையுங்காவுந்துதைந்திலங்கு
பெற்றிகண்டான்மற்றியாவருங்கொள்வர்பிறரிடைநீ
ஒற்றிகொண்டாயொற்றியூரையுங்கைவிட்டுறுமென்றெண்ணி
விற்றிகண்டாய்மற்றிதுவொப்பதில்லிடம்வேதியனே. (அ)

சுற்றிக்கிடந்தொற்றியூரனென்சிந்தைபிரிவறியான்
ஒற்றித்திரிதந்து † நீயென்னசெய்தியுலகமெல்லாம்
பற்றித்திரிதந்து ‡ பல்லோடுநாமென்றுகண்குழித்துத்
தெற்றித் ¶ திருப்பதல்லாலென்னசெய்யுமித்தீவினையே. (கூ)

அங்கட்கடுக்கைக்குழலைப்புறவமுறுவல்செய்யும்
பைங்கட்டலைக்குச்சுடலைக்களரிபருமணிசேர்
கங்கைக்குவேலையரவுக்குப்புற்றுக்கலைநிரம்பாத்
திங்கட்குவானந்திருவொற்றியூரர்திருமுடியே. (கO)

தருக்கினவாளரக்கன்முடிபத்திறப்பாதந்தன்னால்
ஒருக்கினவாறடியேனைப்பிறப்பறுத்தாளவல்லான்
நெருக்கினவானவர்தானவர்கூடிக்கடைந்தநஞ்சைப்
பருக்கினவாறென்செய்கேனொற்றியூருறைபண்டங்கனே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

ஒற்றியூருமொளிமதிபாம்பினை
ஒற்றியூருமப்பாம்புமதனையே
ஒற்றியூரவொருசடைவைத்தவன்
ஒற்றியூர்தொழநம்வினையோயுமே. (க)

வாட்டமொன்றுரைக்கும்மலையான்மகள்
ஈட்டவேயிருளாடியிடும்பிணக்
காட்டிலோரிகடிக்கவெடுத்த § தோர்
ஓட்டைவெண்டலைக்கையொற்றியூரரே. (உ)

* பெற்ற - பெற்றம்; நாகணையான் என்புழிப்போல அம்முக்கெட்டது. † ஒற்றித் திருந்தது என்றும் பாடம். ‡ பற்றித்திரிந்தது என்றும் பாடம். ¶ குழித்துக்-கெற்றித் என்றும் பாடம். § வெடித்த என்றும் பாடம்.

Koviloor Digital Library

கூற்றுத்தண்டத்தையஞ்சிக்குறிக்கொண்மின்
ஆற்றுத்தண்டத்தடக்குமரனடி
நீற்றுத்தண்டத்தராய்நினைவார்க்கெலாம்
ஊற்றுத்தண்டொப்பர்போலொற்றியூரரே. (௩)

சுற்றும்பேய்சுழலச்சுடுகாட்டெரி
பற்றியாடுவர்பாய்புலித்தோலினர்
மற்றையூர்களெல்லாம்பலிதேர்ந்துபோய்
ஒற்றியூர்புக்குறையுமொருவரே. (௪)

புற்றில்வாளரவாட்டி *யுமையொடு
பெற்றமேறுகந்தேறும்பெருமையான்
மற்றையாரொடுவானவருந்தொழ
ஒற்றியூருறைவானோர்கபாலியே. (௫)

போதுதாழ்ந்துபுதுமலர்கொண்டுநீர்
மாதுதாழ்சடைவைத்தமணாளனார்
ஓதுவேதியனார்திருவொற்றியூர்
பாதமேத்தப்பறையுநம்பாவமே. (௬)

பலவுமன்னங்கள்பன்மலர்மேற்றுஞ்சும்
கலவமஞ்ஞைகள்காரெனவெள்குறும்
உலவுபைம்பொழில்சூழ்திருவொற்றியூர்
நிலவினானடியேயடைநெஞ்சமே. (௭)

ஒன்றுபோலுமுகந்தவரேறிற்று
ஒன்றுபோலுமுதைத்துக்களைந்தது
ஒன்றுபோலொளிமாமதிசூடிற்று
ஒன்றுபோலுகந்தாரொற்றியூரரே. (௮)

படைகொள்பூதத்தர்வேதத்தர்கீதத்தர்
சடைகொள்வெள்ளத்தர்சாந்தவெண்ணீற்றினர்
உடையுந்தோலுகந்தாருறையொற்றியூர்
அடையுமுள்ளத்தவர்வினையல்குமே. (௯)

வரையினாலுயர் † தோளுடைமன்னனை
வரையினார்வலி ‡ செற்றவர்வாழ்விடம்
திரையினார்புடைசூழ்திருவொற்றியூர்
உரையினாற்பொலிந்தாருயர்ந்தார்களே. (க0)

திருச்சிற்றம்பலம்.

* புற்றிலாடரவாட்டி என்றும் பாடம். † வரையினாருயர் என்றும் பாடம். ‡ வரையினால்வலி என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

வண்டோங்குசெங்கமலங்கழுநீர்மல்கு
மதமத்தஞ்சேர்சடை * மேன்மதியஞ்சூடித்
திண்டோள்களாயிரமும்வீசிநின்று
திசைசேரநடமாடிச்சிவலோகனார்
உண்டார்நஞ்சுலகுக்கோருறுதிவேண்டி
யொற்றியூர்மேயவொளிவண்ணனார்
கண்டேனான்கனவகத்திற்கண்டேற்கென்றன்
கடும்பிணியுஞ்சுடுந்தொழிலுங்கைவிட்டவே. (க)

ஆகத்தோர்பாம்பசைத்துவெள்ளேறேறி
யணிகங்கைசெஞ்சடைமேலார்க்கச்சூடிப் †
பாகத்தோர்பெண்ணுடையாரானுமாவர்
பசுவேறியுழிதருமெம்பரமயோகி
காமத்தா ‡ லைங்கணையான்றன்னைவீழக்
கனலாவெரிவிழித்தகண்மூன்றினார்
ஓமத்தா ¶ னான்மறைகளோதலோவா
வொளிதிகழுமொற்றியூருறைகின்றாரே. (உ)

வெள்ளத்தைச்செஞ்சடை § மேல்விரும்பிவைத்தீர்
வெண்மதியும்பாம்புமுடனேவைத்தீர்
கள்ளத்தைமனத்தகத்தேகரந்துவைத்தீர்
கண்டார்க்குப்பொல்லாதுகண்டீரெல்லே
கொள்ளத்தாளிசைபாடிப்பலியுங்கொள்ளீர்
கோளரவுங்குளிர்மதியுங்கொடியுங்காட்டி
உள்ளத்தைநீர்கொண்டீரோதலோவா
வொளிதிகழுமொற்றியூருடையகோவே. (ந)

நரையார்ந்தவிடையேறிநீறுபூசி
நாகங்கச்சரைக்கார்த்தோர்தலைகையேந்தி
உரையாவந்தில்புகுந்துபலிதான்வேண்ட
வெம்மடிகளும்மூர்தானேதோவென்ன
விரையாதேகேட்டியேல்வேற்கணல்லாய்
விடுங்கலங்கணெடுங்கடலுணின்றுதோன்றும்
திரைமோதக்கரையேறிச்சங்கமூருந்
திருவொற்றியூரென்றார்தியவாறே. (ச)

* மதமத்தஞ்செஞ்சடை என்றும் பாடம். † மேலரங்கச்சூடிப் என்றும் பாடம். ‡ காமத்தால் - காமகாரணமாக. ¶ ஓமத்தால் - ஓமத்தோடு; "தூங்குகையானோங்குநடைய" என்புழிப்போல. ஓமம் - வேள்வி. § வெள்ளத்தைத்தடஞ்சடை என்றும், வெள்ளத்தடஞ்சடை என்றும் பாடம்.

Koviloor Digital Library

மத்தமாகளியானையுரிவைபோர்த்து
வானகத்தார்தானகத்தாராகிநின்று
பித்தர்தாம்போலங்கோர்பெருமைபேசிப்
பேதையரையச்சுறுத்திப்பெயரக்கண்டு
பத்தர்கடாம்பலருடனேகூடிப்பாடிப்
பயின்றிருக்குமூரேதோபணியீரென்ன
ஒத்தமைந்தவுத்திரநாடீர்த்தமாக
வொளிதிகழுமொற்றியூரென்கின்றாரே. (ரு)

கடியவிடையேறிக்காளகண்டர்
கலையோடுமழுவாளோர்கையிலேந்தி
இடியபலிகொள்ளார்போவாரல்ல
ரெல்லாந்தானிவ்வடிகள்யாரென்பாரே
வடிவுடையமங்கையுந்தாமுமெல்லாம்
வருவாரையெதிர்கண்டோமயிலாப்புள்ளே
செடிபடுவெண்டலையொன்றேந்திவந்து
திருவொற்றியூர்புக்கார்தீயவாறே. (சு)

வல்லராய்வானவர்களெல்லாங்கூடி
வணங்குவார்வாழ்த்துவார்வந்துநிற்பார்
எல்லேயெம்பெருமானைக்காணோமென்ன
வெவ்வாற்றாலெவ்வகையாற்காணமாட்டார்
நல்லார்களுன்மறையோர்கூடிநேடி
நா*மிருக்குமூர்பணியீரடிகேளென்ன
ஒல்லைதான்றிரையேறியோதமீளு
மொளிதிகழுமொற்றியூரென்கின்றாரே. (எ)

நிலைப்பாடேநான்கண்டதேடீகேளாய்
நெருநலைநற்பகலிங்கோரடிகள்வந்து
கலைப்பாடுங்கண்மலருங்கலக்கநோக்கி†
கலந்து‡பலியிடுவேனெங்குங்காணேன்
சலப்பாடேயினியொருநாட்காண்பேனாகிற்
றன்னாகத்தென்னாகமொடுங்கும்வண்ணம்
உலைப்பாடேபடத்தழுவிப்¶போகலொட்டே
னொற்றியூருறைந்திங்கேதிரிவானையே. (அ)

மண்ணல்லைவிண்ணலைவலயமல்லை
மலையல்லைகடலல்லைவாயுவல்லை
எண்ணல்லையெழுத்தல்லையெரியுமல்லை
யிரவல்லைபகலல்லையாவுமல்லை

* நாமென்றும் முன்னிலையுளப்பாட்டுத்தன்மை உயர்வுதோன்ற முன்னிலைக்கண் வந்தது. "நாமமரையாமத்தென்னேவந்துவைகியந்ததுவே" என்புழி நாமென்பதுபோல.
† நோக்கி - நோக்க. ‡ கலந்து - அடைந்து. ¶ செந்தொடையாகக்கொண்டு முலைப்பாடேபடத்தழுவிப் எனவும் பாடங்கொள்ளலாம்.

Koviloor Digital Library

பெண்ணல்லையாணல்லைபேடுமல்லை
பிறிதல்லையாணுயும்பெரியாய்நீயே
உண்ணல்லைநல்லார்க்குத்தியையல்லை
யுணர்வரியவொற்றியூருடையகோவே. (கூ)

மருவுற்றமலர்க்குழலிமடவாளஞ்ச
மலைதுளங்கத்திசைநடுங்கச்செறுத்துநோக்கிச்
செருவுற்றவாளரக்கன்வலிதான்மாளத்
திருவடியின்விரலொன்றாலலறவூன்றி
உருவொற்றியங்கிருவரோடிக்காண
வோங்கினவவ்வொள்ளழலாரிங்கேவந்து
திருவொற்றியூர்நம்மூரென்றுபோனர்
செறிவனைகளொன்றொன்றாச்சென்றவாறே. (கஂ)

திருச்சிற்றம்பலம்.

சு ந் த ர மூ ர் த் தி நா ய ஞ ர்.

ப ண் - த க் கே சி.

திருச்சிற்றம்பலம்.

அழுக்குமெய்கொடுன்றிருவடியடைந்தேனதுவுநான்படப்பாலதொன்றுனல்
பிழுக்கைவாரியும்பால் * கொள்வரடிகேள்பிழைப்பனுகிலுந்திருவடிப்பிழையே
வழுக்கிவிழினுந்திருப்பெயரல்லான்மற்றுநானறியேன்மறுமாற்றம் † [ன்
ஒழுக்கவென்கணுக்கொருமருந்துரையாயொற்றியூரெனுமூருறைவானே. (க)

கட்டனேன்பிறந்தேனுனக்காளாய்க்காதற்சங்கிலிகாரணமாக
எட்டிறைற்றிசைழுந்திருமூர்த்தியென்செய்வானடியேனெடுத்துரைக்கேன்
பெட்டனுகிலுந்திருவடிப்பிழையேன்பிழைப்பனுகிலுந்திருவடிக்கடிமை
ஒட்டினேனெனைநீசெய்வதெல்லா ‡ மொற்றியூரெனுமூருறைவானே. (உ)

கங்கைதங்கியசடையுடைக்கரும்பேகட்டியேபலர்க்குங்கனிகண்ணே
அங்கைநெல்லியின்பழத்திடையமுதேயத்தாவென்னிடரார்க்கெடுத்துரைக்கேன்
சங்குமிப்பியுஞ்சலஞ்சலமுரலவயிரமுத்தொடுபொன்மணிவரன்றி
ஒங்கு ¶ மாகடலோதம்வந்துலவுமொற்றியூரெனுமூருறைவானே. (ஙூ)

ஈன்றுகொண்டதோர்சுற்றமொன்றன்றுலியாவராகிலெனன்புடையார்கள்
தோன்றநின்றருள் § செய்தளித்திட்டாற்சொல்லுவாரையல்லாதனசொல்லாய்
மூன்றுகண்ணுடையாயடியேன்கண்கொள்வதேகணக்குவழக்காகில்
ஊன்றுகோலெனக்காவதொன்றருளாயொற்றியூரெனுமூருறைவானே. (ச)

* பிழுக்கை என்றதனுல் பால் என்றது ஆட்டுப்பாலை என்க; பசுப்பாலெனின், மரபுவழுவாம். † மறுமாற்றம் - திருப்பெயருக்குமறுதலையாய அந்தோ ஐயோ என்பன முதலியன. ‡ என்னை நீசெய்வதெல்லாம் ஒட்டினேன் என்க; என்னை எனக்கு; ஐயுருபு குவ்வுருபின் பொருட்கண் நின்றது; 'அவளைக்கொள்ளுமிவ்வணிகலம்' என்புழிப்போல. ஒட்டினேன் - பொருந்தினேன். ¶ ஒங்கு - ஒங்கெனக்குறைகிற்று. § தோன்றிநின்றருள் என்றும் பாடம்.

Koviloor Digital Library

வழித்தலைப்படுவான்முயல்கின்றேனுன்னைப்போலென்னைப்பாவிக்கமாட்டேன்
சுழித்தலைப்பட்டநீரதுபோலச்சுழல்கின்றேன்சுழல்கின்றதென்னுள்ளம்
கழித்தலைப்பட்டநாயதுபோலவொருவன்கோல்பற்றிக்கறகறவிழுக்கை
ஒழித்துநீயருளாயினசெய்யாயொற்றியூரெனுமூருறைவானே. (ரு)

மானைநோக்கியர்கண்வலைப்பட்டுவருந்தியானுற்றவல்வினைக்கஞ்சித்
தேனையாடியகொன்றையினுயுன்சீலமுங்குணமுஞ்சிந்தியாதே
நானுமித்தனைவேண்டுவதடியேனுயிரொடுந்நரகத்தழுந்தாமை
ஊனமுள்ளனதீர்த்தருள்செய்யாயொற்றியூரெனுமூருறைவானே. (சா)

மற்றுத்தேவரைநினைந்துனைமறவேனெஞ்சினாரொடுவாழவுமாட்டேன்
பெற்றிருந்துபெறுதொழிகின்றபேதையேன்பிழைத்திட்டதையறியேன்
முற்றுநீயெனைமுனிந்திடவடியேன்கடவதென்னுனைநான்மறவேனேல்
உற்றநோயுறுபிணிதவிர்த்தருளாயொற்றியூரெனுமூருறைவானே. (எ)

கூடினாய்மலைமங்கையைநினையாய்கங்கையாயிரமுகமுடையாளைச்
சூடினாயென்றுசொல்லியபுக்காற்றெழும்பனேனுக்குஞ்சொல்லலுமாமே
வாடிநீயிருந்தென்செய்திமனனேவருந்தியானுற்றவல்வினைக்கஞ்சி
ஊடினாலினியாவதொன்றுண்டேயொற்றியூரெனுமூருறைவானே. (அ)

மகத்திற்புக்கதோர்சனியெனக்கானாய்மைந்தனேமணியேமணவாளா
அகத்திற்பெண்டுகணானென்றுசொன்னாலழையேற்போகுருடாவெனத்தரியேன்
முகத்திற்கண்ணிழந்தெங்ஙனம்வாழ்வேன்முக்கணாமுறையோமறையோதீ
உகைக்குந்தண்கடலோதம்வந்துலவுமொற்றியூரெனுமூருறைவானே. (கூ)

ஓதம்வந்துலவுங்கரைதன்மேலொற்றியூருறைசெல்வனைநாளும்
ஞாலந்தான்பரவப்படுகின்றநான்மறையங்கமோதியநாவன்
சீலந்தான்பெரிதும்மிகவல்லசிறுவன்வன்றொண்டனூரனுரைத்த
பாடல்பத்திவைவல்லவர்தாம்போய்ப்பரகதிதிண்ணநண்ணுவர்தாமே. (க0)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனர், திருவொற்றியூரில் வாழ்ந்திருக்குநாளிலே, ஒருநாள் திருவாரூரில் வீற்றிருக்கின்ற வீதிவிடங்கப்பெருமானை மிக நினைந்து, அத்திருப்பதிக்குப்போகக் கருதி, ஆலயத்திலே புகுந்து சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு, திருவொற்றியூரை நீங்கிய பொழுது, அவர் சபதந்தவறினமையால் அவருக்கு, இரண்டு கண்களும் மறைந்தன. அப்பொழுது நாயனர் திகைத்து நெடிதுயிர்த்து, சபதந் தவறினமையால், இது நிகழ்ந்தது என்று நினைந்து, இந்தக் கொடுந்துயரத்தை நீக்கும்பொருட்டு நமது கடவுளைப் பாடுவேன் என்று துணிந்து, "அழுக்குமெய்கொடுன்திருவடியடைந்தேன்" என்னுந் திருப்பதிகத்தைப்பாடியருளினர். பாடியருளியும், சத்தியந்தவறினவர் யாவராயினுமாகுக அவர் தப்பாமற்றண்டிக்கப்படுவார் என்பதை உலகத்தாருக்கு நன்கு அறிவுறுத்தற்பொருட்டும், பின்னரும் பன்முறை திருப்பதிகங்கள் பாடுவித்தற்பொருட்டும் அக்கடவுள் அத்துயரத்தை அவருக்கு நீக்கினரில்லை.

Koviloor Digital Library

பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

பாட்டும்பாடிப்பரவித்திரிவார்
ஈட்டும்வினைகடீர்ப்பார்கோயில்
காட்டுங்கலமுந்திமிலுங்கரைக்கே
ஓட்டுந்திரைவாயொற்றியூரே. (௧)

பந்துங்கிளியும்பயிலும்பாவை
சிந்தைகவர்வார்செந்திவண்ணர்
எந்தம்மடிகளிறைவர்க்கிடம்போல்
உந்துந்திரைவாயொற்றியூரே. (௨)

பவளக்கனிவாய்ப்பாவைபங்கன்
கவளக்களிற்றினுரிவைபோர்த்தான்
தவழும்மதிசேர்சடையாற்கிடம்போல்
உகளுந்திரைவாயொற்றியூரே. (௩)

என்னதெழிலுநிறையுங்கவர்வான்
புன்னைமலரும்புறவிற்றிகழும்
தன்னைமுன்னநினைக்கத்தருவான்
உன்னப்படுவானொற்றியூரே. (௪)

பணங்கொளரவம்பற்றிப்பரமன்
கணங்கள்சூழக்கபாலமேந்தி
வணங்குமிடைமென்மடவாரிட்ட
உணங்கல்கவர்வானொற்றியூரே. (௫)

படையார்மழுவன்பால்வெண்ணீற்றன்
விடையார்கொடியன்வேதநாவன்
அடைவார்வினைகளறுப்பானென்னை
உடையானுறையுமொற்றியூரே. (௬)

சென்று*புரங்கடீயில்வேவ
வென்றவிகிர்தன்வினையைவிட்ட
நன்றுநல்லநாதன்னரையே
றொன்றையுடையானொற்றியூரே. (௭)

கலவமயில்போல்வளைக்கைநல்லார்
பலரும்பரவும்பவளப்படியான்
உலகினுள்ளார்வினைகடீர்ப்பான்
உலவுந்திரைவாயொற்றியூரே. (௮)

பற்றிவரையையெடுத்தவரக்கன்
இற்றுமுரிபவிரலாலடர்த்தார்
எற்றும்வினைகடீர்ப்பாரோதம்
ஒற்றுந்திரைவாயொற்றியூரே. (௯)

* சென்ற என்றும் பாடம்.

Koviloor Digital Library

ஒற்றியூருமரவும்பிறையும்
பற்றியூரும்பவளச்சடையான்
ஒற்றியூர்மேலூரனுரைத்த
கற்றுப்பாடக்கழியும்வினையே. (௧0)
திருச்சிற்றம்பலம்.

திருவொற்றியூர்த்திருப்பதிகம் - அ.

ஆ திருப்பதிகம் - ௬௨.

சுவாமி தேவி திருநாமங்கள் - ஆனந்தத்தியாகர், வடிவுடைநாயகி.

உக. திருவலிதாயம். *

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

பத்தரொடுபலரும்பொலியம்மலரங்கைப்புனறாவி
ஒத்தசொல்லியுலகத்தவர்தாந்தொழுதேத்தவுயர்சென்னி
மத்தம்வைத்தபெருமான்பிரியாதுறைகின்றவலிதாயம்
சித்தம்வைத்தவடியாரவர்மேலடையாமற்றிடர்நோயே. (௧)

படையிலங்குகரமெட்டுடையான்படிறாகக்கனலேந்திக்
கடையிலங்குமனையிற்பலிகொண்டுணுங்கள்வன்னுறைகோயில்
மடையிலங்குபொழிலின்னிழல்வாய்மதுவீசும்வலிதாயம்
அடையநின்றவடியார்க்கடையாவினையல்லற்றுயர்தானே. (௨)

ஐயனொய்யன்னணியன்பிணியில்லவரென்றுந்தொழுதேத்தச்
செய்யன்வெய்யபடையேந்தவல்லான்றிருமாதோடுறைகோயில்
வையம்வந்துபணியப்பிணிதீர்த்துயர்கின்றவலிதாயம்
உய்யும்வண்ணந்நினைமின்னினைந்தால்வினைதீருந்நலமாமே. (௩)

ஒற்றையேறதுடையானடமாடியோர்பூதப்படைசூழப்
புற்றினாகமரையார்த்துழல்கின்றவெம்பெம்மான்மடவாளோ
டுற்றகோயிலுலகத்தொளிமல்கிடவுள்கும்வலிதாயம்
பற்றிவாழும்மதுவேசரணாவதுபாடும்மடியார்க்கே. (௪)

புந்தியொன்றிநினைவார்வினையாயினதீரப்பொருளாய
அந்தியன்னதொருபேரொளியானமர்கோயிலயலெங்கும்
மந்திவந்துகடுவன்னொடுங்கூடி † வணங்கும்வலிதாயம்
சிந்தியாதவவர்தம்மடும்வெந்துயர்தீர்தலெளிதன்றே. (௫)

* வலிதாயம்—பாடி † னொடுகூடி என்றும் பாடம்.

ஊனியன்றதலையிற்பலிகொண்டுலகத்துள்ளவரேத்தக்
கானியன்றகரியின்னுரிபோர்த்துழல்கள்வன்சடைதன்மேல்
வானியன்றபிறைவைத்தவெம்மாதிமகிழும்வலிதாயம்
தேனியன்றநறுமாமலர்கொண்டுநின்றேத்தத்தெளிவாமே. (௬)

கண்ணிறைந்தவிழியின்னழலால்வருகாமன்னுயிர்வீட்டிப்*
பெண்ணிறைந்தவொருபான்மகிழ்வெய்தியபெம்மானுறைகோயில்
மண்ணிறைந்தபுகழ்கொண்டடியார்கள்வணங்கும்வலிதாயத்
துண்ணிறைந்தபெருமான்கழலேத்தநம்முண்மைக்கதியாமே. (௭)

கடலினஞ்சமமுதுண்டிமையோர்தொழுதேத்தநடமாடி
அடலிலங்கையரையன்வலிசெற்றருளம்மானமர்கோயில்
மடலிலங்குகமுகின்பலவின்மதுவிம்மும்வலிதாயம்
உடலிலங்குமுயிருள்ளளவுந்தொழவுள்ளத்துயர்போமே. (௮)

பெரியமேருவரையேசிலையாமலைவுற்றாரெயின்மூன்றும்
எரியவெய்தவொருவன்னிருவர்க்கறிவொண்ணாவடிவாகும்
எரியதாகியுறவோங்கியவன்வலிதாயந்தொழுதேத்த
உரியராகவுடையார்பெரியாரெனவுள்கும்முலகோரே. (௯)

ஆசியாரமொழியாரமண்சாக்கியரல்லாதவர்கூடி
ஏசியீரமிலராய்மொழிசெய்தவர்சொல்லைப்பொருளென்னேல்
வாசிதீரவடியார்க்கருள்செய்துவளர்ந்தான்வலிதாயம்
பேசுமார்வமுடையாரடியாரெனப்பேணும்பெரியோரே. (௧௦)

வண்டுவைகும்மணமல்கியசோலைவளரும்வலிதாயத்
தண்டவாணனடியுள்குதலாலருண்மாலைத்தமிழாகக்
கண்டல்வைகுகடற்காழியுண்ஞானசம்பந்தன்றமிழ்பத்தும்
கொண்டுவைகியிசைபாடவல்லார்குளிர்வானத்துயர்வாரே.† (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவலிதாயத்திருப்பதிகம் - ௧.

௨ திருப்பதிகம் - ௨௬.

சுவாமி தேவி திருநாமங்கள் - வலிதாயநாதர், தாயம்மை.

* காமன்றுருவீட்டிப் என்றும் பாடம் † சம்பந்தன் தமிழ் பத்தும் வலிதாயத்து அண்டவாணன் அடி உள்குதலால் அருட்டமிழ்மாலையாகக் கொண்டு இசை பாட வல்லார் எனக் கூட்டுக. தமிழ்பத்தும் - தமிழ்ப்பாக்கள் பத்தையும். அடி உள்குதலால் - திருவடியைத் தியானித்துப் பாடுதலால்; அடி - திருவருள். அருள் தமிழ் மாலையாகக் கொண்டு - அருட்பா மாலையாகமேற்கொண்டு. இசைபாட - பண்ணோடு பாட. அடியுள்குதல் - இறைபணிநிற்றல்; அஃதாவது திருவருளாலல்லது ஒன்றைக்கருதலும் செய்தலுமில்லாமை; ஞானசம்பந்தன் நம்பன்கழல்பேணி விண்டசெந்தமிழ் என முன்னர் அருளிச்செய்தது மது. தமிழ் இரண்டும் உள்குதலும் ஆகுபெயர்கள்.

Koviloor Digital Library

௨௨. வடதிருமுல்லைவாயில்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

திருவுமெய்ப்பொருளுஞ்செல்வமுமெனக்குன்சீருடைக்கழல்களென்றெண்ணி
ஒருவரைமதியாதுறாமைகள்செய்துமூடியுமுறைப்பனாய்த்திரிவேன்
முருகமர்சோலைசூழ்திருமுல்லைவாயிலாய்வாயினாலுன்னைப்
பரவிடுமடியேன்படுதுயர்களையாய்பாசுபதாபரஞ்சுடரே. (௧)

கூடியவிலயஞ்சதிபிழையாமைக்கொடியிடையுமையவள்காண
ஆடியவழகாவருமறைப்பொருளேயங்கணாவெங்குற்றாயென்று
தேடியவானோர்சேர்திருமுல்லைவாயிலாய்திருப்புகழ்விருப்பால்
பாடியவடியேன்படுதுயர்களையாய்பாசுபதாபரஞ்சுடரே. (௨)

விண்பணிந்தேத்தும்வேதியாமாதர்வெருவிடவேழமன்றுரித்தாய் *
செண்பகச்சோலைசூழ்திருமுல்லைவாயிலாய்தேவர்தம்மரசே
தண்பொழிலொற்றிமாநகருடையாய்சங்கிலிக்காவென்கண்கொண்ட
பண்பநின்னடியேன்படுதுயர்களையாய்பாசுபதாபரஞ்சுடரே. (௩)

பொன்னலங்கழனிப்புதுவிரைமருவிப்பொறிவரிவண்டிசைபாட
அந்நலங்கமலத்தவிசின்மேலுறங்குமலவன்வந்தலவிடவள்ளல்
செந்நெலங்கழனிசூழ்திருமுல்லைவாயிலாய்திருப்புகழ்விருப்பால்
பன்னலந்தமிழாற்பாடுவேற்கருளாய்பாசுபதாபரஞ்சுடரே. (௪)

சந்தனவேருங்காரகிற்குறடுந்தண்மயிற்பீலியுங்கரியின்
தந்தமுந்தரளக்குவைகளும்பவளக்கொடிகளுஞ்சுமந்துகொண்டுந்தி
வந்திழிபாலிவடகரைமுல்லைவாயிலாய்மாசிலாமணியே
பந்தனைகெடுத்தென்படுதுயர்களையாய்பாசுபதாபரஞ்சுடரே. (௫)

மற்றுநான்பெற்றதார்பெறவல்லார்வள்ளலேகள்ளமேபேசிக்
குற்றமேசெயினுங்குணமெனக்கொள்ளுங்†கொள்கையான்மிகைபலசெய்தேன்
செற்றுமீதோடுந்திரிபுரமெரித்ததிருமுல்லைவாயிலாயடியேன்
பற்றிலேனுற்றபடுதுயர்களையாய்பாசுபதாபரஞ்சுடரே. (௬)

மணிகெழுசெவ்வாய்வெண்ணகைக்கரியவார்குழன்மாமயிற்சாயல்
அணிகெழுகொங்கையங்கயற்கண்ணாரருநடமாடலறாத
திணிபொழிறழுவுதிருமுல்லைவாயிற்செல்வனேயெல்லியும்பகலும்
பணியதுசெய்வேன்படுதுயர்களையாய்பாசுபதாபரஞ்சுடரே. (௭)

* வேழமொன்றுரித்தாய் என்றும் பாடம். † குணமெனக்கருதுங் என்றும் பாடம்.

Koviloor Digital Library

நம்பனையன்றுவெண்ணெய்நல்லூரினாயினென்றன்னையாட்கொண்ட
சம்புவேயும்பாரார்தொழுதேத்துந்தடங்கடனஞ்சுண்டகண்டா
செம்பொன்மாளிகைசூழ்திருமுல்லைவாயிற்றேடியான்றிரிதர்வேன்கண்ட
பைம்பொனேயடியேன்படுதுயர்களையாய்பாசுபதாபரஞ்சுடரே. (அ)

பட்டுலாமலர்கொண்டடியிணைவணங்குமாணிதன்மேன்மதியாதே
கட்டுவான்வந்தகாலனைமாளக்காலினாலாருயிர்செகுத்த
சிட்டனேசெல்வத்திருமுல்லைவாயிற்செல்வனேசெழுமறைபகர்ந்த
பட்டனேயடியேன்படுதுயர்களையாய்பாசுபதாபரஞ்சுடரே. (கூ)

சொல்லரும்புகழான்றொண்டைமான்களிற்றைச்சூழ்கொடிமுல்லையாற்கட்டிட்
டெல்லையில்லின்பமவன்பெறவெளிப்பட்டருளியவிறைவனேயென்றும்
நல்லவர்பரவுந்திருமுல்லைவாயினாதனேநரைவிடையேறீ
பல்கலைப்பொருளேபடுதுயர்களையாய்பாசுபதாபரஞ்சுடரே. (கo)

விரைதருமலர்மேலயனொடுமாலும்வெருவிடநீண்டவெம்மானைத்
திரைதருபுனல்சூழ்திருமுல்லைவாயிற்செல்வனைநாவலாரூரன்
உரைதருமாலையோரஞ்சினோடஞ்சுமுள்குளிர்ந்தேத்தவல்லார்கள்
நரைதிரைமூப்புநடலையுமின்றிநண்ணுவர்விண்ணவர்க்கரசே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருமுல்லைவாயிற்றிருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - இச.

சுவாமி தேவி திருநாமங்கள் - பாசுபதேசுவரர், கொடியிடையாள்.

உ௩. திருவேற்காடு.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

ஒள்ளிதுள்ளக்கதிக்காமிவனொளி
வெள்ளியானுறைவேற்காடு
உள்ளியாருயர்ந்தாரிவ்வுலகினில்
தெள்ளியாரவர்தேவரே. (க)

ஆடனாகமசைத்தளவில்லதோர்
வேடங்கொண்டவன்வேற்காடு
பாடியும்பணிந்தாரிவ்வுலகினில்
சேடராகியசெல்வரே. (உ)

பூதம்பாடப்புறங்காட்டிடையாடி
வேதவித்தகன்வேற்காடு
போதஞ்சாந்தும்புகையுங்கொடுத்தவர்க்
கேத * மெய்துதலில்லையே. (௩)

* ஏதம் - துக்கம்.

Koviloor Digital Library

ஆழ்கடலெனக்கங்கைகரந்தவன்
வீழ்சடையினன்வேற்காடு
தாழ்விடைமனத்தாற்பணிந்தேத்திடப்
பாழ்படும்மவர்பாவமே. (ச)

காட்டினானுமயர்த்திடக்காலனை
வீட்டினானுறைவேற்காடு
பாட்டினாற்பணிந்தேத்திடவல்லவர்
ஓட்டினார்வினையொல்லையே. (ரு)

தோலினானுடைமேவவல்லான்சுடர்
வேலினானுறைவேற்காடு
நூலினாற்பணிந்தேத்திடவல்லவர்
மாலினார்வினைமாயுமே. (சா)

மல்லன்மும்மதின்மாய்தரவெய்ததோர்
வில்லினானுறைவேற்காடு
சொல்லவல்லசுருங்காமனத்தவர்
செல்லவல்லவர்தீர்க்கமே. * (எ)

மூரல்வெண்மதிசூடுமுடியுடை
வீரன்மேவியவேற்காடு
வாரமாய்வழிபாடுநினைந்தவர்
சேர்வர்செய்கழறிண்ணமே. (அ)

பரக்கினார்படுவெண்டலையிற்பலி
யிரக்கினானுறைவேற்காட்டூர்
அரக்கனாண்மையடரப்பட்டானிறை
நெருக்கினானைநினைமினே. (கூ)

மாறிலாமலரானொடுமாலவன்
வேறலானுறைவேற்காடு
ஈறிலாமொழியேமொழியாவெழில் †
கூறினார்க்கில்லைகுற்றமே. (க0)

விண்டமாம்பொழில்சூழ்திருவேற்காடு ‡
கண்டுநம்பன்கழல்பேணிச்
சண்பைஞானசம்பந்தனசெந்தமிழ் ¶
கொண்டுபாடக்குணமாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவேற்காட்டுத்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - ருரு.

சுவாமி தேவி திருநாமங்கள் - வேற்காட்டுநாதர், வேற்கண்ணியம்மை.

* வல்லவர்திக்கமே என்றும் பாடம். † மொழிவெம்மொழி என்றும் பாடம். ‡ சூழ் தருவேற்காடு என்றும் பாடம். ¶ தனதின்றமிழ் என்றும் பாடம்.

Koviloor Digital Library

உச. திருமயிலாப்பூர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பூம்பாவைத்திருப்பதிகம்.

பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

மட்டிட்டபுன்னையங்கானன்மடமயிலைக் *
கட்டிட்டங்கொண்டான்கபாலீச்சரமமர்ந்தான்
ஒட்டிட்டபண்பினுருத்திரபல்கணத்தார்க்
கட்டிட்டல் † காணாதேபோதியோபூம்பாவாய். (க)

மைப்பயந்தவொண்கண்மடநல்லார்மாமயிலைக்
கைப்பயந்தநீற்றான்கபாலீச்சரமமர்ந்தான்
ஐப்பசியோணவிழாவுமருந்தவர்கள்
துய்ப்பனவும் ‡ காணாதேபோதியோபூம்பாவாய். (உ)

வளைக்கைமடநல்லார்மாமயிலைவண்மறுகில்
துளக்கில்கபாலீச்சரத்தான்றொல்கார்த்திகைநாள்
தளத்தேந்திளமுலை ¶ யார்தையலார்கொண்டாடும்
விளக்கீடுகாணாதேபோதியோபூம்பாவாய். (ங)

* கானமடமயிலைக் என்றும் பாடம். † மயிலாப்பூர் கடல்சார்ந்த நிலமாகலான் நெய்தற் குரிய கருப்பொருளாகிய புன்னை மிகுத்துக் கூறப்பட்டது. கானல் ஈண்டுக் கழிக்கரைச்சோலை. மடப்பம் மயிலை விசேடித்தது; "குருதிக்கோட்டுக் குஞ்சரநகரம்" என்புழிக் குருதிக்கோடு குஞ்சரத்தை விசேடித்தாற்போல. மடங்கள் செறிந்த மயிலையுமாம். மயிலாப்பூர் மயிலையென மரீயிற்று. கட்டுகபாலீச்சரம் இடைப்பிறவந்தவினைத்தொகை; மயிலைக்கட்கட்டிய கபாலீச்சரம் என்க. அதில் இட்டங்கொண்டு அமர்ந்த சிவன் என்க; இட்டங்கொண்டான் வினையெச்சமுற்று. அமர்ந்தான் வினைப்பெயர். மயிலைக்கட்டு மயிலாப்பெனக்கொண்டு அதனிடத்திட்டம்வைத்துக் கபாலீச்சரத்தமர்ந்தவனெனினுமாம். உருத்திரர் - சிவனடியார்; அவர் சரியையாளர் முதலாகப் பல்வேறு குழுவினராகலான் பல்கணத்தா ரெனப்பட்டார். ஒட்டிட்டபண்பு - அத்துவிதமாக வியைந்தவியைபு; "பின்மார்க்கச்சிவன்" என்புழிப் பின்னுதலுமது. சரியையாளர், கிரியையாளர், யோகிகள் என்னுமிவரும் பரம்பரையின் மெய்ஞ்ஞானம் பெற்றுச் சிவனோடத்துவிதமாகவியைதல் ஒருதலையாகலான் அதுபற்றி அவரையுமுளப்படுத்தி ஒட்டிட்ட என இறந்தகாலத்தாற் கூறியருளினார். சரியைமுதலியன பரம்பரையின் மெய்ஞ்ஞானம் பயக்குமாற்றை "விரும்புஞ் சரியைமுதன் மெய்ஞ்ஞான நான்கும்—அரும்புமலர் காய்கனிபோ லன்றோ பராபரமே" என்னுந் திருவாக்காலுமுணர்க. ஒட்டிடுதல் சேர்தலெனக்கொண்டு இடைவிடாமற்றியானிப்போர் என்றலு மொன்று; சேர்தல் அப்பொருடந்துநிற்றலை "வேண்டுதல் வேண் டாமை யிலானடி சேர்ந்தார்க்—கியாண்டு மிடும்பை யில." என்னுந் திருக்குறளாலறிக. அடுதல் - சமைத்தல். இடுதல் - கொடுத்தல். ‡ உய்ப்பனவுங் என்றும் பாடம். ¶ தளர்த்தேந்திளமுலை என்றும் பாடம்; கச்சைநெகிழ்த்தலாற்றாங்கப்படுகின்றமுலை; தளர்த்தல் - நெகிழ்த்தல்; தளர்த்தென்னுஞ்செய்தெனெச்சங்காரணப்பொருட்டு. தளம் - சாந்து.

Koviloor Digital Library

ஊர்திரைவேலையுலாவுமுயர்மயிலைக்
கூர்தருவேல்வல்லார்கொற்றங்கொள்சேரிதனில்
கார்தருசோலைக்கபாலீச்சரமமர்ந்தான்
ஆதிரைநாள்காணுதேபோதியோபூம்பாவாய். (ச)

மைப்பூசுமொண்கண்மடநல்லார்மாமயிலைக்
கைப்பூசுநீற்ருன்கபாலீச்சரமமர்ந்தான்
நெய்ப்பூசுவெண்புழுக்க*னேரிழையார்கொண்டாடும்
தைப்பூசங்காணுதேபோதியோபூம்பாவாய். (ரு)

மடலார்ந்ததெங்கின்மயிலையார்மாசிக்
கடலாட்டுக்கண்டான்கபாலீச்சரமமர்ந்தான்
அடலானேறூருமடிகளடிபரவி
நடமாடல்காணுதேபோதியோபூம்பாவாய். (சு)

மலிவிழாவீதிமடநல்லார்மாமயிலைக்
கலிவிழாக்கண்டான்கபாலீச்சரமமர்ந்தான்
பலிவிழாப்பாடல்செய்பங்குனியுத்திரநாள்
ஒலிவிழாக்காணுதேபோதியோபூம்பாவாய். (எ)

தண்ணுவரக்கன்றோள்சாய்த்துகந்ததாளினுன்
கண்ணுர்மயிலைக்கபாலீச்சரமமர்ந்தான்
பண்ணுர்பதினெண்கணங்கடம்மட்டமிநாள்
கண்ணுரக்காணுதேபோதியோபூம்பாவாய். (அ)

நற்றுமரைமலர்மேலுன்முகனுநாரணனும்
உற்றுங்குணர்கிலாமூர்த்திதிருவடியைக்
கற்றூர்களேத்துங்கபாலீச்சரமமர்ந்தான்
பொற்றுப்புக்காணுதேபோதியோபூம்பாவாய். (கூ)

உரிஞ்சாயவாழ்க்கையமணுடையைப்போர்க்கும்
இருஞ்சாக்கியர்களெடுத்துரைப்பநாட்டில்
கருஞ்சோலைசூழ்ந்தகபாலீச்சரமமர்ந்தான் †
பெருஞ்சாந்திகாணுதேபோதியோபூம்பாவாய். (க0)

கானமர்சோலைக்கபாலீச்சரமமர்ந்தான்
தேனமர்பூம்பாவைப்பாட்டாகச்செந்தமிழான்
ஞானசம்பந்தனலம்புகழ்ந்தபத்தும்வலார்
வானசம்பந்தத்தவரோடும்வாழ்வாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருமயிலாப்பூர்த்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - ஙகூ.

சுவாமி தேவி திருநாமங்கள் - கபாலீசுவரர், கற்பகவல்லி.

* பூசுமொண்புழுக்கல் என்றும் பாடம். † சரத்தான்றன் என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருமயிலாப்பூரிலே வைசியர் குலத்திலே சிவபத்தி அடியார்பத்தி முதலியவற்றிற் சிறந்த சிவநேசர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் திருஞானசம்பந்தப்பிள்ளையார் ஞானப்பால் உண்டமையையும், பாண்டிநாட்டிற்சென்று செய்தருளிய திருவருட்டிறங்களையும் கேட்டு மனமகிழ்ந்து பிள்ளையாரைத் திக்குநோக்கி நமஸ்கரித்து எழுந்து நின்று, தம்முடைய சுற்றத்தார்கள் சமஸ்தருங்கேட்க, "அடியேன் என்னுடைய புத்திரியாகிய அழகிற் சிறந்த பூம்பாவையையும் திரவியங்களையும், என்னையும் திருஞானசம்பந்தப்பிள்ளையாருக்குக் கொடுத்துவிட்டேன்" என்று சொல்லிப் பேரானந்தம் அடைந்தார். அப்படியிருக்க, ஒருநாள் பூம்பாவை சேடியரோடு கன்னிமாடத்துக்குப் பக்கத்திலே இருந்த பூஞ்சோலையிற்சென்று பூக்கொய்யும்பொழுது, ஒருபாம்பு மல்லிகைப்பந்தரிலே மறைந்து வந்து விரலிலே தீண்ட அவள் இறந்தனள். சிவநேசர் அது கண்டு, "இவளைப் பிள்ளையாருக்கு என்று சொல்லியதனால், பிள்ளையார் வருமளவும் இவ்வுடலைத் தகனஞ்செய்து, எலும்பையும் சாம்பரையும் சேமித்து வைப்பேன்" என்று துணிந்து அப்படியே தகனஞ்செய்து, எலும்பையும், சாம்பரையும், ஓர் குடத்தில் இட்டு, கன்னிமாடத்தில் வைத்து, தினந்தோறும் மஞ்சனம், மாலை, சந்தனம், அன்னம், விளக்கு முதலியவைகளை அமைத்துவந்தார்.

இப்படி நிகழுநாளிலே, "பிள்ளையார் திருக்கூட்டத்தோடு திருவொற்றியூரில் எழுந்தருளிவந்து சுவாமிதரிசனஞ்செய்துகொண்டிருக்கின்றார்" என்று பலர் வந்து சிவநேசருக்குச்சொல்ல, அவர், அவர்களுக்கு வஸ்திரமுதலியவற்றைக் கொடுத்து, பெருங்களிப்புடையராகி, திருவொற்றியூர் வரைக்கும் நடைப்பந்தர் இட்டு, திருவொற்றியூருக்குச் சமீபித்தார். அப்பொழுது பிள்ளையாரும் திருவொற்றியூரை அகன்று, திருமயிலாப்பூரை நோக்கி அடியார்திருக்கூட்டத்தோடு எழுந்தருள, சிவநேசர் அளவில்லாத மகிழ்ச்சிகொண்டு விழுந்து நமஸ்கரித்தார். பிள்ளையார் சிவிகையினின்றும் இறங்கி, தொழுதுகொண்டெழுந்தருளி, சிவநேசருடைய செய்கையை அடியார்கள் சொல்லக்கேட்டு, திருமயிலாப்பூரை அடைந்து, சிவநேசரிடத்து நிகழ்ந்ததைத் திருவுளத்தடைத்து, அவருடைய கருத்தை முற்றுவித்தற்பொருட்டுக் கபாலீச்சரம் என்னும் ஆலயத்திற் பிரவேசித்து, சிவபெருமானை நமஸ்கரித்து, ஸ்தோத்திரஞ்செய்துகொண்டு, திருக்கோயிலுக்கு மேற்புறத்திலேவந்து சிவநேசரை நோக்கி, உம்முடைய மகளினது எலும்பு நிறைந்த குடத்தைத் திருக்கோயிற் புறமதிற் திருவாயிலிலே கொண்டுவாரும் என்று அருளிச்செய்தார். சிவநேசர் அவ்வாறே அக்குடத்தைச் சிவிகையிற் கொண்டுவந்து சிவலிங்கப்பெருமானுக்கு அபிமுகத்திலே வைத்து, நமஸ்காரம் பண்ணினார். அதைப் பார்க்கும்பொருட்டு, மனிதர்கள் பூமியிலும் தேவர்கள் ஆகாயத்திலும் வந்து நெருங்கினார்கள். பிள்ளையார் அடியார் திருக்கூட்டம் சூழ்ந்துவரத் திருக்கோபுரவாயிலின் நேரே வந்து, பூம்பாவையினது அத்தியிருக்கின்ற குடத்தைக்கண்டு, சிவபெருமானுடைய திருவருளின் பெருமையைச் சிந்தித்து, திருவருளினாலே "பூம்பாவாய்" என்று விளித்து, பூமியிலே மாநுடப்பிறப்பு எடுத்தவர்கள் பெறும் பயன் அன்புடனே சிவபிரானுடைய அடியார்களைத் திருவமுது செய்வித்தலும், சைவாகமவிதிப்படி செய்யப்படுகின்ற அச்சிவபெருமானுடையதிருவிழாவைத் தரிசித்து ஆனந்தம் அடைதலுமே என்பது சத்தியமாயின், நீ இவ்வுலகர்முன் வருவாய் என்று "மட்டிட்டபுன்னை" என்னுந் திருப்பதிகத்தை எடுத்தோதியருளினார். அதில் அருளிச்செய்யப்பட்ட "போதியோ" என்னுந் திருவாக்காகிய அமிர்தம் அவ்வங்கத்திலே பொருந்த, அது குடத்தினுள்ளே சரீரமாய்ப் பரிணமித்தது. பூம்பாவை முதற்றிருப்பாட்டிலே வடிவுபெற்று, வேறெட்டுப்பாட்டிலே பன்னிரண்டு வயசடைந்து, குடத்தினுள் அடங்கி யிருந்தனள். பின்பு பிள்ளையார் சமணர்களும் பௌத்தர்களும் இச்செய்கையை ஏற்றதன்று என்று எடுத்துச் சொல்வார்கள் என்னுங் கருத்தினுற் பத்தாந்திருப்பாட்டை அருளிச்செய்யப் பூம்பாவை தன்கை வெளியே தோன்ற, குடமுடைந்து எழுந்தனள். அதுகண்டு பிள்ளையார், திருக்கடைக்காப்புச்

Koviloor Digital Library

சாத்தியருளினர். எல்லோரும் அற்புதம் அடைந்தார்கள். சிவனடியார்கள் ஹர ஹர என்று ஆரவாரித்தார்கள். தேவர்களும் முனிவர்களும் புஷ்பமாரி பொழிந்தார்கள்.

உரு. திருவான்மியூர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர்.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

கரையுலாங்கடலிற்பொலிசங்கம்வெள்ளிப்பிவன்
திரையுலாங்கழிமீனுகளுந்திருவான்மியூர்
உரையுலாம்பொருளாயுலகாளுடையீர்சொலீர்
வரையுலாமடமாதுடனுகியமாண்பதே. (க)

சந்துயர்ந்தெழுகாரகிறண்புனல்கொல்டுதம்
சிந்தைசெய்தடியார்பரவுந்திருவான்மியூர்ச்
சுந்தரக்கழன்மேற்சிலம்பார்க்கவல்லீர்சொலீர்
அந்தியின்னெளியின்னிறமாக்கியவண்ணமே. (உ)

கானயங்கியதண்கழிசூழ்கடலின்புறம்
தேனயங்கியபைம்பொழில்சூழ்திருவான்மியூர்த்
தோனயங்கமராடையினீரடிகேள்சொலீர்
ஆனையங்கவ்வுரிபோர்த்தனலாடவுகந்ததே. (ந)

மஞ்சுலாவியமாடமதிற்பொலிமாளிகைச்
செஞ்சொலாளர்கடாம்பயிலுந்திருவான்மியூர்த்
துஞ்சுவஞ்சிருளாடலுக்கவல்லீர்சொலீர்
வஞ்சநஞ்சுண்டுவானவர்க்கின்னருள்வைத்ததே. (ச)

மண்ணினிற்புகழ்பெற்றவர்மங்கையர்தாம்பயில்
திண்ணெனப்புரிசைத்தொழிலார்திருவான்மியூர்த்
துண்ணெனத்திரியுஞ்சரிதைத்தொழிலீர்சொலீர்
விண்ணினிற்பிறைசெஞ்சடைவைத்தவியப்பதே. (ரு)

போதுலாவியதண்பொழில்சூழ்புரிசைப்புறம்
தீதிலந்தணரோத்தொழியாத்திருவான்மியூர்ச்
சூதுலாவியகொங்கையொர்பங்குடையீர்சொலீர்
மூதெயில்லொருமூன்றெரியூட்டியமொய்ம்பதே. (சு)

வண்டிரைத்ததடம்பொழிலின்னிழற்கானல்வாய்த்
தெண்டிரைக்கடலோதமல்குந்திருவான்மியூர்த்
தொண்டிரைத்தெழுந்தேத்தியதொல்கழலீர்சொலீர்
பண்டிருக்கொருநால்வர்க்குநீருரைசெய்ததே. (எ)

Koviloor Digital Library

தக்கில்வந்ததசக்கிரிவன்றலைபத்திறத்
திக்கில்வந்தலறவ்வடர்த்திர் திருவான்மியூர்த்
தொக்கமாதொடும்வீற்றிருந்திரருளென்சொலீர்
பக்கமேபலபாரிடம்பேய்கள்பயின்றதே. (அ)

பொருதுவார்கடலெண்டிசையுந்தருவாரியால்
திரிதரும்புகழ்செல்வமல்குந்திருவான்மியூர்ச்
சுருதியாரிருவர்க்குமறிவரியீர்சொலீர்
எருதுமேல்கொடுழன்றுகந்தில்பலியேற்றதே. (கூ)

மைதழைத்தெழுசோலையின்மாலைசேர்வண்டினம்
செய்தவத்தொழிலாரிசைசேர் திருவான்மியூர்
மெய்தவப்பொடிபூசிய *மேனியினீர்சொலீர்
கைதவச்சமண்சாக்கியர்கட்டுரைக்கின்றதே. (க0)

மாதொர்கூறுடைநற்றவனைத்திருவான்மியூர்
ஆதியெம்பெருமானருள்செய்தவினாவுரை
ஓதியன்றெழு † காழியுண்ஞானசம்பந்தன்சொல்
நீதியானினைவார்நெடுவானுலகாள்வரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பண் - கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

விரையார்கொன்றையினாய்விடமுண்டமிடற்றினனே
உரையார்பல்புகழாயுமைநங்கையோர்பங்குடையாய்
திரையார்தெண்கடல்சூழ்திருவான்மியூருறையும்
அரையாவுன்னையல்லாலடையாதெனதாதரவே. (க)

இடியாரேறுடையாயிமையோர்தம்மணிமுடியாய்
கொடியார்மாமதியோடரவம்மலர்க்கொன்றையினாய்
செடியார்மாதவிசூழ்திருவான்மியூருறையும்
அடிகேளுன்னையல்லாலடையாதெனதாதரவே. (உ)

கையார்வெண்மழுவாகனல்போற்றிருமேனியனே
மையாரொண்கணல்லாளுமையாள்வளர்மார்பினனே
செய்யார்செங்கயல்பாய்திருவான்மியூருறையும்
ஐயாவுன்னையல்லாலடையாதெனதாதரவே. (ஙு)

பொன்போலுஞ்சடைமேற்புனலுங்கியபுண்ணியனே
மின்போலும்புரிநூல்விடையேறியவேதியனே
தென்பால்வையமெலாந்திகழுந்திருவான்மிதன்னில்
அன்பாவுன்னையல்லாலடையாதெனதாதரவே. (ச)

* பொடிப்பூசிய என்றும் பாடம். † ஓதியன்றெழு - சிவஞானம் திருமுலைப்பாலுண்ட அப்பொழுதே தோன்றப்பெற்ற; ஓதி - ஈண்டுச்சிவஞானம்.

Koviloor Digital Library

கண்ணூருந்நுதலாய்கதிர்சூழொளிமேனியின்மேல்
எண்ணார்வெண்பொடிநீறணிவாயெழில்வார்பொழில்சூழ்*
திண்ணார்வண்புரிசைத்திருவான்மியூருறையும்
அண்ணாவுன்னையல்லாலடையாதெனதாதரவே. (ரு)

நீதீநின்னையல்லானெறியாதுநினைந்தறியேன்
ஓதீநான்மறைகண்மறையோன்றலையொன்றினையும்
சேதீசேதமில்லாத்திருவான்மியூருறையும்
ஆதீயுன்னையல்லாலடையாதெனதாதரவே. (சு)

வானார்மாமதிசேர்சடையாய்வரைபோலவரும்
கானாரானையின்றோலுரித்தாய்கறைமாமிடற்றாய்
தேனார்சோலைகள்சூழ்திருவான்மியூருறையும்
ஆனாயுன்னையல்லாலடையாதெனதாதரவே. (எ)

பொறிவாய்நாகணையானொடுபூமிசைமேயவனும்
நெறியார்நீள்கழன்மேன்முடிகாண்பரிதாயவனே
செறிவார்மாமதில்சூழ்திருவான்மியூருறையும்
அறிவேயுன்னையல்லாலடையாதெனதாதரவே. (கூ)

குண்டாடுஞ்சமண்ர்கொடுஞ்சாக்கியரென்றிவர்கள்
கண்டார்காரணங்கள்கருதாதவர்பேசநின்றாய்
திண்டேர்வீதியதார்திருவான்மியூருறையும்
அண்டாவுன்னையல்லாலடையாதெனதாதரவே. (க0)

கன்றாருங்கமுகின்வயல்சூழ்தருகாழிதனில்
நன்றானபுகழான்மிகுஞானசம்பந்தனுரை
சென்றார்தம்மிடர்தீர் திருவான்மியூரதன்மேல்
குன்றாதேத்தவல்லார்கொடுவல்வினைபோயறுமே. † (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

விண்டமாமலர்கொண்டுவிரைந்துநீர்
அண்டநாயகன் ‡றன்னடிசூழ்மின்கள்
பண்டுநீர்செய்தபாவம்பறைந்திடும் ¶
வண்டுசேர்பொழில்வான்மியூரீசனே. (க)

பொருளுஞ்சுற்றமும்பொய்ம்மையும்விட்டுநீர்
மருளுமாந்தரைமாற்றிமயக்கறுத்
தருளுமாவல்லவாதியாயென்றலும்
மருளறுத்திடும்வான்மியூரீசனே. (உ)

* யெழிலார்பொழில்சூழ் என்றும் பாடம். † இத்திருப்பதிகத்தில் அ—வது செய்யுள் மறைந்துபோயிற்று. ‡ அண்டர்நாயகன் என்றும் பாடம். ¶ பறைந்திடும் - பறைவித்திடும்; "மெய்ஞ்ஞானந்தானேவிளையும்" என்புழிப்போல விவ்விகுதி தொக்குநின்றது; பறைவித்தல் - பாறச்செய்தல்.

Koviloor Digital Library

மந்தமாகியசிந்தைமயக்கறுத்
தந்தமில்குணத்தானையடைந்துநின்
றெந்தையீசனென்றேத்திடவல்லிரேல்
வந்துநின்றிடும்வான்மியூரீசனே. (௩)

உள்ளமுள்கலந்தேத்தவல்லார்க்கலால்
கள்ளமுள்ளவசிக்கழிவானலன்
வெள்ளமும்மரவும்விரவுஞ்சடை
வள்ளலாகியவான்மியூரீசனே. (௪)

படங்கொள்பாம்பரைப்பான்மதிசூடியை
வடங்கொண்மென்முலைமாதொருகூறனைத்
தொடர்ந்துநின்றுதொழுதெழுவார்வினை
மடங்கநின்றிடும்வான்மியூரீசனே. (௫)

நெஞ்சிலவர்நினைக்கநினைக்குறூர்
பஞ்சின்மெல்லடியாளுமைபங்கவென்
றஞ்சிநாண்மலர்தூவியழுதிரேல்
வஞ்சந்தீர்த்திடும்வான்மியூரீசனே. (௬)

நுணங்கு* நூலயன்மாலுமறிகிலாக்
குணங்கடான்பரவிக்குறைந்துக்கவர்
சுணங்குபூண்முலைத்தூமொழிபாரவர்
வணங்கநின்றிடும்† வான்மியூரீசனே. (௭)

ஆதியும்மானுபயன்மாலுமாய்ப்
பாதிபெண்ணுருவாயபரமனென்
றோதியுள்குழைந்தேத்தவல்லாரவர்
வாதைதீர்த்திடும்வான்மியூரீசனே. (௮)

ஒட்டைமாடத்திலொன்பதுவாசலும்
காட்டில்வேவதன்முன்னங்கழலடி
நாட்டிநாண்மலர்தூவிவலஞ்செயில்
வாட்டந்தீர்த்திடும்வான்மியூரீசனே. (௯)

பாரமாகமலைபெடுத்தான்றனைச்
சீரமாகத்திருவிரலூன்றினான்
ஆர்வமாகவழைத்தவனேத்தலும்
வாரமாயினன்வான்மியூரீசனே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருவான்மியூர்த்திருப்பதிகம் - ௩.

ஆ திருப்பதிகம் - ௯௧.

சுவாமி தேவி திருநாமங்கள் - பால்வண்ணநாதர், சுந்தரநாயகி.

* நுணங்கு என்றும் பாடம். † வணங்கிநின்றிடும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

உசா. திருக்கச்சூராலக்கோயில்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - கொல்லிக்கௌவாணம்.

திருச்சிற்றம்பலம்.

முதுவாயோரிகதறமுதுகாட்டெரிகொண்டாடன்முயல்வானே
மதுவார்கொன்றைப்புதுவீசூடும்மலையான்மகடன்மணவாளா
கதுவாய்த்தலையிற்பலிநீகொள்ளக்கண்டாலடியார்கவலாரே
அதுவேயாமாறிதுவோகச்சூராலக்கோயிலம்மானே. (க)

கச்சேரரவொன்றரையிலசைத்துக்கழலுஞ்சிலம்புங்கலிக்கப்பலிக்கென்
றுச்சம்போதாவூரூர்திரியக்கண்டாலடியாருருகாரே
இச்சையறியோமெங்கள்பெருமானேழேழ்பிறப்புமெனையாள்வாய்
அச்சமில்லாக்கச்சூர்வடபாலாலக்கோயிலம்மானே. (உ)

சாலக்கோயிலுளநின்கோயிலவையென்றலைமேற்கொண்டாடி
மாலைத்தீர்ந்தேன்வினையுந்துரந்தேன்வானோரறியாநெறியானே
கோலக்கோயில்குறையாக்கோயில்குளிர்பூங்கச்சூர்வடபாலை
ஆலக்கோயிற்கல்லானிழற்கீழறங்கட்டுரைத்தவம்மானே. (௩)

விடையுங்கொடியுஞ்சடையுமுடையாய்மின்னேருருவத்தொளியானே
கடையும்புடைசூழ்மணிமண்டபமுங்கன்னிமாடங்கலந்தெங்கும்
புடையும்பொழிலும்புனலுந்தழுவிப்* பூமேற்றிருமாமகள்புல்கி
அடையுங்கழனிப்பழனக்கச்சூராலக்கோயிலம்மானே. (௪)

மேலைவிதியேவினையின்பயனே† விரவார்புரமூன்றெரிசெய்தாய்
காலையெழுந்துதொழுவார்தங்கள்கவலைகளைவாய்கறைக்கண்டா
மாலைமதியேமலைமேன்மருந்தேமறவேனடியேன்வயல்சூழ்ந்த
ஆலைக்கழனிப்பழனக்கச்சூராலக்கோயிலம்மானே. (௫)

பிறவாயிறவாய்பேணாய்மூவாய்பெற்றமேறிப்பேய்சூழ்தல்
துறவாய்மறவாய்சுடுகாடென்றுமிடமாக்கொண்டுநடமாடி
ஒறுவாய்த்தலையிற்பலிநீகொள்ளக்கண்டாலடியாருருகாரே
அறவேயொழியாய்கச்சூர்வடபாலாலக்கோயிலம்மானே. (௬)

பொய்யேயுன்னைப்புகழ்வார்புகழ்ந்தாலதுவும்பொருளாக்கொள்வானே
மெய்யேயெங்கள்பெருமானுன்னைநினைவாரவரைநினைகண்டாய்
மையார்தடங்கண்மடந்தைபங்கா‡ கங்கார்மதியஞ்சடைவைத்த¶
ஐயாசெய்யாய்வெளியாய்கச்சூராலக்கோயிலம்மானே. (௭)

* புடையும்புனலும்பொழிலுந்தழுவிப் என்றும் பாடம். † விதியின்பயனே என்றும் பாடம். ‡ மங்கைபங்கா என்றும் பாடம். ¶ கம் கார் மதி அம் சடைவைத்த எனப்பிரிக்க; கங்காநதியஞ்சடைவைத்த என்றும் பாடம்.

Koviloor Digital Library

ஊனைப்பெருக்கியுன்னைநினையாதொழிந்தேன்செடியேனுணர்வில்லேன்
கானக்கொன்றைகமழமலருங்கடிநாறுடையாய்கச்சூராய்
மானைப்புரையுமடமென்னோக்கிமடவாளஞ்சமறைத்திட்ட
ஆனைத்தோலாய்ஞானக்கண்ணாயாலக்கோயிலம்மானே. (௮)

காதல்செய்துகளித்துப்பிதற்றிக்கடிமாமலரிட்டுனையேத்தி
ஆதல்செய்யுமடியாரிருக்கவையங்கொள்வதழகிதே
ஓதக்கண்டே* னுன்னைமறவேனுமையாள்கணவாவெனையாள்வாய்
ஆதற்பழனக்கழனிக்கச்சூ† ராலக்கோயிலம்மானே. (௯)

அன்னமன்னும்வயல்சூழ்கச்சூராலக்கோயிலம்மானை
உன்னமுன்னுமனத்தாரூராரூரன்பேர்முடிவைத்த
மன்னுபுலவன்வயனாவலர்கோன்செஞ்சொன்னாவன்வன்றொண்டன்
பன்னுதமிழ்நூன்மாலைவல்லாரவரெந்தலைமேற் ‡ பயில்வாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருக்கச்சூராலக்கோயிற்றிருப்பதிகம் - ௧.

ஆ திருப்பதிகம் - ௯௦.

சுவாமி தேவி திருநாமங்கள் - விருந்திட்டவரதர், உமையம்மை.

சுந்தரமூர்த்திநாயனார், திருக்கச்சூரிற்சென்று ஆலக்கோயிலுள்ளே பிரவேசித்துச் சுவாமிதரிசனஞ்செய்து, புறத்திலே வந்து அமுதுசெய்யும்பொழுதாகியும், பாகம்பண்ணப் பரிசனங்கள் வாராமையால் மிகுந்த பசியினாலே மதிற்புறத்தில் இருந்தார். அப்பொழுது சிவபிரான் ஒரு பிராமணராகி, ஒரு ஓட்டை ஏந்திக்கொண்டு, அவரிடத்திற்சென்று "நீர் பசியினால் மிக வருந்தி இளைப்புற்றிருக்கின்றீர். நான் இப்பொழுது உமக்கு அன்னம் யாசித்துக்கொண்டு வருவேன். நீர் அப்புறம்போகாமல் சிறிதுபொழுது இங்கே இரும்" என்று சொல்லி, அவ்வூரிலுள்ள பிராமண வீடுகளில் அன்னமும் கறியும் யாசித்துக்கொண்டுவந்து சுந்தரமூர்த்திநாயனாரிடத்திற் கொடுக்க, நாயனார் மகிழ்ச்சியோடு வாங்கித் தம்மோடுவந்த தொண்டர்களுடனே அமுது செய்தார். உடனே அவ்வையர் மறைந்தருளினார். அதுகண்டு சுந்தரமூர்த்திநாயனார் அவர் சிவபெருமானென்று உணர்ந்து, மனங்கசிந்துருகி "முதுவாயோரிகதற" என்னுந் திருப்பதிகம் பாடியருளினார்.

* ஓதக்கண்டேன் - உன்னைப்பாட அறிந்துகொண்டேன்; காணல் - அறிதல்.
† ஆதற்சோலைப்பழனக்கச்சூர் என்றும் பாடம். ‡ ரவரென்றலைமேற் என்றும் பாடம்.

Koviloor Digital Library

உஎ. திருவிடைச்சுரம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண் -குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

வரிவளரவிரொளியரவரைதாழ
வார்சடைமுடிமிசைவளர்மதிசூடிக்
கரிவளர்தருகழல்கால்வலனேந்திக்
கனலெரியாடுவர்காடரங்காக
விரிவளர்தருபொழிலிளமயிலால*
வெண்ணிறத்தருவிகடிண்ணெனவீழும்
எரிவளரினமணிபுனமணிசார
லிடைச்சுரமேவியவிவர்வணமென்னே. (க)

ஆற்றையுமேற்றதோரவிர்சடையுடைய
ரழகினையருளுவர்குழகலதறியார்
கூற்றுயிர்செகுப்பதோர்கொடுமையையுடையர்
நடுவிருளாடுவர்கொன்றையந்தாரார்
சேற்றயன்மிளிர்வனகயலிளவாளை
செருச்செயவோர்ப்பனசெம்முகமந்தி
ஏற்றை† யொடுழிதருமெழிறிகழ்சார
லிடைச்சுரமேவியவிவர்வணமென்னே. (உ)

கானமுஞ்சுடலையுங்கற்படுநிலனுங்
காதலர்தீதிலர்கனன்மழுவாளர்‡
வானமுநிலமையு¶ மிருமையுமானார்
வணங்கவுமிணங்கவும்வாழ்த்தவும்படுவார்
நானமும்புகையொளிவிரையொடுகமழ
நளிர்பொழிலிளமஞ்ஞைமன்னியபாங்கர்
ஏனமும்பிணையலுமெழிறிகழ்சார
லிடைச்சுரமேவியவிவர்வணமென்னே. (ங)

கடமணிமார்பினர்கடறனிலுறைவார்
காதலர்தீதிலர்கனன்மழுவாளர்
விடமணிமிடறினர்மிளிர்வதோரரவர்
வேறுமோர்சரிதையர்வேடமுமுடையர்

* பொழிலினமயிலால என்றும் பாடம். † "ஆற்றலொடு புணர்ந்த வாண்பாற் கெல்லாம்—ஏற்றைக் கிளிவி யுரித்தென மொழிப" என்றாராகலின் குரங்கினுள் ஆண், ஏற்றை எனப்பட்டது. ‡ கனயமுவாளர் என்றும் பாடம். ¶ நிலமையும் என்புழி மைவிகுதி தன்மைப்பொருளுணர்த்தாது தன்மையுடைப்பொருளையே உணர்த்தி நின்றது; "மும்மைமலர்க்கு" என்புழிப்போல; நிலைமையும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

வடமுலையயலனகருங்குருந்தேறி
வாழையின்றீங்கனிவார்ந்துதேனட்டும்
இடமுலையரிவையரெழிறிகழ்சார
லிடைச்சுரமேவியவிவர்வணமென்னே. (௪)

கார்கொண்டகடிகமழ்விரிமலர்க்கொன்றைக்
கண்ணியர்வளர்மதிகதிர்விடக்கங்கை
நீர்கொண்டசடையினர்விடையுயர்கொடியர்
நிழறிகழ்மழுவினரழறிகழ்நிறத்தர்
சீர்கொண்டமென்சிறைவண்டுபண்செய்யும்
செழும்புனலனையனசெங்குலைவாழை
ஏர்கொண்டபலவினொடெழிறிகழ்சார
லிடைச்சுரமேவியவிவர்வணமென்னே. (௫)

தோடணிகுழையினர்சுண்ணவெண்ணீற்றர்
சுடலையினாடுவர்தோலுடையாகப்
பீடுயர்செய்ததோர்பெருமையையுடையர்
பேயுடனாடுவர்பெரியவர்பெருமான்
கோடல்களொழுகுவமுழுகுவதும்பி
குரவமுமரவமுமன்னியபாங்கர்
ஏடவிழ்புதுமலர்கடிகமழ்சார
லிடைச்சுரமேவியவிவர்வணமென்னே. (௬)

கழன்மல்குகாலினர்வேலினர்நூலர்
கவர்தலையரவொடுகண்டியும்பூண்பர்
அழன்மல்குமெரியொடுமணிமழுவேந்தி
யாடுவர்பாடுவராரணங்குடையர்
பொழின்மல்குநீடியவரவமுமரவ
மன்னியகவட்டிடைப்புணர்குயிலாலும்
எழின்மல்குசோலையில்வண்டிசைபாடு
மிடைச்சுரமேவியவிவர்வணமென்னே. (௭)

தேங்கமழ்கொன்றையந்திருமலர்புனைவார்
திகழ்தருசடைமிசைத்திங்களுஞ்சூடி
வீந்தவர்சுடலைவெண்ணீறுமெய்ப்பூசி
வேறுமோர்சரிதையர்வேடமுமுடையர்
சாந்தமுமகிலொடுமுகில்பொதிந்தலம்பித்
தவழ்கனமணியொடுமிகுபளிங்கிடறி
ஏந்துவெள்ளருவிகளெழிறிகழ்சார
லிடைச்சுரமேவியவிவர்வணமென்னே. (௮)

பலவிலமிடுபலிகையிலொன்றேற்பர்
பலபுகழல்லதுபழியிலர்தாமும்
தலையிலங்கவிரொளிநெடுமுடியரக்கன்
றடக்கைகளடர்த்ததோர்தன்மையையுடையர்

Koviloor Digital Library

மலையிலங்கருவிகண்மணமுழவதிர
மழைதவழிளமஞ்ஞைமல்கியசாரல்
இலையிலவங்கமுமேலமுங்கமழு
மிடைச்சுரமேவியவிவர்வணமென்னே. (௯)

பெருமைகடருக்கியோர்பேதுறுகின்ற
பெருங்கடல்வண்ணனும்பிரமனுமோரா
அருமையாடிநிழல்பரவிநின்றேத்து
மன்புடையடியவர்க்கணியருமாவர்
கருமைகொள்வடிவொடுசுனைவளர்குவளைக்
கயலினம்வயலிளவாளைகளிரிய
எருமைகள்படிதரவிளவனமாறு
மிடைச்சுரமேவியவிவர்வணமென்னே. (௧0)

மடைச்சுரமறிவனவாளையுங்கயலு
மருவியவயறனில்வருபுனற்காழிச்
சடைச்சுரத்*துறைவதோர்பிறையுடையண்ணல்
சரிதைகள்பரவிநின்றுருகுசம்பந்தன்
புடைச்சுரத்தருவரைப்பூக்கமழ்சாரற்
புணர்மடநடையவர்புடையிடையார்ந்த
இடைச்சுரமேத்தியவிசையொடுபாட
லிவைசொலவல்லவர்பிணியிலர்தாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவிடைச்சுரத்திருப்பதிகம்-௧.

ஆ திருப்பதிகம் - ௬௧.

சுவாமி தேவி திருநாமங்கள் - இடைச்சுரநாதர், இமயமடக்கொடி.

௨அ. திருக்கழுக்குன்றம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

தோடுடையானொருகாதிற்றூயகுழைதாழ
ஏடுடையான்றலைகலனாகவிரந்துண்ணும்
நாடுடையானள்ளிருளேமநடமாடும்
காடுடையான்காதல்செய்கோயில்கழுக்குன்றே. (௧)

கேணவல்லான்கேழல்வெண்கொம்புகுறளாமை
பூணவல்லான்புரிசடைமேலோர்புனல்கொன்றை
பேணவல்லான்பெண்மகடன்னையொருபாகம்
காணவல்லான்காதல்செய்கோயில்கழுக்குன்றே. (௨)

* சடைச்சுரம் - சடைக்காடு.

Koviloor Digital Library

தேனகத்தார்வண்டதுவுண்டதிகழ்கொன்றை
தானகத்தார்தண்மதிசூடித்தலைமேலோர்
வானகத்தார்வையகத்தார்கடொழுதேத்தும்
கானகத்தான்காதல்செய்கோயில்கழுக்குன்றே. (ங)

துணையல்செய்தான்றூயவண்டியாழ்செய்சுடர்க்கொன்றை
பிணையல்செய்தான்பெண்ணினல்லாளையொருபாகம்
இணையல்செய்யாவிலங்கெயின்மூன்றுமெரியுண்ணக்
கணையல்செய்தான்காதல்செய்கோயில்கழுக்குன்றே. (ச)

பையுடையபாம்பொடுநீறுபயில்கின்ற
மெய்யுடையான்வெண்பிறைசூடிவிரிகொன்றை
மையுடையமாமிடற்றண்ணன்மறிசேர்ந்த
கையுடையான்காதல்செய்கோயில்கழுக்குன்றே. (ரு)

வெள்ளமெல்லாம்விரிசடைமேலோர்விரிகொன்றை
கொள்ளவல்லான்குரைகழலேத்துஞ்சிறுத்தொண்டர் *
உள்ளமெல்லாமுள்கிநின்றாங்கேயுடனாடும்
கள்ளம்வல்லான்காதல்செய்கோயில்கழுக்குன்றே. (சு)

ஆதல்செய்தானரக்கர்தங்கோனைபருவரையின்
நோதல்செய்தானொடியளவின் † கண்விரலூன்றிப்
பேர்தல்செய்தான்பெண்மகடன்னோடொருபாகம்
காதல்செய்தான்காதல்செய்கோயில்கழுக்குன்றே. (அ)

இடந்தபெம்மானேனமதாயுமனமாயும்
தொடர்ந்தபெம்மான்றூமதிசூடிவரையார்தம்
மடந்தைபெம்மான்வார்கழலோச்சிக்காலனைக்
கடந்தபெம்மான்காதல்செய்கோயில்கழுக்குன்றே. (கூ)

தேயநின்றான்றிரிபுரங்கங்கைசடைமேலே
பாயநின்றான்பலர்புகழ்ந்தேத்தவுலகெல்லாம்
சாயநின்றான்வன்சமண்குண்டர்சாக்கியர்
காயநின்றான் ‡ காதல்செய்கோயில்கழுக்குன்றே. (க0)

கண்ணுதலான்காதல்செய்கோயில்கழுக்குன்றை
நண்ணியசீர்ஞானசம்பந்தன்றமிழ்மாலை
பண்ணியல்பாற்பாடியபத்துமிவைவல்லார்
புண்ணியராய்விண்ணவரோடும்புகுவாரே. ¶ (கக)

திருச்சிற்றம்பலம்.

* சிறுதொண்டர் என்றும் பாடம். † நொடிவரையின் என்றும் பாடம். ‡ சாக்கியர்கள்-காயநின்றான் என்பாருமுளர். ¶ இத்திருப்பதிகத்தில் எ-வது செய்யுள் மறைந்துபோயிற்று.

Koviloor Digital Library

திருநாவுக்கரசுநாயனர்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

மூவிலைவேற்கையானைமூர்த்திதன்னை
முதுபிணக்காடுடையானைமுதலானானை
ஆவினிலைந்துகந்தானையமரர்கோனை
யாலாலமுண்டுகந்தவம்மான்றன்னைப்*
பூவினின்மேனான்முகனுமாலும்போற்றப்
புணர்வரியபெருமானைப்புனிதன்றன்னைக்
காவலனைக்கழுக்குன்றமமர்ந்தான்றன்னைக்†
கற்பகத்தைக்கண்ணாரக்கண்டேனானே. (க)

பல்லாடுதலைசடைமேலுடையான்றன்னைப்
பாய்புலித்தோலுடையானைப்பகவன்றன்னைச்
சொல்லோடுபொருளனைத்துமானான்றன்னைச்
சுடருருவிலென்பராக்கோலத்தானை
அல்லாதகாலனைமுன்னடர்த்தான்றன்னை
யாலின்கீழிருந்தானையமுதானானைக்
கல்லாடைபுனைந்தருளுங்காபாலியைக்
கற்பகத்தைக்கண்ணாரக்கண்டேனானே.‡ (உ)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனர்.

பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

கொன்றுசெய்த¶ கொடுமையாற்பலசொல்லவே
நின்றபாவவினை§ கடாம்பலநீங்கவே
சென்றுசென்றுதொழுமின்றேவர்பிரானிடம்
கன்றினோடுபிடிசூழ்தண்கழுக்குன்றமே. (க)

இறங்கிச்சென்றுதொழுமினின்னிசைபாடியே०
பிறங்குகொன்றைச்சடையனெங்கள்பிரானிடம்
நிறங்கள்செய்தமணிகணித்திலங்கொண்டிழி
கறங்குவெள்ளையருவித்தண்கழுக்குன்றமே. (உ)

* மொந்தவையன்றன்னைப் என்றும் பாடம். † குன்றமுடையான்றன்னைக் என்றும், குன்றத்தமர்ந்தான்றன்னைக் என்றும் பாடம். ‡ இத்திருப்பதிகத்தில் ௩, ௪, ௫, ௬, ௭, ௮, ௯, க0 இச்செய்யுள்கள் மறைந்துபோயின. ¶ கொன்றுசெய்து என்றும் பாடம். § பாவம்வினை என்றும் பாடம். ० பாடவே என்றும் பாடம்.

நீளநின்றுதொழுமினித்தலுநீதியால்
ஆளுநம்வினைகளல்கியழிந்திடத்
தோளுமெட்டுமுடையமாமணிச்சோதியான்
காளகண்டனுறையுந்தண்கழுக்குன்றமே. (௩)

வெளிறுதீரத்தொழுமின்வெண்பொடியாடியை
முளிறிலங்குமழுவாளன்முந்தியுறைவிடம்
பிளிறுதீரப்பெருங்கைப்பெய்ம்மதமூன்றுடைக்
களிறினோடுபிடிசூழ்தண்கழுக்குன்றமே. (௪)

புலைகடாத்தொழுமின்புன்சடைப்புண்ணியன்
இலைகொள்சூலப்படையனெந்தைபிரானிடம்
முலைகளுண்டுதழுவிக்குட்டியொடுமுசுக்
கலைகள்பாயும்புறவிற்றண்கழுக்குன்றமே. (௫)

மடமுடையவடியார்தம்மனத்தேயுற
விடமுடையமிடறன்விண்ணவர்மேலவன்
படமுடையவரவன்றான்பயிலும்மிடம்
கடமுடையபுறவிற்றண்கழுக்குன்றமே. (௬)

ஊனமில்லாவடியார்தம்மனத்தேயுற
ஞானமூர்த்திநட்டமாடிநவிலும்மிடம்
தேனும்வண்டும்மதுவுண்டின்னிசைபாடியே
கானமஞ்ஞையுறையுந்தண்கழுக்குன்றமே. (௭)

அந்தமில்லாவடியார்தம்மனத்தேயுற
வந்துநாளும்வணங்கிமாலொடுநான்முகன்
சிந்தைசெய்த* மலர்கணித்தலுஞ்சேரவே
கந்தநாறும்புறவிற்† றண்கழுக்குன்றமே. (௮)

பிழைகடாத்தொழுமின்பின்சடைப்‡ பிஞ்ஞகன்
குழைகொள்காதன்குழகன்றானுறையும்மிடம்
மழைகள்சாலக்கலித்துநீடுயர்வேயவை
குழை¶ கொண்முத்தஞ்சொரியுந்தண்கழுக்குன்றமே. (௯)

பல்லில்வெள்ளைத்தலையன்றான்பயிலும்மிடம்
கல்லில்வெள்ளையருவித்தண்கழுக்குன்றினை
மல்லின்மல்குதிரடோளூரன்வனப்பினால்
சொல்லல்சொல்லித்தொழுவாரைத்தொழுமின்களே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருக்கழுக்குன்றத்திருப்பதிகம் - ௩.

ஆ திருப்பதிகம் - ௧௪.

சுவாமி தேவி திருநாமங்கள் - வேதகிரீசுவரர், பெண்ணினல்லாள்.

* சிந்தைசெய்து என்றும் பாடம். † சந்தநாறும்புறவிற் என்றும் பாடம். ‡ தொழுமின்புன்சடைப் என்றும் பாடம். ¶ கழை என்றும் பாடம்.

Koviloor Digital Library

உகூ. திருவச்சிறுபாக்கம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

பொன்றிரண்டன்னபுரிசடைபுரளப்
பொருகடற்பவளமொடழனிறம்புரையக்
குன்றிரண்டன்னதோளுடையகலங்
குலாயவெண்ணூலொடுகொழும்பொடியணிவர்
மின்றிரண்டன்னநுண்ணிடையரிவை
மெல்லியலாளையோர்பாகமாப்பேணி
அன்றிரண்டுருவ* மாயவெம்மடிக
ளச்சிறுபாக்கமதாட்சிகொண்டாரே. (க)

தேனினுமினியர்பாலனநீற்றர்
தீங்கரும்பனையர்தந்திருவடிதொழுவார்
ஊனயந்துருகவுவகைகடருவா
ருச்சிமேலுறைபவரொன்றலாதூரார்
வானகமிறந்துவையகம்வணங்க
வயங்கொளநிற்பதோர்வடிவினையுடையார்
ஆனையினுரிவைபோர்த்தவெம்மடிக
ளச்சிறுபாக்கமதாட்சிகொண்டாரே. (உ)

காரிருளுருவமால்வரைபுரையக்
களிற்றினதுருவுகொண்டரிவைமேலோடி †
நீருருமகளைநிமிர்சடைத்தாங்கி
நீறணிந்தேறுகந்தேறியநிமலர்
பேரருளாளர்பிறவியிற்சேரார்
பிணியிலர்கேடிலர்பேய்க்கணஞ்சூழ
ஆரிருண்மாலையாடுமெம்மடிக
ளச்சிறுபாக்கமதாட்சிகொண்டாரே. (௩)

மைம்மலர்க்கோதைமார்பினரெனவு
மலைமகளவளொடுமருவினரெனவும்
செம்மலர்ப்பிறையுஞ்சிறையணிபுனலுஞ்
சென்னிமேலுடையரெஞ்சென்னிமேலுறைவார்
தம்மலரடியொன்றடியவர்பரவத் ‡
தமிழ்ச்சொலும்வடசொலுந்தாணிழற்சேர
அம்மலர்க்கொன்றையணிந்தவெம்மடிக
ளச்சிறுபாக்கமதாட்சிகொண்டாரே. (௪)

* அன்றிரண்டுருவம் - ஒன்றேடொன்று மாறுபட்ட ஆண்பெண்ணாகிய இரண்டு வடிவம். அன்று - சிருட்டியாரம்பகாலமுமாம். † துரிவைகொண்டரிவையேலோடி என்றும் பாடம். ‡ ரடியென்றடியவர்பரவத் என்றும், ரடியன்றடியவர்பரவத் என்றும் பாடம்.

Koviloor Digital Library

விண்ணுலாமதியஞ்சூடினரெனவும்
விரிசடையுள்ளதுவெள்ளநீரெனவும்
பண்ணுலாமறைகள்பாடினரெனவும்
பலபுகழல்லதுபழியிலரெனவும்
எண்ணலாகாதவிமையவர்நாளு
மேத்தரவங்களோடெழில்பெறநின்ற
அண்ணலாரூர்தியேறுமெம்மடிக
ளச்சிறுபாக்கமதாட்சிகொண்டாரே. (ரு)

நீடிருஞ்சடைமேலிளம்பிறைதுளங்க
நிழறிகழ்மழுவொடுநீறுமெய்பூசித்
தோடொருகாதினிற்பெய்துவெய்தாய
சுடலையிலாடுவர்தோலுடையாகக்
காடரங்காகக்கங்குலும்பகலுங்
கழுதொடுபாரிடங்கைதொழுதேத்த
ஆடரவாடவாடுமெம்மடிக
ளச்சிறுபாக்கமதாட்சிகொண்டாரே. (சு)

ஏறுமொன்றேறிநீறுமெய்பூசி
யிளங்கிளையரிவையொடொருங்குடனாகிக்
கூறுமொன்றருளிக்கொன்றையந்தாருங்
குளிரிளமதியமுங்கூவிளமலரும்
நாறுமல்லிகையுமெருக்கொடுமுருக்கு
மகிழிளவன்னியுமிவைநலம்பகர
ஆறுமோர்சடைமேலணிந்தவெம்மடிக
ளச்சிறுபாக்கமதாட்சிகொண்டாரே. (எ)

கச்சுமொள்வாளுங்கட்டியவுடையர்
கதிர்முடிசுடர்விடக்கவரியுங்குடையும்
பிச்சமும்பிறவும்பெண்ணணங்காய
பிறைநுதலவர்தமைப்பெரியவர்பேணப்
பச்சமும்வலியுங்கருதியவரக்கன்
பருவரையெடுத்ததிண்டோள்களையடர்வித்
தச்சமுமருளுங்கொடுத்தவெம்மடிக
ளச்சிறுபாக்கமதாட்சிகொண்டாரே. (அ)

நோற்றலாரேனும்வேட்டலாரேனு
நுகர்புகர்சாந்தமொடேந்தியமாலைக்
கூற்றலாரேனுமின்னவாறென்று
மெய்தலாகாததோரியல்பினையுடையார்
தோற்றலார்மாலுநான்முகமுடைய
தோன்றலுமடியொடுமுடியுறத்தங்கள்
ஆற்றலாற்காணாராயவெம்மடிக
ளச்சிறுபாக்கமதாட்சிகொண்டாரே. (கூ)

Koviloor Digital Library

வாதுசெய்சமணுஞ்சாக்கியப்பேய்க
ளல்வினைநீக்கியவல்வினையாளர்
ஓதியுங்கேட்டுமுணர்வினையிலாதா
ருள்கலாகாததோரியல்பினையுடையார்
வேதமும்வேதநெறிகளுமாகி
விமலவேடத்தொடுகமலமாமதிபோல்
ஆதியுமீறுமாயவெம்மடிக
ளச்சிறுபாக்கமதாட்சிகொண்டாரே. (கo)

மைச்செறிகுவளைதவளைவாய்நிறைய
மதுமலர்ப்பொய்கையிற்புதுமலர்கிழியப்
பச்சிறவெறிவயல்வெறிகமழ்காழிப்
பதியவரதிபதிகவுணியர்பெருமான்
கைச்சிறுமறியவன்கழலலாற்பேணுக்
கருத்துடைஞானசம்பந்தனதமிழ்கொண்
டச்சிறுபாக்கத்தடிகளையேத்து
மன்புடையடியவரருவினையிலரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவச்சிறுபாக்கத்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - கூ௬.

சுவாமி தேவி திருநாமங்கள் - பாக்கபுரேசுவரர், சுந்தரநாயகி.

ங௰. திருவக்கரை.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

கறையணிமாமிடற்றான்கரிகாடரங்காவுடையான்
பிறையணிகொன்றையினானொருபாகமும்பெண்ணமர்ந்தான்
மறையவன்றன்றலையிற்பலிகொள்பவன்வக்கரையில்
உறைபவனெங்கள்பிரானொலியார்கழலுள்குதுமே. (க)

பாய்ந்தவன்காலனைமுன்பணைத்தோளியொர்பாகமதா
வெய்ந்தவனெண்ணிறந்த * விமையோர்கடொழுதிறைஞ்ச
வாய்ந்தவன்முப்புரங்களெரிசெய்தவன்வக்கரையில்
தேய்ந்திளவெண்பிறைசேர்சடையானடிசெப்புதுமே. (உ)

* னெண்ணிறைந்தவ் என்றும் பாடம்.

Koviloor Digital Library

சந்திரசேகரனேயருளாயென்றுதன்விசும்பில்
இந்திரனும்* முதலாவிமையோர்கடொழுதிறைஞ்ச
அந்தரமூவெயிலுமனலாய்விழவோரம்பினால்
மந்தரமேரு † வில்லாவளைத்தானிடம்வக்கரையே. (௩)

நெய்யணிசூலமொடுநீறுவெண்மழுவும்மரவும்
கையணிகொள்கையினன்கனன்மேவியவாடலினன்
மெய்யணிவெண்பொடியான்விரிகோவணவாடையின்மேல்
மையணிமாமிடற்றானுறையும்மிடம்வக்கரையே. (௪)

ஏனவெண்கொம்பினொடும்மிளவாமையும்பூண்டுகந்து
கூனிளவெண்பிறையுங்குளிர்மத்தமுஞ்சூடிநல்ல
மானனமென்விழிபாளொடும்வக்கரைமேவியவன்
தானவர்முப்புரங்களெரிசெய்ததலைமகனே. (௫)

கார்மலிகொன்றையொடுங்கதிர்மத்தமும்வாளரவும்
நீர்மலியுஞ்சடை ‡ மேனிரம்பாமதிசூடிநல்ல
வார்மலிமென்முலைபாளொடும்வக்கரைமேவியவன்
பார்மலிவெண்டலையிற்பலிகொண்டுழல்பான்மையனே. (௬)

கானணவும்மறிமானொருகைபதோர்கைமழுவாள்
தேனணவுங்குழலாளுமைசேர்திருமேனியினன்
வானணவும்பொழில்சூழ்திருவக்கரைமேவியவன்
ஊனணவுந்தலையிற்பலிகொண்டுழலுத்தமனே. (௭)

இலங்கைபர்மன்னனாகியெழில்பெற்றவிராவணனைக்
கலங்கவோர்கால்விரலாற்கதிர்பொன்முடிபத்தலற¶
நலங்கெழுசிந்தையனாயருள்பெற்றலுநன்களித்த
வலங்கெழுமூவிலைவேலுடையானிடம்வக்கரையே. (௮)

காமனையீடழித்திட்டவன்காதலிசென்றிரப்பச்
சேமமேயுன்றனக்கென்றருள்செய்தவன்றேவர்பிரான்
சாமவெண்டாமரைமேலயனுந்தரணியளந்த
வாமனனும்மறியாவகையானிடம்வக்கரையே. (௯)

முடியசிவரத்தர்முதிர்பிண்டியரென்றிவர்கள்
தேடியதேவர்தம்மாலிறைஞ்சப்படுந்தேவர்பிரான்
பாடியநான்மறையன்பலிக்கென்றுபல்வீதிதொறும்
வாடியவெண்டலைகொண்டுழல்வானிடம்வக்கரையே. (௧0)

* இந்திரனும் உம்மை இசைநிறை. † மந்தரம் இமயம் என்னுமிவைகளைப் பொன்னென்னும் ஒற்றுமைபற்றி, மேருவில் என்று கூறவேண்டுமிடங்களில் மந்தரவில் இமயவில் என்று கூறுதல் நூல்கட்கியல்பாகலான் ஈண்டும் அதுபற்றி மந்தரமேருவில் என்றருளிச்செய்தார். ‡ நீர்மலிபுன்சடை என்றும் பாடம். ¶ இதனைக் கதிர்போன்முடிபத்தற என்றும் பாடமோதலாம்.

Koviloor Digital Library

தன்புனலும்மரவுஞ்சடைமேலுடையான்பிறைதோய்
வண்பொழில்சூழ்ந்தழகாரிறைவன்றுறைவக்கரையைச்
சண்பையர்தந்தலைவன்றமிழ்ஞானசம்பந்தன்சொன்ன
பண்புனைபாடல்வல்லாரவர்தம்வினைபற்றறுமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவக்கரைத்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - சுசு.

சுவாமி தேவி திருநாமங்கள் - சந்திரசேகரர், வடிவாம்பிகை.

௩க. திருவரசிலி.*

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பாடல்வண்டறைகொன்றைபான்மதிபாய்புனற்கங்கை
கோடல்கூவிளமாலைமத்தமுஞ்செஞ்சடைக்குலாவி
வாடல்வெண்டலைமாலைமருவிடவல்லியந்தோண்மேல்†
ஆடன்மாசுணமசைத்தவடிகளுக்கிடமரசிலியே. (க)

ஏறுபேணியதேறியிளமதக்களிற்றினையெற்றி
வேறுசெய்ததனுரிவைவெண்புலால்‡கலக்கமெய்போர்த்த
ஊறுதேனவனும்பர்க்கொருவனல்லொளிகொளொண்சுடராம்
ஆறுசேர்தருசென்னியடிகளுக்கிடமரசிலியே. (உ)

கங்கைநீர்சடைமேலேகதமிகக்கதிரிளவனமென்
கொங்கையாளொருபாகமருவியகொல்லைவெள்ளேற்றன்
சங்கையாய்த்திரியாமேதன்னடியார்க்கருள்செய்து
அங்கையாலனலேந்துமடிகளுக்கிடமரசிலியே. (௩)

மிக்ககாலனைவீட்டிமெய்கெடக்காமனைவிழித்துப்
புக்கவூரிடுபிச்சையுண்பதுபொன்றிகழ்கொன்றை
தக்கநூறிகழ்மார்பிற்றவளவெண்ணீறணிந்தாமை
அக்கினோடும்பூண்டவடிகளுக்கிடமரசிலியே. (௪)

மானஞ்சும்மடநோக்கிமலைமகள்பாகமுமருவித்
தானஞ்சாவரண்மூன்றுந்தழலெழச்சரமதுதுரந்து
வானஞ்சும்பெருவிடத்தையுண்டவன்மாமறையோதி
ஆனஞ்சாடியசென்னியடிகளுக்கிடமரசிலியே. (௫)

* இது ஒழுந்தியாப்பட்டு என வழங்குகின்றது. † தோன்மேல் என்றும் பாடம். ‡ வெம்புலால் என்றும் பாடம்.

Koviloor Digital Library

பரியமாசுணங்கயிறாப்பருப்பதமதற்குமத்தாகப்
பெரியவேலையைக்கலங்கப்பேணியவானவர்கடையக்
கரியநஞ்சதுதோன்றக்கலங்கியவவர்தமைக்கண்டு
அரியவாரமுதாக்குமடிகளுக்கிடமாசிலியே. (சா)

வண்ணமால்வரைதன்னைமறித்திடலுற்றவல்லரக்கன்
கண்ணுந்தோளுநல்வாயுநெரிதரக்கால்விரலூன்றிப்
பண்ணின்பாடல்கைந்நரம்பாற்பாடியபாடலைக்கேட்டு
அண்ணலாயருள்செய்தவடிகளுக்கிடமாசிலியே. (அ)

குறியமாணுருவாகிக்குவலயமளந்தவன்றானும்
வெறிகொடாமரைமேலேவிரும்பியமெய்த்தவத்தோனும்
செறிவொணாவகைபெங்குந்தேடியுந்திருவடிகாணா
அறிவொணாவுருவத்தெம்மடிகளுக்கிடமாசிலியே. (கூ)

குருளைபெய்திபமடவார்நிற்பவேகுஞ்சியைப்பறித்துத்
திரளைகையிலுண்பவருந்தேருஞ்சொல்லியதேறேல்
பொருளைப்பொய்யிலிமெய்யெநாதனைப் *பொன்னடிவணங்கும்
அருளையார்தரநல்குமடிகளுக்கிடமாசிலியே. (க0)

அல்லிநீள்வயல்சூழ்ந்தவாசிலியடிகளைக்காழி
நல்லஞானசம்பந்தனற்றமிழ்பத்திவைநாளும்
சொல்லவல்லவர்தம்மைச்சூழ்ந்தமரர்தொழுதேத்த
வல்லவானுலகெய்திவைகலுமகிழ்ந்திருப்பாரே.† (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவாசிலித்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - சுள.

சுவாமி தேவி திருநாமங்கள் - மாசிலிநாதர், பெரியநாயகி.

ருஉ. திருவிரும்பைமாகாளம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - செவ்வழி.

திருச்சிற்றம்பலம்.

மண்டுகங்கைசடையிற்கரந்தும்மதிசூடிமான்
கொண்டகையாற்புரமூன்றெரித்தகுழகன்னிடம்
எண்டிசையும்புகழ்போய்விளங்குமிரும்பைதனுள்
வண்டுகெந்தம்முரல்பொழில்சூழ்ந்துநின்ற‡மாகாளமே. (க)

* மெய்யாதனைப் என்றும் பாடம். † இத்திருப்பதிகத்தில் எ-வது செய்யுள் மறைந்துபோயிற்று. ‡ சுலாநின்ற என்றும் பாடம்.

Koviloor Digital Library

வேதவித்தாய்வெள்ளைநீறுபூசிவினையாயின
கோதவித்தாயநீறெழக்கொடிமாமதிலாயின
ஏதவித்தாயினதீர்க்குமிடம்மிரும்பைதனுள்
மாதவத்தோர்மறையோர்தொழநின்றமாகாளமே. (௨)

வெந்தநீறும்மெலும்பும்மணிந்தவிடையூர்தியான்
எந்தைபெம்மானிடமெழில்கொள்சோலையிரும்பைதனுள்
கந்தமாயபலவின்கனிகள்கமழும்பொழில்
மந்தியேறிக்கொணர்ந்துண்டுகள்கின்றமாகாளமே. (௩)

நஞ்சுகண்டத்தடக்கிநடுங்கும்மலையான்மகள்
அஞ்சவேழமுரித்தபெருமானமரும்மிடம்
எஞ்சவில்லாப்புகழ்போய்விளங்கும்* மிரும்பைதனுள்
மஞ்சிலோங்கும்பொழில்சூழ்ந்தழகாயமாகாளமே. (௪)

பூசுமாசில்பொடியான்விடையான்பொருப்பான்மகள்
கூசவானையுரித்தபெருமான்குறைவெண்மதி
ஈசனெங்கள்ளிறைவன்னிடம்போலிரும்பைதனுள்
மாசிலோர்கண்மலர் † கொண்டணிகின்றமாகாளமே. (௫)

குறைவதாயகுளிர்திங்கள்சூடிக்குனித்தான்வினை
பறைவதாக்கும்பரமன்பகவன்பரந்தசடை
இறைவனெங்கள்பெருமானிடம்போலிரும்பைதனுள்
மறைகள்வல்லார்வணங்கித்தொழுகின்றமாகாளமே. (௬)

பொங்குசெங்கண்ணரவும்மதியும்புரிபுன்சடைத்
தங்கவைத்தபெருமானெனநின்றவர்தாழ்விடம்
எங்குமிச்சையமர்ந்தானிடம்போலிரும்பைதனுள்
மங்குறோயும்பொழில்சூழ்ந்தழகாயமாகாளமே. (௭)

நட்டத்தோடுநரியாடுகானத்தெரியாடுவான்
அட்டமூர்த்தியழல்போலுருவன்னழகாகவே
இட்டமாகவிருக்கும்மிடம்போலிரும்பைதனுள்
வட்டஞ்சூழ்ந்துபணிவார்பிணிதீர்க்குமாகாளமே. (௮)

அட்டகாலன்றனைவவ்வினனவ்வரக்கன்முடி
எட்டுமற்றும்மிருபத்திரண்டும்மிறவூன்றினன்
இட்டமாகவிருப்பானவன்போலிரும்பைதனுள்
மட்டுவார்ந்தபொழில்சூழ்ந்தெழிலாருமாகாளமே. ‡ (௯)

அரவமார்த்தன்றனலங்கையேந்தியடியும்முடி
பிரமன்மாலும்மறியாமைநின்றபெரியோனிடம்
குரவமாரும்பொழிற்குயில்கள்சேரும்மிரும்பைதனுள்
மருவிவானோர்மறையோர்தொழுகின்றமாகாளமே. (௧0)

* புகழ்போல்விளங்கும் என்றும் பாடம். † மாசிலோர்தண்மலர் என்றும் பாடம்.
‡ சூழ்ந்தழகாருமாகாளமே என்றும் பாடம்.

Koviloor Digital Library

எந்தைபெம்மா*னிடமெழில்கொள்சோலையிரும்பைதனுள்
மந்தமாயபொழில்சூழ்ந்தழகாருமாகாளத்தில்†
அந்தமில்லாவனலாடுவானையணிஞானசம்
பந்தன்சொன்னதமிழ்பாடவல்லார்பழிபோகுமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவிரும்பைமாகாளத்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - சுஅ.

சுவாமி தேவி திருநாமங்கள் - மாகாளேசுவரர், குயின்மொழிநாயகி.

தொண்டைநாட்டிலுள்ள தலங்கள் முற்றுப்பெற்றன.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் அருளிச்செய்த திருப்பதிகங்கள் ௩க; இத்திருப்பதிகங்களைப்பெற்றதலங்கள் உ௯. திருநாவுக்கரசுநாயனார் அருளிச்செய்த திருப்பதிகங்கள் உச; இத்திருப்பதிகங்களைப்பெற்றதலங்கள் க. சுந்தரமூர்த்திநாயனார் அருளிச்செய்ததிருப்பதிகங்கள் க௩; இத்திருப்பதிகங்களைப்பெற்றதலங்கள் கஉ. ஆ திருப்பதிகங்கள் சுஅ. தலங்கள் ௩உ.

துளுவநாட்டில் உள்ள தலம்.

க. திருக்கோகரணம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

திருவிராகம். ‡ பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

என்றுமரியானயலவர்க்கியலிசைப்பொருள்களாகியெனதுள்
நன்றுமொளியானொளிசிறந்தபொன்முடிக்கடவுணண்ணுமிடமாம்
ஒன்றியமனத்தடியர்கூடியிமையோர்பரவுநீடரவமார்
குன்றுகணெருக்கிவிரிதண்டலைமிடைந்துவளர்கோகரணமே. (க)

பேதைமடமங்கையொருபங்கிடமிகுத்திடபமேறியமரர்
வாதைபடவண்கடலெழுந்தவிடமுண்டசிவன்வாழுமிடமாம்
மாதரொடுமாடவர்கள்வந்தடியிறைஞ்சிநிறைமாமலர்கடூய்க்
கோதைவரிவண்டிசைகொள்கீதமுரல்கின்றவளர்கோகரணமே. (உ)

முறைத்திறமுறப்பொருடெரிந்துமுனிவர்க்கருளியாலநிழல்வாய்
மறைத்திறமறத்தொகுதிகண்டுசமயங்களைவகுத்தவனிடம்
துறைத்துறைமிகுத்தருவிதூமலர்சுமந்துவரையுந்திமதகைக்
குறைத்தறையிடக்கரிபுரிந்திடறுசாரன்மலிகோகரணமே. (௩)

* எந்தையெம்மான் என்றும் பாடம். † மந்தமாரும்பொழில்சூழ்ந்தழகாயமாகாளத்தில் என்றும் பாடம். ‡ திருவிராகம் என்பது பலபிரதிகளில் இல்லை.

Koviloor Digital Library

இலைத்தலைமிருத்தபடையெண்காய்விளங்கவெரிவீசிமுடிமேல்
அலைத்தலைதொகுத்தபுனல்செஞ்சடையில்வைத்தவழகன்றனிடமாம்
மலைத்தலைவகுத்தமுழைதோறுமுழைவாளரிகள்கேழல்களிறு
கொலைத்தலைமடப்பிடிகள்கூடிவிளையாடிநிகழ்கோகரணமே. (௪)

தொடைத்தலைமலைத்திதழிதுன்னியவெருக்கலரிவன்னிமுடியின்
சடைத்தலைமிலைச்சியதபோதனனெமாதிபயில்கின்றபதியாம்
படைத்தலைபிடித்துமறவாளரொடுவேடர்கள்பயின்றுகுழுமிக்
குடைத்தலைநதிப்படியநின்றுபழிதீரநல்குகோகரணமே. (௫)

நீறுதிருமேனிமிசையாடிநிறைவார்கழல்சிலம்பொலிசெய
ஏறுவிளையாடவிசை * கொண்டிடுபலிக்குவருமீசனிடமாம்
ஆறுசமயங்களும்விரும்பியடிபேணியரனைகமமிகக்
கூறுமனம்வேறிரதி † வந்தடியர்கம்பம்வருகோகரணமே. (௬)

கல்லவடமொந்தைகுழறாளமலிகொக்கரையாக்கரைமிசை
பல்லபடநாகம்விரிகோவணவராளுநகரென்பரயலே
நல்லமடமாதாரனுமழுநவிற்றியதிருத்தமுழுகக்
கொல்லவிடநோ ‡ யகறாப்புகல்கொடுத்தருளுகோகரணமே. (௭)

வரைத்தலநெருக்கியமுருட்டிருணிறத்தவனவாய்களலற
விரற்றலைபுகிர்ச்சிறிதுவைத்தபெருமானினிதுமேவுமிடமாம்
புரைத்தலைகெடுத்தமுனிவாணர்பொலிவாகிவினைதீரவதன்மேல்
குரைத்தலைகழற்பணியவோமம்விலகும்புகைசெய்கோகரணமே. (௮)

வில்லிமையினல்விறலரக்கனுயிர்செற்றவனும்வேதமுதலோன்
இல்லையுளதென்றிகலிநேடவெரியாகியுயர்கின்றபரனூர்
எல்லையில்வரைத்தகடல்வட்டமுமிறைஞ்சிநிறைவாசமுருவக்
கொல்லையிலிளங்குறவர் ¶ தம்மயிர்புலர்த்திவளர்கோகரணமே. (௯)

நேசமின்மனச்சமணர்தேரர்கணிரந்தமொழிபொய்களகல்வித்
தாசைகொண்மனத்தையடியாரவர்தமக்கருளுமங்கணனிடம்
பாசமதறுத்தவனியிற்பெயர்கள் § பத்துடையமன்னனவனைக்
கூசவகைகண்டுபினவற்கருள்கணல்கவலகோகரணமே. (௧௦)

கோடலரவீனும்விரிசாரன்முனெருங்கிவளர்கோகரணமே
ஈட ० மினிதாகவுறைவானடிகள்பேணியணிகாழிநகரான்
நாடியதமிழ்க்கிளவியின்னிசைசெய்ஞானசம்பந்தன்மொழிகள்
பாடவலபத்தரவரெத்திசையுமாள்வர்பரலோகமெளிதே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

* யாடவிசை என்றும் பாடம். † கூறும்வனயேறிரதி என்றும் பாடம். ‡ விடர்நோய் என்றும் பாடம். ¶ விருங்குறவர் என்றும், வினங்குறவர் என்றும் பாடம். § தவனியற் பெயர்கள் என்றும் பாடம். ० இடம் ஈடம் என நீண்டது.

Koviloor Digital Library

திருநாவுக்கரசுநாயனார்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

சந்திரனுந்தண்புனலுஞ்சந்தித்தான்காண்
டாழ்சடையான்காண்சார்ந்தார்க்கமுதானான்காண்
அந்தரத்திலசுரர்புரமூன்றட்டான்கா
ணவ்வுருவிலவ்வுருவமாயினான்காண்
பந்தரத்துநான்மறைகள்பாடினான்காண்
பலபலவும்பாணிபயில்கின்றான்காண்
மந்திரத்துமறைபொருளு* மாயினான்காண்
மாகடல்சூழ்கோகரணமன்னினானே. (௧)

தந்தவத்தன் † றன்றலையைத்தாங்கினான்காண்
சாரணன்காண்சார்ந்தார்க்கின்னமுதானான்காண்
கெந்தத்தன் ‡ காண்கெடிலவீரட்டன்காண்
கேடிலிகாண்கெடுப்பார்மற்றில்லாதான்காண்
வெந்தொத்தநீறுமெய்பூசினான்காண்
வீரன்காண்வியன்கயிலைமேவினான்காண்
வந்தொத்தநெடுமாற்குமறிவொணான்காண்
மாகடல்சூழ்கோகரணமன்னினானே. (௨)

தன்னுருவம்பாவருக்குந் ¶ தாக்காதான்காண்
டாழ்சடையெம்பெருமான்காண்டக்கார்க்குள்ள
பொன்னுருவச்சோதிபுனலாடிகாண்
புராணன்காண்பூதங்க § ளாயினான்காண்
மின்னுருவநுண்ணிடையாள்பாகத்தான்காண்
வேழத்தினுரிவெருவப்போர்த்தான்றான்காண்
மன்னுருவாய்மாமறைகளோதினான்காண்
மாகடல்சூழ்கோகரணமன்னினானே. (௩)

ஆறேறுசெஞ்சடையெம்மாரூரன்கா
ணன்பன்காணணிபழனமேயான்றான்காண்
நீறேறிநிழறிகழுமேனியான்கா
ணிருபமன்கா ○ ணிகரொன்றுமில்லாதான்காண்
கூறேறுகொடுமழுவாட்படையினான்காண்
கொக்கரையன்காண்குழுநற்பூதத்தான்காண்
மாறுபமதின்மூன்றுமாய்வித்தான்காண்
மாகடல்சூழ்கோகரணமன்னினானே. (௪)

* மந்திரத்துமறைப்பொருளும் என்றும் பாடம். † தவத்தான் என்றும் பாடம். ‡ கெந்தகத்தான் என்றும் பாடம். ¶ தன்னுருவம்யாருக்குந் என்றும், தன்னுருவம் யாவர்க்குந் என்றும், தன்னுருவமாருக்குந் என்றும் பாடம். § பூதலங்கள் என்றும்பாடம். ○ நிருபன்காண் என்றும் பாடம்.

Koviloor Digital Library

சென்றச்சிலைவாங்கிச்சேர்வித்தான்காண்
டீயம்பன்காண்டிரிபுரங்கண்மூன்றும்
பொன்றப்பொடியாகநோக்கினான்காண்
பூதன்காண்பூதப்படையாளிகாண்
அன்றப்பொழுதேயருள்செய்தான்கா
ணனலாடிகாணடியார்க்கமுதானான்காண்
மன்றன்மணங்கமழும்வார்சடையான்காண்
மாகடல்சூழ்கோகரணமன்னினானே. (ரு)

பிறையோடுபெண்ணொருபால்வைத்தான்காண்
பேரவன்காண்பிறப்பொன்றுமில்லாதான்காண்
கறையோடு * மணிமிடற்றுக்காபாலிகாண்
கட்டங்கன்காண்கையிற்கபாலமேந்திப்
பறையோடுபல்கீதம்பாடினான்கா
ணாடினான்காண்பாணியாகநின்று
மறையோடுமாகீதங்கேட்டான்றான்காண்
மாகடல்சூழ்கோகரணமன்னினானே. (சா)

மின்னளந்தமேன்முகட்டின்மேலுற்றான்காண்
விண்ணவர்தம்பெருமான்காண்மேவிலெங்கும்
முன்னளந்தமூவர்க்குமுதலானான்காண்
மூவிலைவேற்சூலத்தெங்கோலத்தான்காண்
எண்ணளந்தென்சிந்தையேமேவினான்கா
ணேவலன்காணிமையோர்களேத்தநின்று
மண்ணளந்தமாலறியாமாயத்தான்காண்
மாகடல்சூழ்கோகரணமன்னினானே. (எ)

பின்னுசடைமேற்பிறைசூடினான்காண்
பேரருளன்காண்பிறப்பொன்றில்லாதான்காண்
முன்னியுலகுக்குமுன்னாயினான்காண்
மூவெயிலுஞ்செற்றுகந்தமுதல்வன்றான்காண்
இன்னவுருவென்றறிவொணாதான்றான்கா
ணேழ்கடலுமேழுலகுமாயினான்காண்
மன்னுமடந்தையோர்பாகத்தான்காண்
மாகடல்சூழ்கோகரணமன்னினானே. (அ)

வெட்டவெடித்தார்க்கோர்வெவ்வழலன்காண்
வீரன்காண்வீரட்டமேவினான்காண்
பொட்டவநங்கனையுநோக்கினான்காண்
பூதன்காண்பூதப்படையினான்காண்
கட்டக்கடுவினைகள்காத்தாள்வான்காண்
கண்டன்காண்வண்டுண்டகொன்றையான்காண்
வட்டமதிப்பாகஞ்சூடினான்காண்
மாகடல்சூழ்கோகரணமன்னினானே. (கூ)

* கறை ஓடு - விடம்பரந்த; கருமை ஓடுதற்கேதுவாகிய என்றலுமாம்.

Koviloor Digital Library

கையாற்கயிலையெடுத்தான்றன்னைக்
கால்விரலாற்றேனெரியவூன்றினன்காண்
மெய்யினரம்பிசையாற்கேட்பித்தாற்கு
மீண்டேயவற்கருள்களல்கினன்காண்
பொய்யர்மனத்துப்புறம்பாவான்காண்
போர்ப்படையான்காண்பொருவாரில்லாதான்காண்
மைகொண்மணிமிடற்றுவார்சடையான்காண்
மாகடல்சூழ்கோகரணமன்னினனே. (கo)

திருச்சிற்றம்பலம்.

திருக்கோகரணத்திருப்பதிகம் - உ.

சுவாமி தேவி திருநாமங்கள் - மகாபலேசுவரர், கோகரணநாயகி.

துளுவநாட்டிலுள்ள தலம் முற்றுப்பெற்றது.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் அருளிச்செய்த திருப்பதிகம் க. திருநாவுக்கரசுநாயனர் அருளிச்செய்த திருப்பதிகம் க. ஆ திருப்பதிகம் - உ.

வடநாட்டில் உள்ள தலங்கள்.

க. திருப்பருப்பதம்.*

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

சுடுமணியுமிழ்நாகஞ்சூழ்தரவரைக்கசைத்தான்
இடுமணியெழிலானையேறலனெருதேறி
விடமணிமிடறுடையான்மேவியநெடுங்கோட்டுப்
படுமணிவிடுசுடரார்பருப்பதம்பரவுதுமே. (க)

கோய்புல்குதோற்றிரையகரைவருநகருடம்பில்
நீயுல்குதோற்றமெல்லாநினையுள்குமடநெஞ்சே
வாய்புல்குதோத்திரத்தால்வலஞ்செய்துதலைவணங்கிப்
பாய்புலித்தோலுடையான்பருப்பதம்பரவுதுமே. (உ)

* திருப்பருப்பதம்—ஸ்ரீசைலம் அல்லது மல்லிகார்ச்சுனம்; சீபற்பதமலை என்றும் பிரதிபேதமுண்டு.

Koviloor Digital Library

துனியுறுதுயர்தீரத்தோன்றியோர்நல்வினையால்
இனியுறுபயனாதலிரண்டுறமனம்வையேல்
கனியுறுமரமேறிக்கருமுசுக்கழையுகளும்
பனியுறுகதிர்மதியான்பருப்பதம்பரவுதுமே. (௩)

கொங்கணிநறுங்கொன்றைத்தொங்கலன்குளிர்சடையான்
எங்கணாயகலநின்றானெனவருளீசனிடம்
ஐங்கணைவரிசிலையானனங்கனையழகழித்த
பைங்கண்வெள்ளேறுடையான்பருப்பதம்பரவுதுமே. (௪)

துறைபலசுனைமூழ்கித்தூமலர்சுமந்தோடி
மறையொலிவாய்மொழியால்வானவர்மகிழ்ந்தேத்தச்
சிறையொலிகிளிபயிலுந்தேனினமொலியோவாப்
பறைபடு * விளங்கருவிப்பருப்பதம்பரவுதுமே. (௫)

சீர்கெழுசிறப்போவாச்செய்தவநெறிவேண்டில்
ஏர்கெழுமடநெஞ்சேயிரண்டுறமனம்வையேல்
கார்கெழுநறுங்கொன்றைக்கடவுளதிடம்வகையால் †
பார்கெழுபுகழோவாப்பருப்பதம்பரவுதுமே. (௬)

புடைபுல்குபடர்கமலம்புகையொடுவிரைகமழத்
தொடைபுல்குநறுமாலைதிருமுடிமிசையேற
விடைபுல்குகொடியேந்திவெந்தவெண்ணீறணிவான்
படைபுல்குமழுவாளன்பருப்பதம்பரவுதுமே. (௭)

நினைப்பெனுநெடுங்கிணற்றைநின்றுநின்றயராதே
மனத்தினைவலித்தொழிந்தேனவலம்வந்தடையாமைக்
கனைத்தெழு ‡ திரள்கங்கைகமழ்சடைக்கரந்தான்றன்
பனைத்திரள்பாயருவிப்பருப்பதம்பரவுதுமே. (௮)

மருவியவல்வினைநோயவலம்வந்தடையாமல்
திருவுருவமர்ந்தா ¶ னுந்திசைமுகமுடையானும்
இருவருமறியாமையெழுந்த § தோரெரிநடுவே
பருவரையுறநிமிர்ந்தான்பருப்பதம்பரவுதுமே. (௯)

சடங்கொண்டசாத்திரத்தார்சாக்கியர்சமண்குண்டர்
மடங்கொண்டவிரும்பியராய் 0 மயங்கியோர்பேய்த்தேர்ப்பின்
குடங்கொண்டுநீர்க்குச்செல்வார்போதுமின்குஞ்சாத்தின்
படங்கொண்டபோர்வையினான்பருப்பதம்பரவுதுமே. (௧௦)

* பறைபடு - பறைபோல் ஒலிக்கின்ற; படுதல் - ஒலித்தல். † திடவகையால் என்றும் பாடம். ‡ தடையாமற்—கனத்தெழு என்றும், தடையாமற்—கனைத்தெழு என்றும் பாடம். ¶ திரு உரு அமர்ந்தான் - இலக்குமியை மார்பில் விரும்பிவைத்த விட்டுணு; உருவும் அமர்தலும் ஆகுபெயர். § மறியாமலெழுந்த என்றும் பாடம். 0 விருப்பியராய் என்றும் பாடம்.

Koviloor Digital Library

வெண்செநெல்விளைகழனிவிழவொலிகழுமலத்தான்
பண்செலப்பலபாடலிசைமுரல்பருப்பதத்தை
நன்சொலிஞற்பரவுஞானசம்பந்தனல்ல *
ஒண்சொலினிவைமாலையுருவெணத்தவமாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

கன்றினர்புரங்கண்மூன்றுங்கனலெரியாகச்சீறி
நின்றதோருருவந்தன்னுனீர்மையுநிறையுங்கொண்டு †
ஒன்றியாங்குமையுந்தாமுமூர்பலிதேர்ந்துபின்னும்
பன்றிப்பின்வேடராகிப்பருப்பதநோக்கினரே. (க)

கற்றமாமறைகள்பாடிக்கடைதொறும்பலியுந்தேர்வார்
வற்றலோர்கலைகையேந்திவானவர்வணங்கிவாழ்த்த
முற்றவோர்சடையினீரையேற்றமுக்கண்ணர்தம்மைப்
பற்றினர்க்கருள்கள்செய்துபருப்பதநோக்கினரே. (உ)

கரவிலாமனத்தராகிக்கைதொழுவார்கட்கென்றும்
இரவுநின்றெரியதாடியின்னருள்செய்யுமெந்தை
மருவலார்புரங்கண்மூன்றுமாட்டியவகையராகிப்
பரவுவார்க்கருள்கள்செய்துபருப்பதநோக்கினரே. (ங)

கட்டிட்டதலைகையேந்திக்கனலெரியாடிச்சீறிச்
சுட்டிட்டநீறுபூசிச்சுடுபிணக்காடராகி
விட்டிட்டவேட்கையார்க்குவேறிருந்தருள்கள்செய்து
பட்டிட்டவுடையராகிப்பருப்பதநோக்கினரே. (ச)

கையராய்க்கபாலமேந்திக்காமனைக்கண்ணாற்காய்ந்து
மெய்யராய்மேனிதன்மேல்விளங்குவெண்ணீறுபூசி
உய்வராயுள்குவார்கட்குகவைகள் ‡ பலவுஞ்செய்து
பையராவரையிலார்த்துப்பருப்பதநோக்கினரே. (ரு)

வேடராய்வெய்யராகிவேழத்தினுரிவைபோர்த்து
ஓடராயுலகமெல்லாமுழிதர்வருமையுந்தாமும்
காடராய்க்கனல்கையேந்திக்கடியதோர்விடைமேல்கொண்டு
பாடராய்ப்பூதஞ்சூழப்பருப்பதநோக்கினரே. (சு)

* சம்பந்தன்சொன்ன என்றும் பாடம். † நிறையுங்கொண்டே என்றும் பாடம்.
‡ உய்யராயுள்குவார்கட்குவகைகள் என்றும் பாடம்.

Koviloor Digital Library

மேகம்போன்மிடற்றராகிவேழத்தினுரிவைபோர்த்து
ஏகம்பமேவினார்தாமிமையவர்பரவியேத்தக்
காகம்பர்கழறராகிக்* கடியதோர்விடையொன்றேறிப்
பாகம்பெண்ணுருவமானார்பருப்பதநோக்கினாரே. (எ)

பேரிடர்ப்பிணி† கடீர்க்கும்பிஞ்ஞகனெந்தைபெம்மான்
காருடைக்கண்ட†ராகிக்கபாலமோர்கையிலேந்திச்
சீருடைச்செங்கண்வெள்ளேறேறியசெல்வர்நல்ல
பாரிடம்பாணிசெய்யப்பருப்பதநோக்கினாரே. (அ)

அங்கண்மாலுடையராயவைவராலாட்டுணாதே
உங்கண்மாதீரவேண்டிலுள்ளத்தாலுள்கியேத்தும்
செங்கண்மால்பரவியேத்திச்சிவனெனநின்றசெல்வர்
பைங்கண்வெள்ளேறதேறிப்பருப்பதநோக்கினாரே. (கூ)

அடல்விடையூர்தி‡யாகியரக்கன்றோளடரவூன்றிக்
கடலிடைநஞ்சமுண்டகறையணிகண்டனார்தாம்
சுடர்விடுமேனிதன்மேற்சுண்ணவெண்ணீறுபூசிப்
படர்சடைமதியஞ்சேர்த்திப்பருப்பதநோக்கினாரே. (க0)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்தி நாயனார்.

பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

மானுமரையினமுமயிலினமுங்கலந்தெங்கும்
தாமேமிகமேய்ந்துதடஞ்சுனைநீர்களைப்பருகிப்
பூமாமரமுரிஞ்சிப்பொழிலூடேசென்றுபுக்குத்
தேமாம்பொழினீழற்றுயில்சீபர்ப்பதமலையே. (க)

மலைச்சாரலும்பொழிற்சாரலும்புறமேவருமினங்கள்
மலைப்பாற்கொணர்ந்திடித்தூட்டிடமலங்கித்தனகளிற்றை
அழைத்தோடியும்பிளிறியவையலமந்துவந்தெய்த்துத்
திகைத்தோடித்தன்பிடித்தேடிடுஞ்¶சீபர்ப்பதமலையே. (உ)

மன்னிப்புனங்காவன்மடமொழியாள்புனங்காக்கக்
கன்னிக்கிளிவந்துகவைக்கோலிக்கதிர்கொய்ய
என்னைக்கிளிமதியாதென்றுவெடுத்துக்கவணொலிப்பத்
தென்னற்கிளி § திரிந்தேறியசீபர்ப்பதமலையே. (ங)

* காகம்பற்கழறராகிக் என்றும், காகம்பர்கழற்றராகிக் என்றும் பாடம். † † பேரிடர்ப்பிணிகள் என்றும், காருடைகண்டர் என்றும் பாடம்; காருடைகண்டம் வினைத்தொகை; "சங்குதருநீணிதியஞ்சாலவுடைநாய்கன்" என்பதுபோல; கருமை ஒட்டெடுத்தற் கேதுவாகிய கண்டமென்க. ‡ ஊர்தி தன்னை உடையானை உணர்த்திநின்றது. ¶ பிடிதேடிடுஞ் என்றும் பாடம். § தென்னக்கிளி என்றும் பாடம்.

Koviloor Digital Library

மையார்தடங்கண்ணாண்மடமொழியாள்புனங்காக்கச்
செவ்வேதிரிந்தாயோவெனப்போகாவிடவிளிந்து *
கைபாவியகவணான்மணியெறியவிரிந்தோடிச்
செவ்வாயனகிளிபாடிடுஞ்சிபர்ப்பதமலையே. (ச)

ஆனைக்குலமிரிந்தோடித்தன்பிடிசூழலிற்றிரியத்
தானப்பிடிசெவிதாழ்த்திடவதற்குமிகவிரங்கி
மானக்குறவடல்வேடர்களிலையாற்கலைகோலித்
தேனைப்பிழிந்தினிதூட்டிடுஞ்சிபர்ப்பதமலையே. (ரு)

மாற்றுக்களிறடைந்தாயென்றுமதவேழங்கையெடுத்து
மூற்றித்தழலுமிழ்ந்தும் † மதம்பொழிந்தும்முகஞ்சுழியத்
தூற்றத்தரிக்கில்லே ‡ னென்றுசொல்லியயலறியத்
தேற்றிச்சென்றுபிடிசூழறுஞ் ¶ சிபர்ப்பதமலையே. (சு)

அப்போதுவந்துண்டீர்களுக்கழையாதுமுன்னிருந்தேன்
எப்போதும்வந்துண்டாலெமையெமர்கள்சுழியாரோ
இப்போதுமக்கிதுவே § தொழிலென்றோடியக்கிளியைச்
செப்பேந்திளமுலையாளெறிசிபர்ப்பதமலையே. (எ)

திரியும்புரநீறாக்கியசெல்வன்றனகழலை
அரியதிருமாலோடயன்றானுமவரறியார்
கரியின்னினமோடும்பிடிதேனுண்டவைகளித்துத்
திரிதந்தவைதிகழ்வாற்பொலிசிபர்ப்பதமலையே. (அ)

ஏனத்திரள்கிளைக்கவெரிபோலமணிசிதறத்
தேனென்றவை ○ மலைச்சாரலிற்றிரியுங்கரடியும்
மானும்மரையினமும்மயின்மற்றும்பலவெல்லாம்
தேனும்பொழில்சோலைமிகுசிபர்ப்பதமலையே. (கூ)

கல்லாரவர்பலர்வாழ்தருவயனாவலவூரன்
செல்லலுறவரியசிவன்சிபர்ப்பதமலையை
அல்லலவைதீரச்சொனதமிழ்மாலைகள்வல்லார்
ஒல்லைசெலவுயர்வானகமாண்டங்கிருப்பாரே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருப்பருப்பதத்திருப்பதிகம் - ௩.

சுவாமி தேவி திருநாமங்கள் - பருப்பதநாதர், பருப்பதநாயகி.

* போகாவிடம்விளிந்து என்றும் பாடம். † மூற்றித்தணலுமிழ்ந்தும் என்றும், மூற்றித்கனலுமிழ்ந்தும் என்றும் பாடம். ‡ தூற்றித்திரிகில்லேன் என்றும் பாடம். ¶ சூளறும் என்றும் பாடம். § இதுவோ என்றும் பாடம். ○ ஏனல்லவை என்றும் பாடம்.

Koviloor Digital Library

உ. திருவிந்திரநீலப்பருப்பதம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

குலவுபாரிடம்போற்றவீற்றிருந்
திலகுமாமழு* வேந்துமங்கையன்
நிலவுமிந்திரநீலப்பர்ப்பதத்
துலவினனடியுள்கநல்குமே. (க)

குறைவிலார்மதிசூடியாடல்வண்
டறையுமாமலர்க்கொன்றைசென்னிசேர்
இறைவனிந்திரநீலப்பர்ப்பதத்
துறைவினன்றனையோதியுய்ம்மினே. (உ)

என்பொனென்மணியென்னவேத்துவார்
நம்பனன்மறை† பாடுநாவினன்
இன்பனிந்திரநீலப்பர்ப்பதத்
தன்பன்பாதமேயடைந்து‡ வாழ்மினே. (௩)

நாசமாம்வினைநன்மைதான்வரும்
தேசமார்புகழாயசெம்மையெம்
ஈசனிந்திரநீலப்பர்ப்பதம்
கூசிவாழ்த்துதுங்குணமதாகவே. (ச)

மருவுமான்மடமாதொர்பாகமாய்¶
பாவுவார்வினைதீர்த்தபண்பினன்§
இரவனிந்திரநீலப்பர்ப்பதத்
தருவிசூடிடுமடிகள்வண்ணமே. (ரு)

வெண்ணிலாமதிசூடும்வேணியன்
எண்ணிலார்மதிலெய்தவில்லினன்
அண்ணலிந்திரநீலப்பர்ப்பதத்
துண்ணிலாவுறுமொருவனல்லனே. (சு)

கொடியவேற்றினர்° கூற்றுதைத்தவர்
பொடிகொண்மேனியிற்பூண்டபாம்பினர்
அடிகளிந்திரநீலப்பர்ப்பதம்
உடையவாணருகந்த** கொள்கையே. (எ)

* மான்மழு என்றும் பாடம். † நண்பனன்மறை என்றும் பாடம். ‡ தன்பன்பாத மடைந்து என்றும் பாடம். ¶ மாதொர்பங்கனர் என்றும், மாதொர்பங்கமாய் என்றும் பாடம். § பண்பினர் என்றும் பாடம். ° கொடிகொளேற்றினர் என்றும் பாடம். ** வாணனுகந்த என்றும் பாடம்.

Koviloor Digital Library

எடுத்தவல்லரக்கன்கரம்புயம்
அடர்த்தநேர்விரலானவனையாட்
படுத்தனிந்திரநிலப்பர்ப்பதம்
முடித்தலம்முறமுயனுமின்பமே. (அ)

பூவினுனெடுமாலும்போற்றும்
தேவனிந்திரநிலப்பர்ப்பதம்
பாவியாதெழுவாரைத்தம்வினை
கோவியாவருங்கொல்லுங்கூற்றமே.* (கூ)

கட்டர்குண்டமண்டேரர்சிரிலர்
விட்டரிந்திரநிலப்பர்ப்பதம்
எட்டனைநினையாததென்கொலோ
சிட்டதாயுறைபாதிசிர்களே. (கo)

கந்தமார்பொழில்சூழ்ந்தகாழியான்
இந்திரன்றொழுநிலப்பர்ப்பதத்
தந்தமில்லியையேத்துஞானசம்
பந்தன்பாடல்கொண்டோதிவாழ்மினே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவிந்திரநிலப்பருப்பதத்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - ச.

சுவாமி தேவி திருநாமங்கள் - நீலாசலநாதர், நீலாம்பிகை.

ங. திருவனேகதங்காவதம்.†

திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர்.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

நீடன்மேவுநிமிர்புன்சடைமேலோர்நிலாமுளை
சூடன்மேவுமறையின்முறையாலோர்சுலாவழல்
ஆடன்மேவுமவர்மேயவனேகதங்காவதம்
பாடன்மேவுமனத்தார்வினைபற்றறுப்பார்களே. (க)

* பாவியாவெழுவாரைத்தம்வினை—கோவியாதொழுங்கொல்லுங்கூற்றமே என்றும் பாடம். † பல பிரதிகள் காபதம் என்கின்றன. செய்யுள்களுமவ்வாறே கூறப்படுகின்றன.

Koviloor Digital Library

சூலமுண்மழுவுண்டவர்தொல்படைசூழ்கடல்
ஆலமுண்டபெருமான்றனனேகதங்காவதம்
நீலமுண்டதடங்கண்ணுமைபாகநிலாயதோர்
கோலமுண்டளவில்லைகுலாவியகொள்கையே. (உ)

செம்பினருமதின்மூன்றெரியச்சினவாயதோர்
அம்பினலெய்தருள்வில்லியனேகதங்காவதம்
கொம்பினேரிடையாளொடுங்கூடிக்கொல்லேறுடை
நம்பனமநவிலாதனநாவெனலாகுமே. (௩)

தந்தத்திந்தத்தடமென்றருவித்திரள் * பாய்ந்துபோய்ச்
சிந்தவெந்த † கதிரோனொடுமாசறுதிங்களர்
அந்தமில்லவளவில்லவனேகதங்காவதம்
எந்தைவெந்தபொடிநீறணிவார்க்கிடமாவதே. (௪)

பிறையுமாசில்கதிரோனறியாமைப்பெயர்ந்துபோய்
உறையுங்கோயில்பசும்பொன்னணியாரசும்பார்புனல்
அறையுமோசைபறைபோலுமனேகதங்காவதம்
இறையெம்மீசனெம்மானிடமாகவுகந்ததே. (௫)

தேனையேறுநறுமாமலர்கொண்டடிசேர்த்துவீர்
ஆனையேறுமணிசாரலனேகதங்காவதம்
வானையேறுநெறிசென்றுணருந்தனைவல்லிரேல்
ஆனையேறு ‡ முடியானருள்செய்வதும்வானையே.¶ (௬)

வெருவிவேழமிரியக்கதிர்முத்தொடுவெண்பளிங்
குருவிவீழவயிரங்கொழியாவகிலுந்திவெள்
அருவிபாயுமணிசாரலனேகதங்காவதம்
மருவிவாழும்பெருமான்கழல்சேர்வதுவாய்மையே. (௭)

ஈரமேதுமிலனாகியெழுந்தவிராவணன்
வீரமேதுமிலனாகவிளைத்தவிலங்கலான்
ஆரம்பாம்பதணிவான்றனனேகதங்காவதம்
வாரமாகிநினைவார்வினையாயினமாயுமே. (௮)

கண்ணன்வண்ணமலரானொடுங்கூடியோர்க்கையமாய்
எண்ணும்வண்ணமறியாமையெழுந்ததோராரழல்
அண்ணனண்ணுமணிசாரல § னேகதங்காவதம்
நண்ணும்வண்ணமுடையார்வினையாயினநாசமே. (௯)

மாபதம்மறியாதவர்சாவகர்சாக்கியர்
ஏபதம்படநின்றிறுமாந்துழல்வார்கடாம்
ஆபதம்மறிவீருளிராகிலனேகதங்
காபதம்மமர்ந்தான்கழல்சேர்தல்கருமமே. (௧0)

* தந்ததிந்ததடமென்றருவித்திரள் என்றும் பாடம். † சிந்தைவெந்த என்றும் பாடம். ‡ ஆனெயேறு என்றும் பாடம். ¶ செய்வதுவானையே என்றும் பாடம். § மணிச்சாரல் என்றும் பாடம்.

Koviloor Digital Library

தொல்லையூழிப்பெயர்தோன்றியதோணிபுரத்திறை *
நல்லகேள்வித்தமிழ்ஞானசம்பந்தனல்லார்கண்முன்
அல்லறீரவுரைசெய்தவனேகதங்காவதம்
சொல்லநல்லவடையும்மடையாசுடுதுன்பமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவனேகதங்காவதத்திருப்பதிகம் - க.

ஆ திருப்பதிகம் - ௫.

சுவாமி தேவி திருநாமங்கள் - அனேகதங்காவதநாதர், மனோன்மணியம்மை.

ச. திருக்கேதாரம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

பண் - செவ்வழி.

திருச்சிற்றம்பலம்.

தொண்டரஞ்சுகளிறு†மடக்கிச்சுரும்பார்மலர்
இண்டைகட்டிவழிபாடுசெய்யுமிடமென்பரால்
வண்டுபாடமயிலாலமான்கன்றுதுள்ளவரிக்
கெண்டைபாயச்சுனைநீலமொட்டலருங்கேதாரமே. (க)

பாதம்விண்ணோர்பலரும்பரவிப்பணிந்தேத்தவே
வேதநான்கும்பதினெட்டொடாறும்விரித்தார்க்கிடம்
தாதுவிண்டமதுவுண்டுமிண்டிவருவண்டினம் ‡
கீதம்பாடமடமந்திகேட்டுகளுங்கேதாரமே. (உ)

முந்திவந்துபுரோதாயமூழ்கிமுனிகள்பலர்
எந்தைபெம்மானெனநின்றிறைஞ்சும்மிடமென்பரால்
மந்திபாயச்சரேலச்சொரிந்தும்முரிந்துக்கபூக்
கெந்தநாறக்கிளருஞ்சடையெந்தைகேதாரமே. (௩)

உள்ளமிக்கார்குதிரைம்முகத்தாரொருகாலர்கள்
எள்கலில்லாவிமையோர்கள்சேரும்மிடமென்பரால்
பிள்ளைதுள்ளிக்கிளைபயில்வகேட்டுப்பிரியாதுபோய்க்
கிள்ளையேனற்கதிர்கொணர்ந்துவாய்ப்பெய்யுங்கேதாரமே. (௪)

ஊழியூழியுணர்வார்கள்வேதத்தினொண்பொருள்களால்
வாழியெந்தையெனவந்திறைஞ்சும்மிடமென்பரால்
மேழிதாங்கியுழுவார்கள்போலவ்விரைதேரிய
கேழல்பூழ்தியிளக்கமணிசிந்துங்கேதாரமே. (௫)

* புரத்துறை என்றும் பாடம். † அஞ்சுகளிறு - ஐம்புலக்களிறு; அஞ்சு ஆகுபெயர்.
‡ வரிவண்டினம் என்றும் பாடம்.

Koviloor Digital Library

நீறுபூசிநிலத்துண்டுநீர்மூழ்கிநீள்வரைதன்மேல்
தேறுசிந்தையுடையார்கள்சேருமிடமென்பரால்
ஏறிமாவின்கனியும்பலவின்னிருஞ்சுளைகளும்
கீறிநாளும்முசுக்கிளையொடுண்டுகளுங்கேதாரமே. (சு)

மடந்தைபாகத்தடக்கிம்மறையோதிவானோர்தொழத்
தொடர்ந்தநம்மேல்வினைதீர்க்கநின்றார்க்கிடமென்பரால்
உடைந்தகாற்றுக்குயர்வேங்கைபூத்துதிரக்கல்லறைகண்மேல்
கிடந்தவேங்கைசினமாமுகஞ்செய்*யுங்கேதாரமே. (எ)

அரவமுந்நீரணியிலங்கைக்கோனையருவரைதனால்
வெருவவூன்றிவிரலாலடர்த்தார்க்கிடமென்பரால்
குரவங்கோங்கங்குளிர்பிண்டிஞாழல்சுரபுன்னைமேல்
கிரமமாகவரிவண்டுபண்செய்யுங்கேதாரமே. (அ)

ஆழ்ந்துகாணாருயர்ந்தெய்தகில்லாரலமந்தவர்
தாழ்ந்துதந்தம்முடிசாயநின்றார்க்கிடமென்பரால்
வீழ்ந்துசெற்றுநிழற்கிறங்கும்வேழத்தின்வெண்மருப்பினைக்
கீழ்ந்துசிங்கங்குருகுண்ணமுத்துதிருங்கேதாரமே. (கூ)

கடுக்கடின்றுகழிமீன்கவர்வார்கண்மாசுடம்பினர்
இடுக்கணுய்ப்பாரவரெய்தவொண்ணாவிடமென்பரால்
அடுக்கநின்றவ்வறவுரைகள்கேட்டாங்கவர்வினைகளைக்
கெடுக்கநின்றபெருமானுறைகின்றகேதாரமே. (க0)

வாய்ந்தசெந்நெல்விளைகழனிமல்கும்வயற்காழியான்
ஏய்ந்தநீர்க்கோட்டிமையோருறைகின்றகேதாரத்தை
ஆய்ந்துசொன்னவருந்தமிழ்கள்பத்தும்மிசைவல்லவர்
வேந்தராகியுலகாண்டுவீடுகதிபெறுவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

வாழ்வாவதுமாயம்மிதுமண்ணாவதுதிண்ணம்
பாழ்போவதுபிறவிக்கடல்பசிநோய்செய்தபறிதான்
தாழாதறஞ்செய்மின்றடங்கண்ணான்மலரோனும்
கீழ்மேலுறநின்றான்றிருக்கேதாரமெனீரே. (க)

* கிடந்தவேங்கை, வேங்கைபூத்துதிர்ந்தகல்லறைகள் புலியைப்போறலின் அவற்றின்மேற் சினமாக முகஞ்செய்ததென்க; முகஞ்செய்தல் - பார்த்தல்; வேங்கைபூத்துதிர்ந்த கல்லறை புலிபோன்றிருத்தலை "கருங்கால் வேங்கை வீயுகு துறுகல்—இரும்புலிக் குருளையிற் றோன்றுங் காட்டிடை" என்பதனாலுமறிக

Koviloor Digital Library

பறியேசுமந்துழல்வீர்பறிநரிக்கிறுவதறியீர்
குறிகூவியகூற்றங்கொளுநாளாலறமுளவே
அறிவானிலுமறிவானலநறுநீரொடுசோறு
கிறிபேசிநின்றிடுவார்தொழுகேதாரமெனீரே. (உ)

கொம்பைப்பிடித்தொருக்காலர்களிருக்கான்மலர்தூவி
நம்பன்னமை* யாள்வனென்றுநடுநாளையும்பகலும்
கம்பக்களிற்றினமாய்நின்றுசுனைநீர்களைத்தூவிச்
செம்பொற்பொடிசிந்துந்திருக்கேதாரமெனீரே. (ங)

உழக்கேயுண்டுபடைத்தீட்டிவைத்திழப்பார்களுஞ்சிலர்கள்
வழக்கேயெனிற் † பிழக்கேயென்பர்மதிமாந்தியமாந்தர்
சழக்கேபறிநிறைப்பாரொடுதவமாவதுசெயன்மின் ‡
கிழக்கேசலமிடுவார்தொழுகேதாரமெனீரே. (ச)

வாளோடியதடங்கண்ணியர்வலையிலழுந்தாதே
நாளோடியநமனார்தமர்நணுகாமுனநணுகி
ஆளாயுய்ம்மினடிகட்கிடமதுவேயெனிலிதுவே
கீளோ ¶ டரவசைத்தானிடங்கேதாரமெனீரே. (ரு)

தளிசாலைகடவமாவதுதம்மைப்பெறிலன்றே
குளியிருளங்குருக்கேத்திரங்கோதாவிரிக்குமரி
தெளியிருளஞ்சிப்பர்ப்பதந்தெற்குவடக்காகக்
கிளிவாழையொண்கனிகீறியுண்கேதாரமெனீரே. (சு)

பண்ணின்றமிழிசைபாடலின்பழவேய்முழவதிரக்
கண்ணின்னொளிகனகச்சுனைவயிரம்மவைசொரிய
மண்ணின்றனமதவேழங்கண்மணிவாரிக்கொண்டெறியக்
கிண்ணென்றிசைமுரலுந்திருக்கேதாரமெனீரே. (எ)

முளைக்கைப்பிடிமுகமன்சொலிமுதுவேய்களையிறுத்துத்
துளைக்கைக்களிற்றினமாய்நின்றுசுனைநீர்களைத்தூவி
வளைக்கைப்பொழிமழைகூர்தரமயின்மான்பிணைநிலத்தைக்
கிளைக்கமணிசிந்துந்திருக்கேதாரமெனீரே. (அ)

பொதியேசுமந்துழல்வீர்பொதியவமாவதுமறியீர்
மதிமாந்தியவழியேசென்றுகுழிவீழ்வதும்வினையால்
கதிசூழ்கடலிலங்கைக்கிறைமலங்கவரையடர்த்துக்
கெதிபேறுசெய்திருந்தானிடங்கேதாரமெனீரே. (கூ)

* ஒருக்காலர்கள் நம்பன் நமை ஆள்வானென்று கொம்பைப்பிடித்து இருக்கான்மலர் தூவி எனக்கூட்டுக; ஒருக்குகாலர்கள் ஒருக்காலர்கள் என நின்றது; பிராணவாயுவைத் தம்பித்தவர்கள்; மனத்தை ஒடுக்கியவழியையுடையர்களுமாம்; கால் - வழி. இருக்கால்– இருக்கோடு; தூவி - தூவ. நம்பநமை என்றும் பாடம். † பிழைக்கேயென்பர் என்றும் பாடம். ‡ செயேன்மின் என்றும் பாடம். ¶ கீள் - இலங்கோடு.

Koviloor Digital Library

நாவின்மிசையரையன்றனொடுதமிழ்ஞானசம்பந்தன்
யாவர்சிவனடியார்களுக்கடியானடித்தொண்டன் *
தேவன்றிருக்கேதாரத்தையூரன்னுரைசெய்த
பாவின்றமிழ்வல்லார்பரலோகத்திருப்பாரே. (க0)

திருச்சிற்றம்பலம்.

திருக்கேதாரத்திருப்பதிகம் - உ.

ஆ திருப்பதிகம் - எ.

சுவாமி தேவி திருநாமங்கள் - கேதாரநாதர், கேதாரகௌரியம்மை.

ரு. ஸ்ரீ கயிலாயம். †

திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர்.

பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

பொடிகொளுருவர்புலியினதளர்புரிநூறிகழ்மார்பில்
கடிகொள்கொன்றைகலந்தநீற்றர்கறைசேர்கண்டத்தர்
இடியகுரலாலிரியுமடங்கலுடங்குமுழைச்சாரல்
கடியவிடைமேற்கொடியொன்றுடையார்கயிலைமலையாரே. (க)

புரிகொள்சடையரடியர்க்கெளியார்கிளிசேர்மொழிமங்கை
தெரியவுருவில்வைத்துகந்ததேவர்பெருமானுர்
பரியகளிற்றையரவுவிழுங்கிமழுங்கவிருள் ‡ கூர்ந்த
கரியமிடற்றர்செய்யமேனிக்கயிலைமலையாரே. (உ)

மாவினுரிவைமங்கைவெருவமூடிமுடிதன்மேல்
மேவுமதியுநதியும்வைத்தவிறைவர் ¶ கழலுன்னும்
தேவர்தேவர்திரிசூலத்தர்திரங்கன்முகவன்சேர்
காவும்பொழிலுங்கடுங்கற்சுனைசூழ்கயிலைமலையாரே. (௩)

முந்நீர்சூழ்ந்தநஞ்சமுண்டமுதல்வர்மதனன்றன்
தென்னீருருவ § மழியத்திருக்கண்சிவந்தநுதலினுர்
மன்னீர்மடுவும்படுகல்லறையினுழுவைசினங்கொண்டு
கன்னீர்வரைமேலிரைமுன்றேடுங்கயிலைமலையாரே. (ச)

* தொண்டென் என்றும் பாடம். † திருநொடித்தான்மலை எனவும் பிரதிபேதமுண்டு; சங்காரகருத்தாவாகிய உருத்திரர் வீற்றிருத்தலின் கயிலாயம் நொடித்தான்மலை எனப்பட்டது. நொடித்தல் - சங்கரித்தல். ‡ மழுங்கியிருள் என்றும் பாடம். ¶ விளைவர் என்றும் பாடம். § தென்னீருருவம் - சிறந்தநீர்மையையுடைய வடிவம்,

Koviloor Digital Library

ஒன்றும்பலவுமாயவேடத்தொருவர்கழல்சேர்வார்
நன்றுநினைந்துநாடற்குரியார்கூடித்திரண்டெங்கும்
தென்றியிருளிற்றிகைத்தகரிதண்சார * னெறியோடிக்
கன்றும்பிடியுமடிவாரஞ்சேர்கயிலைமலையாரே. (௫)

தாதார்கொன்றைதயங்குமுடியர்முயங்குமடவாளைப்
போதார்பாகமாகவைத்தபுனிதர்பனிமல்கும்
மூதாருலகின்முனிவருடனாயறநான்கருள்செய்த
காதார்குழையர்வேதத்திரளர்கயிலைமலையாரே. (௬)

தொடுத்தார்புரமூன்றெரியச்சிலைமேலெரியொண்பகழியார்†
எடுத்தான்றிரடோண்முடிகள்பத்துமிடியவிரல்வைத்தார்
கொடுத்தார்படைகள்கொண்டாராளாக்குறுகிவருங்கூற்றைக்
கடுத்தாங்கவனைக்கழலாலுதைத்தார்கயிலைமலையாரே. (௮)

ஊணாப்பலிகொண்டுலகிலேற்றாரிலகுமணிநாகம்
பூணாணாகப்பூண்டார்புகழுமிருவர்தாம்
பேணாவோடிநேடவெங்கும்பிறங்குமெரியாகிக்
காணாவண்ணமுயர்ந்தார்போலுங்கயிலைமலையாரே. (௯)

விருதுபகரும்வெஞ்சொற்சமணர்வஞ்சச்சாக்கியர்
பொருதுபகருமொழியைக்கொள்ளார்புகழ்வார்க்கணியராய்
எருதொன்றுகைத்திங்கிடுவார்தம்பாலிரந்துண்டிகழ்வார்கள்
கருதும்வண்ணமுடையார்போலுங்கயிலைமலையாரே. (௧௦)

போரார்கடலிற்புனல்சூழ்காழிப்புகழார்சம்பந்தன்
காரார்மேகங்குடிகொள்சாரற்கயிலைமலையார்மேல்
தேராவுரைத்தசெஞ்சொன்மாலைசெப்புமடியார்மேல்
வாராபிணிகள்வானோருலகின்மருவுமனத்தாரே.‡ (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவிராகம். பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

வாளவரிகோளபுலிகீளதுரிதாளின்மிசைநாளுமகிழ்வர்
ஆளுமவர்வேளநகர்போளயிலகோளகளிறுளிவாயில்
தோளமார்தாளமகர்கூளிபெழமீளிமிளிர்தூளிவளர்பொன்
காளமுகின்மூளுமிருள்கீளவிரிதாளகயிலாயமலையே. (௧)

புற்றரவுபற்றியகைநெற்றியதுமற்றொருகணொற்றைவிடையன்
செற்றதெயிலுற்றதுமைபற்றவர்கணற்றுணைவனுற்றநகர்தான் ¶
சுற்றுமணிபெற்றதொளிசெற்றமொடுகுற்றமிலதெற்றெனவினாய்க் §
கற்றவர்கள்சொற்றொகையின்முற்றுமொளிபெற்றகயிலாயமலையே. (௨)

* தண்சாரல் என்றும் பாடம். † மேலரிபொண்பகழியால் என்றும், மேலரியொண் பகழியார் என்றும் பாடம். ‡ இத்திருப்பதிகத்தில் எ-வது செய்யுள் மறைந்துபோயிற்று. ¶ துணைவனிற்றநகர்தான் என்றும் பாடம். § தெற்றனவினால் என்றும் பாடம்; தெற்றெனவு - தெளிவு.

Koviloor Digital Library

சிங்கவரைமங்கையர்கடங்களனசெங்கைநிறைகொங்குமலர்தூய்
எங்கள்வினைசங்கையவையிங்ககலவங்கயொழியெங்குமுளவாய்த்
திங்களிருளொங்கவொளிவிங்கிமிளிர்தொங்கலொடு* தங்கவயலே
கங்கையொடுபொங்குசடையெங்களிறைதங்குகயிலாயமலையே. (௩)

முடியசடைபிடியதொருவடியமழுவுடையர்செடியுடையதலையில்
வெடியவினைகொடியர்கெடவிடுசில்பலிநொடியமகிழடிகளிடமாம்
கொடியகுரலுடையவிடைகடியதுடியடியினொடுமிடியினதிரக்
கடியகுரனெடியமுகின்மடியவதரடிகொள்கயிலாயமலையே. (௪)

குடங்கையினுடங்கெரிதொடர்ந்தெழவிடங்கிளர்படங்கொளரவம்
மடங்கொளிபடர்ந்திடநடந்தருவிடங்கனதிடந்தண்முகில்போய்த்
தடங்கடனொடர்ந்துடனுடங்குவவிடங்கொளமிடைந்தகுரலால்
கடுங்கலின்முடங்கலைநுடங்கவொடுங்குகயிலாயமலையே. (௫)

ஏதமிலபூதமொடுகோதைதுணையாதிமுதல்வேதவிகிர்தன்
கீதமொடுநீதிபலவோதிமறவாதுபயினுதனகர்தான்
தாதுபொதிபோதுவிடவூதுசிறைமீதுதுளிகூதனலியக்
காதன்மிகுசோதிகிளர்மாதுமயில்கோதுகயிலாயமலையே. (௬)

சென்றுபலவென்றுலவுபுன்றலையர்துன்றலொடுமொன்றியுடனே
நின்றமரரென்றுமிறைவன்றனடிசென்றுபணிகின்றநகர்தான்
துன்றுமலர்பொன்றிகழ்செய்கொன்றைவிரைதென்றலொடுசென்றுகமழக்
கன்றுபிடிதுன்றுகளிறென்றிவைமுன்னின்றகயிலாயமலையே. (௭)

மருப்பிடைநெருப்பெழுதருக்கொடுசெருச்செய்தபருத்தகளிறின்
பொருப்பிடைவிருப்புற † விருக்கையையொருக்குடனரக்கனுணரா
தொருத்தியைவெருக்குறவெருட்டலுநெருக்கெனநிருத்தவிரலால்
கருத்திலவொருத்தனையெருத்திறநெரித்தகயிலாயமலையே. (௮)

பரியதிரைபெரியபுனல்வரியபுலி ‡ யுரியதுடைபரிசையுடையான்
வரியவளையரியகணியுருவினொடுபுரிவினவர்பிரிவினகர்தான்
பெரியவெரியுருவமதுதெரியவுருபரிவுதரு ¶ மருமையதனால்
கரியவனுமரியமறைபுரியவனுமருவுகயிலாயமலையே. (௯)

அண்டர்தொழுசண்டிபணிகண்டடிமைகொண்டவிறைதுண்டமதியோ
டிண்டைபுனைவுண்டசடைமுண்டதரசண்டவிருள்கண்டரிடமாம்
குண்டமணவண்டரவர்மண்டைகையிலுண்டுளறி § மிண்டுசமயம்
கண்டவர்கள்கொண்டவர்கள்பண்டுமறியாதகயிலாயமலையே. (௧௦)

அந்தண்வரைவந்தபுனறந்ததிரைசந்தனமொடுந்தியகிலும்
கந்தமலர்கொந்தினொடுமந்திபலசிந்துகயிலாயமலைமேல்
எந்தையடிவந்தணுகுசந்தமொடுசெந்தமிழிசைந்தபுகலிப்
பந்தனுரைசிந்தைசெயவந்தவினைநைந்துபரலோகமெளிதே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

* வொளிலிங்க என்றும், வொளிவிங்க என்றும் பாடம்; வீங்கி வீங்க என்பனகுறுக்கல்விகாரம்பெற்று விங்கி விங்க எனநின்றன. மிகுதொங்கலொடு என்றும் பாடம். † பொருப்பிடையிருப்புறு என்றும் பாடம். ‡ வலியபுலி என்றும் பாடம். ¶ வுருபுரிவுதரு என்றும் பாடம். § ருழறி என்றும் பாடம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

கனகமாவயிரமுந்து * மாமணிக்கயிலைகண்டும்
உனகனாயரக்கனோடியெடுத்தலுமுமையாளஞ்ச
அனகனாய்நின்றவீசனூன்றலுமலறிவீழ்ந்தான்
மனகனாயூன்றினானேன்மறித்துநோக்கில்லையன்றே. (௧)

கதித்தவன்கண்சிவந்துகயிலைநன்மலையையோடி
அதிர்த்தவனெடுத்திடலுமரிவைதானஞ்சவீசன்
நெதித்தவனூன்றியிட்டநிலையழிந்தலறிவீழ்ந்தான்
மதித்திறையூன்றினானேன்மறித்துநோக்கில்லையன்றே. (௨)

கறுத்தவன்கண்சிவந்துகயிலைநன்மலையைக்கையால்
மறித்தலுமங்கையஞ்சவானவரிறைவனக்கு
நெறித்தொருவிரலாலூன்றநெடுவரைபோலவீழ்ந்தான்
மறித்திறையூன்றினானேன்மறித்துநோக்கில்லையன்றே. (௩)

கடுத்தவன்கண்சிவந்துகயிலைநன்மலையையோடி
எடுத்தலுமங்கையஞ்சவிறையவனிறையேநக்கு
நொடிப்பளவிரலாலூன்றநோவதுமலறியிட்டான்
மடித்திறையூன்றினானேன்மறித்துநோக்கில்லையன்றே. (௪)

கன்றித்தன்கண்சிவந்துகயிலைநன்மலையையோடி
வென்றித்தன்கைத்தலத்தாலெடுத்தலும்வெருவமங்கை
நன்றுத்தானக்குநாதனூன்றலுநகழவீழ்ந்தான்
மன்றித்தானூன்றினானேன்மறித்துநோக்கில்லையன்றே. (௫)

களித்தவன்கண்சிவந்துகயிலைநன்மலையையோடி
நெளித்தவனெடுத்திடலுநேரிழையஞ்சநோக்கி
வெளித்தவனூன்றியிட்டவெற்பினாலலறிவீழ்ந்தான்
மளித்திறையூன்றினானேன்மறித்துநோக்கில்லையன்றே. (௬)

கருத்தனாய்க்கண்சிவந்துகயிலைநன்மலையைக்கையால்
எருத்தனாயெடுத்தவாறேயேந்திழையஞ்சவீசன்
திருத்தனாய்நின்றதேவன்றிருவிரலூன்றவீழ்ந்தான்
வருத்துவானூன்றினானேன்மறித்துநோக்கில்லையன்றே. (௭)

கடியவன்கண்சிவந்துகயிலைநன்மலையையோடி
வடிவுடைமங்கையஞ்சவெடுத்தலுமருவநோக்கிச்
செடிபடத்திருவிரல்லாலூன்றலுஞ்சிதைந்துவீழ்ந்தான்
வடிவுறவூன்றினானேன்மறித்துநோக்கில்லையன்றே. (௮)

* வயிரமுத்து என்றும் பாடம்.

Koviloor Digital Library

கரியத்தான்கண்சிவந்துகயிலைநன்மலையைப்பற்றி
இரியத்தானெடுத்திடலுமேந்திழையஞ்சவீசன்
நெரியத்தானூன்றமுன்னநிற்கிலாதலறிவீழ்ந்தான்
மரியத்தானூன்றினானேன்மறித்துநோக்கில்லையன்றே. (கூ)

கற்றனன்கயிலைதன்னைக்காண்டலுமரக்கனோடிச்
செற்றவனெடுத்தவாறேசேயிழையஞ்சவீசன்
உற்றிறையூன்றமுன்னமுணர்வழிவகையால்வீழ்ந்தான்
மற்றிறையூன்றினானேன்மறித்துநோக்கில்லையன்றே. (க0)

திருச்சிற்றம்பலம்.

போற்றித்திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

வேற்றாகிவிண்ணாகிநின்றாய்போற்றி
மீளாமேயாளென்னைக்கொண்டாய்போற்றி
ஊற்றாகியுள்ளேயொளித்தாய்போற்றி
யோவாதசத்தத்தொலியேபோற்றி
ஆற்றாகியங்கேயமர்ந்தாய்* போற்றி
யாறங்கநால்வேதமானாய்போற்றி
காற்றாகியெங்குங்கலந்தாய்போற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி. (க)

பிச்சாடல்பேயோடுகந்தாய்போற்றி
பிறவியறுக்கும்பிரானேபோற்றி
வைச்சாடனன்றுமகிழ்ந்தாய்† போற்றி
மருவியென்சிந்தைபுகுந்தாய்போற்றி
பொய்ச்சார்புரமூன்றுமெய்தாய்போற்றி
போகாதென்சிந்தைபுகுந்தாய்போற்றி
கச்சாகநாகமசைத்தாய்போற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி. (உ)

மருவார்புரமூன்றுமெய்தாய்போற்றி
மருவியென்சிந்தைபுகுந்தாய்போற்றி
உருவாகியென்னைப்படைத்தாய்போற்றி
யுள்ளாவிவாங்கியொளித்தாய்போற்றி
திருவாகிநின்றதிறமேபோற்றி
தேசம்பரவப்படுவாய்போற்றி
கருவாகியோடுமுகிலேபோற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி. (ஙு)

* யிருந்தாய் என்றும் பாடம். † நன்றுமுகந்தாய் என்றும் பாடம்.

Koviloor Digital Library

வானத்தார்போற்றுமருந்தேபோற்றி
வந்தென்றன்சிந்தைபுகுந்தாய்போற்றி
ஊனத்தைநீக்குமுடலேபோற்றி
யோங்கியழலாய்நிமிர்ந்தாய்போற்றி
தேனத்தைவார்த்ததெளிவேபோற்றி
தேவர்க்குந்தேவனாய்நின்றாய்போற்றி
கானத்தியாடலுகந்தாய்போற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி. (௪)

ஊராகிநின்றவுலகேபோற்றி
யோங்கியழலாய்நிமிர்ந்தாய்போற்றி
பேராகியெங்கும்பரந்தாய்போற்றி
பெயராதென்சிந்தைபுகுந்தாய்போற்றி
நீராவியானநிழலேபோற்றி
நேர்வாரொருவரையுமில்லாய்போற்றி
காராகிநின்றமுகிலேபோற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி. (௫)

சில்லுருவாய்ச்சென்றுதிரண்டாய்போற்றி
தேவரறியாததேவேபோற்றி
புல்லுயிர்க்* கும்பூட்சிபுணர்த்தாய்போற்றி
போகாதென்சிந்தைபுகுந்தாய்போற்றி
பல்லுயிராய்ப்பார்தோறுநின்றாய்போற்றி
பற்றியுலகைவிடாதாய்போற்றி
கல்லுயிராய்* நின்றகனலேபோற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி. (௬)

பண்ணினிசையாகிநின்றாய்போற்றி
பாவிப்பார்பாவமறுப்பாய்போற்றி
எண்ணுமெழுத்துஞ்சொல்லானாய்போற்றி
யென்சிந்தைநீங்காவிறைவாபோற்றி
விண்ணுநிலனுந்தீயானாய்போற்றி
மேலவர்க்குமேலாகிநின்றாய்போற்றி
கண்ணின்மணியாகிநின்றாய்போற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி. (௭)

இமையாதுயிராதிருந்தாய்போற்றி
யென்சிந்தைநீங்காவிறைவாபோற்றி
உமைபாகமாகத்தணைத்தாய்போற்றி
யூழியேழானவொருவாபோற்றி
அமையாவருநஞ்சமார்ந்தாய்போற்றி
யாதிபுராணனாய்நின்றாய்போற்றி
கமையாகிநின்றகனலேபோற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி. (௮)

* இங்கே "புல்லாதி **** கல்லாய் மனிதராய்" என்பது சிந்திக்கற்பாலது.

Koviloor Digital Library

மூவாய்பிறவாயிறவாய்போற்றி
முன்னமேதோன்றிமுளைத்தாய்போற்றி
தேவாதிதேவர்தொழுந்தேவே * போற்றி
சென்றேறியெங்கும்பரந்தாய்போற்றி
ஆவாவடியேனுக்கெல்லாம்போற்றி
யல்லலலியவலந்தேன்போற்றி
காவாய்கனகத்திரளேபோற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி. (கூ)

நெடியவிசும்பொடுகண்ணேபோற்றி
நீளவகலமுடையாய்போற்றி
அடியுமுடியுமிகலிப்போற்றி †
யங்கொன்றறியாமைநின்றாய்போற்றி
கொடியவன்கூற்றமுதைத்தாய்போற்றி
கோயிலாவென்சிந்தைகொண்டாய்போற்றி
கடியவுருமொடுமின்னே ‡ போற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி. (க0)

உண்ணாதுறங்காதிருந்தாய்போற்றி
யோதாதேவேதமுணர்ந்தாய்போற்றி
எண்ணாவிலங்கைக்கோன்றன்னைப்போற்றி
யிறைவிரலாலவைத்துகந்தவீசாபோற்றி
பண்ணாரிசையின்சொற்கேட்டாய்போற்றி
பண்டேயென்சிந்தைபுகுந்தாய்போற்றி
கண்ணாயுலகுக்குநின்றாய்போற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி. (கக)

திருச்சிற்றம்பலம்.

போற்றித்திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

பொறையுடையபூமி ¶ நீரானாய்போற்றி
பூதப்படையாள்புனிதாபோற்றி
நிறையுடையநெஞ்சினிடையாய்போற்றி
நீங்காதென்னுள்ளத்திருந்தாய்போற்றி
மறையுடையவேதம்விரித்தாய்போற்றி
வானோர்வணங்கப்படுவாய்போற்றி
கறையுடையகண்டமுடையாய்போற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி. (க)

* தேவர்கொழுந்தே என்றும் பாடம். † மிகலீபோற்றி என்றும், மிகலிபோற்றி என்றும் பாடம். ‡ கடியவுருவொடுமின்னே என்றும் பாடம்; இப்பாடத்திற்கு நிக்கிரகாநுக்கிரவடிவங்கள் கூறப்பட்டனவாகக்கொள்க; இன் ஆகுபெயராய் இனிமைபயக்கும் அநுக்கிரகவடிவத்திற்காயிற்று. ¶ பிறரும் இவ்வாறே "பொறுமையும் *** நன்னிலமாண்பாகும்மே" என்றார்.

Koviloor Digital Library

முன்பாகிநின்றமுதலேபோற்றி
மூவாதமேனிமுக்கண்ணாபோற்றி
அன்பாகிநின்றார்க்கணியாய்போற்றி
யாறேறுசென்னிச்சடையாய்போற்றி
என்பாகவெங்குமணிந்தாய்போற்றி
யென்சிந்தைநீங்காவிறைவாபோற்றி
கண்பாவிநின்ற * கனலேபோற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி. (உ)

மாலையெழுந்தமதியேபோற்றி
மன்னியென்சிந்தையிருந்தாய்போற்றி
மேலைவினைகளறுப்பாய்போற்றி
மேலாடுதிங்கண்முடியாய்போற்றி
ஆலைக்கரும்பின்றெளிவே † போற்றி
யடியார்கட்காரமுதமானாய்போற்றி
காலைமுளைத்தகதிரேபோற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி. (௩)

உடலின்வினை ‡ களறுப்பாய்போற்றி
யொள்ளெரிவீசும்பிரானேபோற்றி
படருஞ்சடையின் ¶ மதியாய்போற்றி
பல்கணக்கூத்தப்பிரானேபோற்றி
சுடரிற்றிகழ்கின்றசோதிபோற்றி
தோன்றியென்னுள்ளத்திருந்தாய்போற்றி
கடலிலொளியாயமுத்தேபோற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி. (௪)

மைசேர்ந்தகண்டமுடையாய் § போற்றி
மாலுக்குமோராழியீந்தாய்போற்றி
பொய்சேர்ந்தசிந்தைபுகாதாய்போற்றி
போகாதென்னுள்ளத்திருந்தாய்போற்றி
மெய்சேரப்பால்வெண்ணீறாடீபோற்றி
மிக்கார்களேத்துந்விளக்கேபோற்றி
கைசேரனலேந்தியாடீபோற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி. (௫)

ஆறேறுசென்னிமுடியாய்போற்றி
யடியார்கட்காரமுதாய்நின்றாய்போற்றி
நீறேறுமேனியுடையாய்போற்றி
நீங்காதென்னுள்ளத்திருந்தாய்போற்றி

* கண்பாவிநின்ற என்றும் பாடம். † றெளியே என்றும் பாடம். ‡ உடலில்வினை என்றும் பாடம். ¶ சடையேன் என்றும் பாடம். § கண்டமிடற்றாய் என்றும் பாடம்.

Koviloor Digital Library

கூறேறுமங்கைமழுவா * போற்றி
கொள்ளுங்கிழமையேழானாய்போற்றி
காறேறுகண்ட † மிடற்றாய்போற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி. (சு)

அண்டமேழன்றுகடந்தாய்போற்றி
யாதிபுராணனாய்நின்றாய்போற்றி
பண்டைவினைகளறுப்பாய்போற்றி
பாரோர்விண்ணேத்தப்படுவாய்போற்றி
தொண்டர்பரவுமிடத்தாய் ‡ போற்றி
தொழிலேனைக்கியாளுஞ்சுடரேபோற்றி
கண்டங்கறுக்கவும்வல்லாய்போற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி. (எ)

பெருகியலைக்கின்றவாறேபோற்றி
பேராநோய்பேரவிடுப்பாய்போற்றி
உருகிநினைவார்தம்முள்ளாய்போற்றி
யூனந்தவிர்க்கும்பிரானேபோற்றி
அருகிமிளிர்கின்ற ¶ பொன்னேபோற்றி
யாருமிகழப்படாதாய்போற்றி
கருகிப்பொழிந்தோடுநீரேபோற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி. (அ)

செய்யமலர்மேலான்கண்ணன்போற்றித்
தேடியுணராமைநின்றாய்போற்றி
பொய்யாநஞ்சுண்டபொறையேபோற்றி
பொருளாகவென்னையாட்கொண்டாய்போற்றி
மெய்யாகவானஞ்சுகந்தாய்போற்றி
மிக்கார்களேத்துங்குணத்தாய்போற்றி
கையானைமெய்த்தோலுரித்தாய்போற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி. (கூ)

மேல்வைத்தவானோர்பெருமான்போற்றி
மேலாடுபுரமூன்றுமெய்தாய்போற்றி
சீலத்தான்றென்னிலங்கைமன்னன்போற்றிச்
சிலையெடுக்கவாயலறவைத்தாய்போற்றி
கோலத்தாற்குறைவில்லான்றன்னையன்று
கொடிதாகக்காய்ந்தகுழகாபோற்றி
காலத்தாற்காலனையுங்காய்ந்தாய்போற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி. (க0)

திருச்சிற்றம்பலம்.

* கூரேறுமங்கைமழுவா என்றும் பாடம். † காரேறுகண்டம் என்றும் பாடம். ‡ தொண்டர்பரவுமிடற்றாய் என்றும் பாடம்; தொண்டர் மிடற்றைப் பரவுதலை, "புவனங்களுய்யவையர்பொங்குநஞ்சுண்ணயாஞ்செய்—தவநின்றுதடுத்ததென்னத்தகைந்துதான்றரித்ததென்று—சிவனெந்தைகண்டந்தன்னைத்திருநீலகண்டமென்பர்" எனவும், "செய்வினை வந்தெமைத்தீண்டப்பெறாதிருநீலகண்டம் எனவும் வருவனவற்றாலறிக. ¶ அருகிமிகுகின்ற என்றும் பாடம்.

Koviloor Digital Library

போற்றித்திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

பாட்டானநல்லதொடையாய்போற்றி
பரிசையறியாமைநின்றாய்போற்றி
சூட்டானதிங்கள்முடியாய்போற்றி
தூமாலைமத்தமணிந்தாய்போற்றி
ஆட்டானதஞ்சு * மமர்ந்தாய்போற்றி
யடங்கார்புரமெரியநக்காய்போற்றி
காட்டானைமெய்த்தோலுரித்தாய்போற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி. (௧)

அதிராவினைகளறுப்பாய் † போற்றி
யாலநிழற்கீழமர்ந்தாய்போற்றி
சதுராசதுரக்குழையாய்போற்றி
சாம்பர்மெய்ப்பூசுந் ‡ தலைவாபோற்றி
எதிராவுலகமமைப்பாய்போற்றி
யென்றுமீளாவருள்செய்வாய்போற்றி
கதிரார்கதிருக்கோர்கண்ணேபோற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி. (௨)

செய்யாய்கரியாய்வெளியாய்போற்றி
செல்லாத ¶ செல்வமுடையாய்போற்றி
ஐயாய்பெரியாய்சிறியாய்போற்றி
யாகாயவண்ணமுடையாய்போற்றி §
வெய்யாய்தணியாயணியாய்போற்றி
வேளாதவேள்வியுடையாய்போற்றி
கையார்தழலார்விடங்காபோற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி. (௩)

ஆட்சியுலகையுடையாய்போற்றி
யடியார்க்கமு 0 தெலாமீவாய்போற்றி
சூட்சிசிறிதுமிலாதாய்போற்றி
சூழ்ந்தகடனஞ்சமுண்டாய்போற்றி
மாட்சிபெரிதுமுடையாய்போற்றி
மன்னியென்சிந்தைமகிழ்ந்தாய்போற்றி
காட்சிபெரிதுமரியாய் ** போற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி. (௪)

* ஆட்டானவைஞ்சு என்றும் பாடம். † வினைகளதிர்ப்பாய் என்றும், வினைகள்தீர்ப்பாய் என்றும் பாடம். ‡ சாம்பல்மெய்பூசுந் என்றும் பாடம். ¶ செல்வாய என்றும் பாடம். § முடியாய்போற்றி என்றும் பாடம். 0 அமுது - முத்தி; அது சாலோக சாமீப சாரூப சாயுச்சியமென நான்குவகைப்படுதலால் எல்லாம் எனப்பன்மையாற்கூறினார். ** காட்சிபெரிது மறியாய் என்றும் பாடம்; சுட்டுணர்வைப்பெரிதுமறியாதவரே எனினும், சுட்டுணர்வினாற்பெரிதும் அறியப்படாதவரே எனினுமாம்.

Koviloor Digital Library

முன்னியாநின்றமுதல்வாபோற்றி
மூவாதமேனியுடையாய்போற்றி
என்னியாயெந்தைபிரானேபோற்றி
யேழினிசையேயுகப்பாய்போற்றி
மன்னியமங்கைமணாளாபோற்றி
மந்திரமுந்தந்திரமுமானாய்போற்றி
கன்னியார்கங்கைத் * தலைவாபோற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி. (ரு)

உரியாயுலகினுக்கெல்லாம்போற்றி
யுணர்வென்னுமூர்வதுடையாய் † போற்றி
எரியாயதெய்வச்சுடரேபோற்றி
யேசுமாமுண்டியுடையாய்போற்றி
அரியாயமரர்கட்கெல்லாம்போற்றி
யறிவேயடக்கமுடையாய்போற்றி
கரியானுக்காழியன்றீந்தாய்போற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி. (சு)

எண்மேலுமெண்ணமுடையாய்போற்றி
யேறரியவேறுங்குணத்தாய் ‡ போற்றி
பண்மேலேபாவித்திருந்தாய்போற்றி
பண்ணொடியாழ்வீணைபயின்றாய்போற்றி
விண்மேலுமேலுநிமிர்ந்தாய்போற்றி
மேலார்கண்மேலார்கண்மேலாய்போற்றி
கண்மேலுங்கண்ணொன்றுடையாய்போற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி. (எ)

முடியார்சடையின் ¶ மதியாய்போற்றி
முழுநீறுசண்ணித்தமூர்த்திபோற்றி
துடியாரிடையுமையாள்பங்காபோற்றி
சோதித்தார்காணாமைநின்றாய்போற்றி
அடியாரடிமையறிவாய்போற்றி
யமரர்பதியாளவைத்தாய்போற்றி
கடியார்புரமூன்றுமெய்தாய்போற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி. (அ)

* கன்னியாகங்கைத் என்றும் பாடம். † உணர்வென்னும் ஊர்வது உடையாய்-ஞான மாகிய வாகனத்தையுடையாய்; "உயவலூர்திகொண்டு" என்பது மது; உயவல் ஆகுபெயர். சிவனுக்கு உபாங்கங்களும் ஞானம் என்பது "உருவருள்குணங்களோடுமுணர்வருளுருவிற்றோன்றுங்—கருமமுமருளரன்றன்கரசரணாதிசாங்கந் — தருமருளுபாங்கமெல்லாந் தானருடனக்கொன்றின்றி—யருளுருவுயிருக்கென்றேயாக்கினனசிந்தனன்றே" என்பதனாலறிக. ‡ சிருட்டி திதி சங்காரம் பற்றி இராசதாதி முக்குணங்களையுடைமையேயன்றி, உயர்ந்தவரிய வேறும் எண்குணங்களையுடையவனே; குணாதீதன் முக்குணங்களை வகித்தல் முத்தொழில்பற்றி என்க; குணாதீதன் என்றதும் முக்குணங்களைக்குறித்ததே; எண்குணங்களையன்று; ஒருகுணமுமில்லையெனின் குணியுமில்லையெனப்படுமாகலான்; குணாதீதன் என்றது முக்குணங்கட்கு அதீதன் என்பதேயாம். இதனை அப்பயதீக்ஷிதர் சிவதத்துவவிவேகவிருத்தியுள் தடைவிடைகளால் விரித்துச்சாதித்தனர். ¶ சடைமேல் என்றும் பாடம்.

Koviloor Digital Library

போற்றிசைத்துன்னடிபாவநின்றுப்போற்றி
புண்ணியனேநண்ணலரியாய்போற்றி
எற்றிசைக்கும்வான்மேலிருந்தாய்போற்றி
யெண்ணுயிரநூறுபெயராய்போற்றி
காற்றிசைக்கும்விளக்காயநாதாபோற்றி
நான்முகற்குமாற்குமரியாய்போற்றி
காற்றிசைக்குந்திசைக்கெல்லாம்வித்தேபோற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி.* (கo)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்தி நாயனார்.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

தானெனைமுன்படைத்தானதறிந்துதன்பொன்னடிக்கே
நானெனபாடலந்தோ † நாயினேனைப்பொருட்படுத்து
வானெனைவந்தெதிர்கொள்ளமத்தயானையருள்புரிந்து
ஊனுயிர் ‡ வேறுசெய்தானொடித்தான்மலையுத்தமனே. (க)

ஆனையுரித்தபகையடியேனொடுமீளக்கொலோ
ஊனையுயிர்வெருட்டியொள்ளியானைநினைந்திருந்தேன்
வானைமதித்தமர் § வலஞ்செய்தெனையேறவைக்க
ஆனையருள்புரிந்தானொடித்தான்மலையுத்தமனே. (உ)

மந்திரமொன்றறியேன்மனைவாழ்க்கைமகிழ்ந்தடியேன்
சுந்தரவேடங்களாற்றுரிசேசெயுந்தொண்டனெனை
அந்தரமால்விசும்பிலழகானையருள்புரிந்த
துந்தரமோநெஞ்சமேநொடித்தான்மலையுத்தமனே. (ஙா)

வாழ்வையுகந்தநெஞ்சேமடவார்தங்கள்வல்வினைப்பட்
டாழமுகந்தவென்னையதுமாற்றியமரரெல்லாம்
சூழவருள்புரிந்துதொண்டனேன்பரமல்லதொரு
வேழமருள்புரிந்தானொடித்தான்மலையுத்தமனே. (சு)

மண்ணுலகிற்பிறந்துநும்மைவாழ்த்தும்வழியடியார்
பொன்னுலகம்பெறுதறொண்டனேனின்றுகண்டொழிந்தேன்
விண்ணுலகத்தவர்கள்விரும்பவெள்ளையானையின்மேல்
என்னுடல்காட்டுவித்தானொடித்தான்மலையுத்தமனே. (ரு)

* இத்திருப்பதிகத்தில் க–வது செய்யுள் மறைந்துபோயிற்று. † பாடவந்தோ என்றும் பாடம். ‡ யருள்புரிந்–தூனுயிர் என்றும் பாடம். § மதித்த அமரர் மதித்தமரர் எனப் பெயரெச்சத்தகரம் தொக்கது.

Koviloor Digital Library

அஞ்சினையொன்றிநின்று * வலர்கொண்டடிசேர்வறியா
வஞ்சனையென்மனமேவைகிவானநன்னுடர்முன்னே
துஞ்சுதன்மாற்றுவித்துத்தொண்டனேன்பரமல்லதொரு
வெஞ்சினவானைதந்தானுடித்தான்மலையுத்தமனே. (சு)

நிலைகெடவிண்ணதிரநிலமெங்குமதிர்ந்தசைய
மலையிடையானையேறிவழியேவருவேனெதிரே
அலைகடலாலரையன்னலர்கொண்டுமுன்வந்திறைஞ்ச
உலையணையாதவண்ணநொடித்தான் † மலையுத்தமனே. (எ)

அரவொலியாகமங்களறிவாரறிதோத்திரங்கள்
விரவியவேதவொலிவிண்ணெலாம்வந்தெதிர்ந்திசைப்ப
வரமலிவாணன்வந்துவழிதந்தெனக்கேறுவதோர்
சிரமலியானைதந்தானுடித்தான்மலையுத்தமனே. (அ)

இந்திரன்மால்பிரமன்னெழிலார்மிகுதேவரெல்லாம்
வந்தெதிர்கொள்ளவென்னை ‡ மத்தயானையருள்புரிந்து
மந்திரமாமுனிவரிவனாரெனவெம்பெருமான்
நந்தமரூரனென்றானுடித்தான்மலையுத்தமனே. (கூ)

ஊழிதொறூழிமுற்றுமுயர்பொன்னுடித்தான்மலையைச் ¶
சூழிசையின்கரும்பின்சுவைநாவலவூரன்சொன்ன
ஏழிசையின்றமிழாலிசைந்தேத்தியபத்தினையும்
ஆழிகடலரையாவஞ்சையப்பர்க்கறிவிப்பதே. (க0)

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ கயிலாயத்திருப்பதிகம் - எ.
ஆ திருப்பதிகம் - கச.

சுவாமி தேவி திருநாமங்கள் - பரமசிவன், பார்வதியம்மை.

வடநாட்டிலுள்ள தலங்கள் முற்றுப்பெற்றன.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர் அருளிச்செய்த திருப்பதிகங்கள் சு; இத்திருப்பதிகங்களைப்பெற்றதலங்கள் ங. திருநாவுக்கரசுநாயனுர் அருளிச்செய்த திருப்பதிகங்கள் ரு; இத்திருப்பதிகங்களைப்பெற்றதலங்கள் உ. சுந்தரமூர்த்திநாயனுர் அருளிச்செய்ததிருப்பதிகங்கள் ௩; இத்திருப்பதிகங்களைப்பெற்றதலங்கள் ௩. ஆ திருப்பதிகங்கள் கச. தலங்கள் ங.

இருநூற்றெழுபத்துநான்குதலங்களும் முற்றுப்பெற்றன.

* அஞ்சினை ஒன்றி நின்று - ஐம்புலன்களை ஒடுக்கிநின்று; அஞ்சு ஆகுபெயர். அஞ்சினை யொன்றி நின்றலர்கொண்டடி என்றும் பாடம். † உலையணையாதவண்ணனொடித்தான் என்றும் பாடம். ‡ கொள்கவென்ன என்றும் பாடம். ¶ "உரந்தவாது நின்றாழிதோறேங்குமவ்வோங்கல் என்றார்" பிறரும்.

Koviloor Digital Library

சுந்தரமூர்த்திநாயனர், சிவபெருமானல் அனுப்பப்பட்ட வெள்ளையானையின்மேல் எறிக்கொண்டு திருக்கைலாச மலைக்கு எழுந்தருளும்போது தமது தோழராகிய சேரமான்பெருமாணுயனுரைத் திருவுளத்திலே நினைந்துகொண்டு சென்றூர். அவர், சுந்தரமூர்த்திநாயனருடைய செயலை அறிந்து, உடனே பக்கத்தில்நின்ற ஓர் குதிரையின்மேல் எறிக்கொண்டு, திருவஞ்சைக் களத்துக்குப்போய், வெள்ளையானையின்மேல் ஆகாயத்திற் செல்லும் நாயனுரைக்கண்டு, தாமேறிய குதிரையின் செவியில் ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை ஓதியருள, குதிரை ஆகாயத்தில் பாய்ந்து, நாயனருடைய வெள்ளையானையை அடைந்து, அதனை வலஞ்செய்து, அதற்கு முன்னுகச்சென்றது. சேரமான்பெருமாணயனர் முன்செல்ல, பின் சென்ற சுந்தரமூர்த்திநாயனர் "தானெனைமுன்படைத்தான்" என்னுந் திருப்பதிகத்தைப் பாடிக்கொண்டு திருக்கைலாசமலையின் தெற்குவாயிலுக்கு முன்போய், இருவரும் தத்த மூர்த்தியினின்றும் இறங்கி, பலவாயில்களையுங் கடந்து, திருவணுக்கன்திருவாயிலை அடைந்து, சிவாஞ்ஞையினலே செம்பொற்றிருக்கோயிலினுள்ளே சுந்தரமூர்த்திநாயனர் முன்னும் சேரமான்பெருமாணுயனர் பின்னுமாகச்சென்று சுவாமிசந்நிதானத்திலே விழுந்து நமஸ்கரித்து எழுந்து ஸ்தோத்திரஞ் செய்துகொண்டு நின்றூர்கள். சிவபெருமான் அவர்களை நோக்கி "நீங்கள் நம்முடைய கணங்களெல்லாவற்றிற்குந் தலைவராயிருங்கள்" என்று அருளிச்செய்தார். அதைக்கேட்டுத்திருக்கைலாசபதியை மீட்டும் நமஸ்கரித்து எழுந்து, அவருடைய திருவருளைச் சிரமேற்கொண்டு,சுந்தரமூர்த்திநாயனர் ஆலாலசுந்தரராகி முன்னே தாஞ்செய்த திருத்தொண்டைச் செய்பவரும், சேரமான்பெருமாணுயனர் கணநாதராகி அவர்செய்யுந் திருத்தொண்டைச்செய்பவருமாயினுர்கள். சுந்தரமூர்த்திநாயனர் தாம் வழியிலே அருளிச்செய்த திருப்பதிகத்தைத் தக்ஷிணபூமியிலே எற்றும்பொருட்டுச் சமுத்திரராஜனுகிய வருணனிடத்திலே கொடுத்தருள, அவன் அதைத் திருவஞ்சைக்களத்திலே உய்த்துத் தெரிவித்தான்.

பொது.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

திருநீலகண்டம்.

பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

அவ்வினைக்கிவ்வினையாமென்றுசொல்லுமஃதறிவீர் *
உய்வினைநாடா திருப்பதுமுந்தமக்கூனமன்றே
கைவினைசெய்தெம்பிரான்கழல்போற்றுதுநாமடியோம்
செய்வினைவந்தெமைத்தீண்டப்பெறுதிருநீலகண்டம். (க)

காவினையிட்டுங்குளம்பலதொட்டுங்கனிமனத்தால்
ஏவினையாலெயின்முன்றெரித்தீரென்றிருபொழுதும்
பூவினைக்கொய்துமலரடிபோற்றுதுநாமடியோம்
தீவினைவந்தெமைத்தீண்டப்பெறுதிருநீலகண்டம். (உ)

முலைத்தடமூழ்கியபோகங்களுமற்றெவையுமெல்லாம்
விலைத்தலையாவணங்கொண்டெமையாண்டவிரிசடையீர்
இலைத்தலைச்சூலமுந்தண்டுமழுவுமிவையுடையீர்
சிலைத்தெமைத்தீவினைதீண்டப்பெறுதிருநீலகண்டம். (ங)

* சொல்லுமதுவறிவீர் என்றும் பாடம்.

Koviloor Digital Library

விண்ணுலகாள்கின்றவிச்சாதரர்களும்வேதியரும்
புண்ணியரென்றிருபோதுந்தொழப்படும்புண்ணியரே
கண்ணிமையாதனமூன்றுடையீருங்கழலடைந்தோம்
திண்ணியதீவினைதீண்டப்பெறாதிருநீலகண்டம். (ச)

மற்றிணையில்லாமலைதிரண்டன்னதிண்டோளுடையீர்
கிற்றெமையாட்கொண்டுகேளாதொழிவதுந்தன்மைகொல்லோ
சொற்றுணைவாழ்க்கைதுறந்துந்திருவடி * யேயடைந்தோம்
செற்றெமைத்தீவினைதீண்டப்பெறாதிருநீலகண்டம். (ரு)

மறக்குமனத்தினைமாற்றியெம்மாவியைவற்புறுத்திப்
பிறப்பில்பெருமான்றிருந்தடிக்கீழ்ப்பிழையாதவண்ணம்
பறித்தமலர்கொடுவந்துமையேத்தும்பணியடியோம்
சிறப்பிலித்தீவினைதீண்டப்பெறாதிருநீலகண்டம். (சு)

கருவைக்கழித்திட்டுவாழ்க்கைகடிந்துங்கழலடிக்கே
உருகிமலர்கொடுவந்துமையேத்துதுநாமடியோம்
செருவிலரக்கனைச்சீரிலடர்த்தருள்செய்தவரே
திருவிலித்தீவினைதீண்டப்பெறாதிருநீலகண்டம். (அ)

நாற்றமலர்மிசைநான்முகனாரணன்வாதுசெய்து
தோற்றமுடையவடியுமுடியுந்தொடர்வரியீர்
தோற்றினுந்தோற்றுந்தொழுதுவணங்குதுநாமடியோம்
சீற்றமதாம்வினைதீண்டப்பெறாதிருநீலகண்டம். (கூ)

சாக்கியப்பட்டுஞ்சமணுருவாகியுடையொழிந்தும்
பாக்கியமின்றியிருதலைப்போகமும்பற்றும்விட்டார்
பூக்கமழ்கொன்றைப்புரிசடையீரடிபோற்றுகின்றோம்
தீக்குழித்தீவினைதீண்டப்பெறாதிருநீலகண்டம். (க0)

பிறந்தபிறவியிற்பேணியெஞ்செல்வன்கழலடைவான்
இறந்தபிறவியுண்டாகிலிமையவர்கோனடிக்கண்
திறம்பயின்ஞானசம்பந்தனசெந்தமிழ்பத்தும்வல்லார்
நிறைந்தவுலகினில்வானவர்கோனொடுங்கூடுவரே. † (கக)

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தப்பிள்ளையார், கொடிமாடச் செங்குன்றூரை அடைந்து, சுவாமி தரிசனஞ் செய்துகொண்டிருக்குநாளிலே, மழைக்காலம் நீங்கிப் பனிக்காலம்வர, குளிர் மிகுந்ததினால் பிள்ளையாருடைய பரிசனங்கள் நளிர் சுரத்தினால் வருத்தமுற்றுப் பிள்ளையாரை வணங்கி விண்ணப்பஞ்செய்ய, பிள்ளையார் "அவ்வினைக்கிவ்வினை" என்னுந் திருநீலகண்டத்திருப்பதிகத்தைப் பாடியருளினார். உடனே அக்கொங்கநாடு முழுதும் பனிப்பிணி தீர்ந்தது.

* தன்திருவடி என்றும் பாடம். † இத்திருப்பதிகத்தில் எ—வது செய்யுள் மறைந்துபோயிற்று.

Koviloor Digital Library

திருக்ஷேத்திரக்கோவை.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

ஆரூர் தில்லையம்பலம்வல்லநல்லம்வடகச்சியுமச்சிறுபாக்கநல்ல
கூரூர்குடவாயில்குடந்தைவெண்ணிகடல்சூழ்கழிப்பாலைதென்கோடிபீடார்
நீரூர்வயனின்றியூர்குன்றியூருங்குருகாவையூர்நாரையூர்நீடுகானப்
பேரூர்நன்னீள்வயனெய்த்தானமும்பிதற்றாய்பிறைசூடிதன்பேரிடமே. (க)

அண்ணாமலையீங்கோயுமத்திமுத்தாறகலாமுதுகுன்றங்கொடுங்குன்றமும்
கண்ணார்கழுக்குன்றங்கயிலைகோணம்* பயில்கற்குடிகாளத்திவாட்போக்கியும்
பண்ணார்மொழிமங்கையோர்பங்குடையான்பரங்குன்றம்பருப்பதம்பேணிநின்றே
எண்ணாயிரவம்பகலுமிடும்பைக்கடனீந்தலாங்காரணமே. (உ)

அட்டானமென்றோதியநாலிரண்டுமழகன்னுறைகாவனைத்துந்துறைகள்
எட்டாந்திருமூர்த்தியின்காடொன்பதுங்குளமூன்றுங்களமஞ்சும்பாடிநான்கும்
மட்டார்குழலாண்மலைமங்கைபங்கன்மதிக்குமிடமாகியபாழிமூன்றும்
சிட்டானவன்பாசூரென்றேவிரும்பாயரும்பாவங்களாயினதேய்ந்தறவே. (ங)

அறப்பள்ளியகத்தியான்பள்ளிவெள்ளைப்பொடிப்பூசியாறணிவானமர்காட்டுப்பள்ளி
சிறப்பள்ளிசிராப்பள்ளிசெம்பொன்பள்ளிதிருநனிபள்ளி † சீர்மகேந்திரத்துப்
பிறப்பில்லவன்பள்ளிவெள்ளச்சடையான்விரும்புமிடைப்பள்ளிவண்சக்கரமால்
உறைப்பாலடிபோற்றக்கொடுத்தபள்ளியுணராய்மடநெஞ்சமேயுன்னிநின்றே.

ஆறைவடமாகறலம்பரையாறணியார்பெருவேளூர்விளமர்தெங்கூர்
சேறைதுலைபுகலூரகலாதிவைகாதலித்தானவன்சேர்பதியே. ‡ (ரு)

மனவஞ்சர்மற்றோடமுன்மாதராருமதிகூர்திருக்கூடலிலாலவாயும்
இனவஞ்சொலிலாவிடைமாமருதுமிரும்பைப்பதிமாகாளம்வெற்றியூரும்
கனமஞ்சினமால்விடையான்விரும்புங்கருகாவூர்நல்லூர்பெரும்புலியூர்
தனமென்சொலிற்றஞ்சமென்றேநினைமின்றவமாமலமாயினதானறுமே. (சு)

மாட்டூர்மடப்பாச்சிலாச்சிராமமயிண்டீச்சரம்¶ வாதவூர்வாரணாசி
காட்டூர்கடம்பூர்படம்பக்கங்கொட்டுங்கடலொற்றியூர்மற்றுறையூரவையும்
கோட்டூர்திருவாமாத்தூர்கோழம்பமுங்கொடுங்கோவலூர்திருக்குணவாயில்.§

குலாவுதிங்கட்சடையான்குளிரும்பரிதிநியமம்,போற்றூரடியார்வழிபாடொழியாத்
தென்புறம்பயம்பூவணம்பூழியூரும்,காற்றூர்வரையன்றெடுத்தான்முடிதோணெரித்தா
னுறைகோயிலென்றென்றுநீகருதே. 0 (அ)

* கோணம் - திருக்கோணமலை. † திருநனிப்பள்ளி என்றும் பாடம். ‡ இத்திருப்பாட்டில் ஏனைய அடிகள் மறைந்துபோயின. ¶ மயிண்டீச்சம் என்றும், மயிண்டீச்சரம் என்றும், முண்டீச்சரம் என்றும் பாடம். § 0 இத்திருப்பாட்டுக்களில் ஏனைய அடிகள் மறைந்துபோயின.

Koviloor Digital Library

நெற்குன்றமோத்தூர்நிறைநீர்மருகனெடுவாயில்குறும்பலாநீடுதிரு
நற்குன்றம்வலம்புரங்நாகேச்சுரநளிர்சோலையுஞ்சேனமாகாளம்வாய்மூர்
கற்குன்றமொன்றேந்திமழைதடுத்தகடல்வண்ணனுமாமலரோனுங்காணச்
சொற்கென்றுந்தொலைவிலாதானுறையுங்குடமூக்கென்றுசொல்லிக்குலாவுமினே.

குத்தங்குடிவேதிகுடிபுனல்சூழ்குருந்தங்குடிதேவன்குடிமருவும்
அத்தங்குடிதண்டிருவண்குடியுமலம்புஞ்சலந்தன்சடைவைத்துகந்த
நித்தன்னிமலனுமையோடுங்கூடநெடுங்காலமுறைவிடமென்றுசொல்லாப்
புத்தர்புறங்கூறியபுன்சமணர்நெடும்பொய்களைவிட்டுநினைந்துய்ம்மினே. (க0)

அம்மானையருந்தவமாகிநின்றவமரர்பெருமான்பதியானவுன்னிக்
கொய்ம்மாமலர்ச்சோலைகுலாவுகொச்சைக்கிறைவன்சிவஞானசம்பந்தன்சொன்ன
இம்மாலையீரைந்துமிருநிலத்திலிரவும்பகலுந்நினைந்தேத்திநின்று
விம்மாவெருவாவிரும்பும்மடியார்விதியார்பிரியார்சிவன்சேவடிக்கே. (கக)

திருச்சிற்றம்பலம்.

கோளறுதிருப்பதிகம். *

பண் - பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

வேயுறுதோளிபங்கன்விடமுண்டகண்டன்மிகநல்லவீணைதடவி
மாசறுதிங்கள்கங்கைமுடிமேலணிந்தெனுளமேபுகுந்தவதனால்
ஞாயிறுதிங்கள்செவ்வாய்புதன்வியாழம்வெள்ளிசனிபாம்பிரண்டுமுடனே
ஆசறுநல்லநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (க)

என்பொடுகொம்பொடாமையிவைமார்பிலங்கவெருதேறியேழையுடனே
பொன்பொதிமத்தமாலைபுனல்சூடிவந்தெனுளமேபுகுந்தவதனால்
ஒன்பதொடொன்றொடேழுபதினெட்டொடாறுமுடனாயநாள் † களவைதாம்
அன்பொடு ‡ நல்லநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (உ)

உருவளர்பவளமேனியொளிநீறணிந்துவுமையோடும்வெள்ளைவிடைமேல்
முருகலர்கொன்றைதிங்கண்முடிமேலணிந்தெனுளமேபுகுந்தவதனால்
திருமகள்கலையதூர்திசெயமாதுபூமிதிசைதெய்வமானபலவும்
அருநெதிநல்லநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (௩)

மதிநுதன்மங்கையோடுவடபாலிருந்துமறையோதுமெங்கள்பரமன்
நதியொடுகொன்றைமாலைமுடிமேலணிந்தெனுளமேபுகுந்தவதனால்
கொதியுறுகாலனங்கிநமனோடுதூதர்கொடுநோய்களானபலவும்
அதிகுணநல்லநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (௪)

* 'வேயுறுதோளிபங்கன்' என்றும் பிரதிபேதமுண்டு. † ஒன்பது-பூரம், ஒன்று-கிருத்திகை, ஏழு-ஆயிலியம், பதினெட்டு-பூராடம். ஆறும் உடனாயநாள்கள்—திருவாதிரை, பூரட்டாதி, மகம், கேட்டை, பரணி, சுவாதி, விசாகம், சித்திரை. இவை பிரயாணத்துக்கு விலக்கப்பட்ட நட்சத்திரங்கள். ‡ ளவைதான்—அன்பொடு என்றும் பாடம்.

Koviloor Digital Library

நஞ்சணிகண்டனெந்தைமடவாடனோடும்விடையேறுநங்கள்பரமன்
துஞ்சிருள்வன்னிகொன்றைமுடிமேலணிந்தெனுளமேபுகுந்தவதனால்
வெஞ்சினவவுணரோடுமுருமிடியுமின்னுமிகையானபூதமவையும்
அஞ்சிடுநல்லநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (ரு)

வாள்வரியதளதாடைவரிகோவணத்தர்மடவாடனோடுமுடனாய்
நாண்மலர்வன்னிகொன்றைநதிசூடிவந்தெனுளமேபுகுந்தவதனால்
கோளரியுழுவையோடுகொலையானைகேழல்கொடுநாகமோடுகரடி
ஆளரிநல்லநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (சு)

செப்பிளமுலைநன்மங்கையொருபாகமாகவிடையேறுசெல்வனடைவார்
ஒப்பிளமதியுமப்புமுடிமேலணிந்தெனுளமேபுகுந்தவதனால்
வெப்பொடுகுளிரும்வாதமிகையானபித்தும்வினையானவந்துநலியா
அப்படிநல்லநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (எ)

வேள்படவிழிசெய்தன்றுவிடைமேலிருந்துமடவாடனோடுமுடனாய்
வாண்மதிவன்னிகொன்றைமலர்சூடிவந்தெனுளமேபுகுந்தவதனால்
ஏழ்கடல்சூழிலங்கையரையன்றனோடுமிடரானவந்துநலியா
ஆழ்கடனல்லநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (அ)

பலபலவேடமாகும்பரனாரிபாகன்பசுவேறுமெங்கள்பரமன்
சலமகளோடெருக்குமுடிமேலணிந்தெனுளமேபுகுந்தவதனால்
மலர்மிசையோனுமாலுமறையோடுதேவர்வருகாலமானபலவும்
அலைகடன்மேருநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (கூ)

கொத்தலர்குழலியோடுவிசயற்குநல்குகுணமாயவேடவிகிர்தன்
மத்தமுமதியுநாகமுடிமேலணிந்தெனுளமேபுகுந்தவதனால்
புத்தரொடமணைவாதிலழிவிக்குமண்ணறிருநீறுசெம்மைதிடமே
அத்தகுநல்லநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. (க0)

தேனமர்பொழில்கொளாலைவிளைசெந்நெறுன்னிவளர்செம்பொனெங்குநிகழ
நான்முகனாதியாயபிரமாபுரத்துமறைஞானஞானமுனிவன்
தானுறுகோளுநாளுமடியாரைவந்துநலியாதவண்ணமுரைசெய்
ஆனசொன்மாலையோதுமடியார்கள்வானிலரசாள்வராணைநமதே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தப் பிள்ளையார், வேதாரணியத்தில் எழுந்தருளியிருக்கும்போது, பாண்டிநாட்டிலே, பாண்டியராஜன் சமணர்களுடைய துர்ப்போதனையினாலே சத்திய மார்க்கமாகிய சைவத்தைவிட்டு, அசத்தியமார்க்கமாகிய ஆருகதமதத்திலே பிரவேசித்தான். அரசன் அவ்வாறாயினமையால், குடிகளும் அவ்வாறாயின. அதனால் பாண்டிநாடெங்கும் வைதிகமார்க்கமுஞ் சைவமார்க்கமுமாகிய இரண்டுங்குன்றி, சமணசமயமே விருத்தியாக, அப்பாண்டியனுடைய மனைவியாராகிய மங்கையர்க்கரசியாரும், முதன் மந்திரியாராகிய குலச்சிறைநாயனரும், மிகக் கவலைகொண்டு பரிசனங்கள் வாயிலாகத் தமக்குச்

Koviloor Digital Library

சொல்லியனுப்பிய வார்த்தையைக் கேள்வியுற்ற பிள்ளையார், அப்பமூர்த்தியோடு திருக்கோயிலிற்சென்று, சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு திருக்கோபுரத்துள் இருந்து, அதனை அவருக்குச்சொல்லி, பாண்டிநாட்டுக்கு எழுந்தருளுதற்குத் துணிந்தருளினர். அப்பொழுது, அப்பமூர்த்தி தேவரீர் சிறுபிள்ளையாய் இருக்கிறீர், அச்சமணர்களுடைய வஞ்சனைக்கோரெல்லையில்லை, தேவரீருக்கு இப்போது கிரகங்கள் வலியில ஆதலால், தேவரீர் அவ்விடத்திற்கு எழுந்தருளுதற்கு உடன்படுவேது ஒண்ணாது என்று விண்ணப்பஞ்செய்ய, பிள்ளையார், சிவபிரான் நம்முடைய சிந்தையே கோயில்கொண்டு எழுந்தருளியிருத்தலினால் நமக்குத் தீங்குவாராது என்று சொல்லிச் சிவபிரானுடைய திருவடிகளைத் துதித்து "வேயுறுதோளிபங்கன்" என்னுங் கோளறு திருப்பதிகத்தைப்பாடியருளினர். அத்திருப்பதிகத்தைக் கேட்டபின், அப்பமூர்த்தியும் உடன்பட்டருளினர்.

பஞ்சாக்கரத்திருப்பதிகம்.

பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

துஞ்சலுந்துஞ்சலிலாதபோழ்தினும்
நெஞ்சகனைந்துநினைமினுடொறும்
வஞ்சகமற்றடிவாழ்த்தவந்தகூற்
றஞ்சவுதைத்தனவஞ்செழுத்துமே. (க)

மந்திரநான்மறையாகிவானவர்
சிந்தையுணின்றவர்தம்மையாள்வன
செந்தழலோம்பியசெம்மைவேதியர்க்
கந்தியுண்மந்திரமஞ்செழுத்துமே. (உ)

ஊனிலுயிர்ப்பையொடுக்கியொண்சுடர்
ஞானவிளக்கினையேற்றிநன்புலத்
தேனைவழிதிறந்தேத்துவார்க்கிடர்
ஆனகெடுப்பனவஞ்செழுத்துமே. (௩)

நல்லவர்தீயரெனாதுநச்சினர்
செல்லல்கெடச்சிவமுத்திகாட்டுவ
கொல்லநமன்றமர்கொண்டுபோமிடத்
தல்லல்கெடுப்பனவஞ்செழுத்துமே. (௪)

கொங்கலர்வன்மதன்வாளியைந்தகத்
தங்குளபூதமுமஞ்சவைம்பொழில்
தங்கரவின்படமஞ்சுந்தம்முடை *
அங்கையிலைவிரலஞ்செழுத்துமே. (௫)

தும்மலிருமலொடுதொடர்ந்தபோழ்தினும்
வெம்மைநரகம்விளைந்தபோழ்தினும்
இம்மைவினையடர்த்தெய்தும்போழ்தினும் †
அம்மையினுந்துணையஞ்செழுத்துமே. (௬)

* மஞ்சுதம்முடை என்றும் பாடம். † தெய்துபோழ்தினும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

விடுபிறப்பையறுத்துமெச்சினர்
பிடைகெடுப்பனபின்னைநாடொறும்
மாடுகொடுப்பனமன்னுமாநடம்
ஆடியுகப்பனவஞ்செழுத்துமே. (எ)

வண்டமரோதிமடந்தைபேணின
பண்டையிராவணன் * பாடியுய்ந்தன
தொண்டர்கள்கொண்டுதுதித்தபின்னவர்க்
கண்டமளிப்பனவஞ்செழுத்துமே. (அ)

கார்வணனான்முகன்காணுதற்கொணாச்
சீர்வணச்சேவடிசெவ்விநாடொறும்
பேர்வணம்பேசிப்பிதற்றும்பித்தர்கட்
கார்வணமாவனவஞ்செழுத்துமே. (கூ)

புத்தர்சமண்கழுக்கையர்பொய்கொளாச்
சித்தத்தவர்கடெளிந்துதேறின
வித்தகநீறணிவார்வினைப்பகைக்
கத்திரமாவனவஞ்செழுத்துமே. (க0)

நற்றமிழ்ஞானசம்பந்தனான்மறை
கற்றவன்காழியர்மன்னனுன்னிய
அற்றமின்மாலையீரைந்துமஞ்செழுத்
துற்றனவல்லவரும்பராவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சீர்காழியில் திருஞானசம்பந்தப்பிள்ளையாருக்கு, பிராமணர்கள் வேதவிதிப்படி உபநயனச் சடங்கு செய்து, உமக்கு நான்குவேதத்திற்கும் அதிகாரந் தந்தோம் என்று சொல்ல, பிள்ளையார் எண்ணிறந்த வேதங்களை ஓதி, அவற்றிற்கு அங்கமாகிய பல கலைகளையும் எடுத்துச்சொல்லிப் பின் சகலமந்திரங்களுக்கும் வித்து ஸ்ரீ பஞ்சாக்ஷரம் என்பதை அவர்களுக்கும், மற்றை யாவருக்கும் விளக்கும்பொருட்டு, "துஞ்சலும் துஞ்சலிலாத போழ்தினும்" என்னும் பஞ்சாக்கரத் திருப்பதிகத்தைப்பாடி அதில் "வேதியர்க் கந்தியுள் மந்திர மஞ்செழுத்துமே" என்றருளிச் செய்தனர். பிராமணர்கள் அதைக் கேட்டு மனமகிழ்ந்து, அவருடைய திருவருளைத் தலைமேற்கொண்டு, வணங்கித் துதித்து உய்ந்தார்கள்.

ஆளுடையபிள்ளையார், திருக்கூட்டத்தோடு திருத்தெளிச்சேரியிலிருந்து பௌத்தர்கள் இருக்கின்ற போதிமங்கைக்குச் சமீபிக்கும்போது, பௌத்தசமயநூலிலே மகா பாண்டித்தியமுள்ள புத்தநந்தி மிக்கக்கோபித்து பௌத்தர்கூட்டஞ் சூழச்சென்று, சிவனடியார்களை அணுகி, நீங்கள் எங்களைத் தருக்கத்தில் வென்றன்றோ வெற்றிச் சின்னங்கள் ஊதல் வேண்டும் என்று கோபங்கொண்டு விலக்கினான். அப்பொழுது தேவாரத் திருமுறை எழுதும் அடியவர் பொறாமல், பஞ்சாக்கரத் திருப்பதிகத்திலே "புத்தர் சமண்கழுக் கையர் பொய்கொளாச், சித்தத்தவர்க டெளிந்து தேறின, வித்தகநீறணி வார்வினைப்பகைக், கத்திரமாவனவஞ்செழுத்துமே" என்னுந் திருப்பாட்டை ஓதி "இப் புத்தனுடைய சிரம் உருண்டு விழும்படி இடியிடித்து விழக்கடவது" என்றுசொல்லினர். உடனே இடியிடித்துப் புத்தநந்தியினுடைய சரீரத்தையும், தலையையும் வேறாகக் கூறு

* பண்டவிராவணன் என்றும் பாடம்.

Koviloor Digital Library

படுத்தியது. அதுகண்ட அடியார்கள் ஓடிப்போய் பிள்ளையாருக்கு விண்ணப்பஞ்செய்ய, பிள்ளையார் அங்ஙனம் எதிர்ந்த விலக்கை நீக்கும் முறை அதுவேயாம் என்று அருளிச்செய்தனர்.

தனித்திருவிருக்குக்குறள்.

பண் – கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

கல்லானீழல்
அல்லாத்தேவை *
நல்லார்பேணார்
அல்லோநாமே. (௧)

கொன்றைசூடி
நின்றதேவை
அன்றியொன்று
நன்றிலோமே. (௨)

கல்லாநெஞ்சின் †
நில்லானீசன்
சொல்லாதாரோ
டல்லோநாமே. (௩)

கூற்றுதைத்த
நீற்றினானைப்
போற்றுவார்கள்
தோற்றினாரே. (௪)

காட்டுளாடும்
பாட்டுளானை
நாட்டுளாரும் ‡
தேட்டுளாரே. ¶ (௫)

தக்கன்வேள்விப்
பொக்கந்தீர்த்த
மிக்கதேவர்
பக்கத்தோமே. (௬)

பெண்ணாணாய
விண்ணோர்கோவை
நண்ணாதாரை
எண்ணோநாமே. § (௭)

தூர்த்தன்வீரம்
தீர்த்தகோவை
ஆத்தமாக
வேத்தினோமே. (௮)

பூவினானும்
தாவினானும்
நாவினாலும்
நோவினாரே. (௯)

மொட்டலர்
கட்டார்தேரர்
பிட்டர்சொல்லை
விட்டுளோமே. (௧0)

அந்தண்காழிப்
பந்தன்சொல்லைச்
சிந்தைசெய்வோர்
உய்ந்துளோரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

* அல்லாற்றேவை என்றும் பாடம். † கல்லு ஆம் நெஞ்சு எனப்பிரித்துக் கற்போன்றமனம் என்றலுமாம். ஆக்கம் ஈண்டு உவமைப்பொருட்கண்வந்தது; "ஆள்வாரிலிமாடாவேனோ" என்புழிப்போல. ‡ நாட்டுளார் - நாடுதல் உள்ளவர்கள்; நாடு என்னும் முதனிலை டகரம் இரட்டித்து நாட்டென்றாயது. நாட்டுளார் - நாட்டுத்தேவர் எனக்கொண்டு தேட்டுளார் என்பதற்கு இன்னுந் தேடுதலை யுளராயினார் என்னலு மொன்று. தேடிக்காணாமையால் தேடுதலேதொழிலாகவுளராயினார் என்க. "நாட்டுத்தேவருநாடரும் பொருளே" என்பதுமது. ¶ தேட்டுளார்–தேட்டமுள்ளவர்கள்; தேட்டம் அம்முக்கெட்டுத் தேட்டென நின்றது. தேட்டம் - செல்வம்; அருட்செல்வம் பொருட்செல்வமிரண்டுங்கொள்க. § "கண்ணாவா ரேனுமுனைக் கைகுவியா ராயினந்த–மண்ணாவார் நட்பை மதியேன் பராபரமே" என்னும் அருமைத்திருவாக்கு இங்கேசிந்திக்கற்பாலது.

Koviloor Digital Library

நமச்சிவாயத்திருப்பதிகம்.

பண் - கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

காதலாகிக்கசிந்துகண்ணீர்மல்கி
ஓதுவார்தமைநன்னெறிக்குய்ப்பது
வேதநான்கினுமெய்ப்பொருளாவது
நாதனாமநமச்சிவாயவே. (க)

நம்புவாரவர் * நாவினவிற்றினால்
வம்புநாண்மலர்வார்மதுவொப்பது
செம்பொனார்திலகம்முலகுக்கெலாம்
நம்பனாமநமச்சிவாயவே. (உ)

நெக்குளார்வமிகப்பெருகிந்நினைந்
தக்குமாலைகொடங்கையிலெண்ணுவார்
தக்கவானவராத்தகுவிப்பது
நக்கனாமநமச்சிவாயவே. (ங)

இயமன்றூதருமஞ்சுவரின்சொலால்
நயம்வந்தோதவல்லார்தமைநண்ணினால்
நியமந்தானினைவார்க்கினியானெற்றி
நயனனாமநமச்சிவாயவே. (ச)

கொல்வாரேனுங்குணம்பலநன்மைகள்
இல்லாரேனுமியம்புவராயிடின்
எல்லாத்தீங்கையுநீங்குவரென்பரால்
நல்லார்நாமநமச்சிவாயவே. (ரு)

மந்தரம்மனபாவங்கண்மேவிய
பந்தனையவர்தாமும்பகர்வரேல்
சிந்தும்வல்வினைசெல்வமுமல்குமால்
நந்திநாமநமச்சிவாயவே. (சா)

நரகமேழ்புகநாடினராயினும்
உரைசெய்வாயினராயினுருத்திரர்
விரவியே † புகுவித்திடுமென்பரால்
வரதனாமநமச்சிவாயவே. (எ)

இலங்கைமன்னனெடுத்தவடுக்கன்மேல்
தலங்கொள்கால்விரல்சங்கரனூன்றலும்
மலங்கிவாய்மொழிசெய்தவனுய்வகை
நலங்கொணாமநமச்சிவாயவே. (அ)

* நமர் என்றும் பாடம். † நிரவியே என்றும் பாடம்.

Koviloor Digital Library

போதன்போதனகண்ணனுமண்ணறன்
பாதந்தான்முடிநேடியபண்பராய்
யாதுங்காண்பரிதாகியலந்தவர்
ஓதுநாமநமச்சிவாயவே. (கூ)

கஞ்சிமண்டையர்கையிலுண்கையர்கள்
வெஞ்சொன்மிண்டர்விரவிலரென்பரால்
விஞ்சையண்டர்கள்வேண்டவமுதுசெய்
நஞ்சுள் * கண்டனமச்சிவாயவே. (க0)

நந்திநாமநமச்சிவாயவெனும்
சந்தையாற்றமிழ்ஞானசம்பந்தன்சொல்
சிந்தையான்மகிழ்ந்தேத்தவல்லாரெலாம்
பந்தபாசமறுக்கவல்லார்களே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தப்பிள்ளையார், திருநல்லூர்ப்பெருமணத்தில் எழுந்தருளியிருக்குங் கடவுளை நோக்கி இல்லறத்தினின்று நீக்கித் தம்மைத் திருவடியிற் சேர்க்கவேண்டும் என்று பிரார்த்திக்க அதனைத்திருச்செவிசாத்தியருளிய கருணாநிதியாகிய சிவபெருமான் நீயும், உன்மனைவியும், உன்னுடைய விவாகத்தைக்காண வந்தவர்கள் சமஸ்தரும் இந்தச் சோதியினுள்ளே வந்து நம்மை அடையுங்கள் என்று அருளிச்செய்து, திருக்கோயில் உட்பட மேலோங்கிய சுத்தசோதி வடிவாகி, அதில் ஒரு திருவாயிலை வகுத்துக்காட்டியருளினர். பிள்ளையார் சோதிவடிவாய்நின்ற கடவுளை வணங்கித் துதித்து, அதனை அடையும்நெறியை அருளிச்செய்யத் திருவுளங்கொண்டு, யாவருக்கும் மெய்ந்நெறி நமச்சிவாய என்கின்ற மந்திரம் என்னுங் கருத்துடைய "காதலாகிக்கசிந்து" என்னும் நமச்சிவாயத் திருப்பதிகத்தைச் சமஸ்தருங் கேட்க அருளிச்செய்து, "இக்கலியாணங்காண வந்த எல்லோரும் உங்கள் சனனநோய் தீரும்பொருட்டு, இந்தச் சோதியினுள்ளே பிரவேசியுங்கள்" என்று திருவாய்மலர்ந்தருளினர். அப்போது பிள்ளையாருடைய திருமணத்தைச் சேவிக்கப் பெற்றவர்களும், திருநீலநக்கநாயனர், முருகநாயனர், சிவபாத விருதயர், நம்பியாண்டார்நம்பி, திருநீலகண்டப்பெரும்பாணர் முதலிய திருத்தொண்டர்களும், பரிசனங்களும், அறுவகைச்சமயிகளும் ஆகிய சமஸ்தரும் அந்தச் சிற்சோதியினுள்ளே புகுந்தபின், சர்வான்மாக்களையும் உய்விக்கும்பொருட்டுத் திருவவதாரஞ்செய்தருளிய திருஞானசம்பந்தப்பிள்ளையார் தம்முடைய மனைவியாரைக் கைப்பற்றிக்கொண்டு அந்தச்சோதியை வலஞ்செய்து, அதனுள்ளே புகுந்து, சிவசாயுச்சியம் அடைந்தருளினர்.

திருப்பாசுரம்.

பண் - கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

வாழ்கவந்தணர்வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாமரனுமமே
சூழ்கவையகமுந்துயர்தீர்கவே. (க)

* நஞ்சுண் என்றும் பாடம்.

Koviloor Digital Library

அரியகாட்சியராய்த்தமதங்கைசேர்
எரியரேறுகந்தேறுவர்கண்டமும்
கரியர்காடுறைவாழ்க்கையராயினும்
பெரியராரறிவாரவர்பெற்றியே. (உ)

வெந்தசாம்பல்விரையெனப்பூசியே
தந்தையாரொடுதாயிலர்தம்மையே
சிந்தியாவெழுவார்வினைதீர்ப்பரால்
எந்தையாரவரெவ்வகையார்கொலோ. (ங)

ஆட்பாலவர்க்கருளும்வண்ணமுமாதிமாண்பும்
கேட்பான்புகிலளவில்லைகிளக்கவேண்டா
கோட்பாலனவும்வினையுங்குறுகாமையெந்தை
தாட்பால்வணங்கித்தலைநின்றிவைகேட்கதக்கார். (ச)

ஏதுக்களாலுமெடுத்தமொழியாலுமிக்குச் *
சோதிக்கவேண்டாசுடர்விட்டுளனெங்கள்சோதி
மாதுக்கநீங்கலுறுவீர்மனம்பற்றிவாழ்மின்
சாதுக்கண்மிக்கீரிறையேவந்துசார்மின்களே. (ரு)

ஆடும்மெனவும்மருங்கூற்றமுதைத்துவேதம்
பாடும்மெனவும்புகழல்லதுபாவநீங்கக்
கேடும்பிறப்பும்மறுக்கும்மெனக்கேட்டீராகில்
நாடுந்திறத்தார்க்கருளல்லதுநாட்டலாமே. (சா)

கடிசேர்ந்தபோதுமலரானகைக்கொண்டுநல்ல
படிசேர்ந்தபால்கொண்டங்காட்டிடத்தாதைபண்டு
முடிசேர்ந்தகாலைபறவெட்டிடமுக்கண்மூர்த்தி
அடிசேர்ந்தவண்ணம்மறிவார்சொலக்கேட்டுமன்றே. (எ)

வேதமுதல்வன்முதலாகவிளங்கிவையம் †
ஏதப்படாமையுலகத்தவரேத்தல்செய்யப்
பூதமுதல்வன்முதலேமுதலாப்பொலிந்த
சூதனொலிமாலை ‡ யென்றேகலிக்கோவைசொல்லே. (அ)

பாராழிவட்டம்பகையானலிந்தாட்டவாடிப்
பேராழியானதிடர்கண்டருள்செய்தல்பேணி
நீராழிவிட்டேறிநெஞ்சிடங்கொண்டவர்க்குப்
போராழியிந்தபுகழும்புகழுற்றதன்றே. (கூ)

மாலாயவனும்மறைவல்லவனான்முகனும்
பாலாயதேவர்பகரில்லமுதூட்டல்பேணிக்
காலாயமுந்நீர்கடைந்தார்க்கரிதாயெழுந்த
ஆலாலமுண்டங்கமரர்க்கருள்செய்ததாமே. (க0)

* மச்சே என்றும் பாடம். † விளங்கிவ்வையம் என்றும் பாடம். ‡ சூதனொலிமாலை - பதினெண்புராணங்கள்.

Koviloor Digital Library

அற்றன்றியந்தண்மதுரைத்தொகை * யாக்கினும்
தெற்றென்று † தெய்வந்தெளியார்கரைக்கோலைதெண்ணீர்ப்
பற்றின்றிப்பாங்கெதிர்வினூரவும் ‡ பண்புநோக்கில்
பெற்றொன்றுயர்த்தபெருமான்பெருமானுமன்றே. (கக)

நல்லார்கள்சேர்புகலிஞானசம்பந்தனல்ல
எல்லார்களும்பரவுமீசனையேத்துபாடல்
பல்லார்களும்மதிக்கப்பாசுரஞ்சொன்னபத்தும்
வல்லார்கள்வானோருலகாளவும்வல்லரன்றே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தப்பிள்ளையார் மதுரைத்திருப்பதியிலே, பாண்டியன் அரண்மனையில், எழுந்தருளியிருந்தபொழுது, சமணர்கள் நாங்கள் இருபக்ஷத்தோரும் எங்கள் சமயவுண்மையை எழுதிய ஏட்டை ஓடுகின்ற வைகையாற்றிலே இடுவோம், எதிர்ந்துசெல்லும் ஏடே மெய்ப்பொருளையுடையது என்று கூற, பிள்ளையார் "அப்படியே செய்வோம்" என்று அருளிச்செய்தார். சமணர்கள் "அத்தி நாத்தி" என்று எழுதிய ஏட்டை, வைகைநதியில்இட அது விரைந்து கடலைநோக்கி ஓடிற்று. பிள்ளையார் "வாழ்கவந்தணர்" என்னுந் திருப்பாசுரத்தைப்பாடி, ஏட்டில் எழுதி, அதை வைகையில் இட்டருளலும், அத்திருவேடு நதியிலே எதிர்ந்து, ஜலத்தைக் கிழித்துக்கொண்டுசென்றது. சிவபிரானே எல்லாப்பொருளும் என்று எழுதிய திருவேட்டிலே "வேந்தனுமோங்குக" என்று பாடியருளியபடியால், கூன்பாண்டியராஜனுடைய கூனும் நிமிர்ந்தது.

திருநாவுக்கரசுநாயனார்.

சிவனெனுமோசை.

பண் - பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

சிவனெனுமோசையல்லதறையோவுலகிற்றிருநின்றசெம்மையுளதே
அவனுமோரையமுண்ணியதளாடையாவததன்மேலோராடலரவம்
கவணளவுள்ளவுங்கு ¶ கரிகாடுகோயில்கலனாவதோடுகருதில்
அவனதுபெற்றிகண்டுமவனீர்மைகண்டுமகநேர்வர்தேவரவரே. (க)

விரிகதிர்ஞாயிறல்லர்மதியல்லர்வேதவிதியல்லர்விண்ணுநிலனும்
திரிதருவாயுவல்லர்செறுதீயுமல்லர்தெளிநீருமல்லர்தெரியில்
அரிதருகண்ணியாளையொருபாகமாகவருள்காரணத்தில்வருவார்
எரியரவாரமார்பரிமையாருமல்லரிமைப்பாருமல்லரிவரே. (உ)

* மதுரைத்தொகை - மதுரைச்சங்கம். † தெற்றெனற என்றும் பாடம். ‡ கெதிர்வினீரவும் என்றும்பாடம். ¶ வுள்கு என்றும், வள்கு என்றும் பாடம்.

Koviloor Digital Library

தேய்பொடிவெள்ளைபூசியதன்மேலோர்திங்கடிலகம்பதித்தநுதலர்
காய்கதிர்வேலைநீலவொளிமாமிடற்றர்கரிகாடர்காலோர்கழலர்
வேயுடனாடுதோளி*யவள்விம்மவெய்யமழுவீசிவேழவுரிபோர்த்
தேயிவராடுமாறுமிவள்காணுமாறுமிதுதானிவர்க்கோரியல்பே. (௩)

வளர்பொறியாமைபுல்கிவளர்கோதைவைகிவடிதோலுநூலும்வளரக்
கிளர்பொறிநாகமொன்றுமிளிர்கின்றமார்பர்கிளர்காடுநாடுகிழவர்†
நளிர்பொறிமஞ்ஞையன்னதளிர்போன்றசாயலவடோன்றுவாய்மைபெருகிக்
குளிர்பொறிவண்டுபாடுகுழலாளொருத்தியுளள்போல்‡குலாவியுடனே. (௪)

உறைவதுகாடுபோலுமுரிதோலுடுப்பர்விடையூர்வதோடுகலனா
இறையிவர்வாழும்வண்ணமிதுவேலுமீசரொருபாலிசைந்ததொருபால்
பிறைநுதல்பேதைமாதருமையென்னுநங்கைபிறழ்பாடநின்றுபிணைவான்
அறைகழல்வண்டுபாடுமடிநீழலாணைகடவாதமாருலகே. (௫)

கணிவளர்வேங்கையோடுகடிதிங்கள்கண்ணிகழல்கால்சிலம்பவழகார்
அணிகிளராரவெள்ளைதவழ்சுண்ணவண்ணவியலா¶ரொருவரிருவர்
மணிகிளர்மஞ்ஞையாலமழைபாடுசோலைமலையான்மகட்குமிறைவர்
அணிகிளரன்னவண்ணமவள்வண்ணவண்ணமவர்வண்ணவண்ணமழலே. (௬)

நகைவளர்கொன்றைதுன்றுநகுவெண்டலையர்நளிர்கங்கைதங்குமுடியர்
மிகைவளர்வேதகீதமுறையோடும்வல்லகறைகொண்மணிசெய்மிடறர்
முகைவளர்கோதைமாதர்முனிபாடுமாறுமெரியாடுமாறுமிவர்கைப்
பகைவளர்நாகம்வீசிமதியங்குமாறுமிதுபோலுமீசரியல்பே. (௭)

ஒளிவளர்கங்கைதங்குமொளிமாலயன்றனுடல்வெந்துவீயசுடர்நீ
றணி§கிளராரவெள்ளைதவழ்சுண்ணவண்ணர்தமியாரொருவரிருவர்
களிகிளர்வேடமுண்டோர்கடமாவுரித்தவுடைதோலுடுத்தகலனார்
அணிகிளரன்னதொல்லையவள்பாகமாகவெழில்வேதமோதுமவரே. (௮)

மலைமடமங்கையோடும்வடகங்கைநங்கைமணவாளராகிமகிழ்வர்
தலைகலனாகவுண்டுதனியேதிரிந்துதவவாணராகிமுயல்வர்
விலையிலிசாந்தமென்றுவெறிநீறுபூசிவிளையாடும்வேடவிகிர்தர்
அலைகடல்வெள்ளமுற்றுமலறக்கடைந்தவழனஞ்சமுண்டவவரே. (௯)

புதுவிரிபொன்செயோலையொருகாதொர்காதுசுரிசங்கநின்றுபுரள
விதிவிதிவேதகீதமொருபாடுமோதமொருபாடுமெல்லநகுமால்
மதுவிரிகொன்றைதுன்றுசடைபாகமாதர்குழல்பாகமாகவருவர்
இதுவிவர்வண்ணவண்ணமிவள்வண்ணவண்ணமெழில்வண்ணவண்ணமியல்பே.

திருச்சிற்றம்பலம்.

* வேயுடனாடுதோளி - மூங்கிலோடு ஒன்றாகக் கருதப்படுகின்ற தோளையுடையாள்; நாடுதல் - கருதுதல்; வேயுடன் ஆடுதோளி எனப்பிரித்து மூங்கிலோடுஉவமை கூறுதற்குரிய தோளி என்றலுமாம். † நாடுமகிழ்வர் என்றும் பாடம். ‡ யொருத்தியுளன் போல் என்றும் பாடம். ¶ வண்ணமியலார் என்றும், வண்ணமயலார் என்றும் பாடம். § றனி என்றும் பாடம்.

Koviloor Digital Library

திருவங்கமாலை.

பண் — சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

தலையேநீவணங்காய் — தலை
மாலைதலைக்கணிந்து
தலையாலேபலிதேருந்தலைவனைத்
தலையேநீவணங்காய். (க)

கண்காள்காண்மின்களோ — கடல்
நஞ்சுண்டகண்டன்றன்னை
எண்டோள்வீசிநின்றாடும்பிரான்றன்னைக்
கண்காள்காண்மின்களோ. (உ)

செவிகாள்கேண்மின்களோ — சிவன்
எம்மிறைசெம்பவள
எரிபோன்மேனிப்பிரான்றிறமெப்போதும்
செவிகாள்கேண்மின்களோ. (ந)

மூக்கேநீமுரலாய் — முது
காடுறைமுக்கணனை
வாக்கேநோக்கியமங்கைமணாளனை
மூக்கேநீமுரலாய். (ச)

வாயேவாழ்த்துகண்டாய் — மத
யானையுரிபோர்த்துப்
பேய்வாழ்காட்டகத்தாடும்பிரான்றன்னை
வாயேவாழ்த்துகண்டாய். (ரு)

நெஞ்சேநீநினையாய் — நிமிர்
புன்சடைநின்மலனை
மஞ்சாடும்மலைமங்கைமணாளனை
நெஞ்சேநீநினையாய். (சு)

கைகாள்கூப்பித்தொழீர் — கடி
மாமலர்தூவிநின்று
பைவாய்ப்பாம்பரை* யார்த்தபரமனைக்
கைகாள்கூப்பித்தொழீர். (எ)

ஆக்கையாற்பயனென் — னரன்
கோயில்வலம்வந்து
பூக்கையாலட்டிப்போற்றியென்னாதவிவ்
ஆக்கையாற்பயனென். (அ)

* பைவாய் பாம்பரை என்றும் பாடம்.

Koviloor Digital Library

கால்களாற்பயனென் — கறைக்
கண்டனுறைகோயில்
கோலக்கோபுரக்கோகரணஞ்சூழாக்
கால்களாற்பயனென். (கூ)

உற்றாருளரோ — வுயிர்
கொண்டுபோம்பொழுது
குற்றாலத்துறைகூத்தனல்லானமக்
குற்றாருளரோ. (க0)

இறுமாந்திருப்பன்கொலோ — வீசன்
பல்கணத்தெண்ணப்பட்டுச்
சிறுமானேந்திதன்சேவடிக்கீழ்ச்சென்று*
இறுமாந்திருப்பன்கொலோ. (கக)

தேடிக்கண்டுகொண்டேன் — திரு
மாலொடுநான்முகனும்
தேடித்தேடொணாத்தேவனையென்னுளே
தேடிக்கண்டுகொண்டேன். (கஉ)

திருச்சிற்றம்பலம்.

நமச்சிவாயத்திருப்பதிகம்.

பண் — காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

சொற்றுணைவேதியன்சோதிவானவன்
பொற்றுணைத்திருந்தடிபொருந்தக்கைதொழக்
கற்றுணைப்பூட்டியோர்கடலிற்பாய்ச்சினும்
நற்றுணையாவதுநமச்சிவாயவே. (க)

பூவினுக்கருங்கலம்பொங்குதாமரை
ஆவினுக்கருங்கலமரனஞ்சாடுதல்
கோவினுக்கருங்கலங்கோட்டமில்லது
நாவினுக்கருங்கலநமச்சிவாயவே. (உ)

விண்ணுறவடுக்கியவிறகின்வெவ்வழல்
உண்ணியபுகிலவையொன்றுமில்லையாம்
பண்ணியவுலகினிற்பயின்றபாவத்தை
நண்ணிநின்றறுப்பதுநமச்சிவாயவே. (ங)

இடுக்கண்பட்டிருக்கினுமிரந்தியாரையும்
விடுக்கிற்பிரானென்றுவினவுவோமல்லோம்
அடுக்கற்கீழ்க்கிடக்கினுமருளினாமுற்ற
நடுக்கத்தைக்கெடுப்பதுநமச்சிவாயவே. (ச)

* சென்று-மிறுமாந் என்றும், சென்றங் - கிறுமாந் என்றும் பாடம்.

Koviloor Digital Library

வெந்தநீறருங்கலம்விரதிகட்கெலாம்
அந்தணர்க்கருங்கலமருமறையாறங்கம்
திங்களுக்கருங்கலந்திகழுநீண்முடி
நங்களுக்கருங்கலநமச்சிவாயவே. (௫)

சலமிலன்சங்கரன்சார்ந்தவர்க்கலால்
நலமிலனுடொறுநல்குவானலன்
குலமிலராகிலுங்குலத்துக்கேற்பதோர்
நலமிகக்கொடுப்பதுநமச்சிவாயவே. (௬)

வீடினுருலகினில்விழுமியதொண்டர்கள்
கூடினாரந்நெறிகூடிச்சென்றலும்*
ஓடினேனோடிச்சென்றுருவங்காண்டலும்
நாடினேனாடிற்றுநமச்சிவாயவே. (௭)

இல்லகவிளக்கதுவிருள்கெடுப்பது
சொல்லகவிளக்கதுசோதியுள்ளது
பல்லகவிளக்கதுபலருங்காண்பது
நல்லகவிளக்கதுநமச்சிவாயவே. (௮)

முன்னெறியாகியமுதல்வன்முக்கணன்
தன்னெறியேசரணாதறிண்ணமே
அந்நெறியேசென்றங்கடைந்தவர்க்கெலாம்
நன்னெறியாவதுநமச்சிவாயவே. (௯)

மாப்பிணைதழுவியமாதொர்பாகத்தன்
பூப்பிணைதிருந்தடிபொருந்தக்கைதொழ
நாப்பிணைதழுவியநமச்சிவாயப்பத்
தேத்தவல்லார்தமக்கிடுக்கணில்லையே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

பாடலி புத்திரத்திலே பல்லவராஜன் சமணர்கள் வேண்டுகோளின்படி, திருநாவுக்கரசுநாயனாரை ஒரு கல்லோடு சேர்த்துக் கட்டுவித்துச் சமுத்திரத்திலே தள்ளிவிடச் செய்தான். அப்போது நாயனார், அடியேனுக்கு யாது நிகழினும் நிகழுக, அடியேன் எம்பெருமானைத் தோத்திரம் பண்ணுவேன் என்று நினைந்து, "சொற்றுணை வேதியன் என்னும் நமச்சிவாயத் திருப்பதிகத்தைப்பாடியருளினார். கட்டியகயிறறு அறுந்து போயிற்று .உடனே சமுத்திரத்திலே கல்லானது, நாயனார் மேற்பக்கத்திலிருக்கத் தெப்பமாய் மிதந்து திருப்பாதிரிப்புலியூரில் வந்து கரைசேர்ந்தது.

* கூடச்சென்றலும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

தசபுராணம்.

பண் - பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

பருவரையொன்றுசுற்றியரவங்கைவிட்டவிமையோரிரிந்துபயமாய்த்
திருநெடுமானிறத்தையடுவான்விசும்புசுடுவானெழுந்துவிசைபோய்ப்
பெருகிடமற்றிதற்கோர்பிதிகார*மொன்றையருளாய்பிரானேயெனலும்
அருள்கொடுமாவிடத்தையெரியாமலுண்டவவனண்டரண்டரசே. (௧)

நிரவொலிவெள்ளமண்டிநெடுவண்டமூடநிலநின்றுதம்பமதுவப்
பரமொருதெய்வமெய்தவிது† வொப்பதில்லையிருபாலுநின்றுபணியப்
பிரமனுமாலுமேலைமுடியோடுபாதமறியாமைநின்றபெரியோன்
பரமுதலாயதேவர்சிவனாயமூர்த்தியவனாநமக்கோர்சரணே. (௨)

காலமுநாள்களூழிபடையாமுனேகவுருவாகிமூவருருவில்
சாலவுமாகிமிக்கசமயங்களாறினுருவாகிநின்றதழலோன்
ஞாலமுமேலைவிண்ணொடுலகேழுமுண்டுகுறளாயொராலினிலைமேல்
பாலனுமாயவற்கோர்பரமாயமூர்த்தியவனாநமக்கோர்சரணே. (௩)

நீடுயர்விண்ணுமண்ணுநெடுவேலைகுன்றொடுலகேழுமெங்குநலியச்
சூடியகையராகியிமையோர்கணங்கடுதியோதிநின்றுதொழலும்
ஓடியதாரகன்றனுடலம்பிளந்துமொழியாதகோபமொழிய
ஆடியமாநடத்தெமனலாடிபாதமவையாநமக்கோர்சரணே. (௪)

நிலைவலியின்றிவெங்குநிலனோடுவிண்ணுநிதனஞ்செய்தோடுபுரமூன்
றலைநலிவஞ்சிபோடியரியோடுதேவரரணம்புகத்தனருளால்
கொலைநலிவாளி‡ மூளவரவங்கைநாணுமனல்பாயநீறுபுரமா
மலைசிலைகையிலொல்கவளைவித்தவள்ளலவனாநமக்கோர்சரணே. (௫)

நீலநன்மேனிசெங்கண்வளைவெள்ளெயிற்றனெரிகேசனேடிவருநாள்
காலைநன்மாலைகொண்டுவழிபாடுசெய்யுமளவின்கண்வந்துகுறுகிப்
பாலனையோடவோடப்பயமெய்துவித்தவுயிர்வவ்வுபாசம்விடுமக்
காலனைவீடுசெய்தகழல்போலுமண்டர்தொழுதோதுசூடுகழலே. (௬)

உயர்தவமிக்கதக்கனுயர்வேள்விதன்னிலவியுண்ணவந்தவிமையோர்
பயமுறமெச்சனங்கிமதியோனுமுற்றபடிகண்டுநின்றுபயமாய்
அயனொடுமாலுமெங்களறியாமையாதிகமியென்றிறைஞ்சியகலச்
சயமுறுதன்மைகண்டதழல்வண்ணனெந்தைகழல்கண்டுகொள்கைகடனே. §

நலமலிமங்கைநங்கைவிளையாடியோடிநயனத்தலங்கள்கரமா
உலகினையேழுமுற்றுமிருண்மூடமூடவிருளோடநெற்றியொருகண்
அலர்தரவஞ்சிமற்றைநயனங்கைவிட்டுமடவாளிறைஞ்சமதிபோல்
அலர்தருசோதிபோலவலர்வித்தமுக்கணவனாநமக்கோர்சரணே. (௮)

* பிரதிகாரம் பிதிகாரம் என்றாயது; பதிற்செய்கை என்பது பொருள். † மெய்தவிது என்றும் பாடம். ‡ நலவாளி என்றும் பாடம். § கொள்கைசரணே என்றும் பாடம்.

Koviloor Digital Library

கழைபடுகாடுதென்றல்குயில்கூவவஞ்சுகணையோனணைந்துபுகலும்
மழைவடிவண்ணனெண்ணிமகவோனைவிட்டமலரானதொட்டமதனன்
எழில்பொடிவெந்துவீழவிமையோர்கணங்களெரியென்றிறைஞ்சியகலத்
தழல்படுநெற்றியொற்றைநயனஞ்சிவந்ததழல்வண்ணனெந்தைசரணே. (௯)

தடமலராயிரங்கள்குறைவொன்றதாகநிறைவென்றுதன்கணதனால்
உடன்வழிபாடுசெய்ததிருமாலையெந்தைபெருமானுகந்துமிகவும்
சுடராடியான்முயன்றுசுழல்வித்தரக்கனிதயம்பிளந்தகொடுமை
அடல்வலியாழியாழியவனுக்களித்தவவனுநமக்கோர்சரணே. (௧௦)

கடுகியதேர்செலாதுகயிலாயமீதுகருதேலுன்வீரமொழிநீ
முடுகுவதன்றுதன்மமென * நின்றுபாகன்மொழிவானைநன்றுமுனியா
விடுவிடுவென்றுசென்றுவிரைவுற்றரக்கன்வரையுற்றெடுக்கமுடிதோள்
நெடுநெடுவிற்றுவீழவிரலுற்றபாதநினைவுற்றதென்றன்மனனே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

பாவநாசத்திருப்பதிகம்.

பண் - பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

பற்றற்றார்சேர்பழம்பதியைப்பாசூர்நிலாயபவளத்தைச்
சிற்றம்பலத்தெந்திகழ்கனியைத்தீண்டற்கரியதிருவுருவை
வெற்றியூரில்விரிசுடரைவிமலர்கோனைத்திரைசூழ்ந்த
ஒற்றியூரெம்முத்தமனையுள்ளத்துள்ளேவைத்தேனே. (௧)

ஆனைக்காவிலணங்கினையாரூர்நிலாயவம்மானைக்
கானப்பேரூர்க்கட்டியைக்கானூர்முளைத்தகரும்பினை
வானப்பேரார்வந்தேத்தும்வாய்மூர்வாழும்வலம்புரியை
மானக்கயிலைமழகளிற்றைமதியைச்சுடரைமறவேனே. (௨)

மதியங்கண்ணிஞாயிற்றைமயக்கந்தீர்க்குமருந்தினை
அதிகைமூதூரரசினையையாறமர்ந்தவையனை
விதியைப்புகழைவானோர்கள்வேண்டித்தேடும்விளக்கினை
நெதியைஞானக்கொழுந்தினைநினைந்தேற்குள்ளநிறைந்ததே. (௩)

புறம்பயத்தெம்முத்தினைப்புகலூரிலங்குபொன்னினை
உறந்தை † யோங்குசிராப்பள்ளியுலகம்விளக்குஞாயிற்றைக்
கறங்குமருவிக்கழுக்குன்றிற்காண்பார்காணுங்கண்ணானை
அறஞ்சூழதிகைவீரட்டத்தரிமானேற்றையடைந்தேனே. (௪)

கோலக்காவிற்குருமணியைக்குடமூக்குறையும்விடமுணியை
ஆலங்காட்டிலந்தேனையமரர்சென்னியாய்மலரைப்
பாலிற்றிகழும்பைங்கனியைப்பராய்த்துறையெம்பசும்பொன்னைச்
சூலத்தானைத்துணையிலியைத்தோளைக்குளிரத்தொழுதேனே. (௫)

* தன்றுகன்மமென என்றும் பாடம். † உறந்தை - உறையூர்.

Koviloor Digital Library

மருகலுறைமாணிக்கத்தை* வலன்சுழியின்மாலையைக்
கருகாவூரிற்கற்பகத்தைக்காண்டற்கரியகதிரொளியைப்
பெருவேளூரெம்பிறப்பிலியைப்பேணுவார்கள்பிரிவரிய
திருவாஞ்சியத்தெஞ்செல்வனைச்சிந்தையுள்ளேவைத்தேனே. (௬)

எழிலாரிராசசிங்கத்தையிராமேச்சுரத்தெம்மெழிலேற்றைக்
குழலார்கோதைவரைமார்பிற்குற்றாலத்தெங்கூத்தனை
நிழலார்சோலைநெடுங்களத்துநிலாயநித்தமணாளனை
அழலார்வண்ணத்தம்மானையன்பிலணைத்துவைத்தேனே. (௭)

மாலைத்தோன்றும்வளர்மதியைமறைக்காட்டுறையுமணாளனை
ஆலைக்கரும்பினின்சாற்றையண்ணாமலையெம்மண்ணலைச்
சோலைத்துருத்திநகர்மேயசுடரிற்றிகழுந்துளக்கிலியை
மேலைவானோர்பெருமானைவிருப்பால்விழுங்கியிட்டேனே. (௮)

சோற்றுத்துறையெஞ்சோதியைத்துருத்திமேயதூமணியை
ஆற்றிற்பழனத்தம்மானையாலவாயெம்மருமணியை
நீற்றிற்பொலிந்தநிமிர்திண்டோணெய்த்தானத்தெந்நிலாச்சுடரைத்
தோற்றக்கடலையடலேற்றைத்தோளைக்குளிரத்தொழுதேனே. (௯)

புத்தூருறையும்புனிதனைப்பூவணத்தெம்போரேற்றை
வித்தாய்மிழலைமுளைத்தானைவேள்விக்குடியெம்வேதியனைப்
பொய்த்தார்புரமூன்றெரித்தானைப்பொதியின்மேயபுராணனை
வைத்தேனென்றன்மனத்துள்ளேமாத்தூர்மேயமருந்தையே. (௧௦)

முந்தித்தானேமுளைத்தானைமூரிவெள்ளேறூர்ந்தானை
அந்திச்செவ்வான்படியானையரக்கனாற்றலழித்தானைச்
சிந்தைவெள்ளப்புனலாட்டிச்செஞ்சொன்மாலையடிச்சேர்த்தி
எந்தைபெம்மானென்னெம்மானென்பார்பாவநாசமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

விடந்தீர்த்ததிருப்பதிகம்.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

ஒன்றுகொலாமவர்சிந்தையுயர்வரை
ஒன்றுகொலாமுயரும்மதிசூடுவர்
ஒன்றுகொலாமிடுவெண்டலைகையது
ஒன்றுகொலாமவரூர்வதுதானே. (௧)

இரண்டுகொலாமிமையோர்தொழுபாதம்
இரண்டுகொலாமிலங்குங்குழைபெண்ணாண்
இரண்டுகொலாமுருவஞ்சிறுமான்மழு
இரண்டுகொலாமவரெய்தினதாமே. † (௨)

* உறையுமாணிக்கத்தை என்றும் பாடம். † ரெய்தினர்தாமே என்றும் பாடம்; இத்திருப்பதிகத்தில் இங்ஙனம் வருவனவற்றிற்கெல்லாமிஃதொக்கும்.

Koviloor Digital Library

மூன்றுகொலாமவர்கண்ணுதலாவன
மூன்றுகொலாமவர்சூலத்தின்மொய்யிலை
மூன்றுகொலாங்கணைகையதுவின்னாண்
மூன்றுகொலாம்புரமெய்தனதாமே. (௩)

நாலுகொலாமவர்தம்முகமாவன
நாலுகொலாஞ்சனனம்முதற்றோற்றமும்
நாலுகொலாமவரூர்தியின்பாதங்கள்
நாலுகொலாமறைபாடினதாமே. (௪)

அஞ்சுகொலாமவராடரவின்படம்
அஞ்சுகொலாமவர்வெல்புலனாவன
அஞ்சுகொலாமவர்காயப்பட்டான்கணை
அஞ்சுகொலாமவராடினதாமே. (௫)

ஆறுகொலாமவரங்கம்படைத்தன
ஆறுகொலாமவர்தம்மகனார்முகம்
ஆறுகொலாமவர்தார்மிசைவண்டின்கால்
ஆறுகொலாஞ்சுவையாக்கினதாமே. (௬)

ஏழுகொலாமவரூழிபடைத்தன
ஏழுகொலாமவர்கண்டவிருங்கடல்
ஏழுகொலாமவராளுமுலகங்கள்
ஏழுகொலாமிசையாக்கினதாமே. (௭)

எட்டுக்கொலாமவரீறில்பெருங்குணம்
எட்டுக்கொலாமவர்சூடுமினமலர்
எட்டுக்கொலாமவர்தோளிணையாவன
எட்டுக்கொலாந்திசையாக்கினதாமே. (௮)

ஒன்பதுபோலவர்வாசல்வகுத்தன
ஒன்பதுபோலவர்மார்பினிநூலிழை
ஒன்பதுபோலவர்கோலக்குழற்சடை
ஒன்பதுபோலவர்பாரிடந்தானே. (௯)

பத்துக்கொலாமவர்பாம்பின்கண்பாம்பின்பல்
பத்துக்கொலாமெயிறுந்நெரிந்துக்கன
பத்துக்கொலாமவர்காயப்பட்டான்றலை
பத்துக்கொலாமடியார்செய்கைதானே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசு நாயனார், திங்களூரின் வழியாகச் செல்லும்பொழுது, அவ்வூரில் அப்பூதியடிகள் தம்முடைய புத்திரர்களுக்குத் திருநாவுக்கரசு என்னும் பெயரைத்தரித்தும், தம்முடைய அன்னசத்திரம், கிணறு, குளம், தண்ணீர்ப்பந்தர் முதலியவற்றிலும் தனித்தனியே திருநாவுக்கரசு நாயனாருடையது என்று தீட்டியு மிருத்தலைக் கண்டு

Koviloor Digital Library

கேட்டும், அவருடைய வீட்டுக்கு எழுந்தருளினர். அப்பூதிநாயனர், தம்முடைய மனைவியார் புத்திரர் முதலாயினரோடும் அப்பமூர்த்தியை வணங்கி, அவருக்குத் திருவமுது செய்விக்கவிரும்பித் தமது புத்திரராகிய மூத்த திருநாவுக்கரசைநோக்கித் தோட்டத்திற் சென்று "வாழைக்குருத்து அரிந்துகொண்டுவா" வென்றுசொல்லி யனுப்பினர். அவர் விரைந்து வாழைக்குருத்து அரியப் புகுந்தபொழுது, ஒரு பாம்பு தீண்டி இறந்தார். அச்செயலை அப்பமூர்த்தியறிந்து, சவத்தைச் சிவாலயத்தின்முன் கொணர்வித்து, "ஒன்றுகொலா மவர் சிந்தை" என்னுந் திருப்பதிகத்தைப் பாடியருள, உடனே அப்புத்திரர் உயிர்பெற்று எழுந்தார்.

நினைந்த திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

முத்தினைமணியைப்பொன்னைமுழுமுதற்பவளமேய்க்கும்
கொத்தினை * வயிரமாலைக்கொழுந்தினையமரர்சூடும்
வித்தினைவேதவேள்விக்கேள்வியைவிளங்கநின்ற †
அத்தனைநினைந்தநெஞ்சமழகிதாநினைந்தவாறே. (க)

முன்பனையுலகுக்கெல்லாமூர்த்தியைமுனிகளேத்தும்
இன்பனையிலங்குசோதியிறைவனையரிவையஞ்ச
வன்பனைத்தடக்கைவேள்விக்களிற் ‡ றினையுரித்தவெங்கள்
அன்பனைநினைந்தநெஞ்சமழகிதாநினைந்தவாறே. (௨)

கரும்பினுமினியான்றன்னைக்காய்கதிர்ச்சோதியானை
இருங்கடலமுதந்தன்னையிறப்பொடுபிறப்பிலானைப்
பெரும்பொருட்கிளவியானைப்பெருந்தவமுனிவரேத்தும்
அரும்பொனைநினைந்தநெஞ்சமழகிதாநினைந்தவாறே. (௩)

செருத்தனையருத்திசெய்துசெஞ்சரஞ்செலுத்தியூர்மேல்
கருத்தனைக்கனகமேனிக்கடவுளைக்கருதும்வானோர்க்
கொருத்தனையொருத்திபாகம்பொருத்தியுமருத்திரா
திருத்தனைநினைந்தநெஞ்சநேர்படநினைந்தவாறே. (௪)

கூற்றினையுதைத்தபாதக்குழகனைமழலைவெள்ளை
யேற்றனையிமையோரேத்தவிருஞ்சடைக்கற்றைதன்மேல்
ஆற்றனையடியரேத்துமமுதனையமுதயோக
நீற்றனைநினைந்தநெஞ்சநேர்படநினைந்தவாறே. (௫)

கருப்பனைத்தடக்கைவேழக்களிற்றினையுரித்தகண்டன்
விருப்பனைவிளங்குசோதிவியன்கயிலாயமென்னும்
பொருப்பனைப்பொருப்பன்மங்கைபங்கனையங்கையேற்ற
நெருப்பனைநினைந்தநெஞ்சநேர்படநினைந்தவாறே. (௬)

* தொத்தினை என்றும் பாடம். † வேள்விக்களிற்றினையுரித்தவெங்கள் என்றும் பாடம். ‡ வேள்விக்களிறு—தாருகாவனத்து இருடிகள் செய்த யாககுண்டத்தினின்று வந்தயானை; வேழக்களிற்றினை என்றும் பாடம்.

Koviloor Digital Library

நீதியானினைப்புளானைநினைப்பவர்மனத்துளானைச்
சாதியைச்சங்கவெண்ணீற்றண்ணலைவிண்ணில்வானோர்
சோதியைத்துளக்கமில்லாவிளக்கினையளக்கலாகா
ஆதியைநினைந்தநெஞ்சமழகிதாநினைந்தவாறே. (எ)

பழகனைபுலகுக்கெல்லாம்பருப்பனைப்பொருப்போடொக்கும்
மழகளியானையின்றோன்மலைமகணடுங்கப்போர்த்த
குழகனைக்குழவித்திங்கள்குளிர்சடைமருவவைத்த
அழகனைநினைந்தநெஞ்சமழகிதாநினைந்தவாறே. (அ)

விண்ணிடைமின்னொப்பானைமெய்ப்பெரும்பொருளொப்பானைக்
கண்ணிடைமணியொப்பானைக்கடுவிருட்சுடரொப்பானை
எண்ணிடையெண்ணலாகாவிருவரைவெருவநீண்ட
அண்ணலைநினைந்தநெஞ்சமழகிதாநினைந்தவாறே. (கூ)

உரவனைத்திரண்டதிண்டோளரக்கனையூன்றிமூன்றார்
நிரவனைநிமிர்ந்தசோதிநீண்முடியமரர்தங்கள்
குரவனைக்குளிர்வெண்டிங்கட்சடையிடைப்பொதியுமைவாய்
அரவனைநினைந்தநெஞ்சமழகிதாநினைந்தவாறே. (க0)

திருச்சிற்றம்பலம்.

தனித்திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

தொண்டனேன்பட்டதென்னேதூயகாவிரியினன்னீர்
கொண்டிருக்கோதியாட்டிக்குங்குமக்குழம்புசாத்தி
இண்டைகொண்டேறநோக்கி*யீசனையெம்பிரானைக்
கண்டனைக்கண்டிராதேகாலத்தைக்கழித்தவாறே. (க)

பின்னிலேன்முன்னிலேனான்பிறப்பறுத்தருள்செய்வானே
என்னிலேனாயினேனானிளங்கதிர்ப்பயலைத்திங்கள்
சின்னிலாவெறிக்குஞ்சென்னிச்சிவபுரத்தமரரேறே
நின்னலாற்களைகணாரேநீறுசேரகலத்தானே. (உ)

கள்ளனேன்கள்ளத்தொண்டாய்க்காலத்தைக்கழித்துப்போக்கித்
தெள்ளியேனாகிநின்றுதேடினேனாடிக்கண்டேன்
உள்குவாருள்கிற்றெல்லாமுடனிருந்தறிதியென்று
வெள்கினேன்வெள்கிநாணும்விலாவிறச்சிரித்திட்டேனே. (ங)

உடம்பெனுமனையகத்துவுள்ளமேதகளியாக
மடம்படுமுணர்நெய்யட்டியுயிரெனுந்திரிமயக்கி
இடம்படுஞானத்தீயாலெரிகொளவிருந்துநோக்கில்
கடம்பமர்காளைதாதைகழலடிகாணலாமே. (ச)

* டேறநூக்கி என்றும் பாடம்.

Koviloor Digital Library

வஞ்சப்பெண்ணாரக்குகோயில்வாளெயிற்றாவந்துஞ்சா
வஞ்சப்பெண்ணிருந்தசூழல்வான்றவழ்மதியந்தோயும்
வஞ்சப்பெண்வாழ்க்கையாளன்வாழ்வினைவாழறுற்று
வஞ்சப்பெண்ணுறக்கமானேன்வஞ்சனேனென்செய்கேனே. (ரு)

உள்குவாருள்ளத்தானையுணர்வெனும்பெருமையானை
உள்கினேனானும் * காண்பானுருகினேனூறியூறி
எள்கினேனெந்தைபெம்மானிருதலைமின்னுகின்ற†
கொள்ளிமேலெறும்பெனுள்ளமெங்ஙனங்கூடுமாறே. (சு)

மோத்தையைக்கண்டகாக்கைபோலவல்வினைகண்மொய்த்துன்
வார்த்தையைப்பேசவொட்டாமயக்கநான்மயங்குகின்றேன்
சித்தையைச்சிதம்புதன்னைச்செடிகொளேயவடிவொன்றில்லா
வூத்தையைக்கழிக்கும்வண்ணமுணர்வுதாவுலகமூர்த்தீ. (எ)

அங்கத்தைமண்ணுக்காக்கிபார்வத்தையுனக்கேதந்து
பங்கத்தைப்போகமாற்றிப்பாவித்தேன்பரமாநின்னைச்
சங்கொத்தமேனிச்செல்வாசாதனாயேனுன்னை
எங்குற்றாயென்றபோதாவிங்குற்றேனென் ‡ கண்டாயே. (அ)

வெள்ளநீர்ச்சடையனார்தாம்வினவுவார்போலவந்தென்
உள்ளமேபுகுந்துநின்றார்க்குறங்குநான்புடைகள்போந்து
கள்ளரோபுகுந்தீரென்னக்கலந்துதாமேனைக்கிநக்கு
வெள்ளரோமென்றுநின்றார்விளங்கிளம்பிறையனாரே. (௯)

பெருவிரலிறைதானூன்றப்பிறைபெயிறிலங்கவங்காந்
தருவரையனையதோளானரக்கனன்றலறிவீழ்ந்தான்
இருவருமொருவனுபவுருவமங்குடையவள்ளல்
திருவடிசுமந்துகொண்டுகாண்கநான் ¶ திரியுமாறே. (க0)

திருச்சிற்றம்பலம்.

தனித் திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

மருளவாமனத்தனுகிமயங்கினேன்மதியிலாதேன்
இருளவாவறுக்குமெந்தையிணையடிநிழலென்னும்
அருளவாப்பெறுதலின்றியஞ்சிநானலமந்தேற்குப்
பொருளவாத்தந்தவாறேபோதுபோய்ப்புலர்ந்ததன்றே. (க)

மெய்ம்மையாமுழவைச்செய்து § விருப்பெனும்வித்தைவித்திப்
பொய்ம்மையாங்களையைவாங்கிப்பொறையெனுநீரைப்பாய்ச்சித்
தம்மையுநோக்கிக்கண்டுதகவெனும்வேலியிட்டுச்
செம்மையுணிற்பாராகிற்சிவகதிவிளையுமன்றே. (௨)

* உள்குவேனானும் என்றும் பாடம். † விருதலைமினுங்குகின்ற என்றும், விருதலைமிறும் வேகின்ற என்றும் பாடம். ‡ போதாவிங்குற்றேனென் என்றும் பாடம். ¶ காணநான் என்றும் பாடம். § முழவைசெய்து என்றும் பாடம்.

Koviloor Digital Library

எம்பிரானென்றதேகொண்டென்னுளேபுகுந்துநின்றிங்
கெம்பிரானாட்டவாடியென்னுளேயுழிதர்வேனை
எம்பிரானென்னைப்பின்னைத்தன்னுளேகாக்குமென்றால்
எம்பிரானென்னினல்லாலென்செய்கேனேழையேனே. (ங)

காயமேகோயிலாகக்கடிமனமடிமையாக
வாய்மையேதூய்மையாகமனமணியிலிங்கமாக
நேயமேநெய்யும்பாலாநிறையநீரமையவாட்டிப்
பூசனையீசனார்க்குப்போற்றவிக்காட்டினோமே. (ச)

வஞ்சகப்புலையனேனைவழியறத்தொண்டிற்பூட்டி
அஞ்சலென்றாண்டுகொண்டாயதுவுநின்பெருமையன்றே
நெஞ்சகங்கனியமாட்டேனின்னையுள்வைக்கமாட்டேன்
நஞ்சிடங்கொண்டகண்டாவென்னெனநன்மைதானே. (ரு)

நாயினுங்கடைப்பட்டேனைநன்னெறிகாட்டியாண்டாய்
ஆயிரமரவமார்த்தவமுதனேயமுதமொத்து
நீயுமென்னெஞ்சினுள்ளேநிலாவினாய்நிலாவிநிற்க
நோயவைசாருமாகிஞேக்கிநீயருள்செய்வாயே. * (சு)

விள்ளத்தானொன்றுமாட்டேன்விருப்பெனும்வேட்கையாலே
வள்ளத்தேன்போலநுன்னைவாய்மடுத்துண்டிடாமே
உள்ளத்தேநிற்றியேனுமுயிர்ப்புளேவருதியேனும்
கள்ளத்தேநிற்றியம்மாவெங்ஙனங்காணுமாறே. (எ)

ஆசைவன்பாசமெய்தியங்குற்றேனிங்குற்றேனாய்
ஊசலாட்டுண்டுவாளாவுழந்துநானுழிதராமே
தேசனேதேசமூர்த்தீதிருமறைக்காடுமேய
ஈசனேயுன்றன்பாதமேத்துமாறருளெம்மானே. (அ)

நிறைவிலேனேசமில்லேனினைவிலேன்வினையின்பாச
மறைவிலேபுறப்பட்டேறும்வகையெனக்கருளெனெம்மான்
சிறையிலேன்செய்வதென்னேதிருவடிபரவியேத்தக்
குறைவிலேன்குற்றந்தீராய்கொன்றைசேர்சடையினானே. (கூ)

நடுவிலாக்காலன்வந்துநணுகும்போதறியவொண்ணா
அடுவனவஞ்சுபூதமவைதமக்காற்றலாகேன்
படுவனபலவுங்குற்றம்பாங்கிலாமனிதர்வாழ்க்கை
கெடுவதிப்பிறவிசீசீகிளரொளிச்சடையினீரே. (க0)

திருச்சிற்றம்பலம்.

* யருள்செயாயே என்றும் பாடம்.

Koviloor Digital Library

தனித்திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

கடும்பகனட்டமாடிக்கையிலோர்கபாலமேந்தி
இடும்பலிக்கில்லந்தோறுமுழிதருமிறைவனீரே
நெடும்பொறைமலையர்பாவைநேரிழைநெறிமென்கூந்தற்
கொடுங்குழைபுகுந்தவன்றுங்கோவணமரையதேயோ. (க)

கோவணமுடுத்தவாறுங்கோளரவசைத்தவாறும்
தீவணச்சாம்பர்பூசித்திருவுரு * விருந்தவாறும்
பூவணக்கிழவனாரைப்புலியுரியரையனாரை
ஏவணச்சிலையினாரையாவரேயெழுதுவாரே. (உ)

விளக்கினார்பெற்றவின்பமெழுக்கினாற்பதிற்றியாகும்
துளக்கினன்மலர்தொடுத்தாற்றூயவிண்ணேறலாகும்
விளக்கிட்டார்பேறுசொல்லின்மெய்ஞ்ஞெறி † ஞானமாகும்
அளப்பிலகீதஞ்சொன்னார்க்கடிகடாமருளுமாறே. (ங)

சந்திரற்சடையில்வைத்தசங்கரன்சாமவேதி
அந்தரத்தமரர்பெம்மானானல்வெள்ளூர்தியான்றன்
மந்திரநமச்சிவாயவாக ‡ நீறணியப்பெற்றால்
வெந்தறும்வினையுநோயும்வெவ்வழல்விறகிட்டன்றே. (ச)

புள்ளுவரைவர்கள்வர்புனத்திடைப்புகுந்துநின்று
துள்ளுவர்சூறைகொள்வர்தூநெறிவிளையவொட்டார் ¶
முள்ளுடையவர்கடம்மைமுக்கணான்பாதநீழல்
உள்ளிடைமறைந்துநின்றங்குணர்வினாலெய்யலாமே. (ரு)

தொண்டனேன்பிறந்துவாளாதொல்வினைக் § குழியில்வீழ்ந்து
பிண்டமேசுமந்துநாளும்பெரியதோரவாவிற்பட்டேன்
அண்டனேயமரர்கோவேயறிவனேயஞ்சலென்னாய்
தெண்டிரைக்கங்கைசூடுந்திகழ்தருசடையினானே. (சா)

பாறினாப்பாவிநெஞ்சேபன்றிபோலளற்றிற்பட்டுத்
தேறிநீநினைதியாயிற்சிவகதிதிண்ணமாகும்
ஊறலேயுவர்ப்புநாறியுதிரமேபொழுகும்வாசல் 0
கூறையான்மூடக்கண்டுகோலமாக்கருதினாயே. (கூ)

உய்த்தகாலுதயத்தும்பருமையவணடுக்கந்தீர
வைத்தகாலரக்கனோதன்வான்முடிதனக்குநேர்ந்தான்
மொய்த்தகான்முகிழ்வெண்டிங்கண்மூர்த்தியெனுச்சிதன்மேல்
வைத்தகால்வருந்துமென்றுவாடிநானொடுங்கினேனே. ** (க0)

திருச்சிற்றம்பலம்.

* சாம்பர்பூச்சிற்றிருவுரு என்றும் பாடம். † மெய்ந்நெறி என்றும் பாடம். ‡ நமச்சிவாயமாக என்றும் பாடம். ¶ விளையலொட்டார் என்றும் பாடம். § வாளாத்தொல்வினைக் என்றும் பாடம். 0 பொழுகும்பாசம் என்றும் பாடம். ** இத்திருப்பதிகத்தில் ஏ, அ இச்செய்யுட்கள் மறைந்துபோயின.

Koviloor Digital Library

குறைந்த திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

வென்றிலேன்புலன்களைந்தும்வென்றவர்வளாகந் * தன்னுள்
சென்றிலேனாதலாலேசெந்நெறியதற்குஞ்சேயேன்
நின்றுளேதுளும்புகின்றேனீசனேனீசனேயோ
இன்றுளேனாளையில்லேனென்செய்வான்றோன்றினேனே. (க)

கற்றிலேன்கலைகண்ஞானங்கற்றவர்தங்களோடும்
உற்றிலேனாதலாலேயுணர்வுக்குஞ்சேயனானேன்
பெற்றிலேன்பெருந்தடங்கட்பேதைமார்தமக்கும்பொல்லேன்
எற்றுளேனிறைவனேநானென்செய்வான்றோன்றினேனே. (உ)

மாட்டினேன்மனத்தைமுன்னேமறுமையையுணரமாட்டேன்
மூட்டிநான்முன்னைநாளேமுதல்வனைவணங்கமாட்டேன்
பாட்டினுப்போலநின்றுபற்றதாம்பாவந்தன்னை
ஈட்டினேன்களையமாட்டேனென்செய்வான்றோன்றினேனே. (ங)

கரைக்கடந்தோதமேறுங்கடல்விடமுண்டகண்டன்
உரைக்கடந்தோதுநீர்மைபுணர்ந்திலேனாதலாலே
அரைக்கிடந் † தசையுநாகமசைப்பனேயின்பவாழ்க்கைக்
கிரைக்கடைந் ‡ துருகுகின்றேனென்செய்வான்றோன்றினேனே. (ச)

செம்மைவெண்ணீறுபூசுஞ்சிவனவன்றேவதேவன்
வெம்மைநோய்வினைகடீர்க்கும்விகிர்தனுக்கார்வமெய்தி
அம்மைநின்றடிமைசெய்யாவடிவிலாமுடிவில்வாழ்க்கைக்
கிம்மைநின்றுருகுகின்றேனென்செய்வான்றோன்றினேனே. (ரு)

பேச்சொடுபேச்சுக்கெல்லாம்பிறர்தமைப்புறமேபேசக்
கூச்சிலேனாதலாலேகொடுமையைவிடுமாறோரேன்
நாச்சொலிநாளுமூர்த்திநன்மையையுணரமாட்டேன்
ஏச்சுளேநின்றுமெய்யேயென்செய்வான்றோன்றினேனே. (சா)

தேசனைத்தேசமாகுந்திருமாலோர்பங்கன்றன்னைப்
பூசனைப்புனிதன்றன்னைப்புணரும்புண்டரிகத்தானை
நேசனைநெருப்பன்றன்னைநிவஞ்சகத் ¶ தகன்றசெம்மை
ஈசனையறியமாட்டேனென்செய்வான்றோன்றினேனே. (எ)

விளைக்கின்றவினையைநோக்கிவெண்மயிர்விரவிமேலும்
முளைக்கின்றவினையைப்போகமுயல்கிலேனியலவெள்ளம்
திளைக்கின்றமுடியினான்றன்றிருவடிபரவமாட்டா
திளைக்கின்றேனிருமியூன்றியென்செய்வான்றோன்றினேனே. (அ)

* விளாகந் என்றும் பாடம். † அரைக்கடைந் என்றும் பாடம். ‡ வாழ்க்கைக்—கிரைக்கிடந் என்றும், வாழ்க்கைத்—திரைக்கடைந் என்றும் பாடம். ¶ நிலஞ்சகத்தும் பாடம்.

Koviloor Digital Library

விளைவறிவிலாமையாலேவேதனைக்குழியிலாழ்ந்து
களைகணுமில்லேனெந்தாய்காமரங்கற்றுமில்லேன்
தளையவிழ்கோதைநல்லார்தங்களோடின்பமெய்த
இளையனுமல்லேனெந்தாயென்செய்வான்றோன்றினேனே. (௯)

வெட்டனவுடையனாகிவிரத்தான்மலையெடுத்த
துட்டனைத்துட்டுத்தீர்த்துச்சுவைபடக்கீதங்கேட்ட
அட்டமாமூர்த்தியாயவாதியையோதிநாளும்
எட்டனை * யெட்டமாட்டேனென்செய்வான்றோன்றினேனே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

குறைந்த திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

தம்மானங்காப்பதாகித்தையலார்வலையுளாழ்ந்து
அம்மானையமுதன்றன்னையாதியையந்தமாய
செம்மானவொளிகொண்மேனிச்சிந்தையுளொன்றிநின்ற
எம்மானைநினையமாட்டேனென்செய்வான்றோன்றினேனே. (௧)

மக்களேமணந்ததாரமவ்வயிற்றவரை † யோம்பும்
சிக்குளேயழுந்தியீசன்றிறம்படேன் ‡ றவமதோரேன்
கொப்புளேபோலத்தோன்றியதனுளேமறையக்கண்டும்
இக்களேபரத்தையோம்பவென்செய்வான்றோன்றினேனே. (௨)

கூழையேனாகமாட்டேன்கொடுவினைக்குழியில்வீழ்ந்து
வழியினின்றிசையினாலுமிறைவனையேத்தமாட்டேன்
மாழையொண்கண்ணினல்லமடந்தைமார்தமக்கும்பொல்லேன்
ஏழையேனாளுமென்செய்வான்றோன்றினேனே. (௩)

முன்னையென்வினையினாலேமூர்த்தியைநினையமாட்டேன்
பின்னைநான்பித்தனாகிப்பிதற்றுவன்பேதையேனான்
என்னுளேமன்னிநின்றசீர்மையதாயினானை
என்னுளேநினையமாட்டேனென்செய்வான்றோன்றினேனே. (௪)

கறைபணிகண்டன்றன்னைக்காமரங்கற்றுமில்லேன்
பிறைநுதற்பேதைமாதர்பெய்வளையார்க்குமல்லேன் ¶
மறைநவினாவினானைமன்னிநின்றிறைஞ்சிநாளும்
இறையேயுமேத்தமாட்டேனென்செய்வான்றோன்றினேனே. (௫)

* எட்டனை யெனப்பிரித்து—எள்ளளவும் எனப் பொருள்கொள்க; எட்டன் எனக்கொண்டு அட்டகுணங்களையுடையவன் எனினுமாம்; "எட்டுவான்குணத்தீசன்" என்றார் பிறரும். † தாரம் வல்வயிற்றவரை என்றும் பாடம். ‡ திறம்பட்டேன் என்றும் பாடம். ¶ யார்க்கும்பொல்லேன் என்றும் பாடம்.

Koviloor Digital Library

வளைத்துநின்றைவர்கள்வர்வந்தெனைநடுக்கஞ்செய்யத்
தளைத்துவைத்துலையையேற்றித்தழலெரிமடுத்தநீரில்
திளைத்துநின்றாடுகின்றவாமைபோற்றெளிவிலாதேன்
இளைத்துநின்றாடுகின்றேனென்செய்வான்றோன்றினேனே.* (௧௦)

திருச்சிற்றம்பலம்.

ஆருயிர்த்திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

எட்டாந்திசைக்குமிருதிசைக்குமிறைவாமுறையென்
றிட்டாரமரர்வெம்பூசலெனக்கேட்டெரிவிழியா
ஒட்டாக்கயவர்திரிபுரமூன்றையுமோரம்பினால்
அட்டானடிநிழற்கீழதன்றோவென்றனாருயிரே. (௧)

பேழ்வாயரவினரைக்கமர்ந்தேறிப்பிறங்கிலங்கு
தேய்வாயிளம்பிறைசெஞ்சடைமேல்வைத்ததேவர்பிரான்
மூவானிளகான்முழுவுலகோடுமண்விண்ணுமற்றும்
ஆவானடி † நிழற்கீழதன்றோவென்றனாருயிரே. (௨)

தரியாவெகுளியனாய்த்தக்கன்வேள்விதகர்த்துகந்த
எரியாரிலங்கியசூலத்தினனிமையாதமுக்கட்
பெரியான்பெரியார்பிறப்பறுப்பானென்றுந்தன்பிறப்பை
அரியா ‡ னடிநிழற்கீழதன்றோவென்றனாருயிரே. (௩)

வடிவுடைவாணெடுங்கண்ணுமையாளையொர்பான்மகிழ்ந்து
வெடிகொளரவொடுவேங்கையதள்கொண்டுமேன்மருவிப்
பொடிகொளகலத்துப்பொன்பிதிர்ந்தன்னபைங்கொன்றையந்தார்
அடிகளடிநிழற்கீழதன்றோவென்றனாருயிரே. (௪)

பொறுத்தானமரர்க்கமுதருளிநஞ்சமுண்டுகண்டம்
கறுத்தான்கறுப்பழகாவுடையான்கங்கைசெஞ்சடைமேல்
செறுத்தான்றனஞ்சயன்சேனாகலங்கணையொன்றினால்
அறுத்தானடிநிழற்கீழதன்றோவென்றனாருயிரே. (௫)

காய்ந்தான்செறற்கரியானென்றுகாலனைக்காலொன்றினால்
பாய்ந்தான்பணைமதின்மூன்றுங்கணையெனுமொள்ளழலால்
மேய்ந்தான்வியனுலகேழும்விளங்கவிழுமியநூல்
ஆய்ந்தானடிநிழற்கீழதன்றோவென்றனாருயிரே. (௬)

உளைந்தான்செறுதற்கரியான் ¶ றலையையுகிரொன்றினால்
களைந்தானதனைநிறையநெடுமால்கணூர்குருதி
வளைந்தானொருவிரலினொடுவீழ்வித்துச்சாம்பர்வெண்ணீ
றளைந்தானடிநிழற்கீழதன்றோவென்றனாருயிரே. (௭)

* இத்திருப்பதிகத்தில் ௬, ௭, ௮, ௯ இச்செய்யுள்கள் மறைந்துபோயின. † ஆள்வானடி என்றும் பாடம். ‡ பிறப்பை - அரியான்-பிறப்பில்லாதவன்; அருமை ஈண்டின்மை மேனின்றது; "அருங்கேடன்" என்புழிப்போல. ¶ செறுத்தற்கரியான் என்றும் பாடம்.

முந்திவட்டத்திடைப்பட்டதெல்லாமுடிவேந்தர்தங்கள்
பந்திவட்டத்திடைப்பட்டலைப்புண்பதற்கஞ்சிக்கொல்லோ
நந்திவட்டந்நறுமாமலர்க்கொன்றையுநக்கசென்னி
அந்திவட்டத்தொளியானடிச்சேர்ந்ததென்னாருயிரே. (அ)

மிகத்தான்பெரியதோர்வேங்கையதள்கொண்டுமெய்ம்மருவி
அகத்தான்வெருவநல்லாளைநடுக்குறுப்பான்வரும்பொன்
முகத்தாற்குளிர்ந்திருந்துள்ளத்தினாலுகப்பானிசைந்த
அகத்தானடிநிழற்கீழதன்றோவென்றனாருயிரே. (௯)

பைம்மாணரவல்குற்பங்கயச்சீறடியாள்வெருவக்
கைம்மாவரிசிலைக்* காமனையட்டகடவுண்முக்கண்
எம்மானிவனென்றிருவருமேத்தவெரிநிமிர்ந்த
அம்மானடிநிழற்கீழதன்றோவென்றனாருயிரே. (௧௦)

பழகவோரூர்தியரன்பைங்கட்பாரிடம்பாணிசெய்யக்
குழலுமுழவொடுமாநடமாடியுயரிலங்கைக்
கிழவனிருபதுதோளுமொருவிரலாலிறுத்த
அழகனடிநிழற்கீழதன்றோவென்றனாருயிரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

பசுபதித்திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

சாம்பலைப்பூசித்தரையிற்புரண்டுநின்றாள்பரவி
எம்பலைப்பார்க்கிரங்குகண்டாயிருங்கங்கையென்னும்
காம்பலைக்கும்பணைத்தோளிகதிர்ப்பூண்வனமுலைமேல்
பாம்பலைக்குஞ்சடையாயெம்மையாளும்பசுபதியே. (௧)

உடம்பைத்தொலைவித்துன்பாதந்தலைவைத்தவுத்தமர்கள்
இடும்பைப்படாமலிரங்குகண்டாயிருளோடச்செந்தீ
அடும்பொத்தனையவழன்மழுவாவழலேயுமிழும்
படம்பொத்தரவரையாயெம்மையாளும்பசுபதியே. (௨)

தாரித்திரந்† தவிராவடியார்தடுமாற்றமென்னும்
மூரித்திரைப்பௌவத்திக்குகண்டாய்முன்னைநாளொருகால்
வெரித்தன்பூஞ்சுடரைங்கணைவேள்வெந்துவிழச்செந்தீப்
பாரித்தகண்ணுடையாயெம்மையாளும்பசுபதியே. (௩)

ஒருவரைத்தஞ்சமென்றெண்ணாதுன்பாதமிறைஞ்சுகின்றார்
அருவினைச்சுற்றமகல்விகண்டாயண்டமேபணவும்
பெருவரைக்குன்றம்பிளிறப்பிளந்துவேய்த்தோளிபஞ்சப்
பருவரைத்தோலுரித்தாயெம்மையாளும்பசுபதியே. (௪)

* மாவண்சிலை என்றும் பாடம்; இப்பாடத்திற்கு வண்டாகிய நாண்பூட்டிய சிலை என்க. † தாரித்தனை என்றும் பாடம்.

Koviloor Digital Library

இடுக்கொன்றுமின்றியெஞ்சாமைபுன்பாதமிறைஞ்சுகின்றார்க்
கடர்க்கின்றநோயைவிலக்குகண்டாயண்டமெண்டிசையும்
சுடர்த்திங்கள்சூடிச்சுழல்கங்கையோடுஞ்சுரும்புதுன்றிப்
படர்க்கொண்டசெஞ்சடையாயெம்மையாளும்பசுபதியே. (ரு)

அடலைக்கடல்கழிவானின்னடியிணையேயடைந்தார்
நடலைப்படாமைவிலக்குகண்டாய்நறுங்கொன்றைதிங்கள்
சுடலைப்பொடிச்சுண்ணமாசுணஞ்சூளாமணிகிடந்து
படாச்சுடர்மகுடாவெம்மையாளும்பசுபதியே. (சு)

துறவித்தொழிலேபுரிந்துன்சுரும்படியேதொழுவார்
மறவித்தொழிலது * மாற்றுகண்டாய்மதின்மூன்றுடைய
அறவைத்தொழில்புரிந்தந்தரத்தேசெல்லுமந்திரத்தேர்ப்
பறவைப்புரமெரித்தாயெம்மையாளும்பசுபதியே. (எ)

சித்தத்துருகிச்சிவனெம்பிரானென்றுசிந்தையுள்ளே
பித்துப்பெருகப்பிதற்றுகின்றார்பிணிதீர்த்தருளாய்
மத்தத்தரக்கனிருபதுதோளுமுடியுமெல்லாம்
பத்துற்றுறநெரித்தாயெம்மையாளும்பசுபதியே. † (க0)

திருச்சிற்றம்பலம்.

சரக்கறைத் திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

விடையும்விடைப்பெரும்பாகாவென்விண்ணப்பம்வெம்மழுவாட் ‡
படையும்படையாய்நிரைத்தபல்பூதமும்பாய்புலித்தோல்
உடையுமுடைதலைமாலையுமாலைப்பிறையொதுங்கும்
சடையுமிருக்குஞ்சரக்கறையோவென்றனிநெஞ்சமே. (க)

விஞ்சத்தடவரைவெற்பாவென்விண்ணப்பமேவிலங்கு
சங்கக்கலனுஞ்சரிகோவணமுந்தமருகமும்
அந்திப்பிறையுமனல்வாயரவும்விரவியெல்லாம்
சந்தித்திருக்குஞ்சரக்கறையோவென்றனிநெஞ்சமே. (உ)

வீந்தார்தலைகலனேந்தியென்விண்ணப்பமேவிலங்கு
சாந்தாயவெந்தவெள்ளவெண்ணீறுந்தகுணிச்சமும்
பூந்தாமரைமேனிப்புள்ளியுழைமானதள்புலித்தோல்
தாந்தாமிருக்குஞ்சரக்கறையோவென்றனிநெஞ்சமே. (ங)

வெஞ்சமர்வேழத்துரியாயென்விண்ணப்பமேவிலங்கு
வஞ்சமாவந்தவருபுனற்கங்கையும்வான்மதியும்
நஞ்சமாநாகநகுசிரமாலைநகுவெண்டலை
தஞ்சமாவாழுஞ்சரக்கறையோவென்றனிநெஞ்சமே. (ச)

* பிறவித்தொழிலது என்றும் பாடம். † இத்திருப்பதிகத்தில் அ, கூ இச்செய்யுட்கள் மறைந்துபோயின. ‡ வெண்மழுவாட் என்றும் பாடம்.

Koviloor Digital Library

வேலைக்கடனஞ்சமுண்டாயென்விண்ணப்பமேலிலங்கு
காலற்கடந்தானிடங்கயிலாயமுங்காமர்கொன்றை
மாலைப்பிறையுமணிவாயரவும்விரவியெல்லாம்
சாலக்கிடக்குஞ்சாக்கறையோவென்றனிநெஞ்சமே. (௫)

விழிட்டகொன்றைபந்தாராயென்விண்ணப்பமேலிலங்கு
சூழிட்டிருக்குநற்சூளாமணியுஞ்சுடலைநீறும்
எழிட்டிருக்குநல்லக்குமாவுமென்பாமையோடும் *
தாழிட்டிருக்குஞ்சாக்கறையோவென்றனிநெஞ்சமே. (௬)

விண்டார்புரமூன்றுமெய்தாயென்விண்ணப்பமேலிலங்கு
தொண்டாடியதொண்டடிப் † பொடிநீறுந்தொழுதுபாதம்
கண்டார்கள்கண்டிருக்குங்கயிலாயமுங்காமர்கொன்றைத்
தண்டாரிருக்குஞ்சாக்கறையோவென்றனிநெஞ்சமே. (௭)

விடைபட்டியேறுகந்தேறியென்விண்ணப்பமேலிலங்கு
கொடுகொட்டிகொக்கரைதக்கைகுழறுளம்வீணைமொந்தை
வடுவிட்டகொன்றையும்வன்னியுமத்தமும்வாளரவும்
தடுகுட்டமாடுஞ்சாக்கறையோவென்றனிநெஞ்சமே. (௮)

வெண்டிரைக்கங்கைவிகிர்தாவென்விண்ணப்பமேலிலங்கு
கண்டிகைபூண்டுகடிசூத்திரமேற்கபாலவடம்
குண்டிகைகொக்கரைகோணற்பிறை ‡ குறட்பூதப்படை
தண்டிவைத்திட்டசாக்கறையோவென்றனிநெஞ்சமே. (௯)

வேதித்தவெம்மழு ¶ வாளியென்விண்ணப்பமேலிலங்கு
சோதித்திருக்குநற்சூளாமணியுஞ்சுடலைநீறும்
பாதிப்பிறையும்படுதலைத்துண்டமும்பாய்புலித்தோல்
சாதித்திருக்குஞ்சாக்கறையோவென்றனிநெஞ்சமே. (௧௦)

விவந்தாடியகழலெந்தாயென்விண்ணப்பமேலிலங்கு
தவந்தானெடுக்கத்தலைபத்திறுத்தனை § தாழ்புலித்தோல்
சிவந்தாடியபொடிநீறுஞ்சிரமாலைசூடிநின்று
தவந்தானிருக்குஞ்சாக்கறையோவென்றனிநெஞ்சமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

* மென்பார்வையோடும் என்றும் பாடம். † தொண்டராடிப் என்றும் பாடம்; ஓரெழுத்துக் கூடுகின்றது. ‡ கொக்கரைகொன்றைபிறை என்றும் பாடம். ¶ வெண்மழு என்றும் பாடம். § பத்தடர்த்தனை என்றும், பத்தெடுத்தனை என்றும் பாடம்.

Koviloor Digital Library

தனித்திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

வெள்ளிக்குழைத்துணிபோலுங்கபாலத்தன்வீழ்ந்திலங்கு
வெள்ளிப்புரியன்னவெண்புரிநூலன்விரிசடைமேல்
வெள்ளித்தகடன்னவெண்பிறைசூடிவெள்ளென்பணிந்து
வெள்ளிப்பொடிப்பவளப்புறம்பூசியவேதியனே. (க)

உடலைத்துறந்துலகேழுங்கடந்துலவாததுன்பக்
கடலைக்கடந்துய்யப்போயிடலாகுங்கனகவண்ணப்
படலைச்சடைப்பரவைத்திரைக்கங்கைப்பனிப்பிறைவெண்
சுடலைப்பொடிக்கடவுட்கடிமைக்கட்டுணிநெஞ்சமே. (உ)

முன்னேயுரைத்தான்முகமனேயொக்குமிம்மூவுலகுக்
கன்னையுமத்தனுமாவாயழல்வணநீயலையோ
உன்னைநினைந்தேகழியுமென்னாவிகழிந்ததற்பின்
என்னைமறக்கப்பெறுயெம்பிரானுன்னைவேண்டியதே. (௩)

நின்னையெப்போதுநினையலொட்டாய்நீநினையப்புகில்
பின்னையப்போதேமறப்பித்துப் * பேர்த்தொன்றுநாடுவித்தி
உன்னையெப்போதுமறந்திட்டுனக்கினிதாவிருக்கும்
என்னையொப்பாருளரோசொல்லுவாழியிறையவனே. (ச)

முழுத்தழன்மேனித்தவளப்பொடியன்கனகக்குன்றத்
தெழிற்பாஞ்சோதி † யையெங்கள்பிரானையிகழ்திர் ‡ கண்டீர்
தொழப்படுந்தேவர்தொழப்படுவானைத்தொழுதபின்னைத்
தொழப்படுந்தேவர்தம்மாற்றொழுவிக்குந்தன்றொண்டரையே. (ரு)

விண்ணகத்தான்மிக்கவேதத்துளான்விரிநீருடுத்த
மண்ணகத்தான்றிருமாலகத்தான்மருவற்கினிய
பண்ணகத்தான்பத்தர்சித்தத்துளான்பழநாயடியேன்
கண்ணகத்தான்மனத்தான்சென்னியானெங்கறைக்கண்டனே. (சூ)

பெருங்கடன்மூடிப்பிரளயங்கொண்டுபிரமனும்போய்
இருங்கடன்மூடியிறக்குமிறந்தான்களேபரமும்
கருங்கடல்வண்ணன்களேபரமுங்கொண்டுகங்காளராய்
வருங்கடன்மீளநின்றெம்மிறைநல்வீணைவாசிக்குமே. (எ)

வானந்துளங்கிலென்மண்கம்பமாகிலென்மால்வரையும்
தானந்துளங்கித்தலைதடுமாறிலென்றண்கடலும்
மீனம்படிலென்விரிசுடர்வீழிலென்வேலைநஞ்சுண்
டுனமொன்றில்லாவொருவனுக்காட்பட்டவுத்தமர்க்கே. (அ)

* யப்போதேபிறப்பித்துப் என்றும் பாடம். † தெழிற்பெருஞ்சோதி என்றும் பாடம்.
‡ யிகழ்ந்திர் என்றும் பாடம்.

Koviloor Digital Library

சிவனெனுநாமந்தனக்கேயுடையசெம்மேனியெம்மான்
அவனெனையாட்கொண்டளித்திடுமாகிலவன்றனையான்
பவனெனுநாமம்பிடித்துத்திரிந்துபன்னாளழைத்தால்
இவனெனைப்பன்னாளழைப்பொழியானென்றெதிர்ப்படுமே. (௯)

என்னைபொப்பாருன்னையெங்ஙனங்காண்பரகலியுன்னை
நின்னையொப்பார்நின்னைக்காணும்படித்தன்றுநின்பெருமை
பொன்னையொப்பாரித்தழலைவளாவிச்செம்மானஞ்செற்று
மின்னையொப்பார * மிளிருஞ்சடைக்கற்றைவேதியனே. (௰)

திருச்சிற்றம்பலம்.

தனித்திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

பவளத்தடவரைபோலுந்திண்டோள்களத்தோண்மிசையே
பவளக்குழைதழைத்தாலொக்கும்பல்சடையச்சடைமேல்
பவளக்கொழுந்தன்னபைம்முகநாகமந்நாகத்தொடும்
பவளக்கண்வாலமதியெந்தைசூடும்பனிமலரே. (௧)

முருகார்நறுமலரிண்டைதழுவிவண்டேமுரலும்
பெருகாறடை † சடைக்கற்றையினுப்பிணிமேய்ந்திருந்த
இருகாற்குரம்பையிதுநானுடையதிதுபிரிந்தால்
தருவாயெனக்குன்றிருவடிக்கீழோர்தலைமறைவே. (௨)

மூவாவுருவத்துமுக்கண்முதல்வமிக்கூரிடும்பை ‡
காவாயெனக்கடைதூங்குமணியைக்கையாலமரர்
நாவாயசைத்தவொலியொலிமாறியதில்லையப்பால்
தீயாயெரிந்துபொடியாய்க்கழிந்ததிரிபுரமே. (௩

பந்தித்தபாவங்களம்மையிற் ¶ செய்தனவிம்மைவந்து
சந்தித்தபின்னைச்சமழ்ப்பதென்னேவந்தமரர்முன்னாள்
முந்திச்செழுமலரிட்டுமுடிதாழ்த்தடிவணங்கும்
நந்திக்குமுந்துறவாட்செய்கிலாவிட்டநன்னெஞ்சமே.

அந்திவட்டத்திளங்கண்ணியனாறமர்செஞ்சடையான் ௫)
புந்திவட்டத்திடைப்புக்குநின்றானையும்பொய்யென்பனோ
சந்திவட்டச்சடைக்கற்றையலம்பச்சிறிதலர்ந்த
நந்திவட்டத்தொடுகொன்றைவளாவியநம்பனையே.

உன்மத்தகமலர்சூடியுலகந்தொழச்சுடலைப்
பன்மத்தகங்கொண்டுபல்கடைதோறும்பலிதிரிவான்
என்மத்தகத்தேயிரவும்பகலும்பிரிவரியான்
தன்மத்தகத்தோரிளம்பிறைசூடியசங்கரனே. (௬)

* பொப்பாரி என்றும் பாடம். † பெருகாரடை என்றும் பாடம். ‡ மிக்கூரிடும்பை என்றும் பாடங்கொள்ளலாம். ¶ பாவங்களெம்மையிற் என்றும் பாடம்.

Koviloor Digital Library

அரைப்பாலுடுப்பனகோவணச்சின்னங்களையமுனல்
வரைப்பாவையைக்கொண்டதெக்குடிவாழ்க்கைக்குவானிரைக்கும்
இரைப்பாபடுதலையேந்துகையாமறைதேடுமெந்தாய்
உரைப்பாருரைப்பனவேசெய்தியாலெங்களுத்தமனே. (எ)

துறக்கப்படாதவுடலைத்துறந்துவெந்தூதவரோ
டிறப்பனிறந்தாலிருவிசும்பேறுவனேறிவந்து
பிறப்பன்பிறந்தாற்பிறையணிவார்சடைப்பிஞ்ஞகன்பேர்
மறப்பன்கொலோவென்றென்னுள்ளங்கிடந்துமறுகிடுமே. (அ)

வேரிவளாயவிரைமலர்க்கொன்றைபுனைந்தனகன் *
சேரிவளாயவென்சிந்தைபுகுந்தான்றிருமுடிமேல்
வாரிவளாயவருபுனற்கங்கைசடைமறிவாய்
ஏரிவளாவிக்கிடந்ததுபோலுமிளம்பிறையே. (கூ)

கன்னெடுங்காலம்வெதும்பிக்கருங்கடனீர்சுருங்கிப்
பன்னெடுங்காலமழைதான்மறுக்கினும்பஞ்சமுண்டென்
றென்னொடுஞ்சூளறுமஞ்சனெஞ்சேயிமையாதமுக்கண்
பொன்னெடுங்குன்றமொன்றுண்டுகண்டீரிப்புகலிடத்தே. (க0)

மேலுமறிந்திலனான்முகன்மேற்சென்றுகீழிடந்து
மாலுமறிந்திலன்மாலுற்றதேவழிபாடுசெய்யும்
பாலன்மிசைச்சென்றுபாசம்விசிறிமறிந்தசிந்தைக்
காலனறிந்தானறிதற்கரியான்கழலடியே. (கக)

திருச்சிற்றம்பலம்.

தனித் திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

ஒன்றுவெண்பிறைக்கண்ணியோர்கோவணம்
ஒன்றுகீளுமையோடுமுடுத்தது †
ஒன்றுவெண்டலையேந்தியெமுள்ளத்தே
ஒன்றிநின்றங்குறையுமொருவனே. (க)

இரண்டுமாமவர்க்குள்ளனசெய்தொழில் ‡
இரண்டுமாமவர்க்குள்ளனகோலங்கள்
இரண்டுமில்லிளமானெமையாளுகந்
திரண்டுபோதுமென்சிந்தையுள்வைகுமே. (உ)

* விரிமலர்க்கொன்றைபுனைந்தனகன் என்றும் பாடம். † முகந்தது என்றும். பாடம். ‡ இரண்டுதொழில் - ஊனநடனம், ஞானநடனம்; நிக்கிரகம், அநுக்கிரகம் என்றுமாம்.

மூன்றுமூர்த்தியுளின்றியலுந் * தொழில்
மூன்றுமாயினமூவிலைச்சூலத்தன்
மூன்றுகண்ணினன்றீத்தொழின்மூன்றினன்
மூன்றுபோதுமெஞ்சிந்தையுண்மூழ்குமே. (ங)

நாலுமேன்முகஞ்செற்றதுமன்னிழல் †
நாலுநன்குணர்ந்திட்டதுமின்பமா
நாலுவேதஞ்சரித்தநன்னெறி
நாலுபோலெமகத்துறைநாதனே. (ச)

அஞ்சுமஞ்சுமோராடியரைமிசை
அஞ்சுபோலரையார்த்தநின் ‡ றத்துவம்
அஞ்சுமஞ்சுமோரோரஞ்சுமாயவன்
அஞ்சுமாமெமகத்துறையாதியே. ¶ (ரு)

ஆறுகால்வண்டுமூசியகொன்றையன்
ஆறுசூடியவண்டமுதல்வனர்
ஆறுகூர்மையர்க்கச்சமயப்பொருள்
ஆறுபோலெமகத்துறையாதியே. (சு)

ஏழுமாமலையேழ்பொழில்சூழ்கடல்
ஏழுபோற்றுமிராவணன்கைந்நரம்
பேழுகேட்டருள்செய்தவன்பொற்கழல்
ஏழுஞ்சூழடியேன்மனத்துள்ளவே. (எ)

எட்டுமூர்த்தியாய்நின்றியலுந்தொழில்
எட்டுவான்குணத்தீசனெம்மான்றனை
எட்டுமூர்த்தியுமெம்மிறையெம்முளே
எட்டுமூர்த்தியுமெம்முளொடுங்குமே. (அ)

ஒன்பதோன்பதியானையொளிகளி
ஒன்பதோன்பதுபல்கணஞ்சூழவே
ஒன்பதாமவைநீத்தொழிலின்னுரை
ஒன்பதோத்துநின்றென்னுளொடுங்குமே. (கூ)

பத்துநூறவன்வெங்கண்வெள்ளேற்றண்ணல்
பத்துநூறவன்பல்சடைதோண்மிசை
பத்தியாமிலமாதலின்ஞானத்தால்
பத்தியாளிடங்கொண்டதுபள்ளியே. (க0)

திருச்சிற்றம்பலம்.

* மூர்த்தியுநின்றியலுந் என்றும் பாடம். † நாவின்மேன்முகஞ்செற்றதுமந்நிழல் என்றும் பாடம். ‡ வாவார்த்தநின் என்றும் பாடம். ¶ அஞ்சுமாயெனகத்துறையாநியே என்றும் பாடம்.

Koviloor Digital Library

தனித் திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

மாசில்வீணையுமாலைமதியமும்
வீசுதென்றலும்வீங்கிளவேனிலும்*
மூசுவண்டறைபொய்கையும் † போன்றதே
ஈசனெந்தையிணையடிநீழலே. (க)

நமச்சிவாயவேஞானமுங்கல்வியும்
நமச்சிவாயவேநானறிவிச்சையும்
நமச்சிவாயவேநாநவின்றேத்துமே
நமச்சிவாயவேநன்னெறிகாட்டுமே. (உ)

ஆளானார்க்காளானாரை ‡ யடைந்துய்யார்
மீளாவாட்செய்துமெய்ம்மையுணிற்கிலார்
தோளாதசுரையோதொழும்பர்செவி
வாளாமாய்ந்துமண்ணாகிக்கழிவரே. (௩)

நடலைவாழ்வுகொண்டென்செய்திர்நாணிலீர்
சுடலைசேர்வதுசொற்பிரமாணமே
கடலினஞ்சமுதுண்டவர்கைவிட்டால்
உடலினார்கிடந்தூர்முனிபண்டமே. (௪)

பூக்கைக்கொண்டரன்பொன்னடிபோற்றிலார்
நாக்கைக்கொண்டரனாமநவில்கிலார்
ஆக்கைக்கேயிரைதேடியலமந்து
காக்கைக்கேயிரையாகிக்கழிவரே. (௫)

குறிகளும்மடையாளமுங்கோயிலும்
நெறிகளும்மவர்நின்றதோர்நேர்மையும்
அறியவாயிரமாரணமோதிலும்
பொறியிலீர்மனமென்கொல்புகாததே. (௬)

வாழ்த்தவாயுநினைக்கமடநெஞ்சும்
தாழ்த்தச்சென்னியுந்தந்ததலைவனைச்
சூழ்த்தமாமலர்தூவித்துதியாதே
வீழ்த்தவாவினையேனெடுங்காலமே. (௭)

எழுதுபாவைநல்லார்திறம்விட்டுநான்
தொழுதுபோற்றிநின்றேனையுஞ் ¶ சூழ்ந்துகொண்
டுழுதசால்வழியே § யுழுவான்பொருட்
டிழுதைநெஞ்சமிதென்படுகின்றதே. (௮)

* வேனலும் என்றும் பாடம். † வண்டைறைப் பொய்கையும் என்றும் பாடம். ‡ ஆளாகாராளானாரை என்றும் பாடம். ¶ போகநின்றேனையுஞ் என்றும் பாடம். § மெழுதகால்வழியே என்றும் பாடம்.

Koviloor Digital Library

நெக்குநெக்குநினைபவர்நெஞ்சுளே
புக்குநிற்கும்பொன்னார்சடைப்புண்ணியன்
பொக்கமிக்கவர்பூவுநீருங்கண்டு
நக்குநிற்பரவர்தம்மைநாணியே. (௯)

விறகிற்றீயினன்பாலிற்படுநெய்போல்
மறையநின்றுளன்மாமணிச்சோதியான்
உறவுகோனட்டுணர்வுகயிற்றினால்
முறுகவாங்கிக்கடையமுன்னிற்குமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

பல்லவராஜன், சமணர்களுடைய சொல்லின்படி திருநாவுக்கரசுநாயனாரை நீற்றறையில் வைக்குமாறு கட்டளையிட ஏவலாளர்கள் அந்நாயனாரை நீற்றறையினுள்ளே விட்டுக் கதவைப் பூட்டினார்கள். நாயனார் சிவபிரானுடைய திருவடி நிழலைத் தலைக்கொண்டு, "சிவனடியார்களுக்கு இவ்வுலகத்திலே துன்பம் வருவதுண்டோ" என்று அக்கடவுளைத் தியானித்து, "மாசில் வீணையு மாலை மதியமும்" என்னுந் திருக்குறுந்தொகையைப்பாடித் தொழுதுகொண்டு, அந்த நீற்றறையினுள்ளே எழுந்தருளியிருந்தார். அந்நாயனார் சிவபெருமானுடைய திருவடி நீழலாகப் பாவித்த அந்நீற்றறை, வீணாகானமும், சந்திரனும், தென்றலும், இளவேனிலும், பொய்கையும்போலக் குளிர்ந்தது.

தனித் திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

எயிலானையெனிச்சையகம்படிக்
கோயிலானைக்* குணப்பெருங்குன்றினை
வாயிலானைமனோன்மனியைப்பெற்ற †
தாயிலானைத்தழுவுமென்னாவியே. (௧)

முன்னைஞானமுதற்றனிவித்தினைப்
பின்னைஞானப்பிறங்குசடையனை
என்னைஞானத்திருளறுத்தாண்டவன்
தன்னைஞானத்தளையிட்டுவைப்பனே.‡ (௨)

ஞானத்தாற்றொழுவார்சிலஞானிகள்
ஞானத்தாற்றொழுவேனுனைநானலேன்
ஞானத்தாற்றொழுவார்கடொழக்கண்டு
ஞானத்தாயுனை ¶ நானுந்தொழுவனே. (௩)

* யசம்படி—கோயிலானைக் என்றும் பாடம். † இங்கே 'சிவஞ்சத்திதன்னையீன்றும்' எனவும், 'எம்பெருமானிமவான்மகட்கு..தகப்பன்' எனவும், 'தன்னொருபா லவளத்தனுந் தில்லையான்' எனவும், 'கனகமார்கவின்செய்மன்றி,லனகநாடகற்கெமன்னை....மகள்' எனவும் வரும் அருமைத்திருவாக்குக்கள் சிந்திக்கற்பாலன. ‡ சிலபிரதிகளில் இது ௩—வதாகவும் ௩—வது ௨—வதாகவும் காணப்படுகின்றன. ¶ ஞானத்தாலுனை என்றும் பாடம்.

Koviloor Digital Library

புழுவுக்குங்குணநான்கெனக்கும்மதே
புழுவுக்கிங்*கெனக்குள்ளபொல்லாங்கில்லை
புழுவினுங்கடையேன்புனிதன்றமர்
குழுவுக்கெவ்விடத்தேன்சென்றுகூடவே. (ச)

மலையேவந்துவிழினுமனிதர்காள்
நிலையினின்று†கலங்கப்பெறுதிரேல்
தலைவனாகியவீசன்றமர்களைக்
கொலைசெய்யானைதான்கொன்றிடுகிற்குமே. (ரு)

கற்றுக்கொள்வனவாயுளநாவுள
இட்டுக்கொள்வனபூவுளநீருள
கற்றைச்செஞ்சடையானுளனுமுளோம்
எற்றுக்கோநமனான்முனிவுண்பதே. (சு)

மனிதர்காளிங்கேவம்மொன்றுசொல்லுகேன்
கனிதந்தாற்கனியுண்ணவும்வல்லிரே
புனிதன்பொற்கழலீசனெனுங்கனி
இனிதுசாலவுமேசற்றவர்கட்கே. (எ)

என்னையேதுமறிந்திலனெம்பிரான்
தன்னைநானுமுன்னேதுமறிந்திலேன்
என்னைத்தன்னடியானென்றறிதலும்
தன்னைநானும்பிரானென்றறிந்தெனே. (அ)

தெள்ளத்தேறித்தெளிந்துதித்திப்பதோர்
உள்ளத்தேறலமுதவொளிவெளி
கள்ளத்தேன்கடியேன்கவலைக்கடல்
வெள்ளத்தேனுக்கெவ்வாறுவிளைந்ததே.‡ (க0)

திருச்சிற்றம்பலம்.

காலபாசத் திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

கண்டுகொள்ளரியானைக்கனிவித்துப்¶
பண்டுநான்செய்த§பாழிமைகேட்டிரேல்
கொண்டபாணிகொடுகொட்டிதாளங்கைக்
கொண்டதொண்டரைத்துன்னிலுஞ்சூழலே. (க)

நடுக்கத்துள்ளுநகைபுளுநம்பர்க்குக்
கடுக்கக்கல்லவடமிடுவார்க்குக்
கொடுக்கக்கொள்கவெனவுரைப்பார்களை
இடுக்கண்செய்யப்பெறீ0ரிங்குநீங்குமே. (உ)

* கும்மலீதே—புழுவுக்கீங் என்றும் பாடம். † நிலையினின்றீர் என்றும் பாடம். ‡ இத்திருப்பதிகத்தில் கூவது செய்யுள் மறைந்துபோயிற்று. ¶ கனவித்து என்றும் பாடம். § பண்டுநாஞ்செய்த என்றும் பாடம். 0 இடுக்கண்சாரப்பெறீர் என்றும் பாடம்.

Koviloor Digital Library

கார்கொள்கொன்றைக்கடிமலர்க்கண்ணியான்
சீர்கொணாமஞ்சிவனென்றரற்றுவார்
ஆர்களாகிலுமாகவவர்களை
நீர்கள்சாரப்பெறீரிங்குநீங்குமே. (ந)

சாற்றினேன்சடைநீண்முடிச்சங்கரன்
சீற்றங்காமன்கண்வைத்தவன்சேவடி
ஆற்றவுங்களிப்பட்டமனத்தராய்ப்
போற்றியென்றுரைப்பார்புடைபோகலே. (ச)

இறையென்சொன்மறவேனமன்றூதுவீர்
பிறையும்பாம்புமுடைப்பெருமான்றமர்
நறவநாறியநன்னறுஞ்சாந்திலும்
நிறையநீறணிவாரெதிர்செல்லலே. (ரு)

வாமதேவன்வளநகர்* வைகலும்
காமமொன்றிலராய்க்கைவிளக்கொடு
தாமந்தூபமுந்† தண்ணறுஞ்சாந்தமும்
ஏமமும்புனைவாரெதிர்செல்லலே. (சு)

படையும்பாசமும்பற்றியகையினீர்
அடையன்மின்னமதீசனடியரை
விடைகொளூர்தியினானடியார்குழாம்
புடைபுகாதுநீர்போற்றியேபோமினே. (எ)

விச்சையாவதும்வேட்கைமையாவதும்
நிச்சனீறணிவாரைநினைப்பதே
அச்சமெய்தியருகணையாதுநீர்
பிச்சைபுக்கவனன்பரைப்பேணுமே. (அ)

இன்னங்கேண்மினிளம்பிறைசூடிய
மன்னன்பாதமனத்துடனேத்துவார்
மன்றுமஞ்செழுத்தாகியமந்திரம்
தன்னிலொன்றுவல்லாரையுஞ்சாரலே. (கூ)

மற்றுங்கேண்மின்மனப்பரிப்பொன்றின்றிச்
சுற்றும்பூசியநீற்றொடுகோவணம்
ஒற்றையேறுடையானடியேயலால்
பற்றொன்றில்லிகண்மேற்படைபோகலே. (க0)

அரக்கனீரைந்தலையு‡மோர்தாளினால்
நெருக்கியூன்றியிட்டான்றமர்நிற்கினும்
சுருக்கெனவங்குப்பேர்மின்கண்மற்றுநீர்
சுருக்கெனிற்சுடரான்கழல்சூடுமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

* வாமதேவன்வளநகர் - சிவாலயம். † தாமதூபமுந் என்றும் பாடம். ‡ ரைந்துதலையும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

மறக்கிற்பனேயென்னுந் திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

காசனைக்கனலைக்கதிர்மாமணித்
தேசனைப்புகழார்சிலர்தென்னர்கள் *
மாசினைக்கழித்தாட்கொளவல்லவெம்
ஈசனையினிநான்மறக்கிற்பனே. (க)

புந்திக்குவிளக்காயபுராணனைச்
சந்திக்கண்ணடமாடுஞ்சதுரனை
அந்திவண்ணனையாழன்மூர்த்தியை
வந்தெனுள்ளங்கொண்டானைமறப்பனே. (உ)

ஈசனீசனென்றென்றுமாற்றுவன்
ஈசன்றானென்மனத்திற்பிரிவிலன்
ஈசன்றன்னையுமென்மனத்துக்கொண்டு
ஈசன்றன்னையும்யான்மறக்கிற்பனே. (௩)

ஈசனென்னையறிந்ததறிந்தனன்
ஈசன்சேவடியேற்றப்பெறுதலால் †
ஈசன்சேவடியேத்தப்பெற்றேனினி †
ஈசன்றன்னையும்யான்மறக்கிற்பனே. (௪)

தேனைப்பாலினைத்திங்களைஞாயிற்றை
வானவெண்மதிசூடியமைந்தனை
வேனிலானை ‡ மெலிவுசெய்தீயழல்
ஞானமூர்த்தியைநான்மறக்கிற்பனே. (௫)

கன்னலைக்கரும்பூறியதேறலை
மின்னனை ¶ மின்னனையவுருவனைப்
பொன்னனைமணிக்குன்றுபிறங்கிய
என்னனையினியான்மறக்கிற்பனே. (௬)

கரும்பினைக்கட்டியைக்கந்தமாமலர்ச்
சுரும்பினைச்சுடர்ச்சோதியுட்சோதியை
அரும்பினிற்பெரும்போதுகொண்டாய்மலர்
விரும்புமீசனைநான்மறக்கிற்பனே. (எ)

துஞ்சும்போதுஞ்சுடர்விடுசோதியை
நெஞ்சுணின்றுநினைப்பிக்குநீதியை
நஞ்சுகண்டத்தடக்கியநம்பனை
வஞ்சனேனினியான்மறக்கிற்பனே. (அ)

* சிலதெண்ணர்கள் என்றும் பாடம். † † யேத்தப்பெறுதலால் - ஈசன்சேவடி யேற்றப்பெற்றேனினி என்றும் பாடம்; இரண்டடிகளும் யேற்ற யேற்ற என்றும், யேத்த யேத்த என்றும் காணப்படுகின்றன. ‡ வேனலானை என்றும் பாடம். ¶ மின்னனை - மின்னையுடையவனை; மின்-உமாதேவியார்; ஆகுபெயர்.

Koviloor Digital Library

புதியபூவினைப்புண்ணியநாதனை
நிதியைநிதியைநித்திலக்குன்றினைக்
கதியைக்கண்டங்கறுத்தகடவுளை
மதியைமைந்த* னைநான்மறக்கிற்பனே. (கூ)

கருகுகார்முகில்போல்வதோர்கண்டனை
உருவநோக்கியையூழிமுதல்வனைப்
பருகுபாலனைப்பான்மதிசூடியை
மருவுமைந்தனைநான்மறக்கிற்பனே. (க0)

திருச்சிற்றம்பலம்.

தொழற்பாலதேயென்னுந் திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

அண்டத்தானையமரர்தொழப்படும்
பண்டத்தானைப்பவித்திரமார்திரு
முண்டத்தானைமுற்றாதவிளம்பிறைத்
துண்டத்தானைக்கண்டீர்தொழற்பாலதே. (க)

முத்தொப்பானைமுளைத்தெழுகற்பக
வித்தொப்பானைவிளக்கிடைநேரொளி
ஒத்தொப்பானையொளிர்பவளத்திரட்
டொத்தொப்பானைக்கண்டீர்தொழற்பாலதே. (உ)

பண்ணொத்தானைப்பவளந்திரண்டதோர்
வண்ணத்தானைவகையுணர்வான்றனை
எண்ணத்தானையிளம்பிறைபோல்வெள்ளைச்
சுண்ணத்தானைக்கண்டீர்தொழற்பாலதே. (ங)

விடலையானைவிரைகமழ்தேன்கொன்றைப்
படலையானைப்பலிதிரிவான்செலும்
நடலையானைநரிபிரியாததோர்
சுடலையானைக்கண்டீர்தொழற்பாலதே. (ச)

பரிதியானைப்பல்வேறுசமயங்கள்
கருதியானைக்கண்டார்மனமேவிய
பிரிதியானைப்பிறாதியாததோர்
சுருதியானைக்கண்டீர்தொழற்பாலதே. (ரு)

ஆதியானையமரர்தொழப்படும்
நீதியானைநியமநெறிகளை
ஓதியானையுணர்தற்கரியதோர்
சோதியானைக்கண்டீர்தொழற்பாலதே. (சு)

* மைந்தன் - வலிமையுள்ளோன்; வலி ஈண்டுச் சர்வவல்லமை; சிவபிரான் பதினறுவயதினராகவோர் தியான முண்மையின் அப்பருவத்தைக்குறித்ததெனினு மொக்கும்.

Koviloor Digital Library

ஞாலத்தானைநல்லானைவல்லார்தொழும் *
கோலத்தானைக்குணப்பெருங்குன்றினை
மூலத்தானைமுதல்வனைமூவிலைச்
சூலத்தானைக்கண்டீர்தொழற்பாலதே. (எ)

ஆதிப்பாலட்டமூர்த்தியையானஞ்சும்
வேதிப்பானைநம்மேல்வினைவெந்தறச்
சாதிப்பானைத்தவத்திடைமாற்றங்கள்
சோதிப்பானைக்கண்டீர்தொழற்பாலதே. (அ)

நீற்றினானைநிகரில்வெண்கோவணக்
கீற்றினானைக்கிளரொளிச்செஞ்சடை
ஆற்றினானையமரர்தம்மாருயிர்
தோற்றினானைக்கண்டீர்தொழற்பாலதே. (கூ)

விட்டிட்டானைமெய்ஞ்ஞானத்துமெய்ப்பொருள்
கட்டிட்டானைக்கனங்குழைபாலன்பு
பட்டிட்டானைப்பகைத்தவர்முப்புரம்
சுட்டிட்டானைக்கண்டீர்தொழற்பாலதே. (க0)

முற்றினானையிராவணனீண்முடி
ஒற்றினானையொருவிரலாலுறப்
பற்றினானையோர்வெண்டலைப்பாம்பரைச்
சுற்றினானைக்கண்டீர்தொழற்பாலதே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இலிங்கபுராணத் திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

புக்கணைந்துபுரிந்தலரிட்டிலர்
நக்கணைந்துநறுமலர்கொய்திலர்
சொக்கணைந்தசுடரொளிவண்ணனை
மிக்குக்காணலுற்றாரங்கிருவரே. (க)

அலருநீருங்கொண்டாட்டித்தெளிர்த்திலர் †
திலகமண்டலந்தீட்டித்திரிந்திலர்
உலகமூர்த்தியொளிநிறவண்ணனைச்
செலவுகாணலுற்றாரங்கிருவரே. (உ)

ஆப்பிநீரோடலகுகைக்கொண்டிலர்
பூப்பெய்கூடைபுனைந்துசுமந்திலர்
காப்புக்கொள்ளிகபாலிதன்வேடத்தை
ஒப்பிக்காணலுற்றாரங்கிருவரே. (ங)

* வல்லார்செயும் என்றும் பாடம். † தெளித்திலர் என்றும் பாடம்.

Koviloor Digital Library

நெய்யும்பாலுங்கொண்டாட்டிநினைந்திலர்
பொய்யும்போக்கமும்போக்கிப்புகழ்ந்திலர்
ஐயன்வெய்யவழனிறவண்ணனை
மெய்யைக்காணலுற்றாரங்கிருவரே. (௪)

எருக்கங்கண்ணிகொண்டிண்டைபுனைந்திலர்
பெருக்கக்கோவணம்பீறியுடுத்திலர்
தருக்கினாற்சென்றுதாழ்சடையண்ணலை
நெருக்கிக்காணலுற்றாரங்கிருவரே. (௫)

மரங்களேறிமலர்பறித்திட்டிலர்
நிரம்பநீர்சுமந்தாட்டிநினைந்திலர்
உரம்பொருந்தி * யொளிநிறவண்ணனை
நிரம்பக்காணலுற்றாரங்கிருவரே. (௬)

கட்டுவாங்கங்கபாலங்கைக்கொண்டிலர்
அட்டமாங்கங்கிடந் † தடிவீழ்ந்திலர்
சிட்டன்சேவடிசென்றெய்திக்காணிய ‡
பட்டகட்டமுற்றாரங் ¶ கிருவரே. (௭)

வெந்தநீறுவிளங்கவணிந்திலர்
கந்தமாமலரிண்டைபுனைந்திலர்
எந்தையேறுகந்தேறெரிவண்ணனை
அந்தங்காணலுற்றாரங்கிருவரே. (௮)

இளவெழுந்தவிருங்குவளைம்மலர்
பிளவுசெய்துபிணைத்தடியிட்டிலர்
களவுசெய்தொழிற்காமனைக்காய்ந்தவன்
அளவுகாணலுற்றாரங்கிருவரே. (௯)

கண்டிபூண்டுகபாலங்கைக்கொண்டிலர்
விண்டவான்சங்கம்விம்மவாய்வைத்திலர்
அண்டமூர்த்தியழனிறவண்ணனைக்
கெண்டிக்காணலுற்றாரங்கிருவரே. (௧௦)

செங்கணானும்பிரமனுந்தம்முளே
எங்குந்தேடித்திரிந்தவர்காண்கிலார்
இங்குற்றேனென்றிலிங்கத்தேதோன்றினான்
பொங்குசெஞ்சடைப்புண்ணியமூர்த்தியே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

* உரம்பொருத்தி என்றும் பாடம். † அட்டமாதங்கிடந் என்றும் பாடம். ‡ காணிவர் என்றும் பாடம். ¶ பட்டகட்டமுற்றாரங் என்றும் பாடம்.

Koviloor Digital Library

மனத்தொகைத் திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பொன்னுள்ளத்திரள்புன்சடையின்புறம்
மின்னுள்ளத்திரள்வெண்பிறையாயிறை
நின்னுள்ளத்தருள்கொண்டிருணீங்குதல்
என்னுள்ளத்துளதெந்தைபிரானிரே. (க)

முக்கணும்முடையாய்முனிகள்பலர்
தொக்கெணுங்கழலாயொருதோலினோ
டக்கணும்மரையாயருளேயலா *
தெக்கணும்மிலனெந்தைபிரானிரே. (உ)

பனியாய்வெங்கதிர் † பாய்படர்புன்சடை
முனியாய்நீயுலகம்முழுதாளினும்
தனியாய்நீசரணீசலமேபெரி
தினியாய்நீயெனக்கெந்தைபிரானிரே. (ந)

மறையும்பாடுதிர்மாதவர்மாலினுக்
குறையுமாயினைகோளரவோடொரு
பிறையுஞ்சூடினையென்பதலாற்பிறி
திறையுஞ்சொல்லிலையெந்தைபிரானிரே. (ச)

பூத்தார்கொன்றையினுய்புலியின்னதள்
ஆர்த்தாயாடரவோடனலாடிய
கூத்தாநின் ‡ குரையார்கழலேயல
தேத்தாநாவெனக்கெந்தைபிரானிரே. (ரு)

பைம்மாலும்மரவாபரமாபசு
மைம்மால்கண்ணியோடேறுமைந்தாவெனும்
அம்மாலல்லதுமற்றடிநாயினேன்
எம்மாலும் ¶ மிலனெந்தைபிரானிரே. (சு)

வெப்பத்தின்மனமாசுவிளக்கிய
செப்பத்தாற்சிவனென்பவர்தீவினை
ஒப்பத்தீர்த்திடுமொண்கழலாற்கல்ல
தெப்பற்றும்மிலனெந்தைபிரானிரே. (எ)

திகழுஞ்சூழ்சுடர்வானெடுவைகறும்
நிகழுமொண்பொருளாயினநீதியென்
புகழுமாறுமலானுனபொன்னடி
இகழுமாறிலனெந்தைபிரானிரே. (அ)

* யருளேய்தலா என்றும் பாடம். † பனியார் வெங்கதிர் என்றும் பாடம். ‡ கூத்தாறன் என்றும் பாடம். ¶ நாயினேற்—கெம்மாலும் என்றும் பாடம்.

Koviloor Digital Library

கைப்பற்றித்திருமால்பிரமன்றனை
எப்பற்றி * யறிதற்கரியாயருள்
அப்பற்றல்லதுமற்றடிநாயினேன்
எப்பற்றுமிலனெந்தைபிரானிரே. (௯)

எந்தையெம்பிரானென்றவர்மேன்மனம்
எந்தையெம்பிரானென்றிறைஞ்சித்தொழு
தெந்தையெம்பிரானென்றடியேத்துவார்
எந்தையெம்பிரானென்றடிசேர்வரே. (௧௰)

திருச்சிற்றம்பலம்.

சித்தத்தொகைத் திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

சிந்திப்பார்மனத்தான்சிவன்செஞ்சுடர்
அந்திவானிறத்தானணியார்மதி
முந்திச்சூடியமுக்கண்ணினானடி
வந்திப்பாரவர்வானுலகாள்வரே. (௧)

அண்டமாரிருளூடுகடந்தும்பர்
உண்டுபோலுமோரொண்சுடரச்சுடர் †
கண்டிங்காரறிவாரறிவாரெலாம்
வெண்டிங்கட்கண்ணிவேதியனென்பரே. (௨)

ஆதியாயவனாருமிலாதவன்
போதுசேர்புனைநீண்முடிப்புண்ணியன்
பாதிபெண்ணுருவாகிப்பரஞ்சுடர்ச் ‡
சோதியுட்சோதியாய்நின்றசோதியே. (௩)

இட்டதிட்டதோரேறுகந்தேறியூர் ¶
பட்டிதுட்டங்கனாய்ப்பலிதேர்வதோர்
கட்டவாழ்க்கையனாகிலும்வானவர்
அட்டமூர்த்தியருளென்றடைவரே. (௪)

ஈறில்கூறையனாகியெரிந்தவெண்
நீறுபூசிநிலாமதிசூடிலும்
வீறிலாதனசெய்யினும்விண்ணவர்
ஊறலாயருளாயென்றுரைப்பரே. (௫)

உச்சிவெண்மதிசூடிலுமூனறாப்
பச்சைவெண்டலையேந்திப்பலவிலம்
பிச்சையேபுகுமாகிலும்வானவர்
அச்சந்தீர்க்கருளாயென்றடைவரே. (௬)

* எப்பற்றி என்றும் பாடம். † சுடர்க் என்றும் பாடம். ‡ வாகிபரஞ்சுடர் என்றும் பாடம். ¶ யூர்ப் என்றும் பாடம்.

Koviloor Digital Library

ஊரிலாயென்றென்றுகவுரைப்பதோர்
பேரிலாய்பிறைசூடியபிஞ்ஞகா
காருலாங்கண்டனேயுன்கழலடி
சேர்விலார்கட்குத்தியவைதியவே. (எ)

எந்தையேயெம்பிரானேயெனவுள்கிச்
சிந்திப்பாரவர்தீவினைதீருமால்
வெந்தநீறுமெய்பூசியவேதியன்
அந்தமாவளப்பாரடைந்தார்களே. (அ)

ஏனவெண்மருப்போடென்புபூண்டெழில்
ஆனையீருரிபோர்த்தனலாடினும்
தானவண்ணத்தனாகிலுந்தன்னையே
வானநாடர்வணங்குவர்வைகலே. (கூ)

ஐயனந்தணனோடுபெண்ணுமாம்
மெய்யன்மேதகுவெண்பொடிபூசிய *
மைகொள்கண்டத்தன்மான்மறிக்கையினன்
பைகொள்பாம்பரையார்த்தபரமனே. (க0)

ஒருவனாகிநின்றானிவ்வுலகெலாம்
இருவராகிநின்றார்கட்கறிகிலான்
அருவராவரையார்த்தவனார்கழல்
பரவுவாரவர்பாவம்பறையுமே. (கக)

ஓதவண்ணனும்ஒண்மலர்ச்செல்வனும்
நாதனேயருளாயென்று † நாடொறும்
காதல்செய்துகருதப்படுமவர்
பாதமேத்தப்பறையுநம்பாவமே. (கஉ)

ஔவதன்மையவரவராக்கையான்
வெவ்வதன்மையனென்பதொழிமினோ
மௌவனீண்மலர்மேலுறைவானொடு
பௌவவண்ணனுமாய்ப்பணிவார்களே. (கங)

அக்குமாமையும்பூண்டனலேந்தியில்
புக்குப்பல்பலிதேரும்புராணனை
நக்குநீர்கணரகம்புகேன்மினோ
தொக்கவானவராற்றொழுவானையே. (கச)

கங்கைதங்கியசெஞ்சடைமேலிளம்
திங்கள்சூடியதீநிறவண்ணனார்
இங்கனாரெழில்வானம்வணங்கவே
அங்கணாற்கதுவாலவன்றன்மையே. (கரு)

* பொடிப்பூசிய என்றும் பாடம். † நாதநம்மருளாயென்று என்றும் பாடம்.

Koviloor Digital Library

நகரவெல்கொடி * யானொடுநன்னெஞ்சே
நுகரநீயுனைக்கொண்டுயப்போக்குறில்
மகரவெல்கொடிமைந்தனைக்காய்ந்தவன்
புகரில்சேவடியேபுகலாகுமே. (கசு)

சரணமாம்படியார்பிறரியாவரோ
கரணந்தீர்த்துயிர்கையிலிகழ்ந்தபின்
மரணமெய்தியபின்னவைநீக்குவான்
அரணமூவெயிலெய்தவனல்லனே. (கஎ)

ஞமனென்பானரகர்க்குநமக்கெலாம்
சிவனென்பான்செழுமான்மறிக்கையினான்
கவனஞ்செய்யுங்கனவிடையூர்தியான்
தமரென்றாலுங்கெடுந்தடுமாற்றமே. (கஅ)

இடபமேறியுமில்பலியேற்பவர்
அடவிகாதலித்தாடுவரைந்தலைப்
படவம்பாம்பரையார்த்தபரமனைக்
கடவிராய்ச்சென்றுகைதொழுதுய்ம்மினே. (ககூ)

இணர்ந்துகொன்றைபொற்றாதுசொரிந்திடும்
புணர்ந்தவாளரவம்மதியோடுடன்
அணைந்தவஞ்சடையானவன்பாதமே
உணர்ந்தவுள்ளத்தவருணர்வார்களே. (உ0)

தருமந்தான்றவந்தான்றவத்தால்வரும்
கருமந்தான்கருமான்மறிக்கையினான்
அருமந்தன்னவதிர்கழல்சேர்மினோ
சிரமஞ்சேரழற்றீவினையாளரே. (உக)

நமச்சிவாயவென்பாருளரேலவர்
தமச்சநீங்கத்தவநெறிசார்தலால்
அமைத்துக்கொண்டதோர்வாழ்க்கையனாகிலும்
இமைத்துநிற்பதுசாலவரியதே. (உஉ)

பற்பல்காலம்பயிற்றிப்பரமனைச்
சொற்பல்காலநின்றேத்துமின்றொல்வினை
வெற்பிற்றோன்றியவெங்கதிர்கண்டவப்
புற்பனிக்கெடுமாறதுபோலுமே. (உங)

மணிசெய்கண்டத்தமான்மறிக்கையினான்
கணிசெய்வேடத்தராயவர்காப்பினால்
பணிகடாஞ்செயவல்லவர்யாவர்தம்
பிணிசெய்யாக்கையைநீக்குவர்பேயரே. (உச)

* நகரவெல்கொடி என்றும் பாடம்.

Koviloor Digital Library

இயக்கர்கின்னரரிந்திரன்றனவர்
நயக்கநின்றவனான்முக * னாழியான்
மயக்கமெய்தவன்மாலெரியாயினான்
வியக்குந்தன்மையினானெம்விகிர்தனே. (உரு)

அரவமார்த்தனலாடியவண்ணலைப்
பரவுவாரவர்பாவம்பறைதற்குக் †
குரவைகோத்தவனுங் ‡ குளிர்போதின்மேல்
சுரவினான்முகனுங்கரியல்லரே. (உசு)

அழலங்கையினனந்தரத்தோங்கிநின்
றுழலுமூவெயிலொள்ளழலூட்டினான்
தழலுந்தாமரையானொடுதாவினான்
கழலுஞ்சென்னியுங்காண்டற்கரியனே. (உஎ)

இளமைகைவிட்டகறலுமூப்பினார்
வளமைபோய்ப்பிணியோடுவருதலால்
உளமெலாமொளியாய்மதியாயினான்
கிளமையேகிளையாகநினைப்பனே. (உஅ)

தன்னிற்றன்னையறியுந்தலைமகன்
தன்னிற்றன்னையறியிற்றலைப்படும்
தன்னிற்றன்னையறிவிலனாயிடில்
தன்னிற்றன்னையுஞ்சார்தற்கரியனே. (உகூ)

இலங்கைமன்னனையீரைந்துபத்துமன்
றலங்கலோடுடனேசெலவூன்றிய
நலங்கொள்சேவடிநாடொறுநாடொறும்
வலங்கொண்டேத்துவார்வானுலகாள்வரே. (௩0)

திருச்சிற்றம்பலம்.

உள்ளத் திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

நீறலைத்ததோர்மேனிநிமிர்சடை
ஆறலைக்கநின்றுமெமுதினைத்
தேறலைத்தெளியைத்தெளிவாய்த்ததோர்
ஊறலைக்கண்டுகொண்டதெனுள்ளமே. (க)

பொந்தையைப்புக்குநீக்கப்புகுந்திடும்
தந்தையைத்தழல்போல்வதோர்மேனியைச் ¶
சிந்தையைத்தெளிவைத்தெளிவாய்த்ததோர்
எந்தையைக்கண்டுகொண்டதெனுள்ளமே. (உ)

* நின்றவர் நான்முகன் என்றும் பாடம். † பறைத்தற்குக் என்றும் பாடம். ‡ குரவைபோர்த்தவனுங் என்றும் பாடம். ¶ தழலொப்பதோர்மேனியைச் என்றும் பாடம்.

Koviloor Digital Library

வெள்ளத்தார்விஞ்சையார்கள்விரும்பவே
வெள்ளத்தைச்சடைவைத்தவிகிர்தனார்
கள்ளத்தைக்கழியம்மனமொன்றிநின்
றுள்ளத்திலொளியைக்கண்டதுள்ளமே. (௩)

அம்மானையமுதின்னமுதேயென்று
தம்மானைத்தத்துவத்தடியார்தொழும்
செம்மானநிறம்போல்வதோர்சிந்தையுள்
எம்மானைக்கண்டுகொண்டதெனுள்ளமே. (௪)

கூறேறும்முமைபாகமோர்பாலராய்
ஆறேறுஞ்சடைமேற்பிறைசூடுவர்
பாறேறுந்தலையேந்திப்பலவிலம்
ஏறேறுமெந்தையைக்கண்டதெனுள்ளமே. * (௫)

முன்னெஞ்சமின்றிமூர்க்கராய்ச்சாகின்றார்
தந்நெஞ்சந்தமக்குத்தாமிலாதவர்
வன்னெஞ்சமதுநீக்குதல்வல்லீரே †
என்னெஞ்சிலீசனைக்கண்டதெனுள்ளமே. ‡ (௬)

வென்றானைப்புலனைந்துமென்றிவினை
கொன்றானைக்குணத்தாலேவணங்கிட
நன்றானன்மனம்வைத்திடுஞானமாம்
ஒன்றானைக்கண்டுகொண்டதெனுள்ளமே. (௭)

மருவினைமடநெஞ்சமனம்புகும்
குருவினைக்குணத்தாலேவணங்கிடும்
திருவினைச்சிந்தையுட்சிவனாய்நின்ற
உருவினைக்கண்டுகொண்டதெனுள்ளமே. (௮)

தேசனைத்திருமால்பிரமன்செயும்
பூசனைப்புணரிற்புணர்வாயதோர்
நேசனைநெஞ்சினுண்ணிறைவாய்நின்ற
ஈசனைக்கண்டுகொண்டதெனுள்ளமே. (௯)

வெறுத்தானைப்புலனும்பிரமன்றலை
அறுத்தானையரக்கன்கயிலாயத்தைக்
கறுத்தானைக்காலினில்விரலொன்றினால்
ஒறுத்தானைக்கண்டுகொண்டதெனுள்ளமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

* கண்டதுள்ளமே என்றும் பாடம். † வல்லிரேல் என்றும் பாடம். ‡ கண்டதுள்ளமே என்றும் பாடம்.

Koviloor Digital Library

பாவநாசத் திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பாவமும்பழிபற்றறவேண்டுவீர்
ஆவிலஞ்சுகந்தாடுமவன்கழல்
மேவராய்மிகவும்மகிழ்ந்துள்குமின் *
காவலாளன்கலந்தருள்செய்யுமே. (க)

கங்கையாடிலென்காவிரியாடிலென்
கொங்குதண்குமரித்துறையாடிலென்
ஓங்குமாகடலோதநீராடிலென்
எங்குமீசனெனாதவர்க்கில்லையே. (உ)

பட்டராகிலென்சாத்திரங்கேட்கிலென்
இட்டமெட்டியுமீதொழில்பூணிலென்
எட்டுமொன்றுமிரண்டுமறியிலென்
இட்டமீசனென்னாதவர்க்கில்லையே. (ங)

வேதமோதிலென்வேள்விகள்செய்கிலென் †
நீதிநூல்பலநித்தல்பயிற்றிலென்
ஓதியங்கமோராறுமுணரிலென்
ஈசனையுள்குவார்க்கன்றியில்லையே. (ச)

காலைசென்றுகலந்துநீர்மூழ்கிலென்
வேலைதோறும்விதிவழிநிற்கிலென்
ஆலைவேள்வியடைந்ததுவேட்கிலென்
ஏலவீசனென்பார்க்கன்றியில்லையே. (ரு)

கானநாடுகலந்துதிரியிலென்
ஈனமின்றியிருந்தவஞ்செய்யிலென்
ஊனையுண்டலொழிந்துவானோக்கிலென்
ஞானனென்பவர்க்கன்றிநன்கில்லையே. (சு)

கூடவேடத்தராகிக்குழுவிலென்
வாடியூனைவருத்தித்திரியிலென்
ஆடல்வேடத்தனம்பலக்கூத்தனைப்
பாடலாளர்க்கல்லாற்பயனில்லையே. (எ)

நன்றுநோற்கிலென் ‡ பட்டினியாகிலென்
குன்றமேறியிருந்தவஞ்செய்யிலென்
சென்றுநீரிற்குளித்துத்திரியிலென்
என்றுமீசனென்பார்க்கன்றியில்லையே. (அ)

* மிகவுந்நினைந்துள்குமின் என்றும், மிகவுண்மகிழ்ந்துள்குமின் என்றும் பாடம்.
† மோதிலென்சாத்திரங்கேட்கிலென் என்றும் பாடம். ‡ நோக்கிலென் என்றும் பாடம்.

Koviloor Digital Library

கோடிதீர்த்தங்கலந்துகுளித்தவை
ஆடினாலுமானுக்கன்பில்லையேல்
ஓடுநீரினையோட்டைக்குடத்தட்டி
மூடிவைத்திட்டமூர்க்கனோடொக்குமே. (கூ)

மற்றுநற்றவஞ்செய்துவருந்திலென்
பொற்றையுற்றெடுத்தானுடல்புக்கிறக்
குற்றநற்குரையார்கழற்சேவடி
பற்றிலாதவர்க்குப்பயனில்லையே. (க0)

திருச்சிற்றம்பலம்.

ஆதிபுராணத் திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

வேதநாயகன்வேதியர்நாயகன்
மாதிநாயகன்மாதவர்நாயகன்
ஆதிநாயகனாதிரைநாயகன்
பூதநாயகன்புண்ணியமூர்த்தியே. (க)

சென்றுசெத்துப்பிறப்பதேதேவென்று
பத்திசெய்மனப்பாறைகட்கேறுமோ *
அத்தனென்றரியோடுபிரமனும்
துத்தியஞ்செயநின்றநற்சோதியே. (உ)

நூறுகோடிபிரமர்களொந்தினார் †
ஆறுகோடிநாராயணரங்ஙனே
ஏறுகங்கைமணலெண்ணிலிந்திரர்
ஈறிலாதவனீசனொருவனே. (ங)

வாதுசெய்துமயக்குமனத்தராய்
ஏதுசொல்லுவீராகிலுமேழைகாள்
யாதோர்தேவரெனப்படுவார்க்கெலாம்
மாதேவன்னலாற்றேவர்மற்றில்லையே. (ச)

கூவலாமைகுரைகடலாமையைக்
கூவலோடொக்குமோகடலென்றல்போல்
பாவகாரிகள்பார்ப்பரிதென்பரால்
தேவதேவன்சிவன்பெருந்தன்மையே. (ரு)

பேய்வனத்தமர்வானைப்பிரார்த்தித்தார்க்
கீவனையிமையோர்முடிதன்னடிச்
சாய்வனைச்சலவார்கடமக்குடற் ‡
சிவனைச்சிவனைச்சிந்தியார்களே. (சு)

* கேய்துமோ என்றும் பாடம். † நந்தினார் என்றும், மொங்கினார் என்றும் பாடம். ‡ சாய்வனைத்தலைவர்கடமக்குடற் என்றும் பாடம்.

Koviloor Digital Library

எரிபெருக்குவரவ்வெரியீசன
துருவருக் * கமதாவதுணர்கிலார்
அரியயற்கரியானையயர்த்துப்போய்
நரிவிருத்தமதாகுவர்நாடரே. (எ)

அருக்கன்பாதம்வணங்குவரந்தியில்
அருக்கனுவானரனுருவல்லனோ
இருக்குநான்மறை † யீசனையேதொழும்
கருத்தினைநினையார்கன்மனவரே. (அ)

தாயினுநல்லசங்கரனுக்கன்பர்
ஆயவுள்ளத்தமுதருந்தப்பெறூர்
பேயர்பேய்முலையுண்டுயிர்போக்கிய
மாயன்மாயத்துப்பட்டமனத்தரே. ‡ (கூ)

அரக்கன்வல்லரட்டாங்கொழித்தாருள்
பெருக்கச்செய்தபிரான்பெருந்தன்மையை
அருத்திசெய்தறியப்பெறுகின்றிலர்
கருத்திலாக்கயவக்கணத்தோர்களே. ¶ (க0)

திருச்சிற்றம்பலம்.

க்ஷேத்திரக்கோவைத் § திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

தில்லைச்சிற்றம்பலமுஞ்செம்பொன்பள்ளி
தேவன்குடிசிராப்பள்ளிதெங்கூர்
கொல்லிக்குளிரறைப்பள்ளிகோவல்
வீரட்டங்கோகரணங்கோடிகாவும்
முல்லைப்புறவமுருகன்பூண்டி
முழையூர் ० பழையாறைசத்திமுற்றம்
கல்லிற்றிகழ்சீரார்காளத்தியுங்
கயிலாயநாதனையேகாணலாமே. (க)

ஆரூர்மூலட்டானமானைக்காவு
மாக்கூரிற்றூன்றோன்றிமாடமாவூர்
பேரூர்பிரமபுரம்பேராவூரும்
பெருந்துறைகாம்பீலிபிடவூர்பேணும்
கூரார்குறுக்கைவீரட்டானமுங்
கோட்டூர்குடமூக்குக்கோழம்பமும்
காரார்கழுக்குன்றுங்கானப்பேருங்
கயிலாயநாதனையேகாணலாமே. (உ)

* யீச—னுருவருக் என்றும் பாடம். † இருக்குனன்மறை என்றும் பாடம். ‡ மாயன் மாயத்துப்பட்டமனத்தர் — புத்தர். ¶ கருத்திலாக்கயவக்கணத்தோர்கள்—சமணர். § பல பிரதிகளிற் சேத்திரக்கோவை என்று காணப்படுகின்றது. ० முளையூர் என்றும் பாடம்.

Koviloor Digital Library

இடைமருதீங்கோயிராமேச்சுர
மின்னம்பரேரிடவையேமப்பேறூர்
சடைமுடிசாலைக்குடிதக்களூர்
தலையாலங்காடுதலைச்சங்காடு
கொடுமுடிகுற்றாலங்கொள்ளம்பூதூர்
கோத்திட்டைகோட்டாறுகோட்டுக்காடு
கடைமுடிகானூர்கடம்பந்துறை
கயிலாயநாதனையேகாணலாமே. (௩)

எச்சிலிளமரேமகல்லூ
ரிலம்பையங்கோட்டூரிறையான்சேரி
அச்சிறுபாக்கமளப்பூரம்ப
ராவடுதண்டுறைபழுந்தூராறை
கச்சினங்கற்குடிகச்சூராலக்
கோயில்காவிரங்காட்டுப்பள்ளி
கச்சிப்பலதளியுமேகம்பத்துங்
கயிலாயநாதனையேகாணலாமே. (௪)

கொடுங்கோளூராஞ்சைக்களஞ்செங்குன்றூர்
கொங்கணங்குன்றியூர்குரக்குக்காவும்
நெடுங்களநன்னிலநெல்லிக்காவு
நின்றியூர்நீடூர்நியமநல்லூர்
இடும்பாவனமெழுமூரேழூர்தோழூ
செறும்பியூரோருமேமகூடம்
கடம்பையிளங்கோயிறன்னிலுள்ளூங்
கயிலாயநாதனையேகாணலாமே. (௫)

மண்ணிப்படிக்கரைவாள்கொளிபுத்தூர்
வக்கரைமந்தாரம்வாரணாசி
வெண்ணிவிளத்தொட்டிவேள்விக்குடி
விளமர்விராடபுரம்வேட்களத்தும்
பெண்ணையருட்டுறைதண்பெண்ணாகடம்
பிரம்பில்பெரும்புலியூர்பெருவேளூரும்
கண்ணைகளர்க்காறைகழிப்பாலையுங்
கயிலாயநாதனையேகாணலாமே. (௬)

விழிமிழலைவெண்காடுவேங்கூர் *
வேதிகுடிவிசயமங்கைவியலூர்
ஆழிபகத்தியான்பள்ளியண்ணா
மலையாலங்காடுமரதைப்பெரும்
பாழிபழனம்பனந்தாள்பாதாளம்
பராய்த்துறைபைஞ்ஞீலிபனங்காட்டூர்தண்
காழிகடனாகைக்காரோணத்துங்
கயிலாயநாதனையேகாணலாமே. (௭)

* வெங்கூர் என்றும் பாடம்.

Koviloor Digital Library

உஞ்சேனைமாகாளமூறலோத்து
ருருத்திரகோடிமறைக்காட்டுள்ளும்
மஞ்சார்பொதியின்மலைதஞ்சைவழுவூர்
வீரட்டமாதானங்கேதாரத்தும்
வெஞ்சமாக்கூடன்மீயச்சூர்வைகா
வேதீச்சுரம்* விவீசுரம்வெற்றியூரும்
கஞ்சனூர்கஞ்சாறுபஞ்சாக்கையுங்
கயிலாயநாதனையேகாணலாமே. (அ)

திண்டீச்சரஞ்சேய்ஞலூர்செம்பொன்பள்ளி
தேவூர்சிரபுரஞ்சிற்றேமஞ்சேறை
கொண்டீச்சரங்கூந்தலூர்கூழையூர்கூடல்
குருகாவூர்வெள்ளடைகுமரிகொங்கு
அண்டர்தொழுமதிகைவீரட்டான
மையாறசோகந்தியாமாத்தூரும்
கண்டியூர்வீரட்டங்கருகாவூருங்
கயிலாயநாதனையேகாணலாமே. (கூ)

நறையூரிற்சித்தீச்சரநள்ளாறு
நாரையூர்நாகேச்சரநல்லூர்நல்ல
துறையூர்சோற்றுத்துறைசூலமங்கை
தோணிபுரந்துருத்திசோமீச்சரம்
உறையூர்கடலொற்றியூரூற்றத்து
ரோமாம்புலியூரோரேடகத்தும்
கறையூர்கருப்பறியல்கன்றாப்பூருங்
கயிலாயநாதனையேகாணலாமே. (க0)

புலிவலம்புத்தூர்புகலூர்புன்கூர்
புறம்பயம்பூவணம்பொய்கைநல்லூர்
வலிவலமாற்பேறுவாய்மூர்வைகல்
வலஞ்சுழிவாஞ்சியமருகல்வன்னி
நிலமலிநெய்த்தானத்தோடெத்தானத்து
நிலவுபெருங்கோயில்பலகண்டாற்றொண்டீர்
கலிவலிமிக்கோனைக்கால்விரலாற்செற்ற
கயிலாயநாதனையேகாணலாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

அடைவு திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

பொருப்பள்ளிவரைவில்லாப்புரமூன்றெய்து
புலந்தழியச்சலந்தரனைப்பிளந்தான்பொற்சக்
கரப்பள்ளி திருக்காட்டுப்பள்ளிகள்ளார்
கமழ்கொல்லியறைப்பள்ளிகலவஞ்சாரற்

* வேதீசுரம் என்றும் பாடம்.

Koviloor Digital Library

சிரப்பள்ளிசிவப்பள்ளிசெம்பொன்பள்ளி
செழுநனிபள்ளிதவப்பள்ளிசீரார்
பரப்பள்ளியென்றென்றுபகர்வோரெல்லாம்
பரலோகத்தினிதாகப்பாலிப்பாரே.* (௧)

காவிரியின்கரைக்கண்டிவீரட்டானங்
கடவூர்வீரட்டானங்காமருசீரதிகை
மேவியவீரட்டானம்வழுவைவீரட்டம்†
வியன்பறியல்வீரட்டம்விடையூர்திக்கிடமாம்
கோவனகர்வீரட்டங்குறுக்கைவீரட்டங்
கோத்திட்டைகுடி‡வீரட்டானமிவைகூறி
நாவினவின்றுரைப்பார்க்குநணுகச்சென்று
நமன்றமருஞ்சிவன்றமரென்றகல்வர்நன்கே. (௨)

நற்கொடிமேல்விடையுயர்த்தநம்பன்செம்பங்
குடிநல்லக்குடிநளிநாட்டியத்தான்குடி
கற்குடிதென்களக்குடிசெங்காட்டங்குடி
கருந்திட்டைக்குடிகடையக்குடிகாணுங்கால்
விற்குடிவேள்விக்குடிநல்வேட்டக்குடி
வேதிகுடிமாணிகுடிவிடைவாய்க்குடி
புற்குடிமாகுடிதேவன்குடிநிலக்குடி
புதுக்குடியும்போற்றவிடர்போகுமன்றே. (௩)

பிறையூருஞ்சடைமுடியெம்பெருமானூர்
பெரும்பற்றப்புலியூரும்பேராவூரும்
நறையூருநல்லூருநல்லாற்றூரு
நாலூருஞ்சேற்றூருநாரையூரும்
உறையூருமோத்தூருமூற்றத்தூரு
மளப்பூரோமாம்புலியூரொற்றியூரும்
துறையூருந்துவையூருந்தோழூர்தானுந்
துடையூருந்தொழவிடர்கடொடராவன்றே. (௪)

பெருக்காறுசடைக்கணிந்தபெருமான்சேரும்
பெருங்கோயிலெழுபதினோடெட்டுமற்றும்
கரக்கோயில்கடிபொழில்சூழ்ஞாழற்கோயில்
கருப்பறியற்பொருப்பனையகொகுடிக்கோயில்
இருக்கோதிமறைபவர்கள்வழிபட்டேத்து
மிளங்கோயின்மணிக்கோயிலாலக்கோயில்
திருக்கோயில்சிவனுறையுங்கோயில்சூழ்ந்து
தாழ்ந்திறைஞ்சத்தீவினைகடீருமன்றே. (௫)

* பாரிப்பாரே என்றும் பாடம். † டானமழகைவீரட்டம் என்றும் பாடம். ‡ திட்டைக்குடி என்றும் பாடம்.

Koviloor Digital Library

மலையார்தம்மகளோடுமாதேவன்சேரு
மறைக்காடுவண்பொழில்சூழ்தலைச்சங்காடு
தலையாலங்காடுதடங்கடல்சூழந்தண்
சாய்க்காடுதள்ளுபுனற்கொள்ளிக்காடு
பலர்பாடும்பழையனூராலங்காடு
பனங்காடுபாவையர்கள்பாவநீங்க
விலையாடும் * வளைதிளைக்கக்குடையும்பொய்கை
வெண்காடுமடையவினைவேறுமன்றே. (சு)

கடுவாயர்தமைநீக்கியென்னையாட்கொள்
கண்ணுதலோனண்ணுமிடமண்ணல்வாயில்
நெடுவாயினிறைவயல்சூழ்நெய்தல்வாயி
னிகழ்முல்லைவாயிலொடுஞாழல்வாயில்
மடுவார்தென்மதுரைநகராலவாயின்
மறிகடல்சூழ்புனவாயின்மாடநீடு
குடவாயில்குணவாயிலானவெல்லாம்
புகுவாரைக்கொடுவினைகள்கூடாவன்றே. (எ)

நாடகமாடிடநந்திகேச்சுரமாகாளேச்
சுரநாகேச்சுரநாகளேச்சுரநன்கான
கோடீச்சுரங்கொண்டீச்சுரந்திண்டீச்சுரங்
குக்குடேச்சுரமக்கீச்சுரங்கூறுங்கால்
ஆடகேச்சுரமகத்தீச்சுரமயனீச்சுர †
மத்தீச்சுரஞ்சித்தீச்சுரமந்தண்கானல்
ஈடுதிரையிராமேச்சுரமென்றென்றேத்தி
யிறைவனுறைசுரம்பலவுமியம்புவோமே. ‡ (அ)

கந்தமாதனங்கயிலைமலைகேதாரங்
காளத்திகழுக்குன்றங்கண்ணாரண்ணு
மந்தமாம்பொழிற்சாரல்வடபர்ப்பத
மகேந்திரமாமலைநீலமேமகூடம்
விந்தமாமலைவேதஞ்சையமிக்க
வியன்பொதியின்மலைமேருவுதயமத்தம்
இந்துசேகரனுறையுமலைகண்மற்று
மேத்துவோமிடர்கெடநின்றேத்துவோமே. (கூ)

நள்ளாறும்பழையாறுங்கோட்டாற்றோடு
நலந்திகழுநாலாறுந்திருவையாறும்
தெள்ளாறும்வளைகுளமுந்தளிக்குளமுநல்
லிடைக்குளமுந்திருக்குளத்தோடஞ்சைக்களம்

* விளையாடும் என்றும் பாடம். † மயனிச்சரமு என்றும் பாடம். ‡ பலவுமேத்துவோமே என்றும் பாடம்.

Koviloor Digital Library

விள்ளாதநெடுங்களம்வேட்களநெல்லிக்கா
கோலக்காவானைக்காவியன்கோடிகா
கள்ளார்ந்தகொன்றையானின்றவாறுங்
குளங்களங்காவெனவனைத்துங்கூறுவோமே. (௧0)

கயிலாயமலையெடுத்தான்கரங்களோடு
சிரங்களுரநெரியக்கால்விரலாற்செற்றோன்
பயில்வாயபராய்த்துறைதென்பாலைத்துறை
பண்டெழுவர்தவத்துறைவெண்டுறைபைம்பொழிற்
குயிலாலந்துறைசோற்றுத்துறைபூந்துறை
பெருந்துறையுங்குரங்காடுதுறையினோடு
மயிலாடுதுறைகடம்பந்துறையாவடு
துறைமற்றுந்துறையனைத்தும்வணங்குவோமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

பலவகைத் திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

நேர்ந்தொருத்திபொருபாகத்தடங்கக்கண்டு
நிலைதளரவாயிரமாமுகத்தினோடு
பாய்ந்தொருத்திபடர்சடைமேற்பயிலக்கண்டு
படவரவும்பனிமதியும்வைத்தசெல்வர்
தாந்திருத்தித்தம்மனத்தையொருக்காற்றொண்டர் *
தனித்தொருதண்டூன்றிமெய்தளராமுன்னம்
பூந்துருத்திபூந்துருத்தியென்பீராகிற்
பொல்லாப்புலாற்றுருத்திபோக்கலாமே. (௧)

ஐத்தானத்தகமிடறுசுற்றியாங்கே
யகத்தடைந்தாலியாதொன்றுமிடுவாரில்லை
மைத்தானக்கண்மடவார்தங்களோடு
மாயமனைவாழ்க்கைமகிழ்ந்துவாழ்வீர்
பைத்தானத்தொண்மதியும்பாம்புநீரும்
படர்சடைமேல்வைத்துகந்தபண்பன்மேய
நெய்த்தானநெய்த்தானமென்பீராகி
னிலாவாப்புலாற்றானநீக்கலாமே. (௨)

பொய்யாறுவாறேபுனைந்துபேசிப்
புலர்ந்தெழுந்தகாலைப்பொருளேதேடிக்
கையாறுக்காணமுடையோமென்று
களித்தமனத்தாய்க்கருதிவாழ்வீர்

* பொருக்காத்தொண்டர் என்றும் பாடம்.

Koviloor Digital Library

நெய்யாறுவாடியநீலகண்டர்
நிமிர்புன்சடைநெற்றிக்கண்ணர்மேய
ஐயாறேயையாறேயென்பீராகி
லல்லறீர்ந்தமருலகமாளலாமே. (ங)

இழவொன்றுதாமொருவர்க்கிட்டொன்றீயா
ரீன்றெடுத்ததாய்தந்தைபெண்டீர்மக்கள்
கழனங்கோவையாதல்* கண்டுந்தேறார்
களித்தமனத்தராய்க்கருதிவாழ்வீர்
அழனம்மைநீக்குவிக்குமரையனுக்கு
மமருலகமாள்விக்குமம்மான்மேய
பழனம்பழனமேயென்பீராகிற்
பயின்றெழுந்தபழவினைநோய்பாற்றலாமே. (ச)

ஊற்றுத்துறையொன்பதுண்ணின்றோரீ
ரொக்கவடைக்கும்போதுணரமாட்டீர்
மாற்றுத்துறைவழிகொண்டோடாமுன்ன
மாயமனைவாழ்க்கைமகிழ்ந்துவாழ்வீர்
வேற்றுத்தொழில்பூண்டார்புரங்கண்மூன்றும்
வெவ்வழல்வாய்வீழ்விக்கும்வேந்தன்மேய
சோற்றுத்துறைதுறையென்பீராகிற்
றுயர்நீங்கித்தூநெறிக்கட்சேரலாமே. (ரு)

கலஞ்சுழிக்குங்கருங்கடல்சூழ்வையந்தன்னிற்
கள்ளக்கடலிலழுந்திவாளா
நலஞ்சுழியாவெழுநெஞ்சேயின்பம்வேண்டி
னம்பன்றனடியிணைக்கேநவில்வாயாகில்
அலஞ்சுழிக்குமன்னுகந்தன்னுன்மேய
வருமறையோடாறங்கமானார்கோயில்
வலஞ்சுழியேவலஞ்சுழியேயென்பீராகில்
வல்வினைகடீர்ந்துவானாளலாமே. (சு)

தண்டிகுண்டோதரன்பிங்கிருடி
சார்ந்தபுகழ்நந்திசங்குகன்னன்
பண்டையுலகம்படைத்தான்றானும்
பாரையளந்தான்பல்லாண்டிசைப்பத்
திண்டிவயிற்றுச்சிறுகட்பூதஞ்
சிலபாடச்செங்கண்விடையொன்றூர்வான்
கண்டியூர்கண்டியூரென்பீராகிற்
கடுகநும்வல்வினையைக்கழற்றலாமே. (எ)

* கோளவையென்றும் பாடம்.

Koviloor Digital Library

விடமூக்கப்பாம்பேபோற்சிந்திநெஞ்சே *
வெள்ளேற்றான்றன்றமரைக்கண்டபோது
வடமூக்கமாமுனிவர்போலச்சென்று
மாதவத்தார்மனத்துளார்மழுவாட்செல்வர்
படமூக்கப்பாம்பணையிற்பள்ளியானும்
பங்கயத்துமேலயனும்பாவிக்கானுக்
குடமூக்கேகுடமூக்கேயென்பீராகிற்
கொடுவினைகடீர்ந்தானைக்குறுகலாமே. (அ)

தன்காட்டச்சந்தனமுந்தவளநீறுந்
தழையுமுங்குங்குறுங்கொன்றைமாலைசூடிக்
கண்காட்டாக்கருவரைபோலனையகாஞ்சிக்
கார்மயிலஞ்சாயலார்கலந்துகாண
எண்காட்டாக்காடங்கிடமாநின்று
வெரிவிசியிரவாடுமிறைவர்மேய
வெண்காடேவெண்காடேயென்பீராகில்
வீடாதவல்வினைநோய்விட்டலாமே. † (கூ)

தந்தையார்தாயாருடன்பிறந்தார்
தாரமார்புத்திரரார்தாந்தாமாரே
வந்தவாறெங்ஙனேபோமாறேதோ
மாயமாமிதற்கேதுமகிழவேண்டாம்
சிந்தையீருமக்கொன்றுசொல்லக்கேண்மின்
திகழ்மதியும்வாளரவுந்திளைக்குஞ்சென்னி
எந்தையார்திருநாமநமச்சிவாய
வென்றெழுவார்க்கிருவிசும்பிலிருக்கலாமே. (கo)

திருச்சிற்றம்பலம்.

நின்ற திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

இருநிலனாய்த்தீயாகிநீருமாகி
யியமானனாயெறியுங்காற்றுமாகி
அருநிலையதிங்களாய்ஞாயிறாகி
யாகாசமாயட்டமூர்த்தியாகிப்
பெருநலமுங்குற்றமும்பெண்ணுமாணும்
பிறருருவுந்தம்முருவுந்தாமேயாகி
நெருநலையாயின்றாகிநாளையாகி
நிமிர்புன்சடையடிகணின்றவாறே. (க)

மண்ணாகிவிண்ணாகிமலையுமாகி
வயிரமுமாய்மாணிக்கந்தானேயாகிக்
கண்ணாகிக்கண்ணுக்கோர்மணியுமாகிக்
கல்லாகிக்கல்லானந்தானேயாகிப்

* சிந்தைநெஞ்சே என்றும் பாடம். † வினையைவிட்டலாமே என்றும் பாடம்.

Koviloor Digital Library

பெண்ணாகிப்பெண்ணுக்கோராணுமாகிப்
பிரளயத்துக்கப்பாலோரண்டமாகி
எண்ணாகியெண்ணுக்கோரெழுத்துமாகி
யெழுஞ்சுடராயெம்மடிகணின்றவாறே. (உ)

கல்லாகிக்களறாகிக்கானுமாகிக்
காவிரியாய்க்காலாறாய்க்கழியுமாகிப்
புல்லாகிப்புதலாகிப்பூடுமாகிப்
புரமாகிப்புரமூன்றுங்கெடுத்தானாகிச்
சொல்லாகிச்சொல்லுக்கோர்பொருளுமாகிச்
சுலாவாகிச்சுலாவுக்கோர்சூழலாகி
நெல்லாகிநிலனாகிநீருமாகி
நெடுஞ்சுடராய்நிமிர்ந்தடிகணின்றவாறே. (௩)

காற்றாகிக்கார்முகிலாய்க்காலமூன்றாய்க்
கனவாகிநனவாகிக்கங்குலாகிக்
கூற்றாகிக்கூற்றுதைத்தகொல்களிறுமாகிக்
குரைகடலாய்க்குரைகடற்கோர்கோமானுமாய்
நீற்றானாய்நீறேற்றமேனியாகி
நீள்விசும்பாய்நீள்விசும்பினுச்சியாகி
யேற்றானாயேறூர்ந்தசெல்வனாகி
யெழுஞ்சுடராயெம்மடிகணின்றவாறே. (௪)

தீயாகிநீராகித்திண்மையாகித்
திசையாகியத்திசைக்கோர்தெய்வமாகித்
தாயாகித்தந்தையாய்ச்சார்வுமாகித்
தாரகையுஞாயிறுந்தண்மதியுமாகிக்
காயாகிப்பழமாகிப்பழத்தினின்ற
விரதங்களுகர்வானுந்தானேயாகி
நீயாகிநானாகிநேர்மையாகி
நெடுஞ்சுடராய்நிமிர்ந்தடிகணின்றவாறே. (௫)

அங்கமாயாதியாய்வேதமாகி
யருமறையோடைம்பூதந்தானேயாகிப்
பங்கமாய்ப்பலசொல்லுந்தானேயாகிப்
பான்மதியோடாதியாய்ப்பான்மையாகிக்
கங்கையாய்க்காவிரியாய்க்கன்னியாகிக்
கடலாகிமலையாகிக்கழியுமாகி
எங்குமாயேறூர்ந்தசெல்வனாகி
யெழுஞ்சுடராயெம்மடிகணின்றவாறே. (௬)

மாதாபிதாவாகிமக்களாகி
மறிகடலுமால்விசும்புந்தானேயாகிக்
கோதாவிரியாய்க்குமரியாகிக்
கொல்புலித்தோலாடைக்குழகனாகிப்

Koviloor Digital Library

போதாயமலர்கொண்டுபோற்றிநின்று
புனைவார்பிறப்பறுக்கும்புனிதனாகி
யாதானுமெனநினைந்தார்க்கெளிதேயாகி *
யழல்வண்ணவண்ணர்தாநின்றவாறே. (௭)

ஆவாகியாவினிலைந்துமாகி
யறிவாகியழலாகியவியுமாகி
நாவாகிநாவுக்கோருரையுமாகி
நாதனாய்வேதத்தினுள்ளோனாகிப்
பூவாகிப்பூவுக்கோர்நாற்றமாகிப்
புக்குளால்வாசமாய்நின்றானாகித்
தேவாகித்தேவர்முதலுமாகிச்
செழுஞ்சுடராய்ச்சென்றடிகணின்றவாறே. (௮)

நீராகிநீளகலந்தானேயாகி
நிழலாகிநீள்விசும்பினுச்சியாகிப்
பேராகிப்பேருக்கோர்பெருமையாகிப்
பெருமதில்கண்மூன்றினையுமெய்தானாகி
ஆரேனுந்தன்னடைந்தார்தம்மையெல்லா
மாட்கொள்ளவல்லவெம்மீசனார்தாம்
பாராகிப்பண்ணாகிப்பாடலாகிப்
பரஞ்சுடராய்ச்சென்றடிகணின்றவாறே. (௯)

மாலாகிநான்முகனாய்மாபூதமாய்
மருக்கமாயருக்கமாய் † மகிழ்வுமாகிப்
பாலாகியெண்டிசைக்குமெல்லையாகிப்
பரப்பாகிப்பரலோகந்தானேயாகிப்
பூலோகபுவலோகசுவலோகமாய்ப்
பூதங்களாய்ப்புராணன்றானேயாகி
ஏலாதனவெல்லாமேல்விப்பானா
யெழுஞ்சுடராயெம்மடிகணின்றவாறே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

தனித் திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

அப்பனீயம்மைநீயையனுநீ
யன்புடையமாமனுமாமியுநீ
ஒப்புடையமாதருமொண்பொருளுநீ
யொருகுலமுஞ்சுற்றமுமோரூருநீ

* யாதானுமெனநினைந்தார்க்கஃதேயாகி என்றும், யாதானுமெனநினைந்தார்க்கதுவேயாகி என்றும், யாதானுமெனநினைந்தார்க்கமுதேயாகி என்றும் பாடம். † மருக்கம்-மனம். அருக்கம் - உணவு.

Koviloor Digital Library

துப்பனவுமுய்ப்பனவுந்தோற்றுவாய்நீ
துணையாயென்னெஞ்சந்துறப்பிப்பாய்நீ
இப்பொன்னீயிம்மணிநீயிம்முத்துநீ
யிறைவனீயேறூர்ந்தசெல்வனீயே. (க)

வெம்பவருகிற்பதன்றுகூற்றநம்மேல்*
வெய்யவினைப்பகையும்பையவுறையும்
எம்பரிவுதீர்ந்தோமிடுக்கணில்லோ
மெங்கெழிலென்ஞாயிறெளியோமல்லோம்
அம்பவளச்செஞ்சடைமேலாறுசூடி
யனலாடியானைந்துமாட்டுகந்த
செம்பவளவண்ணர்செங்குன்றவண்ணர்
செவ்வானவண்ணரென்சிந்தையாரே. (உ)

ஆட்டுவித்தாலாரொருவராடாதாரே
யடங்குவித்தாலா † ரொருவரடங்காதாரே
ஓட்டுவித்தாலாரொருவரோடாதாரே
யுருகுவித்தாலாரொருவருருகாதாரே
பாட்டுவித்தாலாரொருவர்பாடாதாரே
பணிவித்தாலாரொருவர்பணியாதாரே
காட்டுவித்தாலாரொருவர்காணாதாரே
காண்பாரார்கண்ணுதலாய்காட்டாக்காலே. (ங)

நற்பதத்தார்நற்பதமேஞானமூர்த்தீ
நலஞ்சுடரேநால்வேதத்தப்பானின்ற
சொற்பதத்தார்சொற்பதமுங்கடந்துநின்ற
சொலற்கரியசூழலாயிதுவுன்றன்மை
நிற்பதொத்துநிலையிலாநெஞ்சந்தன்னு
ணிலாவாதபுலாலுடம்பேபுகுந்துநின்ற
கற்பகமேயானுன்னைவிடுவேனல்லேன்
கனகமாமணிநிறத்தெங்கடவுளானே. (ச)

திருக்கோயிலில்லாததிருவிலூருந்
திருவெண்ணீறணியாததிருவிலூரும்
பருக்கோடிப்பத்திமையாற்பாடாவூரும்
பாங்கினொடுபலதளிக ‡ ளில்லாவூரும்
விருப்போடுவெண்சங்கமூதாவூரும்
விதானமும்வெண்கொடியுமில்லாவூரும்
அருப்போடுமலர்பறித்திட்டுண்ணாவூரு
மவையெல்லாமூரல்லவடவிகாடே. (ரு)

* கூற்றம்வெய்ய என்றும் பாடம்; இப்பாடத்திற்கு வெய்ய கூற்றமென மாறுக.
† யடக்குவித்தால் என்றும் பாடம். ‡ பாங்கினுற்பலதளிக என்றும் பாடம்

Koviloor Digital Library

திருநாமமஞ்செழுத்துஞ்செப்பாராகிற்
றிவனார்திறமொருகாற்பேசாராகில்
ஒருகாலுந்திருக்கோயில்சூழாராகி
லுண்பதன்முன்மலர்பறித்திட்டுண்ணாராகில்
அருநோய்கள்கெடவெண்ணீறணியாராகி
லளியற்றார்பிறந்தவாறேதோவென்னில்
பெருநோய்கண்மிகநலியப்பெயர்த்துஞ்செத்துப்
பிறப்பதற்கேதொழிலாகியிறக்கின்றாரே. (௬)

நின்னாவார்பிறரின்றி * நீயேயானாய்
நினைப்பார்கண்மனத்துக் † கோர்வித்துமானாய்
மன்னானாய்மன்னவர்க்கோரமுதமானாய்
மறைநான்குமானாயாறங்கமானாய்
பொன்னானாய்மணியானாய்போகமானாய்
பூமிமேற்புகழ்தக்கபொருளேயுன்னை
என்னானாயென்னானாயென்னினல்லா
லேழையேனென்சொல்லியேத்துகேனே. (௭)

அத்தாவுன் ‡ னடியேனையன்பாலார்த்தா
யருளோக்கிற்றீர்த்தநீராட்டிக்கொண்டாய்
எத்தனையுமரியைநீ ¶ யெளியையானா
யெனையாண்டுகொண்டிரங்கியேன்றுகொண்டாய்
பித்தனேன்பேதையேன்பேயனேன்
பிழைத்தனகளெத்தனையும்பொறுத்தாயன்றே
இத்தனையுமெம்பரமோவையவையோ
வெம்பெருமான்றிருக்கருணையிருந்தவாறே. (௮)

குலம்பொல்லேன்குணம்பொல்லேன்குறியும்பொல்லேன்
குற்றமேபெரிதுடையேன்கோலமாய
நலம்பொல்லேனான்பொல்லேன்ஞானியல்லே
னல்லா § ரோடிசைந்திலேனடுவேநின்ற
விலங்கல்லேன்விலங்கல்லாதொழிந்தேனல்லேன்
வெறுப்பனவுமிகப்பெரிதும்பேசவல்லேன்
இலம்பொல்லேனிரப்பதேயீயமாட்டே 0
னென்செய்வான்றோன்றினேனேழையேனே. (௯)

சங்கநிதிபதுமநிதியிரண்டுந்தந்து
தரணியொடுவானாளத்தருவரேனும்
மங்குவாரவர்செல்வம** திப்போமல்லோ
மாதேவர்க்கேகாந்தரல்லாராகில்

* பிறாந்தி என்றும் பாடம். † நினைப்பார்தம்மனத்துக் என்றும் பாடம். ‡ அத்தா நுன் என்றும் பாடம். ¶ யரியநீ என்றும் பாடம். § நல்லார் - கேட்டுச்சிந்தித்துத்தெளிந்த மெய்யன்பர். 0 னிரப்பவர்க்கொன்றீயமாட்டேன்என்றும் பாடம். ** மங்கினார்செல்வம் என்றும் பாடம்.

Koviloor Digital Library

அங்கமெலாங்குறைந்தழுகுதொழுநோயரா
யாவுரித்துத்தின்றுழலும்புலையரேனும்
கங்கைவார்சடைக்கரந்தார்க்கன்பராகி
லவர்கண்டீர்நாம்வணங்குங்கடவுளாரே. (க0)

திருச்சிற்றம்பலம்.

தனித் திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

ஆமயந்* தீர்த்தடியேனையாளாக்கொண்டா
ரதிகைவீரட்டானமாட்சிகொண்டார்
தாமரையோன்சிரமரிந்துகையிற்கொண்டார்
தலையதனிற்பலிகொண்டார்நிறைவாந்தன்மை
வாமனனார்மாகாயத்துதிரங்கொண்டார்
மானிடங்கொண்டார்வலங்கைமழுவாட்கொண்டார்
காமனையுமுடல்கொண்டார்கண்ணாலேநோக்கிக்
கண்ணப்பர்பணியுங்கொள் † கபாலியாரே. (க)

முப்புரிநூல்வரைமார்பின்முயங்கக்கொண்டார்
முதுகேழன்முளைமருப்புங்கொண்டார்பூணாச்
செப்புருவமுலைமலையாள்பாகங்கொண்டார்
செம்மேனிவெண்ணீறுதிகழக்கொண்டார்
துப்புரவார்சுரிசங்கின்றோடுகொண்டார்
சுடர்முடிசூழ்ந்தடியமரர்தொழவுங்கொண்டார்
அப்பலிகொண்டாயிழையாரன்புங்கொண்டா
ரடியேனையாளுடையவடிகளாரே. (உ)

முடிகொண்டார்முளையிளவெண்டிங்களோடு
மூசுமிளநாகமுடனாகக்கொண்டார்
அடிகொண்டார்சிலம்பலம்புகழலுமார்ப்ப
வடங்காதமுயலகனையடிக்கீழ்க்கொண்டார்
வடிகொண்டார்ந்திலங்குமழுவலங்கைக்கொண்டார்
மாலையிடப்பாகத்தேமருவக்கொண்டார்
துடிகொண்டார்கங்காளந்தோண்மேற்கொண்டார்
சூலைதீர்த்தடியேனையாட்கொண்டாரே. (ந)

பொக்கணமும்புலித்தோலும்புயத்திற்கொண்டார்
பூதப்படைகள்புடைசூழக்கொண்டார்
அக்கினொடுபடவரவமரைமேற்கொண்டா
ரனைத்துலகும்படைத்தவையுமடங்கக்கொண்டார்

* ஆமயம் - ஆன்மசொரூபம்; ஆன்மாவைப்பந்தித்த ஆணவமலமுமாம்; சூலைநோ யெனினு மொக்கும். † பலியுங்கொள் என்றும் பாடம்.

கொக்கிறகுங்கூவிளமுங்கொன்றைகொண்டார்
கொடியானைபடலாழிக்கிரையாக்கொண்டார்
செக்கர்நிறத்திருமேனிதிகழக்கொண்டார்
செடியேனையாட்கொண்டசிவனார்தாமே. (௪)

அந்தகனையயிற்சூலத்தழுத்திக்கொண்டா
ரருமறையைத்தேர்க்குதிரையாக்கிக்கொண்டார்
சுந்தரனைத்துணைக்கவரிவீசக்கொண்டார்
சுடுகாடுநடமாடுமிடமாக்கொண்டார்
மந்தரநற்பொருசிலையாவளைத்துக்கொண்டார்
மாகாளன்வாசல்காப்பாகக்கொண்டார்
தந்திரமந்திரத்தராயருளிக்கொண்டார்*
சமண்டீர்த்தென்றன்னையாட்கொண்டார்தாமே. (௫)

பாரிடங்கள்பலகருவிபயிலக்கொண்டார்
பவளநிறங்கொண்டார்பளிங்குங்கொண்டார்
நீரடங்குசடைமுடிமேனிலாவுங்கொண்டார்
நீலநிறங்கோலநிறைமிடற்றிற்கொண்டார்
வாரடங்குவனமுலையார்மையலாகி
வந்திட்டபலிகொண்டார்வளையுங்கொண்டார்
ஊரடங்கவொற்றிநகர்பற்றிக்கொண்டா
ருடலுறுநோய்தீர்த்தென்னையாட்கொண்டாரே. (௬)

அணிதில்லையம்பலமாடரங்காக்கொண்டா
ராலாலவருநஞ்சமமுதாக்கொண்டார்
கணிவளர்தார்ப்பொன்னிதழிக்கமழ்தார்கொண்டார்
காதலார் † கோடிகலந்திருக்கைகொண்டார்
மணிபணத்தவரவந்தோள்வளையாக்கொண்டார்
மால்விடைமேனெடுவீதிபோதக்கொண்டார்
துணிபுலித்தோலினையாடையுடையாக்கொண்டார்
சூலங்கைக்கொண்டார்தொண்டெனைக்கொண்டாரே. (௭)

படமூக்கப்பாம்பணையானோடுவானோன்
பங்கமெனென்றங்கவரைப்படைத்துக்கொண்டார்
குடமூக்கிற்கீழ்க்கோட்டங்கோயில்கொண்டார்
கூற்றுதைத்தோர்வேதியனையுய்யக்கொண்டார்
நெடுமூக்கிற்கரியினுரிமூடிக்கொண்டார்
நினையாதபாவிகளைநீங்கக்கொண்டார்
இடமாக்கியிடைமருதுங்கொண்டார்பண்டே
யென்னையிந்நாளாட்கொண்டவிறைவர்தாமே. (௮)

* தந்திரமந்திரத்தாலருளிக்கொண்டார் என்றும் பாடம். † காதலாற் என்றும் பாடம்.

Koviloor Digital Library

எச்சனிணைத்தலை * கொண்டார்பகன்கண்கொண்டா
ரிரவிகளிலொருவன்பல்லிறுத்துக்கொண்டார்
மெச்சன்வியாத்திரன் † றலையும்வேறுக்கொண்டார்
விறலங்கிகரங்கொண்டார்வேள்விகாத்து
உச்சநமன்றுளறுத்தார்சந்திரனையுதைத்தா
ருணர்விலாத்தக்கன்றன்வேள்வியெல்லாம்
அச்சமெழவழித்துக்கொண்டருளுஞ்செய்தா
ரடியேனையாட்கொண்டவமலர்தாமே. (கூ)

சடையொன்றிற்கங்கையையுந்தரித்துக்கொண்டார்
சாமத்தினிசைவீணைதடவிக்கொண்டார்
உடையொன்றிற்புள்ளியுழைத்தோலுங்கொண்டா
ருள்குவாருள்ளத்தையொருக்கிக்கொண்டார்
கடைமுன்றிற்பலிகொண்டார்கனலுங்கொண்டார்
காபாலவேடங்கருதிக்கொண்டார்
விடைவென்றிக்கொடியதனின்மேவக்கொண்டார்
வெந்துயரந்தீர்த்தென்னையாட்கொண்டாரே. (க0)

குராமலரோடராமதியஞ்சடைமேற்கொண்டார்
குடமுழநந்தீசனைவாசக ‡ னுக்கொண்டார்
சிராமலைதஞ்சேர்விடமாத்திருந்தக்கொண்டார்
தென்றனெடுந்தேரோனைப்பொன்றக்கொண்டார்
பராபரனென்பதுதமதுபேராக்கொண்டார்
பருப்பதங்கைக்கொண்டார்பயங்கள்பண்ணி
இராவணனென்றவனைப்பேரியம்பக்கொண்டா
ரிடருறுநோய்தீர்த்தென்னையாட்கொண்டாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

வினாவிடைத் திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

அண்டங்கடந்தசுவடுமுண்டோ
வனலங்கையேந்தியவாடலுண்டோ
பண்டையெழுவர்படியுமுண்டோ
பாரிடங்கள்பலசூழப்போந்ததுண்டோ
கண்டமிறையேகறுத்ததுண்டோ
கண்ணின்மேற்கண்ணொன்றுகண்டதுண்டோ ¶
தொண்டர்கள்சூழத்தொடர்ச்சியுண்டோ
சொல்லீரெம்பிரானைக்கண்டவாறே. (க)

* எச்சனிணைத்தலை என்றும் பாடம். † விதாத்திரன் என்றும், வித்தியாத்திரன் என்றும் பாடம். ‡ வாசகன் - வீட்டையடைந்தவன்; வாசம் - வீடு. கெம் - அடைதல்; இங்கே திருக்கோயிலை யடைந்து வாயிற்காவலாளராக இருப்பவர் என்பது கருத்து. ¶ கண்ணொன்டுடையதுண்டோ என்றும் பாடம்.

Koviloor Digital Library

எரிகின்றவிளஞாயிறன்னமேனி
யிலங்கிழையோர்பாலுண்டோவெள்ளேறுண்டோ
விரிகின்றபொறியரவத்தழலுமுண்டோ
வேழத்தினுரியுண்டோவெண்ணூலுண்டோ
வரிநின்றபொறியரவச்சடையுமுண்டோ
வச்சடைமேலிளமதியம்வைத்ததுண்டோ
சொரிகின்றபுனலுண்டோசூலமுண்டோ
சொல்லீரெம்பிரானாரைக்கண்டவாறே. (௨)

நிலாமாலைசெஞ்சடைமேல்வைத்ததுண்டோ
நெற்றிமேற்கண்ணுண்டோநீறுசாந்தோ
புலாலுறுவெள்ளெலும்புபூண்டதுண்டோ
பூதந்தற்சூழ்ந்தனவோபோரேறுண்டோ
கலாமாலைவேற்கண்ணாள்பாகத்துண்டோ *
கார்க்கொன்றைமாலைகலந்ததுண்டோ
சுலாமாலையாடரவந்தான்மேலுண்டோ
சொல்லீரெம்பிரானாரைக்கண்டவாறே. (௩)

பண்ணார்ந்தவீணைபயின்றதுண்டோ
பாரிடங்கள்பலசூழப்போந்ததுண்டோ
உண்ணாவருநஞ்சமுண்டதுண்டோ
வூழித்தீயன்னவொளிதானுண்டோ
கண்ணார்கழல்காலற்செற்றதுண்டோ
காமனையுங்கண்ணழலாற்காய்ந்ததுண்டோ
எண்ணார்திரிபுரங்களெய்ததுண்டோ
வெவ்வகையெம்பிரானாரைக்கண்டவாறே. (௪)

நீறுடையதிருமேனிபாகமுண்டோ
நெற்றிமேலொற்றைக்கண்முற்றுமுண்டோ
கூறுடையகொடுமழுவாள்கையிலுண்டோ
கொல்புலித்தோலுடையுண்டோகொண்டவேடம்
ஆறுடையசடையுண்டோவரவமுண்டோ
வதனருகேபிறையுண்டோவளவிலாத
வேறுடையகொடியுண்டோவிலயமுண்டோ
வெவ்வகையெம்பிரானாரைக்கண்டவாறே. (௫)

பட்டமுந்தோடுமோர்பாகங்கண்டேன்
பார்திகழப்பலிதிரிந்துபோதக்கண்டேன்
கொட்டிநின்றிலயங்களாடக்கண்டேன்
குழைகாதிற்பிறைசென்னியிலங்கக்கண்டேன்
கட்டங்கக்கொடிதிண்டோளாடக்கண்டேன்
கனமழுவாள்வலங்கையிலிலங்கக்கண்டேன்
சிட்டனைத்திருவாலவாயிற்கண்டேன்
றேவனைக்கனவினான்கண்டவாறே. (௬)

* பாகத்தாளே என்றும் பாடம்.

அலைத்தோடுபுனற்கங்கைசடையிற்கண்டே
 னலர்கொன்றைத்தாரணிந்தவாறுகண்டேன்
பலிக்கோடித்திரிவார்கைப்பாம்புகண்டேன்
 பழனம்புகுவாரைப்பகலேகண்டேன்
கலிக்கச்சிமேற்றளியேயிருக்கக்கண்டேன்
 கறைமிடறுங்கண்டேன்கனலுங்கண்டேன்
வலித்துடுத்தமான்றோலரையிற்கண்டேன் *
 மறைவல்லமாதவனைக்கண்டவாறே. (எ)

நீறேறுதிருமேனிநிகழக்கண்டே
 னீள்சடைமேனிறைகங்கையேறக்கண்டேன்
கூறேறுகொடுமழுவாள்கொள்ளக்கண்டேன்
 கொடுகொட்டிகையலகுகையிற்கண்டேன்
ஆறேறுசென்னியணிமதியுங்கண்டே
 னடியார்கட்காரமுதமாகக்கண்டேன்
ஏறேறியிந்நெறியேபோதக்கண்டே
 னிவ்வகையெம்பெருமானைக்கண்டவாறே. (அ)

விரையுண்டவெண்ணீறுதானுமுண்டு
 வெண்டலைகையுண்டொருகைவீணையுண்டு
சுரையுண்டுசூடும்பிறையொன்றுண்டு
 சூலமுந்தண்டுஞ்சுமந்ததுண்டு
அரையுண்டகோவணவாடையுண்டு
 வலிக்கோலும் † தோலுமழகாவுண்டு
இரையுண்டறியாத ‡ பாம்புமுண்டு
 விமையோர்பெருமானிலாததென்னே. (கூ)

மைப்படிந்தகண்ணாளுந்தானுங்கச்சி
 மயானத்தான்வார்சடையானென்னினல்லான்
ஒப்புடையனல்லனொருவனல்ல
 னோரூரனல்லனோருவமனில்லி
அப்படியுமந்நிறமுமவ்வண்ணமு
 மவனருளேகண்ணாகக்காணினல்லால்
இப்படியனிந்நிறத்தனிவ்வண்ணத்த
 னிவனிறைவனென்றெழுதிக்காட்டொணாதே. (க0)

பொன்னொத்தமேனிமேற்பொடியுங்கண்டேன்
 புலித்தோலுடைகண்டேன்புணரத்தன்மேல்
மின்னொத்தநுண்ணிடையாள்பாகங்கண்டேன்
 மிளிர்வதொருபாம்பு ¶ மரைமேற்கண்டேன்

* லரைமேற்கண்டேன் என்றும் பாடம். † வலிர்க்கோலுந் என்றும், வலிற்சோலும் என்றும், வலிற்கோலுந் என்றும், வலிர்க்கோலும் என்றும் பாடம். ‡ இரைகொண்டறியாத என்றும் பாடம். ¶ மிளிர்வதோர்பாம்பு என்றும் பாடம்.

Koviloor Digital Library

அன்னத்தேருர்ந்தவரக்கன்றன்னை
யலறவடர்த்திட்டவடியுங்கண்டேன்
சின்னமலர்க்கொன்றைக்கண்ணிகண்டேன்
சிவனைநான்சிந்தையுட்கண்டவாறே. (கக)

திருச்சிற்றம்பலம்.

மறுமாற்றத் திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

நாமார்க்குங்குடியல்லோநமனையஞ்சோ
நாகத்திலிடர்ப்படோ * நடலையில்லோம்
ஏமாப்போம்பிணியறியோம்பணிவோமல்லோ
மின்பமேயெந்நாளுந்துன்பமில்லை
தாமார்க்குங்குடியல்லாத்தன்மையான
சங்கரனற்சங்கவெண்குழையோர்காதிற்
கோமாற்கேநாமென்றுமீளாவாளாய்க்
கொய்ம்மலர்ச்சேவடியிணையேகுறுகினோமே. (க)

அகலிடமேயிடமாக † வூர்கடோறு
மட்டுண்பாரிட்டுண்பார்விலக்காரையம்
புகலிடமாமம்பலங்கள் பூமிதேவி ‡
யுடன்கிடந்தாற்புரட்டாள்பொய்யன்றுமெய்யே
இகலுடையவிடையுடையானென்றுகொண்டா
னினியேதுங்குறைவிலோமிடர்களர்ந்தோம்
துகிலுடுத்துப்பொன்பூண்டுதிரிவார்சொல்லுஞ்
சொற்கேட்கக்கடவோமோதுரிசற்றோமே. (உ)

வாராண்டகொங்கையர்சேர்மனையிற்சேரோ
மாதேவாமாதேவாவென்றுவாழ்த்தி
நீராண்டபுரோதாயமாடப்பெற்றோ
ந்றணியுங்கோலமேகிகழப்பெற்றோம்
காராண்டமழைபோலக்கண்ணீர்சோரக்
கன்மனமேநன்மனமாய்க்கரையப்பெற்றோம்
பாராண்டுபகடேறித்திரிவார் ¶ சொல்லும்
பணிகேட்கக்கடவோமோபற்றற்றோமே. (௩)

உறவாவாருருத்திரபல்கணத்தினோர்க
ளுடுப்பனகோவணத்தொடுகீளுளவாமன்றே
செறுவாருஞ்செறமாட்டார் § திமைதானு
நன்மையாய்ச்சிறப்பதேபிறப்பிற்செல்லோம்

* நாகத்திலிடப்படோம் என்றும் பாடம். † மேவிடமாக என்றும் பாடம். ‡ பூமதேவி என்றும் பாடம். ¶ பகடேறிவருவார் என்றும் பாடம். § செறவாருஞ்சேரமாட்டார் என்றும் பாடம்.

Koviloor Digital Library

நறவார்பொன் ‥ழிநறுந்தாரோன்சீரார்
நமச்சிவாய்ச்சொல்ல * வல்லோர்நாவால்
சுறவாருங்கொடியானைப்பொடியாக்கண்ட
சுடர்நயனச்சோதியையேதொடர்வுற்றோமே. (௪)

என்றுநாமியாவர்க்குமிடைவோமல்லோ
மிருநிலத்திலெமக்கெதிராவாருமில்லை
சென்றுநாஞ்சிறுதெய்வஞ்சேர்வோமல்லோஞ்
சிவபெருமான்றிருவடியேசேரப்பெற்றோம்
ஒன்றினாற்குறைவுடையோமல்லோமன்றே
யுறுபிணியார்செறலொழிந்திட் † டோடிப்போனார்
பொன்றினார்தலைமாலையணிந்தசென்னிப்
புண்ணியனைநண்ணியபுண்ணியத்துளோமே. (௫)

மூவுருவின்முதலுருவாயிருநான்கான
மூர்த்தியேயென்றுமுப்பத்துமூவர்
தேவர்களுமிக்கோருஞ்சிறந்துவாழ்த்துஞ்
செம்பவளத்திருமேனிச் ‡ சிவனேயென்னும்
நாவுடையார்நமையாளவுடையாரன்றே
நாவலந்தீவகத்தினுக்குநாதரான
காவலரேயேவிவிடுத்தாரேனுங்
கடவமல்லோங்கடுமையொடுகளவற்றோமே. (௬)

நிற்பனவுநடப்பனவுநிலனுநீரு
நெருப்பினொடுகாற்றாகிநெடுவானாகி
அற்பமொடு ¶ பெருமையுமாயருமையாகி
யன்புடையார்க்கெளிமையதாயளக்கலாகாத்
தற்பரமாய்ச்சதாசிவமாய்த்தானுமியானு
மாகின்றதன்மையனைநன்மையோடும்
பொற்புடையபேசக்கடவோம்பேயர் §
பேசுவனபேசுதுமோபிழையற்றோமே. (௭)

ஈசனையெவ்வுலகினுக்குமிறைவன்றன்னை
யிமையவர்தம்பெருமானையெரியாய்மிக்க
தேசனைச்செம்மேனிவெண்ணீற்றானைச்
சிலம்பரையன்பொற்பாவைநலஞ்செய்கின்ற
நேசனைநித்தலுநினையப்பெற்றோ
நின்றுண்பாரெம்மைநினையச்சொன்ன
வாசகமெல்லாமறந்தோமன்றே
வந்தீரார்மன்னவனாவான்றானாரே. (௮)

* நமச்சிவாயஞ்சொல்ல என்றும் பாடம். † செறிவொழிந்திட் என்றும் பாடம். ‡ செம்பவளந்திகழ்மேனிச் என்றும் பாடம். ¶ அற்பனொடு என்றும் பாடம். § கடவோம் பொய்யர் என்றும் பாடம்.

Koviloor Digital Library

சடையுடையான்சங்கக்குழையோர்காதன்
சாம்பலும்பாம்புமணிந்தமேனி
விடையுடையான்வேங்கையதள்மேலாடை
வெள்ளிபோற்புள்ளியுழைமான்றோல்சார்ந்த
உடையுடையானம்மையுடையான்கண்டீ
ரும்மோடுமற்றுமுளராய்நின்ற
படையுடையான்பணிகேட்கும்பணியோமல்லோம்
பாசமறவீசும்படியோநாமே. (௯)

நாவாரநம்பனையேபாடப்பெற்றோ
நாணற்றார்நள்ளாமேவிள்ளப்பெற்றோம்
ஆவாவென்றெமையாள்வானமரர்நாத
னயனொடுமாற்கறிவரியவனலாய்நீண்ட
தேவாதிதேவன்சிவனென்சிந்தை
சேர்ந்திருந்தான்றென்றிசைக்கோன்றானேவந்து
கோவாடிக்குற்றேவல்செய்கென்றாலுங்
குணமாகக்கொள்ளோமெண்குணத்துளோமே.* (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார், சைவசமயத்திலே பிரவேசித்த சங்கதியை அரசன் சமணரால் கேள்வியுற்று, மந்திரிமாரைநோக்கி, தருமசேனரை அழைத்துவாருங்கள் என்று ஆஞ்ஞாபித்தான்.

உடனே மந்திரிமார் திருவதிகையை அடைந்து, திருநாவுக்கரசு நாயனாரிடத்திற் சென்று, அரசன் உம்மை அழைத்துக்கொண்டு வரும்படி எங்களை அனுப்பினான், வாரும் என்றார்கள். அதுகேட்ட நாயனார் "நாமார்க்குங்குடியல்லோம்" என்னும் மறுமாற்றத் திருத்தாண்டகத்தைப்பாடி, நாம் நீங்கள் அழைத்தபடியே வரக்கடவே மல்லேம் என்றருளிச்செய்தார்.

சுந்தரமூர்த்திநாயனார்.

திருநாட்டுத்தொகை.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

விழக்காலனைக்கால்கொடுபாய்ந்தவிலங்கலான்
கூழையேறுகந்தானிடங்கொண்டதுங்கோவலூர்
தழையூர்தகட்டூர் † தக்களூர்தருமபுரம்
வாழைகாய்க்கும்வளர்மருகனாட்டுமருகலே. (௧)

* குணத்திறேமே என்றும் பாடம். † தகடூர் என்றும் பாடம்.

Koviloor Digital Library

அண்டத்தண்டத்தினப்புறத்தாடுமமுதனார்
தண்டந்தோட்டந்தண்டங்குறைதண்டலையாலங்காடு
கண்டன்முண்டல்கள்சூழ்கழிப்பாலைகடற்கரை
கொண்டனாட்டுக்கொண்டல்குறுக்கைநாட்டுக்குறுக்கையே. (௨)

மூலனார்முதலாயமுக்கண்ணன்முதல்வனார்
நாலனார்நரையேறுகந்தேறியநம்பனார்
கோலநீற்றன்குற்றாலங்குரங்கணின்முட்டமும்
வேலனார்வெற்றியூர்வெண்ணிக்கூற்றத்துவெண்ணியே. (௩)

தேங்கூருந்திருச்சிற்றம்பலஞ்சிராப்பள்ளி
பாங்கூரெங்கள்பிரானுறையுங்கடம்பந்துறை
பூங்கூரும்பரமன்பரஞ்சோதிபயிலுமூர்
நாங்கூர்நாட்டுநாங்கூர்நறையூர்நாட்டுநறையூரே. (௪)

குழலைவென்றமொழிமடவாளையோர்கூறனும்
மழலையேற்றுமணாளனிடந்தடமால்வரைக்
கிழவன்கீழைவழிபழையாறு * கிழையமும்
மிழலைநாட்டுமிழலைவெண்ணிநாட்டுமிழலையே. (௫)

தென்னூர்கைம்மைத்திருச்சுழியற்றிருக்கானப்பேர்
பன்னூர்புக்குறையும்பரமர்க்கிடம்பாய்நலம் †
என்னூரெங்கள்பிரானுறையுந்திருத்தேவனூர்
பொன்னூர்நாட்டுப்பொன்னூர்புரிசைநாட்டுப்புரிசையே. (௬)

ஈழநாட்டுமாதோட்டந்தென்னாட்டிராமேச்சுரம்
சோழநாட்டுத்துருத்திநெய்த்தானந்திருமலை
ஆழியூரனநாட்டுக் ‡ கெல்லாமணியாகிய
கீழையில்லரனார்க்கிடங்கிள்ளிகுடியதே. (௭)

நாளுநன்னிலந்தென்பனையூர்வடகஞ்சனூர்
நீளநீள்சடையானெல்லிக்காவுநெடுங்களம்
காளகண்டனுறையுங்கடைமுடிகண்டியூர்
வேளாநாட்டுவேளூர்விளத்தூர்நாட்டுவிளத்தூரே. (௮)

தழலுமேனியன்றையலோர்பாகமமர்ந்தவன்
தொழலுந்தொல்வினைதீர்க்கின்றசோதிசோற்றுத்துறை
கழலுங்கோவையுடையவன்காதலிக்குமிடம்
பழனம்பாம்பணி ¶ பாம்புரந்தஞ்சைதஞ்சாக்கையே. (௯)

மைகொள்கண்டனெண்டோளன்முக்கண்ணன்வலஞ்சுழி
பைகொள்வாளரவாட்டித்திரியும்பரமனார்
செய்யில்வாளைகள்பாய்ந்துகளுந்திருப்புன்கூர்நன்
றையன்மேயபொழிலணியாவடுதுறையதே. (௧௦)

* வழிப்பழையாறு என்றும் பாடம். † பாய்ஞாலம் என்றும் பாடம். ‡ யூரளநாட்டுக் என்றும் பாடம். ¶ பாம்புணி என்றும் பாடம்.

Koviloor Digital Library

பேணிகாடதனிற்றிரியும்பெருமான்றனை
ஆணையாவடியார்கடொழப்படுமாதியை
நாணியூரன்வனப்பகையப்பன்வன்றெண்டன்சொல்
பாணியாலிவைபேத்துவார்சேர்பரலோகமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

நமக்கடிகளாகியவடிகள்.

பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

பாறுதாங்கிபகாடரோபடுதலைபரோமலைப்பாவையோர்
கூறுதாங்கிபகுழகரோகுழைக்காதரோகுறுங்கோட்டிள
ஏறுதாங்கிபகொடியரோசுடுபொடியரோவிலங்கும்பிறை
ஆறுதாங்கிபசடையரோநமக்கடிகளாகியவடிகளே. (௧)

இட்டிதாகவந்துரைமினோநுமக்கிசையுமாநினைந்தேத்துவீர்
கட்டிவாழ்வதுநாகமோசடைமேலுநாறுகரந்தையோ
பட்டியேறுகந்தேறரோபடுவெண்டலைப்பலிகொண்டுவந்
தட்டியாளவுங்கிற்பரோநமக்கடிகளாகியவடிகளே. (௨)

ஒன்றினீர்கள்வந்துரைமினோநுமக்கிசையுமாநினைந்தேத்துவீர்
குன்றிபோல்வதொருருவரோகுறிப்பாகிநீறுகொண்டணிவரோ
இன்றியேயிலராவரோவன்றியுடையராயிலராவரோ
அன்றியேமிகவறவரோ* நமக்கடிகளாகியவடிகளே. (௩)

தேனையாடுமுக்கண்ணரோமிகச்செய்யரோவெள்ளைநீற்றரோ
பானெயாடலும்பயில்வரோதமைப்பற்றினார்கட்குநல்லரோ
மானைமேவியகண்ணினாண்மலைமங்கைநங்கையையஞ்சவோர்
ஆனையீருரிபோர்ப்பரோநமக்கடிகளாகியவடிகளே. (௪)

கோணன்மாமதிசூடரோகொடுகொட்டிகாலர்கழலரோ †
வீணைதானவர்கருவியோவிடையேறுவேதமுதல்வரோ
நாணதாகவோர்நாகங்கொண்டரைக்கார்ப்பரோநலமார்தர
ஆணையாகநம்மடிகளோநமக்கடிகளாகியவடிகளே. (௫)

வந்துசொல்லுமின்மூடனேனுக்குவல்லவாநினைந்தேத்துவீர்
வந்தசாயினையறிவரோதம்மைவாழ்த்தினார்கட்குநல்லரோ
புந்தியாலுரைகொள்வரோவன்றிப்பொய்யின்மெய்யுரைத்தாள்வரோ
அன்றியேமிகவறவரோ ‡ நமக்கடிகளாகியவடிகளே. (௬)

* மிகவறிவரோ என்றும் பாடம். † காலொர்கழலரோ என்றும் பாடம். ‡ மிகவறிவரோ என்றும் பாடம்.

Koviloor Digital Library

மெய்யென்சொல்லுமினமாங்காளுமக்கிசையுமாநினைந்தேத்துவீர்
கையிற்சூலமதுடையரோகரிகாடரோகறைக்கண்டரோ
வெய்யபாம்பரையார்ப்பரோவிடையேறரோகடைதோறுஞ்சென்
றையங்கொள்ளுமவ்வடிகளோநமக்கடிகளாகியவடிகளே. (எ)

நீடுவாழ்பதியுடையரோவ்யனெடியமாலுக்குநெடியரோ
பாடுவாரையுமுடையரோதமைப்பற்றினார்கட்குநல்லரோ
காடுதானரங்காகவேகைகளெட்டினோடிலயம்பட
ஆடுவாரெனப்படுவரோநமக்கடிகளாகியவடிகளே. (அ)

நமணநந்தியுங்கருமவீரனுந்தருமசேனனுமென்றிவர்
குமணமாமலைக்குன்றுபோனின்றுதங்கள்கூறையொன்றின்றியே
ஞமணஞாஞணஞாணஞோணமென்றோதியாரையுநாணிலா
அமணராற்பழிப்புடையரோநமக்கடிகளாகியவடிகளே. (கூ)

படிசெய்நீர்மையிற்பத்தர்காள்பணிந்தேத்தினேன்பணியீரருள்
வடிவிலான்றிருநாவலூரன்வனப்பகையப்பன்வன்றொண்டன்
செடியனாகிலுந்தீயனாகிலுந்தம்மையேமனஞ்சிந்திக்கும்
அடியனூரனையாள்வரோநமக்கடிகளாகியவடிகளே. (க0)

திருச்சிற்றம்பலம்.

முடிப்பதுகங்கை.

பண் - கொல்லிக்கௌவாணம்.

திருச்சிற்றம்பலம்.

முடிப்பதுகங்கையுந்திங்களுஞ்செற்றதுமூவெயில்
நொடிப்பதுமாத்திரைநீறெழக்கணைநூறினார்
கடிப்பதுமேறுமென்றஞ்சுவன்றிருக்கைகளால்
பிடிப்பதுபாம்பன்றியில்லையோவெம்பிரானுக்கே. (க)

நூறன்றியாடரங்கில்லையோசுடலைப்பொடி
நீறன்றிச்சாந்தமற்றில்லையோவிமவான்மகள்
கூறன்றிக்கூறுவதில்லையோ * கொல்லைச்சில்லைவெள்
ளேறன்றியேறுவதில்லையோவெம்பிரானுக்கே. (உ)

தட்டெனுந்தட்டெனுந்தொண்டர்காடமோற்றத்தை
ஒட்டெனுமொட்டெனுமாநிலத்துயிர்கோறலைச்
சிட்டன்றிரிபுரஞ்சுட்டதேவர்கடேவனை
வெட்டெனப்பேசன்மின்றொண்டர்காளெம்பிரானையே. (௩)

* கூறுமற்றில்லையோ என்றும் பாடம்.

Koviloor Digital Library

கரிதலைகவ்வகின்றோரிகூப்பிடநள்ளிருள்
எரிதலைப்பேய்புடைசூழவாரிருட்காட்டிடைச்
சிரிதலைமாலைசடைக்கணிந்தவெஞ்செல்வனைப்
பிரிதலைப்பேசன்மின்றொண்டர்காளெம்பிரானையே. (௪)

வேயனதோளிமலைமகளைவிரும்பிய
மாயமின்மாமலைநாடனாகியமாண்பனை
ஆயனசொல்லிநின்றார்களல்லலறுக்கிலும்
பேயனேபித்தனேயென்பராலெம்பிரானையே. (௫)

இறைவனென்றெம்மானைவானவரேத்தப்போய்த்
துறைபொன்றித்தூமலரிட்டடியிணைபோற்றுவார்
மறையன்றிப்பாடுவதில்லையோமல்குவானிளம்
பிறையன்றிச்சூடுவதில்லையோவெம்பிரானுக்கே. (௬)

தாருந்தண்கொன்றையுங்கூவிளந்தனிமத்தமும்
ஆருமளவறியாதவாதியுமந்தமும்
ஊருமொன்றில்லையுலகெலாமுகப்பார்தொழப்
பேருமோராயிரமென்பராலெம்பிரானுக்கே. (௭)

அரியொடுபூமிசையானுமாயுமறிகிலார்
வரிதருபாம்பொடுவன்னிதிங்களுமத்தமும்
புரிதருபுன்சடைவைத்தவெம்புனிதற்கினி
எரியன்றியங்கைக்கொன்றில்லையோவெம்பிரானுக்கே. (௮)

கரியமனச்சமண்காடியாடுகழுக்களால்
எரியவசவுணுந்* தன்மையோவிமவான்மகள்
பெரியமனந்தடுமாறவேண்டிப்பெம்மான்மதக்
கரியினுரியல்லதில்லையோவெம்பிரானுக்கே. (௯)

காய்சினமால்விடைமாணிக்கத்தெங்கறைக்கண்டத்
திசனையூரனெட்டோடிரண்டுவிரும்பிய†
ஆயினசீர்ப்பகைஞானியப்பனடித்தொண்டன்றூன்
ஏசினபேசுமின்றொண்டர்காளெம்பிரானையே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

* எரிபவசனைவுந் என்றும் பாடம். † டிரண்டுவிரும்பிய என்றும் பாடம்.

Koviloor Digital Library

ஊர்த்தொகை.

பண் - பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

காட்டூர்க்கடலேகடம்பூர்மலையேகானப்பேரூராய்
கோட்டூர்க்கொழுந்தேயழுந்தூரரசேகொழுநற்கொல்லேறே
பாட்டூர்பலரும்பரவப்படுவாய்பனங்காட்டூரானே
மாட்டூரறவாமறவாதுன்னைப்பாடப்பணியாயே. (க)

கொங்கிற்குறும்பிற்குரக்குத்தளியாய்குழகாகுற்றாலா
மங்குற்றிரிவாய்வானோர்தலைவாவாய்மூர்மணவாளா
சங்கக்குழையார்செவியாவழகாவவியாவனலேந்திக்
கங்குற்புறங்காட்டாடியடியார்கவலைகளையாயே. (உ)

நிறைக்காட்டானேநெஞ்சத்தானேநின்றியூரானே
மிறைக்காட்டானேபுனல்சேர்சடையாயனல்சேர்கையானே
மறைக்காட்டானேதிருமாந்துறையாய்மாகோணத்தானே
இறைக்காட்டாயேயெங்கட்குன்னையெம்மான்றம்மானே. (ங)

ஆரூரத்தாவையாற்றமுதேயளப்பூரம்மானே
காரூர்பொழில்கள்புடைசூழ்புறவிற்கருகாவூரானே
பேரூருறைவாய்பட்டிப்பெருமான்பிறவாநெறியானே
பாரூர்பலரும்பரவப்படுவாய்பாசூரம்மானே. (ச)

மருகலுறைவாய்மாகாளத்தாய்மதியஞ்சடையானே
அருகற்பிணிநின்னடியார்மேலவகலவருளாயே
கருகற்குரலாய்வெண்ணிக்கரும்பேகானூர்க்கட்டியே
பருகப்பணியாயடியார்க்குன்னைப்பவளப்படியானே. (ரு)

தாங்கூர்பிணிநின்னடியார்மேலவகலவருளாயே
வேங்கூருறைவாய்விளமர்நகராய்விடையார்கொடியானே
நாங்கூருறைவாய்தேங்கூர்நகராய்நல்லூர்நம்பானே
பாங்கூர்பலிதேர்பரனேபரமாபழனப்பதியானே. (சா)

தேனைக்காவல்கொண்டுவிண்டகொன்றைச்செழுந்தாராய்
வானைக்காவல்கொண்டுநின்றாரறியாநெறியானே
ஆனைக்காவிலரனேபரனேயண்ணாமலையானே
ஊனைக்காவல்கைவிட்டுன்னையுகப்பாருணர்வாரே. (எ)

துருத்திச்சுடரேநெய்த்தானத்தாய்சொல்லாய்கல்லாலா
பருத்திநியமத்துறைவாய்வெயிலாய்ப்பலவாய்க்காற்றானாய்
திருத்தித்திருத்திவந்தென்சிந்தையிடங்கொள்கயிலாயா
அருத்தித்துன்னையடைந்தார்வினைகளகலவருளாயே. (அ)

புலியூர்ச்சிற்றம்பலத்தாய்புகலூர்ப்போதாமூதாரா
பொலிசேர்புரமூன்றெரியச்செற்றபுரிபுன்சடையானே
வலிசேரரக்கன்றடக்கையைஞ்ஞான்கடர்த்தமதிசூடீ
கலிசேர்புறவிற்கடவூராளிகாணவருளாயே. (கூ)

கைம்மாவுரிவையம்மான்காக்கும்பலவூர்கருத்துன்னி
மைம்மாந்தடங்கண்மதுரமன்னமொழியாண்மடச்சிங்கடி
தம்மானூரன்சடையன்சிறுவனடியன்றமிழ்மாலை
செம்மாந்திருந்துதிருவாய்திறப்பார்சிவலோகத்தாரே. (கo)

திருச்சிற்றம்பலம்.

பொதுத்திருப்பதிகங்கள் முற்றுப்பெற்றன.

தலமுறைத்தேவாரத் திருப்பதிகங்கள்
முற்றுப்பெற்றன.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் அருளிச்செய்த திருப்பதிகம் எ. திருநாவுக்கரசுநாயனார் அருளிச்செய்த திருப்பதிகம் கூஎ. சுந்தரமூர்த்திநாயனார் அருளிச்செய்த திருப்பதிகம் ச. ஆ பொதுத்திருப்பதிகங்கள் சஅ.

திருநாவுக்கரசுநாயனார்.

திருக்குறுந்தொகை.

பொது.

பன்னி னூறும் பழத்தினு மின்சுவை
என்னி னூறி யெனக்கே களிதரும்
உன்னி னுன்னுமுன் னுவிடில் விட்டிடும்
என்னு ளீச னிருந்த வியற்கையே.

இத்திருப்பாட்டுப் பிரதிகளிற் காணப்படவில்லை. தாயுமானசுவாமிகளால் "அறிஞருரை" யில் "உன்னினுன் னுமென்ற வுறுதிமொழியா லென்னிதயத்—தன்னிலுன்னி நன்னெறியைச் சாருநா ளெந்நாளோ" என்று எடுத்தாளப்பட்டது.

Koviloor Digital Library

திருமறைக்காடு.

வெள்ளிப்பாட்டு.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

விடைத்தவர்புரங்கண்மூன்றும்விரிசிலைகுனியவாங்கிப்
படைத்தொழில்புரிந்துநின்றபரமனேபரமயோகீ
கடைத்தலைபுகுந்துநின்றோங்கலிமறைக்காடமர்ந்தீர்
அடைத்திடுங்கதவுதன்னையப்படித்தாளினாலே. (௧)

முடைத் தலைப்பலிகொள்வானேமுக்கணாநக்கமூர்த்தீ
மடைத்தலைக்கமலமோங்கும்வயன்மறைக்காடமர்ந்தாய்
அடைத்திடுங்கதவையென்றிங்கடியனேன்சொல்லவல்லே
அடைத்தனைகதவிதன்றோவெம்மையாளுக்குமாறே. (௨)

கொங்கணாமலர்கண்மேவுங்குளிர்பொழிலிமையப்பாவை
பங்கணாவுருவினானேபருமணியுமிழும்வெம்மைச்
செங்கணாராவம்பூண்டதிகழ்மறைக்காடமர்ந்தாய்
அங்கணாவிதுவன்றோதானெம்மையாளுக்குமாறே. (௩)

இருளுடைமிடற்றினானேயெழின்மறைப்பொருள்களெல்லாம்
தெருள்படமுனிவர்க்கீந்ததிகழ்மறைக்காடமர்ந்தாய்
மருளுடைமனத்தனேனும்வந்தடிபணிந்துநின்றேற்
கருளதுபுரிவதன்றோவெம்மையாளுக்குமாறே. (௪)

பெருத்தகைவேழந்தன்னைப்பிளிறிடவுரிசெய்தானே
மருத்திகழ்பொழில்கள்சூழ்ந்தமாமறைக்காடமர்ந்தாய்
கருத்திலனேனுநின்றன்கழலடிபணிந்துநின்றேன்
அருத்தியையறிவதன்றோவெம்மையாளுக்குமாறே. (௫)

செப்பமர்கொங்கைமாதர்செறிவளைகொள்ளுந்தேசோ
டொப்பமர்பலிகொள்வானேயொளிமறைக்காடமர்ந்தாய்
அப்பமர்சடையினானேயடியனேன்பணியுகந்த
அப்பனேயளவில்சோதீயடிமையையுகக்குமாறே. (௬)

மதிதுன்றுமிதழிமத்தமன்னியசென்னியானே
கதியொன்றுமேற்றினானேகலிமறைக்காடமர்ந்தாய்
விதியொன்றுபாவின்மாலைகேட்டருள்வியக்குந்தன்மை
இதுவன்றோவுலகினம்பி * யெம்மையாளுக்குமாறே. (௭)

* நம்பி—விரும்பி; நம்பீ என விளியாக்கினுமமையும்.

Koviloor Digital Library

நீசனுமரக்கன்றிண்டோளொரிதாவிரலாலூன்றும்
தேசனேஞானமூர்த்தி திருமறைக்காடமர்ந்தாய்
ஆசையையறுக்கவுய்ந்திட்டவனடிபரவமெய்யே*
ஈசனார்க்காளதானானென்பதையறிவித்தாயே. (அ)

மைதிகழுருவினானுமலரவன்றானுமெய்ம்மை
எய்துமாறறியமாட்டாரெழின்மறைக்காடமர்ந்தாய்
பொய்தனையின்றிநின்னைப்போற்றினார்க்கருளைச்சேரச்
செய்தனையெனக்குநீயின்றருளியதிறத்தினாலே. (௯)

மண்டலத்தமணர்பொய்யுந்தேரர்கண்மொழியுமாறக்
கண்டனையடிகளென்றுங்கலிமறைக்காடமர்ந்தாய்
தண்டியைத்தானாவைத்தானென்னுமத்தன்மையாலே
எண்டிசைக்கறியவைத்தாயிக்கதவடைப்பித்தன்றே. (க0)

மதமுடைக்களிறுசெற்றமாமறைக்காட்டுளானைக்
கதவடைத்திறமுஞ்செப்பிக்கடிபொழிற்காழிவேந்தன்
தகவுடைப்புகழின்மிக்கதமிழ்கெழுவிரகன்சொன்ன
பதமுடைப்பத்தும்வல்லார்மனுக்கடியர்தாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இப்பதிகம் இரண்டு பிரதிகளின்மாத்திரம் அதிகமாகக்காணப்பட்டபடியாலும், சொல்வளம் பொருள்வளம் முதலியன அத்துணைச் சிறப்புற்றுத் தோன்றாமையாலும் இறுதியில் வேறாகப்பதிப்பிக்கப்பட்டது.

வெள்ளிப்பாட்டெனமகுடம் புனைந்து முன்னர்ப் பதிப்பிக்கப்பட்ட பதிகங்கள், எல்லா ஏட்டுப்பிரதிகளிலும் இருத்தலாலும் முன்பதிப்பித்த பதிப்பாசிரியர்களும் அவ்வத்தலப் பதிகங்களோடு சேர்த்துப் பதிப்பித்திருத்தலினாலும் யானும் அவ்வாறுபதிப்பித்தேன்.

Koviloor Digital Library

உ

கணபதிதுணை.

சந்தானாசாரியருள் ஒருவராகிய

உமாபதி சிவாசாரிய சுவாமிகள்

அருளிச்செய்த

சிவக்ஷேத்திரசிவநாமக்கலிவெண்பா.

காப்பு.

நன்மை மிகுந்தசிவ நாமக் கலிவெண்பாச்
சொன்மொழியி னாலே துதிப்பதற்குப்—பன்மைத்
திருப்பதிக டோறுந் திகழ்களிற்றின் றாளை
விருப்பதிக மாகநெஞ்சே வேண்டு.

[சோழநாட்டிலே காவேரிக்கு வடகரையிலுள்ள தலம் - சுங.]

க. பொன்னி வடகரையிற் பொன்னம் பலக்கோயின்
மன்னுசிவ காமி மகிழ்ந்தேத்த—நன்னடன
உ. மாடுஞ் சபாபதியே யம்மையுமை கண்குளிர
நாடுந் திருமூல நாயகா—நீடுதிரு
ங. வேட்கள மாநகரின் மேவுநல்ல நாயகிக்கு
வாழ்க்கைபுரி பாசுபத மன்னவா—வாக்கமிகு
ச. நெல்வாயின் மேவி நிலவுகன காம்பிகையைப்
புல்குமுச்சி நாதப் புராதனா—மல்குகழிப்
ரு. பாலைநகர் வாழ்பொற் பதவேத நாயகியை
மாலையிடும் பால்வண்ண நாதனே—சீலமிகு
சு. நல்லூர்ப் பெருமணஞ்சேர் நங்கையுமை யாண்மருவுஞ்
செல்வச் சிவலோகத் தியாகேசா—முல்லைநகை
எ. வாயவடி வாளொடுமே கேந்திரப் பள்ளியிடத்
தாயதிரு மேனி யழகனே—தூய
அ. வணிகொண்ட கோதையுட னார்ந்தமுல்லை வாயி
னணுகிய முல்லைவன நாதா—புணர்கலிக்கா
கூ. மூர்சா ரழகு வனமுலையோ டொன்றுசுந்த
ரேசா வமரர்க் கிறைவனே—சீர்சார்
கo. குயிலினு நன்மொழியைக் கூடிச்சாய்க் காட்டி
லியல்பொடுவாழ் சாயாவ னேசா—வியன்மேவு
கக. பல்லவ னீச்சரத்தின் பால்சவுந்த ராம்பிகையைப்
புல்லிய பல்லவனப் பூரணா—நல்லதிரு
கஉ. வெண்காட்டில் வாழ்பிரம வித்தியா நாயகியோ
டண்கார் சுவேதா ரணியனே—விண்காரும்
கங. பாய்ந்தபுகழ்க் கீழ்க்காட்டுப் பள்ளியகி லாண்டவம்மை
தோய்ந்தமகி ழாரணிய சுந்தரா—வாய்ந்தவெழிற்

Koviloor Digital Library

௧௪. காவியங் கண்ணிகுரு காவூரி லன்புடனே
மேவுந் திருமேனி வெள்ளடையே—தேவர்தொழுஞ்
௧௫. சீர்காழி மேவுந் திருநிலை நாயகிசே
ரகா பிரமபுரி யீசனே—வாகுதிருக்
௧௬. கோலக்கா வோசை கொடுத்தவளைச் சேர்ந்துமகிழ்
சாலச்செய் சத்தபுரித் தாணுவே—ஞாலமகிழ்
௧௭. புள்ளிருக்கு வேளூர் புரந்தருளுந் தையன்மனத்
துள்ளிருக்கு மாவயித்ய வுத்தமா—தெள்ளுகண்ணூர்
௧௮. கோயின் முருகுவளர் கோதையுட னன்பர்நெஞ்சி
லேயுமருட் கண்ணு யிரத்தானே—நேயமுட
௧௯. னன்பாங் கடைமுடியை யாளுமபி ராமிபுண
ரின்பாங் கடைமுடிநல் லீச்சுரா—நண்புடவே
௨0. நின்றியூர் வாழுலக நாயகிதன் னேசமுறு
மின்றுணைம காலக்மி யீசனே—நன்றுருங்
௨௧. தோகைசொக்க நாயகியைத் தோய்ந்துதிருப் புன்கூரிற்
சேகரமாய் வாழுஞ் சிவலோகா—மோகமற
௨௨. வீடுதிரு நீடூரில் வேயுறு தோளியையே
நாடு மருட்சோம நாதனே—நீடுமன்னி
௨௩. யூர்ப்பெரிய நாயகிதன் னுள்ளத் திடையிருக்குந்
தாப்புடைய வாபற் சகாயனே—பார்ப்பிணியைக்
௨௪. காயும் பரிமளசு கந்தையைவேள் விக்குடியிற்
றோயுங் கலியாண சுந்தரா—வாயுமலர்
௨௫. வாச மலர்க்குழனன் மாதொடெதிர் கொள்பாடிக்
காசைகொண்டு வாழுமயி ராவதனே—பேசுபுகழ்
௨௬. கூடுமணஞ் சேரியில்வாழ் கோலயாழ் மென்மொழியை
நாடு மருள்வள்ள லுபகா—நீடுசுக
௨௭. மாயுங் குறக்கையின்ஞா னம்பிகையோ டார்க்குமரு
வீயும் புகழ்வீரட் டேசனே—நேயமுடன்
௨௮. கூற்றுநீக்கட் கோல்வளையாள் கூடக் கருப்பறியல்
போற்றிவளர் குற்றம் பொறுத்தவா—தோற்றமருட்
௨௯. டாய்குரக்குக் காக்குந் தவநா யகியிடத்தே
யெய்குந் தளக்கருணை யீசனே—தூயபுகழ்
௩0. வானொளிபுற் றூரிலுறும் வண்டமர் பூங்குழற்கு
வாழ்வுதரு மாணிக்க வண்ணனே—நீளும்
௩௧. வடிக்க ளமுதகர வல்லியொடு மண்ணிப்
படிக்கரைவாழ் நீலகண்டப் பண்பா—வடுக்குமோ
௩௨. மாம்புலியூர்ப் பூங்கொடியோ டன்புடனே யாவருக்குந்
தேம்புதுய ரந்திர்த்த செல்வமே—வான்பணியுங்
௩௩. கானூர் குழலியொடுங் கானாட்டு முள்ளூர்வாழ்
பானி றணிந்த பதஞ்சலியே—வானோர்
௩௪. திரிபுர சுந்தரிமுன் சேர்நாரை யூரில்
வருசவுந்த ரேச மகிபே—பெருகுமெழி
௩௫. லார்ந்தவித்துச் சோதிமின்னோ டானகடம் பூரிலென்றுஞ்
சேர்ந்த வமுதகடச் செல்வமே—சார்ந்தளிகுழ்
௩௬. சந்த மலர்க்குழலாள் காம்பன்ன தோளிபுணர்
பந்தணை நல்லூர்ப் பசுபதியே—சுந்தரஞ்சேர்

Koviloor Digital Library

௩௭. கஞ்சனூர் மேவுகின்ற கற்பக நாயகியோ
டின்சொன்மறை பேசுமக்கி னீச்சுரா—மஞ்சின்
௩௮. கணமார் திருக்கோடிக் காவில்வடி வாட்குத்
துணையாய்வாழ் கோடீச் சுரனே—யணிகொ
௩௯. டிருமங் கலக்குடிவாழ் செல்வமங்க ளாம்பை
மருவுபுரா ணேச வரதா—தரணியுளோர்
௪0. நம்பு மருட்பெரிய நாயகியோ டும்பனந்தாட்
கன்பு மிகுந்தசடை யப்பனே—யின்பணிக
௪௧. ளுற்றுதிரு வாப்பாடி நன்பெரிய நாயகியோ
டேற்றுபசுப் பாலுகந்த வுத்தமா—வாற்ற
௪௨. றருசேய்ஞ லூர்வாழ் சகிதேவி சத்த
கிரியீசா வென்றுதொழுங் கேள்வா—வருமருந்து
௪௩. நாயகிதே வன்குடியி னண்புடனோர் பங்கிலென்று
மேயவருட் கற்கடக வீச்சுரனே—தூயவிரைச்
௪௪. செஞ்சாந் தணிசவுந்த ரந்தோய் வியலூர்வாழ்
நஞ்சார் களயோகா னந்தனே—யின்சொலுடன்
௪௫. பந்தாடு நாயகியோர் பங்குறையுங் கொட்டையூர்ச்
சுந்தரா கோடீச் சுரமணியே—கொந்தார்பூங்
௪௬. கொம்பனையோ டின்னம்பர் கோயில்கொண்டு வாழ்சலுறு
மன்பா மெழுத்தறிந்த வப்பனே—நம்புறம்ப
௪௭. யத்திற் கரும்படுசொ லன்னத்தை யோர்பாலில்
வைத்திருக்குஞ் சாட்சி வரதனே—நச்சு
௪௮. விசயமங்கை யூர்மங்கை நாயகிமீ தென்று
நசைமே வியவிசய நாதா—விசையுடனே
௪௯. புல்லும் வளைக்கைவல்லிப் பூவையுடன் வைகாவாழ்
வில்ல வனேச விமலனே—சொல்லுகுராங்
௫0. காடுதுறை மேவு மழகு சடைமுடியா
ளுடங் குலவணங்கு நாயகா—நீடுதிரு
௫௧. நங்கை திருப்பழன நற்பெரிய நாயகிபா
றங்கிய வாபற் சகாயனே—பொங்குமறை
௫௨. யையாற்றின் மேவு மறம்வளர்த்தா ளோடும்வளர்
துய்யபுகழ் மேவுசெம்பொற் சோதியே—மையிருங்கட்
௫௩. பாவைவா லாம்பிகைதன் பாகாநெய்த் தானத்தி
லாவுலுறு நெய்யாடி யப்பனே—சீர்வளர்நா
௫௪. லாயும் பெரும்புலியூ ரம்மை சவுந்தரியோ
டேயும் வியாக்ரபுரி யீசனே—தூய
௫௫. மழபாடி மேவி மகிழுமழ கம்மை
தழுவி மகிழ்வயிரத் தம்பா—பழுவூரி
௫௬. லம்மை யிமைய வருந்தவ நாயகிசேர்
நன்மை வடமூல நாயகா—புன்மையிலாச்
௫௭. சன்மார்க்கர் வாழ்கானூர்த் தையல்சிவ யோகமின்னோ
னன்மோகச் செம்மேனி நாதனே—பொன்மேவு
௫௮. மன்பிலா லந்துறைவா ழம்மை சவுந்தரிதோ
ளின்பமுறு சத்தியவா கீசனே—நம்புதிரு
௫௯. மாந்துறை மேவுகின்ற மங்கையழ காலுயர்ந்தாட்
கேந்துபுக ழாம்பிரவ னேச்சுரா—பூந்தருவார்

Koviloor Digital Library

௬0. பாற்றுறை மேவும் பரைமோக நாயகியார்
தோற்றதிரு மூல சுவாமியே—போற்றுதிரு
௬௧. வானைக்கா மேவு மகிலாண்ட நாயகிசேர்
ஞானப் புகழ்ச்சம்பு நாயகா—வானமிகு
௬௨. பைஞ்ஞீலி மேவியருட் பாவைவிசா லாட்சிபுணர்
மெய்ஞ்ஞான நீலகண்ட வேதியா—விஞ்ஞாலம்
௬௩. போற்றுபாச்சி லாச்ராமப் பொன்வால சுந்தரிசேர்
மாற்றறிவா ஞன வரதனே—தோற்றுதிரு
௬௪. வீங்கோய் மலைமேவு மின்ப மரகதமான்
ருங்குமின்ப மேமரக தாசலா—வீங்கறுபான்

[காவேரியின் தென்கரையிலுள்ளதலம் - ௧௨௭.]

௬௫. மூன்றுபதி யப்பானிர் மொய்த்துவரு தென்கரையிற்
றோன்றிவளர் வாட்போக்கித் தொன்னகரிற்—றென்றகுசொல்
௬௬. பெற்றசுரும் பார்குழலி பேரன்பி னுற்புணர்ந்து
நத்துகின்ற ரத்னகிரி நாயகா—வுற்றழகு
௬௭. தோன்றுங் கடம்பந் துறைமுற்றி லாமுலையை
யேன்ற கடம்பவ னேசனே—தோன்றும்
௬௮. பராய்த்துறை மேவும் பசும்பொன் மயில்சேர்
பராய்த்துறை நாதா பரமா—குராப்புடைசூழ்
௬௯. கற்குடி மேவுகின்ற கன்னியஞ்ச ளுட்மகிழ்
நற்றுணை வுச்சிவ நாயகா—சொற்குலவு
௭0. மூக்கீச் சரநகர்வாழ் மோகமிகு காந்திமதி
வாக்காற் புகழ்பஞ்ச வர்ணனே—மீக்குயர்ந்த
௭௧. தென்சிராப் பள்ளியில்வாழ் செல்லமட்டு வார்குழலி
யின்பாரன் மாதருபூ தேச்சரனே—வன்பார்
௭௨. நறுங்குழலி நாயகியை நல்லெறும்பி யூரிற்
பெறுமெறும் பீசப் பிரானே—புறஞ்சிர்
௭௩. மிருகன் னெடுங்களத்தின் மேவுமொப்பி லாட்குத்
தகுநித் தியசுந் தரனே—புகழ்மேவும்
௭௪. பண்பார்மே லைக்காட்டுப் பள்ளியில்வார் கொண்டமுலை
யன்பாக மேவுதீ யாடியே—நண்பார்ந்து
௭௫. பூவாறு மாலம் பொழின்மேவி வாழுகின்ற
ஞானாம் பிகையாத்ம நாதனே—தேனு
௭௬. ரழகா லமர்ந்தவனோ டாம்பூந் துருத்திப்
பழநகர்வாழ் புட்பவனப் பண்பா—வெழில்சேர்ந்த
௭௭. கண்டியூர் வாழ்மங் கைநா யகிபுணரு
மிண்டைச் சடைவிரட் டேசனே—யண்டர்தொழுந்
௭௮. தன்றெப்பி லாளுடனே சார்ந்துசோற் றுத்துறையின்
மன்றுதொலை யாச்செல்வ வள்ளலே—நன்னயஞ்சேர்
௭௯. வாய்த்ததிரு வேதிகுடி வாழ்மங்கை யர்க்கரசி
யேத்துபுகழ் வேதபுரி யீச்சரனே—கேத்திரமாந்
௮0. தென்குடித் திட்டையினிற் சேருலக நாயகிக்குப்
பங்கு கொடுத்த பசுபதியே—தங்கமிகு
௮௧. பல்குடிசேர் புள்ளமங்கை பல்வளைக்கு நற்புயத்தை
நல்கு பசுபதி நாயகா—மல்குபுகழ்ச்

Koviloor Digital Library

அஉ. சக்கரப் பள்ளியினிற் சார்ந்தவல்லி யங்கோதை
சொற்கிரங்கு மாலந் துறையானே—மிக்க
அங. கருகாவூர் மேவுங் கரும்பனையாண் மோக
முருகலர்த்தார் முல்லைவன மூர்த்தீ—பெருகுதிருப்
அச. பாலைத் துறைசேர் பரைதவள வெண்ணகையாண்
மாலையிட்ட பாலை வனநாதா—சீலமிகு
அரு. போற்றுதிரு நல்லூர்வாழ் பூவைகிரி சுந்தரிக்கே
யாற்றல்புரி யும்பெரிய வாண்டவா—நாற்றிசையுங்
அசு. காக்குமா வூர்மங் களநா யகியழகுக்
கேற்கு மெழிற்பசுப தீச்சுரனே—யாக்குமருட்
அஎ. சத்திமுத்த மேவுகின்ற தாய்பெரிய நாயகியாள்
சித்த மகிழுஞ் சிவக்கொழுந்தே—யத்தர்புகழ்
அஅ. பட்டீச் சுரமேவும் பல்வளை நாயகிசேர்
பட்டீச் சுரனே பராபரா—விட்டமிகும்
அகூ. பார்மகிழ வாழும் பழையாறை யூர்மேவுஞ்
சோமகலா நாயகிசேர் சோமேசா—காமலர்த்தேன்
கூ0. வீழ்த்தும் வடதளியின் மேவுங் கவுரியம்மை
வாழ்த்தும் வடதளி வள்ளலே—பூத்தவன
கூக. மன்னு வலஞ்சுழியின் வாழ்பெரிய நாயகியாட்
கின்னமுத மானகபர்த் தீச்சுரனே—நன்னயஞ்சேர்
கூஉ. பேரெயில்சூழ்ந் தின்பம் பெருகுங் குடமூக்குக்
கூரயிற்கண் மங்களைசேர் கும்பேசா—சீரிருக்குங்
கூங. கோலக் குடந்தைக்கீழ்க் கோட்டப் பெரியம்மை
பாலுகந்து வாழ்மடந்தை பாகனே—சீலமிகுங்
கூச. தேனார் மொழியுடன்வாழ் தென்குடந்தைக் காரோண
ஞானே தயச்சோம நாதனே—மீனார்கட்
கூரு. குன்றமுலை நாயகியாட் கூடிநா கேச்சரத்தி
லன்றேவாழ் வுற்றசண்ப காரணியா—வென்றுங்
கூசு. திருவா ரிடைமருதிற் சித்த மகிழ்ந்து
பெருநல மாமுலையாம் பெண்சேர்—மருதீசா
கூஎ. தென்குரங் காடுதுறைத் தேவிபவ ளக்கொடிசேர்
சங்கரா வாபற் சகாயனே—மங்காத
கூஅ. செல்வநீ லக்குடிசேர் தேவியழ காண்மருவு
நல்லநா மம்முடைய நாயகா—முல்லைமலர்
கூகூ. வம்புலவும் வைகல் வரநகர்மா டக்கோயிற்
கொம்பிளங் கோதைவைகற் கோமானே—மின்பமிகு
க00. மங்கள நாயகியாள் வாய்த்ததிரு நல்லத்திற்
றங்கு முமாமகே சச்சுடரே—யெங்குமகிழ்ந்
க0க. தார்ந்த திருக்கோழம் பத்திற் சவுந்தரியோ
டேய்ந்தவள ருங்கோகி லேசுரனே—வாய்ந்ததிரு
க0உ. வாவடு தண்டுறைக்க ணனவொப்பி லாமுலையோ
டேவிளங்கு மாமா சிலாமணியே—தேவர்தொழுஞ்
க0ங. செம்பொற்றியா கேசா திருத்துருத்தி மேவுகின்ற
வம்பொன் மிருதுமுகி ழாம்பிகையோ—டின்பமிகு
க0ச. முத்தர வேதிச் சுரனே திருவழுந்தூர்ச்
சத்திதரு மிக்க சவுந்தரியாட்—கத்தயருள்

Koviloor Digital Library

௧௦௫. வேதபுரி யீசா மிகுபுகழ்மா யூரத்த
மாதஞ்ச னாயகிசேர் மாயூரா—கோதில்லாத்
௧௦௬. தோழியம்மை தானே துணையா விளநகரில்
வாழுந் துறைகாட்டு வள்ளலே—நாளுந்
௧௦௭. திருப்பறிய லூரிற் றிகழிளங் கொம்போ
டிருக்கும் புகழ்வீரட் டேசா—மருக்குலவு
௧௦௮. பாக சுகந்தவனப் பாவைசெம்பொன் பள்ளியினிற்
போகமுறுஞ் சொர்ண புரேச்சுரா—வாகு
௧௦௯. பருவதரா சன்புதல்வி பங்கினனி பள்ளி
யுறுநற் றுணையப்பா வுண்மை—பெருகும்
௧௧௦. வலம்புர மேவும் வடுவகிர்க்கண் டோயும்
வலம்புர நாதா வரதா—விலங்குந்
௧௧௧. தலைச்சங்கா டேயுஞ் சவுந்தரிதோ டோயு
மலைச்சங் கருணா யகனே—யிலக்குமியை
௧௧௨. யான்கட்க நேத்திரிநல் லாக்கூரிற் றேயுமெழிற்
றோன்பெற் றிருக்குஞ் சுயம்புவே—வான்பெற்ற
௧௧௩. கண்ணபி ராமி கடவூரி லோர்பங்கி
னண்ணு மமுதகட நாயகா—வெண்ணுந்
௧௧௪. தயாவம லக்குயமின் சாருங் கடவூர்
மயானப் பிரமபுரி மன்னா—பயோததிமான்
௧௧௫. கூடுதிரு வேட்டக் குடிச்சாந்த நாயகியா
ளூடுந் திருமேனி நாயகா—நீடுதிரு
௧௧௬. வீசசத்தி யம்மையுடன் மிக்கதெளிச் சேரியினிற்
றேசிலங்க வாழ்பார்ப்ப தீச்சுரா—நேசத்
௧௧௭. தருமபுர மேவுஞ் சதாமதுர மின்றோ
யருமையுள்ள யாழ்மூரி யானே—பெருகுமின்பம்
௧௧௮. பூண்டுபோ கம்மார்த்த பூண்முலையா ளோடுநள்ளா
றீண்டமர்தேர்ப் பாரணிய வீச்சரனே—மாண்டகுகோட்
௧௧௯. டாற்றின் மிகுவண் டமர்பூங் குழலியொடு
தோற்றுமயி ராவதசு வாமியே—போற்றும்
௧௨௦. பவளவர்ணப் பூங்குழலாள் பங்கிலம்பர் மேவு
நவமார் பிரமபுரி நாதா—வுவகைமா
௧௨௧. காளத்தின் மேவுகின்ற கன்னிபட்ச நாயகிதன்
றோன்பெற்ற காளகண்டத் தோன்றலே—நீள்கதிக்கும்
௧௨௨. பண்ணார்மி யச்சூரிற் பாவைசுந்த ரத்தலைவி
நண்ணுந் திருமுயற்சி நாயகா—வெண்ணுமிளங்
௧௨௩. கோயில்வட மேவிக் குலவுமின்னு மேகலையோ
டேயுஞ் சகலபுவ னேச்சுரா—வாயுமருள்
௧௨௪. பொற்கொடி நாயகியாள் போற்றுதில தைப்பதிசேர்
நற்றுணை முத்தீச நாயகா—சொற்குலவக்
௧௨௫. கொண்டவெண் டார்பூங் குழலியொடு பாம்புரத்தி
லின்டைகொண்டு வாழ்பாம்பு ரேச்சரனே—பண்டர்தொழு
௧௨௬. மங்கள நாயகிசேர் மன்னு சிறுகுடியின்
மங்களமாய்ச் சேருகின்ற மங்களா—பொங்குபுகழ்
௧௨௭. மெய்ப்படு வீழி மிழலையில்வாழ் சுந்தரகு
சாம்பிகைசேர் வீழி யழகனே—பூம்பொழில்சூழ்

Koviloor Digital Library

கஉஅ. வன்னியூர் மேவும் வளர்கவுரி பார்ப்பதிக்
கின்னமுத மானவக்கி னீச்சுரா—பன்னுமறை
கஉக. யாயுங் கருவிலியை யாளுஞ் சருவாங்க
நாயகிசேர் சற்குணநன் ஞயகா—தூயவன்பிற்
கடூ0. பேணு பெருந்துறையூர்ப் பேதை மலையரசி
பேணுஞ் சிவானந்தப் பிஞ்ஞகா—மாணு
கடூக. நறையூர்ச்சித் தீச்சரஞ்சேர் நங்கையழ கம்மைக்
கிறையான சித்தநா தேசா—மறைசே
கடூஉ. ரரிசிற் கரைப்புத்தூ ராளுமழ கம்மை
பரவுபடிக் காசுவைத்த பண்பா—மருமருவு
கடூடூ. போதார் சிவபுரத்துப் பொன்பெரிய நாயகிசேர்
நாதா பிரமபுரி நாயகா—மீதான
கடூச. பண்பார் கலையநல்லூர்ப் பாவை யமுதவல்லி
நண்பா ரமுதகலை நாயகா—விண்போற்றுங்
கடூரு. கிள்ளைசரு வாலங் கிருதமின்னே டன்பர்துயர்
தள்ளுங் கருக்குடிவாழ் சற்குணா—தெள்ளுமறை
கடூசு. மல்குதிரு வாஞ்சியத்தில் வாழவந்த நாயகிசேர்
நல்குசுக வாஞ்சிய நாதனே—செல்வப்
கடூஎ. பெருநன் னிலத்துப் பெருங்கோயின் மேவும்
பிரமே சுரிசேர்பிர மேசா—மருவுதிருக்
கடூஅ. கொண்டீச் சரத்திற் குளிர்சாந்த நாயகிசே
ரெண்டோட் பசுபதியா மெம்மானே—பண்டைமறை
கடூகூ. நாடுந் திருப்பெரிய நாயகியோ டும்பனையூர்
கூடுஞ் சவுந்தரனுங் கொற்றவா—தேடரிய
கச0. விற்குடியில் வாழுகின்ற மின்னேல வார்குழலி
நற்கணவா வீரட்ட நாயகா—சொற்கலைகள்
கசக. கற்கும் புகலூர்க் கருந்தார் குழலிமகி
ழக்கினி யீசனெனு மம்மானே—மிக்கவர்த்த
கசஉ. மானீச் சரமருவு மன்னுகருந் தார்குழலிக்
கானவர்த்த மானீச் சராதிபா—ஞானச்
கசடூ. சரிவார் குழலியொடி ராமனதீ சத்தின்
மருவுமிரா மேச வரதா—திருப்பயற்றூர்க்
கசச. காவியங் கண்ணி கணவா மறைபுகன்ற
நாவா திருப்பயற்றூர் நாதனே—பூவிருக்கும்
கசரு. வாய்த்த திருக்குழனன் மாதுசெங்காட் டங்குடியி
லேத்துகண வாகணப தீச்சுரா—பூத்தமலர்
கசசு. துன்னுவண்டு வார்குழலித் தோகையொடு மாமருகல்
மன்னுகின்ற மாணிக்க வண்ணனே—பொன்னெழில்சூழ்
கசஎ. சாத்தமங்கை மேவுகின்ற தையன்மலர்க் கண்ணம்மை
யேத்து மயவந்தி யீச்சுரனே—வாய்த்ததிரு
கசஅ. நீணைக் காரோண நீலாய தாட்சியையே
காணுங்கா யாரோ கணேசனே—மாணுறுநற்
கசகூ. சிக்கலிலோர் பங்கிற் றிகழ்வே னெடுங்கண்ணி
நிற்க மகிழுநவ நீதனே—மிக்கபுகழ்க்
கரு0. கீழ்வேளூர் மேவுகின்ற கிள்ளை வனமுலையாள்
வாழ்வட் சயநாத மன்னவா—தாழ்வில்லா

Koviloor Digital Library

௧௫௧. மாவிரவு தேவூர் வளர்மதுர பாடணிசேர்
தேவகுரு நாதனெனுஞ் சின்மயா—மாவிரதர்

௧௫௨. நன்றுபள்ளி முக்கூட லுபகியாண் மைம்மேவுங்
கண்ணிபுணர் முக்கோணக் கண்ணுதலே—விண்ணவர்பூ

௧௫௩. மல்குதிரு வாரூர்வாழ் மங்கையல்லி யங்கோதை
புல்கியவன் மீகப் புராதனா—நல்குமரு

௧௫௪. ளாதிபரா யாடரவக் கிங்கிணிக்கா லானடங்கொள்
வீதி விடங்க விமலனே—நீதி

௧௫௫. யகிலே சுரிசே ரமனெறி மேவு
மகிலே சுரனே யரனே—மிகுபாவை

௧௫௬. புண்மண் டளிபு ளூரம்பஞ்சின் மெல்லடியாள்
மண்மகிழ வாழுமண்ட லேசுரா—விண்மகிழும்

௧௫௭. யாழினு மென்மொழியா ளின்ப விளமர்தனில்
வாழும்ப தஞ்சலிம னோகரா—சூழமரர்

௧௫௮. மன்றுங் கரவீர மல்கு பிரத்தியட்ச
மின்னம்மை மேவுகர வீரனே—மன்னுபெரு

௧௫௯. வேளூ ரிறைகொண்ட மின்னேல வார்குழலி
நாளும் பிரியாத நாதனே—யாளுமருள்

௧௬0. காட்டு தலையாலங் காட்டுத் திருமடந்தை
மாட்டுகந்தே யாட வலவரதா—நீட்டுசெம்பொற்

௧௬௧. கோயில்குட வாயிலாக் கொண்டுநித முப்பெரிய
நாயகிசேர் கோணேச நாயகா—தூயமறை

௧௬௨. மன்றுசே றைப்பதியில் வாழ்ஞான வல்லியுடன்
செந்நெறியப் பாநற் செகதீசா—வுன்னதஞ்சேர்

௧௬௩. நாலூர் மயானத்து நற்பெரிய நாயகியாள்
பால்சேர் பலாசவனப் பண்பனே—ஞாலமகிழ்

௧௬௪. காசி கடுவாய்க் கரைப்புத்தூர் சொர்ணபு
ரேசுரிசேர் சொர்ணபு ரேச்சுரா—நேசர்புகழ்ந்

௧௬௫. தோதுமிரும் பூளை யெனுந்தலத்தின் மாதுமையா
ளோதும் புகழ்காசி யாரணியா—சீரு

௧௬௬. ரரதைப் பெரும்பாழி யம்மையலங் கார
மருவும்பா தாள வரதா—பொருவி

௧௬௭. லவனிவணல் லூரி லணிசௌந்த்ர வல்லி
நவமுறவா முஞ்சாட்சி நாதா—புவனி

௧௬௮. நயமங் களநா யகிசேர் பரிதி
நியமப் பரிதியப்ப நீதா—வுயருலகுக்

௧௬௯. காதிவெண்ணி யூர்சே ரழகிய நாயகியுட்
காதன்மிகு வெண்ணிக் கரும்பேநற்—போதமிகு

௧௭0. பூவனூர்க் கற்பகத்தைப் புல்லுகின்ற புட்பவனத்
தேவனே தேவ சிகாமணியே—மாவளமை

௧௭௧. தோற்றுபா தாளிச் சுரவமுத நாயகியாள்
போற்றிடுஞ் சர்ப்ப புரேசனே—தேற்றத்

௧௭௨. திருக்கள ரூரிற் றிகழுமிளங் கொம்போ
டிருக்குங் களர்முளை யீசா—மருக்குலவு

௧௭௩. சிற்றேம மேவுந் திகழுகிலாண் டேச்சுரிதோ
ணத்துநின்ற பொன்வைத்த நாயகா—வுற்ற

Koviloor Digital Library

௧௭௪. திருவுசாத் தானத்துச் சேர்பெரிய நங்கை
மருவலூறு மந்திரபு ரேசா—திருவா
௧௭௫. ரிடம்பா வனத்தி லெழின்மங் களைசேர்
குடும்பா மிகுசற் குணனே—தடஞ்சூழ்
௧௭௬. கடிக்குளஞ்சேர் கற்பகனே காண்கனித்தே மாவின்
வடுக்கட் சவுந்தரிதோய் வாழ்வே—படிக்குண்மிகு
௧௭௭. தண்டலை நீணெறியிற் சார்நீ ணெறிநாதா
தொண்டர்பணி ஞானம் பிகைதுணைவா—கண்டமுதை
௧௭௮. வாட்டு மதுர வசனியுட னேமகிழ்ந்து
கோட்டூர் மருவுங் கொழுந்தீசா—நாட்டுபுகழ்
௧௭௯. வெண்டுறை வேனெடுங்கண் மெல்லிதனக் கின்பருளும்
வெண்டுறை நாத விமலனே—தண்டமிழ்சேர்
௧௮௦. கொள்ளம்பூ தூர்மேவுங் கோலச் சவுந்தரிசேர்
வள்ளலே வில்வ வனேச்சுரா—தெள்ளுபுகழ்ப்
௧௮௧. பேரெயிலில் வாழ்பெரிய பெண்ணமுத மேவுகின்ற
சீருடைய மிக்க ஜெகதீசா—வார்கொள்ளிக்
௧௮௨. காடு குளிரக் கமழ்பஞ்சின் மெல்லடியாள்
கூடுமக்கி னீசா குருமணியே—நீடு
௧௮௩. திருத்தெங்கூ ரிற்பெரிய நாயகிசேர் தெய்வ
மருத்தங்கு வெள்ளி மலையே—தருத்தங்கு
௧௮௪. நெல்லிக்கா மேவு நிகழ்மங் களமாது
புல்லுகின்ற நெல்லிவனப் புண்ணியா—நல்லவர்சேர்
௧௮௫. நாட்டியத் தான்குடிவாழ் ரத்னகிரி நாதாநற்
றேட்டுமலர் மங்கை துணைவனே—யீட்டுதிருக்
௧௮௬. காறுயின் மேவுங் கயிலாச நாயகிசே
ரேறூர்ந்த கண்ணு யிரத்தானே—மீறுமெழின்
௧௮௭. மாதுமை நாயகிசேர் மார்பாகன் றூப்பூர்வாழ்
நாதா நடுதறிநஞ் ஞயகா—நீதி
௧௮௮. வலிவல மேவு மனத்துணையே கும்ப
முலைமாழை யங்கண்ணி மோகா—நலமேவு
௧௮௯. கைச்சின வெள்வளையாள் கண்ணாரக் கண்டுதின
நச்சியிடுங் கைச்சினநன் ஞயகா—மெச்சுமருட்
௧௯௦. கொண்டலே கோளிலிவாழ் கோளிலிநா தாவினிய
வண்டமர் பூங்குழலி மன்னவா—தொண்டர்தொழும்
௧௯௧. பாலினு நன்மொழியாள் பாங்கா திருவாய்மூர்ச்
சூலதரா வாய்மூர்ச் சுவாமியே—கோலமிகு
௧௯௨. யாழைப் பழித்தமொழி யாளொடுவே தாரணியம்
வாழத் திகழ்மறைக்காட் டீசனே—சூழமரர்
௧௯௩. வாகத்தி யான்பள்ளி மங்கைபா கம்பிரியாண்
மோக வகத்தீச முன்னவா—மாகுழகா
௧௯௪. கோடியின் மேவுகின்ற கோதைமை யார்தடங்கண்
டேடு மமிர்தகடச் செல்வனே—நீடுபுகழ்ச்
௧௯௫. சோழமண்ட லத்தினூற் றுத்தொண்ணூ றாகுமப்பா
லீழமண்ட லத்தி லிலங்குபதி—வாழ்வுமிகு

Koviloor Digital Library

[ஈழநாட்டுத்தலம் - ௨.]

௧௯௬. மன்று திருக்கோண மாமலையின் மாதுமைசேர்
பொன்னேகோ ணேசப் புராதனா—நன்னயஞ்சேர்
௧௯௭. கேதீச் சரத்திற் கௌரியுடன் வாழுகின்ற
கேதீச் சுராவேத கீதனே—நீதிதிக

[பாண்டிநாட்டுத்தலம் - ௧௪.]

௧௯௮. தொன்னிதியப் பாண்டிநன்னாட் டோங்கு மதுரைகயற்
கண்ணிமகிழ் சொக்கலிங்கக் கண்ணுதலே—யெண்ணுபுக
௧௯௯. ழாப்பனூர் மேவுகின்ற வம்பிகையோ டெவ்வுலகுங்
காப்பவனே யாப்பனூர்க் காரணா—பூப்புகழு
௨௦௦. மன்பார் திருப்பரங்குன் றுவுடை நாயகிசேர்
நன்பாற் பரங்கிரிநன் னாயகா—வின்பார்
௨௦௧. திருவே டகத்திற் றிகழுமுமா தேவி
மருவேட காத வரதா—பெருகுகொடுங்
௨௦௨. குன்றத் துறையுங் குயிலமுத நாயகிசேர்ந்
தென்று மகிழ்கொடுங்குன் றீச்சுரனே—துன்றுந்
௨௦௩. திருப்புத்தூர் மேவுஞ் சிவகாமி பங்கி
லிருக்குந் திருப்புத்தூ ரீசா—திருப்புனவா
௨௦௪. யிற்கட் டிகழ்கருணை யீசுரியைக் கண்டுமகிழ்
நற்கட் பழம்பதிநன் னாயகா—விற்கையனி
௨௦௫. ராமேச் சரமேவும் ராமநா தாவாசத்
தாமபர்வ தவர்த் தனிக்கின்பா—வோமமிகு
௨௦௬. மாடானை யம்பதியி லம்பா யிரவல்லி
நாடுகின்ற வாதிரத்ன நாதனே—நீடுமயிற்
௨௦௭. கூராருங் கட்போற் கொடிமகமா யிக்கருளுங்
காராருங் கானப்பேர்க் காளையே—போராரும்
௨௦௮. பூவணமின் னம்மை புகழ்பூ வணநாதா
தூவண மேனிச் சுடர்க்கொழுந்தே—தேவி
௨௦௯. துணைமாலை யோடுஞ் சுழியனகர் மேவு
மிணையாந் திருமேனி யீசா—வுணர்வாய்க்
௨௧௦. குழல்வாய் மொழியினொடுங் குற்றால மேவுங்
குழகா குறும்பலாக் கோவே—யழகுதிரு
௨௧௧. நெல்வேலி மேவு நிகரிலாக் காந்திமதிச்
செல்வமே வேணுவனச் சிங்கமே—பல்வளஞ்சேர்
௨௧௨. பன்னான் கெனும்பதிக் கப்பான் மாமலைநாட்
டக்கான்வன் றொண்டர்க் கருள்செய்து—மன்றுதிரு

[மலைநாட்டுத் தலம். - ௧.]

௨௧௩. வஞ்சைக் களத்திலுமை யம்மையுடன் வாழுகின்ற
கஞ்சமுகந் தஞ்சைக் களத்தப்பா—மிஞ்சுகொங்க

[கொங்குநாட்டுத் தலம் - ௭.]

௨௧௪. நாட்டிலவி நாசிப் பெருங்கருணை நாயகிபர்
நாட்ட மகிழவி நாசியப்பா—நீட்டுந்
௨௧௫. திடமார் திருமுருகன் பூண்டித் திருவா
வடைசேர் முருகா வுடையாய்—படியில்

Koviloor Digital Library

உகசு. பவானிகூ டல்சேர் பரைவேத மங்கைக்
கவாமிருந்த சங்கமுக வாதீ—தவாதுநித
உகஎ. மன்பர்தொழுஞ் செங்குன்றூ ரர்த்தநா ரீச்சுரிசே
ரின்பமே யர்த்தநா ரீச்சுரா—மன்புகழ்சேர்
உகஅ. வெஞ்சமாக் கூடல் விகிர்தே சுரிமகிழு
மின்சொற் புகழும்விகிர் தேசனே—விஞ்சுமதி
உகசு. யானனப் பண்மொழியோ டான கொடுமுடிவாழ்
கோனே கொடுமுடியாங் கொற்றவா—வேனெடுங்க
உஉ0. ணுற்றதிரு பாநா யகியோடு மாணிலையைப்
பற்று கருவூர்ப் பசுபதியே—மற்றப்
உஉக. பதியேழுக் கப்பாற் பகருநடு நாட்டிற்
றுதிசெய்து விண்ணோர் தொழவாழ்—முதிரு

[நடுநாட்டுத் தலம் - உஉ.]

உஉஉ. மரத்துறை யாநந்த நாயகிக்கன் பாகு
மரத்துறை நாதா வமலா—நிருத்தமுறு
உஉங. தூங்கானை மாடச் சுடர்க்கொழுந்தே பாங்கொருதா
யாங்கடந்தை நாயகிபங் காளனே—பாங்கான
உஉச. கூடலையாற் றூரிற் குலவும் புரிகுழலா
ளுட நெறிகாட்டு நாயகா—வாடுமிடை
உஉரு. நீலமலர்க் கண்ணியுட னீளெருக்கத் தம்புலியூர்ப்
பாலுகந்த நீலகண்டப் பண்ணவா—கோலத்
உஉசு. திருத்தினை யூரிற் றிகழுமிளங் கொம்போ
டிருக்குந் திருந்தீச் சுரனே—பெருத்ததிருச்
உஉஎ. சோபுர மாநகரிற் சோபுர நாயகிசேர்
சோபுர நாத சுவாமியே—மாபுனிதர்
உஉஅ. நட்பாந் திருவதிகை நாயகிமே வும்மதிகை
யப்பாவீ ரட்டானத் தம்மானே—யெப்போது
உஉகூ. நந்தூரு நாவலூர் நங்கைசுந்த ராம்பிகைசே
ரிந்தூர் சடைநாவ லேச்சுரா—சுந்தரமாம்
உங0. விர்த்தா சலமேவு மின்பெரிய நாயகியாள்
பர்த்தாவாய் மிக்க பழமலையே—கர்த்தாவாய்
உஙக. நெல்வெண்ணெ யூர்மேவு நீலமலர்க் கண்ணாள்சேர்
வில்வமுடி வெண்ணெய் விகிர்தனே—செல்வமிகுங்
உஙஉ. கோவல்வீ ரட்டங் குலவுசிவா னந்தவல்லி
மேவும்வீ ரட்டேச வித்தகா—மேவி
உஙங. யறையணிநல் லூரி லருளு யகிசே
ரறையணி நாதா வரனே—நிறைசே
உஙச. ரிடையாற்றில் வாழ்சிற் றிடைநா யகிசே
ரடலேற் றிடையாற் றரசே—நெடியதிரு
உஙரு. வெண்ணெய்நல்லூ ரிற்றடுத்தாட் கொண்ட விமலாவேற்
கண்மங்கை நாயகிசேர் காதலா—வண்ணத்
உஙசு. துறையூர்த் திருநகர்வா ழுந்துறையூ ரப்பா
நறையார்பூங் கோதையுமை நண்பா—முறையாம்
உஙஎ. வடுகூர் வடிவகிர்க்கண் மங்கைபங்கா மால்நன்
னிடவாழி யீந்தவடு கேசா—நொடியணிகை

Koviloor Digital Library

உ௩௮. மாணிக்க வல்லியுடன் மாணி குழிமருவு
மாணிக்க மேனி வரதனே—நீணிலத்திற்
உ௩௯. சேகறசீர் கொண்ட திருப்பா திரிப்புலியூர்த்
தோகைபுணர் தோன்றாத் துணைவனே—வாகுதிரு
உ௪0. முண்டீச் சரநகர்வாழ் முண்டகா கூரயிற்கண்
கொண்டகா னார்குழலி கொண்கனே—யண்டர்
உ௪௧. திகழ்பனங்காட் டூரிற் றிருப்புறவ மின்னாண்
மகிழ்பனங்காட் டீச வரதா—மிகுபுகழ்சே
உ௪௨. ராமாத்தூர் மேவு மழகிய நாயகியுட்
காமார்த்த மாமழகு காதலா—தேமார்த்த
உ௪௩. வண்ணா மலைசே ரருணா சலாகருணை
யுண்ணா முலைசேரு முத்தமா—வெண்ணும்
உ௪௪. பதினொரு பத்திரண்டிற் கப்பானற் பாலி
நதிசேர் புகழ்த்தொண்டை நாட்டிற்—கதியுதவு

[தொண்டைநாட்டுத் தலம் - ௩௨.]

உ௪௫. காஞ்சிபுரத் தேகாம் பரனேநற் காமாட்சி
வாஞ்சையொடு கட்டும் வரதனே—யாய்ந்தமறை
உ௪௬. போற்றலுறுங் கச்சியப்பா பொங்குதிரு மேற்றளிசேர்
மேற்றளி நாயகனே மிக்கோர்முன்—தோற்றமெழி
உ௪௭. லோணகாந் தீச்சரஞ்சே ரோணகாந் தீச்சரனே
காணு மனேகதங் காவதத்துத்—தாணுவாங்
உ௪௮. காவதனே கச்சிநெறிக் காரைக்காட் டேய்ந்தவருந்
தேவனே காரைத் திருநாதா—மேவுங்
உ௪௯. குரங்கணின்முட் டம்வாழுங் கோவேவா லீசா
விரங்குமிறை யார்வளையா ளின்பா—வரஞ்சார்
உ௫0. திருமா கறற்புவன நாயகிதோள் சேர்ந்து
மருவடைக்க லங்காத்த வாழ்வே—திருவோத்தூர்ப்
உ௫௧. போத விளமுலையாள் போற்றிடு நான்குபுய
நாதா திருவேத நாதனே—நீதிப்
உ௫௨. பனங்காட்டூர் மேவும் பனங்காட்டு நாதா
வணக்காட் டமுதவல்லி மன்றா—கணங்காட்டும்
உ௫௩. வல்லத்தில் வாழுமெங்கள் வல்லாம் பிகைபுணரும்
வல்லநா தாகருணை மன்னவா—நல்லதிரு
உ௫௪. மாற்பேறு மேவுகின்ற மான்கருணை நாயகியா
ளேற்பான மால்வணங்கு மீசனே—வாய்ப்பாகு
உ௫௫. முறநகர் மன்று முலைபாகா மிக்காக
வூறுங் கருணை யுமாபதியே—தேறு
உ௫௬. மிலம்பையங் கோட்டூர்க்கோ டேந்து முலையாள்
கலந்தசந்த்ர சேகரனே காமர்—துலங்குதிரு
உ௫௭. விற்கோல மேவி விளங்கு புராந்தகிசேர்
பொற்கோல மேவும் புராந்தகா—மிக்கதிரு
உ௫௮. வாலங்காட் டிற்றிகழ்வண் டார்குழலி போற்றநின்று
சாலநடக் குஞ்சூர்த்த தாண்டவா—ஞாலமகிழ்
உ௫௯. பாசூரின் மேவும் பசுபதி நாயகிசேர்
பாசூர நாதப் பராபரா—பேசுபுகழ்

Koviloor Digital Library

உசூ0. வெண்பாக்க மாநகரின் மேவுகனி வாய்மொழிசேர்
பண்பாவெண் பாக்கப் பரமனே—நண்பான
உசூக. கள்ளிற் பதிச்சிவா நந்தாகண் ணாருளேத்
தெள்ளுமா நந்தவல்லி சேர்புயனே—விள்ளரிய
உசூஉ. ஞானப்பூங் கோதையுட னற்றிருக்கா ளத்தியினிற்
கானவன்கண் ணப்புங்கா ளத்தியே—வானவர்கள்
உசூங. போற்றுதிரு வொற்றியூர்ப் பூவை வடிவுடையா
டேற்றுமா நந்தத் தியாகனே—தோற்றும்
உசூச. வலிதாய மேவும் வலிதாய நாதா
தலையான தாயம்மை சார்பே—நிலையார்
உசூரு. திருமுல்லை வாயிற் றிகழ்பா சுபதே
சுரனே கொடியிடையாந் தோகை—வரனேசொல்
உசூசூ. வேற்கா டெனுந்தலத்தில் வேற்கண்ணி பான்மருவும்
வேற்காட னேமயிலை மெய்ப்பதியி—லேற்காத
உசூஎ. வென்பைப்பெண் ணாக்கி யெழில்கற் பகவல்லிக்
கின்புற் றுறைகபா லீச்சுரனே—துன்பகற்றும்
உசூஅ. வான்மியூர் மேவும் வளர்சுந் தரமாதின்
பான்மே வியமருந்தே பால்வண்ணா—கான்மேவுங்
உசூகூ. கச்சூரா லக்கோயில் கன்னியுமை மாதினுள
மெச்சவிருந் திட்ட விமலனே—நச்சு
உஎ0. மிடைச்சுர மேவ் மிடைச்சுரா வெற்பின்
மடக்கொடி சேரு மணாளா—விடைக்கொடிசூழ்
உஎக. செய்யகழுக் குன்றிற் றிகழ்பெண்ணி னல்லாள்சேர்
மெய்யனே வேதகிரி வேதியா—பொய்யிலா
உஎஉ. வச்சிறு பாக்கத் ததிசுந் தரமின்னா
ளிச்சையுறும் பாக்கபு ரேசனே—கொச்சையிலா
உஎங. வக்கரை தன்னில் வடிவாம் பிகைமருவு
சிற்கன மேவுசந்த்ர சேகரனே—சொற்கொ
உஎச. ளரசிலியி லப்பெரிய நாயகியோ டாரு
மரசிலி நாத வரனே—யுரமேவுங்
உஎரு. காம ரிரும்பைமா காளக் குயின்மொழிசே
ரேம மலிமாகா ளேச்சுரா—நாமம்
உஎசூ. பகரிப் பதிகண்ழுப் பாணிரண்டுக் கப்பாற்
றிகழ்துளுவ நாட்டிற் சிறந்து—புகழ்கொண்ட

[துளுவநாட்டுத் தலம் - க.]

உஎஎ. கோகரண மேவுதிருக் கோகரண நாயகியாள்
பாகமுறு மாபலப ராபரா—வாகுறவே
உஎஅ. திண்பார் புகழ்காளத் திக்கப்பா லுத்தரத்தி
னன்பான் மருவி நனுகலுறும்—பண்பாங்

[வடநாட்டுத் தலம் - ரு.]

உஎகூ. திருப்பருப்ப தஞ்சேர் திருப்பருப்ப தேசா
பருப்பத மங்கை பதியே—விருப்பமுற
உஅ0. நீலப் பருப்பதஞ்சேர் நீலாம் பிகைமகிழு
நீலா சலநாத நித்தனே—மேலாகு

Koviloor Digital Library

உஅக. மாவினைக டங்கா வதத்தின் மனோன்மணிசேர்
தாவினைக டங்கா வதேச்சரரே—மேவுந்
உஅஉ. திருக்கேதா ரக்கெளரி சேருங்கே தாரா
விருக்குமுத லன்மறைபு மேத்த—வருக்கமுடன்
உஅந. பூதகண நாதர் புடைசூழ வானவரு
மாதவரும் போற்றி வரங்கேட்பப்—போதுகந்த
உஅச. பைங்கோதை வேற்கட் பசியநிறப் பார்ப்பதித்தா
யங்கோர் புறத்தி னமர்ந்திருப்ப—மங்காத
உஅரு. மாகயிலை யாகுநொடித் தான்மலையி லென்றென்றுந்
தாமமதா வீற்றிருக்குஞ் சம்புவே—போகசுக
உஅசா. மாறிலா வள்ளியொடு மால்யானை மங்கையொடு
மாறு தலத்து மருள்பெருக—மீறுமெழிற்
உஅஎ. குன்றுதொறு மாடுங் குமரவே ளைப்பயந்த
கன்றுமா னேந்துங் கரம்புயனே—வென்றிமிகு
உஅஅ. ஞானசம் பந்தர்திரு நாவரையர் வன்றொண்டர்
பானிகருந் தேவாரப் பாமாலை—மாநிலத்திற்
உஅகூ. பாக்குடனே சாத்தும் பதிகளிரு நூற்றெழுபா
ஞன்கன்றிக் காசிமுத லற்பதிகத்—தாங்குவைத்துப்
உகூ0. பாடி யிடங்களிலும் பண்புடைய வாதவூர்ப்
பீடுபெறு நாதன் பிறங்கருளாற்—சூடின்ற
உகூக. மாணிக்கம் போன்றதிரு வாசகத்தி னல்லிசைப்பா
பூணுந் தலங்களிலும் பொற்புடனே—நீணிலத்திற்
உகூஉ. பேறுகின்ற வெண்ணில் பெரும்பதிக ளோருமலை
வாறுதலா னோடு மகிழ்ந்திருக்குந்—தாணுவே
உகூந. சச்சிதா னந்த சதாசிவனே யன்பர்நெஞ்சில்
வைச்சிருக்கு நன்னமச்சி வாயனே—மெச்சு
உகூச. மகள சகள வகண்டிதமே யின்பந்
திகழ்தற் பரமே சிவமே—நிகழ்வுருபே
உகூரு. ரன்புடனே யுன்ற னைந்தா மத்தைமிகுந்
துன்பகலப் போற்றித் துதிப்பவருக்—கின்ப
உகூசா. நிதியே பரமசிவ நித்தியா னந்த
பதியே பசுபதியே பண்பார்—நதியுரவு
உகூஎ. மானந்த சோதியே யாதரவாய் நம்புமவர்க்
கானந்த மாக்குவிக்கு மையனே—யானந்த
உகூஅ. போக சிவானந்தப் பொற்பாத மென்னெஞ்சில்
யோகமுறச் செய்வா யுமைபாகா—வாகைபெறு
உகூகூ. நின்னன் பருக்கு நிகழுமெண் சித்தியொடு
பன்னலமு மெய்யன்பும் பாக்கியமு—மன்னவென்று
௩00. நந்தா தொளிர்நித்யா னந்த சுகவாழ்வுந்
தந்தருளுன் றாளே சரண்.

சிவக்ஷேத்திரசிவநாமக்கலிவெண்பா

முற்றுப்பெற்றது.

திருப்பாட்டுமுதற்குறிப்பகராதி.

பாட்டு.	பக்கம்.
அ	
அகத்தடிமை	௬௧௪
அகமலியன்பொடு	௩௫0,
அகலமார்தரை	௧௪௯
அகலிடமேயிட	௧௨௩௬
அகனமர்ந்தவன்	௫௭௫
அக்கரஞ்சேர்	௧௪௬
அக்கரவரை	௨௬௧
அக்கரவமரைக்	௨௪௭
அக்கரவ்வணிகல	௪௯௮
அக்காரணிவட	௬௪௧
அக்கிருந்தவரை	௭௫௯
அக்கிருந்தவாரமு	௫௧௭
அக்கினெடர	௫௭௯
அக்குமாமையும்	௧௨௧௩
அக்குலாமரையி	௯௧௨
அக்குலாமரையின	௭௨௪
அங்கங்களாறுநான்	௫0௪
அங்கங்களு	௮௪௬
அங்கட்கடுக்கை	௧௧0௬
அங்கண்மதி	௧௪௮
அங்கண்மாலுடை	௧௧௪௭
அங்கதிரொளி	௭௫௩
அங்கதிரோனவனை	௩௮௯
அங்கத்துறுநோய்	௮௫௫
அங்கத்தை	௧௧௯0
அங்கமாதுசேர்	௧௩௮
அங்கமாயாதி	௧௨௨௭
அங்கமாறுமரு	௬௨௭
அங்கமாறுமா	௧௫௭
அங்கமாறும்	௪௬
அங்கமும்வேத	௬௫௯
அங்கமுநான்	௭௮௬
அங்கமேபூண்டா	௬௪௫
அங்கமொடரு	௯௯
அங்கமொராறவை	௫0௯
அங்கமொராறுடை	௩௬௧
அங்கமொராறும்	௮௭௬
அங்கமோதி	௨௫௯
அங்கம்மொழி	௮௫௪
அங்கம்விரி	௧0௭
அங்கியல்யோகு	௪௪௫
அங்கையாரழல	௩௧௭
அங்கையாரழலே	௨௨௧

பாட்டு.	பக்கம்.
அங்கையிலங்	௮௨
அங்கையில்	௯௫௧
அங்கையுளன்	௮௩௮
அங்கையின்மூவிலை	௧௬௯
அங்கோல்வளை	௪௬௮
அசைந்தவன்	௧0௪௪
அசைவுறுதவ	௬௧௫
அச்சமில்லை	௧0௭0
அச்சம்மிலர்	௧௬௬
அஞ்சணைகணை	௭0௪
அஞ்சமொன்றறி	௬௯௩
அஞ்சப்புலனிவற்	௩௧௧
அஞ்சனமணி	௮௨௭
அஞ்சாதே	௨௭௯
அஞ்சாதேயுமக்	௮0௭
அஞ்சியல்லன்	௧௧௬
அஞ்சியாகிலு	௧௬௮
அஞ்சினர்க்கர	௯௨௭
அஞ்சினவியற்ற	௯௫௫
அஞ்சினையொன்	௧௧௬௭
அஞ்சுகொலா	௧௧௮௭
அஞ்சுங்கொண்	௯௭௭
அஞ்சுண்ண	௨௯௭
அஞ்சுமஞ்சு	௧௨0௨
அஞ்சுரும்பணி	௩௪௫
அஞ்சைக்களத்	௫௧௩
அஞ்சையுமடக்கி	௭௬௬
அஞ்சொண்புல	௪௯௪
அடர்செவிவேழ	௧௯௮
அடர்ப்பரிய	௨௬
அடலுளேறுய்த்து	௫௬௨
அடலெயிற்றரக்க	௧௨௭
அடலெருதேறு	௬0௮
அடலேறமருங்	௧0௯
அடலைக்கடல்	௧௧௯௭
அடல்வந்த	௧௩௩
அடல்விடை	௧௧௪௭
அடல்விடையின	௮௪௬
அடன்மலி	௬௧௬
அடிகளாலவாய்	௮௫௬
அடிகேளுமக்	௮௮0
அடிபுல்கு	௫௧௬
அடிமுடிகாண்கில	௧௬௬
அடிமுடிமாலயன்	௬௫

பாட்டு.	பக்கம்.
அடியாராயினீர்	௩௮௫
அடியவர்குழுமிட	௫௭௪
அடியவர்தொழு	௮௧
அடியார்சிலம்	௮௩0
அடியார்ந்த	௭௬௩
அடியிணை	௧௪0
அடியிரண்டோ	௫௨௨
அடுதலையேபுரி	௨0௪
அடுத்தடுத்த	௪௮௭
அடுத்தானையுரி	௧0௩௮
அடுத்தானையுரித்	௧0௪௪
அடுத்திருந்தா	௨௭௨
அடுத்துவந்த	௫௨௬
அடும்புங்	௩௭௭
அடைந்தார்தம்	௬௮௮
அடையரிமா	௮௧
அடையலர்	௫௯
அடையலார்புரஞ்	௬௬
அடையார்தம்	௪௫
அடையாதவர்	௬௩௪
அடையார்புர	௫௫௪
அடையும்வல்	௮0௪
அடைவாகிய	௨௪௪
அடைவிலோ	௧௩௪
அட்டகாலன்றனை	௧௧௩௯
அட்டதுகாலனை	௩௮௬
அட்டபுட்ப	௯௬௧
அட்டமாசித்	௧0௯௬
அட்டமாமலர்	௮௪௧
அட்டமூர்த்தி	௮௪௨
அட்டன்னழ	௮௫௫
அட்டானமென்	௧௧௭0
அட்டுமினில்பலி	௪௧௩
அட்டுமொலி	௩௮௭
அணங்குபாகத்த	௫௩0
அணங்குமை	௧௯௨
அணங்கோடொரு	௪௯௪
அணவரியான்	௨௪௭
அணிகொண்ட	௩௭
அணிகொளாடை	௧௭0
அணிதில்லை	௧௨௩௨
அணிபெறவட	௫௬௮
அணிமலர்	௮௩௩
அணியலைசூழ்	௮௯௧

Koviloor Digital Library

பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.
அணியனவுஞ்	௧௭0	அந்தமாயுல	௯௯௪	அரக்கனுண்மையை	௯௧0
அணியார்தொழ	௯௩௪	அந்தமில்புக	௯௭௩	அரக்கனுய	௮௨௪
அணியார்மலி	௫௫௫	அந்தமில்புகழ்	௮௫௯	அரக்கனாரு	௧௩௫
அண்டகபாலஞ்	௨0௪	அந்தமில்லா	௧௧௩௨	அரக்கனார்தலை	௧௯௧
அண்டக்கட	௧௨௩௩	அந்தமின்ஞான	௧0௯௮	அரக்கனார்வலி	௮௫௯
அண்டத்தாலெண்	௧௩௧	அந்தமுதலாதி	௨௯௪	அரக்கனாற்ற	௭௭௧
அண்டத்தண்ட	௧௨௩௧	அந்தமுமாதியு	௯௯0	அரக்கனாற்றலழித்	௩௯0
அண்டத்தானை	௧௨0௮	அந்தமுமாதியுமா	௫௮௯	அரக்கனாற்றலை	௧௫௮
அண்டமாயாதி	௧0௩௭	அந்தமுமாதியுமாகிய	௧௮	அரக்கனீரைந்	௧௨0௯
அண்டமாரமரர்	௨௪0	அந்தம்மறியாத	௪௪௯	அரக்கனெரிதர	௫௭௨
அண்டமாரிரு	௧௨௧௨	அந்தரத்திற்	௮௨௨	அரக்கனையலற	௧0௩0
அண்டமுதமேரு	௨௯௩	அந்தரமுழிதரு	௭௯௫	அரக்கனைவிர	௮௪௩
அண்டமேழன்று	௧௧௯௩	அந்தரத்தேர்	௮௩௧	அரக்கன்முடி	௮௨௫
அண்டரமரர்	௩௧௧	அந்தாமரை	௯௭0	அரக்கன்முடிதோ	௧௧௯
அண்டர்களுய்ந்திட	௯௭	அந்திதிரிந்	௯௧௧	அரக்கன்வலி	௧௧0
அண்டர்தொழு	௧௧௫௭	அந்திமதியோடு	௪௯௮	அரக்கன்வல்	௧௨௧௯
அண்டர்வாழ்வு	௪௧௭	அந்தியுநண்	௭௪௪	அரக்கன்றன்	௧0௪௩
அண்டவர்	௧0௯0	அந்தியைநல்ல	௩௮௨	அரக்கன்றான்	௮௯௧
அண்டவாணர்	௯௪௪	அந்திவட்ட	௧௨00	அரக்கின்மேனி	௨௧௫
அண்டவானவர்	௫௮௧	அந்திவட்டத்திங்கள்	௨௧0	அரங்காவ	௯௧௯
அண்ணலால	௮௫௪	அப்பனுலவா	௮௯௩	அரசளிக்கு	௧0௯௯
அண்ணாமலையி	௧௧௭0	அப்பனியம்மை	௧௨௨௮	அரணிலா	௪௨
அண்ணாமலை	௫௯௨	அப்பியன்ற	௫௮௨	அரணையுறு	௧௪௮
அண்ணாவுந்	௭௫௪	அப்போது	௧௧௪௮	அரப்பள்ளி	௩௯௮
அதிரர்தேவ	௩௮0	அமைவனதவரிமுகிய	௧௨௧	அரவச்சடை	௯௩௩
அதிராவினை	௧௧௯௪	அம்பனைய	௧00௮	அரவணைப்பயின்	௪௭௩
அத்தகுபொரு	௮௫௧	அம்பினோர்தடங்	௭௮௭	அரவணையான்	௯௯௮
அத்தகுவானவர்	௮0௩	அம்பினோர்விழி	௫௩0	அரவத்தால்	௫0௭
அத்தமண்டோய்	௧௧	அம்பொனுலவாய்	௮௫௯	அரவமாட்டுவ	௫௫௯
அத்தன்முது	௯௮0	அம்மலர்	௯௫௭	அரவமார்த்த	௧௧௩௧
அத்தாவுன்	௧௨௩0	அம்மானேயாக	௭௫௨	அரவமார்த்தன	௧௨௧௫
அத்தியினீருரி	௧௫௧	அம்மானையமு	௧௨௧௯	அரவமுந்நீரணி	௧௧௫௩
அத்தியினுரிதனை	௩௧௯	அம்மானையருந்	௧௧௭௧	அரவமே	௧௧0௨
அத்திரபணி	௫௪௪	அம்மான்சேர்	௧௪௭	அரவமேகச்சதாக	௧௧0௨
அந்தகனை	௧௨௩௨	அம்மைபயக்கு	௮௪௫	அரவம்பூண்ப	௯௨௯
அந்தணர்களா	௩௨௫	அயமுகவெயினிலே	௧௮௩	அரவம்வீக்கிய	௮௩௫
அந்தணர்வேள்வி	௩௧௯	அயலவர்பரவ	௧௫௪	அரவார்கர	௭0
அந்தணல்லா	௧0௧௧	அயர்வுளோ	௧௩௪	அரவார்ந்த	௭௯௩
அந்தணாளர்	௮௧௫	அயனவனு	௮௪௫	அரவார்புனலன்	௩௨௧
அந்தணாளர்தம்	௧௮0	அயனுமாறு	௫௭௨	அரவிரிகோட	௪௩0
அந்தணாளனுன்	௧௭௫	அயனுமாலுமாய்	௧௩௧	அரவினணையா	௯௧௧
அந்தண்காழிப்	௧௧௭௫	அயனொடுமாலிந்	௨௫௨	அரவினிற்றுயி	௧௨௭
அந்தண்காழியரு	௨௫	அயனொடுமெழி	௫௯௮	அரவினொடாமை	௨௧௧
அந்தண்சோற்று	௩௮௮	அயனொடன்றரி	௫௨௭	அரவின்வாயின்	௧0௧
அந்தண்பனல்	௮௭௫	அயிலாரம்	௯௩௩	அரவுநகையினர்	௫௩0
அந்தண்பூந்	௧0௩௪	அயிலாருமம்பதனு	௧௮௧	அரவுற்றநாணு	௫00
அந்தண்மதி	௪௧௫	அயிலுடை	௮௭௯	அரவேரல்குலா	௮௪௯
அந்தண்மாதவி	௧0௧௧	அயிலுறுபடை	௧௨௧	அரவொலியாக	௧௧௯௭
அந்தண்வரை	௧௧௫௭	அரக்கர்தமுப்புர	௨௫௧	அரவொலியில்	௭௭௭
அந்தமாதியயனு	௩௨௧	அரக்கனுண்மை	௯0௫	அரறுறைதரு	௫௯௮

Koviloor Digital Library

பாட்டு.	பக்கம்.
அரனையுள்குவீர்	௧௫௮
அரிசிலின்கரை	௯௧௨
அரிச்சந்திர	௫௧௩
அரிச்சந்திரத்துள்	௫௯௪
அரிச்சிராப்பகலை	௩௯௧
அரிச்சுற்றவினை	௪
அரித்தநம்பி	௯௧௨
அரித்துநம்மேலவர்	௧௮௮
அரிபிரமர்தொழு	௨௧௮
அரியகாட்சி	௧௧௭௮
அரியநான்மறை	௮௪௨
அரியநான்மறையா	௩௫௭
அரியபெரும்	௯௫௮
அரியயனிந்திர	௧௦௪௦
அரியயன்றலை	௩௯௧
அரியனவங்கம்	௨௮
அரியானையந்தணர்	௧௨
அரியுநம்வினை	௭௫௪
அரியொடு	௧௨௪௨
அரியொடுமலரவ	௪௫௧
அருகடைமாலை	௩௮௧
அருகரொடுபுத்த	௯௭௧
அருகெலாங்	௫௧௧
அருக்கனங்கி	௯௨௭
அருக்கன்பாதம்	௧௨௧௧
அருஞானம்	௪௯௩
அருத்தமதாவது	௮௫௭
அருத்தமும்மனை	௩௭௬
அருத்தம்பெரிது	௭௪௩
அருத்தனையர	௧௦௩௦
அருத்தனையறவனை	௧௯௫
அருநெறியமறை	௯௨
அருந்தவத்தின்	௩௭௩
அருந்தவத்தோர்	௨௦௭
அருந்தவமாமுனி	௪௪௪
அருந்தவர்க	௧௨
அருந்தானையன்பு	௧௧௩
அருந்திறலமர	௧௦௪௨
அருந்திறலவுண	௧௯
அருந்துணையை	௧௩
அருந்தும்பொழு	௭௦௫
அருப்பிணர்முலை	௭௬
அருப்புப்போன்	௯௧௨
அருப்போட்டு	௯௦௪
அருமணித்தடம்	௭௦௦
அருமணியைமுத்தினை	௨௧௦
அருமலரோன்	௬௧௩
அருமறைஞான	௧௦௦
அருமறைநான்	௫௩௩
அருமறையனை	௧௫௦
அருமையனெளி	௪௪௯
அரும்பற்றப்பட	௪
அரும்பார்ந்தன	௧௦௦௫
அரும்பித்தசெஞ்	௯௬௯
அரும்புங்குரும்பை	௯௪௪
அரும்பெருஞ்	௪௨
அருவாரதோர்	௫௦௪
அருவாரொரு	௮௫௨
அருவரைதாங்கின	௬௪௩
அருவரைபொறுத்த	௧௩௬
அருவரையேந்திய	௩௮
அருவனுயர்ந்தி	௨௭௨
அருவனலவாய்	௮௫௬
அருவிபாய்தரு	௬௨௮
அரைகெழுகோவண	௧௯௮
அரைக்குஞ்சந்தன	௪௬௨
அரைசேரரவ	௪௦௬
அரைபுல்கு	௧௮
அரைப்பாலுடு	௧௨௦௧
அரையாரழனுக	௬௬௮
அரையார்கலை	௭௦
அரையார்கீளொடு	௩௯௫
அரையார்கோவண	௧௫௧
அரையார்தரு	௯௪௦
அரையார்விரி	௫௬௯
அரையிலாருங்	௩௬௯
அரையோடலர்	௯௪௫
அரைவிரிகோவண	௪௪௪
அலங்கல்சேர்	௬௭௩
அலங்கற்சடை	௨௫௫
அலங்கன்மலி	௧௩௩
அலருநீருங்	௧௨௦௯
அலர்மகண்	௫௭௩
அலரும்மெறி	௬௩௪
அலைக்கின்ற	௫௮௬
அலைசேர்புன	௪௬௨
அலைத்தோடு	௧௨௩௫
அலைபுனலாவடு	௪௭௫
அலைபுனற்கங்கை	௧௩௬
அலைமலிதண்	௧௨௩
அலைமலிதண்புனல்	௯௨௨
அலைமல்குதண்	௪௧௧
அலையடுத்த	௩௨௦
அலையாரும்புன	௫௧௭
அலையார்கடனஞ்ச	௨௭௩
அலையார்தண்புனல்	௩௯௫
அலையார்ந்தபுனற்	௩௧௧
அலையார்ந்தபுனற்கங்	௨௩௪
அலையார்புனலை	௯௦௧
அலையார்புனல்சூடி	௨
அலையார்புனல்	௪௯௩
அலையார்புனற்	௪௩௦
அலையார்வினைத்திற	௩௧௧
அலைவளர்	௮௯௦
அலைவளர்தண்	௮௯௨
அல்லலடியார்	௪௫
அல்லலாகவைம்	௪௭௦
அல்லலாயின	௮௨௩
அல்லலில்லையரு	௨௦
அல்லலின்றி	௬௮௫
அல்லலுள்ளன	௧௭௯
அல்லலென்செயு	௪
அல்லலோடரு	௬௩௩
அல்லல்வாழ்க்கை	௧௨௦
அல்லனென்று	௫௪௫
அல்லன்மிக்க	௨௩௦
அல்லாடரவ	௧௦௨௭
அல்லாய்ப்பகலா	௩௦௮
அல்லிநீள்வயல்	௧௧௩௮
அல்லிமலர்	௯௮௩
அல்லிமலர்நாற்ற	௨௫௩
அல்லியமலர்	௮௨௭
அல்லியானர	௩௯௨
அல்லும்பகலு	௧௦௮௩
அவனென்று	௨௯௮
அவ்வதிசை	௪௯௬
அவ்வினைக்கிவ்	௧௧௬௮
அழகரையடிகளை	௫௫௪
அழகியோமிளை	௪௬௬
அழலங்கை	௧௨௧௫
அழலதோம்பி	௪௨௭
அழலதோம்பு	௮௬௬
அழலுமிழங்கை	௨௩௨
அழவல்லவ	௫௬௧
அழனிரொழுகி	௩௧௫
அழன்மல்கு	௪௫௨
அழித்தவன்கா	௧௦௪௪
அழிப்பரைவர்	௪௬௧
அழிமல்கு	௭௮
அழிவல்லமண	௬௩௪
அழுக்குமெய்	௧௧௧௦
அளக்குநெறி	௩௯௦
அளவிடலுற்ற	௫௮௪
அளித்தவானஞ்சு	௫௨௫
அளித்துவந்தடி	௭௦௦
அளிமலர்க்கொன்றை	௨௫௦
அளியானையண்ணி	௪௪௩
அளியிணர்குழ	௬௪௨
அளைப்பையரா	௯௦௧
அளைவளர்	௧௯௮

Koviloor Digital Library

பாட்டு.	பக்கம்.
அலைவாயிலா	௯௮௨
அன்னலெக்கடக்	௪௮௧
அறங்கிளரு	௯௮௨
அறத்தாலுயிர்	௮0௯
அறந்தெரியா	௩௭௨
அறப்பன்னி	௧௧௭0
அறமழிவு	௧௪௮
அறிவலங்கு	௩௭௨
அறிவிலமன்	௩௩௭
அறிவிலாத	௪௨௭
அறிவிலாவரக்க	௨௮௧
அறிவிற்சமணு	௯௯௨
அறிவினன்	௧௭௭
அறுத்தவங்க	௮௯௫
அறுத்தவன்	௧0௧௪
அறுத்தானை	௫௯௩
அறுத்தான்	௧0௪௫
அறுபதும்	௭௩௩
அறுமையிவ்	௮௩௮
அறைகலந்த	௩௨௧
அறைமல்கு	௪௧௪
அறையார்	௯௯௧
அறையார்கட	௩0௪
அறையார்கடல்	௯௮௩
அறையார்கழ	௯௭௮
அறையார்கழலன்	௭௯௨
அறையார்கழன்	௯௩௪
அறையார்புன	௫0௨
அறையார்புனலு	௧00
அறையார்பொற்	௧௯௨
அறையும்பூம்	௧௨௫
அறையுமைபங்	௧0௯௩
அறையும்மரி	௮௮௩
அற்றமறைபா	௧௯௪
அற்றவொருடி	௧௯௧
அற்றன்றி	௧௧௭௧
அற்றுப்பற்றின்	௯௨௭
அனமிகுசெல்	௫0௯
அனலொருகை	௫௧௩
அனற்படு	௨௫௧
அனலிசர்சடை	௮௧௪
அனுசயப்பட்	௭௮௪
அன்பனையடி	௭௭0
அன்பாலடி	௭௭௨
அன்பிருனஞ்ச	௩௨0
அன்புடையானை	௫௩௧
அன்புறுசிந்தை	௩௩
அன்றடற்கால	௯௧௧
அன்றயன்சிர	௧௬௭
அன்றவானிழ	௧௨௧

பாட்டு.	பக்கம்.
அன்றாலின்கீ	௫௯0
அன்றாலின்கீழிரு	௧0௫௯
அன்றாலின்னிழற்	௫௨௯
அன்றிந்நின்ற	௯0௫
அன்றியலுருவு	௬௧௮
அன்றியவமண	௧0௯௫
அன்றினாரி	௫௭௪
அன்றினவர்	௨0௭
அன்றின்முட்டா	௭௪௫
அன்றுதானரக்	௪௩௨
அன்றுமுப்புர	௮௯௯
அன்றுவந்தெனை	௧௫௭
அன்னங்கன்னி	௯௪0
அன்னஞ்சேர்	௩௪௧
அன்னந்தாவு	௧0௧௧
அன்னமலி	௨௭௧
அன்னமன்னந்	௩௯௯
அன்னமன்னும்	௧௧௨௯
அன்னமாம்	௯௭௪
அன்னமென்ன	௧00
அன்னம்பாவிக்கு	௪
அன்னையே	௩௫௩
ஆ	
ஆகத்துமை	௪௧0
ஆகத்துமையடக்கியா	௫௪
ஆகத்தோர்	௧௧0௮
ஆகநல்லார	௧0௧0
ஆகந்தோயணி	௩
ஆகமத்தொடு	௮௫௮
ஆகம்பத்த	௧0௩௮
ஆகம்மழகாய	௭0
ஆகாதாஞ்சண்ட	௨௫௭
ஆக்கமர்சீறூர்	௧௪௯
ஆக்கும்மழிவும்	௧௧௪
ஆக்கையாற்	௧௧௮௧
ஆங்கணைந்த	௯0௫
ஆசடைவானவ	௭௭௮
ஆசிபாரமொழி	௧௧௧௪
ஆசைபலவறு	௭௪௩
ஆசைவன்	௧௧௯௧
ஆச்சியப்பேய்	௧0௯௪
ஆடலமர்ந்தானை	௫௧௮
ஆடலரவசைத்	௭௩
ஆடலரவசைத்த	௧0௧௮
ஆடலரவத்	௮௨௧
ஆடலரவ	௧0௧௮
ஆடலரவார்	௫௪௩
ஆடலழகு	௯௪௪
ஆடலான்பாட	௧0௯௩
ஆடலிலைய	௩௧௩

பாட்டு.	பக்கம்.
ஆடலேற்றிரு	௮௫௯
ஆடல்புரிந்த	௯௫0
ஆடற்புரியு	௧0௮௭
ஆடனுமசை	௧௧௧௯
ஆடன்மாமதி	௧௨௯
ஆடன்மால்	௮௪௪
ஆடிநின்று	௨௭௧
ஆடியசைந்	௯௯௧
ஆடினப்பாறு	௨
ஆடினொருவர்	௨௯௯
ஆடினர்கான	௯௮௫
ஆடும்மினன்புடை	௨0௪
ஆடும்மென	௧௧௭௮
ஆடுவாய்	௭௧௫
ஆடைதவிர்த்தறங்	௨௨0
ஆடையொழித்	௯௨௧
ஆட்சியாலலரா	௨௪
ஆட்சியுலகை	௧௧௯௪
ஆட்டான்	௧0௫௧
ஆட்டினப்படி	௩௯௨
ஆட்டினன்முன்	௪௯௪
ஆட்டுவித்தா	௧௨௨௧
ஆட்பாலவர்	௧௧௭௮
ஆணலார்பெண்	௭௯௧
ஆணுகிப்பெண்	௯0௩
ஆணிபோல	௩௯௨
ஆணியல்	௧௪௮
ஆணும்பெண்ணு	௯௪0
ஆணும்பெண்ணுமா	௯௯௮
ஆண்டானையடி	௧௯௧
ஆண்டானைவாளே	௩௮௪
ஆதரமணொடு	௩௩
ஆதர்சமண	௨௩௧
ஆதல்செய்	௧௧௩0
ஆதிக்கணன்முக	௫௪௯
ஆதித்தனங்கி	௨௭0
ஆதிநாதனடல்	௨௯௨
ஆதிநாதனமரர்	௭௮௪
ஆதிப்பாலட்ட	௧௨0௧
ஆதிமாமலையன்	௯௯௪
ஆதிமாலயனவர்	௩௩௭
ஆதியடியை	௧௯௪
ஆதியந்தமா	௮௯௪
ஆதியனுதிரை	௫0௮
ஆதியனுதிரையன்	௭௯௮
ஆதியனையெறி	௩௪௨
ஆதியாயநான்	௮௧௪
ஆதியாயவ	௧௨௧௨
ஆதியாரந்த	௨௧
ஆதியானண்ட	௩௧௧

Koviloor Digital Library

பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.
ஆதியானரியய	௨௦௭	ஆலநீழலமர்ந்த	௧௯௭	ஆறுபட்டபுன்	௯௯௬
ஆதியானை	௧௨௦௮	ஆலநீழலார்	௮௫௬	ஆறுவந்தணை	௮௦௦
ஆதியிற்பிரம	௧௯௧	ஆலநீழலுகந்த	௮௬௭	ஆறேறுசடை	௧௦௩௭
ஆதியுமறிவு	௨௩௧	ஆலந்தானுகந்	௧௦௪௮	ஆறேறுசெஞ்	௧௧௪௨
ஆதியும்மர	௧௧௨௪	ஆலமாமரவ	௧௦௯௫	ஆறேறுசென்னி	௧௧௯௨
ஆத்தமாமய	௧௯௩	ஆலமுண்ட	௩௧௫	ஆறேற்கவல்ல	௯௬௨
ஆப்பிநீரோ	௧௨௦௯	ஆலமுண்டழ	௫௨௫	ஆறைவடமாக	௧௧௭௦
ஆமயந்தீர்த்	௧௨௩௧	ஆலலாவிருக்கை	௨௮௯	ஆறொன்றிய	௨௫௧
ஆமலிபாலு	௪௨	ஆலாலமிடற்	௨௧௮	ஆற்றநல்லடி	௮௦௩
ஆமையரவோ	௩௨௬	ஆலாலமுண்	௩௨௦	ஆற்றநீள்சடை	௪௬௫
ஆம்பலதவ	௧௩௦	ஆவிளமதி	௧௬௫	ஆற்றலடல்	௮௫௮
ஆயமுடையது	௩௧௧	ஆலின்கீழறங்	௨௭௦	ஆற்றலுடைய	௧௦௯
ஆயம்பேடை	௭௪௬	ஆலுமாமயிற்	௧௦௪௩	ஆற்றவும்	௬௦௨
ஆயாதனசமயம்	௫௬௭	ஆலும்மயிலின்	௧௦௩	ஆற்றுனேயாறணி	௮௦௯
ஆயிரந்தாமரை	௬௯௬	ஆலைசேர்தண்	௭௪	ஆற்றையு	௧௧௨௭
ஆயிரந்திங்க	௭௦௫	ஆலைப்படு	௫௯௪	ஆனணைந்தேறு	௩௯௮
ஆய்ந்தகைவா	௩௯௦	ஆவாகியாவி	௧௨௨௮	ஆனமொழியானை	௭௭௫
ஆய்ந்தவன்	௧௦௪௭	ஆவாசிறு	௯௩௭	ஆனவலியிற்	௫௭௮
ஆரட்டதேனு	௯௫௮	ஆவாவென	௯௪௦	ஆனிடையைந்து	௩௦௭
ஆரணப்பொருளா	௫௪௫	ஆவிக்கமல	௧௧௨	ஆனிலங்கிள	௨௩௬
ஆரநாகமாம்	௮௫௬	ஆவியாயவி	௬௫௩	ஆனூராவுழி	௬௫௫
ஆரலாஞ்சுறவ	௬௫௬	ஆவியைப்	௬௦	ஆனைக்காவி	௧௧௮௫
ஆரழலுருவ	௨௪௦	ஆவிலைந்தமர்	௬௧௭	ஆனைக்குலமிரி	௧௧௪௮
ஆராதவின்	௬௮௭	ஆவினிலைந்	௩௦௦	ஆனையாறென	௨௯௫
ஆராய்ந்தடி	௭௦௬	ஆவின்பால்	௮௨௩	ஆனையுரித்த	௧௧௬௯
ஆராருமூவிலை	௨௦௬	ஆவின்மேவிய	௭௮௪	ஆன்முறை	௫௪௦
ஆரார்திரி	௨௧௬	ஆவுற்ற	௧௦௮௩	இ	
ஆரிடம்பாடி	௩௪௫	ஆழியங்கை	௧௪௯	இகலுறுசுட	௫௫௩
ஆரியந்தமி	௩௫௬	ஆழியனு	௮௧௮	இகழுங்கால	௭௯௫
ஆருமறியா	௩௦௧	ஆழியாற்கரு	௩௪௪	இகழுந்தகை	௬௦௯
ஆருமெதிராத	௧௦௯௭	ஆழியானு	௯௦௬	இகழுமாறெங்ஙன	௧௭௫
ஆருருவவுள்	௯௦௫	ஆழியுணஞ்ச	௩௯	இகழுருவொடு	௫௬௯
ஆரூரத்தாவை	௧௨௪௩	ஆழ்கடலென	௧௧௧௭	இகழ்ந்தவன்	௪௨௦
ஆரூர்தில்லை	௧௧௭௦	ஆழ்தருமால்	௧௯	இகழ்ந்தருவரை	௧௦௬௫
ஆரூர்மூலட்	௧௨௧௯	ஆழ்ந்து	௧௪௫௩	இகழ்ந்தானை	௯௮௮
ஆரெரியா	௪௩௧	ஆளானவடி	௬௮௨	இகழ்ந்துரை	௫௩௩
ஆர்த்ததோலு	௩௮௦	ஆவானோர்க்	௧௨௦௩	இங்குகதிர்	௧௦௬௦
ஆர்த்தமென்	௧௫௭	ஆறணிசெஞ்	௭௪	இங்ஙனம்	௭௩௯
ஆர்த்தவராட	௧௬௯	ஆறணிந்ண்முடி	௭௪௫	இசைந்தவாறடி	௫௮௩
ஆர்த்தவென	௩௦௮	ஆறுடுசடை	௫௭௫	இசைவிளங்கு	௮௮௪
ஆர்த்தாயாடா	௩௨	ஆறிஞெடு	௬௮௬	இச்சையரி	௫௭௯
ஆர்த்தாரு	௬௪௪	ஆறுகந்தாரங்க	௧௬௯	இடங்கொண்	௬௩௭
ஆர்த்தானை	௩௮௩	ஆறுகால்	௧௨௦௨	இடந்தபெம்மா	௧௧௩௦
ஆர்த்தான்கா	௧௦௧௩	ஆறுகொண்ட	௫௬௧	இடபமேறியு	௧௨௧௪
ஆர்த்தெழு	௨௫௦	ஆறுகொலா	௧௧௮௭	இடமயிலன்ன	௬௦௭
ஆர்ந்தவனே	௩௯௩	ஆறுசடைக்	௪௫௮	இடரினுந்தள	௪௭௩
ஆர்வலநம்	௮௯௩	ஆறுசூடியடை	௫௬௨	இடர்கெடு	௭௨௬
ஆலங்கோலத்	௧௪௧	ஆறுசூடுமணி	௮௪௨	இடர்பாவ	௭௧௮
ஆலத்தார்	௧௦௬௯	ஆறுடைச்சடை	௫௦௩	இடறினார்	௨௨௩
ஆலநிழலிரு	௪௫௯	ஆறுடைச்சடையெம்	௮௬	இடுகுரவினை	[illegible]

Koviloor Digital Library

பாட்டு.	பக்கம்.
இடிப்பான்	கoகஅ
இடியாரேறு	ககஉஉ
இடியார்கட	கூ௩ச
இடியார்குர	ககo
இடுகுதன்	கoசஉ
இடுக்கண்பட்	ககஅஉ
இடுக்கொன்று	ககஎ
இடுவாரிட்ட	எஎக
இடைமரு	கஉஉo
இடையறியேன்	கoகஉ
இடையிர்	கoகக
இடைவித்த	உகக
இட்டதிட்ட	கஉகஉ
இட்டமதமா	அகச
இட்டமாயின	கூஉ
இட்டறும்	கஉஎ
இட்டிதாக	கஉசo
இட்டுழமணி	௯ச௩
இணர்த்து	கஉகச
இணையொருவர்	கoகூo
இண்டைச்	உகஎ
இண்டைமலர்	கஉக
இண்டைவண்ண	உகக
இத்தனையா	கூo
இந்தேரே	கூகக
இந்நெயந்	சகஅ
இந்திரத்தை	எஉக
இந்திரனுக்கு	கஅஎ
இந்திரனேறு	அகஎ
இந்திரன்பிரம	சஉ
இந்திரன்மால்	ககஎ
இந்தவர்தெமு	எஅக
இமயமெல்லா	கூக௯
இமையவரந்தி	கூஅ
இமையவர்	உசக
இமையாதுயி	கககo
இமையாமுக்	கoசக
இமையோர்	ககoo
இம்மாயப்	௩சo
இம்மையம்மை	கoக
இம்மைமானவர்	ச௩ச
இயக்கர்கின்னர	கஉக௯
இயக்கர்கின்னரர்	கஎக
இயக்குமிந்த	அகஉ
இயமன்றூதரு	ககஎக
இயலாடிய	ககக
இயலிசையெனு	சo
இயலுமாறெனு	கoக
இயலும்விடை	அஎ௯
இயலுளோர்	உசக
இயல்பாய	௩o
இயல்வழி	அ௩௩
இரக்கமில்லொழி	௯அக
இரக்கமில்	உஅஉ
இரக்கமின்றி	ககஎ
இரக்கமுடை	கச௯
இரக்கமுன்	௩௯கூ
இரக்கமொன்று	௩க௯
இரக்கமொன்	கoஉக
இரக்காவன்	சகூ௩
இரண்டுகோலா	ககஅகூ
இரண்டுமா	கஉoக
இரப்பவர்க்	உஅஎ
இரவணைநிருபது	அக௯
இரவத்திடு	கூகச
இரவலர்	௯௯உ
இரவுஞமெல்	சoகூ
இரவிலாயிடு	௩oஎ
இரவன்பக	௯எக
இரவிடையொன்	அஉ
இரவிச்சட	எஎக
இரவிமதிய	கoஉக
இரவிந்திரிவோர்	ககக
இரவும்பகலு	உஎ௩
இரவுமல்கின	௯௯௩
இரவோடுபக	அக
இராவணஞ்	௯௩
இராவணன்	அ௯எ
இருக்குநின்	சo
இருடருதன்ப	உகஉ
இருபியமுத்தன்	௯எ௩
இருபிலாத	அ௩௩
இருபிலரும்	கஉஉகூ
இருந்தவன்	ககச
இருந்துசொல்லு	கoஎo
இரும்பார்ந்த	உ௯
இரும்புகை	கo௩க
இரும்புகொப்	க௩உ
இருப்புயர்	உoக
இரும்பொனிக்	உகூ
இரும்பொன்	௯எo
இருவரறிபாத	கூஅக
இருவர்க்கெரி	கசo
இருவர்க்கெரியாய	சசஎ
இருவர்தேடரு	கoகக
இருவர்காடிய	ககo
இருளாயவுள்ள	ககக
இருளிர்...	...
இருளைப்புரையு	கoகூ
இரைக்கும்	கூசச
இரைக்கும்புனல்	எ௩
இரைமண்டி	எஉ
இலகும்முடி	கூ௩ச
இலங்காலஞ்	அகக
இலங்குபூண்	கoக
இலங்கைக்	௩கக
இலங்கைக்கிறை	கூகஉ
இலங்கைத்தலை	கசo
இலங்கைநகர்	சககூ
இலங்கைமனன்	சoஉ
இலங்கைமன்ன	௯சகூ
இலங்கைமன்னனி	கூக௯
இலங்கைமன்னனெ	ககஎசகூ
இலங்கைமன்னனை	கஉக௯
இலங்கைமன்னனையே	உச
இலங்கையரக்க	க௯க
இலங்கையரசை	கo௩௯
இலங்கையரிறைஞ்	உ௯கூ
இலங்கையர்	கூஉஉ
இலங்கையர்மன்	கக௩கூ
இலங்கையர்வே	அச
இலங்கையிரா	௯௩கூ
இலங்கைவேந்	எக௯
இலங்கைவேந்த	சஉக
இலங்கைவேந்தனி	கoசஉ
இலங்கைவேந்தனிரா	௩௩o
இலங்கைவேந்தனிரு	உகூ௩
இலங்கைவேந்தனெ	௯சக
இலங்கைவேந்தன்	ச௩க
இலவஞாழ	௩௩க
இலவிசழ்	கூஎஎ
இலவினர்	கூசஉ
இலைகொள்	எ௩௯
இலைத்தலை	ககசக
இலைமருதே	கூகூo
இலைமலிதா	அக௯
இலைமலிந்த	எ௩கூ
இலைமலிபொழி	சசக
இலைமல்கு	௯௯க
இலையாருஞ்	௩சo
இலைபாலஞ்பா	௩கூ
இலைபார்தரு	கசo
இலையினர்	எஅக
இலையிஞர்சூல	கூகஅ
இலையுடைய	௩o௯
இல்லகவிளக்கது	ககஅ௩
இல்லக்கோல	உஉஉ
இல்லாடிச்சில்	கoகூக

பாட்டு.	பக்கம்.
இல்லானையெவ்	௧௭௪
இவணமை	௭௧0
இழவொன்று	௧௨௨௫
இழித்தன	௨௯௨
இழித்துகந்தீர்	௫௬
இழிவித்சவா	௨௯௬
இழுக்கின்	௨௯௬
இழைக்கும்மெழு	௯௧௩
இழைதழுவு	௨௧0
இழைத்தநாளெல்	௭௨௭
இழைத்தவிடை	௧0௨௬
இழைமேவு	௯௮௨
இழையார்ந்த	௭௬௩
இழைவளர்	௮௩௨
இழைவளர்தண்	௯௯௬
இளகக்கமல	௧௧௨
இளமதி	௨௪௮
இளமைகை	௧௨௧௫
இளவெழுந்த	௧௨௧0
இளிபடு	௨௧௧
இளைப்பறி	௯௯0
இளையகால	௪௨௧
இறங்கிச்	௧௧௩௧
இறந்தாரென்பு	௩௯௫
இறந்தார்க்கு	௧௫
இறவாமே	௫௪௮
இறுத்தானை	௧௬௩
இறுமாந்	௧௧௮௨
இறைகளோ	௭௩௩
இறைக்கொண்ட	௭௫௬
இறைநின்றிலங்கு	௫௨௮
இறையவனீச	௬௭
இறையவன்	௧0௯௧
இறையார்	௧0௫௮
இறையுறு	௮0௩
இறையூண்டு	௯௩௬
இறையென்	௧௨0௬
இறைவராயி	௫௭௨
இறைவனமர்	௧௪௭
இறைவனுரிமை	௫௨௯
இறைவனெ	௧௨௪௨
இறைவனை	௧௨௫
இனதளவி	௧0௧௭
இன்குரலிசை	௬௧௬
இன்பமுண்	௧௮௮
இன்பமும்பிற	௩௭0
இன்பம்வேண்	௧௮0
இன்புடை	௬௨௪
இன்றரைக்கண்	௧௧0௬
இன்றுமன்று	௨௩0
இன்றுளார்	௩௭௭
இன்னங்	௧௨0௬
இன்னவாறென்	௬௬௩
இன்னவுரு	௨௬௪
ஈ	
ஈங்கைப்பே	௫௯௬
ஈசனுயல	௭௩௩
ஈசனீசனென்	௧௨0௭
ஈசனெமை	௨௬௪
ஈசனென்னை	௧௨0௭
ஈசனேற	௬௫0
ஈசனையெவ்	௧௨௩௭
ஈசன்முது	௯௮௧
ஈடலிடப	௫௨௮
ஈட்டுமாநிதி	௧0௭0
ஈண்டாரழ	௬௪௨
ஈண்டாவிரும்	௩௧0
ஈண்டுசெஞ்	௮௪௨
ஈண்டுதுயி	௧௫0
ஈரமேது	௧௧௫௧
ஈரவார்	௯௩0
ஈர்க்குநீர்	௩௬௭
ஈர்க்கும்	௧0௮0
ஈழநாட்டு	௧௨௩௯
ஈறுய்முத	௫௬௬
ஈறில்	௧௨௧௨
ஈனஞானி	௮௬௮
ஈன்றாளு	௧0௧௧
ஈன்றுகொண்	௧௧௧0
உ	
உகலியாழ்	௭௫
உங்கைகளா	௨0௪
உச்சிமேல்	௩0௭
உச்சிவெண்	௧௨௧௨
உஞ்சேனை	௧௨௨௧
உடம்புபோர்	௪0௩
உடம்பெனு	௧௧௮௯
உடம்பை	௧௧௯௬
உடலின்வினை	௧௧௬௨
உடலுமுயிரு	௧௫௨
உடலைத்துற	௧௧௯௧
உடறனை	௪௮௧
உடன்பயில்	௧௫0
உடுத்ததுவும்	௮௪௭
உடுத்தவன்	௨௩௮
உடைதரு	௨௮௭
உடைதுறந்த	௩௫
உடைநவின்	௧௨௧
உடையர்கோவ	௩௪௬
உடையார்தகில்	௭௩
உடையிலாதுழ	௫௫௧
உடையிலார்	௬௪
உட்டங்கு	௨௮
உண்டாய்	௫0
உண்டுடுக்கை	௪௬
உண்டுடுக்கைவிட்	௬௭
உண்டுநஞ்சு	௭0௯
உண்ணலாகா	௫௪0
உண்ணவண்ண	௫௧0
உண்ணற்கரிய	௧0௨
உண்ணுதறங்கா	௧௧௬௧
உண்ணுமுலை	௧0௨௫
உண்ணுவரு	௧௧00
உண்ணிலா	௩௯௯
உண்ணினும்	௪௭௫
உதிரநீரிறைச்	௭௩௪
உதிரும்மயி	௧0௨௫
உதைத்தவன்	௧0௧௪
உதைத்தார்	௬௪௧
உதையுங்	௩௯௫
உந்திச்சென்று	௧0௭௧
உந்திநின்று	௧0௪௧
உந்திவரு	௧00௯
உமையலா	௨௯0
உமையவளை	௧0௪௭
உமையாளொரு	௨௭௬
உம்பரார்	௯௭௭
உம்பராலு	௬0௫
உம்பராளுழி	௧௮௬
உம்பரானை	௭௭0
உம்பரும்	௯௮௯
உயர்தவ	௧௧௮௪
உயர்ந்த	௬௭0
உயர்ந்தவ	௫௪௩
உயர்ந்தேன்	௯௪௬
உயர்வரை	௧௯௯
உயிராவண	௭௧௩
உயிர்நிலை	௭0௩
உய்த்தகா	௧௧௯௨
உய்த்தவன்	௮௧௬
உய்த்தாட்டி	௧௭
உய்யலுறுவீர்	௬௯0
உய்யவேண்	௬௪0
உய்யுங்	௫௫௬
உய்யுமாறிது	௬0௨
உரக்கடல்	௩௨௫
உரக்காநெருப்	௩௯௭
உரங்கெடுப்பவ	௩௧௪
உரங்கொடுக்கு	௩௨௧
உரத்தினு	௪0௯

Koviloor Digital Library

திருப்பாட்டுமுதற்குறிப்பகராதி.

பாட்டு.	பக்கம்.
உரமதித்த	௮௮௭
உரமுஞ்ற	௪௨௬
உரமன்றுயர்	௨௩௭
உரமென்று	௧0௩௫
உரமுன்ன	௫௪௪
உரம்புரி	௬௩௧
உரவினைத்	௧௧௮௧
உரவன்புலி	௧0௨
உரவார்கலை	௧௧௨
உரவீர்சடை	௧௫௧
உரவெங்	௪௧௪
உரிஞ்சன	௧0௭௭
உரிஞ்சாய	௧௧௪௧
உரித்தது	௧௫௧
உரித்தவன்	௧0௪௧
உரித்தன்று	௫௪௨
உரித்தானைக்	௫௭௮
உரித்தானைமத	௪௪௨
உரித்திட்டா	௧௬௨
உரித்தகூறை	௧0௧௧
உரித்தவுடை	௧0௧௪
உரித்துய	௧௫௩
உரிமைப்புடை	௫௪௫
உரிபாயுல	௧௧௩௬
உருகிட	௮௧
உருகிமூன்	௧௯௭
உருகுமனத்	௯௬௭
உருகுடாருன்	௭௧௭
உருத்திரனை	௨௨௮
உருமவிசட	௮௪௪
உருமுன்று	௫௭௮
உருவசித்	௧௨௫
உருவமுமுயிரு	௧0௨௮
உருவமர	௨௪௨
உருவனர்	௧௪௭௧
உருவார்ந்த	௭௭
உருவிற்	௧0௨௭
உருவினு	௧0௭௮
உருவினை	௫௮௩
உருவுடைய	௧0௨௨
உருவும்	௫௧௧
உரைக்குக்கிழி	௧0௪0
உரைசெய்தால்	௧௩0
உரைசெய்	௨௮௧
உரைசேரு	௬௭௬
உரைதரு	௧௮
உரைதவர்	௪௩௧
உரைபக்	௧௩௮
உரைப்பாருரை	௧௧௧
உரைமாலை	௧௭0
உரையரு	௪௬௩
உரையாதா	௧0௩௩
உரையாரும்	௫௪0
உரையார்	௧௭௪
உரையினில்	௨௧௧
உரையினு	௧௮௪
உரைபுண	௮௧0
உரையும்	௧௧௩
உலகமுட்குந்	௨௪௫
உலக்கொன்	௧௧௨
உலந்தவ	௫௩௧
உலந்தார்	௪௮௪
உலந்தார்தயங்	௫௧௧
உலந்தார்தம்	௬௪௭
உலந்தார்வெண்	௧௬௧
உலவும்	௧௫௪
உலந்திட்	௯௬௨
உழக்கே	௧௧௬௪
உழுதமா	௧௨௧
உழைத்துந்	௮0௨
உழையாடு	௨௫௪
உழையுரித்	௪௮௫
உளங்கை	௨௯௧
உளங்கொள்	௧௯௬
உளங்கொள்வா	௧0௭௬
உளரொளி	௯௮௫
உளைந்தான்	௧௧௯௬
உளையாவலி	௬௭0
உள்குவா	௧௧௯0
உள்ளேர்	௧0௯௩
உள்ளதன்	௪௯௧
உள்ளத்தீரே	௯௯௬
உள்ளமா	௭௫0
உள்ளமிக்	௧௧௬௨
உள்ளாமுன்	௧௪௨௪
உள்ளமுன்னி	௧௯0
உள்ளமே	௭௧௧
உள்ளமோரி	௯௯௧
உள்ளவா	௫௮௬
உள்ளாருத	௬௪௬
உள்ளுமா	௨௪0
உறவனு	௬௪௬
உறவாவா	௧௨௫௯
உறவியுமின்	௫௧௫
உறவிலி	௬0௮
உறவுபேய்	௯௨
உறவுமாகி	௧௪௧
உறிகொள்	௯௮0
உறித்தலை	௮௯௭
உறிபிடித்	௫௧௯
உறிமுடித்த	௯௩௫
உறுகயிறாசல்	௧௬௬
உறைப்புடை	௪௬
உறைவது	௧௧௮0
உறைவள	௨௧௨
உற்றநோய்	௪௭௩
உற்றபோதல்	௫௬௧
உற்றவர்க்கு	௧0௪௮
உற்றவர்தம்	௯௬௮
உற்றவன்	௧0௧௪
உற்றனனுற்	௧0௨௪
உற்றாரா	௨௨௫
உற்றாருளரோ	௧௧௮௨
உற்றாரிலா	௨௯௫
உற்றார்சுற்	௧0௬௨
உற்றானமக்	௧0௭
உற்றானை	௧0௭௨
உற்றிருந்த	௫00
உற்றுமை	௧௬0
உற்றுலவு	௪௧௩
உன்மத்த	௧௨00
உன்னிப	௬௭௯
உன்னியிரு	௫௯௭
உன்னியெப்	௪௮௮
உன்னிவான	௬௨௯
உன்னுரு	௭௧௮
ஊ	
ஊகமுகி	௪௬௭
ஊக்கினன்	௭௭௭
ஊசலாமர	௯௪௪
ஊசலானல்ல	௯௨௯
ஊடினு	௯௯
ஊட்டிக்	௧௮௯
ஊட்டிநின்	௫0௯
ஊணுபபலி	௧௧௬௯
ஊணடானு	௧0௬௭
ஊத்தை	௪0
ஊரரவங்	௫௮
ஊராகி	௧௧௯0
ஊராரு	௧௧௬
ஊரானை	௮௭௨
ஊரிடை	௨௧௨
ஊரியார்	௧0௯௯
ஊரிலா	௧௨௧௫
ஊரினின்	௨௭௧
ஊருமா	௪௯௧
ஊருமாதேச	௧௮௬
ஊருமயர	௫௨௮
ஊருவாவு	௯0௬
ஊமரதிர்	௧௨௯

Koviloor Digital Library

பாட்டு.	பக்கம்.
ஊர்கின்ற	௧௩௩
ஊர்திரை	௬௯௬
ஊர்திரைவேலை	௧௧௧௯
ஊர்தொறு	௯௩௮
ஊர்ந்த	௩௯௮
ஊர்மதி	௧௪௬
ஊர்வதோர்	௧௭௮
ஊழிகளா	௭௯௮
ஊழிதொறூழி	௧௧௬௭
ஊழித்தீ	௨௮௫
ஊழியந்த	௧௦௧
ஊழியளக்க	௬௯௬
ஊழியாய	௧௧௬
ஊழியாரூழி	௨௭௦
ஊழியுமின்	௨௪௫
ஊழியூழி	௧௧௫௨
ஊழியூழிவை	௩௩௬
ஊழிவண்ண	௨௯௬
ஊறியார்தரு	௧௦௬௬
ஊறிவாயன	௧௦௦௦
ஊறிஞரோ	௪௦௦
ஊறுநம்பி	௯௯௨
ஊறுடை	௮௯௧
ஊற்றுத்	௧௨௨௫
ஊனங்க	௮௧௮
ஊனடைகின்ற	௨௧௪
ஊனடைந்த	௨௪௧
ஊனத்திரு	௪௯௪
ஊனத்து	௮௫௫
ஊனத்தை	௧௦
ஊனப்பே	௨௮
ஊனமரா	௫௧௦
ஊனமரும்	௫௫௧
ஊனமர்	௧௨௫
ஊனமிலரா	௨௯௩
ஊனமில்லா	௧௧௩௨
ஊனவரு	௧௦௫௦
ஊனவினை	௬௮௯
ஊனவன்	௮௧௬
ஊனாகியுயி	௩௩௧
ஊனாயுயிரா	௧௦௦௧
ஊனாயுயிர்	௯௦௭
ஊனாருடை	௬௦௯
ஊனார்தலை	௪௩௯
ஊனிகந்	௩௨௧
ஊனியன்ற	௧௧௧௪
ஊனிலாவி	௧௦௪௧
ஊனிலாவியுயிர்க்	௪
ஊனிலுயிர்	௧௧௭௩
ஊனினுள்	௫௦௩
ஊனுடுத்தி	௨௯
ஊனுடைப்	௬௨௪
ஊனுடைவெண்	௨௧௪
ஊனுலா	௬௩௧
ஊனுற்ற	௪௪
ஊனேறு	௭௧௧
ஊனேறுவேலி	௩௭
ஊனைப்பெருக்கி	௧௧௨௬
ஊனையார்	௧௮௧
ஊனையுற்	௫௯௯
ஊனையே	௯௫௩
ஊனொடு	௩௩௬
ஊனோக்கு	௫௩
ஊன்கரு	௯௮௭
ஊன்பாயு	௨௭௯
ஊன்மிசை	௭௩௩
ஊன்றலை	௪௮௮
ஊன்றும்	௯௩௬
ஊன்றோயும்	௪௧௧
எ	
எக்கராமமண்	௮௫௯
எங்கள்	௪௯௦
எங்குமாகி	௨௮௦
எங்குமேது	௫௫௬
எங்கேபோ	௩௦௧
எங்கேயென்	௮௨௮
எங்கேனும்போ	௯௧௬
எங்கேனும்மிரு	௩௧
எங்கேனும்யா	௬௪
எச்சனிண	௧௨௩௩
எச்சிலிள	௧௨௨௦
எஞ்சலில்	௮௭௧
எடுத்தவரக்க	௧௦௯
எடுத்தவல்	௧௧௫௦
எடுத்தவல்லர	௧௨௩
எடுத்தவன்	௫௭௬
எடுத்தவன்றருக்	௮௫௨
எடுத்தவாளர	௨௯௬
எடுத்தவெல்	௫௮௭
எடுத்தனனெ	௧௧௨
எடுத்தனன்	௮௦௩
எடுத்தானை	௧௧௦
எடுத்தான்புய	௪௪௭
எடுத்தான்றரு	௫௭௧
எட்ட	௩௬௦
எட்டாந்	௧௧௧௫
எட்டுகந்தார்	௧௬௧
எட்டுக்கொ	௧௧௮௭
எட்டுநாண்	௯௬௦
எட்டுமூர்த்தி	௧௨௦௨
எண்டிசை	௮௬௨
எண்டிசைக்கு	௩௦௦
எண்டிசைக்கும்	௨௪௮
எண்டிசைபால	௧௨௪
எண்டிசையா	௪௧௯
எண்டிசையோ	௧௦௪
எண்டிசையோர்	௧௦௭௪
எண்ணகத்	௫௮௫
எண்ணமது	௧௦௦௯
எண்ணரும்	௨௪௯
எண்ணவ	௧௦௨௪
எண்ணுதம	௧௦௧௨
எண்ணுநெறி	௪௫
எண்ணுநெறியிலெய்	௯௪௪
எண்ணார்	௧௦௮௫
எண்ணார்தரு	௨௪௪
எண்ணார்தங்	௬௦௪
எண்ணார்முத்த	௧௧௨
எண்ணார்மும்	௧௦௯௩
எண்ணானை	௧௮௯
எண்ணிடை	௧௨௧
எண்ணிநாளு	௭௬௭
எண்ணியிரு	௯௦௫
எண்ணிலா	௩௭௭
எண்ணிலாவிற	௮௦௫
எண்ணிலீ	௧௧௯
எண்ணிறந்த	௫௭௫
எண்ணுகே	௬௪௫
எண்ணுடை	௨௩௧
எண்ணுமடி	௪௪௭
எண்ணுமெழுத்	௩௧௮
எண்ணுமொ	௩௨௪
எண்ணுறேன்	௬௩௪
எண்பதும்	௫௦௭
எண்பெரிய	௧௦௦௯
எண்மேலு	௧௧௬௫
எத்தாய	௩௩௧
எத்திக்கு	௬௫௮
எத்திசையு	௯௮௭
எத்திசையுந்	௯௧௧
எத்தீபுகினு	௭௪௭
எத்தைக்	௧௦௪௦
எந்தமது	௧௦௭
எந்தமாதவ	௭௧௦
எந்தம்	௯௧௫
எந்தளி	௭௦௪
எந்தைபெம்	௧௧௪௦
எந்தையிருப்	௭௪௩
எந்தையிரும்	௭௭௨
எந்தையிவ	௯௮௩

Koviloor Digital Library

பாட்டு.	பக்கம்.
எந்தைபீச	௯௫௦
எந்தையெம்	௧௨௧௨
எந்தையென்	௧௦௮
எந்தையே	௧௨௧௫
எந்தையை	௨௦௨
எப்போதும்	௭௦௮
எம்பட்டம்	௯௧௧
எம்பந்த	௭௨௪
எம்பிரானிமை	௧௮௧
எம்பிரானென்	௧௧௯௧
எம்பிரானே	௯௫
எம்பெருமா	௬௨௬
எம்மானெந்	௧௦௮௯
எம்மானெம்	௧௦௬௨
எம்மானெம்மனை	௫௨௨
எம்மான்	௧௪௭
எம்மையா	௭௧௦
எயிலது	௮௬௭
எயிலார்	௧௦௯௫
எய்தவொண்	௮௦
எய்தானை	௪௪௫
எய்ப்பா	௧௮௧
எய்பா	௧௦௫
எரிகினர்	௮௨௭
எரிகின்ற	௧௨௫௪
எரிகொண்	௧௮௨
எரிகொண்மேனி	௬௫௦
எரிசரம்	௪௯௭
எரிதர	௬௬௨
எரிதரு	௬௨௧
எரித்த	௯௪
எரித்தவன்	௧௦௯௪
எரித்தானை	௫௮௫
எரித்து	௨௭௧
எரிபெருக்	௧௨௧௯
எரிப்பிறை	௨௮௫
எரியலா	௨௮௧
எரியன	௬௬௫
எரியினை	௧௦௧௭
எரியார்கமை	௨௫
எரியார்சடை	௯௯௨
எரியார்புன்	௬௨௭
எரியார்மழு	௧௫௭
எரியார்வேற்	௭௬௭
எரியிறு	௬௮௮
எரிபுமழு	௫௯௮
எரிபொரு	௧௨௧
எரிபொருவண்ண	௨௧௫
எருக்கம்	௧௨௧௦
எருதேற	௧௫௮
எல்லாஞ்	௯௯௯
எல்லாமுன்	௧௦௯௧
எல்லாவுல	௫௦௦
எல்லியும்	௯௬௪
எல்லையில்	௧௨௭
எல்லையில்புக	௯௯
எவரேனு	௮௧௧
எவ்வவர்	௮௧௧
எழிலாரிராச	௧௧௮௯
எழிறிகழு	௨௪௧
எழின்மலை	௯௭
எழுதுகொடி	௭௧௫
எழுதுபாவை	௧௨௦௫
எழுந்த	௯௯௯
எழுந்துல	௬௭௬
எழுவாயிறு	௨௧௨
எளியனு	௧௯௮
எளியாய	௨௫
எள்கவின்றி	௧௦௪௧
என்விழு	௯௪௮
எறிகடல்	௯௨௪
எறிச்சுருங்	௧௨௫
எறிசுற	௮௮
எறிந்த	௬௧௧
எறிந்தானே	௫௯௪
எறியார்	௧௬௯
எறியார்பூங்	௧௮௧
எற்றான்	௯௧௯
எற்றினுரே	௨௨௪
எற்றுக்கன்	௧௨
எற்றே	௮௧௦
எனக்கினி	௬௧௪
எனக்கென்	௫௮௨
எனைத்தோ	௧௦௨௭
என்பலா	௨௮௧
என்பிருத்தி	௯௧௭
என்பிறுர்	௯௯௮
என்பிறுற்	௯௧௨
என்பினை	௧௭௬
என்புபூன்	௨௧௯
என்புமா	௬௦௪
என்பொடு	௧௧௭௧
என்போனேன்	௧௧௪௧
என்போனே	௬௮௮
என்போடர	௯௧௧
என்றன்றுன	௭௯௨
என்றுனிம்	௧௦௯௨
என்றுநா	௧௨௫௭
என்றுமரி	௧௧௪௦
என்றுமோ	௯௧௧
என்னதெழி	௧௧௧௨
என்னபுண்	௪௨௯
என்னமாதவ	௭௯௭
என்னனென்	௭௮௪
என்னிலா	௨௬௨
என்னை	௧௨௦௬
என்னையொப்	௧௨௦௦
ஏ	
ஏகாசமாம்	௬௨௦
ஏசற்று	௮௮௯
ஏசினவல்ல	௫௬௨
ஏடமர்	௨௪௩
ஏடவிழ்	௬௨
ஏடியனுன்	௪௨௮
ஏடுமதி	௨௮௫
ஏடுமலி	௬௪௨
ஏடிலா	௫௪௮
ஏடுலாமலர்	௫௧௯
ஏடுவாளிள	௯௨௭
ஏடேறு	௨௨௮
ஏடேறுமலர்	௮௮௬
ஏணழிந்த	௨௫௦
ஏதநன்	௧௭௯
ஏதமிக்க	௧௯௯
ஏதமில	௧௧௬௭
ஏதமிலரரிய	௪௯௬
ஏதம்வந்	௭௬௬
ஏதினையேத	௪௭௧
ஏதுக்களா	௧௧௭௮
ஏதுமொன்	௧௦௭௦
ஏத்தரும்	௨௪௧
ஏத்தாதிரு	௯௮௧
ஏந்தரா	௧௪௧
ஏந்துதிணி	௯௧௦
ஏந்துமழு	௭௧௪
ஏயவன்	௮௧௯
ஏயிலானை	௧௨௦௪
ஏய்ந்த	௮௧௦
ஏய்ந்தறுத்	௨௭௧
ஏய்ந்தவுமை	௨௭௪
ஏரமர்	௬௦௪
ஏராரும்	௧௦௧௫
ஏராரெரு	௯௪௧
ஏரார்	௫௨௫
ஏரிக்கன	௯௧௦
ஏரிசையு	௬௭௪
ஏரிஞருல	௨௪
ஏரிஞர்	௧௦௫௫
ஏலமலர்	௬௬௧
ஏலமலி	௭௪

Koviloor Digital Library

பாட்டு.	பக்கம்.
எலமாரில	௧௨௬
எலமார்	௮௮௧
எலமிலவங்க	௯௩௪
எலுந்தண்	௩௩
எவடுசிலை	௨௩௨
எவணைத்த	௭௧௨
எவமிக்க	௨௩0
எவமேது	௭௮௫
எவலத்தால்	௩௫0
எவார்சிலை	௯௭௮
எவியிடர்	௪௩௫
எவிலாரு	௭௯
எவும்படை	௭0
எழிசை	௭௪0
எழித்தொன்	௯௬0
எழுகொலா	௧௧௮௭
எழுமாமலை	௧௨0௨
எழுமூன்று	௨00
எழைமா	௪௭௩
எழைமார்க	௩௯
எழைமானுட	௪௬௨
எழைவெண்	௮௩௫
எழ்கடல்	௧0௫௭
எறதேறு	௪௫௫
எறனாரேறு	௭
எரூர்தரு	௨௪௪
எறிலெரு	௪0௯
எறினரே	௯௫௧
எறினாரிமை	௨௭௩
எறினார்	௯௮௪
எறுகந்தி	௩௩
எறுகந்தேற	௨௮௭
எறுடனே	௧௯௨
எறுதாங்கி	௫௪0
எறுபுகழ்	௪௧௩
எறுபேணி	௧௧௩௭
எறுமால்	௬௯௨
எறுமொன்	௧௧௩௪
எறேறி	௨௨௬
எறேறியேழு	௯௬௪
எறேற்ற	௬௯௮
எறேற்றமா	௬௯௮
எெருப்பா	௯௩௩
எற்றநீர்	௨௩௨
எற்றூர்	௧00௨
எற்றூனை	௪௮௧
எற்றூனையே	௭௨௨
எற்றுவெல்	௫௮௭
எனக்கொம்பு	௧௮௬
எனத்திரள்	௧௧௪௮
எனத்திள	௭௨0
எனத்தெயி	௬௬௮
எனப்பூண்	௮௯௬
எனமருப்	௮௨௭
எனமருப்பினொடு	௫0௯
எனமருப்பினொ	௧0௭௪
எனமன்ன	௩௩௩
எனமாயிட	௭௭௭
எனமாலய	௩௩௮
எனவுரு	௫௭௮
எனவெண்	௧௨௧௩
எனவெண்கொம்	௯௧௨
எனவெண்கொம்பி	௧௧௩௬
எனவெயி	௪௯௫
எனவேட	௫௩
எனையோர்	௪0
என்றவந்த	௮௧௯
என்றுகொண்	௧0௪0
ஐ	
ஐத்தான	௧௨௨௪
ஐந்தலை	௩௭௯
ஐம்பெரு	௭௧௭
ஐயனந்த	௧௨௧௩
ஐயனல்ல	௧0௭௮
ஐயனே	௧0௭௧
ஐயனேயழகே	௨௭
ஐயனையத்த	௧0௨௪
ஐயனொய்ய	௧௧௧௩
ஐயன்காண்	௭௧௩
ஐயன்முது	௯௮0
ஐயிரண்டு	௪௫௭
ஐயினான்	௮௧௨
ஐவகை	௪௬௧
ஐவணமாம்	௭௩௯
ஐவாயர	௮0௮
ஒ	
ஒக்கமுப்	௪௮௫
ஒடுங்கும்	௯௩௫
ஒட்டாத	௬௯௮
ஒட்டிநின்ற	௩௯௧
ஒட்டியாட்	௭௪௨
ஒண்டிற	௪௯௬
ஒண்டுவரார்	௫௮
ஒண்ணிற	௫௭௮
ஒண்பிறை	௧௧0௩
ஒண்பொனா	௨௨௪
ஒத்தவட	௯௪௧
ஒப்பரிய	௭௯
ஒப்பா	௩௩௯
ஒப்பிலா	௪௮௫
ஒப்பொரு	௭௫0
ஒருகால	௯௬௯
ஒருகாலத்தொரு	௭௧௬
ஒருகாலத்தொன்	௭௨௧
ஒருக்கமுன்	௧௩௬
ஒருக்கிய	௫௭௪
ஒருக்கும்மன	௭௭௨
ஒருங்களி	௩௬௧
ஒருசுடரா	௩௨0
ஒருத்தனா	௩௮0
ஒருத்தனாருலக	௫
ஒருத்தனை	௭௭0
ஒருத்தனோங்	௫௮௯
ஒருத்தி	௧௯௪
ஒருத்திதன்	௧௧0௪
ஒருத்தியை	௭௮௧
ஒருபிறப்	௯௬௨
ஒருமணி	௪௮௧
ஒருமருந்தாகி	௮௭0
ஒருமுழ	௧0௩௮
ஒருமேகமுகிலாகி	௨0௯
ஒருமைபெண்	௬௨
ஒருமையே	௩௫௨
ஒருவடிவின்றி	௭0௫
ஒருவராயி	௨௨௨
ஒருவரானு	௪௨௬
ஒருவரு	௭௬௬
ஒருவரைத்	௧௧௯௬
ஒருவரையு	௭௭௫
ஒருவனாகி	௧௨௧௩
ஒருவனாயுல	௭௩௧
ஒருவனையு	௬௪௭
ஒலிசெய்த	௨௨௪
ஒலிநீர்	௬௬௧
ஒல்லையாறி	௮௧௩
ஒழித்திடு	௯௬௫
ஒழிப்பா	௩௨
ஒழுகலரிதழி	௧௪௯
ஒழுகியபுனன்	௪௫௧
ஒழுகுமாட	௩௩௮
ஒளிகொண்	௫0
ஒளிகொள்	௭௯௭
ஒளியார்	௧௧0
ஒளிரிளம்	௪௯௮
ஒளிரும்	௭0
ஒளிர்தரு	௯0௮
ஒளிவளர்	௧௧௮0
ஒளிறுபுலி	௧0௨௬
ஒள்ளரிக்கனார்	௪௨௩
ஒள்ளிதுப்பா	௧௧௯௬

Koviloor Digital Library

பாட்டு.	பக்கம்.
ஒள்ளியர்	௭௯௪
ஒள்ளியா	௮௨௮
ஒழித்தாய்	௫௩
ஒழித்தானு	௪௦௭
ஒற்றியூரு	௧௧௧௫
ஒற்றியூருமொ	௧௧௦௬
ஒற்றியூரன்	௮௯௦
ஒற்றைமேய	௧௩௧௫
ஒன்பது	௧௧௮௭
ஒன்பதொன்ப	௧௨௦௨
ஒன்றலா	௧௪௩
ஒன்றவே	௬௯௪
ஒன்றாயுல	௧௦௮௨
ஒன்றாலுங்	௧௦௨௨
ஒன்றிர்	௧௨௪௦
ஒன்றியாலும்	௫௪௭
ஒன்றிய	௭௬௬
ஒன்றியிரு	௧௦
ஒன்றுகொலா	௧௧௮௩
ஒன்றுதானறி	௬௨
ஒன்றுபோலு	௧௪௦௭
ஒன்றும்பல	௧௩௯௬
ஒன்றுவெண்	௧௨௦௩
ஒன்றொன்	௫௬
ஒன்னார்	௭௨
ஓ	
ஓங்கிமே	௧௮௨
ஓங்கியாரண	௯௯௨
ஓங்கியழலிலை	௬௨௨
ஓங்கியுயர்	௭௫௩
ஓங்குமால்	௬
ஓசைபொலி	௨௧௧
ஓடம்வங்	௮௦௦
ஓடையன்	௯௦௩
ஓதிக்கிரி	௮௭௯
ஓதிக்கு	௭௬௧
ஓடேகல	௪௪௯
ஓடைசேர்	௭௯௮
ஓட்டகத்	௭௨௦
ஓட்டை	௧௧௨௪
ஓணப்பிரா	௬௪௫
ஓதக்கட	௫௧௯
ஓதமலி	௬௮௬
ஓதமாகட	௫௫௧
ஓதமார்	௪௨௮
ஓதமார்கடலின்	௪௪௩
ஓதமால்கட	௮௪௦
ஓதம்வங்	௧௧௧௧
ஓதவண்ண	௧௨௧௫
ஓதாமலன்	௪௫௨
ஓதிநன்	௯௬௪
ஓதிமண்டல	௬௮௪
ஓதிமாமலர்	௧௦௨௮
ஓதியஞான	௨௬௫
ஓதியாரண	௧௦௩௧
ஓதியாரு	௨௮௦
ஓதியெல்	௮௪௮
ஓதியெகழி	௫௧௦
ஓதியோத்	௮௬௦
ஓதிவாயதும்	௯௮௨
ஓதிற்றிரு	௯௩௧
ஓதினத்	௪௨௫
ஓதினார்வேத	௭
ஓதுமைபங்	௬௬௫
ஓதுவித்தா	௧௦௫௧
ஓத்தரவங்	௪௫௦
ஓமத்தோடய	௫௨௭
ஓமையன	௭௭௨
ஓம்பிமேனன்	௧௧௦௯
ஓயாதவரக்	௪௫௭
ஓராதா	௨௭௯
ஓரியல்	௮௯
ஓருடம்	௭
ஓருடம்பினை	௧௦௫௭
ஓருருவாயினை	௧௪௨
ஓருமொன்	௭௪௨
ஓர்மாத	௨௬
ஓர்த்துள	௭௬௬
ஓர்த்தன	௧௦௨௪
ஓர்வரு	௧௯௦
ஓலிடன்	௬௬௧
ஓவணமே	௧௦௯௪
ஓவாதமறை	௯௦௪
ஓவிலாதிமி	௯௮௨
ஓவுநாளு	௧௨௭
ஔ	
ஔவதன்மை	௧௨௧௫
க	
கங்காளர்	௨௭௮
கங்குல்	௪௮௭
கங்கைசேர்	௭௧
கங்கைதங்	௧௧௧௦
கங்கைதங்கிய	௧௨௧௫
கங்கைதிங்கள்	௯௬௨
கங்கைநீர்	௮௪௦
கங்கைநீர்சடை	௧௧௫௭
கங்கைபொங்	௬௬௪
கங்கையாடிய	௧௨௧௭
கங்கையார்	௫௧௬
கங்கையெறு	௭௧௦
கங்கையை	௨௭
கங்கையைச்ச	௨௮௬
கங்கையோர்	௬௬௩
கங்கையோர்வார்	௬௬௬
கங்கைவார்	௪௮௯
கச்சியனின்	௬௨௧
கச்சியேகம்	௨௧௮
கச்சுமொள்	௧௧௫௪
கச்சேரா	௧௧௨௯
கச்சேர்பாம்	௮௦௭
கச்சைசேரா	௪௫௧
கச்சைசேர்	௭௯௮
கச்சையூர்	௧௦௦௦
கஞ்சத்தே	௧௫௨
கஞ்சிப்	௯௮௪
கஞ்சிமண்டை	௧௧௭௭
கஞ்சிபுங்	௨௬௧
கஞ்சியைக்	௯௮௫
கடகரி	௪௪௦
கடங்களூர்	௧௦௦௦
கடந்தாங்	௬௧
கடந்திகழ்	௪௬௬
கடயணி	௧௧௨௭
கடமன்று	௨௨௬
கடமாகரி	௧௨௪
கடம்பட	௭௦௦
கடலக	௨௫௧
கடலிடை	௨௧௪
கடலிடைமலை	௮௧௫
கடலினஞ்ச	௧௧௧௪
கடலென	௧௨௮
கடலேறி	௪௧௨
கடல்சுழி	௬௭௫
கடல்சூழ்ந்த	௭௫௮
கடல்வண்ண	௫௫௭
கடல்வரை	௯௦௬
கடவுந்திகிரி	௧௫௭
கடவுளை	௧௫௨
கடன்மணி	௧௫௧
கடிகமழ்	௨௫௧
கடிகொள்	௧௨௯
கடிகொள்கூவிள	௭௯
கடிக்குமர	௧௧௪
கடிசேர்ந்த	௧௭௮
கடிதாய்க்	௮௪௧
கடிதென	௮௯௧
கடிபடுகமல	௯௬௪
கடிபடுகூவிள	௧௨௯
கடிபடுகொன்	௮௨௭
கடிமதிச்	௨௮௪

Koviloor Digital Library

பாட்டு.	பக்கம்.
கடிமலி	௨௩௪
கடியவன்	௧௧௫௮
கடியவாயின	௬௮௪
கடியவிடை	௧௧௦௧
கடியவேற்	௬௩௭
கடியாரலங்	௬௦௦
கடியார்	௨௬௭
கடியார்தளிர்	௫௨௦
கடியேன்	௧௧௦௧
கடுகிய	௧௧௮௫
கடுக்கடின்	௧௧௫௩
கடுக்கண்ட	௫௬௧
கடுக்கை	௨௧௬
கடுக்கொடு	௫௫௨
கடுக்கொள்	௬௬௦
கடுத்த	௪௬௫
கடுத்தமேனி	௧௬௧
கடுத்தவன்	௨௦௪
கடுத்தவன்கண்	௧௧௫௮
கடுத்தவாளர	௫௮௪
கடுத்தவாளரக்	௬௨௧
கடுத்தானே	௮௧௦
கடுத்துவந்	௫௬௨
கடுத்துவருங்	௧௫௧
கடுத்துவலரக்	௫௪௩
கடுப்பொடி	௨௮௮
கடுமலி	௧௨௭
கடும்பக	௧௧௬௨
கடுவரி	௭௪௪
கடுவாயர்	௧௨௨௩
கடுவாய்மலி	௭௬௨
கடுவுடை	௪௬௭
கடுவெளி	௪௪
கடைகொணே	௧௦௬௦
கடைநெடு	௮௭௬
கடையார்	௧௩௮
கடையார்கொடி	௧௫௧
கடையார்மாட	௬௦௪
கட்டக்காட்டி	௧௮௬
கட்டங்கந்	௧௦௨௧
கட்டங்கமொன்	௫௪௭
கட்டப்பட்	௨௦
கட்டமண்	௨௬௬
கட்டமும்	௭௪௧
கட்டமே	௪௭௮
கட்டராய்	௩௮௧
கட்டர்குண்	௧௧௫௦
கட்டலர்	௪௧
கட்டறுத்து	௩௫௬
கட்டனேன்	௧௧௧௦
கட்டார்	௧௩௮
கட்டாறே	௧௧௬
கட்டிட்ட	௧௧௪௬
கட்டிணை	௮௨௭
கட்டியொக்குங்	௧௦௩௧
கட்டிவிட்ட	௧௦௮௮
கட்டுகின்ற	௫௮௨
கட்டுமயக்க	௧௦௫௫
கட்டும்பாம்	௬
கட்டுர	௭௬௫
கட்டுவட	௨௮௧
கட்டுவாங்	௧௨௧௦
கணக்கிலா	௮௦௧
கணங்களா	௮௬௧
கணிகை	௬௦௮
கணிச்சி	௪௮௭
கணியணி	௪௬௭
கணிவளர்	௧௧௮௦
கணைசெந்	௩௪௪
கணைநீடெரி	௩௨௮
கணைபிணை	௮௧௨
கணையமர்	௨௫௦
கணையும்	௧௦௮௦
கண்கள்	௧௨௦
கண்காட்டு	௪௮
கண்காள்	௧௧௮௧
கண்கொணு	௩௫௩
கண்டகங்	௨௬௮
கண்டந்தான்	௧௦௩௧
கண்டபேச்	௬௩௨
கண்டமுங்	௧௭௧
கண்டராய்	௨௧௬
கண்டலஞ்	௨௩௩
கண்டவா	௮
கண்டார்	௫௫௧
கண்டான்	௨௬௭
கண்டிபூண்டு	௧௨௧௦
கண்டியிற்	௫௮௬
கண்டுகொள்	௧௨௦௫
கண்டுஞ்சு	௫௧௫
கண்ணமரு	௨௨௬
கண்ணமர்	௭௮௬
கண்ணவணு	௩௧௩
கண்ணவன்	௫௧௪
கண்ணனுநான்	௩௩௭
கண்ணனும்	௨௭௦
கண்ணன்	௭௦
கண்ணன்கடி	௮௭௫
கண்ணன்வண்	௧௧௫௧
கண்ணுயே	௩௨௩
கண்ணாருங்கலி	௧௦௫௭
கண்ணாருங்கா	௧௬௦
கண்ணாருந்	௧௧௨௩
கண்ணார்	௪௪௭
கண்ணார்நுத	௭௬௧
கண்ணார்ந்த	௫௨௦
கண்ணாரேய்	௨௮௬
கண்ணிகழ்	௧௫௧
கண்ணிறைந்த	௧௧௧௪
கண்ணிறைந்தகன	௩௭௦
கண்ணிற்	௫௭௧
கண்ணினயலே	௧௦௮௭
கண்ணினுற்	௫௮௮
கண்ணினுற்காம	௧௦௮௧
கண்ணின்	௪௨௧
கண்ணுதலாற்	௧௦௬௨
கண்ணுதலானு	௮௨
கண்ணுதலான்	௬௪
கண்ணுதலான்கா	௧௧௩௦
கண்ணுமூன்	௧௧௮
கண்ணுமூன்று	௬௮
கண்ணுலா	௫௫௬
கண்பலுக்க	௨௬௨
கண்பனிக்கு	௪௨௧
கண்பாவு	௭௬௧
கண்புனல்	௩௪௬
கண்பொலி	௨௩௮
கண்மேற்	௨௬௬
கதமிகு	௬௧௫
கதம்பட	௭௭௬
கதித்தவன்	௧௧௫௮
கதிமலி	௮௩௨
கதியொன்று	௬௧௮
கதிரார்	௭௮௧
கதிரொளி	௬௮௨
கதிர்க்கொள்	௩௦௨
கத்திரிகை	௮௩௭
கத்துகாளி	௫௨௧
கந்தங்கமழ்	௧௦௦௫
கந்தங்கமழ்கொன்	௧௦௮௦
கந்தநாறு	௪௩௧
கந்தமரவு	௨௮௧
கந்தமர்	௧௬௩
கந்தமலர்	௬௫௭
கந்தமலி	௩௧௭
கந்தமாதன	௧௨௨௩
கந்தமாமலர்	௪௨௫
கந்தமாமலர்க்	௩௫௮
கந்தமார்	௬௮௦
கந்தமார்கேத	௧௨௭

Koviloor Digital Library

பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.
கந்தமார்பொழி	௯௩0	கரியமாலுமய	௪௩௧	கருமானி	௭௫௯
கந்தமார்பொழில்	௧௧௫0	கரியவனுன்	௧௧௧	கருமானினுரி	௧௨
கந்தமார்பொழில்சூழ்	௧0௩௭	கரியாறு	௯௪	கருமானினுரியா	௧௭
கந்தமுந்த	௯௭௯	கரியானை	௭௪௧	கருமையாற்	௧௭
கந்தவார்	௯௯௪	கரியானேறு	௫௧	கருமையினெ	௮௧
கந்தனை	௧0௭௭	கரியின்	௯0௧	கரும்பமரு	௧௩
கமர்பயில்	௯௩0	கரியின்மா	௧௧௮	கரும்பமர்	௯0
கமழ்சருசடை	௪௫௪	கரியின்னுரி	௧0௩௫	கரும்பனவரி	௧௮௨
கமைபொரு	௧௧0௨	கரியுரி	௫௯௮	கரும்பிருந்த	௭௯0
கம்பமால்	௧௭௭	கரியுருவு	௧0௯௯	கரும்பினு	௧௧௮௮
கம்பருக்கரி	௧0௯௨	கருமுந்நீர்	௧௨௨	கரும்பினை	௧௨0௭
கயலசேல	௭௭௩	கருகுகண்ட	௪௭௧	கரும்புதேன்	௧0௧௫
கயலார்	௭௨	கருகுசார்	௧௨0௮	கரும்புபிடி	௭0௯
கயிலாயமலை	௫௯௮	கருகுபரி	௪௧௨	கரும்பொப்	௧௩௩
கயிலாயமலையுள்	௫௯௨	கருகுமுடலா	௯௮௩	கருவடிய	௯௫௯
கயிலாயமலையெடுத்	௧௨௨௪	கருக்காஞ்	௧000	கருவருந்தி	௭௧௯
கயிலைமன்மலை	௪௭௨	கருக்கமேல்	௮௮௪	கருவரை	௯௩0
கயிலைநாத	௪௨௯	கருக்குமணி	௮௭௫	கருவரைசூழ்	௨௮௯
கரக்கு	௯௯௩	கருக்கடக்	௫௫௫	கருவரையனைய	௫௧௨
கரத்தான்	௫௯௭	கருங்கழி	௨௫௭	கருவனே	௫௮௧
கரத்திளுற்	௩௧௯	கருங்கையானை	௨௩௫	கருவனைக்	௯௭௩
கரந்தனை	௯௪௯	கருடத்தனி	௧0௯௮	கருவாகிக்	௭௧௪
கரந்தானை	௯௮௮	கருடனை	௩௩௭	கருவாகிக்கண்	௩௭௭
கரந்தை	௯௨௮	கருதார்புர	௪௪௭	கருவாய்க்	௧0௧௨
கரந்தையும்	௭௫௨	கருதிர்மன	௮௮௧	கருவார்	௧0௩௫
கரப்பர்கண்	௭0௪	கருதிவர்	௫௫௧	கருவார்பொழி	௪௩௯
கரப்பர்கரி	௪௫௯	கருதுசம்	௪௪௭	கருவிலைன்றி	௩௧௧
கரப்பர்கால	௩௫௯	கருத்தனுப்க்	௧௧௫௮	கருவினைக்	௧0௩0
கரப்புற	௫௨௪	கருத்தனுப்க்கயி	௧0௭0	கருவுடை	௧0௯௭
கரம்குபத	௯௪௮	கருத்தனுப்ப்	௮	கருவுற்ற	௨௫௫
கரம்குபத்	௭௧௧	கருத்தனே	௯௧௪	கருவுற்றநாண்	௧0௪0
கரமுதலிய	௮௩௨	கருத்தனைக்கழி	௨௭	கருவுற்றிரு	௪௨0
கரமுணம்	௯௯	கருத்தனைப்	௩௮௯	கருவைக்	௧௧௯௧
கரமயில்	௫௭௪	கருத்தன்கட	௬00	கருவையென்	௩௭௧
கரவாளர்	௯௯௫	கருத்தன்காண்	௧0௧௩	கரைகடலர	௧௮௩
கரவாடும்	௧0௩௭	கருத்திருமேலார்	௪௮௭	கரைக்கட	௧௧௯௩
கரவடை	௭௫	கருத்துடைய	௧௪௯	கரைதலொன்	௨௪௩
கரவிலா	௧௧௪௧	கருத்துத்திக்	௭௧௫	கரைந்து	௫௮௭
கரவின்றி	௪௯௪	கருத்த	௪0	கரைபொரு	௮௫
கரிகால	௧0௨௫	கருத்தடங்	௫௫0	கரையார்	௧௫௨
கரிதாகிய	௫௧௧	கருத்தடங்கண்ணி	௯௭௨	கரையார்கடல்	௯0௭
கரித்தாரி	௬00	கருத்தடந்தேன்	௧௩௫	கரையார்கடலு	௯௯௧
கரிந்தார்	௯௪௪	கருப்பமரு	௫௭௫	கரையுங்	௭௪௨
கரிபுன்புற	௯௪௪	கருப்பனைத்தட	௧௧௮௮	கரையுலாங்	௧௧௨௧
கரியகறைத்	௯௩௭	கருப்பால்	௮௨	கரையுலாவு	௧௭௨
கரியகண்டனை	௧௩௧	கருப்புவெந்	௪௧	கலங்கவிரு	௮௩௧
கரியகறைக்	௮௫௫	கருமணிபோற்	௨௪௯	கலங்கொள்	௮௩௪
கரியத்தான்	௧௧௫௧	கருமணியை	௯௮௯	கலஞ்சுழி	௧௨௨௫
கரியமனை	௧௨௪௨	கருமருவு	௮௮௯	கலைமக்கு	௯௨௯
கரியமாலுஞ்	௪௩௯	கருமலிகட	௩௭௧	கலைமார்கடல்	௪௩௮

Koviloor Digital Library

பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.
கலமார்கடலுள்	௧௦௬	கல்வியலு	௪௨௮	களிந்தவன்	௧௧௫௮
கலமார்கடல்	௭௧	கல்விலோத	௭௯௦	களித்துக்கல	௨௯௨
கலவஞ்சேர்	௫௩௨	கல்வினற்	௫௭௬	களிபுல்கு	௭௮
கலவமஞ்ஞை	௪௦௫	கல்வினு	௧௯௨	களியிறுங்	௪௫௫
கலவமயில்	௧௧௧௨	கல்வினுற்புர	௩௮௯	களையும்	௩௧௪
கலவமாமயி	௯௫	கல்வினொடெனை	௪௬௯	கள்ளநெஞ்	௬௯௪
கலவமாமயிலா	௫௫௦	கல்வின்மணி	௪௫௩	கள்ளமதித்த	௩௧௩
கலவுசீவர	௭௧௬	கல்லுயர்	௧௪௦	கள்ளவிழ்	௨௦௬
கலிகெழு	௧௩௦	கல்லுயர்மாக்	௧௯௯	கள்ளனேன்	௧௧௮௯
கலிபடு	௮௮௮	கல்லூர்கடி	௨௨௭	கள்ளார்	௪௯
கலியார்கச்சி	௪௦௩௫	கல்லூர்ப்பெரு	௩௨	கள்ளார்ந்த	௧௫௮
கலியின்	௩௧௫	கல்லேனல்	௮௦௮	கள்ளிநீ	௨௫௯
கலியேன்	௮௦௮	கல்வளராடை	௭௭௮	கள்ளிமுது	௮௪௪
கலிவலங்	௮௧௯	கல்வாயகி	௯௩௪	கள்ளியிடுதலை	௨௧௩
கலைக்கன்று	௨௪௬	கல்விஞானக்	௩௨௭	கள்ளினுண்	௯௬௦
கலைஞானங்	௧௭௪	கல்வித்தகத்	௯௨௧	கறிமாமிளகு	௯௩௪
கலைபுனை	௩௪௯	கல்வியாளர்	௬௦௫	கறியுமா	௨௬௫
கலைமகடலை	௫௭௩	கவர்பூம்	௧௩௭	கறிவளர்	௧௯
கலைமலி	௬௧௭	கவளமா	௪௦௮	கறுக்கொண்ட	௫௮௭
கலைமலிந்த	௧௯௬	கவிழமலை	௧௦௮௦	கறுத்த	௫௧௩
கலைமலிவிர	௪௫௧	கவ்வைக்	௯௦௭	கறுத்தநஞ்	௬௧௩
கலைமான்	௪௩௭	கழலார்	௭௯௩	கறுத்தமன	௧௦௭௪
கலையவன்	௧௦௦	கழலினோசை	௯௩௮	கறுந்தவன்	௧௧௫௮
கலையாரு	௬௨௦	கழலுஞ்	௪௪௭	கறுத்தார்	௬௪௨
கலையார்கலிக்	௨௭௭	கழல்கொள்	௪௪௯	கறுந்தான்	௭௩
கலையார்மதி	௨௭௫	கழல்வளர்	௫௫௩	கறுத்து	௨௧௧
கலையானே	௮௦௯	கழன்மல்கு	௧௧௨௮	கறும்பியூர்	௩௭௦
கலையானைப்	௩௪௨	கழன்மல்குபங்	௮௩	கறைகொள்	௧௦௪௨
கலையான்	௭௬௨	கழிகாடல	௪௯௨	கறைகொள்கண்ட	௪௨௬
கலையிலங்கு	௫௭௬	கழிக்கரை	௮௬௧	கறைக்கண்ட	௭௩௭
கலையினான்	௩௧௭	கழித்திலேன்	௯௫௫	கறைப்பெரு	௯௫௭
கலையினொலி	௧௦௫௯	கழிந்தவர்	௯௫௧	கறைமலி	௮௩௩
கலையுடை	௪௪௯	கழியக்கண்	௮௨௮	கறையணி	௧௧௯௪
கலையொப்	௯௩௩	கழியருகு	௭௭௫	கறையணிமா	௧௧௩௫
கலைவாழுமங்	௭௯௩	கழியாய்க்	௭௪௬	கறையணிமிடற	௩௧௫
கல்லலகு	௧௦௨௩	கழியார்	௧௧௪	கறையணிவே	௯௫
கல்லவட	௧௧௪௧	கழியார்பதி	௨௩	கறையராய்க்	௩௮௯
கல்லாகிக்	௧௨௨௭	கழியுலாங்	௧௯௯	கறையார்	௮௫௫
கல்லாதார்	௬௫௮	கழியுளா	௨௨௩	கறையார்மணி	௭௬௧
கல்லாநெஞ்	௧௧௭௫	கழியொடுலவு	௧௯௬	கறைபார்மிடறு	௪௦௧
கல்லார்	௧௦௫௯	கழுதுதுஞ்சு	௩௨௬	கறையிலங்கு	௬௫௫
கல்லார்வரை	௯௪௫	கழுதைகுங்குமந்	௪௬௧	கறையிலங்குகண்ட	௮௬௪
கல்லாலி	௯௦௩	கழுமலத்	௧௪௯	கறையினார்	௯௩௧
கல்லாணிழல்	௪௩௭	கழுமலமுது	௧௪௧	கறையுங்	௯௫௨
கல்லாணிழற்	௫௬௭	கழுவார்	௧௦௫௯	கற்பகத்தினை	௫௪௧
கல்லாணிழன்	௪௬௮	கழைபடு	௧௧௮௫	கற்பகமு	௭௪௯
கல்லாணிழன்மேவி	௭௬௮	கழைவளர்	௪௩௧	கற்பொலி	௮௩௬
கல்லாணிழல்	௧௧௭௫	களக்களார்	௯௨௮	கற்பொலிதோ	௫௯௫
கல்விசை	௨௨௪	களங்குளிர்	௪௮௮	கற்றதுற	௩௧௩
		களங்கொள்	௯௩௬	கற்றமேத	௭௦௩

Koviloor Digital Library

பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.
கற்றான்	எகடு	கா		காத்தனே	௫அகூ
கற்றமனை	எஎ	காசக்கடலில்	எ0	காத்தாள்	கூசகூ
கற்றயா	கசெகூ	காசினைக்	கஉ0எ	காத்திலே	கூசரு
கற்றவர்களு	எஉஅ	காசைசேர்	கூச	காப்பதோர்	ககஉ
கற்றவர்கள்	கடுச	காச்சிலாத	ருகச	காமத்துள	கக0ச
கற்றவர்திரு	க0கடு	காடடைந்த	உசக	காமருகண்	ககூச
கற்றறி	க0ச	காடதணி	ககூக	காமருவார்	ருகூஉ
கற்றனன்	கக௫க	காடதிட	க0கஎ	காமனெரி	அச
கற்றுங்	க	காடர்கரி	ருககூ	காமனெழில்	சக0
கற்றூர்பயில்	கூஎக	காடலாற்	உஉடு	காமனையழல்	க0௫
கற்றுனுங்	கஎ	காடிடமா	ரு0௫	காமனையன்று	ரு0ச
கற்றுனைக்	கஉ	காடிடமுடை	உ௫0	காமனையீடழித்	ககருகூ
கற்றிலா	கூசஅ	காடிலாடி	கஎக	காமனையுங்	எஉக
கற்றிலேன்	கசகரு	காடுகொண்	கூ00	காமன்பொடி	ருகடு
கற்றுக்	கஉ0௫	காடுடை	ச௫ரு	காமன்வேவ	௫எஉ
கற்றுணை	சச0	காடுநாடுங்	கூ0௫	காமாத்தம்	க0உ0
கற்றுமுற்	சஅஅ	காடுநீட	அகூஎ	காமியஞ்	சருஉ
கற்றுவ	எச0	காடுபயில்	கூஅடு	காம்படு	அஅகூ
கற்றை	சகூகூ	காடுமலையு	கஉச	காம்பினை	உகரு
கற்றைச்சடை	கருக	காடேன்	அசக	காயச்செவ்	௫௫அ
கனகமாவயிர	கக௫அ	காட்சி	கூகூச	காயமிக்க	௫அஉ
கனகாந்தி	அ௫க	காட்டகத்	அகஎ	காயமே	கககூக
கனத்தகத்	உகக	காட்டிஞெரெனை	உஉச	காயும்புலி	௫ரு0
கனத்தார்	அ0எ	காட்டினுலு	கககஎ	காய்சின	கஉசஉ
கனத்திஞர்	அருஅ	காட்டுமா	அகூ0	காய்ந்தது	அசஎ
கனமலர்	ககஅ	காட்டுளாடும்	ககஎடு	காய்ந்தவ	க0உரு
கனமலர்க்கொன்	ருசக	காட்டேர்க்	கஉசரு	காய்ந்தாய	சகக
கனலங்கை	கூசரு	காணவிளிய	அ௫எ	காய்ந்தானை	எஎக
கனலுங்	உ௫உ	காணவுன்	கருஅ	காய்ந்தான்	கககடு
கனிதனை	எஎக	காணியேற்	கூசஎ	காய்ந்து	கஉஎ
கனிபிறுங்	ச௫ரு	காணிபொண்	கசக	காய்ந்துவரு	கசகூ
கனைகொளிருமல்	கக௫	காணிலார்	க௫கூ	காரடைந்த	உசஉ
கனைத்தெழு	ருஎரு	காணுமா	௫எடு	காரணத்தர்	ருஉக
கன்மன	கக	காண்டகு	கககூ	காரணி	சஉஎ
கன்றுருங்	ககஉரு	காண்டவைய	அஅ	காரமண்	க0கூஉ
கன்றித்	கக௫அ	காண்டலே	கூகூக	காரமுது	கூகக
கன்றிய	எகஅ	காண்டவன்	க0உச	காரழல்	சஎஅ
கன்றியூர்	ககஅ	காண்டனன்	க0உரு	காராருங்	ருசஉ
கன்றிமெழ	கூருக	காண்டேம்பி	கககரு	காராரும்	௫உஎ
கன்றிஞர்	கக௪க	காதமராத்	க௫0	காரார்கட	க0அச
கன்மேருருக்	கூஎ	காதமரும்	சகக	காரார்கடலி	௫ருக
கன்னலைக்	கஉ0எ	காதலாமே	கசஎகூ	காரார்கமழ்	ச௫கூ
கன்னலையின	கூகக	காதலாலே	௫எ	காரார்கமழ்கொன்	க௫
கன்னவிலு	சஉக	காதல்செய்	ககஉகூ	காரார்கொன்றை	ருருஉ
கன்னிய	அரு	காதார்கனை	எரு	காரார்வண்	௫0உ
கன்னிமை	கூ௫அ	காதார்குழை	க௫	காரார்வயல்	க0க
கன்னெடிய	௫கஅ	காதிசைசந்த	௫கூ௫	காராரனைக்	சஎக
கன்னெடுப்	கஉ0க	காதிலங்கு	கூருஅ	காராரனையிருரி	கரு
கன்னெமொல்	அரு	காதிலுஞ்	௫௫க	காராரனையுரி	சசஉ
		காதுபொத்	கஎக	காரியன்	அருகூ

Koviloor Digital Library

பாட்டு.	பக்கம்.
காரிரு	௧௧௩௩
காரிலங்கு	௪௩௪
காரிஞரமர்	௯௮௪
காரிஞர்	௨௧
காருடை	௪௫௩
காருடைக்கொன்	௫௦௩
காருலா	௩௪௭
காருலாங்கட	௫௩௪
காருலாமலர்	௬
காருலாவிய	௩௪௭
காருலாவியவார்	௯௬
காரூருமணி	௧௦௫௬
காரூரும்	௧௧௦௧
காரூர்கட	௬௦௯
காரூர்கண்ட	௭௪௬
காரூர்புன	௧௦௦௨
காரூர்மழை	௬௧௪
காரேறு	௭௧௨
காரைகள்	௫௦௫
காரொளிய	௯௮௬
காரொளியதிரு	௧௪
கார்கொண்ட	௧௧௨௮
கார்கொண்மேனி	௧௧௯
கார்கொள்	௧௨௦௬
கார்க்குன்ற	௭௪௧
கார்க்கொண்	௪௭௯
கார்க்கொள்	௩௦௧
கார்மருவு	௪௧௧
கார்மலி	௧௧௩௬
கார்மலிநெறி	௫௪௪
கார்மல்கு	௪௪
கார்முகிலா	௩௭௨
கார்வண	௧௧௭௪
காலகாலர்	௬௨௫
காலதிர்	௩௦௫
காலது	௧௪௦
காலபாச	௩௫௫
காலமான	௪௭௦
காலமுஞாயிறு	௬௨௪
காலமுஞாயிறுமா	௧௭௦
காலமுநாழி	௫௦௯
காலமுநாள்	௧௧௮௪
காலனுயிர்	௨௭௪
காலனைக்கழ	௫௫௧
காலனைக்காலா	௨௩௧
காலனைக்காலாற்	௭௫௦
காலனையோ	௭௯௮
காலனைவீழ	௩௦௪
காலன்வலி	௪௩௪
காலன்றன்	௧௨௩
காலானுயிர்	௩௩௪
காவினல	௧௦௬௦
காவினோடு	௧௨௦
காலெடுத்த	௫௩௪
காலேமேலே	௧௨௪
காலைசென்று	௧௨௧௭
காலைநன்	௮௫
காலைபோய்	௧௮௧
காலைமடவார்	௪௨௧
காலையார்	௩௧௫
காலையிலுண்	௭௮௬
காலையிற்	௫௮௪
காலையெழு	௩௯௦
காலையொடு	௧௦௫௯
கால்களாற்	௧௧௮௨
கால்கொடு	௮௩௮
கால்கொடுத்தெலு	௬௩௧
கால்விளங்	௪௯௮
காவார்	௪௯௦
காவிமலர்	௧௪௪
காவியங்	௫௯
காவியங்கரு	௯௪
காவியநற்	௫௧௦
காவிரிபுடை	௬௩௫
காவிரியின்	௧௨௨௨
காவிரியின்வட	௨௩௭
காவினையிட்	௧௧௬௮
காழிந்நக	௮௩௪
காழிமாநகர்	௫௭௨
காழியானய	௧௪௧
காழியானை	௯௩௩
காளங்கட	௯௫௮
காளமேகந்நிற	௪௩௯
காளையாகி	௨௦௨
காறிடு	௧௦௮௧
காறிடுவிடத்	௨௫௦
காற்றனுற்	௨௭௦
காற்றனை	௮௨௪
காற்றனைக்கலக்	௧௦௨௯
காற்ருகி	௧௨௨௭
காற்ருனே	௭௫௨
காற்றினுங்	௬௧௩
காற்றினை	௭௮௦
காற்றாத்	௧௫௭
கானணவு	௧௫௩௬
கானநாடு	௧௨௧௭
கானமர்	௧௧௧௯
கானமார்கரி	௯௮௪
கானமார்வாழ்	௭௯௧
கானமுஞ்	௧௧௨௭
கானமுறு	௬௮௬
கானமோடி	௩௫௫
கானயங்	௧௧௨௧
கானருகு	௬௫௫
கானலங்கழனி	௧௩௭
கானவில்	௬௨௫
கானவிளங்	௪௩௩
கானனுலா	௬௦௮
கானலைக்கு	௪௦௦
கானல்வந்	௧௨௩
கானவன்	௧௦௧௪
கானருத	௫௦௪
கானுர்	௯௨௧
கானிரிய	௪௩
கானின்	௧௦௮௭
கானேறு	௭௨௫
கான்மறை	௮௩௦
கான்முக	௫௪௪
கி	
கிடந்த	௯௫௧
கிடந்தானிரு	௫௭௧
கிண்ணவண்	௪௨௫
கிளருந்	௭௮௯
கிளர்மழை	௧௦௭௭
கீ	
கீண்டுங்	௨௫௧
கீண்டுபுக்கார்	௮௦
கீதத்தை	௧௫௯
கீதமுன்	௨௬௧
கீதராய்	௮௩௮
கீர்த்தி	௨௭௭
கீழ்ப்பட	௭௭௬
கீளலா	௨௯௦
கீளார்	௩௨௨
கீறுமுடை	௪௧௩
கு	
குசையுமங்	௨௬௨
குடங்கை	௧௧௫௭
குடமெடுத்	௫௬
குடைமயி	௪௫௧
குடையுடை	௨௭௦
குட்டத்துங்	௯௫௫
குணக்குங்	௯௫௬
குணங்கள்	௫௫௬
குணங்கள்சொல்	௨௨௧
குணங்கள்பேசி	௭௦௧
குணங்கொள்	௯௦௧
குணமறிவு	௯௧௯
குணமின்றி	௧௩௪
குண்டமணராகி	௫௭௮

Koviloor Digital Library

திருப்பாட்டுமுதற்குறிப்பகராதி.

பாட்டு.	பக்கம்.
குண்டமணர்	௧௯௯
குண்டமண்	௨௨
குண்டருங்	௭௮0
குண்டரும்	௪௨௮
குண்டரே	௪௮௧
குண்டரை	௪௪௫
குண்டரைக்குணை	௪௨௩
குண்டரொடு	௫௧௮
குண்டர்சாக்கிய	௫௬௪
குண்டர்தம்	௭௯௪
குண்டர்தேர	௧௮0
குண்டர்பீலி	௧0௨0
குண்டர்வண்	௧௨௯
குண்டலங்	௧௫௪
குண்டலக்	௧0௪௮
குண்டலந்திகழ்	௮௮௧
குண்டறுப்	௯௧௭
குண்டறுப்ச்சம	௨௮௮
குண்டாக்க	௯௩௨
குண்டாடி	௧0௫௭
குண்டாடிச்சமண்	௮0௮
குண்டாடிபுந்	௮௪௬
குண்டாடுகுற்	௨௭௧
குண்டாடுந்	௧௧௨௩
குண்டாய்	௮௭௭
குண்டிகை	௮௫௮
குண்டிகைக்கைக	௮௮௧
குண்டிகைக்கையு	௪00
குண்டிகைபீலி	௯௩
குண்டிகைப்	௫௩௫
குண்டுக்	௯0௪
குண்டுபட்ட	௭௭0
குண்டுபட்டமறு	௧0௩௩
குண்டுபட்டு	௩௪௭
குண்டுமுற்றி	௧௭௩
குண்டை	௯௪௪
குத்தங்குடி	௧௧௭௧
குயிலார்	௯0௭
குயிலினோர்	௪௨௭
குரக்கினங்	௯௩௯
குரக்கினம்	௮00
குரவங்கமழ்ந்து	௨௪௪
குரவங்கமழ்	௮௭௪
குரவங்குருக்	௮௩௪
குரவாண்	௨௮0
குரவார	௭௩௫
குரவார்திய	௩௪௮
குரவமரும்	௮௨௫
குரவனும்	௪0௮
குரவு	௫௭
குராமல	௧௨௩௩
குராமனுங்	௧0௨0
குருகாம்	௪0௫
குருகுபாய	௭௩௪
குருண்ட	௯௮௧
குருதி	௧௮௮
குருந்தம	௨௮௧
குருந்தவ	௬0௯௭
குருந்தமேறி	௯௯௫
குருந்தொடு	௯0௨
குரும்பை	௯௨௧
குரும்பையாண்	௧0௯௨
குருளை	௧௧௩௮
குரையார்	௪௩௭
குலங்கண்	௪௧௯
குலங்களென்	௭௯௭
குலங்கிளரும்	௪௧௭
குலங்கொடு	௫௪௭
குலமலர்	௯0௮
குலம்பல	௭0௫
குலம்பொல்	௧௨௩0
குலவராக	௯௪0
குலவு	௭௧௪
குலவுபாரிட	௧௧௪௧
குலம்வெஞ்	௨௯௭
குலாவு	௧௧௭0
குலாவெண்	௧௫
குலவினர்	௮00
குவப்பெரு	௪௨
குவளைகண்	௮00
குழலார்	௯0௭
குழவிதெறைச	௪௯
குழவின்	௧௯௭
குழவின்வரி	௭௭௫
குழலுங்	௪௭௧
குழலையாழ்	௫௮௮
குழலைவென்ற	௧௨௩௧
குழலோடு	௯௫௫
குழல்வலங்	௭0௩
குழுவினர்	௯௫௧
குழைகொன்	௫௨௧
குழைத்திகழ்	௫௨௪
குழைத்த	௩௫௨
குழையார்	௧0௯௧
குழையார்திரு	௮௩௧
குளக்கண்	௯௨௩
குளித்தனு	௧0௯௮
குளிருந்	௫௫௧
குளிரும	௪௯௮
குளிர்தரு	௫0௯
குளிர்தருதிங்	௯௩0
குளிர்ந்தார்	௫00
குளிர்புனற்	௪௯௪
குறங்காட்	௪௧
குறவர்	௪௩௮
குறவனார்	௧௮௯
குறவிதோண்	௭௫௮
குறிகலந்த	௯௩௮
குறிகளும்	௧௨0௩
குறிகொளாழி	௯௯௯
குறிக்கொண்	௧0௪0
குறியமா	௧௧௩௮
குறியார்	௧௧௨
குறியில்	௪௯௯
குறியில்வழு	௯௧0
குறியினின்	௩௨௭
குறுவித்த	௨௯0
குறைக்காட்	௮௪௧
குறைக்கொண்	௯௫௯
குறைநிரம்	௪௧௧
குறைபடா	௯௮
குறைவதாய	௧௧௩௧
குறைவளை	௧௩௫
குறைவிலா	௪௮௯
குறைவிலார்	௧௧௪௧
குறைவிலோங்	௪௯௭
குற்றங்	௭௮௪
குற்றநம்	௯௯௨
குற்றநீ	௮௯௩
குற்றந்	௪௯௧
குற்றமறு	௪௧௮
குற்றமிலா	௮௫௨
குற்றமில்லா	௧௨௧
குற்றமில்லி	௧௯0
குற்றமின்	௯௪௩
குற்றமுடை	௭0௯
குற்றம்மான்	௧௭௧
குற்றாலங்	௩௮௨
குற்றொரு	௨௫௧
குனித்த	௧௧
குனிந்த	௮௧௨
குனிவினிய	௨௧0
குன்றடுத்	௭௮௮
குன்றமலை	௪௯௪
குன்றம்	௧௯௭
குன்றவார்	௧0௧௮
குன்றுத	௫௪௮
குன்றுளை	௧௧௪
குன்றியூர்	௪௨௯
குன்றிருச்	௩௭௪

Koviloor Digital Library

பாட்டு.	பக்கம்.
குன்று	௩௮
குன்றுபோற்	௮௯௩
குன்றேய	௩௩௪
குன்றேய்க்கு	௧௦௩௪
கூ	
கூசநீக்கி	௧௮௮
கூசநோக்	௪௩௮
கூசமிலா	௨௧௫
கூசியடி	௩௦௨
கூசுமா	௫௮௩
கூசுவார	௨௩௭
கூடரவத்	௭௪௮
கூடரவமொந்	௭௭௫
கூடலர்	௧௮௭
கூடலால	௮௬௬
கூடலை	௧௩௯
கூடவல்	௭௪௮
கூடவேட	௧௨௧௭
கூடாமன்	௮௦௮
கூடிக்	௧௦௫௩
கூடியடி	௩௦௨
கூடியவில	௧௧௧௫
கூடினாய்	௧௧௧௧
கூடினாருமை	௧௦௮௨
கூடினானு	௫௩
கூடுமன்ன	௭௩௫
கூடுமாறு	௧௮௪
கூடுமாறுள்ள	௪௯௦
கூட்டமா	௬௩௧
கூட்டினார்	௮௫௯
கூதலிடுஞ்	௮௯௮
கூரம்பது	௬௫
கூரரவ	௧௭௫
கூராரலி	௬௫௬
கூரார்	௯௦௦
கூரிருள்	௨௮
கூருமாலை	௩௩௬
கூருலாவு	௬௦௫
கூர்வாளர	௨
கூர்வித்த	௨௧௧
கூர்விலங்	௧௨௧
கூவலாமை	௧௨௧௮
கூவிளங்	௧௩௧
கூவைவாய்	௨௬௮
கூழையங்	௫௩௬
கூழையே	௧௧௯௪
கூறணிந்	௧௦௫௬
கூறுகொண்	௩௭௪
கூறுநடை	௧௦௫௫
கூறுபெண்	௨௮௦
கூறேறும்	௧௨௧௬
கூறைபோர்க்	௮௮௪
கூற்றம்	௩௫௫
கூற்றவன்	௮௧௬
கூற்றாயின	௯௪௫
கூற்றினை	௧௧௮௮
கூற்றுதைத்த	௧௧௭௫
கூற்றுத்தண்ட	௧௧௦௭
கூற்றுவன்	௧௦௪௩
கூற்றைறக்	௩௯௦
கூனமரும்	௪௧௧
கூனற்பிறை	௮௮௩
கூனற்றிங்க	௬௬௯
கூனிளம்	௮௩௫
கெ	
கெண்டை	௯௧
கெண்டையந்	௭௦௩
கே	
கேடுமூடிக்	௮௨௩
கேடுமூப்பு	௯௧௫
கேடும்பிற	௧௦௭௯
கேட்டிலேன்	௮
கேணவல்	௧௬௨௯
கேழலதா	௫௨௫
கேழல்வெண்	௨௩௨
கேளுமின்	௬௩௨
கேள்வியர்	௫௭௬
கை	
கைகாள்	௧௧௮௧
கைகிளரு	௮௪௩
கைகொள்	௫௦௫
கைத்தல	௭௬௧
கைத்தலை	௩௯௮
கைப்பற்றி	௧௨௧௨
கைப்போது	௧௦௩௭
கைம்மக	௩௬௭
கைம்மா	௧௦௧௭
கைம்மாமத	௮௮௨
கைம்மான	௪௮௧
கைம்மானமத	௭௧௧
கைம்மாவுரி	௧௨௪௪
கையடைந்த	௯௮
கையது	௩௫௨
கையதுகாலெரி	௩௯௮
கையதுவீழினுங்	௪௭௪
கையதுவெண்	௧௪௦
கையமரும்	௪௨௮
கையராய்	௧௧௪௬
கையரிவை	௧௦௧௬
கையினைத்	௧௯௬
கையார்	௬௧௨
கையார்வெண்	௧௧௨௨
கையார்வெஞ்	௧௦௫௨
கையாற்	௧௧௪௪
கையாற்றொழு	௧௦௮௬
கையிருப	௨௬௪
கையிலங்கி	௪௯௯
கையிலங்கு	௬௨௫
கையிலார்ந்த	௭௮
கையிலிடு	௭௦௬
கையிலுண்	௨௮௧
கையிலுண்டுமேனி	௧௨௫
கையிலுண்டுழல்	௬௫௦
கையிலுண்டுழல்வா	௩௭௯
கையிலுண்ணு	௩௩௬
கையினிலுண்பவர்	௮௧
கையிலோடு	௧௬௦
கையின்	௯௨௦
கையின்மாமழு	௫௫௭
கையுலா	௭௮௨
கையெலா	௧௭௫
கையொர்	௩௪௮
கையோர்	௧௦௨௨
கைவேழ	௫௯௭
கொ	
கொக்கரவர்	௫௪௨
கொக்கரை	௭௧௦
கொக்கரைதாளம்	௪௪௦
கொக்கிறகர்	௩௩௦
கொக்கிறகுங்	௨௧௫
கொக்கிறகுசெ	௩௧௮
கொக்கிறகோடு	௫௬௩
கொக்கின்	௨௧௬
கோக்கின்னிற	௨௭௬
கொக்குடை	௧௦௪
கொங்கணி	௧௧௪௫
கொங்கணை	௪௪௫
கொங்கணைசுரும்	௫௧௪
கொங்கரவ	௧௦௧௦
கொங்கலர்	௧௧௭௩
கொங்கார்ந்	௭௬௩
கொங்கார்மல	௯௨௪
கொங்கியல்	௧௦௫
கொங்கியல்பூங்	௯௦
கொங்கிற்	௧௨௪௩
கொங்கினு	௨௮
கொங்கு	௯௫
கொங்குசெருந்	௧௦௯
கொங்குசேர்தண்	௫௧௮
கொங்குநுழை	௧௦௫௫

Koviloor Digital Library

பாட்டு.	பக்கம்.
கொக்குவா	எஅஎ
கொக்குவார்	எகஉ
கொக்கை	கூடுகு
கொக்கை	கசக
கொக்கைவயம்	கசச
கொக்கைவெக்	க0டுகு
கொடிக்கனிடை	க0நகு
கொடிகொ	உச
கொடிகொன்	டுஅ0
கொடிகொன்விதா	எ0எ
கொடிகெடு	அஅ0
கொடிமாட	உகுஎ
கொடிய	கசசக
கொடியாரிட	சகுக
கொடியார்	எகடு
கொடியுடை	சுகடு
கொடியுடைமும்	கு0க
கொடியுயர்	குகுஉ
கொடியேயு	டுசக
கொக்கு	கசஅ
கொடுக்க	சகச
கொடுக்கண்	சகஎ
கொடுக்கோ	கஉஉ0
கொடுமு	குககு
கொடுவினா	கசக
கொட்டமு	க0எ
கொட்டமே	உ
கொட்டமேகம	எகக
கொட்டுமுழ	டு0க
கொட்டும்	ச0க
கொட்டுவா	கடுக
கொண்டதோர்	க0டுக
கொண்டலார்	கஉஎ
கொண்டலுசில	கஉக
கொண்டலுள்	குகடு
கொண்டல்	டுகு
கொண்டாடு	க0அ
கொதியிறுவ்	சஅகு
கொத்தலர்	கசஎஉ
கொத்தார்	குஉக
கொத்திரை	குடுச
கொத்துலா	கஅச
கொத்தலவு	கஅக
கொத்தலவம்	சசஉ
கொத்தணி	உடுக
கொத்தணிபொழி	சஉக
கொத்தன்	குகுகு
கொத்தார்	டுஅக
கொம்பிலை	டு
கொம்பனை	எசச

பாட்டு.	பக்கம்.
கொம்பனன்	சச0
கொம்பன்ன	டுக
கொம்பார்	கூகச
கொம்பியல்	சஅஎ
கொம்பிரி	எஎச
கொம்பினார்	கூகுச
கொம்பு	கூகுஉ
கொம்புநல்	கூகசு
கொம்மை	கசகுச
கொய்த	க0சுகு
கொய்ம்மலர்	டு0சு
கொய்யணி	கசுகு
கொய்யணிம்	அசுகு
கொய்யா	க00சு
கொலைக்கணி	கடு0
கொலையார்	டுடுச
கொலையார்தரு	கச0
கொலையார்மழு	குகுகு
கொலையானை	டுசுச
கொலைவரி	ககு0
கொலைவரை	டுசுஅ
கொல்லத்	சகக
கொல்லியான்	டு0எ
கொல்லுங்	சக0
கொல்லுமால்	சக0
கொல்லுமால்பா	கஅச
கொல்லுமுவிலை	கஎஅ
கொல்லை	சுஎடு
கொல்லைமுல்லை	கூஅ
கொல்லையேறு	எக0
கொல்லையேற்	டுகச
கொல்லையேற்று	உசுஉ
கொல்லைவனம்	அஉசு
கொல்லைவிடை	க0க
கொல்லைவிடைக்	அகஅ
கொல்லைவிடையே	அக
கொல்லைவென்ற	சஉகு
கொல்வா	கஎசு
கொழுமலை	கஉக
கொள்ளிடக்	உசுஉ
கொள்ளித்	டு0எ
கொள்ளிநக்க	க0க0
கொள்ளிவாயி	அஅக
கொள்ளிவெக்	குஉ
கொள்ளுங்	சகசு
கொள்ளா	குச
கொற்றவை	டு0க
கொன்றுசெய்த	ககடுக
கொன்றை	சசுக
கொன்றைக்குடி	கசஎகு

பாட்டு.	பக்கம்.
கொன்றைசேர்	அ0க
கொன்றைபொன்	அ00
கொன்றைமாலை	சகுச
கொன்றைபங்	சகுஅ
கொன்னவின்ற	கசடு
கோ	
கோங்கமே	க0ககு
கோங்கமேகுர	உசுகு
கோங்கன்ன	சக
கோங்கிள	டுகு
கோங்குசன்	டுடுக
கோசா	க0கு
கோடடுத்த	குடுச
கோடரம்	ககுஅ
கோடலா	கசசக
கோடலிரும்	க0எச
கோடலொடு	டுஉச
கோடலொடுகூன்	எஎ
கோடல்கள்	டுசகு
கோடல்கோங்	உஅ0
கோடல்கோங்கம்	டுசஎ
கோடல்சால	எஎடு
கோடல்வெண்	க0எக
கோடிடை	உசுகு
கோடிதிர்த்த	கஉகஅ
கோடிமாதவ	அகசு
கோடுசந்த	அஅக
கோடுதேன்	டுடுக
கோடுநான்	கஎக
கோடுயர்	கசுச
கோடுயர்வெங்	சுடு0
கோடெலா	சஉகு
கோட்டக	எகக
கோட்டங்	கஎஎ
கோணல்	எகஎ
கோணன்மா	ககுஅ
கோணன்மாமதி	கஉச0
கோளுக	க0கஎ
கோளுகணை	உ
கோணிக்	க0டுக
கோணிய	கஉஅ
கோதிலா	சஅசு
கோதுசாற்	டுஅஅ
கோத்த	கு0க
கோத்திட்டை	அஎஎ
கோலக்கா	ககஅகு
கோலத்தார்	எகசுஅ
கோலநன்	டுஅ
கோலமலை	எகக
கோலமாகரி	க00

Koviloor Digital Library

பாட்டு.	பக்கம்.
கோலமாமங்	௪௭௮
கோலமாமயி	௭௮௮
கோலமாமல	௨௬௫
கோலமாய	௮௬௩
கோலமால்	௧௭௬
கோலம்முடி	௩௦௪
கோலவா	௩௯௫
கோலும்	௪௯௭
கோவணா	௧௧௯௨
கோவணமோ	௭௧௪
கோவணவா	௫௩௯
கோவல	௯௭௬
கோவலனுன்	௮௯௨
கோவாயவிந்	௨௫௯
கோவாய்	௪௧௯
கோழிக்	௨௫௩
கோழை	௨௬௩
கோளரவு	௬௮௬
கோளாளிய	௮௭௯
கோள்வித்	௫௦
கோனாரண	௪௮௩
கோனென்	௮௩௪
கோனைக்	௩௩௮
ச	
சகமலா	௨௯௦
சக்கரமாற்	௪௯
சக்கரம்	௩௩௭
சக்கரவாள	௭௩௫
சங்கக்கய	௨௭௬
சங்கணி	௨௮௭
சங்கணிகு	௫௫௩
சங்கநிதி	௧௨௩௦
சங்கந்தர	௮௩௩
சங்கமரு	௮௯
சங்கரனே	௭௨௯
சங்கரன்	௭௨௫
சங்கலக்	௭௩௯
சங்கவார்	௫௫௮
சங்கவெண்	௧௧௮
சங்கவெண்டோ	௮௮௮
சங்களவிய	௬௧௭
சங்குசெம்	௯௩
சங்குசோர	௬௬௪
சங்குலாவு	௬௯௩
சங்குலா	௨௩௨
சங்குவந்த	௮௪௧
சங்கேந்து	௧௯௬
சங்கைதனை	௩௬௩
சங்கைப்பட	௮௪௬
சங்கையவ	௧௦௫௫
சங்கையுள்	௩௩௦
சங்கொலிப்	௭௦௭
சங்கொளி	௮௪
சங்கொளிர்	௯௫௧
சங்கோடில	௧௩௭
சடங்கொண்	௧௧௪௫
சடங்கொள்	௮௦௫
சடசட	௫௪௫
சடைக்கணுள்	௨௫௩
சடைதனை	௧௮
சடைமுடி	௩௫
சடைமுயங்	௬௨
சடையணி	௧௦௩௬
சடையமர்	௯௨௫
சடையனுர்	௭
சடையனை	௭௮௧
சடையன்	௫௦௧
சடையார்	௩௨௮
சடையார்பிறை	௫௬௯
சடையார்புன	௫௬௬
சடையாயெனு	௬௬௧
சடையானே	௨௮௬
சடையானை	௭௭௯
சடையானைத்தலை	௧௦௩௪
சடையானைத்	௪௭௧
சடையிடை	௫௦௫
சடையினர்	௮௫
சடையினன்	௬௭
சடையின்	௭௦௮
சடையுடை	௫௨௧
சடையுடையான்	௧௨௩௮
சடையேறு	௭௮௨
சடையொன்	௧௨௩௩
சண்டனை	௨௪௭
சண்பை	௧௪௪
சதிமிக	௧௫௦
சதுரம்	௮௩௩
சதுர்முக	௨௮
சத்தியுளா	௯௫௧
சந்தணவு	௯௩௮
சந்தணி	௫௮௫
சந்தநன்	௬௫௧
சந்தமாரகி	௧௦௯௫
சந்தமார்	௫௮௧
சந்தமார்முலை	௧௨௨
சந்தம்பல	௭௪௩
சந்தம்மலர்	௧௦௦௭
சந்தவார்	௩௪௫
சந்தளறேறு	௮௪
சந்தன	௧௧௪௫
சந்தாருங்	௩௨௩
சந்தார்	௩௬௫
சந்தித்த	௧௬
சந்தியானை	௧௦௨௦
சந்திர	௧௧௩௬
சந்திரற்	௧௧௬௨
சந்திரனுந்	௧௧௪௨
சந்திரனைத்	௫௧௬
சந்திரனைமா	௯௬௪
சந்திரன்	௩௫
சந்திரன்னெடு	௪௪௪
சந்துசேன	௨௫௯
சந்துயர்	௧௧௨௧
சமண்சாக்	௧௧௦
சமராசூர	௪௭௩
சமரமிகு	௫௯௬
சமையமே	௧௧௦௪
சம்பரற்	௨௦௫
சரணமாம்	௧௨௧௪
சரிகுழ	௬௫௧
சரிவிலா	௭௭௪
சலசலசங்	௫௮
சலசலசொரி	௪௫௦
சலந்தாங்கு	௭௮
சலமல்கு	௪௫௨
சலமிலன்	௧௧௮௩
சலம்பூ	௯௪௬
சலவரா	௫௦௪
சல்லரி	௮௯
சவந்தாங்கு	௫௯௦
சவைதனை	௪௮௮
சள்ளை	௬௨௮
சற்றேயுந்	௧௯௦
சனம்வெரு	௮௩௩
சனிபுதன்	௮௯௧
சனியும்	௨௫௩
சா	
சாகம்பொன்	௧௦௩௩
சாகையாயிர	௧௯௯
சாக்கியக்	௫௫௮
சாக்கியத்தோய	௧௦௪௩
சாக்கியப்	௯௩௧
சாக்கியப்பட்	௧௧௬௯
சாக்கியர்	௯௨௪
சாக்கியர்வன்	௮௯௧
சாடவெடுத்	௧௧
சாடிக்காலன்	௩௮௮
சாணிரு	௬௩௧
சாதலும்	௧௫௩
சாதல்	௩௨௪

Koviloor Digital Library

பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.
சாதியார்	௩	சிந்தித்	௬௬௩	சினக்குஞ்	௫௨௬
சாத்திரம்	௧0௭0	சிந்தித்தெழு	௪௫௨	சினங்கொண்	௬௭௩
சாத்தவர்	௧௩௧	சிந்தித்தென்று	௧0௪௧	சினத்திறல்	௬௬௩
சாதாவின்	௬௪	சிந்திப்பரிய	௨௧௨	சினந்திருத்	௩௨௧
சாதாளும்	௬௩௫	சிந்திப்பார்	௧௨௧௨	சினமலி	௫௬௬
சாந்தங்கமழ்	௧0௮௪	சிந்தும்	௧௭௨	சினமலியறு	௬௧௫
சாந்தயாக	௬௫௧	சிந்தை	௫௪௩	சின்போர்வை	௪௫௨
சாந்தம்	௩௬௬	சிந்தையாய்	௧௬௮	சீ	
சாந்தாக	௪௧	சிந்தையிடை	௧0௮௬	சீரணங்குற	௬௫0
சாமரல்	௮௨	சிந்தையில்	௪௪௮	சீரணி	௫௬௩
சாமவரை	௧0௪௭	சிந்தையுட்	௧0௪௩	சீரார்	௭௭௧
சாமவேத	௬௫0	சிந்தையுந்	௨௪0	சீரார்சிர	௧௪௪
சாமனை	௪௮௧	சிந்தைய	௮	சீரார்புன	௬௭௨
சாம்பரால	௬௬௭	சிந்தைவன்	௨௧௫	சீரார்முடி	௭௨௪
சாம்பலை	௧௧௬	சிந்தைவண்ணமு	௨௧௫	சீரால்வண	௨௭௪
சாம்பவொடு	௮௨	சிந்தைவாய்	௨௧௪	சீரினார்	௨௩௫
சாம்பல்	௧0௮௧	சிம்மாந்து	௧௧௫	சீரின்	௬0௬
சாயவன்	௬0௮	சிரங்கை	௪௧௫	சீருடை	௩௧௩
சாரணன்	௬௨௮	சிரமஞ்	௪௩௨	சீருறு	௧௩௬
சார்ந்த	௧0௬௫	சிரமுரல்	௮௪௮	சீரூர்	௬௬0
சாலக்கோயி	௧௧௨௫	சிரமேற்	௩௨௧	சீர்கெழு	௧௧௪௫
சாலயா	௧0௬௬	சிரமொரு	௩௫	சீர்கொண்ட	௫௧௬
சாலாபும்	௧௧௪	சிலந்திச்	௮௪௪	சீர்கொண்மா	௧௨௬
சாற்றிச்	௧0௭0	சிலந்தியு	௧௧௨	சீர்த்த	௮௨௩
சாற்றினேன்	௧௨0௬	சிலைதனுன்	௩௭௫	சீர்த்தானை	௧௧௧
சாற்றுவ	௬௬௭	சிலைதனை	௮௩௨	சீர்த்தானையு	௪௪௪
சி		சிலைத்தார்	௪௮௩	சீர்மருவு	௫௭௭
சிகரத்திடை	௮௪௬	சிலைத்து	௩௪௮	சீர்மலி	௬௭௨
சிகரமுக	௬௩௪	சிலைவின்ற	௫௧௨	சீர்மையில்	௧0௭௧
சிக்கார்	௫௭௧	சிலையது	௬௪	சீலம்மிகு	௭௧௨
சிக்கத்	௮௭௧	சிலையான்	௩௬௫	சீறுலாவிய	௬௮௧
சிக்கவரை	௬௫௭	சிலையினுன்	௮௬௭	சு	
சிட்டப	௩௩	சிலையுப்பத்த	௪௫௨	சுடப்பொடி	௪௮௮
சிட்டமார்	௫௪0	சில்லுரு	௧௧௬0	சுடரைப்	௭௮0
சிட்டர்	௫	சில்லுருவிற்	௭௭௭	சுடர்ப்பவள	௭௫0
சிட்டனே	௮௩௨	சிவனுமி	௭௬0	சுடர்மணி	௧௪௧
சிட்டவோ	௬௨௧	சிவனுறை	௬௬௭	சுடர்மணிச்	௫௨௨
சித்தகருமி	௬௬௭	சிவனெனு	௧௨00	சுடலை	௧௫௭
சித்தத்தெழு	௧0	சிவனெனுமோ	௧௧௭௧	சுடுகாடு	௭௧
சித்தசீ	௮௮௧	சிறவார்	௪௩௭	சுடுகூரெரி	௧00௬
சித்தர்தன்	௮0௪	சிறதேரு	௪௪௧	சுடுநீறணி	௩0௩
சித்ததெளி	௬௬0	சிறைகொண்	௨௭௧	சுடுமணி	௧௧௪௪
சித்தத்தெற	௪௬௭	சிறையாரு	௮௮	சுடுவார்	௮௫௪
சித்தராய்	௭௫௮	சிறையார்	௬௭௧	சுட்ட	௩0௭
சித்தர்	௪0௮	சிறையார்வண்டு	௩௨௬	சுணங்கு	௨௫௧
சித்தர்தேவர்	௧௬௧	சிறையார்வரி	௫௩௫	சுணங்குமுக	௨௬௪
சித்தவ	௬௫	சிறையார்வரிவண்டு	௬௭௪	சுண்ணத்தார்	௧௬௧
சித்தனே	௮௬௧	சிற்றிடை	௫௪௪	சுண்ணத்தார்தோ	௬௨௫
சித்திசெய்	௫௨௫	சிற்றிடையு	௫௬௫	சுண்ணநீறணி	௮௧௫
சித்திரமேறு	௬௬௬	சிற்றிடையமை	௧0௭௮	சுண்ணவெண்	௮௪௩

Koviloor Digital Library

பாட்டு.	பக்கம்.
சுண்ணவெண்ணீ	௫௧
சுண்ணவெண்சந்	௯௪௧
சுரபுரத்	௪௪௧
சுரருலகு	௧௪௬
சுரர்மாதவ	௯௭௮
சுரிகுழ	௫௧
சுருக்க	௭௧௧
சுருதிகள்	௯௧௫
சுருதியான்	௧௩௯
சுரும்பார்	௩௧
சுரும்பு	௭௯௪
சுருளுறு	௫௧௧
சுலவுஞ்	௭௯௨
சுழலார்	௨௧௪
சுழித்தவார்	௮௦௫
சுழித்தானை	௯௮௩
சுழித்துணை	௩௨௨
சுழிந்த	௧௮௦
சுழிப்பட்ட	௫௮௭
சுழியிலங்	௧௧௭
சுறவக்	௩௩௪
சுற்றமுந்	௯௩௨
சுற்றமுந்துணையு	௩௭௯
சுற்றமுமக்	௧௨௭
சுற்றமொடு	௧௧௩
சுற்றலா	௧௧௭
சுற்றூர்தரு	௩௧௯
சுக்ருர்ந்த	௭௭௨
சுற்றிக்	௧௧௦௯
சுற்றிநின்	௨௭௧
சுற்றிவண்	௧௧௦௯
சுற்றுமமரா	௧௦
சுற்றுமுற்	௭௩௫
சுற்றுமுன்	௭௯௯
சுற்றுமூர்	௯௧௧
சுற்றும்	௧௧௦௭
சுற்றுவார்	௨௭௩
சுனையுணீலஞ்	௧௯௮
சுனையுணீலமல	௨௨௧
சூ	
சூடகமுன்	௯௦௭
சூடல்	௮௨௭
சூடினர்	௧௫௫
சூடுமதி	௭௪
சூடுமிளந்	௧௦௦௭
சூடுமிளந்திங்க	௪௦௧
சூடும்பிறை	௭௯௮
சூடுவர்	௯௨௪
சூதகஞ்	௧௦௯
சூலங்கொப்	௯௫௨
சூலஞ்சேர்	௫௧௯
சூலப்படை	௪௫௯
சூலப்படையானை	௯௯௮
சூலப்படையான்	௧௦௫௮
சூலப்படையொன்	௩௫௩
சூலமல்கிய	௨௧௯
சூலமுண்டு	௧௪௫௧
சூலமேந்தி	௯௨௫
சூலமேந்து	௫௨௧
சூலமோடொண்	௮௧௨
சூலம்படை	௧௯௯
சூலவஞ்சனை	௭௮௧
சூழுந்துயர	௨௫௪
சூழுமரவ	௧௫௦
சூழுமோடி	௭௩௪
சூழொளி	௭௪௪
சூழ்தரு	௨௩௮
சூழ்ந்த	௭௧௦
சூளாமணி	௭௨௩
செ	
செக்கரங்	௫௪௫
செக்கரங்கெழு	௧௧௭
செங்கட்	௩௩௪
செங்கணரவு	௧௦௨
செங்கணுக	௯௦௧
செங்கணுனு	௧௨௧௦
செங்கண்	௯௩௭
செங்கண்மால்	௫௧௪
செங்கண்மால்பிர	௧௯௦
செங்கண்மால்விடை	௯௫௧
செங்கண்மாறிக	௩௭௯
செங்கண்மேதி	௯௩௫
செங்கண்வெள்	௮௯௨
செங்கமல	௧௯௪
செங்கயல்	௫௧௧
செங்கயல்புன	௫௯௫
செங்கயல்லொடு	௧௦௧௯
செஞ்சடை	௭
செஞ்சடைக்கோர்	௭௮௩
செஞ்சுடர்	௪௧௪
செஞ்சேலன்	௧௧௦௧
செடிகொ	௯௨௯
செடிகொணோயுள்	௧௧௫
செடிகொளோய்	௯௧௨
செடிகொளா	௧௮௭
செடித்தவ	௩௫௩
செடிநகரு	௯௫௫
செடிபட	௨௦௪
செடியமண்	௭௫௫
செடியாய	௧௫௧
செடியாரும்	௮௧௦
செடியார்	௩௨௧
செடியேறு	௭௨௯
செடியேனுன்	௭௫௨
செடியேன்	௩௧
செட்டி	௧௧௧
செண்டாடு	௧௧௦௦
செதுகரு	௩௮௧
செதுவாய்	௯௭௧
செத்த	௭௪௧
செத்தவர்	௨௫௮
செத்து	௧௨௧௮
செத்தை	௧௧௯
செந்தண்	௯௫௯
செந்தண்பவ	௭௪௯
செந்தமிழர்	௫௭௭
செந்தமிழ்த்	௩௪௮
செந்தமிழ்பரப்	௭௭
செந்தழ	௧௦௮௧
செந்தளிர்	௫௭௫
செந்தாமரை	௨௪௯
செந்துவராடை	௮௪௮
செந்துவராடையி	௯௯௧
செந்துவர்	௭௦௧
செந்துவர்வாய்	௯௭௨
செந்துவர்வாயா	௮௯௮
செந்தெனு	௮௯௧
செந்நெலங்	௯௨௧
செந்நெலங்கழனிப்	௯௨
செந்நெலவய	௫௯௫
செப்பநெஞ்	௩௮௭
செப்பரிய	௭௩௯
செப்பான	௧௧௩
செப்பிள	௧௧௭௨
செம்பவள	௨௮௫
செம்பிணுரு	௧௧௫௧
செம்பை	௧௩௨
செம்பொனு	௩௩௧
செம்பொனுற்	௯௫
செம்பொனின்	௯௨௩
செம்பொனே	௩௮௦
செம்பொனேர்	௯௨௮
செம்பொன்	௫௫௮
செம்பொன்செய்	௫௩௮
செம்பொன்மேனி	௫௪௮
செம்பொன்னை	௨௧௭
செம்மலர்	௫௦௭
செம்மென்	௨௪௪
செம்மை	௧௧௯௩
செய்ஞ்ஞின்ற	௧௦

Koviloor Digital Library

பாட்டு.	பக்கம்.
செய்தவத்தர்	கூஙக
செய்தவன்	உகூ
செய்த்தலை	ருகூ
செய்யுங்	கூ0ங
செய்ய	அஎரு
செய்யதன்	கபகூஅ
செய்யதா	க0சக
செய்யதாமரை	அகூக
செய்யதிரு	ஙகஎ
செய்யநின்	அஎ0
செய்யநுன்	உரு
செய்யமலர்	கககூங
செய்யமேனி	உஎ
செய்யமேனிய	சகரு
செய்யமேனியீர்	ருஎஉ
செய்யமேனிவெளி	கூஙஅ
செய்யருகே	ருஎ
செய்யர்	ஙஅஎ
செய்யர்வெண்	கூசக
செய்யனே	கூகூச
செய்யனேதிரு	அகூக
செய்யன்	கூஎ
செய்யார்	க00கூ
செய்யாய்	கககூச
செய்யாமேனி	ஙகூரு
செய்யானை	ஙகூஉ
செய்வினை	க0கஉ
செருக்கு	கசக
செருக்குவாய்ப்	உக0
செருக்கறுற்	கூகங
செருத்தனை	சஉச
செருத்தனையரு	ககஅஅ
செருந்தி	எசக
செருமரு	உசங
செருமேவு	கூஉக
செருவடை	சருக
செருவரை	ருககூ
செருவன	எஉகூ
செல்லேலா	சகச
செல்வமெட்டு	க
செல்வப்பன	கூஎ0
செல்வமலிய	ஙருக
செல்வமல்குதிரு	உஙஎ
செல்வமல்கு	கூ0அ
செல்வியை	க0ருக
செவ்வண்ணா	உசங
செவ்வான்	ககஅக
செவ்வழலா	ருஉஉ
செவ்வழலன	ருஎக
செழுஞ்ச	கூஎக

பாட்டு.	பக்கம்.
செழுந்தண்	கஙக
செழுமலர்	கருரு
செழுமலிய	கசச
செறிகழ	கூ0ச
செறிகொண்ட	சஙரு
செறிந்த	ருகூக
செறிபொழி	ருகூரு
செறிமுளரி	அச
செறியார்	ருஎ0
செறியார்தரு	ச0உ
செறிவிலேன்	சஎஅ
செறிவுண்டே	எசக
செறுத்தது	அசஅ
செறுவிப்	அ0உ
செறுவினிற்	கூசஅ
செற்றதோர்	ஙக
செற்றரக்க	உஙஅ
செற்றவரக்	ருஉஅ
செற்றவர்தம்	ருஅ
செற்றவர்முப்	அகஅ
செற்றான்	க0கஅ
செற்றிட்டே	கஙக
செற்றினின்	ருகூரு
செற்றுக	கக0ரு
செற்றெறிபுந்	ருக0
சென்றச்	கசசங
சென்றிவிடை	ககக
சென்றுதா	அகூஎ
சென்றுபல	கருஎ
சென்றுபுர	கககஉ
சென்றுருளு	சகூ
சே	
சேடர்தேவ	உசச
சேடர்வின்	ருஎகூ
சேடு	உ0
சேடோவிய	கூஅக
சேணியலு	எருஎ
சேறுலா	கசக
சேர்ந்தர்	கஎச
சேமவன்	கங
சேயடை	உசஉ
சேயவுலக	ககஅ
சேரும்	கஎ0
சேர்த்தானே	அக0
சேர்ந்தோடு	உ0அ
சேர்பதி	அஉ
சேலினான	கபகஅ
சேலினேரனைய	ருஉங
சேவுயருந்	கஙங
சேறுபட்ட	ஙஙரு

பாட்டு.	பக்கம்.
சேற்றினர்	உஉச
சேற்றெழு	அஅ
சை	
சைவத்த	க0எ
சொ	
சொக்கர்	ஙகூஎ
சொரிவிப்	அ0க
சொல்லக்	கக0ரு
சொல்லரும்பு	கககூ
சொல்லார்ந்த	கூஎரு
சொல்லானை	கக0
சொல்லானைச்	ருசஎ
சொல்லானைச்சுடு	சஎக
சொல்லானைப்	உகஎ
சொல்லிடி	எஙங
சொல்லிற்	எசஉ
சொல்லுவ	அஉரு
சொல்லே	ககஉ
சொற்பா	கூஅஉ
சொற்பிரி	ஙககூ
சொற்றரும்	சகக
சொற்றுணை	ககஅஉ
சொன்மலி	சஙங
சொன்மாலை	உகூஅ
சொன்னய	க0ரு
சோ	
சோதிமிகு	க00அ
சோதியாய்	ங0ரு
சோதியை	எஎக
சோமனை	க0ரு0
சோலைமிக்க	கூசச
சோலையில்	கூகக
சோறு	ககக
சோற்றுத்	ககஅகூ
ஞ	
ஞமனென்பா	கஉகச
ஞா	
ஞாயிறாய்	கூருங
ஞாலத்தா	ஙககூ
ஞாலத்தார்	சகூச
ஞாலத்தானை	கஉ0க
ஞாலத்துயர்	உ
ஞாலத்தை	சகரு
ஞாலத்தையுண்	க0கக
ஞாலமல்குஞ்	அசஅ
ஞாலமக்கு	கூ0உ
ஞாலமளித்த	கூஅ
ஞாலமுண்ட	கூஅ0
ஞாலமுமறிய	ரு0ங
ஞாலமுன்	உஙகூ

பாட்டு.	பக்கம்.
ஞாலமே	௫௮௧
ஞாலமேழு	௮௫௬
ஞாலம்புகழ்	௭௬௧
ஞாழலுஞ்	௫௩
ஞாழல்	௯௪௫
ஞானங்காட்	௯௦௧
ஞானத்தாற்	௧௨௦௪
ஞானத்திர	௧௦௨௯
ஞானமாகிய	௫௨௫
ஞானமுணர்	௧௦௮௭
த	
தகரமணி	௮௭௫
தகைமலி	௫௦௯
தக்கனது	௪௩௩
தக்கனதுபெரு	௯௮௭
தக்கனதுபெருவேள்	௯௮௧
தக்கனதுவேள்	௨௧௮
தக்கனர்	௧௨௦
தக்கனர்பெரு	௧௧௧
தக்கன்	௪௯௮
தக்கன்வேள்	௧௧௭௫
தக்கன்வேள்வி	௯௫
தக்கன்வேள்விதகர்த்	௮௯௨
தக்கன்வேள்விதகர்த்த	௭௧
தக்கன்வேள்வியை	௫௮௧
தக்கன்வேள்வியைத்	௮௩௯
தக்கன்றன	௯௧
தக்கன்றன்வேள்	௩௮௧
தக்காரடி	௩௦௧
தக்கார்வ	௪௨௦
தக்கிருந்	௩௩
தக்கில்	௧௧௨௨
தக்கை	௩௪௮
தங்கலப்	௨௩௬
தங்களுக்கு	௮௫௧
தங்கிய	௪௪௪
தங்குமோ	௭௫௫
தங்கை	௧௧௧
தசமுக	௧௪௧
தஞ்ச	௮௯௨
தஞ்சமென்று	௫௪௮
தஞ்சவண்	௭௪௭
தஞ்சே	௮௨௮
தஞ்சொலா	௭௩௪
தடக்கை	௭௦௩
தடக்கையா	௯௫௪
தடங்கை	௨௦௧
தடங்கொண்	௪௪௬
தடநிலவிய	௫௯௮
தடமலரா	௧௧௮௫
தடமலி	௮௭௭
தடமலிபுகலி	௪௫௦
தடவரை	௯௫௨
தடவரைக	௧௦௮௧
தடவரையெடு	௮௮௩
தடுக்கமரு	௮௨௨
தடுக்கவுந்	௮௩௧
தடுக்காலுட	௨௪௫
தடுக்கினை	௪௨௨
தடுக்குடுத்	௮௦
தடுக்குடை	௫௩௯
தடுக்கை	௭௯௩
தடுத்தானைக்	௯௮௩
தடுத்தானைத்	௯௮௧
தடுத்திலே	௧௯௭
தடுமாறு	௪௯௩
தட்டிடுக்	௪௩௯
தட்டிடுசம	௨௮௮
தட்டிட்டே	௧௩௨
தட்டெனு	௧௨௪௧
தட்டையிடுக்கித்	௧௦௨௭
தட்டொடு	௨௩௧
தணிநீர்	௧௩௭
தணியார்	௪௧௪
தணியார்மதியர	௪௦௧
தண்கமல	௯௨௩
தண்காட்ட	௧௨௨௯
தண்டணை	௫௧௦
தண்டமர்	௩௬௨
தண்டமுடை	௧௦௫௫
தண்டவாளி	௭௧௦
தண்டி	௧௨௨௫
தண்டுந்	௨௦௦
தண்டேர்	௯௦௭
தண்டொடு	௪௨௮
தண்ணந்தரா	௧௪௪
தண்ணம்	௪௧௦
தண்ணறு	௫௩௮
தண்ணார்	௧௦௦௧
தண்ணார்திங்க	௧௯௩
தண்ணார்மா	௧௦௯௩
தண்ணாவரக்	௧௧௧௧
தண்ணியல்	௯௨௧
தண்புன	௧௧௩௭
தண்புனலும்	௯௨௩
தண்புனலும்வெண்	௫௪௦
தண்புனலோ	௪௭௨
தண்புனனிள்	௨௨௦
தண்பொழில்	௪௧
தண்மதிக்	௨௮௩
தண்மதிசாழ்	௨௧௪
தண்மதியும்	௪௧
தண்முத்	௫௦
தண்மையொடு	௫௧௪
தண்வயல்	௨௩௧
தண்வயல்சூழ்	௮௨௦
தண்வயல்புடை	௪௦௩
தத்துவந்	௯௪௪
தந்தத்	௧௧௫௧
தந்தவத்தன்	௧௧௪௨
தந்தை	௩௦௧
தந்தைதாயு	௩௪௪
தந்தைதாயொடு	௯௩௨
தந்தைதாய்	௯௧௩
தந்தையாய்த்	௯௫௩
தந்தையாருந்	௧௮௮
தந்தையார்	௧௨௨௯
தந்தையார்போ	௯௧௨
தந்தையுந்	௫௦௩
தப்பி	௭௯௭
தமக்கு	௪௯௧
தமிழி	௩.௨௯
தம்பலம்	௭௮௮
தம்மானங்	௧௪௧௪
தம்மானை	௯௭௩
தம்மையே	௯௪௭
தயங்கு	௧௧௧
தரிக்குந்	௯௧௩
தரித்த	௧௪௬
தரித்தவன்	௫௩
தரித்தானை	௪௮௨
தரியா	௧௧௧௫
தருக்கிச்	௩௪௭
தருக்கியதக்க	௨௫௨
தருக்கியகிரி	௯௭
தருக்கிவெற்	௪௯௬
தருக்கின	௨௧௧
தருக்கினவாக்	௫௮௫
தருக்கினவாக்கன்	௪௪௮
தருக்கினவாள	௧௧௦௯
தருக்கின்	௩௫௮
தருக்குமிகு	௬௦
தருஞ்சமதந்	௧௯௩
தருமண	௩௩
தருமந்	௧௨௧௪
தருவளர்	௧௯௩
தருவினை	௧௦௩௯
தருவுயர்ந்த	௯௮௫
தரைத்தேவ	௧௪௫
தரைமுத	௮௧௫

Koviloor Digital Library

பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.
தரையொடு	௫௯அ	தனம்வரு	உ௧உ	தாருந்	௧உ௪உ
தலக்கமே	௫உ௩	தனிபவொன்	௭௪உ	தாருறு	௧௩௫
தலமலிய	௩௦௪	தனிவெண்	௭௯௦	தாருறுதா	௫௧௦
தலைக்கல	உ௦௧	தனைக்கணி	௯உ௫	தார்கொள்	௩உ௯
தலைக்குத்	௯௧௩	தன்மையாரு	உஅ௦	தாவணவ்	அ௯௪
தலைசமக்	௯௯௯	தன்மையிறு	௯௭௯	தாவா	௧உ௩
தலைதாழு	அ௦௯	தன்றவம்	௫அ௪	தாவிய	அஉ௧
தலைமதி	௧உஅ	தன்னடி	௯௦௪	தாவினு	அ௯உ
தலையவனு	௩௯௩	தன்னடை	௯௪	தாழிளங்	உ௯௯
தலையவன்	௧௦௯௭	தன்னவனு	௩௯௪	தாழ்குழ	௭௦௩
தலையானை	௪௪உ	தன்னிலாசறு	௯௪உ	தாழ்ந்த	௯௫௧
தலையிடை	௧௯௧	தன்னிற்	௧உ௧௫	தாழ்வெனு	௭௩௪
தலையின்	உ௭௯	தன்னுருவ	௧௧௪உ	தாளா	௧௦௧அ
தலைபுருவ	௭௧உ	தன்னுருவை	௧௯௦	தாளுடை	௧௦அஉ
தலைமேலாம்	௪உ௩	தன்னைச்	௯௪௩	தாறிடு	௧௯௪
தலையேயர்	௧௧அ௧	தா		தானகங்	௧௧௦௫
தலையேந்து	உஉ௭	தாக்கின	உ௯௧	தானத்தை	௧௧௦௩
தலையொரு	உ௦௯	தாங்கருப்	௫அ௩	தானலம்	௧௧௫
தலைவாண்	௯௧௦	தாங்கூர்	௧உ௪௩	தானலா	உஅ௯
தவந்த	௭௯௫	தாங்கோல	௯௯௯	தானவக்	௫அஉ
தவர்தான்	அ௦௯	தாடாவுடு	௯௯௯	தானெனை	௧௧௯௯
தவர்கொண்	உ௩	தாட்பாவு	௯அஉ	தி	
தவளமா	௪௭௯	தாளுநல்	௯உ	திகழுஞ்சூழ்	௧உ௧௧
தவளவெண்	௫௩௪	தாளுமிகு	௧௪௭	திகழுந்	௭௯௧
தவ்வலி	௭௭௯	தாதலர்	௭௪	திகழுமால	௪அ௫
தழலுமேனி	௧உ௩௯	தாதார்	௧௦௯௧	திகழ்கை	௧௫௦
தழல்சேர்	௯௭அ	தாதார்கொன்	௧௧௫௯	திகழ்சிவ	௯௧௯
தழுறுமரை	அ௦௭	தாமரை	௭அ௯	திகழ்மாமட	௧௪௭
தழுக்கொள்	௧௫௯	தாமரையான்	௩௧௧	திகைநான்	௧௦௯௪
தழைகொள்	௪௩அ	தாமலார்	௭௯௧	திக்கமர்	௫௭௯
தழைத்த	௧௯உ	தாமுக	௯௭	திக்கிற்	௧௩௧
தழைமலி	௯௫௧	தாமென்று	௯௩	திக்குலாம்	௫௩௪
தழையார்	௯௭அ	தாயத்தார்	௩உ௭	திங்கடங்	௧௦௪அ
தளர்கின	உ௪௭	தாயவறுல	௧௦௯௪	திங்கடங்கிய	உஉஉ
தளருங்	௧௦௦௭	தாயவனா	௯௭௭	திங்கடங்கு	௧௦௫௩
தளருக்கோர	உஉ௦	தாயவளை	௭௫௦	திங்கட்	௫௦௯
தளரும்	உஉஉ	தாயவளைவாரெ	௪௪உ	திங்கட்கேது	௧௩௧
தளிசாலை	௧௧௫௪	தாயவன்	௧௦௪௪	திங்கணம்பி	௯௧உ
தளிரிளங்	௯௫௦	தாயானே	அ௦௧	திங்கண்	உ௬௪
தளிரிளவள	அஉ௯	தாயினு	௧உ௧௧	திங்களம்	௫௩அ
தளிரிளவளரொளி	௫௪௩	தாயினுல்ல	அ௫உ	திங்களுச்சி	௫௪௦
தளிர்கொண்	௪௭உ	தாயுந்தியே	அ௧௩	திங்களூர்	௧௦௦௦
தளிர்போன்	௧௧௦௧	தாயுமா	௩௯௧	திங்கனொடரு	அஉ௭
தளையவிழ்	௫அ	தாரமாகிய	௩௪௪	திசையவர்	௫௯௫
தறிபோலாஞ்	௯௫உ	தாரமாய	௩௩௫	திசையு	உ௯உ
தறியார்	௩உ௯	தாரார்	௪௯	திடமலி	௫௯௫
தனகிருந்த	௩௫௯	தாரிடு	௧௧அ	திண்குண	௪௫௭
தனக்கே	அஉ௯	தாரித்திர	௧௧௯	திண்டிற	உ௪௦
தனமணி	௯௫உ	தாரித்தன்	௯௯	திண்மச்சர	௧உஉ௧
தனமலி	௭௯௫	தாரிஞர்	௩	திண்டேர்	௯௩௫

Koviloor Digital Library

பாட்டு.	பக்கம்.
திண்ணமரு	௭௯௯
திண்ணர்	௯0௧
திண்ணினர்	௯௮௫
திரட்டிரை	௪௨௩
திரிதரு	௧0௭௯
திரிதருமா	௮௯௧
திரியுமுப்	௧0௪௮
திரியுமுப்புர	௮௧௧
திரியுமும்மதி	௫0௫
திரியுமூவெயி	௧0௮௧
திரியுமூவெயிநீ	௭00
திரியுமூன்று	௭௧
திரியும்	௧௧௪௮
திரிவன	௨0௪
திருகு	௩௩௮
திருக்கு	௮0௨
திருக்கோயி	௧௨௨௧
திருநிமை	௮௧௨
திருத்திகழ்	௨௮௧
திருத்திக்	௨௯௨
திருத்தினே	௧௫௩
திருநாம	௧௨௩0
திருநின்ற	௭௩௭
திருநீல	௧0௯௪
திருநீர்	௯௭௩
திருந்த	௨0௩
திருந்தமதி	௯௧0
திருந்தலார்	௪௨௬
திருந்தாத	௯௭௫
திருந்தாவமண	௧0௧௨
திருந்து	௩௮௫
திருந்துமா	௧௨௬
திருமகட்கு	௯௬௯
திருமகள்	௧௨௬
திருமணி	௭௨௨
திருமரு	௨௨0
திருமலர்	௬௬௪
திருமலர்க்கொன்	௧0௭௫
திருமாலடி	௬௬௮
திருமாலடிவீழ	௧00௭
திருவமர்	௪௧௪
திருவளருங்	௧௪௫
திருவளர்	௮௮௮
திருவார்	௩௩௫
திருவார்சிலை	௧௧0
திருவிலி	௩௫௧
திருவினுத	௩௨௭
திருவினுயக	௧0௪௨
திருவினுயசனு	௨0௨
திருவினுயகனு	௩௧௮

பாட்டு.	பக்கம்.
திருவினர்	௮௪௧
திருவினர்போதி	௧௧0௩
திருவினள்	௯௫௫
திருவுடை	௯0௫
திருவுமெய்	௧௧௧௫
திருவும்	௧௭0
திருவேயென்	௪௮௨
திருவொளி	௧௯
திரைகளிரு	௪௧௩
திரைகளெல்	௫௭
திரைதரு	௩௪
திரைபுல்கு	௫௯
திரைபொரு	௧௬௫
திரையார்	௧௧0
திரையார்புனலோ	௫௫௫
திரையார்புனற்	௯௭௧
திரையார்ந்த	௫௧௭
திரையானுஞ்	௫௨௧
திரையினர்	௨௧௧
திரைவாய்	௧௫௧
தில்லைச்	௧௨௧௧
தில்லைவாழ	௭௩௬
திளைக்கும்	௯0௧
திறக்கப்	௮௨௧
திறங்கொண்ட	௧௫௧
திறம்பல	௭௩௨
தினைத்தனை	௩௧௧
தினைத்தாளன்	௭௪௬
தீ	
தீக்கூரும்	௫௧௨
தீண்டற்	௮௨௧
தீதவை	௧0௬௧
தீதிலா	௧0௬௮
தீத்தொழி	௫௮௬
தீயராய	௯௪௩
தீயாகி	௧௨௨௭
தீயினர்	௯௧௮
தீயுற	௨௧௨
தீயோம்பு	௭௨
தீரன்	௫௮௮
தீர்த்தநீர்	௪௨௫
தீர்த்தப்	௯௭௧
தீர்த்தமா	௧௫௬
தீர்த்தனை	௫
தீவாயின்	௨௧௭
தீவிரிய	௨௨0
தீவினை	௨௧௩
து	
துகடுறு	௭௬௫
துக்கமிக்க	௨௩0

பாட்டு.	பக்கம்.
துங்கநக	௯௫௭
துங்கமா	௧௪௯
துங்கமிகு	௬௮௭
துங்கவான	௪0
துங்கிய	௯௭
துஞ்சலிலா	௭௭௫
துஞ்சலுங்	௧௧௭௩
துஞ்சவரு	௧0௭௯
துஞ்சியும்	௨௬0
துஞ்சிருளா	௨௧௩
துஞ்சிருளி	௯0
துஞ்சிருள்	௫0௭
துஞ்சுநறு	௧0௬0
துஞ்சுநாடு	௫௬௩
துஞ்சும்	௧௨0௭
துஞ்சும்போது	௮௧௩
துஞ்சும்போதுங்	௮௪௧
துடிகளோடு	௩௮௮
துடிக்கின்ற	௭0௯
துடித்த	௩௮௧
துடிபடு	௭௧௪
துடியாங்	௪0௭
துட்டனு	௪௭௩
துட்டனுய்	௪௭௮
துணிநிலா	௬௬௧
துணிபடு	௪0௩
துணிப்படு	௩௫௨
துணிமல்கு	௫௧௬
துணியாருடை	௧00௭
துணியுடை	௭௨0
துணிவண்ண	௧0௬௧
துணிவளர்	௩௪௧
துணிவார்	௫௩௧
துணிவுடை	௬௪௮
துணைநன்	௭௭௨
துணையல்செய்	௧௧௩0
துணையாக	௨௨
துணையார	௨௬௮
துணையிலா	௪௫௬
துணையிறு	௭௭௩
துண்டமரும்	௫௫௨
துண்ணெனு	௨௧௧
துப்பினை	௭௧௮
தும்மலிரும	௧௧௭௩
தும்மலோ	௪௭௪
துயக்கின	௨௧௧
துயராயின	௭௭௨
துருத்திச்	௧௨௪௩
துருத்தியாங்	௯௫௩
துருத்தியார்	௯0௩௯

Koviloor Digital Library

பாட்டு.	பக்கம்.
துருத்தியுறை	௭௪௬
துலங்கு	௮௯௬
துவராடை	௨௭௭
துவராடையர்	௪௯௩
துவரும்	௧00௭
துவருந	௯0௮
துவருமாடை	௯௮
துவருயவிரி	௪௬0
துவருயவிர்தும	௯௧௨
துவர்ச்சர்	௧௩௮
துளக்க	௨௪௩
துளங்கு	௯௪௬
துளங்குந்	௫௭0
துளபதி	௪௯௯
துளிபண்டி	௩௯
துளிவண்	௧௧௧
துனார்க்கை	௭0௧
துனிவெண்	௧௨௪
துன்று	௨௪
துன்றுமான்	௧௯௧
துன்றுபிரு	௯௯0
துறக்கப்	௧௨0௧
துறக்கு	௪௮௭
துறக்காட்டி	௧௪
துறந்தார்	௮௭௩
துறந்தார்தந்	௪௮௪
துறந்தாயே	௪௪௩
துறவாதே	௯௫௮
துறவிந்	௧௪௯௭
துறவிசெந்	௪௩௨
துறவியென்	௨௮௮
துறைபல	௧௧௪௬
துறைபல்கு	௩௯௮
துறைபவன்	௧0௯௭
துறையுலவு	௬௨௨
துறைவனர்	௩௮
துற்றவை	௬௭௭
துற்றவர்	௭௪௭
துளியுற	௧௧௪௬
துன்பக்	௨௧௨
துன்புறும்	௭0௨
துன்பக்	௯௯0
துன்பமில்லை	௨0
துன்பமன்றி	௩௩௮
துன்பாய	௭௯௧
துன்பானே	௧௧௩
துன்பெலா	௭௧0
துன்று	௬௮௨
துன்றுவார்	௭௯௭
துன்றுவார்சடை	௯௮௧
தூன்றுபூமக	௬௮௧
துன்னக்கோவ	௯௪௪
துன்னம்	௮௪௭
துன்னாந்	௯௪௭
துன்னத்	௬௯௭
துன்னம்	௧0௯௭
துன்னவிருடை	௬௩௩
துன்னவாடை	௯௩௧
துன்னவாடைய	௧௯௧
துன்னாக	௯௯௭
துன்னார்	௧0௩
துன்னுடை	௩௧௩
துன்னுகுழ	௨௮௨
துன்னுவார்	௧௯0
துன்னுவார்ச	௧௭௮
தூ	
தூக்கான்	௩0௯
தூசார்	௭௯௪
தூசுடைய	௯௭௭
தூசுதான	௬௬௯
தூசுதுகி	௧0௯0
தூசுபுனே	௨௧௪
தூசுபோர்	௧0௯௭
தூணியான	௧0௩௯
தூண்டா	௧0௮௬
தூண்டிய	௧௨௯
தூண்டு	௮௪௩
தூண்டுசுடர்	௬௪
தூயயப்	௧௧௭
தூயரு	௯௧
தூயன்	௯௪௧
தூயென்	௯௭௧
தூயசிர	௯00
தூயமல	௪௨௨
தூயராயின	௭௭௨
தூயவர்	௩௪௮
தூயவன்	௯௨0
தூயவன்றூய	௩௪௯
தூயவிடை	௬௨௯
தூயவிரி	௧0௯0
தூயவெயி	௧0௮௭
தூயானேச்	௬௯0
தூயானேத்	௧0௩௪
தூர்த்தர்	௯௨௮
தூர்த்தனே	௧௮0
தூர்த்தனேத்	௮௭௪
தூர்த்தன்	௧௧௭௬
தூர்த்தன்வீர	௮௧௨
தூர்த்தன்ருே	௪௪௨
தூவண	௬௩௧
தூவாயா	௭௬௧
தூவியந்	௧0௧௯
தூவியநீர்	௩௮
தூறன்றி	௧௨௪௧
தூறுசேர்	௧௮௨
தெ	
தெங்குநீண்ட	௧௧
தெண்கட	௭௬௪
தெண்டிரை	௬௩௩
தெண்டிரைதேங்	௬௧௧
தெண்ணீர்	௧௭௨
தெய்வப்	௧௭௨
தெரித்த	௧0
தெரிந்தது	௮௪௮
தெரிந்தவடி	௧௮௩
தெரிந்தவன்	௩௧௬
தெரிந்தில	௧௭௨
தெருண்ட	௪௮௪
தெருளா	௯௪௬
தெருளு	௧௬௪
தெள்ளத்	௧௨0௬
தெள்ளிய	௬௯௬
தெள்ளியபேய்	௧0௯
தெள்ளியரல்	௨0௯
தெள்ளும்	௧௭௨
தெற்ற	௯௮0
தெற்றினர்	௯௭௧
தென்சொல்	௯௬0
தென்றறன்	௯௨௯
தென்றனன்	௪௯௪
தென்றிசை	௯0
தென்றிலரக்	௧௩௧
தென்னவன்	௧0௬௧
தென்னவன்னென	௨௬௨
தென்னுந்	௮௭௮
தென்னிலங்	௯௩௧
தென்னிலங்கை	௩௧௭
தென்னிலங்கையர்	௮௬௪
தென்னூர்	௧௨௩௧
தே	
தேக்குந்	௪௪௯
தேங்கமழ்	௧௧௨௮
தேங்கூருந்	௧௨௩௯
தேசர்நிற	௪௬௧
தேசனூர்	௧000
தேசனேத்	௧௨௧௯
தேசனேத்தேச	௧௧௧௩
தேசனேத்தேசங்க	௧0௩௮
தேசனேத்தேசன்	௮௩௮
தேசகுன்று	௧0௮௭

Koviloor Digital Library

பாட்டு.	பக்கம்.
தேடிக்கண்	ககஅஉ
தேடிக்காணுர்	க0உஎ
தேடிச்சென்று	க0ருக
தேடித்தானயன்	அ0௯
தேடிஞரயன்	அ0ச
தேடுவன்	க0உச
தேடுவார்	சஉக
தேமரு	௯ருசு
தேமாங்கனி	க0உ௯
தேம்பனுண்	கூ௯
தேயநின்	ககரு0
தேயனநா	அருஅ
தேயுமதிய	அக
தேய்ந்த	எ0க
தேய்ந்தில	ரு0சு
தேய்ந்து	அஉ0
தேய்பொடி	ககஅ0
தேரரக்	சசு
தேரரமண	கருக
தேரரமணரு	கூஅக
தேரரு	௯உஉ
தேரரோ	அசுஅ
தேரார்	எகரு
தேரூரார்	எகச
தேரையு	அருக
தேவராயு	களக
தேவரும்	சகக
தேவர்தானவ	ககஅ
தேவர்திங்க	கஉக
தேவாசிறி	கூஅஉ
தேவார்ந்த	சுசசு
தேவாவர	க0ரு
தேவியம்	உகக
தேவியை	அகூரு
தேவியைவவ்	அகூ0
தேவியோர்	சகஅ
தேற்றப்பட	சகச
தேற்றமில்	அசுச
தேனகத்	ககரு0
தேனகமரு	க0௯
தேனப்பூ	க0கக
தேனப்போது	கசு0
தேனமர்	௯சுசு
தேனமர்தரு	அக௯
தேனமர்பொழி	ககஎஉ
தேனயம்	ருசுஅ
தேனலங்	எரு௯
தேனலார்	ச00
தேனுர்	களரு
தேனுர்மத	௯௯ச
தேனினு	ககருரு
தேனுடை	௯கக
தேனுமாய	உருசு
தேனுமாயமுது	க0எசு
தேனுலா	ருகச
தேனுற்ற	சஉ௯
தேனெய்	க0௯ச
தேனைக்	கஉசரு
தேனைப்பாலினை	கஉ0எ
தேனையாடிய	உ0உ
தேனையாடு	கஉச0
தேனையேறு	கக௯க
தேனைவென்ற	ருஎசு
தேனைவென்றமொழி	க0அ
தேனேக்கு	க0ருஎ
தேன்மலர்	சு௯உ
தேன்றிகழ்	௯உ௯
தை	
தையலாருக்	சுசஅ
தையலாளொரு	க௯அ
தையலோர்	அகக
தொ	
தொகுத்த	க0எஅ
தொக்காய்	அஅக
தொங்க	சு௯ச
தொடருந்	ச0அ
தொடலரிய	சக
தொடுத்த	க
தொடுத்தார்	கக௯சு
தொடைத்தலை	கசசக
தொடைமலி	சுரு0
தொடைமலியித	உசுக
தொடையார்	க0சுசு
தொட்டிலங்	௯௯
தொண்டசை	எ௯ச
தொண்டணை	கருச
தொண்டரஞ்சு	கக௯உ
தொண்டரடி	அகஎ
தொண்டரா	சருஉ
தொண்டராயுள்ளார்	அசுக
தொண்டரிசை	சகச
தொண்டர்	உ௯ச
தொண்டர்கடொழ	உஅஎ
தொண்டர்கள்	கக0
தொண்டர்குழா	உஉஅ
தொண்டர்க்கு	எ௯க
தொண்டர்தண்	சுசக
தொண்டர்தம	அகக
தொண்டர்தொழு	உகசு
தொண்டர்மிண்டி	௯சுஉ
தொண்டர்வந்து	க0கக
தொண்டலாற்	உஅக
தொண்டனேன்	சுருக
தொண்டனேன்பட்	ககஅக
தொண்டனேன்பிற	கககஉ
தொண்டாய்	க0அரு
தொண்டிலங்கு	எஅக
தொண்டுபடு	க0சஎ
தொண்டுபாடி	ருசு0
தொண்டெலா	கூஉஅ
தொண்டை	கூ௯ரு
தொத்தின	ருசசு
தொலைவிலா	எக
தொல்லைத்	உகஎ
தொல்லையா	ரு
தொல்லையூழி	கக௯உ
தொல்லைவல்	அ0௯
தொல்லைவா	கூசுரு
தொழலார்	எஎக
தொழற்	சுகசு
தொழிலான்	எரு
தொழுத	எ0ச
தொழுது	உ௯ரு
தொழுமன	கருக
தொழுமாறு	சகஉ
தொழுவா	ருஅஅ
தொழுவார்	கஉச
தொறுவிலா	சுஉஅ
தொன்னிரிற்	கசச
தோ	
தோகையம்	கக0ரு
தோடணி	கக உஅ
தோடணிம்மல	க0ருஉ
தோடமர்	உசுக
தோடார்	எஎஉ
தோடிலங்	கஉக
தோடுகாதிடு	களஅ
தோடுசெவி	சு௯
தோடுடைய	௯ருக
தோடுடையசெவி	சுக
தோடுடையார்	ருகரு
தோடுடையானொரு	ககஉக
தோடுடையான்	சு௯௯
தோடுலா	சஉ
தோடேறு	சக௯
தோடொரு	௯0சு
தோடொருகா	உகச
தோடொர்	சசஎ
தோட்டீரே	க0சுக
தோட்பட்ட	௯அசு

Koviloor Digital Library

பாட்டு.	பக்கம்.
தோத்திர	௫௩௨
தோவிற்	௪௫௮
தோவிறலுடை	௧௪௧௭
தோலுடை	௫௮
தோலுநூலு	௧௦௩௨
தோலுந்	௩௫௮
தோலொடு	௯௫௧
தோளின்	௪௯௫
தோளின்மே	௭௮௭
தோள்கள்	௮௯௮
தோற்றங்	௫௮௧
தோற்றமுன்	௧௮௭
தோற்றவன்	௪௪௮
தோற்றி	௭௭௯
தோற்றுங்	௫௯௦
ந	
நகரவெல்கொடி	௧௨௧௪
நகலார்	௧௩௭
நகவிடம்	௭௦௪
நகுவாய்	௧௦௮௭
நகுவான்	௪௩௭
நகுவென்	௯௪௦
நகையார்	௯௮௨
நகைவளர்	௧௧௮௦
நக்கபேகு	௮௯௭
நக்கம்	௯௧
நக்கரை	௪௩௨
நக்கன்	௬௧௧
நக்குருவாய	௭௧௧
நக்குலா	௪௩
நக்கடம்பினை	௨௨௧
நக்கருக்	௯௫௩
நக்கை	௩௫௭
நக்கையா	௪௩௨
நக்கையைப்	௨௭
நகைபாவினை	௩௪௩
நச்சரவச்	௯௮
நச்சரவாட்	௯௫
நச்சரவு	௧௪௧
நச்சித்	௭௭௨
நச்சிராரு	௧௦௪௧
நச்சிச்ச	௧௨௦
நஞ்சடை	௯௫௮
நஞ்சடைந்த	௨௫௮
நஞ்சணி	௧௧௭௨
நஞ்சமுது	௨௯௪
நஞ்சி	௯௧௦
நஞ்சிருண்	௭௦௪
நஞ்சினை	௫௭௧
நஞ்சுகண்டக்	௧௧௩௧
நஞ்சடைய	௭௨௧
நடநண்ணி	௨௩
நடமதாடி	௧௧௧
நடலில	௧௨௦௩
நடுக்கத்	௧௨௦௫
நடுவிலா	௧௧௯௧
நடைமரு	௪௪௧
நடையுடை	௯௭௪
நடையுடைநல்	௧௦௯
நடையை	௩௩௮
நட்டத்தோடு	௧௧௩௧
நட்டமாடி	௨௦
நணியார்	௭௦௧
நணியானே	௨௮௫
நண்ணலார்	௮௯௨
நண்ணியொர்	௨௮௧
நதியதனை	௫௯௩
நதியாகுஞ்	௯௮௮
நந்தார்	௮௫௪
நந்திநாம	௧௧௭௭
நந்திபணி	௭௪௧
நமச்சிவாய	௧௨௦௩
நமச்சிவாயவென்	௧௨௧௪
நமனார்	௧௨௪௧
நமரேழு	௩௮௫
நமர்பிற	௭௪௩
நமைபெலா	௯௪௨
நம்பனார்	௭௧௯
நம்பனே	௩௧௩
நம்பனேநான்	௮௭௦
நம்பனேயன்று	௧௧௧௯
நம்பனேயெந்	௧௫௪
நம்பனை	௧௦௩௮
நம்பனைநல்	௮௨௨
நம்பனைநால்	௪௮௦
நம்பன்	௧௦௧௩
நம்பினார்	௫௧௧
நம்பவார	௧௧௭௯
நம்புவீர்	௯௦௩
நம்பொரு	௧௧௧
நம்மான	௧௧௩
நயந்த	௫௨
நயர்காழி	௪௧௫
நரகயேழ்	௧௧௭௯
நரம்பிறே	௭௩௩
நரம்பெழு	௯௫௦
நரிதலை	௧௨௪௧
நரிபுரி	௫௧௫
நரிபுரிசடலை	௨௮௧
நரியார்	௧௭
நரியை	௯௯௯
நரிவரால்	௧௫௯
நரைகள்	௯௪௮
நரைப்பு	௪௯௧
நரையார்ந்த	௧௧௦௮
நரையார்வந்	௫௦
நரையார்விடை	௫௦௦
நரைவிர	௮௪௯
நலங்கொண்	௧௧௫
நலங்கொள்	௧௫௯
நலங்கொள்பா	௯௦௧
நலங்கொள்பூம்	௨௦௦
நலச்சங்க	௫௧௯
நலநாரண	௨௩
நலந்தரு	௧௯௪
நலந்தா	௮௦௯
நலந்திகழ்	௮௭௧
நலமலி	௪௦௩
நலமலிஞான	௨௭௮
நலமலிதரு	௫௯௮
நலமலிமங்கை	௧௧௮௪
நலமாகிய	௧௧௧
நலமார்	௧௦௩௫
நலமார்மறை	௪௯௯
நலமிகு	௮௩௨
நலமில	௮௯௯
நலமிலா	௯௪௮
நலம்	௮௪௯
நலனுய	௧௦௯௪
நலிதரு	௮௧௫
நலியுங்	௧௨௨
நலியுநன்	௩௧௮
நல்குரவு	௭௭
நல்லகேள்வி	௮௮௫
நல்லநான்	௩௯௦
நல்லநினைப்	௭௪௪
நல்லபுனற்	௯௧௧
நல்லபோதில்	௯௭௦
நல்லம்மல	௧௯௭
நல்லராற்ற	௮௫௩
நல்லர்	௪௪௧
நல்லவர்திய	௧௭௩
நல்லவர்புக	௫௨
நல்லவினை	௭௮௦
நல்லாரவர்	௧௩௪௮
நல்லாரறஞ்	௯௯௮
நல்லாரும்	௩௩௨
நல்லார்கள்	௧௭௧
நல்லார்நி	௧௧௧
நல்லார்பயில்	௪௯௩

Koviloor Digital Library

பாட்டு.	பக்கம்.
நல்லானை	௬௮௩
நல்லானைநல்	௧௦௩௮
நகூலானைநான்	௧௧௩
நல்லான்	௮௧௫
நல்லிசை	௮௧௮
நல்லிய	௫௧௦
நல்லூரே	௭௧௫
நல்வினை	௩௧௭
நல்வெணெய்	௧௧௩
நளிரும்	௫௧௭
நளிரும்மலர்	௪௬௩
நளிர்காழி	௫௭௦
நளிர்பூந்	௭௬௪
நள்ளாறுதெள்	௯௧௭
நள்ளாறும்	௧௨௨௩
நறப்பொலி	௯௫௬
நறவந்	௯௧௨
நறவநிறை	௧௦௨
நறவமல்	௩௩௧
நறவமார்	௧௩௯
நறவார்	௪௧௩
நறவார்புகலி	௫௦௨
நறுநீருகுங்	௫௦௧
நறுமலரா	௧௭௦
நறுமலர்	௮௭௧
நறுமா	௪௮௩
நறும்	௩௪
நறும்பொனு	௩௭௦
நறைகொண்	௬௫௪
நறைகொள்	௪௨௯
நறைசேர்	௫௩௦
நறைமலி	௯௧௫
நறையூரிற்	௧௨௨௧
நறைவளர்	௯௨௫
நற்கொடி	௧௨௨௨
நற்பதங்	௮௮
நற்பதத்தார்	௧௨௨௯
நற்றமிழ்	௧௧௭௪
நற்றமிழ்வல்ல	௧௭௯
நற்றவஞ்	௪௬௪
நற்றவத்	௫௧௦
நற்றவர்	௮௦௪
நற்றவனைநா	௬௮௧
நற்றவனைப்	௩௬௨
நற்றாமரை	௧௧௧௧
நனவிலும்	௪௭௪
நனவிலுங்கன	௬௨௩
நனிவளர்	௪௪௮
நன்மை	௭௧௯
நன்மையா	௫௧௮
நன்றருளி	௭௨௫
நன்றாக	௭௨௨
நன்றாங்	௯௨௦
நன்றாநான்	௧௦௬௨
நன்றிநாரண	௫௦௫
நன்றியால்	௧௧௦௨
நன்றியொன்	௧௧௮
நன்றுடை	௩௬௭
நன்றுதீதென்	௯௦௧
நன்றுநகு	௮௨௧
நன்றுநா	௧௯
நன்றுநோற்	௧௨௧௭
நன்னெஞ்	௯௩
நா	
நாகங்	௯௫௨
நாகணை	௩௫
நாகத்	௪௬௯
நாகத்தை	௭௦௪
நாகந்தான்	௮௩௫
நாகபணந்	௮௪
நாகமரை	௧௪
நாகமும்	௧௭
நாகமும்வான்	௭௮௬
நாகம்	௧௦௩௪
நாகம்வைத்த	௬௩௧
நாக்கொண்டு	௪௨௯
நாசமாம்	௧௧௪௧
நாச்சில	௩௫௧
நாடக	௧௨௨௩
நாடவல்ல	௧௭௩
நாடிநந்	௪௬௪
நாடிநாரண	௨௩௩
நாடிநாரணனுன்	௫
நாடிநின்	௮௦௪
நாடிவந்து	௩௫௬
நாடினர்	௭௭௮
நாடினுர்	௭௦௦
நாடினுர்மணி	௨௨
நாடுடை	௧௭
நாடுமிக்	௭௭௭
நாடெலா	௧௧௪
நாட்கொண்	௪௧௪
நாட்டம்	௯௨௦
நாட்பட்	௨௯
நாட்பல	௯௧௦
நாணஞ்சு	௮௪௦
நாணமுடை	௮௨௨
நாணுதுடை	௩௬௮
நாணுரமணர்	௪௩௯
நாணிலா	௭௭௪
நாணுமோர்	௩௩௬
நாணெடு	௩௫௦
நாண்முடி	௮௩௧
நாதராவர்	௪௭௨
நாதனம்	௫௦
நாதனு	௭௫௮
நாதனுரென்	௧௫௭
நாதனுக்	௯௭௭
நாதனுந்	௫௨௧
நாதனென்	௧௩௮
நாதனை	௮௧௯
நாத்தானுமு	௯௧௭
நாத்தானுன்	௮௧௮
நாமமெனை	௨௧௪
நாமரு	௯௬௦
நாமருவு	௫௧௮
நாமார்க்கு	௧௨௩௬
நாமாரு	௭௫௧
நாயினுங்	௧௧௧௯
நாயேன்	௧௦௦௧
நாரணனு	௨௨௮
நாரணன்	௧௦௯௮
நாரணன்னெடு	௭௮௫
நாரணன்றன்	௪௦௦
நாலுகொலா	௧௧௮௭
நாலுங்	௯௬௦
நாலுமேன்	௧௨௦௨
நாலுவேதியர்	௪௬௫
நாவணங்	௮௬௯
நாவலம்	௪௪௧
நாவளம்	௨௩௩
நாவாய	௫௩௨
நாவார	௧௨௩௮
நாவார்ந்த	௭௮
நாவானன்று	௩௩௮
நாவிரி	௩௮௫
நாவின்	௧௧௫௫
நாளாய	௮௨௯
நாளார்	௩௨௩
நாளுநம்	௮௨௪
நாளுநன்	௧௨௩௧
நாளுமிகு	௨௬௪
நாளுமின்	௧௫௭
நாறவிண்ட	௮௮௪
நாறுகூவிள	௩௧
நாறுகூவிளமத்த	௧௧௯
நாறுகொன்றை	௧௦௮௮
நாறுசாந்	௯௩௩
நாறுசெங்	௯௩௫
நாறுசேர்	௮௬௦

Koviloor Digital Library

பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.
நாறுபூந்	௧0அ௩	நிலையவன்	௮௧௭	நின்மணி	௧௯0
நாறும்பூம்	௩	நிலைபாய்	௧0௯௨	நின்றடர்	௧0௧௩
நாறுமல்லி	௯௬0	நிலையார்ந்த	௭௨	நின்றநெடு	௩௨௫
நாற்ற	௧௧௬௧	நிலையிலா	௯௮௯	நின்றமதில்	௧௬௭
நாற்றமலர்	௧௯௬	நிலையிலாவென்	௧௬௮	நின்றவிம்	௪௬௯
நாற்றமா	௩௯௧	நிலையினார்	௬௩௩	நின்றவினை	௭௪௪
நாற்றமிகு	௬0	நிலையும்	௧௯௨	நின்றுக	௧0௧௭
நாற்றமிக்க	௬௪௩	நிலையுறு	௮0	நின்றுனுஞ்	௮௯௨
நாற்றுணைத்	௬௭௪	நிலைவலம்	௭௭௬	நின்றுனுஞ்சம	௩௩௨
நாறுவித	௬௧	நிலைவலி	௧௧௮௪	நின்றன்	௬0௭
நாறுகந்	௪௭௭	நிலைவெறுத்	௧௨0	நின்றன்சம	௪௪௭
நாறுடை	௮௬௮	நில்லாக்	௪௨0	நின்றன்சமணு	௪௧௫
நாவினை	௧0௯௨	நில்லாதசீர்	௩௮௨	நின்றதுய்ப்	௭௬
நி		நில்லாதே	௨௯௮	நின்றமலர்	௬௮0
நிச்சலு	௧௧௫	நில்லாய்	௮௮௧	நின்றமுது	௬௮௧
நிச்சமிலத்	௨௧	நில்லாவாழ்	௬0௨	நின்றமெய்	௯௯0
நிணக்கவரு	௪௧௧	நிழலார்	௧௯௬	நின்றலா	௨௭௧
நிணக்குடர்	௬௧௨	நிழலார்வயல்	௩0௪	நின்னடி	௩௭௩
நிணத்திடை	௧௧௭	நிழலான்	௧௩௮	நின்னுவார்	௧௨௩0
நிணந்தரு	௪௧௩	நிழலினார்	௭௯௯	நின்னை	௧௧௧௧
நிணம்படு	௩௯௨	நிழறிகழ்	௮0	நீ	
நிணம்படுசுடலை	௮0௩	நிறங்கொண்	௩௭0	நீக்கிய	௧௧௪
நித்தநிய	௧00அ	நிறங்கொன்	௩௭0	நீடலர்	௭௮௫
நித்தமாக	௭௩௫	நிறவுரு	௯0௬	நீடலர்கொன்	௧௨௨
நித்தலு	௩௧	நிறைக்க	௪௭௧	நீடலர்சோதி	௮௭௬
நித்திலத்	௩௫	நிறைக்காட்	௧௨௪௩	நீடல்	௧0௧௫
நித்திலன்	௯௭௪	நிறைந்த	௭௧௬	நீடவல்ல	௬0௫
நிரம்வாவி	௧௧௮௪	நிறைபுனலணி	௬௭௧	நீடவல்லவார்	௩௭௪
நிராமய	௧௪௮	நிறைபுனல்	௪௬௭	நீடன்மேவு	௧௧௯0
நிருத்த	௩௭௯	நிறைமறைக்	௧௧௨	நீடிரு	௧௧௩௪
நிருத்தனுறங்	௯௮௩	நிறைபவ	௪௪௮	நீடிள	௬௬௪
நிருத்தனை	௬௭0	நிறைபவர்	௧௧௪	நீடிறு	௩௧௭
நிரை	௮௯௧	நிறையனார்	௧000	நீடுகாடிட	௪0௮
நிரைவிரி	௧௧௩	நிறையுடை	௮௧௬	நீடுநெஞ்சு	௬௬௪
நிரைவிரிசடை	௧௧௪	நிறைவார்ந்த	௧௬௩	நீடுபொக்கை	௧௪௨
நிலத்தவர்	௨0௯	நிறைவிலே	௧௧௧௧	நீடுமலரும்	௬௮௩
நிலச்சொடா	௯௧௧	நிறைவில்	௪௬௨	நீடும்புன	௩௨௮
நிலந்தணி	௬௧௧	நிறைவு	௧௮0	நீடுயர்	௧௧௮௪
நிலந்தர	௭௩௨	நிறைவெண்	௧	நீடுவரை	௪௧௨
நிலமல்கு	௧௧௪	நிறைவெண்டிங்க	௭௮௧	நீடுவாழ்	௧௨௪௧
நிலவும்	௭0	நிற்பனவு	௧௨௩௭	நீணமார்	௧0௧௬
நிலவெண்	௭0௧	நிற்பாறுங்	௬௨௨	நீணிலவு	௩௭௨
நிலனுடை	௬0௬	நினைக்கின்	௯௪௧	நீணிலா	௪௧௭
நிலனை	௩௬௯	நினைக்கு	௨௧௪	நீண்ட	௬0௬
நிலனெறி	௬0௪	நினைதரு	௧௯௪	நீண்டகுழ்	௯௮௮
நிலாமாலை	௧௨௩௪	நினைத்த	௩௪0	நீண்டமா	௯௨௧
நிலைகெட	௧௧௧௭	நினைந்தரு	௪௧௫	நீண்டவர்	௨௭௫
நிலைபெற	௭௨௭	நினைப்பெறு	௧௧௪௫	நீண்டவார்	௧0௧௮
நிலைப்பாடே	௧௧0௧	நினைவார்	௧0௨	நீண்டிலங்	௧௮௩
நிலைமை	௪௧௭	நின்போலமரர்	௨௧௩	நீதிநின்னை	௧௧௨௩

Koviloor Digital Library

பாட்டு.	பக்கம்.
நீதிபேணு	௧௮௦
நீதியர்	௫௪௨
நீதியறி	௪௦௨
நீதியாய்	௭௧௭
நீதியார்	௯௨௯
நீதியால்	௯௫௪
நீதியால்வாழ்	௬௧௨
நீதியாற்	௮௨௪
நீதியானினை	௯௫௪
நீதியானினைப்	௧௧௮௯
நீநியிலொன்	௭௪௩
நீதியைக்	௪௨௩
நீதியைநிறை	௬
நீதிவான	௫௮௯
நீத்தநெறி	௪௧௦
நீநாளு	௪௧
நீந்தலாகா	௩௨௫
நீப்பரிய	௭௨௭
நீயாமா	௧௨௩
நீரகக்	௮௦௦
நீரகலந்	௩௬௧
நீரடைந்த	௯௮
நீரணி	௫௭௯
நீரவன்	௨௭௦
நீராகி	௧௨௨௮
நீராகிநெடு	௩௧௯
நீரார	௫௧௭
நீராருஞ்	௧௦௧௦
நீரார்	௬௦௬
நீரார்ந்த	௪௫௨
நீரார்ந்தசெஞ்	௭௮
நீரானே	௨௮௬
நீரானேநீள்	௮௦௯
நீரானை	௭௭௯
நீரிடங்	௮௭௬
நீரிடை	௭௯௦
நீரினார்	௭௯௪
நீரினார்புன்	௭௭௪
நீரினார்புன்சடை	௮௯௨
நீரினார்வரை	௧௦௧௬
நீரின்மலி	௪௨௧
நீரின்மல்கு	௬௩௮
நீரின்மிசை	௧௦௭௪
நீருடை	௩௪௬
நீருமாய்	௬௪௩
நீரும்பாரு	௩௨௭
நீரும்மலரு	௬௦௯
நீருருநெடு	௯௩௫
நீருலா	௮௦௨
நீருலாஞ்	௨௨௫
நீருலாவிய	௬௮௦
நீருளாரும்	௩௬௭
நீருளார்	௭௮௭
நீருளான்	௧௦௭௬
நீரூருஞ்	௭௧௫
நீரூர்தரு	௯௦௮
நீரேற	௯௧௭
நீரேறு	௭௨௪
நீரேறுசெஞ்	௬௪௬
நீரைச்	௭௧௧
நீரொடுங்	௮௧௪
நீரோடு	௨௭௯
நீர்கொணீள்	௭௯௪
நீர்கொண்ட	௭௧
நீர்பரந்த	௬௨
நீர்பரந்தநிமிர்	௧௯௧
நீர்த்திரளை	௮௭௨
நீர்புல்கு	௭௭௮
நீர்மல்கு	௧௯௩
நீர்மல்குமல	௯௦௨
நீலஞ்சேர்	௭௧
நீலத்தார்	௩
நீலநன்மா	௧௨௪
நீலநன்மேனி	௧௧௮௪
நீலநெய்	௬௭௧
நீலநெய்த	௯௦௯
நீலமாமணி	௩௩௨
நீலமாமணிகண்	௪௦௮
நீலமாமணிநிற	௨௬௫
நீலமாமணிமிட	௯௩௧
நீலமாமிடற்	௮௫௯
நீலமார்	௭௯௬
நீலமுண்ட	௨௭௨
நீலமேனி	௮௬௬
நீலவடிவர்	௫௫௯
நீலவண்ட	௩௪௪
நீலவரை	௧௦௮
நீவாவா	௧௨௩
நீளநினைந்	௮௨௫
நீளநின்	௧௧௩௨
நீளமா	௯௬௦
நீறடைந்த	௨௪௧
நீறணிந்த	௫௯௭
நீறணிமேனி	௧௯
நீறணிமேனிய	௫௧௪
நீறணிமேனியனாய்	௬௧௯
நீறலைத்த	௪௩௩
நீறலைத்ததோர்	௧௨௧௫
நீறாகி	௧௦௭௨
நீறாரகல	௩௫௩
நீறார்தரு	௪௯௩
நீறார்திரு	௩௨௯
நீறார்மேனி	௧௧௦௧
நீறிட்ட	௯௫௬
நீறுகொப்	௯௫௨
நீறுசேர்செழு	௭௦௦
நீறுசேர்வ	௩௫௮
நீறுடைத்	௯௫௯
நீறுடைய	௭௭௫
நீறுடையதிரு	௧௨௩௪
நீறுடையார்	௪௧௮
நீறுதாங்	௯௪௧
நீறுதிரு	௮௩௬
நீறுதிருமேனி	௧௧௪௧
நீறுநாங்	௩௪௮
நீறுபூசி	௧௧௫௩
நீறுபூசிநிமிர்	௬௨௭
நீறுபூசினீர்	௫௭௨
நீறுமெய்	௬௯௬
நீறுமெய்பூசி	௩௫௦
நீறுமெய்பூசினானே	௨௩௧
நீறுவரி	௩௯௬
நீறேறிய	௭௯௨
நீறேறு	௩௧௮
நீறேறுதிரு	௧௨௩௫
நீறேறுநீல	௯௬௭
நீற்றர்	௭௯௬
நீற்றவன்	௧௦௪௪
நீற்றாரு	௧௯௫
நீற்றானை	௪௭௦
நீற்றினர்	௫௫௭
நீற்றினார்	௧௦௨௦
நீற்றனணிமிர்	௪௯௭
நீற்றினானை	௧௨௦௯
நீற்றினை	௧௯௨
நீற்றினைநிறை	௫௮௫
நீற்றினையு	௭௨௦
நீற்று	௮௬௯
நீற்றே	௯௧௦
நு	
நுகரார	௩௦௩
நுணங்கு	௩௩௦
நுணங்குநூலயன்	௯௩௧
நுணங்குநூலயன்மா	௧௧௨௪
நுணங்குமறை	௧௦௮௦
நுண்ணிடை	௮௯௬
நுண்ணிதாய்	௮௩௫
நுண்ணியான்	௬௫௪

Koviloor Digital Library

பாட்டு.	பக்கம்.
நூ	
நூலடை	௨௪௧
நூலானன்று	௩௫௭
நூறுகோடி	௧௨௧௮
நூலைங்	௯௯௫
நெ	
நெக்கு	௧௨0௪
நெக்குளார்	௧௧௭௯
நெஞ்சமிது	௫௪௨
நெஞ்சமென்	௨௧௪
நெஞ்சம்	௧௪௯
நெஞ்சார	௩௭
நெஞ்சிலவர்	௧௧௨௪
நெஞ்சினை	௧
நெஞ்சே	௧௧௮௧
நெடிதாய	௭௮
நெடிய	௯௯௫
நெடியமால்	௧௧௩
நெடியமால்பிரய	௯௧௩
நெடியர்	௧00௭
நெடியவன்	௧௩௫
நெடியவன்மல	௪௭௮
நெடியவிசும்	௧௧௯௧
நெடியாய்	௨௩
நெடியானன்	௧௪௫
நெடியானன்முக	௯௮௧
நெடியானிடா	௧0௩
நெடியானு	௯௯௯
நெடியானுமல	௯௭௯
நெடியானென்று	௮௫0
நெடியானென்றான்	௪௩௮
நெடியானென்றான்மு	௪௯௩
நெடியானெ	௪௭௧
நெடியான்	௯0௭
நெடுமுடி	௪௩௧
நெடுவெண்	௭௮௧
நெண்டிக்கொண்டே	௭௪௩
நெண்பயக்கு	௨௨
நெதுபடு	௯0௮
நெதிய	௫௫௯
நெதியவன்	௮௧௭
நெதியானை	௧௧௩
நெதியோப்	௯௩௨
நெய்தலாம்	௮௪௧
நெய்தலாம்பல்	௮௮௪
நெய்தமிழ்	௯௫௧
நெய்தற்	௨௧
நெய்யணி	௧௧௩௧
நெய்யணிமுலிலை	௧0௭௪
நெய்யாடி	௯௪௧
நெய்யினொடு	௫௧௫
நெய்யும்	௧0௫௩
நெய்யும்பாலு	௧௨௧0
நெய்யொப்	௯௩௩
நெருக்கிய	௯௯௪
நெருக்கியம்	௯௨௭
நெருப்பராய்	௩௯0
நெருப்பனைய	௧௯௨
நெருப்பனையமே	௭௮௧
நெருப்பினொற்	௩௯0
நெருப்புருவு	௨௨௯
நெருப்புருவென்	௧௪0
நெளிவுண்	௨௧
நெறிசெழ்	௭௫௩
நெறிகொள்	௮0௫
நெறிநீர்மை	௭௧௨
நெறியில்	௧௯௭
நெறியுமறி	௭௪௨
நெறியே	௩௨௩
நெற்குன்ற	௧௧௭௪
நெற்றிக்	௧0௯௩
நெற்றித்	௩௧௮
நெற்றிமேற்	௨௩௧
நெற்றியோர்	௯௯௪
நென்னலை	௫௪
நே	
நேசநிலக்	௪௯௫
நேசமாகி	௩௩௯
நேசமிகு	௪௨௨
நேசமின்	௧௧௪௧
நேசன்கா	௧0௪௯
நேடுமய	௧00௯
நேணைவ	௧௨௩
நேமியானு	௯௪0
நேரகழா	௧௨௪
நேரிய	௯0௭
நேருமவர்க்	௫௩௯
நேர்ந்தொரு	௧௨௨௪
நொ	
நொச்சியே	௧0௩௩
நொடி	௧௯௯
நொந்த	௩௫௩
நொந்தா	௧0௫௧
நொம்பைந்	௪௧
நொய்ய	௫௧0
நொய்யவர்	௬0௩
நோ	
நோக்கரிய	௨௯௯
நோக்காதே	௧௭௪
நோக்குவே	௭௫௧
நோதங்க	௨௨௫
நோதல்	௯௯௫
நோயனை	௯௪௮
நோயும்	௯௩௯
நோய்புல்	௧௧௪௪
நோற்ற	௧௧௩௪
ப	
பகடேர்	௯௩௯
பகலவன்	௮௯௧
பகலவன்றன்	௭௫௧
பகலுமிரவு	௧0௮0
பகலொளி	௧௪௮
பகழி	௩௭௧
பகைச்	௮௭௩
பகைத்திட்	௯௪௨
பக்கநங்	௫௩௪
பக்கமே	௯௯௮
பக்கமேவிட்	௮௪0
பக்கம்	௪௮0
பக்கம்வாழை	௯0௧
பங்கமார்	௫௩௨
பங்கமாயி	௯0௨
பங்கமாலை	௨௧௫
பங்கமென்	௨௪௩
பங்கமேறு	௧0௯
பங்கயங்	௧௭௨
பங்கயத்	௮௧௭
பங்கயத்துள்	௮௯௮
பங்கயம்	௭௧௯
பங்கயம்மலர்	௯௨௯
பசுக்களே	௯௧௮
பசைந்த	௧0௨௧
பச்சை	௪௯0
பச்சைமேனி	௪௭
பஞ்சடுத்த	௫௯௮
பஞ்சபூத	௧0௨0
பஞ்சமந்திர	௫௯0
பஞ்சிறுண்	௧௯௯
பஞ்சின்	௫௫0
பஞ்சின்மெல்	௪௭௯
பஞ்சின்மெல்லடி	௭0௨
பஞ்சுண்ட	௨௧௭
பஞ்சுதோய்	௮0௩
பஞ்சேரு	௭௫௨
படக்கின	௨௧௧
படங்கொணு	௫௯
படங்கொ	௫௯௨
படங்கொள்	௧௧௨௪
படங்கொள்பாம்	௪௨௯
படப்பாற்	௮0௮

Koviloor Digital Library

பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.
படமாடு	௨௩௫	பட்டமுந்	௧௨௩௪	பண்டொத்த	௧௮௧
படமாடுபாம்	௯௭௭	பட்டமுழ	௫௭௭	பண்டொர்	௪௪௧
படமார்	௧0௩௫	பட்டம்	௬௪௯	பண்ணமரு	௮௯
படமுடை	௧0௩௯	பட்டாகி	௧௨௧௭	பண்ணமர்	௭௯௮
படமூக்கப்	௧௨௩௨	பட்டிசைந்த	௮௬௩	பண்ணல	௨௪
படரொளி	௪௫௪	பட்டியேறு	௧0௩0	பண்ணவண்ணத்	௬௫0
படரொளிசடை	௬௧௭	பட்டிலகி	௭௫௩	பண்ணற்	௫0௮
படர்சடை	௫௨௪	பட்டுடுத்	௧௬	பண்ணார்	௧௨௩௪
படர்செம்	௮௩௪	பட்டுடுத்துப்	௫௧௩	பண்ணார்ந்த	௨௬
படர்தரு	௪௯௯	பட்டை	௬௮0	பண்ணிடை	௬0
படர்பொற்	௯௫௮	பட்டைத்துவ	௨	பண்ணிய	௭0௫
படவர	௧௨௪	பணங்கெழு	௧0௭	பண்ணியனை	௧௬௨
படவரவ	௫௪௬	பணங்கொணாகை	௩௭௫	பண்ணியன்	௯௪
படவரவு	௯௧௯	பணங்கொளரவ	௧௧௧௨	பண்ணியன்மலை	௫௪௪
படவரவேரல்	௧௬௫	பணங்கொளா	௨௩௫	பண்ணியாழ்	௭௮௮
படவோர	௪௧௩	பணங்கொளாடா	௪௯௭	பண்ணியாள்வ	௭௫
படிகொண்	௪௭	பணங்கொள்	௨௨௧	பண்ணிலாவி	௬௮௪
படிசெய்	௧௨௪௧	பணிந்த	௫௧௯	பண்ணிலாவு	௬௩௮
படிநோன்	௧00௮	பணிந்தவாரு	௨௭௭	பண்ணிலோசை	௧0௪௨
படியுளார்	௫௫௭	பணிந்தா	௯௪௬	பண்ணில்	௪௭
படுகுழி	௭0௨	பணியுடை	௫௩௯	பண்ணிற்	௧0௨0
படுவிப்பா	௬௧	பணிவா	௬0௪	பண்ணிற்பொலி	௮௨௭
படைகளே	௫௬	பணைமுலை	௪௪௮	பண்ணினல்	௨௮0
படைகள்	௯௯௭	பண்காட்டி	௫௨	பண்ணினாரு	௩௭௫
படைகொள்	௫௬௧	பண்டங்	௩௮௬	பண்ணினார்	௯௨௯
படைகொள்கூற்	௯௯௫	பண்டடவு	௬௮௬	பண்ணினார்பாட	௫0௭
படைகொள்பூத	௧௧0௭	பண்டடித்த	௮௬௧	பண்ணினார்மறை	௨௨௧
படைக்கட்	௨0௧	பண்டமரர்	௮௨0	பண்ணினார்மறைபா	௭௫௫
படைக்கல	௧௧	பண்டயன்	௮௯௭	பண்ணினான்மறை	௨௧௬
படைத்தாய்	௩௨	பண்டரக்க	௧0௩௬	பண்ணினிசை	௧௧௬0
படைத்தாணு	௪0௬	பண்டலைக்	௩௯	பண்ணினின்	௩௫௭
படைப்பு	௬௧	பண்டலைமழ	௭௫௩	பண்ணினின்மொழி	௭0௯
படைநவில்	௭௯௮	பண்டரீயன	௨௬0	பண்ணி	௯௧
படைமலி	௯0௩	பண்டளவு	௭௬௧	பண்ணினோர்	௧௧௪
படையார்	௯௩௯	பண்டனைவென்ற	௧0௨௮	பண்ணினோர்மொ	௪0௫
படையார்மழு	௧௫௨	பண்டாலி	௪௭௧	பண்ணினோர்மொழி	௮௪௨
படையார்மழுவன்	௧௧௧௨	பண்டாழி	௧௧௬	பண்ணினை	௯௫௮
படையார்வெண்	௧௧00	பண்டாழ்	௫௫௫	பண்ணின்	௧௧௫௪
பாடையானை	௫௪௬	பண்டானை	௩௬௩	பண்ணுதலை	௮௯௮
படையிலங்	௧௧௧௩	பண்டிரை	௮௩௬	பண்ணும்	௫௬௭
படையினார்	௪0௨	பண்டிரைத்த	௭௯௧	பண்ணுலாம்	௬௬௫
படையுடை	௫௧	பண்டுசெய்த	௧0௪௧	பண்ணுளீராய்ப்	௫௬
படையுடைமழு	௪௪௮	பண்டுசெய்தவல்	௨௩0	பண்ணுறு	௧௮
படையும்	௧௨0௬	பண்டுநால்	௮௫௩	பண்ணேர்	௯௨௪
படையும்பூத	௬௨௬	பண்டுநான்	௮0௫	பண்ணொந்தானை	௧௨0௮
படையெலா	௨௬0	பண்டே	௩௨௨	பண்ணொளி	௫௧௮
பட்டநெற்றி	௪௭	பண்டேமுல	௫௬௭	பண்ணொன்	௧௫௯
பட்டநெற்றியர்	௧௯0	பண்டை	௧0௬௧	பண்பழன	௮௮
பட்டநெற்றியர்பா	௩௫௯	பண்டைய	௮௨௬	பண்புசே	௧௪௯
பட்டமின்னை	௫௩	பண்டைவினை	௩௯௫	பண்பொலி	௫௨௨

Koviloor Digital Library

பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.
பண்பைபத்	௧௭௮	பயிலும்	௫௭0	பலபலவேட	௧௧௭௨
பண்ணொய்	௪௧	பரக்கினுர்	௧௧௧௭	பலரும்	௬௬௧
பதந்தெழு	௫௨௪	பரக்குங்	௧0௪	பலவில	௧௧௨௮
பநிதா	௮0௯	பரக்கும்	௩௫௪	பலவுநா	௮௬௪
பநியந்	௨௫௧	பரசாருப்	௯௮௧	பலவுநீள்	௭௧௭
பதைத்	௧0௯௫	பரசுதரித்	௯௫	பலவுமன்	௧௪0௭
பத்தாயி	௧௮0	பரசுபாணி	௪௭	பலவும்	௧0௫௮
பத்தராய்ப்	௭௩௮	பரசுபாணியை	௧0௧	பலவும்வல்	௮௨௨
பத்தரெத்	௪௭	பரத்தாலே	௫௧௪	பலிகெழு	௨௨0
பத்தரோடு	௧௧௧௩	பரந்த	௭௧௫	பலிதிரிந்	௨௮௧
பத்தர்	௨௭	பரந்தது	௧௧௪	பல்லடி	௮௧௮
பத்தர்கட்	௨௮௭	புரந்தபாரிட	௫௯௧	பல்லடை	௯௮
பத்தர்கணம்	௮௪	பரந்தவன்	௧0௪௪	பல்லயங்	௧௧௭
பத்தர்களுரு	௩௧௮	பரந்தோங்	௭௮	பல்லாடு	௧௧௩௧
பத்தர்கள்	௪௮0	பரப்பு	௨௨௩	பல்லாரும்	௧௫௬
பத்தர்சித்த	௧0௮௯	பரப்புத	௭௭	பல்லார்	௨௫௪
பத்தர்மன்	௩௩௩	பரப்பொப்	௯௩௩	பல்லார்தலை	௬௧0
பத்தருப்ப்	௮	பரவக்	௪௯௨	பல்லார்ந்த	௪௮௪
பத்தருட்வாழ	௭0௩	பரவிஈரு	௧௮௧	பல்லார்பயில்	௫௧௩
பத்தாபத்த	௯௮௧	பரவிப்	௩௧0	பல்விதழ்	௬௬௩
பத்திப்	௧௩௨	பரவிவான	௧0௪௮	பல்லியல்	௧௬௩
பத்திமை	௧௧௯	பரவின	௫௫௭	பல்விலோடு	௬௧௫
பத்திமையும்	௭௩௧	பரவுகொப்	௯௫௩	பல்விலோடுகை	௮௩௫
பத்தியா	௧௫௩	பரவும்பரி	௩0௧	பல்விலோடுகையி	௬௪௩
பத்திரட்டி	௯௭0	பரவுவாரை	௨00	பல்விலோடுகையே	௧0௮௮
பத்துக்கொ	௧௧௮௭	பரவைக்	௧௫௨	பல்விலோடுகையேந்	௧0௩0
பத்துத்	௭௧௧	பரவைவரு	௧௧0௫	பல்விலோட்டினர்	௪௭
பத்துத்தலை	௯௮௧	பரிதி	௧௧௯	பல்வில்	௧௧௩௨
பத்துறு	௧௨0௨	பரிதியாலே	௧௨0௮	பல்லுயிர்	௨0௫
பத்துமோ	௫0௮	பரித்த	௯௪௨	பல்லுரை	௨௮௮
பத்துவா	௮௪0	பரித்தவன்	௧௧	பல்வளரு	௪௧௨
பத்தார்	௧௭௧	பரிந்து	௮௫௨	பல்விழ்	௧௩௬
பந்தணம்	௮௩௧	பரிபதிரை	௧௧௫௭	பவளக்	௧௧௧௨
பந்தணவு	௪௮௨	பரிபதோர்	௭௨0	பவளத்தட	௧௨00
பந்தத்தால்	௧௩0	பரிபயாசனை	௧௧௩௮	பவளமேனி	௪௭
பந்தபாச	௭௭0	பரியர்	௨௯௪	பவளவண்ண	௧௭௨
பந்தமும்	௫௫௨	பருக்கை	௯௯௩	பவனமாய்ச்	௬௧௨
பந்தமுடை	௧0௨	பருத்தான்	௩௨	பழகநா	௨௩௨
பந்தம்	௫௧௧	பருத்ததோ	௪௧௮	பழகமா	௫௫௭
பந்தவிடை	௪௪௭	பருத்தரு	௨௮௨	பழகவல்	௪0௪
பந்தார்	௯௨0	பருமதின்	௧௫௫	பழகவொ	௧௧௧௬
பந்தார்விர	௭௧௨	பருமரா	௧௧௫	பழகினே	௧௧௮௧
பந்தித்தசடை	௩0௫	பருமாமணி	௨௧	பழகாரின்	௩0௧
பந்தித்தபா	௧௨00	பருமாமத	௮௮௨	பழமிரின்	௫௮௧
பந்தித்தம்	௮௧௮	பருவத்தில்	௩௯	பழைய	௭௨௩
பந்துட்கினியும்	௧௧௧௨	பருவரா	௮00	பழினுல்	௭௬௮
பந்துசேர்	௯௪	பருவரை	௧௧௮௪	பழகுங்	௧௮0
பந்துலா	௭௧௭	பருவெண்	௫௩	பழகும்	௪௬௩
பயம்பாதி	௧௧௭	பலகாலவ்	௮௩௪	பழிக்கும்	௬௧௪
பயப்பண்மை	௨௫௧	பலபலகாமத்	௯௪௧	பழிசேரில்	௩௨

Koviloor Digital Library

பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.
பழித்திள	௮௫௬	பணித்திள	௮௫௧	பாடன்முழ	௬௯0
பழியிலா	௨௫	பணியாய்	௧௨௧௧	பாடார்ந்தன	௧00௫
பழியுடை	௫௨௩	பணியார்	௧௧0	பாடிச்	௧0௩௧
பழிவழி	௬௭௨	பணிவளர்	௧௨௪	பாடிப்	௮௨௯
பழுதில	௬௧௫	பணிவெண்	௭௮௯	பாடிய	௬௨௯
பழையதம்	௫௫0	பனைக்கை	௫	பாடியனு	௨௧௫
பழையதொண்	௩௮௫	பனைபுரை	௬௭௨	பாடியாடு	௭௯௭
பளிக்குத்	௩௧௫	பனைமல்கு	௩௭	பாடிளம்	௬௯௬
பளிங்கினி	௩௭௧	பன்மலர்	௧0௫௭	பாடின	௭௬௫
பள்ளமதாய	௪௨௭	பன்மலர்வைகு	௭௮௭	பாடினாரு	௪0௨
பள்ளமார்	௩௧௪	பன்மலிந்	௨௫௭	பாடினார்	௧௫௩
பள்ளமீனிரை	௧௩	பன்னலம்	௮௬௯	பாடினை	௮0
பள்ளமே	௮௯௭	பன்னிய	௩௭௧	பாடுகின்ற	௫௮௨
பறக்கு	௭௩௪	பன்னியமறை	௨௫0	பாடுடை	௮௬
பறப்பை	௬௨௭	பன்னினார்	௪௯௮	பாடுமடி	௫௧
பறப்பைப்	௧	பன்னிர்	௧௩௬	பாடுமா	௮௧௮
பறிகொடலை	௫௭௨	பன்றிக்	௧௩௨	பாடுமே	௧௬௫
பறித்த	௧0௬	பன்றியர்	௭௬௫	பாடும்	௨௯௩
பறித்தவெண்	௬௯௪	பன்றியின்	௬௫	பாடுவன்	௧0௨௩
பறியாத்	௧0௩௫	பா		பாடுவாரிசை	௬௮௫
பறியே	௧௧௫௪	பாகமாலை	௨௯௪	பாடுவாருக்	௧௭௯
பறைகொள்	௪௭	பாகமுங்	௫௩௯	பாடுவார்	௬0
பறைக்க	௬௧௪	பாக்கிய	௨௮௨	பாடுவார்பாட	௧௬௭
பறைமல்கு	௯0௨	பாக்கியம்	௭௮௮	பாட்டக	௧௫௭
பறையாத	௧௧௫	பாங்கிலா	௮௬	பாட்டான	௧௧௬௪
பறையினொலி	௧௬௬	பாங்கினல்	௩௭௪	பாட்டுக்கு	௧௬௬
பறையினோசை	௧௬௮	பாங்கினான்	௪0௩	பாட்டும்	௧௧௧௨
பறையினோசையும்	௪௫௫	பாங்குடை	௨0௫	பாணத்	௬௭௨
பறையினோடொ	௨௩௫	பாங்குடைய	௨0௭	பாணியார்	௮0௨
பறையுங்	௮௪௯	பாங்குநல்	௮௮௪	பாண்டு	௨௬௩
பறையுஞ்	௧0௮0	பாசத்தை	௭௨௮	பாதங்க	௧௬
பறையும்	௭௫௫	பாசமறுப்	௬௯0	பாதங்கை	௪௭
பறையும்பழி	௩0௩	பாசமான	௫௨௮	பாதத்தணை	௨௫௪
பறையொடு	௨௧௯	பாசமுங்	௮௯௩	பாதத்தாரொலி	௭௫
பற்பல	௧௨௧௪	பாசமொன்	௪௫௪	பாதத்தான்	௭௩௨
பற்றலர்	௮௯	பாசிப்பன்	௨௮௮	பாதந்தனி	௫௪
பற்றவன்	௮௮௭	பாடகக்	௨௯0	பாதமொர்	௫௭௯
பற்றவன்கங்கை	௫௩	பாடகஞ்	௭௩௧	பாதம்	௧00௧
பற்றற்றார்	௧௧௮௫	பாடகமெல்	௫௩௮	பாதம்பல	௯௪௫
பற்றாய்	௧0௧௧	பாடங்கொள்	௬௯௩	பாதம்வின்	௧௧௫௨
பற்றார்	௨௯௭	பாடலனான்	௬௯0	பாதித்தன்	௭௧௬
பற்றிநின்ற	௭௨௭	பாடலாக்கி	௪௭௨	பாதிப்பெண்	௪௭௯
பற்றியொரா	௩௮௬	பாடலார்நான்	௮௨0	பாதியா	௮௬௭
பற்றியொரு	௧௬௭	பாடலார்வாய்	௭௬௩	பாதியி	௪௮௯
பற்றிலா	௫௨௩	பாடல்வண்	௧௧௩௭	பாதியொரு	௭௪௧
பற்றிவரை	௧௧௧௨	பாடல்வீணை	௮௫௩	பாதியொர்	௮௨௫
பற்றின	௩0௬	பாடவடி	௮௨௯	பாதியோர்	௫௮௩
பற்றினா	௨௨	பாடவல்ல	௭௮௭	பாந்தளார்	௧௩௮
பற்று	௧௨௨	பாடனெறி	௧0௧௭	பாம்பணை	௫௪௬
பற்றுமாமி	௯௭௯	பாடன்மறை	௪௨௧	பாம்பரை	௧0௧௭

Koviloor Digital Library

பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.
பாம்பரைச்சேர்	௧0௪0	பார்நிலவு	௧0௯௨	பிடிக்கு	௯௧௪
பாம்பரிந்	௪௧௭	பார்மலிந்	௫௯௪	பிடித்தாட்	௯௧௩
பாம்பொடு	௧௧௨	பார்முழு	௩௭௮	பிடியத	௮௧௫
பாயமால்	௧0௩௫	பாலமதி	௧0௮0	பிடியெலா	௮௯௯
பாயோங்	௫௧௭	பாலவடி	௫௪௨	பிணமுடை	௧௧0௪
பாய்நியிலர்	௫௩௨	பாலனதாருயி	௪௪௪	பிணம்புல்கு	௩0
பாய்ந்த	௧௧௩௫	பாலனாந்து	௯௨௨	பிணிகலந்	௯௩.0
பாரகம்	௧0௯	பாலனும்	௧0௭௫	பிணிகொளா	௩௮௮
பாரணங்	௩௫௭	பாலனுய்க்	௯௩௨	பிணிகொளாக்	௯௪௧
பாரமாக	௧௧௨௪	பாலனுய்வள	௭௩௧	பிணிகொள்	௫௭௨
பாரல்	௪௨௫	பாலனுய்விருந்	௮	பிணிகொள்வார்	௪௯௧
பாரவன்	௧0௪௯	பாலனுராருயிர்	௩௧௯	பிணித்த	௯0௩
பாரவன்காண்	௯௨0	பாலனுக்	௫௨௪	பிணிநீர	௯௩௫
பாராகு	௧0௩௩	பாலனுயிர்	௧0௭	பிணிபடு	௧௨௮
பாராரோ	௮௮	பாலிறு	௯௫௪	பிணியுடை	௮௩௧
பாரார்	௧௭௪	பாலின்	௮௩0	பிணியுமில	௭௭௫
பாரார்விடை	௯௩௫	பாலுந்து	௧00௭	பிணியும்	௮௭௪
பாரார்வின்	௩௫௫	பாலுசெய்	௧0௨௧	பிணிவண்	௮௭௧
பாராழி	௧௧௭௮	பாலுசெய்யுந்	௯௮௭	பிணிவிடா	௧௫௫
பாராழிவட்	௧0௪	பாலுந்துறு	௪0௧	பிண்டத்திற்	௭௧௯
பாராளைப்	௧0௭௧	பாலுரு	௭௯௮	பிண்டத்தை	௪௮௧
பாரிடப்	௩௭௧	பாலைரு	௭௪௮	பிண்டத்தைக்கா	௭௨௧
பாரிடங்கள்	௧௨௩௨	பாலையன்ன	௧௨௫	பிண்டமறுப்	௬௧0
பாரிடந்	௩0௫	பாலைபாடு	௫௩	பிண்டமுண்டு	௯௨௯
பாரிடம்	௧௧0௨	பாலைபாடொடு	௫௮௮	பிண்டமுண்டுழ	௯௩௭
பாரிடம்வின்	௧௭	பாலையாழ்	௧௧	பிண்டமுண்டுழல்	௧௧௫
பாரிநனை	௧௩௩	பாலொடு	௫௧	பிண்டிபால	௫௫௭
பாரியலு	௭௧௮	பால்வெண்	௯௧0	பிண்டியும்	௮௩
பாரிஞர்	௪0௩	பாவணமேவு	௮0௩	பிண்டியேன்	௩௫௪
பாருரொடு	௧0௧	பாவணவு	௭௯	பித்தரை	௧௮௯
பாரும்	௧௭௨	பாவமும்	௧௨௭	பித்தனைப்	௯௭
பாருளிரிது	௧0௩	பாவமே	௯௪௧	பித்தனைப்பெரு	௯
பாருழ	௨௧௩	பாவமேவு	௧௧௧	பித்தனைப்பெருந்	௧0௨0
பாருரு	௧௭	பாழிபுரை	௧௪௮	பித்தன்	௯௧௧
பாருரும்	௧0௯௪	பாளைபடை	௧	பித்தா	௧00௧
பாரூர்பலபடை	௮௪௭	பாறணி	௫௯௫	பித்தொடு	௪௭௫
பாரூர்பல்ல	௧0௫௨	பாறணிவெண்	௧0௯௭	பிரமபுர	௧௪0
பாரூர்பெளவ	௭0௨	பாறலை	௧௮௧	பிரமனுந்	௧0௩௩
பாரூர்மலி	௮௫0	பாதிருப்	௧௧௯௨	பிரமனூர்	௧௪௩
பாரோடு	௮௭௧	பாதமாங்	௧௨௪0	பிரமன்	௯௨௯
பாரோர்	௯௩௮	பாதபுத்	௯௮௫	பிரமன்றன்	௭௩0
பார்கொண்டு	௧௫௧	பானமரேன	௪௭௭	பிரியாத	௪௫௭
பார்த்தவன்	௧0௩௪	பானுறு	௮௮	பிலந்தரு	௯௨௧
பார்த்தநுக்	௯௫௩	பானில	௫௩௨	பிழைகமாத்	௧௧௩௨
பார்த்தநுக்கருள்	௪௭௭	பி		பிழைத்த	௩0௧
பார்த்தனுக்கன்	௧0௨௧	பிச்சக்	௪௩0	பிழைபுள்	௧0௯௧
பார்த்த[illegible]	௧0௮௨	பிச்சாட	௧௫௧	பிள்ளைப்	௫0
பார்த்தானை	௩௪௩	பிச்சிலேன்	௯௯௭	பிள்ளையிற்	௫௮௭
பார்த்தரு	௮	பிச்சை	௧0௧௮	பிறக்கு	௩௭0
பார்த்[illegible]	௩௫௫	பிச்சைச்சே	௧௩௧	பிறந்தது	௭00

பாட்டு.	பக்கம்.
பிறநெறி	௭௨௩
பிறந்த	௧௧௬௯
பிறந்திளை	௨௫
பிறப்பாதி	௫௦௦
பிறப்பானை	௧௦௭௨
பிறப்பு	௭௬௭
பிறப்போ	௭௨௫
பிறவாது	௨௧௮
பிறவாதே	௧௭௩
பிறவாயிற	௧௧௨௫
பிறவி	௪௨௨
பிறவிமாய	௩௩௦
பிறவியறு	௬௧௦
பிறவியால்	௬௧௨
பிறைகொள்	௬௦௯
பிறைகொள்வா	௬௦௧
பிறைக்கணி	௬௧௨
பிறைதரு	௩௦௪
பிறைதான்	௮௦௬
பிறைநவின்ற	௧௦௫௬
பிறைநிலா	௬௮௧
பிறைபெற்ற	௧௦௧௩
பிறையணி	௪௪௪
பிறையணிபடர்	௧௨௮
பிறையணிமுடி	௧௦௨௮
பிறையரவக்	௭௧௨
பிறையாரு	௯௮௧
பிறையாருஞ்	௫௨௬
பிறையார்	௪௪௭
பிறையார்சடை	௨௩
பிறையானே	௮௧௦
பிறையிள	௨௮௩
பிறையுஞ்	௪௭௯
பிறையுடை	௫௮
பிறையுநெடு	௧௦௦௭
பிறையுமரவு	௩௮௮
பிறையுமாசில்	௧௧௫௧
பிறையும்	௨௬௬
பிறையும்மரவு	௩௨௮
பிறையுறு	௪௪௦
பிறையுறுசெஞ்	௫௭௬
பிறையூருஞ்	௧௨௨௨
பிறையோடு	௧௧௪௩
பிறைவளரு	௩௧௪
பிறைவளர்	௭௭௮
பின்றான்	௬௦௯
பின்றானு	௧௭௩
பின்னிய	௪௧௯
பின்னிலேன்	௧௧௮௯
பின்று	௧௧௪௩
பின்னுசடை	௧௦௨
பின்னுவார்	௧௧௦௪
பின்னை	௯௧௨
பின்னொடு	௮௯௨
பீ	
பீடினூற்	௯௯௮
பீரடை	௨௪௧
பீலிகை	௨௮௮
பீலிம்மயில்	௧௦௨௫
பீலியார்	௩௪௬
பீறற்	௯௧௯
பு	
புகரேது	௮௦௭
புகலி	௧௪௩
புகழுமா	௧௮௫
புகழுமாசந்த	௪௧௧
புகழும்	௩௦௧
புகழொளி	௯௮௭
புகழ்	௫௭௩
புகையெட்	௭௩௨
புக்கடை	௮௮௬
புக்கணைந்து	௧௨௦௯
புடைசூழ்	௫௯௨
புடைபுல்கு	௧௧௪௫
புடையினூர்	௨௧
புண்டரிக	௧௪௧
புண்டரிகத்தார்	௧௪௫
புண்ணியமு	௭௨௭
புண்ணியர்	௮௨
புண்ணியர்தொழு	௯௦௨
புண்ணியர்பூதி	௪௧௮
புதியபூவினை	௧௨௦௮
புதியை	௨௬௮
புதுவிரி	௧௧௮௦
புத்தருக	௯௪௦
புத்தராய்	௮௫௪
புத்தருந்	௪௭௧
புத்தரும்	௯௨௬
புத்தரொட	௬௧௮
புத்தரோடு	௯௯
புத்தரோடுபுன்	௧௪௩
புத்தரோடுபொறி	௬௨
புத்தர்க	௫௩௭
புத்தர்கை	௫௮௧
புத்தர்சமண்	௧௧௭௪
புத்தர்தத்துவ	௪௮௮
புத்தர்தேரர்	௫௬௨
புத்தர்பல	௩௩௫
புத்தர்புன்	௯௨௯
புத்தர்புன்சம	௧௦௧௯
புத்தர்பொய்	௧௧௯
புத்தியினூற்	௧௦௯௦
புத்தூருறையும்	௧௧௮௬
புந்திக்கு	௧௨௦௭
புந்தியர்	௬௧௮
புந்தியார்ந்த	௬௪௦
புந்தியான்	௯௬
புந்தியொன்	௧௧௧௩
புயங்க	௪௩
புயம்பல	௧௩௦
புயலார்பூமி	௧௧௬
புரந்தரன்	௯௨௬
புரமவை	௫௩௪
புரமெரி	௧௭
புரமெரித்த	௯௮
புரவியேழும்	௫௬௨
புரிகாலே	௫௦௩
புரிகொள்	௧௧௫௫
புரிசடைமுடி	௧௦௨௮
புரிசடையா	௮௧௩
புரிசை	௫௯௧
புரிதரு	௭௬௪
புரிதருசடை	௧௮௩
புரிதருபுன்	௫௧௦
புரிந்த	௮௮௫
புரிந்தார்	௪௬௦
புரைசெய்	௮௦௪
புரையுடை	௨௧௮
புலங்களை	௪௯௧
புலங்களைவள	௧௮௫
புலங்கள்	௬௭௫
புலரும்	௨௯௫
புலர்ந்த	௫௦௭
புலனைந்து	௨௭௮
புலன்களைந்	௭௨௮
புலன்களைப்	௬௫௩
புலியதள்	௧௨௪
புலியி	௫௫௯
புலியூர்	௧௨௪௪
புலிவலம்	௧௨௨௧
புலைகடேர	௧௧௩௨
புல்க	௫௪௦
புல்கு	௫௫௬
புல்லமூர்தி	௭௮௪
புல்லமேறி	௭௬
புல்லியிட	௧௦௫௫
புவம்வளி	௯௧௫
புவிமுதலைம்	௧௩௩
புழுப்பெய்	௭௦௨
புழுவாய்	௧௦௧௨

Koviloor Digital Library

பாட்டு.	பக்கம்.
பழுவக்குப்	௧௨௦௫
புள்வாய்	௯௦௪
புன்னிலத்	௯௫௯
புன்னாறு	௫௫
புன்னிகொண்	௨௧௯
புன்னித்	௫௮௩
புன்னியான்	௨௯௧
புன்னிலம்	௧௫
புன்றுங்	௧௦௧௮
புன்றுவரைவர்	௧௧௧௨
புறத்தின	௫௫௭
புறந்திரை	௨௫௧
புறம்பயத்	௧௧௮௫
புறவஞ்	௧௪௪
புற்றரவணி	௨௦௫
புற்றரவம்	௭௮௩
புற்றரவர்	௪௧௨
புற்றரவு	௧௩௫௯
புற்றுடரவ	௧௩௪
புற்றுவினை	௧௧௩
புற்றிடை	௧௦௫௭
புற்றிலாடர	௧௯௦
புற்றிலாடரவோ	௯௨௭
புற்றில்	௯௩௧
புற்றில்வாள	௧௫௭
புற்றில்வாளர	௧௧௦௭
புற்றில்வாளரவு	௧௩௯
புற்றிருக	௧௨௨
புற்றிருகமணி	௧௯
புற்றிருராவம்	௧௯௮
புற்றினில்	௧௧௦௯
புற்றெறி	௭௫௭
புனமல்கு	௪௫௨
புனமுடை	௭௯௪
புனலாடி	௨௨
புனலிலப்	௭௫௫
புனலொப்	௧௩௩
புனைதல்	௫௯௧
புனைபொத்	௫௮௭
புனையழ	௯௯௦
புனையுமா	௯௭௩
புனையும்	௯௧௭
புன்கூரார்	௫௯௪
புன்றுணை	௪௯௧
புன்னை	௮௪௦
பூ	
பூக்குங்	௮௪௦
பூக்குந்தாழை	௮௪௨
பூக்கைக்	௧௨௦௩
பூங்கழ்	௮௩
பூங்கழ	௭௦௦
பூங்கொடி	௨௦௫
பூங்கோத்	௯௯௦
பூசநீர்	௪௨௫
பூசவிளிய	௮௫௭
பூசுமாசில்	௧௧௩௧
பூசுரர்சேர்	௧௪௧
பூசுரர்தொழு	௧௫
பூச்சூழ்ந்த	௪௩௪
பூணரவா	௨௩௨
பூணலா	௧௭௪
பூணாத்	௧௫௫
பூணுறா	௧௫௧
பூணுறுவ	௮௦௭
பூணொடு	௧௧௮
பூண்டங்	௯௯௦
பூண்டதேராக்	௧௫௧
பூண்டதோர்	௯௪௧
பூண்டவ்	௧௯௭
பூண்ப	௯௭௯
பூதங்கள்	௨௮௭
பூதங்கள்பல	௫௧
பூதஞ்சூழ	௯
பூதஞ்சேர்	௯௩௭
பூதத்தின்	௭௧
பூதத்தின்படை	௫௮௪
பூதநாத	௭௮௧
பூதபதி	௫௭௭
பூதப்படை	௨௨௫
பூதமும்	௧௮
பூதமொடு	௨௮௨
பூதம்பாட	௧௧௧௯
பூதியணி	௫௧௨
பூதியனை	௯௮௭
பூத்தபொற்	௧௦௩௧
பூத்தன	௧௧
பூத்தாடி	௪௩௧
பூத்தார்	௧௨௧௧
பூத்தாறும்	௪௦௫
பூந்தேர்ந்தா	௧௦௯௧
பூந்தரா	௧௮௦
பூந்தார்	௩௦௯
பூமகடன்	௧௩௪
பூமகற்கு	௮௫௧
பூமகளும்	௨௧௫
பூமகளோர்	௧௪௯
பூமலுங்	௯௨௪
பூமேன்	௩௫௭
பூமேலாளும்	௧௦௪௨
பூம்படி	௭௦௯
பூம்படு	௨௨௦
பூரியா	௭௯௭
பூவணத்தவன்	௬௩௧
பூவலர்ந்	௫௩௩
பூவனூர்	௭௮௫
பூவனூர்ப்	௭௮௪
பூவார்	௧௦௮
பூவார்குழ	௬௬௯
பூவார்சடை	௫௫௧
பூவார்ந்த	௭௩௦
பூவார்பொய்	௬௩௯
பூவார்பொற்	௯௮௨
பூவார்மலர்	௧௦௨௯
பூவியல்	௮௧௪
பூவிரி	௬௧௯
பூவிரியு	௫௪௭
பூவில்	௫௪௮
பூவினனு	௧௨௧
பூவினனும்	௧௧௭௫
பூவினனெடு	௧௧௫௦
பூவினில்	௫௩௮
பூவினுக்கருங்	௧௧௮௨
பூவின்மிசை	௩௧௭
பூவுந்திங்க	௩௩௩
பூவுந்நீரு	௯௪௦
பூவுலா	௫௦௪
பூவுனாறு	௮௫௪
பூவேந்தி	௧௦௮
பூவையாய்	௯௧௮
பூளைபுனை	௨௦௧
பெ	
பெண்டான்	௧௫௫
பெண்டிர்	௩௨௭
பெண்டிர்மக்க	௮௧௩
பெண்ணமரு	௬௧௧
பெண்ணமர்	௧௨௫
பெண்ணவனை	௩௯௩
பெண்ணவன்	௮௧௭
பெண்ணுருவ	௧௧௭௫
பெண்ணுமொன்ன	௯௧௮
பெண்ணுண்	௨௧௧
பெண்ணூர்	௬௯௮
பெண்ணிட்ட	௬௧௩
பெண்ணிய	௧௦௪
பெண்ணினல்	௧௦௯௭
பெண்ணினை	௮௫
பெண்ணுரு	௯௯
பெண்ணோர்	௧௨௨
பெண்ணோர்கூறி	௯௩௭
பெண்ணோர்பா	௩௮௮

Koviloor Digital Library

பாட்டு.	பக்கம்.
பெண்ணொர்பாக	௮௫௩
பெண்ணொர்பாகம	௪௩௮
பெண்பா	௫௫
பெயரொனு	௧௧௫
பெயலார்	௧௩௭
பெரியமேரு	௧௧௧௪
பெரியவன்	௧0௬௫
பெரியவன்பெண்	௪௪௮
பெரியவாகி	௮௩௬
பெரியாய்	௪௯௩
பெருகலாங்	௬௬௩
பெருகிய	௧௨௯
பெருகியலைக்	௧௧௬௩
பெருகுசங்	௩௩௧
பெருகும்	௧0௨௫
பெருகுவித்	௬௧௭
பெருக்கப்	௧0௯
பெருக்காறு	௧௨௨௨
பெருக்கெண்	௧௬௪
பெருங்கட	௮௮௮
பெருங்கடன்	௧௧௧௯
பெருங்கை	௬௪௪
பெருந்தகை	௬௫௭
பெருந்தட	௧௩௩
பெருந்தண்	௯0௧
பெருந்தண்மா	௯௧௨
பெருந்தவ	௧0௪௬
பெருந்தாழ்	௬௪௧
பெருந்திரு	௭௯௫
பெருமைக	௧௧௨௧
பெருமைநன்	௪௭௮
பெருமையே	௩௮௫
பெரும்பிணி	௨௫௬
பெரும்புலர்	௫௨௩
பெரும்புலி	௫௯௩
பெருவரை	௮௯௧
பெருவிர	௧௧௯0
பெறுமலர்	௫0௬
பெற்ற	௧0௫௩
பெற்றமாசு	௧௫௬
பெற்றமேறி	௩௧௨
பெற்றமேறுகங்	௧0௪௧
பெற்றமேறுவர்	௧0௩0
பெற்றவன்	௬௮
பெற்றிமை	௬௨௨
பெற்றியாற்	௧௧0௩
பே	
பேசப்	௩௫௧
பேச்சொடு	௧௧௯௩
பேணுதொழி	௯௧௭

பாட்டு.	பக்கம்.
பேணுமுனிவ	௬௧0
பேணித்	௨௯௩
பேணிநாட	௧௨௪0
பேணிய	௪௮0
பேதைமட	௧௧௪0
பேயடைந்	௨௪௧
பேயடையா	௪௮
பேயாயின	௩0௩
பேயோ	௭௪௬
பேய்கள்	௧0௧
பேய்பல	௭௮௬
பேய்வனத்	௧௨௧௮
போது	௧௭
போயிர	௧௬௨
பேரிடர்	௪௭௫
பேரிடர்ப்	௧௧௪௭
பேருமோ	௧௮௬
பேரும்	௧0௮௬
பேருரு	௭௪0
பேரெழிற்	௬௯௫
பேரோரா	௧௭௯
பேர்த்தினி	௩௮௧
பேழை	௮௫௩
பேழ்வாய	௧0௮௫
பேழ்வாயரவி	௧௧௯௫
பேறனூர்	௧000
பை	
பைக்கை	௩௮௨
பைங்கண	௫௭௧
பைங்கண்வா	௬௧௨
பைங்கணேற்	௪௭
பைங்காற்	௧௫௭
பைங்கோட்	௬௫௫
பைதற்பிணக்	௨௫௧
பைத்த	௧0௫௫
பைத்தபாம்	௭௭௩
பைந்தளிர்	௪௫௮
பைம்பொனே	௧0௨௮
பைம்பொன்	௭௫௭
பைம்மாணர	௧௧௧௬
பைம்மாநாக	௯0௩
பைம்மாலு	௧௨௧௧
பையஞ்	௯௧௭
பையரவக்	௬௪௫
பையரவசைத்த	௭
பையரவம்	௭௭௮
பையராவரு	௯௪
பையாடரவ	௭௨௪
பையாரர	௫0௨
பையாரும்மர	௧0௬௬

பாட்டு.	பக்கம்.
பையுடைய	௧௧௩0
பைவாயரவ	௯0௧
பொ	
பொக்கண	௧௨௩௧
பொக்கமாய்	௬௩௧
பொக்கம்	௪௬௯
பொங்கரவ	௪௩௪
பொங்கரவரங்	௪௧௩
பொங்காடர	௫௧௪
பொங்காடரவு	௧0௮௭
பொங்கார்	௬0௬
பொங்கி	௩௯௨
பொங்கிவரும்	௪௧௮
பொங்கிளங்	௨௧௩
பொங்கிளநாக	௩௫0
பொங்குசெங்	௧௧௩௯
பொங்குதண்	௬௫0
பொங்குநடை	௫௩௫.
பொங்குநற்	௭௯௪
பொங்குநூன்	௪௫௧
பொங்குபூண்	௬௮௫
பொங்குமத	௭௧௮
பொங்குமா	௨௭௩
பொங்குவெண்	௮௩௫
பொங்குவெண்புரி	௧௧௮
பொங்கோத	௨௯௮
பொசியினன்	௮௧௨
பொச்சமமர்	௬௮௬
பொடிகள்	௫௯௧
பொடிகள்பூசி	௯0௮
பொடிகொடிரு	௪௧௨
கொடிகொண்	௭௧௩
பொடிகொண்மே	௮௫௩
பொடிகொளுரு	௧௧௫௫
பொடிக்கொடு	௮௭௧
பொடிதனைப்	௨௮௬
பொடிதனைப்பூசு	௬௯௫
பொடிநாறு	௩0
பொடிபுல்கு	௧௯௫
பொடிமெய்	௪0௪
பொடியணி	௪௭௬
பொடியாடு	௨௪௬
பொடியாடுமேனி	௮௯0
பொடியார்	௧0௯௪
பொடியார்மேனி	௫௨௬
பொடியிலங்	௧௨0
பொடியுடை	௧௯௮
பொடியேறு	௧௯௫
பொறியிலா	௮௧௪
பொறியே	௧0௫௪

Koviloor Digital Library

பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.
பொத்தன்	௩௨௭	பொருவனர்	௬௨௭	பொன்றிகழ்காவிரி	௧௬௬
பொத்தார்	௪௨0	பொருவாரென	௨௪௫	பொன்றிகழ்கொ	௪௫௪
பொந்தின்	௪0௨	பொருவிடை	௧	பொன்றிகழ்கொன்	௧0௩௯
பொந்தை	௩௮௧	பொருளார்	௭௧௩	பொன்றிரண்	௧௧௩௩
பொந்தையை	௧௨௧௫	பொருளிய	௭௫0	பொன்றொத்த	௯௧0
பொய்கை	௮௮௪	பொருளினேடு	௧0௪௧	பொன்னடி	௧௪௧
பொய்து	௬௬௧	பொருளுந்	௧௧௨௩	பொன்னங்	௫௬௧
பொய்தொழாது	௨௨௧	பொலம்	௨௧௩	பொன்னங்கான	௬0௪
பொய்த்தன்	௭௩௪	பொலிந்த	௯௫	பொன்னமல்கு	௩௩௬
பொய்மிகுத்த	௧௨0	பொலியு	௨௩௬	பொன்னம்	௬௫௫
பொய்ம்மை	௧0௫௪	பொல்லாத	௪௧௨	பொன்னலங்	௧௧௧௫
பொய்ம்மறித்	௬௩௨	பொல்லாதவென்	௩௭௧	பொன்னலத்	௪௧௫
பொய்ம்மாய	௭௭௭	பொல்லாப்	௪௫௨	பொன்னலத்த	௭௨௬
பொய்யடிமை	௭௩௭	பொல்லாப்புற	௮௭௮	பொன்னவன்	௧0௨௪
பொய்யர்	௧௮௮	பொழிந்	௧௮௪	பொன்னவிலு	௧0௯௨
பொய்யவனு	௧௧0௧	பொழிந்திழிமும்	௪௯0	பொன்னவில்	௭௪௮
பொய்யனைத்	௧0௪௩	பொழிலவன்	௪௪௮	பொன்னள	௬௪௩
பொய்யாத	௧௧௫	பொழிலார்	௭௧௨	பொன்னன	௫௭௯
பொய்யாரா	௩௨	பொழிலானை	௩௬௪	பொன்னார்திரு	௯௩௭
பொய்யாமொழி	௨௬௭	பொன்னத்த	௫௨௨	பொன்னார்மாட	௧0௩
பொய்யாவேத	௬0௧	பொன்னலாக்	௨௬௨	பொன்னார்மேனி	௩௨௨
பொய்யாறு	௧௨௨௪	பொன்னலிவ்	௭௪௧	பொன்னானே	௭௫௧
பொய்யினன்	௧௫௪	பொறிகிளரரவ	௧௧௧	பொன்னானை	௧௭௫
பொய்யினை	௧	பொறிகிளர்	௮௧௧	பொன்னிசையும்	௧0௪௭
பொய்யெலா	௩௩0	பொறித்	௪௨0	பொன்னியலு	௩௨0
பொய்யே	௧0௮௫	பொறிப்புலன்	௧0௪௨	பொன்னியலுந்	௪௨௭
பொய்யேது	௩௪௨	பொறியரவ	௫௭௪	பொன்னியலுமே	௭௨௧
பொய்யேயுன்	௧௧௨௫	பொறியரவரை	௪௫௩	பொன்னியல்	௮௭௬
பொய்விரா	௩௮௧	பொறியிலா	௬௪௨	பொன்னியல்சீவ	௧0௭௪
பொரிபடு	௪௪௧	பொறியுமா	௧௮௪	பொன்னியல்பொரு	௧00௮
பொருகட	௪௫௧	பொறியுமாசந்	௪௯0	பொன்னியரு	௫௮
பொருகடலிலங்	௭௫௧	பொறியுலா	௧௮௩	பொன்னியன்	௧0௪
பொருங்	௭௪௧	பொறிவரிய	௭௭௫	பொன்னிலங்	௭௮௩
பொருசிலை	௫௫௮	பொறிவாய்	௧௧௨௩	பொன்னிலங்கு	௧0௯௨
பொருண்	௭௪௮	பொறுத்தா	௧௧௯௫	பொன்னிற	௮௩
பொருதல	௩௧	பொறுத்திரு	௪0௭	பொன்னினர்	௨௨௪
பொருது	௧௧௨௨	பொறைபவன்	௧0௪௬	பொன்று	௮௮௧
பொருத்த	௯௯	பொறையுடை	௧௧௬௧	பொன்றுமாமணி	௧௨௭
பொருந்திய	௫௨௩	பொற்று	௭௧௩	பொன்றுமெய்ப்	௭௪௧
பொருந்தியகுரம்	௪௮௮	பொற்றுணை	௧௮௮	பொன்றுள்ள	௧௨௧௧
பொருந்தா	௮௩௧	பொற்றொடி	௮௮௮	பொன்னெடு	௫௩௭
பொருந்தாத	௩௧௨	பொன்செய்த	௯௮௮	பொன்னே	௭௨௨
பொருந்திறற்	௨௬௬	பொன்செய்மா	௨௭	பொன்னேர்கொன்	௫௫௧
பொருந்து	௭௬௮	பொன்போல	௧௪௧	பொன்னேர்தரு	௪௩௭
பொருபுனல்	௩௭௧	பொன்போறு	௧௧௨௨	பொன்னை	௬௪௩
பொருப்பமர்	௨௫0	பொன்மணி	௬௭௫	பொன்னெருத்	௬௪௫
பொருப்பன்னி	௧௨௨௧	பொன்றயங்	௮௬௪	பொன்னெருத்த	௧௨௩௫
பொருப்பினை	௭௮௧	பொன்ருது	௫௨௮	பொன்னெருத்தமேனி	௧௧
பொருமாற்	௧0௬௧	பொன்றிகழாமை	௯௨௨	பொன்னெருப்பவ	௭௬௨
பொரும்பல	௬௨௨	பொன்றிகழ்	௮௧௨	பொன்னெருப்பா	௯௩௩

Koviloor Digital Library

பாட்டு.	பக்கம்.
போ	
போகமார்த்த	௫௩௯
போகமார்மோடி	௪௪0
போகமு	௯௨௫
போகம்மறி	௭0
போகம்வைத்	௨௭௧
போதகத்தூரி	௯௬
போதகங்	௫௮௧
போதமர்	௫௪௩
போதன்	௧௭௭
போதார்	௪௩௬
போதியர்	௪௧
போதியர்கள்	௧0௮
போதியர்பிண்	௯௨௩
போதியர்பிண்டிய	௫௨
போதியல்	௧0௫
போதியாரும்	௧0௭
போதியார்	௩௭௧
போதியார்பிண்டி	௧0௩௪
போதியென	௮௮௮
போதினுலு	௧0௧0
போதின்	௪௧௧
போதுதா	௩௫௧
போதுதாழ்	௧௧0௭
போதுபொன்	௩௩௩
போதும்	௧0௧
போதுலவு	௮௨0
போதுலாவிய	௧௧௨௧
போதுறு	௫௪௪
போதை	௧௩௪
போந்தனே	௬0
போயநீர்	௮௬௪
போய்க்	௪0
போரணுவு	௫௮௧
போராவ	௬௫௧
போராருங்	௫௨௭
போரார்கட	௧௧௫௬
போரார்பு	௬௧0
போரார்மத	௧00
போரானே	௫௧0
போர்த்த	௧௭௭
போர்த்தது	௮௪௭
போர்த்தமெய்	௪0௫
போர்த்தாயங்	௯௪௬
போர்த்தானே	௬௮௯
போர்த்தானையின்	௯௮௭
போர்ப்பனே	௩௮௬
போர்மலி	௩௬௧
போர்மிகுத்த	௮௧
போவதோர்	௨௬௧
போழும்	௧0௮0
போழிள	௨௮௩
போழுமதி	௧0௭
போழுமதிபூண	௩௯௯
போழுமதியும்	௩0௨
போழொத்த	௬௧௧
போற்றிசை	௧௧௬௬
போற்றுங்	௨௫௧
பௌ	
பௌவமார்	௫௫௬
ம	
மகத்திற்	௧௧௧௧
மகரத்தாடு	௧0௬
மகரமாடு	௩௯௧
மகரவார்	௯௩
மகிழ்ந்	௩௪௩
மக்களே	௧௧௯௪
மங்கலக்குடி	௨௩௭
மங்கலக்குடியீசனே	௨௩௭
மங்குநோயுறு	௨௩௧
மங்குறங்	௬௭௧
மங்குறேய்	௪௧
மங்குன்	௪௫௧
மங்குன்மதி	௧௪
மங்கைகாண	௪௫௬
மங்கைகூற	௧௧௮
மங்கைகூறின	௮௧௫
மங்கைபங்க	௫௪௧
மங்கைபங்கி	௫௭௨
மங்கைமணந்த	௫௨௮
மங்கையங்	௪௬
மங்கையர்க்	௮௬௮
மங்கையொர்	௯௮௧
மங்கையோர்	௭௪
மங்கையோர்கூ	௧௮௫
மங்கையோர்கூறு	௪௧௧
மங்கையோர்கூறுடை	௮௨0
மங்கைவாளுதன்	௧0௧௯
மசங்கற்	௫௯௭
மஞ்சர்தா	௯௮௪
மஞ்சனே	௪௭௭
மஞ்சன்வார்	௨௩௭
மஞ்சாடு	௬௧௧
மஞ்சுண்ட	௮௭௮
மஞ்சுலா	௬௮௧
மஞ்சுலாவிய	௧௧௨௧
மஞ்சுறு	௯௨௪
மஞ்சை	௧0௨௬
மஞ்சோங்	௨௬௭
மடக்கிடூர்	௧௫௫
மடங்கொள்	௬௭௧
மடந்தை	௪௭௬
மடந்தைபா	௧௧௫௩
மடந்தைபாக	௧0௮௮
மடமான்	௯௪௧
மடமுடை	௧௧௩௨
மடம்படு	௧௧௪
மடலார்	௧௧௧௧
மடலாழி	௨௨௧
மடல்	௩௭
மடவரல்	௭௧௧
மடன்மலி	௧௩௫
மடித்தாடு	௧௯
மடுக்களில்	௫௧௧
மடுத்த	௭௧௪
மடுத்துமா	௮௨௩
மடைச்சுர	௧௧௨௯
மடையில்	௧௫௫
மடையினெய்	௯௩௧
மட்டவிழ்	௧0௮௮
மட்டார்	௮0௮
மட்டார்மல	௧00௫
மட்டிட்ட	௯0௨
மட்டிட்டபுன்	௧௧௧௮
மட்டிலங்கு	௭௮௩
மட்டுண்	௨௫௨
மட்டுமலி	௨௫௫
மட்டுலா	௧௧௧௯
மட்டுவார்	௩௬௧
மட்டுவார்குழ	௭0௧
மட்டொளி	௫௭௮
மணந்திகழ்	௨0௬
மணமென	௭௩௪
மணவன்	௪௬௪
மணிகெழு	௧௧௧௫
மணிசெய்	௧௨௧௪
மணிநிற	௨௧௨
மணிநீண்	௪௧௩
மணிமல்கு	௭௧
மணியார்	௪௬௮
மணியார்முது	௯௮௧
மண்டனே	௬௭0
மண்டான்	௧0௬
மண்டி	௩௮௭
மண்டு	௧௨௬
மண்டுகங்கை	௧௧௩௮
மண்டுவாங்	௧௬௭
மண்டை	௨00
மண்டைகொ	௧0௨
மண்டையிற்	௬௭

பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.
மண்ணகத்	௮௯0	மதியமொய்	௧0௧0	மந்திரமுள்ள	௯௫௭
மண்ணதனி	௩௯௩	மதியார்	௧0௩௫	மந்திரமொன்	௧௧௯௯
மண்ணது	௩௩௯	மதியால்	௫௭௧	மயக்க	௨௪0
மண்ணர்	௪௨௯	மதிடானே	௮0௧	மயங்கு	௯௮0
மண்ணர்சிரா	௭௭௩	மதியிலா	௮	மயலாகு	௯0௪
மண்ணல்லை	௧௧0௧	மதியொன்	௨௭௯	மயலிலங்	௧௨௧
மண்ணவர்	௫௨	மதுருத	௩௩௭	மயறீர்	௯௩௯
மண்ணனங்	௫௧௨	மதுர	௫	மயிலார்	௧௫௯
மண்ணாதி	௧௨௨௯	மத்தமெணி	௭௫௩	மயில்புல்	௮௮௨
மண்ணார்	௯௩௯	மத்தக்கனி	௯0	மயில்பெடை	௬௩0
மண்ணார்ந்த	௭௮	மத்தக்கனிமு	௮௮௩	மரக்கொக்	௧௯௯
மண்ணிடை	௫௨௩	மத்தான்	௯௨௩	மரங்கண்	௯௩௫
மண்ணிப்	௧௨௨0	மத்தமத	௧0௭௪	மரங்களேறி	௧௨௧0
மண்ணிலங்	௭௮௨	மத்தமலி	௫௭௮	மரவத்தொடு	௮௮௩
மண்ணிழி	௫௭௭	மத்தமா	௩௪௮	மரவஞ்சிலை	௧0௨௫
மண்ணினல்	௧௩௪	மத்தமாக	௧௧0௧	மரவம்	௫௨௯
மண்ணினாரேத்	௧௩௯	மத்தமாமலர்	௩௪௯	மருசலுறை	௧௧௮௯
மண்ணினார்	௨௪	மத்தமான	௯௯	மருகலுறைவாய்	௧௨௬௩
மண்ணினிற்	௧௧௨௧	மத்தமும்	௧௯0	மருட்டுயர்	௫௨௬
மண்ணினை	௧0௫௧	மத்தம்	௧00௫	மருதங்	௫௫
மண்ணினைமுன்	௮௨0	மத்தம்மலி	௮௪௯	மருதிடை	௬௫0
மண்ணினையுன்	௭௪௫	மத்தம்மலிசித்த	௩0௪	மருந்தவன்	௬௬௭
மண்ணினையுண்ட	௨௯௧	மத்தயானை	௮௯0	மருந்தவை	௯௯௧
மண்ணினைவான	௭௮0	மத்தயானையேறி	௧௮௭	மருந்தன்ன	௫00
மண்ணின்	௫௭௭	மத்தர	௭௯௫	மருந்தானை	௩௪௧
மண்ணின்மேன்	௪௮௫	மத்தனும்	௯௪௫	மருந்திறேடு	௧0௬௧
மண்ணிர்	௫௨௭	மத்தனும்மலை	௧0௮௨	மருந்துவான	௩௭0
மண்ணுண்ட	௯	மத்தனெம்மத	௧0௨௧	மருந்துவானவ	௨௯
மண்ணுதல்	௧௯௯	மத்தாவரை	௯௭௮	மருந்துவேண்	௨௬௨
மண்ணுபா	௧0௧௫	மந்தண	௩௨௪	மருப்பிடை	௧௧௫௭
மண்ணுமோர்	௩௧௨	மந்தமரு	௧௧௯	மருவமர்	௨௯0
மண்ணுலகிற்	௧௧௯௯	மந்தமலர்	௧00௧	மருவமுழ	௬௨௧
மண்ணுலகு	௯௭௮	மந்தமலி	௪௨௨	மருவலர்	௫௯௮
மண்ணுளா	௫௨௯	மந்தமாக	௨௭௨	மருவலார்	௩௯௯
மண்ணுளார்	௨௮௮	மந்தமாசி	௧௨௨௪	மருவாரு	௭௮0
மண்ணெலா	௯௩௯	மந்தமாம்	௨௩௯	மருவார்	௫0௧
மண்ணெலாங்கழ்	௮௯௯	மந்தமாயிழி	௨௯௫	மருவார்கொன்	௫௩0
மண்ணைத்	௮௩0	மந்தமாரும்	௫௯௩	மருவார்புர	௧௧௫௧
மண்ணையுண்	௪௫௯	மந்தமார்	௩௩௨	மருவார்மதின்	௯00
மண்ணொடு	௪௮	மந்தமுந்த	௩௧௮	மருவிப்	௩0௧
மண்ணோர்	௯௯	மந்தமுரவ	௮௩௭	மருவிய	௧௧௪௫
மண்பாதல	௧0௧௨	மந்தம்முழ	௩௯௮	மருவியெங்	௮௮௬
மண்புகார்	௪0	மந்தரம்	௧௧௭௯	மருவிலார்	௩௪௫
மண்புன	௯௧௯	மந்திகடு	௯௧௭	மருவினிய	௧0௭௨
மண்பொடி	௧௯	மந்திரான்	௫௭௮	மருவினை	௧௨௧௯
மண்பொருக்	௨௯௮	மந்திரநான்	௧௧௭௩	மருவுநான்	௧௧௮
மதத்த	௮0௨	மந்திரம்	௫௩௪	மருவுமான்	௧௧௪௧
மதிரு	௭௨௮	மந்திரமறை	௫௧	மருவுற்ற	௧௧௧0
மதிதான்	௧௧௭௧	மந்திரமாவது	௮௫௭	மருவுவா	௧௧௯0
மதிமக்கண்ணி	௧௧௮௫	மந்திரமு	௯௯௨	மருவினல்	௧0௧0

Koviloor Digital Library

பாட்டு.	பக்கம்.
மருளுடை	௨௭௮
மருள்	௫௭௦
மலக்கி	௬௦
மலந்தாங்	௯௦௭
மலமெலா	௨௬௦
மலம்	௪௩௮
மலிகடுந்	௧௧௪
மலியு	௩௧௫
மலியுஞ்செஞ்	௫௪௫
மலிவிழா	௧௧௧௯
மலைக்கண்	௩௦௨
மலைக்குமக	௬௧௩
மலைக்குநேரா	௪௭௮
மலைக்கொளா	௫௨௫
மலைச்சார	௧௧௪௭
மலைநிலாவிய	௬௮௧
மலைபல	௬௧௫
மலைபுரிந்த	௩௭௩
மலைமகடங்	௧௦௭௧
மலைமகடனை	௫௬௮
மலைமகண்	௬௧௬
மலைமகளை	௧௦௮௩
மலைமடந்	௬௨௧
மலைமடமங்	௧௧௮௦
மலைமலி	௪௩௧
மலைமல்கு	௩௬௮
மலையத	௧௭௨
மலையலா	௨௯௦
மலையவன்	௨௩௮
மலையன	௪௬௭
மலையன்	௩௩௪
மலையாருவி	௧௦௦௫
மலையார்	௨௯௩
மலையார்சாரன்	௯௦௯
மலையார்தம்	௧௨௨௩
மலையார்தரு	௭௯௨
மலையார்பொற்	௭௩௧
மலையார்மங்	௪௩௫
மலையார்மாட	௧௧௨
மலையானை	௮௭௩
மலையானைவரு	௨௦௮
மலையான்	௯௦௭
மலையான்மகளஞ்	௬௯
மலையான்மகளோ	௫௦௨
மலையான்மகள்	௪௦௧
மலையான்மட	௭௨௯
மலையிலங்	௧௨௧
மலையினார்	௧௦௭௫
மலையினார்மக	௧௦௩௮
மலையினர்டிரு	௮௪௨
மலையின்	௧௦௯௬
மலையுடனெடு	௫௨
மலையுடன்	௪௫௪
மலையெடுத்	௯௮
மலையே	௧௨௦௫
மலைவளர்	௭௧௩
மல்கிய	௫௦௮
மல்கியநண்	௭௮௬
மல்குதண்	௬௭௦
மல்லன்	௧௧௧௭
மல்லை	௪௭௦
மல்லைஞால	௨௨௨
மல்லையார்	௩௬௭
மழலை	௨௬
மழலையேற்	௫௮௮
மழுங்கலா	௧௦௨௩
மழுவமர்கையர்	௪௭௬
மழுவமர்செல்	௫௨௧
மழுவலான்	௧௦௬௯
மழுவாளேந்	௫௦௨
மழுவாளோ	௧௦௩௪
மழுவாள்	௧௦௦௨
மழைக்கண்	௬௧௪
மழைக்கண்மயி	௨௫௨
மழைக்கரும்	௧௫௩
மழைமுகில்	௧௨௫
மழைநுழை	௯௩௮
மழைநுழைமதி	௪௪௯
மழையார்	௧௧௨
மழையார்மிட	௩௩௪
மழையானு	௧௦௯௪
மழைவள	௧௮௨
மறக்கு	௧௧௬௯
மறக்கொள	௬௦௯
மறத்துறை	௨௫௬
மறந்தான்	௧௦௨௭
மறந்து	௩௭௦
மறப்பித்	௨௯௧
மறப்பிலா	௭௫௭
மறம்பய	௨௫௫
மறவனீ	௮௮௯
மறவனை	௫௪௯
மறிசேர்	௧௧௦௦
மறிதரு	௭௯௧
மறிதிரை	௪௫௦
மறித்தான்	௩௧௦
மறித்திகழ்	௫௨௪
மறிநேரொண்	௧௦௮௫
மறிபட	௯௫௬
மறியாரு	௭௬௩
மறியிலங்	௨௫௮
மறியுடை	௩௮௧
மறியேறு	௬௭௮
மறியொரு	௨௫௦
மறுத்தவர்	௩௮௧
மறுத்தவர்திரி	௧௦௦
மறுத்தானை	௩௮௪
மறுத்தானைமா	௭௭௯
மறுத்தானோர்	௬௯௮
மறுமா	௧௬௪
மறைகலந்	௬௨
மறைகளாயின	௩௪௩
மறைகளான்	௬௮௪
மறைகொண்	௩௫௭
மறைகொளு	௧௨௭
மறைக்காட்	௫௯௩
மறைத்தான்	௮௦௬
மறைபுனை	௫௫௩
மறைமல்கு	௪௫௨
மறைமுதல்	௯௩௯
மறையணி	௭௫௭
மறையது	௧௦௫௦
மறையர்	௭௭௩
மறையவ	௧௬௫
மறையவனுல	௪௫௦
மறையவனொரு	௪௮௪
மறையவன்	௬௧௮
மறையனார்	௭
மறையன்	௬௫௯
மறையானொடு	௯௪௦
மறையானை	௧௦௩௩
மறையானைமா	௪௪௩
மறையிடை	௧௫௪
மறையிடைப்	௫௮௫
மறையினான்	௪௫௪
மறையினார்	௬௬௬
மறையினார்மழு	௨௧
மறையினானொடு	௧௦௩௧
மறையினானொலி	௭௫
மறையினொலி	௪௨௧
மறையின்	௩௫௩
மறையுடை	௩௭௩
மறையுடையா	௩௧௩
மறையுமோ	௮௦௧
மறையுமோதுவ	௩௫௮
மறையும்	௧௨௧௧
மறையோர்	௩௬௪
மறையோனரி	௧௦௩௫
மறைவலா	௮௯௫
மறைவழந்	௮௬௫

Kovileor Digital Library

பாட்டு.	பக்கம்.
மற்றவின்	௯௫
மற்றுருக்	௨௩௪
மற்றிட	௭௦௫
மற்றிணை	௧௧௯
மற்றிவாழ்	௨௩௩
மற்றுக்கேண்	௧௨௦௯
மற்றுத்	௧௧௧௧
மற்றுநற்	௧௨௧௮
மற்றுநான்	௧௧௧௫
மற்றுநீர்	௩௯௦
மற்றுப்பற்	௯௨௭
மற்றுமிப்	௧௧௫
மற்றுவைத்	௨௭௧
மற்றையா	௮௦௨
மற்றெரு	௧௫௩
மற்றெருபற்	௧௩௫
மனத்தகத்	௧௦௯௮
மனத்தினர்	௧
மனத்துன்	௪௫௧
மனமார்	௭௯௨
பனமிகு	௮௮௮
மனமுலா	௧௦௭௯
மனமெரு	௧௧௦௫
மனவஞ்சர்	௧௧௭௦
மனிதர்	௧௨௦௫
மனைகடோ	௭௫௩
மனைக்காஞ்	௨௯௮
மனைக்கே	௧௧௯
மனைதுறந்	௯௭௫
மனைவி	௯௭௦
மன்மத	௫௭௪
மன்றத்து	௧௫௫
மன்றினை	௧௦௩௦
மன்றி	௩௮௨
மன்றுன	௪௦௧
மன்னி	௭௩௮
மன்னிப்	௧௧௪௭
மன்னிமா	௧௦௯௭
மன்னியமா	௪௧௪
மன்னியவலி	௮௧௫
மன்னியவள	௫௪௪
மன்னியுரிறை	௧௮௦
மன்னிரிலங்கை	௯௨௧
மன்னுசிர்	௨௩௭
மன்னுமலை	௨௫௧
மன்னுமறை	௧௦௧௦
மன்னுமாமறை	௮௨௮
மன்னேமற	௧௦௦௧
மா	
மாகத்	௭௮௧
மாகந்தோய்	௩௩௩
மாகயானை	௯௨
மாகாஞ்	௧௦௯
மாகாயம்	௧௫௧
மாக்குன்றெறி	௫௯
மாசடை	௨௪௨
மாசருடம்	௫௦௨
மாசார்	௭௭௧
மாசிலொள்	௧௫௭
மாசில்	௧௨௦௩
மாசிறெண்ட	௪௦௪
மாசினவரக்	௯௭
மாசியொ	௭௦௫
மாசின்	௧௦௦௮
மாசின்மன	௯௮௯
மாசபிறக்கிய	௩௮
மாசமெய்	௯௮௫
மாசமெய்யர்	௫௪௦
மாசமெய்யின	௯௧௫
மாசுர்	௫௫௫
மாசேறிய	௯௧
மாச்செய்	௯௧௭
மாடங்காட்	௫௭
மாடத்தாடு	௫௮௭
மாடநீடு	௯௨௯
மாடமதேன	௭௫௩
மாடமர்	௫௭௩
மாடமல்கு	௫௩௧
மாடமல்குமதில்	௧௭௩
மாடமாளிகை	௭௯௭
மாடமாளிகைகோ	௯௩௫
மாடவீதி	௯௦௧
மாடவீதிவரு	௧௦௧
மாடார்	௧௦௫௮
மாடுதானது	௯௩௨
மாடுதேடி	௭௯௭
மாடேவா	௮௫௪
மாடோ	௧௦௧
மாட்டினேன்	௧௧௧௩
மாட்டுப்	௩௭௯
மாட்டேர்	௧௧௭௦
மாட்டை	௩௭௯
மாணுபுல	௧௧௧
மாணுவரு	௯௩௫
மாணுமென்	௧௦௧
மாணைக்கு	௧௦௯௮
மாணிதன்	௧௦௧
மாணிபால்	௯
மாணியை	௯௭
மாண்டாரெலும்	௯௮௩
மாண்டார்	௭௩
மாண்டான்	௧௦௯
மாதமர்	௯௦௧
மாதரா	௬௭௦
மாதரார்	௨௩௭
மாதர்ப்	௨௮௩
மாதர்மட	௫௩௫
மாதவ	௧௦௫
மாதனத்	௭௭௦
மாதனநேரி	௮௧௨
மாதாபிதா	௧௨௨௭
மாதார்	௧௦௦௫
மாதியன்	௧௧
மாதிர	௨௧௩
மாதிலங்	௯௩
மாதிலங்கிய	௭௯௪
மாதினுக்	௫௪௧
மாதினை	௩௮௦
மாதினையோர்	௮௧௦
மாதுரும்	௫௨௦
மாதொரு	௧௦௩
மாதொர்	௬௨௭
மாதொர்கூறு	௧௧௨௨
மாதோர்	௮௯௪
மாத்தன்	௬௯௪
மாந்தர்	௩௪௯
மாபதம்	௧௧௫௧
மாப்பிணை	௧௧௮௩
மாமலை	௧௪௫
மாமாத்	௧௦௧௧
மாயத்தை	௫௨௩
மாயமா	௧௭௧
மாயமெல்	௧௦௧௨
மாயவன்	௨௧௩
மாயனுப்	௧௦௫௦
மாயனும்	௮௯௫
மாயிரு	௬௭௯
மாய்த்தன	௩௮௭
மார்க்க	௨௭௨
மாலதாகி	௮௨௩
மாலயனு	௯௨௨
மாலயன்	௩௩௭
மாலவன்	௬௯௭
மாலன	௧௦௫௦
மாலாகி	௧௨௨௮
மாலாயிமத	௯௯௫
மாலாய	௧௧௭௮
மாலாயிர	௫௭௧

Koviloor Digital Library

பாட்டு.	பக்கம்.
மாலாலு	இகஎ
மாலினுக்	இகூச
மாலினு	உஅ
மாலினை	௩அக
மாலினேடரு	கூஅ0
மாலினேடயன்	ச0
மாலினேடு	கக
மாலினேடுமறை	க0அக
மாலுஞ்	உஅக
மாலுநான்	எகூ
மாலுநான்முக	அஉச
மாலுநான்முகனு	எ0க
மாலுநான்முகனும்	அகூக
மாலுமய	சகக
மாலுமலர்	சக௩
மாலுமாமல	ககக
மாலும்	ககக
மாலைத்	ககஅகூ
மாலைப்	க0அச
மாலைமதி	அ௩எ
மாலையெழு	கககூஉ
மாலொடய	அஇஅ
மாலொடு	ச00
மாலொடும்மறை	௩0எ
மாலோடு	எகூக
மால்யானை	இஉ0
மாவடை	உசஉ
மாவாய்ப்	சச
மாவாய்ப்பிள	க00கூ
மாவினுரி	கஇஇ
மாவை	அகக
மாருத	க0கஎ
மாறிலவுண	க0எ௩
மாறிலா	க0கூகூ
மாறிலாமல	கககஎ
மாறிலாமா	கூஇக
மாறின்	உஎச
மாறுகொண்	௩இஇ
மாறுதன்	இஇஎ
மாறுபட்ட	இகூ
மாறுமலை	சககூ
மாறெதிர்	கூகஎ
மாற்றமே	கூஎஎ
மாற்றமொன்	ககூ0
மாற்றமொன்ற	எ0௩
மாற்றுக்	ககசஅ
மாற்றே	சஅஉ
மானஞ்சு	கக௩எ
மானத்திண்	க0க
மானமாக்	உச௩

பாட்டு.	பக்கம்.
மானமாமட	அகஎ
மானவாழ்க்	உ00
மானனை	அக0
மானார	உசஇ
மானிடமார்	௩கூக
மானிடம்	சஉஉ
மானினேர்	அஇஅ
மானுமறை	கககஎ
மானேறு	இககூ
மானைநோக்	கககக
மானையேந்	சசக
மான்றிகழு	க0கஉ
மி	
மிகத்தா	கககூ
மிகப்பெரு	அ௩க
மிக்ககமல	கசஎ
மிக்ககா	கக௩எ
மிக்கரை	ச௩0
மிக்கவர்	அஎ
மிக்கனை	ககஎ
மிக்கார்	க0கூக
மிக்கானை	இகக
மிக்கானைவெண்	௩அ௩
மிக்கிறை	க0கூ
மிடுக்கிலா	கூசஎ
மிடுக்கு	கஎஎ
மிடைபடு	உகஉ
மிண்டரோ	௩கஉ
மிண்டாடி	கூஎஎ
மிண்டு	சககூ
மிளிரும்	அஅஉ
மிளிரும்மர	இஇஇ
மிறைபடு	௩கக
மின்காட்டு	அஅஇ
மின்னளந்	ககச௩
மின்னன	ககூ
மின்னனை	க0உக
மின்னனையா	க0கூ
மின்னனு	உஅகூ
மின்னுனை	சஅ0
மின்னிய	க௩கூ
மின்னியலு	இஎஇ
மின்னியல்	அஎஎ
மின்னியல்செஞ்	எஅஇ
மின்னிற	௩அஉ
மின்னினு	ச0உ
மின்னினுரி	௩கஎ
மின்னினுண்	ச0அ
மின்னினே	கூசச
மின்னுஞ்	கூக0

பாட்டு.	பக்கம்.
மின்னுமா	கஅ௩
மின்னுமாமேக	சஅகக
மின்னுரு	ககூஉ
மின்னுலா	கூஅ0
மின்னெடு	எசஇ
மின்னே	௩0அ
மீ	
மீத்திகழ	க0ச
மீளாத	உகக
மீளாவடிமை	எசஇ
மீனுடை	கஇஅ
மு	
முகில்	கஎக
முக்கணு	ககூஅ
முக்கணு	கஉகக
முக்கி	அ௩க
முடிகள்	எ0க
முடிகை	இஅ
முடிகொண்	கஉ௩க
முடிகொண்ட	கக
முடிகொண்டவள	ச௩ச
முடிகொள்	கூ0கூ
முடித்தலை	அ௩எ
முடித்தவன்	க0சஇ
முடித்தாம	இகக
முடிப்பது	கஉசக
முடியசடை	கஇஎ
முடியர்மும்	கஉக
முடியார்	ச0க
முடியார்சடை	கககூஇ
முடியார்சடையாய்	சக௩
முடியார்மதி	எஉக
முடியார்மன்	ச௩இ
முடியிலங்	ககஎ
முடியின்	௩அகூ
முடியே	க00க
முடிவண்ண	எசஅ
முடையரை	சஉ௩
முடையார்	ச௩எ
முட்டாத	கஎ
முட்டாமுது	அஅ௩
முட்டாமே	கஇஇ
முண்டத்	ககூச
முண்டந்	அஎஅ
முண்டமே	எஇஅ
முதற்றனி	எ
முதிரமங்கை	க0௩கூ
முதிரிலா	ச0௩
முதிருஞ்	உகூ
முதிருஞ்சடை	உ௩

Koviloor Digital Library

பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.
முதிருநீர்	அகூங	முந்துரு	ருஉங	முற்றுதொர்	சசகூ
முதிருவ	கஉஅ	முந்தைகாண்	க0சஎ	முற்றுதபான்	ஙகங
முதிர்சடை	கூகஅ	முந்தையார்	சருங	முற்றுதமுழு	க0எங
முதுகின	க0கூ	முந்தையூர்	கககூ	முற்றுதவெண்	ஙசஉ
முதுவா	கசஉரு	முந்நீர்	ககருரு	முற்றுமதி	உஉகூ
முத்தநீற்று	கஅஅ	முப்பது	கூசஉ	முற்றுவெண்	கருஅ
முத்தா	கஎ	முப்புரி	கஉஙக	முற்றிக்	கருஉ
முத்தா	க0அரு	மும்மை	எஙகூ	முற்றிலா	ஙருகூ
முத்தனே	ருஅக	முயல்	கூசக	முற்றிலாமதி	சருரு
முத்தனை	ருகஅ	முயன்ற	கஅகூ	முற்றின	அகங
முத்தன்சில்	கூஅச	முரசதிர்	கஅரு	முற்றிஞனே	கஉ0க
முத்தன்மிகு	ஙஉச	முரலுங்	உககூ	முற்றுஞ்	அஎச
முத்திசை	உஅகூ	முருகமர்	கஅரு	முற்றுணை	ரு0எ
முத்திரு	அருஎ	முருகார்	கஉ00	முற்றுநமை	உகூச
முத்திருமுயர்	கஅரு	முருகினர்	உஉச	முற்றொரு	உருஎ
முத்திமுத்	ககூ	முருகு	அஎச	முன்கை	ங0எ
முத்தியர்	சகஅ	முருட்டு	எக0	முன்பனை	உஎஎ
முத்தியாக	ஙகக	முலைத்தட	ககூஅ	முன்பனையுல	ககஅஅ
முத்திலங்	ச0ச	முலைமறை	ககூங	முன்பாகி	ககூஉ
முத்திலை	கசஅஅ	முலையாழ்	கஙஎ	முன்பின்	ஙகஅ
முத்திலைப்	எஅ0	முல்லைநன்	உஙங	முன்பெலா	ஙருக
முத்திலைமணி	சகூச	முல்லைமுறுவ	அஉரு	முன்பெலாமிளை	கருகூ
முத்திலைமணிதன்	எஉங	முல்லையங்	ககஎ	முன்றுன்	அசக
முத்திலைமுத	அஉஉ	முல்லைவெண்	கஉ	முன்றில்	அஅ
முத்திலைமுழு	எஎக	முழங்கொலி	கஅஉ	முன்னநின்ற	க0க0
முத்தின்	அகூக	முழவமர்	கஅரு	முன்னமவ	எகச
முத்துநீற்றுப்	கஅஅ	முழவினுன்	ஙகஎ	முன்னமிரு	எஎ
முத்துமா	க0கரு	முழுதிலங்	கஉக	முன்னமே	அஉங
முத்துமாமணி	உகரு	முழுதும்வா	கூ	முன்னம்	கூசகூ
முத்துவிதான	எ0க	முழுத்தழன்	கககக	முன்னவனெங்க	உ0ங
முத்தாரும்	கூகஉ	முழுநீறணி	கூ0க	முன்னவன்	க0கூக
முத்தேர்	கஉக	முளிவெண்	ஙஉகூ	முன்னவன்காண்	அகஎ
முத்தொப்	கஉ0அ	முளைக்கதி	கரு0	முன்னனை	ஙசக
முந்திக்	கஅரு	முளைக்கை	ககருச	முன்னிய	எகூ
முந்திச்	க0ஙக	முளைத்த	எ00	முன்னியா	கககரு
முந்திச்செய்	சகூக	முளைத்தானை	அஎக	முன்னியு	உஎக
முந்தித்தா	கசஅகூ	முளைமெயிற்	ருகக	முன்னிற்	ருகூஎ
முந்திநின்ற	கஎஉ	முள்வன	அசகூ	முன்றுமாட	கூஎக
முந்திமா	ககஉ	முள்குவார்	கக0ச	முன்றுமுப்	கூகங
முந்திமு	க0அஅ	முள்வார்	கூகக	முன்றுயிர்	கங0
முந்திய	எஉங	முள்ளிநாண்	கச	முன்னெஞ்ச	கஉககூ
முந்தியிரு	ங0க	முள்ளின்	க0கூங	முன்னெறி	ககஅங
முந்தியவ்	எககூ	முறிப்பான	கூஅச	முன்னெறிவான	எச0
முந்தியவ்வைய	அஎஎ	முறிபுது	எகூச	முன்னே	கஎங
முந்திபுகை	கூஎகூ	முறைத்திற	ககச0	முன்னேயுரை	கககக
முந்திவட்ட	ககஙக	முறையார்ந்த	உக	முன்னைச்	உகூ0
முந்திவந்து	கசருஉ	முற்பிறை	உஅச	முன்னைஞான	கஉ0ச
முந்திவான	கசக	முற்றலா	க0ஙக	முன்னைநான்	சஎஉ
முந்திவானோர்	சஎஎ	முற்றலாமை	கக	முன்னைநான்மறை	ஙககூ
முந்திஞன்	க0எஅ	முற்றுத	கங	முன்னைநீர்	உங0

Koviloor Digital Library

பாட்டு.	பக்கம்.
முன்னைமுதற்	எசச
முன்னையார்	அ0உ
முன்னையாறு	உகரு
முன்னையென்	ககசுச
முன்னொரு	கசுச
மூ	
மூக்கினன்	சஉந
மூக்குவாய்	க0சக
மூக்கே	ககஅக
மூடாய	அஎஅ
மூடியசிவா	சநக
மூடியசிவாத்	கூகக
மூடியசிவாத்தர்	ககநசு
மூடியசோலை	கஅசு
மூடினார்	நருசு
மூடுதுவ	கூ0
மூதணி	கசு
மூத்தவனை	நகஉ
மூத்தவனை	நசுஉ
மூத்தானை	எஎகக
மூத்துவரா	நசுஉ
மூப்பது	கஅசு
மூபபிணோடு	க0சந
மூப்பூர்	சநசு
மூரல்வெண்	கககஎ
மூரன்முறுவல்	கசுஎ
மூரிமுழங்	அசச
மூர்க்கப்	உஎஉ
மூர்த்தி	சுருந
மூலநோய்	அசரு
மூலமாகிய	அஉச
மூலவண்ண	உகரு
மூலனூமூர்த்தி	ச0சு
மூலனூர்	கஉநக
மூவகை	சுருந
மூவராய	கஎஉ
மூவருமாகி	சு0ந
மூவரென	அருரு
மூவனாய்	நஅ0
மூவனை	அஎஉ
மூவன்	க0கந
மூவாத	ருகஉ
மூவாதியா	உகஎ
மூவாய்	ககசுக
மூவாவண்ண	நஉசு
மூவாவுரு	கஉ00
மூவிலை	உஉஎ
மூவிலைவேற்	ககநக
மூவுருவின்	கஉநஎ
மூவெயில்	கஎஎ
மூள்வாய	எககக
மூன்று	ககஅஎ
மூன்றுமூர்த்தி	கஉ0உ
மெ	
மெய்த்தவத்	எருசு
மெய்த்தவன்	ருசுசு
மெய்த்தன்	ச0க
மெய்த்தான	நக0
மெய்த்துலா	சு0சு
மெய்த்தாறு	கூஅக
மெய்ப்பால்	எககூ
மெய்ம்மையா	கககூ0
மெய்யக	சசுசு
மெய்யாட்பு	க0ச0
மெய்யாகி	அகந
மெய்யனை	சுஎந
மெய்யனைமெய்	உ0ந
மெய்யன்ப	அநக
மெய்யன்வெண்	க0சுந
மெய்யானைத்	சசந
மெய்யானைப்	சஅக
மெய்யின்	சு0சு
மெய்யின்மாசின	உநசு
மெய்யின்மாசு	நஎஎ
மெய்யுளே	சுசந
மெய்யெலா	சுகஎ
மெய்யென்	கஉசக
மெய்யை	கூகக
மென்சிறை	சகசு
மே	
மேகத்த	நந
மேகத்திடி	அஅஉ
மேகநலூர்தி	சுசக
மேகந்தோய்	ச0சு
மேகமொடோடு	ரு0சு
மேகம்பூண்ட	ருசரு
மேகம்போன்	கககசஎ
மேயசெஞ்	ருஅந
மேய்ந்திள	க0கரு
மேலது	நரு0
மேலவர்	அஎ
மேலுமறி	கஉ0க
மேலெனக்	அருசு
மேலே	கஉந
மேலைவான	கூகஎ
மேலைவிதி	ககஉரு
மேலோடி	நஎ
மேலோடிவிசும்	உஎக
மேலோதுங்	கசசு
மேல்வைத்த	கககசுந
மேவயரு	நஉச
மேவாவசுரர்	சுக0
மேவித்து	உஎ0
மேவிலொன்	சுஉரு
மேனியிற்	சுஅஉ
மேனின்றிழி	ருஎக
மை	
மைகொள்	சு
மைகொள்கண்ட	கஉநசு
மைகொள்கண்டத்	கஉஉ
மைகொள்கண்டரென்	சுஉஅ
மைக்கடுத்த	எஅரு
மைக்கொள்	அஉஉ
மைசேர்	சசு
மைசேர்ந்த	கசுஉ
மைச்சணி	ருசந
மைச்செறி	ககநரு
மைஞ்ஞல	சுருஎ
மைஞ்ஞவில்	எருஅ
மைதவழு	எசு
மைதழைத்தெழு	ககஉஉ
மைத்தரு	ருஎஅ
மைத்தருமேனி	அஎஎ
மைத்தவண்	கசரு
மைத்திசழ்	கரு0
மைந்தணி	எச
மைந்தன	சசுஎ
மைப்படிந்த	கஉநரு
மைப்பயந்த	கககஅ
மைப்புரை	உசுக
மைப்பூசு	கககக
மைம்மரு	அந
மைம்மலர்	ககநந
மைம்மாநீல	சு0க
மைம்மான	சுஎச
மையகண்	ருருந
மையணி	நகக
மையரி	சுசஉ
மையலின்	ச0ச
மையறு	சஉ
மையனைய	நகச
மையாடிய	ந0ந
மையாருங்	க0அச
மையாருமணி	நச0
மையாரும்	சுஅக
மையாமிரான்	க
மையார்	ருஉஎ
மையார்தட	ககசஅ
மையார்தடங்	அசக
மையார்நிற	க0ருசு

Koviloor Digital Library

பாட்டு.	பக்கம்.
மையார்மணி	௧௨௧
மையார்மலர்	௫௧௧
மையான	௪௭௧
மையினார்	௧௧௪
மையினார்மணி	௧௦௩௯
மையினார்மலர்	௧௫௪
மையினார்மலர்நெடு	௧௦௩௧
மையினார்மிட	௩௭௫
மையுலா	௭௧௧
மையுலாம்	௮௩௯
மைவரை	௩௮
மைவான	௫௩௧
மொ	
மொட்டமணர்	௧௧௭௫
மொட்டலர்	௧௮௯
மொட்டை	௩௨௫
மொட்டையம	௧௦௦௯
மொண்டலம்	௧௧௪
மொய்குழ	௧௮௫
மொய்சேர்	௧௧௨
மொய்த்த	௧௭௦
மொய்த்தவானோர்	௧௮௦
மொய்யார்	௧௮௧
மொய்வல்ல	௧௦௯
மொழிருழ்	௯௬௮
மொழியாளை	௧௮௧
மோ	
மோடிபுறங்	௧௪௫
மோத்தை	௧௧௧௦
மோறுந்தோ	௧௦௫௩
யா	
யாகாயா	௧௨௩
யாகாலா	௧௨௩
யாதேசெய்	௮௨௯
யாமாயா	௧௨௩
யாவரு	௭௭௦
யாழைப்பழித்	௮௪௫
யாழ்நரம்	௨௪௮
வ	
வகைபெலா	௩௦௮
வக்காறுயி	௪௭௭
வங்கமலி	௯௭௨
வங்கமலிகட	௭௪௦
வங்கமலிகடனஞ்	௭௨௯
வங்கமலிபுங்	௭௭
வங்கமார்	௩௫
வங்கமேவிய	௩௪௩
வசிதரு	௧௦௫
வசிப்பெறு	௧௩௦௩
வசையப	௨௧௨

பாட்டு.	பக்கம்.
வசையறு	௮௩௩
வசையறுமாத	௫௭௯
வசையறுவலி	௫௬௮
வசைவிற்	௨௪௫
வஞ்சகப்	௧௧௯௩
வஞ்சகமன	௮௩௭
வஞ்சகர்க்	௪௪௦
வஞ்சங்கொண்	௧௬௧
வஞ்சநஞ்சிற்	௫௪௫
வஞ்சநெஞ்ச	௬௪௮
வஞ்சப்	௧௧௧௦
வஞ்சமண	௩௧௭
வஞ்சமற்ற	௧௦௬௪
வஞ்சமனத்	௮௨௧
வஞ்சமின்றி	௩௩௮
வஞ்சரக்க	௧௮௨
வஞ்சனையா	௬௧௧
வஞ்சித்	௨௬௧
வஞ்சிநுண்	௧௨௪
வஞ்சிநுண்ணிடை	௬௩௬
வடக்கெட	௨௫௬
வடக்கெழு	௪௨
வடந்திகழ்	௩௬௧
வடிகொண்	௬௩௬
வடிசொன்	௨௧௬
வடிகொள்கண்	௧௪௧
வடிகொள்பொழி	௧௧௬
வடிகொள்வாவி	௧௧௩
வடிதரு	௩௦௫
வடியேறு	௬௦௩
வடிவிளங்	௫௧௧
வடிவு	௧௧௧௫
வடிவுடை	௬௧௮
வடிவுடைமழு	௧௩௮
வடிவுடைமா	௬௭௧
வடிவுடைவாட்	௪௩௧
வட்டனை	௧௦௨௧
வட்டமா	௨௦
வட்டமாமதின்	௪௪௧
வட்டமென்	௨௦
வணங்கித்	௬௧௪
வணங்கிமுன்	௭௦௪
வணங்கிம்	௩௨௧
வணங்கு	௧௫௨
வண்டனை	௮௫
வண்டனைகொன்	௩௯௦
வண்டனைசெய்	௧௧௩
வண்டனைத்	௪௫௧
வண்டனைத்தன	௪௫௫
வண்டமருங்	௮௨௫

பாட்டு.	பக்கம்.
வண்டமரோதி	௧௧௭௪
வண்டமர்	௧௨௫
வண்டரங்க	௮௭.
வண்டரவு	௮௯
வண்டர்	௭௫௫
வண்டலங்	௯௩
வண்டலம்பிய	௬௭௨
வண்டலார்	௫௫௦
வண்டாடு	௨௩௩
வண்டார்	௬௮
வண்டார்குழ	௧௦௮௫
வண்டார்கொன்	௧௫௯
வண்டிரிய	௪௧௨
வண்டிரைக்கு	௫௩௨
வண்டிரைத்த	௧௧௨௧
வண்டிரைத்து	௬௭௧
வண்டிரைமதி	௭௬
வண்டுகான்	௭௩௫
வண்டுசென்	௧௦௧
வண்டுசேர்	௨௩௭
வண்டுபாட	௬௬௧
வண்டுலவு	௨௫
வண்டுலா	௭௧௦
வண்டுவாழுங்	௭௯
வண்டுவைகு	௧௧௧௪
வண்டோங்கு	௧௧௦௮
வண்ணங்	௧௦௨௧
வண்ணநன்	௧௦௦
வண்ணமல	௪௧௦
வண்ணமாக	௨௭௨
வண்ணமாமல	௯௮௪
வண்ணமால்	௧௧௩௮
வண்ணமுகி	௬௮௯
வண்ணமும்	௨௬
வண்ணவெண்	௧௦௩௨
வண்மை	௧௪௫
வந்தமண	௮௨௧
வந்தவா	௪௮௫
வந்தனை	௫௯௦
வந்தித்திருக்கு	௧௦௨௭
வந்தியோடு	௧௦௭
வந்திவ்வாறு	௩௫௫
வந்து	௨௬௩
வந்துசொல்	௧௨௪௦
வந்துமாலய	௩௩௭
வந்தொரிந்	௧௭௧
வம்படுத்த	௫௩௩
வம்பலரும்	௫௫௧
வம்பறு	௭௩௭
வம்பார்	௯௦௮

Koviloor Digital Library

பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.
வம்பார்கொன்	கஅரு	வரும்பெரு	கடுச	வழங்கு	கஅ0
வம்பின்	கூகக	வரைகளொத்	அகூச	வழிதலே	டுரு
வம்பு	சருஅ	வரைகிலேன்	கூருக	வழி..லே	ககஎ
வம்பூங்	சசக	வரைகுடை	டுஉஉ	வழித்தலேப்படு	கககக
வம்புலவு	எரு0	வரைக்க	உஉஉ	வழிபோவார்	கககூ
வம்புலா	ருகூ	வரைக்குல	க0அ	வழுவாள்	கூகூஉ
வம்மின்	டுகூகூ	வரைதரு	க0கூடு	வழுவிலா	அஎக
வயஞானம்	கூகூஉ	வரைதனே	க0உ	வளங்கனி	கூக
வயமுண்ட	கூக	வரைதிரிதர	கூகஅ	வளங்கிளர்	டுக
வரங்களால்	உருரு	வரைதிரிந்	எகக	வளங்கிளர்பொழில்	உ0ரு
வரங்கள்	க0சக	வரைத்தல	கக்சக	வளங்கிளர்மதிய	கஅரு
வரங்கள்வண்	ருக	வரைத்தலம்	கூகச	வளங்கிளர்மா	எஅரு
வரந்திகழு	க0ருஉ	வரைத்தலேப்	சஅஎ	வளங்கெழு	உடுகூ
வரந்தை	கூடுச	வரைபொரு	கஉஅ	வளமென	சசக
வரமதே	கசக	வரைமான	கூஉச	வளம்பட்	உசடு
வரமார்	க0ருடு	வரையார்	டு0உ	வளர்பூங்	அஎகூ
வரமுன்	கூருச	வரையார்திர	சருகூ	வளர்பொறி	ககஅ0
வரமொன்	உஎகூ	வரையார்திரடோ	எகூஉ	வளர்மதி	உஅச
வரிகொள்	கரு	வரையார்த்	சகூரு	வளேக்கும்	டு0க
வரிதரு	க0டு	வரையார்ந்த	கூடுக	வளேக்கை	கூகடு
வரிந்த	உஎஎ	வரையார்ந்தமட	ருஎஅ	வளேக்கைமட	கககஅ
வரிந்தவெஞ்	ருடுக	வரையார்மலே	சஅரு	வளேக்கைமுன்	உ0உ
வரிப்பை	ருசஎ	வரையிஞெ	கக0எ	வளேத்து	கககடு
வரிமுரி	கடுரு	வரையின்	கஅடு	வளேயார்	டு0
வரியணி	அஅக	வரையின்மாங்	சகக	வள்வாய	உ0க
வரியயறை	டுஉஅ	வரையுலா	ருஎடு	வள்ளலிருந்	க0
வரியர	அஉ0	வரையொன்ற	உஎகூ	வள்ளி	கூகக
வரியரநாண	சசடு	வரைவந்	ருஎ	வற்கென்	அஅக
வரியரா	டுடுஅ	வரைவளங்	ருருஉ	வற்று	க0ரு
வரியராவென்	எஎச	வலங்கிளர்	கூஉக	வனபவள	உடு
வரியாய	க0கச	வலங்கொள்	ருசச	வன்கண்	அகச
வரியார்	ருடுச	வலங்கொள்புகழ்	கூகூஅ	வன்சயமா	எச0
வரியுறு	கஉஅ	வலமார்	எரு	வன்புயத்த	கூஅடு
வரியோர்	கூகக	வலமிகு	டு0கூ	வன்புற்	சசகூ
வரிவள	ககஉஎ	வலித்தேன்	கூசகூ	வன்றிற	உஎஅ
வருக்கமார்	கரு	வலிந்த	ரு0அ	வன்ஞக	எச0
வருங்கலமு	டுகடு	வலியகால	கசஎ	வன்னி	ருஉஅ
வருங்காலன்	ருகூடு	வலியான்	உகச	வன்னிகொன்	கூஉடு
வருத்தனே	ருகூக	வலியின்	எஉ	வன்னிகொன்றை	அகச
வருநல	சசக	வலேயம்	க0டுச	வன்னிகொன்றைமதி	கூகடு
வருந்த	ககஉ	வல்லதெல்	க0டுரு	வன்னிமத்த	உஉஉ
வருந்தான்	க0சடு	வல்லம்	ருஅ0	வன்னியு	அஅ0
வருந்தி	ச00	வல்லரக்	கசஎ	வன்னிவாளர	உச0
வருந்திய	சடுஉ	வல்லரா	கக0க	வா	
வருந்தின	டுஅச	வல்லாடி	ருகூ0	வாக்கியஞ்	கககூ
வருமாகரி	டுஉக	வல்லி	கூகச	வாக்கிஞெ	அகச
வருமாந்	உ	வல்லிநுண்	அகூ	வாங்கினர்	உக
வருமிக்க	உ0எ	வல்லியந்	ருரு	வாசங்கமழும்	கஅரு
வரும்பயனே	கரு	வல்லியந்தோ	கூகக	வாசங்கமழ்	ககக
வரும்பழி	கூ0	வல்லே	க0கூகூ	வாசங்கமழ்மா	சசகூ

Koviloor Digital Library

பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.
வாசந்திரூர்	௧௩௧	வாரின்	௧௦௮	வானமர்	௨௧௫
வாசவேற்	௧௫௧	வாருமன்	௩௭௫	வானமர்திங்	௨௧௯
வாசான்	௯௦௨	வாருறு	௯௯	வானமர்மதி	௧௦௦
வாசமலர்	௮௩௭	வாருறுகொங்	௧௨௨	வானமர்மதிபுல்	௨௭௭
வாசமலி	௨௮௨	வாருறுமென்	௫௩௫	வானமாள்வ	௪௭
வாசம்	௪௩௮	வாருறுமென்முலை	௮௮௮	வானமிது	௮௭௨
வாசி	௫௭௨	வாரேறு	௧௫	வானவர்கடா	௧௦௧௯
வாடல்	௩௩௩	வாரேற்ற	௯௫௪	வானவர்கோன்	௫௧௧
வாடல்வெண்	௮௧௫	வார்செழு	௨௦௮	வானவர்க்கு	௩௦௯
வாடல்வெண்டலை	௧௦௧௧	வார்கொண்ட	௭௩௭	வானவர்தான	௩௮௯
வாடற்றலை	௯௧௦	வார்கொண்	௯௧௫	வானவர்வணங்க	௨௮௭
வாடாமுலை	௫௩௧	வார்கொண்மென்	௧௦௯௧	வானவர்வணங்கி	௩௦௫
வாடாவிரி	௧௦௫௮	வார்சொன்	௯௯௧	வானவனுய்	௩௧௪
வாடினிர்	௯௦௨	வார்மலி	௫௩௯	வானவனை	௩௯௪
வாடிய	௮௪௭	வாலிய	௩௨௪	வானவனைவலி	௨௨௧
வாடிவாழ்	௨௩௨	வாலிவாய்	௮௧௯	வானவன்	௯௧௧
வாட்ட	௧௧௦௯	வாழியெம்	௪௨௮	வானனைம்மதி	௧௦௨௧
வாணிலாச்	௧௩௮	வாழிறுந்	௪௭௪	வானோர்சோதி	௩௨௫
வாணிலாமதி	௧௦௩௩	வாழும்	௪௭௨	வானோர்திங்கள்	௫௦௨
வாணிலாமதிபோ	௧௪	வாழை	௯௨௮	வானோர்திங்கள்வாண்	௭௮௧
வாண்முக	௭௭௭	வாழ்கவ்	௧௧௭௭	வானோர்மாமதி	௧௧௨௩
வாதுசெய்	௧௧௩௫	வாழ்ந்த	௧௨௦௩	வானிடை	௩௮
வாதுசெய்து	௧௨௧௮	வாழ்ந்த	௩௧௨	வானிலங்க	௨௪
வாதைப்	௫௭௦	வாழ்ந்தாளு	௯௩௧	வானிள	௮௧௫
வாமதேவ	௧௨௦௯	வாழ்வர்	௧௮௭	வானிற்	௮௮௨
வாமனை	௨௮	வாழ்வாவது	௧௧௫௩	வானுடை	௫௦௮
வாயாடி	௯௭	வாழ்வை	௧௧௯௯	வானுலா	௯௭௧
வாயார்	௧௭௦	வாளமர்	௩௧௨	வானுலாந்திங்கள்	௨௯
வாயானை	௮௭௩	வாளவரி	௧௧௫௯	வானுற்ற	௨௧௧
வாயிடை	௯	வாளாங்கின்	௭௪௬	வானே	௪௧௨
வாயிரு	௪௨௪	வாளார்	௫௧௮	வானைக்கட	௨௧௩
வாயேவாழ்த்து	௧௮௪	வாளிசே	௪௧௮	வானைக்கா	௩௩௫
வாய்த்தது	௧௧	வாளினன்	௮௧௭	வானோர்	௮௩௪
வாய்த்த	௧௫௩	வாளெயிற்	௫௧௨	வான்சொட்ட	௫௮௯
வாய்ந்தபுகழ்	௧௧௪	வாளைபாய	௯௩௫	வி	
வாய்ந்தபுகழ்மறை	௧௪௫	வாளைபுத்	௧௦௧௫	விக்குவினை	௧௦௫௧
வாய்ந்தமேனி	௫௮௨	வாள்கொடிய	௧௧௫௪	விசையி	௫௮௧
வாய்ந்தவேல்	௨௭௭	வாள்வரி	௧௧௭௨	விசையுறு	௫௮௦
வாரளவு	௧௦௫௯	வானகத்	௧௦௭௨	விச்சை	௧௪௧
வாரணி	௮௦௩	வானகம்	௭௦௪	விச்சையாவது	௧௨௦௯
வாரமதி	௧௦௫௪	வானஞ்சாடு	௧௦௨௦	விஞ்சத்	௧௧௧௭
வாரண்ட	௧௨௩௪	வானஞ்சேர்	௩௨௧	விடமிலே	௨௮௫
வாராத	௩௯	வானணி	௧௦௧	விடக்கை	௭௪௨
வாராரு	௮௮௫	வானத்தார்	௧௧௯௦	விடக்கொரு	௨௫௯
வாரார்	௫௦௧	வானத்தினர்	௨௫௪	விடங்கொளு	௧௪௩
வாரார்கொங்	௪௩௫	வானத்தின்மதி	௪௩	விடங்கொண்	௫௧௧
வாரார்ந்த	௨௩௪	வானத்துயர்	௩௫௩	விடத்தார்	௩௨௧
வாரிடன்	௧௦௯௨	வானநாட	௪௮௯	விடந்திகழு	௭௯௦
வாரிபாகம்	௯௭௧	வானந்தளங்	௧௧௧௧	விடந்திகழ்	௧௫௧
வாரிருப்	௧௦௫௩	வானமதிய	௩௮௯	விடமடை	௪௯௭

Koviloor Digital Library

பாட்டு.	பக்கம்.
விடமலி	௨௫௦
விடமல்கு	௮௬௬
விடமுண்ட	௪௬
விடமுணா	௩௬௬
விடமூக்க	௧௨௨௬
விடம்படு	௨௩௮
விடலேறு	௨௭௮
விடலை	௧௦௨௧
விடலையானை	௧௨௦௮
விடிவது	௮௧௧
விடுத்த	௩௫௫
விடுத்தமால்	௫௨௫
விடுபெட்டி	௧௧௯௮
விடைசேர்	௧௦௫௮
விடைதரு	௪௭௭
விடைத்த	௨௭௮
விடைத்தவல்	௫௬௪
விடைநவி	௨௨௦
விடைய	௭௧
விடையதேறி	௬௬௧
விடையமர்	௬௪௩
விடையரவ	௨௧௦
விடையவன்	௧௧௦௨
விடையாரு	௩௬௪
விடையார்	௩௦௩
விடையார்கொடி	௫௧
விடையார்கொடியார்	௫௫௧
விடையானை	௧௮௧
விடையானைவிண்	௬௮௭
விடையான்	௬௮௧
விடையான்விரும்பி	௧௦௧௧
விடையினர்	௪௫௦
விடையின்	௧௦௬௩
விடையுங்	௧௧௨௫
விடையுங்கொ	௬௫௨
விடையுடை	௧௨௪
விடையுடைக்	௩௪௫
விடையுடைவெ	௮௮௮
விடையுமேறு	௭௦௧
விடையுமேறுவ	௩௫௮
விடையும்	௧௧௧௭
விடையுயர்	௨௩௮
விடையேறி	௭௬௦
விடையேறிவே	௨௭௫
விடையொரு	௪௨௭
விட்டதோர்	௬௭௭
விட்டார்	௪௨௦
விட்டிசைப்	௬௩௬
விட்டிட்டானை	௧௨௦௬
விட்டிலங்கு	௧௭௬
விட்டிலங்குமா	௪௬௦
விட்டுருவ	௪௦௭
விட்டுவெள்	௧௬௭
விட்டெழில்	௫௮௦
விண்களார்	௭௬௩
விண்கொண்ட	௭௭௭
விண்டமாமல	௮௩௬
விண்டமாமலர்	௭௧௧
விண்டமாமலர்கொ	௧௧௨௩
விண்டமாம்	௧௧௧௭
விண்டலர்	௭௮௬
விண்டலர்பொழி	௧௪௦
விண்டலர்பொழிலணி	௮௭
விண்டவர்	௩௦௭
விண்டவர்தம்	௭௨௬
விண்டவர்தம்புர	௮௮௭
விண்டவர்புர	௪௨௬
விண்டவெண்	௭௦௬
விண்டவெள்	௬௧௩
விண்டார்	௨௪௮
விண்டார்புர	௩௦௦
விண்டார்புரமூன்	௪௬௨
விண்டார்புரமூன்று	௧௧௬௮
விண்டான	௧௦௨
விண்டானே	௭௫௨
விண்டெலா	௪௨௪
விண்டொழி	௪௨௬
விண்ணகத்	௧௧௧௯
விண்ணப்ப	௩௦
விண்ணமர்ந்த	௧௦௧௫
விண்ணர்	௫௬௨
விண்ணவருக்	௧௬௪
விண்ணவர்	௮௬
விண்ணவர்கண்	௬௫
விண்ணவர்கள்	௧௬௪
விண்ணவர்தம்	௨௭௮
விண்ணவர்தொழு	௨௬௨
விண்ணவர்தொழுதே	௧௦௪௬
விண்ணவர்மகுட	௨௪௧
விண்ணவனை	௨௨௮
விண்ணாகி	௧௦௮௧
விண்ணாரும்	௩௪௧
விண்ணார்திங்கள்	௩௨௬
விண்ணார்திங்கள்வி	௩௩௩
விண்ணார்ந்தன	௧௦௦௬
விண்ணாணய்	௩௦
விண்ணானே	௮௦௬
விண்ணிடை	௧௧௮௧
விண்ணிடைவிண்	௧௦௫௦
விண்ணியங்கு	௧௧௭
விண்ணியல்	௫௪௨
விண்ணியல்விமா	௮௬
விண்ணியன்	௧௧
விண்ணிரி	௪௧௫
விண்ணிலா	௩௧௬
விண்ணிலார்	௬௬
விண்ணிலான	௬௨௬
விண்ணிழி	௮௪
விண்ணிறை	௫
விண்ணினாண்	௩௩௫
விண்ணினார்	௪௫௩
விண்ணினார்பணி	௪௦௮
விண்ணினார்மதி	௬௪௪
விண்ணினார்விண்	௮௩௮
விண்ணினை	௨௭
விண்ணின்	௩௪௪
விண்ணின்மின்	௨௧௪
விண்ணுலகா	௧௧௯௧
விண்ணுலகின்	௮௭௨
விண்ணுலா	௧௧௩௪
விண்ணுலாமதி	௬௨௧
விண்ணுலாம்	௧௮௩
விண்ணுலாவுந்	௨௪௩
விண்ணுளாரு	௪௫௫
விண்ணுளார்	௮௨௩
விண்ணுளார்மறை	௧௦௩௪
விண்ணுளார்விரு	௮௪௧
விண்ணுற	௧௧௮௨
விண்ணுறு	௫௩௫
விண்ணோர்	௨௧௮
விண்ணோர்தலைவர்	௫௩௦
விண்ணோர்பரவ	௪௩
விண்ணோர்பெரு	௬௪௦
விண்ணோர்பெருமா	௬௭௪
விண்பணிக்	௧௧௧௫
விண்பயில	௧௪௮
விண்பயில்	௫௮௧
விண்பொய	௧௦௮
விண்மகிழ்	௬௨
விண்முழுது	௧௦௮௪
விதியாய்	௭௨
விதியானை	௧௮௧
விதியுமாம்	௩௧௭
விதிவழி	௫௮௦
விதைத்த	௧௦௭௮
வித்தக	௫௮௧
வித்தகமறை	௮௭
வித்தகவீணை	௬௩௮
வித்தா	௪௦௫
விமுத	௪௦௪

Koviloor Digital Library

பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்.
விம்மா	எ0க	விரையினர்	ககஅ	விறகிற்றீ	கஉ
வியரிலங்	கூஉ	விரையுண்ட	கஉ௩௫	விற்றுனே	சஎக
விரவிநாறு	௫௫0	விரையேறு	உ௫அ	விற்றுக்	எச௫
விரவிநிறு	௩௫அ	விலகினர்	கக0உ	விற்றானென்	க0கஎ
விரவிலாது	௩அ௫	விலக்கலே	கூ௩எ	வினவினே	௩அச
விரவுநிறு	ககஅ	விலக்கலொண்	௫அ0	வினைகெட	கஉஅ
விரிகட	கூகஎ	விலக்கலொன்று	கூகூக	வினையாயின	௩௫௩
விரிகதிர்	ககஎக	விலக்கலொன்றவெ	கூச௩	வின்மலை	உ௩க
விரிக்கு	க௫க	விலக்கலொன்றேந்	க௩0	வின்மை	சச0
விரிசடை	கூசக	விலையிலா	சச	வீ	
விரிசுரு	ச௫0	வில்லருளி	சக௫	வீக்கமெழு	க0கச
விரித்த	௩0க	வில்லாடி	உகஅ	வீக்கினு	௫கஅ
விரித்தபல்	எக௩	வில்லார்	கஉக	வீங்கிய	எ0௫
விரித்தவ	உ௩அ	வில்லிமை	ககசக	வீங்கியவுட	க0கூ
விரித்தவனரு	க0எக	வில்லிய	எச	வீங்கினர்	௫கஅ
விரித்தவேத	௫எ	வில்லே	௫	வீசுமின்	எ௫
விரித்தனே	உ௫௩	வில்லேக்காட்	கூகஅ	வீடரங்கா	கூகஎ
விரித்தார்	எ௫எ	விவர்த்தாடிய	கககஅ	வீடலால	அகூ௩
விரித்தானே	க0௩அ	விழமல்கு	அஎ	வீடிலா	எ௫கூ
விரித்தானோரன்	க0எ௩	விழவாரோவி	௩௫ச	வீடினருல	ககஅ௩
விரித்தனே	உ௫௩	விழவிறைசை	அஉச	வீடினர்	அகூ
விரித்தானே	௩எக	விழிக்குந்	சகஉ	வீடின்	ககச
விரியார்	சசஎ	விழித்தனர்	எசஎ	வீடுஞான	சஉகூ
விரியுந்	உ௫௩	விழியிலா	௩ச௫	வீடுதனை	எஅஉ
விரிவிலா	எ௫அ	விழுது	௩சகூ	வீடுபிறப்	கூகக
விருநிலங்	கஉக	விழுநீர்	க0௫அ	வீடுபிறப்பை	ககஎச
விருது	அ௫௩	விழுமணி	கூ௫க	வீடுபெறப்	க0௫கூ
விருதபகரு	கக௫௩	விழையாதார்	எ௫எ	வீட்டினர்	க0அஉ
விருத்தருமிப்	௩எச	விழையாருள்	கூ0ச	வீணடைந்	உசக
விருத்தருமிவெண்	உக	விளக்கினர்	கககஉ	வீதிகடோறு	எ0க
விருத்தரும்	எ	விளக்கும்	உ௫உ	வீதிபோக்	உச௩
விருத்தனே	அசக	விளக்கப	கசகூ	வீதிவேனெடு	ககூஅ
விருந்தாய	கக௫	விளக்கிய	கச௫	வீந்தார்	கககஎ
விருப்பி	கஉ௩	விளக்கிழை	௫சஉ	வீரத்தா	சஅ௫
விருப்பீர்	௩கக	விளக்கு	அகூ	வீரமாகிய	கூகஅ
விருப்பினே	கூஎச	விளக்குநான்	௫அக	வீரமிக்	அக௩
விருப்பர்	சுக௫	விளக்கும்	உச௫	வீரமும்	எசஎ
விருப்புமதி	உஅச	விளக்கோண்	௫0க	வீரனே	க0௩0
விரும்பும்	உக௩	விளக்கொளி	கசக	வீழக்கால	கஉ௩அ
விரைமழு	உசஎ	விளவார்	க0உக	வீழிட்ட	கக௩அ
விரைசெய்	௫சஅ	விளவு	௩௩க	வீழிமிழலை	கஉஉ0
விரைதரு	ககக௩	விளிதரு	கச0உ	வீழிம்மிழலை	௫கூஎ
விரைதருசரு	கூ௩உ	விளைக்கின்ற	ககக௩	வீளைக்குர	உகஎ
விரைந்தாரு	எகஅ	விளைக்கின்றர்	க0எக	வீழுர்	கூச0
விரைமலி	௫அ0	விளைக்கும்	௫௩௩	வீறுடை	க0உஉ
விரைமலிபொழி	௫அ0	விளைதரு	உ0௩	வீறுதாறுடை	உக௫
விரையல்கு	அஎ	விளைத்த	அ௩0	வீறுதான்	உ௩௩
விரையார்	க0௫உ	விளையாத	கூஎஅ	வீறுஞன்	கூககூ
விரையார்கொள்	ககஉஉ	விளைவறி	கககச	வெ	
விரையாறு	க0கச	விளைத்	ககக௩	வெங்கமெங்	கூஎக

Koviloor Digital Library

பாட்டு.	பக்கம்.
வியங்கடுங்கட்	௭௭௮
வெங்கணை	௫௦௫
வெங்கணேன	௯௪௨
வெங்கண்	௪௦௧
வெங்கள்	௮௮௩
வெங்கள்விம்மு	௬௩௧
வெங்குரு	௧௪௩
வெஞ்சமர்	௧௧௯௭
வெஞ்சினக்	௪௯௭
வெஞ்சினவா	௪௨௮
வெஞ்சினவெள்	௯௬௮
வெஞ்சுடரா	௩௪௧
வெஞ்சுடர்	௫௪௦
வெஞ்சுரஞ்	௭௭௮
வெஞ்சொற்	௩௭௪
வெடிகொள்	௧௫௬
வெடிதரு	௯௧௨
வெட்ட	௧௧௪௩
வெட்டன	௧௧௯௪
வெண்காட்	௫௯௨
வெண்கொடி	௪௩௧
வெண்கோவண	௪௪௬
வெண்செநெல்	௧௧௪௬
வெண்டலைகை	௮௭௧
வெண்டலைப்	௪௮௬
வெண்டலைமா	௫௨௪
வெண்டலைமாலை	௪௧௧
வெண்டலையு	௯௭௫
வெண்டலையோர்	௩௬௬
வெண்டிரை	௧௧௯௮
வெண்டிரைப்	௮௨௨
வெண்ணவ	௩௩௫
வெண்ணித்	௭௮௦
வெண்ணில	௨௧௪
வெண்ணிலா	௧௫௩
வெண்ணிலாமதி	௧௧௪௧
வெண்ணிலாமிகு	௯௮௧
வெண்ணிறத்	௮௮௪
வெண்புலா	௩௬௭
வெண்பொடி	௬௩௦
வெண்மதி	௪௧௪
வெண்மதிதவழ்	௫௮௦
வெந்த	௯௯௫
வெந்தகுங்	௨௪
வெந்தசாம்ப	௧௧௭௮
வெந்தநீறணி	௮௧௫
வெந்தநீறரு	௧௧௮௩
வெந்தநீறு	௧௮௧
வெந்தநீறுமெய்	௨௦௧
வெந்தநீறுமெய்பூ.	௪௦௪
வெந்தநீறுமெய்யி	௩௬௬
வெந்தநீறும்	௧௧௩௬
வெந்தநீறுவிளங்	௧௨௧௦
வெந்தநீற்	௩௩௩
வெந்தநீற்றினர்	௮௦௫
வெந்தலாய	௪௯
வெந்தவெ	௧௦௩௨
வெந்தவெண்	௯௨௨
வெந்தவெண்ணீ	௫௨௨
வெந்தவெண்பொ	௮௭
வெந்தவெண்பொடி	௭௫௪
வெந்தவெண்பொடிப்	௮௪௨
வெந்தவெண்பொடிப்	௪௫௫
வெந்தவெண்பொடிய	௪௦௩
வெந்தழல்	௮௨௬
வெந்தார்	௧௦௨௧
வெந்துயர்	௯௦௨
வெந்துயர்தோன்றி	௪௭௪
வெதுவர்	௭௪
வெந்துறு	௬௧௧
வெப்பத்	௧௨௧௧
வெப்பொடு	௯௦
வெப்பொடுவிர	௪௭௪
வெம்பவரு	௧௨௨௧
வெம்பனை	௯௭௧
வெம்பிணி	௭௭௬
வெம்புநோயு	௬௩௩
வெம்புந்திய	௧௦௨௬
வெம்மான	௧௦௪௫
வெம்மைநம	௪௨௦
வெம்மைமிகு	௯௮௧
வெம்மையான	௪௭௦
வெயிலின்	௭௬௨
வெயிற்	௪௮௭
வெய்தாய	௧௭௪
வெய்யதண்	௩௬௮
வெய்யபோ	௧௧௯
வெய்யபாவ	௩௩௫
வெய்யமா	௪௮௬
வெய்யவன்	௬௨௦
வெய்யவன்பல்	௮௬௭
வெய்யவிரி	௩௨௩
வெய்யவினை	௯௯௦
வெய்யவினைநெறி	௧௦௬௦
வெய்யவினையா	௮௫௫
வெரிநீர்	௫௫௫
வெருகுரிஞ்	௬௩௧
வெருவி	௧௧௫௧
வெலவலான்	௨௨௧
வெல்பறவைக்	௧௧
வெல்லும்	௧௦௪௮
வெவ்வமே	௩௩௩
வெவ்வவண்	௫௬௦
வெளிறு	௧௧௩௨
வெள்ளத்தா	௭௫௫
வெள்ளத்தார்	௧௨௧௬
வெள்ளத்தைச்	௧௧௦௮
வெள்ளத்தைச்சடை	௧௧௦௩
வெள்ளநீர்	௧௧௯௦
வெள்ளநீர்ச்	௧௦௮௧
வெள்ளமது	௭௪
வெள்ளமார்	௬௩௬
வெள்ளமுள்	௩௩௦
வெள்ளமெல்	௧௧௩௦
வெள்ளமொரு	௨௭௩
வெள்ளிக்	௧௧௧௧
வெள்ளிக்குன்	௬௬௩
வெள்ளிமால்	௫௨௫
வெள்ளியர்	௫௦௩
வெள்ளெயிறு	௧௭
வெள்ளெருக்	௧௦௩௬
வெள்ளெருக்கர	௧௯௦
வெள்ளைத்	௭௯௦
வெள்ளைநீற	௨௨௩
வெள்ளையெரு	௫௨௮
வெறிகமழ்	௯௦௨
வெறிகிளர்	௫௫௩
வெறிகொளா	௬௬௧
வெறியார்	௧௦௫௧
வெறியார்மல	௮௦௬
வெறியார்மலர்க்	௩௮௩
வெறியுலா	௯௮௪
வெறியுறு	௧௫௧
வெறிவிர	௯௬௧
வெறிவிரவு	௮௮௬
வெறுத்தா	௧௨௧௬
வெறுத்துக	௧௧௦௪
வெறுத்தேன்	௯௧௪
வெற்பமர்	௫௮௦
வெற்புறுத்த	௭௧௬
வெற்றரைக்	௨௦௪
வெற்றரைச்	௬௬
வெற்றரைச்சம	௧௦௮௨
வெற்றரையா	௨௧௫
வெற்றரையுழல்ப	௧௦௦
வெற்றரையுழல்வா	௩
வெற்றவே	௮௯௮
வெற்றி	௧௦௮௮
வென்றவன்	௧௦௨௪
வென்றுனே	௧௨௧௬

Koviloor Digital Library

பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.
வென்றி	௩௮௧	வேதமோர்நான்	௧௦௮௯	வேலைக்கட	௧௧௦[illegible]
வென்றியா	௨௦௦	வேதம்	௮௫௪	வேலைசேர்	௮௪௪[illegible]
வென்றிமிகு	௨௮௨	வேதர்	௫௫௮	வேலைதன்	௭௯௫
வென்றிவேலன்	௧௧௧௫	வேதவித்தா	௧௧௫௯	வேலைமலி	௪௯
வே		வேதவேதிய	௯௦௦	வேலையி	௯௫௯
வேகக்கொ	௯௭௯	வேதவேள்வி	௮௯௫	வேலைவென்	௫௭௭
வேகமத	௫௫௯	வேதனுர்	௫௭௫	வேழத்தி	௫௪௭
வேடஞ்	௫௩௯	வேதனை	௯௧௨	வேழமுரிப்	௫௫௧
வேடமுடை	௫௯௦	வேதித்த	௧௧௯௮	வேழம்	௪௭௨
வேடராய்	௧௧௪௯	வேதித்தார்	௧௫௯	வேழவெண்	௫௭௪
வேடனுரி	௧௦௫௯	வேதியர்கை	௫௭௭	வேள்பட	௧௧௭௨
வேடனுய்	௧௦௭௦	வேதியர்தொழு	௮௯	வேள்படுத்	௨௫௯
வேடனுய்விச	௧௦௧௦	வேதியர்விண்ணவ	௯௫௮	வேளுவுன்	௫௨௭
வேடுதங்	௨௧௯	வேதியன்	௫௫௧	வேறிணை	௧௦௫௧
வேடுறுவேட	௪௫௧	வேதியன்விடை	௯௨௫	வேறுகோல	௫௦௪
வேட்கள	௨௦	வேதியாவேத	௮௭௦	வேறுசிந்	௨௨௨
வேட்டு	௮௧௯	வேந்தரா	௯௫	வேறுயர்	௨௧௨
வேணுபுர	௧௪௫	வேந்தராயுல	௧௪௨	வேற்றுகி	௧௧௫௧
வேண்டா	௪௮௧	வேந்தர்	௫௮௪	வேனலானை	௨௮௦
வேதகிதர்	௧௮௧	வேந்தனொடு	௧௦௧௪	வேனல்	௮௮௪
வேதக்கனுன்	௪௫௫	வேந்தாகி	௨௭௧	வேனிகர்	௫௮௦
வேதங்கள்	௪௫௭	வேம்பினெடு	௯௭௯	வை	
வேதத்தா	௫௯௧	வேம்பினை	௭௦௯	வைச்ச	௯
வேதத்தி	௮௫௭	வேயன	௧௨௪௨	வைதிகத்	௮௯௫
வேதத்தொலி	௯௯	வேயனைய	௧௦௧௯	வைதெழு	௯௯௯
வேதமாய	௧௨௧௮	வேயினுர்	௫	வைத்த	௯௮௫
வேதநாவின	௪௦	வேயுதிர்	௪௫௯	வைத்தபொரு	௧௦௧௨
வேதமலிந்	௯௮	வேயுயர்	௫௯௮	வைத்தமாடு	௭௯௭
வேதமாகிய	௫௨௯	வேயுறு	௧௧௭௧	வைத்தமாடுமனை	௪௯௫
வேதமாயவின்	௮௨௪	வேய்முத்	௨௯௭	வைத்தனன்	௫௫௧
வேதமாய்	௯௯௫	வேரிமிகு	௯௮௧	வைத்தானை	௫௮௪
வேதமுதல்	௧௧௭௮	வேரியு	௧௨௪	வையக	௧௦௪
வேதமொ	௧௧௫	வேரிவளாய	௧௨௦௧	வையகமுழு	௯௫௮
வேதமொடு	௨௯௪	வேருலா	௧௦௭௯	வையகமுற்	௧௭௯
வேதமொழிவென்	௧௨௧௭	வேர்த்த	௯௪௦	வையந்நேற்	௪௧
வேதமொழிவந்	௧௦௮௮	வேர்வந்துற	௧௦௨௯	வையந்தா	௪௮
வேதமொழிவே	௯௧௯	வேலங்கா	௧௦௮௫	வையமார்	௮௯
வேதமொழிவெண்	௨௯௯	வேலாவலய	௮௫௪	வையம்	௨௭
வேதமொது	௪௫௫	வேலினேர்	௫௮௧	வையனை	௯௭௦
வேதமோர்	௭௫	வேலைக்	௧௧௯௮		

திருப்பாட்டுமுதற்குறிப்பகராதி

முற்றுப்பெற்றது.

பின்னர்க்காட்டப்படும் பிழைகளுட் பெரும்பாலன, தேவாரம் அச்சிட்டுமுடிந்தபின்பு கிடைத்த இரண்டு பிரதிகளின்படி திருத்தப்பட்டன. அவற்றிற் காணப்பட்ட பாடபேதங்களை முன்னர்க்காண்க.

பரிசோதநபத்திரம்.

பக்கம்.	பாட்டு.	வரி.	பிழை.	திருத்தம்.
ச	ச	உ	தொண்டன்ரு	தொந்தந்தா
கக	அ	ங	றுடைக்கிலும்	றுடைக்கினும்
கங	சு	சு	துளக்கிலா	துளக்கில்லா
கஎ	ங	க	மூழ்கி	முள்கி
,,	க0	ங	காஞ்சீ	காஞ்சி
ககூ	அ	ச	நன்னகாரரே	நன்னகராரே.
உங	ங	ங	யொழில்	பொழில்
உஎ	சு	ங	சூடித்	சூடி
உஅ	கூ	உ	வெதிர்	எதிர்
சஉ	ச	ச	மேவீனுரே.	மேவினுரே.
ருங	ங	ச	நேஞ்சே	நெஞ்சே
ருரு	எ	க	வாழ்க்கை	வாழ்க்கைக்
சுக	க	க	சூடிக்	சூடி
சுஅ	அ	ங	குமைவது	குமையது
சுகூ	கூ	ங	தருகழி	தருகழி
எசு	ச	க	நடமதாடிக்	நடமதாடி
எஅ	எ	ச	கொயிலாக	கோயிலாக
அ0	க	க	பொருணின்றிறமாம்	பொருளின்றிறமாம்
அகூ	எ	ச	சரிதை	சரியை
கூஉ	கூ	க	மருப்பபோர்முலை	மருப்பேபார்முலை
க0ச	சு	க	முன்னுகம்	முன்னுகும்
க0எ	ச	ங	மொழியாற்	மொழியார்
கககூ	அ	ச	சூழ்தண்தவயற்	சூழ்ந்ததண்வயற்
கஉக	ங	ங	வாய்ச்	வாய்க்
கஉரு	கூ	ங	போது	மோது
கஉஎ	கூ	உ	கழற்றிரு	கழறிரு
கங0	கக	ச	லின்கமிக	லின்மிக
கஙகூ	க	ச	தாரே.	தரரே.
கசஉ	க	சு	லொண்கழ	லுன்கழ
கசஅ	எ	க	அரணை**யுறுமுரணர்	அரணையுறுமுரணர்**
கருஉ	சு	ங	சிலையின்	சிலையிற்
கருஎ	ச	க	ஆர்த்த	ஆத்த
கசுங	ச	ங	லறந்திங்	லமர்ந்திங்
,,			லமர்ந்திங்	விலக்கல்; குறிப்பு
கசுகூ	சு	ச	சேர்த்தவ	சேத்தவ
கஎஎ	அ	க	மூவரி†	மூவரிவிருவர்†
கஅக	க	ச	யூரரே.	யூரனே.
,,	உ	,,	புறத்தாரன்னியூரரே.	புறந்தானன்னியூரனே.
கஅங	ரு	க	ளாங்கிளர்	வளங்கிளர்
கஅச	ரு	அ	யுற	யற
கஅஅ	எ	க	கூசநீக்கி	கூசனிக்கி
ககூங	க	ங	மேற்றக்*	மேற்றக்—கற்றவ*
ககூஅ	சு	உ	கொள்ளும்	கொள்ளுங்
உகஉ	ங	உ	வண்ணமகலும்*	வணண*மகலும்

Koviloor Digital Library

பக்கம்.	பாட்டு.	வரி.	பிழை.	திருத்தம்.
௨௧௫	௧	௪	குடிலு	குடலு
௨௩௯	௨	௩	பாங்கஞகி	பாங்கராகி
,,	௩	௨	பாங்கஞகிக்	பாங்கராகிக்
௨௪0	௧0	௩	விண்டிறனெரிய	விண்டிறநெரிய
௨௪௨	௮	௪	செய்ஞலூர்	சேய்ஞலூர்
௨௪௩	௮	௨	வேடத்தினன்	வேடத்தின
,,	௧0	,,	தொழும்பர்தமுரை	தொழும்பர்தம்முரை
௨௬௫	௧0	௧	கல்வவை	கலவை
௨௬௭	௧	௨	†ஞாழலே	ஞாழலே†
௨௭௩	௧0	௪	தங்கன்முனடி	தங்கன்முளடி
௨௭௯	௮	௨	நெரித்தவர்‡சேர்	நெரித்தவர்சேர்‡
௨௭௮	௯	௯	கதிரோனல	கதிரோனல்
௨௯௨	௨	௩	முன்சென்†றழித்தன	முன்சென்—றழித்தன†
௨௯௩	௧0	௩	விலைமுகையு	விலையுமுகையு
௩0௬	௯	௨	ளரவும்	ளரவுங்
௩௧௩	௯	௩	தலைவரைந்	தலைவரந்
௩௩௭	௮	௪	ராஞராளைக்	ராஞராதியாளைக்
௩௪௩	௧	௧	மெல்லாம்	மெல்லாத்
௩௫௨	௧	௨	மூக்கப்	மூர்க்கப்
௩௬௮	௧0	௧	காலே	காலை
௩௭௧	௭	௩	வந்நான்	வந்நா
௪0௪	௭	௨	நின்றவரு	நின்றரு
௪௧௨	௧0	௨	அல்லா	றல்லா
௪௧௪	௫	௪	தஞமுன	தமுள
,,	௮	௨	யாஞனல்	யாஞநல்
,,	௯	௩	யன்னிய	யுன்னிய
௪௨௮	௭	௩	வெமாதி	ளெம்மாதி
௪௩௧	௨	௧	கழியாதெ	கழியாதே
௪௪௯	௭	௪	முழ்கி	மூழ்கி
௪௬௧	௮	௪	பிரானே.	பிரானே.
௪௬௫	௧௧	௧	கயிலைமலை	கயிலைம்மலை
௪௭0	௮	௧	ளிங்கினிர்	ளிங்கிநீர்
௪௭௩	௮	௧	கொண்டுண்	கொடுண்
௪௮௬	௮	௨	பரமேட்டி	பரமேட்டீ
௪௮௮	௧௧	௧	கழும்மலத்	கழுமலத்
௪௯௧	௭	௮	உலகறி	யுலகறி
௪௯௯	௮	௧	தோணெரிய	தோணெரிய
௫00	௨	௧	மருந்தன்னமு	மருந்தனமு
௫0௪	௯	௪	மதி	மதிக்
௫௧0	௮	௪	வைகும்	வைகு
௫௨0	௯	௫	நல்வினையாய்*	நல்வினை*யாய்
௫௨௧	௪	௧	பல்பூத	பலபூத
௫௨௯	௩	௩	விரட்டத்துள்‡	விரட்டத்‡துள்
௫௩௩	௧0	௩	மணவின்	மணவி
௫௩௯	௭	௪	தரித்த	தரித்த
௫௪0	௧0	௨	செல்வேன்	செல்வன்
௫௪௫	௧	௧	புண்டரி	புண்டரி
௫௪௯	௧0	௩	டஞ்சம்	டஞ்சஞ்

Koviloor Digital Library

பாட்[illegible] வி[illegible]	பாட்டு.	வரி.	பிழை.	திருத்தம்.
இஇஉ	க	உ	மாடுவார்	மாடுவர்
இஇஅ	க0	க	நூல்	னூல்
,,	கக	ச	நம்பிஞண்	நம்பிநாண்
இஎஉ	இ	ச	தோர்	வோர்
இஎச	எ	க	தோர்	தொர்
,,	கக	ச	கற்றுவல	கற்றுவல்ல
இஅஅ	அ	ங	பெரியிஞர்	பெரியஞர்
இஅக	அ	க	பழக	பழகி
,,	க0	உ	வஞ்சனேன்*மனமன்னிய	வஞ்சனேன்மனமன்னிய*
இகூச	கக	கூ	ஞதர்	நாதர்
கூ0க	க0	உ	மிக்கிடவ்	மிக்கிட
கூ0ங	க	ங	ஞேக்கியங்	ஞேக்கியவங்
கூகங	க	க	மலேக்கு	மலேக்கும்
கூஉகூ	கூ	ங	மாலொ	மாலோ
கூஙகூ	க	ங	மெம்மான†	மெம்மா†ன
கூஙக	உ	உ	யில்லி	யில்லிர்
கூச0	எ	உ	கொர்	கோர்
கூசஉ	கூ	க	ரழலிலிரு	ரழலினிரு
,,	,,	உ	நெடுந	நெடுந்
கூசச	ங	உ	கொண்டனர்	கொண்டன
,,	,,	ங	ஓ	ரோ
கூஎக	எ	ச	நான்	நாங்
கூஎஉ	க0	க	கண்ணியும்	கண்ணியுந்
கூஎகூ	க	எ	வேண்டும்	வேண்டுங்
எ0ங	க0	ங	பத்துந்தோளு§	பத்துந்§தோளு
எகங	உ	உ	ளிளேயார்†கணம்மை	ளிளேயார்கணம்மை†
எகஇ	அ	இ	திரு	திரு
எஉக	கூ	எ	ஆமனேயும்	ஆமனேயுந்
எஉஅ	க0	இ	வென்றும்	வென்று
எசக	இ	ங	செய்யும்	செயும்
எகூ0	அ	அ	பொக்கி	போக்கி
எகூகூ	அ	ச	லாஞேர்	லாஞேர்
எஎங	க	உ	முழக்க	முழக்கம்
எஎச	கக	ங	சீர்ஞர்	சிரிஞர்
எஅச	ச	ங	மேவநூல்விரிவெண்ணியின்றென்கரைப்‡	மேவநூல்‡விரிவெண்ணியின்றென்கரைப்
அ0கூ	எ	உ	கயிலேம்	கயிலே
அஉஉ	கூ	உ	புடமை	புடைமை
,,	கக	ச	ளெய்துவர்	ளெய்துவர்க
அஉஎ	க0	க	மழுவாள்	மழுவர்
அஙக	க0	ச	முடிப்பத்	முடிபத்
,,	க	உ	றன்னேப்†	றன்னேப்
,,	ங	உ	காக்கன்	காக்கன்†
,,	கூ	க	னடுங்கியேமீதுபோகான்¶	நடுங்கியே¶மீதுபோகான்
அஇங	உ	ங	ரீட	ஈட
அஇஅ	க	உ	பாலநீங்	பாலனிங்
அஎக	எ	ச	அகழுனே	அழகனே
,,	க்	க	யெல்லார்க்	யெல்லார்க்கு

பரிசோதநபத்திரம்.

பக்கம்.	பாட்டு.	வரி.	பிழை.	திருத்தம்.
௧௦௨	௩	௪	நத்தி	நந்தி
௧௩௪	௭	௧	மையனி	மையரீ
௧௩௫	௬	௪	குரங்காடுசொலைக்	குரங்காடுசோலைக்
௧௩௯	௬	௨	பீக்ஷை	பிக்ஷை
,,	௯	௪	கொட்டுண்	கொண்டுண்
௧௫௨	௭	௪	விரட்ட	வீரட்ட
,,	௮	,,	ஞனே	ஞரே
௧௫௩	௯	௨	றேற்றுத்	ளேற்றுத்
௧௭௯	௧௧	௧	விரட்ட	வீரட்ட
௧௯௨	௭	௧	நம்பும்பு**	நம்பும்**
௧௦௨௭	௬	௩	பருவிக்	பருவிற்
௧௦௨௯	௭	௨	மெட்டுந்	மெட்டுத்
௧௦௫௨	௯	௧	குழன்	குழல்
௧௦௫௪	௧	௩	மலைமேல்	மலைபோல்
௧௦௬௪	௯	௨	நின்றவர்	நின்றவ
௧௦௭௪	௩	௪	யூறலை	ஞறலை
௧௦௭௩	௭	௨	ளிளைப்	ளிளைப்
௧௦௯௯	௬	௧	பொலலற	போலலற
௧௦௯௮	௪	௮	ஞுளானே.	ஞுளானே.
௧௧௦௩	௧௦	௧	காருரும்	சாரூரும்
,,	,,	,,	காளத்துள்	காளத்தியுள்
௧௧௧௫	௧	௧	பத்தரொடு	பத்தரோடு
௧௧௧௬	௪	௩	கழினி	கழனி
௧௧௧௯	௨	௨	வித்தாயசிறெழ	வித்தாசிறெழ
௧௧௪௧	௧௧	௩	சம்ம்	சம்
௧௧௪௭	௧	௧	மாறு	மாறும்
௧௧௬௨	௧	௧	களிறு	களிறும்
௧௧௬௪	௪	௨	†பிழக்கேயென்பர்	பிழக்கேயென்பர்†
௧௧௬௭	௩	௩	வொளிவிங்கிமிளிர்தொங்க லொடு*	வொளிவிங்கி*மிளிர்தொா கலெ
௧௧௬௮	௨	௨	திடல்று	திடறு
,,	௩	௩	விழ்ந்தான்	வீழ்ந்தான்
,,	௯	௨	திடல்று	திடறு
,,	௮	௩	விரல்லா	விரலா
௧௧௯௩	௩	௩	காக்கு	கரக்கு
,,	௪	,,	வரட்டி	வாட்டி
௧௨௦௫	௧	௧	மாசி்ல	மாசில்
,,	௪	௪	உடவினர்	உடவினர்
௧௨௩௩	௯	௩	வல்லிரே	வல்லிரே
௧௨௨௬	௪	௩	கோவையாதல்*	கோவை*யாதல்
௧௨௨௭	௭	,,	கோதாவிரி	கோதாவரி
௧௨௨௯	௩	௨	வித்தாவா†ரொரு	வித்தா†லாரொரு
௧௨௫௧	௧௦	௬	சழுது	சமுகு
௧௨௫௩	௧௧	௯	கண்டேன்	கண்டேன்
௧௨௫௮	௧	௩	தழை	தாழை
௧௨௪௫	௯	௩	நல்றுர்	நல்லூர்
,,	௮	௪	யடைர்தார்	யடைந்தார்

Koviloor Digital Library

கோவிலூர் ஆண்டவர்
A. No. 3917
நூலகம், கோவிலூர்